அயோத்திதாசர் சிந்தனைகள்

II

(சமயம், இலக்கியம்)

தொகுப்பாசிரியர்
ஞான. அலாய்சியஸ்

நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்

அயோத்திதாசர் சிந்தனைகள்

(சமயம், இலக்கியம்)

II

அயோத்திதாசர் சிந்தனைகள்

(சமயம், இலக்கியம்)

II

தொகுப்பாசிரியர்
ஞான. அலாய்சியஸ்

பிரதி உருவாக்கம் :

The Christian Institute for the Study of Religion and Society
New Delhi

வெளியீடு :

நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்
தூய சவேரியார் (தன்னாட்சி) கல்லூரி
பாளையங்கோட்டை – 627 002

Publication No.	:	08
Title	:	Iyotheethasar Sinthanaigal - II (அயோத்திதாசர் சிந்தனைகள் - II)
Subject	:	Religion, Literature : Hermeneutics
Author	:	Iyotheethasar
Edited by	:	G. Aloysius
© Copyright	:	FRRC
Edition	:	First : September 1999
Size	:	1/8 Demi
No. of pages	:	x + 786
No. of copies printed	:	1200
Published by	:	Folklore Resources and Research Centre St. Xavier's College, Palayamkottai - 627 002 Tamilnadu, India
Printed at	:	Hemamala Syndicate, Sivakasi
Cover portrait	:	Trotsky Marudu
Cover design	:	V.N. Barathan
Type set at	:	Simpson GESET's, SVA Computer Centre, Chennai - 600 012 FRRC
Printing supervision	:	C. Mohan
Sponsored by	:	Ford Foundation, U.S.A.
Price	:	Rs. 300/-

தொகுப்பு II

சமயம்

1. An Argument Against Conversion 1
2. A Unique Petition 8
3. புத்தர் என்னும் இரவு பகலற்ற ஒளி 10
4. கடவுள் 26
5. ஆடிமாதத்தில் அம்மனை சிந்திக்கும் விவரம் 30
6. மாளிய அமாவாசை என்னும் மாவலி அமாவாசி தன்ம விவரம் 40
7. தீபாவளி பண்டிகை என்னும் தீபவதி ஸ்னான விவரம் 45
8. கார்த்திகை தீபமென வழங்கும் கார்த்துல தீப விவரம் 47
9. யோகங்களின் விவரம் 51
10. சங்கறாந்தி பண்டிகை விவரம் 53
11. காமன் பண்டிகை விவரம் 58
12. ஸ்ரீபாதசேவை விவரம் 61
13. விபூதிவிளக்க வொளிவிவரம் 64
14. ஆஸ்திக நாஸ்திக விவரம் 67
15. முருகக்கடவுள் விவரம் 69
16. இலிங்கபூசை விவரம் 74
17. பேதாதை - பேதாளம் 77
18. ஜைன மத விவரம் 77
19. வேதவாக்கியங்களின் விவரம் 79
20. கோயிலும் ஆலயமும் 91
21. அரிச்சந்திரன் மெய்யனென்னுங் காதையும் பொய்யனான விவரமும் 92
22. பிறவி சந்தேகிகாள்கேண்மின் 96
23. பள்ளத்தூரிற் பணஞ் சேர்க்கும் சுவாமி விவரம் 98
24. வேதாந்தம் 99
25. கிறீஸ்த்தவன் கிறீஸ்த்து அவன் - அவன் கிறீஸ்த்து 99
26. தசராவென்னும் ஆயுதபூஜை 101
27. பட்டினத்தார் 101
28. மைலாப்பூரில் பௌத்தாலயம் 102
29. மதவிசாரணை மஹாசங்கம் 104
30. பலிபூசை விவரம் 105
31. ராமருக்குச் சீதை தங்கை 105
32. புத்தமதமும் அருகமதமும் 106
33. புத்தரென்னும் மெய் காட்சியோடு அபுத்தரென்னும் பொய்காட்சியைக் கலப்பதென்னோ 107
34. மஞ்சள் உடுத்தி சுரகம் 109
35. ஆயுதபூசை 109
36. அரசபுத்திரன் புத்தர் 110
37. மரணக்கிரியை 112
38. பௌத்தர்களுக்குள்ளும் தெய்வதூஷணமுண்டோ 114
39. அவனன்றி ஓரணுவுமசையாது 115
40. இந்தியதன்மத்தினின்று புத்த தன்மம் தோன்றியதா அன்றேல் புத்ததன்மமே இந்திரர்தன்மமா 116

41. பூதக்கதை பூதக்கதை வேதாளக் கதையினும் விந்தையே 118
42. சங்கறாந்தி புண்ணியகால விவரம் 119
43. சைவசமயம் 121
44. சாக்கைய பௌத்தர் விவாக விளக்கம் 122
45. கிறீஸ்து நமக்காகப் பாடுபட்டார் 135
46. புத்ததன்மமும் ஆரியமதமும் ஒன்றாமோ 136
47. விதியும் மதியும் 137
48. தேக ஊரல் 138
49. அறன் செயல் விரும்பு 138
50. சகல மதாசாரங்களையும் கிரகிக்கும் மதம் ஒன்றுண்டாமே 140
51. மொட்டையும் மஞ்சளும் 140
52. உபநயனம் 142
53. கர்மத்தால் உண்டாம் பிறவி 143
54. பஞ்சபாதகங்களில் ஒன்றாங் குடி 145
55. பௌத்த தன்ம யாகங்கள் 146
56. அங்கலயமும் இலிங்கமும் 149
57. கற்பூரம் கொளுத்துதல் 150
58. சைநரும் சமணரும் 151
59. மதக்கடைகளால் சுகமுண்டா? மண்டிக்கடை மளிகைக்கடைகளால் சுகமுண்டா? 151
60. பரதேசத்தில் தன்மம் போதித்தது 153
61. பௌத்த தன்ம சிலாவணக்கம் 154
62. தீண்டாதவர்கள் மதத்தால் தீண்டப்படுவார்களோ தாழ்ந்தவர்கள் மதத்தால் உயர்வாவார்களோ 155
63. தீபாவளி கார்த்திகையென்னும் பண்டிகைகள் 156
64. பௌத்த தன்ம போதமும் அவற்றைக் கேட்போர்கள் நாதமும் 158
65. சுடலைச்சடங்குகள் 160
66. தருமராஜ துரோபதை கோவில்கள் 161
67. பௌத்தர்களும் இந்துக்களும் 162
68. பௌத்தர்களின் நம்பிக்கை 163
69. உபநிடதங்களிலிருந்து பௌத்த தன்மந் தோன்றியதோ 164
70. தற்கால பிராமணர்கள் செய்யும் விவாகமும் 165
முற்கால வள்ளுவர்கள் செய்யும் விவாகமும் 165
இந்து விவாகமாமோ 165
71. சாமிலஞ்சம் குருலஞ்சமே சதாலஞ்சமாக முடிந்தது 166
72. கடவுளிலையோ கடவுளிலையோ 167
73. மகாபோதி பௌத்தம் 168
74. வேளாண் சடங்குகள் 169
75. ஏற்பது இகழ்ச்சி என்றால் என்னை 170
76. பௌத்த சோதிரர்களுக்கு அறிக்கை 171
77. மக்களை மக்களாக ஏற்காதோரைத் தேவரெனப்போமா அன்றேல் நரகரென்னலாமோ 172
78. புறக்கருவி ஆராய்ச்சியும் பௌத்தமும் 172
79. இராயப்பேட்டை பௌத்தாச்சிரமத்தில் ஆதிவாரம் மாலையில் நடந்த சங்கறாந்தி பண்டிகைப் பிரசங்கம் 174
80. கடவுளும் சாமியும் 177
81. சென்னை சாக்கைய புத்த சங்க சட்டதிட்டங்கள் 178
82. AN APPEAL TO BUDDHIST SOCIETIES 180
83. ஆதி வேதம் 185
84. புத்ததன்மம் மகடபாஷை சத்தியதருமம் சகடபாஷை மெய்யறம் திராவிடபாஷை 422

85. பௌத்தம் அழிந்த கதை 423
86. புத்தாவதாரம் இராமவதாரத்திற்குப் பின்னரே! என்பது பிசகு 424
87. சைவம் 426
88. ம-ா-ா-ஸ்ரீ சுந்தரராமனென்பவர் கூறியக்கூற்று தர்மமா அன்றேல் அதர்மமா? 427
89. வேதங்களும் நீதிசாஸ்திரங்களும் எற்றிற்கு 429
90. கருணை கருணை கருணை 430
91. பௌத்தர்களின் அறிகுறி 431
92. சீலம் சீலம் சீலம் பஞ்சசீலம் 431
93. ஆன்மா என்னும் மொழி 432
94. அல்லாசாமி பத்துநாளைய துக்க சிந்தனாகாலத்தை பயித்தியக்காரக் கோலஞ் செய்வதென்னை 433
95. சரியை கிரியை யோகம் ஞானம் 433
96. நிதானம்! நிதானம்!! நிதானம்!!! 434
97. பௌத்தசோதிரர்களுக்கு அறிவிப்பு 435
98. புராண சங்கை 436
99. தெய்வத்தைவேண்டிக்கொள்ளுதல் 437
100. நூதன பௌத்தம்! நூதன பௌத்தம்!! நூதன பௌத்தம்!!! 438
101. ஜெயினரும் பௌத்தரும் 441
102. சாக்கைய பௌத்த சங்கத்தின் சபா நாயகர்கள் 442
103. மனுதருமசாஸ்திரம் என்பதென்னை 443
104. மயானச் சடங்குகள் 443
105. ஓம் நமசிவய 445
106. குடிகளுக்கு மழையும் மழைக்கு தவத்தோரும் தவத்தோருக்கு அரசனும் அரசனுக்கு குடிகளும் ஆதாரமென்னப்படும் சத்தியதன்மம் 446
107. சுழிமுனை 447
108. மனுதன்மநூல் 448
109. வித்தைகள் 450

இலக்கியம்

1. திருவள்ளுவ நாயனார் பறைச்சிக்கும் பார்ப்பானுக்கும் பிறந்தாரென்னும் பொய்க்கதா விவரம் 455
2. நாவலர் பட்டமும் பரிசு திட்டமும் 462
3. ஞானத்தாய் ஔவையார் அருளிச் செய்த திரிவாசகம் 464
4. குண்டலிகேசி 537
5. தேன்பாவணி தேவபாணி 537
6. புத்தகம் என்னும் மொழி 538
7. முச்சங்கங்கள் 538
8. நாயனார் செத்தமாடெடுத்தாரா 540
9. பஞ்ச காவியங்களில் ஒன்றாகிய குண்டலகேசி 541
10. வள்ளுவர் காலம் 542
11. திருவள்ளுவர் யார்? 543
12. தமிழினை இயற்றியவர் 544
13. திரிக்குறளில் உள்ள காமத்துப்பால் 545
14. கவிராயர் சிறப்பு 546
15. தமிழ்பாஷையின் சிறப்பு குன்றிய காலமெவை. 548
16. திராவிடமும் தமிழும் 549
17. மை எனும் மகர ஐகாரமும் மெய் எனும் மகர ஏகாரமும் 549

18. அகஸ்தியர், நாயனார், ஔவையார் 551
19. தேசபாஷையை சிறுவர்களுக்கு ஏன் கற்பிப்பதில்லை 553
20. திராவிடமும் திராவிடரும் 554
21. தமிழ் கவிகள் 555
22. மணிமேகலை 556
23. பதினெண் சித்தர்கள் 557
24. அறுபத்திநாலு கலைகள் 559
25. நமது கருணைதங்கிய கவர்ன்மென்றார் தமிழ் பாஷையை விருத்தி
செய்யவேண்டுமென்னும் நன்னோக்கத்தால்
இலட்சரூபாய் செலவிட்டு பலப்பெயர் விளங்கத்தக்க ஓர்
நிகண்டு வெளியிடுவதாகக் கேள்வியுற்று ஆனந்தமடைந்தோம் 560
26. தமிழ்பாஷையாகும் தென்மொழியுடன் கலப்பு 563
27. முதற்குறள் 565
28. முத்தமிழ் திராவிடம் 565
29. பௌத்தர்களது இலக்கணோற்பவம் போப்பையருக்கு
தெரியாதென்பது பௌத்தர்களது இலட்சணோற்பவம்
போப்பையருக்கு தெரியாதென்பதேயாம் 566
30. திருவள்ளுவ நாயனார் இயற்றிய திரிக்குறள் 568
1. கடவுள் வாழ்த்து என்னும் புத்தரது சிறப்புப்பாயிரம் 569
2. மழையினது சிறப்பு 578
3. நீத்தார் பெருமையென்னும் நிருவாணம் பெற்றோர் சிறப்பு 582
4. அறத்தினது வலிதென்னும் தன்மத்தின் சிறப்பு 588
5. இல்வாழ்க்கை 593
6. மனையறமாம் வாழ்க்கைத் துணை நலம் 598
7. புதல்வரைப் பெறுதல் 603
8. அன்புடைமெய் 607
9. விருந்தோம்பல் 611
10 இனியவை கூறல் 615
11. செய்நன்றி அறிதல் 619
12. நடுவு நிலைமெய் 623
13. அடக்கமுடைமெய் 626
14. ஒழுக்கமுடைமெய் 630
15. பிறனில் விழையாமெய் 634
16. பொறையுடைமெய் 638
17. அழுக்காறாமெய் 641
18. வெஃகாமெய் 645
19. கள்ளாமெய் 648
20. கள்ளுண்ணா மெய் 651
21. கொல்லாமை 654
22. பொய் சொல்லாமெய் 658
23. புறங்கூறாமெய் 661
24. பயனில் சொல்லாமெய் 665
25. பெண்வழிச்சேரல் 668
26. தீவினையச்சம் 672
27. ஒப்புர ஒழுகல் 676
28. ஈகை 679
29. புகழ் 683
30. துறவியல் 686
31. ஊழ் 690
32. துறவு 693
33. புலால் மறுத்தல் 697

34. இன்னா செய்யாமெய் 701
35. கூடாவொழுக்கம் 705
36. வெகுளாமெய் 709
37. அவா அறுத்தல் 712
38. தவம் 716
39. அருளுடைமெய். 720
40. மெய்யுணர்தல் 724
41. நாடு 728
42. அரண் 732
43. இறைமாட்சி 736
44. கல்வி 740
45. கல்லாமெய் 743
46. கேள்வி 747
47. அறிவுடைமெய் 751
48. குற்றங்கடிதல் 754
49. பெரியாரைத் துணைக்கோடல் 757
50. சிற்றினந் சேராமெய் 761
51. தெரிந்து செயல் வகை 765
52. வலியறிதல் 768
53. காலமறிதல் 772
54. இடனறிதல் 775
55. தெரிந்து தெளிதல் 779

சமயம்

1. An Argument Against Conversion

To

The Hon. S. Srinivasa Raghava Aiyangar,
Dewan Bahadur C.I.E.
Inspector General of Registration
Madras

Sir,

In your recent report to our gracious Government, on a poor class of people who were anciently known as Dravidians but who are now called Pariahs, you have made a remark that these people can make no progress but by becoming either Christians or Mahommedans. Though a consideration of the motive of this remark leads me to the clear conclusion, that you have thus remarked, as knowing as you do their present deplorable condition, you have the good intention at heart of wishing them every success, yet the particular good that may result from a change of their religion is not perceived by me. To learn this, therefore, from you and get my doubt cleared I have undertaken to bring the following facts to your notice.

The Christians are divided as is well known, into Catholics and Protestants. In some of the Catholic Churches separate seats are assigned for Pariahs, and as they are often despised as low caste men, their feelings are much wounded thereby. Even in the Protestant Churches of some countries they are likewise insulted and sometimes excluded from Church and Lord's Supper. Besides this, the members of this community who have retired from Government service on pension are particularised as Pariah Christians. It does not appear that even those Christians who at the present day, have risen to high position, have done as simply because they became Christians; but, on the other hand, there is reason to suppose that they have so risen by securing to themselves good and decent appointments by means of the education bestowed on them by the Missionaries, who gave them food and clothing as well.

As for the progress this community would make by becoming Mahommedans, it is a thing well known to all that the Mahommedans as a class are going backward, as regards their education, and this fact has already attracted the attention of our benign Government, which has therefore made some special concessions to them. Under the circumstances I do not know what worse condition the Pariahs will come to, if, by becoming Mahommedans, they are to share the hardships of born Mahommedans.

These, then, are the several grave doubts I have entertained in connection with your proposal. But allow me to explain briefly the real cause of the backward condition of the Dravidian people who are called Pariahs, as far as I, a member of this community, have been able to ascertain it from my own personal experience.

First — In practice, the proclamation of 1858 made by our Gracious Sovereign, the Empress Victoria, and the Statutes passed by the Houses of Parliament in 1833 regarding India, are so applied that I am rather led to believe that these enactments are intended for all except the Pariahs. For, when a high caste man commits the serious crime of torturing people

and robbing them of their jewels and other valuables, and is sentenced to undergo imprisonment in the Jail, he is made to perform no degrading work. But, if a Pariah having nothing to eat, commits the trifling crime of stealing a handful of rice or paddy and is made to undergo imprisonment, he is forced to do the degrading work of a *toty* or scavanger, which work he has not done at any time before in his life. By this treatment the unfortunate sufferer, his friends and relations, and even those who have read section 464 of the jail Code, are led into a belief that under the British rule the Pariahs have no right whatever to make any progress, nor to any fair play, and that they cannot but remain disheartened and humbled always to the very dust, without ever having to rejoice at any progressive step.

Secondly — In sections 428 and 434 of a book called the Epitome of Law in Tamil relating to Village Officers, it is stated that such class of men as Carpenters, Goldsmiths, Blacksmiths, etc., should not be put under wooden fetters (called *Tholoovoo*), but only Pariahs for the space of 6 hours. The day-labourers as well as owners of small pieces of land among this class who have read the provision contained in these sections and who have witnessed the hardships caused by its working, become afraid of their caste neighbours and ever shrink from the thought of making progress in civilization and material comforts. For, the illiterate caste villagers not regarding these unhappy people as human beings treat them always like brutes, and when once a Pariah appears before them with any marks of improvement about him, he is at once accused of some crime or other and made to bear the wooden fetters. This tyranny, no doubt, lasts every time for the space of 6 hours only according to the law, still, these unhappy people are almost cowed down by the fear that their caste villagers have it in their power to bring into operation, at the same time, the further ruling, that escape from the above tyranny renders the criminal liable for punishment under Section 224 of the Indian Penal Code.

The fear of power, and the cruel act on the part of the caste villagers whereby the members of this community are lent small sums of money at a high rate of interest for marriage or funeral expense, and then made slaves-though no marks of slavery are ever presented to the outside world—and lastly, the difficulty created by Mirasi right secured by the caste people previous to the introduction of the Revenue Settlement Act when they grew jealous to the extreme degree at the thought that these people could make some progress by land acquisitions — all these are so many effective obstacles in their way of making any progress as tillers of ground.

Thirdly — When the Europeans first conquered this country and, with a view of improving it as well as the means of communication, organised the army of Sappers and Miners, the high caste men did not enlist themselves in it, partly because they thought they would lose their caste by foreign travels and partly because they thought that levelling mounds of earth, filling up ditches and felling trees were degrading to them. But the Dravidians called Pariahs, who had no such scruples came forward and enlisted themselves in large numbers. They opened roads through forest and over hills; they were the first to stand bravely before all the battle that took place in those days, and to undergo all the hardships and privations of a cruel war; and in short, they served their European masters

always truly and faithfully. In consideration of such meritorious service they were given high appointments in the army and they and their relatives for a time led a life of decent competency, and, with the help of the pension bestowed on them in old age, were able to give to their children somewhat liberal education and to make them rise in the scale of civilization. But, now, to leave these people as it were no longer in the enjoyment of such comfort and happiness and to prevent their further progress, the high caste men, who once refused to enlist themselves in this battalion as they thought they would lose their caste thereby, have begun to do so to a large extent. By this all hopes of obtaining high appointments in the army and rising to position are lost to the members of this class, and their gradual banishment from the battalion is the result.

Fourthly — When hospitals were first established, to render medical aid both to troops and civil subjects, the high caste men, thinking it would be quite unbecoming them as caste men to dissect dead bodies and dress the wounds and sores of men of all nationality, did not try for appointment in hospitals as apothecaries, dressers, etc. The members of this community alone offered themselves up for this service. In rendering medical aid to the troops during the time of war and in ministering unto the wants of the subjects in general whenever they became ill, they worked truly and honeslty for the benefit of Government. With the help of the decent pay they got for their good service and of the pension obtained in old age, they and their families were not only able to live in affluence but were also able to educate their children. But now this profession is closed for them. There is no means of proving that now-a-days at least at the rate of one per annum their young men enter the Government service as dressers. This is because the very caste men who once regarded it as unbecoming on their part to dress sores have entered the Medical profession in great majority.

Fifthly — The members of this community who live in the villages have for ages been serving faithfully as watchmen over hamlets and fields and to this day they are the faithful protectors of their masters' property. Such faithful men are scarcely allowed to enlist themselves as city Police men and as Salt and Abkari Police men, who draw better emoluments of pay for their services. Even if they are allowed to do so, their Pariah nationality is made to stand as a bar to their getting higher appointments in that department and as a cause of their ruin.

Sixthly — It will be clear from the foregoing remarks that at all places whence money and health is to be got, a caste man has no caste to observe, but a Pariah alone has his low caste always to stand in his way wherever he goes to get money or to preserve his health. He is thus excluded from sharing every thing that is good and useful and forced to remain always in a degraded condition. He cannot even claim to live healthily. Within the Municipal limits of Madras there is a village called the Hall's Garden which is solely peopled by this race. The benefits of a Municipality are not extended to it; for, it has no metalled roads, nor has it drains or water pipes. The filthy water which the people use soaks into the ground, and during the rainy season an offensive smell emanates from the ground which pollutes the air they inhale. They therefore become often subject to various kinds of disease and get their health more and more impaired. If such is the state of a village within Municipal

limits what the state of the surrounding villages, outside the Municipal limits, which are peopled by this race will be, is easily imagined.

To add to their misery, two or three arrack shops or toddy shops are opened near every village peopled by this race, and the poor men are tempted to drink away their meagre earnings for which they labour hard, and to starve their wives and children. But where can they get the sense to see their own folly and aim at bettering their wretched condition? It is essentially reason that enables man to better his condition and obtain happiness. But the means of developing this greatest of human excellencies are riches, bodily health and learning, which are the 3 things that these people stand greatly in need of. With a mind doomed to ignorance they cannot think otherwise than that all the benefits of a Municipality — viz, clean metalled roads, good cemented drainage and 2 or 3 fine water pipes in every street are reserved for the high caste men, who occupy high and spacious homes, and the low caste men, who are confined to low and humble cottages, cannot claim such privileges, even though they regularly pay the taxes levied by the Municipality or other authorities.

Seventhly -- Among the members of this community who live in the surrounding villages, those who till the ground for others, though they work hard under a tropical sun from early morning to dusk in the evening, can hardly get more than a rupee or two per month. This hardly suffices to keep them alive and clothe them. In consequence they are reduced to mere skeletons. Though they thus work hard and conscientiously for their masters, the caste men give them in return not even permission to draw fine drinking water from their wells. These unhappy people are forced to drink filthy rain water which collects itself into ponds and pools and to fall victims to various diseases. The rest of them, who leaving their abodes in the villages enter a town to seek a living, take up appointments as domestic servants under Europeans and receive wages from 6 to 12 rupees a month. But as they are wanted to dress cleanly and to keep themselves neat and tidy, the pay is, in majority of cases, scarce sufficient to procure them food and necessary clothing, and they can save almost nothing for future use. God only knows the hardships they and their familes undergo on account of food and clothing, in the interval between quitting an appointment and getting another. In this state they continue to serve their European masters faithfully and diligently and also share their pleasures and sorrows even from the time of their arrival from Europe. They work daily from 6 in the morning to 10 or 12 in the night thus awaking for several hours every day. Sometimes they have to perform along with their masters long and tedious journeys through jungles and across mountains, and to accompany their masters even as far as England. Though in this manner they serve their masters faithfully through weal and woe, they can get nothing to support them in their old age and by continual starvation they meet death at last. Neither are they in a position to educate their children. Their masters always keep knocking about from place to place, stopping, for instance, for 6 months in Madras, 6 months at Ooty, 2 months at Cuddapah, 4 months at Salem, and so on. They (servants) are unable to leave their children behind to remain always in one place getting education, as they have no money to meet the expenses in the shape of food and clothing, school fees and books, required for their children. So they take their wives and children

always with them wherever they go. In consequence the children when they grow to manhood are fit only to follow their fathers in their profession. Or, even when they get no transfers during employment if the master returns home or they lose their appointment just at the time their children begin to make some progress in education, they are obliged to take away their children from school, as they have no money to pay for their further education, and from that time to train them to their own work.

In this manner many of the young men of this community were, for want of timely help from their parents, obliged to learn the duties of a domestic servant. As they know no other work, and as the appointments as domestic servants are limited, their distress is very great. As far as I have been able to ascertain the numbers, there are

Butlers	148
Dubashies...	112
Cooks...	201
Maties...	108

who are now out of employment within the Municipal limits of Madras.

The number of those who are out of employment in other profession and of those out of all manner of employment in other places, I am not able to give.

Among those who suffer thus with their wives and children for their food and clothing, there are also Christians. I do not understand, therefore how Pariahs could make any progress by embracing other religions. To feed at an ancient grudge, the caste people began to despise the members of this community by branding them with the degrading name of "Pariah" and tried to throw every possible impediment in their way to progress. Under such unbearable tyranny these people were the first to embrace Christianity when it came into the land. Then, by a liberal expenditure of mission money they began to grow in civilization. Seeing this and becoming extremely jealous, the caste men too became converts to Christanity, and at once began to despise the Christian converts of the community as 'Pariah Christians', and to ruin all their prospects as Christians. There is every reason to suppose that in the same manner they will be despised as 'Pariah Mahommedans' if they become Mahommedans, but the dream that by so becoming they would rise in the estimation of their caste neighbours and rise above their present degraded condition can never be realized.

Their true and only way to progress, then is to get (now and then) support from well educated gentlemen among the caste people and to obtain special concessions from the hands of our British rulers who adminster impartial justice unto all, without making the distinction of caste, creed, or color. This resolution was arrived at after deep consideration and the ten concessions asked for the advancement of this race were already laid before the public through the National Congress of 1891. There is besides a proposal to seek aid to educate this class through the Mahajana Sabah, to establish Dravidajana Sabahs in the several districts, and by getting representatives from those Sabahs to convene a monster meeting to represent to government directly their other wants and grievances.

The antipathy of those who call themselves Brahmins towards those who are called Pariah is notorious; and it is no secret thing that the Brahmins have been always placing every obstacle in the Pariahs' way to

progress. While you, sir, a Brahmin, have now come forward with a report on the Pariahs as if you meant thereby to plead their cause. Our people, therefore, are beset with a grave doubt whether any good or evil may be the result of your report.

While under this Government other communities have made progress without changing their religion you have without any difficulty made a suggestion that Pariahs alone should become either Christians or Mahommedans to make any prgress; but I cannot see the benefits that could arise to them from your proposal. I therefore humbly beg that you will let me know them, since I (a member of this community) desire to know them first before proceeding to ascertain if there are any other benefits to be derived by adopting other suggestions, with a view of bettering the condition of this down-trodden nation.

Yours Obediently,
Pundit C. Iyothee Thoss,
S1, Ammaiappa Mudaly Street,
Rayapettah

(This probably was written in 1894.)

2. A Unique Petition

To,
Colonel H.S. Olcott, F.T.S.
Adyar, Madras.
Reverend and Dear Sir,

At the request of many educated men of my community, I beg to call your attention to the following grievances which we experience as regards religion at the hands of the so-called high caste men, and to request that you may be pleased to help us with your advice in the matter.

It is our earnest desire to revive Buddhism in this Presidency and the following explanation of the way in which the Brahmins are treated in villages will enable you to understand the former social and religious position of the people who are now termed Panchamas and the reasonableness of our above mentioned wish.

If those who are known as Brahmins enter the villages and streets occupied by our people, who were the original Dravidians, but now called Panchamas by the Hindu high caste men, they (Brahmins) are driven out of the place in the most disgraceful manner amidst tumult and uproar, on the ground that the spots stepped on by them have become polluted. The measure adopted to eradicate the impurity thus caused is to cleanse the places trodden by these so-called Brahmins by means of cow-dung and the pots used for such purposes are destroyed beyond the limits of such towns. This treatment is similar to the one done when a person is dead and the body removed from the house. Should these people enter the streets of the Brahmins, they are driven out, but menial servants such as cobbler, washerman, *totty*, barber etc., are allowed to converse with them (Brahmins, etc.) freely and to enter their houses. When the so-called high caste men see these people, they become irritated and begin to scorn them, and they try their utmost to keep them down in the social scale. Such is the hatred between the two classes of people. This kind of

malpractice has been in existence from time immemorial. I began to enquire into the cause for such animosity between the two classes from the time I could think myself. On one occasion while I was travelling in the Coimbatore district I came across a bundle of Tamil Palm-leaf manuscripts. Among those, I found a collection of 570 stanzas styled *Naradia Purana Sangai Thelivoo.* They relate to the interpretation of one of the stanzas given out by a sage named *Aswakosa* to whom it was referred by two other sages *Kakkaipadiar* and *Nallurandar* and the following is briefly the reply given by the above named sage *Aswakosa.*

There was once a great battle between the people of Puruseka, the worshippers of Agni and those of Vanga country in which the former being completely vanquished and put to flight, took refuge on the banks of the Sindhural river, and gradually made their way into the Dravidian country, where they began to spend their lives at the outset as mendicants. Seeing the good manners, customs and civilizations of the Dravidians, these new settlers mingled with them.

Although the original Dravidians were divided into different dynasties such as the Andhra, Karnatic, Maharashtra and Dravidian dynasties, they contracted marriages and ate together without any distinction.

Monasteries were erected over the graves of philosophers and great men, which were termed *Mahtam* such as Thenkasi *Mahtam*, Poothoor *Mahtam*, Tirupuli *Mahtam*, etc. In these sacred houses, the Dravidian *yogees* lived and preached Buddhism. These *yogees* who were working for salvation wore threads to distinguish themselves from other social classes, namely, warriors, Merchants, cultivators, etc. The latter used to prostrate themselves before the wearers of such threads as a mark of respect.

These new settlers, who were day by day minutely observing the civilization and unanimity of the Dravidians, thought it impossible to conquer them either by war or by any other means than stratagems. They began to forget even the language (Savagam) they were speaking and began to learn the vernacular languages (Andhra and Dravida) spoken by the Dravidians. They disguised themselves as sages, wearing the sacred thread of the Dravidians and said to the illiterate people and petty rajahs, "We are Brahmins. We are priests. You should all obey us and give us whatever we require, so do the Shastras command". Then they taught the illiterate and most ignorant people some of the slokas they had picked up from the very language of the Dravidians.

Seeing the tricks and disguises of these purusegas (fire-worshippers), the Dravidian sages and their followers had the curiosity to enquire into their origin and ultimately learnt that they were only masquerading as sages to deceive the people. As a punishment for their roguery, they (Purusegas) were beaten and driven out wherever encountered and therefore, wherever the Purusegas saw two or three Dravidians going together, they for fear, they (Dravidians) would carry news to the Dravidian monks at the *Mahtams*, used to cry out *Parayappogurargal. Parayavarugurargal* which literally mean the tale-bearers are going, the tale-bearers are coming and this word, by frequent application and usage to their rivals became contracted into "Paraiah" and hence it has come to mean a low born man.

These cunning Purusagas however with the help of the illiterate people and petty rajahs, whose passion they had played upon, became

powerful and began to demolish the *Mahtams*, burning all the sacred books containing Lord Buddha's teachings they could get hold of. Not satisfied with this they began to chase the Dravidian monks and their followers hooting at them, calling them Paraiahs and instructing their followers to treat them contemptuously and to deny them shelter in their places.

When I read the above interpretation by *Aswakosa* that the so miscalled *Paraiahs* were once followers of the Buddhist Dharma, I began to search through the literatures of these so-called *Paraiahs* to try and discover whether they had made any mention of Buddha. Not only did I find that the word *Puthagam* is given to the book that contains the teachings of Buddha; but I found also in the books *Kooral, Auttichevadi* and *Konraivendan* which teach moral lessons, in *Chintamani, Cilappadhigaram, Velayapathi, Koondalakesi* and *Manimegalai*, the five *Kavyams,* in *Tholkappiyam, Agatyiam* and *nannulu*, the grammars and in the 12 *Nighandoos*, etc. that the authors touch upon the Buddha Gnanam and that the introductory stanza of each of their works contains an ascription to Buddha.

From these, it is evident that the so termed *Paraiahs* were formerly of the Buddhist faith. The medical and other works compiled by *Agastya, Bogur, Poolipani, Thanvendari,* etc. were in their possession in manuscripts till the introduction of printing when they were published to the world. Not only were our people in possession of these works, but they also studied *Arunkalai* known as *Bhagavatgita*, the teachings of the first Buddha, and they practised *Yogasathanum.*

From the above facts, it is clear to us that our people once professed Buddhism, and now it is our heartfelt desire that we should be shown how to return to our old Buddhist faith only in its primitive purity. We have been planning to form a society under the designation of Dravida Buddha Sangam and through its instrumentality to bring out pamphlets monthly which will show the teachings of the Lord Buddha as found in the literature of Buddhism and to circulate them as widely as possible.

For thus alone we believe, can we hope to restore our self-respect and to gain that right, to win by our own exertions, domestic comforts and untrammeled personal liberty of action, which are denied us in the Hindu social system of caste, under the weight of which we are now and for many centuries have been crushed into the dust.

I, therefore, at the request of all the educated men of my community, humbly beg that you will be pleased to patronize our undertakings and show us how we may accomplish our blameless object.

Madras, Rayapettah — I am, etc.

8th June, 1898.

Yours Obediently
Pundit Iyothee Thoss

(From *Journal of the Mahabodhi Society,* Vol. vii, No.3, pp.23-24.)

3. புத்தர் என்னும் இரவு பகலற்ற ஒளி

சற்குரு தியானம்

குன்றாத மனபாக்கியமும் மேலான மகத்துவமும், வந்தனை உடையவும் ஞானிகள் யாவருக்கும் மகா ஞானியான புத்த சுவாமியை நமஸ்கரிக்கிறேன். புத்த சுவாமியை எங்கள் வழி காட்டியாய்த் துணைக்கொள்ளுகிறேன்.

அவருடைய போதகங்களை வழி காட்டிகளாய்த் துணைக் கொள்ளுகிறேன். அவரைப் பின்பற்றிய சங்கத்தவர்களை வழிகாட்டிகளாய்த் துணைக்கொள்ளுகிறேன்.

1-வது முறை - புத்தசுவாமியை
1-வது அவரைப் பின்பற்றிய சங்கத்தவர்களை
1-வது அவருடைய போதகங்களை
3-வது முறை - புத்தசுவாமியை
3-வது முறை - அவருடைய போதகங்களை
3-வது முறை - அவரைப்பின்பற்றிய சங்கத்தவர்களை

1. யாதாமொரு சீவபிராணியினுயிரைக் கொலை செய்வதில்லை என்று பிரதிக்கினை பண்ணுகிறேன்.

2. பிறர் பொருளைக் களவாய் கவர்தல் செய்வதில்லை என்று வாக்கு தத்தம் பண்ணுகிறேன்.

3. பரஸ்திரீகமனங் கொள்ளுவதில்லை என்று பிரதிக்கினை பண்ணுகிறேன்.

4. பொய் சொல்லுவதில்லை என்று வாக்கு தத்தம் பண்ணுகிறேன்.

5. மதுபானம் அருந்துதலில்லை என்று உறுதி வாக்களிக்கிறேன்.

விசேஷக்குறிப்பு

உலகெங்கும் புத்தரென்று வழங்கும் நமது குலகுருவாகிய ஒப்பிலா அப்பன் சகல தேசங்களிலுஞ் சென்று ஞான நீதிகளைப் போதித்து மனிதன் கடைத்தேறும்படியான பேரின்பானுபவத்தை அருளிச்செய்தார் என்பவற்றிற்கு ஆதரவென்ன என்றால் நெடுங்காலம் அந்தந்த தேசங்களில் புதைப்பட்டிருந்து தற்காலம் வெளிக்குக் கண்டெடுக்கப்படும் சாக்கைய முநிவர் உருவத்தைப் போன்ற சிலைகளும் அங்கங்கு தோன்றியிருக்கும் மதஸ்தர்களின் தொகைகளையும் புத்தமதஸ்தர் தொகைகளையும் கண்டு பார்க்குங்கால் புத்த மதத்தைச் சார்ந்த ஒரு வகுப்பினர் மட்டிலும் உலகத்திலுள்ள ஜனத்தொகையில் அரையே அரிக்கால் பாகமிருக்கும் காட்சியும் போது மானசாட்சியாம்.

அந்தந்த மதஸ்தர்கள் அநுசரித்துவரும் ஞானவாக்கியங்களும் நீதி வாக்கியங்களும் புத்தமதத்திலிருந்து கிரகிக்கப்பெற்றதென்று கண்டு தெளிந்தவர்கள் யாரென்றால் தங்கள் அறிவை மென்மேலும் விருத்திசெய்து நீராவி மரக்கலம், புகைரதம், மின்சாரத்தந்தி, மின்சாரரதம் முதலியவைகளைக் கண்டுபிடித்து உலோகோபகாரஞ் செய்துவரும் மேன்மக்களும் உயர்ந்த சாதியோருமாகிய ஆங்கிலேயர்களும் அமேரிக்கர்களுமாம்.

நமோபுத்தா புத்தரென்னும் இரவு பகலற்ற வொளி
ஆதிபகவன்துதி
சாக்கைய முநிவர் சரித்திர சுருக்கம்

அங்கண் வானத் தவரரசரும்
வெங்களியானை வேல்வேந்தரும்
வடிவார் கூந்தன் மங்கையருங்
கடிமல ரேந்திக் கதழ்ந்திறைஞ்சச்
சிங்கஞ் சுமந்த மணியணை மிசைச்
கொங்கவி ரசோகின் குளிர்நிழற் கீழச்
செழு நீர்ப்பவளத் திரள் காம்பின்
முழுமதியுரையு முக்குடை நீழல்
வெங்கண் வினைப்பகை விளி வெய்தப்
பொன்புனை நெடுமதில் புடைவளைப்ப
அனந்த சதுட்டய மவை யெய்த
நனந்தலை யுலகுட னவைநீங்க
மந்த மாருத மருங்கசைப்ப
அந்தர துந்துமி நின்றியம்ப
இலங்கு சாமரை யெழுந்தலமர
நலங்கிளா பூமழை நனிசொரிதர - இனிதிருந்
தருனெறி நடாத்திய வாதிதன்
திருவடி பரவுதுஞ் சித்தி பெறற் பொருட்டே.

பரதகண்டத்தைச்சார்ந்த மகதநாட்டில் கபிலவஸ்து என்னும் பட்டினத்தை அரசாண்டு வந்த இட்சுவாகு, வீரவாகு, என்னும் சக்கிரவர்த்திகளின் வம்மிச வரிசையைச்சார்ந்த சுத்தோதயனென்றும் மண்முகனென்றும் வழங்கும்படியான ஓர் சாக்கையகுல அரசனுக்கும் பரிசுத்த குணத்தை ஆபரணமாகப் பூண்டிருந்த மாயாதேவி என்னும் இராக்கினிக்கும் கலியுகம் 1616 தசுயசு சித்தார்த்தி வருடம் வைகாசி மாதம் 13-நாள் ஆதிவாரம் பௌர்ணமி திதி, கேட்டை நட்சத்திரம் மீன லக்கினத்தில் ஓர் ஆண்குழந்தை பிறந்தது.

குழந்தை பிறக்கும்போது, விடியர் காலத்து சூரியன் உதிப்பதுபோல் ஓர் விம்பமும் சம்பூரணமுமாகப் பிறந்தது.

உலகம் முழுமைக்கும் ஓர் வகை ஒளிதோன்றி சீவராசிகளை நிலைக்கச் செய்தது.

வரப்போகிற சற்குருவின் மகிமையைக் காணும்பொருட்டு குருடர்களும் ஊமைகளும் செவிடர்களும் சற்குருநாதன் பிறப்பின் சகுனங்களைப் பற்றிப் பேசிக்கொண்டார்கள்.

கூனர்கள் நிமிர்ந்து நடந்தார்கள், சப்பாணிகள் குழந்தையை தரிசிக்கும்படி நடந்து போனார்கள்.

ஆகாயவிரிவில் மேகங்களில்லாமல் சுத்தமாகவும் நீரோடைகள் தெளிவுற்றும் இருந்தன.

பூவுலகின் சீவராசிகள் என்றுங் கேட்டிராத நாதஒலியானது விண்ணுலகத்தினின்று சப்தித்தது.

உலகமுழுமையும் சமாதானமும் ஆறுதலும் உண்டாக அன்பின் பெருக்கமுற்றது.

அருளாழி என்னும் தருமச்சக்கரம் உலகெங்கும் உருளுவதற்கு சாட்சியாக சூரிய சந்திரன் இரண்டுங் களங்கமற்றுப் பிரகாசித்தன.

வான்மீன்கள் தங்கள் தங்கள் நிலைபிசகாமல் உலாவிக் காலமழைப் பெய்து தேசமெங்கும் செழிப்புற்றது.

சீவராசிகள் யாவற்றும் பசியின் துயரந்தோன்றாமல் ஆனந்தித்திருந்தன.

பசுக்கள் யாவற்றும் கலங்கள் நிறம்பப் பால்சொரிந்தன.

பட்சிகள் யாவற்றும் தூரதேசங்களுக்குச் சென்று இறை தேடும் படியானக் கஷ்டங்கள் நீங்கி இருந்த நிலங்களில் தங்களுக்கு வேண்டிய ஆகாரங்களைப் புசித்தோங்கின.

மனிதர்களைப்பற்றி வருத்திக்கொண்டிருந்த அசுத்த ஆவிகளும் புத்திமாறாட்டங்களும் நீங்கி அறிவு தெளிவுற்றார்கள்.

மாரனென்று சொல்லுங்காமனும் காலனென்று சொல்லும் இமயனும் துக்கசாகரத்தில் அழுந்தினார்கள்.

இவ்வகையான நற்சகுனங்களை கண்ணுற்ற "*அசித்தா*" என்னும் ஓர் பெரியவர் ஆனந்தங்கொண்டு அரசனுக்குக் குழந்தை பிறந்தவுடன் தேசத்தில் நற்காட்சிகள் தோன்றினபடியால் அக்குழந்தை வளர்ந்தபின் உலகத்திற்கு என்ன நன்மை உண்டாகுமோ என்னும் ஆசைகொண்டு குழந்தையை தரிசிக்கும்படி அரண்மனைக்குச் சென்றார்.

அசித்தா என்னும் பெரியவர் வருவதை அரசன் அறிந்து அவரை ஓர் ஆசனத்தில் உட்காரவைத்து தன் குழந்தையைக் கொண்டுவந்து அவர் பாதத்தில் வளர்த்தினான்.

அப்பெரியவர் சாக்கைய சிரேஷ்டராகையால் குழந்தையின் அங்கப்பாகக் கணிதங்களை நன்குணர்ந்து அதன் பாதங்களிலுள்ள தாமரை ரேகைகளைக்கண்டு தன்சிரசில் வைத்துக்கொண்டு ஆனந்தக்கண்ணீர் ததும்ப தேம்பித்தேம்பி அழுதார்.

அதைக்கண்ட அரசன் பயந்து தன் குழந்தை அற்பாயுளையுடையதோ! அல்லது வேறு கெடுதி பிறக்குமோ என்று பெரியவரை நோக்கி ஐயா யாதுகாரணத்திற்கு அழுகிறீர்கள்? என்றான்.

அதைக்கேட்ட பெரியவர் "அரசனே,நீர் யாதுக்கும் அஞ்சவேண்டாம். உன்மனைவி மாயாதேவியானவள் இக்குழந்தையை கருப்பந்தரிக்குங்காலத்தில்

வானத்திலிருந்து சோதிமயமான ஓர் நட்சத்திரம் பூமியிலிரங்கி தன் வயிற்றில் நுழைந்ததாக சொற்பனங்கண்டு சொல்லியிருந்தனளே அதற்கு சாட்சியாக இக்குழந்தையின் அங்கபாகக் கணிதப்படி வளர்ந்து உம்முடைய அரசுக்கு வருமாகில் உலகம் முழுமைக்கும் ஏகசக்ராதிபதியாயிருக்கும். அவ்வகை அரசாங்கத்தை விரும்பாமல் துறவடையுமாகில் பூமிசை எங்கும் தருமச் சக்கரத்தை உருட்டி மநுக்களின் தீவினைகளைப் போக்கிக் கொள்ளும்படியான ஞான போதனைகளைப்புகட்டி பிறவிதுன்பத்தை நீக்கிக்கொள்ளும்படியான வழிகளையுந்திரட்டி மூவுலகுங் கொண்டாடும் உலகரட்சகனாகிய சற்குருவாக விளங்கும். இவ்வகையானக்காட்சிகளை என் கண்குளிரக்காணாமல் போகும்படியான மூப்பு வயதுக்கு வந்துவிட்டோமே என்னும் ஏக்கத்தினால் அழுதேனென்றார்.

இத்தியாதி சங்கதிகளையுங் கேள்வியுற்ற சகலதேசத்தரசர்களும் பொன்னாபரணங்களையும் நவரத்தினங்களையும் காணிக்கைகளாகக் கொண்டுவந்து குழந்தையின் பாதத்தில் வைத்து தரிசித்துக்கொண்டார்கள்.

அக்காலத்து சிரேஷ்ட அரசர்களுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்தால் அறுபது வருஷப் பெயர்களில் நளவருஷம் பிறந்தவனை நளராசனென்றும், விக்கிரம வருஷம் பிறந்தவனை விக்கிரம ராசனென்றும், பிங்கல வருஷம் பிறந்தவனை பிங்கலராசனென்றும், விஜயவருஷம் பிறந்தவனை விஜய ராசன் என்றும் வழங்கிவந்ததுபோல இவர் சித்தார்த்தி வருஷம் பிறந்தபடியால் "சித்தார்த்தி" என்னும் பெயரைக்கொடுத்து ஆனந்தமாக வளர்த்துவந்தார்கள்.

ஐந்தாவது வயது வந்தவுடன் யானை ஏற்றம் குதிரை ஏற்றம் முதலியவைகளைக் கற்பித்து கல்வியைக் கற்பிடிக்கும்படியான ஓர் ஆசிரியனிடம் விட்டார்கள்.

ஆசிரியன் எழுத்து லட்சணங்களை சொல்லிக்கொடுத்து வருவதற்கு முன் பழையபாடங்களை ஓதுவதுபோல் குழந்தை சொல்லிவருவதை அறிந்து திடுக்கிட்டு கணிதாதி முதலிய பூதசாஸ்திரங்களைப்போதித்தார், அவைகளையும் அக்குழந்தை பழயபாடம் ஓதுவது போலிருந்தது.

அதை அறிந்த ஆசிரியர் ஆனந்தங்கொண்டு அரசனிடத்திற்போய், "அரசே உம்முடையக் குழந்தைக்கு நான் ஆசிரியன் அல்ல, எனக்கு அவர் ஆசிரியனாயிருக்கின்றா"ரென்று சொல்லி விடை பெற்றுக்கொண்டு போய் விட்டார்.

அரசன் தன் குழந்தையினுடைய கல்வி வல்லபங்களையும் ஒழுக்க நிலைமைகளையும் பனிரண்டு வயதுக்குள் போதிக்கும் நீதிவாக்கியங்களையும் நாளுக்கு நாள் பார்த்து பயந்து ஓ! ஓ! நம்முடைய பிள்ளை அரசபோகத்தை விரும்பமாட்டான் என்று எண்ணி மந்திரிகளைத் தருவித்து ஆலோசிக்கத் தொடங்கினான்.

அதற்கு மந்திரவாதிகள் தீர்க்க ஆலோசித்து அரசே உமது குழந்தைக்கு பாலபருவம் நீங்கிவிட்டபடியால் அவர் மனதைக்கவரும்படியான அதி ரூபமுள்ள ஓர் கன்னிகையை விவாகஞ் செய்து நடினத்திலுங் கீதத்திலும் மையலிலும் வல்லபமுடைய சிலக் கன்னிகைகளை அவளுக்குத் தோழிகளாக அமைத்து எப்பொழுதும் உல்லாசமாயிருக்கும்படியானக் கட்டிடங்களையும் நந்தவனங்களையும் அமைத்து அவர்களை அதற்குள்ளாக வைத்துவிடுவோ மானால் உமது குழந்தை சுகபோகத்தில் அமிழ்ந்தி இருப்பாரென்றார்கள். இவைகளைக்கேட்ட அரசனுக்கு சந்தோஷம் பிறந்து பளிங்குகளாலிழைத்த வினோதமுள்ள மூன்று வகைக் கட்டிடங்களைக்கட்டி சலதாரைகள் ஓடும்படியான சூத்திரங்களியற்றி பலவருண புட்பங்கள் அமர்ந்த நந்தவனங்களைப்பறப்பி தென்றல் வீசும்படியான முகத்துவாரங்களமைத்து தன் பிள்ளையின் மனதைக்கவரும்படியான அதிரூபமுள்ள அசோதரை என்னும் ஓர் அரசகுமாரத்தியை விவாகஞ் செய்து அவளுக்குத் தோழிகளாக நடின கீதவல்லபமுள்ள அரம்பை, ஊர்வசி, மேனகை, திலோர்தமை என்னும் நான்கு தோழிகளை அமைத்து நூதனமாகக்கட்டி வைத்திருக்கும் மாளிகையில்

விட்டு தேசத்தின் சுகதுக்க சங்கதிகள் யாதொன்றும் உள்ளுக்கு எட்டாமலிருக்கும் படியானக் காவலாளர்களை நியமித்து வைத்திருந்தான்.

பளிங்குகளாலிழைத்தக் கட்டிடத்தின் மகிமையாலும் பலபுட்பங்களின் கந்தத்தினாலும் நாட்டியப்பெண்களின் கீதத்தினாலும் சித்தார்த்தருக்கு சுகபோகம் பிறந்து அசோதரையுடன் கலந்திருக்குங்காலத்தில் ஓர் ஆண்குழந்தை பிறந்தது.

அக்குழந்தைக்கு இராகுலனென்னும் பெயரிட்டு வளர்த்துவருங்கால் சித்தார்த்தருக்கு தன் சுதேசிகளின்பேரில் நோக்கம் பிறந்து நாம் இவ்வளவு சுகபோகத்துடன் வாழ்ந்துவரும்போது நம்முடைய தேசத்துக்குடிகளும் இவ்வகை சுகங்களை அநுபவிக்கின்றார்களா, அதைப்பார்க்க வேண்டுமென்று தன்தந்தைக்குத் தெரிவித்தார்.

அந்த சங்கதிகளைக் கேழ்விப்பட்ட அரசனுக்கு ஆனந்தம் பிறந்து பிள்ளை நகர் சோதனைக்குப் புறப்படுகிறபடியால் தேசமெங்கும் அலங்கரிக்கும் படியானத்திட்டஞ்செய்து சித்தார்த்தரை நகர்வலம் போம்படி உத்திரவளித்தான்.

சித்தார்த்தரும் தந்தை உத்திரவின்படி நகர்வலம் வரும்போது வீதிகள் தோரும் தோரணக்கம்பங்கள் நிருத்தி வாழைக்கமுகுகள் தொங்கவிட்டு வீடுகள் தோரும் கற்புடைய மங்கையர்கள் மயில் விசிரியுடன் கற்பூர ஆலார்த்தி ஏந்தி நிற்பதைக்கண்டு சந்தோஷமுண்டாகி நம்மைப்போல் குடிகளும் ஆனந்தமாக இருக்கின்றார்கள் என்று எண்ணி சற்றுதூரம் போகையில் எலும்புந் தோலுமுள்ள ஓர்விருத்தன் தடியூன்றி தள்ளாடிக்கொண்டு வருவதைக்கண்டு சாரதியை நோக்கி - சன்னா! இதோ நம்முடைய முன்னிலையில் வருவது மநுடரூபமா என்று கேட்டார் அதற்கு சாரதி இறைவனே அது மநுடரூபந்தான் அவனுக்கு வயது முதிர்ந்து விட்டபடியால் தேகந்தளர்ந்து மரணத்துக்கு சமீபித்திருக்கின்றான் என்றான்.

அதைக்கேட்ட சித்தார்த்தர் திடுக்கிட்டு ஆ! ஆ! இதுதானோ மனிதன் முடிவில் அடையும்படியான சுகமென்று எண்ணிக்கொண்டு சற்று தூரம் போகையில் சில சனங்கள் அழுதுக்கொண்டு ஓர் பிரேதத்தைப்பாடையில் வளர்த்தி எடுத்து வந்தார்கள் அதை சித்தார்த்தர் கண்டு சாரதியை நோக்கி - சன்னா! இது என்ன என்றார்.

"இறைவனே இதைப்பிரேதமென்று சொல்லுவார்கள் ஆனால் நம்மைப்போன்ற மனித உருவந்தான். பிராணன் நீங்கிவிட்டபடியால் குடும்பத்தோர் அழுதுக்கொண்டுபோய் உடலைத்தகனஞ் செய்யப்போகின்றார்களென்றான்".

அதற்கு சித்தார்த்தர் சாரதியை நோக்கி-சன்னா! நாம் முன்பு கண்ட விருத்தாப்பியன் படும்படியான துக்கத்தைவிட இது அதிகமானதோவென்றார்.

"இறைவனே! அவன் தள்ளாடிய மூப்பு நிலமையிலிருந்தபோதிலும் நாடு நகரம் வீடு வாசல் பிள்ளை பெண்சாதி இவைகளைப்பார்த்துக் கொண்டிருக்கின்றான். இந்தப்பிரேதமோ என்றால் நாடு நகரம் வீடுவாசல் பிள்ளை பெண்சாதி சகலரையும் மறந்து அக்கினிக்கிறையாகி சாம்பலாகப் போகுதென்றான்"

அதைக்கேட்ட சித்தார்த்தர் மனங்கலங்கி மனிதன் உலகத்தில் பிறந்து வளர்ந்து செய்து வந்த காரியங்களுக்கெல்லாம் இதுதானோ கடைசிக் கூலி என்று தன் இரு கண்களையும் மூடிக்கொண்டு சாரதியை நோக்கி சன்னா! நாம் உலகத்தில் கண்டசந்தோஷம் போதும் இரதத்தை அரண்மனைக்குத் திருப்புமென்று சொல்லி மாளிகை சேர்ந்தார்.

சேர்ந்த அன்று இரவு முழுவதும் நித்திரையில்லாமல் சிந்தனை உடையவராய் உலகிலுள்ள மநுடசீவர்களுக்கு முடிவுவரையில் துக்கவழிகள் திறந்திருக்கின்றபடியால் அதை அடைக்கும் எதிரிடையான சுகவழி ஒன்றிருக்கவேண்டும் அவ்வகையான வழியை நம்முடைய தேகந்தளர்ந்து தடியூன்றிக்கொள்ளுவதற்கு முன்பு அறிந்து உலகிலுள்ளோர்களை ஈடேற்ற வேண்டுமென்னும் அன்பு பிறந்து சகல பற்றுக்களையும் விட்டு வெளியில் புறப்படும்போது தன்மனைவி அசோதரையின் பாசக்கயிறு ஒருபக்கம்

இழுக்க உலகிலுள்ள சீவராசிகளை ஈடேற்றவேண்டும் என்னும் காருண்யக்கயிறு ஒருபக்கம் இழுக்க, திடங்கொண்டு உலகிலுள்ள சீவராசிகளின் ஈடேற்றமே பெரிதென்றெண்ணி வெளிவந்து சன்னாவென்னும் சாரதிமூலமாகக் குதிரையைக்கொண்டு வரச்செய்து அதின் பேரிலேறிக் கொண்டுபோய் ஓரிடத்தில் இறங்கி தன்னுடைய ஆபரணங்களெல்லாவற்றையும் கழட்டி சாரதியிடங்கொடுத்து குதிரையைக்கொண்டுபோய் அரண்மனையில் சேர்த்துவிட்டு என் பிறிவையுஞ் சொல்லிவிடுமென்று கூறி அனுப்பிவிட்டார்.

இதை பூர்வ சரித்திரங்களில் "பெருந்துறவென்றும், மகாராஜ துறவென்றும்" எழுதப்பட்டிருக்கிறது.

சித்தார்த்தர் குதிரையை அனுப்பிவிட்டு காடுமலை முதலிய இடங்களில் பாதசாரியாக நடந்து காலபுசிப்புகள் தவரி பலஇடங்களிலுஞ் சென்று இரந்துண்டு துக்கநிவர்த்திக்கான வழிபுலப்படாமல், "புத்தகாயா" என்னும் பட்டினத்தில் சேர்ந்து மராமரம், கல்லாலமரம், அசோகுமரம், பிண்டிமரம் போதிமரமென்று வழங்கும் அரசமரத்தடியில் உட்கார்ந்து, தன்னிற்றானே . சிந்தித்து துக்கத்திற்கு எதிரிடையான சுகவழியைக் கண்டுபிடித்தவுடன் மன்மதன் என்னும் காமத்தையும் காலனென்னும் மரணத்தையும் ஜெயித்து முதலாவது அவ்விடம் தன்னை அடுத்த மாணாக்கர்கள் ஐந்து பேருக்குச் சுகவழியை (சில வரிகள் தெளிவல்லை)

"முடிவில் அதே நித்திரையில் மறைந்துபோகின்றான்."

"இவ்வகையானக்காட்சிகளை பொய் என்றும் மாய்கை என்றும் சொல்லப்படும்"

"மாய்கையினின்று நீங்காதவன் மாமிஷ பட்சணத்தை வெறுத்தாலும் நிருவாணமாகச் சென்றாலும், மொட்டையடித்துக் கொண்டாலும், சடைதரித்துக் கொண்டாலும், கந்தை வஸ்திரம் அணிந்தாலும், சாம்பலைபூசிக்கொண்டாலும், அக்கினி தேவனுக்கு பலிகொடுத்தாலும், பரிசுத்தவானாகமாட்டான்."

"மாய்கையினின்று நீங்காதவன், வேதங்களை ஓதினாலும், நெருப்பில் குளித்தாலும், நீரில் மூழ்கினாலும், அனேகக்கொடிய தவங்களைச் செய்தாலும், பரிசுத்தவனாகமாட்டான்."

"பொருளாசை, கோபம், கள்ளுண்ணல், முறட்டுத்தனம், பிடிவாதம், வஞ்சகம், பொறாமை, தற்புகழ்ச்சி, புறங்கூறல், ஆணவம், கெடுமதி, இவைகள் தான் ஒருவனை அசுத்தமாக்கும்."

"இவைகளை நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுக்குள் உசாவி உலகத்தில் அநுசரிக்கவேண்டியவைகள் பத்தும், நீக்கவேண்டியவைகள் பத்துமாம்."

"அதாவது அருள், அவாவின்மை, தன்னையறிதல் இம்மூன்றையும் மனத்தினால் அநுசரிக்கவேண்டியது."

"இனியவைகூறல், உண்மெய்கூறல், பயனுள கூறல், அறங் கூறல் இந்நான்கையும், நாவினால் அநுசரிக்கவேண்டியது வணக்கம், ஈகை, தவநிலை, இம்மூன்றையும் தேகத்தால் அநுசரிக்கவேண்டியது. நீக்கவேண்டியவைகள், பத்தாவன, தீயசிந்தை, பேராசை, கோபம், இம்மூன்றையும் மனத்திலிருந்து நீக்கவேண்டியது. கடுஞ்சொல், பயனிலாச்சொல், பொய்ச்சொல், கோட்சொல் இந்நான்கையும் நாவிலிருந்து நீக்கவேண்டியது.

களவு, கொலை, பயனிலாச்செயல் இம்மூன்றையும் தேகத்திலிருந்து நீக்கவேண்டியது.

இவ்வகையாக "மனதாற்செய்யும் துற்செய்கைகள் தேகத்தைப்பற்றிக் கொண்டும், தேகத்தாற் செய்யும் துற்செய்கைகள் மனதைப்பற்றிக்கொண்டும் துக்கவிருத்தியை அதிகரிக்கச்செய்து அநித்தியமாகிய மரணத்திற்குக்கொண்டு போகும் வழியைத்திறந்து விடுவதுமல்லாமல் பிறவிக்கும் ஓர் வித்தாயிருக்கின்றது."

"மனதாற்செய்யும் நற்செய்கைகள் தேகத்தைப்பற்றிக்கொண்டும், தேகத்தாற் செய்யும் நற்செய்கைகள் மனதைப்பற்றிக்கொண்டும் ஒன்றுக்கொன்று கலந்து அன்பையும் ஆறுதலையும் பெருக்கி மெய்யாகிய நித்தியத்தின் வழியைத் திறந்து விடுவதுமல்லாமல் பிறவி என்னும் ஓர் வித்தையும் அழித்து விடுகின்றது.

"தன்னகத்தை அறிந்தவன் எவனோ அவன் சுகப்படுவான் உண்மெய்யை உணர்ந்தவன் எவனோ அவன் நன்மெய் அடைவான்." (சில வரிகள் தெளிவல்லை)

"உண்மெய்யில் நம்பிக்கை வையுங்கள்" உண்மெய்யை விரும்புங்கள் "உண்மெய்யில் அன்பை வளர்த்துங்கள்."

யதார்த்தத்தில் "உண்மெய்தான் எவற்றிற்குஞ் சிறந்தது" அதை யாதொமொருவர் மாற்றவாவது விருத்தி செய்யவாவது முடியாது"

"உண்மெய்தான் நித்தியத்திற்கு வழியாயிருக்கின்றது உண்மெய் தான் நித்தியமாயிருக்கின்றது, உண்மெய்தான் நிருவாண நிலையுமென்றறிந்து உலகமாய்கையில் நின்று இவன் மித்துரு, அவன் சத்துருவென்றும் இவன் உன்னியன் அவன் அன்னியனென்றும், இவன் சுதேசத்தான் அவன் புறதேசத்தான் என்றும், இவன் தாழ்ந்தவன், அவன் உயிர்ந்தவன் என்றும், இவன் செல்வமுடைவன் அவன் வருமை உடையவனென்றும் இது தாழ்ந்த சீவராசிகள் அது உயர்ந்த சீவராசிகளென்றும், ஒன்றுக்கொன்றை பேதிக்காமல் சகலசீவராசிகளுக்கும் உண்மெய் ஒன்றெண்றுணர்ந்து சீவகாருண்யம் உடையவர்களாய் பொருமை என்னும் பொக்கிஷத்தைச்சேர்த்து சுகவழியைக்கண்டடையுங்கள்."

என்று போதித்து வருகையில் சித்தாத்தருடைய குடும்பத்தார் அவ்விடம் வந்து அரசபுத்திரர் புழுதியுள்ள பூமியில் வெறுமனே உட்கார்ந்திருப்பதைக் கண்டு துக்கித்து தங்கத்தின்பேரில் நவரத்தினங்களில் இழைத்த ஓர் ஆசனத்தைக் கொண்டு வந்து வைத்து அதன் பேரில் உட்காரும்படி வேண்டிக்கொண்டார்கள்.

அதை அவர் தவிர்த்து தாமரைக் கொட்டையினால் ஓர் ஆசனஞ் செய்வித்து தாமரை புட்பத்தை பறப்பி அதன் பேரில் உட்கார்ந்துக்கொண்டு எதிரிலுள்ள வரன்முறையோர்களை நோக்கி இத்தாமரையானது நீரில் வளர்ந்து செழித்திருந்தபோதிலும் நீரில் ஒட்டாமலிருப்பது போலத் (ததாகதன்) பெருத்த அரச குடும்பத்தில் பிறந்திருந்த போதிலும் உங்கட் குடும்பமென்னும் தேகப் பற்றற்றவனாய் சகல சீவராசிகளின் உண்மெய்ப் பொருந்தி இருக்கின்றேன் என்று சீவகாருண்ய அன்பைப் போதித்து வருகையில் மநுட சீவர்களின் உள்ளங்கள் கனிவுற்றதுமல்லாமல் அவரைச் சூழ்ந்திருந்த மிருக சீவன்களின் உள்ளங்களுங்கசிந்து மிருகராசனாகிய ஓர் சிம்மம் ஓடிவந்து அவருடைய ஆசனத்தைத் தாங்கி நின்றது. ஓர் யானையானது குளங்களுக்கோடி தாமரை புட்பத்தைக்கொய்துவந்து அவர் பாதத்தில் சொரியும்படியான பூசல் நிதஞ் செய்துக்கொண்டு வந்தது. காட்டிலுள்ள சர்ப்பங்கள் ஓடிவந்து அவர் தாளிலுந் தோளிலும் அன்புப் பொருந்தத்தழுவி விளையாடிக்கொண்டிருந்ததுகள். இவ்வகை காலத்தில் அவருடைய மாணாக்கர்களில் சிலர் பற்பலச்சித்துக்களை விளையாடும்படியான எண்ணங்கொண்டு நிறைவேற்றி வருவதை சித்தார்த்தர் அறிந்து அவர்களை வரவழைத்து உலகத்தில் காணும்படியான வஸ்துக்கள் யாவற்றும் சித்துவடிவமாயிருக்க நீங்கள் என்ன சித்து விளையாடுகிறீர் களென்று கண்டித்தார் அதை உணராத மாணாக்கர்கள் ஓ! ஓ! ஏது இவருக்கு யாதொரு சித்து வகைகளும் தெரியாது போல் காணப்படுகிறதென்று தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

சித்தார்த்தர் அவர்களுடைய அறியாமைக்கிறங்கி சற்று மவுனமுற்றிருந்து தான் உட்கார்ந்திருந்த தாமரைபுட்பத்துடன் ஆகாயத்தில் எழும்பி கிழக்கு திக்குநோக்கி மறைந்துவிட்டார்.

இவ்வகையாக மறைந்து குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை, மருத மென்னும் பஞ்ச நிலங்களுக்குச்சென்று அங்கங்குள்ள சகல சீவராசிகளுக்கும் தருமோபதேசஞான நீதிகளைப்போதித்து நிருவாணமென்னும் மோட்ச இச்சையுள்ளவர்களுக்கு ஊருக்குங்காட்டுக்கும் மத்தியில் மடங்களைக் கட்டுவித்து யாதொரு புசிப்பின் கவலைகள் வராமல் குடிகளால் வேண்டிய உதவிகள் இவர்களுக்கு செய்து வருவதற்கு மதாணி பூணூலென்னும் ஓர் அடையாளந்தரித்து திருவோடுகளைக்கையில் கொடுத்து ஞானசாதனங்களில் பழகும்படிச்செய்தும் மற்றுமுள்ளக்குடிகளை சீவகாருண்யம் உடையவர்களாய் நீதி வழுவாமலிருக்கும்படிக்கும் போதித்து வந்தார்.

அருளாழி என்னும் தருமச்சக்கரத்தை உருட்டுவதற்கு 21-வயதில் துறவடைந்து 64-வருடகாலம் உலகெங்கும் சுற்றி தருமோபதேச ஞான நீதிகளைப்போதித்து வந்த காலங்களில் ஒவ்வொருவரும் சுத்த இதயமுடைய வர்களாய் தெளிவடைந்து மிக்க சுயக்கியானிகளானார்கள்.

உலகெங்கும் சுயக்கியானத்தை நிலை நிருத்தி விட்டு தனதுதேகம் உலகத்தில் மறையும்படியான காலத்தை எல்லோருக்குந் தெரிவித்து 85-வயதில் கங்கைக்கரை என்று வழங்கும் பேரியாற்றங்கரை பல்லவநாட்டில் சித்திரபானு வருடம் மார்கழி மாதம் 28-வது நாள் செவ்வாய்க்கிழமை பௌர்ணமி, திதி, திருவாதிரை நட்சத்திரம், துலாலக்கினத்தில், தனது வலது கரத்தை முடியின் கீழ்வைத்து இருகால்களையும் ஆனந்தசயனமாக்கி பஞ்சேந்திரிய தாரையை சோதிமயமாகக்கழட்டி நிருவாணதிசை அடைந்தார். அந்த நேரத்தில் காற்று அடங்கிற்று, சமுத்திரவோசை நின்றது, பட்சிகளும் மிருகங்களும் மவுனமுற்றன.

உமது பொற்றாமரைப்பாதம் மறைந்து விட்டதே என்று துக்கிப் பதற்குப்பகரமாக பூமியதிர்ந்தது, மநுட சீவர்கள் உலகத்தில் அஞ்ஞான இருள் மூடுமென்னும் துக்கத்தினால் புலம்பினார்கள்.

இவ்வகை மகிமை தங்கிய அவரது சரித்திரத்தை சுருக்கமாக எழுதப்பட்டிருக்கிறது இதன் விரிவை சம்பூரணமாக - சரித்திர ஆதரவின் படிக்கு பின்பு வெளியாகும் புத்தகத்தில் தெரிந்துக்கொள்ளலாம்.

அந்தந்த தேசங்களில் அவருக்குண்டாகிய மகிமைக்கும் காட்சிக்கும் தக்கதுபோல சிறு வயதில் அரசாங்கத்தை வெறுத்தபடியால் ஆசை நரைத்தக் கிழவனென்றும், புட்டா புத்தாவென்றும், அவருடைய மோட்ச அரசுக்கு புத்தேளென்றும், மோட்ச ராட்சியத்திற்கு புத்தேளுலகென்றும், அவருடைய போதனைகளை எழுதி வைத்திருக்கும் கட்டுக்கு புத்தகமென்றும், அவருடைய இனிமையான போதனைக்குப் புத்தெனென்றும், அவர்போதனையை அநுசரித்து நடக்கும் பிள்ளைகளுக்கு புத்தறரென்றும், மநுக்களின் அஞ்ஞான இருளை அகற்றினபடியால் பகவனென்றும், மநுட தேகமாகிய கடத்துள்ளிருந்த ஞான ஒளியை விரித்தபடியால் கடவுளென்றும், உலகமுழுமையும் தருமச்சக்கரத்தில் ஆண்டுவந்தபடியால் ஆண்டவனென்றும்.

குமரபருவத்தில் துறவடைந்தபடியால் குமரகுரு குமாரதேவரென்றும், அவருக்கு நிகரான சற்குரு உலகில் ஒருவரும் இல்லாமையால் விநாயகன் என்றும், ஒரு தேசங்களை விட்டு மறுதேசங்களுக்குப்போவது ஒருவருக்குந் தோன்றாமலிருந்தபடியால் மாயோனென்றும், மவுனத்தெளிவுற்றபடியால் பிரமமென்றும், சைவமென்னும் தன்னையறிந்தபடியால் சிவமென்றும், அவர் போதனா சக்த்தி உலகெங்கும் பறவி இருந்தபடியால் திருமால் என்றும், அவர் சதுரகிரி என்றும் இந்திரகிரி என்றும் வழங்கிவரும் மலையிலிருந்துக் கொண்டு ஞான நீதிகளைப்போதித்து வருங்காலத்தில் தென்தேசத்திலிருந்து அவருடைய போதனையைக் கேட்கவருகிறவர்கள் அவரை வடக்கு மலையான், என்று வடதேசத்திலிருந்து அவருடைய போதனையைக் கேட்க வருகிறவர்கள் அவரை தட்சணமூர்த்தி என்றும்.

அவர் நிருவாண திசையடைந்தவுடன் ஏழு அரசர்கள் அவருடைய அஸ்திகளைக்கொண்டு போய் அவைகளின் பேரில் ஏழுகோபுரங்களைக்கட்டி வைத்தபடியால் ஏழு மலையானென்றும், பொருமை என்னும் ஆயுதத்தினால் உலகெங்கும் செயித்து வந்தபடியால் தண்ணாயுதனென்றும், சாக்கையர் குலத்தில் பிறந்தபடியால் சாக்கையரென்றும், எக்காலத்தும் பெருங்கூட்டத்துடன் இருந்தபடியால் சைனரென்றும், அவருடைய போதனையை எல்லோரும் ஏற்றுக்கொண்டிருந்த படியால் சாத்தனென்றும்.

தரும நீதிகளை எங்கும் நிலை நாட்டி வந்தபடியால் அறவாழியன், அறக்கடவுள், அறன், அறப்பளீசனென்றும் அறிவை விருத்தி செய்யக்கூடிய கற்பனைகளைக் கொடுத்த படியால் - அறியென்றும், அவர் அடியார் போதித்துள்ள முதநூலுக்கு அறிச்சுடி என்றும்.

பூமிசை நடந்து உலகெங்கும் சுற்றிவந்தபடியால் உலகளந்தோனென்றும், உலகத்தில் அருமையான சற்குருவாக வந்தபடியால் அருகனென்றும், அரசனுடைய பிள்ளையாகையால் கோபாலனென்றும், அரசருக்குள் விந்தையான துறவடைந்த படியால் கோவிந்தனென்றும்.

காமத்தை செயித்துக்கொண்டபடியால் காமதகனனென்றும், மரணத்தை செயித்துக்கொண்டபடியால் கால காலனென்றும், பெருத்தக்கூட்டங்களிலுள்ள ஒவ்வொருவர்களுடைய எண்ணங்களையும் அறிந்து அவரவர்களுக்குள்ள சந்தேகங்களை நிவர்த்திச்செய்துக்கொண்டு வந்தபடியால் ஆயிரங்கண்ண னென்றும், உலகத்தைக்காணும் ஊனக்கண்கள் இரண்டும், உண்மெய்காணும் ஞானக்கண் ஒன்றும் கூடிய முக்கட்பகவனென்றும்.

மோட்ச வீட்டிற்கு முதன்மையான வழிகாட்டியாயிருந்த படியால் அண்டர் கோன், வானவர்க்கு அரசன் என்றும், ஒவ்வோர் அரசர்களையும் தருமக்கொடி நாட்டும்படி செய்து வந்தபடியால் தருமராசன் என்றும், அங்கங்கு சங்கங்களை ஏற்படுத்தி தருமநீதிகளை போதித்து வந்தபடியால் சங்கறரென்றும், உலகெங்கும் அவருடைய போதனா நீதி விளங்கினபடியால் ஜகந்நாதனென்றும், நீலங் கருப்பென்று சொல்லும்படியான தேகநிறத்தைப் பெற்றிருந்தபடியால் முத்தனென்றும், அரசைத்துறந்தபடியால் முநியென்றும், உலகத்தில் சென்ற இடமெல்லாம் சிறப்புற்றபடியால் செல்வனென்றும், அறம் பொருள், இன்பம் வீடென்னும் நான்கு வாய்மையை தெளிவித்தபடியால் நான்முகன் என்றும், புருடரில் உத்தமகுணத்தைப் பெற்றிருந்தபடியால் புருடோத்தம னென்றும், மேன்மையான தவத்தை பெற்ற படியால் மாதவனென்றும், இன்னுமுள்ள ஆயிர நாமங்கள் அவருக்களித்திருப்பதாக கமலச் சூத்திரத்தில் சகஸ்த்திர நாம-பகவனென்றும், மணிமேகலையில் ஆயிர நாமத்தாழியன் திருவடி என்றும் கூறியிருக்கின்றார்கள்.

பஞ்சேந்திரிய தாரையை ஐந்து வருண சோதிமயமாகக் கழட்டிக் காண்பித்தபடியால் பஞ்சேந்திரிய தாரை விட்டோனென்றும், முநீந்திர னென்றும், இந்திரனென்றும், அவர் மனைவியை இந்திராணி என்றும், அவர் வாழ்ந்த கூடத்தை இந்திர கூடமென்றும், அவர் நந்தவனத்தை இந்திர வனம் என்றும், அவர் நெடுங்காலந் தங்கி பிரசங்கித்திருந்த சதுரகிரி என்னும் மலைக்கு இந்திரகிரி என்றும், உலகம் இவ்வகையான மாய்கையாயிருக்கிறதென்று அவரால் காண்பித்த ஓர் வகை ஜாலத்திற்கு இந்திர ஜாலமென்றும், ஐந்து வருணமாக வானத்தில் தோன்றும் ஓர்வகை (ஜலபிம்ப) வில்லுக்கு இந்திரவில் என்றும், அவர் சோதிமயமாக சுவர்க்கவான மேறிய பெயரை மட்டிலும் விசேஷமாகக் கொண்டாடி வந்தபடியால் அவருடைய காலத்திற்குப் பின்பு தோன்றிய ஒவ்வோர் அரசர்களின் சிறப்பைக் கொண்டாடுவதற்கு சற்குருவின் மகிமை தங்கிய பெயரை ஆனந்தமாக வைத்து இந்திரருக்கு ஒப்பானவனென்றும், இந்திர வனத்திற்கு ஒப்பானதென்றும், இந்திர கூடத்திற்கு ஒப்பானது என்றும், இந்திர விமானத்திற்கு ஒப்பானதென்றும், ஒவ்வோர் வித்துவான்களின் செய்யுட்களிலும் சிறப்பித்து வந்தார்கள். அவ்வகை சிறப்பானது எங்கும் பறவி வடபரத கண்டம் தென்பரத கண்டமென்று வழங்கி வந்த இத்தேசத்திற்கு வட இந்தியம் தென்னிந்தியம் என்றும் குடிகளுக்கு இந்தியர்களென்றும் இந்து மதத்தரென்றும் வழங்கி வருகிறார்கள். மற்றுமுள்ள, சீனம், ஜப்பான், சையாம், தீபெத், நேபால், பர்மா, சிலோன், ஆசாம் முதலிய தேசங்களில் அவர் ஞானத்தின் மகிமைக்குரிய புத்தரென்றும் பெயரை விசேஷமாக வழங்கி வந்தபடியால் புத்தமதத்தரென்று வழங்கி வருகிறார்கள். அவர் உலகத்தில் சற்குருவாக வந்து சகல ஞானங்களையும் விளக்கிவைத்தபடியால், நாளது வரையில் நாம் வாசித்து வரும்படியான ஒவ்வோர் ஓலைச் சுவடிகளின் முகப்பிலும் அறி-ஓம், நன்றாக குருவாழ்க, குருவேத் துணை என சிந்தித்து வருகிறோம்.

பந்தமெல்லாந் தீரபரஞ் சோதி நீகுருவாய்
வந்த வடிவை மரவேன் பராபரமே

என்று தாயுமானவரும்

ஆதனடரு மானந்த செங்கமலத் தாளருள
மானிடர் போல் மண்மிசையில் வந்ததிசயமே

என்று நிகழ் காலத்திரங்கலிலும்

மானிடமாய் வந்ததிரு மேனியின்றன் மையுணராதார் நேரா வருளே
வறிவென்றறியாதார்.

என்று தத்துவக்கலி மடலிலும் மற்றுமுள்ள ஞான நூற்களிலும் அவரை குருமூர்த்த மாகக் கொண்டாடி வந்தவை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றது.

சையாம், ஜப்பான், சீனம், பர்மா, தீபேத், நேபால், சிலோன், ஆசாம் முதலிய தேசத்தோர்கள், நமோதஸ்ஸ பகவத்தோ அதோ சம்போசம் புத்தஸ்ஸ என்னுங்கீதையை அவரவர்களுடைய பாஷையினாலும் இக்கீதையினாலும் தியானித்து வருகின்றார்கள்.

இதன் கருத்தோ என்றால் குன்றாத மனபாக்கியமும் மேலான மகத்துவமும் வந்தனையுடையவும் ஞானிகள் யாவருக்கும் மகாஞானியான புத்த சுவாமியை நமஸ்கரிக்கிறோம் என்பதேயாம்.

மேற்கூறிய தியானத்தில் கூறியுள்ள சம்போ சம்புத்தஸ்ஸ என்னும் வாக்கியத்தை அநுசரித்து திருவள்ளு சாம்பவனார் என்பவர் தான் இயற்றியுள்ள ஞானவெட்டி என்னும் நூலில் சாம்பவ மூர்த்தியாகிய புத்தருக்குப்பட்டங் கட்டியவர்களும் அவருடைய குடும்பத்தோர்களுமாகிய வள்ளுவர்கள் நாங்களென்றும் சாக்கைய குலவம்மிச வரிசையை விளக்கியும் வள்ளுவர்களை பறையரென்று இழிவு கூறி வருவது நியாயமல்ல என்றும் வெகுவாகக் கண்டித்து எழுதியிருக்கின்றார் - பட்டமென்பது மணமகனுக்கும் மணமகளுக்கும் உரிய குடும்பத்தார் இன்னாரின்னாரென்று, தெரிந்து கொள்ளுவதற்கு தங்கதகட்டினால் நெற்றியில் கட்டும் ஓர்வகை விருதென்னப்படும். திராவிடபாஷையின் ஒலிவடிவகாலம், அட்சரகாலம், இலக்கணகாலம், சமுதாயகாலம், அநாதரகாலம் இதிகாசகாலம், ஆதீனகாலம், என்னும் சப்தகாலங்களில் சமுதாய காலமுடிவில், கடைச்சங்கம் இரண்டாயிர வருஷம் இருந்ததாகத்தெரிய வருகிறது அக்காலத்தில் திருவள்ளுவ நாயனார் குறள் ஏற்படுத்தியிருக்கின்றார்.

அவருடைய குறள் ஏற்பட்டு ஏறக்குறைய மூவாயிர வருஷமாகிறது.

சமுதாய காலத்திலேனும், அநாதர காலத்திலேனும், சாதிபேதத்துக்குரிய சரித்திரங்கள் யாதொன்றுங் கிடையாது.

பாரத இராமாயண முதலியவைகள் ஏற்பட்ட, இதிகாச காலத்தில் சாதிபேதங்கள் ஏற்பட்டிருப்பதாக சரித்திர ஆதரவுகள் இருக்கிறபடியால் திருவள்ளுவ சாம்பவனார் இயற்றிய ஞானவெட்டி வெளிவந்து ஏறக்குறைய 1700 வருஷமாகிறது.

1800 வருஷங்களுக்கு முன் இத்தேசத்தில் புத்தருடைய மகத்துவங்களையும் அவருடைய திருவிழாக்களையும் கொண்டாடி வந்ததாக சரித்திர ஆதரவுகளும் சிலாசாஸனங்களும் இருக்கிறபடியால் சாதிபேதங்களை ஏற்படுத்தி புத்தமதத்தை நிலைகுலையச் செய்து புத்தமதத்தோரை பறையரென்று ஏற்படுத்திய காலம் ஏறக்குறைய 1700 வருஷத்திற்கு உட்பட்டதேயாம்.

உலகெங்கும் சாதி வித்தியாசமென்னும் மடமையில்லாமல் சொற்பதேசமாகிய தென்னிந்தியாவில் அனந்தசாதிகள் ஏற்பட்டிருப்பதற்குக் காரணமென்ன என்றால் புத்தமதத்தைச்சார்ந்த சாக்கைய குலத்தோரை பறையரென்று கடைசாதியாக ஏற்படுத்தி புத்தமதத்தை தலைஎடுக்கவிடாமல் செய்வதற்கும்.

புருசீக தேசத்தார் தங்களை பிராமணர் பிராமணரென்று உயர்த்திக் கொண்டு தங்கள் சீவனத்திற்கு ஏற்படுத்திக்கொண்ட மதங்களை விருத்தி செய்வதற்குமேயாம்.

சாக்கைய வகுப்பென்பது என்ன என்றால் பூர்வகாலத்தில் வருங்காலம் போங்காலங்களை அறிந்து சொல்லக்கூடிய ஆரூடர்களுக்கு சாக்கையர் களென்றும் - வள்ளுவர்களென்றும், நிமித்தகர்களென்றும் வகுத்து வைத்திருந்தார்கள்.

அந்தசாக்கைய வகுப்பார்கள் அரசர், வணிகர், வேளாளரென்ற மூன்று தொழிலாளர்களுக்கும் கருமத் தலைவர்களாயிருந்ததும் அல்லாமல், சக்கிரவர்த்திகளாகவும் இருந்தார்கள்.

வள்ளுவர் சாக்கையரெனும் பெயர் - மன்னர்க்குள் படுகருமத்தலைவர்க் கொக்குமென்று - திவாகரத்திலும் - வருநிமித்தகன் பேர்சாக்கை வள்ளுவ னென்றுமாகும் - என்று நிகண்டிலும்.

கூறியிருப்பதற்கு ஆதரவாக, நமது ஒப்பிலா அப்பன் புத்தரவர்கள் சாக்கைய குலசக்கிரவர்த்தி வம்மிச வரிசையில் பிறந்து சாக்கைய முநி என்னும் ஓர் பெயரையும் பெற்று சாக்கையருக்கு குலகுருவாகவும் விளங்கியிருந்தார்.

சாக்கையர் ஆளுந்தலைத்தார் வெந்தனாக்கையுற்று தித்தனனாங்கவன் றானென - லென்று - மணிமேகலையிலும் - விரவு சாக்கையனேசை நன் விநாயகன் சினந்தவிர்ந்தோனென்று நிகண்டிலும், சாக்கையர் குருவின் மாயன் ஆங்கவர் புறத்தில் சாந்து - என்று *கூர்ம புராணத்திலும்*, மற்றுமுள்ள புத்தர் சரித்திரங்களிலுங் காண்க.

பூர்வ புத்தக் கியானிகளாகவும் புத்தருடைய குடும்பத்தோர்களாகவும் விளங்கிய சாக்கையர், வள்ளுவரென்பவர்களை, பறையரென்றும் ஈனரென்றும் வழங்கி வருகிறார்கள்.

சபைதனிலுள்ளவர்கள் சாக்கையனெனை, சாதியிலீனனெனசாற்றுகிறீர்
உபையோகமில்லாமலும் அங்க சுத்தி உடலறியா செபங்களோதுகிறீர்
வபையமதாகிய நூல் வீண்பிலுக்கு வாசியறியாமலும் மயங்குகிறீர்
அவையார் குலத்தில் வந்த வள்ளுவனெனும் ஆதி பீடமும் நாண்காணும்

என்று *ஞானவெட்டியிலும்*.

வேதமொழியர் வெண்ணீற்றர் செம்மேனியர்
நாதப்பறையினர் - என்னே - என்னும்
நாதப்பறையினர் நான்முகன் மாலுக்கு

நாதரின்னாதனா ரன்னே என்னும் - நான்முகனென்பது புத்தருடைய பெயர் என்று *திருவாசகத்திலும்*,

அறுவகை சமயத்தறையு மெய்ப்பொருளு மறுபத்துநாலு நற்கலையுல்
மறுவறப்பயின்று மாசறத்திகழும் மதிஞராமவர்களே எனினுங்
குறைவறத் தன்னைக் கொடுத்திடுங் குரவன் குரைகழல் புனைந்தவரன்றேல்
பறையர் மற்றவரை பறையரே எனினுமருள் உடையவர் பரம்பரரே.

என்று *அவிரோத உந்தியாரிலும்* - மற்றுமுள்ள ஞானநூற்களிலுங் காண்க.

புருசீகர்களென்று கூறியிருப்பது யாவரென்றால் சிலகாலங்களுக்குமுன் அக்கினியை தெய்வமாகத் தொழும்படியான ஓர் சாதியார் சண்டையில் முறியடிப்பட்டு இவ்விடம் வந்து குடியேறி யாசக சீவனத்தால் சிலகாலம் பிழைத்து இத்தேசத்தோரின் நடையுடை பாவனைகளையும் ஒழுக்கங்களையும் உணர்ந்து குடிகளும் அரசர்களும் மடாதிபதிகளுக்கு பயந்து நடந்து வருவதை நாளுக்கு நாள் பார்த்து சிற்றரசர்களையும் பெருங் குடிகளையும் தங்கள் மாய்கையால் வசப்படுத்திக் கொண்டு மடாதிபதிகளைப் போல் பூனூலணிந்து தங்களை அந்தணர்களென்று சொல்லிக் கொண்டு சிற்றரசர்களில் ஒருவர் இறந்துபோனால் அவர்கள் பெயரால் ஒவ்வோர் ஆலயங்களை கட்டிவிட்டு அவர்களுடைய சொத்துக்களையும் பூமிகளையும் அதற்கு ஆதரவாக வைத்துக்கொண்டு அந்த சீவனத்தினால் தங்கள் பெண்சாதி பிள்ளைகளுடன் சுகமாக வாழ்வதற்கு அவர்களால் உண்டு செய்துக்கொண்ட சுவாமிகளுக்கு இரண்டு பெண்சாதி, மூன்று பெண்சாதிகள் உண்டென்னும் கதைகளை ஏற்படுத்திவிட்டு இத்தேசத்தில் அவரவர் தொழில்களுக்கென்று ஏற்படுத்தியிருந்த பெயர்களை,

கீழ்ச்சாதி மேற்சாதி என்று மாறுபடுத்திவிட்டு அதில் தங்களை எல்லோருக்கும் மேலான பிராமண சாதி என வகுத்துக் கொண்டு புத்தமதக் கியானிகளை எல்லோருக்குந் தாழ்ந்தசாதி பறையர்களென்று இழிவு கூறி வந்தார்கள்.

இவ்வகையாக புருசீகர்களென்று வகுக்கப்பட்டிருக்கும் இதன் விவரங்களை அஷ்வகோசர் போதித்துள்ள "*நாராதிய புராண சங்கைத் தெளிவென்னும்*" சரித்திரத்தில் தெரிந்துக்கொள்ளலாம்.

புருசீகர்கள் செய்து வந்த மித்திர பேதத்திற்கும் சிற்றரசர்கள் ஆக்ஞைக்கும், மற்றக்குடிகள் பயந்து சாதிகட்டுக்குள் அடங்கி விட்டார்கள்.

சாக்கையர்களோ என்றால் அவர்கள் ஏற்படுத்திய சாதி கட்டுக்குள் அடங்காமல் தங்கள் குலகுருவின் ஞானமும் நீதியும் அழிந்து விடுகிறதென்னும் மனவருத்தத்தினால் புருசீகர்களைக்கண்ட இடங்களில் எல்லாம் அடித்துத் துரத்தியதும் அல்லாமல் மற்றக் குடிகளுக்கு சாதிபேதமும் விக்கிரங்களை சுவாமி என்பதும் பிசகென்று சிவவாக்கிய முதலிய நூற்களை இயற்றிக் கண்டித்து வந்தார்கள்.

சிவவாக்கியம் புத்தமதத்தைச் சார்ந்த நூலென்பதற்கு - அண்டர் கோனிருப்பிடம் அறிந்து கொண்ட ஞானிகள் - கண்ட கோவில் தெய்வமென்று கையெடுப்பதில்லையே என்னும் பாடல் போதுமான சாட்சியாயிருக்கின்றது. அண்டர் கோனென்பது புத்தருக்குரிய ஆயிரநாமங்களில் ஒன்றென்பதை - சூளாமணி என்னும் - நூலில் கூறியிருக்கும் புத்தர் தியானத்தில் தெரிந்துக் கொள்ளலாம்.

விண்டாங்கு வெவ்வினை வெரூ உதிரநூறி
விரிகின்ற மெய்ஞ்ஞான சுடர்விளக்கு மாட்டிக்
கண்டார்கணின் னிலமை கண்டொழுகயானின்
சுதிர்மயங்கு சோதியாற் கண்விளக்கப் பட்டுத்
தண்டா அமரை மலரின் மேனடந்தா யென்றும்
தமனீயப் பொன்னணையின் மேலமர்ந்தா யென்றும்
வண்டார சோகி நிழல் வாயமர்ந்தா யென்றும்
வாழ்த்தினால் வாராயோ வானவர்தங்கோவே.

புருசீகர்களோ என்றால் சிற்றரசர்களையும் பெருங் குடிகளையுந் தங்கள் வயப்படுத்திக் கொண்டு புத்தக் கியானிகளை பறையர் பறையரென்று தூற்றி கழுவு முதலியவைகளில் ஏற்றிக் கொன்றதும் அல்லாமல் ஓரிடங்களிலும் நிலைக்கவிடாமல் செய்து வந்ததாக அஷ்வகோசர் போதித்திருக்கின்றார்.

அதற்கு சாட்சியாக தன்னவர் அன்னியரென்னும் பட்சபாதம் இல்லாமல் நீதி செலுத்தும் கருணைதங்கிய ஆங்கிலேயர் ஆளுகையில் பறையர்களென்று வழங்கும்படியானவர்களை சுத்த சலத்தை மொண்டு குடிக்கவிடாமலும் இவர்கள் வஸ்த்திரங்களை வண்ணார்களைக் கொண்டு எடுக்கவிடாமலும் அம்மட்டர்களை சவரஞ் செய்யவிடாமலும் மேலான ஜீவனங்களில் பிரவேசிக்கவிடாமலும் கட்டுப்பாடு செய்து வைத்திருக்கும் அன்னிய சாதியார் தங்களுடைய சுயஅதிகார காலங்களில் இவர்களை என்னென்ன துன்பங்களுக்கு ஆளாக்கி இருப்பார்கள் என்பதை ஒவ்வொருவருந் தெரிந்துக் கொள்ளலாம் இவ்வகையான கொடூர துன்பங்களினாலும் தேசங்களை விட்டு தேசமாறுதலினாலும் நாளுக்குநாள் இவ்விடம் குடியேறியிருக்கும் பலமதஸ்தர்களின் போதனையினாலும் புத்தரே நம்முடைய குலகுரு என்பதும் புத்தமதத்தான் நம்முடைய சுய மதமென்பதும் விளங்காமல் திறை மறைவாயிருக்கின்றது.

ஆனால் இவர்களனுபவத்தினாலும் செய்கைகளினாலும் புத்தமதஸ்தர் களாகவே இருக்கின்றார்கள்.

எவ்வகையிலென்றால், நிகண்டில் கூறியிருக்கும் புத்தருக்குரிய பெயர்களில் முத்தனே முநிகருத்தன் முக்குடைச் செல்வன் முன்னோன் - என்று கூறியுள்ளபடிக்கு - இவர்களுக்குள், நாளதுவரையில் முத்தன், முனியன், கருப்பன், செல்லன் - என்னும் பெயர்களால் அழைத்துக் கொள்ளுவார்களல்லது வேறு மதத்தருடைய பெயர்களை விசேஷமாக வழங்கமாட்டார்கள்.

மணிமேகலையில் போதி நிழற்பொருந்தித் தோன்றும் நாதன்பாத நவைகெட வேத்தலென்று - புத்தருடையபோதனா நிலையைக்கூறி இருப்பதற்கு ஆதரவாக நாளது வரையில் இவர்கள் அரசமரத்தடியில் செங்கல்லை நட்டு முனியாண்டவன் பூசை செய்வார்களல்லது வேறுமரத்தடியில் வேறு வேறு தேவதைகளைப் பூசிப்பது கிடையாது அரசாணிக்கால் நட்டு புத்தர் சாட்சியாக விவாகங்கள் நடத்துவார்களல்லது - வேறு தேவதைகளை நியமிப்பது கிடையாது.

புத்தரவர்கள் நிருவாணமடைந்த நாளை பூர்வ அரசர்கள், இந்திர விழாக்கோலென்றும், போதிபண்டகை என்றும், மங்கலத் திருநாளென்றும், தீபசாந்தி, என்றும் புத்தர் சுவர்க்கவானம் ஏறிய நாளென்றும் மார்கழி மாதத்தில் இருபத்தியெட்டு நாள் திருவிழாக் கொண்டாடி வந்ததாக மணிமேகலை, அசோதரை காவியம், மற்றுமுள்ள புத்தசரித்திரங்களில் எழுதியிருக்கின்றார்கள்.

அதற்காதரவாக மார்கழி மாதம் முழுவதும் வீடுவாசல் முதலியவைகளை சுத்தப்படுத்தி மாதகடையில் அவர் சோதிமயமாக, சுவர்க்கவானமேறியநாளை - சொக்கபானை கொளுத்துகிறதென்றும் போதி பண்டிகையை போகி பண்டிகை என்றும் மறுநாள் புத்தராகிய இந்திரரை பூசிக்கும் நாளை பெரும் பொங்கலென்றும் பெரியாண்டவன் பூசை என்றும் இவர்களுடைய கிராமங்களில் நாளது வரையில் கொண்டாடி வருகிறார்கள்.

சிந்தாமணி

தேனுலாமதுச் செய்கோதை தேம்புகை கமழ்வூட்டி
வானுலாச் சுடர்கண் மூடி மாநகரிரவுச் செய்யப்
பானிலாச் சொரிந்து நல்லராணிகலம் பகலைச்செய்ய
வேனிலான் விழைந்த (சேரி) மேலுலகனைய தொன்றே
வேரியின் மெழுக்கார்ந்த மென்பூநிலத் -(து)
ஆரியாகவஞ் சாந்தத்தளித்தபின்
வாரி நித்திலம் வைப்ப பொற் பூவொடு
சேரிதோறிது செல்வத்தியற்கையே.

என்று சீவகசிந்தாமணி என்னும் புத்த நூலில் கூறியுள்ளபடிக்கு பூர்வ புத்தமத அரசர்கள் வாழ்ந்த இடங்களுக்கு சேரி என்று வழங்கி வந்த வார்த்தையை விடாமல், நாளது வரையில் இவர்கள் வாசஞ்செய்யுங் கிராமங்களுக்கு சேரி என்று வழங்கி வருகிறார்கள்.

சூளாமணி

மற்றமா நகருடை மன்னன்றன்னுய / ரொற்றை வெண்குடை நிழலுலகிற் கோருயிர்ப்
பெற்றியான் பயாபதி யென்னும் பேருடை / வெற்றிவேன் மணிமுடி வேந்தர் வேந்தனே.

சிந்தாமணி

கோதை நிலத்திலஞ் சூழ்குளிர் வெண்குடை / ஒத நீருல கொப்ப நிழற்றலால்
தாதையே யவன்றா நிழற்றங்கிய / காதலாற் களிக்கின்ற திவ்வையமே.

ஞானவெட்டி

பூணூல் தரித்துக் கோள்வோம் ஐம்பொறியும் புலனையும் அடக்கிக் கொள்வோம்,
வேண விருதுகளும் விசிதமாய் வெண்குடை சாமரையும் பிடித்துக் கொள்வோம்.
வானவர் முனிவர் தொழும் பொன் விசிறி மரகத குண்டலத்தின் கவசங்களும்,
ஞானப்பிரகாச ஒளி திவ்யகுண நாதனினர்ச்சனையில் நிதமிருப்போம்.

என்று ஞானவெட்டி - சூளாமணி - சீவகசிந்தாமணி முதலிய புத்த நூற்களில் - புத்த அரசர்களுக்கும் - புத்த சன்னியாசிகளுக்கும் வெள்ளை யானை வெள்ளைக்குதிரை வெள்ளைக்குடை முதலிய பதினெட்டு விருதுகள் உண்டென்று கூறியிருப்பதற்கு ஆதரவாக நாளது வரையில் இவர்களுடைய விவாக காலங்களில் வெள்ளைக் குதிரை வெள்ளைக்குடை முதலிய பதினெட்டு விருதுகளுடன் ஊர்வலம் வந்து முகூர்த்தம் நடத்தி வருகிறார்கள்.

சாக்கைய முநிவராகிய புத்தர் அரசமரத்தடியில் உட்கார்ந்து ஞான நீதிகளைப்போதித்து மார்கழிமாதம் நிருவாணதிசையடைந்ததுபோல அவருடைய போதனையை அநுசரித்து வந்த அம்பிகை என்றும் சிந்தாதேவி என்றும் வழங்கிவந்த ஓர் பெண்ணானவள் வேம்புமரத்தடியில் உட்கார்ந்து நீதிநூற்களையும் ஞானநூற்களையும் போதித்து திரிகால சங்கதிகளையும் உணர்த்தி ஆடிமாதம் நிருவாணதிசையடைந்ததாக அம்பிகாதருமம், மணிமேகலை முதலிய புத்தநூற்களில் கூறியிருப்பதற்கு ஆதரவாக சீனதேசபுத்தர்கள் - சாம்பா - என்றும் - நேப்பால தேசபுத்தர்கள்: மாரி: என்றும் சிலோன் தேசபுத்தர்கள் - மாயி - என்றும் - அதே பெண்தேவதையை சிந்தித்து வருகிறார்கள்.

அவைகளை அநுசரித்து இவர்கள் வாசஞ்செய்யும் சேரிகளில் ஒவ்வோர் பெண் தேவதியை வைத்து நாளதுவரையில் சிந்தித்து வருகிறார்கள்.

க்ஷேந்திராந்தம்

நீதியார் வேதநூலினெறியலாவறங்கணாலு
மோதியோரைந்து சீல முடையராயுடல மூடிப்
போதி நீண்மரத்தின் மேவு புத்தர் நால்வரினும் வைத்து
சாதி தானிலாத கொள்கை சௌந்திராந்திகன் முன் சாற்றும்

என்று புத்தமதத்தில் சாதிபேதமில்லாமலிருக்க வேண்டுமென்று போதித்துள்ள கட்டளைபடிக்கு பலவகைக் கால்வாய்களில் ஓடிவரும் அசுத்தசலங்களெல்லாம் - சமுத்திரத்தில் விழுந்து சுத்தமடைவது போல பிராமணனென்பவன் வந்தாலும் செட்டி என்பவன் வந்தாலும் முதலி என்பவன் வந்தாலும் நாயுடு என்பவன் வந்தாலும் அவர்களை வேறு சாதி என்ற வித்தியாசம் பாராமலும் சத்துருக்களென்று சங்கை கொள்ளாமலும் தன்னவர்களைப்போல் ஆதரித்து சுத்த இதயமுண்டாகச் செய்வார்களே அல்லது இன்னசாதி இனியசாதி என்று புறங்கூறி தள்ளமாட்டார்கள்.

ஒவ்வொரு அநுபவங்களும் செய்கைகளும் புத்தமதத்தைத் தழுவி வந்த போதிலும், பேதமைகுணத்தினால், குலகுருவின்பேரில் வைத்திருந்த அன்பைக் கொண்டு தாயைபரிகொடுத்த பிள்ளையானது எவ்வகையாகப் பலரை தேடியலையுமோ அதுபோல், துலுக்கர் கோவில்களுக்கும் கிறிஸ்தவர் கோவில்களுக்கும் வைஷ்ணவர் கோயில்களுக்கும் சைவர் கோவில்களுக்கும் போய்த் தங்களுடைய மதம் இன்னது தானென்று நிலையில்லாமல் திகைத்து நிற்கின்றார்கள் தாயை மறந்துவிட்டப் பிள்ளையானது தாயின் நிறத்தையும் தாயின் அங்கபாகத்தையும் தாயை மறந்துவிட்ட இடத்தையும் உய்த்து நிதானிக்குமானால் இடந்தெரிந்து தாயும் பிள்ளையை ஏந்திக்கொள்ளுவாள் பிள்ளையுந் தாயால் சுகமடையும்.

அதுபோல் குலகுருவை மறந்துவிட்ட இவர்கள் மதசம்மதமான நிலையில்லா மலிருக்குங் காரணமென்னவென்றும் அந்தந்த மதஸ்தர்களுக்கு கோவிலென்றும் குருக்க ளென்றும் நிலையங்களிருக்க சோதிடத்திலும் வைத்தியத்திலும் ஞானத்திலும் நீதியிலும் வல்லமை பெற்று பரம்பரை அநுபவமாயிருக்கும் நமக்கு கோவிலென்றுங் குருவென்றும் சொல்லும்படியான ஓர் நிலையுமில்லாமற் போனதற்கு ஏதுவென்ன வென்று உய்த்து நிதானிப் பார்களானால் குலகுரு இன்னாரென்று கண்டடைந்து குருவின் கருணையும் மதசம்மத ஒற்றுமையும் பெற்று வாழ்வார்கள்.

பிராமணர் என்று வழங்கும் புருஷகருக்கும் பறையரென்று வழங்கும் சாக்கையருக்கும் பூர்வமுதல் நாளது வரையில் ஓர்வகை விரோத மிருப்பதை எளிதிற் தெரிந்துக் கொள்ளலாம்.

பிராமணர் என்பவர்கள் பறையரென்று சொல்லும்படியானவர்களை சகல சுகங்களிலுந் தலையெடுக்கவிடாமல் தாழ்த்தி வரும் செய்கைகளினாலும்.

பிராமணரென்று சொல்லும் படியானவர்களை மற்ற சாதியோர்கள் குருவென்றும் மேலான சாதியென்றும் புகழ்ந்துக் கொண்டிருக்க பறையர்களென்று சொல்லும் படியானவர்கள் மட்டிலும் அவர்களை உயர்ந்த சாதியென்றாயினும் குருக்களென்றாயினு மதியாமல் தங்கள் கிராமங்களுக்குள் வந்து விடுவார்களானால் அவர்களை அடித்துத் துரத்திவிட்டு வீதியின் கடைசியில் சாணக் சட்டியைக் கொண்டுபோய் உடைத்து வருங்கிரியையினாலும் உள்ளப்பகை விளங்கும்.

புத்தமதத்தால் உண்டாகிய பூர்வ பகையானது நாளது வரையநுபவத்தில் இருந்தபோதிலும் அதன் விருத்தாந்தத்தை பூர்வமாக விசாரியாமலும்.

பூர்வ அரசர்கள் முதல் வைசியர் வேளாளரென்ற மூன்று தொழிலாளர்களுக்கும் இவர்கள் குருக்களாகவும் கருமத்தலைவர்களாகவும் மேன்மைப் பெற்றிருந்ததை சகல சரித்திரங்களிலும் வரைந்திருக்க நம்மை தாழ்ந்த சாதியாக இழிவு கூறிவருகிறார்களே அதன் மர்ம்மமென்னவென்று

கண்டு தெளியாமல், சத்துருக்களால் ஏற்படுத்தியிருக்கும் மதங்களைத் தழுவி கோவிலில்லாமலும் குருக்களில்லாமலும் திகைத்து நிற்கின்றார்கள்.

அன்னிய மதத்தார் ஏற்படுத்தியிருக்கும் விஷ்ணு கோவில் சிவன் கோவில் என்று சொல்லும்படியான இடங்களுக்கு பட்டை பட்டையாக நாமங்களை சாத்திக்கொண்டும் வட்டை வட்டையாக விபூதியை இழுத்துக் கொண்டு போனபோதிலும் பறையன் வந்தான் பறைச்சி வந்தாளென்று அடித்து துரத்துகிறதும் சிலர் போலிஸ் அதிகாரிகளுக்குச் சொல்லிமிரட்டுகிறதும் சிலர் இவர்களை கோவிலுக்கு அருகாமை வரவிடாமல் இவர் கொண்டுவந்த பொற்பூஷணம் வெள்ளி பூஷணம் பணமுதலியவைகளைப் பெற்றுக் கொண்டு மற்றமுள்ள தேங்காய் பழ முதலியவைகளை தங்கட் கைகளிற் தொடாமலும் உள்ளுக்குக் கொண்டுபோய் தீப அருச்சனை செய்யாமலும் கற்பூரத்தைக் கொளுத்தி தூரநின்று தட்டில் போட்டுவிடுகிறார்கள்.

அன்னியனுடைய தந்தையை தன்னுடைய தந்தையென்றும் அன்னியனுடைய தாயை தன்னுடையத் தாயென்றும் தாவிப்பிடிப்பது போல அன்னியமதத்தை தழுவுகின்றபடியால் அன்பும் ஆறுதலுமில்லாமல் அவமானத்திற்கு ஆளாக்கி விடுகின்றது.

இரவும் பகலும் உழைத்து கஷ்டத்துடன் சம்பாதிக்கும் பொருட்களை நமக்கு விரோதிகளாய் சகல விஷயங்களிலுந் தலையெடுக்க விடாமல் நசித்துக் கொண்டு வரும் சத்துருக்களிடத்தில் கொடுத்துவிட்டு அவமதிப்படைந்து வருவது என்ன பரிதாபம்.

அந்தோ, அன்னிய சாதியார் நமது குலத்தோர் மீதுள்ள பூர்வ விரோதத்தை வைத்துக் கொண்டு பலவகையாலும் இழிவு கூறி தாழ்த்தி வருவதை நாம் உணராமல் அவர்களுடைய பொறாமைச் செய்கைகளுக்குத் தாழ்ந்து தாழ்ந்து கொண்டே போவதினால் நாளுக்கு நாள் சீர் குலைந்து மதசம்மத ஒற்றுமையில்லாமல் மகமதியருடன் சேர்ந்து அவர்கள் சுவாமிக்கு (பாத்தியா) செய்து வருவதும் கிறிஸ்தவர்களுடன் சேர்ந்து அவர்கள் சுவாமிக்கு மெழுகுவர்த்தி மிளகு முதலியவைகள் இறைப்பதும் ஆகிய நிலையற்ற கருமங்களைச் செய்துக் கொண்டு நிர்ப்பாக்கியராகின்றோம்.

இனியேனும் நிலையற்ற செய்கைகளால் அன்னிய மதங்களைத் தாவி பிடித்து சத்துருக்களால் நசுங்குண்டு போகாமல் பூர்வ சுதந்திரங்களை அறிந்து நம்முடைய ஒற்றுமையினாலும் விடாமுயற்சியினாலும் புத்தமத அரசர் களுடைய உதவியைப் பெற்று நம்முடைய சுயமதத்தை நிலை நிறுத்தி மடாலயங்களைக் கட்டுவித்து குலகுருவாகிய சாக்கைய முநிவரை வணங்கி ஞான வழியின் நிலைகளை உணர்ந்து பஞ்ச சீலங்களிற் பழகி நிருவாண திசையை அடையும்படியானக் கிருத்தியங்களை நடத்துவதற்கு பகவனுடைய சம்பூரணக்கிருபை நங்குலத்தார்மீது உண்டாகும்படி பிராத்திக்கின்றோம்.

நமோதஸ்ஸ பகவதோ அர அதோ சம்போசம் புத்தஸ்ஸ

சாக்கையகுல நாயனார் குறள்

அறவாழி யந்தணன்றாள் சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீத்தலறிது.

சாக்கையகுல அவ்வையார் நீதிநூல்

அறஞ்செயல் விரும்பு

சித்தாந்தக் கொத்து

அருணெரியாற் பாரமிதை யாறைந்து முடன டக்கி
பொருண் முழுவதும் போதிநிழனன் குணர்ந்த முநிவரன்ற
னருண் மொழியா நல்வாய்மை யறிந்தவரே பிறப்பறுப்பார்
மருணெறியாற் பிறநூலு மயக்கறுக்கு மாறுளதோ.

வீரசோழியம்

தோடாரிலங்கு மலர் கோதிவண்டு வரிபாடு நீடு துணர்கோ
வாடாதபோதி நெறி நீழன்மேய வரதன் பயந்த வறநூல்
கோடாத சீல விதமேவி வாய்மை குணனாக நாளுமுயல்வார்
வீடாதலின்ப நெறிசேர்வர் துன்பவினை சோக நாளுமிலரே

யாப்பருங்கலக்காரிகை

பூந்தண் சினைமலர் மல்கிய பொழிற் பிண்டி
வேந்தன் புகழ் பரவாதவர் வினைலெல்லார் - அதனால்
அறிவன தடியிணை பரவிப்
பெறுகுவர் யாவரும் பிறவியினெறியே.

வானோர் தொழ வண்டாமரை
தேனார் மலர் மேல்வந்தரு
ளானாவருள் கூரறிவனைக்
கானார்மலர் கொண்டேத்தி வணங்குனர்
பலர்புகழ் முத்தி பெறுகுவர் விரைந்தே

புத்தருடைய சரித்திரங்களையும் போதனைகளையும் நம்முடைய தேசத்து சரித்திரங்களில் எவ்வகையாக எழுதிவைத்திருக்கின்றார்களோ அது போலவே, நேபால், சீனம், ஜப்பான், சையாம், பர்மா, சிலோன், தீபேத் முதலிய தேசங்களிலும் எழுதிவைத்திருக்கின்றார்கள்.

ஆனால் அவர் பிறந்த தேதியை மட்டிலும் கிஞ்சித்து மாறுபட எழுதி வருகிறார்கள்.

உலகெங்கும் மகிமை பெற்றிருக்கும் மகாஞானியின் பிறந்ததேதி மாறுபட்டதற்குக் காரணமென்னவென்றால் மகதநாட்டை அரசாண்டுவந்த சாக்கையகுல சக்கரவர்த்திகள் வமிச வரிசையிலுதித்து சாக்கையருடைய இருப்பில் அவர்பிறந்து வளர்ந்த சரித்திரங்கள் யாவற்றையும் ஜாதக அம்ஸமாக எழுதி வைத்திருந்தார்கள்.

அக்காலத்தில் சாக்கையருக்குச் சத்துருவாகப் புருசிகர்கள் இவ்விடம் வந்து சேர்ந்து சாக்கையர்களை பறையர் பறையரென்று இழிவுகூறி தலையெடுக்கவிடாமல் நசித்து விட்டபடியால் அவருடைய சரித்திரங்களின் வரிசையாவற்றும் சிதருண்டு விட்டது.

அந்தந்ததேசங்களில் அவர் நிர்வாணமடைந்த நாளை எந்தெந்த காலங்களிற் கொண்டாடினார்களோ அந்தந்த சரித்திரங்களின்படிக்கும் அவருடைய கட்டளைகளை மலைகளில் வரைந்திருக்கும் எழுத்து இலக்கங் களின் படிக்கும் 2500-2600 வருஷங்களுக்கு உட்பட அவர்பிறந்த நாளைக் குறிப்பிட்டு வருகிறார்கள்.

ஆனால் அவர்பிறந்து வளர்ந்த இத்தேசத்தின் கடைச்சங்கவித்து வான்களில் ஒருவராகிய வணிகசாத்தன் இயற்றியுள்ள பஞ்சகாவியங்களில் ஒன்றாகிய மணிமேகலை என்னும் சரித்திர ஆதரவின்படிக்கு அவர்பிறந்தது இந்த விகாரி வைகாசி மாதம் பௌர்ணமி வரையில் 3384 வருடமாகிறது.

பற்பல பாஷைகளிலுள்ள இவருடைய சரித்திரங்களை எவ்வகையில் தெரிந்துக் கொள்ளும்படி நேரிட்டதென்றால் புத்தருடைய ஞானங்களையும் நீதிகளையும் நன்குணர்ந்த ஐரோப்பியர்களும், ஜெர்மன்களும், அமேரிக்கர்களும் புத்தமதத்தில் சேர்ந்து அங்கங்குள்ள அவருடைய சரித்திரங்களை ஆங்கிலேய பாஷையில் வெளியிட்டிருக்கின்றார்கள்.

நமது குலகுருவாகிய ஒப்பில்லா அப்பன் சாக்கைய முநியவர்களின் ஞானத்தைக் கண்டடைவதற்கு மடாலயங்களும் அவருடைய போதனைகளைப் பிரசங்கித்து வருவதற்கு கூடங்களுங் கட்டுவித்து Buddhist Temple என்றும்,

நமது குலத்தவருக்குள் நடக்கும் விவாகங்களைக் குறிப்பிட்டு வைப்பதற்கு புத்தகங்களை ஏற்படுத்தி Buddhist Register என்றும்,

நமது குலத்தவருக்குள் மரணமடைந்தோர்களை புதைப்பதற்கும் தகனஞ் செய்வதற்கும் பிரத்தியேக பூமிகளை ஏற்படுத்தி Buddhist Burial என்றும்,

நமது குலத்து வயித்தியர்களை ஒற்றுமை அடையச்செய்து வயித்திய சாலைகளை ஏற்படுத்தி Buddhist Medical Hall என்றும்,

நமது குலத்து சிறுவர்கள் உயர்தரக்கல்வி இலவசமாகக் கற்றுக்கொள்ளுவதற்கும் தூரதேசங்களிலுள்ள நமது குலத்து சிறுவர்கள் சென்னைக்கு வந்து நிலையாக ஓரிடத்தில் தங்கி மெடிகல் காலேஜ்,

இஞ்சினியர் காலேஜ், அன்டர் காலேஜ் முதலிய இடங்களுக்குச் சென்று வித்தைகளைக் கற்றுக் கொள்ளுவதற்கும் ஓர் கட்டிடத்தை ஏற்படுத்தி Buddhist College என்றும்,

நமது குலத்து பாலியர்கள் சத்விஷயங்களில் பழகி ஆங்கிலேயபாஷையை பயிரங்கத்தில் தெளிவாக பேசுவதற்கும் தேகசுகவிளையாட்டுகளை ஆடுவதற்கும் ஒவ்வோர் கூட்டங்களை ஏற்படுத்தி Buddhist Young Men Association என்றும்,

வருஷந்தோறும் அந்தந்த வைகாசிமாத பௌர்ணமியில் புத்தர் பிறந்த நாளை கொண்டாடி வருவதற்கு Buddha's Birth day Anniversary என்றும்,

அந்தந்த வருஷ மார்கழிமாத கடைசியில் புத்தர் சுவர்க்கவாஸமேறிய நாளை 28 நாள் கொண்டாடி வருவதற்கும் போதி பண்டிகையன்று நமது குலத்து ஏழைகளுக்கு அன்னதானம் வஸ்திரதானமுதலியவைகள் செய்து வருவதற்கும் Buddhist Charity fund என்றும்,

ஒவ்வோர் நிலையான வரம்புகளை உண்டுசெய்து நமது குலத்தவர்களை ஒற்றுமைக்கும் சீருக்குங் கொண்டுவரவிருப்பமுடையவர்கள் அடியில் கையொப்ப மிட்டிருக்கும் பொதுக்காரியதரிசியவர்களுக்கு தங்கள் இருப்பிடங்களையும் பெயர்களையும் ஒப்பந்தரசீதில் எழுதி அனுப்பி விடுவீர்களானால் அதை சபை புத்தகத்தில் பதிவுசெய்து (சையாம்) (தீபேத்) முதலிய அரசர்களுக்கு அனுப்பி அவர்களை நமது சங்கத்தின் (Patron) இரட்சண்யகர்த்தர்களாக நியமித்துக் கொண்டு நமது பூர்வமதத்தை நிலைகாட்டும் உறுதி கொண்டிருக்கின்றோம்.

Pundit. C. Iyodhi Doss,
General Secretary, S.B. Society,
No. 7, M. Road, Rayapettah, Madras.

இப்படிக்கு
க. அயோத்திதாசபண்டிதர்
பொதுக் காரியதரிசி

(இது 1899இல் எழுதப்பட்டிருக்கக்கூடும்)

4. கடவுள்

கடவுள் எனும் மொழி தமிழா, கன்னடமா, தெலுகா, மராஷ்டிரமா என ஆராயுங்கால், அஃது தமிழ் மொழி என்றே கூறத்தகும். கடவுள் என்னும் மொழியை வரைந்துள்ளவர்கள் சைவர்களா, வைணவர்களா, வேதாந்திகளா என உசாவுங்கால் இம்மூவருமின்றி திரிபிடங்களுக்கு சார்புநூல்கள் வரைந்துள்ள சமணமுநிவர்கள் என்றே பரக்க விளங்கும். இவ்வகை விளங்கும் கடவுள் என்னும் மொழிக்குப் பொருள் யாது கூறியுள்ளார் என்று ஆராயுங்கால்,

11-வது நிகண்டுக்கரவெதுகை

இகல்பகை வலிபோர் முப்பேரிகுளையே தோழிநட்பாம்
புகரென்ப மழைக் கோள்குற்றம் புற்கெனுநிறமுமுப்பேர்
நகமனையுகிர் மரப் பேர் நகைமகிழொளி சிரிப்பாங்
ககனம் விண்படை காடென்ப கடவுள்தே முநிநன்மைப்பேர்.

கடவுள் என்னும் மொழிக்கு நன்மை என்னும் பொருள் கூறி இருக்கின்றார்கள். இதை அனுசரித்தே கடவுள், கடவுளர், கடவுளர்கள் என்னும் மொழிகளும் பிறந்திருக்கின்றது. இவ்வகைப் பிறந்துள்ள கடவுள் என்னும் பெயரை யாருக்கு அளித்துள்ளார் என்று ஆராயுங்கால், சாக்கைய முநிவரையே ஆதிதேவனென்றும் ஆதி கடவுள் என்றும் வரைந்திருக்கின்றார்கள்.

பின்கலை நிகண்டு - தெய்வப்பெயர் தொகுதி

தருமராசன் முன்னிந்திரன் சினன்பஞ்சதாரைவிட்டே
யருள்சுரந்தவுணர் கூட்டுந்ததாகதன் ஆதிதேவன்
விரவுசாக்கையனே சைனன் விநாயகன் சினந்தவிர்ந்தோன்
அரசு நீழலிருந்தோன் அறி அறன் பகவன் செல்வன்.

சூளாமணி

ஆதியங்கடவுளை யருமறை பயந்தனை / போதியங்கிழவனை பூமிசை யொதுங்கினை
போதியங்கிழவனை பூமிசை யொதுங்கிய / சேதியஞ்செல்வதின் றிருவடி வணங்கினம்.

சாக்கையமுநிவரை ஆதியங்கடவுளென்று கூறியிருப்பதுகண்டு அவர்

பின்னடியார்களுக்கும் இக் கடவுள் என்னும் பெயருண்டோ என்று ஆராயுங்கால்,

சீவகசிந்தாமணி - முத்தியிலம்பகம்

தணக்குறப்பறித்த போதுந்தானனை விடுத்தல் செல்லா
நிணப்புடையுடும்பனாரை யாதனானீக்கலாகு
மணப்புடைமாலைமார்ப னொரு சொலே யேதுவாகக்
கணைக்க வினழித்த கண்ணார்துறந்துபோய்க் கடவுளானான்.

எனக் கூறியிருக்கின்றது.

நன்மெய்க்கடைபிடி என்னும் ஒரு சொல்லே ஏதுவாக இல்லந் துறந்து கடவுளானானென்னும் மொழியின் ஆதரவால் நன்மெய்க் கடைபிடித்த மகாஞானிகள் ஒவ்வொருவருக்கும் கடவுள் என்னும் பெயர் பொருந்தி நிற்கின்றன. இவ்வகை பொருத்தமுறும் கடவுள் என்னும் நன்மெயாஞ் செயலை புத்தசங்கத்தார் இல்லை என கூறுகின்றார்கள் என்று அதன் பொருளறியா மற்ற சங்கத்தோர்க் குழறுவது வியப்பேயாம்.

அவ்வியப்புக்குக் காரணம் - சகஸ்திரநாமபகவனென்று கமல சூத்திரத்திலும், ஆயிர நாமத்தாழியன் திருவடி என்று மணிமேகலையிலும் கூறியுள்ள பெயர்களாகும் பிரமம், கடவுள், ஈசன், பகவன், பரமன் என்னும் புத்தருக்குரியப் பெயர்களை திவாகரம், நிகண்டு, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை, சூளாமணி, கமலசூத்திரம் முதலிய நூற்களை நோக்காமெயேயாம்.

- 1:1; சூன் 19, 1907 -

நூற்களைநோக்கினும் நுட்பமறியாது ஆகாயத்தில் சகோரபட்சி உண்டோ இல்லையோ என உசாவுவதுபோல நிர்மலம் உண்டா இல்லையா நிற்குணம் உண்டா இல்லையா என உசாவுவோர்க்கு மாற்றம் மவுனமேயாம்.

அதாவது காணாத பொருளுக்குக் கடவுள் என்றும் ஈசன் என்றும் பகவன் என்றும் பரமன் என்றும் பிரமன் என்றும் கூறியுள்ளப் பெயர்களைக் கொடுத்திருக்கின்றார்களா அன்றேல் காணும் பொருளுக்கே இவ்வகைப் பெயர்களைக் கொடுத்திருக்கின்றார்களா என உசாவுங்கால், எழுவகைத் தோற்றங்களுள் மனுக்கள் ஆறாவது தோற்ற நல்வாய்மை - நற்காட்சி - நற்கடைபிடி - நல்லுணர்ச்சி - நல்லீகை - நன்னியதியமைந்த செயல்களுக்கிட்ட பெயர்கள் என்றே விளங்கும்.

இத்தகைய செயலின் மகத்துவம் அறியாதோர் ஓர் கடவுளில்லாமல் உலகம் உண்டாச்சுதா, குயவனில்லாமல் பாண்டம் உண்டாச்சுதா என வினவுவதும் உண்டு.

அங்ஙனம் வினவுவோர் குயவனுக்கு மண் காரணமாயிருந்ததுபோல் கடவுளுக்குக் காரணம் எதுவெனக் கண்டறிவாரேல் சிருட்டிகள் உண்டா இல்லையா என்பது செவ்வனே விளங்கும்.

அல்லது கடவுள் என்னும் மொழிக்கும் சிருட்டிகள் என்னும் மொழிக்கும் பொருள் பொருந்துமா என உசாவுவரேல் பொருந்தாது, பொருந்தாதென்பதும் சிறந்து விளங்கும்.

சிறந்த விசாரணையற்று சருவமதத்திலும் உண்மெயுண்டென்று பரக்கக் கூறுவாறுமுண்டு. அங்ஙனம் கூறுவது மதத்துள் உண்மெய் உண்டா மக்களுள் உண்மெய் உண்டா என்னும் தன்மெய் உணரா தற்போதக் கூற்றேயாம். தற்போதக் கூற்றில் சருவமதஸ்தரும் தத்தங்கடவுளை தொழுது கொண்டிருக்க ஓர் கடவுள் இல்லை என்னலாமோ என வினவுவாரும் உண்டு.

ஒரு கடவுள் இல்லாமெயினால்தான் பலமதஸ்தர் பல கடவுளைத் தொழுது வருகின்றார்கள். பல கடவுள் செய்கையும் பதிகுலைந்துள்ளமெயால் அவர்கள் தொழுகையும் பயனில்லை என்பது பரக்க விளங்கும்.

அதாவது, சாதிதேசத்தை ஆளும் கூட்டை கலைப்பான் என்னும் ஓரரசனுக்கு குடி கெடுப்பான் என்னும் ஓர் மந்திரி இருந்தான். அத்தேசக் குடிகள் யாவரும் மந்திரியைக் கவனிக்காமல் அரசனுக்குக் கட்டவேண்டிய கப்பங்களைச்

செலுத்தி காலங்கழித்து வந்தார்கள். இதை நாளுக்கு நாள் அறிந்து வந்த மந்திரி குடிகள் நமக்கொன்றும் கொடுக்காமல் மதோன்மத்தமராய் காலங்கழிக்கின்றார்கள். இவர்களை அடக்க வேண்டுமென்னும் கெட்ட எண்ணங் கொண்டான். அரசனை அணுகி, அரசே நமது தேசத்து மக்கள் உம்மை அவமதித்து வருகின்றார்கள் என்றான். அதைக் கேட்ட அரசன் ஏனென்னும் விசாரிணை இல்லாமல் அதற்கு யாது செய்யலாம் என்றான். மந்திரி மன்னனை நோக்கி அரசே, ஒவ்வோர் வீட்டிற்குத் தலைமையான வனும் காலையில் அரண்மனைக்கு வந்து தம்மை சேவித்துப் போக வேண்டியது. அப்படி வராமற் போவார்களாயின் ஒவ்வொருவரும் பத்துபணம் ஆயம் செலுத்த வேண்டுமென தாங்கள் உத்திரவு பிறப்பிக்க வேண்டுமென்றான். அதைக் கேட்ட கூட்டைக் கலைப்பான் அரசனுக்குக் குதூகலம் பிறந்து தேசத்தோர்க்குப் பறையறைவித்து ஒவ்வொரு வீட்டிற்குத் தலைமையானவனும் அதிகாலையில் அரண்மனைக்கு வந்து என்னைத் தொழுது போக வேண்டியது. அப்படி வராதவர்கள் பத்து பணம் ஆயம் செலுத்த வேண்டுமென்று ஆக்கியாபித்தான்.

- 1:2; ஞா 26, 1907 -

அதுபோல் ஒவ்வோர் மனிதனும் தத்தமது சுகவிருத்திக்காம் ஏதுக்களை நாடி வித்தைவிருப்பென்னுங் காரண குருக்களின் போதங்களைக் கைக்கொள்ளாமல் காரியகுருக்கள் மதக்கடைகளைப் பரப்பி தத்தம் மதமே மதம் தத்தம் சமயமே சமயமென்னுங் கட்டுக்கதைகளை வரைந்து ஓட்டுச்சுவற்றிற்கு முட்டுக்கொடுப்பது போல் பொய்யிற்கு பொய் உபச்சரணப்பொய் என்னும் புராணமூட்டைகளைக் கட்டிவைத்துக்கொண்டு, பத்திரம் நமது சாமியை மறக்க வேண்டாம். வழக்கம்போல் எனக்குக் கொடுக்குந் துட்டில் குறைக்கவேண்டாம் இதுதான் நான் உங்களுக் கூட்டுந்துட்டுமதி என வஞ்சித்துப் பொருள்பறிக்கும் போதகராகும் பாதகர்களை நம்பி கல்வி விருத்தி கைத்தொழில் விருத்தியில் நின்று சுகஜீவனஞ்செய்து போஷிக்கும் வழிகளை மறந்து ஒவ்வொருவரும் அடிமெய்த் தொழில்புரிந்து அவர் கொடுப்பதை இரந்து தின்னுங் காரணம் யாதெனில், கடவுளென்னும் பொருளறியாக்கழற்றி நிலையேயாம். கடவுள் என்னும் பொருளறிந்தோன் நீதியினாலும் நெறியினாலும் வாய்மையினாலும் அதனை விளக்குவான். கடவுளென்னும் பொருளறியாதோன் கடவுள் எங்கும் நிறைந்திருக்கின்றான். அவனுக்கு எல்லாம் தெரியுமெனத் தம்பட்டமடிப்பான். ஆனால் அன்னியனுடையப் பொருளை அபகரிக்குங்காலத்தும், அன்னியன் மனைவியை இச்சிக்கும் காலத்தும், அன்னியனை வஞ்சிக்குங் காலத்தும் எங்கும் நிறைந்த கடவுள் எல்லாமறியுங் கடவுள் பார்ப்பானென்னுஞ் சிந்தனாச் செயலுண்டோ, இல்லை. அதாவது, உண்மையிற் சொல்லாததினாலேயாம்.

எங்ஙனமெனில், நமது தேயத்தில் வண்டி பாட்டைகள் செவ்வனில்லாகாலத்து வண்டிகள் மேடுபள்ளம் உராய்ந்து ஓடுங்கால், சக்கரத்துள் சொருகியிருக்கும் இரும்பு கம்பி அதாவது இரிசி உராய்ந்து ஓர்வகைக் கிரிச்சனக் கூச்சலிடுவது வழக்கம். அக்கூச்சல் இரவில் வண்டிகள் செல்லும்போது கூச்சலிடுமானால் நித்திரை பிடிக்காமல் அழுது கொண்டிருக்கும் பிள்ளைகளுக்கு பயமுறுத்துமாறு பிள்ளைகளுக்கு அந்த சப்தத்தைக் கேட்கவைத்து இரிசி வந்து பிடித்துக் கொள்ளும். இரிசாத்தாள் வருவாள் என்று போதிப்பது வழக்கம். இவ்வகை சிறுபிள்ளைகளுக்கு பயமுறுத்தியப் பொய் இரிசியாத்தாளென்னும் மெய்யுருகொண்டு கறுப்புக்கோழி பலியும் கறுப்பு பிடவைதானமும் பெறுவதைக் காணலாம்.

காடுகளிலுள்ள ஏரிகளின் அருகே தண்ணீர் மோதுவது ஓர் விகார சப்தங் கொடுக்கும். வவ்வால் முதலிய பட்சிகள் சிலமரங்களிற் தொங்குங்கால் கிளைகள் முறிந்துவிழுவதும் காற்றினாற் சிலகிளைகள் முறிந்துவிழுவதும் வழக்கம். காடுகளில் வெட்டிவிட்ட மரங்களும் பட்டுப் போன மரங்களும் இரவில் கருப்பாக ஆள்நிற்பதுபோல் காண்பது வழக்கம். இவைகளை அறிந்த

பெரியோர்கள் சிலர் தங்கள் பிள்ளைகள் இரவில் வெளியிற் போகுங்கால் அப்பா காட்டேரி சப்தத்திற்கும் காத்தடியால் விழும் மரசப்தத்திற்கும், கருப்பாகக் காணுங் கட்டைத் துண்டுகளுக்கும் பயப்படாமற் போங்களென்று சொல்லுவது வழக்கம்.

- 1:8; ஆகஸ்டு 7, 1907 -

அவற்றுள் காற்றுக்குங் கறுப்புக்கும் பயப்படவேண்டாம் என்பதே கருத்தாம். இதனுட்கருத்தறியா உன்மத்தர் பிள்ளைக்கு காற்றணுகிவிட்டது கோழியேனும் ஆடேனும் பலி கொடுத்தால் தீருமென்பாராயின் அவ்வாக்கியத்தை சிரமேற்கொள்ளும் அறிவிலிகளும் அவ்வாறே செய்து வருகின்றனர்.

காட்டிலுள்ள ஏரியின் சப்தத்திற்கு பயப்படவேண்டாம் என்று கூறியுள்ள விவேகிகளின் வார்த்தையின் உட்பொருளறியா அவிவேகிகள் காட்டேரி வீட்டுப்பின்னாலிருந்து பிள்ளைகளை அடித்துவிடுவது வழக்கம். அதற்குக் கறுப்புக் கோழி தானங்கொடுக்கவேண்டும் என்று கூறியவுடன் அவர்கட் கண்ணலாம் விவேகிகள் அவ்வண்ணே நடத்திவருகின்றார்கள்.

சில பாலபருவங் கடந்த ஆண் மக்களுக்கு சுகயீனமுண்டாகிப் பாயலிற் படுத்திருப்பதைக் கண்ட பெரியோர்கள் கன்னிமார் சொக்கலோ என்று பரிகசிப்பது வழக்கம். அதுபோலவே பெண்மக்களில் பாலபருவம் கடந்தவர் களுக்கு சுகயீனம் உண்டாகி பாயலிற் படுத்திருப்பதைக் கண்ட பெரியோர்கள் அண்ணமார் சொக்கலோவென்று அகடிதங் கூறுவது வழக்கம்.

இத்தகைய அகடிதவார்த்தைகள் அறியா அவிவேகிகள் அண்ணமாருக்கு ஆடடித்துப் பூசைப்போடுவதும், கன்னிமாருக்குக் கோழியடித்துக் கும்பம்போடுவது மாகியச் செயலின் காரணம் யாதெனில்.- அவ்வவர்க்குள்ள விசாரிணைக் குறைவும் அவிவேக நிறைவுமேயாம். விசாரிணையற்ற வீணர்கள் மதக்கடைகளைப் பரப்பி வாழ்க்கையுரும் மாக்களை அணுகி வணங்குங்கால் தத்தம் மதமே மதம், தத்தங் கடவுளே கடவுள் என்றிருமாப்புற்று மற்றோர் மதங்களையும் அன்னோர் கடவுளையுந் தூழித்து வீட்டுக்கடவுள், மேட்டுக்கடவுள், காட்டுக்கடவுள் யாவரும் பொய், யாங் கூறும் ஒரு கடவுளே மெய்யெனத் தம்பட்டமடிக்குங்கால் வெவ்வேறு மதத்தர் தத்தங் கடவுளொன் றென்று வரைந்திருக்கும் ஆதாரங்களைப் புகட்டி ஒவ்வொரு மதத்தரும் ஒவ்வொரு கடவுள் உண்டென்று கூறியிருக்க ஒரு மதத்தர் இல்லையெனக் கூறுதல் இதமாமோ என்றேய்த்தலும் உண்டு.

இங்ஙனம் ஏய்த்துப் பொருள்பறிக்கும் மதக்கடையார் தங்கடவுள் குணாகுணங்களையும் அன்னோர் செயல்களையும் ஏனையோர்க் கடவுளரின் குணாகுணங்களையும் அவரவர்கள் செயல்களையுங் கூர்ந்து விசாரிப்பரேல் அதினந்தரார்த்தம் பரக்கவிளங்கும்.

அவ்வகை விசாரிணையின்றி ஊர் குடியைக் கெடுக்கும் உருத்திராட்ச பூனைகளும் வீட்டுக் குடியைக்கெடுக்கும் உபதேசி பூனைகளும், ஒன்றுகூடி தங்களுக்குள்ள பொறாமெய் பொய்ச் சாப்பு, பொருளாசை, புறங்கூறல் முதலியச் செயல்கள் தத்தங் கடவுளர்ச் செயலிலுங் காணலைக்கண்டுணராது கவிபாடுவோராதலின் விசாரிணையுரும் விவேகிகளைத் தூஷித்து விதண்டவாதம் புரிவது வீணேயாம்.

தங்களுக்குள்ள துற்செயல்களை துற்செயல் என்று அறியாதார் தாங்கொண்டாடுங் கடவுளின் துற்செயலை அறிவரோ ஒருக்காலும் அறியார்.

அன்னன்னோர் கடவுளரின் துற்செயலை அறியாதார் கடவுள் என்னும் வார்த்தையின் பொருளையும்அவ்வார்த்தையின் உற்பவத்தையும் அறிவரோ பல்காலும் அறியார்.

- 1:16; அக்டோபர் 2, 1907 -

ஒரு கடவுள் உண்டென்னும் நிலை யூர்ஜ்ஜிதமாயின் பல கடவுள் தோன்றும் பாங்கிரா பாங்குரினும் பற்பலகடவுள் துவேஷமிரா. துவேஷத்தால் கடவுளைத் தொழுவதாற் சாந்தமிரா.

இத்தியாதி கேடுகளும் ஆதி கடவுள் என்னும் மொழி வழுவி ஒரு கடவுள் என்னும் மொழிதழுவியக்கால் பொருளற்ற பலகடவுள் தோன்றிப் பாழாயின.

சிவஞானவிளக்கம்

கவ்வுண்டு நாசிமுனை காலால் கனலெழுப்பி
வவ்வுதனை யொவ்வாக் கமாட்டாமல் - தெய்வம்
ஒருவனே யென்பார் ஒன்று நூறாகித்
திரிவரே வீணே தினம்.

கடவுள் - தெய்வம் - யீசன் - பரன் - சிவன் எனத் தோன்றியப் பெயர்கள் ஒலிபற்றியப் பெயரா, செயல்பற்றியப் பெயரா, அதில் மக்கள் பெயரா, தெய்வப் பெயரா அங்ஙனந் தெய்வப் பெயராயின் அத்தெய்வங்கள் ஆகாயத்தினின்று தோன்றியவர்களா, மக்களினின்று தோன்றியவர்களா. அவற்றையும் விசாரித் துணர்வாரில்லை. கடவுளென்றும், தெய்வமென்றுந் தோன்றிய ஏழாவது தோற்றப் பெயர்கள் யாவும் ஆறாவது தோற்ற மக்களுள் பற்றற்றான் பற்றாகும் உண்மெய்ப் பற்றினின்று நாமரூபமென்னுந் துவிதமற்று தாய்வயிற்றினின்று பிறந்த பிறப்பற்று தானே தானே யத்துவிதமாய் மாற்றிப் பிறக்குஞ் செயல்பற்றியப் பிறப்பின் பெயர்களாம்.

பட்டினத்தார்

நீற்றைப்புனைந்தென்ன நீராடப்போயென்ன நீமனமே
மாற்றிப்பிறக்க வகையறிந்தாயில்லை மாமறைநூல்
யேற்றுக்கிடக்குது எழுகோடிமந்திர மென்னகண்டாய்
ஆற்றிற்கிடந்துந் துறைதெரியாம லலைகின்றயே.

இருபிறப்பாளர் என்னும் அந்தணநிலையடைந்த ஏழாவது தோற்ற சாந்த தேயுவகநிலை அடைந்தவர்களின் பெயரை ஏற்று ஒரு கடவுள் உண்டா ஒரு தெய்வம் இல்லையா என்று உசாவுங் கடாக்களுக்கு உரைமொழியின்றி ஆகாயப்பூ புதிதோ பழயதோ என்போனுக்கு மாற்ற முரைக்காததுபோல் மவுனமுரலே மற்றாகும்காரணஞ் சொன்னதைச் சொல்லுங் கிளிபோல் பேச்சிலாடுவதுங் சுவர்க்கோழிப் பாடும்போல் கூச்சற்போடுவதுமாகிய விசாரிணையற்ற மக்களுடன் வாதுகூறல் இருதிற சுகமற்றுப்போம்.

தாயுமானவர்

எனதென்பதும் பொய் யானெனல்பொய் யெல்லா மிறந்தவிடங்காட்டு
நினதென்பதும் பொய் நீயெனல் பொய் நிற்கு நிலைக்கே நேசித்தேன்
மனதென்பதுவோ வென்வசமாய் வாராதைய நின்னருளோ
தனதென்பதுக்கு மிடங்காணேன் தமியே னெவ்வா றுய்வேனே.

விசாரிணையில் விவேக மிகுத்தோர் வாக்கை நோக்குவார்களாக.

- 1:26; டிசம்பர் 11, 1907 -

(இத்தொடர் கட்டுரையும் தொடர்ச்சியாக வராமலும், நிறைவு பெறாமலும் நின்றுவிட்டது)

5. ஆடிமாதத்தில் அம்மனை சிந்திக்கும் விவரம்

பின்கலைநிகண்டு

மரகதவல்லிபூக மரநிழலுற்ற வஞ்சி
பரம சுந்தரியியக்கி பகவதி அம்மை யெங்க
ளருகனை முடிதரித்தா ளம்பிகையறத்தின்செல்வி
தருமதேவதை பேரம்பா லிகையென்றுஞ் சாற்றலாமே.

ஆயிரத்தி ஐந்நூறு வருடங்களுக்கு முன்பு தென் பரதகண்டத்துள் புந்நாட்டை அரசாண்டவனும் சீவகன் தாய்மாமனுமாகிய சாக்கைய சுந்திரவாகு என்பவனுக்கு ஓர் பெண்குழந்தை பிறந்து அம்பிகாதேவி என்னும் பெயரிட்டனந்த சீராட்டி வளர்த்து வந்தார்கள். பெண்களின் பேதை பருவமாகும் ஏழுவயதுக்குள் இனிய அமுதென்னும் தமிழட்சரங்களையும் மொழிகளையும் ஊட்டி அறிவை வளரச் செய்யுங்கால் பெதும்பை வயதாகும் பதினோராம் ஆண்டில் நமது அருகனாகும் புத்தபிரான் செயலையும் அவர் குணாதிசயங் களையும் நாளுக்கு நாள் கேள்வியுற்று அவர் பதுமாசன முற்றிருந்ததைப்போல் ஓர் சிறியச் சிலைசெய்து அதை தன்முடியிற் கட்டிக் கொண்டு இடைவிடா நீதியின் சாதனங்களால் அவரை சிந்தித்துவந்தாள்.

இவ்வகை நிகழ்ச்சியால் மங்கை பருவமாகும் பதின்மூன்றாம் வருட முதித்து வதுவைகால வாக்கியங்கள் எழும்பிற்று.

அதைக் கேள்வியுற்று அம்பிகாதேவி தன் தந்தை சுந்திரவாகுவை அணுகி, எனது அருமெய்த் தந்தையே, நமது குலகுருவால் ஏற்படுத்தியுள்ள பெண்களின் ஞானசங்கத்திற்சேர விருப்புற்றிருக்கின்றேன், தடைசெய்யாமல் உத்திரவளிக்க வேண்டும் என வருந்தினாள்.

அதைக்கேட்ட அரசன் மனங்கலங்கி ஞான தேற்றலடைந்து குழந்தாய், பெண்களின் ஞானசங்கத்திற் சேரும் விருப்பம் உனக்கு பேதைபருவத்தில் இருக்க வேண்டும் அல்லது விவாக முடிந்து சிலகாலம் உன் புருஷனும் நீயும் சுகவாழ்க்கை கழிந்து உன்கணவன் புருட சங்கத்திலும், நீ பெண்கள் சங்கத்திலும் சேர வேண்டியது தருமகட்டளை. இதைத் தவிர்ந்து மங்கைபருவமுற்ற வதுவை பெண்கள் சங்கத்திற் சேர்க்கமாட்டார்களே யாது செய்யுதும் என்றான்.

அம்பிகாதேவி அரசன் முகத்தைநோக்கி என்னருமெய்த் தந்தையே, நீர் எவ்வித முயற்சியேனுஞ் செய்து பெண்கள் சங்கத்தில் என்னை சேர்த்துவிடல்வேண்டும் என வருந்தினாள்.

அரசன் மந்திரிப் பிரதானியரைத் தருவித்து தனது புத்திரிக்குந் தனக்கும் நடந்த விருத்தாந்தங்களை விளக்கினான். அதை அவர்கள் தீர்க்க ஆலோசித்து அரசே, உமது புதல்வியின் கழுத்தில் தாய்மாமனால் ஓர் பொட்டுக்கட்டி அறஹத்துக் களுக்கு அறிக்கைவிட்டு பெண்கள் சங்கத்திற் சேர்த்துவிடுவதே விதி என்றார்கள்.

உடனே அரசன் அம்பிகாதேவியின் தாய்மாமன் கந்தருவத்தனை அழைத்து சங்கதிகள் யாவையும் விளக்கி பொன்னினால் ஓர் பொட்டு செய்து சரட்டிற் கோர்த்து தன் புதல்வியின் கழுத்திற் கட்டும்படிச் செய்து சமணநீத்தோர் உத்திரவுபெற்று உமளநாட்டு வியாரத்துப் பெண்கள் சங்கத்திற் சேர்த்துவிட்டான்.

அம்பிகா தன்மம்

திருவளர்செல்வி தேவியம்பிகை / யருமறைப் பீடிகை யாதனமுணர்ந்து
போதிமாதவன் பொற்கழலேந்தி / யாதிதேவியென் றறவோர் போற்றும்
அவ்வையென்னு மைந்நெறிக்கிளத்தி / செவ்வியதன்மம் செப்புவங்கேண்மின்
தென்பரதத்து துரைபுந்நாட்டின் / மன்னவன் சாக்கை சுந்திரவாகு
நற்றவத்துதித்த நானிலமுதல்வி / பேதைப்பெதுமெய்ப் பாலையுங் கடந்து
மாதர்பருவ மங்கைமெய்யடைந்து / அம்மையர் தன்ம சங்கமமரும்
மிம்மெயினோர்க்க மிகுதியினின்று / தாதையையணுகி தற்பரன்வியார
சாதனமமருந் துரையருள் வீரென / வோதியமொழியை உள்ளத்தமைத்து
தாதையு மந்திர சாதனர்க்கோதி / மங்கைபருவம் வாய்ந்தமகட்கு
தன் தாய்மாமன் பொன்சரடிட்டு / சமணநீத்தோர் தன்னுரைக்கொண்டு
அறவுரையென்று மடுத்துணர்திரிவி / பிறவியம்பாசப் பந்தங்கழற்றி
பிடகமும்மொழிப் பிரித்துலகோர்க்குத் / திடமுறுதிரிவா சகமதாவிரித்து
உமனநாட்டு வுமைவியாரத்துள்.

திரிபிடக விசாரிணையினின்று சிலசாதனங்கொண்டு உண்மெயுணர்ந்த ஆனந்தத்தால் பெண்கள் வியாரத்து எதிரிலுள்ள பூகமரமென வழங்கும் வேம்பு மரத்தடியில் வந்து உட்கார்ந்து பெரியோர்கள் முதல் சிறுவர்கள் வரையில் எளிதில் உணருமாறு திரிபிடக தருமபோதங்களை எளியவாசகநடையில் திரிவாசகங்களாக போதித்துவந்தாள். பிடகத்தை அறிவித்தவளாதலின் பிடகறி, பிடாறி என்று முதற்பேரளித்தார்கள்.

- 1:10; ஆகஸ்டு 21, 1907 -

பிடகறி பிடாறி என்னும் காரணப்பெயர் பெற்ற வேம்படியம்பாள் தான் மோனனிலையால் அடைந்த ஞானவிழி பார்வையால் செல்லல், நிகழல், வருங்காலம் மூன்றின் பலன்களையும் குடிகளுக்கு விவரித்துவந்த காலத்தில் நாகைநாடு என்னும் தேயத்தில் மழை குன்றி சாமளை என்னும் விஷப்பூச்சுக்களின் கொடூரத்தால் வைசூரி உவாந்திபேதி என்னும் மாறியாகிய வியாதிகள் தோன்றி மக்களும் விலங்கும் துன்புறுங்கால் குடிகள் பயந்து காவிரி உமளம் உமை வியாரத்துள் வேம்படி நிழலில் வீற்றிருக்கும்

அம்மனிடஞ்சென்று விசாரித்தால் இம்மாறிக்கு ஏதேனும் பரிகாரஞ் சொல்லுவாள் என்னும் அவாக்கொண்டு உமளநாடணுகி அம்பிகையை சேவித்து நாகைநாட்டின் குறைகளை விளக்கினார்கள்.

அம்மன் உள்விழிநோக்கி மக்களை அழைத்து உங்கள் உள்ளங்களிலுள்ள அன்பையும் அறனையும் அகற்றி வஞ்சகம், பொறாமெய், பொருளாசைக், கெடுமதி இவைகளை நிரப்பிக்கொண்டபடியால் வானம் பெய்யாது சாமளை என்னும் விஷக்காற்று உங்கள் நாட்டிற் பரவி உயிர்களைக் கொள்ளை கொள்ளுகின்றது.

இப்பவும் உங்களுள்ளங்களில் உள்ளக் கள்ளங்களை அகற்றி இதயம் சுத்தஞ் செய்வதுடன் வீதிகளையும் வீடுகளையும் சுத்தஞ் செய்து மட்டிப்பால் புகை கற்பூரப் புகைகளை வீடுகள் எங்குங்கமழ நிரப்பி நிம்பத்தார் என்னும் வேப்பிலைத் தோரணங் களைக் கட்டுவதுடன் வீட்டின் வாயற்படிகளிலும் சொருகி பலதானியங்களை உப்பிடாமல் அவித்து ஏழைகளுக்கு தானங் கொடுப்பதுடன் பச்சரிசி மாவும் கூழுந் தானமளிப்பீர்களானால் இதய சுத்தத்தாலும், தேச சுத்தத்தாலும், வேப்பிலை மணத்தாலும், கற்பூரப்புகை யாலும், அவிரிப்புகையாலும் சாமளைப் புழுக்கள் அகன்று கொள்ளைநோய் அகன்று குணம் அடைவீர்கள் என்ற வாக்கைக் கேட்டவுடன் நாகைநாட்டுக் குடிகள் இதயசுத்தம் தேச சுத்தம் செய்ததுடன் அன்பைப் பெருக்கி தானம் அளித்த விஷயத்தால் கொள்ளைநோய் நீங்கி உள்ளம் குளிர்ந்தார்கள்.

சமணநீத்தோர் தண்ணந்தம்மருள் / பெற்று காவிரிபூகநீழ
லுற்று யாக்கை யுண்மெயுணர்ந்து / நாகை நாடு நடுக்குதுன் மாறி
வேக மாற்ற வுரவோர்க்கன்று / வன்பு மறனு மகலவிட்டீர்
துன்பக் கிருமி துடர்ந்த துள்ளம் / உள்ளக் களங்க மகற்றியூரின்
தெள்ளுந் தூசித் துடைத்து மட்டிப் / பாலின் புகையும் பூரப் புகையும்
நீலிப் புகையும் நிரம்பப் பயின்று / பாகு மாவுங் கூழும் பயிறும்
வேகுங் கும்பிக் கிட்டு மவித்து / உண்டி கொடுத்து வுயிரளிப்பீரேல்
பண்டை வினையின் பற்றறுப்பீர்காள் / நிம்பத் தாரி னிரை தோரணங்க
ளம்பலவீதி யெங்கு நிரப்பி / வாய நிலையிலு மாட மலைவிலும்
நேய நிம்பத் தார்மண மூட்டி / யக சுகவாரி யன்பி னிலையால்
தகை மும்மாரிப் பெய்து சாமளைக் / கிருமி யகன்றுக் கிருபாக் கடலா
மருக னருளும் வாய்மெயு முருமென / சாமளை யுற்ற சிலுகை விளக்கி
வாமன் பிடகம் வரையறுத்தோதி.

அம்மன் வாக்கினாற் சொன்னபடி நாகைநாட்டாரை வதைத்தக் கொள்ளைநோய் அகன்று சுகமுற்றவைகளைக் கண்ட ஒவ்வோர் அரசர்களும் குடிகளும் அம்மனைவந்து தாமரை புட்பத்தால் அர்ச்சித்துக் கொண்டாடுவதுடன் பலவகைப் புட்பங்களால் அம்மன் தேகத்தையும் மறைத்து ஆனந்தத்தியான முற்றிருக்குங்கால் அம்மன் சிறுவர்கள் முதல் பெரியோர்கள் வரையில் நீதிமார்க்கத்தினின்று நிருவாணசுகமடையும் போதி போதங்களாகிய திரிவாசகம், மூதுரை, ஞானக்குறள், இரத்தினகரண்டக முதலிய நூற்களியற்றி அரசர் கரங்களில் ஈய்ந்து மடங்களுக்கு அனுப்பி தசசீலாம் தங்களைப் பரவச்செய்து வந்ததுமல்லாமல் ஆதியங்கடவுளாகிய சாக்கைய முநிவரின் மும்மொழியும் மும்மொழிகளைத் தழுவிய நான்கு பேதவாக்கியங்களின் முடிவும், மூலர் திரிமந்திரமும் நாயனார்த் திரிக்குறளும் நானியற்றியுள்ளத் திரிவாசகமுமாகிய நூற்களில் முநிவர் நூல் முதனூலும், நாயனார் நூல் வழிநூலும், மற்றும் நூற்கள் சார்பு நூற்கள் என்றும் விளக்கிக் காண்பித்தாள்.

முனிவன் கண்ட முதனூநிருவி / இனியவழிநூ லியற்றனன் நாயன்
முதநூல் வழிநூல் முற்று முணர்ந்து / விதய மும்மறை முடி புரையாற்றி
படிமிசை மூவர் பெருதிரி மந்திரம் / முடி புரை யாற்றி மொழிந்தனர் சார்பாய்.
மூலர் மொழிந்த மந்திர மூன்றுஞ் / சாலமொழிந்தேன் திரிவாசகம் யான்
மங்கை மாதர் வேரமஞ்சள் / கெங்கை கிழங்கைக் கூட்டறைவித்து
தேகமெங்குந் தீட்டிக் குளித்து / வேக சுன்னக் குங்கும மிட்டு

என்பதன் கருத்தோவெனில் மங்கைப் பருவமடைந்த மாதர்கள் மஞ்சள் கிழங்கை அறைத்து தேகமெங்கும் பூசிக் குளித்து மஞ்சளும் சுன்னமும் கலந்த

சாந்திட்டுக் கொள்ளுவதால் விஷக்கிருமிகள் அகலும் என்பதேயாம்.

- 1:11; ஆகஸ்டு 28, 1907 -

எங்கெங்கு மழை குறைந்து புழுக்கந்தோன்றுகிறதோ அவ்வவ்விடங்களில் பதின்மூன்று வகை வைசூரியும் மூன்றுவகை பேதியுந்தோன்றி சீவர்களைக் கொள்ளைக்கொள்ளுவதற்கு கண்ணுக்குத் தோற்றா சாமளை என்னும் சிறுப் புழுக்கூட்டங்களே காரணமாயிருந்தது. அப்புழுக்கூட்டங்கள் அகலுவதற்கு வேப்பிலை கற்பூரப்புகை, மட்டிப்பால் புகை, அவுரிப் புகை இவைகளை வீடுகள், வீதிகளெங்கும் கமழச்செய்து சீவராசிகளின் நாசியிலும் நாவிலும் புழுக்கள் நுழைந்து கொள்ளைக் கொள்ளுவதால் பல தானியங்களை உப்பிடாமல் அவித்துப் பச்சரிசிமாவு இடித்தும் அதில் வேப்பிலையைக் கலந்து சகலரையுஞ் சாப்பிடும்படி தானஞ் செய்வதால் உள்ளுக்கு நுழைந்த புழுக்கள் கழிந்து மாறி தோன்றாமல் நிற்கவும் போதித்து கொடியமாறி என்னும் கொள்ளைநோய் வெப்பத்தை ஆற்றினவளாதலால் கொடுமாறியை ஆற்றிய மாறியாத்தாள் மாறியாத்தாள் என்று கொண்டாடி வந்தார்கள்.

அம்மன் வாக்கில் தோன்றும் திரிகாலக்கியானங்களுக்கும் மகிழ்ந்து அரசர்கள் முதல் பல தேசக்குடிகளும் வந்து சூழ்ந்துக்கொண்டதும் அல்லாமல் சிம்மம், யானை, பாம்பு முதலிய ஜெந்துக்களுஞ் சூழ்ந்து அறவுரைக் கேட்பதுடன் அவரவர்களுக்குள்ள அந்தரங்கக் குறைகளையும் கேழ்க்கும்படி நெருங்கிய கோஷத்திற்கஞ்சி ஆகாயத்தில் எழும்பி சோதிரூபமாக அந்தரத்தில் நின்றுவிட்டாள்.

ஞானவெட்டி

வானத்தெழுந்த வாலாம்பிகைதன்னை / மதியாலறிந்து கதியடையாமலும்
ஏனந்தனின் முளைத்தெழுந்த கொழுந்தை / யிறுக்கினா னினிமுறுக்கிக் கிள்ளியே
ஞானப்பிரகாச மெய்ஞானவித்தாகையால் / நாடிக் கருவூரில் நாதத்துடன்கூடி
மீன மேஷ மறியாமல் குருவந்து வீணதாம் / பூசைவிருதாவிற் செய்யவும். (பூசை.)

அவற்றைக்கண்ட குடிகளும் அரசர்களும் அந்தரத்துள்ள அம்மனை சரணாகதிக் கோரி வந்தித்ததின்பேரில் அம்மன் மறுபடியும் வேம்பு மரத்தடியில் வந்து உட்கார்ந்து அரசர்களை வரவழைத்து திரிபிடக வாக்கியங்களாகும் திரிசீலமே - தத்துவம், திரிசீலமே சத்தியம், திரிசீலமே - உத்தமம். அதுவே உங்களைக் கார்க்குந் தெய்வம் என விளக்கி திரிசீல ஜாக்கிரதம் ஜாக்கிரதம் என்று அருளி கொல்லா நோன்பு - குறளா நோன்பு, கள்ளாநோன்புகளாகிய திரி நோன்புகளையும் பதித்து வாக்குக் காப்பு, மனோக்காப்பு, தேகக்காப்பாகுந் திரிவிரதங்களையும் ஓதி தான் பரி நிருவாண மடையும் காலத்தையுஞ் சகலருக்குந் தெரிவிக்கச்செய்து ஆடிமாதம் பதிநெட்டாநாள் ஆதிவாரம் பௌர்ணமி திதியில் அம்மன் பதுமாசனத்திருந்து இருவிழிகளை மூடி சுகசமாதியுற்றக்கால் சுயம்பிரகாசசோதி உச்சியின் வழியாய் தீபம்போல் ஒளிர்ந்தது. அதைக்கண்ட அரசர்களும் குடிகளும் பதறிப் பிரலாபித்து தங்கடங்கட் கண்களில் தாரை தாரையாய் நீர்வடிய சிரமீது இருகரங்களைக் கூப்பி அம்ம வடிவுடையாட்டி - வால அம்பிகை - அறமுதற்செல்வி - ஆதி தேவி - உற்ற எண்ணமுறைக்கும் ஆயி - உள்ளக் குறையை அகற்றுஞ் சீலி - பச்சைப்பருவ பகவதி அம்பா உச்சியில் வளர்ந்த உள்ளொளிகண்டு நிட்சயமாக நிலைகுலைந்தோம் யாம் இனி யாவரால் அறவுரைக்கேட்டு ஆனந்திப்போம், யாரைநாடி ஆபத்து பந்துவென்போம், அம்மே எங்கள் வீடுகடோருங் குலதேவதையாயிருந்து கார்ப்பதுடன் கிராமதேவதையாக நின்று தோன்றும் இடுக்கங்களை நீக்குவதற்கு ஊர் காவற்காரியாகவும் காவலூர் அம்மனாகவும் விளங்கவேண்டும் அங்ஙனங் கார்க்குங் காப்பு நிட்சயமாயின் சிரசிற் தோன்றிய தீபம் ஓங்கி வளரவேண்டுமென்று கதறினார்கள். அவர்கள் கோரிக்கையின்படி உச்சியின் சோதி வளர்ந்து மறைந்தது.

வடநாட்டிற் சாக்கா என்றும், தென்னாட்டில் வள்ளுவர் என்று வழங்கும் கர்ம்ம குருக்களும், அரசர்களுங் குடும்பத்துடன் வந்து அவ்வை என்னும் அம்பிகா தேகத்தை தகனஞ்செய்து சாம்பலைக் காவிரிநீரில் விடுத்து தாங்களும் நீராடித் தங்கடங்களில்லஞ் சேர்ந்து,

ஞானவெட்டி

விட்டகுறைவருமளவு முபதேசங்காண் / மெய்யுடலுந் தளர்ந்துபுவி மேலுநோக்கி
தட்டழிந்துவிழும்போது வோதிவைத்த / சாத்திரத்தைக் கணப்போதுமுறைக்கபோமோ
எட்டிரண்டுமறியாதார் குருக்களாமோ / என்னையினிப்பறையனென்று தள்ளலாமோ
மட்டமரும் பூங்குழல்வா லாம்பிகைப்பெண் / வங்கிஷத்திலுதித்த சாம்பவனும் நானே.

என்று மொழிந்த இறையறச்செல்வி / குன்றா மொழியின் குறிப்பை யறிந்தோர்
மாறியாற்று மகமாயென்று / கூறிமன்னோர் குடிகடன்பால்
வீரு சிம்ம மரவோ டானை / யூரு சூழ்ந்த விடுக்கங் கண்டு
சிந்தை நிரைத்த செல்வக் கிழத்தி / யந்தர மெழுவி யருள்வடிவாகி
நின்றப் பேற்றை யுணர்ந்த வரயர் / குன்றாக் குறையால் கோடமுற்றார்
வாலை யம்பிகை மகிழுளங்கொண்டு / வேலின் கண்ணி விரவியென்தாய்
நிம் நீழல் நிரைக மலத்து / உம்பர் போற்ற வுரவீற்றிருந்து
ஆலமர்ச் செல்வ னருளிய பிடக / சீல மூன்றின் திடநிலையாகு
முத்த தத்துவ மெய்மெயோதி / சுத்த சாதத் தூய நிலையாம்
நோன்பு மூன்றி னுட்பங் காட்டி / ஆன்ற விரதக் காப்பு மருளி
தான் சென்றோங்கு சமாதி கால / மான்ற வுலகோர்க் கூறுகவென்று
பருகடகத்துப் பதினெண் பாநாள் / உருகதிர் வார முற்ற பூரணை
சிகிரி தீப சிற்சுக சோதி / பாகிமுக முற்றப் பாங்கை கண்டோர்
அம்மை வல்லி யவ்வை யறத்தி / உம்மை பிறிந்து முலகத் துய்வோ.

- 1:12; செப்டம்பர் 4, 1907 -

பொங்கு மாறி யாற்றிய வடிவை / எங்கு கண்டு விரைஞ் சுவதென்தாய்
உந்தன் காவலூருமுளத்து / முந்து காக்கு முன்னவளாயின்
உச்சி சோதி யோங்கி வளர்ந்து / பிச்சமருள்க பெருமுதல் வாணி
என்று மிக்க வேக்கமுறுகால் / பின்னும் வல்லி பகிர்முகசோதி
நந்தாதிப நற்சுக மோங்கி / எந்தாய் வளர்ந்து யேகமுற்றாள்
உற்ற யாக்கைக் குரியோர் நிமித்தர் / பெற்ற மன்னராவர் கைகொண்
டமச்சுடலை யிட்டு பூதிச் / சாமக்காவிரி நீர்விளையாடி
இல்ல மெங்கு மாதி தேவியை / வல்லி வாணி மகமா யென்றும்
பாடிபாடி பல் பெயரிட்டு / நீடுவாழ்க நிரை குலதேவி
சேரியெங்குஞ் சிறப் பறைவித்து / நூரிபொங்கல் நோன்புநூற்றி
யெங்குமெண்ணான் கறமதுகொண்டு / பொங்குஞ்சோற்றுக் கும்பநாட்டி
வரியோர்க்கூட்டி மநக்குறையாற்றி / உரியவிரத முளத்திலூன்றி.

அன்னதானத்துக்காகும் பதார்த்தங்களைசேகரித்து அம்மன் பரிநிருவாணமுற்ற வேம்பு மரத்தடியில்வந்து பொங்கல்வைத்து எல்லோர் சோற்றையும் ஒரு போராகக் குவித்து ஏழைகளைப் பூர்த்தியாக சாப்பிடவைத்து அவரவர்களில்லங்களுக்கு அனுப்பிவிட்டு விவேகிகள் ஒன்றுகூடி அம்மன் பாலபருவமாதலின் வாலையென்றும், சகலமுந் தெரிந்தவளாதலின் அவ்வை என்றும் இளந்தேகியாதலின் பச்சையம்மன் என்றும், அதிரூபியாதலின் வடிவுடையம்மன் என்றும், குணக்குடியாதலின் மனோன்மணி என்றும், வேல்போன்று பிரகாசமுற்றக் கண்ணுடையவளாதலின் வேற்கண்ணி, வேலாங்கண்ணியென்றும், கவிபாடும் பாணர் நிலையுற்றமெயின் வாணி என்றும், சரமாகும் வாசியைத் தன்வசந் திருப்பிக்கொண்டமெயின் சரசுவதி என்றும், தாமரை புட்பாசனத்தில் வீற்றிருந்தமெயின் கமலாசனி என்றும், இராகத்துவேஷ மோகத்தை அகற்றினவளாதலின் திரிபுராந்தகி என்றும், முப்பத்தி ரண்டறங்களையும் விவரித்து சற்குருவின் தருமத்தைப் பரவச் செய்தவளாதலின் அறச் செல்வி என்றும், அவரவர்கள் இதயத்துள்ள இருளை அகற்றினவளாதலின் பகவதி என்றும் இஸ்திரீகளுக்குள் முதல் தேவியாக விளங்கினமெயின் ஆதிதேவி என்றும், சிரசினுச்சியிற் தீபம்போல் பிரகாசித்தமெயின் நந்தாவிளக்கென்றும்,

சூளாமணி

மௌவன்மலர்வேய்ந்து மதுநாறுமணியைம்பாற்
கொவ்வைதுயில் கொண்ட துவர்வாய்க் கொடியோடொப்பா
டெய்வமணநாறு திருமேனிபுறங்காக்கு
மவ்வையரோடெய்திமுத லவ்வையடிசேர்ந்தாள்.

மணிமேகலை

சிந்தாதேவி செழுங்கலை நியமத்து
நந்தா விளக்கே நாமிசை பாவா

வானோர் தலைவி மண்ணோர் முதல்வி
யேனோ குற்ற விடர்களை வாயென.

சீவகசிந்தாமணி

செந்தாமறைக்குச் செழுநாற்றங்கொடுத்ததேங்கோ
ளந்தாமரை யாளகலத்தவன் பாதமேத்திச்
சிந்தாமணியின்சரிதஞ் சிதர்ந்தேன்நெருண்டார்
நந்தாவிளக்குச் சுடர்நன்மணி நாட்டப்பெற்றே

பல்பெயரிட்டு சேரிகடோரும் அம்மன் வியாரங் கட்டிவைத்து அக் கட்டிடங்கள் வீதியிலிருக்குமாயின் திருவீதி அம்மனென்றும், மத்திய எல்லைக்குள்ளிருக்குமாயின் எல்லம்மன் என்றும் சுழிகளின் ஓரங்களில் இருக்குமாயின் திருக்கழி அம்மன் என்றும், முல்லைநிலத்து இருக்குமாயின் துளிர்கானகத்தம்மன் என்றும், பனைமரச் சோலை களிலிருக்குமாயின் கருக்கம்மன் என்றும் தண்டுகளிரங்குபிடத்தில் இருக்குமாயின் பாளையத்தம்மன் என்றும், நந்தவனத்தில் இருக்குமாயின் பூஞ்சோலையம்மன் என்றும் ஒவ்வோர் பெயர்களை வைத்து அம்மன் நிருவாணமுற்ற ஆடிமாதம் பௌர்ணமி திதி வருங்காலம் பத்துநாளைக்குமுந்தி அத்திருநாளில் அம்மனை உச்சாகப்படுத்தி ஆனந்திப்பதற்கு சேரிக்குள் வந்துள்ளவர்கள் வெளியேறாமலும் வெளியேறி உள்ளவர்கள் ஊர்வந்துசேரவும் கொலை, களவு, காமம், கள்ளருந்தல், பொய் முதலிய பஞ்சபாதகங்கள் அணுகாமலிருக்கவேண்டும் என்று காப்புக்கட்டி அம்மன் கழுத்தில் பொட்டுக்கட்ட வேண்டிய குடும்பத்தான் கரத்திலும் ஓர்காப்புக்கட்டி அவன் கையினால் அம்மன் பீடங்களை சுத்தி செய்துவைத்துக்கொண்டு ஒன்பதுநாள் வரையில் நீதியிலும் தருமத்திலும் உச்சாகமுண்டுசெய்து பத்தாநாள் குடிகள் யாவரும் புதுப்பானைகள் கொண்டு பொங்கல் வைத்து எல்லோர் சாதத்தையும் ஒரேயிடத்தில் கும்பமிட்டு ஏழைகளைப் பசிதீரவுண்ணும்படிச் செய்து காவிரி நதியில் சேலை, குங்குமம், சந்தன தாம்பூலங்கள் விடுத்து ஏழைகளை எடுத்துக் கட்டிக்கொள்ளும்படிச் செய்து வந்தார்கள். அதையநுசரித்துக் குடும்பத்தோர்கள் குலதேவதையாகக் கொண்டாடி வந்ததுமன்றி மற்றுங்கிராமவாசிகளும் அந்தந்த சேரிகளில் அம்மன் வியாரங்கட்டி பகவன் உட்கார்ந்து நிருவாண திசையடைந்த அரசமரத்தையும் அம்மன் உட்கார்ந்து பரிநிருவாண திசையடைந்த வேம்புமரத்தையும் நாட்டி மெய்யறமாகும் புத்ததருமத்தை சகலருக்கும் ஊட்டி அம்மனால் ஓதிய முப்பத்தி ரண்டறங்களையும் பரவச்செய்து வந்தார்கள்.

- 1:13; செப்டம்பர் 11, 1907 -

பின்கலை நிகண்டு - அம்பிகா தருமம்

ஆதுலர் சாலைஐயம் அறுசமயத்தோர்க் குண்டி
ஒதுவார்க் குணவினோடாண் வத்திரமுடனே சேலை
மாதுபோகம்மகப்பால் மகப்பேறுமகவளர்த்தல்
வேதைநோய் மருந்துக்கெல்லாம் விலைகொடுத் துயிர்நோய் தீர்த்தல்.

கண்ணாடி பிறரில்கார்த்தல் கன்னிகாதானங்காவே
வண்ணார் நாவிதர் பெண்காத்தல் மடந்தடங்கண்மருந்து
தண்ணீர் செய்பந்தல் சோலைதலைக்கெண்ணெய் சிறைச்சோறோடு
பண்ணான விலங் கூணலகல் பசுவின்வாயிறை கொடுத்தல்.

அறவையாம் பிணமடக்கல் அறவைத்தூரியம் வகுத்தல்
நிறுவியோர்க்கிடங் கொடுத்தல் நிரையத்தீம் பண்டனல்கல்
உறுதியா யுண்மெய்வாய்ந்த வுத்தமமாகுமெண்ணான்
கறநிலை யன்பாலோது மம்பிகை தானமாமே.

இவ்வகை சிறப்புற்ற அம்மனைத் தமிழ்நாடெங்கும் உள்ள அரசர்களும் குடிகளும் சிந்தித்து வந்ததுமல்லாமல் சோழநாட்டுள் உம்பள கிராமமென்னும் வண்டுவாஞ்சேரியில் அவ்வை வியாரமென்றோர் மடமும் நாகைநாட்டில் வேற்கண்ணி வியாரமென்றும் வேலாங்கண்ணி மடமென்றுங் கட்டி அதில் நாகைநாட்டாருக்குற்ற இடுக்கணாகும் கொடுமாறி என்னும் கொள்ளைநோயை அகற்றி ஆரோக்கியம் பெறச்செய்தவளாதலின் அன்னாட்டார் அம்மனை விசேஷ உற்சாகமாக கொண்டாடி வந்தார்கள், இவற்றுள்,

வீரசோழியம்

போராக்க ரோரைவர்க்கற வமிழ்தம் பொழிந்தனையே
ஆரமிழ்த்தமணி நாகர் குலமுய்ய வருளினையே.

பாலி பாஷையில் நாகரென்றும் யீபுரு பாஷையில் இசரேல் என்றும் தற்காலம் சீனர் என்றும் வழங்கும் ஓர் கூட்டத்தாருக்கு உண்டாயிருந்த இடுக்கங்களை அகற்றி ஆதரித்த புத்தபிரானைக் கொண்டாடும் கூட்டத்தார் நாகைநாதர் வியாரமென்றும் ஓர் கட்டிடங்கட்டி புத்ததன்ம சங்கமென்னும் மும்மணிகளை ஆனந்தமாகக் கொண்டாடி வந்தார்கள்.

அதுபோல் வேலாங்கண்ணியம்மன் வியாரத்திலும் அம்மனாலோதியக் கொன்றுத் தின்னாமை என்னும் நோன்பையும் வாக்குக்காப்பு, மனோக்காப்பு, தேகக்காப்பு என்னும் மூவிரதங்களையும் அநுஷ்டித்துவருங்கால்,

தேகத்தால் யாருக்கேனும் ஓர் தீங்குசெய்து அத்தீவினையால் தங்களுக்கு ஓர் தீங்குண்டாகுமாயின் அம்மன் விரதத்தைக் கடந்து உபச்சாரத்திற்கு அங்கப்பிரதட்சணஞ் செய்துவந்து வேற்கண்ணி வியாரத்துள்ள பிட்சுணிகளை வணங்கி ஏழைகளுக்கு அன்னதானம் வஸ்திரதானங்கள் செய்தும்,

தந்நாவைக் காக்காமல் ஒருவரை வைதும் வடுக்கூறியும் வஞ்சித்தும் பொய்புகன்றுங் கெடுத்தத் தீங்கினால் தனக்குண்டான தீவினைகளை உணர்ந்து வெள்ளியினாலேனும் பொன்னினாலேனும் கம்பிசெய்து குற்றஞ்செய்த தந்நாவுக்கலகிட்டு மோனத்துடன் வேற்கண்ணி வியாரம் வந்து பிட்சுணிக்களை வணங்கி நாவினால் செய்த குற்றங்களை விளக்கி அலகையும் தட்சணையையும் அதிபதிகளிடம் கொடுத்து அன்னதானம் வஸ்திரதானங்கள் செய்தும்,

தன்மனதைக் காக்காமல் போனப்போக்கில் விட்டு ஒருவரைக் கெடுத்தும் வஞ்சித்தும் காமவெகுளி மயக்கங்களைப் பெருக்கியுஞ் செய்த தீங்குகளினால் தனக்குண்டாய தீவினைகளையுணர்ந்து வஞ்சகத்தால் பொஞ்சித்தப் பொருட்களை வியாரத்துட் கொண்டுவந்து பிட்சுணி யதிபர்களிடம் அளித்து முப்பத்திரண்டு அறங்களையும் பரவச்செய்து வந்தார்கள்.

இத்தகைய தன்மர் ஆட்சியநிரைவில் குறைவு தோன்றி கொள்ளைநோய்கண்டு பாலபருவமுற்றப் பெண்களேனும் பிள்ளைகளேனும் பிராணவவத்தையில் இருக்குங்கால் தாய்தந்தையர்கள் ஆண்பிள்ளை அதியவத்தையிலிருக்குமாயின் அரசமரத்தடியிலிருந்து அருளறம் விளக்கிய ஆதி தேவனை சிந்தித்து குழவி சுகமுற்றவுடன் துவராடையணிந்து ஆண்டவனுக்கடிமை என்று ஆண்பிள்ளைகள் மடத்திற் சேர்த்துவிடுவதும் பெண்பிள்ளை அதியவத்தையில் இருக்குமாயின் வேம்புமரத் தடியிலிருந்து வேதவாக்கியங்கள் மூன்றையும் விளக்கிய விண்ணவர் முதல்வியை வணங்கி குழவி சுகமுற்றவுடன் மஞ்சள் சரட்டில் ஓர் பொன் பொட்டைக் கோர்த்து கழுத்தில் கட்டி மஞ்சளாடை உடுத்தி அம்மனுக்கு அடிமையென்று பெண்கள் வியாரத்தில் விடுத்து ஞானசாதனம் அடையும்படிச் செய்து அரச தருவென்றும், இந்திரவிழா என்றும், வேம்பு திருவென்றும், அம்மன் விழா என்றும் கொண்டாடி நீதிமார்க்கத்தை நிலைபெறச்செய்து வந்தார்கள்.

உள்ளத்துண்டா மூழுதுகண்டோர் / கள்ளத்துண்டக் கைப்பொருள் கொண்டும்
அங்கங்கொண்ட வகவினைகண்டோர் / துங்கங்கண்ட தூளிலுருண்டும்
கலகமுண்டுக் காவாநாவில் / அலகுமிட்டு வம் மைகாவ
லூருள்ளாயி தீபங்கண்டும் / பேருள்வேயின் கண்ணிவியாரம்
போற்றியம்மை பொன்னடி வணங்கி / யேற்றியெண்ணான் கறமது முந்தை
உண்டியீய்ந்து உயிரை யோம்பர் / பண்டைகாலப் பாங்கென்றெண்ணி
கூழு மாவுஞ் சோறிங்கொண்டு / யேழைக்கங். கீய்ந்துவளர்ந்தும்
ஊழ்வினையற்று வுளமகிழற்கு / சூழறமென்றே சூட்சியென்றுந்
தேம்பு மாறி தீக்குறிகண்டோர் / வேம்படியம்மை வியாரம் விடுத்து
ஞானசங்கை நாடொரும் வினவி / மோனவரம்பை முற்றுமெழுப்பி
அண்ணலறத்தையருளி / பண்ணவளறத்தை பகர்ந்தனன் பார்த்தன்.

- 1:14; செப்டம்பர் 14, 1907 -

ஔவையார்கோவில். எங்குளதென்று அறிய வேண்டியவர்கள் மாயூரம் முத்துப்பேட்டை ரயில் பண்டி ஸ்டேஷனிலிருந்து தென்கிழக்கில் 7-வது

மையிலிலிருக்கும் வண்டுறைவாள் மாறியம்மன் ஔவையார்க் கோவிலென்று கல்வெட்டில் எழுதியிருக்கும் அவற்றாலும் அடியிற் குறித்துள்ள பாடலாலுந் தெரிந்துக்கொள்ளலாம்.

ஔவையார் துதி ஒருபோகுமயங்கிசைக் கொச்சகக்கலிப்பா

மாமேவு சோனாட்டு வளஞ்சேரியும் பளநாட்டுத்
தேமேவுவண்டுறைவாள் சேரியெனுந் திருப்பதியில்.

அராகம்

மூதுரையென்றிசைக்கு நின்சொன் முதுமறையை நிகர்ப்பதுதான்
யாதுரை யென்றிசைப்பனினி யெவனுரைக்குமி வ்வுலகம்
செல்வழியீதெனஞாலந் தெளிந்திட நீமுனமுறைத்த
நல்வழியே வழியாக நான்மறையு நடக்குமால்.
மிருதிநூ லாகம்நூல் விளம்புவவெலாமுனநீ
கருதியருள் புரிந்துரைத்த கல்லூறியறவுரையால்
எவ்வயினு மெனையவரு மிசைப்பதிடை நிகழ்த்துமொழி
ஔவையர்வசன மிதென்றறியாதா ருளரேயோ.

இவ்வகை அன்பும் அமைதியும் ஆற்றலுமுற்ற தன்மராட்சியத்தின் வட எல்லை குமானிடர்தேசத்தில் ஓர்வகை மிலேச்ச சாதியார் வந்து குடியேறி யாசக சீவனஞ் செய்துக்கொண்டு வஞ்சினத்தாலும் மித்திர பேதத்தாலும் புத்த தருமங்களை மாறுபடுத்திவந்ததும் இல்லாமல் புத்ததருமத்தைச் சார்ந்தவர்களையும் தாழ்த்தி நிலைகுலையச் செய்யுங்கால் மகமதிய துரைத்தனத்தார் வந்து குடியேறி மிலேச்சர்களின் மித்திரபேதத்தால் மகமதியர்கள் செய்துவந்த இடுக்கண்களுக்கஞ்சி திரிசிரபுறத்திலும் நாகை நாட்டிலுமிருந்து புத்ததருமத்தைப் பரவச்செய்துவந்த தமிழ் வித்துவான்களாகும் பாணர்களும் யாழுடன் இசைகலந்து பாடும் யாழ்ப்பாணர்களும் இலங்கை முதலிய தீவுகளுக்குக் குடியேறினவர்கள் நீங்கலாக மற்றக்குடிகள் மகமதியர் மதத்தைத் தழுவியும் நின்றுவிட்டபடியால் நாகைநாட்டு நாகைநாதர்வியாரத்திருந்த பொன்சிலைகளைத் திருடிகொண்டுபோய் விற்பனைச்செய்து ஸ்ரீரங்கத்துள்ள புத்தமடத்தை மாறுபடுத்தி வேறுவகைக் கட்டிடங்களையும் மதில்களையுங் கட்டிக்கொண்டார்கள்.

இதன்மத்தியில் போர்ட்ச்கீய துரைத்தனத்தார் வந்து குடியேறிய போது வேற்கண்ணி அம்மன் வியாரமும் பாழடைந்து நிலைகுலைந்திருந்தும் வருடந்தோரும் ஆடிமாத பௌர்ணமியில் அம்மனை தெரிசிக்கும்படி தூர தேசங்களிலிருந்து வருங் குடிகள் வழக்கம்போல் வந்தும் திகைத்துநிற்பவர் களைக் கண்ட போர்ட்ச்சுகீய குருக்கள் அதேயிடத்தில் தங்கள் மதக்கோவில் ஒன்றைக்கட்டி அம்மனை சிந்திக்கும்படிச் செய்து அம்மன்பெயரால் தட்சணை வருந் திரவியங்களை தன்மஞ்செய்யாமல் தங்கள் சுயப்பிரயோசனங்களுக்கு எடுத்துக் கொள்ளுகின்றார்கள். இதன் சரித்திரபூர்த்தியைத் தெரிந்துக்கொள்ள வேண்டியவர்கள் நாகைநாதர் பொன் விக்கிரகங்களை அபகரித்துக்கொண்ட சங்கதியை சிலாசாசன பதிவின் புத்தகத்திலும் திருமங்கையாழ்வார் சரித்திரப் புத்தகத்திலும் தெரிந்துக்கொள்ளுவதுடன் வேற்கண்ணியம்மன் வியார மாறலை மேற்சொன்னபடி சிலாசாசன புத்தகத்திலும் இலங்காதீவத்து வித்தியாதன சாலையிலுள்ள போர்ட்ச்சுகீயர் சரித்திரத்திலும் தற்காலம் ஆடிமாதந்தோரும் நிரைவேறிவரும் அங்கட்பிரதட்சணவனுபவச் செயல்களினாலும் தெரிந்துக் கொள்ளலாம்.

புத்த, தன்ம, சங்கமென்னும் திரிமணிகளையே திரிசிரமாகக் கொண்ட திரிசிரபுரத்தில் ஸ்ரீ அரங்காமடம் என்றும் அழகாமடம் என்றும் வழங்கிய இந்திரவியாரமும் நாகபட்டிண நாகை நாதர் வியாரமும் அம்மன் வியாரமும் மாறுபட்டதுபோல, தென்னிந்தியாவிலுள்ள இந்திரவியாரங்களையும் அரசு விழாக்களையும் அம்மன் உற்சாகங்களையும் பலவகையில் மாறுபடுத்திக் கொண்டு தன்மத்தைச் சாதித்து வந்தவர்களையும் தாழ்ந்த சாதியாக வகுத்துத் தங்களைச் சார்ந்தவர்களுக்குப் போதித்து வந்ததுமல்லாமல் குடியேறி

வருகிறவர்களுக்கும் போதித்து தாழ்ச்சியடையச்செய்து தருமங்களையும் மாறுபடுத்தி விட்டார்கள்.

- 1:15; செப்டம்பர் 25, 1907 -

அதாவது அரசு திருவென்றும் போதிபண்டிகை என்றும் கொண்டாடி வந்த பௌத்தர்கள் அரசமரத்தை எவ்விடத்தில் காண்கின்றார்களோ அங்கு சாக்கைய முநிவரை சிந்தித்து நீதிநெறியினின்று சுகவாழ்க்கைப் பெற்றுவருவதை புத்த தன்மத்திற்குச் சத்துருக்களாகிய பராயசாதியார் கண்டு அவற்றை மாறுபடுத்திக் கெடுக்கவேண்டும் என்னும் பொறாமையால் விவேகமற்றக் குடிகளை நெருங்கி நீங்களரசமரத்தடியில் சிந்திக்கும் முனியாண்டவனுக்கு ஆடேனுங் கோழியேனும் பலிகொடுத்து கள், சாராயம், அபினி, கஞ்சா, சுருட்டு முதலியவைகளை வைத்துப் படைப்பீர்களானால் உங்கள் கோரிக்கை நிறைவேறும். அவ்வகை செய்யாமல் வெறுமனே சிந்திப்பதால் யாதுபயனும் அடைய மாட்டீர்கள் என்று மான்தோலைப் போர்த்திருக்குங் குக்கலைப்போன்று பெரியமனிதன் எனச் சொல்லிக்கொண்டு திரியும் மிலேச்சர்கள் வார்த்தையை கல்வியற்றக் குடிகள் நம்பி அரச திருவின் ஆழ்ந்த சீலத்தை மறந்து கள்ளருந்துங் களவாணியில் நிறைந்து கேட்டுக்குப் போகும் வாசலைத் திறந்து கொண்டார்கள்.

அது பால் அம்மன்விழாவென்றும், வேம்பு திருவென்றும் கொண்டாடுங்கால் கிராமத்தில் வாழுங்குடிகள் ஒவ்வொருவரும் பத்துநாள் வரையில் கொலை, களவு, காமம், கள்ளருந்தல் பொய் முதலிய பஞ்சபாதகங் களை அற்றிருக்க வேண்டுமென்னும் காப்புக் கட்டி ஒன்பதுநாள் வரையில் அம்மன் உற்சாகமும் அறநெறியுமூட்டி பத்தாநாள் கிராமக்குடிகளில் வீட்டிற்கு ஒருவர் புதுப்பானைகளும் அரிசி முதலியவைகளையுங்கொண்டு போய் அம்மன் பீடத்திடம் பொங்கல் வைத்து வாழையிலைகளைப் பரப்பி எல்லோர் பொங்கிய சாதங்களையுங் கும்பமிட்டு ஆறியப்பின் ஏழைகளைப் பசிதீர உண்பிக்கச் செய்து ஆனந்தகோஷத்துடன் அவரவர்களில்லங்களில் சேர்ந்து சுகவாழ்க்கை யுற்று இருப்பதைக் காணும் பராயசாதியோர் இவ்வொழுக்கத்தைக் கெடுக்க வேண்டுமென்னும் பொறா மையினால் தங்களால் ஏற்படுத்திக் கொண்ட கசிமல சாதிக் கட்டுகளினால் ஒருவர் பொங்கலை ஒருவருடன் சேர்க்க விடாமலும், சாதங்களை ஒன்றாகக் கொட்ட விடாமலும் ஆடுகளையும், மாடுகளையும் கோழிகளையும் பலி கொடுக்கும்படி செய்து நல்லொழுக்கங்களை மாற்றிவிட்டார்கள்.

அம்மன் உற்சாகத்திற் செய்யும் நல்லொழுக்க தானங்கள் தீயோழுக்க நிலைக்கு மாற்றுவதற்கு ஆதாரம் யாதெனில்:-

அம்பிகையம்மன் நிருவாணத்திற்கு நெடுங்காலங்களுக்குப் பின் மதுரையில் கோவிலன் மனைவி கன்னகை என்பவளின் சிலம்பினால் நேரிட்ட துன்பத்திற்கு ஆற்றாமல் அவள் ஒரு புரத்து மார்பைத் திரிகியெடுத்து உதிரத்துடன் அரண்மனைமேல் வீசிய சாபத்தினால் பத்தினி விரதகோபம் பற்றிப் பாழ்நேரிட்டகாலமும் அக்கோபாவேஷந்தணிய ஆயிரமனிதர்களை பலியளித்தகாலமும் ஆடிமாதம் ஆகையால் அக்காலத்தில் கன்னகா பத்தினியை வருஷந் தோரும் சிந்திப்பவர்கள் மனிதபலியைத் தவிர்த்து ஆடுமாடுகளை பலிகொடுப்பது வழக்கமாயிருந்தது. அவ்வழக்கத்தைக் கந்தி நெடுநிதியாகும் அவ்வையின் சுத்த தன்மத்திற் சேர்த்து பாழாக்கிவிட்டார்கள்.

சிலப்பதிகாரம்

கோமுறையறைந்த கொற்றவேந்தன் / றான்முறைபிழைத்த தகுதியுங்கேணீர்
ஆடி திங்கள் பேரிருள்பக்கத் / தழல்சோகுட்டத் தட்டமிஞான்று
வெள்ளிவாரத் தொள்ளெரியுண்ண / வுரைசால் மதுரையோ டரசுகேடுருமெனு.
நிறங்கிளரருவிப் பரம்பின் றாழ்வரை / நறுஞ்சினை வேங்கை நன்னிழற்கீழோர்
தெய்வங் கொள்ளுமின் சிறுகுடியீரே / தொண்டதந்தொடுமின் சிறுபரைதொடுமின்
கோடுவாய் வைம்மின் யெடுமணியியக்குமின் / குறிஞ்சிபாடுமின் னறும்புகையெடுமின்
பூப்பலி செய்ம்மின் காப்புக்கடை நிறுமின் / பாவலும் பரவுமின் விரவுமலர்தூவுமின்
ஒருமுலை யிழந்த நங்கைக்கு / பெருமலை துஞ்சாது வளஞ்சுரக்கெனவே.

புத்ததன்மத்தை மாறுபடுத்தி மிலேச்சவதன்மத்தை நாட்டிய பராய சாதியோர்

வஞ்சகபோதத்தை அறியா பேதைமாக்கள் சாந்ததேவியின் சுத்தசீல மெய்யறத்தை மறந்து தாங்கள் செய்யுந் துற்கன்ம தீங்குகட்காய்த் தோன்றுந் தீவினைகளைத் தீர்க்க ஆடுகளையும் கோழிகளையும் அறுத்து தங்கள் கிராமங்களைப் பாழடையச் செய்வதுடன் தாங்களும் பாழடைந்து போகின்றார்கள்.

இவ்வகைப் பாழுக்கெல்லாம் பராய சாதியோர்களே காரணமாயிருந்து செய்ததுமல்லாமல் சோழனுடைய நாட்டில் செத்த மாடுகளைத் தின்னும்படிச் செய்தும் வதைத்திருக்கின்றார்கள்.

ஞானவெட்டி

இந்தவிதமென்றறியாருலகினி / லெந்தன் குலத்தையிகழ்ச்சிகள்பேசினார்
வந்தவிதி யென்றறியாத மாந்தர்கள் / மாலப்பறையனென்றே சோழனூரினில்
மாடுகள் செத்துமடிந்ததை கண்டவ / ரோலமென்றேயதை யுண்ணும்படிச் செய்தார்
பாடுபட்டுப்பலன் காணா தழியுமிப் / பாவிகளெங்கள் பரநிலை காண்திலர்.(சாதியை)

தங்கள் தீவினையை மாற்றிக்கொள்ளுவதற்கு ஆடுகளையும் கோழிகளையும் பலிகொடுப்பதினால் முன்செய்த தீவினையுடன் சீவர்களைக் கொல்லுந் தீவினையுங்கூடி குடிகெடுக்குமென்று விவேகமிகுத்தோரால் கூறியுள்ள சிலேடைப்பா.

பெருந்திரட்டு

உங்கள் மக்களும் நீங்களும் நோய்பட / எங்கள் மக்களும் யாங்களுமென் செய்தோம்
உங்கள் தீவினை யோடுமுதலிடாய் / எங்கள் தீவினை யேற்பது திண்ணமே.

- 1:16; அக்டோபர் 2, 1907 -

மனிதர்களையும் மாடுகளையும் குதிரைகளையும் சுட்டுத்தின்றுச் சோம்பேரிகளாய்த் திரிந்த மிலேச்சர்கள் மேன்மக்களாயதும் ஒழுக்கஞ், சீலம், ஞானம், விடாமுயற்சி, கருணை, யீகை முதலிய நற்குணமிகுத்த விவேகிகள் கீழ்மக்களாயதுங் காரணம் விசாரிணைக் குறைவேயாம்.

ஆடிமாத ஆதிவாரப் பௌர்ணமியில் சிந்திக்கும் ஔவையார் இயற்றியுள்ளத் திரிவாசகமாகும் நீதிநூலில் புலையுங்கொலையுங் களவுந்தவிரென்று கூறியிருக்க அவ்வம்மையை சிந்திக்கும் நாம் ஆடுமாடுகளை அவளுக்கு பலிகொடுத்தால் ஏற்பளோ, ஒருக்காலும் ஏற்காள்.

பௌத்தமார்க்க சுத்தசீலர்களின் குலதேவதையாக விளங்கிய சாந்த தேவிக்கு புட்பார்ச்சனையை விடுத்து உயிர்வதையாகும் பலி கொடுப்பதினால் அம்மன் நிருவாண காலத்தில் கொடுத்திருந்த வாக்கும் மயங்கி கிராமங்களுஞ் சீர்குலைந்து உள்ளக் குடிகளும் நாளுக்குநாள் பாழடைந்து வருகின்றார்கள்.

மணிமேகலை

சிந்தாதேவி செழுங்கலை நியமத்து / நந்தா விளக்கே நாமிசைபாவாய்
வானோர் தலைவி மண்ணோர் முதல்வி / யேனோ குற்ற விடர்களை வாயெனத்
தான்றொழுதேத்தித் தலைவியை வணங்கி.

இவ்வகைத் தொழுகையில் சற்குருவையும், அம்மனையும் சீலத்தொழுகையால் சிந்திக்குந்தோறும் புட்பங்களைக்கொண்டே அர்ச்சித்து வந்தார்கள்.

மணிமேகலை

விரைமல ரேந்தி விசும்போடிழுந்து / பொருவறு பூங்கொடி பூமியிற்பொலிந்தென
வந்துதோன்றிய மணிமேகலாதெய்வ / முந்தை பிறப்பெய்தி நின்றோள்கேட்ப.

சீவகசிந்தாமணி

தண்ணந்தீம்புன லாடியதண்மலர் / வண்ணவார் தளிர்ப் பிண்டியினானடிக்
கெண்ணியாயிர மேந்துபொற்றாமறை / வண்ணமாமல ரேற்றிவணங்கினான்.

சற்குருநாதனையும், ஔவையையும் தாமரை புட்பத்தைக்கொண்டு அர்ச்சித்துவந்தபடியால் மடங்களைச்சார்ந்தக் குளங்களில் எல்லாம் தாமரை புட்பத்தையே விசேஷமாக விளைவு செய்து வந்தார்கள்.

புத்ததன்மத்தினின்று ஔவையைப்போல் ஓடேந்தி மடத்திற் சேர்ந்து பிட்சுணி நிலை அடைந்த மாதவியின் மகள் மணிமேகலை என்பவள் நிருவாணதிசை அடைந்தபின் சாந்ததேவிகளில் ஒருவளாக விளங்கியபோது கம்பன் மகன் அம்பிகாபதி என்பவன் மணிமேகலை யை சிந்தித்த பாடல்.

காதன்மடந்தையர் கையறுங்கலையு மெய்யகலா
மேதகு நாணு மெலியவன்றோ விழிபோலு நெய்தற்லா
போதவிழ் மென்மலர்ப் புன்னையங்கானல் பொருந்துமிந்த
மாதவிபெற்ற மணிமேகலை நம்மை வாழ்விப்பதே.

புத்ததன்மத்தைச் சார்ந்து துறவடைந்து நிருவாணதிசையடைந்த ஆண்மக்களை தேவர்கள் என்றும் பெண்மக்களை தேவிகள் என்றும் கொண்டாடிவந்தார்கள்.

சிலப்பதிகாரம்

போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியதானம் புரிந்த
மாதவிதன்றுறவுங் கேட்டாயோ தோழி
மணிமேகலைதுறவுங் கேட்டாயோ தோழி.

கோவிலன் மனைவி கன்னகை என்பவளுக்குண்டான கோபாவேஷத்தை அடக்குதற்கு ஆயிரங் கொல்லரை பலிகொடுத்துவிட்டு மதுரையில் கண்ணகி பீடம் அமைத்து மனிதர் பலிக்கு பதிலாக ஆடு மாடு கோழி முதலியவைகளை பலி கொடுத்து வந்தார்கள்.

சீவகசிந்தாமணி

ஊன்சுவைத்துடம்புவீக்கி நரகத்தி லுரைதனன்றோ.
யூன்றுனா துடம்புவாட்டி தேவராயுரைதனன்

சிலப்பதிகாரம்

கொற்கையிலிருந்த வெற்றிவேற்செழியன் / பொற்றொழிற் கொல்ல ரீரைஞ் நூற்றுவ
ரொருமுலை குறைத்த திருமாபத்தினிக் / கொருபகலெல்லை யுயிர்பலியூட்டி
யுரை செல வெறுத்த மதுரை முதூர்.

கிராமதேவதையாய் இருந்து ஊர்க்குடிகளைக் காப்பாற்றும் வாக்களித்தவள், கன்னகை அன்று.

கிராமதேவதையாகவும், குலதேவதையாகவும், ஊர்க்காவற்காரியாகவும், காவலூர் அம்மனாகவும், இருப்பதாய் வாக்களித்து ஊழியாற்றோன்றுங் கொடுமாறியை அகற்றி ஆரோக்கியம் பெறச் செய்தவள் அம்பிகை என்னும் அவ்வையாதலின் அவளை சிந்திப்பவர்கள் சுத்தசீலத்தினின்று பொய், கொலை, களவு, கள்ளருந்தல், காம முதலிய பஞ்சபாதகங்களை அகற்றி தன்மசிந்தையைப் பெருக்கி சிந்திப்பதே சிந்தனையாகும்.

சாந்ததேவதையை சாந்தசீலத்தால் சிந்திப்போமானால் நமது கிராமங்கள் சிறப்படைவது இன்றி நாமும் சுகவாழ்க்கை அடையலாம்.

இதுவே சத்தியம்.

- 1:17; அக்டோபர் 9, 1907 -

6. மாளிய அமாவாசை என்னும் மாவலி அமாவாசி தன்ம விவரம்

ஆயிரத்தி இருநூறு வருடங்களுக்கு முன் தற்காலம் மாபலிபுறமென வழங்கும் பதியில் வீற்றிருந்த தென்பரதகண்ட முழுவதும் ஏகசக்கிராதிபதியாக ஆண்டுவந்த மாபலிச்சக்கிரவர்த்தி என்பவர் புத்ததன்ம சங்கம் என்னும் திரிரத்தினங்களைச் சிரமேற்கொண்டு தன் ஆளுகைக்கு உட்பட்ட தேசம் எங்கும் தன்ம சங்கங்களை நாட்டி நீதிகளையும், நெறிகளையும், வாய்மெகளையும், நிலைக்கச்செய்து குடிகள் யாவரையுஞ் சுத்தசீலத்தில் வைத்திருந்து தானுஞ் சங்கத்திற் சேர்ந்து சுத்தசாதனந் தழுவி புரட்டாசி மாத அமாவாசியிற் பூரணம் என்னும் நிருவாணதிசை அடைந்தார். இத்தென் பரத முழுமையுஞ் சங்கங்களை நாட்டி தன்மத்தைப் பரவச்செய்தப் பேறுபகாரத்தால் அனந்த மக்கள் ஹரஅத்து நிலையுற்று நிருவாணதிசை அடைந்தபடியால் தென்பரதத்திலுள்ள சகல மக்களுக்கும் முக்த்திவழிக்கு முதன்மெயானவர் மாவலிச் சக்கிரவர்த்தியாதலின் அவர்நிருவணாதிசை அடைந்த புரட்டாசிமாதம் அமாவாசியில் சகலரும் ஏழைகளுக்கு தானஞ்செய்து தாங்களும் புத்ததன்மத்தைப் பரவச்செய்து வந்தார்கள்.

இதன் விவரந் தெரிந்துக்கொள்ளவேண்டியவர்கள் வேலூர் திருவல்லக் கிராமத்திலும், குல்கான்பேடே என்னும் கிராமத்திலும் கிடைத்துள்ளக் கல்வெட்டுகளாலும், செப்பேடுகளாலும் தெரிந்துக்கொள்ளலாம்.

சுத்தசீலப் புத்தேளுலகிற்கு முதன்மெய்க் காவலாக விளங்குபவர் மாபலி பெருமானெனக் குறிப்பிட்டு மற்றும் விவரங்களையும் வரைந்திருக்கின்றார்கள்.

அவருக்கு ஆண் சந்ததி ஒன்றும் பெண் சந்ததி ஒன்றும் இருந்தது. இதில் ஆண்பிள்ளைத் திருப்பாணர் என்னும் அரசர். பெண்பிள்ளை அலர்மேலுமங்கை என்பவள், மடஞ்சார்ந்து பிட்சுணியாகிவிட்டாள். பாணர்வம்மிஷவாளிப் பட்டயத்தாலும், தாதைகி என்னும் அலர்மேலுமங்கை அற்புதத்திரட்டாலுந் தெரிந்துக்கொள்ளலாம்.

அலர்மேலுமங்கை அற்புதத்திரட்டு

மாவலிகடைநாட் கன்னியமாம் / வரவையேற்றதன்மின் வாயல்தோற்றுமின்.
பூவலிசிகரம்பற்றி தீர்த்தம் / பாயலேற்றுமின் பூவைபாற்றுமின்
காவில்புத்தூர் காவன் முன்னோன் / காலன்தூற்றுமின் கருணையேற்றுமின்
சேவடி நீழற் சேரற்றானந் / தேரவாற்றுமின் தேவர்போற்றுமின்.

மணிமேகலை

நெடியோன்குன்ற வாரசாரண / ரடியார் தானவ ரமரர்களுலகக்
காவல் கொண்டக் கற்பக சீலன் / மாவலி பெருமான் சீர்புகழ் திருமகள்
சிதாதகை யென்னுந் திருத்தகு தேவி / போதவிழ் பூம்பொழில் புகுந்தனள் புக்கி.

ஓர்கால் பகவனால் லோகவூற்றைக் காண்பித்து வியாதியுற்றவர்கள் சிரமுதலிலுள்ள ரோமங்களைச் சிறைத்துவிட்டு இன்னீரிற் குளிப்பீர்களானால் சிற்சில ரோகங்கள் நீங்குமென்றுரைத்த நெடியோன் குன்றம் - வேங்கடமலை - வடமலை என வழங்குமிடத்தில் மாவலிச்சக்கிரவர்த்தியால் இந்திரவியாரங் கட்டி அதிற்றானும் புத்தசங்கத்தோருந் தங்கி ஞானசாதன முற்றி புரட்டாசிமாதம் அமாவாசியில் நிருவாணமுற்றபடியால் அக்காலத்தை மறவாமல் புத்த தன்ம பிரியர்கள் யாவருஞ்சென்று ஏழைகளுக்கு அன்னதானமளித்து உரோமங்கழித்து சுனை தீர்த்தத்தில் முழுகி சமணமுனிவர்களைப் போல் மஞ்சளாடை அணிந்து அரசருக்குள் ஆட்சரிய துறவடைந்த கோவிந்தா கோவிந்தாவென்றானந்தக் கூச்சலுடன் மற்றும் வியாரங்களுக்குச் சென்று வருவது வழக்கமாயிருந்தது.

சீவகசிந்தாமணி

தீராவினைதீர்த்து தீர்த்தந் தெரிந்துய்த்து / வாராக்கதியுரைத்த வாமன்றானியாரே
வாராக்கதியுரைத்த வாமன் மலர்துதைந்த / காராரப்பும்பிண்டி கடவுணீயன்றே.
அம்மலைச்சினகரம் வணங்கிபண்ணவர் / பொன்மலர் சேவடி புகழ்ந்துபின்னரே
வெம்மலைத்தெய்வதம் விருந்துசெய்தபின் / செம்மல்போய்பல்லவ தேசநண்ணினான்.

சூளாமணி

என்றுதங்கதை யோடிரு நீண்டுகிற் / குன்று சூழ்ந்த குழுமலர் கானகஞ்
சென்றோர்வேங்கடஞ் சேர்ந்தனருச்சிமே / னின்று வெய்யவனு நிலங்காய்த்தினான்.
மஞ்சிவர் மால்வரைச் சென்னிவடமலை / விஞ்சையர் வாழும் விழாவணி நல்லுல
கஞ்சியல் வில்லோ யதுமற்றமரர்க / டுஞ்சிய வில்லத் துறக்க மனைத்தே.

இத்தகைய தன்மச் செயல்களை மதக்கூடை பரப்பி சீவனஞ்செய்வோர் மாவலி அமாவாசி தானத்தை மாளிய அமாவாசை என்று மாற்றியதுமன்றி வித்தை, புத்தி, யீகை, சன்மார்க்கம் நிறைந்த சுத்தவீரனாகும் மாபலியை தங்கட் கடவுள் மிதித்துக் கொன்றுவிட்டாரென்று மாவலிச் சக்கிரவர்த்தியின் சிறப்பையுங் கெடுத்து தங்களுக்குஞ் சீவன உபாயத்தைத் தேடிக் கொண்டார்கள். மாபலி - பாணவம்மிசத்து அரசன்.

- 1:18; அக்டோபர் 16, 1907 -

பாணர்வம்மிஷ வரிசையைச் சார்ந்த மாவலிச் சக்கிரவர்த்தியின் புத்திரன் பாணரென்றும் திருப்பாணரென்றும் வழங்கிய ஒருவனிருந்தான். அவன் தனது இல்லறவாழ்க்கையைத் துறந்து திரிசிரபுரத்தைச்சார்ந்த அழகர் வியாரம் அரங்கா வியாரம் என வழங்கிய புத்ததன்ம சங்கத்திற் சேர்ந்து சீலமிகுதியடைந்தான். பெற்ற சுகத்தை ஏனையோரும் அடையவேண்டும் என்னும் நல்லுரக்கத்தால் விடியற்காலத் தெழுந்து ஓவ்வோர் கிராமங்களுக்குஞ் சென்று அடியிற் குறித்துள்ள வாக்கியங்களை போதித்துக் கொண்டேவந்தார்.

தந்தை தாய் பந்து மித்திரர் திரவியம் வீடுவாசல் முதலிய யாவற்றும் நிலை யற்ற தாதலின் அதனை நீங்கள் நிலையென்று நம்பாமல் எச்சரிக்கையில் நடவுங்கள், எச்சரிக்கையில் நடவுங்கள்: காமக்குரோத வஞ்சின முதலிய திருடர்கள்.

உங்கள் தேகங்களுள் நுழைந்துஞான மென்னும் இரத்தினத்தை அபகரிக்கும் வழிதேடுகிறார்கள் அவர்களுக்கு இடம் கொடுக்காமல் எச்சரிக்கையாயிருங்கள் எச்சரிக்கையாயிருங்கள்!

ஆசையென்னும் பாசத்தால் கட்டுபட்டு பூர்வகருமானு சாரத்தினால் பல சிந்தனையுள்ளவர்களாய் ஆயுளைக் குறைத்துக் கொள்ளுகிறீர்கள். இனியேனும் அவ் வகையாசாபாசத்தில் அதியவாக் கொண்டழுந்தாமல் எச்சரிக்கையாயிருங்கள், எச்சரிக்கையாயிருங்கள்!

பிறப்பதுந்துக்கம் இறப்பதுந்துக்கம் பொருளை சம்பாதித்துந் துக்கம் அதைக்காத்தலுந் துக்கம் அது அழிதலுந்துக்கம் இத்துக்கமானது மாறாமல் அடிக்கடி நேர்ந்துக்கொண்டிருக்கின்றது. இதற்குக் காரணம் சமுசாரம் என்னும் பெருங் கடலாதலின் எச்சரிக்கையாயிருங்கள், எச்சரிக்கையாயிருங்கள்!

என்று நிதமும் போதித்துவந்த வாக்கியங்களை அரச வாக்கியம் என்றும், மடாதிப குருவாக்கியம் என்றும், உயர்ந்த நீதிவாக்கியம் என்றும் கொண்டாடி சுத்தசீலமுற்றதுமன்றி திருப்பாணரை என்றும் மறவா தியானத்தில் வைத்திருந்தார்கள்.

அக்கால் மதக்கடைப் பரப்பி சீவனஞ்செய்வோர் இடுக்கங்களினால் புத்தசங்கத்தோர் நசிந்து பலவிடங்களிற் குடியேறிவிட்டபோது அவர்கள் வியாரங்களைக் கைப்பற்றிக்கொண்டு தங்கடங்கள் மதக் கோவில்கள் என்று மாற்றிக் கொண்டதுமன்றி சங்கத்தோர்களையும் பறையர்களென்று தாழ்த்தி விலகவைத்தவர்கள் ஆதலின், திருப்பாணர் சிறப்பையும் அவர் நீதிகளை மறவாமலிருந்தக் குடிகளின் மனதையும் மாற்றுவதற்காய் திருப்பாணர் என்னும் ஓர் பறையனிருந்தான், அவன் ஊரைக்காவல் வரும்போது சில நீதிகளைச் சொல்லிவந்ததுமன்றி எங்கள் சுவாமிக்கும் அன்பனாகிவிட்டபடியால் ஆழ்வார்களில் ஒருவனாகத் திருப்பாணாழ்வார் என மாற்றி அப்பெயரின் ஆதரவைக் கொண்டு தங்கள் மதக்கடையைப் பரப்பிவிட்டார்கள்.

சிவசமயத்தோரென்பவர் நந்தன் என்னும் புத்ததன்ம அரசனைப் பறையனென்று தாழ்த்தி சிலக் கட்டுக்கதைகளை ஏற்படுத்திவிட்டது போல் விஷ்ணு சமயத்தோர் என்பவர் பாணவம் மிஷத்தரசனை திருப்பாணரென்னும் பறையனென்று தாழ்த்தி சிலக் கட்டுக்கதையை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

புத்த தன்மத்தைச் சார்ந்த அரசர்களையுஞ் சங்கத்தோர்களையுந் தாழ்த்தி அவர்கள் சரித்திரங்களையும் மாறுபடுத்தியதுமன்றி புத்தசங்கத்தோர் நூற்களிலுள்ள வாக்கியங்களையும் மாறுபடுத்தி வைத்திருக்கின்றார்கள்.

பாகுபலி நாயனார், மார்க்கலிங்க பண்டாரம் இவர்கள் கைகளிலிருந்த ஏட்டுப்பிரிதிக்கும் மணிமேகலை, நன்னூல், சீவகசிந்தாமணி, வீரசோழியம் மற்றுமுள்ள சமணர் நூற்களில் சாக்கையர் சாக்கையர் என்னும் வார்த்தைகள் அன்னியரிடமுள்ள நூற்களில் சாவகர், சாவகர் என்று எழுதிவைத்திருக்கின்றார் கள். மலர்கலியுலகத்து மலர்கலியுலகத்து என்னும் வாக்கியங்களை மலர்தலை யுலகத்து மலர்தலையுலகத்து என மாற்றி வரைந்துவைத்திருக்கின்றார்கள்.

அடியிலுள்ளப் பாடல்களின் பேதங்களாற் காணலாம். பாகுபலி நாயனார், மார்க்கலிங்க பண்டாரம் இவர்களேட்டுப்பிரிதிகள்.

மணிமேகலை

சாக்கையராளுந் தலைத்தார்வேந்தன் / ஆக்கையுற்றுதித்தன னாங்கவன்றானென.
நெடியோன் குன்ற வாரசாரண / ரடியார்தான வமரர்களுலகக்
காவல்கொண்ட கற்பகசீலன் / மாவலிபெருமான் சீர்புகழ் திருமகள்
சிதாதகை யென்னுந் திருத்தகுதேவி / போதவிழ்பூம்பொழில் புகுந்தனன்புக்தி.

அன்னியர் கையேட்டுப் பிரிதிகள்.

சாவகமாளுந் தலைத்தார்வேந்த / னாவயிற்றுதித்தன னாங்கவன்றானென
நெடியோன் குறளுரு வாகநிமிர்ந்து / தன்னடியிற்படி யடக்கியவந்தா

ணரிற் பெய்த மூரிவார்சிலை / மாவலிமருமான் சீர்கெழு திருமகள்
சிதாதகையென்னுந் திருத்தகுதேவியொடும் / போதவிழ் பூம்பொழில் புகுந்தனன் புக்குக.
- 1:19; அக்டோபர் 23, 1907 -

புத்தபிரான் மூதாதைக் கலிவாகுச் சக்கிரவர்த்தியின் காலக்கணிதமாகுங் கலியுலக திரியாங்கத்துள் (பாலி) புண்ணபட்சமென்றும் அமணபட்சமென்றும் வழங்கிய வார்த்தை வடமொழியில் பூரண சந்திரன், அமரச்சந்திரனென்றும் தென்மொழியில் பூரணகலை, அமரகலை என்றும், பூர்வவாசி, அமரவாசி யென்று வழங்கி வந்த வார்த்தைகளை தற்காலப் பஞ்சாங்கம் என்று ஏற்படுத்திக் கொண்ட பாவலர்கள் அதனுட் பொருளறியாது ஓலைச்சுவடிகளில் அமரச்சந்திரன் அமரகலை, அமரவாசி என்று வரைந்திருக்கும் மொழியை (அமர) என்று அறியாது (அமா) என்று எண்ணி அமரவாசி என்பதை அமாவாசி என்று வழங்கி வருகின்றார்கள்.

காரணம் இலக்கியம் அறியா இலக்கண வித்துவான்களின் அந்தகாரமேயாம்.

சாக்கையர்கள் அண்டத்திற்கும் பிண்டத்திற்கும் வகுத்துள்ள கலை நூற்களில் தேகத்தின் நாசியினின்று வெளிவரும் சுவாசம் என்றும் கலை என்றும் வழங்கும் வாசியானது சுத்த இதயத்துடன் கலந்து பூரகம் என்னும் பூரணம் அடைந்த நிலையை நித்தியம் நிருவாணம் என்று கூறினார்.

சுவாசமானது ஆசாபாசஞ் கலந்த அசுத்த இதயத்துடன் கலந்து வெளிப்பட்டு தேய்வடையுமாயின் இருளென்னும் அமரமுற்று இறப்பா னென்றுங் கூறினர்.

அதுபோல் அண்டத்துள்ளக் கலை நாளுக்கு நாள் வளர்ந்து பூரணமுற்று உலகின் இருளை அகற்றி சருவ பொருளையும் விளக்குகின்றது.

பூரணமுற்ற கலை நாளுக்குநாள் தேய்ந்து அமரம் என்னும் இருளடைந்து சருவப் பொருட்களையும் மறைத்துவிடுகின்றது.

ஞானக்குறள்

மதிக்குள் கதிரவன் வந்துளொடுங்கில் / உதிக்குமாம் பூரணச் சொல்.
தோற்றுங்கதிரவ னுண்மதி புக்கிடில் / சாற்று மமரம் தான்.

அமரபட்சம் - பூர்வபட்சம், அமரச்சந்திரன் - பூர்வச்சந்திரன், அமரகலை - பூர்வகலை, அமரவாசி - பூர்வவாசி என சுவாசத்தின் தேய்வுக்கும் வளர்ச்சிக்கும் பலனாகும் ஒளியை பூரணம் என்றும் இருளை அமரமென்றுங் கூறினார்கள்.

இருந்தும் ஓர் இமைப்பொழுது மறைந்து காணாச் சந்திரனை அமரச் சந்திரனென்றும், இருந்தும் மறைந்துக்காணா கோட்களுக்கு அமரக்கோட்க ளென்றும் இருந்தும் மறைந்துக்காணா தேவர்களுக்கு அமரர்களென்றும் வகுத்திருக்கின்றார்கள்.

கடைகாண்டம்

இடைகலையே சந்திரகலை மதிதேய்ந்தாப்போ
லிலங்கியதோர் பிங்கலையுந் தேய்ந்துபோச்சு
தடையாளஞ் சொல்லக்கேள் பதினாறுமாத
மப்பனே சிவயோகத் திருந்துபாரு
விடையாதே சந்திரகலை தேய்ந்துபோச்சு
வேதாந்தனந்தியைப்போல் பேசலாச்சு
துடையாளிபோலிருந்த புரியபட்டந்தான்
தானேமுடிந்தட்டா வுண்மெய்ப்பாரே.

பூர்வகாலத்தில் மெய்யந்தணர்களை அறஹத்தோ அறஹத்தோ என்று அழைத்து அன்னமிட்டு வணங்கி தாங்களும் புசித்து சுத்தசீல தன்மத்தைப் பெருக்குஞ் சாதனங்களைமறந்து அரகரோ - அரகரோ என்னும் பொருளற்ற வார்த்தையைக் கூறுவது போல் அமாவாசி என்னும் பொருளற்ற வார்த்தையை வழங்கி வருகின்றார்கள்.

இத்தகைய புதைப்பொருள் வாக்கியங்கள் பொருளறியாது மயங்குவது பொய்க்குருக்களின் அறியாமையாயினும் பூர்வ புத்ததன்ம அரசர்களைப் பறையர்களென்று தாழ்த்தி சைவசமயத்தோர் கோவிலில் நந்தனென்னும் ஓர் பறையனையும், வைணசமயத்தோர் கோவிலில் திருப்பாணரென்னும் ஓர் பறையனையுஞ் சேர்த்துக் கொண்ட காரணம் யாதெனில்:-

93 வருடங்களுக்கு முன்பு பிராமணரென்று சொல்லிக்கொள்வோர் களுக்கும் கம்மாளர் என்று அழைக்கப்படுவோர்களுக்கும் ஓர் பெருத்த கலகம் நேரிட்டது.

அதாவது பிராமணர்களென்போர் சகலசாதியோர்களுக்குங் குருக்களென்றும் சதுர்முகப்பிரமா முகத்திலிருந்து வந்தவர்களானபடியால் நாங்களே சகலசாதி யோர்களுக்கும் மேலான சாதிகள் என்றும் சகலருக்குள்ள தன்ம கன்மங்களையும் தாங்களே செய்யவேண்டியவர்கள் என்றும் கல்வியற்றவர்களை வஞ்சித்து சீவிக்குங்கால் கம்மாளருக்குள் சில விவேகிகள் தோன்றி தாங்கள் பஞ்ச முகப் பிரம்மாவால் பிறந்தவர்களென்றும் தாங்களே சகலருக்கும் தன்மகன்மங்களைச் செய்யவேண்டிய குருக்கள் என்றும் கூறி (நான் முகப் பிரம்மா கரடி முன்னிலையில், ஐந்து முகப்பிரம்மா கரடியை விட்டார்கள்) அதனால் பொய்யுடன் பொய் மோதிக்கொண்டு பெருங்கலக முண்டாகி அடிதடில் நேரிட்டு கம்மாளர்களால் அடிப்பட்ட பிராமணர்களென்போர் தங்களுக்கு உதவிக்காக பறையர்கள் என்போர்களைச் சேர்த்துக் கொண்டு இடங்கையர் வலங்கையர் என்னும் இரு வகுப்புக்களை உண்டுசெய்து கம்மாளர்களை இடங்கையரென்றுகூறி தங்களுடன் சேர்த்துக்கொண்டதுமன்றி,

- 1:20; அக்டோபர் 30, 1907 -

தாங்கள் செய்துக்கொண்டுவருந் தந்திரசீவனத்தை கம்மாளர்கள் என்போர் பற்றிக் கொள்ளுவதை உணர்ந்து அவர்களைத் தாழ்த்துவதற்காய் இடங்கையராக்கி சிவசமயத்தோர் கூட்டங்களில் பலசாதிகளிலும் ஒவ்வொருவர்களை நாயனார் மார்களிற் சேர்த்துக் கொண்டு கம்மாளர் என்போர்களை நீக்கியும் தங்களுக்கு அடங்கியக் கால் சேர்த்துக் கொள்ளுவதற்கும் சாதிப்பெயரில்லா நாயன்மார்களையுஞ் சேர்த்துக் கொண்டார்கள்.

அதுபோலவே விஷ்ணு சமயத்தோர்களும் தங்கள் பன்னிரண்டு ஆழ்வார்களுக்குள்ளும் சேர்த்துக் கொண்டார்கள்.

பறையர்கள் என்போர் பிராமணர்கள் என்போர்களுக்கு புத்தமார்க்கப் பூர்வ விரோதிகளாய் இருந்தபோதிலும் பூர்வ நிலைகுலைந்து ஆயிரத்தி ஐன்னூறு வருடம் கடந்துவிட்டபடியால் சற்குருவின் தியானத்தையும் பூர்வ தன்மங்களையும் மறந்து தாயைப் பறிகொடுத்தப்பிள்ளைகளைப்போல் திகைத்து நின்றவர்களாதலின் பிராமணர்கள் என்போர் போதனையிற்சிக்கி கம்மாளர்கள் என்போரை எதிர்த்துப் போர்செய்ய ஆரம்பித்துக் கொண்டார்கள். அதனால் பிராமணன் என்போருடன் இருந்த விரோதம் போதாமல் கம்மாளர் என்போர் விரோதத்தையுஞ் சேர்த்துக் கொண்டு பறையர்கள் என்னும் பெயரையுந் தாழ்வையும் அதிகரிக்கச் செய்துக் கொண்டார்கள்.

இத்தியாதி தாழ்வுகளுக்கும் காரணம் கல்விக் குறைவும், செல்வக் குறைவும், விசாரிணைக் குறைவும், சற்சங்க சாவகாசக் குறைவுமேயாம்.

ஓர் விவேகியைப் பத்துபெயர்க் கூடிக்கொண்டு இவன் நீச்சன், கேவலன், தாழ்ந்தசாதி என்று புறக்கணித்துவருவார்களாயின் நாணமுற்று சீர்கெட்டு நாளுக்குநாள் நலிந்து விவேக மயங்கி நிலைகுலைந்துவிடுவான்.

ஓர் யாசகனைப் பத்துப்பெயர்க்கூடி இவன் பெரியோன், விவேக மிகுத்தவன், உயர்ந்த சாதியான், சகலமுந் தெரிந்தவன் என்று உயர்த்திக்கொண்டே வருவார்களாயின் நாளுக்குநாள் உயர்ந்து விவேகமிகுத்து நாகரீகமுற்று சகல சுகமும் பெற்று வாழ்வான்.

அதுபோல் வித்தை, புத்தி, யீகை, சன்மார்க்கம் நிறைந்து சோதிடம், வைத்தியம், ஞானம் என்னும் முக்கலைகளுக்கும் குருபீடங்களாக விளங்கிய மேன்மக்களைப் பெருங்கூட்டத்தார் சேர்ந்துக்கொண்டு பறையர் பறையர் என்று தாழ்த்தி சுத்தசலங்களை மோர்ந்து குடிக்கவிடாமலும் அம்மட்டர்களை சவரஞ்செய்ய விடாமலும், வண்ணார்களை வஸ்திரம் எடுக்கவிடாமலும் பலவகை இடுக்கண்களைச் செய்து நிலைகுலைத்தபடியால் அவிவேக மிகுத்த அற்பர்களுந் தாழ்த்தி அலக்கழிக்க நேரிட்டுவிட்டது.

இத்தேசத்தில் நூதனமாக ஏற்படுத்திக் கொண்ட சாதிக் கட்டிற்கு பயந்து சிலர் மகமதியர்களாகவும், சிலர் கிறிஸ்தவர்களாகவும் சேர்ந்துவிட்டதன்றி மற்றுமுள்ளோர் தங்கள் பூர்வநிலையை உற்றுநோக்காமல் சத்துருக்களை மித்துருக்கள் என்று எண்ணி அன்னியனுக்குப் பெற்றப் பிள்ளையைத் தன்பிள்ளை என்று தாலாட்டுதல்போல அன்னியர் மார்க்கங்களை தங்கள் மார்க்கங்கள் என்றும், அன்னியர் தேவதைகளைத் தங்கள் தேவதைகள் என்றும் கொண்டாடி கஷ்டார்ச்சித சொத்துக்களையும் அழித்து விடுகின்றார்கள். இத்தகைய மயக்கத்தில் ஆழ்ந்துள்ளோரைத் தெளிவடையச் செய்து பூர்வ நிலக்குக் கொண்டுவரவேண்டியது விவேகிகளின் கடனாம்.

- 1:21; நவம்பர் 6, 1907 -

7. தீபாவளி பண்டிகை என்னும் தீபவதி ஸ்னான விவரம்

தற்காலம் ஜப்பான் தேசத்தோர் என வழங்கும் பௌத்தமார்க்கத்தோர் ஆனந்தச் செய்கைகள் யாதெனில், அவர்கள் விவேக விருத்தியில் நூதனமாகக் கண்டுபிடிக்கும் கனிவர்க்கங்களையும், நெய்வர்க்கங்களையும், விருட்ச வர்க்கங்களையும் விருத்தியடையச் செய்து பலன்களை நுகர்ந்துவருங்கால் அப்பொருட்களைக் கண்டுபிடித்தக் காலத்தை வருடத்திற்கு ஒருமுறை கொண்டாடவேண்டி வீடுகடோரும் அப்பொருளைக் கொண்டுவந்து வைத்துக்கொண்டு நூதன ஆடைகளணிந்து பலவகை பதார்த்தங்களை வட்டித்து ஏழைகளுக்குக் அளித்துத் தாங்களும் உண்டு ஆனந்தித்து வருவதை நாளது வரையிலும் காணலாம்.

அதுபோல் இத்தேசத்தில் சத்தியதன்மமாகும் புத்தமார்க்கம் பரவி இருந்த காலத்தில் புத்த சங்கத்தோர் ஒவ்வோர் மடங்களிலும் வீண்காலங்களைப் போக்காமல் ஞான விசாரிணைகாலம் நீங்கலாக மற்றகாலங்களில் விருட்ச குணாகுணங்களையும், கனிவர்க்க குணாகுணங்களையும், நெய்வர்க்க குணா குணங்களையும், மற்றும் உலோகோபகார கலைநூல் விருத்திகளிலும், தங்கள் தருமத்தைப் பரவச்செய்து அரசர்களுக்குத் தெரிவித்துவருவது வழக்கமாய் இருந்தது. அதுபோல் (எள்) என்னும் ஓர் தானியத்தைக் கண்டு அதிலுள்ள நெய்யை எடுத்து அவுஷத உபயோகத்தில் விடுத்து அடியிற் குறித்துள்ள குணாகுணங்களைக் கண்டுபிடித்து,அக்கால் தென்பரதத்துள் பள்ளி என்னும் நாட்டை அரசாண்டுவந்த பகுவன் என்னும் அரசனுக்குத் தெரிவித்தார்கள்.

பதார்த்த சிந்தாமணி

நேத்திரக் கபால ரோகம் நீங்கிடுஞ் சுரங்கள் மேகங்
காத்திரமான சேத்மம் கறைந்திடு மலத்திரட்சை
மாத்திடுஞ் சோமரோகம் வளரெலும் புருக்கியீளை
சேத்த நல்லெண்ணெ யாலே தேகமுங் காந்தியாமே.

அவன் அதின் குணாகுணங்களை ஆராய்ச்சிச் செய்து எள்ளை மிக விளைவித்து நெய்யெடுத்து தன் தேசக்குடிகள் யாவரையும் வரவழைத்து எள் நெய்யைக் கொடுத்து சிரசில் தேய்த்துக் கொண்டு அருகிலோடும் தீபவதி என்னும் நதியில் தலைமுழுகச்செய்து மற்றும் அந்நெய்யில் பலகாரங்களும் வட்டித்து புசித்து ஆனந்தங்கொண்ட செய்கையை மாறாமல் வருடந்தோருஞ் சகல குடிகளும் எள்ளின் நெய்யாற் பலகாரம் செய்து தீபவதிநதியில் தலைமுழுகி புதுவஸ்திரம் அணிந்து ஏழைகளுக்கு அன்னதர்னம் செய்து (நல் எள் நெய்) நல்லெண்ணெய் கண்டுபிடித்த அற்பிசிமாதச் சதுர்த்தசி நாளை தீபவதி ஸ்னான நாளென வழங்கி வந்தார்கள்.

பெருந்திரட்டு - பாண்டிப் படலம்

பள்ளியம்பதியிலார்ந்த பகுவனார்கிழவகாலந்
தெள்ளிய லுழவிலாறுஞ் சேர்புனல்புஞ்சைவாவி
எள்ளகவெண்ணெயாய்ந்த் விடயமற்றவர்குறிப்ப
வெள்ளியல்மற்றாகார மேற்சிரமகிழ்வென்றாங்கே
சிரமுருவெள்நெய்மற்றுந் திரளொடு செந்நெலீய்ந்து
கரமுகிலேந்திகங்கைக் கரைதீபவதியைநாடித்

துரமுறத் தோய்ந்துநீரிற் றுவைந்துமெய்யக நிறப்ப
பரவருமசதிமற்றும் பாயிலுமசுலுமென்றான்.

- 1:21; நவம்பர் 6, 1907 -

இத்தகைய வழக்கமானது புத்ததன்மம் இத்தேசமெங்கும் பரவியிருந்த காலத்தில் கனவான்கள் முதல் ஏழைகள் வரையில் இப்பண்டை யீகையை ஆனந்தமாகக் கொண்டாடிவந்தார்கள். அதன்பின் பராயசாதியோர் வந்து குடியேறி புத்ததன்மத்தை நிலைகுலையச் செய்து மதக்கடைகளைப் பரவச்செய்தக்கால் பொய்க் குருக்களை அடுத்த குடிகள் கல்வியற்றவர்களும் விசாரிணை அற்றவர்களும் ஆதலின் தங்கள் குருக்களை நாடி தீபவதி - தீபவெளி - தீபாவளி என்னும் வாக்கியபேதம் அறியாமல் சுவாமி இப் பண்டிகையின் விவரம் என்ன என்று உசாவுங்கால் குருக்களே பிராமணர்கள் என்று புதுவேஷம் இட்டு பிச்சை ஏற்பவர்களாதலின் அவர்களுக்கு இதன் அந்தரங்கம் தெரியாமல் குடிகளின் வார்த்தைகளைக் கொண்டே அதன் நடவடிக்கைகளை உணர்ந்து மலையை ஒத்த ஓர் அசுரன் இருந்துக்கொண்டு மாட்டையொத்த தேவர்களுக்கு இடுக்கங்கள் செய்தபடியால் அவ்வசுரனை ஓர் தேவன் கொன்று தேவர்களுக்கு சுகஞ் செய்தநாளாகையால் நீங்கள் தலைமுழுகி புதுவஸ்திரம் அணிந்து பலகாரஞ் சுட்டுத் தின்பதென்னும் கட்டுக்கதையை ஏற்படுத்திவிட்டதும் அல்லாமல் அதன் மத்தியில் தங்கள் வயிற்று சீவனவழியையும் தேடிக்கொண்டார்கள்.

அதாவது தீபாவளி மறுநாள் நோன்பு ஒன்றிருக்கின்றது. அந்தநாளில் நீங்கள் சுடும் பலகாரங்கள் யாவையும் நாங்கள் நிறுத்துங் கலசத்திடம் வைத்து வீட்டில் எத்தனைப்பெயர்கள் இருக்கின்றீர்களோ அத்தனை சிவப்புக் கயிறு வாங்கி வைப்பீர்களானால் நாங்கள் அதற்கு மந்திராவாகனஞ் செய்து கொடுக்க நீங்கள் கட்டிக் கொள்ளுவீர்களானால் உங்களுக்கு செல்வம் பெருகும் என்று சொன்ன வார்த்தைகளை தேவர்கள் என்பது யார், அசுரர் என்பது யார், நோன்பென்பது என்ன என்று அறியாத குடிகள் வீடுகடோரும் தட்சணை யீய்ந்த நூலை வாங்கிக் கட்டிக் கொண்டுவருகின்றார்கள்.

ஆனால் நோன்புக்கயிற்றை நாங்கள் கட்டிக் கொள்வதால் செல்வம் பெருகும் என்று சொல்லுகின்றீர்களே அவ்வகையிற் சிறந்த கயிற்றைத் தாங்கள் ஏன் கட்டிக் கொள்ளுவதில்லை என்று கேட்பாரில்லை.

புத்ததன்மகாலத்தில் நோன்பு என்னும் பெயரும் அதன் விதிகளும் யாதெனில்,

நோன்பென்பது கொன்றுத்தின்னாமெய்

நோன்பென்பது கணவன்பாற் குறளாமெய், நோன்பென்பது களவு செய்யாமெய், ஆகுஞ் சுத்ததேக வாழ்க்கையை விரும்புதலே நோன்புகள் நோற்றலென்னப்படும்.

அந்த தேகவாழ்க்கை நோன்புகளின் விரதம் யாதெனில், தன் தேக சுகத்தைப்போல் மற்ற சீவராசிகளின் தேகங்களையுங் கருதி அன்னியப் பிராணிகளைக் கொல்லாமலும் மாமிஷ பட்சணங்களைச் செய்யாமலிருக்கும் நெறியில் நிற்கவேண்டும் என்று நோன்பு, நோற்றல் அதாவது அந்நற் செய்கையில் நிற்றல் வேண்டிய வைராக்கியத்திலிருத்தல்.

பெண்களுக்குரிய நோன்புயாதெனில், கணவன்பாற் குறளாமெய்,

அதாவது தன் கணவன் வார்த்தைக்கு எதிர் மொழி பேசாமலும் மிருதுவான வார்தையின்றி கடுஞ் சொற்கூறாமலும் இனிமையிலிருப்பேன் என்று நோன்பு நோற்றல். கணவன் மொழிக்கு இனியமொழி அளிப்பேன் என்று வைராக்கியம் வைத்தல்.

கள்ளாமெய் நோன்பு யாதெனில், அன்னியன் பொருளை அவனுத்திர வின்றி புருஷர்களேனும் பெண்களேனும் தங்கட்கைகளில் எடுக்கக் கூடாது என்றும் அப்பொருளை எடுக்கவேண்டும் என்று மனதில் எண்ணாமலும் இருக்கவேண்டும் என்றும் நோன்பு நோற்றல் அதாவது அன்னியர் பொருளை தேகத்தாலும் எண்ணத்தாலும் அபகரிக்கக்கூடாது என்னும் வைராக்கியம்

வைத்தல் இவற்றையே திரி நோன்புகள் என்றும் கூறப்படும். அம்பிகாதன்மத்தின் நோன்புநிலைகளையும், விரதநிலைகளையுங் காண்க.

- 1:22; நவம்பர் 13, 1907 -

8. கார்த்திகை தீபமென வழங்கும் கார்த்துல தீப விவரம்

நெடுங்காலங்களுக்குமுன் மலாடபுரம் என்னும் ஊரில் புத்ததன்மத்தை தழுவினின்ற சங்கத்தார் பேராமணக்கு சித்தாமணக்கென்னும் வித்துக்களிலிருந்து நெய்யெடுத்து மருந்துகளுடன் உபயோகித்து அதன் நற்பலன்களை அறிந்ததுமன்றி தீபம் ஏற்றி குளிர்ந்த பிரகாசத்தையுங் கண்டு ஆனந்தித்து அத்தேசத்தை ஆண்டுவந்த அரசனிடம் கொண்டுபோய்க் காண்பித்தார்கள். (அரசன் பெயர் விளங்கவில்லை.)

பதார்த்தசிந்தாமணி

உண்டாலுதிரப்பலநோயும் ஒடுங்கிருமிகுடல்வாதம்
கண்டே சுவைக்கில் விளக்கெண்ணெய் கண்ணேகுளிருங் குணந்தேறுங்
கொண்டால் கிரந்தி சூலையுடன் கொடிய சுரப்பான் பலமேகம்
விண்டார்தோஷ கணமாந்த மகலுஞ் சித்தாமணக்கெண்ணெய்.

அவ்வரசன் பேராமணக்கையும் சித்தாமணக்கையும் அதிகமாக விளைவிக்கச்செய்து அவன் தேசத்துள் இருந்த அண்ணாந்து மலையினுச்சியில் வெட்டிப் பள்ளமிட்டு பருத்தி நூல் திரிசெய்து ஆமணக்கு நெய்யை வார்த்து பெருந்தீபம் ஏற்றி விடியும் அளவு எறியவிட்டு உதயத்திற் சென்று அவ்விட முள்ள பட்சிகளுக்கும் ஆடு மாடுகளுக்கும் அத்தீபப் புகையால் ஏதேனும் தீங்கு நேரிட்டுள்ளதோ என்று ஆராயுங்கால் அவ்விடம் உலாவும் பட்சிகளுக்கும் மிருகங்களுக்கும் யாதோர் தீங்கில்லாததைக் கண்டதுமன்றி அத்தீபக்காவலி லிருந்த மக்களுக்கும் ஓர் கெடுதி வராதிருந்ததினால் அரசன் குடிகள் யாவரையுந் தருவித்து ஆமணக்கு நெய்யைக் கொடுத்து தீபம் ஏற்றிக் கொள்ளும்படி ஆக்கியாபித்தான்.

இத்தீபச் சுடரை எக்காலும் காணாதக் குடிகளாதலின் தீபத்தை ஏற்றி வீட்டில் வைக்க பயந்து மூன்று நாள் வரையில் திண்ணைகளின் மீதும், தெரு மாடங்களிலும் வைத்து ஒரு தீங்குங் காணாததினால் வீட்டுக்குள் வைத்து அத்தீபம் இருளை விலக்கும் ஒளியாக விளங்கினபடியால் (கார்த்துலதீப) என்னும் பெயரை அளித்து புத்தசங்கத்தோர் கண்டுபிடித்த கார்த்திகைமாத பௌர்ணமியில் தேசம் எங்கும் தீபம் வெளியிட்டு பண்டை யீகை அளித்து பகவ தியானஞ் செய்துவந்தார்கள்.

இவ்வகை நெடுங்காலம் வருடத்திற்கு ஒரு முறை நிறைவேறிவரும் கார்த்துல தீபவெளி பண்டகையும் புத்தத் தியானத்தையுங் கண்ட சையோயாங்கென்னும் சீனதேச யாத்திரைக்காரன் ஆனந்தமுற்று தன் தேசஞ் சென்று வருடந்தோருங் கார்த்திகைமாதப் பௌர்ணமிக்குள் அவர்கள் தேசக் கொடிகளும் டப்பாசுகளும் பாணங்களும் அனுப்பி கார்த்துல தீப நாளைக் குதூகலிக்கச் செய்ததாக சை யோயாயாங் யாத்திரை சரித்திரமும் விளக்குகின்றது.

பெருந்திரட்டு - பாசமாட்சி

காராமணக்கைக் கருதிக் கரைந்தங்கு / பேராமணக்கைப் பெற்றார்கள் - ஊரா
ருளப்பருத்தி நெய்யு மீர்ந்தார் பெருவங் / களம்பார்த்த தீபக்கழல்.
புரிமலாடபுபதிந்த பொற்றவசங்கத்தோர்கள்
கரதவாமணக்கு நெய்யை தூயமன்னவன்பாற் கொண்டு
பரத வெல்லை அண்ணாந்து பதிசிரம்பதித்து தீப
மொருதீங்கு மேறாதலே யூரவரகத்தி லேற்றார்.

- 1:22; நவம்பர் 13, 1907 -

எள்ளிநெய் கண்டுபிடித்த விஷயத்திற்கும் ஆமணக்கு நெய் கண்டுபிடித்த விஷயத்திற்கும் இவ்வகை ஆடம்பரங்கள் செய்யவேண்டியக் காரணங்கள் யாதென்பீரேல், உலோகோபகாரமாக கண்டுபிடித்த வஸ்துக்கள் எவையோ அவைகளைக் கொண்டாடி வருவதினால் மற்றவர்களுந் தங்களறிவை விருத்திச் செய்து உலோகோபகார வஸ்துக்களைக் கண்டுபிடித்து தேசத்தையுங் குடிகளையுஞ் சீர் பெறச் செய்வார்கள் என்பதேயாம்.

புத்ததன்ம ராட்சியம் பரவியிருந்தகாலத்தில் கண்டுபிடித்த தானியங்களை விட வேறு தானியங் கிடையா. அவர்கள் கண்டுபிடித்த நெய்களை விட வேறு நெய்கள் கிடையா. அவர்கள் கண்டுபிடித்த மூலிகைகளை விட வேறு மூலிகைகள் கிடையா. அவர்கள் கண்டுபிடித்த சருக்கரைகளைவிட வேறு சருக்கரைகள் கிடையா. அவர்கள் கண்டுபிடித்த விருட்சங்களை விட வேறு விருட்சங்கள் கிடையா. அவர்கள் கண்டுபிடித்த கனிவர்க்கங்களைவிட வேறு கனிவர்க்கங்கள் கிடையா. அவர்கள் கண்டுபிடித்த லோகங்களைவிட வேறு லோகங்கள் கிடையா. அவர்கள் கண்டுபிடித்த அவுஷதங்களைவிட வேறு அவுஷதங் கிடையா. அவர்கள் கண்டுபிடித்த கணித சாஸ்திரங்களைவிட வேறு சாஸ்திரங் கிடையா. அவர்கள் கண்டுபிடித்த இலக்கண இலக்கியங்களை விட வேறிலக்கிய விலக்கணங்கள் கிடையா.

மெய்யறச் சங்கங்கள் பரவியிருக்கும் அளவும் இத்தியாதி சீவோபகார வஸ்துக்கள் யாவும் பெருகிக் கொண்டே வந்து வேஷ பிராமண பொய்குருக்கள் தோன்றி பொய்ப்புராணங்கள் இயற்றி பொய்மதங்களைப் பரப்பி பொய்சாதிகளை நிறப்பி தங்களைப் பெரியசாதிகளாக ஏற்படுத்திக்கொண்டு தங்களுக்கு எதிரிகளாக இருந்து பொய் வேஷங்களையும், பொய்ப் புராணங்களையும், பொய் மதங்களையும் பொய் சாதிகளையுங் கண்டித்துவந்த விவேகிகளைத் தாழ்ந்தசாதிப் பறையர்கள் என்று வகுத்து பலவகை மித்திர பேதங்களால் நசித்துவந்ததுடன் சுத்த சலங்களை மொண்டுக் குடிக்கவிடாமலும். வண்ணார்களை அவர்கள் வஸ்திரங்களை எடுக்கவிடாமலும், அம்மட்டர்களை சவரஞ் செய்யவிடாமலும், பார்வைக்கு விகாரமும் மிக்க அசுத்தநிலையில் இருக்கும்படி வைத்துக்கொண்டு இத் தேசத்திற்கு நூதனமாக யார்வருகின்றார் களோ, அவர்களிடத்தில் இவர்களைக் காண்பித்து, இவர்கள் பறையர்கள் மெத்ததாழ்ந்த சாதியார் என்று பலவகையிலும் இழிவுகூறி புத்த சங்கத்தார்களையும் புத்ததன்மத்தையும் தாழ்த்திக்கொண்டே வந்ததினால், சகல ஞான விருத்திகள் யாவும் நாளுக்குநாள் நசிந்து வித்தியா விருத்திகளும் மறந்து ஒற்றுமெய்கள் குறைந்து பிச்சை ஏற்பதே சிறந்து பொய் சொற்களே நிறைந்துவிட்டது. இப்பண்டை யீகைகளின் பெயரும் அதினந்தரார்த்தங்களும் அறியாத பேதைகள் வேஷ பிராமணர்களை அடுத்து விசாரிப்பதில் பூர்வ புத்ததன்ம வார்த்தைகள் அறியாப் பொய் குருக்கள் அசுரரென்னும் வார்த்தையின் பொருளும் இராட்சசர் என்னும் வார்த்தையின் பொருளும் அறியாமல் ஒவ்வோர் பொய் கதைகளைப் போதித்து அதைக்கொண்டே தங்களுக்காகப் பொருள் சம்பாதிக்கும் வழிகளையுந் தேடிக்கொண்டார்கள்.

(வேஷபிராமணர் செய்கையை விவேகிகள் கண்டித்த பாடல்கள்.)

சிவவாக்கியர்

சாதியாவதேதடா சலந்திரண்டநீரலோ
போதுவாசமொன்றலோ பூதமைந்துமொன்றலோ
ஒதுவேதகீதமு மூணுரக்கமொன்றலோ
சாதியாவதென்பதே சாவுவாழ்வு திண்ணமே.

நித்தமு மணிகுலிக்கி நிடுமூலைபுக்கியே
சுத்தியே கதரியே கண்களை மூடியென்பலன்
எத்தனைபேரெண்ணினாலு மெட்டுரண்டும் பத்தலோ
அத்தனுக்கு யேர்க்குமோ அறிவிலாதமாந்தரே.

பூதிபூசையென்று நீர்பூசைசெய்யும் பேதைகாள்
பூதிபூசையென்னினும் பூசை கொண்ட தெவ்விடம்
ஆதிபூசைகொண்டதோ வனாதிபூசை கொண்டதோ
ஏதுபூசை கொண்டது யின்னதென்றியம்புவீர்.

அசுரர்கள் என்பதும் இராட்சசர் என்பதும் செயல்பற்றியப் பெயர்களன்றி வடிவைப்பற்றியப் பெயர்களன்று. மதுமாமிஷம் புசிப்பவர்களுக்கு சுரரென்றுபெயர். அதாவது, சுராபானம் அருந்துபவர்களேயாவர். அவ்விரண்டையும் நீக்கிநிற்போர் அசுரர், இராசதச் செயல்கள் யாதெனில்,

யீகை - விரதம் - தருமம் பேணுதல் - அறிவின் விருத்தியை நாடல் - கேள்வி முயலல் - நன்று தீதென்று உணரலுமாம்.

பின்கலை நிகண்டு

தானமே தவமே மற்ற தருமம் பேணுதலினோடு
ஞானமே கல்விகேள்வி நலனிவை தெரிதரானே
யீனமொன் றில்லார்வைத்த விராசத குணங்களென்ப
ஊன்மின் முதிவன் முன்னாளுரைத்திடு முண்மெய்தானே.

காக்கைபாடினியம்

சுரருண் ணுனுங் கள்ளுமகற்றி / தூயவசுர ராவாதென்னே.

இவ்வகை சுரரென்றும், இராட்சதரென்றும், இராசதரென்றும் வழங்கிவந்த செயல்பற்றியப் பெயர்களின் பொருளறியா பொய்க்குருக்கள் அசுரர் இராசதர் என்போருக்கு மலைபோல மூக்குகளும் அலைபோல் நாக்குகளும் இருக்கும் என்றும் பத்துவண்டி சோறு எட்டு வண்டி சோறு உண்பார்கள் என்றும் கட்டுக்கதைகளை ஏற்படுத்தி மக்களை மயங்கச்செய்து அவர்கள் அறிவின் விருத்தியையும் கெடுத்து தங்கள் சுயப்பிரயோசனத்தையே பெருக்கிக் கொண்டார்கள்.

இப்பொய் குருக்களையும், பொய் மதங்களையும், பொய்சாதிகளையும் கண்டித்தெழுதிய நூற்கள் நாளுக்குநாள் பரவிவருவதைக் கண்ட வேஷதாரிகள் சரியைக் - கிரியை - யோகம் - ஞானமென்னும் நான்கு படிகள் இருக்கின்றது என்றும், அதில் மேலாம்படி ஞானத்திலிருந்து சாதிகளையுஞ் சமையங்களையும் கண்டிக்கின்றார்கள் என்றும் தங்களை அஞ்ஞானிகள் என்றே ஒப்புக்கொண்டு சீவனவுபாயக் கதைகளைப் பெருக்கிவிட்டார்கள்.

- 1:23; நவம்பர் 20, 1907 -

இத்தேசத்தில் நூதனமாக ஏற்படுத்தியுள்ள சமயங்களையும் சமய சீவனத்திற்கு ஆதாயமாக ஏற்படுத்திக்கொண்ட சாதிகளையுங் கண்டித்து எழுதிவருங்கால் சரியைக், கிரியை, யோகம், ஞானமென்னும் பொருளில்லா வார்த்தைகளை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

அதாவது, சரியை அல்லது சரிதை ஓரரைக் கட்டி விக்கிரகங்களை உண்டு செய்து வைத்து அச்சிலைகளின் மீது காலையும் மாலையும் புட்டமிடுதலும் மெழுகுதலும் வலம்வருதலுமாம். இத்தகையச் செயல்களுக்குச் சரியையென்னும் மொழி பொருந்துமா, சரியை யென்னுமொழிக்குப் பொருள் மேற்செயல்களாகும் என்றால் அதைத் தெரிந்துச் சொல்லுவாரில்லை.

இரண்டாவது கிரியை அல்லது கிரிகை அத்தேவதைக்கு ஏற்ற மந்திரந் செபித்தல் உருவேற்றலுமாம். இத்தகைய மந்திரச் செயலுக்கு கிரியை என்னும் மொழி பொருந்துமா. அன்றேல் கிரியை என்னும் மொழி மந்திரத்தை உருவேற்றல் என்னும் பொருளைத்தருமா என்றால் அதை உணர்ந்து ஓதுவாரில்லை.

மூன்றாவது, யோகம் - மூச்சையடக்குதல் - கைகால்களை முடக்குதலுமாம். இத்தகைய யோகமென்னும் மொழிக்கு மூச்சை அடக்குதல், கைகால்களை முடக்குத்லென்னுஞ் செயல்கள் பொருந்துமா, அன்றேல் யோகமென்னும் மொழி மூச்சையடக்குதல் கைகால்களை முடக்குதலென்னும் பொருளைத் தருமா என்றாலதை விவரித்தோதுவாரில்லை.

நான்காவது ஞானம் மனமடங்குதல் என்பார்கள். ஞானமென்னும் மொழிக்கு மனமடங்குதலென்னுஞ் செயல் பொருந்துமா அன்றேல் ஞானமென்னும் மொழி மடங்குதலென்னும் பொருளைத் தருமா என்றாலதன் பொருத்தங் கூறுவாருமில்லை.

மொழிக்கு மொழி பொருளற்ற நான்குவகைச் செயல்களில் கிரியை, யோகம், ஞானமென்னு மூன்றையும் விட்டு தங்கள் சீவனாதார விக்கிரகத்தை விளக்கல், விக்கிரத்தை வலம்வரல், விக்கிரகத்தைப் பூசித்துத் தங்களுக்கு வேண்டிய வரங்களை கேட்டல், விக்கிரகவுர்வலஞ் செய்தலாகிய ஆடம்பரங்களினால்

மநுக்களை மயக்கி அதினால் வருந் தட்சணை திரவியங்களையும் அபிஷேக உணவுகளையும் அனுபவித்தல்.

இத்தகைய விக்கிரகத்தொழுதல் செய்யுங் கட்டிடங்களுக்குள் பறையர் களென்றழைக்கும் ஓர் வகுப்பினரை மட்டும் உள்ளுக்குச் சேர்க்காமல் இருப்பதுடன் தவரிவந்துவிடுவார்களென்னும் நோக்கமுமுண்டு.

காரணம், தாமரை தடாகங்களும் - அரசமரம், வேப்பமரம் வைத்துள்ள கட்டிடங்களும் - யோகசயன சிலாரூப அறப்பள்ளிகளும் பூர்வ புத்தசங்கத்தோர் மடங்களாதலின் பூர்வக்குடிகள் அக்கட்டிடத்தினுள் வருத்துப்போக்கி லிருப்பார்களானால் புத்ததன்ம சங்கத்தோர் சீலசமாதிகளையுஞ் சரித்திர பூர்வங்க ளையுந் தெரிந்து கொண்டு தங்கள் சுதந்திரங்களை விளக்கி மடங்களைக் கைப்பற்றிக் கொள்ளுவார்களென்னும் பீதியேயாம்.

ஞானமென்னும் வாக்கியத்துடன் சரியைக் கிரியை யோகமென்னும் மூன்று வாக்கியங்களைச் சேர்த்துத் தங்கள் சீவன உபாயங்களைச் செய்தபோதிலும் விவேகிகள் அவற்றையுங் கண்டித்திருக்கின்றார்கள்.

பிரம கீதை

சரிதை யாதியொரு மூன்றுஞ் சாதிப்பதுவோ பயனில்லை
அறியும்பிரமரானாலும் அறிதற்கரியதாரணங்கள் உரையுமில்லை
முடிவரிய வொன்றாய்நின்ற தனி ஞானப்
பொருளை இருளும் வெளியுமிலா போகமருவிக் களியென்றான்.

பிரபுலிங்கலீலை

உரைசெயிற் பரமஞானமொன்றுமே முத்திக்கேது
சரியைநற்கிரியை யோகந் தாமொரு மூன்றுமிங்கு
மருவுதற் கேதுவென்றே மனமுவந்துரைக்குமிந்தக்
கருவியைப் பொருளென்றெண்ணி சளிப்பவர் கயவரன்றோ.

இதிற் சரியை, கிரியை, யோக, ஞானமென்னும் வார்த்தைளுதித்த ஏதுக்கள் யாதென்பீரேல் சரி, சரியை, சரிதை என்னும் வார்த்தைக்கு சீர், சீர்பெறச் சீர்தூக்கி எனும் பொருளைத் தரும்.

கிரியை, கிரியாவிருத்தி, கிரியாபலன் எனும் வார்த்தைக்கு செயல், வினைவிருத்தி, கருமபலன் எனும் பொருளைத்தரும்.

(இரண்டு வரிகள் தெளிவில்லை)

ஞானம், ஞானி எனும் வார்த்தைக்கு அறிவு அறிவுள்ளான, விவேகம், விவேகியெனும் பொருளைத்தரும்.

இவ்வார்த்தைகளை புத்தசங்கத்தோர் எவ்வகையில் வழங்கி வந்தார்களென்றால்.

எடுக்கும் விஷயங்களை சரிவர சீர்தூக்கி கிரியை என்னும் ஓர் செயலை முடிப்பார்களாயின் யோகம் என்னும் பாக்கியம் பெருகி ஞானமென்னும் அறிவுவிருத்தியடையுமென்பதேயாம்.

எடுக்குங் காரியங்களை சரிவரச் செய்பவனுக்கு பாக்கிய முண்டாகி அறிவு பெருகும் என்னுங் கருத்தாலாண்டு வந்தார்கள்.

பூர்வ வேதாந்திகளாகும் அறஹத்துகள் நீங்கலாக தற்காலம் வேதாந்திகளென வெளிவந்திருப்போர் சரியை என்னும் விக்கிரகாராதனைச் செய்வோர் மறு ஜென்மத்தில் கிரியை என்னும் மந்திரத்தை உருவேற்றுவார்க ளென்றும், கிரியை என்னும் மந்திரத்தை உருவேற்றி வந்தவர்கள், மறு ஜென்மத்தில் யோக மென்னும் மூச்சை அடக்குவார்களென்றும், யோகமென்னும் மூச்சை அடக்குவோர் மறு ஜென்மத்தில் ஞானமென்னும் மனமடக்கி மௌனமடைவார்களென்றும் மூக்கறியன் கதை சொல்லி விடுகின்றார்கள். சுயம்பாகி வேலையை விடாமுயற்சியாக செய்தவன் மறு ஜென்மத்தில் உபாத்தி வேலை செய்யமாட்டான். உபாத்திவேலை செய்தவன் மறு ஜென்மத்தில் தொம்பரவத்தொழில் செய்யமாட்டான். தொம்பரவத் தொழில் செய்தவன் மறு ஜென்மத்தில் மாட்டைப்போல் பேசாமலிருக்க மாட்டான். அதுபோல் ஒரு விக்கிரகத்தை வைத்துப் பூசிப்பவன் மறு ஜென்மத்தில் மேலுமேலும் விக்கிரகபூசையைச் செய்வானன்றி வேறு செய்கையிற் பிரவேசிக்கமாட்டான்.

காரணம், மனமும் தேகமும் எச்செயலை விடாமுயற்சியால் பற்றி நிற்கின்றதோ அச்செயலையே ஜெநநங்கடோரும் விருத்தி செய்யுமன்றி மனமுந் தேகமும் பற்றாச்செயலையே பற்றி பெரும்பேரடைவது பேயநிலையாம்.

- 1:24; நவம்பர் 27, 1907 -

9. யோகங்களின் விவரம்

உலகத்தில் விசேஷமாகக் கொண்டாடும் யோகங்கள் யாதெனில்:

ஒரு மனிதனுக்கு பூமிச்செல்வம் அதிகரித்திருக்குமாயின் பூவியோகம் என்றும், தனச்செல்வம் அதிகரிக்குமாயின் தனயோகம் என்றும், ரூபமுள்ள பெண் சேருவாளாயின் மனைவியோகம் என்றும் வழங்குவதுடன் கணிதசாஸ்திரிகள் சந்திரமங்கள யோகம், சாமுத்திரி யோகம், எக்காள யோகம் எனப் பலவகை யோகங்களை வரைந்திருக்கின்றார்கள்.

இந்த யோகங்கள் யாவும் மாறிமாறி தேருளைபோற் சுழன்று அழிந்துவிடும் யோகங்களாய் இருக்கின்றபடியால் புத்தசங்கத்தார் எக்காலமும் அழியாது ஜெநநங்கள் தோரும் விருத்தி பெற்று முத்தியளிக்கும் எட்டுவகை யோகங்களை அருளிச் செய்திருக்கின்றார்கள்.

முன்கலை திவாகரம்

இயம் - நியம் - மாசனம் - பிராணாயநமம் - பிரத்தியாகாரம் தாரணை - தியானம் - சமாதி என்பவைகளாம்.

இதன் சுருக்கம்

இயமம் - கொல்லாவிரதம், மெய்கூறல், கள்ளாமை,
பிறர்பொருட்காதலின் மெய், இல்வயினிந்தியமடக்கலு மியமம்.
நியமம் - தவமொடு, தூய்மெய், தத்துவநூலோர்தன்,
மனமுவந்திருத்த, றெய்வவழிபட, னினையுங்காலை நியமமாகும்.

இதன் விரிவு - இயம்

இயமம் பத்துவகை, அதாவது, அகிம்சை - சத்தியம் - ஆஸ்தேயம் பிரமசரியம் - தயை, ஆர்ஜ்ஜவம், க்ஷமை, திரிதியை, மிதாகாரம், சவுகம், என்பனவாம்.

அகிம்சை - அன்னியப் பிராணிகளுக்குத் துக்கத்தையுந் துன்பத்தையும் உண்டுசெய்யாதிருத்தல்.

சத்தியம் - கண்ணினாற் கண்டதையும் யாதார்த்தக் கேள்வியையுஞ் சொல்லுதல்.

ஆஸ்தேயம்-பிறர் பொருளை கிரகிக்காமலும் மனதி லெண்ணாமலும் இருத்தல்.

பிரமசரியம் - ருதுகாலமன்றி மற்ற காலங்களில் சுயஸ்திரியை விரும்பாது ஒடுக்கத்திலிருத்தல்.

தயை - தன்னைப்போல் பிறரும் சுகவாழ்க்கை யடைய விரும்புதல்.

ஆர்ஜ்ஜவம் - மித்துருக்களையுஞ் சத்துருக்களையும் பந்துக்களையும் அன்னியர்களையும் சமமாகப் பார்த்தல்.

க்ஷமை - அன்னியர் செய்யும் தீங்குகளை மனதிற் தங்கவிடாமலும் கலங்காமலு மிருத்தல்.

திரிதியை - திரிபீடார்த்தங்களை தேற விசாரித்து பற்றறுக்க முயலல்.

மிதாகாரம் - கொஞ்சமும் அதிகமு மில்லாமல் சமமாகப் புசித்தல்.

சவுகம் - தேகத்தை சுத்திகரித்து ஆரோக்கியத்தில் வைக்கல்.

நியம்

நியமம் பத்து வகைப்படும். அதாவது, தபசு - சந்தோஷம் ஆஸ்திக்கியம் - தானம் - ஈஸ்வர பூசை - சித்தாந்த சிரவணம் லஜ்ஜை - மதி - செபம் - விரதம் என்பனவாம்.

தபசு - பஞ்ச புலன்களின் போக்கில் மனதைப் போகவிடாமல் வீரியத்தை யடக்குதல்.

சந்தோஷம் - தனக்குக் கிடைத்த வரையில் போதும் என்று திருப்தி யடைதல்.

ஆஸ்திக்கியம் - சுருதி ஸ்மிருதிவாக்கியங்களின் மீது அன்பு வைத்தல்.

தானம் - நீதியினின்று சம்பாதிக்கும் பொருளை ஞானநிஷ்டர்களுக்கு

ஈய்ந்து அவர்கள் ஞானப்பேற்றை விருத்தி செய்வதுடன் சீவிக்க சக்தியற்ற ஆதுலருக்கீய்ந்து ஆதரித்தல்.

ஈஸ்வரபூசை - நீதி நெறியினின்று தீவினையை வெல்லுதற்கு அறவழியானை சிந்தித்தல்.

சித்தாந்த சிரவணம் - ஞான சங்கத்தோரை வணங்குதலும் அவர்கள் அறிவுரைக் கேட்குதலும்.

லஜ்ஜை - பொல்லாங்கான காரியங்களில் வெட்கமடைதல்.

மதி - ஒருவர் சொல்லுவதையும் எழுதிவைத்திருப்பதையும் தேறவிசாரித்து நம்புதல்.

செபம் - ஒழிந்த நேரங்களில் வீண்காலம்போக்காமல் பஞ்ச மந் திரங்களாகும் சீலங்களை சிந்தித்தல்.

விரதம் - மனோவாக்குக் காயங்கள் என்னும் திரிகரணங்களால் அன்னியருக்குத் தீங்கு நேரிடாமல் கார்த்தல்.

ஆசனம்

ஞானசாதனங்களை உட்கார்ந்து சாதிப்பதற்கு ஒன்பதுவகை ஆசனங்களை வகுத்தார்கள். அதாவது

சுவஸ்திகம் - கோமுகம் - பதுமம் - வீரம் - கேசரி - பத்திரம் - முத்தம் - மயூரம் - சுகம் என்பனவாம்.

சுவஸ்திகம் - வெண்ணிற வஸ்திரம் பூமியில் விரித்து உட்காருதல்.

கோமுகம் - பசுவின் சாணச் சாம்பலை ஒரு வஸ்திரத்தின்மேல் பறப்பி இன்னொரு வஸ்திரம் மேலிட்டு அதன்மீது உட்காருதல்.

வீரம் - புலித்தோலின் மீது உட்காருதல்.

கேசரி - புள்ளிமான் தோலின்பேரில் உட்காருதல்.

பத்திரம் - வில்வ இலையைப் பறப்பி அதன்மீது உட்காருதல்.

முத்தம் - வாயல் மத்தியில் வெளிதோன்ற உட்காருதல்.

மயூரம் - இரத்தின கம்பளம் விரித்து உட்காருதல்.

சுகம் - தனக்கு சாவகாசமும் சுகமும் தோன்றுமிடத்தில் உட்காருதல்.

பிராணாயாமம்

மேற்கூறியுள்ள ஆசனங்களில் ஒன்றில் உட்கார்ந்துக்கொண்டு பஞ்சபொறிகளின் பிராணாதாரங்களை நோக்குதல்.

பிரத்தியாகாரம்

அந்நேரத்தில் தன் மனதை உலகவிவகாரங்களிற் செல்லவிடாமல் ஆசானருளிய உபநயனபீடத்தில் நிறுத்தல்.

தாரணை

உடலை தளராதிருத்தி உபநயன உள்விழி பார்வையால் ஊடுருவி நிற்றல்.

தியானம்

நித்திறையை செயித்து ஆனந்த நித்திறையாம் சதாவிழிப்பினிற்றல்.

சமாதி

இத்தியாதி சாதனப்பெருக்கத்தால் அழியா பாக்கியம் பெற்று ஆதியில் தோன்றி ஞானநெறி விளக்கிய குருவுக்கு சமநிலையடைதல். ஆதிக்குச் சமமாவதே சம ஆதியென்றும் சமாதி என்றும் கூறப்படும்.

இந்த எட்டுவகை யோகங்களில் ஒருயோகம் மனிதனுக்குக் கிடைத்துப் பெருகுமாயின் அதனைக் கள்ளர்களேனும் மற்றவர்களேனும் அழிக்கமுடியாது. இவ்வியோகம் நாளுக்குநாள் பெருகி துக்கம் என்பது அற்று சதானந்தத்தை விளைவிக்கக்கூடியதாய் இருக்கின்றபடியால் மேற்கூறியுள்ள பூ யோகம், தனயோகம், மனைவியோகம் மூனறையுஞ் சிறப்பிக்காமல் எட்டுவகை அழியா யோக பாக்கியத்தை அருளிச் செய்தார்கள். அழியா யோகம் அஷ்டயோகமும் ஆனந்தபோகம் அருள் நிறைவுமாம்.

- 1:25; டிசம்பர் 4, 1907 -

10. சங்கறாந்தி பண்டிகை விவரம்

மணிமேகலை

மதிநாண் முற்றிய மங்கலத்திருநாள் / பொதுவறி விகழ்ந்து புலம்பறு மாதவன்
நிருவற் மெய்துதல் சித்தமென்றுணர் நீ.

சூளாமணி

அருள்புரி யழலஞ்சோதி யாரியா னாதியில்லான்
மருள்புரி வினைகட் கென்று மறுதலையாய வாம்
னிருள்புரி யுலகஞ்சேரா வியனெறி பயந்த பெம்மாள்
பொருள்புரி விழவு காண்பார் புண்ணிய வுலகங் காண்பார்.

சாக்கையகுல சகோதிரர்களே! சற்று கவனியுங்கள். சங்கறர் அந்தி சங்கறாந்தி என வழங்கி வரும் வார்த்தையின் பொருள் :

புத்தர் நிர்வாணகாலமென்று கூறப்படும். புத்தருக்கு சங்கறரென்னும் பெயர் வந்த காரண மென்னவென்றால், அவரால் போதித்துள்ள வாக்கியங்களுக்கு தருமமென்றும் தரும வாக்கியங்களை அனுசரித்து துறவடைந்த கூட்டத்தாருக்கு சங்கம் என்றும் வகுத்து புத்த தரும சங்கம் என்னும் மும்மணிகளாக சிந்தித்து வருகின்றார்கள். அதாவது:-

புத்தாங் சரணங்கச்சாமி, தருமாங் சரணங்கச்சாமி, சங்கஞ் சரணங்கச்சாமி, என்னும் வாக்கியங்களை அனுசரித்து குலகுருவாகிய புத்தரை சங்க அறரென்றும், சங்கமித்தரென்றும், சங்க தருமரென்றும் சரித்திரங்களில் எழுதியிருக்கின்றது.

சாக்கைய முநிவராகிய புத்தர் உலகெங்கும் சுற்றி தருமச்சக்கரத்தை உருட்டிவந்ததுமல்லாமல் ஆங்காங்கு நாட்டிய சங்கங்களுக்கும் தருமத்தை நிரைவாக்கி தந்தபடியால் அவரை சங்கற நிரையோனென்றும் தருமராசனென்னும் அறனென்றும் வழங்கிவந்தார்கள்.

மணிமேகலை

புத்த தரும சங்கமென்னும் / முத்திற மணியை மும்மையின் வணங்கி
போதிமூலம் பொருந்தியிருந்து / மாரனை வென்று வீரனாகி
குற்ற மூன்று முற்ற வறுக்கும் / வாமன் வாய்மை யேமக்கட்டுரை,

மேற்படி 5 காதை.

சாதுயர் நீக்கிய தலைவன்றவமுனி / சங்க தருமன்றா னெமக்கருளிய.

மேற்படி 10 காதை.

ஆதிமுதல்வன் அறவாழி யாள்வோன் / மாதுய ரெவ்வ மக்களை நீக்கி
தெருமர லொழித்தாங் கிரத்தின தீவத்து / தரும சக்கர முருட்டினன் வருவோன்.

வீரசோழியம்

அருளாழி நயந்தோய்நீ அறவாழி பயந்தோய்நீ
மருளாழி துறந்தோய் நீ மறையாழி புரிந்தோய் நீ.

சாக்கையகுல நாயனார் குறள்

அறவாழி யந்தணன்றாள் சேர்ந்தார்க்கல்லார் / பிறவாழி நீந்த லறிது.

சாக்கையகுல அவ்வையார் நீதிநூல்

அறன் செயல்விரும்பு. / அறனை மறவேல்.

சீவகசிந்தாமணி

வந்துதான் கூறிய விவ்வாய் மொழியுமன்றி
முந்து அறன் மொழிந்த பொருணமுற்றும்

சூடாமணி நிகண்டு புத்தர்பெயர்

அரசு நீழலி லிருந்தோன் அறி அறன் பகவன் செல்வன்.

ஜநநத்தில் சித்தார்த்தரென்னும் ஒரு பெயரைப்பெற்று தனது ஞானானந்தத்தில் ஆயிரநாமங்களைப்பெற்ற சற்குருநாதன் உலகெங்குஞ் சங்கங்களை ஏற்படுத்தி அறமாகிய இல்லறவொழுக்கங்களையும் துறவற வொழுக்கங்களையும் போதித்து 85-வது வயதில் காசி நகரத்தைச் சார்ந்த கங்கைக்கரை என்று வழங்கும் பேரியாற்றங்கரை பல்லவ நாட்டில் மார்கழி மீ கடைநாள் மங்கலவாரம் பௌர்ணமி திதி திருவாதிரை நட்சத்திரம்

துலாலக்கினங் கூடிய வைகரையில் தனது உண்மெய்யை பஞ்சவரண சோதி மயமாகக் கழட்டி பொய் மெய்யை அந்தியகாலஞ் செய்தார்.

சங்க அறர் அந்தியமான காலமாகையால் சங்கறாந்தி காலமென்றும் சங்கறாந்தியென்றும் வழங்கிவருகின்றார்கள்.

யாப்பருங்கலக்காரிகை

வாளார்ந்த மழைத்தடங்கண் வனமுலை மேல் வம்பனுங்க
கோளார்ந்த பூணாகங் குழைபுரளக் கோட்டெருத்தின்
மாலைதாழ் கூந்தலார் வரன்முறையான் வந்தேத்த
சோலைதாழ் பிண்டிக்கீழ்ச் சூழ்ந்தவர்தன் சொன்முறையான்
மனையற முந்துற வற்கும் மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும்
வினையறுக்கும் வகைதெரிந்து விடொடு கட்டிவை யுரைத்த
தொன் மெய்சால்கழி குணத்தெந் துறவாகைத் தொழுதேத்த
நன்மெய்சால் வீடெய்துமாறு.

வீரசோழியம் - மனையறம்

கொடுத்தலு மளித்தலுங் கோடலு மின்மையும்
ஒழுக்கத்தொடு புணர்தலும் புணர்ந்தோர்ப் பேணலும்
வழுக்கிற் பிறவு மனையறவகையே.

துறவறம்

துறவு மடக்க முந்தாய் மெயுந்தவமும்
மறவினை யோம்பலும் மரத்தினை மறுத்தலும்
மனையினீங்கிய முனைவர்தம் மறமே.

- 1:26; டிசம்பர் 11, 1907 -

மணிமேகலை

காயங்கரையெனும் பேரியாற் றடைக்கரை / மாயமின் மாதவன் றன்னடி பணிந்து
காசின் மாநகர் கடல்வயிறு புகாமல் / வாசவன் விழாக்கோல் மறவேனென்று.

விம்பாசாரம்

இறைமகற்காத னெண்பா னைந்திற் / குறைமிகுகாலக் கூற்றங்கடிந்து
தக்கக்கடை நாட்டனுவா திரையிற் / பக்கமங்கலம் பருமதிகோலாய்
போதி நீழற் பொருந்திய புத்தேள் / சோதி பஞ்சகச் சூழொளியாகி
ஆனவைகரை யார்ப்ப வானவர் / போனக (தெளிவில்லை) விழாக்கோள்.

சங்க மித்தர், சங்க தருமர், சங்க அறரென்று வழங்கிய ததாகதர் அந்தியமான நாளை பூர்வ புத்தமத அரசர்கள் வருடந்தோரும் மார்கழிமாத முதல் இருபத் தெட்டுநாள் வரையில் தங்கள் தேசங்களிலுள்ளக் குடிகளை வீடுவாசல் முதலியவைகளை சுத்தஞ்செய்து, தோரண முதலியவைகள் கட்டுவித்து, வீதிகள் முழுமையும் புதுமணற் பரப்பி, வாழைக் கரும்பு முதலியவைகள் நட்டு, தேச முழுமையும் அலங்கரித்து கடைநாளை போதிபண்டிகை என்றும், தீபசாந்தி நாளென்றும், இந்திரவிழாவென்றும் விடியற்காலத்தில் தீபங்களையேற்றி சோதிமயங் கொண்டாடிவந்தார்கள்.

மணிமேகலை

மேலோர் விழைய விழாக்கோ லெடுத்த
நாலேழ் நாளினு நன்கினி துறைகென
மன்னன் கரிகால் வளவ நீங்கியநாள்
தோரண வீதியும் தோமறு தொட்டியும்
பூரணகும்பமும் பொலம் பாலிகைகளும்
பாவைவிளக்கும் பலவுடன் பரப்பு மின்
காய்குலைக்கமுகும் வாழையும் வஞ்சியும்
பூக்கொடி வல்லியுங் கரும்பு நடுமின்
பத்திவேதிகை பசும் பொற்றூணத்து
முத்துத்தாமமு முறையொடு நாற்றுமின்
விழவுமலி மூதூர் வீதியுமன்றமும்
பழமணல்பாற்றுமின் புதுமணல் பரப்புமின்
கதலிக் கொடியும் காமனறு விலோதமும்
மதலை மாடமும் வாயிலுஞ் சேர்த்துமின்
நாவலோங்கிய மாபெருந்தீவினுட்
காவேற் றெய்வந்தேவர் கோற்கெடுத்த
தீபசாந்தி செய்தருணன்னாள்.

நமது சற்குரு நாதனுடைய தேகத்திலும் உச்சியிலும் ஆயிரங் கதிர் வீசுவதுபோல் பஞ்சேந்திரிய தாரை ஒளியானது வெளிப்பட்ட காலத்தைப் பூர்வ அரசர்களும் குடிகளும் அந்தந்த வருட மார்கழி மாத கடையில் அழற்குண்டமாகிய சோதியை எழுப்பித் தொழுதுவந்தார்கள். அதை அநுசரித்துவந்த நமது குலத்தார் மார்கழிமாத கடையில் சோதியை வளர்த்து போதிபண்டிகை என்று கொண்டாடவேண்டிய வார்த்தையை போகி பண்டிகை என்று வழங்கி வருகின்றார்கள்.

வீரசோழியம்

இவ்வுலகுங் கீழுலகு மிசையுலகு மிருள் நீங்க
வெவ்வுலகுந் தொழுதேத்தவெழுந்த செஞ்டரென்ன.

போதிமேவினை பொய் மெயகற்றினை
சோதிவானவர் தொழுவெழுந்தருளின
ஆதிநாத நீனடியினை பரவுதும்.

கூரார்வளையுகிர் வாளெயிற்றுச் செங்கட்
கொலையுழுவை காய்பசியாற் கூர்ந்த வென்னோய் நீங்க
ஒராயிரங் கதிர்போல் வாள் விரிந்தமேனி
யுளம் விரும்பிச் சென்றாங் கியைந்தனை நீ யென்றாற்
காரார் திரைமுளைத்த செம்பவளமேவுங்
கடிமுகிழ் தண்சினைய காமருபூம் போதி
யேரார் முநிவரர் வானவர்தங் கோவே
யெந்தாயரோ நின்னை யேத்தாதார் யாரே.

நமது குலத்தார் பூர்வகாலத்தில் சோதியை வளர்த்தி போதிபண்டிகை கொண்டாடுவதற்கு முன்பு இருபத்தேழு நாளும் வீதிகளில் கோலமிட்டு முத்தந்தெரித்து புட்பங்களால் அலங்கரித்து வந்த செய்கைகளானது மாறாமல் நாளதுவரையில் மார்கழிமாத முழுமையும் விதிகளில் கோலமிட்டு புட்பங்களைப் பரப்பி அழற்குண்டசோதி வளர்த்தி வருகின்றார்கள்.

சூளாமணி

விரைவினால் மெழுகிய வீதிவாயெலாந்
திரையினாற் செழுமணி முத்தஞ் சிந்தினார்
உரையினாலென்னையவ் வொளிகொள்மானகர்
புரையினாற் பொன்னுல கிழிந்ததொத்ததே.
அழல் வளர்த்தனை யன தழையுமவ்வழற்
றழல்வளர்த்தனை யென மலருந்தாமரை
பொழில்வளர்வளையமும் பொதுளிவண்டினங்
குழைவளர சோகின்மேற் குளிருகின்றவே.

நமது குலத்தார் பூர்வகாலத்தில் போதிபண்டிகை கொண்டாடும் வைகரையில் பற்பல வாத்திய கோஷங்கள் முயக்கிவந்த செய்கைகளானது மாறாமல் நாளதுவரையில் சிறுவர்களுக்கு மேளங்களை வாங்கிக்கொடுத்து போதி பண்டிகை விடியற் காலத்தில் முயக்கி வருகின்றார்கள்.

சூளாமணி

பூரண மணிக்குட நிரைத்த பொன்னணி
தோரண மெடுத்தன துதைந்த வெண்கொடி
வாரண முரசொடு வளைகளார்த்தரோ
காரணி கடலொலி கைதவிர்த்ததே.

சிலப்பதிகாரம்

வாரமுடையதிறல் வானவர் கோனுக் கெனவே
ஒரமுடையோ ருயிரிழப்ப - வீர
முழவெடுத்த பேரொலியான் மூவுலகோரேத்த
விழவெடுத்தான் பூம்புகார் வேந்து.

நமது குலகுருவாகிய ஒப்பில்லா அப்பன் உண்மெயாகிய சோதியை பிரித்துக்கொண்டவுடன் பொய்மெயாகிய தேகம் அசைவாடாமலும், நாவு பேசாமலும், கண் திறவாமலும் இருந்ததைக்கண்ட குடும்பத்துப் பெண்கள் அழுகையின் கூக்குரலானது எங்கும் பரவியதுமல்லாமல் அவரை நெருங்கியிருந்த அடியார்கள் ஒன்றுகூடி அரசமரத்தடியிலிருந்து பேரானந்த ஞானநீதிகளைப் போதித்த அப்பனை என்று காணப்போகிறோம் என்றும்,

அவரருள் பெற்ற அன்பான வாக்கியங்களை எக்காலத்தில் கேட்கப்போகிறோம் என்றும், அருமையாகிய தவத்தைப்பெற்ற அண்ணலுக்கொப்பான சற்குருவை எங்கு தெரிசிக்கப்போகிறோமென்றும் புலம்பி துக்கித்தார்கள்.

- 1:27, டிசம்பர் 18, 1907 -

அதை அனுசரித்துவந்த நமது குலத்துப் பெண்கள் வருடந்தோறும் போதி பண்டிகை விடியற்காலத்தில் எழுந்து சற்குருவை நினைந்து துக்கித்துவந்த செய்கைகளானது மாறாமல் நாளதுவரையில் போதி பண்டிகை விடியற்காலத்தில் பெண்டுகள் எழுந்து சற்குருவை நினைந்து அழுவதை மறந்து குடும்பத்தை நினைந்து அழுதுவருகின்றார்கள்.

வீரசோழியம்

கொண்டன் முழங்கினவாற் கோடற் பரந்தனவா லென்செய் கோம்யாம்
வண்டு வரிபாடவார் தனவம் பூத்தனவாலென்செய் கோம்யாம்
எண்டிசையுந் தோகை யிசைந்தகவி யேங்கினவா லென்செய் கோம்யாம்
மறுளறுத்த பெரும்போதி மாதவரைக் கண்டிலமா லென்செய் கோம்யாம்
அருளிருந்த திருமொழியா லறவழக்கங் கேட்டிலமா லென்செய் கோம்யாம்
, பொருளறியு மருந்தவத்துப் புரவலரைக்கண்டிலமா லென்செய் கோம்யாம்.

மேற்படி நூல்

அலங்கொளியவிர் சுடரிலங்கெழில் மனைதொருங்
கலந்தெரி காலொடு புலம்பின பொழில்.

அஞ்ஞான இருளை அகற்றி மெஞ்ஞான ஒளிவை விளக்கியபடியால் பகவனென்றும் பஞ்ச வர்ண ஒளிமயமாக உண்மையை சகலருந் தெரிசிக்கும்படிச் செய்தபடியால் இந்திரனென்றும் பெயர்பெற்ற சாக்கைய முநிவர் சத்தைப் பிரித்துக் கொண்டவுடன் அசத்தாகிய தேகத்தைக் குடும்பத்தோர் எடுத்து தகனஞ்செய்து கங்கை நீராடி புதிய வஸ்திராபரண மணைந்து புட்பங்களைத் தரித்து சற்குருநாதன் சோதிமயமாக நம்முடன் என்றும் இருக்கின்றார் என்று சந்தோஷங் கொண்டாடினார்கள்.

அதை அனுசரித்துவந்த நமது குலத்தார் போதிபண்டிகை விடியற்காலத்தில் நீராடி புதிய வஸ்திராபரணங்களை அணிந்து புட்பந் தரித்து ஆனந்தங் கொண்டாடி வருகின்றார்கள்.

சூளாமணி

வெண்டுகிலுடுத்து வெண்சாந்து மெய்வழித்
தெண்டிரண் மல்லிகை யொலியல் சூடினார்
வண்டிரண் மணிமுத்தும் வைரச்சாதியுங்
கொண்டியலணியோடு கோலந்தாங்கினார்.

புத்ததருமத்தைத் தழுவிய பூர்வ அரசபத்தினிகள் அவர் நிருவாணகாலத்தில் பாடல்களால் கொண்டாடிவந்தார்கள்.

சூளாமணி

மாமழைக்கண்ணியர் மருங்குபோல்வன / தூமழைவளர்கொடி துவன்றிப்பத்திகள்
பாமழையுருவுகள் பலவுந்தோன்றவே / பூமழைபொன்னிரம் புதையவீழ்ந்தவே.

அதை அனுசரித்துவந்த நமது குலப்பெண்கள் நிருவாண காலமாகும் போதிபண்டிகைமுதல் குருபத்தியினால் (மையலார்) எனுஞ் சிலப் பெண்கள் கூடி அடியிற் குறித்துள்ள பாடலால் நாளதுவரையில் சிந்தித்துவருகின்றார்கள்.

கும்மியடிப் பெண்காள் கும்மியடி / குருபாதங் காணவே கும்மியடி
நம்மை யாண்ட ஆதிநாதனை / நாடிக்கும்மி யடியுமடி.

நமது குலத்துப் பூர்வ அரசர்களுங் குடிகளும் சங்கறர் அந்தியகால பண்டிகையை மிகவுற்சாகமாகக் கொண்டாடி வந்ததுமல்லாமல் அவர் போதி என்னும் அரசமரத்தடியில் உட்கார்ந்து ஞானநீதிகளைப் போதித்திருந்தபடியால் போதி நாதனென்றும், போதி வேந்தனென்றும் அவருடைய திருநாளை போதிபண்டிகை என்றும், அவர் தேகத்திற் பரவிய பஞ்சவர்ண சோதியை அநுசரித்து இந்திரனென்றும், அவர் திருநாளை இந்திர விழாவென்றும், தீபசாந்தி நாள் என்றும் வழங்கிவந்தார்கள்.

அன்னியதேசத்திலிருந்து இவ்விடம் வந்து குடியேறிய பராயசாதியார் தங்கள் சுயஜீவனங்களுக்காக ஏற்படுத்திக் கொண்ட மதகோட்பாடுகளுக்கும்

புத்தருடைய ஞான நீதிகளுக்கும் நேர்விரோதமாய் இருந்தபடியால் அதை ஜெயிப்பதற்கு பலவகைத் தருக்கங்களைச் செய்தும் சித்தியடையாமல் இத்தேசத்தில் அவரவர் தொழில்களுக்கென்று ஏற்படுத்தியிருந்த அந்தணன், அரசன், வணிகன், வேளாளன் என்னும் பெயர்களை கீழ்ச்சாதி மேற்சாதி என மாறுபடுத்திக் கொண்டு புத்தருடைய சம்மதத்தை சாதித்து வந்தவர்களும் வீரவாகு சக்கரவர்த்தி மாவிலி சக்கரவர்த்தி இவர்களின் வம்மிஸ வரிசையோர்களுமாகிய சாக்கையர்களை பறையர் பறையரென்னும் கீழ்ச்சாதிகளாக்கி நசித்துவிட்டால் புத்தமதம் தலையெடுக்காமல் நசிந்துவிடும் என்னும் கெட்ட எண்ணத்தினால் நமது குலத்தோரை 1,700 வருஷ காலமாகப் பறையர் பறையரென்னும் கீழ்ச்சாதியாக வகுத்து கல்வி விஷயத்திலும், நாகரீக விஷயத்திலும், உத்தியோக விஷயங்களிலும் தலையெடுக்கவிடாமல் நசித்துவந்த துன்பங்களினால் நாளுக்குநாள் சீர்குலைந்து சிந்தைநைந்து சற்குருவின் தியானத்தையும் மதசம்மத ஒழுக்கங்களையும் அவற்றின் பெயர்களையும் மறந்து செய்கைகளை முற்றும் மாறாமல் நிறைவேற்றிவருகின்றார்கள். இதன் சுருக்கத்தை சாக்கைய முநிவர் சரித்திரத்திலும் வேலூர் - மைசூர் முதலிய சுரங்கங்களில் எடுத்துள்ள செப்பேட்டு சாசனங்களிலும் புத்தமத அரசர்களின் சரித்திரங்களிலும் தெரிந்துக் கொள்ளலாம்.

நமது குலகுருவாகிய ஒப்பிலா அப்பன் சோதிமயமாய் நிருவாணதிசையடைந்த 3,475-வருடமானது இந்த பிலவங்க வருஷம் மார்கழி மீ 29 உக்குச்சரியான இங்கிலீஷ் 1908 வருஷம் ஜனவரிமீ 13உ சோமவாரம் விடியற்காலம் போதிபண்டிகை என்பது போகிபண்டிகை என்று வழங்கிவருகிறபடியால் புத்ததன்மக் குடும்பத்தோர் ஒவ்வொருவரும் அன்று விடியற்காலத்து எழுந்து நீராடி சுத்தவஸ்திரங்கள் அணைந்து வீடுகள் முழுமையும் தீபங்களால் அலங்கரித்து கற்பூரத்தட்டில் ஜலத்தை நிறப்பி வாசல்மத்தியில் வைத்து கற்பூரத்தைக் கொளுர்த்தி சலமுள்ள தட்டில் வைத்து சோதி சாட்சியாய் பஞ்சபாதகஞ் செய்யோமென்று உறுதிவாக்கு அளிப்பதற்கு அடியிற் குறித்துள்ள பஞ்ச சீலங்களை முதற்சொல்லி குறித்துள்ள பாடல்களால் சிந்தித்து கற்பூரசோதி அமர்ந்தவுடன் தட்டிலுள்ள சலத்தை எல்லோர் நாவிலும் தடவி வீடுகள்தோரும் தெளித்து விடிந்தவுடன் தங்கள் தங்கள் சக்திக்கியன்றவாறு பிக்ஷுக்களுக்குப் புசிப்பளித்தவுடன் ஏழைகளுக்கு அன்னதானஞ் செய்து பசியாற்றித் தாங்களும் புசித்து சத்தியதன்மத்தைக் கொண்டாடும்படிக் கோருகிறோம். இந்த நிருவாண நாள் ஆதியில் பௌர்ணமிதிதி திருவாதிரை நட்சத்திரத்தில் வந்தது. தற்காலம் அப்போதிபண்டிகையை மார்கழி மாதம் கடைநாளில் வந்த கணக்கையே விசேஷித்து நடந்தேறியபடியால் பௌர்ணமி திதியையும் திருவாதிரை நட்சத்திரத்தையுங் குறிக்காமல் மாதக் கடைநாளில் நிறைவேறி வருகின்றது.

அறிவோம் குருவாழ்க குருவேத்துணை
அறிவோம் தன்மம்வாழ்க தன்மமேதுணை
அறிவோம் சங்கம்வாழ்க சங்கமேதுணை
முதலாவது சற்குருவின் செயலைப் பின்பற்றுகிறோம்.
இரண்டாவது அவர் சத்தியதன்மத்தைப் பின்பற்றுகிறோம்.
மூன்றாவது அவரது சாதுசங்கத்தைப்பின்பற்றுகிறோம்.

பஞ்சசீலப்பிரதிக்கினை

பொய்சொல்லாம லிருப்போமாக
பிறர்பொருளை களவுசெய்யாம லிருப்போமாக
பிறர்மனையாளை யிச்சியாம லிருப்போமாக
மயக்கவஸ்துக்களை யருந்தாம லிருப்போமாக
சீவப்பிராணிகளைக் கொலைச்செய்யாம லிருப்போமாக.

மணிவண்ணனென்னும் அரசனும் தனது தேவிமார்களும் போதி பண்டிகையன்று சோதியை வளர்த்தி புத்தரை தியானித்த பாடல்கள்.

சூளாமணி

ஒளியாகி யுலகாகி நீவிரிந்தா யென்கோ
வுலகெலாநின்னொளியினுள்ளடங்கிற்றென்கோ
வளியார வுலகநீயாள் கின்றா யென்கோ

வமருலகு தானின்ன தடியடைந்த தென்கோ
விளியாத மெய்ப்பொருளை நீவிரித்தாயென்கோ
நீ விரித்தவாறே மெய்ப்பொருள் விரிந்த தென்கோ
தெளியாமலில்லை நின்றிருவடிகண் மெய்மை
தெளிந்தாலுஞ் செவ்வனே தெரிந்துரைக்கலாமே.

விண்டாங்கு வெவ்வினை வெரு உதிரநூறி
விரிகின்றமெஞ்ஞான சுடர்விளக்குமாட்டிக்
கண்டார்கணின்னிலமை கண்விளக்கப்பட்டுத்
தண்டா அமரைமலரின் மேனடந்தாயென்றுந்
தமனீயப் பொன்னணையின் மேலமாந்தா யென்றும்
வண்டார சோகினிழல் வாயமர்ந்தா யென்றும்

வாழ்த்தினால் வாராயோ வானவர்தங் கோவே
செங்கணெடுமாலே செறிந்திலங்கு சோதித்
திருமுயங்கு மூர்த்தியாய் செய்யதாமரையி
னங்கணடி வைத்தருளு மாதியா யாழி
யறவரசே யென்று நின்னடி பணிவதல்லா
லெங்கணிட ரகலுமாறிந் நிலைமை யெய்தி
யிருளுலக நீக்குமரு டருகநீ யென்று
வெங்கணிருவினையையறவென்றாய் முன்னின்று
விண்ணப்பஞ் செய்யும் விழுத்த கைமையுண்டோ.

சங்கறாந்தி என்பதை சில சரித்திரங்களில் அறுப்புகால முடிவென்று கூறி இருக்கின்றார்கள். இப்பண்டிகை நஞ்சை அறுப்புகால முடிவில் வருகிறபடியால் அவ்வகையாக சொல்லும்படி நேரிட்டதல்லாமல் அதினந்தரார்த்தம் அஃதன்று.

- 1:28; டிசம்பர் 25, 1907 -

11. காமன் பண்டிகை விவரம்

வீரசோழியம்

போதி நிழலிற் புநிதன் பொலங்கழல் / ஆதியுலகிற் காம்.
அணிதங்கு போதிவாமன் / பணிதங்கு பாதமல்லாற்
றுணி பொன்றிலாத தேவர் / மணி தங்குபாத மேவார்.

உலகத்தில் தோன்றும் மநுட சீவர்களுக்குள் புறப்பொருட் காலம் என்றும் அகப்பொருட் காலம் என்றும் இரு வகையாக முன்னோர்கள் வகுத்திருக்கின்றார்கள். அதில் புறதேக விளக்கமாகிய கடபடாதிகளுக்குள் பதினாறுவயதுக்கு உட்பட பாலகாலம் என்றும் இருபத்தைந்து வயதுக்குட்பட குமாரகாலமென்றும் நாற்பதைந்து வயதுக்குட்பட அரசகாலமென்றும் எழுபதுவயதுக்குட்பட மூப்புகாலம் என்றும் நூறு வயதுக்கு உட்பட மரணகாலம் என்றும் கூறப்படும். அகதேகி விளக்கமாகிய இன்ப நிலைக்கு ஒரு தலைக்காமம் அன்புடைக் காமம் பொருந்தாக் காமம் என்றும் கூறப்படும்.

இவ்வகையான தேக தோற்றத்திற்கும் செயலுக்கும் கொடுத்திருக்கும் பெயர்களில் சகல துக்கத்திற்கும் காரணமானது மரணகாலமும் சகல பற்றுதலுக்குங் காரணமானது பொருந்தாக் காமமுமா இருக்கிறபடியால் அதை சிலேடை சிறப்பில் (காலம்) எனும் வார்த்தையிலுள்ள மகர ஒற்றை நீக்கி னகரஒற்றைச் சேர்த்து (காலன்) எனும் ஆண்பால் விகுதியாக்கி விவேகிகள் விளக்கி வைத்ததுபோல (காமம்) எனும் வார்த்தையிலுள்ள மகர ஒற்றை நீக்கி (காமன்) எனும் னகர ஒற்றைச் சேர்த்து ஆண்பால் விகுதியால் உருவகப்படுத்தி இன்பத்தைக் கரும்பின் வில்லாகவும் ஐம்புல நுகர்ச்சியை ஐம்மலர் கணைகளாகவும் ஐம்பொறிகளின் அவத்தையை அதின் பலனாகவுங்காட்டி சுப்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம் என்னும் ஐவகை துன்பங்களை விளக்கி வைத்தார்கள்.

இத்தகைய துன்பங்களில் ஒவ்வொரு மநுட தேகங்களும் அழுந்தி இருப்பது அநுபவமாயிருக்கிறபடியால் காமம் எனும் இன்பத்தையும் அதின் துன்பத்தையும் அதை ஜெயிக்கும் நிலையையும் அறியத்தக்க ஞான உணர்ச்சியையும் ஆதியிற் கண்டடைந்தவர் ஒருவருண்டு. அவர் யார் என்பீரேல்.

மூவாயிர வருடங்களுக்குமுன் சாக்கையகுல சக்கரவர்த்தியின் திருமகனாகப் பிறந்து மநுட சீவர்களுக்கு உண்டாகும் துக்கங்களை நிவர்த்தி செய்வதற்கான வழியைக்கண்டு தெளிவிக்க வேண்டும் என்னும் கருணையால் இருபத்தியோராவது வயதில் இராசாங்கத்தைத் துறந்து வெளிவந்து ஒன்பது வருடகாலம் பலதேசங்களிற் சென்று விசாரித்தும் துக்க நிவர்த்தியைக் கண்டடைந்தவர் ஒருவருமில்லாதபடியால் தனக்குள்ள அன்பை ஒருருவமாகப் பெருக்கி அகிம்சை - சத்தியம் - ஆஸ்தேயம் பிராமசரியம் - மிதாகாரம் - சவுசம் எனும் தசதீட்சையுற்று முப்பதாவது வயதில் பங்குனி மாத பௌர்ணமி திதியில் ஓர் அரசமரத்தடியில் உட்கார்ந்து தன்னைத்தான் உணர்ந்து ததாகதம் பெற்றவுடன் ஞானக்கண் திறந்து காமன் என்னும் மன்மதனாகிய தன் மனதையும் காலன் என்னும் மரணத்தையும் ஜெயித்து பெண்ணாசை - மண்ணாசை - பொன்னாசை எனும் முப்புரங்களையும் எரித்து அநித்திய - அனாத்தும நிர்வாணமெனும் நாமரூபம் இரண்டும் அற்ற அத்துவிதமானவுடன் அம்மோனானந்த சுகவழியை சருவ சீவர்களுக்கும் போதித்த அந்நாளின் புகழ்ச்சியை பூர்வ புத்தமார்க்க அரசர்கள் ஒவ்வொருவரும் அந்தந்த வருட பங்குனிமாத பௌர்ணமியில் குடிகளுக்கு பறையரை வித்து தேச சிங்காரஞ் செய்து நீர்விளையாடி ஏழைகளுக்கு தானஞ் செய்துவந்தார்கள், (காமன் பண்டிகை) என்பதில் காமன் என்பதை ஆனந்த நிலையாகவும், பண்டிகை என்பதை பூர்வ தருமம் அதாவது பண்டைகால ஈகை என்றும் கூறப்படும்.

தற்காலம் அதை அனுசரித்துவரும் பூர்வபுத்தமார்க்கத்தோரிற் சிலர் பங்குனிமாத பௌர்ணமியில் காமன் கூத்தென்று ஓர் ஆனந்தங் கொண்டாடியும் வருகின்றார்கள். மற்றுமுள்ள சிலர் நீர்விளையாடி தீபம் ஏற்றி வருகின்றார்கள்.

நூலாதார நிரூபகம் - மணிமேகலை

ஆலமர்ச்செல்வன் மதன்விழாக்கோல்கொள.

காமன் ஐங்கணை - 12-நிகண்டு

அசைவிலா வனசஞ்சூத மசோகமே முல்லைநீலம்
ஒசியும் வேள் கணைகளாகும் உன்மத்த மதனமோகம்
வசையில் சந்தாபத்தோடு வசிகரணங்களும்பேர்
இசையுமற்றிவைகள் செய்வதே யிடுமவத்தையு மேற்சொல்வாம்.
ஆதியில் காமனையுங் காலனையும் வென்று விளக்கியவர் புத்தர்.

மணிமேகலை

அருளறம் பூண்ட வொரு பெரும் பூட்கையின்
அறக்கதிராழி திறப்பட வுருட்டிய
காமற்கடந்த வாமன் பாதம் - மாரனை வெல்லும் வீரநின்னடி.

வீரசோழியம்

வாடாப்போதி மரகதப்பாசடை
மரநிழ லமாந்தோன் நெஞ்சம்
யாவாக்கு மருளின்றீந் தேநிறைந்து நனிஞெகிழ்ந்து
மலரிலி மெல்லியரென் பரதனைக்காமர்செல்வி
மாரன் மகளீர் நெடுமாமழைக்கண் விலங்கி
நிமிர்ந்தெடுத்தவாளும் போழ்ந்திலவாயின்
யாதோ மற்றது மெல்லியவாறே.
மாரனிதையாவேட்டு மன்னுபுற மெரித்தனையே

- 1:29; சனவரி 1, 1908 -

சூளாமணி

ஆதியங்கடவுளை யருமறை பயந்தனை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கினை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கிய
சேதியஞ் செல்வ நின்றிருவடி வணங்கினம்
காமனைக் கடிந்தனை காலனைக் காய்ந்தனை
தேமலர் மாரியை திருமறு மார்பனை
தேமலர் மாரியை திருமறு மார்பனை
மாமலர் வண்ண நின்மலரடி வணங்கினம்.

புத்தர் காமனையுங் காலனையும் வென்ற சரித்திராதரவைக் கொண்டு புத்தமார்க்க அரசர்கள் காமன் பண்டிகை கொண்டாடி வந்த விவரம்.

சீவகசிந்தாமணி

காசறு துறவின் மிக்க கடவுளர் சிந்தைபோல
மாசறு விசும்பின் வெய்யோன் வடதிசை யயன முறினி
யாசற நடக்குநாளு ளைங்கணைக் கிழவன் வைகிப்
பாசறை பரிவுதீர்க்கும் பங்குனி பருவஞ் செய்தான்.

சிலப்பதிகாரம்

வெள்ளிமால் வரைவியன் பெருஞ்செடிக்
கள்ளவிழ் பூம்பொழிற் காமக் கடவுட்கு
தென்திசை மருங்கினோர் செழும்பதி தன்னுள்
இந்திரன் விழுவுகொண் டெடுக்குநாளிதுவென.

புத்தரவர்கள் முப்பதாவது வயதில் ஞான நிலைபெற்ற ஆதரவைக் கொண்டு புத்தசங்கத்தோர்களும் மேற்கூறிய வயதில் துறவடைந்து வந்தார்கள்.

நிகண்டில் அருகனை முடிதரித்தாள் அம்பிகையறத்தின் செல்வி என விளங்கியஅவ்வையம்மனா லருளிய,

மூதுரை

முப்பதா மாண்டளவின் மூன்றத்தொருபொருளை
தப்பாமற்றன் கைபடானாயிற்- செப்புங்
கலையளவே யாகுமாங் காரிகையார் தங்கண்
முலையளவே யாகுமா மூப்பு.

காமனையுங் காலனையுஞ் செயித்து மரணமில்லாமல் உலகத்தில் இருக்கின்றார்களா வென்னும் சில சங்கை யுண்டாகும். அதாவது சகல பற்றுக்களையும் நீக்கி பிறவியை செயித்துக் கொண்டவர்கள் இறப்பிறப்பற்றவர் களாகையால் மரணசெயம் பெற்றவர்களென்றும் பாச பந்தத்தில் உழன்று தீவினைக்கீடாய் ஜெநநமெடுப்பவர்கள் மரண துக்கத்தில் அழுந்தி திரிபவர்களென்றும் ஆப்தர்கள் கூறியிருக்கின்றார்கள்.

சீவகசிந்தாமணி

அல்லித்தா ளற்றபோது மறாதநூலதனைப் போல
தொல்லைத்தம் முடம்பு நீங்கத் தீவினை தொடர்ந்து நீங்கா
புல்லிக்கொண் டுயிரை சூழ்ந்து புக்குழிபுக்கு பின்னின்
றெல்லையி றுன்பவெந்தீச் சுட்டெரித்திடுங்களன்றே.

தியானம்

இன்னாப்பிறவியிகழ்ந்தோய்நீ யிணையிலின்ப முடையோய் நீ
மன்னா உலகமறுத்தோய் நீ வரம்பில் காட்சிக் கிறையோய் நீ
பொன்னாரிஞ் சிப்புகழ் வேந்தே பொறியின் வேட்கைக் கடலழுந்தி
யொன்னார் வினையினுழல் வேங்களுயப்போம் வண்ணமுரையாயே.

தாயுமானவர்

சந்ததமும் வேதமொழி யாதொன்றை பற்றினதுதான் வந்துமுற்று மெனலால்
சகமீதிருந்தாலு மரணமுண்டென்பதா சதாநிஷ்டர் நினைவதில்லை.

மச்சமுனிவர்

இறந்துபோனவர்க்கென்ன மெய்ஞானங்காண் / ஏச்சி ஏச்சி இகத்துள்ளோர் தூடிப்பார்
மறந்து செத்து மறுசென்மம் புக்கினால் / வருவதாகிய சஞ்சலமென்னமோ.

அகப்பேய்சித்தர்

பாவந்தீர வென்றா லப்பேய் பற்றறவேணுமடி
சாவதுமில்லையடி யகப்பேய் சற்குரு பாதமடி

இடைக்ககாட்டுசித்தர் பாடல்

பற்றே பிறப்புண்டாக்குந் தாண்டவக்கோனே அதை
பற்றாதறுத்துவிடு தாண்டவக்கோனே.
சாகாதிருப்பதற்கு தான்கற்குங் கல்வியன்றோ
வாகானமெய்க்கல்வி வகுத்தறிநீ கன்மனமே.

அவ்வையார் ஞானக்குறள்

சாகாதிருக்குந் தலமே மவுனமது / ஏகாந்தமாக விரு.

இவ்வகையான கருத்தை அநுசரித்து வேறு சில சரித்திரங்களிலும் பாவத்தின் சம்பளம் மரணம், புண்ணியத்தின் சம்பளம் நித்திய சீவனென்று குறித்திருக்கின்றார்கள்.

- 1:30; சனவரி 8, 1908 -

12. ஸ்ரீபாதசேவை விவரம்

ஸ்ரீபாதமென்றும், கமலபாதம் என்றும், திருவடி என்றும், தாமரையடி என்றும் வழங்கும் பூர்வசரித்திர பாடம் யாதெனில்:-

புத்தபிரான் காசியில் முதற்சங்கத்தை நாட்டிவிட்டு உலகெங்கும் அறக்கதிர் விரித்துவருங்கால் சதுரகிரி என்றும் இரத்தின தீவம் என்றும் வழங்கும் ஓர் மலையினுச்சியில் ஏறி அன்பின் விருத்தியையும், அன்பின் ஆதரையையும், அன்பின் ஆறுதலையும் அதன் சுகப்பலனையும் விளக்கி அன்பின் அமுதத்தை ஊட்டுங்கால் ஒவ்வோர் சீவராசிகளின் இதயங்களுருகி பரவசம் உற்றதுமன்றி பகவன் பாதம் படிந்திருந்த பாறையும் உருகி அவர் பாதத்திருந்த தாமரை ரேகையுடன் பாதமும் பதிந்து படிவு உண்டாயிற்று.

பதிவாகும் ஸ்ரீபாத தோற்றத்தைக் கண்ட சங்கத்தவர்களும் மற்றும் அன்பர்களும் ஆனந்தக் கூத்தாடி அன்பைப் பரவச்செய்த அப்பன் அமுதவாக்கின் உரையால் அடியவர் உள்ளங்களுருகியதும் அன்றி பாறையும் உருகி பாதசேவை தந்ததென்றெண்ணி இடைவிடா அன்பின் பெருக்கத்தில் நின்று ஸ்ரீபாதசேவை செய்துவந்தார்கள்.

காலை முதல் உச்சிவரை அமுதவாக்கின் போதத்தைக் கேட்டிருந்த மக்கள் தாகவிடாய் கொண்டு உச்சிமலையில் தவிப்பதைக் கண்ட காருண்யன் தனது ஏக சடையை நீட்டி தெண்ணீர் பொழியச்செய்து சீவராசிகளின் தாகவிடாய் தீர்த்து ரட்சித்தார். அன்றுமுதல் அந்நீர் பெருகி ஓடிய ஓடைக்கு கங்கைநதி என்றும், அவருக்கு கங்கை ஆதாரனென்றும் பெயருண்டாயிற்று.

பௌத்த தரும அரசர்கள் யாவரும் ஸ்ரீபாத தரிசனாசேவைச் செய்து சத்தியதருமத்தில் நடந்துவந்தார்கள்.

மணிமேகலை

மீங்கித னிகத்தி விரத்தினதீவத் / தோங்குயர் சிமயத்துச்சி மீமிசை
யறவியங்கிழவோ னடி யிணையாகிய / ஆதி முதல்வ னறவாழி யாள்வோன்
பாதபீடிகை பணிந்தனளேத்தி. / மாரனை வெல்லும் வீர னின்னடித்
தீநெறிக் கடும்பகை கடப்போய் நின்னடி / பிறற்கற முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டா தொல்லோய் நின்னடி / யென்பிறப்பொழிய விருந்தோய் நின்னடி
கண்பிறர்க்களிக்குங் கண்ணோய் நின்னடி / தீமொழி கழித்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி / நாகர்துயர்கெட நடப்போய் நின்னடி
யூகர் துயர மொழிப் போய் நின்னடி / வணங்குத லல்லது வாழ்த்துதலென்னோ
வடங்காதென்ற வாயிழைமுன்னர் / போதிநீழற் பொதிந்து தோன்று
நாதன்பாத நவைகெட வேத்தி / ஆதி முதல்வன் அருந்துயர் கெடுக்கும்
பாதபங்கயமலர் பணிந்தன ராதலி

சிலப்பதிகாரம்

விண்பொரு பெரும்புகழ்க் கரிகால் வளவன் / தண்பதங் கொள்ளுந் தலைநாள் போல

சீவகசிந்தாமணி

பாலருவிதிங்கடோய் முத்தமாலைப்பழிப்பிநெடுங் குடைக்கீழ்
பாய்பரிமான்றேர்
கோலருவி வெஞ்சிலையான் கூர்வாளோடுமணிக் கேடகமு மறமுமாற்றி
வாலருவி வாம னடித்தாமரைமலர்சூடி மந்திரமென் சாந்துபூசி
வேலருவி கண்ணினார் மெய்காப் போம்பவேந்தன்போய் விண்ணோர்
விருந்தாயினானே.

சூளாமணி

காமனை கடிந்தனை காலனை காய்ந்தனை / தேமலர் மாரியை திருமறு மார்பனை
தேமலர் மாரியை திருமறு மார்பனை / மாமலர்வண்ணனின் மலரடி வணங்கினம்.

புத்தபிரானுக்கு ஏகசடை நின்றதற்கும் அதனின்று தெண்ணீ ரளித்த தற்கும் நூற்சாட்சிகள் .

வீரசோழியம்

குறியாரெனவே புனலின்மீ / துறுதாமரைமே லுறைவார்தா
நெறியார்சடையாய் நின்பாத / மறிவா ரினியா ரறிவாரே.
வரிகொளரவு மதியும் / புரிவுள சடையும்
புரிவுள சடைமேற் புனலும் பிறழுமே.

நிகழ்காலத்திரங்கல்

தாகவிடாய் தீர்த்தோன் சடைமுடியில்கங்கை / யேகுநதிவிண்டா னிறையோ னதிசயமே.

பகவன் மகதநாட்டை விட்டு வடதிசைநாடி உத்திராபதியாங் காசியை அடைந்தவுடன் சில அரசர்கூடி பகவனுக்கோர் இருக்கைமடங்கட்டி வைத்த காலத்தில் அவருக்கு ஓர் நீண்ட சடையிருந்தது.

வீரசோழியம்

மிக்கவுத்திராபதிக்கு மேவினார் / தொக்க செஞ்சடைப்பரன்
றனக்கோர் தூசளித்தவாய் / மைக்கொள்சோலை சூழுநீதி
மன்னர்கூடி வாரணம் / புக்க வாசவர்க் கிருக்கை நல்கினார்.

சிலப்பதிகாரம்

வாடகமாடத் தறிதுயிலமர்ந்தோன் / சேடங் கொண்டு சிலர் நின்றேத்தத்
தெண்ணீர்சுரந்த செஞ்சடைக்கடவுள் / வண்ணச் சேவடி மணிமுடிவைத்தலி
முடிவளை யுடைத்தோன் முதல்வன்சென்னியின் / றிடியுடை பெருமழை யெய்தியாங்கப்
பிழையாவளையுட் பெருவளஞ்சுரப்ப / மழைபிணித்தாண்ட மன்னவன் வாழ்கென.

அருங்கலைசெப்பு

கங்கைநதிக்குங் கலைநிதிக்குங் காரணனா / யெங்கு நிலைத்தான் றன்.

புத்தபிரான் பிறந்ததும், வைகாசி பௌர்ணமி - அரசை துறந்ததும், மாசி பௌர்ணமி - நிருவாணமுற்றதும், பங்குனி பௌர்ணமி - பரிநிருவாணமுற்றதும், மார்கழி பௌர்ணமி யாதலின் அப்பவுர்ணமி காலத்தையும் அவர் சடா பாரத்திற் தோன்றிய தெண்ணீர் விசேஷத்தையுங் கருதி விவேகமிகுத்த மேலோர் கங்கைக் கரைக்குச் சென்று சங்கத்திற் சேர்ந்து தவம்புரிந்து வந்தார்கள்.

வீரசோழியம்

அம்பொற் பணைமுகத்துத் தீண்கோட் டணிநாகம் / வம்புற்றவோடை மலர்ந்திலங்க - உம்பர்
நவம்புரியுநாண்மதியுங் கங்கையுநண்ணித் / தவம்புரிவார்க் கின்பந்தகும்.

சிலப்பதிகாரம்

போதித்தானம் புரிந்த றங் கொள்ளவு / மென்வாய்க் கேட்டுடா ரிறந்தோருண்மெயி
னன்னீர் கங்கை யாடப்போந்தேன் / மன்னர் கோவே வாழ்க வீங்கென.

- 1:31; சனவரி 15, 1908 -

இவ்வகையாக அப்பாறையிற் பதிந்துள்ள பாதப்பதிவை கமலரேகைக் குறிப்புடன் சந்தனக்கூட்டிலும், அம்பர் கூட்டிலும் பதித்தெடுத்துவந்து வைத்துக்கொண்டு சங்கத்தோர் ஒவ்வொருவருந் தரிசித்து அவர் தருமத்தை சிந்தித்துவந்ததும் அன்றி நாளதுவரையில் பர்மா, சிலோன், தீபேத் முதலிய தேசங்களில் கமல பாதசேவை செய்துவருகின்றார்கள்.

இத்தகைய தருமராட்சியத்தில் சொற்ப துற்கருமச் செயலால் வேஷபிராமணர்கள் தோன்றி தருமநீதிகளையும் ஒழுக்கங்களையுஞ் சீலங்களையுங் கெடுத்து பௌத்த மடத்தோர் செய்துவந்த இட்டியாகம், ஓமயாகம் முதலியவைகளுக்கு மாறுதலாக கௌயாகம், அசுவயாகம், மேஷயாகம் என்னும் ஆடுகளையும் மாடுகளையும் குதிரைகளையும் சுட்டுத்தின்றுக்கொண்டு கொலைபாதகத்தை விருத்திசெய்ததுமன்றி பௌத்த சங்கத்தோர் வேதவாக்கியங்களுக்கு மாறுதலாக தவளை வயிற்றிலும் கழுதை வயிற்றிலும் நாயின் வயிற்றிலும் மனிதர்கள் பிறந்து வேதங்களை எழுதினார்கள் என்றும் பௌத்தர்களால் நீருக்கும் மண்ணுக்கும் காற்றுக்கும் நெருப்புக்கும், ஆகாயத்திற்கும் கொடுத்திருந்த பெயர்களை உருக்கொண்ட தேவர்களாக வகுத்து அவர்களுக்குப் பெண்சாதி பிள்ளைகளையுஞ் சிருட்டித்து அத்தேவர்களுக்கும் மற்றக் குடிகளுக்கும் மத்தியில் வேஷபிராமணர்களிருந்து பூசை நெய்வேத்தியங்கள் நடத்துகிறவர்கள் என்றும் பொய்யிற்குப் பொய்யை முட்டுக்கொடுத்து பொய்யையும் விருத்தி செய்துக்கொண்டு கைம்பெண்களைப் புணரும் புண்டரீக யாகம் என்னும் காமத்தையும் விருத்திசெய்து வருங்கால் பௌத்த தருமக்கேழ்வியிலிருந்த குடிகள் புத்தர் என்றும் அழகர் என்றும், அரங்கர் என்றும், தருமர் என்றும் வழங்கிய பகவனைப் பற்றி விசாரிக்கும் காரணம் கொண்டு புத்தரே விஷ்ணு என்றும், விஷ்ணுவே புத்த அவதாரம் என்றும் புராணமேற்படுத்தி புத்தாபாதமே விஷ்ணுபாதம் விஷ்ணுபாதமே புத்தாபாதம் என்றும் கூறி அக்கமலபாதத்தை நாம் நெற்றியிலணைந்துக்கொண்டு

விஷ்ணுவை சிந்திக்கவேண்டும் என்றும் இராமானுஜாசாரியாரால் வகுத்து இருபாதங்களுக்கு மத்தியில் அம்மன் தீபசோதியை மஞ்சள் தூளித்தாலேனும் சிவப்பு தூளித்தாலேனும் அணைந்துக் கொள்ளவேண்டும் என்றும் ஆக்கியாபித்தாராம். இதன் ஆதாரத்தை மேல்கோட்டை செல்வராயர், ஆலய அர்ச்சகர், பட்டாசாரியார் அவர்களால் இயற்றியுள்ள ஆண்டாள் ஸ்ரீசூரணம் என்னும் நூலின் முகப்பில் வாலக்கும்மிப் பாடலைச் சுட்டி கமலபாதம் இரண்டிற்கு மத்தியில் சோதியை வளர்த்துங்கோளென்று கூறியிருக்கின்றார்.

வாலக்கும்மி

உச்சுக்குநேறே உண்ணாவுக்குமேல்நிதம் / வைத்தவிளக்கு யெறியுதடி
அச்சுள்ளவிளக்கே வாலையடி / அவியாம லெரியுது ஞானப்பெண்ணே.

இத்தகைய தீபசின்னத்தை ஸ்ரீசூரணமென்றும் திருமண்காப்பென்றும் வகுத்து அதை நெற்றியில் அணைந்துக்கொண்டுவரும் ஒரு கூட்டத்தார் தோன்றி, புத்தர் சங்கமே விஷ்ணு சங்கம் என்றும் விஷ்ணு சங்கமே புத்தர் சங்கம் என்றும் புத்த தருமச்சக்கரமே விஷ்ணுசக்கரம் என்றும் விஷ்ணு சக்கிரமே புத்தசக்கரம் என்றும் கூறிவந்த விஷயத்தால், நாளுக்குநாள் புத்ததருமங்கள் யாவும் மாறுபட்டு அபுத்ததன்மங்கள் மேலிட்டு தன்மச்சக்கரத்தைக் கொலைச்சக்கரமாகவும் சாது சங்கத்தை யாதுசெயலும் அற்ற சங்கமாகவும் மாற்றிவிட்டார்கள்.

மணிமேகலை

சாதுயர்நீக்கிய தலைவன் தவமுனி / சங்க தருமன் றானெமக்கருளிய
அறக்கதிராழி திறப்பட வுருட்டிய / காமற் கடந்த வாமன் பாதம்.

வீரசோழியம்

அருளாழி நயந்தோய் நீ / யறவாழி பயந்தோய் நீ
மருளாழி துறந்தோய் நீ / மறையாழி புரிந்தோய் நீ

விஷ்ணுவிற்கும், புத்தருக்கும் அவதாரங்கள் உண்டு என்று புராணங்கள் ஏற்பட்டதுமன்றி கீதகோவிந்தத்தில் வேதாநுத்தரதே என்றும், ஸ்ரீ ஜெயதேவரால் காருண்ய மாதந்வதே என்றும் கூறியுள்ள ஆதாரங்களால் புத்த தன்ம சரித்திர ஆதாரங்களைக் கொண்டே வைணவசமயம் தோன்றியதுமன்றி புத்தபிரான் மாசிமாத பௌர்ணமியில், ஓடேந்தி பிச்சையேற்ற பாவனையாய் வைணவர்கள் கோவில்களில் பிரம்ம உச்சவம் என்றும் கொண்டாடி வைணவர் கடவுள் கையில் வெள்ளிபோல் கொடுத்து பிச்சை ஏற்று ஐதீகங் காட்டுகின்றார்கள்.

அதுவும் அன்றி புத்தபிரானுக்குரிய முப்பத்திரண்டு முத்திரைகளில் முக்கியவற்றில் சிலதை வைணவர் தங்கள் தேவதைகள் கையிலும் உருவத்திலும் நாட்டியிருக்கின்றார்கள்.

ஆதலின் நமது பௌத்ததன்ம சோதிரர்கள் ஒவ்வொருவரும் ஸ்ரீபாதத்தையேனும் அவர்கள் மாறுதலையேனும் புறக்கணிக்காது மெய்யறம் என்னும் புத்ததன்மத்தையூட்டி சாதிபேத சமயபேதங்களை ஒட்டி சகோதிர ஐக்கியத்தை நாட்டி சஞ்சலத்தை வாட்டி சலனம் அற்ற நிருவாணதிசை அடையும் சங்கத்தையும் தன்மச்சக்கரத்தையும் பின்பற்றலே சத்தியதன்மம் எனப்படும். இத்தகைய நன்மெய்க் கடைபிடித்த இதயத்தையே பதுமநிதி - தன்மநிதி - சங்கநிதி வாய்த்தக் குபேர பட்டிணம் என்று வகுத்துவைத்தார்கள்.

பௌத்த தரும அரசர்களுக்குள் பூரணவாசி - அஷ்டமி - அமரவாசி முதலிய திதிகளை விசேஷ விரதங்களாகக் கொண்டாடி வந்தவைகளில் அரசர்கள் அநுசரித்துவந்த அஷ்டமிக்கு கோ, குல, அஷ்டமி என்றும் மன்னு பூரணை என்றும் அரச அமரமென்றும், வழங்கி வந்தார்கள்.

அருங்கலைச்செப்பு

அரயர்களேற்கு மட்டமிபூரணை / விரதவமர முன்னாள்.

பௌத்தர்கள் கியான பஞ்சசீலங்கள் பஞ்ச சமஸ்காரங்கள் என்றும் தாங்கள் எதேஷ்டமாகப் புசிக்கத்தக்க பஞ்சாமிர்தங்கள் என்றும், அஷ்டசீலங்கள் அஷ்டாட்சரம் என்றும், தசசீலங்கள் தசமிதானம் என்றும் தசாவதாரங்கள் என்றும் மாறுபட்டிருக்கின்றது.

சீவகசிந்தாமணி

மன்றனாறு மணிமுடிமேன் மலிந்த சூளாமணிபோலும்
வென்றோன் பெருமானறவாழி வேந்தன் விரிபூ தாமரைமேற்
சென் றதிருவுராடியேற்றித் தெளியும் பொருள்க ளோரைந்து
மன்றியெட்டு மீரைந்து மாகுமென்பா ரறவோரே.

- 1:32; சனவரி 22, 1908 -

13. விபூதிவிளக்க வொளிவிவரம்

வீரசோழியம்

மனைக்குப்பாழ்வாணுதலின்மெய் - தான்சென்ற
திசைக்குப்பாழ் நடடோரையின்மெய் - யிருந்த
வவைக்குப்பாழ் மூத்தோரையின்மெய்
தனக்குப்பாழ் நல்லறிவில்லா வுடம்பு.

உலகத்தில் தோன்றியுள்ள சீவராசிகளுள் அன்பு யீகை சாந்தம் என்னும் மூன்றையும் பெருக்கிக் கொண்டவர்கள் தேவர்கள் என்றும் வித்தை - புத்தி - விசாரிணை மூன்றையும் பெருக்கிக்கொண்டவர்கள் மானிடர்களாகும் மக்களென்றுங் காமக்குரோத லோப மூன்றையும் பெருக்கிக்கொண்டவர்கள் பே - மானிடராகும் நரகர்கள் என்றும் வகுக்கப்பெற்றார்கள். இவற்றுள்ள மானியென்றும் மானிடரென்றும் வகுக்கப் பெற்றவர்கள் தங்கள் விசாரிணையால் உணர்ந்த நல்வாய்மெகளை ஏனையோர்க்கு உணர்த்தி தன்மயமாக்குவது இயல்பாம்.

அறநெறிதீபம்

ஐயெனத்தாம் பெருகுவதும் அறிவினால் விளங்குவதும்
உய்தவங் கேட்டுணர்வதுவும் உணர்ந்தவற்றை பிறருளத்திற்
செய்தவர் நன்றாக்குதலும் சிறந்தார்சொற்றேறுதலுஞ்
மெய்யன்பை யுள்ளத்தில் மேவியவன் பயனாகும்.

ஆதலின் சாம்பலென்றும் பொடி என்றும் நீரென்றும் வழங்கும் ஓர் தூளித்தால் சருவ ரோகங்கள் நீங்கும் என்றும் சகல பாவங்கள் போகும் என்றும் ஓர் மனிதன் கூறுவானாயின் ரோகங்கள் என்பது என்ன. ரோகங்களைப் போக்கும் அவுடதங்கள் என்ன. பாபங்கள் என்ன என உசாவுவதன் முன் சாம்பல் என்னும் வஸ்துவின் உற்பத்தியையும் அதன் குணாகுணத்தையுந் தேறவிசாரித்துப் பலனைக் கண்டடைவதே விவேகிகளின் கடனாம்.

அதாவது, அன்னம் பசியைப்போக்கும். தண்ணீர் தாகத்தை நீக்கும் என்பது சருவ உயிர்களின் சம்மதம். அவற்றின் மாறாய் அன்னந் தாகத்தை நீக்கும் தண்ணீர் பசியைப் போக்கும் என்றால் பொருந்துமோ, பொருந்தாவாம். ஆதலின் நம்தேயத்தார் சாம்பல் என்னும் வீண்பொடியை ஒப்பிக் கொண்டாடும் உற்பவத்தை விளக்குவாம்.

உலகநாதன் என்றும் சற்குரு என்றும் தோன்றி தன்னுயிர்க் கிரங்கான் பிறவுயிர் ஓம்பும் மன்னுயிர் முதல்வன் என்னும் சாக்கைய முனிவர் தான் கண்டடைந்த தரும பலனை உலகெங்கும் பரவச் செய்து,

காசின்மானகர் கடல்வயிறு புகாமல் / வாசவன் விழாக்கோள் மறவேனென்று
காயங்கரையெனும் பெரியாற்றடக்கரை / மாயமின் மாதவன் றன்னடி பணிந்து.

எனும் மணிமேகலை நூலாதரவால் காசி என்னும் கங்கைக்கரை என்றும் மணிப்பல்லவம் என்றும் பெரியாற்றங்கரை என்றும் பூர்வத் தில் வழங்கி தற்காலம் குஷிநகரென வழங்கும் இடத்தில் பரிநிருவாணம் அடைந்தபோது நிலம் நீர் தீ காற்றெனும் நான்கில் அமைந்த (பூதி) யாகும் யாக்கையை,

மேருமந்திர புராணம்

உண்டு நாம்விட்ட வல்லாப் புற்கல மொன்றுமில்லை
பண்டு நாம் பிறந்திடாத பரதேச முலகிலில்லை
கொண்டு நாம் நின்ற யாக்கை குணமிலா பூதி கந்தம்
மண்டி நாம் புலத்தின் வீழ்தன் வினைவரும் வாயிலென்றேன்.

தகனஞ்செய்யுங்கால் ஏழு அரசர்கள் சந்தனக்கட்டைகளையும் வாசனை திரவியங்களையும் கொண்டுவந்து தகனித்து அஸ்தியையும் சாம்பலையும் எழுவர்கள் கொண்டுபோய் ஏழு இந்திர வியாரங்களைக் கட்டி அதாவது

புத்தர் மடங்களைக் கட்டி அதன் மத்தியில் சற்குருவின் தேக அஸ்தியையும் சாம்பலையும் புதைத்து பக்த்திக்கு ஆதாரமாக அங்க லயம் என்றும் லய அங்கம் என்றும் அஸ்தியை புதைத்தவிடம் விளங்குதற்கு (டாகோவாவைப்) போன்ற ஒவ்வோர் கற்களை நாட்டி குருவை சிந்தித்து வந்தார்கள்.

காசிக்கலம்பகம்

முத்திக்குவேட்டவர் மோட்டுடற்பாரமுடைத்தலையோ
டத்திக்குஞ் சாம்பற்கு மோம்பினராலிவை யன்றியப்பாற்
சித்திப்பது மற்றிலை போலுங்காசிச் சிவபெருமான்
பத்திக்குக் கேவலமே பலமாக பலித்ததுவே.

பாலிபாஷையில் சிவம் என்பதற்குப் பொருள் - நிருவாணம், அன்பு எனப்படும். அவ்வகை அன்பை உருவகப்படுத்தி நிருவாணமுற்றவர் புத்தராகுஞ் சாக்கைய முநிவர் ஒருவரேயாம்.

திரிமந்திரம்

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார் / அன்பே சிவமாய தியாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தியாரு மறிந்தபின் / அன்பே சிவமா யமர்ந்திருப்பாரே.

சிவபோகசாரம்

தானோ வசத்தல்ல வென்றறிந்தாற் றாரணியி
லேனோ பிதற்றிடுவா னேழைதான் - றானே
பிறவாதது நீ காணிற் கவருளை
மறவாதிரு சிவமாவை.

ஒவ்வொரு மானிடனும் சிவமாதற்கு அன்பே காரணமாதலின் அவ்வன்பே ஒருருவாக வந்த சாக்கைய முநிவருக்கு ஆயிர நாமங்களில் ஒன்றாகிய சிவம் என்னும் பெயரையும் அளித்துள்ளதை நிகண்டிற் காணலாம்.

அஸ்தியையும் சாம்பலையும் அரசர்கள் எடுத்துக் கொள்ளும் போது கோபாலர்களாகிய அரச புத்திரர்கள் சற்குருமீதுள்ள அன்பின் மிகுதியால் சிறு பேழைகளில் அச்சாம்பலை வாரிவைத்துக்கொண்டு அவரை ரூபில் வணங்குதற்கு பதிலாய் சிரம் வணங்கி அச்சாம்பலை நெற்றியில் பூசிவந்தகாலத்து குருவைச் சுட்டு கோபாலர் பெட்டியுள் வைத்துள்ளார் என்னும் மொழியே பழமொழியாக வழங்கிவருவதை நாளதுவரையிற் கேட்பதுடன் ஓர் மேன்மெய் தகித்த சாம்பலாதலின் அதை (மாபூதி) என வழங்கி அச்சாம்பலின்பேரில் கட்டியுள்ள ஓர் கட்டிடத்திற்கும் மகாபூதி வியாரம் என நாளதுவரையில் வழங்கிவருகின்றார்கள். சாக்கைய முநிவரின் தருமத்தைப் பின்பற்றிய வள்ளுவர் சாக்கையர் என்னும் குடும்பத்தார் மாபூதியாகும் அச்சாம்பலை நெற்றியில் மூன்று பிரிவாகப் பூசி மும்மணிகளை சிந்தித்துவந்தார்கள்.

மணிமேகலை

புத்ததரும சங்கமென்னு / முத்திற மணியையும் மெயில்வணங்கி.

மேருமந்திர புராணம்

பத்திரபாகுவென்னும் பரமமா முநிவனாகும்
உத்தமன் பாதஞ்சேர்ந்துன் பிதாவின்று முநிவனாகி
யித்தலமேத்தநின்றானெனக்கு வந்திதத்தை யோதி
சித்தமெய் மொழிகள் மூன்றுஞ் செறிவித்தக்குரவனானான்.

- 1:33; சனவரி 29, 1908 -

அதாவது புத்தரையும் அவர் தருமத்தையும் அவர் சங்கத்தையும் வணங்கி திரிபீடகங்களாகும், பாபஞ்செய்யாதிருங்கள், நன்மெய்க் கடைபிடியுங்கள், உங்கள் இதையத்தை சுத்திசெய்யுங்கள் என்னும் மூன்று மெய்மொழிகளையுஞ் சிந்தித்து ஒழுக்கத்தினின்று சீலம் அடைவதுடன் அம்மாபூதியாகுஞ் சாம்பலைக் கையில் ஏந்தி சற்குருவின் தேகத்தை நீற்ற சாம்பலிஃதென ஏனையோர் உணரும் பொருட்டு கீதைகளும் பாடிவந்தார்கள்.

மாயவரம் பாகுபலி நாயனார் ஏட்டுப்பிரதி.

மாபூதிபதிகம்

1. பொன்னுடன் மண்ணும் பெண்ணுடன்வெறுத்தப் போதிய நாதன் மாபூதி
மன்னுமுன்னரசர் மாதவர்போற்றும் வள்ளலா மாதி மாபூதி
சொன்ன முன்பிடகச் சுருதிமெய் மொழியை தோற்றவைத்

தோதுமாபூதி
ரன்னீல முனிவர்க் காதியாய் நின்ற நாயகனாகு மாபூதி.

2. உள்ளமெய்ப்பொருளை யுரைத்துநால்வாய்மெய் யுணர்த்திய
போதமாபூதி
கள்ளமெய்யகற்றிக் காட்சியை யருள கடவுளாய் நின்றமாபூதி
விள்ளுமிப்பூத வினையிரண்டாற்றி மிடியினை யகற்று மாபூதி
தெள்ள நஞானத் தெளிவதையூட்டி சேவைதந் தாண்ட மாபூதி.

3. அண்டர்கட் கோமானாகிய தன்றியவனிக்கு மண்ணல் மாபூதி
தொண்டர்களிதயத் துருசினை யகற்றுஞ் சுத்தவாதார மாபூதி.
எண்டிசை யோர்களிதை யசுத்தத்திற்கேமமே யோது மாபூதி
பண்டுளமோன பாக்கிய மீய்ந்த பக்குவமான மாபூதி.

4. பக்குவம் பழுக்கும் பான்மையீதென்னும் பரிமள வேதிமாபூதி
திக்குகளெட்டுங் கோணநன் நான்குஞ் சீர்பெறச் செய்த மாபூதி
மக்களுமனையு மாய்கை யென்றாற்றி வாய்மெ நான்கூட்டு மாபூதி
தக்கமெய்ப் பருவபால தானத்திற்றன்னறி வளர்த்த மாபூதி.

5. தன்னையே யுணர்ந்து தன்னையே யடைந்து தானே தானான மாபூதி
மன்னவனென்னும் வாழ்க்கையினின்றும் வருத்துமென் றகன்றமாபூதி
தன்னுயி ரீய்ந்தேபிறவுயிரோம்பும் மன்னுயிர் முதல்வ மாபூதி
அன்னமு மாடையுரை யுளுமிய்ய வாக்கியாபித்த மாபூதி.

6. வாக்கிய நான்கும் வழிபடுமாறு மாதவ முணர்த்து மாபூதி
ஆக்கியநீதி நெறிதனி நின்று வன்பினை வளர்த்த மாபூதி
போக்கிலே சிந்தை போகவிடாது பூரண முற்ற மாபூதி
சாக்கைய முநிவனாகு மெம்பெருமான் சாரணர் போற்று மாபூதி.

7. சாரணர் போற்றுந் ததாகத னாகுஞ் சம்புவே சங்க மாபூதி
காரணமானக் கடவுளா மெங்கள் கற்பகக் காட்சி மாபூதி
பூரண ஞானம் பொலிந்து கேவலப்பெண் புணர்ந்த போதத்தின் மாபூதி
சீரண முற்றோர் செயலுரவந்த தேவாதி தேவ மாபூதி.

8. தேவாதி தேவனென்னு மெய்யடியார் தேட்டமே நாட்ட மாபூதி
மூவா முதல்வனென மறை தூற்றும் முத்தனே யாகு மாபூதி
காவாதளிக்குங் கண்ணுத லென்னுங் கருணையோ ருருவ மாபூதி
பாவாவெனுஞ் சொல் பற்றியபோதே பற்றினை யறுக்கு மாபூதி.

9. பற்றினை யறுத்துப் பற்றிய நீதிப்பற்றினை பற்று மாபூதி
ஊற்றமெய் ஞான விளக்கினை நாட்டிவுள்ளொளி விளக்கு மாபூதி
கற்றறிந்தோராம் மெய்யறிவாளர் கண்ணினுண் மணிய மாபூதி
முற்றிய ஞான வாழ்க்கையி னிற்போர் முத்தமிட் டாடு மாபூதி.

10. முத்தமிட் டாடுமுதல்வனா மெங்கள் முநிவன தாகு மாபூதி
சித்தத்தே நிற்குஞ் செயகுல குருவாந் தேற்றற வாழி மாபூதி
அத்தனா மெங்க ளருகனா மூலவாதனாய் நின்ற மாபூதி
முத்தியதாகும் பரி நிருவாணமோக்கமே யாகு மாபூதி.

என சற்குருவின் தேகத்தைத் தகனஞ்செய்த சாம்பல் தங்கடங்கள் கையிருப்பில் இருக்கும் அளவும் அப்பூதியைக் கொண்டாடிவந்து அம் மகாபூதி சாம்பல் முடிந்தவுடன் வேறு பொடி கையிலில்லாமல் சாக்கைய முநிவரின் தாயார் மாயாதேவி மரணமடைந்தவுடன் ஓர் பசுவானது தானேவந்து குழவிக்கு பால் சுரந்தூட்டியதை கண்டது முதல் சாக்கையர்கள் பசுக்களின் பேரில் அதிக அன்பும் ஆவலுங் கொண்டவர்களாகையால் பசுக்களின் சாணத்தை எடுத்து சுட்டு சாம்பலாக்கி வைத்துக்கொண்டு மாபூதி என்னும் பெயரை மாற்றி விபூதி என்னும் பெயரால் நாளதுவரையில் உபயோகித்து வருவதுமன்றி ஏழு அரசர்கள் கொண்டுவந்த சந்தனக்கட்டைகளின் மிகுதியை சாக்கையர்களும் சங்கத்தவர்களும் ஆளுக் கொவ்வொன்றை கொண்டுபோய் அவர் சிந்தனை மாறாதிருக்க உறைத்து திலதமிட்டு வந்த வழக்க மாறாது நாளதுவரையில் சந்தனத் திலதமிட்டு வருகின்றார்கள். (திலத மென்பது) பாலி பாஷையில் பிரதமகுரு வால்சுட்டிக்காட்டிய சுழிமுனை நோக்கநிலை யென்னப்படும்.

மணிமேகலை

பொன்னின் கோட்டது பொற்குளம்புடையது / தன்னலம் பிறர்கோழ தான்சென்றெய்தி
யீணாமுன்ன ரிளையருக்கன்று. / நான்முலை சரந்து நன்பா லூட்டலு.

நிகண்டு

அடலைவெண்பலி சாம்பற் பேராந் திருநீறே பற்பம்
பொடியொடு விபூதி சாம்பற் புண்ணிய சாந்தஞ் சாணி
பொடி துகள் சுன்னந் தூளிபூதியே விபூதியாகுஞ்
சுடுச்சுண்ணச் சாந்து மண்ணாஞ் சுதையொடு களபமும் பேர்.

சீவகசிந்தாமணி முத்தியிலம்பகம்

கைப்பொடி சாந்தமேந்தி கரகநீர் விதியிற்பூசி
மைப்படி மழைகணல்லார் மணிசெப்பின் வாசநீட்ட
செப்படு பஞ்சவாசந் திசையெலாங் கமழ வாய்க்கொண்
டொப்புடை யுடைவர்க்கோயில் வணங்குதுமெழுகவென்றான்.

சாக்கைய முநிவர் சங்கத்திற்கு முதன்மையாக விளங்கியகாலத்தில் அவரை ஏகநாயகன் என்றும், சபாநாயகன் என்றும், கணநாயகன் என்றும் வழங்கிவந்தார்கள். அவர் உலகிலுள்ள சருவ சங்கங்களுக்கும் நாயகனானபோது விநாயகன் என வழங்கிவந்தார்கள்,

நிகண்டு

தருமராசன் முன்னிந்திரன் சினன்பஞ்ச தாரைவிட்டே
யருள்சுரந்த வுணர்கூட்டுந்த தாகத னாகி தேவன்
விரவுசாக்கையனே சயினன் விநாயகன் சினந்தவிர்ந்தோன்
அரசுநீழலிலிருந்தோன் அறி அறன் பகவன் செல்வன்.

சற்குருவின் தகன சாம்பலை நெற்றியில் பூசி வருமளவும் அதை மாபூதி, மாபூதி என வழங்கி வந்தார்கள். அது முடிந்து எங்குங் கிடைக்கக் கூடிய பசுவின் சாணச்சாம்பலை ஏற்றுக்கொண்டபோது அதனை விபூதி, விபூதி என வழங்கிவந்தார்கள். அவ்வகை மாற்றிக்கொண்ட சாக்கையர்கள் வேஷப்பிராமணர் களாகத் தோன்றிய பராய சாதியார்களால் நசுங்குண்டு தங்கள் அரச போகங்களுந் தவறி குருபரம்பரையும் இழந்து "பாப்பானுக்கு மூப்பான் பறையன் கேட்பாரில்லாமல் கீழ்சாதியானானென்னும்" பழமொழிக் கிணங்க நாளுக்குநாள் க்ஷீணதிசை அடைந்து தங்கள் குல குருவையும் அவர் தருமங்களையும் மறந்து பொய்ப்புராணக் கட்டுக்களில் நுழைந்து பஞ்சபாதகங்களுக்கு ஆளாகி மாபூதியின் மகத்துவத்தையும் விபூதியின் விளக்கத்தையுங் கைவிட்டு அரசர்கள் முதல் வணிகர் வேளாளரென்ற மூன்று தொழிலாளர்கட்கும் கன்ம குருக்களா இருந்தவர்கள்,

திவாகரம்

வள்ளுவர் சாக்கையர் என்னும் பெயர்மன்னர்க் / குள்படு கூறுமத்தலைவர்க் கொக்கும்.

நூதன மதக்கிளர்ச்சியில் நுழைந்து பூர்வ நிலமையை மறந்து தங்கள் குருபரம் பரையை வேஷ பிராமணர்களாகும் பராயசாதியாரிடம் ஒப்படைத்துப் பதிகுலைந்தார்கள்.

ஆதலின் மாபூதியென்றும் நீறென்றும் சாம்பலென்றும் வழங்கும்படியான ஓர் பொருளால் அனந்த மகத்துவமுள்ளதெனக் கூறுவாராயின் அதன் மூலவுற் பவத்தையும் அதன் குணாகுணங்களையுந் தேறவிசாரித்துப் பலனைக் கண்டடைவதை விபூதி விளக்கவொளி என்று கூறப்படும்.

இத்தகைய விளக்கவொளி விவரமறிந்த தன்மசங்கத்தோரை மாபூதியை விபூதியென்றேனும் விபூதியை மாபூதி என்றேனும் வழங்கிக் கொண்டு தூளிதத்தை மூன்று பிரிவிலேனும் குழைத்தேனும் அணைந்துகொண்டு தூஷிப்போர்களை மெய்யறம் உணர்ந்த தருமப்பிரியர்கள் விரோதிக்காமல் அவர்கள் அறியாமெய்க்கு இரங்கி அருளறமூட்டி அன்பர்களாக்கிக் கொள்ள விரும்புகிறோம்.

- 1:34; பிப்ரவரி 5, 1908 -

14. ஆஸ்திக நாஸ்திக விவரம்

ஆஸ்தி - ஆத்தி என்றும், நாஸ்த்தி - நாத்தி என்றும் வழங்கு மொழிகள் பாலி என்னும் மகடபாஷையேயாம். அதன் பொருட்கள் யாதெனில், திரண்ட செல்வத்திற்குப் பெயர் ஆஸ்தி, அச்செல்வங்கள் அழிந்ததற்குப் பெயர் நாஸ்தி. அய்யனுக்கு ஆஸ்தி பூஸ்தி உண்டா நாஸ்தியாய்விட்டாரா என்பதும் வழக்கச்

சொல். இத்தகைய வார்த்தையின் பொருளறியாது பௌத்தர்கள் யாவரும் நாஸ்திகர்கள் என்றால் அதன் பொருள் என்ன.

ஜப்பான், சைனா, தீபேத், நேபால், சிலோன், பர்மாவாசிகளாகும் பௌத்தர்கள் யாவரும் தனச்செல்வம் அற்ற ஏழைகளும் பௌத்தர்களை நாஸ்திகர் என்றும் கூறும் தென்னிந்தியன் ஆஸ்தியையுடைய தன்கனவான்களோ. இல்லை, சொன்னதைச்சொல்லுங் கிளிபோல் ஒருவர் சொல்லுவதைச் சொல்லித் திரிபவர்களேயாவர்.

உலகப் பொருட்களின் வார்த்தைபேதம் அறியா மாக்கள் உண்மை யப்பொருளுணரும் பௌத்தர்களின் கலைநூல் அறிவரோ. அங்ஙனம் அறிந்தபோதிலும் அதன் அந்தரார்த்தம் விளங்குமோ. ஒருக்காலும் விளங்கா. விளங்காமெய்க்குக் காரணம் வஞ்சகர்சொற்களைத் தஞ்சமென்று எண்ணி ஆராய்தலற்றிருப்பவர்களாதலின் தங்கள் குருக்களாகிய சமயம் பார்ப்பார் தங்கள் தங்கள் பிரயோசனத்தையே பார்ப்பார். தங்களுக்கு உதவி புரியாதவர்களைக் குடிகெடுக்கப் பாப்பார் போதனைக் குட்பட்டு பௌத்தர்களை நாஸ்திகர் என்றுக் கூறித் திரிகின்றனர்.

பௌத்தர்கள் வித்தை - புத்தி - யீகை சன்மார்க்கம் நிறைந்த செயற்களினால் பூச்செல்வந் தனச்செல்வந் தானியச்செல்வமாகிய மூன்றும் பெருகி சுகசீவிகளாக வாழ்வதுடன் இத்தேச ஏனைய சீவர்களையும் காப்பாற்றி வருகின்றார்கள். அதற்குப் பகரமாய் தற்காலம் பர்ம்மாதேசத்திய தானியம் நமது இந்துதேசத்திற்கு வராமல் இருக்குமாயின் சருவ குடிகளும் நசியும் என்பது திண்ணம். ஆதலின் இத்தகைய ஆஸ்தி பூஸ்திகளின் நிறைவைக் கொண்டும் பௌத்தர்களை நிறைந்த ஆஸ்திகர் என்றே கூறத்தகும்.

இரண்டாவது ஒருவர் சொல்லுவதையும் ஒருவர் எழுதி வைத்திருப்பதையும் நம்பாமல் தேறவிசாரித்து உணர்ந்து ஏழைகளுக்கும் கனவான்களுக்குஞ் சுகதேகிகளுக்கும் பிணியாளருக்குந் தன்னவர்களுக்கும் அன்னியர்களுக்கும் பொதுவாக விளங்கும் உண்மெய்ப்பொருளை உணருதற்காதாரமாகும் நீதிநெறி வாய்மெய்களாம் அழியா ஆஸ்திகளைப் பெற்றவர்களாதலின் அதுகொண்டும் பௌத்தர்களை அழியா ஆஸ்திகர் என்றும் கூறத்தகும்.

இத்தகைய அந்தரார்த்தம் உணராது வித்தையிலும் நாஸ்தி, புத்தியிலும் நாஸ்தி, ஈகையிலும் நாஸ்தி, சன்மார்க்கத்திலும் நாஸ்தி, பூச்செல்வம் நாஸ்தி, தனச்செல்வம் நாஸ்தி, தானியச் செல்வம் நாஸ்தி, தேச ஐக்கியம் நாஸ்தி, சகோதிர ஐக்கியம் நாஸ்தி, விசாரித்துணரும் விவேகம் நாஸ்தி, உண்மெய் உணரா உள்ளம் நாஸ்தி, ஓதுதற்கரிய போதகர் நாஸ்தி, பொய்யை விலக்கும் மெய்யர்கள் நாஸ்தியையுடையக் கூட்டத்தார் ஒன்றுகூடி நீதியும் நெறியும் வாய்மெயுமாகும் அழியா ஆஸ்தியைப்பெற்ற பௌத்தர்களை நாஸ்திகர் என்று கூறித் திரிவோர் குற்றமலிந்தோரேயாவர்.

நீதியும் நெறியும் வாய்மெயும் நாஸ்தியுற்ற மாக்களருகில் நெறுங்கி யாது வாது புரினும் மெய்யற ஆஸ்திமிகுத்த பௌத்தர்கள் விவேக நாஸ்தியுற்றவர்கட் இதங்கி பையபைய அவர்கட்குள்ள பொய்யை விலக்கி புத்ததன்மங்களை ஊட்டி புநிதர்களாக்கல் வேண்டும். அங்ஙனமின்றி அவர்களை சத்துருக்கள் என்று சலித்து நிற்கில் சாதி பொறாமெயால் சகோதிரவைக்கியம் நாஸ்தி, சமய பொறாமெயால் சாந்தம் நாஸ்தி, பூததயை இல்லாமெயால் பூஸ்திதி நாஸ்தி, பூஸ்திதி நாஸ்தியாலும் ஆடுமாடுகள் ஏவலால் அல்லல்புரிந்து அழிவதுபோல் மக்களும் தங்களுக்குற்ற விசாரிணை நாஸ்தி, முயற்சி நாஸ்தியால் அன்னியர்களுக்கு அடிமையுண்டு குடிப்பதற்குக் கூழ் நாஸ்தி, உடுப்பதற்கு உடை நாஸ்தி அடைந்து உலகபழிக்கு ஆளாவர் என்பது திண்ணம், திண்ணமேயாம்.

அதன் அநுபவம் அறியவேண்டில் பூர்வம் நமது இந்துதேசம் இருந்த சிறப்பின் ஆஸ்தியையும் சகோதிர ஐக்கிய ஆஸ்தியும் வித்தையின் ஆஸ்தியும் விவேக ஆஸ்தியும் நீதியின் ஆஸ்தியுமாகிய பதுமநிதி, தன்மநிதி, சங்கநிதி என்னும் திரி ரத்தினங்களும் அதன் மகத்துவங்களும் உண்டோ, இல்லை. திரிரத்தினங்களாகும் ஆஸ்தியின் பெயரே விளங்காதிருக்கும் இக்காலத்தில் திரிரத்தினங்களின் பலனை அறிவார் உண்டோ. அப்பலனை அறிந்து

பரிநிருவாணமுறும் ஆஸ்திகளை இழந்து நாஸ்தி அடைந்தவர்கள் பூர்வமெய்யறமாம் ஆஸ்தியைநாடாது தற்கால வேஷபிராமணர் பொய்யறமாம் போதனைக்குட்பட்டு ஆடுகள் கசாயிக்காரனைப்பின் செல்லுவது போல் சுயப்பிரயோசன வஞ்சகர்களைப் பின்பற்றி சுவாமி, சுவாமி என்று திரியுமளவும் இந்துதேசச் சீரும் நாஸ்தி, சிறப்பும் நாஸ்தி, வித்தையும் நாஸ்தி, விவேகமும் நாஸ்தி, கல்வியும் நாஸ்தி. கைத்தொழிலும் நாஸ்தியேயாம்.

இவ்வகை நாஸ்தியாம் அபுத்த தன்மத்தை அகற்றி புத்த தன்மத்தைப் பரவச் செய்வோமாயின் இந்துதேசமும் பிரகாசமுற்று இனியமாக்களும் ஐக்கியம் பெற்று என்றும் அழியா ஆஸ்தியையேற்று "ஆரோக்கிய பரமலாபச் சந்துட்டி பரமானந்த, விசுவாச பரமஞாதி, நிப்பானங் பரமாங் சுபமென்னும்" பாக்கியம் பெறலாம். இதையே சன்மார்க்கம் என்னும் நன்மார்க்கம் என்றும் மதிமார்க்கம் என்றும் நீதிமார்க்கம் என்றும் கூறுவதுடன் அழியா ஆஸ்திமார்க்கம் என்றும் கூறப்படும்.

- 1:35; பிப்ரவரி 12, 1908 -

15. முருகக்கடவுள் விவரம்

இம்மகான் குறிஞ்சிநில அரசபுத்திரனாக அவதரித்து குறிஞ்சி நிலங்களுக்கே கடவுளாகத் தோன்றிய விவரத்தை வீறைமண்டலவன் ஆதியங்கடவுளாகும் புத்தபிரானை சிந்தித்தெழுதியுள்ள பின்கலைநிகண்டின் ஆதரவாலும், புத்த மித்திரன் பகவனை சிந்தித்து எழுதியுள்ள வீர சோழியத்தின் ஆதரவினாலும், நற்கீரன் எழுதியுள்ள திருமுருகாற்றுப்படையின் ஆதரவினாலும், காக்கையர் எழுதியுள்ள நாரைக்குறவஞ்சியின் ஆதரவினாலும், இளங்கோவடிகள் எழுதியுள்ள சிலப்பதிகாரத்தின் ஆதரவினாலும் விளக்குகின்றோம்.

பின்கலை நிகண்டு

மகரகேதனனை வென்ற / லாமற்கே தொழும்புசெய்வோ
னிகரிலா குணபத்திரன்ற / ணிருசர ணிதயமானோன்
மிகுபுகழ் புனையானின்ற / வீறைமண்டலவன் செய்தான்
பகரிற் பன்னேழிரண்டும் / பலபொருட் பெயர்க்குஞ் செய்யுள்.

வீரசோழியம்

மிக்கவன் போதியின்மேதக் / கிருந்தவள் மெய்தவத்தாற்
றொக்கவன் யார்க்குந் தொடர / வொண்ணாத வன்றூயனெனத்
தக்கவன்பாதந் தலைமேற் புனைந்து / தமிழுரைக்கப்
புக்கவன் பைம்பொழிற் / பொன்பற்றி மன்புத்த மித்திரனே.

திருமுருகாற்றுப்படை

உலகமுவப்பவலநோபுதிரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாஅங்
கரவறவி நமக்குஞ் சேண்விளங்கவிரொளி.

நாரைகுறவஞ்சி

நாநிலஞ்சூழ் நாதனடி நாடிபணிந்தேற்றி
நாரைகுறவஞ்சிநிலை நான்புகல்வேனம்மே.

சிலப்பதிகாரம்

திங்களைப்போற்றுதுந் திங்களைப்போற்றுதும்
கொங்கலர்தார்ச்சென்குளிர் வெண்குடைபோன்றிவ்
வங்கணுலகளித்தலான்.
செருவறுசினவேற் செம்பியன்
ஒருதனியாழி யுருட்டுவோனெனவே.

புத்தபிரான் நிருவாணதிசையடைந்த ஆயிரம் வருடங்களுக்குப் பின்பு புத்தசங்கத்தோர் அவர் போதனாவிருத்தி விவேகத்தால் ஆகாய சோதியின் குணாகுண விருத்தியையும், தேக குணாகுணங்களையும், மூலிகை குணா குணங்களையும், உபரச குணாகுணங்களையும், நவரத்தின குணா குணங்களையும், நவசார குணா குணங்களையும், பாஷாண குணா குணங்களையும் விவரித்து எழுதிவருங்கால் இவைகளுக் ஆதாரபீடமாக எக்காலும் நிலைத்திருக்கும் நிலத்தின் குணாகுணங்களில் முக்கியமாகும் ஐந்துவகை நிலங்களைக் குறித்திருக்கின்றார்கள்.

அதாவது, மலைகளைச்சார்ந்த நிலங் குறிஞ்சி என்றும், காடைச்சார்ந்த நிலம் முல்லை என்றும், கடலைச் சார்ந்த நிலம் நெய்தல் என்றும், நாடைச்சார்ந்து நஞ்சைவயல்கள் சூழ்ந்த நிலம் மருதம் என்றும், படுநிலம் பாலை என்றுமாம்.

வீரசோழியம்

முல்லை குறிஞ்சி மருதத்தொடு / பாலை நெய்தலைந்தும்
சொல்லுமகமா மதனுக்குரை / தொகுசட்டகமோ
நெல்லை நிகழு மிருபதொ / டேழுள வேனையவற்
றொல்லை நிகழு முரையுமறிந்துகொ / ளொண்ணுதலே.

பின்கலைநிகண்டு

கோடுசூழ் மலையின் சாரல் / குறிஞ்சியாம் வனச்சார் முல்லை
நாடு சார் மருதமாகு / நற்கடற் சராவுநெய்த
நீடிய கொடுங்கோன் மன்னர் / நெடுங் குடைக் கீழ் வாழ்கின்ற
பாடிலாக் குடிகள் போலப் / படுநிலம் பாலையாமே.

மலைகளைச்சார்ந்த குறிஞ்சி நிலவாசிகளாம் புருடர்களின் பெயர் குறவர், கானவர், மள்ளர், குன்றவர், புனவர், இறவுனரென்றும் இஸ்திரீகளின் பெயர் குறத்தியர், கொடிச்சியரென்றும் அரசன் பெயர் மலையன், வெற்பன், சிலம்பன், கானக நாடனென்றும் அவர்கள் கொண்டாடுந் தெய்வப்பெயர் முருகன் என்றும் கொட்டுமேளத்தின் பெயர் முருகியன் பறை, துடிப்பறை என்றும் வழங்கி வந்தார்கள்.

இதனுற்பவமோவென்னில், பூங்குறிஞ்சி என்றும் பழனி என்றும் வழங்கும் மலையை ஆண்டுவந்த மருகன் என்னும் அரசனுக்கும் கங்கை என்னும் இராக்கினிக்கும் முருகன் என்னும் ஓர் மகவு விசாக நட்சத்திரத்தில் தோன்றி வளர்ந்து சரவண சங்கத்தை அடுத்து கலைநூற்கள் கற்று பாலதானங் கடந்து குமரதானம் வாய்த்தவுடன் தன்தந்தையாம் அரன்பட்டமேற்று தெய்வானையென்னும் இராணியை மணந்து சுகவாழ்க்கையில் இருக்குங்கால் மற்றுமோர் மலைசார்பில் அதிகரூபசுந்திரமுடைய வள்ளியென்னும் மங்கை இருக்கின்றாள் என்று அறிந்து மையலுற்று அவளைக் கொண்டுவருவதற்கு வியாபாரிபோல் வேடமிட்டுச் சென்றும் பாங் கின்மையால் பௌத்த அரசர்களுக்குள் வழங்கிவந்த மயில் வாகன சூஸ்திரஞ் செய்தார்.

அதாவது, அரக்கு மெழுகுநூல் முதலியவைகளால் மயில்போன்ற ஓர் உருவுசெய்து சூஸ்திர இறக்கைகள் அமைத்து செல்லவேண்டிய இடங்களுக்குச் செல்வதும் வருவதுமாகக் கூடுங் கருவியாகும் ஊர்தி எனப்படும். இஃது மஞ்சளும் அரக்குஞ் சேர்ந்துள்ள கருவியானதால் மஞ்ஞை என்னும் மறுபெயரும் உண்டு.

இதற்குப்பகரமாய் சச்சந்தனென்னும் பௌத்தமார்க்க அரசன் மயில் சூத்திரம் செய்த விவரம்.

சீவகசிந்தாமணி

அந்தரத்தார் மயனே யென வையுறுந் / தந்திரத்தாற் றமநூல் கரை கண்டவன்
வெந்திர வான் பெருந்தச்சனைக் கூவியோர் / எந்திரவூர்தி யியற்றுமினென்றான்.

பல்கிழியும் பயினுந்துகி நூலொடு / நல்லரக்கு மெழுகுந் நலஞ்சான் றன
அல்லனவும் மமைந்தெழு நாளினுட / செல்வதோர் மாமயில் செய்தன னன்றே.

- 1:36; பிப்ரவரி 19, 1908 -

பீலிநன் மாமயிலும் பிறிதாக்கிய / கோநன் மாமயிலுங் கொடுசென்றவன்
ஞானமெலா முடையா னடிகைதொழு / தாலுமிம்மஞ்ஞை யறிந்தரு ளென்றார்.

தன்னெறி நூனயந்தா னன்றுனன்றிது / கொன்னறியிற் பெரியாயிது கொள்கென
மின்னெறிபல்கலமே தகப்பெய்ததோர் / பொன்னறைஞாண் கொடுத்தான் புகழ்வெய்யோன்

ஆடியன்மா மயிலூர்தி யையவ்வழி / மாடமுங்காவு மடுத்தோர் சின்னாள்செலப்
பாடலின்மென்மேற் பயப்பயந்தான்றுரந் / தோட முறுக்கி யுணர்த்த வுணர்ந்தாள்.

பண்டவழ் விரலிற்பாவை பொறிவலத் திருப்பப் பொங்கி
விண்டவழ் மேகம் போழ்ந்து விசும்பிடைப் பறக்கும்வெய்ய
புண்டவழ் வேற்கட் பாவை பொறியிடந் திரிப்பத் தோகை
கண்டவர் மருளவீழ்ந்து கால்குவித் திருக்குமன்றே.

குறிஞ்சிவேந்தனாகிய முருகன் மஞ்ஞையூர்தி என்னும் ஓர் சூத்திர வாகனஞ்செய்து அதன் மீதேறி வள்ளியம்மன் வீற்றிருக்கும் இடம் இறங்கி தன்வயஞ் செய்துக்கொண்டு இருவரும் அம்மஞ்ஞை யூர்தியிலேறி வருங்கால் அம்மன் சுற்றத்தார் அறிந்து யுத்தம் ஆரம்பித்தபோது அம்பு துகட்கள் தன்மீதும் வள்ளியம்மன் மீதும் படா துதறி அவர்களை படுகளங் கிளர்த்தி தன் மாளிகை சேர்ந்து கலைநூற் தெளிந்து புலவனாகி சிலகால் மனையறம் நடாத்தி தன்ம சங்கஞ்சார்ந்து உலகமுவப்பத் திரிபீடகங்கள் அளித்த ஞானசூரியனாகும் பகவனை வணங்கி அரசர்கள் யாவரும் போற்றும் கலைநூல் முகமொன்றாகவும், மனுக்களின் இதயவிருள் அகற்றும் சூரியன்போன்ற முகம் ஒன்றாகவும், சித்துநிலை வாய்த்த சிலம்பமுகம் ஒன்றாகவும் மந்திராலோசனை ஊட்டும் மதிமுகம் ஒன்றாகவும், சருவசீவர்களையுந் தன்னுயிர்போல் காக்கும் சாந்த தேகிகளாகும் அந்தணர் வேள்விகளுக்கு ஓர் முகமாகவும், சாந்தநிலையால் சகலருக்கும் அறிவூட்டுஞ் சந்திரமுகம் ஒன்றாகவும் அவரவர்பக்குவ அறுநூன் முகனாக விளங்கியதுமன்றி ஞானாசிரியனாகனின்று யீகை அளிக்கும் ஓர்கை, இன்னமுது அளிக்கும் ஓர்கை, ஞானமரபினரை சேர்க்குமொருகை, அன்பை நம்பினரைத் தேடுமொருகை, அருளறமுத்திறை காட்டு மொருகை, கியான மணிகளை எடுத்தூட்டும் ஒருகை மந்திராலோசனைக் குறங்கம்விளிக்கு மோர் கை, அறமிகுத்தோரை மார்புடனணைப்பது ஓர்கை, அங்கங்கு சங்கங்கள் அமைக்கும் இருகை, யீரைந்து சீலிங்களாம் தசபார தருமச்சக்கரத்தை வலந்திறுகு மொருகை, வானவர் மகளிராம் ஞானப் பெண்களுக்கு நன்மணமூட்ட வொருகை என்னும் பன்மணி வாய்த்தப் பன்னிருகையனென்று பலரும் புகழ்ந்து பாடியாடி துதித்துவருங்கால் சங்கத்தைவிட்டு வெளியேறி உன்மத்தர் போலுளறிக் கொண்டு குப்பைகளிலுள்ளக் கந்தைகளை வாரி அணைத்துக் கொண்டிருந்தும் தேகத்தில் பரிமளம் வீசிக்கொண்டிருந்தபடியால் முருகவேள் என்னும் பெயர் மாறி கந்தசுவாமி என்றும், அறுவகை நூன்முகங்கொண்டு அறுமுகன் என்றும், பனிரண்டு புண்ணியபலங்கொண்டு பன்னிருகையனென்றும், மலையரசனாக விளங்கியபடியால் குறிஞ்சி வேந்தன் என்றும், மயில்வாகனஞ் செய்வதற்குமுன் வள்ளியம்மனைக் காணுதற்கு வியாபாரிபோற் சென்றபடியால் செட்டி என்றும், அரசன்மகன் ஆதலின் அரன்மகன் என்றும், அட்ட சித்துக்களாம் சிலம்பமுள்ளமெயால் மாயோனென்றும், வள்ளியம்மன் சுற்றத்தோர் தேடிக் கொண்டு குறிஞ்சிவேந்தர் அரண்மனையருகில் வந்தபோது உப்பரிகைமேல் எங்கும் கோழிகள் பரவ மேயுஞ் சித்துவிளையாடினார். அவர்கள் அக்கோழி வேட்டையாடிக்கொண்டே வள்ளியம்மனை மறந்துப்போய் விட்டார்கள். அன்று முதல் உப்பரிகைமேல் கோழிக்கொடி விரித்து கோழிக்கொடியோ னென்றும், விசாக நட்சத்திரத்திற் பிறந்தபடியால் விசாகன் என்றும், தனக்குப்பின் சந்ததி இல்லாமெயால் சூர்ப்பகைவனென்றும், கலைநூற்களைக் கற்று வித்துவனாக விளங்கியபடியால் புலவனென்றும், குமரபருவத்தில் சகல சித்துக்களும் விளையாடி பிரசித்தி அடைந்த படியால் குமரர் என்றும், சரவணப்பள்ளியாம் புத்தசங்கத்திற் சேர்ந்து ஆறு அறஹத்துக்களின் ஞானாமுது உண்டபடியால் சரவணபவன் என்றும், இருமனைவி பாகங் கடந்தபடியால் கடம்பன் என்றும், கார்த்திகை நட்சத்திரத்தில் பரிநிருவாண முற்றபடியால் கார்த்திக்கேயன், காங்கேயன் என்றும், ஞானானந்தப் பெயர்கள் அளித்து அக்குறிஞ்சிநில வாசிகள் யாவரும் அவர் பரிநிருவாணமுற்ற கார்த்திகை நட்சத்திரம் வருங்கால் அன்றுமுழுதும் உபவாசமுற்று கார்த்திகேயனை சிந்தித்து வந்தார்கள்.

பின்கலைநிகண்டு

வேய்ந்த பூங்குறிஞ்சி வேந்தன் வேலினுக் கிறைவிசாகன்
சேந்தன் காங்கேயன் செவ்வேள் சிலம்பன்மா மஞ்ஞையூர்தி
வாய்ந்த சூர்ப்பகைவன் வள்ளி மணவாளன் தெய்வயானை

காந்தனே குமரன் கந்தன் கலையுணர் புலவனும் பேர்
முருகன்வேள் சாமியாறு முகன் குகன் குழகன் மாயோன்
மருகன்சேய் கார்த்திகேயன் வருபகை வென்றான் செட்டி
யரன்மகன் கங்கை மைந்த னாண்டலைக் கொடி யுயர்ந்தோன்
சரவணபவன் கடம்பன் றாருகற் செற்றோனாசான்.

திருமுருகாற்றுப்படை

சேண்விளங்கியற்கை வாண்மதிகவைஇ
யகலா மீனி னவிர்வன விமைப்பத்
தாவில்கென்கைத் தந்தொழின் முடிமார்
மனனேர் பெழுதரு வாணிற்முகனே
மாயிருண்ஞாலத் தொளிரறம் விளங்கப்
பல்லறந்தொழுதன் றொருமுக மொருழக
மார்வலரேத்த வுமர்ந்தினிதொழுகிக்
காதலினுவந்து வரங்கொடுத்
தன்றே யொருமுக
மந்திரவிதியின் ம்ரபுளி வழா அ
வந்தணர் வேள்வி யோர்க்குமே யொருமுக
மெஞ்சிய பொருள்களை யேமுறநாடித்
திங்கள்போல் திசைவிளக்கம்மே யொருமுகஞ்
செறுநர்த்தேய்த்து செல்சம முருக்கிக்
கறுவு கொணெஞ்சமொடு
களம்வேட்டன்றே யொருமுகம்
குறவர் மடமகள் கொடிபோனுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந்
தன்றே யொருமுக
மூவிருமுகனு முறைநவின் றொழுகலி
.... (தெளிவில்லை) வண்புகழ் நிறைந்து
விண்செலன் மரபினையர்க்கேந்திய
தொருகையுக்கஞ் சேர்த்திய தொருகை யசையிய தொருகை
யங்குசங்கடாவ லொருகை இருகை
வலந்திரிப்ப வொருகை
தாரொடுபொலிய யொருகை
மீமசைக் கொட்ப வொருகை
படுமணி யிரட்ட வொருகை
விசும்பின் மலிதுளிபொழிய வொருகை
வதுவைசூட்ட வாங்க லொருகை.

- 1:37; பிப்ரவரி 26, 1908 -

சிலப்பதிகாரம்

திருமால் குன்றத்து செல்குவீராயிற் / பெருமால் கெடுக்கும் பிலமுண்டாகு
விண்ணோரேத்தும் வியத்தகுமரபிற் / புண்ணிய சரவணம் பவகாரணியோ
டிட்டசித்தியெனும் பெயர்போகி / விட்டுநீங்கா விளங்கிய பொய்கை
முட்டகச்சிறப்பின் மூன்றுளவாங்குப் / புண்ணிய சரவணம் பொருந்துவீராயின்
விண்ணவர் கோமான் விழுநூலெய்துவிர்.

சரவணப்பூம்பள்ளியறைத்தாய்மாரறுவர்
திருமுலைப்பாலுண்டான் றிருக்கைவேலன்றே
குறம களவளெம் குலமக ளவளொடு
மறுமுகவொருவனின்னடியிணைதொழுதேந்.

நாரைகுறவஞ்சி

1. நாநிலஞ்சூழ்நாதனடி / நாடிபணிந்தேற்றி
நாரைகுறவஞ்சிநிலை / நான்பகர்வேனம்மே
பொன்னுபுகழ் வெள்ளிமுதற் / சந்தனமே தோன்றும்
பழனிமலைபோதநிலை / யேற்றவருளாமே.
2. போற்றவருளுறு மெங்கள் / பொன்மலையன் வாழ்க்கை
பூத்தயை யற்றவர்க்குத் / தோற்றமறிதாமே.
3. தோற்றமுற வேண்டிலுள்ள / மாற்றலுரல் வேண்டும்
ஆற்றமுரலா லவித்தை / யாவுமடிவாகும்.
4. யாவுமடிவாகுமுறை / யாதெனவே கேளீர்
யானெனதென்னுஞ் செருக்கு / யிழியுமதனாலே.
5. யிழியுமன வேகநிலை / யாவுமுணர் போதன்
எம்முருகன் எங்குரவன் / ஏற்றமலை நாடன்.

6. ஏற்ற மலை நாடரச / னம்மருகன் மைந்தன்
போற்றுமயில் வாகனமெய் / பூததயை யாளன்.
7. பூததயையால் வனைந்த / பொன்மயிலின் வேகம்
பூவுலகு மேலுலகும் / புகுதுகடி நேரம்.
8. புகுதி குல கன்னிமனை / புக்கிவச முண்ட
போக்குரவை யென்னரைவேன் / போத மக மாதே.
9. போதுமக மாதுபடை / போர்புரிந்தவாறும்
புநிதவே லொன்றதுவால் / படைகவிழ்ந்த சீரும்.
10. படைகவிழ்ந்த சீரறியா / பேதை குறமாக்கள்
பின்னுமரண் வந்துமனை / போர்புரிய நேற்றார்.
11. போர்புரிய நேர்ந்தநிலைப் / புன்னகையுங் கொண்டு
கோபுரத்தில் வாரணங்கட் / கூட்டமிடச் செய்தார்.
12. கூட்டமதைக் கண்டகுறக் / கூட்டு படையாளர்
ஆட்டமது கோழிபிடி / வேட்டையதிற் சென்றார்.
13. வேட்டையது கண்டவர்கள் / வீடுபுகி னின்றார்
வீணவத்தைப் பற்றுமென / மேதினி துறந்தார்.
14. பாட்டைசுக மாற்றியறப் / பள்ளியதை சார்ந்தார்
பள்ளியதிற் சென்று அறு / பாக்கியத்தி னின்று.
15. பாக்கியமாம் நித்தியத்தைக் / கண்டுணர பல்லோர்
போதனையி னின்றுபர / பக்குவம தீய்ந்தார்.
16. பக்குவமா முத்தநிலை / பாதையற மூட்டி
எத்திசையுஞ் சித்துவிளை / யாடலதுரைந்தார்.
17. ஆடலதை சொல்லமிகு / பாடமது முண்டோ
அன்பரிதையத் துரைவன் / அரியசுக வாசன்.
18. அரியசுக வாசமது / வீசுகந்த தேகி
யதிபீர லாடைதனை / யங்கமுழு போர்த்து
19. அங்கமதை வேங்கைமரத் / தன்னடி யிருத்தி
அறுவாய் நட்சத்திரத்தி / லந்தமுத்தி பெற்றார்.
20. அந்தமுத்த பெற்றவர்த / னறநிலையைச் சொல்வேன்
ஆதனங்கொள் பூதநிலை / யகமுகமு மாமே.

முருகனென்னுங் குறிஞ்சிநாட்டரசன் வேங்கை மரத்தடியில் வீற்று வினையை வென்று விதேகமுத்தி பெற்றபோது குடிகள் யாவரையுந் தருவித்து மலையரண் தன்ம சங்கத்தோருக்கு அன்ன காவடியும் அமுதகாவடியுங் கொண்டு வந்து அளிக்க வேண்டும் என்றாக்கியபித்த வண்ணங் குடிகள் கொண்டுசென்றதை,

சாரண சாக்கைய ரென்பவராலியற்றியுள்ள அமுதகாவடி அஞ்சல், எனும் நூலிலுள்ளக் காப்பையும் நூற்றியெட்டு பாடல்களில் ஐந்துபாடல்களையும் சுவடியிலுள்ளவாறு வெளியிடுகின்றேன்.

அமுதகாவடி அஞ்சல் - காப்பு

முருகக்கடவு ளறுமுகத்தானை
இருகைத்தொழுது யேற்றிடுவாமே.
வேங்கைமரத்துற்றான் விளித்தான் வினைதீர்த்தான்
றூங்காமற்றூங்கி சுகமுற்றான் - பாங்குரங்கக்
கழனியான் சேவடியைக் கண்டுக் களித்தற்கு
பழனியான் காவடியைக்கொண்டு.
திருமுருகன் குரவர்மகன் திவ்யசேவடி
அருமறையோர்க் கூட்டுமபிஷேகக்காவடி.
அண்டர்கள் சேனாதிபநற் குமுதன்சேவடி
உண்டறவோர்க்குயிரளிக்கு ம்மூதகாவடி.
திரன்மிகுத்தோரன்பன் மலைவாசச்சேவடி
பரமர்மகிழ்ந் தருந்திடும்பா யாசக்காவடி.
உற்றவடிவேலனிரு மின்னர் சேவடி
பற்றுமடியார்களுண்ணு மன்னக்காவடி.
அறுமுகத்த னறுவெழுத்த னரியசேவடி
சிறுவர்பள்ளி சரவணத்தோர்க்குரியகாவடி.

இவ்வமுதகாவடி அஞ்சல் எனும் நூலினுள்ள நூற்றி எட்டு பாடல்களால் விவரந் தெரிந்துக் கொள்ளுவதுடன் குறிஞ்சி சிலாசாசனங்களாலும் அறியலாம்.

- 1:38; மார்ச் 4, 1908 -

16. இலிங்கபூசை விவரம்

இலிங்கம் என்னும் மொழியின் மூலவாக்கியம் அங்கலயம் எனப்படும். அங்கலயம் என்னும் மொழியே லய அங்கம் எனத் திரிந்து தற்காலம் லிங்கமென வழங்கிவருகின்றார்கள்.

அங்கலயம் என்னும் மொழியும் லய அங்கம் என்னும் மொழியும் உற்பவித்ததற்குக் காரணம் யாதெனில்,- உலகரட்சகனாகிய புத்தபிரான் பரிநிருவாணம் அடைந்து அவர் தேகத்தை தகனஞ்செய்து அவர் அஸ்திகளை ஏழுராசர்கள் கொண்டுபோய் (டாகோபா) என்னும் கோபுரங்களைக் கட்டி அதின்மத்தியில் அஸ்தியைப் புதைத்து அவ்வஸ்தியைப் புதைத்திருக்கும் அடையாளமானது எப்போதுந் தெரிந்துக் கொள்ளுவதற்கும் அறவாழியானை சிந்திப்பதற்கும் உயர்ந்த கற்களால் பீடங்கட்டி மத்தியில் உயர்ந்த பச்சைக்கல்லினாலேனும் வைரத்தினாலேனுங் கருங் கல்லினாலேனுங் கொழுவிபோற் செய்து நாட்டி புத்தசங்கத்தோர் யாவரும் தாமரை புட்பத்தால் அர்ச்சித்து பகவனை சிந்தித்து சத்தியதன்மத்தில் நடந்துவந்தார்கள்,

இதையே தரும பீடிகை என்றும் மணியறைப்பீடிகை என்றும் கடவுள் பீடிகை என்றும் தருமபீடம் என்றும் கடவுள் பீடம் என்றும் பூர்வ காவியங்கள் கூறுகின்றன.

மணிமேகலை

இந்திரகோடணை விழாவணி விரும்பி / வந்துகாண்குறுஉ மணிமேகலாதெய்வம்
பதியகத்துரையு மோர்பைந்தொடியாகி / மணியறைப்பீடிடை வலங்கொண்டோங்கி.
அப்பீடிகைகளிடத்து, / தூய்மென்சேக்கை துயில்கண் விழிப்ப
வலம்புரி சங்கம் வறிதெழுந்தார்ப்ப / புலம்புரி சங்கம் பொருளொடு முழங்க
புகர்முக வாரண நெடுங்கூ வினிப்பப் / பொறிமயிர்வாரணங் குறுங்கூவிளிப்பப்
பணைநிலைப்புரவி பலவெழுந்தார்ப்ப / வணை நிலப்புள்ளும் பலவெழுந்தார்ப்ப
பூம்பொழிலார்க்கை புள்ளொலி சிறப்ப / கடவுட் பீடிகை பூப்பலி கடிகொளக்
கலம்பகர் பீடிகை பூப்பலி கடிகொள.

இவ்வகையாக புத்தசங்கத்தோர் தொழுது வந்ததுமன்றி சங்கத்துப் பின்னடியார்கள் ஆதிக்குச் சமமான நிலையாம் பரிநிருவாணமுற்ற போது சம ஆதியானாரென்றுகூறி சிலர் தகனஞ்செய்த அஸ்தியை கற்குழியில் வைத்தும், சிலர் நிருவாணமுற்ற தேகத்தையே கற்குழியில் வைத்து அதன்மீது கொழிவி போன்ற அடையாளக்கல் நாட்டி மற்றும் பின்னடியார்கள் அப்பீடத்தை அங்கலிங்க ஐக்கியமென்றும் லய அங்கம் என்றும் வழங்கி சிந்தித்துவந்தார்கள்.

அதாவது, சப்த, பரிச, ரூப, ரச, கந்தம் என்னும் பஞ்ச இந்திரியங்கள் அடங்கி ஆனந்த முதித்துப் பூரணநிலை அடைகின்றபடியால் அங்கலிங்க ஐக்கியம் என்றும் வழங்கிவந்தார்கள்.

ஞானவெட்டி

விரிவான துருவமெனும் மூலவீட்டில் / வேதமதுக் கெட்டாத ரூபமாகி
கருவாகி தெவிட்டாத கனியுமாகி / கதிராகி மதியாகிக் காற்றுமாகி
உருவாகி யுடலாகி யுயிருமாகி / யொளியாகியலகையெனுமுடலுக்குள்ளே
யருவாகி யருள்ஞான சொரூபியாகி / அங்கமதி லிங்கமதா யமைந்தேனையே.

பின்னடியார் சமாதி என்னும் ஆதிக்குச் சமமாம் நிலையை அங்கலிங்கம் என்றும் லய அங்கம் என்றும் வழங்கிய வார்த்தையானது லிங்கம் லிங்கம் எனக் குறுக்கல் விகாரப்பட்டது.

அக்காலத்தில் வேஷ பிராமணர்கள் வந்து தோன்றி புத்த தருமச் செயல்களையும் அவர்கள் வாக்கியங்களையும் பீடமாகக்கொண்டு தங்கள் சீவனப் பொய்மதங்களைப் பரவச்செய்து வந்தகாலத்தில் அவர்களைப் பின்பற்றியக் கூட்டத்தார் தங்கள் பொய்க் குருக்களிடஞ் சென்று அங்கலிங்க ஐக்கியபூசைச் செய்யவேண்டும் என்று கோறியபோது, வேஷபிராமணர்களுக்கு அதினந்தரார்த்தம் விளங்காமல் ஆவிடையார் கோவில் என்னும் ஓர் கட்டிடத்தைக் கட்டிவைத்து அதன்மத்தியில் பெண்குறி ஆண்குறியை நாட்டி அங்கம் என்றால் தேகம், லிங்கம் என்றால் ஆண்குறி ஐக்கியம் என்றால் பெண்குறியென்று ஓதி இதுவே உலகசிருட்டி முதலா இருக்கின்றபடியால்

இதையே நீங்கள் பூசித்துவரவேண்டும் என்று புண்டர யாகம் ஏற்படுத்திக்கொண்டது போல் இக்காமிகார்ச்சனை என்னும் லிங்கமதம் ஏற்படுத்திவிட்டார்கள்.

ஞானவெட்டி

ஆவிடையார் கோவிலிலே - யமைத்தகுறி
ஆதர வாகவே சேர்ந்து மாதர்களினால்
மேவியதோர் நாதவிந்து - வெகுவிசித
விற்பனை யறியவொரு கற்பனை சொல்லே
பாவிக ளிதை யறியார் - கல்லுகள் தனில்
பாவனை யோப்பாகவுமே தாவிதஞ்செய்த
ஆவியென்று மழியாமல் - செலவழியா
ஆத்துமலிங்கமதனைப் பார்த்துணராமல்.

இவ்வகையான லிங்கமதம் ஏற்படுத்திக் குறிகளை சிந்தித்து வருவதைக் காணும் விவேகிகள் இஃது அப்பிரயோசன சிந்தனை என விளக்கிக் கண்டித்து வந்தார்கள்.

சிவவாக்கியர்

தீர்த்தலிங்கமுத்தியென்று தேடியோடுந்தீரரே
தீர்த்தலிங்க முள்ளினின்ற சீவனைத்தெளியும்
தீர்த்தலிங்க மும்முளே தெளிந்துகாண வல்லீரேல்
தீர்த்தலிங்கந்தானதாய்ச்சிறந்ததேசிவாயமே.

ஔவை குறள்

உள்ளமேபீட முணர்வே சிவலிங்கந் / தெள்ளியரர்ச்சிக்குமாறு.

ஞானமதியுள்ளான்

கல்லைப்பிளந்து சிறுசிலையாக்கிக் / கன்னாரர்வைப்பதைக் கண்டுமிருந்தும்
எல்லைப்பிடாரி இது சிவலிங்கமென் / றேற்றிப்பணியு மிடும்பனல்லோபேயன்.
நானோடா பேயன்.

திருக்காவலம்மானை

ஆண்குறியும் பெண்குறியு மத்தனென்றேயோதி
வீண்பெருமெய் கொண்டார் வீணர்களுமம்மானே.
வீண்பெருமை யாவும் வினைப்பயன் காண்போதுணர்வார்
ஆண்மைகாமியத் தழிவோ ரற்பரே யம்மானே.

- 1:39; மார்ச் 11, 1908 -

இத்தகைய லிங்கமதம் ஏற்படுத்திய வேஷபிராமணர்கள் தாங்கள் கட்டியுள்ளக் கட்டிடங்களில் மேற்சென்னபடி குறிகளை ஸ்தாபித்துவிட்டது மன்றி லோக ஊற்றுக்களின் அருகிலும் ஸ்தாபித்துவிட்டு தங்களை அடுத்தக் குடிகள் யாவரையும் அழைத்து அவரவர் சுபாசுபகாலங்களில் சாணத்தினா லேனுங் களிமண்ணினாலேனும் ஆவிடையார் பீடமும், இலிங்கமும் பிடித்து வைத்து அதன் முனையில் அருகம்புல்லைக் குத்தி இந்தப் புல்பூண்டுகள் முதல் சருவ தோற்றத்திற்கும் இவ்விலிங்கமே காரணமாதலால் இதைப் பூசித்து நீரில் விட்டுவிடுங்கோளென்று போதித்துள்ள வாக்கின்படி சிற்சிலக் குடிகளுஞ் செய்துகொண்டுவந்தார்கள். நாளது வரையிலுஞ் செய்துக் கொண்டே வருகின்றார்கள்.

ஞானமதியுள்ளான்

பார்த்துள லிங்கத்தை யேத்திபணிபூசை
பண்ணாமல் வீணர்பலர் பசுசாணமோ
டேத்திமண்லிங்கத்தைபோற்றியெடுத்துப்பின்
தண்ணீரில்போடும் தகல்பாஜிபேயன், நானோடாபேயன்.

இவ்வகைச் செய்கைகளால் லிங்கமதம் பரவிவருவதைக் கண்டு வைணவமதத்தார் தங்கள் மதசீவனத்திற்குக் குறைவு நேரிடுகிறதென்று எண்ணி இலிங்கமதக் கண்டனப் புத்தகங்கள் அச்சிட்டு அதில் தாருகாவனம் என்னும் ஓர் தோட்டம் இருந்ததாகவும் அத்தோட்டத்துள் இரிஷிகளும் இரிஷிப் பத்தினிகளும் இருந்ததாகவும் அவ்விரிஷிப்பத்தினிகளை சிவனென்பவர் கற்பழித்ததாகவும் அப்பத்தினிகள் சாபத்தால் குறியறுந்து விழுந்துவிட்டதாகவும் அதையே சிலர் பூசித்துவருவதாகவும் எழுதிவிட்டார்கள்.

இத்தகையக் கதையை எழுதியவர் இரிஷிகள் என்னும் வாக்கியத்தின் பொருளையும், பத்தினிகள் என்னும் வாக்கியத்தின் பொருளையும், லிங்கம் என்னும் வாக்கியத்தின் பொருளையும் அறியாமலே எழுதியிருப்பதாக விளங்குகின்றது.

புத்தசங்கங்கள் இருந்தகாலத்தில் புருஷர்களில் குடிமி வைத்துள்ளவர்கள் - குடும்பிகள் என்றும் - சடைமுடி வைத்துள்ளவர்கள் - இருடிகள் என்றும் - சங்கத்துள் தங்கி சிறமொட்டை உள்ளவர்கள் சமணர்கள் என்றும் - வகுக்கப்பட்டிருந்தார்கள்.

மனையாளுடன் இல்லத்திருந்து குடும்பியாகாமலும் மடத்திற்சேர்ந்து சிரங்கழித்து சமணநிலை சாராமலும் இல்லத்திலுமிடி துறவிலுமிடியாகும் ஈரிடிகள் உண்டு காலங்கழித்தவர்களுக்கு இருடிகள் என்று பெயர். இவ்வகை யிருடி என்போர்களுக்கு மனைவிகள் கிடையாது. மனைவிகள் இருப்பார் களாயின் அவர்களை மனைவாழுங் குடும்பிகள் என்று அழைக்கத்தகுமேயன்றி இருடிகள் என்று அழைக்கத்தகாது.

பத்தினிகள் என்பதில் இஸ்திரீகளுக்குள் பத்மினி, சித்தினி, சங்கினி, அத்தினி என்னும் அவரவர்கள் குணாகுணச் செயல்களைக் கண்டு எழுதியிருக்கின்றார்கள். இதில் பத்மினி என்பவள் அன்னியப் புருடர்களை கண்ணெடுத்துப் பாராதவளும் கனவிலும் பரபுருடனை எண்ணாதவளும் தன் கணவனையே கடவுளாகப் பாவித்து பணிவிடைச் செய்துவருபவளு மாயிருப்பாள். அத்தகைய உத்தமியை ஒருவன் கற்பழித்தபோது அவளை பத்மினியெனத் தகுமோ. அங்ஙனங் கற்பழிந்தவளின் வாக்கும் பலிதமாமோ ஒருக்காலுமாகா.

இலிங்கம் என்னும் மொழியின் ஞானார்த்தம் தேகமும் மனமும் அயர்ந்தவிடம் அதாவது கருவி கரணங்கள் ஓய்ந்தவிடம். வயிததியார்த்தம் சிவந்த நிறமுள்ள ஓர் மருந்துகட்டியின் பெயர். சோதிடார்த்தம் செவ்வாய் என்னும் கிரகத்தின் பெயர்.

ஆதலின் இலிங்கம் என்பதற்கு ஆண்குறி என்று எந்த சாஸ்திரங்களுங் கூறவில்லை.

இத்தகைய பொய்யுக்குப்பொய் கண்டனம் எழும்பியதைக் கண்ட லிங்கமதத்தோர் விஷ்ணுமதத்தரைநோக்கி உங்கள் தெய்வமாகிய இராமசாமி எங்கள் லிங்கசாமியைப் பூசித்தபடியால் இராமலிங்கம் என்னும் பெயருண்டா யிற்றென்றும் அந்தலிங்கம் எடுக்கச் சென்ற அநுமாருக்கு வாலறுந்து போய்விட்டதென்றும் இன்னோர் கற்பனை வகுத்து அவர்களைக் குறைக் கூறிவந்தார்கள். இத்தகையக் கற்பனா மதப்போர்கள் யாவும் தங்கள் தங்கள் சீவனங்களுக்காய் எதிரி மதத்தைத் தாழ்த்தியும் தங்கள் மதத்தை உயர்த்தியும் பேசிவந்த சங்கதிகளால் ஒருவருக்கொருவர் ஒற்றுமெய்க்கேடுண்டாயதும் அன்றி நமதுதேச ஞானத்தின் மகத்துவார்த்தங்களுங் கெட்டுப்போயிருக்கின்றன. தங்கள் தங்கள் சுயப்பிரயோசனங்கருதுபவர் யாவரும் எங்கெங்கும் பங்கப்படுவார்கள் என்பது இயல்பாதலின் நமது தேசத்தோர் செய்துவருஞ் செய்கைகள் நுண்ணியதாயினும் எண்ணிசசெய்யாமல் மனம் போனப் போக்கில் செய்துவிட்டு மாளா துக்கத்தில் ஆழ்த்திவிட்டார்கள்.

அதுவும் போதாமல் இன்னும் இம்மதவுழல்களை அன்னியமதத்தோர் எளிதில் அறிந்துக் கொள்ளுவதற்கு ஏசல் என்னும் ஓர் நூலியற்றி அதிற் பார்வதி இலட்சுமியை ஏசுவதுபோலும் இலட்சுமி பார்வதியை ஏசுவதுபோலும் மத்தா லடிப்பட்டாரடி உங்கள் பெருமாள் என்றும், பிரம்பால் அடிப்பட்டாரடி உங்கள் சிவனாரென்றும் உள்ள சங்கதிகள் யாவையும் பரக்கத் தீட்டிவிட்டார்கள்.

ஒரு சமயத்தோருடன் மற்றொரு சமயத்தோர் விரோதத்தினால் ஏற்படுத்திக்கொண்ட கண்டனங்கள் சுவாமிகளின் திருவிளையாட்டென்று ஏசுவதினால் விச்சாரிணைப் புருஷர்கள் யாவரும் அதைத் தெரு விளையாட் டென்று கூறித் தள்ளிவிடுகின்றார்கள். ஆதலின் நமது தேசத்தார் இனியேனும்

மதப்போர்புரிந்து மாளா துக்கத்தில் ஆழாமல் சுதேச சீர்திருத்தத்தை நாடி சுகமடையவேண்டுமென்பதேயாம்.

- 1:40; மார்ச் 18, 1908 -

17. பேதாதை - பேதாளம்

சிலகாலங்களுக்குமுன் நம்முடைய தேசத்தின் அதிகாரிகள் கிராமங்களைவிட்டு மறு கிராமங்களுக்குப் போகவேண்டுமாயினும் விழாக்கள் கொண்டாடுங் காலங்களிலேனுந் தூர கிராமவாசிக்கு அறிக்கை செய்யுமாறு ஓர் பெருந்தாதை யூதுதல் கொம்பூதுதல் என்னும் குழற்கருவியும் மூன்றடி சுற்றளவு நான்கடிசுற்றளவில் கைத்தாளமும் செய்துவைத்துக்கொண்டு ஊதுதலும் அடிப்பதுமாய் இருந்தார்கள்.

பெருந்தாதையை வாயில் வைத்து ஒரு மனிதன் பெருமூச்சு கொண்டு ஊதுவானாயின் தூரத்திலுள்ள கிராமவாசிகளுக்குக் கேழ்ப்பதுடன் அருகிலுள்ளவர்களின் காது செவிடு பொத்து விடுவதுபோல் கேட்கும். அதின் பெருஞ்சப்த காரணங்கொண்டு அதைப்பேதாதை என்றும் அத்தாளமானது தட்டுங்கால் காதடைத்துக் கொள்ளும்படியான பெருஞ்சப்தத்தைக் கொடுக்குங்காரணங்கொண்டு அதைப் பேதாளமென்றும் வழங்கி வந்தார்கள்.

பண்டி என்பது வண்டி என்றும், பைராக்கி என்பது வைராக்கி என்றும், பரதனென்பது வரதனென்றும், பேதவாக்கியம் என்பது வேதவாக்கியம் என்றும் வடமொழி மாறுகொள வழங்குவதுபோல் மேற்கூறியுள்ள பேதாள மொழியானது வேதாளமென வழங்கிவந்தது. இத்தகைய வார்த்தைகளின் உற்பவமும் அதன் பொருளும் நன்குணராப் பொய்ப்புலவர்கள் தங்கள் மனம்போனவாறு வேதாளமென்னும் ஓர் பேயிருந்ததென்றும் அஃதோர் வேளாளன் விதைத்திருந்த பயிறுகள் யாவையும் மேய்ந்துவிட்டுப்போவது வழக்கமென்றும் அவ்வகை மேய்ந்துக் கஷ்டப்படுத்திவந்த வேதாளத்தைத் திருவள்ளுவ நாயனார் துறத்திவிட்டபடியால் அவருக்கு அவ்வேளாளன் தனது மகளைக் கொடுத்தானென்றும் பொய்யுக்குப் பொய்ப் பொருந்தாப் பொய்களை எழுதி தன்ம சங்கத்தின் அறஹத்துக்களின் மகத்துவங்களைக் கெடுத்து வைத்திருக்கின்றார்கள். வேதாளமென்னும் ஓர் பேய் உண்டென்று புர்வ சரித்திரங்களிலேனும் பூர்வ நூற்களிலேனும் வரைந்திருக் கின்றார்களா, தற்கால அநுபவத்திலேனும் நிகழ்ந்துவருகின்றதா இல்லையே, பேதாளம் - வேதாளம், ஓர் தாளக்கருவியை பேயென்று கூறியுள்ள அவர்கள் பேயநிலையை நாம் விசாரிக்க வேண்டிய விஷயமில்லை. தன்மசங்கஞ்சேர்ந்து பெண்சாதி பிள்ளைகளென்னும் பற்றுக்களற்ற அறஹத்தாகும் திருவள்ளுவ நாயனாருக்கு ஓர் பெண்சாதியுங்கட்டி பொய்யிற்குப் பொய் மூட்டுக்கொடுத்து விட்டார்களே இதையே விஷயமாகக்கொண்டு வேதாளத்தை விவரிக்கநேரிட்டது. ஆதலின் பாப்பான் பறைச்சியை வைத்துக்கொண்டு ஏழுப்பிள்ளைகள் பெற்ற பொய்க் கதையையும் நாயனாருக்குப் பெண்சாதி கட்டி வைத்தப் பொய்க்கதையையும் திருவள்ளுவ நாயனார் திரிக்குறள் தெளிப்பொருளுரை வெளிவருங்கால் தெள்ளற விளக்குவாம்.

- 1:39,;மார்ச் 11, 1908 -

18. ஜைன மத விவரம்

ஜைநம் என்னும் மொழிக்குப் பாலிசூத்திரம் (பஞ்சமார்ஜினாத்தோஜ்ஜி ஜின) அதாவது சாக்கையச் சக்கிரவர்த்தித் திருமகனாகிய சித்தார்த்தியவர்கள் போதி விருட்சமென்னுங் கல்லாலமரத் தடியில் உட்கார்ந்து பொறிவாய லைந்தினையும் குணத்திரய காமத்தையும் சினத்தையும் வென்று மாணாக்கருக்கு அறிவுறுத்தி பிம்பாசார நகரம் சென்று அங்குள்ள மலையிற் சிலகாலந் தங்கி பாணினியருக்கும் அகஸ்தியருக்கும் போதித்திருந்த சகடபாடையாம் சமஸ்கிருதத்தையும் திராவிடபாஷையாம் தமிழையும் பிம்பாசார அரசனுக்கு வரிவடிவமாய்ப்போதித்து அம் மலையில் தசபாரதம், தசபாரமிதம்,

தசசீலமென்னும் பத்துக்கட்டளைகளை வரிவடிவு அட்சரங்களால் அடிக்கச்செய்து சத்திய தன்மத்தை விளக்கிவருங்கால் சித்தார்த்தியாம் புத்தருக்கு ஜினர், ஜைனர், சினர், சைநரென்றும் அம்மலைக்கு ஜினமலை, சைநமலை யென்றும் வழங்கிவந்தார்கள். நாளது வரையிலும் வழங்கிவருகின்றார்கள். இதுவுமின்றி புத்தபிரானுக்குள்ள ஆயிர நாமங்களில் சைநரென்பது ஒரு பெயர் என்பதை அடியிற் குறித்துள்ள பின்கலைநிகண்டின் பாடலாற் தெரிந்துக் கொள்ளலாம்.

பின்கலைநிகண்டு

தருமராசன் முன்னிந்திரன் / சினன்பஞ்சதாரைவிட்டே
அருள்சுரந் தவுணர்க்கூட்டுந் / தாகதன் ஆதிதேவன்
விரவு சாக்கையனே சைநன் / விநாயகன் சினந்தவிர்ந்தோன்
அரசுநி முலிலிருந்தோன் / அறி அறன் பகவன் செல்வன்.

ஒலிவடிவாகும் பாலிபாஷையும் புத்தபிரானாலியற்றிய சமஸ்கிருத பாஷையும் தமிழ்பாஷையும் மகதநாடாம் வடநாட்டில் வேறூன்றி அகஸ்தியரால் தென்னாடெங்கும் பரவச்செய்தனர்.

வடநாடாம் மகதநாட்டில் தமிழ்பாஷை வேறூன்றி இருந்ததென்பதற்கு நூலாதாரம்.

உதயணன்காதை - இராஜகிரக சிறப்பு

விண்ணுற நிவந்த பண்ணமை படைமதில்
வாயிலு மருங்கிணுங் காவல் கண்ணி
வேந்துபிழைத்தொழுகினுங்காய்ந்துகலக்கறாஅ
முழுப்பரிசார முதற்க ணெய்தி
விழுப்பெருஞ் செல்வமொடு வென்றி தாங்கிய
யைம்பதினிரட்டி யவனச்சேரியு
மெண்பதினிரட்டி யெறிபடைப்பாடியு
மன்பெருஞ் சிறப்பி னாயிரமாகிய
தலைப்பெருஞ் சேனைத் தமிழ்ச் சேரியுங்
கொலைப்படுங் கடுந்திறற் கொல்லச்சேரியு
மிலைச்சச் சேரியுந் தலைத்தலை சிறந்து.

பகவனுக்குரிய சைந ரென்னும் பெயரையும் சைனமலை என்னும் பெயரையும் ஆதாரமாகக் கொண்டு பூர்வம் நாகர் குலம் என்றும் இஸரேலர் என்றும் வழங்கிவந்த ஓர் பெருங் கூட்டத்தார் புத்ததன்மத்தைப் பின்பற்றியச் செயலால் சைனரென்றும் சீனர் என்றும் நாளதுவரையில் வழங்கி வருகின்றார்கள்.

ஜின ஜைநரென்னும் புத்தருக்குரிய பெயரால் அவர் தன்மத்தைப் பின்பற்றிய சைனர்கள் யாவரும் தமிழ்பாஷைக்குரியவர்களுடன் சம்பந்தப்பட்ட வர்கள் என்பதை அடியிற் குறித்துள்ள தொந்த வாக்கியங்களால் அறியலாம். தமிழில் நீ என்னு மொழிக்கு சீனபாஷையில் நீ என்றும், நான் என்பதற்கு ஞான் என்றும் யாம் என்பதற்கு யாம் என்றும், பெண் என்பதற்குப் பெண் என்றும், எஃகு என்பதற்கு எஃ என்றும், கண் அல்லது இடம் என்பதற்கு கண் என்றும், ஈர் அல்லது இரண்டென்பதற்கு ஈர் என்றும், மை என்பதற்கு மை என்றும் வழங்கிவரும் தொந்தமொழிகளால் அறிவதுமன்றி மகதநாட்டைச் சார்ந்த ஜினமலை சைன மலையருகில் சைனர்கள் என்னும் பௌத்தர்களும் தமிழர்கள் என்னும் பௌத்தர்களும் பூர்வத்தில் ஓர் குலத்தினராக விளங்கினார் என்பதும் புலப்படுகின்றது.

தமிழரென்னும் பௌத்தர்கள் யாரென்பீரேல், - தற்காலம் பராயர்களால் பறையர்கள் பறையர்கள் என்று கூறும் பூர்வக் குடிகளேயாம்.

இதன் ஆதரவைக்கொண்டே இலங்காதேசத்துள்ள சிங்கள பௌத்தர்கள் யாவருந் தங்கட் புராதன நூற்களில் பாண்டிய அரச வம்மிஷத்தோர் யாவரையுந் திராவிட பௌத்தாள், திராவிட பௌத்தாளென வரைந்துவைத்திருக்கின்றார்கள்.

சரித்திர பூர்வங்களையும் பாஷையின் பூர்வங்களையும் அவரவர்கள் மதங்களின் பூர்வங்களையும் நன்காராய்ந்து கற்பனா கதைகள் யாவையும்

அகற்றி மெய்ப்பொருள் உணராமல், தங்களுக்கு அன்னியப்பட்ட மதங்களின் பூர்வங்களைக் கண்டுத் தெளிந்தவர்கள் என நடித்து ஜைநமதச்சுவாமி அருகரென்றும், சமணமதச்சுவாமி அருகரென்றுந் தங்கள் மதப்பொய்யை மெய்யாகக் கூறுவதுபோல் அன்னியர்மதமெய்யை அறியாமற் பொய்யாகக்கூறி அலக்கழித்துவருகின்றார்கள்.

சமணர் - பாலி - மகடபாஷா
சிரமணர் - சமஸ்கிருதம் - சகடபாஷா
சௌமியர் - தமிழ் - திராவிடபாஷா

புத்தசங்கத்திற்சேர்ந்து ஞானசாதன சௌமியர்களாக விளங்கினோர்களை பாலியில் சமணரென வழங்கிவந்தார்கள். இவர்கள் ஞானசாதன உயர்வினால் சௌமி யசாகரரென்றும் சமணநீத்தோரென்றும் வழங்கி சாரணர் நிலைதோய்ந்தவர்களை சித்தர்கள் என்றும் அழைக்கப்பெற்றார்கள்.

பின்கலை நிகண்டு

நீரினிற் பூவில் வானில் / நினைந்துழி யொதுங்குகின்ற
சாரண ரெண்ம ராவா / சமணரிற் சித்திபெற்றோர்.

தகரவெதுகை: புத்தன், மால், அருகன், சாத்தன்.

ரகரவெதுகை: தருமராசன்றான், புத்தன், சங்கனோ டருகன்றானாம்.

ஜைநர்கள் புத்தருக்குரிய ஆயிர நாமங்களிற் சிலதையும் தருமங்களிற் சிலதையும் நூதனமான சாதிபேதத்தையும் உண்டுசெய்துக்கொண்டு தங்களை புத்தர் பெயர்களில் ஒன்றாகிய ஜைநரென்னும் பெயரால் மாற்றிக்கொண்டபோதிலும் யதார்த்தத்தில் அவர்கள் பௌத்தர்களே யாவர். புத்தமார்க்கத்திலிருந்தே சருவ மார்க்கங்களும் பிரித்துள்ளவற்றை இனி எழுதிவரும் பூர்வத்தமிழொளியில் அறிந்துக் கொள்ளலாம்.

- 1:41; மார்ச் 25, 1908 -

19. வேதவாக்கியங்களின் விவரம்

வேதமென்றும் மறையென்றும் வழங்கும்படியான ஓர் நூல் மனுக்களுக்கு முதநூலென்றும் சிரேஷ்டநூலென்றும் அதுவே மனுக்களை ஈடேற்றும் நூலென்றும் சகலரும் புகழும்படியாய் இருக்கின்றபடியால், அத்தகைய நூல் யாவரால் இயற்றப்பட்டது என்றும் எக்காலத்தில் இயற்றியது என்றும் அதைக் கற்பதினால் மனுக்கள் அடைந்த சுகம் என்ன என்றும் அவற்றிற்கு வேதவாக்கியங்கள் என்னும் பெயர் வந்த காரணம் யாதென்றும் அவ்வேதவாக்கியம் செய்யாமொழி அதாவது வரையாக்கேள்வியிலிருந்த காலம் யாதென்றும் விசாரித்துத் தெளியவேண்டியதே விவேகிகளின் கடனாம்.

இவ்வேதவாக்கியங்களை இயற்றினவர் யார் என்னில் புத்தர் என்னும் பகவனேயாவர்.

சீவகசிந்தாமணி

ஆதிவேதம் பயந்தோய் நீ / யலாபெய் மாரியமாந்தோய் நீ
நீதிநெறியை யுணர்ந்தோய் நீ / நிகரில் காட்சிக் கிறையோய் நீ
நாதனென்னப்படுவோய் நீ / நவைசெய் பிறவிக் கடலகத்துள்
பாதகமலந் தொழவெங்கள் / பசையாப்பவிழ பணியாயே.

சூளாமணி

ஆதியங்கடவுளை அருமறை பயந்தனை / போதியங் கிழவனை
பூமிசையொதுங்கினை / போதியங் கிழவனை பூமிசை யொதுங்கிய
சேதியஞ்செல்வதின் றிருவடி வணங்கினம்.

கல்லாடம்

மூன்றழல் நால்மறை முனிவறத்தோய்ந்து / மீறைநீருகுத்தலின் மறையோனாகியும்.

இவ்வேதவாக்கியம் எக்காலத்தில் இயற்றியதென்னில் இரண்டாயிரத்தி ஐந்நூறு வருடங்களுக்கு மேற்பட்டும் மூவாயிரத்தி நானூறு வருடங்களுக்குட் பட்டுமேயாம்.

மணிமேகலை: கலியுலகவருடக் கணக்கு

ஈரெண்ணூற்றோடு ரெட்டாண்டினிற் / பேரறிவாளன் றோன்றி.

உள்ளக் கணக்கின் ஆதாரத்தைக்கொண்டும் தீபேத்திலுள்ளப் பிரதமக் கோபுரக்கட்டிடத்தின் அஸ்திபாரக்கல்லின் கணக்கின் ஆதாரத்தைக்கொண்டும் கூறினோம். புத்தரால் போதித்த வேதவாக்கியங்கள் யாதென்னில்:-

பாலி - மகடபாஷா

சௌப்பா பஸ்ஸ அகரணம் / குஸலஸ உபசம்பதா
சசித்த பரியோதபனங் / ஏதங் புத்தான சாசனம்.

தமிழ் - திராவிடபாஷா.

பாபஞ் செய்யாதிருங்கள். / நன்மெய்க் கடைபிடியுங்கள்,
உங்கள் இதயத்தை சுத்திசெய்யுங்கள் என்பதே.

இவைகள் ஒருவகை வாக்கியமாய் இல்லாமல் மூன்று பேதவாக்கியமாய் இருந்தபடியால் திரிபீட வாக்கியம் என்றும் திரிபேதவாக்கியம் என்றும் வழங்கி, பண்டி யென்பது வண்டி யென்றும், பரத னென்பது வரதனென்றும், பைராக்கி யென்பது வைராக்கியென்றும், பாப மென்பது பாவ மென்றும், பாலிபாஷையில் பகரம் வகரமாக மாறுவதுபோல் பேதவாக்கியங்கள் என்னும் மொழி வேத வாக்கியங்கள் என வழங்கலாயிற்று.

ஆனால் புத்தபிரான் இப்பேதவாக்கியங்களை கல்லாலவிருட்சத்தின் கீழிருந்து போதித்தகாலத்தில் பாலிபாஷையென்னும் மகடபாஷையானது ஒலிவடிவமாய் இருந்ததன்றி வரி வடிவமாயில்லாதலினால் ஒருவர் நாவினால் போதிக்கவும் மற்றொருவர் செவியினாற் கேட்டுக்கொண்டு அதன்மேறை நடக்கவுமாயிருந்தார்கள்.

அக்காலத்தில் வரிவடிவாம் அக்ஷரங்கள் இல்லாதபடியால் அவ்வாக்கியங்களைச் செய்யா மொழியென்றும், நாவினால் போதிக்கவும் செவியினால் கேட்கவுமா இருந்தபடியால் பாலிபாஷா சூத்திரபடி (சுரோத்ராதிக்கு அத்தே சுருதி) என்றும் வழங்கிவந்தார்கள்.

இம்மூன்று பேதவாக்கியங்களும் வரிவடிவமாம் அக்ஷரங்களில்லாமல் ஒலிவடிவாம் சுருதியா இருந்தபடியால் மக்களுக்கு மறதியாய் விடும் என்று உணர்ந்த பகவன் அக்ஷரவடிவாய் சகடபாஷையாம் சமஸ்கிருதாட்சரங்களை உண்டுசெய்து பாணினியாருக்கும் திராவிடபாஷையாம் தமிழட்சரங்களை உண்டுசெய்து அகஸ்தியருக்கும் போதித்து வரிவடிவாம் அட்சரங்களைப் பரவச்செய்தார்.

முன்கலை திவாகரம்

வடநூற்கரசன் றென்றமிழ்க் கவிஞன்
கவியரங்கேற்று முபயக்கவிபுலவன்
செரிகுணத்தம்பற் கிழவன்.

தொல்காப்பியம்

மயங்காமரபி னெழுத்துமுறைகாட்டி / மல்குநீர் வரைப்பினைந்திரர்.

வீரசோழியம்

மதத்திற் பொலியும் வடசொற் கிடப்புந் தமிழ்மரபு
முதத்திற் பொலியேழை சொற்களின் குற்றமு மோங்குவினை
பதத்திற் சிதைவு மறிந்தே முடிக்க பன்னூறாயிரம்
விதத்திற் பொலியும் புக முவலோகிதன் மெய்த்தமிழே.

மேற்படி நூல்

வடமொழியை பாணினுக்கு / வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடையத் தென்மொழியை / யுலகெலாந் தொழுதேத்த
குடமுநிக்கு வற்புருத்தார் / கொல்லேற்றுபாகர்.

சிலப்பதிகாரம்

கண்களி மயக்கத்துக் காதலோடிருந்து / தண்டமிழாசான் சாத்தநிஃதுரைக்கு.

இதிற் கிழவோனென்பதும் அவலோகிதனென்பதும் இந்திரர், ஐந்திர ரென்பதும் சாத்தனென்பதும் புத்தபிரானுக்குரிய ஆயிரநாமங்களுக்குள் அடங்கிய பெயர்களாம்.

புத்தபிரான் சமஸ்கிருத அட்சரங்களையும் தமிழட்சரங்களையும் இயற்றியக்கால் பேதவாக்கியங்களாம் பாபஞ் செய்யாதிருங்கள் என்னும்

மொழியினுட் பொருளை கன்மபாகை என்றும், நன்மெய்க் கடைபிடியுங்கள் என்னும் மொழியினுட் பொருளை அர்த்தபாகை என்றும் இதயத்தை சுத்திசெய்யுங்கோளென்னு மொழியினுட்பொருளை ஞானபாகை என்றும் வகுத்து ஒவ்வொரு மொழியின் சாதனமே முத்திக்கு ஆதாரமாயிருந்து நித்தியநிலைப் பெற்றபடியால் கன்மபாகத்தால் மெய்யறமும், அர்த்தபாகத்தால் மெய்ப்பொருளும், ஞானபாகத்தால் மெய்யின்பமுந் தோன்றி வீடுபேறாம் நிருவாணம் அடைகின்றபடியால் மூன்றுபேதந் திரிபேதம் என்றும் வழங்கிவந்த வாக்கியங்களை அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கு பேத வாக்கியங்களாக வழங்கலாயினர்.

- 1:42; ஏப்ரல் 1, 1908 -

இத்தகைய பேதவாக்கியங்களை திரிபேதமென்றுஞ் சதுர்பேதம் என்றும் சப்தபேதம் என்றும் வழங்கிவந்தார்கள்.

பின்கலைநிகண்டு

ஆதிநூ லெழுதாக் கேள்வி / யாரணம், ஒத்து, சாகை,
யேதமில் சுருதிதன்னோ / டிரிக்கிவை யேழும் வேதம்
வேதநூற் பொருளினாமம் / விதித்திடும் ஞானபாகை
யாதியாங் கருமபாகை / யருத்தபாகையுமாமென்ப.
மெய்தெரி காரணந்தான் / வேதத்தில் ஞானபாகை
உய்யுமெய் யறமுறைக்கு / முற்றநல் லர்த்தபாகை
துய்யநற் செயலைப்பற்றல் / சுத்தநற் கருமபாகை
வெய்யபௌடிகமேயாதி / விரியுபநிடதமாகும்.
ஏமமாம் இரண்டாம்வேத / மிசையித்திரியத்தோடு
தோமிலா யசுவாமென்று / சொல்லுவர் நீதிநூலோர்
சாமமே மூன்றாம் வேதஞ் / சாற்றும் பேரின்பப்பேற்றை
வாமமுன் மொழியொன்றில்லா / வதர்வண வேதமாமே.
தந்துரை புனைந்துரைத்தல் / சார்ந்த பாயிரத்தினோடு
முந்திய பதிகமே நூன் / முகவுரை முப்பேராகும்
அந்தமா மாகமத்தோ / டாரிடம் பிடகமற்றுந்
தந்திரம் பனுவலோடு / சமயஞ் சூத்திரமு நூற்பேர்.

இத்தியாதி வேதவாக்கியங்களால் திரிபிடகமென்றும், முதுமொழி என்றும், முதநூ லென்றும், ஆதிநூலென்றும், அறனாற்கூறிய அறநூலென்றும் வழங்கிவந்தார்கள்.

நன்னூல்

வினையினீங்கி விளங்கிய வறிவின் / முனைவன் கண்டது முதநூலாகும்.

திரிக்குறள். புத்தசங்கத்தோர் சாற்றுக்கவிகள்

இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கும்
முன்பறிய சொன்ன முதுமொழிநூல் - மன்பதைகட்
குள்ள வறி தென்றவை வள்ளுவருலகங்
கொள்ளமொழிந்தார்க்குறள்.
நான்மறையின் மெய்ப்பொருளை / முப்பொருளா நான்முகத்தோன்
றான்மறைந்து வள்ளுவனாய்த் / தந்துரைத்த நூன்முறையே
வந்திக்கச் சென்னிவாய / வாழ்த்துக நன்னெஞ்சம்
சிந்திக்கக் கேட்கச் செவி.

அருங்கலைசெப்பு

என்று முண்டாகி இறையால் வெளிப்பட்டு நின்றதுநூல் என்று உணர்.

புத்தபிரானால் வரிவடிவாகும் வடமொழியும் தென்மொழியும் இயற்றியருளியப் பின்னரே பேதவாக்கியார்த்தத்தை நூலென்று வழங்கினர். அதற்கு முன்பு மகடபாஷை வரிவடிவமின்றி ஒலிவடிவாய் இருந்ததினால் திரிபிடகம் என்னுந் திரிபேதவாக்கியங்கள் வரிவடிவற்ற செய்யாமொழியாயிருந்து சுருதிமொழியெனும் பெயர்பெற்று சருவசீவர்களையும் தன்னுயிர்போல் பாதுகாக்கும் அறஹத்துக்கள் என்னும் அந்தணர்பாற் செய்யாமொழியாய் இருந்தது.

திரிக்குறள் - புத்தசங்கத்தோர் சாற்றுக்கவி

செய்யாமொழிக்குந் திருவள்ளுவர் மோழிந்த
பொய்யாமொழிக்கும் பொருளொன்றே - செய்யா

வதற்குரிய ரந்தணரே யாராயினேனை
யிதற்குரிய ரல்லாதாரில்.

பாபஞ் செய்யாதிருங்கள், நன்மெய்க் கடைபிடியுங்கள், உங்கள் இதயத்தை சுத்திசெய்யுங்கோள் என்னும் மும்மொழிகளையே குருமொழி என்றுந் திரிமொழி என்றும் வழங்கி இம்மும்மொழியில் ஓர் மொழியை மனிதன் கடைபிடித்த் தொழுகுவானாயின் முத்திக் குரியவனாவன்.

தாயுமானவர்

குருமொழியே மலையிலக்கு / சந்ததமும்வேதமொழி யாதுஒன்றைபற்றினது
தான்வந்து முற்றுமெனலால்.

ஆதியில் நன்மெய்யைக் கடைப்பிடியுங்கள் என்னும் வார்த்தையைப் போதித்தவரும் புத்தர், நன்மெய்யாம் வார்த்தையைக் கடைபிடித்து நடந்து காட்டியவரும் புத்தர், நன்மெய் என்னும் வார்த்தையாம் சுயரூபியாக அதாவது நன்மெய்யே ஒருருவாக நின்றவரும் புத்தரேயாம்.

இந்த நன்மெயெனும் ஒரு மொழிக்கு எட்டு உபநிட்சயார்த்தங்கள் கூறியிருக்கின்றார்கள். இவ்வார்த்தைக்குப் பாலியில் உபநிஷத்தென்றுங் கூறுவர்.

அருங்கலைச்செப்பு

வேதத்தின் உட்பொருளாகும் அர்த்தபாகை யஷ்டகம் நன்மெய்க் கடைபிடித்தல்.

ஆருயிர்துன்ப மகற்றியாற்றல் / பேருயிர் நன்மெய்ப்புகழ்
யீய்ந்தும் அளித்தும் ஏற்காதிருத்தல் / சாந்த நன்மெய்த்துணை
தன்னுயிர்தவிர்த்து மன்னுயிரோம்பல் / உன்னிய நன்மெய்யுரன்
அன்னியர்தார மன்னைதங்கையென் / றுன்னு நன்மெயுறல்.
கொலையும் புலையுங் கொள்ளாதகற்றல் / நிலையாம் நன்மெய்நிழல்
அமுதவாக்கும் அன்பிநோக்குங் / குமுத நன்மெய்க்குடை
வாக்கின்வாய்மெய் வளம்பெறவோதல் / நோக்கு நன்மெய் நெறி
அமுதமூறு மறிவை யேற்றல் / சமய நன்மெய்ச்சுழி.

- 1:43; ஏப்ரல் 8, 1908 -

இதன்மேறய அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கு பேதவாக்கியங்களில் வாக்கியம் ஒன்றுக்கு எட்டுவகை உபநிட்சயார்த்தங்கள் கூறி நான்கு பேதவாக்கியங்களுக்கும் முப்பத்திரண்டு உபநிட்சயார்த்தங்கள் வரைந்து வைத்தார்கள்.

அறம், பொருள், இன்பமென்னும் முப்பாலாகுந் திரிபேதவாக்கியங் களுக்கும் உள்ள உபநிட்சயார்த்தங்களை மென்மேலும் விளக்கி அதனதன் அநுபவிகளின் சரித்திரங்களுக்குட்பட மெய்யறமாம் அறத்துப்பாலை தன்மபிடகமாகவும், மெய்ப்பொருளாம் பொருட்பாலை சூத்திரபிடகமாகவும், மெய்யின்பமாம் காமப்பாலை வினைய பிடகமாகவும் வகுத்து புத்தசங்கத்தோர் எழுதிவைத்துக்கொண்டு தங்கள் சாதனங்களை அநுட்டித்து வந்தார்கள்.

சங்கத்தோர் சாதனத்தாலும் உலகமாக்களுக்கூட்டும் நீதிநெறிகளின் ஒழுக்கத்தினாலும் குடிகள் வித்தை, புத்தி, யீகை, சன்மார்க்கம் என்னும் நான்கும் பெருகி ஒருவருக்கொருவருள்ள அன்பின் விருத்தியினால் ஒற்றுமெயுற்று சுகசீவிகளாக வாழ்ந்திருந்தார்கள்.

அக்காலத்தில் மிலேச்சர் என்றும் ஆரியர் என்றும் வழங்கும் படியான ஓர் சாதியார் குமானிடமென்னும் ஓர் தேசத்தில் வந்து குடியேறி மண்ணைப்பறித்து அதில் குடியிருந்துக்கொண்டு யாசகசீவனத்தால் சீவித்து வந்தார்கள்.

சூளாமணி

பத்துவகையபரதவிரேவதத் / தத்தகுகால விழிவினகத்தவர்
சித்தந் தெளிவிலர் சீலமடைவிலர் / செத்த வறிவினர் சேகர ரவரே.
தீவினுள் வாழுங் குமானிடர்தேசத்து / மேவியுறையு மிலேச்சரெனப்பெய
ராவரவருண் மிலைச்சவரையும் / வீவருந்தாரோய் விலங்கினுள் வைப்பாம்.
வாலுநெடியவர் வளந்த வெயிற்றினர் / காலுமொரோவென் றுடையர் கலையிலர்
நாலுஞ்செவியர் நவைசெய மருப்பினர் / சீலமடைவிலர் தீவினுள் வாழ்வார்.
மக்கட்பிறப்பினு மாத்திரமல்லது / மிக்கவெளிற்று விலங்குகளேயிவர்
நக்கவுருவினர் நாணாவொழுக்கினர் / தொக்கினர்மண்ணே துளைத்துண்டுவாழ்வார்.

பின்கலைநிகண்டு

மக்கட்பெயர் - மிலேச்சராரியர்

இத்தகைய மிலைச்சரென்றும் மிலேச்சர் என்றும் ஆரியர் என்றும் வழங்கிவந்த ஓர் கூட்டத்தார் யாசக சீவனத்தால் குமானிடர் தேசத்தைவிட்டுப் பரவி பலவிடங்களிலுஞ்சென்று அவரவர்களுக்குத் தக்க ஆரியக்கூத்தாடிக் காரியத்தின் பேரில் கண்ணாய் இத்தேசத்துக்குடிகள் யாவரும் ஒழுக்கத்திலுஞ் சீலத்திலும் மிகுத்தவர்களாய் ஒற்றுமையுற்று வாழ்வதையும் புத்தசங்கத்தோரை அரசர்கள் முதல் குடிகள் வரையும் வணங்கி பயபக்த்தியுடன் ஆதரித்து வருவதையும் நாளுக்குநாள் கண்ணுற்று வருங்கால் புத்தசங்கங்களிற் சமணநிலை கடந்து, மகடபாஷையில் அறஹத்துக்கள், என்றும் சகடபாஷையில் பிராமணர்கள் என்றும், திராவிட பாஷையில் அந்தணர் என்றும் வழங்கிவந்த விவேகமிகுத்த மெய்ஞ்ஞானிகளைப் போல் வேஷமிட்டு அதிகார சீவனஞ் செய்யவேண்டிய தந்திர எண்ணத்தால் வடமொழியையும் தென்மொழியையும் கற்று கல்வியற்ற குடிகளிடஞ்சென்று நாங்கள்தான் அறஹத்துக்கள் நாங்கள்தான் பிராமணர்கள், நாங்கள் தான் அந்தணர்கள் என்று சொல்லி வஞ்சித்தும் பொருள்பறித்துஞ் சீவித்துவந்தார்கள். இவ்வகை வேஷமிட்டு புத்த தருமங்களை மாறுபடச்செய்தகாலம் ஆயிரத்தி ஐந்நூறு வருடங்களுக்குட்பட்ட சீவகன் அரசாண்ட காலமாகும்.

சீவகசிந்தாமணி

செங்கட்புன்மயிர் தோல்நிரைச்செம்முக / வெங்கணோக்கிற்குப் பாயமிலேச்சனை
செங்கட்டீவிழியாற்றெழித்தான்கையு / ளங்கட்போது பிசைந்தடு கூற்றனான்.

இவ்வகையாக மிலேச்சரென்னும் ஆரியர்கள் வடபரதந் குடியேறி பிராமணவேஷமிட்டு புத்ததருமங்களைச் சார்ந்துக் கல்வியற்ற சிற்றரசர்களையும் பெருங்குடிகளையும் தங்கள் வசப்படுத்திக்கொண்டு புத்ததருமங்களையும் சங்கங்களையும் மாறுபடுத்திவருங்கால் கல்விமிகுத்த விவேகிகள் மிலேச்சர்களின் வேஷங்களை அறிந்து அடித்துத்துறத்தியக்கால் மிலேச்சர்களின் மாறுவேஷங்களைப் பறைகிறவர்களும், மிலேச்சர்களின் கட்டுக்குள் அடங்காமல் அன்னியப்பட்டவர்களு மாகிய மேன்மக்களைப் பராயர் பராயரென்றுகூறி பாழாக்கிய சரித்திரத்தை அஸ்வகோஷாவென்பவர் கூறியுள்ள நாராதிய புராணசங்கைத் தெளிவென்னும் நூலில் பரக்கக் காணலாம்.

நாராதிய புராணச்சங்கைத் தெளிவு : 317 - பாடல்

கறைவடுவுள்ளக் காட்சியாற் புருசர் / கனமடஞ் சுருளிளை யழித்து
திறைகவர் வேடஞ் சாற்றிமுப்புரிநூற் / சிலைகொழு வளமைகடேற்றி
மறையவரென்கோல் மாட்டியங்கோர்ந்து / வழுக்குறை யூட்டிவாமனரைப்
பறைபவரெந்தங் கொடுமுறை தூற்றிப் / பறையர்கட் பறையரென்றாற்றே.

- 1:44; ஏப்ரல் 15, 1908 -

பௌத்தசங்க மேன்மக்களால் வழங்கிவந்த பேதவாக்கியங்களும் அதன் உபநிட்சயார்த்தங்களும் வடபரதந் தென்பரத முழுமையும் பரவிவந்த காலத்தில் நமது சக்கிரவர்த்தித் திருமகனாகும் சித்தார்த்தி பெருமான் ஐந்திந்திரியங்களை வென்ற வல்லபங்கொண்டு அவரை ஐந்திரரென்றும் இந்திரரென்றும் ஓர் பெயரளித்து இந்திரவிழாவென்றும் இந்திர திருவென்றும் இந்திரவிழாக்கோலம் என்றும் வடபரதந் தென்பரத முழுமையுந் கொண்டாடிவந்தார்கள். அங்ஙனம் புத்ததருமத்தைக் கொண்டாடிவந்த மாக்களை இந்தியர் என்றும் அவர்கள் கொண்டாடிவந்த தன்மத்தை இந்தியர் மார்க்கம் என்றும் இந்துவேதமென்றும் அவர்கள் வாசஞ்செய்யும் தேசத்தை இந்தியா தேசமென்றும் இந்துதேசம் என்றும் வழங்கிவந்தார்கள்.

அருங்கலைச்செப்பு

இந்தியத்தைவென்றான் தொடர்பாட்டோடாரம்ப
முந்து துறந்தான் முனி.

அறநெறிச்சாரம்

இந்தியக்குஞ்சரத்தை ஞானப்பெருங்கயிற்றால்
சிந்தனைத்தூண்பூட்டிச் சேர்த்தியே - பந்திப்பர்

இம்மெப்புகழும் இனிச்செல்கதிப்பயனும்
தம்மெத் தலைப்படுத்துவார்.

தொல்காப்பியம்

மல்குநீர் வரைப்பினைந்திர நிறைந்த.

மணிமேகலை

இந்திரகோடனை விழாவணிவிரும்பி.
இந்திரர் சிறப்புச் செய்வோர் முன்னர்
வந்துதோன்றிய வானவர் பெருந்தகை.

சிலப்பதிகாரம் இந்திரர் விழாவூரெடுத்த காதை காண்க.

சீவகசிந்தாமணி

ஆசையார்வமோடையமின்றியே / யோசைபோயுல குண்ணநோற்ற பி
னேசுபெண்ணொழித் திந்திரர்களாய்த் / தூயஞானமாய்த் துறக்கமெய்தினார்.

காசிக்கலம்பகம்

புரவுபூண்டிந்திர திருவொடும்பொலிந்து / முடிவினு முடியா முழுநலங்கொடுக்கு.
விடுத்துவிட் டிந்திர திருவும்புவி / வெண்குடைக்குளிடுமரசாட்சியுங்
கடுத்தும்புவனத்தரைத்தேடுவர் / காதலித்து வருந்திருக்காசியே.

இத்தேசத்திலிருந்த சகலமாக்களும் இந்திரராம் புத்தரை சிந்தித்துவந்த சாதனத்தால் இந்தியதேசம் என்று வழங்கும் இந்நாட்டில் பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் வந்து தோன்றி அவரவர்கள் சமயாசார நூற்களை ஆராய்ச்சிசெய்ய ஆரம்பித்தார்கள். அக்காலத்தில் வேஷ பிராமணர்களால் புத்ததன்மம் சீர்குலைந்து சங்கங்களும் அழிந்து சங்கத்தோராகும் மேன்மக்களும் நிலைகுலைந்து வேஷபிராமணர்கள் வாக்கு செல் மிகுதியிலிருந்தபடியால் அவர்களுக்குப்பின்பு தோன்றிய மகமதிய ராஜாங்கத்தாரிடமும் அதன்பின் தோன்றிய பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரிடமுந் தங்கள் வாக்கை ஏற்றுக் கொள்ளத்தக்க நிலையில் வைத்துக்கொண்டார்கள்.

இந்தியர் வேதம் இந்தியர்மார்க்கம் எதுவென்று விசாரிக்க ஆரம்பித்தவர்கள் புத்தபிரானால் விளக்கிய முதநூலாகும் பேதவாக்கியங் களையும் அதன் உபநிட்சயார்த்தங்களையும் வாரணாசியென்னுங் காசியில் வெகுவாகப் பரவச் செய்தபடியால் விசாரிணைமிகுத்த மேன்மக்களாகும் ஐரோப்பியர்கள் காசிபட்டணஞ்சென்று இந்தியர் வேதத்தை விசாரிக்க ஆரம்பித்தார்கள்.

அவ்விசாரிணைக்கு எதிர்தோன்றியவர்கள் எதார்த்த பிராமணர்களின்றி வேஷப் பிராமணர்களாய் இருந்தபடியால் பேதமென்னும் வாக்கியத்தின் பொருளும் அப்பேதமொழிகள் எத்தனை என்றும் அப்பேதமொழி ஒன்றுக்கு எத்தனை உபநிட்சயார்த்தங்கள் இருந்தது என்றும் அதன் அந்தர அர்த்தம் அறியாமல் வேதங்கள் என்றால் பெரியபெரியக் கட்டுச்சுவடிகள் எ ன்றும் அதில் மந்திரம், பிராமணம், தோத்திரங்கள் அடங்கியிருக்கின்றன வென்றும் இவ்வேதம் கள்ள மாயங்களினின்று நீங்கியக் கடவுளின் வாக்கினின்று புறப்பட்ட தற்பூரணமொழியென்று கூறி இவ்வேதத்தைக் கடவுள் பிரம்மாவுக்குப் போதித்தும், பிரம்மா முநிவர்களுக்குப் போதித்தும், முநிவர்கள் தங்கள் மாணாக்கர்களுக்குப் போதித்ததாக வரைந் திருக்கின்றார்கள்.

இவ்வேதம் தோன்றுவதற்கு முன்பே கடவுளும், பிரம்மாவும், முநிவர்களும், மாணாக்கர்களும் இருந்திருக்கின்றபடியால் கடவுள், முநிவர், பிரம்மா என்னும் பெயர்கள் யாவும் புத்த தன்ம நூற்களிலிருந்தே வரைந்துக்கொண்டார்கள் என்பது திண்ணம். இவ்வேதமும் இத்தேசத்திற்குரிய பாலியாம் மகடபாஷையிலேனும் சமஸ்கிருதமாம் சகடபாஷையிலேனும் வரையாமல் தாராஷ்கோ என்னும் பாரீசு சாதியோருள் ஒருவரால் பாரீசு பாஷையில் எழுதிவைத்து கிடைத்தப்பின்பு மற்றுஞ் சிலர்களால் சகடபாஷையில் எழுதிக் கிடைத்தது.

இவைகள் யாவற்றையும் சிறுக சிறுக சேகரித்து புத்தகருபப்படுத்திக் காண்பித்த மேன்மக்கள் யாரெனில்:-

1 - வது. கர்னல் பேர்லியர்.

2 - வது. சர். இராபர்ட்ஸ் சேம்பர்.

3 - வது. ஜெனரல் மார்ட்டீன்.
4 - வது. சர். உல்லியம் ஜோன்ஸ்.
5 - வது. மிஸ்டர் கோல்புருக்

- 1:45; ஏப்ரல் 22, 1908 -

இவ்வகையாகக் காசியில் அந்தந்த துரைமக்கள் கையில் எந்தெந்த சங்கதிகள் அடங்கிய பாகங்களோ அவரவர்கள் கொடுக்க அவைகள் யாவையும் ஒன்றுசேர்த்து பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் கண்காட்சி கூடத்தில் மேற்கூறியுள்ள துரைமக்கள் வைக்கும் வரையில் இவ்வேதங்களானது இன்ன மடத்தில் இருக்கின்றது இனிய கலாசாலையில் இருக்கின்றதென்றேனும் இன்ன ஆச்சாரியாரிடத்தில் இருக்கின்றதேனும் இனிய குருவிடம் உள்ளதென்றேனும் ஓர் வதந்தியும் கிடையாது.

ஓர் கடவுள் வேதத்தை பிரம்மாவிடம் கொடுத்தார் என்றும், பிரம்மா முநிவர்களிடம் கொடுத்தார் என்றும், முநிவர்கள் மாணாக்கர்களிடம் கொடுத்தார் என்றும் பாயிரத்தில் வரைந்திருக்கின்றார்கள்.

கடவுளால் கொடுக்கப்பெற்ற வேதத்தை இருக்கு வேதத்தில் எவ்வகையாக எழுதியிருக்கின்றதென்றால் அனந்தங் கதைகள் விசுவாமித்திரராலும், பரத்துவாசராலும், வசிஷ்டராலும், கிரதசமதராலும், வாமதேவராலும், புதனாலும், அத்திரியினாலும், அகஸ்தியராலும், காசியபர், பராசர், கௌதமர், கண்ணுவர், பிரகஸ்பதி மற்றும் அனந்த அரசபுத்திரர்கள் வேதங்களிலுள்ள அனந்தமாயிரக் கீதைகளை வரைந்திருக்கின்றார்களாம்.

இத்தனைப்பெயர்கள் கூடி எழுதியுள்ள வேதத்தை ஆதியில் சூரியனுக்குத்தான் வெளிப்படுத்தியதாக யசுர்வேதத்தில் எழுதியிருக்கின்றது. இவ்வகையான சூரியனுக்கு வெளிப்படுத்திய வேதத்தை சாமவேதம் என்றும், ருக்குவேதம் என்றும், எஜுர் வேதம் என்றும், அதர்வண வேதம் என்றும் பிரித்துப் பெயர்கொடுத்தவர் வியாசர் என்று முகவுரையிற் கூறி இருக்கின்றது. இதே வியாசர் புராணங்களையும் எழுதியிருக்கின்றார். பாரதத்தையும் எழுதியிருக்கின்றார். சங்கராச்சாரிக்குப் போதிக்கவும் வந்திருக்கின்றார். தற்காலம் எங்கிருக்கின்றாரோ தெரியவில்லை.

இருக்குவேதத்தில் பூலோகத்திற்கு ஓர் கடவுள், புவர் லோகத்திற்கு ஓர் கடவுள், சுவர் லோகத்திற்கு ஓர் கடவுள், அவர்கள் பெயர்கள் யாதெனில் - அக்கினி, வாயு, சூரியன்.

வேத நிகண்டின் அட்டவணைகளோடு முதலில் அக்கினிக்கே ஏகார்த்தப் பலப்பெயர்களை எழுதியிருக்கின்றார்கள்.

அக்கினியையே பெரும்பாலும் தேவதையாகக் கொண்டாடுகிறவர்கள் பாரிசுசாதியோர் ஆதலினாலும், இவ்வேதங்களில் உள்ள அரைபாகசங்கதிகளை ஜெயபுரத்தில் கர்னல் பேர்லியர் துரையவர்களுக்கு தாராஷ்கோ என்னும் பாரீசு சாதியோர் ஒருவரால் பாரீசுபாஷையில் மொழி பெயர்த்துக் கொடுத்துள்ள படியினாலும் வேதங்களின் அரைபாகம் பாரீசு சாதியோருக்கு சம்மந்தப்பட்ட சரித்திரங்களாக விளங்குகின்றது.

பாரிசீகர் சரித்திரங்களையே முற்றுமெழுதி விட்டால் இத்தேசத்திலுள்ள பௌத்தர்கள் மறுப்பார்கள் என்று எண்ணி புத்ததன்மங்களில் வரைந்துள்ள முக்கியப் பெயர்களாகும், இந்தியர், கௌதமர், சங்கறர், வாமனர், காசிபர், அஜாத சத்துரு மற்றுமுள்ளப் பெயர்களையும் அவரவர்கள் சரித்திரங்களில் சிலதைக் கூட்டியுங் குறைத்தும் எழுதிவிட்டார்கள்.

இந்த வேதங்களை இவர்கள் எழுதிய காலம் யாதென்பாராயின் ஜெநநமே ஜெயன் அஸ்வமேதயாகத்தை முடித்தவிஷயத்தை இவ்வேதங்களில் எழுதியிருக்கின்ற படியால் ஜெநநமே ஜெயன் சரித்திரமாகும் பாரதத்திற்குப் பின்பே எழுதியிருத்தல் வேண்டும். அல்லது யசுர் வேதத்துள் புராணத்துள் குறித்துள்ள வராக அவதாரத்தை எழுதியுள்ளதினாலும், பாயிரத்தில் புராணத்திலுள்ள மச்சவதாரத்தை எழுதியுள்ளதினாலும், புராணகாலங்களுக்குப் பின்பே இவ்வேதங்கள் எழுதியிருத்தல் வேண்டும்.

மச்சாவதாரங் கூறியுள்ள புராணத்தை எடுத்தோதும் இவ்வேதத்தில் இன்னோர் ஆட்சரியக்குறிப்பையும் காணலாம்.

அதாவது - பௌத்தர்கள் எழும்பி சங்கரர் என்னும் புத்தரால் போதித்துள்ள பேதவாக்கியங்களையும் பேத வந்தங்களையும் நீங்கள் எடுத்து போதிக்குங் காரணம் யாதென்பாராயின் எங்கள் வேதத்தை சங்கனென்பவன் திருடிக்கொண்டுபோய் சமுத்திரத்தில் ஒளித்துவைத்துக் கொண்டபோது எங்கள் கடவுள் மச்சாவதாரம் எடுத்து சமுத்திரத்துள் மூழ்கி மறுபடியும் கொண்டுவந்தார் என்று கூறுவதற்கு ஓர் ஆதாரமும் தேடிவைத்துக் கொண்டார்கள்.

பின்கலை நிகண்டு

தருமராசன்றான் புத்தன் சங்கனோடருகன்றானாம்.

பாரதத்திலுள்ள சங்கதிகளும் புராணங்களிலுள்ள சங்கதிகளும் புத்த தன்மங்களில் பெரும்பாகங்களும் இவ்வேதங்களில் அடங்கியிருக்கின் றபடியால் புத்தபிரான் நிருவாணம் அடைந்த நெடுங்காலங்களுக்குப்பின்பு பிரிட்டிஷ் துரைத்தனத்தாராகிய ஆங்கிலேய மேன்மக்கள் தோன்றி இந்துக்களின் வேதங்கள் எவை என்று விசாரிக்க ஏற்பட்ட காலத்திலேயே பலபேர்களாலும் பலவகையாக எழுதி அவர்களிடம் சேர்த்திருப்பதாக விளங்குகிறபடியால் வேதசரித்திரங்கள் எழுதுவதற்கும், வேதம் என்னும் புத்தகரூபம் அடைவதற்கும், பிரிட்டிஷ் துரைத்தன ஆங்கிலேயர் காலமே ஆதாரமும் வேஷப்பிராமண வேதோற்பவக் காலம் என்றும் விளங்குகின்றது.

- 1:46; ஏப்ரல் 29, 1908 -

வேஷப்பிராமணர்கள் என்னும் பெயருதித்தக் காரணம் யாதென்பீரேல்:-

இத்தேசம் எங்கும் பௌத்தர்கள் நிறைந்துள்ளகாலத்தில் புத்தநிலையாம் உண்மெய் உணர்ந்தவர்களை பாலி பாஷையில் அறஹத்துக்கள் என்றுஞ் சமஸ்கிருதபாஷையில் பிராமணர்கள் என்றும் தமிழ் பாஷையில் அந்தணர்கள் என்றும் வழங்கப்பெற்ற பெயர்கள் அவரவர்கள் ஞானசாதனத்தால் சாந்தகுணம் மிகுத்த தண்மெயாலுஞ் சருவ சீவர்களையுந் தன்னுயிர்போல் பாதுகாக்கும் அன்பின் மிகுதியாலும் எதிரிகளின் பலனைக் கருதாது ஈகையினின்றாதரிக்குஞ் செய்கையாலும் அறநெறிகளை அடியார்களுக்கு ஓதி அல்லல்களை அகற்றுவதினால் உண்டாயவைகளாம்.

திரிக்குறள்

அந்தணரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மெய்ப் பூண்டொழுகலால்.

பாரதம்

நீதியும் நெறியும் வாய்மெயு முலகில் / நிறுத்தினோன் வேதியனன்றி
வேதியனெனு மிழுக்குறி லவனை / விளம்பு சூத்திரனென வேத
மாதவர் புகன்றாதலாலுடல் / மாய்ந்தபின் யாவதோர் பொருளோ
கோதிலாவிந்தப் பிறவியில் வேதக் / குரவநீயல்லையோ குறியாய்.

சிலப்பதிகாரம்

அரவோர்பள்ளியற நோன்படையும்
புறநிலைக் கோட்டத்து புண்ணியதானமும்.

குமானிடர்தேசத்தில் குடியேறி வந்தவர்களோ பிராமணவேஷந்தரித்து விவேகமற்ற பலரையுந் தங்கள் வசப்படுத்திக்கொண்டு புத்தபிரானால் இயற்றியுள்ளத் தமிழையுஞ் சமஸ்கிருதத்தையும் கற்று சில சுலோகங்களைக் கூறிவந்தபோதிலும் பௌத்தர்கள் யாவரும் மதுமாமிஷங்களை விரும்பாமலும் அவைகளைக் கண்ணிற் காணாமலுஞ் சுத்தசீலத்தில் இருந்தவர்களாதலின் அவர்கள் முன்னிலையில் இந்த வேஷப் பிராமணர்கள் தங்கள் நாட்டில் எக்காலும் புசிக்கும் மதுமாமிஷங்களை பௌத்தாள்முன் புசிப்பதற்குப் பயந்து தங்களை அடுத்த கல்வியற்றவர்களை ஏமாற்றிக் கொழுத்த குதிரைகளையும் கொழுத்த மாடுகளையும் கொழுத்த ஆடுகளையும் கொண்டுவரச்செய்து அசுவ யாகம், கோ யாகம், மேஷ யாகமென்றும் பெயர்களிட்டு நெருப்பிற் சுட்டு தின்றுவந்ததுமன்றி மதுபானமென்னும் சுராபானத்தை சத்தி பூசையென்னும்

பெயர்வைத்துக் கொண்டு பெண்களுடன் தாங்களும் கலந்துப் புசித்து வந்தார்கள்.

இத்தகைய மதுமாமிஷங்களை அந்தரங்கத்திற் புசிக்கும் வேஷ பிராமணர்களின் செய்கைகளை அறிந்த பௌத்தர்கள் அவர்களை அடித்துத் துறத்திவந்தபோதிலும் தங்கள் தந்திரங்களாலும் மித்திரபேதங்களாலும் கல்வியற்றப் பெருங்குடிகளையுஞ் சிற்றரசர்களையும் வசப்படுத்திக்கொண்டு புத்தசங்கத்தோரால் அவரவர்கள் தொழில்களுக்கென்று எழுதிவைத்திருந்தப் பெயர்களைக் கீழ்ச்சாதி மேற்சாதி என்று வகுத்து அதில் தங்களை உயர்ந்தசாதி பிராமணரென்று ஏற்படுத்திக்கொண்டு தங்களை அன்னியர்கள் என்று அடித்துத் துறத்தித் தங்கள் வேஷங்களை விவரமாகப் பறைந்துவந்த பௌத்தர்களைத் தாழ்ந்தசாதி பறையர்கள் என்று வகுத்துப் பலவகை இடுக்கங்களால் பாழாக்கித் தங்கள் பொய்வேஷத்திற்கும் பொய்ப் போதங்களுக்கும் அடங்கி நடந்துக்கொண்ட அரசர்களை ஆதரித்துக் கொண்டும் தங்கள் பொய் வேஷங்களையும் பொய்ப் போதகங்களையும் அறிந்து துறத்திய அரசர்களை மித்திர பேதங்களால் கொன்றும் பலவகைத் துன்பங்களைச் செய்துவிட்டது மல்லாமல் புத்த தன்ம நூற்களையும் அழித்து புத்த சங்கங்களையும் மடங்களையும் பாழாக்கித் தங்கள் பிராமணவேஷத்தை பலப்படுத்திக் கொண்டார்கள்.

பிச்சை எடுத்து உண்பதிலும் அதிகாரப் பிச்சையால் தங்கள் தங்கள் பெண்டுபிள்ளைகளுடன் சுகித்துவாழ்வதை அறிந்த இத்தேசத்து ஆந்திரசாதி, கன்னடசாதி, மராஷ்டக சாதி, திராவிடசாதியோர் என வழங்கியக் கூட்டத்தாருள் சில விவேகிகள் தாங்களும் பிராமணவேஷமிட்டு வெளிவந்ததினால் பழய வேஷபிராமணர்களுக்கும் புதுவேஷப்பிராமணர்களுக்கும் மனத்தாங் கலுண்டாய் அவர்களை வேஷபிராமணர்களென்று கண்டித்தாலோ நீங்களும் வேஷபிராமணர்களே என்று விளக்கிவிடுவார்கள். அதினால் நமக்குக் கனக்குறைவும் வேஷமும் வெளியாகிவிடும் என்று எண்ணி மாட்டிறைச்சியைப் பறிகொடுத்த பாப்பாத்திபோல் வெளிக்குச் சொல்லாமல் உள்ளுக்குள்ளாக விரோதத்தை வைத்துக் கொண்டு பிராமணர்கள் என்னும் வேஷம் போட்டிருந்த போதிலும் ஒருவர் வீட்டில் ஒருவர் புசியாமலும் ஒருவர் பெண்ணை மற்றொருவர் கொள்ளாமலும் மாறுபட்டே நின்றுவிட்டார்கள்.

பிச்சையேற்றுண்பதிலும் அதிகாரப்பிச்சை அதிகரிக்கவும் இதனந்தரார்த்தம் அறியாது ஏமார்ந்து கொடுப்போர் ஏராளமாகவும் பிராமணர்கள் வேஷம் பலபாஷைக்காரர்களிடத்தும் அதிகரித்துவிட்டது. அங்ஙனம் பிராமண வேஷங்கள் மட்டிலும் அந்தந்த பாஷையில் அதிகரித்துவிட்டபோதிலும், ஆந்திரபாஷையில் க்ஷத்திரியன் யார். வைசியன் யார். சூத்திரன் யார். இந்தப் பறையன் யார். கன்னட பாஷையில் க்ஷத்திரியன் யார், வைசியன் யார், சூத்திரன் யார், இந்தப் பறையன் யார், மராஷ்டக பாஷையில் க்ஷத்திரியன் யார். வைசியன் யார். சூத்திரன் யார். இந்தப் பறையன் யார். திராவிட பாஷையில் க்ஷத்திரியன் யார், வைசியன் யார். சூத்திரன் யார். இந்தப்பறையன் யார்.

- 1:47; மே 6, 1908 -

என்பவற்றுள் ஆந்திர, கன்னட, மராஷ்ட்க, திராவிடம் என்னும் பாஷைகளுள் பிராமணன் என்னும் பெயர்களை மட்டிலும் வைத்துக்கொண்டு மற்ற க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்னும் வரிசைக்கிரமப் பெயர்கள் ஒவ்வொரு பாஷைகளிலும் இல்லாமல் திராவிட பாஷையிலுள்ளப் பெருங் குடிகளைப் பறையன் என்றுத் தாழ்த்திப் பலவகை இடுக்கண்கள் செய்துவந்த காலத்தில் பௌத்ததன்ம விவேகிகள் அவற்றைக் கண்டித்துக் கொண்டுவந்தது மன்றி நான்முகன் மாலாகும் புத்தருக்கு சிரேஷ்ட வம்மிஷ வரிசையோரென்றுஞ் சத்தியதன்மப் பரம்பரையோரென்றும் விளக்கி புத்தபிரானை சிந்திக்காதவர்களே பறையர்கள் என்றும் பரக்கத்தீட்டியிருக்கின்றார்கள்.

அவிரோத வுந்தியார்

அறுவகை சமயத்தரையு மெய்ப்பொருளு / மறுபத்துநாலு நற்கலையு
மறுவறப்பயின்று மாசறத்திகழு / மறிஞரா மவர்களே யெனினுங்
குறைவறத் தன்னைக் கொடுத்திடுங் குரவன் / குரை கழல் புனைந்தவ ரன்றேல்
பறையர் மற்றவரை பறையரே யெனினு / மருளுடையவர் பரம்பரரே. /

சிவவாக்கியர்

பறைச்சியாவதேதடா பாணத்தியாவதேதடா
விறைச்சிதோ லெலும்பிலே யிலக்கமிட்டிருக்குதோ
பறைச்சிபோகம்வேறதோ பாணத்திபோகம் வேறதோ
பறைச்சியும் பாணத்தியும் பரிந்துபாருமும்முளே.

திருவாசகம்

வேதமொழியர் வெண்ணீற்றர் செம்மேனியர் / நாதப்பறையினரென்னே என்னும்
நாதப்பறையினர் நான்முகன் மாலுக்கு / நாதரின்னாதனாரன்னே என்னும்.

ஞானவெட்டி

விட்டகுறைவருமளவி முபதேசங்காண் / மெய்யுடலந்தளர்ந்துகலை மேலுநோக்கி
தட்டழிந்துவிழும்போது வோதிவைத்த / சாத்திரங்களொன்றேனு நினைக்கப்போமோ
எட்டுரண்டுமறியாதார் குருக்களாமோ / என்னையுமே பறையனென்று தள்ளலாமோ
மட்டமரும்பூங்குழல் வாலாம்பிகைப்பெண் / வங்கிஷத்தி லுதித்த சம்பவனு னானே.

வேஷப் பிராமணர்களால் பௌத்தர்களைப் பறையரென்று தாழ்த்திவந்தப் பெயரை விவேகிகள் கண்டிடித்து வேஷப்பிராமணர்ப் பொய்ப் போதங்களை விளக்கி யவற்றுள் சொற்ப விவேகிகள் தெரிந்துக்கொண்ட போதிலும் கல்வியற்றப் பெருங்குடிகளைத் தங்கள் வழிப்படுத்திக் கொண்டு பறையரென்னும் பெயரை பலவகையாலும் பரவச்செய்துவந்தார்கள்.

அதாவது பறைப்பருந்து பாப்பாரப் பருந்தென்றும், பறைமயினா பாப்பார மைனாவென்றும், பறைப்பாம்பு பாப்பாரப்பாம்பென்றும், இப் பெயரை மறவாமல் பரவச் செய்ய வேண்டிய உபாயஞ் செய்தார்கள். நாயின் பெயரில் பறைநாயென்று மட்டும் கூறவைத்துப் பாப்பார நாயென்னும் வார்த்தையை வழங்காமல் நிறுத்திக் கொண்டார்கள்.

ஏனென்பீரேல் பாப்பார நாயென்றால் தங்களை இழிவுபடுத்து மென்பதேயாம்.

இதுவுமன்றி வேஷப்பிராமணர்கள் கல்வியற்றக்குடிகளை ஏமாற்றி பிச்சை இரக்கப்போகும் காலங்களில் எல்லாம் இப்பறையனென்னும் வார்த்தையைப் பரவச்செய்தற்கு பொய்சொன்னால் நான் ஒருபறையன், கொடாவிட்டால் நான் ஒரு பறையன் என்று வழங்கும் வார்த்தைகளையும் கற்பித்துவிட்டார்.

அக்கல்வியற்றக் குடிகளோ பொய்யே ஒருருவாகக் கொண்டிருந்த போதிலும், திருட்டே ஒருருவாகக் கொண்டிருந்தபோதிலும், வஞ்சகமே ஒருருவாகக் கொண்டிருந்தபோதிலும், மோசமே ஒருருவாகக் கொண்டிருந்த போதிலும் தங்களுடைய துற்செயல்களையும் துற்குணங்களையும் கவனியாமல் பறையன் என்னும் மொழியை மட்டிலும் இழிவாக உபயோகித்து வருகின்றார்கள்.

இதுவுமன்றி பௌத்தமார்க்கத்தைத் தழுவிய நந்தனென்னும் ஓரரசன் இருந்தான். அவன் பெயரைக் கொண்டே நந்தனென்னும் பறையனிருந்ததாகப் பொய்ப்புராணத்தையும் பொய்க்கீர்த்தனையும் ஏற்படுத்திப் பரவச்செய்ததுமன்றி பொய்ச்சொல்லா அரிச்சந்திரன் கதை என்னும் பொய்ப்புராணம் ஒன்று ஏற்படுத்தி புத்தர் வம்மிஷ முதியோன் வீரவாகுச் சக்கிரவர்த்தியை சுடலை காக்கும் பறையனென்று ஏற்படுத்தி கூத்துகளாடி தமிழ்நாடெங்கும் பரவச் செய்தார்கள்.

கபிலர் இயற்றினாரென்னும் பொய் அகவலொன்று ஏற்படுத்தி அதிலும் பறையன் என்னும் பெயரைப் பரவச்செய்தார்கள். சுத்தமாகியத் திரிக்குறளில் அசுத்தவேஷப் பிராமணன் பொய்க்கதையை எழுதி அதனிலும் பறையன் என்னும் பெயரைப் பரவச் செய்தார்கள்.

காரணம் யாதென்பீரேல் ஐயர் வார்த்தையை ஐயம் பெருமாள் வார்த்தை போல் எண்ணிக் கொள்ளும் கல்வியற்றவர்களாதலின் தங்களிடமுள்ள நீச்சச் செயல்களைக் கவனியாமல் பறையன் என்னும் வார்த்தையை மட்டும் பரக்க உபயோகிக்கின்றார்கள்.

இதுவுமன்றி பௌத்தர்களை நசிக்கிவிட்டால் பௌத்த மார்க்கம் தானே நசிந்துவிடும். அப்போது நம்முடையப் பிராமண வேஷங்களும் பொய்வேதப் புரட்டுகளும் நிலைத்து நாமும் சிறப்படைந்து விடலாம் என்று எண்ணி பௌத்தர்களை சுத்தசலங்களை மொண்டுகுடிக்கவிடாமலும் வண்ணார்களை வஸ்திரம் துவைக்கவிடாமலும் இடுக்கங்கள் செய்துக் கொண்டு வந்ததுமன்றி பண்ணை வேலைச் செய்துவந்தவர்களை ஒருநாள் முழுவதும் வேலைவாங்கி அரைவயிறு கஞ்சேனுஞ் சரிவரக் கொடுக்காமல் எலும்புந் தோலும் விகாரரூபமுங் காணவைத்துக் கொண்டு அன்னியதேசங்களிலிருந்து இவ்விடம் வந்து குடியேறியுள்ள மகமதியர் களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இவர்களைக் காண்பித்து இவர்கள் தாழ்ந்த சாதிபறையர்கள் இவர்களை நாங்கள் தீண்டுகிறதுமில்லை அருகில் சேர்க்கிறதும் இல்லை என்று சொல்லி அவர்களையும் அருவெறுக்கச் செய்து வேஷபிராமணர்களே இத்தேசத்துள்ள வர்களுக்கு பெரியசாதிகள் என்று சொல்லிக் கொண்டு நூதனமாகக் குடியேறியவர்களிடஞ் சென்று பாஷைகளில் ஏதேனும் கற்பிக்கப் போனபோதிலும் இப்பறையனையே முந்தி இழிவடையக் கூறி பின்பு மற்ற போதகங்களைச் சொல்லிவருவது வழக்கமாயிருந்தது.

இத்தகையக் குறூர செயல்களினால் பௌத்த கூட்டத்தோர் யாவருஞ் சுகநிலை தவறி க்ஷீணதிசை அடைந்திருந்தபடியால் நூதனமாகக் குடியேறியவர்களும் இவர்களை அவமதித்து வேஷப்பிராமணர்களால் பறையன் என்று அவமதிக்கப்படும் காரணங்களை விசாரிக்காமலும் இதன் விவரங்களைத் தெரிந்துக் கொள்ளாமலும் வேஷபிராமணர்களின் தந்திர சொற்களை மேற்கொண்டு இந்துதேசத்தோர் வேதம் யாதென்றுக் கேட்க ஆரம்பித்ததின் பேரில் பௌத்ததன்மத்தைச் சார்ந்த வேதங்கள் யாவும் விளங்காமல் வேஷப்பிராமணர்கள் வேதம் வெட்டவெளியாக விளங்கியது.

- 1:48; மே 13, 1908 -

யாதெனில் இந்துக்கள் வேதங்களை அறிய வேண்டும் என்று அவாக்கொண்டு தேடிய கர்னல் போலியர், சர் ராபர்ட் சேம்பர், ஜெனரல் மார்ட்டீன், சர் உல்லியம் ஜோன்ஸ், மிஸ்டர் கோல்புருக் இவர்களுக்கு பலப்பெயர்களால் ஓலைகளில் எழுதிக் கொடுத்து இவைகள் தான் எங்கள் வேதங்கள் என்று கூறியதுமன்றி, இத்தகைய வேதங்களை எழுதியவர்களின் சிரேஷ்ட உற்பவத்தை மநுஸ்மிருதி என்னும் நூதன சாதி உற்பவ நூலில் வரைந்து வைத்தார்கள்.

ரிஷி பஸ ருங்கோம் ருகோஜாத / கௌசிகோகாதிநந்தன
ஜம்புகோ ஜம்புகோத்பத்தி / கௌதமோ கௌதசம்பவ
வால்மீகோ பரோத்பத்தி / அகஸ்திய கும்பகம்பவ
மியாசோலுப்த சம்பூதோ / வசிஷ்டா வூர்வசிசுத
நாரதோப் சகிபுத்திரோ / கௌண்டன்யோ முண்டகிசுத்
மதங்கஸ்ய மதங்கஸயாத் / மாண்டவ்யோ மண்டுகிசுத
சாங்கியாசம்ச சம்பூதோ / கார்க்கேயோ கார்த்தவசுத
சுநகிசுற்ப சம்பூதோ / சௌனகாதி மஹாரிஷி.

இதன் சுருக்கமாவது தவளை வயிற்றிலும், நாயின் வயிற்றிலும், நரியின் வயிற்றிலும், கழுதையின் வயிற்றிலும், மான் வயிற்றிலும், பசுவின் வயிற்றிலும், மனிதர்கள் பிறந்து இவ்வேதங்களை எழுதினார்கள் என்பதேயாம்.

இதுவுமின்றி இவ்வேதத்தை ஓரசுரன்கொண்டுபோய் சமுத்திரத்தில் ஒளித்து வைத்ததை இவர்கள் கடவுள் போய் கொண்டுவந்தார் என்று கூறியிருக்க அது ஒரு கட்டும் ஒருருவுமின்றி பலர்கள் எழுதிகொண்டு ஐந்து துரைமக்களிடம் கொடுத்திருப்பதினாலும், அது காலங்களுக்குக்காலம் மாறுபட்டே கிடைத்திருக் கின்ற படியாலும் இவ்வேதங்களுள் பாரீசு சாதியாரின் சரிதங்களும் புத்ததரும நீதிகளும் கலந்திருப்பது நீங்கலாக சாமவேதத்துள் துவஷ்ட பிரமாவே சங்கராச்சாரியாக வந்திருப்பதாக சித்தூர் ஜில்லாத் தீர்ப்பில் வெளிவந்திருப்ப தினாலும், இருக்குவேதத்துள் மாதவாச்சாரியின் குருவும் அவ்வேதத்துள்ள சில கீதைகளை வரைந்துள்ளதினாலும் சங்கராச்சாரி மாதவாச்சாரி இவர்களின் காலங்கள் சொற்பமாக விளங்குகின்றபடியாலும், ஆளில்லா உபதேசம் அதர்வணனுக்குப்

போதித்து அதினால் அதர்வணவேதம் என்னும் பெயர் கண்டிருப்பதினாலும், வேதங்களின் சிக்கை அறுத்தவரும் வியாசர், புராணங்களை உண்டு செய்தவரும் வியாசர். கைம்பெண்களைச் சேர்ந்து பிள்ளைகளை உற்பத்திச் செய்து அவர்கள் கதையாகும் பாரதத்தை எழுதியவரும் வியாசர். இத்தகைய பாரதப்போர் முடிவில் தோன்றிய பரிச்சித்துவின் மகன் ஜெனனமே ஜெயனென்பவன் குருவின் சங்கதிகளும் எசுர்வேதத்துள் எழுதியிருப்பதினாலும், தற்காலம் கிறீஸ்துவேதம் என்று வழங்கும். மோசே எழுதியுள்ள முதலாகமத்துள் பராபரன் தண்ணரின்பேரில் அசைவாடிக் கொண்டிருந்தாரென்று எழுதியிருப்பது போல், யசுர்வேத 114-வது பாகத்தில் இந்த உலகம் ஆதியில் சலமாக இருந்ததாகவும் அந்த சலத்தின்பேரில் அவர்களுடைய சிருஷ்டி கர்த்தா அசைவாடிக்கொண்டிருந்தார் என்றும் உலகமே சலமாயிருந்து ஒருவரும் அறியாமல் தோன்றிய பூமியை இவர்கள் சிருஷ்டி கர்த்தா பன்றி உருவெடுத்துத் தாங்கியிருந்தார் என்றும், அப்பன்றி எதன்பேரில் நின்றதென்று விளங்காததினாலும், யசுர்வேத 129-வது பாகத்தில் வேதாந்ததை போதித்தவர் சுவேதாசுவத்திரர் என்று கூறியிருக்க சங்கரவிஜயத்தில் சங்கராச்சாரி வேதாந்தங் கூறினார் என்று எழுதியிருப்பதினாலும், உபநிடதங்களையும் அவ்வேதங்களுள் எழுதிவைத்திருப்பதினாலும், சாமவேதம் 131-வது பாகத்தில் சாமவேதியர்க் கிரியைகளை ஓதுதலினால் சாமவேதம் என்று குறித்திருப்பதினாலும், சாமவேதத்தை ஓதுதலினால் சாமவேதியரானார்களா, அன்று, சாமவேதியர் கிரியைகளைக் கொண்டு சாமவேதம் உண்டாயிற்றாவென்று விளங்காததினாலும், சாமவேதம் 141-வது பாகத்தில் புத்தபிரான் பரிநிருவாணமடைந்த நெடுங்காலங்களுக்குப் பின்பு தோன்றிய உத்தாலகன் கதைகள் அடங்கியிருக்கின்றபடியாலும், இவ்வேஷபிராமணர்களின் வேதங்களும் புராணங்களும் மநுஸ்மிருதி பாரதம் இராமாயண முதலிய நூற்கள் யாவும் புத்தபிரான் பரிநிருவாணமடைந்த நெடுங்காலங்களுக்குப் பின்பே தோன்றியுள்ளது என்பது துணிபாம்.

இவைகள் வேதங்களில் உள்ள மற்றும் சங்கதிகளை விவரிக்கின் வீண்சங்கை வளரும். பிராமணவேதம் சைவம் வைணவமென நூதனமாகத் தோன்றியுள்ளவை களுக்குப் பின்பு இன்னும் நூதனமாகத் தோன்றியுள்ள பிரமோசமாஜம், வேதாந்தம், ஆரியமதமென வந்துள்ளவர்களில் சிலர் புத்ததன்ம அஷ்டாங்க மார்க்கத்துள் சீலம், சமாதி, பிரக்ஞை என்னும் நிலையால் தோன்றும்.

பிரக்ஞானம் பிரமம் / அகம்பிரமாஸ்மி / அயமாத்ம பிரமம் / தத்துவமசி.

என்னும் நான்கு சுத்தோதய சத்தியதானத்தை நான்கு பேதவாக்கியங்கள் என்று கூறியபோதினும் அதனுட்பொருள் பிரக்ஞா தெளிவின் பிற்போதமாதலின் நான்கு பேதவாக்கியங்களுக்கும் அதனுட் பொருளாம் கர்மபாகை, அர்த்தபாகை, ஞானபாகையாகும் அறம், பொருள், இன்பம் நிகழாமல் அநார்த்தத்தால் அழியும். இத்தகைய பேத வாக்கியங்களைக் கொண்டு குருடனுக்குக் குருடன் வழிகாட்டுவது போல வேஷபிராமணர்களுக்கு உதவியாய வேஷஞானிகள் தோன்றி ஞானப் பிரகாசமுற்றிருந்த தேசத்தை அஞ்ஞானவிருள் அடையச்செய்து விட்டதினால் ஞானிகளின் தோற்றமும் அவர்கள் தெரிசனமும் கிடையாமல் போய்விட்டது.

இப்போதும் இவ்வேஷபிராமணர்கள் எங்கள் வேதங்களும் நிலையுள்ளது வேதாந்தங்களும் நிலையுள்ளது என்று வெளிவருவார்களாயின் காசியில் விஷ்ணுவே பரமென்று கரமற்ற வியாசர், சிவனே வியாசராகவும் சங்கராச்சாரியாகவும் வந்துள்ள அவதாரபேதங்களாலும் போத பேதங்களாலும் இவர்கள் வேதங்களும் நிலையற்றது வேதாந்தங்களும் நிலையற்றதென ரூபிக்கக் கார்த்திருக்கின்றோம்.

கடுவெளிசித்தர்

பொய்வேதந் தன்னைப்பாராதே - அந்த / போதகர் சொற்புத்தி போதம் வோராதே (பாபஞ்) - 1:49; மே 20, 1908 -

20. கோயிலும் ஆலயமும்

வினா : அடியிற் குறித்துள்ள வாசகங்களின் அந்தரார்த்தங்களை விளக்கும்படிக் கோறுகிறேன்.

ஆலயந்தொழுவது சாலவுநன்று. / கோவிலில்லாவூரில் குடியிருக்க வேண்டாம்.

விடை : விசாரிணைப்புருஷர்கள் ஒவ்வொருவரும் இத்தகைய சங்கைகளைக் கேட்டுத் தெளிவதே விவேக விருத்தியாம். அங்ஙனமின்றி சொன்னதைச்சொல்லுங் கிளிபோல் சொல்லித் திரிவது (ஹாமில்டன்) வாரவீதியை (அம்மட்டன்) வாரவீதி என்று வார்த்தை கெட்டதுமன்றி பொருளுங்கெட்டு நிற்பதுபோலாகும். ஆதலின் தாமுசாவியுள்ள வாசகங்களின் பொருளும் அவ்வாறே கெட்டு வழங்கிவருகின்றது.

வாசகங்களின் பொருளறிய வேண்டியவர்கள் முன் வாசகச் சீரின் அந்தரார்த்தம் உணர்ந்து பின் வாசகச் சீரின் பொருளுரைத்தல் வேண்டும்.

அதாவது

அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம் - தாய் தந்தையர்களே முன்கண்ட தெய்வங்களாவர். அவர்களைத் தொழுவோர்,

ஆலயந் தொழுவது சாலவு நன்று

தாய்தந்தையரை திரிகரணங்களும் ஒடுங்கி வணங்குதல் எக்காலுஞ் சுகத்தைத் தரும் என்பதாம். ஆ என்னும் நெடிலுயிரின் பொருள் பாலிபாஷையில் மனோவாக்கு, காய்மென்று கூறப்பட்டிருக்கின்றது. இத்தகைய மனோவாக்குக் காயங்கள் என்னும் திரிகரணம் ஒடுங்கத் தொழுதலே முழு கும்பிடாகும். அதன் பலனே சாலவு நன்றாம்.

மைந்தன் தாய்தந்தையரைத் திரிகரண லயமுறச் சதா வணங்கி வருவானாயின், அத்தொழுகையைக் கண்டுவரும் இவன் மைந்தன் இவனை சதா வணங்கி சுகத்தில் வைப்பான். இவ்வகை ஆசாரங்களே குலத்தில் பெருகி குலமுஞ் சீர்பெறும். இதன் அந்தரார்த்தங்கொண்டே நமது அம்மை சாலவு நன்றென வைப்புறுத்திக் கூறியிருக்கின்றாள்.

கொற்றவனோடு எதிர்மாறு பேசவேண்டாம். இதன் பொருள் அரசனுடைய வார்த்தைக்கு எதிர்மொழிக் கூறவேண்டாம் என்பதாம்.

கோயிலில்லாவூரில் குடியிருக்கவேண்டாம். இதன் பொருள் அரசன் மனையில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதாம். அதாவது ஓர் அரசனில்லாத ஊரில் குடியிருப்பதினால் சத்துருக்களின் துன்பமும் கள்ளர்களின் பயமும் மிகுந்து விசாரிணையின்றி பாழுறும். ஆதலின் சத்துருக்களின் துன்பமும் கள்ளர்களின் பயமும் இல்லாமல் சுகமாக வாழவேண்டியவர்கள் அரசனிருக்கும் ஊரில் குடியிருக்க வேண்டும் என்பது கருத்து.

இதன் பொருளறியாதோர் இத்தேசத்துள் நூதனமானக் கல்லைநட்டு விளக்கெண்ணெய் வார்த்துத் தொழுமிடங்களுக்குக் கோவிலென்றும், ஆலயம் என்றும் பெயரிட்டுக் கொண்டார்கள். அதற்கு அர்ச்சகர்களாக இருப்பவர்கள் வேஷபிராமணர்கள் ஆகையால் அவர்கள் வார்த்தை ஐயர், பெரியவர் வார்த்தையென்று எண்ணி சகலரும் ஆமோதித்துச் சரிசரி என்று சொல்லி வருகின்றார்கள்.

இத்தகைய சொற்களின் சுயப்பொருட்கள் யாவும் புத்த சங்கத்தோர் உரைக்கல்லில் விளங்குமேயன்றி வேஷபிராமணர்கள் வெறும்பொய்யால் விளங்கும் என்பது வெட்டவெளியேயாம்.

கோத்திரம் அறிந்து பெண்கொடு, பாத்திரம் அறிந்து பிச்சையிடு என்பது பௌத்தர்கள் முதுமொழியாம். (இதன்பொருள்) அரசன் வல்லமெய் அறிந்து பெண் கொடு, புத்தசங்கத்தோருக்கு விமலர் தந்த ஓடு தெரிந்து பிச்சையிடு என்பதேயாம்.

- 1:47; மே 6, 1908 -

21. அரிச்சந்திரன் மெய்யனென்னுங் காதையும் பொய்யனான விவரமும்

அயோத்தியாபுரியை அரசாண்டுவந்த திரிச்சங்கு மைந்தன் அரிச்சந்திர னென்னும் ஓர் அரசன் இருந்ததாகவும் அவன் பொய் சொல்லாவாசகன் என்றும் ஓர் புராணம் இயற்றி இருக்கின்றார்கள்.

இதற்குமுன்னுள்ள சரித்திராதாரங் கிடையாது. இதன் காலவரையோ 384-வருடங்களுக்குமுன் சாலிவாகன் சகாப்தம் 1446-வருடம் நெல்லூர் ஆசுகவி - வீரகவிராயரால் இயற்றியதாகக் குறிக்கப்பட்டிருக்கின்றது. செய்யுட்களின் பேதங்களோ புராதனப் புலவர்கள் செய்யுட்களாகக் காணாமல் தற்காலப் புலவர்கள் செய்யுளாக விளங்குகின்றது.

எவ்வகையதென்னில் - செந்தண்மெய் உடைய அறஹத்துக்களை வடமொழியில் பிராமணர்கள் என்றும், தென்மொழியில் அந்தணர்கள் என்றும் பூர்வச் செய்யுட்களில் வழங்கியிருக்கின்றார்கள். இவ்வரிச்சந்திர புராணத் தமிழ்ச் செய்யுளுள் பிராமணன் எனக் கூறியிருக்கின்றது.

அரிச்சந்திரபுராணம் - நகரச்சிறப்பு

கிள்ளைபாடுவ கீதங்கள் சாரிகைப் / பிள்ளைபாடுவ வேதம் பிராமணர்
கொள்ளைபாடுவ ரின்னிசைக் கோதையர் / வள்ளைபாடுவர் மன்னவன் வன்மையே.

இப்புராணச் செய்யுட்களானது புத்ததன்மகாவியச் செய்யுட்களைப் பார்த்துக் கொண்டே எழுதியிருக்கின்றார்களன்றி அவர்கள் மதசம்மதமாகவும் எழுதியதைக் காணோம்.

அதாவது இவர்கள் மார்க்கமோ பசுமாடுகளை நெருப்பில் இட்டுக் கொன்று சுட்டுத்தின்னும் படியானவர்கள் இத்தகையக் கொலையாளர்கள் பஞ்சசீலத்தைப் பரக்க பாடியிருக்கின்றார்கள்.

அரிச்சந்திரபுராணம் - நாட்டுப்படலம்

கள்ளங் கொலைகட் பொய்க்காமமென்றைந்து மற்றார்க்
குள்ளந் தெளிந்தோர்தரு முத்தான மென்னப்
பள்ளந்திடர்மால் வரை கானக பக்கமெங்கும்
வெள்ளம்பெருகிப் பரந்தோடி விறைந்ததன்றே.

இத்தகையப் புராணத்திலுள்ள சரித்திர சுருக்கம் யாதெனில், விசுவாமித்திரர் என்பவருக்கும் வசிஷ்டர் என்பவருக்கும் ஓர் தருக்கம் உண்டாயதாகவும் அத்தருக்கத்தில் பொய்சொல்லா மனிதன் உலகத்தில் ஒருவனுமில்லை என்று விசுவாமித்திரர் கூறியதாகவும் அரிச்சந்திரர் என்னும் ஓர் அரசனிருக்கின்றான் அவன் பொய்சொல்லாவாசகன் என்று வசிட்டர் கூறியதாகவும் அதன்பேரில் அவர்களிருவரும் அவ்வரசனை சோதிக்க எத்தனித்ததாகவும் அவன் பொய்சொல்லாமலே துன்பங்களை அநுபவித்தான் என்றும் புராணத்தை விரித்திருக்கின்றார்கள்.

பொய் என்பது எது, மெய் என்பது எது என்று கண்டு வாதித்திருக்கின்றார்கள் என்று ஆராயுங்கால் பாப்பானுக்குப் பொருள் கொடுப்பதாகச் சொல்லி அதை மறுக்காமல் பல கஷ்டங்களை அநுபவித்துப் பொருளைக் கொடுத்துவிட்டதே மெய் என்றும், இரண்டு பறைச்சிகள் கேட்டதைக் கொடுப்போம் என்று சொல்லி அவர்கள் கேட்டக் குடையைக் கொடுக்காமல் மறுத்துவிட்டதைப் பொய் என அறியாமல் படாடம்பம் காட்டிவிட்டார்கள்.

இவ்விரு பறைச்சிகளின் உற்பவமும் அவர்கள் நிறத்தையும் பாருங்கள்.

விசுவாமித்திரனின் முதல்பிறப்பு அரசவம்மிஷத்தில் தோன்றி தனது ஞான விருத்தியால் பிராமணனாக விளங்கியதாய் அவர் சரித்திரங் கூறுகின்றது. அத்தகைய புருஷன் சுவாசத்திலிருந்து இரண்டு பெண்கள் பிறந்தார்களாம். அவ்விரண்டு பெண்களே கறுப்புநிறமமைந்த பறைச்சிகள் என்று வரைந்திருக்கின்றார்கள்.

அரிச்சந்திரபுராணம் - சூழ்வினைகாண்டம்

பேச்சினிற் கினிபோற்சிங்கா / பெயர்ச்சியிற் பெடைபோற்செங்கை

வீச்சினின் மின்போற்சிற்ற / மிகுதியான் முநிவன்விட்ட
மூச்சினிற் பிறந்துரண்டு / மோகினி மாதராரு
நீச்சினி நிலைத்துநிற்கு / நீலமென் கொடிபோல் நின்றார்.

இவ்விரண்டு பெண்களையும் அரசனிடம் கொண்டுபோய் அவர்களை விவாகஞ் செய்துக் கொள்ளும்படிக் கேட்டபோது அவற்றை மறுத்த விவரம்.

அரிச்சந்திரபுராணம் - சூழ்வினைகாண்டம்

கண்ணைவேண்டிலு மீகுவன் காக்கின்ற
மண்ணைவேண்டிலும் வாழ்வுடனீகுவன்
பண்ணைவேட்லன் செஞ்சொற்பறைக்குலப்
பெண்ணை வேண்டிலன் யானென்று பேசினான்.

என்னுடையக் கண்ணைக் கேட்டாலும் கொடுப்பேன், என் அரசாட்சியுடன் பூமிமுழுதிலுங் கேட்டாலுங் கொடுப்பேன், இப்பறைச்சிகளை வேண்டேனென்று கூறிய அரசனை இவ்விரு பெண்களும் அரசனது வெள்ளைக்குடையை மட்டிலும் கேட்டார்கள். தனது தேசத்தையே கொடுப்பேன் என்று சொன்ன அரசன் அவர்கள் கேட்ட குடையைக் கொடுக்காமல் துறத்திவிட்டான்.

அரிச்சந்திரபுராணம் - சூழ்வினைகாண்டம்

பழவழி யெழுதாநீதிப் / பானுவின் குலத்துவேந்தர்
வழிவழி வந்தகொற்றக் / கவிகையை வழங்கமாட்டேன்
விழிவிழி கண்டவேறு / கவிகையை விளம்பிலுங்கள்
மொழிவழி தருவேனென்று / மொழிந்தனன் மன்னர்கோமான்.

என் கண்ணைக் கேட்டாலும் கொடுப்பேன், என்தேசத்தைக் கேட்டாலும் கொடுப்பேன் என்று கூறிய அரசன் தேசத்தில் நாட்டியுள்ளக் குடையைக் கொடுக்காத விஷயத்தை வாக்குத் தவறு என்றும் பொய்மொழி என்றும் கூறாமல் பாப்பானுக்குக் கொடுப்பேன் என்று சொன்ன இல்லா திரவியத்திற்கு மட்டிலும் அரசன் இணையில்லா பாடுபடுகிறான்.

- 1:50; மே 27, 1908 -

இரண்டு கறுப்புப் பறைச்சிகள் கேட்டக்குடையைக் கொடுக்காத மன்னன் அந்தணனென்னும் விசுவாமித்திரனுக்கு தன்னுடைய தேசங், குடை, கொடி முதலியவையுங் கொடுத்து விட்டான்.

அரிச்சந்திரபுராணம் - சூழ்வினைகாண்டம்

அந்தணாளனை நோக்கிய வண்ணலும்
உந்த மக்களுரு எலன் வேண்டிலேன்
எந்த நாடு மிருநிதி குப்பையும்
தந்தனன் மொழி தப்புவதில்லையே.
குடைதந்தேனீள்கொடி தந்தேனென்குழுவாய்
படைதந்தேன ற்கனகத்திண்டேர் பரிதந்தேன்
தடைதந்தேனின் றடியேனே காத்தவனே நீ
விடை தந்தேகென்றடிமேற் பரவிவீழ்வானை.

அரிச்சந்திரன் தன்னுடைய நாடுநகரங்கள் யாவையும் அந்தணனுக்கு தாரைவார்த்துக்கொடுத்துவிட்டு வேற்றுநகரை நாடிச்செல்லுங்கால் அரசாட்சியி லிருக்கும் போது யாகத்திற்குக் கொடுப்பேன் என்று சொன்னப் பொருளை அந்தணன் வந்து கேட்கும்போது நாடு-நகரங்-குடை-கொடி-தனதான்யம் யாவையும் கொடுத்து மனைவி மகவுடன் வெறுமனே சென்ற அரசன் திரவியங்கொடுப்பேன் என்று சொன்னவாக்கு தவிராமல் அத்திரவியத்தைக் கொடுப்பேன் என்று ஒப்புக்கொண்டானாம்.

யாதொருகாசுங் கையிலில்லாத அரசன் எவ்வளவு திரவியங் கொடுப்பதாக ஒப்புக்கொண்டான் என்றால் ஓர் யானையை நிறுத்தி அதன்மீதோர் மனிதன் நின்று கவண்கல் எறிந்து அக்கல் ஆகாயத்தில் எவ்வளவு உயரம் போகின்றதோ அவ்வளவு திரவியக் குவியல் கொடுப்பதாக ஒப்புக்கொண்டானாம்.

அரிச்சந்திரபுராணம் - நகர்நீங்கிய காண்டம்

உள்ளிய தீவினையனைத்துந் தனித்திருத்தி
வகைவகையே யுரைத்து நீபோய்

அள்ளியிடும் பொருள்கவராதானையின்மேற்
கவண்சிலைபோ மளவுந்தந்தால்
கொள்ளுதிநீ பின்போன கூலியையும்
பெறுதியெனக்கூறித்தீய
வெள்ளிதனை யுடன்கூட்டி மீண்டுமழைத்
தொருவாய்மெய் விளம்பலுற்றான்.

இத்தகைய யாகத்திற்கு வேண்டிய பேராசைப்பொருளின் பரிமாணத்தைப் பாருங்கள். ஓர் யானையை நிறுத்தி அதன் உயரம் திரவியத்தைக் கொட்ட வேண்டு மானால் எவ்வளவு சுற்றளவுள்ள திரவியத்தைக் கொட்டினால் யானையின் உயரம் குவியும் என்று கணக்கெடுத்துக் கொண்டால் யானையின்மீது ஓர் மனிதன் நின்று கவண்கல்லெறிந்து எவ்வளவு உயரம் போகின்றதோ அவ்வளவு திரவியங் கொட்ட வேண்டுமானால் எவ்வளவு சுற்றளவு திரவியங் குவியல் வேண்டும். அதுவுமின்றி கவண்கல் இவ்வளவு உயரம் சென்றதெனக் கூறு நூல் ஆதாரமெது. இம்மேறு நிறையற்ற உயரமும் பரிமாணமற்ற திரவியக்குவியலை பார்ப்பான் கேட்கவும் கையில் ஒருகாசுமில்லா அரசன் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு வாக்குத் தவிராமல் தன்மனைவி மகவை அவ்வளவு திரவியத்திற்கு விற்றுவிட்டானாம். அப்பணக்குவியலை எவ்விடங்கொட்டி அளவுபார்த்ததும் எடுத்துப்போனதும் யாரும் அறியார்கள்.

மேற்கூறியப் பொருள் யாவும் பெற்றுக்கொண்ட பார்ப்பான் தான்கூட சுற்றிவந்ததற்குக் கூலிவேண்டும் என்று கேட்க அதற்காய் அரசன் வீரவா கென்னும் புலையனுக்கு அடிமையாகி பதினாயிரம் பொன் கொடுத்தானாம்.

அரிச்சந்திரபுராணம் - காசிகாண்டம்

வாரமேதகு மந்திரி மன்னனைத் / தூரமேவிலை கூறிய சொற்கேளா
வீரவாகுவெனும் பெயர்மேவினான் / சூர நீர்மைப் புலைமகன் தோன்றினான்.
ஆயினென்றென் றமைச்சனுமவ்வயின் / மேவினன்னினி விற்பனுனக்கென்றான்
ஈயு நல்விலை யேதெனப் பொன்பதி / னாயிரமென் றமைச்ச னியம்பினான்.

இத்தகைய பார்ப்பானுக்குக் கொடுப்பேனென்ற சொன்மொழி தவிறா அரிச்சந்திரன் தன்தேசத்தை விசுவாமித்திரர்க்குக் கொடுத்துவிட்டு வேற்றுநா டேகுங்கால் மந்திரிப் பிரதானிகள் யாவருஞ்சூழ்ந்து அரசனைநோக்கி மன்னே, மறுபடியும் எக்கால் வருவீர் என்று வினாவினார்கள். மன்னனவர்களை நோக்கி நான் மறுபடியும் இந்நாட்டில் வரமாட்டேன் என்று உறுதிவாக்களித்தான்.

அரிச்சந்திரபுராணம் - நகர்நீங்கிய காண்டம்

அக்காலத் தமைச்சரெல்லா மடல்வேந்த / னடிபோற்றியரசே நீமீண்
டெக்காலமெழுந்தருள்வ தென்றுரைக்க / வாங்கவரை யிருகணோக்கி
முக்காலங்களுமுணரு முனிவனுக்கின்று / யான்கொடுத்த மூதுர்தன்னில்
எக்காலமும் வருவதில்லை யென்றா / னமைச்சரெலா மேங்கிவீழ்ந்தார்

பொய்சொல்லா அரிச்சந்திரன் எக்காலமுந் தன்னாட்டுள் வருவதில்லை என்று வாக்களித்து மறுபடியும் நாட்டுள் வந்துசேர்ந்தான்.

அரிச்சந்திரபுராணம் - மீட்சிகாண்டம்

வள்ளலை முனிவன் கூட்டிவருகின்றவாறு கேட்டு
பள்ள முற்றும்பர் வெல்லாம் பரிசேபோல
வள்ளமு மகிழரோமஞ் சிலிர்ப்புற வூரிற் சேனை
வெள்ளமு மரசர்தாமும் வியந்தெதிர்கொண்டாரன்றே.

பதினாயிரம் பொன்னுக்குப் புலையனிடம் அடிமையுண்ட அரிச்சந்திரன் தனக்குக் கிடைக்கும் வாய்க்கரிசியை சமைத்துண்ணாமல் பசுமாட்டைப் புசிக்கச்செய்து சாணத்துடனும் கோமியத்துடனும் வெளிவந்து விழும் அரிசியைக் குத்தி சமைத்துண்பானாம்.

அரிச்சந்திரபுராணம் - காசிகாண்டம்

மண்டலத் திறைவனுயத்து / வைத்தவாய்க் கரிசிதன்னை
கொண்டுபோய் சுரபிக்கீயந்து / கோமயத்துடனே வீழ்ந்த
தண்டுல மெடுத்துக்குத்தி / சமைத்தினி துதவச்சோ
றுண்ணுவணுரைந்தான் பின்னை / யுற்றவ ரெடுத்துறைப்பாம்.

- 1:51; சூன் 3, 1908 -

அரிச்சந்திரபுராணம் ஏற்பட்ட விதமும் அதிலுள்ளக் கதைகளின் சாராம்சமும் நமதன்பர்கள் ஒவ்வொருவருக்கும் விளங்கியபோதினும் அதினந்தரார்த்தத்தை அவ்விடம் விளக்க வேண்டியவனாய் இருக்கின்றேன்.

அதாவது - இத்தேசத்திருந்த இந்திரவியார அதிபதிகளாகும் பிராமணர், அந்தணரெனக் கூறும் அறஹத்துக்கள்போல் வேஷமிட்டுக் கொண்டு கல்வியற்றக் குடிகளையும் காமியமுற்ற சிற்றரசரையும் அடுத்து தாங்கள் நூதனமாகக் கற்றுக்கொண்ட வடமொழி சுலோகங்களில் சிலதைக்கூறி, நாங்கள்தான் பிராமணர்கள், நாங்கள்தான் அந்தணர்கள் என்று மொழிந்து யாசகசீவனஞ் செய்துவந்தவர்களுக்கும், இத்தேசப் பூர்வக்குடிகளும் சாக்கைய வம்மிஷ வரிசையோரும் குருபரம்பரையோருமாகிய திராவிட பௌத்தர் களுக்கும், நேர்ந்துவந்த விரோதத்தினால் வேஷப்பிராமணர்கள் பூர்வக்குடிகளாம் பௌத்தர்களை பறையர்கள் என்றுத் தாழ்த்தியும் பலவகைத் துன்பங்களைச் செய்துவந்ததும் அல்லாமல் இப் பறையன் என்னும் பெயர் பரவவேண்டிய கட்டுக்கதைகளை ஏற்படுத்திக் கொண்டுவந்ததுமன்றி இவர்களை இழிந்தோர் என்று கூறி பலரும் அருவெறுக்கத்தக்க உபாயங்கள் செய்துவந்தவற்றை முன்பே விளக்கியிருக்கின்றோம். அவைகளைத் தழுவிய ஈதோர் கட்டுக்கதை என்பதை விசுவாமித்திரன் சரித்திரத்தால் வெள்ளென விளங்கிக்கொள்ளலாம்.

விசுவாமித்திரன் என்னும் அரசன் தனது தபோபலத்தால் பிராமணன் நிலையை அடைந்து தனது நாசியின் சுவாசத்தால் இரண்டு பெண்களை உற்பத்திச் செய்தானாம். இங்ஙனம் சுக்கில சுரோணிதமின்றி உற்பத்தியானதென்றால் விவேகிகள் ஏற்பதில்லை. அங்ஙனம் ஞானியாயதால் தனது சித்தினால் ஏற்படுத்தியிருக்கலாம் என்றேற்கினும் சிரேஷ்டமுற்ற ஞானியின் சுவாசத்தில் தோன்றியப் பெண்கள் இழிந்தகுலப் பறைச்சிகளாவரோ, நிறமுங் கறுப்புநிறம் வாய்க்குமோ.

இழிந்தகுலப் பறைச்சிகளாகவும் கறுப்புநிறப் பெண்களாகவுந் தோன்றியது எதார்த்தமாயின் இருபெண்களை ஈன்ற விசுவாமித்திரனும் பறையன் என்றோ. அப்பறையனை குருவாக வணங்கி நாடு நகரம் யாவையுந் தந்த அரிச்சந்திர அரசனும் பறையனன்றோ. அப்பறையனாகும் அரிச்சந்திரன் பின்னே சென்று வெட்டியானுக்கு விற்று அப்பணத்தைப் பறித்துக் கொண்ட வெள்ளியென்னும் அந்தணனும் பறையனன்றோ. இத்தியாதி உற்பவ தோற்றங்களை உணராமல் அற்பமதியால் பறையர்கள் என்னும் பெயரைப் பரவச்செய்தற்கும் அப்பெயரை ஏனையோர் இழிவாக மதித்தற்கும் இக்கட்டுக் கதை எழுதினார்கள் என்பதை எளிதில் அறிந்துக் கொள்ளலாம். அதுவுமின்றி பறைச்சிகள் கேட்டக் குடையைக் கொடுக்காமல் சாக்குபோக்குச் சொன்ன மன்னன் பார்ப்பான் கேட்டவுடன் கொடுத்துவிட்டது பரிசாமோ, பறையனென் போனை இழிவு கூறிவருதற்கும் பார்ப்பான் என்போனை உயர்த்தி தானமீதற்கும் ஈதோர் உபாயமாகும்.

கேட்டதைக் கொடுப்பேன் என்று கூறியமன்னன் பறைச்சிகள் கேட்டக் குடையைக் கொடுக்காமல் விரட்டியது பொய்யன்று. பார்ப்பானுக்குக் கொடுப்பேன் என்று சொன்ன வாக்குத் தவறாமல் கொடுத்தது மெய்யேயாம். இத்தகைய மெய் பொய் வாக்கியத்தினும் பறைப்பொய்ப் பாப்பாரப்பொய், பறை மெய் பாப்பார மெய் இருக்கின்றாப்போல் தோன்றுகின்றது.

யாதென்பீரேல் இரு பறைச்சிகளுக்குக் கேட்டதைக் கொடுப்பேனென்று கூறி கொடாமல் விரட்டியதை பொய்யென ஏற்காமல் பாப்பானுக்குக் கொடுப்பேன் என்று சொல்லிக் கொடுத்ததை மெய்யென்று ஏற்பதினாலேயாம்.

பறையர்களை இழிந்தோர் என வகுத்துவிட்டபடியால் அவர்கள் மெய் மொழிகளும் இழிவடையும் போலும், வேஷப்பிராமணர்களை உயர்ந்தோரென்று வகுத்துவிட்டபடியால் அவர் மொழிவது பொய்மொழி யாயினும் உயர்ந்து போம்போலும்.

இத்தகைய உயர்வு தாழ்வினால் பறைச்சிகள் கோரிக்கையை மன்னன் ஏற்காமல் பாப்பான் சொல்லை ஏற்றிருக்கின்றான். அதுவுமன்றி தனதுதேசத்தை

விசுவாமித்திரனுக்கு தாரைவார்த்துவிட்டு வெளிநகரம் போகும்போது மறுபடியும் இந்நகருள் வரமாட்டேன் என்று உறுதி வாக்களித்த மன்னன் பின்னும் நகருள் வந்து சேர்ந்தான். இம்மொழி பொய்யாமெய்யா என்பதை அறிந்திலர்போலும். காரணம்:- மெய் என்பது இது பொய் என்பது இது என்னும் பேதம் இன்றி குடும்பிகளாகவும் பொருளாசை உள்ளவர்களாகவும் இருந்துக்கொண்டு தங்களைப் பிராமணர், பிராமணர் என்று பொய்சொல்லி கல்வியற்றர்களை வஞ்சித்து பொருள் பறிக்கப் பொய்யை மெய்யாகக் கூறித்திரிபவர்களாதலின் சாக்கையர் வம்மிஷ வரிசையோனும் புத்தபிரான் மூதாதையுமாகிய வீரவாகுச் சக்கிரவர்த்தியை சுடலைகாக்கும் பறையனென்று வகுத்து அப்பெயரைப் பரவச்செய்தற்கும் இழிவு கூறிவருவதற்கும் இவ்வரிச் சந்திரன் கட்டுக்கதையை ஏற்படுத்தினார்களன்றி பொய்மொழி யீதென்றும் மெய்மொழி யீதென்றும் உணர்ந்தியற்றினாரில்லை. மெய்யும் பொய்யு முணர்ந்தியற்றுவாரேல் வையகமுய்யும் நீதிநெறிகளைப் புகட்டி வாழ்வடையச் செய்வார்கள். அங்ஙனமின்றி பொய்யை மெய்யாகக் கூறி பேதையர்பால் பொருள்பறிப்போராதலின் சுவாசத்தால் வந்தபறைச்சிகள் கதையையும் சுடுகாட்டில் வாழும் பறையன் கதையையும் பரக்கத்தீட்டிப் பரவச் செய்யும் பொய் மூட்டையைக் கட்டி விட்டார்கள்.

இப்பொய் மூட்டையாம் அரிச்சந்திர புராணமானது வேஷப்பிராமணர் களுக்கு எதிரிகளாக நின்ற பௌத்தர்களை பறையர்களென்றழைத்து அப்பெயரைப் பரவச்செய்வதற்கும் அவர்களை இழிவடையச் செய்து பாழ்படுத்துவதற்கே இயற்றியுள்ளார் என்பது சத்தியம், சத்தியமேயாம்.

வேஷப்பிராமணர்களால் பறையனென்று தாழ்த்தப்பட்டவன் பதினாயிரம் பொன்படைத்தாலும் சுடுகாட்டில் காவலிருப்பதைவிட்டு நகருள் வரப்படாது என்பது அவர்கள் மநுதன்ம சாஸ்திர விதி.

இவற்றுள் புத்தபிரானுக்கு சங்க அறன் என்றும் சங்க மித்திரன் என்றும் சங்க தருமரென்றும் அனந்தம் பெயர்களுண்டு. இதிற் சங்கரரென்னும் புத்தரை சிந்திக்குஞ் சங்கத்தோர்களை சங்கரசாதிகள் என்று வகுத்து இவர்களே சுடலைக்காப்பவர்கள் என்று மநுநூலில் எழுதி வைத்திருக்கின்றார்கள். இக்கட்டுக்கதைகள் யாவும் பௌத்தர்களைப் பாழ்படுத்தி வேஷப்பிராமணத்தை விருத்தி செய்வதற்கேயாம். யாவரேனும் இவ்வரிச்சந்திரபுராணம் பொய்யன்று மெய் என்றே வெளி வருவாராயின் உள்ளப்பொய்கள் ஒவ்வொன்றையும் தெள்ளற விளக்கித் தீட்டிக்காட்டுவோம்.

- 1:52; சூன் 10, 1908 -

22. பிறவி சந்தேகிகாள்கேண்மின்

வினா : பதினெண்சித்தரில் ஒருவராகிய சிவவாக்கியர் பௌத்தமதத்தைச் சேர்ந்தவராகத் தோன்றிடினும் பௌத்தமதம் பிறப்புண்டென்று போதிக்கிறது. மேற்சொன்னபடி வாக்கியமோவெனில் பிறப்பில்லை எனக் கண்டிக்கிறபடியால் அதின் அந்தரார்த்தத்தை விளக்கவேணுமாய் கோறுகிறேன்.

ஜி.எம்., சாம்பியன் ரீப்ஸ்

விடை : பிறவிக்கடலைக்கடந்து நிருவாண சுகமடைவதற்கும் மாறாப்பிறவியில் சுழன்று துக்கமடைவதற்கும் அவரவர்களின் அவாக்களால் உண்டாகும் பற்றுக்களும் பற்றையறுத்தலுமே காரணமாகும்.

இடைக்காட்டுசித்தர்

பற்றேபிறப்புண்டாக்குந் தாண்டவக்கோனே
அதைப்பற்றாதறுத்துவிடு தாண்டவக்கோனே.

என்று புத்தசங்கத்தோர் ஒவ்வொருவரும் அவாவாகியப் பற்றுக்களே பிறவிக்குக் காரணம் என்று கூறியிருக்கும் அந்தரார்த்தமும் கன்மச்செயலின் திரட்சியும் அறியா வேஷபிராமண மதச்சார்பினர் ஆத்துமாவென்பது ஒன்றுண்டு. அதுபோய் பிறவி எடுக்கின்றதென்றும் சிலர் அந்தந்த உருவங்கள்

அப்படியே வந்து திதிகளை வாங்குகிறதென்றும் பொய் சொல்லி பொருள் பறிப்பது வேஷபிராமணர்கள் இயல்பாம்.

இதற்கு ஓர் கதையும் உண்டு. ஓர் வேஷபிராமணத்திக்கு ஓர் வேஷபிராமண புருஷனிருந்தும் மற்றோர் சூத்திரனையும் வைத்துக் கொண்டு ஓர் புத்திரனைப் பெற்றவுடன் இரண்டு புருஷர்களும் இறந்துவிட்டார்களாம். பிள்ளை வளர்ந்து திதிகொடுக்க ஆரம்பித்தானாம். அப்போது ஓர் சூத்திரனும் வந்து கைநீட்டினான். ஓர் பிராமணனும் வந்து கைநீட்டினானாம். இவ்விரு வரையும் கண்ட மைந்தன் தாயாரிடஞ் சென்று ஓர் சூத்திரனும் பிராமணனும் வந்து திதி கேட்கின்றார்களே நான் யாருக்குக் கொடுப்பதென்று கேட்டான். அப்பா நீ சூத்திரனுக்குப் பிறந்தவனாதலின் சூத்திரனுக்கே கொடுமென்றாளாம். இவ் வகையாக இறந்தபின் சுட்டெரித்த சூத்திரதேகமும் பிராமணதேகமும் உருவாக வந்து திதி வாங்குவதாய்க்கூறி அதினால் அரிசி பருப்பைச் சேர்த்துக் கொள்ளும் ஐயமார் பொய்போதனைப் பிறவிகளைக் கண்டிப்பதற்கு பௌத்தர்களால் ஏற்படுத்தியுள்ளப் பாடல்களில் ஞானவெட்டியில் பொய்க் குருக்கள் போதிக்கும் பிறவிகளைக் கண்டித்திருப்பதுபோல் சிவவாக்கியரும் பொய்க்குருக்கள் போதித்துள்ள பிறவிகளைக் கண்டித்திருக்கின்றார். ஆனால் செய்யுட்கள் பலவாறு மாறுபட்டிருப்பதினால் கருத்துக்களையும் மாறுபடச் செய்து விட்டார்கள்.

ஞானவெட்டி - பொய்க்குருக்கள் பிறவியைக் கண்டித்தல்

இருவினையுந்தனையுரைத்து உலகத்தாசான்
இறந்தவுடல்விழுந்தாவிபிரிந்தபின்பு
வருஜெனனமாகிவந் துடலெடுத்து
வாழ்புவியில்வருவமென் றுருதிச்சொல்வார்
குருவறிந்து புவியில்வந்து வயதுநூறு
குறிப்பாகப் பிறந்திறந்தால் குழவியாமோ
அருமெயுட னற்பிறவிபிறப்பாரென்று
அதீதவெகுபொருளெல்லாம் பறிப்பாரையே

ஞானவெட்டி - மெய்க்குருக்கள் பிறவி விவரம்

தீராப்பிறவி கடலையறுத்து / செஞ்ஞானஞ்சொற்
கூரான வம்பிகை பொற்பாதமேவி / கொடியு மன்னை
நேரான திங்கள் பத்ததுஞ் சென்று / நிறைந்ததென்று
பாராதனஞ்சய னோர்பாதந் தூக்கி / படவுதைத்தே.

இதைப்போலவே சிவவாக்கியரும் பொய்க்குருக்கள் போதனைகளை விளக்கியவற்றைக் கண்டிக்கின்றார்.

கறந்தபால் முலைபுகா / கடைந்தவெண்ணை மோர்புகா
வுறத்தசங்கி னோசையும் / உடல்களும் உயிர்புகா
வறைந்தவே ரடியினி / லுதிர்ந்த பூமரம்புகா
திறந்துபோன மானிட / ரினிபிறப்பதில்லை.

தகப்பன் இறந்தவுடன் மறுபடியும் தேகமெடுத்துவந்து திதி வாங்குவதாகக் கூறும் வேஷபிராமணர்கள் பொய்களை விளக்கி கண்டித்துள்ள பாடல்களாகும்.

உடம்புயிரெடுத்ததோ / உயிருடம்பெடுத்ததோ
உடம்புயி ரெடுத்தபோது / உருவமேது செப்பிடும்.

என்று கண்டித்துள்ள பாடல்களேயன்றி பௌத்தமார்க்கத்தோர் கூறியுள்ள பிறவியைக் கண்டித்தப் பாடல்களன்று. அதே சிவவாக்கியர் 81-பாடலில் பிறவியை அறுக்க வேண்டிய விதிகளை விவரித்திருப்பதைக் காண்க.

வல்லவாச லொன்பது / மறுத்தடைத்த வாசலும்
செல்லும்வாச லோரைந்தும் / சொல்லவிம்மி னின்றதும்
நல்லவாசலைத்திறந்து / ஞானவாச லூடுபோய்
எல்லைவாசல் கண்டபின் / இனி பிறப்பதில்லையே.

என்னும் பிறவியின் ரகசிய போதனைகளும் அதை உணர்ந்தொழுகும் சாதனங்களும் புத்த சங்கத்தோர்க்கு விளங்குமேயன்றி ஏனைய மதஸ்தர்களுக்கு விளங்காவாம். ஒரு மனிதன் தனது அவாவின் மிகுதியால் நாளொன்றுக்கு எத்தனை பிறவிக்கு வித்தாகின்றானென்பது சங்கசாதனர்க்கே விளங்கும்.

- 1:50; மே 27, 1908 -

23. பள்ளத்தூரிற் பணஞ் சேர்க்கும் சுவாமி விவரம்

இவ்வருடம் ஜூன்மீ 10உ வெளிவந்த ஓர் திராவிடப் பத்திரிகையில் (உண்மை விளம்பி) எனக் கையொப்பம் இட்டு பள்ளத்தூரில் ஸ்ரீசிங்கேரிஸ்சுவாமிகள் வந்தபோது புதுவூர் பழயவூர் இரண்டிலும் இருந்து குடிகள் சுவாமிகளுக்கு தட்சணைக் கொடுத்த ரூபாய் 22000 என்றும், கானாடு காத்தானென்னும் ஊரில் குடிகளால் சுவாமிகளுக்குக் கொடுத்த ரூ.16000 என்றும் அவர் பாதத்தைக் கழுவிய தண்ணீரில் தட்சணையாகப்போட்ட ரூபாய் 300 என்றும் குறித்திருக்கின்றார். சுவாமி என்னும் பெயர் கொண்டவருக்கு இத் தனை ரூபாய்கள் ஏன் கொடுத்தார்களோ விளங்கவில்லை. அத்தொகையைக் கொண்டு ஓர்கைத்தொழிற்சாலை ஏற்படுத்தி இருப்பார் களாயின் அக்குடிகளின் பின் சந்ததியார் சுகமடைவார் அன்றோ. பணவாசைக் கொண்ட சுவாமி பீடமும், பிணவாசைக் கொண்ட பூமி கூடமும் நாற்றமெடுக் கும் என்னும் பழமொழிக்கிணங்க சுவாமிகள் மற்ற எந்த ஆசையை விட்டிருப்பார் என்பதை அக்குடிகளே அறிந்துக்கொள்ள வேண்டியதுதான்.

சகலருக்கும் கல்விகொடுத்தாளும் இங்கிலீஷ் துரைத்தனத்திலும் ஏமாளிகள் இருப்பார்களாயின் இவர்களுக்கு கல்விவிருத்தி செய்யாதிருந்த வேஷபிராமணர்கள் துரைத்தனத்தில் எவ்வளவு தெளிவில் இருந்திருப்பார்கள் என்பதை ஒவ்வொரு விவேகிகளும் தெரிந்துக்கொள்ள வேண்டியதேயாம்.

இத்தகைய தந்திரசாமிகளின் செய்கைகளை மந்திரசாமிகளாம் பௌத்தர்கள் விளக்கிக்கொண்டுவந்தபடியால் அவர்களைப் பலவகையாலும் கொல்லவும் பறையர்கள் என்று சொல்லவும் நேர்ந்துவிட்டது.

இதன்பகரமாய் பௌத்ததன்மம் இத்தேச முழுதும் நிறைந்திருந்த காலத்தில் சில வேஷ பிராமணர் கூடி ஓர் பேதை அரசனை அணுகி அரசே நாங்கள் விசேஷ யாகம் செய்யப்போகின்றோம் அதில் தங்களிடம் உள்ள பொன்னாபரணம் யாவையும் அணிந்துக்கொண்டு நாங்கள் பூசிக்கும் யாக குண்டத்தில் குதிப்பீரானால் அணைந்துள்ள ஆடையாபாரணங்களுடன் தெய்வலோகஞ் சென்று அரம்பாஸ்திரீகள் போகம் அநுபவிப்பீர் என்றார்கள்.

அதைக்கேட்ட அரசன் அவர்கள் வாக்கை தெய்வவாக்கு என நம்பி தன்னிடமுள்ள பொன்னாபரணம் இரத்தினாபரணம் யாவையும் அணைந்து கொண்டு யாக குண்டத்தில் அருகில் வந்து சேர்ந்தான்.

அதேகாலத்தில் ஓர் பௌத்தகுருவும் அவ்வழியே வந்து யாககுண்டம் எரிவதையும் அரசன் அருகினில் நிற்பதையுங்கண்டு அரசே யாது செய்கிறீரென்றார். பௌத்த குருவே, நான் யாககுண் டத்தில் குதித்து தெய்வ லோகத்திற்குப் போகின்றேன் என்றான். அதைக்கேட்ட புத்தகுரு அரசே தெய்வலோகத்திற்குப்போகும் வழிகள் யாவும் உமக்கு நன்றாய்த் தெரியுமா என்றார்.

பௌத்தகுருவே, நான் கண்டதில்லை என்றான்.

அரசே, உம்மை தெய்வலோகம் போவதற்கு யாக குண்டத்தில் குதிக்கச் சொன்னவர்கள் யாரென்றார்.

பௌத்தகுருவே, இதோ எதிரில் மந்திரஞ் செய்துகொண்டிருக்கும் பிராமணர்களே சொன்னார்கள் என்றான்.

அரசே, அப்படியானால் அந்தபிராமணர்களை முந்தி யாக குண்டத்தில் குதிக்கச்செய்து நீர் பின்பு குதிப்பீரானால் அவர்கள் முன்பு தெய்வலோகத்தின் வழியைக் காட்டிக்கொண்டே சென்று உம்மை அவ்விடம் விட்டு அவர்கள் இவ்விடம் வந்துசேர்ந்துவிடுவார்கள் நீங்களுஞ்சுக போகத்தில் இருக்கலாம் என்றார்.

அதைக்கேட்ட அரசன் நமக்குந்தெய்வலோகத்து வழிதெரியாது பிராமணர்கள் முன்பு வழிகாட்டிக்கொண்டு நடப்பது நன்றென்று பிராமணர்களை அழைத்து சுவாமிகளே தாங்கள் முன்பு யாக குண்டத்தில் குதிப்பீரானால் நானும் கூடவே குதிக்கின்றேன் என்னை நீங்கள் கூட்டிக் கொண்டு தெய்வலோகத்தைக் காட்டிவிட்டு இவ்விடம் வந்துவிடலாம் என்றான்.

இதைக்கேட்ட வேஷபிராமணர்கள் ஆ ஆ இன்று கிடைக்கக்கூடிய இலக்ஷ பொன்னுக்கு மேற்பட்ட ஆபரணங்கள் போய்விட்டதென்று வருந்தி இப் பௌத்த பிஷுவேகெடுத்துவிட்டான் என்று எண்ணி ஏ அரசே, நீர் நீச்சனை அணுகி, நீச்ச வார்த்தையைக் கேட்டு நீயும் நீச்சனாகிவிட்டீர். ஆதலின் உமக்குதெய்வலோக சுகங் கிடைக்காமல் போய்விட்டது, போம் போம் என்று தூறி குடிமியை தட்டிக்கொண்டே போய்விட்டார்களாம்.

இத்தகையக் காரணங்களைக் கொண்டே பௌத்தர்கள் யாவரும் பறையர்கள் என்றுத் தாழ்த்தப்பட்டு பாழடைந்தார்கள் என்பதைப் பறக்கத் தெரிந்துக்கொள்ளலாம்.

- 2:1; ஜூன் 17, 1908 -

24. வேதாந்தம்

வினா : வேதாந்தம் என்பது ஓர் மதமா, ஓர் சமயமா, ஓர் மார்க்கமா இவ்வேதாந்ததை அனுபவித்தோர் என்ன சுகம் பெற்றார்கள்.

எ.வி. இராமலிங்கம்

விடை : விஷ்ணுவே கிருஷ்ணனாக அவதரித்தாரென்னும் ஆளில்லா வேதாந்தம் வேண்டுமா? சிவனே சங்கராச்சாரியாக அவதரித்தார் என்னும் ஆளில்லா வேதாந்தம் வேண்டுமா!

இவ்விரண்டினுள் ஒன்றைப் போதிப்போர்கள் பாதிவயதுகடந்து பாலனென்னும் பெயர் மாற்றி பரம் எனக்குள் இருக்கின்றது நான்பரத்துள் இருக்கின்றேன் என்னும் பிரசங்கங்கூறி அறைக்குள் நுழைந்து செம்புச்சிலை பித்தளைச்சிலைகளைப் பூசைசெய்துவிட்டு அவ்வகைப் பூசையாலுந் தனது வேதாந்தத்தாலும் தன்னாலும் யாதொரு பிரயோசனமும் கூடிவரவில்லை என்று கண்டு ஓர்வகைக் கொட்டையால் சிலப் பிரயோசனம் உண்டென்று நம்பி அதைக் கழுத்தில் கட்டிக்கொண்டு வேதாந்தம் பிரசங்கித்துக்கொண்டு வருகின்றார் அவர் வேதாந்தம் வேண்டுமா.

அன்றேல் அமேரிக்காதேசத்திற்குச் சென்ற போது புத்ததன்மமாகும் ஞானமே விசேஷமென்று கூறியும் மற்றதேசங்களுக்குச் சென்ற போது இந்துவேதமே முக்கியம் என்று கூறியும், வங்காளதேசம் வந்தவுடன் பிரமோவேதாந்தமே பெரிதென்று கூறியும் ஒருவர் மரணமடைந்தார். அவர் வேதாந்தம் வேண்டுமா.

அல்லது இவ்வேதாந்தங்களுக்கு அதிகாரிகளாகும் பாஷியாக்காரர்கள் கூறியுள்ளபடிக்கு வேதத்தை சூத்திரன் காதில் கேழ்க்கப்படாது அங்ஙனம் கேழ்ப் பானாயின் அவன் செவிகளில் ஈயத்தைக் காய்த்து விடவேண்டும் என்பது விதி. சூத்திரன் என்பவனுக்கு வேதத்தைக் கேழ்க்க சுவாதீனமில்லாத போது சுடு காக்கும் பறையனென்போனுக்கு வேதாந்தங் கேழ்க்க விதியுண்டோமோ, இல்லை இல்லை.

இத்தகைய வேஷ பிராமணர்கள் வேதத்தையும் அவர்கள் வேதாந்தத்தையும் இரகசியமாகக் கற்றுக்கொண்ட ஓர் சூத்திரர் செவியில் ஈயத்தைக் காய்த்து விட்டுவிடுவார்கள் என்று பயந்து தன் வீட்டிற்குள் உழ்க்கார்ந்துகொண்டு வெளியிலிருப்பவர்களுக்கு வேதாந்தஞ் சொல்லிக்கொடுத்துக்கொண்டு வருகின்றார். அவர் வேதாந்தம் வேண்டுமா.

இவர்களனைவர் வேதாந்தத்துள் யாருடைய வேதாந்தம் வேண்டுமோ அதை விவரிப்பீராயின் அவர் வேதத்தின் பிறப்பையும் வேதாந்தச் சிறப்பையும் விளங்கக்கூறுவோம்.

- 2:3; ஜூலை 1, 1908 -

25. கிறீஸ்த்தவன் கிறீஸ்த்து அவன் - அவன் கிறீஸ்த்து

என்னும் சிறந்த வாக்கியமானது கிறீஸ்த்து அவனுக்குள்ளும் அவன் கிறீஸ்த்துவுக்குள்ளும் அமர்ந்தவனே கிறீஸ்த்தவனாவான்.

அதாவது - அவருடைய நீதிபோதனைகளுக்குள்ளும் அவருடைய நன்மார்க்க ஒழுக்கத்திற்குள்ளும் அமர்ந்து ஒழுகுபவனுக்குள் கிறீஸ்த்துவின் அன்பு குடிக்கொள்ளும். அவ்வகைக் குடிகொண்டவனை கிறிஸ்தவன் என்று கூறத்தகும்.

நான் கிறிஸ்தவன் என்று கூறுபவன் தன்னைப்போல் பிறரை நேசிக்க வேண்டியது என்றும் சகலரையும் சகோதிரவாஞ்சையால் ஆதரிக்க வேண்டியது என்றும் கூறியுள்ள அவரது நற்போதனைக்குள் நுழையாமலும் அவர் ஒழுக்க போதனைக்குள் நுழையாமலும் அவர் ஒழுக்கமேரை நடவாமலும் நான் கிறீஸ்தவன் என்று கூறுவது அவர் நீதிபோதகத்திற்கு முரணேயாம்.

ஓர் இராசனென்னும் வேஷம் போடுபவன் அரசசின்னங்களாகும் கிரீடம், புஜகீர்த்தி, வாகுவல்லயம் அணைந்து இராஜன் வந்தானே எனநடிப்பானாயின் எல்லோரும் இராஜன் வந்தான் சரித்திரம் பாடுவானென்று நோக்குவார்கள்.

அத்தகைய அரசசின்னம் இன்றி வெறுமனே ஒருமனிதன் மேடையில் வந்து நிற்பானாயின் இராஜன் யார் இராஜன் யார் என்று சகலரும் கேட்பார்கள். அதுபோல் நான் கிறீஸ்த்தவன் என்று சொல்லும்படியானவன் கிறீஸ்த்துவின் நீதியிலும் அவர் அன்பிலும் ஒழுக்கத்திலும் அமர்ந்திருத்தலே அழகாவதன்றி அவரைக் கனஞ்செய்பவனுமாவன்.

அங்ஙனமின்றி வாய்ச்சொல்லில் கிறீஸ்த்தவன் என்று சொல்லித்திரிவது அவரைக் கனயீனஞ்செய்தலாகும்.

இத்தகையக் கனக்குறைவாய் நான் கிறீஸ்த்தவன் என்பதற்கே செயலற்றவர்கள் செட்டிக் கிறீஸ்த்தவன் நாயுடு கிறீஸ்த்தவன் வேளாளக் கிறீஸ்த்தவன் நாயகர்க் கிறீஸ்த்தவன் என வெளியேறுகிறவர்கள் கிறீஸ்த்துவை என்ன கனஞ் செய்வோராவர்.

கிறீஸ்துவை யதார்த்தத்தில் கனஞ்செய்வோராயின் அவரேந்திய சிலுவையின் ஒடுக்கத்தை இவர்கள் ஏந்தி சருவசீவர்களையும் தன்னைப்போல் பாவித்தல் வேண்டும்.

அங்ஙனமின்றி ஜோசேப்பு செட்டியார், தாவீது முதலியார், சவேரியப்ப நாயுடு என வெளிவருவோர் கிறீஸ்த்துமதப் பெயரையும் பிராமணமத சாதியையும் வைத்துக் கொண்டு மற்றவர்களை அஞ்ஞானிகள் என்று கூறுவது என்ன மகிழ்ச்சியோ விளங்கவில்லை.

கிறீஸ்த்துமதத்தில் பிரவேசித்து பிராமண மதத்தைக் கனஞ்செய்வோர் யதார்த்தக் கிறிஸ்த்தவராவரோ.

கிறீஸ்த்துமதத்தில் பிரவேசித்தாலும் எங்கள் சாதியை மறைக்கலாமோ என்பாரும் உண்டு. அச்சாதிப்பெயர்கள் யாவும் ஓர் தேவனால் உண்டுசெய்யாமல் தங்களுக்குத் தாங்களே உண்டுசெய்துக் கொண்டபடியால் பிராமணமதக் கோட்பாட்டின்படி அவனவன் ஏற்படுத்திக் கொண்ட சாதியை அவனவன் வெளியில் சொன்னால்தான் தெரியும். சொல்லாவிடில் தெரியாது.

இவ்வகை சொல்லிக்கொண்டு திரிவதற்கும் எப்போதும் பார்த்துக் கொள்ளுவதற்கும், பிராமணமதஸ்தர் மநுசாஸ்திரம் ஏற்படுத்திக் கொண்டார்கள்.

அத்தகைய மநுசாஸ்திரமும் அவர்கள் வேதமும் வேண்டாம் என வெறுத்து கிறீஸ்த்துமதம் பிரவேசித்தவர்கள் பிராமணர் மநுசாஸ்திரத்தை விடமாட்டோம் என்பாரேல் எண்ணத்தால் சிந்திக்கும் அவர்கள் மததேவதைகளை விட்டிருப்பரோ ஒருக்காலும் விட்டிரார்.

ஒவ்வோர் கிறீஸ்த்துமதக் குருக்களும் இவற்றைப் பெரும்பாலும் கவனிக்க வேண்டும்.

ஏனென்பீரேல், உயர்த்தப்பட்டவன் தாழ்த்தப்படுவான் தாழ்த்தப் பட்டவன் உயர்த்தப்படுவானென்னும் உங்கள் வேதவாக்கியம் இருக்கின்றது. ஆதலின் உங்களை அடுத்தக் கிறீஸ்தவர்களுள் பூலோகத்தில் உயர்ந்தசாதிக் கிறீஸ்தவன் என்பவன் பரலோகத்தில் தாழ்ந்தசாதிக் கிறிஸ்தவனாவான்போல் காணுகின்றது. அவ்விடம் அங்ஙனந் தாழ்ச்சியடையாமல் உயர்த்தப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

ஆயிரங் கிறீஸ்தவர்களில் ஒரு யதார்த்த கிறிஸ்த்தவன் இருப்பானாயின் உலகம் நடுங்கும். பத்தாயிரம் கிறீஸ்த்தவர்களில் ஒரு யதார்த்தக் கிறிஸ்த்தவன் இல்லாமல் போவானாயின் உலகம் பழிக்கும். இவ்விரண்டிற்குங் காரணம் அம்மத குருக்களேயாவர்.

- 2:9; ஆகஸ்டு 12, 1908 -

26. தசராவென்னும் ஆயுதபூஜை

பூர்வ வடநாட்டரசர் சுத்தவீரத்திலும், வல்லமையிலும் மிகுத்த காளிகா தேவியைப்போன்ற ஒருருவமைத்து தாங்கள் கொலு வீற்றிருக்கும் ஆசனத்தில் பத்துநாள் நிறுத்தி ஒவ்வோர் நாளும் ஒவ்வோர் ஆயுதவித்தைகளை விளையாடி பத்தாநாள் தாங்களெடுக்கும் படைக்கு இருதியினின்று ஆதரிக்க வேண்டுமென்று கோறி கொலுவைக் கலைப்பது வழக்கமாம்.

இஃது பத்துநாள் விளையாட்டாதலின் வடமொழியில் தசராவென்றும், உயுத்தியா யுத்தங்களாம் யுத்த ஆயுதங்களாகும் வேலாயுதம், சூலாயுதம், கதாயுதம், வாகாயுதமென்னும் யுத்தக்கருவிகளை வைத்து பூசித்து வந்ததினால் ஆயுதபூஜை என்றும் வழங்கி வந்தார்கள்.

இத்தகைய பூஜையால் சில சாதியோர்களுக்கு சீவனவிருத்தி கிடையாது. இதை அநுசரித்தே தங்கள் தங்கள் சமயங்களைச் சார்ந்தவர்களை வீடுகடோரும் ஆயுதபூஜை செய்யவேண்டுமென்று கற்பித்து அடுப்பங்கட்டையும் ஓராயுதம், துடைப்புகட்டையும் ஓராயுதம், அறுவாமணையும் ஓர் ஆயுதம், திறுவாமணையும் ஓர் ஆயுதம், அடுக்குந்தட்டும் ஓர் ஆயுதம், வெட்டுபாறையும் ஓர் ஆயுதம், கொடுவுகத்தியும் ஓர் ஆயுதம், மடிவுகத்தியும் ஓர் ஆயுதம் என்னும் நிராயுதபூஜையை உண்டுசெய்து அதன் சார்பாய் சில சீவன விருத்தியைத் தேடிக்கொண்டார்கள்.

ஆயுதபாணிகளென்பதும், நிராயுதபாணிகள் என்பதும் அரசர்களின் யுத்தக் கருவிகளைக் குறிக்குமேயன்றி அடுப்பங்கட்டைக்கருவிகளுக்காகாவாம்.

- 2:20, அக்டோபர் 28, 1908 -

27. பட்டினத்தார்

வினா : நமது பௌத்த சகோதிரர்களுக்குள் சிலர் பட்டினத்து சுவாமிகளையும் பௌத்தரென்று கூறுகின்றார்கள் அவ்வகைக் கூறலாமோ, அவற்றிற்கு ஆதாரம் ஏதேனும் உண்டோ.

ப. முனிசாமிபிள்ளை, செக்கன்றாபாத்

விடை : தாம் வினாவிய சுவாமிகளை பௌத்தரென்றே கூறற்கு அவரருஞ் செய்யுட்களே ஆழ்ந்த ஆதாரங்களாகும்.

அதாவது:- புத்தபிரான் ஓரரச புத்திரனாகப் பிறந்து மனைவி மக்களைத் துறந்து சற்குருவாகச் சிறந்து ஓடேந்தி இரந்து நின்றதுமன்றி செல்வமிகுத்த தனது சங்கத்தோர்களுக்கும் ஓடளித்து இரந்து ஒடுங்கும் பற்றற்ற செயலுள் வைத்துள்ளாரென்பது சருவசாஸ்திர சரித்திர சம்மந்தமாகும்.

பட்டினத்து சுவாமிகள் பாடல்

மானார் விழியைக் கடந்தேறிவந்தனன் வாழ்குருவுங்
கோனாகி யென்னைக் குடியேற்றிக்கொண்டனன் குற்றமில்லை
போனாலும் பேரிருந்தாலு நற்பேரிது பொய்யன்றுகாண்
ஆனாலு மிந்த வுடம்போடிருப்ப தருவெறுப்பே.

இச்செய்யுளால் புத்தபிரான் அரசாங்கத்தைத் துறந்து குருவானவிடயம் விளங்குவதால் இனிவருஞ் செய்யுளால் புத்தசங்கத்தோருக்குள்ள ஓட்டின் மகத்துவத்தையும் அறிந்துக்கொள்ளலாம்.

பட்டினத்து சுவாமிகள் பாடல்

வீடு நமக்குண்டு திருவாலங்காடு விமலர்தந்த
வோடு நமக்குண்டு வற்றாத பாத்திரம் ஒங்கு செல்வ
நாடு நமக்குண்டு கேட்டதெல்லாந்தா நன்நெஞ்சமே
ஈடு நமக்குச் சொலவோ வொருவரு மிங்கில்லையே.

இன்னும் மற்றாதாரங்களை வரையின் விரியும் என்றஞ்சி விடுத்துள்ளோம் ஆயினும் சமய நேர்ந்துழி யெஞ்சிய தெழுதுவாம்.

- 2:31, சனவரி 13, 1909 -

28. மைலாப்பூரில் பௌத்தாலயம்

வினா : ஐயா, இவ்வாரம் வெளிவந்த 'தமிழன்' பத்திரிகையில் திருவளூர், மயிலாப்பூர், திருப்போரூர் மூன்றும் பூர்வபௌத்தர்கள் மடமெனக் குறித்து அவ்விடங்களுக்குப் பெரும்பாலும் பூர்வ பௌத்தர்களென விளங்கி தற்காலம் பறையர்கள் என்று அழைக்குங் கூட்டத்தார் போக்குவருத்து உண்டென்றுங் கூறியிருக்கின்றீர்.

அதுபோலவே இக்கூட்டத்தோர் பெரும் வரவை மூன்று ஆலயங்களிலும் கண்டுவருகின்றேன். திருவளூரில் நிருவாண சிலைக்கு நாமமிட்டுள்ளதைக் கண்டுள் ளேன். திருப்போரூரில் புத்தர் முத்திராங்கசிலைகளுள்ளதையும் கண்டுள்ளேன். ஆயினும், மயிலாப்பூரில் பௌத்த ஆலயம் இருக்கின்றது என்பதற்கு போதிய ஆதாரம் காணேன். ஆதலின், பத்திராதிபரவர்களே போதிய நூலாதாரம் கொடுத்து எமது சங்கையை நீக்கவேண்டும்.

பு.மா. சமரபுரிமுதலியார், திருவளூர்.

விடை : திருமயிலையில் சாக்கையர் நிமித்தகரென்னும் வரிசையோராகிய வள்ளுவர்கள் வாசஞ்செய்திருந்த வீதியின் பெயராலும் அல்லமா பிரபு மடமென்றும், குழந்தைவேலு பரதேசி மடமென்றும் வழங்கிவந்தவைகளையும் கணிதாதி சகல சாஸ்திரபண்டிதர் மார்க்கலிங்க நாயனாரவர்கள் அச்சிட்டுள்ள சுத்தஞானம் நூறிற் காணுவதன்றி பௌத்தர்கள் நூலாகும் திருக்கலம்பகத்தி லுள்ள மயிலாலய யோகசயன தியானத்தையும் காணலாம்.

திருக்கலம்பகம் - கட்டளைக்கலித்துறை

உரையோம்பயன் செய்வதற்கென்று / வைத்தறமோதும் வஞ்சத்
துரையோடுறாத சுகர்கண் / டீர்பொங்கு தூங்கொலிநீர்
திரையோ டுருண்டெழு சங்கஞ் / சொரிந்த செழுந்தரள
நிரையோ டுறங்குந் / துறை மயிலாபுரி நின்றவரே.

விருத்தம்

மயிலாபுரி நின்றவ ரரியாசன வும்பரின்
மலர் போதியிருந்தவர் அலர்பூவிநடந்தவர்
அயிலார் விழிமென்கொடி யிடைதீயையவித்தவர்
அமராபதி யிந்திரர் அணியாட லுகந்தவர்
கயிலாயமெனுந்திரு மலைமேலுரைகின்றவர்
கணநாயகர்தென்றமிழ் மலைநாயகர் செம்பொனின்
எயிலாரிலகுஞ்சினகிரியாள் பவர்சம்பைய
ரெனையாள நினைந்து கொல்வினையேனு ளமர்ந்ததே.

சாக்கையர்கள் மயிலாப்பூரில் அல்லமாப்பிரபுவால் புத்தர் மடம் இயற்றி அவர் மாசிபௌர்ணமியில் துறவடைந்து கரபோலென்னும் ஓடேந்திய பிச்சாண்டி வேஷத்தையும், அன்றிரவு முழுவதும் நித்தி றையற்று துறவடைந்த சிவராத்திரியையும், கல்லால விருட்சத்தின் கீழ் காமனை ஜெயித்து நிருவாணமுற்ற பங்குனிபுருவத்தையும், சுயம்பிரகாச பரிநிருவாணமுற்ற மார்கழிபருவ திருவாதிரைநாளையும், ஆனந்தமாகக் கொண்டாடிவந்தார்கள்.

அக்காலத்தில் மயிலை சாக்கையர் மடத்து பிச்சாண்டி வேஷங் காணும்படியாகவந்த கார்வெட்டிநகரத்து அரசன் மனைவி பூம்பாவை என்பவள் இறந்தபோது சாக்கையர்கள் துக்கங்கொண்டாடிய சரமகவி.

மார்க்கலிங்கநாயனா ரேட்டுப்பிரிதி.

திருமயிலை பூம்பாவை பதிகம் பத்து

உரிஞ்சாய வாழ்க்கை எமனுடைய போக்கு
மிருஞ்சாக்கையர்கள் எடுத்துரைப்ப நாட்டிற்
கருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சுரத்தான்றன்
பெருஞ்சாந்தி காணாது போதியோ பூம்பாவாய்.

சூளாமணியிலுள்ள பூம்பாவை என்பவள் சரிதையைக் காண்க.

கல்யாண சருக்கம்

வணங்கி வையந்தொழ னின்றமன்னன் காதன் மடமகள்போன்
மணங்கணாறும் பூம்பாவை வளரல்வாழி நறுங்குரவே
மணங்கணாறும் பூம்பாவை வளர்த்தியாயிலிளையாராற்
கணங்களோடு பறிப்புண்டி கண்டாய் வாழி நறுங்குரவே.

புத்தபிரான் மாசி மாதப் பௌர்ணமியில் துறவடைந்த பிச்சாண்டி வேஷத்தை சீவக சிந்தாமணியிற் காண்க.

முத்தியிலம்பகம்

மாசித்திங்கண் மாசினமுன்ன மடிவெய்த / வுசித்துன்ன மூசியவாடை யுடையாகப்
பேசிப்பாவாய் பின்னுமிருக்கை யகலேந்த / கூசிக்கூசி நிற்பர் கொடுத்துண்டறியாதார்.

இதை அநுசரித்தே மயிலையில் மாசிமாதப் பௌர்ணமிநாளைக் கொண்டாடாமல், 'போதியோ பூம்பாவா'யென்று சாக்கையர் கொண்டாடியுள்ள பூம்பாவைப் பதிகத்தைக் காண்க.

தெங்கின் மயிலையர் மாசிக் / துறந்தான் கபாலீச்சுர மமர்ந்தான்
யானே யுறுமங்கை யகல்கொண்டு / மாடல் காணாதே போதியோ பூம்பாவாய்.

புத்தபிரான் கல்லாலவிருட்சத்தடியில் வீற்று பங்குனிபருவத்தில் காமனைவென்று நிருவாண நிலையடைந்தார். அதை அநுசரித்தே பௌத்த சங்கத்தோர் யாவரும் கொண்டாடிவந்தார்கள்.

சீவகசிந்தாமணி

காசறு துறவின்கிக்க கடவுளர் சிந்தைபோல
மாசறு விசும்பின் வெய்யோர் வடதிசையயன முன்னி
யாசற நடக்குநாளு ளைங்கணைக்கிழவன் வைகிப்
பாசறைம் பரிவுதீர்க்கும் பங்குனிப் பருவஞ்செய்தான்.

இதை அனுசரித்தே மயிலையில் பங்குனிமாத பௌர்ணமி மதன்விழாக்கோல் கொண்டாடாமல் 'போதியோ பூம்பாவா'யென்று சாக்கையர் கொண்டாடியுள்ள பூம்பாவைப் பதிகம் பத்தைக் காணலாம்.

மலிவிழாவீதி மடநல்லார் மாமயிலை
கலிவிழாகொண்டான் கபாலீச்சுரமமர்ந்தான்
பலிவிதாப் பாடல்செய் பங்குனி பருவநாள்
பொலிவிழாக் காணாதே போதியோபூம்பாவாய்.

புத்தபிரான் மார்கழி பௌர்ணமி திருவாதிரை நாளில் பரிநிருவாண மடைந்தார். அந்நாளை அனுசரித்தே பௌத்தசங்கத்தோர் யாவரும் கொண்டாடி வந்தார்கள்.

விம்பாசாரம் - விழாவதைக்காதை

இறைமகற்காத னெண்பானைந்திற் / குறைமிகு காலக் கூற்றங்கடிந்து
தக்கக் கடைநாட் டனுவாதிரையிற் / பக்க மங்கலம் பருமதி கோலாய்
போதிநீழற் பொருந்திய புத்தேள் / சோதிபஞ்சகச் சூழொளியாகி
ஆனவைகரை யார்ப்ப வானவர் / போனக ..(தெளிவில்லை) விழாக்கோள்.

இதை அநுசரித்தே மயிலைச் சேரியில் ஸ்தாபித்திருந்த கபாலிச்சுர மடத்திற்கு வந்து மரணமடைந்த பூம்பாவையை பரிநிருவாண ஆதிரை நாட் காணாது போதியோ வென்று சாக்கையர் துக்கங்கொண்டாடினார்கள்.

ஊர்திறைவேலை யுலாவு முயர்மயிலைக்
கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனிற்
கார்தரு சோலைக் கபாலீச்சுர மமர்ந்தான்
ஆர்திரைநாட்காணாதே போதியோபூம்பாவாய்.

புத்தர் பரிநிருவாணமடைந்த காலத்திற்குப் பின் அந்தந்த புத்தசங்க வியாரங்களுக்கு அமரவாசி, பௌர்ணமி, அட்டமி இம்மூன்று தினத்திற்கும் வந்திருந்து சீலவிரதங்காப்பது வழக்கமாகும்.

சீவகசிந்தாமணி

ஓவாதிரண்டுவ்வுமட்டமியும் பட்டினியாயொழுக்கங்காத்த
றாவாத தவமென்றார் தண்மதிபோன் மூக்குடைக்கீழ் தாதைபாதம்
பூவே புகைசாந்தஞ் சுண்ணம் விளக்கிவற்றால் புனைதனாளு
மேவா விவைபிறவும் பூசனையென் றீண்டிய நூல் கரைகண்டோரே.

இதனை அனுசரித்தே மயிலை வியார சாக்கையர்கள் தாங்கள் கொண்டாடி வரும் அமாவாசி, பௌரணை, அட்டமிநாள் விரதங்காக்காது 'போதியோ

பூம்பாவை' என்று துக்கங்கொண்டாடினார்கள்.

தண்ணாரறவாழி சுகமீய்ந்த தாளினான்
கண்ணார் மயிலைக் கபாலீச்சுரமமர்ந்தான்
பண்ணார் பருவம் பணையமர வட்டமிநாள்
புண்ணியகாப்புண்ணாதே போதியோ பூம்பாவாய்.

என்றும் புத்ததரும விழாக்கோல் மயிலையிற் கொண்டாடிவந்தவற்றை மேற் குறித்துள்ள செய்யுட்களால் அறிந்துக் கொள்ளுவதன்றி மயிலை சேரியிலுள்ளோர் வரிசை செல்லுவதும், அதன் சபாமண்டபமும் இன்னும் விளக்கவேண்டுமேல் பின்னும் விவரிக்கக் கார்த்திருக்கின்றோம்.

- 2:37; பிப்ரவரி 24, 1909 -

29. மதவிசாரணை மஹாசங்கம்

வங்காளநாட்டில் சென்ற சுக்கிரவாரம் சகலமதஸ்தர்களும் கூடி மதவிசாரிணைப் புரிந்திருக்கின்றார்கள்.

இத்தகைய விசாரிணையில் அந்தந்த மதஸ்தாபகர்கள் எந்தெந்த சீர்திருத்தங்களையொட்டி தங்கடங்கள் மதங்களை இஸ்தாபித்துள்ளா ரென்றும், அந்தஸ்தாபங்களினால் மநுகுலத்தோர் என்னசீர்பெற்று முன்னேறினார்களென்றும், தற்காலம் எம்மதஸ்தர் சீர்பெற்று முன்னேறி சகல சுகங்களையும் அநுபவித்து வருகின்றார்களென்றும் அநுபவ திருஷ்டாந்த தாட்டாந்தங்களை ரூபிக்காதுவிளக்கி நெய்யால் வீட்டைக் கழுவியதுபோல் மநுகுலத்தோருக்கு மதத்தாலுண்டாம் பிரயோசனம் இன்னது யினியதென்று விளக்காமலும் அந்தந்த மதஸ்தாபகர்களின் கருத்தும் அதனதன்பலனும் அவர்களுக்கே விளங்காமலும் பேசி முடித்துவிட்டார்கள்.

அச்சபைக்கு கணநாயகராக வீற்றிருந்தவரோ எல்லோரும் ஒரே கடவுளைத் தொழுங்காலம் வருமென்றுகூறி முடித்து விட்டார். இஃது எவ்வகைத்தான தீர்க்கதெரிசன மொழியோ அதுவும் விளங்கவில்லை.

ஒருகடவுளென்று கூறிய கணிதமொழியானது ஒன்றென்று தோன்றியபின்னர் இரண்டு, மூன்று, நான்கென்னும் தொடரிலக்கம் தோன்றுமென்பதை தெளியாது ஒருகடவுளென்னும் மொழியை உறுதிபெறக் கூறியது உன்மத்தநிலையேயாம்.

ஒருகடவுளென்னும் மொழியே இரண்டு கடவுள், மூன்றுகடவுள், நான்கு கடவுளென்னும் மொழிபெற்று ஒன்றன்பின் ஒன்றாய் உதிக்கும் என்பதை உணராமல் போதித்துவிட்டார்போலும்.

அந்தோ மதவிஷயங்களில் களங்கமற்ற புருஷாள் தன்மதம் பிறர்மதமென்றும், தன்கடவுள் பிறர் கடவுளென்றும், தன்சமயம் பிறர் சமயமென்றும், தன்னவர் அன்னியரென்றும் பட்சபாதமின்றி ஒவ்வோர் மதஸ்தாபகர்களின் குணாகுணச் செயல்களையும் அம்மத ஸ்தாபகத்தால் மக்கள் சீரடைந்த சுகங்களையும் தேற விசாரிணைப்புரிந்து தாங்களும் அச்சுகத்தை அனுபவித்து ஏனையோருக்கும் அச்சுகத்தை காட்சியாகவும், அநுபவமாகவும் விளக்குவரேல், இன்னமத ஸ்தாபகரால் மநுகுலத்தோர் இன்னின்ன சீர்பெற்று இன்னின்ன சுகபலன் அநுபவித்து வருகின்றார்கள் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். அவற்றின் காட்சியாலும் அநுபவத்தாலும் மற்ற மக்கள் முன்னேறி மனக்களங் கங்களற்று மகா நிப்பானம்பெறுவார்கள்.

இதுவே உலகமாக்களுக்கு விசாரிணையுற்ற விவேகமிகுத்தோரளிக்கும் வித்தியாதானமென்னப்படும்.

இத்தகையக் களங்கமற்ற மத விசாரிணையை விடுத்து களங்கமுற்ற மதவிசாரிணைப் புரிவோமாயின் விசாரிப்பவர்களுக்கே அதஅதனுண்மெய் விளங்காது மயங்குவதுடன் அவர்களைப் பின்பற்றியவர்களும் அதிமயக்கமுற்று அழியவேண்டியதேயாம்.

- 2:45; ஏப்ரல் 21, 1909 -

30. பலிபூசை விவரம்

பலி என்பதின் பொருள் சோறு, பூர்வகாலத்தில் புத்தசங்கத்தோருக்கு பௌத்தக்குடிகள் கொண்டுவந்தளிக்கும் சோற்றினை ஓரிடம் குவித்துவைக்கும் இடத்திற்கு (பலிபீடமென்றும்) பெயர்.

சமணமுநிவர்கள் பாத்திரம் ஏந்தி வெளியில் சென்று புசிப்பவர்கள் நீங்கலாக ஆச்சிரமங்களிலுள்ளவர்களுக்கு குடிகள் வட்டித்த சோற்றினை பீடங்களில் கொட்டி முநிவர்களை வலம்வந்து வணங்கி பூசிப்பது வழக்கமாம்.

அம்மனைக்கொண்டாடும் ஆடிமாதப் பௌர்ணமி பத்தாநாள் உச்சாகமாகுந் தசரத்தன்று மடத்தின் முன்னுள்ள பீடத்தில் குடிகள் யாவரும் பொங்கலிட்ட சாதமாம் சோற்றினைக் குப்பலாகக் கொட்டி கும்பமென்றும், கும்பாபிஷேகமென்றும், பலிபூசை என்றும் கூறி அச்சோற்றினை சகல ஏழைகளுக்கும் அளித்து அன்னதானம் என்றும் வழங்கிவந்தார்கள்.

இத்தகைய சுத்தஹன்மச் செயலானது புத்த தன்மத்தைத் தழுவியுள்ளவரையில் நிறைவேறி வந்து அசத்திய தன்மங்களைப் பரவச்செய்வோர் ஆடுகளையும், மாடுகளையும், குதிரைகளையும் சுட்டுத்தின்று மதுமாமிஷமயக்கத்தால் உள்ள மொழிகளின் பொருட்களை உணராது தங்கள் தங்கள் மனம்போனப்போக்கில் வார்த்தைகளின் பொருளை மாற்றிவிட்டார்கள்.

அத்தகைய சத்தியதன்ம வழக்கமானது விசாரிணையின்றி **(வரிகள் சிதைந்து போயின)**

முன்கலை திவாகரம்

பலியென்னும் பெயர், பலியேயையமு / ....**(சிலவரிகள் தெளிவில்லை)**
சோறுமாகும்.

மணிமேகலை

கடவுட்பீடிகை பூப்பலி கடிகௌ / கலம்பகர் பீடிகை பூப்பலி கடிரெ

பின்கலைநிகண்டு

பீடிகையாவணம்பூ ந்தட்டொடுபீடமும்
பூப்பல்லி - மல்லிகை மலரொத்த சோற்றுக்குவியல்
ஆவணம் - சோறு
பலியிடுதல் - சோறுகொண்டுவந்தீதல்
பலியேற்றல் - பிட்சாபாத்திரத்தில் சோற்றை வாங்கிக்கொள்ளுதல்

மணிமேகலையில் உண்டிகொடுப்போர் உயிர்கொடுப்போரே என்னும் சிறப்புமொழிக்கு மாறாக உண்டிகொடாது உயிர் வதைப்பதே மேலென்று ஏற்றுக் கொண்டார்கள்.

இத்தகைய செயல்களையே சத்தியதன்மத்திற்கு மாறுபட்ட அசத்தியதன்மம் என்று கூறப்படும்.

- 3:4; சூலை 7, 1909 -

31. ராமருக்குச் சீதை தங்கை

வினா :, மாரிகுப்பம் சாக்கைய பௌத்த சங்கத்தில் இம்மதி 3-ம் 4 ஆம் நாட்களில் செய்தப் பிரசங்கத்தையுங் கேட்டு மகிழ்ந்தேனெனினும் 3-7-09 ல் செய்தப் பிரசங்கத்தில் ராமருக்கு சீதை தங்கையாக வேண்டுமென்று சொன்னதைக்கேட்டு சங்கைக்கிடமாயிற்று. வேறு சிலரும் இவ்விதமாகவே புகலக் கேட்டிருக்கிறேன்.

தி.ஆ. பார்த்தசாரதிசெட்டியார், மாரிகுப்பம்.

விடை : வாரணாசியில் சுகந்தகாவென்னும் அரண்மனையில் தசரதனென்னும் ஓரரசனிருந்தார். அவருக்கு இராமனென்றும், இலக்கண னென்றும் இரண்டு ஆண்பிள்ளைகளும், சீதையென்ற ஓர் பெண்பிள்ளையும் இருந்து தாயாரிறந்தவுடன் தசரதன் வேறு விவாகஞ் செய்துகொண்டு அவ்வம்மனுக்கும் ஓர் ஆண்குழந்தை பிறந்து பரதனென்னும் பெயரளித்து வாழ்ந்துவருங்கால் மறுதாயின் மாறு பாட்டினாலும், இராமர் பனிரண்டு வருடம் வனவாசம் இருக்கவேண்டும் என்னும் தனது ஜாதகக்குறிப்பின் வினைப்பயனாலும் காட்டிற்கு ஏகும்படி ஆரம்பித்தார். தனது தம்பி இலக்கணருந் தொடர்ந்தார்,

தங்கை சீதையுந் தொடர்ந்தாள். மூவரும் வனசஞ்சாரிகளாய் அங்கங்குள்ள மடங்களில் தங்கி ஞானவிசாரிணைப் புரிந்து வந்தார்களென்பதை வசிஷ்டஸ்மிருதியிற் கண்டறியலாம்.

இம்மூவரும் வெளியேறிய ஒன்பதாமாண்டில் தசரதர் இறந்துவிட்டார். பட்டத்திற்கு ஒருவருமில்லாதபடியால் சிறியதாயார் பரதனுக்குக் கட்டவேண்டுமென்று ஆரம்பித்தாள். மந்திரிகளவற்றைத் தடுத்து காட்டிற் சென்றிருக்கும் இராமரே பட்டத்திற்கு உரியவரென்று கூறியதின்பேரில் பரதன் இராமரை அணுகி வணங்கி வரவேண்டுமென்று கோறினான்.

இராமருடைய சஞ்சாரகாலம் மற்றும் மூன்று வருடம் இருந்தபடியால் வைக்கோலினாற் செய்திருந்த தனது பாதரட்சத்தைக் கழற்றி பரதன் வசமளித்து இதைக் கொண்டுபோய் ராஜபீடத்தில் வைத்து இராட்சியத்தைப் பாதுகார்த் திருங்கோளென்று பரதனுடன் இலக்கணரையும், சீதையையுங் கூட்டியனுப்பி விட்டு பனிரண்டு வருட முடிந்தபின் இராமர் வாரணாசிச் சென்று சுகந்தகாவென்னும் அரண்மனையில் தங்கி அரசு செலுத்தி தனது காலத்தைக் கழித்துவிட்டார்.

இதுவே நாம் பிரசங்கத்திற் கூறிய ராமரது சரித்திர சுருக்கம்.

இந்த சரித்திரத்தைத் தாங்களே வாசித்தறிந்துக் கொள்ளவேண்டுமானால் பிராகிருதபாஷையிலிருந்து மொழி பெயர்த்திருக்கும் அடியிற்குறித்துள்ள இங்கிலீஷ் புத்தகத்தை வாசித்தறிந்துக்கொள்ளுவீராக.

THE STUPA OF BHARHUI - A BUDDHIST MONUMENT.
BY ALEXANDER CUNNINGHAM, C.S.I., C.I.E.
LONDON, 1879
DHASARATHA JATAKA.
(Page 72.)
Place - Baranasi; King - Dasaratha; Palace - Suchandaka.

The queen had two sons and one daughter. The elder son was the sage Rama by name, the second the Prince Lakkhana, the daughter the Princess Sita. Afterwards the queen died. The King's second wife had a son Prince Bharata.

- 3:5, சூலை 14, 1909 -

32. புத்தமதமும் அருகமதமும்

வினா : இத்தேசத் தமிழ்க்குடிகளிற் சிலர் புத்தமதம் வேறு, அருகமதம் வேறென்றுங் கூறுகின்றார்களே.

வே. ப. குலசேகரதாசன், வேலூர்.

விடை : சகஸ்திரநாம பகவனென்றும், ஆயிரநாமத்தால் வாழியனென்றும், வழங்கும் புத்தபிரானுக்கே அருகனென்னும் பெயரும் உரியதென்பதை அடியிற் குறித்துள்ள பின்கலை நிகண்டால் அறிந்துக்கொள்ளலாம்.

11-வது நிகண்டு தகரவெதுகை

புத்தன் மால் அருகன் சாத்தன்

ரகரவெதுகை

தருமராசன்றான், புத்தன் சங்கனோ டருகன்றானும்.

உலகரட்சகனை வடதேசமெங்கும் பகவனென்றும், புத்தரென்றும் வழங்கிவருவது போல் தென்தேசமெங்கும் இந்திரரென்றும், அருகரென்றும் விசேஷமாகக் கொண்டாடி வந்தார்கள்.

இத்தேசத்தோர் இந்திரரென்று கொண்டாடிவந்த விஷயத்தை மணிமேகலை, சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், காசிக்கலம்பக முதலிய நூற்களில் இந்திரவிழா வென்றும், இந்திர திருவென்றுங் கொண்டாடி வந்த உற்சாக நாட்களால் அறிந்துக் கொள்ளலாம்.

இத்தேசத்தோர் அருகரென்று எவ்வகையால் கொண்டாடி வந்தார்கள் என்பீரேல், சாந்தமும், அன்பும் நிறைந்த அருமெயானவர் ஆதலின் அருகரென்று கொண்டாடியதுமன்றி சகலரும் மறவாதிருப்பதற்காய் புத்தபிரான் பரிநிருவாண மடைந்தபின் அவரது தேகத்தை தகனஞ்செய்து அவ்வஸ்திகளை ஏழரசர்கள் எடுத்துபோய் பூமியில் அடக்கஞ்செய்து கட்டிடங்கள் கட்டியபோது அஸ்தியை வைத்துள்ள இடம் விளங்குவதற்காய் குழவிக்கல்லுகளைப்போல் உயர்ந்த பச்சைகளினாலும், வைரத்தினாலும் செய்து, அவ்விடம் ஊன்றிவைத்திருந்தார்கள்.

ஒவ்வோர் பௌத்தர்களும் தங்கள் தங்கள் இல்லங்களில் நிறைவேறும் சுபாசுப காலங்களில் பசுவின் சாணத்தால் மேற்சொன்னபடி குழவிபோல் சிறியதாகப்பிடித்து அதன்பேரில் அருகன் புல்லைக் கிள்ளிவந்தூன்றி அருகனைப் புல்லுங்கள், அருகனை சிந்தியுங்கோளென்று கற்றவர்களுங் கல்லாதவர்களும் அருகம்புல்லை வழங்கும் வழக்கத்தை அநுசரித்து அருகனை மறவாதிருக்கும் ஓர் வழிபடு தெய்வவணக்கமுஞ் செய்து வைத்திருந்தார்கள்.

அதை அநுசரித்தே நாளதுவரையில் நாட்டுகளில் பசுவின் சாணத்தால் குழவிபோல் பிடித்து அருகம்புல்லை ஊன்றி, அருகக்கடவுளாம் புத்தபிரானை சிந்தித்து வருகின்றார்கள்.

பகவனால் போதித்துள்ள தன்மமானது சருவசீவர்களுக்கும் பொதுவாயதாதலின் அதனை புத்தன்மமென்றும், அருகதன்மமென்றுங் கூற வேண்டுமேயன்றி புத்தமதமென்றும், அருகமதமென்றம் கூறுவது பிசகேயாம்.

பத்துபெயர்கூடி, அவரவர்கள் மனோசம்மதப்படி ஏற்படுத்திக் கொள்ளுவது மதமென்றும் ஒவ்வோர் முக்கிய மக்கள் காலத்திற்குக் காலம் தன்மங்களை மாறுபடுத்தல் சமயமென்றும் ஒவ்வொருவர் சென்றவழியே செல்லுதலும், போதித்தவழியே நடத்தலும் மார்க்கமென்றுங் கூறப்படும்.

இவற்றுள் பகவனால் போதித்த சத்தியபோதம் புழுப்பூச்சுகள் முதல் தேவர்கள் எனத் தேர்ந்த மக்கள் வரையிலும் மலமெடுக்குந் தோட்டிகள் முதல் தொண்டர் மகான்கள் வரையிலும், ஏழைகள் முதல் கனவான்கள் வரையிலும்,. கற்றவர்கள் முதல் கல்லாதோர் வரையிலும், பிணியாளிகள் முதல் சுகதேகிகள் வரையிலும் சுதந்திரமாக அனுபவக்கக்கூடிய சத்தியமும் நடுநிலையுமாய தன்மமாதலின் இவற்றை புத்த தன்மமென்றும், பகவத்தன்ம மென்றும், இந்திரர் தன்மமென்றும், அருகர் தன்மமென்றும், அவலோகிதர் தன்மமென்றும், ஐயனார் தன்மமென்றும், மன்னர் சுவாமி தன்மமென்றும், தருமராசன் தன்மமென்றுமே கூறல் வேண்டும். இவைகளே சத்திய மொழிகளாம்.

- 3:7; சூலை 28, 1909 -

33. புத்தரென்னும் மெய் காட்சியோடு அபுத்தரென்னும் பொய்காட்சியைக் கலப்பதென்னோ

உலகெங்கும் புகழ்பெற்ற உத்தமராம் புத்தபிரான் மகதநாட்டுச் சக்கிரவர்த்தித் திருமகனாகப்பிறந்து வளர்ந்து சதா துக்கத்திற்கு எதிரிடையாகும் சதா சுகமிருக்கவேண்டுமென்னும் ஆராய்ச்சியின் மிகுதியால் சகல சிற்சுகபோகங்களையும் விடுத்து சாந்தம், அன்பு, ஈகை என்னும் பற்றினைப்பற்றி இராகத்துவேஷமோகம் என்னும் பற்றுக்களை அறுத்து நிருவாணம் பெற்று தானடைந்த சுகப்பேற்றை உலகெங்குமுள்ள மக்களுக்கூட்டி கியான சங்கங்களை நாட்டி பரிநிருவாணமுற்றபோது அவரது தேகத்தை பௌத்த அரசர்களால் தகனஞ்செய்து அஸ்தியையுஞ் சாம்பலையும் ஏழரசர்கள் எடுத்துப்போய் புத்தபிரான் கியாபகச் சின்னங்களைக் கட்டியதில் அடக்கஞ்செய்த அஸ்திகளையும் கட்டிடங்களையும் அசோக அரசன் சீர்திருத்திவைத்த நெடுங்காலங்களுக்குப்பின் கானிஷ்காவென்னும் அரசனால் அவற்றை சீர்திருத்தி நிலையாகக் கட்டிவைத்தும் சீன யாத்திரைக்காரர் அக்கட்டிடத்தைக் கண்டுகளித்தும் தனது சிலாசாசனத்தில் வரைந்தும் வைத்திருக்கின்றார்.

அத்தகைய சிறப்புற்ற கட்டிடம் நானூறு ஐந்நூறு வருடங்களாக சமய சத்துருக்களால் தரைமட்டமாகி யாதுந் தெரியாமல் மறைந்து (சில வரிகள் தெளிவில்லை) வையும் வெட்டிப் பார்வையிட்டுக்கொண்டுவந்ததில் சென்றமாதம் சரியானப் பீடந்தோன்றி பகவனது அஸ்தியும், சாம்பலுங்கிடைக்கப்பெற்றதன்றி அவரைப்போன்ற சிலாரூபமும், கானிஷ்கா அரசனின் சிலாரூபமுங் கிடைக்கப்பெற்று சீனயாத்திரைக்காரர் சிலாசாசன வாக்கு சத்தியவாக் கென்றேற்பட்டது.

சத்திய சிலாசாசன ஆதரவால் புத்தரென்னும் ஓர் மனிதபுத்திரன் இருந்ததும் மெய், அவரால் போதித்துள்ள சத்திய தன்மங்களும் மெய் அவற்றை அநுஷ்டித்துவரும் சங்கங்களும் மெய்யென்று சகல விவேகிகளுக்கும் வெள்ளென விளங்கிற்று.

இத்தகைய சத்தியவிளக்கத்தால் உலகெங்குமுள்ள சத்திய தன்மப் பிரியர்கள் யாவரும் அவலோகிதர் அஸ்தி தோன்றிற்றென்றவுடன் அவரன்பார்ந்த தேகமே தோன்றிற்றென்றும் ஆனந்தத்தில் இருக்கின்றார்கள்.

ஏனென்பீரேல் தற்காலந்தோன்றியுள்ள மதஸ்தர்களின் கடவுளர் இட்சணமோ அவருக்கு உருவில்லை தோட்டத்தில் உலாவுவார், நாவில்லை பேசுவார், கண்ணில்லை, பார்ப்பாரென்று கூறுவோரும், தங்கள் மதம் அழிந்து போகின்றபடியால் அவதாரங்கள் எடுத்துவந்து அன்னியர் மதத்தையும், அன்னியரையும் அழித்து எங்கள் மதத்தை நிலைநிறுத்தினாரென்று கூறுவோரும், உங்கள் மதங்களைக் காப்பதற்கே உங்கள் கடவுள் அவதரிப்பது யதார்த்தமாயின் தற்காலந்தோன்றியுள்ள மகமதுமதம், கிறீஸ்து மத முதலிய நூதன மதங்களை அழிப்பதற்கு உங்கள் கடவுள் அவதாரம் எடுக்காமலிருக்குங் காரணம் என்னவெனில்:- மௌனஞ் சாதிப்பவர் களுமாகிய பொய்மதக் கற்பனா கதைகளினால் சகலமக்களைப்போல உலகத்திற் பிறந்து வளர்ந்து விவேக விருத்திப்பெற்று சகலதேச மக்களுக்கும் விவேகப் பெருக்கத்தின் வழிகாட்டிய ஜகத்தீசன் சரிதையையும் முன்போன்ற கற்பனா கதைகளென்றே சிலர் எண்ணியிருந்தார்கள். அத்தகைய சந்தேகிகள் யாவருக்கும் சித்தார்த்தி என்னும் மனுபுத்திரன் பிறந்து உலகத்தில் உலாவி மக்களை சீர்திருத்தியதும் மெய். அவரது தேகத்தை தகனஞ்செய்ததும் மெய்யென்னும் அவரது பூர்வ சரித்திரத்திற்கும், ஆயிரத்தி முன்னூறு வருடங்களுக்குமுன் சீன யாத்திரைக்காரர் வரைந்துள்ள சிலாசாசனத்திற்கும் பொருந்த பகவனது அஸ்தியும், சாம்பலுங் கிடைத்துள்ளபடியால் சகல பௌத்தசிகாமணிகளுந் தங்களது தன்மசரித்திரம் மெய் மெய் எக்காலும் மெய்யென்னுங் குதூகலத்தில் இருப்பதுடன் பிரம்மதேசவாசியாம் ஸ்ரீமதி தன்மத்தாயாகும் ஓரம்பாள் இலட்ச ரூபாய் உதவிபுரிந்து அவ்வஸ்தியையும், சாம்பலையும் தகுந்த கட்டிடங் கட்டி வைக்கவேண்டுமென்று கூறியிருக்கின்றாள் நமது கருணைதங்கிய ராஜாங்கத்தோரும் அவற்றிற் கிணங்கி மற்றும் ஆலோசினைகளுக்கு எதிர்பார்த்திருக்கின்றார்கள்.

இத்தகைய மெய்க்காட்சி குதூகலத்தில் இத்தேசவாசிகளிற் சிலர் தங்களது பொய்க்காட்சியைப் போர்த்து மெய்யை முற்றும் மறைக்கப் பார்க்கின்றார்கள்.

அதாவது, பகவனது அஸ்தியையும், சாம்பலையும் வேறு தேசத்தோருக்கு அளிக்கப்போகாது அவர் விஷ்ணுவே அவதாரமாக வந்தவராதலின் இத் தேசத்துள் அவற்றை வைக்கவேண்டுமென்று கூச்சலிடுகின்றார்கள்.

பௌத்த கூட்டங்களை அழிப்பதற்கு விஷ்ணுவும், சிவனும் அவதாரம் எடுத்து வந்துள்ளாரென்று வரைந்து வைத்திருப்பதுடன் உத்திர மீ மாம்சை, தட்சண மீமாம்சை என்னுங் கற்பனைகளை வரைந்து வைத்துள்ளவர்கள் புத்தரை விஷ்ணு அவதாரமென்று கூறவந்த தென்னவிந்தையோ விளங்கவில்லை.

மெய் மெய்யென விளங்கும் சத்தியப் பெருஞ்சரித்திரத்துடன் தங்களது பொய்க் கதைகளையுஞ் சேர்த்து மெய்ப்பித்துக்கொள்ள வேண்டுமென்னும் நோக்கம் போலும்.

அத்தகைய விஷ்ணுவின் அவதாரம் உலகெங்குமுள்ள மக்களைக் கார்க்கவந்திருக்குமா அன்றேல் தென்னிந்தியாவில் நாமமிட்ட மக்களை மட்டுங்

கார்க்க வந்திருக்குமா. உலகெங்குமுள்ள மக்களைக் கார்க்கவந்திருக்குமாயின் சகலதேச மக்களும் அவ்வஸ்தியைபாகித்துக் கொள்ளுவதுடன் தாங்களுஞ் சிறிது பாகம் பெற்று சிறப்பு செய்யலாகாதோ. புத்தரவர்கள் விஷ்ணுவின் அவதாரமாதலின் அவரது அஸ்தியை இந்துதேசத்துள்ளாகவே வைக்கவேண்டுமென்று கூறுவது கொண்டு விஷ்ணுவினவதாரம் தென்னிந்தியா வாசிகளுக்கென்றே தெளிவாக விளங்குகின்றது.

ஆனால் புத்தபிரானோ உலகெங்குமுள்ள மக்களுக்கு ஜகத்தீசனாகவும், ஜகத்குருவாகவும் விளங்கியுள்ள அநுபவக் காட்சியானது உலகெங்குமுள்ள மக்கள் ஜனத்தொகையில் அவரையே அரைக்கால்பாக மனுக்கள் பௌத்தர்களாக இருப்பதால் புத்தபிரானை விஷ்ணு வினவதாரமென்று கூறுவது வீண் வார்த்தையேயாம்.

மெய்யாகிய சரித்திர சாட்சியோடு பொய்யாகியப் பொடிகளைக் கலப்பது நமது தேசத்தையும், தேசத்தோரையும் பொய்யர்களாக்கிவிடும். ஆதலின் நமது அன்பர்கள் ஒவ்வொருவரும் பொய்சரித்திரங்கள் ஈதென்றும், மெய்சரித்திரங்கள் ஈதென்றும் ஆராய்ந்து பேசும்படி வேண்டுகிறோம்.

- 3:14; ஆகஸ்டு 15, 1909 -

34. மஞ்சள் உடுத்தி கரகம்

வினா: விவாஹ மாகுமுன் மணமகனுக்காகிலும், மணமகளுக்காகிலும் மஞ்சளாடை உடுத்திக் கரகம் ஜோடித்து சிரமேற்றி 7-ஊர் விளையாடுவதற்குப் பதிலாய் 7-தெருவாகிலுஞ் சுற்றும் வழக்கமிருக்கிறதே அதின் விஷயங்கள் இன்னதென்ன விளங்கவில்லை.

பி. கோவிந்தசாமி, சாம்பியன் ரீப்ஸ்.

விடை: பூர்வபௌத்தர்கள் தங்களுடையப் பிள்ளைகளில் யாதாமொருவர் கொடு வியாதியால் பீடிக்கப்படுங்கால் ஆண்பிள்ளைகளாயின் அவ்வியாதி நீங்கியவுடன் சிரமொட்டை அடித்து மஞ்சளாடை அணைந்து புருஷர் மடத்திற் சேர்ந்துவிடுவதும், பெண்பிள்ளையாயின் வியாதி நீங்கியவுடன் சிரமொட்டை அடித்து தாய்மாமனால் மஞ்சள் நூல்சரடு கழுத்தில் அணைந்து மஞ்சளாடை உடுத்தி இஸ்திரீகள் மடத்திற் சேர்த்துவிடுவதும் வழக்கமாகும்.

மடத்திற் சேர்க்க பிரியமில்லாத சிலர் தங்கட் பிள்ளைகள் வியாதி நீங்கி விவாக காரியம் நடத்துங்கால் பௌத்த பிக்ஷுணி அம்பிகாதேவியை சிந்தித்து ஆண்பிள்ளையையேனும், பெண்பிள்ளையையேனும் மஞ்சளாடை உடுத்தி பூவாடைக்காரியாம் பிக்ஷுணியின் கமலபாதத்தையே பூங்கரகமாக சிரசிலேந்தி புத்தபிரானது அஸ்தியை ஏழுவரசர்கள் கொண்டுபோய்க் கட்டிவைத்திருக்கும் ஏழு கோபுரங்களாகும் ஏழு மலையான் (டாகோபாக்) களை சுற்றி தெரிசித்து வருவதற்கு பதிலாய், ஏழு எல்லைகளையேனும், ஏழு வீதிகளையேனும் வலம் வந்து முகூர்த்தச்செயலை நடத்துவது வழக்கமாகும்.

- 3:16; செப்டம்பர் 29, 1909 -

35. ஆயுதபூசை

வினா: ஆயுதபூசை என்பதின் பொருளென்னை, அதனை நடாத்தும் விவரமென்னை, அதன் சரித்திரம் யாது

பாஷியம் நாயுடு, காஞ்சிபுரம்.

ஆயுதம் என்பதின் பொருள் மக்கள் ஆயுளை அதஞ்செய்யுங் கருவிகளுக்கு ஆட்கொல்லியென்றும், ஆயுதமென்றும் அவற்றை அணிந்த அரயனை ஆயுதபாணியென்றும், அஃதில்லா அரயனை நிராயுதபாணியென்றும் கூறுவது வழக்கமாம். ஆயுவை அதஞ்செய்யும் ஆயுதங்கள் வில், வாள், வேல், வாகு, பிண்டிபாலம், கதாயுதம், கோல், தடி, ஈட்டி முதலியவைகளேயாம். இத்தகைய ஆயுதங்களைப் பூசிக்குங் காரணம் பூர்வம் இப்பரதகண்டத்தில் கொண்டாடிவந்த மூன்று இஸ்திரீ தேவதைகளில் இருவரை துஷ்டதேவதை களாகவும், ஒருவளை சாந்ததேவதையாகவுங் கொண்டாடி வந்தார்கள்.

இம்மூவருள் வட பரதகண்டத்து வங்காளம், காம்போஜம், பப்பிர மென்னும் மூன்று நகரங்களையும் அரசாண்டுவந்த சுத்தவீரி காளியென்னும் ஓர் அரசியிருந்தாளாம். அவளது நீதிநெறி ஒழுக்கத்திற்கும், வாய்மெய்க்கும், எத்தகைய அரசருக்கும் அஞ்சாத வல்லபத்திற்கும் சகல அரசர்களுங் குடிகளும் அஞ்சும்படி ராட்சியபாரஞ்செய்து மறைந்தனளென்பது காளிதாச தியானம். அவள் வாசஞ்செய்த கோவிலுள் அவளுருவத்தை அமைத்து காளிகாதேவி என்றும், துருக்கை, சாமுண்டி என்றும், வராகி என்றும், வணங்கி வந்தார்கள்.

மற்றுமோர் துஷ்டதேவதை கோவிலன் மனைவி கன்னகா பரமேஸ்பரி. இவளை நீலியென்றும் கூறுவதுண்டு.

மற்றுமோர் சாந்ததேவதை சாக்கையருள் பாணர்வம்மிஷ மலையரசன் புத்திரி வாலாம்பிகை என்றும், ஔவையென்றும், அம்மை என்றும், மணிமேகலா தெய்வமென்றும் வாலை, மனோன்மணி என்றும் மாறியை ஆற்றினவளென்றுங் கூறியுள்ள ஒருவளுண்டு.

இம்மமூவருள் வடபரதகண்டத்தில் இருந்த காளிகாதேவியை அவளது வம்மிஷ வரிசை அரசர்கள் அவள் மரணமடைந்த நாளை பத்துநாள் கொண்டாடுவதற்காய் வருடந்தோரும் அரண்மனை முன்னில் பெரும்பந்தலிட்டு காளிகா வுருவை ஒன்பதுநாள் கொலுவிருக்கச்செய்து தங்கள் சம்மாரத்திற்கு உதவியாகும் வில், வாள், கதை முதலிய யுத்தக்கருவிகளை காளியம்மன் முன் வைத்து தாங்கள் எவ்வரசர்களின்மீது யுத்தத்திற்குச் செல்லினும் ஜெயம்பெற வேண்டுமென பூசித்து அவ்வாயுதங்களைக் கொண்டே அரசர்கள் ஒருவருக்கொருவர் விளையாடி ஆயுதங்களைக் கலைத்து தூணிகளில் வைப்பது வழக்கமாகும்.

இதை அநுசரித்தே காளிதாசர் தனது கமலப்பிரவாள சமஸ்கிருத சூத்திரத்தின் தமிழ்மொழி பெயர்ப்பு.

"காளிகாதேவி கண்வைத்தருள்வாய்
கல்லார்க்கெல்லாங் கலைவகுத்தருள்வாய்
வில்லும் வாளுமேந்திடு மரசர்
கொல்லித்தொழவும் சுகந்தந்தருளாய்
ஒன்பதுநாளு மன்பர்முன் னின்று
இன்பமருளி யெனையாண்டருள்வாய்".

என்றுந் துதித்துள்ள மற்றுஞ் சூத்திரங்களைக் கமலப்பிரவாளத்தை நோக்குக. காளிதாசர், கமலப்பிரவாளத்தை வங்காளம் துருகப்பிரசாத் அவர்கள் வெளியிட்டுள்ள காளிதாச சரித்திரத்திற் காணலாம்.

வட பரதகண்டத்தில் அரசாண்டுவந்த காளிகாதேவியின் உருவை ஒன்பதுநாள் கொலுவீற்றிருக்கச்செய்வதினால் நவராத்திரி கொலு என்றும், பத்தாநாள் வில், வாள், கதை முதலியவைகளை பூசித்து விளையாடுவதால் ஆயுதபூசை என்றும், இஃது பத்துநாள் கொண்டாட்டமானதால் தசரா வென்றுங் கொண்டாடிவந்தார்கள்.

இஃது அரசர்கள் கொண்டாடும் ஆயுதபூசா சம்பந்தமென்பதே வட பரத காளிகாபூசை என்றும் சாமுண்டிபூசை என்றும் வழங்கும். இதன் பிரபல வைபவத்தை மைசூர் அரண்மனையில் வருடந்தோருங் காணலாம்.

- 3:20; அக்டோபர் 27, 1909 -

36. அரசபுத்திரன் புத்தர்

வினா: புத்தரென்னும் பெயரை சகல நீதிநூற்களிலும் ஞானநூற்களிலுங் காண்கின்றேன். ஆயினும் அவரை அரசபுத்திரனென்று எந்தநூற்கள் கூறுகின்றதோ யான் காணவில்லை. சிவசமயத்தோருட் சிலர் தங்கள் சிவன் ஆலமரத்தடியில் உட்கார்ந்தாரென்றும், புத்தர் அரசமரத்தடியில் உட்கார்ந்தார் என்றும் கூறுகின்ற படியால் இவ்விரண்டும் ஒரு சரித்திரமா அன்றேல் இரண்டு சரித்திரமா விளங்கவில்லை.

வீ. மாரிமுத்தாப்பிள்ளை, திரிசிரபுரம்.

விடை: ஐயா, தாம் வினாவியுள்ள வினாக்களை நமது தமிழ் சாஸ்திரங்களைக் கொண்டே எளிதில் அறிந்துக்கொள்ளலாம். ஆயினும் மதவைராக்கியம், மதகர்வம் முதலியவைகளால் கண்ணை மறைத்துக்கொண்டு சத்தியதன்மத்தைக் காண வேண்டுமாயின் கிஞ்சித்தும் விளங்காது.

தன்மதம் பிறமதமென்னும் போர்வையை அகற்றி மதகர்வத்தை நசித்து பொய்யைப்போக்கி மெய்யை விசாரிப்போமானால் பொய் நீங்கிய இடத்திலேயே மெய் விளங்கும்.

புத்தபிரானுக்கு அன்பர்களால் அளித்துள்ள ஆயிர நாமங்களில், தொளாயிரத்து தொண்ணூற்றொன்பது நாமங்களை இத்தேசத்து நூதனமதஸ்தர்கள் எடுத்துக் கொண்டு புத்தரென்னும் ஒரு பெயரை மட்டும் நீக்கி விட்டார்கள். சிவனென்னும் பெயரும் புத்தருக்குரிய ஆயிர நாமங்களில் ஒன்று.

அறநெறிச்சாரம்

அவன்கொ லிவன்கொலென் றையப்படாதே
சிவன்கண்ணே செய்மின்கள் சிந்தை சிவன்றானும்
நின்றுகால்சீக்கு நிகறிகழும் பிண்டிக்கீழ்
வென்றிச்சீர் முக்குடையான் வேந்து.

சிலப்பதிகாரம்

சினவரன் தேவன் சிவகதி நாயகன்

அருங்கலைச்செப்பு - அன்புநிலைப்பத்து

சிவமே சிவமே யென்றேத்தித் திருவாயுள் / ளவமேய வன்பில்லாதென்.
அன்பே சிவமா யமர்ந்தா ரருளடியார் / முன்பே முநிவேந்தனார்.

முநிவேந்தரென்றும், வேந்தனென்றும் அரசரது மரபு கொண்டே வரைந்துள்ளார்கள்.

புத்தராக விளங்கியவர் அரசபுத்திரனே என்பதை அடியிற்குறித்துள்ள நூற்களால் அறிந்துக்கொள்ளலாம்.

நெஞ்சறிவிளக்கம்

அரியதோ ரரசன் மைந்தன் / அவனியிற் பிறந்து முன்னாள்
பெரியபே ரின்ப ஞானம் / பெருவதே பெரிதென்றெண்ணி
உரியவேதாந்த உண்மை / யுரைத் தகண்டத்துச் சென்ற
தெரியொணா நாகைநாதர் / சீர்பதம் போற்று நெஞ்சே.

ஞானக்கும்மி

அரசகுலத்தி லுருவாகி / யம்பரமான வெளிதனிலே
பொரசமரத்தி லமர்ந்திருந்தா - னவன் / பொருளைப்பாடடி ஞானப்பெண்ணே.

மணிமேகலை

சாக்கையராளுந் தலைத்தார் வேந்தன் / ஆக்கையுற்றுதித்தனன் ஆங்கவன்றானென.

அவர் அரசபுத்திரரிலும் சக்கிரவர்த்தி திருமகனாகத் தோன்றியது கொண்டே நாயனார் தானியற்றியுள்ள திரிக்குறள் கடவுள் வாழ்த்துப் பாவில் இறைவனென்றே அவரை சிந்தித்துள்ளார்.

திரிக்குறள்

இருள்சே ரிருவினையுஞ் சேரவிறைவன் / பொருள்சேர் புகழ்புரிந்தார்மாட்டு.
பிறவிபெருங் கடனீந் துவர்நீந்தா / ரிறைவனடி சேராதார்.

இத்தகையச் சக்கிரவர்த்தித் திருமகனாகப் பிறந்து அறியென்றும், சிவனென்றும், பிரமனென்றும் பெயர்பெற்ற புத்தபிரான் சென்று நிலைத்த ஓர் மரத்திற்கு அரசபுத்திரன் மரத்தடியில் வீற்றிருக்கின்றார் அரசபுத்திரன் மரத்தடியில் வீற்றிருக்கின்றார் என்னுங் காரணங்கொண்டு அம்மரத்திற்கே அரசன் மரமென்னு பெயருண்டாயிற்று. அம்மரத்தடியில் உட்கார்ந்து சோகமாம் காம மயக்கத்தை வென்றபடியால் அம்மரத்திற்கு அசோக மரமென்றும், அம்மரத்தின்கோல் காய்ந்த உலக்கையாயிருந்தும் ஓர் கால் துளிரிட்டு தழைத்தபடியால் பிண்டியென்றும் மராஷ்டகம், கன்னட முதலிய பாஷைகளில் வழங்கிவந்ததுமன்றி திராவிட பாஷையில் கருங்கல்நிறங் கண்டதுகொண்டு கல்லாலமென்றும், ஆலமரமென்றும், கல்லாத்தியென்றும்,

போதிக்கும் ஓர் பீடமாதலின் போதியென்றும் அவலோகிதகர் வீற்றிருந்த மரப்பெயர் வழங்கி வந்தார்கள். அதன் மகத்துவப்பெயரை மராமரமென்றும் வழங்குவதுண்டு.

திரிவாசகம்

ஆத்திச்சுவட்டி லமர்ந்ததேவணை / ஏத்தி யேத்தித் தொழுவோமியாமே.

மணிமேகலை

ஆலமர்ச் செல்வன் மதன்விழாக்கோல்கொள.

தாயுமானவர்

செங்கமல பீடமேல் கல்லாலடிக்குள்வளர் / சித்தாந்த முத்திமுதலே.

வைராக்கியசதகம்

ஆலநீழலி லன்றோ ரைவருக் / கறநெறியுரைத்தானை
காலகாலனை சிவப்பிரகாசவெண் / கண்மணிதனை யுன்னா
தேலவார் குழலார் மயல்கொண்டுநீ / யிங் குழலுவதெல்லாம்
சாலவே பிழையாகு நெஞ்சேசொனேன் / றவநிலை யென்மேலே.

முன்கலைதிவாகரம்

கணவைம்பணையேமராமரம் போதி / யரசன் வீற்று மிருந்தலி லரசே.

ஓர் அரசபுத்திரனும் நம்மெய்ப்போன்ற தேகியுமாயிருந்து சுத்தஞானத் தெளிவால் ஜகத்குருவாக விளங்கி உலக சீர்திருத்தக்காரருள் ஆதியாகி உலக ரட்சகனுமாகி பரிநிருவாணமடைந்த பின் அவரது தேகத்தை தகனஞ்செய்த அஸ்தியையும், சாம்பலையும் நாளதுவரையில் தெரிசித்து வருகிறோம்.

உலகெங்குமுள்ள விவேகமிகுத்தோர் யாவரும் அவரை ஜகத்குருவென்றும், சீர்திருத்தக்காரருள் முதல்வரென்றும், புருஷர்களில் உத்தமரவரே என்றும், ஆசியா கண்டத்தின் ஆதியொளி என்றும் நாளதுவரையிலுங் கொண்டாடி வருகின்றார்கள்.

அன்னியன் பிள்ளையைத் தன் பிள்ளை என்று தாராட்டியபோதிலும் அதினந்தார்த்தத்தையும் குணக்குறிகளையும் அறிந்த விவேகிகள் அவற்றைத் தெளிவுற விளக்கிவிடுவார்கள்.

அதுவும் விளக்கவேண்டுமென்று கோறியவிடத்தில் விளங்குமேயன்றி அன்னியன் பிள்ளையை தன்பிள்ளை என்று சாதிக்குமிடத்து விளங்கமாட்டாது.

குணங் குறி யந்தரார்த்தம் உணர்ந்த பெரியோர்களும் மதகர்வங் கொண்டோர் முன் தோன்றி விளக்கவுமாட்டார்கள்.

- 3:23; நவம்பர் 17, 1909 -

37. மரணக்கிரியை

வினா: நமது சாதிபேதமற்ற திராவிடர்களுக்குள் மரணமடைந்துவிட்டால் அப்பிரேதத்தின் பெருவிரலைக் கட்டிவிடுவதும், சிரசினருகே தீபமேற்றி வைப்பதும், பிரேதம் எடுத்துக்கொண்டு போகுங்கால் நெருப்புச்சட்டி எடுத்துக்கொண்டு நெற்பொரியும், வெற்றிலையும் இறைத்துக்கொண்டுபோய் பிணத்தை பூமியிற் புதைத்துவிட்டு இரண்டாநாளேனும், மூன்றாநாளேனும் பால் கொண்டுபோய் பிரேதக் குழியின்மீது வார்த்துவிட்டுவருவதும் ஆகியக் கிரிகைகளின் விவரங்கள்.

வீ. பாலசுந்திரம், அரக்கோணம்.

விடை: முற்காலத்தில் புத்ததன்மம் இந்துதேசம் முழுவதும் பரவியிருந்தகாலத்தில் அவற்றை அநுசரித்துவந்த மக்கள் ஞானத்துக்குரிய நித்தியச்செயல்களைப் புகழ்ந்தும் அநித்திய செயல்களை இகழ்ந்தும் வருவது இயல்பேயாம்.

அதாவது ஞானசாதனம் உணர்ந்தும் இறந்தானென்றால் இகழ்ந்தும், சம ஆதியானானென்றால் புகழ்ந்தவற்றுள் தன்னை அறியாது இறந்தவன் கால்களின் பெருவிரலை சேர்த்துக் கட்டுவதின் காரணம் யாதெனில்.

பாசபந்தக்கட்டானது இவனைவிட்டு நீங்கவில்லையென சகலரும் அறிந்து சீர்பெறுவதற்கேயாம்.

இதனை உணர்ந்தே தாயுமானவரும் "நிகளபந்தக் கட்டவிழ்ப்பாரே" யென்றுங் கூறியுள்ளார்.

ஒவ்வோர் மக்களின் உச்சியில் தேயு ஒளியாம் சோதியுண்டு. அஃது அறிவின் விருத்திக்குத் தக்கவாறு விருத்தியும் பிரகாசமுமாகும்.

அதுவே சாந்தம் அமைந்தபோது சுயம்பிரகாச தெய்வமென்றும், காம வெகுளி மயக்கத்தில் அமைந்தபோது தேயு தீயால் நைந்து பிணமென்றுங் கூறப்படும். இத்தகைய ராகத்து வேஷமோக மிகுதியால் அறிவுகுன்றி அச்சோதி அடங்கியதை உணர்ந்த பெரியோர் பிணத்தின் சிரசினருகே மற்றோர் தீபத்தை ஏற்றிவைத்து தீபமுள்ளோரை தெரிசித்து தங்களுக்குள்ள தீபம் அழியா வழியில் ஒழுகச் செய்திருக்கின்றார்கள்.

ஞானக்கும்மி

உச்சிக்குநேரே வுண்ணாவுக்குமேல் நிதம் / வைத்த விளக்கே யெறியுதடி
அச்சுள்ள விளக்கே வாலையடி / அவியாம லெறியுது ஞானப்பெண்ணே.

கடவுளந்தாதி

மெய்ப்பொரு ளுச்சிக்கு / ளுச்சிதமாக விருக்குமப்பா
வைப்பினின் மாணிக்கப் / பொக்குஷமேமணி மாமகுடச்
செப்புக்குள் ளேற்றுந் / திருவிளக்குள்ளொளி - தீபமது
கைப்பொரு டன்னினு / மெய்ப்பொருளாமது கண்டவர்க்கே.

சிலநூற்றாண்டுகளுக்கு முன்பு புத்ததன்மத்தைச்சார்ந்த உபாசகர்களையும், அறஹத்துக்களையும் தகனஞ்செய்வதே வழக்கமாயிருந்தது. அதன்பின்பு தோன்றிய அசத்தியமார்க்கத்தோர்களால் ஞானசாதனங்கள் மாறுபட்டு அடயோக சாதனமென்னும் பிராணாயாம பொருள் தெரியாது பெருநாவை சிறுநாவாம் உண்ணாவிலடைத்து உந்திகமலம் வரை பூரித்து அகராட்சரத்தை கண்டத்தில் அமைக்குமிடந் தெரியாதமைத்து பெருநித்திறை யடைவதுபோல் மூச்சுப்பேச்சற்று அடங்கிவிடுவார்கள். அச்செய்கை இறந்தவனுக்குங் கூட்டில்லை, உயிருடன் உலாவும் அஞ்ஞானிக்குங் கூட்டில்லை. இத்தகைய சாதனமுள்ளவர்களை இறப்போர்கள் எடுத்து தகனஞ்செய்யுங்கால் சுரணைதெரிந்தெழுந்த சிலரைக் கண்டப்பின் மூச்சுசாதனமுள்ளோர்களை அரைவீடுகட்டி அடக்கஞ்செய்வதும், ஞானசாதகர்களில் குண்டலியோகி களையும் அவ்வகை அடக்கஞ்செய்வதும், மற்றுமுள்ள சகலர்களையுந் தகனஞ்செய்வது வழக்கமாகும்.

அத்தகைய தகனத்திற்கும் அரைக்கட்டுவதற்கும் குறித்தயிடங் கிடையாது. அவரவர்களுடைய தோப்புகளும், காலிபூமிகளும் எங்கெங்கிருக்குமோ அங்கங்கு அடக்கமும், தகனமுஞ் செய்துவந்தார்கள்.

இவ்வகையாய பழக்கத்தால் பிறேதமெடுத்துப்போம்போது பின்வருவோர் அத்தகனவிடந்தெரிந்து வருவதற்காக பதிவிரதாகுணமறியப் பொரித்த நெற்பொரியையும், வெற்றிலையையுங் கவர்ந்து இறைத்துக்கொண்டே போவார்களாயின் பின் செல்லுவோர் அவ்வழி தெரிந்தே சுடுமிடத்திற்குப் போவது வழக்கமாகும்.

நெருப்புச்சட்டிக் கொண்டுபோகுங் காரணம் யாதெனில், முற்காலத்தில் மாச்சிஸ்பெட்டிகளேனும், மற்றவகைத் தீக்குச்சுகளேனும் இல்லாததினால் வீட்டிலிருந்து போகும்போதே நெருப்பைக் கனையவைத்துக் கொண்டுபோய் புறதேகமாம் பிறேதத்தின்மீதுக் கட்டைகளை அடுக்கி சகலவரசர்களுங் கூடி தகனித்த புத்தபிரான் தேகத்தை மற்றவர்கள் யாவரும் நெருங்கி கொள்ளிமீட்டாது தனது யேகபுத்திரர் இராகுலரைக்கொண்டு கொள்ளிமீட்டியதுபோல் இறந்துள் ளோர் மைந்தனைக்கொண்டு கொள்ளிமீட்டி தகனித்த தேகத்தின்மீது நீரைதெளிக்காது பாலை தெளித்தும், போதாதாயின் இளநீரைத் தெளித்தும் அவித்து அவ்வஸ்தியை கங்கையிலேனும், சமுத்திரத்திலேனும் விடுவது இறந் துள்ளோர் மீதுள்ள அன்பின் செயல்களாகும்.

காசிக்கலம்பகம்

கேயூரமூரக் கிளர்தோளகிலேசர் / மாயூர மூறு மொருமைந்தற்குத்-தீயூறு
மவ்வேலையீய்ந்தாரடித்தொழும்பு செய்தொழுகு / மிவ்வேலையீய்ந்தா ரெமக்கு.
இடமருங்கின் மருங்கிலாதவள் / குடியிருக்கவு முடியில்வே
றிவளொருத்தியை யிருத்திவைத்துநதி / பாகமோகினி ரூபமாய்
நடமிடுங்கிவண் மேலும்வைத்துள / நயந்தோர்பிள்ளை பயந்த நீர்
நங்குலத்திருவை மருவினின்று பிறர் / நாவளைக்க விடமாகுமோ
குடமுடைந்தவென வானினங்கண்மடி / மடைதிறந்து பொழி பாலோடுங்
கொழுமடற்பொதியவிழ்ந்து கைதைசொரி / சோறுமிட்டணி திருக்கையாற்
கடல் வயிற்றினை நிறப்புகின்ற சுர / கங்கை குண்டகழியா நெடுங்
சுகநதீள் குடுமிமதில்கள் மூன்றுடைய / காசிமேவு மகிலேசரே.

புத்தபிரான் தேகத்தை தகனங்செய்த சாம்பரின்மீது பாலைக்கொண்டு போய் தெளிக்க ஆரம்பித்தபோது பாற்குடந் தவரிவிழுந்துடையவும் வந்திருந்த மேலோர் மற்றும் பாலும், இளநீரும் விட்டவித்து அங்குவந்துள்ள ஏழைகளுக்கும் சோறு கொடுத்து பசியாற்றினார்கள்.

அதை அநுசரித்தே சாக்கியவம்மிஷ வரிசையோர்களாகிய சாதிபேதமற்ற திராவிடர்கள் பால் கொண்டுபோய் தணலை அவிக்குமுன் பிண்டப் பிரசாத மென்னும் அன்னமிட்டு குடமுடைப்பதும் பாலும் இளநீரும் விட்டவிப்பதும் பூர்வ வழக்கமாகும்.

தற்காலமோ மகமதியர் சேர்க்கையாலும், கிறிஸ்தவர்கள் சேர்க்கையாலும் தகனத்தை மறந்து பிரேதத்தை புதைக்க ஆரம்பித்துக்கொண்டபோதிலும் பூர்வ புத்ததன்மச்செயல் மாறாது நெருப்புச்சட்டிக் கொண்டுபோவதும் பால்கொண்டு போவதும், குடமுடைப்பதும், பிண்டப்பிரசாதம் ஈவதுமாகிய வழக்கங்களை விடாது செய்துவருகின்றார்கள்.

இத்தியாதி தன்கன்மச் செயல்கள் யாவும் பூர்வ புத்ததன்ம அநுபவங்கள் என்றே தெரிந்துக்கொள்ளுவீராக.

- 3:23; நவம்பர் 24, 1909 -

38. பௌத்தர்களுக்குள்ளும் தெய்வதூஷணமுண்டோ

ஒருக்காலும் இராதென்பது திண்ணம் எங்ஙனம் என்பீரேல், தற்காலந் தோன்றியுள்ள கிறிஸ்து மதத்தோரைப் பாருங்கள். தங்கள் மதத்தை சிறப்பித்துக் கொண்டு பௌத்தரை தூஷித்து புத்தகமெழுதியிருப்பார்கள். சிவமதத்தோரைப் பாருங்கள் தங்கள் மதத்தை சிறப்பித்துக் கொண்டு பௌத்தரை தூஷித்து புத்தகம் எழுதியிருப்பார்கள். விஷ்ணுமதத்தோரைப் பாருங்கள் தங்கள் மதத்தை சிறப்பித்துக் கொண்டு பௌத்தரை தூஷித்து புத்தகம் எழுதியிருப்பார்கள்.

நாளது வரையில் அப்புத்தகங்களைக் காணலாம். ஆனால், பௌத்தர் களோ கிறிஸ்து மதத்தையேனும், சிவ மதத்தையேனும், விஷ்ணு மதத்தையேனும் தூஷித்து புத்தகங்கள் எழுதியதுங் கிடையாது, தூஷிப்பதுந் தமிழ் பாஷையிற் கிடையாது.

காரணம், தெய்வமென்றும், கடவுளென்றும், சாமியென்றுந் தோன்றி யுள்ளப் பெயர்கள் யாவும் பௌத்தர்களால் ஏற்படுத்தியுள்ளவைகளேயாம்.

அவ்வகை ஏற்படுத்தியுள்ளவர்களுக்கு அப்பெயர்களின் மூலகாரணங் களுஞ் செயல்களுந் தெரிந்துள்ளபடியால் தெய்வ தூஷணம் மறந்துஞ் செய்யமாட்டார்கள்.

வானரரினின்று நரரும், நரரினின்று மக்களும், மக்களினின்று மனுக்களும், மனுக்களினின்று தேவரும் உயர்ந்துகொண்டே வருவது அவரவர்களின் அதி தீவிரமும், விடாமுயற்சியும், நற்சாதனமும், சற்சாவகாசமுமேயாம்.

இத்தகைய சிறந்த முயற்சியால் தேவரென்னும் பெயர் பெற்றுவருவதை சத்தியதன்ம விசாரிணையாலும், அநுபவத்தினாலும் நாளுக்குநாள் முதிர்ந்துவரும் பௌத்தர்கள் தெய்வதூஷணஞ் செய்கின்றார்களென்று தூற்றித்திரிவது அவரவர் களுக்குள்ள தூஷணச் செயல்களையுந் தாங்களே வெளியிட்டு மற்றும் அன்பர்களையும் விரோதிக்கத்தக்க வழிதேடுகின்றார்கள்.

அஃதெவ்வகையில் என்பீரேல், சென்னையில் சாக்கைய பௌத்த சங்கத்தை நாட்டிய காலத்தில் ஓர் வித்துவான் வெளிவந்து பௌத்தரை தூஷித்து புத்தகம் எழுதியதுமன்றி பௌத்தர்கள் தெய்வதூஷணஞ் செய்கிறார்களென்று தங்கள் சமயத்தோருக்குப் பொய்யைச்சொல்லி அன்னவர்களா உள்ளவர்களை எல்லாம் வீண்விரோதத்தை உண்டுசெய்து தமிழில் மிக்க வல்லவனென்னும் படாடம்பங்காட்டி அன்னோர் சமயவாசிகள் மெச்ச நடித்தும் பொய்யைச் சொல்லி விரோதத்தை வளர்த்தும், பெரியோரை தூஷித்தும் வந்தபலனை தான் மடியுங்கால் யாரும் அற்றனுபவித்ததுன்பமே போதுஞ்சான்றாம்.

அத்தகையோர்க்கு உதவியாய் தற்காலம் மற்றொருவர்தோன்றி பௌத்தர்கள் தெய்வதூஷணஞ் செய்கின்றார்களென்று பொய்யைச்சொல்லி அன்பர்களுக்கு விரோதத்தை உண்டுசெய்து வீண்கலகத்தைப்பெருக்க ஆரம்பிக்கின்றவர் எங்கள் தெய்வத்தை இன்னவிதமாக இன்னார் தூஷித்தாரென்று அதிகாரிகளிடம் ரூபிப் பாராயின் அவர்கள் தேர்ந்த விசாரிணையால் தெண்டிக்கக் கார்த்திருக்கின்றார்கள்.

அத்தகைய நியாயவழியில் செல்லாது தூஷிக்கின்றார்களென்று பொய்யைச் சொல்லி தானே தூஷித்தும், தானே அவதூறு செய்தும், சங்கத்தோரெல்லவரையும் மனத்தாங்கல் அடையச்செய்துள்ள பலனை தானே கூடியசீக்கிறத்தில் அனுபவிப்பார். அன்னோர் தெய்வமே அதற்கு சாட்சியமாம் என்பது சத்தியம்.

- 3:26; டிசம்பர் 8, 1909 -

39. அவனன்றி ஓரணுவுமசையாது

வினா : அவனன்றி ஓரணுவுமசையாது என்பதனால், இடிவிழுந்து சாவதும், வீடுநஷ்டமாவதும், புசலடித்து கப்பல் முழுகிப்போய் அனாதரவாய் மாள்வதும், கன்மாரி பெய்து பட்சிகளும், மிருகங்களும், ஊர்வன முதலியதும் காரணமின்றி உயிர்துறப்பதும், பூகம்பமுண்டாய் ஒரு பட்டணம் அப்படியே நடுநடுங்கி ஆயிரம் ஆயிரமாய் ஜனங்கள்சாவதும், நடுநித்திரையில் வீடிடிந்து வீழ்ந்து மண்டை சிதறி விலாவெலும்புடைந்து மரிப்பதும், பாம்பு கடியுண்டு உயிரிழப்பதும், விருத்தாப்பிய தாய்தந்தையரையும், சிறு சோதரர்களையும் வேலைசெய்து காப்பாற்றிவந்த ஒருவனுக்குக் கண்தெரியாமற் போவதும். ஆனதால் மேற்சொன்னபடி அன்னையும் தந்தையும் திக்கற்று இரந்து குடிப்பதும் பாலிய ஆணுக்கும் பெண்ணுக்கும் அம்மை வார்த்து கண்தெரியாமற்றி கைப்பதும், பத்துமாதமும் பலகஷ்டங்களை அநுபவித்து பிரசவிக்கும் சமயத்தில் உயிரற்று குழந்தை பிறப்பதும், தாயே சாவதும், தாயும்பிள்ளையும் சாவதும் அவன் செயல்தானோ?

தி.சி. நாராயணசாமி பிள்ளை எச்.எப்.யு., உ.கோ.

விடை.: "அவனன்றி யோரணுவு மசையா தெனும்பெரிவாப்தர் மொழியொன்று கண்டாய்" எனக் கூறியுள்ளவற்றுள் அம்மொழி அவனவனென்னும் மீமிசை பெற்று வராது அவனன்றி, யெனவெழுந்த முன்னிலைச் சுட்டுமொழியை காணா வஸ்துவின் கருத்துரை யேற்றல் கனக்குறைவேயாகும். அவனவன் செய்யுங் கன்ம பலனை அவனவனே அநுபவித்துத் தீரல்வேண்டுமேயன்றி ஓரணுவேனு மற்றவர்களால் அகற்றலாகாது என்பது கருத்து. அவன் செய்த கன்மத்தை அவனே அனுபவித்துத் தீரல் வேண்டும் பல சீவர்கள் செய்யுங் குற்றங்கள் யாவற்றிற்கும் ஒருவன் காரணனென்று கூறுவது ஒவ்வாமொழியேயாகும். அவன்செயல் நற்செயலாயின் நற்பலனடைவான். துற்செயலாயின் துற்பலனடைவான். அவ்விரு வினைப்பயனுள் ஓரணுவேனும் மற்றவர்களால் அகற்றலாகாது.

முன்மெய்ச்சுட்டு அவனென்பதும், தன்மெய்ச்சுட்டு தானென்பதும் ரூபக்குறிப்புகளன்றி அரூபக்குறிப்புகளாகாவாம்.

இத்தகையக் கருத்துகொண்டே தாயுமானவர் மற்றோரிடத்திற் கூறியுள்ள "தானானதன்மயமேயல்லால்" என்னு மொழியைக்கொண்டே தனக்கன்னிய வேறுமயமில்லை என்பது துணிபாயிற்று.

அதே தாயுமானவர் மற்றோரிடத்து "எனதென்பதும் பொய் யானெனல் பொய் யெல்லாமிறந்தவிடங்காட்டும், நினதென்பதும் பொய் நீயெனல் பொய்,' என்றுங் கூறியுள்ளக் கருத்துகளைக்கொண்டு அவனென்னு மொழி முன்னிலைச் சுட்டாம். ஓர் மனிதனையே குறிப்பிட்டுக் கூறியமொழியாகும். அம்மொழியே, அவனவனென்னும் மீமிசையுற்று வருமாயின் அவனவன் செய்கைகளென்பது அங்ஙனே விளங்கும். அவனென்று தனிமெய்ப்பெற கூறியதனால் மொழிமயங்கி சகலசீவர்களின் குற்றங்களுக்கும் ஒருவன் காரணமென உருகெட்டுநின்றது.

அவன் செய்த குற்றங்களை அவனே அநுபவிக்கவேண்டும். தான்செய்த குற்றங்களை தானே அநுபவிக்கவேண்டுமேயன்றி ஏனையோர்களால் ஓரணுகும் அசைக்கலாகாதென்பது கருத்து.

அவனன்றி எனுமொழியை அவனவனன்றி யென வேற்றவிடத்து தெள்ளற விளங்கும்.

மூவர் தமிழ் நாலடி நானூறு

நன்னிலைக்கட்டன்னை நிறுப்பானுந்தன்னை / நிலைகலக்கிக் கீழிடுவானு - நிலையினு
மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னை / தலையாகச் செய்வானுந்தான்.

அறநெறிச்சாரம்

தன்னிற் பிறிதில்லை தெய்வநெறி நிற்பில் / ஒன்றானுந் தானெறி நில்லானேல் - தன்னை
இறைவனாய்ச்செய்வானுந் தானேதான்தன்னை / சிறைவனாய்ச் செய்வானுந்தான்.
தானே தனக்குப் பகைவனு நட்டானும் / தானே தனக்கு மறுமெயு மிம்மெயும்
தானேதான் செய்த வினைப்பயன் றுய்த்தலால் / தானே தனக்குக் கரி.

சொரூபசாரம்

என்னையே யல்லாமல் யான்பெற்ற தேதுமிலை
யென்னையான் பெற்றிருந்ததெப்போது -மென்னையன்றி
பந்தமிலை வீடுமிலை பார்க்கிலிவை யாராயுஞ்
சிந்தனையு மில்லாததே.

கடவுளந்தாதி

சாதகமென்னுஞ்சிவஞானபூரணந் தன்னிடத்திற்
பூதமாக வருளிருக்கப் பொருள்வேறெனவே
பேதகமாகத் திரிந்துழன் றெங்கும் பிதற்றும் பொய்யிற்
றோதகமொன்று மறியாமன் மாய்கின்ற தொல்பவரே.

- 3:27; டிசம்பர் 15, 1909 -

40. இந்தியதன்மத்தினின்று புத்த தன்மம் தோன்றியதா அன்றேல் புத்ததன்மமே இந்திரர்தன்மமா

புத்ததன்மமாம் சத்தியதன்மமே இந்திரர் தன்மமென வழங்கலாயிற்று.

சித்தார்த்தியாம் சக்கிரவர்த்தித் திருமகன் புத்தநிலையடைந்து சத்தியதன்ம வரத்தை சகல சீவர்களுக்கும் ஊட்டியது கொண்டு அவரை வரதரென்றும், பரதரென்றுங் கொண்டாடிவந்தார்கள்.

மக்களுக்கும், சீவராசிகளுக்கும் இத்தேசமெங்கும் வேண்டிய சீர்திருத்தங்களை செய்து ரட்சித்த ஆதிபகவனாதலின் அவருக் களித்திருந்த பரதன், வரதன் என்னும் பெயரைக்கொண்டே சிலநாள் வடநாட்டை வடபரதகண்டமென்றும், தென்னாட்டை தென்பரதகண்டமென்றும் வழங்கிவந்தார்கள்.

சூளாமணி

தேரணி கடற்படைத் திவிட்டன் சென்றுபி / னாரணி யறக்கதி ராழிநாதனாம்
பாரணி பெரும்புகழ் பரத வென்றனன் / சீரணிதிருமொழித் தெய்வத் தேவனே.

வீரசோழியம்

தோடாரிலங்கு மலர்கோதிவண்டு வரிபாடு நீடுதுணர்சேர்
வாடாதபோதி நெறிநீழன்மேய வரதன் பயந்த வறநூல்
கோடாதசீல விதமேவி வாய்மெய் குணனாக நாளுமுயல்வார்
லீடாதவின்ப நெறிசேர்வர் துன்ப வினைசேர்த நாளுமிலரே.

சூளாமணி

மாற்றவர் மண்டில மதனுளுழியா / லேற்றுழி புடையன விரண்டுகண்டமாந்
தேற்றிய விரண்டினுந் தென்முகத்தது / பாற்றரும் புகழினாய் பரதகண்டமே.

இத்தகைய பரதகண்டமென்று இத்தேசத்தை வழங்கிவருங்கால் இத்தென்பரதம், வடபரதமெங்கும் புத்தபிரானை இந்திரரென்றும், இந்திர பூசையென்றும், இந்திர விழாவென்றும் மிக்க ஆனந்தத்துடன் இந்திரரென்னும் பெயரைப் பிரபலமாகக் கொண்டாடிவந்தார்கள்.

சித்தார்த்தி என்னும் புத்தபிரானை இந்திரரென்று கொண்டாடிய காரணம் யாதென்பீரேல், பெண்ணிச்சையாம் காமியத்தை வென்று பஞ்ச இந்திரியங்களை அடக்கி ஜெயம்பெற்று மகாஞானிகளாம் வானவர்களுக்கு அதிபராக விளங்கின படியால், அவரை இந்திரர், ஐந்திரரென்றும், அவரது தன்மத்தை ஐந்திர தன்மம், இந்திர தன்மமென்றும், அவரை சிந்திப்பதை இந்திரபூசையென்றும், அவரைக் கொண்டாடும் நாட்களை இந்திர விழாவென்றும், அவரைக்கொண்டாடுந் தேசத்தை இந்திரர்தேசம், இந்திய தேசமென்றும் வழங்கிவந்தவற்றுள் வடநாட்டை வடயிந்தியமென்றும், தென்னாட்டை தென்னிந்தியமென்றும் நாளதுவரையில் வழங்கிவருகின்றார்கள்.

சீவகசிந்தாமணி

ஆசையார்வமோ டையமின்றியே / யோசைபோயுல குண்ணநோற்றபி
னேசுபெண்ணொழித் திந்திரர்களாய் / தூயஞானமாய்த் துறக்கமெய்தினார்

அருங்கலைச்செப்பு

இந்தியத்தை வென்றான் தொடர் பாட்டோடாரம்ப / முந்திதுறந்தான் முனி.

திரிக்குறள்

ஐந்தவித்தா னாற்றல் அகலவிசும்புளார்க் கோமான் / இந்திரனே சாலுங்கரி.

அறநெறிச்சாரம்

இந்தியக்குஞ்சரத்தை ஞானப்பெருங்கயிற்றால்
சிந்தனைத்தூண் பூட்டிச் சேர்த்தியே - பந்திப்பர்
இம்மெயப்புகழும் இனிச்சொல்கதிப்பயனும்
தம்மெய்த் தலைப்படுத்துவார்.

காசிக்கலம்பகம்

புரவுபூண் டிந்திர திருவொடும் பொலிந்து / முடிவினு முடியா முழுநலங்கொடுக்கும்.

மணிமேகலை

இத்திரகோடனை விழாவணிவிரும்பி / வந்துகாண்குரூ உ மணிமேகலாதெய்வம்
இந்திரரெனப்படு மிறைவ நம்மிறைவன் / றந்த நூற்பிடகம்.

சிலப்பதிகாரம்

அந்தரசாரிக ளறைந்தனர் சாற்றும் / இந்திரர் வியார மேழுடன் போகி.
சுப்பத்திந்திரர் காட்டிய நூலின் / மெய்ப்பாட்டியற்கை விளங்கக் காணும்.

புத்தபிரானையே இத்தேசவாசிகள் யாவரும் இந்திரரென்று கொண்டாடிவந்த காரணத்தால் குடிகள் யாவரையும் இந்தியர்களென் றும் வாசங்செய்யும் தேசத்தை இந்திரர் தேசமென்றும் இந்திய தேசமென்றும் வழங்கிவருகின்றார்களன்றி வேறு காரணங்கிடையா.

இத்தேசத்தில் நூதனமாகக் குடியேறியவர்களாம் வேஷபிராமணர்களுக்கு இதனந்தரார்த்தந் தெரியாது. தங்களை இந்துக்கள் என்றும், தங்கள் மதத்தை இந்து மதமென்றுஞ் சொல்லிக் கொண்டே திரிகின்றார்கள்.

தெரியாமலே தங்களை இந்தியர்கள் என்றும் இந்துக்கள் என்றுஞ் சொல்லி வருகின்றார்கள் என்பதை அடியிற்குறித்த விஷயங்களா லறிந்துக்கொள்ளலாம்.

அதாவது உலகிற் தோன்றியுள்ள மார்க்கங்களில் புத்தரென்னும் ஒருவரிருந்தார். அவரால் போதித்த மார்க்கத்தை புத்தமார்க்கமென்றும், கிறீஸ்துவென்னும் ஒருவரிருந்தார். அவரால் போதித்த மார்க்கத்திற்கு கிறிஸ்து மார்க்கமென்றும், மகம்மது என்பவர் ஒருவரிருந்தார். அவரால் போதித்த மார்க்கத்திற்கு மகம்மது மார்க்கமென்றும் வழங்கிவருகின்றார்கள்.

இவைபோல் வேஷபிராமண மதத்தோர் தங்களை இந்திய மதத்தோரென்று கூறுவதில் இவர்களது மார்க்கத்தைப் போதித்த இந்து இந்தியர் என்பவர் எவரேனுமிருந்தாரா. அவரது மார்க்கத்தை எப்பாஷையில் போதித்தார். இவை களுக்கு மாறுத்திரங் கூற யாதோர் ஆதரவுங் கிடையாது. வெறுமனே தங்களை இந்தியர்கள் இந்துக்களென்று கூறித்திரிபவர்கள்,

இந்துமதத்திருந்தே புத்தமதம் தோன்றிற்றென்றும், இந்துக்களிலிருந்தே சிலர் பௌத்தர்களாகிவிட்டார்களென்றும் ஆதாரமில்லாது கூறுகின்றது அஸ்திபார மற்றக் கட்டிடமேயாம்.

இந்திரர் தன்மமே புத்ததன்மமும் புத்ததன்மமே இந்திரர் தன்மமென்னப்படும்.

அங்ஙனமன்று இந்துதன்மம் வேறென்றுகூறுவாராயின் அவ்விந்து என்பவர் பிறப்புவளர்ப்பையும் அவரது சரித்திரத்தையும் வெளிக்குக் கொண்டுவரல் வேண்டும். சாத்திரமில்லை, அனாதிமதமென்பார்களாயின் இந்து மதத்தோ ரென்னும் பெயரை அன்னோர் வகிப்பதற்கு ஆதாரமில்லை என்பது துணிபு.

- 3:28; டிசம்பர் 22, 1909 -

41. பூதக்கதை பூதக்கதை வேதாளக் கதையினும் விந்தையே

அன்பர்காள், பூதமென்னு மொழி பாலி, அப்பாலியிலுள்ள பூதமென்னு மொழிக்கு ஓர் குணிப்பில் அடங்காப் பொருட்களின் பெயரெனக் கூறப்படும்.

அதாவது, மண், நீர், நெருப்பு, காற்று ஆகிய நான்கு பொருட்களும் குணிப்பிற்கடங்காதது ஆதலின் நான்கு பூதங்களென வகுத்துள்ளார்கள் சிலர் வெறுவெளியாகிய ஆகாயத்தையும் ஓர் பூதமெனக் கூறுவதுண்டு இதுவே கலைநூற்களின் சம்மதமும், சரித்திர சம்மதமுமாகும்.

இத்தகைய பூதங்கள் ஓர் அரசனைக் கொண்டுபோய்க் காட்டில் வளர்த்ததென்றும் அவைகள் இறைதேட வெளிக்குப்போயிருந்ததென்றும் ஓர்க்கதை தோன்றுமாயின் அது கண்ணாற்கண்ட சுட்டுக்கதையாயிருக்குமா அன்றேல் கட்டுக்கதையா இருக்குமா, காணக்கூடிய உற்பனக்கதையா அன்றேல் கற்பனைக் கதையா, அதாவது மெய்ச்சரித்திரமா பொய்ச்சரித்திரமா என்று கண்டு தெளிவதே கலைநூற் கற்றதின் பலனாகும்.

கலைநூற் கற்ற விசாரிணையோ இராஜபுத்திரனை எடுத்துபோய் வளர்த்த பூதங்களின் சந்ததி தற்காலம் காடுகளில் ஏதேனும் வாசஞ் செய்கின்றதா, அவ்வகை வாசஞ்செய்யும் பூதங்களைக் கண்டு காட்டிலாக்கா உத்தியோகஸ்தர் களாகும் பாரஸ்ட் ஆபீசர்களேதேனும் அறிக்கை செய்திருக்கின்றார்களா காடுகளையும், மலைக்குகை களையும் வெட்டி ஆராய்ச்சி செய்துவரும் ஆர்ச்சலாஜிகல் சர்வேயர்களேனும் அப்பூதங்களைக் கண்டிருப்பார்களா, இல்லையே. இல்லாதப் பொய்க்கதைகளை ஏட்டில் எழுதிக் கூட்டமிட்டுக் கூத்தாடுவது வீண்விரயமன்றோ.

கஷ்டார்ஜித சொத்தை காடைவிளக்கென்றும், மேடை சோடிப் பென்றும் சிலவிட்டாடும் நாடகத்தை விழித்திருந்து பார்த்த மக்களுக்கு ஏதேனும் பலனுண்டா. ஆட்டமாடுவோருக்குப் பணக்கேடும் அதனைப்பார்க்க ஓடுவோருக்கு பணக்கேடுடன் துரக்கக்கேடுமே கண்டபலனாகும்.

ஓர் சுபகாலங்களைக் கொண்டாடுவோர் தங்களாற் கூடிய திரவியத்தை சேர்த்து நங்குலத்து ஏழைகளுக்கு வஸ்திரதானமேனும், அன்னதானமேனும் அளித்து ஆதரிப்பார்களாயின் ஏழைகள் மனங்குளிர்ந்தளிக்கும் ஆசீரால் சகல சுகமும் பெருகுமென்பது சத்தியம்.

பணவிரயஞ்செய்து பொய்க்கூத்தாடுவோர் பெரும்பாலுங் காணும் பலன் யாதெனில், மேடைக்கு முதலாளியானோர் ஓர் கடனாளி ஆவதும், ஆட்டமாடும் வாலிபர் அருகிலுள்ளமனைவியுடன் மற்றோர் உடைந்தையைத் தேடிக்கொள்ளுவதும் கூத்துபார்க்கப்போகும் பாலியப்பெண்கள் குடி கெட்டலைவதுமே பெரும் பயனாகும்.

இத்தகையக் கேடுகளுக்குக் காரண உற்சாகக் கதைகளோவென்னில், ஓர் பால்ய ஸ்திரீயானவள் தன்னுடைய விளையாட்டில் இருக்குங்கால் ஓர் மதோன்மத்த பாலியன் அவள்மீது கல்லைவிட்டெரியவும் அதை அறிந்த காவலாளிகள் அவனை கட்டி இழுத்து நீதியதிபரிடஞ்சென்று அவர்களது தெண்டனையால் கொலைகளஞ் சென்று நின்றவன் பகவனை வணங்கக் கொலையாளர் விட்டுச்சென்றக் கட்டுக் கதையை மற்றுமுள்ள பாலியர்

கேட்பார்களாயின் கன்னியின்மீது கல்லெரிந்தவன் கொலைக்குற்றத்தில் நியமித்து பகவனை வேண்டி தப்பித்துக்கொண்டபடியால் நாமும் அனந்த பதிவிரதைகளை பலவந்தஞ்செய்தும், கன்னிகைகளைக் கெடுத்தும் பகவனை வேண்டிக்கொண்டால் நம்மெய்க் காப்பாற்றிவிடுவாரென்னும் பயமற்றச் செயலால் நீதிமார்க்கமற்று அனந்தங் குடிகளைக்கெடுத்து அல்லலடையச் செய்து விடுவார்கள்.

இவைகள் யாவையும் நமதன்பர்கள் நன்காராய்ந்து குலயீடேற்றத்தைக் கருதி ஆடம்பரங்களை ஒழித்து சிறுவர்கள் கல்வியிலும், கைத்தொழிலிலும், வியாபாரத்திலும் விருத்திபெறும் வழிகளையும் அவற்றிற்கு வேண்டிய சிலவுகளைச் செய்து சிறப்படையப் பார்ப்பார்களென்று நம்புகிறோம்.

பரிமாணத்திற்கு மீறி பெரிதாயிருக்குந் தாதையென்னும் ஊதுகுழலை பேதாதை என்றும், பரிமாணத்திற்கு மீறி பெரிதாயிருக்கும் தாளத்தை பேதாளம் என்றும் வழங்கிவந்ததுண்டு. அக்கருவியின் தோற்றமும் அதன் பருமனுஞ் செயலும் அறியா தோர் வேதாளமென்னும் ஓர் சீவனுள்ளதென்றும், அஃது பயிறுகளை எல்லாம் மேய்ந்துவிட்டதென்றும், அதனை நாயனார் மந்திரத்தால் ஓட்டிவிட்டாரென்றும் வேதாளக் கட்டுக்கதையை வரைந்திருக்கின்றார்கள். அத்தகைய வேதாளந் தற்காலப் பயிறுகளை ஏதேனும் மேய்ந்துவருகின்றதா, யாவரேனும் அவற்றைக் கண்டதுண்டா. இத்தகைய பேதாளக் கட்டுக் கதையினும் பூத கட்டுக்கதை மிக்க மேலாயதேயாம்.

கட்டுக்கதைகளைக்கொண்டு விருத்திபெறும் மக்களை வீணே கெடுக்காது நந்தேசத்தை ஆண்டு வருகிறவர்களும், நமது இடுக்கங்களையுங் கேடுகளையும் அகற்றி இரட்சித்தவர்களும் இன்னும் இரட்சித்து வருகிறவர்களுமாகிய ஐரோப்பியர் களின் செயலையும் அவர்களது வித்தியா விருத்திகளையும் பின்பற்றுங்கள்.

அவர்களையும், அவர்களது விருத்திச்செயலையும் பின்பற்றுவோமாயின் அவர்களைப்போல் வித்தையும் புத்தியும் பெருகி நிறைந்த செல்வத்தைப் பெறுவதுடன் செல்வ நிறைவால் வஞ்சினம், சூது, பொறாமெய், குடிகெடுப்பு முதலிய துற்கிரித்தியங் களற்று அறிவுவிருத்தி பெற்று ஆனந்த யோகபாக்கியமாம் முத்தி பேறென்னும் நிருவாண சுகமும் பெறலாம்.

அங்ஙனமின்றி நங்குலத்தோரை மீண்டுங் குடிகெடுக்குஞ் சத்துருக்களின் செயலை பின்பற்றுதல் இன்னும் பாழுக்கடிபடை போடுவது போலாம்.

தற்காலம் ஆடியகூத்திற்குப் பணவுதவியாய செயல் ஐரோப்பியர் செயலா அன்றேல் நங்குலத்தோரை தாழ்த்தி தலையெடுக்கவிடாமற் செய்த சத்துருக்களின் செயலா தாங்களே கண்டறிந்துக்கொள்ளுங்கள்.

- 3:29; டிசம்பர் 29, 1909 -

42. சங்கறாந்தி புண்ணியகால விவரம்

சங்கமித்தர். - சங்க தருமர் - சங்க அறர்

என்றழைக்கும் புத்தபிரான் சங்கங்களுக்கு நாயகராக விளங்கியது கொண்டு சபாநாயகரென்றும், கணநாயகரென்றும், சபாபதி யென்றும் கணபதியென்றும் வழங்கி வந்ததுமன்றி சங்கத்தோர்களாகும் சமணமுனிவர்களுக்கு சத்திய தன்மத்தையே பெரும்பாலும் போதித்தவராதலின் சங்கதருமர், சங்கறர் என வழங்கிவந்த அவர் பரிநிருவாணமடைந்த அந்தியகாலத்தை சங்கறர் அந்திய புண்ணியகாலமென்றும், சங்கறாந்தி புண்ணிய காலமென்றும், விடுத்தபூத விழாக்கோலென்றும், இந்திர விழாவென்றும், தீபசாந்திநாளென்றும், சுவர்க்கவானம் ஏறியநாளை சொக்கபானைக் கொளுத்துவதென்றும் வழங்கி வருகின்றார்கள்.

இவ்விந்திரர் தேயமுழுவதும் இந்திரர்மார்க்கம் நிறைந்திருந்த காலத்தில் இந்திய அரசர்கள் சமயகணக்கர்களாகிய சமண முனிவர்களைத் தருவித்து அவர்கள் அடிபணிந்து சக்கிரவர்த்தித் திருமகன் வைகாசிமீ பூரணையில் பிறந்த நாள் விழாக்கோலும், மாசிமீ பூரணியில் இல்லந்துறந்து பிச்சாண்டியான

நாள் விழாக்கோலும், பங்குனிமீ பூரணியில் நிருவாணமடைந்த ஆலமர்ச் செல்வன் மதன்விழாக்கோல்நாளும், மார்கழிமீ பூரணி திருவாதிறை நட்சத்திரத்தில் பரிநிருவாணமடைந்த விடுத்த பூதவிழாக்கோல் நாளுங் கணக்கெடுத்து தெரிவிக்கும்படிவேண்டிக்கொள்ளுவது வழக்கமாகும்.

சமணமுநிவர்களாகும் சமய கணக்கர்கள் அவற்றிற்கு இசைந்து ஒவ்வோர் பௌர்ணமி காலக் குறிப்பையும், அவைகளின் காலகணிதங்களையும் விளக்கி அந்தந்த விழாக்கோலை கொண்டாடும்படி உத்திரவளிப்பார்கள்.

இவற்றை மணிமேகலை விழாவறை காதையிற் காண்க.

இவ்வகையாய் புத்தசங்கங்களில் தங்கியிருந்த சமணமுநிவர்களால் விசேஷகாலங்களை விளக்கிவரவும், பௌத்த அரசர்களுங் குடிகளும் அவற்றைக் கொண்டாடிவருவது இயல்பாயிருந்தது.

இப்பண்டிகை மார்கழிமீ 28உ பூரணிநாள் திருவாதிறை நட்சத்திரத்தில் ஆதியில் வந்தபடியால் மார்கழிமாதக் கடைநாளையே விசேஷமாகக்கொண்டு மார்கழிமீ முதல் திகதி முதல் விடியர்காலமெழுந்து வீடுவாசற் சுத்திசெய்து கோலமிட்டு புட்பம் பரப்பி ஜகத்தீசனாம் சத்குருநாதனை பஜிக்கும் பாடல்களாலும், கும்மியடிக்குங் குதூகலத்தாலும் மாதமுழுவதுங் கொண்டாடி கடைநாள் விடியற்காலம் சோதியை வளர்த்து தெரிசித்து போதிபண்டிகையென போதிநாதனை சிந்தித்து ஏழைகளுக்கு அன்ன வஸ்திரமளித்து சங்கறாந்தி புண்ணிய காலத்தை பூர்த்திசெய்வார்கள்.

இத்தகைய புத்ததன்மச் செயல்களானது அபுத்ததன்மங்கள் மேலிட்டு மதக்கடைப் பரப்பி சீவிக்கும் பொய்க்குருக்களால் மாறுபட்டிருந்த போதினும் பூர்வ வழக்கத்தை மட்டிலும் மாறாமல் செய்துவருகின்றார்கள்.

போதிபண்டிகை, போகிபண்டிகை யெனக் கொண்டாடும் விடியர்காலத்தில் சகல பெண்களும் எழுந்து அழுது துக்கிக்குங் காரணம் யாதென்பீரேல் பகவனது உச்சியிலும் தேகமுழுவதும் வாள்போன்ற சோதி கழன்று பரிநிருவாணமுற்றபோது ஆனந்தன் என்னும் அவரது பிரதம சிஷியன் அலறித் துக்கித்து அழுகவும் அதையுணர்ந்த உலகமக்களுங் குடும்பத்தோரும் இனி எப்போதிவர்பால் அறவுரைக் கேழ்ப்போமென்று துக்கித்த வழக்கமே நாளதுவரையில் போதிபண்டிகை விடியர்காலத்தில் துக்கித்துவருகின்றார்கள்.

சோதியாய் பகவன் - பரிநிருவாணமடைந்த விவரம்

வீரசோழியம்

கூரார்வளையுகிர் வாளெயிற்றுச் செங்கட்
கொலையுழுவை காய்பசியாற் கூர்ந்த வென்னோய் நீங்க
வோராயிரங் கதிர்போல் வாள் விரிந்தமேனி
யுளம்விரும்பிச்சென்றாங் கியைந்தனை நீயென்றாற்
காரார்திரைமுளைத்த செம்பவளமேவுங்
கடிமுகிழ் தண்சினைய காமருபூம்போதி
யே ரார் முநிவரர் வானவர்தங் கோவே
யெந்தாயரோ நினை யேற்றாதார் யாரே.
திருமேவு பதுமஞ்சேர் திசைமுகனென் றுலகேற்ற
வுருமேவி யவதரித்த வுயிரனைத்து முயக்கொள்வா
னிவ்வுலகுங் கீழுலகு மிசையுலகு மிருள்நீங்க
மெவ்வுலகுந் தொழுதேத்த வெழுந்தசெழுஞ்சுடரென்ன
விலங்குகதி ரோரிரண்டு விலங்கிவலங் கொண்டுலவ
வலங்குசினைப் போதிநிழ லறமமர்ந்த பெரியோய்நீ

பகவன் உச்சியிலும் தேக முழுவதும் வாள்போன்ற சோதி கழன்று பரிநிருவாணமுற்றபோது புத்தபிரான் பிரதமமாணாக்கன் ஆனந்தன் துக்கித்த விவரம்.

பாணவீரியன் பாடியுள்ள வெண்டாழிசை

சீருங் சிதைந்தனவோ செல்வந் துறந்தன மாலென்செய்கோம் யாம்
பேரும் பிரிந்தன நம் பெம்மான் மறைந்தன மாலென்செய்கோம் யாம்
நெஞ்சாரவஞ்சமற்றோர்நீலத்தைநீக்க முற்றா ரென்செய்கோம் யாம்
துஞ்சாது துஞ்சியகண் டுஞ்சலுறக் கண்டோ மாலென்செய்கோம் யாம்

உண்ணாவிருந்த சுட ருச்சிக் கெழுந்தனவொ வென்செய்கோம் யாம்
தண்மெய்யெழுந்த சுடர் தார்போன் மறைந்தனவா லென்செய்கோம் யாம்
கருணையே வோருருவாய்க் காட்டி மறைந்தனனோ வென்செய்கோம் யாம்
அருணனே யருளுங் கொண்டோதி மறைந்தனனோ வென் செய்கோம் யாம்
குமுதத்தில்வீற்றானை குவலயத்திற் காணாதா லென்செய்கோம் யாம்
அமுதத்தின் வாக்கை யடக்கி மறைந்தானே யென்செய்கோம் யாம்
செவிக்கின்பமா யுரைப்போன் சேவைத் துறந்தோமே யென்செய்கோம் யாம்
புவிபாரம் நீக்கவந்தோன் போதம் மறைந்தனவா லென்செய்கோம் யாம்
மறுளறுத்தப் பெரும்போதி மாதவரைக்கண்டிலமா லென்செய்கோம் யாம்
அருள் நிறைந்த திருமொழியா ரறவழக்கங் கேட்டிலோமா லென்செய்கோம் யாம்
பொருளறியு மருந்தவத்து புரவலரைக் கண்டிலமா லென்செய்கோம் யாம்
திருவருளே முதற் குருவாய்த் தோன்றி மறைந்தனவே யென்செய்கோம் யாம்.

புத்தபிரான் பரிநிருவாணத்தைப்பற்றி ஆனந்தன் புலம்பியதுபோலவே வீரைமகாமுநிவரும் தனது தேவபாணியிற் பாடியிருக்கின்றார்.

ஆதலின் நமது பௌத்தசோதிரர்களும் தன்மப்பிரியர்களும் கலியுலகம் 5011 சௌமிய வருஷம் மார்கழி மீ 30உ க்குச் சரியான இங்கிலீஷ் 1901 வருஷம் ஜனவரிமீ 13உ குருவாரம் விடியர் காலையில் போகி நாதன் சோதியை வளர்த்தி நீதிமார்க்கத்தினின்று சங்கறர் அந்தியகாலத்தை சிந்தித்து பொங்கலிட்டு புண்ணியதானஞ் செய்யவேண்டுகிறோம்.

வீரசோழியம் அரசர்கள் வைராக்கிய வாக்கு

போதிவேந்தன் சரணலால் அரண் புகேன்

சங்கறரந்திய புண்ணியகாலம் / பொங்கலிட்டுப் புண்ணியஞ்செய்வோர்
தங்குஞ்சங்கத் தண்ணருள் பெற்று / மங்காசெல்வ வாழ்க்கைப் பெறுவர்.

- 3:30; சனவரி 5, 1910 -

43. சைவசமயம்

வினா : தாயுமானவரவர்களின் பாடலில் சைவசமயமென்றும், பொய்வந்துழலுஞ் சமயமென்றும், தெய்வசபையென்றுங் கூறி இருக்கின்றனரே அதின் அந்தரார்த்தங்களென்னை, அவற்றை அறிந்து செல்லும் மார்க்கங்கள் எவை யென்று அடியேனுக்கு விளக்கி ஆட்கொள்ளும்படி வேண்டுகிறேன்.

வி. நடேசன், மதுரை

விடை : அன்பரே, தாம் வினவியக் கருத்தை தெய்வப்புலமெய்த் தாயுமானவர் பாடலின் பரிபக்குவ உரையைக் கொண்டே உணர்ந்துக் கொள்ளலாம்.

அதாவது சைவசமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருள்
கைவந்திடவு மன்றுள் வெளிக்காட்டு மிந்தக் கருத்தைவிட்டு
பொய்வந்துழலுஞ் சமயநெறி புகுதவேண்டா மடநெஞ்சே
தெய்வசபையை சேர்வதற்கு சேரவாருஞ் ஜெகத்தீரே.

இதன் பொருள்.

சைவம் - தன்னை அறியும், சமயமே சமயம் - காலமே காலமாகும், சமயாதீத காலத்திற்கு அப்புறப்பட்ட, பழம்பொருள் - மெய்ப்பொருள், கைவந்திடவும் - தனது நன்முயற்சியால் கைகூடவும், மன்றுள் வெளிக்காட்டும் - அன்று வுள்ளொளிக்காட்டும், கருத்தைவிட்டு - ஆழ்ந்த ஆராயும் உண்மெய் நழுவி, பொய் வந்துழலும் - அபுத்தமாகுஞ் செயல்கொண்டு திரியும், சமயநெறி - காலநிலையில், புகுதவேண்டாம் - நுழையவேண்டாம், மடநெஞ்சே - பாழு மனமே, தெய்வசபையை புத்தசங்கத்தை, சேர்வதற்கு - அமைவதற்கு, சேரவாரும் - நெருங்கி வரக்கடவீர், ஜெகத்தீரே உலகத்தோரே என்றவாறு.

தன்னையறிந்து அடங்கு நிலைக்கு பாலிபாஷையில் சைவமென்று கூறப்படும்.இவற்றையே அகப்பேய் சித்தர். சைவமாருக்கடி - யகப்பேய் தன்னையறிந்தவர்க்கே சைவமானவிடம் - அகப்பேய் தானாகநின்றதடி.

சமயமென்பது ஓர் காலத்தைக்குறிக்கும் மொழியாகும். அதாவது நல்ல சமயத்தில் வந்தீர் நல்ல சமயத்திற் போனீர் என்பதேயாம்.

மக்களுக்குக் காலமென்பது யாதென்பீரேல் பாலகாலம், குமரகாலம், அரசகாலம், மூப்புகாலம், மரணகாலம் ஐந்தினுள் வாலவிளையாட்டுகாலமும், குமர காமிய பாரகாலமும், அரசவாளுகை பாரகாலமும், விசேஷித்தன்று.

மனிதன் தனக்குள்ள இராகத், துவேஷ, மோகமென்னும் பற்றுக்களற தனக்குள்ள நற்செயலையுந் தீச்செயலையுந் தன்னிற்றானே ஆராய்ந்து தீயச்செயல்களை அகற்றி நன்மெய்க் கடைபிடிக்கும் காலமே விசேஷகாலமாதலின், தன்மெயறியுங் காலமே சமயமென வற்புறுத்திக்கூறியுள்ளார்.

சைவமென்பது தன்னை அறிதலும்
சமயமென்பது காலக்குறிப்பும்
பொய்வந்துழலுஞ் சமயமென்பது.
அபுத்தமாம் மதக்கடைகளைப் பரப்பி அதினாற் சீவிப்போர் காலமும்.

தெய்வசபை என்பது ஞான விசாரிணையினின்று உண்மெ உணர்ந்து புலன் தென்பட்டோராகும் தென்புலத்தோர் வாசஞ்செய்யும் புத்தசங்கமேயாகும்.

அதாவது,

மநுக்களென்னும் ஆறாவது தோற்றங் கடந்து தேவர்களென்னும் ஏழாவது தோற்றமுற்றிருக்கும் சமணநிலை கடந்த அறஹத்துக்கள் வாசஞ்செய்யுமிடம் புத்தசங்கமாதலின் அவற்றையே தெய்வசபை என்றுங் கூறியுள்ளார். இவைகளே தாயுமானவர் பாடல்களிற் கூறியுள்ள மெய்ம்மொழிகளின் அந்தரார்த்தங் களாகும்.

- 3:33; சனவரி 26, 1910 -

44. சாக்கைய பௌத்தர் விவாக விளக்கம்

முகவுரை

இவ்வுலகின்கண் பண்டைகாலம் வித்தையிலும், புத்தியிலும், ஈகையிலும், சன்மார்க்கத்திலும் சிறப்புற்றிருந்து தற்காலம் பொறாமெயிலும், வஞ்சினத்திலும், குடியிலும், களவிலும் சீர்கெட்டுவரும் இத்தென்னிந்தியாவில் பற்பல மதங்கள் தோன்றித் தத்தம் மதக் கொள்கைகளைத் தழுவி சுபாசுபக் கிரியைகளை நிறைவேற்றி வருகின்றனர்.

இவ்வகை சுப அசுபக்கிரியைகளில் தாங்கள் எவ்வகை துற்கருமங்களைச் செய்யினும் தங்கடங்கள் தெய்வங்கள் அவற்றை பரிகரிக்குமென்னும் காரிய குருக்களின் மதக்கட்டுண்டு பணத்தினாலும், வாக்கினாலும், தேகத்தாலும் செய்யுந் துற்கருமச்செயல்கள் யாவும் மாட்டினாலும், ஆட்டினாலும், கோழியினாலும், பணத்தினாலும், பூசையினாலும் அப்பாவச்செயல்கள் அகலுமென்றெண்ணி வாளா துற்கன்மங்களைப் பெருக்கி வருகின்றனர்.

துற்கரும பெருக்கத்தால் நற்கருமங் குறைந்து நாளுக்குநாள் மநுக்குல ஒற்றுமெய்க்கெட்டு சதிபுருஷாள் சத்துருத்துவம் மேலிட்டு புத்திரசந்தான போகமும் பட்டு சீரழிவதற்குக் காரணமென்னையெனில் உலக சீர்திருத்தக்காரர்கள் முதன்மெயாகத் தோன்றி ஆதிபகவன் என்றும், ஆதி முனிவனென்றும், ஆதி தேவனென்றும், ஆதி கடவுளென்றும், ஆதி சிவனென்றும், ஆதி மூலமென்றும் காரணப்பெயர்கள் ஆயிரம் பெற்ற ஒப்பிலா சற்குருவாகிய புத்தரையும் அவர் போதித்துள்ள தருமங்களையும், அவர் சங்கங்களையும் மறந்து தங்கள் சீவனோபாவத்தினால் நூதன மதங்களை ஏற்படுத்தி மதக்கடைகளைப் பரப்பி அக்கடைகளில் புத்த தருமங்களில் மட்டும் சிலதைப் பூசலிட்டு புத்தரையும் அவர் சங்கத்தவர்களையும் தாழ்த்தி தங்கள் சீவனோபாயப் பொய் மதக்கடைகளைப் பரவச் செய்வதற்கு பொய்ப்புராணங்களாகும் பற்பலக் கட்டுக்கதைகளை ஏற்படுத்தி உலகொளியாக விளங்கும் சற்குருவின் சரித்திரங்களையுங் கெடுத்து அவர் நீதிவழுவா சங்கத்தவர்களுக்கும் தாழ்ந்த சாதிப் பெயர்களைக் கொடுத்து நாளுக்குநாள் நசித்து வரும் வஞ்சினச் செயல்களே சீரழிவுக்குக் காரணமென்னப்படும்.

சற்சங்க விருத்தியிலிருந்த சாதுக்களும் நாளுக்குநாள் துற்சங்க விருத்தியாகும் பொய்மதக்கடைகளில் பிரவேசித்து பொய்யை மெய்யெனப் பிதற்றித்திரிந்த போதினும் அவரவர்களுக்குள்ள சுபாசுபக் காரியங்கள் யாவற்றிலும் புத்தருமக் கிரியைகளையே நிறைவேற்றி வருகின்றார்கள்.

சுபகாரியங்களென்னும் விவாக காலங்களில் நிறைவேற்றிவரும் தன்மகன்மக் கிரியைகள் யாவும் எந்த சரித்திரத்திற் கூறியுள்ளவை களென்றும், அக்கிரியைகளின் அந்தரார்த்தம் யாதென்றும் விசாரித்துணராமல் புத்ததருமம் நூதனமாகத் தோன்றிய தென்றும் பொய்மதப் போலி ஞானிகளால் அஃது அழிந்து விட்டதென்றும் பிதற்றித் திரியும் அன்பர்களுக்கு நமது விவாக காலங்களிற் செய்து வருங் கிரியைகள் யாவும் 1,500 வருஷங்களுக்குட்பட்டத் தோன்றி நாளுக்குநாள் நசிந்துவரும் சைவமதம் வைணவமதமென்னும் இருமதச்செயல்களைத் தழுவிய தல்லவென்றும் பூர்வ புத்ததருமச் செயல்களைத் தழுவியதென்றும் உணர்வான்வேண்டி புத்ததரும அரசர்கள் செய்துவந்த விவாகக் கிரியைகளையும் தற்காலம் நாம் செய்துவரும் விவாகக் கிரியைகளையும் விளக்கி சாக்கைய புத்த சங்கத்தார் விவாக விளக்க நூலென வெளியிட்டிருக்கின்றோம்.

இவ்வரிய சுருக்கநூலை ஒவ்வோர் அன்பர்களும் பூர்த்தியாக வாசித்துணர்ந்து பூர்வ தன்மகன்மங்களை நிலைபெறச் செய்வதுடன் முடிவுரையிற் கூறுயுள்ளவைகளையும் பின்பற்றுவார்களாக.

பூர்வீக திராவிட புத்தசங்கத்தார்

மங்கலநிலை

மனைக்கு விளக்க மடவார் மடவார் / தமக்குத் தகைசால் புதல்வர் - மணைக்கினிய காதற் புலவர்க்குக் கல்வியே கல்விக்கு / ஒதிற் புகழ்சா லுணர்வு.

மனைநிலை

மழையின்றி மானிலத்தார்க்கில்லை - மழையும் / தவமிலா னில்வழி யில்லை - தவமும் அரசிலா னில்வழி யில்லை - அரசனும் / இல்வாழ்வா ளில்வழியில்.

உண்மெய்நிலை

அறிந்தானை ஏத்தி யறிவாங்கறிந்து / செறிந்தார்க்குச் செவ்வனுரைப்ப - சிறந்தார் சிறந்தமெய் ஆராய்ந்துகொண்டு.

சாக்கைய சங்கத்தார் விவாக விளக்கம்

பூர்வகாலத்தில் வட யிந்தியம் தென்னிந்திய முழுமையும் அரசாண்டுவந்த புத்ததன்ம அரசர்கள்முதல் வணிகர் வேளாள ஈறாகும் முத்தொழிலாளருக்கும் கன்ம குருக்களாக விளங்கி தன்மகன்மக் கிரியைகளை நடத்திவந்தவர்கள் வள்ளுவர், சாக்கையர், நிமித்தகரென்னும் பூர்வக்குடிகளாம்.

முன்கலை நூல் திவாகரம்

வள்ளுவர் சாக்கைய ரெனும் பெயர் / மன்னர்க்குள்படுகருமத்தலைவர்க் கொக்கும்

பின்கலை நூல் நிகண்டு

வருநிமித்தகன் பேர் சாக்கை வள்ளுவனென்றுமாகும்.

இத்தகைய தன்மகன்மப் பெயர்களைப் பெற்ற வகுப்பாருள் கலிவாகுச் சக்கிரவர்த்தி, வீரவாகுச் சக்கிரவர்த்தி, குலவாகுச் சக்கிரவர்த்தி , இட்சுவாகு சக்கிரவர்த்தி யெனுந் தலைத்தார் வேந்தர்களும் அரசர்களும் இருந்தார்கள். இத்தகைய சக்கிரவர்த்திகளின் வம்மிச வரிசையில் சித்தார்த்தி என்னுஞ் சக்கிரவர்த்தி திருமகன் தோன்றி நன்மெய் நிலையாகு உண்மெய் உணர்ந்து புத்தரெனும் பெயர்பெற்று உலக ரட்சகன் என்னும் சற்குருவாக விளங்கின படியால் அவர் வம்மிச வரிசையில் தோன்றிய அரசர்கள் யாவரையும் குருகுலத்தரசரென்றும், குருகுலக் கோமான்களென்றும், குருகுல மன்னரென்றும் வழங்கி வந்தார்கள்.

மணிமேகலை

சாக்கையராளுந் தலைத்தார்வேந்தன் / ஆக்கையுற்றுதித்தன னாங்கவன்றானென.

சூளாமணி

இன்னலன துயர் குலமு மிளமையு மிங்கிவன் வடிவுஞ் சொல்லவேண்டா
மன்னவன்றன் மடமகளே மற்றிவனுக் கிடமருங்கின் மஞ்சஞ் சேர்ந்து
பொன்னவிருமணியணைமேற்பொழிகதிரீண்டெழுந்ததுபோற்பொலிந்துதேன்றி
கொன்னவின்ற வேற்குமான் குரு குலத்தார்கோனிவனே கூறக்கேளாய்.

வீரசோழியம்

மலைகரந்து போகாதோ வற்றாதோபவ்வ
மலர்கதிரோன் வீழானோவஞ்சி - நிலயெனக்குப்
பார்வேந்த ரொப்பரோ பாய்நீர் குரு குலத்தார்
போர்வேந்தே யான்முநிந்தபோது.

சீவகசிந்தாமணி

ஆழ்ந்த குருகுலமா மாழ்கடலி னுண்முளைத்த வறச்செங்கோலாய் கதிரினை
வேந்தர் பெருமானைச் சச்சந்தனை மந்திரிமா நாகமுடன் விழுங்கிற்றன்றே.

இன்னுங் குருகுலத்தரசர்களாய் விளங்கிய திரியோதினன், இரணியன், மாபலி, நந்தன்முதலிய அரசர்கள் யாவரையும் தற்காலந் தோன்றிநிற்கும் பராய மதஸ்தர்கள் வஞ்சினத்தாலும், மித்திரபேதத்தாலும் கொன்று பற்பலக் கட்டுக் கதைகளால் அவர்கள் பூர்வ சரித்திரங்களையும் மாறுபடுத்தி அவர்கள் வம்மிசவரிசை யோர்களையும் தாழ்ந்தசாதியாக வகுத்து நாளதுவரையில் நசித்துவருகின்றார்கள்.

மேற்கூறியுள்ளக் கருமத்தலைவர்கள் முக்காலங்களையும் அறிந்து சொல்லக்கூடிய கணிதசாஸ்திரிகளாகவும், தன்மகன்ம குருக்களாகவும் விளங்கின படியால் வள்ளுவர், சாக்கையர், நிமித்தகரென்னுங் காரணப் பெயர்களைப் பெற்றிருந்தார்கள். வடயிந்தியாவில் சாக்கையரெனும் பெயரால் பெரும்பாலும் இவர்களை அழைக்கப்பெற்றிருந்தபடியால்,

நாளதுவரையில் அவ்விடம் சாக்கையர் தோப்பென்னும் இடப்பெயர் வழங்கிவருகின்றது. தென்னிந்தியாவில் சாக்கையரெனும் பெயரை சாக்கியரென வழங்கி வந்தபோதிலும் வள்ளுவரெனும் பெயரை விசேஷமாக வழங்கி வந்தபடியால் அவர்கள் சிறப்பு மாறாமல் திருவனந்தபுரத்தைச்சார்ந்த வள்ளுவர் நாடென்னும் தேசப் பெயர் நாளதுவரையில் வழங்கிவருகின்றது. கங்கைநதி எனும் வார்த்தை கங்காநதி எனுங் குணசந்தி பெற்றதுபோல சாக்கைய ரெனும் பெயரை சாக்கியரென வழங்கி வருகின்றார்கள்.

சென்னையைச்சார்ந்த மயிலைநாட்டில் சாக்கையரின் வம்மிச வரிசையோர் விசேஷமாக குடியிருந்ததும் அவர்களுக்குள் கொன்றை ராசனென்னும் ஓர் சிற்றரசனிருந்ததும் அங்கு புத்த சங்கத்தோர் மடமிருந்ததும் அம்மடத்தில் புத்தர் மாசிமாத பௌர்ணமியில் துறவடைந்த வேடத்தைக் கொண்டாடுவதற்கு அரசன் பிச்சையாண்டி வேஷங்கொண்டு வெளிவருவது போல் உற்சாகங் கொண்டாடிவந்ததும் மாசிமாத பௌர்ணமியன்று இரவு முழுதும் புத்தரவர்கள் நித்திரையற்று துறவடைந்தபடியால் அந்நாளிரவைக் கொண்டாடுவதற்கு அவருடைய சங்கத்தோர்கள் துறவு விசாரிணையில் விழித்திருந்து மகாசிவராத்திரி என வழங்கிவந்ததும் கார்வெட்டி நகரத்தை ஆண்ட குருகுலத்தரசன் மணிவண்ணன் மனைவி பூம்பாவை என்பவள் மயிலை மடபிச்சை ஆண்டிவேட உற்சாகங் காணவந்து மரணமடைந்ததினால் சாக்கையர்கள் துக்கங்கொண்டாடியதும் ஆகிய விஷயங்கள் யாவும் பூர்வ சரித்திராதாரமாக மயிலை வீ. குப்புலிங்க நாயனாரவர்களால் வெளியிடும் புத்தகத்தில் சாக்கையர் விருத்தாந்தங்களைத் தெளிவாகத் தெரிந்துக்கொள்ளலாம்.

புத்தர் தனது கரத்தில் போல் என்னும் பாத்திரமேந்தி பிச்சை ஏற்றதினால் கரபோல் ஈசனென வழங்கிவந்த வார்த்தை குறுக்கல் விகாரப்பட்டு கபோல ஈசனென்றும், கபால ஈசனென்றும் வழங்கிவருகின்றார்கள்.

சீவகசிந்தாமணி

மாசித்திங்கண் மாசினமுன்ன மடிவெய்த / வூசித்துன்ன மூசியவாடை யுடையாக
பேசிப்பாவாய் பின்னு மிருக்கை யகலேந்தக் / கூசிக்கூசி நிற்பர் கொடுத்துண் டறியாதார்.

தென்னிந்தியாவில் சீவகன், காளகூடன், மணிவண்ணன், நந்தன், கன் சிசேந்திரன், தஞ்சைவாணன், கொன்றையன் மற்றுமுள்ள சாக்கைய புத்த அரசர்கள் வாசஞ்செய்த இடங்களுக்கு சேரி எனும் பெயர் பெரும்பாலும்

வழங்கிவந்தபடியால் நாளது வரையில் அவர்களுடைய வம்மிச வரிசையோர் வாசஞ்செய்யும் இடங்களுக்குச் சேரி என வழங்கி வருகின்றார்கள்.

சீவகசிந்தாமணி

தேனுலா மதுச்செய் கோதை தேம்புகை கமழவூட்டி
வானுலாச் சுடர்கண்மூடி மாநக ரிரவுச்செய்ய
பானிலாச் செரிந்தனல்லா ரணிகலம் பலைச்செய்ய
வேனிலான் விழைந்த சேரி மேலுல களைய தொன்றே.

சூளாமணி

மெய்ப்புடை தெரிந்து மேலை விழுதவமுயன்று நோற்றார்க்
கொம்புடைத்துங்கள் சேரி யுயர்நிலைசெல்வமெல்லா
மெம்படி முயறு மேனு மெங்களுக்கெய் தலாகா
தப்படி நீயுமுன்னர் மொழிந்தணை நன்றே யென்றான்.

சிலப்பதிகாரம்

கூலமறுகிற் கொடியெடுத்தணுலும் / மாலைச் சேரி மருங்கு சென்றெய்தி.

புத்தமார்க்க அரசர்கள் ஓர் அறபுத்திரியை தனக்கு மனைவியாக சேர்த்துக்கொள்ளுவதற்கு வதுவை, கைப்பற்றல், தீவலம், மணம், கல்யாணம், வீதியுளி, மன்றல், விவாகம் என எட்டு வகைப் பெயர்களைக் கொடுத்திருந்தார்கள். இவ்வகை விவாக உற்சாகத்தையும் புத்தர் பிறந்த நாள் உற்சாகத்தையும் அவர் துரவடைந்த உற்சாகத்தையும், காமனை எரித்த உற்சாகத்தையும், அவர் நிருவாணகால உற்சாகத்தையும் ஆனந்தமாகக் கொண்டாடிவந்தார்கள்.

பின்கலை நிகண்டு

வதுவை கைபற்றலே தீவலஞ்செய் தன்மணங் கல்யாணம்
விதியுளி வேட்டன் மன்றவிசாகமெண்பேர் விளங்கும்
புதுவிழா முருகுசாறு புத்தருளுச் சவமாஞ்சோறு
துதை மலர் கொண்டு போற்றும் துணங்கற விரண்டுமப்பே.

இவ்வகை விவாக உற்சாகங்களை சாக்கைய புத்த அரசர்கள் வள்ளுவர், சாக்கையர், நிமித்தகரென்னுங் கருமத்தலைவர்களைக்கொண்டே நடத்தி வந்தார்கள்.

சீவகசிந்தாமணி

பூத்த கொங்கு போற் பொன் சுமந்துவா / ராச்சியார் நலக்காசுறாணனான்
கோத்த நித்திலக் கோதை மார்பினான் / வாய்த்த வன்னிரை வள்ளுவன் சொனான்.

சூளாமணி

நிமித்தக னுரைத்தலு நிறைந்த சோதியா
னுமைத்தொகையிலாததோருவகையாழ்ந்துகண்
ணிமைத்தில னெத்துணை பொழுதுமீர்மலர்ச்
சுமைத்தொகை நெடுமுடி சுடரத்தூக்கினான்.

வேறு.

தலைமகன்றாடனக்காகச் சாக்கைய / நிலமைகொண் மனைவியா நிமிர்த பூந்தூணர்
நலமிகு மக்களா முதியர்தேன்களாக் / குலமிகு கற்பகங் குளிர்ந்து தோன்றுமே.

பூர்வ அரசர்கள் நடக்கையை அநுசரித்து அவர்கள் வம்மிச வரிசையோர்களும் பௌத்தக் குடிகளும் வள்ளுவர்களைக்கொண்டே அவர்கள் சுபாசுபக் கிரியைகளை நடத்தி வருகின்றார்கள்.

சாக்கைய புத்தவரசர்கள் சாந்தம், ஈகை, அன்பென்னும் முக்குணங்களைப் பெருக்கி குடிகளைத் தன்னுயிர்போல் பாதுகாக்குங் குணமுடையவர்களாய் இருந்தபடியால் வெண்குடை, வெண் கொடி, வெண் சாமரை, வெள்ளையானை, வெள்ளைக்குதிரை, வெண்ணுடை, வெண்பிறை, முடி, வாகு, வலய முதலியப் பதினெட்டு விருதுகளுடன் ஊர்வலம் வந்து விவாகக் கிரியைகளை நடத்தி வந்தார்கள்.

சூளாமணி

மறந்தலை மயங்கிவையத் தொருவரையொருவர் வாட்ட
விறந்தலை யிலாமைநோக்கி யின்னுயிர்போலகாக்கு
மறந்தலை நின்றவேந்த ரடிநிழ லன்றி யார்க்குஞ்
சிறந்ததொன் றில்லைகண்டாய் திருமணி திகழும்பூணோய்.

மணிமேகலை

மதிமருள் வெண்குடை மன்னவன் சிறுவனுதய குமரனுரு கெழு மூதூர்.

வீரசோழியம்

ஆவியனைத்துங் கூச நப மவ்வரியும்வவ்வி
லேவிய வெட்டும் யவ்வாறு ஞந்நான்கு மெல்லா வுலகு
மேவிய வெண்குடைச் செம்பியன் வீரராசேந்திரன்றன்
நாவியல் செந்தமிட் சொல்லின் மொழிமுத னன்னுதலே.

சிலப்பதிகாரம்

திங்கண்மாலை வெண்குடையான் சென்னி செங்கோலது வோச்சிக்
கங்கைதன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி.

சூளாமணி

கயந்தனைக் கவிற்றினா யோர்க்கனாக்கண்டதுளதுகங்கு
னயந்தது தெரியினம்பி நளிகடல் வண்ணன் றன்னை
வியம்பகத் திழுந்துவந்தோர் வேழம்வெண் போது சேர்ந்த
தயங்கொளி மாலைசூட்டி தன்னிட மடைந்ததன்றே.
எல்லா விருது மீனும் பொழிலின
தெல்லா நிதியு மியன்ற விடத்தின
தெல்லா வமரர் கணமு மிராப்பக
லெல்லாப்புலமு நுகர்தற் கினிதே.

- 3:36; பிப்ரவரி 16, 1910 -

ஆர்த்த பல்லியக்குழா மதிர்ந்த குஞ்சரக்குழாந்
தேர்த்தவீரர் தேர்க்குழாம் திசைத்தபல் சனக்குழாம்
போர்த்த சாமரைக்குழாம் புதைத்த வெண் கொடிக்குழாம்
வேர்த்த வேந்தர் பல்குழாம் விரைந்த கூந்தன்மாக்குழாம்.

பூர்வ அரசர்கள் கொண்டாடிவந்த விருதுகளாகும் சின்னங்களை விடாது அவர்கள் வம்மிச வரிசையோர்கள் பராயமதஸ்தர்களால் நசுங்குண்டு எழிய நிலமையிலிருந்த போதிலும் தங்கள் விவாககாலங்களில் பூர்வ சின்னங்களை மறவாது, வெள்ளைக் குதிரை, வெள்ளைக் குடை, வெண்ணங்கி, வெண்பிறைமுடி, வெண்சாமரை கொடை, செடி, வாகுவலயம் முதலிய பதினெட்டு விருதுகளுடன் ஊர்வலம் வந்து முகூர்த்தம் நடத்துகின்றார்கள். இவர்களுக்குள்ள பூர்வசுதந்திரம் மாறாமல் பராய மதஸ்தர்கள் திருவாளூரிற் செய்யும் உற்சவத்தில் இக்குலத்தோருள் பெரிய தனக்காரன் ஒருவனை யானையின்பேரிலேற்றி ஊர்வலங் கொண்டு வருகின்றார்கள். இஃது குருபரம்பரை ஒழுக்கம்.

புத்தமார்க்க அரசர்கள் மழலைபருவமாகும் சிறுவயதில் பெண்களுக்கு விவாகஞ்செய்யாமல் மங்கைபருவமடைந்த பெண்களுக்கே விவாகஞ் செய்து வந்தார்கள்.

சூளாமணி

நங்கைதான் வளர்ந்துகாம நறுமுகை துணரவைத்து
மங்கையாம் பிராயமெய்தி வளரிய நின்ற நாளுட்
பைங்கண்மால் யானையார்க்கும் பருவம்வந் திருத்ததென்றாள்
வங்கவாய்ப் பவழச்செவ்வாய் வயந்தமாதிலகையென்பாள்

மேற்கூறிய அரசர்கள் வம்மிசவரிசையைச் சார்ந்த பூர்வக்குடிகளும் அச்சேர்க்கை மாறாது நாளதுவரையில் மங்கைபருவமடைந்த பெண்களையே விவாகஞ் செய்துவருகின்றார்கள்.

குமரபருவமுற்ற அரசர்களுக்கும் மங்கைப்பருவமடைந்த பெண்களுக்கும் வதுவை நியமிக்குங்கால் தன்மகன்ம குருக்களாகும் வள்ளுவர்களை வருவித்து பெண்பிறந்தநாள், பருவமடைந்தநாள் தெரிந்துகொள்ளுவதுடன் பத்மினி, சித்தினி, சங்கினி, அத்தினி என்னுந் தேகலட்சணமும் அறிந்து புருஷருக்குரிய குதிரை, ரிடபம், மான், முயல் எனுந் தேகபொருத்தமும் அறிந்து விவாகம் நடத்திவந்தார்கள்.

மங்கலத்திரட்டு

பருவமங்கை பலுத்தநாள் முகநாளையு மிடைபாரமும்
உருவில் மன்னனுதித்தநாள் குரியோதமுமுயைாழமும்
வருவிலங்க குணக்கடற் சுகவாட்கையு மணசேர்க்கையுங்
கருவிலோங்கு களத்திரத்திரள் காணுமே கனமூனுமே.

சூளாமணி

மானக்கோதை மாசரு வேலோய் வரவெண்ணிலாத்
நானக்கோதை நங்கைபிறந்த நாளாளே
வானக்கோனின் மாண்புணர்வார்கண் மறுவில்
தானக்கோளிற் சாதகவோலைத்தலை வைத்தார்.

இவ்வகையாகக் கருமத்தலைவர்கள் சென்று பெண்பார்த்து புருஷனுக்குரிய தேகபொருத்தமும் பெண்ணுக்குரிய தேக பொருத்தமும் பொருந்துதலைக் கண்டவுடன் அரசர்களுக்குத் தெரிவிக்க அரசன் அம்மங்கையை நானே விவாகஞ் செய்வேனென்று தனது கரத்தில் மஞ்சள்நூலாற் கங்கணங்கட்டிக்கொள்ளுவதும் மங்கை அம்மன்னனையே விவாகஞ் செய்வேனென தனது கரத்தில் மஞ்சள் நூலால் கங்கணங் கட்டிக்கொள்ளுவதும் ஓர் விரதமாய் இருந்தது.

சூளாமணி

போதனத்திறைவன் காண்க விரதநூபுரத்தை யாளுங்
காதுவேன் மன்னனோலை கழலவன் றனக்கு நாளு
மாதிய வடிசி லொண்கேழஞ்சன முன்னிட்டெல்லாந்
தீதுதீர் காப்புப் பெற்றுச் செல்கென விடுத்ததன்றே.

சீவகசிந்தாமணி

கணிபுனைந் துரைத்த வாளாற் கண்ணிய கோயிற்றன்னுண்
மணிபுனைமகளிர் நல்லார் மங்கல மரபுகூறி
யணியுடைக் கமலத்தன்ன வங்கைசேர் முன்கை தன்மேற்
றுணியுடைக் காப்புக்கட்டிச் சுற்றுபு தொழுது கார்த்தார்.

கங்கணமென்னுங் காப்புக்கட்டி மங்கலமுரசு வழங்க ஊர்வலம் வருவதற்கு தேசாலங்காரஞ் செய்து கமழ்புகையூட்டி வேற்றரசர்கள் புடை சூழ வீதிவலம்வந்து மணாளன் தன் குலமரபினோர் கோயிலாகும் புத்தமடஞ் சென்று வணங்கிக் கொள்ளுவதும் மணாளி தன் குலமரபின் கோயிலாகும் அம்மன்மடத்திற் சென்று வணங்கிக்கொள்ளுவதுமாகிய வணக்கமுற்று கலியாணமண்டபஞ்சேர்ந்து பூநூல் தரித்துக்கொள்ளுவது வழக்கமாயிருந்தது.

சூளாமணி

குங்குமக் குழம்புகொட்டிச் சந்தனத்தொளிகண்கூட்டி
யங்கலுழவிரை சேற்றோடகநகர ளருசெய்து
மங்குலாய் விசும்புமூட வகிற்புகை மயங்க மாட்டி
பொங்குபொற் சுண்ணம் வீசிமணவினை புனைவியென்றான்.
முரசும் முழுவின் குழுவும் முடிசே / ரரசன் னகரார் குழுவுக் கெழுமி
விரையும் புகையும் விரவும் பகலின் / னிரையந் நெடுவீதி நிறைத்தனவே.

பிடியுங் களிறும் பிறவுந் நெரிவுற் / றடியும்மிடவா மிடமின்றிலருங்
கொடியுங் குடையுங் குளிர்சா மரமும் / முடியின் சுடரும் மிசைமூடினவே.

சீவகசிந்தாமணி

மடற்பனைக் குழாத்திற் பிச்சநிரைத்தன மன்னர் சூழ்ந்து
புடைக்களி நேறித் திங்கட் பொழிக்கதிர் குப்பை யன்ன
வெடுத்தெரிசுவரிவீச வியம்பல முழங்கியார்ப்பக்
கடற்புடை வெள்ளஞ்சூழ காவலன் வீதி சேர்ந்தான்.

சூளாமணி

உலமுறை தோளினானுவகை கூர்ந்தனன்
குலமுறை வழிபடுந் தெய்வக் கோயிலை
வலமுறை வந்தனன் வரலுமாமணி
கலமுறை கதிர்நகைக் கபாடம் போழ்ந்ததே.
மௌவன்மலர்வேய்ந்துமது நாறுமணியைம்பாற்
கொவ்வைதுயில் கொண்டதுவர் வாய்க்கொடியோடொப்பா
டெய்வமண நாறுதிரு மேனிபுரங் காக்கு
மவ்வையரோடெய்தி முதலவ்வையடிசேர்ந்தான்.
நங்கைமணவேள்விநக ரெய்துவதன்முன்னைப்
பொங்குபுரிநூலனலர் தாமரைபுனைந்தார்
மங்கல வுழைக்கல திரைத்தமணமாட
மங்கது புகுந்தழல் வளாக்கிய வமைத்தார்.

மணமக்கள் வீற்றிருக்கும் மணவரைமுகப்பில் அரசமரத்தடியில் வீற்றிருந்து உலகநீதி ஒளி பரப்பிய நமது ஒப்பிலா அப்பன் குருசாட்சியாகுகைக்கு அரசிலைக்கால் நாட்டியும்,

- 3:37; பிப்ரவரி 23, 1910

வேம்புமரத்தடியில் வீற்றிருந்து குருநாதனை சிரசில் தாங்கி உலகுக்கு நீதிவிளக்காக விளங்கி அம்பிகையென்றும், அவ்வையென்றும் பெயர் பெற்ற நமதம்மனை சாட்சியாகுகைக்கு குடிவிளக்கு அமைத்தும், பஞ்சதாரை சோதி நிலையைப் பரப்புவதற்கு பஞ்சகூறு சால்களென்னும் இந்திர வருண பானைகள் அமைத்து ஓமகுண்டத்தில் அகிற்புகை சோதி வளர்த்தி மணமகளை தாய்மாமன் பாத சேவை செய்ய வைத்து மண்டபத்திற் கொண்டுவந்து மணமகள் தந்தை நீரில் தாரைவார்த்து மணமகன் கையில் பிடித்துக் கொடுப்பது வழக்கமாய் இருந்தது.

பின்கலை நிகண்டு

தருமராசன் முநீந்திரன் சினன் பஞ்சதாரைவிட்டே
யருள் சுரந்த வுணர்கூட்டுந் ததாகதன் ஆதிதேவன்
விரவு சாக்கையனே சைனன் வினாயகன் சினந் தவிர்ந்தோன்
அரசு நீழலிலிருந்தோன் அறியறன் பகவன் செல்வன்.

சிலப்பதிகாரம்

பணையைந்தோங்கிய பாசிலைப்போதி / யணிதிகழ் நிழலற வோன்றிருமொழி

பின்கலை நிகண்டு

மரகதவல்லிபூக மரநிழலுற்றவஞ்சி
பரமசுந்தரி யியக்கி பகவதி யம்மையெங்க
ளருகனை முடிதரித்தா ளம்பிகையறத்தின் செல்வி
தரும தேவதை பேரம்பாவிகை யென்றுஞ் சாற்றலாமே.

மணிமேகலை

சிந்தாதேவி செழுங்கலை நியமத்து / நந்தாவிளக்கே நாமிசைப்பாவாய்
வானோர் தலைவி மண்ணோர் முதலிவி / யேனோருற்ற விடர்களைவாய்.

சூளாமணி

தூண்டிய சுடர்விளக்கன்ன கன்னியோ / டாண்டகை யழல்வலஞ் செய்யுமாரணி
காண்டகையுடைத்தது காண்டுநாமென / வீண்டிய கதிரவ னுதயமேறினான்.

சீவகசிந்தாமணி

அடிமணை பவழமாக வரும்பொனா லலகு சேர்த்தி
முடிமணி யழுத்திச் செய்த மூரிக்காழ் நெற்றிமூழ்கக்
கடிமலர் மலரை நாற்றி கம்பல விதானங் கோலி
யிடும்புகை மஞ்சிற்குழ மணவரை யியற்றினாரே.

ஐந்து மூன்றெடுத்த செல்வத்தமனி மூன்றியற்றிப் பூம்பட்
டெந்திர வெழினிவாங்கி யினிமுக வாசச்செப்புஞ்
சந்தனச் சாந்து செப்புந் தண்மலர் மாலை யெய்தி
யிந்திர நீலச்செப்பு மிளயவ ரேந்தினாரே.
மன்பெரிய மாமனடி மகிழ்ந்து திசை வணங்கி
யன்பி னகலாதவினை விடுத்தலர்ந்த கோதைக்
கின்பநிலத் தியன்றபொரு ளிவையிவைநின் கோமான்
றந்தவெனச் சொல்லிநனி சாமி கொடுத்தானே.

சூளாமணி

மங்கையை வலத்துக் கொண்டு மாலையுங் குழலுந் தோடு
மங்கையாற் றிருத்திமாம னடிகளைப் பணிகவென்று
செங்கயற் கண்ணிதாதை செவ்விரல் குவியப்பற்றி
பங்கயப் பழனன் னாடன் பாத மூலத்து வைத்தான்.
அங்குமுன் வளர்த்த வழலே கடவுளாக
மங்கையைமணக்குழுவின் முன்னைவரவேந்தன்
கொங்குவிரிதாரவற்கு நீரொடு கொடுத்தான்
நங்கையொடு நாண்மலரு ளாளையுமடுத்தான்.

மணவரையில் மணமகளை வலமாகவும், மணமகனை இடமாகவும் வைத்து அரசாணிக்கால்முன்பு வளர்த்திய சோதியை குருசாட்சியாகவும் குடவிளக்கை அம்மன் சாட்சியாகவும் சத்திய குண்டமிட்டு மணமகள் வலப்புறக் கழுத்தில்

பொற்சரட்டை சுழலமாட்டி இருவருமெழுந்து அரசிலைக்கால் வலம் வந்து வடமீனென்னும் அருந்ததி நட்சத்திரத்தை மணமகளுக்குக் காண்பித்து அருந்ததியைப்போல் கற்புடையவளாக வாழும்படி நவரத்தினங்களாலும், பொன்னரிசியாலும் ஆசிர்கூறுவது வழக்கமாயிருந்தது.

சூளாமணி

மன்னியழல் வேழ்வியிலவற்கு வலமாகப்
பின்னியத குப்பைகள் பிடித்தவை விடுத்தாங்
கன்ன மனையாளொடெயில் வேலவனிருந் தான்
கன்னியோ டியைந்த கதிர் மாமதியமொத்தாள்.
கந்துளு மிழுங்கரிய சூழ்புகைகள் விம்ம
வந்துசுட ரேந்திவல னேசுழலமாட்டி
யந்தணனு மங்கழ லழைத்துமிக வேட்டான்
மைந்தனுமடந்தையை மனத்தின்மிக வைத்தான்.

பொங்கழல்செய் வேள்விமுறை போற்றலு மெழுந்தா
னங்கையி னணங்கினணி மேல்விரல் பிடித்து
மங்கையொடு காளைவல னாகவருகின்றான்
கங்கையோடி யைந்தவரு கார்க்கடலோ டொத்தான்.

வானநெறி யங்குவளர் சோதிவட மீனைக்
கானமயிலன்னவடன் முன்னைநணிகாட்ட
யானுமிவள்போலுலகு காணவியல்வேனோ
வீனமொடுநாணமில னோவெனவிகழ்ந்தாள்.

இடிபடு முரசிற் சாற்றி யேற்பவ ராசி கூறச்
சுடர்விடு மணியின் மாரி பொன்னொடு சொரிய வேவிக்
கடிபடு நெடியமாடங் கன்னியோ டேறினானாண்
முடிகொளு முலகமெய்து மின்டா மூர்த்திமெய்யான்.

சீவகசிந்தாமணி

விளங்கொளி விசும்பிற் பூத்த வருந்ததிக் காட்டியின்பால்
வளங்கொளப் பூத்தகோல மலரடி கழீய பின்றை
யிளங்கணை யாழியேந்த வயினிகண்டமர்ந்திருந்தான்
றுளங்கெயிற் றழுவைதொல்சீர் தோகையோ டிருந்ததொத்தான்.

மணாளியை கற்புநிலையில் நிறுத்துவதற்கு அருந்ததியைக் காட்டி மணாளனின் பாதத்தைக்கழுவி கணையாழிபூட்டிய மறுநாள் மஞ்சள் நீரினாலும், சந்தனக் குழம்பாலும் விளையாடி சுகானந்தத்திலிருப்பது வழக்கமாயிருந்தது.

சீவகசிந்தாமணி

அன்னப் பெடைநடுக்கி யசைந்து தேற்றா நடையாளு
மன்னர் குடைநடுக்கும் மாலைவெள் வேன்மறவோனும்
மின்னு மணிக்குடத்தின் வேந்தரேந்த மண்ணாடி
சுன்னங் கடிமலருந் துகிலுஞ் சாந்தும் புனைந்தாரே.

இவற்றிற் கூறியுள்ள விவாக சடங்குகளை ஆழ்ந்து வாசிப்பவர்களுக்கு தற்கால விவாக சடங்குகள் தெளிவாக விளங்கும். நமக்குள்ள ஓவ்வோர் கிரியா சம்மந்தங்களையும் செவ்வனே விசாரித்துணராமல் நம்மை நாளெல்லாம் தாழ்த்தி நசுங்குரச்செய்யும் பராய சாதியார் மதங்களைத் தம்மதமெனக் கொண்டு மயங்கி நிற்கும் அன்பர்கள் இனியேனும் பராயர்களின் மதக்களிம்பை அகற்றி அவரவர்களின் மதத்தோன்றலை பூர்த்தியாக விசாரித்துணர்ந்து சற்குருவின் திருவடியைப் பின்பற்றுவார்களாக.

புத்ததரும நூல்களாக விளங்கும் திவாகரம், நிகண்டு, வீரசோழிய முதலிய இலக்கண நூற்களிலும் சீவகசிந்தாமணி, மணிமேகலை, சூளாமணி, மங்கலத்திரட்டு முதலிய சரித்திர நூற்களிலும் புத்ததரும அரசர்கள் முதல் வணிகர், வேளாளரென்றமூன்று தொழிலாளருக்கும் வள்ளுவர்கள் கன்மகுருக்களாயிருந்து தன்ம கன்மங்களை நிறைவேற்றிவந்ததாகக் கூறுகின்றது.

அவைகளை அநுசரித்துவந்த குருகுலத்து அரசவம்மிச வரிசையோர்களாகிய நாமும் நாளதுவரையில் வள்ளுவர்களை விடாது தன்மகன்மங்களை

நிறைவேற்றுவதுடன் அரச சின்னங்களாகும் புத்ததரும விருதுகளையும், கிரியா சம்மந்தங்களையும் விடாது நிறைவேற்றிவருகின்றோம்.

அதாவது குருகுல அரசர்களுக்குள் மங்கை பருவமடைந்து பெண்களை விவாகஞ் செய்துவந்தார்கள். அதுபோல் நாமும் பருவமடைந்த பெண்களை விவாகஞ் செய்துவருகின்றோம். அவர்கள் சாதகவோலைப் பார்ப்பதுடன் தேகபொருத்தமும் பார்த்து விவாகம் நடத்தி வந்தார்கள். நாம் சாதக வோலை ஒன்றைமட்டும் பார்த்து தேகபொருத்தம் பாராது கறுப்பு சிவப்பென்னும் அழகு பொருத்தம் பார்த்து விவாக முடிந்த நாலைந்து தினத்துள் கலகத்தையும், துக்கத்தையும் பெருக்கிக் கொள்ளுகின்றோம்.

- 3:38; மார்ச் 2, 1910 -

அவர்கள் ஊர்வலம் வருவதுடன் கோவில் வலமும் வந்து மணவரையிற் பூநூல் தரித்துக் கொள்ளுவார்கள். அதுபோலவே நாமும் ஊர்வலம் வருங்கால் அம்மன் கோவிலை வலம்வந்து மணவரையிற் பூநூல் தரிப்பது வழக்கமாயிருக்கின்றது. அவர்களுக்குப் பெண் நியமனமானவுடன் கையிற் கங்கணங் கட்டுவது வழக்கமாயிருந்தது. அதுபோலவே நாமும் விவாக காலங்களில் கங்கணங்கட்டி வருகின்றோம். அவர்கள் ஊர்வலம் வருங்கால் வெள்ளை யானை, வெள்ளைக்கொடி, வெண்குடை, வெண்சாமரை முதலிய பதிநெட்டு விருதுகளுடன் வந்தார்கள். அதுபோலவே நாமும் வெண்பிறை முடியென்னும் வெண்பிறைப் பாகை, வெண்ணங்கி, வெள்ளைகுதிரை, வெள்ளைக்குடை, வெண்சாமரை முதலிய விருதுகளுடன் ஊர்வலம் வருகின்றோம் அவர்கள் தங்கட் பெண்ணைத் தாய்மாமன் பாதத்தில் விழச்செய்து மணவரைக்குக் கொண்டுவருவது வழக்கமாயிருந்தது. அதுபோலவே நாமும் தாய்மாமன் பாதத்திற் பெண்ணை விழச் செய்கின்றோம்.

அவர்கள் அரசாணிக்கால், குடவிளக்கு, பஞ்சவர்ணப் பானைகள் முன்பு ஓமகுண்ட சோதியை வளர்த்து அதன் சாட்சியாக மாலையிடுவது அல்லது பொற்சாட்டில் பொட்டுக்கட்டுவது வழக்கமாயிருந்தது. அதுபோலவே நாமும் அரசிலைக்கால் நாட்டி, குடவிளக்கிட்டு பஞ்சவர்ண பானைகளமைத்து ஓமகுண்ட சோதியைவளர்த்து நமது எழியநிலமைக்குத் தக்கவாறு நூல் சரட்டில் (தாலி) என்னும் ஓர் மங்கல்யச் சின்னத்தைக் கட்டிவருகின்றோம்.

அவர்கள் மங்கல்யம் முடிந்தவுடன் நவரத்தினங்களாலும் பொன்னரிசியாலும் ஆசீர் கூறி அருந்ததி என்னும் வடமீனைக் காட்டி வந்தார்கள். பராய மதஸ்தர்களால் நாம் நசுங்குண்டு எழிய நிலமைக்கு வந்துவிட்டபடியால் நவரத்தினங்களுக்குபதிலாக பலவருணபுட்பங்களும் பொன்னரிசிக்கு பதிலாக மஞ்சட்கலந்த அரிசியுங்கொண்டு ஆசீரிட்டு அருந்ததியைக் காட்டிவருகின்றோம்.

அவர்கள் விவாகமுடிந்த மறுநாள் பெண்ணும் பிள்ளையும் பொற்குடங்களில் மஞ்சள் நீரும் சந்தனக்குழம்புங்கொண்டு நீராடிவந்தார்கள். அதுபோலவே நாமும் மட்குடங்களில் மஞ்சள்நீர்க்கொண்டு விளையாடிவருகின்றோம்.

இவ்வகைக் கிரிகைகளின் அந்தரார்த்தமும், மணவரையிற் பெண்ணும் பிள்ளையும் கொடுக்கும் சத்தியவாக்குபாடுகளும் பூர்வத்திலிருந்த தன்மகன்ம குருக்களாகிய வள்ளுவர்கள் புத்த தருமங்களைத் தழுவி நீதிவழுவா ஒழுக்கத்திலும் சீலத்திலும் இருந்த காலத்தில் சத்தியதருமங்களையும் கிரியா சம்மந்தங்களையும் விளக்கிவந்தார்கள். தற்காலத்திலுள்ள வள்ளுவர்கள் பராயர் மதாசாரங்களைத் தழுவி ஒழுக்கமும் சீலமும் கெட்டு பொய்ப்பிராமணர்களைப் போல் பொருளாசை மேலிட்டு பராயர்கள் போதனைக்குட்பட்டு மதவித்தியாசமானதுமன்றி சாதி வித்தியாசமும் ஏற்படுத்திக்கொண்டு நமது வீடுகளில் சாப்பிடாமல் தங்கள் சாதியை உயர்த்திக்கொண்டு நமது கருமக்கிரியைகளைமட்டும் அதினந்தரார்த்தம் உணராது நடத்திவருகின்றனர். இத்தகைய வள்ளுவர்கள் புத்ததருமத்தைத் தழுவியிருந்தகாலத்தில் களங்கமற்ற நெஞ்சினர்களாய் நம்முடன் கலந்து புசித்து வந்ததாக அடியிற் குறித்துள்ள சரித்திர நூலால் விளங்குகின்றது.

மங்கலத்திரட்டு

கொள்ளு நெய்தயிர் பாலுமின்னமு துண்டபாளித சோறுடன்
பள்ளு காய்கனி சீனிதேனு கர்பாகுமற்று பணித்தமும்
வள்ளுவர்க் குணவூட்டி வட்டினை மாடு பொன் சிலையீய்ந்தனன்
உள்ளமெய்ப் புகழுற்ற ராயனுயர்ந்த கார் நகர் சீயனே.

புத்ததரும நிலை வழுவி பராயர் மதத்தைத்தழுவியவர்கள் போதனைக்குட் பழகி நம்மைத்தாழ்ந்த வகுப்பாக்கித் தங்களை உயர்த்திக்கொண்டதுமுதல் நாளுக்குநாள் வள்ளுவர் குலம் நசிந்து சீலமு மறந்து சிறப்புங் குறைந்து வருகின்றார்கள்.

புத்ததரும அரசர்களின் சின்னங்களையும் ஞானிகளாகிய சமணமுனிவர் களின் சின்னங்களையும் திருவள்ளுவ சாம்பவனார் தானியற்றியுள்ள ஞானவெட்டியில் தெளிவாகக் கூறியிருக்கின்றார்.

ஞானவெட்டி

பூனூல்தரித்துக்கொள்வோம் பூதம்பொறியுமை
ம்புலனையு மடக்கிக்கொள்வோம்
வேணவிருதுகளும் உசிதமாய் வெண் குடை
வெண்சாமரையும் பிடித்துக்கொள்வோம்
வானவர் முனிவர்தொழும் வெண்விசிரி மரகத
குண்டலமுங் கவசங்களும்
ஞானப்பிரகாச வொளிநிறைந்த பரநாதன் றன்
னடிகளை நிதந் துதிப்போம்.

எனக் கூறியுள்ள ஞானவெற்றியெனும் நூல் ஏற்பட்டக் காரண மென்னவென்றால் தற்காலம் விசுவபிரம வம்மிசத்தோரென்றும், கம்மாளரென்றும் வழங்கும் படியானவர்களுக்கும், வேஷப்பிராமணர்களுக்கும் குருபட்ட தருக்கம் நேரிட்டதுபோல் 1,400- வருடங்களுக்கு முன்பு புத்த தருமங்களைச்சார்ந்து தன்மகன்மங்களை நிறைவேற்றி வந்த வள்ளுவர் அரசர்கள் முதல் வணிகர்கள் வேளாளரென்ற மூன்று தொழிலாளர்களுக்கும் கன்மகு ருக்களாயிருந்து செய்துவந்த கிரியைகளை பௌத்தபிராமணர்களைப் போலவேஷமிட்டுக் கொண்டவர்கள் செய்யும்படி ஆரம்பித்தகாலத்தில் இவர்களுக்கும் அவர்களுக்கும் வாதுகள் நேரிட்டு வள்ளுவர்களுக்குள்ள களங்கமற்றச் செய்கையால் சோர்வடைந்தும் வேஷப் பிராமணர்களுக்குள்ள வஞ்சகச் செய்கையால் அரசர் வணிகர்வேளாளரென்ற முத்தொழிலாளரையும் தங்கள் வயப்படுத்திக்கொண்டு வள்ளுவர்களையும், அவர்களைச்சார்ந்த அரசர்களையும், ஞானகுருக்களாகிய சமண முனிவர்களையும் கொன்றுப் பலவகைத் துன்பங்களையுச் செய்ததுமன்றி தற்காலம் திருப்பதி, மாவலிபுரம், சிதம்பரம், ஸ்ரீரங்கம், காஞ்சிபுரம், புதுக்கோட்டை மற்றுமுள்ளப் பூர்வ இந்திரவிஹாரங்களையும் தங்கள் வயப்படுத்திக்கொண்டு பூர்வம் இத்தேசத்தில் தொழில்களுக்கென்று வகுத்திருந்தப் பெயர்களை சாதிகளாக ஏற்படுத்தி அதில் தங்களை உயர்ந்தசாதிப் பிராமணர்களென வகுத்துக் கொண்டு வள்ளுவர்களையும் அவர்களைச்சார்ந்த புத்த தருமசீலர்களையும் தாழ்ந்தசாதிப் பறையர்களென வகுத்து இழிவு கூறிவந்த காலத்தில் இஞ்ஞானவெற்றி நூல் ஏற்பட்டது. இந்த ஞானவெற்றி யெனும் நூலை தற்காலம் அச்சிட்டவர்கள் பராயமதஸ்தர்களாகையால் தங்கள் மனம்போனவாறு கிறிஸ்துமதத்தைக் கண்டித்தும் செத்ததோர் மாடெடுப் போமென்றும் கட்டையும் அடுக்கிக்கொள்ளுவோம் என்றும் அவரியற்றியதுபோல் (217) பொய்ப் பாடல்களை இயற்றி அதிற் சேர்ந்து அச்சிட்டிருக்கின்றார்கள். இவைகள் யாவையும் நமது சங்கத்தாரால் சுத்தப்பிரிதிகளாக அச்சிட்டு கூடிய சீக்கிரத்தில் வெளியிடப்படும். இந்த சரித்திரங்களை அநுசரித்து சென்னை தேவனாம்பேட்டையில் வசித்துக் காலஞ்சென்ற ம-அ-அ-ஸ்ரீ வீ. அயோத்திதாஸ கவிராஜ பண்டிதரவர்கள் இயற்றியுள்ள,

சீட்டுக்கவி சுருக்கம்

ஆதிச்சிறந்தவனை பறையனென் பேசுவ
தகைந்தை வாய்மதமல்லவோ

அந்தணர் தமிழரையு மடுமைகொண்டுக்
ககனமாண்டப் பிரபோத சிம்மம்
அவனியிற் பதினெட்டு விருதுடைதீட்டிலா
னழகு முன்னூல் பூண்டவன்
அவைவென்ற வெள்ளானை யேறிப்பிரதிட்டைவரு
மகழங்களுானவீரன்.

எனவும் சென்னை புரசவாக்கத்தில் வசித்துக்காலஞ்சென்ற ம-அ-அ-ஸ்ரீ ஏகாம்பரப்புலவரவர்களியற்றியுள்ள,

கீர்த்தனை சுருக்கம்

சகலவிருதும்பெற்ற சத்துவசீலரை
பகலிற் பறையரெனப் பகட்டும்பாதகர்க்கு
இகத்து சுகமதற்று பரத்திற் பவங்களுற்று
நுகத்துத் தடிகளேற்று நொய்வர்நொய்வர்மிகு.

- 3:39; மார்ச் 9, 1910 -

இத்தகைய பூர்வ சரித்திரங்களை மறந்து பராயர் மதவிசாரிணையிலும் அவர்கள் செயலிலும் பழகி தன்மகன்ம குருக்களென விளங்கும் வள்ளுவர்கள் மணவரையில் உட்கார்ந்து தன்மகன்ம குருக்களின் செயல்களைச்செய்து வருகின்றார்கள். அதாவது, புருடர்களுக்கு உத்தம குணத்தையும், பெண்களுக்கு பத்மினி குணத்தையும் பெருக்கி வாழ்க்கைத்துணை நலங்காட்டும் மந்திரங்களை மறந்து (சுக்கிலாம்பரதரம்) தேங்கா கொண்டுவா, (சசிவர்ணம்) வாழைப்பழம் கொண்டுவா, (அட்சயா நமா) தட்சணைக் கொண்டுவா, (பிரபவாநமா) தாம்பூலம் கொண்டுவா வெனத் தங்கள் வரவைப் பார்த்துக்கொண்டு போய்விடுகின்றார்கள்.

தன்மகன்ம குருக்களாகிய வள்ளுவர்கள் மணவரையில் மணமக்களை நிலம்பெறச் செய்து ஓமகுண்டத்தில் அகில், சந்தனம் தக்கோல முதலிய கந்த சுள்ளிகளிட்டு, பசுநெய்விட்டு சோதியை வளர்த்து, மணமகள் கரத்தில் நவதானியங் களைக் கொடுத்து பெண்ணை யாதொருகுறைவுமின்றி நடத்துவதற்கு தன்மகன்ம மந்திரஞ் சொல்லப்போகின்றேன் அதைக் கவனித்து என்னுடன் சொல்லி தானியத்தை சோதியிலிட வேண்டுமென்று எச்சரித்து மணமகனைநோக்கி இப்பெண்ணை இன்றுமுதல் என் மனைக்கும் என் சுகத்திற்கும் ஆளாக்கிக் கொள்ளப்போகின்றேன், இவளுக்கு யாதாமொரு துரோகமும் நான் செய்யமாட்டேன், இவளையன்றி நான் வேறு இஸ்தீரிகளை இச்சிக்கமாட்டேன், இவளுக்கு சுகபூஷணங்களை என்னாற் கூடியவரையிற் செய்து சுகமாக பாதுகார்ப்பேன், இவளுக்குண்டாகும் பிணி வாதைகளை எனக்குண்டாகும் வாதைபோல் எண்ணி சுகமடையச் செய்வேன், என் அறிவை மயக்கும் கள் முதலிய லாகிரிவஸ்துக்களைக் குடித்து இவளை மனநோகச் செய்யமாட்டேன், அன்னியர்களை வஞ்சித்தும் அவர்கள் பொருட்களைக் களவு செய்தும், இவளை போஷிக்காமல் என்தேகத்தையும் மனத்தையும் வருத்தி சம்பாதித்து இவளை போஷிப்பேன், பொய்யான வார்த்தைகளைச் சொல்லி இவளை வஞ்சிக்க மாட்டேன், சீவப்பிராணிகளைத் துன்பப்படுத்தி அதினாற் பொருளை சம்பாதித்து இவளை போஷிக்கமாட்டேன். இவளுக்கு வேண்டிய சுகங்களுக்குப் புருடனாகவும், காப்பாற்றுவதில் காவலாளியுமாக இருந்து இவளை அன்புடன் ஆதரிப்பேன். இதுவே சத்தியம் சத்தியம், சத்தியமென ஒவ்வொரு வார்த்தைகள் முடியும் போதும் நவ தானியத்தை சோதியிலிடச்செய்து புருடனை உறுதிமொழி கூறவைப்பர்.

பெண்ணின் கரத்தில் நவதானியத்தைக் கொடுத்து இன்றைய திகதியில் என் தந்தையானவர் எனக்கு அருகிலிருப்பவரை பத்தாவாக நியமித்து அவருக்கு என்னை தத்தஞ் செய்துவிட்டபடியால் இன்றுமுதல் இவரையே என் தெய்வமாகவும் என் குருவாகவும் எண்ணி என்மனைத் தொழிலை நடத்திவருவேன். இவர் வாழும் இல்லத்தை மடமாகவும், இவரை தெய்வமாகவும், இவருக்குச் செய்யும் பணிகளை நற்கிரியைகளாகவும், இவருக்கு வட்டிக்கும் பதார்த்தங்களை நெய்வேத்தியங்களாகவும், இவரை

சுத்திகரிக்கச்செய்யும் ஏவலை தூபதீபங்களாகவும் பாவித்து நடத்திவருவேன். இவரை தெய்வமாக பாவிப்பதை மறந்து வேறொரு காணாத் தெய்வத்தை சிந்திக்க மாட்டேன். இவரைக் கண்குளிரப் பார்ப்பதை மறந்து அன்னிய புருடர்களை என் தலை நிமிர்ந்து பார்க்கமாட்டேன். என் மனைத்தொழில்களை மறந்து வாசற்படி கடக்கமாட்டேன். அண்டைவீட்டு கலகச்சொல் அயல்வீட்டுக் கலகச்சொற்களாகும் நெறுப்பைக் கொண்டுவந்து என்வீட்டிற் கொளுத்தமாட்டேன். என்வீட்டிலுள்ள கலகச் சொற்களாகும் நெறுப்பை அயல்வீடுகளிற் கொண்டுபோய் எரியவிட மாட்டேன்.

அன்பான எண்ணத்தையும், சாந்தமான வார்த்தைகளையும் ஈகையுள்ள தருமச்செயல்களையும் மனையில் நடத்திவருவேன். மாமன் மாமி மாதுலன் மாதுவி இவர்களை மேன்மையாக பாவித்து அன்புடன் ஏவல்செய்துவருவேன். அருந்ததி யென்னு மெமதம்மாள் தன் கணவனாகிய வதிட்டரை தெய்வமாக பாவித்து அவருக்குச் செய்யும் மனைத்தொழிலில் சாந்தம், ஈகை அன்பென்னுங் கற்புநிலையைப் பெருக்கிய பதிவிரதத்தினால் நாளதுவரையில் நாம் கொண்டாடும் நீதியொளியாய்ப் பிரகாசிப்பது போல் யானும் என்னாற் கூடியவரையில் பதிவிரதத்செயலால் கற்புநிலை நின்று என் பத்தாவாகிய இவரைக் கனஞ்செய்வேன். இதுவே சத்தியம் சத்தியம் சத்தியம் என ஓவ்வோர் வார்த்தையின் முடிவிலும் தானியத்தை சோதியி லிடும்படிச் செய்து உறுதிமொழிக் கூறவைப்பர்.

இவ்வகையான வாக்கு தத்தங்களை தன்ம கன்ம குருக்கள் ஏன் நிறைவேற்றி வந்தார்ளென்றால், புத்த தருமத்தைச்சார்ந்த புருஷர்கள் யாவரும் சற்குருவை தெய்வமெனசிந்தித்து பாவச்செயல்களை அகற்றி நன்மெக்கடைபிடித்து தங்கள் இதயத்தை சுத்திசெய்து வந்தார்கள்.

வீரசோழியம்

அருள்வீற்றிருந்த திருநிழற்போதி / முழுதுணர் முதிவனிற் பரவுதுந்தொழுதக
வொருமனமெய்தி யிருவினைப் பிணிவிட / முப்பகை கடந்து நால்வகை பொருளுணர்ந்
தோங்குநீ ருலகிடை யாவரு / நீங்க வின்பமொடு நீடுவாழ்கெனவே.

சூளாமணி

தன்னலாற் றெய்வ பேணார் சார்ந்தவர் தானுஞ் சார்ந்தார்க்
கென்னலா விவருக்குற்றா ரில்லையென்றிரங்கு நீரான்
பொன்னலா நிதியமாறப் பொழிந்திடுகின்ற பூமி
மன்னலா மவனையன்றி வணங்குவதில்லை மன்னா.

புத்ததருமத்தைச் சார்ந்த இஸ்திரிகள் யாவரும் தங்கள் புருஷர்களை தெய்வமாகச் சிந்தித்து மனைத்தொழில் நடத்தி சுற்புநிலை நின்று தங்கள் பத்தாவைக் கனஞ் செய்து வந்தார்கள்.

- 3:40; மார்ச் 16, 1910 -

மணிமேகலை

தெய்வந் தொழா அள் கொழுநற்றொழுமவள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்

புத்த தருமத்தைச்சார்ந்த புத்திரர்கள் யாவரும் தங்கள் தாய் தந்தையரை தெய்வமென சிந்தித்து கலை நூல்களைக் கற்று சுயக்கியான நிலைனின்று உலகோபகார நித்தியச்செயல்களை செய்துவந்தார்கள்.

அவ்வை நீதிவாசகம்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

தந்தையையும் தாயையும் தெய்வமென சிந்தித்த போதிலும் அவர்கள் பேரில் தங்களன்பை லயஞ்செய்து அவர்களை எக்காலும் தொழுது வருவதே நன்மெயாம். இதையே இரண்டாவது வாசகசீருள்

ஆலயந்தொழுவது சாலவுநன்று எனக் கூறியுள்ளாள்.

இதின் புத்ததரும அந்தரார்த்தம் உணராது கல்லையும் கட்டையையும் செம்பையும் எக்காலுந் தொழுது வருவது காலக்கேடேயாம். தந்தை தாயரைத் தெய்வமென சிந்திப்ப துடன் அவர்கள் மீதுள்ள நன்றியறி தலென்னும் அன்பை

எக்காலும் லயம்பெறச் செய்வதே அதன் பயனாம். இதையே தந்தைதாய்ப் பேண் என வற்புறுத்திக் கூறியுள்ளார்.

புருடர்களையும், ஸ்தீரிகளையும், புத்திரர்களையும் நீதிநூல் ஒழுக்கங்களில் நிறுத்தி அவர்கள் சுகசீவிகளாக வாழ்வதற்கு தன்மகன்ம குருக்களாகிய வள்ளுவர்கள் முன்னின்று நற்கிரியைகளை விளக்கி வந்தார்கள். அவ்வகை தன்மகன்மங்களை நிறைவேற்றிவந்த வள்ளுவர்கள் தற்காலத்தில் தாராபலன், சந்திரபலனைக்கொண்டு இராசிபொருத்தம், கணபொருத்த மட்டிலும் பார்த்து பூர்வகாலத்தில் ஏழு செறுப்புத் தேயுமளவும் சுற்றி பெண்பார்க்கும் தேகபொருத்தத்தை மறந்து விவாககாரியங்களை நடத்தி வருகின்றனர். தாய்தந்தையர் பிள்ளைக்குப் பெண்பார்க்கும்போது வள்ளுவர்களை அழைத்துப் போவதையும் நாளுக்குநாள் மறந்துவிட்டார்கள். வள்ளுவர்களும் தேகபொருத்த சாஸ்திரங்களை மறந்து காரிய பொருத்தங்களை கைக்கொண்டார்கள்.

தேகபெருத்த லக்ஷணங்களாவன

ஆண்பால்		பெண்பால்	
குதிரை சாதி	16	அத்தினி	16
இரிடப சாதி	12	சங்கினி	12
மான் சாதி	6	சித்தினி	6
முயல் சாதி	6	பத்மினி	6

ஆகிய தேகபொருத்தந் தழுவிய குணம், குறி, நடை, நகை, தொனி, விழி முதலியவைகளை உணராது கறுப்பு சிவப்பென்னும் அழகு பொருத்தமும், தனவான் வீட்டின் பெண், பெரியவீட்டுப் பெண்ணென்றும், ஏழையின் வீட்டின்பெண் சிறியவீட்டுப் பெண்ணென்றும் அந்தஸ்து பொருத்தமும் பார்த்து விவாகஞ் செய்வதில் குறிபேதத்தால் புத்திரப்பேறற்றும் மேகரோக முற்றும் தேகங்கள் நாளுக்குநாள் ஈனதிசை அடைவதுமன்றி விவாகம் முடிந்த நாலு நாளுள் சிலர் நற்குறி காணவில்லை என்னும் ஓர் கவலையினால் பெண்ணை வியபசாரியெனத் தூற்றுவதும், பிள்ளையை துக்கத்தில் ஆழ்த்துவதும், பணத்தைப் பாழாக்குவதுமாகிய பாரத்தில் ஆழ்ந்து விடுகின்றார்கள். தேகபொருத்தங்களை நன்குணர்ந்து விவாகம் செய்வார்களாயின் பெண்ணும் பிள்ளையும் வியாதியின்றி சுகதேகிகளாய் சுற்புத்திரரைப் பெற்று நீடு வாழ்வார்கள். பெண்களும் தங்கட் புருடர்களை தெய்வமாகப் பாவித்துக் கனமடையச் செய்வார்கள்.

கூர்மபுராணம்

கற்பிற் கினியவ ருந்ததியார் கண்ணுமனமுந் தனிக்கவரும்
பெற்பிற் குயர்வா னுருப்பசியாப் புனித
வொழுக்க முடையாளாய்
வெற்போ ரணுவா மெனப்புடைத்துச் செம்மாந்தெழுந்து வீங்கு முலை
அற்போருருவு கொண்டனைய வணங்கை விழைவின் மணம்புரிக.

வீடுமார்வாக்கு

தன்கணவனைக் கடவுளென்று பலதன்மெய்
மன்முறை திருத்திவழி பாடுகணிரைப்பேன்
நன்முறை யவர்க்கினிய நாடியவை தேடி
யன்பொடு சமைத்தடி சினல்குவனடுத்தே.

தலைவனுந் தலைவியன்பார் தங்களிற் பக்கமன்பு
நிலைமன மொருமெயோடு நீணிலந்தன்னில் வாழ்தல்
பலனெவை யென்னில் வானிற் பரமமெய் யருள்பேரின்ப
நலனுநீ டூழிகால நன்கொடு வாழுவாரே.

முடிவுரை

ஒரு மனிதன் தன் தகப்பனுக்கு நூறு ரூபாய் சம்பாத்தியமுள்ள காலத்தில் புசிப்பிலும் உடையிலும் இல்லத்திலும் சுகபோகங்களை அனுபவித்து வருவான். தன் தகப்பன் இறந்தவுடன் தனக்கு சொத்துக்கள் யாதுமின்றி பத்துரூபா சம்பாத்தியம் உண்டானபோது முன் சுகங்கள் யாவையும் மறந்து தன் சம்பாதனைக்குத் தக்க சுகத்திலிருப்பான்.

அதுபோல் நமது மூதாதைகளின் புத்தரும அரசாங்கம் இருக்குமளவும் குடை செடி விருதுகளாகிய பற்பல சின்னங்களுடன் ஆனந்தங் கொண்டாடி வந்தோம். தற்காலம் பராய மதஸ்தர்களின் வஞ்சினத்தால் நமது அரசபோகங் களும் குருப் பிரதாபங்களும் நசுங்குண்டு எழிய நிலையிலிருக்குங்கால் பூர்வ ஆடம்பரங்களைச் செய்வதில் மேலுமேலும் எழியநிலையுற்று துக்கவிருத்தி அடைகின்றோம்.

இனியேனும் அவ்வகை ஆடம்பரச் செயல்களை நிறுத்தி குலகுருவின் போதனா ஒழுக்கத்தினின்று காலத்திற்கும் செயலுக்குந் தக்கவாறு நமது விவாக வீண் சிலவுகளை சுருக்கி சீலத்தையும் ஒழுக்கத்தையும் பெருக்கவேண்டு மென்பது சங்கத்தோரின் நன்னோக்கமாதலால் இதனை வாசித்துணரும் ஒவ்வோர் அன்பர்களுந் தங்கள் யுக்திக்கு எட்டியவரையில் விவாக சீர்திருத்தங் களையும், விவாகம் முடிந்தவுடன் மணமக்கள் கடனென்னும் கவலையில்லாமல் சுகத்தை அநுபவிக்கும் பாதைகளையும் எழுதி சங்கத்திற்கு அனுப்புவார் களானால் அவைகளை ஒருங்குசேர்த்து நமது குலத்தாரின் பெருங்கூட்டமிட்டு பெருந்தொகையோர் சம்மதப்படி விவாக சீர்திருத்தம் செய்துக்கொள்ளலாம்.

திருப்பதி, மாவலிபுரம், சிதம்பரம், ஸ்ரீரங்கம், காஞ்சிவுரம், திருவாளூர் மற்றமுள்ள பூர்வ கட்டிடங்கள் யாவும் புத்தரும் சமண முநிவர்களின் மடங்களா அல்லது தற்கால நூதன மதஸ்தர்களின் கட்டிடங்களாவெனத் தெரிந்துக் கொள்ள விருப்பமுடையவர்கள் நமது கருணை தங்கிய அரசாங்கத்தாரால் வித்தையிலும் புத்தியிலும் மிகுத்த ஒவ்வோர் ஆங்கிலேயர்களை நியமித்து இத்தேசத்திலுள்ள பூர்வக் கட்டிடங்களைத் தோண்டியதின் விருத்தாந்தங்களை தெரிவிக்கும்படி விட்டிருந்ததில் அவர்கள் ஒவ்வொருவரும் தங்களாற் கூடியவரையில் அங்கங்கு புதைக்கப்பட்டிருந்த சிலாசாசனங்களையும் சிலைகளையும் கண்டெடுத்து அப்படங்களுடன் சரித்திரங்களையும் விவரித்து புத்தகங்களையும் அச்சிட்டிருக்கின்றார்கள். அவர்கள் யாவரையும் எழுமூர் மியூசியம் புத்தகசாலையிலும், அடையாறு தியாசபி புத்தகசாலையிலும் சென்று வாசித் துணர்ந்துக் கொள்ளலாம். ஆயினும் பொய்ப் புராணக் கட்டுக்கதைகளை புலம்பித்திரியும் போலிப் புலவர்களுக்கு பூர்வ சரித்திரங்களை விளக்குவது செவிடன் காதில் சங்கு ஊதுவதுபோலாம்.

- 3:41; மார்ச்23, 1910 -

45. கிறீஸ்து நமக்காகப் பாடுபட்டார்

வினா : நமது நேயராம் கிறீஸ்தவர்கள் கிறீஸ்துவானவர் நமக்காகப் பாடுபட்டார். நம்முடைய பாபங்கள் நீங்கிவிட்டனவென்று கூறுகின்றார்கள். அவர்கள் வாக்கை மறுத்து முன் செய்துள்ள பாவங்கள் நீங்கிவிட்டதா இனி செய்யும் பாவங்களும் நீங்கிவிடுமாவென்று வினவுங்கால் யாதொரு விடையுமின்றி திகைக்கின்றார்கள்.

வி. ஏபிராம், குண்டூர்

விடை : முன் செய்துள்ள பாவத்திற்காக ஒருவர் தோன்றி பாடுபட்டாரென்னும் உறுதி உள்ளத்தில் லயிக்குமாயின் பின்னும் பாவங்களுக்காய் மற்றொருவர் தோன்றி பாடுபடுவார் என்னும் தைரியத்தால் தினேதினே பாவங்களை அஞ்சாது செய்வதற்காகும்.

ஆதலின் அவரவர்கள் அறியாது செய்த பாவத்திற்காய் ஒருவர் வந்து பாடுபட்டார் என்பது வீண்மொழியேயாம்.

கிறீஸ்து நமக்காகப் பாடுபட்டார் என்னும் மொழியின் அந்தரார்த்தம் யாதெனில், எருசலேமிலுள்ள விவேகிகள் கிறீஸ்துவின் மகத்துவத்தைப் பற்றிப் பேசுங்கால், அவர் தான் கண் கண்ட ஞானத்தின் காட்சியை தன்மட்டிலும் அனுபவித்துக் கொள்ளாது கருணைகொண்டு நமக்கும் அந்த பேரானந்த ஞானத்தை ஊட்டி ரட்சிக்க முயன்றபடியால் விவேகமற்றோர்களாகிய சதிசேயரும், பரிசேயரும் அவரைத் துன்பப்படுத்திக் கொல்ல ஆரம்பித்தார்கள். அதன் செயல் கொண்டு கிறீஸ்து நமக்காகப் பாடுபட்டார் என்று கூறியுள்ளார்கள்.

தான் கண்டு களித்த ஞானத்தைத் தன் மட்டிலும் அனுபவித்துக் கொள்ளாது நமக்கும் போதிக்க ஆரம்பித்தபடியால் இப்பாடுவந்து நேர்ந்தது. ஆதலின் நமக்காகப் பாடுபட்டாரென்னு மொழி நாளது வரையில் நிறைவேறி வருகின்றது. ஒருவன் செய்த பாவத்தை மற்றொருவர் நீக்கமுடியாது அவனவன் செய்த பாவத்தை அவனவனே அனுபவித்துத்தீரல் வேண்டும். "அளந்ததே அளக்கப்படு" மென்பது நீதிமொழியாம்.

- 3:38; மார்ச் 2, 1910 -

46. புத்ததன்மமும் ஆரியமதமும் ஒன்றாமோ

ஒருக்காலும் ஆகாவாம் காரணமோவென்னில், புத்ததன்மமென்பது பாலிமொழி சமஸ்கிருதத்தில் சத்தியதருமமென்றும், திராவிடத்தில் மெய்யறமென்றும் கூறப்படும். இத்தியாதி சிரேஷ்ட நிலையைப் பெற்றுள்ள புத்ததன்மத்துடன் மிலேச்சமாம் ஆரிய மதத்தை ஒப்பிடுவது ஒருக்காலும் பொருந்தாதென்று கூறினோம்.

ஆரியரென்பதற்குப் பொருள் மிலேச்சர்களென்று திவாகரத்திலும், நிகண்டிலும் பொருட்கூறியுள்ளவற்றிற்குப் பகரமாய் சூளாமணி யென்னும் பூர்வ காவியத்தில் இம்மிலேச்சர்கள் வந்து குடியேறியுள்ள இடத்தையும், அவர்கள் குணாகுணக் குறிகளையும், நாணமற்றச் செயல்களையும் பரக்க வரைந்து வைத்துள்ளார்கள். அத்தகைய மிலேச்சர்களாம் ஆரியர்கட் செயலுடன் புத்ததன்மத்தை ஒன்றுபடுத்துவது பொருந்தா வீண்பொருத்தமேயாம்.

புத்ததன்மமாம் மெய்யறமானது உலகெங்கும் பரவி உலகிலுள்ள விவேகிகள் யாவராலும் கொண்டாடிவந்தபோதிலும் அந்த சத்தியதருமத்தின் காட்சியும் அநுபவமும் சித்தார்த்தி திருமகன் பிறந்து வளர்ந்த குருகுல வம்மிஷவரிசையோராம் சாக்கையர்களுக்கே தெள்ளற விளங்குமன்றி ஏனையோர்க்கு எட்டுவது கஷ்டமேயாம். பூர்வ புத்ததன்மமானது சாதிபேதமென்னும் சத்துருபேத மில்லாமல் வாழ்ந்து வந்ததுபோல் குருகுல வம்மிஷவரிசையோரும் சாதிபேதமென்னும் ஒற்றுமெய்க் கேடில்லாமல் களங்கமற்ற நெஞ்சினர்களாக வாழ்ந்து வருகின்றார்கள். அத்தகையக் களங்கமற்றோர்களுடன் களங்கமுள்ளோர் சேருவார்கள் என்பது ஓர் சுயகாரிய தந்திரமாயிருக்கலாம்.

தங்களுக்குத் தாங்களே தொழிற்பெயர்கள் யாவையும் சாதிப்பெயர்களாக ஏற்படுத்திக்கொண்டு தங்கள் சுயகாரியங்கள் சுகமாக நிறைவேறிவருமளவும் பொய்சாதிக் கட்டுக்கதைகளுக்கு மூட்டுக்கொடுப்பதற்காய் அந்தசாதி அப்படியிருக்கவேண்டும் இந்தசாதி இப்படி இருக்கவேண்டுமென்னும் கற்பனைகளை எழுதிவைத்துக்கொண்டு இளித்தவாயர்களை ஏமாற்றிவந்தார்கள். தற்கால பிரிட்டிஷ் துரைத்தன கல்வி விருத்தியால் மேற்சாதி யென்பான் யார், கீழ்ச்சாதி யென்பவன் யார், மேற்சாதி யென்பவனால் உலகத்திற்கு உண்டாகும் சுகமென்ன, கீழ்ச்சாதி என்பவனால் உலகத்திற்கு உண்டாகுந் சுகமென்ன, மேற்சாதி யென்போனுக்கு உண்டாகியுள்ள அடையாளமென்ன. கீழ்ச்சாதி யென்போனுக்குண்டாகும் அடையாள மென்னவென்று கேழ்க்க ஆரம்பித்துக் கொண்டதின்பேரில் ஆ, ஆ, நமது சாதிபேதக் கட்டுகளாகும் பொய் மூட்டைகள் அவிழ்ந்துவிடுவதற்குக் காலம்வந்துவிட்டது. இனி நாம் சும்மாவிராது தாழ்ந்த வகுப்போர் யாவரையும் நமது சாதிகளுடன் கலந்துக்கொள்ள வேண்டுமென்று கலந்து சிலநாட் சென்றபின் தங்கள் காரியங்கள் கைகூடிவிடுமாயின் "பழைய குருடி கதவைத் திறவடி" என்னும் பழமொழிக்கிணங்க பழையசாதிப்பிரிவே பிரிவு, பழையசாதி ஆசாரமே ஆசாரமெனத் தங்களை சிறப்பித்துக்கொண்டு ஏனையோரை அடக்கும் வழியைத் தேடினும் தேடுவர்.

குதிரை வகுப்புடன் நாயையும், பன்றி வகுப்புடன் முயலையும் சேர்க்கப் பொருந்துமோ, ஒருக்காலும் பொருந்தா. குதிரைவகுப்புடன் குதிரைகளைப் பொருந்த வைக்கலாம். ஒருகாலத்தில் தங்கள் சுயப்பிரயோசனத்திற்காய் தங்களைப் பெரிய சாதியென்று உயர்த்திக்கொண்டு தங்களுக்குள்

அடங்காதவர்களை சிறிய சாதியென்று பாழ்படுத்திவந்தார்கள். தற்காலம் தங்கள் சுயப்பிரயோசனம் மாறுபடுகிறபடியால் சகலசாதியோரையும் ஒன்று சேர்த்துக்கொள்ளப் பார்க்கின்றார்கள்.

ஆதலின் குருகுல வம்மிஷவரிசையோர்களாம் சாதிபேதமற்ற திராவிடர்களே, கேண்மின். தங்களுக்கு வேண்டிய சுயகாரியங்கள் கைகூடுமளவும் சாதிபேதம் உண்டென்று சாதிப்பதும் தங்கள் சுயகாரியங்கள் தவறுமாயின் சாதிபேதமில்லை யென்று சேர்த்துக்கொள்ளுவதுமாகியச் செயல்களைக்கொண்டே இச்சாதிபேதக் கட்டுக்கதைகள் யாவும் பட்டப்பகல் வேஷப்பொய்யென்று திட்டமாக அறிந்து சத்துருக்கள் போதனைக்கு இணங்காமலும் பிரிட்டிஷ் ராஜவிசுவாசத்தினின்று மெய்யறத்தைப் பின்பற்றுங்கள். புத்த தன்மத்தையும் ஆரியமதத்தையும் ஒன்றென்று எண்ணாதீர்கள். காலம் நேர்ந்துழில் இரண்டின் பேதாபேதங்களையும் விளக்குவாம்.

- 3:44; ஏப்ரல் 13, 1910 -

47. விதியும் மதியும்

வினா : விதி என்பது ஒன்று உண்டென்றும், அதன்படியே சகலமும் நடக்குமென்னும், மதியினால் ஒன்றும் ஆகாதென்றுஞ் சிலர் கூறுகின்றவை, "தானே தனக்குக்கரி" என்னும் நீதிவாக்கியத்திற்கு முறண்படுகின்றபடியால் அதனந்தரார்த்தம் அடியேனுக்கு விளங்கவில்லை ஆதலின் தமிழன் பத்திராதிபர் கிருபை கூர்ந்து விதி எனும் வாக்கியோர்ப்பவத்தையும் அதனந்தரார்த்தத்தையும் விளக்கி ஆட்கொள்ளும்படி வேண்டுகிறேன்.

வே.கி. மாணிக்கவேலு. செக்கண்டிறாபாத்

விடை ; விதி என்பதின் பொருள், கட்டளை என்று கூறப்படும். அக் கட்டளையாகிய விதியின் முறையை ஆதிபகவனாகிய புத்தபிரான் முதனூலென்னும் பிடகத்தை வகுத்து விதிவழாதொழுகும் ஒழுக்கத்தில் விடுத்திருக்கின்றார்.

விதியாங் கட்டளையோவென்னில்:-

"பாபஞ்செய்யாதிருங்கள்" பாவஞ் செய்வீரேல், பலவகைத் துன்பங்களுக்கு ஆளாவீர்கள்.

"நன்மெய்க் கடைபிடியுங்கள்" நன்மெய்க் கடைபிடியாது நிற்பீரேல், தின்மெயாகி அதி தீவினைக்குள்ளாவீர்கள்.

"இதயத்தை சுத்திசெய்யுங்கள்" இதயத்தை சுத்திசெய்யாது துற்களங்கை நிறப்புவீரேல், ஓயா துக்கம் பெருகி மாயா பிறவியிற் சுழன்று திரிவீர்களென்று வகுத்துள்ளார்.

அவ்விதிகளின் பயனையே என் தலைவிதி என்றும், முன்வினை என்றும், ஊழ்வினை என்றும், முன் ஜெநநபலனென்றும், பூர்வ தீவினை என்றும் வழங்கி வருகின்றார்கள்.

அதனந்தரார்த்தமோவென்னில் தனது பேராசையால் ஒருவனைக்கெடுத்து துன்பப்படுத்திய தீவினையானது இவனை விடாது துன்பப்படுத்துவதற்கு பின்தொடர்ந்தே நிற்குமென்று கூறியுள்ளக் கட்டளையாம் விதியை உணராது செய்த தீவினையின் பயனை அநுபவிக்குங்கால் என் தலைவிதி, நான் முன்செய்த தீவினை என்று கட்டளையாம் விதிக்கு மீரிநடந்த செயலை ஓதி துக்கின்றான்.

துக்கவிருத்தி அடையுங்கால், இது என்தலைவிதி, இது நான் முன்செய்த தீவினை என உணர்ந்துக் கொண்டவன் தலைவிதியாம், ஆதிகட்டளையை மீராமலும், தீவினைகளுக்கு உட்படாமலும் இருப்பானாயின், அதன் சுகவிருத்தியால், என் தலைவிதி என்னும் சொல்நீங்கி, பூர்வபுண்ணியமென்று கொண்டாடுவான்.

ஆதலின் ஆதிபகவனது கட்டளையாம் விதியை மீரி நடந்து துக்கத்தை அநுபவிப்பவன், என் தலைவிதி, முன்செய்த தீவினை பயனென்று புலம்பித் திரிகின்றான்.

தீயவினையைச் செய்தால் தீய துன்பத்தை அநுபவிப்பாயென்னும், கட்டளையாகிய விதியானதை அநுபவிக்குங்கால் கட்டளையை மீரியச் செயலென்று உணர்ந்தும் தீவினையைச் செய்து வருவானாயின் மேலுமேலுந் துக்கத்தை அநுபவிப்பான். விதியின்படி தீவினைகளை அகற்றி நல்வினையில் நடப்பானாயின் நித்தியசுகத்தை அநுபவிப்பான். இத்தகைய செயல்களைக் கொண்டே விதியின் பயனே பயனென்று வற்புறுத்திக் கூறியுள்ளார்கள்.

ஆதிவிதி, தலைவிதி என்னும் பூர்வவினையை உணராதார்க்கு அதனந்தரார்த்தம் விளங்கவே விளங்காவாம். காலங்கள் நேர்ந்தவிடத்து இதன் கருத்தை விரிவாகக் கூறுவாம்.

- 3:45; ஏப்ரல் 20, 1910 -

48. தேக ஊரல்

வினா : சில வைத்தியர்களும் வாதிகளும் "தன் தேகம் ஊரலற்றால் தாம்பரம் ஊரலறும்" எனக் கூறுகின்றார்கள். அதன் கருத்தை வினவுங்கால் தேகவூரல் அவர்களுக்கு விளங்கவில்லை.

ஏ. தருமலிங்கம், இரங்கூன்

விடை : "தன் தேகம் வூரலற்றால் தாம்பரம் வூரலறு" மென்னும் மொழியானது இரசவாதிகளுக்கே மொழிந்ததாகும். அதாவது அம்பரமென்னும் பொன்னானது தாய் அம்பரமாம் செம்பிலமைந்துள்ளதுபோல் தேய்வகமாம் தெய்வநிலை தேகமென விளங்கநிற்றலால் தேகத்துள்ள இராகத் துவேஷ மோகமென்னும் ஊரலற்ற போது தெய்வமென்னும் தேஜசும், சுயம்பிரகாசமுந் தோன்றும்.

தேகத்துள்ள இராகத் துவேஷ மோகமென்னும் திரிவூரலை அகற்றும் சாதனமுடையோர் செவிகளில் தாம்பரக் குண்டலங்களை அணிந்திருப்பினும் தேக வூரல் அறுந்துக்கொண்டேவருங்கால் செவியில் அணிந்துள்ள செம்பினூரலும் தாய் அம்பரமாம் பொன் பிரகாசமுண்டாம். அதுகொண்டே இரசவாதம் செய்து கெடும் வாதிகளைக் கண்டிடப்பான்வேண்டி, "செம்பதுகளிம்பதற்றால் செம்பொன்னா" மென்னு முதுமொழிக்கிணங்க தேகவூரலை அறுக்கும் பஞ்சசீலத்தில் ஒழுகுவோருக்கு திரிவூரலற்று தேவநிலை மாறுதலும், செவியிலிட்ட செம்பு அம்பரமாய் தேறுதலும் அநுபவக் காட்சியாதலின் வீணாசைகொண்டு வாதமூதாதீரென வேண திருட்டாந்த தாட்டாந்தங்களை விளக்கியுள்ளார்கள்.

- 3:46; ஏப்ரல் 27, 1910 -

49. அறன் செயல் விரும்பு

வினா: நமது திருவள்ளுவநாயனார் இயற்றியுள்ளத் திரிக்குறளில், அறன்வலியுறுத்த லென்னு மொழியின் அந்தரார்த்தம் அடியேனுக்கு விளங்காதபடியால் அதன் பொருள் காட்சிக்கும், அநுபவத்திற்கும் பொருந்த விளக்கி ஆட்கொள்ளும்படி வேண்டுகிறேன்.

க. சரவண பெருமாள், காஞ்சி

விடை : தாம் வினவிய சங்கை சாம்புனதமாதலின் இழுத்தவர்க்கெல்லாம் கம்பியாகவும், அடித்தவர்க்கெல்லாம் தகடாகவும் அகன்று நீண்டு இடங் கொடுக்கும் மொழியாதலின், எச்சமயத்தோருந் தங்கள் தங்கள் சமயத்திற்குத் தக்கவாறு பொருள்படுத்திக் கொள்ளுகின்றார்கள். அச்சமயங்களும் பூர்வ தன்மத்தினின்றே தோன்றியதாதலின் பொருளும் பொருந்துவதாகவே விளங்கும்.

அவ்வகை விளங்கினும் அந்தரார்த்தப்பொருள் அதுவாகாவாம்.

அதாவது,"அற" மெனு மொழியை இல்லறமென்றும், துறவறமென்றும் இருவகையாகக் கூறப்படும்.

வீரசோழியம் - மனையறச்செயல்

கொடுத்தலும் அளித்தலுங் கோடலும் இன்மெயும்
ஒழுக்கத்தொடுபுணர்தலும் புணர்ந்தோர் பேணலும்
வழுக்கில் பிறவு மனையற வகையே.

துறவறச்செயல்

துறவும் அடக்கமும் தூய்மெயுந் தவமும்
மறவினையோம்பலு மறத்தினைமறுத்தலும்
மனையினீங்கிய முனைவர்த மறமே.

இவ்வகைப் பிறிவால் ஒருவனைநோக்கி அறஞ்செய்ய விரும்பென்னில் அவன் துறவறத்தைச் செய்ய விரும்புவதா, இல்லறத்தைச் செய்யவிரும்புவதா இரண்டையுஞ் செய்யவேண்டுமென்னில் நட்டாற்றில் விட்டவனைப்போலும் இரண்டு எஜமானனிடத்தில் ஒரு ஊழியன்படும்பாடுபோலும் முடியும்.

துறவறத்தையும், இல்லறத்தையும் ஒருவனே செய்யலாமென்று கூறுவதாயின் குடும்பிக்கு மாறுதலாக சங்கங்களையும், மடங்களையும் ஏற்படுத்தியுள்ள அநுபவமுங் காட்சியும் இராவாம்.

இல்லறத்தை சரிவர நடத்தியவனே துறவறத்திற்கு உரியவனென சங்கத்திற் சேர்ப்பது அநுபவமாயிருக்க ஈரறத்தையும் ஏககாலத்தில் ஒருவன் செய்வதியல்புக்கு மலைவாதலின் விவேகமிகுத்தோர் திருமொழி ஒருக்காலும் மலைவுறாதாம். "அறன்செயல் விரும்" பென்னும் மலைவில்லா மொழியையே ஆதாரமாகக் கொண்டு அறன்வலி யுறுத்தலெனக் கூறியுள்ளார்.

அதற்குப் பகரமாய்த் திருத்தக்கத்தேவர் தானியற்றியுள்ள சீவகசிந்தாமணியில் "முந்து அறன்மொழிந்த பொருள் முற்று" எனக் கூறியுள்ளார். இதற்கு ஆதாரமாகப் புத்தமித்திரனார் தான் இயற்றியுள்ள வீரசோழியத்தில் "வாடாத போதிநெறி நீழன்மேய வரதன் பயந்த அறநூ" லென்றும் மற்றும் யாப்பருங்கலக்காரிகையுள் "மனையற முந்துறவறமும் மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும் வினையறுக்கும் வகைதெரிந்து வீடொடு கட்டிவை யுரைத்த" போதிவேந்தனும் ஆதிநாதனுமாகிய அறன் செயலை விரும்புமென்னும் ஆண்பால் விகுதி கொண்டே நாயனாருந் தனது கடவுள் வாழ்த்தலில், "பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீரொழுக்கம் நெறி நின்றார் நீடுவாழ்வா" ரென்னும் அறன் செயலையே வற்புறுத்திக் கூறி புத்தேளான் செயலையும் வல்லபத்தையும் உறுத்திக் கூறுவான்வேண்டி அறன்வலியுறுத்த லென்னும் அதிகாரத்தையும் வகுத்துள்ளார்.

உலகமக்கள் ஈடேற்றத்தைக் கருதி ஈரறமோதிய ஒப்பிலா அப்பனை அறக்கடவுள் என்றும், அறவாழியானென்றும், அறப்பளீசனென்றும் அறனென்றும் வழங்கிவந்தது கொண்டு அறன் கூறியுள்ள முதநூலாம் அறநூலுக்கு வழிநூலும், சார்புநூலுங் கூறியவர்கள் அறனை மறவேலென்றும், அறன்செயல் விரும்பென்றும், அவரது நெறியில் நில்லுமென்றும், அவர் பற்றியபற்றை பற்றுமென்றுங் கூறியிருக்கின்றார்கள்.

காரணமோ வென்னில் மெய்ப்பாட்டியல் சூத்திரம், "தீவினையைவெல்லும் அறவாழி தெய்வம் அஞ்ச" லென்றும்

அவர் பிறந்ததுமுதல் பரிநிருவாணமுற்ற வரையில் திரிகரணமாம் மனோசுத்தம், வாக்கு சுத்தம, தேகசுத்தமாஞ் செயலையுடையது கண்டு அறன் செயல் விரும்பென்று உறுத்திக் கூறியுள்ளார்கள்.

வீரசோழியம்

எறும்புகடை யானைமுத லெண்ணிறந்த வென்றுரைக்கப்
பிறந்திருந்த யோனிதொரும் பிரியாது சூழ்யோகி
யெவ்வுடம்பி லெவ்வுயிர்க்கும் யாதொன்றா லிடரெய்தி
லவ்வுடம்பி லுயிர்க்குயிரா யருள்பொழியுந் திருவுள்ளம்.
அறங்கூறு முலகனைத்துங் குளிர்வளர்க்கு மழைமுழக்கின்
திறங்கூற வரசதிருஞ் செழுங்கமல நனினாண
வொருமெய்க்க ணீரென்பா னுரைவிரிப்ப வுணர்பொருளா
லருமெய்க் கண்மலைவின்றி யடைந்தது நின்றிருவார்த்தை.
இருட்பார வினைநீக்கி யெவ்வுயிர்க்குங் காவலென
தருட்பாரந்தனி சுமந்த வன்றுமுத லின்றளவு
மதுவொன்று மலரடிக்கீழ் வந்தடைந்தோர் யாவர்க்கும்
பொதுவன்றி நினக்குரித்தோ புண்ணியநின் திருமேனி.

– 3:47; மே 4, 1910 –

50. சகல மதாசாரங்களையும் கிரகிக்கும் மதம் ஒன்றுண்டாமே

1910 ஜூன் மாதம் 6 ஆம் தேதி வெளிவந்த சுதேசமித்திரன் பத்திரிகை 4 - ம் பக்கம் முப்பத்தி ஐந்தாவது வரியில் "ஸனாதன தர்மத்தின் சிறப்பு" எனும் மகுடமிட்டு கஸ்தூரி ரங்கன், க்ஷ.ஹ.டு.கூ. அவர்கள் ஓர்கடிதம் எழுதியிருக்கின்றார். அதன் கருத்தோவென்னில் அவரது மதமானது சகல மதாசாரங்களையும் கிரகிக்கக் கூடிய மதமென்றும் எவ்வகை என்னில் வாலியென்பவன் தனக்கு எதிரியாகத் தோன்றுகிறவன் பலத்தைக் கிரகித்துக் கொள்ளுவதுபோலெனும் தாட்டாந்தமிட்டு அவ்வகைத் தங்கள் மதக்கிரகிப்பினுள் புத்தமதந் தெரியாமல் போய்விட்டதென்றும் கிறீஸ்துமதந் தலையெடுக்காமலாய்விட்டதென்றும் வரைந்துள்ளவற்றைக் கண்டு மிக்க வியப்புற்றோம். அதாவது வாலி என்பவனையோ இராட்சசனென்று கூறுகின்றார்கள். இராமரென்பவரையோ இவர்கள் தேவரென்று கொண்டாடு கின்றார்கள். இந்த இராமருக்கும் வாலிக்கும் யுத்தம் நடந்தபோது தன்பலத்தை வாலிகிரகித்துக் கொள்ளுவான் என்று பயந்து ஒளிந்துகொண்டு அம்பெய்து வாலியைக் கொன்றதாகக் கூறுகின்றார்கள். நமது டு.கூ. அவர்களின் தேவராகிய இராமரே வாலியின் சக்த்தியைக் கிரகிப்பதற்கு சக்தியற்று ஒளிந்து கொன்றவராயிருக்க இவரது மதசக்த்தி எம்மதசக்த்தியை எவ்வகையால் எக்காலத்தில் கிரகித்ததென்று திருஷ்டாந்த தாட்டாந்தங்களுடன் வரைவரேல் டு.கூ. அவர்கள் சிறந்த விசாரிணைப் புருஷரேயாவர்.

தனது தேவனாலாகாத காரியம் மதத்தாலாயதென்பது விந்தையேயாம். இவரது மதத்தின் சிறப்பையும் அதிற் கூறுகின்றார். அதாவது கள்ளைக் குடிக்க பிரியமுடையவன் அன்னோர் தேவனுக்கு ஆராதனைச்செய்துக் குடிக்கலாமென்றும் திருடவேண்டியவன் தனது சொத்தைக் கோவில்களுக்கு சேர்த்துவிடலாம் என்றும், மாமிஷம் புசிக்கப் பிரியமுடையவன் யாகங்களிற் கொன்று தின்னலாமென்றும் வரைந்திருக்கின்றார்.

அன்னோர் மதக்கிரகிப்பின் சிறப்பை ஆராயுங்கால் கள் குடிக்கக் கூடாதென்னும் ஓர் மதத்தினர்முன் கள்குடிக்கவேண்டியவர்கள் ஓர்வகையால் குடிக்கலாம் என்பது சிறப்புற்றதுபோலும், திருடவேண்டியவர்கள் ஓர்வகைக்குத் திருடலாமென்றும் கூறும் மதம் சிறப்புற்றதுபோலும், சீவர்களை வதைக்கவேண்டாம் மாமிஷம் புசிக்கவேண்டாமென்னும் மதத்தினர் முன்பு கொலைச்செய்தாலும் மாமிஷம் புசித்தாலும் ஓர்வகையாகக் கொல்லலாம், ஓர்வகையாகப் புசிக்கலாமென்னும் மதம் சிறப்புற்றதுபோலும்.

அந்தோ இத்தகையப் பஞ்சபாதகங்களை ஓர் வகையாகச் செய்யலாமென்னும் மதத்தினர்முன்பு பஞ்சபாதகங்களை அகற்ற வேண்டுமென்னும் புத்த மதம் இருந்தவிடந் தெரியாமற்போனது ஓர் இழிவன்று. காரணம் பன்றியைக்கண்டு யானை ஒதுங்குவது இழிவாகாவாம். யானையைக்கண்டு பன்றி ஒதுங்குமாயின் பயத்தினால் அது ஒதுங்கிய விழிவெனத்தகும். இத்தியாதி சீலச்செயல்களையும் அசீலச்செயல்களையும் நமதன்பர் L.T. அவர்கள் உணராது தங்கள் மனம்போனவாறு தம்மதத்தைப் புகழ்ந்தும் எதிரிகளின் மதத்தை இகழ்ந்துங் கூறுவது பிசகேயாம். தம்மதத்தைப் புகழ்ந்தும் எதிரிகளின் மதத்தை இகழ்ந்துங்கூறுவது மதக்கடை வியபாரிகளின் இனிய இயல்பாதலின் கலாசாலை உபாத்தியாயராகும் L.T. அவர்கள் இத்தகையக் கூற்றில் இனிப் பிரவேசிக்க மாட்டாரென்று நம்புகிறோம்.

- 4:1; சூன் 15, 1910 -

51. மொட்டையும் மஞ்சளும்

வினா : இந்துக்களில் அநேகர் (ஏழுமலையான் கோவிலுள் திருப்பதியில் போய் மொட்டை அடித்துக்கொள்ளுகிறதும் மஞ்சள் ஆடை அணிந்துக் கொள்ளுகிறார்களே தமது பௌத்த மதத்திலும் அம்மாதரி மொட்டை

அடித்துக் கொள்ளுகிறதும் மஞ்சள் ஆடைத் தரித்துக் கொள்ளுகிற வழக்கமுண்டா?

தன்மப்பிரியன். பம்பாய்.

விடை : அதாவது தற்காலந்திருப்பதி என்றும் வெங்கடமென்றும் வழங்கும் படியான பீடம் இந்திரவியாரம் என்னும் பௌத்தர்கள் மடமேயாகும். அதன் வாயிற்படியில் நுழையுங் குகையுள்ளிருப்பது புத்தரது தன்மச்சக் கிரமென்னப்படும். வெங்கடவுச்சியில் நின்று நீதிபோதிப்பது போலிருக்குஞ் சிலைக்கு அவலோகீஸ்வரர் என்று பெயர் அதுவும் புத்தருக்குரிய சகஸ்திர நாமங்களில் ஒன்றாகும்.

வீரசோழியம் - ஆயுங்குணத்தவலோகிதன்

பக்கலகத்தியன்கேட், டேயும்புவனிக்கியம்பிய தண்டமிழீங்குரைக்க,
நீயுமுளையோவெனிற் கருடன் சென்ற நீள்விசும்பி,
லீயும் பறக்கு மிதற்கென் கொலோசொல்லு மேந்திழையே,

உலகயிதமாம் இன்பத்தை வெறுத்த அனுபவங்கள் கண்டு அவலோகித ரென்னும் பெயருடன் களங்கமற்ற சுப்பிர தேகியாய் விளங்கியது கண்டு வெங்கடயீச னென்றுங் கொண்டாடிவந்தார்கள்.

சூளாமணி

என்று தங்கதையோடிருநீண்முகிற்,
குன்று சூழ்ந்தகுமுமலர்க்கான கஞ்,
சென்றோர் வேங்கடங் சேர்ந்தனருச்சி மேனின்று
வெய்யவடை நிலங்காய்த்தினான்.

இத்தகைய வெங்கடயீசனென்றும் அவலோகித யீசனென்றும் பெயர் பெற்று, குடகம் வேங்கடமென்னும் தமிழ் நாட்டெல்லைக்கு மத்தியமாக விளங்கிய சிறப்புயாதெனில் புத்தபிரான் எண்ணருஞ்சக்கிரவாளமெங்கும் உலாவிவந்த காலத்தில் அம்மலையடிவாரத்தில் ஓர்லோக ஊற்று அதாவது ஜனிக்கும் நீர்சநிநீரிருந்ததை தனது சங்கத்தோருக்குக் காண்பித்து தேகத்திலுள்ள உரோமங்கள் யாவற்றையும் சிறைத்து அந்நீரில் முழுகினால் சிற்சில ரோகங்கள் நீங்குமென்று போதித்தார் அதனை உணர்ந்த சங்கத்தோர்களும் அத்தேசவாசிகளும் அந்நீரின் சுகானுபவங் கண்டு அடிவாரத்திலும் மலையின் உச்சியிலும் புத்தமடங்களைக்கட்டி சங்கத்தோர் ஞானவிசாரிணையில் நிலைத்திருந்ததுமன்றி, கோவென்னும் அரசன் துறவு பூண்டு வித்தையின் பெருமையால் காண்பித்தலோக ஊற்றைநாடி வரும் உபாசகர்களுக்கு சமண முனிவர்களைப்போல் சிரோமயிர் யாவுங் கழித்து சநிநீரில் முழுகவைத்து மஞ்சளாடை அணிந்து அரசனின் விந்தைவிளங்க கோவிந்தம் கோவிந்தமென்றும் ஆனந்தக் கூச்சலுடன் அவரவர்கள் இல்லஞ்சேருவது வழக்கமாயிருந்தது அன்றுமுதல் தீர்த்தனென்னும் ஓர் பெயரும் அவருக்குண்டாயிற்று.

சீவகசிந்தாமணி

தீராவினை தீர்க்குந் தீர்த்தந் தெரிந்துய்த்து / வாராக்கதியுரைத்தவாமன்றான்யாரே
வாராக்கதியுரைத்த வாமென்மவர்பதிந்த / கர்ரார்ப்பூம்பிண்டி கடவுணீயன்றே.

அத்தகைய தீர்த்தத்தின் சிறப்பினால் நான்கு எல்லையிலுள்ள மக்களும் அவ்விடஞ்சென்று சநிநீராடி அடிவாரத்துள்ள தன்மச்சக்கிர வியாரங்கடந்து உச்சிமலையிலுள்ள வெங்கடவியாரஞ்சென்று தன்மம் வினவிபஞ்ச சீலம் பெற்று ஆனந்த கோவிந்தநிலையில் இருக்குங்கால் அசத்தியர் குடியேறி, சத்திய சங்கத்தோர்களுக்கு அனந்தயிடுக்கங்கள் செய்து வந்ததுமன்றி மகமதிய கூட்டத் தோருக்கும் இவர்களை சத்துருக்களாக்கி வேங்கடத்திற்றங்கியிருந்த சங்கத்தோர்களை பல இடங்களிலும் விலகிப் போகச்செய்து விட்டார்கள்.

அக்காலம் வடதேசத்தினின்று பிச்சை இரந்தேதின்ன வேண்டுமென்னும் வைராக்கிகளின் கூட்டத்தோரில் சிலர் அவ்விடம் வந்து தங்கிவருந் தட்சணைகளை பெற்று சுகத்தில் உழ்க்கார்ந்து கொண்டபோதிலும் அவ்விடத்தியமடாதிபதிகளைப் பூர்வத்தில் மாகாயிந்திரர்களென்றே வழங்கிவந்தது இயல்பாம். அம்மகா இந்திரரென்னும் மொழிமறுவியே

தற்காலமுள்ள வைராக்கிகளைமாயிந்துமகந்துவென வழங்கிவருகின்றார்கள். வெங்கடவியாரத்தை நூதனமாக பற்றிக்கொண்ட பைராக்கிகள் அவ்விடமுள்ள சிலைகளுக்கு சந்தனப்பூச்சு நெற்றியிலிட்டு பஜேகோவிந்தம் பகவான் பஜேகோவிந்தமென சிந்தித்து வந்து இராமானுஜர் காலத்திற்குப்பின்பு அவ்விடமுள்ள சிலைகளுக்கு (நாமமென்னும்) பொருளற்றச் சின்னங்கள் இட்டு வைஷ்ணவர் கோவிலென்று சொல்லும்படியாய் ஆரம்பித்துக் கொண்டார்கள். அத்தகைய வைணவர்களால் ஆழ்வார் தீர்த்தமென்னும் அசப்பிய மொழி பரவியவுடன் யதார்த்த சநிநீர் மறைந்து ரோகம் நீங்கும் அற்புதங்களும் பரந்துவிட்டது.

அதனுடன் பூர்வ சமணமுனிவர்களைப்போல் மொட்டை அடித்து மஞ்சளாடை அணிந்து நாளதுவரையில் நடத்தி வருகின்றார்கள் அஃது பௌத்த மடமே என்பதற்கு இன்னும் அனந்த ஆதாரங்களுமுண்டு. பௌத்த மடம் அல்லவென்று எதிர் தோன்றுவாராயின், அதையும் நிரூபிக்கக் கார்த்திருக்கின்றோம்.

- 4:8; ஆகஸ்டு 3, 1910 -

52. உபநயனம்

வினா : உபநயனம், உபநயனமென்று வழங்குகின்றார்களே அதன் பொருளும் செயலும் விளங்கவில்லை.

வே. வடிவேலு, வேலூர்.

விடை : உபநயனமென்னு மொழி வடமொழியாகும். அதன் பொருள் உதவி விழியென்று கூறப்படும். ஊனக்கண்ணென்றும் ஞானக்கண்ணென்றும் வழங்கும் இருவகைப் பெயருள் ஞானக்கண்ணிற்கே உபநயனமென்று கூறியுள்ளார்கள்.

பௌத்த மடங்களில் உள்ள சமணமுநிவர்களுக்கு அறஹத்துக்களாம் தென்புலத்தோர் ஞானக்கண் உணர்த்திய அடையாளத்திற்காய் மதாணிப் பூணூலென்னும் முப்பிரி நூலணிந்து வருவது வழக்கமாயிருந்தது. அந்நூலணையும் வழக்கமும் யாதுக்கென்னில் உபநயன மென்னும் ஞானக்கண் பெற்ற மாணாக்கன் வேறுதொழில் யாதுமின்றி தன்னைப்பார்க்கும் சாதனமே தொழிலாகக் கொண்டவனைக் கண்ட உபாசகர்கள் வேண உதவிபுரிந்து ஞானமகனை ஈடேற்று வதற்கேயாம்.

இத்தகைய ஞானக்கண் பெற்ற மக்களை ஆதரிக்கும் புருஷர்களை ஞான தந்தைகளென்றும் இஸ்திரீகளை ஞானத்தாயார்களென்றுங் கூறப்படும்.

ஞானநிலை யுசாவல்

ஊனக்கண் அன்றென் றுளக்கண்ணளித்தபின்
ஞான வனுபவ முறையென் றரைத்தது.

கைவல்யம்

அசத்திலெம்மட்டுண்டம்மட்டும் பராமுகமாகினாய்
நிசத்தி லுளவிழி பார்வை யிப்படி நிறந்தர பழக்கத்தால்
வசத்திலுன்மனம் நின்று சின்மாத்திர வடிவமாகிடின்மைந்தா
கசத்த தேசுத்திலிருக்கினும் ஆனந்தக்கடல்வடி வாவாயே.

பின்கலை நிகண்டு

காப்புக்கு முன்னெடுக்குங் கடவுடான் மாலேயாகும்
பூப்புனை மலரின் செல்வி புனைபவ னாதலானும்
காப்பவனாதலானுங் கதிர்முடி கடகத்தோடு
வாய்ப்பதா மதாணி பூனூல் வரிசையிற் புனைதலானும்.

இத்தகையாய் பௌத்த வியாரங்களிலுள்ள சமணமுனிவர்களின் பரிபக்குவம் அறிந்து ஞான விழியாம் உபநயனம் உணர்த்தியபின்னர் உலகோர் யாவரும் அவனைக் கண்டவுடன் அவனுக்கு வேண்டிய உதவிபுரிந்து யாதொரு கவலையுமின்றி ஞானவிழிப் பார்வையில் நிலைத்துப் பற்றறுப்பதற்காக அவனை உபநயனம் பெற்றோனென்றறிந்து உதவுவதற்கு மதாணி என்னும் பூனூல் அணிந்து வந்தார்கள்.

அதாவது தற்காலம் B.A. பட்டம் பெற்றவர்களென்று அறிந்துக் கொள்ளுவதற்கு ஓர் அறிகுறியாக நீண்ட கருப்பு செட்டை ஒன்றளித்திருப்பது போல் சமணருக்குள் உபநயனமாம் உள்விழிபெற்று புலன் தென்பட்ட தென்புலத்தார் என்றறிந்துக் கொள்ளுவதற்கோர் அறிகுறியாக மதாணி என்னும் பூணு நூலை மார்பில் அணிந்து வந்தார்கள்.

தென்புலத்தோர் என்று உலகோர் அறிந்துக் கொள்ளுவதுடன் அந்நூலை அணிந்துக்கொண்டவனும் முதநூல், உழிநூல், சார்புநூல் மூன்றினையும் ஓதுதற்கும், ஓதிவைப்பதற்கும் மாறாக்கியாபகம் பதிந்து நிற்பதற்காய் முப்பிரிநூலாகவும் அணிந்திருந்தார்கள்.

அருங்கலைச்செப்பு - மதாணி பூணூல் பத்து

ஒப்புடனோதி யுணர்ந்தா ருளநிறைந்தார்முப்பிரிநூலின் முதல்
இதாதி புலத்தை யுணர்ந்தா ரிறையறிந்தார் மதானு நூலின் மணம்
துப்பறு முந்நூல் வழிநூற் சார்பும் முப்புரிநூலின் முதல்.

மணிமேகலை

புரிநூன் மார்பிற் றிரிபுரி வார்சடை மரவுரியாடையன் விருச்சிக னென்போன்

இதுவே உபநயனமென்பதின் பொருளும் செயலுமாகும். தற்காலம் இத்தேசத்தில் உபநயனமளிக்கும் ஆசிரியனுமில்லை, உபநயனம் பெறும் மாணாக்கர் களுமில்லை. ஆதலின் யதார்த்த பிராமணனுமில்லை என்பதாயிற்று.

- 4:9; ஆகஸ்டு 10, 1910 -

53. கர்மத்தால் உண்டாம் பிறவி

இந்திரதேயத்தோர்களாகும் பௌத்தர்கள் பிறவியால் உண்டாந் துக்கங்களையும், பிறவியால் உண்டாம் சுகங்களையும் செவ்வனே விளக்கிப் பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடென்னும் நான்கு வாய்மெகளை வகுத்துவைத்திருக்கின்றார்கள்.

ஓர் மனிதன் பிறக்கும்போதே கூன், குருடு, சப்பாணி, பேடுடன் பிறப்பதுபெருந் துக்கம். அத்தகைய கூன், குருடு, சப்பாணி, பேடின்றி சுகதேகியாய் பிறப்பது சுகம். ஓர் மனிதன் பிறந்ததுமுதல் தனச்செல்வம், தானியச்செல்வமற்று அவன் எண்ணுந்தொழில் யாதுங் கைகூடாது பிச்சை இரந்துண்பது துக்கம், பிறக்கும் போதே தனச்செல்வம், தானியச் செல்வமுடையவனாய் வளர்ந்து முன்போன்ற பிச்சையிரப்போர்க்கு ஈய்ந்து புசிப்பின் கவலையற்றிருப்பது சுகம். இத்தகைய சுகத்தையுந் துக்கத்தையும் அநுபவிக்குங் காட்சியாக விளங்குகின்றது.

இத்தகைய அநுபவங்களைக் கண்காட்சியாகக் கண்டவர்களும் அதன் அனுபவங்களை உணர்ந்தவர்களும் இம்மெயில் புண்ணிய விருத்திச் செய்தவர்கள் மறுமெயில் சுகத்தை அநுபவிப்பார்களென்றும், இம்மெயில் பாவவிருத்திச் செய்தவர்கள் மறுமெயில் துக்கத்தை அநுபவிப்பார்களென்றுங் கூறி பாவச்செயல் களையும், புண்ணியச் செயல்களையும் விளக்கி சீவகாருண்ய வாழ்க்கையில் வாழும்படி செய்திருக்கின்றார்கள்.

இத்தகையப் பிறவியால் உண்டாந் துக்கங்களை செயித்து பிறவியற்ற சுகநிலையை தன்னிற்றானே கண்டடைந்த ததாகதர்தான்பெற்ற நித்தியசுகத்தை உலகத்தில் தோன்றும் சருவசீவர்களும் பெற்று பிறவியின் துக்கத்தை ஒழிப்பதற்காக பாவத்தைப் போக்கும் வழிகளையும், நன்மெய்க் கடைபிடிக்கும் வழிகளையும் மனமாசு கழுவும் வழிகளையும் விளக்கி சுருக்கத்தில் ஆசையாம் பற்றுக்கள் இருக்கும் வரையில் மாறா பிறவியின் துக்கமும் ஆசையாம் பற்றுக்களற்றவிடத்து பிறவியற்ற சுகமும் உண்டாமென்று தனதனுபவக் காட்சியையும் விளக்கியுள்ளார். இதையே கன்மத்திற்கேற்ற ஜென்மமென்றும் விட்டகுறை தொட்டகுறையென்றும் பிறவியின்செயலைக் கூறுவதுடன் ஆதியில் இப்பிறவியைஜெயித்து நித்திய சுகமடைவதற்காகப்பகவன் போதித் துள்ள நீதிமொழிகளாம் கட்டளைகளை மீறி நடந்தவர்கள் துக்கச்செயல் அதிகரிக்கும்போது என் தலைவிதி என் தலைவிதியென்று முன் நீதிபோதத்தை வழுவி நடந்தவற்றால் உண்டாகியக் கேட்டை விளக்கிவருதலும் இயல்பாம்.

கன்மம் என்பதின் பொருள் செய்கை என்னப்படும். நற்கன்மத்தை நற்செய்கையென்றும், துற்கன்மத்தை துற்செய்கையென்றும், நல்வினைத் தீவினையென்றுங்கூறுவர். நல்வினையாம் நற்செய்கையின் பெருக்கத்தால் ஆசையென்னும் பற்றுக்களற்று பிறவியின் துக்கமொழிந்து பரிநிருவாணம் பெறுவர். தீவினையாம் தீயச்செய்கையின் பெருக்கத்தால் ஆசை யென்னும் பற்றுக்களதிகரித்து மாளாப்பிறவியிற் சுழன்று துக்கவிருத்தியால் தோன்றி தோன்றி மறைவர். இத்தகைய மறுப்பிறவியாம் தோற்றத்தில் தோன்றிய ஒருவன் தனது வளர்ச்சியில் கல்வியின் அவாவால் மேலுமேலும் வாசிப்பின் பற்றில் இருப்பானாயின் மறுமெயில் சிறுவயதிலேயே உயர்தரக் கல்வியில் தேறுவான். அதுபோல் மற்றொருவன் தனது வளர்ச்சியில் கைத்தொழில் விருத்தியில் மேலான வித்தைகளையுக்தியாலளாவி வித்தையின்விருத்திப்பற்றில் மடிந்தவன் மறுமெயில் சிறுவயதிலேயே சகலரும் ஆட்சரியப்படத்தக்க அரிய வித்தைகளைச் செய்வான். மற்றொருவன் தனது வளர்ச்சியில் குடி விபச்சார முதலிய துற்கிருத்தியப்பற்றில் அதிகரித்து மடிவானாயின் மறுமெயில் சிறுவயதிலேயே விபச்சாரம் குடி முதலிய துற்பழக்கம் பெருகி கேடுண்டழிவான். மற்றொருவன் தனது வளர்ச்சியில் கொள்ளல் கொடுத்தலென்னும் வியாபாரவிஷய விருத்திபற்றில் அதிகரித்து மடிந்து மறுமெயில் சகலரும் மெச்ச சிறுவயதிலேயே வியாபாரவிருத்தியிற் சீவிப்பான். மற்றொருவன் தனது வளர்ச்சியில் களவு, பொய், வஞ்சின முதலியச் செயல்விருத்தியிலிருந்து மடிந்து மறுமெய் அடைந்த சிறுவயதிலேயே களவு, பொய், வஞ்சகம் முதலியச் செயல்களில் தீவிரமுடையவனாகிக் காராக்கிரகம் பெறும் கீழ்மகனெனத் திரிவான். மற்றொருவன் தனது வளர்ச்சியில் ஒரு கற்சிலையையும் ஒரு உலோகச்சிலையையும் வைத்து அதின்பற்றே மிகுதியுடைவனாகி அதையே தெய்வமென்றுதுதித்து அஞ்ஞானத்தைப் பெருக்கி மடிவானாயின் மறுமெயில் சிறு வயதிலேயே மேலுமேலும்கற்சிலைகளையும், உலோகச்சிலைகளையும் வைத்துத் தன்வயிற்றை போஷிப்பதற்கே விதியின்றி அஞ்ஞானத்திற் பெருகி அல்லலடைந்து திரிவான். மற்றொருவன் தனது வளர்ச்சியில் அறிவை வளர்க்குங் கலைநூற்களை வாசிக்கவும் பெரியோர்களை சேவிக்கவும் அவர்களை அடுத்து சுபவிசாரஞ்செய்யவும் அவர்களை அடுத்து நன்மார்க்கத்தில் அடக்கவுமாகிய நற்கன்ம விருத்தியினின்று மடிந்து மறுமெ யடைவானாயின் சிறுவயதிலே சுப இச்சை பெருகி சாந்தம், அன்பு, யீகை யென்னும் பற்றற்றான் பற்றில் நிலைத்து இராகத், துவேஷ, மோகமென்னும் பற்றினையறுத்து சிறுவயதிலேயே வாலறிங்னென சகலருந் தொழூஉம் மேன்மகனென விளங்குவான். இதுவே தன்னுயிரைப்போல் மன்னுயிர்களைக் கார்க்கும் தண்மெயுடையவர்களாம் பௌத்த பிராமணர்களின் போதனையும் கன்மத்தால் தோன்றும் பிறவியின் தோற்றங்களும் நிகழ்ச்சிகளுமாகும்.

இத்தகையக் கன்மபாகத் தோற்றங்களையும் மறைவுகளையும் கண்டுணராத நூதனமாய சாதிபேதமுள்ளவர்களும், சமயபேதமுள்ளவர்களும் இப்பிறவியின் வகுப்பை எவ்வகையாக வகுத்து வைத்துக்கொண்டிருக்கின்றார் களென்னில், கன்மமென்னும் ஒன்றுண்டென ஒப்புக்கொண்டு உருவமில்லா பிரம்மா முகத்தில் பிராமணனும், புஜத்தில் க்ஷத்திரியனும், துடையில் வைசியனும், பாதத்தில் சூத்திரனும் பிறந்தார்களென்றும் வரைந்துவைத்துள்ளார் கள். இத்தகையக் கன்மத் தோற்றமானதுபிர்ம்ம கன்ம தோற்றமா, அன்றேல் மேல்தோற்றியுள்ள நால்வர் கன்மதோற்றமா. பிர்ம்ம கன்மதோற்றமாயின் சீவராசிகளின் கன்மத்தாலாய தோற்றமில்லையென்பது துணிபாம். சீவராசிகளாம் மேற்கூறிய நால்வர்களின் தோற்றத்திற்கு அவரவர்களின் கன்மங்களே ஆதாரமென்னில் பிரமமென்னும் உருவின் சிறப்பும்அதன் செயலும் ஒன்று மில்லாமற்போம். அத்தகைய பிரம்மத்திற்கே சிறப்பில்லாவிடத்து அதன் முகத்தில் தோன்றிய பிராமணனுக்கும் சிறப்பில்லையென்பது சொல்லாமலே விளங்கும்.

இத்தகைய பிரம்மா முகத்தில்தோன்றிய நால்வருள் பிரம்மா பாதத்தில் சூத்திரனாகப் பிறந்தவன் பிராமணனுக்கும், க்ஷத்திரியனுக்கும், வைசியனுக்கும்

மிக்க பயபக்தியுடன் யேவல் புரிந்துவருவானாயின் வைசியனாகப் பிறப்பானென்றும், வைசியனாகப் பிறந்தவன் பிராமணனுக்கும், க்ஷத்திரியனுக்கும் மிக்க பயபக்த்தியுடன் ஏவல்புரிந்துவருவானாயின் அவன் க்ஷத்திரியனாகப் பிறப்பானென்றும், க்ஷத்திரியனாகப்பிறந்தவன் பிராமணனுக்கு மிக்க பயபக்த்தியுடன் ஏவல்புரிந்து வருவானாயின் பிராமணனாகப் பிறப்பானென்றும் வகுத்துப் போதித்து வருகின்றார்கள்.

இத்தகைய நான்குவகை ஜெநநங்களின்தோற்றங்களுக்கும் அவரவர்களுக்கு ஏவல்புரியும் கன்மங்களே காரணமாயின், பரசுராமனென்பவன் க்ஷத்திரியர்கள் கருவில்லாமலே அழித்து விட்டானென்னுங் கதை தோன்றிவிட்டபடியால் வைசியனென்பவன் யாருக்கு ஏவல்புரிந்து க்ஷத்திரியனாகத் தோன்றுவான். அவ்வகைத் தோற்றமுள்ளதாயின் பரசுராமன் கருவறுத்த க்ஷத்திரியக் கூட்டம் வேறென்றே விளம்பல் வேண்டும். இரண்டுவகை க்ஷத்திரியக்கூட்டங்கள் இருக்குமாயின் பிரம்மா புஜத்திற் பிறந்த க்ஷத்திரியக்கூட்டம் தற்காலம் இல்லையென்பதே துணிபாம். இத்தகைய கன்மத்தால் பிரம்மாமுகத்திற் பிறந்த பிராமண கூட்டமொன்றும், பிராமணருக்கு ஏவல்புரிந்து பிராமணனாகப்பிறக்குங் கூட்டமொன்றுமாகிய யிருவகைக் கூட்டத்தோருள் விசுவாமித்திரனென்னும் க்ஷத்திரியன் எந்த பிராமணனுக்கும் ஏவல்புரியாது தன்னுடைய தபோபலத்தால் பிராமணனானா னென்று கூறுகிறபடியால் இவனோர்வகைத் தோற்ற பிராமணனாக விளங்குகின்றது. இம்மூவகை பிராமணர் தோற்றத்துள் பிரம்மாவின் முகத்தில் தோன்றினோர் யதார்த்த பிராமணர்களா, க்ஷத்திரியனாகிபிராமணனுக்கு ஏவல்செய்து தோன்றியவர்கள் யதார்த்தபிராமணர்களா, அன்றேல், க்ஷத்திரியன் தனது தபோபலத்தால் பிராமணனாயது யதார்த்த பிராமணக்கூட்டமா, மூன்றும் யதார்த்த பிராமணக்கூட்டமென்பாராயின் கன்மபாக நிலையறியா மூன்று கூட்டமும்பொய்ப் பிராமணக்கூட்டமென்றே கூறல்வரும். மற்றோர்வகையில் சூத்திரனுக்கு ஏவல்புரியும் பிராமணன் யாவராகப் பிறப்பான். வைசியனுக்கு ஏவல்புரியும் பிராமணன் யாவராகப் பிறப்பான். க்ஷத்திரியனுக்கு ஏவல்புரியும் பிராமணன் யாவராகப் பிறப்பான். இதையும் அவரவர்கள் கன்மத்திற்குத் தக்கப் பிறப்பென்பதாயின் பிராமணனென்னும் பிறவி தோன்றுவதற்கு ஆதாரமில்லாமல் போம். அதாரமில்லாதிருந்தும் பிராமணக்கூட்டம் உண்டென்பாராயின், கன்மபாகை, அர்த்தபாகையற்று ஞானபாகையாம் யாதார்த்தபிராமணக் கூட்டம் இல்லையென்றும் கன்மத்தாலாயப் பிறவிகளின் ரகசியமறியாதோர் எழுதியுள்ளக் கட்டுக் கதைகளென்றும் துணிந்து கூறுவாம்.

- 4:11; ஆகஸ்டு 24, 1910 -

54. பஞ்சபாதகங்களில் ஒன்றாங் குடி

இவ்விடம் குடியென்பவற்றுள் கட்குடி, சாராயக்குடி, கஞ்சாக்குடி, என்பவைகளேயாம். இவைகளின் குணாகுணங்களோவெனில், பித்தத்தை அதிகரிக்கச்செய்யும். அதிமயக்கத்தால் புத்தியைக் கெடுக்கும். அவற்றைக் குடித்தவன் வாய்திறந்து பேசுவானாயின் சகிக்ககூடாத துன்னாற்றம் நாறும். இத்தகைய லாகிரியை அருந்துபவன் சற்று காமாதிகாரனாயிருப்பானாயின் இவைகளின் வெறிமயக்கத்தால் தாய்தங்கை என்றும், அன்னியர் மனைவி தன்மனைவி என்றும், மாமி மாதுலியென்றுணராது கெடுப்பான். சற்றுக் களவுமிகுத்த குணமுள்ளவனாயின் எவ்விதத்தானும் அன்னியர் பொருளைக் களவாடி அவர்களை மனம்வருந்தச் செய்வான். சற்று மிலேச்சக்குடும்பத்திற் பிறந்துள்ளவனாயின் லாகிரியை அருந்தியவுடன் இவன் மித்துரு அவன் சத்துருவென்றும், இவன் யோக்கியன் அவன் அயோக்கியனென்றும், இவன் விவேகி அவன் அவிவேகியென்றும், இவன் சிறியோன் அவன் பெரியோனென்றுணராது தனது மிலேச்சக்குடும்பத்திற் பிறந்த வழக்கச்செயல்கள் மாறாது கொடூர வார்த்தைகளும், இழிமொழிகளும் தூஷணச்சொற்களுங் கூறி அன்பர்களை மனனோகச்செய்வதுமன்றி அவர்களால் சகிக்க முடியாது

(சாத்துக்காப்பென்னும்) கைபூஜையோ, கால்பூஜையோ, துடைப்புக்கட்டைப் பூஜையோ பெற்றுக்கொண்டும், பணத்தால் பெரியசாதியென்றுயர்த்திக் கொண்டிருந்த போதிலும் இந்த லாகிரியை அருந்தியவுடன், "குலத் தளவே யாகுமாங்குணம்" என்னும் பழமொழிக்கிணங்க பூர்வ மிலேச்சகுல குணத்தை வெளிக்கு விசிரிம்பித்து யாவர் புத்திகூறினும் அடங்காது ஈன்று வளர்த்தத் தாயார் வெறுக்கவும், தனதுமனைவி இக்கொடிய பாதகன் முகத்திலும் விழிக்கப்போமொவென்று அகலவும், இவன் சுரணையற்றநிலை கண்டோர்கள் யாவருங் கைகொட்டி நகைக்கவும் உள்ள சொத்துக்கள் யாவையும் விற்றுக் குடித்து குடிகேடனென்னும் பெயருமெடுத்துக் கடைசியாகப் பிச்சையிரக்க வெளிதோன்றியும் பிச்சைக்கிடைக்காதலையும் பெரும் பாதகனாகிவிடுகின்றான்.

இந்த லாகிரி வஸ்து பாவங்களுக்கெல்லாம் தலையானதென்று அறிந்து மற்றுமொருவன் சுவாமிப்பிறந்த நாள் ஒன்றில்தான் குடிப்பேனென்கின்றான். இன்னொருவன் முநியாண்டவன் பூசையன்று தான் குடிப்பேனென்கின்றான். வேறொருவன் சத்திபூசை செய்யும்போதுதான் நான் குடிப்பேனென்கின்றான். இவர்களே சுவாமி கும்பிடுவதில் முதல் பாவிகளாய் இருக்கின்றார்கள். எவ்வகையிலென்னில், இலாகிரியை அருந்தி மயக்குண்டு மதிகெடுவது பஞ்ச பாதகத்துள் ஒன்றென்றறிந்தும் அத்தகையப் பாவச்செயலை சுவாமிப்பிறந்த நாளைக் கொண்டாடச்செய்தேனென்றும், முனியாண்டவன் பூசைப் போடச் செய்தேனென்றும், சத்திபூசைப் போடச்செய்தேனென்றும் சொல்லுவதினால் அன்னோர் தொழுஉம் சுவாமிகளே இவர்கள் பாவத்திற்கு முதற்பீடமாக விளங்குகின்றது. சுவாமிப் பிறந்தாரென்னும் நாளைக் கெண்டாடுவதற்கு அன்று பாவத்திற்குப் பீடமாம் இலாகிரியைப் பானஞ்செய்யாமல் ஒழித்து தெளிவிலிருப்பானாயின் அவனைப் புண்ணியவழித் தேடுவோன் என்னலாம். முனியாண்டவனைக் கும்பிடுபவன் அன்று லாகிரி அருந்தாமற் கும்பிடு வானாயின் அவனைப் புண்ணியவழித் தேடுவோன் என்னலாம். சத்திபூசைசெய் பவன் அன்று குடியாமல் சுத்தநிலையில் இருப்பானாயின் அவனைப் புண்ணியத்தின் சுத்தவழித்தேடுகின்றான் என்னலாம். அங்ஙனமின்றி சாமிப் பிறந்தாரென்று சாராயப் புட்டியைத் திறப்பதும், முநியாண்டவன் பூசையில் சனியன் பிடித்தக் கள்ளைக் குடிப்பதும், சத்தி பூசையில் அசுத்தமாங் கள்ளு சாராயத்தைக் கலந்து குடிப்பதுமாகியப் பாவச்செயல்களுக்கு கும்பிடுஞ் சாமிகளையே காரணபூதங்களாக ஏற்றுக் கும்பிடுதலை ஒழித்து பாவத்தைப் போக்குவதழகாம். மேலுமேலும் பாவத்தை பெருக்குதற்குக் கும்பிடு தெய்வங்களே கூட்டாளிகளாக விருக்குமாயின் அவர்களுக்கு சதா துக்கமென்பதே சான்றாம்.

பின்கலை நிகண்டு - பஞ்ச அங்கங்களும் பஞ்சபாதங்களும்

பஞ்சாங்கம் திதியே வாரம் பகர்ந்தநாள் யோகத்தோடு
துஞ்சாத கரணமென்ப சூழ்கொலை களவு பொய்யும்
அஞ்சாது கள்ளருந்தல் ஆர்குரு நிந்தையென்ப
பஞ்சார் மெல்லடி நல்லாய் கேள் பஞ்சபாதகத்தின் பேரே.

திரிக்குறள்

ஈன்றாண்முகத்தேயுமின்னாதாலென்மற்றுச்
சான்றோர்முகத்துக்களி.
நாணென்னுநல்லாள்புறங்கொடுக்குங் கள்ளென்னும்
பேணாப்பெருங்குற்றத்தார்க்கு.

- 4:12; ஆகஸ்டு 31, 1910 -

55. பௌத்த தன்ம யாகங்கள்

வினா : ஐயமின், தாம் தமது பத்திரிகையில் வரைந்துவரும் சங்கதிகளில் சைவம், வைணவம், வேதாந்தமென்னும் விஷயங்கள் யாவற்றிற்கும் ஆதாரபீடம் புத்ததன்மமென்றே வரைந்து வருகின்றீர். அங்ஙனமாயின் அவர்களுட் சிலர் யாகம் யாகமென்று கூறி மாடுகளையும், குதிரைகளையும், சுட்டுத் தின்றதாக வரைந்து வைத்துக்கொண்டிருக்கின்றார்களே அவைகளும் புத்ததன்மங்களைச்

சார்ந்ததாமோ. அவ்வகைச் சார்ந்ததாயின் புத்ததன்மம் அகிம்சை தன்மத்திற்கு விரோதமன்றோ. பிராணாதி பாதாவேறமணி என்னும் சீலமுந் தவருகிறதன்றோ.

பா. முநிசாமி ராஜு, பிரம்பூர்.

விடை : தாம் வினவிய யாக சங்கை பூர்வ பௌத்த சங்கத்தோர்களால் அக்கினி குண்டமாம் வேள்வித் தீ வளர்த்து ஏதேது காரியங்களைச் செய்து வந்தார்களோ அவைகளுக்கு எல்லாம் யாகமென்று கூறிவந்தது வழக்கமாகும்.

முன்கலை திவாகரம்

ஓமம், கிருது, வெச்சம், யாக, மிட்டி, யூபமகமிவை வேள்வி

குண்டம்வெட்டி அக்கினி வளர்த்து மருந்து புடமிடுவதும், ஈட்டிகளுக்குத் துவையலேற்றுவதும், ஈட்டியால் உண்டாம் மூர்ச்சையை இறக்குவதும், வானம் வருஷிக்கச்செய்வதும், மழையை விலகச்செய்வதும், ஒடதி சுக வஸ்துக்களைச் காச்சுதலும், தாமரை புட்ப சுன்னங்களை முடித்தலும், அரசர்களுக்கு தேக பலமும் மனோ உற்சாகமும் பெறச் செய்தலும், நரருக்கு கதிபெறச் செய்தலும், மக்களுக்கு சுகபுகை யூட்டி ஞான நெறிகளைக் காட்டி தேவகதியாம் பிரமநிலைப் பெறச் செய்தலுமாகிய சோதிட்டோமயாகம், அக்கினிட்டோமயாகம், மத்தியாகினிட்டோ மயாகம், வாசபேய யாகம், மத்திராத்திர யாகம், சேமயாகம், காடகயாகம், சாதுரமாகி யாகம், சவித்திராமணியாகம், புண்டரீக யாகம், சிவகாம யாகம், மயேந்திரயாகம், மங்கிக்கனே யாகம், இராசசுக யாகம், அச்சுவமேதையாகம், விச்சுவதித்து யாகம், நரமிதயாகம், பிரமமித யாகமென 18 யாகங்களைச் செய்துவந்தார்கள்.

இவற்றுள் முக்கியமாக சகல மக்களும் தெரிவரச் செய்துவந்த யாகங்கள் சிலதுண்டு. அதாவது:- இட்டியாகம், எச்சயாகம், ஓமயாகம், கிருதயாகம் இவைகளேயாம். இவற்றுள் இட்டியாகமாவது யாதெனில், அரசர்கள் யுத்தகாலங்களிலும், வேட்டை காலங்களிலும் தங்களுக்கு வேண்டிய ஆயுதங்களாகும் பட்டா, ஈட்டி, பல்லயம், அம்பு முதலியவைகளைக் கொண்டுவந்து மடங்களிலுள்ள சமண முநிவர்களிற் சித்திப் பெற்ற சித்தர்களிடங் கொடுத்து இவ்வாயுதங்கள் மிருகங்களின் மீது பட்டபோதினும் மநுக்களின்மீது பட்டபோதினும் பிராண உபாயமின்றி மூர்ச்சையாகி விடும்படியானத் துவையலேற்றிக் கொடுக்கும்படிக் கேட்கும்போது யாககுண்டம் வெட்டி அவைகளுக்கான சில மூலிகைகளைக் குழியிலிட்டுத் தீமூட்டி எறியுங்கால் பசுவின் நெய் விட்டு விறகுகள் முழுவதும் பற்றி மெழுகுபதந்திரளுங்கால் ஆயுதங்களை ஒவ்வொன்றாக அதிற்சொருகி மணலைக்கொட்டி யாககுண்டத்தை மூடி மூன்றாநாள் திறந்து ஆயுதங்களை எடுத்து பிரமமூலி சாற்றிற் கழுவி யுத்தகளத்தில் உபயோகித்தால் காயமடைந்த ஒவ்வொருவருக்கும் மூர்ச்சையுண்டாகச் செய்விக்குமாம். இந்த யாகத்திற்கு வடமொழியில் கோமித யாகமென்றும், தென்மொழியில் இட்டியாகமென்றும் வழங்கிவந்தார்கள்.

அத்தகைய ஆயுதம் எய்யப்பெற்றோர் மூர்ச்சைத் தெளியாமல் பிரேதம்போற் கிடப்பார்களாயின் இன்னொரு யாககுண்டம் வெட்டி நிகும்பிலை அதாவது சஞ்சீவிப் பூண்டின் சமூலங் கொண்டுவந்து குழியிலிட்டு அக்கினி வளர்த்து பசுவின் கோமியத்தைக் கொஞ்சங்கொஞ்சமாகத் துளிர்த்துக் கொண்டுவந்து சாம்பல் பூர்த்தவுடன் எடுத்து சுத்தநீரில் கரைத்து யுத்தகளத்தில் வீழ்ந்துள்ளவர்களின் முகத்தில் தெளித்தவுடன் நித்திறை தெளிந்தெழுந்திருப் பவர்களைப்போல் எழுவார்களாம். இவ்வியாகத்தற்கு வடமொழியில் நிகும்பிலை யாகமென்றும், தென்மொழியில் எச்சயாகமென்றும் வழங்கி வந்தார்கள்.

இவ்வாயுதம் பட்ட காயங்கள் ஆறாமலிருக்குமாயின் இன்னொரு யாககுண்டம் வெட்டி ஆலம் விறகு, பருத்தி விறகு, அத்தி விறகு மூன்றையும் சமமாகக் குழியிலிட்டு வெண்குங்கிலியத்தைக்கொட்டி அக்கினி மூட்டி குதிரை நெய்யைக் கொஞ்சங் கொஞ்சமாக கொடுத்து விறகுகள் முற்றும் எரிந்து குமிழ்க்கண் விடுங்கால் அவித்துக் களிம்பை எடுத்து பட்டக் காயங்களுக்குத்

தடவிவந்தால் மூலிகை வேகம் நீங்கி இரண மாறிப்போகுமாம். இவ்வியாகத்திற்கு வடமொழியில் அச்சுவமித யாகமென்றும், தென்மொழியில் கிருத யாகமென்றும் வழங்கிவந்தார்கள்.

மற்றும் சிலகாலங்களில் சுக்கிரக்கோள் பின்னிட்டு சூரியன் முன்னிட்டேகுங் கால் மழைகுன்றி பஞ்சமென்னும் தானியமும் நீருமின்றி பசிதாகத்தால் வருந்தும் விருத்தி 1. விஷரோக பீடிதங்களால் துன்புரும் விருத்தி, 2. ஒருதேசத்தைவிட்டு மறுதேசங்களுக்கு ஓடும்விருத்தி 3. பூமியிலுள்ள நீர் வரண்டு காயும் அனல் விருத்தி. 4. சருவசீவர்களுக்கும் அழுகை, பற்கடிப்பு விருத்தி. 5. ஆக பஞ்சமாம் - அஞ்சுந்தோன்றி குடிகள் தவிக்குங்காலத்தில் ஊருக்குமத்தியில் பெருத்த யாகுண்டம் வெட்டி நாணற்புல்லைக் கொட்டி மட்டிப்பால், கற்பூரம், குங்கி சுயம், கேந்திக் கல், நீறுப்பாகிய பஞ்சமழை முகில் ஓடதிகளைக் கொட்டி, யாக குண்டத்தைச் சுற்றி 32-அடி உயரத்திறை எழுப்பி அதன் 8 மூலைகளிலும் விவேகமிகுத்த சமணமுநிவர்கள் உட்கார்ந்து கொண்டு அக்கினிமூட்டி ஓமவிறகும், பசுவின் நெய்யுங் கொஞ்சங் கொஞ்சமாக விட்டு ஐந்திரநிலையில் நிற்குங்கால் யாகபுகை ஆகாயத்தை ஆளாவிய ஐந்து கடிகைக்குள் கருமுகில் தோன்றி பெருமழைப்பெய்து யாகுண்டம் நனைவதுடன் சருவசீவர்களுக்குமுள்ள அஞ்சு அவத்தையாம் பஞ்சம் நீங்கி சுகம்பெறுவார்களாம். இந்த யாகத்திற்கு வடமொழியில் பிரம்ம யாகமென்றும், இந்திர யாகமென்றும்; தென்மொழியில் ஓம யாகமென்றும் வழங்கிவந்தார்கள்.

இத்தகைய 4 யாகங்களுக்கு மட்டிலும் அரசர்களால் வாழைக்கனி, அவுல், கடலை, தேங்காய் இவைகளைக் கொண்டுவந்து ஏராளமாக வைத்திருந்து மேற்சொன்னபடி யாகங்கள் ஒவ்வொன்றும் முடிந்தவுடன் குடிகளுக்கு ஆனந்தமாகக் அவிற்பிரசாதங் கொடுத்துப் புசிக்கச்செய்வது வழக்கமாயிருந்ததாம்.

இத்தியாதி சத்தியதன்ம உபகாரச் செயல்கள் யாவும் வேஷ பிராமணர்களால் மாறுதலடைந்து புத்த சங்கங்களும், பௌத்தர்களும் சிதறி அசத்தியர்களின் ஜாலக்கூற்றுப் பெருகிவிட்டபடியால் யாகங்களின் செயலும் மிலேச்ச அதன்மத்தில் மாறுதல் அடைந்துவிட்டது. எவ்வகையில் என்பீரேல், இவ் வேஷ பிராமணர்களுக்கு புத்ததன்ம யாதார்த்த பிராமணர்கள் செய்துவந்த சீவகாருண்யச் செயல்களும் அதனந்தரார்த்தங்களுந் தெரியவேமாட்டாது. இவ்வகைத் தெரியாத வேஷ பிராமணர்களிடங் கல்வியற்றக் குடிகள் சென்று ஐயா! முன்பிருந்த மடத்துப் பெரியோர்கள் யாகஞ்செய்து எங்களுக்கெல் லோருக்கும் அவிற் பிரசாதங் கொடுப்பார்கள் அவ்வகையாக நீங்கள் ஒன்றையுங் கொடுப்பதைக் காணோமே என்று வினவுங்கால் வேஷபிராமணர்களுக்கோ யாகமென்பது யாதென்று தெரியாது. அவர்களை நாடிக்கேட்குங் குடிகளுக்கு அவுல், கடலை தேங்காய் , வாழைப்பழம் இவைகளைத் தின்ற ருசிமட்டுந் தெரியுமேயன்றி யாகங்கள் இன்னதென்றும் அதன் செயல்கள் இன்னதென்றும் அவர்கள் அறியவேமாட்டார்கள்.

இவ்வேஷபிராமணர்களோ தங்களது நாட்டில் ஆட்டு மாமிஷம், மாட்டு மாமிஷங்களைத் தின்று வளர்ந்தவர்கள் புத்ததன்ம நாட்டைச் சார்ந்தபோது மாமிஷப் புசிப்புக்கேதும் இல்லாமல் திகைத்துநின்றவர்களுக்குத் திறைக்கட்டி யாகம் வளர்த்தலென்று கேழ்விப்பட்டவுடன் அவர்களைக்கொண்டே கொழுத்தப் பசுக்களையும் கொழுத்த குதிரைகளையுங் கொண்டுவரச்செய்து குண்டம் வெட்டி, திறைகட்டி, பசுக்களையும் குதிரைகளையும் உயிருடன் நெருப்பிலிட்டுச் சுட்டுத்தின்பதுடன் அவுல், கடலை, தேங்காய், வாழை, பழம் முதலியவைகளையுங் கொண்டுவரச்செய்து சகலவற்றையும் தாங்களே வாரி மூட்டைக்கட்டிக்கொண்டு பசுவையும், குதிரையையும் சுட்டுத் தின்ற சாம்பலை வாரிக் கையிற்கொடுத்து இந்த சாம்பலை ஒவ்வொருவர் வீட்டிலும் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளுவீர் களானால் உங்களுக்கு எவ்வகை வியாதிகளும் அணுகாது நல்ல சம்பத்துள்ளவர்களாக வாழ்வீர்களென்று கூறியவுடன் யாகத்தின் பொருளறியா விவேகமற்றக் குடிகள் பசுமாடுகளையும்,

குதிரைகளையும் இழந்ததுடன் வாழைப்பழம், தேங்காய், அவுல், கடலை இவைகள் ஒன்றேனும் பெறாது வெறுஞ் சாம்பலைப் பெற்று வெறுமனே வீடேகுவார்களாம்.

இத்தகையப் பேதைக்குடிகளை வஞ்சித்து ஆடுகளையும், மாடுகளையும், குதிரைகளையும், உயிருடன் சுட்டுத் தின்பதை உணர்ந்த புத்ததன்ம விவேகிகள் உயிர்வதைச் செய்யும் பாபிகளை அடித்துத் துரத்தியும் சிவகாருண்யத்தை விளக்கியும் நெருப்பிற் சுட்டுத்தின்னுந் கொறூரக்கொலையை அகற்றியும் வந்தார்களாம்.

ஈதன்றி ஆரிய வேஷப் பிராமணர்களின் சுகத்தையும் அதிகாரத்தையும் கண்டுவரும் ஆந்திரசாதி, கன்னடசாதி, மராஷ்டகசாதி, திராவிடசாதியென வகுக்கப்பெற்றோராகும் இத்தேசத்து சோம்பேறிகளும், வஞ்சகர்களும் பிராமண வேஷம் எடுத்துக்கொண்டு வஞ்சகமிகுத்தப் பொய்யர்களும், சோம்பேறிகளும் ஆனபோதினும் கொலையும் புலையுமற்றவர்களாக வாழ்ந்தவர்களாதலின் ஆரிய வேஷப்பிராமணர்கள் ஆடுமாடுகளை சுட்டுத் தின்னுங் கொலைபாதகத்துள் இவர்கள் சேராது இவர்களுக்குள் நூதனமாகத் தோன்றிய வேஷப் பிராமணர்கள் மிகுந்துவிட்டபடியால் ஆரிய வேஷப் பிராமணர் யாகம் யாகமென வழங்கி மாடுகளையுங் குதிரைகளையுஞ் சுட்டுத்தின்ற வழக்கத்தைப் பரவச்செய்தற்கு ஏதுவில்லாமல் போய்விட்டது. ஆதலின் மாடுகள் குதிரைகளைச் சுட்டுத்தின்னும் யாகம் ஏடுகளில் எழுதிவைத்திருந்த போதினும் செயலில் நிகழாதொழிந்தது. பௌத்தர்களின் யாகமோ மாமாத்திரர் யாககுண்ட புடத்திலும், நிமித்தகர் விவாக யாகபுடத்திலும், மற்றும் அக்கினிச்செயலிலும் உள்ளதை நாளது வரையிற் காணலாம்.

முன்கலை திவாகரம்

பதினெண் யாகவகைப் பெயர். / சோதிட்டோம மக்கினிட்டோம,
மத்தியக்கினிட்டோமம் வாசபேய / மத்திராத்திரஞ் சேமயாகங்காடகஞ்
சாதுர மாசியஞ் சவித்திரா மணியே / புண்டரீகஞ் சிவகாம மயேந்திர
மங்கிச சனேயி ராசசூய / மச்சுவமேதம் விச்சுவதித்து
நாமேதம் பிரமமேத மென்னப் / பதிநெட்டியாகப் பலப்பெயராமே.

இவற்றுள் அடங்கியுள்ள புண்டரீக யாகமென்பது தாமரைப் புட்பத்தை பஸ்பிக்கும் ஓர் புடவகையாகும். இதன் ரகசியந்தெரியாத வேஷ பிராமணர்கள் புண்டரீக யாகமென்னும் ஓர் அசுத்தச் செயலும் சகலரும் அருவெறுக்கக்கூடியதுமா யவற்றைச் செய்திருக்கின்றார். அவற்றை நமது பத்திரிகையில் எழுதுவதால் பத்திரிகையும் அசுத்தமாமென்று எண்ணி அகற்றி விட்டோம்.

குறுந்திரட்டு

புலையர்க்கூடி யாகமென்று பசுவுங் கன்றுஞ் சுட்டுப் புசித்தார்
வலையர்க்கூடி வன்னி வளர்த்து மச்சமட்டு மேதய முண்டார்
சிலையர்க்கூடி பரவைக ளெய்து செந்தீயிட்டு தின்று வளர்ந்தார்
கலையோர்க்கூடி கண்டு வகற்றி கருணாரம்பங் காட்டினரன்றே.

- 4:16; செப்டம்பர் 28, 1910 -

56. அங்கலயமும் இலிங்கமும்

வினா : ஆண்குறிபோலும், பெண்குறிபோலும் கல்லுகளிலடித்து அதன் மீது ஆமணக்கு நெய் வார்த்து ஜலங்கொட்டி புஷ்பமிட்டு இலிங்கபூஜை என செய்துவருகின்றார்களே அதன் பயன் யாது: அவ்வகையானச் செயல் பௌத்ததன்மத்தைத் தழுவியதாகுமா; ஆகுமாயின் "காமேசுமிச்சாசாறா" வென்னுஞ் சீலத்திற்கு மாறுபட்டு காமிகா அர்ச்சனை என்றும் கூறத்தகுமன்றோ. இவ்வர்ச்சனையால் மக்களுக்கு ஏதேனும் ஈடேற்றம் உண்டா,

பா. முநிவாமி ராஜு, பிரம்பூர்.

விடை : அதாவது பௌத்ததன்மத்தில் மனோவயிக்கியத்தையும், தேக ஐக்கியத்தையும் அங்க லிங்க அயிக்கியமென்றும், லய அங்கமென்றும் அங்கலயமென்றும் லிங்கமென்றும் வழங்கி வந்தார்கள். அத்தகைய வழக்கக்காலமோ வெனில் பகவன் பரிநிருவாணமடைந்தபின்னர் தேகத்தை

தகனஞ் செய்து அஸ்தியையும் சாம்பலையுங் கொண்டுபோய் ஏழரசர்கள் ஒவ்வோரிடங்களில் அடக்கஞ்செய்து மண்டப வியாரங்கள் கட்டியதுமன்றி அவ்வஸ்தியையும் சாம்பலையும் புதைத்தயிடக் குறிப்புத் தெரிந்துக்கொள்ளுவதற்காய் மரகதங்களினாலும் வைரங்களாலும் குழவிபோற் செய்து அவ்விடம் புதைத்து சித்தார்த்தியார் அங்கலய பீடமென்றும், லய அங்கபீடமென்றும் வழங்கி குறுக்கல் விகாரத்தால் லிங்கபீடமென வழங்கி வந்தார்கள்.

அதன்பின்னர் புத்தசங்கங்களிலுள்ள சமண முநிவர்கள் மனோலயத்தையே அங்கலிங்க ஐக்கியமெனவும் வழங்கிவந்தார்.

திருவள்ளுவ சாம்பவனார் ஞானவெட்டி

விரிவான துரியமெனு மூலவீட்டில் வேதமதுக்கெட்டாத ரூபமாகி
கருவாகி தெவிட்டாத கனியுமாகி கதிராகி மதியாகி காற்றுமாகி
உருவாகி யுடலாகி வுயிருமாகி வொளியாகி வெளியாகி யுடலுக்குள்ளே
அருவாகி யருள்ஞான சொரூபியாகி அங்கமதி லிங்கமதா யமைந்தேனையே.

இதன் அந்தர் அங்கரகசியார்த்தம் ஞான சாதனர்களுக்கு விளங்குமேயன்றி அங்கலய சாதனமற்ற அஞ்ஞானிகளுக்கு விளங்கமாட்டாது. இத்தகையப் பேரானந்த ரகசியமொழியின் அந்தரார்த்தத்தை கல்வியற்றப் பெருங்குடிகளும் அறியமாட்டார்கள். அவர்களால் குருக்களென்று அழைக்கப்பெற்ற வேஷபிராமணர்களுக்கும் அவை தெரியமாட்டாது.

இத்தகையக் கல்வியற்றக் குடிகள் வேஷபிராமணர்களை அடுத்து அங்கலிங்க அயிக்கியமதம் அருள்புரிவேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் பேரில் அதனந்த ரார்த்தம் அறியா பொய்க்குருக்கள் ஆண்குறிபோலும், பெண்குறி போலும் கற்களால் செய்வித்து அதைப் பூசிக்கத்தக்கக் கட்டிடங் கட்டி அங்கமென்றால் தேகம், இலிங்கமென்றால் ஆண்குறி, அயிக்கியமென்றால் பெண்குறி. இவைதான் உலகசிருஷ்டிக்கு ஆதி. இதையே நீங்கள் பூசித்து எங்களுக்கு தட்சணை தாம்பூலம் அளிக்கவேண்டுமென்று கல்வியற்றக் குடிகளின் வார்த்தைகளைக் கொண்டே சீவன வழித் தேடிக்கொண்டார்கள்.

அங்கலிங்க அயிக்கியமென்பது ஐயிந்திரியம் வென்ற சமாதி சாதனமென்றுணராது தென்மேற்கு நாட்டில் ஆவிடையார் கோவிலென்று ஓர் கட்டிடங் கட்டி அவற்றுள் கல்லினால் ஆண்குறி பெண்குறி நாட்டியுள்ளதாகக் காவியங்களால் விளங்குகின்றது.

திருவள்ளுவ சாம்பவனார் ஞானவெட்டி

ஆவிடையார கோவிலிலே, யமைத்தகுறி ஆதரவாகவே சேர்ந்துமாதர்களினால்
மேவியதோர் நாதவிந்து, வெகுவிசித விற்பனையறியாவொரு கற்பனைசொல்வேன்
பாவிக ளிதை யறியார், கல்லுகள்தனில் பாவனை யொப்பாகவுமே தாபிதஞ்செய்தார்
ஆவியென்று மறியாமல், செலவழிய ஆத்தமலிங்கமதனைப் பார்த்துணராமல் (தந்தன)

இத்தகையாய்க் கல்வியற்ற பெருங்குடிகள் கேழ்க்கவும் பொய்க்குருக்கள் போதிக்கவுமாகிவிட்டது. இவ்விலிங்க பூசையைக் கண்டிக்க வைஷ்ணவர்கள் இலிங்கமதக் கண்டனமென ஓர் புத்தகம் எழுதியிருக்கின்றார்கள். அவற்றைக் காணின் பொய்க்குருக்களின் செயலும், அவர்களது போதனையும் பரக்கவிளங்கும்.

உளியிட்டக் கல்லுகள் சிலகால் வெய்யல்வேகத்தால் வெடித்துப் போகும் என்றெண்ணி சிலரூபத்தின் மீது ஆமணக்குநெய் தடவி நீர் கொட்டுவதாகும்.

- 4:17; அக்டோபர் 5, 1910 -

57. கற்பூரம் கொளுத்துதல்

வினா : நம் தேசத்தில் இறந்தவுடன் கற்பூரம் கொளுத்தி தேங்காய் உடைக்கின்றார்களே அது என்ன காரணத்தினால்?

தன்மப்பிரியன், பம்பாய்,

விடை : அதாவது சிலகாலங்களுக்கு முன்பு தோன்றிய காளிகாதேவி கன்னகா பரமேஸ்வரி இவர்களுக்கு ஆடுமாடுகளை கொலைசெய்து பூசிப்பதுபோல் சாந்ததேவதையை பூசிப்போர் தேங்காயுடைக்கும் ஓர் வழக்கத்தை அநுசரித்து வந்தார்கள். பூர்வப் பலகாரம் அவுல், கடலை,

வாழைப்பழம் தேங்காய் இவைகளே யாதலின் தேவதைப் பெயர்சொல்லி தேங்காயுடைத்து அவுல் கடலையுடன் சேர்த்துப் புசிப்பதற்கேயாம்.

கருப்பூரத்தைக் கொளுத்துங் குணம் அவ்விடமுள்ளக் கெட்ட நாற்றங்களைப் போக்கி சுத்தஞ்செய்வதற்கேயாம். அதை ஓர் மக்கள் சுகாதார ஔடதமென்றே கூறல் வேண்டும்.

- 4:18; அக்டோபர் 12, 1910 -

58. சைநரும் சமணரும்

சமணரென்பது பௌத்தசங்கத்து செயலுக்குரியப் பெயர், சைனரென்பது பௌத்தமார்க்கத்தினின்று பிரிந்த ஓர் கூட்டத்தோர் பெயர்.

மகடபாஷையில் சமணரென்றும், சகடபாஷையில் சிரமணரென்றும், கூறியுள்ள பெயர் பௌத்த சங்கத்தோர் முதற்சாதன நிலையாகும் இச்சமண முநிவர்களில் தேர்ந்தவர்களையே நமது தேசத்தோர் சித்தர்களென்று அழைத்துவந்தார்கள்.

பின்கலை நிகண்டு

"நீரினிற் பூவில் வானில் நினைந்துழி யொதுங்குகின்ற
"சாரண ரெண்மராவர் சமணரிற் சித்திபெற்றோர்."
சைனரென்பது புத்தருக்குரிய ஆயிர நாமங்களில் ஒன்று.
விரவு சாக்கையனே சைநன் / விநாயகன் சினந்தவிர்ந்தோன்

பாலிநிகண்டு

'பஞ்சமார ஜீனோதீதி ஜீனா.'

சைநர்களென்பது பௌத்த தன்மத்தினின்று பிரிந்துள்ள ஓர் கூட்டத் தோர் தற்கால சாதியாசாரத்தையும், சமயாசாரத்தையும் அநுசரித்துக்கொண்டு பௌத்த தன்மத்தின் நிருவாணமென்னும் கருத்தரியாது நிருமான உருவத்தை வைத்துப் பூசித்து வருகின்றார்கள்.

மற்றப்படி சன்னியாசிகள் என்போர் பகவனுடைய காலத்தில் நிருமானமாக இத்தேசத்தில் சஞ்சரித்ததுங்கிடையாது. அவர்கள் சரித்திரமுங் கிடையாது.

தற்காலமுள்ள சில சைந கூட்டத்தோர் பகவனது காலத்திலேயே சில நிருமான சன்னியாசிகள் இருந்ததுபோலும் அவர்களை பகவன் கண்டித்தது போலும் மகடபாஷையில் எழுதி இவ்விடம் வந்திருந்த யாத்திரைக்காரர்களிடங் கொடுக்க அவைகளை மொழிபெயர்த்து ஆங்கிலேயர்களஎல் வெளியிட்டிருக் கின்றார்கள். அதன் காரணமோவென்னில், நிருவாணமென்னும் மொழியின் பொருளறியாது நிருமான ரூபத்தைப் பூசிப்பவர்கள் பகவன் காலத்திலேயே இருந்ததாக ரூபித்து தங்கள் சமயத்தை மேற்படுத்திப் பேசுவதற்கேயாம்.

முற்காலத்திலுந் தற்காலத்திலுங் காட்டு முராண்டிகள் நிருமானமாகத் திரிந்திருப்பார்களன்றி சன்னியாசிகள் நிருமானமாகத் திரிந்திருந்தார்களென்பது பிசகு. அவ்வகைத் திரிவோரை சீலமிகுத்தோர் சேர்ப்பரோ, அவர்களை சன்னியாசி களென்றுங் கூறுவரோ ஒருக்காலுங் கூறமாட்டார்கள். நிருமான சன்னியாசிகள் இத்தேசத்தில் இருந்ததுமில்லை அவர்களை சன்மானித்தவர் களுமில்லை.

- 4:18; அக்டோபர் 12, 1910 -

59. மதக்கடைகளால் சுகமுண்டா? மண்டிக்கடை மளிகைக்கடைகளால் சுகமுண்டா?

மதக்கடைகளென்பது யாதெனில், கல்லுகளாலும், பித்தளைகளாலும், களிமண்களாலும், எலும்புகளினாலும் செய்துள்ள பலவகை சிலைகளைப் பரப்பி இந்தசாமி பெரியசாமி, அந்தசாமி சின்னசாமி, அந்தசாமி மோட்சத்திற்கு நேரேவழிகாட்டுஞ் சாமி, இந்தசாமி எதிரிகளையெல்லாங் கொல்லுஞ் சாமி, அந்தசாமி உங்கள் நோய்களைப் போக்கிவிடுஞ்சாமி, இந்த சாமி உங்கள் பாவங்களையெல்லாம் நீக்கிவிடுஞ்சாமி எனக்காட்டி தட்சணை தாம்பூலம் கொண்டுவாருங்கோளென்றும், உண்டிபெட்டிக்கு காசுகள் போட்டுக்

கொண்டே வாருங்கோளென்றும், இந்த சாமிகள் பெயர்களால் உங்கள் வீடுகளில் வேறு உண்டிகள் சேர்த்து கொண்டுவந்து கொடுங்கோளென்றும், வேறு சாமிகள் உங்களுக்கு சுகங்கொடுக்கமாட்டாது எங்கள் சாமிதான் உங்களுக்கு சகலசுகமும் கொடுக்கும் வேறுசாமிகளை நீங்கள் தொழவேண்டாம் எங்கள் சாமிகளை மட்டிலும் தொழுஉங்களென்றும் கூறி ஏழைகளது பொருள்களை பறித்து தங்கள் தேசங்களுக்குக்கொண்டுபோவதும் தங்கடங்கள் பெண்டு பிள்ளைகளைக் காப்பாற்றிக்கொண்டு சுகசோம்பலுற்றிருப்பது மாகியச் செயல்களே மதக்கடைச் செயல்களென்றும் அவைகளுக்கான காரியகுருக்களையே மதக்கடை வியாபாரிகளென்றுங் கூறப்படும்.

மண்டிக்கடைகளென்பது யாதெனில், அரிசி, கேழ்வரகு, சோளம், கடலை மொச்சை முதலிய தானியங்களைப் பரப்பிவைத்துக்கொண்டு அது மேலான சரக்கு, இது மேலான சரக்கென்று கூறி துட்டு பெற்றுக்கொண்டு தானியமளப்பது மண்டிக்கடையென்றும், அதனை விற்போர் மண்டிக்கடை வியாபாரிகளென்றும் கூறப்படும். மளிகைக் கடைகள் யாதெனில், உப்பு, புளி, மிளகாய், வெல்லம், நெய், சருக்கரை முதலிய தினுசுகளைப் பரப்பி வைத்துக் கொண்டு, அது நல்லநெய், இது நல்ல வெல்லம், அது புதுப்புளி, இது பழைய மிளகாய் எனக்கூறி துட்டு பெற்றுக் கொண்டு சரக்குகளை விற்பது மளிகைக்கடை என்றும் அவைகளை விற்போர் மளிகைக் கடைக்காரர்களென்றும் கூறப்படும். இம்மண்டிக்கடை, மளிகைக்கடை வியாபாரிகளோ தங்கள் வியாபாரமும் துட்டும் பெருகுவதற்கு மற்றவர்களின் கடைசரக்குகளைத் தாழ்த்தி தங்கள் சரக்குகளை உயர்த்திக்கூறுவது வழக்கமாகும். இவ்விரு கடைக்காரர்களும் தங்கள் சரக்குகளை உயர்த்தி ஏனையோர் சரக்குகளைத் தாழ்த்தித் தங்கள் வியாபாரத்தையும் பொருளையும் பெருக்கிக்கொள்ளுவதாயினும் அவைகளைப் பணங் கொடுத்து வாங்குவோர் தங்கள் பெண்டுபிள்ளைகளுடன் புசித்து பசிதீர்ந்து சுகமடைந்து வருகின்றார்கள்.

மதக்கடை வியாபாரிகளோ, காணாத சாமிகளைக் கண்டதைப்போல் பொய்யைச்சொல்லிப் பொருள் பறிப்பதும், காணாத மோட்சமென்னு மிடத்திற்குப்போய்க் கண்டுவந்தவர்களைப்போல் பொய்யைச்சொல்லி பொருள் பறிப்பதும், காணாத நரகத்திற்குப் போய்க் கண்டுவந்தவர்களைப் போல் பயமுறுத்திப் பொய்யைச்சொல்லி பொருள் பரிப்பதும், கப்பலில் அபாயம் நேரிட்டால் எங்கள் சாமியை வேண்டிக் கொண்டு உண்டியை சேர்த்துக் கொண்டு வந்துக் கொடுங்கள். உங்களுக்கு வியாதி வந்தால் எங்கள் சாமியை வேண்டிக்கொண்டு உண்டிசேர்த்துக் கொண்டுவந்து செலுத்துங்கோளெனப் பலவகைப் பொய்யைச்சொல்லி அறிவிலி களை வஞ்சித்து பொருள் சேர்த்து தங்கள் தேசத்திற்கு அனுப்புவதும் தங்கள் பெண்டுபிள்ளைகளுடன் சுகமாக உண்டு உடுத்தி உலாவுவதுமாகியச் செயல்களுக் குரித்த இடங்களே மதக்கடைகளென்றும், பொய்யைக் கூறிப் பொருள் பறித்து சீவிப்போரே மதக்கடை வியாபாரிகளென்றும் கூறப்படும்.

இத்தகையமதக்கடைகளும், மதக்கடை வியாபாரிகளும் உலகிலுள்ள எத்தேசத்திலும் விசேஷமாகக்கிடையாது. இந்துதேசத்தில் மட்டும் விசேஷமாகக் காணலாம். காரணமோவென்னில் விசாரிணையென்பதற்று சொன்னதைச் சொல்லுங் கிளிபோல் சொல்லிலித்திரிவோர் பலர். சொல்லின் காரணகாரியத்தை விசாரிப்போர் சிலர். கடைச்சோம்பேரிகளாகிய யாதொரு தொழில் முயற்சியுமின்றி சாமி கொடுப்பார், சாமிகொடுப்பாரென் றண்ணாந்துபார்த்திருப்போர் பலர். தன்முயற்சியே தன்னைக் கார்க்குமென்று முயல்வோர் சிலர். இத்தகையாய் விசாரிணையற்றக் கூட்டத்தோர் பெருகியும் விசாரிணையுள்ளோர் சிறுகியும்விட்ட படியால் வஞ்சினத்தாலும் பொய் சொல்லியும் பொருள் பறித்தும் சீவிப்பவர்களுக்கு விசேஷயிடங் கொடுத்து விட்டது.

வஞ்சகர்களின் கூற்றும், பொய்யர்களின் புரளியும், கல்விகற்றுள்ளோம் என்பவர்களை ஏமாற்றுங்கால் கல்லாதவர்களை எவ்வகையால் வஞ்சிப்பார்

களென்பதைக் கண்டு கற்றோரே தெளிந்துகொள்ளல் வேண்டும். காரணம், விவேகமிகுத்தோர்களால் "கண்டுபடிப்பதே படிப்பு மற்றபடிப்பெல்லாம் தெண்டபடிப்பென்று" கூறப்பட்டிருக்கின்றது.

கண்டுபடிக்கும் விசாரிணையாவது யாதெனில், ஒருவன் எங்கள் சாமியை வேண்டிக்கொண்டால் உங்கள் வியாதிநீங்கிவிடுமென்பானாயின் அப்பா உங்கள் சாமியை வைத்திருக்கும் இடத்தில் கண்டிருக்கும் உவாந்திபேதியை தடைச்செய்வ தற்கியலாத சாமி என் வியாதியை நீக்கிவிடுமா. என்னுடைய வியாதி நீங்குவதும் அதிகரிப்பதும் என்னுடையச் செயலாயிருக்க உங்கள் சாமியால் என் வியாதியை நீக்குவதற்கு ஏதுவில்லையே சருவச்செயலும் அவனவன் ஏதுக்குத் தக்க நிகழ்ச்சியாயிருக்க அவனையன்றி வேறு ஏதுவாவது நிகழ்ச்சியாவது கிடையாவே என்பான். கண்டுபடிக்காத விசாரிணையற்ற வனிடம் ஒருவன் சென்று, அப்பா, எங்கள் சாமியை வேண்டிக்கொண்டால் உன் வியாதி நீங்கிவிடுமென்று சொன்னவுடன் தன்னால் தோன்றிய வியாதியைத் தா னுணராதவனாதலின் அவன் சொன்ன சாமியை விழுந்து கும்பிட்டு வேண்டிக்கொண்டகாலம் அவ்வியாதி நீங்குவதற்குக் காலமாயிருந்துவிடுமாயின் அவன் தொழுத சாமியை மெய்சாமியென் றெண்ணி அச்சாமிக்குப் பணங்கிடையாதென இவன் சம்பாதிக்கும் பணங்களைக் கொட்டிக் கொடுப்பான். சாமி இவனுக்குப் பணங் கொடுப்பதா, இவன் சாமிக்குப் பணம் கொடுப்பதாவென்று உணரான். மனிதர்கள்தான் லஞ்சம் வாங்கிக் கொண்டு உதவி புரிகின்றார்கள். சாமியும் லஞ்சம் வாங்கிக்கொண்டு வியாதியை நீக்குமாவென்று பகுத்தறியான்.

இத்தகைய பகுத்தறியாதோர் கூட்டம் பெருத்தும், பகுத்தறிவோர் கூட்டம் சிறுத்தும்விட்டபடியால் மதக்கடை பரப்பி சீவிக்கும் பொய்க் குருக்களாகிய வஞ்சகர்களுக்கு மேலும் மேலும் பொய்யைச் சொல்லி வஞ்சித்துப் பொருள் சம்பாதிக்கும் வழிகள் பலவகையாகப் பெருகிவிட்டது. இத்தகையப் பொய்க் குருக்களின் போதனைகளையும், மாறுபாடுகளையும், நம்பி சோம்பேறிகள் அதிகரித்துவிட்டபடியால் கல்வியின் விருத்தியும், கைத்தொழில் விருத்தியும், விவசாயவிருத்தியும் ஞானவிருத்தியும் பாழடைந்து இந்துதேசக்குடிகள் சீர்கெடுவதுடன் இந்துதேசமும் சிறப்புக் குன்றிபோய்விட்டது. ஆதலின் நமதன்பர்கள் மதக்கடை பரப்பி சீவிக்கும் பொய்க்குருக்கள் போதனைகளை நம்பி வீண்மோசம்போகாது மெய்க்குருக்களாகத் தோன்றிநிற்கும் பிரிட்டிஷ் ஆட்சியாரின் போதனையில் நிலைத்து சீர்பெற வேண்டுகிறோம்.

- 4:18; அக்டோபர் 12, 1910 -

60. பரதேசத்தில் தன்மம் போதித்தது

வினா : பண்டை காலத்தில் பிராமணரென்போர் சைனா, ஜப்பான் முதலிய தேசங்களுக்குச் சென்று பௌத்ததன்மங்களை போதித்து அதேயிடத்தில் சமாதி அடைந்திருப்பதாகவும், அச்சமாதி பீடம் நாளதுவரையிற் காணப்படுகிற தென்றும் சில இங்கிலீஷ் பத்திரிகைகளிலும் தமிழ்ப் பத்திரிகைகளிலும் வரைந்திருப் பதைக் கண்டேன். அவ்வகை சரித்திரம் ஏதேனும் உண்டா அது மெய் சரித்திரமா.

கோ. வேதாஜலம், புரசைவாக்கம்.

விடை : தாம் வினவிய சங்கை யதார்த்த சரித்திரமேயாம். ஆயினும் தற்காலம் பெண்சாதி பிள்ளைகளுடன் இகபோகத்திருந்து அனந்தம் பிறவிக்கு ஆளாகும் வேஷப்பிராமணர்கள் அவ்வகை பரோபகாரங்கொண்டு பல தேசங்களுக்குச்சென்று தன்மம் போதித்தது கிடையாது சாதியில் தலைவர் களென வேஷமிட்டுக் கொண்டு சூத்திரனுக்கு வேதம் போதிக்கப்படாதென்னும் கட்டுப்பாடுகளை வகுத்துக்கொண்டுள்ள இவர்கள் சீனருக்கும் ஜப்பானி யருக்கும் தன்மம் போதித்திருப்பார்களென்பது மெய்யாமோ இல்லை, இல்லை, பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை என்னும் சகல பற்றுக்களையும் அறுத்து சருவ உயிர்களையும் தன்னுயிர்போல் கார்க்கும்

பரிபூரணநிலை பெற்ற இருபிறப்பாளர் களாம் யதார்த்த பிராமணர்களே அவ்வகையாக சகல தேசங்களுக்குஞ் சென்று பௌத்த தன்மங்களை பரவச்செய்திருக்கின்றார்கள். அவர்கள் வம்மிஷவரிசையோ சாக்கைய குல திராவிடர்களேயாவர்.

இத்தகைய சாக்கையகுல திராவிடர்கள் அமேரிக்கா முதலிய தேசங்களுக்குச் சென்று பௌத்ததன்மத்தைப் பரவச்செய்த சரித்திரம் அவ்விடத்திய சிலாசாசனத்தில் பதிந்துள்ளதன்றி அதன் குறிப்பு சீனர்களுடைய புராதனப் புத்தகத்திலும் பதிவு செய்திருக்கின்றார்கள். அவ்வகைச்சென்ற திராவிடர்களுக்குள் பிராமணநிலை அடைந்த ஒருவர் சீனதேசத்திலும் ஜப்பான் தேசத்திலும் சத்தியதன்மத்தைப் பரவச்செய்து அவ்விடத்திலேயே பரிநிருவாணம் அடைந்ததும் யதார்த்தம். நாளதுவரையில் அவரது அங்கலயபீடம் இருப்பதும் யதார்த்தமேயாம்.

- 4:19; அக்டோபர் 19, 1910 -

61. பௌத்த தன்ம சிலாவணக்கம்

வினா : நாம் சிலைகளை வைத்து பூஜிக்கும் இவ்வணக்கத்திற்கும், பிற சமயிகள் இந்து, கிறிஸ்தவர்கள் உருவங்களை வைத்து பூஜித்து வணங்குவதற்குமுள்ள அந்தரார்த்தமும் பேதமும் யாது.

கே. பெருமாள், K.G.F

விடை : ஜகத் குருவாகிய புத்தபிரான் உலகெங்கும் சுற்றி அறக்கதிர் விரித்து சங்கங்களை நாட்டிவருங்கால் அந்தந்த சங்கவியாரங்களில் தன்னைச் சிந்தனைச் செய்யுங்கோள் என்றாயினும் தன்னைக் கனப்படுத்துங்கோ ளென்றாயினுங் கூறியது கிடையாது. அவர் பரிநிருவாணமடைந்த நெடுங்காலத்திற்குப் பின்பு தோன்றிய சங்கத்தலைவர்கள் குடிகளைநோக்கி சக்கிரவர்த்தித் திருமகன் நம்மெய்ப்போன்ற உருவினராகத் தோன்றி நமதுமுன்னின்று சத்தியதன்மத்தைப் போதித்ததுபோன்ற ஒருருவமும், அவர் ஞானசாதனம் சாதித்ததுபோன்ற ஒருருவமும் அவர் பரிநிருவாணமடைந்த யோகசயனத்தைப்போன்ற ஒருருவமும் வியாரங் கடோரும் செய்து வைத்துக் கொண்டு குருவைக்கண்டு மாணாக்கர் ஒடுங்கி நடந்துக்கொள்ளுவதுபோல் சங்கத்துள் வாழும் சமணமுநிவர்கள் அவரது போதனா உருவத்தைக்கண்டு ஞானசாதனங்களைச் செய்துவருவதும், அவரது யோகசயன உருவத்தைக்கண்டு அவரைப்போல் யோகசயனத்தில் முயற்சிப்பதுமாகியச் செயல்களை நடத்திவந்தது இயல்பாகும். அவற்றைக் கண்டுவரும் உபாசகர்களும் அவ்வாறே மடங்களுக்குச் சென்று சற்குரு நாதனுக்கும், அவரது தன்மத்திற்கும், அவரது சங்கத்திற்கும் வந்தனை புரிந்து தங்களது சத்திய தன்மத்தின்படி சீவப்பிராணிகளுக்குத் துன்பஞ் செய்யமாட்டோம், பொய் சொல்லமாட்டோம், பிறர் பொருளை அபகரிக்கமாட்டோம், அன்னியர் தாரத்தை இச்சிக்க மாட்டோம், எங்கள் மதியைக் கெடுக்கும் மதுபானத்தை அருந்தமாட்டோமென வாக்குறுதிக்கூறி வீடேகுவது வழக்கமாகும். மற்றப்படி அச்சிலைகளைக் கண்டு எங்கள் வியாதியை நீக்கவேண்டும், எங்களுக்கு தனம் பெருகவேண்டும். எங்களுக்கு மாடு கன்றுகள் பலுகவேண்டுமென்று கேட்கவும் மாட்டார்கள். அவ்வகை எண்ணங்கொள்ளவும் மாட்டார்கள். காரணமோவென்னில், அவரவர்கள் செய்த கருமங்களை அவரவர்களே அநுபவித்துத் தீரல் வேண்டு மென்பது பிரத்தியட்சம் ஆதலின் அத்தகைய வேண்டுகோளுங்கிடையாது, வேண்டுங் கைம்மாறுக்கு லஞ்சமுங் கொடுக்கமாட்டார்கள்.

அந்தந்த மடங்களில் வாசஞ்செய்யும் சமணமுநிவர்களும் தங்களுக்கு வேண்டிய ஒருவேளை புசிப்பின்றி பணங்களை ஏனும், நகைகளை ஏனும் தங்கள் கைகளை ஏந்தி வாங்கவேகூடாது. மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை இம்மூன்றி னையும் வெறுக்கவேண்டியதே அச்சங்கத்தோர் சரதனமாதலின் தாங்களே சகல பற்றுக்களையும் அறுக்கத்தக்க உபாயங்களைத் தேடுவதுடன் உலகமக்களும் பற்றுக்களில் அழுந்தி துக்கவிருத்தி

அடையாமலிருக்கும் போதனைகளையும் செய்துவருவது வழக்கமாகும். பஞ்சசீல சாதனமே பற்றறுக்கும் பாதையாதலின் அவற்றைப் போதித்து நல்வழி காட்டிய நாதனை சிந்தித்து சீர்பெறுவதற்காக அவரது சிலா உருவங்களை கண்டவுடன் அவர் குமரபருவத்தில் சக்கிரவர்த்தி பீடத்தைத் துறந்த சிறப்பையும், அருமைந்த மனைவியை அகன்ற வல்லபத்தையும், அத்தகையப் பற்றற்ற செயலால் பரிபூரண சுகமாம் நிருவாணம் பெற்று அப்பேரானந்த சுகத்தை சகல மக்களுக்கும் போதித்து ஈடேற்றிய அன்பின் மிகுதியையுஞ் சிந்தித்துத் தாங்களும் அவரைப்போல் ததாகதம் பெருவதற்காகக் கனஞ்செய்து வருகின்றார்களன்றி வேறன்று.

தற்காலம் நமதுதேசத்தில் மண்றோ, குயின் விக்டோரியாள் எட்வர்ட் சக்கிரவர்த்தியார் இவர்களுடைய உருவ சிலைகளைக் கண்டு அவரவர்கள் வாழ்க்கைகால நீதிநெறியாம் செயல்களை சிந்தித்து வந்திப்பதுபோல் புத்தரது சிலாரூபங் கண்டவுடன் அவரது வாழ்க்கைகால நீதி நெறியாம் நற்செயல்களை சிந்தித்து வந்தித்து வருகின்றார்கள். மற்றப்படி அச்சிலைகள் இவர்களுக்கு மோட்சங்கொடுக்கும் என்றாயினும் இவர்கள் வியாதியை நீக்கிவிடும் என்றாயினும், இவர்கள் அல்லலை அகற்றிவிடும் என்றாயினும் சிந்திப்பதுங் கிடையாது, அச்சிலைகளுக்கென்று லஞ்சமாம் பரிதானம் அளிப்பதுங் கிடையாது.

இத்தகைய சிலாரூப ஆதரவைக்கொண்டே நூதனமாகத் தோன்றிய மதக்கடை வியாபாரிகள் நாலு கை, ஆறுகையுள்ள உருவ சிலைகளையும், இறக்கைகட்டி ஆகாயத்திற் பரக்கும் உருவ சிலைகளையும், உலகத்திற் காணாப் பேய்களென்னும் உருவ சிலைகளையும் செய்து தங்கள் கூடத்திற் பரப்பி பேதைமக்களுக்குக் காண்பித்து பயமுறுத்தி பொருள் சம்பாதித்து தங்கள் தேசங்களுக்கு மூட்டைக்கட்டியனுப்புவதுடன் சுதேச மதக்கடை வியாபாரிகள் தங்கள் தங்கள் பெண்சாதி பிள்ளைகளுடன் சுகமாகப் புசிப்பதற்கு அச்சிலாரூபங்களைக் காட்டி பேதைமக்களுக்குப் பொய்க்கதைகளைப் போதித்து பொருள் சம்பாதித்து அதைக்கொண்டே சீவித்து வருகின்றார்கள்.

இத்தகையப் பொருளாசை மிகுத்த பொய்க்குருக்களாம் மதக்கடை வியாபாரிகளுக்கும் பொருளாசையை நீக்கி பற்றறுக்க முயலும் மெய்க் குருக்களாம் பௌத்த சங்கத்தோர்களுக்கும் அனந்த பேதமுண்டு. இதன் மூலம் அறியவேண்டியவர்கள் இதனுள் இனி வரைந்துவரும் இந்திரதேச சரித்திரத்தால் உணர்ந்துக்கொள்ளலாம்.

- 4:20; அக்டோபர் 26, 1910 -

62. தீண்டாதவர்கள் மதத்தால் தீண்டப்படுவார்களோ தாழ்ந்தவர்கள் மதத்தால் உயர்வாவர்களோ

ஈதோர் புதின மொழிபோலும். அதாவது, ஓர் மதத்தினர் தீண்டாத நந்தனென்பவனை நெருப்பிலிட்டுச் சுட்டு சேர்த்துக்கொண்டதாக வரைந்திருக்க, தற்காலம் தீண்டாதவர்களை சுடாமற் சேர்த்துக் கொள்ளும் மதம் ஏதேனும் உளதோ. உளதாயின் தீண்டாதவன் பறையன் எனக் கூறும் பொறாமெய் மொழிகள் மாறுமோ. மாறுமென்பதாயின் திருவள்ளுவரூரில் அமைத்துள்ளக் கோவிலிலும் பறைப் பெருமாட் கோவிலென்பது மாறவில்லையே. நாயனார்களிலும் பறைநாயனார் பெயர் மாறவில்லையே. ஆழ்வார்களில் பறையாழ்வார் பெயர் மாறவில்லையே. இவ்வகையாலெல்லாம் உறுதிபெற இழிவுபடுத்தி ஓர் பெருங் கூட்டத்தோரை தங்கள் மதத்திலும் தாழ்வடையச் செய்தவர்கள் தற்காலம் அவர்களை உயர்வடையச் செய்யப்போகின்றோம் என்று வெளிதோன்றியுள்ளது விந்தையிலும் விந்தையென்றே கூறல்வேண்டும்.

காரணமோ வென்னில், ஆயிரத்திச்சில்லரைவருடங்களாக பௌத்ததன்ம விரோதத்தால் தங்களுக்குப்பராயர்களென்றுகூறி பலவகையாலும் இழிவுபடுத்தி

பாழடையச் செய்துவந்தார்கள். தற்காலம் ஏதுகாரணத்தைக்கொண்டோ அவர்களை சீர்பெறச் செய்யப்போகின்றோமென்பதினாலேயாம்.

யதார்த்தத்தில் ஏழைகளை சீர்திருத்தி சுகம்பெறச் செய்யவேண்டு மென்னும் அன்பு இவர்களுக்கு இருக்குமாயின் தீண்டாதவர்கள், தீண்டாதவர்களென்றும், தாழ்ந்த வகுப்பார், தாழ்ந்தவகுப்பாரென்றும் சொல்லிக்கொண்டே சீர்திருத்துவரோ, இல்லை. பொறாமெய்மிகுத்தோரால் தாழ்த்தப்பட்டவர்கள் கருணைதங்கிய பிரிட்டிஷ் ஆட்சியில் தன்னிற்றானே உயர்ந்துவரும் செயல்களைக் கண்டு சகிக்க ஏலாது ஏழைகளை சீர்திருத்துவது போல் அறுபது லட்சத்திற்கு மேற்பட்ட குடிகளைத் தீண்டாதவர்கள், தீண்டாதவர்களென்றும், தாழ்ந்த வகுப்பார், தாழ்ந்த வகுப்பாரென்றுங் கூறிவருவது பிரிட்டிஷ் ஆட்சியில் முன்னேறுகின்றவர்களை இன்னுந் தாழ்த்தி ஈடேறவிடாமற் செய்வதற்கு இதுவுமோர் தந்திரம்போலும்.

பொதுவாகியக் கோவிலுக்குள் விடாதவர்களும், பொதுவாகியக் குளத்து நீரை கிணற்றுநீரை மொண்டு குடிக்கவிடாதவர்களும், பொதுவாகிய அம்மட்டர்களை சவரஞ்செய்யவிடாதவர்களும், பொதுவாகிய வண்ணாரை வஸ்திரமெடுக்க விடாதவர்களுமாகிய பொறாமெயே உருக்கொண்ட இவர்களும் ஏழைகளை ஈடேற்றுவார்களோ. அவர்கள் சுகபோகத்தைக் கண்டும் சகிப்பார்களோ. அவர்களடையும் உயர் பதவிக்கு ஆனந்தமுங் கொள்ளுவார்களோ, இல்லை. இவர்களது பரிதாப நிலையும், வீடேற்று மொழிகளும், எத்தகையத்தென்னில் ஆடுகளெல்லாம் நனைகிறதென்று புலிகள் யாவும் புரண்டழுவதுபோலாம். பறையனைக்கொண்டு சங்கறாச்சாரி வேதாந்தந் தெளிந்துகொண்டதாக டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிகைக் கூறியதென சுதேச மித்திரன் கூறியது மெய்யாயின் அது கால் பறையன் ஜெகத்குருவா அல்லது சங்கறாச்சாரி ஜெகத்குருவாவென்பதை விவேகிகளே தெளிந்துக்கொள்ளல் வேண்டும்.

- 4:20; அக்டோபர் 26, 1910 -

63. தீபாவளி கார்த்திகையென்னும் பண்டிகைகள்

இதுவே தீபவதி ஸ்நானம் கார்த்துல தீபமென்று கூறப்படும். இதன் செயல்களோவென்னில், பூர்வம் இத்தேசத்தில் பௌத்த தருமம் நிறைந்திருந்த போது அந்தந்த சங்கங்களிலுள்ள சமண முநிவர்கள் தங்கள் தங்கள் ஞானவிசாரிணை காலங்களும், ஞானசாதன காலங்களும் நீங்கலாக மற்றயகாலங்களில் புற் பூண்டுகளின் குணாகுணங்களையும், தானியங்களின் குணாகுணங்களையும், விருட்சங்களின் குணாகுணங்களையும், கனி வர்க்கங்களின் குணாகுணங்களையும், நெய்களின் குணாகுணங்களையும், ஓடதிகளாம் உபரசங்களின் குணாகுணங்களையும், பாஷாணங்களின் குணாகுணங்களையும், நீர்களின் குணாகுணங்களையும், மண்களின் குணாகுணங்களையும் ஆராய்ச்சிசெய்து சுகபலன் கண்டபோது அத்தேசத்து அரசர்களுக்கும், பௌத்த உபாசகர்களுக்குந் தெரிவித்து அதனை விருத்திபெறச்செய்து சகல குடிகளுக்கும் உபயோகப்படும்படி செய்வார்கள். அத்தகைய பௌத்த சங்கத்தோர் முயற்சி நாளதுவரையில் ஜப்பானியதேசத்தில் நிறைவேறிவருகின்றது.

இந்தியதேச நடவடிக்கைகள் ஜப்பான்தேசத்திற்கு எவ்வகையாய் சென்றதென்பீரேல், இத்தேசத்திய திராவிட பௌத்தர்கள் பலதேசங்களுக்குஞ் சென்று தங்கள் வியாபாரங்களை விருத்திசெய்து வந்ததுமன்றி திராவிடருக்குள் சங்கஞ்சேர்ந்து சிரமணநிலைகடந்து பிராணசித்திப்பெற்ற யதார்த்த பிராமணர்கள் ஜப்பான் தேசத்திற்குச் சென்று அவ்விடந்தங்கள் சாது சங்கங்களை நாட்டியதுமன்றி மேற்கூறிய உபகாரவிருத்திகளையுஞ் செய்து வந்தார்கள். அத்தகைய விருத்திகள் யாதெனில்:-

அத்தேச சங்கத்தோர் ஓர் தானியத்தையேனும், கனிவர்க்கங்களையேனுங் கண்டுபிடிப்பார்களாயின் அவற்றை அரசரைக்கொண்டேனும், குடிகளைக்

கொண்டேனும் மிக்க விருத்திசெய்து தானியத்தையோ கனியையோ ஓரிடத்திற் சேர்த்து சகலமக்களையுந் தருவித்துப் புசித்து ஏழைகளுக்கும் ஈய்ந்து அக்கனிவகையைக் கண்டுபிடித்த முதல் நாளெனக் கொண்டாடி அதை விடாமுயற்சியில் விருத்தி செய்வதற்காய் அதனை கண்டுபிடித்து புசித்தநாளை வருஷந்தோருங் கொண்டாடு வது வழக்கமாம். அத்தகைய நடவடிக்கை நாளதுவரையில் அவ்விடத்தில் நடைபெற்று வருகின்றது.

அதுபோலவே நமது தேச பௌத்தசங்கத்தோர் எள்ளினது நெய்யை கண்டுபிடித்து அதைத் தலைமுழுகு தைலமாகவும் பதார்த்தங்களை வறுக்கும் நெய்யாகவும் உபயோகித்து சுகங்கண்டதின்பேரில் அதனை தங்கள் அரசனுக்குத் தெரிவிக்க அவன் அதனை அதிக விளைவித்து எள்ளி நெய்யெடுத்து தேசக்குடிகளைத் தருவித்து சகலருக்கும் போதுமான நெய்யீந்து அத்தேசத்தி லோடும் தீபவதி நதியில் ஸ்நானஞ் செய்தும் பலகாரங்களைச்சுட்டும் உபயோகித்து சுகபலன் காண்பீர்களாயின் எள்ளை மேலும் மேலும் விருத்திசெய்து நெய்யெடுத்து உபயோகித்துக் கொள்ளுங்கோளென்று உத்திரவளித்ததின் பேரில் சகல குடிகளும் எள்ளி நெய்யாம் எண்ணெய்யை சிரசில் தேய்த்து தீபவதி நதியில் முழுகியதுமன்றி அந்நெய்யில் பலகாரங்களும் சுட்டுப் புசித்து சுகங்கண்ட நாளை வருஷந்தோருந் தீபவதி ஸ்நானமெனக் கொண்டாடி பலகாரஞ்சுட்டு அன்பர்கள் வீட்டிற்கு இவர் களனுப்புவதும், இவர்கள் வீட்டிற்கு அவர்களனுப்புவதுமாகிய வழக்கத்தைப் பெருக்கி எள்ளிநெய்யை விருத்தி செய்துக்கொண்டு வந்தார்கள்.

தீபவதிஸ்நானமென்பதை தீபவொளி, தீபாவெளி ஸ்நானமென மாற்றிவிட்டார்கள். கார்ணமோ வென்னில், மாவலிமன்னன் பேரொளியால் தீபவொளியெனக் கொண்டாடிய வார்த்தையைத் தீபவதி ஸ்நானத்தில் மாற்றி எள்ளிநெய்யின் இஸ்நானத்தை மறைத்து தீபாவெளி பண்டிகையென வழங்கிவருகின்றார்கள்.

கார்த்திகைத் தீபமோவென்னில் சமணமுநிவர்காளல் ஆமணக்கு நெய் கண்டுபிடித்து அத்தேசத்து அரசனிடமளிக்க அவ்வரசன் இவ்வாமணக்கு நெய்யின் தீபத்தால் குடிகளுக்கும் மற்றும் சீவராசிகளுக்கும் ஏதேனும் துன்பம் விளையுமோ வெனக் கருதி, அத்தேசத்திலுள்ள அண்ணாந்து மலையினுச்சியில் பள்ளத்தை வெட்டி அதில் ஆமணக்கு நெய்யைவிட்டு பெரும் வத்திகள் போட்டு தீபமேற்றி இரவும் பகலும் மூன்றுநாள் எறியவிட்டு அவ்விடம் பார்த்தபோது அங்கு சூழ்ந்திருக்கும் ஆடுமாடுகளுக்கும் மற்ற பட்சிவகை களுக்கும் மநுக்களுக்கும் யாதொரு கெடுதியும் நேரிடாதிருப்பதைக் கண்ட அரசன் ஆமணக்குப்பயிர் அதிகவிளைவித்து அதன் நெய்யெடுத்து குடிகளெல் லோருக்குங் கொடுத்து வீடுகடோருந் தீபமேற்றி இருளை விளக்கி ஒளியில் வாழ்க்கைபுரியுங் கார்த்துலதீபம் ஏற்றுங்கோளென்று ஆக்கியாபித்தான். குடிகள் யாவரும் ஆமணக்கு நெய்யைக் கொண்டுபோய் தங்கள் வீடுகளுக்குள் அத்தீபத்தை ஏற்றுவதற்கு பயந்து வெளியிலே மூன்றுநாள் எரியவிட்டு யாதொரு துன்பமூங் காணாது சுகங்கண்டபடியால் வீட்டுக்குள் தீபமேற்றும் வழக்கத்தை அநுஷ்டித்ததுமன்றி தேசத்தோர் ஆமணக்குநெய்யை மாறாது விருத்தி செய்வதற்காக வருஷந்தோரும் கார்த்துலதீபமெனக் கொண்டாடிவந்தார்கள். அப்பெயர் தற்காலம் மாறி கார்த்திகைத்தீபமென்று வழங்கியதற்குக் காரணமியாதெனில்: கார்த்திகை மாதத்தில் ஆமணக்குத் தீபமேற்றியதாதலின் இருளை விலக்கும் கார்த்துலதீபப் பெயரை மாற்றிக் கார்த்திகைத் தீபமென வழங்கி வருகின்றார்கள்.

பௌத்தர்களின் உலகவிருத்திச்செயல்களை வேஷப்பிராமணர்கள் மாற்றி தங்கள் சுயவிருத்திக்கான ஏதுக்களைத் தேடிக்கொண்டபடியால் எள்ளிநெய் விருத்தியும், ஆமணக்கு நெய் விருத்தியும் கெட்டு நாளுக்குநாள் நசிந்து வருகின்றது.

- 4:22; நவம்பர் 9, 1910 -

64. பௌத்த தன்ம போதமும் அவற்றைக் கேட்போர்கள் நாதமும்

ஓர் போதகர் ஐரோப்பா கண்டத்தைப்பற்றி போதிப்போமெனக்கூறி அவை முடிந்தபின்னர் காலமிருக்குமாயின் அமேரிக்கா கண்டத்தைப்பற்றியும், ஆசியா கண்டத்தைப்பற்றியுங் கூறுவர். அவ்வகைக்கூற்றால் கேட்போருக்கு லாபமும் போதிப்போருக்கு நஷ்டமுமேயன்றி வேறில்லை. அத்தகைய போதத்தைக் கேட்போர் போதகருக்கு நன்றியறிந்த வந்தனஞ் செய்ய வேண்டியதை விடுத்து அவரைப் புறங்கூறி நாதமிடுவது பொறாமெய்க் கூற்றேயாம்.

அதாவது ஓர் பிரசங்கியார் போதத்தைக் கேட்கப்புகுவோர் சுத்த இதயத்துடன் சென்று போதத்தை கிரகிப்பாராயின் அன்னம்போல் நீரென்னும் வீண்போதத்தை அகற்றி பாலென்னும் பிரயோசனத்தைக் கிரகித்து சுகானந்தம் பெறுவர். அங்ஙன மின்றி போதங் கேட்கப் போம்போதே விரோத சிந்தைகொண்டு கேட்பதாயின் சேருநீரும்போல் கலக்குற்று அவிரோதமற்று சகோதரவாஞ்சையாம் அன்புஞ் செற்று தனக்குத்தானே துவேஷத்தைப் பெருக்கிக்கொள்ளுகின்றார்கள். இத்தகைய துவேஷநிலை தன்னைத்தானே துக்கத்திற்கு ஆளாக்கிவிடுமன்றி போதகருக்கு அத்துக்கம் அணுகாதென்பது துணிபு.

பௌத்த சங்கத்தோராம் சமண முநிவர்கள் வரைந்துள்ள நூற்கள் யாவிலும் கடவுளென்றும், தெய்வமென்றும், சாமியென்றும் வரைந்திருக்க அம்மொழியை சிரமேற்கொண்டு ஆண்டுவரும் பௌத்தர்கள் தெய்வமில்லை யென்றும், கடவுளில்லை யென்றுங் கூறுவரோ. ஆதியங் கடவுளும், ஆதி தெய்வமும் புத்தராகவேயிருக்க அவரை இல்லையென்று துணிந்துங்கூறுவரோ. ஒருக்காலுங் கூறார்கள். கடவுளென்னு மொழியும், தெய்வமென்னு மொழியும் பௌத்தர்களாலேயே தோன்றி பௌத்தர் களாலேயே வரைந்து, பௌத்தர்களாலேயே மொழிந்தும் வருபவற்றை ஏனைய மதத்தோர் ஏற்று அதன் பொருள் விளங்காது வீணேநிந்திப்பதில் யாது பயன்.

மக்களது நற்செயலைப்பற்றிய மொழிகளை வேறுருசெய்து மனோபிராந்தியால் சிந்திக்கினும் மனுவுருவாய சிந்தனையாமன்றி வேறுருவே ண்டாரென்பது திண்ணம். அதற்குமோர் தாட்டாந்தங் கூறுவாம். அதாவது லண்டன் பார்லிமெண்டு மெம்பராயிருந்து காலஞ்சென்ற சர்சார்ளஸ் பிராட்லா என்பவர் அவருடைய மிக்க நேயரான ஓர் சுத்தோலிக்குப் பாதிரியார் வீட்டிற்குச் சென்று வார்த்தையாடிக்கொண்டிருக்கும்போது அவருடைய நேயகூட மத்தியில் ஓர் விருத்தாப்பியக் கிழவனைப்போல் ஒருபடமும் அவரருகில் ஓர் சிறு குழந்தையும் இருப்பதுபோன்ற உருவம் அமைக்கப்பெற்றிருந்ததாம். அப்படத்தைக் கண்ட பிராட்லா என்பவர் பாதிரியாரைநோக்கி ஐயா இப் படம் யாருடையதென்றாராம். பாதிரியார் சற்று நிதானித்து இப்பெரியவர் பிதா, இக்குழந்தை, கிறிஸ்துவென்று கூறினாராம். அதற்கு பிராட்லா மறுதலித்துப் பிதாவென்றால் உங்கள் (காடோ) என்றாராம். அதற்குப் பாதிரியார் ஆமென்று கூறியபோது பிராட்லா பாதிரியாரைநோக்கிக் கிறிஸ்துவானவர்க் குழந்தையாய் இருக்கும் போதே உங்கள் பிதாவென்னுங் (காடானவர்) இவ்வளவு விருத்தாப்பியக் கிழவனா யிருந்தபடியால் இதுவரையில் அவர் இறந்துபோயிருப்பாரல்லோவென்று கூறினாராம். அதை வினவிய பாதிரியார் நகைத்து எனது பிரியமான நேயரே, மனித உருவத்தைக்காட்டி மனிதர்களுக்கு மதி கூறவேண்டுமேயன்றி மனிதனையன்றி வேறுருகொண்ட பிதா இல்லையென்று கூறினராம். இதன் சரித்திர வாக்குவாதத்தை அவரது நாஷனல் ரீபார்மரென்னும் பத்திரிகையிற் காணலாம்.

இத்தகைய திருட்டாந்த தாட்டாந்தங்களைக் கொண்டே மனிதவுருவத்தைச் சுட்டி அதன் செயலால் கடவுளென்னு மொழியும், தெய்வமென்னு மொழியுந் தோன்றியுள்ளதென்பதைத் தெள்ளறத் தெளிந்துக்கொள்ளலாம். அவற்றி னந்தரார்த்தங்களைவிசாரித்துணராது பௌத்தர்களால் வகித்துள்ளக்

கடவுளென்னு மொழியையும், தெய்வமென்னு மொழியையும் ஏற்று அதன் பொருளுணராது பௌத்தர்கள் கடவுளில்லை, தெய்வமில்லை என்று கூறுவதாக விதண்டவாதஞ் செய்வதழகின்மெயேயாம். மயிலை திருக்குளத்துத் தாமரைப்பூ புதிதோ பழயதோவென வினவில், கண்டறிந்து புதிது அல்லது பழயதென்று கூறிவிடலாம். அங்ஙனமின்றி ஆகாயப்பூ பழயதோ புதியதோவென வினவுவார்களாயின் ஆகாயப்பூ இல்லை யென்னும் விசாரிணை யற்ற மந்தமதிகள் வினாவென உணர்ந்து மவுனமுறுவது சுவாபம். மறுத்துங் கேட்பார்களாயின் இல்லையென்றே துணிந்து கூறுவர்.

அதுபோல் மநுமக்களையன்றி மக்களையும், மலைகளையும் உண்டுசெய்த கடவுள் ஒருவரிருக்கின்றாராவென உசாவுவார்களாயின் அதனைக் காட்சியிலும், அநுபவத்திலும் உணராத மெய்யர்கள் மவுனஞ் சாதிப்பார்கள். மறுத்துங் கேட்பார் களாயின் இல்லையென்றே துணிந்து கூறுவர். காரணமோவென்னில், உண்டுசெய்யுங் கடவுளை கண்டுசெல்லுவோர் ஒருவருமில்லாததினால் கண்டதை உண்டென்றும், காணாததையில்லை யென்றுங் கூறுவது பௌத்தர்களின் நெறியாகும்.

சருவ சீவர்களிடத்தும் தேய்வென்னும் ஒளியுண்டு. அதனழியா நிலை கண்டோர் சருவசீவர்களிலும் தெய்வம் நிறைந்துள்ள தென்னிற் பொருந்தும். சருவசீவர்களிடத்தும் அன்பென்னும் சிவமுண்டு. அதன் பெருக்க சுகங் கண்டோர் சருவசீவர்களிலும் சிவம் நிறைந்துள்ளதென்னிற் பொருந்தும். சருவ சீவர்களிடத்தும் நன்மெ யென்னுங் கடவுளுண்டு. நன்மெயின் சுகச்செயலைக் கண்டோர் சருவசீவர் களிலுங் கடவுள் நிறைந்துள்ளதென்னிற் பொருந்தும்.

இத்தகையுணர்ந்து கூறும் வாக்கியத்தை பௌத்தர்களும் ஏற்பர். மேற்கூறியுள்ள வாக்கியங்களின் அந்தரார்த்தங்களை உணராது தன்செயலற்று ஏனையோன் செயலொன்று உண்டென்பதை பௌத்தர்கள் இல்லையென்றே துணிந்து கூறுவர். அக்கூற்றின் நீதிபோத முணராதோர் பௌத்தர்கள் கிறீஸ்துமார்க்கத்தையுந் தூஷிக்கின்றார்களென்று தூற்றுவர் அத்தகையோர் தூற்றினை அறியாதோர் ஏற்பாரன்றி அறிவுடையார் ஏற்காரென்பது திண்ணம்.

பௌத்த தன்மத்தினின்றே கிறீஸ்துவின் தன்மம் தோன்றியுள்ளதென்பது அலக்சாண்டர் சரித்திரத்தாலும் தீபேத்திற்கும் ரோமைக்குமுள்ள யாத்திரா சரித்திரத்தாலும் உலகெங்கும் பிரசித்திப்பெற்றிருக்க பௌத்தர்கள் கிறிஸ்துவின் மார்க்கத்தை தூஷிப்பரோ, ஒருக்காலுந் தூஷிக்கமாட்டார்கள்.

தற்காலம் சில பௌத்தர்களுக்குள் யாவரேனும் கிறிஸ்துவின் மார்க்கத்தை தூஷித்திருக்கின்றார்களென்பதாயின் தன்னை அடிப்போனை அடிக்காவிடினுந் தடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாதலின் தன்னைக்காக்கு நூல் தூஷணையாகாது. மற்றும் அவர்கள் அறியாமெயால் இவர்களை தூஷிக்கவும் இவர்களறியாமெயால் அவர்களை தூஷிக்கவும் ஏற்பட்டிருக்குமேயன்றி தோன்றிய ஏதுவை உணர்ந்தபின்னர்தோற்றத்தை தூஷிக்கமாட்டார்கள்.

ஏதுக்களை எவ்வகையால் உணர்வரென்னில் கத்தோலிக்குக் கிறீஸ்தவர் களுக்குள் புருஷர்கள்மடமென்றும், இஸ்திரீகள் மடமென்றும் தோன்றியதற்கு யேது பௌத்தமடங்களேயாகும். அதன் காலமும், சரித்திரமும், லூயிஸ் அலக்சாண்டர் காலமும், லூயிஸ் அலக்சாண்டர் சரித்திரங்களுமேயாம்.

பௌத்த போதகர்கள் நீங்கள் பௌத்தர்களானால் தான் சீர்பெறுவீர்களென்று கூறுகின்றார்கள். இதுவும் நியாயமோ என்கின்றார் களாம், அதுவும் நியாயமேயாம். காரணமோவென்னில், பஞ்சசீலம் புரிபவர்களே பௌத்தர்க ளாவர். ஒருவன் எம்மதத்தோனாயினும், எச்சமயத்தோனாயினும் சீவப்பிராணிகளைத் துன்பஞ் செய்யாமலும், பொய்சொல்லாமலும், அன்னியர் பொருளை அபகரிக்காமலும், அன்னியர் மனையாளை விரும்பாமலும், மதியை மயக்கும் லாகிரி பானத்தை அருந்தாமலும் இருப்பானாயின் அவன் பௌத்தனேயாவன்.

பஞ்சபாதகங்களை அகற்றுங்கோளென்பதும் பௌத்தர்களாகுங்கோள் என்பதும் ஒருபொருட்கிளவியாதலின் அன்பர்களை நோக்கியும், வற்புறுத்தியும்

நீங்கள் பௌத்தர்களாகுங்கோளென்று கூறுவது மக்கள் சீர்திருத்த முதன்மொழி யாதலின் விவேகிகளும், சீர்திருத்தக்காரர்களும் அவற்றை சிரமேந்தி ஆனந்திப்பார்கள். பஞ்சபாதகத்தோர் அம்மொழியை பழித்தும் புறங்கூறியும் அவலம்பிப்பார்கள். ஆதலின் பௌத்த போதனாசிரியர்களும், பௌத்ததன்மப் பிரியர்களும், பௌத்த உபாசகர்களும் பஞ்சபாதகர்களின் புகழ்வையும், இகழ்வையும் நோக்காது சத்தியதன்மத்தைப் பரவச்செய்யும்படி வேண்டுகிறோம்.

- 4:23; நவம்பர் 16, 1910 -

65. சுடலைச்சடங்குகள்

வினா : இத்தேசத்தோர்களாகிய நம்மவரில் யாரேனும் இறந்து வீட்டிலிருந்து சுடலைக்கெடுத்துச்செல்லும்போது அரிச்சந்திரன் கோவில் வரைக்கும் பிணம் வீட்டுப்பக்கம் பார்க்கும்படியாகவும், அரிச்சந்திரன் கோவிலண்டை இறக்கியவுடன் வெட்டியான் வந்து நின்று சில வசனங்களைச் சொல்லி கடைசியாக காளியம்மா கதவைத்திற அரிச்சந்திரா வழிவிடு என்பதின் மூல காரணத்தையும் அப்புறம் பிணம் சுடுகாட்டைப் பார்க்கும்படி எடுத்துச்செல்கிறார்களே அதின் மூல காரணங்களையும் விளக்கிக்காட்ட வேணுமாய்த் தங்கள் மேலான கனத்தைக் கோருகிறேன்.

வி.டாம். பட்லர், K.G.F. ஆஸ்பிட்டல்

விடை : தாம் வினவியுள்ள அரிச்சந்திரன் சங்கை அடியோடு பொய்யாதலின் அவன் சுடலையில் வழி விடுவதும், காளி கதவைத்திரப்பதும் கட்டுக்கதையேயாகும்.

அத்தகையக் கதை தோன்றியக் காரணமோவென்னில், விசுவாமித்திரன் மூச்சியினின்று இரண்டு பறைச்சிகள் பிறந்தார்களென்றும், சுடலை காக்கும் வீரவாகு பறையன் ஒருவன் இருந்தானென்றும் ஓர் கட்டுக்கதையை ஏற்படுத்தி பறையர்களென்னும் சாதியோர் பூர்வத்திலிருந்தே வருகின்றார்களென்று பூர்வ பௌத்தர்களை சீரழிப்பதற்காக சுடலையில் அரிச்சந்திரன் என்னுமோர் உருவு செய்து வழியில் வைப்பதுமன்றி குழி வெட்டவும், பிணஞ் சுடவுங் கார்த்திருக்கும் வெட்டியானுக்கும் ஓர்வகைப் பாடலைக் கற்பித்து பிணத்தை எடுத்து அவ்விடஞ் சென்றவுடன் வெட்டியானப்பாடலைப் பாடி காளியம்மா கதவைத்திர, அரிச்சந்திரா வழிவிடுமென்னும் அப்பிரயோசன மொழியை வழங்கி வருகின்றார்கள்.

மோட்சத்திற்கு வழிவிடவும், கதவைத்திரக்கவுமுள்ள அதிகாரம் வெட்டியானிடம் இருக்கின்றதென்று எண்ணி பிணத்தை எடுத்துச் சென்று அரிச்சந்திரனிடம் வைக்கவும் வெட்டியானை வழி திரக்கச் சொல்லவும் உள்ளவர்களின் கல்வியும், விசாரிணையும், யோக ஞானங்களும் எத்தகையத் தென்பதைத் தாங்களே உணர்ந்துக்கொள்ள வேண்டியதுதான்.

ஆங்கிலேயர்ப் பிணங்களைப் புதைக்கும் செப்பிடு துரைக்குச் சென்று அவ்விடமுள்ள வெட்டியானைக் கதவைத் திரக்கவும், வழிவிடவுங் கூறுவதாயின் அனுபவத்திற்குங் காட்சிக்கும் அம்மொழி பொருந்தும் . ஏதுமற்ற வெட்ட வெளியாம் சுடலைக்குச்சென்று கதவைத் திரக்கவும், வழிவிடவும் சொல்லுவதும் அச்சொல்லுக்காகப் பிணத்தை வைத்துக் கார்ப்பதுமாகியச் செயல்கள் யாவும் பறையனென்னும் ஓர் சாதியோன் இருக்கின்றானென்று பழிக்கவும் அவனது பேதை நிலை இவ்வளவென்று கழிக்கவுமேயன்றி வேறில்லையாகும்.

சாதித்தலைவர்கள் சுடலைக்கும், மகமதியர்கள் மயாணத்துக்கும், கிறிஸ்தவர்கள் கல்லறைகளுக்கும் கதவைத் திரக்கவேண்டிய காளியம்மாளும், வழிவிடவேண்டிய அரிச்சந்திரனும் இல்லாமல் சிலக்கூட்டத்தோருக்கு மட்டிலும் இருப்பது அவர்களைத் தாழ்த்தி அலக்கழிப்பதற்கேயாம்.

காளியம்மாளென்பவள் வங்காளத்தைச்சேர்ந்த ஓர் பெண்ணரசி. அவளது வல்லபத்திற்கும் நீதிநெறி வழுவா ஆட்சிக்கும், அத்தேசத்தோர் அவளை

தேவதையாகக் கொண்டாடி வருகின்றார்கள். வடதேசத்தோர் மிக்க சிறப்புடன் கொண்டாடுங் காளியம்மாள் தென்தேசத்தோர் சுடுகாட்டின் கதவைத் திரக்கவருவாளோ, அரிச் சந்திரன் கதையில் சுடுகாட்டிலிருந்து மறுபடியும் அரசாளப் போய்விட்டானென்று வரைந்திருக்க இவர்கள் இன்னும் சுடுகாட்டைக் கார்த்திருக்கின்றானென்று எண்ணில் அக்கதையை எழுதினவன் ஒப்புக்கொள்ளுவனோ. அக்கதையிலேனும் அரிச்சந்திரன் நாளதுவரையிற் சுடுகாடு கார்க்கின்றானென்று வரைந்திருக்கின்றதோ, இல்லை. அரிச்சந்திரன் கதையே அடியோடு பொய்யாயிருக்க அக்கதையுட் கூறாது நாளதுவரையில் அரிச்சந்திரன் சுடுகாட்டிற்கு வழிவிட்டுக் கொண்டிருக்கின்றான் என்பது அதனினும் பொய்யாதலின் தாங்கள் அவற்றைப் பொருட்படுத்தாது ஏனையோருக்கும் இப்பொய்யை விளக்கி மெய்நெறியினை நிலைக்கச்செய்வதுடன் சுடலைக்குப் பிரேதங் கொண்டுபோம்போது அரிச்சந்திரன் கல்லிடம் நிறுத்தாமலும், வெட்டியான் பாட்டிற்கு இசையா மலுஞ் சென்று பிரேதத்தைத் தகனஞ்செய்வதே அழகாம். செத்தவன் கால் கிழக்கிருந்துமென்ன மேற்கிருந்தும் என்னவென்னும் பழமொழியை உணர்ந்துக்கொள்ளுவீராக.

- 4:26; டிசம்பர் 7, 1910 -

66. தருமராஜ துரோபதை கோவில்கள்

வினா : ஐயா நமது தேசத்தில் தருமராஜா கோவில் என்றும், துரோபதைக் கோவிலென்றுங் கொண்டாடி வருகின்றார்களே அவ்விருவரும் பாரதக் கதையைச்சார்ந்தவர்களா அன்று வேறா என்பதை விளக்கி நூலாதாரத்துடனும், அவர்களைக் கொண்டாடக்கூடிய சிறப்பின் காரணத்துடனும் கண்டெழுதி அடியேனின் சங்கையைத் தெளிவிக்கும்படி வேண்டுகிறேன்.

த. கோபாலன், சித்தூர்.

விடை : பாரதத்திற் கூறியுள்ள தருமராஜனாயின் மக்கள் அவரை தெய்வமாகத் தொழவேண்டிய காரணமில்லை. அத்தகைய தெய்வ நிலையை அவர் அடைந்த வருமன்று. துரோபதையை சபையில் மானபங்கஞ் செய்யுங்கால் சகல சோதிரர்களும் கோபக்குறிப்பைக் காட்டியதாகவும், தருமராஜன் அக்கோபக் குறிப்பை வெளிக்குக் காட்டாது உள்ளுக்கு அடக்கியபோது நெல்லை அவர் முதுகின்மீது கொட்டப் பொரியாயிற்றென்று கதையுட் கூறியுள்ளபடியால் அத்தகையக் கோபாக்கினி நிறைந்துள்ள புருடன் சாந்ததேவதையாவனோ.

ஈதன்றி தனக்குள்ள பூமி ஆளவேண்டுமென்னும் அவாவின் மிகுதியால் தன்பிள்ளை வேறு தனது தம்பி அர்ச்சுனன் பிள்ளை வேறென்று எண்ணி அர்ச்சுனன் பிள்ளை அரவானென்பவனைக் கொலைச்செய்து எதிரிகளை வென்று அத்தேசத்தை ஆண்டதாக பாரதங் கூறுகின்றது. இவ்வகைப் பிள்ளையைக் கொன்று பூமி ஆண்ட பாதகனும், பூமியின் ஆசை மிக்கோனுமாய தருமராஜனைத் தெய்வமாகக் கொள்வரோ ஒருக்காலுங் கொள்ளமாட்டார்கள்.

அப்பாரதக்கதையைச் சார்ந்தவளே துரோபதையுமாதலின் அவளையுந் தேவதையாகக் கொண்டாடுவதற்கு ஏதுவுமில்லை.

மற்றும் யாவரை புருஷதேவதையாகவும், இஸ்திரீ தேவதையாகவும் இத் தேசமெங்கும் இத்தேசத்தோர் கொண்டாடி வந்தார்கள் என்னில், கல்லாலமென்னும் அரசமரத்தடியில் வீற்று நித்தியானந்த ஞானமாம் நிருவாணம்பெற்ற புத்தபிரானையே மன்னர் சுவாமி என்றும், தருமதேவனென்றுங் கொண்டாடி வந்தார்கள். புத்தபிரான் உருவினை என்றும் சிரசிற்றாங்கி பூகமரமென்னும் வேம்பு மரத்தடியில் வீற்று மேலாய ஞானமாம் நிருவாணம் பெற்ற அம்பிகாதேவியையே அறச்செல்வி என்றும், பச்சையம்மனென்றும், சிந்தா விளக்கென்றும், சிந்தாதேவி என்றும், அம்மனென்றும், சாந்ததேவதை என்றுங் கொண்டாடி வந்தார்கள். அதற்குப்

பகரமாக தருமராஜன் கோவிலினுள்ளும், அம்மன் கோவிலினுளளும் அரசமரம் வேப்பமரம் நாட்டி இருப்பதை நாளதுவரையிலுங் காணலாம்.

தருமராஜனென்று தொழுவது புத்தபிரானையும், துரோபதையென்று தொழுவது அம்பிகா தேவி என்னும் சிந்தாதேவியையேயாம்.

பின்கலை நிகண்டு

தருமராசன் முந்நிந்திரன் சினன் பஞ்சதாரைவிட்டே
அருள்சுரந் தவுணர்க்கூட்டுந் ததாகதன் ஆதிதேவன்
விரவு சாக்கையனே சைனன் விநாயகன் சினந் தவிர்ந்தோன்
அரசு நீழலி ருந்தோன் அறியறன் பகவன் செல்வன்.
மரகத வல்லிபூக மரநிழ லுற்ற வஞ்சி
பரம சுந்தரி யியக்கி பகவதி யம்மெ யெங்க
ளருகனை முடி தரித்தாளம்பிகை யறத்தின் செல்வி
தருமதேவதை பேரம்பாலிகை யென்றுஞ் சாற்றலாமே.

மணிமேகலை

சங்கதருமன்றாமெனக் கருளிய / சிந்தாவிளக்கே செழுங்கலைபாவாய்.

- 4:27; டிசம்பர் 14, 1910 -

67. பௌத்தர்களும் இந்துக்களும்

இந்தியதேச பௌத்தர்கள் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயம் சோதிரர்களே, நமது தேசத்தில் பௌத்தர்களென்றும், இந்துக்களென்றும் இரு வகுப்பாருண்டு. அவர்களுக்குள் இந்துக்கள் என்பவருக்குள் சாதியாசாரம் என்னும் பிரிவினைகளுண்டு. பௌத்தர்களுக்குள் அத்தகையப் பிரிவினைபேதங் கிடையாது.

இந்துக்களென்போர் அவரவர்கள் ஏற்படுத்திக்கொண்டுள்ள அவரவர்கள் தேவதைகளைத் தொழுது அவர்களுக்குப் பூசை நெய் வேத்தியஞ் செய்துவந்தால் மோட்சமும் சுகமும் உண்டென்பார்கள். பௌத்தர்களோ நன்மார்க்க நடையில் சீலத்தைப் பின்பற்றி ஒழுக்கத்தில் நிலைப்போர்க்கு முத்திய சுகமுண்டென் பார்கள்.

இந்துக்கள் என்போர் அவர்கள் ஏற்படுத்திக்கொண்டுள்ள வேதத்தை நம்புவதுடன் சாதியாசாரம் சமயாசாரத்தில் லைத்திருக்கவேண்டுமென்பார்கள். பௌத்தர்களோ, தங்களது பௌத்தாகமப் போதத்தின்படி பாவச் செயல்களை அகற்றி நன்மெய்க் கடைபிடித்து இதய சுத்தி உடையவர்களாகி சருவசீவர்கள் மீதும் அன்பு பாராட்ட வேண்டும் என்பார்கள்.

இந்துக்களென்போர்களுக்கு தங்கள் சாதியாசாரங்களுக்குத்தக்க சாதிப்பெயரும் தொடர்மொழியும் இருப்பதுடன் நெற்றியிலும், கழுத்திலும் சமய சின்னங்களாகும் விபூதி, திருமண், உருத்திராட்சம் முதலியன இருத்தல் வேண்டும். பௌத்தர்களோ சகல மநுக்களையும் சகோதிரரென பாவித்து சகலரும் ஒற்றுமெயின் வாழ்க்கைபெற விரும்புதலும் பஞ்சபாதங்களை அகற்றி வாழ்தலே பௌத்த சின்னமென்று எண்ணி பஞ்சசீலத்தையே தியானமாகக் கொண்டு அம்மேறை நடப்பார்கள். அதன் செயல்களைக்கொண்டு சென்னை சாக்கைய பௌத்த சங்கத்தோர்களும், கோலார் சாக்கைய பௌத்த சங்கத்தோர்களும், பெங்களூர் சாக்கைய பௌத்த சங்கத்தோர்களும், செக்கின்றாபாத் சாக்கைய பௌத்த சங்கத்தோர்களும், திருப்பத்தூர் சாக்கைய பௌத்த சங்கத்தோர்களும் இரங்கூன் சாக்கைய பௌத்த சங்கத்தோர்களும் அங்கங்கு ஒன்றுகூடி தற்காலம் எடுக்க ஆரம்பிக்கும் சென்ஸஸென்னும் குடிமதிப்புக் கணக்கில் பௌத்தர்களை வேறாகவும், இந்துக்களை வேறாகவும் பிரித்துக் கணக்கெடுக்கும்படி நமது கருணைதங்கிய கவர்ன்மெண்டாரை வினவி பௌத்தருக்கென்று வேறுகலமே பிரித்துக்கொள்ளும் ஏதுவைத் தேடுவதற்காக மேற்சொன்னபடி சங்க ஸ்தாபகரும், பொதுக் காரியதரிசியுமாகிய க. அயோத்திதாஸப் பண்டிதருக்குத் தங்கடங்கள் யேகவாக்கின் கையெழுத்துக்கள் அநுப்பி அவர்மூலமாக இராஜாங்கத்தோருக்கு விண்ணப்பம் அனுப்ப இராஜாங்கத்தோரும் அவற்றை நன்காராய்ந்து இந்த சென்ஸஸில்

பௌத்தர்களுக்கு வேறு கலம், இந்துக்களுக்கு வேறு கலம் வகுக்கத்தக்க ஏதுக்களை செய்துவிட்டு சங்கங்களின் பொதுக் காரியதரிசி க. அயோத்திதாஸப் பண்டிதர் அவர்களுக்கும் மாறுத்திரம் அநுப்பிவிட்டார்கள்.

இத்தகையப் பிரிவினைகளைக் கண்டுநடந்துக்கொள்ள வேண்டியக் காரணங்கள் யாதெனில், சாதிப்பெயர்களும், சாதித் தொடர்மொழிகளும், சமயச் சின்னங்களும் இந்துக்களுக்கு உரியவைகளேயன்றி பௌத்தர்களுக்கு உரியவைகளன்றாம்.

ஆதலின் பௌத்தர்களென்று சொல்லுவோர்களை ஏனையோர்கள் நீங்கள் என்னசாதி என்று கேட்கும் ஆதாரமுங்கிடையாது, அவர்களும் தங்களுக்கு சாதியாசாரம் இல்லாதபடியால் தங்களை ஓர் சாதியானென சொல்லவும் மாட்டார்கள்.

மற்றப்படி பௌத்தர்களென்று கூறியவுடன் அதனை எழுதிக் கொள்ளாமல் பௌத்தர்களை இழிவுபடுத்தவேண்டுமென்று எண்ணி நீங்கள் முன்பென்னசாதி பின்பென்ன சாதி என்றும் பயமுறுத்தியும் கேட்பார்களாயின் தக்க சாட்சி ஆதாரங்களுடன் ராஜாங்கத்தோருக்கு விளக்கி அதற்குத்தக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்படும். அதுவுமன்றி பௌத்தர்களைத் தாழ்த்தி நாசமடையச்செய்வதற்காக ஓர் சாதிப்பெயரைக்குறித்து அழைத்தாலும் ஓர் சாதிப்பெயரைக்குறித்து பத்திரிகை களிலேனும், புத்தகங்களிலேனும் பிரசுரஞ்செய்தாலும் வேண முயற்சிகளை நிறை வேற்றப்படும் இவற்றை இந்தியதேச பௌத்தர்கள் ஒவ்வொருவரும் நன்குணர்ந்து சத்தியதன்மத்தில் நடந்து இராஜ விசுவாசத்தில் நிலைத்து சீர்பெறுவீர்களென்று நம்புகிறோம்.

இங்ஙனம், சாக்கைய சங்காதிபர்கள்.

- 4:28; டிசம்பர் 21, 1910 -

68. பௌத்தர்களின் நம்பிக்கை

புத்தரையே பகவனென்றும், ஈசனென்றும், கடவுளென்றும், சிவனென்றும், பிரமமென்றும், பரமென்றும், திருமாலென்றும், அவரது நற்கிரியைகளுக்குத் தக்க ஆயிரநாமங்களை அளித்து சகஸ்திரநாம பகவனென்றும், ஆயிரநாமத் தாழியனென்றுங் கொண்டாடிப் பூர்வத் தமிழ் நூற்கள் யாவிலும் வரைந்துள்ள போதினும் அவரது அளவுபடா அன்பிற்கும், குறைவுபடா ஞானத்திற்கும் பொதுவாய புண்ணிய திருமேனிக்கும் அருள் நிறைந்த உள்ளத்திற்கும், மலைவுபடா அவரது வாய்மொழிக்குமே அமர்ந்தும் அன்புகொண்டும் ஆனந்தமாக சிந்தித்தும் அவரது போதனா நீதிநெறி வாய்மெய் வழுவாது நடந்துவருவார்களன்றி, பகவனே எங்கள் பாவத்தைப் போக்கவேணும், கடவுளே எங்களைக் காப்பாற்றவேண்டும், பிரமனே எங்களைப் பாதுகாக்க வேண்டும், சிவனே எங்களை சீர்திருத்தவேண்டுமென சிந்திக்க மாட்டார்கள். காரணமோவென்னில், தாங்கள் செய்த தீவினையைத் தாங்களே அநுபவிக்க வேண்டுமென்னும் நம்பிக்கையும் அநுபவமும் உடையவர்களாதலின் தங்கள் தீவினைகளை வெல்லுதற்கு அறவாழியானின் அறமொழியில் அஞ்சலியஸ்தராகி அறநெறியில் நடந்து தாங்களே அத்தீவினையை வெல்லவேண்டிய தேயன்றி மற்றெவராலும் அத்தீவினையைப் போக்கலாகாதென்பதே நம்பிக்கையாகும்.

இதுவே பௌத்ததன்மத்தின் விசேஷ நம்பிக்கையாதலின் அன்னியர் பொருளை அபகரித்து அதிகாரிகளிடம் அகப்பட்டுக் கொண்டு ஆண்டவனே என்னைக் காப்பாற்றவேண்டு மென்றால் காப்பாற்றுவரோ, இல்லை அன்னியர் பொருளை அபகரிக்கலாகாதென்று கூறியிருந்தும் அம்மொழியை சிரமேற்று நடவாது திருடிவிட்டு தண்டனை நேருங்கால், ஆண்டவனே, ஆண்டவனே, என்பதின் பயன் செய்த தீவினைக்குத் தக்க தண்டனையை அநுபவிக்க வேண்டியதே பயனாதலின் பௌத்தர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் செய்த தீவினைக்கு பயன் தாங்களே அநுபவித்துத்தீரல் வேண்டுமென்பதே நம்பிக்கை யாகும். தங்களது துற்செயலாந் தீவினையை ஏனையோர் வந்து தீர்ப்பார் களென்று கனவிலும் நம்பமாட்டார்கள்.

இத்தகைய சிறந்த நமபிக்கை யற்று தங்கள் தங்கட் கொடூரச்செயலால் கொலை, களவு, குடிகேடு, வஞ்சினம், விபசாரம், பொய், கடுஞ்சொல் முதலியத் தீவினைகளைச் செய்துவிட்டு ஏனைய வொருவர் அத்தீவினைகளை நீக்கிவிடுவாரென்னும் பொய் நம்பிக்கை அதிகரித்துவிட்டபடியால் நாளுக்கு நாள் பொய்யும், திருடும், குடியும், விபச்சாரமும், கொலையும் அதிகரித்து வாழ்க்கைத்துணை நயமின்றி ஒருவருக்கொருவர் நம்பிக்கையற்று சீர்கெடுவதுடன் வித்தையும் புத்தியுமற்று, யாதொரு தொழிலுமற்று சாமி கொடுப்பார், சாமிகொடுப்பாரென்னுஞ் சோம்பலேறி உள்ளதுங் கெட்டுப் பாழடையும் நம்பிக்கைகளே பலமாகிவிட்டது.

இத்தகைய சீர்கேட்டிற்கு மூலமாம் பாழ் நம்பிக்கைகளை விட்டு முயற்சி திருவினையாக்குமென்னும் நல்முயற்சி, நல்லூக்கம், நற்கடைபிடி என்னும் பௌத்தர்களது நம்பிக்கையைப் பின்பற்றி அதன் பயனைக் கண்டடைவார் களென்று நம்புகிறோம்.

"அவர்கள் அளந்ததையே அவர்களுக்களக்கப்படும்".

"தினையை விளைத்தவன் தினையையே அறுப்பன்"

அவனவன் செய்வினைக்கு இதுவே அநுபவமுங் காட்சியுமாகும்.

- 4:31; சனவரி 11, 1911 -

69. உபநிடதங்களிலிருந்து பௌத்த தன்மந் தோன்றியதோ

இல்லை, இல்லை. பௌத்ததன்ம ஆராய்ச்சியைக் கனம் மாக்ஸ் முல்லரவர்களும் ரையிஸ் டேவிஸ் அவர்களும் தெள்ளற விசாரிணைச் செய்யாதகாலத்தில் உபநிடதங்களிலிருந்துபுத்தன்மந்தோன்றியதாகத் தங்கள் புத்தகங்களிலெழுதி விட்டார்கள். நாளுக்குநாள் புத்ததன்ம ஆராய்ச்சியையும், பூர்வசாசனங்களையும் கண்டுணர்ந்ததின் பேரில் இப்போதவர்களெழுதியுள்ள புத்தகங்களில் புத்த தன்மத்தினின்றே சகல உபநிஷத்து சாராம்சங்களுந் தோன்றியுள்ளதென்று வரைந்துள்ளதன்றியும், தாங்கள் பிறந்து வளர்ந்த கிறீஸ்துவின் மதத்தையும் விட்டகன்று புத்ததன்மத்திற் சேர்ந்து லண்டனில் தற்காலம் புத்தசங்கங்களையும் நாட்டி சத்தியதன்மத்தைப் பரவச்செய்து வருகின்றார்கள். இதன் சங்கதியைத் தெளிவாகத் தெரிந்துக்கொள்ள வேண்டியவர்கள் லண்டனில் மூன்றுமாதத்திற் கொருமுறை வெளிவரும் "Buddhist Review" என்னும் பத்திரிகையால் தெள்ளறத்தெரிந்துக் கொள்ளலாம். ஈதன்றி வேதமின்னது, நூலின்னது, பிடகமின்னது, ஆகமமின்னது, சுருதியின்னது, உபநிடத மின்னதென் றறியாதவர்களுக்கு அதினந்தரார்த்தம் விளங்கவே மாட்டாது.

பௌத்தர்களின் முன் கலைநூலாம் திவாகரத்தால் தெள்ளறத் தெளிந்துக் கொள்ளலாம்: உபநிடதத்தின் பெயர் - உபநிடதம் வேதத்தினுட்பொருள் நுட்டம். - வேதத்தின் பெயர் -- ஆதிநூலென்பது வேதநூற்பெயரே. நூலின் பெயர் -- பிடகந்தந்திரம் நூலின் பெயரே. மற்றும் நூலின் பெயர் -- ஆகமம் பனுவல் ஆரிடம் சமயம் சூத்திர மைந்தும் நூலினைத் துலக்கும்.

இந்நூல் எவ்வகையாய்த் தோன்றியதென்னில்,

அருங்கலைச்செப்பு

என்றுமுண்டாகி இறையால் வெளிப்பட்டு / நின்றநூலென் றுணர்.

அந்நூலுள் முதல்நூல் எவையெனில்:-

யாப்பருங்கலை

விளையினீங்கி விளங்கிய வறிவன் / முனைவன் கண்டது முதலாகும்.

இந்நூலாதாரங்களால் முதனூல் தோன்றியது புத்தபிரானாலென்றே தெளிவாக விளங்கியபோதினும் முதனூ லென்னும் வேதத்தை போதித்தவர் யாரென்று விசாரிக்குங்கால்;

சீவகசிந்தாமணியில்

ஆதிவேதம் பயந்தோய் நீ / அலர் மும்மாரி பொழிந்தோய்நீ

என புத்தபிரானையே சிந்தித்து விளக்கியிருக்கின்றார்கள்.

இத்தகைய முதனூலாம் ஆதிவேதத்தை போதித்தவரும் புத்தபிரான், அதனுட்பொருள் நுட்பமாம் உபநிடதங்களை விளக்கியவரும் புத்தபிரானென்றே தெளிவாகவிளங்குங்கால், கனந்தங்கிய மாக்ஸ்முல்லரவர் களும், கனந்தங்கிய ரைஸ்டேவிஸவர்களும் உபநிடதங்களினின்று புத்ததன்மந் தோன்றியதென்று முதலெழுதிய புத்தகம் முற்றும் பிசகேயாம். அஃது முழுவிசாரிணை யற்றக் காலவரைவாதலின் அவர்களது முந்நூலுக்குப் பின்னூல் தோன்றியுள்ளவற்றைக் கண்டேனுந் தெளிந்துக்கொள்ளல் வேண்டும். அங்ஙனங் கண்டுதெளியாது ஒருவ ரெழுதிவைத்துள்ளதை உடனே நம்பிக்கொள்ளுவது அழகன்று. அவரெழுதியுள்ள நூலினையும் நன்காராய்ந்து அந்நூலெழுதியுள்ள பாஷையையும் அப்பாஷையின் ஆக்யோனையும் அப்பாஷை தோன்றியக் காலவரையையுங் கண்டுணர்வரேல் பாஷையின் வரிவடிவிற்கு மூலகாரணரான புத்தபிரானே வேதபோதத்தின் உபநிடதங்களுக்கும் மூலகாரண ரெனத்தெள்ளென விளங்கும். அத்தகைய விளக்கத்தால் வேறொருவருக்கு விளக்குவதே விவேகிகளுக்கு அழகாம்.

- 4:35; பிப்ரவரி 8, 1911 -

70. தற்கால பிராமணர்கள் செய்யும் விவாகமும் முற்கால வள்ளுவர்கள் செய்யும் விவாகமும் இந்து விவாகமாமோ

ஒருக்காலுமாகாவாம். இந்துமதமென்பது யாவருடையதென்னில், தற்காலம் பிராமணரென்று சொல்லிக் கொள்ளுவோர் போதனைகளுக் குட்பட்டதும், அவர்களது மதத்திற்கு அடங்கியதும், அவர்கள் வருத்துப்போக்குக்கு இடமாயதும், அவர்களது ஆலயத்துக்குட் பிரவேசிக்க சுதந்திரமுடையதும், பிராமணர்களென் போர்களுக்கு தானங்கொடுக்கக் கூடியவர்களுக்கும், பிராமணர்களென் போர்களையே, தெய்வமாகவும், குருவாகவும் சிந்திக்குங் கூட்டத்தோர்கள் யாரோ அவர்களே இந்துக்களென்று அழைக்கப்படுவார்கள் பிராமணர் களென்று சொல்லிக் கொள்ளுவோர் முதலாக நின்று விவாகக்கிரியைகளை நடாத்தி மங்கல்யம் சூட்டுவதாயின் அதையே இந்துவிவாகமென்று கூறப்படும். பிராமணர்களென்போர் வந்துமுன்னின்று செய்யப்படாத விவாகங்களை இந்து விவாகங்களென்று சொல்லுவதற்கு ஆதாரமில்லை.

இந்துக்களென்னும் ஆரியவகுப்போர் இத்தேசத்தில் வந்து குடியேறுவதற்கு முன்பிருந்த பௌத்தவரசர்களும் பௌத்த வியாபாரிகளும், பௌத்த விவசாயிகளு மாகிய முத்தொழிலாளருக்கும் கன்மகுருக்களாயிருந்து தன்மகன்மங்களாம் விவாகக் கிரியைகளை பரம்பரையாக நடாத்தி வந்தவர்கள் வள்ளுவர்களேயாவர்.

பௌத்தர்களுக்குள் ஞானகுருக்களாம் பிராமணர் களென்றழைக்கப் பெற்றவர்கள் விவாகமுதலியக் கன்மக்கிரியைகளுக்குப் பிரவேசிக்கமாட்டார்கள். குடிகளுக்கு நீதியையும், நெறியையும், வாய்மெயையும் போதிக்கும் தன்மச் செயலிலேயே நிற்பார்கள். வள்ளுவர், நிமித்தகர், சாக்கையரென்றழைக்கப் பெற்ற, கன்மகுருக்களே விவாக முதலிய தன்மகன்மங்களை நடாத்தியும் வந்தார்கள். நாளது வரையில் நடத்தியும் வருகின்றார்கள்.

முன்கலை திவாகரம்

வள்ளுவர் சாக்கையரெனும் பெயர் மன்னர்க்குன்படு கருமத் தலைவர்க் கொக்கும்.

பின்கலை நிகண்டு

வரு நிமித்தகன் பேர் சாக்கை வள்ளுவனென்றுமாகும்.

பௌத்தமார்க்க அரசர்களுக்கும், பௌத்தமார்க்க வியாபாரிகளுக்கும், பௌத்தமார்க்க விவசாயிகளுக்கும் வள்ளுவர், சாக்கையர் நிமித்தகரென் றழைக்கப்பெற்றவர்களே கன்மகுருக்களாயிருந்து விவாக முதலிய தன்மகன்மங் களை நிறைவேற்றியுள்ளவற்றை மணிமேகலை, சீவகசிந்தாமணி, சூளாமணி,

சிலப்பதிகார முதலிய சமணமுனிவர்கள் நூலால் தெரிந்துக்கொள்ளலாம், தற்காலந் தோன்றியுள்ள இந்துமதச் செயல்களுக்கும் பூர்வபௌத்தமதச் செயல்களுக்கும் அனந்த பேதமுண்டு.

தற்காலந் தோன்றியுள்ள இந்துமதம் சிறப்புற்றும், பூர்வபௌத்ததன்மம் சிறப்புக்குன்றியும் இருக்கின்றபடியால் பூர்வசரித்திரங்களை ஆராய்ந்தறியாதவர்கள் எங்களது இந்துமதக் கிரியைகளைத்தான் வள்ளுவர்கள் செய்கின்றார்களென்று கூறுவதுமுண்டு. அத்தகையோர் கூற்று பௌத்ததன்ம கன்மங்களை அறியாதோர் வாய்மொழியேயாகும். பௌத்தர்களின் தன்மங்களை நன்காராய்ந்தும் உணர்ந்துமிருப்பார்களாயின் விவாககாலங்களில் அரச ஆணிக்கால் நடுவதும் சிந்தாவிளக்காம் குடவிளக்கேற்றுவதும், விவாகமண்டபத்தில் இந்திரத்தியான பலவர்ண நீலச்செப்புகள் வைப்பதுமாகியச் செயல்கள் பௌத்த தன்மச் செயல்களேயன்றி இந்துக்களின் செயல்களல்ல வென்று தெள்ளறத் தெளிந்துக்கொள்ளுவார்கள். பௌத்தர்களது கிரியைகளி னின்று சிலவற்றை தற்கால பிராமணர்களேற்றுக் கொண்டு அக்கிரியைகள் யாவும் எங்கள் இந்துமதத்தைச் சார்ந்ததென்றும் கூறுவது ஆதாரமற்ற மொழியேயாம்.

வள்ளுவர்கள் நடாத்தும் விவாகக் கிரியைகளை இந்துக்கள் விவாக சம்மந்தத்துடன் சேர்ப்பதற்கு எள்ளளவேனும் இடங்கிடையாது. பூர்வ வள்ளுவர்களின் கிரியைகளை தற்கால பிராமணர்கள் கிரியைகளுடன் பொருந்தவைக்கவுமாகாது.

தற்கால பிராமணர்களைக் கண்டவுடன் வள்ளுவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களுங்கூடி அடித்துத்துரத்தி சாணசட்டியை உடைப்பதும், வள்ளுவர்களையும் அவர்களைச் சார்ந்தவர்களையும், தற்காலப் பிராமணர்கள் தங்கள் வீதிகளிற் கண்டவுடன் அவ்வழியே வரவிடாமல் அடித்துத் துரத்துவதுமாகிய விரோதச் செயல்கள் நாளது வரையில் அநுபவக்காட்சியாய் இருப்பதையுணர்ந்தும், வள்ளுவர்களால் நடாத்தும் விவாகக்கிரியைகளை இந்துக்களது விவாகக் கிரியைகளுடன் சேர்ப்பது முற்றும் பிசகேயாம். இந்துக்களென்னும் தற்கால பிராமணர் களுக்கும் வள்ளுவர்களென்னும் பூர்வகன்ம குருக்களுக்கும் அவர்களைச் சார்ந்த வர்களுக்குமுள்ளத் தீராப்பகை நாளது வரையிலுமிருக்க இருவர் விவாகமும் ஒன்றாகாதென்பதுதுணிபு.

- 4:37, பிப்ரவரி 22, 1911 -

71. சாமிலஞ்சம் குருலஞ்சமே சதாலஞ்சமாக முடிந்தது

ஓர் மனிதனுக்கு சுரரோகம் உண்டாகுமாயின் அதன் தோற்றத்திற்குக் காரணமெது. உஷ்ணமா சீதளமா வாதமா என ஆராய்ந்து அதற்குத்தக்க சிகிட்சை புரியின் ரோகம் நீங்கி சுகமடைவான். அதனினும் ஒவ்வோர் சுரங்களுக்குக் கால அளவுகளுமுண்டு, அவற்றை நோக்காது பொய்க்குருக்கள் போதனைகளைக் கொண்டு, அந்தசாமிக்கு உண்டிபணம் லஞ்சங்கொடுக்க வேண்டும், இந்தசாமிக்குக் கண்ணைப்போல் கண்ணும், மூக்கைப்போல் மூக்கும், வெள்ளியினாலேனும் பொன்னினாலேனுஞ் செய்து லஞ்சங்கொடுக்கவேண்டும். அவற்றைக் கொடுப்பது மல்லாமல் அதைப் பெற்றுக்கொள்ளும் குருதட்சணையாகும் குருலஞ்சங் கூடவே கொடுக்க வேண்டும், அப்போது சுரம் நீங்கிவிடுமென்று மதக்கடை வியாபாரிகள் கூறவும் அவர்கள் பொய்ம்மதப்போத மறியாப் பேதைகள் நோய்க்கண்ட காரணகாரியங்களறியாது விக்கிரக சாமிகளுக்கு லஞ்சம், குருக்களுக்கு லஞ்சங் கொடுத்து அவர்களை சுகம்பெறச் செய்துவிட்டு லஞ்சங்கொடுப்போர் பஞ்சைகளாகி பரதபிக்கின்றார்கள்.

காற்று பெருக்குள்ளகாலத்தில் கப்பல்யாத்திரைச் செய்வதாயின் கனக் கஷ்டங்களுண்டாவது இயல்பேயாம். காற்று அடங்குநேரமடங்கி ஆறுதலடைவதும் இயல்பாம். காற்றடங்காது கொந்தளிப்பு மீறில் கப்பலுடன் சகலமும் நாசமாவது சகஜமாம். இதனை உணராத பேதைமக்கள் மதக்கடை

பரப்பி சீவிக்கும் பொய்க் குருக்களின் போதனையால் அந்தம்மாளுக்கு லஞ்சங்கொடுப்பதாகப் பிராத்தித்துக் கொண்டால் காற்றடங்கிவிடுமென வேண்டிக்கொண்டு அடங்காவிடின் சகலரும் மடிவதும், காற்று அடங்கும் நேரம் வந்தடங்கில் அதற்கென்று உண்டியில் சேர்த்துவைத்தப் பணங்களை அம்மாசாமிகளுக்கு லஞ்சங் கொடுத்து பஞ்சைகளாவதுடன் அச்சிலைகளுக்கு முதலாளிகளாக விளங்கும் பொய்க் குருக்களுக்கும் லஞ்சங் கொடுத்துப் பாழடைந்துபோகின்றார்கள். பேதைமக்களை வஞ்சித்து தங்களுக்கும் தங்கள் சாமிகளுக்கும் இலஞ்சம் வாங்கிப் புசிக்குங் குருக்களோ சோம்பலிலும் சுகசோம்பேறிகளாக சுகித்திருக்கின்றார்கள்.

அத்தகையாய் ஏழைக் குடிகளிடம் நெஞ்சிதக்கம்வையாது சாமிகளும் குருக்களுமே லஞ்சம் வாங்கிவருவதாயின் அதன் செயலைக் கண்டுவரும் கூலியாளர் முதல் எஜமானன்வரை இலஞ்சம், லஞ்சம். லஞ்சமென்னும் செயலே பெருகி சீவகாருண்யம் உபகாரமென்பதற்று கல்லையும் மண்ணையும் சுமக்கும் இரண்டணா கூலிக்காரனாயினும் அக்கூலிக்கார மேஸ்திரிகளுக்கு அவ்விரண்டணாவில் காலணா லஞ்சங் கொடுக்க வேண்டும். ஓர் எஜமானனைக் காணவேண்டி உத்தியோக சாலைக்குச் சென்று உள்ளேபோகவேண்டுமாயின் எஜமான்னன் உளரா, இலரா வெனக் கண்டறிவதற்காய் அங்குள்ள சிப்பந்தி சேவகனுக்கு ஓரணா லஞ்சங் கொடுத்தே தீரல்வேண்டும், அவ்வகைக் கொடாவிடின் எஜமானன் உள்ளதுந் தெரியாது, இல்லதுந் தெரியாது, வெளியினின்று விழிக்கவேண்டியதாதலின் இலஞ்சங் கொடுத்தேதீரும் யேதுவாகிவிடுகின்றது. ஓர் உத்தியோகங் கிடைக்க வேண்டியதாயின் முதலாவது சேவகனுக்கு லஞ்சம், ஆபீசு பெரிய உத்தியோகஸ்தனுக்கு லஞ்சம், அவன் வலது பக்கத்து உத்தியோகஸ்தனுக்கு லஞ்சம், அவன் இடதுபக்கத்து உத்தியோகஸ்தனுக்கு லஞ்சம், இத்தியாதி லஞ்சங்களுங் கொடுத்ததுபோதாது, மாதமாத சம்பளத்திலும், வாரவாரம் வாங்குங் கூலிகளிலும் லஞ்சம், மற்றும் விவசாயிகளிடம் விளையும் வாழக்காய் லஞ்சம், வாழையிலை லஞ்சம், முருங்கக்காய் லஞ்சம், பூசணைக்காய் லஞ்சம், கத்தரிக்காய் முதலிய லஞ்சங்களுடன் ஏழைகளை ஆபீசுவேலைவாங்குவதுடன் தங்கள் வீட்டுவேலை வாங்கும் லஞ்சம், ஆகிய நெஞ்சிரக்கமற்ற லஞ்சப்பரிதானங்களினால் இலஞ்சமளிப்போர் நாளுக்குநாள் கிஞ்சித்து சீரழியினும் இலஞ்சம் வாங்குவோர் தாங்கள் சீரழிவதுடன் தங்கள் சந்ததியோரும் சீரழிவதை யுணராது மேலுமேலும் இலஞ்சக்கூற்றையே பெருக்கி வருகின்றார்கள். இத்தகையக் காருண்யமற்ற லஞ்சப்பெருக்கமே தேச சிறப்பையும் தேசத்தோர் அன்பையுங் கெடுத்து நிலைகுலையச் செய்துவருகின்றது. இத்தியாதி கேடுகளுக்கெல்லாம் மூலக்காரணம் சாமிகளுக்கு லஞ்சமும் குருக்களுக்கு லஞ்சமுங் கொடுத்துவருவதேயாம். சாமிகளும், குருக்களும் லஞ்சம்வாங்கும்போது குடிகள் இலஞ்சம் வாங்குவதினால் யாதுகேடுண்டாமென்னுந் துணிபேயாம். சுயப் பிரயோசனத்தை நாடிய சோம்பேறி குருக்களின் லஞ்சப்பரிதானச் செயல்களானது சுடுகாடு சென்றும் விடாமல் நிற்கின்றது.

- 4:41; மார்ச் 22, 1911-

72. கடவுளிலையோ கடவுளிலையோ

கடவுள் என்பதின் பொருள் "நன்மெய்" அதாவது பின்கலை நிகண்டினைக் காண்க. "கடவுடேமுநிநன்மெய்ப்பேர்."

அதன் தன்மமோ யாதெனில், சகலசீவராசிகள்மீதுங் கருணைகூர்ந்து நன்மெய்புரிதல் அத்தகைய நன்மெய்புரிதற்குத் தக்க செல்வப்பொருளுங் கல்விப் பொருளும் இல்லாவிடில் சகல சீவர்களிடத்தும் நல்லவனாக நடந்துக் கொள்ளுதல் இவ்விரண்டில் ஒன்று பூர்த்தி அடைந்தவிடமே கடவுளென்னும் பொருளைப்பெறும். அங்ஙனமிராது சொற்ப தின்மெய்க் களங்கு அவ்விடம் நிலைக்குமாயின் கடவுளென்னும் பெயர் பொருந்தாவாம். அக்கடவுள் என்னும் பெயரும் நரரென்றும், மக்கள் என்றும் அழைக்கப்பெற்ற மனுக்களது

தோற்றத்தில் நிகழும் நீதிநெறி ஒழுக்கங்களில் உண்டாவதாதலின் தேவர் என்னும், ஏழாவது தோற்றமுண்டாகி கடவுள் என்று அழைக்கப்படுவதும் அத்தகையோர் பலராயின் கடவுளர்கள் என்று அழைக்கப்படுபவர்களுமானார்கள்.

இத்தகையக் கடவுளென்னும் மொழியையும் அதன் பொருளையும் வகுத்து வைத்துள்ளவர்கள் பௌத்தர்கள் என்னும் சமணமுநிவர்களே அன்றி மற்றெவரும் வகுத்துள்ளது கிடையாது.

பூர்வ பௌத்தர்கள் இத்தேசத்தில் தங்களது சத்துருக்களால் பலவகைத் துன்பமுற்று கல்வியற்றிருப்பினும் இக்கடவுள் என்னும் மொழியைமட்டிலும் மாறாமல் உச்சரித்தே வருவர்.

அதன் காரணமோவென்னில் புத்தபிரானுக்குரிய ஆயிர நாமங்களில் கடவுள் என்னும் பெயரும் அதில் ஒன்றாயதன்றி நன்மெய்க் கடைபிடித்தொழுகவேண்டும் என்பதும் வேதமொழியில் ஒன்றாதலின் பூர்வ பௌத்தர்கள் ஆதியங்கடவுளை கடவுள் கடவுள் என சிந்தித்து வந்ததுமன்றி அச்சிந்தனா ஒழுக்கத்தால் நன்மெய்க் கடைபிடிக்கும் சாதனங்களில் ஒழுகி வந்தார்கள்.

அங்ஙனமிருக்க பௌத்தர்கள் கடவுள் இல்லை என்று கூறுகிறார்கள் என்பது சுத்த பிசகேயாம். கடவுள் என்னும் மொழியும் அதன் பொருளும் அவர்களே வகுத்து அவர்களே வழங்கிவருதலால் அவற்றை இல்லையென மறந்துங் கூறமாட்டார்கள். ஆனால் கடவுளென்னும் ஓர் உருவங் கட்டைதடிபோல் சட்ட திட்டமாக உட்கார்ந்துகொண்டு உலகத்தை சிருஷ்டிப்பவர் ஒருவர் இருக்கின்றார் என்னில் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். காரணமோவென்னில் வெளிச்சத்தினின்று அம்மொழி கூறாது இருட்டினின்று கூறுகிறபடியால் அம்மொழியையுஞ் செயலையுமேற்காது தூற்றிவருகின்றனர். அதாவது அநுபவத்திற்குங் காட்சிக்கும் பொருந்தியவைகள் யாவையும் ஏற்றுக்கொள்ளுவார்கள். அவைகளே உள்ளபடி வெளிச்சமென்னப் படும். அநுபவத்திற்குங் காட்சிக்கும் பொருந்தாதது எதுவோ அவைகள் யாவையும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இதுவே இருள் என்னப்படும். ஒன்றைக் கண்டறிந்து பேசுவதே வெளிச்சமென்றுங் கண்டறியாது சொன்னதைச் சொல்லுங் கிளிபோற் பேசுவதே இருளென்றும் பௌத்த சாஸ்திரிகள் வகுத்துள்ளார்கள் மற்றும் பௌத்தர்களும் அம்மொழியை சிரமேற்கொண்டு ஒழுகிவருகின்றபடியால் இருளில் உள்ளோர் மொழியை ஏற்காது அகற்றுகின்றார்கள்.

- 4:43; ஏப்ரல் 5, 1911 -

73. மகாபோதி பௌத்தம்

வினா: பௌத்ததன்மத்தைப் பரவச்செய்யவேண்டுமென்று புதுப்பேட்டைக் கோமளீஸ்வரன் கோவிலருகே மகாபோதி சங்கமென்னும்ஓர் கூட்டத்தார் தோன்றி தன்மத்தைப் பரவச்செய்துவருங்கால் அவ்விடந் தாங்கள் வராமலும் வந்திருந்து தன்மத்தைப் போதிக்காமலுமிருப்பது எங்கள் யாவருக்கும் பெரும் ஆயாசத்தையும் சங்கையையும் உண்டுசெய்கின்றபடியால் இச் சங்கையைத் தெளிவற நிவர்த்திக்கும்படி வேண்டுகிறோம்.

வே.உ. மாணிக்கம். புரசவாக்கம்.

விடை: நமது சங்கத்தின் பெயர் சாக்கைய பௌத்த சங்கம். அவர்களுடைய சங்கத்தின் பெயர் மகாபோதி சங்கம். நமது சங்கத்தின் கருத்தோவென்னில் பொய்யாகிய சாதிக் கட்டுப்பாடுகளைக் கனவிலும் நம்பப்படாது. அதை அநுசரித்து ஒற்றுமெய்க் கேட்டை உண்டுசெய்துக் கொள்ளப்படாதென்பது துணிபு.

அவர்களது சங்கத்தின் கருத்தோவென்னில் புத்ததன்மத்தில் சாதிபேத மென்னும் செயலேயில்லாதிருக்கத் தாங்கள் புத்ததன்மம் போதித்தோமென்று கூறி அவற்றை தாழ்ந்த வகுப்போர்களுக்குப் போதிக்கப் போகின்றோமென்று தங்களைத் தாங்களே உயர்த்திக்கொண்டு புத்ததன்மமென்று கூறுகின்றார்கள்.

நம்முடைய சங்கத்தின் சத்தியதன்ம போதமோவென்னில், ஒவ்வொரு மனிதனும் நீதிநெறி வாய்மையில் நிலைத்து மெய்ப்பொருளுணர்ந்து தீவினைகளை ஒழித்து பிறவியின் துக்கத்தை ஜெயிக்கவேண்டும் என்பது கருத்தும் சத்திய சாதனமுமாகும்.

சென்னை மகாபோதி சங்கத்தோர் கருத்தோவென்னில் மெய்ப் பொருளென்பது ஒன்று கிடையாது. மறுபிறவியென்பதுங் கிடையாது. மனிதன் சாகவேண்டியதே முடிபென்றுங் கூறுவார்கள்.

இத்தகைய சாதி சம்மந்தத்திலும் தன்மசம்மந்தத்திலும் நேர் விரோதமாயுள்ளபடியால் அச்சங்கத்தற்கு வருவதிலும் வந்தும் ஏதேனும் போதிப்பதிலும் யாதொரு பயனும் இல்லாதபடியால் வராமல் நின்றுவிட்டோம். இதுவே நமது கருத்தாகும்.

அவர்கள் பௌத்தர்களென வெளிதோன்றியும் தங்களை உயர்ந்தவகுப்போர்களாக எண்ணிக்கொண்டு தாழ்ந்த வகுப்போர்களுக்கு தன்மஞ் சொல்லப்போகின்றோமென்று கூறி வெளிவந்ததை கனந்தங்கிய தன்மபாலா அவர்கள் வெளியிட்டுவரும் மாதாந்த மகாபோதி ஜர்னலில் தெரிந்துக் கொள்ளுவதுமன்றி அச்சங்கத்தில் வந்துள்ள பிக்ஷுவின் கையிலிருக்குங் கடிதத்தினாலும் அறிந்துக் கொள்ளலாம். ஈதன்றி அவர்களது புத்தஜயன்தி கொண்டாட்டத்தை 'இந்து' பத்திரிகையில் எவ்வகையாக எழுதியிருக்கின்றார் களென்னில் காட்டுமிராண்டிகளுக் கொப்பானவர்களும். அறிவில்லாதவர்களும், நீதிநெறி ஒழுக்கமற்றவர்களுமாகியக் கூட்டத்தோருக்கு தன்மம் போதிக்கப் போகின்றோம் என்றும் வரைந்திருக்கின்றார்கள். அத்தகையக் கூட்டத்தோர் யாரோ நமக்கு விளங்கவில்லை. இத்தகையக் கூட்டத்தோர் யாவரென்று தாங்களேனுந் தெரிந்துக் கூறுவீராயின் மிக்க உபகாரமாகும்.

தங்களுக்குள் அறிவிலிகளும் அசுத்தர்களும் அசப்பியர்களும் நீதிநெறி ஒழுக்கமற்றவர்களும் இருக்கின்றார்களா இல்லையாயென்று ஆராயந்துணராது அறிவில்லாதார்களும் நீதிநெறியற்றவர்களுமாகிய ஓர் கூட்டத்தோர் இருக்கின்றார்களென்றும் அவர்களை சீர்திருத்த வந்தோமென்றுங் கூறுகிற படியால் அக்கூட்டத்தோர் யாவரென்பதை நாம் தெரிந்துக் கொண்ட பின்னர் அவ்விடம் வரக் கார்த்திருக்கின்றோம்.

திரிக்குறள்

வெண்மெயெனப்படுவதி யாதெனினொண்மெ
யுடையம் யாமென்னுஞ் செருக்கு.

- 4:49; மே 17, 1911 -

74. வேளாண் சடங்குகள்

வினா : தென்னிந்தியாவில் விவசாயம் நடாத்தும் அனந்தமானவர்களும் சங்கராந்திகாலங்களில் மாடுகள் யாவையுங் கழுவி சுத்தஞ்செய்து வேண்டிய ஆபரணங்கள் பூட்டி நல்லவேளை என்னுங் காலவரையை அனுசரித்து பொன்னேறுக்கட்டுகின்றார்களே அவ்வாதாரம் எதை அனுசரித்தது. மறுபடியும் ஏரை விட்டுவிடுங் காலங்களில் வடக்குமுகமாய் சரிவரத் திருப்பி ஏரைவிட்டுவிடும் யாவருங் கையிலேந்துங் கோலையும் பயபக்தியுடன் கரமேந்தி இருகையையும் சிரசின் மேல் வைத்து வடக்குமுகமாய் கும்பிட்டு ஏரைவிட்டு விடுகிறார்களே இது எந்த அனுபவத்தை ஒட்டியது, இதற்கு சாஸ்திரமும் நூலாதாரமுமுண்டா. வடக்கு திக்குநோக்கி கும்பிடும் வழக்கமொன்றிருக்க சிலர் மெய்ப்பொருளில்லை என்று கூறுகின்றார்களே மேல்குறித்தவர்கள் எந்த மெய்யைக்கண்டு கும்பிடுகிறார்கள். அவர்களைக் கேட்டால் பெரியோர்கள் வழக்கத்தை அநுசரித்து கும்பிட்டு வருகிறோமென்கிறார்கள்.

எ. நாராயணசாமி, ஓரத்தூர்,

விடை : பௌத்தருள் வேளாளத்தொழில் செய்வோர் யாவரும் சங்கறர் அந்திய புண்ணியகாலமாகும் மார்கழி மாதக்கடையிலும், தைமீ முதலிலும்

தங்கள் தங்கள் வயல்களில் விளைந்த தானியங்களைப் பொங்கலிட்டு இந்திரராம் புத்த பிரானை பூசிப்பதுடன் மாடுகளை சுத்தஞ்செய்து அவைகளையுங் கொண்டாடி மறுநாள் வேளாளத் தொழிலாளர்கள் ஒருவருக்கொருவரை காணும் பொங்கலென வழங்கி சந்தித்துக்கொள்ளுவார்கள்.

காணும் பொங்கலுக்கு மறுநாள் அதிகாலையில் எழுந்து பொன்தகடு வேய்ந்த ஏறினைக்கொண்டுபோய் வெண்ணெறுதுகள் பூட்டி உத்திர முகமென்னும் வடக்குதிக்கு நோக்கி சரணாகதி என்னும் இருகரத்தை சிரமேற்கூப்பி உத்தரகுருவாம் புத்தபிரானை சிந்திப்பதியல்பாம்.

இத்தகைய சிந்தனைக்கும் மூலகாரணர் சமணமுநிவர்களேயாகும். அறப்பள்ளிகளிலுள்ள ஞானசாதனர்கள் புத்தபிரான் அரசமரத்தடியில் வீற்று உத்திரமுகம் நோக்கி சித்தசுத்தி செய்து இந்திரியத்தை வென்று பற்றற்ற நிருவாணம் பெற்றதுபோல் தாங்களும் பெற்று நித்தியானந்தம் அடைவதற்கு உத்திரமுகம் நோக்கி சாதனை புரிந்துவருவதை நாளுக்குநாள் கண்டுவரும் வேளாளத் தொழிலாளர்களும் தங்களது வேளாண்மெய் விருத்திபெறல் வேண்டி பொன்னேறு பூட்டி போதிநாதனை சிந்தித்து வந்தார்கள்.

அத்தகைய சிந்தனையினாலும், நீதிநெறி ஒழுக்கத்தினாலும் மாதம் மும்மாரி பெய்யவும் வரப்புயரவும், நீர் நிறம்பவும், பயிறு பெருகவும், குடிகள் சுகிக்கவும், கோன் உயரவுமாய செயலுற்றிருந்தது.

அத்தகைய சத்தியசிந்தனையுமற்று நீதிநெறி ஒழுக்கங்களுங் கெட்டு பொய் வேதங்களும், பொய்ச்சாதி வேஷங்களும், பொய்ப்புராணங்களுந் தோன்றி, பொய்ப்பொருள் மலிந்து, மெய்ப்பொருள் விளக்கமற்றுவிட்டபடியால் பஞ்சமும் பெருவாரிக் காச்சலுமுண்டாகி குடிகளை சஞ்சலத்திற்கு உள்ளாக்கிவருகின்றது.

நிட்டானுபூதி

உத்தரமுகமாய யாதனத்திருந்தே வுயர்குருபத மலர் தொழுது
முத்திரையெனுஞசாம்பவியினை பொருந்திமோனமா மன்னிலை வழாமல்
சித்திரதீபம்போல் அசைவறவே சிந்தையை நிலைநிறுத்துவனே
அத்தனடியை யடைவனென்றுறைக்கு மண்ணலாகமமெலா மெடுத்தே.

- 5:11, ஆகஸ்டு 23, 1911 -

75. ஏற்பது இகழ்ச்சி என்றால் என்னை

எங்கள் முன்னோர் எழுதிவைத்திருக்கின்றாரென்று கூறுவானாயின் அதன் மெய்யும் பொய்யும் நன்குணராது நம்புவது இகழ்ச்சி. எங்கள் தேவன் அப்பவுமிருக்கின்றார், இப்பவுமிருக்கின்றார், அப்போதும் அப்படி சொன்னார், இப்போதும் இப்படி சொன்னாரென்று கூறுவானாயின் இருந்ததினாலும் சொன்னதினாலும் நீவிரடைந்துள்ளப் பலன் யாதென உசாவாது அவன் வார்த்தையை நம்புவது இகழ்ச்சி. எங்கள் தேவன் கீழிருந்து மேலே போனார் மேலிருந்து கீழேவந்தாரென்பானாயின் மேலேபோயதினாலுண்டாய சுகமென்ன, கீழேவந்ததினாலுண்டாய பயனென்னவென்று உசாவாது அவன் சொல்லியதை நம்புவது இகழ்ச்சி. எங்கள் தேவனே சகலரையுங் காப்பவரென்று கூறுவானாயின் உங்கள்தேவன் எங்களைக் கார்க்காமல் விட்டுவிடுவாரோ வென்று உசாவாது அவன் வார்த்தையை நம்புவது இகழ்ச்சி. எங்கள் தேவன் நம்பினால் கார்ப்பாரென்று கூறுவானாயின், உங்கள் தேவனை நம்பியுள்ளவர்கள் தேசத்தில் எரிமலைகள் பொங்கியும் நீர் பிரவாகமுற்றும் தத்தளித்து மடியுங்கால் நம்பியுள்ளோரைக் கார்க்காத தெய்வம் எங்களைக் கார்க்குமோவென்று உசாவாது அன்னோன் வார்த்தையை நம்புவது இகழ்ச்சி.

ஆதலின் எங்கள் தேவன் எழுதியப் புத்தகமென்று கூறியபோதினும் எங்கள் பெரியபெரிய மனிதர்கள் எழுதிவைத்துள்ளப் புத்தகமென்றபோதினும் அதை தேற வாசித்து அதைக் கைப்பற்றியுள்ளோர் என்ன சுகத்திலிருக் கின்றார்கள், அன்னோர் கூட்டத்தோர் என்ன சுகத்திலிருக்கின்றார்கள், அன்னோர் கூட்டத்தோர் என்ன சுகச்சீர் பெற்றுள்ளாரென்று ஆராய்ந்து அதைநம்புவதே

புகழ்ச்சி. தேற ஆய்ந்துணராது ஏற்பது யாவும் இகழ்ச்சி இகழ்ச்சியேயாம்.

- 5:15; செப்டம்பர் 20, 1911 -

76. பௌத்த சோதிரர்களுக்கு அறிக்கை

பௌத்த தன்மப் பிரியர்களே! சோதிரர்களே! சற்று கவனியுங்கள் இந்துக்களென்போர்களுக்கும், பௌத்தர்களென்போர்களுக்கும் யாதொரு சம்மந்தமுங் கிடையாது. காரணமோவென்னில், இந்துக்களுக்குரியது இந்து மதம், பௌத்தர் களுக்குரியது புத்ததன்மம். இந்துக்களென்போருக்குப் பலவகை சாதிப்பிரிவினை களுண்டு. பௌத்தர்களுக்கு தேசப்பிரிவினையும், பாஷைப்பிரிவினையும் உண்டேயன்றி பெரியசாதி, சின்னசாதி என்னும் ஒற்றுமெய்க்கேடும் மநுக்களைக் கண்டவுடன் மநுக்கள் முறுமுறுக்கும் பொறாமெய்க்கேடும் இவர்களுக்குள் கிடையா. பௌத்தர்களை ஏதேனும் ஓர்சாதிப் பெயரால் இழிவு கூறுவார்களாயின் பிரையாதுக்கு உட்படுவதுடன் தண்டனைக்குமுள்ளாவார்கள். ஆதலின் பௌத்த சோதிரர்கள் இந்துக்களென் போருள் சைவ, வைணவ, வேதாந்திகளென்னும் பிரிவினைகள் உள்ளோர் குடும்பத்தோர்களாயிருப்பினும் நீங்கள் பஞ்சசீலம் பெற்று பௌத்தர்களானப் பின் இந்துக்களுக்குட்பட்ட சைவ, வைணவ வேதாந்திகளாயுள்ளக் குடும்பத்தோரை நெருங்கி குடும்பத்தோர்களாக பாவிக்காது அன்னியர்களாகவே பாவித்து கொள்ளல் கொடுக்கல் முதலிய சம்மந்தங்களிலுங் கலக்காமலிருக்க வேண்டியது.

அவர்களும் பராயர்கள் மதத்தை ஒழித்து சுயதன்மசீலம் பெற்று பௌத்தர்களாகி நன்மார்ககத்தில் ஒழுகுவார்களாயின் அவர்களையே தங்கள் நெருங்கிய குடும்பத்தோர்களென்றெண்ணி கொடுக்கல், வாங்கல் முதலிய சம்பந்தங்கள் செய்துக்கொள்ளவேண்டியது.

அம்மை, அவ்வை, எனவழங்கும் கிறாமதேவதை நமது பௌத்த பிக்குணியாயினும், தற்காலம் அவளைச்சார்ந்த தேவதையாகக் கோறாது காளி, கன்னிகாபரமேஸ்வரி என்னும் துஷ்டதேவதையாகக் கோறுகிறபடியால், நீங்களும் அவ்வகை சேராது, பெண்களுக்கென்னும் வேறு வியாரங்கட்டி சாந்த தேவதையை சுத்தோதயமாகப் பூசித்து அம்மன் சத்தியதன்ம திரிவாசகத்தைப் போதித்து வரவேண்டியது.

சாதிவித்தியாசத்திற் குட்பட்ட சில பராயசாதியார் தாங்களும் பௌத்தர்களென வேஷமிட்டுக்கொண்டு யதார்த்த பௌத்தர்கள் மத்தியிற் பிரவேசித்து சத்திய தன்மத்தை மாறுபடுத்துவதுடன் அவர்களையுங் கெடுத்து முன்னேறாதிருக்கும் ஏதுக்களைச் செய்துவருகின்றார்கள். அத்தகையப் பராயசாதியோர் கூட்டத்திற் பிரவேசியாமலும் அவர்கள் போதனைகளைக் கேளாமலும் இருக்கவேண்டியது. சாதிபேதமில்லா கூட்டத்தோருட் சிலர் சாதிபேதமுள்ள பௌத்தர் கூட்டத்திற் சேர்ந்து தாங்களுமோர் பெரிய சாதிகளென அபிநயித்து உள்ளதையுங் கெடுக்க ஆரம்பித்துத் திரிகின்றார்கள். அத்தகைய மூதேவிகள் முகத்தில் விழிக்காமலும் அவர்கள் கூட்டுரவிற் சேராமலும் அவர்கள் வீட்டு வாயற்படிகளுள் தங்கட் படிகளை வையாமலும் இருக்கவேண்டியது.

சுய சாதியோரை சீர்திருத்தி சுயசாதியோரை முன்னேறக் கருதுவோர்கள் மறந்தும் பராயசாதியோரை சாரமாட்டார். காரணம் நாளெல்லாம் பராயசாதியோர்களால் தாழ்த்தி நலங்குலைந்திருப்பவர்கள் இப்போது அவர்களால் சீர்பெறுவோமென்று நம்புவர்களோ, ஒருக்காலும் நம்பமாட்டார்கள். ஆதலின் சுயசாதியோரை யதார்த்தத்தில் சீர்திருத்த முயலுவோர் சுயசாதியோர் மத்தியினின்றே சீர்திருத்தவேண்டும் அங்ஙனமின்றி பராயசாதியோர் மத்தியிற்சென்று சீர்திருத்துவரென்போர் சுயசாதியோரைக் கெடுப்பதுடன் தாங்களுங்கெட்டு சீரழிவோர்களேயாம்.

- 5:21; நவம்பர் 1, 1911 -

77. மக்களை மக்களாக ஏற்காதோரைத் தேவரெனப்போமா அன்றேல் நரகரென்னலாமோ

மக்களாம் மநுகுலத்தோரை, மக்களென்றும் மநுக்களென்றும்பாராது மிருகங்களினுந் தாழ்ச்சியாக எண்ணுவோரும், தாழ்ச்சியாக நடத்துவோரும், தேவர்களாவரோ, ஒருக்காலும் ஆக மாட்டார்கள்.

தேவர்களின் இலட்சணங் கூறுமிடத்து சருவசீவர்களையுந் தன்னுயிர்போல் பாதுகாக்குந் தண்மை உடையவர்களென்றும், இராகத்துவேஷ மோகங்களை அற்றவர்களென்றும், பொன்னாசை, மண்ணாசை, பெண்ணாசை மூன்றையும் விட்டவர்களென்றும், செல்லல், நிகழல், வருங்கால மூன்றினையும் சொல்லுவோ ரென்றும், இரவு பகலற்றவர்களென்றுங் கூறுகிறபடியால், மக்களை மக்களாக பாவிக்காத வன்னெஞ்சர்களும், போறாமெக்காரர்கள் ஒருக்காலும் தேவர்களாக மாட்டார்கள்.

மக்களை மக்களாக பாவிக்காதோரை நரர்களென்றே கூறத்தகும். அத்தகைய நரர் கூற்றினும் இவ்வன்னெஞ்சினர் வானரரோ அன்றேல் வாலற்ற நரரோவென் றோசிப்பதாகும்.

இவற்றுள் வானரரும் வாலற்ற நரரும்பகுத்தறிவில்லாக் குறைவால் மக்களைக் கண்டவுடன் ஒதுங்கி ஓடுவதியல்பாம். அவ்வியல்பு மாறாது வானரரும் வாலற்ற நரரும் பூர்வ புண்ணிய வசத்தால் மக்களாகத் தோன்றி நிற்கினும் பூர்வம் நரராயிருக்குங்கால் மக்களைக் கண்டவுடன் ஓடுமியல்பு மாறாது. இம் மக்கள் ஜெனனமெனத்தோன்றினும் பூர்வஜென்மச்செயல்கொண்டு மக்களைக் கண்டவுடன் ஒதிங்கி ஓடுகின்றார்கள். கேட்போருக்கு அவர்களைத் தீண்டப்படாது, இவர்களைத் தீண்டப்படாதென்னும் படாடோபம் காட்டினும் பூர்வ விட்டகுறையின்செயலே சான்றாம். மற்றபடி மக்களை மக்கள் தீண்டக்கூடாதென்போன் மக்களில் மக்களுமாகான், மக்களில் தேவனுமாகான், மக்களில் நரர் நரரென்றே கூறத்தகும். அத்தகைய நரனது வாக்கையும், நரனது செயலையும் நன்கென்று ஏற்காது அவற்றை மநுகுல ஒற்றுமெக்கேடாம் தீது, தீதென்றே விலக்கல் வேண்டும்:

- 5:22; நவம்பர் 8, 1911 -

78. புறக்கருவி ஆராய்ச்சியும் பௌத்தமும்

வினா : தற்காலம் ஆங்கில பாஷையை வாசித்து அதிற் (சைன்ஸ்பிரபஸ) ரென்னும் பெயரெடுத்துள்ளவர்கள் சகலவற்றையும் ஆராய்ந்துள்ளவர்களாம் அதிற் சிலர் புத்தபிரானுக்குச் சமதையான ஆராய்ச்சிப்பெற்றவர்களாம் அவர்கள் புத்ததன்மங் கூறுகிறோமென வெளிதோன்றி மனிதன் மரணமடைவதுதான் முடிவு அதற்குப்பின் அவனுக்கு யாதொரு சுகதுக்கமுங் கிடையாதெனக் கூறுகின்றார்களாம். ஈதென்ன (சைன்சோ) ஈதென்ன ஆராய்ச்சியோ அடியேனுக்கு விளங்கவில்லை.

வே. கோ. பதுமநாபம், சென்னை.

விடை : தாம் விசாரிப்பதும் பிரபஸர்கள் கூறுவதும் புறக்கருவியினது ஆராய்ச்சியேயன்றி உட்கருவியினது ஆராய்ச்சி ஆகாவாம். புறக்கருவியினது ஆராய்ச்சி யாதெனில் கெந்தகமும், வெடியுப்புஞ் சேர்ந்தால் வெடிக்கும். சக்கிக் கல்லும், இரும்புதுண்டுஞ் சேர தட்டினால் நெருப்புண்டாகும். இன்னின்ன வஸ்துக்கள் சேர்ந்தால் இனிப்புண்டாகும், இன்னின்ன வஸ்துக்கள் சேர்ந்தால் துவர்ப்புண்டாகும், இன்ன வஸ்துவை முகர்ந்தால் மனிதன் இஸ்மரணையற்று விடுவான், இன்ன வஸ்துவை உட்கொண்டால் மனிதன் மரணமடைவான், நெருப்பும் நீருங் காற்றுஞ் சேர்ந்தால் ஓர் வஸ்துவை இழுக்கும், புகையுங் காற்றும் பாதரசமும் ஓர் வஸ்துவை ஆகாயத்திற் கிளப்பும் எனக் கைகளாலும் கருவிகளாலும் வஸ்துக்களை ஆராய்வது புறக்கருவி ஆராய்ச்சி என்னப்படும்.

இத்தகையப் புறக்கருவி ஆராய்ச்சியோர் தேகதத்துவ ஆராய்ச்சி செய்யுங்கால் பிணத்தை அறுத்து ஆராய்வார்களன்றி குணத்தை ஆராய மாட்டார்கள். குணத்தை ஆராய வேண்டியவர்கள் தன்னைத்தானே ஆராயவேண்டுமேயன்றி தனக்கப்புறப்பட்டப் பிணத்தை ஆராய்வதால் பயனில்லை. சத்துவகுணம், ரசோகுணம், தமோகுணமென்னும் முக்குணங்களால் எழுஉம் காம, வெகுளி, ம்யக்கங்களில் காமாக்கினி எவ்விடத்தினின்றெழும்பி எவ்விடத்து அடங்குகிறதென்றும், கோபாக்கினி எவ்விடத்தினின்று எழும்பி எவ்விடத்து அடங்குகிறதென்றும், பசியாக்கினி எவ்விடத்தினின்றெழும்பி எவ்விடத்து அடங்குகிறதென்றும் கண்டறிந்தவனும், அறிவு மனத்தின்கண் ஒடுக்கமா, மனம் அறிவின் கண் ஒடுக்கமாவென்று ஆராய்ந்தொடுங்கினவனும் பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசையாம் பாசபந்தக் கயிறுகளை அறுத்து நிருவாணநிலைப் பெற்றவனும் எவனோ அவனே உண்மெய்ப்பொருள் உணர்ந்த மெய்யனாவன். தன்னிற்றானே இத்தியாதி விஷயங்களையுங் கண்டுணரா கடைச்சோம்பேறிகளால் கண்ட காட்சிகளைக்கொண்டு மனிதன் இறப்பதே முடிவு. இறந்தபின் யாதொரு சுகதுக்கங்களுங் கிடையாதென்பது பெரும்பொய் பொய்யேயாம்.

காரணம் பாசபந்தப் பற்றுக்கள் யாவையும் அறுத்து நிருவாணமுற்ற மெய்கண்ட தேவனை விவேகமிகுத்தோர் புத்தரென வரைந்திருக்கின்றார்கள். அத்தகைய பாசபந்த பற்றுக்கள் அறாதவர்களையும் மெய்கண்டறியாதவர் களையும் அந்நிலையில் உணர்ச்சியேனும் இல்லாதவர்களையும் புத்தருக்கு சமதையாகக் கூறுவது கஸ்தூரியுடன் கசிமலத்தை ஒப்பிடுவதொக்கும் எம்.ஏ. எல்.எல்.டி. கற்றவர்களாயினும் அதற்கு மேற்பட்ட பிரபஸர்களாயினும் கருவிகளைக்கொண்டு காணும் பொருட்களை சோதிப்பவர்களே அன்றி கருத்தைக்கொண்டு காணாப்பொருளைக் கண்டறிய மாட்டார்கள். அவ்வகையால் தன்னைத்தானே கண்டறியா மாந்தர்கட் போதனை களால் உலக மக்கள் அகங்கரித்துப் பாழடைவார்களென்பது சத்தியம். எங்ஙன மென்பீரேல், தன்னைத்தானே கண்டறிந்த விவேக மிகுத்தோராம் மேன்மக்கள் உலகமக்களைநோக்கி மக்களே! நீங்கள் இம்மெயில் துற்கருமங்களாம் கொடியச் செய்கைகளைச் செய்துவரில் மறுமெயில் மாளாதுன்பத்தை அனுபவிப்பீர்கள். இம்மெயில் நற்கருமங்களாம் நல்லசெய்கைகளைச் செய்துவரில் மறுமெயில் நல்லசுகத்தை அடைவீர்களென்று கூன், குருடு, சாப்பாணிகளாகத் தோற்றும் உருவங்களையும், பிணியன், வரியன் என உழலும் பாடுகளையுந் தங்களனுபவக் காட்சியால் உணர்ந்து பயமுறுத்தியிருக்கும் போதே மக்களும் மொழிகளை ஏற்காது தங்கள் தங்கள் துற்கன்மங்களையே பெருக்கித் துக்கவிருத்தியை அதிகரித்துக் கொண்டு தாங்கள் கெடுவதுடன் தங்களை அடுத்தோர்களையுங் கெடுத்துப் பாழ்படுத்தி வருகின்றார்கள். மனிதன் இறப்பதே முடிவு, இறந்த பின் யாதொரு சுகதுக்கமுங் கிடையாதெனக் கூறும் அபுத்தப்பிரசங்கிகள் இன்னும் பத்துபேர் தோன்றுவார் களாயின் இப்போதே கேட்டிற்குப் போகும் வழியை உண்டு செய்து வருகின்றவர்கள் மனிதனுக்கு முடிவு மரணந்தான் மற்றப்படி வேறு சுகதுக்கங் கிடையாதென்னும் மனோதிடத்தால் கேட்டுக்குப் போகும் வழிகளை விசாலப்படுத்தி மனம்போனப்படி தன்னுடைய சுகத்தை அநுபவிக்கக் கருதி அன்னியர் தாரத்தை இச்சிப்பதும், அன்னியர் பொருளை அபகரிப்பதும், மதுமாமிஷம் புசிப்பதுமாகிய துற்செயல்களில் புக்கி வீணே கெட்டழிவதுமன்றி தன்னை அடுத்தோனுக்கும் இம்மதியைக் கொடுத்துக் கெடுத்துப் பாழ்படுத்திவிடுவான். ஆதலின் மனிதனுக்கு மரணந்தான் முடிவு வேறு சுகதுக்கங் கிடையாதென்று கூறுங் கூட்டத்தோர் கூட்டுரவிலும் அவர்கள் முகத்திலும் விழிக்காமலிருப்பதே நீதியின்பாதைக்கழகாம். மற்றப்படி புலிகள் பசுவின் தோலைப் போர்த்துலாவுவதுபோல் சில சூன்ய மதஸ்தர்கள் தங்களை பௌத்தர்களென நடித்து சீர்பெற்றுவரும் யதார்த்த பௌத்தர்களைக் கெடுத்து சீரழிக்கப்பார்க்கின்றார்கள். அத்தகையக் கேட்டிற்குக் கொண்டு போகும் வழிக்கு மனவுற்சாகத்தையுந் திடத்தையுங் கொடுக்கும் சூன்யமதஸ்தர்கள்

கூட்டுரவிற் சேராமலும், அவர்களது சூன்ய போதங்களை கேளாமலும், அவர்களது சூன்ய புத்தகங்களைக் கண்களிற் பாராமலுமிருக்கும்படி வேண்டுகிறோம். அதாவது மக்களுலாவும் வீதிகளில் மலமூத்தராதிகளை விசுரிம்பிக்கலாகாதென்னும் சட்டத்தைப் பிறப்பித்து தெண்டித்து வரும்போதே எத்தனையோ பெயர் மலமூத்திர விசுரிம்பக் குற்ற தெண்டனையடைந்து வருகின்றார்கள். அத்தகைய சட்டமுங் கிடையாது தெண்டனையுங் கிடையாதாயின் வீதிகள் என்னக் குப்பைக்கேட்டை அடைந்திருக்கு மென்பது சொல்லாமலே விளங்கும். பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடென்னும் நான்கு வாய்மெயையும் ஓர் மனிதன் இல்லையென்று மறுதலிக்க வியலாது அந்நான்கிலுமுண்டாகுந் துக்கமின்னது, துக்கோர்ப்பவ மின்னது, துக்க நிவாரணம் இன்னது, துக்கநிவாரணமார்க்கமின்னதென்று தெள்ளற வகுத்திருக்க அம்மார்க்கத்தில் நடந்து அதன் சுகதுக்கங்களை விளக்காது நடவாமலே பேசுவதும் சாதிக்காமல் போதிப்பதுமாகிய செயல்கள் சாக்கைய புத்த சங்கத்தோர் தோற்றத்தையும் அவர்கள் சீரையும், அவர்களது முன்னேற்றத்தையுங் கெடுத்துப் பாழ்படுத்தத் தோன்றியதாக விளங்குகின்றது. ஆதலின் அவர்களது சுகதுக்கம் இல்லையென்னும் அடித்தபோதனை களைச் செவிகளிற்கேளாமலும் அத்தகைய அபுத்தர்களின் சங்கதிகளை நமது பத்திரிகைக்கு எழுதாமலும் இருக்க வேண்டுகிறோம்.

துற்கருமத்தால் இம்மெயிலும், மறுமெயிலும், இன்னின்னக் கேடுகளுண்டு, நற்கருமத்தால் இம்மெயிலும் மறுமெயிலும் இன்னின்ன சுகமுண்டென்று கூறும் சத்தியசங்கத்தோரை அடுத்து அவர்களுக்கு பாதசேவை செய்வதே அழகாம். மற்றவை யாவும் நீதிநெறிக்கு இழிவாம்.

- 5:29, டிசம்பர் 27, 1911 -

79. இராயப்பேட்டை பௌத்தாச்சிரமத்தில் ஆதிவாரம் மாலையில் நடந்த சங்கறாந்தி பண்டிகைப் பிரசங்கம்

அன்பர்காள் இன்று சங்கறாந்தி பண்டிகை என்றும் சங்கறாந்தி புண்ணியகாலமென்றும், வழங்கும்படியான உற்சாக காலம் எம்மார்க்கத் தோரைச் சார்ந்ததென்றும், எச்சரித்திரத்தை அநுசரித்ததென்றும் விசாரித்து நடத்தவேண்டியதே விவேகிகளின் இயல்பாம். அங்ஙனம் விசாரியாது நடத்தல் சொன்னதைச்சொல்லுங் கிளிப்பிள்ளைக்கொத்ததென்றும், சொன்னதைச் செய்யும் ஏவலுக்கொத்ததென்றும் எண்ணப்படும். ஆதலின் இப்பண்டை ஈகையின் அந்தரார்த்தத்தை அநுபவ சரித்திரங்களைக்கொண்டு ஆராய்வோமாக

சங்கறர் என்பது புத்தருக்குரிய ஆயிரநாமங்களில் ஒன்றாம். அதாவது உலகெங்குஞ் சங்கங்களை நாட்டி அறத்தை ஊட்டிவைத்த காரணங்கொண்டு அவரை சங்கமித்தரென்றும், சங்கதருமரென்றும், சங்க அறரென்றும் வழங்கி வந்தவற்றை அடியிற் குறித்துள்ள பாடல்களால் அறிந்துக்கொள்ளலாம்.

மணிமேகலை

புத்த தரும சங்கமென்னும் / முத்திற மணியை மும்மையின் வணங்கி
போதிமூலம் பொருந்தியிருந்து / மாரனை வென்று வீரனாகி
குற்ற மூன்று முற்ற வறுக்கும் / வாமன் வாய்மெ யேமக்கட்டுரை.
மேற்சொன்னபடி 5. காதை
சாதுயர் நீக்கிய தலைவன் றவமுனி / சங்க தருமன்றா னெமக்கருளிய.

இத்தகைய சங்க அறநிறையோனாம் ஒப்பிலா அப்பன், கல்லால விருட்சத்தினடியில் வீற்று தனது அதிதீவரபக்குவ ஞானசாதனத்தால் சகலபற்றுக்களு மற்று பங்குனிமாத பௌர்ணமியில் நிருவாணம்பெற்று காமனையுங் காலனையுஞ் ஜெயித்து நித்திய சுகம்பெற்ற சதானந்த நிலையைத் தன்மட்டிலும் சுகிக்காது உலகெங்குஞ் சுற்றி சங்கங்களை நாட்டி அறத்தை ஊட்டிவைத்துள்ளாரென்பது சரித்திர ஆதாரமாம்.

மணிமேகலை

எண்ணருஞ் சக்கரவாள மெங்கணும் / அண்ணலறக்கதிர் விரிக்குங்காலை.

என்னுஞ் செய்யுளாதாரத்துடன் தற்காலம் சைனா, ஜப்பான், பர்மா, சிலோன், ஆசாம், மங்கோலியா மற்றத் தேசங்களிலுள்ள தன்மசங்கங்களும் உலகிலுள்ள மநுகுலத்தோர் மொத்தத் தொகையில் அரையே அரைக்கால் பாகம் பெருந்தொகை பௌத்த கூட்டங்களிருக்குஞ் சிறப்பே போதுஞ்சான்றாம்.

உலகெங்குஞ் சென்று சங்கங்களை நாட்டி அறத்தை ஊட்டிய சங்கறர் காசிகங்கை கரை என்னும் பேரியாற்றங்கரையில் மார்கழி மாதம் கடை நாள் பௌர்ணமி திதி திருவாதிரை நட்சத்திரம் விடியற்காலம் துலாலக்கினத்தில் தனது உச்சியிலும் தேகத்திலும் பஞ்சவருண சோதி வாள்போன்று வீச பரிநிருவாணமுற்றார்.

வீரசோழியம்

இவ்வுலகுங் கீழுலகு மிசையுலகு மிருள் நீங்க
வெவ்வுலகுந் தொழுதேத்த வெழுந்த செஞ்சுடரென்ன.

போதிமேவினை பொய்மெ யகற்றினை
சோதிவானவர் தொழவெழுந் தருளினை
ஆதிநாத நீனடியினை பரவுதும்.

கூரார்வளையுகிர் வாளெ யிற்றுச் செங்கட்
கொலையுழுவை காய்பசியாற் கூர்ந்த வென்னோய் நீங்க
ஒராயிரம் கதிர்போல்வாள் விரிந்தமேனி
யுளம் விரும்பிச் சென்றாங் கியைந்தனை நீயென்றாற்
காரார் திறை முளைத்த செம்பவளமேவுங்
கடிமுகழ் தன்சினைய காமரூபூம் போதி
யேரார் முநிவரர் வானவர்தங் கோரவே
யெந்தாயரோ நின்னை யேந்தாதார் யாரே.

மணிமேகலை

காயங்கரை யெனும் பேரியாற் றடைகரை / மாயமின் மாதவன் றன்னடி பணிந்து
காசின் மாநகர் கடல்வயிறு புகாமல் / வாசவன் விழாக்கோல் மறவேனென்று,

விம்பாசாரன்

இறைமகற்காத னென்பானைந்திற் / குறைமிகு காலக் கூற்றங்கடிந்து
தக்கக்கடை நாட்டனுவாதிரையிற் / பக்கமங்கலம் பருமதகோலாய்
போதிநீழற் பொருந்திய புத்தேள் / சோதி பஞ்சகக் சூழொளியாகி
ஆனவைகறை யார்ப்ப வானவர் / போனக ... விழாக்கோள்.

இக்காலத்தையே சங்கறர் அந்தியகாலமென்றும் இக்காலத்தை அனுசரித்து ஆனந்த தன்மஞ்செய்வதை சங்கறர் அந்தியபுண்ணியகாலமென்றும், போதிநாதனது பண்டிகை ஆதலின் போதிபண்டிகை என்றும், ஐயிந்திரியங்களை வென்ற புத்தரது உற்சாகாலமாதலின், இந்திரர் பொங்கல், இந்திரர் விழா, இந்திரர் விழாக்கோ லென்றும் பௌத்தமார்க்க அரசர்கள் வருடந்தோரும் மார்கழிமாதம் முதல் கடை இருபத்தி எட்டு நாள்வரையில் தங்கள் தேசங்களிலுள்ளக் குடிகளை வீடுவாசல் முதலியவைகளை சுத்தஞ் செய்து தோரண முதலியவைகளைக் கட்டுவித்து வீதிகள் முழுவதும் புதுமணற்பரப்பி வாழைக் கரும்பு முதலியவைகளை நட்டு தேசமுழுவதும் அலங்கரித்து கடைநாளிற் சோதியை வளர்த்தி தீபசாந்தி கொண்டாடி வந்தார்கள்.

மணிமேகலை

மேலோர் விழைய விழாக்கோ லெடுத்த / நாலேழ் நாளினு நன்கினி துறைகென
மன்னன் கரிகால் வளவ நீங்கியநாள் / தோரண வீதியும் தோமறு தொட்டியும்
பூரணகும்பமும் பொலம் பாலிகைகளும் / பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்
காய்குலைக் குமுகும் வாழையும் வஞ்சியும் / பூக்கொடி வல்லியுங் கரும்பு நடுமின்
பத்திவேதிகை பசும்பொற்றூணத்து / முத்துத்தாமமு முறையொடு நாற்றுமின்
விழவுமலி மூதூர் வீதியு மன்றமும் / பழமணல்பாற்றுமின் புதுமணல்பரப்புமின்
கதலிக் கொடியுங் காமனது விவோதமும் / மதலை மாடமும் வாயிலுஞ் சேர்த்துமின்
நாவலோங்கிய மாபெருந்தீவினுட் / காவேற் றெய்வந்தேவர் கோற்கெடுத்த
தீபசாந்தி செய்தருணன்னாள்.

அதை அநுசரித்தே நாளதுவரையில் மார்கழி மாத முழுவதுங் கொண்டாடி வருவதைக் காணலாம். சங்கறர் அந்தியகாலமானவுடன் அவரது மறைவுக்காற்றாது சங்கத்தோர்கள் துக்கங்கொண்டாடியதுமன்றி வீடுகடோரு முள்ள தன்மப் பிரியப் பெண்களும் அழுது துக்கங்கொண்டாடினார்கள்.

அதை அநுசரித்தே போதி பண்டிகை விடியர்காலத்தில் வீடுகடோருமுள்ள பெண்கள் துக்கங்கொண்டாடி வருகின்றார்கள்.

வீரசோழியம்

கொண்டன் முழங்கின்வாற் கோடற் பரந்தனவா லென்செய்கோம்யாம்.
வண்டுவரி பாடவார் தளவம் பூந்தனவாலென்செய்கோம்யாம்.
மறுளறுத்த பெரும்போதி மாதவரைக் கண்டிலமா லென்செய்கோம்யாம்
அருளிருந்த திருமொழியா லறவழக்கங் கேட்டிலமா லென்செய்கோம்யாம்
பொருளறிவு மருந்தவத்துப் புலவரைக் கண்டிலமா லென்செய்கோம்யாம்.

போதிபண்டிகை விடியற்காலத்தில் சோதியை வளர்த்திக் கொண்டாடி வந்த வழக்கம் மாறாது நாளதுவரையில் சோதியை வளர்த்திக்கொண்டு வருகின்றார்கள்.

மணிமேகலை

'மதிநாண் முற்றிய மங்கலத்திருநாள் / பொதுவறி விகழ்ந்து புலம்பறுமாதவன்
றிருவற மெய்துதல் சித்தமென்றுணர் நீ.'

சூளாமணி

அருள்புரி யழலஞ் சோதி யாழியா னாதியில்லான்
மருள்புரி வினைகட் கென்று மறுதலை யாயவாம
னிருள்புரி யுலகஞ்சேரா வியனெறி பயந்த பெம்மான்
பொருள்புரி விழவு காண்பார் புண்ணிய வுலகங் காண்பார்.

மார்கழிமாத முழுவதும் வீட்டுவாயலில் கோலமிட்டு முத்தந்தெரித்து வந்ததுபோல் நாளது வரையில் வீதிகளிற் கோலமிட்டு புட்பம் பரப்பி வருகின்றார்கள்.

சூளாமணி

விரையினால் மொழுகிய வீதிவாயெலாந்
திரையினாற் செழுமணி மூத்தஞ் சிந்தினார்
உரையினாலெண்ணயவ் வொளிகொள்மா நகர்
புரையினாற் பொன்னுல கிழிந்த தொத்ததே.
அழல் வளர்த்தனை யன தழையுமவ்வழற்
றழல் வளர்த்தனை யென மலருந் தாமரை
பொழில்வளர் வளையமும் பொதுளி வண்டினங்
குழைவளர் அசோகீன்மேற் குளிருகின்றவே.

விடியற்காலம் சோதியை வளர்க்குங்கால் வாத்தியகோஷம் செய்தவழக்கம் மாறாது நாளதுவரையில் போதிபண்டிகை விடியற்காலம் சிறுவர்கள் மேளவாத்திய கோஷத்துடன் கொண்டாடி வருகின்றார்கள்.

சூளாமணி

பூரண மணிக்குட நிறைத்த பொன்னணி
தோரண மெடுத்தன துதைந்த வெண்கொடி
வாரண முரசொடு வளைகளார்த்தரோ
காரணி கடலொலி கைதவிர்த்ததே.

சோதியை வளர்த்தி விடிந்தவுடன் இஸ்நானஞ்செய்து புதுவஸ்திர மணிந்து பரிநிருவாண சிறப்பைக்கொண்டாடி வந்தார்கள். அதை அநுசரித்தே நாளதுவரையில் இஸ்நானஞ்செய்து புதுவஸ்திரம் அணிந்து வருகின்றார்கள்.

வெண்டுகிலுடுத்து வெண்சாந்து மெய்வழித்
தெண்டிரன் மல்லிகை யொலியல் சூடினார்
வண்டிரண் மணிமுத்தும் வைரச்சாரியுங்
கொண்டிய லணியோடு கோலந்தாங்கினார்
மாமழைக் கண்ணியர் மருங்குபோல்வன
தூமழை வளர்கொடி துவன்றிப் பத்திகள்
பாமழை யுருவுகள் பலவுந் தோன்றவே
பூமழை பொன்னிரம் புதைய வீழ்ந்தவே

மங்கை பருவமில்லா சிறுபெண்கள் யாவரும் சோதிநாள் கொண்டாடுங் காலத்தில் அரசமரத்தை சுற்றி கும்மியடித்து குருநாதனை சிந்திப்பது வழக்கமாம். அதை அநுசரித்தே இக்காலத்தில் கும்மியடிப்பெண்காள் கும்மியடி குருபாதங்காணவே கும்மியடி நம்மெய் ஆண்ட ஆதிநாதனை நாடிக் கும்மி அடியுமடி அவனைத் தேடிக்கும்மியடியுமடி.

இத்தகையாக நகரவாசிகள் கொண்டாடிவந்தது வழக்கமாயினும் நாட்டுவாசிகள் இந்திரராகிய புத்தபிரானைப் பொங்கலிட்டுப் பூசித்து ஏழைகளுக்கு அன்னதானஞ்செய்த வழக்கமானது மாறாது நாளது வரையில் பொங்கலிட்டு போதினாதனைப் பூசிப்பதுமன்றி மாடுகளை சுத்தஞ்செய்து பொன்னேரு பூட்டி பூமியை உழுது வடதிசைநோக்கிக் கைகூப்பி வடக்குமலை யானென்னும் வெங்கடபதியாம் இந்திரரை பூசித்து வருகின்றார்கள். இதுவே சங்கறாந்தி புண்யகாலமென்பதின் கருத்தும் செயலும் என்னப்படும்.

சிலப்பதிகாரம்

வாரமுடைய திறல் வானவர்கோனுக் கெனவே
ஒரமுடையோ குயிரிழப்ப - வீங்கு
முழவெடுத்த பேரொலியான் மூவுலகோரேத்த
விழவெடுத்தான் பூம்புகார் வேந்து.

- 5:32, சனவரி 17, 1912 -

80. கடவுளும் சாமியும்

வினா : கடவுளென்னும் பெயரின் உற்பவத்தையும், அதன் காரணத்தையும், சாமியென்னும் பெயரின் உற்பவத்தையும், அதன் காரணத்தையுங்கண்டு அடியேனது சங்கையை விளக்கித் தெரிவிக்கும்படி வேண்டுகிறேன்.

கோ.வீ. ஜெயசேகரன், கொளம்பு.

விடை : தெய்வப்பெயர் மக்கட்பெயர் விலங்கின் பெயர் என்பவற்றுள் தாம் வினவிய காட்சிப்பொருளையும் - காட்சியற்றப்பொருளையும் தெய்வப்பெயர் தொகுதியிலேயே தெரிந்துக்கொள்ளலாம். தெய்வப் பெயருள் சூரிய, சந்திர குணியாகுங் காட்சிப்பெயரும்; கடவுள், சாமி குணமாகும் செயல்பற்றிய பெயருமேயாம். உலகத்திற்கு உபகாரமாக விளங்கும் சூரியன், சந்திரன், பூமி, நீர் காற்று, நெருப்பு முதலியவைகளை தெய்வப்பெயர்களுள் வகுத்திருப்பினும் ஆறாவது தோற்றமாகிய மக்களெனத் தோன்றி ஞானவிசாரிணையால் தன்னை உணர்ந்து காம வெகுளி மயக்கங்களை ஜெயித்து பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடென்னும் நான்கையுங்கடந்து நிருவாணமுற்று ஏழாவது தோற்றமாகிய தேவகதியில் நிலைத்திருப்போர்கள், சருவ சீவர்களுக்கும் உபகாரிகளாகும் நன்மெய்ச் செயலில் நிலைத்துள்ளபடியால் கடவுளென்றும் பரிநிருவாணமுற்று ஒளிமயமாக நட்சேத்திரம் பெற்று அகண்டத்தில் உலாவுகின்றபடியால் சாமி என்றும் சமணமுநிவர்கள் வரைந்திருக்கின்றார்கள்.

பின்கலைநிகண்டு ககரவெதுகை

ககனம்விண்படைகாடென்ப கடவுடேமுநி நன்மெப்பேர்.

சீவகசிந்தாமணி - முத்தியிலம்பகம்

தணக்குறப்பறித்தபோதுந் தானளைவிடுத்தல்செல்லா
நிணப்புடையுடம்பினாரை யாதிநீநீக்கலாகு
மணப்புடைமாலைமார்ப னொருசோலேயேதுவாகக்
கணைக்கவினழித்தகண்ணார்த் துறந்துபோய் கட்வுளானான்.
பான்மிடை யமிர்தம்போன்று பருகலாம் பயத்தவாகி
வானிடை முழக்கிற்கூறி வாலற வமுதமூட்டித்
தேனுடை மலர்கள்சிந்தித் திசைதொழச் சென்றபின்னாட்
டானுடை யுலகங்கொள்ளச் சாமிநாள் சார்ந்ததன்றே.

என்றுங் கூறியச் செய்யுட்களே போதுஞ் சான்றாம். மற்றும் அவரவர்கள் மனப்போக்கின்படி மதக்கடைகளை வைத்து சீவிப்பவர்கள் கிழவனைப்போல் தாடி வைத்திருக்கும் ஓர் கடவுளும், நாலுதலைக்கடவுளும், ஆறுதலைக் கடவுளும், கையே கடவுளும், காலே கடவுளும், தலையே கடவுளுமாக மக்களால் சிருஷ்டித்துக் கொண்ட கடவுளர்கள் அனந்தமுண்டு. இவைகள் யாவும் மதக்கடைபரப்பி சீவிக்கும் பொய்க்குருக்களின் போதனாக் கடவுளர் களும், பொய்க்குருக்கள் பேதை மக்களை வஞ்சித்துப் பொருள்பரிப்பதற்காக சிருஷ்டித்துக்கொண்ட கடவுளர்களென்னும் பொருளற்றப்பெயர்களேயாகும். கடவுள், சாமி என்னும் பெயர்களின் உற்பவங்களையும் அதன் பொருள்களையுந்

தேறவிசாரித்துத் தெளிவார்களாயின் தற்காலம் மதக்கடைப்பரப்பி சீவிப்போ ரெல்லாந் தங்கள் தங்கள் கோவில் கதவுகளை மூடிவிட வேண்டியதேயாம்.

- 5:37, பிப்ரவரி 21, 1912 -

81. சென்னை சாக்கைய புத்த சங்க சட்டதிட்டங்கள்

இதுவே சென்னைத் தலைமெய்ச் சபையோரின் அநுட்டானமாதலின் மற்றதேசங்களில் ஆரம்பிக்குங் கிளைச்சபையோரும் இதனை அநுசரித்து தேச வசதிக்கும், மக்கள் சுகத்துக்குந் தக்கவாறு திருத்தி சங்க காரியாதிகளை நடத்திக் கொள்ளும்படி இதனைப் பத்திரிகையில் வெளியிட்டுள்ளோம்.

சங்கத்தின் பெயர் - சென்னை சாக்கிய புத்த சங்கம்

சாக்கைய புத்தசங்கமென்னும் பெயர் வந்த காரணம் - மணிமேகலையின் பொருளறியாதும் சரித்திர ஆதாரமின்றியும் பகவனுக்கு முன்பு சில புத்தர்கள் இருந்தாகக் கூறுகின்றபடியால் அக்கூற்றிற்கு இடந்தராது சரித்திர ஆதரவாலும் சிலாசாஸனங்களின் ஆதரவாலுங் காணக்கூடிய சாக்கைய வம்மிஷ வரிசையிற் தோன்றிய புத்தரே ஆதிபுத்தரென்பதை விளக்குவான் வேண்டி இச்சங்கத்திற்கு சாக்கைய புத்த சங்கம் என்னும் பெயரை அளித்துள்ளோம்.

சங்கத்தின் நோக்கம் - சாதிபேதமில்லா பூர்வீக திராவிடாள் புத்த தன்மத்தைச்சார்ந்தே நாளதுவரையில் சாதிபேதம் இல்லாதிருந்தபோதினும் குலகுருவையும் குருவின் சரித்திரத்தையும் மறந்து தாய் தந்தையரை இழந்தப் பிள்ளைப்போல் நூதனமாகத் தோன்றியுள்ளப் பலமதங்களைத் தாவித்தாவி பிடித்து சம்பாதிக்கும் பொருளை பொய்க்குருக்களுக்கு அளித்து பஞ்சபாதகத் திற்கு உள்ளாவதுடன் நூதன சாதிபேதங்களை ஏற்படுத்திக்கொண்டுள்ள சத்துருக்களாலும் நிலைகுலைந்துப் பாழ்பட்டு வருகின்றபடியால் இவர்களது பூர்வ சரித்திரங்களையும், நீதிநெறி ஒழுக்கங்களையும் நன்கு விளக்கித் தெளிவுபெறச் செய்து அங்கங்கு சங்கங்கள் நிலைபெற்றவுடன் கல்வி சாலை களையும், கைத்தொழிற்சாலைகளையும், விவசாய சாலைகளையும், வியாபார சாலைகளையும் எற்படுத்தி சகலவிருத்தியிலும் முன்னேறச்செய்வதுடன் விவேகவிருத்திப் பெற்றோர் சங்கத்து சமணமுநிவர்களிடம் பொன்னாடை பெற்றுக் கரபோலேந்தி இராகத்துவேஷ மோகங்களை அகற்றி அன்பு ஈகை சாந்தத்தைப் பெருக்கி என்றும் அழியா நித்தியானந்த நிலையாம் நிருவாணத்தைப் பெறுவதற்கேயாம்.

சங்கத்தின் அங்கங்கள்

இச்சங்கத்திற்கு புத்ததன்மம் போதிக்கத்தக்க ஓர் சபாநாயகரும், உதவி சபாநாயகரும், ஓர் காரியதரிசியும், ஒரு பொக்கிஷாதிபரும், தன்ம விவகாரம் அறிந்த பனிரண்டு அங்கங்களும் இருத்தல் வேண்டும். இவர்கள் யாவரும் தன்மத்தைப் பரவச்செய்யும் தன்மகர்த்தாக்களாதலின் சத்திய தன்மத்தை ஒவ்வொருவரும் அறிந்திருத்தல் வேண்டும் என்பது கருத்து.

சங்கஞ் சேருங்கால் செய்ய வேண்டிய விதி

சங்கத்தோர் யாவரும் வந்து சேர்ந்தவுடன் சபாநாயகரெழுந்து சற்குருவை சிந்தித்து தன்னாலாயினும், சமணமுநிவரைக் கொண்டாயினும் பஞ்சசீல பிரதிக்கினை முடிந்தவுடன், நம்மெயாண்டு ரட்சித்துவரும் பிரிட்டிஷ் ஆட்சியாருக்கு நன்றியறிந்த வந்தன வாழ்த்தல் கூறி சங்கக்காரியாதிகளை நடத்தல் வேண்டும்.

சங்கத்திற் சேருவோர்

சங்கத்திற் சேரவிரும்புவோர் பஞ்சசீலம் பெற்றே சேரல் வேண்டும். அப்போதே பஞ்சபாதகங்களை அகற்றி நித்திய சீவனை அடைய வழியுண்டாகும்.

சங்கத்தின் செலவு

சங்கத்திற்கு வாடகை வீடெடுத்திருப்பினும் சங்கத்தின் செலவுகளுக்கும் பகவன் பிறந்த வைகாசிமாதம் பௌர்ணமியிலும் அவர் துறவடைந்த மாசிமத

பௌர்ணமியிலும் அவர் நிருவாணம் அடைந்த பங்குனி மாத பௌர்ணமியிலும், அவர் பரிநிருவாணம் அடைந்து நித்தியநிலைப்பெற்ற மார்கழி பௌர்ணமியிலும் அறப்பள்ளியைத் தீப கிருதஞ்செய்து கண்டாமணி ஓசையால் ஏழைகளைத் தருவித்து அன்னதானம், வஸ்திரதானம், கனிவர்க்கதானஞ்செய்வதற்கும், பணவுதவி வேண்டியதாதலின் சங்கத்தோர் சக்திக்குத் தக்கவாறு விகிதமிட்டுப் பணத்தைச் சேர்த்துப் பொக்கிஷாதிபரிடம் அளித்து குறித்துள்ள பொக்கிஷச்சாலைக்கு அனுப்பிவிடல் வேண்டும்.

சங்கச் செலவு செய்யும் விவரம்

சேருந் தொகையை சபாநாயகரும், காரியதரிசியும், பொக்கிஷாதிபரும் கையெழுத்து வைத்து பொக்கிஷ சாலைக்கு அனுப்பவும் சங்கத்தின் ஏழுபெயர் கூடி முடிவு செய்தவாறு மேற்குறித்த மூவருங் கையெழுத்திட்டு பணத்தை எடுத்துக் கூட்டத்தோர் செய்துள்ள முடிவுபடி செலவு செய்யல் வேண்டும்.

மடவிஷயம்

அறப்பள்ளிகள் கட்டவேண்டிய விஷயங்களுக்கும், சமண முநிவர்களுக்கும் அன்னமளிக்கவேண்டிய விஷயங்களுக்கும் சமயம் நேர்ந்தவழியில் காரியாதிகளைக் கூட்டத்தோரைக் கொண்டு நடத்திக்கொள்ளல் வேண்டும். சங்கவிருத்தி சகலத்திற்கும் தலைமெய்ச் சபையினின்று வெளிவரும் "தமிழன்" பத்திரிகையே ஆதாரமாயுள்ள படியாக அன்னியதேசங்களிலுள்ள சாக்கைய புத்தக் கிளைச்சங்கத்தோர்கள் யாவரும் அன்புகூர்ந்து வருடந்தோரும் தங்களாலியன்ற பொருளுதவிச்செய்து ஆதரித்தல் வேண்டும்.

சங்கத்தின் செயல்

சங்கமானது தன்மத்தையே ஆதாரமாகக்கொண்டு சீர்திருத்தத்தை நாடியுள்ளதால் சங்கத்தவர் ஒவ்வொருவரும் அந்தந்த கிராமங்களுக்குச்சென்று நீதிநெறிகளைப் போதித்து சன்மார்க்கத்தில் நிலைபெறச் செய்யல் வேண்டும்.

சங்கத்தோர் விரதம்

சங்கத்தோர் பஞ்சசீலத்தை உறுதிபடுத்திக் கொள்ளுவதற்கு மதியைக்கெடுக்கும் மதுவினையும், கொழுமெய்க் கொடுக்கும் மாமிஷத்தையும் இச்சிக்காது சங்கத்தோர் அகற்றவேண்டியதே அத்தியந்தச் செயலாகும்.

சாதிபேதமுள்ளோர் சங்கத்திற் சேர்தல்

சாதிபேதமுள்ளோர் சங்கத்திற் சேர விரும்புவார்களாயின் சமண முநிவர்களிடம் சீலம்பெற்று சாதிபேதமில்லாக் கூட்டத்தோர் மத்தியில் தங்கள் சாதிபேதத்தை அகற்றி சகல சம்பந்தங்களிலும் பொருந்திய வாழ்க்கை புரிதல் வேண்டும்.

தன்மம் பொதுவாயது

மக்களுள் ஏழைகளாயினும், கனவானாயினும், பிணியாளனாயினும், சுகதேகியாயினும், கற்றவனாயினும், கல்லாதவனாயினும் இத்தன்மம் பொதுவாதலின் யாதொரு பேதமுமின்றி சகலருக்கும் பொதுவாகப் போதித்தல் வேண்டும்.

விவாகக்கிரியை மரணக்கிரியை

சங்கத்தோருள் சீலம் பெற்றவர்களின் விவாகக்கிரியைகளையும், மரணக்கிரியைகளையும் சுருக்கமாகவும் அந்தஸ்தாகவும் வீண்செலவின்றியும் நடத்திக் கொள்ளுவதற்கு வேறு புத்தகங்கள் அநுப்பப்படும்.

கிளைசங்கத்தோர்களுக்கு மற்றும் வேண்டிய சங்கதிகளை எழுதித் தெரிந்துக் கொள்ளலாம்.

- 5:52, சூன் 5, 1912 -

82. AN APPEAL TO BUDDHIST SOCIETIES

Namo tassa Bhagavata Arahato
Samma Sambuddhassa.
The S.B.S. of Madras.
AN APPEAL

To
BUDDHIST SOCIETIES
in
Europe and America

The Buddhists of Madras met in the Sakya Buddhist Asrama, Royapettah on the 12th May 1911 and celebrated with great rejoicings the Festival of Vesakha Powrnami, in commemoration of the Birth Day of Lord Buddha. It was a day of momentous significance. Such a celebration every year, which 14 or 15 years ago would not have been even thought of, is a clear sign of the revival in the land of its birth of the holy religion of the Tathagato, who is now universally acknowledged to be the greatest man of intellect that humanity has yet produced, and who infact captivated the whole world by his august personality and stupendous wisdom and emancipated the fettered millions from the bondage of evil by enunciating the Noble Eight - fold path which leads to Nirvana - Nirvana, the goal of the Buddhist, which is neither the annihilation of all activities nor the absorption of individual soul in the universal soul but is that ideal state in which the evolved and perfected Ego, in full possession of all human excellences reposes with a full knowledge of its whole being in a perfect realisation of Truth.

There is no doubt that there has been a natural hankering of men of the 20th century - the age of reason - after the scientific religion and with the progress of science, Buddhism the scientific religion is reviving. That the revival in Southern India has mainly been the work of the Sakya Buddhist Society of Madras cannot be denied even by its great opponents.

A brief sketch of the circumstances which led to the establishment of this Society and of the work it has done for the past 14 or 15 years may be of interest to the general public, and is by no means an unpleasant task.

So long back as the year 1890 I came to be convinced, after a long and varied study and research, of the truths of Buddhism. In the year 1898 I sought the late Col. H.S. Olcott of the Theosophical Society, Adyar, Madras, for advice and co-operation in the establishment of a Buddhist Society in the city of Madras. At the instance of that good and great man I journeyed and voyaged to Ceylon. At the Malikaganda Vihara, I obtained the Panchasila at the hands of the Venerable Sri Sumangala Mahanayaka, the High Priest, Principal of the Vidyodaya College, Colombo, in the presence of a large and representative gathering. With the blessings of the High Priest the Venerable Sumangala I returned to Madras and started the Sakya Buddhist Society at Royapettah in Madras.

Dr. Paul Carus of Chicago has kindly consented to be the President of the Association.

Lectures are delivered every week in the Hall of the Society, in addition to occasional lectures delivered here and there in the city of Madras. Thus great interest is aroused in the minds of the people in the

life and teachings of our Lord Buddha. And not a few have been the conversions to the Faith of the Master.

A member of the Kolar Branch of the Society, Mr. C. Lingiah was sent to Ceylon by the society to take robes and study Pali at Malikaganda Vidyodya College - the first instance after a lapse of centuries that an Indian went over to Ceylon to become a Bikhshu. Some 260 Buddhist Visitors Bikhshus and lay men and women from Holland, China, Japan, Burma, Ceylon, Siam, Singapore, Chittagong, Benares, Calcutta, Budhgaya and other places have called and stayed here on different occasions. A Charity Fund for the relief of the disabled workmen at Marikuppam, Mysore Mines, was started by the Kolar Branch and is in full working order.

Thanks to the devotion and zeal of Bhikshus like Gunalankara of Ceylon, Uthaduthaya of Bharrvady, Burma, Dhammananda of Poona, Nandarama of Ceylon, U. Wilasa, Winayalankara and U. Tezzavansa of Burma, the propagation of the truths of Buddhism has received not a little stimulus. Mr. M. Ragavar, a member of the Sakya Buddhist Society, Madras, went to Kolar and with the help of some kind friends started S.B.S in Kolar whither I had been to a lecturing tour. Later on I went to Bangalore where another S.B.S was founded. In connection with it a Library and a School were started. Similar movements have began in Thirupatur, Secunderabad, Rangoon and other places. The latest accession to the ranks of the Branch Societies is that started in South Africa as reported in the Natal Advertiser. In the work of propagation of Buddhism the zeal and exertion of Samana Visuddha Sami cannot be too highly praised.

In Schools established under the auspices of the Sakya Buddhist Society, special care is taken to impart moral instruction to children. In the course of a little more than a decade the Sakya Buddhist Society has become a Centre of Buddhist activities. When the late lamented Col. Olcott cast off his mortal coil, I was the recipient of an invitation from Mrs. Annie Besant to perform the last and solemn ceremony - as a Buddhist. The Birth Day anniversary of our Lord and Master, which has been celebrated this year, has become an institution here. On this joyous day many hundreds of the poor are fed - aye the poor thousands look forward to the day with hope and pleasure. With a desire to circulate the Dharma throughout the length and breadth of the Tamil speaking world, single handed and unaided I have started a Weekly, The *Tamilian*.

So much has been and is still being done by the S.B.S. of Madras - with practically little help in the shape of donations beyond the monthly payment of the rent of the Society building by the kind hearted lady Mrs. Annie Besant, P.T.S. Adyar, Madras, and the gift to me of a small printing press by the good Buddhists of Kolar - towards the re-establishment of the Religion of Love and Universal Brotherhood founded by the Great Master, the Madhyamikha in thought as well as in life, in the land of its birth which since its disappearance has been suffering under the evil influence of an alien secretive and exclusive religion enjoining the idol workship of false gods and goddesses and strict observance of the rules of the tyrannical caste system, charming however to the ignorant on account of its highly ceremonious rites and bloody sacrifices of animals.

But to bring back the long forgotten teachings of the Lord of compassion and love to millions of such highly superstitious and unsympathetic

people is a Herculean task. If we have to proceed with this extremely difficult task with any measure of success, what is most needed is the sympathy and co-operation of all Buddhists true and honest. Alas! on this side of caste-ridden India we can scarcely find such honest men. With some the denomination "Buddhist" serves as a spell to charm, and easily insinuate into the confidence of the guileless masses.

These so called leaders who pretend to work for the regeneration of the unfortunate brethren betray themselves by their actions which show beyond the shadow of a doubt that they still fondly cling to the vain distinctions of caste and care more for them than for Brotherhood or Nirvana. Of course the scientific knowledge, which has been easily acquired by a study of the works of western scientists, enables them to talk glibly of the scientific religion (Buddhism) in newspapers and on public platforms, but it cannot give them that moral courage which one must possess to act up to one's moral convictions. How can we safely accept such men as our guides or co-workers?

Are we then going to give up our work in despair? No we will push on the work in face of great odds, until we can gain the sympathy and co-operation of our trusted friends, the brother Buddhists of scientific researches living in the far off countries of Europe and America where the Law is being preached by educated, earnest disciples of our Lord Buddha. They are the men who have made a deep study of pure Buddhism for its own sake, whose learning has convinced them that the Buddha's philosophy is a philosophy which reconciles every thing in nature — a conflict between Buddhism and Science is impossible and who now greatly wonder that in those far off days in meditative solitude the Buddha should have seen without extraneous help what has now been found only after deep research by clever scientists with the aid of wonderfully contrived instruments. It is then a matter of great relief for the conductors of the infant S.B. Societies in Southern India, who have been walking through slippery places with trembling feet, to find that just at this critical time Buddhist Centres have been formed in several European countries and missionary bodies are being organised.

We therefore earnestly appeal in all hope and confidence to those really learned and generous-hearted Buddhists of the West for their generous contribution, and fervently pray that they will be so kind as to take-up our cause and in time send to our relief duly organised missionary bodies composed of, if possible, Pali Scholars well versed in all branches of oriental as well as occidental lore. We can assure them that the field of operation is wide and has been well prepared for sowing the seed of the Dhamma with the prospect of an abundant harvest.

May the grace of the omniscient Lord Buddha be with us!

Sabbadanam Dhammadanam Jenati.

General Secretary,
PANDIT C. IYOTHEE DOSS,

DATE OF LORD BUDDHA'S BIRTH

It is well known to all students of history that the Buddha, Sakya Muni is the first and the eldest of all Founders of Religion; and it is equally well known that He was born in the Royal house of the Sakyas. It is a pity that there should be uncertainty as to the date of birth of the historic Buddha the founder of the greatest of the world religions. Those scholars

who have studied the Buddhist sculptures and frescoes and the inscriptions of King Asoka, hold the opinion that the Master was born (February - Renunciation; March - Buddha - hood; May - Birth Day; December - Maha Pari Nibbana) about 620 years before Christ. I am however with the help of the histories of the Dravidian kings, able to calculate the date of His birth correctly as follows:-

Sakya Buddha was as the annexed extracts from poetical works go to confirm born of Mayadevi, at Kapila the capital of Magathanadu, on the Full Moon day of Sunday the 13th of the month Vigasi (In Pali Vaisakha) in the Dravidian year Sitthartthi the 1616th year of Kaliyulagu, when the Star Kattai of the constellation was representing Minum or the fish Calculating from this date it is now nearly 3397 years since Buddha was born.

EXTRACTS.

(i) From **Manimegalai.**

1347 வரி

விருள்பரந்துகிடந்த மலர்கலியுலகத்து
விரிகதிர்ச் செல்வன் றோன்றின னென்ன
வீரெண்ணூற்றோ டிரெட்டாண்டினிற்
பேரறிவாளன்றோன்றி யதிற்றவ
பெருகுளமருங்கிற் சுருங்கைச்சிறுவழி
யிரும்பெருநீத்தம் புகுவதுபோல
வளவாச்சிறுசெவி யளப்பரு நல்லற
னுளமலியுவகையொடுயிர் கொளப்புகூஉங்
கதிரோன் றோன்றுங் காலையாங்கவ
னவிரொளி காட்டு மதியே போன்று
மைத்திருள் கூர்ந்த மனமாசு கழூஉம்
புத்தஞாயிரு தோன்றுங்காலைத்
திங்களு ஞாயிருந் தீங்குறா விளங்கத்
தங்காநாண் மீன்றகைமையினடக்கும்.

1509 வரி.

னாங்கவரவ்வயிற்றமரர் கண்முவப்பத்
தீங்கனிநாவலோங்கு மித்தீவினுக்
கொருதானாகியுலகு தொழுத்தோன்றினன்
பெரியோன் பிறந்த பெற்றியைக் கேணீ
ரிருதிளவேனி லெறிகதிரிடபத்
தொருபதின்மேலு மொருமூன்று சென்றபின்
மீனத்திடைநிலை மீனத்தகவையிற்
போதித்தலைவனோ பொருந்தியபோழ்தத்து
மண்ணகமெல்லா மாரியின்றியும்
பண்ணியநன்னீர் போதொடு சொரிந்தது
போதிநாதன் பூமியிற் றோன்றுங் காலம்

3264 வரி.

மறந்துமழைவறா மகதநன்னாட்டுக்
கொருபெருந் திலகமென் றுரவோ ருரைக்குங்
கரவரும் பெருமைக் கபிலைப்பதியி,

(ii) From **Soolamani.**

சூளாமணி, இரதநூபுரச்சருக்கம் 96 பாடல். புத்தர் தியானம்.

ஆதியங்கடவுளை யருமறை பயந்தனை
போதியங்கிழவனை பூமிசை யொதிங்கினை
போதியந் கிழவனை பூமிசை யொதிங்கிய
சேதியஞ் செல்வநின் றிருவடி வணங்கினம்.

மந்திரசாலைச் சருக்கம்.

153, 154, 155, 156 பாடல்கள்.

மாற்றவர் மண்டில மதனுளூழியா
லேற்றுழிபுடையன விரண்டுகண்டமாந்
தேற்றிய விரண்டினுந் தென்முகத்தது
பாற்றரும் புகழினாய் பரதகண்டமே.

மற்றதுமணிமய மாகிக்கற்பகம்
பொற்றிரளணிபொழிற் போகபூமியாய்
முற்றியவூழி மூன்றேறி மீள்வழிப்
பிற்றைகயூழிவட் பிரமர்தோன்றினார்.
வெங்கதிர்ப்பரிதியும் விரவு தண்பனி
யங்கதிர் வளையமு மாதியாயின
விங்கிவர்படைத்தன யுழிந்த திவ்வகை
பொங்கியபுரவியாய் போககாலமே.
ஊழிமூன்றாவதோய்ந்திறு திமன்னுயிர்
சூழ்துயர்பலகெடச் சோதிமூர்த்தியா
யேழுய ருலகுடன் பரவவீண்டரு
ளாழியங் கிழமை யெம்மடிக டோன்றினார்.

C. IYOTHEE DOSS.

SAKYA BUDDHIST SOCIETY (BRANCHES)

Place.		Secretary,
Mysore,	Marikuppam. K.G.F.	Mr. C. Guruswami, Upasaka.
Mysore,	Bangalore.	Mr. V. Jivarathnam.
North Arcot,	Tirupatoor.	Mr. C.K. Nagula Pillai.
Hyderabad,	Secunderabad.	Mr. R.V. Sabapathy.
Burmah,	Rangoon.	Mr. S. Annamalai
South Africa,	Durban. Overport	Mr. V. Veeran.

AN APPEAL TO OUR BUDDHIST BROTHERS.

The strenuous efforts made to re-establish the Dharma in the land of its birth are beginning to bear fruit and signs are not wanting which betoken that the glorious Doctrine of Deliverance will once more find acceptance in India and serve to infuse into the minds of India's millions, that Spirit of Brotherhood by which alone they will be capable of once more elevating themselves to that state of prosperity and national glory in which they were during the time of Asoka.

The ever increasing number to the ranks of Buddhists here calls for a building of their own to locate the Society - to find abode for the Bhikshus, to contain a Hall for the propagation of Buddhism. While we the members of Sakya Buddhist Society (Head Quarters) were struggling for a place the late Col. Olcott kindly came to our help and secured for us the grant of a monthly rental of Rs. 10 wherewith to engage a house till the Society secured a building of its own. Accordingly a house was engaged at Royapettah and Buddhist Meetings are held there every Sunday and Panchaseela administered. After the lamentable death of Col. Olcott the grant of the rent is being continued by Mrs. Annie Besant.

The want of a building of its own hampers the work of the Society a great deal. As the present abode of the Society is insecure and very small for the work, it is necessary that the Society should have a building of its own and spacious enough to accommodate a large number of persons particularly the Bikkshus from Ceylon and Burma who true to the Master's command have been carrying the message of benevolence and good will to all countries and who since the establishment of the Sakya Buddhist Society have been visiting Madras and staying in our midst so that it may carry out its work widely.

It is therefore that this appeal is made to the generous hearted Buddhist Ladies and Gentlemen to render such help as lies in their power

for the propagation of the Dharma preached by our Venerable Lord Buddha.

ESTIMATE OF BUILDING

Ground	Rs. 5,000
Lecture Hall	Rs. 5,000
Place for Visitors	Rs. 3,000
Panchala	Rs. 2,000

Subscriptions may be sent to Mrs. Annie Besant, P.T.S., Adyar, who will forward them to the Bank of Madras for credit to our account.

PUNDIT C. IYOTHEE DOSS,
General Secretary, 5-6-1911

(From the Wesak Day, published by Sakya Buddhist Society, Madras)

83. ஆதி வேதம்

அறிவோம் நன்றாக குருவாழ்க குருவேத்துணை
பூர்வத்தமிழொளியாம்

புத்தரது ஆதிவேதம்

இஃது, பௌத்ததன்மப் பாலிப் பிரிதிகளைக்கொண்டும், தமிழ்ப் பிரிதிகளைக் கொண்டும், பரம்பரை சுருதிவாக்கியங்களைக் கொண்டும் சென்னை சாக்கைய பௌத்த சங்கஸ்தாபகரும் பொதுக்காரியதரிசியும் "தமிழன்" பத்திரிகையின் அதிபருமாகிய க. அயோத்திதாஸப் பண்டிதரால் எழுதி, மாரிகுப்பம், சாக்கைய பௌத்த சங்கத்து சபாநாயகர் ஆ.லு. முருகேசர் சாஸனதாயகா, சங்கத்தின் காரியதரிசி சி. குருசுவாமியார் சாஸனதாயகா, இவ்விருவர் பேருதவியால் சென்னை கௌதம அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது.

பௌத்த வருடம் 3398. இதன் விலை ரூபாய் - 3.50 கிறிஸ்து வருடம் 1912.

பாயிரம்

சற்குருவே நமः.
தாயுற மாட்டே தரணியென் றோம்புங்
கோயிறை தெய்வப் புலவர் கொண்டாடு
மாயிர நாமத் தாழியன் சரிதை
பாயிர மிங்குப் பகருவம் யாமே.

மணிமேகலை

இருள் பரந்து கிடந்த மலர்கலியுலகத்து, விரிகதிர்ச் செல்வன் தோன்றினனென்ன,
ஈரெண்ணூற்றோ டிரெட்டாண்டினில், பேரறிவாளன் தோன்றி
மகதனன் நாட்டுக் கொருபெருந் திலகமென் சாக்கையராளுந் தலைத்தார் வேந்தன்,
ஆக்கையற்று உறுதித் தனனாங்கவன்றானென

எண்ணருஞ் சக்கரவாளமெங்கணும், அண்ணலறக்கதிர் விரிக்குங்காலை

பெருங்குறவஞ்சி - குலமுறை சிறப்பு

குலமுறையிற் கலிவாகு நிலவரை ஈதம்மே - நிலவரை யீதம்மே,
பலவறையிற் கணிதாதி பார்த்தறிந்தோனம்மே.
பார்த்தறிந்து சாக்கையெனும் பெயர் வாய்த்தோனம்மே பெயர் வாய்த்தோனம்மே,
மூர்த்தியவன் குலத்தோன்றல் வள்ளல்வாகம்மே.
வள்ளல்வா குள்வரிசை வாகுவல்லனம்மே - வாகுவல்லனம்மே,
துள்ளுதார்வேந்தன் குல சோகுவா கும்மே.
சோகுவாகின் சுகத்தை சொல்லொணாதம்மே - சொல்லொணாதம்மே,
வாகுமன்னரையடக்கு வல்லவன் காணம்மே.
வல்லவன் குலத்திலக மாமதிவாகம்மே - மாமதிவாகம்மே,
சொல்லொணா சுந்திரவாகவன் தோன்றலம்மே.
அவன்மகவை அங்கணவா கதிவல்லனம்மே - அதிவல்லனம்மே,
புவன மன்னவர் போற்றும் புரவலனெனம்மே.
புரவலன்றன் குலமரபோன் குலவாகு அம்மே - குலவாகு அம்மே,
திரமரபோன் தோன்றலதி இட்சுவாகம்மே.
இட்சுவாகின் சுகத்தை எண்ணெண்ணாதம்மே - எண்ணெண்ணா தம்மே,

அச்சமற வாளுமதி வேந்தனவனம்மே.
வேந்தன் முகத்தார்வேந்தன் வீரவாகம்மே - வீரவாகம்மே,
ஏந்தலொன்பான் மேலோன் மண்முகவாகம்மே.
மண்முகவா கீன்றமைந்தன் சித்தார்த்தரம்மே - சித்தார்த்த ரம்மே,
அண்ணலவன் ஆதியந்த மறைகிறேன்கேளம்மே.

பின்கலை நிகண்டு

மண்முகன்மாயாதேவி சுதனகளங்கமூர்த்தி.

மலர்கலியுலகத்து 166 சித்தார்த்தி வருடம் மகதநாட்டுத் தலைத் தார்வேந்தர் களாக வழங்கி வந்த கலிவாகு, வள்ளல் வாகு, இட்சுவாகு, வீரவாகென்னும் சக்கிரவர்த்திகளின் வம்மிஷவரிசையில் மண்முகவாகென்னும் சக்கிரவர்த்திக்கும், மாயாதேவி என்னும் இராக்கினிக்கும் மகவாகத் தோன்றி தனது பேரானந்த ஞானத்தால் ஒலிவடிவிலிருந்த மகடபாஷையை வரிவடிவாக்கி சகலமக்களுக்கும் சகடபாஷையையுந் திராவிட பாஷையையும் அருளி நீதிநெறி ஒழுக்கங்களில் அமைத்து எண்ணருஞ் சக்கரவாளமெங்கணும் அறிய சங்கங்களை நாட்டி சகல கலைக்கியானங்களையுமூட்டி தனது தந்தைக்கே குருவானதுபோல் உலகத்தில் தோன்றியுள்ள சகல மதங்களுக்கும் போதனாபீடமாகவும், உலகரட்சகனாகவும், ஜகத் குருவாகவும் விளங்கிய ஒப்பிலா அப்பன் புத்தரது சிறந்த சரிதத்தையும், அவரது அளவுபடா ஞானபோதத்தையும், அதனால் மனுக்கள் அடைந்த ஆனந்த சுகத்தையும் எனது நாவினாற் கூறுதற்கும் கரத்தால் வரைவதற்கும் அசக்தனாயினும் கூடியவரையில் எமதுகுலமரபோர் இடத்து சிதலுண்டது நீங்கி எஞ்சிய நூற்களாகும் அருங்கலைச்செப்பு, அறநெறிச்சாரம், நிகழ்காலத்திரங்கல், மணிமேகலை, சீவகசிந்தாமணி, சூளாமணி, சிலப்பதிகாரம், திரிக்குறள், திரிமந்திரம், திரிகடுகம், யாப்பருங்கலை, திரியறக்கலை செய்யுட்களைக்கொண்டும் சமண முநிவர்களில் சித்தி பெற்றோராகும் சித்தர்களால் இயற்றியுள்ள சித்து நூற்களின் ஆதாரங்களைக் கொண்டும் சாக்கைய வம்மிஷவரிசையோர் தங்கள் தங்கள் கர்ணபரம்பரையால் வழங்கிவந்த சுருதிகளைக்கொண்டும் சென்னை சாக்கைய புத்தசங்கத்திற்கு வந்திருந்த மாண்டலே, யு. சாந்தவாராவென்னும் சமண முநிவராலும், ஹேரன்னா சிலோன், யு. வினயலங்காராவென்னும் சமண முநிவராலும், மோல்மென், யு. பிரஞ்ஞா வென்னும் சமண முநிவராலும், என்சடா யு. தேஜோவன்ஸா வென்னும் சமணமுநிவராலும் பாலிபாஷையிலுள்ள அபிதம்மத சங்கஹ, பட்தானா, தம்மசங்கினி, சம்ஹிதசுத்தா என்னும் தன்ம நூற்களை மொழிபெயர்த்தும், அறவாழி அந்தணனது திவ்விய சரித்திரத்தை கலியுலகம் 500 வது வருடம் புத்தர் பிறந்த 3393 வது வருடம் கிறிஸ்து பிறந்த வருடம் 1907 மகம்மது பிறந்த 1325 வருடம் நமது தமிழன் பத்திரிகையில் வெளியிட ஆரம்பித்து நாளதுவரையில் வெளியிட்டுள்ள சரித்திர நீதிநெறி ஒழுக்கங்கள் யாவையும் புத்தக ரூபமாகத் திரட்டி வெளியிட்டுள்ளோம்.

இதனுள் அடங்கியுள்ள சரித்திரங்களும், நீதிநெறி ஒழுக்கங்களும், ஞானசாதனங்களும், அதனதன் பலன்களும் ஓதாமல் உணர்ந்த முநிவன் கண்டளித்த, பிறப்புப் பிணி மூப்பு சாக்காடென்னும் நான்கு வாய்மைகளும், பிறப்பை ஜெயித்து பிணியை ஜெயித்து மூப்பை ஜெயித்து மரணத்தை ஜெயித்து நிருவாணமுற்ற துக்கநிவர்த்தியும், அதன்பின் இருபிறப்பாளனாகி சோதிமயமாக மாற்றிப் பிறக்கும் பூரணானந்தமாம் பரிநிருவாணமும் சாதனமற்ற அன்னிய மதத்தர்களால் வரைந்து வைத்துள்ள பௌத்த நூற்களுக்கு மாறுபட்டே நிற்கும்.

அதாவது பாலி நூற்களிலிருந்து மொழிபெயர்த்ததினால் உண்டாம் பேதங்களும், செய்யுட்களிலிருந்து பொருள் பிரித்த பேதங்களும் இத்தேசத்திற்கு வந்துள்ள யாத்திரைக்காரர்வசம் எழுதி அளித்துள்ள பேதங்களும் பேரானந்த புத்ததன்மத்திற்கு மாறுதலடைந்து பலவகையாய சந்தேகத்தில் ஆழ்த்தி திகைக்க வைத்திருக்கின்றது.

அத்தகையத் திகைப்புகளுக்கு ஆதாரம் பாலிபாஷையின் மொழி பெயர்ப்பே என்பது எவ்வாறெனில் : சக்கிரவர்த்தித் திருமகன் சித்தார்த்தியார் பிணியாளன்

துக்கத்தையும், மூப்பின் துக்கத்தையும், மரண துக்கத்தையுங் கண்டு சகியாது இத்தகைய துக்கத்திற்கான எதிரடை சுகம் ஒன்றிருத்தல் வேண்டும். அதைக் கண்டடைவதே மானுஷீகதன்மமென்று சகல ராஜபோகங் களையும் விட்டுத் துறவடைந்து சகல பற்றுக்களும் அற்று பேரானந்தமுற்று அரசமரத்தடியில் நிருவாணம் பெற்றுக் காமனையுங் காலனையும் வென்று பிறவியின் துக்கத்தையும், பிணியின் துக்கத்தையும், மூப்பின் துக்கத்தையும், மரண துக்கத்தையும் தான் செயித்து பரிநிருவாணமுற்று பரமானந்தத்தில் இருப்பதுடன் தனது சங்கத்தோர்கள் யாவருக்கும் அந்நான்கு வகை சத்திய தன்மங்களை ஊட்டி பிறப்பு, பிணி, மூப்பு சாக்காட்டினால் உண்டாந் துக்கங் களை ஜெயிக்கச் செய்ததுடன் நாளது வரையிலும் அவற்றை ஜெயிக்கத்தக்க சங்கங்களை நாட்டி சாதனைகளையும் அநுஷ்டிக்கும்படிச் செய்திருக்கின்றார்.

வீரசோழியம்

காமனை கடிந்தனை காலனை காய்ந்தனை

மணிமேகலை

காமற் கடந்த வாமன் பாதம்.

அத்தகையப் பெரியோனது ஞானவழியிற் செல்லாதவர்களும் அவரது சாதனத்தில் நில்லாதவர்களும் அனந்தம்பேருண்டு. அவற்றுள் ஞானவழியும் ஞானசாதனமுமில்லாதவர்கள் பாலிபாஷையையும் ஆங்கில பாஷையையுங் கற்றுக்கொண்டு மொழிபெயர்ப்பதாயின் ஞானசாதன ரகசியங்கள் விளங்காது தாங்களடைந்துவரும் பிறவியின் துக்கத்தையும், பிணியின் துக்கத்தையும், மூப்பின் துக்கத்தையும், மரண துக்கத்தையும் புத்தரென்னும் மெய்யரடைந் திருப்பாரென்று எண்ணி தங்கள் தங்கள் மனம் போனவாறு பன்றியினிறைச்சி யைத் தின்றாரென்றும், பேதி கண்டு தள்ளாடி நடந்து ஓரரசமரத்தடியில் இறந்தாரென்றும் புத்ததன்மத்திற்கு எதிரடையாய அபுத்ததன்மத்தை மொழிபெயர்த்து வரைந்து வைத்திருக்கின்றார்கள்.

ஆதலின் பூர்வத்தமிழொளியுள் வரைந்துள்ள ஞானசாதன சத்தியதன்மத் திற்கும், ஞானசாதனமில்லார் வரைந்துள்ள அசத்திய தன்மத்திற்கும் பொருந்தவே பொருந்தாது.

பௌத்த தன்மத்தைச்சார்ந்த அன்னியமதஸ்தர்கள் பொருள்படுத்தியுள்ள செய்யுட்பேதங்கள் யாதெனில், ஆதிவேதம் பயந்தோய் நீ என்றும், ஆதியங் கடவுளை அருமறை பயந்தனை என்றும் புத்தபிரானை சிந்தித்திருக்கும் செய்யுட்களின் பொருள்பேதமறியாது வேதமென்றால் பெரிய புத்தகமென்றும், ஒரு ஆட்சுமை யாயிருக்குமென்றும், வருணனை சிந்திப்பது பலவாயிரம் பாடலென்றும், இந்திரனை பூசிப்பது பலவாயிரம் பாடலென்றும், குபேரனை பூசிப்பது பலவாயிரம் பாடலென்றும் அவைகளே சுருதிகளாயிருந்தனவென்றும் மாறுபடக் கூறித்திரிகின்றார்கள்.

வேதவாக்கியமென்னும் மொழிகள் பேதவாக்கியமென்னும் மொழி களிலிருந்து பிரிந்தவைகளாகும். அதாவது பண்டி என்பது வண்டி என்றும், பரதனென்பது வரதனென்றும், பைராக்கி என்பது வைராக்கி என்றும், பங்காள மென்பது வங்காளமென்றும், பாலபருவமென்பது - வாலபருவமென்றும் திரிவதுபோல் பேதவாக்கியங்களென்பது வேதவாக்கியங்களெனத் திரிவதாகும்.

திருக்கலம்பகம்

ஒதாதுலகிற் பொருளனைத்து முடனே யுணர்ந்தா னுணர்ந்தவற்றை
வேதாகமங்களா ரேழால் விரித்தான் விமலன் விரித்தளவே
கோதார் நெஞ்சத்தவர் தெளியக் கொண்டே சுற்றோர் மும்மொழியை
பேதா, பேதம்; பேதமெனப் பிணங்கானின்றார் பிரமித்தே
சப்பபாபஸ்ஸ அகரணம் குசலஸ உபசம்பதா
சஸித்தபரியோதபனம் ஏதங்புத்தானஸாஸனங்

என்றும் ஆதிதேவனாம் புத்தபிரானால் போதித்துள்ள மூன்று அருமொழிகளையே திரிபேதவாக்கியங்களென்றும், திரிபீட வாக்கியங் களென்றும், திரிமந்திரவாக்கியங்களென்றும், திரிசுருதிவாக்கியங்களென்றும், ஆதிநூலென்றும், எழுதாக் கேள்வி என்றும், ஆரணமென்றும், ஒத்தென்றும்,

சாகையென்றும், சுருதி என்றும், இருக்கென்றும். ஏழு பேதமொழிகளாக வழங்கிவந்தார்கள்.

பின்கலை நிகண்டு

ஆதிநூ லெழுதாக்கேள்வி யாரண மொத்துசாகை
யேதமில் சுருதிதன்னோடிருக்கிவை யேழும்வேதம்
வேதநூற் பொருளினாமம் விதித்திடு ஞானபாகை
ஆதியாங் கருமபாகை அறுத்தபாகையுமாமென்ப
மெய்தெரி யாரணந்தான் வேத தின் ஞானபாகை
மையலுட் பொருளினாம மற்றுப நிடதமென்ப
வைதிக வேதமுற்ற மார்க்கமே பார்க்குங்காலை
பையமா விருக்கினோடு பிடகமே யாதிவேதம்

நன்னூல் - பாயிரம்

மனவிருளிரிய மாண்பொருள் முழுவது, முநிவறனருளிய மூவரு மொழியுளுங்

அதன் காரணமோவென்னில்:- பாபஞ்செய்யாதிருங்கள், நன்மெய்க் கடைபிடியுங்கள், உங்கள் இதயத்தை சுத்திசெய்யுங்கோளென்னும் மூன்று வாக்கியங்களும் மூன்று வகையாயிருந்தபடியால் மூன்று பேதவாக்கியங்களென்றும், உலக சீர்த்திருத்தத்திற்கு இம்மூன்று வாக்கியங்களே ஆதிபீடமாயிருந்தபடியால் திரிபீடவாக்கியமென்றும், திரிபீடக வாக்கியமென்றும், சகலகலை நீதி நூல் ஒழுக்க ஆலோசனைகளுக்கும் மதியூக வாக்கியங்களாயிருந்தபடியால் திரிமந்திர வாக்கியங்களென்றும் பகவன் நிருவாணமுற்று உலகமக்களுக்கு நீதிவாக்கியம் போதிக்குங்கால் வரிவடிவமாம் அட்சரங்களில்லாமல் மகடபாஷையாம் பாலிபாஷை ஒலிவடிவிலிருந்தபடியால் போதித்த மும்மொழிகள் செவிகளில் கேழ்க்கவும் சிந்திக்கவும் தெளியவுமிருந்தது கண்டு 'சுருதி சிந்தனா பாவனா தரிசன'மென்னும் பாலிபாஷைப்படி திரிசுருதி வாக்கியங்களென்றும், என்றுமுண்டாய அந்தர் அங்கமாம் மெய்ப்பொருள் யாவராலும் வெளிப்படாது இறைவனால் ஓதிய எழுதாக் கேள்வியாம் முச்சுருதிவாக்கியத்தால் வெளிப்பட்டபடியால் ஆதிவேதமென்றும், முதனூலென்றும் இருக்கென்றும் வழங்கிவந்தார்கள்.

சீவகசிந்தாமணி

ஆதிவேதம் பயந்தோய் நீ யலர் பெய்மாரி யமர்ந்தோய் நீ
நீதி நெறியை யுணர்ந்தோய் நீ நிகரில் காட்சிக் கிரையோய் நீ

அருங்கலைச்செப்பு - ஆதிநூற் பத்து

திருமறை யென்னுந் திரிமொழியாகி அருங்கலையாயது நூல்
என்று முண்டாகி யிறையால் வெளிப்பட்டு நின்றது நூலென்றுணர்
மூவருமொழியால் மூவுலகளந்து தேவரு மாக்கிய நூல்
எல்லாமுடையான் குருவாகி வந்துமுச் சொல்லாகி நின்றது நூல்
மெய்பொருட்காட்டி யுயிர்கட் கறணாகி துக்கங் கெடுப்பது நூல்
பிடகமும் மொழியே பிறவியை யகற்றும் திடமுறு ஞான முந்நூல்
சாதுயர் நீக்கத் தவமுதலுய்யு மாதவன் கண்ட முன்னூல்
காதிலந்தோயா கடவுளராக்குங் கோனவனீய்ந்த நன்னூல்
பேதமும் மொழியே பீடமதாகி நாதமெய் கண்டது நூல்
பிறவியை வெல்லும் பெருவழி காட்டும் அறன் மொழியாய முந்நூல்

உலக சீர்திருத்த மும்மணிகளாகும் பாபஞ் செய்யாதிருங்கோளென்னும் மொழியைக் கர்ம்மபாகையாகவும், நன்மெய்க் கடைபிடியுங்கோளென்னுமொழியை அர்த்தபாகையாகவும், இதயத்தை சுத்தி செய்யுங்கோளென்னும் மொழியை ஞானபாகையாகவும் பிரித்து, பாபஞ்செய்யாதிருங்கோளென்னும் மெய்யறநிலைக்கு இருக்கென்றும், நன்மைக்கடைபிடியுங்கோளென்னும் உட்பொருணிலைக்கு யசுரென்றும், இதயத்தை சுத்தி செய்யுங்கோளென்னும் பேரின்ப நிலைக்கு சாமமென்றும் பெயர்களை அளித்து திரிபேத வாக்கியங்களென ஆதியில் வழங்கிவந்தபோது சுருதியாயதால் மக்கள் மனதில் பதியாது சிந்திப்பதற்கும் பாவிப்பதற்கும் மறைமொழியாயிருந்தபடியால் அருங்கலை நாயகனாம் அறவாழியான் கருணைகூர்ந்து வடமொழி என்னும் சகடபாஷையையும், தென்மொழி என்னும் திராவிட பாஷையையும் வரிவடிவால் இயற்றி, அட்சரங்களை உண்டுசெய்து

விம்பாசார அரயன் ஆளுகைக்குட்பட்ட ஓர் மலையில் தான் போதித்துவரும் நீதிமொழிகளை தசபாரமிதையாய் வரைந்து வைத்ததுமன்றி சகடபாஷையை பாணினியாருக்கும், திராவிட பாஷையை அகத்தியருக்குங் கற்பித்து தனது மெய்யறத்தைப் பரவச்செய்துவருங்கால், மெய்யறம், மெய்ப்பொருள், மெய்யின்பத்தின் பயனாம் வீடுபேற்றை நிருவாணமென்னும் நான்காம்பேதவாக்கியமெனச்சேர்த்து அவற்றிருக்கு அதற்வணமென்னும் பெயரை அளித்து வழங்கினும் அதனந் தரார்த்தம் சங்கத்தவர்களுக்கு சரிவர விளங்காதது கண்ட பகவன் கர்ம்ம பாகையாம் இருக்கினது பேத வாக்கியத்தை விளக்குமாறு எட்டு உபநிட்சை யார்த்த உபநிடதங்களும், அர்த்த பாகையாம் யசுரினது பேதவாக்கியத்தை விளக்குமாறு எட்டு உபநிட்சையார்த்த உபநிடதங்களும் ஞானபாகையாம் சாமபேதவாக்கியத்தை விளக்குமாறு எட்டு உபநிட்சையார்த்த உபநிடதங்களும், நிருவாண பாகையாம் அதர்வண பேதவாக்கியத்தை விளக்குமாறு எட்டு உபநிட்சையார்த்த உபநிடதங்களும், ஆய முப்பத்திரண்டு உபநிட்சை யார்த்தங்களை வகுத்து நான்கு பேதவாக்கியங்களின் மறைப்பொருள் நன்கு விளங்குமாறு சாதுசங்க சமணமுநிவர்களுக்களித்து தென்புலத்தராகி அறஹத்து நிலைபெறும் ஆனந்தவழியில் விடுத்தார்.

வீரசோழியம்

திடமுடைய மும்மொழியாந் திரிபிடக நிறைவிற்காய்
வடமொழியை பாணினுக்கு வகுத்தருளியதற்கிணையாய்த்
தொடர்புடைய தென்மொழியை யுலகெலாந் தொழுதேத்த
குடமுனிக்கு வற்புறுத்தார் கொல்லாற்று பாகர்
இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவரியல் வாய்ப்ப
இரு மொழியும் வழி படுத்தார் முநிவேந்தரிசை பரப்பும்
இரு மொழியும் மான்றவரே தழீஇனா ரென்றாலிங்
குரு மொழியு நிகரென்னு மிதற்கைய முளதேயோ

முன்கலை திவாகரம்

வடநூற்கரசன் றென்தமிழ்க் கவிஞன் / கவியரங்கேற்று முபயகவிப்புலவன்
செறிகுணத்தம் பற்கிழவோன் சேந்த / னறிவு கரியாகத் தெரி சொற்றிவாகரம்

சிலப்பதிகாரம்

தண்டமிழாசான் சாத்தனஃதுரைக்கும்

நன்னூல் விளக்கம்

வினையினீங்கி விளங்கிய வறிவின் / முனைவன் கண்டது முதநூலாகும்

முன்கலை திவாகரம்

ஆதிநூலென்பது வேதநூற் பெயரே / உபநிடதம் வேதத்தினுட் பொருள் நுட்பம்.

உபநிடத சுருக்கம்

இருளகற்று நால் வேதத் துபநிடத சுருக்கமென - வெங்கோன்சொன்ன
பொருளதனை நெஞ்சகத்தே சௌபாக்கிய - குருவென்னும் பொருளினோடு
மருளகற்றும் படியழுத்தித் தமிழ்போலு - மதனை யொருவழி யெண்ணான் கா
யருளகத்திலிருந்து ரைத்த வதிசயமே - யதிசய மற்றறிகிலேனே.

முன்பு கூறியுள்ள திரிபேத வாக்கியங்களில் ஒரு வாக்கியத்தை சரிவர பின்பற்றினும் அவன் கடைத்தேறி வீடுபேறாம் நிருவாணமடைவது அனுபவக் காட்சியாயிருந்தது. இத்தகைய சத்திய பேதவாக்கியங்களும் அவ்வாக்கியங்களின் அந்தரார்த்தங்களும் அதன்தன்மங்களும் மறைந்து பௌத்தகுடிகள் அனுசரித்துவந்த பஞ்சசில பாக்கியங்களற்று பொய்க்குருக்களாம் பொய்ப் பிராமண வேஷதாரிகளால் பஞ்சபாதகங்கள் பெருகி பொய்வேதங்களும் பொய் வேதாந்தங்களும் பொய்ப் புராணங்களுந் தோன்றி மனுக்களுக்குள்ளே மனுக்களென்னுங் கொள்கை அற்று தங்களது சுயப்பிரயோசனத்திற்காக இத்தேசத்தில் எக்காலும் இல்லாக் கீழ்ச்சாதி மேற்சாதி என்னும் பொய்க் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி பௌத்தர்களால் தொழில்களுக்கென்று வகுத்திருந்தப்பெயர்களை சாதிப் பெயர்களென மாற்றி ஒற்றுமையில் வாழ்ந்திருந்த மனுமக்களின் வாழ்க்கைகளைக் கெடுத்து அறப்பள்ளிகளில் விருத்திப்பெற்றுவந்த கல்வியையும் கைத்தொழில்களையுங் கெடுத்து அறப்பள்ளி களையும் அழித்து பாழ்படுத்தி தங்கள் சுயநலங்களைமட்டிலுந்

தேடிக்கொண்ட படியால், அரிய பேதவாக்கியங்களும் வேத அந்தங்களும் ஞானசாதனங்களு மாறுப்பட்டு, உண்பதே ஞாலம் உடுப்பதே கோலமென்னும் அஞ்ஞானத்தடிப்பேறி பிறவி, பிணி, மூப்பு, சாக்காடென்னும் நான்குவகை துக்கங்களையுமுணராது நாளுக்கு நாள் நசிந்து பிறவியின் துக்கத்தைப் பெருக்கி வருகின்றோம்.

இத்தகைய நசித்தலின் உணர்வுதோன்றிய நாம் தங்கடங்கள் சுயப் பிரயோசனங்களுக்காய் ஏதுமிலாது மதக்கடைபரப்பி சீவிக்கும் பொய்க் குருக்களானோர்களை நாடாமலும் அவர்களது பொய் வேதங்களையும் பொய் வேதாந்தங் களையும், பொய்ப் புராணங்களையும் பாராமலுமொழித்து எல்லாமுடையான் குருவாகிவந்து போதித்த மெய் வேதவாக்கியங்களையும் மெய்வேத அந்தங்களையும் நன்காராய்ந்து பிறவியாம் பெருங்கடலைக் கடந்து பிணி, மூப்பு, சாக்காட்டை ஜெயித்து மனிதருள் தேவனெனத் தோன்றி நித்திய சுகம் பெறவேண்டியதே புத்ததன்மத்தின் பலனாகும்.

பிறவியை ஜெயித்து தேவனாகும் பலனை விரும்புவோர் புத்தரையும் புத்தரது தன்மத்தையும் சிந்திக்கவேண்டியதே செயலாதலின் அவரது பிறப்பு வளர்ப்பின் சரித்திரத்தையும், அறமொழிகளாம் சத்தியதன்மத்தையும் அன்னிய தேசத்தோரும் அன்னிய பாஷைக்காரரும் அன்னிய மதத்தோர்களுமான பெரியோர்களால் வரைந்துள்ள நூற்களை விசேஷமாகக் கவனியாது அவர் பிறந்து வளர்ந்து இத்தேசத்துள் நாட்டிய சங்கத்தவர்கள் வரைந்துள்ள அருங்கலைச்செப்பு, அறநெறி தீபம், அறநெறிச்சாரம், திரிக்குறள், திரிமந்திரம், திரிவாசகம், திரிக்கடுகம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், வளையாபதி, குண்டலகேசி, சூளாமணி, நிகழ்காலத்திரங்கல், நிகண்டு, திவாகரம், பெருங்குறவஞ்சி, சிறுங்குறவஞ்சி, பெருந்திரட்டு, குறுந்திரட்டு, மற்றுமுள்ள சமணமுனிவர்களின் நூற்களைக்கொண்டும் புராதன பௌத்தவிவேகிகள் கர்ணபரம்பரையாக வழங்கிவரும் சுருதிகளைக் கொண்டும் அநுபவச் செயல்களைக் கொண்டும் ஆராய்வதாயின் சத்தியதன்மம் நன்கு விளங்கும். நாமும் அவைகளை ஆராய்ந்தே பூர்வத்தமிழொளியென புத்தரது அரியசரித்திரத்தையும், அவரது அரிய தன்மத்தையும் விளக்கி வரைந்திருக் கின்றோம்.

நாயனார் திரிக்குறள்

அறவாழி யந்தணன் தாள் சேர்ந்தார்க்கல்லாற் / பிறவாழி நீந்தலரிது.

சித்தாந்தக் கொத்து

அருணெறியாற் பாரமிதை யாறைந்து முடனடக்கிப்
பொருள் முழுவதும் போதி நிழனன் குணர்ந்த முநிவறன்ற
னருள் மொழியா னல்வாய்மெயறிந்தவரே பிறப்பறுப்பார்
மருணெறியாற் பிறநூலு மயக்கறுக்குமாறுளதோ.

வீரசோழிய கலித்துறை உதாரணம்

தோடாரிலங்கு மலர்கோதி வண்டு வரிபாடு நீடு துணர்சேர்
வாடாத போதி நெறி நீழன்மேய வரதன் பயந்த வறநூல்
கோடாத சீல விதமேவி வாய்மெ குணனாகு நாளுமுயல்வார்
வீடாகு வின்ப நெறிசேர்வர் துன்ப வினைசேர்த நாளுமிலரே.

பாட்டியல்

தீவினை வெல்லும் அறவாழி தெய்வம் அஞ்சேல்

இவ்வரிய தன்மமே சகல பாஷைகளுக்கு பீடகமும், சகல மதங்களுக்கு பீடகமும், சகல சித்துக்களுக்கு பீடகமும், சகல ஞானத்திற்கும் பீடகமாயிருக்கின்ற படியால் புத்ததன்மப் பிரியர்கள் நீங்கலாக அன்னிய மதஸ்தர்கள் யாவரும் தங்களது விரோத சிந்தையை அகற்றி அவிரோதச் சிந்தையில் நிலைத்து பூர்வத்தமிழொளியாம் இவ்வாதிவேத சாராம்சத்தை வாசித்துணருவரேல் முத்திபேறாம் நிருவாண சுகமுற்று தேவகதி அடைவார் களென்பது சத்தியம், சத்தியமேயாம்.

புத்த தன்மத்தை ஆராய முயல்வோர் கண்டுபடிக்கவேண்டிய நூற்கள் அனந்தமுண்டு. அதாவது சித்தார்த்தரது காலத்திலேயே தற்காலத்திய வேஷப்

பிராமணர்களிருந்ததாகவும் ஞானமறியாது பேசியதாகவும் அப்பிராமணன் என்போர் பௌத்த மார்க்கத்தில் சேர்ந்ததாகவும் எழுதியிருக்குமாயின் அவைகள் யாவும் மத்தியில் சேர்த்துள்ள பொய் சரித்திரங்களென்றே நீக்கல் வேண்டும். புத்தரென்பதும் பிராமணனென்பதும் ஒரு பொருளந்தரங்கமாதலின் பெண்சாதிப் பிள்ளைகளுடன் சுகித்துப் பேராசையிலிருப்பவர்களைப் பிராமணர்களென்று கூறுவது தவரேயாம்.

அத்தகைய தவராகிய சரித்திரங்கள் தோன்றியதற்குக் காரணங்கள் யாதெனில், புத்தபிரான் பரிநிருவாணமடைந்த ஆயிரத்தி எண்ணூறு வருடங் களுக்குப் பின்பு பௌத்ததன்ம யதார்த்தப் பிராமணர்கள் குன்றி வேஷப்பிராமணர் கள் அதிகரித்தார்கள். அவர்களது காலத்தில் சீனயாத்திரைக்காரர்களும், சிங்கள யாத்திரைக்காரர்களும், பர்ம்ம யாத்திரைக்காரர்களும் இந்திரதேசம் வந்து புத்தபிரான் சரித்திரங்களை ஆராய்ச்சிசெய்யுங்கால் இந்த வேஷப்பிராமணர்கள் தற்காலந் தோன்றினவர்களன்றி முற்காலத்திலேயே இருந்தவர்களென்று கூறி தங்களைப் பூர்வக்குடிகளென்று சிறப்பித்துக்கொள்ளுவதற்கு புத்தரது சிற்சில சரித்திரங்களுடன் பிராமணர்களையும் ஜெயித்து பௌத்தமார்க்கத்தில் சேர்த்துவிட்டாரென்று எழுதி கொடுத்துள்ளவைகள் யாத்திரைக்காரர்களுக்கு மிக்க வியப்பாயிருந்தபடியால் அவைகளை பத்திரமாக வரைந்துக்கொண்டுபோய் இப்போது வெளியிட்டுவருகின்றார்கள். தற்காலத்துள்ள வேஷப்பிராமணர்கள் முற்காலத்தில் இல்லை என்பது சரித்திர சுருக்கமாதலின் புத்தரது காலத்தில் வேஷப்பிராமணர்கள் இருந்தார்களென்பது முற்றும்பொய்யேயாம்.

அதற்குப்பகரமாக ஓர் ஆட்டிடையனின் காலுடைந்த ஆட்டுக்குட்டி யையும் தோற்பை கம்பளத்தையும் புத்தபிரான் தூக்கிச்சென்று ஆட்டிடையன் வீட்டில் விட்டுச் சென்றதாக சரித்திரம். அதை அநுசரித்தே ஓர்ப் பொய்க்கதையை சேர்த்துவிட்டிருக்கின்றார்கள். அவை யாதெனில் பகவன் ஆட்டுக்குட்டியைத் தூக்கிக்கொண்டு பிராமணர்களென்போர் யாகஞ்செய்யும் இடத்திற்கே போனதாகவும் யாகத்தைத் தடுத்ததாகவும் அதனால் ஆடுகளை நெருப்பிலிட்டுக் கொல்லாமல் நிறுத்தியதாகவும் ஓர் கட்டுக்கதையை நுழைத்து யாத்திரைக்காரர்களிடங் கொடுத்திருக்கின்றார்கள். அவர்களும் அதை மெய் என்று நம்பி எடுத்துப் போய் இப்போது அச்சிடும் புத்தகங்களில் வெளியிடுகின்றார்கள். இவைகள் யாவும் தற்கால வேஷப்பிராமணர்கள் புத்தர்காலத்திலேயே இருந்தார்களென்று கூறி தங்கள் பொய்வேஷங்களையும், பொய்வேதங்களையும், பொய் வேதாந்தங்களையும், பொய்ப் புராணங்களையும் முற்படுத்திக்கொள்ளுவதற்காய சமயபேதக் கட்டுக்கதைகளேயன்றி யதார்த்த சரித்திரமாகமாட்டாது. அவர்களுக்குள் பெரும்பாலும் மாடுகளையும், குதிரைகளையும் சுட்டுத் தின்றதாக வரைந்துக்கொண்டிருக்கின்றார்களன்றி ஆடுகளை நெருப்பிலிட்டுச் சுட்டுத் தின்றதாகக் கிடையாது. புத்தரது பரிநிருவாணமடைந்த ஆயிரத்தி எண்ணூறு வருடங்களுக்குப் பின்பே மிலேச்சர்களென்னும் ஆரியர்கள் வந்து குடியேறி கொல்லாவிரதம் பூண்டிருந்த பௌத்தர்களின் முன் மாமிஷந் தின்பதற்கு பயந்து மாறுபாடாய யாகமென்று கூறி மாடுகளையும் குதிரைகளையும் சுட்டுத்தின்ற கதைகள் புத்தருக்குப் பின்னிட்டவைகளேயன்றி முன்பிருந்ததன்று. ஆதலின் புத்தரது காலத்திலேயே ஓர் வேஷப்பிராமணனிருந்தான், வாதுபுரிந்தான் புத்தமார்க்கத்திற் சேர்ந்தானென்னுங் கதைகளை ஏதேனுங் காணுவீர்களாயினும் புத்தருக்குமுன்பு சாதிபேதங்கள் இருந்ததென்றாயினும் புத்தகங்களில் காணுவீர்களாயின் அவைகள் யாவையுங் கற்பனாகதைகளென்று அகற்றி நீதிநெறி வாய்மைகளை மட்டிலும் உணரல் வேண்டும்.

அத்தகைய உணர்ச்சியில் சாதிபேதங்களே சகல கேடுகளுக்கும் மூலமாகவும் சாமி சண்டைகளே சகல விரோதங்களுக்கும் மூலமாகவும் விளங்குகிறபடியால் கேட்டிற்குப் போகும் வழிகளிலும் விரோதத்தை வளர்க்குமிடங்களிலும் அணுகாது தேகசுத்தம், உடை சுத்தம், மனோசுத்தம், வாக்கு சுத்தமுடையவர்களாயிருந்து சுகவாழ்க்கைப்பெறவேண்டிய ஒவ்வொரு

வர்களுக்கும் என்றுமழியா நிதிகளாகும் பதுமநிதி, தன்ம நிதி, சங்கநிதி மூன்றையுந் திரட்டி "பூர்வத்தமிழொளியாம் புத்தரது ஆதிவேத" மென வெளியிட்டிருக்கின்றோம்.

இவ்வேதப்போதகனும் வேதியனுமான விண்ணவர்க்கரசனாம் புத்த பிரானையே ஆதிதெய்வமென்றும், ஆதி கடவுளென்றும், ஆதிபகவனென்றும், ஆதிசிவனென்றும் ஆதியீசனென்றும், ஆதிநாதனென்றும் ஆதிவேதனென்றும் ஆயிர நாமங்களால் வந்தித்தும் சிந்தித்தும் வந்திருப்பதை சகல பௌத்த நூற்களிலும் வரைந்திருக்கின்றார்கள். அவைகளின் அந்தரார்த்தம் அறியாதோர் அப்பெயர்களை தங்கள் தங்கள் மனம்போனவாறு மாறுகொள ஏற்றுக் கொண்டதுமன்றி அவ்வாயிர நாமங்களை இயற்றி சிந்தித்துவரும் பௌத்தர்கள் கடவுளரில்லை என்று கூறுவதாகப் பட்டாங்கடித்து நாமங்களின் மொழிபுரட்டை உண்டுசெய்துவருகின்றார்கள். அத்தகையோர் புறட்டிற்கு நூலாதாரம் ஏதுமில்லாதபடியால் அவர்கள் கூறுங் கூற்றை மெய்யென நம்பி மோசம்போகாமலும் தங்கள் தங்கள் மனங்கொண்டவாறு தாங்களே சிருஷ்டித்துக்கொள்ளும் கடவுளர்களை நம்பாமலும், மாதா பிதா குருவையே தெய்வமென சிந்தித்துவருவது பௌத்தர்களின் பூரணக் கொள்கையாதலின் இதனது பெரும்பலனை தமிழொளியில் நன்கு தெரிந்துக்கொள்ளுவதுடன் புத்ததன்ம நான்கு வாய்மெயின் செயல்கள் சகல மக்களுக்கும் நன்குவிளங்காது அவர் பரிநிருவாணமுற்ற ஆயிரவருடங்களுக்கு உட்படவே அறுசமயங்களெனக் காலத்திற்குக்காலம் வேறாகி உபாசக தன்மமட்டிலும் நிலைத்து தென்புலத்தார் தன்மம் நிலைகுலைந்து நாளதுவரையில் மாறுபட்டிருக்கின்றது. அதனால் மெய்ப்பொருளுண்டென்போர் சிலரும், மெய்ப்பொருள் இல்லை என்போர் சிலருமாக மலைவுற்றிருக்கின்றார்கள். அவைகள் யாவையும் இவ்வாதிவேதத்தால் அறிந்துக் கொள்ளலாம்.

க. அயோத்திதாஸ பண்டிதர்

சரித்திர அட்டவணை

1. சித்தார்த்தர் உற்பவக் காதை
2. சித்தார்த்தர் திருமணக் காதை
3. சித்தார்த்தர் வாய்மெ விசாரிணைக் காதை
4. சித்தார்த்தர் மகாராஜ துறவு காதை
5. சித்தார்த்தர் பஞ்சவிந்தியத்தை வென்று இந்திரரும் மெய்கண்டு புத்தருமாய காதை
6. ஆதிவேத வாக்கிய விவரக் காதை
7. சதுர் சத்தியக் காதை
8. சங்கங்களின் ஸ்தாபனக் காதை
9. மானைக் காத்து மழுவேந்திய காதை
10. சதுரக்கிரிக் காதை
11. தந்தைக்கு மைந்தன் குருவாகிய காதை
12. புரத்துவாசருக்கு வியாதிக்குத்தக்க ஓடதிகளோதிய காதை
13. விசாகா காதை
14. குருஷேத்திர காதை
15. தரும சக்கிர பிரவர்த்தன காதை
16. கோசல நாட்டரசன் காதை
17. கலக விவாத காதை
18. தந்தையின் இரண்டாமுறை தரிசன காதை
19. சிகாளா விசாரிணைக் காதை
20. மத்திம பதிபதா காதை
21. சதுர் பரமார்த்த காதை

22. கன்ம காதை
23. புக்கசாதி துறவு பூண்ட காதை
24. பிருமன் தரிசின காதை
25. மகா மங்கள காதை
26. உபதேச காதை
27. சுகவர்க்க காதை
28. பரிநிருவாண காதை
29. ஆதிவேத விளக்கம்.

1. சித்தார்த்தர் உற்பவக் காதை

புத்தமாலிகா

யோவடதங் பவரோ மனு ஜேசு / சாக்யேமுநி பகவா சுதகிச்சோ
பாரகதோ பலவிரிய ஸமங்கி / தங்ஜுசுதங் ஸரணத்த முபேமி.

(இதன் பொருள்) மநுக்களுட் பெருமெயும், அருமெயுமான வாசான் ஆதிபகவன் சாக்கைய முநிவரேயாவர். அவரே சகலருக்கும் குருவாக விளங்கி உலகில் முடிக்கவேண்டியதை முடித்து கரையேறி நிருவாணமடைந்த மங்களகர பெரியோன் புத்தபிரானை சரணாகதியடைந்து, அவரது சத்தியதன்மத்தை விவரிக்கின்றோம்.

பொறையதே யுலகிற் பொருளெனத் தோன்றி
போன்ற சத்துவமதே முதலா
மிறையென வகுத்து யினிதரசாளு
மின்பமு மகற்றி பற்றற்று
பிறையெனுங் கலைநூற் பிரமுகர்க் கூட்டி
பின்னுமுள்ளொளியதா முண்மெய்
மறையவனென்ன மதமெலாம் போற்றும்
வள்ளலை யுள்ளம துணர்வாம்.

அகஸ்தியர் பரிபாஷை

அங்கிடத்தில் வந்ததுதான் மண்ணேயாச்சு, அப்பூதத் தொருமுளையங் குதிக்கலாச்சு,
பங்குபண்ணி அம்முளையே இலைபூவாச்சுப், பருமலரே காய்பழமாய் வித்துமாச்சு
திங்களெனும் வித்துவே ரசமு மாச்சு, தெளிந்த ரசந் தானுருண்டு உதிரமாச்சு,
சங்கையில்லா உடலாச்சு உயிருமாச்சு, தன்னுடலில் சீவசெந்துக் கோடி யாச்சே

எக்காலுமுள்ள பூதபௌதிகங்களினின்று சூரியன்தோன்றி ஆதிவாரம் உண்டாகி, சந்திரன் தோன்றி சோமவாரம் உண்டாகி, பூமி தோன்றி மங்களவாரம் உண்டாகி, நீர் தோன்றி புதவாரமுண்டாகி, காற்று தோன்றி குருவாரம் உண்டாகி, ஆகாய விரிவாகும் வெளிதோன்றி சுக்கிரவாரம் உண்டாகி, இருள் தோன்றி சனிவாரம் உண்டாகி வாரங் கிழமையென்னும் நற்பல தோற்ற உலகமாய் விரிவதியல்பாம்.

இத்தகைய விரிவும் மறைவுமாய உலகில் தோற்றமாகும் நான்கு பூதங்களின் நல்லேதுவின் நிகழ்ச்சியால் என்றும் நிலையாயுள்ள நிலமென்னும் பூமியின்கண் நீர் தோய்ந்து விருட்சங்களென்னும் தாபரங்களாம் முதற்பிறப்பு தோன்றி, விருட்சங்களினின்று புழுக்கீடாதிகளென்னும் ஊர்வனங்களாம் இரண்டாம் பிறப்புத் தோன்றி, ஊர்வனங்களினின்று நீர்வாழ்வனங்களென்னும் மட்சங்களாகும் மூன்றாம் பிறப்புத் தோன்றி, மட்சங்களினின்று பட்சிகளென்னும் பறவைகளாகும் நான்காம் பிறப்புத்தோன்றி, பறவைகளினின்று விலங்குகளென்னும் மிருகங்களாகும் ஐந்தாம் பிறப்புத் தோன்றி, மிருகங்களில் அஃறிணையாகும் வானரரென்னுங் குரங்குகளினது நல்லேதுவினிகழ்ச்சியால் வாலற்ற நரர்களாம் மக்களில் மானமுண்டாகி மானிடரென்னும் ஆறாம்பிறப்புத் தோற்றமாம் உலகத்தில் தோன்றும் பொருட்களில் இதுவே ஆறாவது தோற்றமாகி, தோற்றமாம் பிறப்புக்கேதுவாய வித்து, வியர்வை, முட்டை, கருப்பை என்னும் நான்குவகை யோனிகளின் நல்லேதுவினிகழ்ச்சியால் தாவரம், ஊர்வனம், நீர்வாழ்வனம், பட்சி, மிருகம், மானிடரென்னும் அறுவகைத் தோற்றங்கள் தோன்றி க்ஷணத்திற்கு க்ஷணம் மாறுகொளல் இயல்பாம்.

அத்தகைய மாறுள தோற்றத்துள் வாலற்ற நரரென்னும் மானிட வகுப்பில் பேமானிகளென்னும் அஞ்ஞானமுற்று தாழ்ந்தபிறவிக்கு ஏகாது மானிகளாகும் அற்ப விவேக முதிர்ச்சியில் விட்டகுறையால் நெடுங்காலத்திற்குக்காலம் அனந்தம் பிறப்பிற்றோன்றி அறுவகை சங்கத்தவரானார்கள்.

முதலாவது சங்கம் : இறப்பும், பிறப்பும், உயர்வும், தாழ்வும், நன்மெயும், தீமெயும் பஞ்சபூதங்களால் உண்டானபடியால் பஞ்சபூதங்களை வணங்குவோமென்னும் ஓர் வகுப்பினர் தோன்றினார்கள்.

இரண்டாவது சங்கம் : இறந்தபிறகு மனிதன் மிருகமாகவும், மிருகம் மனிதனாகவும், பிறக்கமாட்டான். மனிதன் மனிதனாகவும், மிருகம் மிருகமாகவும் பிறக்கும். ஆதலின் ஒன்றை வணங்குவதால் பலனுமில்லை, வணங்காமலிருப்பதினால் கெடுதியுமில்லை என்னும் இரண்டாவது கூட்டத்தார் தோன்றினார்கள்.

மூன்றாவது சங்கம் : மனிதனுக்கு யாதொரு சுகமுங் கிடையாது. பிறப்பது ஆதி, இறப்பது அந்தம். இறந்தப்பின் சகலமும் சூன்யமாதலால் விழித்திருப்பவன் சூனியத்தை விசாரிப்பதில் யாதொரு சுகமுங் கிடையாதென மூன்றாவது வகுப்பார் தோன்றினார்கள்.

நான்காவது சங்கம் : சீவர்களுக்கு ஆதியுங் கிடையாது, அந்தமுங் கிடையாது. நன்மெயுங் கிடையாது, தீமெயுங் கிடையாது. எல்லாந் தானே ஏற்றுக் கொள்ளுவதால் யாவுந் தற்செயலென நான்காவது வகுப்பார் தோன்றினார்கள்.

ஐந்தாவது சங்கம் : புசிப்பை விரும்பாதவனும், தாகத்தை அடக்குவோனும், அக்கினியின் கொதிப்பை சகிப்பவனும், சூரியன் வெப்பத்தைத் தாங்குகிறவனும் எக்காலும் சுகமடைவான். இவைகளைத் தாங்காதவன் சுகமடைய மாட்டானென ஐந்தாவது வகுப்பார் தோன்றினார்கள்.

ஆறாவது சங்கம் : கிழமை வாரமென்னும் பலன்தரும் உலகில் முதனாளாகும் சூரியனும், இரண்டானாளாகுஞ் சந்திரனும், மூன்றானாளாகும் செவ்வாயும், நான்கானாளாகும் புதனும், ஐந்தானாளாகும் வியாழமும், ஆறானாளாகும் வெள்ளியும், ஏழானாளாகும் சனியும் ஆகிய சூரியன், சந்திரன், பூமி, நீர், காற்று, வெளி, இருள் ஏழுவாரத்தின் சுழலையும், ஏழுவாரத்துள் தோற்றும் பதினைந்து திதிகளின் சுழலையும், பதினைந்து திதிகளின் வடனோக்கு தென்னோக்குகளால் மாறும் பூரண சந்திரன் அபூரண சந்திரனென்னும் இரு பட்சங்களையும், இருபட்சங்களாகும் நாள் முப்பதில் தோன்றும் முக்கிய நட்சத்திரங்கள் இருபத்தியேழும், இருபத்தியேழு நட்சத்திரங்களில் இரண்டேகால் நட்சத்திர பீடங்கொண்ட இராசி பனிரண்டையும் அதிற் றங்கி யாடும் வலவோட்டுக் கிரகங்கள் ஏழும், இடவோட்டுக் கிரகங்கள் இரண்டும் ஆக ஒன்பதுக் கிரகங்களையும் மழைகாலம், வெய்யல்காலம்,. பனிகாலமாகும் முக்காலங்களையும் சோதிகளின் இடங்களைக்கொண்டே சோதித்து கணிதங்களில் நிறுத்தி கணிதமாகும் பெருக்கினாலும், குறிக்கினாலும் உண்டாகும் குணிப்பால் மழையின் திக்குகளையும், காலங்களையும்; காற்றின் திக்குகளையும், அதன் காலங்களையும் உலகத்தாருக்கு விளக்கி தேச சுபாசுபங்களைப் போதித்ததுமன்றி உலகில் ஆறாவது தோற்றமான மநுக்களின் பிண்டோற்பவக் காலவரையில் குழவியின் சிரவுதயம் எந்த விராசியில் உதித்ததோ அதையே லக்கிடமாகவும், ஒன்பது கிரகங்களின் நிலைகளைக்கொண்டு குழவிக்கு நேரிட்ட செல்கால பலன்களையும், வருங்கால பலன்களையும் திடமாகக்கூறும் வல்லபத்தினால் சாக்கையனென்னுங் காரணப்பெயரைப் பெற்றான். அவன் தாய் தந்தையரால் கொடுத்தப் பெயர் (கலியன்) ஈகையிலுங் கணிதத்திலும் பேர்பெற்றிருந்ததுமன்றி வாகுவல்லயமென்னும் ஆயுதங்களைக்கொண்டு புஜபலபராக்கிரமத்தினால் சகல அரசர்களையுஞ் செயித்து வட அயோத்தியாபுரி என்னும் மகததேசத்திற்குத் தலைத்தார் வேந்தனென்னும் சக்கிரவர்த்தியாக விளங்கினபடியால், வாகுவென்னும்

ஆயுதவல்லபத்தால் கலிவாகுச் சக்கிரவர்த்தி என்னுந் தீவரப்பெயருண்டாயிற்று. அவன் ஏகசக்கிராதிபதியாக ஆண்ட இவ்வுலகத்திற்குக் கலியுலகமென்று வகுத்ததுமன்றி அவன் தலைத்தார் வேந்தன் என்னும் சக்கிரவர்த்தி பீடத்திற்கு வந்ததுமுதல் கலியுலக வருஷமென்னும் ஓர் கணிதநிலையையும் வகுத்து வைத்தான். அவன் வம்மிஷ வரிசையோர் கணிதத்தில் சிறப்புற்றிருந்ததுமன்றி வாகுவென்னும் ஆயுதவல்லபத்தால் கலிவாகு, குலவாகு, கணவாகு, வீரவாகு, இட்சுவாகு என்னும் ஒன்பது சக்கிரவர்த்திகள் கலியுலகமென்னும் தங்கள் மூதாதை கணித்த வருஷத்தைக்கொண்டு சகல கணிதங்களையும் வரிவடிவின்றி ஓலிவடிவாம் சுருதியில் நிலைக்கச் செய்யும் ஆறாவது சங்கத்தோர் தோன்றினார்கள்.

அவன் அரசுக்கு வந்தகாலத்தில் தேசமெங்கும் மழைபெய்து பயிர்களோங்கி குடிகளும் சிறப்புற்று அரசனும் சன்மானிக்கப்பெற்றான். அதை உணர்ந்த கலிவாகு மேஷராசியிற் சூரியன் வந்தகாலத்தில் அரசை ஏற்றபடியால் அதையே முதல்மாதமாக்கி மீனத்தில் சூரியன் வருங்காலத்தைக் கடைமாதமாக்கி ஒரு வருஷமென வகுத்து அவ்வருஷத்தில் தான் கண்ட சுப பலன்களால் அதையே தன்னரசுக்கு முதல்வருஷமாகக் கொண்டு பாலிபாஷையிற் பிரபவ வருஷமென்னும் பெயரைக் கொடுத்தான்.

அதை அநுசரித்துப் பின்வரும் வருஷங்களில் கிரகசஞ்சாரபேதங்களால் உலகத்தில் உண்டாகும் சுபாசுப குணங்களை அநுசரித்து நிறைவேறிவரும் பலன்களுக்குத் தக்கவாறு விபவ, சுக்கில, பிரஜோத்பத்தி, ஆங்கிரீஸ என்னும் பெயர்களைக் கொடுத்துவந்தான்.

இவ்வகையாக அவ்வவ்வருஷ குணாகுணங்களுக்குத்தக்கப் பெயர்களைக் கொடுத்துக்கொண்டு அவன் அரசுக்கு வந்த அறுபதை அக்ஷய வருஷம் என்னும் பெயரைக் கொடுத்து அதே வருஷத்தில் மரணமடைந்தான்.

இக்கணிதங்களை அநுசரித்துவந்த சாக்கைய குலத்தார் கலிவாகுச் சக்கிரவர்த்தி அரசுக்கு வந்த அறுபது வருஷத்திற்குமேல் அறுபத்தொன்று, அறுபத்திரண்டென்னும் நீண்ட கணக்காக்கி அவனது அறுபது வருஷ அரசவாழ்க்கை கியாபகத்தில் மாறாமலிருப்பதற்கு கணிதா சுருதி சிந்தனையில் பதித்து வந்தார்கள்.

மணிமேகலை

கதிரோன் தோன்றுங் காலையாங்கவ, / னவிரொளிகாட்டும் மதியே போன்று,
மைத்திருள் கூர்ந்த மனமாசு கழுஉம், / புத்த ஞாயிறு தோன்றுங்காலை,
திங்களு ஞாயிறுந் தீங்குறா விளங்க.

யிருதிளவேனி லெறிகதி ரிடபத், / தொருபதின்மேலும் ஒரு மூன்று சென்றபின்,
மீனத்திடனிலை மீனத்தகவயில், / போதித்தலைவனோ பொருந்திய போழ்தத்து.

சாக்கையராளுந் தலைத்தார்வேந்தன், / ஆக்கையுற்று தித்தன னாங்கவன் றானென,
தண்ணன் சாக்கையர் தவளமால்வரை,. / மண்முகனென்னு மாவரசிடநிலை,
பொன்னின் கோட்டது பொற்குளம்புடையது, / தன்னலம் பிறர்தொழ தான் சென்றெய்தி,
யீணாமுன்னர் இன்னுயிர்க்கன்று, / நான்முலை சுரந்து நன்பாலூட்டலும்,

கலிவாகு சக்கிரவர்த்தியின் அரசாங்க கலியுலகின் நீண்டகணக்கு 1616-ல் சாக்கைய குல வீரவாகு வம்மிஷ வரிசையில் மண்முகவாகென்னும் அரசனுக்கும், மாயாதேவி என்னும் இராக்கினிக்கும் சித்தார்த்தி வருஷம் வைகாசி மாதம் 13-ம் நாள் பௌர்ணமி திதி கேட்டை நட்சத்திரம் மீனலக்கினம் ஆதிவாரம் அதிகாலையில் ஓர் ஆண்குழந்தை பிறந்தது.

அக்காலத்தில் தேசமெங்கும் சிற்சில நற்சகுனங்கள் தோன்றி அதைக் கண்ட சிற்றரசர்களும், சோதியின் இடங்கண்டு குணங் கூறும் சோதிட சாஸ்திரிகளும் குழந்தையைக் காணும்படி வந்தார்கள்.

வந்தவர்களுள் அசித்தா என்னும் பெரியவர் தங்கள் மூதாதை கலிவாகு வகுத்துக் கூறிவந்த அங்கபாக லட்சணங்களைக்கொண்டு குழந்தையின் குணக்குறிகளை ஆராய்ந்து கண்கலங்கி தேம்பலுற்றழுதார்.

அதைக்கண்ட அரசன் மனங்கலங்கி பெரியோய் தாங்கள் துக்கிக்குங் காரணமென்னை. குழவிக்கு ஏதேனும் ஆபத்துண்டோ என வினவினான்.

பெரியோன் மண்முகனைநோக்கி அரசே! குழந்தையைப்பற்றி நீர் யாதுக்கும் அஞ்சவேண்டாம். இதன் அங்கபாத தாமரை ரேகையின் பலாபலனை ஆராயுங்கால் குழந்தை வளர்ந்து பாலதானத்தில் ஏகசக்கிராதி தலைத்தார் வேந்தனாக விளங்கினும் விளங்கும், அல்லது வாலறிஞனாகத் தோன்றி சருவ சீவர்களுக்கும் சற்குருவாக விளங்கினும் விளங்கும். ஆதலின் அம்மகத்துவத்தை என் கண்குளிரக் காணாது அற்பாயுவைப் பெற்றுள்ளதால் துக்கித்தேனென்றான்.

அக்கணிதங்களை உணர்ந்த அரசன் பெரியவரை நோக்கி ஐயே! இக்குழந்தை பாலதானமுற்று வெளியேறாது அரசாங்க இச்சையில் நிற்பதற்கு யாது செய்யலாமென வினவினான்.

அரசே உமது புத்திரன் நமது மூதாதைக் கலிவாகு போதித்திருந்த சித்தார்த்தி வருஷம் பிறந்தபடியால் சித்தார்த்தி என்னும் பெயரை அளித்து பாலதானம் பதினாறு வயதுக்குமேல் வெளியிலெங்கும் விடாமல் விசித்திரக்கூடம் ஒன்று அமைத்து பிள்ளையின் மனதைக் கவரத்தக்க வினோத அரண்களும், நீர்வாவி தூற்றும் நந்தவனங்களும், பரிமளமமைந்த பூஞ்சோலைகளும், பட்சிகளின் நாதகீத நடன மஞ்சனங்களும் அமைத்து மைந்தனுக்கொற்ற மலையரசன் மகளை மணம்புரிந்து அவ்விருவரையும் பவழமால் வரையில் வைப்பதுடன் பரதநாட்டிய சங்கீத சல்லாபம் அமைந்த தோழிகளையும் வைத்து உலகவிசாரந் தோன்றாமற் செய்யவேண்டுமென ஆக்கியாபித்தார்.

அதைக்கேட்ட அரசன் புத்திரனுக்கு சித்தார்த்தி என்னும் நாமகரணஞ்சூட்டி சிற்பசாஸ்திரிகளை வரவழைத்து பவழமால்வரைக் கட்டும் உத்தேசத்தில் இருக்குங்கால்; காற்குளம்புகளும், கொம்புகளும், பொன்போன்ற நிறம் வீசும் ஓர் பசுவானது கன்று ஈணாமுன்னம் பிள்ளையின் அருகில் வந்துநின்று பால் சுரந்து வடிய ஆரம்பித்துள்ளதை அரசன் கண்டு கன்றீணா காராம் பசுவின் பாலை மைந்தனுக்கூட்டி பசுவின் அன்பின் மிகுதியையும், அதன் ஈகையையும் சகலருக்கும் விளக்கி அன்றுமுதல் தேசத்துள்ள சகல குடிகளும் பசுக்களுக்கு யாதொரு துன்பமும் அணுகாமல் பாதுகாக்க வேண்டுமென்று ஆக்கியாபித்தான்.

பசுவின்பால் உண்டமர்ந்த குழவிக்கு பாலிபாஷையில் கௌதமர் கௌதமரென்னும் மறுபெயரையும் அளித்தார்கள்.

சக்கிரவர்த்தித் திருமகன் நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமாய் வளர்ந்துவருங்கால் விளையும் பயிறு முளையில் தெரியுமென்பதுபோல் குழவி வளர்ந்து தனக்கொற்ற குழவிகளுடன் கீரையாடுங்கால் இரு விழியின் நோக்கங்களும், செயலும், அன்புமிகுத்தே விளங்கி வளர்ந்தது.

வளர்ந்த குழவிக்கு வயது ஐந்து ஆனவுடன் தந்தை, வில்வித்தை, வாகுவித்தை முதலியவைகளைக் கற்பிக்கவும், யானையேற்றம், குதிரையேற்றம் முதலியவைகளை ஏற்றவும் ஆரம்பித்தான். அதையுணர்ந்த சிறுவர் வில்வித்தையையும், வாகு வித்தையையும் குதிரை ஏற்றத்தையும், யானை ஏற்றத்தையும், எளிதில் உணர்ந்து தனது வித்தியா ஆசிரியருக்குக் காட்டுவதை உணர்ந்த ஆசிரியனுக்கு ஆனந்தமும் பயமுந் தோன்றி அரசனிடஞ் சென்று ஐயே, உமது புத்திரனின் இனிய பார்வையும், மிருதுவசனமும், அறிவினுட்பமு முள்ளச் செயல்களை ஆராயுங்கால் அவர் எனக்கு ஆசிரியனே அன்றி நான் அவருக்கு ஆசிரியனல்ல என்று கூறி விடைபெற்று தன்னில்லஞ் சேர்ந்தான்.

வாலவயதிற்குள் உண்டாகும் வாலறிஞன் செயல்களையும், குணங்களையும் நாளுக்குநாளறிந்த அரசன் பிள்ளையின் நுட்பவறிவின் செயல்களைக் கண்டு ஆனந்தமுற்றபோதிலும் பிள்ளை தன்னரசுக்கில்லாமல் போய் விடுமோ என்னுஞ் சிந்தாக்கவலையால் மாளிகையை நிருமிக்குஞ் செய்கையில் இருந்தான்.

அக்கால் வாலறிஞன் வீதியுலாவி வருங்கால் ஓர் குறுபருந்தானது புறாவைத் துறத்திக்கொண்டு வரவும் அப்புறா பயந்து பலவிடங்களில் ஓடியும் பருந்து துடர்ந்துவர புறாவானது சென்று சித்தார்த்தி சிறுவர் மடியில் ஒளிந்தது.

வீரசோழியம்

மீதியல் கருடனை விடவர வொடுபகை, / விதிமுறை கெடவறம் வெளியுறவருளினை.

கௌதம சிறுவரிடம் அடைக்கலம் புகுந்தப் புறாவை அன்புடன் ஆதரிக்குங்கால் குறுபருந்தும் மடியில் வந்து உட்கார்ந்து தன் பசியைத் தணிக்கத் தாவிற்று.

அதை உணர்ந்த சிறுவர்க்கு அடைக்கலம் புகுந்த புறாவையும் கார்க்கவேண்டும், பசிகொண்ட பருந்தையும் பார்க்கவேண்டிய கருணையால் திகைத்து பருந்தின் முதுகைத் தடவி, நீ நாடி துறத்திய புறாவின் மாமிஷத்திற்குத் தகுந்த எடை மாமிஷம் என் தேகத்திற் தின்னலாமென்று முன்கை கெண்டை யை நீட்டினார். அவர் கருணையின் விசிரிம்பம் பருந்தினும் பரவி சிறுவன் தன்னைப் பற்றிக்கொண்டும் யாதொரு இம்சையுஞ் செய்யாமல் தன் மாமிஷத் தைக் கொடுக்க ஆரம்பித்தவுடன் பருந்தும் பரிதாபத்தால் பரந்துப் போய்விட்டது.

இவ்விருத்தாந்தங்களைக் கண்ணுற்ற மக்கள் அரசனிடஞ் சென்று கௌதமரைப் புறா அடைக்கலம் புகுந்ததும், அதைத்துறத்திவந்த பருந்து பசியால் வருந்தியதும், சிறுவர் தன்மாமிஷத்தைக் கொடுத்ததும், அதைப் புசியாமல் பருந்து போய்விட்டதும் ஆகிய செயல்களைத் தெரிவித்தார்கள்.

அவைகளை உணர்ந்த அரசன் தன் பிள்ளையின் கருணாநிதியை உணர்ந்து கௌதமரை அணுகி குழந்தாய் என்ன செய்கின்றாயென்றான்.

என்னருமெய் தந்தையே, புறாவை ஆதரிக்கின்றேன் என்றார். அதைக்கேட்ட அரசன் புன்னகைக்கொண்டு சிறுவருக்குக் கைலாகுக் கொடுத்து அழைத்துப்போய் வயல்வெளிகளிலுள்ள செந்துக்களின் செய்கைகளையும், தோப்புகளிலுள்ள செந்துக்களின் செய்கைகளையும் சுட்டிக்காண்பித்தான். அதாவது, புழுக்கீடாதிகளை எறும்புகள் தின்பதும், எறும்புகளைப் பல்லிகள் தின்பதும், மட்சங்களை மட்சிகள் தின்பதும், பட்சிகளை நரிகள் தின்பதுமாகிய செயல்களைக் காண்பித்து குழந்தாய், உலகிற் தோன்றியுள்ள சீவசெந்துக்கள் ஒன்றை ஒன்றுத் தின்று சீவிப்பது இயல்பாகையால் நீ அவைகளைக் கருணைக்கொண்டு காப்பாற்ற முயல்வதில் யாது பயன் என்றான்.

உடனே கௌதமர் பிதாவைநோக்கி தந்தையே, புழுக்களை எறும்புகள் பிடித்துத்தின்னுங்கால் புழுக்கள் துடித்து வாதைப்படுவதைக் காண்கின்றேன். அதனால் என் மனங்கலங்குகிறதென்றார்.

அதற்கு அரசன் குழந்தாய், உன் மனங் கலங்குவதால் யாது பலன். சீவராசிகளில் உள்ள சுபாவத்தை மாற்றக்கூடுமோ என்றான்.

அதற்கு சிறுவர் தந்தையே, புழுக்கீடாதிகள் தாபரவர்க்கங்களைத் தின்று சீவிப்பதைக் காண்கின்றேன். அதுபோல் மற்ற சீவராசிகள் தாபர வர்க்கங்களாகும் இலை, சருகு, காய்க்கனி, கிழங்கு முதலிய வஸ்துக்களைப் புசித்து சீவிக்கலாகாதோ என்றார்.

மாமிஷத்தைப்பெற்ற தேகங்கள் மாமிஷத்தைப்புசித்தால் அவைகளுக்கு சத்துவம் உண்டாகுமேயன்றி தாபரவர்க்கங்களைப் புசித்தால் சத்துவமுண்டா காது மைந்தனே என்றான்.

தாபரவர்க்கங்களைப் புசிக்குங் கரடிகளுக்கும், யானைகளுக்கும், குதிரைகளுக்கும், ஒட்டகங்களுக்கும் சத்துவ மில்லையோ என்றான்.

மைந்தன் வினவிய வினாக்களுக்கு மாறுத்திரமளிக்க இயலாது மார்புடனணைத்து முத்தமிட்டு குழந்தாய், நீ சீவராசிகளின் சுபாசுபங்களைக் கண்டு களித்ததுபோதும் அரண்மனைச் சேரலாம் என்றழைத்து வருங்கால் அரச வம்மிஷ சிறுவரில் ஒருவன் ஆகாயத்திற் பரக்கும் புறாவை அம்பினால் எய்யவும் அஃது கௌதமச் சிறுவர்முன் வந்துவிழவும் அவர் அதைத் தாவி எடுத்து மார்புடன் அணைத்து அதனுடலில் தைத்திருந்த அம்பைப் பிடுங்கியவுடன் இரத்தஞ் சொரிவதைக்கண்டு பதரி உதிரத்தை இருகரத்தால் துடைத்து ஆதரிக்குங்கால் அப்புறாவை அம்பினால் எய்தச்சிறுவனும் அருகில் வந்து புறாவைக் கேட்டான். அவனைக் கண்ட கௌதமச் சிறுவர் புறா உடலில் தைத்திருந்த அம்பை எடுத்து அவன் உள்ளங்கையில் ஊன்றி உணர்ச்சி

எவ்வகை என்றார். அதிகம் உளைக்கின்றதே என்றான். உதிரம் வாரா உணர்ச்சியில் அதிகம் உளைக்குங்கால் உதிரம் வெளிவரத் தைத்தப் புறாவின் உடலுக்கு எவ்வகை உளையுமென்பதை அறியாயோ என்றார்.

அதைக்கேட்ட சிறுவனுக்கு பயமும், உணர்ச்சியுந்தோன்றி அரச புத்திரா, என் அம்பைப் புறாவின்பேரில் எய்தது அதிதோஷமாகத் தோணுதலால் க்ஷமிக்கவேண்டுமென்றான்.

அதற்கு கௌதமச் சிறுவர் நேயனே, நீர் செய்த துன்பத்தை நான் க்ஷமிக்கக் காரணனல்ல இப்புறாவுக்கு நேரிட்ட துன்பத்தை நீயே ஆற்றி ரக்ஷிக்கவேண்டுமென்று கொடுத்துவிட்டு அரண்மனைச்சேர்ந்தார்.

இத்தியாதி செயல்களையுங் கண்ணுற்ற அரசனுக்கு ஆனந்தமும், பயமுந் தோன்றிற்று. அதாவது, பதினாறுவயதுக்குள் அறிவின்விருத்தி பெற்றிருக்கும் வாலறிஞன் பதினாறு வயதுக்குமேல் அரசபாரத் துன்பஞ் சகியாது துறந்து விடுவானென்றெண்ணி மந்திரிகளைத் தருவித்து மைந்தன் மனதைக் கவர்ந்து இன்பத்தை பெருக்கும் மாளிகையை நிருமித்து மணத்தை முடிக்க ஆரம்பித்துக் கொண்டான்.

அரசபுத்திரன் வாலவயதிற் கொண்ட விவேக மிகுதிக்கு வாலறிஞன், வாலறிஞனென்னும் பெயரையும் அளித்தார்கள்.

அரசன் தனதரிய மைந்தன் சுகத்தை நாடி மலையரண், காட்டரண், மதிலரண், நீரரணாகும் நான்கரண்களில் மலையரணாகும் உச்சியில் ரத்தினாம்பரக் கலசமும், மத்தியில் நவநிறங்கள் பூர்த்த தாபரப் பூடுகளும் தென்றலுடன் குளிர் வீசும் ஜலதாரைகளும் மயில், குயில், நாரை, அன்னந்தூக்குணான் வாழும் மடலமேடைகளும், அடிவாரத்தில் கண்குளிரப் பசும்புற்களை அமைத்தும்;

முன்கலை திவாகரம் - நால்வகையரண்

மலையரண் காட்டரண் மதிலரண் ணீரர
ணிவையரு சிறப்பி நால்வகை யரணே.

காடரணென்னும் முல்லை, மல்லிகை, யிருவாட்சி, சண்பக, சந்தன, வெம்மண நிரைந்த புட்பவிருட்சங்களையும் வாழை, பலா, மா, அத்தி நிரைந்த கனி விருட்சங்களையும் மான், முயல், புறா முதலிய சீவன்களுலாவும் சோலைகளை அமைத்தும்;

நீரரணென்னும் சுத்தநீர் வாவிகளும், பளிங்குகளிழைத்த பாக்கு நீரோடைகளும், கிரீடை வாவிகளும், எக்காலுங் குளிர்ந்த நீரூற்று சயன கற்களும், பன்னீரோடைகள் அமைத்தும்;

மதிலரண் விடுக்குமுன் பளிங்குகளிழைத்த கீதா மண்டபமும், பச்சைகளிழைத்த லீலா மண்டபமும், பவழங்களமைந்த உலாவு மண்டபமும், அறுசுவை அருந்தும் அம்பர் மண்டபமும், மோகனா தோழிகள் வாழும் முத்து மண்டபமும், அவைகளைச் சுற்றி பொன் தகடுகள் வேய்ந்த மதிலும், அதற்கப்பால் வெள்ளி தகடுகள் வேய்ந்த மதிலும், அதற்கப்பால் இரும்புகளாலமைத்த மும்மதிலுங் கட்டிமுடித்து ராஜ கிருக மென்னும் பெயரையுமளித்தார்கள். சக்கிரவர்த்தித் திருமகன் வாழ்க்கையில் துக்கச்செயலாகும் அழுகை, பற்கடிப்பு முதலிய தோன்றாமலும் பிணிகொண்ட உடலும், மூப்படைந்த தேகங்களுங் கண்ணிற்காணாமலும், ஆதுலர்கட் பரிதாபக் கூக்குரல் செவிகளிற் கேளாமலும், வெளியிலுள்ளவர்கள் உத்திரவில்லாமல் உள்ளுக்குப் பிரவேசியாமலும், உள்ளுக்கிருப்பவர்கள் வெளியேறாமலும் இருக்கக்கூடிய விச்சித்திர மாளிகைகளை நிருமித்து இரும்பு தகடுகள் வேய்ந்த மதிலும், வெள்ளித்தகடுகள் வேய்ந்த மதிலும், பொன்தகடுகள் வேய்ந்த மதிலுமமைத்து மைந்தனுக்கு விவாகத்தை ஆரம்பித்து, மந்திரிகளைத் தருவித்து தசாங்கச் சிறப்புகளாகும் ஆறலங்கிருதம், மலையலங்கிருதம், யானை யலங்கிருதம், குதிரை அலங்கிருதம், நாடலங்கிருதம், நகரலங்கிருதம், கொடியலங்கிருதம், முரசலங்கிருதம், தாரலங்கிருதம், தேரலங்கிருதஞ் செய்யும்படி ஆக்கியாபித்தான்.

முன்கலை திவாகரம்

மும்மதில் பொன்னும் வெள்ளியு மிரும்பும்

யாப்பருங்கலைச்சூத்திரம்

சுறமறி வனதுறை எல்லாம், இறவீன் பனவில்லெல்லாம்,
மீன்றிரி வனகிடங்கெல்லாம் தேன்றாழ்வனபொழி லெல்லாம் எனவாங்கு,
தண்பனை தழீஇயவிருக்கை, மண்கொழு, நெடு, மதின் மன்னனூரே

சீவகசிந்தாமணி

இரும்பிடிதழீ இயயானை-இழிமதங்கலந்து சேராய்ச்,
சுரும்பொடு மணி வண்டார்க்குந் துகிர் கொடி மாடவீதி,
பெருங்கடி நகரம்பேசி னிராசமாகிருக மென்ப,
ரருங்குடி யமர்கோமா-னணிநகராயதொன்றே.

மந்திரிகளும் அவ்வாக்கியத்தை சிரமேற்கொண்டு தசாங்க சிறப்பை முடித்து மங்கலமுரசும் அறிவித்தார்கள். முரசம் வினவிய அரசன் மந்திரிகளை நோக்கி மைந்தன் சித்தார்த்தி பிறந்தகாலத்தில் வந்திருந்த சாக்கையக் கணிதர் குழந்தைக்கு பதினாறு வயது முடிந்தவுடன் மலையரசன் மகளை விவாகஞ் செய்துவிடும்படி ஆக்கியாபித்திருக்கின்றார். அவ்வாக்கியப்படி மலையரசன் சுப்ரபுத்திக்கும் ஓர் பெண் பிறந்து அவளுக்கும் பன்னிரண்டு வயது முடிந்து விட்டதாகக் காண்கின்றது; மைந்தனுக்கும் பதினாறு வயது முடிந்துவிட்ட படியால் சென்றவயனமோதிய பெரியோன் சாக்கையர் வாக்கை நிறைவேற்ற வேண்டுமென்று ஆக்கியாபித்தான்.

2. சித்தார்த்தர் திருமணக்காதை

அவ்வாக்கியத்தை வினவிய மந்திரிகள் அரசே, தமது புத்திரர்க்கு மலையரசன் மகள்பேரில் பிரியமிருக்குமோ அன்றேல் மற்ற அரசபுத்திரிகளின் மீது மனமிருக்குமோ அதைத் தெரிந்துச்செய்ய வேண்டும் என்றார்கள்.

அஃதை எவ்வகையால் தெரிந்துக்கொள்ளக்கூடும் என்றான்.

சக்கிரவர்த்தித் திருமகன் அரசபுத்திரிகள் யாவருக்கும் பரிசளிக்கப் போகின்றார் யாவரும் வரவேண்டும் என்று ஆக்கியாபித்தால் அரசபுத்திரிகள் யாவரும் வருவார்கள். அப்பரிசளிக்குங்கால் மைந்தனுக்கு எப்பெண்ணின்பேரில் நோக்கமிருக்கின்றதோ அதை உணர்ந்து காரியத்தை முடிக்கலாம் என்றார்கள்.

அப்படியே அரசர்கள் யாவருக்குந் தெரிவித்து பரிசளிக்கும் பாக்கியங் களாகும் முத்துமாலை, பவழமாலை, பச்சைமாலை, வைரமாலை, சிவப்பு மாலை முதலியவைகளையும்; மேகவர்ண, நாகவர்ண, லோகவர்ண முதலிய பட்டுக்களையும் பரப்பி மைந்தன் விழி எப்பெண்ணைக் கவருமோ என்று கார்த்திருந்தார்கள்.

அரசபுத்திரிகள் ஒவ்வொருவரும் ஆடையாபரண வலங்கிருதராய் அன்னநடைக் கொண்டு அரசபுத்திரனை அணுகி முகமலர்ந்துபேசி அவரளிக்கும் பரிசை ஆனந்தமாகப் பெற்று போனார்கள். அதில் மலையரசன் சுப்ரத்தியின் மகள் பார்ப்பதி அல்லது அசோதரை என்பவள் ஆனந்தமாக அரசபுத்திரன் அருகில் வந்து முகத்தைப் பார்த்தவுடன் தலைகுனிந்து பரிசுக்குக் கையை நீட்டாமலும் கேழ்க்காமலும் நின்றுவிட்டாள். அரசபுத்திரனும் யாதொன்றும் பேசாமல் தன் கழுத்தில் அணைந்திருந்த மோகன மாலையைக் கழட்டி அப்பெண்ணின் கழுத்தில் அணைந்துவிட்டு எழுந்து அரண்மனைக்குப் போய்விட்டார்.

இவைகளைக் கண்ணுற்ற அரசனும் மந்திரிகளும் அசோதரையாம் பார்ப்பதியே அரசபுத்திரனுக்குரிய வாணீயென்று உணர்ந்து மலையரசனுக்கு அறிவித்தார்கள்.

அதையறிந்த சுப்ரத்தி மண்முகவாகை அணுகி அரசே, உமது புத்திரர் வீரமற்றவராகத் தோன்றுகிறபடியால் என் பெண்ணைக்கொடுக்க சந்தேகிக்கின்றேன் என்றான்.

அதைக்கேட்ட அரயன் மைந்தனை அணுகி குழந்தாய் மலையரசன் புத்திரியை உமக்குக் கொடுப்பதற்கு சந்தேகிக்கின்றானே உமது அரச வல்லபம் எங்கு போய்விட்டதென்றான்.

மைந்தன் பிதாவைநோக்கி தந்தையே, அரசவல்லபத்தில் நான் எதைக் காட்டவேண்டுமென்றார்.

குழந்தாய், மலையரசன் புத்திரியை நாடி அவ்விடம் வந்திருக்கும் அரசர்களை ஜெயித்து அசோதரையைக் கைப்பற்றிக் கொள்ளுவாயாகில் அதுதான் உன்னுடைய அரசவல்லபமென்றான்.

அரசபுத்திரன் எழுந்து யுத்தசன்னத்தராய் தனியே வெளிவந்ததைக் கண்ட அரசன் பதினாறுவயதுள்ள சிறுவனாச்சுதே என்ன யுத்தஞ் செய்வானென்று பயந்து ரத கஜ துரக பதாதிகளாகுஞ் சதுரங்க சேனைகளைத் தொடரவிட்டான்.

அந்த சதுரங்க சேனைகள் யாவையும் முன்னேரவிடாமல் தனியே முன்சென்று சகல அரசர்களையும் விற்போர், வாட்போர், மற்போர், வாகுபோரென்னும் சதுரங்க வீரத்தால் ஜெயித்து அசோதரையைக் கைப்பற்றிக் கொண்டார்.

உடனே மலையரசனாகும் சுப்ரத்தி மண்முகவாகை அணுகி அரசே, எனது புத்திரி அசோதரை பிறந்தகாலத்தில் ஓர் பெரியோன் சாக்கைய கணிதர் வந்து குழந்தை பிறந்த காலவரைகளைக் கணக்கிட்டு இம்மகவை மணம்புரியும் மணாளன் மனோதிடமும், ஞானோதயனுமாக விளங்குவதன்றி அவன் கரங்களால் பூமியைப் பரித்து வருத்த வித்தை விதைக்கினு முளைக்கும். பட்டமரத்தை நாட்டினுந் துளிர்க்கும். அந்த காட்சியே எக்காலும் நித்திய மங்களமாக வழங்குமென்று கூறியிருக்கின்றார். அதையும் நான் சோதிக்க வேண்டியதாயிருக்கின்றதே என்றான்.

அம்மொழியைக் கேட்ட மண்முகவாகுக் கலக்கமுற்று வருத்தவித்து முளைப்பதும், பட்டமரந் துளிர்ப்பதும் இயல்பல்லவே. ஆயினும் சித்தார்த்தி குழந்தையாயிருந்தகாலத்தில் கன்றீணாப் பசுவும் பால் சுரந்தூட்டியிருப்பதால் இதையும் பார்ப்போமென்றுன்னி மைந்தனை அணுகிக் குழந்தாய் மலையரசன் புத்திரி அசோதரைக்கு நீர் உரிய கணவனாயின் வருத்தவித்து முளைக்கவும், பட்டமரந் துளிர்க்கவும் வேண்டும் என்கின்றான். இது கூடுஞ்செயலோ என்றான். அதற்கு வாலறிஞன் நகைத்து தந்தையே, அவர்கள் மனோரம்மியப்படி சோதித்துக் கொள்ளட்டும் என்றார்.

மண்முகவாகு பூரித்துக் கிளை சமூகங்களாகும் அமாத்தியர், சாக்கையர், சேனாதிபதியர், தூதுவர், சாரணர், காரணக் கிளைஞர், கடைகாப்பாளர், நகரமாக்கள், படைத்தலைவர், யானை வீரர், அடுத்த நட்டாளர், மடைத் தொழிலாளர், மருத்துவ மாக்கள், கணித கலைஞர், உயர்குடை வேந்தர், முற்றும் சுற்றத்தவர் யாவர்க்கும் மங்கல முரசம் அறிவித்து சகலரையும் வரும்படிச் செய்தான்.

அக்கால் மலையரசனாகும் சுப்ரத்தி தனது பார்ப்பதி அசோதரையை மண்முகவாகின் அரண்மனைக்குக்கொண்டுவராமலும், மணாளன் மனைக்கும் ஈரைங்காத வழியில் கொண்டுவந்து நிறுத்திவிட்டு வாலறிஞன் வருத்த விதைகளையும், பட்டமரத்தையுந் துளிர்ப்பிக்கும் வரையில் புதல்வியை அழைத்து வருவதில்லை என்று மணாளன் வருகைக்கெதிர்பார்த்திருந்தான்.

இதன் விருத்தாந்தத்தை உணர்ந்த பெரியோர்கள் மண்முகனை அணுகி தலைத்தார்வேந்தே, தமது புதல்வர் சகல அரசர்களையுஞ் செயித்து மலையரசன் புதல்வியைக் கைப்பற்றிக்கொண்டபோதே அசோதரைத் தமதரணில் வந்து சேர வேண்டியதிருக்க அவை தவிர்ந்து வருத்த வித்து முளைப்பதும், பட்டமரந் துளிர்ப்பது மாகியபோக்குகள் நேரிட்டக் காரணம் யாதென உசாவினார்கள்.

அதைக்கேட்ட மண்முகவாகு பெரியோர்களை அமர்த்தி அன்பர்களே, என் மனைவி மாயாதேவி சித்தார்த்தியைக் கருப்பையிற்றாங்குமுன் ஓர் சொற்பனங்கண்டு சொல்லினள், அதாவது தான் நித்திரை செய்யுங்கால் ஓர் சிறிய வெள்ளை யானையின் குட்டி சுயம்பிரகாச வடிவமாய்த் தன் வயிற்றில் நுழைந்ததென்பதே.

இக்கனவையும் நினைவையும் அறியவேண்டி அசித்த சாக்கையரை அழைத்து மாயாதேவியின் சொர்ப்பனத்தை வெளியிட்டேன் அவர் நிதானித்து

முகமலர்ச்சியுடன் அரசே, உமக்கோர் ஆண்குழந்தை பிறக்கும் அது யானையின் உரத்தைப்பெற்று ஞானசூரியன்போற் பிரகாசிக்குமென்று சொல்லிப் போய்விட்டார். அதே சாக்கையர் அசோதரை பிறந்த காலக்கணிதங்களை வகுத்து இவ்வற்புதக்காட்சிகளையுங் குறிப்பிட்டிருக்கின்றார். ஆதலின் நாமனைவரும் மங்கல முரசுடன் மலையரசன் தங்கியிருக்கும் இடத்திற்கு சென்று நித்திய சகுனங்களைக் காண்பதுவே காட்சியென்றான்.

உடனே அரச வகுப்பார் பதினெண்மரும் சக்கிரவர்த்தித் திருமகனும் மங்கலமுரசம் அதிர்ப்ப மணக்கோலத்துடன் மலையரசன் தங்கியுள்ள இடத்திற் சென்று கலந்தார்கள்.

அப்போது அவ்விடமிருந்தவர்களிற் சிலர் பலதானியங்களையும் வருத்து வைத்துக்கொண்டிருந்ததுடன் பட்டமரத்திற்கு பதிலாய்ப் பூணிலா உலக்கையையுங் கொண்டுவந்து சித்தார்த்தி கரத்தில் அளித்து விதைகளை பூமியில் விதைப்பதுடன் இப்பட்டமரமாகும் உலக்கைகோலையும் பூமியில் நாட்டுங்கோ ளென்று வேண்டினார்கள்.

வாலறிஞன் அவற்றைக் கரத்தில் ஏந்தி பூமியைத் திருத்தி விதைகளை விதைத்து உலக்கையையும் பூமியில் ஊன்றினார்.

பதின் கடிகைபோதுள் பலதானியங்களும் முளை தோன்றியதுடன் உலக்கையும் கல்லாலிலைக் கொழுந்திட்டு வளர்ந்தது.

மணிமேகலை

அகமெய்யருளிய அறவாழியானெம். பகவன தாணையிற் பன்மரம் பூர்க்கும்.

பாகுபலிநாயனார் ஏட்டுப்பிரிதி. யாப்பருங்கலைக்காரிகை சூத்திரம்

வண்டுலக்கை பூந்தார் வளங்கெழு செந்துளிர் சேய்வடிவேபோலத்,
தண்டளிர் பூம்பிண்டித் தழையோங்க மாமணமுன் மணந்தோன் யாரே,
தண்டளிர்பூம்பிண்டி தழையோங்க வந்துநம்,
பண்டைவினைகழற்றும் பாங்குபல மொழிந்து படந்தோனன்றோ.
வேதவாய் மேன்மகனும் வேந்தன்மடமகளும், நீதியாற் சென்று நிகழ்ந்த
நெடுங்குலம்போல், ஆதிசால்பாவும் அரசர் உயர்பாவும்,
ஒதியவாறோத வருட்பாவாய் ஓங்கிற்றே.

சீவகசிந்தாமணி நாமக ளிலம்பகம்

தொத்தணிபிண்டி தொலைந்தற வீழ்ந்ததெண்,
முத்தணிமாலை முடிக்கிடனாக ஒத்ததன் றாள்வழியே முளையோங்குபு,
வைத்ததுபோல வளர்ந்ததை அன்றே

அதைக்கண்ட அரசர்களும் பெரியோர்களும் ஆட்சரியங்கொண்டு நிற்குங்கால் மணமகன் மணாளியின் கரத்தைப்பற்றி இரதமூர்ந்து நூதன மாளிகையைச் சேர்ந்தார்.

அவ்விடம் வந்திருந்த பெரியோர்கள் வருத்தவித்து முளைத்ததைப் பாலி என்றும், உலக்கைக் கொழுந்துவிட்டதைப் பிண்டி என்றும் பெயரளித்து,

பதினாறு வயதிற்கு மேற்பட்டக் குமரனும், பனிரண்டு வயதிற்கு மேற்பட்ட குமரியும் சுகவாழ்க்கையுற்றதை அநுசரித்து பின்சந்ததியாரும் பதினாறு வயதுக்கு மேற்பட்ட குமரர்களுக்கும், பனிரண்டு வயதிற்கு மேற்பட்ட குமரிகளுக்கும் விவாகம் நியமித்து நவதானிய முளைகள் எழும்பும் பாலிசோதனையோடு உலக்கையில் கல்லாலிலைக்கட்டி மங்கலபீடம் வகுத்துவந்தார்கள்.

முன்கலை திவாகரம்

பதினாறாட்டைக்குமரனும் விதிவழி,
பன்னீராட்டைக் குமரியுமாகி,
ஒத்த அன்பினும் ஒத்த நலத்தினும்,
கற்பகப் பிண்டி நற்பலனுதவ,
ஆகிய செய்யுந் தவத்தினும் அவ்வழி,
போக நுகர்வது போகபூமி.

அரசபுத்திரனும் அசோதரையும் முன்னரண்மனையைவிடுத்து தங்களுக்கு என்று அமைத்திருக்கும் சிங்காரமண்டபத்தை நாடி இரும்பு மதில்வாயில், வெள்ளி மதில்வாயில், பொன்மதில்வாயில் மூன்றையுங் கடந்து மரகத மண்டபஞ்சேர்ந்து பளிக்கரை சப்பிரமஞ்சத்தில் சுகித்திருந்தார்கள்.

சுத்தவிதயன் தனது புத்திரனால் வருத்தவித்து முளைத்ததும் பட்டமரந் துளிர்த்ததுமாகிய அபூர்வச்செயல்களைக்கண்டு திகைத்து இக்குழந்தையின் இயல்பில் ஆச்சரியச்செயல்கள் தோன்றுகிறபடியால் நமதரசாங்கத்தை ஒருபொருளா எண்ணி நடத்துமோ அன்றேல் துரும்பென்றெண்ணி துறக்குமோவென்னும் அச்சங்கொண்டு உலர்ந்த உலக்கை துளிர்த்தபடியால் பிண்டி நாதன் என்னும் மற்றோர் பெயரளித்து தன் புத்திரன் மனதை சிற்றின்ப லீலா வினோதத்தில் ஆழ்த்தி வைக்கவேண்டும் என்னும் நோக்கத்தினால் வீணையில் வல்லபமுள்ள ஊர்வசி என்னுமோர் குமரியையும், பரதநாட்டியத்தில் வல்லபமுள்ள அரம்பையென்னும் ஓர் குமரியையும், அபிநயத்தில் மிகுத்த திலோர்த்தமை என்னும் ஓர் குமரியையும், சங்கீதத்திற் சாதுரிய மேநகை என்னுங் குமரியையும் தருவித்து அவர்களுக்கு வேண்டிய பரிசுகளளித்து நீங்கள் நால்வரும் விசித்திரக்கூடத்திற்குச் சென்று என் புத்திரன் மனதை ஆயாசத்திலுந் துக்கத்திலுஞ் செல்லவிடாமல் எக்காலுஞ் சுகபோக சிந்தையில் நிறுத்தி வீணையிலும், அபிநயத்திலும், சங்கீதத்திலும், நாட்டியத்திலும் மயக்கி வைத்திருக்கும்படி ஆக்கியாபித்தான்.

அவ்வாக்கியத்தை சிரமேற்கொண்ட தோழிப்பெண்கள் நால்வரும் சித்திரக்கூடஞ் சேர்ந்து அசோதரைக்கு ஏவல்புரிந்து வருவதுடன் அரம்பை தன்னாட்டியத்திலும், திலோர்த்தமை தன்னபிநயத்திலும், மேனகை தன் சங்கீதத்திலும், பிண்டிநாதனை மகிழ்ப்பித்திருந்த போதிலும் ஊர்வசிமட்டிலும் தன் வீணையிற் தனக்கு நிகர் ஒருவருமில்லை என்னும் மமதைகொண்டிருந்தாள். அதை உணர்ந்த பிண்டிநாதன் ஓர்நாள் ஊர்வசியை அருகில் அழைத்து வீணையை மீட்டும்படி ஆக்கியாபித்தார் அவளும் வீணையைக் கையிலேந்தி ஏழாழ் முடிக்கி ஆ-சோ-ம-பு-கு-சு-ச என்னும் ஒலிவடிவ சப்த இசையால் வாசித்தனள்.

ஊர்வசி கரத்திலிருந்த வீணையைப் பிண்டிநாதன் கரத்திலேந்தி வீணையின் முதலாழ் தொனியை மயிலிரைச்சல் போலும், இரண்டாமாழ் தொனியை இடப தொனிபோலும், மூன்றாமாழ் தொனியை ஆடு கரைதல்போலும், நான்காமாழ் தொனியை கொக்குளைத்தல் போலும், ஐந்தாமாழ் தொனியை குயிலோசைபோலும், ஆறாம் ஆழ்தொனியை குதிரை கனைப்பைப் போலும் ஏழாம் யாழ் தொனியை யானை வீரிப்புபோலும் அமைத்து மிடற்றால் குறலும், நாவினாற்றுத்தமும், அண்ணத்தாற் கைக்கிளையும், சிரத்தாலுழையும், நெற்றியால் விளியும், நெஞ்சால் விளரியும், மூக்காற் ஆரமும் ஆகும் ஏழிசைகளைப் பெருக்கி வாசிக்குங்கால் அவ்விடமுள்ளவர்களில் விழித்த கண்ணோர் விழித்த பார்வையிலும், மேனோக்கினோர் மேனோக்கிலும், நின்றவர்கள் இடம்விட்டுப் பேராமலும், அவரவர்கள் தேகங்கள் அசையாமலும், அயர்ந்து நின்றுவிட்டார்கள். மும்மதிலுக்கும் புறம்பேயுள்ளவர்கள் சப்ததாதுக்களாலெழும் வீணையின் ஓசையைக் கேட்டு சித்திரகூடத்தில் வசிக்கும் கோபாலன் அதாவது அரச புத்திரன் வீணை வாசிக்கின்றா ரென்றரிந்து இசைகளின் சுகத்தால் வீணைகோபாலன் வீணைகோபாலன் எனக் கொண்டாடிச் சென்றார்கள்.

வீணைகோபாலன் வாசித்த வீணையின் நாதத்தையும், இசையையுங் கேட்ட ஊர்வசியானவள் தனது சிரத்தை கோபாலன் பாதத்திற்பட வணங்கி (சத்தாரி) சருவசீவர்களுக்கும் (ஆகம) ஒழுக்கத்தை அருளும் (பதநீ) நின் கமலபாதத்தை சிந்திக்கின்றேனென்றாள்.

பாலிசுரசாயுத்ய சுருதி சூத்திரம்.- சத்தாரி-ஆகம-பதநி எனும் பாலி ஒலி மொழிகளை பாகித்து ச-ரி-க-ம-ப-த-நீ என சப்தசுர ஒலியால் வீணையை மீட்டி சிந்தித்தாள். அன்றுமுதல் இதே சிந்தனையைக் கேட்டவர்களும், வீணை கற்றவர்களும், வாரசுரம் ஏழையும் விடுத்து சத்தாரி, ஆகம, பதநீ யாகிய ச-ரி-க-ம-ப-த-நீ என வீணை கோபாலனை சிந்திக்கும் சப்தவொலிகள் நிலைக்க ஏழாழ் முடிக்கி ஏழோசை இசைத்து ஒலிவடிவ மாறலிசையால் வாசித்து வந்தார்கள்.

வீணைகோபாலன் வாசித்த ஏழாழினோசையால் கேழ்ப்பவர்களுக்கு மனோலய ஆனந்த சுகமுண்டாகி இதயாக்கினிதணிவதற்கோர் கலைக்கருவியாக விளங்கினபடியால் வீணைவிருத்த முதற்குருவானார் ஓர் சங்கத்திற்கு இதத்தைக் கொடுக்குங் கலைக்கியானத்திற்கு சங்கீதமென்னும் ஓர் பெயருண்டாயிற்று.

சக்கிரவர்த்தித் திருமகன் சங்கீதங் கோஷிக்குங்கால் அவர் முகம் பேரியாழ் முடிக்கி சச்சற்புட மிடுங்கால் சத்தியோசாத முகமாகவும், சகோடயாழ் முடிக்கி சாசற்புட மிடுங்கால் வாமமுகமாகவும், மகரயாழ் முடிக்கி சம்பத்து வேட்ட மிடுங்கால் தற்புருட முகமாகவும் ஆகிய சதுர் முக தோற்றங்களுண்டாயிற்று. அதனாற் சித்தார்த்தரை சதுர்முகன் சதுர்முகனென்றும் அழைத்தார்கள்.

பின்கலை நிகண்டு

தேனவிழ்த் தளிர்களெல்லாஞ் - செவ்வழி பாடானின்ற,
பூனகைத் திலங்கு கஞ்சப் - பொகுட்டின்மீதே ஒதுங்கும்,
நான்முகக் கடவுள் பாத - நாவினா னவிற்றி ஏத்தி,
மானவர்க்கியன்றபேரை - வகுத்திடுந்தொகுதி சொல்வாம்.

நன்னூல்

பூமலியசோகின் புனைநிழலமர்ந்த,
நான்முகன் தொழுது நன் கியம்புவனெழுத்தே.

சீவகசிந்தாமணி பதிகம்

கோனைக்களிற்றுத் தொடித்தேரி உளிக்கடல்சூழ்,
வாண்மொய்த்த தானை அவன் தம்பியுந் தோழன்மாரும்,
பூண்மொய்த்த பொம்மன் முலையாரும் புலந்துறப்ப,
வீணைக்கிழவன் விருந்தார் கதிசென்றவாறும்.

சங்க இதத்திலும், வீணை அபிநயத்திலுந் தினேதினே சுகித்து மலைமகள் லீலாவினோதனாய் துக்கமென்பது அணுவேனுந் தோற்றாமல் ஆண்டாண்டு நிகழ்ச்சியில் அசோதரைக்கு கருப்பமுண்டாகி அன்பின் பெருக்கும், ஆலிங்கன விருப்பும் அதிகரித்து நிற்குங்கால் சதுர்முகர்க்கோர் சங்கை தோன்றிற்று, அதாவது தான் அறுசுவை புசிப்பிலும், அபிநய விழிப்பிலும், அணை சயனத்திலும் ஆனந்தித்திருப்பதுபோல் அரசுக்குள் அடங்கியக் குடிகளும் இத்தகைய ஆனந்தத்தில் இருப்பார்களோ என்பதேயாம்.

இவ்வகை சிரேஷ்டவெண்ணமுதித்தவுடன் அரசனை வரவழைத்து தந்தையே, நம்முடைய தேசக்குடிகளின் சுகாசுகங்களைக் கண்டறிய வேண்டி விருப்புற்றிருக் கின்றேன் உத்திரவாகவேண்டுமென வினவினார்.

உடனே அரசன் திகைத்து மைந்தன் ஊர்வலம் வருங்கால் குடிகளின் அசுகபேதங் கண்களிற் தோற்றுமாயின் அதே துக்கத்திற் துறப்பாரென்னும் பீதியால் திருமகன் தேரூறும் வீதிகள் யாவையும் அலங்கரிக்கச்செய்து மைந்தனுக்கு ஊர்வல உத்திரவளித்தான்.

சித்தார்த்தி சதுர்முகன் சதுரங்க சேனைகள் சூழ ஊர்வலம் வருங்கால் வீதிகடோரும் வாழை, கமுகு, கரும்பு முதலியவைகளை நாட்டி பவழ தோரணம், முத்து தோரணங்கள் உயர்த்தி வீடுகடோரும் கற்புடை மாதர்க் கரங்களில் கர்பூரால்மேந்தி கனகமழ் சுன்னந் தூவி நிற்கவும், அசுகபாவனையோர் எதிர்த்தோற்றாமல் எச்சரிக்கைக் கூறவும், பதாதி சேனைகள் வேறு பராக்குராமல் அரச பராக்கில் நிற்கும் ஜாக்கிரதையிலிருந்தும், ஓர் வீதியில் நரை திரை முதிர்ந்த ஓர் மனிதன் கூன் வளைந்து தடியூன்றி தள்ளாடி வருவதைக் கண்டவுடன் இரதத்தை நிறுத்தும்படி ஆக்கியாபித்துக் கீழிரங்கி மூப்பனை அணுகி நீவிர் யாரென்றார். அவன் மூப்பினாற் கண்பஞ்சடைந்து செவியுந் தூர்த்திருந்தபடியால் மறுமொழி யாதுங் கூறாமல் திகைத்து நின்றான்.

சித்தார்த்தி சதுர்முகன் அருகிலுள்ளவர்களை அழைத்து இஃது யாது. நம்போன்ற தேகியா அன்றேல் வேறு சீவனோவென உசாவினார். அதற்கு அவர்கள் அரசனே, இவன் நம்மெய்ப் போன்ற தேகியே ஆயினும் வயதேற தளர்ந்து தள்ளாடுவதுடன் கண்களின் பார்வையும், செவிகளின் கேட்டலும் அடங்கி விட்டது என்றார்கள்.

சதுர்முகன் அவர்களை நோக்கி நம்மெய்ச் சூழ்ந்து நிற்கும் சகலதேகிகளும் இன்னிலைமெய் அடைவார்களோ என்றார். ஆம் ஒவ்வோர் தேகமும் இவ்வகைத் தளர்வடையும் என்றார்கள்.

என் தேகமோ என்றார். அரசே, உமக்கும் அப்படியே என்றார்கள்.

வாலறிஞன் சித்தங்கலங்கி ரதமூர்ந்து மற்றோர் வீதியில் ஏகுங்கால் ஓர் மேடையின் மீது காசரோகங்கொண்டவன் உட்கார்ந்து கொண்டு மேல் சுவாச உபத்திரவத்தாலும், இருமலின் திணரலினாலும், கண்களில் நீரும் வாயிற் கோழையும் வடிய கைகளினால் மார்பை அழுத்திக் கொண்டிருப்பதைக் கண்டு இரதத்தை விட்டிரங்கி உமக்கென்ன கஷ்டமென்றார். அவனுக்குள்ள மாரடைப்பின் உபத்திரவத்தால் மாறுத்திரமளிக்க வேலாது தலைநிமிர்ந்துங் கவிழ்ந்து கொண்டான்.

அதைக்கண்ட சித்தார்த்தர் அருகிலுள்ளவர்களை நோக்கி இதன் காரண மென்ன என்றார். அதற்கு அவர்கள் அரசே, இவன் நெடு நாளாக சுவாச ரோகத்தால் பீடிக்கப்பட்டு நிலைகுலைந்திருக்கின்றான். அதினாற் தங்கள் கேள்விக்கு உத்திர வளிக்கக்கூடாமல் திக்கிட்டுக் கவிழ்ந்து கொண்டான் என்றார்கள்.

ஆனால் மநுடசீவர்கள் எல்லோருக்கும் இத்தகைய உபத்திரவம் உண்டாகுமோ என்றார். ஒவ்வோர் மநுடசீவர்களுக்கும் பற்பல வி யாதிகள் தோன்றி உபத்திரவம் அடைவதுண்டு எனக் கூறினார்கள்.

எனக்கும் உங்களுக்கும் இவ்வகை உபத்திரவந் தோன்றுமோ என்றார். அரசே, ஒவ்வோர் உடலிலும் வியாதி உட்பிறந்து வாதிப்பது உள்ள சுபாவமாதலின் உமக்கும் எமக்கும் வியாதி தோன்றாமற்போகாதென்றார்கள்.

அவற்றை வினவிய சதுர்முகன் சற்று திகைத்து மறுபடியும் இரதமூர்ந்து மற்றோர் வீதியிற் செல்லுங்கால் பெருவெளி வழியே பாடையில் ஓர் பிரேதத்தைப் படுக்கிட்டு நான்குபேர் சுமந்து செல்லவும், அவர்களுக்குப் பின் சிலக் கூட்டத்தார் அழுதுகொண்டு செல்லவுங் கண்டு சாரதியை நோக்கி நமது ரதத்தை வீதிவழி செலுத்தாது வெளிவழி செலுத்தி அதோ செல்லுங் கூட்டத்தாரைப் பின்பற்றும் என்றார்.

உடனே சாரதி தனது ரதத்தை பிரேதத்தை எடுத்துச் செல்லுங் கூட்டத்தாரிடம் நெறிக்கியவுடன் அவர்களும் பிரேதத்தை வைத்துக் கொண்டு நின்றுவிட்டார்கள். திருமகன் ரதத்தை விட்டிரங்கி பாடையின் அருகில் சென்று அவ்விடமுள்ளவர்களை நோக்கி இஃதென்ன கோரம் என்றார்.

அரசே, இவன் இறந்துவிட்டான் அடக்கஞ் செய்யப்போகிறோம் என்றார்கள்.

மனிதனே இவ்வகை நிலமெய்க்கு வந்திருக்கின்றானா அன்றேல் வேறு சீவனோ என்றார். மனிதனே, பேச்சும் மூச்சும் அடங்கி மரணமடைந்தானென்றார்கள்.

மரணமடைந்தால் மறுபடியும் எழுந்து பேசமாட்டானோ என்றார்.

அவனுக்கு பேச்சும் மூச்சும் இருக்குமானால் இடுகாட்டுக்கு எடுக்க மாட்டோம் என்றார்கள். இவன் வீடுவாசல் பெண்சாதி பிள்ளைகளை மறந்து விட்டானோ என்றார்.

அவ்வகை மறந்ததினால் இவனை இறந்தானென்று சொல்லுகிறோம் என்றார்கள்.

இறந்தவனென்றால் விழித்துப் பார்க்கானோ என்றார்.

பார்க்குங் கண்ணும், கேட்குஞ் செவியும், முகறும் மூக்கும், பேசும் வாயும், ஊருந் தேகமும் ஒய்ந்துவிட்டபடியால் ஊரைவிட்டெடுத்துப்போய் இடுகாட்டில் இடப்போகின்றோம் என்றார்கள்.

இவனொருவனே இன்னிலமெய் அடைந்தானா அன்றேல் மநுட சீவர்கள் யாவரும் இன்னிலமெய் அடைவார்களோ என்றார்.

ஒவ்வோர் மநுட சீவர்களும் இறந்தே தீரல் வேண்டும் என்றார்கள்.

ஆகையால் யானும் அவ்வகை இறப்பேனோ என்றார்.

ஒவ்வொருவரும் திகைத்து ஆம் நீரும் இறப்பீரென்றால் அரசபுத்திரன் பயந்து பிணிக்குள்ளாவரேல் சக்கிரவர்த்தி சினப்பாரென்னும் பீதியால் மாறுத்திரமளிக்காது மௌனத்திருந்தார்கள்.

மறுமொழிக் கிடைக்காததை உணர்ந்த மன்னுபுத்திரன் தனக்கும் இதுவே முடிவாக்கும் என்றெண்ணி சாரதியை நோக்கி நாம் கண்ட காட்சிகள் போதும் இரதத்தை அரண்மனைக்குச் செலுத்தும் என்றார்.

உடனே சாரதி இரதத்தைத் திருப்பி சித்திர மாளிகைச் சேர்த்தான்.

இரும்பு மதில், வெள்ளி மதில், பொன் மதில் மூன்றையும் முன்பு புகழ்ந்து சென்றவர் அன்று மூன்றையும் மண்மதில் என்றிகழ்ந்து மாளிகைச் சேர்ந்தக்கால் அவர் முகத்தைக் கண்ட அசோதரை அருகிற் சென்று என் பிராணநாயகா! நீவீர் செல்காலிருந்த செந்தாமரை முகம் வருங்கால் வாடியதென்னோ என வினவினாள்.

அதற்கு அசோதரை நாயகன் பெண்ணே நாமிதுவரை அடைந்த சுகத்திற்குமேல் துக்கமிருப்பதைக்கண்டு வாட்டமுற்றேனென்றார்.

அவ்வகை துக்கத்திற்கு நான் காரணமோ என்றாள். உம்மெய்யோ, தந்தை மெய்யோ, எம்மெய்யோ, காரணமென்றறியேன் என மறுமொழி கூறி நித்திய கடனை நிகழ்த்திவருங்கால் அசோதரைக்கோர் ஆண் குழந்தை பிறந்தது. அதைக் கேழ்வியுற்ற மண்முகவாகு சித்திர மாளிகைச் சேர்ந்து மைந்தனையும், மகவையுங் கண்டு வீரவாகு சக்கிரவர்த்தி வம்மிஷவரிசையில் இரகுவாகுத் தோன்றிய குதூகலத்தால் சித்தார்த்தரை அணுகி நங்குடிகளுக்கு யாது செய்யுதும் என்றான்.

ஊர்வலம் வருங்காற் கண்ட மூப்பன் வருமெயும் பிணியாளநிலமெயுந் தன்னுள்ளத்தைக் கவர்ந்திருப்பதால் மூப்பர்களுக்கு அன்னமும், ஆடையும், பிணியாளருக்கு மருந்தும் அளிக்கவேண்டும் என்றார்.

சீவகசிந்தாமணி - முத்தி

கனகடல் சுவரச்செல்லுங் கணமழைத் தொகுதிபோலு,
நனைமலர்ப் பிண்டிநாதன் நல்லறங் கொள்ளைசாற்றிப்,
புனைமுடி மன்னரீண்டிப் பொன்னெயிற் புறத்துவிட்டார்,
வினையுடைத் தின்ப வெள்ளம் விரும்பிய வேட்கையானே.

அடிசில்வைகளாயிரம் அறப்புறமும் ஆயிரம்
கொடியனார் செய்கோலமும் வைகறோரும் ஆயிர
மடிவில்கம்மியர்களோடு மங்கலமும் ஆயிரம்
ஒடிவிலையர் ஆயிரமோம்புவாரினோம்பவே.

சித்தார்த்தித் திருமகனுக்குக் குலமகன் பிறந்த குதூகலத்தால் தேசமெங்கும் பறையறைவித்து பிணியாளருக்கு மருந்தும் மூப்பர்களுக்கு அன்னமும் ஆடையும் அளிக்க வேண்டிய அறச்சாலைகளையும் அவுஷதச் சாலைகளையுங் கட்டி அறச்செயலை நிலைக்கச்செய்தார்கள்.

மணிமேகலை

மட்டறச்சாலையும் மருந்தினர் சாலையும், கட்டிடைச்சேவகக் காப்புடைத்தாக.

சிலப்பதிகாரம்

ஆயுள் வேதருங் காலக் கணிதரும், பால்வகைத் தெரிந்த பன்முறை இருக்கெயும்.

அறச்சாலைகளையும் அவுடதச்சாலைகளையும் நிருமித்த கருணையால் சித்தார்த்தரை தம்மராஜன் தம்மராஜனெனக் கொண்டாடினார்கள். குழவிபிறந்த மகிழ்வும் குடிகள் கொண்டாடும் புகழும் ஏகதோஷத்தில் இருந்தபோதிலும் தம்மராஜன் உள்ளம் பிணி, மூப்பு, சாக்காடென்னும் மூவகைத்துக்க விசாரணை யினின்றது.

அருங்கலைச்செப்பு

பிணிமூப்புச்சாக்காடிவை மூன்றும் ஆய்தற், துணிபுற்று நின்றானிறை.

3. சித்தார்த்தர் வாய்மெய் விசாரிணைக் காதை

தம்மராசன் வாய்மெய் விசாரிணையில் மூழ்கி தனதரிய தந்தையை வரவழைத்து எனதருமெய் தந்தையே, நமதாளுகைக்கு உட்பட்ட தேயங்களி

லேனும் மற்றும் இடங்களிலேனும் விவேகமிகுத்தக் கூட்டத்தார்கள் இருப்பார் களானால் அவர்களை வரவழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

உடனே மண்முகவாகு தேசமெங்கும் பறையறைவித்து முதற் சங்கத்தைச்சார்ந்த விவேகிகளில் சிலரை அழைத்து மைந்தனிடம் அனுப்பினான்.

அவர்களுஞ் சித்திரக்கூடஞ்சேர்ந்து சிற்றரசரைக்கண்டு சபாமண்டபத் தில் உட்கார்ந்து நகரவிசாரிணை முடிந்தவுடன் தம்மராசன் முன் சங்கத்தோரை நோக்கி பெரியோர்களே, தங்கள் சங்கத்தின் நோக்கமென்ன, அதன் பயன் யாதென உசாவினார்.

எங்கள் சங்கத்தின் நோக்கம்

இறப்பும், பிறப்பும், உயர்வும், தாழ்வும், நன்மெயும், தீமெயும், பஞ்சபூதங்களால் உண்டானபடியால் பஞ்சபூதங்களையே வணங்கவேண்டும் என்பதே யாம் என்றார்கள்.

அருங்கலைச்செப்பு - முதற்சங்கவியல்

இறப்பும் பிறப்பு மினியவை தீதுங் / குறிய வைம்பூதத்தியல்.
ஒங்க லொடுங்க லுயர்வு தாழ்த / லாங்கவைம் பூதத்தளர்.
தோற்றும் பூதமைந்தும் வணங்க / லாற்றலென்றே யுணர்.

அங்ஙனம் வணங்குவதில் பயன் யாதென்றார். வணங்கிய பயன் யாதும் அறியோமென்றார்கள். பஞ்சபூதங்களென்றால் அஃதெவைகள் என்றார். நிலம், நீர், தீ, காற்று, வெளி என்றார்கள். வெளியும் ஓர் பூதமாமோ என்றார். மாறுத்திரங் கூறாமல் திகைத்து நின்றார்கள்.

பெரியோர்களே, பூதவிசாரிணை இருக்கட்டும். சீவர்களுக்குப் பிணியணுகா மருந்தும், மூப்பணுகா நிலையும், மரணமடையா வழியும் ஏதேனும் உண்டோ என்றார். அரசே, அவ்வகை ஏதுக்களை நாங்கள் கண்டதுமில்லை கேட்டதுமில்லை என்றார்கள்.

ஆனால் தங்கள் போகலாமென்று அனுப்பிவிட்டு இரண்டாவது சங்கத்தோர்களைத் தருவித்தார்.

அவர்களும் சித்திரகூடம் அணுகி சிற்றரசரைக்கண்டு சபாமண்டபத்தில் உட்கார்ந்து அரசே, எங்களை வரவழைத்தக் காரணம் யாதென உசாவினார்கள்.

பெரியோர்களே, உங்கள் சங்கத்தின் நோக்கமும் அதன் பயனும் யாதென்றார்.

அரசே, இறந்தபின் மனிதன் மிருகமாகவும், மிருகம் மனிதனாகவும் பிறக்கமாட்டான். மனிதன் மனிதனாகவும், மிருகம் மிருகமாகவும் பிறக்கும். ஆதலின் ஒன்றை வணங்குவதால் பலனுமில்லை, வணங்காமலிருப்பதினால் கெடுதியுமில்லை என்பதே எங்கள் சங்கத்தின் நோக்கம் என்றார்கள்.

அருங்கலைச்செப்பு - இரண்டாஞ்சங்கவியல்

மாண்ட மக்கள் விலங்குகளாகி / மீண்டும் பிறப்பதிலர்.
மரித்த விலங்கு மக்களாகி / விரித்துத் தோன்றா விழல்.
வணக்க மதினால் வருபயனில்லை / இணங்காததுவே நிலை.

பெரியோர்களே, மனிதன் மிருகமாகப் பிறக்கான் என்பதையும், மிருகம் மனிதனாகப் பிறக்காதென்பதையும் எவ்வகையால் அறிந்து கொண்டீர்களென்றார்.

அதனதன் உருவங்களே போதுமான சாட்சி என்றார்கள்.

ஆனால் மனிததேகத்தில் மாமிஷமும் எலும்பும் மிருகதேகத்தில் மண்ணும் மரமும் பொருந்தியிருக்குமோ என்றார்.

உருவ பேதமே காரணமென்றார்கள்.

உருவபேதத்தால் பிறவிபேதத்தை எவ்வகையிற் கண்டறிந்தீர்கள் என்றார்.

கண்டறிந்த காரணங் கூறாமல் திகைத்து நின்றார்கள்.

பெரியோர்களே பிறவிபேதமிருக்கட்டும், பிறந்தபின் உண்டாகும் பிணியின் பேதங்களையும், மூப்பின் பேதங்களையும், மரணபேதங்களையும் கண்டதுண்டோ என்றார்.

அரசே, தற்காலந் தங்களால் இயற்றியுள்ள வைத்தியசாலைகளின் சிகிட்சைகளைக் கண்டோமன்றி வேறு சிகிட்சை அறியோமென்றார்கள்.

பிணிகள் தோற்றும் பீடங்களை ஏனுங் கண்டதுண்டோ என்றார்.

பிணிகளின் உற்பவ காரணம் அறியோமென்றார்கள்.

கண்காட்சியில் தோன்றும் பிணியோற்பவம் அறியாதார் பிறவியோற்பவம் அறிந்தாற்போல் பேசுவது பேதைமெய் அன்றோ என்றார்.

பேதைமெயே என்றொப்புக் கொண்டு அவரவர் இல்லஞ் சேர்ந்தார்கள்.

தம்மராசன் மூன்றாஞ் சங்கத்தோரை வரவழைத்து பெரியோர்களே, தங்கள் சங்கத்தின் உத்தேசமும் அதன் பயனும் யாதென்றார்.

அரசே, எங்கள் உத்தேசம் மனிதனுக்கு யாதொரு

சுகமும் கிடையாது. பிறப்பது ஆதி, இறப்பது அந்தம், இறந்தபின் சகலமும் சூன்யமாதலால் விழித்திருப்பவன் சூனியத்தை விசாரிப்பதில் யாதொரு சுகமுங் கிடையாதென்பதே என்றார்கள்.

அருங்கலைச்செப்பு - மூன்றாஞ் சங்கவியல்

மக்கட் பிறப்பிற் சுகமு மில்லை / இக்கட்டிடுகுறையால்.
பிறப்பதாதி யிறப்பதந்தங் / குறிப்பாம் பாழ்நிலையால்.
விழிப்போன்பாழை வினவுவதெல்லாம் / பழிப்பின் பகுதியேயாம்.

பெரியோர்களே, உலகத்தில் ஆணுக்குப் பெண்ணும், நன்மெய்க்குத் தின்மெயும், சூட்டிற்கு குளிர்ச்சியும், இருளுக்குப் பகலும், தூக்கத்திற்கு விழிப்பும் எதிரடையாகத் தோன்றுவதுபோல் துக்கத்திற்கு சுகம் எதிரடையாக வேண்டுமே. அங்ஙனம் இராததற்குக் காரணம் என்னை என்றார். மனிதன் பிறந்ததுமுதல் இறக்குமளவும் துக்கமே தோற்றமாதலின் சுகமில்லை என்பது கருத்தாம் என்றார்கள்.

உங்களுக்குச் சுகமென்னும் உணர்ச்சித் தோன்றியவிடத்தில் துக்கம் விளங்கிற்றா அன்று வேறாகத் தோன்றிற்றா என்றார். சுகம் உணரும் இடத்தில் துக்கம் விளங்குகிறதென்றார்கள். மனிதனுக்கு சுகமில்லை என்று கூறுங் காரணமென்னை என்றார். விசாரணைக் குறைவே என்று ஒப்புக்கொண்டார்கள்.

ஆதி என்னுந் தோற்றம் உண்டானபோதே அந்தமென்னும் முடிவும் இருப்பதாக விளங்குகின்றது. ஆதலின் தாங்கள் கூறும் பிறப்பிற்கும் இறப்பிற்குங் காரணம் எதுவென உசாவினார்.

அதன் காரணங்களை அறியோமென்றார்கள்.

பெரியோர்களே தங்கட் கண்களில் தோற்றும் பொருட்களை சூன்யம் என்கிறீர்களா தோற்றாப்பொருட்களை சூன்யம் என்குறீர்களா என்றார்.

தோற்றும் பொருட்கள் மறைந்தவிடத்தை சூன்யமென்றோமென்றார்கள்.

சூனியத்தினின்று எதேனுந் தோற்றுமோ என்றார்.

அதன் விளக்கம் அறியாது விழித்தார்கள்.

பெரியோர்களே, உங்களுக்குள்ள சூனியம் இருக்கட்டும் பிணிகளின் உற்பவம் ஏதேனுங் கண்டீர்களோ என்றார்.

அரசே, உபத்திரவங் கண்டு தீறும் பிணி ஒன்று, உபத்திரவங் கண்டு கொல்லும் பிணியொன்று ஆக இரண்டு பிணிகளைக் கண்டுள்ளோ மென்றார்கள்.

பெரியோர்களே இவ்விரண்டு வகைப் பிணிகளின் உற்பவங்களைக் கண்டீர்களோ என்றார்.

அறியோமென்றார்கள்.

மனிதன் மூப்படையுங் காரணத்தையேனுங் கண்டதுண்டோ என்றார்.

அதையும் அறியோமென்றார்கள்.

மனிதன் மரணத்திற்கு உள்ளாகுங் காரணங்களையேனுங் கண்டதுண்டோ என்றார்.

அதையும் அறியோமென்றார்கள்.

பெரியோர்களே, தாங்கள் கொண்ட விசாரிணையால் உங்களுக்கேனும், உங்களைச் சார்ந்தவர்களுக்கேனும் பயனுண்டோ என்றார்.

யாதொரு பயனையும் அறியோம் என்றார்கள்.

பயனற்ற சங்கத்தைச் சாருதலும், பயனற்ற வார்த்தைகளைப் பேசுதலும், பாழாதலின் பெரியோர்களே தங்கடங்கள் இல்லங்களில் சேருங்கோளென்று அனுப்பிவிட்டார்.

சக்கிரவர்த்தித் திருமகன் நான்காம் சங்கத்தோரை வரவழைத்து ஆசனமீய்ந்து பெரியோர்களே, தங்கள் சங்கத்தின் நோக்கம் யாது, அச்சங்கத்தால் தாங்கள் அடைந்த பலன்கள் என்னை அதை விவரிக்க வேண்டும் என்றார்.

அரசே, எங்கள் சங்கத்தின் நோக்கம் யாதென்பீரேல்,

சீவர்களுக்கு ஆதியுங்கிடையாது, அந்தமுங் கிடையாது, நன்மெயுங் கிடையாது, தீமெயுங்கிடையாது எல்லாம் தானே ஏற்றுக்கொள்ளுவதால் யாவுந் தற்செயலென்றே கொள்ளுவதாக்குமென்றார்கள்.

அருங்கலைச்செப்பு - நான்காஞ் சங்கவியல்

தோற்றும் பிறப்பின் முதலுமில்லை / யாற்றுங் கடையுமது.
நன்மெயுமில்லைத் தீமெயுமில்லை / புன்மெயூர் சீவர்க்கது.
முற்செயல் யாவை யூர்ந்து மேற்றல் / தற்செயலென்றே யறி.

தம்மராஜன் அங்கு வந்துள்ள ஓர் பெரியவரைநோக்கி பெரியோய் உமக்கு வயதென்ன என்றார்.

அரசே, எனக்கு நாற்பது வயதாகின்றது என்றார். இவ்வயதை உமது ஆதி உற்பவங்கண்டு சொல்லுகின்றீரா, அன்றேல் அனாதியினின்று சொல்லுகின்றீரா என்றார்.

அரசே, என் ஆதியுற்பவங்கொண்டே சொல்லுகின்றேனென்றார்.

பெரியோய் அங்ஙனம் சீவர்களுக்கு ஆதியுமில்லை அந்தமும் இல்லை என்று கூறிய கருத்தென்னவென்றார்.

அரசே, சீவர்களுக்கு ஆதியுங் கிடையாது அந்தமுங் கிடையா தென்றார்கள்.

பெரியோர்களே, சீவர்களென்றால் ரூபிகளா அரூபிகளாவென்றார்.

அரசே, அரூபியே என்றார்கள்.

பெரியோர்களே, சீவர்கள் அரூபவஸ்துக்களாயின் மநுடசீவர்களென்றும் மிருக சீவர்களென்றும் ரூபங்களைக் குறிக்குங் காரணம் யாதென்றார்.

அரசே, தேகத்தை ஆட்டுவது சீவனேயன்றி தேகம் சீவனாகாதே என்றார்கள்.

பெரியோர்களே, உங்கள் கண்ணினால் தேகம் ஆடுவதைக் கண்டீர்களா தேகத்தை ஆட்டி வைப்பதைக் கண்டீர்களா என்றார்.

அரசே, தேகம் ஆடுவதையே கண்டோமென்றார்கள்.

பெரியோர்களே, தேகத்தை ஆட்டிவைப்பது ஓர் சீவனென்று கூறியது காணாமற் கூறும் பொய்யல்லவோ என்றார்.

அரசே, நாங்கள் கூறும் வழக்கமென்றார்கள்.

பெரியோர்களே, அறியாத சங்கதிகளை அடுத்துச்சொல்லி அயலாரைக் கெடுக்கும் பொய்யே தின்மெயாயிருக்க நன்மெயுமில்லை தின்மெயுமில்லை என்று கூறுவது பெரும் பொய்யல்லவோ என்றார்.

அரசே, நன்மெயுந் தின்மெயும் தீதென விளங்காமற் கூறுவது பொய்யாமோ என்றார்கள்.

பெரியோர்களே, விவேகிகளுக்கும் ஓர் சங்கம் வேண்டும், கள்ளர்களுக்கும் ஓர் சங்கம் வேண்டும், ஆதலின் தாங்கள் கூடியுள்ளது யாது சங்கமென்றார்.

அரசே, யாங்கள் கூடியுள்ளது விவேகிகள் சங்கமென்றார்கள்.

பெரியோர்களே, தங்கள் சங்கத்தை கள்ளர் சங்கமென்றாலோ என்றார்.

அரசே, யாங்கள் கள்ளர்களல்லவே என்றார்கள்.

பெரியோர்களே, கள்ளர்களென்றால் தீயச்செயலை உடையவர்களோ என்றார்.

அரசே, ஆமென்றார்கள்.

அப்போது நன்மெயுமில்லை தீமெயுமில்லை என்பது உங்கள் வழக்கமோ என்றார்.

அதற்கும் ஆமென்றார்கள்.

ஆதியுமில்லை, அந்தமுமில்லை, நன்மெயுமில்லை, தீமெயுமில்லை என்று

சொல்லித்திரிவது உங்கள் சங்கத்தின் இயல்புபோலும் என்றார்.

மாறுத்திரங் கூறாமல் மௌனத்திலிருந்தார்கள்.

பெரியோர்களே, தாங்கள் ஒவ்வொருவரும் சொன்னதைச் சொல்லுங் கிள்ளைபோன்றவர்களாதலின் உங்களால் உள்ள சங்கை விளங்காது, தங்கடங்கள் இல்லஞ்சேர்ந்து ஆதி அந்தத்தை ஆராய்ச்சி செய்யுங்கோள் என்று அனுப்பிவிட்டார்.

அதன்பின் சித்தார்த்தி சிறுவர் ஐந்தாவது சங்கத்தோர்களை வர வழைத்து பெரியோர்களே, தங்கள் சங்கத்தின் நோக்கமும் அதன் பயனும் யாதென உசாவினார்.

ஐந்தாவது சங்கத்தார் சிறுவரை நோக்கி அரசே, எங்கள் சங்கத்தின் நோக்கம் புசிப்பை விரும்பாதவனும், தாகத்தை அடக்குவோனும், அக்கினியின் கொதிப்பை சகிப்பவனும், சூரியன் வெப்பத்தைத் தாங்குகிறவனும் எக்காலும் சுகமடைவான். இவைகளைத் தாங்காதவன் சுகமடைய மாட்டான் என்பதே என்றார்கள்.

அருங்கலைச்செப்பு - ஐந்தாம் சங்கவியல்

உண்ணலுணவை யொழிக்கு முளத்தான் / களங்கமகற்றுங்கரை
தீயவெப்பந்தாங்குந்தரியல் / ஆயசுகமென்றுணர்
இத்திரவொடுக்கமேவாதொருவன் / பற்றுஞ்சுகமற்றது.

பெரியோர்களே, தங்கள் தேகங்களில் பசி தானே தோற்றுகின்றதா அன்றேல் பசியைத் தாங்கள் தோற்றவைக்கின்றீர்களா என்றார்.

அரசே, பசி தானே தோற்றுகிறதென்றார்கள்.

அங்ஙனந் தானே தோற்றும் பசிக்குப் புசிப்பை விரும்பாமலிருக்கக் கூடுமோ என்றார்.

புசிப்பை விரும்பாமலிருந்தால் பசி எடுக்காமலிருக்கும் என்பது சங்கத்தின் கருத்தென்றார்கள்.

தற்காலந் தாங்கள் புசிப்புண்டு தேகத்தைப் போஷிக்கின்றீர்களா என்றார்.

அரசே, புசிப்புண்டு தேகத்தைப் போஷிக்கின்றோம் என்றார்கள்.

அங்ஙனம் புசிப்பை விரும்பாதிருத்தல் என்பதின் கருத்தென்னை என்றார்.

அஃதெங்கள் முன்னோர் கருத்தென்றார்கள்.

பெரியோர்களே, முன்னோர் கருத்தை உணராமல் பின்னோராகச் சொல்லிக் கொண்டு திரிவது உங்கள் கருத்துபோலும் என்றார். ஆமென்றார்கள்.

பெரியோர்களே, உங்கள் சங்கத்தோர்க்குப் பிணி, மூப்பு, சாக்காடு தோன்றுவதில்லையோ என்றார்.

அரசே, மூன்றுந் தோன்றுவதுண்டு என்றார்கள்.

பெரியோர்களே, இம்மூன்றின் உபத்திரவத்தால் உங்களுக்குத் துக்கம் உண்டா இல்லையா என்றார்.

அரசே, இம்மூன்றினாலும் எங்களுக்குத் துக்கம் உண்டு என்றார்கள்.

பெரியோர்களே, தங்கள் சங்கத்தோர் கருத்தின்படி நடந்தால் எக்காலுந் துக்கமணுகாவென்று கூறிய உங்களுக்கு இம்மூன்றினால் துக்கமணுகுங் காரண மென்னை என்றார்.

அரசே, எங்கள் சங்கத்தோர் நோக்கத்தைச் சொல்லிக்கொண்டு வருகிறோமன்றி அதன் பலனை அறியோமென்றார்கள்.

பெரியோர்களே, வியாபார சங்கமென்று சிலர்கூடி வியாபாரம் நடத்துவதில் ஓர் பயனைக் கருதி நடத்துகின்றார்களா பயனைக் கருதாமல் நடத்துகின்றார்களா. பூமியை விருத்திசெய்யும் ஓர் சங்கத்தார் உழுது பண்படுத்தி விதைப்பதில் அப்பயிற்றின் பயனைக் கருதி விதைக்கின்றார்களா கருதாமல் விதைக்கின்றார்களா என்று ஆராயுங்கால் ஓர் பயனையும் அதன் சுகத்தையுங் கருதியே செய்துவருவது கண்கண்ட காட்சியாகும்.

அங்ஙனமுள்ள தாங்கள் சங்கத்தின் கருத்தை சொல்லிக்கொண்டு அதன் பலனை அறியோமென்பது பாழல்லையோ என்றார்.

அரசே பயனற்ற சங்கம் பாழே என்று ஒப்புக் கொண்டார்கள்.

பெரியோர்களே, தாபரங்களுக்கும் ஓர் சங்கமுண்டு, பட்சிகளுக்கும் ஓர் சங்கமுண்டு, மிருகங்களுக்கும் ஓர் சங்கமுண்டு, மக்களுக்கும் ஓர் சங்கமுண்டு. இவைகளுள் தாபரசங்கமமாகுந் தோப்புகளினால் பட்சிகளுக்கும், மிருகங்களுக்கும், மக்களுக்கும் நிழலளிப்பதன்றி காய் கனி கிழங்குகள் ஈய்ந்துத் தாங்களும் விருத்தியடைகின்றது.

பட்சிகளின் சங்கங்களோ ஒன்றுகூடிக் கூச்சலிட்டுத் தங்களினங்களைக் கார்த்துக்கொள்ளுகின்றது. மிருகங்களோ அதனதன் வகுப்பில் ஒன்றுகூடித் தங்களைக் கார்த்துக்கொள்ளுகின்றது. மக்கள் சங்கமென்று கூடி யாதொரு பயனுமடையவில்லை என்பது பரிதாபமே.

ஆயினும் பெரியோர்கள் பயனற்ற சங்கத்தை நாட்டிப் பாழடைந்ததைப்போல் சிறுவர்களையும் பாழடையவிடாமல் பயனடையுஞ் சங்கத்தில் சேருங்கோள் என்றோதி அவர்களையும் அவர்களில்லங்களுக்கு அனுப்பிவிட்டார்.

வீணைகோபாலன் ஐந்து சங்கத்தோர்களையுந் தருவித்து விசாரிணைச் செய்தவற்றில் யாதும் விளங்காததால் தந்தைக்கு வேவுவிடுத்து மற்றும் விதரண சங்கத்தோர் வேறுளரோ என்று உசாவினார்.

அவற்றிற்கு சக்கிரவர்த்தியார் சற்று நிதானித்து தனது மூதாதை கலிவாகுச் சக்கிரவர்த்தியின் வம்மிஷவரிசையோர்களாகிய சாக்கையர்களே ஆறாவது கடைச்சங்கத்தோர்களாக நின்று கணிதாதிகளை விளக்கிவருகின்றபடியால் அவர்களில் சில பெரியோர்களைத் தருவிக்க வேண்டும் என்றெண்ணி மிக்கோர்களை வரவழைத்து சாக்காய் நமது குழந்தை ஊர்வலஞ்சென்ற நாள் முதல் தனக்கேதோ ஓர் சங்கை தோன்றி தேசங்களிலுள்ள ஐந்து சங்கத்தோர்களையுந் தருவித்து உசாவியும் தனது சங்கை நிவர்த்தியாகாமல் மற்றுமுளரோ என்றேவினார். அதுகண்டு தங்களை வரவழைத்தேன். நீவிரும் அவ்விடஞ்சென்று குழந்தைக்குற்ற சங்கையை விளக்குவதுடன் சித்திரமாளிகை யை விட்டு வெளியேறாதிருக்கும் விதரணைகளை ஊட்டி இளவரசை நிலைபெறச் செய்யுங்கோள் என்றனுப்பினான்.

சாக்காக்களும் சக்கிரவர்த்தியினாக்ஞைப்படி சித்திரமாளிகைச் சென்று சித்தார்த்தரைத் தெரிசித்து ஆசனத்திருந்து அரசே, எங்களைத் தருவித்தக் காரணம் யாதென வினாவினார்கள்.

பெரியோர்களே, தங்கள் சங்கத்தின் நோக்கங்களையும் அதன் பயன்களையும் அறியவேண்டியவனாயிருக்கின்றேன் விளக்குங்கோளென்றார்.

அரசே, எங்கள் சங்கத்தின் நோக்கமும் அதன் பயனும் யாதென்பீரேல்:-

ஒன்பது கிரகங்கள் கூடி நடத்துஞ் செயல்களே உலகத்தில் பொருந்தும் நிகழ்ச்சி என்றும் ஒவ்வோர் காயங்களின் நிகழ்ச்சியும் நன்மெய் தின்மெயும் தோற்ற ஒடுக்கங்கள் யாவும் நவக்கோட்களின் ஆட்டங்கள் என்றறிந்து அதன்மேறை நடந்து வருகிறோமென்றார்கள்.

கௌதம சிறுவர் பெரியோர்களை நோக்கி ஐயமின் உலக பொருத்தமும் காயங்களும் நன்மெய் தின்மெய்களும் தோற்ற ஒடுக்கங்களுமாகிய நிகழ்ச்சிகள் யாவும் நவக்கோட்களின் ஆட்டமென்றால் அச்செயல்கள் ஏதுக்குத்தக்க நிகழ்ச்சியா, நிகழ்ச்சிக்குத்தக்க ஏதுவாவென்றார்.

அரசே, சருவசெயலும் நவக்கோட்களின் நிகழ்ச்சியென்றார்கள்.

பெரியோர்களே, சருவ நிகழ்ச்சிகளுக்கும் நவக்கோட்களே ஏது வென்பீர்களோ என்றார்.

அரசே, சருவ நிகழ்ச்சிகளுக்கும் நவக்கோள்கள்தான் ஏதுவென்றார்கள்.

பெரியோர்களே, நன்மெய் தின்மெய்கள் இரண்டிற்கும் நவக்கோட்களே ஏதுவென்பீர்களோ என்றார்.

அரசே, தீக்கோட்கள் நோக்கமுருங்கால் தீயபலனையும், நற்கோட்கள் நோக்கமுறுங்கால் நல்ல பலனையுந் தருமென்றார்கள்.

பெரியோர்களே, நற்கோள் பார்வைக்கோர் ஏதுவும், தீக்கோள் பார்வைக்கோர் ஏதுவும் இருக்குமல்லவோ என்றார்.

அரசே, அவைகளிரண்டிற்கும் நவக்கோட்களே ஏதுவென்றார்கள்.

பெரியோர்களே, தீக்கோட்களென்றும், நற்கோட்களென்றும் பகுப்பு உண்டானதற்கு ஏதுக்களெவை என்றார்.

அரசே, அதனதன் செயல்களே ஏதுவென்றார்கள்.

பெரியோர்களே, தீச்செயலும், நற்செயலும் ஒழிந்தவிடத்தில் தீக்கோள் நற்கோளென்னும் பெயருண்டோ என்றார்.

மாறுத்திரங் கூறாமல் திகைத்து நின்றார்கள்.

பெரியோர்களே, தீக்கோட்கள் நல்லபலனையும், நற்கோட்கள் தீயபலனையுந் தாராவோ என்றார்.

அரசே, அந்தந்த கிரகங்கள் நின்ற விராசிபேதத்தால் நற்கோட்கள் தீயபலனையும், தீக்கோட்கள் நல்லபலனையும், தருமென்றார்கள்.

பெரியோர்களே, சருவ செயல்களுக்கும் நவக்கோட்களே ஏதுவென்று முன்பு கூறினீர்கள் இப்போது இராசியை ஏதுவாக்குகின்றீர்கள். ஆக இவ் விரண்டில் எவற்றை முக்கிய ஏதுவாகக் கொள்ளலாம் என்றார்.

அரசே, இராசிகளையும் ஏதுவென்னலாம் என்றார்கள்.

பெரியோர்களே இராசிகளையும் கிரகங்களையும் ஏதுவாகக் கொள்ளுவதில் ஒவ்வொரு சீவராசிகளின் உற்பவங்களில் ஒரேராசியில் ஒரே கிரகம் பொருந்திவருமோ என்றார்.

அரசே, காலத்திற்கு காலம் இராசிகளுங் கோட்களும் மாறுபட்டு வருமென்றார்கள்.

பெரியோர்களே, காலமும் ஓரேதுவாகும் போலுமென்றார்.

அரசே, கிரகங்களை முதலேதுவாகவும், இராசியை இரண்டாமே துவாகவும், காலத்தை மூன்றாவது ஏதுவாகவும் கொள்ளல் வேண்டு மென்றார்கள்.

பெரியோர்களே, காலத்தை அநுசரித்து இராசியும், இராசியை அநுசரித்துக் கிரகங்களும் இருக்கின்றபடியால் கிரகங்களை முதலேதுவாக எவ்வகையில் கொள்ளலாம் என்றார்.

அரசே, இம்மூன்றேதுக்களுள் முதலேதுவை எதுவென்று எங்களுக்கும் விளங்கவில்லையே என்றார்கள்.

பெரியோர்களே, மூன்று ஏதுக்களுக்கும் முதலேது அவரவர்கள் செயல்களென்றே விளங்குகிறதல்லவா என்றார்.

அரசே, அவரவர்கள் செயல்களே முதலேதுக்களென்று நாங்கள் எவ்வகையில் கண்டடைவோமென்றார்கள்.

பெரியோர்களே, தாங்களென்னை நாடி இவ்விடம் வந்தபின்பு இன்னகாலத்தில் வந்தோமென்று குறிப்பீர்களா வராததற்கு முன்பே காலத்தைக் குறிப்பீர்களா என்றார்.

அரசே, இவ்விடம் வந்தபின்பே இக்காலத்தில் வந்தோமென்று குறிப்போமென்றார்கள்.

பெரியோர்களே, அதுகொண்டு தாங்கள் வந்த செயல் முந்தியதா காலம் முந்தியதா என்றார்.

அரசே, நாங்கள் வந்தசெயலே முந்தியதென்றறிந்தோம் என்றார்கள்.

பெரியோர்களே, செயலைத் தழுவிக் காலமும், காலத்தைத் தழுவி இராசியும், இராசியைத் தழுவிக் கிரகமும் நிற்கின்றதல்லவாவென்றார்.

அரசே, அவரவர்கள் செய்கைகளையே முதலேதுவாகவும், காலத்தை இரண்டாமேதுவாகவும், இராசியை மூன்றாமேதுவாகவும், கிரகத்தை நான்காமேது வாகவுங் கொள்ளுவோமானால் நமது மூதாதை கலிவாகு சக்கிரவர்த்தி வகுத்துள்ள கலியுகக் கணிதங்கள் மாறுபடுமல்லவோ என்றார்கள்.

பெரியோர்களே, தங்கள் கணிதங்களை யான் மாற்றுவதற்கு வரவில்லை முன்செயலைக்கொண்டு காலமுங் கணிதமும் விளங்குகிறபடியால் முன்செயலை விட்டுக் காலமுங் கணிதமும் விளங்காதல்லவோ என்றார்.

அரசே, உலகத்தில் தோற்றும் பொருட்களின் உதயத்தைக்கொண்டு பலன்களை கணிக்கின்றோமன்றி அவைகள் தோற்றுஞ் செயலை அறியோமென்றார்கள்.

பெரியோர்களே,

ஒவ்வொரு சீவராசிகளின் உதயங்களுக்கு வேறு வேறு இராசிகளும், வேறுவேறு கிரகங்களும் மாறுகொண்டு தேருருளைப்போல் சுழன்று வருகிற படியால் முன் செயல்களே ஏதுக்களாகவும் தோற்றங்களே நிகழ்ச்சிகளாகவும் வருவது விளங்கவில்லையா என்றார்.

அருங்கலைச்செப்பு - ஆறாவது சங்கவியல்

நவக்கோள் கூடி நடத்து மாண்பு / உவப்பி நிகழ்ச்சியது
ஆயக் கோட்க ளாட்ட மதுவே / காய நிகழ்ச்சி யெனல்
நன்றுந் தீதும் நவக்கோளாட்ட / மென்று முணர்வ தது
தோற்ற வொடுக்கம் யாவுங் கோட்களாற்ற செயலென் றுணர்.

ஏதுக்குத் தக்க நிகழ்ச்சியென்பது செயலுக்குத்தக்கத் தோற்றமென்று விளக்கிய இவர் கலிவாகுச் சக்கிரவர்த்தியின் செயலே சித்தார்த்திச் சக்கிரவர்த்தி என்றுரு கொண்டனரோ என்னும் பீதியால் அரசே, நமது மூதாதை கலியுலகக் கணிதத்தில் தோற்றங்கண்டு மொழிந்து வரும் யாங்கள் செயலைக்கண்டு எவ்வகையில் கவனிப்போமென்றார்கள்.

பெரியோர்களே, முன் செயல்களைக் கொண்டு பின்செயல்கள் தோற்றுகிறபடியால் உங்கள் முன்செயலைக்கொண்டு உங்கள் தோற்றத்தையும் பலனையுங் கணியுங்கோள். அப்பலன் முன் சுகச்செயலைப் பற்றி வருமாயின் பூர்வபுண்ணியமாம் சுபபலனும், அசுகச்செயல்பற்றி வருமாயின் பூர்வ பாவமாம் அசுபபலனும் அடைவீர்களென்றோதி கலியுலகாதி சுகம் ஒழுக்கமே முக்கியமென்று கணித்து எண்ணைப் பூர்த்திசெய்யுங்கோள் என்றாக்கியாபித்து அவரவர்கள் இல்லங்களுக்கு அனுப்பிவிட்டார்.

சித்தாத்தி சிறுவரிடம் சாக்காக்கள் விடைபெற்று தங்கடங்கள் இல்லங்களில் சேர்ந்து சக்கிரவர்த்தித்திருமகனால் போதித்த ஒழுக்கத்தைப் பின்பற்றுவதால் உழ்வினையற்று ஜெனனத்திற் புண்ணியபலன் தோற்றமுணர்ந்து ஒவ்வொருவர் கணிதக் குறிப்பையும் ஒலிவடிவ பாலிபாஷையில் 'ஜநநீஜென்ம சௌக்கியானாம், வத்தநீ குலசம்பதாம், பதவிபூர்வபுண்யானா' மென சுருதியாக ஏதுக்குத்தக்க நிகழ்ச்சியாகும் பூர்வச்செயலுக்குத் தக்க தோற்றங்களை விளக்கி ஒழுக்கத்தை விருத்திசெய்து கலிவாகுவின் கணிதத்தைப் பரவச்செய்து வந்தார்கள்.

யாப்பருங்கலைக்காரிகை

ஆர் கலியுலகத்து மக்கட்கெல்லாம் / ஒதலினன்றே ஒழுக்கமுடமெய்.

சூளாமணி - ஒழுக்க விவரம்

ஆதிநாளரசர் தங்களருங் குலமைந்துமாக்கி
யோதநீருலகின்மிக்க ஒழுக்கந் தொழிலுந்தோற்றித்
தீதுதீர்ந்திருந்த பெம்மான்றிருவடி சாரச்சென்று
நீதிநூற்றுலகங்காத்து நிலந்திரு மலரநின்றான்.

தம்மராசனோ ஆறு சங்கத்தோர்களையுந் தருவித்து பிணி, மூப்புச் சாக்காடென்னும் நான்கு வாய்மெய் விசாரிணையினின்றும் சங்கை விளங்காமல் புசிப்பை விரும்பாமலும், சயனங் கருதாமலும், நித்திரை பிடியாமலும், இடைவிடா விசாரிணையிலிருப்பதை உணர்ந்த வேவுகர்கள் அரசனுக்குத் தெரிவிக்க அரசனும் பெருங்கவலை உடையவனாய் பிள்ளை சித்திரமாளிகையை விட்டு வெளியேறா வண்ணம் வேவுகர்களுக்கு அறிக்கையிட்டு மிக்கப் பாதுகாப்பில் வைத்திருந்தான்.

ஓர் நாள் இரவு அரசபுத்திரனுடன் சயனித்திருந்த அசோதரைத் திடுக்கிட்டு எழுந்து கணவனையுங் குழவியையுந் தழுவி என் பிராணநாயகா நீவிர் எங்கள் இருவரையும் நீங்கி வெளியேறியதுபோலும், குழவியும் யானும் சயனத்துடன் பூமியில் இரங்குவதுபோலும் சொர்பனங்கண்டேன் இதன் பயன் யாதோ அறியேனென்று அலறினாள்.

அதை உணர்ந்த சித்தார்த்தர் அசோதரையைத் தழுவி, பெண்ணே, நீ யாதுக்கு அஞ்சுகின்றாய் அரசபத்தினிக்குள் சிறந்தவளாக விளங்குவாய் உன் அரணிநிலைக்கும் ஓர் தாழ்ச்சியுண்டாகும். யான்கொண்ட நோக்க நிலைக்கு

ஒருக்காலுந் தாழ்ச்சிவராது. எக்காலும் அரணி என விளங்குவாய். அன்பே அஞ்சவேண்டாமென்றமர்த்தி நித்திரைக்கொள்ளும்படி செய்து தான் நித்திரைக்கொள்ளாமல்,

சீவர்களுக்குத் தோன்றும் பிணி மூப்பு சாக்காட்டின் துன்பங்களை அகற்றும் சுகவழியைக்கண்டு சீர்பெறச் செய்விக்கவேண்டுமென்னுங் காருண்ணியக் கயிறு ஒருபக்கமிழுக்க மனைவி மகவென்னும் பாசக்கயிறு ஓர் பக்கம் இழுக்கத் திடங்கொண்டு உலகிலுள்ள சருவசீவர்களின் ஈடேற்றத்தின் பாகம் மனைவி மகவுக்கும் பொருந்துமென்று எண்ணி பாலிகலையில் கும்போபித மாதமென்றும், வடகலையில் கும்பமாதமென்றும், தென்கலையில் மாசிமாதமென்றும் வழங்கும் பௌர்ணமி நள்ளிரவில் வெளியேறும் வழிகளை நோக்குங்கால் ஒவ்வோர் வேவுகர்களுந் தோழிகளும் எச்சரிக்கையில் விழித்திருப்பதைக்கண்டு புறம்போய் பொன்மதில் வெள்ளிமதில் இரும்பு மதில் மூன்றையுங் காலினால் மெறித்துத் தகர்த்து வெளியேறி குதிரைலயஞ் சென்று சன்னாவென்னும் அஸ்வசேவகனை அழைத்து பட்டத்து பரிக்கு சேணமிடச்சொன்னார். சேவகன் கலக்கமுற்று அரசே, தலைத்தார்வேந்தருக்குத் தாமோரறிக்கையுஞ் செய்யாமல்;

சீவகசிந்தாமணி

அடியுலக மேத்தியலர்மாரிதூவ / முடியுலகமூர்த்தி யுறநிமிர்ந்தோனியாரே
முடியுலகமூர்த்தி யுறநிமிர்ந்தோன் மூன்று / கடி மதிலுங் கட்டவிழ்த்தகாவலநீயன்றோ.

முன்கலைதிவாகரம்

மும்மதில் பொன்னும் வெள்ளியுமிருப்பும் / மன்ன சிவன் முன்னழித்த முப்புரமே.

நிகழ்காலத்திரங்கல்

தேனடரு மானந்த செங்கமலத் தாளருள,
மானிடர்போல் மண்மிசையில் வந்தது அதிசயமே.
மானிடராய் வந்துமரணமூப்புப் பிணியைத்,
தானறிய மும்மதிலைத் தாண்டல் அதிசயமே.
தாண்டித் தலங்கடந்து தலைமுடியைத் தானறுத்து,
வேண்டுவிம்பாநாடு மேவலதிசயமே.

சூளாமணி - கலியுலக விவரம்

மருங்கவை புணர்த்த பின்னை வானக வளாகமெல்லாம்,
கருங்கலொன்று அகன்றமேலார் கவித்தது கவித்தலோடு,
மிருங்கலியுலகமெல்லாம் இருள்கொள வெருவிநோக்கி,
பொருங்கலி அரசர்தானை போக்கிடமற்றதன்றே.

வீரசோழியம்

மேருகிரி யிரண்டாமெனப் பணைத்த விருபுயங்கள்
மாரனிதை யாவேட்டு மும்மதில் மிதித்தனையே

4. சித்தார்த்தி மஹாராஜ துறவு காதை

பிறைமுடி தரித்து வாகுல்லயம்பூண்டு வெளியேறுங் காரணம் யாதோவென வணங்கி நின்றான்.

சக்கிரவர்த்தி திருமகன் சன்னாவைக் கையமர்த்தி குதிரைக்கு சேணங் கட்டியவுடன் தாவியேறி விடிவதற்குமுன் விம்பசார நகரஞ்சேர்ந்து குதிரையை விட்டிரங்கி தனது திங்கள் முடி வாகுவல்லயம் மார்பதக்க முதலிய யாவையுங் கழற்றி சன்னாவிடங் கொடுத்து இவைகள் யாவையும் என் தந்தையிடஞ் செலுத்தி உமது மைந்தர் மூப்புப் பிணி சாக்காடென்னும் மூவரசர்கள் பேரில் யுத்தத்திற்குப் போயிருக்கின்றார். அவர்களை ஜெயித்து கூடிய சீக்கிரம் இவ்விடம் வந்து அதன் ஜெயபேரி தொனியையும் ஆனந்த நிலையையுந் தங்களுக்கு அருளுவாரென்றரைந்து போய்விட்டதாக சொல்லும்படி யாக்கியாபித்து தனது வாளை உருவி சிரோமுடியை அறுத்தெரிந்துவிட்டு வாளையும் அவன் கையில் கொடுத்தனுப்பி விட்டார்.

குதிரை சேவகன் சக்கிரவர்த்தியார் இடங்சென்று நடந்த வர்த்தமானங்கள் யாவையுங்கூறி தான் கைபெற்ற வாகு, பிறைமுடி, கச்சை, பதக்க முதலியவைகளையுங் கொடுத்தான்.

வீரசோழியம்

அன்னாயறங்கோனலங்கிளர் சேட்சென்னி,
ஒன்னாருடைபுறம் போல நலங்கவர்ந்து,
துன்னான் துறந்துவிடல்.
பாவாயறங்கோனலங்கிளர் சேட்சென்னி,
மேவாருடைபுறம் போல நலங்கவர்ந்து,
காவான் துறந்துவிடல்.

காசிக்கலம்பகம்

பாசத்தளையறுத்துப் பாவக்கடல் கலக்கி, / நேசத்தளைப்பட்டு நிற்குமே - மாசற்ற,
காரார்வரையீன்ற கன்னிப்பிடியளித்த, / ஓரனை வந்தெனுளத்து.

அரசன் அவைகளைக்கண்டவுடன் திகைத்து தான் கொண்ட எண்ணங்கள் யாவும் நிறைவேறாமல் சாக்கையர் கணிதம் போல் செய்கையின் தொடர்பாகும் விட்டகுறை எத்தன்மைத்தோவென்றேங்கி பாலபருவங்கடந்து குமர பருவத்துள் உன் சக்கிரவர்த்தி பீடத்தை துறந்தபோதிலும் உன் மனைவி பாசத்தை எவ்வகையில் துறந்தாய். உன் மனைவி பாசத்தைத் துறந்தபோதிலும் உன் மகவின் பாசத்தை எவ்வகையிற் துறந்தாய் மகனே என்று அலறி மறுபடியுந்தேறி தன் பௌத்திரனைக் கொண்டுவரச் செய்து வாரியெடுத்து முத்தமிட்டு குழந்தாய், உன் தந்தை சித்தார்த்தர் சித்திர மாளிகையில் இருக்கும் வரையில் தேசம் முழுவதும் பிரகாசித்திருந்தது. நீங்கியவுடன் இருளடைந்தபடியால் இனி உன் பெயர் இராகுலன் இராகுலனென்றோதி பட்டத்திற்கு பௌத்திரனிருக்கின்றானென்னுந் திடத்தால் கவலையை மாற்றி இராஜகீய சிந்தையிலிருந்தான்.

விடியர்கால வெள்ளி தோன்றியும் பட்சிகள் பாடும் நாதமெழாமலும், பசுக்களின் சப்தம் பிறவாமலும், தோழிகளின் கீதம் எழாமலும், மாளிகையுள் அசைவற்று இருளடைந்திருப்பதை அறிந்த அசோதரை அலரி எழுந்து கணவனைக் காணாமல் திகைக்குங்கால் வேவுகன் ஓடிவந்து அரணியை வணங்கி சக்கிரவர்த்தியார் பௌத்திரனைக் கொண்டுவரும்படி யாக்கியாபித்தாரென்றான்.

அசோதரைத் தன்னருமந்தக் குழவியை அவன் கரத்தில் அளித்துக் காரணம் யாதென உசாவினாள். மன்னுபுத்திரன் மாளிகையை விடுத்து மும்மதிலையுந் தவிர்த்து வேற்று நாடடைந்து தன் கைவாளினால்சிரோரோ மங்களை அறுத்தெரிந்து விட்டுச் சென்ற சங்கதிகள் யாவையும் விளக்கிப்போய் விட்டபின்னர் அரணி திகைத்து வாட்டமுற்று தன்சிரோமுடியையும் சுத்தரித்துக் கொண்டு சருவாலங்கிருதங்களையும் தவிர்த்து சுத்த புசிப்பையும் அகற்றி பிராந்தியுற்றபோதிலும் தன் கணவன் கொண்டு வருவேனென்று சொன்ன நித்திய போகத்திற்கு எதிர்பார்த்துக் கொண்டு தன் கணவனால் வகுத்துள்ள தருமசாலைகளைச் சீர்திருத்தி எவ்வெவ்வகையில் யாராருக்கறமளித்து ஆதரிக்கவேண்டுமென்னும் நிலைகண்டு தன்மத்தைப் பரவச் செய்துவந்தாள்.

காசிக்கலம்பகம்

உடுத்தகலையுமே கலையுமொழுகும் பணியும் விரும்பணியுந்
தொடுத்தவளையுங் கைவளையுந் துறந்தாளாவி துறந்தாலு
மடுத்தவுமது உரந்தானு மதனாலிதழி பரந்தாமம்
விடுத்து விடுவாள் எவளெனப்போய் விளம்பீர்காசி வேதியர்க்கே.

யாப்பருங்கலைக்காரிகை

இளநலமிவள்வாட வரும்பொருட்குப்பிரிவாயேல்
தளநல முகவெண்பற்றாழ்குழற் தளர்வாளோ
தகைநலமிவள் வாடத்தரும் பொருட்குப் பிரிவாயேல்
வகைநலம் இவள்வாடி வருந்தியில்லிருப்பாளோ
அணிநலமிவள்வாட வரும் பொருட்குப்பிரிவாயேல்
மணிநல மகிழ்மேனி மாசொடு மடிவாளோ.

வீரசோழியம்

விடாஅது கழலுமென் வெள்வளையுந் தவிர்ப்பாய்மன்
கெடா அது பெருகுமென் கேண்மெயு நிறுப்பாயோ
ஒல்லாது கழலுமென்னொளிவளையுந் தவிர்ப்பாய்மன்
நில்லாது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ
தாங்காது கழலுமென்ற கைவளையுந் தவிர்ப்பாய்மன்

நீங்காது பெருகுமென்னெஞ்சமு நிறுப்பாயோ
மறவாதவன்பினேள் மனனிற்குமாரருளாய்
துறவாத தமருடையேள் துயர்தீரு மாறருளாய்
காதலார் மார்பன்றி காமக்குமருந்துரையா
ஏதிலார் தலைசாய யானுய்யு மாறுரையாய்
இணைபிரிந்தார் மார்பன்றி இன்பக்கு மருந்துரையாய்
துணைபிரிந்த தமருடையேள் துயர்தீரும் மாறுரையாய்
பகைபோன்றது துறை பரிவாயினகுறி
நகையிழந்தது முகம் நணிநாடிற்று டம்பு
தகையிழந்தது தோள் தலைசிறந்தது துயர்
புகை பரந்ததுமெய் பொறையாயிற்றென்னுயிர்.

காசிக்கலம்பகம்

இல்லாளே முப்பத்திரண்டறமுஞ் செய்திருப்ப
செல்லார் பொழிற் காசிச்செல்வனார் - மெல்ல
பரக்கின்ற புன்கை பருவகல்கொண் டைய
மிரக்கின்ற வாறறிகிலேன்.

மாசிமாதப் பௌர்ணமியில் துறவடைந்த மன்னன் விம்பாசார் நகரிலுள்ள ஓர் நதியிலிறங்கி தேகசுத்தஞ் செய்துக்கொண்டு ஆற்றுநீரை அருந்தி கரையேறி நகரவீதிச்சென்று சிரேஷ்டமுற்றக் கையில் ஓர் அகலையேந்தி பிச்சையேற்கும் குமரபருவமுற்ற கோமான் முகமலர்ச்சியையும் கண்ணொளியையுங் குளிர்ந்த பார்வையையும் தேஜசையுங் கண்ட லோபியர்களும் நாணிப் பிச்சமளித்தார்கள்.

சீவகசிந்தாமணி

மாசித் திங்கண் மாசினமுன்னமடிவெய்த
ஊசித்துன்ன மூசியவாடை உடையாகப்
பேசிப் பாவாய் பின்னுமிருக்கை அகலேந்த
கூசிக்கூசி நிற்பர் கொடுத்துண்டறியாதார்.

பௌர்ணமியில் பிறந்து பௌர்ணமியில் துறவடைந்த பூரணன் தன் கரத்துள்ள வகலில் கிடைத்த அன்னத்தை எடுத்துக்கொண்டுபோய் ஓர் ஆற்றங்கரையில் வைத்துக்கொண்டு தேகசுத்தி செய்து அன்னத்தைப் புசித்துக் கையலம்புங்கால் நீரிலுள்ள மட்சங்கள் ஓடிவந்து கரத்தில் கழிந்த அன்னங்களைப் புசிக்கக் கண்ட குமரர் அகலில் மிகுந்திருந்த அன்னங்களையும் எடுத்து கொஞ்சங்கொஞ்சமாய் நீரில் விடுங்கால் ஒரு மட்சத்தின் மீது மறுமட்சங்கள் விழுந்து சண்டையிட்டுப் புசிப்பதைக் கண்டு தவிர்த்தும் அவைகள் விடாது போரிடுவதை உணர்ந்து ஒன்றுக்கொன்று உண்டாகும் ஆசையின் மிகுதியே இக்கலகத்திற்குக் காரணமென்றறிந்து அவ்விடம் விட்டெழுந்து ஓர் கால்வாயருகில் தழைத்து நிழலுற்றிருக்கும் மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு கால்வாயிலோடும் நீரை உற்றுநோக்குங்கால் ஓடும் நீரினுடன் மட்சங்கள் போகாமல் எதிர்நோக்கி ஏறுவதைக்கண்டு அவ்விடம்விட்டெழுந்து கடைக்காலண்டைச் சென்று பார்க்குங்கால் நீர் வயல்களில் பரவவும், அதில் சிதரியோடிய மட்சங்களைக் காகங்களுங் கொக்குகளும் பிடித்துத் தின்பதைக்கண்டு நீரில் எதிர்நோக்கியோடும் மட்சங்கள் எவ்விடம் போகுதென்று தொடர்ந்தேகுங்கால் வாய்க்கால் நீரிலேறி ஏரிநீரில் மறைந்துவிட்டதுகள். இவைகளைக் கண்ணுற்ற சித்தார்த்தர் நீரோடுங்கால் மட்சங்கள் எதிரேறுவது சுவாபமா அன்றேல் தன் பிராணனைக் கார்த்துக்கொள்ளற்காவென்று ஆராய்ச்சி செய்யுங்கால் ஓடும் நீரில் எதிரேறுவது சுவாபமாயின் சிலமட்சங்கள் வயல்வெளியில் சிக்குண்டு காகங்களுக்கும் கொக்குகளுக்கும் இறையாயிரா,

அவ்வகை இறையாவதைக்கண்ட மட்சங்கள் தங்கள் பிராணனைக் கார்த்துக்கொள்ளுவதற்கு எதிரேறும் இயல்பென்றறிந்து அவைகளுக்குள்ள பிராண பயத்தையுஞ் சிந்தித்துக்கொண்டிருக்குங்கால், நகரவீதியிலுள்ள விவேகிகள் அரசனிடஞ்சென்று வணங்கி அரசே, நமது வீதியில் குமரபருவமும், குளிர்ந்த பார்வையும், மிருது வசனமும் வாய்த்த ஒருவர் தன் கையிலுள்ள அகலில் பிச்சையேற்ற அன்னத்தை எடுத்துக்கொண்டுபோய் ஆற்றங்கரையில் புசித்துக்கொண்டிருக்கின்றார். அவர் நடையுடை பாவனைகளைப் பார்க்குங்கால் சிறந்த சீமான்போல் காணப்படுகிறதென்றுரைத்தார்கள்.

அருங்கலைச்செப்பு

தலைத்தார் வேல்போகஞ் சாலத் துறந்து / நிலைத்தானாய் நின்றானிறை.
இறையோன் அகலேந்தி ஏற்றவன்னமுண்டு / பொறையூர் புறம் உணர்ந்தான் பின்.
மீனுமுடல்கொண்டவிற்போரிடங்கண்டு / தானுமிச்சை என்றானிறை.
நீரோட்டக்காலும் நேரோடும் மீனும் / பாரோட்டங் கண்டான் பயன்.
விம்பாசாரன்றன் வேண்டல் மிகுகொண்டு / அன்பாலடைத்தானறன்,
முன்னொருத்திமாள முனைந்தவம் மூப்பன் / தன்னாற்றன் னோயகற்றினான்.
பின்னொருத்தன் மூப்பன் பெண்பாலர் நோய்கண்டு / உன்னுதளர் கொண்டானுடல்.

அசோதரை நெஞ்சுவிடுதூது

மதுரந்தருஞ் சாத்தனவன் கோயில் முன்னே / சதுரங்கப் பலமாத்தங்கும் - குதிரைப் பரி
தேரானெனும் பெயரும் செப்பியபேர் கொள்ளுரவு/நேராது பொய்யென்று நீக்கியே-தேருமிடத்

அதைக்கேட்ட விம்பாசார அரசன் திடுக்கிட்டெழுந்து பல்லக்கை கொண்டுவரச்செய்து ஏறிக்கொண்டு ஆற்றங்கரை வந்துசேர்ந்து சித்தார்த்தரைக் கண்டு திகைத்து அருகில் சென்று, ஐயன்மின், நீவிர்யாவரென்றான். யானோர் விசாரிணைப்போக்கனென்றார். தாங்கள் விசாரிணைப் போக்கராயினும் தேசம் யாதோவென்றான் கபிலைநகரென்றார். அங்கு தாங்கள் யாருடைய புத்திரரென்றான். மண்முகவாகு சக்கிரவர்த்தியின் ஏகபுத்திரரென்றார். அதைக்கேட்ட விம்பாசாரன் அவரை வணங்கி தன் பல்லக்கில் ஏற்றிக்கொண்டு அரண்மனைச்சேர்ந்து ஆசனமளித்துத் தானும் அருகில் உட்கார்ந்து அரசே, தாங்கள் உலக இன்பங்களைத் தவிர்த்து ஓடேந்தியக் காரணமென்னை என்றான்.

எனக்குற்ற சங்கைகளை அரசபோகத்தினின்று அதிகாரவிசாரிணையால் எவ்வெவ்வரிடத்து விசாரித்தும் சங்கை விளங்காததினால் ஒடுக்கநிலையில் ஓடேந்தி வணக்கவிசாரிணையில் வெளியேறினேனென்றார்.

அதைக்கேட்ட விம்பாசார அரசன் திடுக்கிட்டு தம்மராயனை நோக்கி இறைவா, தங்கள் சக்கிரவர்த்தி பீடத்தையும் மனைவி மைந்தன் சுகத்தையும் விடுத்துக் கையில் ஓடேந்தி என்ன சுகத்தை அடையப்போகின்றீரென்றான்.

சோதிரரே, தாம் வறிய சுகங்களில் பிறப்பது துக்கம், பிணி துக்கம், மூப்பு துக்கம், மரண துக்கம் பிரத்தியட்ச அநுபவத்தில் இருக்கின்றதினால் எச்சுகத்தில் என்னை நிலைக்கச்சொல்லுகின்றீரென்றார்.

இறைவா, ஓர் குடித்தனக்காரனிலுங் கிறாமாதிபதி மேலானவன். கிராமாதிபதியிலுந் தேசாதிபதி மேலானவன். தேசாதிபதியிலும் அரசன் மேலானவன். அரசனிலுந் தார்வேந்தன் மேலானவன். தார்வேந்தனிலும் தலைத்தார்வேந்தன் மேலானவன். அவ்வகைத் தலைத்தார்வேந்தனின் ஏகபுத்திரராகிய உமக்கு யாதொரு சுகமுமில்லை என்பீராயின் நாங்களென்ன சுகத்தை அடைவோமென்றான்.

மணிமேகலை

சாக்கையராளுந் தலைத்தார்வேந்த
யாக்கையுற்று தித்தனனாங்க வன்றானென.

சோதிரரே, ஒரு ஆட்டை மேய்ப்பவனுக்கு சாதாரணம். பத்து ஆடுகளை மேய்ப்பவனுக்கு சொற்ப கஷ்டம். நூறு ஆடுகளை மேய்ப்பவனுக்கு அதனினுங் கஷ்டம். ஆயிரம் ஆடுகளை மேய்ப்பவனுக்கு அதிக கஷ்டம் இருக்குமல்லவா என்றார்.

இறைவா, தலைத்தார்வேந்தர் இராட்சியபாரம் அதிகமாயினும் அவ்வவர் பொருப்பில் ஆளுகையை விடுத்து ஆதிபத்தியம் நடத்துவோமாயின் சுகவாழ்க்கைப் பெறலாமன்றோ என்றான்.

சோதிரரே, நமக்குள்ளடங்கிய சகலக் குடிகளின் சுகவாழ்க்கையால் நாம் சுகமடையலாமா அன்று குடிகளின் அசுகவாழ்க்கையால் சுகமடையலாமா என்றார்.

இறைவா, சகல குடிகளின் சுகவாழ்க்கையே நமக்கும் சுகநிலை என்றான். சோதிரரே, தங்கள் நாட்டிலுள்ள குடிகளின் சுகநிலைகள் யாவற்றையுங் கண்டதுண்டோ என்றார்.

இறைவா, ஒவ்வோர் மனிதனும் பிறப்பதிலுந் துக்கங் காண்கின்றேன், வளர்தலிலுந் துக்கங் காண்கின்றேன், அதனைக் காப்பாற்றுதலிலுந் துக்கத்தைக்

காண்கின்றேன், அதன் சார்பால் என் அரசியலுந் துக்கத்தைக் காண்கின்றேன். ஆதலின் குடிகளின் சுகநிலை ஈதென விளங்கவில்லையே என்றான்.

சோதிரரே, தமது நாட்டுக் குடிகளிடத்திலுந் தமது அரசிலுந் துக்கமே விசேஷித்திருக்கக்கண்ட நீவிர் ஏதேனுஞ் சுகத்தைக் காணவில்லையோ என்றார்.

இறைவா, துக்கத்தைக் கருதாவிடத்து சுகமும், சுகத்தைக் கருதிய விடத்தில் துக்கத்தையும் காண்கின்றேனென்றான்.

சோதிரரே, சகல குடிகளையுந் துக்கத்தில் ஆழ்த்தி நாம் சுகமடையக் கருதுதல் சுகமாமோ என்றார்.

இறைவா, சகலர் சுகத்தையும் கருதுதலே சுகமென்றான்.

சோதிரரே, இருளுக்கு வெளிச்சமும், ஆணுக்குப் பெண்ணும், எதிரடையாகக் காணுதல்போல் துக்கத்திற்கு எதிரடை சுகமிருத்தல் வேண்டும். அந்தந்த துக்கங்களுக்குரிய உற்பவங்களைக் கண்டறிவோமானால் நித்திய சுகவாழ்க்கைத் தோன்றும்.

அந்த நித்திய சுகத்தை சருவ சீவர்களுக்கும் அளித்து அதில் நாமும் சுகமடைதல் மிக்க சுகமல்லவா என்றார்.

மணிமேகலை

தன்னுயிர்க் கிரங்கான் பிறவுயிரோம்பு
மன்னுயிர் முதல்வனறமுமிதென்றான்.

வீரசோழியம்

ஆருயிர்களனைத்தினையும் காப்பதற்கே அருள்பூண்டா
லோருயிர்க்கே உடம்பளித்தால் ஒப்புரவிங்கென்னாகும்.

இறைவா, அவ்வகை சுகத்தை இதுகாறுங் கண்டவர்களுமில்லை கேட்டவர்களுமில்லை, அனுபவித்தவர்களும் இல்லை. ஆதலின் தாங்கள் வீணில் அலைந்து சுகதேகத்தைப் பாழாக்கிக்கொள்ளாமல் இத்தேசராட்சிய பாரத்தைக் கைக்கொண்டு சுகவாழ்க்கை அடையவேண்டுமென வணங்கினான்.

சோதிரரே, சருவ உயிர்களின் ஈடேற்றத்தை நாடி வெளிவந்தயான் தன் சுகத்தைப் பார்த்தல் துக்கமாதலின் என் துறவை தடுக்காதேயுங்களென்று வேண்டினார்.

அதைக்கேட்ட விம்பாசார அரசன் மனங்கலங்கி சருவசீவர்களின் சுகத்தைக் கருதி சக்கிரவர்த்திப் பீடத்தைத் துறந்ததும், மனைவியைத் துறந்ததும், அருமந்த மகவைத் துறந்ததும் பெரிதல்ல எக்காலமும் ஆனந்த நிலையிலிருந்த சுகத்தை எவ்வகையில் துறந்தீரென்று கதரி உலக இன்பத்தை தவிர்த்த (பாலி மொழியால்) அவலோகிதா அவலோகிதா என்றேற்றி தாங்கள் செல்லுமிடத்தையேனுஞ் சொல்லவேண்டுமென்று பணிந்தான்.

சோதிரரே, நானோரிடத்தைக் கருதி செல்லாமல் சுகவாழியைக் கருதி செல்லுகின்றேன். என்னை மறுக்காதீரென்று வெளியேறுங்கால் அவலோகிதரை ஓர் விருத்தன் மறுத்து தாம் வெளியேறிய சங்கை யாதென உசாவினான்.

அவலோகிதர் பெரியோனை நோக்கி ஐயன்மின் தாமடைந்துள்ள மூப்புநிலைக்கு நரை திறை சான்றாயினும் ஏதேனும் பிணிகண்டுளதோ என வினவினார்.

அவலோகிதா, எனக்கு உலகந் தெரிந்தவரையில் உடல் பிணி ஒன்றும் அறியேனென்றான்.

பெரியோய், உமக்கு மனைவிமக்கள் உண்டா இல்லையா என உசாவினார்.

அவலோகிதா, சிறுவயதில் என் மனைவி மடிந்துவிட்டாள், மறு மனைவியை யான் தேடிக்கொள்ளவில்லை என்றான். அருகினிற் மற்றோர் பெரியோன் அவலோகிதா, யான் பிறந்து வளர்ந்து நார்ப்பது வயதுக்குள் மூன்று விவாகஞ்செய்து மூவரும் மடிந்து நான்காவது விவாகஞ்செய்திருக்கின்றேன் உடலில் பற்பல வியாதிகளும் தோன்றி உபத்திரவப்படுகின்றேன் என்றான்.

பெரியோய், விவாக சுகத்தை விரும்புதல் மனுகுல விருத்தியின் நன்மெய் ஒன்றும், அதே சுகத்தை அதிக விருப்பத்தால் பிணிகண்டு மடிக்குந் தின்மெயொன்று மாகிய இருவினைச்செயல்கள் ஒருச்சுக இயல்பில் தோற்றுகிற தல்லவா என்றார்.

அவலோகிதா, எனது நேயர் மனைவியற்று ஒருமெயுற்று வியாதியற்றிருக் கின்றார். யானோ மாறா மனைவிகளைக்கொண்டு தீராப்பிணிகளுங்கண்டு தவிக்கின்றேன் என்றான்.

பெரியோய், தமக்குத் தோன்றியுள்ள பிணிகள் தம்மால் தோன்றியதா தானே தோன்றியதா என்றார்.

அவலோகிதா, என்னனுபவச் செயலால் இப்பிணிகள் யாவும் என்னால் தோன்றியதன்றி தானே தோற்றியதல்லவென்று உறுதியாகக் கூறுவேனென்றான்.

பெரியோய், உம்மால் தோற்றியதற்கு ஆதாரமென்னை என்றார்.

அவலோகிதா, யான் மாறிமாறி செய்துகொண்ட விவாக சங்கமச் செயல்களால் காலத்திற்குக்காலந் தோன்றிய பிணிகளின் உற்பவத்தைக் கொண்டும் என் மீறிய சேர்க்கைச் செயல்களைக்கொண்டு இப்பிணிகளின் உற்பவங்களுக்கு நானே காரணமென்றேன் என்றான்.

பெரியோய், உம்மால் தோன்றியப் பிணிகளின் உற்பவம் உணர்ந்தும் அஃது தோன்றாமல் கார்த்துக்கொள்ளாத காரணமென்னை என்றார்.

அவலோகிதா, அதி மோக இச்சையே அதற்குக் காரணமென்றான்.

பெரியோய், தாங்கள் மோக இச்சையை அதிகரிக்கச் செய்துகொண்டபடியால் பிணி அதிகரித்துப் பீடிக்கப்படுகின்றீர். தமதருகிருக்கும் பெரியோர் மோக இச்சையை அதிகரிக்கவிடாமல் கார்த்துக்கொண்டபடியால் பிணியற்று சுகித்திருக் கின்றாரல்லவா என்றார்.

அவலோகிதா, எங்களுக்குரியச் செயல்களே எங்கள் அனுபவத்தில் விளங்குகிறதே என்றான்.

சக்கிரவர்த்தித் திருமகன் மற்றும் பிறந்தமுதல் பிணி அறியேனென்ற பெரியோரை நோக்கி ஐயன்மின், தமது மனையாள் இறந்தபின் மறு மனையாளைத் தேடாதக் காரணமென்னை என்றார்.

அவலோகிதா, மடிந்த மனைவியின் குணமும், வடிவும், மிருதுவான வார்த்தையும் மற்றப் பெண்களிடம் காணாமையே காரணமென்றான்.

அதனைக்கேட்ட தம்மராசன் காரணத்திற்குத் தக்கக் காரியங்கள், ஏதுக்குத்தக்க நிகழ்ச்சியாய் விளங்குவதை முற்றும் அறியவேண்டுமென்று வெளியேறுங்கால் பெரியோர்கள் வணங்கி அவலோகிதா, தமது சித்திர மாளிகையின் முன்பு இரத, கஜ, துரக பதாதிகள் யாவும் தமது ஏவலுக்கு எதிர்பார்த்திருக்க செந்தாமரைப்பாதம் புழுதியில் பட நடப்பதைக் காண என்னக் கொடுமெய் செய்தோம் இறைவனே என்று இறைஞ்சி விம்பாசாரன் பரிகளிலேனும் ஏறிச்செல்ல வேண்டுமென்று வருந்தினார்கள்.

ஒடுக்கத்திற்கு ஓடேந்தி விசாரிணையில் வெளியேறிய எமக்குப் பரியும் பளுவாம் என்றோதி விம்பாசாரன் நகரங் கடந்து காடுகளுள் நுழைந்து ஓர் மலையடிவாரத்தில் வருங்கால் அரவங்காட்டாது அடிவாரத்து ஒளிந்திருந்து வழிப்போக்கரை அடித்துப் பரிக்கும் அரக்கர்கள் ஐவர் அப்பனை வழிமறித்து அவர் முகத்தைக்கண்டு தங்கள் கொறூரச்செயல்களைத் தவிர்த்தும் அரசருக்குள் ஈகையில் மிகுத்தவராதலின் தியாகராயர் என்றும், தனத்தின் மிகுதியால் செல்வராயர் என்போர் செவியிலிருந்த பொற்குண்டலத்தைக் கழற்றிக்கொண்டு செப்புக் குண்டலத்தை செவியில் அணிந்துவிட்டுப் போய்விட்டார்கள்.

நிகழ்காலத்திரங்கல்

ஒப்பற்ற குண்டலத்தை ஊழரக்கர் வவ்வி / செப்புகுண்டலமிட்ட செய்தி அதிசயமே.

அசோதரை நெஞ்சுவிடுதூது

காதிணையிற்பூண்ட கனகசெப்புக் குண்டலங்க / ளேதறவே காட்டும் இருதிண்புயமுமோதவிட.

தன்மராயன் தன் செவியிலிருந்து அரக்கர்கள் கழட்டிக்கொண்டது பொற்குண்டலமென்றும், அவர்களணிந்தது செப்புக்குண்டலம் என்றுங் கருதாது பின்சென்று பார்த்தபோது மறைந்துவிட்டார்கள். மற்றும் புறங்களில் பார்க்குங்கால் அரக்கர்களால் பொருட்களை அபகரித்துக்கொண்டு அடித்துக் கொன்றுப் போட்டுள்ளப் பிணங்களே மிக்கக் காணப்பட்டது. அவைகளைக்கண்ட சித்தார்த்தர் மனங்குழைந்து உயிரைவதைத்து பொருள்

சம்பாதிக்கத்தக்க மக்களும் உலகத்தில் உண்டோவென்று சொல்லிக்கொண்டு காடுமலைகளைக் கடந்து ஓர் சிற்றூர் சேர்ந்து பிச்சையேற்றுண்டு சற்றிளைப்பாறி அவ்வூரிலுள்ளோர் அதிக ஆடம்பரமும் கூச்சலும் இல்லாமல் தன்தன் வேலைகளில் அமைதியுற்றிருப்பதினால் ஆற்றலுற்றிருப்பதைக் கண்ட அவலோகிதர் அவ்விடஞ் சிலகால் தங்கவேண்டு மென்றெண்ணி ஓர் விருத்தக் கிழவி வாசமாயிருக்கும் சிறு குடிசையில் தங்கினார்.

நிகழ்காலத்திரங்கல்

அழகன் திவாகரனம்மண்ணலருள் வடிவன் / கிழவிச்சிறு குடிலங்காண்டல் அதிசயமே.

வீரசோழியம்

கொய்தினைகாத்துக் குளவியடுக்கத்துப் / பொய்தற் சிறுகுடி வாரனீயைய - நலம்வேண்டின்
ஆய்தினை காத்து மருவியடுக்கத்தெம் / ஆய்தற்சிறுகுடி வாரனீயைய - நலம்வேண்டின்
மென்றினைக்காத்து மிகுபூங்கமழ்சோலைக் / குன்றச்சிறுகுடி வாரனீயைய - நலம் வேண்டின்

அவ்விடந்தங்கி இந்த சிற்றூர் அமைதியினால் எவ்வளவாற்றலுற்றுளதோ அதைப்போன்ற நிலையே நமக்கு சுகநிலையாகுமென்று எண்ணி சீவராசிகளின் உற்பவங்களையும் அதனதன் முடிவுகளையும் பட்சிகளின் தோற்றங்களையும் அதன் ஒடுக்கங்களையும் மக்கட் பிறப்புகளையும் அவர்கள் மரணங்களையும் பூமியின்மீது நீர்த்தோயுமேதுவால் புற்பூண்டுகளும், கிருமிகளும், மட்சங்களும், பட்சிகளும், மிருகங்களும், மக்களுந் தோன்றும் நிகழ்ச்சிகளையும் நீரின் ஏதுவாலும், அக்கினியின் ஏதுவாலும், பிணிகளின் ஏதுவாலும், விஷங்களின் ஏதுவாலும் மறைதலின் நிகழ்ச்சிகளையும், பூர்த்தியாக அறியவேண்டிய நோக்கத்தால் மீளவுஞ் சிறுகுடியில் தங்கி அவ்விடமுள்ள சீவராசிகளின் குணாகுணங்களை ஆராச்சிசெய்வதும்,

மலையடிவாரங்களில் சென்று அவ்விடமுள்ள சீவராசிகள் உற்பவ ஒடுக்கங்களைக் காண்பதுவும், மலை சிகரங்களில் ஏறி அவ்விடத்திய தோற்ற ஒடுக்கங்களைக் கண்டறிவதுமாகியச் செயல்களில் பட்சிகள் தன்தன் கூட்டத்தைநாடி சேருவதும், மிருகங்கள் அதனதன் உருவங்களைநாடி அணுகுதலும், மனுக்களில் சுராபானம் அருந்துவோரிடம் சுராபான இச்சையுள்ளோரால் அணுகுதலும், கள்ளச்செய்கையுள்ளோர்பால் கள்ளவுள்ள முள்ளோர் கலப்புருதலும், மூர்க்கச்செய் கைகளுள்ளோர்பால் மூர்க்கவிச்சையுள்ளோர் அணுகுவதுமாகிய சேர்க்கைகளுடன்;

மனிதவுருவங் கண்டுங் குரங்குகளுக்குரிய செயல்களையும், குரங்குருவங் கண்டும் மனிதருக்குரிய விவேகங்களையும், மனித உருவங் கண்டும் நாயிக்குரிய பொறாமைக் குணங்களையும் நாயுருவங் கண்டும் மனிதனுக்குரிய விவேகச் செயல்களையும் பிரித்துணர்ந்து; மனத்தின் ஆசைப் பெருக்கமும், கோபப்பெருக்கமும் கருமத்தோற்ற ஒடுக்கங்களுக்குக் காரணமாயிருப்பதென்று கண்டு உள்ள ஏதுக்களுக்குங் காரணந் தானாகவும், உள்ள நிகழ்ச்சிகளுக்குங் காரியந் தானாகவும் விளங்குதலால் உள்ள நிலையை அறியவேண்டிய உசாவலால்;

தன்னைநோக்கி உள்ளத்தெழும்பும் ஆசையை எழவிடாமல் நசித்தும் தோற்றும் ஆசையை உள்ளத்திற் கொள்ளவிடாமல் அகற்றியும், உள்ளத்தில் எழுங் கோபத்தை எழவிடாமல் நசித்தும், தோற்றத்தால் வருங்கோபங்களை சாரவிடாமல் அகற்றியும்,வந்தச் செயல்களினால் மனதுக்குண்டாகுஞ் சொற்ப ஆறுதலை உணர்ந்து;

யாவும் உள்ளச்செயலென்றறிந்து காமக்கொதிப்பை எழவிடாமலும், தோற்றுங் காமத்தை எண்ணவிடாமலும் அகற்றுங்கால் உதிரத்திரட்சியின் தணலே காமாக் கினியாக வீசுதலை உணர்ந்து, புசிப்பை அடக்க வேண்டும் என்று எண்ணி தான் சிறிதுகாலந் தங்கியிருந்த சிறுகுடிலையும் விட்டகன்று சிலக்குன்றுகளேறி வருங்கால் அவ்வழியாக ஓர் ஆட்டிடையன் மந்தைகளை ஓட்டும்போது பாதையில் ஓர் குட்டி தவறி விழுந்து காலுடைந்துவிட்டபடியால் நடக்கவியலாது நொண்டிக்கொண்டு மெதுவிற்போகவும் இடையன் ஓட்டும் பயத்தால் தாயாடானது முந்தி ஓடுவதும் நடக்கமாட்டாமலிருக்குங் குட்டியிடம்

அம்மே என்று ஓடிவருவதும் மறுபடியும் இடையன் ஓட்ட ஓடுவதுங் குட்டி தவிழ்ந்துகொண்டு தவிப்பதும் தாயாடு திரும்பி திரும்பி அம்மே என்று ஓடி வருவதுமாகியப் பரிதாபத்தைக் கண்டுவரும்;

சக்கிரவர்த்தித் திருமகன் இதங்கி ஆட்டின் குட்டியை வாறி மார்பில் அணைத்துக்கொண்டு தாய் ஆட்டைநோக்கி அம்மா உன் பிள்ளையை வீட்டுவரையிலுங் கொண்டுவந்துவிடுகிறேன் நீ பயப்படாமல் நடவென்று கொண்டுபோகுங்கால்;

இடையன் அருகில் வந்து பரிதாபத்தால் செம்மறிக்குட்டியை மட்டிலும் சுமக்கும் நீர் என்னால் சுமக்கமுடியாத இக்கம்பளிமூட்டையையும் எடுத்துவர வேண்டுமென்று அப்பன் தோளில் ஏற்றிவிட்டுப் போய்விட்டான்.

தம்மராசன் செம்மறிக்குட்டியையும், தோற்பை மூட்டையையும் நெடுஞ்தூரஞ் சுமந்துக்கொண்டுபோய் ஆட்டிடையன் வீட்டண்டை இரக்கிய போது அவன் மனைவி கண்டு அடப்பாவி யாரோ பெரியவற்போல் காண்கின்றது அவரிடஞ் சுமையை ஏற்றியது தன்மமல்லவே என்று அலரினாள். அப்போதுதான் இடையனுக்கும் பயமுண்டாகி வணங்கிக்கொண்டான். சித்தார்த்தரும் இடையனைநோக்கி உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் உண்டாகியத் துன்பம்போல் உன் ஆடுகளுக்கும் உன் ஆட்டின் குட்டிகளுக்கும் உண்டாகுந் துன்பங்களைக்கருதிப்பாரென்று சொல்லி விட்டுப் போய்விட்டார்.

தனிவழிப்போய்ப் பலதேசங்களையுங் கடந்து ஓர் மலைக்குகையில் சேர்ந்து நாளுக்கு நாள் புசிப்பைக் குறைத்துக்கொண்டே வந்ததினால் தேகத்துள்ள என்புகள் யாவுந் தோன்றக் கண்பஞ்சடைந்து சிலதூரம் நடந்த ஆயாசத்தினால் மெய்மறந்து ஓர் மரத்தடியில் வீழ்ந்துவிட்டார்.

அவ்வழியாகத் தன் புருஷனுக்குக் கஞ்சிகொண்டுபோகும் ஓர் பெண்ணானவள் அப்பனை நெருங்கிப் பார்த்துவிட்டு தன் புருஷனிடஞ் சென்று ஐயே, சில காலங்களுக்குமுன் நமது ஆட்டுக்குட்டியையும், மூட்டையையுஞ் சுமந்துவந்த பெரியவர் போல் ஒருவர் மிக்க ஆயாசத்தால் விழுந்துகிடக்கின்றார் பார்ப்போம் வாருங்கோள் என்றழைத்தாள்.

இருவருஞ்சென்று விழுந்திருப்பவரை உற்றுநோக்கி செம்மறிக்குட்டியை ஏந்திவந்தப் பெரியவரென்றே பதரி எடுத்து மார்புடன் அணைத்து தன் மனைவி தனக்குக் கொண்டுவந்த பாற்கஞ்சியை சிறுக சிறுக ஊட்டினான்.

அசோதரை நெஞ்சுவிடு தூது

இடையன்பாற் சென்ற விருசெம்மலூனத் தொடருமறிக் குட்டியுடன் தோற்பை - எடுத்து
கம்பளந்தண்டாதிக் கையேந்திக்கொண்டு விம்புமடிபாதை மிகுநடந்து - நமபுந்
தகைமெயுடையோராய்த்தக்க பணிசெய்தே யகமுமுகமு மிகமலர்ந்து - சுகமாய்
செம்மறிதன் குட்டி நிமிரகம்பளமளித்து நம்புமெய்யுள்ளன்பை நாட்டி - நம்மி.

இடைகாட்டு சித்தர் பாடல்

மும்மலநீக்கிட முப்பொறிக்கப்பாலு / முப்பாழ்கடந்த வப்பாவில்
செம்மறி ஒட்டிய வேலையைமட்டுஞ் / சிந்தையில் வைப்பீரே கோனாரே.

நிகழ்காலத்திரங்கல்

பைம்பொற்கலை கொண்டு பாராளுங்கையில் செம்மறியை ஏந்துஞ் செய்கை அதிசயமே.
செம்மறியுந் தோற்பையுஞ் சேர்த்தகம்பளமேந்தி வம்மறியனில்லி லளித்தததிசயமே.
பாரமிகவேந்தி படியில் மிக நடந்து, தாரமிகு அன்பை தரித்தது அதிசயமே.
செங்கோலை ஏந்துங்கை செம்மறியை ஏற்றநன்றி பொங்கும்பாற்கஞ்சருந்தப்போற்றல் அதிசயமே.
போற்றியவரளித்தப் புன்புசிப்பையேற்று வாற்றலுறு மீகை அளித்த ததிசயமே.

அதனை அருந்திய அப்பன் இரண்டுநாழிகைக்கு மேல் கண்விழித்துப் பார்த்து ஆயாசந் தெளிந்தபின் நீவிர் யாவரென்று உசாவினார். அவர்களிருவரும் ஆனந்தங்கொண்டு ஐயே, தாங்கள் ஒருகால் எங்களாட்டுக்குட்டியை சுமந்துவந்தீர் அந்த நன்றியை யாங்கள் மறவாமல் தங்களுக்குப் பால்கஞ்சி சுமந்து வந்தோமென்றார்கள். அதைக் கேட்ட தம்மராஜன் தன்னறச்செய்கைத் தன்னைக் கார்த்ததை எண்ணி நகைத்து அவர்கள் இருவரையும் நோக்கி நான்செய்த நன்றி உங்களுக்குப் பெரிதல்ல நீங்கள் எனக்கு உண்டிகொடுத்து

உயிர்கொடுத்த நன்றியை உலகம் எக்காலும் மறக்காதென்று வாக்களித்து அதே இடத்தில் சிலகாலந்தங்கி அவர்கள் போஷிப்பால் தேகத்தைத் திடப்படுத்திக்கொண்டு இனி தேகத்தை ஒடுக்குவதில் பயனில்லை மிதாகாரம் புசித்துக் காமநிலையைக் கருக்கவேண்டி,

5. சித்தார்த்தர் பஞ்ச விந்தியத்தை வென்று இந்திரரும் மெய்கண்டு புத்தருமாய காதை

உள்ளக்கருவிக் காணாதிகளின் தோற்றங்களையும், ஒடுக்கங்களையும் ஆராய்ச்சிசெய்ய ஆரம்பித்தார். காரணம் அசத்தில் காணும் புறத்தோற்றங்கள் யாவுந் தோன்றுதலும் மறைதலும் பிறத்தலும் இறத்தலுமாகியச் செயல்களில்;

இன்று நாளை என்னுங் காலக்கணிதங்களும் பொய்த் தோற்றமாக விளங்கியபடியாலும் தோற்றிக்கொண்டே எழும்பும் பொருட்கள் யாவும் க்ஷணத்திற்குட்சணம் அழிந்துக்கொண்டேவருஞ் சுவாபமென்றறிந்த படியாலும்;

உள்ளத் தோற்ற ஒடுக்கங்களாகும் இராகத்துவேஷம் மோகங்களென்னும் காம வெகுளி மயக்கங்களின் உற்பவங்களையும் அதன் செயல்களையும் அச்செயல்களினால் உண்டாகுந் துன்பங்களையும் அழிவுகளையும் நாளுக்குநாள் உள்ளுணர்ந்து வருவதுடன்;

தேகத்தால் ஊறு பேதங்களையும், கண்ணால் வருணபேதங்களையும், நாவால் சுவை பேதங்களையும், மூக்கால் நாற்றபேதங்களையும், செவியால் ஓசை பேதங்களையும் உள்ளுணர்ந்து மூக்கினால் நாற்றமறிதற்கு மண் காரணமென்றும், நாவினால் சுவை அறிதற்கு நீர் காரணமென்றும், கண்ணொளியால் பார்வை அறிதற்கு தீ காரணமென்றும், செவியால் சத்தமறிதற்கு ஆகாயங் காரணமென்றும், தேகத்தில் உணர்ச்சி அறிதற்கு வாயு காரணமென்றும் அறிந்துகொண்டதன்றி தீயும், ஆகாயமும், மனவிரிவுக்கும் மடிவுக்குங் காரணமென்றும் நீரும், காற்றும், மண்ணும் மூச்சுக்குக் காரணம் என்றுமுணர்ந்து மூச்சானது கழுத்தைப் பீடமாகக் கொண்டு பீஜத்திற்கும் நாசிக்கும் மாறலிடுவதும், மனமானது இருகண் மத்தியையும் மூக்கின் முனையையும் பீடமாகக்கொண்டு விரிந்து மடிவதுமாகிய செயலில் பாசபந்தப் பலபற்றுக்களால் மனம்விரிந்து உலகமாதலும், சாந்தம், ஈகை, அன்பு, பெருகி சிரேஷ்டநிலை தோற்றும் உள்ளுளவையும் நாளுக்குநாள் உணர்ந்து பிறப்பு, பிணி, மூப்பு, மரணமென்னும் நான்கு வாய்மையின் துக்கம், துக்கோற்பவம், துக்கோற்பவக் காரணம், துக்கநிவாரணமாகும் நான்குமார்க்கங்களை அறியவேண்டி பூர்வம் முத்தாநதி என்று வழங்கி தற்காலம் கயாவென்று வழங்குமிடத்தில் தனது விவாககாலத்தில் உலக்கைத் தடியை ஊன்றிப் பிண்டிமரமெனத் துளிர்த்து ஐங்கிளைப் பிரிந்து வளர்ந்திருந்த பிண்டி மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு இராகத்துவேஷ மோகங்களென்னும் முக்குற்றங்களுக்குக் காரணச்சுழலாகும் இராசதம், தாமதம், சாத்துவிகமென்னும் முக்குணப் பிரிவுகளும் இடைகலை, பிங்கலை, சுழி முனை என்னு முச்சுவாச பிரிவுகளுமாகிய ஆறுள்ளங்க முகங்களை இருவிழி மத்திய ஓரங்கமாகும் உள்விழி பார்வையில் நிறுத்தி கண்பார்த்தவிடத்தில் மனம்போதலும், செவி கேட்டவிடத்தில் மனம்போதலும், நாவு உரிசித்தவிடத்தில் மனம் போதலும், மூக்கு முகர்ந்தவிடத்தில் மனம்போதலும், தேகஞ் சுகித்தவிடத்தில் மனம்போதலுமாகியச் செயல்களுக்குரிய சுவை, ஒளி, ஊறு, வோசை, நாற்றமிவற்றினிலையாம்,

பொறிவாயல்கள் ஐந்தினையுமவிக்கும் இடைவிடா அந்தர்முகப் பார்வையின் நிரந்தர பழக்கத்தால் மனமென்னும் பெயரற்று நாதவொலியுற்று பேரறிவாம் இரவுபகலற்றவிடந் தங்கி ஆனந்த நித்திறையடைந்து நித்திய சுகமுற்று பங்குனிமாத பௌர்ணமியில் காமனென்னும் பெண்போக இச்சையையும் சிலேத்துமக் கபங்கண்டுக் கொல்லுங் காலனென்னும் மரணத்தையுஞ் ஜெயித்துக்கொண்டார்.

குறள்

பொறிவாய லைந்த வித்தான் பொய்தீ ரொழுக்கம் / நெறிநின்றார் நீடு வாழ்வார்.

அசோதரை நெஞ்சுவிடு தூது

முறவாலுயர்வா லுனைப்போ லெனக்குப், பிறிதாருளரதனாற் பேணி - யறவாழி,
யான்குமரதேவன்பால் அன்புடனே தூதுசெல்ல, நான் கருதி உன்பானவிற்றினேனி யான்புகலு,
மவ்விறைவனென்று மமருமிடஞ் சொல்லக்கேண், மௌவன்மணக்குமலர் சோலை - செவ்விதரு,
முந்தாநதிசூழ் முதுகிரியாமாங்கு நீ, வித்தாரமாய்ச் செல்லும் வேளைதனிற் - சுத்தும்.

சித்தாந்தத் தொகை

அருணெறியால் பாரமிதை யாறைந்து முடனடக்கிப்
பொருள் முழுதும் போதியின்கீழ் முழுதுணர்ந்த முநிவரன்ற,
னருள் மொழியானால் வாய்மெய் அறிந்தவரே பிறப்பறுப்பார்
மருணெறியாம பிறநூலு மயக்கருக்கு மாறுளதோ.

திரிமூலர் திரி மந்திரம்

அற்றார்பிறவியவரிரு கண்களை / வைத்தார் புருவத்திடையே பார்க்க
ஒத்தேயிருக்க உலகெல்லாந்தெரியும் / எத்தாலுஞ் சாவில்லை இறைவனாமே.

பாம்பாட்டிசித்தர்

ஓங்காரக்கம்பத்தினுச்சிமேலே / அதனுள்ளும் புரம்பையும் அறியவேண்டும்
ஆங்காரக் கோபத்தை அடக்கிவிட்டே / ஆனந்த வெள்ளத்தைத் தாக்கிக்கொண்டே
தூங்காமல் தூங்கியே சுகம் பெறவே / தொந்தோம் தோந்தோமென் றாடாய்பாம்பே.

மணிமேகலை

மாதவ ருரையிடங் காட்டிய மறையோன் / சாதுயர் நீக்கிய தலைவன் தவமுனி
காமனைக் காய்ந்தனை காலனைக் கடிந்தனை.

சீவகசிந்தாமணி

ஒன்றாய வூக்கவேர் பூட்டியாக்கைக் கெறுவுழுது
நன்றாய நல்விரதச் சென்னல் வித்தி யொழுக்கநீர்
குன்றா மற்றாங் கொடுத்தைம் பொறியின் வேலிகாத்தோம்பின்
வென்றார் தம் வீட்டின்பம் விளைக்கும் விண்ணோருலகின்றே
தருமன் றண்ணளி யாற்றன தீகையால் வருணன் கூற்றுயிர் மாற்றலில் வாமனே.

இதையே பற்றற்ற அநித்தியவனாத்தும நிருவாணநிலை என்பர். இந் நிலையால் நாம ரூபம் இரண்டுமற்று புளியம் பழம்போலும், ஓடுபோலும் பயிரங்கமும் அந்தரங்கமும் வேறாயவன்று முதல் சித்தார்த்தி என்னும் நாமமற்று புத்தரென்று அழைக்கப்பெற்றார். உலர்ந்த உலக்கைத் துளிர்த்த மரத்தடியில் உட்கார்ந்தபடியால் பிண்டிமரமென்றும், மும்மல சோகமற்றபடியால் அசோகு மரமென்றும், அரசனே மரத்தடியில் உட்கார்ந்தபடியால் அரசன் மரமென்றும், மரத்தடியிலிருந்தே சத்திய தன்மத்தைப் போதித்தபடியால் போதிமரமென்றும், கருங்கற் போன்ற மரமாதலால் கல்லால மரமென்றும் வழங்கிவந்தார்கள்.

சிலப்பதிகாரம்

பணையைந் தோங்கிய பாசிலைப்போதி, யணிதிகழ் நீழலறவோன்றிருமொழி

சீவகசிந்தாமணி

காசறு துறவின் மிக்கக் கடவுளர் சிந்தைபோல
மாசறு விசும்பின் வெய்யோன் வடதிசை யனமுன்னி
யாசறு நடக்கு நாளு ளைங்கணைக் கிழவன் வைகிப்
பாசறை பரிவு தீர்க்கும் பங்குனி பருவஞ் செய்தான்.

யாப்பருங்கலைக்காரிகை

பிண்டியினீழற் பெருமான் பிடர்த்தலை, மண்டலந்தோன்று மால்வாழியன்னோய்

சிலப்பதிகாரம்

வெங்க நெடுவேள் வில்விழாக் காணும், பங்குனிமுயக்கத்து பனியரசு யாண்டுளன்

மணிமேகலை

ஆலமர்ச் செல்வன் மதன் விழாக் கோல் கொள
பாலமர் கொள்ளும் பங்குனிப் பருவம் காண்மினோ வெனக் கண்டுநிற்குனரும்.

பதினாறாவது வயதில் விவாகமுடிந்து இருபதுக்குமேல் புத்திரசந் தானமுண்டாகி சிலகால் தங்கி வெளியேறி முப்பதாவது வயதில் நிருவாண முற்றபடியால் அதை அநுசரித்துவந்த அரசர்களுங் குடிகளுங் தங்கள் வம்மிச வரிசைக்குப் புத்திரசந்தானம் உண்டானவுடன் முப்பதாவது வயதில் மடங்களில் சேருவது வழக்கமா இருந்தது.

சீவகசிந்தாமணி

ஐயாண்டெய்தி மெய்யாடி அறிந்தார் கலைகள் படை நவின்றார்
கொய் பூமாலை குழன் மின்னுங் கொழும்பொற்றோடுங் குண்டலமு
மையன் மார்கள் துளக்கின்றியாலுங் கலிமா வெகுண்டீர்ந்தார்
மொய்யாரலங்கன் மார்பறகு முப்பதாகி நிறைந்ததே.

நல்வழி

முப்பதாமாண்டளவின் மூன்றற் ஒருபொருளை / தப்பாமற்றன்னுட் பெறானாயின் - செப்புங்
கலையளவே யாகுமாங் காரிகையார் தங்கண் / முலையளவே யாகுமா மூப்பு.

நாயனார் குறள்

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை / பற்றுக பற்று விடற்கு

மச்சமுனி ஞானம்

நித்தமு நீசுத்தமதாய் நின்றுபார்த்தால் / நின்தேகம் பிரம்மமடா நீதான் காண்பாய்,
சுத்தமுடன் சோதிமனக் கண்ணாலந்த / சுருதிமுடிவான சுடரொளியைக் கண்டால்,
பத்தியுள்ள தேகமது சுத்தமாச்சு / பாலகனே அவமிருத்து பரந்து போச்சு,
வெற்றியுள்ள அஷ்டசித்துங் கைக்குள்ளாச்சு / வேதாந்த புருவமைய மேவிநில்லே.

சீவகசிந்தாமணி

ஆசையார்வமோடைபமின்றியே / யோசைபோயுல குண்ணநோற்றபி,
னேசுபெண்ணொழித் திந்திரர்களாய் / தூயஞானமாய்த் துறக்க மெய்தினார்.

அறநெறிச்சாரம்

இந்தியக் குஞ்சரத்தை ஞானப்பெருங்கயிற்றால், சிந்தனை தூண்பூட்டி சேர்த்தியே - பந்திப்பர்
இம்மெப்புகழும் இனிச்சொல் கதிப்பயனும் / தம்மெத் தலைப்படுத்துவார்.

இராகத்துவேஷ மோக மூன்றையும் அறுத்து மெய்ப்பொருள் ஒன்றைப் பற்றுதல். அதாவது, உலகப் பற்றுக்கள் யாவையும் அறுத்து உண்மெய்ப் பொருளாம் ஒருபொருளைப்பற்றினபடியால்; உண்மெய் உணர்ந்த ததாகத நிலையில் சுவர்க்க, மத்திய, பாதாள மூன்றுலகங்களையுந் தனக்குள் கண்டதன்றி செல்லல், நிகழல், வருங்காலமாகும் முக்காலங்களின் தோற்றங்களுந் தனக்குள் விளங்குவதைக் கண்ட ததாகதர் தானே கண்ட காட்சியைத் தனக்குள் அடக்கிக்கொள்ளவேண்டிய எண்ணம் பிறந்தது. அதையே பைசாசநிலை என்றகற்றினார். இரண்டாவது உலகத் திலுள்ள சீவராசிகளின் அந்தகாரத்தை விலக்கி உள்ளொளி விளக்கவேண்டும் என்னும் ஓரெண்ணம் பிறந்தது. அதையே பிரம்ம நிலை என்றார்.

அதாவது, பூமியை உழுது பண்படுத்தி நஞ்சையாகுந் துன்பஞ் செய்தபோதிலும் அது நற்பலனைத் தருவது சுவாபமாதலின் அதுபோல் மக்கள்கூடிப் பலவகைத் துன்பந் தரினும் அதைக்கருதாது நன்மெய்செய்யுங் குணநிலைக்கு பிரமமென்னும் பெயரையும் வகுத்தார். உள்ளத்தில் எழும் அசுத்தங்களைத் தெள்ளர நீக்கி பெண்மயல் போக்கி பஞ்ச இந்திரியங்களை அடக்கிக் காமனை வென்றக் காட்சியால் ஐந்திரர் இந்திரரென்னும் பெயர் வாய்த்தது. யாதோர் ஆசிரியனும் இன்றி பிறப்பின் துக்கத்தையும், பிணியின் துக்கத்தையும், மூப்பின் துக்கத்தையும், மரண துக்கத்தையும் ஜெயித்துக் கொண்டபடியால் ஓதாமல் உணர்ந்த முனிவனென்றும் ஓர் சிறந்த பெயரை அளித்தார்கள்.

அருங்கலைச்செப்பு

இந்தியத்தை வென்றான் தொடர்பாட்டோடாரம்ப / முந்து துறந்தான் முனி

குறள்

ஐந்தவித்தனாற் றலகல் விசும்புளார்க் கோமான் / இந்திரனே சாலுங்கரி.
பொறிவர்யி லைந்தினை யவித்தற்குப்பயன் / புத்தரெனு மிந்திரரே போதுங் சான்று.

சீவகசிந்தாமணி

சுறவுக் கொடிக்கடவுளொடு காலத் தொலைத்தோயெம் / பிறவியறு கென்று பிறசிந்தை யிலராகி
நறவுமலர் வேந்து நறுஞ்சாந்து நிலமெழுகித் / துறவு நெறி கடவுளடி தூமமொடு தொழுதார்.
பாலனைய சிந்தை சுடரப்படர் செய்காதி / நாலுமுடனே யறிந்து நான்மெவரம்பாகி
காலமொரு மூன்று முடனே யுணர்ந்த கடவுள் / கோலமலர்ச் சேவடிகள் கொண்டு தொழுதும் யாம்
முழங்கு கடநெற்றி சுடர்முளைத் தெழுந்தேபோ / லழுங்கல் வினைகளற நிமிந்தாங்குலக மூன்றும்
விழுங்கியுமி ழாது குணம் வித்தியிருந்தோய்நின் / னிழுங்கில் குணச் சேவடிகளேத்தி தொழுதும் யாம்
ஏத்தரிய பல்குணங்கட் கெல்லைவரம் பாகி / நீத்தவிரு ளிந்திரனை நின்று தொழுதமரர்
நாத்தழும்ப வேத்திதவ நங்கையவர் நண்ணித் / தோத்திரங்களோதி துகண் மாசுணிக்கின்றார்.

சக்கிரவர்த்தித் திருமகன் தன்னை மறைக்கும் அஞ்ஞான இருளாம் நித்திறையை நீக்கி சதா விழிப்பாம் ஆனந்தத்திற்றாக்கும் இரவு பகலற்ற நித்திய நிலையினின்று சருவசீவர்களின் உள்ளங்களையும் கவர்ந்து அவரவர்களுக்கு உண்டாகுந் துக்கங்களையும், அதன் உற்பவங்களையும், அதன் நிவாரணங் களையும் போதிக்க ஆரம்பித்து முதலாவது;

சௌப்பாபஸ்ஸ அகரணங் குஸலஸ உபஸம்பதா ஸஸித்த பரியோதபனங் எனும் மூன்று நீதிநெறி பேதவாக்கிய அஸ்திபார கற்களாம் பாபஞ் செய்யாதிருங்கள், நன்மெய்க் கடைபிடியுங்கள், உங்கள் இதயத்தை சுத்திசெய்யுங்கோள் என்னும் திரிபீடங்களை வகுத்தார்.

இத்திரிபீடங்களாகும் மூன்று பேதவாக்கியங்களை ஓர் ஓலையில் எழுதாமலும், பட்டைகளில் எழுதாமலும் ஒருவர் நாவினால் கூறவும் மற்றவர் செவிகளில் கேட்டுக்கொள்ளுவதுமாயிருந்த வரையாக் கேள்வி எழுதாக்கேள்வியிலிருந்தது. இதையே சுருதி என்று கூறினர். அக்கால் சாந்தம் நிறைந்த தண்மெயாம் அந்தண நிலையையும் அன்பே ஒருருகொண்ட வடிவையுங்கண்ட குடும்பத்து அரசபத்தினி களும் மற்றுமுள்ளோரும் அருகில் வந்து வணங்கி, அரசன் மரத்தடியில் உட்கார்ந் திருப்பதை தவிர்த்து பொற்பீடங்களை அமைத்தும், வெள்ளியாசனங்களை விரித்தும், அவைகளின் பேரில் உட்காரும்படிக் கேட்டுக்கொண்டார்கள். சிம்மமும், இரிடபமும் அருகில் தாங்கி நின்றது. நாகங்கள் தோளிலுந் தாளிலும் புரண்டு லாவியதுகள். மயில்கள் தோகையினால் வெயில் மறைத்ததுகள். அவைகளைக்கண்ட அரசர்கள் மூன்று பூச்சக்கரக் குடைகளைக் கொண்டுவந்து உதயசூரியன் சுடர் தாங்காமல் கிழக்குசார்பில் ஓர் குடையும், அஸ்தசூரியன் சுடர் தாங்காமல் மேற்கு சார்பில் ஓர் குடையும், மத்தியகால சுடர்தாங்காமல் உச்சிக்கு நேர் ஓர் குடையும் ஆக முக்குடைகளை நிழற்றி போதனை வினவி நின்றார்கள்.

அதை அறிந்த ததாகதர் அன்பர்களை அழைத்து தாமரைப் புட்பங்களையுந் தாமரைக் கொட்டைகளையுங் கொண்டுவரச்செய்து பூமியில் பரப்பி அதன்பேரில் உட்கார்ந்துகொண்டு இத்தாமரையானது நீரிலிருந்தும் நீர் ஒட்டாமலிருப்பதுபோல் ததாகதன் உங்களுடன் கலந்திருந்தும் உங்கள் பற்றுக்களற்று உண்மெயில் உட்கார்ந்திருக்கின்றேன். அந்த நித்திய பீடத்திற்கு இவ்வனித்திய பீடம் நிலையாகா என்று உணர்த்தினார். அன்றுமுதல் தாமரைக்கொட்டைக்கு குருமணி என்றும், தாமரை புட்பத்திற்கு குரு மலரென்றும் பெயருண்டாயிற்று.

வீரசோழியம்

முடைத்தலையை மதவேழந் தடைக்கையான் வெயின்மறைக்கும்,
பிடித்துறவடைந்தார்க்கே நடக்குமென் மனனேகாண.
தாடினை இரும்போத்து தோகையான் வெயின் மறைக்கும்,
காடகமுரைந்தார்க்கே யோடுமென் மனனேகாண்.

வாசிட்டம்

புண்டரிக வாதனத்தில் புத்தன்போல் உத்தரமுகனாய்.

யாப்பருங்கலை

வெறிகமழ் தாமரை மீமிசை ஒதுங்கிய அறிவனை வணங்கி அறைகுவன் யாப்பே.

அறநெறிச்சாரம்

தாவின்றி எப்பொருளுங் கண்டுணர்ந்து தாமரை பூவின்மேற் சென்றான் புகழடியை.

குறள்

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் / நிலமிசை நீடுவாழ்வார்.

தாயுமானவர்

செங்கமல பீடமேல் கல்லாலடிக்குள்வளர் / சித்தாந்த முத்தி முதலே.
குருமணி இழைத்திட்ட சிம்மாதனத்தின்மிசை / கொலுவீற்றிருக்கு நின்னை.

சூளாமணி

குருமணித் தாமரைக் கொட்டை சூடிய / திருமணிப் பீடமுஞ் செதுக்கவாயவும்.

நிகழ்காலத்திரங்கல்

திருமலராந்தா மரையுட் சேர்ந்து கல்லாலடியில் / குருமலராங் குப்பல் குவிந்ததுஅதிசயமே.

சிலப்பதிகாரம்

திங்கண்மூன்றடுக்கிய திருமுக்குடைக்கீழ்ச், / செங்கதிர்ஞாயிற்றுத் திகழொளி சிறந்து,
கோதைதாழ் பிண்டிக்கொழு நிழலிருந்த, / வாதியிறோற்றத்து அறிவனை வணங்கி.
மலர்மிசை அடைந்த மலரடிக்கல்லதென், தலைமிசையுச்சி தானணி பொறாது.

இரண்டாவது தன்னை அடுத்த மாணாக்கர்களுக்குத் திரிபீடங்களை விளக்குவதற்காய் அவர்களையும், மற்றுமுள்ளோரையும் நோக்கி அன்பர்காள் உலகத்தில் தோற்றும் பொருட்கள் யாவும் க்ஷணத்திற்கட்சணம் அழிந்து கொண்டே வருகின்றபடியால் சகலமும் அநித்தியமாயிருக்கின்றது.

அவ்வனித்தியவாழ்வை நித்தியமென்று தாவிபிடித்திருக்கும் ஒவ்வொரு வரும் தனக்கு நித்திறை மறைத்தக்கால் மனைவி மக்கள் பந்து மித்திரர் பொற்பூஷண திரவியங்கள் யாவும் எங்கு மறைந்திருந்தது. தன்னை மறைத்த அத்திறை எத்திறம் ஒத்தது. அதே திறை இரண்டுநாள் மூடுமாயின் இறந்தானென்று தகனஞ் செய்து விடுவார்கள்.

அடுத்தடுத்து இரவும்பகலும் மறைக்காவண்ணம் இரவு பகலற்றவிடத்தே விழித்திருக்கும் நித்தியநிலையை உண்மெய் என்று கூறப்படும்.

அதுவே மெய்ப்பொருளாதலின் அம்மெய்ப்பொருளை மறைக்குந் திறைச்சீலை அடுக்குகளாகும் பொருளாசை, கோபம், கள்ளருந்தல், முறட்டுத்தனம், வஞ்சகம், பிடிவாதம், பொறாமெய், தற்புகழ்ச்சி, புறங்கூறல், ஆணவம், கெடுமதி இவைகளேயாம்.

6. ஆதிவேத வாக்கிய விவர காதை

நித்திறையை சுகமென்று எண்ணி நாளுக்கு நாள் திறைச்சீலைகளால் மேலும் மேலும் மூடப்பட்டுவருவானாயின் சதா நித்திறையால் இம்மெய் நசிந்து வினைக்கீடாய் மறுமெய்டுப்பன்.

குணப்பற்றுக்களின் நிலையை அறியவேண்டின் தசவாண்டுகளுக்கு முன் கண்ணினால் கண்ட காட்சியையும், மூக்கினால் முகர்ந்த நாற்றத்தையும், செவியினால் கேட்ட ஓசையையும், நாவினால் உருசித்த சுவையையும், தேகத்தால் கண்ட சுகத்தையுஞ் சிந்திக்குங்கால் தோற்றுவித்தடங்கும் ஞாபகநிலையில் இராகத்துவேஷ மோகம் பெருகி பிறவி தோற்றத்தால் உலகம் விரிந்து உண்மெய் மறைந்திருக்கின்றது.

அந்த ஞாபகநிலையை உள்விழியால் நோக்கி இராகத்துவேஷ மோகங்களைப் போக்கி சுத்த இதய சத்துவநிலையில் நிற்பீரேல் உண்மெய் விளங்கும்.

அவ்வுண்மெய்தான் நித்தியத்திற்கு வழியாயிருக்கின்றது. உண்மெய்தான் நித்தியமாய் இருக்கின்றது. உண்மெய்தான் நிருவாணநிலையும் என்றறிந்து அமுதமருந்தாமல்,

இம்மெய்மறைவதற்கும் மறுமெய் தோற்றுவதற்கும் பேரவாபற்றி நிற்கின்றீர்கள். அப்பற்றுக்களே பிறவிக்குக் காரணம் என்னப்படும்.

அதாவது மண் பெண் பொன்னென்னும் பொருட்களைத் தாவும் இராகத்துவேஷ மோகமென்னும் இதயப்பற்றுக்களேயாம்.

அவ்விதய உற்பவம் மூன்று வகையாம். அதன் தோற்றநிலைக்கு குணி என்றும், தோற்றி வைக்கும் நிலைக்கு குணமென்றும் பெயர்.

பின்கலை நிகண்டு

தாமதம் நிறைபேருண்டி சாம்புதல் சோம்புமூரி / காமமே நீதிகேடு கண்ணுறக்கம் பொச்சாப்பு
நாமசஞ்சலமே தஞ்சம் நாட்டலாம் இம்மூப்பாலும் / ஆமலி உடனேமற்ற மெலிவொடு சமனுமாமே.
தானமே தவமேமற்ற தருமம்பேணுதலினோடு / ஞானமே கல்விகேள்வி நலனிவை
தெரிதரானே
ஈனமொன்றில்லார் வைத்த விராசத குணங்களென்ப / ஊனமின் முனிவன்முன்னாள்
உரைத்திடுமுண்மெய்தானே.

ஏற்றசாத்துவிதத்தோடே இராசதந்தா மதங்கள்
ஆற்றமுக் குணங்களாகும் மதிற்சத்து விதமே ஞானம்
சாற்றிடு தவமே மெய்மெய் சாலநல்லருளுண்டாதல்
போற்றிய வாய்மெயோடைம் புலனடக்குதலுமாமே.

இதில் பெருந்திண்டி, பேராசை, சோம்பல், கடுஞ்சினம், காமம், நீதிகேடு, பெரு நித்திறை, பொய், தன் முயற்சியின்றி பிறரை கெஞ்சுதலாகும் ஊக்கமற்ற தாமதகுணம் என்னப்படும்.

ஈகை, விரதம், தருமம் பேணுதல், அறிவின் விருத்தியை நாடல், கேள்வி முயலல், நன்று தீதென்று உணரலாதி முயற்சியை இராசதகுணமென்னப்படும்.

ஞானம், தவம், மெய்யுணர்ச்சி, அருள், வாய்மெய், ஐம்புலனடக்கலாதி நன்மெய்க் கடைபிடித்தல் சத்துவகுணமென்னப்படும்.

உலகதோற்றத்தில் மகிழ்ந்து இவன் மித்துரு அவன் சத்துருவென்றும், இவன் உன்னியன் அவன் அன்னியனென்றும், இவன் தாழ்ந்தவன் அவன் உயர்ந்தவன் என்றும், இவன் செல்லுமெயுடையவன் அவன் வருமெய் உடையவன் என்றும் ஒன்றுக்கொன்றை பேதிக்காமல் சகல சீவராசிகளுக்கும் உண்மெய் ஒன்று என்று உணர்ந்து சீவகாருண்யம் உடையவர்களாய் பொருமெய் என்னும் பொக்கிஷத்தைச் சேர்த்து சுகவழியைக் கண்டடையுங்கள்.

அச்சுகவழி யாதெனில், மாறாப்பிறவியில் சுழன்று மேலும் மேலுந் துக்கத்தை அதிகரிக்கச்செய்யுந் தீவினைகள் பத்தையும் அகற்றி நல்வினையாம் பத்துப் பாதையில் நடத்தல்;

அதாவது, அவாவின்மெய், அருள், தன்னை அறிதல் இம்மூன்றையும் மனத்தால் அனுசரிக்கவேண்டியது.

இனியவை கூறல், உண்மெய் கூறல், பயனுள கூறல், அறங் கூறல் இந்நான்கையும் நாவினால் அனுசரிக்கவேண்டியது.

பெரியோரை வணங்கல், தானமீதல், தவபீடமிடுதல் இம்மூன்றையும் தேகத்தால் அனுசரிக்க வேண்டியது.

பாரதம் தசரதமென்னும் பத்துப் பாதையையே சுகவழி என்றும் முத்திக்கேகுந் தசபாரமிதம் என்றுங் கூறப்படும்.

மணிமேகலை

தீவினை என்பதியாதென வினவி / னாய்தொடி நல்லாயாங்கத்துகேளாய்,
கொலையே களவே காமத்தீவினை / யலையா துடம்பிற் தோன்றும் மூன்றும்,
பொய்யே குறளை கடுசொல் பயனில் / சொல்லே நாவில் தோன்றும் நான்கும்,
வெஃகல் வெகுளல் பொல்லாக்காட்சி / என்றுளந்தனினிருப்பன மூன்றும் என,
பத்துவகையால் பயன்தெரி புலவ / ரித்திறம்படார் படர்குவராயின்,
விலங்கும் பேயும், நரகருமாகிக் / கலங்கிய உள்ளக் கவலையில் தோன்றுவர்,
நல்வினை என்பதி யாதென வினவில் / சொல்லிய பத்தின் தொகுதியு நீத்துச்,
சீலந்தாங்கி தானந்தலை நின்று / மேலென வகுத்த ஒருமூன்று திறத்துத்,
தேவரு மக்களும் பிரமருமாகி / மேவிய மகிழ்ச்சி வினைப்பயன் நுகர்வர்.

இச்சுகவழிக்குத்தடைகளாகும் தீயச்சிந்தை, பேராசை, கோபம் இம் மூன்றையும் மனத்தால் எழவிடாமல் அடக்கவேண்டியது.

கொலை, களவு, பயனற்றச் செய்கை இம்மூன்றையுந் தேகத்தால் செய்யாமல் இருக்கவேண்டியது.

இவ்வகையாக மனத்தால் செய்யுந் துர்க்கருமம் தேகத்தைப் பற்றிக் கொண்டும் தேகத்தால் செய்யுந் துர்க்கருமங்கள் மனதைப்பற்றிக்கொண்டும் துக்க விருத்தியை அதிகரிக்கச்செய்து, அநித்தியமாகிய மரணத்திற்குக் கொண்டு போகும் வழியைத் திறந்துவிடுவதுமல்லாமல் பிறவிக்கும் ஓர் வித்தாயிருக்கின்றது.

தேகத்தால் செய்யும் நற்கருமங்கள் மனதைப் பற்றிக்கொண்டும், மனதால் செய்யும் நற்கருமங்கள் தேகத்தைப் பற்றிக்கொண்டும், ஒன்றுக்கொன்று கலந்து அன்பையும் ஆற்றலையும் பெருக்கி உண்மெயாகிய நித்திய வழியைத் திறந்துவிடுவது மல்லாமல் பிறவிக் கேதுவாம் வித்தையும் அழித்துவிடுகின்றது.

தன்னை அறிந்தவன் எவனோ அவன் சுகப்படுவான். உண்மெய்யை உணர்ந்தவன் எவனோ அவன் நித்தியமடைவான்.

மதுரமும் பெருமெயுமானது உண்மெய், துன்பசாகரத்திலிருந்து உங்களை விடுவிக்கச் செய்வதும் உண்மெய், உலகபாசங்களினின்று விடுவிக்கச்செய்யும் இரட்சகரும் உண்மெய் என்றறிந்துக்கொள்ளுவீர்களாக.

நீங்கள் உங்கள் உண்மெய்யை அறிந்துக்கொள்ளுவதற்கு சக்தியற்ற வர்களாயிருந்தாலும் அவ்வமுதத்தைக் கசப்பென்று எண்ணினாலும் உங்கள் உண்மெயில் நம்பிக்கை வையுங்கள். உண்மெய்யை விரும்புங்கள். உண்மெய்யில் **அன்பை** வளர்த்துங்கள்.

யதார்த்தத்தில் உண்மெய்தான் எவற்றிற்குஞ் சிறந்தது. அதை யாதாமொருவர் கூட்டவாவது குறைக்கவாவது மாற்றவாவது விருத்திசெய்ய வாவது முடியாதென்று கூறி தன்னை அடுத்த மாணாக்கர்களை அருகில் அழைத்து ஒன்றுக்கொன்றை பற்றி பிறவிக்காளாகும் ஜின்முத்திரை பதினாறு வகை நிலைகளை விளக்கிவருங்கால் மாணாக்கர்கள் மனதில் அவைகள் பதியாமல் பரவுவதை உணர்ந்த பகவன் வரிவடிவாகும் அட்சரங்களை உண்டு செய்து அதன் வழியாக தன்மங்களைப் பதிவடையச்செய்ய வேண்டுமென்று எண்ணி வடமொழியையும் அதனதன் அட்சரங்களையும் தென்மொழியையும் அதன் அட்சரங்களையும் உற்பத்திச்செய்து;

மாணாக்கருள் ஜனகர், வாமதேவர், நந்தி, ரோமரென்னப்பட்ட நால்வருக்கு ஜெயமுத்தி நிலையாகும் ஜின்முத்திரையை அளித்து தானியற்றிய வரிவடிவ பாஷையாகும் வடமொழி என்னும் சகடபாஷையை பாணினி யாருக்கும், தென்மொழியாகுந் திராவிடபாஷையை அகத்தியருக்கும், போதித்து ஞானத்தானம் அளித்து எட்டுத்திக்குகளிலும் மெய்யறத்தைப் பரவும்படிச் செய்தார்.

காரணம், மகடபாஷை என்றும், மூலபாஷை என்றும், பிராகிருதபாஷை என்றும், பாலிபாஷை என்றும், வழங்கிவரும் ஆதிபாஷை வரிவடிவம் இல்லாமல் ஒலிவடிவமாத்திரமாய் இருந்தபடியால் தன்மங்களை நிலைக்கச் செய்வதற்கு வடமொழியையுந் தென்மொழியையும் உற்பத்திச் செய்தார்.

வைராக்கிய சதகம்

ஆலநீழலிலன் றொருநால்வருக் / கறநெறி யுரைத்தானை,
காலகாலனை சிவப்பிரகாசவென் / கண்மணிதனையுன்னா.

பதஞ்சலியார் ஞானம்

வசனசுத்தி கபிலாதி மாமுனிவர் மகிதமான ஜனகாதியும்
வாம ரோம முநிநந்திதேவன் வடபாஷை யோதினர்கள் வண்மையே
மேருலாவுவட வீதிதோரும் உயர் வேதஞான ஜனகாதியர்
மேலை வீதி திருமூலர்வர்க்கமிகவே இருந்து விளையாடினார்
பாருங் கீழ்திசையி லையர்சட்டமுனி பானுமாமலையில் லாகினார்
பன்னுதென்றிசையிலே இருந்து தமிழ் பாஷையோதின அகத்தியன்
தாரிலே இவர்கள் சீஷவர்க்கமிது கோடிகோடி இவர் தம்மிலே
சாதுசுந்திரனும் மச்ச கூர்மமுனி தாரசாரபதி கொங்கணன்
சீருலாவுவர தேமடங்களது செய்து சித்ததிகமாடினார்
தேசதேசசில பாஷையாலும் இவர் செப்புநான்முறை தெரிந்திடே.

பாணினியவர்கள், கபிலர், ஜனகர், வாமதேவர், நந்தி, ரோமரைவருக்கும் சகடபாஷையையூட்டி வடநாடெங்கும் மெய்யறமாம் புத்ததன்மத்தைப் பரவச்செய்தார். அகத்தியருக்கும் திருமூலருக்கும் திராவிட பாஷையையூட்டி அவற்றுள் அகஸ்தியர் தென்திசை சென்று தமிழ்பாஷையையூட்டி வரிவடிவாம் அட்சரபதிவால் தன்மங்களைப் பரவச்செய்து மடங்களைக் கட்டுவித்து உலோகோபகார சித்துக்களுமாடி வைத்தியம், ஞானம், நீதி முதலிய பொக்கிஷங்களை அளித்துவந்தார்.

முன்கலைதிவாகரம்

வடநூற்கரசன் தென்றமிழ்க்கவிஞன் / கவியரங்கேற்றும் உபயக்கவி புலவன்,
செரிகுணத்தம்பற் கிழவோன் சேந்த / னறிவுகரியாக தெரிசொற்றிவாகரத்து,
முதலாவது தெய்வப்பெயர்தொகுதி.

வீரசோழியம்

மதத்திற் பொலியும் வடசொற்கிடப்புந் தமிழ்மரபு
முதத்தில் பொலியேழை சொற்களின் குற்றமும் ஒங்குவினை
பதத்தில் சிதைவும் அறிந்தே முடிக்க பன்னூறாயிரம்
விதத்திற் பொலியும் புகழ்வலோகிதன் மெய்த்தமிழே.

மேற்சொன்னபடி பதிப்புரை.-

திடமுடைய மும்மொழியாம் திரிபிடக நிறைவிற்காய்
வடமொழியை பாணினுக்கு வகுத்தருளியதற்கு இணையாத்
தொடர்புடையத் தென்மொழியை உலகமெலாந் தொழுதேத்த
குடமுநிக்கு வற்புருத்தார் கொல்லாற்றுபாகர்.

சிலப்பதிகாரம்

கண்களிமயக்கத்துக் காலதலற்றிருந்த. / தண்டமிழாசான் சாத்தனிஃதுரைக்கு.

தொல்காப்பியம்

மயங்காமரபினெழுத்துமுறைகாட்டி. / மல்குநீர் வரைப் பினைந்திரர்.

மணிமேகலை

ஆயிரநாமத் தாழியன் திருவடி.

கமலசூத்திரம்

சகஸ்திரநாம பகவன்.

அவலோகிதரென்பதும், சாத்தனென்பதும், கிழவனென்பதும், இந்திர னென்பதும் பகவனுக்குரிய ஆயிர நாமங்களில் அடங்கியவைகளேயாம்.

உலக இதத்தைத் தவிர்த்து மலைவுபெறாமதுர வாக்கியங்களை ஊட்டின வராதலின் அவலோகிதரென்றும், விண்ணவரும் மண்ணவருஞ் சாற்றுதற் குரியவராதலின் சாத்தனென்றும். சகலமும் அறிந்தவராதலின் கிழவனென்றும், ஐயிந்திரியங்களை வென்றவராதலின் ஐந்திரர், இந்திரரென்றும் வழங்கப்பெற்றார்.

பூமியின்கண் நீரினேதுவால் தாபரவர்க்கங்கள் தோன்றி தாபரவர்க்கங் களின் ஏதுவால் ஊறுவனங்கள் தோன்றி ஊறுவனங்களின் ஏதுவால், மட்சங்கள் தோன்றி, மட்சங்களின் ஏதுவால், பட்சிகள் தோன்றி பட்சிகளின் ஏதுவால், விலங்குகள் தோன்றி விலங்குகளின் ஏதுவால், வால்னரர் வாலற்ற நரரென்னும் மக்கள் தோன்றி ஆறாவது தோற்றம் விரிந்து நின்ற மக்களுள் வாலவயதில் அறிவின் விருத்தியினின்ற வாலறிஞன் தனக்கோர் ஆசிரியன் இல்லாமலும் வரிவடிவமாகும் அட்சரபாஷை இல்லாமலும் தனதிடைவிடா விசாரிணையின் ஏதுவால் மெய்ப்பொருளை ஓதாமல் உணர்ந்து முக்காலமும் அறிந்த முநீந்திரனென்னும் ஏழாவது தோற்ற தேவனாக விளங்கியபடியால், சகல சங்கத்தோர்களும் முன் இந்திரரை ஆதிகடவுளென்றும், ஆதிபகவன் என்றும், ஆதிநாதன் என்றும், ஆதி ஈசன் என்றும், ஆதிசிவனென்றும், ஆதிமூலமென்றும், ஆதிகுருவென்றுஞ், சகல நூற்களின் காப்புகளிலும் அவரையே தொழுதுவந்தது மன்றி மற்றுமுள்ள மக்களும் அவரை வணங்கி மெய்யறம்பற்றி தீவினையையும் அகற்றிக்கொள்ள வேண்டுமென்னும் முயற்சியிலிருக்கின்றார்கள்.

மெய்ப்பாட்டியல் சூத்திரம்

தீவினையை வெல்லும் அறவாழி தெய்வம் அஞ்சல்

குறள்

அறவாழியந்தணன்தாள் சேர்ந்தார்க்கல்லார் / பிறவாழிநீந்தலறிது.

வீரசோழியம்

பீடுகொண்ட வார்தளிர் பிரங்குபோதி யானையெம்
பிரானை நாளுமேத்துவார் பிறப்பிறப்பிலார்களே.

போதிவேந்தன் சரணலால் அரண்புகோமென்று அரசர்கள் புடை சூழவும் மற்றுமுள்ள மாக்கள் சூழநிற்கவும் ஆலமர்க் கடவுள் திரிபேத வாக்கியங்களாகுந் திரிபீடங்களை வகுத்து அதன் முதன் மொழியாகும் பாபஞ் செய்யாதிருங்கோள் என்பதை கர்மபாகையாகவும், நன்மெய்க்கடை பிடியுங்கோள் என்பதை அர்த்தபாகையாகவும், இதயத்தை சுத்திசெய்யுங்கோள் என்பதை ஞானபாகை யாகவுமுள்ள பேதத்தின் உட்பொருளை விளக்கி மகடபாஷையுள் மறைந்துள்ள மும்மறை வாக்கியங்களை அவனவன் தேகங்களில் உணருமாறு தென்மொழியில் மெய்யறம், மெய்ப்பொருள், மெய்யன்பென்னும் அறம்பொருள் இன்பத்தை உணர்த்தி இப்பேரின்ப நிலையை அவனவன் அநுபவிக்க வேண்டியவனாதலின் அதையே அவன் முதிர்ந்த முத்தநிலை நிருவாணமென்றுங் கூறிவருங்கால் நாக சர்ப்பங்கள் அவர்தோளிலும் தாளிலும் புறண்டுலாவவும் யானைகள் தாமரை புட்பங்களைக் கொய்து வந்தர்ச்சிக்கவும் தனது மாணாக்கர்களில் சிலர் சித்துக்களை விளையாடவுங் கண்ட கருணாம்பரன் அவர்களை அருகிலழைத்து நீங்கள் செய்துவருஞ் சித்துக்கள் மெய்யறச் செயலாலும், மெய்ப்பொருள் உணர்ச்சி யாலும், மெய்யின்ப சுகத்தாலும் எண்பத்தொன்பது

சித்துக்களுந் தானே விளங்கும். அதைக் காணாமல் நீங்களே சித்தினெண்ணங்கொண்டு செய்வீர் களானால் டம்பம் அதிகரித்து மெய்ப்பொருள் மறையும் என்று கூறினார்.

அதை அவர்களுணராது ஆசிரியருக்கே சித்தினிலை தெரியாதென்றகங் கரித்த எண்ணத்தை அறிந்த அறிவன் விருட்சத்தடியிலிருந்து மறைந்து தான் வரும்வழியில் தனது பொற்குண்டலங்களை கழட்டிக் கொண்டு செப்புக் குண்டலத்தை செவியிலிட்ட வைந்தரக்கர்கள் முன் தோற்றினார்.

ஆதிவேதமென்னும் மூன்று பேதவாக்கியங்களை ஓதியவரும் அதில் மறைந்துள்ள நான்கு மறைப்பொருட்களாம் உபநிடதங்களை விளக்கியவரு மாகிய வேதியன் மரத்தடியிலிருந்து மறைந்தவுடன் அவ்விடம் நிறைந்துள்ள சகல மக்களுந் திகைத்து நின்றார்கள். அவர் ஆசனத்தைத் தாங்கினின்ற யானை, ரிஷபம், சிம்மம் இவைகள் அவரைத்தேடவும், அவர் தோளிலும் தாளிலும் புறண்டு விளையாடிக் கொண்டிருந்த சர்ப்பங்கள் ஒடிவந்து அவர் உட்கார்ந்து இருந்த மரத்தடியில் வந்து படமெடுத்து ஆடுகிறதும் வந்திருக்கும் மக்களைப் பார்த்துக் கவிழ்ந்து கொள்ளுவதுமாகியச் செய்கையிலிருந்ததுகள். அரசனை மரத்தடியில் காணாத மக்கள் சர்ப்பங்களை தரிசித்துக்கொண்டு போனார்கள். அவரை ஏந்தி செல்லும் ரிஷபமும் அவராசனத்தின் முன் வந்து சயனித்துக்கொள்ளுதலே தொழிலாயிற்று.

சீவகசிந்தாமணி

ஆதிவேதம்பயந்தோய் நீ யலர்பெய்மாரி யமர்ந்தோய் நீ
நீதி நெறியை உணர்ந்தோய் நீ நிகரில் காட்சிக் கிறையோய் நீ
நாதனென்னப்படுவோய் நீ நவைசெய்பிறவிக் கடலகத்துன்
பாதகமலந் தொழ வெங்கள் பசையாப்பவிழப் பணியாயே.

அருங்கலைச்செப்பு

வேதங்கடன்னை விளித்தான் மெய்யுரைத்தான் / போதிசேர் வேந்தன் புகழ்.

சூளாமணி

ஆதியங்கடவுளை யருமறை பயந்தனை, / போதியங் கிழவனை பூமிசை ஒதுங்கினை.
போதியங் கிழவனை பூமிசை ஒதுங்கிய, / சேதியஞ்செல்வ நின்றிருவடி வணங்கினம்.

சீவகசிந்தாமணி

குழலுடைச்சி கழிகைக் குமரன்தோளினை
கழலுடையிளையவர் கச்சின் வீக்கலி
னழலுடைக் கடவுளை யரவு சேர்ந்தென
விழவுடைமுது நகர் விலாவிக்கின்றதே

யாப்பருங்கலைக்காரிகை

வாளார்ந்த மழைத் தடங்கள் வனமுலைமேல் வம்பநுங்கக்
கோளார்ந்த பூணாகங்குழைபுறள கோட்டெருத்தின்
மாலைதாழ் கூந்தலார் வரன் முறையான் வந்தேத்த
சோலைதாழ் பிண்டிக்கீழ் சூழ்ந்தவர்தன் சொன்முறையான்

ஐந்துபேரும் அரவங்காட்டாது அடித்துபரிக்கும் அரக்கர்களாதலின் திகைத்துக்கண்ட பகவனின் தோற்றத்தால் தியங்கி தங்களால் செப்புக்குண்டலம் அளித்த தேசிகனென்று மயங்கி ஒருவருக்கொருவர் தங்கள் தங்கள் முகங்களைப் பார்த்துக்கொண்டு வாய் பேசாமல் நின்றார்கள்.

அதை உணர்ந்த பகவன் அரக்கர் ஐவர்களையும் நோக்கி அன்பர்களே! தங்கள் இருப்பிடங்கள் எங்கு, செய்யுந் தொழில்கள் என்னை, மனைவி மக்கள் எவ்விடம் என உசாவினார்.

அரவம் அடங்கியக்கால் அடித்து பரித்து ஏதோரிடமுமின்றி எதேச்சையாய்த் தின்று திரிபவர்களாதலின் பகவன் முகமலர்ச்சியையும், அவரது தேஜசையும், அன்பு மிகுத்த பார்வையும், மிருதுவான வார்த்தையையுங் கண்ட ஐந்தரக்கர்களுந் தங்களுக்குள் சதா குடிக்கொண்டிருந்த கள்ள விஷங்களாகும் அரவத்தை அகற்றி ஐயன் பாதத்தில் வீழ்ந்து எங்கள் அக்கிரமங்களைப் பொருக்க வேண்டுமென்று வணங்கினார்கள்.

அதை அறிந்த பகவன் ஐவரையும் எழுந்திரியுங்கோள் என்று கூறி ஓர் மரத்தடியில் உட்கார வைத்துக்கொண்டு அன்பர்களே தாங்கள் செய்துவந்த அக்கிரமங்கள் எவை யான் பொருக்க வேண்டியவைகள் யாதென உசாவினார்,

அதற்கு ஐவர்களும் எழுந்து வணங்கி ஐயனே, சில காலங்களுக்கு முன் தாங்கள் இவ்வழியில் வந்தபோது தமது செவியிலிருந்த பொற் குண்டலங்களைக் கழட்டிக்கொண்டு செப்புக்குண்டலத்தை செவியிலிட்டுப் போய்விட்டோம். அதே செப்புக்குண்டலத்தை தங்கள் செவியில் காணுங்கால் முன்பு யாங்கள் கழட்டிக்கொண்ட பொற்குண்டலத்திற்கு மேலானப் பிரகாசமும் ஒளிவுங் காண்கின்றபடியால் எங்களுள்ளங் கலங்கி யாங்கள் முன்செய்த அக்கிரமத்தைப் பொருக்கும்படி வேண்டினோமென்றார்கள்.

தாங்கள் முன்செய்த செய்கையை அக்கிரமம் என்றறிந்து கொண்டீர்களா என்றார்.

ஐயனே அதனை அக்கிரமம் என்றறிந்து கொண்டோம் என்றார்கள்.

இதுகாருந் தாங்கள் செய்துவந்த செய்கைகள் யாவும் அக்கிரமம் என்றறிந்துக் கொண்டீர்களா, கிரமமென்று அறிந்து கொண்டீர்களா என்றார்.

ஐயனே, யாங்கள் செய்து வந்த செய்கைகள் யாவும் அக்கிரமமே என்றார்கள்.

தாங்கள் இதுவரையும் அறியாதக் கிரமங்களையும், அக்கிரமங்களையும் இன்று எவ்வகையில் அறிந்து கொண்டீர்கள் என்றார்.

ஐயனே, தாங்கள் செவியிலிட்டக் குண்டலங்களே எங்களை சீர்பெறச் செய்துவிட்டதென்றார்கள்.

தாங்கள் எமக்கு அளித்த செப்புக்குண்டலந் தங்களை எவ்வகையில் சீர்படுத்தியது என்றார்.

ஐயனே, அச்செப்புக் குண்டலம் எங்களிடம் இருக்குமளவும் களிம்பேறி இருளடைந்திருந்தது. அதைத் தங்கள் செவியிலிட்டபோது களிம்பற்று ஒளி வீசுகின்றது.

அவ்வொளியைக் கண்ட எங்களுள்ளத்து இருளகன்று இதுகாரும் யாங்கள் செய்து வந்த செய்கைகள் யாவும் அக்கிரமமென்று உணர்ந்து வருந்துகிறோம் என்றார்கள்.

நிகழ்காலத்திரங்கல்

ஐந்தரக்கர் செய்துவந்த அறியாக் கொலைக்களவு / உந்தன் முகங்கண்டே ஒழிந்தது அதிசயமே.
ஒழிந்த உள்ளத்துளளக்களங்க முழுதகற்றி / பழுதற்ற சங்கம் பதித்தது அதிசயமே.

அன்பர்களே, தாங்கள் அக்கிரமத்தை அக்கிரமமென்று எதுவரையில் தெரிந்து கொண்டீர்களோ அதுவரையிலும் அவற்றை நீக்கி கிரமத்தில் நடவுங்கள்.

உங்கள் பொருளை வேறொருவன் அபகரிக்காதிருக்க வேண்டுமாயின் அன்னியன் பொருளை நீங்கள் அபகரிக்காதீர்கள்.

உங்களை ஒருவன் அடித்து துன்பஞ்செய்யாமலிருக்கவேண்டிய விருப்புண்டாயின் நீங்கள் மற்றவர்களை அடித்துத் துன்பஞ்செய்யாமலிருங்கள்.

உங்கள் மனைவியை ஒருவன் இச்சிக்கக்கூடாத எண்ணங்கொள்ளுவீர் களாயின் அன்னியன் மனைவியை நீங்கள் இச்சியாதிருங்கள்.

உங்களால் உங்கள் அறிவை விருத்தி செய்யாமல், மயங்கி நிற்பதை நீங்கள் அறிந்துக்கொள்வீர்களானால் இன்னும் உங்கள் அறிவை மயக்கக்கூடிய வஸ்துவை அருந்தாதிருங்கள்.

அன்னியர்கள் பொய்சொல்லி வஞ்சிப்பது உங்களுக்குப் பொருந்தா விடில் நீங்கள் அன்னியரைப் பொய்சொல்லி வஞ்சியாதிருங்கள்.

உங்களுக்குள்ள இராகத்துவேஷ மோகமென்னுங் களிம்புகள் அற்ற போது நீங்கள் அணிந்துள்ள செப்புக்களின் களிம்புகளுமற்றுக் கருணை பெருவீர்களென விளக்கிவிட்டு பிம்பாசார அரசநகரத்தை நாடிச்சென்றார். அரக்கர்கள் அனைவரும் ஐயனைப் பின்தொடர்ந்தார்கள்.

ஜெகத்குருவாகத் தோன்றிய நாதன் பிம்பாசார நகரத்துட் சென்று வீதியில் சிரங்கவிழ்ந்து இரு கைகள் அசைவாடாமல் ஒடுக்கத்தில் நடப்பதையும் அவரைப் பின்தொடர்ந்து நடக்கும் ஐவர்கள் அடக்கத்தையுங் கண்டவர்கள் திகைத்து அரசனிடம் ஓடி ஐயே, நமது நகர வீதியில் யாரோ ஓர் குமரன் வருகின்றார் அவரைப் பின்பற்றி ஐவர்கள் வருகின்றார்கள். அவர் வடிவையுந் தேஜசையுஞ் சொல்லத் தரமன்றென்று கூறுங்கால் அரசன் எழுந்து முன்சென்று

முன்னிவ்விடம் வந்திருந்த சக்கிரவர்த்தித் திருமகனென்று உணர்ந்து அருகில் சென்று முன்கண்ட வடிவில் மிகுத்த அவர்முக வதிகரத்தையும் கருணைமிகுத்த பார்வையையுங் கண்டவுடன் பாதம்பணிந்தெழுந்து வர்த்தமனங்களை விசாரித்துக்கொண்டே அரண்மனைக்குச் செல்லும் விஷயத்தை உணர்ந்த விமலன் அரசனைத் தடுத்து அரண்மனைக்கேகலை விடுத்து எதிரிலுள்ள ஓர் மலைமீதேறி நிழலில் உட்கார்ந்து மெய்யறமாகும் புத்ததன்மத்தை விளக்கிவருங்கால் அரசன் எக்காலுங் கேட்கா அமுதவாக்கியத்தால் ஆனந்தம் பெருகி ஐயனை வணங்கி மெய்யனே என்னால் ஆகவேண்டிய செயல்களுக்கு ஆக்கியாபித்தல் வேண்டுமென வாய்பொத்தி நின்றான்,

ஆதிநாதன் அரசனைநோக்கி உன்தேசமெங்கும் சத்திய தன்மம் பெருகி குடிகள் ஒழுக்கத்திலும் நீதிநெறியிலும் நிற்கவேண்டியதாதலின் வரிவடிவாம் அட்சரங்களைக் கற்றுக்கொண்டு தசபாரமாம் பாரதப்பத்தை இப்பாறையில் பதிவுசெய்து குடிகள் இதயத்தில் நிலைக்கச்செய்ய வேண்டுமென்று கூறினார்.

அருங்கலைச்செப்பு - சிகரப்பத்து

விம்ப அரசர்க்கு வரிவடிவம் ஈய்ந்து / வைம்மலை ஓர்ந்தானறன்.

அரசன் அவ்வாக்கியத்தை சிரமேற்கொண்டு வரிவடிவாம் வட அக்கரங்களையுந் தென்னக்கரங்களையுங் கற்று பாறையில் பதிக்குஞ் சீலத்தை வினவினான்.

அரசன் மனதில் வரிவடிவட்சரங்கள் பதியும்வரையில் அவ்விடமே புசித்து மலையில் தங்கி தன்மங்களைப் போதிக்குங்கால் திரண்ட கூட்டங்கள் மலைக்குவந்து தன்மத்தை வினவும் போக்குவருத்தில் இருந்தார்கள்.

அரசன் பாறைப்பதிவை வினவியகால் ஓர் பாறையைத் திருத்தி அடியில் குறித்துள்ள தசபாரங்களைப் பதியச்செய்தார்.

உங்களுக்குள்ள அன்பை மற்ற சீவராசிகளின் மீதருளி சீவர்களை விருத்தி செய்வீர்களாக.

உங்களுக்குள்ள பாக்கியத்தை நடுநிலைமையினின்று எழியமக்களுக்கீய்ந்து யீடேற்றுவீர்களாக

உங்கள் மனத்தைப் போகும் போக்கில் விடாமல் அடக்கத்தினின்று ஆண்டு கொள்வீர்களாக

உங்களுக்குள்ள ஒழுக்கங்களை வழுவடையாது நற்பாதையில் நடத்து வீர்களாக

உங்கள் மனைவியை மற்றவன் விரும்பாதிருக்க எண்ணுகிறவர்கள் அன்னியர் மனையாளை யிச்சியாதிருப்பீர்களாக

உங்கள் பொருளை மற்றவர்கள் களவாடாதிருக்க விரும்புகிறவர்கள் அன்னியர் பொருளை அபகரிக்காதிருப்பீர்களாக.

உங்களுடலுக்கு மற்ற சீவராசிகளால் கொலையும் தீங்கும் நேரிடாமல் இருக்க விரும்புகிறவர்கள் மற்ற சீவராசிகளை கொலையும் தீங்கும் செய்யாமலிருப்பீர்களாக.

உங்களறிவை விருத்தி செய்ய விரும்புவீர்களாகில் உங்களறிவை மயக்கும் வஸ்துக்களை அருந்தாதிருப்பீர்களாக.

உங்களை ஒருவன் பொய் சொல்லி வஞ்சியாதிருக்க விரும்புகிறவர்கள் நீங்கள் ஒருவரைப் பொய் சொல்லி வஞ்சியாதிருப்பீர்களாக.

உங்களிதயத்தில் எழும்பும் காம வெகுளி மயக்கங்களை எழவிடாமலும் தங்கவிடாமலும் அகற்றுவீர்களாக.

என்று ஒழுக்கங்களையும் சீலங்களையும் பதிவு செய்ததை உணர்ந்த அரசன் மற்றுமுள்ள பாறைகளிலும் பதியச் செய்து குடிகளும் அரசனும் தினேதினே உண்மெய் விசாரிணையிலிருந்தார்கள்.

பாரதப்பத்து

அன்பை பெருக்கியாருயிர்க்கூட்டி இன்பை விருத்திச்செயல்,
அறத்தை விருத்தியாருயிரோம்பல் புறமெய் நடுநிலையாம்.
மனத்தை ஒடுக்கி தாழுடலடக்கல் கனத்த கடனென்றறி,
உள்ள ஒழுக்கமுயரத்தோன்றல் விள்ளுஞ் சுகவழியாம்.
அன்னியர் மனைவி ஆசையேற்றல் உன்னியல் பாழ்மனையாம்.
ஊர் பொருளாசையுள்ளத் தெழுவல் பேர்மனை தற்பொருள் பாழ்.
தன்னுடல் கார்க்குந் தனையர்தரணி மன்னுயிர் காத்தல் மனு.
அறிவை பெருக்கி ஆற்றலடைவோர் தெறிவை மயக்கமறல்.

வஞ்சமகற்றி வாழ்வை விரும்பில் துஞ்சும் பொய்யையொழி.
காமவெகுளி மயக்கமகற்றி, ஏமவிதயத்திரு
பாரதம் பத்தும் பாறைப்பதிந்து சீரது தந்தான் சினன்.

மாரனைவென்று முத்திவழிக்கு முதல்வனாகவும் ஜெயமுத்தி என்னும் ஜின்முத்திரை அருளிய ஜினன் அம்மலையில் சிலநாள் தங்கி கலைவடிவும் சிலைபதிவும் அளித்தக்கால் (சினன் மலை என்றும், ஜினன் மலை என்றும்) சைனமலை என்றும் அதற்குப் பெயருண்டாயிற்று.

பரம்பரபோதம் - வீரசோழியம்

பேரரக்கரோரைவர்க்கரவமிழ்தம் பொழிந்தனையே
ஆரமிழ்த மணிநாகர்க்குலமுய்ய அருளினையே
வார்சிறைப் புள்ளரையர்க்கும் வாய்மெநெறி பகர்ந்தனையே
பார்மிசை இரைந்தும் பாவின்றி பயிற்றினையே.

சிலப்பதிகாரம்

வெங்கநெடு வேள்வில் விழாக்காணும்,
பங்குனி முழக்கத்துப் பனியரசு யாண்டுளன்.

சீவகசிந்தாமணி

காசறு துறவின்மிக்க கடவுளர் சிந்தைபோல,
மாசறு விசும்பின் வெய்யோன் வடதிசை யயனமுன்னி,
யாசறு நடக்குநாளுளைங்கணை கிழவன் வைகிப்,
பாசறை பரிவு தீர்க்கும் பங்குனி பருவஞ்செய்தான்.

மணிமேகலை

ஆலமர்ச் செல்வன் மதன்விழாக் கோல்கொள,
பாலமர் கொள்ளும் பங்குனி பருவங்,
காண்மினோவெனக் கண்டுநிற்குனரும்.

பின்கலைநிகண்டு

சிறந்திடுங் குன்ற வேந்தன் குணபுத்திரன் சீலநூலை,
மறஞ்செயாவாறே கற்று மதிமயக்கத்தினாலே,
குறைந்திடுந் தமது மேற்கோள் கொளீஇய மற்றது கரந்தே,
அறிந்ததும் அறியாதாரைப் போறலே அறிமடந்தான்.

விம்பாசார நகரமெங்கும் வரிவடிவ பாஷையும் தசபாரகோஷமும் பரவியவுடன் ஜினன் அந்நகரம்விட்டகன்று பூர்வம் பாலிபாஷையில் வாரணாசி என்னுங் காசிநகரடைந்து முதல் சங்கத்தை ஸ்தாபித்தார்.

பின்கலைநிகண்டு

தருமராசன் முந்நிந்திரன் சினன் பஞ்சதாரைவிட்டே
அருள்சுரந்தவுணர்க்கூட்டுந் ததாகதன் ஆதிதேவன்
விரவுசாக்கையனே சைனன் விநாயகன் சினந்தவிர்ந்தோன்
அரசுநீழலிருந்தோன் அறிஅறன் பகவன் செல்வன்.

வினாயகரென்னும் புத்தபிரான் பாரதத்தை மலையில் எழுதியுள்ளார் என்பதும் மகாபுராண பாடம்.

பாரதமென்பதுவும் தசபாரமென்பதும் பாரமிதமென்பதும் செய்யுட்களாய் இராது வாசகநடையில் எழுதியுள்ள தசசீலத்தின் பெயராம்.

விம்பாசாரன் தேசத்துள்ளக் குன்றின்மீது சிலநாள் தங்கி தசசீலங்களைப் பதிவுசெய்து தசரத தன்மசக்கரம் உருட்டியக்கால் குன்றை வேந்தனென்றும் வேறுபெயரால் அழைக்கப்பெற்றார். ஆதிநூலென்றும், ஆதிவேதமென்றும், முதநூலென்றும் வழங்கிய திரிபீட வாக்கியங்களை வரிவடிவாம் அட்சரங் களில்லாமல் ஒலிவடிவாம் வார்த்தையால் கூறவும் செவியால் கேட்கவும் இருந்தகாலத்தில் அவற்றை ஏழு பேதமாக வழங்கி வந்தார்கள். அதாவது, ஆதிநூல், எழுதாக்கேள்வி, ஆரணம், ஒத்து, சாசை, சுருதி, இருக்கு என்பதுவாம். வரிவடிவாம் அட்சரங்களையும் பகவன் ஈன்றருளியப் பின் அவர் ஆதிநூலை எழுவகைப் பெயரால் வழங்கி வந்தார்கள். அதாவது ஆகமம், ஆரிடம், பிடகம், தந்திரம், பனுவல், சமயம், சூத்திரம் என்பதுவாம். ஆதிவேதம், ஆதிநூலென வழங்கும் திரிபீடம், திரிபிடகமென்னும் திரிபேத வாக்கியங்கள் யாதெனில்.-

பாபஞ்செய்யாதிருங்கள், நன்மெய்க் கடைபிடியுங்கள்.
உங்கள் இதயத்தை சுத்திசெய்யுங்கோள் என்பதே.

பின்கலைநிகண்டு

ஆதிநூலெழுதாக்கேள்வி யாரணமொத்துச்சாகை
யேதமில் சுருதி தன்னோடிருக்கிவை ஏழும் வேதம்
வேதநூற் பொருளினாமம் விதித்திடு ஞானபாசை
யாதியாங் கருமபாகை யருத்தபாகையுமா மென்ப.
மெய்தெரிகாரணந்தான் வேதத்தின் ஞானபாகை
யுய்யுமெய் யறமுறைக்கு முற்றநல்லர்த்தபாகை
துய்யநற் செயலைப்பற்றல் சுத்தநற் கருமபாகை
வெய்யபௌ டிகமேயாதி விரியுப நிடதமாகும்.
ஏமமா மிரண்டாம் வேதமிசை தயித்திரியத்தோடு
தோமிலா யசுவாமென்று சொல்லுவர் நீதிநூலோர்
சாமமேமூன்றாம் வேதஞ் சாற்றும் பேரின்பப்பேற்றை
வாமமுன் மொழியொன் றில்லா அதர்வண வேதமாமே.
தந்துரைபுனைந்துரைத்தல் சார்ந்தபாயிரத் தினோடு
முந்திய பதிகமே நூன் முகவுரை முப்பேராகும்
அந்தமா மாகமத்தோர் யாரிடம் பிடகமற்றுந்
தந்திரம் பனுவலோடு சமயம் சூத்திரமு நூற்பேர்.

முன்கலைதிவாகரம்

உபநிடதம் வேதத்தின், உட்பொருள் நுட்பம்.

ஆதிபேத வாக்கியம் கன்மபாகை இதன் காரணம்; பாபஞ்செய்யாதிருத்தல் காரியம் மெய்ப்பொருளறிதல் இதன் பெயர். பொருட்பால் பௌடிகம் இருக்கென்று கூறப்படும். இரண்டாம் பேதவாக்கியம், அர்த்தபாகை இதன் காரணம் நன்மெய் கடைபிடித்தல் காரியம் மெய்யற உணர்ச்சி. இதன் பெயர் அறத்துப்பால், இயமம், தைத்தரியமென்னப்படும். மூன்றாம் பேதவாக்கியம், ஞானபாகை இதன் காரணம் இதயசுத்திசெய்தல் காரியம் மெய்யின்ப மாம் பேரின்ப உணர்ச்சி. இதன் பெயர் காமபபால் சாமமென்னப்படும். பேதவாக்கியங்கள் மூன்றேயன்றி நான்காவது பேதவாக்கியமில்லை. ஒரு பொருள் ஏகமென்னும் வீட்டுப்பேரை குறிக்கும் நிருவாணமாம். பேரின்ப நிலையை நான்காவது பேதமெனக் கூறியபோதிலும் மொழிக்குமொழி ருசிக்கும் மும்மொழியாம் மூன்று பேதவாக்கியங்களன்றி நான்காவது பேதவாக்கியங் கிடையா. அறம் பொருள் இன்பத்திற்கு ஆதாரமாம் வீடுபேற்றை அவனவன் உணர்ந்து பேரின்பஞ் சுகிக்க வேண்டியவனாதலின் அதன்பெயர் அதர்வண மென்று கூறிவிட்டார்கள். ஒன்றென்னும் வீடுபேற்றை அடைதற்கு மும்மொழிகளாம் மூன்றுவாக்கியங்களும் மாறுபொருளால் நான்கு பேதமாயிருந்தது கொண்டு வடமொழியில் பேதமென்றும், தென்மொழியில் வேதமென்றுங் கூறினார்கள். மூன்று பேதவாக்கியங்களும் வீடும் விளங்குதற்கு வாக்கியமொன்றுக்கு எட்டு உபநிட்சயதார்த்தங்களாக நான்கு வாக்கியங்களுக்கும் முப்பத்திரண்டு கலையாம் உபநிடதங்களை விளக்கினார்.

பாபமென்பதெவை

உபநிடதமென்னும் உபநிட்சயார்த்த முதலெட்டு அருங்கலை செப்பு - கர்மபாகை அஷ்டகம் முதல்வேதவாக்கியம். பாபஞ் செய்யாதிருத்தல்.- 1. சீவர்களவத்தைச் செய்தொழில் யாவும், பாவமஃதென்றேயறி. 2. ஏனையோர் பொருளை எடுத்துமகிழ்தல், ஊனமுப்பாவமதாம். 3. உள்ளத்தீங்கை யுளத்தே நிறப்பல், கள்ளப் பாவமதாம். 4. அன்னியர்தார வாசை பெருக்கம், பின்னிய பாபப் புணை. 5. புலை யுனிச்சைப் பேணி வகுத்தல், கொலையாம் பாபக்குழி. 6. கண்ணியருள்ளங் கலங்கக்கூறல், பண்ணிய பாவமுதல். 7. நெஞ்ச மொளித்த வஞ்சம் யாவும், புஞ்செய்ப் பாவப்புனல். 8. அறிவை மயக்கி யாருயிர் வதைத்தல், நெறியை அகற்றும் பாவம்.

1. அன்னியப் பிராணிகளின்மீது கோபங்கொண்டு துன்பஞ்செய்தல் பாபம். 2. அன்னியர் பொருளை அவர்கள் அனுமதியின்றி அபகரித்தல் பாபம். 3. அன்னியரைக் கெடுக்கவேண்டுமென்று தீங்குநினைத்தல் பாபம். 4. அன்னியர்

ஸ்திரீகளை அபகரித்தல் பாபம். 5. அன்னிய சீவப்பிராணிகளைக் கொலைசெய்தல் பாபம். 6. அன்னியர்மனம் புண்பட வார்த்தை பேசுதல் பாபம். 7. அன்னியர்களை வஞ்சித்து வருந்தச்செய்தல் பாபம். 8. அன்னியர் அறிவை மதுவூட்டி மயங்கச்செய்தல் பாபம்.

நன்மெய் என்பதெவை

உபநிடதமென்னும் உபநிட்சயார்த்தம் இரண்டாமெட்டு. அருங்கலைச்செப்பு.- அர்த்தபாகை அஷ்டகம்.

இரண்டாம் பேதவாக்கியம். நன்மெய்க் கடைபிடித்தல்.- 1. ஆருயிர் துன்பமகற்றி ஆற்றல், பேருயிர் நன்மெய்ப்புகழ். 2. ஈந்து மளித்தும் ஏற்காதிருத்தல், சாந்தநன்மெய்த் துணை. 3. தன்னுயிர் தவிர்த்து மன்னுயிர் ரோம்பல், உன்னிய நன்மெய்யுறன். 4. அன்னியர் தாரமன்னை தங்கை, உன்னு நன்மெய்யுறல் 5. கொலையும் புலையுங் கொள்ளாதகற்றல், நிலையாம் நன்மெய் நிழல். 6. அமுதவாக்கு மன்பிநோக்குங், குமுத நன்மெய்க் குடை 7. வாக்கின் வாய்மெ வளம்பெற வோதல், நோக்கு நன்மெய் நெறி. 8. அமுதமூறு மறிவையேற்றல், சமய நன்மெய்ச்சுழி.

1. அன்னியபிராணிகளுக்குண்டாகுந் துன்பங்களை நீக்கி ஆதரித்தல் நன்மெய். 2. அன்னியருக்கில்லாப் பொருளீய்ந்து தன்னைப்போல் சீர்பெறச்செய்தல் நன்மெய் 3. அன்னியர்களைத் தன்னவர்கள் போல் நேசித்து ஆதரிப்பது நன்மெய் 4. அன்னியர் மனைவிகளை தாய் தங்கையர்போல் பாதுகாத்தல் நன்மெய் 5. அன்னிய சீவப்பிராணிகளைக் கொலைச்செய்யாமலும் கொலைக்கேவாமலும் இருப்பது நன்மெய் 6. அன்னியர் மனமும் உடலும் பூரிக்கும் மிருதுவான வார்த்தையாடுதல் நன்மெய். 7. அன்னியர்களுக்கு உபயோகம் உண்டாகும் வார்த்தைகளைப் பேசி விருத்திபெறச்செய்தல் நன்மெய் 8. அன்னியர்களின் அறிவைப் பெருகச் செய்து அமுதுண்ணச்செய்தல் நன்மெய்.

இதயசுத்தம் என்பதெவை

உபநிடதமென்னும் உபநிட்சயார்த்த மூன்றாமெட்டு. அருங்கலைச் செப்பு.- ஞானபாகை அஷ்டகம். மூன்றாம் பேதவாக்கியம். இதயத்தை சுத்தி செய்தல்.- 1. துள்ளுங்கோபம் அகற்றியாற்றல், உள்ளக் களங்கமறல். 2. காமமகற்றி கருணை விளித்த, லேமவுள்ளத்து ளிர் 3. மயக்கமகற்றி வானறி ஓம்பல், சுயம்பாமுள்ளக் கலை 4. வாழ்க்கைக் கருதி வஞ்சமகற்றல், சூழ்ச்சியுள்ளத் தவம் 5. மெய்ப்பொருள் நோக்கி வீணகமாற்றல், துய்யவுள்ளச் செயல் 6. அழியா இன்ப ஆற்றல் அடைதல் விழியா முள்ளக்குறி 7. அடக்கமமைந்து வாடமொழிதல், துடைக்குமுள்ளக்கரை 8. தீங்கினுருவத்தானைத் தேற்றல், பாங்கினுள்ளப் பயன்.

1. தன்னிடத்துண்டாங் கோபத்தை தங்கவிடாமல் அகற்றி சாந்தத்தைப் பெருக்குதல் இதய சுத்தம் 2. தன்னிடத்துண்டாங் காமத்தை தங்கவிடாமல் அகற்றி அன்பைப் பெருக்குதல் இதய சுத்தம் 3. தன்னிடத்துண்டாம் மயக்கங்களை அகற்றி அறிவை வளரச்செய்தல் இதய சுத்தம் 4. தன்னிடத் துண்டாம் வஞ்சினம் பொறாமெய்க் குணமகற்றி சகலர் சுகவாழ்க்கையை விரும்புதல் இதய சுத்தம் 5. தன்னிடத்துண்டாம் பொய்ப்பொருளாசையை அகற்றி மெய்ப்பொருளுசாவுதல் இதயசுத்தம். 6.தன்னிடத்துண்டாம் சிற்றின்பச் செயல்களை அகற்றி பேரின்பத்தை நாடல் இதய சுத்தம் 7. தன்னிடத் துண்டாம் டம்பச்செயல்களை அகற்றி அடக்கத்தி நிற்றல் இதய சுத்தம் 8. தன்னை வஞ்சித்து துன்பப்படுத்தியவனை அன்புடன் ஆதரித்தல் இதய சுத்தம்.

வீடு முத்தி நிருவாணம் என்பதெவை

உபநிடதமென்னும் உபநிட்சயார்த்த நான்காவதெட்டு. அருங்கலைச் செப்பு.- நிருவாண அஷ்டகம்.

நான்காம் வேதவாக்கியம் வீடுபேறு.- 1. பற்றுக்களற்றுப் பழம்பொருளாற்ற, லுற்ற முத்திநிலை 2. தூங்கா விழிப்பிற் சுகநிலை காண்டல், பாங்காமுத்திப்பலன்

3. பிறப்பு இறப்பின் பேற்றை செயித்தல், துறப்பின் முத்தி சுகம் 4. காமம் வெகுளி மயக்கமகற்றல், சேமமுத்திச்செயல் 5. தோற்றவொடுக்க மனத்தின் செயலை, யாற்றல் முத்தி சுகம் 6. மரண பயத்தை மாற்றி மகிழ்தல், திரண்ட முத்தித் திடம் 7. உண்மெய் கண்டு உள்ள மகிழ்தல், திண்ண முத்தித் திறம் 8. தானே தானே சுயம் பொளியாதல், வானோர் முத்தி வளம்.

1. தன்னிடத்துண்டாம் பற்றுக்களற்று சதானந்தத்திலிருப்பது நிருவாணம் 2. தன்னை மறைக்கும் நித்திறையை செயித்து சதாவிழிப்பிலிருப்பது நிருவாணம் 3. தன்னை மாறி மாறி பிறக்கச்செய்யும் மரணத்தை செயித்த நிலை நிருவாணம் 4. தன்னை சதா துக்கத்தில் ஆழ்த்தும் காம வெகுளி மயக்கங்களை அறுத்த நிலை நிருவாணம் 5. தானே தோன்றுகிறதும் கெடுகிறதுமாகிய மனதை தோன்றாமலுங் கெடாமலும் அலையற்ற கடல்போல் நிற்பது நிருவாணம் 6. தனக்குண்டாகும் மரணபயம் செநநபயமற்று யாதுக்குங் கலங்காமல் நிற்பது நிருவாணம் 7. தன்னுள் தானாய் விளங்கும் உண்மெய்யாம் பேரின்பமே நிருவாணம் 8. தானே தானே சுயம்பிரகாச சதாநித்திய சித்தாம் அகண்டநிலையே நிருவாணம்.

இவ்வகையாக சதுர்முகனென்னும் பெயர்பெற்ற சாக்கையமுநிவர் அருளிய பேதவாக்கியங்களும் அதன் உபநிட்சயார்த்தங்களென்னும் 32 உபநிடதங்களும் வடமொழியில் பொருள் மறைந்து மறைகளென்னும் பெயர்கொண்டிருந்த முதநூலாகுந் திரிபிடகத்திற்கு வழி நூலாகும் முப்பாலென்னுந் திரிக்குறளை சாக்கையகுல நாயனார் செந்தமிழில் இயற்றி தெளிவடையச்செய்தார்.

வீரசோழியம்

எண்பத்தொன்பது சித்தியியல் பினாலுளவென்று
பண்பொத்த நுண்பொருளை பாரறியப்பகர்ந்தனையே
துப்பியன்ற குணத்தோடு தொழில்களால் வேறுபட
முப்பதின்மேலிரண்டுகலை முரைமெயான் மொழிந்தனையே.

திருவள்ளுவர் மாலை

இன்பம் பொருளறம் வீடென்னும் இந்நான்கும்
முன்பறியச்சொன்ன முதுமொழிநூன் - மன்பதைகட்
குள்ளவரிதென்றவை வள்ளுவருகலங்
கொள்ள மொழிந்தார் குறள்.
நான்மறையின் மெய்ப் பொருளை
முப்பொருளா நான்முகத்தோன்
றான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த நூன்முறையே
வந்திக்கச் சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ்
சிந்திக்க கேட்கச்செவி.

7. சதுர் சத்ய காதை

பகவன் காசியை அடைந்து தரும சங்கத்தை நாட்டி திரிபீடங்களாகுந் திரிபிடக மூன்று பேதவாக்கியங்களையும் ஒரு வீடுபேற்றையும் போதித்து ஒவ்வோர் பேதவாக்கியங்களுக்கும் எட்டு உபநிட்சயார்த்தங்களென்னும் முப்பத்திரண்டு உபநிடதங்களையும் விளக்கி வரிவடிவாகும் வடமொழி தென்மொழிகளையுமூட்டி ஒவ்வொருவர் இதயத்திலுமுள்ள இருளை அகற்றி தருமத்தைப்பரவச்செய்தப் பேருபகாரத்தாலும் அத்தருமமானது ஏழைகளுக்கும், தனவான்களுக்கும், விவேகிகளுக்கும், அவிவேகிகளுக்கும், சுகதேகிகளுக்கும், பிணியாளருக்கும் பொதுவாஞ்சுகமடையுஞ் சுகவழியாகக்கண்ட ஒவ்வொரு வரும் அவரைக்காசியீசனென்றும், காசி விசுவேசனென்றும், காசி விசுவநாதரென்றுங் கொண்டாடியதுமன்றி சீவராசிகளின் ஆறாவது தோற்ற மநுக்களுள் ஏழாவது தோற்ற முதற்றேவனாகத் தோற்றியபடியால் ஆதிதேவ னென்றும், முன்கடவுளாகத் தோற்றியபடியால் ஆதியங்கடவுளென்றும், முதலிந்திரராகத் தோற்றியபடியால் முன்னிந்திரரென்றும், முதல்நாதனாகத் தோற்றியபடியால் ஆதிநாதனென்றும் போற்றி அரசனாகப் பிறந்து சற்குருவாக விளங்கிய சம்பிரமத்தை பலதேச அரசர்கள் முதல் குடிகள் வரையில் கொண்டாடி வந்தார்கள்.

சிவஞானவிளக்கம்

பச்சைமரத்தாணிபோல் பாய்ந்திருந்த மும்மலத்தைத்
தைச்சிருந்த மும்மலத்தைத் தானீக்கி - அச்சமிலாத்
தானீன்ற தற்பரத்தைத் தந்தருளி எந்தனுக்கு
கோனாகி வந்தான் குரு.

மணிமேகலை

காசின்மாநகர் கடல்வயிறு புகாமல்
வாசவன் விழாக்கொள் மறவேனென்று
காயங் கரையெனும் பேரியாற்றடைகரை
மாயமின் மாதவன் தன்னடி பணிந்து
தருமங்கேட்டு தாடொழுதேத்தி.

சீவகசிந்தாமணி

முனிவரு முயன்று வான்கண்மூப்பிகந்துடையவின்ப
கனிகவர் கண்ணுமேத்தக் காதிகணறிந்த காசித்
தனிமுதற்கடவுட் கோயிறான் வலங்கொண்டு செல்வான்
குனிதிரை முளைத்த வெய்யோன் குன்றுசூழ் அதனை ஒத்தான்.

பேதவாக்கியங்களையும், உபநிடதங்களையும் விளக்கிய பகவன் அவற்றை உணரவேண்டியதற்குக் காரணமாகும் நான்கு வாய்மெகளை விளக்க ஆரம்பித்தார்.

அந்நான்கு வகை வாய்மெய் உணர்ச்சியே நான்கு பரிசுத்த சத்தியங்களென்று கூறப்படும். இப்பரிசுத்த சத்தியமானது நேராகக் காட்டக்கூடியதும், உரைக்கக் கூடியதும், வெளியரங்கமானதும், ஆழ்ந்து பார்க்கக்கூடியதும், பிரத்தியட்சமாய்க் காட்டக்கூடியவைகளுமாம்.

நான்கு பரிசுத்த சத்தியங்களாவது.- பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு இவை நான்கிலுந் துக்கமுண்டாமென்பது சத்தியம். இவற்றை விசாரிக்கப்புகின், சப்பே சது சக்யங். ஜானாஸி கரோதீதி ஜீனோ.

சப்பேசதுசத்யங்.

நான்கு பரிசுத்த சத்தியங்களாவது

1. துக்கா சத்யா
2. துக்காசமுத்ய சத்யா
3. துக்க நிரோத சத்யா
4. துக்க நிரோத காமினிபிரதி பதா சத்யா என்னப்படும்.

1. துக்கம்
2. துக்கோற்பத்தி
3. துக்க நிவாரணம்
4. துக்க நிவாரணமார்க்கம்

மணிமேகலை

துன்பந்தோற்றம் பற்றே காரண,
இன்பம் வீடே பற்றிலி காரண,
மொன்றிய உரையே வாய்மை நான்காவது

சீவகசிந்தாமணி

நூனெறி வகையி நோக்கி நுண்ணிதி னுழைந்து தீமெப்,
பானெறி பலவுநீக்கிப் பரிதியங் கடவுளன்ன,
கோனெறி தழுவினின்ற குணத்தொடு புணரின்மாதோ,
நானெறிவகையினின்ற நல்லுயிர்க்கு அமிர்தமென்றான்.
அருமெயினெய்தும் யாக்கையும் யாக்கையதழிவுந்,
திருமெய் நீங்கிய துன்பமுந் தெளிபொருட் டுணிவும்,
குருமெய் எய்திய குணநிலை கொடைபெறு பயனும்,
பெருமை வீட்டொடும் பேசுவல் கேளிது பெரியோய்.

இந்நான்கு வாய்மெயினாழ்ந்த சத்தியத்தை கண்டடைவது மிக்கக் கஷ்டமாயிருப்பினும் உண்மெயில் உள்ளன்பு உள்ளவன் தனது சாந்தத்தையே ஈகையாகக் கொடுக்கக்கடவன்.

உலகம் சுகத்தையே நாடுகின்றது. சுகத்தில் சிக்குப்பட்டிருக்கிறது. சுகமயக்கத்தில் சுழல்கின்றது. இவ்வகை விழிப்பதும் மறைப்பதும் தோன்று வதுங் கெடுவதுமாகிய சுகத்தை நாடுகிறவர்களுக்கும் அதே சுக மயக்கத்திலிருப்ப வர்களுக்கும் ஆசையை ஒழித்து நிருவாணசுகத்தை அடைவது கஷ்டமா யிருக்கும். அதன் சத்தியம் விளங்கவும் விளங்காது.

முதலாவது துக்க சத்யம்

ஓ! சகோதிரர்களே! துக்கமென்பது தூய்மெயான சத்தியம். அஃது யாதென்பீரேல்:-

பிறப்பது துக்கம், பிணி துக்கம், மூப்பு துக்கம், மரணம் துக்கம், பொருளை சம்பாதித்தலுந் துக்கம், அது அழிதலுந் துக்கம், வேண்டிய பொருள் கிட்டாதது துக்கம், சுருக்கமாகச் சொல்லின் ஐம்புலப் பற்றுக்களே துக்கமென்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! பிறப்பென்பது யாதெனில்:-

உற்பேதம் பிறப்பு, கற்போற்பத்தி பிறப்பு, பஞ்சஸ்கந்த உருவமாதல் பிறப்பு, சுருக்கத்தில் ஐந்து புலன்கள் சேர்ந்து உருவமைந்து தோற்றலே பிறப்பென்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! பிணி என்பது யாதெனில்:-

ஆசையாம் அதிபோகத்தால் உண்டாதல் பிணி, அல்லலடைதற் பிணி, ஆறா சினம் பிணி, அதிபுசிப்புப் பிணி, சுருக்கமாக தேகம் சகிக்கக்கூடாத துன்பமடைதலைப் பிணி என்னப்படும்.

ஓ! சகோதிரர்களே மூப்பென்பது யாதெனில்:-

முதிர்ந்த வயதுற்று தள்ளாடல் மூப்பு, நரை திறை தோன்றுதல் மூப்பு, நாடிகள் தளர்தல் மூப்பு, சுருக்கத்தில் ஐம்புல நுகர்ச்சிகள் குறைந்துக்கொண்டு வருதலே மூப்பென்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! இறப்பென்பது யாதெனில்:-

பிறிவு இறப்பு, மறைதல் இறப்பு, தேகம் நீற்று நீராதல் இறப்பு, இருளடைதல் இறப்பு, சுருக்கத்தில் பஞ்சஸ்கந்தங்களின் பிரிவுகளாற்றாது ஐம்புல நுகர்ச்சிகளால் பஞ்சாவஸ்தைகள் தோன்றி மடிதலை இறப்பென்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! பஞ்சஸ்கந்தங்கள் யாதெனில்:-

முதலாவது ரூபஸ்கந்தம். இதையே தேகமென்னப்படும். இரண்டாவது வேதனா ஸ்கந்தம். இதையே உணர்ச்சி என்னப்படும். மூன்றாவது சன்ஹா ஸ்கந்தம். இதையே அறுவகை இந்திரியங்களின் உணர்ச்சிகள் என்னப்படும். நான்காவது சங்காரா ஸ்கந்தம். இதையே மனோவாக்குக் காயங்களால் உண்டாகும் உணர்ச்சிகள் என்னப்படும். ஐந்தாவது விக்ஞானா ஸ்கந்தம். இதையே அறிவென்னப் படும். இவ்வைந்தும் அமைந்துள்ள உருவத்தையே வடமொழியில் ஆன்மனென்றும், புருஷனென்றும், தென் மொழியில் மானிடனென்றும், மகனென்றுங் கூறப்படும்.

ஓ! சகோதிரர்களே! ரூபஸ்கந்தங்கள் யாதெனில்:-

அஃது நான்கு வகைப்படும். முதலாவது படவிதாது. இரண்டாவது அபோதாது. மூன்றாவது தேஜோதாது. நான்காவது வாயுதாது என்னப்படும்.

முதலாவது, படவிதாதுவின் விவரம். உறுதியானதுங் கனத்ததுமான உரோமம், நகம், பல், தோல், சதை, நரம்பு, எலும்பு, ஈரல், இருதயம், குண்டிக்காய், மண்ணீரல், நுரையீரல், இரைக்குடல், குடல், மணிக்குடல் மற்றும் தடித்த உருவங்களுள்ளதை படவிதாது என்னப்படும்.

பண்டி அல்லது வண்டி என்றபோது சக்கரம், இருசு, ஏற்கால், முதலியவைகள் சேர்ந்துள்ள வஸ்துவாகும். அங்ஙனமின்றி இருசைமட்டும் வண்டி என்று கூறலாகா. வீடென்றபோது கல், மண், கதவு, சன்னல், தூண் முதலியவைகள் சேர்ந்துள்ள வஸ்துவாகும். அங்ஙனமின்றி தூணைமட்டும் வீடென்று கூறலாகா. சதை, எலும்பு, நரம்பு முதலிய படவிதாதுக்களே ரூபஸ்கந்த முதலாதாரங்களாகும்.

சகோதிரர்களே! அப்போதாதென்பது யாதெனில்: உதிரம், கபம், சீழ், வியர்வை, நிணநீர், கண்ணீர், சிறுநீர், கீலான் முதலியவைகளேயாம். தேஜோதாதுவென்பது யாதெனில்: கோபாக்கினி, பசியாக்கினி, காமாக்கினியாகும் மூன்றுக்கும் ஆதாரமாகிக் கீல்களிலுள்ள ஊன்களை உருக்கி நீட்டவும், முடக்கவும் முன்னாதாரமாகு முன்னனலென்னப்படும். வாயுதாதென்பது யாதெனில்: சுவாசமென்னும் பெயர்கொண்டு உதிரத்தைப் பரவச்செய்தற்கு

ஆதாரமாகும். ஆவி என்னப்படும். இத்தியாதி மண், நீர், தீ, காற்று சேர்ந்தவைகளை உருவமென்றும், ரூபமென்றும், தேகமென்றுங் கூறப்படும்.

ஓ! சகோதிரர்களே! வீடென்றபோது கல், மண், கதவு, தூண், சன்னல் முதலியவைகள் சேர்ந்துள்ள வஸ்துவாகும். அதேபிரகாரம் நரம்பு, சதை, தோல், எலும்பு முதலியவைகள் சேர்ந்துள்ளதையே நாம் தேகமென்றுங் கூறுகிறோம்.

ஓ! சகோதிரர்களே! சுத்தபார்வையையுடைய ஒருவன் எப்பொருளையும் பார்க்காமலும் கண்ணிற்கும் பொருளுக்கும் சம்பந்தமில்லாதிருக்குமாயின் அதற்குத் தக்க உணர்ச்சியின் ரூபந்தோன்றா.

சுத்த பார்வையை உடைய ஒருவன் ஒரு பொருளைப்பார்த்து கண்ணிற்கும் பொருளுக்கும் சம்பந்தமில்லையாயின் அப்போதும் அதற்குத் தக்க உணர்ச்சியின் ரூபந்தோன்றா.

ஓ! சகோதிரர்களே! சுத்தபார்வையையுடைய ஒருவன் ஒரு பொருளைப் பார்த்து கண்ணிற்கும் பொருளுக்கும் சம்பந்தமிருப்பின் அப்போது அதற்குத்தக்க உணர்ச்சியின் ரூபந்தோன்றும். ஆகவே ஏதுக்குத் தக்க உணர்ச்சி உதிக்கின்றது. எதுவில்லாவிடில் உணர்ச்சி தோன்றா. உணர்ச்சி உதிப்பதற்கு ஏதுக்களே காரணம்.

1. கண்ணுக்கு உருவந்தோன்றி உதிக்கும் உணர்ச்சிக்கு ஸக்சுவிக்ஞானம் அல்லது ஸக்சு பிரசாதரூபமென்றும், 2. காதிற்கு சப்தம்கேட்டு அதினின்று உதிக்கும் உணர்ச்சிக்கு சுரோட்சவிக்ஞானம் அல்லது சுரோட்சபிரசாத ரூபமென்றும், 3. மூக்குமுகர்ந்து அதினின்று உதிக்கும் உணர்ச்சிக்கு ஆக்ராஹணவிக்ஞானம் அல்லது கராஹணபிரசாத ரூபமென்றும் 4. நாவு ருசி பார்த்து அதினின்று உதிக்கும் உணர்ச்சிக்கு சுவை விக்ஞானம் அல்லது தீவபிரசாத ரூபமென்றும், 5. தேகத்தோடு தேகம் உராய்ந்து அதினின்று உதிக்கும் உணர்ச்சிக்கு காயவிக்ஞானம் அல்லது காயபிரசாத ரூபமென்றும், மனத்தோடு எண்ணம் கலந்து அதினின்று எழும் உணர்ச்சிக்கு மனோ விக்ஞானம் அல்லது மனோபிரசாத ரூபமென்றுங் கூறப்படும்.

(விக்ஞானம்)1. ஒவ்வொரு க்ஷணத்திலும் தேகத்தினின்று உதிக்கும் உணர்ச்சிகள் யாவும் ரூபஸ்கந்தத்தைச் சேர்ந்தவை. 2. எதெது உணர்ச்சியை உண்டாக்குகின்றதோ அவை வேதனாஸ்கந்தத்தைச் சேர்ந்தவை. 3. எதெது புலன்களின் உணர்ச்சியை உண்டாக்குகின்றதோ அவை சன்ஹாஸ்கந்தத்தைச் சேர்ந்தவை 4. எதெது மனோவாக்கு காயத்தினின்று உணர்ச்சியை உண்டாக்குகின்றதோ அவை சங்காராகந்தத்தைச் சேர்ந்தவை. எதெது சித்தத்தின் உணர்ச்சியைச் சேர்ந்ததோ அவை யாவும் விக்ஞனஸ்கந்தத்தைச் சேர்ந்தவை.

ஓ! சகோதிரர்களே! தோற்றத்தையும் அதன் மடிவையும் உணர்ச்சியின் வளர்ச்சியையும் அதன் விருத்தியையும் ரூபஸ்கந்தம், வேதனாஸ்கந்தம், சன்ஹாஸ்கந்தம், சங்காராஸ்கந்தம் இவைகளின் தனித்தனி வேறுபாடுகளை ஒருவன் விவரித்துக் கூறுவது அசாத்தியம்.

ஓ! சகோதிரர்களே! சகலமும் அநித்யமாயிருக்கிறது. தேகம் அநித்யம், உணர்வு அநித்யம், காட்சி அநித்யம், அறுவகை இந்திரியங்களால் உண்டாகும் உணர்ச்சி அநித்யம், தோன்றி கெடுவதும் விசாரித்து மயங்குவதுமாகிய அறிவும் அநித்யம். ஆனால் எது அநித்யமாயிருக்கின்றதோ அதே துக்கம். நிலையற்றதும் வருத்தமுள்ளதும் மாறக்கூடியதுமான இவைகளை ஒருவன் இது என்னுடையது இதே நானாயிருக்கின்றேன் இதே நான் என்று கூற பாங்கிறாது.

ஓ! சகோதிரர்களே! எதெது ரூபஸ்கந்தத்தைச் சேர்ந்ததாயிருந்தாலும், வேதனாஸ்கந்தத்தைச் சேர்ந்ததாயிருந்தாலும், சன்ஹாவைச்சேர்ந்ததா யிருந்தாலும், சங்காராவைச் சேர்ந்ததாயிருந்தாலும் அல்லது விக்ஞானத்தைச் சேர்ந்ததா யிருந்தாலும், ஒருவனுடையதாயிருந்தாலும், மற்றவனுடையதாய் இருந்தாலும், சுத்தமாயிருந்தாலும், அசுத்தமாயிருந்தாலும், உயர்ந்திருந்தாலும், தாழ்ந்திருந்தாலும், தூரமிருந்தாலும், அருகிலிருந்தாலும் சத்தியத்தின்படி நுண்ணறிவால் உள்ளதை உள்ளபடி தெரிந்தவன் அவை தன்னுடையதல்ல என்றும் அவனுடையதல்லவென்றும் நான் என்பது கிடையாதென்றுங் கூறுவன்.

ஓ! சகோதிரர்களே! எவனொருவன் தன் தேகத்தால் ஆனந்தப்படு கின்றானோ உணர்வில் ஆனந்தப்படுகின்றானோ காட்சியில் ஆனந்தப்படு கின்றானோ அறுவகை இந்திரியங்களால் உண்டாகும் உணர்ச்சி நிலையினால் ஆனந்தப்படு கின்றானோ அறிவினில் ஆனந்தப்படுகின்றானோ அவன் துக்கத்தில் ஆனந்தப்படு கின்றான். துக்கத்தில் எப்போது ஆனந்தப்படுகின்றானோ துக்கத்திலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. ஆகையால் ததாகதன் கூறுவேனாக.

ஓ! சகோதிரர்களே! இவ்வகை துக்கத்திலுள்ள ஒருவன் எப்படி நகைக்கமுடியும். உலகப் பொருட்களின்பேரில் இச்சைகொண்டு எப்படி ஆனந்திக்க முடியும். உண்மையாகவே இருளிலிருக்கின்றான். உங்களில் வயதுள்ள ஆணோ பெண்ணோ எண்பது, வயதுள்ளவனோ உள்ளவளோ, தொண்ணூறு வயதுள்ளவனோ உள்ளவளோ, நூறுவயதுள்ளவனோ உள்ளவளோ இவர்களை நீங்கள் பார்த்த தில்லையா? விருத்தாப்பியத்தால் மெலிந்தவர்களையும், கூனர்களையும், பார்த்த தில்லையா. அதேவிதமாறாது உங்களுக்கும் சம்பவிக்குமென்று உணரவில்லையா. அதே மூப்பு உங்களுக்கும் வருமென்று சிந்திக்கவில்லையா. வயதுள்ள ஆணோ பெண்ணோ பெருத்த வியாதிகளால் துன்பப்படுவதைப் பார்த்ததில்லையா. பிணியால் சூழப்பட்டுள்ளவர்களை நிறுத்தி வைத்தாலும் நிற்க சக்தியற்று விழுவதை நீங்கள் பார்த்ததில்லையா. அதேவிதமாய் உங்களுக்கும் சம்பவிக்குமென்று உணரவில்லையா. அதே பிணி உங்களுக்கும் வருமென்று சிந்திக்கவில்லையா. ஆணோ பெண்ணோ இறந்து இரண்டு அல்லது மூன்று நாள் இருந்து தேகம் உப்பலிட்டு நீலநிறமாக மாறி கேவலஸ்திதி அடைவதை நீங்கள் பார்த்ததில்லையா. அதே இறப்பு உங்களுக்கும் வருமென்று சிந்திக்கவில்லையா?

ஓ! சகோதிரர்களே! இந்த சம்சாரம் ஆதியந்தமில்லாததாய் இருக்கின்றது. இதன் அந்தரார்த்தத்தை உலகம் அறியாமலே இருக்கின்றது. உலகஜீவர்கள் பிறப்பதும் இறப்பதும் மறுஜனனம் எடுப்பதுமாக மாளா பிறப்பிலும் இறப்பிலும் சுழன்றுக்கொண்டு வருகின்றனர்.

ஓ! சகோதிரர்களே! அனேக ஜென்மங்கள்தோறும் இறப்பாலும், பிறப்பாலும் விரும்பியதை அடையாது விரும்பாததை அடைதல். இவைகளின் துன்பத்தால் ஒவ்வொரு ஜென்மத்திலும் புலம்பி கண்ணீர்விட்ட ஜலத்தை அளவிடில் நா[illegible]கு மஹாசமுத்திரமும் இதன்முன் நிற்கா.

ஓ! சகோதிரர்களே! அனேக ஜென்மங்கள்தோறும் ஒவ்வொரு பிறப்பிலும் தாய் இறந்ததைப்பற்றி புலம்பவில்லையா, குமாரன் இறந்ததைப்பற்றி புலம்பவில்லையா. ஒவ்வொரு பிறப்பிலுஞ் சகோதிரர் இறந்ததைப்பற்றி புலம்பவில்லையா. சகோதரிகள் இறந்ததைப்பற்றி புலம்பவில்லையா. ஒவ்வொரு பிறப்பிலும் பொருள் காணாததைப்பற்றி துக்கிக்கவில்லையா. இவ்வகையாக தாய் தகப்பன், குமாரன், குமாரத்தி சகோதிரர் சகோதிரிகள் ஒவ்வொரு பிறப்பிலும் இறந்ததைக் கண்டுங்காணாத பொருள்களைப்பற்றி கண்டும் இவைகளால் அநேக ஜென்மங்களாக ஒவ்வொரு பிறப்பிலும் புலம்பிய கண்ணீரின் வெள்ளப்பெருக்கத்தின் முன் நான்கு மஹாசமுத்திரங்களும் நிற்கா.

சீவகசிந்தாமணி

பிரிந்தவற் கிரங்கிப்பேதுற்றழுத நங்கண்ணினீர்கள்
சொரிந்தவை தொகுத்து நோக்கிற்றொடுகடல் வெள்ளமாற்றா
முரிந்தநம் பிறவிமேனாண் முற்றிழை இன்னு நோக்கால்
பரிந்தழுவதற்குப்பாவா அடியிட்டவாறு கண்டாய்.

ஓ! சகோதிரர்களே! அனேக ஜென்மங்களில் நீங்கள் ஒவ்வொரு பிறப்பிலும் கொலைபுரிந்து அவைகளால் பெருகிய இரத்தவெள்ளத்தின் முன் நான்கு மஹாசமுத்திரங்களும் நிற்கா.

ஓ! சகோதிரர்களே! அனேக ஜென்மங்கள்தோறும் ஒவ்வொரு இறப்பிலும் பிறப்பிலும் திருட்டினாலும் விபச்சாரத்தாலும் பெருகிய இரத்தவெள்ள பெருக்கின்முன் நான்கு மஹாசமுத்திரங்களும் நிற்கா.

ஓ! சகோதிரர்களே! இவ்விதமாக அநேக ஜென்மங்களின் பிறப்பிலும் இறப்பிலும் ஜீவர்களால் உண்டான இரத்த வெள்ளத்தின் பெருக்கும், கண்ணீரின் பெருக்கும் உலகிலுள்ள நான்கு மஹாசமுத்திரங்களைவிட பெரிதாகவே இருக்கின்றது.

ஓ! சகோதிரர்களே! அநேக ஜென்மங்கள்தோறும் துக்கத்தை அநுபவித்து வருகின்றீர்கள். அநேக ஜென்மங்கள்தோறும் நிற்பாக்கியராயிருந்து வருகின்றீர்கள். அநேக ஜென்மங்கள்தோறும் இறந்து இறந்து சுடலையும் நிறம்பிவிட்டது. பூமியில் எலும்பு தோன்றா இடமில்லை. பட்டதுயரம் போதும். மெய்யாகவே என் சகோதிரர்கள் இவ்வகை துக்கத்தில் வெகுநாள் வாதைப்படவேண்டாம். சுருக்காகவே இத்துக்கத்தினின்று தப்பித்துக் கொள்ளுங்கள். பட்ட துயரம் போதும்.

கதமஞ்சே பிக்கவேதுக்கங் அறியசக்யானி?
ஜாத்திபி துக்கா, ஜராபி துக்கா, வியாதிபி துக்கா, மரணாபி துக்கா,
சோகா, பிரிதேவா துக்கந் தாம்னாஸ்ஸே உபாயாஸாபி
துக்காயாங்கவிஸ்ச்சங்கல்பா ஸ்திடம்பிதுக்கங் ஸஞ்செட்டேனோ
பஞ்சஞ்சப்பதங் அற்சந்தங் துக்கா இதங்விஜ்ஜாதி பிக்கவேதுக்கங்
அரியசக்யானி.

இரண்டாவது துக்கோற்பத்தி சத்யம்

ஓ! சகோதிரர்களே! துக்கோற்பத்தியாகிய தூய்மையான சத்தியம் யாதென்பீரேல்:- அவைகள் முறையே மறு பிறப்பிற்காளாக்கும். அவா, இன்பத்தைநாடி ஆவலுண்ட அவா, அங்குமிங்கும் எக்காலும் சந்தோஷத்தை நாடும் அவா, அவையே - காமதன்ஹா புலன்களால் உண்டாகும் அவாவென்னப்படும். பவாதன்ஹா - உயிர் வாழ்க்கையின் பேரில் உண்டாகும் அவா என்னப்படும். விபவாதன்ஹா - அநித்தியமாகும் சொற்ப இன்பத்தாலுண்டாகும் அவாவென்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! இவ்வேட்கையின்பற்று எங்கிருந்து உதிக்கின்றது, எங்குநின்றெழும்புகின்றது, எங்கு நிலைக்கின்றது, இதன்வேர் எங்கிருக்கின்றது என்பீரேல்;

(அறுவகை சேதனராஜ்யங்கள்) கண்ணானது மனிதர்களை சந்தோஷிப்பிக்கச் செய்வதும், இன்பசுகத்தைத் தருவதுமாய் இருக்கின்றது. அவ்விடத்திலேயே அவ்வவா உதித்து எழும்பி நிலைத்து வேரூன்றுகிறது. மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம் இவைகளானது மனிதர்களை சந்தோஷிப்பிக்கச் செய்வதும், இன்ப சுகத்தைத் தருவதுமாய் இருக்கின்றது. அவ்வவ்விடங்களிலேயே அந்தந்த அவாக்களுதித்து நிலைத்து வேரூன்றுகிறது.

(அறுவகை சேதனா இந்திரியங்கள்) உருவங்கள், ஒலிகள், கந்தங்கள், சுவைகள், தேகத்தின் பரிசங்கள், மனத்தில் எண்ணங்கள் யாவும் மனிதர்களை சந்தோஷிப்பிக்கச் செய்வதும் இன்பசுகத்தைத் தருவதுமாய் இருக்கின்றன. அவ்வவ் இடங்களிலேயே அந்தந்த அவாக்கள் உதித்து தோன்றி நிலைத்து வேரூன்றுகின்றது.

(அறுவகை ஆரமணங்கள்) மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம் இவைகளின் பற்றால் உதிக்கும் அறிவுகள், உணர்ச்சிகள் மனிதர்களை சந்தோஷிப்பிக்கச் செய்வதும் இன்ப சுகத்தைத் தருவதுமாய் இருக்கின்றன. அவ்வவ்விடங்களிலேயே அந்தந்த அவாக்கள் உதித்து எழும்பி நிலைத்து வேரூன்றுகிறது.

(அறுவகை யூறுகள்) மெய் சுகித்தவிடத்தை மனம் பற்றுதலும், வாய் உருசித்தவிடத்தில் மனம் பற்றுதலும், கண்கண்ட பொருளை மனம் பற்றுதலும், மூக்கு முகர்ந்த வாசனையை மனம் பற்றுதலும், செவி கேட்ட நாதத்தை மனம் பற்றுதலுமாகிய பாசப்பற்றில் மனிதர்களை சந்தோஷிப்பிக்கச் செய்வதும், இன்பசுகந் தருவதுமாயிருந்து அவ்வவ் விடங்களிலேயே அந்தந்த அவாக்கள் உதித்து எழும்பி நிலைத்து வேரூன்றுகிறது.

(அறுவகை உணர்ச்சிகள்) பார்வை, கேள்வி, முகரல், உருசித்தல், பரிசித்தல், எண்ணல் இவைகளினின்று உதிக்கும் உணர்ச்சிகள் மனிதர்களை

சந்தோஷிப்பிக்கச்செய்வதும், இன்ப சுகத்தைத் தருவதுமாயிருந்து அவ்வவ்விடங்களிலேயே அந்தந்த அவாக்கள் உதித்து எழும்பி நிலைத்து வேரூன்றுகிறது.

(அறுவகை சைதன்யங்கள்) பார்வை, கேள்வி, முகரல், உருசித்தல், பரிசித்தல், எண்ணல் இவைகளின் பேரிலுள்ள சிந்தனைகளும் நோக்கமும் மனிதர்களைச் சந்தோஷிக்கச் செய்து இன்ப சுகங்களைத் தருவதுமா யிருக்கின்றன. அவ்வவ் விடங்களிலேயே அந்தந்த அவாக்களுதித்து எழும்பி நிலைத்து வேரூன்றுகின்றது.

(அறுவகை அவாக்கள்) பார்வையாலுதிக்கும் அவா பற்று. கேட்டலால் உண்டாகும் அவா பற்று. உருசித்தலால் உண்டாகும் அவா பற்று. பரிசித்தலால் உண்டாகும் அவா பற்று. எண்ணங்களால் உண்டாகும் அவா பற்று. இத் தியாதி பற்றுக்கள் யாவும் மனிதர்களை சந்தோஷிப்பிக்கச் செய்வதும் இன்பசுகத்தைத் தருவதுமாயிருந்து அவ்வவ்விடங்களிலேயே அந்தந்த அவாக்கள் உதித்து எழும்பி நிலைத்து பாசபற்றில் வேரூன்றுகிறது.

(அறுவகை சிந்தனைகள்) பார்வையின் மீதும், கேட்டலின் மீதும், முகர்தலின்மீதும், சுவைத்தலின் மீதும், பரிசித்தலின் மீதும், எண்ணங்களின் மீதும் எண்ணுவதும் மறப்பதும் மறுபடியுந் தோன்றுவதுமாகிய உணர்வுகள் யாவும் மனிதர்களை சந்தோஷிப்பிக்கச்செய்வதும் இன்பங்களைத் தருவதுமாயிருந்து அவ்வவ்விடங்களிலேயே அந்தந்த எண்ணமும், மடிவும், மீளும் எண்ணமும் உதித்து எழும்பி நிலைத்து வேரூன்றுகிறது.

ஓ! சகோதிர்ர்களே! இவ்விதமாக ஒரு மனிதன் கண்ணால் ரூபத்தைப் பார்ப்பதும், காதால் சப்தத்தைக் கேட்ப்பதும், மூக்கால் வாசனை அறிவதும், நாவால் உருசியைப் பார்ப்பதும், தேகத்தால் சுகத்தை அறிவதும், மனத்தால் எண்ணங்களை வளர்ப்பதுமாய் இருக்கின்றான். இவைகள் ஒன்றில் சுகத்தைக் காணுவானாயின் அதனில் ஆழ்ந்த நாட்டமுள்ளவனாய் இருப்பான். அதை விட்டு இவைகள் ஒன்றில் அசுகத்தைக் காணுவானாயின் வெறுப்படைவான். ஒருவன் சுகவேதனா சுகவுணர்ச்சியில் அப்பியாசப் பட்டாலும், துக்கவேதனா துக்க உணர்ச்சியில் அப்பியாசப்பட்டாலும், உபேக்ஷாவேதனா சுகத்திற்குந் துக்கத்திற்கும் நடுநிலையான உணர்ச்சியில் அப்பியாசப்பட்டாலும் அவைகளை நல்லவை என்று நம்பி அதே உணர்ச்சியில் தேற்சியடைந்து அவைகளில் ஐக்கியப்படுகின்றான். இவ்வகைச் செயலில் தேற்சியடைந்து ஐக்கியப்படு கிறவனிடம் (தன்ஹா) ஆசை உதிக்கின்றது. தன்ஹா அவாவிலிருந்து (உபாதானா) பற்று உண்டாகின்றது. உபாதானா பற்றிலிருந்து (பவா) பிறப்புக்கு மூலமான கருமக்கூட்டம் உண்டாகின்றது. பவாவென்னுங் கருமக் கூட்டத்தினின்று (ஜாத்தி) பிறப்புண்டாகின்றது. பிறப்பினின்று பிணியும், மூப்பும், மரணமும், வலியும், அழுகையும், துன்பமும், கவலையும், ஏக்கமுமாகிய வினைப் பயன்கள் உண்டாகின்றன. துன்பமென்கின்ற கூட்டத்திற்கெல்லாம் இவைகள்தான் உற்பத்தி என்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! மேற்கூறியுள்ளவைகளையே துக்கோற்பத்தியின் தூய்மையான சத்தியமென்னப்படும். மனுக்கள் இம்மிருதுவான அவாவினால் தூண்டப்பட்டும், இம்மிருதுவான அவாவினால் இழுக்கப்பட்டும், இம் மிருதுவான அவாவினால் நடமாடியும் வருகின்றனர். இவ்வித வீணவாவால் அரசர்களுடன் அரசர்கள் போர்புரிவதும் நிமித்தகர்களுடன் நிமித்தர்கள் வாதிடுதலும், குடியானவர்களுடன் குடியானவர்கள் சச்சரவு செய்தலும், தாய் பிள்ளையிடம் சண்டை செய்தலும், பிள்ளை தாயிடஞ் சண்டை செய்தலும், தகப்பன் பிள்ளையுடன் போர் புரிதலும், பிள்ளை தகப்பனுடன் போர் புரிதலும், அண்ணன் தம்பியுடன் வழக்காடுதலும் தம்பி அண்ணனுடன் வழக்காடுதலும், அண்ணன் தங்கையை மனனோகப் பேசுதலும், தங்கை அண்ணனை மன்னோகப் பேசுதலும், சகோதிரிகளுடன் சகோதிரிகளும், சினேகிதர்களுடன் சினேகிதர்களும் போர்புரிய நேரிட்டு கற்களாலும், தடிகளாலும், கத்திகளாலும் சண்டைசெய்து மாளுதலும் காயமடைந்து வாதைப்படுகிறவர்களுமாய் இருக்கின்றார்கள்.

ஓ! சகோதிரர்களே! இவைகள்தான் துக்கத்தின் மிருதுவான அவா. இவைகள் தான் காணக்கூடிய துக்கங்கள். இவைகள்தான் மிருதுவான அவாவினால் உண்டானவைகள். மிருதுவான அவாவினால் கட்டுப்பட்டவைகள். மிருதுவான அவாவினால் நிலைக்கப்பட்டவைகள். மிருதுவான அவாவினால் வேரூன்றியவைகள். இவ்வகை மிருதுவான் அவாவாலன்றோ அவ்வகைத்தான பெருங் கலகங்கள் பயிரங்கமாய் துக்கத்தை உண்டாக்குகின்றது.

பின்னும் ஓ! சகோதிரர்களே! இம்மிருதுவான அவாவின் தூண்டுதலாலும், இம்மிருதுவான அவாவின் நடமாட்டத்தினாலும் இவ் வகையானப் பிரயோசனமற்ற அவாக்களுண்டாய் மக்களுக்குள் உண்டாக்கிய உடன்படிக்கைகளை ஒருவருக் கொருவர் மறைத்தலும், அன்னியர் பொருளை அபகரித்தலும், ஒருவருக்கொருவர் கோட்சொல்லித் திரிதலும், மாங்கல்ய ஸ்திரீகளைக் கற்பழித்தலும் ஆகிய துற்செயல்களுக்காய் அரசர்களால் கசைகளால் அடிக்கச்செய்வதும், தடிகளால் அடிக்கச்செய்வதும், பிரம்புகளால் அடிக்கச்செய்வதும், கை கால்களை வெட்டச் செய்வதும், ஒரு காலையோ ஒரு கையையோ வாங்கச்செய்வதும், நாய்களால் கடிக்கச்செய்வதும், கற்காணத்திலாட்டச்செய்வதும், தலையை துண்டித்தலுமாகியக் கொடிய தண்டனைக்கு உள்ளாகின்றார்கள்.

ஓ! சகோதிரர்களே! இவைகள் யாவும் மிருதுவான அவாவினால் உண்டான துக்கம். அவாவின் நடமாட்டத்தால் உண்டான துக்கம். மிருதுவான அவா இழுப்பதினால் உண்டான துக்கம். மிருதுவான அவாவில் ஐக்கியப்பட்டதால் உண்டான துக்கம். சீவகோடிகள் இம்மிருது அவாவினால் தூண்டப்பட்டும், இம்மிருதுவான அவாவின் ஐக்கியத்தினால் நடமாடியும் வருகின்றது. இவ்விதப் பிரயோசனமற்ற அவாவினால் தங்கள் தேகத்தால் தீயச்செய்கைகளைச் செய்தலும், வாக்கால் சுடச் சொல்லுதலும், மனத்தால் தீய எண்ணங்களை எண்ணுதலுமாய் இருக்கின்றனர். மனோ வாக்குக் காயங்களால் செய்துவந்தத் தீயச்செயல்களின் முடிவு மரணமேயாம். மரணமடைந்த பிறகோ கன்மக்கூட்டமென்னுந் தீவினைத் திரட்சியே ஓர் உருகொண்டு மறுபிறவித் தோன்றி முன்தொடர்ச்சியைத்தொட்டு வளர்ந்து பயனுகர்ந்து கேவலநிலை அடைந்து பிறப்பதும் இறப்பதுமாகியத் துக்கச்செயலில் காற்றில் பரந்துவிடுவேன் என்றாலும், சமுத்திரத்தில் ஒளிந்துக்கொள்ளுவேன் என்றாலும், மலைகளின் குகைகளில் ஒளிந்துக் கொள்ளுவேன் என்றாலும் வினைப்பயன் விடுவதில்லை. காரணம், வினையே திரண்டு உரு தோன்றலால் அவனவன் செய்வினைக்கீடாய் மாளாப்பிறவியில் சுழன்று பிறப்பதும், துக்கத்தை அநுபவிப்பதுமாகியச் செயல்கள் யாவும் மிருதுவான அவாவின் தூண்டுதலினாலும் மிருதுவான அவாவின் ஐக்கியத்தினாலுமேயாம்.

ஓ! சகோதிரர்களே! மஹா சமுத்திரமுங் காய்ந்து தண்ணீரில்லாமல் வரண்டுபோகுங்காலம் வரினும் வரும். ஆனால் இத்துக்கத்தின் முடிவை சொல்லத் தரமன்று. இறப்பதும் பிறப்பதும், பிறப்பதும் இறப்பதுமாகிய கன்மச் சக்கிரத்தின் முடிவை யாவரால் சொல்லமுடியும்.

ஓ! சகோதிரர்களே! இப்பூமியும் அக்கினிக்கு இரையாகி ஒழிந்து தோன்றுங்காலம் வரினும் வரும். ஆனால் இத்துக்கத்தின் ஒழிவை யாரால் கூறத்தகும். உலக சீவர்கள் அவாவின் ஏதுவால் துக்கநிகழ்ச்சியில் மூழ்கி இறப்பதும் பிறப்பதும், பிறப்பதும் இறப்பதுமான கன்மச் சக்கரத்தில் சிக்குண்டு சுழல்கின்றார்கள். இச்சிக்கை அறுத்து கன்மச்சக்கரத்தினின்று விடுபடுங்காலம் யாவரால் சொல்ல முடியும். ஏனென்பீரேல், துக்கத்திற்குக் கொண்டுபோகும் வழி விசாலமாய் இருக்கின்றது.

மூன்றாவது துக்கநிவாரண சத்யம்

ஓ! சகோதிரர்களே! துக்கநிவாரண தூய்மெயான சத்தியம் யாதென்பீரேல், அவாவைப் பற்றற ஒழித்து அதைத் தன்னைவிட்டு நீக்கித் தள்ளுவதும், தன்னை அதிலிருந்து பிரித்துக்கொண்டு அதற்கிடங்கொடாமல் முற்றும் நாசஞ்செய்தலினால் உண்டாகும் முற்கூறியுள்ள அவாவின் அழிவுதான்

நிவாரண மூலமாகும். இந்த அவா எவ்விதமாக வந்து தோன்றுகிறதென்றும், மறைகிறதென்றும் உங்களுக்குத் தெரியுமா. எவ்விதமாகக் கசிந்து உருகுகிறதென்றும் உங்களுக்குத் தெரியுமா. இவ்வுலகிலுள்ள மக்களை எவ்வெவ்விடங்களில் சந்தோஷிப்பிக்கச்செய்வதும் இன்ப சுகந்தருவதுமாய் இருக்கின்றனவோ அவ்வவ்விடங்களில் எல்லாம் இவ்வாசையானது தோன்றி மறைகிறதும் கசிந்து உருகுகிறதுமாய் இருக்கின்றது. இவ்வகையால் அவாவை ஒழிக்க ஒருவன் காமதன்ஹா என்னும் புலன்களால் உண்டாகும் அவாவிலிருந்து விடுதலைப்பட்டாலும் பவாதன்ஹா என்னும் உயிர்வாழ்க்கையின் பேரில் உண்டாகும் அவாவிலிருந்து விடுதலைப்பட்டாலும் முழுபற்றை ஒழிக்கமுடியாது. ஏனெனில் இவ்விரண்டுவித அவா முற்றும் ஒழிந்தால் உபாதானாவாகும் பற்றொழியும். அப்பற்றொழிய பிறப்புக்கு மூலமாகும் கருமக் கூட்டங்கள் ஒழியும். கருமக் கூட்டங்கள் ஒழியப் பிறப்பொழியும். பிறப்பொழிய மூப்பொழியும். மூப்பொழிய மரணமொழியும். மரணமொழிய அதனவத்தை ஒழியும். அவத்தை ஒழிய அழுகை ஒழியும். அழுகை ஒழிய கவலையும் ஏக்கமும் ஒழியும். துன்பமென்னும் இராட்சியத்திற்கெல்லாம் இதுதான் நிவர்த்தி இதுதான் துக்கநிவாரணமென்னுந் தூய்மெயான சத்தியம்.

நான்காவது துக்கநிவாரணமார்க்க சத்யம்

ஓ! சகோதிரர்களே! துக்கநிவாரணமென்னும் தூய்மெயான சத்தியம் யாதென்பீரேல், அவைதான் பரிசுத்த அஷ்டாங்கமார்க்கமென்னப்படும்.

1. சம்மாதித்தி நற்காட்சி — 1. பிரஞ்ஞை ஞானம்
2. சம்மா சங்கப்போ நற்சிந்தை
3. சம்மா வாசா நல்வசனம்
4. சம்மா கம்மந்தோ நற்செய்கை — 2. சீலம் நீதி
5. சம்மா அஜீவோ நல் வாழ்க்கை
6. சம்மா வாயமோ நல்ஊக்கம்
7. சம்மா சத்தி நற்கருத்து — 3. சமாதி சலனமற்ற மனம் மனஆறுதல்.
8. சம்மா சமாதி நல் அமைதி

ஓ ! சகோதிரர்களே! இப்பரிசுத்தமும் நெருக்கமுமாகிய பாதையைக் கண்டுபிடிப்பதற்கே என் சக்கிரவர்த்திப் பீடத்தைத் துறந்தேன், என் மனைவி மைந்தனை விடுத்தேன், உற்றார் உரவினரை மறந்தேன், சுகபுசிப்பைத் தவிர்த்தேன், சுகநித்திரை அகன்றேன், இத்தகைய இன்பசுகங்கள் யாவும் தோன்றுவதும், மறைவதும், சிற்றின்பத்தைக்காட்டுவதும், பெருந்துக்கத்தில் ஆழ்த்துவதும், நித்தியம் போலாளுவதும், அநித்தியத்தில் மாளுவதுமாகிய செயல்களில் துக்கமே சுகத்திற்கு வழியாகவும் அநித்தியமே நித்திய நடையாகவும், துவிதமென்னும் நாமரூபமே அத்துவித நிருவாணமாகுந் ததாகதமுற்றேன். இதனை நீங்கள் ஒவ்வொருவரும் ஆழ்ந்து சிந்தித்து அதனினின்று சாந்தத்துள் ஐக்கியப்பட்டு பகுத்தறிவுண்டாகி தெளிவடைந்து மனவமைதி உண்டானவுடன் துக்கமற்று வாதனை அற்று அழுகையற்று தோன்றி தோன்றி மறையும் பிறப்பற்று சகல துன்பங்களுமற்று ததாகதமென்னுஞ் சலனமற்றநிலையை அடைவீர்கள். இதற்குச் சமதையான வழி வேறொன்றுங் கிடையாது.

ஓ! சகோதிரர்களே! இப்பரிசுத்த மார்க்கத்தில் நடப்பீர்களாகில் துக்கத்தின் முடிவைக் காணுவீர்கள். இத்துக்கத்தை நீக்குவதற்கு இன்னொரு வரைத் தேடவேண்டாம். அவரவர்களுடைய துக்கம் அவரவர்களைத் தொடர்ந்துக்கொண்டே நிற்கின்றது. ததாகதரோ வழிகாட்டியாவேன் நீங்கள் ஒவ்வொருவரும் அவ்வழியில் நடந்து சோம்பலின்றி யாத்திரையை முடிப்பீர்களாக.

ஓ! சகோதிரர்களே! என் வாய்மெய்ப் பொக்கிஷத்தை செவிகளில் நிறப்புங்கள். ஏனெனில் அழிவற்றதைக் கண்டுபிடித்துள்ளேன் என்னால் கூறுவது சத்தியம். தாதாகதர்கூறியபடி நடப்பீர்களாகில் இல்வாழ்க்கையிலும் பரிசுத்த சுகவாழ்க்கையை அடைவீர்கள். இப்பரிசுத்தவாழ்க்கையை

அடைவதற்கே பெருங் குடும்பக்குமரர்கள இனி வெளியேறி இப்பரிசுத்த மார்க்கத்தே சென்று சுகநிலைகண்டு புத்தர்களாவார்கள்.

அஷ்டாங்கமார்க்கத்தின் முதற்படி - சம்மாதித்தி

நற்காட்சி உணர்வு

ஓ! சகோதிரர்களே! நற்காட்சியின் உணர்வு யாதென்பீரேல், ஒரு மாணாக்கன் துற்கருமம் இன்னதென்றும், துற்கருமத்திற்கு மூலம் இது வென்றும், நற்கருமம் இன்னதென்றும், நற்கருமத்திற்கு மூலம் இன்னதென்றுங் கண்டுணர்வானாயின் இதையே நற்காட்சி என்று கூறப்படும்.

ஓ! சகோதிரர்களே! அகுசலம் அல்லது துற்கருமம் என்பதை விளக்குவாம். 1. கொலை, சீவப்பிராணிகளைத் துன்பஞ் செய்தல் துற்கருமம். 2. களவு, அன்னியர்பொருளை அபரித்தல் துற்கருமம் 3. விபச்சாரம், அன்னியர் மனைவியை இச்சித்தல் துற்கருமம். (இதுவே காயகன்மா) தேகத்தாலாகுங் குற்றங்கள் 4. பொய், தாங்கள் காணாததையும் அறியாததையும் கண்டதைப் போலும் அறிந்ததைப்போலுங் கூறுதல் துற்கருமம். 5. கோட்சொல்லுதல், ஒருவருக்கொருவர் கோட்சொல்லி விரோதத்தைப் பெருக்கி அன்பைக் கலைத்தல் துற்கருமம் 6. கடுஞ்சொல், மற்றொருவர் மனம் புண்படக் கூறுவது துற்கருமம் 7. வீண்வார்த்தை, பயனற்ற வார்த்தைகளைப் பேசுதலும், பழிக்கூறித் திரிதலும், வெறும் பந்தியங் கூறுதலும், வித்தைவிரும்பாதுளரலும் துற்கருமம். (இதுவே வஸிகன்மா) வாக்கினால் உண்டாகுங் குற்றங்கள் 8. பொருளாசை, அன்னியர் பொருட்களின்பேரில் அவாக்கொண்டலைதல் துற்கருமம். 9. துட்டகுணம், அன்பில்லாமல் மற்றவர்களைச் சீறி சினமிகுத்தல் துற்கருமம் 10. கெட்ட எண்ணம், எதிரிகள் நற்சுகத்தையேனும் செல்வத்தையேனும் பொறாது முறுமுறுத்தல் துற்கருமம். (இதுவே மனோ கன்மா) மனத்தாலாகுங் குற்றங்கள்.

ஓ! சகோதிரர்களே! இத்தியாதி துற் கருமத்திற்கும் மூலம் யாதென்பீரேல், லோபா - பேராசையே துற்கருமங்களுக்கு மூலம். தோஸா - கோபமே துற்கருமங்களுக்கு மூலம். மோஹா - காமியமே துற்கருமத்திற்கு மூலம். லோபமும், தோஸமும் எப்போதும் மனதைத் தொடர்ந்துவரும்.

ஓ! சகோதிரர்களே! குசலா அல்லது நற்கருமம் யாதென்பீரேல், 1. கொலைசெய்யாதிருத்தல், அன்னியப்பிராணிகளுக்குத் துன்பஞ் செய்யாதிருத்தல் நற்கருமம் 2. களவு செய்யாதிருத்தல். அன்னியர் பொருளை கனவிலேனும் அபகரிக்காதிருத்தல் நற்கருமம் 3. விபச்சாரஞ் செய்யாதிருத்தல், அன்னியர் தாரத்தை மனதிலேனும் இச்சியாதிருத்தல் நற்கருமம். (இதுவே காயநற்கன்மா).

4. பொய்சொல்லாதிருத்தல், தான் காணாததையும் அறியாததையுஞ் சொல்லுதற்கு அஞ்சுதல் நற்கருமம் 5. கோட்சொல்லாதிருத்தல், ஒருவர் வார்த்தையை மற்றவருக்கு ஓதி கலகஞ்செய்தற்கு நாணுதல் நற்கருமம் 6. கடுஞ்சொல் கூறாதிருத்தல், அன்னியரை மனநோகப்பேசாமல் அடக்கத்தைக் கருதுதல் நற்கருமம் 7. வீண்வார்த்தைப் பேசாதிருத்தல், பயனற்ற வார்த்தைகளைப் பேசாதொழித்தல் நற்கருமம். (இதுவே வஸீநற்கன்மா) வாக்கின் நற்கருமம்.

8. பொருளாசை இல்லாதிருத்தல், அன்னியர் பொருளின் ஆசையை அகற்றுதல் நற்கருமம் 9. துஷ்டகுணம் இல்லாதிருத்தல், கொடிய எண்ணங்கள் மனதில் எழாமல் தடுத்தல் நற்கருமம் 10. கெட்ட எண்ணங்களைத் தடுத்தல், மற்றவரை வஞ்சிக்குங் குணத்தை அகற்றுதல் நற்கருமம். (இதுவே மனோ நற்கன்மா).

ஓ! சகோதிரர்களே! இத்தகைய நற் கருமங்களுக்கு மூலங்கள் யாதென்பீரேல், அலோபா - பேராசையை அகற்றுவதே நற்கருமத்திற்கு மூலம். அத்துவேஷா - கோபத்தை அகற்றுவதே நற்கருமத்திற்கு மூலம். அமோஹா - காமியத்தை அடக்குதலே நற்கருமத்திற்கு மூலம்.

ஓ! சகோதிரர்களே! சிஷியன் ஒருவன் துக்கம் இன்னதென்றும் துக்க உற்பத்தி இன்னதென்றும், துக்க நிவாரணம் இன்னதென்றும், துக்க நிவாரண மார்க்கம் இன்னதென்றும் அறிந்துக்கொள்வதே நற்காட்சி என்னப்படும்.

அங்ஙனமின்றி வீண்காலப் போக்கன் ஒருவன் ததாகதரை நோக்கி ஐயனே, உலகம் நித்தியமா? அநித்தியமா? உலகம் ஒருவரால் உண்டாக்கப் பட்டதா? தானே தோன்றியதா? ஒருவன் உண்டாக்கினாரெனில், உன்டாக்கினவர் உண்டான தெவ்விடம். தானே தோன்றிற்றென்னில் முன்னிருந்தே தோன்றிற்றா இல்லாமல் தோன்றிற்றா என்றுங்கேட்க முயலுவான்.

இத்தகைய வீண் வினாக்களினால் அருந்தியுந் தாகந் தீரப்போகிறதில்லை, புசித்தும் பசியாரப்போகிறதில்லை என்னும் பழமொழிக்கிணங்கப் பாழ்விடை தோன்றி பழியும் பாவமுந் திரண்டே உருபெறும்.

அதாவது, விஷங்கலந்த அம்பினால் தைக்கப்பட்ட ஒருவன் அவ்வம்பைப் பிடிங்கி எறிந்துவிட்டு அவ்விஷத்தை முறிக்கக்கூடிய அவுடதங்களைப் பூசாமலும் அருந்தாமலும் இவ்வம்பானது யாவரால் எய்யப்பட்டது எய்தவன் அரச குடும்பமா அன்னிய குடும்பமா அவன் சத்துருவா நமது மித்துருவா அவ்வம்பிற்கு விஷமேற்றித் தந்தவர்கள் தன்னவர்களா அன்னியர்களா என்று விசாரித்தறிதற்குள் விஷமேறி மடிவது திண்ணம்.

உமியைக்குத்தி கைசலித்தவாறுபோல் உலகத்தையும், உலகத் தோற்றத்தையும் விசாரிக்கும் அன்பர்கள் தன்னைநோக்கித் தான் நித்தியனா அநித்தியனா என்றுந் தன் செயல்கள் யாவும் நித்தியச் செயல்களா அநித்தியச் செயல்களா என்றும், தான்தோன்றிய தேகம் தோன்றும் வஸ்துவினின்று தோன்றியதா தோன்றா வஸ்துவினின்று தோன்றியதா என்றும் தோன்றும் வஸ்துவினின்று தோன்றுவது காட்சியாதலின் பூர்வப்பற்றிருந்தே தோன்றினானா இல்லாமல் தோன்றினானா என்று உசாவுவனேல் தோன்றும் வஸ்துக்களின்று தோற்றவைக்கும் பற்றுக்களாகும் இராகத்துவேஷ மோகங்களை அறுத்து மறுபிறவி தோற்றாமலிருக்கும் நிப்பானம் பரமாங் சுகமென்னும் நிருவாண பரமசுகமடைவான்.

உலகம் நித்தியமாய் இருந்தால் என்ன அநித்தியமாய் இருந்தால் என்ன. உலகம் ஒருவனால் உண்டுசெய்தால் என்ன தானே தோன்றினால் என்ன. உலகம் முடிவுபெற்றால் என்ன முடியாமல் இருந்தால் என்ன.

ஒவ்வொருவனும் பிறப்பில் தோன்றி பிணியடைவதும், மூப்படைவதும், மரணமடைவதுமாகிய துக்கவிருத்தியால் அழுகையுங் கவலையும் ஏக்கமும் பெருகி மாளாக்கவலையால் மடிவதைக்கண்ணுற்றும் அம்மடிவின் செயலை உணரா சோதிரர்களே இப்பிறவியிலேயே அத்துக்கத்தினின்று விலகி தப்பித்துக்கொள்ளும்படி உங்களை ஜாக்கிரதைப்படுத்துகின்றேன்.

பரிசுத்தப் புருஷர்களிடம் அணுகாதவனும், பரிசுத்தப் புருஷர்களின் போதனையைக் கேளாதவனும், பரிசுத்தப் புருஷர்கள் பழகும் ஒழுக்கத்திற் பழகாதவனுமான ஒருவனுக்கு நற்கருமமும் அதற்கு மூலமும் யாதென்று தெரியாது. அதன் நிலை தெரியாமல் தடுக்க முயல்வான்.

காரணம்.- நன்மெய் இன்னதென்று தெரியாமெயினாலேயும் நற்கருமத்திற் பழகாததினாலேயுமாம்.

இவ்வகை நிலைமெயிலிருப்பவன் (1) உச்சேத அல்லது விபவதிருஷ்டி. இறந்தபிறகு நான் எனும் பொருள் அழிந்துவிடுமென்றும், (2) சஸ்ஸேத அல்லது பவதிருஷ்டி இறந்தபிறகு நான் எனும் பொருள் நிலைத்திருக்குமென்றும் ஆகிய இவ்விரண்டு நம்பிக்கைகளால் சக்காயதிருஷ்டி தேகம் நிலையுள்ளதென்றும் மாய்கையில் சிக்குப்பட்டவனாகி புறக்கிரியைகளிலும் காமவிகாரத்திலும் கோபத்திலும் முழு நம்பிக்கை வைத்து தன் இருதயத்தை சந்தேகமென்னும் இருட்டறைக்குச் செல்லவிடுகின்றான்.

இவ்வகை இருட்டறை என்னும் வலையிலகப்பட்டுள்ள ஒருவன் தன்னைத்தான் எப்படி விடுதலை செய்துக்கொள்ளமுடியும்.

இவைகள் அவனுக்கு உண்மெயாக தெரியாதாதலால் இவ்வலையில் சிக்குண்டு தாழ்ந்த பிறவிக்கேகுகின்றான்.

ஏனெனில் அவைகளை அவன் அதனதன் கிளர்ச்சியில் தடுக்காமல் விட்டபடியால் துற்கருமக் களிம்பு தடிப்பேறிவிடுகின்றது.

சிந்திக்கவேண்டிய முக்கிய விஷயங்களில் பழக்கமில்லாமலும் சிந்திக்கத்தகாத விஷயங்களில் பழக்கமுள்ளவனுமாகிய ஒருவன் பிரயோசனமற்றதை சிந்திப்பானன்றி பிரயோசன முள்ளவைகளை சிந்திக்கமாட்டான்.

முக்காலங்களைப்பற்றிய பதினாறுவகை சந்தேகங்களை விவேகக்குறைவால் கீழ்வருமாறு சிந்திக்க ஆரம்பிக்கின்றான்.

முன்பிறப்பில் நானிருந்தேனா? இருக்கவில்லையா? முன்பிறப்பில் எவ்விதமாய் இருந்தேன்? முன் என்னிலைமெயிலிருந்து என்னிலைக்கு மாறினேன்? இனிமேல் பிறப்பேனா பிறக்கமாட்டானே? எவ்விதமாய் இருப்பேன்? என்னிலைக்கு மாறுவேன்? நான் இப்போது இருக்கின்றேனா? இல்லையா? நான் யார்? நான் எவ்விதமாய் இருக்கின்றேன்? இத்தேகம் எங்கிருந்துவந்தது? எங்கே போகப்போகின்றது.

என்னும் வீணான துற்சிந்தனைகளால் ஆத்துமமென்னும் வார்த்தையைப் பற்றிக்கொண்டு ஒருவித அல்லது ஆறுவிதமான எண்ணங்களை உதிக்கச்செய்வான்.

ஆத்தா ஆத்துமா அழியாததென்று எண்ணி அவ்வெண்ணத்தையே உறுதியாக சாதித்தலும் அல்லது அழியாத ஆத்துமா கிடையாதென்று எண்ணி அவ்வெண் ணத்தையே உறுதியாக சாதித்தலும்.

ஓ! சகோதிரர்களே! அல்லது சுத்த ஆன்மாவைக்கொண்டு சுத்த ஆன்மாவைக் கிரகிப்பேன் என்று எண்ணி அதையே உறுதியாக சாதித்தலும் அல்லது சுத்த ஆன்மாவைக்கொண்ட அநாத்தா அனாத்துமத்தை உணர்வேன் என்று எண்ணி அதையே உறுதியாக சாதித்தலும் அல்லது அனாத்துமத்தைக் கொண்டு சுத்த ஆன்மாவை உணர்வேன் என்று எண்ணி அதையே உறுதியாக சாதித்தலும் அல்லது இங்கு எங்கு சுகித்தாலும் என் ஆன்மாவை மறுபடியுங் காணக்கூடும். நன்மெய் செய்தாலுந் தின்மெய் செய்தாலும் என் ஆன்மா காணப்படும். என் ஆன்மா அழியாதது. நிலையுள்ளது. எப்போதும் உள்ளது. மாறுதல் அடையாதது. என் ஆன்மா இவ்விதமாக எக்காலும் நிலையுள்ளது என்பான்.

இவ்வகையால் (என் ஆன்மா) என்பவன் (என்) என்பவனுக்கு என்னப்பெயரளிப்பானோ அறியேன். என்வீடு, என்மனைவி, என் பிள்ளை என்பதுபோல் என் ஆன்மா, என் தேகம் என்பதில் என்னென்பவன் பெயர் யாதும் அறியான். இவ்வகை மயக்கத்திற்குள்ளாக்கும் ஆன்மாவே புருஷன் புருஷனே ஆன்மா என்பதும் அறியான். பஞ்சஸ்கந்த திறட்சியே ஆன்மா என்பதும், பஞ்சஸ்கந்த திறட்சிகள் கலைந்தவிடமே அநாத்துமா என்பதும் அறியான். இவைகள் யாவும் உண்மெய் விசாரணை அற்றவர்களின் கோட்பாடுகளாகும்.

ஓ! சகோதிரர்களே! மேற்கூறியவைகள் யாவும் வீண் சிந்தனை, சடுதிநேரச் சிந்தனை, தடுமாறற்செய்யுஞ் சிந்தனை, பொய்ம்மெய் ஆட்டத்தைப்போன்ற சிந்தனை, சிக்குகளை உண்டாக்குஞ் சிந்தனைகளாகும்.

ஓ! சகோதிரர்களே! சத்தியத்தை அறியாத உலகம் மறுபிறப்பென்னும் சக்கரத்தினின்று தப்பித்துக்கொள்ள முடியாது. பிணி, மூப்பு, சாக்காடு, துக்கம், அழுகை, ஏக்கம் இவைகளினின்றுந் தப்பித்துக் கொள்ள முடியாது. இவற்றை ததாகதன் உங்களுக்கு உறுதியாக சொல்லுகின்றேன். உண்மெய்யை உணருங்கள். உண்மெய்யில் அன்பை வளர்த்துங்கள்.

ஓ! சகோதிரர்களே! சத்தியத்தை அறிந்த பரிசுத்த சிஷியர்கள் பரிசுத்த புருஷர்களுக்கு வந்தன உபசாரமளிப்பர். பரிசுத்த புருஷர்களின் போதனையைத் தெரிந்தவர்களாயிருப்பர். பரிசுத்தப் புருஷர்களிடம் பழகியதால் நல்விஷயத்திற்கு இடங்கொடுப்பர். அதினால் நல்விஷயங்களைத் தெரிந்தவர்களாகின்றார்கள். சத்விஷயத்தில் தேறியவர்களாகின்றார்கள். சிந்திக்கவேண்டியவைகள் இவை

இவை என அறிந்துக்கொள்ளுகின்றார்கள். சிந்திக்கத்தகாதவைகள் இன்னின்னவைகள் என்று அறிந்து நீக்கிக்கொள்ளுகின்றார்கள்.

முக்கியமாக சிந்திக்கவேண்டிய விஷயங்களில் பழகியும் சிந்திக்கத் தகாத விஷயங்களில் பழகாமலும் தேற விசாரிணையில் நம்பத்தக்கினவிஷயங்களில் நம்பிக்கையும் நம்பத்தகாத விஷயங்களில் நம்பிக்கை அற்றும் இருப்பார்கள்.

தேற விசாரிணையுள்ள புருஷன் இதுதான் துக்கம், இதுதான் துக்கோற்பத்தி, இதுதான் துக்கநிவாரணம், இதுதான் துக்கநிவாரண மார்க்கமென்று ஆழ்ந்து சிந்திக்கின்றான். இவ்வித மெய்ஞானத் தெளிவால், 1. உடம்பு நித்தியமானதென்னும் எண்ணம் 2. சந்தேகம் 3. பயனைக் கருதிச்செய்யும் விரதங்கள். இம்மூவித பந்தத்தினின்று தப்பித்துக் கொண்டவனாகின்றான். அவ்வகை தப்பித்துக் கொண்டவன் யாரோ அவன் தர்மத்தை சிந்திப்பவனாகின்றான். வாதனையற்று ஞானத்தைப்பெற ஏதுவாய் இருக்கின்றவன் சோடாபன்னா என்றழைக்கப்படுவான்.

ஓ! சகோதிரர்களே! உங்கள் சகோதிரர்களில் ஒருவர் உங்களை நோக்கி நமதாசான் கௌதமர் ஒரு கோட்பாட்டை உடையவரா என்று கேட்பார்களாயின் அதற்கு பதிலாக, ததாகதர் எவ்வித கோட்பாடுகளுக்கும் உட்பட்டவரல்லர். ஏனெனில் இந்த தேகம் இவ்வகையானது இவ்விதமாக வளருகிறது இவ்விதமாக மடிகிறதென்றும், புலன்கள் இவ்வகையானது இவ்வகையாக உதிக்கின்றது இவ்வகையாக மடிகிறதென்றும் மனதுக் கடுத்தவைகள் இவ்விதமானது இவ்விதமாக உதிக்கின்றது இவ்விதமாக மடிகிறதென்றுந் தேறக் கண்டு தெளிந்திருக்கின்றார். ஆதலின் சகலவித கோட்பாடுகளினின்றும், சகல எண்ணங்களினின்றும், சகல வித தப்பபிப் பிராயங்களினின்றும், தற்பெருமையினின்றும், தன்னயத்தினின்றும் முற்றும் நீங்கியுள்ளவர் என்று அறிந்து கூறுவீர்களாக.

ஓ! சகோதிரர்களே! ததாகதர் உலகில் அவதரித்தாலும் அவதரிக்கா விட்டாலும் உலகிலுள்ள சகலமுந் தோன்றி தோன்றி கெடும் அநித்தியமாய் இருக்கிறதென்னும் நிலைமெயானதும் அவசியமானதுமான ஒரு உண்மெய் இருந்தே இருக்கின்றது.

எவ்வகையில் என்பீரேல், தேகம் அநித்தியம், உணர்ச்சி அநித்தியம் , புலன்கள் அநித்தியம், மனதுக்கடுத்தவைகள் யாவும் அநித்தியம், அறிவும் அநித்தியமாய் இருக்கின்றது.

ஓ! சகோதிரர்களே! ததாகதர் உலகில் அவதரித்தாலும் அவதரிக்கா விட்டாலும் உலகிலுள்ள சகலமும் துக்கத்திற்கு ஆளாகின்றன என்னும் நிலைமெயானதும் அவசியமானதுமாகும் ஒருண்மெய் நிலை இருந்தே யிருக்கின்றது. அதாவது, தேகம் துக்கத்திற்கு உட்பட்டிருக்கின்றது உணர்ச்சி துக்கத்திற்கு உட்பட்டிருக்கின்றது, புலன்கள் துக்கத்திற்கு உட்பட்டிருக்கின்றது, மனதுக்கடுத்தவைகள் துக்கத்திற்கு உட்பட்டிருக் கின்றது, அறிவு துக்கத்திற்கு உட்பட்டிருக்கின்றது. ஆதலின் உலகில் தனிமெயான அத்தா ஒன்றுமில்லை என்னும் அவசியமான ஒருண்மெய் இருந்தே இருக்கின்றது. தேகந் தனியல்ல, அத்தா உணர்வு தனியல்ல, புலன்கள் தனியல்ல, மனதுக்கடுத்தவைகள் தனியல்ல, அறிவு தனியல்ல. ஒரு தேகம், ஒரு உணர்வு, ஒரு காட்சி, ஒரு மனதுக் கடுத்தவை, ஒரு அறிவு என்பவைகள் சாஸ்வதமாகவும், என்றும் அழியாததும், எக்காலும் மாறக்கூடாததுமாக உலகில் இருந்ததில்லை. நற்காட்சியை அறிந்த புருஷன் அறியாதோர் நிலையுள்ளதென்னுங் கொள்கையை ஒருக்காலும் மதியான்.

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரன் உணர்ச்சியையே தன் ஆன்மா அத்தாவென்று கூறுவான். அவனுக்குப் பின்வருமாறு விடையளிப் பீர்களாக. உணர்ச்சியில் மூன்றுவகை உணர்ச்சிகளுண்டு. அதாவது, இன்பத்தை நுகரக்கூடிய உணர்ச்சி ஒன்று, துன்பத்தை நுகரக்கூடிய உணர்ச்சி ஒன்று, இன்பந் துன்பம் இவ்விரண்டையும் நுகரக்கூடிய உணர்ச்சி ஒன்று ஆக மூன்றுவகை உணர்ச்சிகளில் எந்த உணர்ச்சியை அத்தா ஆன்மா என்று

நினைக்கின்றாய். ஒருவித உணர்ச்சியை நீர் சாதித்துவருகையில் மற்றும் இருவகை உணர்ச்சிகளை அதேகாலத்தில் அதே சாதனத்தில் இல்லாததைக் காண்கின்றீர். இவ்வகை ஒருகாலத்திலுள்ள உணர்ச்சியும் நுகரலும் மறுகாலத்தில் மடிந்துவிடுகிறபடியால் இம்மூன்றையும் அநித்தியமென்று கூறப்படும். இத்தகைய ஒருகாலத்திலுள்ள உணர்ச்சியும் நுகரலும் மறுகாலத்தில் மடிந்துவிடுகிறபடியால் இம்மூன்றையும் அநித்தியமென்று கூறப்படும். இத்தகைய காரணங்களால் தோன்றிய காரியங்கள் அழிவுக்குக் கீழ்படிதல் வேண்டும், மரணத்திற்குக் கீழ்படிதல் வேண்டும். அவைகளின் இருப்பே பிறிதலிலும் மறைதலிலும் அடக்கப்பட்டுள்ளன. இவ்வகை உணர்ச்சிகளில் ஒன்றை எவன் கண்டுக்கொள்ளுகின்றானோ அவன் பின்வருமாறு கூற ஆரம்பிப்பான். இது என் ஆன்மா என்று முன்புகூறி பின்பு இந்த உணர்ச்சியின் மறைவால் என் ஆன்மா அழிந்ததென்பான். இவ்வகை சிந்தித்த அதே காலத்தில் இந்நிலையற்ற வாழ்க்கையாம் உணர்ச்சியால் என் ஆன்மா அநித்தியமென்று சம்மதித்துக்கொள்ளுவான்.

ஓ! சகோதிரர்களே! இன்னொரு சகோதிரன் உணர்ச்சியையே என் சுத்த ஆன்மமல்ல, என் சுத்த ஆன்மம் உணர்ச்சிக்கு உட்படாத தாயிருக்கின்ற தென்பான். அவனுக்குப் பின்வருமாறு விடையளிப்பீர்களாக.

ஓ! சகோதிரனே! உமக்கு உணர்ச்சியில்லாவிட்டால் நான் வருகின்றேன், போகின்றேன், கூறுகின்றேன் என்னும் வாக்கியந் தோற்றுமாவென வினவி உணர்ச்சியின்றி இவ்வாக்கியங்கள் தோன்றாதென விளக்கி அப்பிரயோசன வார்த்தைகளை விலக்கல் வேண்டும்.

மற்றும் இன்னோர் சகோதிரன் உணர்ச்சியே என் ஆன்மாவல்ல உணர்ச்சி ஆன்மாவுக்கு அப்புறப்பட்டதென்று கூறுவதும் பிசகு. ஆனால் என் சுத்த ஆன்மாவே உணர்ச்சியை அறிந்துகொள்ளுகின்றது. என் ஆன்மாவுக்கு அவ்வகை அறியுஞ் சக்தி உண்டென்றுங் கூறுவான். அவ்வகையால் கூறுஞ் சகோதிரனுக்குப் பின்வருமாறு விடையளிப்பீர்களாக. உணர்ச்சியற்று அதன் தொடர்ச்சி யாதொன்றுமில்லாமல் உணர்ச்சியே நிர்மூலமானபின்பு உணர்ச்சியற்ற சூன்யத்தில் நான் இருக்கின்றேன், நான் போகின்றேன், நான் கூறுகின்றேனென்னும் வாக்கியம் எழ முடியாதல்லவா. ஆதலின் இத்தகைய அப்பிரயோசன வார்த்தைகளையும் அகற்றல் வேண்டும்.

இன்னொரு சகோதிரன் எண்ணங்களை சுத்த ஆன்மா என்பான். அதுவும் சூன்ய அஸ்திபாரமேயாம். ஏனெனில் எண்ணும் எண்ணங்கள் எழுவதும் மடிவதும் தோன்றுவதும் கெடுவதும் அநுபவக் காட்சியாயிருக்க ஆன்மாவும் தோன்றுவதுங் கெடுவதுமாக முடியும். ஆதலின் எண்ணமே ஆன்மாவென்பதும் அப்பிரயோசன வார்த்தையாகும்.

மற்றுமோர் சகோதிரன் எண்ணத்தை அறியும் உணர்ச்சியாகும் அறிவே சுத்த ஆன்மமென்பான். அவ்வாக்கும் சூன்ய அஸ்திபாரமாகும் எவ்வகையில் என்றால் எண்ணத்தாலாய அறிவு தோன்றுவதையுங் கெடுவதையும் அறிகிறோம். அறிவு கெட்டவன் என்னும் மொழியையுங் கேட்கின்றோம். ஆதலின் எண்ணத்தாலாய அறிவே ஆன்மா என்பதும் அப்பிரயோசன வார்த்தையாம்.

இன்னொரு சகோதிரன் மனமே சுத்த ஆன்மா என்பான். அதுவும் சூன்ய அஸ்திபாரமேயாம். இயாதெனில், மனமானது தோன்றுவதுங் கெடுவதுமாகக் காண்கின்றோம். அதுபோல் ஆன்மா கெடுவதுந் தோன்றுவது மாயின் சுத்த ஆன்மாவாகா. ஆதலின் அதுவும் அப்பிரயோசன வாக்கியமாம்.

ஓ! சகோதிரர்களே! மனம், எண்ணம், உணர்ச்சி என்னும் பெயர்களை ஆன்மாவென்று கூறுவதினும் நான்குபூத சேர்க்கையால் தோன்றுந் தேகமென்னும் ரூபமே ஆன்மாவென்று கூறியிருப்பது பிசகன்று. ஏனென்பீரேல், நான்கு பூதத்தின் சேர்க்கையாலாய தேகம் ஒருவருஷம் பத்து வருஷம் நூறு வருஷம் நிலைத் தேனுமிருக்கும். ஆனால் மனம் உணர்வு அறிவு இவைகள் இரவும் பகலும் க்ஷணத்திற்கு க்ஷணம் தோன்றுவதும் மறைவதுமாய் இருக்கின்றது. ஆதலின் தேகம் சடபதார்த்தத்தைச்

சேர்ந்ததாயிருந்தாலும், உணர்ச்சியை சேர்ந்ததாயிருந்தாலும், புலன்களைச் சேர்ந்ததாயிருந்தாலும், அறிவைச் சேர்ந்ததாயிருந்தாலும், ஒருவனுடை யதாய் இருந்தாலும், மற்றவனுடையதாய் இருந்தாலும், சுத்தமுள்ளதாய் இருந்தாலும், அசுத்தமுள்ள தாயிருந்தாலும், அருகிலிருந்தாலும், தூரமிருந்தாலும் உண்மையாக சத்தியஞானமென்னும் மெய்யறிவினின்று இது என்னைச்சார்ந்ததல்ல இது நான் அல்ல நானென்பது கிடையாது. அநாத்தா இது அநான்மமென்று தெரிந்துகொள்ளல் வேண்டும்.

ஓ! சகோதிரர்களே! மற்றொரு சகோதிரன் உங்களை நோக்கி முன்பு நீங்கள் இருந்திருக்கின்றீர்களா இல்லையா, இனி இருக்கப்போகின்றீர்களா இல்லையா, இப்போது இருக்கின்றீர்களா இல்லையா என்பான். அந்த சகோதிரனுக்கு பின்வருமாறு விடை அளிப்பீர்களாக.

ஒருவிதத்தில் முன்பு நீயிருந்தாய், மற்றொரு விதத்தில் நீ இல்லை, ஒருவிதத்தில் நீ இருக்கப்போகின்றாய், மற்றொரு விதத்தில் நீ இருக்கப் போகிறதில்லை, இப்போது நீ இருக்கின்றாய், மற்றொரு விதத்தில் நீ இல்லை.

எந்த ஒரு சகோதிரன் காரணத்தாலாயது பிறப்பென்று உணர்கின்றானோ அவனே சத்தியத்தைத் தெரிந்தவன் ஆகின்றான். எவ்வகையில் எனில், பசுமடியினின்று பாலும், பாலினின்று தயிறு கட்டியும், தயிறு கட்டியினின்று வெண்ணெயும் உண்டாகின்றது. ஆனால் பாலாயிருக்குங்கால் அதனை வெண்ணெய் என்று கூறுவாரில்லை. தயிறானது கட்டியாய் உறாய்ந் திருக்குங்கால் அதனை பாலென்றேனும் வெண்ணெய் என்றேனுங் கூறுவாரில்லை. வேறெந்தப் பெயராலும் அழைப்பாருமில்லை. அதுபோல் இறந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் இவைகளில் ஒரு காலத்தைக் குறிக்குங்கால் மற்றும் இரண்டு காலமுந் தோற்றுவதில்லை. இரண்டு காலத்தையுஞ் சேர்த்துக் குறிப்பாராயின் முக்காலமென்னும் பெயரில்லாமல் போம். ஆதலின் வார்த்தைக்கு வார்த்தை வீண்பொருட்கூறி தானும் அறியாமல் தங்களை அடுத்தோரையுங் கெடுத்து வீண்காலம் போக்காமல் உலக சீவராசிகளுக்கேனும் நன்மெய் புரியுங்கள். அன்றேல் உங்களுக்குள்ள நன்மெய்யையேனும் வளர்த்துங்கள்.

ஓ! சகோதிரர்களே! நாம் காணும் தேகம் அழிந்தபிறகு நான் என்பதும் அழியும் என்று நம்புவதால் அழிவிலா பரிசுத்தமார்க்கம் அதற்கு வேண்டாமற்போம். நாம் காணும் தேகத்தில் நான் என்பது தனியாகவே இருக்கின்றது. தேகம் அழிந்தபிறகு நான் என்பது அழியாதென்று நம்புவதாலும் அழிவிலாபரிசுத்தமார்க்கம் அதற்கு வேண்டாமற்போம். விபவதிருஷ்டியோ இந்த தேகம் அழிந்த பிறகு நான் எனும் தனி ஆன்மாவும் அழிந்துவிடும் என்று எண்ணுவான்.

பவதிருஷ்டியோ இந்த தேகத்திற் புறப்பட்ட தனி ஆன்மா ஒன்றுண்டு. அது தேகம் அழிந்தபின்னும் சாஸ்வதமானதென்று எண்ணுவான். இவ்விரண்டு வகைக் கொள்கைக்கும் பரிசுத்தமார்க்கமுடிவின் அழிவிலா வாழ்க்கை வேண்டாமற் போம்.

ஏனெனில் தனி ஆன்மாவைப்பற்றிய பவதன்ஹாவாகிய வீண் அவாவைக்கொண்டு இறந்தபிறகும் தேகத்தைவிட்டத் தனி ஆன்மா சாஸ்வதமென்ற சஸ்ஸே திருஷ்டி இருந்தே இருக்கின்றதென்று எண்ணுவான். இத்தகையக் கொள்கைகள் யாவும் பரிசுத்தமார்க் கத்தை மறைக்கும் வருங்கால ஏதுக்களாகும் அக்காலம் உங்கள் காலங்களை வீணில் போக்காமல் பரிசுத்தமார்க்க மத்திய பாதையில் நடக்கும் நடைகளை விவரிக்கின்றேன். அவைகளை உள்ளுணர்ந்து உசாவி உருதியில் நிலைப்பீர்களாக.

மணிமேகலை

பேதைமெய் சார்வாச் செய்கை யாகுஞ் / செய்கை சார்வா உணர்ச்சியாகு,
முணர்ச்சி சார்வா வருவுருவாகு / மருவுருச் சார்வா வாயிலாகும்,
வாயில் சார்வா வூறாகும்மே / யூறு சார்ந்து நுகர்ச்சியாகும்,
நுகர்ச்சி சார்ந்து வேட்கையாகும் / வேட்கை சார்ந்து பற்றாகும்மே,
பற்றிற்றோன்றுங் கருமத்தொகுதி / கருமத்தொகுதி காரணமாக,

வருமேயேனை வழிமுறைத் தோற்றம் / தோற்றஞ் சார்பின் மூப்புப் பிணிசாக்கா,
டவல மாற்றுக் கவலை கையாறெனத் / தவலி றுன்பத் தலைவருமென்ப.
ஊழின் மண்டிலமாச் சூழுமிந் நுகர்ச்சி.

துவாதஸ நிதானங்கள்

"அவிஜ்ஜா பஸ்யா ஸங்காரா, ஸங்காரா பஸ்யா விஞ்ஞானா, விஞ்ஞானா பஸ்யா நாமரூபா, நாமரூபா பஸ்யா ஸலாயதனா, ஸலாயதனா பஸ்யா பஸ்ஸோ, பஸ்ஸோ பஸ்யா வேதனா, வேதனா பஸ்யா தன்ஹா, தன்ஹா பஸ்யா உபாதானா, உபாதானா பஸ்யா பவோ, பவோ பஸ்யா ஜாட்தி, ஜாட்தி பஸ்யா ஜராமரணா, ஸோகபரித்தேவ, துக்கா, தோம்னஸ்ஸ, உபாயாஸா ஸம்பவன்தி."

1. (அவித்தை) பேதைமெ அல்லது பொய்க்காட்சியிலிருந்து ஏதுக்குத் தக்க ஸ்கந்தசேர்க்கையால் குஸல அகுஸல கன்மங்களாகிய ஸம்ஸ்காரங்கள் செய்கைகள் உண்டாகின்றன.

2. (ஸம்ஸ்காரங்கள்) செய்கைகளிலிருந்து மறுபிறப்பை உண்டுசெய்ய கற்பந்தரிக்கும் விஞ்ஞானம் உணர்வு உண்டாகின்றன.

3. (விஞ்ஞானம்) உணர்விலிருந்து நாமரூபங்களாகும் அருவுரு உண்டாகின்றன.

4. (நாமரூபமாகும்) அருவுருவிலிருந்து ஷடாயதனங்களாகும் அறுவகை வாயில்கள் உண்டாகின்றன.

5. (ஷடாதனங்கள்) சப்த, பரிச, ரூப, ரச, கந்த எண்ணங்களாகும் அறுவகை வாயில்களிலிருந்து பதோ ஊறு உண்டாகின்றன.

6. (பதோ) இன்ப துன்பம் ஊறுகளினின்று வேதனை நுகர்வு உண்டாகின்றன.

7. (வேதனை) நுகர்விலிருந்து தன்ஹா வேட்கை உண்டாகின்றன.

8. (தன்ஹா) வேட்கையிலிருந்து உபாதானம் பற்று உண்டாகின்றன.

9. (உபாதானம்) பற்றிலிருந்து பிறப்புக்கு மூலமான கருமக்கூட்டம் பவோ உண்டாகின்றன.

10. (பவோ) பிறப்புக்கு மூலமாகுங் கருமக்கூட்டத்திலிருந்து ஜாத்தி மறுபிறப்பு உண்டாகின்றன.

11. (ஜாத்தி) மறுபிறப்புண்டாகி அதிலிருந்து ஜய - மூப்பு, மர்ணா - மரணம், ஸோகா - வலியும், பரிதேவா - அழுகையும், துக்கா - துன்பமும், தாம்நாஸே - கவலையும், சம்பாந்தே - ஏக்கமும் ஆகிய துக்கோற்பவ மூலமாம் வினைப்பயன்கள் உண்டாகின்றன.

மணிமேகலை

பேதைமெய் மீளச்செய்கை மீளுஞ் / செய்கை மீள உணர்ச்சி மீளு,
முணர்ச்சி மீள வருவுரு மீளு / மருவுருமீள வாயின் மீளும்,
வாயின்மீள வூறு மீளு / மூறு மீள நுகர்ச்சி மீளு,
நுகர்ச்சி மீள வேட்கை மீளும் / வேட்கை மீளப் பற்று மீளும்,
பற்றுமீளக் கருமத்தொகுதி மீளும் / கருமத் தொகுதிமீளத் தோற்ற மீளுந்
தோற்ற மீளப் பிறப்பு மீளும் / பிறப்புப் பிணி மூப்புச் சாக்காடவல,
மாற்றுக் கவலை கையாரின்றிக் கடையி றுன்ப மெல்லா மீளும்.

துவாதஸ நிதானங்கள்

"அவிஜ்ஜா நிரோதா ஸங்காரா, ஸங்காரா நிரோதா விஞ்ஞானா, விஞ்ஞானா நிரோதா நாமர்பா, நாமரூபா நிரோதா ஸலாயதனா, ஸலாயதனா நிரோதா பஸ்ஸோ, பஸ்ஸோ நிரோதா வேதனா, வேதனா நிரோதா தன்ஹா, தன்ஹா நிரோதா உபாதானா, உபாதானா நிரோதா பவோ, பவோநிரோதா ஜாட்தி, ஜாட்தி நிரோதா ஜராமரணா, ஸோக பரித்தேவ, துக்கா, தோம்னஸ்ஸ, உபாயாஸா ஸம்பவன்தி."

அவிஜ்ஜ - பேதைமெய் - பொய்காட்சி

அறியாமெ ஒழிந்தால் அதினின்றெழும் ஸம்ஸ்காரங்களென்னும் செய்கைகள் ஒழியும்.

ஸம்ஸ்காரங்களென்னும் செய்கைகள் ஒழியின் அதனின்றெழும் நாமரூபங்களென்னும் அருவுரு ஒழியும்.

நாமரூபங்களென்னும் அருவுரு வொழியின் அதனினின்றெழும் சடாயதனங்கள் என்னும் அறுவாயல்களாகிய மெய், வாய், கண், மூக்கு,

செவி, மனம் இவைகள் மூலமாக உண்டாகும் சப்த, பரிச, ரூப, ரச கந்த எண்ணங்களாகிய ஆறும் ஒழியும்.

சடாயதனங்கள் ஒழியின் அதனினின்றெழும் பதோ என்னும் பரிசம் அல்லது ஊறு ஒழியும்.

பதோ என்னும் பரிசம் ஒழியின் அதனினின்றெழும் வேதனா நுகர்ச்சி ஒழியும்.

வேதனா என்னும் நுகர்ச்சி ஒழியின் அதனினின்றெழும் தன்ஹா வேட்கை ஒழியும்.

தன்ஹா என்னும் வேட்கை ஒழியின் அதனினின் றெழும் உபாதானா பற்று ஒழியும்.

உபாதனா என்னும் பற்றுக்கள் ஒழியின் அதனினின்றெழும் பவோ பிறப்புக்கு மூலமாகுங் கருமக்கூட்டங்கள் ஒழியும்.

பவோ என்னும் பிறப்புக்கு மூலமாகும் கருமக்கூட்டங்கள் ஒழியின் அதனினின்றெழும் ஜாத்தி மறுபிறப்பொழியும்.

ஜாத்தி என்னும் பிறப்பொழியின் பிணி, மூப்பு, மரணம், அழுகை, துன்பம், கவலை, ஏக்கம் என்னும் துக்கம் நிவாரணமாம்.

ஓ! சகோதிரர்களே! ஜீவர்கள் அறியாமெயில் மூழ்கி அவாவால் கட்டுண்டு அங்குமிங்கும் ஓடி கண்டதை நாடி புதியவானந்தத்தை அநுபவிக்க விரும்புவதினால் புதிய புதிய பிறப்புகள் மாறி மாறி தோன்றி சுழன்றுவருகின்றது.

லோபா - பேராசையாலும், தோஷா - கோபத்தாலும், மோஹா - அறியாமெயினாலும் உதித்த சீவர்களது கருமமானது பேராசையிலிருந்தேனும், கோபத்திலிருந்தேனும், அறியாமெயிலிருந்தேனும் உற்பத்தியாகி; பேராசையிலாவது, கோபத்திலாவது, அறியாமெயிலாவது விருத்தியடைந்து; பேராசையைக் கொண்டும், கோபத்தைக்கொண்டும், அறியாமெயைக் கொண்டும் சீவர்கள் எங்கெங்கிருக் கின்றனவோ அங்கங்கு பரவி உள்ள சீவர்கள் செய்த கருமத்தின் பிரகாரம் இப்போதோ மறுபிறப்பிலோ அந்தந்த கருமத்திற்குத் தக்க பலனை அநுபவிக்கின்றனர்.

சீவர்கள் அறியாமெயினின்று விலகுவதாலும், விவேகவிருத்தியினாலும், பேரவாவை நாசஞ் செய்வதாலும் மறுபிறப்பிற்காம் ஏதுக்கள் யாதுமில்லாமற் போம்.

எவ்வகையிலென்னில், சீவர்களது கருமமானது பேராசையாலாவது , கோபத்தாலாவது, அறியாமெயாலாவது நேர்ந்ததல்ல.

பேராசையிலிருந்தாவது, கோபத்திலிருந்தாவது, அறியாமெயிலிருந்தாவது உற்பத்தியாயதல்ல.

பேராசையாகவே இருந்தேனும், கோபமாகவே இருந்தேனும், அறியாமெயாகவே இருந்தேனும் அக்கருமம் விருத்தியடைந்ததல்லவென்று எப்போது ஏற்படுகின்றதோ அப்போதே பேராசையும், கோபமும், அறியாமெயும் ஒழிந்து கருமமும் அழிந்துபோமென்பது திண்ணம்.

அதாவது ஓர்பனைமரத்தை வேரோடு வெட்டி எறிந்துவிட்டபின் மறுபடியுந் துளிர்க்காமல் எப்படி மடிந்துவிடுகின்றதோ அதுபோல் மேற்கண்ட கருமங்களை எப்போது வேருடன் களைந்துவிடப்படுகின்றதோ அப்போதே கருமக்கூட் டோற்பவம் மடிந்துபோமென்பதாம்.

பேராசையை நாசஞ்செய்யவேண்டுமென்றும், கோபத்தை நாசஞ் செய்யவேண்டுமென்றும், அறியாமெயை நாசஞ்செய்யவேண்டுமென்றும், துர்நடத்தையை நாசஞ்செய்யவேண்டும் என்றும், மனதிற்கு சுகயீனமான வைகளை நாசஞ்செய்யவேண்டும் என்றும் போதித்து வருகின்றபடியால் பேராசை, கோபம், அறியாமெய் நிறைந்த சீவர்கள் என்னை சூன்யக் கோட்பாட்டை உடையவரென்றும்; பேராசை, கோபம், அறியாமெயற்ற சீவர்கள் என்னை அசூன்யக் கோட்பாட்டை உடையவரென்றுங் கூறுவர்.

தேகவிருத்திக்குத் தக்க புசிப்பும், பருமனும், உணர்வும், சிற்றின்பமுந் தோன்றுவதுபோல்; விவேகவிருத்திக்குத்தக்க சுகமும் ஆனந்தமும் பேரின்பமுந் தோன்றும்.

சம்மா சங்கப்போ - நல்லூக்கம்

ஓ! சகோதிரர்களே! இவ்விடத்தில் நல்லூக்கத்தை ததாகதன் விளக்குகின்றேன்.

அதாவது:- பகையில்லா வாழ்க்கையிலிருக்க வேண்டும் என்னும் எண்ணம், நமதுள்ளத்தில் பொறாமையை நிலைக்கவைக்கக் கூடாதென்னும் எண்ணம், ஒருவருக்குத் தீங்கு செய்யலாகாதென்னும் எண்ணம், தீங்கான குணங்களை உள்ளத்திற் குடிக்கொள்ள வைக்கலாகாதென்னும் எண்ணம், முன்பு பிறனுடைய சுகத்தைக் கருதிப் பின்பு தன்னுடைய சுகத்தைக் கருதும் எண்ணம்.

இத்தகைய எண்ணங்கள் விருத்தியடைவதற்கு மனையறப் பற்றுக்கள் தடையுண்டாக்கிக்கொண்டு வருமாதலின் சாதுசங்கத்திற் சேருந் துறவறத்தை விரும்பும் எண்ணம் இவைகளையே நல்லூக்கம் என்னப்படும்.

உதாரணமாக ஒரு குடியானவனோ அவன் புத்திரனோ மற்றும் யாவனேனும் ததாகதர் போதனையைக் கேட்டு அதனிலையை தெரிந்து கொள்ளுவானாயின் அவன் பின்வருமாறு சிந்திக்க எண்ணங்கொள்ளுவான். அதாவது, இந்த சமுசார வாழ்க்கையிலிருப்பது சிறையிலிருப்பதென்றும் முள்ளுகள் நிறைந்த காட்டிலிருப்பதென்றும் குப்பைகள் நிறைந்த குழியிலிருப்பதென்றும் எண்ணி சமுசாரச் சிறையினின்றும் முட்காட்டினின்றுங் குப்பைக்குழியினின்றும் விலகுவதற்கான முயற்சியினிற்பான்.

தன் தேகத்தாலும், நாவினாலும், எண்ணத்தினாலும் உண்டாகிக் கொண்டுவருந் துற்கருமப் பற்றுக்களை மனையறத்திருந்தே பற்றறுக்க முயலுவான். அம்முயற்சியானது சமுசாரச்சிறையின் இடுக்கத்தாலும், முட்காட்டின் குத்துதலாலும், குப்பைக்குழியின் துந்நாற்றத்தினாலுங் கெட்டு கீழிழிவான். மறுபடியும் துறவறத்தோராம் சங்கத்தோரை நோக்குவான், நோக்கி சிரசை மொட்டையடிப்பதில் பயனென்னை. தாடியை சிறைத்துவிடுவதில் பயனென்னை. மஞ்சளாடையைப் புனைவதிற் பயனென்னை என்று எண்ணுவான். அவ்வெண்ணங்கள் யாவும் முந்நூக்கத்தால் மடிந்து மனையறத்தோர் பல கஷ்டத்தோடும் சம்பாதித்தப் பொருட்கள் யாவையுங் கள்ளர் கொண்டுபோவார்கள், வேற்றரசன் பரித்துக் கொள்ளுவான், கறையானென்னுஞ் சிதல் உண்டுவிடும்.

ஆனால் முடியைப் பரித்துவிட்டும், தாடியை சிறைத்துவிட்டும், பட்டாடைகளை அகற்றிவிட்டும், மஞ்சளாடை ஏற்று நான்குவாய்மெயாம் நல்லூக்க பொக்கிஷத்தை சேர்த்துவருகிறவர்களாதலின் அப்பொக்கிஷத்தைக் கள்ளர்களேனும், வேற்றரசரேனும், சிதல்களேனும் அழிப்பதற்கு முடியாதென்று உணர்ந்து அவ்வழியாய்ப் பொருளை சேர்க்கும் ஊக்கத்தால் அரசாங்கத்திருந் தேனும், பெரிய குடும்பத்திலிருந்தேனும், சிறந்த வியாபாரத்திலிருந்தேனும் விடுபட்டு துறவறமாம் தன்மசங்களுசார்ந்து சிரம் மொட்டையடித்தும், தாடியை சிறைத்தும், மஞ்சளாடை போர்த்தும் பொன்போன்ற பிரகாச பரிசுத்த வாழ்க்கையில் நிலைப்பான். பேராசையற்று, கோபமற்று லோபமற்று நல்லூக்கம் உடையவனது உலகப் பொருட்களை கள்ளர் பரிக்கினுங் கவலையற்று ஆனந்தத்திலிருப்பன்.

காரணம் யாதெனில், உள்ளப் பொருளாம் நல்லூக்கத்தினிற்பவன் உலக பொருளின் பற்றுக்களற்றுக்கொண்டே வருவதினாலேயாம். அதுவுமன்றி அசைவிலா நல்லூக்கத்தினின்றவன்பால் எத்தகைய இடுக்கண்கள் தோன்றினும் உலகப் பொருளழியினும் உள்ளங்கலங்கானென்பது திண்ணம். கொடிகளானது வெள்ளப் பெருக்கத்தினுந் தளராது ஓங்கி நிற்பதுபோல் நல்லூக்க மிகுத்தவனை பல்வகை இடுக்கங்கள் வந்து மோதினும் உள்ளங் கலங்கானென்பது துணிபு. யுத்தகளத்திற் பாய்ந்த யானையினதுடல் முழுவதும் அம்பின் கும்புகள் நிறைந்து தைக்கினும் நிலைபிரழாது நிற்பதுபோல் நல்லூக்க மிகுத்தோன் உள்ளத்தில் நீடிய இடுக்கண்கள் தோன்றினும் நல்லூக்க நிலை தளரானாவன்.

ஓரரசனானவன் குடிகளைக் காக்கும் ஊக்கத்திலும் படைகளை பயிற்றும் ஊக்கத்திலும் அமைச்சர்களை நிதானத்தமைக்கும் ஊக்கத்திலும் மிகுத்திருப்

பானாயின் அவனை நோக்கும் வேற்றரசர்கள் அஞ்சி நிற்பர். அதுபோல் நல்லூக்க மிகுத்த உள்ளத்தின்கண் பலவகை இடுக்கண்களும் சார்வதற்கஞ்சி ஒதுங்கும் என்பதாம்.

விருட்சங்களானது தன் முயற்சியின்றி வளர்ந்து வளர்ந்த இடத்திற்கெடும், மக்களும் அவ்வகை முயற்சியற்றிருப்பின் மரமென்னத்தகும். மக்களுள் முயற்சியின் மிகுத்து மாளாநிற்கின் மக்களென்னும் பெயர் மாறி தேவர் களென்னும் பெயரைப் பெறுவார்கள். இதையே நல்லூக்கப் பலனென்னப்படும்.

சம்மா வாசா – நல்வசனம்

ஓ! சகோதிரர்களே! இனி நல்வாழ்க்கையை ததாகதன் விவரிக்கின்றேன்.

1. அதாவது, (பொய்சொல்லாமெய்) ஒரு மனிதன் பொய்பேசுவதை விடுத்து பொய்யினின்று நீங்கியிருப்பானாயின் அவன் சத்தியத்தைப் பேசுவான். உண்மையில் சிந்தனை உடையவனாய் இருப்பான். உண்மையில் பற்றுள்ளவனா வான். சகலராலும் யோக்கியனென மதிக்கப்படுவான்.

அத்தகைய சத்தியவானை ஜனக்கூட்டங்களிலாவது குடும்பங்களிலாவது காணுவார்களானால் ஒவ்வொருவரும் அஞ்சுவார்கள். நியாயாதிபதியினிடம் அவனைக்கொண்டுபோனபோதிலும் தனக்குத் தெரிந்ததைத் தெரியுமென்றும், தெரியாததைத் தெரியாதென்றுங் கூறுவான். அதினால் நியாயாதிபன் சத்தியவாக்கனைநோக்கி நல்ல மனிதனே, நீர் கண்டதைச் சொல்லவேண்டுமென்றால் மன உறுதியுடன் அஞ்சாமல் நான்கண்டதைச் சொல்லுவேன் காணாததைச் சொல்லமாட்டேன் என்பான். அவன் மற்றவர்களுடைய சுகத்துக்கேனுந் தன்னுடைய சுகத்துக்கேனும் மெய்யைப் பேசுவானேயன்றி பொய்யைப் பேசமாட்டான். இத்தகைய மெய் வார்த்தையைப் பேசுதலினால் தனக்குச் சுகமும் மதிப்பு முண்டாவதுமன்றி சகல சீவர்களுக்குந் தீங்கை உண்டுசெய்யாதவனாகின்றான்.

2. (புறங்கூறாமெய்) அதாவது, ஒருவருக்கொருவர் புறங்கூறுதலையும் மற்றவர்களைப் புறங்கூறி மனத்தாங்கலை உண்டுசெய்தலையும் எதிரில் கண்டபோது ஓர் வார்த்தைக் காணாதவிடத்தோர் வார்த்தைப் பேசுவதையும் அகற்றிநிற்பானாயின் மற்றவர்களை தூஷிப்பதைவிட்டொழிவான். ஒருவருக்கொருவர் கோட்சொல்லி கொடூரமுண்டு செய்யும் வாக்கை அகற்றுவான். இத்தகையச் செயல்களால் ஒருவருக்கொருவர் பகைத்து பிரித்துள்ளவர்களை சேர்த்தும் தன் வார்த்தையால் மற்றவர்களுக்கு அன்பை வளர்த்தியும் புறங்கூறாச் செயலால் ஆனந்தப்பரவசத்திலிருப்பான்.

தருமத்தைக் கூறிக்கொண்டிருப்பவன் ஓர்கால் மறந்தும் புறங்கூறாமலிருப் பானாயின் ஆறுதலடைவான். தனது குடும்பத்தோரையேனும் தன்னேயர் களையேனுங் கண்டவிடத்தில் புகழ்தலுங் காணாதவிடத்தில் இகழ்தலுமாகியச் செயலற்றவன் அழியா தருமத்தைச் செய்ததற்கு ஒப்பாவான். அங்ஙனமின்றி அறிந்தோரைக் கண்டயிடத்து புகழ்தலும் காணாவிடத்தி லிகழ்தலுமாகியப் புண்ணாக்குடையவன் உலகத்தில் சீவித்திருப்பதைப்பார்க்கினும் சீவனற்று விடுவானாயின் சத்தியதருமத்தில் நிலைத்தவனாவான்.

சத்தியதன்மத்தில் நிலைத்தவன் தனது நேயனை கண்டயிடத்தி லிகழ்தலின்றி காணாவிடத்திற் புகழ்ந்து நிற்பன்.

ஒருவன் தன்னிடத்திற் பேசிவிட்டுப் போம்போதே யவனையிழிகூறலும், அவன் மறைந்தபின் அவனைப்பழி கூறலுமாகிய புறங்கூறலை சத்தியதன்மம் உணர்ந்தவன் மறந்தும் புறங்கூறான்.

3. (கொடுஞ்சொற்) கூறாமெய் அதாவது இனியவைகூறல், ஒருமனிதன் சுடச்சொல்லுங் கொடூரவார்த்தையைப் பேசுதலிலிருந்து மீண்டவன் மறுபடியும் அக்கொடுஞ்சொற் கூறுதற்கஞ்சுவான். செவிக்குளிரும் வார்த்தை பேசுவான். இதயத்தில் அன்பு பதியும் வார்த்தையைப் பேசுவான். அன்புடன் பேசுவான். சந்தோஷம் உண்டாகும்படி பேசுவான். யீடேற்றத்தைத் தரும்படியான வார்த்தைகளைப் பேசுவான். ஏனித்தகைய வார்த்தைகளைப் பேசுவானென்னில் அவனென்னை அவதூராக வைதான், அடித்தான், என்னை

வென்றான், என்பொருளைத் திருடினானென்றுகூறும் ஒருவனுடைய எண்ணங்கள் யாதால் வந்ததென்று மேற்கண்ட அறிவுடையோன் தெரிந்துக் கொள்ளுவதுடன் அவ்வகையான மனதையுடையவன் கொடூரத்தினின்று மீளமாட்டான் என்று அறிவான். ஏனெனில், கோபத்தைக் கோபத்தால் வெல்ல முடியாது. கோபத்தை சாந்தத்தால் வெல்லக்கூடும் என்பதை உணர்ந்திருப்பதினாலேயாம்.

ஒருவன் தான் செய்யுந் தருமத்தைப் பேசிக் கொடுத்தலினும் முக மலர்ந்து இனிய வார்த்தைகளைப் பேசுதல் அதி தன்மமாம், தன்மத்தினொளியானது அன்புடன் முகமலர்ந்தீயுந் கொடையினிற்கும் என்பதாம். அன்பும் உபசரிப்பும் முகமலர்ச்சியும் உடைய இனிய சொற்களாலீயுந் தருமத்தை உடையவனைத் துன்பம் அணுகா திருப்பதுடன் வறுமையும் அகலும் என்பதாம்.

ஒவ்வொரு மனிதனையும் பிரகாசிக்கச்செய்யும் ஆபரணங்கள் யாதெனில், பெரியோர்களை வணங்குதலும், முகமலர்ச்சியும், இனிய வார்த்தைகளுமேயாம்.

ஓ! சகோதிரர்களே! இத்தகைய ஒழுக்கமும், முகமலர்ச்சியும், இனிய வார்த்தையையும் அநுஷ்டிக்கின்றவன் எவனோ அவன் புத்ததேவனுலகை அறிந்தவனாகின்றான்.

இவ்வநுஷ்டானத்தை உடையவன் திருடர்களையேனுங் கொலையாளி களையேனுங் கண்டபோது கலக்கமில்லாமல் இருப்பான். மனதில் கெட்ட எண்ணங்கள் இருந்தால் வாக்குக் கொடூரத்தில் எழும்பும் மனதில் அன்பும் சமாதானமும் பெருகிநிற்கில் முகத்தில் மலர்ச்சியும், வாக்கில் இனிய வாக்கும் எழும்.

கோபத்திற்கும் பொறாமெய்க்கும் வேரில்லாமலும், எல்லையில்லாமலும், ஆழமில்லாமலும் அடியோடும் எறிந்துவிட்ட புருஷனின் பற்றிருக்கவேண்டும்.

4. (விண்வார்த்தை) அதாவது பயனில் சொல்லாமெய். ஓ! சகோதிரர்களே! ஒரு மனிதன் வீண்வார்த்தைப் பேசுவதைவிட்டு நீங்குவானாயின் அவன் மறுபடியும் பேசவேண்டிய காரியங்களைப் பேசி பேசவேண்டாத காரியங்களை அகற்றிவிடுவான். எப்போதுந் தனக்கும் எதிரிக்கும் பிரயோசனம் உண்டாகுந் தன்மத்தைப் பற்றியுஞ் சங்கத்தைப் பற்றியும் பேசுவான். தான் சொல்லும் வார்த்தைகளால் எதிரிகளுக்கு யாதாமொருப் பிரயோசனமும் இல்லையென்று தெரிந்து கொண்டவன் நாணமுற்று மறுபடியும் பயனிலா சொற்களைப் பேசாதிருத்தல் வேண்டும்.

தனது பந்துக்களிடத்தும், நேயர்களிடத்தும் பயனிலா சொற்களைப் பேசுதல் தீதென்றறிந்து கொண்டவன் கனவிலும் பயனற்ற சொற்களை கருதலாகாது. பயனற்ற வார்த்தைகளைப் பேசித் திரிதலின் பயன் யாதெனில், உள்ள நீதியும் நெறியும் அகன்று சற்குணநிலை பெயன்று போமென்பதாம். பயனற்ற சொற்களைப் பன்னிப்பன்னிப் பேசுபவனை பெரியோர்கள் பதரென்று கூறுவார்களென்று உணர்ந்து மறந்தும் பயனற்ற வார்த்தைகளைப் பேசலாகாது. சத்திய தன்மத்தை உணர்ந்தவர்கள் மிருதுவான வார்த்தைகளைப் பேசாவிடினும் பயனற்ற வார்த்தைகளைப் பேசாதிருத்தல் வேண்டும்.

இத்தகைய வாக்குநிலை பெற்றவன் செயல் சுகத்தைக் கொடுக்கக் கூடியதாகும். இரண்டுவிதமான விஷயத்தில் பற்றுள்ளவனாகின்றான். அதாவது, பயனுள்ள தருமத்தை சம்பாஷிக்கவேண்டும் என்பதோர்பற்று. அவ்வகை தருமநிலையினின்று சாந்தத்தை நிறப்பவேண்டும் என்பதோர் பற்று. இப்பற்றாகும் பயன் தரும்பொருளே பற்றற்றான் பற்றாகும் நல்வசனம் எனப்படும்.

சம்மா கம்மந்தா - நற்செய்கை

1வது கொலை ஓ! சகோதிரர்களே! நற்செய்கையைப்பற்றி தகாகதன் விளக்குகின்றேன். ஒரு மனிதன் கொலைத்தொழிலை விட்டு இனி அக்கொலைத் தொழிலை செய்வதில்லையென்று நோன்புகொண்டு தனது கைகளிற் கத்திகளை யேனுந் தடிகளையேனுந் தொடாமல் சருவசீவர்களின்பேரிலும் அன்பு பாராட்டலாலும் சீவர்கள் இம்சைக்குப் பரிதாபப்படுதலினாலும் உயிர்களை ஆதரிக்கத் தக்கவனாகின்றான். தனக்குக் கிடைத்துள்ள ஆகாரத்தை சருவ

சீவர்களுக்கும் ஈய்ந்து அவைகளின் பசியாற்றி ஆதரிக்கும் நோன்பினை உடையவன் கொல்லாநோன்பின் குணமிகுத்தோனாதலின் எல்லா தருமங்களினும் மேலான தருமத்தை அடைந்திருக்கின்றான். பொய்ப்பேசுதலை ஒழித்தவன் எத்தகைய சுகத்தின்று உண்மெயறியும் நிலையை அடைகின்றானோ அவனருகில் கொலையைத் தவிர்த்து சீவகாருண்ய மிகுத்தவனாக நிற்பான். முத்தியென்றும், மோட்சமென்றும், நிருவாணமென்றுஞ் சொல்லுஞ் சுகநிலையின் பீடம் எதினால் அமைக்கப் பட்டிருப்பதென்னில், கொலையைத்தவிர்த்த சீவகாருண்ணியத்தினாலேயாம் ஒரு மனிதனை நல்லவனென்று மற்ற மனிதர்கள் சொல்லுவதுடன் சருவ சீவராசிகளும் நல்லவனென்று அருகிற்சென்று அன்பு பாராட்டுமாயின் அவனது சீவகாருண்ய அன்பையே சுகவாரி எனப்படும். மாறிமாறி பிறக்கும் மாளாப்பிறவியின் துக்கத்தை நீக்கிப் பிறப்பறுக்கும் உள்ளத்துறவை நோக்குபவன் கொலையை அகற்றி சீவகாருண்யத்தை நோக்குவனேல் துறவின் வழி வெள்ள விளங்கும். சருவசீவர்களையுந் தன் புசிப்புக்கென்று கொல்லாமலுங் கோபத்தாற் கொல்லாமலுங் காருண்ய மிகுத்துத் தான் கொலைபுரிவதை அகற்றுவதுமன்றி கொலைபுரிபவனையுந் தடுத்தாட்கொள்ளுவானாயின் தன்னைக் கொலையுண்ணும் இயமமென்னுங் காலனணுகானென்பதாம். மாமிஷ புசிப்பால் தன் யாக்கையைப் பெரிதாக்க முயலுவோன் சருவ சுகத்தையுஞ் சுருக்கித் துன்பத்தைப் பெருக்கிக் கொள்கின்றான். தேகத்தைக் கொழுக்க வளர்ப்போன் பிணிப்பீடையால் வாதைப்படுவதை உணர்ந்தும் விவேகிகள் வெறுக்கத்தக்கப் புலால் இச்சையால் கொலைபுரிந்து அதன் விருத்தியைக் கெடுப்பதினும் தன் தேகத்தை சுருக்கிக்கொள்ளுபவன் சுகமடைவான். அதாவது, புற்பூண்டுகளிலிருந்து புழுக் கீடாதிகளும், புழுக்கீடாதிகளின்று மட்சம் பட்சிகளும், மட்சம் பட்சிகளினின்று ஊர்வன மிருகாதிகளும், மிருகாதிகளினின்று வாலற்ற நரர்களாம் மக்களும், மக்களினின்று தேவர்களும், ஒன்றிலிருந்தொன்று உயர்ந்துகொண்டேபோவது உலகத்தோற்றமாதலின் சீவராசிகளின் உயர்வைக் கெடுக்குங் கொலைத் தன்னுயிர் நீங்கினுஞ் செய்யாதிருக்கக்கடவன்.

2வது களவு ஓ! சகோதிரர்களே! ஒரு மனிதன் களவு செய்யுந் தொழிலினின்று நீங்கி அதைச் செய்வதில்லையென்று விரதங்கொண்டவன் தனக்குக் கொடுப்பதைப் பெற்றுக்கொள்ளுவான். கொடாததை எடுக்க மாட்டான். அவன் வாங்கவேண்டியப் பொருள் எவ்வளவோ அவ்வளவுங் கார்த்திருந்து வாங்கிக் கொள்ளுவான். உரியவன் உத்திரவின்றி தொடமாட்டான். வஞ்சினத்தாலுங் களவினாலும் மற்றோர் பொருளை அபகரிக்கலாகாதென்னும் எண்ணத்தை உறுதிபடுத்தினவன் இதய பரிசுத்தம் அடைவான். நித்திய சுகத்தை விரும்புகிறவன் மறந்தும் அன்னியன் பொருளை அபகரித்து அவன் மனதைப் பெருமூச்சுடன் அலையவிடமாட்டான். அதாவது, விவேகமிகுத்தோர் தனதுள்ளத்தில் எழும் களங்கங்களாம் வஞ்சினம், தீங்கு, களவு முதலியன எழாமல் அகற்ற வேண்டியது அழகாதலின் உலக மாக்கள் கனவினுங் களவை எண்ணாதிருத்தல் நன்று. ஓர் மனிதன் களவினால் சேகரித்தப் பொருள் தனது மூத்தோர் பொருளையுஞ் சேர்த்துக்கொண்டு சென்றுவிடும். அதுபோல் களவின் பொருளைக் கருதினவன் அருளைக் கருதான். அருளைக் கருதினவன் பொருளைக் கருதான். அருளையும் பொருளையுங் கருதினவன் இருளினின்று தவிப்பான். பொருளை விரும்புகிறவன் புண்ணியவச தேகத்தை வருத்தி சம்பாதித்தல் வேண்டும். அங்ஙனமின்றி வருத்தியு முயற்சியுமுற்று சம்பாதித்தவன் பொருளை யவனை யறியாது களவு செய்துக் கொள்பவன் அப்பொருட்களைத் தன்னையறியாது இழந்து சகலராலும் அவமதிக்கப் படுவான். அருளைக்கருதினவன் பொருளையும் பொருளுக்குடையவனையும் நோக்காமல் சீவர்களின் சுகத்தை நோக்குபவனாதலின் களவென்னுங் கருத்தே அவன் உள்ளத்திலுதிக்காதென்பதாம். ஆசையின் மிகுதியால் அன்னியன் பொருளை அபகரித்து ஆனந்தமுறுதல் படிப்படியே துக்கத்திலிறங்கி சதா

துக்கத்திலாழ்த்திவிடும். உலகத்தார் ஒருவனைக் கள்ளனென்றறிந்துக் கொண்டவுடன் அவன் வரும் இடங்களிலும் போகும் இடங்களிலுங் கண்ணோக்க முற்றிருப்பார்கள். அவ்வவர் நோக்கமே அவனைத் துன்பத்தில் ஆழ்த்தி மாளா துக்கத்தில் ஆழ்த்திவிடும். ஆதலின் களவை அகற்றி களங்கமறுப்பதே முத்திக்கு வித்தென்னப்படும்.

3-வது காமம். ஓ! சகோதிரர்களே! ஒரு மனிதன் தன் தாரமன்றி அன்னியர் தாரத்தையேனும் அன்னியர் இஸ்திரீகளையேனும் விரும்பு வதில்லை என்று விரதம் பூண்டவன் பிதாவினாலாவது, மாதாவினாலாவது, மூத்தோராலாவது, சகோதிரனாலாவது, சகோதிரியாலாவது பாதுகாக்கப்பட்ட கன்னிகையை யேனும் மாங்கல்ய ஸ்திரீயையேனும், அடிமைப்பெண்ணையேனும், வேசியையேனும், இச்சிக்கமாட்டான். ஒருவனது இல்வாழ்க்கைக்கும் சுகத்திற்கும் இல்லாளே காரணமாதலின் அவ்வில்லாளை மற்றொருவன் இச்சித்து அவள் புருஷனுக்கும் அவளுக்கும் மிகுந்த அன்பையும் ஒற்றுமையையுங் கெடுத்துப் பாழாக்கியபோது அவன் இல்லமும் குடும்பமுங் கூடிவாழும் வாழ்க்கைக்கெட்டு குலைந்து விடுவதினால் அத்தகையக்குடிக்குக் கேடுண்டு செய்வதைப் பார்க்கினுந் தான் ஒருவன் கெடுவது நலமென்று எண்ணித் தனதுயிரைப் போக்கிக் கொள்ளுவான். அதுவுமின்றி தன் தாரத்தை மற்றொருவன் இச்சித்தபோது தனக்கெவ்வளவு மனத்தாங்கலுங் கோபமும் பிறந்து குடிகெடும்படி நேரிடுகின்றதோ அதுபோல் மற்றவனது குடியுங் கெடுமென்றெண்ணி அன்னியதாரத்தைக் கனவிலும் நினையாதிருப்பன். அன்னியர் மனைவியை யேனும், கன்னியையேனும், அடிமைப்பெண்ணை யேனும் இச்சிப்ப வனுக்கு மற்றவர்கள் பகையும் அவள் சீரைக் கெடுத்த பாவமும் அவள் குடும்பத்தோர் எவ்விதத்தும் அடிப்பார்களென்னும் பயமும் ஓர் பெண்ணின் சீரைக் கெடுத்தாயே ஆடோ பாவி என்னும் பழியும் இவன் சீவியகாலமெல்லாம் நிலைத்துவிடுமென்று எண்ணி காமிய இச்சையைக் கண்டித்து அவ்வாசையை அகற்றிவிடுவான். ஈகையில் மிகுத்தோனென்றும் வாக்கில் மிருதுவானவன் என்றும் சொல்லக் கூடியவனாயினும் அன்னியன் மனையாளை இச்சித்து அக்குடியைப் பாழாக்கினானென்று பெரியோர் கேழ்விப்படுவாராயின் தன் மனையின் அருகிலேனுஞ் சேர்க்காரென்று எண்ணி அச்சமுண்டாகிக் காமத்தை எறித்துக்கொண்டே வருவான். கொலை களவு மிகுத்த பாபிஷ்டிகளுடன் சேர்ந்து ஓர் குடியைக் காலமெல்லாந் துக்கத்தில் ஆழ்த்துங் காமிஷ்ட்டி என்னும் பெயரையும் வகிக்கமாட்டான். இதுவே நற்கன்மங்களென்னப்படும். இந்நற்கன்மங்கள் யாவுந் திரண்டப் பொதுப்பெயரே கடவுளென்னப்படும்.

சம்மா அஜீவா - நல்வாழ்க்கை

ஓ! சகோதிரர்களே! நல்வாழ்க்கையை ததாகதன் விவரிக்கின்றேன். அதாவது மனையறத்திலிருப்பவன் மனையறமென்பது யாது, துறவறம் என்பது யாது என உசாவி மனையறத்துனின்று இல்வாழ்க்கையை நோக்கி தனக்குத் தக்க இல்லாளை சேர்த்துக்கொள்ளக்கடவன். அவ்வில்லாள் பிறந்த குடும்புத்தில் அவனைக் கொலைபுரிந்தான் இவனை வஞ்சித்தான் அன்னியன் தாரத்தை இச்சித்து அவன் குடும்பத்தைக் கெடுத்தான் இவன் சொத்தை அபகரித்துக்கொண்டான் என்னும் பழியில்லாமலும், கொலைத் தொழிலே கொடூரமாகக் கொண்டவன் உள்ளத்தில் எக்காலும் வஞ்சத்தை உடையவன் என்னும் பாவமில்லாமலும், கோபமே வோருருவாகக்கொண்டவனும் கத்திரியைப்போல் ஒவ்வோர் குடும்பத்தைச் சேராமற்கத்திரிப்பவனும் எக்காலும் விரோதச்சிந்தையே கொண்டவனுமாகிய பகையில்லாமலும், இவன் கள்ளன், இவன் கொலைஞன், இவன் வஞ்சன், இவன் வழி பரிப்போன் என்னும் அச்சமும், நோயில்லாமலும் உள்ளக் குடும்பியாயிருப் பாளாயின் தனக்கோர் பழி நேராமலும், பகை நேராமலும், பிணி நேராமலும், பயம் நேராமலும் சுகவாழ்க்கையிலிருப்பான். அவ்வாழ்க்கை யினால் இல்லஞ் சார்ந்த குடும்பிகளுக்கும், சங்கஞ்சார்ந்த சமணர்களுக்கும், சமணநீத்து சித்துநிலை

வாய்ந்த அந்தணர்களாம் அறஹத்துக்களுக்குந் துணையாக விளங்குவான். வித்தியா குரு, ஞான குரு, ஆதரித்தோன், தாய்தந்தையர் ஐவர்களையுங் கண்டவுடன் அன்புடன் வணங்கி ஆதரித்து முகமலரச் செய்பவன் தனதில்வாழ்க்கைத் துணைவியுடன் வாழ்க்கைத்துணை நலனுமடைவான்.

வித்தியா முயற்சியிலும் தேக முயற்சியிலுஞ் சம்பாதிக்கத்தக்க பொருள் பழிபாவத்திற்கு ஏதுவில்லாமலும் பிறன்மனம் வருந்தாமலுங் கொணர்ந்து தலைவனுந் தலைவியும் யாக்கை இரண்டாயினும் மனமும் அன்பும் பொருந்த நின்று நடாத்தும் தருமமே வாழ்க்கை தருமமாகும். உலக நோன்புகளாகும் பஞ்சபாதகங்களை நீக்குவோருக்கும் பஞ்ச பொறிகளின் வாயல் அவிப்போர்களுக்குப் பக்கத்துணை வாழ்க்கையுற்று பூரணப் பக்குவம் அடையச்செய்பவனாதலின் இவனது ஒழுக்க வாழ்க்கையே உண்மெய் உணர்த்தும் உத்தம வாழ்க்கையாகும்.

தருமமென்பதே இல்வாழ்வோன் பீடமாயிருத்தலின் அவ்வில் வாழ்வோன் நீதியிலும், நெறியிலும், வாய்மெயிலும் பற்றுள்ளவனாய் இருப்பானாயின் அவன் மண்ணுலகத்தானாயினும் விண்ணுலகத்தாரெண்ணில் வைக்கப் பட்டவனாகின்றான்.

இல்வாழ்வோனுக்குப் பழிபாவம் ஏற்கும் சம்பாத்தியம் யாதெனில், ஒருவன் மதியை மயக்கி அவன் குடும்பத்தைக் கெடுக்கத்தக்க வஸ்துக்களும், பல உயிர்களைக் கொன்று விற்கத்தக்க மாமிஷங்களும், விஷங்களை ஏற்றி விற்கத்தக்க ஆயுதங்களும் மனிதர்களை அடிமை பிடித்து விற்குந் தொழில்களும், சூது விளையாடுவோருக்கும் கள்ளர்களுக்கும் இடங்கொடுத்து அதினால் சீவிக்குந் தொழில்களும் பழி பாவத்துக்குரிய தொழில்கள் யாவையும் அகற்றிப் பரநிலையில் வாழக்கடவன்.

இத்தகைய வாழ்க்கை உடையவனுக்குத் துணைநலமாக வந்தவள் தன் கணவனையே தன்னைக் காக்குந் தெய்வமாகவும் தன் கணவனையே தன்னை ஆதரிக்கும் ஆசானாகவும் தன் கணவனையே தன்னைக் காக்கும் காவலாளியாகவும் பல பதார்த்தங்களை வட்டித்து தன் கணவனுக்கூட்டி திருப்தியடையச்செய்தலே ஆனந்தமாகவும் தன்கணவன் மகிழ்வடைய மிருதுவான தொனிகொண்டு வார்த்தைப் பேசுதலே இன்பமாகவும் உடையவளே வாழ்க்கைக்குத் துணைநலமாவள். மனைக்குடையவள் எப்பெரியோரைக் காணிலும் அவர்களை வணங்கி உபசரித்தலும் பரபுஷர்களைக் காணில் அவர்களுக்குத் தன் முகத்தையுந் தேகத்தையும் மறைத்துக் கொண்டு நாணமுறுதலும் அன்னியபுருஷர்களில் பெரியோர்கள் கரமேனுஞ் சிறியோர்கள் கரமேனுந் தன் தேகத்தில் படில் பயிற்புறுதலும் எப்போதுந் தன் பார்வையையும் நடக்கையையும் அடக்கி ஆண்டுவருபவள் வாழ்க்கைக்குத் துணை நலமாவள். தன் கணவனுக்குத் திரண்டதிரவியங் கிடைத்தவிடத்து சந்தோஷ மில்லாமலும் திரவியமில்லாதபோது துக்கமில்லாமலும் கணவனைத் திருப்தி செய்துக் கொண்டு கணவன் வார்த்தைக்கு எதிர்மொழி பேசாமலும் கணவன் செய்யுந் தருமச்செயல்களுக்கு எதிர்மறைக் கூறாமலிருப்பவள் வாழ்க்கைக்குத் துணை நலமாவாள் - கணவன் புசிக்கத்தக்கப் பதார்த்தங்களை வட்டித்து அவன் பசிவேளை அறிந்து புசிக்கச் செய்து தேக சுகத்திற்கும், தேக போஷிப்பிற்கும் ஆதார நோக்கத்திலிருப்பவள் வாழ்க்கைத்துணைநல மனைவியே யாயினுந் தாயிக்குமொப்பாவாள். தன் கணவன் மதுப்பிரியத்தால் மயங்கி வெறிக்குங்கால் அவனுக்கு அன்பின் மதியூட்டி அவ்வருந்தலை மறக்கச்செய்தலும், தன் கணவன் பரஸ்திரீகமனத்தில் நுழைவானாயின் அவனுக்குக் கோபக்குறிக்காட்டாது இன்ப வார்த்தைகள் பேசி மிக்க அன்புபாராட்டி ஆலிங்கனமுற்று அன்னியஸ்திரீகளின் எண்ணங்களை மாற்றுவதிலும் பழிபாவ யாசகத் தொழிலின்றி வருத்தி சம்பாதிக்கத்தக்க முயற்சியில் நடவும்படிச்செய்வதுடன் தானும் முயற்சியினின்று நற்கருமங்களை நடாத்தச் செய்பவள் வாழ்க்கைத் துணை நலமாவதுடன் மந்திரிக்கும் ஒப்பாவாள். பெண்ணெனத்தோன்றும் ஓர் உருவமே தனது துற்கருமச் செயல்களினால் இயமனெனனின்று இல்லத்தின்

சுகங்களைக் கெடுத்துப் பாழாகிவிடுவான். பெண்ணெனத் தோன்றும் ஓர் உருவமே தனது நற்கருமச்செயல்களினால் தனக்குத் தாய்போல் விளங்கி ஞானாமுதூட்டும் நல்வழிக்குந் துணையாவாள். ஓர் இஸ்திரீயை தன் கணவன் கார்ப்பனென்றுந் தன் பந்துக்கள் கார்ப்பரென்றுங் கூறுவதில் பயனில்லை. இஸ்திரீயானவள் தன்னுடைய கற்பைத் தானே கார்த்துக்கொள்ளுவது சிரேஷ்டமாக விளங்குவதால் வாழ்க்கைத் துணைக்கும் அவளே துணையாவாள். இத்தகைய வாழ்க்கை சுகமுண்டாக்கும். பெண்களும் பிள்ளைகளும் நற்கருமத் தொடற்சியின் வழியாய் வளர்பவர்களின் பலனாதலின் இல்லத்தில் வாழுங் கற்புடையாள் வாக்கு இகத்தை அழிக்கவும், இகத்தை வளர்க்கவுங்கூடியதாயிருக் கின்றது.

இல்வாழ்க்கைத் துணை நல் மனைவியும் துணையாம் நல்மனைவியின் கணவனும் தங்கள் நற்கருமப் பலன்களால் சுகவாழ்க்கையுற்றுத் தங்களை அடுத்தவர்களையுஞ் சுகமுறச்செய்து சத்திய தரும சங்கத்தையும் நிலைபெறச் செய்வதால் இவர்கள் வாழ்க்கையே சுகவாழ்க்கையாம், இதையே நல்வாழ்க்கை என்று கூறப்படும்.

சம்மா வாயமா - நன்முயற்சி

ஓ! சகோதிரர்களே! நன்முயற்சியை விளக்குகின்றேன். மனிதன் செய்ய வேண்டிய முயற்சிகளில் முக்கியமானப்பெருமுயற்சிகள் நான்கு வகையான் முயலப்படும். அதாவது 1. ஒவ்வொரு மனிதனும் தன்னிடத்திலிருந்து நீக்கவேண்டிய முயற்சி. 2. தன்னை அணுகாமல் தடுக்க வேண்டிய முயற்சி 3. தன்னிடத்தினின்று மேலும் மேலும் உதிப்பிக்கச்செய்யவேண்டிய முயற்சி 4. தன்னிடத்துள்ளதைப் பாதுகாக்கவேண்டிய முயற்சி இத்தகைய நான்கு முயற்சிகளையுந் தெளிந்தவன் சுகமற்றத் தீங்குகளை தன் சித்தத்தில் எழவிடாமல் அதேமுயற்சியில் போராடி முழு தைரியத்துடன் தன் மனதைத் திடப்படுத்திக் கொள்ளுவான். தன் கண்ணால் அதிரூபத்தையேனும் ரூபவஸ்துக்களையேனுங் கண்டபோதிலும் இனிய சப்தங்களைச் செவியில் கேட்டபோதிலும் பரிமளகந்தத்தை நாசியில் முகர்ந்த போதிலும் உருசியுள்ள பதார்த்தங்களை நாவில் சுவைத்தபோதிலும் சுகநிலையில் தேகத்தைப் பரிசித்த போதிலும் பலவகையான எண்ணங்கள் மனதில் எண்ணிய போதிலும் அதில் நிலைக்கத்தக்க இடங்கொடுக்கமாட்டான். மிதமீறிய உணர்ச்சியால் உதிக்குந் தீங்குகளையும் அவாக்களையும் திருப்த்தியில்லாதவைகளையும் தன் மனதில் தங்கவிடாமல் நீக்கிக் கொண்டே வருவான்.

எவ்வகை உணர்ச்சிக்கும் அவாவிற்கும் இடங்கொடுக்காமல் தனக்குள் அடக்கி ஆண்டு உணர்ச்சிகளின்பேரில் ஜாக்கிரதையாயிருப்பவன் தீங்குகளற்ற சுகநிலை காண்பான். இத்தகைய சுகநிலை காணவேண்டியவன் தனதைம்புல நுகர்ச்சிகளால் எழுந் தீங்குகள் யாவற்றையும் பேரவாவையும் தனதுள்ளத்திலும் உணர்ச்சியிலுந் தங்கவிடாமல் நீக்கும் முயற்சியிலிருப்பான். இதையே நீக்க வேண்டிய சித்தமுயர்ச்சி என்னப்படும்.

தனதுணர்ச்சியிலும் உள்ளத்திலும் எழுந் தீங்குகளையும் அவாக்களையும் உதிக்கவிடாமலுந் தோற்றவிடாமலுந் தடுக்கும் விழிப்பிலுஞ் ஜாக்கிரதையிலு மிருந்து அவைகளுடன் போராடி தன் மனதைத் திடப்படுத்திக்கொள்ளுவான். பேராசைக் கோபம் பொய்க் காட்சியால் உதிக்கும் எண்ணங்களைத் தடுத்து அவைகள் வேரூன்றி நிற்க இடங்கொடுக்க மாட்டான். அதை எக்காலும் எழ விடாமல் நசுக்கி நிர்மூலமாகும் படிப் பிரயாசைப்படுவான். தீங்குகளுக்கு மூலமாகுஞ் சொற்ப எண்ணம் உள்ளத்தில் தங்கிவிடுமாயின் உடனுக்குடன் கோபம், பேராசை, பொய்க்காட்சிகள் தோன்றி சுகமற்ற எண்ணங்கள் உதித்துவிடும். ஆதலின் சுகமற்ற எண்ணங்கள் சொற்பமேனும் உள்ளத்தில் தங்கவிடாமல் தடுத்துக்கொண்டுவருவான்.

தனது ஆழ்ந்த சிந்தனையால் உள்ளத்திலும், உணர்ச்சியிலும், இன்னின்ன துன்பத்திற்கு ஆதாரத் தீங்குகள் உதிக்கின்றன என்றும் இன்னின்னவகை விழிப்பிலும் ஜாக்கிரதையிலும் அதை வேரூன்றவிடாமல் செய்யவேண்டும்

என்றும் கண்டுணர்ந்து அதே விருப்பத்திலிருப்பான். அதாவது தன்னைப் பாழாக்கக்கூடிய எண்ணங்கள் எவ்விடத்து உதிக்கின்றன என்றும் அவ்வகை உதிக்கும் எண்ணங்களின் வித்துக்கள் எவை என்றும் ஆராய்ந்து அவைகளைப் பாழாக்கவுந் தடுக்கவும் முயல்வான். அல்லது ஒரே வைராக்கியத்தினின்று தன் உள்ளத்தில் எழும் கோபம், பேராசை, பொய்க் காட்சியாம் எண்ணங்களைத் தடுத்து நிற்பதால் தீய எண்ணங்கள் யாவும் நசிந்து மனமானது அலையற்ற கடல்போல் நிற்கும். இதையே தீச்செயல் தோற்றங்களைத் தடுக்க வேண்டிய சித்தமுயற்சி என்னப்படும்.

இத்தகைய விழிப்புஞ் ஜாக்கிரதையும் உடையவன் சிந்தனை, விவேகம், ஊக்கம், ஆனந்தம், ஆறுதல், மனநிறை, சமாதானம், சாந்தம் உண்டாக்கும் அறிவை விருத்தி செய்யக்கூடிய ஆதாரங்களையும், ஊன்றியவைகளைப் பிரிக்கக்கூடிய ஆதாரங்களையும், நிர்மூலப்படுத்தக்கூடிய ஆதாரங்களையும், துறவுக்கு ஆளாக்கும் ஆதாரங்களையும் உதிக்கச்செய்கின்றான். அதினால் சருவசீவர்களையும் ஆதரிக்கக்கூடிய உதிப்பும், சருவசீவர்களுந் தன்னைப்போல் சுகமடையவேண்டும் என்னும் உதிப்புஞ் சருவ சீவர்களுஞ் சுகவாழ்க்கை யிலிருக்கத் தான் காணவேண்டு மென்னும் உதிப்புஞ் சீவர்களுக்கு எக்காலுந் தருமங்களை ஊட்டவேண்டுமென்னும் உதிப்புந் தன்ம வார்த்தைகளே செவியில் கேட்கவேண்டுமென்னும் உதிப்பும் உள்ளத்தில் வளரவேண்டிய முயற்சியையே உதிக்கச்செய்யவேண்டிய முயற்சிகள் என்னப்படும்.

இத்தகைய சுகவழியாம் எண்ணங்களைப் பாதுகாத்து அவைகளை நாசமாகவிடாமல் நல்லூக்கத்தால் முன்னுக்குக் கொண்டுவந்து இடைவிடா விழிப்பினின்று தைரியத்துடன் மனதை நிலைக்கச் செய்கின்றான். இவ்வகை நல்லுணர்வை பாதுகாப்பவன் அதிதீவர பக்குவ ஜாக்கிரதையிலிருக்கின்றான். சோம்பலற்று சுருசுருப்பினின்று மத்தியபாதையில் நடப்பான். அதாவது தராசின் முள்ளானது சரிநிறைப்பெற்று மத்தியில் நிற்பதுபோல் வேண்டுதலும் வேண்டாதலுமாகிய மத்தியநிலையில் நிற்பான். அவனது மாமிஷம், நரம்பு, என்பு, தோல் முதலியவைகள் சுருங்கி மாறுபடினும் தனது நன்முயற்சிகள் மாறுபடாது விடாமுயற்சியிலும் ஆண்மெயிலும் இடைவிடா சாதனத்திலும் உள்ள நிலையைப் பாதுகாக்க வேண்டிய முயற்சிகள் என்னப்படும். இவைகளே நன்முயற்சிகளாம்.

சம்மா ஸத்தி - நற்சிந்தனை

ஓ! சகோதிரர்களே! இவ்விடம் நற்சிந்தனையை விளக்குகின்றேன். நற்சிந்தனையில் நான்குவகை உண்டு. அதாவது:- 1. காயா சம்யக்ஸ்மிருதி 2. வேதனா சம்யக் ஸ்மிருதி 3. சித்தா சம்யக் ஸ்மிருதி. 4. தம்ம சம்யக் ஸ்மிருதி (இதன் விவரம்) 1. தேகத்தை மலபாண்டமென்றும், அசுத்தமென்றும் சிந்தித்தல் 2. உணர்ச்சிகளிலிருந்து உண்டாகுங் கேடுகளை சிந்தித்தல் 3. எண்ணங்களில் நிலையில்லா செய்கைகளை சிந்தித்தல் 4. அந்தரங்கத்தோர் விகாரங்களை சுத்த அறிவுடனும் புலன்கள் விழிப்பினின்றும், உலக அவாவினின்றும், துக்கத்தினின்றும், தருமசிந்தனையை சிந்தித்தல் இவ் விநான்கையே சத்தி பதானங்களென்றும் அல்லது முக்கிய தியானத்தின் நான்கு பாதைகள் என்றுங் கூறப்படும்.

இவற்றுள் 1-வது (காயா) ஸம்யக் ஸ்மிருதி தேகத்தைப்பற்றியச் செயலும், சிந்தனையும் யாதெனில், தேகத்தில் அமைந்துள்ள நவத்துவாரங்களிலும் மயிர்க்கால் பீரல்களிலும் படிந்துள்ள தூசுகளை சுத்தநீரில் கழுவி சுத்தவஸ்திரம் அணைந்து அரவமற்ற ஏகாந்த ஸ்தானத்திலேனும், வனங்களிலுள்ள விருட்சத்தின் அடியிலேனும் சுகசீலத்தில் உட்கார்ந்து உலகதோற்றமாம் சருவசீவர்களின் சுகத்தை சிந்திக்க வேண்டும்.

அவ்வகை அன்பின் பெருக்க சிந்தனையால் ஊசியில் கோர்த்துள்ள சரடு ஊசி செல்லுமிடங்களில் துடர்ந்து செல்லுவதுபோல் மனதில் தொந்தித்த மூச்சானது மனதைத் தொடர்ந்து சிந்தனை லயிக்குமிடத்தில் மூச்சானது உள்ளுக்கடங்கியும் சிந்தனை பரவி நிற்குங்கால் மூச்சானது வெளிக்கோடியும்

வரும். இவ்வகையாக மூச்சு உள்ளுக்கடங்குவதும், வெளிக்குப் பரவுவதும் தோற்றங்கள் விரிகிறதும் மறுபடியும் மடிகிறதுமாகியச் செயல்கள் யாவும் மனத்தின் செயலென்றே சிந்தித்தல் வேண்டும். இவ்வகை சத்தியசிந்தனை பெருக்கத்தால் மூச்சானது இவ்வளவு நேரந் தனக்குள் அடங்கியிருந்ததென்றும் இவ்வளவு நேரம் வெளிக்குச் சென்றதென்றும் உணருவான். இவ்வகை உணர்ச்சியால் மனமும் மூச்சும் மூக்கு முனையில் சேர்வதைக் காண்பான். அவ்வகைச் சேர்க்கையைக் காணுங்கால் தன் தாயின் கருப்பையில் கட்டுண்டு ஒன்பதா மாதத்தில் துள்ளி விளையாடும்போது மூச்சோடிக்கொண்டிருந்த ரந்தனத்தைச் சுழிமுனையில் காண்பான். அக்காட்சியால் மூச்சு ஓடுங்கு நிலையும் விரியு நிலையுந் திட்டமாயறிந்து முன் ஜெநநத்தின் கன்மகாட்சிகளைக் காண்பான். முன் கன்ம காட்சியைக் கண்டவுடன் இனி தோற்றுங் கன்மங்களுக்கு இடங்கொடாமல் விழிப்பிலும் நற்சிந்தையிலும் நிலைப்பான்.

இவ்வகையால் நிலைத்தவன் தன் தேகத்தையும் எதிரி தேகத்தையும் நோக்குவான். அவ்வகை நோக்குவோன் தேகமானது பதவிதாது அபோதாது, தேஜோதாது, வாயோதாது என்னும் நான்குவகை பூதச்சேர்க்கையின் ஏதுவால் தோன்றியதென்றும் அத்தோற்றத்தில் மெய், வாய், கண், மூக்கு, செவி, மனம் இவைகளதின் பிரிவென்றும்; சப்த, பரிச, ரூப, ரச, கந்த, எண்ணங்களாம் அதன் செயல்களென்றும் உணர்ந்து அவ்வகைக் கூர்ந்த உணர்ச்சியால் விக்ஞானமென்னும் அறிவினின்று அதே விக்ஞான அறிவிநிலையில் நாமஸ் கந்தத்தையும், ரூபஸ்கந்தத்தையும் அறிகின்றான்.

இதில் வாய், கண், செவி, மூக்கென்னுந் தோற்ற ஸ்கந்தங்களே ரூபமென்றும், வேதனா, ஸஞ்ஞா, ஸம்ஸ்காரம், விஞ்ஞானம், நுகர்ச்சி, குறிப்பு, பாவனை, அறிவு என்றுஞ் செயலின் ஸ்கந்தங்களே நாமமென்றுங் கூறப்படும்.

இத்தகைய நாம, ரூபம் இரண்டையும் உணர்ந்தவன் தன் தேகத் தையும், எதிரி தேகத்தையும் பஞ்சஸ்கந்த சேர்க்கைகளென்றே தெரிந்து கூறுவான்.

தன்தேகம் எதிரிதேகம் உண்டாகிய கன்மங்களையும் தன்தேகமடிவுக்கும், எதிரிதேக மடிவுக்கும் ஏதுவாகிய கன்மங்களையுஞ் சிந்தித்து தேகமென்னும் ரூபமும் பாழ், உயிரென்னும் நாமமும் பாழென்னும் இரண்டற்ற நிலையில் நிற்பான்.

நான் உட்கார்ந்தேன், நான் படுத்தேன், நான் நின்றேன், நான் சாய்ந்தேனென்னும் ஒரு பொருள் தனியே இருக்கவில்லை. நான் என்பது எப்படி உட்காரும், நிற்கும், படுக்கும் என விசாரித்து இது வீண் வார்த்தை என்று அறிந்து தன்தேகத்தைப் பற்றியும் அன்னியர் தேகத்தைப் பற்றியுஞ் சிந்திப்பான்.

இந்த தேகம் உரோமத்தால் சூழ்ந்து நகம், பல், சதை, என்பு, மூளை, குண்டிக்காய், ஈரல், பித்தம், கபம், உதிரம், சீழ், உயிர் நீர், வியர்வை, சளி, மூத்திரம், கண்ணீர், தாது முதலிய உருப்புகள் சேர்ந்திருக்கின்றனவென்றும் இது காலத்திற்குக்காலந் துற்கந்தத்தைக் கொடுத்துக்கொண்டே வருமென்றும்; இவைகளில் ஒன்று கெடுமாயின் சகலமுங் கெடுமென்றுஞ் சிந்திப்பான்.

இவ்வகையாற் கெட்டழியுந் தேகம் மயானத்தில் இன்னு மாறுபட்டு நிறமுங் கெட்டு ஊதலிட்டிருப்பதைக்கண்டு தன் தேகமும் பிறர் தேகமும் இதுபோல் கெடுமல்லவா என்று சிந்திப்பான்.

இன்னோர் இடத்தில் கெட்டுள்ள தேகத்தை நரிகளுங் கழுகுகளும் பிடுங்கித்தின்பதைக்கண்டு நம்முடைய தேகத்தையும் பிறனுடைய தேகத்தையும் நரிகள் பிடுங்கித்தின்னுமல்லவா என்று சிந்திப்பான்.

அவ்விடத்திற் கிடக்குந் துண்டெலும்புகளைப்போலுங் குப்பல் எலும்புகளைப்போலுந் தன்னுடைய என்புகளும் பிறனுடைய என்புகளுஞ் சேர்க்கப்படுமல்லவா என்று சிந்திப்பான்.

கால் என்புகள் ஒருபுரமும், கை என்புகள் ஒருபுரமும், தலை என்புகள் ஒருபுரமும் பலர் கால்களிலும் உதைப்பட்டு உருளுவதைக் கண்டு நம்முடைய என்புகளும் பிறனுடைய என்புகளும் மிதியும் உதையும்பட்டு உருளுமோ என்று சிந்திப்பான்.

அவ்வகையால் ஆழ்ந்து சிந்திப்பவனும், தேகத்தின் செயல்களை ஆராய்பவனும், தேகத்தில் வெறுப்படைந்த புண்ணியனும் தனது இடைவிடா விசாரிணையினால் பத்துவகை நற்குணங்களை அடைகின்றான்.

1. வெறுப்பும் விருப்புமற்ற நிலையே இடமாகக்கொண்டு நிற்பன்.

2. பயத்தையும் ஆவலையும் வெல்லுவான். ஆவலுக்கும் பயத்திற்கும் இடங் கொடான்.

3. குளிர்ச்சியையும், உஷ்ணத்தையும், பசியையும், தாகத்தையும் நோக்காமல் நிற்பன்.

4. கொசுக்களாலும், பூச்சுகளாலும், பல ஜெந்துக்களாலும் உண்டாகுந் துன்பங்களைத் துன்பமாகக்கருதாமலும், மற்ற ஜெந்துக்களால் உண்டாகும் இன்பங்களை இன்பமாகக் கருதாமலும் இருப்பன்.

இத்தகைய சிந்தனா மிகுதியாலும், விசாரிணைப் பூர்த்தியாலும் காம வெகுளி, மயக்கங்களற்று சாந்தம், ஈகை, அன்பு பெருகி சுழிமுனையில் சதாவிழிப்பில் இருக்குங்கால் மனதின் எண்ணத்திற்கு ஆதாரமாயிருந்த மூச்சானது மனத்தின் நல்லெண்ணமிகுதியால் அதனைப்பின்பற்றி சுழிமுனைத் திறந்து உள்ளடங்கியபோது அவனுக்குப் பலவிதமான தொனிகள் செவியில் சப்திக்கும். அவ்வகைத் தொனியையும் ஓர் பொருளாகக் கருதாமல் நிற்பான்.

5. அருகிலுந் தூரத்திலுமுள்ள சப்தங்களைப்போல் ஐம்பொறிகள் அடங்கியவிடத்து நாதவொலிகள் தொனிக்கும்.

6. தன்னிற்றானே தோற்றிய நாதவொலி அடங்கியவுடன் வெளியிலுள்ளப் பொருட்கள் யாவுந் தனக்குள் தோன்றும்.

7. அவ்வகைத் தோற்றத்தால் செல்காலம், வருங்காலமென்னும் முக்காலச் செயல்களையுங் கூறுவான். ஒவ்வொருவர் இதயத்தில் எண்ணும் எண்ணங்களையும் அறிந்து சொல்லுவான். ஆசாபாசங்களால் தனக்குள் தோன்றும் எண்ணங்கள் எவ்விடத்தில் அடங்கியதோ அதே இடத்தில் சருவமுந் தோன்றும். அவ்வகைத் தோற்ற இயல்பால் எண்பத்தொன்பது சித்துக்களும் வாய்க்கும்.

8. முன்பிறப்பிற்கு ஆதாரமான கன்மங்களையும், முன் பிறப்பையுங் கண்டறிவான்.

9. ஊனக்கண் பார்வையற்று ஞானக்கண்ணின் பார்வையால் சருவதோற்றங்களும், ஒடுக்கங்களும் முன்வினையின் பயனென்றறிந்து சருவ சீவர்களுக்கும் நீதிநெறிகளைப் புகட்டுவன்.

10. இத்தகைய ஞானக்கண் பெற்று சதா விழிப்பிலிருப்பவன் பிறப்பென்னுஞ் சமுத்திரத்தைக் கடப்பான்.

மௌனதெரிசனம்

அருமெயென்ற மௌனத்தை மூட்டுமூட்டு, வடங்காத கரணமது வடங்கிப்போம்,
இருமெயென்ற விந்திரிய மாண்டுபோகு, மிருள்மலம்போம் திரோதையில்லை மயக்கம் நீங்கும்,
வெருவுபல கோடிகன்மங் கணத்தினீங்கும், வெளியினுள்ளே வொளிதோன்றும் நாதங்கேட்கும்,
உரிமெயுடன் மௌனசித்தியாகவாக, உருவமுனக் 'கானந்த உருவமாமே.

மச்சமுனிவர்

விழித்துமிகப் பார்த்திடவே பொறிதான் வீசும்,
முச்சந்தி வீதியிலே தீபந் தோன்றும்,
சுழுத்தியிலே பொசாம லொருமனதாய் நின்றால்,
சுத்தமேன்ற நாதவொலிக் காதில் கேட்கும்,
இழுத்ததென்று நீகூடத் தொடர்ந்தாயானால்,
எண்ணெண்ணா பிறப்பிறப்பு எய்தும்பாரு,
அழுத்திமனக் கேசரத்தி நின்று மைந்தா,
அப்பனே லலாடத்தில் தூங்குவாயே.

ஞானிகள்நிலை

கந்தமுதலைம்புலனை அடக்கி நாப்பண், / கருத்தமைத்து சாம்ப விநோக்கதனை மேவி,
சிந்தையுறத் தான் சரிக்குமிடங்கடன்னில், / செறிந்திடைய திருந்திணையா நிட்டைகூட,
வந்தெழும்பு மணிசலதி சிலம்பு சங்கு, / வண்டிசையாங் குழல்பேரி முழக்கங்காண,
இந்தவகை சிவயோகத் திருப்பான்ஞானி, / இனியவாக்குப் பிறவியுமுண்டென்னலாமோ.

ஔவைக் குறள்

செல்லல் நிகழல் வருங்கால் மூன்றினையுஞ் / சொல்லுமௌனத் தொழில்

இவைகள் யாவும் தேகவிசாரிணையால் இதயத்தை சுத்தீகரித்தவிடத்தில் தோன்றும் காட்சிகளாம்.

2-வது வேதனா (சத்திபதானா) சம்யக் ஸ்மிருதி, அதாவது, நுகர்வுகளிலிருந்து உண்டாகுங் கேடுகளை விவரிக்கின்றேன்.

ஓ! சகோதிரர்களே! நுகர்வுகளை தியானிக்கத்தக்க மனிதன் பின்வருமாறு சிந்திப்பான். நுகர்வுகளென்னும் உணர்ச்சியை ஆராயும் விருப்புள்ளவன் நுகர்வுக ளின்னதென்றும், வெறுப்புள்ள நுகர்வுக ளின்னதென்றும், நடுநிலையுள்ள நுகர்வுக ளின்னதென்றும் சத்திய தருமத்தின்படித் தெளிவான்.

இலௌகீகத்திற்கடுத்த விருப்புள்ள நுகர்வுகளின்னதென்றும் வெறுப்புள்ள நுகர்வுகளின்னதென்றும் இலௌகீகத்திற்கு அடுத்த நடுநிலையுள்ள நுகர்வுக ளின்னதென்றும் சத்தியதன்மப்படி தெளிகின்றான்.

இவ்விதமாகத் தன்னிடத் துண்டாகும் நுகர்ச்சிகளாம் உணர்ச்சிகளைப் பற்றி சிந்திப்பான். அந்நியனிடத் துண்டாகும் நுகர்ச்சிகளென்னும் உணர்ச்சி களைப்பற்றி சிந்திப்பான்.

இவ்விதமாகத் தன்னிடத்துண்டாகும் நுகர்ச்சிகள் எவ்வகையிலுதிக் கின்றனவென்றும், அன்னியனிடத் துண்டாகும் நுகர்ச்சிகள் எவ்வகையால் உதிக்கின்றனவென்றும், தனக்குள் மறையும் நுகர்ச்சிகளைப்பற்றியும் பிறனுக்குள் மறையும் நுகர்ச்சிகளைப் பற்றியும் நடுநிலையில் மறையும் நுகர்ச்சிகளைப் பற்றியும் சிந்திப்பான்.

நுகர்ச்சிகளின் உதிப்புகள் யாவையும் உற்று நோக்குவான்.

இவ்வகையில் உற்றுநோக்கும் உணர்ச்சிகள் உற்றுநோக்குமிடத்தில் உதிப்பதென்றும் உணர்வான்.

இத்தகைய நுகர்வின் நுண்ணறிவு தோன்றிய காரணம் யாதெனில் தன்னையுந் தன் செயலையும் விசாரித்து உணர்ந்த சத்தியதன்மத்தின் பற்றற்ற நிலையேயாம்.

உலகில் நான் உணர்கின்றேன் என்ற பதத்தை சுத்த சிந்தனையிலிருந்து ஒருவன் சாதாரண பேச்சு முறையன்றென்றும் இஸ்திரமானதல்லவென்றும் உற்றுநோக்குமிடத்துத் தானே உணர்பவனென்று தெளிகின்றான்

இவ்வகை ஆழ்ந்த அறிவுடன் உணர்ச்சிகளைப்பற்றி சிந்திக்குஞ் சிந்த னையே நுகர்வாகும் வேதனா தியானம் எனப்படும்.

3வது சித்த (சத்திபதானா) சம்யக் ஸ்மிருதி. அதாவது, எண்ணங்களின் நிலையில்லா செய்கைகளைப்பற்றிய தியானத்தை விளக்குகின்றேன்.

அதாவது உதிக்கும் எண்ணத்தை நோக்குகின்றவன் எண்ணங்களின் தோற்றுதலை கிறகிக்கின்றான்.

1. பேராசையின் யெண்ணங்களையும், பேராசையற்ற எண்ணங்களையும். 2. கோபத்தை எழுப்பும் எண்ணங்களையும், கோபத்தினின்று மீண்ட எண்ணங்களையும், 3. பொய்க்காட்சிகளது எண்ணங்களையும், பொய்க் காட்சிகளினின்று மீண்ட எண்ணங்களையும். 4. மனதை ஒன்றிலே செலுத்திய எண்ணங்களையும், மனதைப் பலவகையில் சிதரவிட்ட எண்ணங்களையும். 5. தாழ்ந்த எண்ணங்களையும், மகத்துவமுள்ள எண்ணங்களையும், 6. நீச்ச எண்ணங்களையும், புகழத்தக்க எண்ணங்களையும், 7. மனங்குவியும் எண்ணங்களையும், மனத்தின் நிலையற்ற எண்ணங்களையும். 8. சிக்கற்ற சுயக்கியான நேரான எண்ணங்களையும், விலங்கி லகப்பட்ட எண்ணங்களையும் ஆழ்ந்து சிந்திப்பவனாகின்றான்.

இவ்வகை ஆழ்ந்த சிந்தனையில் தன்னிடத்துதிக்கும் எண்ணங்களையும், அன்னியரிடத்துதிக்கும் எண்ணங்களையும், எண்ணங்கள் உதிக்கத்தக்க பீடங்களையும், அவைகள் ஒடுங்கும் இடங்களையும் ஆராய்வான். எண்ணங்கள் தோற்றுதற்கும் மறைவதற்கும் உள்ள காலவரைகளை சிந்திப்பான் தோற்றுதற்கும் மறைவதற்கும் உள்ள யேதுக்களை நோக்குவான்.

இவ்வகை நோக்கத்தின் மிகுதியும் நுண்ணறிவும் உண்டாகும் ஏதுக்கள் யாதெனில், தன்னையுந் தன் செயலையும் ஆராயும் பற்றற்ற நிலையேயாம்.

இத்தகைய ஆராய்ச்சியின் ஆழ்ந்த விழிப்பே எண்ணங்களின் தியானம் எனப்படும்.

4வது காம்பீர தம்ம (சத்திபதானா) சம்யக் ஸ்மிருதியை விளக்குகின்றேன். அதாவது, அந்தரங்கத் தோற்றங்களின் விகாரங்களைப் பற்றிய அறியுஞ் சிந்தனை என்னும் தியானமேயாம்.

இக்காம்பீர தன்மம் ஐந்து வகை உள்ளடக்கத்தை உடையது.

1. பஞ்சநீவர்னீய. 2. பஞ்சஸ்கந்த. 3. ஆயதன. 4. சத்த சம்போஜங்கய. 5. சதுர்சத்ய வென்பவைகளாம்.

1வது பஞ்சநீவர்னியத்தில் 1. காமச்சந்த. 2. வியாபாத. 3. தீனமித்த. 4. உத்தச்சக்குக்கச்ச. 5. விஸிகிச்சா என்னும் ஐந்து பிரிவுகளுண்டு.

1. இதிற் (காமசந்தா) யாதெனில் ஒருவன் காமாக்கினியில் வெதும்புங்கால் காமயிச்சைப் பெருக்கத்திலிருக்கின்றான் என்றும் இக்காமாக்கினி மறுபடியும் எவ்விடமிருந்து எழும்புகிறதென்றும் எவ்விடத்தில் இல்லாமல் அடங்குகிற தென்றும் அவ்வகை எழும்புங் காமாக்கினியால் உண்டாகும் இன்பம் தன் தேகத்தில் ஜெநிக்கின்றதா அந்நிய தேகத்தில் ஜெநிக்கின்தாவென்று உணர்ந்து காமத்தில் எரிவுக்குங் காம எரிவின் இன்பத்திற்குந் தன் தேகமே காரணமாதலின் இச்சிற்றின்பத்தின் வீணவாவால் தேகத்தைப் பிணிக்குள்ளாக்கி கேடுண்டாக்கிக் கொள்ளுவது தகாதென்றறிந்து காமாக்கினியை அவித்து அதனின்று தப்பித்து அவ்விச்சையில் விடுபட்டவனாகின்றான்.

2. (வியாபாத) வென்னுங்கோபக்கினியானது தன்னையொருவன் மனனோகப் பேசியவிடத்திலும் தன் தேகத்தை நோக புடைத்தவிடத்திலும் தன் பொருளை யபகரித்த விடத்திலும் பிறத்தலால் இக்கோபாக்கினியின் தோற்றத்திற்கு பேரவாவின் பீடமே நிலையென்று உணர்ந்து கோபத்தையும் அவாவையுஞ் சீர் தூக்கி உணர்ந்து தன்னுடையது பிறனுடையதென்னும் அவாவின் மூலாக்கினியே கோபாக்கினியாயதால் அவாவை யடக்கிக் கோபத்தைத் தணிக்க முயலுகின்றான். அம்முயற்சியே அவாவையறுத்து கோபாக்கினியை யவித்து அவ்வக்கினிக்குத் தப்பித்து கோபத்தினின்று விடுபட்டவனாகின்றான்.

3. (தீன்மீத்த) வென்னும் சோம்பலானது மிதமின்றி புசிக்கும் பொசிப்பினிடத்துஞ் சதா மதோன்மத்தத்திடத்து முதிப்பதென்றுணர்ந்து மிதாகாரம் புசித்து மதோன்மத்தம் போக்கி சோம்பலை நோக்குவான். அச்சோம்பலும் அசதியும் நீக்கியவிடத்து தனக்குள் எழுஞ் சுருசுருப்பையும் ஆனந்தத்தையும் உணருவான். அன்றுமுதல் சோம்பலுக்கும் அசதிக்கும் மூலமாகும் மிதபுசிப்பையும் மதோன்மத்தத்தையும் அகற்றி சோம்பலும் அசதியுந் தன்னை யணுகாமல் அகற்றி அதனின்று விடுப்பட்டவனாவான்.

4. (உத்தச்சக்குக்குச்ச) வென்னும் பெருமகிழ்ச்சியும் அதனிறை வியாகூலமும் உண்டாவதற்கு மூலம் தனக்குள்ள பூநிதியும் தனநிதியும் பசுநிதியுங் குரைவில்லாமல் இருக்குங்கால் பெருமகிழ்ச்சியடைவான். அவைகள் மாண்டவிடத்து மாளா வியாகூலமடைவான். இவ்வகை மகிழ்ச்சிக்கும் வியாகூலத்திற்கும் பொருள் சேர்க்கையின் பெருந் தோற்றமும் பொருளழிவின் சிறுந்தோற்றமுங் காரணமென்றுணர்ந்து திரண்ட திரவியஞ்சேரினும் பெருமகிழ்ச்சி அடையாமல் பெருந்திரவியம் அழியினும் வியாகூலமடையாமல் உலகப் பொருட்கள் தோற்றுவதும் மடிவதும் உள்ள சுவாபமென்று உணர்ந்து மகிழ்ச்சிக்கும் வியாகூலத்திற்கும் மத்தியில் நின்று பெரு மகிழ்ச்சியையும் வியாகூலத்தையும் வெல்லுவான், தற்புகழ்ச்சியாம் மகிழ்ச்சியையும் வியாகூலத்தையும் வென்றவன் அவைகளினின்று சதா விடுபட்டவனாகின்றான்.

5. (விசிகிச்சா) வென்னும் சந்தேகமென்பது ஒருவன் மரணமடைந்தபின் சுகமுண்டென்னும் இடத்திலும், மற்றொருவன் மரணமடைவதற்குமுன் சுகமடைய வேண்டுமென்னும் இடத்தில் உதிப்பதை உணர்வான்.

அச்சந்தேகத்தை மரணமடைந்தபின் சகலமுமடிந்து வினைபோகத்துக் கீடாய் மறுதேகத் தோற்றலைக் காண்பான். அக்காட்சியால் துற்கன்ம நற்கன்மச் செயல்களின் பலன்களை உணர்ந்து சந்தேகமற தன்தேக நற்கன்ம பலன்களைப் பெருக்கி சதானந்தமும் நித்திய சுகமும் மரணத்தை ஜெயித்தவிடமாம் சந்தேகமற்ற சதா விழிப்பினிடத்திலுள்ள தென்று உணர்ந்து சந்தேகத்தினின்று விலகி சதா விடுபட்டவனாகின்றான்.

இவ்வகையாக சந்தேகங்களை அகற்றி தன் தேக அந்தரங்கத் தோற்றங்களையும் அதன் களைகளையும் வேரறக் களைந்து தோற்றுங் களைகளெழாது சிந்திப்பான்.

இவ்வகைச் சிந்தனா தியாகம் எவ்விடத்துதித்ததென்னில் இடைவிடா நுட்ப விசாரிணையாலும் சத்திய தரிசனையாலுந் தன்னை உணர்ந்து வெறுப்படைந்த புண்ணியத்தாலும் ஆழ்ந்த சிந்தனையாலும் உலகபந்தத்தில் சிக்குண்ணா ஜாக்கிரதையாலும் உண்டாகும் நல்லிச்சையின் நடுநிலையாம் சுபயிச்சை விசாரணை தியானமென்னப்படும்.

இத்தகைய நல்லிச்சை விசாரிணை தியானமாகிய பஞ்சஸ்கந்த தம்மேய வென்னும் ஐந்து மூலதத்துவங்களை விசாரிக்கின்றான்.

1. ரூபம் எவ்விதமாகத் தோன்றி எவ்விதமாக மறைகிறதென்றும் 2. உணர்ச்சி எங்கிருந்து தோன்றி எங்கு மறைகிறதென்றும், 3. குறிப்பு எவ்விடத்தினின்று தோன்றி எவ்விடத்தில் மறைகிறதென்றும், 4. பாவனை எவ்வகை ஆதரவால் தோன்றி ஏவ்வாதரவால் மறைகிறதென்றும், 5. அறிவு எவ்வகை சுகத்தால் தோன்றி எவ்வகை அசுகத்தால் மறைகிறதென்றும் உசாவுகின்றான்.

பஞ்சஸ்கந்த தோற்றமாகும் அறுவகை சம்பந்த விஷயமாகுங் கருமத் தொகுதியைப் பற்றியுங் கரும உற்பவங்களைப் பற்றியுஞ் சிந்திப்பான்.

அதாவது ஆயதன தம்மேயவென்னப்படும். விஷயசம்பந்த கருமத்தொகுதியைப் பற்றியுங் கரும உற்பவங்களைப் பற்றியுஞ் சிந்திப்பான்.

அதாவது ஆயதன தம்மேயவென்னப்படும். விஷயசம்பந்த கருமத்தொகுதிகளுக்கு ஆதாரம் அறுவகைப் பீடங்களாகும்.

1. சக்கு. 2. சோத. 3. மாஹன. 4. ஜீவ்ஹ. 5. காய. 6. மனோ. இதுவே 1. கண், 2. செவி, 3. மூக்கு, 4. வாய், 5. மெய், 6. மனம்.

இதிற்றோன்றும் அறுவகைக் கருமத்தொகுதிகளின் தோற்றங்கள் யாதெனில் 1. சப்த, 2. பரிச, 3. ரூப, 4. ரஸ, 5. கந்த, 6. மனோ கருமங்களாகும்.

இவ்வறுவகைக் கருமத்தொகுதியாம் விஷயசம்மந்தமாகும் உள்ளுணர்ச்சியின் தோற்றங்களை யாராய்வான்.

அதாவது, அவன் கதி ஈதென்றுங் கண்ட ரூபங்கள் இஃதென்றும் அதினின்றெழும் பற்றுக்கள் இவையென்றும் அப்பற்றுக்களின் எழுச்சி எவ்விதமாய் எழும்புகிறதென்றும் எவ்வகையால் மடிகிறதென்றும் எவ்விதத்தால் மேற்கொள்ளுகிற தென்றும் எவ்விதத்தால் அதினினின்று மீண்டு சதா விடுபட்டோமென்பதையும் அறிகின்றான்.

இவ்வகை விசாரிணையால் 1. கண்ணையும் பார்வையையும், 2. செவியையும் சப்தத்தையும், 3. மூக்கையுங் கந்தத்தையும், 4. வாயையும் உருசியையும், 5. மெய்யையும் உணர்ச்சியையும், 6. மனதையும் எண்ணங்களையும், அதனதன் கட்டுகளையும் ஒன்றைக்கொண்டு ஒன்று தாவியிருப்பதையும் அதனதன் பற்றுக்களையுந் தோற்றங்களையும் மறைவுகளையும் அழிவுகளையும் அவ்வகைத் தோற்றங்களுக்கும் பற்றுக்களுக்கும் இடங்கொடாது சதா விழிப்பில் நின்று விடும் பற்றற்ற நிலைகளை அறிகின்றான்.

அவ்வகைப் பற்றறுக்கும் ஆயுதங்களாகும் சத்த போஜங்கய தன்மேயவென்னு அறிவைத்துலக்கும் அந்தரங்க எழுவகையான மூலங்களை ஆராய்வான்.

அதாவது - 1. சதிசம்போஜங்காய, 2. தம்மவிசய சம்போஜங்காய, 3. வீரியசம்போஜங்காய, 4. பிரீதிசம்போஜங்காய, 5. பஸ்ஸதத்தி சம்போஜங்காய, 6. சமாதி சம்போஜங்காய, 7. உபேய சம்போஜங்காய எனப்படும்.

1. ஞாபகம் எப்போதுந் தன்னிலிருக்கின்றதென்றும், 2. நுட்ப விசாரிணை எப்போதுந் தன்னில் இருக்கின்றதென்றும், 3. முயற்சி எப்போதுந் தன்னில் இருக்கின்றதென்றும், 4. ஆனந்தம் எப்போதும் தன்னில் இருக்கின்றதென்றும், 5. சந்தி எப்போதுந் தன்னில் இருக்கிறதென்றும், 6. மனனம் எப்போதும் தன்னில் இருக்கின்றதென்றும், 7. சம்திருஷ்டி எப்போதும் தன்னில் இருக்கின்ற தென்றும் இவைகளின் விடா நோக்கங்களே அறிவின் விருத்தி என்றும் விவேக மிகுதியென்றுங் கண்டறிகிறான்.

இவ்வகைக் குணங்கள் தன்னிலுள்ளபோது இருப்பதென்றும் இல்லாத போது இல்லை என்றுந் தெரிகின்றான். இவ்விதமாய் மனக்களிம்பகற்றும் மூலயேதுக்கள் எவ்விதமாக வுதிக்கின்றதென்றும் எவ்விதமாகப் பூரணப்படுகிற தென்றும் அறிகின்றான். அப்பூரண நிலையாகும் நான்கு சத்தியத்தைப்பற்றி சிந்திப்பான்.

1. துக்கசத்ய, 2. சமுத்ய சத்ய, 3. நீரோத சத்ய, 4. மார்க்க சத்ய எனப்படும். இவ்வகை நான்கு சத்திய விசாரிணையால் 1. பஞ்சஸ்கந்தங்களே துக்கத்திற்கு மூலமென்றும், அதினால் உண்டாகும் 2. அவாக்களே துக்கத்தின் மூலகாரணம் என்றும், 3. அவாவறுத்தலே துக்க நிவாரணமென்றும், 4. அவாக்களை யறுக்கும் மார்க்கங்களே பரிசுத்த அஷ்டாங்க மார்க்கங் களென்று அறிகின்றான்.

இவ்வகை அறிந்தவன் அந்தரங்கத்தில் தனக்குள்ள சத்திய தன்மங்களையும் அதினாற்றா னடைந்துள்ள ஆறுதல்களையும் அன்னியன் அந்தரங்கத்துள்ள அசத்திய தன்மங்களையும் அதினால் அவனடையும் அல்லல்களையுங் கண்டறிகின்றான். இவ்வகை அந்தரங்க சத்தியங்களை அறிதற்கு நுட்ப அறிவும் பற்றற்ற நிலையும் புண்ணிய சிந்தையும் நன்மண வாசமுமே காரணமென்று அறிவான் இதய பரிசுத்த மடையும் அழிவிலா வாழ்க்கையை அடையவும் துக்கத்தினின்று விடுபடவும் அழுகையிலும், ஏக்கத்திலும், பற்கடிப்பிலும் நின்று நீங்கவும் நான்கு சத்திய தானங்களே ஆதாரமும் நிருவாணத்தின் பாதையும் என்றறிவான்.

ஓ! சகோதிரர்களே! ஓர் காட்டு யானையைப் படுகுழிவெட்டிப் பிடித்து நாளுக்குநாள் அதன் மதோன்மத்தங்களை அடக்கி காட்டில் ஏதேச்சையாய் உலாவித்திரியுங்காலிருந்த கொடுஞ்செயல்களை ஒடுக்கி ஊரிலுள்ள மக்களுடன் பழகிவருமளவுஞ் சதா விழிப்பிலும் நின்று வயப்படுத்துவதுபோல், இதய பரிசுத்ததத்தை நாடும் அன்பனொருவன் தன்னெண்ணத்தில் நான்கு சத்திபதானங்களை நோக்கி காம வெகுளி மயக்கங்களைப் போக்கி உலகப் பற்றுக்களை நீக்கி சதா விழிப்பால் தன்னைத்தானே கார்த்து தன்னை சுத்திகரிக்குஞ் சாதனத்தினின்று சத்திய தரிசனமாம் பரிசுத்த முத்தி என்னும் நிருவாணத்தை அடைவான்.

சம்மா சமாதி--நல் அமைதி

ஓ! சகோதிரர்களே! மன அமைதியாஞ் சாந்தத்தைப் பற்றி இவ்விடம் விளக்குகின்றேன். அவையே, 1. காயானாபஸ்ஸன்னா 2. வேதனானுபஸ்ஸன்னா 3. சித்தானுபஸ்ஸன்னா 4. தம்மானுபஸ்ஸன்னா என்னும் நான்குவித சத்திபதானங்கள் என்னப்படும். அதாவது, 1. அசுத்தத்தாலாய தேகத்தைப்பற்றி சிந்தித்தல் 2. வேதனா சகல உணர்ச்சிகளினின்று உண்டாகுங் கேடுகளைப்பற்றி சிந்தித்தல் 3. மனத்தினது எண்ணங்களின் ஓட்டங்களையும் மறதிகளையும் உதயங்களையும் சிந்தித்தல் 4. உலகத்தில் தோற்றும் பொருட்கள் யாவும் க்ஷணத்திற்கு க்ஷணங் கெட்டுக்கொண்டே வருகிறதென்று சிந்தித்தல் சாந்தத்தின் பெருக்கத்தையும், மன அமைதியையும், இதய சுத்தத்தையுங் கோறும் ஒவ்வொரு மனிதனும் மேற்கூறியுள்ள நான்குவகை சத்திபதானங்களையே தியானிக்கக் கடவன்.

இத்தகைய சிந்தனையாம் மன அமைதிக்கும், இதய சுத்தத்திற்கும் வழிகள் யாதெனில்:- சம்வாப்பதானா 2. பஹானப்பதானா 3. பாவனாப்பதானா

4. பிரக்கமாப்பதானா என்னும் நான்கு தானங்களே மன அமைதிக்கும் இதய சுத்தத்திற்கும் பாதைகளென்னப்படும்.

அதாவது, 1. தங்களுக்குள் கெட்ட எண்ணங்கள் உண்டாகாமல் தடுக்கும் முயற்சியிலிருத்தல் 2. தங்களுக்குள் உள்ள கெட்ட எண்ணங்களை நீக்க வேண்டுமென்று சதா முயற்சி செய்தல் 3. தங்களுக்குள் முன்னில்லாத நல்லெண்ணங்களையும் நன் முயற்சிகளையும் இடைவிடாது விருத்திசெய்தல் 4. தங்களுக்குள் உண்டாயிருக்கும் நல்லெண்ணங்களையும் நன்முயற்சிகளையும் மேலும் மேலும் விருத்தியடைய முயற்சித்தல் இன்னான்குமே மன அமைதிக்கும் இதய சுத்தத்திற்கும் நெறுங்கிய பாதைகளாகும்.

இவைகள் இடைவிடா பழக்கத்திற்கும் விருத்திக்குங் கொண்டு வருவதே நற்றியானம், நற்சிந்தனை என்னப்படும். இத்தகைய நல்லறமாம் ஒழுக்கத்தி னாலும், பரிசுத்த வாழ்க்கையினாலும், உணர்ச்சிகளைத் தன்னிடத்தில் வசப்படுத்திக் கொள்ளுவதினாலும் விவேகவிருத்தி அடைந்த மாணாக்கனுக்குத் தனித்தவிடத்திற் செல்லவேண்டிய நோக்கம் பிறக்கும்.

அதினால் காடுகளிலேனும், மரத்தினடியிலேனும், மலைக்குகை களிலேனும், அடர்ந்த தோப்புகளிலேனுஞ் சலனமற்று அடங்கி ஒடுங்குமிடந் தேடுவான். இவ்வகைத் தேடி ஓடி ஓரிடந் தங்கி பிச்சை பாத்திரத்தாலேனும் தானத்தாலேனுங் கிடைக்கும் அன்னத்தை ஒருவேளை புசித்து சம்பளம்போட்டு உட்கார்ந்து சிரநிமிர்ந்து நீ தானமென்னுஞ் சூழிமுனையாம் உள்விழி பார்வையால் மனதை அமைதியடையச் செய்வான்.

ஞானவாசிட்டம்

மனமணிபேதச் சேற்றின் மறைந்தொருவருக்குந் தோன்றா
கனமுறுவிவேக நீராற்கழுவினாற் சித்திகாட்டும்
வினவுறுவிவேகவன்பான்மெய்மெயை மதியாற்கண்டு
சினமுறுபொறியை வென்று தீர்வரும் பிறவிதீர்வாய்.

1. இத்தகைய சாதனமுடையோன் முன்பே காம இச்சையைத் தவிர்த்திருப்ப வனாதலின் காம அவாவினின்று விலகி பரிசுத்த இதயமுடையவனாவான்.

2. இச்சாதனத்தால் முன்பே கோபத்தைத் தவிர்த்தவனாதலின் குரூரச்சிந்தையை அகற்றி பரிசுத்த இதயமுள்ளவனாவான்.

3. இச்சாதனத்தால் முன்பே பிராந்தியின்று நீங்கி இருப்பவனாதலின் சதா விழிப்பிலும் ஜாக்கிரதையிலும் விருத்தி அறிவிலும் நின்று பிராந்தியில் பற்றற நீங்கி ஒளியில் அன்புகூர்ந்து பரிசுத்த இதயமுள்ளவனாக விளங்குவான்.

4. இச்சாதனத்தால் அமைதியற்ற வியாகூலத்தை முன்பே தவிர்த்திருப்ப வனாதலின் மனம் மாறாமலுஞ் சாந்தம் பேராமலும் வியாகூலத்தினின்று விலகி நித்யானந்தனாகி பரிசுத்த இதயமுள்ளவனாக விளங்குவான்.

5. இச்சாதனத்தால் மனமாறுதல்களை முன்பே தவிர்த்திருப்பவனாதலின் நன்மெயாம் உண்மெயில் அன்பை வளர்த்தி பரிசுத்த இதயமுள்ளவனாக விளங்குவான். ஆகிய இவ்வைந்து தடைகளை முன்பே களைந்து எறிந்து விட்டதினால் மனதின் சுய நிலையை அடையப் பிரயத்தினப்படுவான்.

அதாவது, மயக்கத்தினின்று விடுபட்டவனாகியும் உணர்ச்சிகளாலாய எண்ணங்களுக்கு அதீதப்பட்டவனாகியும் துர்நடத்தைகளுக்கு அப்புறப்பட்ட வனாகியும் இருப்பதுடன் தன்னை இவைகளினின்று விலக்கிக் கொண்டு மனத்துடனும் ஆராய்ச்சியுடனும் கூடி மன அமைதியாம் முதல் தியானமாகும் பிரீதி, சுகா, சித்த, ஏக்கதா என்னுஞ் சந்தோஷமயம், ஏக சிந்தனை இவைகளின் உட்பிரவேசிப்பான்.

இம்முதல் தியானத்தில் 1. காமம் 2. கோபம் 3. பிராந்தி 4. அமைதியற்ற வியாகூலம் 5. மனமலைவு இவ்வைந்தும் ஒழிந்து

1. மனனம் 2. ஆராய்ச்சி 3. சந்தோஷம் 4. ஆனந்தம் 5. ஏக சிந்தை ஆகிய ஐந்தும் உதிக்கின்றன.

இரண்டாந் தியானத்தில், மனனத்தையும் ஆராய்ச்சியையுந் தவிர்த்து சாந்தமுடையவனாகியும் ஆனந்தமுடையவனாகியும் இருப்பான்.

அவைகள் அடக்கப்பட்டிருக்குஞ் சாந்தியும் ஏக சிந்தனையும் உதிக்கும். இதை பிரீதி, சுகா, ஏகக்தா என்னப்படும் இரண்டாந் தியானத்திலிருப்பான்.

மூன்றாந் தியானத்தில் மேற்கண்ட சந்தோஷத்தினின்றுக் கொண்டு நித்தியானந்தம் உடையவனாகியும், சதா விழிப்புள்ளவனாகியும், விவேகவிருத்தி உள்ளவனாகியும் மனமணியின் சுயப்பிரகாச பேரின்ப சுகத்தைத் தானே அனுபவிக்கும் மூன்றாந்தியானத்திலிருப்பான்.

நான்காவது தியானத்தில் அவனது சுகதுக்கங்களை விலக்கி பற்றற்று மனநிறைவில் சென்று துக்கமுஞ் சுகமுமற்றிருக்கின்ற மனநிறை அல்லது உபேட்சை சித்த ஏகக்தா என்னும் பரிசுத்த நிலையாம் நான்காந் தியானத்திலிருப்பான்.

ஓ! சகோதிரர்களே! முன்பு கூறியுள்ள நான்குவகை தியானங்களில் பூர்த்தியான நிலை அடைந்தவுடன் ஐந்து வகை பாவனையில் நிலைப்பன்.

1. மைத்திரீபாவனா : அதாவது, உலகில் தோன்றியுள்ள சருவ சீவர்களும் ஆனந்தத்தில் வாழ்கவேண்டுமென்று பாவிப்பான். சீவராசிகள் யாவும் பேராசை, துக்கம், வியாதி, துராசையினின்று மீளவேண்டுமென்று பாவிப்பான். சருவ மநுட சீவர்களும் பிறவி என்னும் நரகவாதனையில் சுழன்று திரியாமல் சுகநிலை அடையவேண்டுமென்று பாவிப்பான்.

2. கருணாபாவனா : ஏழைகளும், பிணியாளரும் செல்வம் நிறைந்து சுகதேகிகளாக வாழவேண்டுமென்று பாவிப்பான்.

3. முதிதபாவனா : ஒவ்வோர் மநுடசீவர்களும் தங்கள் தங்கள் நல்வினைகளைப் பெருக்கி நற்பயனை அடையவேண்டுமென்று பாவிப்பான்.

4. அசுபபாவனா : சரீரமானது பலவகைக் குற்றங்களால் ஆக்கப்பட்டதென்றுஞ் சாணக்குவியலில் தோன்றி வளருகின்ற புழுக்களைப் போல் கருப்பையில் உண்டாகிறதென்றும், ஒன்பது துவாரங்களின் வழியே ஒப்பத்தகாத கசிவு ஓயாமல் சொறிகிறதென்றும் ஊற்றை சாரளத்தைப்போல் வெறுக்கத்தக்க நாற்றத்தை அது வெளிப்படுத்துகிறதென்றுஞ் சரீரத்தின் கால அளவு மின்னிலைப்போன்றதும் நுரையைப்போன்றதும் நீரிலிட்ட உப்பைப் போன்றதும் காய்ந்தப் புல்லைப்பற்றிய நெருப்பைப்போன்றதும் கடலின் அலையைப்போன்றதும் புல் நுனியின் மீதுள்ளப் பனித்துளியைப்போன்றது மாகிய நிலையற்ற தேகமென்று ஒவ்வோர் மநுட சீவர்களும் ஆழ்ந்து ஆயுளைப்பற்றி அஞ்சவேண்டுமென்று பாவிப்பான்.

5. உபேட்சபாவனா : சகல உயிர்களையுஞ் சமமாகப் பாவித்தலும் வேண்டுதல் வேண்டாமை என்னும் வெறுப்பு விருப்பின்றி இருத்தல் வேண்டுமென்றும் பாவிப்பான்.

நான் என்பதும் வீணெண்ணம். நானல்ல என்பதும் வீணெண்ணம். நான் இருக்கின்றேனென்பதும் வீணெண்ணம். நான் இல்லை என்பதும் வீணெண்ணம். நான் ரூபமுள்ளவனென்பதும் வீணெண்ணம். நான் ரூபமில்லாதவனென்பதும் வீணெண்ணம்.

ஓ! சகோதிரர்களே! வீணெண்ணங்கள் விரிவதே பிணி. வீணெண்ணங்கள் விரிவதே துக்கம். வீணெண்ணங்கள் விரிவதே பிராந்தி. வீணெண்ணங்கள் விரிவதினின்று குறுகி வீணெண்ணங்களில் ஓடாமல் மீண்டவன் எவனோ அவனையே ஞானவரம்பிட்ட மவுனி என்று கூறத்தகும்.

இம்மவுனி மறுபடியும் பிறக்கவுமாட்டான், தோன்றவுமாட்டான் இறக்கவுமாட்டான். ஏனெனில் வீணெண்ணங்களும், வீணவாக்களும், வீண் வார்த்தைகளும், வீண் செயல்களுமற்று அதனினின்று எப்போது மீண்டானோ அப்போதே வீணெண்ணங்களுக்கும், வீணவாக்களுக்கும், வீண் வார்த்தைகளுக்கும், வீண்செயல்களுக்கும் ஏதுக்களில்லாமல் சருகு புழுப்போல் அடங்கி விடுகின்றான்.

அதாவது சருகு புழுக்களானது சிறு புழுக்களா இருக்குமளவுந் தவிழ்ந்து இலைகளைப் புசித்து ஊர்ந்து முதிர்ந்தகாலத்தில் தான் பிடித்துத் திரிந்த இலையால் தன்னை மூடிக்கொண்டு தன்னாவின் பசையால் சுழன்று தன்னுரு

மாறி கோவைக் காய்கள்போல் சிலநாள் அவ்விலையின் காம்பில் தொங்கிக்கொண்டிருந்து வெடித்து சருகு பட்சிகளாய் வெளியிற் பறந்தோடுவது இயல்பாம். அதுபோல் மனிதனும் பேராசை, கோபம், காமம், பொய்க்காட்சி, வீணெண்ணம் இவைகளினின்று விடுபட்டு சாந்தம், ஈகை, அன்பு மூன்றும் பெருகியவிடத்து இதயசுத்தம் உண்டாகி கலை வளர்ந்து பூரணமடைந்து தோற்றங்களில் உண்டாகும் பற்றுக்களற்று பிறவியினின்று மீண்டு நித்திறை என்பதற்று சதா விழிப்புள்ளவனாய் இரவு பகலற்ற பரிபூரண மௌனநிலை அடைகின்றான்.

அவ்வகை மௌனபாக்கியந் திரண்டவுடன் முன்பு அநித்தியத்தினின்றவன் நித்தியனாகின்றான். ஆத்துமாவினின்றவன் அனாத்துமனாகின்றான். ஐநநங்கள் தோறும் பொய்யனாக நின்றவன் உண்மெய்யனாகின்றான். அப்பொய்யற்ற மெய்யே நிருவாணமென்னப்படும்.

இதுவே அதீதப்பட்ட ஞானம். இதுவே துக்கம் நீங்கிய இடம். இதுவே பிறப்பிறப்பற்ற நிலை. இதுவே சத்திய பீடம். இதுவே உள்ளத்துறவு. இதுவே பரமசாந்தி. இதுவே சுகவாரி. இதுவே பரமானந்தம். இதுவே பரிபூரணம். இதுவே சருவ உலகங்களையுந் தோற்ற வைக்கும் பளிங்கு. இதுவே சருவ உள்ளங்களையும் அறியத்தக்க பளிங்கு. இதுவே சாந்தம் நிறைந்த பிரமம். இதுவே அன்பு நிறைந்த சிவம், இதுவே யீகை நிறைந்த ஈசன். இதுவே சுகமுத்தி. இதுவே பரமோக்ஷம். இதுவே நிருவாணமுமாம்.

இத்தகைய மெய்கண்ட நிருவாணநிலை அடைந்தவனே புத்தனாவன். இவ்வகைப் புத்தனானோன் சருவசீவர்களின் யீடேற்றங் கருதி ஒவ்வொரு சீவப்பிராணிகளின் மீதும் அன்பு பாராட்டி அஹிம்சா தருமத்தை நாட்டி புற்பூண்டுகளிலிருந்து உயர்ந்து புழுக்கீடாதிகளாக தோற்றுவதற்கு இடையூறுகள் நேரிடாமலும் புழுக்கீடாதிகளிலிருந்து உயர்ந்து மட்சம் பட்சிகளாகத் தோற்றுவதற்கு இடையூறுகள் நேரிடாமலும், மட்சம் பட்சிகளிலிருந்து உயர்ந்து மிருகாதிகளாகத் தோற்றுவதற்கு இடையூறுகள் நேரிடாமலும், மிருகாதிகளினின்று உயர்ந்து மக்களென்னும் மநுக்களாகத் தோற்றுவதற்கு இடையூறுகள் நேரிடாமலும், மநுக்களிலிருந்து உயர்ந்து தேவர்களாகத் தோற்றுவதற்கு இடையூறுகள் நேரிடாமலுந் தடுத்து சத்திய தன்மம் என்னும் மெய்யறமாம் சுகவழியைக் காட்டி துக்க நிவர்த்தியாம் பிறப்பறச் செய்வான்.

விவேகசிந்தாமணி

மெய்யதைச் சொல்வாராகில் விளங்கிடு மேலுநன்மெய்
வையகமதனைக் கொள்வார் மனிதரிற்றேவராவார்
பொய்யதைச் சொல்வராகிற் போசன மற்பமாகும்
நொய்யவரிவர்களென்று நோக்கிடாரறிவுள்ளோரே.

சீவகசிந்தாமணி

ஊன் சுவைத்து உடம்புவீக்கி நரகத்திலுரைதனன்றோ
ஊன்றினாது உடம்புவாட்டி தேவராயுரை தனன்றொ
ஊன்றியிவ் இரண்டினுள்ளும் உறுதி உரைதி என்ன
ஊன்றினாதொழிந்து புத்தேளாவதே உறுதி என்றான்.

திரிக்குறள்

தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயி ரெல்லாந்தொழும்.
கொல்லான் புலாலை மறுத்தானைக் கை கூப்பி
எல்லா உயிருந் தொழும்.

ஓ! சகோதிரர்களே! நிருவாணம் பெற்றவனாகும் நித்தியனுக்கு இத்தகைய சுத்தகுணம் உண்டாகி சருவ சீவப்பிராணிகளுக்கும் உண்டாகும் துக்கங்களை நிவர்த்திக்க வேண்டிய எண்ணம் பிறப்பதுடன் துன்பங்களின்று விடுபட்டு மேற்பிறவியடைய வேண்டிய நீதிநெறிகளையும் புகட்டுவது காரணம் யாதெனில், தான் அடைந்த சாந்தத்தை மற்றவர்களும் அடைய வேண்டும் என்றும், தான் பெற்ற சுகத்தை மற்றவர்களுஞ் சுகிக்கவேண்டியதென்றும், தானடைந்த மனவமைதியை மற்றவர்களும் அடையவேண்டும் என்றும், தனக்குள் கண்ட சுயம்பிரகாசத்தை மற்றவர்களுந் தங்களுக்குள் காண

வேண்டியதென்றும், தன்னிற்றானே பற்றறுத்து கண்ட காட்சியால் புளியம்பழம் வேறு ஓடு வேறுபோல் தேகம் வேறு ஒளி வேறாய் தானே சுயம்பாதலும், தனக்குள் சகலமுந் தோற்றுதலுஞ், சுயம்பிரகாச தூய உடம்பினனாதலும், இயற்கையாகிய உணர்வில் நிற்றலும், பாசபந்தங்களினின்று நீங்கும் இயல்பிலும், அன்பின் மிகுதியிலும், சதா ஆறுதலிலும், பேரின்பத்திலும் நின்று எண்குணத்தனாகி சகல துக்கங்களுஞ் சாறாது நிற்பதற்கேயாம். அதாவது தண்மையாம் சாந்தபெருக்கத்தால் தேகதேயுதிரண்டு குளிர்ந்துள்ளமையால் கற்பாறையைத் தீபிறக்கக் காய்த்து இவனை அதன்மீது கிடத்தின போதிலுங் குளிர்ந்த பாறையில் படுத்திருப்பதுபோல் காண்பான். பாசபந்தங் களினின்று நீங்கி புளியம்பழத்தைப்போலும் ஓட்டைப்போலும் உள்ளவனாதலின் இவன் தேகத்தின்மீது பலர் கூடி அம்பு கும்பலை எய்தபோதிலும் யாதொரு உபத்திரவுமின்றி ஆனந்தத்திலிருப்பன்.

ஞான வாசிட்டம்

சரமலர்கள் நெய்தல் மலர் மழையை ஒக்கும், / தழற்பள்ளி பனிநீரிற் சயனமொக்கும்,
சிரமறிதல் சுகமுறு நித்திறையை ஒக்கும், / தெகமறிவ துக்கலவைச் செரிப்பூச்சொக்கும்,
நிரவறியநாராச மறுமம் பாய்தல் / நெடுங்கோடை சிவிரியினன் னீரையொக்கும்
விரகறிய விடயமெனும் விடை விடுசி / விவேக மிகுத்தவர்க்கலால் விலக்கொணாதே.

திரிக்குறள் புத்தர் வாழ்த்து

கோளில் பொழியில் குணமிலவே எண்குணத்தான், / தாளை வணங்காத்தலை.

சூளாமணி

காதலரில் பிழையாராய்க் கள்ளுன்றேன் கடிந்தகற்றி
யிதலே டில்லிருக்கு மிளம்பிடியர் முதலாயா
ரோதினமுன்தேவரா உயர்ந்தவர்க்குள் உயர்ந்துளராய்
சோதியும்பே ரெண்குணமுந் துப்புரவுந் துன்னுவரே.

இமையாத செங்கண்ணர் இரவறியார் பகலறியா
ரமையாத பிறப்பறியா ரழலறியார் பனியறியார்
சுமையாகி மணிமாலை சுடர்ந்திலந்து நெடுமுடியா
ரமையாத தல்லுலகி னகைமணிப் பூ ணமரரே.

சீவகசிந்தாமணி

சோலையினும்பித்திங்கட் சுடரொளி பூத்ததேபோல்
மாலையுங் கலனுமீன்று வடகுமுந்துகிலு நான்று
காலையும் இரவும் இல்லா கற்பக மரத்தி நீழற்
பாலையாழ் மழலை வேறாய்ப் பழமணிக் கொம்பினின்றாள்

உலகுணர் கடவுளை உருகெழு திறலினை
நிலவிரி கதிரணி நிகரறு நெறியினை
நிலவரி கதிரணி நிகரறு நெறியினை
னலர் கொழு மரை மலரடியிணை தொழுதும்

மணிமேகலை

முற்றுமுணர்ந்த மூதறிவாளன்.

இவன் பெருக்கிக்கொண்ட அன்பின் மிகுதியால் மற்றவர்களின் கொடுஞ்சினமும், குரூரச்செயலும் இவன் அருகில் நெறுங்காது. இனிய மொழியால் நீதிநெறிகளாம் அழியாச் செல்வத்தை அன்னியர் செவிகளிலோதி ஆதரிப்பவனாதலின் அவிவேகிகளால் இவன் செவியில் ஈயத்தைக் காய்த்து விட்டபோதிலும் அதன் துன்பமின்றி சுகந்த தைலத்தை செவியில் விடுவது போலிருப்பன். தனக்குண்டாகுஞ் சகலபற்றுக்களையும் அறுத்தெறிந்ததுமன்றி மற்றவர்கள் பற்றுக்களையும் அறுக்கும் உபாயங்களை ஊட்டி சுக மடையச் செய்வதால் அவிவேகிகளால் இவன் தேக மாமிஷத்தைக் கத்திகொண்டு கழித்த போதிலும் சந்தனசாந்தணிவதுபோல் சுகித்திருப்பன். சகல உயிர்களையுந் தன்னுயிர்போல் காற்பதுடன் சதா விழிப்பாம் ஆனந்த நித்திறையினின்று ஏனையோர்களுக்கும் அவ்வுயிர்களைக் கார்க்கும் அகிம்சாதருமத்தை ஊட்டி ஆதரிப்பவனாதலின் அவிவேகிகளால் இவன் சிரசை அறுத்தபோதிலும் யாதொரு துன்பமுமின்றி சுகநித்திறையிலிருப்பது போல் இருப்பன். ஆறாவது மநுகுலத் தோற்றத்திற்கு மாறுபட்ட சிரேஷ்ட செயலைப் பெற்றுள்ளபடியால் இவன் மநுரூபியாகத் தோற்றிய போதிலும் தேய்வு ஒளிவமைந்த தேவனென்னும்

ஏழாவது தோற்றமாக உயர்ந்து உயர்ந்தோர் மாட்டே உலகென்னும் ஒப்புவமெயுற்றிருப்பன். மநுகுலத்தோனே தனது நன்முயற்சியால் தேவனென்னும் ஏழாவது தோற்றமடைவன்.

சங்கங்களின் ஸ்தாபனம்

இத்தகைய அஷ்டாங்கமார்க்கத்தால் மன அமைதிப் பெற்று துக்க மற்ற அறஹத்துக்களும் தங்கள் சிஷியர்களுக்கு இதே மார்க்கத்தைப் போதிப்பரென்பது சத்தியம். அச்சிஷியர்களும் போதிநிலையாம் ததாகத மடைந்து அவர்கள் சிஷியர்களுக்கும் போதிக்கும் பரிசுத்த சாந்தியுமொன்று, மார்க்கமுமொன்று அடையும் முத்தியும் ஒன்றேயாகும்.

ஓ! சகோதிரர்களே! சாந்தமும், அமைதியும், அன்பும், கருணையுமான ததாகதருடைய மார்க்கத்தின் பலனை யாதென்று கூறுவோமாயின் ததாகதருடைய நிகரில்லா தருமத்தைக் கண்ட சிஷியனை காடுகளழைக்கும், தனித்த இடங்களை அழைக்கும். ஆதலின் சத்தியதன்ம விசாரிணை உங்களைக் கூப்பிட்டழைக்குங்கால் தாமதியாது புறப்படுங்கள். பரிசுத்த தியானத்தில் நில்லுங்கள். நின்றவிடத்தில் ததாகதர் அருளிய ஞானமாம் மௌன மனவமைதிப்பெற்று ததாகதர் நிலையை அடையுங்கள். அப்போது சஞ்சலத்தில் ஆழமாட்டீர்கள். சத்திய தன்மத்தையே ஆசானாகக் கொள்ளுங்கள். சகல தோற்றங்களும் அழியத்தக்கவைகளாதலின் ஜாக்கிரதையுடன் சுகவழியாம் அஷ்டாங்க மார்க்கத்தில் நடந்து வீடடையுங்கள் வீடடையுங்கோளென்றார்.

இவ்வகையாக புத்தபிரான் நான்கு வாய்மெகளின் விவரங்களையும் அஷ்டாங்கமார்க்கத் தெளிவையும் அதன் பலனையும் இதே தேகத்தில் அறியவேண்டிய சுபேச்சையையும் ஊட்டி சுகமடையச் செய்த பெருநன்றிக்கேற்ற பிரிதிபலனளிக்கப் போதாவாரணாசி வாசிகள் யாவரும் ஒன்றுகூடி அவரது ஈகையின் செயலாம் தன்மத்தை முன்னிட்டு வாரணாசி காசி விசுவநாதா, காசிவிசுவேசா, காசியப்பனே எங்களி தயங்களில் சதா குடி கொண்டிருந்த இருளை அகற்றிய பகவனே பகவனே என்று வணங்கிக் கொண்டார்கள்.

சீவகசிந்தாமணி

குருகுலஞ் சீவக குமரன் கோத்திர, / மருகலில் காசிப னடிகள் வாழியென்,
றெரிமணி முடி நிலைமுறுத்தி யேத்தினான். / புரிமணி வீணைகள் புலம்பவென்பவே.

காசிக் கலம்பகம்

கலைமதியின் கீற்றணிந்த காசியகிலேசர்,
சிலைமதனைக் கண்ணழலாற் செற்றனர்காணம்மானை.

காசி விசுவநாதர் வாரணாசியில் சாதுசங்கங்களை நாட்டி சிஷியர்கள் யாவரையும் வரவழைத்து நீங்கள் ஒவ்வொருவருந் தனித்திருப்பீர்களாயின் நீங்கள் அநுசரிப்பதாகத் தீர்மானித்துக்கொண்ட சத்தியதருமத்தை உங்கள் பலயீனத்தால் பழயப்படி வழுவடையச் செய்துக்கொள்ளுவீர்கள். ஆதலின் நீங்கள் ஒவ்வொருவருந் தனித்திராது ஒவ்வோர் கூட்டங்களாகவுமிருந்து ஒவ்வொருவருக்கும் உள்ள தரும சங்கைகளை ஒருவருக்கொருவர் விளக்குஞ் சங்கங்களாகுங்கோள் என்று ஆக்கியாபித்தார்.

தரும சங்கைகளை விளக்கி ஒருவருக்கொருவர் தெளிந்துக்கொள்ள வேண்டிய சங்கத்தோர் சகோதிரர்களைப்போல் அன்பில் ஒன்றாகவும் சுத்தத்தில் ஒன்றாகவும், முயற்சியில் ஒன்றாகவுங் கூடிவாழுங்கள்.

உலகிலுள்ள சீவராசிகள் யாவுந் தரும ராட்சியத்தின் குடைக்கீழ் வாழும்படி அகிம்சா தருமத்தை ஊட்டுங்கள். சத்தியதர்மத்தை நான்கு திசைகளிலுஞ் சென்று பிரசங்கியுங்கள்.

இதுதான் பரிசுத்த சகோதிரக்கூட்டம். இதுதான் புத்தசங்கம். இது தான் சகல சீவர்களின் அடைக்கல ஸ்தானமென புத்த சங்கங்களை ஸ்தாபித்தார்.

இத்தகைய வாரணாசி சங்கஸ்தாபனத்துள் கவுண்டியனென்பவன் காசி விஸ்வேசன் போதனைகளைக் கவனமுறக்கேட்டு கருத்தில் பதிவுசெய்வதைக் கண்ட கடவுள் நித்தியமாகவே கௌண்டண்யன் சத்தியதன்மத்தை உணர்ந்தா னென்றார்.

அன்றுமுதல் சத்தியதன்மத்தை உணர்ந்த கௌண்டியனென்று அழைக்கப்பட்டான்.

அவ்வகைப் போற்றப்பெற்ற கௌண்டியன் காசிநாதனை வணங்கி ஓப்பிலா அப்பனே, தன்மசேனனே, எனையனே பகவனால் யான் சங்கத்தின் கட்டளைப் பெறவேண்டுமென்றான். அவனன்பின் மிகுதியையும், ஒழுக்கத்தின் அவாவையும் உணர்ந்த நாதன் தனது மாணாக்கர்களை நோக்கி சுகவழியாகும் சத்தியதன்மம் உங்களுக்குப் போதிக்கப்பட்டிருக்கின்றது.

நீங்கள் அதன்மேறை நடந்து துக்கநிவர்த்தியாகும்படி பரிசுத்தமாக வாழக்கடவீர்களென்றார். அதன்பின் கௌண்டன்யனும் மற்றுமுள்ளோருஞ் சேர்ந்து திரிரத்தினங்களாகும் மூன்று அழியா நிதிகளைச் சேர்த்துக் கொண்டார்கள். அதாவது,

தாமரைப்புட்பத்தில் வீற்றிருந்த ததாகதரே முதல் நிதியாகும் பதுமநிதி

புத்தரை விசுவாசிப்போம், புத்தரே பகவன், புத்தரே அருகன், நமதறிவை விளக்குங் குருநாதன், ஓதாமலுணர்ந்த முனிவன், சகலமுந்தெரிந்த அறிவன், அவரே ஜெகந்நாதன். அவரே ஜெகத்குரு, சருவசீவர்களுக்கும் அன்பன், சருவ சீவராசிகளுக்கும் போதகன், உலகத்தோர்முதற் கண்ட தெய்வம் அவரே, ஆதியாங் கடவுளும் அவரே, உலக சீர்திருத்தக்காரருள் முதன்மெயானவரும் அவரே ஆதலின் ஆதிபகவனாகும் புத்தரை வாழ்த்துவோம்.

இரண்டாவது தன்மநிதி

காசிவிசுவேசராகும் புத்தரால் போதித்த சத்தியதன்மத்தை விசுவாசிப் போம். பகவனால் சத்தியதன்மம் நன்கு பிரசங்கிக்கப்பட்டது. காலத்துக்கும், இடத்துக்கும் அதீதப்பட்டது. சொன்னதைச் சொல்லாகுங் கிள்ளை போலிராமல் விசாரித்துத் தெளிய வேண்டுமென்னுங் கற்பாறையின்பேரில் ஸ்தாபிக்கப்பட்டது. குழந்தைகளுக்கும் பெரியோர்களுக்கும் பொதுவாயுள்ளது. வியாதியுள்ளோனும் சுகதேகியும் உணரக்கூடியது. சிறியோர்களும் பெரியோர்களும் அறியக்கூடியது. கற்றவர்களுங் கல்லாதவர்களுந் தெரியக் கூடியது. விசாரிணைக்கொண்ட சகல மனுக்களையும் மெய்ஞ்ஞான சுகத்துக்குக் கொண்டுபோகப்பட்டது. அறிவில் சிறந்தோரால் நன்குமதிக்கப்பட்டது. சருவ துக்கங்களையும் நிவர்த்திக்கக்கூடியது, யாதொரு துன்பமுமின்றி சுகவழியே சென்று வீடடையக்கூடியது. வே ண்டுதல் வேண்டாமெய் என்னும் மத்தியபாதையை உடையதுமாகிய மெய்யறமாம் புத்ததன்மத்தைவாழ்த்துவோம்.

மூன்றாவது சங்கநிதி

மணிமேகலை

புத்ததன்ம சங்கமென்னும் முத்திர மணியை/ மும்மெயில் வணங்கி

ஆதிபகவனால் ஸ்தாபித்த புத்தசங்கத்தை விசுவாசிப்போம். புத்த சங்கத்தோர் சத்தியதன்மத்தை விளக்குகின்றவர்கள், நன்னடக்கையை யாவருக்குந் தெரியச் செய்கின்றவர்கள், சகலரையும் சத்தியதன்மத்தின் படி நடக்கும்படியாகப் போதிக்கின்றவர்கள், தாங்களும் அந்த சத்திய தருமத்தின்படி நடந்துக்காட்டு கின்றவர்கள், அவாக்களை அறுக்கும் ஆண்மெய் உடையவர்கள், அரசர்முதல் குடிகள் வரையும் சமதிருஷ்டியுள்ளவர்கள், நானென்னும் அகங்காரத்தை வெல்லும் ஆயுதத்தைக்கொண்டவர்கள், நீதியையும் நெறியையும் தாகமாகக் கொண்டவர்கள் ஒழுக்கத்தை புசிப்பாக உண்டவர்கள், புத்த சங்கத்தோர் விருப்பும் வெறுப்பும் அற்றவர்கள், சகலராலும் போற்றி வணங்குதற்குப் பாத்திரமுடையவர்கள். ஆதலின் புத்த சங்கத்தை வாழ்த்துவோம்.

சங்கநிபந்தனை

எண்குணத்தான் வாரணாசியிலுள்ள சங்கத்தோர் யாவரையும் வரவழைத்து ஓ! சகோதிரர்களே! உங்கள் கூட்டத்தார் ஐந்துவகைப்பெயரால் அழைக்கப் படுவார்கள். அதாவது:- மகட பாஷையில் (சமணரென்றும்) சகடபாஷையில் (சிரமணரென்றும்) திராவிடபாஷையில் (மநுமக்களென்றும்) வழங்கும் சற்சங்கத்தோருள் உத்த மக்களென்றும், விதரண மக்களென்றும், உள்விழி

மக்களென்றும், விஞ்ஞை மக்களென்றும், ஐந்திர மக்களென்றும் ஐவகையோருண்டு.

சீவகசிந்தாமணி

உறுதிமுன் செய்ததின்றி யொழுகினேனென்று நெஞ்சின்
மறுகளீபற்றோடார்வம் விட்டிடு மாணவச்சத்
திறுகளீயிறைவன் சொன்ன வைம்பத அமிர்தமுண்டாற்
பெறுதிநற்கதியை என்று பெருநவை அகற்றினாரே.

அருங்கலைச்செப்பு
சங்க நிபந்தனைப் பத்து

சுத்த வால அறிவை வளர்த்தல் உத்தமக்களுணர்.
உதிரசுகத்தினுறத்தை அறுத்தல் விதரண மக்களுறம்.
தெள்ளவுணர்ந்தோர் தெந்நூலீதல் உள்விழி மக்கள் நிலை
மெஞ்ஞானத்தின் மிகு நிலையாற்றல் விஞ்ஞை
மக்கட்டிரள் அந்தணபூத அறவோனாதல் ஐந்திர மக்கட் சுகம்.
தூயவாடை சிறுமகற்கீதல் ஆயதுற விலர்க்காம்.
பொன்னிற வாடைத் துறவோர்க்கீதல் நன்னுடல் போர்வையதாம்.
முற்பகலுண்டியுண்டு விழித்தல் தற்பகவிரவறு மெய்
வானப்பெருக்க மாரிகாலந்தானக் கூட்டுரவாம்.
ஒருவருக் கொருவருள்ளக் குற்றந்திரு உளமகற்றித்தெரி.

அவர்களுந் தங்கள் துற்சங்கங்களாகும் பொய்யை மெய்யென வழங்குங் கூட்டத்தை விடுத்து, கள்ளை அருந்தி மதிமயங்கி நிற்குங் கயவர் கூட்டத்தை விடுத்து, அன்னியர் பொருளை அபகரிக்குங் கள்ளர் கூட்டத்தை விடுத்து சருவ சீவர்களையுங் கொன்று புலால் புசிக்கும் புலையர் கூட்டத்தை விடுத்து காமிய இச்சையைப் பெருக்கி அன்னியர் இஸ்திரீகளையும் அக்குடும்பத்தையுங் கெடுக்கும் அற்பர் கூட்டங்களையும் விடுத்து ததாகதர் சற்சங்கஞ்சேர விரும்புவார்களாயின்;

ஐந்து வயதுள்ள சிறுவர்களையுஞ் சிறுமிகளையும் வெள்ளை ஆடை உடுத்தி வியாரங்களில் விடுத்து கல்வி விருத்திச்செய்து தெளிவடைந்து மநுகுல ஒழுக்கமுஞ் சீரும் உணர்ந்து சிறுவர்களுக்கு பதினாறு வயதுஞ் சிறுமிகளுக்குப் பத்துவயதும் முடிந்தவுடன் அவரவர்கள் குடும்பங்களில் சேர்த்து பஞ்சசீல ஒழுக்கத்திற் பழகும்படி யாக்கியாபித்தல் வேண்டும். இவர்களே 1-வது உத்தமக்களாவர். அச்சிறுவர்களுஞ் சிறுமிகளும் குடும்ப துன்பத்திற் சேராமல் சற்சங்கத்தைச் சார்ந்து சுகமடைய விரும்புவார்களாயின் புருஷர்களுக்கு வேறு வியாரமும், பெண்களுக்கு வேறு வியாரமும் அமைத்து சிறுவர்களுக்கு இருபது வயதளவுஞ் சிறுமிகளுக்குப் பதினாறு வயதளவும் உள்ள ஒழுக்கங் களையும் நெறிகளையும் ஆராய்ந்து திரிகரண அமைதி காணுமாயின் சற்சங்கத்தில் சேர்த்து மனதை துற்குணத்திலும் துற்செயலிலும் விடுத்து துக்கத்தைப் பெருக்கி மாளாப்பிறவிக்கு ஆளாகாமல் பொன்போன்ற சுயம்பிரகாச அமைதியினின்று பிறவியறுக்கும் அடையாள சிறுமஞ்சளுஞ் சிறுசிவப்புங்கலந்த துவராடை அளித்து தேகமுழுவதும் மறைக்கச்செய்து சிரமுடியகற்றி தான் அரசபுத்திரனென்று மமதையும் குரு புத்திரனென்னுங் கர்வமும் பிரபு புத்திரனென்னும் பெருமெயுங்கொள்ளாது இராகத்துவேஷ மோகங்களற்று தன்னடக்கமும் அமைதியும் உண்டாவதற்கு பிச்சாபாத்திரம் ஈய்ந்து வீதிகளிலுள்ள வீடுகடோறுஞ் சென்று வாயற்படியினின்று உத்த மக்கள் வந்திருப்பது குடும்பிகளுக்குத் தெரியவும் அவர்களும் பஞ்ச மந்திரங்களை மறவாமல் அநுட்டித்துவரவும் பஞ்சசீல ஜாக்கிரதா பஞ்சசீல ஜாக்கிரதா பஞ்சசீல ஜாக்கிரதா என்று மூன்று சத்தமிட்டு பேசாமலிருக்க வேண்டியது.

அருங்கலைச்செப்பு - அரசபுத்திரர் சங்கஞ்சேருங்கால் சிரமயிர் களைதல்

திருந்திய கீழ்திரைநோக்கிச் செல்வனே இருந்ததோரிடிக்குரச் சிங்கம் பொங்கிமேற்,
சுரிந்த தன்னுளைமயிர் துறப்பதொத்தன, னெரிந்தெழுமிளஞ்சுடரிலங்குமார்பினான்.

இச்சங்கதிகளைக் குடும்பிகளுக்கும் அறிக்கைச்செய்து உத்தமக்கள் ஜாக்கிர

சத்தங் கேட்டவுடனே அன்னமளித்து அநுப்பிவிடும்படி உத்திரவு செய்யவேண்டியது. உத்தமக்கள் பிச்சாபாத்திரத்திற் கொண்டுவந்த அன்னத்தை ஐம்மக்களும் புசித்து மிகுதியை ஏழைகளுக்கும், மற்ற சீவராசிகளுக்கும் பரிமாறிவிடவேண்டியது.

அருங்கலைச்செப்பு - அகலேந்தி அறமோதி பிச்சையன்ன மேற்றல்

அம்பொற்கலத்துளடு பாலமர்ந்துண்ணாவரிவை அந்தோ
வெம்பிப்பசிநலிய எவ்வினையின் வேறாயோ ரகல்கையேந்திக்
கொம்பிற் கொளவொசிந்து பிச்சை எனக் கூறிநிற்பாட் கண்டு
நம்பன்மின் செல்வ நமரங்காணல்லறமே நினைமின் கண்டீர்.

எவ்வகைப் பதார்த்தங்களேனும் அன்னமேனுங் கொஞ்சமும் அதிகமும் இல்லாமல் முற்பகல் உதயாதி முதல் பதினைந்து நாழிகைக்குள்ளாகப் புசித்துத் தீறல் வேண்டும்.

பிற்பகல் முதல் இரவு முழுவதும் ஜலபானமின்றி மற்றக் கடினவஸ்துக்களைப் புசிக்கலாகாது. ஐம்பத மாக்களும் மழை காலங்களில் வியாரங்களை விட்டு யாத்திரைப் போகலாகாது. குடும்பிகளை அட்டமி, பௌர்ணமி, அமாவாசை இம்மூன்று நாளும் வியாரத்துள் வரவழைத்து பஞ்சசீலம் நிலைக்கச் செய்யவேண்டியது. இவ்வகை சுஷ்கச் செய்யவேண்டிய காரணம் யாதென்பீரேல் அதிக புசிப்பை விரும்பியகாலத்திலுண்டாய மமதையும், முற்றும் புசிப்பை அகற்றியிருந்தகாலத்தில் உண்டாய அமைதியையும் ததாகதர் உணர்ந்தவராதலின் அதிகமுங் கொஞ்சமும் இல்லா மிதாகாரத்தில் நிலைக்கச்செய்தார். அத்தகைய மிதாகாரத்தை அதிகமுங் கொஞ்சமும் இல்லாமல் முற்பகல் முழுவதும் புசித்து பிற்பகலும் இரவும் யாதொரு கடின வஸ்துக்களும் இராது ஜலபானமட்டிலும் அருந்தவேண்டிய காரணம் யாதென்பீரேல் மிகு புசிப்பால் மதோன்மத்தம் உண்டாம் அதி நித்திறை கொண்டு காமனிடஞ்சிக்கி அயர்ந்துபோவார்கள். ஆதலின் இரவு புசிப்பை தவிர்த்து நல்விசாரிணையிலும் சுகத்தியானத்திலும் விழித்திருப்பார் களாயின் இரவு பசலற்ற இடத்தில் தூங்காமற் தூங்குவார்கள். இவர்களையே 2-வது விதரண மக்களென்னப்படும்.

பின்கலை நிகண்டு

பகவனது சங்க வரிசையில் பூணுநூற் புனைந்த விவரம்.

காப்புக்கு முன்னெடுக்குங் கடவுள் தான்மாலேயாகும்
பூப்புனை மலரின் செல்வி புனைபவனாதலானும்
காப்பவனாதலானுங் கடவுளர் முதல்வனாகி
வாய்ப்பதாமதாணி பூநூல் வரிசையிற்புனைதலானும்

இவர்கள் அதிதீவிர விதரணக்குறைவால் தூங்காமற்றூங்கும் நிலை தவரி நோக்கி நோக்கி நழுவியும், விழித்து விழித்து பேருரக்கங் கொள்வார்களாயின் தன்னை மறந்து பிறவிக்காளாவார்கள் என்று உணரும் அறஹத்துக்கள் விதரணமக்கள் அதி தீவர நோக்கற்றிருப்பதற்கிரங்கி உபநயனமாம் உள்விழியைத் திறந்து ஊனக்கண் பார்வையைத் தவிர்த்து ஞானக்கண் பார்வையிலிருத்தி உபநயனம் பெற்றவனென்று உலகோர் அறிந்து வேண்டிய உதவி புரிந்துவருதற்கு மதாணி பூணுநூலென்னும் ஓர் அடையாளந் தரித்து கடைத்தேறற் செய்யவேண்டும். இவர்களையே 3-வது உள்விழிமாக்களென்னப்படும்.

சீவகசிந்தாமணி

அட்டமீ, அமரவாசி, பூரணவாசி, ஒடுக்கம்.

ஓவாவிரண்டுவ்வு மட்டமியும் பட்டினிவிட்டொழுக்கங்காத்த
றாவாததவமென்றார் தண்மதிபோன் முக்குடைக்கீழ் தாதைபாதம்
பூவேபுகைசாந்தஞ் சுண்ணம் விளக்கிவற்றாப் புனைதனாளு
மேவா விவைபிறவும் பூசனையென்றீண்டிய நூல் கரைகண்டோரே.

பின்கலை நிகண்டு

விஞ்ஞையர் சாரணரென்போற் செய்கை.

நீரினாற்பூவில் வானில் நினைந்திட மொதுங்குகின்ற
சாரணரெண்மராவர் சமணரிற் சித்திபெற்றோர்

சீவகசிந்தாமணி

நலத்திரு மடமகணயந்த தாமரை / நிலத்திருந்திருசுடர் நிமிர்ந்து செல்வபோ
நுலப்பருந் தவத்தினாலோங்கு சாரணர் / செலத்திரு விசும்பொறி சிறந்த தென்பவே.

இத்தகைய உள்விழிப்பார்வையால் சதாவிழிப்பாம் ஞான நித்திறையில் தசநாடிகளுந் தசவாயுக்களுமடங்குங்கால் தசநாதங்களாம் சுரமண்டல தொனிகளெழும்பும். அத்தொனியைநோக்கி நிற்பார்களாயின் நித்திறைக் கிழுத்து மாளாப் பிறவிக்காளாக்கும். அத்தொனியில் அவாக்கொள்ளாது கேட்பதுங் கேளாததுமாகும் உட்பார்வையிலிருப்பார்களாயின் எண்பத் தொன்பது சித்தும் இயல்பிற்றோன்றுஞ் சாரணர்களாகும் இவர்களையே 4-வது விஞ்ஞை மக்களென்னப்படும்.

இவ்விஞ்ஞையாம் சித்துக்களை விரும்பி வீண்செயற்களில் தங்களை ஏனைய மநுக்கள் புகழவேண்டிய மகிழ்ச்சியிலிருப்பார்களாயின் மநுக்களின் துற்கன்ம பீடிதரோகங்கட் சார்ந்து இவர்கள் தேகசுகத்தைக் கெடுப்பதுடன் நற்கன்மதான சுகங்களுங் கெட்டு சித்துக்களின் டம்பமே மறுபிறவிக்கு ஆளாக்கிவிடும்.

ஆதலின் விஞ்ஞைமக்கள் இயல்பினால் உண்டாகுங் சித்துக்கள் நீங்கலாக ஏனையோர் மகிழ்ச்சியை நோக்கி டம்ப சித்துக்களாடாது சுத்தவிதயமாம் மனக்களங்குகளை அகற்றி கண்டயிடம் மனம்போகாமலும், முகர்ந்தயிடம் மனம்போகாமலும், கேட்டயிடம் மனம்போகாமலும், உருசித்தயிடம் மனம் போகாமலும், பரிசித்தயிடம் மனம் போகாமலும் தண்மெயாம் குளிர்ந்த நிலையில் பொறிவாயிலைந்தினையும் அவித்து சருவசீவர்களைத் தங்களுயிர்கள் போலும் தங்களால் ஆதரித்து சீர்பெறவேண்டிய சீவர்களென்றுங் கருதி உண்மெயுணர்ந்து இறப்பும் பிறப்புமற்று மெய்யறத்தி நின்று அறஹத்துக்களாய் விளங்கியிருக்கும் இவர்களை 5-வது ஐந்திர மக்களென்று கூறப்படும்.

சங்கத்தோருள் ஐவகை சாதனரும் மிக்க ஜாக்கிரதையால் சதாவிழிப் பினின்று மக்களென்னும் ஆறாவது தோற்றங்கடந்து தேவர்களென்னும் ஏழாவது தோற்றமுண்டாயினும் ஜாக்கிரதா நிலையற்றிருப்பரேல் அங்குந் தீய நிலை தோன்றும். ஆதலின் மிக்க ஜாக்கிரதையோர் விழிப்பே மேன் மெய்யாம் சுயம்பிரகாச ரூபத்தைப் பெறுமென்றோதி சங்கத்தோர் ஐவகைச் சாதன கட்டளைகளைப் பூர்த்திசெய்தார்.

ஐந்திர மக்கள் ஐம்பொறிகார்த்து ஏழாவது தேவதோற்றம் பெறினும் ஜாக்கிரதையிலிருக்கவேண்டுமென்பதாம்.

சீவகசிந்தாமணி

ஒழுக்கத்தினின்று ஐம்பொறிகாத்தலே வீட்டின்பந்தரும்.

ஒன்றாய ஊக்கவேர் பூட்டி யாக்கைக்கெறுவுழுது
நன்றாய நல்வரகுச் செந்நெல் வித்தி ஒழுக்க நீர்,
குன்றாமற்றாங்கொடுத் தைம்பொறியின் வேலிகாத்தோம்பின்,
வென்றார் தம் வீட்டின்பம் விளைக்கும் விண்ணோருலகின்றே.

நாயனார் திரிக்குறள்

எழுபிறப்புந்தீயவை தீண்ட பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெரின்.

8. சங்கங்களின் ஸ்தாபன காதை

காசி விசுவநாதன் வாரணாசியில் தன்ம சங்கங்களை நாட்டி சங்க நிபந்தனைகளையும் ஊட்டி திரிபேத வாக்கியங்களாகும் திரிபீடங்க ளையும் அதன் உபநிட்சயார்த்தங்களாகும் உபநிடதங்களையும் சங்கத்தோர் இதயங்களிற் பதியச்செய்து சதானந்த நிலையை விளக்கிவருங்கால் அத்தேசவாசியாம் ஓர் சிறந்த வியாபாரியின் புத்திரன் யட்சன் என்பவனிருந்தான். அவனோ அவன் தந்தையால் சேகரித்த பெருந்திரவிய சம்பத்திருந்தும் தனக்கோர் மனவமைதியும் ஆறுதலும் இல்லாமல் பொருளை சேகரிக்கும் பேராசையால் பலவகை விரோதங்களும் மனசஞ்சலங்களும் பெருகுவதை உணர்ந்து ஓர்நாள் நள்ளிரவில் எழுந்து வீட்டைவிட்டு காசி விசுவேசனாம் பகவன் தங்கியிருக்கும் இடத்திற்குச் சென்றான்.

செல்வச் சிறுவன் தன்னை நாடி தூரத்தில் வருவதைக் கண்ணுற்றார். அவனும் பகவன் அருகிற் சென்று வணங்கி ஐயனே, யான் பெருத்த திரவிய சம்பத்துடையோன் மைந்தனாயிருந்தும் சகிக்கமுடியா பெருந்துக்கத்தில் ஆழ்ந்து தவிக்கின்றேன். இஃது யாது உபத்திரவம் என்று அலரினான்.

அதைக்கேட்ட பகவன் யட்சனை நோக்கி குழந்தாய், உனக்குவேண்டிய திரவியசம்பத் திருந்தும் மாளா துக்கந் தோன்றிய காரணம் யாதென்றார். அதைக்கேட்ட சிறுவன் மெய்யனை வணங்கி பெரியோய், எனது தந்தை திரவியத்தை சேகரிக்கவும் அதை பாதுகாக்கவும் விருத்தி செய்யவுமுள்ள காலத்தில் இரவும் பகலும் பெருமூச்சிறைந்து புரண்டிருப்பதைக் கண்டிருக்கின்றேன். ஆயினும் அதன்காரணம் எனக்கு விளங்காமலிருந்தது.

என் தந்தையார் சேகரித்த திரவியங்களையும் அதன் பாதுகாப்பையும் விருத்தியையும் என்னிடம் ஒப்படைத்துவிட்டதுமுதல் அவர் பெருமூச்சும் புரட்டலும் நின்று சுகநித்திறையிலிருக்கின்றார். யானோ திரவிய சேகரிப்பாலும் அதன் பாதுகாப்பாலும் விரயத்தினாலும் மாளா துக்கத்திலும் பெருமூச்சிலும் புரட்டலிலும் நின்றலரி உம்மை வந்தடைந்தேன் என்றான்.

அதைக்கேட்ட பகவன் யட்சனைநோக்கி சிறுவனே, இவ்விடத்தில் யாதொரு துக்கமுமில்லை, இவ்விடத்தில் யாதொரு உபத்திரவமும் இல்லை. என்னை நாடிவந்த உனக்கு சத்தியதன்மமாம் அழியா திரவியத்தைக் கொடுக்கின்றேன். அதை சிதலழிக்காது கள்ளர்கள் அபகரிக்க மாட்டார்கள். அதன் சேகரிப்பால் உன் பெருமூச்சடங்கி யாட்டல் மற்ற துக்கத்திலும் உபத்திரவத்திலும் நிலைக்காமல் மீட்குமென்றார்.

ததாகதர் திருமொழியைக் கேட்ட யட்சன் மனோதிருப்தியடைந்தான். துக்கமுமில்லை விசாரமுமில்லை என்ற பகவனுடைய வார்த்தைகள் அச்சிறுவன் மனக்கவலையைப் போக்கியது. உள்ளத்தில் ஆறுதல் அடையும்படிச் செய்தது. அவ்வானந்தத்தால் அருகனென்றுணர்ந்து அருகில் உட்கார்ந்தான். பகவன் சிறுவனைநோக்கிக் குழந்தாய்! உன் தேகம் வளர்ந்து சுகதேஜசிலிருப்பதும் உன் தாதை தேகம் சுஷ்கி நரைதிரை கொண்டிருப்பதைக் கண்டீரா காண வில்லையா என்று உசாவினார்.

அதைக்கேட்ட யட்சன் பெரியோய் எனது தாதை கண் பஞ்சடைந்து தேகந் தளர்ந்து சருமஞ் சுருங்கி முதுகும் வளைந்திருப்பதைக் கண்டே னென்றான்.

குழந்தாய்! அதே தோற்றத்தை உன் தேகமும் அடையுமா அடையாதா என்றார்.

அதைக்கேட்ட யட்சன் இன்னும் திகைத்து ஐயனே! என் தேகத்தையும், என் தந்தை தேகத்தையும் என் தாதை தேகத்தையும் நோக்கிப் பார்க்குங்கால் ஓர் புட்பமானது மொக்கிட்டு மலர்ந்து மணம் வீசி காய்ந்து மடிவதுபோல் என் தேகமும் மடியும்போற் காணுகின்றேன் என்றான்.

மலரின் மணமானது சகலருக்குஞ் சுகந்தத்தை வீசி ஆனந்தமுறச் செய்வதைக் கண்டாய். அதுபோல் உன் தேகத்தில் வீசும் சுகமணம் யாதேனும் உண்டா என்றார்.

ஐயனே என் தேகத்தில் மலமூத்திராதிகளின் துற்கந்தங்களையும் வாய் கொப்புழ் இவைகளின் துற்கந்தங்களையும் முகருகிறேனன்றி நற்கந்தம் ஒருநாளுங் கண்டிலேன் என்றான்.

தன்னிற்றானே தோன்றி வளர்ந்த புற்பூண்டுகளிற்றோன்றும் புஷ்பங்களின் மணம் சகல துன்மணங்களையும் போக்கி நன்மணம் வீசுங்கால் சிரேஷ்டமுற்ற மநுக்களாம் தாய் தந்தையர் சேர்ந்து ஜெநித்த உனது தேகத்தில் மணமில்லாமற் போயதென்னோ என்றார்.

ஐயனே! அவற்றை யான் இதுவரையுங் கண்டதுமில்லை கேட்டதுமில்லை முகர்ந்ததுமில்லை என்றான்.

குழந்தாய்! புற்பூண்டுகளில் தோற்றுவது புஷ்பமணமும் பிண்டங்களில் தோற்றுவது பிரம மணமுமாம். அப்பிரமமணத்தை முகர்ந்தவன் துக்கத்தி

னின்று விடுபடுவான். பிணியினின்று அகலுவான். ஆறுதலில் நிலைப்பா னென்றார்.

அதைக்கேட்ட யட்சனெழுந்து அருகனை சரணாகதி அடைந்து ஐயனே! இவ்வாரணாசியிலுள்ள ஒரு மநுக்களிடத்தேனும் அம்மணத்தைக் காணேன். எல்லாமுணர்ந்த உம்மிடத்தே அம்மண மிருக்கக் கண்டேன். என் மனக்கூற்றுக்கள் யாவையும் விண்டேன். சதாதுக்கத்தை அகற்றி ஆனந்தங் கொண்டேன். உமது அளவுபடா சத்தியதன்ம அமுதத்தை உண்டேன் என்று கூறி உலகத்தின்மீது கொண்டுள்ள விருப்பைத் தவிர்த்து மெய்யுணர்வுற்று பரிசுத்த ஞானமாங் குளிர்ந்த நிலையினின்று தன் தேகத்திலில்லா மணம் அணைந்துள்ள பட்டாடைகளிலும் இரத்தினாபரணங்களிலும் உண்டோ வென்று நோக்கினான்.

அவ்வாடைகளிலும் ஆபரணங்களிலும் சேர்க்கைமணம் உள்ளதேயன்றி இயற்கை மணமில்லாததைக் கண்டான். டம்பமென்று விண்டான். நாணத்தைக் கொண்டான்.

இத்தகைய நாணங்கொண்ட யட்சன் பகவனைநோக்கி ஐயன்மின் தமதுதேகத்தில் சிறப்புற்ற ஆடைகளில்லாமலும், விலையுயர்ந்த ஆபரணங் களில்லாமலும் இருந்தபோதினும் தாமரைப் புட்பம் மலர்ந்திருப்பதுபோல் உமது முகம் மலர்ந்திருப்பதும், புட்ப தேஜசு விளங்குவதுபோல் உமது விழி யினால் தோன்றும் அன்பின் மிகுதியும், புட்பத்தின் வாசம் வீசுவது போல்உமது நாவினின்றெழும் அமுத வாக்கும் என்னைக் கவர்ந்து முன்னிருந்த பயத்தையும் அளவுபடா துக்கத்தையும் போக்கி என்னை ஆறுதலில் நிலைக்கச்செய்ததென்று கூறி நீதியாகும் ஆடையையும், நெறியாகும் ஆபரணங்களையும் விட்டு பொன்சுமக்கும் பூதமானோமென்று எண்ணி ஏக்கமுற்றான்.

அவனுக்குள்ள நாணத்தை உணர்ந்த காசி விசுவேசன் சிறுவனை நோக்கிக் குழந்தாய்! ஒருவனுடையதேகம் ஆபரணாதிகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தபோதினும் அவன் ஐம்புலன்கள் அடக்கப்பட்டிருக்கலாம். வெளித்தோற்றமானது அவனுடைய மனதையாயினும் அவன் செயலையாயினும் பாதிக்காது ஒரு சிரமணன் துவராடை அணைந்துக்கொண்டாலும் அவன் மனம் சமுசாரப் பற்றுக்களில் மூழ்கியிருக்கும்.

ஒருவன் ஆடையாபரணங்களைத் தவிர்த்து காட்டுக்குச் சென்று உலக இன்பத்தைத் தாவுவானாயின் அவன் உலகப் பற்றுடையவனேயாவான். மற்றொருவன் ஆடையாபரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தபோதினும் அவன் உலக இன்பங்களைத் தாவாமலிருப்பானாயின் அவனே உலகப் பற்றுக்களை ஒழித்தவனாவான்.

உலகிலுள்ளோர் நானென்னும் அகங்காரத்தை ஒழிப்பார்களாயின் இல்வாழ்பவர்களுக்குந் துறவிகளுக்கும் யாதொரு வித்தியாசமும் இல்லையென்று கூறி சங்கத்தினின்று சாதிக்குஞ் சாதனங்களின் தெளிவையும் இல்லத்தினின்று சாதிக்கும் சாதனங்களின் வழுவையும் விளக்கியபோது யட்சன் சங்கத்தைச் சார்ந்தே சாதனம் பெறவேண்டுமென்று அவாக்கொண்டான்.

அதனை உணர்ந்த பகவன் யட்சனுக்குச் சங்க நிபந்தனைகளை யூட்டி சிரமுடிகழித்து காஷாயமீய்ந்து கரவோடளித்து திரிமணிகளில் நிலைக்கச் செய்தார்.

அதன்பின் யட்சனுக்கு மெய்யறத்தை மேலுமேலும் விளக்கிவருங்கால் யட்சனுடைய பிதா வெளியில் வந்து நின்று ஐயனே! எனது மைந்தன் இவ்விடம் வந்ததுண்டோ என்றான்.

அதை வினவிய பகவன் யட்சன் பிதாவை நோக்கி தாம் உள்ளே வாரும் உமது மைந்தனைப் பாருமென்று கூறினார். யட்சன்பிதா உள்ளே சென்று தமது மைந்தன் அருகில் உட்கார்ந்தும் இவனே தனது மைந்தன் என்றறியக் கூடாமலிருந்தான்.

ஆதிபகவன் அவ்வேளையில் மெய்யறத்தின் மார்க்கத்தையும் மெய்ப் பொருளின் விளக்கத்தையும் மெய்யின்ப சுகத்தையும் போதித்துவருவதைக் கேட்டுணர்ந்த யட்சனுடைய பிதா பின்வருமாறு சொல்லத்தொடங்கினான்.

ஐயனே, உமது மெய்யறப் பாதை மாட்சிபெற்றது. உமதுமெய்ப்பொருள் விளக்கம் உலகம் அறியாதது. உமது மெய்யின்பப் பேறுதான் தானே உணர்வதென்னும் முயற்சியில் நிலைத்தது. இவ்வரும் பெருந்தானத்தை உலகோர்க்கீயும் ஈசனாம் புத்தரே எமதாசான். ஒழுங்கற்றிருக்கும் நீதிகளை ஒழுங்கடையச்செய்கின்றார். மறைந்திருக்கும் நீதிகளை வெளிப்படுத்துகின்றார். திசை தப்பி நடப்போருக்கு வழி காட்டுகின்றார். அஞ்ஞானிகளாங் குருடர்களுக்கு மெஞ்ஞானத்தின் விழியை அளிக்கின்றார். இருளிலிருக்கும் அறிவீனர்களுக்கு வெளிச்சமாம் அறிவின் விருத்தி செய்கின்றார். ஆதலின் புத்தரிடம் யான் அடைக்கலம். அவர் தெரியச்செய்த சத்தியதருமத்தில் யான் அடைக்கலம். அம் மெய்யறத்தை தெரிந்துய்த்த சத்திய சங்கத்தில் அடைக்கலம். அடைக்கலம் புகுந்தவென்னை இன்றுமுதல் யான் உலகிற் தோன்றும் வரையில் என்னை ஓர் சிஷியனாக ஏற்றுக்கொள்ள வேண்டு மென்றடிபணிந்தான்.

இல்லற வாழ்க்கையிலிருந்து புத்த சங்கத்துள் சேர்ந்தவர்களுள் முதலானவன் யட்சனின் பிதா ஒருவனேயாம்.

இங்ஙனம் புத்தசங்கஞ்சார்ந்து காஷாயம் பெற்றுக்கொண்ட வர்த்தகன் தன்னைப்போல் தன்மகனுங் காஷாயந்தரித்து முகமலர்ந்திருப்பதைக்கண்டு குதூகலித்து மைந்தனைநோக்கி குழந்தாய்! உனது தாய் உன்னைக்காணாது வருந்தி பிரலாபித்திருக்கின்றாள் நீ வீடுசென்று உன் தாயாருக்குத் தேறுதற் சொல்லுமென்றான்.

இதைக்கேட்ட யட்சன் பகவனைப் பார்க்கவும் பகவன் வர்த்தகனை நோக்கி இப்போது தெளிந்த மனதுடனிருக்கும் யட்சன் மாதாவுடன் சென்று உலகப்பற்றை அடைந்து கலங்கிய மனத்தனாகுவானாயின் யாது செய்வீரென்றார்.

யட்சன்பிதா அதற்கு மாறுத்திரமாக மைந்தன் உம்மிடந் தங்கியிருத்தல் நலமெனக் கருதுவானாயின் தங்கியிருக்கட்டும். அவன் உலகப்பற்றை ஒழித்த புநிதனாகுவானென்றான்.

அக்கால் பகவன் ஒடுக்கத்தால் அமையுஞ் சுகத்தையும் விரிவாலுண்டாகுங் கேட்டையும் விளக்கி நீதியையும், நெறியையும், வாய்மையையும் போதித்து அவ்விருவரையும் ஆற்றலடையச் செய்யுங்கால் அவர்கள் குதூகலித்து பகவனை வணங்கி மாதவனே! தாமும் யட்சனும் மனைக்குவந்து புசிப்பெடுத்துக்கொண்டு எனதில்லாளுக்கும் நல்லறத்தை நவிலவேண்டுமென்று விண்ணப்பித்தான்.

அவனன்பின் மிகுதியை உணர்ந்த குருநாதன் எழுந்து காஷாயத்தால் உடல் முழுவதும் மூடிக்கொண்டு பிச்சாபாத்திரங் கையிலேந்தி யட்சன் வீட்டிற்குச் சென்றார்.

இவர்கள் வரவை அறிந்த யட்சனுடைய தாயும் அவன் மனைவியும் எதிர்நோக்கிவந்து பகவனை வணங்கி ஆசனமளித்து உட்காரச்செய்து வர்த்தகன் உத்திரவின்படி அன்னமளித்து அவர் புசித்து தீர்ந்தவுடன் மற்றுமுள்ள யாவரும் புசித்து அருகனைச்சுற்றி வணக்கவழியில் உட்கார்ந்து ஐயனே! உமது அளவுபடா சத்தியதன்மத்தை எங்களுக்கும் அளிக்கலாகாதோ என்று விண்ணப்பித்தார்கள்.

அதைக்கேட்ட விமலன் யட்சன் மாதாவைநோக்கி அம்மா! உம்முடைய கணவனும், மைந்தனுங் காஷாயம் பெற்றுக்கொண்டதுபோல் நீங்களும் பெற்றுக்கொள்ள விருப்பங்கொண்டீர்களோ என்றார்.

ஆம் ஐயனே என்றடிபணிந்தார்கள்.

அவ்வகை அடிபணிந்தோர் உள்ளங்களை உணர்ந்த வள்ளல் அவர்களைநோக்கி அம்மே! உங்கள் கோறிக்கை ஈடேறும். ஆயினும் ஆண்மெய்யிற்கும், பெண்மெயிற்கும் உள்ள பேதாபேதங்களை முதலாவது விளக்குகின்றேன். அதாவது :-

ஆண்மெய் என்பது சகலரையும் ஆண்டு இரட்சிக்கும் புருஷனென்னப் படுவான். பெண்மெய் என்பது சகலராலும் இச்சிக்கக்கூடிய இஸ்திரீ

என்னப்படுவாள். இவ்விருவருள் ஆண்மெய் வீரிய வான்ம வடிவமென்றும் பெண்மெய் பேதை யான்மவடிவமென்றுங் கூறப்படும்.

பேதை யான்ம தோற்றமுள்ள நீங்கள் சகலராலும் இச்சிக்கக்கூடிய வடிவுள்ளவர்களாதலின் நீங்கள் ஒவ்வொருவரும் நாணம், அச்சம், மடம், பயிர்ப்பென்னும் நான்கு கற்பின் தன்மத்தில் நிலைக்கவேண்டும். இந்நான்கு வகைக் கற்பின் தன்மத்தையே நல்லாடைகளாகவும், நல்லாபரணங்களாகவும், நன்மணமாகவும், நல்லுணவாகவும் எண்ணி கற்பின் நான்குபாத தன்மத்தில் நடக்கவேண்டும்.

அருங்கலைச்செப்பு

பெண்மெயுற்றோர் கற்பின் நான்கு தன்மபாதப்பத்து

பகவனுரைத்தப் பெண்ணறநான்கி, லகமுத நாணத்துறை
அச்சம் பயிர்ப்பு மடநாற் கற்பி, னிச்சை முதலென்றறி
அன்னிய புருடரங்கங்காண, லுன்னிய நாணநிலை
தனித்து நிற்றல் தனிவழிச்சேர, லினித்த அச்சத்திறை
புருடன் தன்னைப் போற்றி பயற்றல், அருள்சேரச்சத்தவம்
பெண்மெ ஒடுக்கிப் பேதைமெய் ஆற்றல், உண்மெய் பயிர்ப்பின் வழி
கணவன் வாக்கைக் கடவாதொழுகல், மணமெய் ஒடுக்கநிலை
ஈருடலொத்து ஒருமன வாழ்க்கை, பேருடல் ஒடுக்க பலன்
குற்றங் கடிந்து கொழுனனோடொழுகல், உற்றவொடுக்க நிலை
ஒக்க விரதமைந்துங் காக்கல், துக்க நிவர்த்தி வழி.

1 வது (நாணமென்னுங் கற்பின்தன்மம்) அன்னியபுருஷர் யாரைக்கண்ட போதிலும் நாணமுற்று தலை கவிழ்தலும், தனது முகத்தையும், தேகத்தையும் அன்னிய புருஷர்கள் கண்டார்களேயென்று வெட்கமடைதல் வேண்டும்.

2-வது (அச்சமாங் கற்பின் தன்மம்) தனது கணவனும் மைந்தர்களும் இல்லத்திலில்லாதபோது அச்சவாழ்க்கையில் இல்லறம் நடாத்துதலும், தனியே வெளியிற் போகுங்கால் ஓர் சிறுவனையேனும் கையாதரவுகொண்டு செல்லலும், அன்னிய புருஷர் முகங்களை நோக்குதற்கு பயப்படுதலும், தன் கணவனே தன்னை ஆண்டுரட்சிக்கும் ஆண்டவனாதலின் அவனுக்கு வேண்டிய பதார்த்தத்தை வட்டித்தலும், வேணபுசிப்பை அளித்தலும், ஆன நித்திறை படுத்தலுமாகிய செயல்களில் அவன் மனங்கோணாது திருப்த்தியுறுமளவும் அச்சத்தில் நின்று ஆனந்திக்கவேண்டும்.

3-வது (பயிர்ப்பென்னுங் கற்பின் தன்மம்) அன்னிய புருஷரைக் காணுமிடத்து வெறுப்படைதலும், தனக்குக் கிடைத்துள்ள ஆடைகளில் திருப்தியுற்று அன்னியர் சிரேஷ்டவாடைகளில் வெறுப்படைதலும், தனக்குள்ள ஆபரணங்களில் போதுமென்று திருப்த்தியுற்று அன்னியர் சிரேஷ்ட ஆபரணங்களில் வெறுப்படைதலும், தன் கணவனால் கிடைத்துவரும் புசிப்பில் போதுமான திருப்த்தியுற்று அன்னியர் சிரேஷ்ட புசிப்பில் வெறுப்படைதலு மாகிய செயலுற்று தனக்குக் கிடைத்தவரையில் திருப்த்தியடைதல் வேண்டும்.

4-வது (மடமென்னுங் கற்பின் தன்மம்), தனது கணவன்வாக்குக்கு மீறாது நடத்தல் முதலொடுக்கம். பெரியோர்களிடம் அடங்கி வார்த்தை பேசதல் இரண்டாமொடுக்கம். கணவனுக்கு எதிர்மொழி பேசாதிருத்தல் முன்றாவது ஒடுக்கம். கணவனிடம் எக்காலும் மிருதுவான வார்த்தை பேசுதல் நான்காம் ஒடுக்கம். அன்னிய புருஷர்கள் தன்னைப் பார்க்காமல் ஒடுக்கிக்கொள்ளுதல் ஐந்தாம் ஒடுக்கம். அன்னியர் மெச்சும் ஆடையாபரணங்களை அகற்றி தன்கணவன் கண்குளிரும் அலங்கிருதத்தில் நிற்றல் ஆறாம் ஒடுக்கம். தங்கணவன் தேகமும் தன்தேகமும் வேறாகத் தோன்றினும் அன்பும் மனமும் ஒன்றாய் ஒத்துவாழ்தல் ஏழாம் ஒடுக்கம். கணவனுக்குப் பின் புசித்தலும், கணவனுடன் புசித்தலும் எட்டாம் ஒடுக்கம். கணவனுக்குப்பின் சயனித்தலும், உடன் சயனித்தலும் ஒன்பதாம் ஒடுக்கம். பஞ்சசீலத்தின் ஒழுக்க விரதங்காத்தல் பத்தாம் ஒடுக்கம் என்னப்படும்.

நிகழ்காலத்திரங்கல்

எண்குணத்தானோது மேதாநாற் கற்புநிலை / பெண்மெய் அருந்ததிபாற் பெற்றது அதிசயமே.
பெற்றவர் பாற் பெற்றார் பேறுநாற் கற்புநிலை / உற்றவொளிவடமீனோம்பல் அதிசயமெ.
ஓம்புங்கடவுளுற்றக் கணவனென்றே / தேம்பாற் பணிமெய்ச் செய்யல் அதிசயமே.

இத்தகையக்கற்பின் நான்கு தன்மவேலிக்குள் அடங்கி நிற்பீர்களாயின் உலகில் உங்களைப்போன்ற இஸ்திரீகள் யாவரும் உங்கள் பொய்யா விரதத்திற்குப் போற்றி செய்வார்கள். கொல்லா விரதத்தைக் கொண்டாடு வார்கள். களவா விரதத்தில் கண்களிப்பார்கள். மயங்காவிரதத்தில் மகிழ்ச்சியடைவார்கள். அன்னியர் முகம்பாரா விரதத்தில் ஆனந்தமடைவார்கள்.

இத்துடன் கணவன் சொற் கடவா காட்சியையும், மிருதுவார்த்தைகளின் மீட்சியையும், மனமொன்றாகக் கணவனுடன் ஒத்துவாழும் மாட்சியையுங் காண்பரேல் உலகத்தில் தோன்றியுள்ள இஸ்திரீகளில் இவர்களே உத்தமி களென்றும், இவர்களே சுகசீவிகளென்றும், இவர்களே பெண்மணிகளில் கண்மணிகளென்றும் போற்றி ஜெயபோற்றி செய்வார்கள்.

நீங்களும் உங்களுக்குள்ள கற்பின் விரதகாப்பிலும் சீலகாப்பிலுந் தலைவனுந் தலைவியும் மனமொத்து வாழும் ஒருமெயிலும் முத்தி மோட்சமென்னும் நிர்வாணசுகம் அடைவீர்களென்றார்.

அருகன் அருள்மொழியைக்கேட்ட மங்கை மடந்தை பேதை பெதும்பை என்னும் இஸ்திரீகள் யாவரும் பரமானந்தமுற்று, ஐயனே! என்றுமழியா மெய்யனே! உமது சத்தியதன்மம் மாட்சி பெற்றது. உமதீகையோ அளவு படாதது. உமதுருவோ ஓரன்பாயது. உமது மிருதுவாகிய வாக்கோ ஓரமுதாயது. உமது சாந்தமோ எம்போலியர்க்கு நிழலாயது. பரிசுத்தமாய புத்தரே! எம்முடைய ஆசான் ஒழுங்கற்றிருக்கும் நீதியை ஒழுங்கடையச்செய்கின்றார். மறைந்திருக்கும் ஒழுக்கங்களை வெளிப்படுத்துகின்றார். திகைதப்பிப்போன மிதப்பர்களுக்கு வழி காட்டுகின்றார். அஞ்ஞான இருளிலிருக்கும் அறிவீனர்களுக்கு மெய்ஞ் ஞான வெளிச்சத்தைக் காட்டுகின்றார்.

இத்தகைய அருளறமூட்டும் அருகனாம் புத்தரிடம் அடைக்கலம். அவர் தெரியச்செய்த சத்தியதன்மத்தில் அடைக்கலம். அவர் ஸ்தாபித்த சத்திய சங்கத்தில் அடைக்கலமென்று வணங்கி நாங்கள் சீவித்திருக்கும் வரையில் தங்கள் சிஷ்யர்களாக அங்கீகரிக்க வேண்டுமென்று வணங்கிக்கொண்டார்கள்.

இல்லறத்தைச்சேர்ந்த இஸ்திரீகளில் அவலோகிதராகும் புத்தபிரானிடங் கற்பினறங்கேட்டு பிக்குணி சங்கத்திற் சேர்ந்தவர்களில் ஆதியாகச் சிரமயிர் கழித்து காஷாயம் பெற்றுக்கொண்டவர்கள் யட்சனுடையத் தாயும் அவன் மனைவியுமேயாம்.

வாரணாசியில் மிக்க தனவந்தர் குடும்பங்களில் யட்சனுடைய சிநேகிதர் களாகும் விபலன், சுவாகு, புண்ணிய சித்தன், கவாம்பி என்னும் நால்வரிருந்தார்கள்.

அவர்கள் நால்வரும் யட்சனுடைய சங்கதிகளைக் கேள்வியுற்று மிக்க ஆனந்தமுடையவர்களாய் நமது யட்சன் விவேக விருத்தியிலும் வியாபார விருத்தியிலுந் தேர்ந்தவன். ஈதன்றி சாந்தத்திலும் பகுத்தறிவிலும் மிகுத்தவன்

இத்தகைய குணநிறைந்த யட்சன் சிரமயிர் கழித்து காஷாயம் பெற்று பிச்சா பாத்திரங் கையில் ஏந்திக்கொண்டு புத்த சங்கத்தில் சேர்ந்து விட்டானென்றால் அஃது சாமான்ய சங்கமாயிராது, சிரேஷ்ட சங்கமாகவே இருத்தல் வேண்டுமென்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு யட்சனிடஞ் சென்றார்கள்:

யட்சனும் பகவனை வணங்கி எங்களையனே! இந்நால்வரும் எனதன்பு மிகுத்த நேயர்கள். இவர்களுக்குத் தங்கள் அளவுபடா தன்மத்தைப் போதித்து புனிதர்களாக விளங்கச்செய்ய வேண்டுமென்று வருந்தினான்.

அவனன்பையும், அவனது நேயர்கள் நால்வரின் விசாரிணை மிகுத்த அவாவையும் உணர்ந்த அருகன் அவர்களை அருகில் உட்காரும்படிச் செய்து சிறுவர்களே! உங்கள் தாய்தந்தையர் போதுமான முதலளித்து வியாபாரத்தைப் பெருக்குங்கோள் என்று உத்திரவளித்திருக்க நீங்கள் அவைகளை விடுத்து என்னை வந்தடுத்தக் காரணம் யாதென்று உசாவினார்.

அதைக்கேட்ட சிறுவர்கள் தருமனை வணங்கி மெய்யனே! எங்கள் தந்தை அளித்துள்ள முதலை கள்ளர்களும் வஞ்சகரும் வழிப்போக்கரும் அபகரித்துக்கொள்ளுவதை அறிந்திருக்கின்றோம்.

ஆனால் தாங்களளிக்கும் சத்திய தன்ம முதலைக் கள்ளர்கள் அபகரிக்கவாவது, வஞ்சினர்கள் பொஞ்சிக்கவாவது, வழிப்போக்கர் எடுக்கவாவது முடியாதென்று கேழ்விப்பட்டு அந்த சத்தியதன்ம முதலைப் பெற வேண்டி தங்களை சரணடைந்தோம். தாங்களும் அருள்சுரந்து சத்திய தன்ம அமுதாகும் முதலை ஊட்டி ஆதரிக்க வேண்டுமென்றார்கள்.

இவர்களது அதி தீவிரத்தையும் அன்பின் மிகுதியையுங் கண்ட அருகன் சிறுவர்களை நோக்கி நீங்கள் நால்வரும் ஒவ்வோர் மனைவியை அடைந்து மக்களை ஈன்று உலக விருத்தி செய்து சுகமடையவேண்டிய திருக்க என்னை நாடி யாது சுகம்பெற வந்தீர்களென்றார்.

ஒப்பிலா அப்பனே! உலகத்தில் தோன்றியுள்ள சருவசீவர்களும் பொருளைச் சேர்ப்பதும் அதன் போக்கால் வருந்துவதும் பெண்களைச் சேர்ப்பதும் அதன் மாறுதலால் வருந்துவதும் பிள்ளைகளைப் பெறுவதும் அதன் பிணியின் உபத்திரவங்களால் வருந்துவதுமாகியச் செயல்களைக் கேட்டும் இருக்கின்றோம், கண்டும் இருக்கின்றோம். ஆதலின் அவர்களைப்போல் சதா துக்கநிலை சாராமல் தங்களைப்போல் சதா சுகநிலைப்பெற வந்தோம் என்றார்கள்.

அதையுணர்ந்த அருகன் புந்நகைக்கொண்டு சிறுவர்களை நோக்கி உலகசீவர்கட்படும் சதா துக்கத்தை உங்கள் கண்களால் பார்ப்பதுமன்றி கேட்டுமிருக்கின்றீர்கள்.

ஆயினும் ததாகதர் சதானந்தத்திலிருப்பதை எவ்வகையால் அறிந்துக் கொண்டீர்களென்றார்.

சிறுவர்கள் ஜினனை வணங்கி சினேந்திரா! ஈதுவேண்டும் வேண்டா மென்னும் புசிப்பினாலும் இவ்வுடை வேண்டும் வேண்டாமென்னும் போர்வையினாலும் இவ்விடம் வேண்டும் வேண்டாமென்னும் நிலையினாலும் உமது முகத்தில் எக்காலுங் காணும் ஆனந்த தேஜசினாலும் நாளுக்குநாள் போதனா சக்த்தியால் மிகுத்துவரும் இனிதான வாக்கினாலும் இரவும் பகலும் நித்திறையற்று சதா விழிப்பிற் சுகித்திருக்குஞ்சுகத்தினாலும் நீவிரெக்காலும் சதானந்தத்தில் சுகித்திருக்கின்றீரென்று கண்டோமென்றார்கள்.

அதைக்கேட்ட பகவன் சிறுவர்களைநோக்கி அத்தகைய சதானந்தத்தை விரும்பும் ஒவ்வொருவனும் புத்ததரும சங்கத்தைச் சார்ந்து அறநூல் விசாரிணைப் புரிந்து அன்பைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்றார்.

அதற்கு சிறுவர்கள் பகவனைநோக்கி ஐயனே! தாங்கள் அளித்துள்ள அறநூலால் ஒழுக்கங்களைப் பெருக்கிக்கொண்டபோதிலும் எங்களுக்குள்ள அன்பை எவ்வகையாற் பெருக்கிக்கொள்ளுவோமென்றார்கள்.

பகவன் நால்வர்களையும் நோக்கி சிறுவர்களே! நீங்கள் நால்வருங் குடும்பத்திலுள்ள குழந்தைகள் முதல் பெரியோர்களீறாக அன்புபாராட்டி வந்தீர்களா இல்லையா. யட்சனைத் தேடிவந்தது அன்பு பாராட்டியா இல்லையா என்றார்.

சிறியோர்கள் மேலோனை வணங்கி சினேகித அன்பின் மிகுதியால் அவனைத் தேடிவந்தோமென்றார்கள். சிறுவர்களே! சினேகிதமெ ன்பது யாதெனில்:- ஒருவனை நேசித்தபோது அவனுக்குள்ள இடுக்கங்களைத் தனக்கு வந்த இடுக்கங்களைப்போல் கருதி தீர்த்தலும், அவனுக்குள்ள பசியின் உபத்திரவங்களை தன் உபத்திரவம்போல் கருதி ஆற்றலும், தன்மனையில் யாதொரு கோபச்செயலிலிருந்தபோதினும் அவனைக் கண்டவுடன் சினமகற்றி இதம் பாராட்டுதலுமாகியச் செயல்களையே அன்பென்றும் சிநயிதமென்றுங் கூறப்படும்.

இத்தகைய குணநிலையை மகட பாஷையில் சிவமென்றும், சகட பாஷையில் இதமென்றும், திராவிட பாஷையில் அன்பென்றும் வழங்கப்பெறும். அன்பின் மிகுதியால் சருவசீவர்களின் குற்றங்களையும் பொறுத்து ஆதரிக்குங் குணநிலைக்கு மகடபாஷையில் பிரமமென்றும், சகடபாஷையில் சாந்தமென்றும், திராவிட பாஷையில் தண்மையென்றுங் கூறப்படும். அன்பின் மிகுதியால் சருவசீவப்பிராணிகளுக்கும் புசிப்பூட்டி நல்வழி காட்டுங் குண

நிலைக்கு மகட பாஷையில் ஈசனென்றும், சகடபாஷையில் தன்மமென்றும், திராவிட பாஷையில் ஈகையென்றுங் கூறப்படுமென்று விளக்கினார்.

இதைக்கேட்ட சிறுவர்கள் பகவனை வணங்கி தேவரீர் தாம் கூற வந்த பிரமமென்னுந் தண்மெயும், சிவமென்னும் அன்பும், ஈசனென்னும் ஈகையும் சருவ மக்களிடத்தில் உண்டோவென்றார்கள். சிறுவர்களின் புன்மொழிக் கேட்ட பகவன் ஆனந்தித்து சாந்தம், ஈகை, அன்பு என்னும் முச்செயல்களும் சருவமக்களிடம் மட்டிலும் உள்ளதல்ல. உலகத்தில் தோன்றியுள்ள சருவசீவராசிகளிடத்திலும் நிறைந்திருக்கின்றது. அன்பென்னும் ஓர் செயல் சருவசீவராசிகளிடத்தும் நிறைந்துள்ளபடியால் பட்சிகள் தன்குஞ்சுகளையும், மிருகங்கள் தன்குட்டிகளையும் வேளைக்குவேளை புசிப்பூட்டி பாதுகாத்து விருத்திசெய்துவருகின்றது. சருவசீவராசிகளிடத்தும் அன்பென்னுஞ் செயல் அகன்றிருக்குமாயின் பட்சிகளின் குஞ்சுகள் பாதுகாப்பற்றுப்போம். மிருகங்களின் குட்டிகள் மாண்டு மறைந்துபோம் மக்களின் மகவும் மயாணபூமிக்கிறையாவர்.

அங்ஙனம் அகலாது சருவசீவராசிகளுக்குள்ளுஞ் சிவமென்னும் அன்பும், பிரமமென்னுஞ் சாந்தமும், ஈசனென்னும் ஈகையும் நிறைந்துள்ளபடியால் அதனதன் கூட்டத்தை பாதுகாத்து ஒன்றுகூடி விருத்திசெய்து வருகின்றது. ஆனால் பட்சிகள் அதனதன் குஞ்சுகளை மட்டுலும் பாதுகாத்து விருத்தி செய்யும். மக்களென்னும் மநுக்களோ பட்சிகளைப்போலுந் தலைகுனிந்து தன்னினத்தில் அன்பு செலுத்துவதுபோலிராது தலை நிமிர்ந்து சருவசீவர் களிடத்தும் அன்புபாராட்டி ஆதரிக்கவேண்டியவர்களாயிருக்கின்றார்கள்.

இவ்வகைத் தலை நிமிர்ந்து மக்களாகத் தோன்றினோர் சருவசீவர்களின் மீதும் அன்பு பாராட்டாது தன்மனைவி மகவுமீதுமட்டும் அன்பு பாராட்டு வரேல் தலைநிமிர்ந்த மக்களென்று கருதாது தலைநிமிர்ந்த நரகரென்று கூறுவர். நீங்கள் நால்வரோ தலைகுனிந்த வானரரினின்று நிமிர்ந்து நரரென்னும் தோற்றமுண்டாகி விவேகமிகுதியால் மக்களென்னும் பெயர் பெற்றுள்ளபடியால் விசாரிணையினின்று உங்களுக்குள்ள அன்பையும், சாந்தத்தையும், ஈகையையும் பெருக்கிக்கொள்ளுவீர்களாயின் இரவு பகலற்ற தேவர்களென்னும் ஏழாவது தோற்றமுண்டாகி சதா சுகமும் நித்தியானந்தமும் பெற்று வாழ்வீர்கள். அங்ஙனமின்றி இராகத்துவேஷ மோகங்களென்னுங் காம வெகுளி மயக்கங்களைப் பெருக்கிக்கொண்டு நரகர் நிலைகளை அடைவீரேல், சதா துக்கத்தில் மூழ்கி மாறாப்பிறவியில் சுழன்று திரிகுவீர்களென்றார்.

சிறுவர்கள் நால்வரும் எழுந்துநின்று பகவனைநோக்கி போதிசத்துவா! புண்ணியநாதா! பொய்தீரொழுக்கா! தாமோதிய அருள்வாக்யங்களில் அன்பு, ஈகை, சாந்தம் இம்மூன்றும் நிறைந்தநிலையில் சுகமுண்டென்று உணர்ந்தோம். காமம், வெகுளி, மயக்கம் இம்மூன்றும் நிறைந்த நிலையில் துக்கம் உண்டென்று உணர்ந்தோம். ஆயினும் இத்தேகம் உள்ளளவும் அத்துக்கத்தை அநுபவிப்பது நிட்சயமாகும். இத்தேகம் மறைந்தபின் இம்மெய்யில் செய்த தீவினைகளை மறுமெயில் அநுபவிப்பதற்கு மாறாப்பிறவியில் சுழன்று திரிவானென்பதில் மனங் காரணமா தேகங்கணமா என்பது விளங்காததினால் அதை விளக்கி ஆதரிக்க வேண்டுமென்றடிபணிந்தார்கள்.

கருணாகரக்கடவுள் நால்வரையும் நோக்கி சிறுவர்களே! தேகமில்லாமல் மனமும் மனமில்லாமல் புருஷனென்னும் ஆன்மாவும் இருப்பதைக் கண்டீர்களோ என்றார். சிறுவர்கள் செல்வனை வணங்கி, மெய்யனே ! தேகமில்லாவிடத்து மனதை அறியோம். மனமும் தேகமும் பொருந்திய செயலில்லாவிடத்து புருஷனென்னும் ஆன்மாவையும் அறியோமென்றார்கள்.

அநாத்மனாகும் அறிவன் நால்வரைநோக்கி சிறுவர்களே! சருவ தோற்றங்களும் அநித்தியம், சருவ ஆன்மாக்களும் அநாத்மம் என்பதே மோட்சமென்னும் நிருவாணத்திற்கு ஏதுவாகும் சருவ தோற்றங்களும் நித்தியம், சருவ ஆன்மாக்களும் நித்தியமென்பதே நரகமென்னும் பிறவிக்கேதுவாகும். எழு நரகமென்னும் எழுபிறவிகளுக்கு ஏதுக்கள் யாதென்பீரேல் காம, வெகுளி,

மயக்கங்களால் உண்டாகும் பற்றுக்களேயாம். அக்காம வெகுளி மயக்கங்களின் செயல்கள் அவனவனுக்குள் தங்கி மாறாபிறவியிற் சுழன்று மீண்டும் அச்செயலைப் பற்றுவதை அவனவன் தூக்கத்திலும் விழிப்பிலும் உண்டாயதைக் காணலாம்.

நாயனார் திருக்குறள்

பற்றற்றக் கண்ணே பிறப்பறுக்கு, / மற்று நிலையாமெய்க் காட்டிவிடும்.

இடைக்காட்டு சித்தர்

பற்றே பிறப்புண்டாக்குந் தாண்டவக்கோனே
அதை பற்றாதறுத்துவிடு தாண்டவக்கோனே.

மணிமேகலை

சீலந்தாங்கி ஆனந்த நிலைதின்று, மேலென வகுத்த ஒருமூன்று திறத்துத்,
தேவரு மக்களும் பிரமருமாகி, மேவிய மகிழ்ச்சி வினைப்பயன் னுகர்வர்.

ஒருச்செயலை செய்திருந்தவன் தூங்கி விழித்தவுடன் விட்டச்செயலை தொடர்ந்து செய்யத்தேடுவான். அதுபோல் மரணமடைந்தானென்பதும் தூங்கினான் என்பதும் ஒருபொருளாதலின் விட்டபற்றைத் தொடர்ந்து பற்றலுக்கு தேகத்தில் தோய்ந்த மனமும், மனதில் தோய்ந்த பற்றுதலும் பிறவிக்கு ஏதுவாதலின் பற்றுதலுக்கு ஈடாய் மனம் விரிந்து தேகந்தோன்றி விட்டபற்றைத் தொடர்ந்து செய்வது உள்ளத்தியல்பாம்.

என பகவன் போதித்துவருங்கால் நால்வருமெழுந்து காசிநாதனை வணங்கி கருணையெங்கடலே! கற்பகத்தருவே! கமலநாயகனே! அவாவின் மிகுதியால் தாவிநிற்கும் பற்றுக்களே பிறவிக்கு மூலமென்றும், மறுமெய்யைத் தோற்றவைக்கும் வித்தென்றும் விளங்கினோமாயினும் நித்தியானந்தமென்றும் சதா சுகமென்றுங் கூறும் அநுபவநிலையில் தேகம் உள்ளவரையிலும் அச்சுகத்தை அநுபவிப்பதா தேகமற்றபோதும் அச்சுகத்தை அநுபவிப்பதா அதனைத் தேற விளக்கவேண்டுமென்றார்கள். சங்க தருமனென்னுங் கணநாயகன் நால்வரையும் நோக்கி சிறுவர்களே! (ஆரோக்கிய) பரமலாபா, (சந்துட்டி) பரமானந்தா, (விசுவாச) பரம ஞாதி, (நிப்பானங்) பரமாங் சுகம் என்பவற்றுள் ஒரு மனிதன் நோயற்ற வாழ்க்கையிலிருப்பானாயின் அவனை என்னென்று கருதுவீர்கள். ஒருவன் எக்காலும் சந்தோஷத்திலிருப்பானாயின் அவனை என்னென்று கருதுவீர்கள். ஒருவன் தன்குடும்பத்தில் யாதாமொரு கவலையும் இல்லாமல் வாழ்வானாயின் அவனை என்னென்று கருதுவீர்கள். ஒருவன் தன்னதென்னும் பற்றற்று நானென்னும் அகம்பாவமற்று இஃது வேண்டும் வேண்டாமென்னும் விருப்புவெறுப்பற்று தூங்கல் விழிப்பென்னும் இரவுபகலற்று சுழிப்பத்தி, ஜாக்கிரமென்னும் அசதியற்று இன்று நாளை என்னும் மறதியற்று பாலன் விருத்தனென்னும் பருவமற்று சதா விழிப்பிலும், சதானந்தத்திலும், சதா போதத்திலும், சதா நீதியிலும், சதா சாந்தத்திலும், சதா ஈகையிலும், சதா அன்பிலும் இருப்பானாயின் அவனை என்னென்று கருதுவீர்களென்றார்.

அதனை வினவிய சிறுவர்கள் ஆனந்தமுங் குதூகலமுங் கொண்டு ஆதிதேவனை வணங்கி ஓதாமல் உணர்ந்த தூயனே! ஒப்பிலா மெய்யனே! ஒரு மனிதன் உலகத்தில் வியாதியில்லாமல் வாழ்வதரிது. அவ்வகை வியாதியில்லாமல் வாழ்வானாயின் அழியும் லாபத்தைத் திரளாக அடைபவனைப்பார்க்கினும் அவனே அழியா லாபத்தை அடைந்தவனாவன்.

ஒரு மனிதன் எப்போதும் சந்தோஷமாயிருப்பதரிது. அவ்வகை சந்தோஷத்திலிருப்பானாயின் அவனே அழியா ஆனந்தமுடையவனாவான். ஒரு மனிதன் குடும்பத்தில் எக்காலம் விசுவாசம் வைப்பதரிது. அக்குடும்பத்தோருந் தானும் ஒருவருக்கொருவர் விசுவாசமுற்று வாழ்வார்களாயின் அவனே அக்குடும்பத்திற் சிரேஷ்டனும் ஞாதியுடைய வனுமாவன். ஒருமனிதன் தன்னதென்னும் பற்றறுத்தல் அரிது. நானென்னும் அகம்பாவமற்றல் அரிது. வேண்டும் வேண்டாமென்னும் விருப்பு, வெறுப்பற்றல் அரிது. தூங்கலற்றல் அரிது. சதா விழிப்பில் இருத்தலரிது.

சுழுப்த்தி என்னும் சோம்பலறுத்தல் அரிது, துற்செயல் அணுகாமல் ஜாக்கிரதையில் நிற்றலரிது. மறவாநிலைப்பெற்று நிற்றலரிது. பால விருத்தமற்று எக்காலுங் குமரனாகக் காண்டலரிது. சதானந்தத்தில் இருப்பதரிது. சதா போதத்தில் இருப்பதரிது. சதா நீதியிலிருப்பதரிது. சதாவன்பிலிருப்பதுமரிது.

இத்தகையச் செயல்களையுங் குணங்களையும் யாவரிடத்துங் கண்டறியோம். ஆயினும் உலகத்தில் சிரேஷ்டமென்னும் பரமலாபத்தைக் கண்டடைந்தவர் தாங்களென்றே காண்கின்றோம். உலகத்தில் சிரேஷ்ட ஆனந்தமாகும் பரமானந்தத்தைக் கண்டடைந்தவர் தாங்களென்றே அறிகிறோம்.

ஓர் குடும்பத் தலைவருள் சிரேஷ்ட நீதியதிபதியைவிட உலகத்திற்குத் தலைவராய் நீதிபோதராய் விளங்குபவர் தாங்களென்றே காண்கின்றோம். ஆதலின் சதா ஈகை அமைந்த ஆதி ஈசரும் நீரே, சதானந்தமுற்ற ஆதிபரனும் நீரே, சதா அன்புமிகுத்த ஆதிசிவனும் நீரே, சதானந்தமுற்ற ஆதிபரனும் நீரே, சதா அன்பு மிகுத்த ஆதிசிவனும் நீரே, சதா சாந்தமிகுத்த சுயப்பிரமமும் நீரே, சதா நன்மெய் பெற்ற ஆதியங் கடவுளும் நீரே ஆதலின் எங்கள் அநித்திய நிதிகளை மாற்றி நித்தியமாம் பதுமநிதியாகும் உம்மெயும், தன்மநிதியாகும் அறத்தையும், சங்கநிதியாகும் கூட்டத்தையும் நாடினோம்.

எங்களையுந் தங்கள் சங்கத்திற் சேர்த்து தங்கள் அளவுபடா சத்தியதன்மத்தைப் போதித்து தேகமுள்ளபோதே சதானந்தத்தை சாதித்து நிருவாண சுகத்தை அடையும் வழிக்கு ஆளாக்கவேண்டுமென்றார்கள்.

அவ்வாக்கியங்களைக் கேட்ட பகவன் புந்நகைக்கொண்டு சிறுவர்களே! உங்களை ஆளாக்குவதற்குத் ததாகதன் ஆக்குவோனல்லன். நீங்களே அறிந்து தீங்கான எண்ணங்களை அகற்றிக்கொண்டேவரவும், நல்ல எண்ணங்களை விருத்திசெய்துக்கொண்டே வரவும், சிவர்களின்மீதுள்ள அன்பைப் பெருக்கிக்கொண்டே வரவும், சீவ ஹிம்சைகளை அகற்றிக்கொண்டே வரவும், தன்ம சிந்தையைப் பெருக்கிக்கொண்டே வரவும், உலோபசிந்தையை அகற்றிக் கொண்டே வரவும், மயக்கத்தை உண்டு செய்யும் வஸ்துக்களை எக்காலுங் சேரவிடாமல் அகற்றிக்கொண்டே வரவுமாகிய விழிப்பிலிருந்து மனக்களங்கங் களை அகற்றி சுத்த இதயமுண்டாகினோமா என்று உங்களை நீங்களே அறிந்து உண்மெய்யை உணர்ந்துக்கொள்ளுவீர்களாயின் உங்களிடைவிடா விசாரிணையும், திடமுயற்சியுமே உங்களை ஈடேற்றி தேகந் தோன்றினும் அழியினும் சத்தியதன்மமாம் உண்மெய் என்றுமழியாது சதானந்தத்திலும் நித்திய சுகத்திலும் இருப்பீர்களென்றார்.

நால்வரும் சிரமுடி அகற்றி காஷாயம் பெற்று பிச்சாபாத்திரங் கையிலேந்தி சங்கத்திற் சேர்ந்தவுடன் காசி விசுவேசன் வாரணாசியை விட்டு நீங்கி மற்றுந் தேசங்களில் தன்ம சங்கங்களை நாட்டவேண்டுமென்று செல்லுங்கால் யட்சனுடன் நால்வரும் பின்சென்று சங்க அறனை சிலதூரந்தொடர்ந்து ஓரிடத்தினின்று தேவரீர் நாங்கள் முன்ஜெநநத்தில் என்ன ஜெநநமாக இருந் திருப்போமென்று எவ்வகையில் அறிந்துக்கொள்ளக்கூடும் என்றார்கள்.

சங்கறர் ஐவர்களையும் நோக்கி சிறுவர்களே! நாமனைவரும் நேற்று வாசஞ்செய்திருந்த வியாரமாகிய கட்டிடந் தெரிகிறதா என்றார். தேவரீர் நாம் சில தோப்புகளையும் வனங்களையுங் கடந்து வந்துவிட்டபடியால் அக்கட்டிடந் தோன்றவில்லை என்றார்கள். சிறுவர்களே! நாமிப்போது வாசஞ்செய்ததும் தற்காலம் விட்டுவந்ததுமாகியக் கட்டிடம் சொற்ப நேரத்திலுந் தூரத்திலும் மறைந்து தெரியாமற்போமாயின், நான்கு பூதங்களால் அமைந்த தேகமானது ஒன்று குறைந்தும், ஒன்று நிறைந்தும் நசிந்து அந்தந்த பூதங்களுடன் கலந்தும் பற்றியப் பற்றுக்கள்மட்டுந் தனித்துரைந்தும் நூதன பூதத்தால் பரந்தும் மறுஜெநந தோற்றமுண்டாயபோது பாலதானச் செயலால் முன் ஜெநந விட்டகுறை ஈதென்று மற்றோர் விவேகிகள் அறிவரன்றி பற்றியச் செயலை விட்டவன் அறியும் உணர்ச்சிகளற்றுப்போம்.

அதினால் வாலவயது பதினாறு கடந்து குமரபருவம் அடைந்துள்ள இச் செநநத்தில் மரணத்தில் மறைந்தும், மாதுரு கருப்பத்தில் மறைந்தும்,

பாலதானத்தில் மறைந்தும் நிற்கும் முன்ஜெநநத்தைத் திரும்பிப்பார்ப்பதானால் அனந்தச்சுழலும் அரியப் படலங்களும் மறைந்திருக்கின்றது. அப்படலங்களாம் இராகத்துவேஷ மோகத்திறைகளை நீக்கி இதைய சுத்தமாம் சுழுப்த்தியற்ற சுப்ரப்பளிங்கினின்று பார்ப்பீர்களானால் முன்ஜெநந தோற்றமும் அதின் கன்மப்பற்றுக்களாஞ் செயலும் கன்மப் பற்றுக்களே உருவெடுத்தாளும் முன்செய்வினையின் பகுதியும் தெள்ளற விளங்கும். அங்ஙனமின்றி ஓர் மயிரையெடுத்து இரவில் பார்ப்பவனுக்குத் தெரியாததுபோல் காம, வெகுளி, மயக்கமாம் அஞ்ஞான இருளிலிருந்து முன்ஜெநநத்தை நோக்குதல் தன் வினைப்பயனால் விட்டகுறை தொடர்ச்சி தனக்குளிருந்தும் அஃது விளங்குவதரிதேயாம்.

ஆதலின் நீங்கள் ஒவ்வொருவரும் முன்ஜெநநம் யாது பின்ஜெநநம் ஏதென்று உசாவி வீண்காலங்கழிக்காது காமத்தாலுண்டாகுங் கேடுகளை நோக்குதலும், அவைகளை நாளுக்குநாள் நீக்குதலும், கோபத்தாலுண்டாகுங் கேடுகளை நோக்குதலும், அவைகளை நாளுக்குநாள் நீக்குதலும் மயக்கத்தாலுண்டாகுங் கேடுகளை விழித்து நோக்குதலும் அவற்றை நாளுக்குநாள் நீக்குதலுமாகிய நற்கடைபிடியினின்று இதயத்தை சுத்தி செய்தலென்னும் மனக்களங்கங்களை அகற்றி விடுவீர்களாயின் செல்காலத் தோற்றம் நிகழ்காலத்தோற்றம் வருங்காலத் தோற்றம் யாவும் உங்களுக் குளுணர்ந்து உதயசூரியன்போல் பிரகாசிப்பீர்களென்றோதி அறிவு பெருகு கவென வாழ்த்தி ஐவர்களையும் வாரணாசி வியாரத்திற்கு அனுப்பிவிட்டு ஓர் ஆரணத்தின் மத்தியில் நுழைந்துவிட்டார்.

வீரசோழியம்

அருள் வீற்றிருந்த திருநிழற்போதி / முழுதுணர்முநிவனிற்பரவுதுந் தொழுதக
ஒருமனமெய்தி இருவினைப் பிணிவிட / முப்பகைகடந்து நால்வகை பொருளுணர்ந்
தோங்குநீருலகிடையாவரு / நீங்காவின்பம் ஒடுநீடுவாழ்கெனவே.

9. மானைக்கார்த்து மழுவேந்திய காதை

ஆரணமத்தியில் நுழைந்த அவலோகிதர் செல்லும் வழியில் ஓர் புலியானது மானைப் பற்றிக்கொள்ள அது பதருவதைக் கண்ட கருணாகரன் அருகிற் சென்று மானைவிடுத்து தன்னுடலைப் புலிக்கு தத்தந் செய்தார்.

புலியுடலுடன் பொய்யா மொழியோன் உடல் பொருந்தியவுடன் அப்புலிக்கும் கருணைதோன்றி இருவரையும் விட்டுப்போய் விட்டது. கருணாகரக்கடவுள் மானுடலில் வடியும் உதிரத்தைத் துடைத்தும் காயங்களைப் பொருத்தியும் விட்டு நடக்குங்கால் அம்மான் கன்று மாதவனைப் பின் தொடர்ந்தே சென்றது. அவரும் அதன் அன்பையும் பயத்தையும் அறிந்து யாதொன்றும் பேசாமற் சென்றார்.

வீரசோழியம்

சுற்புடை மாரனைக் காய் கினந்தவிர்த்தனை,
பொற்புடைநாகர் தந்துயரம்போக்கினை,
மீனுருவாகி மெய்ம்மையிற் படிந்தனை,
மானுருகார்த்து வான் குணமியற்றினை.
உலகுமிக மனந்தளர்வுற், உயர் நெறியோர் நெறியழுங்கப்,
புலநசைப்ப பெருஞ்சினத்து, புலிக்குடம்பு கொடுத்தனையே.
தீதியில் புலியது பசிகெடுவகைநின.
திருவுருவருளிய திறமுறுபெருமையை.

அருங்கலைச்செப்பு

மன்னுயிர் காக்கத் தன்னுயிரளித்தல், விண்ணுயர் வேந்தன்றிறம்.

நிகழ்காலத்திரங்கல்

மெலிந்திரைந்த மான்கன்றை வேதியனார் கார்த்து,
புலிக்குடம் பளித்தாண்ட போத அதிசயமே.

மான் கன்று மாதவன் செல்லுங்கால் செல்லுதலும், அவர் நிற்குங்கால் மேயுதலுமாகியச் செயலுற்று அவர் பிச்சாபாத்திரமேந்தி அன்னத்திற்கு செல்லுங்கால் கூடவே நடத்தலும், அவர் யோகசயம் உறுங்கால் கூடவே சயனித்தலும். அவரெழுந்திருக்குங்கால் கூடவே ஏழுதலுமாகப் பின்சென்றது.

இறைவனுங் கானகங்களைக் கடந்து கராடர் நாடடைந்து ஓர் மரத்தடியில் உட்கார்ந்து மக்களுக்கு தன்மோபதேசஞ் செய்ய ஆரம்பித்தார். மான் கன்றும் அவரருகில் உட்கார்ந்து கொண்டது. அவ்விடம் இரும்பூதிக்கொண்டிருந்தக் கன்னான் பகவனைநோக்கிப் பெரியோய்! சருவத்தையும் விட்டு வெளியேறியத் தாங்கள் இம்மான் கன்றை விடாதக் காரணம் என்னை என்றான்.

அதை வினவிய பகவன் கன்னானை நோக்கி மக்களுக்கு மிருகசீவர்கள் மீது அன்பில்லாவிடினும் மிருகசீவனாகிய இதற்கு மக்கள்மீது அன்பு பொருந்தி தொடர்ந்து நிற்கின்றதென்றார். கன்னான் பகவனை நோக்கி மிருகராசிகளிடத்தும் அன்புண்டோ என்றான். பகவன் கன்னானை நோக்கி சருவசீவர்களிடத்தும் அன்பில்லாமற்போமாயின் ஒவ்வோர் சீவராசிகளும் சீவிப்பதரிதென்று அறியாயோ என்றார்.

கருணாகரக் கடவுள் வாக்கையும் அவர் செயலையும் அறியாத கன்னான் ஊதுலையில் மழுகக் காய்ந்திருந்த இரும்பு குண்டை இறைவன் முன்னுருட்டி இதனினும் அன்புண்டோ என்று பரிகசித்தான்.

அருகக்கடவுளோ அவனறியாமெய்க் கிரங்கி அக்காய்ந் துருகு மழுவை தன் கரத்திலேந்தி கன்னானை நோக்கியபோது அத்தழலானது ததாகதர் கரத்திற்றாவாது மேனோக்கி வீசிற்று. அதைக் கண்ணுற்ற கன்னான் அச்சுவாலை மேனோக்கி வீசுவதையும் அதன் தான்டவத்தையும் உணர்ந்து திகைத்து நின்றான்.

வீரசோழியம்

பூதலத்தில் எவ்வுயிர்க்கும் பொதுவாய திருமேனி
மாதவநீ என்பதற்கு ஓர் மறுதலையாக் காட்டதோ
சுழலடைந்த உலக்கணத்துக் காயுலைவா உருமழுவா
மழலெழுந்த கரத்தொடுமற்றன்றருளை ஏற்றினையே.

திருமூலர் திரிமந்திரம்

உருகிய மழுவை உள்ளங்கையேந்தி / அருளொடு வாய்மெய் ஆற்றலருளி
கருவில் அமைந்த காட்சி அமைப்பை / திருவையினுள்ள செயலிதென்றானே.

காசிக்கலம்பகம்

கண்ணிருக்குந் திருநுதலுங் கனலிருக்குந் திருகரமுங் கலந்தோருள்ளத்
துண்ணிருக்கு மின்னமுதும் பிறைமுடியும் உடைவாளும் அகற்றி கானில்
வெண்ணிறைந்த கணத்தோடு மனந்தவனத் திருப்பாரை எங்கே காண்பேன்
பண்ணிருந்த மறைபுகழ்முக் கண்ணனை அண்ணலர் அமரர் பரனைத் தானே.

இறைவனோ, தன்கரத்தேந்தியமழுவை எறிந்துவிடாது இன்னும் மேலேற்றி கன்னானை நோக்கி அன்பரே! உன்னிடத்துள்ள காமாக்கினியின் சுடுகையை உணராமலும், கோபாக்கினியின் சுடுகையை உணராமலும், பசியாக்கினியின் சுடுகையை உணராமலும் இம்மழுவன் சுடுகையைமட்டும் உணர்ந்து மகிழ்ச்சி கொண்டதென்னோ என்றார்.

கன்னான் திகைத்து கருணாகரன் அடியில் வீழ்ந்து ஐயனே, காமாக்கினி, பசியாக்கினி இவைகளின் சுடுகைகளை அறியாது இவ்வுலையிற் காய்ந்த மழுவின் சுடுகையைமட்டும் அறிந்தவனாதலின் தங்கள் தண்மெய் நோக்கின்றி தரிதலையானேன் பிழை பொருத்து புண்ணியபலனைப் பகரல் வேண்டும் என்றான்.

கருணாகரர் கன்னானை நோக்கி அன்பரே! உலையில் காய்ந்த மழுவு உம்மெச்சுடுமென்றறிந்த நீவிர்மற்றவரை சுட்டு உபத்திரவம் அடையட்டுமென்று எண்ணலாமோ என்றார். கன்னான் கமலநாயகனை வணங்கி - ஐயனே! இம்மழுவைத் தமது கரத்தில் எடுக்கமாட்டீரென்று உரைத்தேனன்றி உம்மெய் உபத்திரவத்தில் ஆழ்த்தக் கருதினேனில்லை. ஆதலின் எனதுன்மத்தச்செயலை சுமித்து ரட்சிப்பதுடன் எனக்குள் உள்ள அக்கினியை விவரிக்க வேண்டும் என்று வருந்தினான்.

பகவன் கன்னானை நோக்கி அன்பரே! உமக்குள்ளெழும் பசியாக்கினியின் வெப்பத்தை அறிந்திருப்பீர். அவ்வெப்பத்தைத் தணிக்கும் புசிப்பை உட்கொண்டவுடன் தணிந்து ஆயாசம் நீங்கும். அன்னம் புசிப்பின்றி இருப்பீராயின்

அவ்வக்கினி கீழிழிந்து மலமூத்திராதிகளைக் கவர்ந்து தேகம் முழுவதும் பரந்து சிற்சில வியாதிகளை உற்பத்தி செய்து மாளா உபத்திரவத்தை உண்டு செய்யும். கோபாக்கினியானது உம்மிடத்து எழுந்து பரந்து எதிரிக்கும் அவ்வக்கினியை எழுப்பிப் போர்புரிந்து பற்பல இடங்களில் காயங்கள் உண்டாய் உபாதைப்படுத்துவதுடன் அதிகாரிகளிடத்துந் துன்பத்தை அநுபவிக்கச்செய்யும்.

காமாக்கினியானது உம்மிடத்து எழும்புவதையும் அடங்குவதையும் அநுபவத்தில் அறிந்து வருகின்றீர். அவ்வக்கினியை தவிற்காது மேலும் மேலும் பெருக்கிக்கொள்ளுவதால் காமாக்கினியின் பெயரற்று மேகாக்கினி என்றும் பெயர் பெற்று சப்த தாதுக்களுங் கொதிப்புற்று பற்பல வியாதிகளால் துன்பத்தை அநுபவிக்கச்செய்யும். ஆதலின் உம்மிடத்துண்டாகும் மூவக்கனியின் கொதிப்பையும் அதினால் உண்டாகும் ஊன்களின் உருக்கையும், உபாதைகளின் பெருக்கையும் கண்டுணராது உமக்கு அப்புறப்பட்ட மழுவின் கொதிப்பை மட்டிலும் அறிந்திருப்பதால் யாது பயன்.

சீவகசிந்தாமணி

தன்னுயிர் தான் பரிந்தோம்புமாறு போன் மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமே,
லின்னுயிர்க்கிறைவனாய் இன்ப மூர்த்தியாய் பொன்னுயிராய் பிறந்து உயர்ந்து போகுமே.
நெருப்புயிர்க் காக்கிநோய் செய்யினிச்சமு முருப்புயிரின் இருவினை உதைப்ப வீழ்ந்தபின்,
புரிப்பரிக் கொண்டுபோய்ப் பொதிந்துக் கட்டிட விருப்புயிராகிவெந்தெரியுள் வீழுமே.

உம்மிடத்தெழுவும் மூவக்கினியின் கொதிப்பை அடக்குவதினால் சகல மதிப்பும் உண்டாய் சீவகாருண்யனென்னும் பெயர் பெற்று மக்கள் நிலைகடந்து தேவர் பிரமரென்னுஞ் சுகநிலைப்பெற்று வாழ்வீர். அங்ஙனமின்றி இப்பேதை ஜெந்துவாகிய மானைக்கண்டவுடன் உமது காருண்யத்தைக் காட்டாது துவேஷமுறுவதால் உம்மிடத்துண்டாகும் இராகத்துவேஷமோகோற்பவமாம், காம வெகுளி மயக்கங்கள் கொதிப்பேறி பிணி, மூப்பு, சாக்காடுண்டாகி மாறாப் பிறவியில் சுழன்று தீரா துக்கத்திற்கு ஆளாக்கும். இத்தகைய துக்கத்தை நீக்கிக்கொள்ளவேண்டிய நீவிர் சீவராசிகளுக்குண்டாகுந் துன்பங்களை உமக்குண்டாய துன்பம் போல் கருதி அவைகளை ஆதரித்துவருவீராயின் மேற் பிறவியை நோக்கிவாழும் ஒவ்வோர் சீவப்பிராணிகளும் பெருகி பலுகி சுகமடையும் வாழ்க்கையைத் தாங்களும் அறிந்து அன்பின் பெருக்கத்தால் உண்டாகுங் கருணையின் பலனை ஆராய்ந்து கதிபெருகுவீரென்றார்.

கன்னான் கலைநாயகனை வணங்கி ஐயனே, இங்கு காய்ந்து மழுவாய் உருகிய இரும்பு பட்டவிடமெங்குஞ் சுடுவதாயிருக்க தமது கரத்தை சுடாததின் காரணமென்னோ விளக்கல் வேண்டுமென்றான்.

கரமழுவேந்தி கன்னானை நோக்கி அன்பரே, நீர் தண்மெய் அடைவீராயின் சகலமுந் தண்ணுறும். நீர் சுடுமெய் அடைவீராயின் சகலமும் உம்மெச்சுடுமென்றார்.

தண்மெய் என்பதும் சுடுமெய் என்பதும் விளங்கவில்லையே என்றான்.

அன்பரே! உமக்குள் சாந்தமென்னுங் குளிர்ந்த நிலை கோடலே தண்மெய் என்றும், காமங் கோபமென்னுங் கொடுநிலைக் கோடலே சுடுமெயென்றுங் கூறப்படும்.

வாக்கால் ஒருவரை மனனோகப்பேசுதலும் சுடுமெய்க்காதாரமாம். தேகத்தால் மற்றோரை நோக வடித்தலுஞ் சுடுமெய்க்கு ஆதாரமாம். மற்றோரைக் கெடுக்க வஞ்சநெஞ்சங் கொள்ளுவதுஞ் சுடுமெய்க்கு ஆதாரமாம்.

மிருதுவான வாக்கும், அன்பான மொழியும், பிரயோசனமான வார்த்தைகளும் நாவினால் கூறுதல் தண்மெய்க்கு ஆதாரமாம்.

மற்றோர் தேகத்திற்குண்டான தீங்கை தன் தேகத்தால் கார்த்தலுந் தன் தேகத்தை வருத்தி சம்பாதித்து மற்ற தேகங்களைப் போஷித்தலும் தண்மெய்க்கு ஆதாரமாம்.

மற்றோர் செய்த தீங்குகளை நினையாமலும் அதை மனதில் தங்கவிடாமல் செய்தலும், மற்றொருவர் செய்த நன்றியை நினைத்தலும், அந்நன்றியை என்றும் மறவாமலிருத்தலுந் தண்மெய்க்கு ஆதாரமாம்.

இத்தகையத் தண்மெய் அடைதற்கு தென்புலமே தோற்றமாகும். அதாவது நாவினால் அறுசுவைகளை அறிதலும், மூக்கினால் நற்கந்தந் துற்கந்தங்களை அறிதலும், செவியினால் சப்தங்களைக் கேட்டலும், கண்களால் உருவங்களைப் பார்த்தலும், தேகத்தால் பரிசித்தலென்னும் உணர்ச்சி நுகர்தலுமாகியப் புலன்களும் எண்ணங்களுந் தென்பட உசாவுவனேல் தென்புலத்தானாவன்.

அத்தென்புல நுகர்ச்சியால் கண் பார்த்தவிடத்தை மனமிச்சித்தலும், நாவுருசித்த பதார்த்தத்தை மனம் இச்சித்தலும், நாசி முகர்ந்த வஸ்துவை மனம் இச்சித்தலும், செவி கேட்ட சப்தத்தை மனம் இச்சித்தலும், தேகஞ் சுகித்த இடத்தை மனம் இச்சித்தலுமாகியச் செயல்கள் மனங்கோறிய வஸ்துக்கள் கிடைத்தவிடத்து சந்தோஷமும் கிடைக்காதவிடத்து துக்கமும் பற்கடிப்பும் உண்டாய் காம வெகுளி மயக்கங் கொதிப்பேறி தன்னை அடுத்தோர் களையுங் கெடுத்து தானும் கெட்டு மாளா துக்கத்தில் சுழன்று திரிவான்.

மனம் இச்சித்தலாகும் பற்றுக்களற்று சருவ சீவர்களின் மீதும் அன்புற்று சத்தியதானத்தில் நிலைபெற்று நிற்குஞ் சாதனத்தால் சாந்தம், அன்பு, ஈகை திரண்டு தண்மெயுண்டாய் அந்தணனாகுவன்.

அந்தணநிலை அடைந்து சந்தத சுகம் உண்டாகி தேவர் பிரமரென்னும் ஏழாவது தோற்றம் பெற்று எங்கும் உலாவுவர்.

இன்னிலைபெற முயற்சிக்கும் தென்புலத்தாருக்கும் தேவர்களாகும் ஏழாவது தோற்ற அறஹத்துக்களுக்கும் அன்னமிட்டு வருவது ஆனந்ததானமாகும்.

இத்தானத்தை நாடியும் அவர்களே வரமாட்டார்கள். நீங்களே உங்கள் அன்னபதார்த்தங்களை பதினைந்து நாழிகைக்குள் முடித்து வெளிவந்து (அறஹத்தோ அறஹத்தோ அறஹத்தோ) என்று மூன்று சப்தமிட்டு பார்ப்பீர்களானால் ஒரு சங்கத்தை விட்டு மறு சங்கங்களுக்குச் செல்லுந் தென்புலத்தாரும், அறஹத்துக்களாம் தேவர்களும் வருவார்கள். அவர்களுக்கு அன்னமிட்டு நீங்களும் புசித்து ஆனந்தமடையுங்கள்.

திரிவெண்பா

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் என்னும் இவர்
இன்புறத்தாணுண்டல் இனிதாமே - அன்பில், தக்கவரையன்றி
தனித்துண்ண றாவிமீன், கொக்கருந்தென்றே குறி.

திரிக்குறள்

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க றானென்றாங்
கைம்புலத்தா றோம்பறலை.

இத்தகைய தென்புலத்தார்க்கு அன்னமீய்ந்து அவர்கள் சத்தியதன்மத்தைக் கேட்பீர்களாயின் நீங்களும் ஐம்புலனடக்கம் அதி சீக்கிரம் பெற்று அறஹத்துக் களாவீர்கள் என்று முடித்தார்.

கன்னானும் அங்குள்ள சில விவேகிகளுங் கணநாதனைநோக்கி அறநிறைக்கடலே, அன்பின் உடலே! தமதரிய கமலபாதத்திலும், சத்திய தன்மத்திலும், அனந்த சங்கத்திலும் அடைக்கலம் புகுந்தோம். எங்களையுந் தங்களரிய சங்கத்தவர்களாக சேர்த்து சரணாகதித்தரல் வேண்டும் என்று கைகூப்பினார்கள்.

கணநாயகன் அவர்கள் சரணாகதிக்கிரங்கி கராடர் நாட்டிலுள்ளக் கனவான்களைக்கொண்டு புருஷர்களுக்கோர் வியாரமும், இஸ்திரீகளுக்கோர் வியாரமுங் கட்டுவித்து அவ்விடஞ் சிலநாள் தங்கி புருஷர்களுக்கு நான்கு வாய்மெயாஞ் சத்திய தன்மங்களையும், இஸ்திரீகளுக்கு நான்கு கற்பு நிலையாஞ் சத்திய தன்மங்களையும் ஊட்டி துக்க நிவர்த்தியாம் வழியைக்காட்டி சகல பாசபந்தங்களையும் ஒட்டி சருவவியாரங்களிலும் வெண்ணிறமாந் தன்மக் கொடியை நாட்டி புத்ததன்மத்தோர் சேர்ந்து வாழுஞ் சேரிகளைச் சுகம் பெறச் செய்தார்.

நிகழ்காலத்திரங்கல்

கராடர் நாடங்கு கன்னான் மழுவால் / விராடர் பொன் வியாரம் விளித்த தசியமே.

வீரசோழியம்

ஆவியனைத்துங், ச, த, ந, ப, மவ்வரியும் வவ்வி
லேவிய வெட்டும் யவ்வாறு ஞந்நான்கும் எல்லாம் உலகு
மேவிய வெண்குடைச் செம்பியன் வீர ராஜேந்திரன்றன்
நாவியல் செந்தமிழ்ச் சொல்லின் மொழி முதனன்னுதலே.

சீவகசிந்தாமணி

தேனுலாமதுச்செய்கோதை தேம்புகை கமழ்வூட்டி
வானுலாச் சுடர்கண்மூடி மாநகரிரவுசெய்ய
பானிலாச் சொரிந்த நல்லாரணிகலம் பகலைச்செய்ய
வேனிலான் விழைந்த (சேரி) மேலுலகனையதொன்றே.

வேரியின் மெழுக்கார்ந்த மென்பூநிலத்,
தாரியாகவஞ் சாந்தந்தனித்தபின்,
வாரி நித்திலம் வைப்பபொற்பூவொடு,
சேரிதோறிது செல்வது இயற்கையே.

10. சதுரகிரிக்காதை

அறவாழி அந்தணன் கராடர் நாட்டில் தன்ம சங்கத்தை நாட்டிவிட்டு சதுரகிரி என்றும், இரத்தனதீவகமென்றும் வழங்கும் ஓர் மலையின்மீது ஏறியபோது அடிவாரத்தில் வாசஞ்செய்திருந்தக் குடிகள் யாவரும் பின்தொடர்ந்து உச்சியில் சென்று ஐயனைச் சூழ்ந்து நின்றார்கள்.

அறவாழியான் சகலரையும் நோக்கி அன்பர்களே! உங்களை ஒத்த மநுக்கள் முதல் புழுக்கீடாம் எறும்புகளீராக உள்ள சீவர்களை ஒருவருக் கொருவர் அன்பு பாராட்டி ஆதரித்து வருகின்றீர்களா, அன்றேல் தங்களுடைய போஷிப்பையுஞ் சுகத்தையும் பார்த்துக்கொண்டு மற்ற சீவர்களை வதைத்து வருகின்றார்களா என்றார்.

தேவரீர் தாங்கள் இவ்விடம் வந்தவுடன் இக்கரடி புலி சிம்மம் யாவும் உம்மைச் சூழ்ந்து ஆனந்தமாகப் பார்த்திருக்கின்றது. இத்தகைய கரடியும் புலியும் சிம்மமும் எங்களைத் தனியாகக்காணுமாயின் அடித்துக் கொன்று விடுவது நிட்சயம். இவ்வகைக் கொடூர ஜெந்துக்கள்மீது யாங்கள் எவ்வகையில் அன்பு செலுத்தி ஆதரிப்போமென்றார்கள்.

அதைக்கேட்ட பகவன் கூட்டத்தாரை நோக்கி அன்பர்களே! ததாகதன் உங்களை ஒத்த மனிதனாயிருக்க இம்மிருக சீவன்கள் எம்மீது அன்பு பாராட்டி அருகில் வீற்றிருப்பதும் உங்களைக் கண்டவுடன் கொல்லுவதுமாகியக் காரணம் யாதென்றார்.

ஐயனே! இதினந்தரங்கம் யாங்கள் அறியோமே என்றார்கள்.

அருங்கலையோன் அக்குடிகளை நோக்கி அவ்விடம் இருந்த ஓர் நீர்ப்பாம்பையும் விஷப்பாம்பையும் காண்பித்து அவைகளைப் பிடித்து வாருங்கோள் என்றார்.

சிலர் அவைகளைப் பின்சென்று பிடிக்க ஆரம்பித்தபோது நீர்ப்பாம்பு மட்டிலும் எங்கும் ஓடாமல் அவ்விடமே தங்கினின்று கையில் பிடிப்பட்டது. விஷப்பாம்போ இவர்களைக் கண்டவுடன் ஒடிவொளித்துக் கொண்டது.

வேறுசிலரைநோக்கி அவ்விடமிருந்த ஓர் பல்லியையுந் தேளையுங் காண்பித்து அவ்விரண்டையும் பிடித்து வாருங்கோள் என்றார்.

அவற்றை சிலர் தொடர்ந்து பிடிக்க ஆரம்பித்தபோது பல்லியானது எங்கும் ஓடாமல் தங்கள் கைகளில் பிடிப்பட்டுக்கொண்டது.

தேளோவெனில், இவர்கள் அருகில் நெறுங்கியவுடன் ஓடி ஒளித்துக் கொண்டது.

இவைகளைக் கண்ட இறைவன் குடிகளைநோக்கி அன்பர்களே! ஒரு பாம்பு ஓடி ஒளிந்துக்கொள்ளவும் மற்றொன்று உங்கள் கையில் பிடிப்படவும் தேளானது உங்களைக் கண்டவுடன் ஓடி ஒளிக்கவும் பல்லியானது ஓடாது உங்கள் கையில்பிடிபடவும் நேர்ந்த காரணங்கள் யாதென்று வினவினார்.

தேவரீர் அதன் காரணமும் யாங்கள் அறியோமென்றார்கள்.

குமாரதேவன் குடிகளை நோக்கி அன்பர்களே! சீவர்களை இம்சிக்கக் கூடிய நஞ்சென்னும் விஷமானது எந்த ஜெந்துவினிடமிருக்கின்றதோ அந்த

ஜெந்துவானது நம்மிடங் கொடிய விஷமுள்ளபடியால் நம்மெக்கண்டோர் கொன்றுவிடுவார்கள் என்று பயந்து ஒளிப்பது இயல்பாகும்.

சீவர்களை இம்சிக்கக்கூடாத விஷமற்ற ஜெந்துக்கள் தன்னிடத்து யாதொரு நஞ்சுமில்லாமெயால் நம்மெ யாருங் கொல்லமாட்டார்களென்று எண்ணி அஞ்சாமல் நிற்பது அதனியல்பாகும் என்றார்.

அவற்றை வினவியக் குடிகள் அருகக்கடவுளை வணங்கி எமதை யனே! தோற்றியுள்ள ஜெந்துக்களில் சிலது விஷமுள்ளதாயுஞ் சிலது விஷமற்றதாயுந் தோற்றுங் காரணம் யாதென்று வினவினார்கள்.

அன்பர்களே! காரணத்திற்குத்தக்கக் காரியமென்னும் ஏதுக்குத் தக்கச் செயல்களும் உண்டாகும்.

அதாவது அக்கினியின் வெப்பமும் புழுக்கமும் உண்டாகும் இடங்களில் விஷமுள்ள ஜெந்துக்கள் தோற்றுவது இயல்பாம்.

வாயுவுங் குளிர்ச்சியும் நிறைந்த இடங்களில் விஷமற்ற ஜெந்துக்கள் தோற்றுவது இயல்பாம்.

இவ்விரண்டிற்கும் பூதபேதங்களே காரணமாகும். அதுபோல் உங்களுக்குள்ள காமாக்கினி கோபாக்கினியின் பெருக்கத்தால் விஷம் ஏறி மற்றவர்களை வஞ்சித்துந் துன்பப்படுத்தியும் வருகின்றீர்கள். அத்தகைய விஷத்தை நீங்கள் உள்ளடக்கி உள்ளவர்களாதலின் மற்ற சீவர்களுக்கும் அதிகாரிகளுக்கும் ஒளிந்துவருகின்றீர்கள்.

உங்களுக்குள்ள மோக துவேஷ அக்கினி அவிந்து கொடுவிஷம் நீங்கி சாந்தம் அன்பென்னும் குளிர்ந்தநிலைபெருகி அழுதுண்ட கருணை முகங்காணும் அக்காலத்தில் சருவ சீவன்களும் உங்கள் மீது அன்பு பொருந்தி உங்கள் ஏவலை எதிர்நோக்கும் அதினால் நீங்களும் சுகமடைவீர்கள் என்றார்.

அக்கால் மலையின் உச்சி நிறம்பப் பெருங்கூட்டங்கட் சேர்ந்து அருளாழியான் அழுதவாக்கை நோக்கினின்ற யாவரும் அவரடி பணிந்து தங்கள் சீர்பாதமே அடைக்கலம், சத்திய தன்மமே அடைக்கலம் என்றார்கள்.

அவற்றை வினவிய அண்ணல் கூட்டத்தோரை நோக்கி அன்பர்களே! சீர்பாதமே தன்மபாதம். தன்மபாதமே சீர்பாதமாதலின் ததாகதரோதுந் தன்மபாதத்தை ஒவ்வொருவர் இதயத்திலும் பதித்து விஷத்தை நீக்கி அழுதை நிறப்புங்கோளென்று தன்மபாதத்தை விளக்கலானார்.

துவிதவாக்கியவர்க்கம்

நம்முடைய எண்ணங்களே நாமாயிருக்கின்றோம், நம்முடைய எண்ணங்களே நமக்காதாரம், நம்முடைய எண்ணங்களால் நாம் அமைந்திருக்கின்றோம். ஒருவன் கெட்ட எண்ணங்களை எண்ணுவானாயின், கெட்ட செய்கைகளைச் செய்வானாயின் வண்டியை இழுக்கும் எருதின் காலை சக்கரமானது பின்பற்றித் தொடர்வதுபோல துக்கமானது தொடர்ந்தே நிற்கும்.

அவன் என்னை அவமதித்தான், அவன் என்னை அடித்தான், அவன் என்னைத் தோற்கடித்தான், அவன் என்னை வஞ்சித்தான் என்று எழும் எண்ணங்களுக்கு ஒருவன் இடங்கொடுப்பானேல் பகை அவனைவிட்டு அகலாது.

அவன் என்னை அவமதித்தான், அவன் என்னை அடித்தான், அவன் என்னைத் தோற்கடித்தான், அவன் என்னை வஞ்சித்தான் என்று எழும் எண்ணங்களுக்கு ஒருவன் இடங்கொடாதிருப்பனேல் பகை அவனை விட்டகலும், ஏனெனில் பகை பகையால் எக்காலத்தும் விலகுவதில்லை. பகை அன்பால் விலகும்.

எவனொருவன் ஐம்புல நுகர்ச்சி தென்படா பெருந் திண்டியிலும், சோம்பலிலும், விவேகக் குறைவிலும் இருந்து சிற்றின்பத்தில் கண்ணாந்து நிற்பவன் காற்றால் மோதுண்டு விழும் மரத்தைப்போல் மாரனால் கீழ்ப்பட்டு மடிவான்.

எவனொருவன் சுருசுருப்பிலும், ஜாக்கிரதையிலும், விடாமுயற்சியிலும் நின்று புலன்கள் தென்படு நுகர்ச்சியினின்று தென்புலத்தானாகின்றானோ

அவனைக் காற்றானது மலையை அசைக்காததுபோல மாரனுடைய மாறுபடுச் செய்கைகளால் அவனை மயக்கலாகாது.

சீலங்களைக் கவனியாதும், பாவத்தை ஒழிக்காதும், சத்தியதரிசனமாம் நான்குவாய்மெய்களை அறியாதும் ஒருவன் இருப்பனேல் அவன் காஷாயமாம் சீவரத்தை தறிக்கத்தகுந்தவனல்லன்.

சீலங்களைப் பெற்று பாபத்தை ஒழித்து நீதியில் நின்று சத்திய தரிசனமாம் நான்கு வாய்மெய்களை அறியும் சக்தியுள்ள ஒருவன் இருப்பனேல் அவன் காஷாயமாம் சீவரத்தை தறிக்க உத்தமனாவான்.

எவனொருவன் சத்தியத்தை அசத்தியமாகவும், அசத்தியத்தை சத்தியமாகவும் கருதுகின்றோனோ அவனுக்கு சத்தியம் விளங்காது வீண் அவாவையே பின்பற்றி விரோதியாக நிற்பான்.

எவனொருவன் சத்தியத்தை சத்தியமாகவும், அசத்தியத்தை அசத்தியமாகவும் கருதுகின்றானோ அவனுக்கு சத்தியம் விளங்கி பற்றற்ற நிலையை பற்றி சகலருக்கும் அன்பனாக விளங்குவான்.

செவ்வனே திருத்திக் கட்டப்படாத கூறைவீட்டுள் மழைத்துளிகள் ஒழுகுதல்போல் ஞான விழிப்பும், விசாரிணையுமற்ற மனத்தின் வழியாய் காமக்குரோதாதிகள் நுழையும்.

செவ்வனே திருத்தி கட்டப்பட்ட கூறைவீட்டுள் மழைதுளி நுழையாதது போல் ஞானத்தில் சதா விழிப்பும், ஜாக்கிரதையுமுள்ள மனத்தின் வழியாய் காமக்குரோதாதிகள் நுழையமாட்டாது.

சீலமற்றவன் துக்கத்தில் ஆழ்ந்திகிடப்பான். அவன் செய்துவந்த பாபங்களை நினைத்து மிக்க வியாகூலமடைவான். அவன் பாபவழியை அநுசரிக்கும்போது அதிக துக்கமடைகிறான்.

சீலத்தை அநுஷ்டிப்பவன் ஆனந்தத்திலிருப்பான். அவன் செய்துவந்த நற்கன்மங்களை நினைத்து மிக்க ஆனந்தமடைவான். அவன் நல்ல வழியை அநுஷ்டிக்கும்போது சொல்லவொண்ணா ஆனந்தமடைகின்றான்.

சிந்தனையற்ற ஒருவன் பெருத்த நீதிவசனங்களை பிறருக்கு ஓதியும் தான் அந்நீதிகளின்படி நடவாது காமம், வெகுளி, பொறாமை இவற்றில் இருப்பானாயின் அவன் ஏனையோரது மாடுகளை கணக்கெடுக்கும் இடையனாவான். விவேகி ஒருவன் ஒரு சிறு நீதி வசனத்தைப் பிறருக்கு போதித்து காமம், பகை, குடிகெடுப்பு, வஞ்சினம் இவைகளற்று நீதியில் நின்று மன அமைதி பெற்று, உலக பற்றற்றுவருவனேல் அவனே சிரமண நிலைக்கு சமமாவான்.

பண்டிதவர்க்கம்

சகோதிரர்களே! அறிவுடையோன் ஒருவன் நித்தியவழியைக் காட்டி அநித்தியவழிகளைப் போக்கும்படி போதிப்பானேல் அவன் வழியைப் பின்தொடருங்கள்.

புத்திமதி கூறவும், நன்மார்க்கத்தை போதிக்கவும் அவனுக்கிடங் கொடுங்கள், கெட்டவை இவை என தெளிவரக் காட்டப்படும். அவன் நல்லோரால் புகழப்பட்டு தீயோரால் இகழப்படுவான். தீயோருடன் நேசம் பாராட்டாதீர்கள். கீழோராம் அவிவேகிகளை அணுகாதீர்கள். மேலோராம் விவேகிகளின் நேசம் பாராட்ட பன்முறை அணுகுங்கள்.

அறிவுடையோர் புகழ்ச்சியாலும் இகழ்ச்சியாலும் நிலைகுலையார்கள். அவர்களோ சதா நீதியுணர்வினின்று அலையற்ற தடாகம்போல் ஆறுதலுற்றிருப் பார்கள்.

பிராஹ்மணவர்க்கம்

சகோதிரர்களே! எவனொருவன் அவாவை அறுத்து துக்கசாகரமென்னும் பெருங்கடலை நீந்தி கரைசேர்ந்து அமிர்தமாம் நிருவாணத்தை அடைந்தானோ அவனே பிராஹ்மணன்.

எவனொருவன் அறிவுடையோனாகவும் குற்றமற்றவனாகவும் ஒரே நிலையானவனாகவும் காமமற்றவனாகவும் மேலான பதவியை அடைந்தவனு மாயிருக்கின்றானோ அவனே பிராஹ்மணன்.

பகலில் சூரியனும், இரவில் சந்திரனும், கவசத்தால் போர்வீரனும், தியானத்தால் பிராஹ்மணனும் பிரகாசிப்பதுபோல் ததாகதர் இரவும் பகலும் சதா விழிப்புள்ளோ ரகத்து பிரகாசிக்கின்றார்.

பாபத்தினின்று விலகினபடியால் பிராஹ்மணனென்றும், சாந்த வாழ்க்கையில் நடப்பதால் சமணனென்றும், பாப குற்றங்களை விலக்கிவருகிற படியால் பிரவர்ஜிதாவென்று அழைக்கப்படுவான்.

மனோ வாக்கு காயத்தால் ஜீவர்களுக்கு யாதொரு துன்பமும் செய்யாதிருப்பவன் எவனோ அவனே பிராஹ்மணன்.

கடுகை ஊசியின் நுனியிலிருந்து விழச்செய்வதுபோல் எவனொருவன் கோபம், பொறாமெய், பெருமெய், பகை இவைகளை விட்டொழிக்கின்றானோ அவனே பிராஹ்மணன்.

யாவர்பேரிலும் குற்றங் குறை கூறாதும், கொலை செய்யாமலும், கொலைசெய்ய ஏதுவாகாதிருப்பவன் எவனோ அவனே பிராஹ்மணன்.

ஆவலோடு அலைபவர்களின் மத்தியில் ஆவலில்லாமலும், கோபமுள்ளவர்களின் மத்தியில் கோபமில்லாமலும், பொய்யர்கள் மத்தியில் மெய்யர்களாகவும் வாழ்கின்றவன் எவனோ அவனே பிராஹ்மணன்.

துன்பஞ் செய்வோர்களை துன்பஞ்செய்யாது துன்பமின்றியும், வஞ்சகமுற்றோர் மத்தியில் வஞ்சமின்றியும் வாழ்பவன் எவனோ அவனே பிராஹ்மணன்.

ஓ சகோதிரர்களே! எவனொருவன் இவ்வுலகில் நல்லவை, தீயவை இவைகளுக்கு அதீதப்பட்டவனும் துக்கம், துற்குணம், பாபம் என்னும் கட்டுகளினின்று விலகினவன் எவனோ அவனே பிராம்மணன்.

எவனொருவன் பரிசுத்தமும் மன அமைதியும் துராசையும் அற்றிருக் கின்றானோ அவனே பிராமணன்.

எவனொருவன் சேறுள்ள பாதையையும், கடக்கமுடியாத உலகத்தையும், இவ்வுலகத்தின் பெருந் துக்கத்தையுங் கடந்து அக்கரையைச் சேர்ந்து கபடமற்றவனும், திருப்தியும் யோசனையுமுடையவன் எவனோ அவனே பிராம்மணன்.

எவனொருவன் இவ்வுலகில் உலகபற்றற்றவனும், துறவியாகத்திரிபவனும், மோகமற்றவனுமாக விருப்பவனெவனோ அவனே பிராம்மணன்.

எவனொருவன் இன்பத்திற்கும், சுகத்திற்கும் இடங்கொடாதும், சாந்தரூபியாயும், பாப உலகத்தை வென்ற வீரனாகவும் இருக்கின்றானோ அவனே பிராம்மணன்.

பிறவிக்கு ஆளாக்குமார்க்கம் இது, பிறவியை வெல்லும் மார்க்கம் இது எனவும் தெரிந்து சகலபற்றும் அற்ற பகவனாம் புருஷ உத்தமன் பற்றிய பற்றைப் பற்றினவனெவனோ அவனே பிராம்மணன்.

உலக பற்றற்றவனும், ஏழையுமாய் இருப்பவன் எவனோ அவனே பிராம்மணன்.

முற்பிறப்புகளைத் தெரிந்தவனும், மோக்ஷம் இது நரகமிதுவென அறிந்தவனும், பிறப்பற்றவனும், பரிபூரண ஞானியும், பெருந் துறவியும், பரிசுத்தனுமானவன் எவனோ அவனே பிராம்மணன்.

தண்டவர்க்கம்

ஓ சகோதிரர்களே! இவ்வுலகில் மனுக்கள் தண்டனைக்கு நடுங்குகின்றனர். மரணத்திற்குப் பயப்படுகின்றனர். நீங்கள் எல்லோரும் அவர்களைப் போன்றவர்களன்றோ. ஆகையால் கொலைபுரியாதிருங்கள். கொலைக்குக் காரணக்கர்த்தர்களாக இராதிருங்கள்.

இவ்வுலகில் மனுக்கள் தண்டனைக்கு நடுங்குகின்றனர். பிராணனை காப்பாற்ற முயல்கின்றனர். நீங்கள் எல்லோரும் அவர்களைப்போன்றவர் களன்றோ. ஆகையால் கொலைபுரியாதிருங்கள். கொலைக்குக் காரணகர்த்தர் களாக இராதிருங்கள்.

தன்சுகத்தைக் கோறும் ஒருவன் அதேசுகத்தைக்கோறும் ஏனைய ஜீவர்களை தண்டியாதும், கொலை புரியாதும் வருவனேல் அவன் சுகத்தை அடைவான்.

எவரையும் கடுஞ்சொற்களால் சுடாதிருங்கள். ஏனெனில் கடுஞ்சொற் களே உங்களைச்சுட திரும்பும். கோபமான வார்த்தை துன்பத்தை உண்டாக்கு வதுடன் பெரும் விபத்தையும் நேரிடச்செய்யும்.

வெங்கல மணியின் நாக்கை எடுத்துவிட்டால் சப்தம் இல்லாமல் போமன்றோ. அதுபோல் உங்களின் இராக துவேஷ மோகங்களைத் தவிர்த்து விட்டால் அமிர்தமாம் நிப்பானத்தை அடைவீர்கள். விவாதம் உங்களை அணுகா.

இடையனொருவன் தன் கோலின் உதவியினால் பசுக்களை சாலைக்கு நடத்திச்செல்வனோ அதுபோல் வயதும், மரணமும் ஜீவர்களை நடத்திச் செல்கின்றன.

இவ்வுலகில் ஒருவன் அம்மணமாய் இருந்தாலும், ரோமங்களைத் தொங்கவிட்டுக்கொண்டிருந்தாலும், தினேதினே நீரில் முழுகினாலும், பசியால் வருந்தினாலும், பூமியில் நெடுகப் படுத்திருந்தாலும், கற்களால் தேகத்தை வாதைசெய்தாலும் அசையாது உட்கார்ந்திருந்தாலும் அவாவை வெல்லாதவன் ஒருக்காலும் பரிசுத்தனாகமாட்டான்.

பழகிய குதிரையானது சாட்டையால் தொட்டவுடன் சுருசுருப்பாய் ஓடுமோ அதுபோல் உண்மெயாலும், நற்குணத்தாலும், முயற்சியாலும் தியானத்தாலும் ஒருவன் பெருங்கடலாகிய துக்கசாகரத்தை வென்று ததாகதநிலையை அடைவான்.

கிணற்றுநீரை வேண்டிய இடங்களுக்குக் கொண்டுபோவதுபோலும், அம்பை தன் மனதிற்கு இசைந்தவாறு வளைப்பதுபோலும், மரக்கட்டையை மனவிச்சைப்படி செப்பனிடுவதுபோலும் அறிவுடையோர் தங்களை ஒழுங்குபடுத்திக்கொள்ளுவார்கள்.

லோகவர்க்கம்

ஓ சகோதிரர்களே! அநீதிமார்க்கத்தை அநுசரியாதீர்கள். யோசனையற்று வாழாதீர்கள். தப்பான மார்க்கங்களை பின்தொடராதீர்கள்.

நீதிமார்க்கத்தை அநுசரியுங்கள். பாபமார்க்கத்தை விலக்குங்கள். ஏனெனில் நீதியால் இவ்வுலகில் பாக்கியவான்களாகலாம்.

இவ்வுலகம் நீர்க்குமிழியையும், கானலையும் ஒத்தது என அறியுங்கள். அறிந்த ஒருவனிடத்தில் இமயனென்னுங் காலன் அணுகமாட்டான்.

சகல ஆடம்பரம் பொருந்திய இவ்வுலகை சக்கரமென நினையுங்கள். அறிவுள்ளோர் அதனின்று விலகிக்கொள்வர். அறிவிலார் அதனைக் கவர்ந்து நிற்பர்.

எவனொருவன் முன் கவலையற்றவனாயிருந்து பின் தெளிந்து அறிவுடை யோனாகின்றானோ அவன் மேகத்தால் கவரப்படாத சந்திரனைப்போல் உலகில் பிரகாசிப்பான்.

இவ்வுலகம் இருளாய் இருக்கின்றது. சிலரால் பார்க்கமுடியும். வெகு சிலர் வலையினின்று தப்பும் பட்சிபோல் உலகினின்று தப்பித்துக் கொள்வார்கள்.

தருமசிந்தை இல்லாதவன் தெய்வ நிலையை அடையமாட்டான். அறிவற்றவன் எவனோ அவன் ஈகையைப்பற்றி இகழ்வான். அறிவுள்ளோர் ஈகையைப்பற்றிப் புகழ்வார். அதே ஈகையில் வாழ்வார்கள்.

உலகையே ஆள்வதைவிட, உலகில் கீர்த்தி பெருவதைவிட நிர்வாண பாதையாம் முதற்பாதையாகிய ஸ்ரோதாபதி மார்க்கத்தை அடைவதே சிரேஷ்டம்.

பிக்குவர்க்கம்

ஓ சகோதிரர்களே! கண்விஷயத்தில் ஜாக்கிரதையாயிருத்தல் உத்தமம். செவிவிஷயத்தில் ஜாக்கிரதையாயிருத்தல் உத்தமம். நாசிவிஷயத்தில் ஜாக்கிரதை யாயிருத்தல் உத்தமம். நாவுவிஷயத்தில் ஜாக்கிரதையாயிருத்தல் உத்தமம். தேகவிஷயத்தில் ஜாக்கிரதையாயிருத்தல் உத்தமம். வாக்குவிஷயத்தில் ஜாக்கிரதையாயிருத்தல் உத்தமம். எண்ண விஷயத்தில் ஜாக்கிரதையாயிருத்தல்

உத்தமம். சகல விஷயத்திலும் ஜாக்கிரதையா இருத்தல் உத்தமம். சகல விஷயத்திலும் ஜாக்கிரதையாயுள்ள பிக்ஷு சகலதுக்கத்தினின்று விலகினவனாவான்.

எவனொருவன் கையை காத்துக்கொள்பவனாயும், காலைக் காத்துக் கொள்பவனாயும், வாக்கைக் காத்துக்கொள்பவனாயும், சகலத்தையும், அடைந்தவனாயும், ஏகாந்தமானவனாகவும், ஆறுதலையுடையவனாகவும் இருக்கிறானோ அவனே பிக்ஷு.

நாவைக் காத்துக்கொண்ட பிக்கு ஒருவன் அறிவுடனும், சாந்தத்துடனும் பேசுவான். ஞானத்தின் அர்த்தங்களையும், நீதியின் தெளிவையும் போதிக்கும் பிக்குவின் வார்த்தை அமிர்தமாக இருக்கும்.

நீதியின் பிரகாரம் நடப்பவன் ஒருவனோ அவன் நீதியில் ஆனந்தத்தை அடைகின்றான். நீதியில் தியானத்தை செலுத்துகின்றவன் நீதியின்படி நடக்கின்றான். அவ்வகைத்தான பிக்கு நீதியினின்று பிரழான்.

தனக்கு கொடுக்கப்பட்டவைகளை அலட்சியஞ்செய்யாமலும், யாவரையும் விரோதியாமலும் இருக்கட்டும். பிறனை விரோதிக்கின்ற துறவி சித்தசாந்த நிலையை அடையமாட்டான்.

எவனொருவன் நாமரூபமாம் தேகத்தையும், சித்தத்தையும் ஒருபொருட்டாக மதியாதும், மேலும் மேலும் பொருள் சேர்க்கும் அவாவில்லாதும், மேலான பதவியை நாடுகின்றானோ அவனே பிக்கு.

அன்பையே சதா சாதிப்பவனும், புத்தரது தன்மத்தில் அடங்கினவனுமான பிக்கு அமிர்தமாம் நிப்பானத்தை அடைவான்.

ஓ பிக்குகளே! இப்படகை காலிசெய்யுங்கள். அப்படிச் செய்வதால் படகானது சுருக்காகச் செல்லும், காமத்தையும் பொறாமெயையும் விட்டகலுங்கள். நிப்பானத்தை அடைவீர்கள்.

ஓ பிக்குகளே! தியானியுங்கள். சிரத்தையற்றவர்களாய் இராதீர்கள். இன்பத்தைத் தரும் வழிகளுக்கு உங்களுடைய எண்ணங்களை செலுத்தாதீர்கள்.

ஏனெனில் நீங்கள் சிரத்தையற்றும் உங்களை குடிகெடுக்கும் நெஞ்சத்துக்கு இடந்தருவீர்களாகில் துக்கமென்னும் அக்கினியில் சிக்கி வாதைப்படல் வேண்டும்.

அறிவில்லாவிடத்து தியானங் கிடையா. தியானமில்லாவிடத்து அறிவு கிடையா. எவனொருவன் அறிவோடும், தியானத்தோடும் இருக்கின்றானோ அவனே நிப்பான பதவிக்கு சமீபத்திலிருப்பவனாவன்.

தேகத்தின் நான்கு பூதங்களின் உற்பவத்தையும், இவைகளின் அழிவையுங் கண்டவன் எவனோ அவன் ஆனந்தத்தையும் சுகத்தையும் தரும் அழிவிலா நிப்பானத்தைப் பெற பாத்தியதை உடையவனாவான்.

சுகவர்க்கம்

ஓ சகோதிரர்களே! சுகத்துடன் வாழ உங்களுக்கு மனம் வாய்க்குமேல் உங்களை வெறுப்பவர்களை நீங்கள் வெறுக்காமல் அவர்கள் மத்தியில் வாழ்வீர்களாக. உங்களை வெறுப்பவர்களின் மத்தியில் நீங்கள் வெறுப்பின்றி வாழ்வீர்களாக. துன்பத்தை அநுபவிப்போர் மத்தியில் நீங்கள் துன்பமின்றி வாழ்வீர்களாக.

சுகத்துடன் வாழ உங்களுக்கு மனம் வாய்க்குமேல் வஞ்சகமுள்ளோர் மத்தியில் நீங்கள் வஞ்சகமின்றி வாழ்வீர்களாக. வஞ்சகத்தால் வாதைப்படுவோர் மத்தியில் வஞ்சமின்றி வாழ்வீர்களாக.

காமமே ஓர் பெருந்தீ. பகையே ஓர் கொடிய விஷம். தேகமே ஒரு பெருந் துன்பம். ஆனால் பற்றற்று ததாகத நிலையை அடைவதே பரம சுகம்.

நோய்களில் கொடிது பசி. துன்பங்களில் கொடிது தேகம் என அவ்வந்தரங்க சத்தியத்தை அறிந்தோனெவனோ அவனே பரமசுகத்தைக் கண்டவனாவன்.

ஆரோக்கியமே பரமலாபம். திருப்த்தியே பெருஞ்செல்வம். நன்மார்க்க நம்பிக்கையே விசேஷ சம்பத்து. நிப்பானமே பேரானந்தம்.

துறவுபூண்டு சாந்தநிலையின் சுகத்தைக் கண்டவனெவனோ அவன் பயமும், பாபமுமற்றவனாய் நீதியில் சதாஜாக்கிரதையுடனிருந்து நீதியின் சுகத்தில் ஆனந்தித்திருப்பான்.

அரியர்களை (அறஹத்துக்களை)த் தரிசித்தல் புண்ணியம். அவர்களுடன் வாழ்தல் சதாசுகத்தைத் தரும். ஒருவன் கீழோர்களாம் துன்மார்ககர்களை தரிசியாதிருப்பானேல் அவன் சத்தியமாகவே சுகம்பெறுவான்.

கீழோர்களுடன் ஒருவன் பழகிவருவனேல் அவன் மிக்க துன்பத்தை அநுபவிப்பான். கீழோர்களிடத்தும், விரோதிகளிடத்தும் நேசம் பாராட்டல் சதா துக்கமே. மேலோர்களாம் நன்மார்க்கமுள்ளோரிடத்தில் ஒருவன் நேசம் பாராட்டி வருவனேல் அவன் தெளிவடைவதுடன் சுகம் பெறுவான்.

ஆகையால் ஒருவன் மேலோர்களிடத்தும், விவேகிகளிடத்தும், பண்டிதர்களிடத்தும், பொருமையாளரிடத்தும், போதனாசிரியர்களிடத்தும், அறஹத்துக்களிடத்தும் அணுகி பழகவேண்டும்.

மார்க்க வர்க்கம்

ஓ சகோதிரர்களே! மார்க்கங்களில் அரிய அஷ்டாங்க மார்க்கமே சிறந்தது. சத்தியங்களில் சதுர்வித சத்தியமே விசேஷித்தது. ஒழுக்கங்களில் காமமற்றிருத்தலே சிரேஷ்டம். மனுக்களில் அன்பின் மிகுத்த பார்வை யுள்ளோரே உத்தமமானவர். பரிசுத்தத்திற்கு வழி இதுவே, இதைவிட வேறுவழி கிடையா. இவ்வழியைப் பற்றிநில்லுங்கள். ஏனைய வழிகள் மாரனால் ஏமாற்றும் வழிகளே.

நீங்கள் இவ்வழியின் பிரகாரம் பழகிவருவீர்களாகில் துக்கத்தினின்று விடுபடுவீர்கள். சதையில் தைத்த முள்ளை பிடுங்கி எறிந்துவிடுங்கள்.

உங்களையே நீங்கள் சீர்படுத்திக்கொள்ளுங்கள். ததாகதர் போதிக்கும் ஆசான் இம்மார்க்கத்தை பின்பற்றி நடக்கும் அறிவுடையோனிடம் மாரன் அணுகான்.

அநுசரிக்க வேண்டியவை அஷ்டாங்கமார்க்கம்.

3. சம்யக் வசனா நல்வசனம்
4. சம்யக் கர்மந்தா நற்செய்கை
5. சமயக் அஜீவா நல்வாழ்க்கை 1. சீலம்நீதி.
6. சம்யக் வீரியா நல்ஊக்கம்.
7. சம்யக்ஸ்மிருதி நல்எண்ணம்.
8. சம்யக் சமாதி நல் அமைதி. 2. சமாதி மன ஆறுதல்
1. சம்யக்திருஷ்டி நற்காட்சி
2. சம்யக் சங்கல்ப நற்சிந்தை. 3. பிரஞ்ஞை ஞானம்.

விலக்கவேண்டியவை.

3. மிஸ்சாவசனா துர்வசனம்.
4. மிஸ்சாகர்மந்தா துற்செய்கை
5. மிஸ்சா அஜீவா துன்வாழ்க்கை 1. அசீலம் அநீதி
6. மிஸ்சா வீரியா துன்முயற்சி
7. மிஸ்சாஸ்மிருதி துன் எண்ணம்.
8. மிஸ்சா சமாதி மோஹம். மோஹம். 2. மோஹம்
1. மிஸ்சாதிருஷ்டி துற்காட்சி.
2.. மிஸ்சாசங்கல்ப துற்சிந்தை 3. அஞ்ஞானம்.

சதுர்சத்யம்.-1. துக்கசத்யா. 2. துக்கசமூத்ய சத்யா. 3. துக்கநிரோத சத்யா. 4. துக்க நிரோதாகாமினி பிரதிபதசத்யா.

நான்கு வாய்மெய்.- 1. துக்கம். 2. துக்கோற்பத்தி. 3. துக்க நிவாரணம். 4. துக்க நிவாரண மார்க்கம்.

மாரன்.- மாரன் அணுகான். 1. தன்ஹா-வேட்கை. 2. அறட்தி-குரோதம். 3. ராகா-காமம்.

உலகில் தோற்றும் பொருட்கள் யாவும் கெடும் என அறிந்தவன் துக்கத்தைக் கண்டு இஃதே அதற்கு மார்க்கமென அறிவன்.

மனோவாக்குக் காயத்தால் யாதொரு குற்றமும் செய்யாதிருக்கக் கடவன். இம்மூன்று வழிகளைத் திருத்தி நன்மார்க்கத்தை விருத்திசெய்து வருவனேல் அறஹத்துக்கள் அடையும் நிலையை அடைவான்.

ஓ! சகோதிரர்களே! மனோவாக்குக்காயத்தால் யாதொரு குற்றமுஞ் செய்யாதிருக்கக்கடவன். இம்மூன்று வழிகளைத் திருத்தி நன்மார்க்கத்தை விருத்திசெய்துவருவனேல் அறஹத்துக்கள் அடையும் நிலையை அடைவான்.

காயத்தால் தோற்றுவ மூன்று.-1. கொலை. 2. களவு. 3. காமம்.

வாக்கால் தோற்றுவ நான்கு. 4. பொய் 5. கோட் சொல்லுதல். 6. கடுஞ்சொல் 7. வீண் வார்த்தை

மனத்தால் தோற்றுவ மூன்று.- 8. துராசை. 9. படுபகை. 10. பொல்லாக் காட்சி.

எழுந்திருக்கவேண்டிய காலங்களில் எழாதவனும், ஒன்றுசெய்ய வேண்டிய காலங்களில் செய்யாதவனும், இளமெயும் வலிமெயுமிருந்தும் நிறம்ப சோம்பலும் மந்தபுத்தியுள்ளவனும் மனோதிடமற்றவனுஞ் சபல சித்தமுடையவனும், பேராசை ரூபியும், பெருந்திண்டிக்காரனும் தெளிவு பெரு மார்க்கத்திற்கு பாத்திரவானாக மாட்டான்.

காமமென்னுங் காட்டை வெட்டி சமமட்டமாக்கிவிடுங்கள். ஒரு மரமேனுங் வளரவிடாதீர்கள். காமமென்னுங் காட்டினால் விளையுந் தீங்கோ கொரூரமானது. காட்டையும் வேறோடே வெட்டி சமமாக்கிவிட்ட போதன்றோ பிக்குக்களே நீங்கள் பயமின்றி காட்டின்வழி செல்ல முடியும்.

எதுவரையில் ஒருவன் ஒரு ஸ்திரீயின் பேரில் அவாவை சிறிதளவேனும் செலுத்தி அந்த அவாவினின்று விட்டகலாதிருக்கின்றானோ அது வரையில் அவன் மனம் அடிமைத்தனத்தினின்று விலகாது. கன்றானது தன் தாயின் பாலை அடிக்கடி அருந்த ஆவல்கொள்ளுவது போலாகும்.

தன்ஹா வர்க்கம்

ஓ சகோதிரர்களே! அறிவிழந்தவனிடத்தினின்று உதிக்கும் அவாவானது கொடியைப்போல் படரும். அவன் காட்டிலுள்ள குரங்கானது ஒரு மரத்தைவிட்டு வேறொரு மரத்தைத் தாவி பிடிப்பதுபோல் ஒரு பிறவியினின்று மறுபிறவிக்குச் செல்வான்.

அவாவை வென்ற ஒருவனை உலகத்தார் வெல்லமுடியாது. துக்கமானது தாமரை இலையின்மேல் விழுந்த நீர் துளிகள் விழுந்துவிடுவதுபோல நீங்கிவிடும். ஒரு மரத்தை வெட்டிவிடினும் அதன் வேறிருப்பதால் திரும்ப வளருமன்றோ. வேறையே வெட்டிவிடின் மரம் உதிக்க ஏதுவுண்டா. அவா அற்றவிடத்து துக்கம் ஒழியும்.

அவாவை இன்பத்தின்வழியே ஒருவன் செலுத்துவானாயின் அவனை முப்பத்தியாறு கூர்கால்களால் கொண்டுபோகப்பட்டு தப்புவழியில் சிக்கின அவனை அலைகள் அடித்துச்செல்லும். (காமக்குரோதாதிகள்)

அக்கடற்கால்கள் பலவிடங்களில் ஓட காமக்குரோதாதிகள் என்னும் படர்கொடியானது முளைத்து நிற்கும். அப்படர்கொடி துளிர்த்து வருவதைக் காணில் அறிவால் அதன் வேறை வெட்டித்தள்ளுங்கள்.

ஜீவர்கள் கோறும் இன்பங்களின் பெருக்கமோ அளவிடக்கூடாததும், திருப்தியற்றதுமாயிருக்கின்றன. காமக்குரோதாதிகளால் சிக்குண்டு இன்பத்தை நாடுவதால் ஜீவர்கள் மாறி மாறி பிறப்பதும் இறப்பதுமாய் இருக்கின்றனர்.

ஜீவர்கள் அவாவால் செலுத்தப்பட்டு கண்ணியில் அகப்பட்ட முயல்போல் இங்குமங்கும் அலைகின்றனர். ஜீவர்கள் பலபல பற்றுக்களால் கட்டுண்டு பற்பல துன்பங்களை பலப்பல பிறப்புகளில் அநுபவித்துமாளாமல் பிறந்தும் இறந்தும் வருகின்றனர்.

ஜீவர்கள் அவாவால் செலுத்தப்பட்டு கண்ணியில் அகப்பட்ட முயல்போல் இங்குமங்கும் அலைகின்றனர். ஆகையால் சகோதிரர்களே! காமக்குரோதாதி களினின்று விலகி அவாவிற்கு இடந்தராது நில்லுங்கள்.

ஓ! சகோதிரர்களே! இரும்பாலாய விலங்குகளை ஒருபொருட்டாக மதியார். மனைவி, புத்திரர்கள், பொன் இவைகளினாலாய விலங்கே மிக்க பயங்கரமானது என்பர். அறிவுடையோர்களால் பயங்கரமானதென மதிக்கப்படும் விலங்கினின்று விடுபடுவது மிக்க கடினம். ஆயினும் அதினின்று விடுபட்டால் ஜீவர்கள் உலகைத் துறந்து கவலையற்று அவாவற்று இன்பத்துக்கிடந்தராது நிற்பர்.

சிலந்திப்பூச்சானது தன் நூலால் நெய்த வலையின் மத்தியிலிருந்து ஈயாவது, பட்டுப்பூச்சாவது தனது வலையில் விழுந்தால் திடீரென அவைகளின்பேரில் பாய்ந்து அவைகளின் சாரத்தை உரிந்துவிட்டபின் பழைய இடத்திற்கு சென்று தங்குவதுபோல் காமவலையில் அகப்பட்டவர்கள் பொறாமையால் சீரழிந்தும், கோபத்தால் பைத்தியம் பிடித்தும் அவர்களாலேயே தேடிக்கொண்ட அவாவென்னும் வெள்ளம் அடித்துச்சென்று கடக்க முடியாது விழிப்பர். அவாவை அறுத்துவிடுவார்களாயின் கடையில் உலகைத்துறந்து கவலையற்று இன்பத்துக்கிடந்தராது நிற்பர்.

ஒருவன் சந்தேகத்தால் அலைபவனாகவும், காமமுள்ளவனாகவும், இன்பத்திற்கே அண்ணாந்திருப்பவனாகவும் இருப்பானாயின் அவனது அவாவானது விருத்தியாகி அவாவின் விலங்கால் கட்டுப்பட்டவனாவான்.

பூரண ஸ்திதியை அடைந்தவனும், பாபமற்றவனுமாய் இருப்பவன் எவனோ அவன் வாழ்க்கையின் முட்களை உடைத்தெரிந்தவனும் இனி தேகத்துடன் வாழ பாத்தியதை உடையவனும் ஆகமாட்டான்.

சகலத்தையும் வென்ற ஒருவன் சகலமும் அறிந்தவனாவன். சகலத்தையும் ஒழித்த ஒருவன் சகல அவாக்களினின்று விலகினவனாவன். சகலமும் உணர்ந்து ததாகதனான ஒருவன் தான் கண்ட காட்சியை யாவருக்குப் போதிப்போமென தேடித்திரிவன்.

சகலதானங்களிலும் நிதானமே சிரேஷ்டம். சகல இன்பங்களிலும் நீதியின் இன்பமே விசேஷித்தது. ஆனந்தங்களில் ஈகையிலும், அன்பிலும் ஆனந்திப்பதே துக்கம் ஒழிந்துபோம்.

களைகளால் பயிர்கள் நாசமடைகின்றன. காமத்தால் ஜீவர்கள் அழிகின்றனர். ஆகையால் காமத்தையேவெட்டி எறிந்து விடுவதே சுகத்தைத் தரும்.

களைகளால் பயிர்கள் கெடுகின்றன. பொறாமையால் ஜீவர்கள் நாசமடைகின்றனர். ஆகையால் பொறாமையற்று சாந்தத்துடன் வாழ்வதே பெரும்பலனைத் தரும்.

களைகளால் வயல்கள் நாசமடைகின்றன. பெருமையால் ஜீவர்கள் அழிகின்றனர். ஆகையால் பெருமையற்று சமதிருஷ்டியுடன் வாழ்வதே பரமசுகத்தைத் தரும்.

களைகளால் வயல்கள் கெடுகின்றன. துராசையால் ஜீவர்கள் நாசமடைகின்றனர். ஆகையால் துராசையற்றிருப்பதே சுகத்தை விளைக்கும்.

புட்பவர்க்கம்

ஓ! சகோதிரர்களே! வண்டானது மலரிலுள்ள மணத்தையேனும் அதன் அழகையேனுங் கெடுக்காமல் தேனை உண்டு செல்லுவதுபோல் ஜீவர்கள் உலகத்தில் வாழ்க்கைப் பெறவேண்டும்.

விவேகி ஒருவன் அயலாரின் தாருமாறான நடத்தைகளைக் கண்டாயினும் அவர்களின் குற்றாகுற்றங்களை நோக்கியாயினுங் கவலையுராமல் தான்செய்த குற்றங்களைப்பற்றியும், தன்னுடைய சோர்வைப்பற்றியும் கவலையுறுவான்.

ஒரு அழகிய புஷ்பமானது பலவருணங்கள் அமைந்தும் மணமற்றிருப்பதுபோல் ஒருவன் இன்பமானதும் பிரயோஜனமற்றதுமான போதனைகளைக்கூறி அதன்படி நடவாதிருப்பன்.

ஒரு அழகியபுஷ்பமானது பலவருணங்கள் அமைந்தும் பரிமளிப்பதுபோல் ஒருவன் இன்பமாகவும், பிரயோஜனமுள்ளதுமான போதனைகளைக் கூறி அதன்படி நடப்பவனாகியும் இருப்பான்.

பலபுஷ்பங்களைக்கொண்டு ஒரு மாலைக்கட்டுவதுபோல் பல நற்கருமங்கள் செய்துவந்தவன் புண்ணியபுருஷனாக அவதரிப்பான்.

புஷ்பங்களின் மணமானது காற்றின் முகத்தில் அதிதூரஞ்செல்லாது.

ஆனால் புண்ணியபுருஷர்களின் மணமானது காற்றின் முகத்தில் அதிதூரமாகச்செல்லும் புண்ணியன் மணம் எங்கும் வியாபித்து வீசும்.

சந்தணம், தாமரைப்புஷ்பம் இவைகளின் கந்தமோ மிக்க மதிக்கத் தக்கது. ஆனால் இவ்வாசனைகளுக்கெல்லாம் அதீதப்பட்டது புண்ணியத்தின் மணமே.

சந்தணம், தாமரைப்புஷ்பம் இவைகளினின்று வெளிவரும் கந்தமோ அற்பமானது. ஆனால் புண்ணியர்களின் மணமோ அளவிடக்கூடாததுமான தெய்வ மணமாம்.

புண்ணிய மணம் வீசும் பெரியோர்களிடத்தில் மாரன் அணுகான்.

சேற்றினின்று பரிமளத்துடன் தாமரை முளைத்து இன்பந்தருவது போல் பேரவாவாகும் இருளில் அறிவுமயக்கி நிற்கும் மக்களுக்கு புத்த தன்மமாம் மெய்யறந் தோன்றுங்கால் பேரறிவு விளங்கும்.

பாபவர்க்கம்

ஓ! சகோதிரர்களே! கெட்ட எண்ணங்களைக்கொள்ளாமலும், கெட்ட செய்கைகளைச் செய்யாமலும் ஒழித்தலே நலமாகும். ஏனென்பீரேல், சொற்பநேரத்தில் கெட்ட எண்ணங்களை எண்ணுவோனும், கெட்ட செய்கைகளைச்செய்வோனும் நீடியதுக்கத்தை அநுபவிக்கின்றான்.

நல்ல எண்ணங்கொள்ளுவோனும், நல்ல செய்கைகளைச் செய்வோனும் சதா சுகத்தை அநுபவிக்கின்றான். அவன் தன் நற்செய்கைகளுக்கு ஆனந்தமடைவான்.

பாபிக்குக் குற்றம் தேனைப்போலிருக்கும். அதன்பலனை உணரும் வரையில் இன்பமாகவே நோக்குவான். அதன் பலனை உணர்ந்தபின்பு பாபமென்று காண்பான். அதுபோல் புண்ணியவான் தன்மத்தின் பலனை உணரும்வரையில் அதனை பாரமாகவும் கஷ்டமாகவும் நோக்குவான். அதன் பலனும் சுகமும் விளங்கியபோது ஆனந்தத்தைக்கண்டடைவான்.

உங்களிடத்தில் தீவினை அணுகாதென்று அஜாக்கிரதையில் இருக்க வேண்டாம். சிறு துளிகள் சேர்ந்து பெருவெள்ளமாவதுபோல் சிறுக சிறுக சேர்ந்த தீவினைகள் பெருகி நிறம்ப துக்கத்தில் ஆழ்த்திவிடும்.

உங்களிடத்தில் நன்மெய் அணுகாதென்று விலகி நிற்காதீர்கள். உள்ள நன்மெயின் செயல்களே சிறுதுளிகள் பெருவெள்ளமாவதுபோல் நாளுக்குநாள் பெருகி உங்களை நிறம்ப சுகத்தில் மூழ்கவைக்கும்.

ஓ சகோதிரர்களே! விழித்தவனுக்கு இரவு நீடித்திருக்கும். அயர்ந்தவனுக்குப் பிரயாணம் தூரமாயிருக்கும். அதுபோல் உண்மெய் உணர்ச்சியில்லாத அவிவேகிக்கு வாழ்நாள் கஷ்டமாயிருக்கும்.

வழிப் பிரயாணி ஒருவன் தனக்கு மேலான அந்தஸ்துடைய வனுடனேனும், தனக்கு சமானமானவன் உடனேனும் பிரயாணஞ் செய்யக் கடவன். வஞ்சகனுடனேனும், வழிபரிப்போனுடனேனுஞ் செல்லலாகாது.

இவர்கள் என்மக்கள் இவர்கள் எனக்கு சொந்தம் என்றும் இந்த சொத்து எனக்கு சுயாதீனம் என்றும் எண்ணுகிற எண்ணமே ஒரு அவிவேகியை வாதைப்படுத்தும். தானே தனக்கு சொந்தமல்லாத போது மக்களும் சொத்துக்களும் எவ்விதத்தில் சொந்தமாவார்கள்.

தன்னுடைய அவிவேகத்தை அறிந்த அவிவேகி அதுவரைக்கும் விவேகி யாவான். தன்னை விவேகியென்று மதித்த அவிவேகி யதார்த்தத்தில் அவிவேகியாவான்.

அவிவேகி செய்த கெட்ட செய்கையின் பலன் உணரும் வரையில் தேனைப்போல் மதிப்பான். அதன் பலனை உணர்ந்தபின் அதனை அநு பவிப்பதுமன்றி துக்கப்படுவான்.

விவேகி ஒருவன் மாதத்துக்கொருமுறை விட்டாது புல்நுனி அளவு அன்னம் புசித்து வந்தாலும் நீதி மார்க்கத்தில் நடக்கும் ஒருவனுக்கு பதினாறில் ஒருபாகமேனும் சமமாக மாட்டான்.

துற்செய்கையானது பாலைக்கறந்தவுடன் கெடாதிருப்பதுபோல் இருக்கும். அனல்கொண்டு சாம்பலால் மூடப்பட்ட தீப்போல் துற் செய்கை யானது தொடர்ந்தே நிற்கும்.

அவிவேகி ஒருவன் தான் செய்த துற்செய்கையின் பலனை அறிந்தபோது துக்கப்படுகின்றான். துக்கப்படுங்கால் அவனிலிருந்த துலக்கம் நசிய துக்கமானது அவனில் பதிந்துவிடுகின்றது.

அவிவேகி ஒருவன் தன் அவிவேகத்தை உணர்ந்தபோது கீர்த்திக்கும் புகழ்ச்சிக்கும் நாளைக் கழிக்காது நிருவாண பாதையைக் கடைபிடிக்க முயல்வான்.

நியாயவர்க்கம்

ஓ! சகோதிரர்களே! கொடூரமாக ஒருவன் காரியத்தை நிறை வேற்றுவானாயின் அவன் நியாயவானவனோ? இல்லை. இது தகுந்தது இஃது தகாததென பகுத்தறியும் சக்தியும் ஏனையோர்களை அறிவுடன் செலுத்தும் மார்க்கமும் அறிந்தவன் எவனோ அவனே நியாய முடையவன். தன்மவழியும், நீதிநிறையும் வாய்த்து நீதியுடனும் அறிவுடனும் நடத்துபவன் எவனோ அவனே நியாயமுடையவன்.

ஒருவன் மிக்க சாமர்த்தியமாய் பேசுவதனால் கலைவல்லோனாவனோ? இல்லை. பொறாமெயும் பயமுமற்ற பொருமெயுடன் இருப்பவன் எவனோ அவனே கலைவல்லோனாவன்.

ஒருவன் மிக்க சாமர்த்தியமாய் பேசுவதினால் தன்மத்தை உணர்ந் தவனாகான். ஒருவன் சிறிதளவு தன்மத்தை அறிந்து அதன்படி ஒழுகி வருவானாகில் அவனே தன்மம் தெரிந்து நீதியில் நடப்பவனாவான் .

உரோமம் நரைத்திருப்பதால் ஒருவனை பெரியோனெனக் கூறமுடியாது. வயதில் பெரியவனாய் இருக்கலாம். ஆனால் ஆசை நரைக்காவிடில் வயதால் பெரியோனென அழைப்பது வீணே.

எவனிடத்தில் சத்தியம், ஒழுக்கம், நட்பு, அடக்கம், மத்தியபாதை, பரிசுத்தம் இவைகள் அமைந்திருக்கின்றதோ அவனே பெரியோன்.

பொறாமெயும், பேராசையும் நாணயமும் பொருந்திய ஒருவன் அதிகம் பேசுவதால் மதிப்படைய மாட்டான். பொறாமெயும், பேராசையும், நாணயமும் பொருந்திய ஒருவன் மிக்க அழகுடையவனாக இருப்பதாலும் மதிப்புடைய மாட்டான்.

தலையைமுண்டனஞ்செய்து சீலமற்று பொய்பகருவானாகில் அவன் சிரமணனாகமாட்டான். அவாவும், பேராசையும் மேற்கொண்ட ஒருவனை எவ்விதமாக சிரமணனென அழைக்கலாம்.

சகல பாபங்களையும் தன்னில் அகற்றி அவைகளுக்கு இடந்தராது அடக்கமுடையவனாய் இருப்பவன் எவனோ அவனே சிரமணன்.

பிட்சாபாத்திரம் ஏந்தி ஏனையோரிடத்தில் பிச்சை கேட்பதால் பிக்ஷுவாகமாட்டான். தன்மத்தில் பூர்த்திபெற்று பரிபூரண படித் தரத்தில் பழகிவருபவனும் பிச்சை கேட்க வருபவன் எவனோ அவனையே மோன முடையவன் என்றும் முனி என்றும் அழைக்கப்படும்.

கொலை செய்யாதிருப்பதால் ஒருவன் அறஹத்தாக மாட்டான். எவனொருவன் ஜீவர்கண்மீது காருண்யத்தை செலுத்துகின்றானோ அவனே அறஹத்தாவான்.

ததாகதர் சீலம், தபயோகம், தனிமெயாய் படுத்திருத்தல் இவைகளால் மட்டும் சுகத்தைப் பெறவில்லை. இந்த ரகசியத்தை உலகம் அறியாது. சகோதிரர்களே! ஜாக்கிரதையாயிருங்கள். அவா ஒழியுமட்டும் ஒன்றும் பெறப் போகிறதில்லை.

ஓ! சகோதிரர்களே! ஒருவன் தன்னை தீவைப்போல் ஆக்கிக் கொள்ளட்டும், தன்மத்தில் சிந்தனையை செலுத்தி ஞானியாகட்டும், சகல பாபகன்மங்களையும் ஊதிவிடட்டும், ஊதிவிட்ட அந்தக்ஷணமே அரிய நிலையைப் பெற்றவனாவான்.

ஒருவன் தன்னை தீவைப்போல் ஆக்கிக்கொள்ளட்டும், தன்மத்தில் சிந்தனையை செலுத்தி ஞானியாகட்டும், சகல பாபகன்மங்களை ஊதி விடட்டும், ஊதிவிட்ட அந்தக்ஷணமே மறுபடியும் பிறப்பதற்கும் இறப்பதற்கும் ஏதுவில்லாமற்போம்.

வெள்ளியின் அசுத்தத்தை சிறுகசிறுக தினேதினே சுத்தி செய்தல்போல் அறிவுடைய ஒருவன் தன்னிடத்திலுள்ள பாபகன்மங்களை சிறுகசிறுக தினேதினே விட்டொழிக்கட்டும்.

எப்படி இரும்பினிடத்திலிருந்து துரும்பு சேர்ந்து விருத்தியாகி இரும்பையே கெடுக்கின்றதோ அதுபோல் தவறுதலையுடையவன் தன் சொந்த தவறுதலால் பாபகன்மத்துக்கீடுபடுகின்றான்.

தன்மத்தை தினகாலஞ் சிந்தியாதிருத்தலே அன்றாடம் கறைப்படுத்துகிறது. சுறுசுறுப்பாயில்லாதிருத்தலால் குடும்பிகளை கறையாக்குகிறது. சோம்பலாயிருப்பதால் தேகத்தை கறையாக்குகிறது. அசட்டையாயிருப்பதால் பெருத்த காரியத்தை கறையாக்குகிறது.

துஷ்டசெய்கையே பெண்களுக்கு கறையாயிருக்கின்றது. உபகாரிக்கு பேராசை கறையாயிருக்கின்றது. உலகில் செய்யும் சகல பாப கன்மங்களும் கறைப்படுத்துவனவாய் இருக்கின்றன.

ஓ! சகோதிரர்களே! இந்தக் கறைகள் யாவற்றையும்விட பெருத்தது அறியாமெய் என்னும் கறையே இந்தக்கறையினின்று விலகி கறைபடாதிருக்க தப்பித்துக்கொள்ளுங்கள்.

வெட்கமற்றவனுக்கும், பெருமெய் பாராட்டுபவனுக்கும், தீங்கு செய்பவனுக்கும் பழிப்பவனுக்கும் துணிகரமுள்ளவனுக்கும் பகைக்கத்தக்க வனுக்கும் உலகின் வாழ்க்கை மிக்க எளிதாயிருக்கும்.

பரிசுத்தத்தையே நாடியும், தன்னயம் பாராட்டாமலும், அடக்கமும், குற்றமற்றும், அறிவுடனுமுள்ள ஒழுக்க நடையிலுள்ள ஒருவனுக்கு உலகின் வாழ்க்கை மிக்க கடினமாயிருக்கும்.

ஜீவவதை செய்தும், பொய்சொல்லியும், களவாடியும், விபச்சாரம் செய்தும், மயக்கத்தைத்தரும் மதுபானம் அருந்தியும் ஒருவன் வருவானாகில் அவன் தான் அடையப்போகும் பெரும்பேற்றின் அஸ்திபாரத்தையே பெயர்த்துவிடுகின்றான்.

அளவுகடந்து செய்யும் துற்செய்கையானது செட்ட ஸ்திதிக்குக் கொண்டுபோகும் என்று உணருங்கள். பேராசையும், பொல்லாங்கும் வெகு நாளைக்கு நிலைக்காதென்று கண்டு ஜாக்ரதையாயிருங்கள்.

காமமே ஓர் பெருந்தீ, கோபமே ஓர் கூறான அம்பு, அறிவீனமே ஓர் கண்ணி, பேராசையே ஓர் பெருமழையாய் இருக்கின்றது.

பிறர் குற்றத்தை உணர்வது எளிது. தன் குற்றத்தை உணர்வது அறிது. அயலான் குற்றத்தை பதரைப்போல் பிடுங்கிக்காட்டுவான். தன் குற்றத்தை நஞ்சரவம் போல் ஒளிப்பான்.

ஆகாயமார்க்கமாக ஓர் பாதையுங் கிடையா. வெளியரங்கமான செய்கையால் ஒருவன் சிரமணனாகமாட்டான். உலகம் பெருமெயில் ஆனந்திக்கின்றது. அறவணவடிகள் பெருமெயற்றிருப்பர்.

ஆகாயமார்க்கமாக ஓர் பாதையுங் கிடையா. வெளியரங்கமான செய்கையால் ஒருவன் சிரமணனாகமாட்டான். நிலையாக உள்ள ஜீவர்கள் கிடையா. அறவணவடிகளே எக்காலும் உளர்.

உலகில் மனிதர்களாய் பிறப்பதே அரிது. அதில் நீதிமான்களாய் நடப்பது அதிலும் அரிது. அதிலும் சத்திய தன்மத்தைக் கேட்டல் அரிது அதிலும் பிறப்பை வென்று நிப்பாணம் பெறுவது அதினும் அரிது.

சம்மா சம்புத்தவர்க்கம்

ஓ! சகோதிரர்களே! மனுக்களாய் பிறப்பது கடினம், மானுஷீக தன்மம் வாய்ப்பது கடினம், சத்திய தன்மத்தைக் கேட்பது கடினம், பரிபூரணநிலையைப் பெறுவது கடினம்.

பாபஞ்செய்யாதிருத்தல், நன்மெய்க் கடைபிடித்தல், இதயத்தை சுத்திசெய்தல் இஃதே பகவனது போதனை.

சாந்தமாய் இருத்தலே அகோரதபம் செய்வதாகும். பலநாள் துன்பத்தை அநுபவித்தல் பேரின்பத்தைப் பெற ஏறும். ஏனெனில் பல ஜீவர்களைப்பற்றி கேடுநினைத்து வந்தவன் சிரமணனுமல்ல. பழிகூறாமலும், தையற்சொற் கூறாதும் புலனையும், மனதையும் ஒடுக்கி நீதியில் நின்று மிதமின்றி உண்ணாமல் தனிமெயாய் உட்கார்ந்து உறங்கும்போதும் விழித்திருக்கும்போதும் மேலான

எண்ணங்களில் சித்தத்தை செலுத்தல்வேண்டும். இவைகளே பகவனது போதனை.

காம இச்சைக்கு திருப்திசெய்தல் கூடாதகாரியம். தங்கப் பொடிகளை மழைபோல் சொரிந்தாலும் திருப்திசெய்ய முடியாது. காம இச்சையின் அளவையும் அதனால் நேரும் துன்பத்தைக் கண்டறிந்தவன் எவனோ அவனே அறிவுடையோன்.

சகல அவாக்களையும் பற்றற்று நிற்கும் துறவிக்கு பற்றற்று நிற்றலிலேயே ஆனந்தமயமாய் இருப்பான். உலகில் ஜீவர்கள் நாடி நிற்கும் ஆனந்தத்தில் திருப்தியற்றவனாய் இருப்பான்.

ஜீவர்கள் பயத்தால் பல இடங்களில் சென்று அடைக்கலம் புகுகின்றனர். மலைகளுக்கும், காடுகளுக்கும் செல்கின்றனர். தோப்புகளையும், மரங்களையும் தேடிச் செல்கின்றனர். ஆனால் இவ்வகைத்தான அடைக்கலம் சுகத்தைத் தராது. ஏனெனில் அங்கு சென்றும் துக்கத்தினின்று விடுபடாமலிருக்கின்றான்.

எவனொருவன் புத்ததன்ம சங்கமென்னும் மும்மணியில் அடைக்கலம் பெற்று துக்கம், துக்கோற்பத்தி, துக்கநிவாரணம், துக்கநிவாரணமார்க்கம் இன்னவை என அறிந்து துக்கத்தினின்று விடுவிக்கும் பரிசுத்த அரிய அஷ்டாங்கமார்க்கத்தை அனுஷ்டிக்கின்றானோ அவனே மேலோன். இது தான் மேலான அடைக்கலமும் பயங்கரமற்றதுமான அடைக்கலமும் பெறல். இவ்வகையான அடைக்கலம் பெறுவதால் ஜீவர்கள் துக்கத்தினின்று விடுபட்டவர்களாவார்கள்.

பேரவாவை ஒழித்தலே சுகவழியும் சிறந்த தருமமுமாகும்.

எல்லா தருமங்களைப் பார்க்கினும் புத்த தருமமென்னும் மெய்யறமே சிறந்தது. அம்மெய்யறமே மெய்ப்பொருளை விளக்கும். அம்மெய்ப்பொருள் விளக்கமே மெய் இன்பமாம் பேரின்பம் பயக்கும். அப்பேரின்பமே துக்கநிவாரணமாகும்.

பேரவாவாகிய நதியைக்கடந்து அக்கரையாம் நிருவாணமடைபவர்கள் உலகில் சிலரே. ஆயினும் பலரோ அந்நதியின் கரையோரங்களில் அங்குமிங்கும் ஓடுகிறவர்கள். ஆனால் அந்நதியைக் கடந்தவர்களுக்குத் தான் துக்கமில்லை. சேற்றினின்று பரிமளத்துடன் தாமரை முளைத்து இன்பந்தருவதுபோல் பேரவாவாகும் இருளில் அறிவுமயங்கி நிற்கும் மக்களுக்கு புத்ததன்மமாம் மெய்யறந்தோன்றுங்கால் பேரறிவு விளங்கும்.

பொய்யர்கள் மத்தியில் மெய்யர்களாக வாழ்வீர்களாக. பொய்யர்கள் பாதையை உங்கள் மெய்யில் விளக்குவீர்களாக.

கொலைஞர்கள் மத்தியில் சீவகாருண்யர்களாக வாழ்வீர்களாக. கொலைஞர்கள் மத்தியில் உங்கள் காருண்யத்தை விளக்குவீர்களாக.

ஓ! சகோதிரர்களே! காமியர்கள் மத்தியில் நிஷ்காமிகளாக வாழ்வீர்களாக. மதிமயங்குங் கூட்டத்தோரின் மயக்கையகற்றி வாழ்வீர்களாக.

களவு செய்வோர் மத்தியில் நீங்கள் களவின்றி வாழ்வீர்களாக. களவுபொருட்கிட்டினும் அதைக் கண்காணாது அகலுவீர்களாக.

அன்பர்களே! பகலில் சூரியனும், இரவில் சந்திரனும், சுவசத்தால் போர்வீரனும், யோசனையால் ஞானியும் பிரகாசிப்பதுபோல் ததாகதர் இரவுபகலற்றவிடத்தும், சதாவிழிப்புள்ளோர் அகத்தும் பிரகாசிக்கின்றா ரென்று தனது தன்மபாதகீதையை நிறுத்தினார்.

சூளாமணி

ஒளியாகி உலகாகி நீ விரிந்தாய் என்கோ
உலகெலா நின்னொளியினுள் உள்ளடங்கிற்றென்கோ
வளியார உலக நீ யான்கின்றா என்கோ
வமருலகு தானின்ன தடியடைந்ததென்கோ
விளியாத மெய்ப்பொருளை நீவிரித்தாய் என்கோ
நீவிரித்தவாறே மெய்ப்பொருள் விரிந்ததென்கோ
தெளியாமல் இல்லை நின் திருவடிகன் மெய்மெய்
தெளிந்தாலுஞ் செவ்வனே தெரிந்துரைக்கலாமே.

தருமராஜனானவர் தன்மபாத போதத்தை இருவகையால் விளக்கி ஒவ்வொருவர் இதயமும் உருகி அன்பு ததும்ப போதித்தபோது சருவ சீவர்களின் உள்ளங்கள் யாவும் பரவசம் உற்றதுமன்றி அவர் பாதம் படிந்திருந்தக் கல்லும் உறுகி கமலபாத ரேகைப்பதியப்பெற்றது.

அருங்கலைச்செப்பு - சொற்சுவைபத்து

கல்லுமுருகிக் கமலத்தைப் பெற்றதெனில், சொல்லுமுருகாததென்.

உதயகாலத்தில் உச்சிமலை ஏறி பதினைந்து நாழிகை வரையில் தன்மபாதத்தை விளக்கியபோது அவரை சுற்றிலும் இருந்த மக்கள் யாவரும் தங்கள் தங்கள் சிந்தைகள் யாவையும் வேறு செலுத்தாது ததாகதர் போதத்தை நோக்கி நின்றவர்களாதலின் அவர்போதம் நின்றவுடன் கலைந்து தாகவிடாயின் மிகுதியால் தவிக்கலாயினர்.

அவர்கள் தவிப்பை உணர்ந்த அண்ணல் தனது ஏகசடையைக் கரத்திலேந்தி நீட்டியபோது அதனின்று பெருகிய நீர்ப் பிரவாகமாய்ப் பரந்து சகல சீவர்களும் பருகி விடாய்தீர்ந்ததுகள்.

வீரசோழிய உதாரணச் செய்யுள்

குறியாரெனவே புனலின் மீ / துறுதாமரைமேல் உரைவார் தா
நெறியார் சடையாய் நின்பாதம் / அறிவார் இனி யார் அறிவாரே.
புரிவுள சடையும் புரிவுள / சடைமேற் புனலும் பிறழுமே.

அருங்கலைச்செப்பு - காக்கல்பத்து

வினைதீர்த்தான்தாகவிடாய்தீர்த்தான் கங்கை
முனைபேர்த்தானன்றே முதி.

சீவகசிந்தாமணி

இலங்க வாழியி நான்களிற்றீட்டம்போல்
கலங்கு தெண்டிரை மேய்ந்து கணமழை
பொலங்கொள் கொன்றையினான் சடைபோன் மின்னி
விலங்கல் சேர்ந்து விண்ணேறி விட்டார்த்தவே.

பாறை எங்கும் கங்கைப்பிரவாகமுற்றிருப்பதைக் கண்ட கருணாகரன் அங்குள்ள அன்பர்களைக் கொண்டு அவ்விடம் பரவும் அருவி நீரோடையை அடிவாரத்தில் கொணர்ந்து சகலசீவர்களுக்கும் உதவும்படி துவாரமிட்டு மலையின் அருவிநீர் பூமியில் வற்றாமல் ஓடி சீவர்களைக் காக்கும்படி செய்துவிட்டார்.

அம்மலையில் செய்த ஜலதாரை வழிக்கு பகவன் பெயரில் ஒன்றாகிய அறித்துவாரமென்னும் பெயரைக்கொடுத்ததுமன்றி அக்கங்கை நதி பெருகி ஓடுதற்கு கங்கை நதி என்றும் புத்தபிரானே அதற்கு ஆதாரமாய் இருந்தபடியால் அவரை கங்கை ஆதாரனென்றும் போற்றினார்கள்.

வீரசோழிய உதாரணச் செய்யுள்

அம்பொற் பணைமுகத்துத் திண்கோட்டணிநாகம்
வம்புற்றவோடை மலர்ந்திலங்க - வும்பர்
நவம்புரியு நாண்மதியுங் கங்கையு நண்ணி
தவம்புரிவார்க்கு இன்பந்தரும்.

சிலப்பதிகாரம்

போதித்தானம் புரிந்தறங் கொள்ளவு,
மென்வாய்க் கேட்டோர் இறந்தோர் உண்மையி
னன்னீர்கங்கையாடப்போந்தேன்
வாடகமாடத் தரியுயில் அமர்ந்தோன்
சேடங்கொண்டு சிலர்நின்றேத்தத்
தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச்சேவடி. மணிமுடிவைத்தல்
முடிவளையுடைத்தோன் முதல்வன் சென்னி என்
றிடையுடைப் பெருமழை தெய்தா தேகப்.

மணிமேகலை

செங்கதிர்ச்செல்வன் திருவறம் விளக்குங்
கஞ்சை வேட்கைக் கரந்தாண்ட
அமரர் முநிவன் அகத்தியன் தனாது.

இத்தகைய ஜடாபாரத்தில் தோன்றிய கங்கை என்னும் மகத்துவத்தைக்கொண்டு சகலதேசத்தோர்களும் அவற்றை தரிசிப்பதுடன் தன்ம சங்கத்தோர்களும் பூரணச்சந்திர நாள்நோக்கி அவ்விடம் சென்று தங்கள் தவத்தையும் முடிக்க ஆரம்பித்துக்கொண்டார்கள்.

ஆதிநாள் அறக்கதிர் விளக்கிய ஒப்பிலா அப்பன் அருமொழியை அநுசரித்தே பின் அறிவுரைச் சந்ததியாரும் திரிமந்திராலோசனை விளக்கி இருக்கின்றார்கள்.

சிலப்பதிகாரம்

தெய்வந் தெளிமின் றெளிந்தோர் பேணுமின்
பொய்யுரை யஞ்சுமின் புறஞ்சொற் கூறன்மின்
ஊனூன் அகற்றுமின் உயிர்கொலை யஞ்சுமின்
தானஞ் செய்மின் றவம்பல தாங்குமின்
செய்நன்றி மறவன்மின் றீனட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருண்மொரு நீங்கன்மின்
அறவோ ரவைக்கள மகலா தணுகுமின்
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை யஞ்சுமின் பிழையுயி ரகலுமின்
அறமனை காமி பொல்லவை கடிமின்
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியம் விரகினி லொழிமின்
இளமெயுஞ் செல்வமும் யாக்கையு நிலையா
வுள்ளநாள் வரையீ தொல்ல லொழியாது
செல்லுந் தே அத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீ ரீங்கென.

மலைமீதேறி போதித்த தன்மபாத அன்பின் மிகுதியும், அளவு படா நீதியும், ஆற்றலளிக்கு நெறியும், கல்லுறுகப் பதிந்தக் கமலபாதத்தால் விளங்கியது மன்றி அவர் கருணைமிகுதியால் பொழிந்த சடாபார நீரின் பெருக்குமே கங்கை நதிக்கு ஆதாரமானதும், நீரருவிக்குத் திறந்தவழியே அறித்துவாரம் என்னும் பெயர்பெற்றதுமாகிய நித்தியதன்மத்தை நிலைக்கச்செய்து மலையின் சிகரத்திற்கும் அடிவாரத்திற்கும் மத்தியில் பொதியை வியாரம் நிருமித்து அகஸ்தியரைப் பிரதம குருவாக வகித்து மெய்யறத்தை வளர்க்கச்செய்தார்.

பாலி பாஷையில் பொதியை என்பது மலையைத் துளைத்து போதிய அறைகள் நிருமிப்பதேயாம்.

மலையினின்றிழியும் சலதாரையாம் அறித்துவாரம் ஏற்பட்டதும் அழியா கங்கை நதி உண்டாயதும் கற்பாறையில் கமலபாதம் பதிந்ததுமாகிய அறச்செயல்கள் தேசமெங்கும் பரவி பகவன் தந்தையாகிய சுத்தோதயன் அல்லது மண்முகவாகென்னுஞ் சக்கிரவர்த்திக்கு எட்டியவுடன் முத்திரைமோதிரம் ஈய்ந்து வேவுகர்களை விடுத்து மைந்தனை அழைத்துவரும்படி ஆவல்கொண்டான்.

சக்கிரவர்த்தி வார்த்தையை சிரமேற்கொண்ட வேவுகர்கள் பல நாடு நகரங்களையும் நதிகளையுங் கடந்து பொதியசாரலை அடைந்து கங்காதரனை அணுகி கமலபாதத்தை வணங்கி ஐயனே! நமது சக்கிரவர்த்தியார் தம்மெய்க் காணவேண்டும் என்னும் அவாவின் மிகுதியால் எங்களை அநுப்பியிருக்கின்றார் தாம் வந்து தந்தைக்குத் தரிசனந்தரவேண்டும் என்று வேண்டி நின்றார்கள்.

அவற்றை வினவிய கோபாலன் ஆனந்தமுற்று நமது சக்கிரவர்த்தியார் எம்மெய்க் காணவேண்டிய ஆவலிலிருக்கின்றபடியால் ததாகதன் தடையின்றி வருவேன் என்று எழுந்து பிச்சாபாத்திரத்தைக் கையில் ஏந்தி வேவுகர்களைப் பின்தொடர்ந்தார்.

வேவுகர்கள் சக்கிரவர்த்தித் திருமகன் யாதொரு வாகனமுமின்றி கால்நடையில் வருவதைக்கண்டு கண்கலங்கி கமலாசனனே, கருணாகரனே கங்கை ஆதாரனே உமது கமல பாதம் புழுதியில் நடக்கவும் அதனை யாங்களை காணவும் என்ன கன்மஞ் செய்தோமோ என்று கலங்கினார்கள்.

கங்கை ஆதாரன் வேவுகர்களை நோக்கி அன்பர்களே! கலங்காதீர்கள். ஒருகால் ஓடத்தை வண்டி ஏற்றிக்கொண்டு செல்லுவதைக் கண்டிருக்கின்றீர்கள்.

மற்றொருகால் வண்டியை ஓடம் ஏற்றிக்கொண்டு செல்லுவதைக் கண்டிருக்கின்றீர்கள், ஆதலின் ததாகதன் வெறுமனே பூமியில் நடப்பதும், இரதமூர்ந்து பூமியில் செல்லுவதும் ஒன்றென்றே தெரிந்துக் கொள்ளுங்கோள் என்று சொல்லிக்கொண்டே நடந்து வருவதை முன் வேவுகர்களால் அறிந்துக்கொண்ட கபிலை நகரவாசிகளும், மகதநாட்டு வாசிகளும் வீதிகளெங்கும் சுத்தஞ்செய்து வாழைக் கமுகுகள் நட்டு அரசிலைத் தோரணங்கள் கட்டி கந்ததூபங்களிட்டு சுன்னச்சாந்துகள் பூசி சக்கிரவர்த்தித் திருமகன் வருகையைக் கண்ணிமைப்பின்றி எதிர்நோக்கி நின்றார்கள்.

அக்கால் கபிலைநகருள் சென்ற கங்கை ஆதாரன் பொன்னிற காவி அணைந்துள்ள தன்மசங்கத்தோர் தன்னைப்புடைச்சூழ்ந்து நிற்கவும் தானும் அக்காவியை அணைந்து கபோலங் கரத்திலேந்தி குமுத முகமலர்ச்சியுடன் குண்டலம் பிரகாசிக்க வருவதைக் கண்டவர்கள் யாவரும் குதூகலித்து சக்கிரவர்த்தித் திருமகன் சதானந்தன் வருகின்றார் வருகின்றார் என்றும், வீணையில் வல்ல வேணுகோபாலன் வருகின்றார் வருகின்றார் என்றும், அசோதரையை வெறுத்த அவலோகிதர் வருகின்றார் வருகின்றார் என்றும், குமரபருவம் குறையா குணசேகரன் வருகின்றார் வருகின்றார் என்றும், எங்கள் இதயத்திருளை அகற்றும் இறைவனாம் ஞானசூரியன் வருகின்றார் வருகின்றார் என்றும், கமலாசன ஞானக்கண்ணன் வருகின்றார் வருகின்றார் என்றும், சர்ப்பங்கள் தழுவி விளையாடும் சாக்கைய முநிவர் வருகின்றார் வருகின்றார் என்றும், பிறவுயிராம் மானைக்கார்க்க புலிக்கு உடம்பைக்கொடுத்த புண்ணியன் வருகின்றார் வருகின்றார் என்றும், கங்கைநதிக்கு ஆதார கருணாகரன் வருகின்றார் வருகின்றார் என்று ஆனந்தக் கூச்சலிட்டு கற்புடைய மாதர்கள் கற்பூர ஆலாத்தி ஏந்தி சாமரை ஆலவட்டங்கள் வீசி கண்ணன்வாழி என்போரும், கமலாசனன் வாழி என்போரும், அண்ணல்வாழி என்போரும், அறவாழியான் வாழி என்போரும், ஆதி வாழி என்போரும், ஆதிநாதன் வாழி என்போருமாக ஆர்ப்பரித்து ஆனந்தகோஷஞ் செய்ய அருகக்கடவுள் அரண்மனை வீதி சேர்ந்தார்.

இத்தகைய கோஷங்களை உணர்ந்த இறைவன் மண்முகவாகென்னும் சுத்த இதயச் சக்கிரவர்த்தி இரதமூர்ந்து எதிற் சென்று தனதுமைந்தன் மஞ்சளாடை அணைந்து ஓடேந்தியும், அவரது முகதேஜசும், வடிவும் குன்றாதிருப்பதைக் கண்டு திகைத்து இரதத்தை விட்டிரங்காது மைந்தன் தானோ என்று திகைப்பான். அங்கபாக முப்பத்திரண்டு லட்சணங்களும் மென்மேலும் பிரகாசிப்பதைக் கண்டு மைந்தனென்றே உறுதி கொண்டு இரதத்தைவிட்டிரங்கி அருகில் சென்று மைந்தனை அணைத்து முத்தமிடலா மென்று எண்ணுவான். உலக ரட்சகனாயினனே என்று திகைப்பான். தனது மைந்தன் சித்தாத்தனென்றே மதிப்பான். மறுத்துந்தேறி ஜெகத்குரு வாயினனே என்று திகைப்பான்.

இத்தகைய திகைப்பகன்று பழைய சித்தாத்தி, பெயரகன்ற புத்தராமே என்று மகிழ்ந்து அவர் கரத்தைப்பற்றி மகனே என்னைவிட்டுச் சென்ற ஏழு வருடமும் என்னை மறந்துநின்ற காரணமென்னோ. நீவிர் செங்கோலேந்த வேண்டிய கரத்தில் ஓடேந்திய காரணமென்னோ என்று கலங்கினான்.

11. தந்தைக்கு மைந்தன் குருவாய காதை.

அவரது கலக்கத்தை உணர்ந்த அண்ணல் உலகத்தில் தோற்றும் உருக்களை மறப்பதுடன் உம்மையும் மறந்திருக்கலாம். புத்தராகவேண்டிய வழிக்கு இப்பாத்திரம் ஏந்தியும் இருக்கலாம் என்றார். அவற்றை வினவிய மண்முகவாகு மைந்தனைநோக்கி குழந்தாய்! இப்பாத்திரமேந்தாது புத்தநிலை அடையலாகாதோ என்றார்.

செங்கோலேந்துஞ் செருக்கை இப்பாத்திரமே அறுக்குமென்று விடை பகர்ந்தார்.

உமது மூதாதைகள் மரபில் தோன்றிவரும் சக்கிரவர்த்திகள் செருக்கும் அறுமோ என்றார்.

சக்கிரவர்த்திகளாய் இருந்தபோதிலும் அவர்களுக்கு உண்டாகும் நானென்னுஞ் செருக்கை அறுப்பது இவ்வோடேயாகும். சக்கிரவர்த்திகளாய் இருந்தாலும் அவர்களுக்குள்ள தானென்னும் அகம்பாவத்தைப் போக்குவதும் இவ்வோடேயாகும். ஆதலின் சதா சுகத்தை அடையவேண்டிய ஒவ்வொருவனும் தன்னை அடக்கியாள இவ்வோட்டைக் கையிலேந்தி அதில் கிடைக்கும் பிச்சை அன்னத்தை உண்டு பசியாறி அகம்பாவத்தைப் போக்கி இதயத்தை சுத்திகரிக்கவேண்டுமென்று பேசிக்கொண்டே அரண்மனைக்குச் சென்று தந்தையுந் தானுந் தனித்துட்கார்ந்து தாமிதுவரையினும் செய்துவந்த ஆளுகையில் யாது சுகத்தைக் கண்டீரென்றார்.

அவற்றை வினவிய சுத்தோதயன் குழந்தாய்! நீர் அரண்மனையை விட்டகன்று காடேகி உமது முடியை அறுத்துவிட்டீரென்று கேழ்விப் பட்டவுடன் அசோதரையும் தனதுமுடியை அறுத்தெரிந்துவிட்டாள். நீவிர் பிச்சாபாத்திரம் ஏந்தி அன்னமேற்று உண்கின்றீர் என்று கேழ்விப்பட்டவுடன் அசோதரையும் ஒரு ஓடு கையில் ஏந்தி அதில் அன்னத்தை வாங்கி உண்டு வருகின்றாள். ஆயினும் உமக்குள்ள ஈகையின் குணம் அவளுக்கும் மாறாமல் என்றும் தருமத்தைச் செய்துக்கொண்டு ஆனந்தத்தில் இருக்கின்றாள். யானோ சக்கிரவர்த்தி பீடத்தை வகித்தும் சதா துக்கத்தில் இருக்கின்றேனென்றார்.

அசோதரையானவள் என்னை பிரிந்தும் உமதடக்கத்திலிருந்தும் சருவ சுகத்தை இழந்தும் தனது ஈகையின் பெருக்கத்தால் ஆனந்தத்தில் இருக்கின்றாளென்றீர். தாமோ சக்கிரவர்த்தி பீடத்திருந்து சர்வ அதிகாரமுற்றும் சஞ்சலம் மாறவில்லை என்பது யாதுகாரணம் என்றார்.

எமதரிய குழந்தாய்! அதன் காரணம் யானறியேனே என்றான். அவற்றை வினவிய பகவன் சக்கிரவர்த்தியை நோக்கி அரசே! நீர் போட்ட இடத்தில் பொருளைத் தேடினால் கிடைக்குமேயன்றி போடா இடத்தில் தேடுவது பொய்த் தேடலாகும். அதுபோல் துக்கந் தோன்றிய இடத்தில் அதன் காரணத்தை விசாரியாது துக்கத்தைப் பெருக்குதல் மேலும் மேலும் துக்கத்திற்கு ஆளாக்கும்.

சீவகசிந்தாமணி

வேட்டன பெறாமை துன்பம் விழைநரைப் பிரிதறுன்பம்,
மோட்டெழி லிளமெய் நீங்க மூப்பு வந்தடைத றுன்பம்,
மேட்டெழுத்த றிதலின்றி யெள்ளர்பா டுள்ளிட் டெல்லாஞ்,
சூட்டணிந் திலங்கும் வேலோய் துன்பமே மாந்தர்க்கென்றான்.

அதாவது விரும்பிய பொருள் கிட்டாவிடத்து துக்கம் பெருகும். விருப்பமாகும் அவாவின் பெருக்கமே துக்கத்திற்கு மூலமென அறிந்து அவாவை அறுத்தவிடத்து துக்கம் நீங்கும். தேகத்திற்கு நரை திறை உண்டாவது துக்கம். அதற்கு மூலம் யாதென்று ஆராயுங்கால் தேகத்தில் நிகழுங் காம வெகுளி மயக்கங்களென்றே தெளிந்து அவைகளைத் தடுத்தவிடத்து நரை திறையின் துக்கம் நீங்கும்.

மனைவி மக்களைப் பிரிதலும் துக்கம், தனது திரவியத்தை இழத்தலுந் துக்கம், தனது நாடு நகரை பரிகொடுத்தலுந் துக்கம். அவைகளுக்கு மூலம் யாதென்று ஆராயுங்கால் மனைவி மக்கள் மீதுள்ள பற்றுக்களே மூலமாகும். திரவியத்தின்மீதுள்ள அவாவே மூலமாகும். நாடு நகரின் மீதுள்ளப் பெரும் ஆசையே மூலமென்றறிந்து பற்றுக்களையும், பேராசையையும் அகற்றி மனைவி மக்களுந் தோன்றி கடிகையில் கெடுவர். தானிய சம்பத்தும் தனசம்பத்துந் தோன்றி கடிகையில் கெடும். நாடு நகரங்களும் தோன்றி கடிகையில் கெடுமென்று உணர்ந்து தெளிந்து பற்றற்றவிடத்தே துக்கம் நீங்கும்.

இளமெய் நீங்கி முதுமெய் தோற்றுங்காலத்து துக்கமுண்டாகும். அத்தகைய துக்கத்திற்கு மூலம் யாதென்று ஆராயுங்கால் முதுமெய் வருமெய் என்றுணராது இளமெய் அவாவினின்று ஏது சுகமுமற்று இந்திரியங்கள் கலங்குங்காலத்து முதுமெய் வந்ததென்று துக்கிக்கின்றார்கள்.

இளமெய் என்னும் வாக்கியம் எப்போது இத்தேகத்திற்கு உண்டாயதோ அப்போதே முதுமெய் என்னும் வாக்கியம் அதற்கு எதிர்மொழியாய்

உண்டென்பதை அறிந்துக்கொள்ளல் வேண்டும். அவ்வகை அறிந்தவிடத்து இளமையும், முதுமையும் தேகதோற்றக் கெடுதியின் தொடர்பென்று உணர்ந்து அதனவாவை அறுத்தவிடத்து துக்கம் நீங்கும்.

தேகத்துக்குரிய பிணி மூப்புச் சாக்காடென்னும் துக்கத்தையும், அதனுற்பவத்தையுங் காணாது சதா அவாவையும், சதா இன்பத்தையும் பெருக்கி நிற்றலால் சதா துக்கத்தில் வருந்துகின்றீர்.

துக்கந் தோன்றியவிடத்து அதன் உற்பவத்தை நோக்குவீரேல் அங்கு பற்றிய அவாவிடுத்து அதனால் உண்டாய துக்கம் நீங்கும். அதுபோல் மற்றுந் துக்கோற்பவங்களை உணர்ந்து அதனதன் பற்றுக்களை அறுத்துக்கொண்டே வருவீராயின் சதா துக்கம் நீங்கி சதா சுகமடைவீரென்றார்.

மைந்தன் அமுதவாக்கில் பிறந்த ஞானபோதத்தைக் கேட்ட சுத்தோதயச் சக்கிரவர்த்தி அகமகிழ்ந்து பகவன்முன் எழுந்துநின்று புத்தராம் மெய்யனை யான் புத்திரனாகப் பெற்ற பாக்கியமே பாக்கியமென்று ஆனந்தக்கண்ணீர் பெருக இருகரங்கூப்பி என்னை துக்கசாகரத்தினின்று கரையேற்றிய ஞானவள்ளலே! துக்கவிருளில் திகைத்துநின்ற எனக்கு ஞானசுடர்விளக்கேற்றிய சுந்திரனே! உம்மை முன்பு பார்த்தபோது காவி ஆடையாலும், கரபோலாலும் கலங்கினேன். தற்போது உமது அமுதவாக்கின் மிகுதியால் பொன்னா டையையும், திருவோட்டையும் புகழ்ந்தேன்.

இப்பொன்னாடையே புவனாதாரமென்றும், திருவோடே சித்த சுத்தி என்றும் தெரிந்துக்கொண்டேன். உமது உறவினால் உண்டாய அன்பின் மிகுதியையும், அளவுபடா ஞானத்தையும் கண்டேன். உலகுய்யும் உமது சத்திய தன்மத்தை விளக்கி என்னை ஆட்கொள்ள வேண்டும் என்றான். புத்தபிரான் தனது தந்தையாகிய சுத்தோதயச் சக்கிரவர்த்திக்கு குருவாக விளங்கினதுகொண்டு "தகப்பன்சுவாமி" என்றும், "பிதாவிதாதா" என்றும் அழைக்கலானார்கள்.

பின்கலை நிகண்டு

பிரமன்மேதினி சிறந்தோன் பிதாமகன் பிதாவிதாதா
நிரந்தரன் கமலயோகி நீநிலம் அளந்த பாதன்
திரமிக உடைய பூதன் தேவர்கள் முதல்வன் சாது
வரனறன் முதநூலாசான் மாதவன் நரசிம்மன்.

ததாகதர் தனது தந்தைக்கு ஞானோபதேசஞ்செய்துவிட்டு அசோதரை வாசஞ்செய்யும் இடத்தை நாடி வாயற்படியில் நின்று ததாகதன் வரலாமோ என்றார். தேவிகாலோத்திரம் தடையின்றி வரலாமென்னும் மிருதுவாக்கு எழும்பிற்று. அதனை வினவிய பகவன் அறைக்குள் சென்று அசோதரையை நோக்கி அம்மே! சுகமோ என்றார். அசோதரையோ நமதையன் பாதத்தை இருகப் பற்றிக்கொண்டு ஐயனே! உமது கருணா நோக்கத்தால் இம்மட்டும் சுகமே என்றாள்.

அம்மே! யாதொரு துக்கமும் இல்லையோ என்றார்.

ஐயே! உம்மைப் பிரிந்ததுக்கம் ஒன்றேயன்றி வேறு துக்கம் யாதும் அறியேனென்றாள்.

ததாகதர் சகலருக்குந் தோற்றி நமக்குத் தோற்றாமல் இருக்கின்றாரே என்று துக்கித்தாயா அன்றேல் ததாகதர் தோற்றமே மறைந்துவிட்டதென்று துக்கித்தாயா என்றார்,

உலகெங்கும் சத்தியதருமமாம் அமுதத்தை ஊட்டி வரும் ஐயன் உடலுயிர் பொருந்தி வாழ்ந்த அடியாளுக்கு அப்பேரின்ப அமுதை ஊட்டாது பிரிந்துநின்ற குறையே பெருந்துக்கத்தில் ஆழ்த்தியது என்றாள்.

அம்மே! நீவிர் தோன்றி கெடும் சிற்றின்பமாம் உலக இச்சையை ஆசிக்கின்றாயா அன்றேல் என்றுங் கெடாமல் நித்தியமாம் பேரின்ப சதாசுகத்தைத் தெரிந்துக்கொள்ள ஆசிக்கின்றாயா என்றார்.

ஐயனே! சதாசுக நித்திய தன்மமாம் பேரின்பத்தையே தெரிந்துகொள்ள ஆசிக்கின்றேனென்றாள்.

காசிக்கலம்பகம் - அசோதரை இந்திரர் அரணியாதல்

இல்லாவே முப்பத்திரண்டறமுஞ் செய்திருப்ப
செல்லார் பொழிற்காசிச் செல்வனார் - மெல்ல
பரக்கின்ற புன்கை பருவகல் கொண்டைய
மிரக்கின்றவா ரறிகிலேன்.

அம்மே! நீவிர் இதுவரையுஞ் செய்துவருந்தருமத்தை உமது மணாளன் அரண்மனை வந்து சேரவேண்டும், சுகத்துடன் வாழவேண்டுமென்று ஓர் பலனைக்கருதி செய்துவருகின்றாயா அன்றேல் ஓர் பிரிதி பலனையும் கருதாமல் செய்துவருகின்றாயா என்றார்.

அவ்வாக்கியத்தைக் கேட்ட அசோதரைத் திடுக்கிட்டு நமதுள்ளத்தில் கருதிசெய்யுஞ் செயலை யாவருக்கும் வெளியிட்டதில்லையே. அத்தகைய அந்தரங்க நோக்கத்தையும் உள்ள எண்ணத்தையும் அறிந்துகொண்ட நமதையன் சகலத்தையும் அறிந்தவர், சகலத்தையும் அறிபவர், சகலத்தையும் அறிவோர் என்று எண்ணி மீண்டும் ஐயன் பாதத்தைப்பற்றி எனதுள்ளத்தை உணர்ந்த மெய்யனே! உமது வரவைக்கோறும் ஓர் பலனைக் கருதியே என் தருமத்தைச் செய்துவந்தேனென்றாள்.

அம்மே! நீவிர் செய்துவந்த தருமம் ஓர் பலனைக்கருதி செய்தவை நிஷ்ப்பலனேயாகும். அதாவது, நீவிர் தருமபாதையில் நடக்கவேண்டின் நான்கு பாதத்தில் நடக்கல்வேண்டும். முதலாவது (சீலபாதம்.) இரண்டாவது (அருட்பாதம்.) மூன்றாவது (மங்கலபாதம்.) நான்காவது (சுபபாதமேயாம்)

இவற்றுள் முதலாவது பொய்சொல்லாமெய், களவு செய்யாமெய், கொலை செய்யாமெய், பரபுருஷனையேனும் பரஸ்திரீயை ஏனும் இச்சியாமெய், மயக்க வஸ்துக்களை அருந்தாமெய் ஆகிய சுத்ததேகியாக நின்றீயும் தருமமே(சீலபாத)மாகும்.

இரண்டாவது, தன் பிள்ளை தன்பந்துவின் மீது வைத்துள்ள அன்புபோல் மற்ற மக்கள் மீதும் சருவ சீவராசிகளின்மீதும் அன்பு பாராட்டி ஈயும் தருமமே (அருட்பாத)மாகும்.

மூன்றாவது உம்மிடத்தில் வந்து தருமம் பெறும் மக்கள் எக்காலும் ஒருவர் ஈகையை நாடாது ஆனந்தமாக வாழவேண்டும் என்று முகம் மலர்ந்து ஆசிகூறிச் செய்யுந் தருமமே (மங்கலபாத)மாகும்.

நான்காவது, தன் சுகம் கெடினும் அன்னியர் சுகம் கெடாத வழிகளைப் போதித்தும், அவர்களை ஆதரித்தும் ஈயுந்தருமமே (சுபபாத)மாகும்.

இத்தகைய நான்கு பாதத்தில் நடத்தலே சத்திய தன்ம மார்க்கம் ஆகும் என்றார்.

அவற்றை வினவிய அசோதரை நமதையனை நோக்கி கபிலைப்பதியே, கமலாசனனே, கருணை வள்ளலே, கங்கையாதரனே! என்னை மீண்டும் கியானவடிமை ஆக்கிக்கொண்ட அருளிறையே! உமது அளவுபடா சத்திய தன்மபோதத்தை அடியாளுக்குத் தெளிவுற உணர்த்தல் வேண்டுமென்று வணங்கினாள்.

அம்மே! முற்கூறிய தன்மபாதத்தில் நடக்குங்கால் நூதன வஸ்துவைக் காணுமிடத்து ஆசைக்கொள்ளுதலும், கொறூர ஜெந்துக்களைக் காணுமிடத்து பயங்கொள்ளுதலும், தனக்கடங்கிய ஜெந்துக்களைக் காணுமிடத்து அகங்கரித்தலுமாகியச் செயல்களைத் தவிர்த்து மணாளன் மகவென்னும் பாசபந்தங்களை அகற்றி அன்பையோர் உருவாக்கி அறிவை ஆடையாக வனைதல் வேண்டும்.

சத்தியதன்மத்தில் நிலைப்பதற்கு ஒழுக்கமும் அறிவின் பெருக்கமுமே மூலமாகும்.

அம்மூலாதரவினால் உனக்குள் எழும் காம, வெகுளி, மயக்கமாம் விஷயங்களைச் சேரவிடாமலும், தங்கவிடாமலும் அகற்றி உனக்குள் எழும் சாந்தம், ஈகை, அன்பென்னும் அமுதத்தைப் பெருக்கிக்கொண்டே வருவாயாயின் இதயசுத்தமாம் மனக்களங்கமற்று அலையற்ற கடலாம் சுகவாரி நிலையினிற்பாய்.

அங்ஙனமின்றி மனதின்கண் இராகத்துவேஷ மோகக் களங்கங்களாம் விஷம் கிஞ்சித்திருக்குமாயின் சாந்தம், ஈகை, அன்பென்னும் அமுதமும் விஷமாகிப்போம்.

அமுதத்தைப் பெருக்கி அருட்பெறவேண்டுமாயின் காம வெகுளி மயக்கங்களால் எழும் பாசபந்த பற்றுக்களை அறுத்து இதயத்தை சுத்தி செய்தல் வேண்டும். இதயசுத்தி உண்டாய் மனமணிப்பிரகாசிக்குமாயின் நித்திறையை ஜெயித்து இரவுபகலற்ற நிருவாணம் பெறுவாய். அக்கால் உம்மெக்காணும் சருவ விவேகிகளும் நான்கு தன்மபாதத்தால் நடக்கும் தருமதேவதை எனக் கொண்டாடுவார்கள். விவேக பெருக்கை நாடும் மேலோர் சத்தியதன்ம மார்க்கத்தை நான்கு தன்மபாதத்தால் நடந்து அவர்களும் பிறவி சமுத்திரத்தைக் கடப்பார்களென்று ஓதி அம்மன் அஞ்ஞான இருளை அகற்றிவிட்டு தனது சங்கத்தோருடன் கலந்து பிச்சாபாத்திரம் ஏந்தி அரசன் வட்டித்த அன்னத்தைப் புசித்து அங்கோர் சோலையில் தங்கினார்.

அசோதரையம்மை அண்ணல்பால் உபநயனமாம் ஞானவிழிப்பெற்றும் சக்கிரவர்த்தி மருமகளென்னும் மமதையும், சக்கிரவர்த்தித் திருமகன் மனைவி என்னுஞ் செருக்குந் தன்னைவிட்டகலாமல் இருந்ததுகொண்டு நிதானித்து தனதேகமைந்தன் இராகுலனை உப்பரிகை மீதழைத்துப் போய் சன்னலின் வழியாய் பகவன் வீற்றிருக்குஞ் சோலையைக் காண்பித்து அப்பா உனதரிய தந்தையாகிய நாரசிம்மம் அதோவீற்றிருக்கின்றது பார். நீ அவரிடஞ்சென்று அவர் சேகரித்து வைத்திருக்கும் அழியா நிதியில் உனக்கு சேரவேண்டிய பாகத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அனுப்பிவிட்டு தான் அணைந்துள்ள ஆடையுடன் பிச்சாபாத்திரங்கையிலேந்தி அரண்மனை வீதியில் சென்று அன்னமேற்றுப் புசித்து ஆனந்தசாதனத்திலிருந்தாள்.

சீவகசிந்தாமணி

அதேநிலைபெற்ற பிக்குணிகள் செயல்.

அம்பொற் கலத்துளடு பாலமர்ந் துண்ணு மரிவையந்தோ
வெம்பிப்பசி நலிய வெவ்வினையின் வேறாயோரகல் கையேந்தி
கொம்பிற்கொள வொசிந்து பிச்சை எனக் கூறி நிற்பாட் கண்டு
நம்பன்மின் செல்வ நமரங்கா ணல்லறமே நினைமின் கண்டீர்.

சோலையில் தங்கியிருந்த பகவன் அசோதரைத் தன்னைப்போல் அகம்பாவமற்று ஓடேந்தி வெளிவந்த சங்கதியை அறிந்தானந்தமுற்று அவ்விடத்துக் காட்டிற்கும் நாட்டிற்கும் மத்தியில் பெண்களாம் பிக்குணிகளுக்கென்று ஓர் வியாரமும், புருஷர்களாம் பிக்ஷுக்களுக்கோர் வியாரமுங் கட்டும்படிச் செய்து சங்கத்தின் ஞானசாதகர்களுக்கு வேண்டிய உதவி புரியத்தக்க ஏதுக்களையுஞ் செய்து வைத்தார்.

மாதுரு வாக்ஞையின்படி இராகுலன் தனது பிதுருவாகிய ஓடேந்தும் பிஞ்சகனிடஞ்சென்று அவர் கரத்தை இருகப் பற்றிக்கொண்டு நாயனே! நீவிர் எமக்கு சேரவேண்டிய பாகத்தை அருளல்வேண்டும் என்றான்.

சங்கங்களுக்கு அறத்தை நிறப்புஞ் சங்கறன் தனது கரத்தை விடாமல் பற்றியுள்ள சிறுவனின் அதி தீவர பக்குவத்தை உணர்ந்து இவன் நம்மெ விடாகண்டனென்றறிந்து சிரரோமங் கழித்து மரவுரியாம் மஞ்சளாடை ஈய்ந்து வற்றாத ஓடு கரத்தளித்து தனது சங்கத்தில் சேர்த்து கண்டுபடிக்குஞ் கல்வியாம் கலைநூல் விருத்தியில் விடுத்தார்.

அசோதரை யம்மனோ இராகத்துவேஷ மோகங்களால் எழும் உள்ளக் களங்கங்கள் யாவையும் பற்றறுத்து புறவிழி பார்வைபோக்கி உள்விழி பார்வையை நோக்கி தூங்காமற்றூங்கி இந்திரியத்தை வென்று நிருவாணநிலை பெற்றாள்.

"இந்தியத்தை வென்றான் தொடர்பாட்டோ டாரம்ப
முந்தி துறந்தான் முநி."

என்பதாம் ஐயிந்திரியங்களை வென்ற வல்லபஞ்கொண்டு சித்தார்த்தரை ஐந்திரர், இந்திரரென்று வழங்கிவந்ததுபோல் அவர் மனைவி

அசோதரையம்மனும் ஐயிந்திரியங்களை அடக்கிய வல்லபங்கண்டு இந்திரர்-அணி இந்திராணி என்று அழைக்கலானார்கள்.

சித்தார்த்தரது சித்திரகூடத்தில் அசோதரையாம் இந்திராணிக்குத் தோழிப்பெண்களாயிருந்த அரம்பை, ஊர்வசி, மேனகை, திலோர்தமை என்னும் நால்வருள் அரம்பையும், ஊர்வசியும் இல்லற தன்மத்தைநாடி புத்திரசந்தானவிருத்தியில் ஆழ்ந்துவிட்டார்கள். மேனகையும், திலோர்தமையும் துறவற தன்மத்தை நாடி பிக்குணிகள் சங்கத்திற் சேர்ந்து இந்திராணிக்கு அங்குந் தோழிகளாய் ஆனந்த சாதனத்தில் இருந்துவிட்டார்கள்.

அருங்கலைச்செப்பு

இந்திரர்க்கரணியா ஏற்ற அசோதரையாள்
சிந்தைத் தெளிந்தாள் சிவம்
முந்தியார் தோழிகள் முதிந்தார் இருவர்
பிந்தியோர் இல்லறத்தானார்
மேனகையோடு முற்றத்திலோர்தமை, போனக வம்மையானார்
ஆயவரம்பையும் ஊர்வசியே இவர், தோயுமில் ஆழ்ந்தனர் பால்

நிகழ்காலத்திரங்கல்

தானடைந்த பேற்றை தந்தைக்கருளியலால்
மானனையாட் கீய்ந்த மோன அதிசயமே
மாமனையாளோடு மைந்தன் வழிசிறப்ப
கோமனையோர் யாவுங் குளிர்ந்த ததிசயமே
தலத்தோர் தார்வேந்தன் தலமும் விடுத்துதென்,
புலத்தாரோடோடு தரித்தது அதிசயமே.

ததாகதர் தனது தந்தைக்கே குருவாகத் தோன்றி ஞானோபதேசஞ் செய்ததுமன்றி மனைவி மைந்தனுக்கும் அருளூட்டி தங்களை விட்டுத் துறந்தனரே என்னுந் துக்கத்தை ஓட்டி சதானந்த நிலையில் நிறுத்திவிட்டார்.

இத்தகைய காலத்தில் ஓர்நாள் அவ்விடமுள்ள நூதன வியாரத்துள்ள சங்கத்தோருக்கு சற்குருநாதனானவர் சத்திய தன்மத்தை விளக்கி வருங்கால் மனைவி மைந்தர் இருவரும் அவ்விடம் வந்து நின்றார்கள்.

அவர்கள் அந்தர அங்கமறியா சங்கத்தோர்கள் குமாரதேவனுக்கும் குமரதேவிக்கும் இன்பமில்லாமல் போமோவென்று தங்களுக்குள் தாங்களே சிந்தித்துக்கொண்டார்கள்.

சங்கத்தோர் அந்தரங்க எண்ணத்தை இந்திராணி அறிந்துகொண்டு தகப்பன் மடியில் தனது பெண்குழந்தை சென்று உட்கார்ந்துகொள்ளுவதுபோல் யாதொரு மனக்களங்கமின்றி நெறுங்கி இந்திரராம் புத்தபிரான் துடைமீது உட்கார்ந்துகொண்டாள்.

சங்கத்தோர் அழுக்காறு எண்ணத்தையும் அவற்றை அகமுகத்தறிந்த அசோதரையானவள் தனது துடைமீதுவந்து உட்கார்ந்த களங்கமற்றச் செயலையுமுணர்ந்த நமதையன் குதூகலித்து உச்சமுருகி அம்மே! சுகமோ என்றார்.

அருங்கலைச்செப்பு

துணைவியாள் தன்னை துடைமீ திறுத்தி கணஞானமூட்டுங் கதிர்.
சங்கத்தோர் உள்ளச் சழக்கையறிந்தா ளெங்கடாய் வீற்றாள் மேற்கால்.

அவற்றை வினவியதாய் அருகனை நோக்கி தாதா உமது கருணையால் ஞானவழித் திறந்ததுமுதல் துக்கமென்பது ஈதென்றும், சுகமென்பது ஈதென்றும் அடியாள் அறியேனே என்றாள்.

ததாகதர் சங்கத்தோரை நோக்கி அன்பர்களே! உங்கள் சங்கத்தாள் சுகதுக்கம் இரண்டும் அறியேனென்கிறாளே இஃது நியாயமோ என்றார்.

சங்கத்தோருள் தலைமையான ஆனந்தனென்பவர் பகவனை நோக்கி ஜகத்திரட்சக! எமதம்மனின் அந்தர அங்கமாம் உண்மெய்ச்செயலும், பயிர அங்கமாம் புறமெய்ச்செயலும் யாங்களறியோம். எங்கள் பேதை எண்ணத்தால் குமரக்கடவுளுக்கும், குமாரதேவிக்கும் இன்பமில்லாமல் போகுமாவென்று எண்ணினோம். அவ்வெண்ணத்தை அறிந்துக்கொண்ட எமது தாய் அவ்வின்பமற்றவளென்பதை ரூபிக்க தந்தை மடியில் மகள் வந்து

உட்காருவதுபோல் யாதொரு மனக்களங்கமுமின்றி தமது மடியில் வந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

தாங்களோ தேவியின் களங்கமற்ற எண்ணத்தையும் எங்கள் பேதை குணத்தால் எழுவிய களங்கத்தையும் உணர்ந்து மகளைத் தந்தையானவர் உச்சமுருகி யாதொரு களங்கமுமின்றி பயிரங்க மடியில் உட்கார வைத்துக் கொண்டீர்.

ஆதலின் தமது அடியார்களின் பேதைகுணத்தால் எழுவிய களங்கை க்ஷமித்து ஆட்கொள்ளவேண்டும் என்றடி பணிந்தார்கள்.

அவர்கள் பேதை குணங்களை அறிந்த பெம்மான் சங்கத்தவர்களை நோக்கி அன்பர்களே! உங்கள் களங்கம் அகலட்டும். அம்மனுக்குள்ள சுகதுக்கம் இரண்டுமற்ற நிலையை அறிந்து கொண்டீர்களோ என்றார்.

சீவகசிந்தாமணி

நிலவிலகி யுயிரோம்பி நிமிந்தொளிர்த்து பசிபகைநோ
யுலகமிருள் கெடவிழிக்கு மொண்மணி யறவாழி
யலகையிலாக் குணக்கடலை யகல் ஞானவரம்பனை
விலையிலா மணிமுடியான் விண்வியப்ப லிறைஞ்சினான்.

சங்கத்தோர்கள் சங்க அறனைநோக்கி ஐயனே! தாம் ஊட்டியுள்ள ஞான அமுதில் நாமரூபம் இரண்டற்றபோது நான் நீ என்னும் பின்னபாவம் இரண்டும் அறுமென்றும், வேண்டுதல் வேண்டாமை இரண்டும் அறுமென்றும், சுகதுக்கம் இரண்டும் அறுமென்றும் ஊட்டியிருக்கின்றீர்.

தங்களடியார்கள் அவற்றை உட்கொள்ளாது உலக சிற்றின்பமாம் விஷத்தை உண்டுவருகிறபடியால் சுகதுக்கமற்ற இடம் விளங்காமல் போனோம். ஆதலின் இனியேனும் யாங்கள் விஷத்தை உண்டு கண்டங்கறுத்துக் காலனுக்கு ஆளாகாமல் ஞானவாருதியைக் கடைந்து அமுதளிக்கவேண்டுமென்றார்கள்.

அன்பர்களே! உங்கள் உள்ளம் விரிந்தவிடத்து உலகும், உள்ளம் களங்கமற்று அடங்கியவிடத்து நிருவாணமுந் தோற்றுமென்பதை விளக்கியிருக் கின்றோம்.

அத்தகைய விளக்கத்தால் உங்கள் உள்ளமே ஞானவாருதியாகவும், வலயிட சுவாசமே கயிறாகவும், புருவமத்திய சுழினியை மத்தாகவுமூன்றி சதாவிழிப்பாற் கடையவேண்டியவர்களும் நீங்களே. அக்காலத்தில் எழும் காமவெகுளி மயக்கங்களாம் விஷயங்கள் அணுகாவண்ணம் அகற்றி அன்பு, ஈகை, சாந்தமென்னும் அமுதத்தைத் திரட்டவேண்டியவர்களும் நீங்களே. அவ்வகைத் திரட்டிய அமுதுண்டு திரிகாலமுமுணர்ந்து மரணத்தை ஜெயித்து பிறப்பை அறுத்துக்கொள்ள வேண்டியவர்களும் நீங்களே ஆதலின் உங்கள் உள்ள ஞான வாருதியை நீங்களே கடைந்து அமுதுண்ண வேண்டுமென்று போதித்து அந்தந்த சங்கத்தோர்களை அங்கங்கு தங்கி சாதனங்களைப் பூர்த்திச் செய்யுங்கோள் என்று விடுத்து ஆரணத்திற்சென்று;

காக்கைபாடியம்

பாலகக் கடலைபழுகக் கலக்கி / மேலைச்சுழினை கயிறை இழுத்து,
சீலவமுதைச் சேர்த்து நிறப்பி / ஆலமர்ந்தோனல் லடி தொழுவீரே.

நிகழ்காலத்திரங்கல்

உள்ளக்கடலை கடைந்தே யுறமகற்றி / தெள்ளமுதமீய்ந்த தேற்றல் அதிசயமே.

அறநெறிச்சாரம்

தானே தனக்குப் பகைவனு நட்டானும் / தானே தனக்கு மறுமெயு மிம்மெயும்,
தானேதான் செய்த வினைப்பயன் துய்த்தலால் / தானே தனக்குக் கரி.

மூன்றாமுறை விம்பாசாரன் தெரிசனமும் நூதன வியாரம் ஏற்படலும்

ஓர் மரத்தடியில் வீற்றிருப்பதை வேவுகர்களாலும், மற்றுமுள்ளவர் களாலும், விம்பாசார அரசனறிந்து குலகுரு வந்திருக்கின்றாரென்னும் குதூகலத்தில் எழுந்து தனது பரிவாரங்களுடன் வந்து தற்பரனை வணங்கி ததாகதா புசிப்புக்கெழுந்தருள வேண்டுமென்று கோறினான்.

பிஞ்சகன் விம்பாசாரன் கோறிக்கைக்கிணங்கி எழுந்து வருங்கால் ஐயன் சத்தியதன்மத்தையும் அதன் பலனையும் முன்பே அறிந்துள்ளவனாதலின் பிம்பாசாரன் தன்னைச் சூழ்ந்துள்ள மக்களை நோக்கி;

அன்பர்களே! இதோ வெழுந்தருளிய பகவன்,

"எல்லா முணர்ந்தவர், எண்குண மமைந்தவர்
அருளாழி பயந்தவர், அறவாழி யளித்தவர்
மருளாழி துறந்தவர், மறையாழி புரிந்தவர்
மாதவருள் மாதவர், வானவரில் வானவர்
போதனரிற் போதனர், புண்ணியரில் புண்ணியர்
ஆதியு மிவவே, அமலனு மிவரே.
நீதியு மிவரே, நிறந்தர ரிவரே
சோதியு மிவரே, துல்லிய ரிவரே
இறைவனு மிவரே, துறைவனு மிவரே
கிருவுரு மிவரே, செல்வனு மிவரே
என வேற்றுங்கள் போற்றுங்கள்
என்றென்றும் வாழ்த்துங்கள்."

என்று சொல்லிக்கொண்டே அரண்மனைக்குச்சென்று ஐயனுக்கு ஆசனமளித்து மனையோரை வணங்கச்செய்து புசிப்பளித்து பகவன் புசித்தபின் அவரருகில் உட்கார்ந்த விம்பாசாரன் போதிநாதனை வணங்கி ஐயனே துறவிகளாகும் சங்கத்தோர் வசிக்கத்தக்கதும், சுத்தமானதும், பகவன் சிலநாள் தங்கியிருக்கக்கூடியதும், பகலில் ஜனசஞ்சாரம் அதிகமில்லாததும், கூச்சலற்றதும், மிக்க வமைதிபெற்றதும்;

பகவனை தெரிசனஞ்செய்ய வருத்துப்போக்கா இருப்பவர்களுக்கு வழி சுகமானதும், நாட்டிற்கும், நகரத்திற்கும் மத்தியிலுள்ளதுமாகிய வேணுவன மென்னும் மூங்கில் தோப்பை வியாரத்திற்கு அளிக்கின்றேன் தேவர் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று வணங்கினான்.

அரசன் திரிகரண சுத்தியால் அளிக்குந் தானத்தை அருகனேற்று அவ்விடத்தில் வேணுவனவியாரமென்னும் ஓர் மடம் கட்டுவித்து சங்கத்தோருக்கு அளிக்கச்செய்து தானும் அம்மூங்கிற் தோப்பிற் சிலகாலந் தங்கியிருந்தார். அதனை வேணுவன வியாரமென் றழைக்கலானார்கள்.

பரத்துவாசனென்னும் பெரியோன் ஒருவர் மகதபிரான் வேணுவன வியாரத்தில் தங்கியுள்ளாரென்று கேழ்வியுற்று அவ்விடஞ்சென்று அருகனை வணங்கி துலவில் உட்கார்ந்துகொண்டு நமக்குத் தோன்றியுள்ள வியாதியின்னதென்றும், அஃது நீங்கும்வழி ஈதென்றும் ஏதோர் தன்மங் கூறுவரோ கூறாரோவென்று எண்ணிக்கொண்டிருந்தார்.

12. பரத்துவாசருக்குப் பிணிக்குத்தக்க ஓடதிகள் போதித்த காதை

பிணியாளன் எண்ணத்தை ஞானக்கண்ணினால் அறிந்த ஆரூடர் பரத்துவாசரை நோக்கி அன்பனே, நீவிர் அதிதுன்ப வியாதியின் அனுபாதையால் அனந்தநாள் அவத்தைப்படுகின்றீர்போலும் என்றார்.

அருகன் அருள்மொழியைக் கேட்ட பரத்துவாசர் திடுக்கிட்டு ஐயிந்திரியங்களை வென்று அந்தரங்கமுணர்ந்த இந்திரரே எனதுள்ளத்தில் எண்ணிய எண்ணங்களை உமது களங்கமற்ற உள்ளக்கண்ணாடியில் கண்டு கொண்ட செவ்வியக் கண்ணனே, சிறந்த செல்வனே எனக்குற்ற வியாதியை எவ்வகையால் தெரிந்து கொண்டீரோ அதன் நிவர்த்தியும் உமக்குத் தெரிந்தேயிருக்கும். தேவரீர் அதன் உற்பவத்தையும், மடிவையும் விளக்கி ஆட்கொள்ள வேண்டுமென்று வணங்கினான்.

பகவன் பரத்துவாசரை நோக்கி அன்பனே! உமக்குள் எழும் ரசோகுண, தமோகுண, சத்துவகுணமென்னு முக்குணத்திரய காம, வெகுளி, மயக்கங்களைக் காரணமாகக் கொண்டேழுஉம் முக் குற்றங்களே வாத, பித்த, சிலேத்தும மென்னுங் மூவியாதி பீடமாகி வாதத்தால் ஆயிரத்தியைந்நூறுவகைத் தோற்றங் களும், பித்தத்தால் ஆயிரத்தி ஐந்நூற்றி நார்ப்பது வகைத் தோற்றங்களும், சிலேத்துமத்தால் ஆயிரத்தி நானூற்றி எட்டுவகைத் தோற்றங்களையும் உண்டுசெய்து மக்களை மாளா துக்கத்திற்கு ஆளாக்கி மடித்து வருகின்றது.

இத்தியாதி வியாதிகளின் தோற்றத்திற்கும், உபாதைக்கும் மக்கள் அவாக்களே காரணமாகும். அவற்றுள் காம அவாபெருக்கம், வெகுளி பெருக்கம், மயக்க

பெருக்கத்துள் உமக்குத் தோன்றியுள்ள வியாதியின் பெருக்கமானது வெகுளியின் அதிகரிப்பினாலும், வேணபுசிப்பின் தவறு தலினாலும் பித்த வனல் மீறி மார்பின் குழியினுள்ளும், இறைப்பையின் முகப்பிலும், திரண்ட கட்டிபோல் வளர்ந்து புசிப்பின் அன்னத்திற்கே தடை களை ஏற்று எட்டுவகை துன்பத்திற்கு ஆளாக்கி அஷ்டகுன்மக் கட்டிகளாக வளரும்.

அவ்வகை வளர்ந்து அன்னதுவேஷத்தால் ஒடுங்கியும், பித்தகோபமாம் வெகுளி ஒடுங்காது மேலும் மேலும் கோபத்தைப் பெருக்கிக்கொள்ளுவதால் குன்மமென்னுங் கட்டியும் வளர்ந்து துன்பமும் பெருகிக்கொண்டே வரும்.

வெகுளியாங் கோபத்தை அடக்கும் மூலிகை சத்துக்களையும், உபரச சத்துக்களையும், உப்பின், சத்துக்களையும் புசித்து கோப மெழாவண்ணம் நசித்து சாந்தத்தைப் பெருக்குவதால் குன்மங்கள் கரைந்து துன்பமகன்று அன்னமுறைந்து உதிரஞ் சிறந்தோடி யுடல்குளிர்ந்து சுகத்தை அளிக்குமென்றார்.

பகவன் பரிகரிப்பாம் பரம வாக்கை உணர்ந்த பரத்துவாசர் அவர் அடிபணிந்து ஐயனே! திரிபீடமாம் மூவமுத வாக்களித்து மக்களை தேவர்களாக்கிய தேவாதிதேவா! இத்தேகவாயுளின் தீரத்தை தேறச்செய்யவும், வீரத்தை விலக்கிக் கலைக்கவுமாகுங் கற்பத்தை அருள்புரிய வேண்டுமென்று அடி பணிந்தான்.

பகவன் பரத்துவாசரை நோக்கி அன்பனே! மக்களுக்குள்ள கிரமச்செயல்களே சௌக்கியம் என்னப்படும். அக்கிரமச் செயல்களே வியாதி என்னப்படும்.

இத்தகைய வியாதிகளின் ஏதுக்குத் தக்க நிகழ்ச்சியாய்த் தோன்றும், அத்தோற்றங்களுக்கு பூதபௌதிகங்களும், அவரவர் குணாகுணங்களும் செயல்களுமே காரணமாகும்.

மண், நீர், தீ, காற்று இவற்றின் மாறுதலின் செயல்களே முதல் மூலமாகும். குணத்திரய அவாக்களே இரண்டா மூலமாகும். மனப்போக்கின் மீறியச் செயல்களே மூன்றா மூலமாகும்.

இம்மூவகை ஏதுவால் நிகழ்ச்சியாகும் சத்துவ விருத்தி, தமோ விருத்தி, இரஸோ விருத்தியாகும் வாத, பித்த, சிலேத்தும வியாதிகளாகி நெய்தநில மக்களுக்கு வாதமே பீடமாகக்கொண்டும், குறிஞ்சிநில மக்களுக்கு பித்தமே பீடமாகக்கொண்டும், முல்லைநில மாக்களுக்கு சிலேத்துமமே பீடமாகக்கொண்டும், மருதநில மக்களுக்கு வாதத்திற் பித்தமே மூலமாகக்கொண்டும், பாலைநில மக்களுக்கு பித்தத்திற் சிலேத்துமமே மூலமாகக்கொண்டும் பற்பல வியாதிகள் தோன்றி மும்மெய் வினையின் பயன்களையும், இம்மெய் வினையின் பயன்களையும் அனுபவிக்கச்செய்கின்றது.

மக்கள் ஒவ்வொருவருக்கும் வினையுள்ளளவும் தேகமும், தேகமுள்ளளவும் வியாதியும் ஆதியாய் நின்று அலக்கழித்துவரும்.

ஆதியாய வியாதிகளுக்கு அவடதமூலம் அறிவின் பெருக்கமேயாகும்.

அறிவின் விருத்தியால் ஒவ்வொரு மக்களுக்குள்ள உதிர விருத்தியே அயசம்மந்தமாகவும், மூளையின் விருத்தியே பொன் சம்மந்தமாகவும், மாமிஷ விருத்தியே வங்க சம்மந்தமாகவும், அஸ்தியின் விருத்தியே வெள்ளி சம்மந்தமாகவும், நரம்பின் விருத்தியே தராவின் சம்மந்தமாகவும், தாம்பிரவிருத்தியே சரும சம்மந்தமாகவும் உணர்ந்து அந்தந்த யாக்கை உருப்பின் குறைவு நிறைவுகளை அந்தந்த லோகங்களால் நிவர்த்திக்க வேண்டியது.

மூலிகைவர்க்கங்களிலுள்ள அய சம்மந்த தாபரங்களும், பொன் சம்மந்த தாபரங்களும், தாம்பிரசம்மந்ததாபரங்களும் இன்னின்னவைகள் என்று கண்டறிந்து அவ்வவ் உருப்பின் குறைவு நிறைவுகளுக்கு அந்தந்த மூலிகைகளைக் கொடுத்து நிவர்த்திக்கவேண்டியது,

உப்பின் வர்க்கங்களிலுமுள்ள அயச்சம்பந்த உப்புகளும், பொன் சம்மந்த உப்புகளும், வங்கசம்மந்த உப்புகளும், தராசம்மந்த உப்புகளும் தாம்பிரசம்மந்த உப்புகளும் ஈதீதென்றறிந்து அந்தந்த உருப்பின் குறைவு நிறைவுகளுக்கு அந்தந்த உப்பினங்களை ஈய்ந்து நிவர்த்திக்கவேண்டியது.

அருங்கலைச்செப்பு - சூசரகப்பத்து

ஊனு மென்பு முதிரம் நரம்புதோல், காணுமெய் நோயின் திறை
அயம் வெள்ளி பொன்னு மருந்தாரங்கொண்டு, நியமிநோய்தாம்பிரத்திநேர்
கௌரி வெண் தொட்டி தாளகம் வீரம், பௌரி பாடாணங்கள் பார்
சிவப்பொடு நீலம் வைரமா பச்சை, உவப்புட்பராகமன்னேர்
பாடாணத்துள்ளும் பரூங்கல்லிலுப்பிற், சேடான லோகங்கண்டேர்
அயத்திற்குதிர மருமூளைப் பொன்னாம், புயல் வங்க மப்புலையேயாம்
என்பதனுள் வெள்ளி யுரைநரம்ப தேதரா, தொன்னை தோற்றாம்பிரமதாம்
துன்பத்திரட்சி சினக்கோதுருண்டு, குன்மக் குடத்தியாங் கூர்
சினமாற்றி நாளுஞ் செல்லன்னங் கொண்டு, வனவுப்பின் தூளம் பரி
இதயத்திலுள்ள விடும்பைகள் நீங்கில், புதயற்ற துன்பம்படும்.

இரத்தின வர்க்கங்களிலுமுள்ள அய சம்பந்த இரத்தினங்களும் பொன் சம்பந்த வைரங்களும், வெள்ளி சம்பந்த புஷ்பராகங்களும், வங்க சம்பந்த கோமேதங்களும், தராசம்பந்த நீலங்களும் தாம்பர சம்பந்த பச்சைகளும், இன்னின்னவைகள் என்றறிந்து அந்தந்த உருப்பின் குறைவு நிறைவுகளுக்கு அந்தந்த இரத்தினங்களை ஈய்ந்து நிவர்த்திக்க வேண்டியது.

பாஷாணவர்க்கங்களிலுமுள்ள அயசம்மந்த தொட்டி பாஷாணங்களும், பொன்சம்மந்த கௌரி பாஷாணங்களும், வெள்ளி சம்மந்த சங்கு பாஷாணங்களும், வங்க சம்மந்த தாளக பாஷாணங்களும், தரா சம்மந்த வீரபாஷாணங்களும், தாம்பிர சம்பந்த செப்புத்தொட்டி பாஷாணங்களும் ஈதீதென்றறிந்து அந்தந்த உருப்பின் குறைவு நிறைவுகளுக்கு அந்தந்த பாஷாண அளவுளவின் சிகிச்சையால் தீர்த்தல் வேண்டும்.

இத்தகைய தேக குணாகுணங்களையும், மூலிகை குணாகுணங்களையும், உபரச குணாகுணங்களையும், நவரத்தின குணாகுணங்களையும், உலோக குணாகுணங்களையும், பாஷாண குணாகுணங்களையும் நன்காராய்ந்து அதனதன் சத்துருக்களைக் கண்டறிந்து முடிப்பதும் அதனதன் மித்துருக்களைக் கண்டறிந்து சேர்ப்பதுமாகிய அவுடதங்களை முடித்தல் வேண்டும்.

ஒவ்வோர் தேகத்திற்குள்ள திடத்தையும், சத்துவத்தையும் ஊட்டும் வஜீகரண அவுடதங்களையும், ஆயுள்விருத்திக்கு ஆதாரமாகும் இரசாயன அவுடதங்களையும், மூலிகைகளே தனது சத்துருக்களின் சேர்க்கையால் பாஷாணமாகுதலும். பாஷாணங்களே தனது சத்துருக்களின் சேர்க்கையால் அமுதமாவதும், குழந்தைகளின் வியாதிகளுக்குச் செய்யுஞ் சிகிட்சைகளை அதி ஜாக்கிரதையாகவும், கணபேத குணபேதங்களை அறிந்தும், மக்களுக்கு உண்டாகும் மனோ பீதியாலும், எண்ண பேதத்தாலும் உண்டாகும் பேயநிலை ரோகங்களையும், சரீரத்தை மாறுபடச்செய்யுங் காமரோகங்களையும், கழுத்திற்கு மேற்பட்ட உர்த்தவாத ரோகங்களையும், காய சிகிட்சை, இரண சிகிட்சையாகும் சல்லியரோகங்களையுந் தெரிந்துக்கொள்ளல் வேண்டும்.

இத்தியாதி தேக குணாகுணங்களையும், வியாதியின் குணாகுணங்களையும், அவுடத குணாகுணங்களையும் அறிந்துசெய்வதே சிகிட்சா சூஸ்ரதமாகும்.

அவற்றுள் உமக்குள்ள ரோகங்களைத் தெரிந்துக்கொள்ளவேண்டுமாயின் உமக்குள்ள குணச்செயல்களையும், காயச்செயல்களையுங் கண்டறிந்து அவற்றுள் குணச்செயல்களாகும் ரசோகுணவிருத்திகளையும், தமோகுண விருத்திகளையும் ஒடுக்கி காயச்செயல்களில் குன்மத்தை விருத்திசெய்யும் இனிப்புள்ள பதார்த்தங்களாகும் பித்த சத்துக்களை அகற்றி நீத்தனவாதாரமாம் உப்பினப்பண்டங்களை உண்டு வருவீராயின் உருண்டரோகங் கரைந்து உண்ணும் புசிப்பும் பரந்து உதிரஞ் சிறந்து சுகமுறுவீரென்று முடித்தார்.

மாதவன் வேணுவியாரத்தோருக்கு மதியூட்டிய விவரம்

மாதவன் பின்னும் வேணுவியாரசங்கத்தோர்களை நோக்கி சிரம ணர்களே! நாம்காலமெல்லாம் மெய்மொழிகள் யாதென்றுகேட்டுத் தெளியாமல் பொய்மொழிகளை நம்பி சமுத்திர அலைபோல் ஓய்வில்லா ஜெநநங்களாகிய பிறவி துக்கத்தில் சுழன்று அனேககாலமாக அல்லல் பட்டிருந்தோம்.

நாம் வாசஞ்செய்யும் இப்பூவுலகமே ஏதுக்குத்தக்க நிகழ்ச்சியாய் கருமத்திற்கு ஏதுவாம் உருதிரண்டு உலகமென்று கூறுவதுள் சீவர்கள் செய்யும்

செயல்களென்னுங் கருமங்களே ஒரு காலத்தில் மண்ணாகவும், மரங்களாகவும், புழுக்களாகவும், விலங்குகளாகவும், மட்சம், பட்சிகளாகவுந் தோன்றுகின்றன. அந்த கர்ம்மங்களென்னும் செயல்களே அநேக நற்செயல் தோற்றங்களுருண்டு முடிவில் புத்தராகின்றன.

ஆதலின் சீவர்களின் செய்கைகளையே கருமமென்று கூறப்படும். அக்கருமங்களின் பயனே சீவர்களாகின்றார்கள். முன் ஜெநநத்தின் கருமங்களே சீவர்களாக இருப்பதால் நமது கருமத்தின் பயனே இந்த ஜெநநத்தில் சீவர்களாகத் தோன்றியுள்ளோம்.

அநேக ஜெநநங்கள்தோருந் தோன்றிய சீவர்கள் மனித உருவத்தைப்பெற்று பகுத்தறிதலாகிய விவேகத்தை அடைந்து வருகின்றார்கள்.

இத்தகையப் பகுத்தறிவைப்பெற்ற அரிய மானிட ஜெநநத்திற்கு துக்க நிவர்த்தியாகிய ஞானத்தைப் பெற அநேக ஜெநநங்கள் தோரும் நற்கருமங்களை புரிந்திருக்கவேண்டியதாதலின் சத்கருமங்களே துக்கநிவர்த்திக்குக் காரணமாகும்.

இந்த திவ்விய மானிடதேகத்தைப்பெற்ற ததாகதன் துக்க நிவர்த்திக்குக் கொண்டுபோகும் மார்க்கத்தை கண்டுதெளிந்தேன். நீங்களும் நம்மேறை சாந்தமும், சமாதானமும் அடையும்படியாக அந்த திவ்வியமார்க்கத்தைத் தெரிவித்தேன்.

தாகவிடாய்கொண்ட உங்களுக்கு அமுர்தமாகும் சத்தியமார்க்கத்தைக் கொடுத்தேன். அதை அருந்தினவன் கொலை, களவு, காமாதிகளினின்று நீங்கி சுகமடைவான். இராகத்துவேஷ மோகங்களாகிய வெள்ளத்தினின்று மீண்டு நிருவாணக்கரைச் சேர்ந்தவனுடைய துக்கமற்றச் செயலைக்காண்போர் யாவருந் திகைத்து நிற்பார்கள்.

அவ்வகை சத்தியமார்க்க அமுதை அருந்தினவன் உலகில் வாழ்ந்தும் நீரிலிருக்குந் தாமரைபோல் பற்றற்று வாழ்வான்.

சத்தியமார்க்கத்தில் நடப்பவன் உலகத்தோருடன் ஒக்கவாழினும் ஆசாபாசங்களில் பற்றற்றிருப்பான்.

தன்னுயிரைப்பார்க்கினும் தன் யேகபுத்திரன் உயிரைக்காக்குந் தாயைப்போல் மன்னுயிர்களின்பேரில் தன் அளவுபடா அன்பை செலுத்துவான்.

ஆதலின் ஒவ்வொரு மனுமகனும் நிற்கும் போதும், உலாவும்போதும், நித்திறைக்குப் போகும் போதும், விழிக்கும்போதும், மரணகாலத்தும் அன்பின்மயமாய் இருக்கக்கடவன்.

இந்த மெய்மொழிகளை உணராதவன் பகுத்தறிவற்றவனாவான். பகுத்தறிவில்லாதவன் அநேக ஜெநநங்களாய்ப் பிறந்திருந்து மாளா துக்கத்தில் ஆழ்வான். அறியாமையாம் அந்தகாரத்தில் மூழ்குவான்.

பெரும்பொருள் விளக்கம்

இளையர் முதியரென விருபால்பற்றி
விளையும் அறிவென்ன வேண்டாம் - இளைஞனாய்த்
தன்றாதைகான நுகர்தற்குத் தன்கான
மொன்றாது நீத்தா னுளம்.

ஆனால் நாம் நமது பகுத்தறிவால் மெய்ம்மொழிகளைக் கண்டறிந்தோம். ஜெநநமரணத்தினின்று நீங்கினோம். நானென்னும் அகங்காரத்தை நசித்தோம். உண்மெய் அறிந்தோம்.

இதுதான் சத்தியதன்ம பலன், இதுதான் சத்தியமுத்தி, இதுதான் சத்தியலோகம், இதுதான் சத்தியவாழ்க்கை என்று முடித்தார்.

அருங்கலைச்செப்பு - தன்மந்திரியார்பத்து

பரத்துவாசன்றன் மந்திரியாய் நின்றான், திரத்த சுஞ்ஞானமுநி
உரபிடகமோதி உலகநாதன்பால், சரகமுந்தான் கற்றநேர்
கற்றமருந்துங் கனவொழுக்கமுற்றுப், பற்றுங் குடிக்களித்தான் பார்
வியாரங்கள் பக்கும் வியாதித்தருக்கும், நியாயங்கள் ஈய்ந்தா நெறி
முன்னறன்பாற் கண்ட மொழியை விளித்தான், பின்னறன் கைகண்ட நேர்
மனச்சுத்தமுற்ற மக்கட் கணுகா, கனப்பித்த நோயின் குணம்
உள்ளக் களங்க முட்டங்கி நிற்றல், விள்ளத் தொடரும் வினை

வினையணுகாதுற்ற விழியுங் கரமுந், தினையணுகா நோயின் திரள்
பாசங்கள் தோய்ந்த பகுதி எதிர் பாச, நேசத் தொடரும்நெறி
விழியால் விலகுங் கையால் கழியுந் தொழிலாம் ஞானத் தொடர்.

அக்காலோர் தன்மந்திரி என்னும் தனவந்தன் பரத்துவாசரை அடுத்து தனக்குள்ள திரவியங்கள் யாவையுஞ் செலவிட்டு தேக குணாகுணங்களையும், வியாதியின் குணாகுணங்களையும், மூலிகைகளின் குணாகுணங்களையும், உபரச குணாகுணங்களையும், பாஷாண குணாகுணங்களையும் நன்காராய்ந்து பகவனது உத்திரவால் இந்திர வியாரங்களுக்கு அருகே வைதியசாலைகளை நிருமித்து ஏழைகளுக்குங் கனவான்களுக்கும் உண்டாய வியாதிகளுக்குத் தக்க அவுடதங்களை ஈய்ந்து சுகமுறச்செய்து வருங்கால் பரத்துவாசரை அடுத்த தன்மந்திரிக்கு ஓர் மனமாறுதல் தோன்றி மாதவனிடஞ் சென்று பிடகபோதனா சரகசூஸ்திரா உமது கருணையால் மனோ துக்கங்களை நீக்கும் பிடகபோதகங்களையும், தேகவுபத்திரவங்களை நீக்கும் அவுடதங்களாம் சூசரக போதங்களையும் அருளிச்செய்தீர்.

இத்தகைய போதகங்களால் மக்களுக்குள்ள மனோதுன்பங்களும், தேக துன்பங்களும் அகன்று ஆறுதல் அடைந்து வருகின்றார்கள்.

ஆயினும் உம்மெய் நெறுங்கிய வியாதியஸ்தர்களும், உமது பார்வைபெற்ற ரோகிகளும் சுகமடைகின்றார்களே அத்தகைய போதங்களை இவ்வடியார் களுக்கு அருள் புரியலாகாதோ என்றடிபணிந்தான்.

அவற்றை வினவிய பகவன் பரத்துவாசர் மாணாக்கனைநோக்கி தன் மந்திரி மனோரோகங்களை நீதிநெறி ஒழுக்கங்களாலும், தேக ரோகங்களை அவுடதப் பிரயோகங்களாலும் அவரவர்கள் தங்களுக்குத் தாங்களே உணர்ந்தும் அவுடதங்களைத் தாங்களே உண்டும் சுகமடைவதே கிரமமாகும்.

அங்ஙனமின்றி ஓர் ஞானியினது விழிபட்டும், கைபட்டும் சுகமடை வார்களாயின் அதன் கிரகிப்பு சுத்த ஞானிகளை யாதொன்றுந் தீங்கு செய்யாது.

தங்களைப் பெரியோனென்று மதிக்கவும், தங்களை சகலரும் கொண்டாடவும் வேண்டிய சொற்ப பற்றுள்ள ஞானிகளை அவர்களுக்குள்ள தீவினைகள் பற்றிக்கொண்டு ஞானியுந் துன்பமடைவான். ஆதலின் அத்தகைய ஆனந்தத்தை மறந்தும் கருதாதிருப்பீராக என்று மற்றுமுள்ள அவுடதப் பிரயோகங்களையும் விளக்கிவிட்டு மச்சநாடடைந்தார்.

தன்மந்திரியும் மற்றுந் தனக்குள்ள திரவியங்கள் யாவையுஞ் செலவிட்டு அவுடதப்பிரயோக தன்மஞ்செய்வதுடன் அறநெறியாம் நல்லொழுக்க தன்மங்களையும் ஊட்டிக்கொண்டு வந்தார்.

அக்காலத்தில் ஓர் வகைக் கொள்ளைநோய் தோன்றி அத்தேசவாசிகளில் அநேகர் மரணமடைந்தார்கள். அநேகர் திகிலடைந்தார்கள், அநேகர் மரண கிலேசமுற்று வருந்தினார்கள். அநேகர் பொய்ச்சந்தோஷங்கொண்டு எல்லோரையும் அழைத்து இன்றைக்கு யாவற்றையும் அனுபவித்துவிடுவோம் இன்றைக்கிருப்பதும் நாளைக்கு இருப்போம் என்பதும் நிட்சயம் இல்லை என்று சொல்லிக்கொண்டு உள்ளுக்குள் திகிலடைந்தும் வெளிக்கு சந்தோஷமாகப் பேசிக்கொண்டார்கள்.

இவ்விதமான அவ்வூர் ஆண் பெண் யாவரும் மரண பயத்துடன் கிலேசமுற்றிருக்குங்கால் பரத்துவாச தன்மந்திரியார் ஒருவர் மட்டிலும் வழக்கம்போல் மன அமைதியுடனும், சமாதானத்துடனும் வீடுவீடாய் நுழைந்து வியாதியஸ்தர்களுக்கு வேண மருந்தளித்து வருவதுடன் வேண்டிய தேறுதல்களையும் சொல்லிக்கொண்டு வந்தார்.

அக்காலத்து ஒரு மனிதன் தன்னிடம் வந்து தனது குறைகளைக் கூற ஆரம்பித்தான்.

அதாவது என்னுடைய உள்ளம் பதைபதைக்கின்றது, மனந் தடுமாற்றமடைகின்றது, மக்கள் மரணமடைதலைப் பார்க்க சகிக்கக் கூடாதவனாய் இருக்கின்றேன், எனக்கு இறப்பு வருமாயின் யாது செய்வேன், அயலாரைப் பற்றிய அவசியம் ஒன்றுமில்லை, என் மரணத்தைப்பற்றிய கவலை

கொண்டேன், எனக்கு உதவிபுரியீரா, என் கவலையை ஒழிக்கமாட்டீரா, என்மரண பயத்தை நீக்கமாட்டீரா, மரணத்திற்கு என் செய்வேன் என் செய்வேன் என அலறினான்.

அவற்றை வினவிய தன்மந்திரியார் அவனை அருகில் உட்காரவைத்து அப்பா மரணபயத்தோனே! பிறர்மேற் பரிதாபமுடையோனுக்கு உதவி உண்டு. தன்மேல் அவாவுடையவனுக்கு உதவிகிடையாது. பிறர் துக்கத்தைப்பார்த்து சகியாதவனுக்கு உதவியுண்டு. தன்துக்கத்தைப்பார்த்து சகியாதவனுக்கு உதவி கிடையாது.

கஷ்டகாலமே மக்கள் உள்ளத்தை சோதிக்கும், கஷ்டகாலமே மக்களை தன்மவழியிலும் நீதிமார்க்கத்திலும் செல்லவைக்கும்.

இக்காலத்தில் மக்கள் படும் துக்கக் காட்சியைக் கண்ணில் கண்டும் உமது பேராசை ஒழியவில்லையல்லவா. தானென்னும் அகம்பாவம் நீங்க வில்லையா, உமது தாய் தங்கையர் பந்துமித்திரர்கள் படுந் துக்கக்காட்சிகளைக் கண்டிருந்தும் உனது அற்பசுகம் ஒழியவில்லை அல்லவா. அவர்களுக்கு ஏற்பட்டுள்ள துக்கங்களை நீக்குவதற்கு உதவி புரியாது உம்முடைய துக்கத்தை நீக்கிக்கொள்ள முயல்வதால் யாவர் உம்மை ஆதரிப்பார்கள்.

நீர் மற்றவர்களுக்குச் செய்த உபகாரத்தினாலேயே கார்க்கப்பட வேண்டியவராயிருக்கின்றீர். உமது அபகாரம் உம்மெய்க்கார்க்காது.

உட்கார்ந்திருந்தவனைப் பிணமாக நான்குபெயர் தூக்கிச்செல்லு வதையும், படுத்திருந்தவனைப் பிணமாக நான்குபெயர் தூக்கிச்செல்லுவதையும், நடந்திருந்தவனை பிணமாக நான்கு பெயர் தூக்கிச்செல்லுவதையும் கண்டிருந்தும் நீர் கொண்டிருக்கும் அவாக்கள் உம்மெய் விட்டு நீங்கவில்லை அல்லவா.

உன் மனை மாளிகைகளைப் பெருக்கிக்கொண்டதுபோல் உமது ஆயுளைப் பெருக்கிக்கொண்டீரோ. உமது செல்வங்களைப் பெருக்கிக் கொண்டதுபோல் நீடிய வாழ்க்கையைப் பெருக்கிக்கொண்டீரா.

உமக்குள்ள அன்பை நீடிக்கச்செய்தும், உமக்குள்ள சாந்தத்தை நீடிக்கச்செய்தும், உமக்குள்ள ஈகையை நீடிக்கச்செய்தும் இருப்பீராயின் உமக்குற்ற தீங்குகள் உம்மெய் அறியாமல் நீங்கும்.

அங்ஙனமின்றி மோகத்தைப் பெருக்கிக்கொண்டும், கோபத்தைப் பெருக்கிக்கொண்டும், உலோபத்தைப் பெருக்கிக்கொண்டும் உள்ள நீவிர் உமக்கு நேரிட்ட தீங்குகளை குறுக்க வேண்டுமென்று அலைவதினால் ஒருக்காலும் அத்தீங்குகள் அகலமாட்டாது.

துஷ்டனோடே துஷ்டனும், சுராபானப் பிரியனோடே சுராபானப் பிரியனும், வேசிக்கள்ளர்களுடன் வேசிக்கள்ளர்களும் சேர்ந்துக்கொண்டு தங்கள் தங்கள் கூட்டுரவைப் பெருக்கிக்கொள்ளுவதுபோல் இராகத்துவேஷ மோகங்களைப் பெருக்கிக்கொண்டுள்ளவன் மேலும் மேலும் அக்கூட்டுரவைச் சேர்த்துக்கொண்டு தினேதினே துக்கத்தில் ஆழ்ந்திருப்பான்.

அத்துக்கங்களை அகற்றுவதற்கு ஒருவராலும் முடியாது. அந்த துக்கங்களை அகற்றிக்கொள்ள வேண்டியவன் முன்பு தனக்குள்ள கோபமோக லோபங்களை அகற்றிக்கொண்டே வந்திருப்பானாயின் தனக்குத் தெரிந்துந் தெரியாமலும் நேரிட்ட துக்கம் தெரிந்துந் தெரியாமலும் அகன்றுபோம்.

ததாகதர் உமக்கருளிய திவ்யபோதகத்தின்படி ஒவ்வொரு மனிதனின் தோற்றமும், ஒடுக்கமும், ஏதுவும், நிகழ்ச்சியும், சுகமும், துக்கமும், செல்வமும், தாரித்திரமும், நீடியவாயுளும், குறுகிய ஆயுளும், அவனவன் கருமத்திற்கு ஈடாய் தேருருளைபோற் சுழன்றுவரும். அவர்கள் கன்மத்துக்கீடாய் ஓர் குடும்பமும் சுழன்று வருகின்றது. ஓர் கிராமவாசிகளும் சுழன்று வருகின்றார்கள். ஓர் தேசவாசிகளும் சுழன்று வருகின்றார்கள் நான்கு பூதகன்மங்களின் செயலால் தேசங்களும் மாறுதல் அடைகின்றவாதலின் நீர் உமது துக்கத்தை அகற்றவேண்டுமென்று கோறுவது வீண்கோறிக்கையேயாகும்.

எது விஷயத்தில் பயமும், எது விஷயத்தில் துக்கமும் பெருகி உள்ளதென்று விசாரித்து பயத்திற்கான ஏதுவையும், துக்கத்திற்கான ஏதுவையும் உய்த்து நிதானிப்பீராயின் ஒருவர் உதவியுமின்றி தன்னிற்றானே தோன்றியுள்ள பயத்தையும், துக்கத்தையும் போக்கிக்கொள்ளுவீர்.

இவைகள் யாவற்றிற்கும் புத்தரின் அடைக்கலமே பெருநிதியாகும். அவரது தன்மமே அழியா பொக்கிஷமாகும். அவரது சங்கமே சதானந்தக் கூட்டமாகுமென்று உலகவாழ்க்கையையும், வீண்டம்பத்தையும் விளக்கி துக்கமுற்றோனுக்கு ஆறுதல் கூறிச் சங்கத்தில் ஒருவனாகச் சேர்த்துவிட்டார்.

மாதவமறையோன் மச்ச நாடடைந்து அவ்விடமுள்ள மக்களுக்கு அரிய தன்மத்தை உபதேசித்து வருங்கால் மச்சனென்னும் ஓர் விவேகியார் வேதமுதல்வனை அடுத்து உலகத்தில் மெஞ்ஞான சுடர்விளக்காக விளங்கும் உத்தமனே, அன்பே ஒருருவாக வந்த அருகனே, சகலருஞ் சாற்றிக் கொண்டாடுதற்குரிய சாத்தனே, சாந்தமே ஒருருவாகத் தோன்றிய சதுர்முகனே, ஈகையே ஒருருவென அமைந்த ஈசனே! தன்னுயிர்க்கிரங்காது பிறவுயிர்க்கிரங்கும் பிரமமே இவ்வடியேனையுந் தங்கள் சங்கத்தில் ஒருவனாகச் சேர்த்து ஈடேற்றவேண்டும் என்றடிபணிந்தான்.

அக்கால் அருகன் மச்சனைநோக்கி அப்பா மச்சனே! நீவிர் இல்லறத்தை விட்டு முனிந்து துறவறமாம் சத்திய சங்கத்தைச் சாரவேண்டுமென்னுங் கோறிக்கை கொண்டபடியால் உமக்குள்ள அசத்தியங்களாகும் அநித்திய தோற்றங்கள் யாவையும் மறந்து சத்தியமாகும் நித்தியமெஃதென்று தெளிந்து நீடிய ஜாக்கிரதையில் இருத்தல் வேண்டும்.

அங்ஙனமின்றி இல்லற இன்பமும் வேண்டும், துறவற டம்பமும் வேண்டுமென்று முநிவீராயின் உன்மத்தர்போலும், பாலர்போலுந் திகைத்து உப்பு சாரமற்றுவிட்டதுபோல் உலகத்தோருக்கு ஓர் பிரயோசனமுமற்ற வராய்விடுவீர்.

நீவிர் எடுக்கும் முயற்சியும், உமது அதி தீவரபக்குவமும், சதா ஜாக்கிரதையிலும், சதாவிழிப்பிலும் இருந்து இரவு பகலற்ற இடத்தில் நிலைப்பீராயின் உலகில் தோன்றியுள்ள சருவ சீவர்களுக்கும் உதவியோரா யிருந்து உள்ள சீவர்களையும் உத்தமர்களாக்கி வைப்பீர்.

அவர்களடைந்த உத்தம நிலையால் மற்றுமுள்ள மத்திம ரதமர்களையுஞ் சீர்திருத்தி செவ்வனே விளங்க வைப்பார்களென்றார்.

மச்சனார் மாதவனை வணங்கி ஐயனே! சருவசீவர்களும் இரவு பகலற்ற நிலைக்குவரக்கூடுமோ என்றார்.

மச்சனே! நீவிரிது மட்டிலும் இல்லற இன்பத்தையே பேரின்பமாகக் கருதி மச்சனென்னுந் தனிப்பெயரினின்றீர். தற்காலமோ இல்லற இன்பத்தை மறந்து துறவற இன்பத்தில் முனிந்தீர். அத்தகைய முனிவைக்கொண்டு அதன்தீவரகாரியத்தால் மச்சனென்னும் பெயருடன் மச்சமுனி என்னுங் காரணப்பெயர் தோன்றும்.

அதுபோல் எக்காலுமுள்ள பூமியினின்று ஏதுக்குத்தக்க நிகழ்ச்சியால் முதற்றோற்றமாம் புற்பூண்டுகள் தோன்றி, புற்பூண்டுகளினின்று இரண்டாந் தோற்றமாம் புழுக்கீடாதிகள் தோன்றி, புழுக்கீடாதிகளினின்று மூன்றாந் தோற்றமாம் மட்சம் பட்சிகள் தோன்றி, மட்சம் பட்சிகளினின்று நான்காவது தோற்றமாம் ஊர்வனங்கள் தோன்றி, ஊர்வனங்களினின்று ஐந்தாவது தோற்றமாம் விலங்குகள் தோன்றி, விலங்குகளாம் வானரரினின்று ஆறாவது தோற்றமாம் வாலற்ற நரர்களென்னும் மக்கள் தோன்றி, மக்களினின்று மானிகளாய் ஏழாவது தோற்றமாம் இரவு பகலற்ற இடத்தினின்று தேவர்களாகத் தோன்றி சருவசீவர்களுக்கும் உபகாரிகளாக விளங்குவார்களென்று கூறினார்.

அவற்றை வினவிய மச்சன் சீவராசிகளே அதனதன் நற்கருமத்தால் உயர்ந்து மனுக்களாகத் தோன்றி, மனுக்களின் நற்கரும விவேகவிருத்தியால் இரவு பகலற்றவிடஞ் சென்று தேவர்களென்னும் பெயர்ப்பெறுவதாக உணர்ந்து உள்ளமுடையானை வணங்கி ஒப்பிலா எமதப்பனே தாம் கூறியுள்ள இரவு

பகலற்றவிடமெங்குளது அதனைச் சேரவேண்டிய வழி எவை அவற்றை விளக்கி ஆட்கொள்ளவேண்டு மென்றடிபணிந்தான்.

மச்சமுனி எண்ணூறு

செய்வதற்கு செப்புகிறேன் கருவைக்கேளு
ஜெகந்தழைக்க உண்டான செடி பூண்டெல்லாங் கொய்வதற்கு
வேளைகண்டு -பிடுங்கிவந்து, குருவருளால் மந்திரத்தால் கொடுத்துப்பாரு
நெய்வதற்கு ஒடமிட்ட வயணம்போலே
நெறிநின்றால் சகலசித்தும் நிலைக்கும்பாரு
உய்வதற்கு வழிபாரு பொய் பேசாதே
ஒருநாளுங் குருமொழியை மறந்திடாதே
மறந்திடா மறைகுலத்தில் உபயத்தந்திரம்
மச்சனென போதற்கு முன்புயாகும்
பிறந்திருந்த வென்தேசம் மச்சதேசம்
பிரமனுக்கு தொண்டுசெய்து பிறகு தானும்
அறந்தழைக்க ஒதிவைத்தார் வித்தை எல்லாம்
அவருடைய புண்ணியத்தால் வரையிலேறி
நிறைந்த சித்தா ஆச்சிரமந் தன்னில் சேர்ந்து
நிட்டையிலேயிருந்துருகு நிலைகண்டேனே.

அவலோகிதர் அவனது விசாரிணைக்கு அன்புகூர்ந்து மச்சனே! நீவிருலகத்தோடு உருண்டு வருகின்றீர். அதாவது உலகம் சனியால் இருளும் போது தாமும் இருண்டு நித்தியால் மூடிக்கொள்ளுகின்றீர். உலகம் பகலவனாம் சூரியனால் பிரகாசிக்கும்போது தாமும் நித்திறையை நீக்கி விழிக்கின்றீர்.

இத்தகைய இறப்பும் பிறப்புமாகும் விழிப்பும் நித்திறையும் பெருகி பெருநித்திறை அடைந்துவிடுவீராயின் மாறா பிறப்பிறப்பிற்கு ஆளாகி மங்காதுக்கத்தை அனுபவிப்பீர்.

ஆதலின் உம்மெய்க்கு அப்புறப்பட்ட வஸ்து ஏதோவொன்றிருக்கின்ற தென்றும், உம்மாற் காணாதவஸ்து ஒன்றிருக்கின்றதென்றும், உள்ளங்கலங்காது உம்மெய்யாம் நிலம், நீர், தீ, காற்றலாய உருவமும் உணர்ச்சி எண்ணமென்னும் நாமமுமாகிய இரண்டுமே உம்மெய்யாட்டுவதும் ஓட்டுவதும், கார்ப்பதும், தூர்ப்பதும், போஷிப்பதுமாய் இருக்கின்றபடியால் எண்ணத்தாலாயப் பேராசையின் கேடுகளையும், உணர்ச்சியினாலய இன்பத்தின் கேடுகளையும் நன்காராய்ந்து பார்ப்பீரானால் இம்மெய், மறுமெய் என்னுந் தோற்றங்களும், சுகம் துக்கமென்னும் நுகர்வுகளும், வேண்டுதல் வேண்டாமெனும் அவாக்களும், இரவு பகலென்னுங் காலங்களும் எளிதில் விளங்கும்.

அதாவது.- இருளவன் மறைக்குங்கால் நித்திறை சுகத்தை நாடுதலும், பகலவனுதிக்குங்கால் புசிப்பின் சுகத்தை நாடுதலுமாகியச் செயலினின்று விடுபட்டு சதாவிழிப்பாம் ஜாக்கிரதையினின்று உலக வாழ்க்கையின் சுகத்தால் உண்டாகுங் கேடுகள் யாவையும் கண்டறிந்து எண்ணும் பீடத்தில் தீங்கான எண்ணங்களைத் தங்கவிடாமல் அகற்றியும், சிற்றின்ப உணர்ச்சியில் சுகிக்காமல் அகன்றும் இரவு தோன்றியதென்னும் எண்ணமும், பகல்தோன்றியதென்னும் உணர்ச்சியும் அற்று நிற்பீராயின் இரவுபகலற்றவிடந்தோன்றும். உமது இதயமாகிய கண்ணாடியில் பதிந்திருந்த காமவெகுளி மயக்கங்களாகும் அழுக்குகள் யாவும் அகன்று இதய கண்ணாடி பளிங்குபோல் பிரகாசிக்கும். அப்பிரகாச நிலையில் பலதேசங்களுக்குள் தோற்றுவதன்றி பற்பல சீவராசிகளின் எண்ணங்களும் உமக்குள் விளங்கும்.

அன்றுமுதல் நன்றாய்த் தூங்கினேன், நன்றாய் விழித்தேனென்னும் சுகசொற்களுமற்று தூக்கமில்லாது வாதை அடைந்தேன், விழிக்கக்கூடாத மயக்கத்தில் ஆழ்ந்தேனென்னுந் துக்கசொற்களுமற்று இரவுபகலென்னுங் காலனைச் செயித்துகொள்ளுவீர்.

காலனென்னும் மரணகால ஜெயமுண்டானபோது இறப்பு பிறப் பென்னும் இரண்டற்ற நிருவாணம் பெறுவீரென்று போதித்து அந்த மச்சநாட்டுள் வியாரமொன்று கட்டுவித்து மச்சமுநிவரையும் தன்மப் பிரியர்களாம் சமணமுநிவர்களையும் அவற்றுள் நிலைக்கச்செய்து அவரவர்கள் இதயங்களிலுள்ள சங்கைகள் யாவையும் நிவர்த்திச் செய்துக்கொண்டிருந்தார்.

சங்கறநிறையோனாகும் அவலோகிதர் மச்சவியாரத்தினின்று குணபாடம், இரணபாடங்களாம் சூசரகங்களை விளக்கி தேகவியாதியின் உபத்திரவங்களை நீக்கும் உபாயங்களை அருளியதினால் அவரை உலகவைதியோவென்றும், வைதியநாதனென்றுங் கொண்டாடிவந்தார்கள்.

அருங்கலைச்செப்பு - மச்சப்பத்து

மச்சநாடன்றன் மனவிருளகற்றி இச்சையீதென்றானிறை
இச்சையாலுண்டாமிடுக்கங்கள் யாவும், மூச்செய் வினையென்றறி
வினையின் செயலே வெளிவுறுதோன்றி, முறியும் மூர்க்கனென்று உணர்
சினமும் அமைதியும் செய்தொழில் யாவும், உனதுணரெண்ணமதாம்.
சுகமதை நாடி சுகிக்க விருத்தல், இகநிலை துக்கத்தொடர்.

13. விசாகா காதை

அக்கால் கோசலமென்னும் அயோத்தியாபுரியின் உள்நாடாகும் ஷ்ராவஸ்தியில் மிகாரா என்னும் ஓர் தனவந்தனிருந்தான்.

அவனுக்குப் புண்ணியவர்த்தனனென்னும் ஓர் புத்திரனுண்டு. அவன் பாலதானமாம் பதினாறு வயது கடந்து குமரதானம் உண்டாயதால் வதுவைக்கு ஏதுசெய்து தாயுந் தந்தையருங் கூடி மைந்தனை அழைத்து மகனே உனது கண்ணுக்கு ரம்மியமான பெண்ணை நியமித்துக்கொள்ளலாமென்றார்கள்.

அவற்றை வினவிய புண்ணியவர்த்தனன் தாய் தந்தையரை விளித்து அவ்வகை எண்ணத்தை யான் கொள்ளவில்லையே என்றான்.

தாய் தந்தையர் மைந்தனை விளித்து அப்பா காலங்கடக்குமாயின் சந்ததி அற்றுப்போம்; உன் வதுவைக்கு இதுவே காலமென்றார்கள்.

அவர்கள் வார்த்தையை வினவிய மைந்தன் வேண்டாமென்று மாறுத்திரங்கூறாது உங்கள் மனோபீஷ்டப்படி யாகட்டும். அப்பெண் பஞ்ச லட்சணம் அமைந்திருப்பாளாயின் அவளை மணஞ்செய்வதே மங்கல மென்றான்.

தந்தை தாயர் மைந்தனைநோக்கி மகனே! பஞ்சலட்சணமென்பதெவை என்றார்கள். மங்கை பருவ மான்துளிர் மேனியழகு, ஒடுங்கிய உடலழகு, மயிரழகு, பல்லழகு, சந்திரவதன ஒளியழகுமே என்றான்.

அவற்றை உணர்ந்த தாய் தந்தையர் நிமித்தகர்களை வரவழைத்து பஞ்சலட்சணம் அமைந்த பெண்கள் உலகத்திலுண்டோ என்றார்கள். பஞ்சலட்சணம் அமைந்த பெண்களுண்டு ஆனால் தேடிகண்டுபிடிக்க வேண்டுமென்றார்கள்.

தனபதி தக்கமதியுகிகளாகும் நிமித்தகர்களை வரவழைத்து வேண பரிசளித்து சிறந்த மோகனமாலை ஒன்றை அவர்களிடங்கொடுத்து பஞ்சலட்சணம் அமைந்த மங்கை தோற்றுவாளாயின் அவள் கழுத்தில் இம் மாலையை அணிந்துவாருங்கோள் என்று அனுப்பினான்.

நிமித்தகர்கள் தனபதியின் உத்திரவைப் பெற்று பலதேசங்களுக்குச் சென்றும் பஞ்சலட்சணப் பெண் தோற்றாமல் மிக்க துன்புற்று மெலிந்து வரும் வழியில் சகிதா என்னும் நகரத்தை அடைந்தார்கள்.

அந்நாள் அந்நகரவாசிகளுக்கு சகிதா என்னும் முல்லைபுட்பவிழா கொண்டாடும் மங்கையர் நாளாயிருந்தது.

அதனைக் கொண்டாடுமாறு மங்கைபருவப் பெண்கள் யாவரும் முல்லை புட்பங்களை தட்டுகளில் நிறப்பிவந்து முல்லை செண்டுகள் செய்தாடுவதும், முல்லைபாடல் பாடுவதுமாக ஆற்றங்கரையை அணுகி ஆனந்த நீராடி ஒருவர்மேல் ஒருவர் புட்பமிரைத்துக் கொண்டிருந்தார்கள்.

முல்லை கொண்டாட்டத்தைக் கண்ட நிமித்தர்கள் யாவரும் அங்குள்ள ஓர் சத்திரத்தில் உட்கார்ந்து முல்லைவிழாப் பெண்களுள் பஞ்ச லட்சணமமைந்தப் பெண் ஏதேனும் உண்டோ என்று கண்ணோக்க முற்றிருந்தார்கள்.

அக்கால் மழைப்பெய்ய ஆரம்பித்தது. பெண்கள் யாவரும் ஓடி வந்து சத்திரத்தில் சேர்ந்துவிட்டார்கள். விசாகா என்னும் மங்கை மட்டிலும் மெதுவில் நடந்து சத்திரம் வந்து சேர்ந்தாள்.

அக்காலத்தில் சத்திரத்தில் வீற்றிருந்த நிமித்தகர்கள் யாவரும் விசாகாவுக்குள்ள நான்கு லட்சணங்கள் சரிவரயிருப்பதைக் கண்டு பல்லின் லட்சணத்தை காணாதவர்களாய் விசாகாவை நோக்கி அம்மே! உம்முட னிருந்தப் பெண்கள் யாவரும் அதிகம் நனையாமல் ஓடிவந்துவிட்டார்களே அதுபோல் நீயும் ஓடிவந்துவிட்டால் உனது வஸ்திரம் அதிகம் நனையாதன்றோ என்றார்கள்.

விசாகா நிமித்தர்களை நோக்கிப் பெரியோர்களே! நான் அவர்களிலும் ஓட சக்த்தியுள்ளவளே ஆயினும் சிலகாரணங்களை உணர்ந்து ஓடாமல் நடந்துவந்தேனென்றாள்.

அன்புமிகுத்த குழந்தாய்! அதன் காரணங்கள் என்னை என்றார்கள்.

பெரியோர்களே! ஓடுவதினால் நான்குவகை கௌரவப்பழுதுண்டு.

அதாவது, இராஜகோலங்கொண்ட அரசன் ஓடுவானாயின் அவனைக் கண்டோர் மதியார்கள். அலங்காரஞ்செய்துள்ள பட்டத்துயானை ஓடுமாயின் அதனைக் கண்டோர் மதியார்கள். பற்றற்ற ஞானி ஓடுவானேயாயின் அவனைக் கண்டோர் மதியார்கள். கற்புடையப் பெண்கள் ஓடுவார்களேயாயின் அவர்களைக் கண்டோர்களும் மதியார்கள்.

மற்றும் ஓடுவதினால் இன்னோர் குறைவுமுண்டு. எங்கள் தாய் தந்தையர்களால் நாங்கள் விலையாகும் பெண்கள் ஒவ்வோர் அவயங்களையும் விலைமதித்து வைத்திருக்கின்றார்கள்.

அதிலொன்று ஓடுவதினாலும், ஆடுவதினாலும் பழுதடையுமாயின் ஒருவரும் எங்களை விவாகத்திற்கு விரும்பமாட்டார்கள். இதுதான் நான் ஓடாததற்கு மற்றொரு காரணமென்றாள்.

விசாகா பேசிக்கொண்டிருந்த நேரமெல்லாம் அவள் பற்களின் அழகைப் பார்த்தும் அவளது புத்தியின் விருத்தியை அறிந்தும் இத்தகைய லட்சணமுள்ள மங்கையை இதுவரையிலுங் கண்டதில்லை என்று எண்ணி அவளைப்புகழ்ந்து அவளது கழுத்தில் தங்கள் கரத்திருந்த மோகனமாலையை அணிந்து குழந்தாய்! உம்மால் இம்மாலை அழுகுபெற்றதென்றார்கள்.

விசாகா திடுக்கிட்டு பெரியோர்களே! தாங்கள் எவ்விடமிருந்து வந்தீர்களென்றாள்.குழந்தாய்! ஷ்ராவஸ்தியிலிருந்து வந்தோமென்றார்கள் தங்களதிபதியின் பெயரென்னையென்றாள் குழந்தாய்! அவர் பெயர் மிகாரா தனபதியென்றார்கள் பெரியோர்களே! எமதையன்பெய ரென்னையென்றாள் குழந்தாய்! உமதையன் பெயர் புண்ணியவர்த்தன சிறுவனென்றார்கள். மாலை சூடப்பட்ட விசாகா நடந்தவர்த்தமானங்கள் யாவற்றையுந் தனது தாய்தந்தையர்களுக்கு அறிவித்தாள்.

மாலைசூட்டப்பட்டபெண்கள் யாவரும் மாலைக்குரியவன் மனையைச் சேரவேண்டியது வழக்கமாதலின் அதுபோல் விசாகாவும் ஐஞ்நூறு தேர்களில் தோழிகளுடனும், நிமித்தகர்களுடனும், சிலபெரியோர்களுடனும் பிரயாணத்திற்கு ஆயத்தமானபோது விசாகாவின்தந்தை நிமித்தகர்களை நோக்கி தாங்கள் எவ்விடமிருந்து வந்தீர்களென்றான்.

தனபதி யாங்கள் ஷ்ராவஸ்தி நகரத்திலிருந்து வந்தோமென்றார்கள். அந்நகர தனபதியின் பெயரென்னை யென்றான் மிகாரா தனபதி யென்றார்கள் அவரது புத்திரன்பெய ரென்னையென்றான் புண்ணியவர்த்தன சிறுவனென்றார் கள் தங்கள் தனபதியின் செல்வமதிப்பென்னையென்றான் தனபதி நாற்பது கோடிக் காகுமென்றார்கள்.

அஃது எமது செல்வத்திற்கோர் திரணமாகாது. ஆயினும் என்குமாரத்தி காலதேச வழக்கத்தையும் விவாகக் குறிப்பையும் ஒட்டி எப்போது மாலைசூட்டப்பட்டாளோ அப்போதே ஒருவனுக்குத் துணைவியாகிவிட்டாள். இனி செல்வத்தைப்பற்றி யோசிப்பதில் யாது பயனுமில்லை என்று சம்மதித்துக்கொண்டான்.

விசாகாளுக்கு மாலையணிந்த நிமித்தகர்கள் யாவரும் முன்பு சென்று வர்த்தமானங்கள் யாவற்றையும் மிகாராதனபதிக்கு விளக்கியபோது மிகாரா

தனபதி சாகித நகரவாசியாகும் தனஞ்சய தனபதியிடம் வந்து சேர்ந்து தனது மருமகளை அழைத்துப்போகும்படி ஆரம்பித்தான்.

அக்கால் தனஞ்சய தனபதி தனது மகளை திவ்யாபரணங்களால் அலங்கரித்து தேர், ஒட்டகம், குதிரை, யானை முதலிய ஸ்ரீதனங்களளித்து தனது மகளை அருகிலழைத்து குழந்தாய்! உனது கணவன் வீட்டிற்குச் சென்றவுடன் நீ நடந்துகொள்ள வேண்டிய ஒழுக்கங்கள் சிலதுண்டு.

அவை யாதெனில்:- உன் மாமனார் வீட்டிலிருக்கும் வரையில் வீட்டின் நெருப்பு வெளியில் போகலாகாது, வெளி நெருப்பு வீட்டிற்கு வரலாகாது. கொடுப்பவனுக்குக் கொடு, கொடாதவனுக்குக் கொடாதே, கொடுத்தவனுக்குங் கொடாதவனுக்குங் கொடு, சுகத்துடன் உழ்க்காரு, சுகத்துடன் உண்ணு, சுகத்துடன் நித்திறை செய், அக்கினியைக் கவனி, வீட்டு தேவதைகளை விசுவாசி என்று பத்து தனமதிகளையும் அளித்தான்.

விசாகா இத்தியாதி சம்பத்துகளையும் பெற்றக்கொண்டு தனது மாமனார் மிகாரா தனபதியும் மற்றுமுள்ளோரும் புடைசூழ ஷ்ராவஸ்தி நகரத்தை நோக்கிச் சென்றார்கள்.

மிகாரா தனபதி தனது பின்னால்வருங் கூட்டங்களைக்கண்டு இவர்க ளெல்லோரும் யாரென்று வினவினான்.

"உமது மருமகளின் தோழிப்பெண்களும் ஏவலாளருமென்றார்கள்".

அதனை வினவிய மிகாரா தனபதி மறுண்டு இத்தனை ஆட்களை வைத் துக்கொண்டு யாரால் போஷிக்கக்கூடும்? இவர்கள் யாவரையும் அடித்துத் துறத்திவிடுங்கோளென்று ஆக்கியாபித்தான்.

அவர்களுடைய வேவுகர்கள் துறத்துங்கால் விசாகா தடுத்தும் அதனைக் கவனியாது துறத்தியதால் ஓடியவர்கள்போக சிலர் பின்தொடர்ந்து வந்தார்கள்.

விசாகா தனது மாமனார் இல்லஞ் சேர்ந்தவுடன் தனக்களித்திருந்த இஸ்திரீதனங்கள் யாவற்றையும் பங்கிட்டு தனது சுற்றத்தாருக்கு வந்தனத்துடன் அநுப்பிவிட்டாள்.

காரணம் அந்த ஸ்திரீதனங்கள் யாவும் தனதேவலாளர் போஷிப்புக் கென்றே கொண்டுவந்ததாதலின் அவர்கள் யாவருந் துறத்தப்பட்டபோது இனி யாரைப் போஷிப்போமெனக் கருதி தனதில்லத்திற்கே திருப்பிவிட்டு தன்மாமனார் குணாகுணங்களைக் கேட்டப் பணிப்பெண்களுக்கு விஷயங்களை விளங்கப்போதித்தாள்.

அதாவது தோழிகளா! எனது மாமனார் தனத்தை சேகரிக்குந் தொழிலாளரே அன்றி அநுபவிக்குஞ் சுகவாளறன்றென்று விளங்குகின்றது.

எவ்வகையில் என்பீரேல், பூர்வபுண்ணியபலத்தால் தனவிருத்தியடைவது இயல்பாகும். அத்தகைய தனத்தால் தானும் சுகித்து தன்னை அடுத்தோரையுஞ் சுகிக்கச்செய்தல் தனாதிபதிகளின் இயல்பாம். அங்ஙனமின்றி குப்பையைக் கொல்லையில் சேர்ப்பதுபோல் செல்வத்தை இல்லத்தில் சேர்த்து வைப்பவர்களை தனபதிகளென்றுங் குணபதிகளென்றுங் கூறலாகாது. ஆதலின் எனது இஸ்திரீதனத்தையும் மாமனாற் குப்பையில் சேர்க்காது சகலருக்கும் உபகாரியாக விளங்குந் தனபதிகளிடமே அநுப்பிவிட்டேனென்றாள்.

மணமகளில்லஞ் சேர்ந்து நிமித்தகர்களால் வதுவை நிறைவேறியவன்றிரவு தனக்கு இஸ்திரீதனமாக வந்தப் பெண்குதிரை குட்டி ஈன்றதை வேவுகர்களால் அறிந்து அவ்விடஞ்சென்று கொட்டாரத்திலுள்ளக் குதிரையையும் அதன் குட்டியையும் பார்வையிட்டு வேவுகர்களால் வேண உபசரிப்புச் செய்து ஆகாரமளித்து வந்தாள்.

சிலகாலங்களுக்குப்பின் காலைநேரத்தில் சமணமுனிவர் ஒருவர் பிச்சாபாத்திரம் ஏந்தியிருந்த பெரியோரை கவனியாமலும், அன்னமளிக்கும்படி உத்தரவுகொடாமலும் இருந்த தனது மாமனாரின் லோபத்துவமுணர்ந்த விசாகா மனவருத்தமுற்று தென்புலத்தோர்க்கு ஈயாதனமிருந்தென்ன போயென்ன குறைந்தென்ன மிகுந்தென்ன என்று சொல்லிக்கொண்டே மனைக்குள் போய்விட்டாள்.

அதனைக் கேட்டிருந்த மிகாரா தனபதிக்கு கோபமீண்டு வேவுகர்களை அழைத்து இந்தப்பெண் எனது மனைக்குள் வந்து சிறிது நாளைக்கெல்லாம் என் தனம் இருந்தென்ன போயென்ன என்னும் சாபமிடுகின்றாள் உடனே என் இல்லத்தைவிட்டு இவளை அகற்றிவிடவேண்டுமெனக் கூச்சலிட்டான்.

அவ்விடமிருந்த வேவுகர்கள் யாவரும் விசாகாவின் ஆட்களாதலின் அம்மொழியைக் கவனிக்காமல் மௌனமாயிருந்தார்கள்.

அக்கொடுமொழியை வினவிய விசாகா தனது மாமனாரை நோக்கி, ஐயனே! என்னைத் தெருவிலிருந்துக்கொண்டு வந்ததுபோல் வார்த்தையாடி விட்டீர், என்னை வெளியிற்றுரத்தும்படியான அவக்கேடுகள் யான்செய்த தென்னை, அவற்றை விளக்கவேண்டுமென்று கேட்டாள்.

மிகாரா தனபதி நானவற்றை விளக்கவேண்டிய அவசியமில்லை என்றான்.

விசாகா மறுபடியும் மாமனாரை நோக்கி ஐயனே! காகதாளி நியாயம் வேண்டாம். என்னுடன் வந்துள்ள எட்டுக்கிரகஸ்தர்களையும் வைத்து விசாரிப்பதே நலமென்று வேண்டி தன்னுடன் வந்த எட்டுக்கிரகஸ்தர்களையும் வரவழைத்தாள்.

மிகாராவும் தனது கிரகஸ்தர்களை வரவழைத்தபோது இருவருங்கலந்து உழ்க்கார்ந்தார்கள். விசாகா இருகட்சி பெரியோர்களை வணங்கி ஐயன்மின்! எனது மாமனார் வாய்ச்சூளுவாக என்னை வீட்டைவிட்டுப் போகும்படி சொல்லுகிறார் அதைத் தாங்கள் தீரவிசாரித்து என்னை அநுப்பிவிட வேண்டுமென்று வணங்கினாள்.

அதனை வினவிய மத்தியர்கள் தனபதியைநோக்கி யாது காரணமென்றார்கள்,

"என் தனத்தை குறைந்தென்ன மிகுந்தென்னவென்று சபித்தாள் அதினால் துறத்தும்படி சொன்னேனென்றான்".

பெரியோர்கள் விசாகாவைநோக்கி அம்மே! காரணம் யாதென்றார்கள்.

"தென்புலத்தோர் பாத்திரமேந்தி வாயல்படியில் வந்துநின்றதும் தன் மாமனார் அவரைப்பார்த்தும் பாராததுபோல் புசித்திருந்ததுகண்டு அவ்வாக்கியம் புகன்றது மெய்யேயென்று கூறினாள்."

அதனை வினவியப் பெரியோர் தனபதியைநோக்கி ஐயா! இவ்வரு மொழிக்கு எமது குழந்தையை வெளியேகும்படி சொல்லலாமோ என்றார்கள்.

அதனைவினவிய மிகாரா பெரியோர்களைநோக்கி இரவு நடுஜாமத்தில் உங்கள் குழந்தை வெளியில் போகலாமோ என்றான்.

பெரியோர்கள் விசாகாவை நோக்கி அம்மே! ஜாமத்தில் வெளியேறிய காரணமென்ன என்றார்கள்.

தனது பெண்குதிரை குட்டி ஈன்றதும் வேவுகர்களால் சங்கதி தெரிந்து அவ்விடஞ்சென்று குதிரைக்கு சிகிட்சை செய்ததும் விளக்கினாள்.

அதனை வினவிய பெரியோர்கள் தனபதி! யாதுதோஷமுங் காணவில்லையே என்றார்கள்.

மிகாராதனபதி பெரியோர்களை நோக்கி மருமகள் செய்வது ஓர் வகையாயிருப்பினுந் தனது தகப்பனார் தனஞ்சய தனபதி கூறியவாக்குகளில் தன் நெருப்பை வெளியில் விடாதே வெளி நெருப்பை வீட்டுள் கொண்டுவராதே என்று கூறியுள்ளாரே இது நியாயமோ என்றான்.

அதனை வினவியப் பெரியோர்கள் விசாகாவை நோக்கி குழந்தாய்! அவ்வகை நிகழ்ந்ததோ என்றார்கள்.

பெரியோர்களே! என் பிதா இவர் கூறியவண்ணங் கூறவில்லை யான்கூறும் வண்ணங் கூறினார்.

பெரியோர்களே! என் தகப்பனார் கூறிய கருத்து அதுவன்று. அவரென்னை நோக்கி குழந்தாய்! உன் மாமனாராயினும், உன் மாமியாராயினும், உன் புருஷனாயினும், உன் விஷயத்தில் ஏதேனுங் கொறூரவார்த்தைகளைப் பேசினாலும் வைதாலும் அவற்றை அயல் வீட்டிற்குச் சென்று அந்நெருப்புக் கொப்பாகிய வார்த்தைகளை சொல்லிவிடுவாயாயின் அஃது உன் வீட்டிற்கும்

அயல் வீட்டிற்கும் பற்றி எறிந்து பற்பல துக்கங்களை எழுப்பிவிடும். ஆதலின் உன்வீட்டு நெருப்பை வெளிவிடாதே என்று கூறினாரென்றாள்.

அதனை வினைவிய மிகாரா தனபதி அதுசரிதான் வெளிவீட்டின் நெருப்பு உள்ளுக்கு வராவிடின் பதார்த்த வகைகள் எவ்வகை நிகழும் இவ்வார்த்தைக் கூறலாமோ என்றான்.

விசாகா பெரியோர்களை நோக்கி ஐயன்மின்! எனது பிதாவின் கருத்து அஃதன்று. அண்டைவீட்டார் அயல்வீட்டார் உன்னை தருவித்து உன் மாமனாரைப் பற்றியேனும் உன் மாமியாரைப்பற்றியேனும், உன் புருஷனைப் பற்றியேனும் நெருப்புக்கொப்பாகிய தீங்கான வார்த்தைகள் ஏதேனும் புகல்வார்களாயின் அவ்வார்த்தையை வீட்டுள் கொண்டுவந்து நெருப்புக் கொப்பாங் கலகத்தை மூட்டிவிடாதேயென்று கூறினார்.

ஈதன்றி எனது தந்தையார் ஓதியுள்ள மற்றுங் கட்டளையும் விவரிக்கின்றேன்.

கொடுத்தவனுக்குக் கொடு என்பதின் பொருள்.

உன் வீட்டிலிருக்கும் ஓர் வஸ்துவை ஒருவன் இரவல் வாங்கிக்கொண்டு மறுபடியுங் கொண்டுவந்து கொடுப்பானாயின் அவனுக்குக்கொடு.

கொடாதவனுக்குக் கொடாதே என்பதின் பொருள்.

உனது பொருளை இரவலென்று வாங்கிக்கொண்டுபோய் மறுபடியுங் கொடாதவனுக்குக் கொடாதே.

கொடாதவனுக்குக் கொடு என்பதின் பொருள்.

கொடாத லோபியாயிருப்பினும் அவன் வருந்தி இரந்தகாலத்தில் கொடு. கொடுத்தவனுக்குக் கொடு ஒருகால் உனக்கு உபகாரஞ் செய்வானாயின் பலகாலும் அவனுக்குக் கொடு.

காலத்தில் உட்காரு என்பதின் பொருள்.

உன் மாமனாரேனும், உன் மாமியாரேனும், மற்றும் பெரியோர்களேனும் எதிரிருக்குங் காலங்களில் உட்காராதே. அவர்களெதிரில் இல்லாதகாலங்களில் உட்காரு.

காலத்தில் சாப்பிடு என்பதின் பொருள்.

உன் மாமனார் மாமியார் புருஷன் இவர்கள் புசித்து திருப்த்தி அடைந்தபின் காலத்தில் நீ சாப்பிடு.

காலத்தில் தூங்கு என்பதின் பொருள்.

உன் மாமனார், மாமியார், புருஷன் நித்திறையடைந்த காலத்திற்குப்பின் நீ நித்திறைக்கொள்.

நெருப்பை கவனி யென்பதின் பொருள்.

உன் மாமன், மாமி, நாத்தி, மாதுலி, புருஷன் இவர்களை நெருப்பென்று கவனித்து மிருதுவாக்கில் வாழக்கடவாய்.

வீட்டுதேவதைகளை விசுவாசி என்பதின் கருத்து.

உன் மாமன், மாமி, புருஷன் இவர்களை வீட்டுதேவதைகளெனக் கொண்டாடக்கடவாய் என்று கூறியுள்ளார்.

எனது தந்தை எனக்களித்த இஸ்திரீதனங்களில் அழியாதனங்கள் இவைகளே என்று வாய்பொத்திநின்றாள்.

விசாகாவின் வாய்மொழிகள் யாவையுங் கேட்டிருந்த மிகாராதனபதி மறுமொழி கூறுவதற்கு ஏதுவில்லாமல் நாணடைந்து தலைகவிழ்ந்து பூமியைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

இதனையுணர்ந்த கிரகஸ்தராகிய பெரியோர்கள் மிகாராதனபதியை நோக்கி மற்றுங் குற்றங்கள் ஏதேனும் உண்டோ என்றார்கள்.

பெரியோர்களே! யாதொரு குற்றமுமில்லை என்றான்.

யாதாமோர் குற்றமுமில்லாதிருக்க குழந்தையை வெளியிற் போகும்படிக் கூறலாமோ என்றார்கள்.

தனபதியும் பெரியோர்களும் இவ்வகையாக வார்த்தையாடிக் கொண்டிருக்குங்கால் விசாகா பெரியோர்களை நோக்கி தாங்களிவற்றை விசாரிப்பதற்கு முன் என் மாமனார் உத்திரவின்படி யான் வீட்டைவிட்டுப்

போவது சிறப்பாகாது. தாங்கள் யாவற்றையும் சரிவர விசாரித்து என்மீது யாதொரு குற்றமும் ஏற்படாததினால் என்பிதாவின் சொற்படி நான் புறப்படவேண்டுமென்று கூறி தனது தோழிப் பெண்களையும் ஏவலாளர் களையும் அழைத்து தனக்குவேண்டிய தேர்பரிவாரங்களை ஆயத்தஞ் செய்யும் படி ஆக்கியாபித்தாள்.

அதனைக் கண்ணுற்ற தனது மாமனார் விசாகாவைநோக்கி அம்மணி! யான் தெரியாமற் சொல்லியக் குற்றங்களைப்பொருத்து என் மனையை சிறப்படையச் செய்யவேண்டுமென்று இரைஞ்சினான்.

விசாகா தனது மாமனாரை நோக்கி பெரியோரே யான் பொருக்க வேண்டியதெதுவோ அதைப்பொருத்துக்கொண்டேன் ஆனால் புத்தருடைய தன்ம கன்ம குடும்பத்திற் பிறந்தவள் என்மனைக்கு எக்காலுந்தென் புலத்தார்வந்து அன்னம் புசிக்க வேண்டியதே சிறப்பாகும் அத்தகைய ஞானசாதகர் பாத்திரம் அறிந்து பிச்சையிட உத்திரவளிப்பீரேல் இவ்விடம் தங்கி எனது மனைத்தொழில் நடாத்துவேன் அவ்வகை இலதேல் எனக்கு உத்திரவளிக்கவேண்டுமென்று வருந்தினாள்.

அவள் அமுதவாக்கை உணர்ந்த மிகாரா அம்மணி! உமதிஷ்டம் போல் தென் புலத்தார்க்கன்னமளித்து சிறப்படையலாமென்று கூறினான்.

மாமனார் அன்பின் வாக்கை வினவிய விசாகா தனது கிரகஸ்த பெரியோர்களில் சிலரை தருவித்து தாங்கள் இரத மூர்ந்துபோய் நமது அறவாழியானாகிய அவலோகிதரும், அவரது சங்கத்தவர்களாகிய தென்புலத் தோரும் எங்கிருந்தபோதுங் கண்டறிந்து அவர்களை நமது இரதங்களில் ஏற்றிக்கொண்டு வந்துவிடவேண்டுமென்று ஆக்கியாபித்தாள்.

பெரியோர்களும் பெருமானிருப்பிடங் கண்டறிந்து அருகில் சென்று சரணாகதி வேண்டியழைத்து மிகாராதனபதி இல்லம் வந்து சேர்ந்தார்கள்.

விசாகாவும் மிக்க பயபக்த்தியுடன் பதார்த்தங்களை வட்டித்து பாத்திரங்களில் அளித்து தனது மாமனாரை அழைத்து பாத்திரங்களிலுள்ள அன்னத்தை பகவனுக்குப் பரிமாறும்படி வேண்டிக்கொண்டாள்.

மிகாராதனபதி முன்பொருகால் சமண முனிவர்களாகுந் தென்புலத்தோரைக் கண்டுங் காணாதவன்போல் புசித்திருந்தவனாதலின் மனங்குன்றி நாணடைந்து விசாகாவை நோக்கி அம்மணி! விநாயகருக்குத் தாமே அன்னமளித்துவிடவேண்டுமென்று கோறினான்.

ஐயனே! அங்ஙனமாகுகவென்று விடைபெற்று தனது கணவன் புண்ணியவர்த்தன சிறுவனை அழைத்து வந்து பதியுஞ் சதியும் பகவன் பாதத்திற் பணிந்து கருணாகாரா, கணநாயகா, கங்கையாதாரா, காசிவிஸ்வேசா, கமலநாயகா, இவ்வடியாரளிக்கும் அன்னத்தை அன்புடன் புசித்து எங்களைப் புனிதர் களாக்கவேண்டுமென இரஞ்சினாள்.

விசாகாவின் வணக்க வாக்குணர்ந்த விநாயக்கடவுள் புண்ணிய வர்த்தனனையும் புண்ணியவர்த்தினியையும் அறிவுபெருக என வாழ்த்தி அன்னமுண்டு முகிந்தபின் அனைவருக்கும் அருள் மொழியை ஊட்டும்படி ஆரம்பித்தார்.

அக்கால் விசாகா மாமனாரை அணுகி ஐயனருள் மொழியைக் கேட்க வாருங்கோளென்று அடிபணிந்தாள். மிகாராதனபதி தனக்குள்ள நாணத்தினாலும் அச்சத்தினாலும் அறவாழியான் முன்பு செல்லாமல் ஓர் அரையின் திறைமறைவில் உட்கார்ந்து கொண்டான்.

உலக மூன்றும் உணர்ந்து உள்ளடைந்த ஒப்பிலா அப்பன் மிகாரா தனபதியின் லோபகுணத்தையும், அதினால் நேர்ந்த நாணத்தையும், திறைமறைவில் வீற்றிருக்கும் அச்சத்தையும், உணர்ந்த உலகநாதன் திறை மறைவினின்ற மிகாராவுக்கும், திறைக்கும், திறையறைக்கும் அப்புறமுள்ளவர் களுக்கும், மலைக்கு உட்புறத்தும் மலைக்கும் அப்புறமுள்ளவர்களுக்கும், சமுத்திரத்துள்ளும் சமுத்திரத்து அப்புறமுள்ளவர்களுக்கும், மெய்யருக்கும் புத்தரிவரே, சத்தியமென்னும் புத்தரிவரே, சகலலோக சாட்சியாகிய புத்தரிவரே

என்று சகல சீவர்கள் கண்ணுக்குங் காட்சியாய் நின்று சத்தியதன்மத்தை விளக்கினார்.

தனபதியாகும் அன்பரே! நீர் திறைமறைவிலிருந்தும் உம்மெய் தெரிந்துகொண்டேன் நீரும் எம்மெய் எதிரில் பார்க்கின்றீர்.

நீரானது நுழையா விடமுண்டோ? காற்றானது கலவாவிடமுண்டோ? தீயானது தீண்டாவிடமுண்டோ? அதுபோல் மனமானது மலைவாவிட முண்டோ இல்லை.

மனமானது விரிந்தவிடத்து சகல வரும்பொருளும் மறையும், மனமடங்கியவிடத்து சகல திறைகளும் நீங்கி மூவுலகமுந் தோன்றும்.

அவ்வகைத் தோற்றத்தை அறிந்துக்கொள்ளும்படி செல்லவேண்டிய மார்க்கமே புத்ததன்மமென்னப்படும். புத்ததன்மமாம் மெய்யறத்தில் நடப்பவர் களே உண்மெய் கண்டடைவார்கள். அவ்வுண்மெய்யைக் கண்டவர்களோ புறம்பாய்க் காணும் பொருட்கள் யாவும் பொய்யென்று அறிந்து அவைகள் யாவுங் கடிகைக்குக் கடிகைக் கெட்டுக்கொண்டே வருங் காட்சிகளை விளக்கி உண்மெய்க்கு மேலாம் பொருள் உலகத்தில் ஒன்றுமில்லை என்று துலக்கி சதாதுக்கத்தை விலக்கி சருவசாட்சியாய் சதானந்தத்தில் நிலைப்பார்கள்.

அவர்களுக்கு அருமறைவுமில்லை, உருமறைவுமில்லை, உரைமறைவு மில்லை, திறைமறைவுமில்லை, அணைமறைவுமில்லை, குணமறைவுமில்லை சருவமும் அவர்களுள் தோன்றும் சன்னிதானமாகும் சருவதானங்களும் உதிர்ந்து மகா நிதானமாம் சன்னிதானத்தில் நிலைத்தவன் தனக்கோர் பற்றின்றி சருவ சீவர்களுக்கும் உபகாரிகளாக விளங்குவான்.

பகிர்முகத் தோற்றத்தில் கடிகைக்குக் கடிகை அதாவது க்ஷணத்திற்கு க்ஷணங் கெட்டுக்கொண்டேவருந் தோற்றப்பொருட்கள் யாவையுந் தாவிதாவி பிடித்து சேர்க்குமளவும் பிறவி சமுத்திரமாம் துக்கக்கடலில் ஆழ்ந்து பாசக்கயிற்றில் கட்டுண்டு துன்ப வலைகளென்னுங் கசைகளால் அடியுண்டு இறப்பும் பிறப்புமாகிய துக்க சக்கர பற்களில் சிக்குண்டு சுழல்வான்.

தேவர், மக்கள், விலங்கு, பட்சி, தாபரம், ஊர்வனம், நீர்வாழ் வனங்களென்னும் எழுவகைத் தோற்றங்களும் அள்ளல், இரவுரவம், கும்பிபாகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி, மாபூதியாம் எழுநாகமென்னுங் துக்கத்தில் ஆழ்ந்து மாறா பிறவியில் சுழலவைக்கும்.

ஆதலின் ஒவ்வொரு மக்களும் எழுபிறவியில் தோற்றும் எழுநரகவாதனைகளை அநுபவியாது க்ஷணத்திற்கு க்ஷணந் தோற்றிக் கெடுக்கும் அவாக்களை அறுத்து முன் பற்றுக்களை விடுத்து அன்பின் விருத்தியாலும் நீதியின் பற்றிலும் நிலைத்து இறப்பையும் பிறப்பையும் போக்கிக்கொள்ளுங்கோ ளென்று தனது சத்தியதன்மத்தைப் பதியச்செய்தார்.

மிகாரா தனபதிக்கும் உலோபதோஷம் விளங்கி கணநாதனை வணங்கி இந்த லோபியையுந் தங்கள் சங்கத்தில் ஒருவனாக சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று இரைஞ்சினான்.

இன்னும் சிலநாள் நீரில்லற தன்மத்தில் நிலைத்து சீலம் பதிந்து சித்த சுத்தமுண்டாகுங்கால் சங்கத்திற் சேர்ந்துக்கொள்ளலாமென்று சொல்லிப் போய்விட்டார்.

அன்றுமுதல் விசாகா தனது மாமன் கணவன் முதலியவர்களுக்கு மிக்க அன்புடையவளாய் நடந்துவருவதுடன் பகவனும் தென்புலத்தோராம் சமணமுநிவர்களும் வந்து தங்கியிருப்பதற்கு வியாரம் கட்டிவைத்ததுமன்றி. மற்றுமுள்ளவியாரங்களில் தங்கியுள்ள சமணமுநிவர்களுக்கு அன்னக்காவடி அநுப்புவதும், சீவரவுடை ஈவதும், பிட்சாபாத்திரம் அளிப்பதும், ஏழைகளை ஆதரிப்பதும் சங்கத்திற்சேர்ந்து சமணநிலைபெற்று தன்னைப்பார்க்கும் பார்ப்பார்களுக்கும் தன்னைப்பார்க்கும் பார்ப்பிணிகளுக்கும் வேண்டிய தானங்களைச் செய்துக்கொண்டே புத்திர பௌத்திரர்களுடன் ஆனந்த சுகவாழ்க்கையிலிருந்து 120-வது வயதில் மரணமடைந்தாள். அவளது நீதிமார்க்க நடையும் சத்திய தன்மச் செயலும் ஈகையின் பெருக்கமுமே அவளை நோயற்ற

வாழ்விலுங் குறைவற்ற செல்வத்திலும் இருத்தி சுருக்கத்தில் நித்திய நிலைபெறும் மறுமெயடைந்தாள்.

14. குருக்ஷேத்திர காதை

பகவன் அந்நகரைவிட்டு முன்பு சிலநாள் தங்கியிருந்து குருக்ஷேத்திரமெனப் பெயர்பெற்றவிடஞ் சென்று அங்குள்ள பிக்ஷுகுழாங்களுக்குப் போதிக்க கருணைபுரிந்து சங்கத்தோரை நோக்கி ஓ! சகோதிரர்களே என்றழைத்தனர்.

சிஷ்யர்கள் ஐயனே என விடை பகர்ந்தார்கள்.

பகவன் உபதேசிக்க ஆரம்பித்தார்.

சகோதிரர்களே! பரிசுத்த பேறு அடைவதற்கும், துக்க, அழுகை இவைகளினின்று விடுபடுவதற்கும், நீதியில் நடப்பதற்கும், நிருவாண நிலை அடைவதற்குமான ஓர் வழி மனுக்களுக்குத் திறக்கப்பட்டிருக்கின்றது. அவ்வழியே நான்குவித சமாதிகளென்னப்படும்.

அந்நான்கு சமாதிகள் யாவை? அவை, காயா சமாதி, வேதனா - சமாதி, சித்தா சமாதி தம்மா சமாதி என்பவைகளாம்.

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரன் தேகவிஷயத்தில் ஜாக்கிரதை யுடையவனாயும், அறிவுள்ளவனாயும், ஆராய்ச்சி உள்ளவனாயும், காமம் துக்கம் இவைகளினின்று தன்னை விலக்கிக்கொள்பவனாயும் இருப்பானாகில் அவனே காயசமாதியிலிருப்பவனாவான்.

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரன் உணர்ச்சி விஷயத்தில் ஜாக்கிரதையுடையவனாயும், அறிவுள்ளவனாயும், ஆராய்ச்சி உள்ளவனாயும், காமம் துக்கம் இவைகளினின்று தன்னை விலக்கிக்கொள்பவனாயும் இருப்பவனாகில் அவனே வேதனாசமாதியிலிருப்பவனாவான்.

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரன் சித்தவிஷயத்தில் மனஜாக்கிரதை உடையவனாயும், அறிவுள்ளவனாயும், ஆராய்ச்சி உள்ளவனாயும், காமம், துக்கம் இவைகளினின்று தன்னை விலக்கிக்கொள்பவனாயும் இருப்பானாகில் அவனே சித்த சமாதியிலிருப்பவனாவான்.

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரன் கந்த விஷயத்தில் ஜாக்கிரதை யுடையவனாகவும், அறிவுள்ளவனாயும், ஆராய்ச்சி உள்ளவனாயும் காமம், துக்கம் இவைகளின்று தன்னை விலக்கிக் கொள்ளுபவனாயும் இருப்பானாகில் அவனே தம்ம சமாதியில் இருப்பவனாவான்.

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரன் தேக விஷயத்தில் ஜாக்கிரதையுடன் எப்படியிருப்பான்.

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரன் துறந்து காட்டிற்கேனும், ஓர் மரத்தினடியிலேனும், ஜனசஞ்சாரமற்ற விடத்திலேனும் சென்று சப்பளம்போட்டு உட்கார்ந்து நிமிர்ந்த தேகத்துடனும், தியான சக்தியுடனும் இருந்து அவன் வெளிக்குவிடும் சுவாசத்தைப்பற்றியும், உள்ளுக்கிழுக்கும் சுவாசத்தைப்பற்றியும். மனத்திடை நிறுத்துவான். வெளிக்கு சுவாசத்தை வெகுநேரம் விட்டு தான் இவ்வளவு அதிகமாக சுவாசத்தை விட்டோமென கிரஹித்தும் உள்ளுக்கிழுக்கும் சுவாசத்தை வெகுநேரம் இழுத்து தான் அதிகமாக சுவாசத்தை உள்ளுக்கிழுத்தோம் என கிரகித்தும், வெளிக்கு சுவாசத்தை சற்றுநேரம் விட்டுதான் இவ்வளவு சிறுநேரம் சுவாசத்தை விட்டோம் என கிரகித்தும் உள்ளுக்கிழுக்கும் சுவாசத்தை சற்றுநேரம் இழுத்து, தான் இவ்வளவு சிறுநேரம் சுவாசத்தை இழுத்தோமென கிரகித்தும் இவ்விதமாக தெளிவுடன் சுவாசத்தை வெளிக்குவிடுவதும், உள்ளுக்கிழுப்பதுமாக அப்பியாசத்திற்குக் கொண்டுவந்து பின் இருமூச்சுகளையும் சலனமாகச் செய்துக்கொள்ளுவான்.

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரன் தேகவிஷய ஆராய்ச்சியில் சுவாச சம்பந்தமாக தியானிக்கும்போது பின்வருமாறு விசாரிப்பான். அதாவது வெளிக்குவிட்டு உள்ளுக்கிழுப்பதும், உள்ளுக்குவிட்டு வெளிக்கு இழுப்பது மாகிய இச்சுவாசங்களுக்கு ஆதாரமெது. ரூபமே இவைக்கு ஆதாரம். அந்த ரூபமோ பூதங்களால் அமையப்பட்டது. இரண்டாவது நாமமும் பூதங்களுடன்

சேர்ந்து வருகின்றது. நாமம் இஃதென தெரிந்தவுடன் அதைப் பற்றியுள தெதுவென விசாரிக்கையில் அது அறியாமையாலென்றும் தெரிந்து நாமமும் ரூபமும் ஒன்றை ஒன்று பற்றியிருக்கிறதன்றி வேறு நான் என்பது ரூபமாக வருவது கிடையாது.

ஓ! சகோதிரர்களே! இவ்விதமாக தேகவிஷயத்தில் ஜாக்கிரதையுடைய வனாய் இருப்பதோடு ஏனையோருடைய தேகவிஷயத்திலும் ஜாக்கிரதையுட னிருப்பான். தன் தேகம்போல் ஏனையோர் தேகமும் தோன்றி அல்லல்பட்டு அழியுமெனவும், தன் தேகம்போல் ஏனையோர் தேகமும் தளர்வடையு மென்றும், தன் தேகம்போல் ஏனையோர் தேகமும் விழுந்து விடுமெனவும் நிதானித்து தியானிக்கும்போது தேகமட்டும் இவனுக்குத் தோன்றுமன்றி ஜீவஸத்தி என்றும், பெண் இதென்றும், ஆண் இதென்றும், நான் எனது என்றும், ஆட்டும் பொருளென்றும், மனிதரூபமென்றுந் தோன்றாது இவ் விதமாக தேகவிஷயத்தில் ஜாக்கிரதையுடன் அறிவை விருத்திசெய்துவர தியானசக்தி அதிகரித்து தனிபுருஷனாகிய உலக பற்றற்று நிற்பன். ஓ! சகோதிரர்களே! இவ்விதமாக ஒரு சகோதிரன் தேகவிஷயத்தில் ஜாக்கிரதை யுடையவனாயிருப்பான்.

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரன் நடக்கும்போது நாம் நடக்கின்றோ மென அறியும் திறமுடனும், நிற்கும்போது நாம் நிற்கின்றோமென அறியும் திறமுடனும், உட்காரும்போது நாம் உட்காருகிறோமென அறியும் திறமுடனும், படுக்கும்போது நாம் படுக்கின்றோமென அறியும் திறமுடனும், மற்ற எந்த நிலைமையிலிருந்தபோதிலும் அந்த நிலைமைகளில் அறியுந் திறமுடனிருப்பான்.

ஓ! சகோதிரர்களே! முன் தேக விஷயத்தில் ஜாக்கிரதையுடனிருந்து அதன்பின் தேகநிலைகளைப்பற்றி தியானிக்கத் திரும்புகின்றான்.

நடப்பது யார்? யார் நடை? நடக்கச்செய்வதெது? என்ற இம்மூன்று கேள்விகளைத் தனக்குள் கேட்டு நான் என்பது நடக்கவில்லை, நான் என்பதின் நடையுமன்று, மனோகர்மத்தால் வாயுதாது ஊடுறுவிச்செல்ல நடக்கச்செய்தது நடக்கவேணுமென்கின்ற எண்ணம் பிறந்தது. அந்த எண்ணம் வாயுதாதைத் தூண்ட வாயுதாதே நடக்கச்செய்தது. மனோகர்மம் தூண்டி வாயுதாது சம்பந்தப்பட்டு ஊடுறுவிச்செல்ல இந்த முழுதேகத்தை முன்னுக்கு நடக்கச் செய்தது.

நிற்க வேணுமென்கின்ற எண்ணம் பிறந்தது. அந்த எண்ணம் வாயுதாதைத் தூண்ட வாயுதாதே நிற்கச்செய்தது.

உட்காரவேணுமென்கின்ற எண்ணம் பிறந்தது. அந்த எண்ணம் வாயுதாதைத் தூண்டி வாயுதாதே உட்காரச்செய்தது.

படுக்கவேணுமென்கின்ற எண்ணம் பிறந்தது. அந்த எண்ணம் வாயுதாதைத் தூண்ட வாயுதாதே படுக்கச்செய்தது என இவ்விதமாகத் தெளிந்து பின்வருமாறு தியானிப்பான்.

ஒரு ஸத்து இருந்தே நடக்கச்செய்கிறதென்றும், ஒரு ஸத்து இருந்தே நிற்கச்செய்கிறதென்றும், ஒரு ஸத்து இருந்தே உட்காரச்செய்கிறதென்றும், ஒரு ஸத்து இருந்தே படுக்கச்செய்கிறதென்றும் கூறுவார்கள். அப்படி நடக்கச் செய்வதும், நிற்கச் செய்வதும், உட்காரச் செய்வதும், படுக்கச்செய்வதுமான ஒரு ஸத்து உண்டா? கிடையாது. ஏன் சாதாரணமாக ஜனங்கள் வண்டி போகின்றது, வண்டி நடக்கின்றதென கூறுகிறார்களே? மாட்டைக்கொண்டு மனிதன் பூட்டாவிட்டால் வண்டி யாது செய்யும்? வண்டி போகிறது, வண்டி நிற்கிறதென்னும் வார்த்தைக்குப் பொருள் யாது? வண்டிபோகிறதென்றும், வண்டி நிற்கிறதென்றும் கூறுவது அர்த்தமற்ற வார்த்தை. அறிவின் குறைவால் தேகம் வண்டியை ஒத்தது; மனமே புருடன், எண்ணங்களின் ஏதுக்களே எருது, எண்ணமே வண்டி ஓட்டுபவன். நடக்கவேணுமென்றேனும், நிற்க வேண்டுமென்றேனும், உட்காரவேண்டுமென்றேனும், படுக்க வேண்டுமென் றேனும் எண்ணம் உதிக்க வாயுதாது தோன்றி நடக்கவும், நிற்கவும், உட்காரவும், படுக்கவும் செய்கிறது. நான் நடக்கின்றேன், நான் நிற்கின்றேன், நான்

உட்காருகின்றேன், நான் படுக்கின்றேன் என்பவை உலக வழக்கச்சொல்லேயன்றி வேறன்று.

கப்பல்கள் எப்படி காற்றல் நடத்தப்படுகின்றதோ, அம்பு எப்படி வின்னாண்பலத்தால் எய்யப்படுகின்றதோ அதுபோல் இந்ததேகமும் எண்ணுதலினாலும், வாயுதாதுவாலும் நடத்தப்படுகின்றது.

சூத்திரங்களின் கருவிகள் எப்படி கயிற்றால் அசைக்கப்படுகின்றதோ அதுபோல் இந்த தேகசூத்திரத்தின் கருவிகள் மனக்கயிற்றால் நடக்கவும், நிற்கவும் செய்கிறது. இவ்விடத்தில் ஒருதவியுமின்றி ஒரு ஸத்து நடக்கவும் நிற்கவும் செய்யவிருக்கின்றதோ?

ஓ! சகோதிரர்களே! இவ்விதமாக தேகவிஷயத்தில் ஜாக்கிரதை உடையவனாய் இருப்பதோடு ஏனையோருடைய தேகவிஷயத்திலும், ஜாக்கிரதையுடனிருப்பன். தன் தேகம்போல் ஏனையோர் தேகமும் தோன்றி அல்லல்பட்டு அழியுமெனவும், தன்தேகம் போல் ஏனையோர் தேகமும் விழுந்துவிடுமெனவும் நிதானித்து தியானிக்கும்போது தேகமட்டும் இவனுக்குத் தோன்றுமன்றி ஜீவஸத்தி என்றும், பெண் இதென்றும், ஆண் இதென்றும், நான் எனதென்று ஆட்டும் பொருளென்றும், மனிதரூபமென்றுந் தோற்றாது.

இவ்விதமாக தேகவிஷயத்தில் ஜாக்கிரதையுடன் அறிவை விருத்தி செய்துவர தியானசக்தி அதிகரித்து தனிபுருஷனாகி உலகபற்றற்று நிற்பன். ஓ! சகோதிரர்களே! இவ்விதமாக ஒரு சகோதிரன் தேக விஷயத்தில் ஜாக்கிரதையுடையவனாயிருப்பான்.

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரன் சாதாரணமாய்ப் பார்க்கும் போதும், உற்றுநோக்கும்போதும், தான் எதைப் பார்க்கின்றானெனவும், எதை உற்றுநோக்குகின்றானெனவும் ஊன்றி ஆராய்ந்து ஜாக்கிரதையும் அடக்கமு முள்ளவனாயும் இருப்பன். கைகளை நீட்டும்போதும், மடக்கும் போதும் யாதுபற்றி நீட்டுகின்றோம், யாதுபற்றி மடக்குகின்றோமென ஊன்றிய மனத்துடன் ஜாக்கிரதையும், அடக்கமுமுள்ளவனாயுமிருப்பான். சீவரமணிந்து பிட்சாபாத்திரத்தை கையிலேந்தும் போது யாதுபற்றி சீவரமணிந்தோம், யாதுபற்றி பிட்சாபாத்திரத்தை கையிலேந்தினோமென ஆழ்ந்து சிந்தித்து ஜாக்கிரதையும், அடக்கமுமுள்ளவனாயிருப்பான். உண்ணும்போதும், அருந்தும் போதும், மெல்லும் போதும், ருசிக்கும் போதும் யாதுபற்றி உண்கின்றோம், அருந்துகின்றோம், மெல்லுகின்றோம், ருசிக்கின்றோமென தெளிந்து ஜாக்கிரதையும், அடக்கமுமுள்ளவனாயும் இருப்பான்.

நடக்கும்போதும், நிற்கும்போதும், உட்காரும்போதும், உறங்கும் போதும், விழிக்கும்போதும், பேசும்போதும், அமைதியாயிருக்கும் போதும் யாதுபற்றி நடக்கின்றோம், யாதுபற்றி நிற்கின்றோம் , யாதுபற்றி உட்காரு கின்றோம், யாதுபற்றி உறங்குகின்றோம், யாதுபற்றி விழிக்கின்றோம், யாதுபற்றி பேசுகின்றோம், யாதுபற்றி அமைதியாயிருக்கின்றோம் என விழித்து ஜாக்கிரதையும் அடக்கமுமுள்ளவனாய் இருப்பான்.

ஓ! சகோதிரர்களே! இவ்விதமாக தேகவிஷயத்தில் ஜாக்கிரதை யுடையவனாய் இருப்பதோடு ஏனையோருடைய தேகவிஷயத்திலும் ஜாக்கிரதையுடனிருப்பான். தன் தேகம்போல் ஏனையோர் தேகமும் விழுந்து விடுமெனவும் நிதானித்து தியானிக்கும்போது தேகமட்டும் இவனுக்குத் தோன்றுமன்றி ஜீவஸத்தி என்றும், பெண் இதென்றும், ஆண் இதென்றும், நான் எனதென்றும், ஆட்டும் பொருளென்றும், மனிதரூபமென்றுந் தோன்றாது இவ்விதமாக தேகவிஷயத்தில் ஜாக்கிரதையுடன் அடக்கத்தை விருத்தி செய்துவர தியானசக்தி அதிகரித்து தனிபுருஷனாகி உலக பற்றற்று நிற்பான்.

ஓ! சகோதிரர்களே! இவ்விதமாக ஒரு சகோதிரன் தேகவிஷயத்தில் ஜாக்கிரதையுடையவனாயிருப்பான்.

காயாசமாதி

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரன் இத்தேகம் உச்சிமுதல் உள்ளங்கால் வரையிலும் அருவறுக்கத்தக்க பல அசுத்தங்கள் பொருந்தி தோலால்

மூடப்பட்டதெனவும், இத்தேகத்தில் சிரசின்ரோமம், தேகத்தினது ரோமம், நகம், தந்தம், தோல், மாமிசம், நரம்பு, எலும்பு, எலும்பிலுள்ள ஊன், ஈரல், இருதயம், ஈரற்குலை, நுரையீரலைச் சார்ந்திருக்குஞ் சவ்வு, மண்ணீரல், சுவாசாசயம், இரைப்பைக்கும் ஆசனத்திற்கும் இடையிலுள்ள குடல், மணிக்குடல், இரைக்குடல், மலம், பித்தநீர், கபம், சீழ், இரத்தம், வியர்வை, நிணம், கண்ணீர், நிணநீர், உமிழ்நீர், சளி, வெண்நீர், மூத்திரம் அடங்கியுள்ளனவென்று சிந்திப்பான்.

ஓ! சகோதிரர்களே! சாலி அரிசி, நெல், அவரை, உளுந்து, எள், அரிசி முதலானவைகளை மூடிவைத்திருந்த ஒரு பாண்டத்தை ஒருவன் திறந்து வைத்துவிட்டு இப்பாண்டத்தில் இது சாலி அரிசி, இதுநெல் இது அவரை, இது உளுந்து, இது எள், இது அரிசியென பிரித்துவிடுவது போல் ஒரு சகோதிரன் உச்சிமுதல் உள்ளங்கால் வரையிலும் அருவறுக்கத்தக்க பல அசுத்தங்கள் பொருந்தி தோலால் மூடப்பட்ட இத்தேகத்தில் இது தேகத்தினது ரோமம், இது நகம், இது தந்தம், இது தோல், இது மாமிசம், இது நரம்பு, இது எலும்பு, இது எலும்பிலுள்ள ஊன், இது ஈரல், இது இருதயம், இது ஈரற்குலை, இது நுரை ஈரலைச்சார்ந்திருக்கும் ஜவ்வு, இது இரைக்குடல், இது மலம், இது வெண்நீர், இது மூத்திரம் என பிரித்து பிரித்து அதே தியானத்தினின்று வெறுத்து வருவான்.

பூனாச்சா பரங் பிக்கவே பிக்கூ! ஈமாமேவா காயங் உத்தம் பாதாதவ அதோ கேதா மா தகாதச்சாபிரியந்தங் மூரம் நானாபகராஸா அஸுஸினே பிச்சவக்கட்டி அதி இமம்லே மெய்க்காயே. கேஸா லோமா ஹரு தந்தா தஸ்ஸோ மம்ஸங் ந அத்தி அத்தி மிஞ்சங் வக்கங் ஹதயங் யக்கனங் கிளோமாகங் பிஹாகங் பப்பாஸங் அந்டங் அந்டாகுணந் உதரியங் கரிதங் மதலுகங் பித்தங் ஸேமங் புப்போ லோஹிதங் ஸெடோ மேடோ அஸுவாஸா கேலோங் ஸிங்கனீகங் லஸீகங் மோதந்தீ. தியாதாபி பிக்கவே உபடோ மூகா புட்டோலி புரா நானா விஹிதாடா தஞ்ஞதா தேய்தீதங் ஸாலீனங் விஹினங் முகானங் மாதானங் திலானங் தங்தூலானங் தமேனங் சக்குமா புரிஸோ முச்சத்தவா பிச்சவக்கேயா, இமே ஸாவி, இமேவீஹி, இமேமுகா, இமேமாஸ, இமேநீலா, இமே தந்துல. மேவாகோ பிக்கவே பிக்கூ! இமாமேவா காயங் உத்தம் பாதாதலே அதோகேதா மாதகாதஸா பரிபந்தங் பூரங் நானா பகஸாஸ அஸுசினோ பிச் சவக்கதீ.

ஓ! சகோதிரர்களே! இவ்விதமாக தேகவிஷயத்தில் ஜாக்கிரதை உடையவனாய் இருப்பதோடு ஏனையோருடைய தேகவிஷயத்திலும் ஜாக்கிரதையுடன் இருப்பான். தன் தேகம்போல் ஏனையோர் தேகமும் தோன்றி அல்லல்பட்டு அழியுமெனவும், தன்தேகம்போல் ஏனையோர் தேகமும் தளர்வடையுமென்றும், தன் தேகம்போல் ஏனையோர் தேகமும் விழுந்துவிடும் எனவும், நிதானித்து தியானிக்கும்போது தேகம் மட்டும் இவனுக்குத் தோன்றுமன்றி ஜீவஸத்தி என்றும், பெண் இதென்றும், ஆண் இதென்றும், நான், எனது என்றும், ஆட்டும் பொருளென்றும், மனிதரூபமென்றுந் தோன்றாது இவ்விதமாக தேகவிஷயத்தில் ஜாக்கிரதையுடன் அறிவை விருத்தி செய்துவர தியானசக்தி அதிகரித்து தனி புருஷனாகி உலகபற்றற்று நிற்பன். ஓ! சகோதிரர்களே! இவ்விதமாக ஒரு சகோதிரன் தேக விஷயத்தில் ஜாக்கிரதையுடையவனாய் இருப்பான்.

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரன் தேகத்தை நோக்கி இத்தேகத்தில் வாயு, அக்னி, பிருதிவி, நீர் என்னும் தாதுக்களிருந்துக் கொண்டு நடத்துகின்றன என்றும் தியானத்திலிருப்பான். ஒரு சகோதிரன் மயானத்திற்குச்சென்று அங்குள்ள ஒருநாளில் இறந்து அழிகிறதேகத்தையும், இறந்த இரண்டாம் நாளில் அழிகிற தேகத்தையும், இறந்த மூன்றாம் நாள் அழிகிற தேகத்தையும், ஊதலிட்டிருக்குந் தேகத்தையும், நிலைமுச்சுகெட்டு அழிகின்றதெனக்கருதி தன்தேகமும் இதுபோல் கெடும் அல்லவா என தியானிப்பான்.

மூனாச்சா பரங் பிக்கவே பிக்கூ! இமாமேவாயங் யதாதீயங் யதாபனீஹிதங் தாதுஸோபச்சவேகத்தீ. அதி இமாங் ஸமேங்காயே பதவிதாது, அபோதாது, தேஸோதாது. வாயோதாது, யசாபிபிக்கவே தக்கோ கோகாத கோவாதோகாதங்தீ.

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரன் மயானத்திற்குச்சென்று அங்கு கிடக்கும் பிணங்களை காக்கைகளால் கொத்தித் தின்பதையும், பருந்துகளாலும் கழுகுகளாலும் கொத்தித் தின்பதையும், நாய்களாலும் நரிகளாலும் தின்னப்படுவதையும், பலவித கிருமிகளால் தின்னப்படுவதையும் கண்டு சத்தியமாகவே என் தேகமும் இவ்வகையான ஸ்திதிக்கு வருமென தியானிப்பான்.

ஓ! சகோதிரர்களே! இவ்விதமாக தேக விஷயத்தில் ஜாக்கிரதை யுடையவனாய் இருப்பதோடு ஏனையோருடைய தேக விஷயத்திலும், ஜாக்கிரதையுடன் இருப்பன். தன் தேகம்போல் ஏனையோர் தேகமும் தோன்றி அல்லல்பட்டு அழியுமெனவும், தன்தேகம்போல் ஏனையோர் தேகமும் விழுந்துவிடுமெனவும் நிதானித்து தியானிக்கும்போது தேகம் மட்டும் இவனுக்குத் தோன்றுமன்றி ஜீவஸத்தி என்றும், பெண் இதென்றும், ஆண் இதென்றும், நான் எனதென்றும் ஆட்டும் பொருளென்றும், மனிதரூபமென்றுந் தோன்றாது.

இவ்விதமாக தேகவிஷயத்தில் ஜாக்கிரதையுடன் அறிவை விருத்தி செய்துவர தியான சக்தி அதிகரித்து தனிபுருஷனாகி உலக பற்றற்று நிற்பன். ஓ! சகோதிரர்களே! இவ்விதமாக ஒரு சகோதிரன் தேகவிஷயத்தில் ஜாக்கிரதையுடையவனாய் இருப்பான்.

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரன் மயானத்திற்குச்சென்று அங்கு கிடக்கும் மாம்சத்தோடு கூடிய எலும்புகளையும், மாம்சமும் எலும்பும் சேர்ந்து இரத்தம் வடிந்துக்கொண்டிருக்கும் துணிக்கைகளையுமுடைய தேகங்களைக் கண்டு சத்தியமாகவே என் தேகமும் இப்படி அழியக்கூடியதென தியானித்து வெறுப்பான்.

ஓ! சகோதிரர்களே! இவ்விதமாக தேகவிஷயத்தில் ஜாக்கிரதை யுடையவனாய் இருப்பதோடு ஏனையோருடைய தேகவிஷயத்திலும் ஜாக்கிரதையுடன் இருப்பான். தன் தேகம்போல் ஏனையோர் தேகமும் தோன்றி அல்லல்பட்டு அழியுமெனவும், தன் தேகம்போல் ஏனையோர் தேகமும் விழுந்துவிடுமெனவும், நிதானித்து தியானிக்கும்போது தேகம் மட்டும் இவனுக்குத் தோன்றுமன்றி ஜீவஸத்தி என்னும், பெண் இதென்றும், ஆண் இதென்றும், நான் எனதென்றும், ஆட்டும் பொருளென்றும், மனிதரூபமென்றும் தோன்றாது இவ்விதமாக தேகவிஷயத்தில் ஜாக்கிரதையுடன் அடக்கத்தை விருத்தி செய்துவர தியானசக்தி அதிகரித்து தானே தத்துவப்புருஷனாகி உலகபற்றற்று நிற்பான்.

ஓ! சகோதிரர்களே! இவ்விதமாக ஒரு சகோதிரன் தேகவிஷயத்தில் ஜாக்கிரதையுடையவனாயிருப்பான்.

வேதனா சமாதி

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரன் உணர்ச்சி விஷயத்தில் எவ்விதமாக ஜாக்கிரதையுடனிருப்பான்.

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரனுக்கு இன்பமான உணர்ச்சி அறியுங்கால் இது இன்பமான உணர்ச்சி என்றும், இன்பமற்ற உணர்ச்சியை அறியுங்கால் இது இன்பமற்ற உணர்ச்சி என்றும், சமநிலையான உணர்ச்சியை அறியுங்கால் இது சமநிலையான உணர்ச்சி எனவும், அக்கரை உண்டாக்கும் இன்பமற்ற உணர்ச்சி எழுங்கால் இது அக்கரை உண்டாக்கும் இன்பமற்ற உணர்ச்சி எனவும், அக்கரை உண்டாக்கா இன்பமற்ற உணர்ச்சி எழுங்கால் இது அக்கரை உண்டாக்கா இன்பமற்ற உணர்ச்சி எனவும், தெளிந்து ஜாக்கிரதையுடனிருப்பான்.

ஓ! சகோதிரர்களே! இவ்விதமாக தன் உணர்ச்சி விஷயத்தில் ஜாக்கிரதையுடையவனாய் இருப்பதோடு ஏனையோருடைய உணர்ச்சி விஷயத்திலும் ஜாக்கிரதையுடனிருப்பான். தன் உணர்ச்சிபோல் ஏனையோர் உணர்ச்சியும் எழும்பி மடிந்து மறையும் எனவும், உணர்ச்சி எழும்போது ஜாக்கிதையுடனும், உணர்ச்சி மடியும்போது ஜாக்கிரதையுடனும், உணர்ச்சி எழும்பி மடியும்போதும் ஜாக்கிரதையுடனிருந்தும் இவ்விதமாக ஜாக்கிரதையான தியானத்தில் உணர்ச்சியைப் பரிசோதிப்பதுடன் தியானசக்தி உறுதிப்பெற உலகத்திலிருந்தும் உலகப் பற்றற்றவனாயிருப்பான்.

சித்த சமாதி

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரன் சித்த விஷயத்தில் எவ்விதமாக ஜாக்கிரதையுடையவனாக இருப்பான்.

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரனுக்கு வெடுவெடுப்பான சித்தம் உதிக்குங்கால் இது வெடுவெடுப்பான சித்தமெனவும், வெடுவெடுப்பற்ற சித்தமெனவும், விரோதமான சித்தம் உதிக்குங்கால் இது விரோதமான சித்தமெனவும், விரோதமற்ற சித்தமெனவும், மெய் மறக்குஞ் சித்தம் உதிக்குங்கால் இது மெய்மறக்கச்செய்யும் சித்தமெனவும், இது மெய்மறதியற்ற சித்தமெனவும், உத்தேசிக்கும் (அதாவது நிதானம்) சித்தம் உதிக்குங்கால் இது உத்தேசிக்கும் சித்தமெனவும் அலைகிற சித்தம் உதிக்குங்கால் இது அலைகிற சித்தமெனவும், புகழும் சித்தம் உதிக்குங்கால் இது புகழும் சித்தமெனவும், இது புகழத்தகாத சித்தமெனவும் ஏகசிந்தனை சித்தம் உதிக்குங்கால் இது ஏகசிந்தனை சித்தமெனவும், ஏகசிந்தனையற்ற சித்தமெனவும், விமோசனசித்தம் உதிக்குங்கால் இதுவிமோசனமுற்ற சித்தமெனவும், விமோசனமற்ற சித்தமெனவும் தெளிந்து ஜாக்கிரதையுடனிருப்பான்.

ஓ! சகோதிரர்களே! இவ்விதமாக தன் சித்தவிஷயத்தில் ஜாக்கிரதை யுடையவனாய் இருப்பதோடு ஏனையோருடைய சித்தவிஷயத்திலும் ஜாக்கிரதையுடனிருப்பான். தன் சித்தம்போல் ஏனையோர் சித்தமும் தோன்றி கலைந்து மறையுமெனவும், சித்தம் தோன்றும்போது ஜாக்கிரதையுடனும், சித்தம் மறையும்போது ஜாக்கிரதையுடனும், சித்தம் தோன்றி மறையும்போது ஜாக்கிரதையுடனிருந்தும் இவ்விதமாக ஜாக்கிரதையான தியானத்தால் சித்தத்தைப் பரிசோதிப்பதுடன் தியானசக்தி உறுதிப்பெற உலகத்திலிருந்தும் உலக பற்றற்றவனாயிருப்பான்.

தம்ம சமாதி

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரன் தேகவிஷயத்திலும், உணர்ச்சி விஷயத்திலும் சித்த விஷயத்திலும் ஜாக்கிரதையாயிருந்தபின் நான்கு சத்தியத்தில் ஜாக்கிரதையுடையவனாய் இருப்பான். ஒரு சகோதிரனுக்கு துக்கம் ஈதெனவும், துக்கோற்பத்தி ஈதெனவும், துக்க நிவாரணம் ஈதெனவும், துக்க நிவாரணமார்க்கம் ஈதெனவும் தெளிந்துக்கொள்ளுவான்.

ஓ! சகோதிரர்களே! துக்க சத்தியமென்றால் யாது. பிறப்பு, துக்கம், மூப்பு துக்கம், பிணி துக்கம், இறப்பு துக்கம், கவலைப்படுதல், புலம்பல், துற்சம்பவம், சங்கடத்திற்குள்ளாதல், நிராசையாய்த் துயரப்படல் ஆகிய இவைகள் துக்கம், வேண்டிய பொருள் கிட்டாமெய் துக்கம், சுருக்கமாகச் சொல்லின் ஐம்புலப் பற்றுக்களே துக்கமென்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! பிறப்பென்பது யாது? உற்பேதம் பிறப்பு கற்போற்பத்தி பிறப்பு, பஞ்சஸ்கந்த உருவமாதல் பிறப்பு, சுருக்கத்தில் ஐந்துபுலன்கள் சேர்ந்து உருவமைந்து தோற்றலே பிறப்பு.

ஓ! சகோதிரர்களே! மூப்பென்பது யாது? முதிர்ந்த வயதுற்ற தள்ளாடல், தந்தமற்றிருத்தல், ரோமம், நரைத்துவிடல், தேகம் சுருங்கி விடல், பலம் குறைந்து விடல், சித்தஸ்தி மடிதல் மூப்பு.

ஓ! சகோதிரர்களே! இறப்பென்பது யாது? பிறிவு இறப்பு, தேகம் நீற்று நீராதல் இறப்பு, இருளால் இறப்பு, பஞ்சஸ்கந்தங்களின் பிரிவே இறப்பாம்.

ஓ! சகோதிரர்களே! கவலைப்படுதல் யாது? பெருத்த நஷ்டம் நேரிட்டாலும், கைவிட்டு விலகியதானும், கவலையும், கவலைப்படுதலும் கவலையுள்ளவனாயிருத்தல் இருதயக்கவலை, இருதயத்தில் கவலையுள்ளவனா யிருத்தலே கவலைப்படுதலாம்.

ஓ! சகோதிரர்களே! புலம்பலென்பது யாது? பெருத்த விரையம் நேர்ந்து பிரிந்தபோது புலம்பல், ஓலமிட்டழல், சத்தமிட்டழல், சத்தமின்றி குமுங்கல் புலம்பலாம்.

ஓ! சகோதிரர்களே! துன்பமென்பது யாது? தேகத்தை ஒத்த துன்பம், தேக அசௌக்கியம், தேகம் உணர்வால் வருந்தி அதற்கீடுபடுவதால் நேரும் துன்பம் தேகம் அனுபவிக்கும் பீடை யாதும் துன்பமே.

ஓ! சகோதிரர்களே! துயரமென்பது யாது? மனதிற்கடுத்த துன்பம் மன உணர்வால் வருந்தி அதற்கீடுபடுவதால் நேரும் துயரம், மனமனுபவிக்கும் பீடையாதும் துயரமே.

ஓ! சகோதிரர்களே! நிராசையாய்த் துயரப்படல் யாது? பெருத்த நஷ்டம் நேர்ந்தும், துர்சம்பவம் நேர்ந்தும், நம்பிக்கை இன்மெயாகியும், நிராசையாகியும், நிராசை ஸ்திதியிலிருப்பதே நிராசையாய் துயரப்படலாம்.

ஓ! சகோதிரர்களே! ஐந்துபற்றின் கூட்டங்களே துன்பமென்பதெப்படி. ரூபக்கூட்டத்தின் பற்று, உணர்ச்சிக் கூட்டத்தின் பற்று, கரணக் கூட்டத்தின் பற்று, மனச்சாய்வின் கூட்டப்பற்று, சித்த (மன) கூட்டத்தின் பற்று இவைகளே ஐந்து கூட்டத்து பற்றே துன்பம்.

ரூப ஸ்கந்தம்

ரூபகூட்டம் இருவகைப்படும். அவை (1) பூதரூபம். (2) உபாதாரா ரூபம். பூதரூபநாமங்களாவன:- பதவிதாது, அப்போ தாது, தேஜோ தாது, வாயோ தாது. அதாவது நான்குவித பூதங்களாயரூபமாம்.

உபாதார ரூப நாமங்களாவன :-

(சக்குபஸாதா, ஸோடாபஸாதா, கானாபஸாதா, ஜீவாபஸாதா, காயபஸாதா, ரூபா சத்தா, கந்தா, யச, இஸ்திரிபாவா, பும்பாவா, ஜீவிந்திரியாஹதயாவாது, ஆகாசதாது, காயவிஞ்ஞா, முஜ்ஜிவிஞ்ஞா, லஹுதா, முதிதா, கம்மிசதா, உபசியா, சந்திடி, ஜராதா, அனிச்சாதா) அதாவது, கண், காது, நாசி, நா, தேகம், வர்ணம், சத்தம், கந்தம், உருசி, ஆண்பெண் குறி, உயிர்; இருதய உருப்பு, தேகத்தினது குறிப்பு, வாக்கின் குறிப்பு, தேகவெழுச்சி, தேக இளமெய், தேக மிருதுவான தேக விருத்தி, தேக வளர்ச்சி, தேகம் கிழத்தனமாகுதல், அநித்யதேகம், உணவு, பொருள் யாவும் சேர்ந்தே ரூபகந்தம் எனப்படும்.

வேதனா ஸ்கந்தம்

வேதனாஸ்கந்தம் அல்லது உணர்ச்சிக் கூட்டமாவது யாதெனில் :சு க - வே த னா, து க் கா - வே த னா, அ து க் க சு க - வே த னா அல்லது குஸல அகுஸல, குஸலாகுஸல என்னும் மூன்றுவித உணர்ச்சிகளை உடையது. உணர்ச்சி குஸலசித்தத்துடன் சேர்ந்துவரின் குசலவேதனா என்றும், உணர்ச்சி அகுசல சித்தத்துடன் சேர்ந்துவரின் அகுசல வேதனா என்றும், உணர்ச்சி குசலாகுசல சித்தத்துடன் சேர்ந்துவரின் குசலா குசல வேதனாவென்றுங் கூறப்படும்.

ஸம்ஞ்ஞாஸ்கந்தம்

ஸம்ஞ்ஞா ஸ்கந்தம் அல்லது குறிப்புக் கூட்டம் அறுவகைப்படும். அதாவது பச்சை அல்லது சிவப்பான ஒரு வஸ்துவைப் பார்த்து இது சிவப்பு அல்லது இது பச்சை என்றபோது ஒரு வர்ணக்குறிப்பைக் காட்டியது. அதேபிரகாரம் ஏதாவதொரு சத்தத்தைக் கேட்டபோது இது மேளசத்தம் அல்லது சங்குசத்தம் என்று ஒரு சத்தக் குறிப்பைக் காட்டியது. ஏதாவதொரு கந்தத்தை முகர்ந்தபோது இது துற்கந்தம் அல்லது இது நற்கந்தமென்று ஒரு கந்த குறிப்பைக் காட்டியது. ஏதாவது ஒன்றை உருசித்தபோது இது தித்திப்பு, இது புளிப்பு, இது துவர்ப்பு, இது எண்ணெய் என்ற ஒரு உருசிப்பின் குறிப்பைக் காட்டியது. ஏதாவது ஒரு தேகம் மற்றப் பொருளுடன் பட்டபோது இது தொடத்தக்கது அல்லது தொடத்தகாதது என்ற ஒரு தேகத்தின் உணர்ச்சிக் குறிப்பைக் காட்டியது. ஏதாவது ஒன்றை (மனம்) சித்தமானது நினைக்கும் போது இது விலக்கக்கூடியது அல்லது இது விலக்கக்கூடாதது என்ற குணத்தைக் காட்டியது. சுருக்கத்தில் குறிப்பு குசலசித்தத்துடன் சேர்ந்துவரின் குசலக் குறிப்பென்றும், குறிப்பு அகுசல சித்தத்துடன் சேர்ந்துவரின் அகுசல குறிப்பென்றும், குறிப்பு குசலாகுசல சித்தத்துடன் சேர்ந்துவரின் குசலாகுசல குறிப்பென்றும் கூறப்படும்.

சங்காரா ஸ்கந்தம்

சங்காராஸ்கந்தா அல்லது பாவனைக்கூட்டம் 52-வகைப்படும் 1. பஸ்ஸா - ஸ்பரிசம் 2. வேதனா - ஸ்பரிச வறிவு. 3. சஞ்ஞா - புலப்பாடு 4. சேதனா - விருப்பம் 5. ஏகக்தா - ஏக்த்துவம் 6. ஜீவிதந்திரியா - ஜீவிய இந்திரியம் 7.

மனஸீகரா - கவனம் 8. விதகா - முயற்சியின் ஆரம்பம் 9. விசாரா - சகித்தல் 10. அதிமோக்கா - தீர்மானம் 11. வீரியா - வீரியம் 12. பீதி - பிரீதி 13. சட்தா - செய்யவேணும் என்கிற ஆசை 14. மோஹா - மந்தம் 15. தீனா - சோம்பல் 16. அஹிரிகா - வெட்கமற்ற 17. அநொத்தபா - காரணத்தாலாகுங் காரியத்தை அசட்டை செய்தல் 18. உத்தச்ச - மனக்கலக்கம் 19. லோபா - துராசை 20. திட்தி - தப்பிதம் 21. மானா - வீணெண்ணம் 22. தோஸா - பகை 23. மச்சரியா - பற்கடிப்பு 24. குக்குச்சா - ஆவல் 25. இஸ்ஸ - பொறாமெய் 26. மிட்தா - திமிர்ப்பு 27. விஸிகிச்ச - திகைப்பு 28. சட்தா - நம்பிக்கை 29. சட்தி - சிந்திப்பு 30. ஹிரி - யோசனை 31. உத்தப்பா - இஷ்டம் 32. அலோபா - பரோபகாரம் 33. அதோஸா - சமாதானம் 34. தட்தாமஜ்ஜட்த்ததா - மனத் தராசு 35. காயா பஸ்ஸட்தி - மன வலைச்சலின் அமைதி 36. சிட்தப்பஸ்ஸட்தி - மன அடக்கம் 37. லஹீதா - மனசத்தி 38. காயலஹீதா - லேசான காய சக்தி 39. சித்த லஹீதா - லேசான சித்த சக்தி 40. காயமுதிதா - மிருதுவான காய சக்தி 41. சித்தமுதிதா - மிருதுவான சித்த சக்தி 42. காயாகம்மிஞ்ஞதா - காய கன்ம சக்தி 43. சித்தாகம்மிஞ்ஞதா - சித்தகன்ம சக்தி 44. காயபகுஞ்ஞதா - சோர்வடையா காயசக்தி 45. சித்த பகுஞ்ஞதா - சோர்வடையா சித்தசக்தி 46. காயஉஜகதா - ஸ்திரமான காய சக்தி 47. சித்த உஜகதா - ஸ்திரமான சித்தசக்தி 48. ஸம்மாவசா - நல்ல வசனம் 49. ஸம்மா கம்மந்தா - நற்செய்கை 50. ஸம்மா அஜீவா - நல்வாழ்க்கை 51. கருணா - கருணை சக்தி 52. முதிதா - ஆனந்த சக்தி

விஜ்ஞானா ஸ்கந்தம்

விஜ்ஞான ஸ்கந்தமாவது ஒரு பட்டணத்துக் காவற்காரன் நான்கு முக்கிய பாதைகள் கூடும்படியான மத்திய இடத்தில் நின்றுக்கொண்டு வடக்கிலிருந்து வருவது யார், தெற்கிலிருந்து வருவது யார், மேற்கிலிருந்து வருவது யார், கிழக்கிலிருந்து வருவது யார் எனத் தெரிந்துக் கொள்ளக்கூடுமோ, அதுபோல் ரூபம் கண்ணால் பார்க்கப்படுகிறது, சத்தம் காதால் கேட்கப்படுகிறது, கந்தம் நாசியால் முகரப்படுகிறது, உருசி நாவால் உருசிக்கப்படுகிறது, பரிசம் தேகத்தால் தெரியப்படுகிறது, எண்ணங்கள் மனத்தால் கிரகிக்கப்படுகிறது. ஆகிய இவைகள் யாவும் (விஜ்ஞான)த்தால் ஸ்தாபிக்கப்படுகிறது.

விஜ்ஞானக் கூட்டம் 89-வகைப்படும் அல்லது விசாரணா சித்தக் கூட்டம் 89-வகைப்படும். (அ.) லோகி சித்தம் ... 81 (ஆ.) லோகுத்ர சித்தம் ... 8

(அ.) லோகி சித்தம் 3-வகை : 1. காமவசர சித்தம் 2. ரூபவசர சித்தம் 3. அரூபவசர சித்தம் 1. காமவசரசித்தம் 3-வகை : காமவசர 54 அகுஸலா ... 12 அஸிதா ... 18 அஸோபனா ஸோபனா ... 24

2. ரூபவசரசித்தம் 3-வகை : குஸலா ... 5 ரூபவசர 15 விபாகா ... 5 கிரியா ... 5

3. அரூபசரசித்தம் 3-வகை : அரூபவசர 12 - குஸலா ... 4 விபாகா ... 4, கிரியா ... 4,

ஆ. லோகுத்தர சித்தம் 2-வகை : லோகுத்தர 8 - மார்க்க ... 4 பலா ...4

1. காமவசர சித்தம் - 54

அஸோபனா - அகுசலா சித்தம் ... 12, அஹித சித்தம் ... 18 ஸோபனா ... 24

அகுஸல சித்தம் 12 : ஸுமன்ஸ்ய ... 4 உபேநா ... 4 8 (லோபா) அஸங்காரிகா ... 1 ஸஸங்காரிகா ... 1 (தோஸா)

உத்திச்சா ... 1 விசிகிச்சா ... 1 (மோஹா)

1. லோபா ஸீமன்ஸ்யா சித்தம் - 4

1. சுமனஸ்யா சஹாகோ தீத்டி கத்தா சம்பியோ அஸங்காரிகா சித்தகூ.
2. சுமன்ஸ்யா சஹாகோ தீத்டி கத்தா சம்பியோ ஸஸங்காரிகா சித்தகூ.
3. சுமன்ஸ்யா சஹாகோ தீத்டி விப்பியோ அஸங்காரிகா சித்தகூ.
4. சுமன்ஸ்யா சஹாகோ தீத்டி விப்பியோ ஸஸங்காரிகா சித்தகூ.

பேராசை. இன்பம் - 4

1. இன்பம் பேராசையுடன் சேர்ந்து தூண்டப்படாத சித்தம்
2. இன்பம் பேராசையுடன் சேர்ந்து தூண்டப்பட்ட சித்தம்
3. இன்பம் பேராசையுடன் சேராது தூண்டப்படாத சித்தம்.
4. இன்பம் பேராசையுடன் சேராது தூண்டப்பட்ட சித்தம்.

உபேகா சித்தம் - 4

1. உபேகா சஹாகோ தீத்டி சுத்தா சம்பியோ அசங்காரிகா சித்தகூ.
2. உபேக சஹாகோ தீத்டி சுத்தா சம்பியோ ஸசங்காரிகா சித்தகூ.
3. உபேகா சஹாகோ தீத்டி சுத்தா விப்பியோ அசங்காரிகா சித்தகூ.
4. உபேகா சஹாகோ தீத்டி சுத்தா விப்பியோ ஸசங்காரிகா சித்தகூ.

பேராசை உபேக்ஷை சித்தம் - 4

1. உபேக்ஷையும், பேராசையும் சேர்ந்து தூண்டப்படாத சித்தம்.
2. உபேக்ஷையும், பேராசையும் சேர்ந்து தூண்டப்பட்ட சித்தம்.
3. உபேக்ஷை பேராசையுடன் சேராது தூண்டப்படாத சித்தம்.
4. உபேக்ஷை பேராசையுடன் சேராது தூண்டப்பட்ட சித்தம்.

2. தோஸா அசங்காரிகா 1. ,ஸசங்காரிகா 1

1. தோமனஸ்ய சஹாகோ பத்திகா சாம்பியோ அசங்காரிகா சித்தகூ.
2. தோமனஸ்ய சஹாகோ பத்திகா சாம்பியோ ஸஸங்காரிகா சித்தகூ

கோபம்

1. துன்பம் கோபத்துடன் சேர்ந்து தூண்டப்படாத சித்தம்.
2. துன்பம் கோபத்துடன் சேர்ந்து தூண்டப்பட்ட சித்தம்.

மோஹா

1. விபாகா சஹாகோ விசிகிச்ச சஹாகோ சித்தகூ.
2. விபாகா சஹாகோ உத்திச்சா சாம்பியோ சித்தகூ.

3. மோஹம்

1. உபேட்சையுடன் சந்தேகம் சேர்ந்த சித்தம்
2. உபேட்சையுடன் இறுமாப்பு சேர்ந்த சித்தம்

அஹிதசித்தம் - 18

1. அகுல விபேக் - 7
2. குசல விபேக் - 8
3. எஹ் கிரியா - 3

1. அகுசலா விபேக் - 7 1. சக்கு 2. சோடா 3. கானா 4. ஜீவா 5. காயா 6. தம்ரீசய் 7. தந்தியனா

1. உபேக்கா சஹாகதஞ் சக்கு விஞ்ஞானா
2. உபேக்கா சஹாகதங் சோட விஞ்ஞானா
3. உபேக்கா சஹாகதங் கானா விஞ்ஞானா
4. உபேக்கா சஹாகதங் ஜீவ விஞ்ஞானா
5. துக்கா சஹாகதங் காய விஞ்ஞானா
6. உபேக்கா சஹாகதங் தம்ரீஸனா சித்தம்
7. உபேக்கா சஹாகதங் சந்தீயான சித்தம்

(முன்பிறவியில் செய்த பாபகன்மத்தின் பலன்களாலாய)

1. அகுசல உபேக்ஷை - 7
1. உபேக்ஷையுடன் சேர்ந்த கண் சித்தம்
2. உபேக்ஷையுடன் சேர்ந்த செவி சித்தம்
3. உபேக்ஷையுடன் சேர்ந்த நாவு சித்தம்
4. உபேக்ஷையுடன் சேர்ந்த ஜீவ சித்தம்
5. உபேக்ஷையுடன் சேர்ந்த காய சித்தம்
6. உபேக்ஷையுடன் சேர்ந்த 5 கூட்ட சித்தம்
7. உபேக்ஷையுடன் சேர்ந்த -------- சித்தம்.

2. குசலா விபேக் - 8 : 1. சக்கு 2. சோடா 3. கானா 4. ஜீவா 5. காயா 6. தம்ரீசை 7. தந்தியனா 8. தந்தியனா

1. உபேக்கா சதா சுதங் சக்கு விஞ்ஞானா
2. உபேக்கா சகா சுதங் சோடா விஞ்ஞானா
3. உபேக்கா சகா சுதங் கானா விஞ்ஞானா
4. உபேக்கா சகா சுதங் ஜீவ விஞ்ஞானா
5. சுக சகா சுதங் காய விஞ்ஞனா
6. உபேக்கா சகா சுதங் தம்ரிசை சித்தம்
7. ஸோமனாஸா சகா சுதங் தந்தியனா சித்தம்
8. உபேக்கா சகா சுதங் தந்தீயனா சித்தம்

(முன்பிறவியில் செய்த புண்யகன்மத்தின் பலன்களாலாய)

2. குஸல உபேக்ஷ - 8

1. உபேட்சையுடன் சேர்ந்த சுண் சித்தம்
2. உபேட்சையுடன் சேர்ந்த செவி சித்தம்
3. உபேட்சையுடன் சேர்ந்த நாவு சித்தம்
4. உபேட்சையுடன் சேர்ந்த ஜீவ சித்தம்
5. இன்பத்தை சேர்ந்த தேக சித்தம்
6. உபேட்சையுடன் சேர்ந்து அறியும் சக்தியுள்ள மனோ சித்தம்
7. ஆனந்தத்துடன் சோதிக்கத்தக்கதும் ஒரே கருத்துள்ளதுமான மனோ சித்தம்
8. உபேட்சையுடன் சோதிக்கத்தக்க சக்தியான மனோ சித்தம்

எஹ் கிரியா - 3

1. உபேகா சகாகதங் பஞ்சதுவாரா வியசனாசித்தங்
2. தட்தாமனோ துவாரா வியசன சித்தங்
3. தோம்னாசா சகாகதங் ஹதிடோபாதா சித்தசே திஹிமானி தீனிபி அஹேதுகா.

ஏதுவின்றி நிகழும் கிரியை சித்தம் - 3

1. உபேட்சையுடன் பஞ்சதுவாரமாம் மெய், வாய், கண், மூக்கு, செவி இவைகளுடன் சேர்ந்த சித்தம்
2. உபேட்சையுடனும், மனத்துவாரத்துடனும் சேர்ந்த சித்தம்
3. உபேட்சையுடனும், ஆனந்தத்துடன் சேர்ந்த சித்தம்

சோபனா : குசலசித்தம் 8, விபாக 8 கிரியா 8 குஸல சித்தம் - 8

1. சுமனஸ்ய சஹாகோ ஞானாசம்பியோ அசஸங்காரிகா சித்தகூ
2. சுமனஸ்ய சஹாகோ ஞானாசம்பியோ சஸங்காரிகா சித்தகூ
3. சுமனஸ்ய சஹாகோ ஞானாவிப்பியோ அசங்காரிகா சித்தகூ
4. சுமனஸ்ய சஹாகோ ஞானாவிப்பியோ சஸங்காரிகா சித்தகூ
5. உபேகா சஹாகோ ஞானாசம்பியோ அசங்காரிகா சித்தகூ
6. உபேகா சஹாகோ ஞானாசம்பியோ சஸங்காரிகா சித்தகூ
7. உபேகா சஹாகோ ஞானாவிப்பியோ அசங்காரிகா சித்தகூ
8. உபேகா சஹாகோ ஞானாவிப்பியோ சஸங்காரிகா சித்தகூ

குஸல சித்தங்கள் - 8

1. ஆனந்தம் அறிவுடன்சேர்ந்து தூண்டப்படாத சித்தம்
2. ஆனந்தம் அறிவுடன்சேர்ந்து தூண்டப்பட்ட சித்தம்
3. ஆனந்தம் அறிவுடன் சேராது தூண்டப்படாத சித்தம்
4. ஆனந்தம் அறிவுடன் சேராது தூண்டப்பட்ட சித்தம்
5. உபேக்ஷையுடன் அறிவு சேர்ந்து தூண்டப்படாத சித்தம்
6. உபேக்ஷையுடன் அறிவு சேர்ந்து தூண்டப்பட்ட சித்தம்
7. உபேக்ஷையுடன் அறிவு சேராது தூண்டப்படாத சித்தம்
8. உபேக்ஷையுடன் அறிவு சேராது தூண்டப்பட்ட சித்தம்

விபாக பயனைத்தரும் சித்தங்கள் 8

1. ஆனந்தம் அறிவுடன்சேர்ந்து தூண்டப்படாத சித்தம்
2. ஆனந்தம் அறிவுடன் சேராது தூண்டப்பட்ட சித்தம்
3. ஆனந்தம் அறிவுடன் சேராது தூண்டப்படாத சித்தம்
4. ஆனந்தம் அறிவுடன்சேராது தூண்டப்பட்ட சித்தம்
5. உபேக்ஷையுடன் அறிவு சேர்ந்து தூண்டப்படாத சித்தம்
6. உபேக்ஷையுடன் அறிவு சேர்ந்து தூண்டப்பட்ட சித்தம்
7. உபேக்ஷையுடன் அறிவு சேராது தூண்டப்படாத சித்தம்
8. உபேக்ஷையுடன் அறிவு சேராது தூண்டப்பட்ட சித்தம்

கிரியா கிரியையுடைய சித்தங்கள் 8

1. ஆனந்தம் அறிவுடன்சேர்ந்து தூண்டப்படாத சித்தம்
2. ஆனந்தம் அறிவுடன்சேர்ந்து தூண்டப்பட்ட சித்தம்
3. ஆனந்தம் அறிவுடன் சேராது தூண்டப்படாத சித்தம்
4. ஆனந்தம் அறிவுடன் சேராது தூண்டப்பட்ட சித்தம்
5. உபேட்சையுடன் அறிவுசேர்ந்து தூண்டப்படாத சித்தம்
6. உபேட்சையுடன் அறிவுசேர்ந்து தூண்டப்பட்ட சித்தம்
7. உபேட்சையுடன் அறிவுசேராது தூண்டப்படாத சித்தம்
8. உபேட்சையுடன் அறவிசேராது தூண்டப்பட்ட சித்தம்

ரூபவசர சித்தம்

ரூபவசரா 15 : 1. குசல சித்தம் - 5, விபாக சித்தம் - 5 கிரியா சித்தம் -5

(1) குஸலா சித்தம் - 5

1. வித்தேகா விசாரா பீதி சுகே ஏககதா சஹிதங் பத்தமா ஜானா குசலா சித்தங்
2. விசாரா பீதி சுகே ஏககதா சஹிதங் துத்திய ஜானா குசலா சித்தங்

3. பீதி சுகே ஏககதா சஹிதங் தத்தியா ஜானா குசலா சித்தங்
4. சுகே ஏககதா சஹிதங் சதுதா ஜானா குசலா சித்தங்
5. உபேகா ஏககதா சஹிதங் பஞ்சமா ஜானா குசலா சித்தம்

(1) குஸலா (நல்) சித்தம் - 5

1. விவேகம், ஆலோசனை, ஆனந்தம், சந்தோஷம், தியானம் ஒன்ற ாய்க்கூடிய குசல சித்தம்
2. ஆலோசனை, ஆனந்தம், சந்தோஷம், தியானம் ஒன்றாய்க் கூடி ய குசல சித்தம்
3. ஆனந்தம், சந்தோஷம், தியானம் ஒன்றாய்க்கூடிய குசல சித்தம்
4. சந்தோஷம், தியானம் ஒன்றாய்க்கூடிய குசல சித்தம்
5. உபேட்சை, தியானம் ஒன்றாய்க்கூடிய குசல சித்தம்

(2) - விபாகா 5 ;பயனைத்தரும் சித்தங்கள் 5

1. விவேகம், ஆலோசனை, ஆனந்தம், சந்தோஷம், தியானம் ஒன்றாய்க்கூடிய குசல சித்தம்
2. ஆலோசனை, ஆனந்தம், சந்தோஷம், தியானம் ஒன்றாய்க்கூடிய குசல சித்தம்
3. ஆனந்தம், சந்தோஷம், தியானம் ஒன்றாய்க்கூடிய குசல சித்தம்
4. சந்தோஷம், தியானம் ஒன்றாய்க்கூடிய குசல சித்தம்
5. உபேட்சை, தியானம் ஒன்றாய்க்கூடிய குசல சித்தம்

(3) கிரியா 5 ; பயனைத் தரும் சித்தங்கள் 5

1. விவேகம், ஆலோசனை, ஆனந்தம், சந்தோஷம், தியானம் ஒன்றாய்க்கூடிய குசலசித்தம்
2. ஆலோசனை, ஆனந்தம், சந்தோஷம், தியானம் ஒன்றாய்க்கூடிய குசல சித்தம்.
3. ஆனந்தம், சந்தோஷம், தியானம் ஒன்றாய்க்கூடிய குசலசித்தம்
4. சந்தோஷம், தியானம் ஒன்றாய்க்கூடிய குசலசித்தம்
5. உபேட்சை, தியானம் ஒன்றாய்க்கூடிய குசல சித்தம்

ரூபவசர சித்தம் - 12

குசல 4, விபாகா 4 கிரியா 4

குஸலா சித்தங் - 4

1. ஆகாசான்ஞ்சா யத்தனா குசலா சித்தங்
2. விஞ்ஞானஞ்ச யத்தனா குசலா சித்தங்
3. ஆகே சஞ்சா யத்தனா குசலா சித்தங்
4. நேவா சஞ்சா யத்தனா குசலா சித்தங்

குஸல சித்தங்கள் - 4

1. வெட்டவெளி மட்டற்ற தென்னும் பரவசராஜ்யத்தோடுகூடிய கு சல சித்தம்
2. விஞ்ஞானம் எல்லையற்ற தென்னும் பரவச ராஜ்யத்தோடுகூடிய குசல சித்தம்
3. யாதொரு வெளிப்பொருளுமில்லை என்கிற பரவச ராஜ்யத்தோடு கூடிய குசல சித்தம்
4. அறிவுள்ளதும் அறிவல்லாததும் அல்லாத பரவசராஜ்யத்தோடு கூடிய சித்தம்.

லோகுதித்தர - 8
மார்க்கம் 4 பலம் - 4

மாக்காசித்தம் - 4

1. ஸ்ரோதாபதி மார்க்க சித்தங்
2. சகதாகாமி மார்க்க சித்தங்
3. அனாகாமி மார்க்க சித்தங்
4. அறஹத்த மார்க்க சித்தங்

மார்க்க சித்தங்கள் - 4

1. காமம், வெகுளி, மயக்கம் இம்மூன்றும் தம்மிடத்தில் எழாதபடி குறைக்கும் மார்க்கத்துடன் சேர்ந்த சித்தம்
2. ஒரேபிறப்பை மட்டும் அடைதற்குரிய மார்க்கத்துடன் சேர்ந்த சித்தம்
3. மறுபிறப்பில் தோற்றுவதற்கு ஏதுவில்லா மார்க்கத்துடன் சேர்ந்த சித்தம்
4. நிருவாணமடையும் மார்க்கத்துடன் சேர்ந்த சித்தம்

பலா - 4

1. ஸ்ரோதபதி பலா 2. ஸகதாகாமி பலா 3. அனாகாமி பலா 4. அறஹத பலா

பலன் - 4

1. காமம், வெகுளி, மயக்கம், இம்மூன்றும் தம்மிடத்தில் எழாதபடி குறைத்துக்கொண்ட பலன்

2. ஒரே பிறப்பைமட்டும் அடைந்த பலன்
3. மறுபிறப்பு தோற்றுவதற்கு ஏதுவில்லாது நின்ற பலன்
4. நிருவாண பலன்

ஓ! சகோதிரர்களே! துக்கோற்பத்தியாகிய தூரய்மெயான சத்தியம் யாது?

ஓ! சகோதிரர்களே! அவைகள் முறையே மறுபிறப்பிற்கு ஆளாக்கும் அவா, இன்பத்தைநாடி ஆவலுண்ட அவா, ஒவ்வொரு பிறப்பிற்கும் சந்தோஷத்தை நாடும் அவா, அவை யேகாமத்தால் உண்டாகும் அவா, உயிர் வாழ்க்கையின் பேரில் உண்டாகும் அவா, அநித்யமாகும் சொற்ப இன்பத்தால் உண்டாகும் அவாவென்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! இவ்வேட்கையானது எங்கிருந்து உதித்து விருத்தியாகின்றது? எங்கு நிலைத்து வேரூன்றுகிறது?

ஓ! சகோதிரர்களே! ஜீவர்களுக்கு எதன்பேரில் இன்பம் இஷ்டமு மாயிருக்கின்றதோ அவ்விடத்தில் வேட்கையானது உதித்து விருத்தியாகி நிலைத்து வேரூன்றுகிறது

ஓ! சகோதிரர்களே! ஜீவர்களுக்கு இன்பமும், ஹிதமானது எது; வேட்கை எங்கிருந்து உதித்து விருத்தியாகின்றது; எங்கு நிலைத்து வேரூன்றுகிறது?

(அறுவித ஞானேந்திரியங்கள்) சகோதிரர்களே! ஜீவர்களுக்கு கண் இன்பத்தையும் ஹிதத்தையும் தரும். அங்கு அவா உதித்து விருத்தியாகி அவ்விடத்திலேயே அது நிலைத்து வேரூன்றுகிறது. செவி-நாசி நா - தேகம் - மனம் இவைகள் ஜீவர்களுக்கு இன்பத்தையும், ஹிதத்தையும், தரும். அங்கங்கே அவாக்கள் உதித்து விருத்தியாகி அவ்வவ்விடத்திலேயே அவைகள் நிலைத்து வேரூன்றுகின்றன.

(அறுவித இந்திரிய கோசரமான வஸ்துக்கள்) ரூபங்கள், சப்தங்கள், கந்தங்கள், பரிசங்கள், எண்ணங்கள் இவைகள் ஜீவர்களுக்கு இன்பத்தையும், ஹிதத்தையும் தரும். அங்கங்கே அவாக்கள் உதித்து விருத்தியாகி அவ்வவ்விடத்திலேயே அவைகள் நிலைத்து வேரூன்றுகின்றன.

(அறுவித விக்ஞானங்கள்) சித்தம் கண் - சித்தம், செவி - சித்தம், நாசி - சித்தம், நாவு - சித்தம், தேக - சித்தம், மனோ - சித்தம் இவைகள் ஜீவர்களுக்கு இன்பத்தையும் ஹிதத்தையும் தரும். அங்கங்கே அவாக்கள் உதித்து விருத்தியாகி அவ்வவ்விடத்திலேயே அவைகள் நிலைத்து வேரூன்றுகின்றன.

(அறுவித பரிசங்கள்) கண்ணின் பரிசம், செவியின் பரிசம், நாசியின் பரிசம், நாவின் பரிசம், தேகத்தின் பரிசம், மனோபரிசம் இவைகள் ஜீவர்களுக்கு இன்பத்தையும், ஹிதத்தையும் தரும். அங்கங்கே அவாக்கள் உதித்து விருத்தியாகி அவ்வவ்விடத்திலேயே அவைகள் நிலைத்து வேரூன்றுகின்றன.

(அறுவித உணர்ச்சி) கண் பரிசத்தாலாய உணர்ச்சி, செவி பரிசத்தாலாய உணர்ச்சி, நாவு பரிசத்தாலாய உணர்ச்சி நாசி பரிசத்தாலாய உணர்ச்சி, தேக பரிசத்தாலாய உணர்ச்சி, மனோ பரிசத்தாலாய உணர்ச்சி, இவைகள் ஜீவர்களுக்கு இன்பத்தையும், ஹிதத்தையும் தரும். அங்கங்கே அவாக்கள் விருத்தியாகி அவ்வவ்விடத்திலேயே அவைகள் நிலைத்து வேரூன்றுகின்றன.

(அறுவித குறிப்புகள்) ரூபங்களின் குறிப்பு, சப்தங்களின் குறிப்பு, கந்தங்களின் குறிப்பு, ரசங்களின் குறிப்பு, பரிசங்களின் குறிப்பு, எண்ணங்களின் குறிப்பு, இவைகள் ஜீவர்களுக்கு இன்பத்தையும், ஹிதத்தையும் தரும். அங்கங்கே அவாக்கள் உதித்து விருத்தியாகி அவ்வவ்விடத்திலேயே அவைகள் நிலைத்து வேரூன்றுகின்றன.

(அறுவித நினைவுகள்) ரூபங்களைப்பற்றி நினைத்தல், சப்தங்களைப் பற்றி நினைத்தல், கந்தங்களைப்பற்றி நினைத்தல், ரசங்களைப்பற்றி நினைத்தல் பரிசங்களைப்பற்றி நினைத்தல், எண்ணங்களைப்பற்றி நினைத்தல் இவைகள் ஜீவர்களுக்கு இன்பத்தையும், ஹிதத்தையும் தரும். அங்கங்கே அவாக்கள் உதித்து விருத்தியாகி அவ்வவ் இடத்திலேயே அவைகள் நிலைத்து வேரூன்றுகின்றன.

(அறுவித அவாக்கள்) ரூபங்களின் பேரில் அவா, சப்தங்களின் பேரில் அவா, கந்தங்களின் பேரில் அவா, ரசங்களின் பேரில் அவா, பரிசங்களின்

பேரில் அவா, எண்ணங்களின் பேரில் அவா இவைகள் ஜீவர்களுக்கு இன்பத்தையும் ஹிதத்தையும் தரும். அங்கங்கே அவாக்கள் உதித்து விருத்தியாகி அவ்வவ்விடத்திலேயே அவைகள் நிலைத்து வேரூன்றுகின்றன.

(அறுவகை யூகைகள்) ரூபங்களைப்பற்றி யூகித்தல், சப்தங்களைப் பற்றி யூகித்தல், கந்தங்களைப் பற்றி யூகித்தல், ரசங்களைப் பற்றி யூகித்தல், பரிசங்களைப் பற்றி யூகித்தல், எண்ணங்களைப்பற்றி யூகித்தல் இவைகள் ஜீவர்களுக்கு இன்பத்தையும், ஹிதத்தையும் தரும். அங்கங்கே அவாக்கள் உதித்து விருத்தியாகி அவ்வவ்விடத்திலேயே நிலைத்து வேரூன்றுகின்றன.

ஓ ! சகோதிரர்களே ! துக்கோற்பத்தி என்னும் தூய்மையான சத்தியம் இஃதே.

ஓ ! சகோதிரர்களே ! துக்கநிவாரண தூய்மையான சத்தியம் யாது?

ஓ ! சகோதிரர்களே ! அவாவை முற்றும் ஒழித்துவிட வேண்டும். ஆனால் ஓ ! சகோதிரர்களே ! இந்த அவாவானது எவ்விடத்தில் குறைந்து மறைந்து எவ்விடத்தில் இது கலைந்து மடிகிறது. ஓ! சகோதிரர்களே ! ஜீவர்களுக்கு எங்கு இன்பத்தையும் ஹிதத்தையும் தருமோ அவ்விடத்தில் அவாவானது குறைந்து மறைகிறது. அது அவ்விடத்தில் கலைந்து மடிகிறது. ஜீவர்களுக்கு இன்பத்தையும், ஹிதத்தையும் தருவதெது. எவ்விடத்தில் அவாவானது குறைந்து மறைகிறது. அது எவ்விடத்தில் கலைந்து மடிகிறது. ஜீவர்களுக்கு இன்பத்தையும், ஹிதத்தையும் தருவது கண். அவ்விடத்தில் அவாவானது குறைந்து மறைகிறது. அது அவ்விடத்தில் கலைந்து மடிகிறது. செவி, நாசி, நா, தேகம் மனம் இவைகள் ஜீவர்களுக்கு இன்பத்தையும், ஹிதத்தையும் தரும். அவ்விடத்தில் அவாக்களானது குறைந்து மறைகின்றது. அது அவ்விடத்தில் கலைந்து மடிகிறது. ஜீவர்களுக்கு இன்பத்தையும், ஹிதத்தையும் தருவதுகண். அவ்விடத்தில் அவாவானது குறைந்து மறைகிறது. அது அவ்விடத்தில் கலைந்து மடிகிறது. செவி, நாசி, நா, தேகம் மனம் இவைகள் ஜீவர்களுக்கு இன்பத்தையும், ஹிதத்தையும் தரும். அவ்விடத்தில் அவாக்களானது குறைந்து மறைகின்றன. அவைகள் அவ்வவ்விடத்தில் கலைந்து மடிகின்றன. ஜீவர்களுக்கு இன்பத்தையும், ஹிதத்தையும் தருவது (அறுவித இந்தியகோசமான வஸ்துக்கள்) ரூபங்கள், சப்தங்கள், கந்தங்கள், பரிசங்கள், எண்ணங்கள் அவ்விடத்தில் அவாக்களானது குறைந்து மறைகின்றன. அவைகள் அவ்வவ்விடத்தில் கலைந்து மடிகின்றன. ஜீவர்களுக்கு இன்பத்தையும் ஹிதத்தையும் தருவது (அறுவித விக்ஞானங்கள்) கண்-சித்தம், செவி-சித்தம், மனோ-சித்தம் அவ்வவ்விடத்தில் அவாக்களானது குறைந்து மறைகின்றன. அவைகள் அவ்வவ்விடத்தில் கலைந்து மடிகின்றன. ஜீவர்களுக்கு இன்பத்தையும், ஹிதத்தையும் தருவது (அறுவித பரிசங்கள்) கண்ணில் பரிசம், செவியின் பரிசம், நாசியின் பரிசம், நாவின் பரிசம், தேகத்தின் பரிசம், மனோ பரிசம், அவ்வவ்விடதில் அவாக்களானது குறைந்து மறைகின்றன. அவைகள் அவ்வவ்விடத்தில் கலைந்து மடிகின்றன. ஜீவர்களுக்கு இன்பத்தையும் ஹிதத்தையும் தருவது (அறுவித உணர்ச்சிகள்) அவ்வவ்விடத்தில் அவாக்களானது குறைந்து மறைகின்றன. அவைகள் அவ்வவ்விடத்தில் கலைந்து மடிகின்றன. ஜீவர்களுக்கு இன்பத்தையும், ஹிதத்தையும் தருவது (அறுவித குறிப்புகள்) அவ்வவ்விடத்தில் அவாக்களானது குறைந்து மறைகின்றன. அவைகள் அவ்வவ்விடத்தில் கலைந்து மடிகின்றன. ஜீவர்களுக்கு இன்பத்தையும், ஹிதத்தையும் தருவது (அறுவித நினைவுகள்) அவ்வவ்விடத்தில் அவாக்களானது குறைந்து மறைகின்றன. அவைகள் அவ்வவ்விடத்தில் கலைந்து மடிகின்றன. ஜீவர்களுக்கு இன்பத்தையும் ஹிதத்தையும் தருவது (அறுவித அவாக்கள்) அவ்வவ்விடத்தில் அவாக்களானது குறைந்து மறைகின்றன. அவைகள் அவ்வவ்விடத்தில் கலைந்து மடிகின்றன. ஜீவர்களுக்கு இன்பத்தையும் ஹிதத்தையும் தருவது (அறுவித யூகைகள்) அவ்வவ்விடத்தில் அவாக்களானது குறைந்து மடிகின்றன. அவைகள் அவ்வவ்விடத்தில் கலைந்து மடிகின்றன.

ஓ! சகோதிரர்களே! துக்கநிவாரணமார்க்கமென்னும் தூய்மையான சத்தியம் யாது?

ஓ! சகோதிரர்களே! துக்கநிவாரணமார்க்கமாகிய தூய்மையான சத்தியம் இதுவே. மிக்க பரிசுத்தமுடைய அரிய அஷ்டாங்க மார்க்கம் இதுதான்,

அதாவது - நற்காட்சி, நற்சிந்தை நல்வசனம், நற்செய்கை, நல்வாழ்க்கை, நல் ஊக்கம், நற்கடைபிடி, நல் அமைதி என்னும் இவ்வெட்டுமாம்.

ஓ! சகோதிரர்களே! நற்காட்சி என்றால் யாது?

ஓ! சகோதிரர்களே! துக்கம் இதென்றும், துக்கோற்பத்தி இதென்றும், துக்கநிவாரணம் இதென்றும், துக்க நிவாரணமார்க்கம் இதென்றும் தெளிவற அறிவதே நற்காட்சி அல்லது நற்பார்வை என்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! நற்சிந்தையெனில் யாது?

ஓ! சகோதிரர்களே! காம இச்சை அற்றும், கோபம் போறாமெய் அற்றும், ஜீவர்களை ஹிம்சிக்காதும் இருப்பதே நற்சிந்தனை என்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! நல்வசனம் எனில் யாது?

ஓ! சகோதிரர்களே! பொய்பேசாமெய், புறங்கூறாமெய், கொடுஞ்சொற் கூறாமெய், வீண்வார்த்தை யாடாமெய் ஆகிய இவைகளே நல்வசனம் என்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! நற்செய்கை எனில் யாது?

ஓ! சகோதிரர்களே! கொலை, களவு, காமம் இவைகள் அற்றிருப்பதே நற்செய்கை என்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! நல்வாழ்க்கை என்பது யாது?

ஓ! சகோதிரர்களே! ஒருவன் மதியை மயக்கி கெடுக்கத்தக்க வஸ்துக்களையும், பல உயிர்களைக் கொன்று விற்கத்தக்க மாமிஷங்களும், விஷங்களை ஏற்றிவிற்கத்தக்க ஆயுதங்களும், மனிதர்களை அடிமைபிடித்து விற்குந் தொழில்களும், சூது விளையாடுவோருக்கும், கள்ளர்களுக்கும் இடங்கொடுத்து அதினால் ஜீவிக்கும் தொழில்களும் இவ்வகை பழிபாவத்துக்குரிய தொழில்கள் யாவுமகற்றி வாழ்வதே நல்வாழ்க்கை என்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! நல் ஊக்கம் எனில் யாது?

ஓ! சகோதிரர்களே! அபுண்ய குணங்க ளுண்டாகாமல் அவற்றைத் தடுக்க முயர்ச்சித்தல் உண்டாயிருக்கும் அபுண்ய குணங்களை விலக்குவதற்கு முயற்சித்தல், முன்னில்லாத புண்ய குணங்களை உண்டாக்க முயற்சித்தல், உண்டாயிருக்கும் புண்யகுணங்களை அதிகப்படுத்த முயற்சித்தல் ஆகிய இவைகளே நல்ஊக்கம் அல்லது நல்முயற்சி என்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! நற்கடைபிடி எனில் யாது?

ஓ! சகோதிரர்களே! சகோதிரன் ஒருவன் தேகவிஷயத்தில் ஜாக்கிரதையும், ஊக்கமும், அறிவும், ஆராய்ச்சி உடையவனாகவும், காமமும், துயரமும் அற்றவனாயும்; பூதவிஷயங்களில் ஜாக்கிரதையும், ஊக்கமும், அறிவும், ஆராய்ச்சி உடையவனாகியும், காமமும், துயரமும் அற்றவனாகவும் இருந்து சிந்திப்பதே நற்கடைபிடி அல்லது நல் தியானம் என்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! நல் அமைதி யெனில் யாது?

ஓ! சகோதிரர்களே! சகோதிரன் ஒருவன் காம இன்பத்தினின்று விலகியும், உசிதமற்ற நடைகளினின்று விலகியும், விசாரணையாலும், யூகையாலும், தியானிப்பனேல் அவ்விடத்தில் அவனுக்கு சந்தேகமும், ஆனந்தமுந் தோன்றும்.

விசாரிணையும் யூகையும் அற்று சந்தோஷமும் ஆனந்தத்துடனும் தியான சக்தியால் நல் அமைதியும் ஏகாக்கிர சித்தமுள்ள எண்ணத்துடனிருப்பான்.

அவ்வகை மௌனபாக்கியம் திரண்டவுடன் முன்பு அநித்தியத்தி னின்றவன் நித்யனாகின்றான். ஆத்மாவினின்றவன் அனாத்மனாகின்றான். ஜநநங்கடோறும் பொய்யனாக நின்றவன் உண்மெய்யனாகின்றான். அப்பொய் யற்ற மெய்யே நிருவாணமென்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! இதுதான் துக்கநிவாரண மார்க்கமென்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! இவ்விதமாக நான்குவித சமாதிகளைப்பற்றி தெரிந்தோம்.

நிருவாண பதவிக்கு ஆளாக்குவது இந்நான்குவித சமாதிகளேயாம் என முடித்தவுடன் பிக்ஷுகுழாங்கள் கைகுவித்துவணங்கி ஆனந்தமடைந்தார்கள். பகவன் பின்னர் சாவித்தி நகரத்திலுள்ள விஹாரத்திற்குச்சென்று அங்குள்ள

பிக்ஷுகுழாங்களுக்கு துறவற தன்மத்தைப்பற்றி போதித்துவிட்டு ஜீதாவன விகாரத்திற்குச் சென்றார்.

15. தர்ம சக்ர பிரவர்த்தன காதை

அவர் வரவை எதிர்நோக்கி நின்றிருந்த இல்லறத்தாருக்கும் துறவறத்தாருக்கும் பின் வருமாறு போதித்தார். ஓ! சகோதிரர்களே! தூய்மையான (நற்சிந்தனை அல்லது நல் தியானமாம்) சம்யக் ஸமாதி இன்னதென்றும் அதைத் தொடர்ந்துவருபவை இவைகள் என்றும் உங்களுக்கு விளக்குகின்றேன். அவைகளை செவியாரக் கேளுங்கள்.

ஐயனே! கூறியருளும் என்றார்கள்.

பகவன் ஓ! சகோதிரர்களே! நல்தியானமாம் சம்யக் ஸமாதியை பூர்த்திசெய்ய ஏழுவகை கூட்டங்கள் தொடர்ந்துவரும். அவை (1. சம்யக்திருஷ்டி 2. சம்யக் கல்பனா 3. சம்யக் வஸனா 4. சம்யக் கர்மந்தா 5. சம்யக் அஜீவா, 6. சம்யக் வீரியா 7. சம்யக் ஸ்மிருதி) 1. நற்காற்சி 2. நல்லூற்றம் 3. நல்வாய்மெய் 4. நற்செய்கை 5. நல்வாழ்க்கை 6. நன்முயற்சி 7. நற்கடைப்பிடி

ஓ! சகோதிரர்களே! இதில் சம்யக்திருஷ்டியாம் நற்காட்சி முதலில் நிற்கின்றது. ஆனால் சகோதிரர்களே! நற்காட்சி எவ்விதமாய் முதல் நின்றது. ஒருவனுக்கு கெடுதியை கெடுதி என்றும், நல்லவை நல்லவை என்றும் தோன்றுமாயின் அஃதே நற்காட்சி என்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! துற்பார்வை என்றால் என்ன?

தர்மம் செய்வது பிரயோசன மற்றதென்றும், நற்கருமத்தால் நற்பலனும், துற்கருமத்தால் துற்பலனும் அடைவதென்பது கிடையாது. இப்பிறவி, மறுபிறவி என்பது கிடையாது. அன்னையும் பிதாவும் தெய்வமெனல் வீண்வார்த்தை என்றும், இவ்வுலகில் பரிசுத்தமும் குற்றமற்ற தபசிகள் கிடையாதென்றும், இப்பிறவியையும் மறுபிறவியையும் தபசிகளால் எடுத்துக்காட்ட முடியாதென்றும் கூறத்துணிவதே துற்பார்வை என்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! நற்பார்வை என்றால் என்ன?

ஓ! சகோதிரர்களே! நற்பார்வை என்பது இருவகைப்படும்.

முதலாவது உலகத்திலிருந்து நற்கிரியைகளைச் செய்தால் நற்பலனை அடைவோமென்பது (லோகீக) இல்லறவாழ்க்கைக்குரிய நற்பார்வை. இரண்டாவது சத்தியமார்க்கத்தில் நின்று (லோகுத்தா) துறவியாவோமென்பது உலகத்திற்கு அப்புறப்பட்ட நற்பலனை நாடிநிற்பதும் நற்பார்வையாம்.

ஓ! சகோதிரர்களே! இல்லறத்திலிருந்து நற்கிரியைகளைச் செய்தால் நற்பலனை அடைவோமென்னும் நற்பார்வை என்றால் என்ன?

தர்மம் செய்வது புண்ணியம், பிரயோசனமானது. நற்கருமத்தால் நற்பலனும், துற்கருமத்தால் துற்பலனும் அடைவது உண்மையே. இப்பிறவி மறுபிறவி என்பது உண்டு. அன்னையும் பிதாவுந் தெய்வங்களே.

இப்பிறவியையும், மறுபிறவியையும் தாங்களும் தெரிந்து விளக்கக்கூடிய பரிசுத்தமும் குற்றமற்ற தபசிகள் இருக்கின்றார்கள். சகோதிரர்களே! இவையே இல்லறத்திலிருந்து நற்கிரியைச்செய்து நற்பலனை அடைவோம் என்னும் நற்பார்வை என்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! உலகவாழ்க்கைக்கு அப்புறப்பட்ட சத்திய மார்க்கத்தினின்ற (லோகுத்தா) துறவிகள் நற்பலனை நாடி நிற்கும் நற்பார்வை என்றால் என்ன?

ஞானமுடனும், ஞான சக்தியுடனும், ஞான வீரியத்துடனும், சிந்திப்புடனும், மன பரிசுத்தம் உலகநாட்டமற்ற வழியில் நின்று சத்திய மார்க்கத்தை பின்பற்றுதலே நற்பார்வை. இஃதே உலகவாழ்க்கைக்கு அப்புறப்பட்டு சத்தியமார்க்கத்தினின்று துறவிகள் நற்பலனை நாடிநிற்கும் நற்பார்வை என்னப்படும்,

இரண்டாவது இல்லறத்திலிருந்து துறந்து சத்திய மார்க்கத்தில் பழகுவதினால் உண்டாகும் நற்சித்தமும் இருவகைப்படும்.

ஓ! சகோதிரர்களே! துற்பார்வை ஒழித்து நற்பார்வையை உதிக்கச்செய்வதற்கு சம்யக்வீரியா அதாவது நல்முயற்சியைக் கடைபிடிக்கவேண்டும். நற்பார்வையுடனும் உறுதிமனத்துடனும் இருந்து துற்பார்வையை ஒழிக்க சம்யக் ஸ்மிருதி அதாவது நற்கடைபிடித்தல் வேண்டும். ஆக நற்பார்வையும், நன்முயற்சியும், நற்கடைப்பிடியும் தொடர்ந்து வருகின்றது.

ஓ! சகோதிரர்களே! சம்யக் திருஷ்டி அதாவது நற்காட்சி அல்லது நற்பார்வை முதலாக வருகின்றது. எவ்விதத்தில் இது ஆரம்பமாக வருகிறது? துற்சித்தம் துற்சித்தமென்றும், நற்சித்தம் நற்சித்தமென்றும் ஒருவனுக்குத் தோன்றுமாயின் அஃதே நற்பார்வை என்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! துற்சித்தமென்றால் என்ன?

காம எண்ணங்கள், துயர் வருவிக்கத்தக்க எண்ணங்கள், கொடூரமான எண்ணங்கள் இவைகளே துற்சித்தமென்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! நற்சித்தமென்றால் என்ன?

நற்சித்தம் இருவகைப்படும்.

முதலாவது இல்லறத்திலேயே நற்சுகத்தையும், நற்பல்னையும் கொடுக்கக் கூடிய நற்சித்தமாம்.

ஓ! சகோதிரர்களே! இல்லறத்திலேயே நற்சுகத்தையும், நற்பலனையும் கொடுக்கக்கூடிய நற்சித்தமெனில் யாது?

உலகத்தைத் துறக்கவேணுமென்கின்ற எண்ணம், குற்றம்பாராட்டா திருக்கவேணுமென்கின்ற எண்ணம், கொடூரச்செய்கைகளைச் செய்யாதிருக்க வேணுமென்கின்ற எண்ணம் இஃதே இல்லறத்திலேயே நற்சுகத்தையும் நற்பலனையும் கொடுக்கக்கூடிய நற்சித்தமாம்.

ஓ! சகோதிரர்களே! இல்லறத்தினின்று துறந்து சத்தியமார்க்கத்தில் பழகுவதினால் உண்டாகும் நற்சித்தமெனில் யாது?

யோசிக்கும்போதும், அவதானிக்கும்போதும், முயற்சிக்கும்போதும் சித்தமானது பரிசுத்தத்துடனும் உலகப்பற்றைவிட்டு சத்தியமார்க்கத்தில் நாடி சத்தியமார்க்கப்பிரகாரம் ஒழுகிவரும்படியான இச்சித்தத்தின் செயலே இல்லறத்தினின்று துறந்து சத்தியமார்க்கத்தில் பழகுவதினாலுண்டாகும் பரிசுத்த நற்சித்தம் என்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! துற்சித்தத்தை யொழித்து நற் சித்தத்தை உதிக்கச் செய்வதற்கு சம்யக் வீரியா அதாவது நன்முயற்சியைக் கடைபிடிக்கவேண்டும். நற்சித்தத்துடனும், சித்த ஜாக்ரதையுடனும் துற்சித்தத்தை ஒழிக்க சம்யக் ஸ்மிருதி அதாவது நற்கடைபிடித்தல் வேண்டும். ஆக நற்சித்தத்தை நற்பார்வையும், நன்முயற்சியும், நற்கடைபிடியும் தொடர்ந்து வருகின்றது.

ஓ! சகோதிரர்களே! சம்யக் திருஷ்டி நற்பார்வை ஆரம்பமாக விருக்கின்றது. ஆனால் சகோதிரர்களே! நற்பார்வை எவ்விதத்தில் ஆரம்பமாக வருகிறது. ஒருவனுக்கு மிச்சா வாஸா துன்வசனம் துன்வசனமென்றும் சம்யக்வசனா நல்வசனம் நல்வசனமென்றும் பகுத்தறிந்துக் கொள்வானாகில் அவன் நற்பார்வையில் இருக்கின்றான்.

ஓ! சகோதிரர்களே! மிச்சா வஸனா துன்வசனமெனில் யாது?

பொய் சொல்லல், புறங்கூறல், கடுஞ்சொல் கூறல், பயனற்ற சம்பாஷனை இவைகளே துன்வசனம் என்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! நல்வசனமெனில் யாது?

ஓ! சகோதிரர்களே! நல்வசனம் இருவகைப்படும்.

முதலாவது இல்லறத்திலேயே நற் சுகத்தையும், நற்பலனையும் கொடுக்கக்கூடிய நல்வசனமாம்.

இரண்டாவது இல்லறத்தினின்று துறந்து சத்தியமார்க்கத்தில் பழகுவதினால் உண்டாகும் பரிசுத்தமான நல்வசனமாம்.

ஓ! சகோதிரர்களே! இல்லறத்திலேயே நற்சுகத்தையும், நற்பலனையுங் கொடுக்ககூடிய நல்வசனமெனில் யாது?

பொய் கூறாதிருத்தல், புறங்கூறாதிருத்தல், கடுஞ்சொற் கூறாதிருத்தல், பயனற்ற சம்பாஷனை செய்யாதிருத்தல் இஃதே.

இல்லறத்திலேயே நற்சுகத்தையும், நற்பலனையும் கொடுக்ககூடிய நல்வசனமாம்.

ஓ! சகோதிரர்களே! இல்லறத்தினின்று துறந்து சத்தியமார்க்கத்தில் பழகுவதினால் உண்டாகும் நல்வசனமெனில் யாது?

மேற்கூறிய நான்குவகை துன்வசன பழக்கங்களை வெறுத்து நீக்கி விலகிக்கொண்டு பரிசுத்த மனத்துடனும், உலகப்பற்றைவிட்டு சத்திய மார்க்கத்தில் நாடி சத்தியமார்க்கப் பிரகாரம் ஒழுகிவரும்படியான இவ்வசனமே இல்லறத்தினின்று துறந்து சத்தியமார்க்கத்தில் பழகுவதினால் உண்டாகும் பரிசுத்த நல்வசனம் என்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! துன்வசனத்தை ஒழித்து நல்வசனத்தை விருத்தி செய்வதற்கு சம்யக்வீரியா அதாவது நன்முயற்சியைக் கடைபிடிக்கவேண்டும். நற்சித்தத்துடனும், சித்தஜாக்கிரதையுடனும், துன்வசனத்தை ஒழிக்க சம்யக்ஸ்மிருதி அதாவது நற்கடைபிடித்தல்வேண்டும். ஆக நல்வசனத்தை தொடர்ந்து வருபவை மூன்றாம். அவை நற்பார்வை, நன்முயற்சி, நற்கடைபிடி என்பவைகளே.

ஓ! சகோதிரர்களே! சம்யக் திருஷ்டி அதாவது நற்பார்வை அல்லது நற்காட்சி முதலாக வருகின்றது. எவ்விதத்தில் இது ஆரம்பமாக வருகின்றது.

துற்செய்கை துற்செய்கைஎன்றும், சம்யக்கர்மந்தா அதாவது நற்செய்கை நற்செய்கை என்றும் பகுத்தறிந்துக் கொள்ளுவானகில் அவன் நற்பார்வையில் இருக்கின்றான்.

ஓ! சகோதிரர்களே! மிச்சாகர்மந்தா துற்செய்கை எனில் யாது?

கொலை செய்தல், கள்ளருந்தல், விபசாரஞ்செய்தல் இவைகளே துற்செய்கை என்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! நற்செய்கை எனில் யாது?

ஓ! சகோதிரர்களே! நற்செய்கை இருவகைப்படும்.

முதலாவது - இல்லறத்திலேயே நற்சுகத்தையும் நற்பலனையும் கொடுக்கக் கூடிய நற்செய்கையாம்.

இரண்டாவது - இல்லறத்தினின்று துறந்து சத்தியமார்க்கத்தில் பழகுவதினால் உண்டாகும் பரிசுத்தமான நற்செய்கையாம்.

ஓ! சகோதிரர்களே! இல்லறத்திலேயே நற்சுகத்தையும், நற்பலனையும் கொடுக்ககூடிய நற்செய்கையெனில் யாது?

கொலைசெய்யாதிருத்தல், கள்ளருந்தாதிருத்தல், விபசாரஞ் செய்யாதிருத்தல் இஃதே.

இல்லறத்திலேயே நற்சுகத்தையும், நற்பலனையும் கொடுக்ககூடிய நற்செய்கையாம்.

ஓ! சகோதிரர்களே! இல்லறத்தினின்று துறந்து சத்தியமார்க்கத்தில் பழகுவதினால் உண்டாகும் நற்செய்கை எனில் யாது?

மேற்கூறிய மூன்றுவகை துற்செய்கைகளான பழக்கங்களை வெறுத்து நீக்கி விலகிக்கொண்டு பரிசுத்த மனத்துடனும், உலக பற்றை விட்டு சத்தியமார்க்கத்தில் நாடி சத்தியமாக்கப்பிரகாரம் ஒழுகிவரும்படியான இச் செய்கையே இல்லறத்தினின்று துறந்து சத்தியமார்க்கத்தில் பழகுவதினால் உண்டாகும் பரிசுத்த நற்செய்கை என்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! துற்செய்கையை ஒழித்து நற்செய்கையை விருத்திசெய்வதற்கு சம்யக்வீரியா அதாவது நன் முயற்சியைக் கடைபிடிக்க வேண்டும். நற்சித்தத்துடனும், சித்த ஜாக்ரதையுடனும், துற்செய்கையை ஒழித்து சம்யக்ஸ்மிருதி அதாவது நற்கடைபிடித்தல் வேண்டும். ஆக நற்செய்கையைத் தொடர்ந்துவருபவை மூன்றாம். அவை நற்பார்வை, நன் முயற்சி, நற்கடைபிடி என்பவைகளே.

ஓ! சகோதிரர்களே! சம்யக்திருஷ்டி அதாவது நற்பார்வை அல்லது நற்காட்சி முதலாக வருகின்றது. எவ்விதத்தில் இது ஆரம்பமாக வருகின்றது.

மிச்சா - அஜீவா அதாவது துன்வாழ்க்கை துன்வாழ்க்கையென்றும், சம்யக் - அஜீவா நல்வாழ்க்கை நல்வாழ்க்கையென்றும் பகுத்தறிந்துக் கொள்வானாகில் அவன் நற்பார்வையில் இருக்கின்றான்.

ஓ! சகோதிரர்களே! மிச்சா - அஜீவா துன்வாழ்க்கை எனில் யாது?

சூது, நம்பிக்கைத் துரோகம், குறிச்சொல்லுதல், தந்திரம், அநியாய வட்டி இவைகளில் பழகிவருவதே துன்வாழ்க்கை என்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! நல்வாழ்க்கை எனில் யாது?

ஓ! சகோதிரர்களே! நல்வாழ்க்கை இருவகைப்படும்.

முதலாவது - இல்லறத்திலேயே நற் சுகத்தையும், நற்பலனையும் கொடுக்ககூடிய நல்வாழ்க்கையாம்.

இரண்டாவது - இல்லறத்தினின்று துறந்து சத்திய மார்க்கத்தில் பழகுதலினால் உண்டாகும் பரிசுத்தமான நல்வாழ்க்கையாம்.

ஓ! சகோதிரர்களே! இல்லறத்திலேயே நற்சுகத்தையும், நற்பயனையும் கொடுக்ககூடிய நல்வாழ்க்கையெனில் யாது?

கெடுதியான மார்க்கங்களில் சம்பாதித்து புசியாது சத்தியத்திற்காக பாடுபட்டு புசித்து வாழ்வதே இல்லறத்திலேயே நற்சுகத்தையும், நற்பலனையும் கொடுக்கக்கூடிய நல்வாழ்க்கையாம்.

ஓ! சகோதிரர்களே! இல்லறத்தினின்று துறந்து சத்தியமார்க்கத்தில் பழகுவதினால் உண்டாகும் நல்வாழ்க்கைஎனில் யாது?

மேற்கூறிய ஐந்துவகை துன்வாழ்க்கைகளான வாழ்க்கைகளை வெறுத்து நீக்கி விலகிக்கொண்டு பரிசுத்த மனத்துடனும் உலகப்பற்றை விட்டு சத்தியமார்க்கத்தில் நாடி சத்தியமார்க்கப்பிரகாரம் ஒழுகிவரும்படியான இல்வாழ்க்கையே இல்லறத்தினின்று துறந்து சத்தியமார்க்கத்தில் பழகுவதினால் உண்டாகும் பரிசுத்த நல்வாழ்க்கை என்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! துன் வாழ்க்கையை ஒழித்து நல்வாழ்க்கையை விருத்தி செய்வதற்கு சம்யக்-வீரியா அதாவது நன்முயற்சியைக் கடைபிடிக்க வேண்டும். நற்சித்தத்துடனும், சித்த ஜாக்ரதையுடனும், துற்செய்கையை ஒழித்து சம்யக்ஸ்மிருதி அதாவது நற்கடைபிடித்தல் வேண்டும். ஆக நற்செய்கையைத் தொடர்ந்து வருபவை மூன்றாம். அவை நற்பார்வை, நன் முயற்சி, நற்கடைபிடி என்பவைகளே.

ஓ! சகோதிரர்களே! நற்காட்சி அல்லது நற்பார்வை முதலில் நிற்பதற்குக் காரணம் சம்யக் கல்பனா நல்லூற்றம் யாவரிடத்தில் தோன்றியதோ அவனுக்கு சம்யக் வஸனா நல்வசனம் தோன்றும். நல்வசனம் யாவனிடத்தில் தோன்றிய தோ அவனுக்கு சம்யக் கர்மந்தா நற்கருமந் தோன்றும். நற்கருமம் யாவனிடத்தில் தோன்றியதோ அவனுக்கு சம்யக் அஜீவா நல் வாழ்க்கை தோன்றும். நல்வாழ்க்கை யாவனிடத்தில் தோன்றியதோ அவனுக்கு சம்யக் விரியா நல் முயற்சி தோன்றும். யாவனுக்கு நல்முயற்சி தோன்றிற்றோ அவனுக்கு ஸம்யக்ஸ்மிருதி நற்கடைபிடித்தல் தோன்றும். யாவனுக்கு நற்கடைபிடித்தல் தோன்றிற்றோ அவனுக்கு சம்யக் சமாதி நற்தியானம் தோன்றும். யாவனுக்கு நற்றியானம் உதித்ததோ அவ்விடத்திலேயே முத்தியாம் நிருவாணமென்னும் பரமசாந்தியடைகின்றான். அவனே சுரோதாபதி, சகிர்தாகாமி, அநாகாமி என்னும் இம்மூன்று நிலைகளினின்று விலகி பற்றற்றதும் பரமசுகமுமான அறஹத்துநிலை அடைகின்றான் என பகவன் தமது தர்மசக்ரப்ரவர்த்தனமாம் அறச்சக்கரத்தை விளக்கிக்காட்டி முடித்தவுடன் பிக்ஷு குழாங்களெழுந்து கைகூப்பி ஆனந்தமடைந்தனர்கள்.

அவ்விடம்விட்டு நீங்கிய அறவாழியான் வைசாலி நகரடைந்தபோது பிக்ஷுமார்கள் பகவனை அஞ்சலிகரணஞ்செய்து சுவசித்தங் பரிதபனம் அதாவது இருதயத்தை சுத்திசெய்யும் மார்க்கத்தை போதித்தருளவேண்டுமென வினவ பகவன் கூறுவார்.

ஓ! சகோதிரர்களே! இதயத்தை சுத்திசெய்யும் மார்க்கம் எழுவகைப்படும். அவை 1. சதிபதானங்கள் - நான்குவகை சிந்தனை, 2. வாயமோ - நான்குவித

முயற்சி 3. சம்மபாதா - நான்குவித பாதை 4. சந்திரியா - ஐயிந்திரியங்கள் 5. சபலா - ஐந்துவித நீதிபலம் 6. சத்தபோ ஜங்கா - பற்றறுத்தல் 7. சதிபாத - அறிய அட்டாங்க மார்க்கம்

ஓ! சகோதிரர்களே! முதலாவது - நான்கு விதமான சிந்தனைகளாவன :-

அவை 1. காயானுபஸ்ஸன்னா - அசுத்தத்தாலாய தேகத்தைப்பற்றி சிந்தித்தல்.

2. வேதனானு பஸ்ஸன்னா - சகல உணர்ச்சிகளின்று உண்டாகுங் கேடுகளைப்பற்றி சிந்தித்தல்.

3. சித்தானுபஸ்ஸன்னா - மனத்தினது எண்ணங்களின் ஓட்டங்களையும் மறதிகளையும் உதயங்களையும் சிந்தித்தல்.

4. தம்மானு பஸ்ஸன்னா - உலகத்தில் தோற்றும் பொருட்கள் யாவும் க்ஷணத்திற்கு க்ஷணங் கெட்டுக்கொண்டே வருகிறதென்று சிந்தித்தல்.

ஓ! சகோதிரர்களே! இரண்டாவது - நான்குவிதமான முயற்சிகள் யாவை.

அவை. 1. அநூபானானங், அநுபாதாயாவாயமோ - கெட்ட குணங்கள் உதிக்காமல் அவற்றை தடுக்க முயற்சித்தல்.

2. உபானானங் பபாகானங் பஹானாயாவாயமோ - உள்ள கெட்ட குணங்களை விலக்குதற்கு முயற்சித்தல்.

3. அநுபானானங் கூஸலானங் உபாதாயாவாமோ - முன்னில்லாத நன்மெய்களை உண்டாக்க முயற்சித்தல்.

4. உபானானங் குஸலானங் பயோபாவாயா வாயமோ - உண்டாயிருக்கும் நன்மெய்களை அதிகப்படுத்த முய்ற்சித்தல்.

ஓ! சகோதிரர்களே! மூன்றாவது, நான்குவித பாதைகள் யாவை?

அவை 1. சந்தித்தி - பாதா - சித்த சுத்தியைப்பெறவேண்டிய பாதை
2. விரியத்தி - பாதா - நிருவாண ஸித்திபெறவேண்டிய பாதை.
3. ஸிட்தித்தி - பாதா - சித்தத்தை அடக்கவேண்டிய பாதை.
4. விமம்ஸித்தி - பாதா - விசாரணை பாதை.

ஓ! சகோதிரர்களே! நான்காவது - ஐயிந்திரியங்கள் யாவை?

அவை 1. சத்ட்திந்திரியா - உரமானசிரத்தை
2. வீரியந்திரியா - உரமான சக்தி
3. சடீந்திரியா - உரமான ஞாபகம்
4. சமாதிந்திரியா - வாஸ்தவமான தியானம்
5. பிரஞ்ஞந்திரியா - சிறந்த ஞானம்

ஓ! சகோதிரர்களே! ஐந்தாவது - ஐந்துவித நீதிபலம் யாவை?

அவை 1. சிட்தா - பலா சிரத்தைக்கருவி
2. வீரிய பலா - சக்திக்கருவி
3. சடீ பலா - ஞாபகக்கருவி
4. சமாதி பலா - தியானக்கருவி
5. பிரஞ்ஞா பலா - ஞானக்கருவி

ஓ! சகோதிரர்களே! ஆறாவது பற்றறுத்தல் அதாவது அறஹத்த நிலையை அடையும் ஏழு துணைகள் யாவை?

அவை 1. சதிசம்போஜங்கா - ஞாபகத்தை நிர்மலமாக்கல்
2. வீரிய சம்போஜங்கா - சித்தி யதிகரிக்கச் செய்தல்
3. தம்ம விஸய சம்போஜங்கா - பகுத்தறியும் ஞானம்
4. பிடிசம்போஜங்கா - ஆனந்தத்தை நிர்மலமாக்கல்
5. பஸ்ஸட்தி சம்போஜங்கா - சித்தமும், அமைதியாயிருத்தல்.
6. சமாதி சம்போஜங்கா - சித்தியானத்திலிருத்தல்
7. உபேக்கா சம்போஜங்கா - தெளிவு.

ஓ! சகோதிரர்களே! ஏழாவது - நான்கு பாதைகள் யாவை?

அவை 1. (ஸோரோதாபதி) இஃதே நிருவாண பதமடையும் முதல்பாதை, இம்முதல்பாதை சித்தி பெற்றவனுக்கு சத்காய திருஷ்டி, விஸிசிக்சா ஸீல பத பரமாஸ அதாவது நான் என்னும் மயக்கம், சந்தேகம், நீதிமார்க்கமில்லாமலே சுகம் பெறலாமென்ற இம்மூன்றும் அற்றுவிடும்.

2. (ஸகிர்தாவாமி) இஃதே மேற்கூறிய, மூன்றும் அற்ற நிலையிலிருத்தல்.

3. (அனாகாமி) இஃதே நிருவாண பதமடையும் மூன்றாம் பாதை, இப்பாதையில் சித்திபெற்றவனுக்கு காமராக, படிகா அதாவது புலன்கள் பற்றும், கோபமும் இவைகள் அற்றுவிடும்.

4. (அறஹத்) இஃது நிருவாண பதடையும் நான்காவது பாதை. இப்பாதையில் சித்தி பெற்றவனுக்கு ரூபராக, அரூபராகமான (உட்தச்ச, அவிஜ்ஜா) அதாவது ரூப ஆசை, அரூப ஆசை விழிப்புடன் பார்க்கும் ஆசை அகங்காரம், தியான தடுக்கம், அறியாமை இவைகள் அற்றுவிடும். மேற்கூறிய பத்துவகைப் பற்றுக்கள் அற்ற நிலையினுள் அரிய அஷ்டாங்கமார்க்கம் அடங்கியுள்ளன.

ஓ! சகோதிரர்களே! சுவஸிக்தம் பரிதபனம் அதாவது இதயசுத்தத்திற்கு இஃதே மார்க்கமென பகவன் முடிவு செய்தார்.

பிக்ஷுகுழாங்கள் பகவனை வணங்கி கீழ்வரும் புத்த சாக்கைய முனிவரின் குணலட்சணங்களைப் பற்றியும் அவர் சத்தியத்தைப்பற்றியும் மும்மணி களடங்கிய மூன்று கீதையையும் பாடி ஆனந்தித்தார்கள்.

குணலட்சணம்

இதிபிஸோ பகவா அறஹங்ஸம்மா ஸம்புத்தோ
விஜ்ஜாஸரண ஸம்பன்னோ ஸுகதோ லோகவிது
அனுத்தரோ புரிஸ தம்ம ஸாரதி
ஸத்தா தேவ மனுஸ்ஸானஞ் புத்தோ பகவாதீ.

குணலட்சணங்கள்

இதிபிஸோபகவா - பகவானேபெரியோன், அறஹம் - அவரே பெருந்துறவு ஸம்மா ஸம்புத்தோ - அவரே ஞானசமுத்திரம், விஜ்ஜா ஸரண ஸம்பன்னோ - அவரே சகல சித்தியும் பெற்றவர் ஸுகதோ - அவரே சுகமடைந்தவர் லோகவிது - அவரே உலகறிந்தோன் அனுத்தரோ - அவரே நிகரற்றவர் புரிஸதர்மஸாரதி - அவரே மனுக்களை தருமவழியிலோட்டியவர் ஸத்தாதேவ மனுஸ்ஸானங் - தெய்வ நிலை உடையோருக்கும், மனுக்களுக்கும் ஆசான் புத்தோ பகவாதி - அவரே பகவன் புத்தர்

சத்தியம்

ஸுவாகாதோ பகவதோ தம்மா
ஸந்திட்டிகோ அகாலிகோ ஏஸிபஸ்ஸிகோ உபநெயிகோ
பச்சித்தங்வுவேதிதப்போவிஞ்ஞாஹி.

சத்தியம்

சுவாகாதோ பகவதா தம்மோ - சத்தியம் பகவனால் குறைவின்றி போதிக்கப்பட்டது, ஸந்திட்டிகோ - அச்சத்தியம் உடனுக்குடன் பலனைக் காட்டக்கூடியது, அகாலிகோ - யாதொரு தடையின்றி அந்தக்ஷணமே பிரயோசனத்தைக் தரக்கூடியது, எஹிபஸ்ஸிகோ - அச்சத்தியம் பேதமின்றி யாவரையும் கூவியழைக்கக் கூடியது, உபநெயிகோ - அச்சத்தியமே நிருவாணத்திற்கு அழைக்கும் பாதை, பச்சிதங் வுவேதிப்போ விஞ்ஞாஹி - ஞானிகள் தங்களுக்குள்ளே அறிந்துக்கொள்ளக் கூடியதும் இச்சத்தியமேயாம்.

மூன்று கீதைகள் - புத்தம்

1. யோவடதங் பவரோ மனுஜேஸு
சாக்யமுனி பகவா கதகிச்சோ
பாரகதோ பலவிரிய ஸமங்கி
தங் சுகதாங்சரணத்த முபேமி.

புத்தம்

யோவடதங் பவரோ மனுஜேஸு - மனுக்களில் பெருமையும் அருமையான ஆசானும், சாக்யமுனி பகவாகதகிச்சோ - பகவான் சாக்கைய முநிவர் சகலருக்குங் குருவாக விளங்கி, பாரகதோ பலவீரிய ஸமங்கி - உலகில் முடிக்கவேண்டியதை முடித்து கரையேறி நிருவாணமடைந்த, தங்ஸுகதங் ஸரணத்தமுபேமி - மங்கலகரமான புத்தபிரானை யாங்கள் துணைக் கொள்ளுகிறோம்.

தம்மம்

2. ராகவிராகங் அனீஜமஸோகங்
தம்மம் அஸங்கதம் அப்பமேகூலம்
மதுரம் இமம் புகுணம் ஸுவிபத்தம்
தம்மம் இமம் ஸரணத்த முபேமி

தம்மம்

ராக விராகம் அனீஜம ஸோகங் - காமம், அவா, துக்கம் இவைகளினின்று

விலகச்செய்யும் தர்மமும், அசங்கதங் அழியா தர்மமும், அப்பட்டி குலம் மதுரம் இமம் புகுணம் ஸுவிபத்தங் - குற்றமற்றதும், மதுரமானதும், தெளிவானதும், தருக்கநீதியானதுமான தம்மம் இமம் ஸரணத்த முபேமி - தர்மத்தை யாங்கள் துணைக்கொள்ளுகிறோம்.

சங்கம்

3. யத்தச்ச தின்ன மஹாப்பலம் ஆஹு
சதுஸுஸுஸீஸு புரிஸயு கேஸு
அத்தச்ச புக்கல தம்ம தஸாதி
சங்கம் இமம் ஸரணத்த முபேமி.

சங்கம்

யத்த ச்ச தின்ன மஹாப்பலம் ஆஸு - எட்டு மார்க்கங்களை உடையவர்களும், சது ஸுசு ஸீசு புரிஸயு கேசு - நான்குவித வாய் மெய் உடையோர்களும், அத்தச்ச புக்கல தம்ம தஸாதி - தர்க்கத்தில் தேர்ந்து அவன் பலனைக் கண்டடைந்த, சங்கம் இமம் சரணத்த முபேமி - சங்கத்தை யாங்கள் துணைக்கொள்ளுகிறோம்.

புத்தாங்க சரணம், தர்ம்மாங்க சரணம், சங்காங்க சரணமெனத் திரிரத்தினங்களை போற்றிச் சென்றார்கள்.

16. கோசல நாட்டரசன் காதை

பகவனும் வைஸாலிவிட்டு நீங்கி கோசலைநாடென்னும் அயோத்தியா புரியை அடைந்து அங்குள்ள ஒருவனத்தில் தங்கினார்.

ததாகதராம் தேவாதிதேவன் வந்து தனது தேசத்திலுள்ள ஒரு வனத்தில் தங்கியிருப்பதை வேவுகர்களால் அறிந்த பிரசானஜித்தென்னும் அரசன் தனதரச கோலத்துடன் சென்று அஞ்சலியஸ்தனாக வணங்கி தேவாதிதேவா, திரிவேத போதனா, தினகரப் பிரகாசா, திங்கள் முகவதனா, ஜெகத்திரட்சகா என்று துதித்து ததாகதருடையப் பாதப்படி எமதுதேசத்திற்படிய என்ன பாக்கியம் பெற்றேன், உமது திருமுகத்தைக் கண்ணாரக்கண்டேன், தீவினையை விண்டேன், ஆனந்தங்கொண்டேன். ஐயன் அடிமையின் புசிப்பேற்று அருள்மொழியாம் சத்தியதன்மத்தை ஊட்டி, காமாக்கினி, கோபாக்கினி, லோபாக்கினியால் எறிந்துகொண்டிருக்கும் உள்ளத்தைக் குளிரச்செய்யவேண்டும்.

உலகத்தை ஆளும் முடிசார்ந்த மன்னர்களும், படிதாழ்ந்த ஏழைகளும் பிடிமண்ணாய்ப்போவதைக் காண்கின்றேன். ஆதலின் அடியான் மீது கண்ணோக்கம் வைக்கவேண்டுமென்றான்.

இன்ப அவாவாலும் பேராசையாலும் சுமக்கப்பட்டிருக்கும் அரசனுடைய உள்ளத்தை அறிந்த நமதையன் பின்வருமாறு போதிக்கலாயினர்.

துற்கருமத்தால் தாழ்ந்த அந்தஸ்துள்ளவர்களும் ஓர் புண்ணியபுருஷரைக் கண்டவளவில் அவரை அன்புடன் வணங்குகிறார்கள். சற்கருமத்தினால் இப்பயனைப்பெற்ற அரசன் புத்தரை சந்தித்தபோது அவர்பால் வைத்த அன்பின்மிகுதியால் ஐயன் அருளறம் போதிக்கலாயினர்.

அதாவது சத்தியதன்மத்தைக் கேட்க விரும்புவோர் அதே நோக்கமாகவும் ஆழ்ந்து உள்ளத்தில் ஆராயக் கூடியவர்களாவும் இருத்தல் வேண்டும்.

ஏனென்பீரேல் நம்முடைய நற்காரியங்கள் யாவும் நற்சாயலாய்த் தோன்றி நல்லுள்ளத்தில் பதிந்து நற்பலன் ஈய்ந்து சருவசீவர்களுக்குஞ் சுகத்தை அளிக்கும்.

நம்முடைய துற்காரியங்கள் துற்சாயலாய்த் தோன்றி துன்னுள்ளத்தில் பதிந்து துற்பலனை ஈய்ந்து சருவசீவர்களுக்குந் துக்கத்தை அளிக்கும்.

நற்கருமம் வாய்ந்த அன்பார்ந்த உள்ளமே யாவற்றிலும் சிறந்தது அவையே யாவரும் விரும்பத்தக்கது.

ஆதலின் எம்மால் உமக்குப் போதிக்கப்போவது சத்தியதன்மம். உம்மால் நடக்கவேண்டியது சத்தியமார்க்கமாகும்.

உம்முடையப் புத்திர பௌத்திரர்களைப் பாதுகாத்து ரட்சிப்பதுபோல் உமதுதேசக் குடிகளையும் பாதுகாத்து ரட்சித்தல் வேண்டும்.

குடிகளை மீளா துக்கத்தில் ஆழ்த்தலாகாது. அவர்கள் அறியாமையால் துற்கருமங்களை விளைத்தபோதினும் அறக்கருணையால் அவர்களை தண்டித்து அன்பு பாராட்டி அறிவு விருத்தி செய்தல் வேண்டும்.

உமது குடிகளை அழிவின் கூட்டத்தில் சேரவிடாமலும், அநீதி மார்க்கத்தில் நடக்கவிடாமலும் தடுத்து சாதுசங்கங்களுடன் சேரவும், சத்திய தன்மத்தில் நடக்கவுஞ் செய்தல் வேண்டும்.

ஆதுலர்களுக்குப் புசிப்பும், பிணியாளருக்கு கவுடதமும், அநாதைகளுக்கு ஆதரவும் தந்தருளல் வேண்டும்.

அரசாங்கத்து அதிபதியாய் இருக்கின்றோமென்று அகங்கரிக்கலாகாது, அதிகாரத்தில் தன்னை ஒடுக்கிக்கொண்டவனே சகலரையும் அடக்கியாளும் அதிகாரியாவன்.

தன்னைத்தானே அடக்கியாளும் அதிகாரி தன்குடும்பத்தையுந் தன் கிறாமவாசிகளையும் தனது தேசக் குடிகளையும் எளிதில் அட்க்கி ஆளுவான்.

நான்குபக்கமும் அடர்ந்திருக்கும் பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடென்னும் அவத்தையாற் சூழப்பட்டிருக்கின்றோம். அவ்வவத்தையின் சதுர்பந்தக் கட்டுகளறவேண்டுமாயின் சத்தியதன்மத்தின் வாளைக்கொண்டே அவற்றை அறுத்து மீளவேண்டும்.

அறிவை விருத்தி செய்துக்கொள்ளுகிறவர்கள் தேகபோகம் சகலத்தையும் வெறுப்பார்கள். அறிவின் வாழ்க்கையில் விழிப்புள்ளவர்கள் சகல மோகங் களையும் தவிர்ப்பார்கள்.

மரமானது பற்றி எரியுங்கால் ஓர் பட்சியும் அதனருகில் அணுகாமல் திகைப்பதுபோல் கோபாக்கினி, காமாக்கினி, லோபாக்கினியால் பற்றி எரியும் உள்ளத்தின்கண் உண்மெய் சேராது திகைத்து பேதமெயால் பிறப்புண்டாகி பிணி, மூப்பு, சாக்காட்டிற்கிழுத்து பின்னும் பின்னுந் துக்கத்திற்கு ஆளாக்கும்.

இதன் சுருக்கத்தை அறிந்தவனே உண்மெய்ப்பொருளை அடைவான். உண்மெய்ப்பொருளை அறிந்தவனே நித்திய வாழ்வைப் பெறுவான். உண்மெய்ப் பொருளை உணராதவன் மாளாப்பிறவியில் சுழன்று மீளாதுக்கத்தில் ஆழ்ந்து காற்றிற் பரக்கும் பதறுபோல் அல்லலடைவான்.

இத்தகைய உண்மெய் ஞானம் ஒருவனுக்கு இல்லாமல் போமாயின் அவன் பகுத்தறிவில்லாதவனேயாவன். பகுத்தறிவில்லாதவன் தோற்றத்தில் மனிதனேயாயினும் மனிதருள் மரமும், மனிதருள் மாடென்றும் எண்ணப்படுவான்.

உண்மெய் ஞான விசாரிணை துறவறத்தைச் சார்ந்த சங்கத் தோருக்குமாகும். இல்லறத்தைச்சார்ந்த குடும்பிகளுக்குமாகும்.

உண்மெய் விசாரிணைக்காய துறவற தன்மசங்கத்தைச் சேருவோரும், பற்றறுக்காது பிறவிக்காளாவார்கள்.

இல்லற தன்மத்தினின்றும் பற்றினை அறுப்போர் உண்மெய்ப்பொருளை அடைந்து நிருவாணம் பெறுவார்கள்.

காம, வெகுளி, மயக்கமாம் பெருவெள்ளமே யாவருக்கும் அபாயமானது. அவ்வெள்ளத்தால் சகலமும் நாசமாகிப்போம். அவ்வெள்ளத்தின் சுழலில் அகப்பட்டவன் ஒருக்காலும் மீளான். பற்றற்ற ஞானமாந்தோணியில் ஏறிக் கொண்டவன் அவ்வெள்ளத்திற்குஞ் சுழலுக்கும் அஞ்சான். ஆதலின் உன் விழிப்பிலும் நித்திறையிலும் சத்கருமத்தை நாடு, சத்கருமத்தின் பேரொலியானது உன்னைக் கூச்சலிட்டழைக்கின்றது. அதனிற் செவிசாய்ப்பாயாக.

நமது கன்மத்தை விட்டு தப்பிப்போம் வழி யாதொன்றும் இல்லை. துற்கன்மவழி துன்பவரையில் கொண்டுபோய்விடும். இத்தகைய வழிகளைக் கண்டறிந்து நடப்பவர்களும் நாமே. அதன் நிலையை அடைபவர்களும் நாமேயாதலின் உமக்குள்ள பேரின்பவமுதம் பேரொலியிட்டழைக்கின்றது அதனை உணர்வாயாக.

நாம் செய்துவரும் கன்மத்தின் பலனை நாமே அனுபவித்துத்தீரல் வேண்டும். விதைத்த விதையே முளைக்கும். ஆதலின் துற்கருமங்களை அணுகவிடாது சத்கருமத்தையே செய்தல் வேண்டும். சத்கன்ம பலன் துக்கத்தை அகற்றும்.

வெளிச்சத்தினின்று இருளிற்குப் போகும் வழியுண்டு. இருளினின்று வெளிச்சத்திற்குப் போகும் வழியுண்டு. மாலையினின்று பேரிருளுக்குப் போகும் வழியுண்டு. வைகரையினின்று பெருவெளிச்சத்திற்குப்போகும் வழியுண்டு. ஆதலின் அறிவை நிதானித்தவன் இருளினின்று வெளிச்சத்திற்கேகுவான், சிற்றறிவினின்று பேரறிவாளனாவான்.

தேறவிசாரிக்கும் பகுத்தறிவாலும், நற்செயலாலும் உன்னுடைய தண்மெயாம் சாந்தநிலையினின்று உலகவஸ்துக்களின் மீதுள்ள அவாவை ஆழ்ந்து கவனி, நிலையில்லா வாழ்வை நிதானித்துப்பார்.

உன்னுடைய அறிவை விருத்திசெய்து அதிவுக்கத்துடன் சன்மார்க்கத்தை நாடும் அரசனுக்குரிய செயல்களில் அதி ஜாக்கிரதையிலிருந்து வெளி தோற்றங்களில் உன்னுடைய சுகத்தை நாடாதே. மிக்க வல்லமெய்ப்பெற்றவ னென்றும் அதி தீரனென்றும் உன்னைக் காட்டிக்கொள்ளாதே. நன்மெய்க்கடை பிடித்து உனக்குள்ள சுகத்தை நாடு. வேற்றரசர்மேல் வெகுளி கொள்ளாதே. உனக்குள்ள சாந்தத்தை உன் உப்பரிகைமீது நாட்டும். வெண்கொடியாம் மௌனப்பிரகாசத்தால் காட்டு. உனது குடிகள் யாவருக்கும் செவ்வியக் கோலை நீட்டி நீதிமார்க்கத்தையூட்டு. அவர்கள் நிறைந்த நீதிமார்க்கத்தில் நிற்பார்களாயின் அவர்கள் ஒழுக்கமே உமது சுகத்துக்கோர் வழியை ஈந்து சகல பற்றுக்களுமற்று மாளாப்பிறவியில் உண்டாகும் துக்கங்களும் ஒழிந்து நிருவாணநிலை அடைவாயென்று கூறினார்.

ஐயன் அமுதவாக்கை உணர்ந்த அரசன் அருகன தடிபணிந்து தேவாதிதேவா! உமது அளவுபடா சத்தியதன்மத்தின் நிலையைக் கிஞ்சித்தறிந்து கொண்டபோதிலும் பிறவி என்னும் வார்த்தையின் பொருளும், அதன் செயலும் விளங்காதவனாயிருக்கின்றேன் அவற்றை விளங்கக்கூறி அப்பிறவியினின்று விடுவிக்கவேண்டுமென்று வணங்கினான்.

அவலோகிதர் அரசனைநோக்கி பிறவியின் தோற்றத்திற்கும் காரணம் நீயே, அதன் மடிவுக்கும் காரணம் நீயே, தோற்றம் மடிவு இரண்டுமற்று நிற்பதற்கும் காரணம் நீயேயன்றி வேறொருவரும் உன்னைப் பிறவியினின்று விடுவிக்க மாட்டார்களென்று கூறினார்.

அவற்றை வினவிய அரசன் அண்ணலைநோக்கி ஐயே! பிறவி என்னும் விவரமே அடிமைக்கு விளங்காததால் அவற்றைத் தெள்ளற விளக்கி என் தீவினையை ஒழிக்கவேண்டுமென்றான்.

அரசனது வேண்டுகோளை வினவிய விநாயகன் பிறவியின் தோற்றங்களையும் அதன் மறைவுகளையும் விளக்க ஆரம்பித்தார்.

அரசே! உன் உள்ளத்தினின்று ஓர் விஷயத்தை எண்ணும் எண்ணமானது தோற்றி எண்ணிய எண்ணம் மறந்துவிடுவதை உணர்கின்றாய். அவ்வகை எண்ணும் எண்ணங்களின் தோற்றமே ஓர் பிறப்பாகவும், எண்ணங்களின் மறதியே அதன் இறப்பாகவும் உணரல் வேண்டும்.

நித்திறையினின்று விழித்தலே ஓர்பிறப்பாகவும், விழிப்பினின்று நித்திறை அடைதலே ஓர் இறப்பாகவும் உணரல் வேண்டும்.

மாதுரு கருப்பையினின்று வெளிக்குத் தோற்றுதலே ஓர் பிறப்பென்றும், அத்தோற்றம் மறைதலேயோரிறப்பென்றும் உணரல் வேண்டும்.

இம்மூவகை இறப்பு பிறப்பினுள் உலகத்தில் தோற்றும் பொருட்களை நாடி உன் உள்ளத்தில் எழும் அவாவின் பற்றானது மண், பெண், பொன்னென்னும் முப்பொருளையேனும், முப்பொருட்களில் ஒன்றையேனும் பற்றி அதனலுப்பால் அயர்ந்த நித்திறை உண்டாய் அந்நித்திறா பழக்கத்தால் பெருநித்திறையாம் மரணமுண்டாகி முன் பேதமெயால் திரண்ட வினையாம் அவாவின் பற்று வியர்வையாகவாயினும், விதையாகவாயினும், முட்டையாக வாயினும், கருவாகவாயினும் உருண்டு உருவாகத் தோன்றி பிறப்பென்னும் பெயரேற்று துக்கத்திற் சுழன்று திரிகின்றது.

எவ்வகையிலென்னில் காற்றானது உருவமற்றிருத்தலால் அதன் சுயநிலை ஒருவருக்குந் தோன்றாது. அவ்வருவுருவமற்றக்காற்று யாவருக்கும் உணர்ச்சியாகி

அக்கினியுடன் சம்மந்தித்துவருங்கால் நெருப்புக்காற்றென்றும், நீருடன் சம்மந்தித்து வருங்கால் குளுங்காற்றென்றும் வழங்குவது போல் காம அவாவால் காமத்துடன் சம்மந்தித்து தோற்றிய பிறப்பும், வெகுளி அவாவால் வெகுளியுடன் சம்மந்தித்து தோற்றிய பிறப்பும், மயக்க அவாவால் மயக்கத்துடன் சம்மந்தித்து தோற்றிய பிறப்பும், இன்ப அவாவாம் வினைபோகமாதலின் அவாவால் உண்டாகும் பற்றுக்களே பிறப்பிற்கு மூலமாகும்.

அவாவானது அருவுருவற்றிருப்பினும் காம அவாபற்றி பஞ்சஸ்கந்தங் களுடன் திரண்டு பிறப்புத்தோன்றில் காமரூபி என்றும், வெகுளி அவாபற்றி பஞ்சஸ் கந்தங்களுடன் திரண்டு பிறப்புத்தோன்றில் வெகுளி ரூபி என்றும், மயக்க அவாபற்றி பஞ்சஸ்கந்தங்களுடன் திரண்டு பிறப்புத் தோன்றில் மயக்க ரூபி என்றும் பெயர் பெருவான்.

இத்தகைய பிறப்பின் தோற்றங்களுக்கும் தோற்றங்கள் அனுபவிக்கும் துக்கங்களுக்கும் மூலகாரணம் பேதமெயால் உண்டாகும் அவாவின் பற்றுக்களாதலின் பற்றற்ற கண்களே பிறப்பறுக்கும், கேட்டலற்ற செவிகளே பிறப்பறுக்கும், கந்தமற்ற நாசிகளே பிறப்பறுக்கும், சுவையற்ற நாவுகளே பிறப்பறுக்கும். பரிசமற்ற தேகங்களே பிறப்பறுக்கும். இவ்வைந்தின் செயல்களை அறிந்துகொள்ளுகிறவனே அதி தீவிரத்தில் பிறவியை அறுத்து மரணத்தை ஜெயிப்பான்.

அவாவுடன் கலந்த தீயச்செயல்களின் பற்றானது தீய உருவத்தை தோற்றுவித்து தீச்செயல்களைப் பெருக்கி மேலும் மேலும் துக்கத்திற்கு ஆளாக்கும்.

அவாவுடன் கலந்த நியாயச்செயல்களின் பற்றானது நியாய உருவத்தைத் தோற்றுவித்து நியாயச்செயல்களைப்பெருக்கி நித்தியவாழ்வாம் நிருவாணத் திற்குக் கொண்டுபோகும்.

கண்ணினால் பார்க்கும் வஸ்துக்களை பேரவாவால் பற்றி மேலும் மேலும் தாவி நிற்றல் தீயப்பிறவிக்குக் கொண்டுபோகும். கண்ணினால் பார்க்கும் வஸ்துக்களைப் பார்த்தும் பாராததுபோல் நின்று அவ்வஸ்துக்களின் அதிரூபமும், அழகும் நாளுக்குநாள் மாறுதலடைந்து நசிந்துபோம். அவ்வகை நசிந்துபோகும் வஸ்துவை நாட்டமுறுவதும் அவைமீதவாபற்றுவதும் வீணென்றறிந்து நாட்டத்தாலெழும் அவாவையும், அவாவால் எழும் பற்றுக்களையும் அறுத்து வருதல் நியாயப்பிறவிக்குக் கொண்டுபோகும்.

சந்தனக்குழம்பில் ஓர் பாதமும், அக்கினிக்குண்டத்தில் ஓர் பாதமும் வைத்துக்கொண்டிருப்பதுபோல் இன்னின்னது தீயச்செயல்களென்றும், இன்னின்னது நியாயச்செயல்களென்றும் பகுத்துணர்ந்து தீயச்செயலால் உண்டாகும் தீவினைப்பயனாகும் பிறப்பையும் இறப்பையும் அறுத்து நற்செயலால் எழுவும் நல்வினைப்பயனாகும் பரிநிருவாண நித்தியவாழ்வைப் பெறுவாய்.

இத்தகைய நித்தியவாழ்வின் மார்க்கத்திற்கும், உமது குடிகளின் நீதிவாழ்வாம் வாழ்க்கைக்கும், போதகர்கள் மந்திரவாதிகளேயாவர். அவ்வகை மந்திரிகள் புத்தசங்கத்தோர்களாயிருப்பார்களாயின் உம்மிடத்தில் யாதோர் பிரிதிபலனையுங் கருதாது சத்தியதன்மங்களை நாட்டி சமயோசித யுக்த்திகளை ஊட்டிவருவார்கள்.

அதினால் உம்முடையக் குடிகள் யாவரும் சுகவாழ்க்கை அடைவதுடன் தாமும் நித்தியவாழ்வைப் பெறுவீர். இப்போதனா வாழ்க்கைப் பொருந்துவீ ராயின் காலாகாலத்திற்கு அன்பும், அருளும், பேரும், புகழுமடைவாய். இதுவே ததாகதருடைய அன்பென்றோதி அரசனுக்காசி கூறி அரணுக்கனுப்பி விட்டு யாதும் விளைவற்ற ஓர் வனத்தின் வழியே வாமன் சென்று கம்மஸதம்மா என்னுமிடத்தில் ஒற்றுமெயற்றிருக்கும் சங்கத்தோர்களை நோக்கி;

17. கலஹ விவாத காதை

ஓ! சகோதிரர்களே! விவாதமும், குதர்க்கமும், அழுகையும், துக்கமும், பொறாமெயுடன் எங்கிருந்து உதிக்கின்றன. அகந்தையும், வீணெண்ணமும் புறங்கூறலுடன் எங்கிருந்து எழுகின்றன.

ஓ! சகோதிரர்களே! பிரீதிகொண்ட பொருட்களினால் விவாதமும், குதர்க்கமும், அழுகையும், துக்கமும் பொறாமையுடன் சேர்ந்தும்; அகந்தையும், வீணெண்ணமும் புறங்கூறலுடன் சேர்ந்து, விவாதமும் குதர்க்கமும் பொறாமையுடன் கலக்க குதர்க்கத்தினின்று புறங்கூறல் உதிக்கின்றது.

ஓ! சகோதிரர்களே! இவ்வுலகில் பிரீதிகொள்ளும் பொருட்களும், இவ்வுலகில் நிகழும் பொருளாசையும், அவாவும், திருப்தியும் இவ்வுலகில் இனி ஜீவர்கள் அடையும் நிலையும் எங்கிருந்து உதிக்கின்றன.

ஓ! சகோதிரர்களே! இவ்வுலகில் பிரீதிகொள்ளும் பொருட்கள் பற்றிலிருந்து உதிக்கின்றன. இவ்வுலகில் நிகழும் பொருளாசை, அவா, திருப்தி இவைகள் பற்றிலிருந்து உதிக்கின்றன. இவ்வுலகில் இனி ஜீவர்கள் அடையும் நிலையும் பற்றின் பலனுக்குத்தக்கவாறு நிகழ்கின்றன.

ஓ! சகோதிரர்களே! இவ்வுலகில் நிகழும் பற்று எதினின்று எழுகின்றது. அதன் பகுப்பு யாது? இவ்வுலகில் வழங்கும் இன்பம் துன்பம் என்பவைகளினின்று பற்று உதிக்கின்றது. தோற்றத்தையும் மடிவையும் கண்ட ஒருவன் பகுத்தறிந்துக் கொள்வான். இன்பமும் துன்பமும் நிகழ்வதற்கு மூலகாரணம் யாது? எதுகாரணத்தால் இவைகள் நிகழ்வதில்லை? மடிவும் தோற்றமும் எப்படி நிகழ்கின்றன.

ஓ! சகோதிரர்களே! இன்பமும் துன்பமும் பரிசத்தால் நிகழ்கின்றன. பரிசம் எழாதபோது இன்பமும் துன்பமும் நிகழ்வதில்லை. மடியவைப்பதும் தோற்றவைப்பதும் பரிசமே.

ஓ! சகோதிரர்களே! இவ்வுலகில் பரிசம் உதிப்பதற்கு மூலகாரணம் யாது? எது கிரகிப்பதற்கு மூலம். எது இருப்பின் நான் என்னும் மமதை நீங்கும். எதை தவிர்ப்பதினால் பரிசம் விலகும்.

ஓ! சகோதிரர்களே! நாமரூபமே பரிசத்துக்கு மூலகாரணம். பரிசத்தை கிரகிப்பது பற்றே. பற்றை நிவாரணஞ்செய்வதால் நான் என்னும் மமதை நீங்கும். ரூபத்தை நிவாரணஞ்செய்ய பரிசம் விலகும்.

ஓ! சகோதிரர்களே! இவ்வுலகில் சகோதிரர்களில் ஒருவன் சுபாவ அறிவுடனில்லாமலும், உன்மத்த அறிவுடனில்லாமலும், அறிவற்றில்லாமலும் இருப்பானாகில் ரூபம் ஒரு நிகரல்ல. ஏனெனில் மயக்கமே அறிவில் மூலமாக நின்று காரியாதிகளை பலவிதமாக நடப்பிக்கின்றது.

உலகில் சகோதிரர்களில் ஒருவன் சகலபாபங்களையும் விட்டொழித்து புனிதனாகவும், சாந்தமுள்ளவனாகவும், மனநிறைவுள்ளவனாகவும், பரிசுத்தனாகவும், சமுசார சாகரத்தினின்று விலகினவனாகவும் சுயம்பாயிருப்பானாகில் அவனையே பிராமணனென அழைக்கலாம்.

உலகில் சகோதிரர்களில் ஒருவன் ஆறுதலும், துற்கன்மங்களினின்று விலகினவனும், களங்கமற்றவனும், ஜனனத்தையும் மரணத்தையும் வெல்லும் சக்தியுடையவனாகியும் இருப்பானாகில் அவனையே சமணனென அழைக்கலாம்.

உலகில் சகோதிரர்கள் ஒருவன் அசுகத்தைச்சுடும் காமத்தினின்று விலகியும், சகல பற்றுக்களை ஒழித்தும் எப்பொருட்கள் பேரிலும் அவாவைக்காமலும் இருப்பானாகில் அவனையே நாதனென்று அழைக்கலாம்.

உலகில் சகோதிரர்களில் ஒருவன் காமத்தையும் அவாவையும் விட்டொழித்தவனும், மறுபடியும் தாயின் வயிற்றில் பெறப்படாதவனும், தியான நிலையில் பூர்த்திபெற்றவனாகியும் இருப்பானாகில் அவனையே அறஹத்தென அழைக்கலாம்.

உலகில் சகோதிரர்களில் ஒருவன் துக்கத்தைவிருத்தி செய்யும் கன்மங்களினின்று விலகியும், நற்பார்வையுடன் வனங்களில் சென்றும், கபடம் ஆணவம், பொருளாசை, கோபம், நாமரூபம் இவைகளை அணுகவிடாது பரிபூரண நிலையை அடையசிரத்தை கொண்டிருப்பானாகில் அவனையே பரிபாஜா என அழைக்கலாம்.

உலகில் சகோதிரர்களில் ஒருவன் உலக ஆசையைவிட்டு துக்கத்தினின்று விடுபட்டு துக்கபயமின்றி தைரியத்துடன் இருப்பானாகில் அவனையே தீரனென்றழைக்கலாம்.

உலகில் சகோதிரர்களில் ஒருவன் பிராமணன் அடைந்தநிலை இது வெனவும், சமணன் அடைந்த நிலை இதுவெனவும் கண்டு அந்தந்த படித்தரத்துக்குத் தக்கபடி நடந்து பற்றுக்களினின்று சிறுகசிறுக விலகிவருவானாகில் அவனையே குஸலனென்றழைக்கலாம்.

உலகில் சகோதிரர்களில் ஒருவன் நீதியான தன்மம் இன்னதெனவும், அநீதியான தன்மம் இன்னதெனவும் பகுத்தறிபவனாகியும், மனத்தை ஐம்பொறிகளில் செல்லவொட்டாது தடுத்து துறவற ஒழுக்கத்திற் செல்பவனாகியும், பற்றென்னும் வலையினின்று விடுபட்டவனுமா யிருப்பானாகில் அவனையே முனி என்றழைக்கலாம்.

உலகில் சகோதிரர்களில் ஒருவன் மத்தியபாதையில் நின்றும், சுகத்தைப்பெற்றும், சந்தேகத்தை நிவர்த்தி செய்தும், மறுபிறப்பை ஒழித்தவனாகியும் இருப்பானாகில் அவனையே மஹா பிக்ஷு என்றழைக்கலாம்.

ஓ! சகோதிரர்களே! இவ்வுலகில் இவைகள் யாவற்றையும் தெரிந்த சகோதிரர்கள் வாதிடுவதற்கு வெளிவரமாட்டார்கள்.

1. ஸந்த வாதோ பயங் ஜாதங் / நிக்கேதா ஜாயதோ ஜோ
அனிகே மஸஸ்தங்வ / ஏதங் வே முனி தஸ்ஸனங்

ஓ! சகோதிரர்களே! வழக்க பழக்கத்தால் பயங்கரம் உதிக்கின்றது. இல்லற துன்வாழ்க்கையால் துற்சுபாவம் எழுகின்றது. வழக்க பழக்கங்களற்று துறவற வாழ்க்கையைப் பெறுவதே முனியினது தர்சனமாயிருக்கவேண்டும்.

2. யோ ஜாத முத்திஜ்ஜ நரோபயய்ய / தாயந்த மஷ்ஸ நானுப்ப வஜ்ஜ
தமாஹு ஏகங் முனிநந் தாந்தங் / அடத்தகிஸோ சந்திப்தங் மஹேஸி

சகோதிரர்களில் ஒருவன் எழும்பிய பாவங்களை நீக்கி அப்பாவங்களை வேரூன்றாது தடுத்து தன்னில் எழும்போது அதற்கு இடந்தராது நிற்கும் மௌனியை முனி என்றழைக்கலாம்.

3. ஸங்காய கட் நூனி பஹா பீஜங் / ஸிநேஹ மஸ்ஸ நனு பவச்ச
ஸவேமுனி ஜாதிகயந்த தஸ்ஸி / தக்கங் பஹாய நாஉபெதி சங்கங்

பாவம் எழும் காரணங்களைக்கண்டு அதன் வித்தை மாயவைத்த பின் அதன்பேரிலுள்ள அவாவின்படி இடந்தராதுயிருக்கும் முனியாரோ அவர் பிறப்பின் அந்தத்தையும், அதன் மடிவையும் கண்டபின் மறுபிறப்புக்கு ஆளாகமாட்டார்.

4. அஞ்ஞாய ஸப்பானி நிவேதனானி / அனிகாமயங் அஞ்ஞகாம் தேஸங்
ஸவேமுனி வீதகேதோ அகித்தோ / நாயூ ஹெத்தி பாரகதோ
ஹேஹோதி

மனமானது எந்தெந்த இடங்களில் தங்குகிறதென உற்றறிந்து அது பற்றின பற்றிற்கு சற்றேனும் இடந்தராது மௌனியாயிருக்கும் முனியாரோ அவர் பொருளாசையும் பேராசையும் அற்று மனம்பற்றின பற்றிற்கு இடந்தராது அக்கரைச் சேர்ந்தவராவர்.

5. ஸப்பாபிபுங் ஸப்பவிதுங் ஸுமேதங் / ஸப்போஸு தம்மேஸு அநுபலித்தங்
ஸப்பங் ஜஹங் தன்ஹக்கயே விமுத்தங் / தஞ்சாபி திஹிராமுனிங்வேத யந்தி.

சகோதிரர்களில் ஒருவர் சகல பாபகன்மங்களை வென்றும், சகலமுமுணர்ந்தும், நற்பார்வையினின்றும், குற்றமற்றும், அவாவை ஒழித்தும் இருப்பாராகில் அவரையே முனி என்றழைக்கலாம்.

6. ஆஞ்ஞாபலங் நீலவிதூப்பண்ணங் / ஸமா ஹிதங் ஜானரதங் ஸதீமங்
ஸங்காப முத்தங் ஸகிலங் அனாஸவங் / தஞ்சாபி திஹிரா முனிங் வேத யந்தி.

சகோதிரர்களில் ஒருவருக்கு பகுத்தறியும் சக்தியும் அறிவு மிகுதியும் இருக்குமாயின் அறமும், பரிசுத்த நடையும், தியானத்தில் ஆனந்தித்தும், ஜாக்கிரதையுடனும் பாஸபந்தங்களற்றும், கடுமெயற்றும் காமமற்றும் இருப்பர். அவரையே முனி என்று அழைக்கலாம்.

7. ஏகங் சாந்தங் முனிங் அப்பமத்தங் / நிந்தா பஸ்ஸாஸு அவதே மானங்

ஸீஹங் வஸ்தேஸு அஸந்தஸந்தங் / வாங்வ ஜாலம்ஹி அஸஜ்ஜமானங்
பதுமங் தோயேவ அலிப்பமானங் / நேதார மணஞ்ஞ மனஞ்ஞஞ்ய்வ
தஞ்சா பிஹிரா முனிங்வேதயந்தி.

ஏகாந்தமாயும், வைராக்கியமாயும், புகழ்ச்சிக்கும், இகழ்ச்சிக்கும் இடந்தராமலும், சத்தத்திற்கு பயப்படாத சிம்மம்போலும், வலையிலகப்படா காற்றுபோலும், ஜலத்தில் படாத தாமரைபோலும் ஏனைய சகோதிரர்கள் இவருக்குப் போதிக்காது இவர் ஏனைய சகோதிரர்களுக்கு ஆசானுமா யிருப்பாராயின் அவரையே முனி என்றழைக்கலாம்.

8. யோகா ஹணே தம்போரிவாபிஜாயதி / யஸ்மிங் பரவேடா பரியந்தங் வதந்தி
தங்வதராக ஸுஸமாஹி இந்திரியங் / தஞ்சாபி திஹிரா முனிங்வேத யந்தி.

சகோதிரர்களில் யாவரேனும் அசையா கம்பம்போல் உறுதியான சித்தமும் நேர்மையான வாக்கையுடையவும், காமமற்றும், புலன்கள் ஒடுக்கமுள்ளவராய் இருப்பரேல் அவரையே முனி என்றழைக்கலாம்.

9. யோவே டிதத்தோ ஸரஸ்வ உத்ஜி கங் / ஜிகுச்சத்தி கம்மேஹி பாய கேஹி
வபஸ் ஸமானோ விஸமஸ்ஸ மஞ்ச / தஞ்சாபி திஹிரா முனிங்வேத யந்தி.

சகோதிரர்களில் யாவரேனும் நேரான நூலேணிபோலொத்த சித்தமும், பாபகன்மத்தினின்று விலகியும், எது நீதி எது அநீதியென தன்னிற்றானே பகுத்தறியவுங் கூடியவராய் இருப்பரேல் அவரையே முனி என்றழைக்கலாம்.

10. யோஸஞ்ஞ தத்தோ நகரோதி பாபங் / தாரோ சமஜ்ஜோச முனிய தத்தோ
அரோஸநெய்யுங்ஸோனரோ ஸேதிகந்தி / தஞ்சாபி திஹிரா முனிங்வேதயந்தி.

சகோதிரர்களில் யாவரேனும் தன்னடக்கமும், குமரபருவமுள்ளவராகி தன்னிச்சையை வென்றவராகவும், ஏனையோர்களால் கோபமூட்டப்படாதும் தான் ஏனையோரை கோபமூட்டாமலும் இருப்பரேல் அவரையே முனி என்றழைக்கலாம்.

11. யதக்கதோ மஜ்ஜதோ ஸுஸ தோவா / பிண்டங் விபேத பரதத்துப ஜீவி
நாளஸ் துதிங் ரோபி நிபச்சவாதி / தஞ்சாபி திஹிரா முனிங்வேதயந்தி

சகோதிரர்களில் யாவரேனும் ஏனையோரால் அளித்ததை புசித்து பிச்சாபாத்திரத்தில் அன்னம் நிறைந்திருந்தாலும் குறைந்திருந்தாலும் அதனைக் கவனியாதும், அன்னமிட்டவர்களை புகழாதும் இகழாதும் கொடுத்ததை உண்டு ஆனந்தத்திலிருப்பரேல் அவரையே முனி என்றழைக்கலாம்.

12. முனிங்காந்தங் விரதங் மேதுனஸமாயோ / ஜோயப்பனே உபது வஜ்ஜதே
கௌசிமதப்ப மாதாவிரதங் விப்பமுத்தங் / தஞ்சாபி திஹிரா முனிங்வேதயந்தி

சகோதிரர்களில் ஒருவர் விபசாரஞ் செய்யாதும், குமரபருவத்தில் பாசபந்த வலையில் சிக்காதும், டம்பத்தினின்று விலகியும், துறந்தவராகியும் இருப்பரேல் அவரையே முனி என்றழைக்கலாம்.

13. அஞ்ஞாய லோகங் பரமத்த தஸ்ஸிங் / ஒகஸ்ஸ முத்தங் அதிகரி யதாதிங்
தஞ்சின்ன கந்தங் அளிதங் அனாஸவங் / தஞ்சாபி திஹிரா முனிங்வேதயந்தி

சகோதிரர்கள் ஒருவர் வாழ்க்கை என்னும் சமுத்திரத்தையும், நதியையும் கடந்து மேலான சத்தியதரிசனம் பெற்று உலகத்தை துறந்தும், சகலபற்றுக்களை அற்றும், ஏகாந்தமாயும் சுகவாரிபோல் இருப்பரேல் அவரையே முனி என்றழைக்கலாம்.

கோபமற்றும், பயமற்றும், டம்பமற்றும் துன்னடையற்றும் சதா ஞானத்தையே பேசவும், சித்தியால் சிந்தை பூரிக்காமலும் ஒருவர் இருப்பரேல் அவரையே முனி என்றழைக்கலாம்.

பற்றற்றும், வஞ்சகமற்றும், பொறாமெயற்றும், விவேகியாயும், நிந்திக்காதும், பின்புறணி கூறாமலும் ஒருவர் இருப்பரேல் அவரையே முனி என்றழைக்கலாம்.

லாபத்தை அடையவேண்டி இச்சைகொண்டு கற்காமலும், பிறர்புகழ்ச்சிக்காக துறவியாகாமலும், கோபாவேசங்கொண்டு அதனால் துறவி ஆகாமலும், இச்சித்த மண்ணோ பெண்ணோ பொன்னோ கிடைக்காவிடில் துறவியாக போகாமலும், தான் எடுத்த தேகம் பிறருக்கே நன்மெய்செய்ய வேண்டுமென்றும், பிறர் துக்கத்தையும் தன் துக்கத்தையும் நிவர்த்திப்பான் வேண்டி ஒருவர் துறவியாவரேல் அவரையே முனி என்றழைக்கலாம்.

சதா விழிப்புள்ளவரும், ஏனையோர்களைவிட தாம் மெத்த பூர்த்தியான ஞானி என்று புகழ்ந்துக்கொள்ளாதவரும், உலகில் இவர் பெரியார் இவர் சிறியார் என தாரதம்மியம் பாராது தன் உள்ளத்திலும் புறம்பிலும் எழும் அவாக்களை தினேதினே நசித்துவருபவருமாய் இருப்பவர் எவரோ அவரையே முனி என்றழைக்கலாம்.

பரிசுத்த சத்தியங்களாம் துக்க சத்யம், சமூதய சத்யம், நிரோதய சத்யம், மார்க்க சத்யம் (துக்கம், துக்கோற்பத்தி, துக்க நிவாரணம், துக்கநிவாரண மார்க்கம்) இவைகளில் இடைவிடா சாதமுடையவராகியும்; நித்திறை, சோம்பல், மந்தம் இவைகளை ஜெயித்தவராகியும், அசதியுடன் வாழாமலும், மமதையில் சுகித்திராமலும் இருப்பவரெவரோ அவரையே முனி என்றழைக்கலாம்.

பொய்ப்பாதையில் செல்லாமலும், ரூபங்களின்மேல் அவாக் கொள்ளாமலும், மேலான பதவியை நாடியும், கொடுமெயற்றும், தான் பழகிய பொருட்களின் பேரில் ஆசைவையாதும், புதிய பொருட்களின்பேரில் மனம் நாடாமலும், பெரியோர்களால் விலக்கப்பட்டதும், அறிவற்றவர்களால் புகழத்தக்கதுமான பொருட்களின்மேல் அவாக்கொண்டு அலையாமலும் அவாக்களுக்கு சற்றேனும் இடந்தராது இருப்பவரெவரோ அவரையே முனி என்றழைக்கலாம்.

அந்த அவா யாதெனில்:- அதே ஓர் பெருக்க வெள்ளம். அதே ஒரு பெருத்த தூண்டுகோல், பேரவா, கிலேசம், மோகமென்னும் சதுப்புநிலம், நாமரூபத்தின்மேல் அவாவற்றவரும் சகலவிதமான கெட்ட திருஷ்டியினின்று விலகியவரும், எந்தெந்த காலங்களில் எவ்வெவ்விதமான கெட்ட எண்ணங்கள் தோன்றுகின்றதோ அவ்வவ்விதமான கெட்ட எண்ணங்களை போக்குவதற்கான நல் எண்ணங்களை விருத்திசெய்தும், எந்தெந்த காலங்களில் எவ்வெவ்விதமான அவாக்கள் எழுகின்றதோ அந்தந்த காலங்களில் எந்தெந்த அவாக்களை எவ்வெவ்விதமாக எந்தெந்த தியானங்களால் அறுக்கமுடியுமோ அந்த தியானத்தில் நின்று தியானித்தும், எந்தெந்த புண்ணிய ஞானங்கள் எந்தெந்த காலங்களில் தோன்றுகின்றதோ அந்தந்த காலங்களில் அந்தந்த ஞானங்களை விருத்திசெய்தும், எந்தெந்த காலங்களில் எவ்வெவ்விதமான ஜீவர்களுக்கு எவ்வெவ்விதமான போதனைகளை எவ்வெவ்விதமாக போதிக்கவேணுமோ அவ்வவ்விதமாக போதித்தும், சகல ஜீவர்களினின்று உதிக்கும் பலவிதமான அவாக்களென்னும் அம்பை பலவிதபுண்ணிய வழிகளாலும், நீதிமார்க்கத்தாலும் தினேதினே போதித்து தான் எவ்விதமாய் அவாக்களென்னும் அம்பைப் பிடுங்கிவிட்டபின் ஆனந்தமடைந்தனரோ அதே ஆனந்தத்தை ஜீவர்கள் அடையும் வரையில் ஜீவர்களுக்கு இடைவிடாது போதித்துவருபவர் எவரோ அவரையே முனி என்றழைக்கலாம்.

ஓ! சகோதிரர்களே! தகாதகாலங்களில் வெளியே செல்லாமலும் குறித்த நேரத்தில் பிச்சாபாத்திரத்தைக் கரத்திலேந்தி கிராமங்களுக்குச் சென்றும், பிச்சை வாங்குங்கால் இவர்கள் ஏழை இவர்கள் தனவான் என நினையாது சமமனதுடனும், பிச்சாபாத்திரத்தைக் கரத்தில் ஏந்தி செல்லுங்கால் இந்த இல்லத்தில் நமக்கு நல்வுணவு கிடைக்கும் இந்த இல்லத்தில் நல்வுணவு கிடைக்காதென்னும் அபிப்பிராயத்துடன் செல்லாமலும், சாவகர்களாம் குடும்பிகள் அன்புடன் அளித்த உணவை பிச்சாபாத்திரத்தில் வாங்கியபின் திரும்புங்கால் இன்னின்ன இல்லத்தில் இவ்விவ்வகைத்தான பதார்த்தங்கள் இவ்விவ்வதமான குடும்பிகளால் அளிக்கப்பட்டனவென நினையாது நடக்கும்போதே மூன்று அடி தூரத்தில் தலைகுனிந்து ஒரேபார்வையுடனும் ஒரேமனதுடனுஞ் சென்று சேர்ந்தபின் இவ்வுணவோ இரும்புத்தூளை ஒத்தது இத்தகைய உணவோ பசி என்னும் நோய்க்கு மருந்து என சிந்தித்துக்கொண்டும் புசித்தபின் ஒரு தனிமெயான இடத்தில் சென்று தான் வருங்கால் மனம் எந்தெந்த இடத்தில் தவறிசென்றதோ அவைகளை தியானத்தில் சிந்தித்து மறுபடியும் அவ்வகைத்தான பார்வையில் மனதை செலுத்தாதிருக்கும்படி திருத்தியபின் தன்னிற்றானே விழிப்புடன் தியானசமாதியிலிருப்பவரெவரோ அவரையே முனி என்றழைக்கலாம்.

(சாவகர்களாம்) குடும்பிகளாவது (உபாஸகர்களாம்) புத்ததன்ம சங்கத்தை பாதுகாப்பவர்களாவது (தாயகர்களாம்) இல்லறத்தினின்று துறவறத்தை நாடி வருவோரை அன்புடன் ஆதரித்து பிச்சாபாத்திரமும் சீவரமுமளிப்பவர் களாவது (அனகாரிகாகளாம்) விவாகம் செய்யாது இல்லறத்திலிருந்தே தன்மத்தைப் போதிப்பவர்களாவது வியாபாரிகளாவது மற்றும் யாவரேனும் அருகில் அணுகுவரேல் அவர்களுக்கு பரிசுத்ததன்மத்தைப் போதித்தும் அவர்களில் எழும் அபரிசுத்தமான பாபகன்மங்களை விலக்கும் வழிகளை போதித்தும் யாவர்பேரிலும் தீங்கு நினையாது மழையானது ஏழை என்றும், தனவான் என்றும், சுகதேகி என்றும், பிணியாளனென்றும், ஆணென்றும், பெண்ணென்றும் வித்தியாசம் பாராது பெய்வதுபோல் சகலருக்கும் ஒரே விதமாய் தன்மத்தைப் போதித்து அன்பை வளர்த்து வருபவர் எவரோ அவரையே முனி என்றழைக்கலாம்.

ததாகதர் போதித்துள்ள சதுர்சத்தியத்தை இடைவிடாது சிந்தித்தும், பழக்கத்திற்குக் கொண்டுவந்தும், அதன் உள்ளடங்கிய அரிய அஷ்டாங்க மார்க்கம், பஞ்சஸ்கந்தம், 40 வித சமதாபாவனா, 12 நிதானங்கள் இவைகளின் விசாரணையிலும் பழக்கத்திலும் தினேதினே விருத்தியான பின் ராஹ, துவேஷ, மோஹம் இவைகளினின்று விடுபட்டும் புசிக்க அன்னமும், படுக்க மஹாசயனமும், உட்கார உயரமான இடமும், தங்க மடமும், சீவரத்தைத் துவைக்கத் தண்ணீரும் ஆகிய இவைகளைத் தேடாது தாமரை இலையின்மேல் தண்ணீர் நிற்பதுபோல் தேகசுத்தம், மனோ சுத்தம், வாக்கு சுத்தம் என்னும் இவைகளில் உட்கார்ந்தும், படுத்தும், உண்டும், சதானந்தத்தில் யாதொரு பற்றுமின்றி இருப்பவரெவரோ அவரையே முனி என்றழைக்கலாம் என பகவன் கூறி முடித்தவுடன் பெருமான் பிரசங்கத்தைப் பொறுமையுடனும், அன்புடனும் செவிகுளிரக்கேட்டிருந்த பிரஜைகளும் சங்கத்தோர்களும் பகவனை மும்முறை சுற்றிவந்து பாதம் பணிந்து காம்பீரமான பார்வையையுடைய ததாகதரே மாரனை வென்ற வீரரே சரணம் மஹாமுனியே சரணம் சாக்கைய சிம்ஹமே சரணம். 32 இலட்சணமுடைய சுகதோ சரணம் என பன்முறை ஆனந்தத்துடன் இறைஞ்சி பகவனே! இருளிலிருந்தோருக்கு வெளிச்சத்தைக் காட்டினீர். பாப கன்மத்தில் புரண்டுருண்டு சென்ற எங்களுக்கு புண்யகன்மத்தை விருத்திசெய்ய போதித்தீரென ஆனந்தக்கண்ணீர் விட்டு பகவனிடம் விடைபெற்றுச் சென்றார்கள்.

18. தந்தையின் இரண்டாமுறை தரிசனகாதை

அக்கால் மகதநாட்டில் சுத்தோதயச்சக்கிரவர்த்தி என்றும், மண்முகவாகு என்றும் பெயர் பெற்றதலைத்தார்வேந்தர் தேகமெலிவை உணர்ந்த அமைச்சர்கள் தனதேகபுத்திரராகும் சித்தார்த்தருக்கறிவிப்பான்வேண்டி வேவுகர்களை அழைத்து சுத்தோதயர் சுக ஈனத்தைவிளக்கி நமது கருணைக்கடலாங் கங்கையாதாரரை அழைத்துவரவேண்டுமென்று ஆக்கியாபித்திருந்தார்கள்.

அவ்வேவுகர்களும் கம்மதம்மாவில் தங்கியிருந்த கமலநாதனைக் கண்டு வணங்கி தேவரீர் தமது தந்தை அதிக சுகயீனத்திலிருக்கின்றார் தாமவ்விடம் வந்து உமது தரிசனந் தரல் வேண்டுமென்று இரைஞ்சினார்கள்.

அவ்வார்த்தையை வினவிய அந்தணர் தாதை அவ்விடம்விட்டெழுந்து அரண்மனையை நோக்கிவருங்கால் வேவுகர்கள் விசுவநாதனைநோக்கி ஐயனே! தாங்கள் கால்நடையில் நடக்கவும் அவற்றை யாங்கள் காணவுங் கூடுமோ கிருபாநிதியே! நம்முடன் வரும் யானையின்மீதேனும், ஒட்டகத்தின்மீதேனும் ஒன்றில் ஏறிக்கொள்ளவேண்டுமென்று வேண்டினார்கள்.

அதனைவினவிய அவலோகிதர் வேவுகர்களை நோக்கி அன்பர்களே! நம்முடன் வரும் யானையின்மீதும் ஒட்டகத்தின்மீதும் உங்களுக்கு வேண்டிய ஆகாரங்களின் பாரமே நிறம்பவிருக்கின்றது. அதனுடன் எம்மையும் நிறப்புவீர்களாயின் அதிகபாரமாகுமன்றோ. அப்பாரந்தாங்கி நடப்பதற்கு யானையும் ஒட்டகமும் சோர்வடையுமன்றோ. அத்தகைய சோர்வுக்கும்

துன்பத்திற்கும் காரணம் யாமன்றோ. அத்தகைய சோர்வையும், துன்பத்தையும் சீவர்களுக்கு அளிக்காது நாமே அநுபவிப்பது நன்றன்றோ என்றார்.

அதனை வினவிய வேவுகர்கள் மெய்சிலிர்த்து தேவாதிதேவா! தலைத்தார்ந் வேந்தனென்னும் சக்கிரவர்த்திப்பீடத்தைத் துறந்தீர் அதுவும் பெரிதல்ல. இரத கஜ துரக பதாதிகளென்னும் நான்குவகை சேனைகளையுந் துறந்தீர் அதுவும் பெரிதல்ல. அரிய மனைவியாம் அசோதரையைத் துறந்தீர் அதுவும் பெரிதல்ல. ஏகபுத்திரனாம் இளமகவைத் துறந்தீர் அதுவும் பெரிதல்ல. எக்காலும் இரதமூர்ந்துசெல்லும் தாமரை பாதமானது முள்ளுங் கல்லும் ஊன்றும் பாதையில் நடப்பதைப்பார்க்கப் பொறுக்கவில்லையே யாது செய்வோமென்று கலங்கினார்கள்.

அன்பர்களே! மனிதன் தனக்கு மெத்த சுகத்தை விரும்பியவிடத்து சொற்ப துக்கமும் பெருந்துக்கமாகவே தோன்றும். சுகத்தை அதிகம் விரும்பாதவிடத்து பெருந்துக்கமும் சொற்பதுக்கமாகவே தோன்றும். சுகத்திற்குந் துக்கத்திற்குங் காரணம் நாமும் நம்முடையச்செயலுமாகவே இருக்கின்றோம்.

சுகதேகிகளாக உலாவச் செய்துக்கொள்ளுகிறவர்களும் நாமே, பிணியின் உபத்திரவங்களால் துக்க தேகிகளாக உலாவுகிறவர்களும் நாமே.

உலகத்தில் பகையைப் பெருக்கிக்கொள்ளுகிறவர்களும் நாமே, சாந்தத்தை நிறப்பிக்கொள்ளுகிறவர்களும் நாமே.

அதிக லாபத்தைப் பெருக்கிக்கொள்ளுகிறவர்களும் நாமே, அதிக நஷ்டத்தை அடைபவர்களும் நாமே.

மறுமெய் தோற்றுவதற்கும் ஆதாரம் நாமே, மறுமெய்த் தோற்றாமல் செய்துக்கொள்ளுவதற்கும் ஆதாரம் நாமே என்று சத்திய தன்மத்தை விளக்கிக்கொண்டே மகதநாட்டை நெருங்கியகாலத்தில் சக்கிரவர்த்தித் திருமகன் வருகையை உணர்ந்த நாட்டுக்குடிகளும், நகரக்குடிகளும், குதூகலித்து வீதிகடோரும் பழயமணல்களைப் பேர்த்தும், புது மணல்களைப் பரப்பியும், வாழைக் கமுகு முதலியவைகளை நாட்டியும், அரசிலைத் தோரணங்களைக் கூட்டியும், அறிவையர்கள் ஆலவட்டம், வெண்சாமரை வீசவும், கற்புடை மாதர் கர்ப்பூரவாலாத்தி ஏந்தியும், கமலபாதன் வருகையை எதிர்பார்த்திருக்குங் கால் எண்குணத்தோனும் வந்து தோன்றினார்.

நமதையன் ஞானகருணாகரமுகங் கண்டவுடன் பொல்லுறவோர், தொல்லுறவோர் யாவரும் நல்லுறவோரெனத்தோன்றி நாதனை யாசிகூறி சாமரை வீசி ஆலார்த்தி யார்த்தி பல்லாண்டுபாடி சாரணர் கதிவேண்டி சிரமீது இருகைகூப்பி ஜெகத்திரட்சகா! ஜெகந்நாதா! ஜெகத்குருவே! எங்களை ஆண்டு ரட்சிக்கவேண்டுமென்று இரைஞ்சி நின்றார்கள்.

மகதநாட்டை அடைந்த மாதவன் சகலருக்கும் அறிவுபெருகுக என்னும் ஆசிகூறி அரண்மனை சேர்ந்தவுடன் அமைச்சர்கள் யாவருமெதிர் நோக்கிவந்து அவலோகிதரை வணங்கி அழைத்துச்சென்று சுத்தோதயச் சக்கிரவர்த்தி படுக்கையறையில் விடுத்தார்கள்.

சக்கிரவர்த்தியாரும் தனக்குள்ளிருந்த வியாதியின் உபத்திரவம் நீங்கி திருமகனை விழித்துப்பார்த்து அருமெய் மைந்தனே என்று அழைக்கலாமோ என்று சிந்தித்தான். மறுபடியும் தன்னைத்தேற்றிக்கொண்டு நாமவருக்கு பிதாவாயினும் நமக்கவர் ஞானப்பிதாவாம் தாதாவாச்சுதே அவரை மைந்தனென்று அழைக்கலாமோ என்று மருண்டான். அவரது முகதேஜசைக் கண்டு ஆனந்தக்கண்ணீரை சொரிந்தான்.

சுத்தோதயச் சக்கிரவர்த்தியின் இத்தியாதி எண்ணங்களின் உதயங் களையும், ஓடுக்கங்களையும் உள்ளுணர்ந்த ஒப்பிலா அப்பன் சுத்தோதயன் அருகில் சென்று ஐயனே! யாது குறை என்று வினவினார்.

சுத்தோதயனும் சித்தார்த்தரைநோக்கி ஐயனே! அரசுக்கு யாதோர் அதிகாரியும் இல்லையே யாது செய்யலாம் என்றான்.

புருஷோத்தமன் புன்னகை கொண்டு ஐயனே! உமக்குமுன் இத்தேசத்தை வல்லமையுடன் ஆண்டுவந்த இட்சுவாகு, வீரவாகு, குலவாகு, கலிவாகென்னுஞ்

சக்கிரவர்த்திகள் யாவரேனும் இத்தேசத்தைப் பார்ப்பதற்காய் வருத்துப்போக்கில் இருக்கின்றார்களோ என்றார்.

அவ்வகையால் அவர்களின் வருத்துப்போக்கை யான்கண்டதுமில்லை கேட்டதுமில்லை என்றான்.

அத்தகைய சுத்தவீரர்களுக்கே இத்தேசத்தின்மீது கவலையில்லா திருக்கவும் உமக்கு மட்டிலும் அக்கவலையுண்டாய காரணமென்னை என்றார்.

ஐயனே! அவர்கள் வம்மிஷ வரிசையில் வாழையடிவாழை தோற்றுவது போல் அரசசந்ததியார் தோற்றிக்கொண்டே வந்தார்கள். என்னுடைய வம்மிஷ வரிசையிலோ தாமும் உலகத்தை வெறுத்து அவலோகிதரானீர். உமது மைந்தன் சிறுவனையும் அவலோகிதனாக்கிவிட்டீர். ஆதலின் இவ்வரசை யாரிடங் கொடுத்துவிடலாமென்று கோறினான்.

அவற்றை வினவிய அருகர் சக்கிரவர்த்தியைநோக்கி ஐயனே! வாழையடிவாழை என்னும் ஓர் தாட்டாந்தங் கூறினீரே அவ்வாழையினது தோட்டமே அழிந்துபோமாயின் மறு வாழைத்தோன்றுமோ என்றார்.

அம்மொழியைக்கேட்ட அரசன் திடுக்கிட்டு தோட்டமே அழிந்து போகுங்கால் வாழையின் தோட்டமும் அழிந்துபோவது இயல்பே என்றான்.

அதுபோலவே இந்த சக்கிரவர்த்திகளின் தோட்டமும் அழிந்து போயதென்று தாங்கள் எண்ணிக்கொள்ளலாகாதோ என்றார்.

ஐயனே! தாமுந்தமது மைந்தனும் இருக்குமளவுஞ் சக்கிரவர்த்திகளின் தோட்டம் அழிந்துபோயதாக யான் எண்ணுவதற்கு ஆதாரமில்லையே என்றான்.

ஐயனே! தோற்றும் பொருட்கள் யாவும் கெடுமென்பதை தெள்ளறத் தெளிந்துகொண்டீரா இல்லையா என்றார்.

தாதா தெரிந்துகொண்டேன் தெரிந்துகொண்டேன் என்று கூறினான்.

நீவிர் தெரிந்துகொண்டது திண்ணமாயின் உமது கோறிக்கையை மறந்துவிடுவதே மகிழ்ச்சியாகும் என்று கூறியவுடன் சுத்தோதயச் சக்கிரவர்த்தியின் பேச்சுமூச்சும் ஒடுங்கி பிரேதமானார்.

குடும்பத்தரசர்கள் யாவரும் வந்து கூச்சலிட்டழுது கண்கலங்கி பிரேதத்தை சுடலைக்கு எடுத்துச்சென்று தகனத்திற்கு ஆரம்பிக்கும்போது அசோதரையும், இராகுலரும் அம்மடத்தைச்சேர்ந்த சங்கத்தவர்களும், பந்துமித்திரர்களும் சூழ்ந்து நின்றார்கள்.

தகனக்காட்சியைக் கண்டுநின்ற ததாகதர் சுத்தோதய மறுமெய் பிறப்பறுமோ அறாவோவென்று உள்ளத்துணர்ந்து அறுமென்னுந் தோற்ற உணர்ச்சியால் ஆனந்தமுற்று மலைமகள் அசோதரையும் மற்றுமுள்ளோருங் காண தகனகுண்டத்தை சுற்றிச்சுற்றி தனது ஏக சடையுடை துலங்க இவ்வுரு ஆணோ பெண்ணோ என்று கலங்க சுடலையில் நடனமாடினார்.

நம்பெருமான் நடனங்கண்ட யாவருந் தங்கள் தங்கள் துக்கங்கள் யாவையும் போக்கி ஆனந்த சுகிகளாய் அவரவர்கள் இல்லஞ்சேர்ந்தார்கள்.

கருணாகரக்கடவுள் கமலபாதமானது சுடலைப் புழுதியில் நடமாடவும், நடனமிடவுங்கண்ட நல்லுறவோரும், மற்ற அரசர்களும் அரசனது ஆனந்த நடனத்திற் சுகமகிழ்ந்து சிலர் நடராசா நடராசாவென்றும், சுத்தோதய அரசபுத்திரர் சுடலையாடி என்றும் கொண்டாடி அவரவர்கள் இல்லஞ் சேர்ந்தவர்கள் நீங்கலாக மற்றுமுள்ள சத்திய சங்கத்தோர் சங்க நிறையோனை இராஜகிரக வேணு வியாரத்திற்கு அழைத்துச் சென்று சகலரும் பூசித்து குருமணி பீடத்தில் வீற்றிருக்கச் செய்து வேண சங்கைகளை விசாரிக்க ஆரம்பித்தார்கள்.

வீரசோழியம்

பூண்ட பறையறைய பூதமருள, நீண்டசடையானாடுமே,
நீண்டசடையானாடுமென்ப, மாண்டசாயன் மலைமகட் காணவே காணவே.
பாடகஞ்சேர் காலொருபாற் பைம்பொற் கழலொருபாற் தேன்றுளி,
நீடு குழலொருபால் நீண்டசடை ஒருபால் நீடியபாந்தளொருபான் - மேகலைசேர்ந்,
தாடுதுகிலொருபா லவ்வுருவாண்பெண்ணென்றறிவார்யாரே.

சுடலைப்பத்து

விண்ணவர் கோன்காண வேந்தன் விழிதிரந்தான்,
பண்ணவனும்பக்கல் அடைந்தான்.
மன்னுகோலாளு மக்களிலை என்றான்,
துன்னுகோல் தோன்றுங் குறை.
ஆயபொருட்கள் கணத்தில் வழிவதைநின்,
சேயுட் பொருதிலையோ சொல்.
சுருதியின்சொல்லுந் தூயோன் துறவுங்,
கருதியோன் கண்ணடைந்தான் காண்.
கண்ணடைந்தான் கண்டார் கவலையுற்றார் சுற்றத்தார்,
கொண்டெடுத்தார் சுட்டெறிக்கக்கோன்.
சுட்டெறிக்குங்காலை சுத்தோதய நிலையை,
உற்றுணர்ந்தார் உள்ளத்தவர்.
மண்முகவாகின்று வாழ்நாட் சுகமறுத்தார்,
விண்ணவர்க்குள் ஒன்றாகுமேல்.
அறுப்பான் பிறவி அடுத்தவுடல் களிப்பால் தொடுத்தார்
திடுத்தாண்டவம் ஈமச்சுடலையாடும் இமையவர்கோன்,
நேமச் செயலறிந்த நேர். கோனாகிவந்து குருவா யறமளிக்குந்,
தானான தாண்டவனற்றாள்.

நிகழ்காலத்திரங்கல்

சுடலைதனிலாடுஞ் சுகநடனங் காணுங்கண், உடலதனை
யாண்பெண்ணறியாத அதிசயமே.

19. சிகாளா விசாரிணைக் காதை

அவற்றுள் சிகாளனென்னுங் குடும்பியொருவன் சுடலையாடியைச் சேவித்து சுத்தோதய புத்திரா! சுப்ரதீபா! சுகுணவிலாசா! சின்மயமுத்ரா! தமதமுதவாக்கினால் அறவுரைகேட்டு அனந்தங்காலமாகிவிட்டபடியால் குடும்பிகளாகிய எங்களுக்கு பாபகர்மங்களைப் போதித்து காத்தல் வேண்டுமென்றிரைஞ்சினான்.

நடராசன் சிகாளனைநோக்கி அன்பனே!

1. உம்மெயடுத்திருக்கும் சீவர்களின்மீது அன்புபாராட்டாது கொலை புரிவது பாவம்.

2. ஒருவன் மனமுவந்துனக்கீயாத பொருளை அபகரிப்பது பாபம்.

3. தன்தாரமிருக்கப் பிறர்தாரமிச்சிப்பது பாவம்.

4. தாம் சொல்லுஞ்சங்கதிகள் யாவும் பொய்யென்றறிந்தும் அவற்றைப் பேசுதல் பாவம்.

இவற்றை ஒவ்வோர் குடும்பிகளும் கண்டறிந்துக்கொள்ளுவதுடன்,

1. பேராசையால் உதிக்கும் பாபங்களைச் செய்யாதிருத்தல்

2. கோபத்தாலுதிக்கும் பாபங்களைச் செய்யாதிருத்தல்

3. பயத்தாலுதிக்கும் பாபங்களைச் செய்யாதிருத்தல்

4. பேதைகுணத்தால் எழுஉம் பாபங்களைச் செய்யாதிருத்தல்

இத்தகைய அவாவாலேனும், கோபத்தாலேனும், பயத்தாலேனும் பேதைகுணத்தாலேனும் தூண்டப்பட்டு சீலத்தை மீறி பாபகர்ம்மத்தைச் செய்வரேல் அவரது கீர்த்தி தேயுபிறைகாலத்து ஒளி குறையுமாபோல் க்ஷீணமடையும்.

தங்கள் மூதாதைகள் சேகரித்துள்ள திரவியங்களின் நஷ்டத்திற்கும், தாங்கள் சேகரித்துள்ள திரவிய நஷ்டத்திற்கும் ஏதுக்களெவை என் பீரேல்:-

1. தாங்களறிவை மயக்கி அன்னத்தை அகற்றும் கள் முதலிய லாகிரி வஸ்துக்களை அருந்துதல் திரவிய நஷ்டத்திற்கு ஓர் மூலயேதுவாம்.

2. யாதோர் தொழில் முயற்சியுமின்றி சோம்பல்கொண்டு வீதியுலாவுதல் திரவிய நஷ்டத்திற்கோர் மூலயேதுவாம்.

3. நடனசங்கீதங் கச்சேரி அகஷிய நடிப்பு முதலிய இடங்களுக்கு மாறாது செல்லுதல் திரவியநஷ்டத்திற்கு ஓர் மூலயேதுவாம்.

4. வித்தியா முயற்சிகளை அசட்டைச்செய்து சூதாட்டத்தில் முயற்சித்திருப்பது திரவிய நஷ்டத்திற்கு ஓர் மூலயேதுவாம்.

5. வஞ்சகம், குடிகெடுப்பு மிகுத்து சோம்பித்திரியும் வேலை கெட்டோரிடம் நேசம்பாராட்டல் திரவிய நஷ்டத்திற்கோர் மூலயேதுவாம்.

6. பெருந்திண்டித் தின்று சதா நித்திறைக்கொண்டு யாதோர் முயற்சியுமின்றி சோம்பலே ஒருருகொண்டு திரிதல் திரவிய நஷ்டத்திற்கோர் மூல ஏதுவாம்.

இவ்வறுவகை பாபமூலங்களுக்குள் (ஒன்றாவது) புத்தியை மயக்குங் கள்ளை அருந்தும் பாவக்கிளைகள் யாதெனில்.-

1. அதி மயக்கத்தால் திரவியத்தை வீணே சிலவுசெய்தல்
2. விரோதசிந்தையைப் பெருக்கி கலகத்தை உண்டுசெய்தல்
3. பலவகை வியாதிகளைத் தேடிக்கொள்ளுதல்
4. கீர்த்தியை நாசமாக்கிக்கொள்ளல்
5. மானயீனங் கெட்டு சூன்யமாதல்
6. விவேக விருத்தி கெட்டு மிருகத்திற்கு ஒப்பாதல்

இவைகளே கள்ளை அருந்துவோர்க்கு உண்டாகும் பாபக்கிளைகள் என்னப்படும்.

(இரண்டாவது) யாதோர் தொழிலுமற்று சோம்பேறியாய் அகால காலங்களில் வீதியுலாவுவதினால் உண்டாகும் பாபக்கிளைகள் யாதெனில்:-

1. ஆபத்தினின்று தேகத்தை விடுதலைச்செய்ய முடியாமலும் ஆதரவற்றவனாகுதல்.
2. அவனது மனைவி மக்களும் ஆபத்திலிருப்போனை விடுதலைசெய்ய முடியாமல் அவர்களும் ஆபத்துக்குள்ளாகுதல்
3. அவனது திரவியங்கள் யாவும் பாதுகாப்பின்றி ஆதரவற்றழிதல்
4. அவனது குணத்திற்கு சகலரும் அஞ்சுதல்
5. அவன் யாதுமறியா பேதையாயிருப்பினும் அவனது பெயரை இழிவுள்ளோர் கூட்டத்தின் பெயருடன் சேர்த்தல்
6. அளவுபடா துக்கத்தையும் உபத்திரவங்களையும் அடைதல்

இவைகளே சோம்பலால் வீதி உலாவுவோர்க்கு உண்டாகும் பாவக்கிளைகள் என்னப்படும்.

(மூன்றாவது) நடனம், பாட்டுக்கச்சேரி முதலியவைகளால் உண்டாகும் பாவக்கிளைகள் யாதெனில் :-

1. எத்தொழிலிருப்பினும் அவற்றை விடுத்து நடனம் எங்கு நடக்கின்றதோ அங்கு செல்லுதல்.
2. பாட்டுகள் எங்கு பாடுகின்றாரோ அங்கு செல்லுதல்
3. களியாட்டு கச்சேரி எங்கு நடக்கின்றதோ அங்கு செல்லுதல்
4. பொய்யும் போரும் நிறைந்த கட்டுக்கதைகள் எங்கு நடக்கின்றதோ அங்கு செல்லுதல்.
5. எங்கு கைத்தாளங் கொட்டுவார்களோ, பறையடிப்பார்களோ அங்கு செல்லுதல்
6. மிருகவேட்டை, பட்சிவேட்டை, மட்சவேட்டை, மல்யுத்தம் எங்கு நடக்கின்றதோ அங்கு செல்லுதல்.

இவைகளே நடன விருப்பத்தாலுண்டாகும் பாபக்கிளைகள் எனப்படும்.

(நான்காவது) குடும்பிகளுக்கு சூதாட்டத்தால் விளையும் பாபக்கிளைகள் யாதென்பீரேல் :-

1. ஒருவன் வெற்றியடைந்து மற்றொருவன் தோல்வியடைவானாயின் வெற்றியடைந்தவன் பேரிற் பெரும்பகை காட்டி வெறுப்பான்.
2. இன்ன மனிதன் நமது திரவியத்தை கெலித்துக் கொண்டானல்லவா என்று தோல்வியடைந்தவன் வியாகூலப்படுவான்.
3. அதிக கஷ்டத்துடன் சேகரித்த திரவியம் நஷ்டமாகிவிட்டதே என வியாகூலமடைவான்.
4. நியாய ஸ்தளங்களுக்குச் சென்று நீதியதிபர்முன் சாட்சி கூறுவானாயின் இவன் சூதாட்டமிகுந்தவனென்றறிந்த அதிபதியும் இவன் வாக்கை மெய்யென்று ஏற்க மாட்டார்.

5. சினேகரும் பந்து மித்திரரும் அவனை வெறுப்பார்கள். சூதாட்டமே மிக்க விருப்புள்ளவனாதலின் விவேகமிகுத்தோர் கூட்டங்களிலும் இவனை சேர்க்க மாட்டார்கள்.

6. சூதாட்டத்தில் மிக்க விருப்புள்ளவனுக்கு இல்லற வாழ்க்கைக்கு ஏதுவாம் ஓர் பெண்ணையுங் கொடுக்க அஞ்சுவார்கள்.

இவைகளே சூதாட்டமிக்கோனுக்கு உண்டாகும் பாவக்கிளைகள் எனப்படும்.

(ஐந்தாவது) சோம்பேறிகளுடன் சேர்ந்து பழகுவதாலுண்டாகும் பாவக்கிளைகள் யாதென்பீரேல் -

1. சூதாட்ட மிகுத்தோர் எங்குளரோ அவர்களிடஞ் சார்தல்.
2. காமிய தூர்த்தர்களுடன் கலந்து திரிதல்.
3. பொய் விருத்தாந்தங்களைப் புலம்பித் திரியுங் கூட்டத்தோருடன் சேர்தல்
4. மதுபானப்பிரியர்களின் கூட்டத்தையே பின்தொடர்ந்து திரிதல்.
5. வஞ்சகமுள்ளோர் கூட்டத்தில் சேர்தல்.
6. துஷ்டதனம் வீண்வழக்கிழைப்பவர் பாற் சேரல்.

இவைகளே யாது தொழிலுமற்ற சோம்பேறிகளுடன் சேர்வதால் உண்டாகும் பாவக்கிளைகள் என்னப்படும்.

ஓர் குடும்பியானவன் குடும்ப விருத்திக்குத் தக்க முயற்சியற்று அஜாக்கிரதைக்கு இடங்கொடுப்பதால் உண்டாகும் பாவக் கிளைகள் யாதென்பீரேல் -

1. ஒருவன் காலையில் எழுந்து கழிக்கவேண்டிய கடன்களை யொழித்து தான் செய்யுந் தொழிலை நோக்காது இன்று அதிகக் குளிராயிருக்கின்றது, வெப்பமாயிருக்கின்றது என்னுமோர் போக்குக்காட்டி செய்தொழிலை விடுப்பானாயின் அன்று கிடைக்கக் கூடிய கூலியுமற்று சேர்த்துள்ள திரவியத்தை சிலவிட்டு திகைப்பான்.

2. இவ்வகை அஜாக்கிரதையால் ஒருநாள், இரண்டுநாள், மூன்று நாள் தங்கி முற்றுங் குடும்பச் செலவைக் கருதானாயின் சேர்த்துள்ள திரவியங்கள் யாவும் செலவழிந்து யாரிடங் கடன் கேட்கலாம் என்று நாணுவான்.

3. தொழிலை நோக்கிச் செல்லாது கடன் கொடுப்போன் எவனோ அவனை நோக்கிச் சென்று அவன் யாதாமோர் ஈடுகொடுத்தாலன்றி கடன் கொடேனென்பானாயின் அவனை முறுமுறுத்து வீடு சேர்வான்.

4. திரவிய கஷ்டத்தை உணர்ந்தும் தொழிலை நோக்காது பசியா யிருக்கின்றது தொழிலுக்குச் செல்லேனென்று மனைவியை நோக்கி ஆசைக்குச் செய்த நகை ஆபத்துக்கு உதவவேண்டுமல்லவா உன் ஆபரணங்களில் ஒன்றைக் கொடுமென்பானாயின் மனைவிக்கும் மனத்தாங்கலுண்டாய் தொழிலுக்குச் செல்லாது துட்டு விரயஞ்செய்தது நீக்கி நகைகளையும் விரையஞ்செய்ய ஆரம்பித்தீர் என்பாளாயின் மனையாட்டியை முறுமுறுத்தும் வெளியேறுவான்.

5. நகைகளை விற்றேனும், வீடுவைத்தேனும் பணங்கொண்டு அன்னம் வட்டித்துப் புசித்தபின் திருப்தியாகப் புசித்து விட்டேன், தொழிலுக்குச் செல்லலாகாதென்று நின்று விடுவானாயின் உள்ள நகைகளும் மற்றும் பொருட்களும் விரயமாகின்றதேயென்று மனைவி முணுமுணுக்க எக்காலுங் கேட்கா முணுப்பால் ஏக்கங்கொண்டு விழிப்பான்.

6. தொழிலின் முயற்சியையும் அதன் விருத்தியையுங் கருதாது பொருட்களை விற்பதும் புசிப்பதுமே முயற்சியாயிருந்து பெண்டுபிள்ளைகளும் வெறுக்க பெற்றோர் உற்றாரும் நிந்திக்க குடும்பத்திற்கே துவேஷியாய் குற்றங்காலிடுவான்.

இவைகளே தனது அஜாக்கிரதையால் செய்தொழிலைவிட்ட பாவக்கிளைகள் என்னப்படும்.

சுடலை நடராஜன் பின்னும் சிகாளனைநோக்கி குடும்பத்தில் துக்க மற்றவாழ்க்கை மிக்க அரிதாகும்.

அதாவது குடும்பிகளுக்குள் மூன்றுவகை நேயர்கள் தோன்றுவார்கள்.

1. ஒருவன் மதிமயங்கக் கள்ளருந்தியிருக்குங்கால் சினேகம் பாராட்டுவான்.

மற்றொருவன் என் அறியநேயனே நற்குணநேயனே என எதிரில் நேசித்து மறைந்தவுடன் நிந்தைகூறி தூஷிப்பான்.

இன்னொருவன் திரவியம் இருக்குமளவும் நேயம் பாராட்டுவான். திரவியமற்றபோது அவனும் விட்டொழிவான்.

2. சூரியன் உதயமாகுமளவும் நித்திறை செய்தல், காமிகளுடன் பழகல், துற்குண மிகுத்தோருடன் சாவகாசஞ்செய்தல், பாம்பைக் கோபத்துடன் கோலாலடிக்க முயலுவோருக்கு ஒப்பானவனிடம் நேசித்தல், மிக்க கோபிகளுடன் சாவகாசஞ் செய்தல், அபகீர்த்தி உள்ளோருடன் பழகுதல் ஆகிய அறுவகை நேயம் பாராட்டுவதால் குடும்பி அதிதுக்கத்திற்கு ஆளாவான்.

3. கட்டுக்கடங்கா சிற்றின்ப நேயர்களுடன் பழகுதல், மதுபானப் பிரியர்களுடன் செல்லுதல், பாட்டுக்கச்சேரிக்காரரை பின்பற்றுதல், பகல்கால நித்திறையை அதி விரும்பல், அகால நேரங்களில் வீணே தெருத்திரிதல், உலோபமே உருவாக நிற்றல் ஆகிய அறுவகைப் பற்றுக்களே குடும்பியை அல்லற்படுத்தி அதிதுக்கத்திற்காளாக்கும்.

4. அவமானத்தை உண்டு செய்யுங் கூட்டத்திற் சேருவோனும், பிறர் விருத்தியைக் கண்டு மனஞ்சகியாதவனும், பாவங்களை விருத்திசெய்வோர் கூட்டத்திற் சேருபவனும், இம்மெயிலநுபவிக்குந் துக்கத்தினும் மறுமெயில் அதி துக்கத்தை அனுபவிப்பான்.

5. சூதாட்டத்தை சிந்திக்காதவனும், சூதாடுவோர் சேர்க்கையில் அணுகாதவனும், மதுபானத்தைக் கையிற்றொடாதவனும், மதுவையருந்து வோர்பால் நெருங்காத்வனும், விபசார எண்ணங் கொள்ளதவனும், விபச்சாரம் புரிவோரை அணுகாதவனும், வஞ்சினம், பொறாமெய், குடிகெடுப்பு முதலிய கீழ்மக்கட்செயலை விரும்பாதவனும், அத்தகைய குணமிகுத்த கீழ்மக்களை அணுகாதவனும், அன்னியர் பொருளை அபகரிக்க எண்ணங்கொள்ளாதவனும், அத்தகையக் களவு மிகுத்தோர்பால் சேராதவனும், சீவர்களை இம்சிக்கா எண்ணமுள்ளவனும், அத்தகைய சீவயிம்சையோரை அணுகாதவனும், இம்மெயில் அதி சுகம் பெறுவதுடன் மறுமெயில் அதிதீவர நிருவாண நிலையை அடைவான்.

6. குடும்பத்தில் குடிகள் மீது சினங்கொள்ளாமலும், சினங்கொள்ளு வோருக்கு இதமொழி கூறலும், பெண்பிள்ளைகளின் போஷணையை விரும்புதலும், பெரியோரை வணங்கி அனுபவங்கேட்டலும், சிறியோர் கலையில் கலைநூல் பயிற்றலும், செய்தொழில் விருத்தியை சிறியோர்க் கூட்டலும், வித்தியாவிருத்தியை உலகில் பரப்பலும், தான் சுகம்பெறுவது போல் ஏனையோர் சுகம் பெறவேண்டுமெனக் கருதுதலும், ஏனைய சீவர்களுக்கு வந்த துன்பம் தனக்கு வந்த துன்பம் போல் கருதி அவற்றை நீக்க முயலுதலும் ஆகிய செயற்கள் யாவும் குடும்பியின் சுக வாதாரங்கள் என்னப்படும்.

7. கள்ளருந்தும் அவாவையும், காமியயிச்சையையும் ஒழித்தவன் எவனோ அவன் குடும்ப துக்கத்தில் அரைபாகம் ஒழிந்தவனாவான்.

8. மேற்கூறியவைகளுடன் அதியவாக்கொண்டு அன்னியர் பொருளை அபகரிக்காதவனும், மாமிஷப்புசிப்பின் இச்சையால் சீவயிம்சை செய்யாதவனும் குடும்பத் துக்கத்தில் முக்கால் பாகம் ஒழிந்தவனாவான்.

9. இவைகளுள் தன்னாவிற் பொய்யெழாமற் காக்கவேண்டியவன் சகல துற்செயல்களையும் மறுக்கும் சத்தியவாளேந்தியுள்ளவனாதலின் குடும்ப துக்கமற்று ஒழிந்தவனாவான்.

10. குடும்பி என்னும் இல்லறத்தோன் தொல்லறம் யாவையுமொழித்து நல்லற நிலை நிற்பானாயின் அவனையே இல்வாழீசனென்றெல்லோரும் புகழ்வார்கள்.

குடும்பியே! கள்ளசிநேகருள் மற்றும் நன்குவகையோருண்டு.

1. அவர்கள் யாரென்பீரேல், ஒரு சிநேகிதன் மிக்க நேயமுடன் கூட்டுறவாடி எவ்விதத்திலும் உமது பொருளை அபகரித்துச் செல்லவேண்டிய விழிப்பிலிருந்து வவ்விச்செல்லுவான்.

2. மற்றொரு சினேகிதன் வார்த்தையில் மட்டிலும் நேயனைப் போல் காட்டி உமக்கு உதவியாயிருப்பேன், உதவியும் புரிவேனெனக்கூறி ஒன்றுக்கும் உதவா சூனியத்திலிருப்பான்.

3. வேறுமோர் சினேகிதன் மிக்க வன்புடையவன்போல் இனிய மொழிகளைக்கூறி கெடுவெண்ணத்தை உள்ளத்திருத்தி அக்கேட்டைச் செய்தற்கு சமயம் பார்த்திருப்பான்.

4. இன்னொருவன் பலவந்தமாகவே நெருங்கி நேயனென்றும், உறவினனென்றுங் கூறி உடனுக்குடன் கெடுக்க ஆரம்பிப்பான்.

இவர்கள் நால்வருள் முதலானவனாகும் பொருளை அபகரிக்குஞ் செயலில் நான்கு வகையாவர்.

1. ஒரு சினேகிதன் உமது பொருளை வாங்கிப்போகவேண்டும் என்று வருவான்.

2. ஒரு சினேகிதன் சிறிய பொருளைக் காட்டி பெரியபொருளைக் கொண்டுபோக வருவான்.

3. ஒரு சினேகிதன் தனக்கு ஆபத்து நேரிடுங்கால் நெருங்கி சினேகித்து வேண்டிய பொருளை கிரகிக்க ஆரம்பிப்பான்.

4. ஒரு சினேகிதன் தன் சுகத்திற்கு வேண்டிய பொருள் கிடைக்கும் வரையில் நேசித்துத்திரிவான்.

இந்நால்வரும் வெருங்கையுடன் உமது பொருளை அபகரித்துச் செல்லும் பொருட்கள்ள நேயராவர்.

வார்த்தையால் வசப்படுத்தி வஞ்சிக்கும் நேயர்கள் நான்கு வகையாயிருப்பார்கள்.

1. சென்ற கால விஷயங்களைப் பேசி அவ்வார்த்தை நயத்தால் வசப்படுத்தி தங்கள் சுயப்பிரயோசனத்தைத் தேடிக்கொள்ளுவார்கள்.

2. வருங்கால விஷயங்களைப் பற்றிப் பேசி அவ்வார்த்தை நயத்தால் தங்கள் சுயப் பிரயோசனத்தைத் தேடிக்கொள்ளுவார்கள்.

3. யாதோர் பிரயோசனமற்ற வார்த்தைகளைப் பேசி அவ்வார்த்தை நயத்தால் தங்கள் சுயப்பிரயோசனத்தைத் தேடிக்கொள்ளுவார்கள்.

4. விவேகிகள் யாதேனுஞ் சத்விஷயங்களைப் புகட்டுவார்களாயின் அவ்வார்த்தைகளைக் கெடுக்கத்தக்க நயவார்த்தைகளைப் புகட்டி தங்கள் சுயப்பிரயோசனத்தைத் தேடிக்கொள்ளுவார்கள்.

உறவாடிக்கெடுக்கும் நேயர் நான்கு வகையாகத் தோன்றுவார்கள்.

1. ஏதேனுமோர் பாவச்செயலை நாடிக்கேட்டால் அதைசெய்யத்தக்க உற்சாகங்களை ஊட்டிக் கெடுதியை உண்டுசெய்துவிடுவார்கள்.

2. நீதிமார்க்க விசாரிணைச் செய்வதற்காக ஓரிடஞ் செல்லுங்கால் அவ்விடம் ஏகவிடாத உபாயங்களையும், அவர்களை விரோதிக்கும் வார்த்தைகளையும் புகட்டிக் கெடுத்துவிடுவார்கள்.

3. எதிரிற் காணுங்கால் மிக்க புகழ்ச்சியாகவே பேசிக்கொண்டு உள்ளுக்குக் கெடுக்கத்தக்க உபாயங்களைத் தேடுவார்கள்.

4. காணாவிடங்களில் அவதூறு பேசிக்கொண்டு உன் கீர்த்திக்கும் பெயருக்கும் இழிவை உண்டுசெய்யத்தக்க எத்தனங்களைத் தேடுவார்கள்.

உனது திரவியத்தை நஷ்டப்படுத்தி சீரழியச்செய்யும் சிநேகிதர்கள் நான்குவகையாகத் தோன்றுவார்கள்.

1. உன்னையடுத்து மதுபானக் கடைக்கழைத்துச் செல்லும் உபாயத்தைத் தேடுவார்கள்.

2. நேரமில்லா நேரங்களாகும் அகாலகாலங்களில் வீதிகளில் அழைத்துச் சென்று வீண்கலகத்திற்கும், விரயத்திற்கும் வழிதேடுவார்கள்.

3. கூத்தாட்டம், பாட்டுக்கச்சேரி, அகஷியம், ஜாலம் இத்தகைய இடங்களுக்கு அழைத்துச் சென்று விரயத்திற்கு உள்ளாக்குவார்கள்.

4. சூதாட்டங்களுக்கும், களியாட்டுகளுக்கும் அழைத்துச்சென்று அதினாலும் விரயத்தை உண்டு செய்வார்கள்.

குடும்பிகளுக்குள்ளாகவே வெருங்கைகையுடன் வந்து மற்றவர்கள் பொருளை அபகரிப்போரும், வீண்வார்த்தைகளைப் பேசிக் குடும்பத்தைக் கலைத்து வைப்பவர்களும், நல்ல வார்த்தைகளைப் பேசிக்கொண்டே குடிகெடுக்க ஆரம்பிப்போர்களும், தங்களைப் போல் கூழுக்கும், கஞ்சிக்கும் அலையாமல் சுகபுசிப்பில் இருக்கின்றார்களே இவர்களைக் கெடுக்கவேண்டு மென்று வழிதேடுகிறவர்களும் உண்டு.

இத்தியாதி குடிகேடர்களையும், வஞ்சகர்களையும் உய்த்தறிந்து அவர்களுடன் சேராமலும், அவர்கள் தங்குமிடங்களிற் செல்லாமலும், அவர்கள் உட்காருமிடங்களில் உட்காராமலும், அவர்கள் நேசத்தைக் கனவிலும், விரும்பாமல் இருக்கவேண்டுமென்று கூறி குடும்பியானவன் அடுத்துப் பழகவேண்டியவர்களையும், நேசிக்க வேண்டியவர்களையும் புகலவாரம்பித்தார்.

குடும்பியே! சிநேகிக்கக் கூடியவர்களுள் நல்லுள்ளத்தோர் நான்கு வகைப்படுவர்.

1. நல்லுள்ள நேயன் பிறர்நயமும், பிறருதவியுங் கருதாது தன்னாலியன்ற உதவி புரிவான்.

2. நல்லுள்ளநேயன் உனக்கு மிக்க திரவியமுள்ள காலத்தில் உன்னுடன் சுகித்ததுபோல் உன்னுடைய திரவியங்கள் யாவும், அற்ற துக்கத்தை அனுபவிக்குங் காலத்தும் உடந்தையாகவே துக்கத்தை அனுபவிப்பான்.

3. நல்லுள்ள நேயன் உன்னை நேசிக்குங்கால் உனது திரவியம் விருத்தி அடையவேண்டிய முயற்சியிற் கூடவே இருந்து விருத்திசெய்து சுகம் பெறுவான்.

4. நல்லுள்ள நேயன் உன்மீது மிக்க அன்பு பாராட்டி உன் நிழல் போல் நிற்பான்.

குடும்பியே! நல்லுள்ளத்தோன் ஒருவன் உனக்கு நான்குவகை உதவியைப் புரிவான்.

1. ஓர்வகை வியாதியினாலோ, புசித்துள்ள பதார்த்தங்களின் மயக்கத்தினாலோ நீ மயங்கி கிடப்பாயாகில் உன்னைக் காப்பாற்றி வீடுசேர்த்தும் உபசரிப்பான்.

2. உனது சொத்துக்களை கள்ளர்களேனும், மற்றவர்களேனும் வந்தபகரிக்காவண்ணம் பாதுகாப்பான்.

3. உனக்கேதோவோர் ஆபத்து நேரிட்டகாலத்தில் கூடவே இருந்து வேண்டிய தைரியத்தைக் கொடுப்பதுடன் அவ்வாபத்தினின்று மீட்கத்தக்க யேதுக்களையுந் தேடுவான்.

4. உனக்கேதேனும் உதவிவேண்டி கேட்பாயாயின் தன்னிட மில்லாவிடினும் பிறரிடத்தேனுங் கொணர்ந்தளித்து காப்பான்.

இத்தகைய நான்குவிதமாகிய உதவி புரிவோர்களாகும் நேயர்களே நல்லுள்ளத்தோர்களாகும்.

குடும்பியே சுகத்திற்குந் துக்கத்திற்கும் உதவியாயிருந்து ஆதரிக்கும் நேயர்கள் நான்குவகையாவர்.

1. உனது அந்தரங்கப் பொருளையேனும், இரகசிய வார்த்தையையேனும் வெளியிடவேண்டாமென்று கூறுவாயாயின் அவற்றை மற்றோரறியாவண்ணம் மிக்க ஜாக்கிரதையிலிருப்பான்.

2. உனக்குள்ள இரகசியச் செயல்களை யாவரிடமுங்கூறாது தன்னிடம் பதித்துக்காப்பான்.

3. தனக்கு யாது துன்பம் நேரிட்டாலும் தனது நேயனைக் கைவிடமாட்டான்.

4. நேயனுக்கோர் துன்பம் நேரிடுமாயின் தனது பிராணனைக் கொடுப்பான்.

இத்தகைய நான்குவகை நேயர்களையே துக்கத்திற்குஞ் சுகத்திற்கும் பொருந்தி ஆதரிக்கக்கூடிய சிநேகிதர்கள் என்பார்கள்.

குடும்பியே உனக்குள்ள செல்வத்தை விருத்திசெய்யும் நல்லெண்ண முள்ள நேயர்கள் நான்குவகையுண்டு.

1. உன்னைப் பாபச்செயல்களில் விழாவண்ணங் பாதுகாப்பான்.

2. தானும் நற்செயல்களையே செய்துகொண்டு உன்னையும் நற்செயலில் உலாவச் செய்வான்.

3. நற்போதனைகளைப் போதிக்குங் கூட்டத்திற்குத் தானுஞ் செல்லுவதுடன் உன்னையும் பலவந்தமாக அழைத்துச் செல்லுவான்.

4. நற்கதி அடையவேண்டிய வழிக்குத் தானு முயற்சிப்பதன்றி உன்னையும் அதில் முயற்சிசெய்யத் தூண்டுவான்.

இத்தகைய நான்குவகை நேயர்களே உள்ள நிதியை விருத்தி செய்வோர்களாவார்.

குடும்பியே நல்லுள்ளத்தோர் நன்குவகையான அன்பினைப் பாராட்டு வார்கள்.

1. நீ பாக்கியவந்தனாயிருக்குங்கால் உன்னுள் அன்புகூர்ந்து ஆனந்தம் அடைவார்கள்.

2. உனது தனவிருத்தியையும் தானியவிருத்தியையுங் கண்டு ஆனந்தம் அடைவார்கள்.

3. வஞ்ச நெஞ்சினர்களை உன்னிடம் சேராவண்ணம் பாதுகாப்பார்கள்.

4. நல்லெண்ணமும், அன்புமிகுத்தோர்களை உன்னிடம் வரவழைத்து உனக்குள்ள அன்புடன் மிக்க அன்புடையவனாகச் செய்வார்கள்.

இத்தகைய அன்பினைப் பாராட்டுவோர் நான்குவகையோர் என்பது இவர்களேயாகும்.

குடும்பிகளுக்குள் மிக்க அன்புமிகுந்த சிகாளா மற்றுங் கேட்டறிவாயாக.

குடும்பிகளுக்குள் தாய்தந்தையர் தங்கள் மக்களை நடத்தவேண்டிய ஒழுக்கங்களே மிக்க மேலானதாகும். குடும்பத்தின் செயலே குலத்தின் குணமெனத் தோன்றுதலால் பெற்றோர் பிள்ளைகளை நடத்துஞ் செயல்களே பேரறிவுக்கு ஆதாரமாகும்.

1. ஆதலின் பெற்றோர்கள் தங்கள் மக்களுக்குப் பெருந்திண்டியூட்டி பேராபரணம்பூட்டி அழகுபாராது மிக்க ஒழுக்க நடையிலும், ஒழுக்க மொழியிலும், ஒழுக்கச் செயலிலும் அழகுபார்த்தல் வேண்டும்.

2. துஷ்டச்செயலும், தூறு வார்த்தையும், நஷ்ட களியாட்டு மிகுத்த பிள்ளைகளுடன் சாவகாசஞ் செய்யவிடாமல் ஒழுக்க மிகுத்தப் பிள்ளைகளிடம் உலாவச்செய்யல்வேண்டும்.

3. பிள்ளைகளின் பார்வையையும், மனதையும் கல்வியின் பேரிலும் கைத்தொழில்களின் பேரிலும் நாட்டமுறச் செய்யல்வேண்டும்.

4. மக்களுக்குப் பருவமறிந்து நோய்பழியற்ற கால்வழியிற் பெண்களைச் சேர்த்துக் குடும்பவிருத்திசெய்து சிறந்த குடும்பத்தானென்ன சீர்படுத்தல் வேண்டும்.

5. தான் சம்பாதிக்கும் சொத்துக்களின் மிகுதியை ஆண்மகவிற்கும் பெண்மகவிற்கும் சரிபாகம் அளித்தல் வேண்டும்.

இத்தகைய ஒழுக்கங்களைந்தும் தாய்தந்தையர் மக்களை சீர்பெறச் செய்யுந் திருத்தங்களாகும்.

குடும்பியே இவற்றுள் ஈன்ற மக்கள் தாய்தந்தையரை என்றும் ஆதரிக்கும்படியான ஒழுக்கங்கள் யாதெனில் -

1. மக்கள் தங்கள் தாய்தந்தைகளை வணங்குதலும், வேண்டிய உபசரிப்புச் செய்தலும், அவர்களை மிக்க சுகத்தில் வைக்கவேண்டியவைகளையுந் தேடல் வேண்டும்.

2. தாய் தந்தையர்களுக்குச் செய்ய வேண்டிய அன்னாபிஷேக நெய் தயிர் போஷணைக் குறைவரவுங் குணக்கோணவின்றியுஞ் செய்துவரல் வேண்டும்.

3. தாய் தந்தையர் பெயர்கள் என்றுங் கெடாது மக்கட்செயல்களைக் கொண்டே மாதாபிதாக்கள் சிறப்படைதல்வேண்டும்.

4. மாதாபிதாக்களின் சொத்துக்குரிய மக்களென்று சகலருங்கூற சத்கருமத்தில் நடத்தல்வேண்டும்.

5. தாய்தந்தையர் உலகத்தில் மறைந்ததினின்று அவர்கள் மீதிருந்த அன்பும் அவர்கள் பெயரும் மாறாமல் அத்திதி கண்டு ஏழைகளுக்கு அன்னதானம் வஸ்திரதானஞ் செய்துவரல்வேண்டும்.

இத்தகைய ஐந்து நற்செய்கைகளும் மைந்தர்கள் தந்தைதாயாருக்குச் செய்யும் ஒழுக்கங்களாகும்.

குடும்பத்தோருக்கு ஆசிரியனாயுள்ளவன் ஐந்து வகை சிறப்பில் மிகுத்தோனாய் இருத்தல்வேண்டும்.

1. பொய் பேசாதவனும் பேராசை இல்லாதவனுமாய் இருத்தல் வேண்டும்.

2. கலைநூற்களையும், கணித நூற்களையும் மிக்க ஆராய்ந்தவனாய் இருப்பதுமன்றி நல்லொழுக்கங்களையே போர்வைபூண்டவனாய் இருத்தல் வேண்டும்.

3. குடும்பிகளுக்குத் தோன்றும் துற்கால நற்காலச் செயல்களை ஆராய்ந்து துற்கருமசெயல்களை அகற்றவும் நற்கருமச் செயல்களைப் பெருக்கவுஞ் செய்யல்வேண்டும்.

4. மக்கள் பருவமாய்ந்து வித்தியா புத்திகளை ஊட்டி வதுவை பருவமாய்ந்து பாலதான பொருத்தத்திற்குத் தக்க மங்கையைப் பொருத்தி தன்மகன்மத்தை நடத்தல் வேண்டும்.

5. இத்தகைய கன்மகுருக்கள் எக்காலுங்குடிகள் மீது கண்ணோக்கம் வைத்து ஞானத்தின் ஒழுக்கமும் சீலத்தின் பெருக்கமுமூற்று வாழ்வு பெறச்செய்யல் வேண்டும்.

இவ் ஐந்துங் குடும்பிகளுக்காய் கன்மகுருக்கள் செய்யவேண்டிய நல்லொழுக்கங்களாகும்.

குடும்பியே இல்லற மாணாக்கர்கள் ஒழுக வேண்டிய ஒழுக்கங்கள் ஐந்து வகைப்படும்.

1. ஆசிரியரை மாணாக்கன் எழுந்து பணிந்து அவருக்கு வேணவுபசரணைச் செய்து அவருக்கு ஆசனம் ஈய்ந்து உட்காரவைத்து பயபக்தியுடன் அவரெதிரில் உட்காரவேண்டும்.

2. அவர் கொடுக்கும் பாடங்களை உறுதியுடன் மனதிற் பதியச் செய்து ஆசிரியர் கேட்கும்போதெல்லாம் விளக்கவேண்டியது.

3. தானே காலந்தவிராது ஆசிரியனை அடுத்து பாடங்கேட்டு அதனளவில் நிற்றல்வேண்டும்.

4. ஆசிரியருக்கு வேண்டியவைகளை உதவிபுரிந்து அவரை ஆதரித்துவரல் வேண்டும்.

5. கற்றவைகளை மேலும் மேலும் விருத்திசெய்து ஆசிரியர் பெயரை எங்கும் புகழ்பெறச் செய்யல் வேண்டும்.

இவ்வைந்துங் குடும்பிமக்கள் ஆசிரியருக்குச் செய்யும் ஒழுக்கங்களும் செயல்களுமாகும்.

குடிம்பியே மனையாளன் தனது மனைவியை நடத்திவரவேண்டிய ஒழுக்கங்கள் ஐந்துவகைப்படும். அவையாவன -

1. மனையாளன் தன்மனைவியை உள்ளன்பினாலும், அரைவணைப் பினாலும் ஆதரிப்பதுடன் பெண்ணென்னும் உருவே பேதமெயென்றுணர்ந்து கற்பினிலையில் நிற்கக்கூடியவழியில் நடாத்திவரல் வேண்டும்.

2. கற்பினிலையின் வழிகளைக்காட்டாது அவள் மனம்போனடம்பச் செயலில் விட்டு வீணே பழிகூறி அருவெறுக்கலாகாது.

3. இஸ்திரிகளுக்குத் தங்கட் கணவர்களே காவலாளிகளாதலின் மிருதுவான மொழியாலும், மேலான குணத்தாலும் பாதுகாத்தல் வேண்டும்.

4. குடும்பி சேகரிக்கும் பொருட்கள் யாவற்றிற்கும் குடித்தனக்காரியே பாதுகாப்புடையவளாதலின் சேகரிக்கும் பொருட்கள் யாவையும் அவளிட மளித்து அவற்றை சிதரவிடாமற் சேர்க்கவும், விருத்திச் செய்யவும் வேண்டிய விதிகளைக் கற்பித்துவரல்வேண்டும்.

5. குடும்பியானவன் தன்சம்பாத்தியத்திற்குத்தக்க ஆடையாபரணங்களை அளித்து வரவுக்குத் தக்க சிலவிலும் கிடைத்தவரையில் போதும் என்னும் திருப்தியிலும் இருக்கவேண்டிய இல்லற தன்மங்களை ஊட்டி பாதுகாக்க வேண்டும்.

இவைகளே கணவனால் மனைவியை நடத்தவேண்டிய ஐந்து வகை ஒழுக்கங்கள் என்னப்படும்.

குடும்பியே, மனைவி தன்மணாளனுடன் நடந்துக் கொள்ளவேண்டிய ஒழுக்கங்கள் ஐந்துவகைப்படும்.

1. மனைவியானவள் தன்கணவன் மனோபீஷ்டப்படி அன்னமுதலியவை வட்டித்து திருப்த்தியுடன் புசிக்கச்செய்து போஷிக்கவேண்டும்.

2. கணவனுக்குரிய பந்துமித்திரர்கள் வருவார்களாயின் ஃவர்களையே தனது பந்துமித்திரர்களெனக் கருதி உபசரிப்புச் செய்து ஆதரித்தல்வேண்டும்.

3. தன் கணவனையே தனக்கு தாதாவாகவும், தன்கணவனையே தனக்குக் காவலாளியாகவும், தன்கணவனே தன்னைக் காக்குங்கர்த்தனாகவும் எண்ணி மறவாவன்பில் நிலைத்தல்வேண்டும்.

4. கணவன் சேகரிக்கும் பொருளை வீண்விரயஞ்செய்யாது பாதுகாத்து விருத்திசெய்து தன் கணவன் பொருள் சேகரிக்குங் காலந்தவரியபோது முன் சேகரித்துள்ளப் பொருளைக் கொண்டு கணவனை கவலையின்றி போஷித்துவரல் வேண்டும்.

5. மனைவியானவன் தன் தேகத்தை சோம்பலுக்கும், அதி நித்திறைக்கும் இடங்கொடாது குடும்பத்தின் தொழிலின் பேரிலும், பொருட்களை சுத்திசெய்து வீட்டை அலங்கரிப்பதின்பேரிலும், கணவனுடைய இதயத்திற்கு ஆனந்தத்தை உண்டு செய்து அன்பை பெருக்குதலின் பேரிலும் சுருசுருப்பா யிருத்தல் வேண்டும்.

இவ்வைந்துவகை ஒழுக்கங்களே மனைவி தன் கணவனைப் போஷிக்கவேண்டியவைகள் என்னப்படும்.

உத்தம குடும்பத்தோன் தனது குடும்பத்தோரை உபசரிக்கும் ஒழுக்கங்கள் ஐந்து வகைப்படும்.

1. குடும்பத்தோர் சுகதுக்கங்களுக்கு வேண வுதவிபுரிந்து ஆதரித்தல் வேண்டும்.

2. குடும்பத்தோர் வருத்துப்போக்கில் அவர்களுக்கு யாதோர் மனவருத்தமுமின்றி அன்புபாராட்டிவரல்வேண்டும்.

3. தன்னைப்போல் தனது குடும்பத்தோரும் சுகசீவிகளாக வாழ்கவேண்டிய பொருளதவிச் செய்து போஷித்தல்வேண்டும்.

4. தனது குடும்பத்தின் ஆண்மக்கள் போஷிப்பற்றிருப்பார்களாயின் அவர்களுக்கு வேண்டிய வித்தியா புத்தியை விருத்திசெய்து சிறப்படையச் செய்யல் வேண்டும்.

இவ்வைந்து ஒழுக்கங்களே உத்தம குடும்பத்தோன் செய்ய வேண்டியவைகளாம்.

உத்தமகுடும்பத்தோனுக்கு உத்தமக் குடும்பிகள் செய்யவேண்டிய ஒழுக்கங்கள் ஐந்து வகைப்படும்.

1. உதவி செய்துவந்த குடும்பத்தோனுக்கு ஏதேனுமோர் குறைவு நேரிடுமாயின் அக்குறைவு தங்களுக்கு நேரிட்டனபோற் கருதி நிறைவு செய்யல்வேண்டும்.

2. உதவி செய்துவந்த குடும்பத்தோன் சொத்துக்கள் விரயமாகுங்கால் அவைகளை விரயமாகவிடாது பாதுகாத்தல்வேண்டும்.

3. உதவி செய்துவருங் குடும்பத்தோன் சொத்துக்கள் மென்மேலும் விருத்தியடையவேண்டிய முயற்சியின்று பாதுகாத்தல் வேண்டும்.

4. உதவிசெய்துவந்த குடும்பத்தோன் சொத்துக்கள் யாவுமழிந்து ஆதுலநிலை அடைவானாயின் குடும்பத்தோர் அவனுக்கு வேண்டிய பொருளுதவிச்செய்து முன்போற் சுகசீவ வாழ்க்கை பெறச் செய்யல்வேண்டும்.

5. உதவி செய்துவந்த குடும்பத்தோன் மரணமடைந்துவிட்டாலும் தேசாந்திரியாயினும் குடும்பத்தோர் ஒன்றுகூடி அவன் பெண்சாதி பிள்ளைகளுக்கு யாதொரு குறைவும் நேரிடாமற் பாதுகாத்து சீர்பெறச் செய்யல்வேண்டும்.

குடும்பியே குடும்பத்தின் வாழ்க்கையுஞ் சுகமும் குணவீகையிலிருக் கின்றது.

நீரொருவருக்கு உபகாரஞ்செய்வீராயின் மற்றவர்கள் உமக்கு உபகாரஞ் செய்வார்கள்.

நீரொருவனுக்கு உபகாரஞ்செய்யாமல் மற்றவர்கள் உபகாரத்தையே கருதுவீராயின் அவன் யீவுள்ளோனோயினும் உமக்கு லோபியாகவே விளங்குவான்.

மயக்கத்துக்கேதுவையும், மனத்திற்றுருவையும் உண்டுசெய்யும் வஸ்துவை மற்றவனுக்கருளுவீராயின் மற்றவனுமுமக்கு அம்மயக்கவஸ்துவை அளித்து மதிமோசம் பெறச் செய்வானன்றி உன் மக்களை ஆதரிக்க மாட்டான்.

நீவிர் சருவசீவர்களின் மீதும் அன்பு பாராட்டுவீராயின் சருவசீவன்களும் உமது மீது அன்பு பாராட்டும்.

சருவசீவர்களின் மீது சினந்தேனும் புசிக்கவேண்டிய அவாவின் மிகுதியிலேனுந் துன்பம் செய்துவருவீராயின் சருவசீவர்களே துன்ப உருகொண்டெதிர் தோன்றும்.

அன்னிய மக்களுக்கு வேண்டிய பொருளளித்து ஆதரிப்பீராயின் அன்னியமக்கள் வேண பொருளளித்து உம்மை ஆதரிப்பார்கள்.

அன்னியர் பொருளை நீவிர் அபகரிக்கும் அவாவிலிருப்பீராயின் உனது பொருளை மற்றவர்கள் அபகரிக்கும் வழியைத் தேடுவார்கள்.

நீவிர் மற்றவர்களை வஞ்சிக்கத்தக்கப் பொய்யைச் சொல்லி பொருள்பரிப்பீராயின் மற்றவர்களும் உமக்குப் பொய்யைச் சொல்லி வஞ்சித்து விடுவார்கள்.

நீவிர் அன்னியர் தாரங்களை தாய் தங்கையற்போற் கருதி ஆதரித்து வருவீராயின் உமது தாரத்தை மற்றவர்களுந் தாய்தங்கையற்போற் கருதி ஆதரிப்பார்கள்.

அன்னியர் தாரங்களை இச்சித்து அவர்கள் குடிக்குத் தீங்கு விளைப்பீராயின் உம்முடைய தாரத்தை மற்றவர்கள் இச்சித்து உன் குடிக்கு தீங்கு விளைவிப்பார்கள்.

குடும்பியானவன் குடும்பவாழ்க்கையில் மிக்க ஜாக்கிரதையிலும், சீலத்திலும், ஒழுகுவானாயின் சகலசுகமும் பெற்று வாழ்க்கையில் சுகமடைவான்.

அஜாக்கிரதையிலும், அசீலத்திலும் ஒழுகுவானாயின் இல்லற சுகமுமற்று துறவற பாக்கியமுமற்று இரண்டுங்கெட்ட நிலையினின்று உன்மத்தனைப் போலேங்கி உண்ண புசிப்புக்கும், உடுக்கக் கந்தைக்குமின்றி பலராலும் இகழப்படுவான்.

குடும்பியே எஜமானன் தன் வேலைக்காரர்களை நடத்தவேண்டிய ஒழுக்கங்கள் ஐந்துவகைப்படும்.

1. எஜமானன் வேலைக்காரர்களுக்குரிய திடத்தையும் வல்லபத்தையுங் கண்டு அவனவனுக்குத் தக்க ஊழியங் கொடுத்து வேலைவாங்க வேண்டும்.

2. ஏவலாளன் வயதுக்குத் தக்கவாறு வேலை வாங்குவதுடன் பசியறிந்து உணவளிக்கவேண்டியவர்களுக்கு உணவும், வேலைக்குத் தக்கக் கூலியளிக்க வேண்டியவர்களுக்குக் கூலியுமளித்து ஆதரித்தல் வேண்டும்.

3. ஏவலாளருக்கு ஏதேனும் வியாதி தோன்றுமாயின் அவ்வியாதியை நீக்கத்தக்க அவுடதப்பிரயோகங்களைச் செய்வதுடன் பத்தியப் பரிகாரங் களையும் அதற்குத்தக்க உணவுகளையும் அளித்துப் பாதுகாத்தல் வேண்டும்.

4. ஏவலாளருக்குத் தங்கள் தொழில்களிலேனும், வெளியிலேனும் யாதாமோர் ஆபத்து நேரிடுமாயின் ஏஜமானனே முன்னின்று அவ்வாபத்தை நீக்கல்வேண்டும்.

5. ஏவலாளனை வேலைவாங்குங்காலங்கள் நீங்கலாக அவர்கள் ஓய்ந்திருக்கவேண்டிய காலங்களையும் நியமித்தல் வேண்டும்.

ஆக இவ்வைந்தும் எஜமானிகள் ஏவலாளன் ஏவலாளியை வேலை வாங்க வேண்டிய ஒழுங்குகளாகும்.

குடும்பியே! ஏவலாளர்கள் எஜமானனுக்கு நடந்து கொள்ள வேண்டிய ஒழுக்கங்கள் ஐந்து வகைப்படும்.

1. எஜமானன் படுக்கையறைக்குச் சென்றப்பின் அவனுக்கு வேணபொருட்களை சேகரித்து வைத்துக்கொண்டு எஜமானன் எழுந்திருக்கும் முன் எழுந்து வேண பொருட்களை முடித்துவைத்தல் வேண்டும்.

2. எஜமானன் படுக்கையறைக்கு சென்றப்பின் ஏவலாளர் படுக்கைச் செல்லுவதுடன் எஜமானன் பொருட்கள் யாவும் கள்ளர் கைபடாவண்ணம் காப்பாற்றல் வேண்டும்.

3. எஜமானன் கொடுத்துள்ள வேலைகளை ஏவலாளர் அதி ஊக்கமாகவும், அதி ஜாக்கிரதையாகவுஞ்செய்து எஜமானன் மனதை திருப்த்தி செய்தல் வேண்டும்.

4. எஜமானனால் எந்தெந்த வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்தந்த வேலைகளை சரிவர முடிக்காமல் வேறுவேலைகளைத் தங்கள் மனம்போனவாறு தொடுத்து கெடுக்கலாகாது.

5. எஜமானன் சங்கதிகளையேனும், எஜமானன் வீட்டு சங்கதிகளையேனும் வெளியாருக்குத் தெரிவித்து வீண் கலகங்களுக்கேது செய்யாமல் எஜமானனை சிறப்பித்துவரல் வேண்டும்.

இவ்வைந்துவகை ஒழுக்கங்களே ஏவலாளர் எஜமானனுக்கு நடந்துக் கொள்ள வேண்டிய ஒழுக்கங்களாகும்.

குடும்பியே! குடும்பத்தோருள் சிரமணர்களாம் சமணமுனிவர்களையும் அவர்கள் தங்கியுள்ள வியாரங்களையும் பாதுகாத்து வருபவர்களை உபாசகர்களென்று கூறப்படும். அத்தகைய உபாசகர்கள் பிக்ஷுக்களென்னும் சமணமுனிவர்களிடம் நடந்துக்கொள்ளவேண்டிய ஒழுக்கங்கள் ஐந்து வகைப்படும்.

1. உபாசகர்கள் என்னும் அடியார்கள் சமணமுனிவர்களாம் ஞானகுருக்கள்பால் தங்கள் அன்பை காயமாகிய தேகத்தால் செலுத்தல் வேண்டும்.

2. உபாசகர்களாகிய வடியார்கள் தங்கள் ஞானகுருக்களாகிய சமண முனிவர்கள் பால் தங்கள்அன்பை ஈகை என்னுங் செயலால் செலுத்துதல் வேண்டும்.

3. உபாசகர்களாம் அடியார்கள் சமணமுனிவர்களாம் ஞானகுருக்கள் பால் தங்கள் அன்பை எண்ணமென்னுமனத்தால் செலுத்தல் வேண்டும்.

4. உபாசகர்களாகிய வடியார்கள் தங்கள் ஞானகுருக்களாம் சமண முனிவர்கள் மீது முழு அன்பு பாராட்டி அவர்கள் ஞானசாதனங்களுக்கு யாதாமோரிடையூறுமின்றி பாதுகாப்பதுடன் வேணபுசிப்புமளித்து ஆதரித்து வரல்வேண்டும்.

5. உபாசகர்களாம் அடியார்கள் சமணமுனிவர்களாம் ஞானகுருக்களுக்கு ஞானத்தை விருத்திசெய்யும் உபகாரிகளாகும் ஞானத்தந்தையர்களாதலின் அவர்களுக்கு யாதொரு கவலையும் அணுகவொண்ணாமல் கார்த்து ஞானசாதனத்தை முதிரும்படி செய்யல்வேண்டும்.

இத்தகைய ஐந்து ஒழுக்கங்களே ஞானகுருக்களுக்கு அடியார்கள் நடந்துக்கொள்ளவேண்டியவைகளாகும்.

குடும்பியே! பிக்ஷுக்களாம் சமணமுனிவர்கள் உபாசகர்களாம் அடியார்களுக்குப் போதித்துவரும் ஒழுக்கங்கள் ஐந்துவகைப்படும்.

1. பிக்ஷுக்களாம் சமணமுனிவர்கள் உபாசகர்களாம் அடியார்களுக்கு பாபகன்மமீதென்றும், புண்ணியகன்மமீதென்றும், பாபகன்ம துற்பலன் ஈதென்றும், புண்ணியகன்ம நற்பலன் ஈதென்றும் விளக்கிபோதித்துவரல் வேண்டும்.

2. உபாசகர்களாம் அடியார்களை பாபிகள் கூட்டத்திற் சேரவிடாமலும், பொய்யர்கள் கூட்டத்தில் அணுகவிடாமலும் போதித்து நீதிநெறியமைந்த அன்பர்கள்பால் நெருங்கி இன்னும் அன்பைப் பெருக்கி வாழ்வடையும்படி போதித்தல் வேண்டும்.

3. உபாசகர்களாம் அடியார்கள் மறந்தும் துற்கருமத்தை நாடாது நற்கருமத்திலேயே நிலைக்கச்செய்யல்வேண்டும்.

4. உபாசகர்களாம் அடியார்கள் முன்பு கேட்டிராத தன்மங்கள் யாவையும் ஊட்டி இதயத்திற் சேர்ந்துள்ள களங்கங்களென்னும் அழுக்குகளாம் காமவெகுளி மயக்கங்களை அகற்றும் போதகஞ்செய்யல் வேண்டும்.

5. உபாசகர்களாம் அடியார்கள் எவ்விதத்தும் இல்லறத் தொல்லைகளற்று துறவற விருப்பமுற்று சகலபற்றுக்களையும் அற்று சுகவாரிபெறும் சுருக்கத்தைப் போதித்துவரல் வேண்டும்.

ஆக இவ்வைந்தும் உபாசகர்களாம் அடியார்களுக்கு பிக்ஷுக்களாம் சமணமுனிவர்கள் போதிக்கும் தன்மபோதங்களாகும்.

சருவசீவதயாபரன் இவ்வரிய உபதேசத்தை முடித்தவுடன் குடும்பியாகிய சிகாளன் பின்வருமாறு கூறலாயினன்.

நடவரசே! தங்களது போதனை மிக்க கெம்பீரமானது. மறைந்திருந்த பொருளைவிளக்கிய மாமறையோனே! திகைதப்பி மெலிந்து நிற்போர்க்கு வழிகாட்டிய தேசிகனே! இருட்டறையில் தீபமேற்றி உள்ள பொருளைத் தெள்ளறக் காட்டுவதுபோல் அஞ்ஞானவிருளை அகற்றி மெய்ஞ்ஞானமாம் மெய்ப்பொருளை விளக்கும் மாதவனே! உமதடைக்கலம், உமது தன்மத்தில் அடைக்கலம், உமது சங்கத்தில் அடைக்கலம் என்று கூறி மும்முறை சிரம்வணங்கி எழுந்து சங்கறநிறையோய், இவ்வடியோனையும் உமது சங்கத்திற் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று இறைஞ்சினான் .

அவற்றை வினவிய அவலோகிதர் குடும்பியாகிய சிகாளனைநோக்கி அன்பனே! இன்னுஞ் சிலநாள் நீர் குடும்பத்தினின்று பாசபந்தப்பற்றுக்களின் வாசனைகளையுமகற்றி சங்கத்திற் சேர்ந்துக்கொள்ளுவீராயின் அலையற்ற கடல்போல் சுகவாரி என்னும் நிருவாணத்தைப் பெறுவீரென்று சொல்லிப் போய்விட்டார்.

20. மத்திம பதிபதா காதை

பகவான் சாவித்தி நகரம் ஜீதாவனத்தில் தங்கியுள்ளபோது பிக்ஷு குழாங்களுக்கு போதித்த ஸாஸனமாவது:-

ஓ! சகோதிரர்களே! பேதைமெயிலிருந்து கன்மங்கள் அல்லது செய்கைகள் உண்டாகின்றன. செய்கைகளிலிருந்து உணர்வு உண்டாகின்றது. உணர்ச்சியி லிருந்து அருவுறு உண்டாகின்றது. அருவுருவிலிருந்து வாயில்கள் உண்டாகின்றது. வாயில்களிலிருந்து ஊறு உண்டாகின்றது. ஊறிலிருந்து நுகர்வு உண்டாகின்றது. நுகர்விலிருந்து வேட்கை உண்டாகின்றது. வேட்கையிலிருந்து பற்று உண்டாகின்றது. பற்றிலிருந்து கருமத்தொகுதி உண்டாகின்றது. கருமத்தொகுதியிலிருந்து பிறப்பு உண்டாகின்றது. பிறப்பிலிருந்து மூப்பும், மரணமும், வலியும், அழுகையும், துன்பமும், கவலையும், ஏக்கமுமாகிய இவைகள் உண்டாகின்றன. துக்கமென்கின்ற சகல ராச்சியத்திற்கும் இதுதான் உற்பத்தி.

அவிஜ்ஜி பஸ்ச்சா ஸங்கார
ஸங்காரா " விஜ்ஞானா
விஜ்ஞானா " நாமரூபா
நாமரூபா " ஸலாயதன
ஸலாயதனா " பஸ்ஸோ
பஸ்ஸோ " வேதனா
வேதனா " தன்ஹா
தன்ஹா " உபாதானா
உபாதானா " பவோ
பவோ " ஜாட்தி
ஜாட்தி " ஜெயா மரணா;

ஸோகா, பரிதேவா; துக்கா, தோம்னாஸா; உபாயஸா, சாம்பாந்தே.

ஓ! சகோதிரர்களே! அவித்தை பேதைமெயை முற்றுந்துறப்பதால் செய்கைகள் போக்கப்படுகின்றது. செய்கைகளைப் போக்குவதனால் உணர்ச்சி போக்கப்படுகின்றன. உணர்ச்சியைப் போக்குவதனால் அருவுரு போக்கப்படுகின்றன. அருவுருவைப் போக்குவதனால் வாயில்போக்கப் படுகின்றன. வாயில் போக்கப்படுவதனால் ஸ்பரிஸம் போக்கப்படுகின்றது.

ஸ்பரிஸத்தைப் போக்குவதனால் நுகர்ச்சி போக்கப்படுகின்றது. நுகர்ச்சியைப் போக்குவதனால் வேட்கை போக்கப்படுகின்றது. வேட்கையைப் போக்குவதனால் பற்று போக்கப்படுகின்றது. பற்றைப்போக்குவதனால் கருமத்தொகுதி போக்கப்படுகின்றது. கருமத் தொகுதியை போக்குவதனால் தோற்றம் போக்கப்படுகின்றது. தோற்றத்தை போக்குவதனால் பிறப்பு போக்கப்படுகின்றது. பிறப்பைப் போக்குவதனால் மூப்பும், மரணமும், வலியும் அழுகையும், துன்பமும், கவலையும், ஏக்கமும் போக்கப்படுகின்றன. துக்கமென்கிற இராச்சியத்திற் கெல்லாம் இதுதான் நிவர்த்தி.

அவிஜ்ஜ நிரோதா ஸங்காரா
ஸங்காரா " விஜ்ஞானா
விஜ்ஞானா " நாமரூபா
நாமரூபா " ஸலாயதனா
ஸலாயதனா " பஸ்ஸோ
பஸ்ஸோ " வேதனா
வேதனா " தன்ஹா
தன்ஹா " உபாதானா
உபாதானா " பவோ
பவோ " ஜாட்தி
ஜாட்தி " ஜெயா, மரணா;
ஸோகா, பரிதேவா; துக்கா, தோம்னாஸா; உபாயஸா, சாம்பாந்தே.

ஓ! சகோதிரர்களே! பேதைமெய், செய்கை, உணர்ச்சி, அருவுரு, வாயில், ஊறு, நுகர்ச்சி, வேட்கை, பற்று, கருமத்தொகுதி, தோற்றம், பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு முதலிய வினைப்பயன் என்று சொல்லப்படுகிற இப்பன்னிரண்டு நிதானங்களுக்குள் ஒரு நிதானத்திற்கும், மற்றொரு நிதானத்திற்கும் உள்ள காரண காரிய பாகுபாடுகளை அறிந்துக்கொண்டால் இரண்டாம் மூன்றாம் தூய்மையான சத்தியங்களாகிய துக்கோற்பத்தி, துக்கநிவாரணங்களைப்பற்றி யாவும் தெரியவரும்.

ஓ! சகோதிரர்களே! ஜீவர்கள் யாவரும் பஞ்சஸ்கந்தங்களின் சேர்க்கையால் உண்டாகி வருகின்றனர். இந்தஸ்கந்தங்களாகிய ரூபம், வேதனை, ஸஞ்ஞா, ஸங்காரா, விஜ்ஞானம், (உருவு, நுகர்ச்சி, குறி, பாவனை, அறிவு) யாவும் நிலையில்லாதவை. ரூபமானது நுரையைப்போல் தோன்றி மறையும். வேதனை நீர்க்குமிழியைப் போன்றது. ஸஞ்ஞா கானலை ஒத்தது. ஸங்காரா வாழைப்போல் வெட்டவெட்ட தோன்றியும் நிலையில்லாதது. விஞ்ஞானமோ ஜாலத் தோற்றம் போன்றது.

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரன் மரணமடையும்போது அவனைச்சேர்ந்த பஞ்சஸ்கந்தங்களும் அவைகளது பழைய சேர்க்கையினின்று பிரிக்கப்படுகின்றன.

ஸ்கந்தங்கள் இவ்விதமாக பிரிக்கப்பட்டிருக்கும் ஸ்திதியிலே அவன் வாழ்ந்திருந்தகாலத்தில் செய்துவந்த (குஸலா அகுஸலா) நற்கருமம் துற்கருமங்களாகிய கருமங்கள் யாவும் விஜ்ஞானஸ்கந்தத்தில் விதைபோல் கட்டுப்பட்டிருந்து அந்த விஜ்ஞானஸ்கந்தத்தை தமக்குத் தகுந்த பிறப்பில் ஏனைய நான்குவித ஸ்கந்தங்களோடு சேர்ந்து மறுபிறப்பை உண்டு செய்கின்றன. இவ்வகைத்தான கரு சேர்க்கையே மறுபிறப்பின் மூலம் ஒரு தீபத்திலிருந்து பல தீபங்கள் எவ்விதமாய் ஏற்றப்படுமோ அவ்வாறே ஒரு பிறப்பிலிருந்து பல பிறப்புக்கள் ஏற்படும். ஆகையால் சகோதிரர்களே! இப்பிறப்பினின்று தப்பி நிப்பாணம் அடைவதற்கு வழி மத்திய பாதையாம். அஃதே அரிய அஷ்டாங்கமார்க்கம். அதாவது சம்யக்திருஷ்டி, சம்யக் ஸங்கல்ப, சம்யக் வசன, சம்யக்கர்மந்தா, சம்யக் அஜீவா, சம்யக் வாயமோ சம்யக் ஸ்மிருதி, சம்யக் சமாதி (இதுதான் நற்காட்சி, நல் அமைதி) என்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! இவ்வரிய அஷ்டாங்க மார்க்கத்தின்படி ஒழுகிவரும் சகோதிரர்கள் செய்யவேண்டிய யோகங்கள் 40 வகைப்படும்.

அதாவது:- 40-வித சமதாபாவனா :

கசினா 10, அசுப 10, அநூஸதி 10, பிம்மாவிஹாரா 4, அறப 4, ஆஹேயேபடீகுலாசஞ்ஞா 1, ஸநூதாது வாவே டானங் 1, மொத்தம் = 40

கசினா - 10 : பதவீ கசினா, அப்போ கசினா, தேஜோ கசினா, வாயோ கசினா, நீலா கசினா, பீதா கசினா, லோஹிதா கசினா, ஒடத கசினா, ஆலோகா கசினா, ஆகாசா கசினா.

அசுபா - 10 : உதுமாதகங், வியிநிலாகங், உட்யோகங், விசித்தகங், வியிகாய்தகங், வெக்கிடகங், ஹடாவிஹிதகங், மோஹிதகங், புழுவகங், அட்திகங்.

அனுஸடி : புத்தாநூஸடி, தம்மா நூஸடி, ஸங்கா நூஸடி, சீலா நூஸடி, சாகங் நூஸடி, தேவதா நூஸடி, உபாஸமா நூஸடி, மரணா அநூஸடி, காயகாத நூஸடி, அனபானா நூஸடி.

பிம்மவிஹாரா - 4. : மித்தா, கருணா, முதிதா, உபேக்கா.

அறபா - 4. : அகாஸசஞ்சாயதனா, விஞ்ஞானாஸன்யாயதனங், ஆகேஸஞ்ஞாயதனங், நீவசஞ்ஞாயதனங்.

ஆஹேயேட்டீலோசஞ்ஞா - 1. ஸதூதாதுவாவேடானங் - 1.

கசினா - 10 : பதவி கசினா. அப்பு கசினா, தேய்வு கசினா, வாயு கசினா, கருநீல நிற கசினா, மஞ்சள்நிற கசினா, செந்நிற கசினா, வெண்ணிற கசினா, வெளி கசினா, ஆகாச கசினா.

அசுபா - 10 : ஊதலிட்ட பிணம், நீலவர்ணமான பிணம், அழுகின பிணம், சின்னாபின்னப்பட்ட பிணம், கொந்தினதும் கடிக்கப்பட்டதுமான பிணம், சிதறிகிடக்கும் பிணம், அடிக்கப்பட்டு சிதறிகிடக்கும் பிணம், இரத்தம் சிந்திக்கொண்டிருக்கும் பிணம், புழுக்கள் நிறைந்திருக்கும் பிணம், எலும்புக்கூடு பிணம் ஆகிய இவைகள் 10-வித அசுபங்கள்.

அநூஸடி - 10 : பகவனைப்பற்றி, தன்மத்தைப்பற்றி, சங்கத்தைப்பற்றி, சீலங்களைப்பற்றி, நிஷ்பக்ஷபாதத்தைப்பற்றி, தெய்வ நிலையைப்பற்றி, மரணத்தைப்பற்றி, தேகத்தைப்பற்றி, மூச்சை உள்ளுக்கிழுப்பதும் வெளிக்கு விடுவதைப்பற்றி, சாந்தத்தைப்பற்றி தியானித்தலே 10-வகை அநூஸடிகள்.

பிம்மாவிஹாரா - 4. : அன்பு, சிநேகம், ஆனந்தம், விருப்பு வெறுப்பின்மை, இவைகள் நான்கும் பிம்மாவிகாரமென்னப்படும்.

அறப - 4. : அளவற்ற ஆகாஸ ராஜ்யம், அளவற்ற சித்த ராஜ்யம், நேசமற்ற ராஜ்யம், திருஷ்டியும் திருஷ்டியற்ற ராஜ்யம்.

ஆகாரம் நல்லவை கெட்டவையென நினையாத தியானம் - 1.

பூதங்களைப்பற்றிய தியானம் - 1.

ஓ! சகோதிரர்களே! பதவி கசினா அல்லது பிருதிவியின் தொடர்பைப்பற்றி தியானித்தல் எப்படி என்பீரேல்:- சகோதிரன் ஒருவன் உலகப் பொருட்களின்பேரில் அவாக்கொண்டு அந்த அவாவை விலக்க சக்தியற்றவனாய் இருப்பானாகில் இந்த பதவி கசினங்களைப்பற்றி தியானித்தல் வேண்டும். எப்படியெனில்:- ஒரு சகோதிரன் ஒருவசதியானவிடத்திற்குச் சென்று அங்கு தங்கி களி மண் சிறிது கொணர்ந்து அதிலுள்ள கற்களையும் புற்களையும் எடுத்துவிட்டு அக்களிமண்ணால் ஒரு வட்டவடிவமான பீடம் செய்து அதன்பின்னர் தனது தேகத்தை சுத்தஞ்செய்தவனாய் அப்பீடத்தினெதிரில் மனவொடுக்கத்துடன் உட்கார்ந்து அப்பீடத்தை உற்றுநோக்கி இது பிருதிவி கசினா, இது (பதவி கசினா, இது பதவி கசினா) என ஆழ்ந்துதியானித்து சற்று பின்கண்ணை மூடிக்கொண்டு (இது பதவி கசினா) என தியானித்து அதன்பின் ஏனையப் பொருட்களையும் பார்த்து (இது பெருத்த பிருதிவி, இது பெருத்த பிருதிவி) என ஒருமனப்பட்டுவிடுகின்றான்.

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரன் தியான நடையில் வர ஆரம்பிக்கும் போதே ஒரு பாதரட்சையும், ஒரு ஊன்றுகோலை உடைய வனாயிருக்க வேண்டும்.

ஏனெனில் தியானத்திலிருந்து ஏதோ புறப்பொருள் காட்சியில் சற்று நீங்குவானாயின் திரும்ப கால் சுத்தஞ்செய்துக்கொண்டு மறுபடியும் தியானஞ்செய்ய வருவானாகில் மத்தியில் காலங்கழிந்துவிடும். சகோதிரன்

ஒருவன் பாதரட்சை ஏறி சற்று சோர்வடைவானாகில் ஊன்றிக்கொண்டு முன்செய்த தியானத்தை செய்ய ஆரம்பிப்பான். சகோதிரன் ஒருவன் வசதியானவிடத்தில் மனம் கட்டுப்பட்டபோதிலும் தன் இல்லத்திற்கு வந்து அதே தியானத்தை செய்யவேண்டும். அவ்வகை வராவிடின் மற்றொருதரம் அதே வசதியான இடத்திற்குச் சென்று அக்களிமண் வட்டத்தைப்பார்த்து பதவி கசீனாவென உறுதியாக்கியபின் தன் இல்லத்திற்கு வரல் வேண்டும். இவ்விதமாக விடாமுயற்சியாய் யோகஞ்செய்பவனுக்கு உலகப்பொருட்களின் பேரில் அவா உதிக்கா. அவா எங்கு உதிக்கவில்லையோ அப்போதே அவன் முதல் தியானமாம் பதவிஞானமடைந்து அங்கு அவனுக்கு ஆனந்தமும், சந்தோஷமும் தோன்றும்.

ஓ! சகோதிரர்களே! மேற்கூறியபடி எந்தெந்த பொருட்களின் பேரில் அவா உதிக்கின்றதோ அந்தந்த பாகத்திற்குத் தகுந்த தியானம் செய்து அந்தந்த அவாக்களை அறுத்தல் வேண்டும். பிருதிவியின்பேரில் எப்படி தியானித்தோமோ அதேபோல் ஜலம், வாயு, அக்கினி, வர்ணங்கள் இவைகளின் பேரிலும் அந்தந்த சந்தர்ப்பங்களில் தியானித்து அந்தந்த பற்றுக்களை அறச்செய்யவேண்டும்.

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரன் சக்கு விஞ்ஞானா அல்லது கண் சித்தத்தால் ரூபங்களைப் பார்க்கின்றான். ரூபத்தைப்பார்க்க செய்கிற கருவிக்கு கண் என்று பெயர். விஷயமானது ஞானேந்திரியத்துடன் சேர்ந்து கண் சித்தத்தால் மனத்துடன் பார்க்கின்றான். சகோதிரன் ஒருவன் ஒரு தேகத்தைக் கண்டு அவா எழும்புங்கால் அவ்வவாவை எழவிடாது செய்யவேண்டிய யோகங்கள் 10 வகைப்படும். அவையே 10 அசுப பாவனாக்கள்.

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரன் காமத்தை அதிகரிக்கச்செய்யும் தேகத்தில் குறிகளையேனும், காமத்தை எழுப்பும் அழகையேனும் ஒரு தேகத்தின் கைகளின் அழகையேனும், காலின் அழகையேனும் கண்டும் மற்றும் நடித்தல், நகைத்தல், சம்பாஷித்தல் இவைகளாலும் உதிக்கும் அவாவினின்று விலகி ஓ இந்த தேகமானது விழுந்தவுடன் பிணமாக அப்பிணத்தை எப்படி அறுவறுக்கின்றோமோ அதுபோல் தேகம் உயிருடனிருக்கும்போதும் அறுவறுக்கத்தக்க தேகத்தை உடைகளால் அலங்கரித்து வாசனைகளை சேர்த்துவருவதால் அறுவறுப்புத்தோன்றவில்லை. உண்மையில் இத்தேகமானது முந்நூறுக்கு மேற்பட்ட எலும்புக்குவியலை உடைத்தாயதும், நூற்றெண்பது கீல்களால் சேர்க்கப்பட்ட கட்டிடமாகவும், நரம்புகளால் கட்டுண்டு தசைகளால் உள் மூடப்பட்டும், பல துவாரங்களையுடைய ஈரத்தோலால் மேல் மூடப்பட்டும், அத்துவாரங்களினின்று இடைவிடாது ஊற்றுபோல்கசிந்து ஒழுகிக்கொண்டிருக்கின்றன. இத்தேகமோ பூச்சுகளுக்கு ஆகாரமும், பிணிக்குப் பீடமும், சகல வித துக்கங்களுக்கு காரணமுமாயிருக்கின்றது. இத்தேகமானது நவத்துவாரங்களை உடைத்தாய் பழுத்தகட்டியினின்று அழுக்குகளை தள்ளப்படுவதுபோல் அழுக்குகளை துவாரங்கள் மூலமாய் வெளிக்குத் தள்ளிக்கொண்டே இருக்கின்றது. இத்தேகத்தின் தசையின் துவாரங்களிலிருந்து வியர்வை பெருக ஈக்களையும், கிருமிகளையும் அண்டச்செய்கின்றது. இத்தேகத்தை தினகாலம் சுத்தஞ்செய்யாமலும், பற்களை சுத்தஞ்செய்யாமலும் இருப்பானாயின் தேகத்தின் கதி என்ன. இத்தேகத்தையும், பற்களையும் சுத்திசெய்து உடுப்புகளாலும், வாசனைகளாலும், பூக்களாலும், அலங்கரிக்கப்பட்டபோது "நான்" "என்னுடைய" என பெருமெய் பாராட்டுகிறோம். மெய்யாகவே ஜீவர்கள் இவ்வறுவறுக்கத்தக்க தேகத்தினது உள் அந்தரங்க அசுத்தங்களைக் காணாமலே பெறுமெய்கொண்டாடி புருஷர்கள் ஸ்திரீகளையும், ஸ்திரீகள் புருஷர்களையும் இச்சிப்பவர்களாக இருக்கின்றனர். உண்மையில் அவ்வகையால் அவாக்கொள்ள சற்றேனும் ஏது கிடையா இதற்கு உதாரணமாக தேகத்தினின்று உரோமங்களையேனும், நகங்களையேனும் வெட்டி எடுத்துவிட்டபின் அந்தரோமங்களின்பேரிலேனும் நகங்களின் பேரிலேனும் இச்சைவைக்க முடியுமா? தேகத்தில்

சம்பந்தப்பட்டிருந்தபோது அவைகளை பாதுகாத்தலும், நீங்கியபோது அறுவறுப்பதும், தேகத்தினின்று வெளியான நிணம், சளி, சீழ், இரத்தம், மலம், மூத்திரம் இவைகளைப் பார்க்க சகிக்கமுடியுமோ? முடியாது. என தேகவிஷயத்தில் ஜாக்கிரதையுடனிருந்து தியானித்துவருவான். இதேபிரகாரம் மயானத்திற்குச் சென்று அங்கு கிடைக்கும் 10-வித அசுபங்களைக்கண்டு தேகத்தை வெறுத்து வருவான். இவ்வகையாக வெறுத்து வெறுத்து தேகத்தின்பேரில் உண்டான அவாக்களை அறுத்தறுத்து எறிந்து வருவான். இவைகள் யாவும் ஒரு சகோதிரன் 10-வித அசுய யோகத்தால் பலனடைந்தபின் அநூஸடி யோகங்களில் பழகிவருவான்.

தம்மாநூஸடி : துக்கம், துக்கோற்பத்தி, துக்க நிவாரணம், துக்கநிவாரணமார்க்கமாம் நான்குவித வாய்மெகளையும்; நற்காட்சி, நல்லூக்கம், நல் வாய்மெய் நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கடை பிடி நல் அமைதியாம் அரிய அஷ்டாங்கமார்க்கத்தைப்பற்றியும், ஆழ்ந்து தியானிப்பதே தம்மா நூஸடியோகமென்னப்படும்.

சீலாநூஸடி : அதாவது: சீலங்களைப்பற்றி பஞ்சசீலம். கொலை, களவு, பொய், கள், காமம், அஷ்டசீலம். கொலை, களவு, பொய், கள், காமம், அகால போஜனம் இனியவாசனை, கூத்து, மலர், அலங்காரம், மேளம், பாட்டு, வேடிக்கை, வாசனைத் தைலம் இவைகளை தவிர்த்தல்.

தசசீலம் : கொலை, களவு, பொய், கள், காமம், அகாலபோஜனம், இனியவாசனை, கூத்து, மலர், அலங்காரம், மேளம், பாட்டு, வேடிக்கை வாசனைத் தைலம் இவைகளைத் தவிர்த்தல், உயரமானதும், சுகத்தைத்தரும் மெத்தையும் மிக்க எளிய நிலைமையிலிருத்தல் இவைகளைப்பற்றி தியானித்தலே சீலா நூஸடி யோகமென்னப்படும்.

சங்காநூஸடி : அதாவது அறவணவடிகளையும், அவர்கள் சமணர்களாய் உள்ளபோது அநுஷ்டித்துவந்த 96 சீலங்களையும், பிக்ஷுநிலை வாய்த்தபோது அநுஷ்டித்துவந்த 277-சீலங்களையும் அவர்கள் போதிஸத்வர்களாய் உள்ளபோது அநுஷ்டித்துவந்த தஸபாரம் இவைகளைப்பற்றி தியானித்தலே சங்கா நூஸடி யோகமென்னப்படும்.

சாக அநூஸடி - அதாவது தானத்தைப்பற்றி தியானித்தல்
தேவாநூஸடி - தெய்வநிலையைப்பற்றி தியானித்தல்
மரணாநூஸடி - மரணத்தைப்பற்றி தியானித்தல்
காயகதா நூஸடி - தேகத்தைப்பற்றி தியானித்தல்

அதாவது:- நகம், ரோமம், தந்தம், இவைகளைப்பற்றி நிதானித்தலே தேகதா நூஸடி யோகமென்னப்படும்.

அனபனா நூஸடி - மூச்சுகளைப்பற்றி தியானித்தல்.
உபாஸமாநூஸடி - சாந்தத்தைப்பற்றி தியானித்தல்

பிம்மாவிஹார :

(மித்தா) அல்லது மைத்திரீபாவனை. ஒரு சகோதிரன் இத்தியானத்தில் பரிசுத்தமானபிறப்பினை உடைய ஜீவர்கள் யாவும் ஆனந்தத்துடன் வாழ்வனவாகுக. அவை யாவும் துக்கம், வியாதி, துராசை என்னும் இவை களினின்று விடுபட்டனவாகுக என்று தியானித்தல்.

(கருணா) அல்லது கருணை பாவனை. எளியவர்கள் ஆதுல நிலை நீங்கி செல்வமுடையவர்களாய் ஆகுகவென்று தியானித்தல்.

(முதிதா பாவனை) ஜீவர்களுடைய நல்ல அதிர்ஷ்டமானது எப்போதும் நீங்காதிருத்தல் வேண்டும் என்றும், ஒவ்வொருவரும் தாங்கள் அடைந்துள்ள நல்வினைப்பயனை அடைகவென்று தியானித்தல்.

(உபேகஷ பாவனை) சகல உயிர்களையும் சமமாக பாவித்து விருப்பு வெறுப்பின்றி இருந்து தியானித்தல் இன்னான்கு பாவனைகளும் சித்தியான ஒரு துறவியை மஹாபிரம்மா என்றழைப்பர்.

(ஆகாரம் நல்லவை கெட்டவை என நினையாத தியானம்) பூதங்களைப் பற்றிய தியானம் இவைகள் சித்தியானபின் அளவற்ற ஆகாஸராஜ்யம், அளவற்ற சித்த ராஜ்யம், நேசமற்ற ராஜ்யம், திருஷ்டியும் திருஷ்டியுமற்ற ராஜ்யம் அதாவது

ஒரு சகோதிரன் லோப, தோஸ, மோஹங்களிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டு மனத்தோடும், ஆராய்ச்சியோடுங் கூடியிருக்கும் போது சந்தோஷமயமும், ஆனந்தமயமுமானஸ்திதி.

(துதியா தியானம்) மனனமும், ஆராய்ச்சியுமில்லாமல் அவைகள் தடுக்கப்பட்டிருக்கும்போது சாந்தியிலிருந்து உற்பத்தியாகும் ஸந்தோஷமும், ஆனந்த மயமுமான ஸ்திதி.

(ததியாதியானம்) காம வெகுளியற்று சந்தோஷத்தை அடைந்து ஆனந்தமுடையவனாகியும், ஞானமுடையவனாகி அறஹத்துக்கள் அடைவதும், பொறுமெய், அறிவு சந்தோஷங்களோடு கூடியதுமான சுகத்தை தன்னுள் அடைதல்.

(சுருடாதியானம்) முன்பிருந்த சுகதுக்கங்களை அடியோடு விட்டொ ழித்து சுகதுக்க நாசங்களைப்பெற்று சுகமுமில்லாமலும், துக்கமுமில்லாமலும் இருக்கிற ஸமதிருஷ்டியையும், அறிவையுமுடைய பரிபூரணமான ஸ்திதி.

இப்படி படிப்படியாக தியானிக்கும் ஒரு சகோதிரன் ஸமாதியாகிய யோக சித்தியைப் பெறுவானென பகவன் கூறவும் பிக்ஷுகுழாங்கள் ஆனந்தப் பரவசமாய் சற்று போதிருந்து பகவனைப் பன்முறைப் பணிந்து தந்தையே, கருணைக்கடலே, காம்பீரம்பெற்ற ததாகதரே என கூறி ஆனந்தங்கொண்டு இறையும்போது இராஜகிரகத்திலுள்ள சகோதிரர்களுக்குள் பரமார்த்தங்களைப் பற்றி சந்தேகம் தோன்றி உளதென அறிந்த பகவன் பிக்ஷுகுழாங்களுடன் புறப்பட்டு இராஜகிரகம் வந்து சேர்ந்தார். சேர்ந்த அந்தக்ஷணமே பிக்ஷுக்கள் சந்தேகங்களை வினவ பின்வறுமாறு போதிக்கத்தொடங்கினார்.

21. சதுர் பரமார்த்த காதை

நான்குவித பரமார்த்தம்

1. சித்தம் - மனம் 2. சேதசிகம் - மனத்தின் சக்தி 3. ரூபம் - உருவம் 4. நிப்பானம் - நிருவாணம்

ஓ! சகோதிரர்களே! 1. சித்தம் 89 வகைப்படும். 2. சேதசிகம் 52 வகைப்படும் 3. ரூபம் 4 வகைப்படும் 4. நிப்பானம் 5 வகைப்படும்.

சேதசிகம் - 52

(1.) அன்னஸமானா 13

(2.) அகுஸலா 14

(3.) ஸோபனா 25

(1.) அன்னஸமானா - 13:

பஸ்ஸா, விதகா, வேதனா, விசாரா, ஸஞ்ஞா, அதிமோக்கா, சேதனா, வீரியா, ஏகக்கதா, பீதி, ஜீவதா, சந்தா, மனஸிகரா,

(2.) அகுஸலா - 14 :

மோஹா, தோஸா, அஹிரிகா, இஸ, அநொத்தப்பா, மாச்சரியா, உத்தச்ச, குக்குச்சா, லோபா, தீனா, தித்தி, மித்தா, மானா, விஸிகிச்சா,

(3.) ஸோபனா - 25 :

1. ஸோபன சதந்ண சேதசிகம் 19 2. விரதி சேதசிகம் 3

3. அபமான சேதசிகம் 2 4. பிரஞ்ஞா சேதசிகம் 1

மனத்தின் சக்தி 52 வகைப்படும். (1.) நன்மெ அல்லது தீமெயான மனத்தின் சக்தி 13 வகை (2.) தின்மெயான மனத்தின் சக்தி 14 வகை (3.) நன்மெயான மனத்தின் சக்தி 25 வகை

சேதசிகம் - மனத்தின் சக்தி 52.

(1.) அன்னா - சமானா 13 : பஸ்ஸா - ஸ்பரிஸம் நற்பரிசம், துற்பரிசம் வேதனா - ஸ்பரிஸம் நல்உணர்ச்சி, துன்னுணர்ச்சி ஸஞ்ஞ - எண்ணம் நல் எண்ணம், துன் எண்ணம் சேதனா - தூண்டல்,

ஏகக்கதா - அசையா மனம், ஜீவதா - விருத்தியாகும் மனம்,
மனசீகரா - சிந்தனை, விதகா - ஆரமணம்
விஸாரா - மெதுவான, அதிமோக்கா - உறுதி
வீரியா - பலம், பீதி - பிரீதி, சந்தா - ஆசை

ஆக இவ்வொவ்வொன்றும் குஸலம் அதாவது நன்மெயுடன் சேர்ந்தால் நல் பரிசம் என்றும், தின்மெயுடன் சேர்ந்தால் கெட்ட பரிஸம் என்றும் கூறப்படும். தனியாக கஸ்ஸா பரிஸம் பொதுவானதே. ஆனால் நன்மெய் சேர்ந்தவிடத்து நல்லவையாகவும், தின்மெய் சேர்ந்தவிடத்து கெட்டதுமாக மாறுகிறது.

2. அகுஸலா 14. தின்மெயான மனத்தின் சக்தி
மோஹா - மோஹம்; தோஸா - கோபம்;
அஹிரிகா - அசுத்தத்தை இச்சித்தல்; இஸா - பொறாமெய்;
அநொத்தப்பா - வெட்கமின்மெய்; மாச்சரியா - பற்கடிப்பு;
உத்தச்ச - கலைந்த மனம்; குச்குச்சா - ஆவல்;
லோபா - துராசை; தீனா - சோம்பல்;
தித்தி - மந்த புத்தி; மித்தா - அன்பின்மெய்;
மானா - கர்வம்; விசிகிச்சா - சந்தேகம்;
இவைகள் யாவும் தின்மெயான மனத்தின் சக்தி என்னப்படும்
3. ஸோபனா 25 நன்மெயான மனத்தின் சக்தி
1. ஸோபனா சாதாரண சேதசிகம் 19
ஸட்தா - சுத்தமான சக்தி;
சட்தி - மோஹத்தின் விரோதமான சக்தி;
ஹிரி - துற்கிருத்தியத்தைச் செய்ய வெட்கப்படும் சக்தி;
உத்தபா - துற்கிருத்தியத்தைச் செய்யப்படாது தடுக்கும் சக்தி;
அலோபா - துராசையற்ற சக்தி;
அதோஸா - கோபமற்ற சக்தி;
உபேக்கா - உபேட்சை சக்தி;
கயாபஸாதி - சுத்தமான காய சக்தி;
சித்தாபஸாதி - சுத்தமான சித்த சக்தி;
காயாமுதிதா - மிருதுவான காய சக்தி;
சித்தாமுதிதா - மிருதுவான சித்த சக்தி;
காயகம்மிஞ்ஞதா - காய கன்ம சக்தி;
சித்தா கம்மிஞ்ஞதா - சித்த கன்ம சக்தி;
காயாபகுஞ்ஞதா - சோர்வடையா காய சக்தி;
சித்தபகுஞ்ஞதா - சோர்வடையா சித்த சக்தி;
காயாஸோட்கதா - ஸ்திரமான காய சக்தி;
சித்தஸோட்கதா - ஸ்திரமான சித்த சக்தி;
2. வீரதிசேதசிகம் 3.
சம்மாவாஸா - நல்வசனம், சம்மாகம்மந்தா - நற்செய்கை, சம்மா அஜீவா - நல்வாழ்க்கை
3. அபமான சேதசிகம் 2.
கருணா - கருணை சக்தி,
முதிதா - ஆனந்த சக்தி
4. பிரஞ்ஞா சேதசிகம் 1.
விவேக சக்தி.

இவைகள் யாவும் அரூப லோகத்தைச் சார்ந்தவை. இனி ரூப லோகத்தைப் பற்றி விளக்குவாம்.

3. ரூபம் 2- வகை

பூதரூபம் - 4 உபதய ரூபம் - 24
பூதரூபம் - 4 :
1. படவிதாது - பிருதுவியின் லட்சணம், 2. தேஜோ தாது - தேயுவின் லட்சணம் 3. அபோதாது - அப்புவின் லட்சணம் 4. வாயோ தாது - வாயுவின் லட்சணம்
உபதய ரூபம் - சுபஸம்பவமானவை
5 - வித ஸபதி.

5-9 சக்கு - கண், ஜீவா - நாவு,
சோடா - செவி, காயா - தேகம்,
கானா - மூக்கு.,
4 - வித கோஸாம்.
10-13 ரூபா - ரூபம், கந்தா - வாசனை,
சட்தா - சத்தம்; ரஸா - ரஸம்
உணர்ச்சியை இங்கு சேர்க்கப்படவில்லை. அது பதவி, தேய்வு, வாய்வுடன் சேர்ந்தது.
2 - வித குறி
14 - 15 இந்தி - பெண், புரிஸா - ஆண்
16,17,18 ஹிதயவாது இருதயம், ஜீவிதா - ஜீவன், ஆஹாரா - உணவு.
மேற்கூறிய 18-ம் சேர்ந்தவைக்கு (நிப்பன்ன ரூப) மென்னப்படும். இவை ஒருவன் கன்மத்தால் உண்டாக்கிக் கொண்டவை.
19 ஆகாசர் - ஆகாசம்
20 காயா விஞ்ஞாதி - சைகை
21 வசி விஞ்ஞாதி - பேச்சு
22 ரூபஸ்ஸ-லஹுதா - மிதக்குஞ் செயல்
23 ரூபஸ்ஸ-முதிதா - நெகிழ்ச்சி
24 ரூபஸ்ஸ - கம்மன்யதா - வளையத்தக்க செயல்
25 உபாஸயா - நிப்பன்ன ரூபத்தை அதிகரிக்கச்செய்யும் சக்தி அல்லது கர்ப்ப உற்பத்திக்குக்கூடப் போகிற சத்து.
26 சந்ததி - பிறக்கும்போது உதிக்கும் சத்து
27 ஜரதா - மூப்புக்குக் கொண்டுவந்து தளரச்செய்யும் சத்து
28 அநிஸ்ஸதா - இறப்பைத்தரும் சத்து
இவை பத்தும் அனிப்பன்னா வென்னப்படும்.

4. நிப்பானம் 5

1. அபநீதா நிப்பானம், 2. அநுமெத்தா நிப்பானம், 3. சுஞ்ஞதா நிப்பானம் 4. சவுபாதிசேசா நிப்பானம் 5. அநுபாதிசேசா நிப்பானம்

1. யாவும் துக்கம், துக்கம் என சாதித்து அதனால் அடைவதே அபநீதா நிப்பானம்.

2. யாவும் அநித்யம், அநித்யம் என சாதித்து அதனால் அடைவதே அநுமெத்தா நிப்பானம்.

3. யாவும் அநாத்மா, அநாத்மாவென சாதித்து அதனால் அடைவதே சுஞ்ஞதா நிப்பானம்.

4. சகல பற்றுக்களையும் அறுத்துவிட்டு பஞ்சஸ்கந்தங்களராதிருப்பதே சவுபாதிசேச நிப்பானம்

5. பஞ்சஸ்கந்தங்களும் அற்று அதாவது இனி ஸ்கந்தங்களுடன் சேர்ந்து பிறவாதிருப்பதே அநுபாதிசேசா நிப்பானமென்னப்படும்.

ஓ! சகோதிரர்களே! கந்தங்கள் இருவகைப்படும்.
1. ரூபகந்தா 2. நாமகந்தா
1. ரூபம் உருவத்தைச் சேர்ந்தவை யாவிற்கும் ரூபகந்தமென்றும்,
2. வேதனா கந்தா, சங்காரா கந்தா,
சஞ்ஞா கந்தா, விஞ்ஞான கந்தா
இவை நான்கும் சேர்ந்து நாமகந்த மென்னப்படும்.

இப்பஞ்சஸ்கந்தங்களின் சேர்க்கையே ஜீவன் மரணமடையுங்கால் இவ்வைந்தும் அழிந்து ஒருவனது கன்மமானது புதிய கந்தங்களுடன் சேர்ந்து பிறக்கின்றான். ஆகையால் கன்மத்தை ஒழித்தாலன்றி மறுபிறப்பை ஒழிக்கமுடியாது என்னும் உண்மெய்ப்பொருளை அவர்களுக்கு நன்கு தெளிவுர போதித்தார். அவைகளை செவிகுளிரக்கேட்ட அவர்கள் மனக்களிம்பு நீக்கியபின்னரும் அவர்களுக்கு கன்மத்தைப்பற்றி சில சந்தேகங்களிருக்கத் தெரிந்து பகவன் கன்மத்தைப்பற்றி போதிக்க ஆரம்பித்தார்.

22. கன்ம காதை

ஓ! சகோதிரர்களே! கன்மங்கள் மூன்று விதமாக செய்யப்படுகின்றன. 1. லோபம் அல்லது பேராசையால் செய்யப்படும் கன்மங்கள் 2. பகையால் செய்யப்படும் கன்மங்கள் 3. செறுக்கால் செய்யப்படும் கன்மங்கள்

ஓ! சகோதிரர்களே! ஒருவன் பேராசையால் செய்யப்படுகின்ற கன்மங்களானது பேராசையிலிருந்து உதிக்கின்றன. அவைகள் பேராசையால் சம்பவிக்கின்றன. பேராசையால் உண்டுசெய்துக்கொள்கின்றன. எங்கெங்கு இவனிருக்கின்றானோ அங்கங்கு அவனது கன்மங்கள் பக்குவப்படுகின்றன. எங்கு பக்குவப்படுகின்றனவோ அங்கு அவைகளின் பலன்களை அநுபவிக்கின்றான்.

ஒருவன் பகையால் செய்யப்படுகின்ற கன்மங்களானது பகையிலிருந்து உதிக்கின்றன, அவைகள் பகையால் சம்பவிக்கின்றன, பகையால் உண்டு செய்துக்கொள்கின்றன, எங்கெங்கு இவனிருக்கின்றானோ அங்கங்கு அவனது கன்மங்கள் பக்குவப்படுகின்றன. எங்கு பக்குவப்படுகின்றனவோ அங்கு அவைகளின் பலன்களை அநுபவிக்கின்றான்.

ஒருவன் செறுக்கால் செய்யப்படுகின்ற கன்மங்களானது செறுக்கிலிருந்து உதிக்கின்றன, அவைகள் செறுக்கால் சம்பவிக்கின்றன, செறுக்கால் உண்டு செய்துக்கொள்கின்றன, எங்கெங்கு இவனிருக்கின்றானோ அங்கங்கு அவனது கன்மங்கள் பக்குவப்படுகின்றன. எங்கு பக்குவப்படுகின்றனவோ அங்கு அவைகளின் பலன்களை அநுபவிக்கின்றான்.

ஓ! சகோதிரர்களே! ஒரு விதையை காற்று உஷ்ணம் இவைகளால் சேதப்படுத்தாதபடிக்கும், அழிக்காதபடிக்கும் இருக்கும்படியான ஒரு செழிப்பான தோட்டத்தில் விதைத்தபின்னர் சரியான காலத்தில் மழை பெய்தால் எவ்விதமாக வளர்ந்து பலனைத்தருமோ அதுபோல பேராசையால் செய்யப்படுகின்ற கன்மங்களானது பேராசையிலிருந்து உதிக்கின்றன, அவைகள் பேராசையால் சம்பவிக்கின்றன, பேராசையால் உண்டுசெய்துக்கொள்கின்றன. எங்கெங்கு இவனிருக்கின்றானோ அங்கங்கு அவன் கன்மங்கள் பக்குவப்பட்டு அங்கங்கு அவைகளின் பலன்களை அநுபவிக்கின்றான்.

பகையால் செய்யப்படுகின்ற கன்மங்களானது பகையால் கன்மங்கள் பக்குவப்பட்டு அங்கு அவைகளின் பலன்களை அநுபவிக்கின்றான். செறுக்கால் செய்யப்படுகின்ற கன்மங்களானது செறுக்கால் கன்மங்கள் பக்குவப்பட்டு அங்கு அவைகளின் பலன்களை அநுபவிக்கின்றான். சகோதிரர்களே! இவ்வகையாக மூன்றுவித கன்மங்கள் செய்யப்படுகின்றன.

இவைகளன்றி வேறு மூன்றுவித கன்மங்கள் செய்யப்படுகின்றன. 1. ஆலோபா அல்லது பேராசையற்று செய்யப்படும் கன்மங்கள். 2. ஆதோசா அல்லது பகையற்று செய்யப்படும் கன்மங்கள். 3. ஆமோஹா அல்லது செறுக்கற்று செய்யப்படும் கன்மங்கள்.

ஓ! சகோதிரர்களே! ஒருவன் பேராசையற்று செய்யப்படுகின்ற கன்மங்களானது பேராசையினின்று உதிக்காதும், பேராசையால் சம்பவிக்காதும், பேராசையே உதிக்கச்செய்யாது. அதாவது பேராசையே அற்றுவிடுகின்றது. பேராசையற்றபோது கன்மங்கள் அற்றுவிடுகின்றன. அக்கன்மங்கள் பனைமரத்தை வேறோடே பெயர்த்துவிட்டால் எப்படி திரும்ப முளையாதோ அதுபோல் பேராசை முற்றும் அற்றவிடத்து கன்மங்களுடன் தோன்ற ஏது கிடையா.

ஒருவன் பகையற்று செய்யப்படுகின்ற கன்மங்களானது பகையினின்று உதிக்காதும், பகையால் சம்பவிக்காதும், பகையே உதிக்கச்செய்யாது. அதாவது பகையே அற்றுவிடுகின்றது. பகையற்றபோது கன்மங்கள் அற்றுவிடுகின்றன. அக்கன்மங்கள் பனைமரத்தை வேறோடே பெயர்த்துவிட்டால் எப்படி திரும்ப முளையாதோ அதுபோல் பகை முற்றும் அற்றவிடத்து கன்மங்களுடன் தோன்ற ஏதுகிடையா.

ஒருவன் செறுக்கற்று செய்யப்படுகின்ற கன்மங்களானது செறுக்கினின்று உதிக்காதும், செறுக்கால் சம்பவிக்காதும், செறுக்கையே உதிக்கச்செய்யாது. அதாவது செறுக்கே அற்றுவிடுகின்றது. செறுக்கற்றபோது கன்மங்கள் அற்றுவிடுகின்றன. அக்கன்மங்கள் பனைமரத்தை வேறோடே பெயர்த்து விட்டால் எப்படி திரும்ப முளையாதோ அதுபோல் செறுக்கு முற்றும் அற்றவிடத்து கன்மங்களுடன் தோன்ற ஏது கிடையா.

ஓ! சகோதிரர்களே! ஒரு விதையை காற்று, உஷ்ணம் இவைகளால் சேதப்படுத்தாதபடிக்கும், அழிக்காதபடிக்குமிருக்கும்படியான ஒரு செழிமையான தோட்டத்தில் விதைத்தபின்னர் அதை ஒருவன் தீயால் சுட்டு சாம்பலாக்கி அதை காற்றிலும், நதியிலும் எறிந்துவிட்டால் விதை முளைத்து பலனைத் தராதோ அதுபோல் பேராசை, பகை, செறுக்கு இம்மூன்றும் அற்றபோது கன்மங்கள் ஒழிந்து எழுதற்கு இடமில்லாதுபோம்.

ஓ! சகோதிரர்களே! இவ்விதமான மூன்றுவிதகன்மங்களை எழவிடாது ஜாக்கிரதையுடன் ஒரு சகோதிரன் இருப்பானாகில் அவன் மறுபடியும் பிறக்க ஏதுவில்லாமற்போம்.

மனிதன் எதை விதைக்கின்றானோ அதை அறுப்பான். அதாவது எவ்வித கன்மங்கள் செய்கின்றானோ அதன்படி அநுபவிப்பான் என ஒரு சகோதிரன் கூறுவானாயின் அது தன்மத்திற்கு ஒவ்வாததும் துக்கத்தை போக்குவதற்கு ஏதுவில்லாமற்போம். ஆனால் யாவனேனும் எதைவிதைக் கின்றோமோ அதன் பலனை அறுப்போம். அதாவது எவ்வித கன்மங்கள் செய்தோமோ அதன் பலனை அநுபவிப்போம் என்பானாயின் அது தன்மத்திற்கேற்றதும் துக்கத்தை போக்குவதற்கு ஏதுவாயிருக்கின்றது.

ஒரு சகோதிரன் செய்யும் கன்மமானது அற்பமாயிருப்பினும் அது அபாயமாகவும், மற்றொரு சகோதிரன் செய்யும் கன்மம் அற்பமாயிருப்பினும் அது அற்பமாகவே முடிவதற்குக் காரணம் யாது?

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரன் தன் தேகவிஷயத்தில் ஜாக்கிரதையற்றவனாகவும், சீலவிஷயத்திலும் தியானவிஷயத்திலும் ஞானவிசாரிணையிலும் ஜாக்கிரதை அற்றவனாயும், ஒரு காரியத்தை முழுதும் நிறைவேற்றாது அரையுங் குறையுமாக முடிப்பவனாகவும், எதெது தீமையை விளைக்கக்கூடியதோ அவைகளில் மிக்க ஊக்கத்துடன் மனதை செலுத்துகின்றவனெவனோ அவன் செய்யும் கன்மமானது அற்பமாக இருக்கினும் அபாயத்திற்கே ஏதுவாக இருக்கும்.

ஓ! சகோதிரர்களே! ஒரு சகோதிரன் தன் தேகவிஷயத்தில் ஜாக்கிரதை யுள்ளவனாகவும், சீலவிஷயத்திலும் தியானவிஷயத்திலும் ஞான விஷயத்திலும் ஜாக்கிரதை உடையவனாகவும், ஒரு காரியத்தை முழுதும் நிறைவேற்று பவனாகவும், எதெது நன்மையை விளைக்கக்கூடியதோ அவைகளில் மிக்க ஊக்கத்துடன் மனதை செலுத்து கின்றவன் எவனோ அவன் செய்யும் கன்மமானது அற்பமாக இருக்கினும் சுகத்திற்கே ஏதுவாக இருக்கும்.

ஓ! சகோதிரர்களே! ஜலம் நிறைந்த ஒரு சிறு பாத்திரத்தில் ஒருபிடி உப்பைக் கலந்துவிடின் அச்சலத்தை அறுந்தமுடியுமா முடியா. ஒருபிடி உப்பை கங்காநதியில் கொட்டி கலக்கிவிடினும் ஜலம் அறுந்தமுடியுமா முடியும்.

ஓ! சகோதிரர்களே! உலகில் ஜீவர்கள் யாவரும் கன்மாம்ஸமாக அவதரித்திருக்கின்றனர். அவர்கள் கன்மத்திற்கு சுதந்தரக்காரராயிருக்கின்றனர், கன்மத்தால் பிறந்திருக்கின்றனர், கன்மத்திற்கு பாத்தியதை உடையவர்களாயிருக் கின்றனர், கன்மத்தால் காப்பாற்றப்படுகின்றனர், ஜீவர்களை உயர்ந்த ஸ்திதிக்கும் தாழ்ந்த ஸ்திதிக்கும் வரச்செய்வதும் கன்மமே.

இவ்வுலகில் ஒருவன் கொலை, வதை, குரூரச் செய்கைகள், அடித்துக் கொல்வது, ஜீவர்கள்மேல் அன்பே வையாது இத்தியாதி கிருத்தியங்களை ஒரு பிறப்பில் செய்து வருவனேல் அவன் மறுபிறப்பில் நீடியகாலம் ஜீவிக்காது சிறிதுகாலம் இருந்து மாள்வான். இவ்வுலகில் ஒருவன் கொலை, வதை, குரூர செய்கைகள், அடித்துக்கொல்லல் இவைகள் யாவுமின்றி கொலை

செய்யாதும், வதைசெய்யாதும், ஜீவர்கள் மேல் அன்பையே ஒரு பிறப்பில் பெறுக்குவனேல் அவன் மறுபிறப்பில் மன ஆனந்தத்துடன் நீடித்து வாழ்வான்.

இவ்வுலகில் ஒருவன் கற்களினாலும், கொம்புகளாலும் அடித்தும் தண்டாயுதங்களையும், வாட்களையும் ஜீவர்கள் மேல் பிரயோகித்து ஒருபிறப்பில் வதைபுரிவனேல் அவன் மறுபிறப்பில் துக்கரமான ஜனனமெடுத்து சதா பிணியாளியாய் காலத்தைக்கழித்து மாள்வான். இவ்வுலகில் ஒருவன் கற்களினாலும், கொம்புகளாலும் ஜீவர்களை அடிக்காதும், தண்டாயுதங்களையும், வாட்களையும் ஜீவர்கள்மேல் ஒரு பிறப்பில் பிரயோகிக்காதிருப்பனேல் அவன் மறுபிறப்பில் சுகரமான ஜனனமெடுத்து வாதையைத் தரும்படியான பிணிகளற்று வாழ்வான்.

இவ்வுலகில் ஒருவன் காமமும், கோபமுமுள்ளவனாகவும், அற்ப வார்த்தைக்கும் ஆறாக் கோபமுள்ளவனாகவும், கடுங்கோபமுள்ளவனாகவும் கன்னெஞ்ச முள்ளவனாகவும், கோபமும் பொறாமெயுமுள்ளவனாகவும், தூர்த்த குணமுள்ளவனாகவும் ஒருபிறப்பில் இருப்பனேல் அவன் மறுபிறப்பில் அவலட்சணமும், அந்தக் கேடுள்ளவனாகவும் பிறந்து வாழ்வான்.

இவ்வுலகில் ஒருவன் காமம், கோபமற்றவனாகவும், அற்ப வார்த்தைக்கும் கோபங்கொள்ளாதவனாகவும் கோபமற்றவனாகவும், கடுங்கோபமற்றவனாகவும், தூர்த்தகுணமற்றவனாகவும் ஒரு பிறப்பில் இருப்பனேல் அவன் மறுபிறப்பில் லட்சணமுடையவனாகப் பிறந்து வாழ்வான்.

இவ்வுலகில் ஒருவன் தனக்குக் கிடைக்கிற சுகம் பிறருக்குப் போகுமென்னும் பயமும், பொறாமெயுள்ளவனாகவும், ஏனைய சகோதிரர்கள் அடையும் பலனையும் கீர்த்தியையும் பற்றி அழுக்காருடையவனாகவும், ஏனைய சகோதிரர்கள் பெறும்பட்டம் பூசனை வழிபாடுகளைப்பற்றி பொறாமெய் அடைந்தவனாகவும், பெருமெய் அடைந்தவர்களை தூஷித்து பயமுறுத்து பவனாகவும், ஒரு பிறப்பில் இருப்பனேல் அவன் மறுபிறப்பில் யாவராலும் மதிக்கப்படாது ஈனஸ்திதியுடையவனாயும் வாழ்க்கையில் நற்கீர்த்தி பெற ஏதுவின்றி மாள்வன். இவ்வுலகில் ஒருவன் தனக்குக் கிடைக்கிற சுகம் பிறருக்குப் போகுமாறும், அன்புடையவனாகவும், பொறாமெயற்றவனாகவும் ஏனைய சகோதிரர்கள் அடையும் பலனையும், கீர்த்தியையும்பற்றி தானும் அவர் களுடன் கூடி ஆனந்திப்பவனாகவும், ஏனைய சகோதிரர்கள் பெறும்பட்டம், பூசனை வழிபாடுகளைப்பற்றி தானும் அவர்களுடன் கலந்து சந்தோஷப் படுபவனாகவும், பெருமெயடைந்தவர்களை புகழ்ந்து ஆசி கூறுபவனாகவும், ஒரு பிறப்பில் இருப்பனேல் அவன் மறுபிறப்பில் பேர்பெற்றவனாகவும், அதிகாரஸ்தனாகவும் பிறந்து வாழ்வான்.

இவ்வுலகில் ஒருவன் பூஜிக்கத்தகுந்தவர்களை பூஜியாமலும், உயர்ந்தஸ்தானம் அடையும் பாத்தியதை உடையார்க்கு ஸ்தானமளிக்காமலும், கீர்த்திபெற சக்த்தியுள்ளவர்களுக்கு கீர்த்தி அளிக்காமலும், போற்றி கௌரவப் படுத்தத் தக்கவர்களுக்கு கௌரவம் செய்யாதும், பெறுமெயடைபவரை பெருமெய் பாராட்டாதும், வணங்கத்தக்கவர்களை வணங்காமலும், மதிக்கத் தகுந்தவர்களை மதிக்காமலும், ஒரு பிறப்பில் இருப்பனேல் அவன் மறுபிறப்பில் தாழ்ந்த ஸ்திதியில் பிறந்து கீழ்மகனென்றும் அறிவிலியாக வாழ்வான்.

இவ்வுலகில் ஒருவன் பூஜிக்கத்தகுந்தவர்களை பூஜித்தும், உயர்ந்த ஸ்தானம் அடையும் பாத்தியதை உடையார்க்கு ஸ்தானமளித்தும், கீர்த்திப்பெற சக்தியுள்ளோர்க்கு கீர்த்தி அளித்தும், போற்றி கௌரவப்படுத்தப்பட்டவர்க்கு கௌரவம் செய்தும், பெறுமெய் உடையோரை பெறுமெய்ப்படுத்தியும், வணங்கத் தக்கவர்களை வணங்கியும், மதிக்கத்தகுந்தவர்களை மதித்தும் இவ்விதமாக ஒரு பிறப்பில் நடந்துவருவனேல் அவன் மறுபிறப்பில் சிரேஷ்டஸ்திதியில் பிறந்து மேன்மகனென்னும் அறிவுள்ளவனாக வாழ்வான்.

இவ்வுலகில் ஒருவன் துறவிகளைக்காணில் அவர்களை அவமதித்தும் எழியோர்களைப்பற்றி மனதிலும் சிந்திக்காதும், திக்கற்றவர்களைப்பற்றி நோக்காமலும், ஜீவர்கள்மேல் அன்பற்றவனுமாகி ஒரு பிறப்பில் இருப்பனேல்

அவன் மறுபிறப்பில் நற்குடும்பத்திற் பிறவாது யாவராலும் இகழப்பட்டு அஞ்ஞான மார்க்கத்தை அவன் மனம் நாடி நிற்கும்.

இவ்வுலகில் ஒருவன் துறவிகளைக்காணில் அவர்களுக்கு அன்னமளித்தும் எழியோர்களுக்கிரங்கி தானம்செய்தும் திக்கற்றவர்களை ஆதரித்தும் ஜீவர்கள் மேல் அன்புவைத்தும் ஒரு பிறப்பில் வருவனேல் அவன் மறுபிறப்பில் சிறந்தகுடும்பத்தில் பிறந்து யாவராலும் போற்றி வாழ்த்துதல் பெறுவதுடன் ஞானமார்க்கத்தை அவன் மனம் நாடி நிற்கும்.

இவ்வுலகில் ஒருவன் பலபிறப்புகளில் தசபாரமிதைகளாம் தானம், சீலம், நிக்கஹமர், பிரஞ்ஞா, வீரியா, ஷாந்தி, சத்யா, அதிஷ்டானா, மைத்ரீ, உபேக்ஷா இவைகளை அநுஷ்டானத்திற்குக்கொண்டுவருவானாகில் ஒரு பிறப்பில் பெருங் குடும்பத்திற் பிறந்து அறஹத்து நிலையை அடைவான்.

1. தானாபாரமிதா 2. சீலாபாரமிதா 3. நிக்கஹமாபாரமிதா 4. பிரஞ்ஞாபாரமிதா 5. வீரியாபாரமிதா 6. ஷாந்திபாரமிதா 7. சத்யாபாரமிதா 8. அதிஷ்டானாபாரமிதா 9. மைத்ரீபாரமிதா 10. உபேக்ஷாபாரமிதா

தானமாவது : அளவுகடந்தது. அதாவது, தன் உயிரைக் கேட்பினும் கொடுத்துவிடக்கூடிய தானம் செய்தல்.

சீலமாவது : மனோவாக்கு காயத்தை சுத்திகரிக்கும் சீலம். அதாவது, நீதியில் நிற்றல்

நிக்கஹமா: லோப, தோஸா, மோஹம் இவைகளற்றும் பரிசுத்த நிலை அடையும் வரையில் பிறர் சுகத்தையே கருதியிருத்தல்.

பிரஞ்ஞா: பரிசுத்த ஞானத்தை விருத்தி செய்தல்

வீரியா: பரிசுத்த நிலையை அடைய விடாமுயற்சியுடனும், தைரியத்துடனும் சிந்தித்துத் தெளிதல்.

ஷாந்தி: தன் புத்திரனைப்போல் சகல உயிர்கள் பேரிலும் அன்பு பாராட்டலும், ஜீவர்கள் செய்யும் குற்றங்களைப் பொருத்து அவர்கள் பேரில் கோபங் கொள்ளாதிருத்தல்.

சத்யா: சத்தியத்தைபேசி சத்தியமாகவே நடந்து சத்தியத்தையே கைப்பற்றல்

அதிஷ்டானா: நன்மார்க்கத்தினின்று சற்றும் மலைபோல் பிறழாதும் முன் தணிந்த அவாக்களை எழவிடாமலுமிருத்தல்.

மைத்ரீ: தாயானவன் தன் ஏகபுத்திரனைக் காப்பாற்றுதல்போல் சகல உயிர்கள் பேரிலும் ஜீவகாருண்யத்தைக் காட்டல்.

உபேக்ஷா: இப்பூமியைக் கொத்தி எவ்வளவு துன்பம் செய்தபோதினும் அது நற்பலனையே தரும் அதுபோல் மித்திரன் அல்லது விராதி இவர்கள் செய்யும் துன்பங்களைக் கவனியாது நன்மெய்களை செய்துவரல் அதாவது, மித்திரனையும் விரோதியையும் சமமாக பாவித்தல் என்று உபதேசித்தார். அதுகேட்ட யாவரும் ஆனந்தமுற்றார்கள்.

23. புக்கஸாதி துறவு பூண்ட காதை

ஒரு குமரபருவமுள்ள புக்கஸாதி என்னும் பெயருடையவன் பகவனைக் காணவேணுமென்றும், பலருடைய நன்மெயின் பொருட்டே துறவடைந்து பலருக்கும் போதித்துவரும் தன்மத்தைக் கேட்கவேண்டுமென்றும், கேட்டபின் உலகைத் துறந்து காம்பீரமான பிக்ஷு சங்கத்தில் சேர்ந்து மேலான பதவியை அடையவேண்டுமென்னும் அவாக்கொண்டு பலவிடங்களில் பகவனைத் தேடி அலைந்து கடைசியாக இராஜமா கிரஹத்துக்கு வந்து சேர்ந்து (பக்கவா) என்னும் குடும்பியின் வீட்டினருகில் சென்று அன்றிரவு தங்க இடந்தர வேண்டுமென இரங்கிகேட்க அக்குடும்பியும் அவனை அழைத்து உணவளித்து தன்வீட்டில் அன்றிரவு தங்கவும் இடம் அளித்தான். அன்று இரவு நடுஜாமத்தில் பகவன் ஓர் அடர்ந்த காட்டில் தங்கி (கருணாபாவனா) கருணை சமாதியிலிருக்குங்கால் ஓர் குமரன் இராஜகிரஹத்தில் வந்து ஒரு குடும்பியின் இல்லத்தில் தங்கி துறவியாக வேணுமென்கிற ஒரேவைராக்கியம் பூண்டிருக்கின்றானெனத் தெரிந்து உடனே சமாதியினின்று எழுந்து புக்கசாதி தங்கியிருக்கும் இல்லத்திற்கு வந்து சேர்ந்தனர். சற்று தாமதித்து புக்கசாதியை

அழைக்க புக்கசாதி பகவனைக்கண்டு வணங்கி ஆச்சரியமுடையவனாகி ஆனந்தத்துடன் அவரருகில் சென்று உட்கார்ந்தான். பகவன் அவனைப்பார்த்து சிறிதுநேரம் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் புக்கசாதி ஆவலுடையவனாகி தன்னை சங்கத்தில் சேர்த்துக்கொள்ளும்படி வேண்டினான். பகவன் போதிக்கத் தொடங்கினார்.

ஓ! சகோதிரர்களே! எதினாலே உலகம் மூடப்பட்டிருக்கிறது? எதினாலே உலகம் பிரகாசிக்கவில்லை? எதினால் உலகம் கறைப்பட்டிருக்கிறது? உலகத்தின் அபாயம் எது?

உலகம் அறியாமையால் மூடப்பட்டிருக்கின்றது. லோபத்தால் உலகம் பிரகாசிக்கவில்லை. அவாவால் உலகம் கறைப்பட்டிருக்கிறது. துன்பமே உலகத்தின் அபாயம். அவாவென்னும் வெள்ளங்கள் பல திக்குகளில் புரண்டோடு கின்றன. அவ்வெள்ளங்களை எதினால் தடுக்கலாம்? தடையாவதெது? வெள்ளங்களை எதனால் முற்றும் நிறுத்திவிடலாம்? யோசனையால் வெள்ளங்களைத் தடுக்கலாம். யோசனையே தடை நிதானத்தால் வெள்ளங்கள் நிறுத்தப்படுகின்றன.

உலகில் ஜீவர்கள் ஏன் துன்பமடைகின்றனர். துன்பத்திற்குக் காரணம் யாது?

அவாவால் ஜீவர்கள் துன்பமடைகின்றனர். அவாவே துன்பத்திற்குக் காரணம்.

அறியாமையால் ஒருவன் அவாவை உதிக்கச்செய்துக்கொள்ளுகிறான். அப்படி செய்வதால் துன்பம் நேர்கின்றது. ஆகையால் அறிவுடையோர் பிறப்பையும், துன்பத்தின் உற்பத்தியையுங் கண்டு அவாவை விருத்தி செய்யாதிருக்கட்டும்.

ஓ! சகோதிரர்களே! கண்ணானது ஒரு ரூபத்தைப்பார்த்து அதில் பிரீதி கொள்ள மனம் அதிகமாக விரும்பத்தொடங்குகிறது. கண்ணானது ஒரு ரூபத்தைப்பார்த்து அதில் பிரீதி கொள்ளாவிடில் மனம் அதிகமாய் வெறுக்கத் தொடங்குகிறது.

கண்ணானது ஒரு ரூபத்தைப்பார்த்து அதில் பிரீதிவையாமலும், வெறுக்காமலிருக்க மனமானது உபேட்சையுடன் இருக்கத்தொடங்குகிறது.

கண் எப்படி மூன்றுவிதமாய் பார்க்கின்றதோ அதுபோலவே காது, மூக்கு, நாவு, தேகத்தின் பலபாகமும் மனம் இவைகளை விரும்புவதும், விரும்பாமலிருப்பதும், விரும்பாமலும், வெறுக்காமலும் இருக்கத் தொடங்குகின்றன.

1. சக்குஞ்சபடீஸா ரூபேஸா உபேஸடி சக்குவிஞ்ஞானங் தேனாங் ஸங்கதிபஸ்ஸோ.
பஸ்ஸோ பஸ்சா வேதனா
வேதனா பஸ்சா தன்ஹா
தன்ஹா பஸ்சா உபாதானா
உபாதானா பஸ்சா பவோ
பவோ பஸ்சா ஜாட்தி
ஜாட்தி பஸ்சா ஜெய
ஜெய, மரணா, பிரிதேவா, துக்கா தோம்னாஸே ஸம்போந்தே.

கண்ணானது ரூபத்தை பார்க்க கண்ணின் விஞ்ஞானத்தால் லோபம், மோஹம் சேர்ந்து ஊறு உண்டாகின்றது.

"ஊறு சார்ந்து நுகர்ச்சியாகும்
நுகர்ச்சி சார்ந்து வேட்கையாகும்
வேட்கை சார்ந்து பற்றாகும்மே
பற்றிற் றோன்றுங் கருமத்தொகுதி
கருமத்தொகுதி காரணமாக
வருமே யேனை வழிமுறை தோற்றம்
தோற்றஞ் சார்பின் மூப்புப் பிணி சாக்கா
டவல மாற்றுக்கவலை கையாறெனத் தவலிறுன்பத்தலைவருமென்ப"

2. தோடென்ஸா பட்டீஸா ரூபேஸ உபேஸிடி தோட விஞ்ஞானங் தேனாங் ஸங்கதிபஸ்ஸோ.

பஸ்ஸோ பஸ்சா வேதனா
ஜெய, மரணா, பிரிதேவா, துக்கா, தோம்னாஸே ஸம்போந்தே

செவியானது சப்தத்தைக் கேட்க காதின் விஞ்ஞானமானது லோப, மோஹங்களுடன் சேர்ந்து ஊறு உண்டாகிறது.

ஊறு சார்ந்து நுகர்ச்சியாகும்
நுகர்ச்சி .... றுன்பந்தலைவருமென்ப

3. காணேன் ஸபட்டீஸா கந்தேஸ உபேஸடி காணா விஞ்ஞானங்
தேனாங் ஸங்கதிபஸ்ஸோ.
பஸ்ஸோ பஸ்சா வேதனா
ஜெய, மரணா .... ஸம்போந்தே

நாவானது உருசிகாண நாவின் விஞ்ஞானமானது லோப மோஹங்களுடன் சேர்ந்து ஊறு உண்டாகிறது.

ஊறு சார்ந்து நுகர்ச்சியாகும்
நுகர்ச்சி ... றுன்பந்தலைவருமென்ப
4. ஜீவேன்ஸா பட்டீஸா ரஸேன்ஸ உபேஸடி ஜீவாவிஞ்ஞானங்தேனாங்
சங்கதி பஸ்ஸோ.
பஸ்ஸோ பஸ்சா வேதனா
ஜெய, மரணா .... ஸம்போந்தே

நாவானது உருசி காண நாவின் விஞ்ஞானமானது லோப மோஹங்களுடன் சேர்ந்து ஊறு உண்டாகிறது.

ஊறு சேர்ந்து நுகர்ச்சியாகும்.
நுகர்ச்சி .... றுன்பந்தலை வருமென்ப
5. காயேன் ஸபட்டீஸா புட்தபேஸா தேகவிஞ்ஞானமானது
லோபமோஹங்களுடன் சேர்ந்து ஊறு உண்டாகிறது.
காயவிஞ்ஞானங் தேனாங் ஸங்கதி பஸ்ஸோ
பஸ்ஸோ பஸ்சா வேதனா
ஜெய, மரணா .... ஸம்போந்தே

தேகத்தின் பலபாகங்கள் பரிசிக்க தேகவிஞ்ஞானமானது லோப மோகங்களுடன் சேர்ந்து ஊறு உண்டாகிறது.

ஊறு சார்ந்து நுகர்ச்சியாகும்
நுகர்ச்சி .... றுன்பந்தலைவருமென்ப
6. மனோஞ்சபட்டீஸா தம்மேஸா உபேஸடி மனோவிஞ்ஞானங் தேனாங்க
ஸங்கதி பஸ்ஸோ.
பஸ்ஸோ பஸ்சா வேதனா
ஜெய, மரணா .... ஸம்போந்தே

மனமானது நினைக்க மனோவிஞ்ஞானமானது லோப மோஹத்துடன் சேர்ந்து ஊறு உண்டாகிறது.

ஊறு சார்ந்து நுகர்ச்சியாகும்
நுகர்ச்சி றுன்பந்தலைவருமென்ப

ஓ! சகோதிரர்களே! அறுவகையான ஆரமணங்களால் மூப்பு மரணம் நேர்கின்றது. மூப்பு மரணம் நேர்வதற்குக் காரணம் பேதைமையே. பேதைமை யல்லது பொய்காட்சியிலிருந்து செய்கைகள் உண்டாகின்றது.

செய்கையிலிருந்து உணர்வு உண்டாகின்றது, உணர்விலிருந்து அருவுரு உண்டாகிறது. அருவுருவிலிருந்து வாயில்கள் உண்டாகின்றன. வாயில் களிலிருந்து ஊறுகள் உண்டாகின்றது. ஊறுகளினின்று நுகர்வு உண்டாகின்றது. நுகர்விலிருந்து வேட்கை உண்டாகிறது. வேட்கையிலிருந்து பற்று உண்டாகிறது. பற்றிலிருந்து பிறப்புக்கு மூலமாம் கருமக்கூட்டம் உண்டாகின்றன. கருமக்கூட்டத்தினின்று மறுபிறப்புண்டாகின்றது. அதினின்று மூப்பு, மரணம், வலியும், அழுகையும் ஆகிய துக்கோற்பவங்கள் உண்டாகின்றன.

ஓ! சகோதிரனே! இந்தச் சக்கரத்தினின்று விடுபடுவது மிக்க அரிது.

ஓ! சகோதிரனே! ஞானமார்க்கத்தின் உதவியால் இச்சக்கரத்தினின்று விடுபடலாம்.

ஞானமார்க்கம் யாதெனில்:- அநித்யம், துக்கம், அநாத்மா என்பவைகளே. இம்மார்க்கத்தின் உதவியால் அவிஜ்ஜாவாம் பேதமெய் என்னும் வண்டி சக்கரத்தின் குடத்தை எடுத்துவிட்டால் மற்றை இலைகள் உதிர்ந்து விடுமாபோல்

சகலமும் அநித்யம். சகலமும் துக்கம், சகலமும் அநான்மா என விசாரித்து பேதமெய் முதற்கொண்டு மரணம் வரையில் விடுபட மூப்பையும் மரணத்தையும் ஜெயித்துக்கொள்ளலாம்.

"பேதமெய் மீளச் செய்கை மீளும் / செய்கை மீள வுணர்ச்சி மீளு
முணர்ச்சி மீள வருவுரு மீளு / மருவுரு மீள வாயின் மீளும்
வாயின் மீள ஊறு மீளு / மூறு மீள நுகர்ச்சி மீளும்
நுகர்ச்சி மீள வேட்கை மீளும் / வேட்கை மீளப் பற்று மீளும்
பற்று மீளக் கருமத்தொகுதி மீளுந் / கருமத் தொகுதி மீளத் தோற்ற மீளுந்
தோற்ற மீளப் பிறப்பு மீளும் / பிறப்புப் பிணி மூப்புச் சாக்கா
டவல மாற்று கவலை / கையா றென்றிக் கடையி றுன்ப
மெல்லா மீளுமிவ் வகையான் மீட்சி"

பகவனது திவ்ய போதனையை ஆழ்ந்து கேட்டுவந்த புக்கஸாதி ஆனந்தக்கண்ணீர் சொரிந்து பகவனை மும்முறை சுற்றிவந்து பாதம்பணிந்து (நமோதஸ்ஸ பகவதோ அறஹதோ ஸம்மாஸம்புத்தஸ்ஸ) குன்றாத மனபாக்கியமும் மேலான மகத்துவமும் வந்தனையுடையவும் ஞானிகள் யாவருக்கும் மஹாஞானியுமாகிய புத்தபகவனை நமஸ்கரிக்கிறேனென மும்முறை வணங்கி, (ஓ! காஸகருணங்கத்வா திஸரனேன சட்திம் அட்டாங்க சீலம் தேதாமே பாந்தே அஹம்பாந்தே ஸரணசீலங் யாஸாமி) பெருமையும் காம்பீரமுமான பெருமானே! தயைகூர்ந்து இவனை மும்மணிகளாம் புத்த, தம்ம, சங்கத்தில் சேர்த்து எட்டு சீலங்களையும் அளிக்கும்படியும் நீதியில் நடந்துவரவும் அருள்புரியவேண்டுமென இரஞ்சி கேட்க, பகவன் எட்டு சீலங்களை ஒவ்வொன்றாக கூற ஆரம்பித்தார்.

1. பானாதிபாதா வேறமணி சிக்ஹாபதங் ஸமாதியாமி
2. அதின்னா தானாவேறமணி சிக்ஹாபதங் ஸமாதியாதியாமி
3. அஹபிரஹ்ம சரியாவேறமணி சிக்ஹாபதங் ஸமாதியாமி.
4. மூஸாவாதா வேறமணி சிக்ஹாபதங் ஸமாதியாமி.
5. ஸுராமேறய மஜ்ஜ பமாதட்தானாவேறமணி சிக்ஹாபதங் ஸமாதியாமி.
6. விகாள போஜனாவேறமணி சிக்ஹாபதங் ஸமாதியாமி.
7. நச்ச கீதவாதிக விஸூக்கதஸ்ஸனமாலகந்த விவப்பன தாரண மண்டன விபூஷணட்தானா வேறமணி சிக்ஹாபதங் ஸமாதியாமி.
8. உட்சாஸபன மஹாஸயன வேறமணி சிக்ஹாபதங்ஸமாதியாமி.

1. களவுசெய்யாமெய் 2. கள்ளருந்தாமெய் 3. பொய் சொல்லாமெய்
4. பிறன்மனை நயவாமெய் 5. கொலை செய்யாமெய் 6. அகாலபோசன மருந்தாமெய் 7. சீதம், வாசனை, கூத்து இவைகளுக்கிடங்கொடுக்காமெய்
8. பஞ்சணை மெத்தை உயர்வான படுக்கையின்மேல் துயிலாமெய்.

ஆகிய சுத்ததேகிகளாக வாழ்தலே சுகதேக வாழ்க்கைக்கு அறிகுறியாகும். சுகதேகவாழ்க்கையின் அறிகுறியே நித்திய வாழ்வுக்கு அறிகுறியாகும். அந்த நித்தியவாழ்க்கையையே நிருவாணமென்னப்படும். அந்நிருவாண சுயம்பிரகாசப் பிரிவே பரிநிருவாணமென்னப்படும்.

ஓ! சகோதிரனே! இப்பரிநிருவாண சுகமே என்றுமழியா நித்தியசுகம், உலகத்தில் அநித்தியத்தை ஆய்ந்தே நித்தியத்தைக்கண்டேன். துக்கத்தை ஆய்ந்தே சுகத்தைக்கண்டேன். போட்டயிடத்திற் பொருளைக் கண்டடைவது போல் அநித்தியநிலையில் சுழலும் பஞ்சஸ்கந்தத்தினிடத்திலேயே நித்திய நிலையும் துக்கந்தோன்றியவிடத்திலேயே சுகநிலையுங் கண்டேன்.

இத்தகைய சுகவாரியாம் பரிநிருவாண நிலையை விரும்புவோன் தனது தேகக்களங்கையும், வாக்குக் களங்கையும், மனோகளங்கையும் தன்னிற்றானே உணர்ந்து தன்னைத்தானே சுத்திகரித்துக்கொள்ளுவோன் சுகம் பெறுவான்.

அந்நியரால் சுகம்பெற வேண்டுமென்போன் அல்லலுற்றலைவான். அதாவது அன்னை குழவிக்கு அன்னமூட்டுவாள். விழுங்குகைக்கு அவள் உத்திரவாதியன்று. ஆசிரியன் திரிகரண சுத்தத்தைப் போதிப்பான். சுத்தீகரிப்புக்கு அவன் உத்திரவாதியன்று. ஆதலின் உண்மெய்ப்பொருளை உணரவேண்டிய சகோதிரனே! நீவிர்தன்மெய்யுணர்ந்து தண்மெய் நிலைத்து சுகம்பெருகுகவென்று வாழ்த்தி சத்தியசங்கத்திற் சேர்த்தருளினார்.

பகவன் கூறிய சீலங்களை புக்கஸாதி அன்புடன் ஏற்று காவிபோர்த்து பிச்சாபாத்திரத்தைக் கையிலேந்தி சங்கத்தில் சேர்ந்து சதுர்சத்தியமாம் துக்கம்,

துக்கோற்பத்தி, துக்க நிவாரணம், துக்க நிவாரணமார்க்கத்தில் விசாரிணை புரிந்துவந்தான்.

24. பிருமன் தரிசன காதை

பிருமனென்பவன் அசோதரையம்மனின் சோதிரன் அஜாதசத்துரு வென்பவன் விம்பாசார அரசனுடைய புத்திரன் இவ்விருவரும் பகவன் கோசலை நாட்டிலிருக்கின்றாரென்று எண்ணி அவ்விடம் போய் விசாரித்து இல்லை என்றுணர்ந்து குருநாதன் வந்தவழியைத் தொடர்ந்து ஐயனைப் பாலைவனத்தில் சந்தித்தார்கள்.

இவ்விருவர் வருகையையுங் கண்ட இறைவன் ஓர் மரத்தடியில் தங்கி வந்தகாரணம் யாதென்றார்.

அசோதரை நெஞ்சுவிடுதூது - மகா ராஜா துறவு

பிரும நகந்தை பிறங்காதடங்கப், பரம னொளியாய் படர்ந்து
உருவனத்தும் வகிலுங் கழைமணியு மந்திரயாழுந்தி,
சிகிநிறச் செம்பாலை குணந்தீர்ந்து - பகரறிய.

நிகழ்காலத்திரங்கல்

பிருமனுஞ் சத்துருவும் பேணா மகந்தைகெட, / உருமறைந்தசோதி உயர்ந்த அதிசயமே.

பிருமனென்னும் தனது மைத்துனன் தனக்குள்ள மமதையால் மாதவனைநோக்கி நீவிருமது சங்கத்தோருக்கு கொடுத்திருக்குங் சட்டங்கள் யாவும் கடினமின்றி எளியநடையிலிருக்கின்றபடியால் அவர்களொவ் வொருவரும் வீண்காலம் போக்குகின்றார்கள் கடின சட்டத்தில் நிறுத்த வேண்டுமென்றான்.

அவற்றை வினவிய பகவன் பிருமனைநோக்கி தாங்களும் அவர்களுடன் கலந்துள்ளவராதலின் கடின சட்டத்தில் பொருந்துவீரோவென்றார்.

நாம் பொருந்துவோம் பொருந்தமாட்டோமெனும் கேள்வியைத் தாம் கேட்கவேண்டியகில்லை உம்முடைய சங்கத்தோரை உறுதிச் செய்துக் கொள்ளும் என்றாஎ.

பகவன் அவனுக்குள்ள வஞ்சினத்தையும், பொறாமெயையுமுணர்ந்து மௌனமுற்றார்.

மறுமொழி கூறாதிருந்த மாதவனை மற்றும் பிருமன் நோக்கி உமது சங்கத்தோரை உறுதிசெய்துக் கொள்ளுமென்றான்.

அவ்வார்த்தைக்கும் அருகன் யாதோருத்திரமுங்கூறாதிருப்பதைக் கண்ட பிருமன் சினமீறி அஜாதசத்துருவை அழைத்து தூரஞ்சென்று இவரை நாம் எவ்விதத்திலும் கொன்றுவிடவேண்டும், அவ்விதம் செய்யாமற்போய்விடு வோமாயின் உமது தந்தைக்கும் எனது தந்தைக்கும் சங்கதிகள் எட்டி வீணில் அல்லலடையவேண்டி வரும். ஆதலின் யாருமற்ற பாலைவனமே இச்செயலுக்குத் தகுதி என்று அருகில் நெருங்கினார்கள்.

இவர்கள் கொடுஞ்செயலை உணர்ந்த கோமான் அவர்கள் நெருங்கிய நேரத்தில் அந்தர சுவர்க்க மத்தியம் என்னும் நிலையற்று சுடுகையற்று சுயம்பிரகாச சோதியாய் நின்றுவிட்டார்.

சுயம்பிரகாசத்தைக் கண்ட இருவர்களுந் திகைத்து நான்கு திக்குகளிலோடித் திரிந்தும் அவரது மகத்துவம் விளங்காது மதிகெட்டு திட்டமிட்டார்கள்.

அருங்கலைச்செப்பு - பாலைநிலப்பத்து

பாலைநிலத்தின் பகுத்தனைத்தும் பார்த்துரைத்தான்,
சீலமிகுத்த சிவன். மண்ணினுறுக்கு மணியொளியா
முன் தொகுப்பு மெண்ணியுரைத்தானிறை.

அக்கால் குன்றை நாட்டுச் செல்வன் சோதியை ஒடுக்கி பாலைவன வாசிகளிடஞ்சென்று இராகத் துவேஷ மோகமாம் மூன்றினால் உண்டாகுங் கேடுகளையும் அன்பு, ஈகை, சாந்தமென்னும் இம்மூன்றினால் உண்டாகுஞ் சுகங்களையும் விளக்கி அவர்கள் விருத்தி அடையவேண்டி பாலைவனத்தில் உற்பத்தியாகும் உவர்மண், கீரைமணி மண், வளையல் மண், கண்ணாடி மண், படிகக்கல், அப்பிரகக்கல் முதலியவைகளின் விளைவுகளையும் அவைகளைக்

காய்த்துப் பொருட்செயும் வகைகளையும் கற்களுக்கு தீத்தீட்டி கண்ணாடி செய்யுந் தொழில்களையும் விளக்கிவிட்டு மற்றோர் குறிஞ்சிநிலமாம் மலையடி சேர்ந்தார்.

அம்மலைநாட்டரசன் மாலியன் என்பவன் மலையடிவாரத்தில் பகவன் வந்திருப்பதைக் கேள்வியுற்று பந்துமித்திரர்களுடன் வந்து வாலறிஞனை வணங்கி எண்ணிறந்த குணத்தோய் நீ, யாவர்க்கு மரியோய் நீ, உண்ணிறைந்த வருளோய் நீ, உயர்பாரந் தவிர்த்தோய் நீ, மெய்ப்பொருளை அறிந்தோய் நீ, மெய்யறமிங் களித்தோய் நீ, செப்பரிய தவத்தோய் நீ, சேர்வார்க்குச் சார்வு நீ, யாதலின் உமது சிறந்த கமலபாதத்தைத் தாவினோம். இவ்வடியார்களையுந் தங்கட் சங்கத்தவர்களில் ஒருவராகச் சேர்த்து சகல விவேகிகளால் கொண்டாடும் சத்தியதன்மத்தைப் போதிக்க இரைஞ்சி தனதில்லத்திற் கழைத்துக் கொண்டுபோய்ப் புசிப்பளித்து தனதாளுகைக்கு உட்பட்ட குடிகள் யாவரையும் வரும்படிச் செய்து தன்மத்தைக் கேட்கும் சித்தாயத்தத்தில் வைத்திருந்தான்.

மலையன் வேண்டுதலை வினவிய வீணைகோபாலன் அகமகிழ்ந்து அரசே, சத்தியதன்மத்தை தாங்கள் தெரிந்துகொள்ளவேண்டியவரா யிருப்பதுடன் உமது ஆளுகைக்குட்பட்ட மக்களும் உணரவேண்டுமென்னும் அவாக்கொண்டுள்ளீர்.

ஆயினும் உம்மெய்போன்ற மனுக்கள் மீது வைத்த கருணைப் போல் மற்ற சீவராசிகளின் மீதும் வைக்காதகாரணம் என்ன என்றார்.

அசோதரை நெஞ்சுவிடுதூது - மகாராஜா துறவு

குறிஞ்சியினின்று குறவர் குடில் சாடி / மறிந்தவரன் மாலியனையேற்று - சிறந்த

அருங்கலைச்செப்பு - குறிஞ்சிப்பத்து

குறிஞ்சி நிலத்தின் குணமறிந்தான் வெற்பன் / துறந்த முநியின் திரம்.
சிவப்பின் மணியும் செழுவாணி முத்தும் உவப்பினுரமா முடல்.
உடலுள்வுள்ள உதிரக் கறையகற்றி திடநல்வளமுருக்குங்கல்.

அதனை வினவியக் குறிஞ்சிநாட்டரயன் தங்கள் கூட்டத்தாராகியக் குறவர்கள் பல சீவசெந்துக்களை கொல்லுவதும், விற்பதும், தின்பதுமாகிய செயலை யுடையவர்கள் ஆதலின் சற்று நிதானித்து அகிலத்தில் (அகிம்சா) தருமத்தை நிலைநாட்டிய அப்பனே, எங்கள் கூட்டத்தாருள் பெரும்பாலும் ஜெந்துக்களைக் கொன்று புசிப்பதும், விற்பதும், அதேசீவனவிர்த்தியாய் நிற்பதும் அனுபவமாதலின் சீவர்களை கொலைபுரிந்து உண்பது குலத்தொழிலாய் விட்டது. அவற்றை விடுவதானால் வேறு சீவனவிருத்திக்கு யாதுமில்லாமல் திகைப்பார்களே என்றான்.

அரசனே! ஒவ்வோர் மனிதனும் புசித்து தன் தேகத்தை வளர்ப்பதற்கு கனிகாய், கிழங்கு முதலிய வஸ்துக்கள் இருப்பதுடன் சென்னெல், கேழ்வரகு பயிரிடுந் தொழிலாளிகளிடஞ் சென்று தானியங்களைப்பெற்று மாற்றிக் கொள்ளுவதற்கு மிளகு, கோஷ்டம், அகில், சந்தனக்கட்டை, தக்கோலம், குங்குமப்பூ முதலியவைகளை இம்மலையில் விருத்திசெய்து சீவிப்பதுடன் அம்மலையில் விளையும் சில உலோகங்களையும், இரத்தினங்களையுங் காண்பித்து சிவப்புநிறக் கற்களை ஓர் மனிதன் அணைந்துக்கொள்ளுவானாயின் உதிர வண்டல் கட்கழிந்து தெளிவுண்டாகி சுத்தயிரத்தம் உடலிற் பரவி வஜிகரமும் தேஜசும் பெறுவான்.

அவ்விடம் உதிர்ந்துள்ள யானைத்தந்தங்களை எடுத்துவரும்படிச் செய்து அதிலுள்ள முத்துக்களைக் காண்பித்து இவ்வாணி முத்துகளை ஓர் மனிதனணைந்துக்கொள்ளுவானாயின் மனோதிடனும் தேகசக்த்தியும் பெற்று உச்சாகத்திலிருப்பான். என்று லோகவுருக்குகளையும், இரத்தினத்தீட்டு களையும், முத்தின் பலன்களையும் விளக்கி இவைகளைக் கொண்டுபோய் ஒன்றைக்கொடுத்து மற்றொன்றை மாற்றிக்கொண்டுவந்து சீவிக்கலாமேயன்றி சீவர்களுக்குத் துன்பம் விளைத்து அதினால் சீவிப்பது அதர்ம்மமாகும்.

அதாவது, உங்களில் ஒவ்வொருவரும் சத்தியதன்மத்தை உணர்ந்து தன்னை உயர்த்தி சீர்பெறும் எண்ணத்தில் நிற்பதுபோல் அச்சீவராசிகள் ஒவ்வொன்றுந் தங்களை உயர்த்திக்கொண்டே வருகின்றது.

அவைகளின் உயர்வுகளை நீங்கள் மத்தியில் கெடுத்து கொலைபுரிவதால் அதன் நோக்கங்களும், நிலைகளுங் கலைந்து தாழ்ந்தநிலை அடைவதுடன் உங்கள் உணர்வுங்கெட்டு தாழ்ந்தநிலை அடைவீர்களென்று போதித்து அவர்கள் குடிசைகள் யாவையுந் தவிற்று கட்டிடங்கள் கட்டும் வகைகளையும் ஊட்டிவருங்கால், பகவன் மலையநூரான் வாசஞ்செய்யுங் குறிஞ்சிநாட்டில் சத்தியதன்மத்தைப் போதித்துவருகின்றாரென்று கேழ்விப்பட்ட பிருமனும் அஜாதசத்துருவும் அம்பும் வில்லுங் கையிலேந்தி துஷ்ட யானைகளையும் அழைத்துக்கொண்டு அவ்விடம் வந்து அவலோகிதர்மீது அம்பு கும்பலைப் பிரயோகித்தார்கள்.

அவற்றைக்கண்ட அமலன் அருகிலுள்ளவர்களை தூர விலகிவிடச் செய்து தனியே உழ்க்கார்ந்தார்.

அவ்விருவரும் எய்த அம்புகும்புகள் அவலோகிதர் உடலில்மோதி புட்பங்கள் உதிருவதுபோல விழுந்துகொண்டே வந்தது. அவர்கள் அம்பு கூடுகளுங் காலியாயின. இன்னும் அவர்களுக்குக் கோபம் அதிகரித்து தங்களிடமுள்ள யானையை விடுத்துக் கொல்லும்படிச் செய்தார்கள்.

அவ்வியானையோ வீரிட்டுக்கொண்டு ஐயனருகில் வந்து அவரது ஞானகருணாகரமுகங் கண்டவுடன் தனது மதவீரியத்தை ஒடுக்கி முழங்காலிட்டு மத்தகஜம் பூமியிற்படவணங்கி பின்னுக்கே சென்றுவிட்டது.

அதன்செயலைக் கண்ட இருவருக்கும் மேலும் மேலுங் கோபமதிகரித்து யானைக்கு மயக்கவஸ்துவை ஊட்டி மறுபடியும் மாதவன் பேரில் ஏவினார்கள்.

அவ்வியானையோ தனது மதிமயக்கத்தால் மாதவனை அணுகி துதிக்கையினால் பிடிக்கவும் இழுக்கவுமாகியச் செயலிலிருந்தது. அதன் மதிமயக்கத்தை உணர்ந்த மாதவன் புந்நகைக்கொண்டு ஓர்கரத்தால் துதிக்கையைப்பற்றி ஓர் துரும்பை எறிவதுபோல் தூர எறிந்துவிட்டார்.

யானைக்கோ தனக்குள்ள மயக்கங்கள் யாவுமகன்று பகவனுரத்திற்கு பயந்து வீரிட்டோட்டமிட்டது.

யானை உரத்தோன் வல்லபத்தைக்கண்ட யாவருந் திடுக்கிட்டு நின்று விட்டார்கள்.

அவருரத்தைக் கண்ணாரக்கண்ட பிருமனும் அஜாதசத்துருவும் ஐயன் எதிரில் போவதற்கு பயந்து மலையைச் சுற்றிக்கொண்டு உச்சிக்கேறி அவ்விடமிருந்த ஓர் பெரும்பாறையை யானை உரத்தோனுக்கு நேரே உருட்டிவிட்டார்கள்.

அப்பாறையானது அதிவேகமாக உருண்டு வந்து ஐயன்தலைமீதெழும்பி உருண்டுபோய் இருவர்களும் மலையடிவாரத்தில் விட்டிருந்த ரதத்தின்பேரில் விழுந்து அவற்றை பொடியாக்கிவிட்டது.

அதனைக்கண்ட இருவரும் நமதில்லம் போய்ச் சேருவதற்கு ரதமில்லையே யாதுசெய்யலாமென்று மயங்கி தாங்கள் தவமுதல்வருக்கு செய்து வந்த தீங்குகளை சிந்தித்தார்கள்.

இருவருஞ் செய்த தீவினைகளை சிந்தித்ததினால் இறைவன் மீதிருந்த வஞ்சினங்களும் பொறாமெயுமகன்று யானையுரத்தைப்பெற்ற தேகபலமிருந்தும் நம்மீதவ்வுரத்தைக் காட்டாதிருப்பது என்னவன்போ யாது சாந்தமோ என்று ஒருவருக்கொருவர் நிதானித்து சதா சாந்தரூபியை இன்று சேவித்து அடைக்கலம் புகுவதே நமதரணாகும். அங்ஙனம் அவர் அடைக்கலங் கொள்ளாவிடில் இருவர் பிராணனையும் அவர் பாதத்தில் விடுவதே பதமென்றெண்ணி யானை யுரத்தோனருகில் சென்று இருவரும் அவர் கமலபாதத்தைப்பற்றி செந்தாமரை பாதா, சின்மயபோதா, ஜெகத்குருநாதா, சுருதி நல்வேதா, சருவசீவ தாதாவென்றிறைஞ்சி எங்கள் குற்றத்தைப் பொருக்கவேண்டுமென்றார்கள்.

இவற்றிற்கு முன்பு இராகிருகத்தை ஆண்டு வந்த விம்பாசாரனுக்கு தனது புத்திரன் அஜாத சத்துருவும், அசோதரையின் தமயன் பிருமனும் துஷ்ட செயல்களிற் திரிகின்றார்களென்றறிந்து அவர்கள் இருவரையும் அழைத்து கண்டித்தான். அவனுடைய நற்போதனையை சகிக்காத பிருமன் அஜாத

சத்துருவிற்கு கோபத்தை மூட்டி விம்பாசாரனை கொலை செய்யும்படி ஏகினான்.

அவ்வார்த்தையை ஏற்றுக்கொண்ட அஜாதசத்துரு நள்ளிரவிற் சென்று தனது தந்தையைக் கொல்லும்படி ஓர் ஆளை ஏவிவிட்டு பிருமனிடஞ் சென்றான்.

பிருமனும் அஜாதசத்துருவைக்கண்டு முடிந்ததா என்றான். அதற்காகவே ஆளை நியமித்து வந்திருக்கின்றேன் கூடியசீக்கிரம் சங்கதிவருமென்று கூறினான்.

அதனை வினவிய பிருமன் அஜாதசத்துருவைக் கோபித்து அரண்மனை யருகில் ஆட்கள் போகமாட்டார்கள் வேவுகர்களும் விடமாட்டார்கள் நீரே அவ்விடஞ்சென்று விம்பாசாரனைக் கொலைபுரிய வேண்டுமென்று விரட்டினான்.

பிருமன் மொழிக்கு மறுமொழி கூறாது அஜாதசத்துருவானவன் அரண்மனைச்சேர்ந்து இரவில் தந்தை யுலாவுமிடத்தை நோக்கினான். அங்கு தான் முன்பு அநுப்பிய ஆளானவன் அரசவுடையணிந்து வேவுகரறியாது அரண்சேர்ந்து விம்பாசாரன் வெளிவரின் கொலைபுரிய உலாவிக் கொண்டிருந்தான்.

அவனது உடையின் மாறுதலை அறியா வஜாதசத்துரு தந்தையே உலாவிக்கொண்டிருக்கின்றாரென்று பதுங்கி வாளைவீசி அவனை இரண்டு துண்டமாக்கிவிட்டு ஓடி பிருமனை அணுகி முடித்துவிட்டேனென்றான்.

அதனை வினவிய பிருமன் ஆனந்தங்கொண்டு இனி நாமிங்கு இருக்கப் படாது புத்தரிருக்குமிடத்தைக்கண்டு அவரையும் முடித்துவிடவேண்டுமென்று அம்பும், வில்லும், யானையும், ரதமுங்கொண்டு வெளியேறி வந்து பகவனை பல இம்சைகள் புரிந்தும் பலியாது அவர் பாதத்தைப் பற்றிக்கொண்டு கெஞ்சுங்கால் யானையுரத்தோன் இருவரையும் நோக்கி சிறுவர்களே! விம்பாசாரனை முடித்துவிட்டீர்களோ என்றார்.

இருவர் செவியிலும் அம்மொழி கேட்டவுடன் இடியுண்ட சர்ப்பம்போல் திகைத்து பயமும் அழுகையுந்தோன்றி ஐயனே! விம்பாசாரனை மடித்து விட்டோமென்றார்கள்.

சிறுவர்களே! கொதித்த உள்ளஞ் சுட்டழியுமேயன்றி குளிர்ந்த உள்ளம் ஒருக்காலும் அழியாது. நீங்கள் கொதிப்பேற்றி அனுப்பிய ஆளை நீங்களே கொலைபுரிந்து இன்னுங் கொதிப்பேறி இவ்விடம் வந்துவிட்டீர்கள். ஆயினும் உங்களுள்ளக்கொதிப்புகள் யாவும் பனிபருவதத்தில் மோதி பாழடைந்து விட்டதினால் அதனுணர்வைக்கொண்டேனுந் தீவினைகளை அகற்றி நல்வினையைப் பெருக்குங்கோளென்றார்.

அவ்வருள்மொழியை வினவிய இருவரும் ஐயனைவணங்கி எங்கள் குற்றங்களை மன்னிக்கவேண்டுமென்றார்கள்.

பகவன் இருவரையும் நோக்கி சிறுவர்களே! நீங்கள் இருவரும் விம்பசாரனிடஞ்சென்று நீங்கள் செய்துவந்த தீவினைகள் யாவையும் விளக்கி இனி யாங்கள் செய்யவேண்டிய நல்வினைகள் யாதென்று உசாவுவீர்களாயின் அவரவற்றை விளக்குவார். நீங்கள் அவரையே குருவாக வழிபட்டொழுகுவீர் களாயின் துக்கத்தைப் போக்கிக்கொள்ளுவீர்களென்றோதி இராஜகிருகம் அனுப்பிவிட்டு குன்றைவிட்டிழிந்து காடாகும் முல்லை நிலத்தில் சேர்ந்தார்.

முல்லைநில மாக்கள் யாவரும் மாதவனைக்கண்டு வணங்கி பாலைக் கொண்டு வந்து கொடுத்து அருந்தும்படி வேண்டிக்கொண்டார்கள்.

அப்பாலில் நெய்யுந் தயிறுங் கலந்திருப்பதைக்கண்டு அதைப் பிரிக்கும் வகைத் தெரியாதவர்களாயிருக்கின்றார்கள் என்று அறிந்து அவர்களிடமுள்ளப் பால்கள் யாவையுங் கொண்டுவரச்செய்து ஒரேசாடியிலிட்டு மத்தினால் கடையும்படிச்செய்து அதன்மேல் மிதந்த வெண்ணெய்யை எடுத்து ஓர் பாத்திரத்தில் வைத்தபோது அஃதின்னவஸ்துவென்றும், இவ்வகை உபயோகத்திற்கு உதவுமென்றும் அறியாமல் திகைத்துநின்றார்கள்.

அசோதரை நெஞ்சுவிடு தூது-மகா ராஜாதுறவு

முல்லைபுகுந்து முதலெழுமு மாய்ச்சியர்தம்

பல்லை ஒத்த முல்லை பகுத்தறிந்தங் - கொல்லை
தயிர்சாடி மத்துடனே தாங்கி மருதத்
தியற்பள்ளாரர்ப்ப வெழுந்து.

அருங்கலைச்செப்பு.- முல்லைப்பத்து

முல்லைபுகுந்தான் முனையாச்சிய குரிபால், வெல்லை விளித்தானிறை.
பாவினுரைப்பும் பருதயிறும் வெண்ணெய்க், கோலமுரைத்தான் குரு.
கன்றுக்களித்து களிப்பூட்டி மிக்கு பால், என்று முமக்கென்றறி.
புள்ளாங்குழலாற் புள்ளினான் வாய்மெய்த், தெள்ள விளித்தார் திரு.

அதனை உணர்ந்த பகவன் வெண்ணெய்யை வாயிலிட்டுப் புசித்துக் காட்டியதுமன்றி பாலைக்காய்த்து தயிறாக்கி வெண்ணெயெடுத்து நெய்யுறுக்கும் வகைகளையும் விளக்கி பசுவின் மடியில் கன்றானது பாலூட்டி திருப்தியடைந்தபின் மிகும் பாலைக் கரந்துக்கொள்ளவேண்டுமென்றும் அங்ஙனம் கன்றுக்கு பாலைத் திருப்த்தி செய்யாமல் கரப்பீர்களானால் உங்கள் புத்திரி புத்திரர்கள் யாவரும் புசிப்பற்று புலம்பித்திரியநேரிடுமென்று கன்மபலனை விளக்கி அவ்விடம் மாடு ஆடுகளைக் கார்க்கும் காவலர்களை அழைத்து அவர்களூதும் புள்ளாங்குழலை வாங்கி அதிலுள்ள நான்கு துவாரத்திலும் நான்கு விரல்களை ஊன்றி முதல் துவாரந் துக்கம், இரண்டாந்துவாரம் துக்கோற்பவம், மூன்றாந்துவாரம் துக்க நிவாரணம், நான்காம் துவாரம் துக்கநிவாரணமார்க்கம் என்றுங் குழலூதுங்கள் குழலூதுங்கோளென்றோதி துக்கம், துக்கோற்பவம், துக்கநிவாரணம், துக்க நிவாரணமார்க்கமாகிய இந்நான்குமே நாவினின்று வெளிப்படும் நான்கு வாய்மெய்கள் என்னப்படும். நான்கு வாய்மெய்களென்று சத்தியமாக நாவினின்று எழும் மெய்வாக்கியங்களும் இதுவேயாம்.

இவற்றை உணரும் ஒவ்வொருவனும் பொல்லாங்கென்னும் பாவங்கள் யாவையும் அகற்றி நன்மெய் கடைபிடித்து உள்ளக்களங்கங்களைப் போக்கி தெள்ளிய சுகம்பெறுவான். அங்ஙனமின்றி நாவினால் பொய்யைச் சொல்லித்திரியும் பொய்வாயாம் வாய்ப்பொய் உள்ளோர்க்கு முற்கூறியுள்ள நான்கு வாய்மெயும் விளங்காது. ஆதலின் உங்கள் ஊதுகுழலிலுள்ள நான்கு துவாரமே நான்கு வாய்மெய்யாகக்கொண்டு குழலூதி சருவ மக்கள் இதயங்களையுஞ் சுத்திசெய்வதுடன் வீரசெந்துக்களைக் கொலைபுரிந்து கோரோசினம் விற்று சீவிப்பதினும் பால், தயிர், நெய், தேன், அறக்கு, மெழுகு, மயிற்பீலி இவைகளைக் கொண்டுபோய் மாறி சென்னெல் சிறுபயிறு இவற்றைக் கொண்டுவந்து சுகசீவனஞ் செய்யுங்கோளென்று விடுத்து நஞ்சை நிலங்களுள்ள மருதநிலத்திற் சேர்ந்தார்.

அவ்விடஞ்சென்று அங்குள்ளக் குடிகளை அழைத்து பூமியைப் புழுகவழுகக் கலக்கி புன்செய் போக்கி நஞ்சையாக்கி சென்னெல் விளைக்குஞ் சாதனங்களையும், கோதமுது நெல்விளைக்கும் போதங்களையுமூட்டி, தென்னை, கரும்பு, வாழை, பலா முதலிய விருட்சக்காப்புகளையும் காட்டி, ஓர் புறம் நீர் கட்டி, ஏறிபாய்க்கும் வகைகளையும், பூமியை உழுது கலைக்குங் கலைப்புகளையும் உணர்த்தி குளங் கிணறுகளின் நீரேற்றுஞ் சால்களையும் பூட்டி வேளாண்மெய்ப் பயிரிடுந்தொழில் விருத்தியை நாட்டி, அதினால் அடையும் பலனை இந்திரவியார அறஹத்துக்களுக்கும், நகரை ஆண்டுகாக்கும் அரசர்களுக்கும் அளித்து சென்னெல் இவைகளைக்கொடுத்து தயிறு, பால், நெய் இவற்றைப் பெற்றுக்கொள்ளுதலும், தெங்கு, வாழை, மா இவற்றைக் கொடுத்து உலோகம் இரத்தினம் முதலியவைகளைப் பெற்றுக் கொள்ளுதலுமாகிய மாற்றலுடன் அங்கப்பழுதுற்றோர்களையும், ஆதுலர்களையும் ஆதரித்து ஈகையினிலையிலும் இதய ஒழுக்கத்திலும் இருந்து மேழியை நடாத்துவீர்களாயின் மாதம் மும்மாரி பெய்து மேழிச்செல்வம் பெருகி சுகம்பெற்று வாழ்வீர்கள்.

உங்களுக்குள்ள ஈகையையும், அன்பையும் அகற்றிவிட்டு மேழியைத் தொடுவீர்களாயின் பூமியழுந்தி, அன்புகாணாது, ஈகைசிறந்து வானம்பெய்யாது இவ்வகை பூமி அழுந்தாமலும் வானம் பெய்யாமலும் போமாயின் சகல தானியமும் விளைவுகுன்றி சஞ்சலத்திற்கு ஆளாகுவீர்கள்.

வானமானது யாதொரு பிரிதிபலனையுங்கருதாது பூமியில் பெய்து சகல சீவராசிகளையுந் தோற்றவைக்கின்றது.

பூமியும் யாதொரு பிரிதிபலனையுங் கருதாது சகல சீவராசிகளுக்கும் உணவீய்ந்து உயிர்ப்பிச்சை அளிக்கின்றது.

இவ்விரண்டின் செயலையுங் கண்ணுற்றுவரும் நீங்கள் உங்கள் இதயங் களிலும் மற்றவர்களின் பிரிதிபலனைக் கருதாது அன்பைப்பெருக்கி ஈகையையே இயல்பாகக் கொள்ளல் வேண்டும்.

அவ்வகை அன்பை ஆதாரமாகவும், ஈகையை இயல்பாகவுங் கொண்டு மேழிச்செய்வீரேல் உங்கள் பூமியும் பண்ணையுன்றி வானமுங்கோறிய காலத்திற் பெய்து பயிறுகளும் பெருகி தானிய விருத்தியும் உண்டாகும். குடிகளும் சுகமுற்று அரசாங்கமுஞ் சிறப்புற்று அகமகிழ்வதால் அறிவின் விருத்தியை நாடும் மகாஞானிகளும் விருத்திபெற்று தன்னையுணர்ந்து தற்பரமாகி நற்சீர்திருத்த விருத்தியால் சருவசீவர்களையுந் தன்னிற்றானே விருத்தியடையுஞ் செயல்களில் நிறுத்தி சுகம்பெறச் செய்வார்கள்.

அத்தகைய அன்பின் ஆதாரமும் ஈகையின் இயல்புமற்று மேழியைப் பற்றுவீர்களாயின் பூமியுமழுந்தா, வானமுஞ் சுறுங்கும், பயிறுங் கருகும், தானியமுங் குறையும், குடிகளும் க்ஷீணமடைவார்கள், கோனுங் குதூகலங் குறையும், ஞானிகளுந்தியங்குவர்.

இத்தகைய ஞானிகளின் திகைப்பினால் சருவ சீர்த்திருத்தங்களுங் குறைந்து தேசத்தின் சிறப்புங்கெட்டு பற்பல விஷபீடிதங்களால் பதிகுலைந்து போவீர்கள்.

இவ்வகையாய்ப் பதிவிட்டு மற்றோர் பதியடைந்து மதிகலங்குவது சுகந்தருமோ அன்றேல் இருந்தபதியிலிருந்து மதிகலங்காதவை சுகந்தருமோ என்றார்.

அதனை வினவிய பள்ளராம் வேளாளத் தொழிலாளர்கள் அறவாழி யானை வணங்கி ஐயனே இருந்தபதியிலிருந்து இதயசுகம் பெறுவதே இனிய தென்றார்கள்.

அன்பர்களே! நீங்கள் வாசஞ்செய்யும் வயலோ கிராமமென்னப்படும். கிராமமென்பதின் நிலையோ சகல தானியங்களையும் நிறப்பியுள்ளக் களஞ்சியம் என்னப்படும். அக்களஞ்சியமோ சருவசீவர்களுக்கும் உயிரளிக்கும் உயிர்ப் பென்னப்படும்.

அத்தகைய உயிர்ப்பிற்கு ஆதாரமாகும் உங்களுள்ளங்களில் அன்பையும், ஈகையையும் சதாநிறுத்தி பயிறிடும் வேளாளத் தொழிலை நடாத்துவீர்களாயின் சகல சீவராசிகளின் சுகங்களுக்கு ஆதாரமாவதுடன் நீங்களும் சுகித்து வாழ்வீர்களென்றோதி அவர்களைவிட்டு விலகி நெய்தநிலஞ்சார்ந்தார்.

அசோதரை நெஞ்சுவிடுதூது-மகா ராஜாதுறவு

தியர்பள்ளரார்ப்ப வெழுந்து-வயற்புடைசூ ழேறிகுணங்களெலாமுரைத்து நெய்தனிலஞ், சாரவெழுந்து தகும்பரவர் - நேரும்.

அருங்கலைச்செப்பு.- மருதப்பத்து

நஞ்சையுறநீர் நறுநெல்விளைகரும்பு, புஞ்செய் பலனாம்பனி
ஏறிநீரோட்டு மெழிலும் பலனுங், கூறிநின் நீய்ந்தான் குரு
ஆடும்பரப்பு மதன்பலனைக்காட்டும், வீடுஞ் சுகமதுவேயாம்
தென்னை கமுகு தெளிபலாபுன்னை, முன்னீர் விளைவாமுணர்
வேளாண்மெய்கொண்டு வினைசுகையாதல், மாளாமெய் ஆண்ட மனம்.

பின்கலை நிகண்டு

புரந்தரித்திடுதலாலே புரந்தரனென்னு நாமம்
வரந்தரும் பிண்டிவேந்தன் வாக்கிலிந்திரனே பெற்றா
னிருந்தவனாதிகால மியற்றிய திப்பாற் கேண்மின்
சரந்தநீர் வயல்களாலே சூழ்ந்தவூர் கிராமமாமே.

கடற்கரையோரமாய் நெய்த நிலத்தை அடுத்தபோது அங்குள்ள கரையோர் களாகும் பரவர்கள் யாவரும் பகவனை வந்து வணங்கி, ஐயனே நீவிர் யாவீர், வந்த காரணம் யாதென்று வினவினார்கள்.

அக்கால் அருகன் பரவர்களை நோக்கி உங்கள் தொழில் யாது போஷிப்பு எவ்வகை என்றார்.

ஐயனே! எங்கள் போஷிப்பு சமுத்திர மச்சங்களைப் பிடிப்பதும் விற்பதும், புசிப்பதுமே போஷிப்பு என்றார்கள்.

அத்தகைய நீர்வாழ் ஜெந்துக்களைக் கொன்று சீவிக்காது வேறுவகையில் சீவிக்கலாகாதோ என்றார்.

ஐயனே! எங்கள் பீடிபீடியாங் குலத்தொழில் வலைத் தொழிலேயன்றி வேறு தொழிலறியோம், யீதன்றி நீரில் வாழுங் செந்துக்களை நிலத்திற் கொண்டு வந்தவுடன் மடிந்து விடுவதனால் அவற்றைக் கொன்றாலென்ன, தின்றாலென்ன, விற்றா லென்னவாம் என்றார்கள்.

பரவர்கள் மொழியைக் கேட்ட பங்கய மூர்த்தி புன்னகைக் கொண்டு அன்பர்களே! உங்களை நீரில் போட்டு வைத்தால் சீவித்திருப்பீர்களோ என்றார்.

ஐயனே! மூச்சு திணரி மடிந்து போவோம் என்றார்கள். நிலத்தில் வாழும் உங்களை நீரில் போட்டு கொன்றாலென்ன, நீரில் வாழும் மட்சங்கள் உங்களைத் தின்றால் என்னவென்று நீங்களும் இருக்கலாகாதோ என்றார்.

ஐயனே! நிலத்தில் வாழும் யாங்கள் வலைகளைக் கொண்டுபோய் நீர்வாழும் ஜெந்துக்களைக் கொண்டு வருகிறோம். அதுபோல் நீரில் வாழும் செந்துக்கள் எந்த வலைகளைக் கொண்டு வந்து எங்களை நீரிற் கொண்டுபோய் கொல்லும் என்றார்கள்.

அவற்றை வினவிய அவலோகிதர் அன்பர்களே! நீரிலுள்ள மட்சங்களைப் பிடிக்கும் வலைகளும் உங்களிடமிருக்கின்றது. பாசபந்தமென்னும் வலைகளும் உங்களிடமிருக்கின்றது. ஆனால் நீங்கள் அதை அறியமாட்டீர்கள். அவ்வலையோ பேராசை என்னும் நூலைத்திரித்து பெருந்திண்டி என்னும் கயிராக்கி பொறாமெய், வஞ்சினம், சூது, களவு, கொலை, கள்ளருந்தல் காமியமென்னும் முடிகளிட்டு கோபமென்னுங் கரையோரங் குஞ்சங்கட்டி முறுக்கேறிக் கொண்டு வருகின்றது.

அவ்வகை முறுக்கேறும் வலையால் என்று சூழப்படுகின்றீர்களோ அன்றே அதில் சிக்குண்டு துக்கம் பெருகி மாளாப்பிணியாலும் முப்பாலுந் துன்பமடைந்து பிறவி என்னும் அலையால் பீடிக்கப்படுவீர்கள்.

இத்தகைய சொற்பசீவனத்திற்காக வலையேந்தி மச்சங்களை மடிப்பதினும் முத்து, பவழம், சங்கு, உப்பு இவைகளை சேகரித்து விற்பீர்களானால் அதிக சீருஞ் சிறப்பும் பெற்று பிறவியின் வலையையும் அறுத்து நிருவாணசுகமும் அடைவீர்களென்றார்.

உதயணன்காதை - மகத காண்டம்

பாடலோவாப் பழனப் படைப்பைக் / கூடுகுலைக்குமுகின் கொழுநில லசைந்த
மன்றுனற்பார்க்கு (மருதந்தடீயி) / குன்றயற்பரந்த குளிர்கொ ளருவி
மருவினமாண மூதூர் / வெறிது சேரல் விழுப்பமன்றெனக்
கானவாழைத் தேனுறு கனியு / வெள்ளிலைப் பல்லின் முள்ளுடை யமூர்தமுந்
திடரலண்மரத்துத் தேம்பலாக் கனியும் / வரைதாழ் தேனொடுகா அயவிரை சூழ்ந்து
மணியு முத்து மணிபெற வயங்கி / பணிவில் பாக்கம்பயங் கொண்டுகவரா
நிறைந்திழைத்தகு நீங்காச்செல்வமொடு / சிறந்த சீர்த்திக் (குறஞ்சி) கோலிக்
கல்லென சும்மையொடு கார்தலை மணந்து / (முல்லை) முதுதிணைச் செல்வ மெய்தி
(பாலையு நெய்தலும்) வேலியாகக் / கோல மெய்திக் குறையவ ணகற்றி
(துறவிற் சிறந்த சொல்லறன் விளித்தது) / பிறப்பற முயலும் பெரியோன் பிறந்தது
சிறப்பிடை யறாத தேசிக முடையது / மறப்பெருந் தகையது மாற்றோரில்லது
விறற்புக ழுடையது வீரியமைந்த / துலகிற் கெலலாந் திலகம் போல்வ
தலகு வேந்த னாணை கேட்ப / தாம்பு மல்லும் பரந்துமிகை யில்லது
செல்வப் பெருங்குடி சிறந்தரை பெற்றது / நல்குர வாளரை நாடி நிற்பது
நன்பெரும் புலவர் பண்புளி பண்ணிய / புகழ்ச்சி முற்றா மகிழ்ச்சியின் மலிந்த
வின்னவை பிறவு மெண்ணுவாம் பிகந்த / மன்பெருஞ் சிறப்பின் (மகதனன்னாடு)
சென்று சார்ந்தனராற் செம்மலோ டொருங்கே.

அவ்வருமொழிகளை வினவிய பரவர்கள் ஆனந்தங்கொண்டு ஐயனே! உயிர்வதையின்றி சுகசீவனம் ஏதேனும் உண்டாயின் அவற்றை விளக்க வேண்டும் என்றடி பணிந்தார்கள்.

அவ்வருந்துதலைக் கேட்ட அண்ணல் அவ்விடமுள்ள ஓர் ஓடத்தில் சிலரை ஏற்றிக்கொண்டு ஆழியிற்சென்று நீரில் மூழ்கவைத்து முத்துள்ள மடிந்த

இப்பிகளையும், பவழக்கொடி பாறைகளையும், சிறு சங்கினங்களையும், விளக்கி சுகசீவித வழிகளைக்காட்டி, நல்லறத்தை நாட்டி நிருவாண பாதையில் விடுத்து மகதநாட்டை அகன்று மாளவதேசஞ் சேர்ந்தார். பரவர்களில் மச்சம் பிடித்து சீவிக்கும் இச்சையுள்ளோர் நீங்கலாக மற்றுமுள்ள விவேகிகளில் சிலர் முத்து, சிப்பி, சங்கு, பலகரை, உப்பு இவற்றால் சீவித்து சீருஞ் சிறப்புமடைந்தார்கள்.

அசோதரை நெஞ்சவிடு தூது

மகாராஜாதுறவு.வலைகுறையலாந்தணித்து வன்படவுதள்ளி
குலவுகடலோடுரவு கொண்டு-நிலவலய
மாழமொடுநீள மளத்தற்கரிதாகி
யேழ்கடல் வெள்ளமெனச் சிறந்து.

அருங்கலைச்செப்பு-நெய்தற் பத்து

வலைத்தொழிலையேந்தி வருமீனைப்பற்றுங், குலத்தொழிலாம் என்றார்குடி
முப்போதுயுரை முதலழித்து போடித்தல், ஒப்பாதுலகமுமென்றான்
கொலையொழித்து போடிக்குங்கொள்ளுமுதலாம், பலப்பயிறும் பற்றும்நிதி
சூழோடங்கொண்டு சுழிநீரழுத்தி, ஆழாழி யாய்ந்தானறன்
முத்தும் பவழமுரைச்சங்குமிப்பி, நித்தங்கொலையகற்று நேர்.

25. மஹாமங்கள காதை

அருகன் அவ்விடம் விட்டு அங்கங்கு காணும் மக்களுக்கு அருள் மொழியூட்டி சத்தியதன்மத்தைப் பரவச்செய்துக்கொண்டே சாவித்திரி நகரஞ் சேர்ந்து ஜீத்தாவனத்திலுள்ள அநாதபிந்தகனது ஆச்சீரமத்திற்றங்கினார்.

அவ்வாச்சிரமவாசிகள் யாவரும் அத்தேச வாசிகளால் தேவர் சபையெனக் கொண்டாடும் நீதிநெறிவாய்மையில் நிலைத்திருந்தார்கள்.

அவர்கள் யாவரும் அருகக்கடவுளைக் கண்டவுடன் எழுந்து தேவாதி தேவ செங்கனெடுமாலே திரிபுறமித்தோய், தேவரீர் தெரிசனஞ்சென்றுந் திரும்பக் கிடைத்தவெங்கள் பாக்கியமே பாக்கியம் பஞ்சசீல சிலாக்கியமே சிலாக்கியமென்று வணங்கி சாரணர்கதிவேண்டுமாறு சங்கறநிறையோனை நோக்கி சாது உலகத்தில் மங்களமென்னும் வார்த்தையாதை குறிக்கும் அதன் பலனென்னை அவற்றை விளக்கவேண்டுமென்றார்கள்.

அநாதபிந்தக வாச்சிரம சங்கத்தோர் யாவரும் ஒன்றைக்காணினும் கே[illegible]யும் அதன் குணாகுணங்களையும் பலன்களையும் தேறவிசாரித்து தங்களுக்கேனும் தங்கள் தேசவாசிகளுக்கேனுந் துக்க நிவர்த்துக்கேதுவாய் சுகவிருத்தி தருமாயின் அவற்றை ஏற்பதும் யாதாமொரு சுகவிருத்தியுங் காணாரின் அம்மொழிகளை ஏற்காமலும் விவேகமிக்க நடப்பவர்களாதலின் அவர்கள் வினாவுக்கிதங்கிய மாதவநாதன் மகாமங்களத்தை விளக்கவாரம்பித்தார்.

சமணீர்காள் உலகமாக்கள் தங்கள் தங்கள் இல்லங்களில் வாழைக்கமுகு பலா முதலியவைகளை நாட்டி சகலவாத்தியங்களும் முழங்க சிலர் துக்கத்திலும், சிலர் ஆனந்தத்திலும், சிலர் சுகதுக்கக்கலப்பிலும் இருந்து வரும் செயலை மங்களகாலமென்றும் மங்களகரமென்றும் கூறுவார்கள்.

அஃது அகுஸல கர்மங்களாகும் அதாவது பாம்பின் வாய்ப்பட்டத்தேரை எறும்பை பிடித்துண்பதற்கு ஒக்கும்.

குஸலகன்மங்களாவது யாதெனில் ஒரு குடும்பத்தில் சதியும் பதியுமாகிய இருவர் மனம் ஒன்றாகவும் களங்கமற்ற நெஞ்சினராகவுமிருந்து இல்லற தருமத்தை நல்லறமாக நடாத்தி சருவ சீவர்களுக்கும் உபகாரிகளாக விளங்கி சத்தியதன்மத்தில் நடப்பார்களாயின் அச்செயலையே மகாமங்களமென்று கூறப்படும்.

மற்றுமோர் குடும்பத்தில் சதியும் பதியும் மனமொற்று வாழ்வதுடன் தங்கள் மாமன் மாமி மாதுலன் மாதுலி தனையன் தனைவி முதலிய பந்துமித்திரர் கூடிவாழும் வாழ்க்கையில் யாதாமோர் வன்னெஞ்சமுமின்றி நன்னெஞ்ச முடையவர்களாய் தங்களுக்குக் கிடைக்கும் பொருளை தங்களை அடுத்த பந்துமித்திரர்களுக்கும் அளித்து தாங்களும் அனுபவித்து களங்கமற்ற வானந்தத்தில் வாழ்தல் மகாமங்களமென்று கூறப்படும்.

ஓர் கிராமவாசிகளும் அவ்வகையாகவே ஒருவருக்கொருவர் பேதமின்றி ஒருவருக்கொருவர் உபகாரிகளாயிருந்து உற்றதுணைவர்களாய் சேர்ந்து வாழ்தல் மகாமங்களமென்னப்படும்.

இவ்வாறாகவே ஓர் தேசவாசிகளும் அத்தேசவரசனும் சகல தேசவரசர்களின் சமாதானத்தைக் கருதி உப்பரிகையில் வெண்கொடி நாட்டி குடிகள் யாவருக்கும் சத்தியதன்மத்தையூட்டி ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டி வாழும் வாழ்க்கை சுகந்தரும் நாட்டில் வாழ்தல் மகாமங்கள மென்னப்படும்.

முன்ஜெனனமாம் முன் மெய்யில் செய்த நல்வினைகளாம் புண்ணியபலனால், இம்மெய் புண்ணிய புருஷனென விளங்கும், பூர்வ பயனால் தன்னையும் தனக்காதாரச் செயல்களாம் நற்பயனையே பெருக்கி வருதல் மகாமங்களமென்னப்படும்.

சிறந்தகலை நூற்களின் ஆராய்ச்சியிலும் சகலருக்கும் உபகாரியாக விளங்கக்கூடிய பெருமுயற்சியிலும் தன் தேகத்தினால் மற்றோர் தேகத்திற்குத் தீங்குவிளைத்து நோகசெய்யாமலும், தன்னாவினால் மற்றவர்களைக்கொடூரமாக வைது அவர்களைப் புண்படுத்தாமலும், தன்மனதுள் வஞ்சினத்தை நிறப்பி மற்றவர்களுக்குக் கேடுண்டாக்காமலும் இருக்கும் மனோவாக்கு காய திரிகரண சுத்தவாழ்க்கையே மகாமங்களமென்னப்படும்.

மாதாபிதாக்களை ஈன்றவர்கள், வளர்த்தவர்கள், கார்த்தவர்களென்று எண்ணி அவர்கள் விருத்தாப்பியகாலத்தில் ஆனந்தமாக அமுதூட்டி அவர்களுக்கு யாதொரு கவலையுந் தோன்றவிடாமல் ஆதரித்தல் மகாமங்கள மென்னப்படும்.

மனைவிமக்களை விரும்புவோர் நற்கருமவிருத்தியால் சம்பாதிக்கக்கூடிய பொருளை சேகரித்து அதினால் தனது மனைவி மக்களுக்கு யாதொரு குறைவுமின்றி அமுதூட்டி கலைநூல் விருத்தியில் வளர்த்தல் மகாமங்கள மென்னப்படும்.

கல்வியில் விருத்தியடையுஞ் சிறுவர்கள் தங்கள் தாய் தந்தையரை கனஞ்செய்வதுபோல் மற்றுமுள்ள பெரியோர்களையுங் கனஞ்செய்து அவர்களுக்கு வணக்கமுற்று வளர்த்தல் மகாமங்களமென்னப்படும்.

புண்ணியதானஞ்செய்தல், சத்தியதன்மத்தில் நடத்தல், குடும்பத்தை யாதரித்தல், சகலருக்கும் உபகாரியாயிருத்தல், புண்ணியகன்மங்களை விருத்தி செய்யக்கூடிய தொழில்களின் முயற்சியிலிருத்தல், தான் நடத்துந் தொழிலால் தனக்கு உபகாரமாவதுமன்றி ஏனையோர்க்கும் உபகாரமுண்டாகக் கருதிச் செய்தல் மகாமங்களமென்னப்படும்.

எக்காலுந் தனக்குள்ளெழுங் காம, வெகுளி, மயக்கச்செயல்களின் பேரில் நாட்டமாயிருந்து அவைகளை விருத்தியடையவிடாமல் நசித்துவருதல் தனதறிவையும், தனது வித்தையையும், குடும்பத்தையுங் கெடுக்கக்கூடிய மயக்கபானங்களை அருந்தாதிருத்தல் மகாமங்களமென்னப்படும்.

நீதிநெறிகளின் வாக்கியங்களையும், அதின் நடைகளாம் ஒழுக்கங் களையும், அதன் பலன்களையும் நோக்கி நிற்றல், வணக்கத்தையும் ஒடுக்கத்தையுமே கருதுதல் தன்மபோதங்களாகும் ஞானசொற்களை செவிகளில் கேட்க விரும்புதல் மகாமங்களமென்னப்படும்.

சாந்தமும் மிருதுவுமான வார்த்தைகளைப் பேசுதல், சமணகுருக்களின் தெரிசனத்தையும் அவர்கள் நீதிபோதங்களையும் விரும்பியிருத்தல் துக்கந் தோன்றுங்காலங்களிலெல்லாம் தன்மவிசாரிணைப்புரிதல் மகாமங்கள மென்னப்படும்.

உலகப்பொருட்களின் பேரில் அதியவாக்கொண்டு பற்றும் பற்றுக்களை அறுத்து துக்கமற்று, பயமற்று, பிணியற்றும் இருத்தல் மகாமங்கள மென்னப்படும்.

மனத்தையும், வாக்கையும், தேகத்தையுங் காக்கக்கூடிய விரதங்களையும், கொன்றுதின்னாதிருக்கும் நோன்புகளையும் அனுஷ்டித்து அஷ்டாங்க மார்க்கத்தில் நிலைத்து சுகவாரியாம் அலையற்ற கடல்போற்றெளிந்து நிருவாணநிலை பெறுதல் மகாவுத்தம மங்களமென்னப்படும்.

இத்தகைய உத்தமமங்களங்களில் நிலைத்த புருஷனை காமனுங் காலனும் அணுகான் உலகமக்களாலும் அவனை வெல்லமுடியாது சகலகீர்த்திப்பெற்ற பெரியோனாகியும், ஜாக்கிரதையில் நடப்பவனாகியும் இருப்பான். அவனே உலகத்தில் ஜெயசுபமங்களனாவான். என மங்களகரத்தை விளக்கியவுடன் அநாதபிந்தக வாச்சிரமவாசிகள் யாவருமெழுந்து மங்களநாதனைநோக்கி அவலோகிதா! உலகத்திற் தோன்றும் சிற்றின்பச்செயல்கள் யாவும் அவமங்களமென்றும், பேரின்பச்செயல்கள் யாவும் மங்களமென்றுந் தெரிந்துக் கொண்டோம், ஆனந்தநிலையை விண்டோம், சதா சுகங்கண்டோம். இத்தகைய சத்தியதன்மத்தை உணராது அசத்தியதன்மத்தில் நடப்பது அழிவுக் கேதுவென்று தெள்ளற தெளிந்தோம். இவற்றிற்கு யாது கைம்மாறு செய்வோமென வணங்கி நின்றார்கள்.

அவர்களன்பின் வாக்கையும் ஆனந்த நோக்கையுங்கண்ட அருகன் சமணீர்காள்! தங்களுக்குள் மங்களத்தை விரும்பும் அன்பர்கள் தங்களுள்ளத்துள் வஞ்சினம், சூது, குடிகெடுப்பு இவற்றை நிறப்பி வைத்துக்கொண்டு மங்களத்தை நோக்குதல் அவமங்களமேயாம். காமியம், பொறாமெய், கள்ளருந்தலாகியச் செயலினின்று மங்களத்தை நோக்குதல் அவமங்களமேயாம். விரோதசிந்தை, வீண்டம்பம், வெகுளியினின்று மங்களத்தை நோக்குதல் அவமங்களமேயாம். தற்புகழ்ச்சி, தானென்னும் அகம்பாவம், தன்னையறியாது நின்று மங்களத்தை நோக்குதல் அவமங்களமேயாம். தானே சுகிக்கவேண்டும் ஏனையோர் சுகிக்கலாகாதென்னும் எண்ணத்தையும், தானே பிரபுவாக வாழ்தல்வேண்டும் ஏனையோர் பிரபுவாக வாழலாகாதென்னும் எண்ணத்தையும், தானே தக்கவாடையாபரணங்களை அணைதல் வேண்டும் ஏனையோர் அணையலாகா தென்னும் எண்ணத்தையும், தானே சகலகலை பண்டிதனாக விளங்க வேண்டும் ஏனையோர் பாண்டித்தியம் அடையலாகாதென்னும் எண்ணத்தையும், இதயத்தில் நிறப்பிக்கொண்டு மங்களத்தை நோக்குதல் அவமங்களமேயாம்.

களவுச்செயல் மிகுத்தவனைக் கள்ளனென்றும், லோபச்செயல் மிகுத்தவனை லோபி என்றும் அழைப்பதுபோல் மங்களச் செயல் மிக்கோனை ஜெய மங்களனென்றும் அழைப்பார்கள்.

இத்தகைய மங்களமானது சுகச்செயலாலும், அன்பின் மிகுதியாலும் விளங்குமேயன்றி வாழைக்குமுகை நாட்டுவதாலும், வாத்தியகோஷங்களாலும் விளங்கமாட்டாது.

ஒருநாள் ஒருவன் வாயலில் மணப்பறை அடிக்கின்றான். அதே வாயலில் மறுநாள் பிணப்பறை அடிக்கின்றான். இவ்விரு சுபாசுபச்செயல்களில் எவற்றை மங்களமென்னலாம் எவற்றை அமங்களமென்னலாம். சுபம் அசுபமென்பதும், இறப்பு பிறப்பென்பதும், நித்திறை விழிப்பென்பதும், வேண்டுதல் வேண்டாம் என்பதுமாகிய துவித பாபங்களற்ற நிலையே நித்திய வாழ்க்கையாகும் ஜெயசுபமங்களமென்னப்படும்.

இத்தகைய மங்களத்தையே மணமெனக்கருதி மனக்களிம்பற்று மகாநிருவாணம் பெருகுகவென ஆசிகூறிப் போய்விட்டார்.

26. உபதேச காதை

புத்த பகவான் இராஜமாகிரஹத்திலுள்ள கழுகுமலை உச்சியில் தங்கியுள்ளபோது ஆனந்தனைநோக்கி யாவரும் ஒன்றுகூடுங்கள் என ஆக்கியாபித்தார்.

ஆனந்தன் பகவனது வாக்கை ஏற்று யாவரையும் வரவழைத்தபின் பிக்ஷு குழாங்களைநோக்கி போதிக்கத்தொடங்கினார்.

ஓ! சகோதிரர்களே! சகோதிரர்கள் ஒருபெருத்த கூட்டங்களில் சந்திக்கும்போது ஒன்றாக யாவரும் கூடி சந்தியுங்கள். உட்காரும்போது யாவரும் ஒன்றாக உட்காருங்கள். எழுந்திருக்கும்போது யாவரும் ஒன்றாக எழுந்திருங்கள். சங்க நிபந்தனைகளை நிறைவேற்றும்போது யாவரும் ஒன்றாக நிறைவேற்றுங்கள். தம்மசாஸனத்தில் கூறியுள்ள சத்தியங்களில் ஒன்றை

வீரியத்துடன் நிறைவேற்றி அதன்படி நில்லுங்கள். கண்டசத்திய நிலையை மட்டும் ஒருவருக்கொருவர் ஒன்றாக சம்பாஷித்துக் கொள்ளுங்கள். அதன்பின் இரண்டாவது சத்தியத்தை இடைவிடாது விசாரியுங்கள். சகோதிரர்களில் ஒருவர் நான்குவித சத்தியங்களைப் பூர்த்தி செய்துவருபவராவது இருப்பார்களாகில் அவரை அணுகி ஒன்றாக சம்பாஷித்து அவரைப்போல் ஒவ்வொருவரும் கடைத்தேறுவதற்காக ஒன்றாக சென்று விசாரிணைப் புரியுங்கள். ஒவ்வொருவர்களிடமும் எழும் ரூப ஆசைகளை யாவரும் ஒன்றாக நின்றுவிலக்குங்கள். எழும்பிய ரூப ஆசைகளை விசாரணையால் தடுத்துவிடுங்கள். இனி எழா வண்ணம் ஜாக்கிரதையாயிருங்கள். ஒவ்வொரு வரிலும் பரிசுத்த ஞானம் விளங்குமென யாவரும் ஒன்றாக நினைந்து அவர்களில் பெரியோன் எப்போது தோன்றுவாரென சதா ஒவ்வொருவரும் ஒன்றாக சிந்தித்துக்கொண்டிருங்கள். அப்படி தோன்றுவாராயின் அவரையே ஒரு உதாரணமாக வைத்துக்கொண்டு ஒவ்வொருவரும் ஒன்றாகவே சதா விசாரணையுள்ளவர்களாயிருங்கள்.

முத்திபேறு பெருமளவும் சற்றும் சலியாது விடாமுயற்சியாயிருந்து முடிக்கவேண்டிய பிரயாணத்தை முடித்துவிட்டு சேரவேண்டிய இடமாம் நிப்பாணத்தில் யாவரும் ஒன்றாகசேர பிரயத்தனப்படுங்கள்.

ஓ! சகோதிரர்களே! சத்தியதன்மத்தையே உடையாகக்கொண்ட சகோதிரர்கள் வேறு தொழில் புரியாதிருங்கள். பல விஷயங்களில் தலையிடாதிருங்கள். பொருள் சேகரிக்கவேண்டிய யாதேனும் தொழில்களைப் புரியாதிருங்கள். பிரயோசனமற்ற சம்பாஷணைகளைச் செய்யாதிருங்கள்.

சோம்பலுக்கு இடந்தராது சதா முயற்சியுடையவர்களாயிருங்கள். பாப அவாக்கள் அடிக்கடி உங்களை ஏமாற்றவரும் அக்கால் ததாகதர் எந்தெந்த அவாக்களை எந்தெந்த தியானத்தால் சுத்தீகரித்தனரென போதித்துள்ள தியானங்களை யூகித்து தியானியுங்கள்.

சகோதிரர்களில் ஒருவர் நிப்பாணமார்க்கத்திற்கு முதற்படியாம் ஸ்ரோதாபதி மார்க்கத்தில் சித்திபெறுவாராகில் அவ்வளவுடன் திருப்தியடையாது அதற்குமேற்பட்ட ஸகிர்தாகாமி மார்க்கத்தையும் பெற முயற்சியாம் தியானத்திலிருக்கட்டும் இரண்டாம் மார்க்கமாம் ஸகிர்தாகாமி மார்க்கத்தில் சித்திபெற்றவுடன் மூன்றாம் மார்க்கமாம் அநாகாமி மார்க்கத்தை நாடிதியானிக்கட்டும். அநாகாமி மார்க்கத்தில் சித்திபெற்றவுடன் நான்காம் மார்க்கமாம் அறஹத்து மார்க்கத்தை நாடி தியானித்து நிப்பாணமாம் பரிசுத்தநிலையை அடையும்வரையும் விடாமுயற்சியுடன் முடிக்கும்படி தூண்டுங்கள், இதயத்தை சுத்திசெய்வதே உங்களது தொழிலென நினையுங்கள், பாபகன்மங்களுக்கு அஞ்சுங்கள், மனசுருசுருப்புள்ளவர்களாயிருங்கள், வீரியமுள்ளவர்களாயிருங்கள், சத்தியத்தையே துணையாகத் துணைக் கொள்ளுங்கள், சீலம், ஸமாதி, பிரக்ஞாவென்னும் மார்க்க சத்தியத்திலடங்கிய அஷ்டாங்கமார்க்கத்தின் உண்மெய்களைக்கண்டறிந்து தியானசித்திபெற்று நிப்பாணசுகத்தை அடையுங்கள்.

ஓ! சகோதிரர்களே! சகோதிரர்கள் ஒருவருக்கொருவர் அன்பானவர் களாகவும், மனோசுத்தம், வாக்குசுத்தம், காயசுத்தமுள்ளவர்களாயும் அந்தரங்கத்திலேனும், பஹிரங்கத்திலேனும் யாதொரு குற்றமும் செய்யாதிருப் பவர்களாகவும், உட்காரும்போதும், எழுந்திருக்கும்போதும் நடக்கும் போதும் அன்புமயமாக உட்காருங்கள், அன்புமயமாக எழுந்திருங்கள் அன்புமயமாகவே நடவுங்கள். உட்காரும் போதும், எழுந்திருக்கும்போதும், நடக்கும் போதும் பற்றுக்களை அறுக்கும் விஷயத்திலேயே சிந்தனை உடையவர்களாய் உட்காருங்கள். பற்றுக்களை அறுக்கும் விஷயத்திலேயே சிந்தனை உடையவர்களாய் எழுந்திருங்கள். பற்றுக்களை அறுக்கும் விஷயத்திலேயே சிந்தனை உடையவர்களாய் நடவுங்கள். சகோதிரர்கள் இவ்விதமாக அந்தரங்கத்திலும், பஹிரங்கத்திலும் தினேதினே இடைவிடாது சாதனத்தாலும் புத்த தர்ஸனம் காணும் வரையில் புத்த ஒளியை உங்களில் பெறும்வரையில்

இடைவிடாது சாதியுங்கள். இவ்விதமான பரிசுத்த ஞானவிசாரிணையால் நீங்கள் பிறவி என்னும் சக்கரத்தில் சிக்காது தப்பித்துக்கொள்ளுவதுமன்றி துக்கத்தினின்று விடுபெற்று நீங்கள் கண்டகாட்சியை ஏனைய சகோதிரர்களுக்கும் வழிகாட்டிகளாகிய ஒளிப்போன்றிருப்பீர்கள். துக்கமற்று சுகம்பெறுவீர்கள். நிப்பாணமென்னும் கரைசேருங்களென பகவன் போதனையை நிறுத்தினார். பிக்ஷு குழாங்கள் பகவனை முறைப்படி வந்தனை வழிபாடு செய்தனர்.

27. சுகவர்க்க காதை

பகவன் உலகெங்கும் சுற்றி சத்தியதன்மத்தைப் போதித்து மக்களுக்கு சுகவழிகளையூட்டி அஹிம்சா தன்மத்தை நாட்டிவருங்கால் இராஜகிருகத்துக்கடுத்த ஓர் குக்கிராமத்திற்குச்சென்று அங்குள்ள ஓர் மரத்தடியில் உட்கார்ந்து உள்விழிபார்வையாம் மௌனத்தில் லயித்து ஏழுநாள்வரையில் கண்திரவாமலும், மூச்சோடாமலும் இருக்கக்கண்ட அக்கிராமவாசிகள் திடுக்கிட்டு ஓ! ஓ! இச்சிறமணர் இறந்துவிட்டாரென்று கருதி இவரது தகப்பன் மண்முகவாகுவை இவரெப்படி கட்டைகளை அடுக்கி தகனஞ்செய்துவிட்டாரோ அதுபோல் இவரையும் நாம் தகனஞ்செய்துவிடலாம் என்று எண்ணிக் கட்டைகளை அடுக்கி இவரை வளர்த்தி தீயினை மூட்டிவிட்டார்கள். கட்டைகள் எறிந்து தணிந்தும் இவரது தேகத்திற்கு யாதொரு தீங்குமின்றி மறுபடியும் அம்மரத்தடியில் போய் உழ்க்கார்ந்துகொண்டார். அதனைக்கண்ட அக்கிராம வாசிகள் யாவரும் பயந்து மும்முறை வணங்கி ஐயனே! தங்களை ஏதோ மகத்துவம் பெற்றப் பெரியோரென்று அறியாது தணலை மூட்டிவிட்டோம். யாங்களறியாமல் செய்தச் செயல்களை மன்னித்து ரட்சிக்க வேண்டுமென் றிரைஞ்சினார்கள்.

அவற்றை வினவிய மாதவன் கிராமவாசிகளைநோக்கி திருவாய்மலர்ந்து அன்பர்களே! நிருவாணம் பெற்ற ததாகதர் கோபமுள்ளோர் மத்தியில் கோப மில்லாமலும், காமமுள்ளோர் மத்தியில் காமமில்லாமலும், துக்கமுள்ளோர் மத்தியில் துக்கமில்லாமலும், பற்றுள்ளோர் மத்தியில் பற்றில்லாமலும், மரணமுற்றோர் மத்தியில் மரணமில்லாமலும், நித்தியநிலையில் இருப்பவராதலின் நெருப்பின் சுடுகையும், நீரின் குளிர்ச்சியும், வாயுவின் மோதலுமோர் தீங்குஞ்செய்யாதென்று கூறிய அமுதவாக்கைக் கேட்டுணர்ந்த கிராமவாசிகளில் சில விவேகிகள் முயன்று சத்தியசங்கத்தை நாட்டி ததாகதரின் தன்மோபதேசம் பெற்று சமணநிலையுற்று சத்துவசாதனத்தில் நிலைத்து விட்டார்கள்.

மணிமேகலை

எண்ணருஞ் சக்கரவாள மெங்கணும் / அண்ண லறக்கதிர் விரிக்குங்காலை

சூளாமணி

சாதுயர் நீக்கிய தலைவன் றவமுனி / சங்க தருமன் றாமெக் கருளிய

திரிமந்திரம்

அற்றார் பிறவி யவரிரு கண்களை / வைத்தார் புருவத்திடையே பார்க்க
வொத்தே யிருக்க வுலகெலாந்தோன்றும் / எத்தாலுஞ் சாவில்லை யிறைவனாமே.

இடைக்காட்டு சித்தர்

சாவாதிருந்திடப் பால்கற / தன்னிலிருந்திடும் பால்கற

ஔவை குறள்

சாகாதிருந்த தலமே மவுனமது / ஏகாந்தமாக விரு
மறவா நினைவா மவுனத்திருக்கில் / பிறவா றிறவார் பினை
இதுமுத்தி சாதன மென்றேட்டில் வரைந்து / பதித்து வைத்தனன் குருபார்

தாயுமானவர்

சுந்ததமும் வேதமொழியா தொன்றைப் பற்றினது / தான்வந்து முற்று மெனலால்
சுகமீதிருந்தாலு மரணமுண்டென்பது சதா / நிஷ்டர் நினைவதில்லை.

மச்சமுனியார்

இறந்து போனவர்க் கென்ன மெஞ்ஞானங் காண்,
யேச்சி யேச்சி யிகத்துள்ளோர் தூஷிப்பார்.

28. பரிநிருவாண காதை.

பகவன் பின்னர் ஆனந்தரைப்பார்த்து ஆனந்தா! புறப்படுவோம் வாவென அழைக்க, ஆனந்தன் பகவன் பின்தொடர்ந்தான். பகவன் பெருத்த பிக்ஷு குழாங்களுடன் புறப்பட்டுச்சென்று அங்குள்ள பாவதரிக்காமாமரத்தோப்பில் தங்கினார்.

சீவகசிந்தாமணி

எரிமிடைத்தனையமாலை இனமணி திருவில்வீசுந்
திருமுடி யாரமார்பிற்சேணிபனென்பநாம
மருமுடி மன்னர்சூழ வலரனிபிண்டிவேந்தர்
திருவடி விருந்துசெய்வான் நிரண்முர சறைவித்தானே.

அருங்கலைச்செப்பு - குணசேணிபன் விருந்து

தானந்த ராஜகிரி தனபதிக்கோரைங்காத
மானந்த புரியடைந்தான் ஆன். கணநாதன் வந்தமைந்த
காட்சிதனைக்கண்டான்
குணசேணிபனென்னுங்கோன்
அருந்தவத்தோன்றன்னை அணுகி அடிபணிந்து
விருந்தோம்ப நின்றான் செவ்வேள்
அவ்விருந்தோமிக்க வரியவிருந்தானும்
பவ்விருந்தலீதானே பழி
பழியேற்றான் மன்னன் பாரோர்கள் தூற்றுகரி,
இழிவேற்றான் பன்றியெனுமேர்
கூர்கழங்கின் கூட்டுங் குமுதமுதச் சோறும்
சேர்த்தளித்த சேணிபனார் தூர்
அறியாதார் பன்றி என்றாரங்குணர்ந்தோர் கூரென்றார்
நெறியாயார் நின்றழிந்தார் நேர்.
நெறி நின்றார் மாயணத்தார் நெறியற்றா ரீணணத்தார்
பொறியற்றார் போதத்தவர்

இராஜகிருகத்திற்கு ஐங்காத வழியிலுள்ள ஆனந்த புரியென்னும் குஷீ நகரமாந்தோப்பில் பகவன் வந்திருக்கின்றாரென்றறிந்த குணசேணிபன் என்னும் அரசன் புத்தபிரானிடம் சென்று சாஷ்டாங்க தெண்ட மும்முறையிட்டெழுந்து தேவாதி தேவா திவாகரபாவா, மூவாமுதல்வா, முத்திக்கிறைவா, காட்சிக்கதிபா, கருணையோருருவா, சூட்ச சுகுணா, சுந்தரவதனா, ஆதிமூலா, அன்பின் முந்நூலா, வேத முதல்வா, வித்தைக்கதிபா, அருங்கலைநாதா, ஆனந்த பூதாவென்று துதித்து ஐயன்மீர் எமதில்லத்து விருந்திற்கெழ வேண்டுமென்று வருந்தினான்.

அவனது வருந்துதலுக்கு தங்கிய பகவன் விருந்தோம்பி யெழுந்து மறுபடியும் கங்கைக் கரையணுகி தனதாதியடியார் ஆனந்தனையும் பிருங்கியையும் அருகில் அழைத்து பரிநிருவாணத்தை விளக்குகைக்கு சகலதேச சத்திய சங்கத்தோர்களையுந் தருவிக்குமாறு உத்திரவளித்தார்.

ஆனந்தன் பிருங்கி யென்னும் ஆதிசீடர்கள் வரலாறு

சக்கிரவர்த்தித் திருமகன் சித்தார்த்தர் பிறந்த காலத்தில் ஆகாயத்திலும் பூமியிலும் அனந்த அற்புத காட்சிகள் தோன்றியதுடன் கன்று ஈணாத ஓர் காராம் பசுவானது வந்து குழவிக்கு பால் சுறந்தூட்டியதும்., அன்றுமுதல் பசுக்களை யாதொரு துன்பமுஞ்செய்யாது ஆதரிக்கவேண்டுமென்று தார்வேந்தன், ஆக்கியாபித்ததுமாகியப் பேரானந்த செய்திகளைக் கேட்டிருந்த ஆனந்தனும், பிருங்கியும் நடக்க சக்தி யற்ற சப்பாணிகளாயிருந்தும் காராம்பசுவின் பாலருந்திய கௌதமரை தரிசிக்கவேண்டுமென்னும் அன்பின் மிகுதியால் தவிழ்ந்துகொண்டே சென்று தெரிசித்து தள்ளாடி நடக்கப்பெற்றவர்கள் அரசமரத்தடியில் ஐயன் நிருவாணம் பெற்றது முதல் பரிநிருவாணம் வரை அவரை அடுத்து அருகினின்றே ஊழியஞ் செய்து வந்தவர்களாகும்.

அவ்விருவரும் அவலோகிதர் மொழியைக் கேட்டவுடன் சத்திய சங்கத்தோர் யாவருக்கும் ஐயன் பரிநிருவாணகாலத்தைத் தெரிவிக்க சகலசங்க சமணர்களும் அறஹத்துக்களும் வந்து சேர்ந்தார்கள்.

அவர்கள் யாவரையுங்கண்ட அறவாழியான் ஆனந்தமுமகமலர்ச்சியுடனின்று சகோதிரர்களே! ததாகதர் பரிநிருவாணம் அடையுங்காலம் நெருங்கிவிட்டபடியால் நீங்கள் ஒவ்வொருவரும் அதன் அந்தரங்க ஒளியின் பிரிவையும் அதன் சுகத்தையுங் கண்டுகளித்து பிறவியையறுத்து நித்திய வாழ்வில் நிலைப்பீர்களாக.

இந்த சத்தியதன்மமானது நாளுக்குநாள் அசத்தியர்களாலும், அசப்பியர்களாலும், சோம்பேரிகளாலும் மாறுதலடைந்தபோதி னும் சத்திய தன்ம போதகர்களால் நாளுக்குநாள் நித்தியர்கள் தோன்றி பிறவி சமுத்திரத்தைக் கடந்து கரைசேருவார்கள்.

சீவகசிந்தாமணி

பிண்டியின் கொழுநிழற் பிறவி நோய்கெட
விண்டிலர் கனைகதிர் வீரன் தோன்றினா
னுண்டி வணறவமிர் துண்மினோவென
கொண்டன கோடனை கொற்றமுற்றமே.

ததாகதர் பிறவியால் உண்டாம் பிணியைக் கண்டார் துக்கித்தார், பிணியின் நிறைவால் நரைதிறை என்னும் மூப்பை கண்டார் துக்கித்தார், மூப்பின் மிகுதியால் மரணத்தைக் கண்டார் துக்கித்தார், பிறவியால் உண்டாம் பிணி, மூப்பு, சாக்காடென்னும் அநித்தியத்தைக்கண்டு அதற்கெதிரடையாய நித்திய மிருக்கவேண்டுமென்று நிதானித்தார், இராகத்துவேஷமோகங்களை ஜெயித்தார், பற்றற்றார், நிருவாணம் பெற்றார், அந்நிருவாண பலனே, உபத்திரவமாம் பிணியை ஜெயித்தார், நரைதிறை காணும் மூப்பை ஜெயித்தார், பஞ்ச அவத்தையால் மாளும் மரணத்தை ஜெயித்தார், பிறவியற்றார், அவ்வழியே நீங்களுஞ்சென்று பிணி, மூப்பு, சாக்காடென்னுந் துன்பங்களை செயித்து சுகம்பெறுவீர்களாக.

சீவகசிந்தாமணி

வேட்டெனபெறாமை துன்பம் விழைநரைப் பிரிதருன்பம்
மோட்டெழி லிளமெய் நீங்கி மூப்புவந்தடைத ருன்பம்
வேட்டெழுத் தறிதலின்றி யெள்ளற்பாடுள்ளிட்டெல்லாஞ்
சூட்டணிந் திலங்கும் வேலோய் துன்பமே மாந்தர்க்கென்றான்.

முன்வினைக்கீடாய் பிறக்கும்போதே கா கூ என்னும் அழுகையுந் துக்கமுந் தோன்றி வளர்ந்து காலபேதங்களாலும் புசிப்பின் பேதங்களாலும் வினைக்கீடாய் பிணிகள் தோன்றி துக்கத்தை அநுபவிப்பதும் பிணி தோன்றியுள்ளோன் மாதுருவும் பிதுருவும் உடன்பிறந்தாரும் அத்துக்கத்தை அநுபவிக்கவுமாகத் தோன்றுவதும் வினையின் பயனேயாகும். அப்பிணிகளின் மாறா பெருக்கத்தால் தேகந் தளர்ந்து நரைதிறையாம் மூப்பு வந்தடைவதாகும். மூப்பு முதிர்ந்து தளர்ந்தவுடன் தான் துக்கித்து தள்ளாடுவதுடன் தனது பந்துக்களுந் துக்கிப்பர். மூப்பால் முதிர்ந்து தளர்ந்து மரணவத்தை வருங்கால் பாசபந்த பற்றுக்கள் ஓர்புறமிழுக்க பஞ்ச அவஸ்த்தையின் துன்பம் மேலும் மேலும் பெருக்க இருளடைந்து இறக்கின்றான். இத்தகையாய் மாறிமாறி பிறக்கும் பிறப்பேதுன்பத்திற்கு ஆளாக்கும். பிறவாமலிருப்பதே பேரின்பத்திற்கு உள்ளாக்கும்.

சீவகசிந்தாமணி

பிரிதலும் பிணியும் மூப்புஞ் சாதலும் பிறப்புமில்லா
வரிவையைப் புல்லியம்பொனணிகிளர் மாடத்தின்றேன்
சொரிமது மாலைசாந்தங்குங்குமஞ் சுண்ணந் தேம்பாய்
விரிபுகை விளக்கு விண்ணோ ரேந்தமற்றுரையுமன்றே

மணிமேகலை – தீவினைக்கேடு

தீவினை என்பது யாதென வினவினாய்
தொடி நல்லா யாங்கது கேளாய்
கொலையே களவே காமத் தீவினை
அலையா துடம்பிற் றோன்றுவ மூன்றும்
பொய்யே குறளை கடுஞ்சொற் பயனில்
சொல்லே சொல்லிற் தோன்றுவ நான்கும்
வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சி

என்றுளந்தனி உருப்பன மூன்றதும்
பத்தும் வகையாற் பயன்றெரி புலவ
ரித்திரம்படார் படர்குவராயின்
விலங்கும் பேயும் நரகருமாகி
கலங்கிய உள்ளக் கவலையில் தோன்றுவர்.

நல்வினைப்பயன்

நல்வினை என்பதியாதென வினவிற் / சொல்லிய பத்தின் தொகுதியு நீத்துச்
சீலந்தாங்கி தானந்தலைநின்று / மேலெனவகுத்த வொருமூன்று திறத்துத்
தேவரு மக்களும் பிரமருமாகி / மேவிய மகிழ்ச்சி வினைப்பயனுகர்வர்.

பிறப்பதே துன்பத்திற்கு ஆதாரமாகவும் பிறப்பற்றிருப்பதே இன்பத்திற்கு ஆதாரமாகவும் இருப்பதால் ஆசை என்னும் பற்றுதலே பிறப்பிற்கு மூலகாரணமாக விருந்து துன்பத்திற்கு உள்ளாக்குகின்றது. ஆசையாம் பற்றுக் களற்றவிடமே பிறப்பறுதலுக்கு மூலகாரணமாக இருந்து பேரின்பத்திற்கு உள்ளாக்குகின்றது. அப்பேரின்ப நிலையே சுகவாரி என்னப்படும். அச்சுகவாரி யில்லயிப்பவனே பிறவிக்கடலை நீந்தியவனாவன். அவனே சதா விழிப்புள்ள வனும் நித்தியசீவியுமாகி சம ஆதியாம் ததாகதரை என்றுந் தரிசிப்பான்.

பட்டினத்தார்

நீற்றைப்புனைந்தென்ன நீராடப்போயென்ன நீமனமே,
மாற்றிப்பிறக்க வகையறிந்தா இல்லை மாமறைநூல்,
ஏற்றிக் கிடக்குது ஏழுகோடி மந்திரமென்னகண்டாய்,
ஆற்றிற்கிடந்துந் துறைதெரியாமல் அலைகின்றையே.

அருங்கலைச்செப்பு - பரிமுத்திப்பத்து

புளிகாயின் பற்றுபோல் பற்றாதது பழம்போல, வெளி காண்டல் பரிமுத்தியாம்.
புழுபோல் உலாவி புலனடக்கி விட்டில்போல், வழிபோதல் பரிமுத்தியாம்.
இன்பமும் துன்பமும் இரண்டற்றுருவெளியாய், அன்புறுதல் பரிமுத்தியாம்.
வேண்டுதல் வேண்டாம் இரண்டற்றுருவெளியாய், காண்டற் பரிமுத்தியாம்.
அகண்டத்துருவொளியா அவனியில் காலூன்றா, துகன்றப் பரிமுத்தியாம்.
புட்பம் வேறாக மணம்பிரிக்கும வாறுபோல், உட்பறலே பரிமுத்தியாம்
என்றுங் கெடாத இதயப் பிரகாசமணி, அன்றே பரிமுத்தியாம்.
கருணாகர மிகத்தோர்க்காணும் ஒளிகாட்சி, பொருளாம் பரிமுத்தியாம்.
அறம் பொருளாமின்பா லிருபிறப்பானாதல், மறமவித்த பரிமுத்தியாம்.
மாற்றிப்பிறக்க வகை அறிந்தோன் மானிலத்தோர்ப், போற்றும் பரிமுத்தியாம்.

இத்தகைய நித்தியதரிசனத்தை விரும்புவோர் சத்தியதன்மமாரம் நல்வாழ்க்கை, நல்லூக்கம், நற்கடைபிடி, நல்லுணர்ச்சி, நல்வாய்மெய், நற்காட்சி யினின்று கருணையை பெருக்கிக்கொள்ளுவோரே தண்மெயாம் உள்ளொளி திரண்டு மாற்றிப்பிறக்கும் வகை தேடுவர். இவர்களுக்கே தேவரென்றும் பிரமரென்றும் சிறப்புப்பெயர் தோன்றுவதன்றி நிருவாணம் பெற்றோரென்றும் இரவு பகலற்றோரென்றும் அவர்களது அநுபவக்காட்சியால் கூறப்படும். தாய்வயிற்றினின்று பிறக்கும் பிறப்பொன்றும், அநித்திய வனாத்தும நிருவாண முற்று தன்தேகத்தினின்று சுயஞ்சோதி ஒளிதோன்றும் பிறப்பொன்றும் ஆகிய விருபிறப்படைவதே பரிநிருவாணமென்றுங் கூறப்படும்.

சங்கறர் தனது அந்தியகாலப் பரிநிருவாணப் பரிபக்குவத்தைச் சொல்லி வருங்கால் அவ்விடம் வந்து சேர்ந்துள்ள அறஹத்துக்களும் சமணமுனிவர் களும் இருகரங்கூப்பி எழுந்து அறஹத்தோ அறஹத்தோ என்று வணங்கி தேவாதிதேவா! உமது அமுதவாக்கால் சாரணர்கதியாம் சரணாகதி அறிந்தோம். துக்கநிலை ஒழிந்தோமென்று ஆனந்தகோஷஞ்செய்யுங்கால் ஆனந்தனெழுந்து அருகன் திருவடியில் மும்முறை வீழ்ந்து ஒப்பிலா அப்பனே! உலகத்தில் தோன்றியுள்ளப் புருஷர்களில் உம்மெய்விட புருஷ உத்தமன் ஒருவருமில்லை என்றும் உலகெங்கும் கொண்டாடத்தக்க அருகனும் அன்பே ஒருருவாகத் தோன்றியவண்ணலும் கருணையே ஓர் குருமுகூர்த்தமாக அமைந்தகாட்சியும் அமுதவாக்கியமே நீதியின் பாதையுமாய் அமைந்த அண்ணல் பரிநிருவாண மடையுங்காலம் ஈதென்பதால் உடல் நடுக்கமுறுகின்றது, உள்ளம் பதருகின்றது, காரணமோ என்னில் கருணாகரனின் காட்சி மறைந்துபோமாயின் யாரை தெரிசிப்போம் யார்பால் அறவுரைக்கேட்போமென்று அவலோகி தரடிபணிந்து கவிழ்ந்துக் கொண்டான். ஆனந்தனின் கருத்தறிந்துகொண்ட அறவாழியான்

புன்னகைக்கொண்டு ஆனந்தா! நீரிதுகாரும்கேட்டு வந்த அறவுரையின் பலன் இதுதானோ. தோற்றும் பொருட்கள் யாவும் கெடுமென்பதை கேட்டிலையோ, கண்ணாறக் கண்டறிந்திலையோ பயிரங்கமாக தோற்றவுருவம் பாசபந்த பற்றுக்குள்ளாகி வாணமென்னும் ஆசைக்கயிற்றால் கட்டுண்டிருக்கும் அளவும் பிறவி என்னும் சமுத்திரத்தைக் கடவாது இராகத்துவேஷமோக வலைகளால் பிடிபட்டு பிணி மூப்புச் சாக்காடென்னும் அவத்தையுண்டு இறப்பதும் பிறப்பதுமாகிய துக்கத்தையே அநுபவித்துவருவான்.

தோற்றாதுலவும் அந்தரங்கமாம் உள்ளமானது பாசபந்தக் களிம்புகளற்று ஆசைக்கயிறுகளை அறுத்து நிருவாணம் பெற்றபோது காமவெகுளி மயக்கங்களடங்கி அலையற்ற கடலாம் சுகவாரியில் நிலைப்பன். அந்நிலையை வாய்த்தவன் பிறவிப் பிணி மூப்பு சாக்காடென்னும் அவத்தையை ஜெயித்துக் கொண்டவனாதலின் இறப்புப் பிறப்பற்ற சுகநிலையும் இரவுபகலற்ற வொளிநிலையில் நின்று சகலவுலகங்களையும், சகல சீவர்களின் எண்ணங்களையுந் தனது களங்கமற்ற உள்ளக்கண்ணாடியால் உணர்ந்து உலக மக்களுக்கு நீதியின் சுகங்களையும் அநீதியின் கேடுகளையும் விளக்கி தான் பெற்ற சுகநிலையைத் தனது அன்பின் பெருக்கத்தால் ஏனைய மக்களும் பெறும்படிச் செய்வான். இதுவே நிருவாணம் பெற்றோன் அடையாளமென்று கூறிவருங்கால் மறுபடியும் ஆனந்தன் மாதவனின் பாதத்தைப் பற்றிக்கொண்டு ஐயனே! நீவிர் பரிநிருவாணமுற்றபின்பும் தமது தரிசனம் கிட்டுமோ கிட்டாதோ அதனை விளக்கி ஆட்கொள்ளவேண்டுமென்று இரைஞ்சினான்.

ஆனந்தா, நரர்களின் கூட்டுரவும், செயலும், தோற்றமும் நரர்களுக்கே விளங்காது மக்களுக்கு விளங்கும். மக்களின் கூட்டுரவும் செயலும் தோற்றமும் மக்களுக்கே விளங்காது தேவர்களுக்கு விளங்கும்.

அதாவது விவேகமற்றோர் செயலை அற்ப விவேகிகள் அறிவர். அற்ப விவேகிகளின் செயலை மிகுவிவேகிகளறிவர். ஆதலின் விவேக மிகுத்தோர் செயலையும் தோற்றத்தையும் விவேகமிகுத்தோர்களே அறிவர். அவ்விவேக மிகுத்தோர் தங்கள் விவேக மிகுதியால் வாணமென்னும் பாசபந்தக் கயிறுகளற்று நிருவாணமாம் பற்றற்றபோது களங்கமற்ற இதயமுடையவர்களாய் சுயம்பிரகாச உருவாய் கருணை ஒளி என்றும், சாந்த ஒளி என்றும், அந்தர் அங்கமென்றும், உண்மெய் என்றும் அழியா உரு என்றும், தன்மகாயமென்றும், சத்திய உருவமென்றும், நித்தியரூபமென்றும், கொண்டாடப்பெற்றோர் தேவரென்றும், பிரமரென்றும் கொண்டாடும் ஏழாவது தோற்றமாவர்.

எக்காலுமுள்ள பூமியினின்று தோற்றும் புற்பூண்டுகள் முதற்றோற்ற மாகும். புற்பூண்டுகளினின்று தோற்றும் புழுக்கீடாதிகள் இரண்டாவது தோற்றமாகும். புழுக்கீடாதிகளினின்று தோற்றும் மட்சம் பட்சிகள் மூன்றாவது தோற்றமாகும். மட்சம் பட்சிகளினின்று தோற்றும் ஊர்வன தவழ்வனங்கள் நான்காவது தோற்றமாகும். ஊர்வன தவழ்வனங்களினின்று தோற்றும் மிருகர் நரர்கள் ஐந்தாவது தோற்றமாகும். மிருகர் நரர்களின்று தோற்றும் மக்கள் மனுக்கள் ஆறாவது தோற்றமாகும். மக்கள் மனுக்களினின்று தோற்றும் தேவர், பிரமர் ஏழாவது தோற்றமாகும்.

இவ்வெழுவகைத் தோற்றமாம் எழுபிறப்புந் தீதெனக் கண்டோர் தாய் வயிற்றிநின்று பிறந்த பிறப்பொன்றும், தேகத்தினின்று சுயபிரகாச ரூபமாய்ப் பிறக்கும் பிறப்பொன்றும், ஆகிய இருபிறப்பால் மாற்றிப்பிறப்பதே பரிநிருவாண மென்னப்படும். ததாகதர் தான் கண்ட காட்சியை உலகத்தில் தோன்றியுள்ள சகல மக்களுக்கும் விளக்கிப் பூர்த்தி செய்து சத்திய சங்கங்களை நிலைக்க நாட்டிவிட்டபடியால் பூர்த்தியுற்று மாற்றிப் பிறக்கும் பரிநிருவாண காலத்தை சகலருக்குந் தெரிவித்து தெய்வநிலை பெற்றோர் தெரிசித்து ஆனந்த பூர்த்தியினிலைக்கவும், மக்கள் நிலை வாய்த்தோர் முன்னோக்கி ஈடேறும் வழி தேடவும் உள்ள சுகவழிகளை விளக்கப் போகின்றார். அவ்வழி நடந்து பிறவியின் சமுத்திரத்தைக் கடக்க முயலாது இராகத்துவேஷ மோகமென்னும் அலைகளால் மொத்துண்டு இறப்புப் பிறப்பென்னும் துக்கத்தில் வதைந்து

இருளடைந்திருப்போருக்கு ததாகதர் தெரிசனங் கிடைப்பது அரிதாகும். ஆதலின் ஆனந்த பூர்த்தி அடையவேண்டுமாயின் உம்மெய் நீர் தெரிசித்து உள்ளக்களங்கைப் போக்கிக்கொள்ளுவீராக.

உமதுள்ளக் களங்கமாம் மனமாசு கழுவியவிடத்து களங்கமற்றக் கண்ணாடியாம் சுத்த இதயத்துள் மக்களுக்குத் தோற்றும் பொருட்களும் தோற்றா பொருட்களும், ரூபகாயங்களும், தன்மகாயங்களும், புறமெய்களும், உண்மெய்களும், பயிர் அங்கங்களும், அந்தர் அங்கங்களும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும்.

ஆனந்தா, ஒவ்வொரு சீவராசிகளும் அதனதன் நல்வினைச்செயலால் நாளுக்குநாள் உயர்ந்துகொண்டேவந்து மக்களாம் மனுக்களென்னும் பேர்பெறுவது மிக்க மேலாயதாகும். அம்மனுக்களில் ஒருவராய நீவிர் தேவரென்னும் உயர்நிலைப் பெறுவழியைநாடாது ததாகதரை நாடுவதால் யாது பயன். ததாகதரோ வழிகாட்டியாவர். அவ்வழி நடந்தோர் முத்திரைக் கரையாம் நிருவாணம் பெற்றோராவர். அவர்களே மனுக்களில் உணர்ந்து தெய்வநிலைப் பெற்றவர்களாகும் இவர்களையே ஏழாவது தோற்றமென்றுங் கூறப்படும்.

ஒவ்வோர் சீவராசிகளின் தோற்றங்களை அழிக்காமலும், அதன் உயர்வு நிலைகளைக் கெடுக்காமலும், அதன் சாந்தநிலைகளைக் கொறூரப் படுத்தாமலும் முன்னேறச்செய்வதே முநிவோர்களின் கடனாகும். முன்னேற முநியு மக்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளுவதினும் தங்களை அடுத்த சீவர்களின் உயர்வைக் கெடாது கார்த்தலே காருண்யமாகும்.

அக்காருண்ய திரட்சியோரே உள்ளொளி உருவாய் மாற்றிப் பிறந்து நட்சேத்திரம் பெற்று அகண்டத்துலாவி என்றுமழியா நித்தியநிலையில் நிற்பர்.

அந்த நித்திநிலையோரை அநித்தியநிலையோர்க் காண்பது அரிது அரிதேயாம். நித்தியவழியில் சென்று நித்தியநிலையில் நிற்போர்களே நித்தியர் களை நித்தந் தெரிசிப்போர்களாவர்.

காருண்யத்தால் மக்கள் ஈடேற்றத்தைக் கருதி ஒளிவுருவாய்த்தோற்றினுந் தோற்றுவர். அத்தோற்றங்கண்டுந் தங்களுள்ளொளியைத் துலக்காமலும் காணாமலும் கலங்கிநிற்போர் மாறா பிறவியில் பிறந்து பிணிமூப்பால் வாதைப்பட்டு தீராத் துன்பத்திற் சுழன்றுதிரிவர்.

பிணி மூப்பாம் தீராத் துன்பமடைந்து மாறாப்பிறவியில் உழலாமல் இருக்கவேண்டுமென்னும் சுப இச்சையை உள்ளவர்கள் பாபச்செயலை அகற்றி இதயத்தை சுத்திசெய்து மனமடங்கி மாற்றிப் பிறக்கும் வழியறிதல் வேண்டும். அவ்வழியாம் பரிநிருவாணத்தையே தற்போது ததாகதர் விளக்குவார் விழித்திருங்கள்.

ஆனந்தா! உலகப்பொருட்களொன்றுங் கெடாது மாறுதலடைந்துக் கொண்டிருப்பது உளளசுவாபமாகும். அவற்றுள் புற்பூண்டுகளிலிருந்து மாறுதலடைந்து புழுக்கீடாதிகளாகத் தோற்றியவைகளில் மக்களென்னும் வாலநிலை வாய்த்தோர் முன்னேறி மிருக சேர்க்கைக் கடந்து மானமின்னது நிருமான மின்னதென்று உணர்ந்து மானிடர் மநுக்களென்னும் பெயர் வாய்த்தார்கள்.

மக்களெனத் தோன்றி மானமுண்டாய் மானிடரென மாறுதலுற்றோர் என்றென்றும் மானமாம் மானிடநிலை நில்லாது மானமற்றுக் கள்ளை அறுந்துவாராயின் மேனோக்கும் வழியற்று மக்கள் நிலைக்கே தாழ்வர்.

மற்றுஞ்சிலர் மானமற்று விபச்சாரநிலையில் உழல்வராயின் மேனோக்கும் வழியற்று மக்கள் நிலக்கே தாழ்வர்.

மற்றுஞ் சிலர் மானமற்று அன்னியர்பொருளை அபகரித்துழல்வராயின் மேனோக்கும் வழியற்று மக்கள் நிலைக்கே தாழ்வர்.

மற்றுஞ் சிலர் சீவகாருண்யமற்று கொலைபுரிந்துழல்வராயின் மேனோக்கும் வழியற்று மக்கள் நிலைக்கே தாழ்வர்.

மற்றுஞ் சிலர் மெய்யற்று பொய்யைச்சொல்லி வஞ்சித்துழல்வராயின் மேனோக்கும் வழியற்று மக்கள் நிலைக்கே தாழ்வர்.

மநுக்களென உயர்ந்தவர்கள் மானமற்று பஞ்சபாதகத்திற்குள்ளாகி தாழ்ந்தநிலைக்கு மாறாதிருத்தல் வேண்டும். மானமற்று மானிடரென்னும் பெயரற்று மாறாப்பிறவியில் சுழன்று தீராக்கவலையில் உழலாத சுகவழியைத் ததாகதர் கண்டறிந்தார். அவ்வழியை நீங்களும் பின்பற்றி மாறாப்பிறவியையுந் தீராக்கவலையையும் ஒழித்து அழியா சுகநிலைபெற்று மானிடர் என்னும் பெயரினின்று உயர்ந்து தேவர் பிரமரென்னும் பெயர் பெற்று பிறவியற்று பரிநிருவாணமுற்று நட்சேத்திரமாம் அந்தரத்துலாவுவீர்கள்.

மநுக்களெனத் தோன்றியும் மானமற்று பஞ்சபாதகத்துக்கு உள்ளாவது மாறாப் பிறவிக்கும் தீராத்துன்பத்திற்குமே வழியாம்.

அத்தீய வழியிலேகி தாழ்ந்த பிறவிக்கேகாது சுகவழியிலேகி பிறப்பற் றிருப்பதே பேரானந்தமாகும்.

எக்காலுமுள்ள பூமியிற்றோன்றும் சீவ அசீவர்களாம் புற்பூண்டு களிலிருந்து புழுக்கீடாதிகளும், புழுக்கீடாதிகளிலிருந்து மட்சம் பட்சிகளும் ஒன்றிலிருந்தொன்று உயர்ந்துகொண்டே போவதை உணர்ந்தும் தாங்களுயரும் வழியை நோக்காது தாங்களுங்கெட்டு உயர்ந்தேகும் சீவர்களையுங் கெடுத்து வருவது மானிகளாய மானிடர்களுக்கு அழகன்றேயாம். மானிகளாய மானிடர்கள் தேவர்களாவதே திருவுருவாகும். அத்திருவுருவே பிறவா பிணி, மூப்பு, சாக்காட்டை செயித்த உருக்கூடாகும். அவ்வுருக்கூட்டினின்று ஒளியுருவாக வெளி தோன்றலே பரிநிருவாணமாகும்.

ஆனந்தா! அப்பரிநிருவாணத்துக்குரிய இப்பரிசுத்ததேகத்தை ததாகத ஒளி அகலும் வரையில் மண்ணறிக்குமோ, காற்றுபரிசிக்குமோ, நீர் நனைக்குமோ, அக்கினி தகிக்குமோ, வெளி மறைக்குமோ ஆகாவாம். இராகத்துவேஷ மோகஞ்சூழ்ந்து இருளடைந்திருக்கும் அசுத்ததேகத்தை மண்ணறிக்கும், காற்றுமோதும், நீர் நனைக்கும், தீதகிக்கும், வெளி மறைக்கும். அதாவது தனக்குள் கோபமிருக்கும் வரையில் எதிரியின் கோபம் தன்னைச் சூழ்ந்து வாதிக்கும். தனக்குள்ள காமமிருக்கும் வரையில் எதிரியின் காமம் தன்னைப்பற்றி ஈடழித்து வாதிக்கும். தனக்குள்ள மயக்கமிருக்கும் வரையில் எதிரியின் மயக்கால் அவாபெருகி அல்லலுற வாதிக்கும். தனக்குள்ள இராகத்துவேஷ மோகங்களாம் இருளகன்று சாந்தம், ஈகை அன்பென்னும் ஒளிதிரண்டு பற்றற்ற பரிசுத்த தேகமே பரிநிருவாணத்திற்கு உரியதாகும்.

என்று சொல்லிவருங்கால் இராஜகிரகத்திற்கு 300 - காத வழியிலுள்ள ஓர் மலைவாசிகள் பகவனது குணாதிசயங்களையும், அவரது தேககாந்தியையும், அமுர்தவாக்கையும் கேள்வியுற்றுப் பெருங்கூட்டமாகத் திரண்டு வந்து பெருமானை வணங்கி சுற்றிலும் நின்றுகொண்டு இவர் நம்மெய்ப்போன்ற மனிதர்தானே, ஆனால் தேககாந்தியும், கருணையும் நிறைந்தவராகக் காண்கின்றார். இதனால் இவரை எங்கும் புகழ்ந்து கொண்டாடுவதற்குக் காரண மென்னை. இவரைப் பெருங்கூட்டங்கள் பின்பற்றி நிற்பதில் சுகமென்னை. உலக மனுக்களினும் இவரிடமுள்ள சிறப்பென்னை. இவரைக் காஷாயந் தரித்துள்ள பெருங்கூட்டத்தோர் கூடி வணங்கிநிற்பதால் பலனென்னை என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு அவரது அன்பின் முகதேஜசால் தியங்கி எவ்விதத்தேனும் நமதில்லத்தில் ஒரு வேளை அன்னம் புசிப்பிக்கச்செய்யவேண்டுமென்னும் அவாவின் மிகுதியால் அவலோகீசரை மறுபடியும் வணங்கி தங்கள் இல்லத்திற்கெழுந்தருள வேண்டும் என்று இரைஞ்சி நின்றார்கள். அவர்களது உள்ளச்செயலை முற்றும் உணர்ந்த ஐயன் தமதிடம் வந்துள்ள சமணர்களாம் சாதுசங்கத்தோர்களையும் ஆனந்தன் முதலோர்களை அவ்விடமே நிறுத்திவிட்டு மலைவாசிகள் இல்லஞ்சேர்ந்து அவர்கள் அன்புடன் அளித்த அன்னத்தைப் புசித்துக் குறிஞ்சி தோப்பின் ஓர் மரத்தடியில் அமர்ந்தார். அவ்விடமுள்ள யாவரும் வந்து அருகனை வணங்கி நின்றார்கள். வணங்கிநின்ற மலைவாசிகளின் உள்ளங்களை மாதவன் உணர்ந்து சகோதிரர்களே உலகத்தில் எப்போது மானிடரெனத் தோன்றினீர்களோ அப்போதே மகிமெய் நிறைந்த மானிகளாய் சருவசீவர்

களுக்கும் உபகாரமென்னும் நன்மெய் புரியுங்கள். உபகாரஞ் செய்யப் பொருளில்லையேல் சகலர்களுக்கும் நல்லவர்களென விளங்குங் கோளென்று சொல்லிக்கொண்டே உள்ளத்தொடுங்கிவிட்டார்.

உள்ளொடுக்கத்தால் ஏழுநாள் கண்திரவாமலும், நாவு பேசாமலும், மூச்சோடாமலும், தேகமசையாமலும் உழ்க்கார்ந்த நிலையிலமர்ந்த அந்தர் அங்கநிலையை உணரா மலைவாசிகள் அறவாழியான் இறந்துவிட்டாரென்று ஏங்கி உடலையோர் பாடையில் வளர்த்தி சுடலைக்கெடுத்துச்சென்று கட்டைகளை அடுக்கிக் கொளுத்திவிட்டார்கள்.

சுடலைதகனத்தில் அமர்ந்த சித்தார்த்தர் மறுபடியும் அம்மரத்தடியில் வந்து உட்காந்து கொண்டிருப்பதைக் கண்ட மலைவாசிகள் திடுக்கிட்டு உள்ளங் கலங்கி நடுக்குற்றவர்களாய் ஐயனே! உமது மெய்கண்ட மேன்மையை உணராபாவிகள் இறந்துவிட்டீரென்று ஏங்கி தகனஞ்செய்துவிட்டோம். யாங்கள் அறியாமல் செய்த தோஷத்தைப் பொருத்து ஆதரிக்க வேண்டும் என்றடிபணிந்தார்கள்.

ஓ! சகோதிரர்களே! ததாகதர் பசியுள்ளார் மத்தியில் பசியற்றவராகவும், தாகமுள்ளோர் மத்தியில் தாகமற்றோராகவும், கோபமுள்ளோர் மத்தியில் கோப மற்றவராகவும், காமமுள்ளோர் மத்தியில் காமமற்றவராகவும், நோயாளிகள் மத்தியில் நோயற்றவராகவும், துக்கமுள்ளோர்கள் மத்தியில் துக்கமற்றவராகவும், உபாதைப் படுவோர்கள் மத்தியில் உபாதையற்றவராகவும், நித்திறை உள்ளார்கள் மத்தியில் நித்திறை அற்றவராகவும், மரணத்தை உள்ளார்கள் மத்தியில் மரணத்தை ஜெயித்தவராகவும் விளங்குகிறபடியால் நிருவாணம் பெற்ற அந்தர் அங்கமும், பயிர் அங்கமும் பொருந்தியுள்ளவரையில் உண்மெய்க்கண்ட உடலை தீ தகிக்குமோ, மண்ணறிக்குமோ, காற்றுமோதுமோ, நீர் நனைக்குமோ, ஒளிமறைக்குமோ ஒருக்காலும் முடியாவாமென்று நிருவாணமாம் அந்தர் அங்கத்தை விளக்கிவருங்கால் மலைவாசிகள் பேரானந்தமும் குதூகலமுங் கொண்டு இவரே உலகநாதன், இவரே உலகரட்சகன், இவரே உலகமக்களை ஈடேற்றவந்த தாதா, இவரே மானிடரிற் சிறந்த சீமான், இவரே ஜகத்தின் குருவென்று மகிழ்ந்தும் புகழ்ந்தும் அவரறவுரையை சிந்தித்து நிற்குங்கால் அருமறை பயந்தோன் ஆனந்த நகரென்னுங் குஷிநகராம் கங்கைக் கரைச்சேர்ந்து மரத்தடியில் உட்கார்ந்து ஆனந்தனை அழைத்து ஏதேனும் விசாரிணை உண்டோ என்றார்.

அருங்கலைச்செப்பு - தென்மலைப் பத்து

தென்மலையோர்கூடி தேவனடி அடைந்தார், நன்மனத்தைக் காணும் நலம்
இம்மெய் மறுமெய் இரண்டிற்குங் காரணமாம், நன்மெய்க்குகந்தவர் என்றார்
கூட்டங்கள் கூடி கும்பிட்டடிபணியும், நாட்டமேதென்றார் நவில்
திங்களமுதத்திருமுகத்தைக் கண்டார், தங்கள் மனைத்தெரிந்தார் தேர்
புசிப்புண்டகன்று புரைமரந்தூய்ந்து, நிசிப்பிரு மூணாளமர்ந்தார் நேர்
ஏழுநாள் கண்டோரிறைமடிந்தாரென்றெண்ணி, சூழு கலல் சுட்டெறித்தார் சீர்
எறியுறாமன்னனெழுந்துமுன் மரமமர்ந்தார் பிறிவுறா வங்கத்தவர்
அங்கமழியாது அறிந்தாரருள் நிறைந்தார், சங்கத்தமர்ந்தார் சரண்
பிறப்புப் பிணிமூப்புச் சாக்காட்டை வென்ற, சிறப்பின் சுகமறிந்தார் சீர்
அறவுரையைக் கேட்டோரதனொழுக்கம் நின்றார், பிறப்பறுக்கும் பாதை அறிந்தார்.

அதாவது பகவன் தென்மலைக்குச் சென்றதும் மலைவாசிகளால் தகனஞ்செய்ததும், ரூபகாயம் அழியாததும், சங்கத்தோர் மத்தியில் எக்காலும் நித்திறைக்கொள்ளாததும், புசிப்பை நாடாததும், தாகத்தை விரும்பாததும் ஆகியச் செயல் கண்ட சமணர்களும் ஆனந்தனுந் திடுக்கிட்டு அறவாழியானை நாம் புசிக்கும்படி வேண்டினால் புசிக்கின்றார். வேண்டாவிடில் தாமும் வேண்டாமலிருக்கின்றார். தாகத்திற்கருந்தும்படி வேண்டினால் அருந்துகின்றார். வேண்டாவிடில் அருந்தாமல் அறவுரையை அடியார்களுக்கு போதித்தலையே பசிதாகத்திற்கு நிவர்த்தி என்றிருக்கின்றார். அரசன் மரத்தடியில் வீற்றிருந்தது முதல் இரவும் பகலும் அயர்ந்தநித்திறை கொண்டதைக் கண்டறியோம். சதாவிழிப்பும், சதா அறவுரைப் போதனைகளுமே அவருக்கு ஆனந்த நித்திறைபோற் காண்கின்றது.

அவரை யடுத்ததுமுதல் அவரது முகத்தில் சினக்குறிப்பேனும், விழிப்பில் சினப்பார்வையேனும் கண்டறியோம். சதா சாந்தமும் சதா அன்பும் சதா கருணையுங் கண்டு வருகின்றோம்.

ஈதன்றி உலகத்தில் தோன்றியுள்ள நமக்கு நாளுக்குநாள் தேகந்தளர்ந்து நரைதிறை மூப்புவந்தமைந்து விழிபஞ்சடைந்து கூன்வளைந்து தளர்ந்து தடியூன்ற வேண்டியதைக் காண்கின்றோம். பகவனோவென்னில் நாளுக்குநாள் மங்காமலும், முகதேஜசு மாறாமலும் பொன்மேனி குன்றாமலும், அமுதவாக்கழியாமலும் இருப்பதுகொண்டு இவரே பிறப்பை வென்ற பெரியோன், இவரே பிணியை வென்ற பெருமாள், இவரே மூப்பை வென்ற முநிவன், இவரே மரணத்தை வென்ற மாதவனெனக் கொண்டாடி அவரது திருவடிகளை இருகப்பற்றி தேவரீர் திருத்தொண்டு சதா நிலைத்து உலக சீவர்கள் உயர்ந்துய்யுமாறு பிறப்பிலுண்டாகுந் துக்கங்களையும் பிறவாமலிருக்கும் சுகங்களையும் பிணிகளால் உண்டாகுந் துக்கங்களையும் பிணிகளணுகாதிருக்கும் வழிகளையும் மூப்பால் உண்டாகுந் துக்கங்களையும் மூப்பணுகாதிருக்கும் சாதனங்களையும் மரணவஸ்தையின் துக்கங்களையும் மரணத்தை ஜெயிக்கும் பாதைகளையும் இவ்வடியார்களுக்கு மேலும் மேலும் விளக்கி அஞ்ஞான இளந்தையை நீக்கி மெஞ்ஞான முத்தர்களாகச் செய்யவேண்டுமென்று இரைஞ்சிநின்றார்கள்.

ஓ! சகோதிரர்களே! அஞ்ஞானமாம் இளந்தைப்பருவங் கடந்து மெஞ்ஞாயமாம் முத்தனாவதே முத்திப்பேறாகும்.

அம்முத்தி நிலையையே சகல துக்கங்களும் அற்றவிடமென்றும், சுகவாரியென்னும் தேஜோவண்மயமென்றுங் கூறத்தகும்.

பிறவியால் உண்டாகுந் துன்பங்களைக்கண்டவன் பிறவிக்கஞ்சுவான். பிணிகளால் உண்டாகுந் துன்பங்களைக் கண்டவன் பிணிகளுக்கு அஞ்சுவான். மூப்பினால் உண்டாகுந் துன்பங்களைக் கண்டவன் மூப்பிற்கு பயப்படுவான். மரணத்தால் உண்டாகுந் துன்பங்களைக் கண்டவன் மரணத்திற்கு பயப்படுவான்.

இவைகள் யாவும் மானிகளாம் விவேக மிகுத்தவர்களுக்கே விளங்கும். ஆதலின் ஆனந்தா உலகத்தில் தோற்றுவனயாவும் பிறப்பென்றும், மறைவன யாவும் இறப்பென்றுங் கூறப்படும்.

இவற்றுள் தோற்றும் பொருட்கள் யாவும் கெடுமென்று உணர்ந்து அதாவது கடிகைக்குக்கடிகை அழிந்துபோமென்றறிந்து மண்ணின்மீதுள்ளப் பற்று பொன்னின் மீதுள்ளப்பற்று பெண்ணின்மீதுள்ளப்பற்றாகிய அவாவை ஒழிப்பதே பிறவியை அறுக்கும் வழியாகும். அவாவை ஒழித்து பாசபந்த பற்றுக்களாம் மனக்களங்கமற்றவிடமே பிறவியற்ற நிலையாகும். அப்பிறவியற்ற நிலையே பிணியை ஜெயித்த சுகமாகும். பிணியை ஜெயித்த சுகமே மூப்பை ஜெயித்த முதலாகும். மூப்பை ஜெயித்த முதலே மரணத்தை ஜெயித்து என்றும் அழியா நித்திய நிலையாம் நிருவாணத்தைப் பெறுவன்.

அந்நிருவாண சுகமாம் பேரானந்தத்தை நோக்காதவன் அவாமிகுதியாம் பற்றினால் மாறாபிறவி துன்பமும், தீரா பிணிவாதையும், தள்ளாடி விழும் மூப்பின் கேடும் பஞ்சாவஸ்தையாம் பிராணவாதை கொண்டிறந்து பற்றிய பற்றால் உருவம் தோன்றி தோன்றி வினைபோக உருவாய் துக்கத்தில் மாறி மாறி சுழன்றுதிரிவான்.

துக்கத்திற்குப் பீடமாம் பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடென்னும் நான்கு வாய்மையே தோற்றிய தேகத்தாற் காணும் அநுபவக் காட்சியாகும். இவ் வநுபவக் காட்சியால் துக்கம், துக்கோற்பவம், துக்கோற்பவக் காரணம், துக்க நிவாரணமாம் அஷ்டாங்க மார்க்கத்திற்சென்று உண்மையில் அன்பை வளர்த்துங்கள். அவ்வுள்ளன்பின் மிகுதியால் இராகத்துவேஷ மோகங்கள் மூன்றுந் தன்னிற்றானே நசிந்து தன்மகாயமாம் சாந்த தண்மையுண்டாய் ததாகதம் பெறுவீர்கள். அத்ததாகத நிலையில் என்றுமழியா ததாகதரைக் காண்பீர்கள். என்றுமழியா சாந்தவுருவாம் தன்மகாயத்தை தன்மகாயத்தோரே காண்பர். பாச பந்தத்தால் அழிந்து கொண்டேவரும் ரூபகாயத்தால் ததாகதரைக் காண்பது அரிது அரிதேயாம்.

மணிமேகலை

மெய்யுணர்வின்றி மெய்ப்பொருணர்வரிய / வையமல்ல தறுதிச் சொற்பெறா
கருமத்தொகுதி மீளத்தோற்ற மீளுந் / தோற்ற மீளப் பிறப்பு மீளும்
பிறப்புப் பிணி, மூப்புச்சாக்கா டவல / மாற்றுக்கவலை கையாரென்றென்று
கடையிற்றுன்ப மெல்லா மீளு / மிவ்வகையான மீட்சி யற்று
கண்ட மாகுமென்ப / பேதமெசெய்கை யென்றிவை யிரண்டுங்
காரணம் ஐய மாதலானே / யிரண்டாங் கண்ட மாகுமென்ப
வுணர்ச்சி யருவுருவாயினூறே / நுகர்ச்சி யென்று நோக்கப்படுவன
முன்னவற் றியல்பால் உன்னிய வாதலின் / மூன்றாங்கண்டம் வேட்கைப் பற்றுக
கரும வீட்டமென கட்டுரைப்பவை / மற்றும் பற்று நிகழ்ச்சி யொழுக்கிலுட்
குற்றமாம் வினையே விளைவாக லானே / ரன்காங் கண்டம்
பிறப்பே பிணியே மூப்பே சாவென / முதிர்ந்திடுந் துன்பமென விவை
பிறப்பினுட்கும் பயனாதலினாற் / பிறப்பின் முதலுணர் வாதியாகி
வினையுனுடை முதற்சந்தி / நுகர்ச்சி யொழுக்கொடு விழைவின் கூட்டறும்
புகர்ச்சியி னறிவ திரண்டாஞ் சந்தி / கன்மக்கூட்டத் தொடுவருபிறப்பிடை
முன்னிச் செல்வது மூன்றாஞ் சந்தி / மூன்றுவகை பிறப்பு மொழியுங்காலை
யான்றற மார்க்கத் தாயவுணர்வொடு / தோன்றல் வீடெனத் துணிந்து தோன்றியு
முணர்வுள்ளடங்க வுருவாய் தோன்றியு / முணர்வுள்ளுருவு முடங்கி தோன்றும்.

ஆனந்தா, ஊனக்கண்ணால் க்ஷணத்திற்குச்சணம் அழிந்துகொண்டே போகும் பொய்ப்பொருளைக் காணக்கூடும். அம்மெய்ப்பொருளே தானே தானாய் தலைவனாகுந் ததாகதரைக்காணும் ததாகதரோ தன்னை ஆய்ந்தறியுந் தருமத்தை ஊட்டுவார். ஊட்டப்பெற்றோர் தங்களை ஆய்ந்து தங்கடங்கள் மனதை அறிவுக்குள் ஒடுக்கி அலைவற்ற மெய்ப்பொருளாய் நிலைக்க வேண்டியவை அவரவர்கட் செயலாகும். அவரவர்களின் ஊனக்கண் பார்வையை ஒழித்து ஞானக்கண் பார்வையினிலைப்பதே முக்காலச் செயலையும், முக்காலத் தோற்றத்தையும், மூவுலகத்தையுந் தோற்றுவிக்குங் களங்கமற்றக் கண்ணாடியாகும். களங்கமற்ற கண்ணாடியே மாசற்ற மனமாகும். மாசற்ற மனமே அறிவிலடங்கிய மெய்ப்பொருளாகும். மெய்ப்பொருளுணர்வே பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடெனுந்துன்பங்களை ஒழித்த பற்றற்ற நிலையே நிருவாணமென்னப்படும். அந்நிருவாணநிலையோ உலகப் பற்றற்றதுடன் உடல் பற்று மற்று புழுக்கூட்டில் ஒடுங்கியுள்ள விட்டில் போலும், ஓட்டிலடங்கியுள்ள பழம்போலும் பற்றியும் பற்றற்றிருக்கும். அப்பற்றற்ற பழம்பொருள் பரிபூரணமாய் வெளிதோன்றலே பரிநிருவாணமென்னப்படும். அப்பரிநிருவாணமே ததாகத ருருங்காலம் ஈதாதலின் ஒவ்வொரு வரும் இதனை நன்குணருங்கோளென்று கூறிவருங்கால் ஆனந்தனெழுந்து அருகனின் அடிபணிந்து ஐயனே, எங்கள் பற்றுக்களை அறுப்பதில் இராகத்துவேஷ மோகமென்னும் பற்றுக்களைமட்டும் அறுப்பதா அன்றேல் சாந்தத்தைப் பெருக்கல் வேண்டும் அன்பை வளர்த்தல் வேண்டும், ஈகையில் நிலைத்தல் வேண்டுமென்னும் பற்றையும் அறுப்பதா இவ்விரண்டின் விவரங்களையும் விளக்கி ஆதரிக்கவேண்டும் என்றிரைஞ்சினான்.

மணிமேகலை

மெய்க்குணத்தடைதல் அல்லதூஉ நிலனாய் / மையாயுழல்வதும் நீராயிழைவதும்
தீயாய் சுடுவதுங் காற்றாய் வீசுவதும் / மாயதொழிலை யடைந்திடமாட்டா
நேரினுந் தெய்வக்கண்ணா ருணர்குனர் / நோலாபூதத் திரட்சியுள்ளானோர்
மாலைப்பொழுதி லொருமயிரறியார் / சாலத்திரள்மயிர் தோற்றுதல்சாலுங்
கருமப்பிறப்புங் கருநிலப்பிறப்புஞ் / சேமம் பிறப்பும் எண்ணப் பிறப்புமென்
மிவ்வாறு பிறப்பினும் பண்புறு வரிசையின் / பாற்பட்டிறந்து சுழிந்த வறிவே
பிறப்பிற் கலந்து.

சீவகசிந்தாமணி

காதலுங் களிப்புமிக்குங் கங்குலும் பகலும் இல்லார்
சாதலும் பிறப்பு மில்லா தண்மெய் பெற்றவர்க ளொத்தார்.

அறவாழியான் ஆனந்தனை நோக்கி குழந்தாய், சாந்தம், அன்பு, ஈகை இம் மூன்றும் உனது சுயரூபம். மத்தியில் பாற்பட்டு கலந்த காம, வெகுளி, மயக்கம் இம்மூன்றும் துப்புற நீங்கியவிடத்து சாந்தம், அன்பு, ஈகை இம் மூன்றுந்தானே தானாய் விளங்கும். நான்கு வாய்மெயின் பலனை உணர்ந்து சுகவாரியினிலைக்கும்.

அச்சுகவாரிக்கு செல்லுஞ் சுகத்தை, நீரே நினது சிற்சுகத்தில் உணர்ந்துக் கொள்ளலாம். அதாவது ஆனந்தா, தாமும், தமதுதோழர் பிருங்கியும், நடக்கவியலா சப்பாணிகளாகி தவழ்ந்து திரிந்தவர்கள் தற்காலம் எழுந்து நிற்கவும்நடக்கவும் உண்டாகிய ஏதுஎதுவென்று வினவினார். ஆனந்தன் அவலோகிதரடிபணிந்து தேவாதிதேவா, தமது சத்தியதன்ம போதனையும் கிருபா நோக்கமுமே ஏதுவென்றான். பகவன் ஆனந்தனை நோக்கிக் குழந்தாய் எனது கிருபா நோக்கம் உமது நற்செயலை நோக்கியிருக்குமேயன்றி வேறிராது. சத்திய தன்மத்தைப் பின்பற்றி ஒழுகிய ஒழுக்க ஏதுவே இம்மட்டும் உமது பயிரங்கத்தையும் அந்தரங்கத்தையும் சுகச்சீர்பெறச் செய்துவருகின்றது. நீங்கள் முற்றிலும் சத்தியதன்மத்தில் நிலைத்து பாபப் பற்றுக்களற்று இதயசுத்த முண்டாகி நன்மெய்க் கடைபிடித்து அதன் பயனால் புறமெய் ஈதென்றும், அதுவடைந்த சுகம் ஈதென்றும், உண்மெய் ஈதென்றும், அதன் சுகம் ஈதென்றும் தெள்ளற உணர்ந்துக் கொள்ளுவீர்களாயின் தற்காலந் ததாகதர் பெறும் பரிநிருவாண சுகமும் பெறுவீர்களென்று முகித்தார்.

அறவாழியந்தணன் கூறிவந்த சத்தியதன்மங்கள் யாவையுங் கேட்டிருந்த கௌண்டினனென்னும் சிரமணனெழுந்து சீமானை வணங்கி, தேவாதிதேவா! தமது சத்திய சங்கத்தைச் சார்ந்தது முதல் அடியேனுக்கோர் சங்கை உண்டு. அவையாதென்பீரேல், நாங்களில்லறம்விட்டுத் துறவறம் பற்றியவுடன், சிரமயிர் கழிக்கவும், பிட்சாபாத்திரங் கைகளிலேந்தவும் பொன்னிறம் போன்ற மஞ்சளாடைகள் அணைவதுமாகியக் காரணங்கள் விளங்கவில்லை. அவற்றை விளக்கி ஆட்கொள்ளவேண்டும் என்றடிபணிந்தான்.

அவனது சங்கையை உணர்ந்த அருகன் கௌவுண்டன்யனைநோக்கி குழந்தாய் காட்டிற்கும் நாட்டிற்கும் மத்தியில் கட்டிடங்களை நிருமித்து சங்கத்தோர்களை அங்கு நிலைக்கச்செய்தது காரணம் யாதெனில், பாபத்தை ஒழித்து நன்மெய் கடைபிடித்து இதயத்தை சுத்திசெய்யவேண்டியவர்கள் இல்லறத் தொல்லையாம் பல பற்றுக்களும் இருந்துசெய்வது கஷ்டமாதலின் சங்கத்தோரை வேறுபடுத்துங் காரணமுண்டாயிற்று. சங்கத்தில் சேருங்கால் சிரமயிர் கழிக்கவேண்டிய காரணமோவென்னில் இல்லறத்திலிருந்து சிரமயிரை சிக்கங்கோலிட்டு சீவுவதும், சீர்திருத்துவதுமே பெருவேலையாகும். அத்தகைய சீர்திருத்தத்தை மனோ சீர்திருத்தக்காரரேற்றுக்கொள்ளுவதனால் தங்கள் விசாரிணைக்கு சுகக்கேடுண்டாவதுடன் தேகசுகத்திற்கும் இடையூறுண்டாமாதலின் இல்லறக்குடும்ப சுகத்தை விரும்புவோருக்குக் குடுமியும் துறவறத்தூய தண்மெயை விரும்புவோருக்கு சிரமயிர் கழித்தலும் பற்றினைக்கழிக்கும் முதற்சீராகும்.

இவற்றுள் சிரமண நிலையாம் முதற் சாதனர்களுக்கே இவைகள் வேண்டியவன்றி தவநிலை முதிர்ந்த சிரமணர்களாம் அறஹத்துநிலை அடைபவர்களுக்கு மயிரைக்கழித்தலும், மயிரை வளர்த்தலுமாகியச் செயலும் எண்ணமுமில்லையாகும்.

பிட்சாபாத்திரங் கைகளில் ஒடுக்கவேண்டிய காரணமோவென்னில் டம்பத்திற்கும், அகங்காரிப்புக்கும் மூலமாகும் இராகத்துவேஷ மோகங்களைக் கழிக்கும் இரண்டாஞ் சீராகும்.

வாசிட்டம்

பொன்போலயிலங்குமனம், சஞ்சலத்தாற் குரங்காம்.

ஞானக்குறள்

வெள்ளிபொன்மேனி யாதொக்கும் வினையுடைய,
உள்ளுடம்பினாய ஒளி.

பட்டினத்தார்

விமலர்தந்த வோடு நமக்குண்டு

பொன்னிறம்போன்ற மஞ்சளாடை அணையவேண்டிய காரணமோ வென்னில் பொன்னிறம்போன்ற மனதை ஆசாபாச பல பற்றுக்களடர்ந்து அல்லலுறும் பிறவிக்கு ஆளாக்குகின்றபடியால் ஆசாபாசக் களங்கங்களைக்

கழற்றி மனதின் உள்ள பொன் சுயரூபத்தைக் கண்டடைவதற்கு மாறாகியாபக மூன்றாஞ் சீராகும்.

மச்சமுனி ஞானம்

கேட்டறிந்துக்கொள்வீடென்ன காடென்ன கெட்டிப்பட்ட மௌனத்திலே நின்று,
மாட்டறிந்துக்கொள்வஸ்துவையுண்டு நீ மனதைத்தாண்டி அறிவுக்குள்ளே செல்ல,
பூட்டறிந்துக்கொள் (பொன்போல் தேகமாம்) மாட்டறிந்துக்கொள்
கற்பூரதேகமாமகண்டசோதியும் சித்தியுமாச்சுதே.

ஞானமதியுள்ளான்

ஆதி குருவோனை அடண்ணே ஆனந்த வாழ்வோடு
வேதியர்தந்த வோடு அடண்ணே வல்லதிருவோடிதே.
சாதிதவிர்ந்தவோடு அடண்ணே தான்பலிகொண்டவோடு
ஜோதிமணியோடு அடண்ணே சொல்லுந்திருவோடிதே
ஆதிசிவனோடு அடண்ணே அன்னைதான் தந்தவோடு
ஒதி உணர்ந்தவோடு அடண்ணே உற்றகை சிற்றோடிதே
வேதனளித்தவோடு அடண்ணே வெவ்வினையோட்டும்வோடு
மாதவபோதனனார் முன்பளித்த முத்தித் திருவோடிதே.

உலக விவகாரப் பற்றுக்களை ஒழிப்பதற்காக பிரத்தியேக மடங்களையும், ரோமத்தை வளர்க்கவும், வாரவும், சிக்கங்கோலிடவும், சீர்திருத்தவும் வேண்டிய தொல்லைகளை அறுக்க சிரமயிர் கழிப்பதையும், நானென்னு மமகாரமற பிட்சாபாத்திர மேந்துவதையும் உண்மெயாம் பொன்னுருகாண மஞ்சள்நிறப் பொன்னாடை அளித்ததையும் விளக்கிக் கொண்டு வருங்கால் சேணிபனென்னும் அரசன் வந்து செல்வனை வணங்கி தேவரீர் தாம் போதித்துவரும் தன்மங்கள் யாவும் துறவறம்பூண்ட சங்கத்தோருக்கே உபயோகமாகின்றதன்றி இல்லறம் பூண்ட குடும்பிகளுக்கு யாதொரு தன்மமுங் காணாதபடியால் இவ்வடி யேனுக்குக் குடும்ப தன்மத்தை விளக்கியாட்கொள்ள வேண்டுமென்று அடிபணிந்தான்.

பகவன் சேணிபனை நோக்கிக் குழந்தாய், ததாகதர் மனையறமுந் துறவறமும் இரண்டையுமே போதித்துள்ளாரன்றிவேறில்லை. அதாவது மனையற வொழுக்கத்தினின்றோனே துறவறத்திற்கு அருகனாதலின் மனையற சுகவாழ்க்கையே துறவற முத்திப்பேற்றுக்கு வழியாகும்.

ஆதலின் குடும்ப சோதிரர்களே, முதலாவது சுகவழி தேடல் வேண்டும். அதாவது ஓர் குடும்பத்தில் தனதான்யப் பெருக்கமிருந்து ஒருவருக்கொருவர் அன்பும் ஒருவருக்கொருவர் சமாதானமும் இல்லாமற்போமாயின் அக் குடும்பத்தில் தனதானியமிருந்தும் ஒன்றுமில்லை என்பதேயாம்.

மற்றொரு குடும்பத்தில் தனதானியமில்லாமல் எழியநிலையிலிருப்பினும் அக்குடும்பத்தோர் ஒருவருக்கொருவர் அன்பும், சமாதானமும், அமைதியும், ஆற்றலுமுற்றிருப்பார்களாயின் அவர்களையே தனதானிய சம்பத்துடையவர் களென்று கூறலாகும்.

மனவாறுதலும் அமைதியும் களங்கமற்ற சமாதானமும் உடையவர்களாக வாழும் குடும்பத்தையே சகலசம்பத்தும் அமைந்த குடும்பமென்று கூறத்தகும். அத்தகையக் குடும்பத்தோர் எடுத்த முயற்சிகள் யாவும் நிறைவேறும். அக்குடும்பத்துள் விவேகமிகுத்தோர்களே கூடிய சீக்கிரஞ் சாது சங்கஞ் சேர்ந்து நிருவாணசுகம் பெறுவார்கள்.

ஓர் குடும்பத் தலைமகன் தனது தாய்தந்தையர்களையே காப்பாற்றினவர் களெனக் கண்டு தன்னைக் குழந்தைபருவத்தில் ஈ எறும்பும் அணுகாமல் கார்த்ததுபோல் அவர்களுக்கோர் துன்பமும் அணுகாமல் கார்த்து வேண்டிய புசிப்பும் ஆடையுமளித்து அன்புடன் பயபற்றுடனும் ஆதரித்துவரல் வேண்டும் அவ்வகை ஆதரித்துவருதலே குடும்பத்தலைவனின் மக்கள் தனது தந்தையின் பேரானந்தச் செயல்கண்டு பழகி வருவார்களாயின் இவர்கள் குடும்பத்தலைவர் களாயபோது தங்கள் தாய்தந்தையர்களைக் கனஞ்செய்து களிப்பின் செயலில் நிலைப்பார்கள். அத்தகைய நிலையிலுங் குடும்பத்தோர்கள் ஒருவருக்கொருவர் விலகிய வாழ்க்கைப் பெறாது சேர்ந்து வாழ்கவேண்டியதே ஒருவருவக்கொருவர் ஆதரவையுங் கொடுக்கக் கூடியதாகும்.

ஓர் குடும்ப வாழ்க்கையில் மெய்யைப் பேசுவதும், பொய்யை அகற்றுவதும், சகல உயிர்களின் பேரிலும் அன்பை வளர்த்தலும், கொல்லா விரதங்கொள்ளலும், அன்னியர் பொருளை களவாடாதகற்றலும், பேரவாவை ஒழித்தலும், அன்னியர் மனைவிகளை தங்கள் சகோதரிகளைப்போல் பாவித்தலும், காமயிச்சையைப் பெருக்காமலகற்றலும், புத்தியை மயக்கக் கூடிய பானங்களை அருந்தாதகற்றலும், எக்காலும் நிதானவிழிப்பில் இருத்தலுமாகிய நற்செயலிலும், நன்முயற்சியிலும், நல்லூக்கத்திலும், நற்கடைபிடியிலுமிருந் தொழுகுவார்களாயின் அக்குடும்பச் சிறுவர்களும் குலப்பழக்கத்தினின்று சுகச்சீர் பெற்று சகல சம்பத்தமைந்த யோகத்தில் நிலைத்து சத்தியசங்கத்திற் சேர்ந்து நற்பழக்க விருத்தியால் கூடிய சீக்கிரம் நிருவாணசுகம் பெறுவார்கள்.

குடும்பப்பெண்கள் தங்கள் தாய்தந்தையரை விட்டு நீங்கி கணவரை அடுத்தபின் தங்கடங்கள் கணவர்களையே கண்ணவர்களாகவும், காக்குங் காவலராகவும், அவர்கள் விவேகமொழிகளையே மந்திரபோதமாகவும் அவர்களைப் பசிதீரச் செய்வதே தங்கள் பசியாற்றலாகவும், அவர்கள் சுகத்தைக் கண்ணாரக்கண்டு களிப்பதே தங்கள் சுகமாகவும், அவர்கள் விவேகமொழிக்கு எதிர்மொழி கூறாது அடங்கிநிற்றலே மடமாகவும், தன்னுருவத்தையும் முகதேஜசையும் அன்னியபுருஷன் கண்ணிற் பாராது மறைதலே நாணமாகவும், கணவர்பால் அடங்கி வார்த்தையாடலே அச்சமாவும், அன்னியர் விருந்தோம்பி அவர் பசியாற்றலே பயிர்ப்பாகவுமிருந்து விவேக முதிர்ந்து காமியம் அவிந்துவருமாயின் கூடிய சீக்கிரம் சத்தியசங்கஞ்சேர்ந்து நிருவாணசுகம் பெறுவார்கள்.

குடும்பத்துப் பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள் விவேக விருத்திப் பெறக்கூடிய போதனைகளையும் வித்தியாபிவிருத்தி அடையக்கூடிய சாதனங்களையும், ஈகை விருத்தி அடையக்கூடிய காருண்யத்தையும், அறிவுக்குள் மனமடங்கக்கூடிய சன்மார்க்கங்களையும் விருத்தி செய்துக்கொண்டே வருவார்களாயின் சிறுவர்கள் தாய்தந்தையரைக் கனஞ்செய்து ஆனந்தத்திலிருப் பதுடன் அன்னிய சீவராசிகளுக்கும் உபகாரிகளாய் விளங்கி நாளுக்குநாள் சுகம்பெருகி துக்கங்கெடும் வழியே சென்று சாதுசங்கஞ் சேர்ந்து பூரணசுகமாம் நிருவாணம் பெறுவார்கள்.

குடும்பிகள் ஒருவருக்கொருவர் சேர்ந்து வாழும் சேர்க்கையே சகல சுகத்திற்கும் ஆதாரமாகும். மனையறவாழ்க்கையில், அன்பும் ஆறுதலும் பெற்று வாழ்பவர்களே கூடிய சீக்கிறந் துறவறவாழ்க்கையைப் பெறுவார்கள். மனையறத்தில் அன்பும் ஆறுதலுமற்ற துன்பும் தொல்லையும் பெற்றவர்கள் துறவறத்திற்கு அருக ராகமாட்டார்கள்.

துறவறப் பாதையே மனையறமாதலின் மனையறத்தின் ஒழுக்கம் வழாது வாழ்பவர்களே மானிகளாகும் மநுக்களின் வாழ்க்கை பெறுவர். மிருகங்களல்ல மக்களென்றும், மக்களல்ல மனுக்களென்றும் பெயர்பெற வேண்டியவர்கள் மனையறத்தையே மகத்துவப்படுத்தி மன அமைதிக்குக் கொண்டுவரல் வேண்டும். என்ற மனையறத்தையும் துறவறத்தையும் போதித்து முடித்த பகவனது நிருவாணமுடிவிற்கு சேணிபவரசன் விருந்தே கடைசி விருந்தாக முடிந்தது.

யாப்பருங்கலைக்காரிகை

வாளார்ந்த மழைத்தடங்கண் வனமுலைமேல் வம்பனுங்கக்
கோளார்ந்த பூணாகங் குழைபுரளக் கோட்டெருத்தின்
மாலைதாழ் கூந்தலால் வரன்முறையான் வந்தேத்த
சோலைதாழ்ப் பிண்டிக்கீழ்ச் சூழ்ந்தவர்தஞ் சொன்முறையான்
மனையறமுங் துறவறமு மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும் வினையறுக்கும் வகைதெரிந்து
வீடொடு தட்டிவையுரைத்த தொன்மெய்சால்கழி குணத்தெந்
துறவாசை தொழுதேத்த நன்மெசால் வீடெய்துமாறு.

வீரசோழியம்

கொடுத்தலும் அளித்தலுங் கோடலு மின்மெயு
ஒழுக்கொடு புணர்தலும் புணர்ந்தோர் பேணலும்
வழுக்கில் பிறவு மனையறவகையே

துறவுமடக்குமுந் தூய்மெயுந் தவமு
மறவினை யோம்பலு மறத்தினை மறுத்தலும்
மனையினீங்கிய முனைவர்தமறமே.

காஷாயந் தரிக்கவேண்டியவன்

லௌகீக உடைதரித்து குருபீடத்திற்குரிய காஷாய உடுப்புகளைக் கையிலேந்திக் கொண்டு தன் ஆசிரியனோடு மண்டபத்திற்குள் பிரவேசித்து பௌத்த பிக்ஷுவாம் திரிபிடகாச்சாரி பிரதான நாயகருக்கு முன்னால் நமஸ்கரித்து எழுந்து நின்று பின்வருமாறு சொல்லுவான்.

சிஷ்யன் : அடியேன் பெரியோர் முன்னிலையில் விண்ணப்பம்செய்ய அநுக்கிரஹம்புரியுங்கள். பெரியோரே, அடியேனைக் குருபீடத்தில் சேர்த்துக்கொள்ளப் பிரார்த்திக்கின்றேன். மறுபடியும் பெரியோரே, அடியேனைக் குருபீடத்தில் சேர்த்துக்கொள்ளப் பிரார்த்திக்கின்றேன். மற்றும் மூன்றாவது தடவை பெரியோரே, அடியேனைக் குருபீடத்தில் சேர்த்துக் கொள்ளப் பிரார்த்திக்கின்றேன்.

பெரியோரே அடியேன் பேரில் கிருபைவைத்து, அடியேன் சகல துக்கங்களினின்றும் விடுபட்டு, நிருவாணமாகிய பேரானந்த கதியை அடையும் பொருட்டு இக்காஷாயத்தை எடுத்துக்கொண்டு, அடியேனுக்கு உபதேசம் புரிந்தருளுங்கள். மூன்று தரம் சொல்லப்பட வேண்டும்.

குருநாயகன் : காஷாய உடுப்பைக் கையில் வாங்கிக்கொள்ளுகிறார்.

சிஷியன் : அடியேன்பேரில் கிருபைவைத்து அடியேன் சகல துக்கங்களினின்றும் விடுபட்டு நிருவாணமாகிய முத்திப் பதவியை அடையும்பொருட்டு அக்காஷாயத்தைக் கொடுத்தருளி அடியேனுக்கு உபதேசம் புரிந்தருளுங்கள். (மூன்றுதரம் சொல்லப்படவேண்டும்.)

குருநாயகன் : (காஷாயத்தைக்கொடுத்து) தேகத்தினது ரோமம், நகம், தந்தம், தோல், மாமிசம், நரம்பு, எலும்பு, எலும்பிலுள்ள ஊன், ஈரல், இருதயம் ஈரற்குலை, நுரைஈரலைச்சார்ந்திருக்குஞ் சவ்வு, மண்ணீரல், சுவாசாசயம், இரைப்பைக்கும் ஆசனத்திற்கும் இடையிலுள்ள குடல், மணிக்குடல், இரைக்குடல், மலம், பித்தநீர், கபம், சீழ், இரத்தம், வியர்வை, நிணம், கண்ணீர், நிணநீர், உமிழ்நீர், சளி, வெண்நீர், மூத்திரம் என்கிற யாக்கை நிலையாமெயைக் குறிக்கின்ற தஸபஞ்சகத்தை உச்சரித்துக்கொண்டு மேற் சொல்லிய உடையிலுள்ள மஞ்சள் நூலை கழுத்தில் கட்டுவார். பிறகு சிஷ்யன் எழுந்து உடுத்திக்கொண்டிருந்த லௌகிக உடையைக்களைந்துவிட்டு காஷாயத்தை உடுத்திக்கொள்ள வெளிச்செல்லுவான்.

உடையை மாற்றிக்கொள்ளும்போது பின்வருமாறு சொல்லிக் கொள்வான். ஞானத்துடன் இவ்வுடையை அணிகிறேன். குளிர், வெப்பம், காற்று முதலியவற்றால் பீடிக்கப்படாமலும், கொசு, சர்ப்பம் முதலிய விஷ ஜந்துக்களால் ஹிம்சிக்கப் படாமலும், கேவலம் அம்மணமாயிராமலும் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டுமே அணிந்துக்கொள்ளுகிறேன். அதாவது அடியேன் உடைதரித்துக் கொள்வது ஆவசியமாயிருத்தல் பற்றியே அல்லது அழகுக்காகவன்று.

உடுத்திக்கொண்டபிறகு தன்குருநாயகன் பக்கத்தில் வந்துநின்று பின்வருமாறு கூறுவான்.

அடியேன் பேச அருள்புரியுங்கள், அடியேனது துஷ்கிருத்தியங்களை எல்லாம் க்ஷமித்தருளுங்கள். அடியேனுக்கு உண்டான யோக்கியதையும் கௌரவமும் எல்லாம் குருவினது அநுக்கிரஹமேயன்றோ. அண்ணலே, அடியேன் ஈடேறுவதற்கு மும்மணிகளாம் மூன்று அடைக்கலங்களையும், பத்து சீலங்களையும் உபதேசித்தருளுங்கள்.

சிஷ்யன் : முழந்தாளிட்டு மறுபடியும் கேட்பான்.

மும்மணிகள்

புத்தங் சரணங் கச்சாமி, தம்மங் சரணங் கச்சாமி சங்கங் சரணங் கச்சாமி.
துத்யம்பி.- புத்தங் சரணங் கச்சாமி, தம்மங் சரணங் கச்சாமி சங்கங் சரணங் கச்சாமி.
தத்யம்பி.- புத்தங் சரணங் கச்சாமி, தம்மங் சரணங் கச்சாமி சங்கங் சரணங் கச்சாமி

மூன்று இரத்திநங்கள்(மும்முறை)

புத்தபகவானை வழிகாட்டியாகத் துணைக்கொள்ளுகிறேன்
அவ்ரது தர்மத்தை வழியாகத் துணைக்கொள்ளுகிறேன்
அவரது சங்கத்தை வழிக்குத் துணையாகத் துணைக்கொள்ளுகிறேன்.

பத்துக் கோட்பாடுகள் அல்லது குருபீடத்தின் சட்டங்கள்

1. பானாதி பாதா வேறமணி சிக்ஹாபதங் ஸமாதியாமி
2. அதின்னாதானா வேறமணி சிக்ஹாபதங் ஸமாதியாமி
3. அஹபரஹம சரியா வேறமணி சிக்ஹாபதங் ஸமாதியாமி.
4. மூஸாவாதா வேறமணி சிக்ஹாபதங் ஸமாதியாமி
5. ஸுராமேறய மஜ்ஜப மாதட்டாணா வேறமணி சிக்ஹாபதங் ஸமாதியாமி
6. விகாள போஜனா வேறமணி சிக்ஹாபதங் ஸமாதியாமி
7-8-9 நச்சகீத வாதித விலரக்க தஸ்ஸனமாலகந்த, விவப்பண தாரணமண்டன விபூஷணட்தானா வேறமணி சிக்ஹாபதங் ஸமாதியாமி.
10. உட்சாஸயன மஹாஸயன வேறமணி சிக்ஹாபதங் ஸமாதியாமி.

1. ஜீவஹிம்சை செய்யாதிருத்தல் 2. களவாடா திருத்தல் 3. பிறன்மனை நயவாதிருத்தல் 4. பொய் மொழியாதிருத்தல் 5. கள் முதலிய லாகிரி வஸ்துக்களை அருந்தாதிருத்தல் 6. அகாலங்களில் போஜனம் அருந்தாம லிருத்தல் 7. ஆட்டம் பாட்டம் இல்லாம லிருத்தல் 8. புட்பம், வாசனை திரவியங்களால் தேகத்தை அலங்கரிக்காதிருத்தல் 9. வெள்ளி, பொன் முதலியவைகளைத் தொடாதிருத்தல் 10. உயர்ந்த அல்லது பெரிய பீடத்தில் உட்காராதிருத்தல்

இவைகளே சன்மார்க்கத்திற்கு ஏதுவானது. சிஷ்யன் பின்வருமாறு கூறுவான். இப்பத்துக் கோட்பாடுகளையும் தங்களிடம் கற்றறிந்தேன். ஆசீர்வதியுங்கள். எழுந்து குருநாயகனுக்கு வழிபடுகிறான் தடுத்தாண்டக்கோனே, நமஸ்கரிக்கின்றேன். சிஷ்யன் முழந்தாளிட்டுக் கொண்டு ஆசிரியர் மூன்று அடைக்கலங்களையும் பத்துக்கோட்பாடுகளையும் சொல்லிக் கொண்டுவர பின்னோடே தானுஞ் சொல்லுவான்.

பிரதம குருவாய்ச் சேர்க்கப்படுவதற்குரியவன் குருவாயிருந்தாலும் இல்லாவிட்டாலும் முன்கூறியபடி சடங்கு நிறைவேற்றப்படுகின்றது. பிரதம குருவாவதற்கு பக்குவியாயிருக்கும் பக்ஷத்தில் குருபீடத்தினின்ற உடனே பிரதமகுரு பீடத்திற் சேர்த்துக் கொள்ளப்படுகிறான். இல்லாவிடில் குருவாயிருந்து சிலநாள் உபதேசம் பெறவேண்டும். ஆனால் குருவாயிருந்தவன் பிரதம குருவாவதற்கு மறுபடியும் ஆசிரியர்களுக்குப் பழையப்படி விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும்.

குருவாய்ச் சேர்க்கப்படவேண்டுபவன், தனது குருநாயகனோடு திரும்பிவந்து பிரதமாசரியருக்கு வந்தனம் புரிந்து பின் வருமாறு கூறுவான்.

நான் விஞ்ஞாபனம் செய்துகொள்ள அநுமதிகொடுங்கள். பிரபோ அடியேனைக் கடைக்கணித்து அநுக்கிரஹம் புரியுங்கள். (முழங்கால் படியிடுகிறான். மூன்றுமுறை சொல்லுகிறான்)

குருநாயகன்-சரி, அப்படியே யாகக்கடவது.

பக்குவி-அடியேன் திருப்தியடைகிறேன். (மூன்றுமுறை) இந்த நாளிலுமிருந்து அடியேனையாட்கொள்ளுங்கள் அடியேன் தங்களுக்கு அடிமைப்பட்டவனாய் இருக்கிறேன். (மூன்றுமுறை.)

பிறகு அவன் எழுந்து நமஸ்கரித்து சபையின் கோடியில் தனியாய்ச் செல்கிறான். அவ்விடத்தில் அவனுக்குப் பிக்ஷாடன பாத்திரத்தை முதுகில் கட்டப்படுகிறது. அவனுடைய ஆசிரியன் அங்குசென்று அவன் வலக்கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு பிரதமாசாரியின் சமீபத்தில் விடுகிறான். சபையினின்று ஒருகுரு எழுந்து பக்குவியின் பக்கத்தில் நிற்கிறார். இரண்டு ஆசிரியர்களுக்கு இடையே பக்குவிநின்றுகொண்டு இருக்கையில் குருவானவர் சபையோரை அநுமதி கேட்டுவிட்டுப் பக்குவியைநோக்கிப் பின்வருமாறு கேழ்விகள் கேட்பார்.

குரு: - உன் பெயர் ஞானவன்ஸாவா

பக்குவி: - ஆம், பிரபுவே

குரு: உனது ஆசாரியன் பருசுத்தமான தர்ம்மகீர்த்தியா

பக்குவி: - ஆம், பிரபுவே

இரண்டு குருமார்களும் பின்வருமாறு கூறுவார்கள். பரிசுத்தமானவரும், ஆசிரியிக்கப்பெற்றவரும், உண்மையை அறிந்தவருமான புத்த பகவானுக்கு ஸ்தோத்திரம்.

பிறகு புத்தரது கட்டளைகளை அக்குருமார் சொல்லுவார்கள்.

முதலில் ஆசாரியனை நியமிப்பது யுக்தமாகும். ஆசாரியனை நியமித்தபிறகு பிக்ஷாடன பாத்திரத்தையும் காஷாய வஸ்திரத்தையும் பக்குவி யடைந்திருக்கிறானா என்று கேட்பது யுக்தம்.

குரு: இதுதானா உன் பிக்ஷாடனபாத்திரம்

பக்குவி: ஆம், பிரபுவே

குரு: இதுதானா உன் உடை

பக்குவி: ஆம், பிரபுவே

குரு: இதுதானா உன் உத்தநீயம்

பக்குவி: ஆம், பிரபுவே

குரு: இதுதான் உன் வேஷ்டி

பக்குவி: ஆம், பிரபுவே

குரு: நீபோய் அவ்விடத்தில் நில்

பக்குவி வணக்கமாய் அவ்விடத்தைவிட்டு சபையின் ஓரத்திற்கு சென்று நிற்பான். குருமார்கள் பிரதமாசாரியருக்கு முன்பாக நின்று கொண்டு சபையை நோக்கிக் கூறுவார். ஆசாரியர்களே செவிகொடுங்கள் இந்த மனுஷ்யன் பரிசுத்தமான தர்ம்மகீர்த்தியின்கீழ் குருவாயிருக்கப் பிரார்த்திக்கிறான் ஆசாரியர் சபை கூடுதற்குச்சமையம் இதுதான். நான் பக்குவிக்கு உபதேசம் செய்கிறேன். குருமார் பிரதமாசாரியருக்கு நமஸ்காரம் செய்து சபையின் கோடிக்குச்சென்று பக்குவிக்குப் பின்வருமாறு உபதேசம் செய்வார்கள். ஞானவன்ஸா, கேட்பாயாக. இப்போது நீ நடந்தவற்றை உண்மையாய்ச்சொல்லவேண்டியது. சபையில் உன்னைக் கேட்கும்போது உண்மையாயிருந்தால் ஆமென்றும் உண்மையா யில்லாவிட்டால் இல்லை என்றும் சொல்லவேண்டியது. ஆலஸ்யம் செய்யக்கூடாது. ஒன்றையும் மறைக்கப்படாது. பின்வரும் கேள்விகளைக் கேட்பார்கள். உனக்கு குஷ்டம் பிளவு, சொரி, சிறங்கு, குளிர் ஜுரம் முதலியவியாதிகள் ஏதேனும் உண்டா.

பக்குவி. இல்லை, பிரபுவே

குரு. நீமனுஷ்ய ஜாதியைச் சேர்ந்தவனா

பக்குவி. ஆம், பிரபுவே

குரு. ஆம், ஆண்மையனா

பக்குவி. ஆம் பிரபுவே

குரு. நீயோர்க் களத்தில் யுத்தம் செய்பவனல்லவே

பக்குவி. அல்ல, பிரபுவே

குரு. உன்னைப் பெற்றோர் சம்மதத்தைப்பெற்று வந்திருக்கிறாயா

பக்குவி. ஆம், பிரபுவே

குரு. உனக்குப் பிக்ஷாடனபாத்திரமும், காஷாய வஷ்திரமும் இருக்கிறதா

பக்குவி. ஆம், பிரபுவே

குரு. உன் பெயரென்ன

பக்குவி. என் பெயர் ஞானவன்ஸா

குரு. உனக்கு ஆசாரியன் யார்

பக்குவி. எனக்கு ஆசாரியன் பரிசுத்தமானதர்ம்மகீர்த்தி, பிரபோ

இரண்டு குருமார்களும் சபையின் முன்னேபோய் சபாநாயகருக்கு நமஸ்காரம் செய்து பின்வருமாறு கூறுவார்.

ஆசரியர்காள். செவிசாய்த்துக்கேட்டருளுங்கள். பக்குவி பரிசுத்தமான தர்ம்மகீர்த்தியின் கீழ் ஆசார்யனாய்ச் சேர்க்கப்பட விரும்புகிறான். குருமார் சபைகூடுதற்குச் சமையம் இதுதான். பக்குவி இவ்விடம் இருந்தால் அருகில் வந்து நிற்கக்கடவன், ஒருகுருபக்குவியருகில் வரவழைக்கிறான் பக்குவி வந்து

இரு குருமார்களுக்கும் மத்தியில் வந்து நின்று முழங்கால் பணியிடுகிறான் ஆசரியர்காள்! யான் சொல்லுவதைக் கேட்டருளுங்கள். பரிசுத்தமான தர்ம்மகீர்த்தியினடிக்கீழ் ஆசிரியனாய்ச் சேர்க்கப்பட் விரும்புகிறான். ஆசரியர் சபைகூடச் சமையம் இதுதான். ஆசரியனாயிருக்கத் தக்கவனாயிருக்கின்றானா வென்று பக்குவியைப் பரீக்ஷிக்கிறேன்.

கேள்விகள் முடிவு பெறுகின்றன. பிறகு ஒரு ஆசிரியன் இவ்வாறு கூறுகின்றான்.

பரிசுத்தமான தர்ம்மகீர்த்தியின்கீழ் ஆசார்யனாயிருக்க இந்தபக்குவி வேண்டுகிறான். அவன் அந்த பதவிக்குரிமையுள்ளவன். அவனுக்குப் பிக்ஷாடன பாத்திரமும் காஷாய வஸ்திரமும் உண்டு. இந்த பரிசுத்தமான சபையில் யாருக்காவது அங்கீகரமாயிருந்தால் பேசாமலிருக்கட்டும் யாருக்காவது ஆக்ஷேபமிருந்தால் அவன் எழுந்து சொல்லலாம். சபையார் அவனைக் குருவாய்ச் சேர்த்துக்கொள்ள அங்கீகரிக்கிறார்கள். மூன்று முறை இரண்டு குருமார்களும் சபாநாயகருக்கு நமஸ்காரம்செய்து பின்வருமாறு கூறிமுடிப்பார்கள். பக்குவி பரிசுத்தமான தர்ம்மகீர்த்தியின் கீழ் குருபதவிக்குச் சேர்க்கப்பட்டான். சபையார் இதை அங்கீகரிக்கிறார்கள். ஆகையால் வாய்திறவாமல் இருக்கிறார்கள். ஆதலால் இதுதான் உங்கள் விருப்பமென்று தெரிந்துக்கொள்ளுகிறேன். சங்கபோதமுடிந்தவுடன் அறவாழி அந்தணன் ஆனந்தனை நோக்கி சகல சங்கத்தலைவர்களையும் அருகில் அழைக்கும்படி ஆக்கியாபித்தார். சகல சங்கத்தவர்களும் அருகில் வந்து அறனை வணங்கி வாய்ப்பொத்தி நின்றார்கள். அவர்களது அன்பின் பெருக்கையுணர்ந்த அருகன் ஆனந்தமுற்று சங்கத்தலைவர்களே ததாகதர் கண்டக் காட்சியை உலகில் தோன்றியுள்ள மக்கள் யாவருக்கும் விளக்கி என்றும் அழியா மெஞ்ஞான விளக்கை ஏற்றிவிட்டார். சங்கத்தலைவர்களாகிய நீங்கள் மேலும் மேலும் அவைப் பிரகாசிக்கத் தூண்டி ஞானவொளியில் நிலைத்து நிருவாணம் பெற்று அறஹத்துக்களும் பிராமணர்களுமாகி சருவ சீவர்கள்மீதும் அன்பு பாராட்டி சத்தியதன்மத்தை மாறாமலூட்டி தற்காலம் ததாகதரடையும் பரிபூரண சுகமாம். பரிநிருவாணமடைந்து பிறவி துக்கத்தை ஒழித்துக்கொள்ளுங்கோள் என்றடங்கிவிட்டார்.

வீரசோழியம்

கூரார் வளையுகிர்வாளெயிற்றுச் செங்கட்
கொலையுழுவை காய்பசியாற்கூர்ந்த வென்னோய்நீங்க
வோராயிரங்கதிர் போல்வாள் விரிந்தமேனி
யுளம்விரும்பிச்சென்றாங்கியைந்தனை நீ
என்றான். காரார் திரைமுளைத்த செம்பவளமேவுங்
கடிமுகிழ் தண்சினையகா மறுபூம்போதி
யேரார் முனிவரர் வானவர்தங் கோவே
எந்தாயரோ நின்னை ஏற்றாதார்யாரோ
திருமேவு பதுமஞ் சேர் திசைமுகனா முதலாகு
வுருமேவி அவதரித்து உயிரனைத்து முயக்கொள்ளுவான்
இவ்வுலகுங் கீழுலகு மிசையுலகுமிருள்நீங்க
எவ்வுலகுந் தொழுதேத்த வெழுந்த செழுஞ் சுடரென்ன
விலங்கு கதிரோரிரண்டு விலங்கிவலங்கொண்டுலவ
வலங்குசினைப் போதிநிழ லறமமர்ந்த பெரியோய் நீ.

அருங்கலைச்செப்பு - பரிநிருவாணப்பத்து

பரமுத்தியாய பாக்கியத்தைப் பெற்றான், திரசித்தி காண்டச்சிவன்.
வாள்போன்ற நல்லொளிவளர்த்தானுடலெங்கும், நீள்விசும் புலாவும் நிலை.
உச்சி வழியால் அலைந்துகிளையுள்ளொளியின், சொச்சவுளங் கண்டகன்ற சீர்.
அம்பரமாமுள்ளொளியே நல்லொளியாய் தோன்றி, உம்பர்க்குயர்வழியானான்.
பிறவியறுத்தப் போரொளியைக் கண்டோர், துறவினானந்தமிதென்றார்.
சுகவாருதி நிலையே சூழொளியதாகி, பகவனெனப்பரந்த பேர்.
சுகங்கண்டடைந்த சுழிமுனையாந் தோற்றம், அகண்டத்துலாவுவதேயாம்.
புவியத்திற காலூன்றா பொன்னொளிதேகத்தின், அவியாமுதற் பரமானார்.
ஒளி கனலற்ற உண்மெயாந் தண்ணொளியாய்க், களிப்பவர்க் காட்சியதுவாம்.
கருணை வடிவுங் காட்சி நல்ஞானத்தோர், குருவடிவாய்த் தோற்றுமொளி.

உத்திராயணநிலயமுள்ளத்தொளியாய், சித்திரபானுக் கணிதஞ்சேர்.
அல்லும் பகலுமது வகன்ற உள்ளொளியாய், பல்லவத்திலே அமர்ந்தான் பார்.
அங்கத்தொளிருமந்த ரங்கவுள்ளொளியாய்க, கங்கைக் கரையமர்ந்த சீர்.
சீர்சிறந்த செவ்வேள் சிரவொளிமெய்க் காண்டல், மார்கழியின் மாமதியமாம்.
துங்கநிலயத்துளி ரொளியங்காண்டல், மங்களவாரத்தின் மகிழ் குருவாகவந்தான்
குளிர்ந்தவொளி திரண்டான், திருவாதிரைநாளிற் சீர்.
காரணமாய் நின்றான் கமலவொளி சிறந்தான், பூரணைநாட் கொண்டான் புகழ்.
படியதிர்ந்ததெங்கும் பணையுள்ளொளியாய், விடியர்காலத்தின் வெளிர்.
ஊழியது கடந்தான் உள்ளொளியாய் நின்றான், நாழிகையைம்பத்தாறதாம்.
சீலம் நிறைந்த செவ்வொளியைக் கண்டார், கோலதுவே லக்கினமதாம்.

அவர் உழ்க்கார்ந்திருந்தபோது தேகமுழுவதும் வாள்போன்ற சோதிவீசி பரந்தது. சிரசின் உச்சியில் ஐந்துபிளப்பமைந்த ஒளிஓங்கி வளர்ந்தது. அருகினின்ற ஆனந்தனும் பிருங்கியும் அறஹத்துக்களும் ஆனந்தக்கண்ணீர் ததும்பக் கலங்கினார்கள்.

அதுசமயத்தில் விதற்பநாட்டரயனும் அவன் மந்திரியும் தங்களுக்கு நேரிட்டுள்ள சங்கைகளைத் தெளிந்துக்கொள்ள வேண்டுமென்று அருகிலோடி வந்தார்கள். அவைகளை உணர்ந்த அருகன் அறப்பள்ளியில் தனதுவலக்கையால் சிரந்தாங்கி கால்நீட்டிடப் படுத்துவந்தவர்களை அருகில் வரச்செய்து சங்கையை விளக்குங்கோளென்று கூறினார்.

விதர்ப்பநாட்டரசனும் மந்திரியும் விவேகமிகுத்தோன் உடலிற்றோன்றும் ஒளியையும் அதன் குளிந்தப் பிரகாசத்தையும் கண்டு திகைத்தும் பயந்தும் வாய்பொத்தியும் நின்று ஒப்பிலா அப்பனே, எங்களுக்குள்ள சங்கையாதெனில், எங்களைக் காப்பாற்றும் பொருள் யாதேனும் உண்டாயில்லையா என்பதேயா மென்றார்கள். அம்மொழிகளைக்கேட்ட அருகன் இருவரையும் நோக்கி உண்டென்பதை உங்களுள்ளத்திலும் இல்லை என்பதை தோற்றும் பொருள் க்ஷணத்திற்கு க்ஷணம் அழிதலிலும் அறிந்துக்கொள்ளலாம். அன்னையானவள் குழந்தைக்கு அன்னத்தை ஊட்டுவாள். அதனை விழுங்கித் தன்னைப் போஷித்துக்கொள்ளவேண்டியது குழவியின் செயலாகும். அதுபோல ததாகதர் தான் கண்டடைந்த சுகவழியைப் போதிப்பார். நீங்களோ அவ்வழியில் சென்று சுகமுற்று உண்டா இல்லையா என்பதை உங்களுக்குள் நீங்களே உணர்ந்துதெளிந்துக்கொள்ளல் வேண்டும். உண்டென்னிலோ விசாரிணையற்ற சோம்பலால் எங்குண்டென்னும் எதிர்வினாத் தோன்றும். இல்லையெனிலோ மதோன்மத்தச் சோம்பலால் யாதுக்கில்லை என்னும் பதில்மொழித் தோன்றும். ஆதலின் உண்டென்பதை அவனவனுள்ளத்திலும் இல்லை என்பதை அவனவன் விசாரிணையிலுமே தெரிந்துக்கொள்ளவேண்டியது இயல்பாமென்று தனதிருக் கண்களையும் மூடி மார்கழிமீ பௌர்ணமி திதி திருவாதிரை நட்சத்திரத்தில் பரிநிருவாணம் அடைந்துவிட்டார்.

ஆனந்த நகரமென்னும் பல்லவநாட்டில் பேறியாற்றங்கரை என்றும் கங்கைக்கரை என்றும் வழங்குமிடத்தில் சித்திரபானு வருஷம் மார்கழி மாதம் 28-வது நாள் மங்களவாரம் பௌர்ணமி திதி விடியர்காலம் 56 நாழிகை துலாலக்கினத்தில் பரிநிருவாணமுற்றபோது தேகமெங்கும் குளிர்ந்த ஒளி வீசவும் உச்சியினொளி ஓங்கிவளரவும், பூமியதிரவும், மேகங்கள் பரவி நிற்கவும் தாமரை மலரவும், கண்ட சங்கத்தோர்கள் யாவரும் கலக்கமுற்று தேவாதிதேவனை என்று காண்போம், திருமூர்த்தியை என்று காண்போம், மூவாமுதல்வனை என்று காண்போம், முத்திக்கு முதல்வனை என்று காண்போம், சித்தார்த்தி திருவுருவை என்று காண்போம், திங்கள் முகவதனத்தை என்று காண்போம். தேஜோன்மயவுருவை என்று காண்போம். அழியாத அறவுரையை என்று கேட்போம், அமுதமொழி அறநெறியை யார்பால் கேட்போமென்று கதறியழுது தாயிழந்த குழவிபோல் பதரிநின்றார்கள்.

விம்பாசாரம் - விழாவரைக்காதை

இறைமகற்காத னெண்பானைந்திற் / குறைமிகுகாலக் கூற்றங் கடிந்து,
தக்கக் கடைநாடனுவாதிரையில் / பக்கமங்கலம் பருமதிகோலாய்,
போதி நீழற் பொருந்திய புத்தேள் / சோதிபஞ்சச் சூழொளியாகி,
ஆனவைகரை யார்ப்ப வானவன் / போனக விழாக்கோள்.

வீரசோழியம்

மணியிலகு செறிதளிரோ டலரொளிய / நிழலமர மருவியறவோர்,
பிணிவிரவு துயரமொடு பிறவிகெட / உரையருளும் பெரியவருளோன்,
றுணியிலகு சுடருடைய உடலமொடு / பிரமனெனுந் தலைமையவர் மா,
வணியிலகு கமலமல ரனையவெழி / லறிவனிணை யடிகடொழுவாம்.
போதிமேவினை பொய்மையகற்றினை / சோதிவானவர்தொழவெழுந்தருளினை
ஆதிநாதநீனடி யினை பரவுதும்.

சங்கத்தோர்களில் விவேகமிகுத்தவர்கட் சிலர் தங்கள் குருபரன் தனது தேகத்தில் பிணியொன்று அணுகாமலும், நரைதிறைவாய்த்து மூப்படையாமலும் குமரபருவ சுக தேஜசிலிருந்து பஞ்சாவஸ்தையாம் மரணவாதையின்றி ஆனந்தச் சோதிமயமாய் சகலருங்காண பரிநிருவாணமுற்றபடியால் ஆனந்தக் கூத்தாடி அருள் நிறைந்தோம் அருள் நிறைந்தோமென்றுபாடி பெருநிட்டையில் நிலைத்தார்கள்.

மற்றய சங்கத்தோர்கள் சித்தார்த்தர் பரிநிருவாணமடைந்த செய்தியை அவரது வம்மிஷவரிசை பேரர்களாகும் சாக்கையர்களுக்கும் தேகபாது காப்பாளராகும் மல்லர்களுக்கும் தருமப்பிரியவரசர்களுக்குந் தெரிவித்தார்கள்.

முக்கியமான ஏழு அரசர்கள் தங்கள் தங்கள் பரிவாரங்களுடன் வந்துசேர்ந்து பரிநிருவாணசயனத்திலிருக்கும் நிமலனைக்கண்டு பிணி மூப்பணுகா பெரியோன் தேஜசும், நரைதிரை காணா நாதன் வடிவுமே பிறவி சமுத்திரத்தைக் கடந்த பேரின்பசாட்சி என்று உணர்ந்து அருகபூதே அருளாழி வேந்தே நீவிராசை துறந்த பெருமெய் குமரபருவம் நீங்கா குறிப்பால் விளங்குகின்றது. யாங்களோ வீண்டம்ப அனுபோகத்தினின்று மாறாப் பிணியாலும் மூப்பாலுந் துக்கத்தைப் பெருக்கிக் கொண்டே வருகின்றோம். அரசர்களென்னும் பெயர்பெற்றும் அல்லலும் அவதியும் எங்களை விட்டகன்ற தில்லை. ஆறுதலுள்ள மனோதுக்க தேகதுக்க செயலால் சுகநித்திறையற்று திகைத்து நிற்கின்றோம். தாங்களோ ஆனந்த நித்திறையில் லயித்து சதா விழிப்பினின்று சருவசீவர்களுக்கும் சத்தியதன்மத்தை ஊட்டிய நாவானதயரவும் கருணா நோக்க விழியானது மூடவும் இன்றுதான் கண்டோம். இனியார் பால் அறவுரைக் கேட்போம். இனியாவரது கிருபாநோக்கம் பெறுவோமென்று அலறிவிழுந்து அறஹத்துக்களால் ஆறுதல் அடைந்து அறவாழி அந்தணன் தேக தகனத்திற்காய் ஏறாளமான சந்தனக்கட்டைகளையும் கற்பூரத்தையும் அகில் தைலங்களையுந் தருவித்தார்கள். சாக்கைய வம்மிஷவரிசையோரும் மல்லர்களும் மற்றுஞ் சங்கத்தோர்களும் வந்து சேர்ந்து பொன்மதில் வெள்ளிமதிலமைந்த சித்திரமாளிகையில் சயனித்த தேகம் மரத்தடி புழுதியில் இருகால்களை நீட்டி வலதுகையை சிரசிற்றாங்கி ஓலையின் பன்னகசயன அறப்பள்ளியுற்றிருப்பதைக் கண்டு தலைத்தார் வேந்தர் பதியைத் துறந்தசுகம் இதுதானோ, உலகச் சக்கிராதிபதியாகும் ஓர் மகவைத் துறந்த உல்லாசமிதுதானோ என்றவ ரடியில் வீழ்ந்து கதரி அவர் பரிநிருவாண ஆனந்தமறியாத அஞ்ஞான முற்றோர் சிலர் யாதா மொரு பிணியுமின்றி சுகதேகத்துடனிருந்தவர் எவ்வகையால் இறந்தார். யாது புசிப்பெடுத்தார், இவரது மரணத்திற்குக் காரணம் யாதென்று கண்கலங்கி நின்றார்கள்.

சாக்கையர் பிரிவாற்றா மூவடி வெளி விருத்தம்

உலக மிருண்டனவா லுன்னொளி பிரிந்தனவா லென்செய்கோம்யாம்
இலகு மொளிகுளிர்ந்துயெங்கும் பரந்தனவா லென்செய்கோம்யாம்
சலமலிந்த கடலலைகள் சாலவமர்ந்தனவா லென்செய்கோம்யாம்.
கொண்டல் முழங்கினவாற் கோடற்பரந்தனவா லென்செய்கோம்யாம்
வண்டுவரிபாட வார்தவளம் பூத்தனவா லென்செய்கோம்யாம்
எண்டிசையுந்தோகை யிசைந்தகவியேங்கினவா லென்செய்கோம்யாம்.
குலமரபோர் கூடுமொரு கூக்கல் முழங்கினவா லென்செய்கோம்யாம்
கலகலெனுங்கிண்கிணியார காதல் நிறைந்தனவா லென்செய்கோம்யாம்
பலகலையுமீய்ந்த தொனிபாகல் மறைந்தனவா லென்செய்கோம்யாம்.
அமுதவாக்கின்மொழியாம் அறமுமறைந்தனவா லென்செய்கோம்யாம்
குமுதமலர்வீற்றிருந்த கோமான் மறைந்தனரே யென்செய்கோம்யாம்
சுமுகசுகவாருதியின்சூ ழுலமர்ந்தனவா லென்செய்கோம்யாம்.

கங்குல்பரந்தனவா காந்தள் நிறைந்தனவா லென்செய்கோம்யாம்
சங்கங் குமிங்கினவா சாக்கை யொடுங்கினதா லென்செய்கோம்யாம்
எங்குமமர்ந்தகுரு வங்க மறைந்தனகா லென்செய்கோம்யாம்
எல்லா முணர்ந்த மொழியார்பாலுணர்ந்தறிவோ மென்செய்கோம்யாம்
கல்லா லமர்ந்தசுக காட்சி யெங்கு கண்டறிவோ மென்செய்கோம்யாம்
சொல்லா லுணர்த்து சுக சூட்சமொழி கண்டறியோமென்செய்கோயாம்.
சீலசுகமளித்த செல்வநிலை யெங்குணர்வோ மென்செய்கோம்யாம்
காலநிலையைவென்றகாட்சிதனை யென்றுணர்வொமென்செய்கோம்யாம்
வாலவறிவமர்ந்தோன்வாய்மொழியைக்கேட்டிலோமேயென்செய்கோம்யாம்.
மறுளறுத்தப்பெரும்போதி மாதவனைக்கண்டிலமா லென்செய்கோம்யாம்
அருளமர்ந்ததிருமொழியாலறவழக்கங்கேட்டிலோமாலென்செய்கோம்யாம்
பொருளறியு மருந்தவத்துப் புரவலரைக்கண்டிலமா லென்செய்கோம்யாம்.
துக்கநிலைநாலுணர்ந்தத்தாயவனைக்கண்டிலமாலென்செய்கோம்யாம்
பக்குவமெய்ப்பாங்குரைக்கும் பரதன்மொழிக்கேட்டிலமா லென்செய்கோம்
திக்கெட்டுணர்ந்தானின் தேய்வுநிலைக்கண்டறியோ மென்செய்கோம்யாம்.

பேரியாற்றங்கரையில் வந்திருந்தப் பெருங்கூட்டத்தோருள் விவேகமிகுத்த அறஹத்துக்களும் மற்றும் பெரியோர்களும் மாதவன் தனது பெருமுயற்சியால் கண்டுபிடித்த துக்கநிவர்த்தியின் மார்க்கங்களையும் அம்மார்க்கத்தில் நடந்து மாறிமாறி பிறக்குந் துன்பங்களையும் பிணியின் துன்பங்களையும், மூப்பின் துன்பங்களையும், மரணத்தின் துன்பங்களையும் ஜெயித்து ஜெயசீலனாக விளங்கி பரிநிருவாணமுற்ற பக்குவத்தையும் கண்டுணர்ந்து உலகத்தில் இதுவரையுங் காணா பேரின்ப சுகமும் பெரும்பேரும் இதுவே என்று ஆனந்தக் கூத்தாடி அவரது ஏகசடையைக் கத்திரித்துவைத்துக்கொண்டு தாங்களும் பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடென்னும் நான்கு வாய்மெயில் நிலைத்து பிறப்பை ஜெயிக்கவும், பிணியை ஜெயிக்கவும், மூப்பை ஜெயிக்கவும், மரணத்தை ஜெயிக்கவுமாயசுக சாதனங்களில் நிலைத்து சதாவிழிப்பிலும் ஜாக்கிரதையிலும் நிலைத்துக்கொண்டார்கள்.

அத்தகைய விவேகம் இல்லாதவர்களும் அறிவின் விருத்தியற்றவர்களும் ஆசாபாசப் பற்றுக்களையே மேலாக விரும்பினவர்களுமாகியக் கூட்டத் தோர்கள் யாவரும் தங்களைப்போல் பிணிவாதையிலும், மரணாவத்தையிலும் சித்தார்த்தர் வருந்தி சீவனை விடாது சுகதேகமும் சுப்ரதேஜசும் பெற்றிருந்து இறந்துவிட்டாரென்றுக் கேட்டவுடன் எவ்வகையால் இறந்தாரென்னும் விசாரிணையே பெரிதாகக்கொண்டு உசாவிவருங்கால் சேணிபனென்னும் அரசனளித்தப் புசிப்பில் கூர்முகக்கரி சமைத்தளித்து என்றுந் தின்றறியாதவர் அதனை புசித்து இறந்தாரென்று தங்களுக்குள் ஒருவருக்கொருவர் பேசி உறுதிபடக் கூறவாரம்பித்துக்கொண்டார்கள்.

விவேகமிகுத்தோர் அவர்களின் அவிவேகக்கருத்தை தடுத்து பரிபூரண பரிநிருவாணப் பேரின்பத்தை விளக்கியும், அவர்கள் எங்குங் கண்டுங் கேட்டுமறியா பரிநிருவாண சுகநிலையறியாது தங்கள் தங்கள் அஞ்ஞானப் பெருக்கின் பிடிவாதத்திலே நின்றுவிட்டார்கள்.

அரசர்களும், சங்கத்தோர்களும் அறவாழியான் தேகத்தைப் பல்லக்கில் வளர்த்தி அரசர்களும், அறஹத்துக்களும் அதனை ஏந்திக்கொண்டு அரசசின்னங்களாம் பலவகை வாத்தியகோஷங்கள் முயங்க வெண்குடை, வெண்கொடி, வெண்சாமரைகள் வீச சுத்தோதயனென்னும் மண்முகவாகு சக்கிரவர்த்தித் திருமகன் சித்தார்த்தி சக்கிரவர்த்தி பிறப்பை ஜெயித்தார், பிணியை ஜெயித்தார், மூப்பை ஜெயித்தார், மரணத்தை ஜெயித்தாரென்னும் ஆனந்தக்கூத்தாடிக்கொண்டே வம்மிஷவரிசையோராம் சாக்கையர்களும், பாதுகாப்பாளராகும் மல்லர்களும் புடைச்சூழ்ந்து நெருங்கக் காசிகங்கைக்கரைப் பல்லவ நாட்டைச்சார்ந்த ஆனந்தநகருக்கெடுத்துச்சென்று அவ்விடமுள்ள ஓர் விசால பூமியில் அரசர்களால் கொண்டுவந்திருந்த சந்தனக்கட்டை, கற்பூரம், அகிற்றைல முதலியவகைளை விட்டுப் பரப்பி பல்லக்குடன் தேகத்தை அவற்றுள் வைத்து மேலும் மேலும் சந்தனக்கட்டைகளால் மூடி நெருப்பிடுவதற்கு ஒருவருக்கொருவர் மனம்வராது

தூரவே விலகிநின்று சாந்தரூபத்தில் எவ்வகையால் அக்கினியை வளர்ப்போம், அன்பே ஒருருவாய ரூபத்தில் எவ்வகையால் அக்கினியை வளர்ப்போம், தருமமே ஓர் வடிவாய தேகத்தில் எவ்வகையால் அக்கினியை வளர்ப்போம், ஈகையே பேருருவாய ரூபத்தில் எவ்வகையால் அக்கினியை வளர்ப்போம் என்றும் பெருங்கூச்சலிட்டு அவற்றைக்கொளுத்துங் கொள்ளிக்குக் காரணர் அவரது ஏகபுத்திரர் இராகுலரே என்று சகல கூட்டத்தோருஞ் சம்மதித்து அவரது புத்திரரைக் கொண்டே தீ மூட்டிவிட்டார்கள்.

காசிக்கலம்பகம்

கேயூர மூரக்கிளர்தோளகிலேசர்
மாயூர மூருமொரு மைந்தற்குத்-தீயுரு
மவ்வேலையீந்தா ரடிதொழும்பு செய்தொழுகு
மிவ்வேலை யீய்ந்தா ரெமக்கு.

சித்தார்த்தரது தகனத்தின் மறுநாள் ஏழரசர்களும், சங்கத்தோர்களும் வந்துசேர்ந்தார்கள். சாக்கையர்களும், மல்லர்களும் அவ்விடமே கார்த்திருந்தும் சந்தனக்கட்டைகளை அதிகமாக அடுக்கி தகனித்தபடியால் அக்கினி தணியாமலிருந்தது. அரசர்களோ அவரது அஸ்தியையும் சாம்பலையும் கொண்டுபோய் பக்தி மாறாதிருப்பதற்காய கட்டிடங்களைக் கட்டி அவற்றுள் வைத்துக்கொள்ளவேண்டுமென்று ஆரம்பித்ததின்பேரில் அத்தணலை தண்ணீர்விட்டு அவிக்கப்படாது பால்விட்டவிக் கவேண்டுமென்னும் அன்பின் மிகுதியால் குடங்குடமாகப் பால் கொண்டுவந்தவித்து அஸ்திகளை எடுக்குங்கால் அரசர்களுக்குள் எமக்குமக்கென்னும் வாதுகள் பெருகி கலகத்திற்காயத்தமான போது சங்கத்து அறஹத்துக்களாம் அந்தணர்கள் தருமச்சக்கிரப் போதனை யூட்டி சாந்தத்தை நிறப்பி அரசர்களின் வாதுகளை அகற்றி அவர்கட் பிரியம் போல் அஸ்திகளையும், சாம்பலையும் எடுத்துப்போம்படி செய்துவிட்டார்கள்.

அரசர்கள் கொண்டுபோன அஸ்திகளை ஏழு இந்திரவியாரங்கள் கட்டி அதனதன் மத்தியில் புதைத்து அஸ்தியாம் அங்கலய அயிக்கியபீடம் தெரிந்துக் கொள்ளுவதற்காய் உயர்ந்த பச்சைக் கற்களாம் மரகதங்களாலும், வைரங்களாலும் குழவிபோல் செய்து அவ்விடம் புதைத்து அஸ்திவைத்துள்ள இடங்கண்டு அறவாழியானை பக்திசெய்யும் வழி தேடிக்கொண்டார்கள்.

அரசபுத்திரர்களாகிய கோபாலர்களோ சிறு சிறிய பேழைகளை செய்துவந்து குருவை தகனஞ்செய்த சாம்பலாம் மாபூதியை அவைகளிலடக்கஞ் செய்து வைத்துக்கொண்டு காலைக்கடனை முடித்து தேகசுத்தம் முடிந்தவுடன் சிறு பெட்டியிலுள்ள மாபூதியாம் சாம்பலை சற்குருவின் சிந்தனையும் தருமமும் மாறாதிருக்க புத்த, தன்ம, சங்கமென்னும் மூன்றையும் சிந்தித்து மூன்று கோடுகளாக நெற்றியில் பூசி அவ்விடம் மிகுந்துகிடந்த சந்தனக்கட்டைகளையும் எடுத்து அறஹத்துக்களாம் தென்புலத்தோர் உத்தரவின்படி உரைத்து புருவமத்தியில் பொட்டிட்டு புருஷோத்தமனை சிந்திக்கும்படி ஆரம்பித்துக் கொண்டார்கள். சாக்கையக் குடும்பத்தோர்களும் சித்தார்த்தரது ஏகசடையைக் கத்திரித்து இஸ்திரீகள் கூந்தலுடன் முடிந்துகொண்டதுடன் புருஷர்கள் வெள்ளியினாலும், பொன்னினாலுங் கூடுகள் செய்து அதனுள்ளடக்கி குருவின் சிந்தனை மாறாதிருக்க கழுத்தில் அணிந்துக் கொண்டார்கள்.

அஸ்தியைப் புதைத்த அங்கலய பீடமாம் லய அங்க பீடத்தையும் ஏகசடையாம் அங்க பாகத்தையும் இலிங்கமென வழங்கி குரு சிந்தனை மாறாது தன்மசிந்தனையில் லயித்திருந்தார்கள்.

சாக்கைய வம்மிஷவரிசையோர் சற்குருவை தகனஞ்செய்தவிடத்துள்ள மகாபூதியாம் சாம்பலின்மீது ஓர் இந்திரவியாரங்கட்டி மகாபூதியென்னுமோர் பெயரளித்தார்கள். மற்றும் நாதனை தகனஞ்செய்தவிடத்திற்கு ஜகந்நாத மென்னும் ஓர் பெயரையும் அளித்தார்கள். நாதனது அஸ்தியை அடக்கஞ்செய்த ஓர் தேசத்திற்கே அஸ்திநாதபுரமென்னும் ஓர் பெயரையும் அளித்தார்கள்.

அதே காசியம்பதியில் பகவன் ஆதியில் தன்மசங்கத்தை நாட்டி ஆதிவேதம் போதித்தவிடத்தில் பெரும் வியாரங்கட்டி பகவன் சின்முத்திரா ரூபத்தையும்,

பரிநிருவாணகால ரூபத்தையும், ஸ்தாபித்து காசிநாதவியாரமென்றும், காசிவிஸ்வேச வியாரமென்றும் வழங்கிவந்தார்கள்.

சங்கை ஆதாரனாம் புத்தபிரானால் தோன்றிய கங்கைக்கரையின் அருகிலேயே அறவாழியான் பள்ளிகொண்ட பரிநிருவாண ஆனந்தத்தால் கங்காநதி ஸ்நானத்தையும், சங்கறர் அந்தியமான பீடத்தையும், புத்தகயா வென்னும் பதியையும், உலகிலுள்ள சகல பௌத்தர்களும் சென்று தெரிசித்து கங்கையில் மூழ்கி காசிநாதா, காசி விசுவேசா, கங்கை ஆதரா, கமலநாயகா, கருணாலயனே எனக் கொண்டாடி வந்தார்கள்.

மணிமேகலை

புத்ததன்ம சங்கமென்னும் / முத்திரமணியை மும்மெயில் வணங்கி
காயங் கரையெனும் பேரியாற் றடக்கரை / மாயமின் மாதவன் றன்னடி பணிந்து
காசிமா நகர் கடல்வயிரு புகாமல் / வாசவன் விழாக்கோல் மறவேனென்று

காசிக்கலம்பகம்

குடமுடைந்ததென வானினங்
கண்மடி மடைதிறந்து பொழிபாலொடு
கொழுமடர் பொதிய வீழ்ந்து கைதைதொழு
சோறுமிட்டணி திருக்கையாற்
கடல் வயிற்றி நிரப்புகின்ற
சுரகங்கை குண்டகழியா நெடுங்
ககன நீள்குடுமி மதில்களேழுடைய
காசிமேவு மகிலேசரே

முத்திக்கு வேட்டவர் மோட்டுடற் பாரமுடைத்தலையோடு
அத்திக்கும் சாம்பற்கு மோம்பினரா லிவையன்றி யப்பாற்
சிந்திப்பது மற்றிலைபோலுந் காசிச்சிவபெருமான்
பத்திக்குக் கேவலமே பலமாக பலித்ததுவே.
பொன்னாருக்கென்ன பூந்துணர் கொன்றையும்
வெள்ளிமுளை யன்ன விரிநிலாக் கொழுந்துங்
காந்தண்மலர்ந்தன்ன பாந்தளி னிறையுந்
திரைசுழித்தெரியும் பொருபுனற் கங்கையில்
வெள்ளிதழ்க்கமலம் வள்ளவாய் விரித்தென
முழுநகை முகிழ்க்குங் கழுமுடை வெண்டலை
தோலடிச்செங்காற் பால்புரை வரிச்சிறைக்
கிஞ்சுக மலர்ந்த செஞ்சூட்டெகினத்
துருவெடுத்த கல்வான் றுருவியுங் காணாத்
தொன்மறைக்கிழவ சென்னிமற்றியானே
கண்டுகொண்ட னன்னிக்கடவுண்மா முடியெனப்
பெருமகிழ் சிறப்பக் குரவையிட்டார்த்த
வெள்ளெயி றிலங்க விரைவிற் சிறைத்தென
பெருவியப் பிழைக்கு மெரிபுரை சடையை
யாள்வழக் கறுக்கும் வானமர் தடங்கண்
மின்னிழை மருங்கிற் சின்மொழி மகளீ
ரொழுகொளி மிடற்றி னழகுகவர்ந்துண்டெனக்
கயிறுகொண்டார்க்குங் காட்சித்தென்ன
மரகதங் காய்த்துப் பவளம் பழுக்குங்
கமஞ்சூர் கமுகின் கழுத்திறயாத்து
வீசொளிப் பசும்பொ னூசலாட் டயர்வரர்
பருமணிக் கமுகின் பசுங்கழுத் தடைந்து
துரைபடற்குறுதித் திறடெரித் தென்ன
முழுக்குலை முரிந்து பழுக்காய் சிதறு
மங்குல்கண்படுக்கும் மதுமலர் பொதும்பர்
கங்கைசூழ் கிடந்த காசிவாணா.
புகுமேமதிக்கொழுந்தும் பொன்மாலைப்போது
நகுமே கிளையு நகைத்தா னமக்கென்னே
யுகுமே லுயிர்காசி யுத்தமனைக் காண
தகுமே யப்போதிதழைத்தாரும் பெறலாமே.

மற்றும் சமணரிற் சித்திப்பெறவேண்டியவர்கள் அச்சாம்பலைவாரிக் கொண்டுபோய் மடத்தில் வைத்துக்கொண்டு அதன்மீது ரெட்டுவஸ்திரம் விரித்து தாங்கள் உழ்க்கார்ந்து ஞானசாதனமுஞ் செய்துவந்தார்கள்.

ஈதன்றி மகதநாட்டைச்சார்ந்த கபிலைநகரில் சாக்கையச் சக்கிரவர்த்தி திருமகன் பிறந்தபோது காராம்பசுவென்னும் கன்று ஈணாத பசுவொன்று

வந்து குழவிக்கு அமுதூட்டிய ஆட்சரியங் கண்டு கௌதமரென்னும் காரணப்பெயரும், கலிவாகுச் சக்கிரவர்த்தியால் கணிக்கப்பெற்ற சித்தார்த்தி வருஷம் வைகாசிமீ பௌர்ணமியில் பிறந்து சித்தார்த்தி என்றும் பெயர்பெற்ற பெரியோன் பிறந்த காலவாட்சரியக் குறிப்புகளைக் கண்டும் அவரை தரிசிக்கவேண்டி தூரதேசத்தினின்று தவழ்ந்துவந்த இருசப்பாணிகளாகிய ஆனந்தன், பிருங்கி என்னும் இருவர்கள் எழுந்துநின்று நடக்க ஆரம்பித்த ஆட்சரியத்தைக் கண்டும், அவரது வாலவயதில் போதித்த நீதிமொழிகளின் ஆட்சரியங்களைக் கண்டும் தனது அரியமனைவி அசோதரையையும் அரிய புத்திரன் இராகுலனையும் விட்டு மாசிமாதம் பௌர்ணமியில் துறவுபூண்ட ஆட்சரியத்தைக் கண்டும், அத்தகையத்துறவினிலையால் சகல பற்றுக்களுமற்று கல்லாலடியில் வீற்று பங்குனி மாதப் பௌர்ணமியில் நிருவாண சுகநிலைபெற்று காமமென்னும் மன்மதனையும், மரணமென்னும் காலனையுஞ் செயித்து சகலமுமுணர்ந்து தான் மறுபிறவிக்கேகாது பிறவி நிலையை ஜெயித்த வழிகளையும், தேக சுகஈனமடையாது பிணியை ஜெயித்த வழிகளையும், தேகந் தளராது மூப்பை ஜெயித்த வழிகளையும், பஞ்ச அவத்தைக்குள்ளாகாது மரணத்தை ஜெயித்த வழிகளையும் உலக மக்களுக்கு அநுபவக் காட்சியாகப் போதித்து வந்த ஆட்சரியங்களைக் கண்டும், உலகெங்கும் சத்தியதன்ம சங்கங்களை நாட்டி மெய்யறத்தையூட்டி, உண்மையறியும் வழிகளைக் காட்டி நட்சேத்திரமாம் தனது புத்தேளுலகநிலை பெறுகுவதற்காக மார்கழிமாதப் பௌர்ணமியில் சுயம்பிரகாசமாகப் பரிநிருவாணமடைந்த ஆட்சரியங்களைக் கண்டும் வந்தவர்களாகும் உலகமக்களுக்கு என்றுங்காணா ஈதோர் புதுமெயும் முத்திய நிலயுமாகக் காணப்பட்டபடியால் இவரே முத்திக்கு முதல்வனென்றும், ஞானத்தின் வழிகாட்டி என்றும் உலகெங்கும் சங்கங்களை நாட்டி அறத்தைப் போதித்துள்ளபடியால் இவரே ஜகத் குருவென்றும் சக்கரவாளமெங்கணும் அறக்கதிர் விதைத்துள்ளபடியால் உலகுக்கு நீதி போதமளித்த உலகநாத னென்றும் உலகிலுள்ள சருவசீவர்களையும் தனது தருமச் சக்கரநெறியில் நிறுத்தியவராதலின் திருமாலென்றும் அவர் பரிநிருவானம் அடையும் வரையில் நரைதிறை காணாது கருணாகரமுகமும் தேஜசும் நிறைந்த வடிவாய் நின்றபடியால் திருமூர்த்தியென்றுங் கொண்டாடி அவர் பரிநிருவாணமுற்ற அயனமாம் ஆறாவது மாதத்தில் பௌத்த அரசர்களும், குடிகளும், சங்கத்தோர்களும் ஒன்றுகூடி அவர் பரிநிருவாண முற்றப் பேரானந்த ரகசியத்தை விளங்க போதித்து பகவன் பன்றியின் இறச்சியைத் தின்றதுங்கிடையாது, அவர் பஞ்ச அவஸ்தையால் மற்றய மனுக்களைப்போல் மரணமடைந்ததுங் கிடையாதென்று அநுபவங்களை ஊட்டி அறவாழியான் மறைவிற்குத் துக்கமடையாதீர்கள் ஆனந்தத்தில் வீற்றிருங்கோள் ததாகதர் தன் வினையை ஜெயித்து ஏனையோர் வினைகளையும் ஜெயிக்கத்தக்க வழிகாட்டியிருக்கின்றார். நீங்கள் யாவரும் அவர் போதித்த வழியில்நடந்து அவரடைந்த பரிநிருவாண மடையுங்கோள் என்று தென்புலத்தோராம் விவேக மிகுத்தோர்கள் கூறினார்கள்.

அவற்றைக் கேட்டிருந்த விவேகமற்றப் பெருங்குடிகளும் சில அரசர்களும் விவேகிகளின் கூற்றை மறுத்து மாமிஷ பட்சணம் என்றும் செய்யாதவரும், திடகாத்திரமும், சுகதேகியுமாயிருந்தவருக்கு பன்றியின் இறைச்சியைப் புசிக்க வைத்துக் கொன்றுவிட்டார்கள். அவரது மரணத்திற்குப் பன்றியினிறைச்சியே காரணமாதலின் வருடந்தோரும் அவர் மரணமடைந்தநாளிற் பன்றி எய்து பெரியாண்டவனை பூசிக்கவேண்டுமென்று ஓர் வகுப்பார் பிரிந்து கொண்டார்கள். இவர்களே ஈனாயன பௌத்தர்களென்று அழைக்கப் பெற்றவர்களாகும்.

மற்றுமுள்ள சங்கத்தோர்களும் விவேக மிகுத்தோர்களும் அகிம்சா தன்மத்தை ஆதியில் ஊட்டிய அப்பனுக்கு இம்சாதுதி ஏற்காது, அது சாது சங்கத்தோரைக் கார்க்காது, அவரை சிந்தித்து நீதிமார்க்கத்தைக் கொண்டாட வேண்டியவர்கள் அஹிம்சா தருமத்தில் நிலைத்து வைகாசிமாத பருவத்தில்

அவர் பிறந்தநாள் கொண்டாட்டத்தையும், மாசி மாத பருவத்தில் அவர் துற்வடைந்தநாள் கொண்டாட்டத்தையும், பங்குனிமாத பருவத்தில் அவர் நிருவாணமாம் காமனை ஜெயித்தக் கொண்டாட்டத்தையும், மார்கழிமாத பருவத்தில் அவர் சுயஞ்சோதியாய் பரிநிருவாணமுற்ற வானந்தத்தையும் கொண்டாடி நீதிநெறியில் நிலைக்கவேண்டுமென்று ஓர் கூட்டத்தார் பிரிந்தார்கள். இவர்களே மகாயன பௌத்தக் கூட்டத்தோர்களானார்கள்.

பகவன் பரிநிருவாணமுற்ற அயனமாம் ஆறாவது மாதத்திலிக் கூட்டங்கள்கூடி மேற்கூறி முடிவுகளை செய்தபடியால் வருடந்தோரும் பன்றியை எய்யவேண்டுமென்னும் கூட்டத்தோர் ஈனாயன பௌத்தர்களென்றும், அவ்வகைப் பன்றி எய்யப்படாதென்னும் கூட்டத்தோர் மகாயன பௌத்தர்களென்றும் அழைக்கப்பெற்றார்கள்.

தேவர் கோன் வாழ்க தென்புலத்தோர் வாழ்க
மூவா முதல்வன் மும்மணியும் வாழ்க
காவாது காக்கங் கருணா வுபாஸக
ராவலோர் வாழ்க வவர்சுக மோங்கவே.

சூளாமணி

மூவடிவினாலிரண்டு சூழ் சுடருநாண முழுதுலகமுடியெழின் முளைவயிரநாற்றித்
தூவடிவினாலிலங்கு வெண்குடையினீழற்சுடரோயுன்னடி
போற்றிச் சொல்லுவதொன்றுண்டாற்
சேவடிகடாமரையின் சேயிதழ்கடீண்டச்சி வந்தனவோ சேவடியின் செங்கதிர்கள்பாயப்
பூவடிவுகொண்டனவோ பொங்கொளிகள்சூழ்ந்து புலங்கொளாவாலெமக்கெம்
புண்ணியர்தங்கோவே
கருமாலை வெவ்வினைகள்காறளர நூறிக்கடையிலாவொண்
ஞானக்கதிர்விரித்தாயென்று
மருமாலை நன்னெறியைமுன்பயந்தா என்றுமடியே முன்னடி பரவுமாறறிவதல்லாற்
றிருமாலே தேனாருமரவிந்தமேந்துந் திருவணங்குசேவடியாய் தேவாதிதேவ
பெருமானே நின்பெருமெ நன்குணர மாட்டார்பிணங்குவார்தம்மை வினைப்
பிணக்கொழிக்கலாமே
ஒளியாகி உலகாகி நீவிரிந்தாயென்கோவுலகெலாநின்னொளியினுள்ளடங்கிற்றென்கோ
வளியாரவுலகநீயாள்கின்றாயென்கோ வம குலகுதானின்ன
தடியடைந்ததென்கோ
விளியாதமெய்ப்பெர்ருளை நீவிரித்தாயென்கோ நீவிரித்தவாறே மெய்ப்பொருள்
விரிந்ததென்கோ
தெளியாமலில்லை நின்றிருவடிகண்மெய்மெதெளிந்தாலுஞ் செவ்வனே தெரிந்துரைக்கலாமே.
களியானை நாற்கோட்டத் தொன்றுடையசெல்வன் கண்ணொராயிரமுடையான் கண்
விளக்கமெய்து
மொளியானை ஊழிமுதலானானை ஒங்கியுல களவுமாகி உயிர் தமக்குறுகண்செய்யா
வளியானையாரழலஞ்சோதிவாய் சூழ்ந்தவருளாழியானையினையடி பரவுவார்கட்
கெளியானை எந்தைபெருமானை ஏயல்லா லிறையாக
வீங்கொருவரெண்ணுமாறென்னே
தெருளாமெயால் வினவற்பாலதொன்றுண்டு திருவடிகள் செம்பொனாரரவிந்தமேந்த.
விருளாழியேழுலகுஞ் சூழொளியின் மூழ்க விமையாத செங்கண்ணினிமையோர் வந்தேத்த
உருளாழியானுமொளிமணி முடிமேற்கைவைத்தொருபாலில் வரவுலகதின்னுழையதாக .
வருளாழி முன்செல்லப் பின்செல்வதென்னா வடிப்படாதாய்நின்றவகன்ஞாலமுண்டோ
வானோர் தமுலகுடையமானீலவண்ணன் மகிழ்ந்திறைஞ்சு
மாலையணிமணிமுடிமேல்வைகா
ஊனாருமறவாழியோடைமால் யானையுடையான்ற ஒளிமுடியின் மேலுரையோநிற்கத்
தேனாருமரவிந்தஞ் சென்றேந்தும் போழ்து திருவடிகள்
செந்தோடு தீண்டாவேயாகி
லானாவிம்மூவுலகுமாளுடையபெம்மானடியுறுவாரின்மெதாமறிவுண்டதன்றே
தேனருளி மந்தாரச் செந்தா மந்தாழ்ந்து திரளரைய செம்பவளம் வம்பாக வூன்றி
வானருளி மாணிக்கச் செங்கதிர்கள் வீசி மதிமருட்டும் வெண்குடையோர்
மூன்றுடையவாமன்
யானருள வேண்டியடியிணை பணியும் போழ்துமிமையவர் கோனாயிரச்
செங்கணான் வந்து
தானருளுமாறென்று தாழ்பணியும் போழ்துந் தகை யொன்ற தேலிறைமைதக்க
தேயேன்றே
விண்டாங்கவெவ்வினைவெரூ உதிரநூறிவிரிகின்ற மெய்ஞ்ஞானச்
சுடர்விளக்குமாட்டிக்

கண்டார்கணின்னிலைமைகண்டொழுகயானின்கதிர்மயங்குசோதியாற்கண்விளக்கப்பட்டுத்
தண்டா அமரைமலரின்மே னடந்தாயென்றுந்தமனீயப்
பொன்னணையின் மேலமர்ந்தாயென்றும்
வண்டார சோகினிழல் வாயமர்ந்தாயென்றும் வாழ்த்தினால் வாராயோ
வானவர்தங்கோவே.

கருவார்ந்தபொருணிகழ்வுங் காலங்கண்மூன்றுங் கடையிலா நன்ஞானக்கதிரகத்தவாகி
யொருவாதிங்கவ்வொளியினின்னுள்ளமாகிலுலகெல்லா நின்றுள்ளத்தே
ஒளிக்கவேண்டா
திருவார்ந்ததண்மார்ப தேவாதி தேவ திரளரையசெந்தனிரசோகமர்ந்தசெல்வ
வருவாரும் வையகமுநீயும் வேறாகி மணிமேனிமாலேமயக்குவதிங்கென்னோ
செங்கணெடுமாலே செறிந்திலங்குசோதித்திருமுயங்கு மூர்த்தியாய்செய்யதாமரையி
னங்கணடிவைத்தருளுமாதியாயாழியறவரசே என்று நின்னடி பணிவதல்லா
லெங்கணிடரகலுமாறிந்நிலைமெயெய்தி யிருளுலக நீக்குமருடருகநீயென்று
வெங்கணிருவினையையறவென்றாய் முன்னின்று விண்ணப்பஞ்செய்யும்
விழுத்தகை மெயுண்டோ.

சிலப்பதிகாரம்

அறிவ னறவோ னறிவுவரம் பிகந்தோன்
செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
றரும முதல்வன் றலைவன் றருமன்
பொருளன் புனிதன் புராணன் புலவன்
சினவரன் றேவன் சிவகதி நாயகன்
பரமன் குணவதன் பரத்தி லொளியோன்
றத்துவன் சாதுவன் (சாரணன்) காரணன்
சித்தன் பெரியவன் செம்ம றிகழொளி
யிறைவன் குரவ னியல்குண னெங்கோன்
குறைவில் புகழோன் குணப்பெருங் கோமான்
சங்கற னீசன் சயம்பு சதுமுக
னங்கம் பயந்தோ னருக னருண்முனி
பண்ணவ னெண்குணன் பாத்தில் பழம்பொருள்
விண்ணவன் வேத முதல்வன் விளங்கொளி
யோதிய வேதத் தொளியுறி னல்லது
போதார் பிறவிப் பொதியறை யோரெனச்
சாரணர் வாய்மொழி கேட்டுத் தவமுதற்
காவுந் தியுந்தன் கைதலை மேற்கொண்
டொருமூன் றவித்தோ னோதிய ஞானத்
திருமொழிக் கல்லதென் செவியகந் திறவா
காமனை வென்றோ னாயிரத் தெட்டு
நாம மல்லது நவிலா தென்னா
வைவரை வென்றோ னடியினை யல்லது
கைவரைக் காணினுங் காணா வென்கண்
ணருளறம் பூண்டோன் றிருமெய்க் கல்லதென்
பொருளில் யாக்கை பூமியிற் பொருந்தா
தருக ரறவ னறிவோற் கல்லதென்
னிருகையுங் கூடி யொருவழிக் குவியா
மலர்மிசை நடந்த மலரடிக் கல்லதென்
றலைமிசை யுச்சி தானணி பொறாஅ
திறுதியி லின்பத் திறைமொழி யல்லது
மறுதர வோதியென் மனம்புடை பெயரா
தென்றவ னிசைமொழி யேத்தக் கேட்டதற்
கொன்றிய மாதவ ருயர்மிசை யோங்கி
நிவந்தாங் கொருமுழ நீணில நீங்கிப்
பவந்தரு பாசங் கவுந்தி கெடுகென்
றந்தர மாறாப் படர்வோர்த் தொழுது
பந்த மறுகெனப் பணிந்தனர் போந்து
காரணி பூம்பொழிற் காவிரிப் பேரியாற்று.

எனும் பஞ்சகாவியங்களின் ஆதாரங்கொண்டும், பாலிபாஷையிலுள் ளப் பிடகங்களின் ஆதாரங்கொண்டும், திராவிட பௌத்தருள் பிரபலமாக வழங்கிவந்த சுருதியின் அனுபவங் கொண்டும் வரைந்துள்ள முதநூலாம்.

புத்தரது ஆதிவேதம் முற்றிற்று

29. புத்தரது ஆதிவேத விளக்கம்

சவ்வபபாபஸ்ஸ அகரணம்
குஸலஸ வுபசம்பதா
சசித்தபரியோதபனம்
யேதங் புத்தானுசாசனம்

பாபஞ் செய்யாதிருங்கோள்
இதயத்தை சுத்திசெய்யுங்கோள்
நன்மெய்க் கடைபிடியுங்கோள்

இவ்வாக்கியங்கள் மூன்றும் மூன்று பேதமாயுள்ளபடியால் திரி பேதவாக்கியங்கள் என்றும், திரிவேதவாக்கியங்கள் என்றும், இதுவே சீர்திருத்த ஆதிபீட வாக்கியங்களானபடியால், திரிபிடகவாக்கியங்கள் என்றும், வரிவடிவ அட்சரமில்லாது ஒலிவடிவாய் ஒருவர் சொல்லவும் மற்றொருவர் கேட்கவுமாயிருந்தபடியால் வரையாக் கேள்வி திரிசுருதி வாக்கியங்கள் என்றும், விசேஷித்த ஞானம் அமைந்துள்ளபடியால் திரிரத்தினங்கள் என்றும், ஆதிமக்கள் சீர்திருத்த முப்பிரிவாக்கியங்களாயிருந்த படியால் முதநூலென்றும், ஆதிவேதமென்றும், உடனுக்குடன் விளங்காத அபரியப் பொருட்களாயிருந்த படியால் அருமறைகள் என்றும் வழங்கி வந்தார்கள். இம்முதநூலாம் ஆதிவேதத்தை போதித்தவர் புத்தரே என்பதற்கு ஆதாரம்

நன்னூல்

வினையினீங்கி விளங்கிய வறிவின் / முனைவன் கண்டது முதநூலாகும்

அருங்கலைச்செப்பு

என்று முண்டாகி யிறையால் வெளிப்பட்டு / நின்றது நூலென்றுணர்

சீவகசிந்தாமணி

ஆதிவேதம் பயந்தோய்நீ யலர்பெய்மாரி யமர்தோய் நீ
நீதிநெறியை யுணர்ந்தோய் நீ நிகரில்காட்சிக் கிறையோய் நீ
நாதனென்னப் படுவோய் நீ நவைசெய் பிறவிக் கடலகத்துன்
பாதகமலந் தொழவெங்கள் பசையாப்பவிழப் பணியாயே.

சூளாமணி

ஆதியங் கடவுளை யருமறை பயந்தனை / போதியங் கிழவனை பூமிசை யொதுங்கினை
போதியங் கிழவனை பூமிசை யொதுங்கிய / சேதியஞ் செல்வனின் றிருவடி வணங்கினம்.

திரிபேதவாக்கியங்களாம் திரிபிடகவாக்கியங்கள் வரிவடிவ அட்சரங் களில்லாது வரையாக்கேள்வியாம் திரிசுருதிவாக்கியங்களாய் இருந்தபடியால் மக்கள் மனதிற் சரிவறப்பதியாமல் மலைவுற்றிருப்பதையுணர்ந்த பகவன் விம்பாசார அரசனை அணுகி மகடபாஷை வடமொழி வரிவடிவட்சரங் களையும், திராவிடபாஷையாம் தென்மொழி வரிவடிவட்சரங்களையும் உண்டுசெய்து உடலினதுச் செயலையும் உயிரினதுச்செயலையும் உணர்ந்து உண்மெயாம் மெய்ப்பொருள் உணர்வான் வேண்டி உயிரெழுத்து மெய்யெழுத்தென்னு மட்சரங்களையும் வல்லினம், மெல்லினம், இடையினமென்னு மதனதன் சத்துவங்களையும், ஒருமெய், பன்மெயென்னும் பாகுபாடுகளையும், அதனதன் வேற்றுமெகளாம் விகற்பங்களைத் தெள்ளறவிளக்கி மொழிதலாக்கி விம்பாசாரவரசனது தேசத்திலுள்ள ஓர் கன்மலையை சீர்திருத்தி திரிவேதமொழிகளைத் தழுவிய தசசீலங்களாம் பாரதப்பத்தை வரைந்து சகடபாஷை, திராவிடபாஷை கற்றுத்தேறும் ஒவ்வொருவர் மனதிலும் பதியச்செய்து விட்டார்.

சகடபாஷை : வடமொழி புத்தபிரானால் இஃது பாணினியாருக்கு போதிக்கப்பட்டது.

திராவிட பாஷை : தென்மொழி புத்தபிரானால் இஃது அகஸ்தியருக்குப் போதிக்கப்பட்டது.

இவ்விருமொழியும் புத்தபிரானால் போதித்துள்ளதென்பதற்காதாரம்.

பூர்வம் இத்தேசக்குடிகள் யாவரும் புத்தபிரானை இந்திரரென்றே கொண்டாடிவந்தார்கள். அதற்குக் காரணம் மெய், வாய், கண், மூச்சுச், செவியென்னும் ஐயிந்தியங்களை வென்ற வல்லபங் கொண்டேயாம். இந்திர

விழாவென்றும் இந்திரவிழாக்கோலென்றும், இந்திரதிருவென்றும் அவரைக் கொண்டாடிவந்த உச்சாகத்தால், அவ்வகைக் கொண்டாடிவந்த மக்களை இந்தியர்களென்றும், கொண்டாடிய தேசத்தை இந்தியமென்றும் நாளது வரையிலும் வழங்கி வருகின்றார்கள்.

இத்தகைய இந்திரரென்னும் பெயர்பெற்ற பகவனால் வரைந்துள்ள வரிவடிவ முதலெழுத்ததிகாரத்திற்கு ஐந்திரவியாக்ரணமென்று பெயர். அதனாதாரங்கொண்டே தொல்காப்பியம் தோன்றியுள்ளதென்பதை அதற்குப் பாயிரங்கூறியுள்ள பனம்பாரனாரே போதுஞ்சான்றாம்.

தொல்காப்பிய எழுத்ததிகார சிறப்புப்பாயிரம்

வடவேங்கட தென்குமரி யாயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளு மாயிருமுதலி
னெழுத்துஞ் சொல்லும் பொருளுநாடிச்
செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல்கண்டு முறைப்படவெண்ணி
புலந்தொடுத்தோனே போக்கறு பனுவ
னிலந்தரு திருவிற் பாண்டியன வையத்
தறங்கரைநாவினான் மறை முற்றிய
விதங்கோட்டாசாற் கரிதுபத்தெரிந்து
மயங்கரமாபினெழுத்து முறைகாட்டி
மல்குநீர்வரைப்பினிந்திரரரைந்த
தொல்காப்பியனெனத் தன்பெயர் தோற்ற
பல்புகழ் நிறுத்தப் படிமெயோனே.

வீரசோழியம்

ஆவியனைத்துங் கசதநபமவ் வரியும்வவ்வி,
லேவியவெட்டும்யவ்வாறுஞன் நான்கு மெல்லாவுலகு,
மேவியவெண்குடைச் செம்பியன்வீர ராசேந்திரன்றன்,
நாவியல் செந்தமிட் சொல்லின் மொழிமுதனன்னுதலே.

முன்கலைதிவாகரம்

வடநூற்கரசன் என்றதமிழ்க் கவிஞன்,
கவியறங்கேற்று முபயக் கவிப்புலவன,
செறிகுணத்தம்பற் கிழவோன் சேந்த,
னறிவு கரியாகத் தெறிசொற்றிவாகரத்து,
முதலாவது தெய்வப்பெயர் தொகுதி.

சிவஞான யோகீஸ்வரர் வடகலை தென்கலை பாணினீயம்

திடமுடைய மும்மொழியாந் திரிபிடக நிறைவிற்காய்
படிமொழியை பாணினிக்கு வகுத்தருளி அதற்கு இணையா
தொடர்புடைய தென்மொழியை உலகம் எலாந்தொழுதேத்தக்
குடமுதிக்கு வற்புறுத்தார் கொல்லாற்றுபாகர்.

வீரசோழியப் பாயிரம்

ஆயுங்குணத்தவ லோகிதன் பக்கலகத்தியன்கேட்
டேயும் புவனிக் கியம்பிய தண்டமி ழீங்குரைக்க
நீயு முளையோவெனிற் கருடன் சென்ற நீள்விசும்பி
லீயும் பறக்குமிதற்கென்கொலோ சொல்லுமேந்திழையே.

வீரசோழியக் கிரியாபதப்படலம்

மதத்திற் பொலிவும் வடசொற்கிடப்புந் தமிழ்மரபு,
முதத்திற் பொலியேழை சொற்களின் குற்றமு மோங்குவினைப்,
பதத்திற்கிதைவு மறிந்தே முடிக்க பன்னூறாயிரம்,
விதத்திற் பொலியும் புகழவலோகிதன் மெய்த்தமிழே (அவலோகிதர்-புத்தர்.)

சீவஞானயோகீஸ்வரர் கலைஞானம்

திருமொழிக்குங் கண்ணுதலால் முதற்குலவரியல்வாய்ப்ப
இருமொழியும் வழிபடுத்தார் முநிவேந்தரிசைபரப்பும்
இருமொழியுமான்றவரே தழீஇனா ரென்றாலிவ்
இருமொழியு நிகரென்னு மிதற்கைய முளதேயோ.

(முதற்குரவர் - ஆதி முநிவர், முநிவேந்தராம் முதற்றுறவியால் வடமொழியும், தென்மொழியுமாக்கியதென்பது கருத்து).

அவலோகிதரால் அக்கை, தங்கையர்போலாக்கிய வடமொழி, தென்மொழி இரண்டினாதரவால், திரிபேத வாக்கியங்களாகு முதநூலை ஆதிநூல்,

எழுதாக்கேள்வி, ஆரணம், ஒத்து, சாகை, சுருதி, இருக்கென்னும் ஏழுபேதமாக வழங்கிவந்தார்கள்.

முன்கலை திவாகரம்

ஆதிநூலென்பது வேதநூற்பெயரே

பின்கலைநிகண்டு

ஆதிநூலெழுதாக்கேள்வி யாரண மொத்து சாகை
யேதமில் சுருதிதன்னோடிருக்கிவை யேழும்வேதம்
வேதநூற் நாமம் விதித்திடு ஞானபாகை
யாதியாங் கருமபாகை யருத்த பாகையுமா மென்ப.

பாபஞ் செய்யா திருங்கோள் கருமபாகை; நன்மெக் கடைபிடியுங்கோள் அர்த்தபாகை இதயத்தை சுத்திசெய்யுங்கோள் ஞானபாகை.

அறத்தால் கன்மபாகை நற்செயல் விளக்கத்தையும், பொருளால் அர்த்தபாகை மெய்ப்பொருள் விளக்கத்தையும், இன்பத்தால் ஞானபாகை பேரின்ப விளக்கத்தையும் விவரித்து ஞானசாதனத்தால் பற்றற்று தானே தானே தத்துவமாம் நித்தியானந்த நிருவாண வீடுபேறு பெற்றுபோது பாபஞ்செய்யா திருங்கோள், நன்மெக் கடைபிடியுங்கோள், இதயத்தை சுத்தி செய்யுங்கோள் என்னும் மூன்று பேதவாக்கியங்களின் பயனாம் வீடு பேற்றையும் ஒரு பேதவாக்கியமாக்கி ஆக நான்கு பேதவாக்கியங்கள் என வழங்கியதுமன்றி அதனதன் செயலுக்குத் தக்கவாறு இருக்கு, யசுர், தைத்திரீயம், அதர்வணமென்னும் நான்குபெயர்களையும் அளித்து அவைகளுக்கு சிறப்புநிலையாம் ஆகமம், ஆரிடம், பிடகம், தந்திரம், பநுவல், சமயம், சூத்திரமென்றும் வழங்கி வந்தார்கள்.

பின்கலைநிகண்டு

மெய்தெரியாரணந்தான் வேதத்தி ஞானபாகை
மையலுட் பொருளினாம மற்றுப நிடதமென்ப
வைதிகம் வேதமற்ற மார்க்கமேபார்க்குங்காலை
பையமிலிருக்கினோடு பிடகமேயாதிவேதம்
ஏமமா மிரண்டாம் வேத மிசை தைத்திரியத்தோடு
தோமிலா யசுவமென்றுஞ் சொல்லுவர் நல்லநூலோ
சாமமா மூன்றாம்வேதந் தகமெபேரின்பஞ் சாரும்
வாமமாம் நான்காம்வேதம் அதர்வணம் வீடுபேறாம்
தந்துரை புனைந்துரைத்தல் சார்ந்த பாயிரத்தினோடு
முந்திய பதிகமேநூன் முகமுக உரையுமப்பே
ரந்தமா மாகமத்தோராரிடம் பிடகமற்றுந்
தந்திரம் பநுவலோடு சமயஞ்சூத்திரமுநூற்பேர்.

நான்குபேதவாக்கியங்கள் : பாபஞ் செய்யாதிருத்தல், நன்மெய்க் கடைபிடித்தல், இதயத்தை சுத்திசெய்தல், அதன்பயன் வீடுபேறு.

நான்குபேதவாக்கியங்கள் : கன்மபாகை, அர்த்தபாகை, ஞானபாகை, வீடுபேறாம் நிருவாணபாகை.

நான்குபேதத்தின் பெயர்கள் : இருக்கு, யசுர், தைத்திரியம், அதர்வணம்.

ஆதிபேதவாக்கியம் கன்மபாகை. இதன் காரணம் பாபஞ்செய்யாதிருத்தல், காரியம் மெய்ப்பொருளறிதல். இதன் பெயர் பொருட்பால், பிடகம், இருக்கென்றுங் கூறப்படும்.

இரண்டாம் பேதவாக்கியம் அர்த்தபாகை. இதன் காரணம் நன்மெய்க் கடைபிடித்தல், காரியம் மெய்யறவுணர்ச்சி. இதன் பெயர் அறத்துப்பால் தைத்திரய மென்னப்படும்.

மூன்றாம் பேதவாக்கியம் ஞானபாகை. இதன்காரணம் இதய சுத்திசெய்தல், காரியம் மெய்யின்பமாம் பேரின்ப உணர்ச்சி. இதன்பெயர் காமப்பால் சாமமென்னப்படும்.

மூன்று பேதவாக்கியங்களுக்கு மேல் நான்காவது பேதவாக்கிய மில்லாவிடினும் மூன்று பேதவாக்கியங்களின் சாதனங்கொண்டு விவேக முத்தினவனாதலால் அவற்றை நிருவாணபாகையாகவும், சுயம்பிரகாச

வீடுபேற்றை அதர்வண பேதவாக்கியமெனக் கூறி நான்கு பேதவாக்கியங்களென வகுத்துள்ளார்கள்.

இன்னான்கு பேதவாக்கியங்களின் அந்தரார்த்தம் சகலருக்கும் விளங்காமல் மறைபொருளாயிருந்தபடியால் ஒவ்வோர் பேதவாக்கியங்களுக்கும் எவ்வெட்டந் தரார்த்தங்கள் கூறி, நாலெட்டு முப்பத்திரண்டு உபநிட்சையார்த்தங்களை வகுத்து உபநிடதங்களென்னும் பெயரை அளித்துள்ளார்கள்.

முன்கலைதிவாகரம்

உபநிடத்தின் பெயர் - உபநிடதம் வேதத்தினுட்பொருள் நுட்பம்

பேதவாக்கியங்களின் உட்பொருள் சகலருக்கும் விளங்காதது கண்டே திருவள்ளுவ நாயனார் முப்பாலென்னுந் திரிக்குறளாலும் விளக்கியிருக்கின்றார்.

நரிவெருத்தலையார்

இன்பம் பொருளறம் யீடென்னு மின்னான்கு
முன்பறியச் சொன்ன முதுமொழி நூன் - மன்பதைகட்
குள்ளவரிதென்ற வைவள்ளுவ குலகங்
கொள்ள மொழிந்தார் - குறள்.

மாங்குடிமருதனார்

ஒதற்கெளிதா யுணர்தற்கரிதாகி
வேதப்பொருளாய் மிகவிளங்கி - தீதற்றே
குள்ளுதொ குள்ளுதொ குள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

வேதவாக்கியத்தினுட் பொருளை விளக்கு மொழிக்கு மகடபாஷையில் உபநிடதமென்றும், சகடபாஷையில் உபநிட்சையார்த்தம் என்றும், திராவிடபாஷையில் வேதத்தினுட்பொருள் என்றும் வழங்கிவந்தார்கள்

நான்கு பேதவாக்கியங்களின் 32 உட்பொருணுட்பம்.

1. கன்மபாகையுட்பொருளஷ்டகம் பாபமென்பதென்னை

1. அன்னியப்பிராணிகளின் மீது கோபங்கொண்டு துன்பஞ் செய்தல் பாபம்.
2. அன்னியர்ப்பொருள் எவர் அனுமதியின்றி அபகரித்தல் பாபம்.
3. அன்னியரைக் கெடுக்கவேண்டும் என்று தீங்கு நினைத்தல் பாபம்.
4. அன்னியருடைய ஸ்திரீகளை அபகரித்தல் பாபம்.
5. அன்னிய சீவப்பிராணிகளைக் கொலைச் செய்தல் பாபம்.
6. அன்னியர் மனம் புண்பட வார்த்தையாடுதல் பாபம்.
7. அன்னியர்களை வஞ்சித்து வருந்தச் செய்தல் பாபம்.
8. அன்னியரறிவை மதுவூட்டி மயங்கச் செய்தல் பாபம்.

2. அர்த்தபாகை உட்பொருளஷ்டகம் நன்மெய்க்கடைபிடித்தல் என்பது என்னை

1. அன்னியப்பிராணிகளுக்கு உண்டாகுந் துன்பங்களை நீக்கி ஆதரித்தல் நன்மெய்.
2. அன்னியருக்கில்லாப் பொருளீய்ந்து தன்னைப்போல் சீர்பெறச் செய்தல் நன்மெய்.
3. அன்னியர்களைத் தன்னவர்போல் நேசித்து ஆதரிப்பது நன்மெய்
4. அன்னியர் மனைவிகளை தாய்தங்கையர்போல் பாதுகாத்தல் நன்மெய்.
5. அன்னிய சீவப்பிராணிகளை கொலை செய்யாமலும் கொலைக் கேவாமலுமிருத்தல் நன்மெய்.
6. அன்னியர் மனமும் உடலும் பூரிக்கும் மிருதுவான வார்த்தையாடுதல் நன்மெய்.
7. அன்னியர்களுக்குபயோக முண்டாகும் வார்த்தைகளைப்பேசி விருத்திபெறச்செய்தல் நன்மெய்.
8. அன்னியர்களின் அறிவைப் பெருகச் செய்து அமுதுண்ணச் செய்தல் நன்மெய்.

3. ஞானபாகையுட்பொருளஷ்டகம். இதயசுத்தமென்பது என்னை

1. தன்னிடத்துண்டாங் கோபத்தை அகற்றி சாந்தத்தை நிறப்புதல் இதய சுத்தம்.

2. தன்னிடத்து உண்டாகும் காமத்தைத் தங்கவிடாமல் அகற்றி அன்பை பெருக்குதல் இதயசுத்தம்.

3. தன்னிடத்துண்டாம் மயக்கங்களை அகற்றி அறிவை வளரச்செய்தல் இதய சுத்தம்.

4. தன்னிடத்து உண்டாம் வஞ்சினம் பொறாமைகளை அகற்றி சகலர் சுகவாழ்க்கையை விரும்புதல் இதயசுத்தம்.

5. தன்னிடத்து உண்டாம், பொய்பொருளுசாவுதல் இதயசுத்தம்.

6. தன்னிடத்து உண்டாகும் சிற்றின்பச் செயல்களை அகற்றி பேரின்பத்தை நாடல் இதயசுத்தம்.

7. தன்னிடத்து உண்டாகும் ஆடம்பச் செயல்களை அகற்றி அடக்கத்தில் நிற்றல் இதயசுத்தம்.

8. தன்னை வஞ்சித்துத் துன்பப்படுத்தியவனை அன்புடன் ஆதரித்தல் இதயசுத்தம்.

4. நிருவாணபாகையுட்பொருளஷ்டகம் வீடுபேறாம் நிருவாணம் என்பது என்னை

1. தன்னிடத்து உண்டாம் பற்றுக்களை அகற்றி சதானந்தத்தில் இருப்பது நிருவாணம்.

2. தன்னை மறைக்கும் நித்திறையை ஜெயித்து சதா விழிப்பிலிருப்பது நிருவாணம்.

3. தன்னை மாறிமாறி பிறக்கச்செய்யும் மரணத்தை ஜெயித்த நிலை நிருவாணம்.

4. தன்னை சதாதுக்கத்தில் ஆழ்த்தும் காம வெகுளி மயக்கங்களை புறுத்த நிலை நிருவாணம்.

5. தானே தோன்றுகிறதும் கெடுகிறதுமாகிய மனதை தோன்றாமலுங் கெடாமலும் நிறுத்தல் நிருவாணம்.

6. தனக்கு உண்டாகும் ஜெநநபயம், மரணபயமற்று யாதுக்குங் கலங்காமல் நிற்றல் நிருவாணம்.

7. தன்னுள் தானாய் விளங்கும் உண்மெய்யாம் பேரின்பமே நிருவாணம்.

8. தானேதானே சுயம்பிரகாச சதாநித்திய சித்தாம் ஆனந்தநிலை நிருவாணம்.

இத்தகைய பேதவாக்கியம் ஒன்றுக்கும் எட்டு உட்பொருள் நுட்பங்களை விளக்கி நான்கு பேதவாக்கியங்களுக்கும் முப்பத்திரண்டு உபநிட தங்களாக்கி நாளதுவரையில் திராவிட பௌத்தாள் சுருதி யுக்தி அனுபவமாகவும், கேட்டல் சிந்தித்தல் தெளிதல் என்னும் மார்க்கமாகவும் வழங்கி வருகின்றார்கள். ஒருமொழியின்றி ஆதியில் மூன்று மொழிகளாகத் தோன்றி அம்மூன்று மொழிகளும் மூன்று பேதமாயிருந்தது கண்டு திரிபேதவாக்கியங்கள் என வழங்கி வீடுபேற்றையும், ஒருபேதவாக்கியமாகக் கொண்டபோது நான்கு பேதவாக்கியங்களென வழங்கலாயினர்.

இதுவே புத்தரது ஆதிவேத விளக்கமென்னப்படும்

(ஆதிவேதம், முதலாண்டு முதல் இலக்கத்திலிருந்து தொடர் கட்டுரையாக நாலாமாண்டு பதினொன்றாம் இலக்கம் வரை வெளிவந்தது)

84. புத்ததன்மம் மகடபாஷை சத்தியதருமம் சகடபாஷை மெய்யறம் திராவிடபாஷை

இம்முப்பாஷை மொழியும் ஒரு பொருளையே தரும். அதனால் புத்தம் என்பதும். சத்தியம் என்பதும், மெய்யென்பதும், ஒரு பொருள் கொண்டு, சக்கிரவர்த்தித் திருமகன் சித்தார்த்தரது மலைவுபடா வாக்கை அநுபவத்திற் கண்டோர் அவரை புத்தரென்றும், சத்தியரென்றும், மெய்யரென்றும் அழைக்கலானார்கள்.

இவற்றுள் தன்மம் என்பதும், தருமம் என்பதும், அறம் என்பதும் ஒரு பொருட் கொண்டு ஆராயுமிடத்து மலைவுபடா மெய்யறம் என்பது யாதெனில்: கோபத்தாற் குடிகெடுமென்று கூறியபோது அதன் அனுபவங் கண்டோன்

கோபத்தாற் குடிகெடாதென மறுக்கான், காமியபெருக்கத்தால் காயமழியும் என்று கூறியபோது அதன் அனுபவங்கண்டோன் காமியத்தாற் காயமழியாதென மறுக்கான், அவைபோல் மனோவிருத்தியாம் அவாவின் பெருக்கத்தால் துக்கவிருத்தியுண்டாம் மனோவொடுக்கத்தால் அவாவையறுத்தலால் சுகவிருத்தியுண்டாம். இதனை அநுபவத்திற் கண்டவர்களே மெய்கண்ட வர்களாவர். இவற்றை யநுபவத்திற் காணாதோர் பொய்யர்களே யாவர். ஆதலின் ஒவ்வோர் மக்களும் தங்களுக்கு உண்டாகுந் துக்கங்களைப்போக்கி சுகவிருத்தியை நாடுவதே முத்தியாம்.

அத்தகைய முத்திய சுகத்தை நாடுவோர் எதிரிகளின் சுகத்தைக் கருதல் வேண்டும். தான் கல்வி விருத்தியைப் பெற வேண்டுமாயின் எதிரிகளின் கல்வி விருத்தியைக் கருதல்வேண்டும். தான் சுகசீவனம் பெறவேண்டுமாயின், எதிரிகளின் சுகசீவனத்தைக் கண்டு ஆனந்தித்தல்வேண்டும். தனது பொருளை மற்றொருவர் களவாடாதிருக்க எண்ணுவானாயின் அன்னியர் பொருளை தான் களவாடாதிருத்தல் வேண்டும். தன்னை யொருவன் பொய்சொல்லி வஞ்சியாதிருக்க எண்ணுகிறவன் அன்னியனை பொய்சொல்லி வஞ்சியா திருத்தல் வேண்டும். தன் தாரத்தை மற்றொருவன் இச்சியாதிருக்க எண்ணுகிறவன் அன்னியர் தாரத்தை இச்சியாது இருத்தல் வேண்டும். தான்மதிமயங்கிக் கெடாதிருக்க எண்ணுகிறவன் எதிரிக்குமதுவூட்டி கெடுக்காமலிருக்க எண்ணவேண்டும். தனது சீவனுக்கோர் துன்பம் அணுகாதிருக்க எண்ணுகிறவன் மற்ற சீவராசிகளைத் துன்பம் செய்யாதிருத்தல் வேண்டும். தன்னை சிறப்பித்துக் கொள்ள வேண்டியவன் எதிரிகளின் சிறப்பைக் கருதல்வேண்டும். இத்தியாதி செயல்களைத் தானே நடத்துவதுடன் தன்னை அடுத்தோருக்கும் போதித்துத் துக்க நிவாரணஞ் செய்வதும் செய்விப்பதுமாகிய செயலுக்கே புத்ததன்மம் என்றும், சத்தியதருமம் என்றும், மெய்யறமென்றுங் கூறப்படும். இதுவே புத்தரது ஆதிவேத மொழிகளின் அந்தரார்த்தமும் திரிபீட விரிவுமாகும்.

- 6:9; ஆகஸ்டு 7, 1912. -

85. பௌத்தம் அழிந்த கதை

வினா: தற்காலம் இவ்விடந் தோன்றியுள்ள பிரசங்கிகள் புத்தமார்க்கம் என்பது அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சங்கரர் இவர்களால் அழிந்து போய் விட்டதென்று கூறிவருகின்றார்களே அது மெய்க்கதையாய் இருக்குமா அல்லது பொய்க்கதையாய் இருக்குமா அவற்றை சற்று தெள்ளற விளக்கிக்காட்ட வேண்டும்;

மா. பாலசுந்திரம், கோடூர்.

விடை: ஐயா பாலசுந்திரமென்னும் அன்பரே! தாம் வினாவியுள்ள சங்கை அன்னோர் நடவடிக்கை சரித்திரங்களைக் கொண்டே பொய்க் கதைகள் என்று நுட்பமாகத் தெரிந்துகொள்ளலாம்.

அதாவது புத்தமார்க்கத்தை அழிப்பதற்கு தேவர்களே மக்களாக வந்து பிறந்தார்கள் என்பதும் அத்தகைய மக்களில் பிராமணர்களே சிறந்தவர்கள் என்றும் அவர்கள் குடும்பத்திலேயே தேவர்கள் வந்து தோன்றினார்கள் என்றும் வரைந்து வைத்திருக்கின்றார்கள். இத்தகையக்கதை மெய்யானதும் பூர்வம் வழங்கியதுமா இருக்குமாயின் நூறு வருடத்திற்கு முன்பு கல்வியில் மிகுத்தசில கம்மாளர்கள் எழும்பி இப்பிராமணர்கள் என்போர் குருபட்டத்துக்கு உரியவர்களல்ல, ஜோதிசங்கமர்களைப் போல் பிச்சையேற்று உண்பவர்கள் என்று கூறிய வழக்கு "அதாலத் கோர்ட்" டுக்குக் கொண்டுபோயிருந்தபோது தேவர்களே பிராமணர்களாகப் பிறந்து புத்தர்களை அழித்துவிட்டார்கள் என்னும் மெய்யானதும் இப்புராணக்கதைகள் இவர்கள் கையிருப்பில் இருந்துள்ளதுமாயின் அக்கோர்ட்டார் முன்னிலையில் இக்கதைகளைக் கொண்டுவந்து தங்கள் குலசிறப்பை ரூபித்து ஜெயம் பெற்றிருப்பார்கள் அன்றோ. அத்தகைய நீதி ஸ்தளத்தில் கொண்டுவந்து ரூபிக்காது இப்போது தோன்றியகதை

மெய்க்கதையா அன்று பொய்க்கதையா என்பதைத் தாங்களே தெரிந்துக் கொள்ளலாம். இக்கதை நூறுவருடங்களுக்கு முன்படதோன்றியிருக்குமாயின் "அதாலத்துக் கோர்ட்டிற்" கொண்டுவந்து தாங்களே உயர்ந்தோரென ரூபித்திருப்பார்கள். நூறு வருடத்திற்குப் பிற்பட்டே ஏற்படுத்திக்கொண்ட பொய்க்கதைகளாதலின் அக்காலத்தில் கொண்டுவரவில்லை. அதனினும் பௌத்தர்களை வெல்வதற்கு அப்பிராமணர்களால் இயலாது அவர்கள் தேவர்களே வந்து தோன்றினார்கள் என்றபோது பௌத்தர்கள் யாவரும் எத்தகைய நிபுணர்களாய் இருந்திருப்பார்கள் என்பது அவர்களது பொய்க்கதைகளாலும் விளங்குகிறதன்றோ. இஃதன்றி பௌத்தர்கள் சைவர்களுக்கும், வைணவர்களுக்கும் அவர்கள் வேதாந்திகளுக்கும் இடுக்கஞ் செய்கின்றார்களென்று பரிந்து தேவர்களும், தேவர்கருணைகொண்டும் அப்பர், சுந்திரர், மாணிக்கவாசகர், சங்கரர், முதலானோர் தோன்றி பௌத்தர்களை அழித்துவிட்டார்களென்னுங் கதைகள் மெய்யாயிருக்குமாயின் மகமதிய அரசர்கள் வந்து தோன்றி சைவர்கள், வைணவர்கள் கோவில்களை தகர்த்தும், சிலைகளை உடைத்தும் தங்களுக்கு அடங்காதவர்களை தோலுரித்தும், நெருப்பிலிட்டும்வதைத்தும் வந்தபோது இவர்களுக்குப் பரிந்து பாடுபடுதற் கில்லாது அப்பர், சுந்திரர், மாணிக்கவாசகர், சங்கரர், எங்குபோய் ஒளிந்துக் கொண்டார்கள். அப்போது மகமதியர் தோலையுரித்தும் நெருப்பில் இட்டும் சுட்டுவிடுவார்கள் என்றஞ்சி மறைந்திருந்தேனும் இருக்கட்டும்; தற்காலம் கிறிஸ்துமதத்தோர்வந்து சைவர்கள் சாமிகளின் கதைகளையும், வைணவர்களின் சாமிகளின் கதைகளையும் வீதிவீதியாக விளக்கிக்காட்டி சைவத்திற்கும் வைணவத்திற்கும் இடுக்கங்களை உண்டாக்கி வருவதை அப்பர், சுந்திரர், மாணிக்கவாசகர், சங்கரர் வந்து கண்டித்து தங்கள் சைவத்தையும் வைணவத்தையும் நிலைநிறுத்தலாகாதோ, இல்லை. பௌத்தர்களை ஜெயித்தது மெய்க்கதை களாயிருக்குமாயின் மகமதியர்களையும் கிறிஸ்தவர்களையும் வந்து ஜெயித்து தங்கடங்கள் சைவத்தையும் வைணவத்தையும் நிலைப்படுத்திக் கொண்டிருப்பார்கள். அங்ஙனம் பௌத்தர்களுக்காகத் தோன்றி அவர்களை ஜெயித்தார்களென்றுள்ளது பொய்க்கதைகளென்றேதெள்ளறத்தெளிந்துகொள்ளலாம் ஈதன்றி பௌத்தர்கள் அழிந்துவிட்டார்கள். ஊரைவிட்டோடிவிட்டார்களென்று எண்ணற்க. யாவர்வீட்டில் இலக்கியநூற்கள், இலக்கணநூற்கள், வைத்திய நூற்கள், சோதிடநூற்கள், கணிதநூற்கள் இருக்கின்றதோ அங்கங்கு பௌத்தர்களே தங்கி இருக்கின்றார்கள் என்றெண்ணவும். பௌத்தர்கள் யாப்பிலக்கணங்கொண்டு வெண்பா விருத்தம், அகவற்பா மற்றும் பாடல்கள் பாடும் வித்துவான்கள் நாவிற்கும் பௌத்தர்களே அமுதூட்டிவருகின்றார்கள். ஆதலின் பௌத்தர்களை அழித்துவிட்டார்களென்பதும் அழிந்தார்க ளென்பதும் பொய், பொய் முக்காலும் பொய்யென்று அறிந்துக் கொள்ளுவீராக.

- 6:16; செப்டம்பர் 25, 1912 -

86. புத்தாவதாரம் இராமவதாரத்திற்குப் பின்னரே! என்பது பிசகு

தற்காலம் இச்சென்னையில் வெளியுலாவிவரும் "லோகோபகாரி" *(16-9-12)* என்னும் பத்திரிகையின் இரண்டாம் பக்கம் மூன்றாவது கலத்தில் ம-அ-அ-ஸ்ரீ வெங்கிட்டராமனென்பவர் தங்களது யுகக்கணக்கை மேற்கொண்டு இராமருக்குப் பின்னரே புத்தர் தோன்றியுள்ளாரென வரைந்துள்ளக் கடிதத்தைக் கண்டு மிக்க வியப்புற்றாம்.

அதாவது யுகமென்னும் வடமொழி குணசந்திப்பெற்று யுகமென மறுவியதா அன்றேல யுகமென்னும் வடமொழி குறுக்கல் விகாரம் பெற்று யுகமென மறுவியதா என்பதை அறியார் போலும். அறிந்திருப்பரேல் யுகமெனு மொழியை மறந்து வரைந்திருக்கமாட்டார். யுகம் என்னும் மொழியே குறுக்கல் விகாரப்பட்டு கிரேதா, திரேதா, துவாபர, கலியென்னுமொழி பொருள்கெட்டு

வழங்கிவருவதாகும். எங்ஙனமென்பீரேல் அம்மொழிகள் யாவும் பௌத்த அரசர் காலயுத்தத்தின் அணி வகுப்பென்னப்படும். அஃது வருமாறு.

கிருதயுகம் - முதலாம் அணிவகுப்பு. துவாபர யுகம் - இரண்டாம் அணிவகுப்பு. திரிதா யுகம் - மூன்றாம் அணிவகுப்பு. சதுர் யுகம் - நான்காம் அணிவகுப்பு.

இவ்வடபாஷை இலக்கமொழிகளைக் கொண்டே சோதிட நூற்களில் பிரதமை, துவிதியை, திரிதியை, சதுர்த்தி என்றும்; ஏகாதேசி, துவாதேசி, திரியோதேசி, சதுர்த்தேசி என்றும் வரைந்து வருகின்றார்கள். இவ்வடமொழி இலக்க அந்தரார்த்தம் அறியாதோர் ஒன்று, மூன்று, இரண்டு, கலி என்பனபோல் கிருதம், திரேதம், துவாபரம், கலியெனக் கைகொண்டவறெழுதி ஒவ்வொன்றுக்கும் இலட்சக் கணக்குகளைப் பெருக்கித் தங்கள் நூதன மதங்கள் யாவும் புராதன மதங்களென மறுட்டுவான்வேண்டி பொருளறியாது எழுதியப் பொய்யுகங்களேயாம்.

இத்தகையப் பொய்யுகக் கணக்குகளை மெய்யெனக்கூறி வெளி வருவாராயின் சீனதேசத்தில் ஆயிரத்தி ஐன்னூறு வருடமாக ஓர் பத்திரிகை உலாவிவந்திருப்பதில் புத்ததன்மங்கள் வரையறுத்து வந்துள்ள கணக்கை நாளதுவரையில் காணலாம். லண்டன் மிஷநெரி கிறீஸ்தவர்கள் தோன்றியது முதல் நாளதுவரையில் அவர்களது கணக்கை வரையறுத்துக் காணலாம். அதுபோல் கனம் வெங்கிட்டராமன் அவர்களின் விஷ்ணுமத நூறுவருட கணக்கை வரையறுத்துக் கூற இயலுமோ. அன்றேல் சிவமதத்தின் நூறுவருடக் கணக்கையேனும் வரையறுத்துக் கூற இயலுமோ, இயலாதே. தங்கள் மதக்கணக்குகளையே வரையறுத்துக் கூற வகையற்றவர் யுகக் கணக்கை கூறவந்ததை வியப்பெனக் கூறியுள்ளாம்.

ஈதன்றி யுகக் கணக்குகளை மட்டிலும் மெய்யென நம்பி வெளித்தோன்றியவர் வால்மீகர் இராமாயணத்தையும், வசிஷ்டர் கூறியுள்ள ஸ்மிருதியையும் பொய்யெனக் கூறுவரோ, முக்காலுங் கூறாரென்று நம்புகிறோம். அதுகொண்டு வால்மீக ராமாயணத்தில் அநுமார் இலங்கைக்குச் சென்று சீதையைத் தேடுங்கால் ஓர் கோபுரத்தின் உச்சியில் உட்கார்ந்து இஃது பௌத்தர்களது வியாரமோவென வரைந்துள்ளவற்றை நாளதுவரையிற் காணலாம்.

அத்தகைய இராமர் யுத்தகாலத்திலேயே பௌத்தர்கள் வியாரம் இருந்திருக்க, புத்தருக்குப் பின்பே இராமர் தோன்றி உள்ளாரா, முன்பு தோன்றியுள்ளாரா என்பதை இவரது இராமாயணக் கதையைக் கொண்டே தெரிந்துக்கொள்ளலாம் அன்றோ. வசிஷ்டர் இராமருக்கு ஞான சாதனம் போதிக்கும் இடத்தில், அப்பா இராமா உன்னுடைய பாட்டன் உத்தாலகன் என்போன் புத்தரைப்போல் உத்திரமுகம் நோக்கி தாமரைப் புட்பமாம் பதுமாதனத்தில் உட்கார்ந்து ஞானசாதனஞ் செய்துள்ளான். அதுபோல் நீயுஞ் செய்யக்கடவாய் என்று கூறியுள்ள மொழியாலேனும் இராமருக்குப் புத்தர் முந்தியவர் என்றே விளங்கவில்லையோ. இவரது இராமாயணத்தையும் வாசித்துணராது யுகக் கணக்குகளை மட்டிலும் ஏற்பதென்னோ. யுகக் கணக்கைத் தன்னிற்றானே நம்பிக் கொண்டபோதினும் கனந்தங்கிய ரோமிஷ்சந்திரடட்டு என்பவர் எழுதியுள்ள இந்தியதேயசரித்திரத்தை நம்பி புத்தரது காலவரையைக் குறித்துள்ளவர் அவரால் பாரதத்திற்குப் பிந்தியே இராமாயணந் தோன்றியள்ளது என்று குறித்துள்ளவற்றையும் சரிவர வாசித்துத் தனது மதவைராக்கிய அபிப்பிராயத்தைப போக்கி இராமருக்கு முந்தியே புத்தர் தோன்றியுள்ளார் என்று அறிந்தடங்குவாராக. அங்ஙனம் அடங்காது இன்னும் யுகக் கணக்கையே நம்பி வெளிவருவரேல் கலியுலகக் கணக்கின் ஆதாரங்கொண்டு இவரது பொய்யுலகக் கணக்குகளை போர்ந்த ஆதாரத்துடன் ரூபிப்பதோடு இரவு முழுவதும் இராமாயணங் கேட்டு விடிந்தபின் இராமருக்குச் சீதை என்ன முறையாக வேண்டுமெனக் கேட்டுள்ள விவேகிகள் கதையையும் விளக்கக் கார்த்துள்ளோம்.

- 6:16; செப்டம்பர் 25, 1912 -

87. சைவம்

வினா: "சைவம்" எனு மொழி தென்மொழியா, வடமொழியா, அதன் பொருளென்னை. தாயுமான் என்னும் பெரியோன் எம்மதத்தோர் என்பதேயாம்.

மா. பாலசுந்திரம், கோடூர்.

விடை: தாயுமான் என்னும் பெரியோன் குருவையே தெய்வமென சிந்திக்கும் சமணமுனிவர்களில் ஒருவரும், புத்ததர்மப்பிரியருமாதலின் கல்லாலடியிற் கமலாசனத்துள் வீற்று நால்வருக்கு உபதேசித்தவற்றை அவர்பாடலின் பல இடங்களிற் கூறியுள்ளதுமன்றி புத்தரது பரிநிருவாண சோதியையே இடைவிடாது சிந்தித்தும் சமணமுநிவருள் சித்திபெற்ற சித்தர்களையே ஆனந்தமாகத் தொழுதும் வந்திருக்கின்றார்.

இத்தகைய சமணமுநிவரின் தியானப்பாக்களுடன் சில நூதன மதத்தோர் தங்கள் மதக்கருத்துக்கு இயைந்தப் பாடல்களை இயற்றி பொன்னுடன் தராகலந்தனபோல் சேர்த்துக்கொண்டு தங்கள் மதநூலென மாறுகொளக் கூறிவருகின்றார்கள். அக்கூற்று கற்றவர்முன் எவ்வகையாலும் பொருந்தாவாம்.

தாயுமானவர் முதற்செய்யுளுள் "அங்கிங்கெனாதபடி யெங்கும் பிரகாசமாய்" என்னும் மெய்ப் பொருளை எப்பொருளுக்கு ஒப்பிட்டு ரூபிப்பார்கள்.

"செங்கமலபீடமேல் கல்லாலடிக்குவளர் சித்தாந்தமுத்திமுதலே" என்பவற்றால் எம்முத்தனை ஒத்திப்பார்கள்.

"பந்தமெல்லாந்தீர பரஞ்சோதி நீகுருவாய் வந்தவடிவை மறவேன் பராபரமே" என்பதில் எக்குருவை சுட்டுவார்கள் யாவுந் தனக்குள்வளர் உண்மெய்ப்பொருளையே அவர் வந்தித்தும் சற்குருவாம் புத்தரையே சிந்தித்துமுள்ளதை அவரது சுயச்செய்யுள் சகலவற்றினும் பகலக் காணலாம்.

ஈதன்றி உலகமக்களை தொல்லைவிட்டகன்று தெய்வசபையாம் புத்தசங்கத்தைச் சேருங்கோள் என்று கூறியுள்ளச் செய்யுளையுங் காணலாம்.

"ஸைவஸமயமே ஸமயம் ஸமயாவதீதப் பழம்பொருள், கைவந்திடவும் அன்றுள்ளொளிக்காட்டுங் கருத்தைவிட்டு பொய்வந்துழலும் ஸமய நெறி புகுதவெண்டா மடநெஞ்சே, தெய்வச்சபையை சேர்வதற்கு சேரவாருஞ் ஜெகத்திரே".

ஸைவமென்பது பாலிமொழி, அதன்பொருள் தன்னையறிதல், ஸமயமென்பது பாலிமொழி, அதன்பொருள் காலக்குறிப்பு.

அகப்பேய்சித்தர்

ஸைவ மாருக்கடி - யகப்பே, தன்னையறிந்தவர்க்கே; ஸைவமானவிட - மகப்பே, தானாக நின்றதடி.

ஸைவஸமயமேஸமயம் என்பது தன்னைத்தானறியுங்காலமே சரியான காலம் என்னப்படும். அதாவது ஒருமனிதன் ஏதுமறியா பாலபருவத்தில் செய்யுஞ்செயல்கள் ஓர் காலம், குமரப்பருவத்திற் காமியங்கொண்டலைவது ஓர் காலம், அரசபருவத்தில் புத்திரபாக்கியப்பேற்றை பெறுவது ஓர்காலம். இத்தியாதி காலச்செயலால் யாதுபயனுங் கிட்டாவாம். இவற்றுள் தன்னைத்தான் அறிந்தடங்குங்காலமே ஆனந்த நித்திய சுககாலமாதலின் வடமொழியில் ஸைவஸமயமே ஸமயமென்றும், தென்மொழியில் தன்னைத்தானறியும் நேரமே நேரமென்றும் வற்புறுத்திக் கூறியுள்ளார்.

அவ்வகைத் தன்னைத்தான் அறிந்தொடுங்குவதால் காலங்களுக்கு அதீதப்பட்டப் பூரணப் பொருளுள்ளொளியாய்த் தோன்றுங்கருத்தையும் செயலையும் விட்டு காலத்திற்குக்காலம் நூதனமாகத் தோன்றி கெடுக்கும் பொய்ப்புராணக் கட்டுக்கதைகளை நம்பி மோசம் போகவேண்டாம் மனமே எனத் தனக்குத்தானே கூறிக் கொண்டதுமன்றி கருணைமிகுதியால் உலக மக்களையும் தனது சத்தியசங்கத்தில் வந்து சேரும்படியும் அழைத்திருக்கின்றார். அதற்குப் பகரமாகத் தன்னைத்தான் அறிந்தடங்குதற்கு மனமே காரணமாதலின் அதனது இரண்டாம் பாடலில் "காடுங்கரையு மனக்குரங்கு கால்விட்டோட வதன்பிரகே யோடுந்தொழிலாற் பயனுளவோ" என்று இதயசுத்தமாம் புத்தரது

மூன்றாம் பேதவாக்கியப் பொருளையுஞ் சுட்டிக்காட்டி இருக்கின்றார். ஸைவஸமயமென்னுந் தன்னைத்தானறியுங்காலம் ஐரோப்பியனுக்கு வரினும், அமேரிக்கனுக்கு வரினும், சீனனுக்கு வரினும், பர்மியனுக்கு வரினும், அவனே சைவனாவன். மற்றுமோர் கூட்டத்தோரை சைவக்கூட்டத் தோரென்பது பொருளறியாப் பொய்க் கூட்டத்தோர் என்னப்படும்.

- 6:17; அக்டோபர் 2, 1912 -

88. ம-ா-ா-ஸ்ரீ சுந்தரராமனென்பவர் கூறியக்கூற்று தர்மமா அன்றேல் அதர்மமா?

ஆராய்வோமாக. "லோகாபகாரி" என்னும் பத்திரிகையில் "தர்மம்" என்னும் மகுடமிட்டு கி.சுந்தரராமனென வெளிதோன்றியவர் தர்மமென்னு மொழி புத்ததர்மதத்தினின்று தோன்றியதா ஆரிய தர்மத்தினின்று தோன்றியதா என்பதை அறிந்திலர் போலும்.

அறிந்திருப்பரேல் புத்ததர்மத்தை நாஸ்திகமென மறந்துங் கூறார். அறியாதவரென்பது அவர்கூறி வெளிதோன்றிய ஆரியதர்மமே போதுஞ் சான்றாம்.

அதாவது புத்தரென்பவர் ஒருவர் இருந்தார் அவர் போதித்த நீதிநெறிகளுக்கு புத்ததர்மம் என்றும், கிறிஸ்து என்பவர் ஒருவர் இருந்தார் அவர் போதித்த நீதிநெறிகளுக்கு கிறிஸ்து தர்மம் என்றும், மகமது என்பவர் ஒருவரிருந்தார் அவர் போதித்த நீதிநெறிகளுக்கு மகமது தர்மம் என்றும் வழங்கி வருகின்றார்கள். ஆனால் நமது சுந்தரராமனவர்கள் வெளிதோன்றி கூறிய ஆரியர் என்பவர் யார், அவர் எத்தேசத்தார், எங்கு உதித்தவர், அவர் போதித்த தர்மநூலின் பெயரென்ன. அதன் அனுபவகாட்சிகள் எவை சரித்திர ஆதாரத்துடன் கூறத்துணிவரோ ஒருக்காலுந் துணியார். யாதுக்கென்பரேல் முந்த முந்த இந்து தர்மமெனத் தோன்றினார்கள். இந்து என்பவர் யாவரென்றபோது அம்மொழியை வழுவவிட்டு பிரமதர்மமெனத் தோன்றினார்கள். பிரமர் என்பவர் யாவரென்றபோது அதனையும் நழுவவிட்டு ஆரியதர்மமென வெளிதோன்றியுள்ளார்கள். அவற்றிற்கும் ஆளில்லை என்றறியா சொன்னதைச் சொல்லுங் கிள்ளைபோன்ற சுந்தரராமன் எள்ளி, எள்ளி அறியா தர்மத்தை ஆரியதர்மமெனக் கூறவந்தது அதர்மம், அதர்மம், அதர்மமேயாம்.

ஓரிடத்து ஆரியதர்மம் என்றும் மற்றோரிடத்து ஆர்யதர்மம் என்றுங் கூறியுள்ளவை காலநேர்ந்த சமயபுறட்டாம் தர்மபுறட்டாகுமன்றோ. மொழிக்குமொழி பேதிக்கும் தர்மமும் ஓர் தர்மமாமோ. இவர் கூறிவரையும் ஆரியக்கூட்டத்தோருள் முதற்காலத்தேனுந் தற்காலத்தேனும் ஒற்றுமை யுண்டென்பதைக் கண்டேனுங், கருத்திலுணர்ந்தேனுங் கூறவல்லரோ, துணிந்துங் கூறவல்லார். ஆரியரென்போரால் ஒற்றுமையும் ஒழுக்கமுங்கெட்டு தேசஞ் சீர்கேடடைவது அநுபவக்காட்சியாயிருக்க ஆரியரால் ஒற்றுமையும் ஒழுக்கமும் பாதுகார்த்து வருகின்றது என்பதும் அதர்மமேயாம்.

ஆளுள்ள சத்தியதர்மமாம் புத்ததர்மம் முந்தியதா, ஆளில்லா அசத்தியதர்மமாம் ஆரியதர்மம் முந்தியதா என்னும் சரித்திர ஆராய்ச்சியின்றி உலக சீர்திருத்தத்திற்கே ஆதியாகத் தோன்றியுள்ள புத்ததர்மத்தின் பேரில் அபுத்ததர்ம அஸ்திபாரமிட்டு மதக்கடை பரப்பி அதனாற் சீவித்துவரும் ஆரியர்கள் கதையை பௌத்தர்களுக்கு முந்தியதென வியாபித்து கூறியது அதனினும் அதர்மமேயாம்.

க்ஷணத்திற்கு க்ஷணந் தோற்றி தோற்றி மாறுதலடையும் பொருட்கள் யாவும் அநித்தியமென்றும் பொய்யென்றும் அங்ஙனந்தோன்றாததுங் கெடாததுமாகியப் பொருளே மெய்ப்பொருளென்றும், அம்மெய்ப்பொருளைக் கண்டு ஓதியவர்களையே மகடபாஷையில் புத்தரென்றும், சகடபாஷையில் சத்தியரென்றும், திராவிடபாஷையில் மெய்யரென்றுங் கூறியுள்ளதைக் கற்றுணராதும் அவரது யதார்த்த சத்தியதன்மத்தைக் கேட்டுணராதும் புத்ததர்மத்தை நாஸ்திகமென்பதும் அதர்மமேயாம்.

புத்தரைக் கர்மயோகியென்பது தனது நற்கர்மத்தால் நிருவாணவதிஷ்டம் பெற்றவர் என்பது கருத்து. அவற்றிற்கு மாறாக துற்கர்மமுடையோர் தங்கள் துற்கர்மங்களை நீக்கிக் காப்பதற்கு ஓர் ஈசுரன் உண்டெனத் தங்கள் தங்கள் மனோசிருட்டீ செய்துக்கொண்டு மாளா துற்கர்மஞ்செய்து மயானம் போமளவும் துக்கவிருத்தியி லிருப்போருக்குக் கர்மயோக லட்சணம் விளங்குமோ, ஒரு ஈசுரன் உண்டென உருவேற்றுக் கொண்டு படைத்தலுக் கொருவன், காப்பதற்கொருவன், அழித்தலுக்கொருவன் என மூவரை சிருட்டி செய்துக்கொண்டு நாம் செய்ய வேண்டிய முயற்சி யாதுமில்லையெனச் சோம்பித்திரிவோருக்கு துற்கர்மம் ஈதீதென்றும், அதனாலுண்டாங் கேடுகள் இன்னவை என்றும், நற்கர்மங்கள் ஈதீதென்றும், அதிலுண்டாம் சுகங்கள் இன்னவை என்றும் விளங்குமோ. படைப்பவன் பாம்பையுந் தேளையும் சிருட்டித்து மக்களையும் சிருட்டித்து அவனைக் கொட்டவும் கடிக்கவும் விடுவது படைப்போன் திருவிளையாட்டோ. அவ்வகை படைப்போன் உஷ்ண தேசத்தில் பாம்பையும் தேளையும் படைத்து குளிருள்ளதேசத்தில் படைக்காது விடுவது பட்சபாதமோ. அழித்தலுக்கென்றே ஒருவன் உண்டெனில் காணும் பொருட்களில் அழியாதது ஏதேனும் உண்டோ. காப்பவன் ஒருவன் உண்டெனில் ஊருக்குளுள்ள மக்களை உவாந்திபேதி கண்டு மடிக்கும் போதும், பிளேக்நோய் கண்டு மடிக்கும்போதும், அக்கினிமலை எரிந்து மடிக்கும் போதும், வெள்ளம்பெருகி மடிக்கும்போதுங் காக்காதவர் மற்றும் எக்காலத்தில் காப்பார். இவ்வகை வற்புறுத்தி வினாவில் அவரவர்கள் கர்மத்துக்கு ஈடா அநுபவிப்பரெனத் தோன்றுவர். கர்மத்துக்கு ஈடாய அநுபவமும் காட்சியுமிருக்க ஈசுரன் ஒருவன் உண்டென்றும், அவனன்றி படைப்பவன் காப்பவன் அழிப்பவன் வேறு மூவருண்டென்றும் மக்களே சிருட்டித்துக்கொண்டு மற்றோரை மயக்கி மாள்விப்பதும் போதாது, நற்கருமங்களை செய்யுங்கோள் நல்லசுகமடைவீர்கள் என்று கூறிய கர்மயோகியாம் கமலாசனனை நாஸ்திகரென நாத்தழும்பக் கூறுவது மன்றி இவர்கள் சிருட்டித்துக் கொண்ட ஈசுரன் ஒருவனை இவர்களே சிருட்டித்துக்கொள்ளவில்லை என்பதும் அதர்மமேயாம்.

தோல்ஷாப்பின் வேலைக்காரனுக்கு அத்துர் நாற்றந் தோன்றாதது போலும், சாக்கடைவாருவோனுக்கு அக்கெட்டநாற்றம் புலப்படாதது போலும் தங்கள் மதங்களிலுள்ள ஊழல்களையுந் கேடுபாடுகளையுந் தாங்களே உணராது கல்வியையுங் கைத்தொழில்களையும் விருத்திசெய்து மக்களை சீர்திருத்தம் செய்துவரும் மிஷநெரி கிறிஸ்தவர்களை போலிக் கிறிஸ்தவர்களெனக் கூறவந்ததும் அதர்மமேயாம்.

இராமாவதாரம், கிருஷ்ணனவதாரம், சங்கரனவதாரமென்னும் வழிகாட்டிகள் தாங்களாயிருந்தும் அவ்வழியைப் பின்பற்றி தோன்றிய ஆனிபீசென்டம்மனைப் பழிப்பது தங்களுக்கு இழிவாக முடிந்ததாதலின் அதுவும் அதர்மமேயாம்.

ஓர் பழமொழியைப் பகுத்தறிந்து எழுத வகையற்றவர் முதுமொழி யாளனாம் மூவுலகுணர்ந்த முநிவனையும் அவரது தர்மத்தையுங் குறைகூற வந்தது விந்தையே.

அதாவது முழுப்பூசினிக்காயை சோற்றில் மறைப்பதென்பது பழமொழி பிசகு. முழுபூசிணிக்காயை இரண்டுபானை சோற்றில் மறைத்து விடலாம். ஆனால் முழு பூசணிக்காயை பிடிசோற்றில் மறைக்கலாகாது. ஆதலின் "முழு பூசணிக்காயைப் பிடி சோற்றுள் மறைப்பதுபோல்" என்பது பழமொழி.

இதனைத் தெரிந்தேனும் வரைய முயல்வாராக. அன்னோர் எழுத ஆரம்பிக்கும் அனாரியர் இத்தேசத்தில் எத்தனை பேரிருக்கின்றார்கள், ஆரியர்கள் இத்தேசத்தில் எத்தனைபேர் இருக்கின்றனரென்று ஆராயாது இத்தேசத்தை ஆர்யர் தேசமெனக் கூறி அதன்பின்னரே தமது தர்மத்தை வரைந்திருக்கின்றார். இவர் குடகம் வேங்கடமென்னுந் தமிழ்நாட்டெல்லைக்கு உட்பட்டவராயின் இத்தேசத்தை ஆரியர்தேசமென மறந்தும் வரைந்திருக்க மாட்டார். ஓரிடத்தில் ஆர்யரென்றும், மற்றோரிடத்தில் ஆரியரென்றும் வரைந்திருக்கின்றார். அவை ஏதுக்கென்னில் ஆரியரென்பதற்குப் பொருள்

மிலேச்சரென்று திவாகரத்திலும் நிகண்டிலும் கூறியுள்ளபடியால் நாம் ஆரியரென்று கூறவில்லை, ஆர்யரெனக் கூறியுள்ளோமென வந்தாடித்துக் கொள்ளுவதற்கேயாம்.

ஆர்யர், ஆரியரென அவ்வகைப் புறட்டினும் மிலேச்சர், மிலேச்சரென்னும் பொருளையே தரும். ஆதலின் மிலேச்ச போதகர்களுடைய உபதேசங்களென்பது தங்களையே சுட்டிக்காட்டிக்கொண்டது அதுவுமோர் கற்றறியா அதர்மமேயாம்.

சாம்பர்லேனென்னும் மேதாவியர் இந்தியாவின் அரிய தர்மத்தை எடுத்தோதியுள்ளது சகலமும் புத்ததர்ம சிறப்பேயன்றி ஆரியர்களென்ற மிலேச்சர் சிறப்பன்றாம். அரியபகவன், அரியமுனி, அரியநாதன், அரியறன், அரியபோத னென்னும் பெயர்கள் யாவும் புத்தருக்குரியவைகளே என்றும் அரியதர்மமென்பதும் அவரது சத்தியவாக்குகளே என்றும் (பாலி) நிகண்டில் கூறியுள்ளவற்றைப் பரக்க காணலாம். புத்தரது அரிய தர்மத்தை இந்திய தேசத்தோர் மறந்துள்ளபடியால் மக்கள் சீர்கேடு அடைந்து வருகின்றார்க ளென்று அவ்வமேரிக்க சாஸ்திரி வரைந்துள்ளவற்றை நன்கு கற்றுணராது தங்கள் ஆர்ய, ஆரியமென்னும் மிலேச்ச தர்மத்தை சிறப்பித்துள்ளார் என்னு மொழி யாவற்றினும் அதர்மமென்னப்படும். ஆதலின் நமது கி.சுந்தர ராமனென்பவர் இனியேனுந் தமது சரித்திரத்தை நன்காராய்ந்து அடங்கு வாரென்று நம்புகிறோம்.

- 6:17; அக்டோபர் 2, 1912 -

89. வேதங்களும் நீதிசாஸ்திரங்களும் எற்றிற்கு

மக்கள் சீர்திருந்தி செவ்வைப்படுவதற்கேயாம். அத்தகைய வேதமென்பது சகல மக்களுக்கும் பொதுவாயிருத்தல் நலமா; சில மக்கள் அவற்றைப் பார்க்கவும்படாது கேட்கவும் படாதென்பது நலமா, அவ்வேதங்களை அளித்தக் கடவுளுக்கு தனது சிருஷ்டிகளாம் மக்கள் மீதும் பேதமுண்டோ; பேதமாகவே சிருட்டித்தாரென்னின் மக்கள் உருவினில் மாறுகொள சிருஷ்டிக்கலாகாதோ, மக்களுருவில் மாறின்றி சிருஷ்டித்துங்கொடுத்துள்ள வேதத்தைக் கூறுபோடலா மோ, அவ்வகைப் பிரித்திருப்பாராயின் அவரை ஓர் கருணை மிகுத்தக் கடவுளென்னலாமோ, அத்தகையக் கருணையற்றக் கடவுளை ஓர் சிருஷ்டிகர் என்றும் கருணையற்ற வேதத்தை சீர்திருத்த முதநூலென்றும் பாவிக்கப்போமோ. கருணையற்றக் கடவுளைப் பின்பற்றியவர்களுக்கும் கருணையற்ற வேதத்தைப் போதிப்போர்களுக்கும் அதனைக் கேட்போர் களுக்கும் கருணையென்பது ஏதேனுமிருக்குமோ கனவிலும் இருக்காதென்பது அனுபவமுங் காட்சியுமாகும். கருணையற்றச் செயலைப் பெருக்கக் கூறும் ஓர் முதநூலென்றும், அதனை நம்பி நடப்போரே மேலோரென்றுங் கூறத் துணிபுண்டோ. மேலோரென்பதில் சகல மக்களையுந் தம்மை ஒத்த மக்களாக பாவித்து சருவசீவர்களையுந் தன்னுயிர்போல் காப்பவனன்றோ மேலோராவர். கனவிலுங் கருணையென்பது அற்று தங்கள் ஒரு குடி பிழைக்க நூறு குடிகளைக் கெடுத்துப் பாழ்படுத்துவோரும் மேலோராவரோ, சாதியில் மேலோரென வகுத்துக்கொண்டு தம்மெயொத்த மக்களைத் தாழ்த்தி இழிவடையச் செய்து சீர்கெட வைப்போர்களையும் ஓர் மேல்சாதியோரென்றுங் கூறப்போமோ.

அங்ஙனம் சாதியென்னும் மொழியின்படி மேற் சாதனங்களாம் நல்வாய்மெய், நற்கடைபிடி, நல்லூக்கம், நல்முயற்சி, இவைகளை சாதிப்பவரை யன்றோ மேற்சாதி என்பதற்குப் பொருந்தும். கருணையற்றச் செயலும், அன்பற்ற பார்வையும், ஈகையற்றக் கரமுடையோரை மேலான சாதியோர் என்பதும் கருணையற்ற சிருட்டிகரைக் கடவுளென்பதும், ஒற்றுமெயைக் கெடுத்து உள்ளக் களிம்பு ஏற்றும் நூலை வேதமாம் முதநூலென்பதும் பொருந்துமோ, முக்காலும் பொருந்தா. இத்தகையக் கடவுளையும், இத்தகைய வேதத்தையும்,

இத்தகைய சாதிக் குருக்களையும் பின்பற்றுவோர் சுகம்பெறுவார்களோ, பெறார்களென்பது திண்ணம் திண்ணமேயாம்.

மற்றுமுள்ள நீதிசாஸ்திரங்களேனும் நீதியையேனும் ஓர் உருவாகப் பெற்றுளரோ, அதுவுங் கிடையாவாம். அச்சாஸ்திரத்திற்குரிய சாதியோன் திருடிவிடுவானாயின் அந்தப் பொருளுடன் அவனை ஊரைவிட்டகற்றி விடவேண்டது. அவன் யாகத்திற்கென்று திருட அதிகாரமுண்டு, ஏனைய சாதியான் அவனது பசியின் வாதையால் ஒன்றைத் திருடிவிடுவானாயின் அவனைக் கண்டிதமாக தண்டித்தே விடவேண்டியது. அச்சாஸ்திரத்திற் குரிய சாதியோன் ஒருவனைக் கொன்று விடுவானாயின் அவனுக்குரிய சொத்துக் களையும் அவனுக்களித்து ஊரைவிட்டகற்றி விட வேண்டியது. ஏனைய ஒருவன் கொன்றுவிடுவானாயின் அவனைக் கொலைச்செய்தே தீரல் வேண்டும். இத்தகையச் செயல்களை ஏந்தியுள்ள நூலையும் நீதிசாஸ்திரமென்னலாமோ. இத்தகைய சாஸ்திரங்களைப் பின்பற்றி ஒழுகும் மக்களும் சீர்பெறுவார்களோ ஒருக்காலும் சீர்பெறமாட்டார்களென்பது திண்ணம்.

ஆதலின் தேசமக்கள் பிரிட்டிஷ் துரைத்தனத்தோரால் அன்பும் ஆறுதலுமடைந்து விவேக விருத்திபெற்ற ஒவ்வோர் புருஷர்களும் கருணையற்றக் கடவுளைக் கனவிலுங் கருதாமலும், கருணையற்ற வேதத்தைக் கடைக்கண்ணினாலும் பாராமலும், கருணையற்ற குருக்களைக் கண்டும் பேசாமல் ஒதிங்கியும், அவர்கள் நீதியாம் நூற்களை அருகில் வைத்திராமலும் அகற்றி கருணைமிகுத்த பிரிட்டிஷ் ஆளுகையோரையே கடவுளரென சிந்தித்தும், அவர்களால் ஓதிவரும் கலைநூற்களையே சீர்திருத்த வேதமென வந்தித்தும் அவர்களது ஆளுகையாம் நடுநிலைச் செயல்களையே நீதிசாஸ்திரங்களெனப்பந்தித்தும் அவர்களால் போதித்துவரும் வித்தியா விருத்திபோதம், விவசாய போதங்களையே குருபோதங்களாக தொந்தித்தும் வருவதே மக்கள் சீர்திருத்தத்திற்கும் சுகவாழ்க்கைக்கும் ஆதாரமாயுள்ளபடியால் அவர்களது ராஜவிசுவாசத்திலயித்து அன்பை வளர்த்து கருணையைப் பெருக்க வேண்டியதே அழகாம்.

- 6:19; அக்டோபர் 16, 1912 -

90. கருணை கருணை கருணை

கருணை என்பது கரடிக்கும், புலிக்கும், பாம்புக்கும், தேளுக்கும் இருக்குமோ என்பாருமுண்டு. அவைகளின் குட்டிகளிடத்தில் அவைகளுக்குங் கருணையுண்டு என்பது அனுபவமாகும். கருணை என்பதில்லாவிடில் அதனதன் குட்டிகள் சீவிக்க முடியாவாம்.

ஆதலின் சருவசீவப்பிராணிகளிடத்துங் கருணையுண்டு என்பது நிட்சயம். அச்சீவராசிகள் யாவற்றினும் மக்களென்னும் மனிதவகுப்போர்க்கே அக்கருணை கிஞ்சித்துப் பெருகியிருக்கின்றது என்பது அவர்கள் பிள்ளை பெண்டுகளிலுள்ள கருணையும் தங்கள் பந்துக்கள் மீதுள்ளக் கருணையும் தங்கள் நேயர்கள் மீதுள்ளக் கருணையும் தாங்கள் வளர்க்கும் சீவப்பிராணிகளின் மீதுள்ளக் கருணையுங் கண்டு, கலைநூலார் சகல சீவராசிகளுக்கும் உயர்ந்தவன் மனிதனே என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். இத்தகைய மனுமக்களுள் நாங்களே உயர்ந்த சாதியினர், நாங்களே உலகத்திற் சிறந்தவர்கள், நாங்கள் மிக்க வாசித்தவர்கள், நாங்களே மிக்க அறிவாளிகள் எனக் கூறிக்கொண்டிருப்பவர் களுக்கு எத்தகையானக் கருணை நிறைந்திருத்தல் வேண்டும். தன்னைப்போல் பிறரை நேசித்தலும் சகல சீவராசிகளையுந் தன்னுயிர்போல் காத்தலுமாகியப் பெருஞ்செய்கைகளேயாம். இக்கருணை நிறைந்த பெருஞ்செயலோர்களே அக்கருணாகரக்கடவுளையுஞ் சார்வர்.

அங்ஙனம் மனுக்களே கருணை உடையவர்களென்று வகுத்திருக்க அம்மனுக்களுள் உயர்ந்த சாதியோரென வகுத்துக்கொண்டும் உலகத்தில் உயர்ந்தோரென சொல்லிகொண்டும், யாங்களே மிக்கக் கற்றவர்களெனப் பலுக்கிக்கொண்டும், யாங்களே மிக்க அறிவாளிகளென நடித்துக்கொண்டும்

இருப்போர் தங்களையொத்த மனுக்களை ம க்களென நேசியாமலும், தங்களையொத்த சீவராசிகளைக் காக்காமலும், அவர்கள் தாழ்ந்தசாதியார்கள் அவர்களைத் தலையெடுக்கவிடாமல் நசிக்கவேண்டுமென்றும், பசுக்களை நெருப்பிலிட்டு சுட்டுத்தின்ன வேண்டுமென்றும், சதாகியாபகத்திலிருப்பவர் களுக்கு கருணை என்பது இருக்குமோ, சிலகால் புலிக்கும், பாம்புக்கும், தேளுக்கு இருப்பதுபோல் தங்கள் பெண்டுபிள்ளைகள் மீதில்மட்டும் இருக்கலாம். இத்தகையக் கருணை அற்றோரை மக்கள் சிறப்புச்செய்வரோ, கற்றோர்களென மதிப்புறுவரோ, விவேக மிகுத்தவர்கள் எனக் கொண்டாடு வரோ, அக்கருணாகரக்கடவுளேனும் அருகில் சேர்ப்பரோ, ஒருகாலுஞ் சேர்க்கார், மூன்றுமுறை குளிக்கினுஞ் சேர்க்கார், நான்கு முறை ஜெபிக்கினுஞ் சேர்க்கார், ஏழுமுறைத் தொழுகினுஞ் சேர்க்கார். கருணையற்றோர் ஏதோ தங்கள் முயற்சியினால் கிஞ்சித்து சுகமுற்றுவாழினும் அவ்வஞ்சக் கூற்றே வாழைப்பழத்தில் ஊசி நுழைவது போலத் தங்களையும் தங்கள் உற்றாரையும் சீர்குலைக்கும் என்பது திண்ணம். ஆதலின் முயற்சியாற் சிறப்புறினும் தன்னை ஒத்த சிறப்பை ஏனையோரும் பெறவேண்டுமென்னும் நன்னோக்கங்கொண்டு தன்னைப்போலவே பிறரையும் நேசித்துக் கருணையைப் பெருக்குவார்களென்று நம்புகிறோம்.

- 6:20; அக்டோபர் 23, 1912 -

91. பௌத்தர்களின் அறிகுறி

பௌத்தர்கள் என்னும் புத்தசங்கமாம் தெய்வ சபையைச் சேர்ந்தவர்களை ஏனையோர்கள் அறிந்துகொள்ளும் அறிகுறிகள் யாதெனில்:-

ஒவ்வோர் பௌத்தர்களுந் தங்கள் படுக்கையைவிட்டு உதயத்தில் எழுந்திருக்குங்கால் ஆனந்த எண்ணமுடன் "நமோ புத்தா" எ ா எழுந்து அவர் ஓதியுள்ள நீதியையும் நெறியையும் சிந்தித்து வெளிவருவதே முதற் பூசையாகும்.

ஏன் அவரை சிந்தித்து எழுந்திருத்தல் வேண்டுமென்னில் அவர் நம்மெப்போல் ஒத்த மனிதனாகத் தோன்றி சருவசீவர்களின் ஈடேற்றத்தையும் சீர்திருத்தத்தையுங் கருதி தனது சக்கிரவர்த்தி பீட சுகத்தையுந் துறந்து மனைவி மகவின் பாசபந்தங்களையும் மறந்து தானடைந்த நித்தியகாட்சியை உலகமக்கள் யாவருங்கண்டு கடைத்தேறுமாறு வோடு எடுத்திரந்து தன்சுகம் பாராது ஏனையமக்கள் சுகத்தை நாடி நீதிநெறிகளைப்புகட்டி ஞானவழியில் நடத்தி அழியா சுகவாழ்க்கை அருளி சருவசீவர்களுக்குங் கருணாகரன் என்னும் நன்மை சொரூபியாக விளங்கிய ஆதியங்கடவுளாதலின் துயிலெழுங் காலவரை முதலாவது சிந்தித்து எழ வேண்டுமென்பது அறிகுறியாம்.

இரண்டாவது, நம்மை ஆண்டுவரும் பிரிட்டிஷ் ராஜாங்கத்தோரை சிந்தித்துப் போற்றுவது இரண்டாவது பூசையாகும்.

அவர்களை ஏன் போற்றி பூசிக்க வேண்டியதென்னில், அவர்களது நீதியும், நெறியும், கருணையு மிகுத்த வரசாட்சியில் சுகச்சீர் பெற்று வாழ்வதுடன் கள்ளர் பயம், காமியர் பயம், துஷ்டர் பயம், மிருக பயம், விஷவியாதி பயங்கள் யாவையும் அகற்றிக் காத்து ரட்சித்துவருவதினால் அவர்களைப்போற்றி விசுவாசிக்க வேண்டுமென்பது அறிகுறியாம்.

மூன்றாவது, தாய்தந்தையரைப்போற்றி வணங்கி ஆனந்திக்கச் செய்வதுமே மூன்றாம் பூசையாகும்.

அவர்களை ஏன் போற்றிவணங்க வேண்டு ன்னில் அவர்களே கருப்பிணியடைந் தீன்று அமுதூட்டி சீராட்டி தாராட்டி ஈ எறும்பு அணுகாது பாதுகாத்துப் போஷித்து கல்வி விருத்தி கைத்தொழில் விருத்திக்கு ஆளாக்கி உலகில் ஓர் மனிதன் மனுஷியென உலாவ வைத்துள்ளவர்களவர்களேயாதலின் தாய் தந்தையரை அன்புடன் போற்றி வணங்கி மனங்குளிரச்செய்து ஆனந்திக்க வேண்டுமென்பது அறிகுறியாம்.

இவ்வகையாக உலகரட்சகனை சிந்தித்தும், ஆளும் அரசரை விசுவாசித்தும், தாய் தந்தையரை நேசித்தும் வரும்படியான முக்கியச் செயலும் அடையாளமுமே

பௌத்தர்களின் அறிகுறிகளாகும்.

துயிலெழும்போதே இம் மந்திரத்தை சிந்தித்து எத்தொழிலுக்குச் செல்லினும் அத்தொழில் சுகமாக நிறைவேறுவதுடன் மனவாறுதலுடனும் ஆனந்தத்துடனும் வீடுவந்து சேரலாம். இதையே சத்திய மந்திரமாகவும் இதையே நித்திய மந்திரமாகவுங்கொண்டு நேசிப்போருக்கும், பூசிப்போருக்கும் யாது துன்பமும் அணுகாதென்பது சத்தியம். அங்ஙனம் அணுகினும் சூரியனைக்கண்ட பனிபோல் விலகுமென்பது நிட்சயம், ஆதலின் பௌத்தர் களுக்குக் கழுத்திற் கட்டும் அடையாளமும், நெற்றியிற் பூசும் அடையாளங் களாம் அறிகுறிகள் ஏதுமின்றி குருவிசுவாசம், இராஜவிசுவாசம், பெற்றோர் விசுவாசமாய நல்லொழுக்க பீடமே அறிகுறிகள் என்னப்படும். இதுவே சகல சுகங்களுக்குங் கொண்டுபோகும் சத்தியமார்க்கமுமென்னப்படும்.

- 6:21; அக்டோபர் 30, 1912 -

92. சீலம் சீலம் சீலம் பஞ்சசீலம்

சீலம் என்பது தேகசுத்தஞ் செய்து தலைமயிராற்றி வெண்ணுடை உடுத்தி சாராயக்கடை, கள்ளுக்கடைக்குள் நுழைவது சீலமாகுமா இல்லை, முழுகக் குளித்து கஸ்தூரி புனுகுபூசி தாசிவீட்டுக்குள் நுழைவது சீலமாகுமா இல்லை, தேக சுத்தஞ்செய்து குறுக்குபூச்சு நெடுக்குபூச்சு பூசி ஊரான் சொத்துக்கு உலைவைக்கலாமா, ஊர் குடிகளைக் கெடுத்துப் பணம் சம்பாதிக்கலாமாவென் றெண்ணி, மந்திரமோதி மணிகுலுக்குவது சீலமாகுமா இல்லை. முழுகக்குளித்து சோமவார விரதம் சுக்கிரவாரவிரதமெனக் கூறி, சோம்பித்திரிந்து அன்னியன் பொருளை அபகரிக்க வழிதேடுதல் சீலமாகுமா இல்லை. தேகசுத்தம் உடைசத்தத்துடன் திண்டுபோட்டு உழ்க்கார்ந்துகொண்டு ரூபாயிற்கு ஓரணா இரண்டணா வட்டிவாங்கி ஊரார் சொத்தை அபகரிப்பது சீலமாகுமா இல்லை. தேய்த்துக்குளித்து தூளிதம்பூசி அரிசிகளிற் கலப்பும் நெய்களிற் கலப்பும், தானியங்களிற் கலப்புங்கலந்து ஏழைமக்களை வஞ்சித்துப் பொருளை சேர்ப்பது சீலமாகுமா இல்லை. காவிவஸ்திரந் தரித்து காதுகுண்டலமிட்டு கண்கள் சிவக்க சுஞ்சாகுடித்து கைம்பெண் சொத்துக்களைக் கண்டுங் காணாது அபகரிப்பது சீலமாகுமா, இல்லை.

ஐயா! சுத்தமுடன் குறுக்குபூச்சு நெடுக்குப்பூச்சுபூசி பாட்டுபாடும் போதும் அழுவார், கூத்தாடும்போது அழுவார், பஜிக்கும்போதும் அழுது தனக்குந் தெரியாப் பொய்ப் புராணங்களைப் போதித்துப் பொருள்பரித்து சீவிப்பது சீலமாகுமா, இல்லை. இவைகள் யாவும் பஞ்சபாதகம் மிகுத்தச் செயல்களேயாம். குளிப்பதே சீலம், வீடுவாசல் மெழுகுவதே சீலம், சுத்தவுடை தரிப்பதே சீலம், உயர்ந்த ஆபரணமணிவதே சீலம், நார்மடி கட்டுவதே சீலம், ஒருபொழுதென்று கூறி மூன்று பொழுதுண்பதே சீலமென்று திரிவது யாவும் அசீலங்களேயாம்.

சீலங்கள் என்பது யாதெனில் அன்னியப் பிராணிகளைத் துன்பஞ் செய்யாதிருத்தல் சீலம், அன்னியர் பொருளை அபகரிக்காதிருத்தல் சீலம், அன்னியரைப் பொய்சொல்லி வஞ்சியாதிருத்தல் சீலம், அன்னியர் மனையாளை இச்சித்து அவர்கள் குடியைக் கெடுக்காதிருப்பது சீலம், அன்னியருக்கு மதுவூட்டி அவர்கள் குடிகளைக் கெடுக்காமலுந் தானுங் குடித்துக் கெடாமலிருப்பது சீலம்.

இத்தகைய சீலம்பெற்று பௌத்தர்களான சத்தியதன்மப்பிரியர்கள் யாவரும் பகவனருளிய நீதிநெறி ஒழுக்கத்தில் நடந்து பௌத்தர்களென்னும் அறிகுறியைக் காட்டுவார்களென்று நம்புகிறோம்.

- 6:27; டிசம்பர் 11, 1912 -

93. ஆன்மா என்னும் மொழி

வினா: ஆன்மாவென்றும், ஆத்துமாவென்றும் வழங்குகின்ற மொழியை சிலமதத்தோர் சீவான்மனென்றும் பரமான்மனென்றும் வழங்குகின்றார்கள். அவர்களை யணுகி ஆன்மமென்பது வடமொழியா தென்மொழியா அதன்

பொருளென்னவென்று கேட்டால் அதன் விவரத்தை நூலாதாரங்கொண்டு விளக்குவதைக் காணேன். இதன் விவரத்தை எமக்கும் ஏனையோருக்குங் களங்கமற விளக்குமாறு மிகு வணங்கிக் கேட்டுக்கொள்ளுந் தங்கள் அடிமை.

வீ. அந்தோணி. கொளம்பு

விடை: ஆன்மமென்னும் மொழி மகடபாஷையின் உற்பவமேயாம். ஆன்மமென்பதின் பொருள் புருஷனென்னப்படும். பாலி நிகண்டிலும் பாணினியார் சகடபாஷை இலக்கணத்திலுங் காணலாம். பஞ்சஸ்கந்தங்கள் சரிவர அமைந்து மானிடனெனப் பாடியாடி உலாவும் புருஷவடிவிற்கே ஆன்மனென்றும் ஆத்துமன் என்றும் வழங்கலாயினர். புருஷனென்னும் தோற்றம் இல்லாவிடத்து ஆன்மனென்னும்பெயரும் இல்லையாகும். புருஷதோற்றம் உண்டாயவிடத்து ஆன்மனென்னும் மொழியுந் தோன்றும். உடலுயிரெனும் வேற்றுமை மொழியை ஒன்றித்து ஆன்மனென ஆயிற்று.

உடலுயிர் ஒற்றுமைய நயத்தால் ஒன்றென்றும் வேற்றுமை நயத்தால் மலைவுற்றும் பிரிதலால் அவ்வகை மலைவுறாது வழங்கற்கு மகடபாஷையில் ஆன்மனென்றும், சகடபாஷையில் புருஷனென்றும், திராவிடபாஷையில் மனிதன் என்றும் வழங்கலாயினர்.

உலகில் மக்களெனத் தோன்றி மாறா பிறவியிற் சுழன்று தீராக்கவலையில் உழலும் வரையில் ஆன்மமென்னும் பெயரும் வழங்கிக்கொண்டே வரும். மனிதனுக்குள்ள சகல பற்றுக்களுமற்று இதயசுத்தமுண்டாகி தோற்றும் பொருட்கள் யாவும் அனித்தியம் புருஷவுருவமும் அனித்தியமென்னும் அநித்ய, அனான்மனான போது நிருவாணமடைகின்றான். அன்றுமுதல் அவனுக்கு ஆன்மனென்னும் பெயரற்று அமலன், அசரீரியென்னும் பிறவியற்ற நிலையை அடைகின்றான். பிறவி அறாது துக்கத்திற் சுழலும் வரையில் ஆன்மனென்னுந் தோற்றப்பெயருண்டு. பிறவியற்றபோது தோற்றுஞ் செயலுமற்று ஆன்ம பெயரும் இல்லாமற்போம். இதுவே ஆன்மமென்னும் மொழியி னுற்பவமும் அதன் தோற்றச்செயல்களுமென்னப்படும். இதையே தோற்ற முண்டாயவிடத்து ஆன்மனென்றும் தோற்றமுண்டாகாவிடத்து அனான்மனென்றும் வழங்கலாயினர்.

- 6:28; டிசம்பர் 18, 1912 -

94. அல்லாசாமி பத்துநாளைய துக்க சிந்தனாகாலத்தை பயித்தியக்காரக் கோலஞ் செய்வதென்னை

மகமதியரென்னும் மகாமதியர்களாம் விவேக புருஷர்களின் சீர்திருத்தக் குறைவேயாகும். அதாவது விசேஷமாக அவர்களது குருபரம்பரையில் மரித்த சிலமகான்களின் சரித்திரமாக விளங்குகின்றது. அவர்களில் ஒருவரை சத்துருக்கள் நெருப்பிலிட்டு வதைத்தபோதினும் யாதாமோர் உபத்திரவமன்றி ஆனந்தமாய் நெருப்பினின்று வெளிவந்ததாகவும் தெரியவருகின்றது. அவர்களது ஞானநெறி அறியாத சத்துருக்கள் மேலும் மேலும் உபத்திரவஞ்செய்தபோது ஓர் கிணற்று நீரிலேயே சமாதியடைந்து தேகம் ஒருவருக்கும் அகப்படாமல் போனதாகவும் விளங்குகின்றது. அத்தகைய மக்கள் நீரில் மூழ்கும்போது தனதுகையால் என்னை துன்பஞ்செய்ய ஆரம்பித்த நீவிர் யாவரும் சுகமாயிருங்கோளென்று ஆசிகூறி கையை உள்ளடக்கிக் கொண்டாரென்றும் அச்சரித்திரக்காரரால் கூற நன்கு விளங்குகின்றது.

இத்தகைய பேரறிவாளராம் மகான்களது காலத்தை மகமதியர் மிக்க அமைதியுடன் அன்புடனுமிருந்து அவர்களது துன்பத்தை நினைத்து துக்கித்து பத்துநாளும் ஆனந்த தியானத்திலிருந்து அவர்கள் பெயரால் ஏழைகளுக்கு அன்னதானம் வஸ்திரதானஞ்செய்து அத்திருநாளைப் பெருநாளாகக் கொண்டாடி வருவார்களாயின் அவர்கள் நித்தியானந்த சுகவழியைக் கண்டடை வதுடன் தங்களது சந்ததியோர்களும் சுகவாழ்க்கையில் நல்லறிவும் விளங்கி மகான்களது ஆசியும் பெறுவார்கள்.

அங்ஙனமின்றி பக்தியில் நிறைந்து மறைந்தோர் காலத்தை பத்துநாளைய பயித்தியக்காரக் கோலமாக்கி வீணான கூச்சலுக்கும் சண்டைகளுக்கும் ஏதுவை

உண்டுசெய்து அரசவதிகாரிகள் காவலிடவும் அதி மூர்க்கரை அடக்கவும் பலர் தெண்டனையடையவும் பலசாதியோரும் பயித்தியவேஷமிட்டு தங்கடங்கள் மனம்போனவாறு ஆடியும் பாடியுந் திரிந்து சாராயக்கடைக் கள்ளுக்கடைகளே சதானந்தமாகவும் அதனிற் குடித்து வெறித்தோரெல்லாம் அல்லாசாமி பெயரை வழங்கவும் கோலத்தை மகமதியரென்னும் மகாமதியர்கள் யாவரும் பெருங்கூட்டமிட்டு இப்பத்து நாளைய பக்திக்குரிய காலத்தை மிக்க அமைதியாகவும் அன்பாகவுமிருந்து அம்மாகான்களின் சரித்திரத்தை எல்லவருக்கும் விளக்கி மகமதிய பாலியர்களுக்குள்ள அறிவைப் பெருகச் செய்விப்பதுடன் ஏனைய சாதியோர்களுக்குங் கூறி அமைதிபெறச் செய்வார்க ளென்று நம்புகிறோம்.

- 6:29; டிசம்சர் 25, 1912 -

95. சரியை கிரியை யோகம் ஞானம்

வினா: தற்காலந் தோன்றியுள்ள நூதன மதஸ்தர்கள் சரியை, கிரியை, யோகம், ஞானமென்று கூறி அவற்றுள் சரியை என்றால் கோவிலைமொழுகி சுத்தஞ்செய்வதும், சிலாதெய்வங்களைக் கழுவி புட்பமெரிதலும், மணிகுலுக்கி மந்திரஞ்செபித்தலும், கோவிலைச்சுற்றி வலம்வருதலென்றும்; கிரியை என்றால் மணியேந்தி மந்திரங்களை உச்சரித்தலென்றும்; யோகமென்றால் மூச்சை உள்ளுக்கிழுத்து அடக்குவதென்றும்; ஞானமென்றால் முத்தியடைவதென்றுங் கூறி இவற்றுள் சரியையை ஒருமனிதன் கிரமமாகசெய்து மரணமடைவானாயின் மறு பிறவியிற் கிரியை அநுசரிப்பானென்றும், கிரியையை ஒருமனிதன் கிரமமாகச் செய்துவருவானாயின் மறுபிறவியில் யோகத்தை அநுசரிப்பா னென்றும், யோகத்தை ஒரு மனிதன் சிரமமாகச் செய்வானாயின் மறு பிறவியில் ஞானத்தை அநுசரித்துக் கொள்ளுவானென்றுங் கூறுகின்றார்கள். இஃது யதார்த்த மொழிகளா அல்லது வேறேதேனும் பொருளுண்டா.

கோ. பாலசுந்திரம்: சோளிங்கபுரம்

விடை: தற்காலம் தோன்றியுள்ள நூதன மதஸ்தர்களுக்கு சாதியையே சாமியாகக்கொண்டு அதற்கான பொய்நூற்களை ஏற்படுத்திக்கொண்டு உள்ளவர்களாதலால் பௌத்தர்களால் வழங்கிவந்த மெய்நூற்களும் நீதிபோதங்களும் ஒழுக்க மொழிகளும் செவ்வனே விளங்காது தங்கடங்கள் மனம்போனவாறு ஒழுக்கமொழிகளை மாறுபடுத்திவிட்டார்கள். காரணமோ வென்னில், சூத்திரனாகப் பிறந்தவன் பிராம்மணனையே தெய்வமாகக்கருதி அவனுக்குத் தொண்டுசெய்து வருவானாயின் மறுபிறவியில் வைசியனாகப் பிறப்பானென்றும், வைசியனாகப் பிறந்தோன் பிராம்மணனுக்கே தொண்டு செய்து அவனுக்கு வேண்டிய பொருளளித்துவருவானாயின் மறுபிறவியில் க்ஷத்திரியனாகப் பிறப்பானென்றும், க்ஷத்தரியனாகப் பிறந்தோன் பிராம்மணனை சேவித்து அவன் சொற்படி அரசாண்டு வேண திரவியங்களைக் கொண்டு போஷித்துவருவானாயின் மறுபிறவியில் அவன் பிராம்மணனாகப் பிறப்பானென்றும் எழுதிவைத்துள்ளார்கள். அத்தகையக் காரியக் கட்டுக்கதையைக் காண்போரும் கேட்போரும் தற்காலம் பிராம்மணரென்று சொல்லிக்கொள்ளுவோரும் பலபேர் சூத்திரரை வணங்கி சூத்திரர்களுக்கு வேலை செய்து வருகிறார்களே அவர்கள் என்ன பிறவியில் பிறப்பார்களென்று தட்டிக்கேழ்ப்போர்கள் இல்லாததினாலேயாம்.

கல்வியற்றப் பெருங்குடிகளும், காமியமுற்ற சிற்றரசர்களும் அவர்களது பொய்க்கதைகளையே மெய்க்கதைகளென்றும் அவர்களது பொருளறியா மொழிகளையே சரிபொருளென்றுங் கொண்டாடிவருகின்ற படியால் பௌத்தர்களால் வழங்கிவந்த சரியை, கிரியை, யோக, ஞானமென்னும் ஒழுக்க மொழிகள் விளங்காது, அவர்கள் மனம் போனவாறு வழங்கிக்கொண்டார்கள்.

அதாவது உலகத்தில் தோன்றியுள்ள மனுக்களில் ஒருவன் தனது ஒழுக்கத்தில் நல்காரியத்தில் முயலுங்கால் அதனை சரிவர நிதானித்தலை சரியை என்றும், அவ்வகைநிதானித்துச் செய்யுஞ் செயலை கிரியை என்றும்,அக்கிரியை செவ்வனே முடிந்த அதிஷ்டபாக்கியமே யோகம் என்றும் அவ்வதிஷ்டபாக்கியம்

பொருள் அதிகரித்தபோது அறிவு பெருத்தலே ஞானம் என்றும் வகுத்து வழங்கிவந்தார்கள். ஓர் கிரியையை சரிவரநடத்துவதால் யோகமாம் அதிர்ஷ்டமுண்டாகி அறிவு பெருகியகியானத்தினால் உலக சீர்திருத்தங்களுக்கு முதல்வனாகத் தோன்றுவதுடன் தனக்குள்ள துற்செயல் நற்செயல்களை ஆராய்ந்து துற்செயல்கள் யாவையுந் தனது கியானமாம் ஞானத்தால் அகற்றி நற்செயலாம் நன்மையை கடைபிடித்து நிருவாண சுகம் பெறுவான் என்னும் கருத்தால் கிரியா சரியை யோக ஞானத்தை வழங்கி வந்தார்களன்றி இவர்களது சிருஷ்டியால் சாமிகளையுண்டுசெய்து சிலாலயங் கட்டி மதக்கடைபரப்பி அதனால் சீவிக்கும் அஞ்ஞான சோம்பேறிகளுக்கும் பௌத்தன்ம ஒழுக்க மொழிகளுக்கும் பொருள் பொருந்தவே பொருந்தாவாம். சரியை என்பது சிலாலயத்தைத் தொழுதலென்னும் பொருளைத்தருமா, கிரியை என்பது மந்திரஞ் செய்தலென்னும் பொருளைத் தருமா யோகம் என்பது மூச்சை அடக்குதல் என்னும் பொருளைத்தருமா, ஞானமென்பது வீடுபே றென்னும் பொருளைத் தருமாவெனத் தட்டிக்கேட்பாரில்லாமல் தங்கடங்கள் மதக்கடைகளைப் பரப்பித் தங்கள் தங்களுக்கான சீவன வழிகளைத் தேடிக்கொண்டார்கள். மற்றும் வேறில்லை யென்றறிவீராக.

- 6:30; சனவரி 1, 1913 -

96. நிதானம்! நிதானம்!! நிதானம்!!!

உலகத்தில் மநுமக்கள் செய்துவரும் தானங்களில் அன்னதானம், வஸ்திரதானம், கோதானம், பூதானம், சுவர்ணதானம் முதலிய முப்பத்திரண்டு தானங்களிலும் விசேஷித்தது நிதானமே பெரிதென்னப்படும். அதாவது, மனிதன் உண்பதிலும் நிதானம், உடுப்பதிலும் நிதானம், குளிப்பதிலும் நிதானம், சயனிப்பதிலும் நிதானம், பேசுவதிலும் நிதானம், நடப்பதிலும் நிதானம், ஈவதிலும் நிதானம், இரப்பதிலும் நிதானம், வித்தையிலும் நிதானம், விவசாயத்திலும் நிதானம், வியாபாரத்திலும் நிதானம், பணம் சம்பாதிப்பதிலும் நிதானம், பணத்தை செலவு செய்வதிலும் நிதானம், பெண்ணைக் கொள்ளுவதிலும் நிதானம், பெண்ணைக் கொடுப்பதிலும் நிதானம், பிள்ளைகளைப் புசிப்பூட்டுவதிலும் நிதானம், பிள்ளைகளை வளர்ப்பதிலும் நிதானம், பிள்ளைகளுக்கு வித்தியா விருத்தி செய்வதிலும் நிதானம், குடும்பவாழ்க்கைப்புரிவதினும் நிதானம், குடும்பத்தோருடன் கூடிவாழ்தலிலும் நிதானம், பெண்களுடன் வார்த்தையாடலிலும் நிதானம், பெரியோர்களிடம் சங்கைத்தெளிவதிலும் நிதானம், சரித்திரங்களையும் சாஸ்திரங்களையும் விசாரிப்பதிலும் நிதானம், சண்டை சச்சரவுகளைக்கண்டு ஒதுங்குவதிலும் நிதானம், ஞானாசிரியனை இன்னானென்று அறிந்து கொள்ளுவதிலும் நிதானம், ஞானசாதனம் புரிவதிலும் நிதானம், பஞ்சபாதகங்களை அகற்றுவதிலும் நிதானம், பற்றறுக்கும் வழிகளை அறிந்து நடப்பதிலும் நிதானம், மனமாசு களைக் கழுவுதலிலும் நிதானம், மனோலயம் அறிந்தடங்குதலிலும் நிதான முற்று ஒழுக்கத்திலும் சீலத்திலும் உயர்ந்தோர்மாட்டே உலகமென்பதாதலின் மக்களென்னுந் தோற்றத்தில் இத்தகைய நீதிமார்க்கத்தில் ஒழுகி மானியாகி மானிடனென்னும் பெயரைப் பெருகின்றான். அவ்வகை மானியாகிய மனிதன் தனது நிதானமற்று உலகவாழ்க்கைப் புரிவானாயின் மனிதனென்னும் பெயரற்று ஐந்தாவது தோற்றமாம் மிருகங்களுக் கொப்பாவாரென்றே கூறுவர். இத்தகைய மானியாகும் நிதானமறியாதோரும் மக்களினது தோற்றம் அறியாதோரும் மக்களென்னும் உருதோன்றியும் மிருகங்களுக்கு ஒப்பாய சீவகாருண்யம் இல்லாதோரும் ஞானக்கண் இல்லாதாயினும் ஊனக்கண்ணிருந்தும் தம்மெய்யொத்த மக்களை மக்களாகப் பாவிக்காதோரும், தங்களை உயர்ந்த சாதியோர் என்று உயர்த்திக்கொண்டு ஏனையோரைத் தாழ்ந்தசாதியென வகுத்துத் தலையெடுக்கவிடாமற் தாழ்த்தி வருகின்றார்கள். அத்தகையாகத் தாழ்த்தப் பட்டோர் உயருங்காலம் நெருங்கிவிட்டது. அக்கால் உயர்ந்தோர் கதி தானே தாழ்ந்து தலையெடுக்கவிடாதென்பது சத்தியம் சத்தியமேயாம்.

- 6:33; சனவரி 22, 1913 -

97. பௌத்தசோதிரர்களுக்கு அறிவிப்பு

சீவகசிந்தாமணி

மாசித்திங்கள் மாசினமுன்னமடிவெய்த / வூசித்துன்ன மூசிவவாடையுடையாகப்
பேசிப்பாவாய்பின்னுமிருக்கையைகலேந்தக் / கூசிகூசி நிற்பர் கொடுத்துண்டறியாதார்.

எமதரிய பௌத்தசோதிரர்களே! ஜகத்குருவும் உலகரட்சகருமாகிய நமது ஒப்பிலாது அப்பன் சித்தார்த்தியாம் சக்கிரவர்த்தித் திருமகன் பிறப்புப் பிணி மூப்புச் சாக்காடு என்னும் நான்கு வகை துக்கங்கள் மக்களுக்குள்ளதையும் அதற்கு எதிரிடையாய சுகவழி ஏதேனும் உண்டோ என்று அக்காலத்திருந்த அறு சங்கத்தோர்களை தருவித்து விசாரிணைப்புரிந்தும் விளங்காததினால் தனது சக்கிரவர்த்திபீடத்தையும் அரிய மனைவியையும் ஏகபுத்திரனையும் விடுத்து சிரமயிரை அறுத்தெரிந்து திருக்கரத்தில் ஓடெடுத்து பிச்சாண்டியாக வெளிதோன்றிய மாசிமாதப் பௌர்ணமிநாள் 1913ஸ்ரீ பிப்ரவரிமீ 21உக்குச் சரியாய மாசிமீ 10உ சுக்கிரவாரம் வருகிறபடியால் ஒவ்வோர் பௌத்தர்களும் பெண்டுபிள்ளைகளுடன் நீராடி சுத்தவாடையணிந்து சுத்தபுசிப்பை புசித்து தங்களால் இயன்றமட்டும் ஓர் ஏழைக்கு அன்னமிட்டு அம்மகாராஜன் துறவையும் அவர் அதிதீவிரத்தையுங் கொண்டாடும்படி வேண்டுகிறோம்.

அன்பே ஒருருவாகத் தோன்றி சிவன் என்னும் பெயர் பெற்றுள்ளோன் அப்பௌர்ணமி இரவு முழுவதும் விழித்திருந்து துறவடைந்தபடியால் பௌத்த சங்கத்தோர்கள் யாவரும் அன்றிரவு முழுவதும் விழித்திருந்து துறவினது சுக சாதனங்களைத் தேறவிசாரிப்பதுடன் "சத்தாரி ஆகமபதனி" யென்னும் 'ச, ரி, க, ம, ப, த, னி, என ஏழு வாழிசையுடன் பாடி ஆனந்தங்கொண்டாடும் நாளை சிவராத்திரி என்றுங் கொண்டாடி வந்தார்கள். சகஸ்திரநாமங்களில் சிவனென்னும் பெயரும் புத்தருக்குரியதே என்பதை வடமொழியில் வரைந்துள்ள "இரத்தின காண்டகம்" என்னும் நூலிற் பரக்கக்காணலாம். சூளாமணி, அறநெறிச்சாரம் மற்றுமுள்ள தென்மொழி நூற்களிலும் விளங்கக்காணலாம்.

தற்காலம் அச்சிவனென்னும் பெயரையே ஆதாரமாகக்கொண்டும் புத்தரது செயல்களையே மூலமாகக்கொண்டும் நூதன மதங்களை ஏற்படுத்திக் கொண்டு மதக்கடைகள் பரப்பி அதனாற் சீவிக்க ஆரம்பித்துக்கொண்டார்கள். அத்தகையோர் பொய்ப்புராணப் போதங்களையும் பொருளறியாது செய்துவருஞ் செயல்களையும் நோக்காது சத்தியசரித்திரத்தைப் பின்பற்றி ஜகத்து இரட்சகனைக் கொண்டாடும்படி வேண்டுகிறோம்.

- 6:37; பிப்ரவரி 19, 1913 -

98. புராண சங்கை

வினா: ஐயா! இத்தேசத்துள் பெரியசாதிகளென ஏற்படுத்திக் கொண்டுள்ளோர் தாங்கள் வளர்க்கும் நாயினுக்கும் இழிவாகத் தீண்டக்கூடா தென அகற்றிவைத்துள்ள சில வித்துவான்கள் தோன்றி பெரியசாதியோருக் குரியப் பெரியபுராணத்தை எடுத்துக்கொண்டு அதனைத் தங்கள் புராணமென நடித்துத் தாளமத்தளமடித்து பிரசங்கிக்க ஆரம்பிக்கின்றவர்களை அப்புராணங் கள் மட்டும் இவர்களைத் தீண்டிக்கொள்ளுமா, அருகில் சேர்க்குமா, புராணமென்பதற்குப் பொருளென்னை. பெரியபுராணம் எக்காலத்தில் தோன்றியிருக்கலாம். அது நடந்த சரித்திரமா நடவா பொய்கதையா அதனை அடியேனுக்கு விளக்கித் தெளிவிக்கும்படி வேண்டுந் தங்களடிமை.

வீ. முத்துகிருஷ்ணன், மதுரை

விடை: அதாவது ஓர் மனிதன் பௌத்த குருவை அடுத்து பஞ்ச சீலோபதேசம் பெற்றுக் கொள்ளுவானாயின் அன்றுமுதல் அவன் பௌத்தனென்று அழைக்கப்படுவான். மற்றொருவன் கிறிஸ்தவ குருவை அடுத்து ஞானஸ்னான மென்னும் ஓர் தீட்சையைப் பெற்றுக்கொள்ளுவானாயின் அவன் அன்று முதல் கிறிஸ்தவனென்று அழைக்கப்படுவான். இன்னொருவன் மகம்மது

குருவை அடுத்து அவர்களுக்குரிய தீட்சையைப்பெற்றுக் கொள்ளுவானாயின் அவன் அன்று முதல் மகம்மதியனென்று அழைக்கப்படு வான். ஆனால் சைவன், வைணவன், வேதாந்தியென்று சொல்லிக்கொள்ளும் மதத்தினர்களுக்கு அதிற் சேர்ந்த ஓர்காலமுங் கிடையாது சேர்த்துக்கொள்ளுங் குருவுங்கிடையாது. பெரியசாதி என்று சொல்லிக்கொள்ளுவோர்களுக்கே அதன் உறுதி நிலையற்றிருக்க அவர்களால் தீண்டப்படாதென்று இழிவுகூறி புறம்பே அகற்றிவைத்துள்ள சைவன், வைணவனென்னும் பேதைகளாயப் பிரசங்கிகளுக்கும் அவர்களது நாவைப்பார்த்து நங்கவிளிக்குங் குழாங்களுக்கும் நிலையுண்டோ, இல்லை. எவ்விதமென்னில் மகம்மதியர்அல்லாசாமி பண்டிகையில் மனம்போனவாறு வேஷமிட்டு ஆலி ஜூலா கூச்சலிடும் ஐயமாரையடுத்தாப்போன்றவர்களென்பதாம், பெரியபுராணமாயினும் இவர் களுக்குச் சொந்தமாமோ என்பதில் பணங்கொடுத்துப் பெரியபுராணத்தை விலைக்கு வாங்கியுள்ளது கொண்டு அவர்களுக்கு சொந்தமேயாயினும் அதனுள்ளடங்கிய மக்களும் அச்சங்கதிகளும் அவர்களைத் தீண்டப்படாத தாதலின் சொந்தமாகாவாம். நாயையேனும் என்வீட்டுக்குள் சேர்த்துக் கொள்ளுவேன் உம்மெயென் வாயற்படியிலுங் காலை வைக்கவிடமாட்டே னென்று உறும்பும் சத்துருவின் மதத்தைத் தம்மதமென்று அவர்கள் பாராட்டி சீராட்டித் திரிவது அன்னியனுக்குப் பெற்ற பிள்ளையைத் தன்பிள்ளையென்று தாராட்டிப் பலருக்கும் பகட்டுவதுபோலாம்.

பௌத்தர்களுடைய காலத்தில் பழய நடந்த சங்கதிகளைக் கண்டெழுதியுள்ள நூற்களுக்குப் பூராணங்களெனப்பெயரளித்திருந்தார்கள். அதிற் பெரும்பாலும் பதிநெட்டு புராணங்கள் புத்தபிரானையே முதற் கடவுளாகசிந்தித்து பழய சரித்திரங்களை வரைந்திருப்பதாக வடதேசவாசியாகிய துருகப்பிரசாதென்பவர் தனது புராணங்களைக் கண்டித்தெழுதியுள்ளவற்றுள் இப்பெரிய புராணத்தை யெழுதாமலே விட்டிருக்கின்றார். இதுவுமன்றி விஸ்வபிரம்ம வம்மிஷத்தோரென்னுங் கம்மாளர்களுக்கும் தங்களுக்குத் தாங்களே பிராம்மணர்களென்று சொல்லிக் கொள்ளுவோர்களுக்கும் வாதுக ளுண்டான போது விவகாரங்கள் யாவும் ஈஸ்ட்டின்டியன் கம்பனியார்காலத்திய சித்தூர்ஜில்லா அதாலத் கோர்ட்டில் நிறைவேறியிருக்கின்றது. அக்காலத்தில் இந்த பிராமணர்கள் வீட்டில் சாமிகளே வந்து அவதரித்துக் கதைகளடங்கிய பெரியபுராணம் இருந்திருக்குமாயின் அதைக் கொண்டுவந்து அக்கோர்ட்டில் ரூபித்துத் தங்கள்சாதியே சிறந்ததென்று ஜெயம்பெற்றிருப்பார்கள். அஃதில்லாதபடியால் அபஜெயமடைந்தார்கள்.

இவைகளன்றி வீரமாமுனியென்பவர் சமணர்கள் நூற்களாகும் முன்கலைதிவாகரம், பின்கலைநிகண்டு முதலியவைகளை ஆதாரமாகக்கொண்டு ஓர் சதுரகராதி எழுதியிருக்கின்றார். அதனுள் பௌத்தர்கள்காலத்திய பதிநெண் புராணங்களைமட்டிலுங் கண்டெழுதியுள்ளாரன்றி பெரியபுராணப் பெயர், புராணவகுப்பிற்கிடையாது அதே அகராதியை 1860-ம் வருடத்தில் விசாகப்பெருமாளையரும் பொன்னம்பல முதலியாருங்கூடி பரிசோதித்துக் கூட்டவேண்டியவற்றைக் கூட்டியும் குறைக்க வேண்டியவற்றைக் குறைத்தும் அச்சிட்டிருக்கின்றார்கள். அவர்களும் இப்பெரியபுராணத்தைக் குறிப்பிட்டெழு தியுள்ளதுங் கிடையாது.

பெரிய புராணம் அக்காலிருந்தால் சேர்த்தேயிருப்பார்கள். இல்லாது 60 வருடத்திற்குள் தோன்றிய கற்பனா கதையேயாதலின் அவ்விருவரும் அவற்றைக் குறிப்பிடாது புராணத்தொகையை வெளியிட்டுள்ளார்கள்.

இத்தகைய சரித்திர நூலாதாரங்களைக்கொண்டே பெரியபுராணம் நூதனமாயக் கட்டுக்கதையென்றும் சிவமதக்கடை பரப்பி அதனால் வயிறு பிழைப்போருக்கு சரக்குபுத்தகமென்று கூறலாமேயன்றி நடந்த சரித்திரபுத்தகம் ஆகாவாம். அதனை ஓர் மெய்யாய் நடந்த சரித்திரமென்று பிரசங்கித்து நடிக்குந் தீண்டாத்திருமேனிகளுக்கு இலக்கணங்கள் யாவரால் ஏற்பட்டுள்ள தென்னும் சரித்திரமுந் தெரியாது. இலக்கண பாகுபாடுகளும் இலக்கியத்

தொகுப்புகளுந் தெரியாதாதலின் வீணே ஆடு கசாயிக்காரனை நம்புவதுபோல் அன்னியர் சாதியையும் அன்னியர் மதத்தையும் மெய்யென நம்பிக்கொண்டு சுஜாதி அபிமானமற்று சுஜாதி விரோதமுற்று அல்லலடைந்து வருகின்றார்கள். இன்னுஞ் சில காலத்துள் தங்களுடைய நல்விசாரிணையாலும் உண்டாம் உணர்ச்சியாலும் சத்திய தன்மந்தோன்றி சுஜாதி சீர்திருத்தத்திற்கீடுபடுவார்கள். அதுகாலம் வரையில் அவர்களது அறியாச்செயல்களுக்கும் பிரசங்கங்களுக்கும் மனத்தாங்கல் அடையாது தங்களது தன்மக்கடைபிடியில் நிற்க வேண்டுகிறோம்.

- 6:41; மார்ச் 19, 1913 -

99. தெய்வத்தைவேண்டிக்கொள்ளுதல்

வினா: பலதேவதைகளையுண்டுசெய்துகொண்டிருக்கும் பற்பல மதஸ்தர் பலவகையானத் தீயச்செயல்களைச் செய்து வந்தபோதினும் ஆபத்துகாலத்தில் தங்கள் தேவனை தேவியை வேண்டிக்கொண்டு பிரார்த்தனை செலுத்தினால் அவ்வாபத்து நீங்கிப்போய்விடுகிறதென்றும், வியாதிகள் நீங்காவிடில் தங்கள் தேவனை தேவியை வேண்டிக்கொண்டு பிரார்த்தனை செலுத்தினால் அந்நோய்கள் நீங்கிவிடுகிறதென்றுங் கூறித்திரிகின்றார்கள். அவர்கள் கூறுங் கூற்று அநுபவத்திற்குங் காட்சிக்கும் பொருந்துமோ.

வே. பார்த்தசாரதி, சென்னை

விடை: இவையே காகதாளி நியாயமென்று கூறப்படும். அதாவது காக்கையானது பனைமரத்தில் உழ்க்காரவும் பனம்பழம் வீழவும் ஆயதுபோல நீங்கும் ஆபத்து நேர்ந்தகாலத்து தேவனை தேவியை வேண்டிக்கொள்ள அவரவர்களால் ஆபத்து நீங்கிவிட்டதென்றும், தீரும்வியாதி தீர்ந்தகாலத்து தேவனை தேவியை வேண்டிக்கொள்ள வியாதி நீங்கிவிட்டதென்றும் நம்பி மோசத்துக்குள்ளாகி கண்ணைப்போற் பொன்னினாற் கண்ணும், காலைப்போல் வெள்ளியினாற் காலுங்கொண்டுபோய் செலுத்துவதுடன் வேணரொக்கங்களுங் கொண்டுபோய் தேவதைகளுக்கு லஞ்சங்கொடுத்து வருகின்றார்கள். ஆபத்தைநீக்கவும் வியாதியைப் போக்கவுங்கூடிய தேவதைகளுக்குப் பிரிதிதானமும் வேண்டுமோ. அதேயாபத்தும் அதே வியாதியும் மற்றும் பலருக்குண்டாகி அதே தேவதைகளை வேண்ட அவை நீங்காமலிருப்பது பிரத்தியட்சமாகும். உம்மெய்ப்போல் ஆபத்திற்கும் வியாதிக்கும் வேண்டிக் கொண்ட ஏனையமக்களுக்கு ஏன் நீங்கவில்லையென்னில் அத்தேவதையின் பேரில் உமக்கு உறுதியில்லையென்பார்கள். அதனால் அத்தேவதைகளால் ஒருகாரியமும் ஆகிறதில்லை இவனாலேயே ஆகிறதாக விளங்குகிறது. ஆதலின் அவர்களது மறுமொழியைக்கொண்டே அவனவனன்றி யோரணுவு மசையாதென்னு மொழியை நிலைபெறச் செய்யல்வேண்டும். கண்ணைப்போல் கண்தராவினாலும், காலைப்போல்கால் இரும்பினாலும் ரொக்கத்திற்கு பதில் தாம்பூலத்தையுங் கொடுப்பார்களாயின் அக்கோவில்குருக்கள் கையேந்திப் பெற்றுக்கொள்ளுவார்களா ஒருக்காலும் பெறமாட்டார்கள். அதாவது பேதைமக்களை வஞ்சித்தும் பொய் சொல்லியும் பொருள்பறிப்பதற்கு மதக்கடைகளைப் பரப்பி அதனாற் சீவிக்கும் சோம்பேறிகள் அதிகரித்துவிட்ட படியால் தேவதைகளுக்குலஞ்சங் கொடுத்து ஆபத்தை நீக்கிக்கொள்ளும் நம்பிக்கைகளும் வியாதியை நீக்கிக்கொள்ளும் நம்பிக்கைகளும் விவேகமற்ற மக்களுக்குப்பரவி வேண்டிக்கொள்ளும் வித்தைகளேயதிகரித்துவிட்டது. இவைகள் யாவும் தங்களால் தேவதைகளை சிருஷ்டித்துக்கொண்டு பொய்ச் சொல்லிப் பொருள் பரிப்பதற்கு ஆதாரமான மதக்கடைகளென்னப்படும். வியாபாரிகள் தங்கள் கடை சரக்கே நல்ல சரக்கு ஏனைய கடை சரக்கு நல்ல சரக்கல்லவென்றுகூறி பொருள் சம்பாதிப்பதுபோல் எங்கள் மததேவதைகளே மேலானதேவதைகளென்றும் வியாதிகளையும் ஆபத்துகளையும் நீக்குமென்றும் மோட்சத்தை நேரிற் கொடுக்குமென்றும் பொய்யைச்சொல்லுவதோடு தங்கள் மதக்கடை வியாபாரக் குறைவால் ஓர் மதத்தோருடன் மற்றொரு மதத்தோர்

சண்டை தொடுத்தும் கோர்ட்டு வழக்கெடுத்தும் வாதிட்டு வருகின்றார்கள். ஆடானது கசாயிக்காரனை நம்பியிருப்பது போல் பேதைமக்கள் பொய்க் குருக்கள் வாய்மொழிகளை நம்பி பொருள் விரயஞ் செய்து வருகின்றார்கள். இவற்றைத் தாங்களும் நம்பி மோசம் போகவேண்டாம்.

- 6:49; மே 14, 1913 -

100. நூதன பௌத்தம்! நூதன பௌத்தம்!! நூதன பௌத்தம்!!!

இச்சென்னையில் தற்காலம் சாக்கைய புத்தசங்கத்தோர் எனத் தோன்றியுள்ளவர்கள் சிலோனிலுள்ள எட்டுபிரதம பௌத்த குருக்களின் அதிகாரம் பெற்று 1898ம் வருடம் சென்னை இராயப்பேட்டையில் சாக்கைய புத்தசங்கம் என்னும் அரியபெயரளித்து இந்திய தேசத்திற் திராவிட பூர்வபௌத்தர்கள் எழுதிவைத்துள்ள நூற்களை அநுசரித்தும் சிலோன், பர்மா, தீபேத், சைனா, ஜப்பான், சையாம் முதலிய தேசத்து பௌத்தர்களின் நடவடிக்கைகளைப் பின்பற்றியும் புத்தரது போதனா சிலாரூபமும், சாதன சிலாரூபமும், பரிநிருவாண சிலாரூபமும் சங்கத்தில் ஸ்தாபித்து, சிலாரூபங்களை சுட்டிக்காட்டி, அவரது நன்மார்க்கங்களை விளக்கி, அவரைப்போல் நன்மார்க்கங்களில் நடந்து நித்தியானந்தமடையவேண்டும் என்றும், அதற்கு முதற்படியாம் கொலைசெய்யாமெய், பொய்சொல்லாமெய், களவுசெய்யாமெய், விபச்சாரஞ் செய்யாமெய், கள்ளருந்தாமெய் என்னும் சுத்ததேகிகளாக இல்லறம் நடாத்தற்கு பௌத்த குருக்களிடம் பஞ்சசீலம் பெற்று துற்கன்மங்கள் யாவையும் அகற்றி நற்கன்மங்களையே செய்து இந்நல்லவழிகாட்டிய பகவனாம் புத்தபிரான் மீது அன்பும் விசுவாசமும் வைப்பதுடன் நம்மெய் ஆண்டு ரட்சித்துவரும் பிரிட்டிஷ் அரசாட்சியார்மீதும் அன்பையும் விசுவாசத்தையும் நிலைபெறச்செய்து சுகவாழ்க்கையையடைய புத்ததன்ம நடைகளையும் உள் சீர்திருத்தங்களையுஞ் செய்துவர முயன்றதில் சென்னையில் சாதிபேதமென்னுங் கொடுஞ்செயல் இல்லாமல் வாழும் விவேகிகளிற் சிலர் பஞ்சசீலம்பெற்று பௌத்தர்களாயுள்ளதுடன் கோலார், பெங்களூர், திருப்பத்தூர், நாகப்பூர், செக்கன்றாபாத், இரங்கூன், நெட்டால் முதலிய தேசங்களிலும் சாக்கைய புத்த சங்கங்களை ஸ்தாபித்து நல்லொழுக்க சீர்திருத்தங்களில் நடைபெறச் செய்து வருவதுடன் இந்துக்களென்போர் சாதிபேதமென்னுங் கொடுஞ் செயலையே பீடமாகக் கொண்டொழுகுகிறவர்கள், பௌத்தர்களோ சாதிபேதமென்னுங் கொடுஞ் செயல் அற்று அன்பையே பீடமாகக்கொண்டு வாழ்கின்றவர்கள் அதுகொண்டு சென்னை சாக்கைய புத்தசங்கத்தார் கருணை தங்கிய பிரிட்டிஷ் ராஜாங்கத்தாருக்கு விண்ணப்பம் அனுப்பி இந்துக்கள் செயல்களுக்கும் பௌத்தர்கள் செயல்களுக்கும் சம்மந்தமில்லாததால் இராஜாங்கத்தோர் வகுத்தெழுதும் குடிமதிப்புப் புத்தகத்தில் பௌத்தர்களை இந்துக்களுடன் சேர்க்காது பௌத்தர்களுக்கென்று வேறுகல மேற்படுத்தி பிரித்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டபடி வேறாகப்பிரித்தே காரியாதி களை நடத்தி வருகின்றார்கள். அதன்பின்னர் சுடலையிலும் பௌத்தர்களுக்கு என்று பிரத்தியேக பூமி பிரித்துக்கொடுத்துவிட வேண்டும் என லோக்கல் போர்டாருக்கு விண்ணப்பித்த வண்ணம் பௌத்தர்களுக்கென்று சுடலை பூமியும் வேறாகப் பிரித்துக் கொடுத்துவிட்டார்கள்.

இவ்வகையாக இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் யாதாமொரு சம்மந்தமுமில்லாமல் பிரித்துக்கொண்டதுடன் உள்சீர்திருத்தங்களாம் விவாகக் கிரியைகளையும் மரணக்கிரியைகளையும் வேறாகப்பிரித்துக் கொடுத்து விட்டார்கள்.

சாக்கைய புத்தசங்கத்தோருள் பௌத்ததன்ம முக்கியபோதம் யாதெனில் பௌத்தர்களுக்குக் கன்மம் உண்டென்றும் பிறவியுண்டென்றும் நற்கன்மங் களைச் செய்துவரில் பிறவிகள் தோறும் நற்பலனை அநுபவித்துவருவதுடன் நன்மெயே ஓர் உருவாகத் திரண்டகாலத்து நிருவாண சுகமடையலாம் என்றும்

துற்கன்மங்களைச் செய்துவருவோமாயின் இப்பிறவியில் மாளாதுக்கத்தை அநுபவிப்பதுடன் கன்மத்திற்கு ஈடாய இனிபிறக்கும் பிறவியிலுந் தீராதுன்புற்று அல்லலடைய வேண்டிவருமாதலின் பௌத்தகுழாங்கள் ஒவ்வொருவருக்கும் நல்வாழ்க்கை பெற்று நன்முயற்சியினின்று நற்கடைபிடியில் ஒழுகவேண்டும் என்று போதித்துவருவதினால் பௌத்தக்கூட்டத்தார் யாவரும் நாளுக்குநாள் பெருகிவருவதுடன் நன்மார்க்கத்திலும் ஒழுகி வருகின்றார்கள்.

இந்துக்களுக்கு மாறாயுள்ள பௌத்தர்களது கூட்டம் நாளுக்குநாள் பெருகி விவேகவிருத்தியுண்டாகி சீல சேர்க்கையும் சுகசாதனங்களும் அமைந்து முன்னேறுவதைக்கண்ட இவர்களது சத்துருக்களாய இந்துக்களென்போர் மனஞ்சகியாது மற்றுஞ் சாதிபேதமில்லாக் குடிகளை முன்னேறவிடாது கெடுக்க வேண்டும் என்னும் வன்னெஞ்சங்கொண்டு ஆடுகள் நனைந்துவிடுகிறதென்று புலிகள் கட்டி அழுவதுபோல டிப்பிரஸ் கிளாசை சீர்திருத்தப்போகின்றோம் என்னும் ஓர் கூட்டத்தோர் கூடி பணஞ்சேர்க்கப் பரிந்து திரிந்து நிற்கின்றார்கள்.

இந்துக்களென்போரில் மற்றொரு கூட்டத்தோர்வெளிதோன்றி சாதிபேதமில்லாக் கூட்டத்தோரிற் சிலர் இந்துக்களைப்போல் சைவர்களெனக் குறுக்குப்பூச்சு பூசிக்கொண்டும், வைணவர்களென நெடுக்குப்பூச்சு பூசிக்கொண்டு அவர்கள் கோவில் வாசலின் தூரநின்று சுரணைகெட்ட சாமி கும்பிட்டு தட்சிணை தாம்பூலம் பெறும் வரவு கெட்டுப்போவதுடன் வைணவர் சைவர்களென்னும் தொகையுங் குறைந்துபோய் விடுகிறதென்னும் வன்னெஞ் சத்தால் சாதிபேதம் இல்லாதோர் வாழும் சேரிகளுக்கே சென்று நீங்கள் சைவமதத்தைவிடாதீர்கள், கூடியசீக்கிரம் உங்களைக் கோவிலுக்குள் சேர்த்துக் கொள்ளுகிறோம் கல்லையுங் கட்டையுந் தொழுதுக்கொண்டு கடைசாதியாகவே வாழ்வீர்களெனப் படாடம்பங்காட்டி அவர்கள் முன்னேறும் வழிகளைக் கெடுத்து வருகின்றார்கள். இவர்கள் தந்திரங்களை அறிந்த சிலவிவேகிகள் அவர்களிடஞ் சென்று, ஐயா இந்துசாதி பிரசங்கியாரே, இதுகாரும் சேரிக்குள் வராமலும் இவர்களைக் கண்ணெடுத்துப் பாராமலுமிருந்தவர்கள் இப்போது இவர்கள் மீது பரிதாபங்கொண்டு பிரசங்கிக்க வந்தீர்களா அல்லது எல்லவரும் பௌத்தர்களாகிவிடுவார்களாயின் தங்களது பொய் வேதங்களும் பொய் புராணங்களும் பரந்துபோமென பயந்து வந்தீர்களா என வினவில் மாறுத்திர மின்றி மறைந்து திரிகின்றார்கள்.

இவர்களது மித்திரபேத தந்திரம் ஒருவாறிக்க இந்துக்களது செய்கையை விடாதவர்களும் சாதிபேதத்தை உடையவர்களுமாகிய இருவர்கள் வெளி தோன்றி யாங்கள் பௌத்தர்களாகிவிட்டோம் மற்றவர்களையும் பௌத்தர் களாக்க வந்துள்ளோமென இரண்டு பௌத்த சங்கங்களை ஏற்படுத்திக்கொண்டு அக்கூட்டங்களில் தங்கள் சாதிசம்பந்தப்பட்ட ஒருவரேனுமின்றி சாதிபேத மில்லாமற் சேரிகளில் வாழ்ந்திருந்தவர்களையே அதில் அங்கங்களாகச் சேர்த்துக் கொண்டு நூதன பௌத்தம் பிரசங்கித்து வருகின்றார்கள்.

அவ்விருவரும் யதார்த்தத்தில் பௌத்ததன்மத்தைப் பரவச்செய்பவர் களாயின் முதலாவது தங்கள் பெண்டு பிள்ளைகளை பௌத்தர்களாக்கி யிருப்பார்கள், அதுவுங்கிடையாது. தங்கள் இனத்தோர்களையேனும் பௌத்தர்களாக்கி சீர்திருத்தியிருப்பார்கள், அதுவுங்கிடையாது. தங்கள் அண்டைவீட்டுக்காரன் அயல் வீட்டுக்காரனையேனும் பௌத்தர்களாக்கி யிருப்பார்கள், அதுவுங்கிடையாது. மற்றும் சாதியாசாரமுள்ள இந்துக்கள் என்போரையேனும் பௌத்தர்களாக்கி இருப்பார்கள், அதிலொருவனுங் கிடையாது. அவர்கள் யாவரையும் நீக்கிவிட்டு இவர்களிருவரும் எவர்களைச் சேர்த்துக்கொண்டு பௌத்தம் போதிக்கின்றார்களென்னில் சாதிபேதமில்லாமல் சேரிகளில் வாழுவோர்களையே சேர்த்துக் கொண்டு பௌத்த கூட்டம் நடாத்தி வருவது அவர்களது சட்ட புத்தகங்களே போதுஞ் சான்றாம்.

அவ்வகை சாதிபேதமில்லா சேரிகளில் வாழ்ந்திருந்தோரை பௌத்தர்களாக்கி முன்னேறச் செய்யவேண்டும் என்னும் நல்லெண்ணமும் நன்முயற்சியும் இவர்களுக்கிருக்குமாயின் சீன பௌத்தர்கள், சிங்கள பௌத்தர்கள், ஜப்பான்

பௌத்தர்கள், சையாம் பௌத்தர்கள், தீபேத் பௌத்தர்கள், பர்மா பௌத்தர்கள், பூர்வ திராவிட பௌத்தர்கள் புத்ததன்மத்தை எவ்வகையாகப் போதித்து எவ்வழியாக நல்மார்க்கத்தில் நிலைபெறச் செய்தார்களோ அதுபோல் இவ்விருவர்களும் போதித்து நன்மார்க்கத்தில் நிலைபெறச் செய்வார்கள். அங்ஙனமிராது பௌத்தர்கள் யாவருக்கும் நூதனமாய பௌத்த கூட்டங்களென்று ஏற்படுத்திக் கொண்டு அவ்விருவர்களின் போதனையில் புத்தரது சிலாரூபங்களை சங்கங்களில் வைக்கப்படாதென்றும் பௌத்தகுருக்களே சங்கத்திலிருக்கப்படாதென்றுங் கூறுவதுடன் மறுபிறவி என்பதுங் கிடையாது, கன்மமுங்கிடையாது, மனிதன் எப்போது மரித்துவிடுகின்றானோ அதுதான் அவனுக்கு முடிவு. மற்றோர் சுகம் யாதுங்கிடையாதென புத்ததன்மத்திற்கு எதிரடையாய அபுத்ததன்மமாம் நூதன பௌத்தம் போதிக்கின்றார்கள். அதனால் புத்ததன்மமே மாறுபடுவதுடன் அதனைக் கேட்போர்கள் மனிதன் மரிப்பதே முடிவாதலின் மனம் போனவாறு கொலைச்செய்தால் பாபமென்னை, குடித்து சுகித்தால் பாபமென்னை, அன்னியன் தாரத்தை யிச்சித்தால் பாபமென்னை, அன்னியன் பொருளை அபகரித்தால் பாபமென்னை, பொய்யைச் சொன்னால் பாபமென்னை என்னும் உச்சாகமுண்டாகி தானுங் கெடுவதுடன் தன்னை அடுத்தோரையுங் கெடுத்து தேசத்தையுஞ் சீரழித்து இராஜவிசுவாசத்தையுங் கெடுப்பதற்குத் தடையிராது.

வீதிகளில் மலமூத்திராதிகளை விசிரம்பிப்பில் அதிகாரி பிடித்து தெண்டிப்பான் என்னும் பயமிருக்கில் வீதிகள் சீரும் சிறப்புமடைந்திருக்கும். அவ்வகை அதிகாரிகளுமில்லை தெண்டனையுமில்லையென்னில் வீதிகளில் மலமுத்திராதிகள் நிறைந்து சீரும் சிறப்புங் கெடுவதுபோல தீவினைக்குத் தக்க தெண்டனையுமில்லை நல்வினைக்குத்தக்க சுகமுமில்லாது மனிதன் மரணமடைவதே முடிவேயன்றி வேறொரு கருமமுந் தொடராது என்று கூறுவதாயின் நல்வினைச் செய்தாலென்ன தீவினைச் செய்தாலென்னவென்னும் உச்சாகம் உண்டாகுமாயின் மநுக்கள் சீர்கெடுவதற்கே ஏதுவுண்டாகிப்போம்.

அதனினும் சாதிபேதமுள்ள இந்துக்கள் புத்ததன்மம் போதிப்போர் என வெளிதோன்றி சாதிபேதமுள்ள இந்துக்கள் மத்தியினின்று இத்தகைய போதனைகளை போதியாது சாதிபேதமில்லாமல் சேரிகளில் வாழ்வோர் களையும் பேட்டைகளில் வாழ்வோர்களையுஞ் சேர்த்துக்கொண்டு இத்தகைய நூதன பௌத்தம் போதிப்பதை ஆலோசிக்கில் இவர்களை சீர்கெடுப்போர் களாக விளங்குகிறதேயன்றி சீர்படுத்துவார்கள் என்பதை சுனவினும் நம்புதற்கு ஏதுவில்லை. சாதிபேதமில்லாக் குடிகள் சாதிபேதம் உள்ளவர்களால் பலவகையாலும் நசுங்குண்டு அறிவின்விருத்தி கெட்டிருப்பதினால் அவர்கள் மத்தியில் கேட்டை விளைவிக்கும் நூதன பௌத்தத்தைப் போதிப்பதாயின் உள்ள அறிவுங்கெட்டுப் பாழடைவார்கள் என்பதற்குத் தடையில்லை. ஆதலின் நமது கருணைதங்கிய ராஜாங்கத்தார் இத்தகைய சீர்கேட்டைப் போதித்துவரும் பிரசங்கியார்களையும் அக்கூட்டங்களை நடாத்த முயலுங் கூட்டத்தோர் களையும் சற்று நோக்கி மநுக்களுக்குக் கேட்டை உண்டுசெய்யும் வழிகளை அடைப்பார்களென்று நம்புகிறோம்.

- 6:51; மே 28, 1913 -

101. ஜெயினரும் பௌத்தரும்

வினா : ஜெயினர்கட்கும் புத்தர்கட்கும் யதார்த்தத்திலுள்ள பேதாபேதங்கள் இன்னின்னவையென நன்குவிளங்குவது அரிதாகலான் விரித்து விளம்புதல் வேண்டுமென விநயபூர்வகம் வேண்டுகிறேன்.

ஆதிசக்கிரவர்த்தி உபாத்தியாயர், திருமலை

விடை : கமலசூத்திரத்துள் சகஸ்திரநாம பகவனென்றும் மணிமேகலை யில் ஆயிரநாமத்தாழியன் திருவடியென்றும் புத்தருக்குரிய வாயிரநாமங்களில் ஜைநரென்பதும், சைநரென்பதும், ஜிநரென்பதும், சினரென்பதும், புத்தருக்குரிய பெயரெயாகும். அப்பெயர் வாய்த்தவிதி பாலி நிகண்டு பஞ்சமாரஜிநோதிதீ

ஜிநா. அதுகொண்டு தமிழ் நிகண்டில் தருமராஜன் முந்நிந்திரன் சினன் பஞ்சதாரை விட்டோன், அருள்சுரந்தவுணக் கூட்டுந் ததாகதன் ஆதிதேவன், விரவுசாக்கையனே சைனன் விநாயகன் சினந்தவிர்ந்தோன், அரசு நிழலிலிருந்தோன், அறியறன், பகவன், செல்வன் என்றும், மற்றுமோரிடத்தில் புத்தன்மால் அருகன் சாத்தனென்றும், தருமராஜன் தான் புத்தன் சங்கனோடரு நன்றாம்' என்னும் கூறுபாடுகளே போதுஞ் சான்றாம். புத்தரென்னும் பெயரை வடநாட்டில் விசேஷமாகக் கொண்டாடிவந்த போதினும் தென்னாட்டில் இந்திரரென்றும், அருகரென்றும் கடவுளென்றும், தருமராஜன் என்றும், மன்னன் என்றுங் கொண்டாடிவந்தவைகளை பெரும்பஞ்சகாவியங்களிலும், சிறுபஞ்சகாவியங்களிலும் பரக்கக் காணலாம்.

நமது பத்திரிகை தோன்றியதுமுதல் குரு விசுவாசத்தையும் இராஜ விசுவாசத்தையும் பீடமாகக் கொண்டு அகிம்சாதன்மத்தையே மிக்க வரைந்து வருகின்றோமன்றி இம்சா அதன்மம் வரைவதே கிடையாவாம்.

ஆதியென்னு மொழி தோன்றிய பின்னரே அநாதியென்னு மொழித் தோன்றுமேயன்றி தோன்றாவிடத்து அநாதி தோன்றாவென்பது விதி, மலந் தோன்றி மலை தோன்றாவிடத்து அமலமென்றும், ஆன்மனென்னும் புருஷன் தோன்றி மறைந்து மற்றுந் தோன்றாவிடத்து அனான்மனென்றும் அவிரோதமென்றும் வழங்குதல்போல் சருவநீதிக்கும் ஆதியாக வோர் உரு தோன்றி மறைந்து தோன்றாவிடத்து ஆநாதியென்னும் மொழி வழங்கி வருகின்றது. யாதுமில்லாத திலிருந்து ஒன்று தோன்றாதென்பது அநுபவமுங் காட்சியுமாதலின் அநாதியினின்று ஆதி தோற்றாவாம். ஆதலின் உலக சீர்திருத்தக்காரருள் ஆதியாகத்தோன்றிய புத்தபிரான் பிறந்த வருடத்தை முதற்குறித்தும், கிறீஸ்துவை இரண்டாவது குறித்தும், மகம்மதுவை மூன்றாவது குறித்தும் வரைந்தும் வருகின்றோம். புத்ததன்மத்தினின்றே நெருங்கத் தோன்றியுள்ளது ஜைனமும், தூரத் தோன்றியுள்ளது மற்ற மதங்களேயாம் என்பதை ஆராய்ந்து அறிந்துக்கொள்ளுவீராக.

திரிக்குறளைப்பற்றி அஃது ஜைநருடைய நூலல்லவென்று கூறியது அவர்கள் விசாரிணைக்குறைவேயாம். காரணம் பௌத்தத்தன்மத்தையும் ஜைநதன்மத்தையும் வேறாக எண்ணியுள்ளார்களாதலின், பௌத்ததன்ம திரிபீடமாம் முதநூல் தன்மபிடகம், சூத்திரபிடகம், வினய பிடகமென்னுந் திரிபிடகத்தைக்கொண்டு வழிநூல், அறத்துப்பால், பொருட்பால், காமபாலென்னுந் திரிக்குறள் தோன்றியுள்ளது உணர்ந்து, திரிக்குறள் பௌத்தர் களுக்குரியதன்றி ஜைநருகுரிய தன்றென்றெண்ணி அவ்வாறு வரைந்துள்ளார் களென்று நம்புகிறோம். பௌத்தமும் ஜைநமும் ஒன்றென்று உணர்ந்திருப்பார் களாயின் அவ்வகை வரையார்கள். ஓர் மகதநாட்டுச் சக்கிரவர்த்தியே புத்தரென்றும், ஜைநரென்றும் அழைக்கப்பெற்றபடியால் தற்கால ஜைநரென் போருள் சக்கிரவர்த்தியென்னும் பெயரை வழங்கி வருகின்றார்கள். கொடுந்தமிழ் வாசிகளாம் மலையாளிகள் புத்தரை நாயன், நாயனாரென்று வழங்கிவந்தது கொண்டு திருவனந்தபுறத்தைச் சார்ந்த வள்ளுவர் நாடென்னும் பதியில் வாழும் வள்ளுவர்கள் குப்புலிங்க நாயனாரென்றும், மார்க்கலிங்க நாயனாரென்றும் வழங்கிவருவதுபோல ஜைநருக்குள்ளும் பாகுவலி நாயனார், தீர்த்தங்கர நாயனார், ஜெயசீல நாயனாரென வழங்கி வருகின்றார்கள் இஃதை அறிந்துக் கொள்ளுவீராக.

- 7:8; சூன் 30, 1913 -

102. சாக்கைய பௌத்த சங்கத்தின் சபா நாயகர்கள்

பௌத்த சோதிரர்களே சற்று கவனியுங்கள். சங்கத்தோர் கூட்டுங் கூட்டம் பெருங்கூட்டமாயிருப்பினுஞ் சிறுங் கூட்டமாயிருப்பினும் அவற்றிற்கு நியமிக்கும் சபா நாயகர்கள் சங்கத்திற்கு சபா நாயகரென நியமித்துள்ளவரே யிருந்து காரியாதிகளை நடாத்தும்படி செய்விக்கல் வேண்டும். அக்கால் சங்க சபாநாயகரில்லாமற் போய்விடு வாரானால் புத்ததன்மத்தில் அன்பும்

அதியாவலும் ஏழை மக்களை யீடேற்ற வேண்டுமென்னும் ஆசையுமுள்ளக் கிறீஸ்தவரில் ஒருவரையேனும் மகமதியரில் ஒருவரையேனுங் கண்டு நியமித்துக்கொள்ளலாம் மற்றப்படி பௌத்த தன்மத்தில் அன்பில்லாமலும் அதன் விசாரணையில்லாமலும் சாதி பேதமில்லா ஏழை மக்கள் படுங்கஷ்டங்களைக் கண்டு கருணை வையாமலும் தங்கள் ஓர் பெருத்த உத்தியோகஸ்தர்களென்றெண்ணி, செருக்குற்று இருமாப்படைந்து நானும் ஓர் இந்துவென நடித்துத் திரியும் போலிகளை சபா நாயகராக நியமித்து விடுவீர்களாயின் அவர்களது பூர்வமிலேச்சச் செயலும் பொறாமை குணமும் வஞ்சின நிலையும் அகலாது சங்கத்தோர் எடுத்த கருத்தை உபபலமான விவேகங்கூறி தொடுத்து முடிக்காது சீர்திருத்தக் கருத்தைக் கெடுக்கத்தக்க வழிவகைகளேதேதோ அவற்றையே பேசி முடிப்பார்கள்.

அதாவது ஓர் கோழிக்கு விரல்களெல்லாம் பொன்வளயமிட்டு இறக்கைகளுக்கெல்லாம் முத்து, இரத்தினக்குஞ்சங்கள் கட்டி கழுத்தில் வைரசரமிட்டு முகத்திற் பொன்கண்ணாடி பூட்டி சருவாலங்கிருத நிறைந்தவரண் மனைக்குக் கொண்டுபோய் அவ்விடமுள்ள நவரத்தின ஆசனத்தில் விட்டபோதிலும் அக்கோழியானது பூர்வக்குப்பைத்தித்துங் குணம்மாறாது, நவரத்தினங்களிழைத்த ஆசனத்தையுந் தன்கால் விரல்களால் தீத்தேதீரும். ஆதலின் ஜெனன முதல்வஞ்சினம் சூது குடிகெடுப்பு நிறைந்தவர்களும் தன்மமென்பதே தலை முறைதலை முறையாய் அறியாதவர்களுமானோர் சபைக்கு ஆள்டம்பமாகக் காட்டிய போதினும் அவர்களது அதர்மகுணம் அவர்களைவிட்டு மாறவேமாறாது. விவேகசிந்தாமணியார் "ஈயாரையீய வொட்டானிவனு மிய்யான் எழுபிறப்பினுந் கடையா மிவன் பிறப்பே" யென்றோதிய நீதிபோதம் மலைவுபடாவாம்.

ஆதலின் சாக்கையபுத்த சங்கசிகாமணிகள் யாவரும் சங்கசபாநாயகர் களைக்கொண்டே காரியாதிகளை நடத்தி வரும்படி வேண்டுகிறோம்.

- 7:10; ஆகஸ்டு 13, 1913 -

103. மனுதருமசாஸ்திரம் என்பதென்னை

மனுடரென்றும் மனிதரென்றும் வழங்கும் படியான மக்கள் நீதிநெறி வழுவா ஒழுக்கத்தினின்று மனுட சீவர்களை மனுட சீவர்களாக பாவித்து சருவ சீவர்கள் மீதுங் கருணை வைத்து வாழ்க்கைத் துணை நலமுற்று பஞ்சசீலத்தில் நடக்கச் செய்வதே மநுதரும சாஸ்திரமாகும்.

அம்மனுதரும சாஸ்திரமென வழங்கற்குக் காரணம் யாதெனில் மனித சீவர்களானோர் தங்கடங்கள் குடும்பங்களில் விரோதமின்றியும் பொறாமையின்றியும் பேராசையின்றியும் ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டி வாழ்க்கையை சீர்திருத்திக் கொள்ளுவார்களாயின் அக்குடும்பமானது ஆறுதலுற்று ஆனந்தவாழ்க்கையைப் பெறும். அதுபோல் ஓர்கிராமத்தோரும் இருப்பார்களாயின் அக்கிறாமமும் ஆறுதலுறும். தேசமும் அதுபோலிருக்கு மாயின் சகல சுகமும் பெற்று மக்கள் ஆறுதலுற்று வாழ்வார்கள். இத்தகைய சுகநலங்கோறியே விவேக மிகுத்த சாஸ்திரிகள் மனுக்கள் சீர்பெற்று வாழ்கவேண்டுமென்னும் அன்பின் மிகுதியால் மனுதன்ம சாஸ்திரங்களை ஏற்படுத்தினார்கள்.

அதையே புத்ததன்மமென்றும், சத்திய தன்மமென்றும், மெய்யறமென்றுங் கூறப்படும். இத்தகையாய் மனுக்களுக்கு வேண்டிய தருமசாஸ்திரம் இந்திய தேச முழுவதும் பரவியிருந்த காலத்தில் வித்தை, புத்தி, யீகை, சன்மார்க்கம் பெருகி வித்தியாவிருத்தியும், விவசாயவிருத்தியும், வியாபார விருத்தியுமோங்கி சகல சீவர்களும் ஒற்றுமையுற்று சுகவாழ்க்கையில் ஆறுதலுற்றிருந்தார்கள்.

அதன் விருத்திக்கேட்டிற்கு மூலமாக அன்னிய தேசத்திலிருந்து இந்திய தேசத்திற்குக் குடியேறி பிச்சையிரந்து கொண்டு சீவித்துவந்த ஓர் வகை மனுக்கூட்டத்தோர் தங்கள் மித்திர பேதத்தாலும் வஞ்சினத்தாலும் கருணையென்பதே கனவிலுமற்றக்கரவிடத்தாலும் நூதன சாதிவேஷங்களையும்

நூதன மதவேஷங்களையும் உண்டு செய்து தேசத்தையும் தேச மக்களையும் பாழ்படுத்தி தங்கள் சுய சீவனங்களை விருத்தி செய்துக்கொண்டதுமன்றி இன்னுமதை விருத்தி செய்வதற்கான மனு அதரும சாஸ்திரங்களை ஏற்படுத்திக்கொண்டு அதற்கு மனுதரும சாஸ்திரமென்னும் பெயர் கொடுத்து வழங்கி வருகின்றார்கள் அஃது சுயநலங்கருதி எழுதிய நூலேயன்றி பொதுநலம் கருதி எழுதியதன்றாம். ஆதலின் பௌத்த சோதிரர்கள் பொதுநலங் கருதும் நூற்களை வாசிப்பீர்களேயன்றி சுயநலங் கருதும் நூற்களை கரங்களிலும் ஏந்தாதிருக்க வேண்டுகின்றோம்.

- 7:12; ஆகஸ்டு 27, 1913 -

104. மயானச் சடங்குகள்

வினா : ஓர் குடும்பத்தில் யாராமொருவர் இறந்துவிட்டால் இறந்தவரின் புத்திரனோ, பேரனோ, மைத்துனனோ ஒருவருக்கு தலையை நாவிதனிடம் மொட்டையடித்து மீசையை சிரைத்து, பூனுல் தரித்து, திருநீரை பட்டை பட்டையாய் பூசி, வேஷதாரி பிராமணனைப்போல் காட்டியும் இறந்தவரை மயானத்திற்கு கொண்டுபோகும்போது மொட்டையடித்தவன் இடதுபக்கம் முரத்தில் வெற்றிலையும் பொரியும் வைத்துக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக போட்டு கொண்டு போகிரதும், மாயானத்தின் அருகே போனதும் காளியம்மா கதவைதிர அரிச்சந்திரா வழியை விடுயென்று சொல்லியும் அரிச்சந்திரன் கோவிலை மூன்றுமூறை சுத்திவந்து எதிரில் பிரேதத்தை வைத்து எதிரில் வெட்டியான் நின்றுகொண்டு சிலவு சொல்லுகிறதும் வெட்டியானுக்கு கால்பணம் முழந்துண்டு வாய்க்கரிசி இவைகளை கொடுக்கிறதும், இவை முடிந்தவுடன் குழியண்டை வந்து மூன்றுதரம் சுற்றி குழியில் வைத்து வந்திருக்கும் யாவரும் பிடிமண் போடுகிறதும் அதன் பிற்பாடு முற்றிலும் மூடிவிட்டு மொட்டையடித்தவன் குடத்தில் தண்ணீர் நிறப்பி தோள்மேல் வைத்துக்கொண்டு மூன்றுமுறை சுற்றிவருகிறதும், ஒவ்வொரு தரமும் வண்ணான் துவாரம் செய்கிறதும் மூன்றாம்நாள் பால்சடங்கு செய்கிறதும், 16-ம் நாள் கருமாதி செய்கிறதும் இறந்தவரின் பாத்தியஸ்தர்கள் மொட்டை அடித்தவனுக்கு தங்கட்கைகளால் அங்கவஸ்திரம் தலையில் கட்டுகிறதும், இவ்வித சடங்குகளெல்லாம் நமது ஆதி சற்குருநாதன் இயற்றிய சட்டமா அல்லது மேல்ஜாதி மேல் ஜாதியென்று மேலுக்கு எடுத்து திரியும் வேஷதாரிகள் ஏற்படுத்திய கற்பனையா.

ஆ.அ.முருகேசர்

- 7:13; செப்டம்பர் 3, 1913 -

விடை: பூர்வ பௌத்தரது காலத்தில் இல்லறத்தோர் செய்யுங் கிரியைகள் வேறாகவும் துறவறத்தோராகிய கியான சங்கத்தோர் செய்யுங் கிரியைகள் வேறாகவும் நடாத்திவந்ததாக சரித்திரங்களாலும் சுருதிகளாலும் அநுபவங்களாலும் விளங்குகின்றது அவைகள் யாதென்னிலோ இல்லறத்தோர் பிணம் சத்துபோனது கண்டு செத்தானென்றும், இருளடைந்ததுகண்டு இறந்தானென்றும் தன்னை மறந்ததுகண்டு மரணமடைந்தானென்றும் வழக்கமொழி பெற்று பிணத்தை ஓரிடம் வளர்த்தி சிரசினின்று ஒளிரும் சோதி மறைந்துவிட்டபடியால் தலைபுறமாக ஓர் தீபத்தை ஏற்றி வைத்துவிட்டு பாசபந்தக் கட்டுடையோனாக மரித்தது கொண்டு பாதப்பெருவிரல் இரண்டையுஞ் சேர்த்து பாசபந்தக்கட்டிட்டு பெண்கள் கற்பிற்கும் அச்சத்தை ஊட்டுமாறு நெற்பொரி பொரித்து அக்கால் சுடலைபூமி இதுயெனக் குறிப்பற்று கிடைத்தக்காடுகளில் கொண்டு போய் தகனஞ் செய்வதே வழக்கமாயிருந்த படியால், அப்பிணஞ் சுடுமிடங் கண்டு பின்வரு மக்கள் தேடிவருவதற்கு ஓர் முரத்தில் பொரித்தப் பொரியையும் வெற்றிலையையுங் கலந்து பிணமெடுத்துச் செல்லும் வழியிலிரைத்துக்கொண்டே போவது வழக்கமாகும். காலதாமதமாக வருவோர் அப்பொரியுடனுள்ள வெற்றிலைக் குறிப்பைப்பார்த்துக் கொண்டேபோய் தகனவிடஞ் சேர்ந்துக்கொள்ளுவார்கள்.

அக்காலத்தில் மாச்சிசென்னுந் தீக்குச்சி இல்லாதபடியால் நெருப்புச் சட்டியைக் கையிலெடுத்துக்கொண்டுபோய் கட்டைகளை அடுக்கிப் பிணத்தைச் சுட்டுவிட்டு வீடுவந்துசேர்ந்து மறுநாள் சுடலைக்குப் பாலெடுத்துச்சென்று உள்ள அனலை பால்கொண்டு அவித்து அஸ்திகளைப் பொறுக்கி ஆற்றிலேனும் சமுத்திரத்திலேனுங் கொட்டிவிடுவது வழக்கமாகும். மற்றக்கிரியைகள் யாவும் தற்கால மாறுதல்களேயாம். இதுவே இல்லறத்தோர் ஈமக்கிரியையாகும். புத்தசங்கஞ் சேர்ந்த துறவிகளின் கிரியைகளோவென்னில் மரணத்தை ஜெயிப்பதே புகழ்ச்சியும் மரணத்திற்குள்ளாவதே இகழ்ச்சியுமாய சாதனத் திலிருப்பவர்களாதலின் ஓரரசன் பதினாறு வயதுக்குமேல் விவாகஞ் செய்து இருபத்தொன்பது வயதளவும் சகல சுகபோகங்களையும் அநுபவித்து புத்திர வாதாரமுற்று முப்பதாவது வயதில் துறவுற்று சங்கஞ் சேர்ந்து பிறப்புப், பிணி, மூப்பு, சாக்காடென்னும் நான்கு வகைத் துக்கங்களையுஞ் ஜெயிக்கும் ஞானசாதன முற்று ஆதிக்குச் சமமாம் சமாதியடைய முயலுங்கால், வீட்டிற்குங் காட்டிற்கும் மத்தியிலுள்ள சமபூமியில் ஓர் கல்லறைக்கட்டி அதனுள் கற்பூரத்தை நிறப்பி சமாதியடையுமரசன் அதனுள் உழ்க்கார்ந்து கொண்டவுடன் சதுரக் கல்லினால் அக்குழியை மூடி மண்பரப்பிவிட்டு சகலரும் அரண்மனை சேர்ந்து பதினைந்தானாள் சங்கத்தோரும் அரச குடும்பத்தோரும் ஏதொரு வாகனமும் இரதமுமின்றி கால்நடையாக நடந்துபோய் அக்கல்லரையருகே சுற்றிலும் நின்று அறஹத்தோ அறஹத்தோ என்னுஞ் சப்தமிட்டு மூடியுள்ளக்கல்லை எடுப்பார்கள். எடுத்துப்பார்க்குங்கால் சமாதியடைந்தோர் உச்சிவழிதிரந்து உடலசையாமல் நிற்குமாயின் எல்லோரும் ஆனந்தக்கூத்தாடி அறையைக்கல்லால் மூடி அவ்விடத்திலே ஓர் மடங்கட்டி அந்நாளையே தன்மகன்ம ஆதினாளாகக் கொண்டு ஏழைகளுக்கு அன்னதானம் வஸ்திரதானஞ் செய்து அம்மடத்திலேயே சாது சங்கஞ் சேர்த்து சமண முநிவர்களால் வருடந்தோருங் குருபூஜையை நடத்தி அன்னதானம் வஸ்திரதானஞ் செய்து வருவார்கள்.

இவ்வகையாக செய்துவந்த கட்டிடங்களே மதுரையில்மட்டிலும் புத்த சங்க மடங்கள் பன்னீராயிரக் கட்டிடங்களிருந்தவிடங்களை ஆர்ச்கிலாஜிகல் சர்வேயர்களால் கண்டுபிடித்து புத்தகங்களில் வெளியிட்டிருக்கின்றார்.

அம்மேறை சமாதியடைந்தோரை அரச குடும்பத்தோரும் சங்கத்தோரும் பதினைந்தானாள் கால்நடையிற் சென்று கல்லறை அணுகி மூடியக் கல்லைத் திறந்து பார்க்குங்கால் சமாதியடைந்தோர் உச்சவழி திறவாது சிரஞ்சாய்ந்து கிடக்குமாயின் அவ்விடம் வந்துள்ள சகலருந் துக்கித்துக் கல்லை முடிமண்பரப்பிவிட்டு வீடுசேர்ந்தவுடன் அவ்வரசனுடையப் புத்திரர் தங்கள் தந்தை மரணத்தை செயித்து ஆண்பிள்ளையென்னுங் கீர்த்தி பெறாது வீண் பிள்ளையாயினரே என்னுந் துக்கத்தால் தங்கள் மீசையை சிரைத்தும் இழிவில் அழுந்து துக்கத்திலாழ்ந்தி விடுவார்கள். மற்றவர்கள் யாவரும் அரசன் சமாதியுள்ளாரென்னும் புகழ்ச்சிக்குப் போகாமல் இறந்தாரென்னும் இகழ்ச்சி யாம் இழிவுக்குப் போனோமென ஒவ்வொருவரும் நீராடி இல்லஞ் சேருவார்கள்.

அக்கால் அரசருக்குள்ள மற்றுங் குடும்பத்தோர் சேர்ந்து முடியைக் கழற்றி எறிந்துவிட்டு மீசையைச் சிரைத்துள்ள வரசபுத்திரர்களை அணுகி உங்கள் தகப்பன் வீண்பிள்ளையாகப் போயினும் போகட்டும் ஆயாசப்படாது முப்பதாவது வயதில் நீங்கள் துறவேறி மரண ஜெயமடையுங்கோளென்று ஆசி கூறி முடிகளையெடுத்து அவரவர்கள் சிரசிலிட்டு இராட்சிய பாரந்தாங்கும்படி உத்திரவளித்து விடுவார்கள். இவைகளே பூர்வ தன்மகன்மச் செயலுள், வாகனமின்றி நடந்து செல்லுவதை நடப்பென்றும், சமாதி அறையின் கல்லெடுத்துப் பார்ப்பதை கல்லெடுப்பென்றும் அரச புத்திரர் எறிந்துள்ள முடியை எடுத்துத் தரிப்பதை முடிசூட்டலென்றும் வழங்கிவந்தார்கள்.

அத்தகைய இல்லறத்தோர் துறவறத்தோரது கிரியைகள் யாவும் தற்கால நூதன மதஸ்தர்களாலும் நூதன சாதிகளாலும் பலவகையாக மாறுதலுற்று

இல்லறத்தோர் கிரியைகளீதென்றுந் துறவறத்தோர்க்கிரியைகளீதென்றும் அறியாது தங்கடங்கள் மனம்போனவாறு செய்து வருங்கிரியைகளுடன் பூர்வ பௌத்தத்தன்மக் கிரியைகளையும் அநுசரித்தே நடாத்திவருகின்றார்கள். ஆதலின் பௌத்தர்கள் யாவரும் வீணாய வீரியக் கிரியைகளை ஒழித்து வேணுமாயக் காரியக் கிரியைகளைமட்டிலும் நடத்திவர வேண்டியது அழகாம்.

- 7:15; செப்டம்பர் 17, 1913 -

105. ஓம் நமசிவய

வினா: சமணமுநிவர்களாம் சித்தர்களால் வரைந்து வைத்துள்ள வைத்திய நூற்களில் ஓம் நமசிவய, வென்றும், ஓம் ஐயுங்கிலியும் சவ்வென்றும் மந்திரங் களை வரைந்து வைத்திருக்கின்றார்களே அதன் பொருள் என்ன அதன் பயன் என்ன.

நா. பஞ்சனாதன். வேலூர்,

விடை: முதலாவது மந்திரம் என்னும் வார்த்தையின் பொருளை அறிதல் வேண்டும். அதாவது மந்திரமென்பதின் பொருள் ஆலோசித்தலென்னப்படும், மந்திரி என்பதற்குப் பொருள் ஆலோசிப்பவனென்னப்படும் அவ்வகை சத்தியதன்ம ஆலோசனையில் ம, ந, சி, வ, ய, மனதை வயப்படுத்தும் ஆலோசனையே மேலாயதாம் அவற்றுள் ஓம் நமசிவய, என்பதினிலக்கணம் அறிவோம். மநசிவய, ப்படுதலை யென்பதேயாம். இவற்றையே நமசிவய, வென்றும், சிவயநம வென்றும் மாறி மாறி சொல்லிக்கொண்டிருக்கின்றார் களன்றி மநசிவய, ப்படும் வழிவகைகளை அறிந்தாரில்லை.

ஓம் ஐயுங், கிலியும், சவ்வு மென்பதில் ஐயுறுபுமனோ சுத்தத்தையும், கிலியுறுபு வாக்கு சுத்தத்தையும், சவ்வுறுபு, உடல் சுத்தத்தையும், ஓம், அறிவோமென்பதேயாம் இவற்றையே வடநூலார் திரிகாயமந்திரமென்றும், காயத்திரிமந்திரமென்றும் வகுத்துள்ளார்கள். தென்மொழியார் திரிகரண சுத்தமென்பர். இத்தகையாய பரிபாஷை மொழிகளை சித்தர்களால் அனந்தம் வரையப்பட்டிருக்கின்றது. அதனந்தரார்த்தங்களை உசாவியுந் தெளிவோர்களே அதனதன் பலனை அநுபவிப்பார்கள். அங்ஙனம் ஆலோசியாமலும் உசாவாமலும், வரைந்துள்ள மொழிகளை சொல்லிக்கொண்டே திரிவது உமிகுத்தி கைசலிப்பதுபோலாம்.

- 7:18; அக்டோபர் 8, 1913 -

106. குடிகளுக்கு மழையும் மழைக்கு தவத்தோரும் தவத்தோருக்கு அரசனும் அரசனுக்கு குடிகளும் ஆதாரமென்னப்படும் சத்தியதன்மம்

மழையின்றி மானிலத்தார்க்கில்லை / மழையும் தவமிலாரில் வழியில்லை
தவமும் அரசிலாரில் வழியில்லை / அரசனும் இல்வாழ்வாரில் வழியில்

பூமியில் வாழும் மக்களுக்கு ஏதேனும் தனசம்பத்து, மனைசம்பத்து, மக்கட் சம்பத்து, உத்தியோக சம்பத்திருப்பினும் மழை ஒன்றில்லாமற் போமாயின் சகல சம்பத்தும் அழிந்து மக்களும் நசிந்து போவார்களென்பதே திண்ணம். அத்தகைய மழைகாலந் தவராது பெய்வதற்கு ஆதாரம் எவரென்னிலோ பஞ்சசீலத்தில் நிலைத்து சருவ சீவர்களையுந் தன்னுயிர்போல் காத்து, அஷ்டசீல சாதனம் புரிந்து, தபோபலம் பெற்ற மகா ஞானிகளின் தோற்றத்திற்கு ஆதாரமோவென்னில் சாம, தான, பேத, தண்டமென்னும் சதுர்வித உபாயமும் சகல மக்களையும் ஒரு குடை நிழலில் காக்கும் வல்லபமும், பொய்யர்களை அடக்கி மெய்யர்களை சீர்தூக்கலும் பொல்லார்களை தண்டித்து நல்லோர்களாக்குதலும், அஞ்ஞான மகற்றி மெஞ்ஞானம் பெருகும் வழிவகை களைத் தேடலும் நீதிநெறி ஒழுக்கங்களை நிலைநிருத்தச் செய்தல்கூடிய அரசரே என்னப்படும். அரசருக்காதாரமோவென்னில் வித்தையில் விருத்தியுள்ளக் குடிகளும் புத்தியில் விருத்தியுள்ளக் குடிகளும் சன்மார்க்க முள்ளக் குடிகளும் இராஜ விசுவாசமும் உள்ளக் குடிகளே என்னப்படும்.

இத்தகைய சத்தியதன்மமானது இந்திய தேசமெங்கும் நிறைந்திருந்த காலத்தில் மாதம் மும்மாரி பெய்யவும் பயிறுகள் ஓங்கவும் குடிகள் சிறக்கவும் கோனுயரவுமாயிருந்தவற்றிற்கு பூர்வ பௌத்த சரித்திரங்களும் பௌத்த மடங்களுமே போதுஞ் சான்றாகும். தற்காலம் தோன்றியுள்ள பிரிட்டிஷ் ராஜாங்கமானது பௌத்தன்ம அரசாட்சிக்கு மேலாகவே நின்று குடிகளை சீர்திருத்தும் வித்தை புத்திகளை யூட்டி தங்களைப்போல் சகல குடிகளும் சுகம்பெற்று வாழ்கவேண்டுமென்னுங் கருணையால் காத்து இரட்சித்தும் வருகின்றார்கள் இத்தகையாய நீதியும் நெறியுமமைந்த செங்கோலின் கீழ் வாழ்குங் குடிகளோ வஞ்சினமும் பொறாமெயும் பொய்யும் பொருளாசையிலும் நிறைந்து குரு விசுவாசமும் இராஜ விசுவாசமுங் குறைந்து ஒருவருக்கொருவர் சாதி வித்தியாசத்தால் சீறிச்சினந்து மதவித்தியாசங்களால் தங்களை மறந்து மடிந்து வருகின்றபடியால் நாளுக்குநாள் மழைகுன்றியும் ஏகாலத்திற் பெருகியும் மக்களை மடிப்பதுபோதாது பஞ்சமும் பெருவாரி நோய்களுந் தோன்றி கருணை தங்கிய ராஜாங்கத்தார் ஏதேது வழிவகைகளைத் தேடி காத்து வரினுங் குடிகள் சுகமின்றியே அல்லலடைந்து வருகின்றார்கள். இவற்றிற்குக் காரணமோ வென்னில் குடிகளுக்குக் கருணை என்பதும் அன்பு என்பதுமாயக் குணமே அற்றுள்ளபடியால் தவமிகுத்த ஞானிகளின் தோற்றமேயில்லாமற் போய் விட்டது. தபோபலமிகுத்த அறஹத்துக்களாம் அந்தணர்களில்லாமற் போய்விட்டபடியால் மழை குன்றிமாநிலந் தீய்ந்து வருகின்றதென்பது சத்தியம் சத்தியமேயாம்.

இத்தேசத்தில் அந்தணர்களென்னும் பிராமணர்களும் வேதாந்திகளும் வேதாந்திகளின் மடங்களும் அனந்தமாக இருக்கின்றபடியால் தவமிகுத்தோரு மிருப்பார்களென்று சிலர் படாடம்பங் கூறினுங் கூறுவர். அவர் கூற்று அவலமேயாம். தங்களுக்குத் தாங்களே அந்தணர்கள் பிராமணர்களென்று அப்பெயரைச் சொல்லிக்கொள்ளுங் கூட்டத்தோர் பெருந்தொகையினராயினும் வேஷ அந்தணர்கள் வேஷப்பிராமணர்களாவாரின்றி யாதார்த்த அந்தணராகார்கள். யதார்த்த பிராமணரொருவரிருப்பரேல் மழை குன்றாவாம். அது கொண்டே நமதறச் செல்வி அவ்வை "நல்லாரொருவருளரேல் அவர் பொருட்டெல்லார்க்கும் பெய்யுமழை" என்றுங் கூறியுள்ளாள். வேதாந்திகளும் வேதாந்திகளின் மடங்ளோவென்னில் தவபலமிகுத்தோர் பெயர்களாய அந்தணர் பிராமணர்கள் என்னும் பெயரை அதற்கு ஒவ்வாதவர்கள் யாவரும் பூண்டுள்ளதுபோல் தீவினை ஒழிக்கத் திடமில்லாதார் யாவரும் வேதாந்திகளென்னும் வெறு வேஷமிட்டு விதரணையற்றக் குடிகளை வஞ்சித்து வயிற்றை வளர்த்துவருகின்றார்களன்றி அவர்களும் யாதார்த்த வேதாந்திகளாகார்கள். அவர்கள் வசிக்குமிடங்களுக்கும் வேதாந்திகள் மடமென்னும் பெயர் பொருந்தாது. பொருந்தும் பெயர் யாதென்னிலோ கஞ்சாமடம், அவனென்ன சாதி இவனென்ன சாதியென வினவும் அஞ்ஞானிகள் வாசஞ்செய்யும் மடங்களே யாகும். யதார்த்த வேதாந்திகளுளரேல் கால மழை தவிராவாம் காலமழை வேண்டுவோர் யதார்த்த தபோபலத்தோரை நிலை நிருத்துவார் களென்று நம்புகிறோம்.

- 7:25; நவம்பர் 26, 1913 -

107. சுழிமுனை

வினா. இந்துக்களின் நவீன நூற்களுக்கு (காப்பு) உ என்னும் சுழி எழுத்தை தலப்பில் வரைந்துள்ளது. அதனந்தரார்த்தம் யாது, இலக்கணம் என்னை, எக்காலத்தில் எவரால் எழுதப்பட்டது?

ஆதிகாலமாம் ஆதிவேதமிருந்தக்காலத்து ஓலைச்சுவடிகளிலன்றோ சகலகலை நூற்களும் வரைந்துள்ளது. இவைகளை நனேமாய் காகிதத்திலச்சடித்து ஒரு கட்டாய் கட்டி "காகிதம்" என்று பெயரிடாமல் புத்த அகமென்று பெயரிட்ட காரணம் யாது, இப்புத்தகமுண்டாவதற்குமுன் இப்பெயருண்டா? இல்லையா ஆதலால் யாரால் இப்பெயர் தரப்பட்டது?

கே. மீறையய்யா, கெமன்டயின் பர்மா

விடை: கே. மீறையய்யா வென்னு மன்பரே, தாம் சுட்டி வரைந்துள்ள (உ) இச்சுழியை பண்டை கால தெய்வப்புலவர்களால் ஓலைச்சுவடிகளின் முகப்பில் வரைந்துவருவதேயாகும். இதனந்தரார்த்தம் பொய்ப்புலவர் போலிப்புலவர், புராணப்புலவர்களுக்கு விளங்காவிடினும் வழக்கமாகக் கீரிவருகின்றார்கள். அஃது பௌத்த தன்மக் கீரலேயாம். அதாவது மனிதன் தன்னைக்கொண்டு தானே சீர்திருத்தி தானே தானாகி பரிநிருவாணமடைய வேண்டியவனாதலின் தனது புருவமத்திய சுழிமுனை லயிக்கவேண்டியது கொண்டு, புருடனுக்கு சுழிமுனை நாடியே பீடமாகக்குறிப்பிடுமாறு சமண முநிவர்கள் வரைந்துவரும் நூற்களின்முகப்பில்(உ) இச்சுழியை நாட்டி வந்தார்கள். இவற்றிற்கு சுழிமுனை யென்றும், மோனநிலையென்றும், பேசாவெழுத்தென்றும் பெயர். பைரவி, சாம்பவி, கேசரி, என்னும் ஞான முத்திறைகளில் (உ) இச்சுழியையே சாம்பவியென்றுங் கூறுவர். இஃது ஞானிகளுக்கு ஒளியாகவும் அஞ்ஞானிகளுக்கு இருளாகவுமே விளங்கும்.

புத்தகம் என்னும் மொழியோ பூர்வ பௌத்தர்கள் காலத்தில் வழங்கி வந்ததன்றி தற்கால மொழியன்றாம் அதாவது புத்ததன்மங்களை வரைந்துக் கட்டிவைத்துள்ள சுவடிகள் யாவையும் புத்தகமென்றே வழங்கி வந்தார்கள். அதனந்தரார்த்தம் அறியாது தற்கால காகிதக் கட்டுகளுக்கே பொதுவாகப் புத்தகமென வரைந்து வருகின்றார்கள்.

பூர்வ புத்ததன்மச் செய்யுளைக் காண்க:

நாலடி நானூறு

புத்தகமே சாலத்தொகுத்தும் பொருடெரியா
ருய்த்தகமெல்லா நிறைப்பினு மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே பொருடெரிந்து
தேற்றும் புலவரும் வேறு.

- 7:37; பிப்ரவரி 18, 1914 -

108. மனுதன்மநூல்

பூர்வ இந்தியதேச பௌத்தர்கள் மனுமக்கள் சீர்பெறுமாறு வரைந்து வைத்துள்ள நூலுக்கு மனுதன்ம நூலென்று கூறப்படும். அவற்றுள் வாக்கால் போதிக்குந் தன்மமும் கரங்களால் ஈயுந் தன்மமும் ஆகிய இருவகையுண்டு. முதலாவது மனுமக்களுள் வஞ்சினம், பொறாமெய், பொருளாசை, கொலை, களவு, பொய், மதுவருந்தல், விபச்சாரம் முதலிய துற்கிருத்தியங்களே நிறைந்துள்ளக் கூட்டத்தோருக்கு நன்மார்க்கங்களைப் போதித்து நல்வழியில் நடத்தி நல்ல சுகவாழ்க்கையாம் நித்திய சுகம் பெறச் செய்யுந் தன்மத்திற்கு போதனா தன்மமென்றும், இரண்டாவது கூன், குருடு, சப்பாணி, பிணியாளர், திக்கற்றோர், உழைத்து சீவிக்க சத்தியற்றோர், பசியாளர், இல்லந்துறந்த பெரியோர் முதலியோருக்குப் பொருளுதவி செய்து அன்னமிட்டு ஆதரிப்பது ஈயுந் தன்மமென்றும் கூறப்படும்.

இத்தகைய தன்மத்தையே மகட பாஷையில் புத்ததம்மாவென்றும் சகட பாஷையில் சத்தியதருமமென்றும் திராவிட பாஷையில் மெய்யறமென்றும் வழங்கிவந்தார்கள். இத்தன்மத்தை மனுமக்களுக்கே போதித்து அவரவர்கள் இதயத்தில் நன்கு பதியுமாறு ஓலைகளிலும் செப்பேடுகளிலும் பொன்னேடுகளிலும் சிலைகளிலும் வரைந்துள்ளவற்றிற்கு மனுதன்ம நூலென்றும் மனுதரும சாஸ்திரமென்றும் மனுநீதியென்றும் வழங்கலாயிற்று.

அதாவது ஓர் மனிதன் எக்காலும் பொய்யை சொல்லிக்கொண்டே பொருள் பறித்து சீவிக்க முயலுவானாயின் அவனைக்காணும் விவேகிகள் யாவரும் அவன் வார்த்தையை நம்பாது அகற்றிக் கொண்டே வருவார்கள். அதனால் அவன் பொய்யனென்னும் பெயரைப் பெறுவதுடன் உண்ண உணவிற்கும் உடுக்க உடைக்குமின்றி ஆதுலனாய் அலைவதற்கு ஏதுண்டாகி விடுகின்றான். அத்தகையோனுக்குப் பொய்பினால் உண்டாங் கேடுபாடுகள் யாவற்றையுந் தெள்ளற விளக்கி நன்மதியூட்டி பொய்யினை அகற்றுந் தன்மத்தைப்

போதிப்பதாயின் அவன் மெய்யனாகி சுகச்சீர் பெறுவதுடன் சகலராலும் நன்கு மதிக்கப்படுவான். அதுபோல் கொலையினாலேயே சீவிப்போனைக்காணும் சீவகாருண்ய மிகுத்தோர் அவனுக்கு பயந்து தூர விலகுவதுடன் சருவ சீவர்களும் அஞ்சுவதியல்பாம். கொல்லுவா னென்னுங் கருணையற்ற செயலே அதற்குக் காரணமென்னப்படும். அக்கொலை பாதகனை அணுகி உம்முடைய காலில் ஓர் முள்ளு தைக்குமாயினும் தேகத்தில் சொற்ப காயப்படுமாயினும் உணர்ச்சியால் எவ்வளவு துன்பப்படுகின்றீர், அவைபோல் மற்ற சீவராசிகளுக்கும் அத்தகைய துன்பமுண்டாம் என்றுணரலாகாதா, ஓர் சீவனைக் கொல்லுங்கால் அவை துடிப்பதும் பதருவதும் கதருவதுமாயச் செயல்களைக் கண்டேனும் உமக்கு இதக்கம் உண்டாகவில்லையா, ஒவ்வோர் சீவராசிகளும் நாளுக்குநாள் வளர்ந்து மேனோக்குவதே இயல்பாதலின் அவற்றை மத்தியிற் கொன்று பாழ்ப்படுத்துவது பாபமல்லவா என்று பலநாளும் தன்மத்தைக்கூறி அவனிதயத்தில் அன்பை வளரச்செய்து சீவகாருண்யம் அடைவானாயின் அன்றே கொலைத்தொழிலை விட்டகன்று சகலருக்கும் அருகனாவான். சகலருக்கும் நல்லவனாக விளங்குவதுடன் நல்வாழ்க்கையாம் அழியா பேரின்ப சுகத்தையும் பெறுவான். ஓர் கள்ளனை அணுகி உம்முடையப் பொருளை ஒருவன் அபகரித்துக் கொள்வானாயின் நீரெவ்வளவாய ஆயாசத்தையும் துக்கத்தையும் அடைகின்றீர், அவைப்போல் அன்னியர்ப் பொருளை அபகரிப்பதாயின் அவர்கள் இதயத்தில் எத்தகையாய ஆயாசத்தையுந் துன்பத்தையும் அடைவார்களென்று உணரலாகாதாவென்று மெய்யறத்தை நாளுக்குநாள் போதித்து அவன் களவு தொழிலை அகற்றி கஷ்டப்பட்டு சீவிக்கும் கைத் தொழிலில் முயல்வானாயின் அவனைக் காண்போர் யாவரும் அன்புடன் நேசிப்பதுடன் அவன் எக்காலும் பயந்து பயந்து சீவித்துவந்த களவின் சீவனம் ஒழிந்து பயமற சீவிக்கும் கைத்தொழிலில் முயன்று சுகசீவியம் பெறுவான். ஒருவன் காமிய இச்சையில் ஏதொரு கைத்தொழில் வித்தையுமற்று அன்னிய தாரங்களை இச்சித்துக் திரிவானாயின் அவனைக் காணும் விவேகிகள் ஆ ஆ இவன் துற்காமியென்றுன்னி வீடுகளுள் சேரவிடாமலும் ஏதொரு தொழிலிலும் அணுகவிடாமலும் அகற்றி புறக்கணிப்பதால் பல தொழிலும் அற்று பல பிணியுமுற்று பாழடைந்து போகின்றான். அத்தகைய துற்காமியை அணுகி உம்முடைய காமத்தீயை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொள்ளுதலால் தேகமெங்கும் வியாதியால் புண்புரைகள் தோன்றி உபத்திரமடைவது திண்ணமாவதுடன் உம்முடைய தாரத்தை ஒருவன் இச்சிப்பானாயில் நீரெவ்வளவு கோபமும் ஆயாசமுங் கொள்ளுவீர், அவை போல் அன்னியன் தாரத்தை நீர் இச்சிப்பதாயின் அவன் எத்தகைய துக்கத்தில் ஆழ்வான், அதனால் அவன் குடும்ப விருத்தியே பாழடைந்து குலகோத்திரமும் அழிகின்ற தல்லவாவென்று சத்தியதன்மத்தை ஊட்டி காமிய சேட்டையை ஓட்டி நல்வழிக்குக் கொண்டு வருவதாயின், அவன் குடும்ப விருத்தியடைவதுடன் ஏனைய குடும்பங்களும் சுகவிருத்திப்பெற்று நல்வாழ்க்கையை அடைவார்கள். ஓர் சுராபானமாம் கஞ்சா, அபினிகலந்த நீர்களையேனும், கள்ளு சாராய முதலியப் பானங்களையேனும் அருந்தும் பழக்கத்தால் ஏதொரு தொழிலுமற்று பெண் சாதி பிள்ளைகளை காப்பாற்ற விதியின்று நிலை தவறி தாயும் தந்தையும் வெறுக்க, விவேகிகள் சேர்க்காது ஒதுக்க, மனிதனென்னும் பெயரற்று மிருகத்திற்கு ஒப்பாயிருப்போனை அடுத்து, உமது மதுபான பழக்கத்தால் அறிவு மயங்கி நீர் செய்துவருஞ் செயல்களை உன் தாய் தந்தையரே வெறுப்பாராயின் மற்றய மனுக்கள் உன்னை யென்ன மதிப்பார்கள், உன் சுகங்கள் யாவையுங் கெடுக்கும் இம்மது பானத்தால் யாது சுகமடைகின்றீர், தன் சுத்த நிலையிலிருக்கும் மனிதனே தவருதலடைகின்றான், நீரருந்தும் மதுவின் மயக்கத்தால் என்னென்ன தவருதலடைந்து துக்கத்தை அனுபவிக்கின்றீர், இம்மதுபானமே சகல கேட்டிற்குங் கொண்டுபோகும் வழியாச்சுதே, மனிதனாகப் பிறந்துங் கேட்டிற்குப் போகும் வழியில் நடக்கலாமா. மனிதனாகத் தோன்றியவன் எக்காலுஞ் சுகவழிகளைத் தேடல்வேண்டும், அவ்வகை

சுகவழியைத் தேடாதவன் மனிதனென்னும் பெயரற்று மிருகமென்றே எண்ணப் படுவ , ஆகலின் சுகவழியை நாடுவதே மேலாய தன்மமென்று போதனா தன்மதை மேலும் மேலும் போதித்துவருவதாயின் அவன் மதுபான மயக்கமும் அற்று அறிவுந் தெளிவுற்று நாளுக்குநாள் தனது துற்செயல்களை உணர்ந்து தானே சீர்படுவதுடன் தனது சுற்றத்தோருஞ் சீரடைவார்கள் அவனைக் கண்ணுறும் ஏனயக் குடியர்களுஞ் சுகம்பெற்று நல்வாழ்க்கை அடைவார்கள்.

மற்றும் வஞ்சினத்தாலும் சூதாலும் பேராசையாலும் ஏனையக் குடிகளைக் கெடுத்து சீவிப்போனை அடுத்து உன் குடும்பம் ஒன்று பிழைக்க மற்ற குடும்பங்களை வஞ்சினத்தாலும் சூதினாலும் பேராசையினாலுங் கெடுப்பது அழகன்று, மனிதச் செயலன்று, உமக்குள்ள வஞ்சினமும் சூதும் பேராசையும் உம்மையும் உமது குடும்பத்தையுங் காப்பதுபோல் தோன்றி அதுவே பெருங்கேட்டுக்குக் கொண்டுபோய் விடுவதன்றி மீளா துக்கத்திற்கு ஆளாக்கி விடும்.

ஆகலின் உமது இதயத்துள்ள வஞ்சினஞ்சூது பேராசை முதலிய துற் குணங்களை அகற்றி தேகம் வருந்த பாடுபட்டு உம்மையும் உமது குடும்பத்தையும் போஷிக்க ஆரம்பிப்பீராயின் இதுவே நன்மார்க்கமென்னும் சுகவழியாகும், இவ்வழி நடப்போரே துக்கம் ஒழிந்து சுகநிலையடைவார்கள் என்னும் மெய்யறத்தை மேலும் மேலும் வற்புறுத்திப் போதித்து வருவதாயின் இதய சுத்தமுண்டாகி அவன் சுகச்சீரடைவதுடன் அவனை அடுத்தோரும் இதய சுகங்கொண்டு சுகமடைவார்கள். மனிதர்களால் போதிக்குந் தன்மத்தை மனிதர்கள் கேட்டு சீர்பெறுவதே மனுதன்மமென்னப்படும். இன்னீதி நெறிகளை எழுதி வைத்துள்ளதே மனுதன்ம நூலென்னப்படும் இந்நீதி நெறிகளுக்கு மாறாய போதனைகளையும் நூற்களையும் அதன்ம போதம் என்றும் அதன் நூற்களென்றுமே கூறப்படும். இதுகண்டு சத்திய தரும வழியில் நடப்பதே அழகாம்.

– 7:41; மார்ச் 18, 1914 –

109. வித்தைகள்

வினா: தற்காலம் இந்தியாவில் தோன்றியுள்ள மதத்தோர்களிற் சிலர் எங்கள் மதசாமிகளும் அடியார்களும் எத்தனையோ மகத்துவமான்ச் செயல்களைச் செய்திருக்கின்றார்கள் செத்தவர்களை எழுப்பியிருக்கின்றார்கள் உங்கள் பௌத்தமதத்தில் யாரேனும் அவ்வகையான மகத்துவங்கள் செய்த துண்டோவெனக் கேழ்க்கின்றார்கள் அது விஷயம் எனக்கு விளங்கவில்லை.

பெ. முத்துசாமி, குடியேத்தம்.

விடை: மனிதனாற் செய்யக்கூடிய வித்தைகள் அனந்தமுண்டு அவ்வித்தைகளால் தருமம் சிறப்படையாது. மனிதனை சீலமும் ஒழுக்கமுமே சிறப்படையச் செய்யும். சித்துக்களை விளையாடியவர்கள் யாவரும் சமணமுனிவருட் சித்திப்பெற்றோர்களேயன்றி வேறொருவருங் கிடையா. அவர்களினும் மேலாய சித்துவித்தைகளைக் கையாடினோர் வேறொருவருங் கிடையாதென்பதே திண்ணம்.

இவ்வித்தைகள் யாவற்றையும் பௌத்தர்கள் வெகுவாக மதிக்கமாட்டார்கள். சீலத்தையும் ஒழுக்கத்தையுமே மேலாக மதிப்பர்.

மனிதன் அபூர்வமாய சித்துக்களை விளையாடியபோதினும் அவைகள் யாவுமோர் வித்தையென்றே புத்தபிரான் பிரதம தமிழ் மாணாக்கர் அகஸ்தியராலியற்றியுள்ள செய்யுட்களைக் காண்க.

அகஸ்தியர் விவேக தசபாரதம்

1. சோதியிலெழுந்த திருநிழல்போலும் சொல்லிடாச் சூடனல்போலும்
ஆதியிலெழுந்த விருவினை விகர்ப்ப மாய்ந்தறிந் தோதவே சுத்த
நீதியிலெழுந்த வாசமுமனந்த நித்தியவினோதமாஞ் சித்தின்
வீதியிலெழுந்த விந்திரஜாலம் வித்தையென் றறிவதே விவேகம்.
2. மன்னவராதி தருமசிந்தையினால் மறுவுமெய் சுவர்க்கமென் பதமும்
கொண்ணவாரதி கோல்பழிக்குரியகுரல்மணி முதலிய பதமும்

பன்னவராதி முநிவரர் சித்தர்பதுமனை யாதியாம் பதமும்
விண்ணவராதிப் பதங்களைப் பார்க்கில் வித்தையென்றறிவதே விவேகம்.

3. பருத்தியால் நூலும் நூலினால்வர்ணப்படம்பல சுவர்க்க நிர்ப்பதமும்
துருத்தியால் காற்றுங் காற்றினாலங்கி துரும்பினால் தோற்றிடுஞ் சித்தங்
கருத்தெனுமொன்றா யொன்றினி லனந்தங்கற்பனை நினைவில் பல்பேதம்
விருத்தியால்வளரும் வேற்றுமையெல்லாம்வித்தையென்றறிவதே விவேகம்.

4. மண்ணிலேமறைய மறைந்துபின்வருக மலையென வளர்ந்தெதிர் நிற்க
தண்ணியிற்கரைய தனித்துருவெடுக்க தரணியோர் கண்டுமெய்களிக்க
கண்ணிலே நுழைய கரியமால் முகில்போல் காலிலே தளையது பூட்ட
விண்ணின்மீதிருந்து பரந்துவந்துரினும் வித்தையென்றறிவதே விவேகம்.

5. கடல்வரவழைக்க மேருவையணைக்க கடமுயிர்ப் பெய்யவேசெய்ய
உடல்பிறிந்தயலோ ருடலதிற்பாய வூரிலாவெளியி லூர்காட்ட
வடவனல்வளைக்க வஷ்டநாகங்களனைத்தையு முன்னிலையழைத்து
விடபலகோடி சித்துவாடிடினும் வித்தையென்றறிவதே விவேகம்.

6. தந்தையன்னையர் முன்தவ நிலையொடுக்கத் தனிமகா மேருவைக்காட்ட
சந்தையமில்லா சலத்தின்மேல் நடக்க சலத்தினை திரட்டியே யெடுக்க
பந்தியங்சொல்லி வடவைமேலிருக்க பருதியோடுமதியழைக்க
விந்தையுற்றதுன்னும் வேதையாடிடினும்வித்தையென்றறிவதே விவேகம்.

7. ஆணுறுவதனைப் பெண்ணுறுவாக்க வடுத்தபெண்ணுறு வையாணாக்க
காணுவதனைத்தும் பேதனஞ்செய்ய காமனைக்கண்ணெதி ரழைக்க
சேணுறுவெடுத்து சேணிடையொளிக்க செம்பொடு யிரும்பை பொன்னாக்க
வீணுறுவெடுக்கும் கற்பித சிந்தை வித்தையென்றறிவதே விவேகம்.

8. கரிபலகோடி வனத்திருந்தழைக்ககரடி சிங்கங்களை யாட்ட
வரிபலகோடி யழைக்க மேற்கொள்ளவவனியைத் துறந்தறக்காட்ட
நரிபலகோடி பரியென நடத்திநஞ்சமுதாக்கியே கொடுக்க
விரிபலகோடி சித்தையாடிடினும்வித்தையென்றறிவதே விவேகம்.

9. நாட்டில் சஞ்சரிக்க நமனுறுகாட்ட நற்றவத்தோரென நடிக்க
ஏட்டினை நீரி லெதிர்க்கவே விடுக்கவெண்ணிலாவாகன மேற்க
காட்டினிலிருந்து மனதினி நினைக்கக்காமதேன் கற்பகமமைக்க
வீட்டினிலடைக்க வெளியில்வந்திடினும் வித்தையென்றறிவதே விவேகம்.

10. உம்பர் பூதங்கள் பணியவேநிற்க ஊமையாயிருந்தவன் பேச
தம்பமாய் அசையா மலையெனநிற்க தனிமகாமேருவைக் காட்ட
கம்பங்களேறி கழையர் கூற்றாடி காணாது கூப்பிடற் கேட்க
விம்பநோயகற்றுஞ் சித்தையாடிடினும் வித்தையென்றறிவதே விவேகம்.

- 7:41; மார்ச் 18, 1914 -

இலக்கியம்

1. திருவள்ளுவ நாயனார் பறைச்சிக்கும் பார்ப்பானுக்கும் பிறந்தாரென்னும் பொய்க்கதா விவரம்

இந்துதேச முழுவதும் புத்த தன்மமாம் மெய்யறம் பரவியிருந்த காலத்தில் இந்திரவியார சங்கங்களில் தலைமையாய் அறஹத்துக்கள் என்றும், பிராமணர்கள் என்றும், அந்தணர்கள் என்றும் வழங்கிவந்த ஞானகுருக்கள் நீங்கலாக, சாக்கையர் என்றும், வள்ளுவர் என்றும், நிமித்தகர் என்றும் பெயர்பெற்று அரசர், வணிகர், வேளாளர் என்ற முத்தொழிலாளருக்கும் கன்மகுருக்களாக விளங்கி தன்மகன்மங்களை நடாத்தி வந்தார்கள்.

முன்கலைதிவாகரம்

வள்ளுவர் சாக்கையரெனும் பெயர் / மன்னர்க்குள்படுங்கருமத்தலைவாக்கொக்கும்.

பின்கலைநிகண்டு

வருநிமித்தகன் பேர் சாக்கை / வள்ளுவனென்றுமாகும்.

இவர்கள் பூர்வம் வடதேசத்தில் கணிதவல்லபத்தால் சாக்கையர் என்னும் பெயர் பெற்று கலிவாகு, குலவாகு, வீரவாகு, இட்சுவாகு என்னும் சக்கிரவர்த்திகளாக தலைத்தார்வேந்தர்களாக விளங்கிவந்த அநுபவத்தை வடநாட்டில் தற்காலம் வழங்குஞ் சாக்கையர் தோப்பென்னும் நந்தவனத்தாலும் அங்கு கற்பலகைகளில் அடித்திருக்கும் சிலாசாசனங்களாலுந் தெரிந்துகொள்ளலாம்.

மணிமேகலை

சாக்கையராளுந் தலைத்தார்வேந்தன் / ஆக்கையுற் றுதித்தனனாங் கவன்றானென.

இதே குடும்பத்தார் தென்னாட்டில் வந்து குடியேறியபோதும் சாக்கையர், வள்ளுவர், நிமித்தகரென்னும் பெயரால் தன்மகன்மங்களை நிறைவேற்றி வந்தபோதினும் இவ்விடம் உள்ளோர் வள்ளுவர் என்றே பெரும்பாலும் வழங்கி வந்தபடியால் திருநெல்வேலிக்கு அருகே உள்ள ஓர் தேசத்தை நாளதுவரையிலும் வள்ளுவர் நாடென்று வழங்கி வருகின்றார்கள். இவர்களே பௌத்தமார்க்க அரசர்களுக்கு கன்மகுருக்களாக காரியாதிகளை நடாத்திவந்த விவரம்.

சீவகசிந்தாமணி

பூத்தகொங்குபோற் பொற்சுமந்துளா ராச்சியார்நலக் காசறாணனான்
கோத்தநித்திலக் கோதைமார்பினான் வாய்த்தவன்னிரை வள்ளுவன் சொனான்.

சூளாமணி

நிமித்தகனுரைத்தலு நிறைந்தசோதியா / னுமைத்தகையிலாததோ ருவகையாழ்ந்துகண்
ணிமித்திலனெத்துணைப் பொழுதுமீர்மலர்ச் / சுமைத்தகைநெடுமுடி சுடரத்துக்கினான்.
தலைமகன்றானடக்காகச் சாக்கைய / நிலைமெகொண்மனைவியாநிமிர்ந்த பூந்துணர்
நலமிகு மக்களா முதியர் தேன்களா / குலமிகுங் கற்பகங் குளிரத்தோன்றுமே.

இத்தகைய வள்ளுவ அரசவம்மிஷ வரிசையில் வடமதுரைக்கச்ச னென்னும் அரசனுக்கும் உபகேசி என்னும் இராக்கினிக்கும் செந்நாப்புலவராகும் ஓர் மகவு உதித்து நாயனார் என்னும் பெயர் பெற்று வளர்ந்து பலதேச வியாரங்களுக்குஞ் சென்று தனது குலகுருவாம் சாக்கைய முநிவரால் போதித்துள்ள திரிபீட வாக்கியங்களாம் மூன்று பேதவாக்கியங்களையும் அதன் உபநிட்சயார்த்தங்களையும் தெளிந்து,

தின்னனூருக்கு மேற்கே இந்திரவியாரத்துள்ள புத்தசங்கத்தில் சேர்ந்து சமணநிலை கடந்து அறஹத்துவாம் அந்தணநிலைபெற்று தனது குலகுருவாம் சாக்கையமுநிவர் அருளிய முதல் நூலாந் திரிபீடங்கள் என்னும் திரிபேத வாக்கியங்களும் அதனுட் பொருட்களும் மகடபாஷையாம் பாலியிலும், சகடபாஷையாம் சமஸ்கிருதத்திலும் இருந்து சங்கங்களில் தங்கியுள்ள சமணர்களுக்கும் பிராமணர்களுக்கும் உபயோகப்படுவதன்றி ஏனைய

மனுக்களுக்கு உபயோகம் இல்லாமல் இருந்தபடியால் அதனை திராவிட பாஷையாம் தமிழ்பாஷையில் திரிபீடகம், திரிபேத வாக்கியம் என்னும் முதநூலுக்கு முப்பால் திரிக்குறள் என்னும் வழி நூலியற்றினார்.

திரிக்குறள் சாற்றுக்கவி - நல்கூர்வேள்வியார்

உப்பக்க நோக்கி யுபகேசி தோண்மணந்தா / னுத்தாமாமதுரைக் கச்சென்ப - விப்பக்க
மாதானுபங்கி மறுவில் புலச்செந்நாப் / போதார் புனற்கூடற்கச்சு.

நன்னூல்

வினையினீங்கி விளங்கியவறிவின் / முனைவன் கண்டது முதனூலாகும்.
முன்னோன் நூலின் முடிபொருங்கொத்து / பின்னோன் வேண்டும் விகற்பங்கூறி
யழியாமரபினது வழிநூலாகும்.

பின்கலைநிகண்டு

பூமலியசோகிநீழற் / பொலிந்தவெம் மடிகள் முன்னா
ளேமமா முதநூற்சொல்ல / வள்ளுவ ரியன்றபாவாற்
றாமொரு வழிநூற்சொல்ல / சார்புநூற் பிறருஞ்சொல்ல
தோமிலா மூன்றுநூலுங் / துவமென வுதித்தவன்றே.

திருக்கழுகுன்றம் சீர்காழிதம்பிரான் கையேட்டுப்பிரிதியிலும் பாகு பலினாயனார் கையேட்டுப்பிரிதியிலுமுள்ள காசிநாதராம் புத்தபிரான் கூறியுள்ள முதநூலைத் தழுவி வள்ளுவர் வம்மிஷ வரிசையைச்சார்ந்த நாயனாரியற்றிய வழிநூலுக்கு புத்தசங்கத்தோருள் பொன்முடியா ரருளிய சாற்றுக்கவி.

திரிக்குறள் சாற்றுக்கவி - பொன்முடியார்

கானின் றதொங்கலாய் காசிபனா தந்ததுமுன்
கூனின்றளநற் குறளென்ப நூன்முறையான்
வானின்றுமண்ணின் றளந்ததே வள்ளுவனார்
தானின்றளந்த குறள்.

திரிக்குறள் சாற்றுக்கவி - நரிவெருத்தலையார்

இன்பம் பொருளறம் வீடென்னு மின்னான்கு
முன்பறியச்சொன்ன முதுமொழிநூன் - மன்பதைகட்
குள்ளவரிதென் றவைவள்ளுவருகலம்
கொள்ள மொழிந்தார் குறள்.

2:1, சூன் 17, 1908

திரிக்குறள் சாற்றுக்கவி - வெள்ளிவீதியார்

செய்யா மொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே - செய்யா
வதற்குரியாரந்தணரே யாராயினேனை
யிதற்குரிய ரல்லாதாரில்.

ஆதியிற் புத்தபிரானாற் கூறிய திரிபீடவாக்கியம் என்னும் முப்பேத வாக்கியங்களும் வரிவடிவட்சரமில்லாது மகடபாஷா ஒலி வடிவாய் செய்யா மொழியாய் ஒருவர் போதிக்கவும் மற்றவர்கள் கேட்கவுமான சுருதியாயிருந்து,

மக்களின் முதல் சீர்திருத்த திரிபீடவாக்கியங்கள் செய்யாமொழியாய் சுருதியிலிருப்பதால் மனதில் தங்கி மறையும் என்று எண்ணி அவலோகிதராகும் புத்தபிரான் சகடபாஷையாம் சமஸ்கிருதத்தையும், திராவிட பாஷையாம் தமிழையும் வரிவடிவிலியற்றி திரிபேதவாக்கியங்களையும் அதின் உபநிட்ச யார்த்தங்களையும் வரைந்துள்ள போதினும் ஒவ்வோர் புத்த சங்கங்களிலுமிருந்த சமணர்களும், பிராமணர்களும் புத்ததன்மங்களை பெரும்பாலும் சகட பாஷையில் உபயோகித்துவந்தார்கள்.

அதினால் சகல குடிகளுக்கும் மறை, மறை என்று விளங்காதிருந்ததைக் கண்ட திருவள்ளுவ நாயனார் தனது குலகுருவாம் சித்தார்த்தரின் அரசவம்மிஷ வரிசையில் வடமதுரையை அரசாண்ட கச்சனென்னும் அரசனுக்கு மகவாய் பிறந்து சகல கலைகளுங் கற்று தெளிவுற்று (உப்பக்கநோக்காம்) உள்விழி பார்வையின் ஞானக்கண்ணிலைகால் உதித்தவராதலின் தனது அரச போகங்கள் யாவையுங் கருதாது ஞானவிசாரிணையால் பலதேச புத்த சங்கங்களிலுஞ்

சென்று தேற விசாரிணைபுரிந்து தின்னனூருக்கு அருகே உள்ள இராகுல வியாரத்தில் தங்கி தனது அரசாங்க பரம்பரையில் நிகழ்ந்துவந்த புத்ததன்ம அரசநீதிகளையும், அரண்களையும், அமைச்சர் விதிகளையுந் தெள்ளற விளக்கியதுமன்றி ஒழுக்கம் சீலம் ஞானம் இவைகளையும் விளக்கி பாயிரமாகும் பத்துப்பாடலிலும் புத்தபிரானாகும் ஆதியுங்கடவுளை வாழ்த்தி அவர் ஓதியுள்ள தன்மபீடம், சூத்திரபீடம், வினையபீடம் ஆகும் முப்பீடங்களாம் மெய்யறம், மெய்ப்பொருள், மெய்யின்ப பேதவாக்கிய உட்பொருளாம் கன்மபாகை, அர்த்தபாகை, ஞானபாகையின் கருத்துகளைத் தெள்ளற விளக்கி ஆயிரத்தி முந்நூற்றி முப்பது அருங் குறட்பாவால் அறத்துப்பால், பொருள்பால், காமப்பாலெனவகுத்தெழுதி தனது தந்தையாகிய கச்சனென்னும் அரசனுக்கு வாசித்துக்காட்டி அவனை மனமகிழச் செய்தார்.

திரிக்குறள் சாற்றுக்கவி - கீரந்தையார்

தப்பா முதற்பாவாற் றாமாண்டபாடலினான்
முப்பாலிநாற்பான் மொழிந்தவ - ரைப்பாலுந்
வைவைத்தகூர்வேல் வழுதி மனமகிழ
தெய்வத் திருவள்ளுவர்.

அதே அறவோர் பள்ளியில் அறஹத்து நிலையடைந்த நாயன் மற்ற புத்தசங்கத்தோர்களுக்கும் தெள்ளற விளக்கி அவரவர்கள் தியான போற்றுக் கவிகளைப்பெற்று சிலநாட்சென்று சித்திரை சதுர்த்தசி பின்னாள் அமரவாசியில் நிருவாணதிசை அடைந்தார்.

அக்கால் புத்தசங்கத்தோரும் குடிகளுந் தேகத்தை தகனஞ்செய்து தாதுகோபத்தை அதே அறப்பள்ளி மத்தியில் அங்கலயஞ் செய்த சிலகாலங்களுக்குப் பின் வியார மாறுதலால் அடியில் குறித்துள்ள தியான பஞ்சுரத்தினப்பாவை நற்பலகையில் எழுதி அவ்விடம் நாட்டினர்களாம்.

சிலாசாஸனப் பெயர்ப்பு

நல்லுரையூரர் நாயனாரை சிந்தித்த தியானபஞ்சுரத்தினப்பா

மலர்கலியுலகத்துன்னிய மேலோன் வள்ளலெணகுணன றவாழி
குலகுமரபோன் கொற்றவனென்னுங் குடமதுராபுரிகச்சன்
தவமதிலுதித்த தண்டமிழ்மறையோய் சருவமுமுணர்ந்த பாவலனே
தலமெலா முதற்சீராகுல வியார சங்கமெய் நாயனேயருளே.

சங்கமெய்க்குருவாய் சாதனத்துரைந்து தரணியோர் குறைமிகுவாற்றி
பொங்கிரு வினையின் பகுப்பினை யுணர்த்தி புத்தமுதீய்ந்த மெய்ப்பொருளே
தங்குமின்னமுதே தாதைமுப்பால்போற் சமணமுற்றோர்க் கருளூட்டுந்
திங்கணன் முடியோன் வழிவழிகாட்டுந் செந்த நற்புலவ நாயகனே.

செந்நாப்புலவர் சீர்பெயர்பெற்றுத் தெண்ணிறை திரிக்குற ளருளி
நந்நாவலர்க்கு நாவுற மீய்ந்து நானிலத்தோர் நலமுற்றார்
புந்நாவடியேன் போற்றவுமறியேன் புநிதமெய்ஞ்ஞான மாவமுதே
திந்நநூர் மேலோய் திருவளு ராவீர் சின்மய நாயனே யருளே.

சின்மயானந்த நாயனே நின்னை சேவைசெய் தேற்றுதற் கருளாய்
முன்னுமிச்சங்க முதலவனாகி மேடமே சதுர்த்தசி பின்னாள்
துன்னிய முத்தித் தூயமெய்ப்பொருளாஞ் சுடரொளி காட்டிய வருளே
மின்னுபூம்பிண்டி வேந்தனன் வழியோய் வள்ளலுண் நாயனே யருளே.

வள்ளலந் நிறைந்த வள்ளுவர் வழியோய் மாதவ ரேற்று மெய்ஞ்ஞான
உள்ளமேகொண்டா யுலகெலா முணர்ந்தாய் உமதுமுப்பா லதையுணர்ந்தோர்
கள்ளமே யகற்றி காட்சியை பெறுவர் கமலநாயகன் கழல்கண்டு
வள்ளுவநாயன் காட்டிய வழிநூல் மணந்திரு வள்ளுவரூரே.

என்னும் ஐந்து பாடலும் விபூதி விளக்கம் பத்தும், சகசவிளக்கம் நூறும் அடங்கியுள்ள ஓர் ஓலைச்சுவடி கொடுக்கப்பெற்றோம்.

எவ்வகையில் என்னில் இராயப்பேட்டையைச் சார்ந்த புதுப்பேட்டையில் வசித்திருந்த சித்தூர்ஜில்லா தாசில்தார் ம-அ-அ-ஸ்ரீ ஏ.ஜெயராம் நயினாரவர்களை இரத்தினகரண்டகம், வளையாபதி, குண்டலகேசி, அசோதரை காவியமுதலிய புத்ததன்ம நூற்கள் கிடைக்கும் ஆயின் சேகரித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டி ருந்தோம். அக்கால் அவர் வீடூர் முதலிய கிராமங்களுக்குச்

சென்று திரும்பிவந்தபோது சகசவிளக்கம் நூறு பாடலும் வீபூதிவிளக்கம் பத்து பாடலும் பஞ்சரத்தினம் ஐந்துபாடலும் அடங்கி உள்ள ஓர் சுவடியும், அசோதரை காவியம் அச்சிட்ட சிறு புத்தகம் ஒன்றும், பாகுபலிநாயினார் பரம்பரையோரால் கிடைத்ததென்று நமக்களித்தார். அவைகளை முற்றிலும் வாசித்து இப்பஞ்சரத்தினத்தைக் கண்டவுடன் மனங்கலங்கி யாம் குடியேற்றஞ் சென்றுவரும்போது திருவள்ளூருக்குச் சென்று இப்பஞ்சரத்தினப்பா வடித்துள்ள இடங்களைத் தேடியும் கிடையாமல் அவ்விடமுள்ள விவேகந் தங்கிய சில பெரியோர்களை விசாரித்தோம்.

2:2, சூன் 24, 1908

அப்பெரியோர்கள் யாவரென்பீரேல் வேலூர் மார்க்கலிங்கப்பண்டாரம் மைத்துனர் முத்துசுவாமி ஜோஷியரவர்களும், காசி விசுவநாத முதலியாரவர்கள் சம்பந்தியாரிளவல் சௌந்திரபாண்டிய முதலியாரவர்களுமேயாம். அவ்விரு வரையும் அணுகி இச்சிலாலயத்தில் ஏதேனும் சிலாசாசனக் கவிகளுள்ள தாவென்று உசாவினோம். அதில் சௌந்திரபாண்டிய முதலியாரவர்கள் சற்று நிதானித்து வாசக சிலாசாசனங் கேட்கின்றீரா அன்று பஞ்சரத்தினப் பாக்களடித்துள்ள சிலாசாசனங் கேட்கின்றீரா என்றார். அதற்கு நாம் மாறுத்திரமாக பஞ்சரத்தின சிலாசாசனமே என்று கூறினோம்.

அப்பஞ்சரத்தின சிலாசாசனந் தோன்றிய காரணம் யாதென்றால் இத்திருவளுர் ஆலயத்திற்குப் பறையர்களே திரளாக வந்து பூசிப்பதும் அமாவாசைதோறும் அவர்களால் சேருந்தட்சணையுந் தேங்காய் பழமும், மாவும், வெல்லமும் அதிகமாக வரும் வழக்கத்தைக்கண்ட சில சாதியார் இக்கோவிலை அபகரிக்க ஏற்பட்டதினால் வள்ளுவர்களில் சிலர் அவர்களைக் கண்டித்து திருவள்ளுவர் குறிப்பு மாறாதிருப்பதற்கு நல்லுரையூரர் என்னும் பாணரால் பஞ்சரத்தின் தியானப்பா பாடி கற்பலகையில் அடித்து முகப்பிற் புதைத்திருந்தார்களாம். அப்பஞ்சரத்தினப்பாவை முத்துசுவாமி ஜோஷியர் பாடவும் கேட்டோம். ஆனால் என்னிடத்துள்ளப் பாடலைக் கொண்டு போகாததினால் ஒத்துப்பார்ப்பதற்கில்லாமல் போயது. ஆயினும் அச்சிலா சாசனத்தை யார் கொண்டுபோய் இருக்கலாம் என்று விசாரித்ததின் பேரில் சௌந்திர பாண்டிய முதலியாரவர்கள் கூறியது யாதெனில் - அந்த சிலாசாசனத்தை எடுத்து இந்தக் குளத்தில் போட்டுவிட்டிருப்பார்கள் அல்லது பறையர்கள் வெகுவாக இக்கோவிலுக்கு அமாவசைதோறும் வருவதை மாற்றிவிடுவதற்கு அதோயிருக்கும் சிறியக் கோவிலைக்கட்டி அதற்குப் பறைப்பொருள் கோவிலென்று பெயர் வைத்து அதில் பறையர்களைப் போம்படி உத்திரவுசெய்திருக்கின்றார்கள். ஒருகால் அக்கட்டிடத்திற்கு சிலாசாசனத்தை அடிபடைப்போட்டிருப்பினும் போட்டிருப்பார்களென்று கூறினார்.

அதற்கு யாம் இஃது வைஷ்ணவர் கோவில் என்று வழங்குவதை பௌத்தர் மடமென்றும், திருவள்ளுவநாயனாரை அரசபுத்திரனென்றும் எவ்வகையில் கூறலாம் என்றோம்.

அதற்கு மாறுத்திரமாக முத்துசுவாமி ஜோஷியர் கூறியது யாதெனில் - வேலூர் வினயலங்காரர் வியாரமும், தின்னனூர் திருவள்ளுவர் வியாரமும் ஏககாலத்தில் கட்டியதென்றும் திருவள்ளுவர் நிருவாணத்திற்குமுன்பு இதை இந்திரவியாரம் என்றும் இராகுலர்வியாரம் என்றும் வழங்கிவந்த வார்த்தையைக் கொண்டே தற்காலம் அநுபவித்துவரும் வைணவசமயத்தார் இராகுலா, இராகுலர் என்னும் புத்தருடைய மைந்தன் பெயரை இராகவர், இராகவர் என்று மாற்றி வீரராகவ ராலயம் என்று பெருக்கிக்கொண்டபோதினும் இஃது பௌத்தர்மடமே என்று ரூபிப்பதற்கு உள்ளிருக்கும் பௌத்தர் நிருவாண சிலையே போதுஞ் சான்றென்று கூறினார்.

இதுவுமன்றி திருவள்ளுவநாயனார் அரசபுத்திரன் என்பதை இப்பஞ்சரத்தினம் கூறுவதுமன்றி திரிக்குறளுக்கு சாற்றுக்கவி கொடுத்துள்ள புத்தசங்கத்தாராகிய,

நல்கூர்வேள்வியார் வெண்பாவிற்கு வேலூர் மார்க்கலிங்க பண்டாரமவர்கள் இயற்றியுள்ள கருத்துரையினாலுந் தெரிந்துக்கொள்ளலாம் என்று தன்னிடத்துள்ள திரிக்குறள் ஓலைப்பிரிதி ஒன்றையும் எமக்களித்துள்ளார்.

நல்கூர்வேள்வியார்

உப்பக்க நோக்கி யுபகேசிதோண்மணந்தா / னுத்தரமா மதுரக்கச்சென்ப - விப்பக்க மாதானுபங்கி மறுவில் புலச்செந்நாப் / போதார் புனற்கூடற்கச்சு.

கருத்துரை : உத்தரமா மதுரைக் கச்சென்ப = வட மதுரைக் கச்சனென்னுமரசன், உப்பக்கநோக்கி = தன துள்விழிபார்வை தியான காலத்து, உபகேசி தோண்மணந்தான் = மனைவி உபகேசியென்பவளைச்சேர்ந்து, விப்பக்க = விட்டகுறையாமல், மாதானுபங்கி = உபகேசி கருப்பத்திற் கட்டுண்டு, மறுவில்புலச்செந்நாப் = உருவிற் செவ்விய நாவல்ல தெய்வப்புலவரென்று சகலராலு மதிக்கத்தக்க, புனற்கூடற்கச்சு = சாந்தநிலைக்கூடும் பாக்களை, போதார் = போதித்தார் வள்ளுவநாயனாரென்பதாம்.

தந்தை மதியல்லவோ அடண்ணே வந்தவிதிகள் எல்லாம் என்று மேதாவியர் கூறியுள்ள வாக்குக்கு ஆதாரமாய் தந்தையார் உள்விழிநோக்கின் மகத்துவக் காலத்துத் தோன்றிய மகவென்று விளக்குவான்வேண்டி நல்கூர்வேள்வியார் மேற்குறித்துள்ள வெண்பாவைக் கூறியிருக்கின்றார்.

தந்தைமதியா லுண்டாம் மைந்தன் செயலை நாயனாருந் தனது குறட்பாவில் முன்பே விளக்கியு மிருக்கின்றார்.

குறள்

மகன்றந்தைக்காற்று முதவியிவன் றந்தை / யென்னோற்றான் கொல்லெனுஞ்சொல்.

திருவள்ளுவநாயனார் சாக்கைய அரச வம்மிஷ வரிசையைச் சார்ந்தவர் என்பது வள்ளுவர் வம்மிஷ வாளியால் விளங்குவதுமன்றி அரசர்களாகவும், ஞானகுருக்களாகவும், கன்ம குருக்களாகவும், விளங்கியதை பௌத்த சரித்திரங்களினாலும் கலைநூற்களினாலும் திரிக்குறளின் சராம்சத்தினாலுந் தெரிந்துக்கொள்ளலாம்.

திருவள்ளுவநாயனார் தந்தை கச்சனென்னும் அரயன் வடமதுரையை ஆண்ட அனுபவம் கொண்டு நாளதுவரையில் அந்நாட்டை கச்சயம் என்றும், கச்சம் என்றும் வழங்கிவருகின்றார்கள்.

மணிமேகலை

கச்சயமாளுங் கழற்கால்வேந்தன் / றுச்சயனென்போ னொருவன்கொண்டன.

சிங்கள பௌத்தர்கள் வாசஞ்செய்யும் இலங்காதீவத்தைப் பறையர்கள் ஊர் என்று இராமாயணக்கீர்த்தனையில் பாடிவைத்துக் கொண்டது போல் சாக்கையர் அரசவம்மிஷத்தவரும் ஞானமிகுத்த பௌத்தபிராமணப் பரம்பரை யோருமாகிய திருவள்ளுவநாயனாரைப் பறைச்சிக்கும் பார்ப்பானுக்கும் பிறந்தார் என்னும் பெரும் பொய்க் கட்டுக்கதையை ஏன் இயற்றினார்கள் என்றும் அவற்றை எவ்வெவ்வகையாய் எவ்வெவ்வவரால் எவ்வெக்காலங்களில் வரைந்துள்ளாரென்றும் விளங்கக்கூறுவாம்.

2:3, குலை 1, 1908

இத்தேசமெங்கும் வேஷப்பிராமணர்கள் விரிந்து விவேகமற்றவர்களால் சிறந்த பௌத்த அரசர்களையும், பௌத்த குருக்களையும், வேஷப் பிராமணர்களை மதியாத பௌத்தக்குடிகளையும் பறையர்களென்றுந் தாழ்ந்தசாதிகளென்றும் இழிவுகூறி கழுவிலுங் கற்காணங்களிலும் வதைத்துக் கொன்றதுமன்றி பௌத்த மடங்களையும் அபகரித்துக் கொண்டு பறைய ரென்னும் பெயரெங்கும் பரவவைத்து இழிவடையச் செய்தற்கு பலவகை ஜந்துக்களுக்கும் இப் பெயரைக் கொடுத்து வழங்கிவரச் செய்தார்கள். ஈதன்றி அரிச்சந்திர புராணமென்னும் பொய்க்கதையும், நந்தன் சரித்திரமென்னும், பொய்க்கதையும், கபிலர் அகவலென்னும் பொய்க்கதையும் இயற்றி அவைகளாலும் இப் பறையனென்னும் பெயரைப் பரவச்செய்தார்கள்.

இவ்வகையாக பௌத்தர்களை இழிவடையச் செய்ததுமன்றி பிரிட்டிஷ் ராஜாங்கத்தார் குடியேறிய காலத்தில் சில வேஷப்பிராமணர்களே முநிஷிகளாகச் சென்று தமிழ் கற்பிக்குங்கால் இப்பறையர்களையே முன்பு இழிவடையக் கூறி அருவெறுக்கச் செய்துவிட்டு பின்பே இவர்கள் பாடங் கற்பிப்பது வழக்கமாம்.

அதற்குப் பகரமாய் தமிழுக்கு இங்கிலீஷ் மொழிபெயர்ப்புள்ள ராட்ளர் டிக்ஷநெரியில் 352-ம் பக்கம் 34-வது வரியில்,

1. வள்ளுவப் பறையர், 2. தாதப்பறையர் 3. தங்கலான் பறையர்,4 துற்சாவி பறையர், 5. குழிப் பறையர், 6. தீப் பறையர் 7. முரசப் பறையர், 8. அப்புப் பறையர், 9. வடுகப் பறையர், 10. ஆலியப் பறையர், 11. வழிப் பறையர், 12. வெட்டியாரப் பறையர், 13. கோலியர் பறையர்களெனப் பதின்மூன்று வகைப் பறையர்களைப் பரக்கவெழுதி பிரிட்டிஷாருக்குக் கொடுத்துவிட்டு பார்ப்பானில் இத்தனை வகைப் பார்ப்பான் இருக்கின்றானென்று எழுதிக் கொடுக்காமல் விட்டிருக்கின்றார்கள்.

காரணம் யாதென்பீர்களேல் - பிரம்மாவின் முகத்திலிருந்து வந்தப் பார்ப்பானில் நூற்றியெட்டுவகைப் பார்ப்பான் ஏதென்று கேட்பார்கள் அதினால் தங்களுக்கு இழிவுண்டாமென்றஞ்சி விடுத்து பௌத்தர்களை மட்டும் பாழ்படுத்தி வந்தார்கள்.

அக்காலத்தில் பிரிட்டிஷ் இராஜாங்கத்தில் சிவில் சர்விசில் தேர்ந்துவந்த மிஸ்டர் எலீஸ் துரையவர்கள் 1825-ம் வருடத்திற்குப் பின்பு ஓர் தமிழ்ச்சங்கம் சென்னையிலேற்படுத்தி அதனை விருத்தி செய்தற்கு பலரிடங்களிலுமுள்ள ஓலைப் பிரிதிகளைக் கொண்டு வரச்செய்து அச்சிட்டு தமிழ் நூற்களைப் பரவச்செய்து வந்தார்.

அதையறிந்த ஜர்ஜ் ஆரிங்டன் துரை பட்லர் கந்தப்பனென்பவரால் தன்னிடமிருந்த ஓலைப்பிரிதி திரிக்குறள் மூலமும் திருவள்ளுவர்மாலையும் நாலடி நாநூறுங் கொண்டுபோய் மேம்பட்ட துரையிடம் கொடுக்க அவரும் சந்தோஷித்து அக்கால் தன்னிடமுள்ளத் தமிழ் வித்வான்களாகும் தாண்டவராய முதலியாராலும் மானேஜர் முத்துசாமிப்பிள்ளை அவர்களாலும் 1831 வருஷம் அக்குறளை அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றார்.

ஆனால் திருவள்ளுவர்மாலையில் மட்டும் நூதனமாக நான்கு பாடல்களை சேர்த்திருப்பதாய் கந்தப்பனவர்கள் மேம்பட்ட துரையிடம் முறையிட்டிருப்பதாய் சூரியோதயப் பத்திரிகையில் வரைந்திருக்கின்றார்கள்.

இவ்வகையாய் 1831 வருஷம் வெளிவந்தக் குறளில் திருவள்ளுவநாயனார் பார்ப்பானுக்குப் பிறந்தார் ஏய்ப்பானுக்குப் பிறந்தார் என்னும் கட்டுக்கதைகள் யாதொன்றும் கிடையாது. அக்குறளை வாசிக்கும் பெரியோர்களும் துரைமக்களும் மிக்க ஆனந்தங்கொண்டதுமன்றி அதே தமிழ்சங்கத்து அதிபராகும்மிஸ்டர் எலீஸ்துரையவர்கள் நாயனார் குறட்பாக்களும் சில சார்புநூற் பாக்களுஞ் சேர்த்து தன்பெயரால் இன்னொரு குறள் புத்தகமும் வெளியிட்டிருக்கின்றார். அப்புத்தகத்திலும் நாயனார் பார்ப்பானுக்குப் பிறந்தார் பறைச்சிக்குப் பிறந்தாரென்னும் கட்டுக்கதைகள் யாதொன்றும் கிடையாது.

இத்திரிக்குறளுக்கு நிகரான நீதி நூல் தமிழ் பாஷையில் ஏதொன்றும் இல்லாததாலும் வேஷப்பிராமணர்களை அறியாமலே தமிழ்ச்சங்கத்தினின்று குறள் வெளிவந்துவிட்டதினாலும் உள்ள வேஷப்பிராமணர்கள் நிதானித்து ஆ, ஆ, நாம் வள்ளுவர்களை முதற் பறையர்களாகக் கூறி பலவகை இழிவுபடுத்தி இராஜாங்கத்தாருக்கும் மற்றவர்களுக்கும் போதித்திருக்கின்றோமே இன்னீதிநூலை அவர்கள் பார்வையிட்டு இத்தகைய விவேக மிகுத்தோர்களை பறையர்கள் என்றும் தாழ்ந்தோர்கள் என்றும் கூறுகின்றீர்களே அதன் காரணம் யாதென்று கேட்பார்களாயின் வேஷப்பிராமண விபச்சாரன் கதையால் மூடலாம் என்று எண்ணி அடியில் குறித்தக் கட்டுக்கதையை அடுக்கிவிட்டார்கள்.

அதாவது - நாயனார் புத்தபிரானை சிந்தித்துள்ள முதற்பாடலில் ஆதி என்றும், பகவன் என்றும் வந்துள்ள வாக்கியங்களை எடுத்துக் கொண்டு ஆதி என்னும் பறைச்சியும், பகவன் என்னும் பிராமணனும் இருந்ததாகவும் அவ்விருவர் விபசாரத்தால் ஏழு பிள்ளைகள் பிறந்ததென்றும் அவர்களில் நாயனார் மயிலாப்பூரில் தங்கி ஓர் வைசியகுலப் பெண்ணை மணந்து இல்லறம் நடத்துங்கால் இக்குறளைப் பாடினார் என்றும் ஓர் சிறிய அகவற்பா பாடி அதைப் பாடினவர் இன்னாரென்றும் குறிக்காமல் விசாக பெருமாளையர் 1835 வருஷம் அச்சிட்டக் குறள் புத்தகத்தின் கடைசியில் அச்சிட்டு வைத்துவிட்டார்கள்.

இவ்வகையாக நாயனார் சீவியசரித்திரத்தை அவர் புத்தகத்தின் முதலில் அச்சிடாமல் கடைசியில் சேர்த்து அச்சிட்ட காரணம் யாதென்பீரேல் - இத்திரிக்குறளை மிஸ்டர் எலீஸ் துரையவர்களும், தாண்டவராய முதலியார், முத்துசாமி பிள்ளை இவர்கள் அச்சிட்ட இரண்டு புத்தகங்களிலும் இல்லாதக் கட்டுக்கதைகள் பார்ப்பார்கள் அச்சிட்ட புத்தகத்தில் எங்கிருந்து வந்ததென்று யாவரேனும் கேட்பார்களாயின், சரிதை அங்கு கிடைத்தது இங்கு கிடைத்ததென நழுவவிடலாம் யாவரும் கேட்காதிருந்துவிடுவார்களாயின் கதையை விரித்து வலுத்துவிடலாம் என்று எண்ணி 1837 வருஷம் விசாக பெருமாளையரிளவல் சரவணபெருமாளையர் அச்சிட்ட புத்தகத்தின் முகப்பில் இப்பொய் சரித்திரத்தை விரித்து பொருந்தாப்பொய்களைப் பொருத்திவிட்டார்.

அப் பொருந்தாப் பொய்கள் யாதெனில் - விசாக பெருமாளையர் செய்துவைத்துள்ள பொய்க்கதா அகவலில் ஏழு பிள்ளைகள் பிறந்ததென்று நிறுத்திவிட்டார்.

2:4, குலை 8, 1908

சரவணப்பெருமாளையர் நான்காவது அச்சிட்ட புத்தகத்தில் ஏழு பிள்ளைகளில் ஒவ்வோர் பிள்ளை பூமியிற்பிறந்தவுடன் ஒவ்வோர் வெண்பாக்களைப் பாடிவிட்டதென்றும் அப்போது இச்சரவணப் பெருமாளையர் அருகினின்று ஓலை எழுத்தாணி கொண்டு உடனுக்குடன் எழுதிக் கொண்டதுபோலும் ஏழு வெண்பாக்களைப் பாடி சேர்த்துவிட்டார். விசாகபெருமாளையர் அச்சிட்ட புத்தகத்தில் நாயனார் வைசியகுலப்பெண்ணை மணந்தாரென்று வரைந்திருக்கின்றார். அதன்பின் சரவணப்பெருமாளையர் அச்சிட்ட புத்தகத்தில் நாயனார் வேளாளகுலப்பெண்ணை மணந்தாரென்று வரைந்திருக்கின்றார்.

விசாகப்பெருமாளையர் அகவலில் ஆறுபிள்ளைகள் பிறந்தயிடங் களையும் தங்கிய இடங்களையும் காண்பிக்காமல் நாயனார் பிறந்தயிடம் மட்டும் மயிலை என்று குறித்திருக்கின்றார். சரவணப்பெருமாளையர் அச்சிட்ட புத்தகத்தில் ஏழுபிள்ளைகளுக்கும் இடங்களைக் குறித்துவிட்டதுமன்றி ஊரிலில்லா வேதாளக் கதை ஒன்று விபரீதமாகச் சேர்த்துவிட்டார். இவ்வகையாய் இருவர் எழுதியுள்ளப் பொய்க்கதைகளுக்கு இன்னும் பெருத்தப் பொய்யாதரவுகளை 1847 வருஷம் திண்டிக்கல் முத்துவீரப்பிள்ளை உத்திரவின்படி வேதகிரி முதலியாரவர்கள் விரித்துவிட்டார்.

அதாவது விசாகப்பெருமாளையர் அச்சிட்டப் புத்தகத்திலிருக்கும் அகவலில் சோழநாட்டுள் ஓர் அந்தணனுக்கு தனது உயர் குல மனைவியால் பகவன் என்னும் மைந்தன் பிறந்து அப்பகவன் வளர்ந்து கருவூர் புலைமகள் ஆதி என்பவள் தன்னை வந்தடுக்க அவளை அடித்துத் துறத்திவிட்டுப் போய் மறுபடியும் வருங்கால் அவளே சந்தித்து இருவரும் கூடிக்கொண்டு போய் ஏழுபிள்ளைகளைப் பெற்றதாக வரைந்திருக்கின்றார்.

1847 வருஷம் முத்துவீரப்பிள்ளை உத்திரவின்படி வேதகிரி முதலியாரவர்கள் அச்சிட்டபுத்தகத்தில் பிரமன் ஓர் யாகஞ் செய்து அதில் கலைமகள் உற்பத்தியாக அவளையே பிரமன் விவாகஞ்செய்துக்கொண்டு மறுபடியும் அகஸ்தியராகத் தோன்றி சமுத்திர கன்னிகையை மணந்து பெருஞ் சாகரனென்பவரைப்

பெற்றானாம். அப்பெருஞ்சாகரன் திருவாரூர் புலைச்சியைச் சேர்ந்து பகவன் என்பவரைப் பெற்று அவர் வளர்ந்தப்பின்பு,

பிரம்ம வம்மிஷத்தில் தவமுனி என்பவர் அருண்மங்கை என்னும் பிராமணமாதைச் சேர்ந்து ஓர் புத்திரியைப் பெற்றுவைத்து விராலி மலைக்குத் தவஞ்செய்யப் போய்விட்டாராம். (தாய் எங்குபோனாளோ தெரியவில்லை.) அப்பெண்குழந்தையை உரையூர் பெரும்பறையன் கண்டெடுத்து வளர்த்து வருங்கால் அச்சேரியில் உள்ளோர் எல்லாம் மண்மாரியால் மடிந்து இப்பெண் ஒருத்திமட்டிலும் பிழைத்து மேலூர் அகரத்தில் நீதியையன்வீட்டில் வளர்ந்து பகவன் என்பவருக்கும் ஆதி என்பவளுக்கும் நீதி ஐயன் ஐந்துநாளைய விவாகமும் மங்களஸ்நானமுஞ் செய்தபின்னர் வெளியேறி ஏழுபிள்ளைகளைப் பெற்றதாக விரித்துவிட்டார். நாயனார் தோன்றிய காரணத்தையும் எவ்வகையில் எழுதியிருக்கின்றார்கள் என்னில்,

இன்ன அரசன் காலம், கலியுலக இன்னவருட காலம் என்னும் யாதொரு காலமுமின்றி முதற்சங்கம், நடுச்சங்கம், கடைச்சங்கம் என்னும் நிலை யற்ற சங்கத்தோர் ஓர்காலத்தில் சிவனென்பவரை அவமதித்துவிட்டதாகவும் அந்த கோபத்தால் சங்கத்தை அழிக்கவேண்டி பிர்மாவை திருவள்ளுவராகவும், சரஸ்வதியை அவ்வையாகவும், விஷ்ணுவை இடைக்காடராகவும் பூமியில் அவதரிக்கச்செய்தாராம். அற்ப வித்வான்களை ஜெயிக்கலாகாத சிவன் அவதாரம் செய்யும் அதிகாரத்தை எவ்வகையில் நடத்தினரோ விளங்கவில்லை.

இப்பெரும் பொய்களுடன் விசாகப்பெருமாளையர் மூன்றாவது அச்சிட்டுள்ளத் திரிக்குறளில் நாயனார் வள்ளுவர் வீட்டில் வளர்ந்தாரென்று எழுதியிருக்கின்றார்.

ஆறாவது, முத்துவீரப்பிள்ளையும் வேதகிரி முதலியாரும் அச்சிட்டுள்ள திரிக்குறளில் நாயனார் வேளாளர் வீட்டில் வளர்ந்தாரென்றும் எழுதியிருக்கின்றார்கள்.

இத்தகையப் பொய்யிற்குப் பொய் பெரும் பொய்களை விரித்து அரசவம்மிஷ வரிசையோரும் பௌத்த பிராமண பரம்பரையோருமாகிய திருவள்ளுவநாயனாரை பறைச்சிக்கும் பாப்பானுக்கும் பிறந்தார் என்னும் ஓர் கட்டுக்கதையும், திருவாரூர் புலைச்சிமகன் பகவனுக்கும், பிராமணன் பிராமணத்தி மகள் ஆதிக்கும் திருவள்ளுவநாயனார் பிறந்தாரென்னும் மற்றோர் கட்டுக்கதையும் எழுதி பாழ்படுத்தி விட்டார்கள்.

இப்பாழும் பொய்க்கதைகள் யாவும் புத்தபிரான் சரித்திரமும் அவரது தன்மங்களும் மறைந்திருந்தவரையில் மெய்யாகவே நம்பி நாசமடைந்தார்கள்.

அவருடைய தன்மம் பரவியபோது பொய்யின்னதென்றும் மெய்யின்ன தென்றும் விளங்கி இக்கட்டுக்கதையை ஒடிக்கி விளக்கியிருக்கின்றோம்.

நாயனார் பறைச்சிக்கும் பாப்பானுக்கும் பிறந்தார் என்னும் கதையை யாவரேனும் மெய்யென்று கூறி வெளிவருவரேல், திரிக்குறளை ஒவ்வொருவர் அச்சிட்டு வெளியிடுங்காலங்களில் புதுப்புது பொய்களைப் பெருக்கி யிருப்பதையும் உம்பளநாட்டு சிலாசாசனங்களையும் கொண்டு இஃது பொய்க்கதை என்றே இன்னும் விளக்க எதிர்பார்த்திருக்கின்றோம்.

2:5, சூலை 15, 1908

2. நாவலர் பட்டமும் பரிசு திட்டமும்

உலகின்கண் மத்திய ஆசியாகண்டமென வழங்கும் மகத நாட்டில் ஒலிவடிவமாக வழங்கி வந்த மகடபாஷையாம் பாலியினிலையால் அவலோகிதராகும் புத்தபிரான் சகட பாஷையாம் சமஸ்கிருதத்தையும் திராவிடபாஷையாம் தமிழையும் உற்பத்திச்செய்து வரிவடிவாக்கி சகட பாஷையை பாணினியாருக்கும், திராவிட பாஷையை அகஸ்தியருக்கும் போதித்து எங்கும் பரவச்செய்த காலத்து வடநாட்டில் தமிழ்பாஷை கிஞ்சித்து பரவியிருப்பினும் பெரும்பாலும் தென்னாட்டில் அகஸ்தியரால் பரவிற்று.

இவ்வகையாய்த் தென்னாட்டில் பரவிய ஓர் பாஷைக்கு எழுத்து லட்சணம், சொல்லிலட்சணம், பொருளிலட்சணம், யாப்பிலட்சணம் அணியிலட்சணமாகும் பஞ்ச லட்சணங்களையும் புத்தசங்கத்தோராகும் சமண முனிவர்கள் வகுத்துக் கூறியவைகளுள் யாப்பிலட்சண விதியில்,

மங்கலஞ் சொல்லெழுத்தெண்ணியதானம் வருமிருபாற்
பொங்கிய உண்டி வருணம் பகுத்திடி நாட்பொருத்தம்
தங்கிய நாட்கதி யெண்கண மென்று தமிழ் தெரிந்தோ
ரிங்கிவை பத்து முதல் மொழியாமென்றியம்புவரே.

என்னும் (சீர்கொண்ட) (சீர்பூத்த) மணி கொண்ட எனுமொழியில் பத்துபொருத்தம் அமைந்திருத்தல் வேண்டும் என்றும், அத்தகைய முதன் மொழியில் நஞ்செழுத்து கலவாமல் அமுதெழுத்து சேரவேண்டும் என்று உண்டியின் பொருத்தத்தை அதிஜாக்கிரதையில் பொருத்தவேண்டும் என்றும் குறித்திருக்கின்றார்கள்.

யாப்பிலட்சண்ம் கூறும் முதல் மொழி ஐந்தெழுத்துள், யா, யோ, ரா, ரோ, லா, லோ, என்னும் மூவொற்றெழுத்தும் இரண்டளபடை மகரக் குறுக்கமும் ஆய்தமுமாகிய நஞ்செழுத்துக்கள் அமைந்துள்ளதால் தென்மொழியை திராவிட பாஷை என்றும், அ, இ, உ, எ, க, ச, த, ந, ப, ம, வ. என்னும் அமுதெழுத்துக்களுள்ளதால், தென்மொழியை தமிழென்றும், இருபெயரால் அழைத்து வந்தார்கள். இவற்றுள் திராவிடம் என்னும் பெயர் வடநாட்டாராலும் தமிழென்னும் பெயர் தென்னாட்டாராலும் பெரும்பாலும் வழங்கலாயினர்.

நஞ்செழுத்தைக்கொண்டு திராவிடம் என்றும் அமுதெழுத்தைக் கொண்டு, தமிழென்றும் வழங்கிவந்த பாஷையை மலையாளு வாசிகள் வழங்குவதை கொடுந்தமிழென்றும், மண்ணாளுவாசிகளுள் தென்மேற்கு வாசிகள் வழங்குவதைக் கருந்தமிழென்றும், தென்கிழக்கு வாசிகள் வழங்குவதை செந்தமிழ் என்றும் ஆக முத்தமிழென வழங்கி வந்தார்கள்.

இம்முத்தமிழும் பௌத்தசங்கத்தோராகும் சமணமுநிவர்கள் இத்தேச முழுவதும் நிறைந்துள்ள வரையில் தமிழ்மணம் எங்கும் வீசி புலவர்கள் முயற்சி சிறப்புற்றிருந்தது, பௌத்த சங்கங்கள் அழிந்தவுடன் தமிழ்மணம் குன்றி புலவர்களும் முயற்சி இழந்தார்கள்.

தற்காலமோ பௌத்ததேசமாகும் பிரம்ம தேசத்தில் வாசஞ்செய்யும் புலவர் பெருமாள் இராயாபாதூர் பெ.மா. துரைப்பிள்ளை அவர்கள் பூர்வத்தமிழ் மணம் வீசவும் புலவர் சிறப்பவும் தனது சுயமுயற்சியால் சேகரித்த திரவியங்களில் அரையே அரிக்கால்பாகம் தமிழ் வித்வான்களுக்கே அளித்து தமிழை விருத்திசெய்து வருகின்றார்.

இத்தகைய விருத்தி பூமான் இருப்பிடஞ் சென்ற பூ. முத்துவீர உபாத்தியாயரவர்கள் ஸ்ரீமான் சபாமண்டபத்தில் சகல வித்துவான்களும் புடைச்சூழ அவதானங்களில் தச அவதானஞ்செய்து புலவர் புகழ்கோன் பெ.மா. மதுரைப்பிள்ளை அவர்களால் நாமதானம், நாவலரென்றும், ஆடைதானம் காசி பட்டாடையும், ஆபரணதானம் தங்கக்காப்பும், கழுத்தணியும், சுவர்ணதான தாம்பூலமுமளித்து சகல வித்வான்களையும் வந்துள்ள அன்பர்களையும் களிப்புறச் செய்திருக்கின்றார்.

இம்மேறைக் கட்டுப்பட்டால் கவரிமான் மயிரால் கட்டுப்படல் வேண்டும். குட்டுப்பட்டால் மோதிரக்கையால் குட்டுப்படவேண்டும் என்னும் பழமொழிக்கிணங்க சகல வித்துவான்கள் மத்தியில் நாவலரென்னும் பெயர் பெற்றதே பேராகும். அங்ஙனமின்றி யாரடாவிட்டது மானியமென்றால் நான்தான் விட்டுக்கொண்டேன் என்னும் பழமொழிக்கிணங்க தன்னைத்தானே நாவலர் என்று கூறித் திரிவது நகைப்புக்கிடம் உண்டாவதுமன்றி தமிழ்மணம் இருப்பதும் குன்றிப்போம்.

2:7, சூலை 29, 1908

3. ஞானத்தாய் ஔவையார் அருளிச் செய்த திரிவாசகம்

முதல் வாசகம்

காப்பு

ஆத்திச்சுவட்டில் அமர்ந்த தேவனை / ஏத்தி யேத்தித்தொழு வோமியாமே

ஆத்தி - கல்லாத்தி, சுவட்டின் - நீழலின்கண், அமர்ந்த-வீற்றிருந்த, தேவனை-ஆதிதேவனாம் புத்தபிரானை ஏத்தியேத்தி-புகழ்ந்து மகிழ்ந்து, தொழுவாம்-வணங்குவாம் யாம்-யாங்களென்றவாறு.

திராவிட பாஷையில் கல்லாலம், கல்லாத்தி என்று வழங்கி வந்தமரப்பெயர், அரசன் மரத்தடியில் வீற்றிருக்கின்றார், வீற்றிருக்கின்றார் என்னும் காரியப் பெயர்க்கொண்டு அரசமரமென வழங்கலாயிற்று.

கல்லாலங் கல்லாத்தியென்று வழங்கிவந்தப் பெயர்களை தாயுமானவர்க் கூறியுள்ள, "கல்லாலடிக்குள் வளர்சித்தாந்த முத்திமுதலே" எனும் வாக்கியத்தினாலும், மணிமேகலையில் கூறியுள்ள 'ஆலமர்ச்செல்வன் மதன்விழாக்கோல்கொள்,' எனும் வாக்கியத்தினாலும்,

அருங்கலைச்செப்பு - கல்லாலப்பத்து

ஆத்தியடியமர்ந்து வாகமங்களீய்ந்து / சாத்தனமக்களித்தசீர்

எனும் செய்யுளாலும் அறிந்துக் கொள்ளுவதன்றி தேவனென்னும் மொழி ஆதிதேவனையே சிந்தித்துள்ளதாதலின் அவ்வாதி தேவனென்னும் பெயர்புத்த பிரானுக்குரிய ஆயிர நாமங்களில் ஒன்றென்பதை அடியில் குறித்துள்ள தெய்வப் பெயர்ச் செய்யுளாலும் அறிந்துக் கொள்ளலாம்.

பின்கலைநிகண்டு

தரும ராசன்முன்னிந்திரன் சினன் பஞ்சதாரைவிட்டே
யருள்சுரந்தவுணர்க் கூட்டுந் ததாகதன் ஆதிதேவன்
விரவு சாக்கையனேசைனன் விநாயகன் சினந்தவிர்ந்தோன்
அரசுநீழலிலிருந்தோன் அறி அறன் பகவன்செல்வன்

இத்தகைய கலைவாசகத்தை தமிழ்மொழியால் அமைக்க ஆரம்பித்த ஞானத்தாய், புத்தபிரானாம் ஆதிதேவனை காப்புக்கு முன்னெடுத்தக்காரணம் யாதென்பீரேல் உலக சீர்திருத்தமக்களுள் ஆதிபகவனெனத் தோன்றி தமிழ் பாஷையை இயற்றி அதனிலையால் சத்தியதன்மத்தைப் பரவச் செய்து தமிழர் பெருமானெனக் கொண்டாடப்பெற்றவராதலானும், "காப்புக்குமுன்னெடுக்குங் கடவுடான் மாலேயாகும்," எனப்பின்கலைநிகண்டு புகல்வதாலும், தான்கூறிய தமிழ் வாசகநூலுக்குத் ததாகதரையே காப்பாக சிந்தித்துள்ளாள்.

வீரசோழியம்

ஆவியனைத்துங் க,ச,த,ந,ப,ம,வ், வரியும் வவ்வி
லேவிய வெட்டும் யவ்வாறு ஞந்நான்கு மெல்லாவுலகு
மேவியவெண்குடை செம்பியன் வீரரா சேந்திரன்றன்ஷ
நாவியல் செந்தமிட் சொல்லின் மொழி முத னன்னுதலே

யாப்பருங்கலக்காரிகை

திறந்திடு மின்றீயவை பிற்காண்டுமாதர் / இறந்து படிற்றெரிதாமேதம் உறந்துயர்கோன்
தண்ணாரமார் பிற்றமிழர் பெருமானை / கண்ணாறக்காணக்கதவு.

நூல்

1. அறன் செயல்விரும்பு

அறன் - அறக்கடவுளாகும் புத்தபிரான், செயல் - செய்கைகளாம், நற்காட்சி, நற்சிந்தை நல்மனம் நற்செய்கை, நல்வாழ்கை, நல்லுரக்கம், நற்கருத்து, நல்லமைதி இவைகளை, விரும்பு - ஆசை கொள்ளுமென்பதாம்.

இச்செயலானது ஏழைகள் முதல் கனவான்கள் வரையிலும், பெரியோர்கள் முதல் சிறுயோர்கள் வரையிலும், பிணியாளர்கள் முதல் சுகதேகிகள் வரையிலுஞ் செய்யக்கூடியபொது தன்மமாதலின் இவற்றை முதலில் விளக்கியுள்ளாள்.

அறனென்னும் வல்லினறகரமமைந்த தெய்வப்பெயர் உண்டோ என்பாருமுண்டு.

சீவகசிந்தாமணி

கொடுவெஞ் சிலைவாய்க்கணையிற் கொடிதாய் / நடுனாளிரவின்னவைதான் டிகுமா
னெடு வெண்ணிலவின் னிமிர்தேர்பரியா / தடுமாரெழினின்றனேயருளே.

இதற்காதரவாய் அறனை மறவேலென்னும் வாசகமுமுண்டு. அறக் கடவுளின் செயலாகும் அஷ்டாங்கமார்க்கத்தை பற்றுவோர், பாசபந்த பற்றுக்கள் யாவையும் அறுத்தற்குப் பாதையதுவே ஆதலின் அறன் செயலாம் பற்றினை விரும்பு ஆசை கொள்ளும் என்றாள்.

திரிக்குறள்

பற்றுகபற்றற்றான் பற்றினை யப்பற்றை / பற்றுகபற்றுவிடற்கு

அறன், அறமென்னும் மொழிக்கு யீகையென்னும் பொருளை யேற்பதாயின் இல்லறம், துறவறம் நல்லறம் பொல்லறம், மெய்யறம், பொய்யறமாகும் இம்மொழிகளுக்கு எப்பொருள் பொருந்தும்.

செல்வப்பொருளுள்ளவனுக்கு யீகை என்னும் மொழி ஏற்குமேயன்றி, செல்வப்பொருள் இல்லாதவனுக்கு ஈகை என்னும் மொழி பொருந்தாவாம். ஆதலின் அறமென்னும் மொழி சகலருக்கும் பொருந்தும் சத்தியதன்ம மொழியேயாம்.

2. ஆறுவதுசினம்

ஆறுவது - தணியத்தகுவது, சினம் - கோபமேயாம்.

அறன்செயலென்னும் பற்றற்றான் பற்றை விரும்பக்கூறி, உடனே கோபாக்கினியை தணிக்கவேண்டுமென்று கூறியக் காரணம் யாதென்பீரேல்:-

சகல நற்கிருத்திய செயல்களையும் கெடுக்கக் கூடியவை சினமென்னும் கோபமேயாதலின் அறவாழியான் செயலை விரும்புவோர், அகக் கொதிப்பாகுங் கோபத்தை ஆற்றவேண்டும் என்று கூறியுள்ளாள்.

தன்னை சகல தீங்குகளினின்றும் தப்பித்துக் கொள்ள எண்ணமுடையவன் தன்னிடத்தெழும் கோபத்தைக் காக்கவேண்டும் என்பதாம்.

திரிக்குறள்

தன்னைத்தான்காக்கிற் சினங்காக்கக் காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்.

பாம்பாட்டிசித்தர்

மனமென்னுங் குதிரையை வாகனமாக்கி / மதியெனுங் கடிவாளம் வாயிற்பூட்டி
சினமென்னுஞ் சீனிமேல் சீராயேறி / தெளிவுடன் சாரிவிட்டாடாய் பாம்பே.

அறப்பளீசுரசதகம்

கோபமே பாபங்களுக்கெலாந் தாய்தந்தை கோபமே குடிகெடுக்குங்
கோபமே யெவரையுங் கூடிவரவொட்டாது கோபமே துயர் கொடுக்குங்
கோபமே பொல்லாது கோபமே சீர்கேடு கோபமே யுரவறுக்குங்
கோபமே பழிசெயுங் கோபமே பகையாளி கோபமே கருணை போக்குங்
கோபமே யீனமாங் கோபமே யெவரையுங் கூடாம லொருவனாக்குங்
கோபமே மறலிமுன் கொண்டுபோய் தீய நரகக்குழியினிற் றள்ளுமால்
ஆபத்தெலாந்தவிர்த் தென்னையாட்கொண்டருளு மண்ணலெம தருமெய்மதவேள்
அனுதினமு மனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீ சுரதேவனே.

வேமனசதகம்

கோபமுன்னநரக கூபமுஜெந்துனு / கோபமுன்னகுணமு கொஞ்சமகுனு
கோபமுன்னபிரதுகு கொஞ்சமைபோவனு / விஸ்வதாபிராம வினரவேமா.

3. இயல்வது கரவேல்

இயல்வது - உன்னால் செய்யத்தகுவது ஆகிய வித்தையை, கரவேல் - ஒளியாதே.

உனது அறிவின் விருத்தியினாலும், கேள்வியினாலும், விடாமுயற்சியினாலும், இயல்பினாலும் உன்னால் தெரிந்துக் கொண்ட வித்தையை நீமட்டிலும் அநுபவித்து சுகியாமல் ஏனையோரும் அவ்வித்தையைக் கற்று சுகிக்கும் வழியைக் காட்டவேண்டுமென்பதாம்.

இயல்பில் கண்டடைந்த வித்தையை ஏனையோர்க்கு உதவாமல் ஒளிப்பதானால் உள்ள வித்தையும் கெட்டு விருத்தி கெடுமென்பதாம். அதுவே அன்புமிகுத்தவர்களின் செயலாகும்.

அறநெறிதீபம்

ஐயெனத் தாம் பெருகுவதும் அறிவினால் விளங்குவதும்
உய்தவங் கேட்டுணர்வதுவும் உணர்ந்தவற்றைப் பிர குளத்திற்
செய்தவ நன்றாக்குதலுஞ் சிறந்தார்சொற் றேருதலும்
மெய்யன்பை யுள்ளத்தில் மேவியவன் பயனாகும்.

4. ஈவதைவிலக்கேல்

ஈவதை - ஒருவருக்கொருவர் கொடுப்பதை, விலக்கேல் - தடுக்காதீரென்பதாம்.

மக்கள் ஒருவருக்கொருவர் உபகாரங் கருதியே சேர்ந்து வாழ்பவர்களாய் இருக்கின்றார்கள். அத்தகைய உபகாரச் சேர்க்கையை ஒருவருக்கொருவர் தடுத்து கெடுப்பதானால் மநுகுல விருத்திக் கெட்டுப்போ மென்பதாம்.

உனக்குள்ள உலோபகுணத்தை எதிரிக்குங் கற்பித்து உனக்குள்ளக் கேட்டில் எதிரியையுஞ் சேர்த்துக் கெடுத்தல் இழிவேயாகும்.

கொடுக்கும் யீகையுள்ளோன் குணத்துடன் கெடுக்கும் லோபியின் குணம் கலக்குமாயின் பொன்னுடன் பித்தளையும், சோற்றுடன் மலமும், பாலுடன் மூத்திரமுங் கலந்ததுபோல் அதன் பெருந்தகைய குணமுஞ், சிறந்தமதிப்பும், பரந்த கீர்த்தியும் நாசமடைந்துப்போம்.

ஆதலின் ஒவ்வோர் புருஷனும் வித்தை, புத்தி, ஈகை, சன்மார்க்கமென்னும் நான்கிலும் நிலைத்தல் வேண்டும். அத்தகைய உயர்ந்தோர் மாட்டே உலகமும் எனப்படும்.

எழியோர்க்கு ஈவதை விலக்குவோனின் குணாகுணகதி.

விவேகசிந்தாமணி

நாய்வாலை யளவெடுத்துப் பெருக்கித்தீட்டி நற்றமிழை யெழுத வெழுத்தாணியாமோ
பேய்வாழுஞ் சுடுகாட்டைப் பெருக்கித்தள்ளி பெரியவிளக் கேற்றிவைத்தால் வீடதாமோ
தாய்வார்த்தைக் கேளாத ஜகசண்டிக்கென் சாற்றிடினு முலுத்தகுணந் தவிரமாட்டான்
ஈயாரை யீயவொட்டா னிவனுமீயா னெழுபிறப்பினுங்கடையா மிவன்பிறப்பே.

பற்பல இடுக்கங்களினால் இழிய நிலைமெய் அடைந்தவர்களுக்கும் யாதொரு தொழிலுஞ் செய்ய சக்த்தியற்றவர்களுக்கும் ஈதலே பேருபகாரம். அவைகளைத் தடுத்தலே இழியநிலையைத் தரும்.

விவேகசிந்தாமணி

இடுக்கினா விழிமெய் யெய்தி யிரப்பவர்க் கிசைந்துதானங்
கொடுப்பதே மிகவுநன்று குற்றமே யின்றிவாழ்வார்
தடுத்துகை விலக்குவோர்க்கு தக்கநோய் பிணிகளுண்டாய்
உடுக்கவுந் துணியுமற்று வுண்ணுஞ்சோ றுதவாதாமே.

இத்தகை ஈகையை வீணருக்கும், சோம்பேரிகளுக்கும், பொய்யர்களுக்கும் கொடுப்பதானால் ஈவோர்களுக்கே இடுக்கணுண்டாய் இழிய நிலைபெற வேண்டும் ஆதலின் பாத்திரம் அறிந்து பிச்சை இடுவதே பாக்கியபெருக்க வழியாகும்.

குறுந்திரட்டு

பொய்யைச்சொல்லி பிதற்றிடும் பேயர்க்கும் / அய்யமேற்கவே அஞ்சாமிலேச்சர்க்கும்
துய்யஞான சுகுணசெல்வாதிபர் / இய்யுந்தான மிடுக்கத்திழுக்குமே.
ஊனமின்றி யுருபெருத்தோருக்குங் / கானமற்றுமெய் காணாகசடர்க்கும்
மோனரென்னு முழுமோசக்காரர்க்குந் / தானமீவது தப்பரையாகும்மே.

5. உடையதை விளம்பேல்

உடையதை - உன்னிடத்துள்ள திரவியத்தை, விளம்பேல் - பிறருக்குரையாதே.

டம்பத்தினால் உனக்குள்ள ஆஸ்தியை பிறரறியக் கூறுவாயாயின் உன்னையொத்த திரவியவான் அவற்றைக் கருதமாட்டான். வன்னெஞ்சனும் கள்ளனும் அறிவார்களாயின் உன்னை வஞ்சித்துக் களவாடியும் துன்பப்படுத்துவார்கள்.

ஆதலின் ஆட்கொல்லியாகும் உனக்குள்ள திரவியத்தை அனைவருமறியக் கூறுவாயாயின் அவ்வாட்கொல்லி என்னும் திரவியமே உன்னைக் கொல்லும் ஓர் ஆயுதமாகிப்போம். இது கொண்டே உள்ள திரவியத்தை உடன் பிறந்தானுக்கும் உரைக்கலாகாதென்பதோர் பழமொழி.

உனக்குள்ள திரவியத்தை உலகோர் அறியக் கூறி உலோபியாக விளங்கி உன்மத்தனாவதினும் உனக்குள்ள திரவியத்தைக் கொண்டு உலக உபகாரியாக விளங்குவாயாயின் உன் திரவியமும் பெருகி உன் ஆயுளும் வளர்ந்து உன் கீர்த்தியும் அழியாமல் நிலைக்குமென்பதாம்.

காக்கைபாடியம்

அறநெறிநின்று வாயுளை வளர்த்து / பிறருபகாரம் பேணிப் பெருக்கி
நிறைமொழிமாந்தரெனு நிலைநிற்கில் / துறந்தவர் கீர்த்தித் தொடர்புமீதாமே.

6. ஊக்கமதுகைவிடேல்

ஊக்கமது - உனக்குள்ள முயற்சியில், கைவிடேல் - சோர்வடையாதே.

வித்தையிலேனும், கல்வியிலேனும் ஊக்கமாயிருந்து அவற்றைக் கைவிடுவதாயின் எடுத்தமுயற்சி ஈடேறாமல்போம்.

ஆதலின் ஊக்கத்தினின்று நடாத்தியச் செயலைக் கைவிடுவதானால் வீண் முயற்சியேயாம். எடுத்த முயற்சியைக் கைவிடாது சாதித்துக் கைகண்ட தொழில்களாகும் இரயில்வே, டிராம்வே, டெல்லகிறாப், போனகிறாப், லெத்தகிறாப், முதலியத் தொழில்கள் யாவும் கைவிடா ஊக்கத்தினால் விருத்திப்பெற்றக் காட்சிகள் எனப்படும்.

நாம் இத்தகைய வித்தியாவிருத்தியையும், புத்தியின் விருத்தியையும், ஈகையின் விருத்தியையும், சன்மார்க்க விருத்தியையும் கைவிடுத்து பொய்க் குருக்களால் போதிக்கும் பொய்ப்புராணக் கட்டுக்கதைகளை நம்பி சாமி கொடுப்பார், சாமி கொடுப்பார் என்னும் ஊக்கமற்ற சோம்பேரிகளாய் சோற்றுக்கு வழியற்று பிச்சையிரந்துண்பதே பெரும் வித்தியாவிருத்தி என்று எண்ணிப் பாழடைவோம் என்னும் வருங்கால சம்பவம் உணர்ந்த ஞானத்தாய் உருக்கவலிமையாம் ஊக்கச்செயலை உறுதி பெறக் கூறியுள்ளாள்,

திரிக்குறள்

தெய்வத்தாலாகாதெனினு முயற்சிதன் / மெய்வருந்த கூலிதரும்.

அருங்கலைச்செப்பு

வாழ்விப்பதேவ ரென மயங்கிவாழ்த்துதல் / பாழ்பட்ட தேவமயக்கு.

7. எண்ணெழுத்திகழேல்

எண் எழுத்து - எட்டென்னுங் கணிதாட்சரமாகவும், எழுத்தென்னும் அகராட்சரமாகவும் விளங்கும் வரிவடிவை, இகழேல் - அவமதியாதே என்பதாம்.

அகரவட்சரமானது சகல அட்சரங்களுக்கும் ஆதியாய் தோன்றி அறிவை வளர்த்து ஞானக் கண்ணாகவும் விளங்குவது அதுவேயாதலின் அதனை அவமதியாதே என்று கூறியுள்ளாள்.

ஔவையார் ஞானக்குறள்

ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத் / தோதிய நூலின் பயன்.
விகாரங் கெடமாற்றி மெய்யுணர்வுகண்டால் / அகாரமாங் கண்டீ ரறிவு.

அகரத்தின் சுழியானது அங்கத்தின் புருவமத்திய சுழிமுனையினின்று முதுகின் தண்டெலும்புள் அளாவி உந்தியில் முனைகூடி பூணுநூல் அணைவதுபோல மார்புட்சென்று கண்டத்தில் கால்வாங்கி நிற்கும். அதையே தாயின் வயிற்றில் குழவி கட்டுபட்டிருக்குங்கால் மூச்சோடிக் கொண்டிருக்கும் பிரமரந்தினமென்றும், குண்டலி நாடியென்றும், குண்டலி சத்தியென்றும், குறியெழுத்தென்றுங் கூறுவர்.

இத்தகைய எட்டெழுத்தாம் அகராட்சரத்தை கண்டத்திலூன்றி குண்டலியை நிமிர்த்தி குணங்குடிக்கொள்ளும் வழிக்கு ஆதியட்சரமாகலின் நாம் எப்போதும் வாசித்துவரும் அகர எழுத்து தானேயென்று அவமதித்து அறிவின் விருத்தியை விட்டுவிடாதீர்களென்று வற்புறுத்திக் கூறியுள்ளாள்.

ஆதியட்சரமாம் அகாரமே அறிவின் விருத்திக்குக் காரணமாகி உகாரமாம் உண்மையொளிகண்டு மகாரமாம் காமவெகுளி மயக்கங்கள் அற்று சிகாரமாம் அன்பில் நிலைப்பதே நிருவாண சுகமாகும்.

சிவவாக்கியர்

அகாரகாரணத்துளே அநேகனேக ரூபமாய்
உகாரகாரணத்துளே வொளிதரித்துநின்றனன்
மகாரகாரணத்தின் மயக்கமற்று வீடதாம்
சிகாரகாரணத்துளே தெளிந்ததே சிவாயமே.

ஞானக்கும்மி

கட்டுப்படாதந்த வச்சுமட்டம் - அதின் / காலே பன்னிரண் டாகையினால்
எட்டுக்கயிற்றினால் கட்டிக்கொண்டால் அது / மட்டுப்படுமோடி ஞானப்பெண்ணே.

எட்டென்னும் கணிதாட்சரமாகவும், எழுத்தென்னும் இலக்கிய முதலட்சரமாகவும் விளங்கும் குறியெழுத்தாம் அகராட்சரத்தை அவமதியாதே என்பது அறிவுருத்தப் பலனாம்.

ஔவையார் ஞானக்குறள்

கூடகமானக் குறியெழுத்தைத் தானறியில் / வீடகமாகும் விரைந்து.

இத்தகைய சிரேஷ்டமாம் அகராட்சரத்தை ஒவ்வோரில்லந்தோரும் வழங்கிவருதற்கு அப்பா, அம்மா, அண்ணா, அண்ணி, அக்கா, அத்தை, அத்தான், அப்பி என்று அழைப்பிலும் உச்சரிக்கும்படி செய்திருக்கின்றார்கள்.

8. ஏற்பதிகழ்ச்சி

ஏற்பது - ஒருவர் சொல்லும் வார்த்தையை விசாரிணையின்றி ஏற்றுக்கொள்ளுவது, இகழ்ச்சி - இழிவைத்தரு மென்பதாம்.

அதாவது ஒருமனிதன் முன்னில்வந்து நான் பிரமாமுகத்திலிருந்து வந்தவன் நானே பெரிய சாதியினனென்று கூறுவானாயின் அவன் வார்த்தையை மெய்யென்று ஏற்றுக்கொண்டு யாதொரு விசாரிணையுமின்றி அவனைப் பெரியசாதியோன் பெரியசாதியோனென்று உயர்த்திக் கொண்டு தன்னைத் தாழ்ந்தசாதியாக ஒடுக்கி சகலத்திலும் முன்னேறுவதற்கில்லால் ஒடுங்கி தானே சீர்கெட்டு இழிவடைந்துபோகின்றான்.

இத்தகையோன் ஒருவன் வாய்மொழியை ஏற்காது அவனைநோக்கி நீவிர் பிரம்மா முகத்தினின்று பிறந்தவரானால் அப்பிரம்மா எங்கிருக்கின்றார், அவர் முகம் எவ்வகைத்தானது, உமது மனைவியார், யாவர் முகத்தில் பிறந்துள்ளார், மநுகுலத்தோருள் நீவிர் எவ்வகையால் பெரியசாதி யானீர், பெரியசாதியோர் அடையாளமென்னை சிறியசாதியோர் அடையாள மென்னையென்று விசாரிணைச் செய்வானாயின் பிரம்மாவும், பிரம்மாவின் முகத்தில் தோன்றியதும், பெரியசாதி என்னும் படாடம்பமும் பின்னிடைந்துபோம்.

அதினால் இவன் தன்னை சின்னசாதியென விசாரிணையின்றி தாழ்ச்சியடையும் இகழ்ச்சி நீங்கி சகல விஷயங்களிலும் முன்னேறி புகழ்ச்சி பெறுவான்.

இத்தகைய நிகழ்ச்சி நேர்ந்து மக்கள் இகழ்ச்சி பெறுவார்களென்று வருங்காலமறிந்த ஞானத்தாய் ஏற்பதை இகழ்ச்சி என்று வற்புறுத்திக் கூறியுள்ளாள்.

சுவர்ண தானமேனும், வஸ்திர தானமேனும் ஒருவன் கேழ்க்காமல் மற்றொருவன் யீவதை ஏற்பது இழிவாகமாட்டாது.

எவ்வகையதென்னில்:- யதார்த்தபிராமணர்களுக்குரிய அறுவகைத் தொழிலாம் ஓதல், ஓதிவைத்தல், வேட்டல், வேட்பித்தல், யீதல், ஏற்றல் என்பவற்றுள் அந்தணர்கள் ஏற்றலும் ஒருதொழிலாகும். அரசன் வரி இறை ஏற்றலும் ஒரு தொழிலாகும். ஆதலின் இத்தகைய ஏற்பு இழிவடையமாட்டாது. சுயப்பிரயோசனமுள்ளோர் சொற்களைவிசாரிணையின்றி ஏற்றுக்கொள்ளுவதே இழிவைத் தருமென்பது அநுபவக்காட்சியாகும்.

9. ஐயமிட்டுண்

ஐயம் - புலன் தென்பட ஒடுங்கினோராகும் தென்புலத்தோர்க்கு,

இட்டு - வட்டித்துள்ள அன்னத்தை முன் புசிக்கக்கொடுத்து, உண் - நீயும் உண்ணுமென்தாம்.

பூர்வம் இத்தேசமெங்கும் புத்ததன்மம் நிறைந்திருந்த காலத்தில் பாசபந்தத்தில் ஐயமுற்று பற்றறுக்க முயலும் சமண முநிவர்களாகும் தென்புலத்தோர் ஒருமடங்களைவிட்டு மறுமடங்களுக்குப் போவதியல்பாம். அவற்றை உணர்ந்துள்ள இல்லறத்தோர் தாங்கள்புசிப்பதற்கு முன்பு வெளிவந்து அறஹத்தோ, அறஹத்தோ என்று ஐம்புலனொடுக்க வையமுற்றோரை அழைப்பார்கள். அவர்கள் வந்தவுடன் வட்டித்துள்ள அன்னத்தை முன்பு புசிக்கக்கொடுத்து பின்பு தாங்களும் உண்பது ஐயமிட்டுண்ணென்னும் போதனாவொழுக்கத்தை பின்பற்றியச் செயலேயாம்.

அறநெறிச்சாரம்

பிச்சையு மையமுமிட்டுப் பிறன்றார / நிச்சலு நோக்காது பொய்யொரீஇ - நிச்சலுங்
கொல்லாமெய்காத்துக் கொடுத்துண்டுவாழ்வதே. / இல்வாழ்க்கை யென்னு மியல்பு.

சிலப்பதிகாரம்

அறவோர்களித்தலும் அந்தணரோம்பலும்
துறவோர்க்கெதிர்தலும் தொல்லோர்சிறப்பின்
விருந்தெதிர் கோடலு மிழந்தவெண்ணையும்

ஆசாரக்கோவை

முறுவலினிதுரைகானீர்மனைபாய
கிடைக்கையோ டிவ்வைந்த மென்பதலைச்சென்றார்
கூணெடுஞ் செய்யுஞ்சிறப்பு.

நீதிவெண்பா

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லென்னுமிவ
ரின்புறத்தா லுண்ட லினிதாமே - அன்பிறவே
தக்கவரை யின்றித் தனித்துண்ண நானிகமீன்
கெக்கருந்த லென்றே குறி.

தண்டலையார் சதகம்

திருவிருக்குந்தண்டலையார் வனநாட்டி .....
(நாலுவரிகள் தெளிவில்லை)

இத்தகையாய் பாசபந்தத்திற்கு ஐயமுற்று பற்றறுக்க முயலும் பெரியோர்களுக்கு இட்டுண்பதே பேருபகாரமாதலின் ஞானத்தாய் முதியோர் கருத்தை குறுக்கல் விகாரப்படுத்தி ஐயமிட்டுண் என்று கூறியுள்ளாள்.

10. ஒப்புரவொழுகு

ஒப்புரவு - உள்ளத்திற் சாந்தத்தை நிறப்பி முகமலர்ச்சியுடன், ஒழுகு - இல்வாழ்க்கையில் நடவு மென்பதாம்.

ஒப்புரவினின்று வார்த்தையாடலும், ஒப்புரவினின்றுணவளித்தலும், ஒப்புரவினின்று உள்ளந்திருத்தலுமே உலகசிரேஷ்டமாகக் கொள்ளுதலான் ஒழுக்கத்திற்கு உதவி ஒப்புரவென்று வற்புறுத்திக் கூறியுள்ளாள்.

விவேகசிந்தாமணி

ஒப்புடன் முகமலர்ந்தே யுபசரித் துண்மெய்ப்பேசி
உப்பிலாக் கூழிட்டாலு முண்பதே யமிர்தமாகும்
முப்பழ மொடுபாலன்னம் முகங்கடுத்திடுவராயின்
கப்பிய பசியினோடு கடும்பசி யாகுந்தானே.

அறநெறிச்சாரம்

மக்களுடம்பு பெறற்கரிது பெற்றபின் / மக்களறிவு மறிவரிது - மக்கள்
அறிவதறிந்தா ரறத்தின் வழுவார் / நெறித்தலை நின்றொழுகுவார்.

ஒப்பி - மனப்பூர்வ சம்மதமாய், உரவோர் - அறிவுமிகுத்தாராகும் சமண முநிவர்பால் ஒழுகு - நெறிபிறழாது வாழக்கடவா என்பதுமோர் பாடபேதம்.

திரிபீடகம், திரிக்குறளாம், முப்பாலைத்தழுவியதே திரிவாசகமாதலின் நீதிநெறி ஒழுக்கங்களையே புதைப்பொருளாக அமர்ந்துள்ளதாகும்.

11. ஓதுவதொழியேல்

ஓதுவது - அறிவைபெருக்குங் கலை நூற்களை வாசிப்பதில், ஒழியேல் - நீங்கிவிடாதே என்பதாம்.

ஓதலும், ஓதிவைத்தலும், கற்றலுங் கற்பித்தலுமாயவை கலை நூற்களே ஆதலின், அவற்றை ஓதுவதினின்று ஒழியேலென வற்புறுத்திக் கூறியுள்ளாள்.

அறநெறிச்சாரம்

எப்பிறப் பாயினு மேமாப் பொருவதற்கு / மக்கட் பிறப்பிற் பிறிதில்லை - அப்பிறப்பில் கற்றலுங்கற்றவை கேட்டலுங் கேட்டதன்கண் / நிற்றலுங் கூடப் பெறின்.

கலைநூற்களையே கற்கவேண்டும் என்னும் காரணம் யாதெனில் சிற்றறிவின் விருத்தியால் வித்தியா விருத்திகளோங்கி உலக வாழ்க்கை சிறப்படையவும், பேரறிவின் விருத்தியால் பூரணமுற்று சுகவிருத்தி யடைவதற்குமேயாம். நுண்ணிய அறிவை விருத்தி பெறச் செய்யுங் கலைநூற்கள் ஓதுவதை ஒழியேலென்பது கருத்தாம். **(சில வரிகள் தெளிவில்லை)**

இதனையனுசரித்தே விவேக மிகுத்தோர் 'கண்டு படிப்பதே படிப்பு மற்ற படிப்பெல்லாந் தொண்டுபடிப் பென்றறி" என்றும் கூறியிருக்கின்றார்கள்.

12. ஔவியம் பேசேல்

ஔவியம் - ஒருவருக்கொருவர் பொறாமையை உண்டு செய்யும் வார்த்தையை, பேசேல் - மறந்தும் பேசாதே என்பதாம்.

உலகத்தில் தோன்றியுள்ள மக்கள் வாழ்க்கைத் துணையாய் ஒருவருக்கொருவர் நெருங்கி வாழ்கவேண்டுமென்பது நீதிநூற் சம்மதமாதலின் அத்தகைய சேர்க்கை வாழ்க்கையில் ஒருவருக்கொருவர் பொறாமையை, உண்டுசெய்யத்தக்க வார்த்தைகளைப் பேசி பொருந்தியுள்ள அன்பைக்கெடுத்து விரோதத்தைப் பெருக்கி வாழ்க்கைத் துணையைப் பிறித்துவிடுவதினால் ஒவ்வொருவருக்குமுள்ள உபகாரமும் கெட்டு சுகமற்றுப்போவதால் ஒருவருக்கொருவர் கேடுண்டுசெய்யும் ஔவியமாம் பொறாமை சொற்களைப் பேசேல் ஒருக்காலும் பேசாதே என்று வாழ்க்கைத்துணைநலம் கூறியுள்ளாள்.

இதை அநுசரித்தே கலைநூலோர் பொறாமைச் சொற்களால் அன்பர் உறவைப் பிரிப்போரும் களங்கமற்ற நெஞ்சினர்க்குக் களங்கம் உண்டு செய்வோரும், பிறர் தாரங்களின்மீது நாட்டமுள்ளோரும் அன்னியர் பொருளைக்கவ்விய நாய்படுங் கஷ்டம்போல் அல்லடைவார்களென்று கூறியிருக்கின்றார்கள். ஆதலின் பொறாமைசொற்களைப் புகலாதிருப்பதே புண்ணியபலனாகும்.

அறநெறித்தீபம்

அவ்வியமேகூறி மிகுவன்பிநிலைமாற்றுதலுஞ்
செவ்வியவுள்ளத்தினிடந்தீங்கு நினைவூட்டுதலும்
பவ்வி பிறர்தாரமனையபற்றினமோடுதலும்.
கவ்விய கணங்கனபடுங்காட்சி அதன் பயனாகும்.

13. அஃகஞ் சுருக்கேல்

அஃகம் - எக்காலமிருந்தபோதினும் குறைந்து அழியக்கூடிய தேகத்தை, சுருக்கேல் - நீயே வொடுக்கி சுகங்கெடாதே என்பதாம்.

தேகமானது பாலதானம், குமரதானம், அரசதானமென வளர்ந்து மூப்புதானம், மரணதான மெனத்தேய்ந்துத் குறைந்து சீர்க்கெடுவதியல் பாதலின். குமர, அரச, தானங்களையே தேய்த்துக் குறைப்பதானால் அவ்விருதானங் களையே மூப்புதானம் என்னும் பெயர் பெற்று மரணத்திற்கு ஆளாக்கி விடுமென்பதாம்.

மக்களுக்குள்ள ஆயுள் வருடம் பதினாரைப் பாலதானமென்றும், வருடம் முப்பதை குமரதானமென்றும், வருடம் நாற்பத்தைந்தை அரச தானமென்றும், வருடம் எழுவதை மூப்புதானமென்றும், வருடம் நூற்றை மரணதானம் என்றும் வகுத்திருக்கின்றார்கள். இத்தகைய அழிவுக்குரிய ஆயுளாம் அஃதை குமரதானத்திலேயே குறைத்து சீர்கெடுப்பதானால்,

அக்குமரதானமே மூப்புதான நிலைப்பெற்று மரணத்திற்கு உள்ளாக்கும் என்பது கருத்து.

நாம் புசிக்கும் பதார்த்தங்களை மிதாகாரமாய் அதிகமுமின்றி கொஞ்சமுமின்றி புசிப்பதே சுகாதாரமாகும். அங்ஙனமின்றி அதிகப்புசிப்பினும் தேகம் தடிப்பேறிக் கெடும். புசிப்பை அதிகச்சுருக்கினும் சப்த தாதுக்களொடுங்கி கெடும். ஆதலின் மரணத்திற்கேதுவாம் அஃகஞ்சுருக்காது மரணத்தை ஜெயிப்பதற்கேதுவாம் மிதாகாரம் புசித்து சதாஜாக்கிரமையினின்று அறிவை விருத்தி செய்ய வேண்டுமென்பதே ஆப்தர்களின் கருத்தும் ஆசீருமாதலின் அஃதை அறிந்துரைத்தலே அரும் பொருளாகும்.

அறநெறிச்சாரம்

மெய்மெய் பொறையுடைமெய் மேன்மெய் தவமடக்கம்.
செம்மை யொன்றின்மெய் துறவுடைமெய் நன்மெய்
திறம்பாவிரதந் தரித்தரோடின்னும்
அறம்பத்து. மான்ற குணம்.

மேற்கூறிய, தேகக்காப்பு, மனோகாப்பு, வாக்குக்காப்பாம் விரதங்களை நோக்காது சோமவார விரதம், அது போல் மங்களவார விரதம், சுக்கரவார விரதம், சனிவார விரதமென்று விருந்தினரை ஏமாற்றிப் பணஞ் சேர்க்கும் விரதம் வாரத்திற்கு நான்கு நாளிருப்பதினால் தேகங்குன்றி சீர்கெட்டு குமரபருவத்துள் நரை தோன்றி நசிப்பார்களென்று திரிகாலமுணர்ந்த ஞானத்தாய் செய்யுளிற் கூறாது வாசகத்தில் விளக்கியுள்ளாள்.

அருங்கலைச்செப்பு - இழிவொடுக்கப்பத்து

சோற்றைக் குறைத்து சொரூபத்தை தானடக்கல் மாற்றான் மதியென்றுணர்.
உன்னைச்சுருக்கி வுடம்புரிக்கித் தானிருத்தல் பேணப்படுமாம் பிழை.
கூற்ற னுடம்பின் குறிப் பறியாதே குறைத்தல் சீற்றச் சிறை யென்றறி
நாதனொடுங்கி னனவழிந்த முற்றுறவைப் போத முணர்ந்து புணர்.

14. கண்டொன்றுசொல்லேல்

கண்டொன்று - கண்ணினாற் பார்த்த ஒன்றைவிட்டு, சொல்லேல் மற்றொன்றை சொல்லாதே என்பதாம்.

கண்ணினாற் பார்த்ததொன்றிருக்கக் காணாத மற்றொன்றை சொல்லுவதானால் அதைவிடப் பொய் வேறில்லை என்பதாம்.

ஞானத்தாய் கண்டொன்றுசொல்லேல் எனும் மொழியை வற்புருத்திக் கூறியுள்ளக் காரணம் யாதென்பீரேல்:-

செல்காலம், நிகழ்காலம், வருங்கால மூன்றினையும் உணர்ந்தவளாதலின் வருங்கால சம்பவங்களில் சத்தியதன்மமாம் மெய்யறம் நிலைகுலைந்து அசத்திய தன்மமாம் பொய்யறம் நிலைத்து காணாததையே கண்டதுபோல் பிதற்றிப் பொய்யைச் சொல்லி போசனத்திற்கலைவார்கள்.

ஆதலின் கண்ணினாற் கண்டதைவிட்டு மற்றொன்றைக் கூறாதேயென்று வற்புருத்திக் கூறியுள்ளாள்.

விவேகசிந்தாமணி

மெய்யதைச் சொல்லுவாராகில் விளங்கிடு மேலுநன்மெய்
வையக மதனைக்கொள்வார் மனிதரிற் றேவராவார்
பொய்யதைச் சொல்வாராகிற் போசன மற்பமாகும்
நொய்யவ ரிவர்களென்று நோக்கிடா ரறிவுள்ளோரே.

வளையாபதி

கல்வியின்மெயுங் கைப்பொருட்போக
நல்லில செல்லர்களானலியுற்றலும்
பொய்யில் பொய்யொடு கூடுதற்காகுந்
.....யதுகடிந்தோம்புமின். (வரிகள் தெளிவில்லை)

15. ஙப்போல்வளை

ஙப்போல் - தன்னைப்போல, வளை - மற்றவர்களையுஞ்சூழ வாழ்க்கைச்சுகந் தருவாயென்பதாம்.

இல்வாழ்க்கையில் தன் சுகத்தை மட்டிலும் கருதி வளைந்து ஏனையோர் சுகத்தைக் கருதாது அகற்றி வாழும் வாழ்க்கையில் தனக்கு சுகங்கெடுமாயின் ஏனையோர் அச்சுகக்கேட்டைக் கருதாது விலகிநிற்பார்கள்.

ஆதலின் இல்வாழ்க்கையில் வளையாபதியாய் நிற்றல் அவலோகிதர்கட் செயலும் சுற்றத்தோருடன் வளையும் பதியில் வாழ்தல் லோகயிதச் செயலுமாகும்.

அறநெறிச்சாரம்

செல்வத்தைப் பெற்றா சினங்கடிந்து செவ்வியராய்ப்
பல்கிளையும் வாடாமற் பார்த்துண்டு - நல்ல
தானமறவாத தன்மெயரே லஃதென்பார்
வானகத்து வைப்பதோர் வைப்பு.

விவேகசிந்தாமணி

தன்மானங்குலமானந் தன்னைவந்தே யடைந்தவர்க டங்கள் மானம்
என்னாகி லென்னவல்ல வெல்லவருஞ் சரியெனவே யெண்ணம்போந்து
நன்மானம் வைத்தெந்த நாளுமவர் தங்களக்கு நன்மெய் செய்வோர்
மன்மானி யடைந்தோரை காக்கின்ற வள்ளலென வழுத்துவாரே.

16. சனிநீராடு

சனி - உலோக, நீர் - ஊற்றில், ஆடு - தேக முழுவது மழுந்த குளித்தெழுஉம் என்பதாம்.

அதாவது, பாலி பாஷையில் சனியென்னும் மொழிக்கு இருளென்றும், சனிமூலை என்னும் மொழிக்கு வடகிழக்கென்றும், சனிபிந்து என்னும் மொழிக்கு நீலக்கல் என்றும், சனி நீர் என்னும் மொழிக்கு உலோகவூற்று, தீர்த்தம் எனக் கூறியுள்ளபடியால் மூலபாஷையை முற்றும் உணர்ந்த மாதவி உலோகவூற்றுக்களாந் தீர்த்தமாடுதலினால் தேகத்தில் உண்டாகும் சருவரோக நிவர்த்திக்கும் ஓடதிமூலமாகும் சனிநீரில் விளையாடுங்கோளென்று கூறியுள்ளாள்.

இந்த உலோகவூற்றாம், சனிநீரின் குணாகுணத்தை உலகநாதனே தனது சங்கத்தோருக்கு கூறியுள்ளதை திருவேங்கிடமென்னும் திருப்பதியிலும் சீனதேசத்தைச் சார்ந்த கொரியா என்னும் நாட்டிலும் தீபகற்ப மென்றவற்றுள் ஓர் உலோக ஊற்றுள்ளதை நாளது வரையிலும் காணலாம். சருவாங்க சவரம் செய்து சனிநீருள் மூழ்குவதினால் சர்வரோக நிவர்த்தி உண்டாம் என்பது சரக சாஸ்திரமூலபாடம். (சில வரிகள் தெளிவில்லை)

சூளாமணி

குற்றதோரிடுக்கண் வந்தாலுதவுதற் ததன்றாயிற்
பெற்றவிவ்வுடம்புதன்னால் பெறுபயனில்லைமன்னா
ஆங்கவேங்கடஞ் சேர்ந்தபினையகா
ணீங்கிவெங் கடுங்கானகத்தீடென
வேங்குநீர்கடல் வண்ணனுக் கின்னனாம்
வீங்குவேண்டிரை வண்ணன் விளம்பினான்.

சீவகசிந்தாமணி

தீராவினைதீர்க்குந் தீர்த்தந்தெரிந்துய்த்து / வாராக்கதியுரைத்த் வாமன்றா னீயாரே
வாராக்கதியுரைத்த வாமன் மலர்த்துய்ந்த / காரார் பூம்பிண்டி கடவுணீ யன்றே.

எள்ளிநெய் கண்டுபிடித்தகாலம் கானிஷ்கர் என்னும் அரசனுக்கு முந்தியதும், 1,000 வருஷத்திற்கு பிந்தியகாலமாகும். ஔவையார் வாசக நூலியற்றிய காலம் 1,500 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகும். ஆதலின் எள் நெய் தேய்த்து தலைமுழுகென்பது வாசக நூலின் காலவரைக்கும் பொருந்தாது. சகலதேச மக்களுக்கும் எண்ணெய் ஸ்னானம் பொருந்தாதென்பது திண்ணம்.

17. ஞயம்படவுரை

ஞயம் - நியாயம், பட - இதயத்திலூன்றும்படி உரை - சொல்வா யென்பதாம்,

நீர் ஒதும்படியான நீதிநெறியடைந்த வாக்கியங்கள் எதிரியின் உள்ளத்தில் பட்டு உணரும்படி உரைக்கவேண்டும் என்பது கருத்தாம்.

ஓர் நியாயமுள்ளோன் கள்வனைநோக்கி அன்னியர் பொருளை அபகரிக்காதேயென்பானாயின் அக்கள்ளன் நியாயத்தை உட்கொள்ளாது கோபமீண்டு கூறியவன் களவாடானோ என்பான்.

அதேநியாயத்தைக் கள்வனைநோக்கி அப்பா நீவிர் மிக்க கஷ்டத்துடன் சம்பாதித்தப்பொருளை மற்றொருவன் அபகரித்துக் கொள்ளுவானாயின் உன் மனம் ஆறுதலடையுமோ, பொருண்மீதுற்ற அவா விடுமோவென்றால்,

விடாது ஆறுதலுமடையாதென்பான். மீண்டும் அவனைநோக்கி அதுபோல் அன்னியன் பொருளையும் கருதி அவற்றை அபகரிக்காதிருப்பது அழகன்றோ என்பானாயின் அழகென்றும், சரியென்றும் தனதுள்ளத்தில் பட்டு களவு தொழிலை அகற்றுவான்.

ஆதலின் ஓதும் நியாயமானது ஒவ்வொருவர் உள்ளத்தில் படும்படி உரைக்கவேண்டும் என்பதாயிற்று.

திரிக்குறள்

நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று / பண்பிற்றலை பிரியாச்சொல்.

18. இடம்படுவீடிடேல்

வீடு - மனைக்கோலுங்கால், இடம் - அதனுள்ளமையுமில்லம், படு வீணேகெடும்படியாக, இடேல் - அமைக்காதே என்பதாம்.

வீண்டம்பத்தினால் வீட்டைப் பெருக்கக்கட்டி அதற்குத்தக்க செலவு செய்யாவிடினும் இல்லம் பாழ்படும். அதனை ஆளும் மக்களில்லாவிடில் சீர்கெடும்.

இதனை அநுசரித்தே "சிறுகக் கட்டி பெருக வாழவேண்டும்" என்பதுஉம் ஓர் பழமொழியேயாம். ஆங்கிலேயர்கள் பெருகக்கட்டி பெருக வாழ்கின்றார்களே அவ்வில்லம் பாழ்படுவதற்கேதுவில்லையோ என்பாருமுண்டு. தனத்தின்பேரில் வளைவென்பது போல் வரவுக்குத்தக்க செலவு செய்யுங் கனவான்களுக்கு அஃது பொருந்துமேயன்றி செலவிற்கே போதாத வரவுள்ள ஏழைகளுக்குப் பொருந்தாவாம்.

உலகத்தில் நூறு கனவான்களிருப்பார்களாயின் லட்சம் ஏழைகளிருப்பார் களென்பது திண்ணம். ஆதலின் பகவனது சத்ய தர்மத்தைப் பின்பற்றிய சங்கத்தோர்கள் யாவரும் தங்கள் சீர்திருத்தப்போதங்களை செல்வமற்றோர் கூட்டி சிறப்புப்பெறச் செய்வதியல்பாம்.

வீதியில் போக்கு வருத்துள்ளவர்கள் பார்த்து மெச்சவேண்டிய டம்பங்கொண்டு வீதியின்பெருந்திண்ணை, சிறுந்திண்ணை, நடைத் திண்ணை, சார்புத்திண்ணை முதலியவைகளைக் கட்டிவிட்டு உள்ளுக்கு நுழைந்தவுடன் உட்காருவதற்கிடமின்றி ஓலைகுடிசைகள் போட்டுக் கொண்டிருப்பவர்களும் உண்டு. இதனனுபவம் கண்டோர் உட்சுவரிருக்கப் புறச்சுவரும் பூசுவோரென்று கூறும் பழமொழியும் உண்டு.

இத்தியாதி டம்பச் செயல்களை அநுபவத்தில் அறிந்துள்ள ஞானத்தாய் வீணேயிடம்படும்படி வீடிடேலென்று விளக்கியுள்ளாள்.

19. இணக்கமரிந் திணங்கு

இணக்கம் - ஒருவரை யடுத்து வாழ்கவேண்டுமாயின், அறிந்து அவரது குணாகுணங்களை நன்காராய்ந்து, இணங்கு நேசஞ்செய்வா யென்பதாம்.

குடும்பம் ஒன்றாயினும் அவனவன் தொழிலுக்குத்தக்க புத்தியாம் குணங்கள் வேறுபட்டு குடும்பம் மாறுபட்டுப்போவதையும் கண்டு வருகின்றோம்.

அதுபோல் ஒரு குடும்பத்தில் பலபேதகுணமுண்டாய் பல குடும்பமாவதைக் கண்டுள்ளோமாதலின் துற்குணமுற்ற குடும்பத்தையேனும் நேயனையேனும் அடுத்து சேர்வோமாயின் அவர்களுக்குள்ள துற்குணச் செயல்களே நம்மையும், நம்மெய் அடுத்தோர்களையும் பற்றி நாசத்திற்குள்ளாக்கி விடும்.

அவரவர்களின் குணாகுணங்களில் நற்குணமுற்றோர் குடும்பத்தையேனும், நேயனையேனும் அடுத்து சேர்வோமாயின் அவர்களுக்குள்ள நற்குணச் செயல்களே நம்மையும், நம்மையடுத்தோர்களையும் சுகம்பெறச் செய்யும்.

திரிக்குறள்

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி / னல்லற் படுப்பதூஉமில்.

விவேகசிந்தாமணி

கற்பகத்தருவைச் சார்ந்த காகமு மமிர்த முண்ணும்
விற்பன விவேகமுள்ள வேந்தரைச் சேர்ந்தோர்வாழ்வார்
இப்புவிதன்னி லென்று மிலவுகாததிடு கிள்ளைப்போல்
அற்பரைச் சேர்ந்தோர்வாழ்வதரிதரி தாகுமம்மா

20. தந்தைதாய்ப்பேண்

தந்தை - தகப்பனையும், தாய் - அன்னையையும், பேண் - பாதுகாப்பா யென்பதாம்.

நாம் மதலைப்பருவத்திலிருக்குங்கால் பசியறிந்து அமுதூட்டியும் ஈ, எறும்பணுகாது பாதுகாத்தும் அன்னம் ஊட்டியும், வித்தியா விருத்தி காட்டியும் சீர்பெறச் செய்தவர்களாதலின் அவர்கள் உபகாரத்தை என்றும் மறவாது யாதாமோர் தொழில் செய்வதற்கு ஏதுவின்றி தடியூன்றி தள்ளாடி கண் பஞ்சடைந்து பாலுங்கடைவாய்ப்பட்டு மூப்புதானமுற்றக்கால் அவர்களுக்கு வேணமுதூட்டி யாதோர் குறைவுமின்றி அதியன்பு பாராட்டி பாதுகாத்தல் வேண்டும். அத்தகைய பாதுகாத்த பிற்பலன் தன் மக்களாற் தானனுபவித்தல் கூடும். தன் மக்களைத் தான்மிக்க அன்புடன் காப்பாற்றுவது போல் தன்னையும் தன் தாய் தந்தையர் காப்பாற்றியிருப்பார்களென்று உணர்ந்து அவர்கள் மூப்புக் காலத்தில் யாதொரு கவலையும் அணுகவிடாமல் போஷிக்க வேண்டுமென்பது கருத்து.

அறநெறிதீபம்

அன்னைபிதா சுற்றத்தை அன்புமிகக் காப்பதுவும்
பின்னமறப் பெற்றோரை பிழையணுகா தோம்புதலும்
தன்மகவுந் தானுமிகு சன்மன்மா வாழ்க்கை பெறுங்
கன்மமதாம்நற்கரும காட்சியதன்பயனாகும்.

21. நன்றிமறவேல்

நன்றி - ஒருவர் செய்த நல்லுதவியை, மறவேல் - என்றும் மறவாதே யென்பதாம்.

சகலராலும் இஃது நல்லுதவி, நற்போதம், நல்லீகை என்று கூறும் நன்றியென்னும் செயலால் சுகம்பெற்றும், அச்சுகத்தை அளித்தோன் செயலை மறப்பதாயின், மறுச்சுகமடைவதற்கும் அவனிடம் செல்லுவதற்கும் சங்கை, முன்செய்த நன்றியாம் உதவியை மறந்தவனாச்சுதே மறுபடியும் இவனுக்கு உதவிபுரியப்போமோ என்று மறைவான்.

ஆதலின் மக்கள் மற்றொருவர் செய்த தீங்குகளை மனதில் தங்கவிடாமல் நீக்கிவிடவேண்டியது. ஏனென்பீரேல், அத்தீங்காகிய எண்ணங்கள் உள்ளத்தில் பதிந்து மற்றவர்களுக்கும் தீங்குகளிழைத்து தாங்களும் தீங்குகளுக் குள்ளாகி மாறா துக்கத்தை அனுபவிப்பார்கள்.

அதுபோல் ஒருவர்செய்த உதவியை உள்ளத்திலூன்றி செய் நன்றியை மறவாதிருத்தலால் அந்நன்றியே ஏனையோருக்கு நன்னன்றியருளி உள்ளக் களங்கம் நீங்கி சதானந்தத்தை அனுபவிப்பார்களென்பது கருத்து.

திரிக்குறள்

நன்றிமறப்பது நன்றன்று நன்றல்ல / தன்றேமறப்பது நன்று.

அறப்பளீசுரசதகம்

செய்நன்றி மறவாதபேர்களு மொருவர்செய் தீமையை மறந்தபேரும்
திரவியந்தரவரினி மொருவர்மனையாட்டிமேல் சித்தம் வையாதபேரும்
கைகண்டெடுத்த பொருள் கொண்டுபோய்பொருளாளர் கையிற் கொடுத்தபேரும்
காசியினி லொருவர்செய் தருமங்கெடாதபடி காத்தருள் செய்கின்றபேரும்
பொய்யொன்று நிதிகோடி வரினும் வழக்குமிவு புகலாத நிலைகொள்பேரும்
புவிமீது தலைபோகு மென்னினுங்கனவிலும் பொய்யை யுரையாதபேரும்
ஐயவிங் கிவரெலாஞ் சத்புருஷரென்றுலகி லகமகிழ்வ ரருமெய்மதவேள்
அநுதினமு மனதினினை தருசதுரகிரிவள் ரறப்பளீசுரதேவனே.

22. பருவத்தே பயிர்செய்

பருவத்தே - அந்தந்த தானியங்கள் விதைக்கக்கூடிய காலங்களுக்குக் காத்திருந்து, பயிர் - தானிய விளைவை, செய் - விதைக்க வேண்டு மென்பதாம்.

காரணம் கைப்பொருளுண்டாயின் வேண்டியபோது தானியங்களை வாங்கிக் கொள்ளலாம். ஆனால் வேண்டியபோது பருவமென்னும் விளைவுக்குத்தக்கக் காலங்களை வாங்க இயலாது. ஆதலின் பூமியைத் திருத்தி பயிரிடும் ஒவ்வோர் வேளாளனும், பயிர்களை விளைக்கக்கூடிய காலங்களை எதிர்பார்த்திருந்து விளைவிக்க வேண்டும் என்பது கருத்து.

கம்பர் ஏறெழுபது

பருவத்தே கார்த்துநிலம் பண்படுத்தி பயிர்செய்து
உருவத்தாலாயபயன் வுழுதுபயிர் செய்தளிக்கும்
பருவத்தான் வேளாளன் பக்குவத்தா லுல கோம்பும்
திருவத்தான் கோலதையுந் தேற்றுங்கோல் தாக்கோலே.

23. மண்பறித் துண்ணேல்

மன்றுபறித்துண்ணேலென்பது மற்றுமோர் ஓலைப்பிரிதி மூலபாடம்:

மண் - அன்னியனுடைய பூமியை, பறித்து - அபகரித்து, உண்ணேல் அதில்விளை பொருளை புசியாதே யென்பதாம்.

மன்று - அன்னியர்பொருளை, பறித்து - அவர்களை யறியாது வவ்வி, உண்ணேல் - புசியாதே யென்பது மற்றும் பாடம்.

இவ்விரண்டுவாசகங்களும் அன்னியனுடைய பொருளையோ, அவனது பூமியையோ, அவனை அறியாது மோசத்தினாலும் களவினாலும் அபகரித்துண்பது அக்கிரமமாதலின் சுத்ததேகத்தை சோம்பலினாலும், களவினாலும், வஞ்சினத்தாலும், வளர்க்காதே என்பது கருத்து. ஈதன்றி அன்னியன் பொருளை அபகரித்து அதினால் சீவிப்போனை மற்றவர்கள் அறிந்தபோது அவனை நெருங்கி சினேகிக்கமாட்டார்கள், அவனே வந்த போதினும் வஞ்சகனென்றஞ்சி தூரவே விலகுவார்கள்.

மேருமந்திர புராணம்

தானத்திற் குறித்துமன்று தன்கிளைக்கீயியற்சால
வீனத்து ளுய்க்கு நிற்கு மெச்சத்தை யிழக்கப்பண்ணும்
மானத்தை யழிக்குந் துய்க்கு மற்றவர்க் கடிமையாக்கு
முனத்து நரகத்துய்க்கும் பிறன்பொரு ளுவக்கின்மாதோ.

24. இயல்பலாதன செயேல்

இயல்பு - தன்னளவில், அலாதன - செய்யக் கூடாதவற்றை, செயேல் - நீ செய்யாதே யென்பதாம்.

அதாவது தன்னா லியலாததும், தான் முன்பின் பாராததும், தன் அனுபவத்தில் வாராததுமாகியச் செயலைச் செய்வதானால் தேகத்தைக் கஷ்டப்படுத்துவதன்றி திரவியத்தையும் நஷ்டப்படுத்தி விடுமென்றுணர்ந்து ஞானத்தாய் இயல்பில்லாதச் செயலை செய்யேல் என்று கூறியுள்ளாள்.

ஒரு மனிதன் ஒருமணங்கு பாரம் ஏற்றக்கூடிய இயல்பு அனுபவமிருக்குங்கால் அவன் இயல்பை உணராது இரண்டு மணங்குள்ள பாரத்தை எடுத்துச் செல்லவியலுமோ ஒருக்காலும் இயலாது. எடுக்கலா மென்னுந் திண்ணத்தால் எடுத்துச்சென்று கால்கழுத்து முறிந்துவிழுவது திண்ணமாகும். ஆதலின் இயலுவதைச் செய்து இயலாததை யகற்ற வேண்டும் என்றுரைத்தது.

25. அரவமாட்டேல்

அரவம் - சீரலுள்ள விஷப் பாம்புகளை, ஆட்டேல் - மற்றவர்கள் மிரளுவதற்காக விளையாடிக் காட்டாதே யென்பதாம்.

துஷ்டர்களின் சவகாசமும், குடியர்களின் இணக்கமும், பாம்புகளின் பழக்கமும், எவ்வகையானுந் துன்பத்திற்கு ஆளாக்கி விடும். ஆதலின் கெட்டவஸ்து வென்றறிந்தும் இதனை அருந்தலும் கொடிய ஜெந்துக்களென்று

அறிந்தும் அதனுடன் பழகுதலும் எவ்வகையானும் ஓர்கால் தனக்கும் பிறருக்கும் துன்பத்தை விளைவிக்கும் என்றறிந்த ஞானத்தாய் விஷ ஜெந்துக்களைக் கொண்டு பிறர் பயப்படுவிதமாய் விளையாட்டுக் காட்டாதே. அது கொடுவினையாய் முடியுமென்று வற்புறுத்திக் கூறியுள்ளாள்.

விவேகசிந்தாமணி

அரவினை யாட்டு வாரு மருங்களி ரூட்டுவாரும்
இரவினிற் றனிப் போவாரு மேரி நீர் நீந்து வாரும்
விரை செரி குழலியான வேசையை விரும்புவாரும்
அரயனைப் பகைத் திட்டாரு மாருயி ரிழப்பர்மாதோ.

26. இலவம் பஞ்சிற்றுயில்

இலவம் - மிகு மிருதுவாம், பஞ்சியில் - பஞ்சு மெத்தையில், துயில் - நித்திறைசெய்

பருத்திப் பஞ்சு, பனைப் பஞ்சு, இலவம் பஞ்சு என்பவற்றுள் இலவம் பஞ்சே மிக்க மிருதுவானதும், சுகுணமுள்ளதுமாதலின் இலவம்பஞ்சு மெத்தையில் துயிலென்று கூறியுள்ளாள்.

அதன் சுகுணமோவெனில், பற்பல உஷ்ண ரோகங்கட்போம், மேககாங்கையால் குடும்பப் பரம்பரையில் தோன்றும் மதுமேகம்போம், குட்டரோகத்தால் உண்டாம் நமைகள்போம், குழவிகளுக்குக் காணும், மலபந்தம்போம், குமரகண்ட வலிபோம், தாதுவிருத்தி உண்டாகும் ஆதலின் பொதுவாய சுகங்கருதி இலவம்பஞ்சில் துயிலென வற்புறுத்திக் கூறியுள்ளாள்.

பதார்த்தசிந்தாமணி

பலபலவெப்பம்போகும் பற்றியமேககாங்கை
குலவரைதோன்று மேகங் குட்டத்தின் தினவுபாலர்
மலபந்தங் குமரம் நீங்கும் மன்மதநிலையுமுண்டாம்
இலவமெத்தைப்பதிந்த வில்லறமக்கட்கென்றும்

27. வஞ்சகம்பேசேல்

வஞ்சகம் - உள்ளத்தில் கெடு எண்ணத்தை வைத்துக் கொண்டு வெளிக்கு நல்லவன்போல், பேசேல் - பேசாதே என்பதாம்.

அத்தகைய வஞ்சநெஞ்சமுள்ளவன் உலகத்தில் எவ்வகையாய் உலாவுவானென்னில் நஞ்சுள்ள பாம்பானது தனக்குள்ள நஞ்சுடமை அறிந்து மற்றவர்களுக்கு பயந்து வொளிப்பதுபோல் வஞ்சநெஞ்சனும் மற்றவர்களுக்கு பயந்துலாவுவான்.

அறநெறிச்சாரம்

தன்னைத்தன் நெஞ்சங் கரியாகத் தானடங்கின் / பின்னைத்தா னெய்தானலனில்லை - தன்னைக்
குடிகெடுக்குந் தீநெஞ்சிற் குற்றேவல்செய்தல் / பிடிபடுக்கப்பட்ட களிறு.

திரிக்குறள்

வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க / ளைந்து மகத்தே நகும்.

28. அழகலாதன்செயேல்

அழகு - அந்நியர் கண்ணுக்கு ரம்மியமும், மனோரம்மியமும், அலாதன - இல்லாதவற்றை, செயேல் - என்றுஞ் செய்யாதே யென்பதாம்.

அதாவது ஓர் காரியத்தை எடுத்துச் செய்யுங்கால் அக்காரியமானது தனக்கு சுகத்தையும், நற்கீர்த்தியையும் தருவதுடன் ஏனையோர் கண்களின் பார்வைக்கு அழகாகவும், இதயத்திற்கு சுகமாகவும் விளங்கவேண்டும் என்பது கருத்து.

அறப்பளீசுரசதகம்

வாழ்மனைத்தனக்கழகு குலமங்கை குலமங்கை வாழ்வினுக் கழகு சிறுவர்
வளர்சிறுவருக்கழகு கல்விகல்விக்கழகு மானிலந் துதிசெய் குணமாம்
சூழ்குணமதற்கழகு பேரறிவு பேரறிவு தோன்றிடி லதற்கழகுதான்
தூயதவமேன்மெ யுபகாரவிரதம் பொறுமெய் சொல்லறிய பெரியோர்களைத்
தாழ்தல் பணிவிடைபுரிதல் சீலநேயங்கருணை சாற்றுமிவை யாமென்பர்காண்
சவுரிஜன கோரமரர் முநிவர்முற்சாரணர் சரண்மென் விருகைகூப்ப
ஆழ்கட லுதித்துவரு விடமுண்ட கண்டனே யண்ணலெம தருமெய்மதவேள்
அநுதினமு மனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே.

நாலடி நாநூறு

குஞ்சியழகுங் கொடுத்தானைக்கோட்டழகு / மஞ்சளழகு மழகல்ல - நெஞ்சத்து
நல்லம் யாமென்னு நடுவுநிலையாமெய்க் / கல்வி யழகே யழகு.

முகத்தழகு, அகத்தழகு, மயிரழகு, யாவும் வெயில்பூர்க்கும், மஞ்சள்போலும், புல்நுனி நீர்போலும் மறைவது திண்ணமாதலின் எத்தேசத்துள்ளோருங் கண்குளிர வாசித்துணரவேண்டிய அழகும் எக்காலும் அழியா உண்மெய் உணர்த்தும் மெய்க்கல்வியாம் கலைநூற்களின் அழகே மிக்க சிறப்புற்றதாதலின் அத்தகைய அழகினை உலகோர்க்கு சிறக்கச்செய்யாது அழகலாதனவற்றைச் செய்தல் வீணே என்பது கருத்தாம்.

29. இளமெயிற்கல்

இளமெய் - தேகம் இளத்தையாம் பச்சை பருவத்திலேயே, கல் - கலைநூற்களை உள்ளத்துணர்த்து மென்பதாம்.

பச்சை பருவத்தினின்று பாலப்பருவம், குமரப்பருவம் வளருவதுபோல் கல்வியாம் கலைநூல் கற்றலாம் கலையென்னும் சந்திரன் நான்காம்பிறை ஐந்தாம்பிறை என வளர்ந்து பூரணச்சந்திரன் என்பதுபோல் தேகம் வளரும் போதே கலைநூற்களாம் நீதிநூற்களின் பழக்கத்தால் சிற்றறிவென்னும் பெயரற்று பேரறிவு வளர்ந்து பூரணம் பெறுவானென்னும் அன்பின் மிகுதியால் இளமெயாம் பச்சைப்பருவத்திலே கலைநூற்களைக் கல்லென்று கூறியுள்ளாள்.

கல்லாடம்

நிலைதனிற்சலியா நிலைமெயானும் / பலவுலகடுத்து வொருதிறத்தானும்
நிறையும் பொறையும் பெறுநிலையானும் / குறையாவள்ளற் கொடுகரத்தானும்
தவமு மன்பும் சைலத்தருளி / வவுமுந் திருவு முந்தினோன்றானும்
பலதுறை முகத்தொடு பயின்ற கோனும் / தலமுறை சீலந்தாக்கிய வளனுந்
தருதலிற் சீல முகத்தொடு தாகிய / வருபவர்க் குலகோ பிறை மூன்றருளி
திருமகள் முடித்த சிலையின்னும் / புண்ணியக் கல்வி வுண்ணுணர் மாக்கன்
கண்ணுஞ் செவியுங் காரணங்கொண்டு / குடக்குசேரர்க் கிடைத்த மதிநிதி
யுடைத்த பதிமலி திருமுகங் கூறி / யன்புருத்துதவி னின்புறுபாணன்
பொன்னிதி கொடுகென புறவிடுத்தருளு / மாதவர் முதல்வன் வள்ள லிறைவன்
னிருசரண் பெறுகுனர்போல / பெருமதி நீடுவர் சிறுமதி நுதலே.

(ஓரிரு வரிகள் தெளிவில்லை)

30. அறனைமறவேல்

அரனை - அறவாழிக்கடவுளாம் புத்தபிரானை, மறவேல்-என்றும் மறவாதேயென்பதாம்.

புத்தபிரான் புவியில் உலாவியகாலத்தில் தன்னைத் தொழுவுங்கள் என்றாயினும், தன்னை மறவாதிருங்களென்றாயினும் அவர் நாவினாற் கூறாதிருக்க,

நமது ஞானத்தாய் ஔவையார்மட்டிலும் அறனை மறவாதிருங் கோளென்று கூறியக் காரணம் யாதென்பீரேல்,

அறனை சிந்திக்குங்கால் அறன் மொழிந்த பொருள் முற்றுஞ் சிந்திக்க யேது உண்டாகும். அத்தகைய சிந்தனா முயற்சியால் உண்மெய்ப் பொருள் விளங்கி துக்க நிவர்த்தி உண்டாகி சுகவாரி என்னும் நிருவாணத்தை அடைவார்கள் அப்பரிநிருவாணமே பிறவிச் சமுத்திரத்தைக் கடந்து நித்திய சீவினராய் சதானந்தத்திலிருப்பார்கள். என்பது சத்தியமாதலின், சத்தியமாம் அறனை என்றும் மறவேலென்று வற்புறுத்திக் கூறியுள்ளாள்.

அருங்கலைச்செப்பு - அறனார் பத்து

அறனன் றவித்த வாய்மெயாம் நான்கும் / பிறவி கடல் கடக்கும் பேழ்.

சீவகசிந்தாமணி

வந்துதான் கூறிய விவ்வாய்மொழியுமன்றி
முந்து வறன் மொழிந்த பொருண்முற்றும் கைநாடி
பந்துபுடைப்பாணியெனப் பாயுங்கலிமான்றே
ரெந்தை திறமுள்ள முணர்ந்தின்ணம்விடுத்தேன்.

31. அனந்தலாடேல்

அனந்தல் - அதிக வெள்ளப்பெருக்கத்தில், ஆடேல் - நீ நீந்திவிளையாடாதே.

ஆறுகளில் உண்டாகும் பெருவெள்ளப்போக்கில் நீந்திவிளையாடுவதினால், அனந்தலாம் நீர் ததும்பலிலும், சுழலிலும் சிக்குண்டு கைகால்கள் உயர்ந்து உதவியற்று வீணே மடிவதற்கேதுவாகும். ஆதலின் அனந்தலாம் வெள்ளப் போக்கில் விளையாடலாகாதென்பது கருத்து.

அனந்தனென்பதின் பொருள் சிவன், மால், மிக்கோன், நிராயுதன், அருகனென்றுங் கூறத்தகும்.

அனந்த மென்பதின் பொருள் மிகுதி, சேடமெனக் கூறத்தகும்.

அனந்தலென்பதன் பொருள் நீர் ததும்பிய வெள்ளப்போக்கென்று கூறத்தகும்.

பாலிபாஷையில் அனந்தலென்னும் மொழிக்கு வெள்ளம், பேரலை, நீர்வேகமெனப் பொருளளித்திருக்கின்றார்கள்.

திரிபிடகம், திரிக்குறள், திரிமந்திரம், திரிகடுகம், திரிவாசகம் முதலிய நூற்களில் பாலிமொழிகளே மிக்க மலிவுள்ளது கொண்டு, அனந்தலென்னும் மொழிக்கு வெள்ளமென்னும் பொருளை விவரித்துள்ளோம்.

அனந்தல் என்பதற்கு நித்திறை என்னும் பொருள் கூறுவாராயின், அனந்தலாடேலென்னும் வாக்கியத்திற்கு நித்திறை வாடாதே என்னும் பொருளைத் தரும் அங்ஙனமின்றி அதி நித்திறை செய்யாதே, கொஞ்ச நித்திறை செய்யென்னும் பொருள் மொழிக்கு முற்றும் பேதமேயாகும்.

32. கடிவதுமற

கடிவது - ஒருவரைக் கொடுமொழியால் கடிந்துபேசும் வார்த்தையை, மற - நீ எக்காலும் பேசாதே என்பதாம்.

முகம் கடுகடுத்தும் வாக்கால் சிடுசிடுத்தும் பேசுவதானால் தனது மனைவிமக்களுக்கு வெறுப்புண்டாவதன்றி, குடும்பத்துவேஷியென்னும் பெயர்பெற்று திருவென்னும் அருளும் அகலும் என்பது கருத்தாம்.

ஆதலின் ஒருவரைக் கடிந்து பேசவேண்டிய காலம் நேரினும் அவ்வாக்கை மிருதுவாகவும் நியாயவாயலிலும் உபயோகிப்பதாயின் மானுஷீக தருமத்தையும் அதன் சிறப்பையும் விளக்கும்.

அறப்பளீசுரசதகம்

மெய்யொன்றிலாமலே பொய்ப்பேசியேதிரியு மிக்கபாதகரிடத்தும்
சுதியொன்று மிலர்போல மெலினங்கொளும் பழய சுந்தை யணிவோரிடத்தும்
கடி நர்யெனச்சீறி யெவரையுஞ்சேர்க்காத கன்னிவாழ் மனையகத்தும்
ததிவார்த்தையின்றி மிகு கடிவார்த்தைகொண்டுலவு தண்மெய்றோ ரிடத்துஞ்
சாம்பின முகத்திலுஞ் சோம்பியப்பீடைமு தேவிவர் ழிடமென்பர்காண்
அதிரூப மலைமங்கை நேயனே யெழைதொழு மழகனெம் தருமமெய்மதவேள்
அருதினமு மனதிநினை தருசுர கிரிவள ரறப்பளீசுர தேவனே.

நீதிவெண்பா

மென்மதுரவாக்கால் விரும்புஞ் சகங்கடின
வன்மொழியினாலிகழு மண்ணுலகு - நன்மெசே
ரோதுகுயி லேதங் குதவியது சுந்தபந்தா (தெளிவில்லை)

33. காப்பது விரதம்

காப்பது - உனக்குள்ள நல்லொழுக்கங்களை நிலைக்கச் செய்தல், விரதம் - உடற்காப்பேயாம்.

அதாவது ஒவ்வோர் மனிதனும் உலகத்தில் சுகமாக வாழ்கவேண்டுமாயின் தேகக்காப்பு, வாக்குக் காப்பு, மனோகாப்பென்னும் தன் தேகத்தால் மற்றய சீவராசிகளுக்குத் துன்பஞ் செய்யாமல் காப்பதும், தன் வாக்கினால் மற்றோரை மனநோகப் பேசுதலும், தீங்குண்டு செய்தலுமாகிய சொற்களைச் சொல்லாது காப்பது, தன் மனதில் மற்றவர்களுக்குத் தீங்கு விளையக்கூடிய எண்ணங்களை எண்ணாமலும். உள்ளத்தில் கபடு சூது வஞ்சினமிவைகளை அணுக விடாமலும் காப்பதும் விரதமென்னப்படும்.

அறநெறித்தீபம்

பொய்யகற்றி மெய்புகலும் போதரடி போற்றுதலும்
வையகத்தோ ரென்றுமிகு வாழ்த்தி சுகமேற்றுதலுந்
துய்யனென் சீவனெலாந் தொண்டுநிலை யாற்றுதலும்
உய்யுமுடல் வாக்குமனக்காப்பதனின் பலனாகும்.

34. கிழமெய்ப் படவாழ்

கிழமெய் - அறிவு முதிர்ந்தோன், பட - என்று சொல்லும்படியாக, வாழ் - உன் வாழ்க்கையை சீர்பெறச் செய்யும் என்பதாம்.

அறிவு மிகுத்த ஞானிகளையே கிழவரென்றும் கிழமெய் என்றும் கிழமெய்யரென்றும், மூத்தோரென்றும், முத்தரென்றும், அறநூற்கள் முறையிடுகின்றபடியால் நமது ஞானத்தாயும் கிழமெய்ப்படும் வாழ்க்கையால் முத்தனாகக் கடவாயென்று வற்புறுத்திக் கூறியுள்ளாள்.

கிழமெய் என்பது முதிர்ந்தோர், மூத்தோர் மிக்கோரென்னும் பொருட்களின் ஆதாரங் கொண்டு புத்தபிரானையும் கிழவனென்றே வழங்கி வந்தார்கள்.

சூளாமணி

ஆதியங் கடவுளை யருமறை பயந்தனை / போதியங் கிழவனை பூமிசை யொதிங்கினை
போதியங் கிழவனை பூமிசை யொதிங்கிய / சேதியென் செல்வனின் றிருவடி வணங்கினம்.

மேருமந்திரபுராணம்

மண்ணினுக்கிறை மெய்ப்பூண்டான்
மன்னனை சயந்தனென்றே
திண்மிர சரைந்து பின்..
சிறப்பொடு (இங்கு சிலவரிகள் தெளிவில்லை)

குடிவாரம் - நிலவாரம் என்பதும், குடிக்கிழமெய் - நிலக்கிழமெய் என்பதும், ஓர் பலனைக் குறித்த மொழிகளாகும். அப்பலன் பிரிதி பலனைக் கருதாது ஈயும் பரோபகாரப் பலனாயுளதேல் அத்தேகியை கிழவன், மூர்த்தோன், மூப்பன் என்னும் சிறப்புப் பெயரால் அழைத்து வந்தார்கள்.

இதை அனுசரித்து நமது ஞானத்தாயும் உனது வாழ்க்கையில் கிழமெய்ப்பட வாழ்கவென்று வற்புறுத்திக் கூறியுள்ளாள்.

35. கீழ்மெயகற்று

சீழ் - தாழ்ந்த செயலுக்குரிய, மெய் - தேகி என்று சொல்லுதற் கிடங்கொடாது, அகற்று - நீங்கி நில்லென்பதாம்.

அதாவது உனது உருவை மற்றொருவன் கண்டவுடன் ஆ இவன் வஞ்சகன், குடிகெடுப்போன், பொருளாசை மிகுத்தோன், கள்ளன், கொலையாளி, குடியன், வியபசார மிகுத்தோன், பொய்யனென்னும் கீழ்மகன் இவனென உன்னை மற்றொருவன் அகற்றுதற் கிடங்கொடாது நீயே அக்கீழ்மகன் செயற்களை அகற்றும் என்னும் கருத்தை பின்னிட்டு கீழ்மெயகற்றும் என்று முன்னிட்டுக் கூறியுள்ளாள்.

கீழ்மக்கள் மேன்மக்களென்னும் பெயர்கள் இத்தகையச் செயல்களால் தோற்றியவைகளேயாம்.

வளையாபதி - தீவினையச்சம்

கள்ளன்மின் களவாயின யாவையுங்
கொள்ளன்மின் கொலைகூட்டி வருமற
மெள்ளன் மின்னில ரெண்ணியாரையு
நள்ளன்மின் பிறபெண்ணோடு நண்ணன்மின்

மேருமந்தரபுராணம்

பொய், கொலை, காமம் புலை சூதுகள்ளகற்றி
மெய்யறத் திசையினோடு பொருளினை வரைந்துமேனி
நையினும் வதங்கணையா வகையினா நாகராசன்
சய்யமா சய்யமத்தின் றலைநின்றார் போலச் சென்றார்.

36. குணமது கைவிடேல்

குணம் - உமக்கு தோற்றிய சுகம் அது - அதினாலாய தென்றறிந்து

கொள்ளுவாயாயின், கைவிடேல் - அவற்றை நழுவ விடாதே யென்பதாம்.

அதாவது நீவிர் புசித்த அவுடத்தினால் வியாதி நீங்கிவரும் குணத்தை சுகநிலையில் காண்பாயாயின் அதை கைவிடாமல் புசிப்பாயாக.

புசித்துவரும் பதார்த்தங்களில் சுகநிலை தோற்ற, குணமுண்டாயின் அவற்றையும் கைவிடேல்.

நீவிர் ஆதுலர்க்கு அளிக்கும் அன்னதானத்தாலும், அறஹத்துக்கு அளிக்கும் போஷிப்பினாலும், அன்னியரைக் காக்கும் ஆதவினாலும், உமக்குண்டாய சுகுணநிலையால் உற்றச் செயலைக் கைவிடேல்.

உம்மால் மற்றவர்களுக்குப் போதிக்கும் நற்போதக விருத்தியால் தாமும் அப்போத நிலையினின்று சொற்சுகுணங்காண்பீராயின் அவற்றையும் கைவிடேலென்பதாம்.

தனக்கும், பிறருக்கும் சுகுண முண்டாகச் செய்தல் நியாயகுணமும், தனக்கும் பிறருக்கும் அசுகுணம் உண்டாகச் செய்தல் தீயகுணமுமாதலின் எக்காலும் தீயகுணங்களை அகற்றி நியாய குணங்களை நிறப்புவதே நீதிநெறியினிலைகளாம் நீதிநெறி நிறைந்தவர்களையே மக்கள் எக்காலும் நாடிநிற்பர்.

அறப்பளீசுரசதகம் - குணங்காண் குறி

கற்றோர்களென்பதை சீலமுடனே சொலுங் கனவாக்கினா லறியலாம்
கற்புளோரென்பதை பார்க்கின்றபார்வையொடு கானடையினாற் காணலாம்
அற்றோர்களென்பதனை யொன்றினும் வாரா வடக்கத்தினா லறியலாம்
அறமுளோரென்பதைப் பூததயையென்னுநிலையதுகண்டு தானறியலாம்
வித்தோங்கு பயிரை கிளைத்துவரு துடியினால் விளையுமென்றே யறியலாம்
வீரமுடையோரென்ப தோங்கிவரு தைரிய விசேஷத்தினா லறியலாம்
அத்தர் குணத்தினால் குலநலந் தெரியலாம் அண்ணலெம தருமெய்மதவேள்
அநுதினமு மனதிநினை தருசதுர கிரிவளரறப்பளீ சுரதேவனே.

தனக்குண்டாய குணத்தையும், ஏனையோர் குணத்தையும் ஆராய்ந்து அதன் சுகுணத்தை அறியவேண்டில் ஓர் குடும்பத்தையே குலமென்று கூறுவர். அக்குடும்பத்தோர் ஊர்குடி கெடுப்போரும், வஞ்சினத்தோருமாயிருப்பார் களாயின் அக்குடும்பத்தில் பிறக்கும் பிள்ளைக்கும் அத்தீயகுணங்கள் உண்டாகும்.

அத்தகைய தீயகுணங்களாலும், செயல்களாலும் அவர்கள் அடையும் துக்கத்தின் பேரவாவாலும் கண்டறியலாம்.

மூதுறை

நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற / நூலளவே யாகுமாம் நுண்ணறிவு - மேலைத் தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வங் / குலத்தளவே யாகுங் குணம்.

குலமென்னும் ஓர் குடும்பத்தில் வஞ்சின மிகுத்திருக்குமாயின் அக்குலத்து சிறுவர்களுக்கும் அக்குணமே மிகும் குலமென்னும் ஓர் குடும்பத்தில் பொய்யும், பொறாமெயும் நிறைந்திருக்கின் அக்குலத்து சிறுவர்களுக்கும் அக்குணமே மிகும்,

குலமென்னும் ஓர் குடும்பத்தில் பொருளாசை, குடிகெடுப்பு, களவு மிகுந்திருக்குமாயின் அக்குலத்து சிறுவர்களுக்கும் அக்குணங்களே மிகும். **(சிலவரிகள் தெளிவில்லை)**

37. கூடிப்பிரியேல்

கூடி - ஒருவரை நேசித்து, பிரியேல் - அவரைவிட்டு நீங்காதே என்பதாம்.

அவரவர்களுக்குள்ள தீயகுணங்களையும் நியாயகுணங்களையும், நன்காராய்ந்து நியாயமிகுத்தோர்பால் நேயம்புரிந்து அவர்களைக் கூடிப்பிரிவதாயின் தீயகுணநிலையே நியாய குணத்தோடு நிலைக்கவிடாது அகற்றியதென்பது கருத்தாகும்.

ஆதலின் நல்லோரை அடுத்து அவர்களுடன் கூடி நல்லுணர்ச்சி மிகுங்கால் அவர்களை விட்டுப் பிரியேலென்று கூறியுள்ளாள். **(சிலவரிகள் சிதைந்து போயின)**

38. கெடுப்பதொழி

கெடுப்பது - மற்றோர்குடிக்கு கேடுண்டாக்குதலை, ஒழி - அகற்றிவிடும் என்பதாகும். கெடு எண்ணத்தையும் கெடு தொழிலையும் ஒழித்து வாழ

வேண்டிய காரணம் யாதெனில் தனக்குள் தோன்றுங் கெடு எண்ணத்தின் விரிவே தன்னுள்ளத்திற் கொதிப்பேற்றி சுடுவதுடன், தன்னை அறியாமலே வாழைப்பழத்தில் ஊசி நுழைவதுபோல் நுழைந்து கெடுத்துவிடும். தன் சுகத்தை நாடுகிறவன் தனக்குள் தோன்றுங் கெடு எண்ணத்தினரிவே தன்னுள்ளத்தில் (சிலவரிகள் தெளிவில்லை) எதிரியின் சுகத்தையும் கோறல் வேண்டும். அங்ஙனமின்றி தன் சுகத்தை நாடி எதிரியின் சுகத்தைக் கெடுப்பதாயின் அக்கேட்டின் பலனே தனக்குங்கேட்டையுண்டு செய்யுமாதலின் கெடுப்பதொழி யென்னும் வாசகத்தை சுருக்கி கூறியுள்ளான். (பாடல்கள் தெளிவில்லை)

39. கேள்விமுயல்

கேள்வி - உனது செவிகளால் அறநெறி வாக்கியங்களைக் கேட்பதற்கு, முயல் - முயற்சியிலிருமென்பதாம்.

பூர்வம் வரிவடிவாம் அட்சரங்கள் இல்லாத காலத்தில் புத்தபிரானால் போதித்த திரிபேத வாக்கியங்களென்னும் திரிபீடமாம், சப்பரபஸ்ஸ அகரணம், குஸலஸ வுபசம்பதா, சசித்தபரியோதபனம், எனும் பாபஞ்செய்யாதிருங்கள், நன்மெய்க் கடைபிடியுங்கள், உங்கள் இதயத்தை சுத்திசெய்யுங்கோள் என்னும் மூன்று பேதவாக்கியங்களையே ஒருவர் சொல்லவும் மற்றவர்கள் கேட்கவுமா யிருந்தபடியால் சுருதியென்று வழங்கிவந்தார்கள்.

இத்தகைய நீதிநெறிகளமைந்த சுருதிமொழிகளைக் கேட்டலும், அதின் அந்தரார்த்தங்களை சிந்தித்தலும், தான் சிந்தித்துணர்ந்தவற்றால் தெளிதலும், அத்தெளிவால் துக்கநிவர்த்தியடைதலுங்கொண்டு, வரிவடிவ அட்சரங்களுள்ள சகடபாஷையாம் சமஸ்கிருதமும், திராவிடபாஷையாந் தமிழும், புத்தபிரானால் இயற்றி அவர் போதித்துள்ள நீதிநெறிகள் யாவும் அட்சரவடிவிற் பதிந்துள்ள போதினும் செவிச்செல்வமாங் காதுகளினாற் கேட்டுணர்வதே தெளிவாதலின் ஞானத்தாயுங் கேள்விமுயல் என்று கூறியுள்ளாள்.

இவற்றை அநுசரித்தே நாயனாரும் தனது திரிக்குறளில் செவியால் கேட்டுணராத மக்கள் உலகில் இருந்தென்ன போயென்ன என்னும் பயனற்ற உலகின் நிலையை ஊட்டியுள்ளார்:

செவியிற்சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென்.

இத்தகையக் கேள்வியில் புத்தாகமங்களை உணராதோரும், ஞான போதங்களைக் கேட்காதோரும், வினையின் பயன்களை உணராதோரும், சொல்லும்படியான போதகங்கள் யாவும் குருடனுக்குக் குருடன் வழிகாட்டுவன ஆதலின் தங்கள் வயிற்று சீவனத்திற்காயப் பொய்யைச் சொல்லித் திரிவோர் போதனைகளைச் செவிகளிற் கேளாது மெய்க்குருக்கள் போதகங்களை செவியாறக் கேட்டுத் தெளிவதே கேள்வியாம்.

பழமொழி விளக்கம்

அருண்மிகுத்த வாகமநூல் படித்தறியார் / கேள்வியொன்று மறியார் பின்னும்
இருவினையின் பயனறியார் குருக்களென்றே / யுபதேசம் எவர்க்குஞ் செய்வார்
வரமிகுத்த தண்டலைநீ நெறியாரே / யவர்க்கிரியை மார்க்கமெல்லாங்

பொருள் சம்பாதிக்கும் உபாயத்தைக் கருதிபொய்சொல்லி வஞ்சிக்கும் அஞ்ஞான குருக்களின் கேள்வியில் முயலாமல் பொருளாசையற்று கண்டிப்பான நீதிநெறிகளைப் புகட்டும் மெய்ஞ்ஞான குருக்களின் கேள்வியில் முயலவேண்டுமென்பது கருத்தாம்.

40. கைவினைகரவேல்

கைவினை - உனது கைத்தொழிலாஞ் செயலை, கரவேல் - கைசோர்ந்து பின்னிடையச் செய்யாதே என்பதாம்.

அதாவது - கைவினையாம் செய் தொழிலில் மேலும் மேலும் அறிவினை விருத்திசெய்து முன்செய்யும் பொருளினும் பின்செய்யும் பொருட்கள் சிறப்புக்குன்ற தோற்றுமாயின் அப்பொருள் நாளுக்குநாள் சிறப்புக் குன்றுவதுமன்றி செய்தொழிலால் கைவினையுங் கரந்து பாழடைந்துபோம்.

ஆதலின் செய்தொழிலை நாளுக்குநாள் சிறப்படையச் செய்யவேண்டுமேயன்றி ஒளித்துக் குன்றலாம் கரவேலென்று கூறியுள்ளாள்.

எடுத்த கருமத்தை சீர்பெற முடிக்கும் முயற்சியே சிறப்பைத்தரும். அங்ஙனமின்றி செய்தொழிலிற் சூதும், செய்தொழிலிற் களவும், செய்தொழிலில் வஞ்சமும் உண்டாயின், இழிதொழிலாற் சகலராலும், இகழ்ச்சியுண்டாம்.

பழமொழி விளக்கம்

இதுகரும மிதனாலே யதைமுடிப்ப தெனத்தொழிலை யெண்ணிச்செய்தால்
அதுகருமம் பாராமற் றிருடியுமள் ளியும் பிரட்டா யலைவதெல்லாம்
மதியணிந்த தண்டலையார் வளநாட்டில் நீராடு மாதர்தங்கள்
முதுகினைத் தேயெனச்சொன்னால் முலைமீது கையையிட்ட முறையீதாமே

ஆதலின் செய்தொழிலாம் கைவினையானது அறம், புகழ், நேயம், மூன்றிற்கும் ஆதாரமாயிருத்தல்வேண்டும்.

திரிக்குறள்

துணைநல மாக்கந் தருஉம் வினை நலம் / வேண்டிய வெல்லாந் தரும்

41. கொள்ளைவிரும்பேல்

கொள்ளை - பொருட் கொடுத்து கொள்ளாத பொருளை, விரும்பேல் - நீ ஆசை வையாதே என்பதாம்.

முதலீய்ந்து கொள்ளாதப் பொருளே கொள்ளை என்று கூறப்படும். அத்தகையாய கொள்ளை கொடுத்தோன் மனங் குமுறவும், தேகம் பதரவும், அவன்பொருளை விரும்புவதினால் விரும்பினோன் பொருளை அவனை அறியாது மற்றொருவன்கொள்ளைக் கொள்ளுவான் என்பது அநுபவமாதலின் அன்னியன் பொருளை அபகரிக்க விரும்பாதே என்பது கருத்தாம்.

வளையாபதி

பீடிற் செய்திகளாற் களவிற் பிறர் / வீடிற் பலபொருள் கொண்ட பயனென
கூடிக்காலொடு கைகளைப் பற்றிவைத் / தோடிலின்றி யுலையக் குறைக்குமே

சீவகசிந்தாமணி

(பாடல் தெளிவில்லை)

42. கோதாட்டொழி

கோது - உன்னை குற்றத்திற் காளாக்கும், ஆட்டு - விளையாட்டை, ஒழி - எக்காலும் நீக்கிவிடும் என்பதாம்.

தன்னைத்தானே குற்றத்திற்கு ஆளாக்கிவிடும் விளையாட்டுகள் யாதெனில், கள்ளினைக் கூடி குடிக்குங் களிவிளையாட்டும், மற்றவன் பொருளை அபகரிக்க சுருங்கி விளையாடும் சூது விளையாட்டும், அடுத்த உறவோர்கள் முன்னிலும், அதிகாரிகள் முன்னிலும் குற்றவாளியாக ரூபிக்கும் ஆட்டத்தை விளையாடேல் என்று கூறியுள்ளாள்.

அறநெறிதீபம்

சூதுடனே கள்ளருந்துந் தொல்லை விளையாட்டகற்றி
ஆதுலர்க்கே யன்னமளித்தானந்தமாடுதலும்
தீதகற்றி யெஞ் ஞான்றுந் தேவனென போற்றுதலும்
போதி நிழல் வீற்றிருந்தோற் போதறத்தின் பயனாகும்.

43. சக்கரநெறிநில்

சக்கர - அறவாழியாம் தருமச்சக்கர, நெறி - ஒழுக்கத்தில், நில் - நிலைத்திரு மென்பதாம்.

புத்தபிரான் அரச புத்திரனாகத் தோன்றி சத்திய தன்மத்தைப் போதித்த படியால் அதனைக் கோனெறி என்றும், அஃது சகலருக்கும் பொதுவாய தன்மமாதலின் அறநெறி என்றும் அவர் உலகமெங்கும் சுற்றி அறக்கதிராம் சத்திய தன்மத்தை விளக்கிய படியால் சக்கர நெறி என்றும் வழங்கி வந்தார்கள்.

மணிமேகலை

தருமச்சக்கரம் உருட்டினன் வருவோன்
அறக்கதிராழி திரப்பட வுருட்டிய காமற்கடந்த வாமன்பாதம்.

பொன்னணிநேமி வலங்கொள்சக்கரக்கைமன்னுயிர் முதல்வன் மகனெமக்களித்த
எண்ணருஞ்சக்கர வாளமெங்கணும் அண்ணலறக்கதிர் விரிக்குங்காலை.

திரிபேதம் என்றும், திரிபீடம் என்றும் வழங்கிய சுருதிமொழிகளை கலைநூற்களில் வகுத்து பாநெறி என்றும், அரசர்கள் செவ்வியக் கோல்வழியில் வகுத்து கோனெறி என்றும், பொதுவாய நீதிநெறியில் வகுத்து நீநெறி என்றும், போதித்துள்ளவற்றில் உலகெங்குஞ் சூழ்ந்துள்ள சருவசீவர்கண்மீதுங் கருணைவைத்துக் காக்கும் நெறியே விசேஷ நெறியாதலின் நமது ஞானத்தாய் சக்கரநெறிநில்லென வற்புறுத்திக் கூறியுள்ளாள்.

சீவகசிந்தாமணி

நூனெறி வகையி நோக்கி நுண்ணுதினுழைந்து தீமெய்
பானெறி பலவு நீக்கிபரிதியங் கடவுளன்ன
கோனெறி தழுவிநின்ற குணத்தொடு புணரின்மாதோ
நீனெறி வகையினின்ற நல்லுயிர்க் கமிர்தமென்றான்.

காக்கைபாடியம்

பக்குவஞானம் பகர்ந்தருள்போதன் / மிக்கவர்க்கீய்ந்த மேதினி தன்ம
சக்கரநெறியிற் சேர்ந்தவர்க்கென்றுங் / கைக்கிளை காமக் காரணுகாவே.

44. சான்றோரினத்திரு

சான்றோர் - சகலராலும் நன்குமதிக்கும், இனத்து - கூட்டத்தாரிடத்து, இரு - சேர்ந்து வாழக்கடவா யென்பதாம்

சான்றோர் என்போர் சகலமக்களாலும் மேலோர், மேதாவியர் என்று சாற்றுதற்கு உரிய மேன்மக்களாகும் சாந்த மிகுத்தோர்களேயாவர். சகல நற்கிரித்தியங்களுக்கும் சான்றாகும் மேன்மக்களாம் நல்லினத்தோரை அடுத்து வாழ்வதினால் தனக்குள்ள பொய்யும் களவும் கொலையும், காமமும், வெறியுமற்று மெய்யும், ஈகையும், காருண்யமும், சாந்தமும், நிதானமும் பெருகி நிருவாணமார்க்கமும் சுருக்கமாக விளங்கும்.

ஈதன்றி தன்னையீன்ற தாயானவள் எக்காலும் அன்பு கொண்டொழுகு பவளாயினும் உமது புத்திரன் மேன்மக்களாம் விவேகிகளை அடுத்து கலைநூற்களைக் கற்று சாந்தரூபியாய் சகலராலும் நல்லோன் என்று சாற்றுதற்குரியவனாயிருக்கின்றான் என்று கேழ்விப்பட்டவுடன், ஈன்றாள் அகமகிழ்வையும் அன்பையும் சொல்லத்தகுமோ, ஒருவராலுஞ் சொல்லத் தரமன்றாம் ஆதலின் நல்லினத்தைச் சார்ந்தொழுகுஞ் சாட்சியே நன்றென்று கூறியுள்ளாள்.

திரிக்குறள்

ஈன்ற பெழுதிற் பெரிதுவக்குந் தன்மகனை / சான்றோனெனக் கேட்டத் தாய்.

குமரேசசதகம் - நல்லினஞ்சேர் பயன்

சந்தனவிருட்சத்தை யண்டிநிற்கின்ற பல தருவுமவ்வாசனைதரும்
தங்கமகமேருவை யடுத்திடுங் காக்கையுஞ் சாயல்பொன்னிறமே பெறும்
பந்தமிகு பாலுட னுடைந்த தண்ணீரெலாம் பால்போல் நிறங்கொடுக்கும்
படிகமணி கட்குளே நிற்கின்ற வடிவுமப் படியே குணங்கொடுக்கும்
அந்தமிகு மரகதக் கல்லைத் தரித்திடி லடுத்ததும் பசியநிறமாம்
ஆனபெரியோர்களொடு சகவாசம துசெய்யிலவர்கள்குணம் வருமென்பர்காண்
மந்திரநெடு கிரியைமுன் மத்தாய்கடைந்தவரின் மருகமெய்ஞ்ஞான குரவா
மயிலேறி விளையாடு குகனேபுல் வயநீடு மலைமேவு குமரேசனே.

45. சித்திரம் பேசேல்

சித்திரம் - பொய்யாகியவார்த்தைகளை மெய்போல் அலங்கரித்து, பேசேல் - நீ என்றும் பேசாதேயென்பதாம்.

அதாவது தன் கண்ணினாற் காணாததைக் கண்டதுபோல் அலங்கரித்துப் பேசுதலும், தன் செவியினாற் கேளாததைக் கேட்டதுபோல் அலங்கரித்துப் பேசுதலும், தன் நாவினால் உருசிக்காததை உருசித்ததுபோல் அலங்கரித்துப் பேசுதலும் தன் நாசியினால் முகராததை முகர்ந்தது போல் அலங்கரித்துப் பேசுதலும். தன் உடல் பரிசிக்காதனவற்றை பரிசித்தது போல் அங்கரித்துப்

பேசுதலும், மனமுற்றுச் சொல்லும் பொய்யாதலின் அப்பொய்யே மேலுமேலுந் திரண்டு உண்மெய்யை மறைத்து உலகபந்தத்திற் சிக்கி மாளா துன்பத்திற்கு ஆளாக்கிவிடும். ஆதலின் தான்சொல்லும் வார்த்தைகள் பொய்யென்று அறிந்தும் மனசாட்சி உண்டென்றும் அஞ்சாது அப்பொய்யையே மெய்போல் அலங்கரித்துப்பேசுதலிலும் வாய்மெய்க்கேடு வேறில்லை என்பதாம்.

ஈதன்றியும் ஔவையாகிய ஞானத்தாய் முக்காலமும் உணர்ந்தவளாதலின், வருங்காலத்தில் ஔவையார் அவசரப்பூசை செய்ய அதையுணர்ந்த யானைமுகக் கல்விநாயகர் அவசரப்பூசை செய்ய வேண்டா மென்றுங் கூறி தனது துதிக்கையா லெடுத்து கயிலாயத்தில் விட்டுவிட்டா ரென்னுந் சித்திரவார்த்தையாம் கற்பனைக் கதையைக் கட்டிவிடுவார்கள். அத்தகைய பொய்யாகும் கட்டுக்கதைகளில் மெய்யுணராது மேலுமேலுந் துக்கத்திற்கு ஆளாவர் என்றுணர்ந்த ஞானத்தாய் சித்திரம் பேசேலென்று வற்புறுத்திக் கூறியுள்ளாள்.

காக்கை பாடியம்

முத்திர மாய்ந்த மூதறிவாளர் / குத்திரமிய்யுங் கோடுரையாது
சித்திரங்கூறி சீரழியார்க / ளெத்திரத்தாலு மெய்துவர் வீடே.

46. சீர்மெய் மறவேல்

மெய் - தேகத்தை, சீர் - சுத்தி செய்யும் விஷயத்தில், மறவேல் - ஒருக்காலும் மறவாதே யென்பதாம்.

சீர்மெய் என்பதின் இலக்கணம் மெய் சீராதலின் புறமெய்ச் சீராம் தேகச் சுத்திகரிப்பால் தெளி நிலையும் விவேக விருத்தியுமுண்டாவதன்றி இதயசுத்தத்திற்கும் ஏதுவுண்டாம். அத்தகைய இதயசுத்தத்திலேயே சகல சுகமும் விளங்குகிறபடியால் அவற்றிற்கு மூலகாரணமாம் புறமெய்ச்சீரென்னும் சீர்மெயாதலின் தேக சுத்தத்தை திடம்பெறக் கூறியுள்ளாள்.

பிரிட்டிஷ் ஆட்சியோராய் நமது தேசத்தை அரசாண்டுவரும் ஆங்கிலேயர்கள் வெண்மெய் நிறத்தால் சுத்த தேகிகளாகவும் எக்காலுந் தங்கள் தேகத்தை சுத்திகரிப்பவர்களாகவும் சுத்த உடையை உடையவர்களாகவுந் தோன்றியபடியால், அவர்களை சீர்மெய்யர், சீர்மெயோரென்று இத்தேசத்தோர் வழங்கிவந்த வார்த்தையைக் கொண்டு இவர்கள் காணாத வைரோப்பா தேசத்திற்கு சீர்மெய் என்னும் பெயர் வாய்த்திருப்பதை தேக சுத்த தோற்றமாம் சீர்மெயென்றே தெளிந்து கொள்ளலாம்.

அருங்கலைச் செப்பு - உள்ளொளி பத்து

சீர்மெயதாகி சுகங்கெடா சுத்தத்தாற் / றூய்மெயதா முன்னொளி.
காய்மெயிலுற்றக் களங்கமறநீக்கில் / வாய்மெயாம் வள்ளலொளி.
மெய்மெயாலாற்ற லுடையார் தமக்கு / பொய்யகன்றேற்றுமொளி.

47. சுளிக்கச்சொல்லேல்

சுளிக்க - வொலிக்கும் வார்த்தை பிறருக்குப் புலப்படாமல், சொல்லேல் - பேசாதே யென்பதாம்.

அதாவது பேசும்வார்த்தைகளை சுழித்து சுழித்து உள்ளுக்கொன்றும் வெளிக்கொன்றுமாக பேசுதலினும் பேசாதிருப்பது சுகமாதலின் பேசும் வார்த்தைகளை பூர்த்தியாக வெளியிடாது உள்ளுக்கே சுளித்துப் பேசலாகா தென்பது கருத்தாம்.

முகசுளிப்பால் வாக்குச்சுளிப்பும் வாக்குச்சுளிப்பால் அகச்சுளிப்பாம் வஞ்சநெஞ்சத்தின் நஞ்சு விளங்குகிறபடியால் அந்நஞ்சின் விஷமீறி இதய கோசத்தைக் கெடுப்பதுமன்றி தேகமும் பாழடைவதற்கு சுளிப்பே ஓர் மூலமாதலின் வஞ்சத்தை நெஞ்சிலுன்றி சுளிக்கச் சொல்லேலென்பது உட்கருத்தாம்.

48. சூதுவிரும்பேல்

சூது - ஒருவரை வஞ்சித்தும் குடிகெடுத்தும் தானுங் கெடுங் கரவடைச் செயலை, விரும்பேல் - நீ யெப்போதும் ஆசை வையாதே என்பதாம்.

அதாவது தான் வேறுதொழில் யாதுமின்றி மற்றொருவன் பொருளை வஞ்சக விளையாட்டையாடி பறிப்பதும், சூதென்னும் ஓர் தொழிலையே நெஞ்சிற் குடிகொளச்செய்வதுமாகிய அத்தீயவிளையாட்டையே மிக்க விரும்பி தானுங்கெடுவதுடன் மற்றவர்களையுங் கெடுத்து பாழ்படுத்துகிறபடியால் வஞ்சித்துக் கெடுக்கும் சூதை விரும்பேலென்பது கருத்தாம்.

காக்கைபாடியம்

கோதுட்டுளமே குலநல மழிக்கும் / வாதிட்டார்ப்ப வாழ்க்கையுங் குன்றும்
சூதுற்றாடல் சூழ்கிளை யழிக்கும் / போதித்தானப் பொக்கிடம்போற்றீர்.

49. செய்வன திருந்தச்செய்

செய்வன - நீ செய்ய வேண்டிய காரியங்களை, திருந்த - சீர்பெற, அதாவது தானெடுத்து முடிக்கவேண்டிய காரியாதிகள் யாவும் சகலருக்கும் உபயோகமாகக்கூடியதாகவும் சகலருங் கொண்டாடுவதாகவுமிருத்தல்வேண்டும்.

அங்ஙனமின்றி எடுத்தகாரியத்தை திருந்த முடிக்காது குறைந்தழியுமாயின் தனக்கு அதிகக் கஷ்டமுண்டாவதுடன் பொருளும் நஷ்டமுண்டாகிக் கெடும். ஆதலின்எத்தகைய காரியங்களைச் செய்ய முயன்றபோதினும் அவற்றைத் திருந்தச் செய்வதே அழகாகும்.

குமரேசசதகம் – செய்யத்தகாதவை

தானாசரித்துவரு தெய்வமிதுவென்று பொய் சத்தியஞ் செயில் விடாது
தன்வீட்டி லேற்றிய விளக்கென்று முத்தந்தனைக்கொடுத்தா லது சுடும்
ஆனாலு மேலவர் மெத்தவுந் தனதென்றடாதுசெய்யிற் கெடுதியாம்
யானைதான் மெத்தப் பழக்கமானாலுஞ் செய்யாதுசெய்தால்கொன்றிடும்
தீனாதினிதென்று மீதூண் விரும்பினாற்றேக பீடைகளே தரும்
ஜகராஜ ரென்னினு மேலாத காரியஞ் செய்தான் மனம்பொறார்காண்
வாணாடு புகழுமொரு சோணாடழைக்கவே வந்தவதரித்த முதலே
மயிலேறிவிளையாடு குகனேபுல் வயல்நீடுமலைமேவு குமரேசனே.

செய்யத்தகுவனவை இன்னதென்றும், தகாதனவை இன்னதென்றும் விவேகமிகுத்த மேன்மக்களால் வகுத்துள்ளபடியால் ஒவ்வொருவரும் தாங்கள் செய்யவேண்டிய காரியங்களை முன்பின் யோசித்துத் திருந்தச் செய்யவேண்டுமென்பதேயாம்.

50. சேரிடமறிந்துசேர்

இடமறிந்து - இஃது நல்லோரிடமா, அன்று பொல்லாரிடமா வென்றறிந்து,

சேர் - கூடி வாழக்கடவாய் என்பதாம்.

தீயரென்றும், நியாயரென்றும், நல்லோரென்றும், பொல்லாரென்றும் வழங்கும்படியானக் கூட்டத்தோரைக் கண்டாராய்ந்து நல்லோருடன் சேர்தலே நன்மக்களென்பதற்கு ஆதாரமாதலின் தீயோர்களையும், பொய்யர்களையும், வஞ்சகர்களையும், குடிகெடுப்போரையும், பொறாமெயுள்ளோரையும் அடுக்காது,

நியாயர்களையும், அன்பு மிகுத்தோரையும், தன்னவர் அன்னியரென்னும் பேதமற்ற மேன்மக்களையும், ஈகை மிகுத்த தாதாக்களையும், அடுத்து வாழ வேண்டியதே விவேகமிகுக்கக் கோறுவோர் குணமாதலின் சேரிடமறிந்துச் சேரவேண்டியதே சிறப்பாகும்.

நீதிவெண்பா

நிந்தையிலா தூயவரும் நிந்தையரைச்சேரிலவர்ய / நிந்தையது தம்மிடத்தே நிற்குமே-நிந்தைமிகு
தாலநிழற் கீழிருந்தான் றன்பாலருந்திடினும் / பாலதனைச் சொல்லுவரோ பார்.

மக்களை ஒத்த ரூபமுற்றோராயினும் மிருகத்திற்கொற்ற செயல் மிகுத்தோர் மிக்கோராதலின் நல்லோரைக் கண்டிணங்கவேண்டியதும், பொல்லாரைக் கண்டோடவேண்டியதும் புதைப்பொருளாகும்.

நீதிவெண்பா

கொம்புளதற்கைந்து குதிரைக்குப்பத்து முழம் / வெம்பு கரிக்காயிரந்தான் வேண்டுமே-வம்புசெரி
தீங்கிளர்தன் கண்ணிற் றெரியாத தூரத்து / நீங்குவதே நல்லநெறி.

51. சையெனத் திரியேல்

சையென - கியானியென்று உன்னை மெச்சும்படியான வேஷம் பூண்டு, திரியேல் - நீயுலாவாதே என்பதாம்.

பாலி பாஷையில் ஸை என்னு மொழிக்கு ஞானமென்றும், ஸைலமென்னு மொழிக்கு ஞானக்குன்றென்றும், ஸைவமென்னு மொழிக்குத் தன்னை அறிதலென்றும், ஸையோகமென்னு மொழிக்கு ஞானபாக்கியம் அல்லது கியானவதிர்ஷ்டமென்றுங் கூறியுள்ளபடியால் (ஸை) யெனக்கூறும் ஞானவான் போலும், மௌனி போலும் வேஷமிட்டுக் கொண்டு மற்றவர்களை வஞ்சித்தும், பொருள் பரித்து, மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசையற்றவர்போல் நடித்து மூவாசையும் முற்றப்பெருக்கி ஞானியெனத் திரிதல் யதார்த்த ஞானிகளை இழிவுபடுத்துவதற் கேதுவாகத் தோற்றலால் ஸை யெனத் திரியேலென்று சத்திய நிலையை விளக்கியுள்ளாள்.

மேருமந்திர புராணம்

யீற்றிலாராதனை விதியிலேந்தறா / னாற்றலுக்கேற்றவா றன்னபானமும்
சாற்றியவகையினாற் சுருக்கிச் சையமே / லேற்றினான்றன்னைநின்றிலங்குஞ்சிந்தையான்
சித்தமெய் மொழிகளிற் செரிந்துயிர்க் கெலா / மித்திரனாய பின் வேதனாதியி
லொத்தெழு மனத்தனா யுவகையுள்ளுலாயத் / தத்துவத் தினாற் றனுவைவாட்டினான்.

52. சொற் சோர்வுபடேல்

சொல் - ஒருவருக்குச் சொல்லிய வுருதிவாக்கியத்தில், சோர்வு - தவறுதல் வுண்டாகும்படி, படேல் - செய்துக்கொள்ளாதே.

ஒருவருக்குப் பொருளளிப்பேன் வாவென்று கூறியும், அன்னமளிப்பேன் வாவென்று கூறியும், அவன் வந்த பின்பு சொல்லிய சொல் தவருமாயின் மிக்க அவாவால் நாடிவந்தவன் மனதுகுன்றி நாணடைந்து போவான். அவ்வகையா லவன் மனம்குன்றிப் போவதினாலும் அவனுக்குக் கொடுப்பேனென்று சொல்லியவாக்கைச் சொல்லாமலிருப்பது அழகாகும். ஒருவனுக்கு அவா மிக்கச் சொல்லி அச்சொல் சோர்வுபடுமாயின் அதனினும் வாய்ப்பொய் வேறில்லை யெனவுணர்ந்த ஞானத்தாய் தேகசோர்வினும் சொற்சோர்வுபடேலென்று வற்புறுத்திக் கூறியுள்ளாள்.

53. சோம்பித் திரியேல்

சோம்பி - ஒரு தொழிலுஞ் செய்வதற் கியலாதவனாய், திரியேல் - உலாவாதே என்பதாம்.

அதாவது ஓர்தொழிலுக்கு உதவாதவனாகவும், ஓர் வித்தைக்கு உதவாதவனாகவும் சோம்பேறி திரிவானாயின் விவேகிகள் அவனை சீவ அசீவ மிரண்டினுங் கடையாக மதிப்பர்.

மாடு, குதிரை, கழுதையாயினும் சுமைசுமந்தும், வண்டியிழுத்தும், உழவு செய்தும் மக்களுக்கு உபகாரிகளாகும். மண்ணேனும் ஓர் பலனைக் கொடுக்கும், கல்லேனும் ஓர் கட்டிடத்திற்காகும். மரமேனும் நிழலைக் கொடுக்கும். இத்தகையப் பிரயோசனங்கள் யாதுமன்றி மனிதரூபியாய் உலாவுவானாயின், அவனை மனிதனில் மாடு, மனிதனில் கழுதை, மனிதனில் மண், மனிதனில் கல் என்று கூறலாமோ. அவ்வகைக் கூறுதற்கும் ஆதாரமில்லாதவனா யிருக்கின்றான். ஆதலின் சகலவற்றினுங் கடையனென்றே கழிக்கப்படுவதினும் ஓர் தொழிலைப் பற்றுவதே அழகெனக் கண்ட ஞானத்தாய் சோம்பித்திரியே லெனக் கூறியுள்ளாள்.

விவேகசிந்தாமணி

கருதியநூல் கல்லாதான் கசடனாகும் / கணக்கறிந்து பேசாதான் மூடனாகும்
ஒருதொழிலு மில்லாதான் முகடியாகும் / வொன்றுக்கு முதவாதான் சோம்பனாகும்
பெரியோர்கண்முன்னின்றுமரத்தைப்போல / பேசாம லிருப்பவனே பேயனாகும்
பரிவுசொல்லி தழுவுபவன் பசப்பனாகும் / பசிப்பவருக் கிட்டுண்ணான் பாவியாமே.

54. தக்கோனெனத்திரு

தக்கோன் - எடுக்குங்காரியங்களை முடிக்கத்தக்கவன், என - சொல்லும்படியாக, இரு - நீ வீற்றிருக்கக்கடவா யென்பதாம்.

ஓர் சபையில் எழுந்து பேசுவதற்குத்தக்கவன், ஓர் சுபகாரியாதிகளை முடிப்பதற்குக் தக்கவன், நீதிநெறிகளைப் போதிப்பதற்குத் தக்கவன், நடுநிலையிலும், நியாயவாயலிலும் பேசுவதற்குத் தக்கவன், எடுத்தகாரியங்களை எவ்விதத்திலும் முடிக்கத்தக்கவனென்று பலருஞ் சொல்லும்படியாக வீற்றிருப்பானாயின் அவனைக்கொண்டே சகல சீர்திருத்தங்களை முடித்துக் கொள்வதுடன் மற்றவர்களும் தக்கவனென்றுமேறை நடந்து சுகம் பெறுவார்கள்.

திரிக்குறள்

தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச் / செற்றார் செயக்கிடந்த தில்.

55. தானமது விரும்பு

தானம் - யீகையாம், அது - அச்செயலை, விரும்பு - நீ ஆசைக்கொள்ளு.

அன்புமிகுத்தோரிடத்து ஈகை மிகுத்து இருப்பது இயல்பாதலின், ஈகையிருக்கும் இதக்கத்தால் எல்லா சுகமுந் தோன்றுமென்பது துணிபு.

இத்தகைய தானத்துள் உத்தமதானமென்றும், மத்திம தானமென்றும், அதம தானமென்றும் மூவகைப்படும்.

இவற்றுள் உத்தம தானமாவது மெய்ப்பொருளை விரும்பும் மேன்மக்களாகவும், முக்குற்றங்களை அகற்றும் மூதறிவாளராகவும் விளங்குவோரைக் கண்டு அவர்கள் எடுத்துள்ள முயற்சியை முடிக்கத்தக்க உதவியாம் தானஞ்செய்துவருதலே உத்தமதான மென்னப்படும்.

முன்கலைதிவாகரம்

அறத்தினாற்றியவரும் பெரும்பொருளை / புறத்துறைக்குற்ற மூன்றறுத்த நற்றவற்கு
கொள்கெனப் பணிந்து குறையிரந்தவர்வயி / னுள்ள முவந்தீவ துத்தம தானம்.

திக்கற்று மிக்க மெலிந்த ஏழைகளுக்கும், குருடர்களுக்கும், ஊமைகளுக்கும், தொழில் செய்ய சக்தியற்ற அங்கவீனருக்கும், செவிடர் களுக்கும் ஈவது மத்திமதான மென்னப்படும்.

ஆதுலர்க்கந்தகரூ ம குறுப்பிலிகள் / செவிடர்க்கீவது மத்திமதானம்.

சகலருமறியக் கூச்சலிட்டளிப்பதும், கீர்த்தியாம் புகழ் வேண்டுமென் றளிப்பதும், நம்மெய் லோபி என்று சொல்லுவார்களென பயந்தளிப்பதும், ஒருபலனைக் கருதியளிப்பதும், பிரபுவென்று பலர் சொல்லும்படி அளிப்பதும், பார்ப்போர் மெச்சும்படி அளிப்பதும், ஒருவர் கேட்டுக்கொண்டதின் பேரிலளிப்பதும் அதமதானமென்று கூறப்படும்.

ஆர்வம், புகழே, யச்சங், கைம்மாறு, காரணங், கண்ணோட்டம்,
கடப்பாடென்றி வை ஏழுங் கடைபடு வதமதானம்.

இத்தகைய மூவகை தானத்தில் உலக சீர்திருத்தத்திற்கும், மக்கள் சீர்திருத்தத்திற்கும் ஆதியாக விளங்கி புலன் தென்படநோக்கும் தென்புலத்தோராகும் சமணமுநிவர்களுக்கு ஈவதே உத்தமதானமாதலின் அதன் சாதனங்களா லுணர்ந்த ஔவையும் தானமது விரும்பு என்று வற்புறுத்திக் கூறியுள்ளாள்.

திரிக்குறள்

தென்புலத்தார் தெய்வம் விருந்தோக்கறா னென்றாங் / கைம்புலத்தா றோம் பறலை.

இஸ்காந்தம்

துறந்தவர்கள் வேண்டியதோர் துப்புரவுநல்கி / யிறந்தவர்கள் காமுறு மிருகங்கடனியற்றி
அறம்பலவுமாற்றி விருந்தோம்புமுறையல்லாற் / பிறந்தநெறியா லுளதோர் பேருதவி யாதோ.

56. திருமாலுக் கடிமைசெய்

திரு - மனுமக்களுட் சிறந்த, மால் - புத்தபிரானின், அடிமை - பாத தூளி யென்றிரஞ்சி, செய் - துதிசெய்யுமென்பதாம். தன்மச்சக்கரப் பிரவர்த்தன் என உலகெங்கும் வட்டமிட்டு அறவாழியை உருட்டியது கொண்டு மால் என்னும் பெயர்பெற்ற புத்தபிரானின் பாததூளியென்றெண்ணி சங்கத்தோர் களையே சங்கறனெனப் பாவித்து சங்க தருமத்தையே சிந்தித்து பற்றறுக்க

வேண்டு மென்னுங் கருத்தால் பற்றற்றானுக்கு அடிமையாக வேண்டும் என்பது கருத்து.

சீவகசிந்தாமணி

மலரேந்து சேவடிய மாலென்ப மாலா / லலரேந்தி யஞ்சலி செய் தஞ்சப் படுவா
னலரேந்தி யஞ்சலி செய் தஞ்சப் படுமே / லிலரே மல ரெனினு மேத்தாவா றென்னே.

சூளாமணி

கருமாலை வெவ்வினைகள் காரளரநூறிக்
கடையிலா வொண் ஞானக் கதிர்விரித்தாயென்று
மருமாலை நன்னெறியை முன்பயந்தா யென்று
மடியே முன்னடி பரவு மாறறிவதல்லாற்
றிருமா லேதேனாரு மறுவிந்த மேந்துந்
திருவணங்கு சேவடியாய் தேவாதி தேவ
பெருமானே நின்பெருமெய் நன்குணரமாட்டா
பிணங்குவார் தம்மெய் வினைபிணக் கொழிக்கலாமே.

இத்தகையாய் புத்தபிரானைத் திருமால் என்று சிந்தித்திருப்பது மன்றி பின்கலை நூலாகும் நிகண்டில் காப்புக்கு முன்னெடுக்குங் கடவுள்தான் மாலே யாகுமென்று கூறியுள்ள விதியின்படி புத்தபிரானை கண நாயகரென்றும், விநாயக ரென்றும் சகல நூலாக்கியோன்களுந் தங்கடங்கள் நூற்களின் காப்பில் சிந்தித்திருக்கின்றார்கள். இதினந்தரார்த்தம் உணராமலே சிந்தித்தும் வருகின்றார்கள்.

தேவரென்போர் யாவருக்கும் வழிகாட்டியும், ஆதிதேவனுமாக சிறந்திருந்தபடியால் நாயனார் திரிக்குறளுக்குச் சாற்றுக்கவி கொடுத்துள்ள புத்த சங்கத்தோராகும் கவிசேகர பெருந் தேவனார் "தேவிற் றிருமாலெனச்" சிறந்த தென்னுந் திருவாக்கினாலும் திருமாலென்னும் பெயர் புத்தருக் குரிய சகஸ்திர நாமங்களில் ஒன்றென்றறிந்துள்ள ஞானத்தாய் தனது ஞானகுருவாம் திருமாலுக் கடிமைசெய்யென்று திருந்தக் கூறியுள்ளாள்.

57. தீவினையகற்று

தீய - கொடிய, வினை - செயலை, அகற்று - இதயத்திற் பதியவிடாது நீக்கு மென்பதாம்.

பொய்யைச் சொல்லி வஞ்சிப்பதும், அன்னியர் பொருளை அபகரிப்பதும், பிறர் மனையாளை இச்சிப்பதும், சீவப்பிராணிகளை வதைப்பதும், மதி கெடுக்கும் பானங்களைக் குடிப்பதும் ஆகிய தீவினைகளாம் பஞ்சமா பாதகங்களை அகற்றவேண்டும் என்பது கருத்து.

திரிக்குறள்

வினைக்கண் விளைகெட லோம்பல் வினைக்குறை / தீர்ந்தாரிற் றீந்தன் றுலகு.

சீவகசிந்தாமணி

அளைவதுகாம மடுநறவு நெய்யொழுகு மூனும்பின்னும்
விளைவது தீவினையே கண்டீ ரிவை மூன் முன்விடுமினென்றாற்
றளையுவிழ் கோதையார் தாமஞ்சேர் வெம்முலைபோல் வீங்கிக் கண்சேந்
துளையவுறுதி யுரைப் பாரையோபாவமுணராரே சாண்.

இத்தகையத் தீவினைகள்ஒழிந்தவிடத்து ஞானச்சுடர் விளங்குவதை அநுபவங்கொண்டு அறவாழியான் போதித்துள்ளபடியால் அவரது போதனையைப் பின்பற்றிய புத்தசங்கத்தோரும் தங்கள் தியானங்களில் விளக்கியுள்ளார்கள்.

சூளாமணி

விண்டாங்கு வெவ்வினை வெருவுதிரநூறி
விரிகின்றமெய்ஞ்ஞானச் சுடர்விளக்கு மாட்டிக்
கண்டார்க ணின்னில மெய்க்கண்டொழு கயானின்
கதிர்மயங்கு சோதியாற் கண்விளக்கப்பட்டுத்
தண்டாஅமரைமலரின் மேனடைந்தாயென்றுந்
தமனீயப் பொன்னணையின் மேலமர்ந்தாயென்றும்
வண்டாரசோகினிழல் வாயமர்ந்தாயென்றும்
வாழ்த்தினால் வாராயோ வானவர்தன் கோவே.

58. துன்பத்திற் கிடங்கொடேல்

துன்பத்திற்கு - உபத்திரவமுண்டாவதற்காய, இடம் - ஆதரவை, கொடேல் - நீ எக்காலுங் கொடாதே யென்பதாம்.

அதாவது, சூதாட்டத்திற்கு இடங்கொடுத்தலுந் துன்பம், கொலைபாதகனுக்கு இடங்கொடுத்தலுந் துன்பம், கள்ளருந்துங் களியாட்டலுக்கு இடங்கொடுத்தலுந் துன்பம், வியபசாரிகளுக்கு வீடு கொடுத்துவைத்தலுந் துன்பம், பொய்யைச்சொல்லித் திரிபவனென்றுணர்ந்தும் அவனுக்கிடங்கொடுத்தலுந் துன்பம்,

சூதாட்டம், கட்குடி, வியபசாரம், திருட்டு, பொய், கொலை முதலிய ஈனச்செயலை உடையார்க்கு இடங்கொடுத்தல் கேடுண்டென்பதை உலக வழக்கப் பழமொழியால் ஈனனுக்கு இடம் கொடுத்தால் இல்விடம் பாழென்பதையுந் தெரிந்துக்கொள்ளலாம்.

ஈனச்செயலை உடையார்க்கு இல்லிடங்கொடுப்பின் அதிகாரிகளால் அவர்களுக்குந் துன்பம், இல்லங்கொடுப்பவனுக்குந் துன்பம் உண்டாவது நிட்சயமாதலின் துன்பத்தை உண்டுசெய்யுஞ் செயலுக்கு யிடங்கொடேலென்று வற்புறுத்தியுள்ளாள்.

காக்கை பாடியம்

வானவர்க் கரசன் வாய்மை யுணர்ந்து / யீனச்செயலுக் கிடந்தரா தகற்றி
மோனவரம்பி லுற்று நிலைத்து / ஞானத்தானம் நல்குவரன்றே

59. தூக்கிவினைசெய்

தூக்கி - சீர்தூக்கி, வினை - ஒவ்வோர் தொழிலையும், செய் - நீ செய்யக்கடவாய் என்பதாம்.

நீ செய்யப்படும் ஒவ்வோர் தொழிலையும் சீர்தூக்கி நிதானித்துச் செய்யவேண்டு மென்பதாம்.

குறுந்திரட்டு

ஆராய்ந்து செய்பவனே யறிவுள்ளோனாம் / அடக்கமறிந்தடைபவனே யருளுள்ளோனாம்
பூராயம் பேசுபவன் பொறியற்றோனாம் / பொய்கூறு நாவுடையோன் புழுவுற்றானாம்
பேராயக் கீர்த்தியது வேண்டுமென்போன் / புவனத்து பேடியெனப் போற்றுவோனாம்
தீராத வினைகடக்குந் தெப்பங்கொண்டு / திறைகடலைக் கடப்பவனே தீரனாமே.

60. தெய்வமிகழேல்

தெய்வம் - தேய்வகமாம் உள்ளொளி கண்டோரை, யிகழேல் - நீ தாழ்வு செய்யாதே என்பதாம்.

அதாவது, மக்களென்னும் ஆறாவது தோற்றத்திற்கு மேலாம், ஏழாவது தோற்றமென்னும் தெய்வமென்போனை, ஆறாவதுதோற்றமான மநுகுலத்தோன் இகழ்வானாயின், அக்கொடுமொழியால் உள்ளக் களிம்பாம் வஞ்சகமிகுத்து தாழ்ந்த பிறவிக்கேகி தவிப்பானென்பது கருத்து.

மநுமக்களுள் இராகத்துவேஷ மோகமென்னும் முக்குற்றங்களைக் கழற்றி பாசபந்தப் பற்றுக்களை அறுத்து நித்திய சீவனாம் நிருவாணம்பெற்று தேவனென்றும், தெய்வமென்றும் பெயர் பெற்றோனின் ஞானசாதன சிறப்பையும், அவனது பற்றற்ற முயற்சியையுங் கண்டு புகழ்ச்சி செய்வதைவிட்டு இகழ்ச்சிசெய்வானாயின் அவனை மநுபிறவி என்னாது தாழ்ந்த மிருகபிறவி என்றே கூறத்தகும்.

மக்கள் தோற்றங் கடந்து தெய்வ தோற்றம் அடைதல்.

சீவகசிந்தாமணி

ஊன்சுவைத் துடம்புவீக்கி நரகத்திலுரை தனன்றோ
வூன்றினா துடம்புவாட்டி தேவார யுரைத நன்றோ
வூன்றியிவ் விரண்டினுள்ளு முறுதிநீயுரைத்திடென்ன
வூன்றினா தொழிந்துபுத்தே வாவதே யுறுதியென்றான்.

விவேகசிந்தாமணி

ஆசாரஞ்செய்வாராகி லறிவொடு புகழுமுண்டாம்
ஆசார நன்மையானா லவனியிற் றேவராவர்

அசாரஞ்செய்யாராகி லறிவொடு புகழுமற்று
பேசார்போற் பேச்சுமாகி பிணியொடு நரகில் வீழ்வார்.

இவற்றுள் மெய்த்தேவர்களென்றும், பொய்த்தேவர்களென்றும் இருவகை பேதமுண்டு. அவர்களுள், மக்களென சீலமிகுத்து ஒழுக்கத்தினின்று விவேகமிகுத்தோர்களை சருவ மக்களுந் தேவர்களென்று கொண்டாடி வருவதியல்பாகும் இவர்களே மெய்த் தேவர்களாவர்.

பொய்வேதப் புலம்பலாலும், பொய்ப்புராணக் கட்டுக்கதைகளாலும், ஆகாயத்தினின்று பூமியில் வந்து தோன்றினாரென்னும் பொய்த்தேவக்கதை களையும் ஆகாயத்திலிருந்த தேவர் பெண் வயிற்றிற் பிறந்தாரென்னும், பொய்தேவக் கதைகளையும், அவனைக்கொல்ல அவதரித்தான், இவனைக் கொல்ல அவதரித்தானென்னும் பொய்தேவர்களையும், அந்த மதத்தைக் கண்டிக்க அவதரித்தான், இந்த மதத்தைக் கண்டிக்க அவதரித்தா னென்னும் பொய் தேவர்களையும், விசாரணைப் புருஷர் இழிவு கூறுவதில் ஓரிடுக்கணுமில்லை, புகழ்ச்சி செய்வதால் ஓர் பிரயோசனமுமில்லை.

மக்களினின்று தேவரெனத் தோன்றியவர்கள் பிறப்பிறப்பற்று மறுபடியுங் கருவில்வந்து தோன்றார்களென்பது சத்தியமாம்.

சீவகசிந்தாமணி - தேவர்கள் லட்சணம்

திருவிற் பொற்குலத்திற் றேர்ந்த தேவர்தன் தண்மெய் செப்பிற்
கருவற்று சென்று தோன்றார் கானிலந் தோய்தல் செல்லா
ருருவமே லெழு தலாகா வொளியுமிழ்ந் திலகுமேனி
பருதியி னியன்றதொக்கும் பன்மலர் கண்ணிவாடா.

பொய்க்குருக்களின் கற்பனா வேதங்களிலும் புராணங்களிலும் வரைந்துள்ள பொய்த் தேவர்கள் கதைகளிலும், அவர்கள் நம்பிக்கைகளையும் ஒழித்து மெய்த் தேவர்களும், எக்காலுந் தோற்றக்கூடிய ஏழாவது தோற்ற முடையவர்களுமாகிய மகா ஞானிகளை இகழலாகா தென்னும் பெரு நோக்கங் கொண்டு தெய்வமிகழேலென்னுந் தெளிவுபடக் கூறியுள்ளாள்.

சொரூபசாரம்

எங்கும் பொதுவா யிருக்குமொரு சீவன்முத்தர் / தங்கு மிடந்தானே தலவாச-மங்கவர்கள்
பார்வையே தீர்த்தமவர் பாதார விந்தமலர்ச் / சேவையே சாயுச்சியம்.

61. தேசத்தோடொத்துவாழ்

தேசத்தோடு -தேசத்துள்ளோர் சீலத்துடனும் ஒழுக்கத்துடனும், ஒத்து - மனமுவந்து, வாழ் - நீவாழக் கடவாய் என்பதாம்.

அதாவது, தேகத்துடன், ஒத்துவாழ்தலும் தேசத்துடன் ஒத்துவாழ்தலும், ஒரு பொருளைத் தரும். தேகத்துடன் ஒத்துவாழ்தலாவது மிகு புசிப்பால் மந்தவேதனையுண்டு, மிகு போகத்தால் தாதுகெட்டு நஞ்சடைதலுண்டு, மிகு அவாவால் பெருந்துக்கமுண்டு, இவற்றை நிதானித்து மிதபுசிப்பு, மித போகம், மித அவாவினின்று வாழ்தலே தேகத்தோ டொத்துவாழ்த லென்னப்படும்.

அவைபோல், தேசத்தோருக்குள்ள பொய்யாவிரத சீலத்திலும், கொல்லாவிரத சீலத்திலும் களவாவிரத சீலத்திலும் காமமிகா விரத சீலத்திலும், மதுவால் மயங்காவிரத சீலத்திலும் ஒத்து வாழ்க வேண்டுமென்பது கருத்தாம்.

இத்தகைய பஞ்சசீலத்தோருடன் ஒத்து வாழாது பஞ்சபாதகச் செயலாம் சீலங்கெட்டு ஒத்து வாழ்வானாயின் சீலமிகுத்தோர் யாவரும் சீ சீ என்றிகழ்ந்து சேரவிடாது அகற்றுவார்கள்.

அத்தகைய வாழ்க்கைத் துணையற்று வாழ்வதினும் மடிவது மேலாம்.

இத்தகைய சீலத்தோருடன் ஒத்துவாழ்க வேண்டுமென்பது அம்மன் கருத்தேயன்றி நீதிநெறி கெட்டு அவன் பெரிய சாதி, இவன் சிறிய சாதியென்போருடனும் அவன் சாமி பெரியசாமி, இவன் சாமி சின்ன சாமியென்போருடனும் ஒத்துவாழ்க வேண்டுமென்னுங் கருத்தன்று. நீதியும் நெறியுமற்ற தேசம் ஒருகாலும் சீரும், சிறப்புமடையப் போகிறதில்லை. ஆதலின் சீலமாம் நீதிநெறியமைந்த தேசத்தோருடன் ஒத்து வாழ்க வேண்டுமென்பது துணிபு.

பழமொழி விளக்கம்

தேரோடு மணிவீதி தண்டலையார்த்திருவமைந்த தேசமெல்லாம்
பேரோடும் புகழ்படைத்த வீராதிவீரனெனும் பெரியோனெனும்
நேரோடும் உலகத்தோ டொன்றுபட்டு நடப்பதுவே நீதியாகும்
ஊரோடு வுடனோடி நாடோட நடுவோடலுறுதிதானே.

நீதிநெறியாம் நேர்வழியில் ஊரோட வுடனோடலும், நாடோடநடுவோடலும் சுகநிலையுறுதி தருவதாகும்.

62. தையல் சொற்கேளேல்

தையல் - கொடூரமாம், சொல் - வார்த்தைகளை, கேளேல் - செவி கொடாதே என்பதாம்.

எதிரியால் உன்னைத் தைக்கக்கூறு மொழிக்கு, செவி கொடுப்பாயாயின் கோபமீண்டு அவனுடன் போர்செய்ய நேரும். அதனால் துக்கம் பெருகும். ஆதலின் எதிரி தையல் சொற்களுக்கு செவி கொடாதிருக்க வேண்டுமென்பது கருத்து.

அதாவது, குத்திக்குற்றி யிழுக்குங் கொடூரச் செயலுக்குத் தைத்தலென்றும், பனியின் கொடூரத்தால் இலையுதிரும் மாதத்திற்குத் தைமாதமென்றும்; கொடூர நெய் கலந்த வஸ்துக்களுக்குத் தைலமென்றும், புண்பட யிதயத்தில் தைக்கக்கூறும் கொடூர வார்த்தைக்குத் தையல் மொழியென்றுங் கூறப்படும்.

அன்னியனாற் புண்படக்கூறுந் தையல் மொழியாங் கொடூர வார்த்தையை செவியிற் கேட்டவுடன் கோபமீறும். அக்கோபத்தால் ஒருவருக்கொருவர் கைகலக்குந் தையலுண்டாம். அத்தையலால் துன்பம் பெருகிமாளா துக்கத்திற்கு ஆளாக்கிவிடும். ஆதலின் எதிரிகளாற் கூறுங்கொடூர சொற்களை கேளாதிருப்பதே சுகமென்றறிந்த ஞானத்தாய் தையல் சொற்கேளேலென்று வற்புறுத்திக் கூறியுள்ளாள்.

63. தொன்மெய்மறவேல்

தொன் - பூர்வ, மெய் - தேகிகளாம் பழமெயாங் குடும்பத்தோரை, மறவேல் - என்றும் மறவாதே என்பதாம்.

வாழையடி வாழைபோல் தொன்றுதொட்டு தோன்றிவரும் பழமெய் தங்கியக் குடும்பத்தோரை மறவாதிருக்க வேண்டுமென்பது கருத்து.

தொன்றுதொட்டு வழங்கிவரும் பூர்வ குடும்பத்தோரை மறவாமலிருப்பதினா லுண்டாகும் விருத்தியும், மறப்பதினா லுண்டாகுங் கேடும் யாதென்பீரேல்:-

தொன்மெய் மறவாச் செயலால் குடும்பம் விருத்திடைந்து அவர்களுக்குள் விவேக விருத்தியடைந்தோர் சார்பால் முன் குடும்பத்தோர் சுகவிருத்தியும், ஞானமும் பெறுவதுடன் பின்குடும்பத்தோரும் விருத்தியினின்று சுகவாழ்க்கைப் பெறுவார்கள்.

தொன்மெயாம் பூர்வ சுற்றத்தோரை மறந்து பற்றற்றவரைப்போல் நடித்தல் முன் குடும்பத்தோர் தோற்றமும், சேர்க்கையும் மறைந்துபோவதுடன் பின்சந்ததிகளும் விருத்தியின்றி பாழடைந்துபோம்.

திரிக்குறள்

பற்றற்றே மென்பார் படிற்றொழுக்கமெற்றென்ன / றேதம் பலவுந் தரும்.

64. தோற்பனை தொடரேல்

தோற்பனை - உன்னால் முறியடிக்கப்பட்டோனை, தொடரேல் - பின்பற்றிச்செல்லாதே யென்பதாம்.

வில்லால்தோற்றவனுக்கும், வித்தையால்தோற்றவனுக்கும் உள்ள விரோதம் எதிரியை யெவ்வகையேனும் ஜெயிக்குமளவும் உள்ளனவாதலின் அத்தகைய தோற்பனைத் தொடர்ந்து செல்லுவதினால் எத்தகையுந் துன்பமுண்டாமென்றுணர்ந்த ஞானத்தாய் தோற்பனைத்தொடரேலென்று வற்புறுத்திக் கூறியுள்ளாள்.

இவற்றுள் (தோற்பன தொடரே) லென்னும் பாடபேதமுமுண்டு. தோற்றவியாஜியத்தை தொடர்ந்தும் ஜெயித்ததனந்தமுண்டு. தோற்றயுத்தத்தை

விடாமுயற்சியால் தொடுத்து ஜெயித்த யுத்தங்களும் அனந்தமுண்டு.

ஆதலின் தோற்பனைதொடரேலென்னும் வாசகமேயன்றி தோற்பன தொடரேலென்னும் வாசகமன்று.

ஓர் வியாஜியத்திலேனும், யுத்தத்திலேனும் வாக்குவாதத்திலேனும், சுபஜெயமடைந்தோனின் உள்ள வஞ்சினத்தையும் பொறாமெயையுமுணராது மித்துரு வென்றெண்ணி தோற்றவனைத் தொடர்வதாயின் கேடுண்டென்பது கருத்தாம்.

65. நன்மெய்க் கடைபிடி

நன் - நல்ல, மெய் - தேகி, நற்றேகி, நல்லவன் என உலகோர் சொல்லுஞ் செயலை, கடைபிடி - முடிவாய பாக்கியமென்று பற்று மென்பதாம்.

உலகத்தோரால் நல் அவன், நன்மார்க்கன், நற்குலத்தோன், நற்புத்திரன், என்று செல்லுவதற் கேதுவாம் நன்மெய்யைத் தோற்றிவைப்பான்வேண்டி நன்மெய்க்கடைபிடியென்று இரண்டாவது பேதவாக்கியத்தைக் கூறியுள்ளாள். அதாவது, பொய்சொல்லாமெய், பிறர்மனை நயவாமெய், களவுசெய்யாமெய், கள்ளருந்தாமெய், கொலைசெய்யாமெய், ஆகிய சுத்ததேகிகளாக வாழ்தலே நன்மெய்க் கடைபிடித்தலென்று கூறத்தகும்.

நல்வாய்மெய், நல்லுரக்கம், நற்காட்சியுடைய நன்மெயாம் சுத்ததேகியாக வாழ்தலே நிருவாணத்தின் சுருக்கபாதையுமாகும்.

66. நாடொப்பன செய்

நாட்டோர் - நஞ்சை புஞ்சை பூமியின் செயலுக்குரியோர், ஒப்ப - அவர்கள் சம்மதிக்கும்படியான செயலை, செய் - நீ செய்யக்கடவாய் என்பதாம்.

அதாவது நாடென்றும், நகரமென்றும் பிரித்துள்ள இருவகுப்பாருக்குள், நகரவாசிகள் யாவரும் அரசனது செங்கோலுக்குள் அடங்கிவாழ்தல்போல் நாட்டுவாசிகள் யாவரும் வேளாளத் தொழிலாம் ஏறடிக்குங்கோலுக்கு ஒப்பி வாழ்கவேண்டுமென்பது கருத்தாம்.

அஃது யாதென்பீரேல், பூமியை உழுதுண்போனாம் வேளாளனுக்கு ஏறும், மாடும் இல்லாவிடில் மற்றவனிடம் ஒப்பி உதவிபுரிதலும், நீர் வாய்க்காலின் ஒழுங்குகளை ஒருவன் பூமிக்குப் பாய்ந்தபின் மற்றவன் பூமிக்கு ஒப்பிப் பாயவிடுதலும் ஆகிய சருவ மேழிச்செயலையுங் கோழைப்படாது செய்தற்கு நாடொப்பச் செய்தலே நலமாகும்.

நாடொப்பாது ஒருவன் ஏறிக்கால் நீர் பாய்ச்சுமுன் மற்றொருவன் பாய்ச்சுதலும், ஒருவன் மேழிமுடியுமுன் மற்றொருவன் ஏறைப் பறித்தலுமாகிய ஒப்பாச்செயலைச் செய்தல் நாட்டுக்குக் கேட்டை விளைவிக்குஞ் செயலாதலின் உழவோராம், நாட்டோர் நாடொப்பனச் செயல் வேண்டுமென அம்மன் வற்புறுத்திக் கூறியுள்ளாள்.

67. நிலையிற் பிரியேல்

நிலையில் - கியானவிழிப்பினின்று, பிரியேல் - நீ நழுவாதே என்பதாம்.

அதாவது தோற்றும் பொருட்கள் யாவும் கெடுவது இயல்பாதலின் அத்தோற்ற நிலையிலும் அதன் அவா நிலையிலும் நில்லாது உண்மெய் உணருந் சுழிமுனை நிலையைப் பிரியேலென்பது கருத்தாம். குருவருளாற் காட்டிடுநிலையும் அந்நிலையேயாம்.

அகஸ்தியர்

விழித்துமிக பார்த்திடவே பொறிதான் வீசும் முச்சந்திவீதியிலே தீபந்தோன்றும்
சுழித்தியிலேபோகாது வொருமனதாய் நின்றால் சுத்தமென்ற நாதவொலிக் காதிற்கேழ்க்கும்
இழுத்ததென்று நீகூடத்தொடர்ந்தாயானால் எண்ணெண்ணா பிறப்பிறப்பு எய்தும் பாரும்
அழுத்திமன கேசரத்தில் நின்று மைந்தா அப்பனே லலாடத்தில் தூங்கு வாயே.

ஞானக்குறள்

ஈரொளி யீதென நிறைவ னுரைத்தனன் / நீரொளி மீது நிலை.
மயிர்முனையிற் பாதி மனத்தறி வுண்டேல் / அயிர்ப்புண்டங் காதி நிலை.

அழியும் நிலையைப்பற்றி நிற்பது அழுகைக்கும் பற்கடிப்பிற்கும் ஆதாரமாதலின், அத்தகைய துக்கத்தை யகற்றுவான் வேண்டி அழியா நிலையாம் உள்விழிநோக்க நிலையிற் பிரியேலென்று கூறியுள்ளாள்.

68. நீர்விளை யாடேல்

நீர் விளையாட்டு - பங்குனி பருவ நீர் விளையாட்டை, ஆடேல் - நீ விளையாடாதே யென்பதாம்.

அதாவது பூர்வ காலத்தில் சித்தார்த்தியார் காமனையுங் காலனையும் வென்ற பங்குனிமாத பருவத்தில் பௌத்தவரசர்களும், குடிகளும் ஒன்றுகூடி பெண்களும் புருடரும் நீர்விளையாடுவதும் காமன் பண்டிகைக் கொண்டாடுவதும் வழக்கமாகும்.

அத்தகைய விளையாட்டினால் மதிமயங்கி பெண்களின் கற்பு நிலை தவறுதலும், புருஷர்கள் பஞ்சவிரதங் கெடுதலுமாகிய நீர் விளையாட்டை சத்திய சங்கத்தோர் தடுத்துள்ளது மன்றி அம்மனும் அவ்விளையாட்டைக் கண்டித்திருக்கின்றாள்.

அது கண்டே சருவதேச பௌத்தர்களும் நீர்விளையாட்டை நீக்கிவிட்ட போதினும் மார்வாடிகளும் குஜிராத்தியர் மட்டிலும் பெண்களை நீக்கி புருஷர்கள் அந்நீர் விளையாட்டை நாளது வரையில் விளையாடி வருகின்றார்கள். பூர்வம் புருஷர்களும் பெண்களும் அந்நீர் விளையாடுவதனால் உண்டாகுங் கேடுகளை யுணர்ந்த ஞானத்தாய் நீர்விளையாடேலென்று காமன் விழாவையே கண்டித்திருக்கின்றாள்.

சீவகசிந்தாமணி

காசறு துறவின் மக்க டவுளர் சிந்தைபோல / மாசறு விசும்பின் வெய்யோன் வடதிசை யயனமுன்னி
யாசற நடக்குநாளு மைங்கணைக் கிழவன்வைகி / பாசறைப் பரிவு தீர்க்கும் பங்குனி பருவஞ் செய்தான்.

முழவங்கண் டுயிலாத முதுநகர் / விழவுநீர் விளையாட்டு விருப்பினாற்
றொழுவிற் றோன்றிய தோமரு கேவலக் / கிழவன் முதெயில் போற்கிளர்வுற்றதே.

இன்று நீர் விளையாட்டினு ளேந்திழை / தொன்று சுன்னத்திற் றோன்றிய வேறுபா
டின்றென் னாவிக்கோர் கூற்றமென்மெயா / நின்று நீலக்கணித்திலஞ் சிந்தினாள்.

சீராவச் சிலம்பேந்து மென்சீரடி / யாராவக் கழலாட வரோடும்
பேராவக் களம்போன்று பொன்றார்புன / னீராவும் விளைத்தார் நிகரில்லார்.

கார்விளையாடிய மின்னனை யார்கதிர் / வார்விளையாடிய மென்முலை மைந்தர்
தார்விளையாட்டொடு தங்குபு பொங்கிய / நீர்விளையாட்டணி நின்றதை யன்றே.

69. நுண்மெய் நழுவேல்

நுண் - நுட்பத்திலறியும் விவேகமிகுத்த, மெய் - தேகியெனத் தோன்றி, நழுவேல் - அதினின்று கேடடையாதே என்பதாம்.

நுட்பத்தில் அறிந்து கொள்ளக்கூடிய விவேகமும் நுண்ணிதில் ஆய்ந்து உணரக்கூடிய விசாரணை மிகுதியிலிருந்து நழுவி விவேகமற்றோன், விசாரணை யற்றோன் என்பதாயின் முன்தேக தோற்ற சிறப்புக் கெடும். ஆதலின் நுண்ணிய அறிவை மேலும் மேலும் விருத்தி செய்ய வேண்டுமேயன்றி அவற்றினின்று நழுவேல் என்பது கருத்தாம்.

இவற்றுள் தற்காலம் அச்சிட்டுள்ளப் புத்தகங்களில் நுண்மை நுகரேல் எனும் வாசக பாடபேதமும் ம-அ-அ-ஸ்ரீ மார்க்கலிங்க பண்டாரமவர்கள் ஏட்டுப்பிரிதியிலும் ம-அ-அ-ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளை மாணாக்கர் கோவிந்தப்பிள்ளையவர்கள் ஏட்டுப்பிரிதியிலும் (நுண்மெய் நழுவேல்) எனும் வாசகபாடபேதமும் உள்ளதுகண்டு உசாவுங்கால் நுண்மைநுகரேல் எனும் வாசகஞ் சிதைந்துள்ளதன்றி சகல தேச மக்களுக்கும் பொருந்தா பொருளுள்ளதால் நுண்மெய் நழுவேல் எனும் சகல மக்களுக்கும் பொருந்தும் வாசகத்தை வெளியிட்டுள்ளோம்.

அதாவது உலகெங்குமுள்ள மக்கள் சிறுதிண்டியே பெரும்பாலும் உண்பது சுவாபமாகும். நமது தென்னிந்தியவாசிகளோ துட்டை யிருகப்பிடித்துக்கொண்டு பெருந்திண்டியும் சரிவரப் புசியாமல் சோமவார

விரதம், மங்களவார விரதம், சுக்கிரவாரவிரதம், சனிவாரவிரதமென ஒடுக்குவது இவர்கள் சுவாபமாகும்.

ஆதலின் சகலமக்களுக்கும் பொதுவாய் ஓதியுள்ள சத்தியதன்மத்தை பணஞ் சம்பாதிக்க வித்தையற்றவர்களும், புசிக்கப் பணச்சிலவுசெய்ய மனம்வராதவர்களுமாகி சிலரது கருத்துக்கு இசைந்து பலருக்குள்ளப் பெரும்பலனைக்கெடுப்பது பாழ்வினைமுதலெனக் கண்டு நுண்மெய் நழுவேல் என்னும் சகல மக்கள் சுகத்தையே இவண் நோக்கிக் கூறியுள்ளோம்.

70. நூற்கலை கல்

நூற்கலை - அறிவை வளர்க்குங் கலைநூற்களை, கல் - நீ வாசிக்கக் கடவாய் என்பதாம்.

அதாவது காம, வெகுளி, மயக்கங்களைப் பெருக்கக்கூடிய பலவகைநூற்களிருக்கின்றபடியால் அவற்றை கண்ணோக்காமலும், கற்காமலும் அறிவை விருத்திசெய்யக்கூடியக் கலைநூற்களையே கற்கவேண்டுமென்பது கருத்தாம்.

காக்கைபாடியம்

பலநூல் கற்றுப் பாழடைவதினுங் / கலைநூற் கற்று காட்சி வடிவாஞ்
சிலைநுதற் காம சேட்டை யகற்றி / யுலகமவர்மாட் டென்னலு முவப்பே.

கலைநூற்கள் என்பவற்றுள் அறுபத்தி நான்குவகைகளுண்டு. அதாவது அட்சர லட்சணங்களையும், மொழிலட்சணங்களையும் விளக்கும் முன்கலை நூலாகும் திவாகரம், இலிகிதத்திற்கு ஆதரவாகும் வாசகங்களும், அதனதன் பொருட்களையும் விளக்கும் பின்கலைநூலாகும் நிகண்டு, கணிதம், ஆகமம், வியாகரணம், நீதிசாஸ்திரம், சோதிடம், தன்மசாஸ்திரம், விருத்தி சாஸ்திரம் மதியூக சாஸ்திரம், ஆருடசாஸ்திரம் சிற்பா சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், சாமுத்திரிகள் சாஸ்திரம், ரூபசாஸ்திரம், இதிகாசம், காவியம், மதுரபாடனம், அலங்காரம், நாடகம், நிருத்தம், சப்தபிரமம், சிரோரத்னம், வீணை, மிருதங்கம், தாளம், தனுர்வித்தை, சுவர்ண பரீட்சை, ரதபரீட்சை, கஜபரிட்சை, அஸ்வ பரீட்சை, ரத்தினபரிட்சை, பூப்பரிட்சை, யுத்தலட்சணம், மல்லயுத்தம், ஆக்ருஷணம், உச்சாடனம், வித்துவேஷணம், மானத சாஸ்திரம், மோகன விளக்கம், வசீகரணம், ரசவாதம், காந்தர்வவாதம், பிபீலிகாவாதம், கௌதுவவாதம், தாதுவாதம், காரூடம், நஷ்டப் பிரசனம், முஷ்டிப் பிரசனம், ஆகாயப்பிரவேசம், ஆகாயகமனம், பிரகாயப்பிரவேசம், அநுர்ஷியம், இந்திரஜாலம், மகேந்திரஜாலம், அக்கினிஸ்தம்பம், ஜலஸ்தம்பம், வாயுஸ்தம்பம், திருட்டிஸ்தம்பம், வாக்குஸ்தம்பம், சுக்கிலஸ்தம்பம், ஜநநஸ்தம்பம், கடகஸ்தம்பம், அவஸ்தைஸ்தம்பம் என்பவைகளாம்.

தற்காலம் அச்சிட்டுள்ள புத்தகங்களில் நூற்பலகல் என்றிருந்தபோதினும் புராதன ஏட்டுப்பிரிதிகளில் நூற்கலை கல்லென்று வரைந்திருக்கின்றார்கள். அதாவது "கண்டு படிப்பதே படிப்பு மற்றபடிப்பெல்லாம் தெண்டப்படிப் பென்றறி" எனக்கூறியுள்ளக் கலைநூலார் கருத்தை ஒட்டியதேயாகும்.

71. நெற்பயிர் விளை

நெற்பயிர் - நெல்லென்னுந் தானியத்தை, விளை - நீ உழுது பயிரிடு என்பதாம்.

அதாவது சகலசீவருக்கும் உணவாகவிளங்கும் தானியம் நெல்லாதலின் அவற்றை வேணமுயற்சிசெய்து விளைவிக்கவேண்டுமென்பது கருத்தாம்.

பௌத்தன்ம மக்கள்யாவரும் தங்கள் சுயப்பிரயோசனத்தை மிக்கக் கருதாது பலர் பிரயோசனத்தையே மிகக் கருதுவதாதலின் சகலசீவர்களுக்கும் பிரயோசனமாகும் நெற்பயிரை விளைக்கும்படி வற்புறுத்திக்கூறியுள்ளாள்.

அத்தகைய நெற்பயிரை விளைக்குமாறு வற்புறுத்திக் கூறியக் காரணம் யாதென்பீரேல், தற்காலம் இத்தேசத்தில் 10-படி, 12-படி அரிசி விற்பனை செய்தவிடத்தில் 4-படியரிசி விற்குங்கால் மழைபெய்தும் சகலருக்கும் உபயோகமாகும் நெற்பயிரை விளைவிக்காது தங்கள் சுயப்பிரயோசனத் திற்காகும் மணிலாக் கொட்டையென்னும் நிலக்கடலையை விளைவித்துக் கொண்டார்கள்.

அதினால் நல்லமழைப் பெய்தும் நெற்பயிர் விளைவிக்காது குடிகள் இன்னும் பஞ்சத்துக்குள்ளாயதை நாம் கண்டுள்ளது அனுபவமாதலின் முக்காலமுமுணர்ந்த ஞானத்தாய் மற்பயிர் யாதையுங் கருதாது நெற்பயிர்விளை என்று கூறியுள்ளாள்.

72. நேர்பட வொழுகு

நேர் - சகலருக்கும் நல்லவன் நேரானவனென்று, பட - காணும்படி, ஒழுகு - நீ வாழக்கடவா யென்பதாம்.

நஞ்சுள்ளப் பாம்புகள் யாவும் சகலர் கண்களுக்கும் புலப்படாமல் உலாவும், நஞ்சில்லா நீர்ப்பாம்புகளோ சகலர் கண்களுக்கும் நேர்பட உலாவும், அதுபோல் நன்மெய் கடைபிடித்து சகலர் கண்களுக்கும் நேர்பட ஒழுகவேண்டு மென்பது கருத்தாம்.

73. நைவன நணு கேல்

நைவன - வாக்கால் நையவுரைக்குஞ் கூட்டத்தாரும், தேகத்தால் நையப் புடைக்குங் கூட்டத்தாருமாகிய தீயரை, நணுகேல் - நெருங்கிய வாழ்க்கையை புரியாதே யென்பதாம்.

சுகதேகமும், சுகுணமும், தீயர் சேர்க்கையால் நைவது அனுபவமாதலின் அத்தகையச்செயலோரால் நைவன நணுகேலென்று கூறியுள்ளாள். தன்னிற்றானே கேட்டை வருவித்துக் கொள்ளுஞ் செயலுக்கு நையலென்றும் நைவன மென்றுங் கூறப்படும்.

74. நொய்ய வுரையேல்

நொய்ய - அன்புமிகுத்தோர் மனமுடைய, உரையேல் - ஓர் வார்த்தையையும் பேசாதே என்பதாம்.

அதாவது குடும்பத்தில் அன்புதிரண்டு வாழ்பவர்களையும், சிநேகிதத்தில் அன்பு திரண்டு நேசிப்பவர்களையும் அடுத்து அவர்களுக்குள் திரண்டுள்ள அன்பை நொய்ய உடைப்பதாயின் குடும்பமென்னுங் கூடிவாழும் வாழ்க்கையும் மற்று சிநயிதமென்னும் அன்புமற்று சேர்க்கை பிரிந்துபோம். அத்தகைய பிரிவினால் 'வாழ்க்கைக்கு அனந்தங் கேடுண்டாவதை உணர்ந்த ஞானத்தாய் வார்த்தைப் பேசுவதில் நொய்யவுரையேலென்று கூறியுள்ளாள்.

75. நோய்க் கிடங் கொடேல்

நோய் - தேகத்தில் வியாதி தோன்றற்கு, இடம் - ஓராதாரத்தைக், கொடேல் - என்றுஞ்செய்துக்கொள்ளாதே என்பதாம்.

மிதமிகுத்தப் புசிப்புக்கு இடங்கொடுத்த விடத்திலும், பலதேக போகத்திற் கிடங்கொடுத்தவிடத்திலும் வியாதிதோன்றி உடலை வதைப்பது உள்ள சுவாபமாதலின் இன்னின்னக் கொறூரச் செயல்களால் இன்னின்னான் இன்னினியநோய் கண்டு உபாதைப்படுகின்றானென் றுணர்ந்தும், அதனை மறந்தும் வாதைப்படுவது மக்கள் இயல்பாதலின் விழிப்பான்வேண்டி நோய்க்கிடங்கொடேலென்று கூறியுள்ளாள்.

76. பழிப்பனபகரேல்

பழிப்பன - மற்றவர்களைப் பழித்தலும் இழிவுகூறுதலுமாகிய மொழிகளை, பகரேல் - மறந்தும் பேசாதே யென்பதாம்.

தனது குற்றங்களையுந் தனது குடும்பத்தோரிழிவுகளையும், தான்செய்யும் இழிய தொழிலாம் செயலையுங் கருதாது ஏனையோர் குற்றங்களையும், ஏனையோர் குடும்ப இழிவையும், ஏனையோர் தொழிலிழிவையும் எடுத்துக் கூறுவதாயின் ஏனையோர் இவனிழிவையும் பழியையுமெடுத்துக் கூறியேளனந் செய்வதுடன் எல்லார்க்கும் விரோதியாய் சகலராலுந் சீ சீ யென்று இகழப் படுவான் ஆதலின் பகருமொழிகளில் பழிப்பனபகரேல் என்று கூறியுள்ளாள்.

77. பாம்பொடு பழகேல்

பாம்பை - விஷப்பற் பையையுடைய, ஓடு - ஜெந்தினொடு, பழகேல் - எப்போதும் நேசிக்காதே என்பதாம்.

பற்களில் விஷப்பையைச் சேர்த்துவைத்துள்ள ஜெந்துக்களுடன் பழகுவதாயின் எக்காலத்திலேனும் ஓர்கால் அப்பையிலுள்ள விஷத்தை வெளியிடுதற்கு வழிதேடும். வழிதேடுங்காரணமோ அதன் மீறிய கோபமேயாம். அக்கோபத்தால் கடித்துவிடுத்த விஷமானது பழகியவன் தேகமுழுவதும் பரவி நஞ்சமைந்துவிடுவதுடன் நசிந்தும்போகின்றான். ஆதலின் நஞ்சுள்ள ஜெந்துக்களுடன் பழகலாகாதென்பது கருத்து.

78. பிழை படச் சொல்லேல்

பிழை - குற்றம், பட - உண்டாகச், சொல்லேல் - பகராதே யென்பதாம்.

அதாவது துஷ்டர்கள் தங்களுக்குள்ள வன்னெஞ்சங், குடிகெடுப்பு, பொறாமெய், நீச்சச்செயல் முதலிய நிறைந்துகொண்டு குற்றமற்றப் பெரியோர்களைக் கண்டவுடன் வெகுண்டு தங்களது நீச்சகுணச்செயலால் அவர்களைப் பிழைபடக்கூறுவது சுவாபமாகும்.

எவ்வகையிலென்பீரேல் மிலேச்சகுண மிகுத்தோர்களையும், நீச்சசெய லமைந்தோர்களையும் பெரியோர் நெருங்காமலும் தங்களிடம் நெருங்க விடாமலும் இருப்பது வழக்கமாகும்.

அத்தகைய விவேகமிகுத்தப் பெரியோர்செயலைக் காணும் அவிவேக மிகுத்த நீச்சர்கள் தங்கள் துஷ்டகுண மாறாது விவேகிகளை பழிகூறுதலும், பலவகையாய்ப் பழித்தலும் உடையவர்களாய் நிற்பர்.

அவ்வகைப் பெரியோர்களைப் பழித்தால் அவர்களுக்குண்டாகும் மனத்தாங்கலின் கொதிப்பே பழித்தவனையும், பழித்தோன் குடும்பத்தோரையும் பாழாக்கும் பழவினைத் தொடராதலின் குற்றமற்றப் பெரியோர்களைப் பழிக்கலாகாதென்பது கருத்து.

இதனந்தரார்த்தங் கண்ட ஞானத்தாய் பெரியோர்களைப் பிழைபடச் சொல்லேலென்று கூறியுள்ளாள்.

79. பீடு பெற நில்

பீடு - வல்லமெய், பெற - உண்டாகத்தக்க நிலையில், நில் - நிற்கக்கடவா யென்பதாம்.

தேகமானது தக்க வலுவுள்ளவரையில் யாதொரு தொழிலுக்கும், முயற்சிக்கும் அஞ்சாது எடுத்த காரியங்களை முடிப்பதற்கேது ஆவதன்றி பற்பல பிணிகளுந் தோன்றி உபத்திரவஞ் செய்யாவாம்.

பீடு குறைந்தக்கால் எடுக்கும் முயற்சிகளும் சோர்வடைவதன்றி தேகத்திற் பற்பலவியாதிகளும் தோன்றி உபத்திரவத்தை உண்டுசெய்யும் ஆதலின் ஒவ்வோர் மக்களுந் தங்களது தனங்குறையினும், தானியங் குறையினும், தேகபிலங் குறையாது வாழ்தல் சுகநிலையாகும்.

சிற்றின்பப்பெருக்கத்தினால் தேகசுகத்தைக் குறைத்துக்கொள்ளுவதும், பணம்சேர்க்கும் விஷயத்தால் புசிப்பைக் குறைத்து தேக சக்தியைக் குறைத்துக் கொள்ளுவதும், அநுபவமறியா பொய் வேதாந்த வேஷத்தால் தேகசக்தியைக் குறைத்துக் கொள்ளுவதும், உள்ள வழக்கமாதலின் திரிகாலச் செயலு முணர்ந்த ஞானத்தாய் பொய் விரதங்களாலும் பொய் வேதாந்தத்தாலும் பொய் பொருளாசையாலும் புசிப்பை அகற்றி தேகத்தின் பீடுரையாது ஒடுக்கிப் பாழடைவார்களென்றுணர்ந்து பீடுபெற நில்லென்று கூறியுள்ளாள்.

80. புகழ்ந்தாரைப் போற்றிவாழ்

புகழ்ந்தாரை - மற்றவர்களால் புகழத்தக்க பெரியோர்களை, போற்றி - நீயுந்துதிசெய்து கொண்டாடி, வாழ் - வாழக்கடவா யென்பதாம்.

அதாவது வித்தையில் மிகுத்தப் பெரியோரென்றும், புத்தியில் மிகுத்த பெரியோரென்றும், ஈகையில் மிகுத்த பெரியோரென்றும், சன்மார்க்கத்தில் மிகுத்த பெரியோரென்றும் புகழ்ந்து அவர்களை போற்றி வாழ்வது ஒழுக்க மிகுத்த உலகத்தோர் சுவாபமாகும் அவற்றைக் கொண்டொழுகும் நீயும் அவ்விவேக மிகுத்த புருடர்களைப் போற்றி வாழக்கடவாயென்பதாம். அத்தகைய விவேக மிகுத்த மேன்மக்களாம் பெரியோர்களைப் போற்றி வாழ்தல்,

அவர்களது வித்தியா விருத்தியின் செயலும், புத்திவிருத்தியின் செயலும், ஈகை விருத்தியின் செயலும், சன்மார்க்கவிருத்தியின் செயலுந் தங்களுக்கு விளங்கும் மற்ற பின் சந்ததியோர்களால் தாங்களும் போற்றத்தக்க வாழ்க்கை பெறுவார்கள். ஆதலின் ஒழுக்க மிகுத்தோரால் புகழத்தக்கப் பெரியோர்களை நீயும் போற்றிவாழென்று கூறியுள்ளாள்.

81. பூமி திருத்தியுண்

பூமி - உனது நிலத்தை, திருத்தி - கல்லுகாடுகளைப் போக்கிப் பயிர்செய்து, உண் - நீ புசிக்கக்கடவா யென்பதாம். அதாவது, சகலதொழிலிலும் பூமியைத்திருத்தியுண்ணும் வேளாளத் தொழிலே விசேஷித்ததாகும். எவ்வகையிலென்பீரேல், மகாஞானிகள், அரசர்கள் முதல் சீவராசிகளீராக அன்னமூட்டி ஆதரிக்குந் தொழிலாதலின் பூமியின் பலனை போதித்துள்ளாள்.

ஏறெழுபது

வெங்கோபக் கலிக்கடந்த வேளாளர் விளைவயலுள்
பைங்கோல முடிதிருந்த பார்வேந்தர் முடிதிருந்தும்
பொங்கோதைக் களியானை போர்வேந்தர் நடத்துகின்ற
செங்கோலைத் தாங்குங்கோலேறடிக்குஞ் சிறுகோலே.

82. பெரியாரைத் துணைக்கொள்

பெரியாரை - வித்தையிலும் புத்தியிலும் ஈகையிலும் சன்மார்க்கத்திலும் மிகுத்த மேன்மக்களை, துணைக்கொள் - உதவிபற்றிநில்லுமென்பதாம்.

மக்களுள் மூர்க்கர் கேண்மையால் கோபலாபமும், காமிய மிகுதியால் பிணியின் லாபமும், பெற்றுத் துன்புறுவது அநுபவக்காட்சி யாதலின் அவிவேகிகளையணுகாது விவேகிகளை அணுகவேண்டுமென்று கூறியுள்ளாள்.

நீதிவெண்பா

அரிமந்திரம் புகுந்தாலானை மருப்பும் / பெருங்கொளிசேர்முத்தும்பெறலாம் - நரினுழையில்
வாலுஞ்சிறிய மயிரெலும்புங்கத்தபத்தின் / தோலுமல்லால் வேறுமுண்டோ சொல்.

83. பேதமை யகற்று

பேத - பலவகைக் குணங்களும் பலவகைச் செயலுமமைந்த, மெய் - நிலயற்ற தேகியென்று பிறர் சொல்லுந் செயலை, அகற்று நீக்கிக் கொள்ளுமென்பதாம்.

பேதமாகிய நிலையற்ற குணங்களும், நிலையற்ற செயலும் அமைந்தவனென்று மற்றவர் காண்பாராயின் எத்தொழிலிலும் இணங்கவிடாமல் அகற்றிவிடுவார்கள். அவற்றால் பலவகை இடுக்கங்களுண்டாகி துக்கம் பெருகிபோம். ஆதலின் உமக்குள்ள பேதகுணத்தை அகற்றுமென்பது கருத்தாம்.

திரிக்குறள்

நாணாமெய் நாடாமெய் நாரின்மெய் யாதொன்றும் / பேணாமெய் பேதை தொழில்.

84. பையலோடிணங்கேல்

பையல் - பரியாசமாம் சிறுசேஷ்டை, ஓடு - உள்ளவர்களுடன், இணங்கேல் - சேராதே என்பதாம்.

அதாவது, மக்களுருவமைந்தும், குரங்குசேட்டையுள்ளவர்பாலிணங்கில் விவேகவிருத்திக்குத் தக்க வார்த்தைகளுஞ் செயலுமின்றி களியாட்டும் கலகமும் பெருகி வீணே மனத்தாங்கலுண்டாகும். அம்மனத்தாங்கலால் வித்தியாபுத்தி விருத்திக் குறைந்து வீணே அல்லலடைவார்களென் றறிந்த ஞானத்தாய் பரியாசக்காரரை அணுகலாகாதென்னும் கருத்துடன் பையலோடிணங்கே லென்று கூறியுள்ளாள்.

85. பொருடனை போற்றி வாழ்

பொருள் - மெய்ப்பொருள், தனை - தன்னை, போற்றி - சிந்தித்து, வாழ் - வாழக்கடவா என்பதாம்.

தன்னைத்தான் உணரலென்னுந் தனக்குள்ள நற்செயல்களையும் துற்செயல்களையும் உணர்ந்து தனக்கொரு கேடும் வராது துற்செயல்களை

அகற்றி நற்செயல்களைப் பெருக்கி சுகநிலையாம் உண்மெய்ப்பொரு ளுணர்ந்துநிற்றலே நித்திய வாழ்க்கைக்கு ஆதாரமாதலின் க்ஷணத்திற்கு க்ஷணம் அழிந்து கொண்டேபோகும் பொய்ப்பொருளை போற்றாது நித்திய ஒழுக்கமாம் நீடுவாழ்க்கையைத்தரும் மெய்ப்பொருளைப் போற்றி வாழென்று கூறியுள்ளாள்.

திரிக்குறள்

பொருளல்ல வற்றைப்பொருளென் றுணரு / மருளானா மாணாப் பிறப்பு.
எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினு மப்பொருள் / மெய்ப்பொருள் காண்ப தறிவு.

சீவகசிந்தாமணி

உள்பொரு ளிதுவென வுணர்தன் ஞானமாந் / தெள்ளிதி னப்பொரு டெளிதல் காட்சியாம்
விள்ளற விருமெயும் விளங்கத் தன்னுளே / யொள்ளிதிற்றரித்தலை யொழுக்கமென்பவே.

86. போர்த்தொழில்புரியேல்

போர் - எக்காலும் வாதுவழக்குக் கேதுவாம், தொழில் - கன்மங்களை, புரியேல் - நீ செய்யாதே என்பதாம்.

ஓர் தொழிலை ஆரம்பிக்குங்கால் அதனேது கொண்டு எக்காலமும் வாதுவழக்கை உண்டுசெய்யுங் கன்மத்தைப் புரியாதேயென்று கூறியுள்ளாள்.

87. மனந்தடுமாறேல்

மனம் - ஒன்றை யெண்ணி, தடு - மற்றொன்றை, மாறேல் - பிறழாதே என்பதாம்.

ஊனக்கண் பார்வையுறாது நடக்கில் உடல் தடுமாறுவது போல், உள்விழிபார்வையாம் கியான நிலை தவறி மனந்தடுமாறுவது இயல்பாதலின், எக்காலும் விழிப்பினின்று மனந்தடுமாறும் செயலாலுண்டாகும் துக்கவிருத்தி களையும், மனந்தடுமாறாச் செயலாலுண்டாகும் சுகவிர்த்திகளையும், காட்சியின் அநுபவத்தாலுணர்ந்து கியானக் கண் நிலைப்பதற்காய் மனந்தடுமாறேல் என்று கூறியுள்ளாள்.

88. மாற்றானுக் கிடங்கொடேல்

மாற்றானுக்கு - வாக்கிலொன்று மனதிலொன்றுமுள்ள வன்னெஞ்சனுக்கு, இடம் - நெருங்கி இல்லத்தைக், கொடேல் - நீ கொடுக்காதே யென்தாம்.

அதாவது உள்ளத்தில் மாறுபட்டவனும் மனதில் மாறுபட்டவனும் செய்கையில் மாறுபட்டவனுமாகிய வன்னெஞ்ச சத்துருக்களுக்கு இடங் கொடே லென்று வற்புறுத்திக் கூறியுள்ளாள். மாற்றானென்பது - கூற்றன் என்பவனுக்கும் பொருளாதலின், காலனுக்கிடங்கொடேலென்பதும் மற்றோர் பாடபேதமாகும். காலனுக் கிடங்கொடுக்கும் வழிகள் இராகத்துவேஷ மோகங்களேயாகும். இம்மூவழிகளிலும் இடந்தராது அகற்றி ஆள்வதே ஜாக்ரதையாம்.

89. மிகைபடச்சொல்லேல்

மிகை - துன்பத்தை, பட - உண்டாக்கத்தக்க வார்த்தையை, சொல்லேல் - மறந்தும் பேசாதே என்பதாம்.

அதாவது உன் பிள்ளை குளத்தில் முழுகிவிட்டான், உன் கணவனை அடித்துவிட்டார்களென்று வேடிக்கையாக சொல்லும் வார்த்தைகள் கொடும் வினையாக முடிந்து பலவகை துன்பத்திற்கு ஆளாக்கிவிடுகிறபடியால் திடீரென்று மக்களுக்குக் கேட்டையுண்டாக்கத்தக்க வார்த்தையைப் பேசலாகாதென்னுந் தன்மநோக்கத்தால் ஞானத்தாய் மிகைபடச் சொல்லேலென்று கூறியுள்ளாள்.

திரிக்குறள்

மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி / னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

நீதி வெண்பா

வெய்யோன் கிரணமிகச்சுடுமே வெய்யவனில் / செய்யோன் கிரணமிகத் தீதாமே-வெய்யகதிர்
எல்லோன்கிரணத் தெரியினிலுமெண்ணமிலார் / சொல்லே மிகவுஞ் சுடும்.

90. மீதூண் விரும்பேல்

மீ - அதிக, ஊண் - புசிப்பை, விரும்பேல் - இச்சியாதே யென்பதாம்.

அதாவது மிதமின்றி மீதூண் இச்சிப்பவர்க்கு சோம்பலும், மந்தமும் உண்டாகி சருவதொழில் விருத்திகளும் கெடுவதன்றி சுற்றத்தாரும் பெருவயிற்றோன் என்றிகழப் பேரெடுப்பன். ஆதலின் மிதாகாரம் புசித்து வித்தியா விருத்தியையும், அறிவின் விருத்தியையும் பெருக்கி சுகவாழ்வைப் பெறவேண்டுமென்னும் தன்மச்சிந்தையால் அதிக புசிப்பை விரும்பாதேயுங்க ளென்று கூறியுள்ளாள்.

நீதிவெண்பா

ஒருபோது யோகியே யொண்டளிர்க்கைமாதே / இருபோது போகியே யென்ப - திரிபோது
ரோகியே நான்குபோ துண்பா னுடல்விட்டுப் / போகியே யென்று புகல்.

91. முனைமுகத்துநில்லேல்

முனை - கூரிய அம்பைஏந்தி முனைந்தோன், முகத்து - எதிரில், நில்லேல் - நிற்காதே என்பதாம்.

அதாவது எய்யவேண்டியவன் தவறி எதிர் தோன்றியவன் படவேண்டி நேரிடுமாதலின் சினந்து முனைந்தோர் எதிர் நிற்கலாகாதென்பது கருத்து.

92. மூர்க்கரோ டிணங்கேல்

மூர்க்கர் - கோபிகள், ஓடு - உடன், இணங்கேல் - நெருங்கே லென்பதாம்.

முற்கோப மிகுத்த மூர்க்கரை நேசிப்பதினால் இவனு மோர் மூர்க்கனென்று மற்றவர் மதிப்பதுடன் நல்லோர் நெருங்கவு மாட்டார்கள். நெருங்கினும் நேசிக்கமாட்டார்களென்பது கண்டு, நல்லவனென்று நடமாடுங்கால் மூர்க்கரது கேண்மெய் தோன்றின், நல்லவனென்னும் பெயரற்று சுகமிழப்பானென்னுங் கருணையால் ஞானத்தாய் மூர்க்கரோடிணங்கேலென்று கூறியுள்ளாள்.

நீதிவெண்பா

நல்லொழுக்கமில்லா ரிடஞ்சேர்ந்த நல்லோர்க்கு
நல்லொழுக்கமில்லாச்சொனண்ணுமே - சொல்லி விடின்
பாம்பெனவுன்னாரோ பழுதையோயானாலுந்
தரம்பமரும் புற்றெடுத்தக்கால்.

93. மெல்லியாடோள்சேர்

மெல்லியாள் -மிருதுவாக்குடையவள், தோள் - உடன், சேர் - கூடிவாழக்கடவா யென்பதாம்.

மெல்லிய வாக்கும், மெல்லிய செயலும், மெல்லிய நடையுமுடையாளை இல்லாளாக்கி வாழக்கடவாய் என்பதாம்.

அறப்பளீசுரசதகம்

கணவனுக் கினியளாய் மிர்துபாஷியாய் மிக்க கமலநிக ரூபவதியாய்
காய்சிநமிலாளுமாய் நோய்பழியிலாததோர் கால்வழியில் வந்தவளுமாய்
மணமிக்கநாணமட மச்சம் பயிர்ப்பென்ன வருமினிய மார்க்கவதியாய்
மாமிமாமார்க்கிதஞ் செய்பவளுமாய் வாசல் வருவிருந் தோம்புபவளாய்
இணையின்மகிழ்நன்சொல்வழி நிற்பவளுமாயந்தி யென்பெய ரிலாதவளுமாய்
இரதியெனவே லீலை புரிபவளுமாய் பிற ரிழிவழி செலாதவளுமாய்
அணியிழை யொருத்தி யுண்டாயினவள் கற்புடைய ளாகுமெம தருமெய்மதவே
அநுதினமு மனதிநினை தருசதுர கிரிவள ரறப்பளீசுரதேவனே.

94. மேன்மக்கள் சொற்கேள்

மேல் - சிறந்த, மக்கள் - மநுக்களின், சொல் - வார்த்தையை, கேள் - கேழ்க்கக் கடவா யென்பதாம்.

வித்தையிலும், புத்தியிலும் மிகுத்துள்ளதன்றி அன்பு, ஈகை, சாந்தத்தில் உயர்ந்தோர் மாட்டே உலகம் சீர்திருந்துவதின் அனுபவங்கண்ட ஞானத்தாய் மேன்மக்கள் சொற்கேளென்று வற்புறுத்தி கூறியுள்ளாள்.

சிலர் மேன்மக்களென்றால் உயர்ந்தசாதியென்றும், கீழ்மக்களென்றால் தாழ்ந்தசாதியென்றும் அதனுட்பொருளறியாது வேஷசாதியோர் வகுப்பின்படி

பொருட்கூறித்திரிவர். அஃது பொருந்தாவாம். எங்ஙனமென்றால், ஒருங்கே ஓர் கூட்டத்தார் கூடித் தங்களை உயர்ந்தசாதியென்று சொல்லிக்கொள்வதும் மற்றுமோர் கூட்டத்தோரை ஒருங்கே சேர்த்து தாழ்ந்தசாதியென்று சொல்லித்திரிவதும் ஆகியப் பொருளற்ற மொழிகள் யாவும் கலையற்ற சாதிப்புறட்டுகளேயாம்.

சாதிக்கும் சாதனங்களில் நல்லோரென்னும் மேலான சாதனங்களை சாதிப்போர் மேல் சாதியினரென்றும், சாதிக்கும் சாதனங்களில் தீயோரென்னும் இழிந்த சாதனங்களைச் சாதிப்போரை தாழ்ந்தசாதியினரென்றுங் கூறத்தகும்.

அதாவது, ஐரோப்பியராயினும் சீனனாயினும், ஜப்பானியராயினும், இந்தியராயினும், வித்தை, புத்தி, ஈகை, சன்மார்க்கமென்னும் மேலான சாதனங்களில் இருப்பார்களாயின் அவர்களையே மேன்மக்களென்றும், மேலான சாதியோ ரென்றும் கூறப்படும்.

பொய், வஞ்சகம், சூது, குடிகெடுப்பு, அன்னியர் பொருளாசை முதலிய இழி செயல்களிலிருப்பார்களாயின் அவர்கள் எத்தேசத்தோராயினும் கீழோ ரென்றும், தாழ்ந்த சாதியோரென்றுங் கூறப்படும்.

ஆதலின் நல்லூக்கம், நற்கடைபிடி, நல்லுணர்ச்சி, நல்வாய்மெய் மிகுத்த மேன்மக்களாம் விவேகமிருத்தோர் சொற்படி நடக்கவேண்டுமென்று கூறியுள்ளாள்.

95. மைவிழியார் மனையகல்

மைவிழியார் - கண்ணில் மையிட்டு மயக்கவல்லார், மனை - வீடுகளுக்கு, அகல் - தூர நில்லு மென்பதாம்.

தூண்டிலிட்டும் வலைவீசியும் மச்சங்களை இழுப்பதுபோல், கண்களுக்கு மையிட்டு வாலிப மக்களுக்கு வலைவீசும் மைவிழியார் மனையைக் கண்டவுடன் அவ்விடம் நில்லாது தூர அகல வேண்டு மென்பது கருத்தாம்.

96. மொழிவ தறமொழி

மொழிவது - ஓர் வார்த்தை புகலுங்கால், அற - சந்தேக மற, மொழி - சொல்லவேண்டு மென்பதாம்.

ஒரு வார்த்தையை புகலுங்கால் அவ்வார்த்தையின் பொருள் தெரிந்தும் தெரியாது இருக்குமாயின் பிரயோசன மற்றுப்போம். ஆதலின் மொழியின் வாக்கு முழுதும் தெளிவுற சொல்லவேண்டுமென்பதாம்.

97. மோகத்தைமுநி

மோகத்தை - காமிய மயக்கத்தை, முநி - கடந்து நில்லென்பதாம்.

காமவெகுளி மயக்கங்களாம், மூன்றினுள் காமியமே மிக்கக் கொடியதாதலின் அவற்றை முநிந்து ஜயித்தலே மக்களுக்கழகாம், ஆதலின் மோகத்தை முனியென்று வற்புறுத்தியுள்ளாள்.

98. வல்லமெய் பேசேல்

வல்ல - மிக்க சாமர்த்தியமுடைய, மெய் - தேகி யென்று, பேசேல் - பலருமறியக் கூறாதே யென்பதாம்.

அதாவது, மாமிக்கோர் மாமி உண்டென்பதுணராது எமக்கு மேற்பட்ட வல்லமெய்ப்புருஷன் இல்லையென்று கூறுவானாயின் அவனுக்கு மேற்பட்ட வல்லமெய்யன் தோன்றி அழித்துவிடுவான் ஆதலின் எத்தகைய வல்லமெய் யோனாயினுந் தனது வலதை பலரறியக் கூறாதிருப்பதே சிறப்பைத் தருமென்று விளக்கியுள்ளாள்.

அறப்பளீசுரசதகம்

தனக்குவெகு புத்தியுண்டாயினும் வேறொருவர் தன்புத்தி கேட்கவேண்டும்
தானதிக சூரனே யாயினுங் கூடவே தள சேகரங்கள் வேண்டும்
கனக்கின்ற வித்துவானாயினுந் தன்னினுங் கற்றோரை நத்தவேண்டும்
காகினியை யொருகுடையி லாண்டாலும் வாசலிற் கருத்துள்ள மந்திரிவேண்டும்
தொனிக்கின்ற சங்கீத சாமர்த்தயனாயினும் சுதிகூட்ட வொருவன்வேண்டும்
சுடர்விளக்காயினும் நன்றாய் விளங்கிடத் தூண்டுகோ லொன்றுவேண்டும்

அனற்கண்ணனே படிக சங்கநிகர் வண்ணனே ஐயனே யருமெய்மதவேள்
அநுதினமு மனதிநினை தருசதுர கிரிவள ரறப்பளீசுரதேவனே.

99. வாதுமுற்கூறேல்

வாது - தருக்கம்புரிவதில், முன் - முன்பு, கூறேல் - யோசியாது பேசாதே என்பதாம்.

அதாவது, குற்றங்கூறுதலும், கூறும்பொருள் விளங்காது கூறுதலும், கூறியதை கூறுதலும், மிகப்படக் கூறுதலும், முன்கூறிய பொருளுக்கு மாறுகொளப் பொருள் கூறுதலும், முன்மொழிக்குப் பின்மொழி விரோதிக்கக் கூறுதலும், நூலுக்குக் குற்றமாதல்போல் வாதாகுந்தருக்கத்தில் யோசியாது முன் பேசலாகாதென்பது கருத்து.

துரிதத்தில் முன் பேசுவதினால் எதிரி கொணர்ந்தவை இலக்கிய தருக்கமா, இலக்கணதருக்கமா, மதோ தருக்கமாவென்பது வீணே விளங்காது விரிந்துபோம் அவற்றால் எடுத்தவாது முடிவு பெறாது என்றறிந்துள்ள ஞானத்தாய் வாது முற்கூறேலென்று கூறியுள்ளாள்.

தருக்கக் கௌமுகி

வாதுமுற்கூறி வழுவுற விடுத்தல் ஏது பயனின் றிழிவது மாகும்.

100. வித்தை விரும்பு

வித்தை - கைத்தொழிலை, விரும்பு - நீ கற்பதற்கு ஆசைக்கொள்ளு மென்பதாம்.

அதாவது, வித்தையை விரும்பி கற்றுக்கொள்ளுவதில் ஓர் பாஷையைக் கற்பதே வித்தையென்று கூறுவாறுமுண்டு. அஃது பொருந்தாவாம். எவ்வகையிலென்பீரேல், "கற்றோர்க்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு" என்னும் முதுமொழியை சிரமேற்கொண்டு தமிழ் பாஷையைத் தெளிவுறக் கற்றவன் கன்னடதேசம் போவானாயின் சிறப்படைவனோ. கன்னட பாஷையைத் தெளிவுறக் கற்றவன் மராடதேசம் போவானாயின் சிறப்படைவனோ, ஒருகாலுஞ் சிறப்படையான்.

ஓடதிவித்தை, மரவினைவித்தை, தையல்வித்தை, பொன்வினை வித்தை, பயிரிடும் வித்தை, நெய்யும் வித்தை, உலோக பொருத்த வித்தை, காந்தவித்தை, இரசவித்தை முதலியவற்றுள் ஒன்றைத் தேறக்கற்று எத்தேசம்போயினும் சிறப்படைவான்.

அதற்குப் பகரமாய் நமது ஐரோப்பியர், அமேரிக்கர், சீனர், ஜப்பானியர் முதலிய மேன்மக்கள் மற்றதேசத்தோர் பாஷைகளைக் கற்காதிருப்பினும் தங்களிடமுள்ள வித்தைகளின் தைரியத்தால் எங்கும் உலாவி சுகம் பெற்றிருக்கின்றார்கள்.

நமது தேயத்தோர் சாதிவித்தை ஒன்று, சமயவித்தை ரண்டு, கொட்டை கட்டும்வித்தை மூன்று, கொழையல்வித்தை நான்கு, குறுக்குபூசுவித்தை ஐந்து, நெடுக்குபூசுவித்தை ஆறு, மற்றும் இதற்காதாரவித்தைகளை கற்றுக்கொண்டு பிள்ளைகொடுக்குஞ் சாமியார், பொன்கொடுக்குஞ் சாமியார், புதையலெடுக்குஞ் சாமியார், பூமியைவிட்டு ஒருமுழ உயரம் எழும்புவேனென்னுஞ் சாமியார், காணாத மோட்சத்திற்குக் கையோடு இட்டுக்கொண்டுசெல்லுஞ் சாமியார் களென்னும் வேஷமிட்டு பொருள் பறித்துத்தின்னும் பொய்யும், பொறாமெயும், வஞ்சகமும் நிறைந்த நெஞ்சினர்களே குருக்களாகத் தோன்றி, பேதைமக்களை மயக்கிப் பாழாக்கிவிடுவார்களென்னும் பூர்வக்கியான முணர்ந்த ஞானத்தாய் வருங்கால சம்பவமறிந்து வித்தையை விரும்புங்கோளென்று வற்புறுத்திக் கூறியுள்ளாள்.

101. வீடுபெற நில்

வீடு - முத்தி, நிருவாண மென்னும் நிலையை, பெற - அடைவதற்கு, நில் - ஞானவரம்பில்நிற்கக்கடவா யென்பதாம்.

வீடுபேறாம் நிருவாணமாகும் பிறவியற்ற நிலையே துக்கத்தை ஒழித்த இடமாதலின் அவற்றிற்கு கேடிலா பருவம், மோட்சம், கேவலம், சித்தி,

கைவல்லியம், மீளாகதி, நிருவாணம், பரகதி, சிவம், முத்தி, அமுதம் என வழங்கிவந்தார்கள், நாளதுவரையில் வழங்கியும்வருகின்றார்கள்.

பின்கலைநிகண்டு

கேடிலா விபவருக்கம் கேவலத்தோடு சித்தி / வீடு கைவல்லியமே மீளாதகதியே நாலோர் பாடு நிர்வாணத்தோடு பரகதி சிவமே முத்தி / நீடு மீரைந்தும் மோட்சம் அமுதமும் நிகழ்த்தலாமே

மனுடன் வாணமென்னும் பற்றுள்ளவரையில் பிறவியிற் சுழன்று மாளாதுக்கத்தை யனுபவித்து வருவது இயல்பாம். மாறிமாறி பிறந்து கொண்டேவரும் துக்கத்தை ஒழிக்க வேண்டியவன் நிருவாணமென்னும் பற்றற்ற நிலையடைவானாயின் மாளா பிறவியு மற்று பிறப்பினால் உண்டாகுந் துக்கமுமற்று வீடென்னும் அழியாநிலை அடைகின்றான்.

அவனே உலக பாசபந்த இளமெய் முதுமெய்யாம் முத்தினோன், மோக்கமுற்றோன், நிருவாணமடைந்தோனென்று கூறப்படுவான். மரண மென்னும் நித்திரையை ஜெயித்தானென்றுங் காலகாலனென்றுங் கூறப்படும்.

(இரண்டு வரிகள் தெளிவில்லை)

ஔவை குறள்

(தெளிவில்லை)

சீவகசிந்தாமணி

மாதவன் சரிதமுந் துறந்த வண்ணமு / மேதமின் றியம்பு மினடிகளோவென்ப
போதலர் புனைமுடி யிறைஞ்சியேத்தினான் / காதலிற் கணந்தொழக் காவன் மன்னனே

வேறு

இன்பமற்றென்னும் பேரானெழுந்த புறகற்றை தீற்றித்
துன்பத்தை சுரக்கு நான்கு கதியெனும் பதியறுத்து
நின்ற பற்றார்வ நீக்கி நிருமலன் பாதஞ்சேரி
னன்புவிற் றுண்டுபோகிச் சிவகதி யடையலாமே.

102. உத்தமனாயிரு

உத்தமனாக - உன்னை சகலரும் நல்லவனென்று சொல்லத்தக்கதாக, இரு - நீவீற்றிருக்கக்கடவாயென்பதாம்.

மக்களுள் மத்திபனென்றும் உத்தமனென்றும், அதமனென்றும், வழங்க கூடிய நிலையில் அதமனையும், மத்திபனையும்நீக்கி உத்தமனையே உலகம் கொண்டாடுவது இயல்பாதலின் ஞானத்தாய் உத்தமனா யிருமென்று கூறியுள்ளாள்.

103. ஊருடன் கூடிவாழ்

ஊருடன் - மநுக்களாம் கிராமவாசிகளுடன், கூடி - சேர்ந்து, வாழ் - வாழக்கடவா யென்பதாம்.

அதாவது ஒருவருக்கொருவர் விலகி வாழ்க்கை புரிவதினால் ஆபத்துக்குதவாமல் அல்லலடைய நேரிடுமென்றறிந்த ஞானத்தாய் மக்களுள் ஒருவருக்கொருவர் உபகாரிகளாயிருக்கவேண்டுமென்ற கருத்தால் குடிகள் சேர்ந்து வாழ்க்கை பெற ஊருடன் கூடிவாழ் என்று கூறியுள்ளாள். மேன்மக்கள் வாக்குதவிராது சேர்ந்து வாழ்ந்து வந்த பௌத்த தன்ம அரசர்களும் குடிகளும் வாழ்ந்த இடங்களை சேரி, சேரி என்று வழங்கிவந்தார்கள்.

சீவகசிந்தாமணி

தேனுலா மதுசெய் தோதை தேம்புகை கமழ வூட்டி
வானுலா சுடர்கண்மூடி மானகரிரவு செய்யப்
பானிலா சொரிந்து நல்லா ரணிகலம் பகலைச் செய்ய
வேனிலான் விழைந்த சேரி மேலுலகனைய தொன்றே.

104. வெட்டெனப்பேசேல்

வெட்டென - மனந்துண்டிக்கத்தக்க கடினவார்த்தைகளை பேசேல் - மறந்தும் பேசாதே யென்பதாம்.

கடின வார்த்தைகளில் அனந்தக் கேடுண்டாவதை உணர்ந்த ஞானத்தாய் வெட்டெனப் பேசேலென்று விளக்கிக் கூறியுள்ளாள்.

105. வேண்டி வினைசெயேல்

வினை - குறித்த தொழிலை ஒருவன் செய்து வருகின்றானென்றறிந்தும், வேண்டி - அத்தொழிலை நீயும் விரும்பி, செயேல் - செய்யாதே யென்பதாம்.

அதாவது, ஒருவன் அத்தொழிலை நடத்தி வருகின்றானென்றறிந்திருந்தும் அதை நாடுவதாயின் எதிரியைக் கெடுப்பதற்கு ஏதுவென்று உணர்ந்த ஞானத்தாய் வேண்டி வினைசெயேலென்று கூறியுள்ளாள்.

106. வைகரைத் துயிலெழு

வைகரை - சூரியவுதயகாலத்தில், துயில் - நித்திரையைவிட்டு, யெழு - நீ யெழுந்திரு மென்பதாம்.

வைகரை விழிப்பே சூரியகலை, சந்திரகலைக்கு ஆதாரமாதலின் சூரியன் கரைகட்டுக்கு விழிக்க வேண்டுமென்று கூறியுள்ளாள்.

107. ஒன்னாரைச்சேரேல்

ஒன்னாரை - பகைவர்களாகும் சத்துருக்களை, சேரேல் - நெருங்காதே யென்பதாம்.

அடுத்து கெடுப்பது பகைவர் சுவாபமாதலின் அவர்களை நெருங் கலாகாதென்பது கருத்து.

108. ஓரஞ் சொல்லேல்

ஓரம் - ஒருவர் சார்பாய் சார்ந்துகொண்டு மற்றொருவருக்குத் தீங்குண்டாகத்தக்க வார்த்தையை, சொல்லேல் - எக்காலுஞ் சொல்லாதே யென்பதாம்.

எக்காலும் நடுநிலையினின்று சகல காரியாதிகளிலும் பேசவேண்டும் என்பது கருத்து.

ஔவை, அம்மையென்னும் பெயர்பெற்ற ஞானத்தாய் அருளிய முதல் வாசகம் முற்றிற்று.

(இவ்வாசகம் இரண்டாமாண்டு 42ஆம் இலக்கத்தில் தொடங்கி மூன்றாமாண்டு 11ஆம் இலக்கத்தில் முற்றுப் பெறுகிறது)

ஞானத்தாய் ஔவையார் அருளிய இரண்டாம் வாசகம்

காப்பு

குன்றை வேந்தன் செல்வனடியினை / யென்று மேற்றித் தொழுவோமியாமே.

குன்றைவேந்தன் - மலைக்குன்றில்வாழரசனென்றும், செல்வன் - அழியா சம்பத்தனென்றும் வழங்கப்பெற்ற புத்தபிரானின், அடியினை - செந்தாமரைப் பாதங்களை, என்றும் - எக்காலமும், ஏற்றி - போற்றி, தொழுவோம் - வணங்குவோம், யாம் - யாங்கள் என்றவாறு.

அரசன் மரத்தடியில் உட்கார்ந்திருந்ததுகொண்டு அரசன்மரம், அரசமரமெனக் காரணப்பெயரைப் பெற்றதுபோல், விம்பாசார அரசன் ஆளுகைக் குட்பட்ட ஓர் குன்றின்மீது சித்தார்த்தியாம் அரசன் வீற்றிருந்து, சத்திய தன்மமாம். தசபாரமென்னும் தசசீலங்களைப் பதிவித்து, விம்பாசாரனால் பலவகை தன்மங்களையும் செய்வித்துவந்த பீடமாகுங் குன்றையே ஆதாரமாகக் கொண்டு குன்றைவேந்தனென்றும், வரையாது கொடுக்கும் ஈகையை ஆதாரமாகக்கொண்டு செல்வனென்றும், வழங்கிவந்தப் பெயர்களையே ஞானத்தாய் தானியற்றியுள்ள இரண்டாம் வாசகக் காப்பிற் கூறியுள்ளாள்.

பின்கலைநிகண்டு

சிறந்திடுங் குன்றைவேந்தன் குணபத்திரன் சீலநூலை
யறங்செயா வாறேகற்றவதிமயக்கத்தினாலே
குறைந்திடுந் தமது மேற்கொள்கொளீயமற்றதுகரந்தே
யறிந்தது மறியாதாரைப்யேற்றலு மிழிமடந்தான்.

சூளாமணி

மிக்கெரி சுடர்முடி சூடிவேந்தர்க / டொக்கவரடிதொழத் தோன்றுந்தோன்றலா
யக்கிரிபெருஞ்சிறப் பெய்தியாயிடை / சக்கரப்பெருஞ்செல்வன் சாலைசார்ந்ததே.

சீவகசிந்தாமணி

சினவுனர் கடந்த செல்வன் செம்மல ரகலநாளை.

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

அன்னையும் - தாயாரும், பிதாவும் - தகப்பனாரும், முன் - ஆதியாகவும் முன்னிலையாகவும், அறி - காணக்கூடிய, தெய்வம் - கடவுளர்களென்பதாம்.

அதாவது குழவியாகத் தோன்றியகால் அமுதூட்டி சீராட்டியவளும் அன்னமூட்டி பாராட்டியவளுமாகிய தாயாரும், சேயையுந் தாயையும் ஆதரித்து வந்த தந்தையும், காப்பு, இரட்சையிரண்டிலும் முதற்கடவுளாகத் தோன்றியுள்ளபடியால் அவர்களையே கண்ணிற்கண்ட முதல்தெய்வமென்று கூறியுள்ளாள்.

2. ஆலயந்தொழுவதுசாலவுநன்று

ஆலயம் - முதல்தெய்வமாகக் காணுந் தந்தை தாயரை மனோவமைதிபெற, தொழுவது - வணங்குவது, சாலவும் - எக்காலும், நன்று - சுகமென்பதாம்.

அதாவது தந்தை தாயரை தெய்வமாகக் கொண்டவன் அவர்கள் காப்பையும், இரட்சையும் நன்றியறிந்து அவர்க் கன்பான ஆதரணை இதயத்து ஊன்றி வணங்கியும் அவர்களை அன்புடன் போஷித்தும் வருவானாயின் அச்செயலைக் கண்ணுற்றுவரும் இவனது மைந்தனும் அன்னை தந்தையரை தெய்வமெனக் கொண்டு ஆலயந்தொழுதுவருவான். அங்ஙனமின்றி அன்னையையும், பிதாவையும் அன்புடன் போஷித்தும் ஆலயம்பெறத் தொழுவதைவிடுத்து கல்லையுஞ் செம்பையுந் தொழவேண்டுமென்பது கருத்தன்றாம்.

பட்டினத்தார்

சொல்லினுஞ் சொல்லின்முடிவிலும் வேதச் சுருதியிலும்
அல்லினு மாசற்ற வாகாயந்தன்னிலு மாய்ந்துவிட்டோர்
இல்லினும் அன்பரிடத்திலு மீசன் இருப்பதல்லால்
கல்லினுஞ் செம்பிலுமோயிருப்பானென் கண்ணுதலே.

கடவுளந்தாதி

வீண்பருக் கெத்தனைச்சொன்னாலும் பொய்யது மெய்யென்றெண்ணார்
மாண்பருக்குப் பொருளாவதுண்டோ மதுவுண்டு வெறி
காண்பரைக் கும்பிட்டு கல்லையுஞ் செம்பையுங் கைதொழுது
பூண்பவர் பாதக பூதலத்தொல்லை பிடித்தவரே.

என்று மகாஞானிகள் கூறியுள்ளவற்றை நாம் பின்பற்றவேண்டியதன்றி அஞ்ஞானிகளின் கருத்தை பின்பற்றலாகாதென்பது கருத்து.

பாலி பாஷையில் ஆலயமென்றும், ஆவிலயமென்றும், மனோலய மென்றும் வழங்கும் வாக்கியங்கள் மூன்றும் ஒருபொருளைத்தரும்.

ஔவைக்குறள்

வாயுவழக்க மறிந்து செறிந்தடைங்கில் / ஆயுட் பெருக்கமுண்டாம்.
வாயுவினாலய வுடம்பின் பயனே / ஆயுவி னெல்லையது.

3. இல்லறமல்லது நல்லறமன்று

இல்லறம் - மனையாளுடன் கூடி வாழும் வாழ்க்கையில் மனமொத்து வாழ்தலே நல்லறமெனப்படும், அல்லது - அவ்வகையல்லாதது, நல்லறமன்று - நல்லற மென்பதற்று பொல்லறமென்று கூறுதற்கேதுவுண்டாம்.

இல்வாழ்க்கையில் மனையாளனும், மனையாட்டியும் மனமொத்து வாழ்தலே இல்லறமென்னும் நல்லறமாவதுடன் இகவாழ்க்கையிலும், சுகவாழ்க்கைப் பெறுவார்களென்பது கருத்து.

மனமொத்துவாழும் இல்லாளின் வாழ்க்கைப்பெற்றவன் துறந்த பெரியோர்களுக்குந், துறவாசிரியோர்களுக்கும், மறந்திரந்த மக்களுக்கும்

உதவிபுரியும் உத்தமனாதலின் இல்லறத்தில் நல்லறத்தோனை மிக்க மதித்துக் கூறியுள்ளாள்.

திரிக்குறள்

இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு / நல்லாற்றி னின்ற துணை.

அறநெறிச்சாரம்

மடப்பதூஉமக்கட் பெறுவதூஉம் பெண்பான்
முடிப்பதூஉமெல்லாருஞ்செய்வர் படைத்ததனால்
இட்டுண்டில்வாழ்க்கை புரிந்துதா னல்லறத்தே
நிற்பரேல் பெண்டீ ரென்பர்

நாயனாதிகாரர் காப்பியம்

தலைவனுந் தலைவி யென்பார் தங்களிற் பக்கமன்பு
நிலைமன மொருமெயோடுநிணிலந்தன்னில் வாழ்தல்
பலனவனென்னில் வானிற் பரமனு மருள்போரின்ப
நலனுநீ டூழிகாலம் நன்கொடு வாழ்குவாரே.

சங்கத்துபராதம்

எப்பணியா லின்புருவர் காதலர் காதலரை / யப்பணியா லப்பொழுதே யன்புறுத்தி யொப்
மனங்குழையும்வண்ண மகிழ்விப்பதன்றே / கனங்குழையார் தங்கள் கடன்.

4. ஈயார்தேட்டைத் தீயார்கொள்வர்

ஈயார் - மற்றவர்க்குக்கொடா லோபியரின் தேட்டை - சுகப்பொருளை, தீயோர் - வஞ்சகர், கள்ளர், பொய்யர்களாகிக்கொறூரச்சிந்தையையுடையவர்கள், கொள்வர் - அபகரித்துக் கொள்ளுவார்கள் என்பதாம்.

நாலடி நானூறு

உடா அதுமுண்ணாதுந்த முடம்புசெற்றுங் / கெடா அத நல்லறமுஞ்செய்யார் - கெடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர் வான்றோய் மலைநாட / வுய்த்தீட்டுந் தேனீக்கரி.

5. உண்டிசுருங்குதல் பெண்டிற்கழகு

உண்டி - உண்ணும் புசிப்பை, சுருங்குதல் - மிதாகாரத்தில் நிறுத்தல், பெண்டிர்க்கு - பெண்களுக்கு, அழகு - சிறப்பாகும்.

அதாவது, பெண்கள் தங்களது புசிப்பை அதிகமுமில்லாது கொஞ்சமுமல்லாது புசிப்பார்களாயின் தன் கணவனையும், பந்துக்களையும் வரும் விருந்தினரையும் அன்புடன் போஷிப்பார்கள். அங்ஙனமின்றி பெருந்திண்டியை விரும்புவரேல் தன்கணவரையும் பந்துக்களையும் விருந்தினரையும் ஓம்பார்களென்பது திண்ணமாதலின் உண்டிற் சுருக்கி வாழ்தலே இல்வாழும் பெண்ணுக்குக் இனியதென்று கூறியுள்ளாள்.

நீதிநெறிவிளக்கம்

கற்பின் மகளிர் நலம்விற் றுணவுகொளா / பொற்றொடி நல்லார் நனிநல்லர்-மற்றுத்தங்
கேள்வர்க்கு மேதிலர்க்குந் தங்கட்குந் தங்கிளைஞர் / யாவர்க்குங் கேடு சூழார்.

அறநெறிச்சாரம்

கொண்டான் குறிப்பொழுகல் கூறிநாணுடை / கண்டது கண்டு விழையாமெய்-விண்டு
வெறுப்பென செய்யாமெய் வெஃகாமெய்நீக்கி / யுறுப்போடு ணர்வுடையாள் பெண்.

6. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்

ஊருடன் - ஓர் கிராமத்துட் சேர்ந்து வாழும் எல்லோருடனும், பகைக்கின் - விரோதித்துக்கொள்ளில், வேருடன் - தனது புத்திர மித்திர சந்ததியோர்களுடன், கெடும் - சீரழிவார்க ளென்பதாம்.

ஆதலால் ஒருவருக்கொருவர் உபகாரிகளாக விளங்கவேண்டுமென்றும், ஒருவருக்கொருவர் ஆதரவாக இருக்கவேண்டுமென்றும் எண்ணம் உடையவர்களாய் ஓரிடஞ் சேர்ந்து வாழ்தற்கு ஆரம்பித்தவர்கள் வாழ்க்கை எண்ணத்தை விடுத்து விரோத சிந்தையைப் பெருக்கிக்கொள்ளுவதாயின் அக்குடி வாழ்க்கையில் தான் கெடுவதுமன்றி தனது குடும்பசம்பந்தமுள்ள யாவருங்

கெடுவார்களென்றுணர்ந்த ஞானத்தாய் ஊராரெல்லோருடனும் விரோதித்துக் கொள்ளாதீர்களென்று கூறியுள்ளாள்.

7. எண்ணு மெழுத்துங் கண்ணெனத்தகும்

எண்ணும் - கணிதத்தில் (அ) எட்டென்னும் வரி வடிவும், எழுத்தும் - அட்சரத்தில் (அ) அகரமென்னும் வரிவடிவும் உண்மெய்ப் புறமெய்யென்னு மிரண்டையுங்கூடியக், கண்ணென - அருட்கண்ணாம் ஞானவிழியென, தகும் - கூறுதலொக்கும் என்பதாம்.

அதாவது (அ) அகரமா முதலெழுத்தின் சுழியே ஞானசாதகர்க்கு உள்விழி பார்வை நிலையாதலின் எண்ணுக்கு (அ) எட்டாகவும் எழுத்தில் அகரமாகவும் விளங்கும் வரி வடிவே ஞானக்கண்ணென்று விளக்கியுள்ளாள்.

திரிக்குறள்

எண்ணென்பவேனை யெழுத்தென்பவிவ்விரண்டுங் / கண்ணென்ப வாழு முயிர்க்கு.

ஞானக்கும்மி

கட்டுப்படாதந்த வச்சுமட்டம் - அதன் காலே பன்னிரண்டாகையினால்
எட்டுக்கயிற்றினால் கட்டிக்கொண்டால் - அது மட்டுப்படுமடி ஞானப்பெண்ணே.

அறநெறிச்சாரம்

தன்னோக்குந் தெய்வம் பிறிதில்லை தானதன்னைப்
பின்னை மனமறப் பெற்றானேல் - என்னை
எழுத் தெண்ணே நோக்கி யிருமெயுங் கண்டாங்
கருட் கண்ணே நிற்பதறிவு.

8. ஏவாமக்கள் மூவாமருந்து

ஏவா - பெரியோரேனும், தாய்தந்தையரேனும் ஒன்றை நோக்கி யேவல் கூறுவதற்கு முன்பு, மக்கள் - மநுக்களவற்றையுணர்ந்து செய்யுஞ் செயலானது, மூவா - என்றுங்கெடாது சுகந்தரும், மருந்து - அவுடதத்தை யொக்கு மென்பதாம்.

எஜமானனாயினுந் தாய்தந்தையராயினும் இன்னதைக் கேட்கின்றார்கள் இனியதைத் தேடுகின்றார்களென்றுணர்ந்து அவ்வேவலைப் புரிவோர் தேவாமிர்தத்திற்கு ஒப்பானவரென்பது கருத்து.

9. ஐயம்புகினுஞ் செய்வினைசெய்

ஐயம்புகினும் - பிச்சையேற்றுண்ணுங் காலம் வரினும்அச்சோம் பேரிச்செயலைக் கருதாது, செய்வினை - உனக்குத்தெரிந்த தொழிலை விடாமுயற்சியுடன், செய் - செய்து சீவிக்கக்கடவா யென்பதாம்.

அதாவது கால ஏதுக்களாலும், வியாதிகளினாலும் செய்தொழில் முயற்சி குன்றி பயந்து ஒருவரை இரந்துகேட்க நேரிடும். அவ்வகை இரந்துண்ணுந் தொழிலையே கடைபிடிப்பதாயின் பிச்சை கிடையாவிடத்து களவு, சூது, வஞ்சக முதலிய துற்கிருத்தியங்களுக்கு ஆளாக்கிவிடும். ஆதலின் இரந்துண்ணுங் காலம் வரினும் அவனவன் செய்தொழிலில் முயற்சி குன்றாதிருந்து செய்யக்கூடிய வினையை செய்து சீவிக்கவேண்டுமென்பது கருத்து.

10. ஒருவனைப்பற்றி யோரகத்திரு

ஒருவனை - தன்மெய்தானே, பற்றி - யுணரப்பிடித்து, ஓரகத்து - உள்ளத்தின்கண், இரு - நிலைத்திருமென்பதாம்.

தன் தொழிலால் தனக்கு போஷிப்பும், தன்னை உணர்ந்து ஒடுங்கலால் தனக்கு சுகமும் உண்டாவதன்றி ஏனைய மக்களால் சுகங்காண்டல் அறிதாதலின் தன்னொருவனைப்பற்றி தன்னகத்து ஒடுங்கவேண்டுமென்பது கருத்தாம்.

அறநெறிச்சாரம்

செய்வினையல்லாற் சிறந்தார் பிறிதில்லை
பொய்வினைமற்றைப் பொருளெல்லா - மெய்வினைவில்
தாயார் மனைவியார் தந்தையார்மக்களார்
நீயார் நினைவாழி நெஞ்சு.

தானே தனக்குப் பகைவனு நட்டானும் / தானே தனக்கு மறுமெயு மிம்மெயும்
தானே தான் செய்தவினைப் பயன்றுய்த்தலால் / தானே தனக்குக் கரி.

ஒற்றுமெய் நயத்தால் ஒன்றெனத் தோன்றுமொருவன் தன்னைத்தான் உணர்ந்து மனத்தை வணக்கலென்னும் நன்மெய்க் கடைப்பிடித்து ஒருவனைப் பற்றி உடலுயிரென்னுமோரக திருவென்று கூறியுள்ளாள்.

சூளாமணி

அருந்தவ மமையும் பார மிரண்டையு மறிந்து தம்மெய்.
வருந்தியு முயிரையோம்பி மனத்தினை வணக்கல்வேண்டும்
திருந்திய விரண்டுதத்தஞ் செய்கையிற்றிரியுமாயின்
பெருந்துயர் விளைக்குமன்றே பிறங்குதார் நிறங்கொள்வேலோய்.

இவற்றை அநுசரித்தே சமணமுநிவர்கள் யாவரும் தாங்கள் இயற்றியுள்ள இலக்கணநூற்கள் யாவிலும் தன்மெய், முன்னிலை, படர்க்கை என்றும்; ஒருமெய், பன்மெயென்றும்; ஒருமெயென்னும் ஒருவனாய் தன் தேகத்தை சுட்டியும்; பன்மெயான பலதேகத்தைச் சுட்டியும் தனக்குள்ள பஞ்சஸ்கந்தங்களை விளக்கி தன்னகத்தடங்கும் நிலையை ஊட்டியுள்ளார்கள்.

11. ஓதலினன்றே வேதியர்க்கொழுக்கம்

வேதியர் - சமணமுநிவர்களின், ஒழுக்கம் - நற்கிருத்தியம் யாதெனில், ஓதல் - வேதவாக்கியங்களாம் நீதிமொழிகளை சகலருந் தெளிவுற போதித்தலே, நன்றாகும் - சுகந்தரு மென்பதாம்.

அதாவது புத்தபிரானால் ஓதியுள்ள சௌபபாபஸ்ஸ அகரணம், குஸலஸ வுபஸம்பதா, ஸசித்த பரியோதபனம் பாபஞ் செய்யாதிருங்கோள் என்னும் கன்மபாகைகளையும், நன்மெய்க் கடைபிடியுங்கோள் என்னும் அர்த்தபாகைகளையும், இதயத்தை சுத்திசெய்யுங்கோள் என்னும் ஞானபாகைகளையும் அடக்கியுள்ள திரிபேத வாக்கியங்களை உணர்ந்தும் அதன்மேறை ஒழுகி சாதனைபுரியும் வேதியர்களாம் சமணமுநிவர்கள், தாங்கள் கண்டடைந்த திரிவேதவாக்கியங்களாம் நீதிமார்க்கங்களை சகலமக்களுக்கும் ஊட்டி அவ்வழியில் நடைபெறச்செய்வதே வேதியர்களாம் சமணமுநிவர்களின் ஒழுக்கமாகும்.

ஆதியில் மூன்று நீதிமார்க்கங்களை திரிபேதமாக சுருதியாய் போதித்த வரும், மாதம் மும்மாரி பெய்யும் ஒழுக்கங்களையூட்டி சருவசீவர்களுக்குஞ் சுகத்தையளித்தவரும் புத்தபிரானேயாகும்.

சீவகசிந்தாமணி

ஆதிவேதம் பயந்தோய் நீ. யலர்பெய் மாரியமர்ந்தோய் நீ.
நீதி நெறியை யுணர்ந்தோய் நி. நிகரில் காட்சிக் கிறையோய் நீ.
நாத னென்னப்படுவோய் நீ. நவைசெய் பிறவிக் கடலகத்துன்
பாதகமலந் தொழுவெங்கன் பசையாப்பவிழ பணிவாயே.

சூளாமணி

ஆதியங்கடவுளை யரு மறை பயந்தனை / போதியங்கிழவனை பூமிசை யொதிங்கினை
போதியங்கிழவனை பூமிசை யொதிங்கிய / சேதியென்செல்வநின் திருவடி வணங்கினம்.

நெஞ்சறி விளக்கம்

அரியதோ ரரசன் மைந்தன் அவனியிற் பிறந்து முன்னாள்
பெரியபே ரின்பஞானம் பெறுவதே பெரிதென்றெண்ணி
உரிய வேதாந்த வுண்மெய்யுரைக்கு மாசானுமான
தெரிவுறு நாகைநாதர் சீர்பதம் போற்று நெஞ்சே

அறநெறிச்சாரம்

குற்றங்குறைத்து குறைவின்றி மூவுலகில் / நற்ற மறைத் தாங்க ருள்பரப்பு - முற்ற
உணர்ந்தானைப் பாடாத நாவல்லவல்ல / சிறந்தோன்றாள் சாராத்தலை

அறவாழியான் போதித்துள்ள அருமறையாம் வேதவாக்கியங்களை ஓதுவோர் பால்போன்ற ஒழுக்கத்தால் சாந்தம் பெருகியும் ஈகைசிறந்தும், அன்பு நிறைந்துமுள்ளவர்களாதலின் தாங்களடைந்த சுகத்தை ஏனையோரும் அடைய வேண்டுமென்னும் நன்னோக்கத்தால் வேதவாக்கியங்களை வாசித் தடங்கிய வேதியர்களாம் சமண முனிவர்கள் ஏனையோருக்கு வோதுபவற்றையே ஒழுக்க மென்னப்படும்.

அறநெறித்தீபம்

ஐயெனத்தான் பெருகுவதும் அறிவினால் விளங்குவதும்
உய்தவங் கேட்டுணர்வதுவும் உணர்ந்தவற்றைப் பிறருளத்திற்
செய்தவர் நன்றாக்குதலும் சிறந்தார்சொற்றேருதலும்
மெய்யன்பை யுள்ளத்தில் மேவியவன் பயனாகும்

அஞ்ஞான இருளையகற்றி மெய்ஞ்ஞான விளக்கைத் தூண்டிக் கொண்டிருப்பதே வேதவாக்கியங்களாம் நீதிவாக்கியங்களை உணர்ந்த வேதியர்களின் ஒழுக்கமாதலின் ஞானத்தாய் ஓதல் நன்றே வேதியர் ஒழுக்கமென்று கூறியுள்ளாள்.

அறநெறிச்சாரம்

இருளேயுலகத்தியற்கை இருளகற்றுங்
கைவிளக்கேகற்ற வறிவுடைமெய் - கைவிளக்கு
நெய்யேதன்னெஞ்சத் தருளுடைமெய் நெய்ய பயந்த
பால்போலொழுக்கத்தவரே புரிவில்லா மேலுலக மெய்துபவர்.

யாப்பருங்கலைக்காரிகை

ஆர்கலியுலகத்து மக்கட்கெல்லாம் / ஓதலிநன்றே வொழுக்கமுடைமெய்

ஓதுதலிலும், உணர்தலிலும், அரும்பொருளுரைத்தலிலும், வல்லமெயுற்று அவ்வழியில் தானடங்கி நடவானாயின் வேதமோதும் நீதிமார்க்கக் குடியிற் பிறந்தும் அநீதிமார்க்கமாம் அஞ்ஞானக்குடியிற் பிறந்தவனென்று கூறப்படும்.

அதாவது நல்லொழுக்கமென்னும் தன்னைப் போல் பிறரைநேசித்தல் தன்னுயிரைப்போல் மன்னுயிரைக் காத்தல், பொய்யகற்றி மெய்பேசுதல், பொய்ப்பொரு ளாசையை அகற்றி மெய்ப்பொருளாசையைப் பெருக்கல், உலகத்தைப் பார்க்குஞ் சிந்தையை அகற்றி தன்னைப்பார்த்தல் ஆகிய மேன்மக்கள் குடியிற்பிறந்தும், களவு, சூது, வஞ்சினம், பொருளாசையாம் சுயப்பிரயோசனங் கருதி நீதிநெறி ஒழுக்கங்களை வழுவுவனேல் தீயக்குடியிற் பிறந்த கீழ்மகனென்றே சொல்ல நேரிடும்.

திரிக்குறள்

ஒதியுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப் / பேதையிற் பேதையாரில்.
மறப்பினு மோத்துக்கொளலாகும் பார்ப்பான் / பிறப்பொழுக்கங் குன்றக்கெடும்.

நீதியொழுக்கமாம் தன்னைப்பார்க்கும் பார்ப்பாரக் குடியில் பிறந்தும், தன்னை பாராமலும், தன்மெய் உணராமலும், அநீதியாம் தீயவொழுக்கங்களைப் பின்பற்றுவானாயின் அவன் நல்லொழுக்க நற்குடியிற்பிறந்தும் அவன் தன்மெய்யைப் பார்க்காது மறந்த தீயச்செயலால் தன் மெய்யறியா தம்மெய்ப் பார்க்கா தீயப் பிறப்பாங் குடியிற் பிறந்தவனென்றே கூறலாகும். ஆதலின் சமணருள் வேதவாக்கியங்களாம் நீதி வாக்கியங்களை உணர்ந்த ஒவ்வோர் வேதியனும் அவ்வொழுக்கத்தினின்று ஒதுதலே நன்றென்பது கருத்தாம்.

திரிக்குறள்

ஓ ஒதல் வேண்டு மொழி மாழ்குந் செய்வினை / யா அது மென்னு மவர்.

பாரதம்

நீதியும் நெறியும் வாய்மெயு முலகில் நிறுத்தினோன் வேதியன் அன்றி
வேதியனேனும் இழுக்குறிலவனை விளம்பும் சூத்திரனென வேத
மாதவர் புகன்றா ராதலாலுடல மாய்ந்தபின்பாவதோர் பொருளோ
தோதிலாவிந்தப் பிறவியில் வேதக் குரவனீ யல்லையோ குறியாய்.

12. ஔவியம்பேசுத லாக்கத் திற்கழிவு

ஔவியம் பேசுதல் - ஒருவனைக் கெடுக்கத்தக்க வாலோசினையைப் பேசுதல், ஆக்கத்திற்கு - தன் தேகத்திற்கே, அழிவு - கெடுதியை யுண்டாக்கு மென்பதாம்.

தங்கள் வாக்கினாலும், செயலினாலும் நற்கிரித்தியஞ்செய்வோர் சுகபலனை அடைவதுபோல் தங்கள் வாக்கினாலுஞ் செயலினாலும் துற்கிரித்தியங்களைப் பேசினும், செய்யினும் துக்கத்தையடைவார்கள் என்பது அநுபவமாதலின் ஞானத்தாய் ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவென்று கூறியுள்ளாள்.

மும்மெய்யிற் செய்த தீவினையின் பயனை இம்மெய்யில் அனுபவிக்கும் சுகத்தையும், அசுகத்தையும் உய்த்துணர்வோமாயின் மறுமெய்யில் அதிக துக்கத்திற்கு ஆளாகாது சுகம்பெறுஞ்செயலை அடைவான்வேண்டி இம் மெய்யில் அவ்வியம் பேசலாகாதென்று கூறியுள்ளாள்.

அறநெறிச்சாரம்

முற்பிறப்பிற் றான்செய்த புண்ணியத்தினல்லதோர்
இற்புறத்தின்புறா நின்றவ - ரிப்பிறப்போ
யின்னுங் கருதுமே வேதங்கடிந்தறத்தை
முன்னு முயன்றொழுகற் பாற்று.

13. அஃமுங்காசுஞ் சிக்கென் றகற்று

அஃமும் - தேகத்தா லுண்டாகுங் குற்றங்களையும், காசும் - மனத்திலெழுஉங் களங்கங்களையும், சிக்கென - பாசபந்தக் கயிற்றின் வலையென், அகற்று - கண்டு நீக்கி விடுமென்பதாம்

காஸ்யென்னும் பாலிமொழிக்கு களிம்பு ஆசாபாசமென்னும் பொருளைக் குறித்திருக்கின்றார்கள்.

அருங்கலைச் செப்பு

ஆசாபாசத்தோ டஃக விருளகற்றி / பேசாதான் பெற்ற பலன்.

14. கற்பெனப்படுவது சொற்றிரும்பாமெய்

கற்பு யெனப்படுவது - பெண்களுக்குக் கற்பென்று கூறப்படுவது, சொல் - கணவன் வாக்குக்கும், மாமனார் மாமியார் வாக்குக்கும், திரும்பாமெய் - கோணாமல் நடக்குந்தேகத்தைப் பெற்றவள் என்பதாம்.

அதாவது இல்லாளென்னும் மனைவாழ்க்கைக்குடையவள் கணவனையே தெய்வமாக பாவித்து அவனது வாக்கைக் கடவாமலும், மாமன் மாமியார் வாக்கை மீறாமலும் நடக்குந் தேகத்தை உடையாளை கற்புடைய மகளீரென்று கூறப்படும்.

அறநெறிச்சாரம்

வழிபா டுடையாளாய் வாழ்க்கைநடா அய் / முனியாது சொல்லிற்றுச் செய்தாங் - கெதிருரையா
தேத்திபணியுமே லில்லாளையாண்மகன் / போற்றிப்புனையும் பரிந்து.

பாரதம்

தன்கணவனைக்கடவு ளென்றுபலதன்மெய் / மென்முறைதிருத்திவழிபாடுக நிரைப்பேன்
இன்பொடு மவர்க்கினிய நாடியவைதேடி / யன்பொடு சமைத்திடுவ னல்குவனடுத்தே.
புருடனுண்டபின் றானுணல் பூவைமாற் / குரியவனவனாழ் துயிலுற்றபின்
அருசினிற்றுயின் றாங்கவன் முன்விழித் / தருடலைக்கொளல் கற்புடையாரரோ.

15. காவரானே பாவையர்க்கழகு

காவரானே - பெண் விவேகியாயினும் அவளை விவேகமுடன் கார்க்குங் காவலாளன் இருப்பானாயின், பாவையர்க்கு - பதுமெயாம் அழகுநிறைந்த பெண்களுக்கு, அழகு - சிறப்பாகும் என்பதாம்.

நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு இன்னான்கும் அமைந்த பெண்ணுருக் கொண்டவளாயினும் அவளுக்கோர் நற்காவலனில்லாவிடின் பெண்மெய்க்கு எவ்விதத்துங் கேடுண்டாமென்று உணர்ந்த ஞானத்தாய் காவல்தானே பாவையர்க் கழகென்று வற்புறுத்திக் கூறியுள்ளாள்.

16. கிட்டாதாயின் வெட்டென மற

கிட்டாதாயின் - நீவிர் இச்சிக்கும் பொருள் கிடைக்காவிடின், வெட்டென - துண்டிக்கும் பொருளைப்போல் அவ்விச்சையை, - மற அகற்றிவிடுமென்பதாம்.

மக்கள் நாடும் சிற்றின்ப பொருள் கிட்டா தாயினுந்துக்கம் ஓர்கால் கிட்டுமாயின் அப்பொருளைக் கார்ப்பாற்றுதலினுந் துக்கம், அப்பொருள் கை தவரினுந்துக்கம். ஆதலின் ஒருபொருள் மீது மிக்க அவாப்பற்றி நிற்கலாகாதென்பது கருத்து.

17. கீழோராயினுந் தாழ வுரை

கீழோராயினும் - உம்மை யடுத்து யாதாமொன்றைக் கேட்போர் யேழைகளாயினும், விவேகமற்றவர்களாயினும், தாழவுரை - மிருதுவாக்கியத்தா லவர்களுக்கு பதிலுரைக்கக்கடவா யென்பதாம்.

விவேகமிகுத்த மேலோர்களிடம் அவிவேகிகளாம் கீழோர் ஒன்றைநாடி சென்றக்கால் அவர்களை அன்புட னழைத்து வேண்டியவற்றை விசாரித்து உபசரித் தனுப்புவார்களாயின் அதன் சார்பால் அவிவேகிகளாகும் கீழோர் களுக்கும் ஓர் நற்கிரித்தியம் உதயமாமென்பது கருத்தாம்.

18. குற்றம் பார்க்கின் சுற்றமில்லை

குற்றம் பார்க்கின் - குடும்பமென்று கூடியவிடத்து தொடுத்த மொழி, எடுத்தச்செயல் யாவற்றிற்குங் குற்றங்கூறித் திரிவதாயின், சுற்றமில்லை - குடும்பத்தோரென்னும் பெயரில்லாமற்போம் என்பதாம்.

ஓர் குடும்ப விவகாரத்துள் சொல்லுக்குச்சொல் குற்றம் பிடித்தலும், செய்கைக்கெல்லாங் குற்றம் பிடித்தலுமாகிய கொறூரச் சிந்தையை விருத்தி செய்வதால் குடும்பமென்னும் பெயரற்றுப்போவதுடன் வாழ்க்கையுங் குன்றுமென்று உணர்ந்த ஞானத்தாய் குடும்பமென்னும் வாழ்க்கையில் எடுத்த செயலுக்கெல்லாங் குற்றம் பார்ப்பார்களாயின் சுற்றத்தோரென்னும் உரன்முறையோர் இல்லாமற்போய்விடுவார்களென்று கூறியுள்ளாள்.

19. கூரம்பாயினும் வீரியம் பேசேல்

கூரம்பாயினும் - உம்மிடத்துள்ள அம்பு மிக்கக் கூருள்ளதாயினும், வீரியம் - மிக்க வல்லமையாகப், பேசேல் - பதங் கூறாதே யென்பதாம்.

அதாவது அம்பு கூரியதாயினும் வின்னாணி சோர்வுற்றுப்போம். வின்னாணி தளராநிற்பினும் மெய் சோர்வுற்றுப்போம். மெய்சோர்வுராது வல்லமையுற்றிருப்பினும் காலக்கேடயரும் ஆதலின் காலபலம், தன்பலம், வில்லின்பலம், நாணின்பலம், எதிரியின்பலம் யாவையும் நோக்காதுதனது அம்பு கூரியதாயினும் அம்பைநம்பி வீரியம் பேசலாகாதென்பது கருத்து.

20. கெடுவதுசெய்யின் விடுவதுகருமம்

கெடுவது செய்யின் - செய்யுந் தொழிலில் கேடுண்டாமாயின், செயலை - அவ்வினையை, விடுவது - அவற்றுடன் விட்டுவிடுவதே, கருமம் - அழகாகும் என்பதாம்.

எடுத்துச் செய்யும் கருமத்தில் கேடுண்டாமென்று உணர்வாராயின் அக்கருமத்தைக் கருவிகளுடன் விட்டுவிடவேண்டுமென்பது கருத்தாம்.

தொடுத்த கருமத்தால் கேடுண்டென்று உணர்ந்தும் அதே கருமத்தை முடிக்க முயல்வானாயின் அவன் கெடுவதுடன் அவன் சந்ததியாரும் கெட்டு அவனை அடுத்த கருமிகளும் கருவிகளும் பாழடைந்து போமென்றுணர்ந்த ஞானத்தாய் கெடுதியுண்டாகுந் செயலை விடுவதே கருமமென்று கூறியுள்ளாள்.

21. கேட்டிலுறுதி கூட்டுங்குறைவை

கேட்டில் - தன சம்பத்தேனும், தானிய சம்பத்தேனுங் குறைந்து கெடினும், உறுதி - பொருள் போச்சுதே யென்றுள்ளங் கலங்காது திறத்தில் நிற்பானாயின், குறைவை - குறைந்தபொருள் யாவும், கூட்டும் - சேருமென்பதாம்.

மக்கள் சேர்த்துவரும் தானியம் குறைந்ததென்றும், தனங் குறைந்த தென்றும் கலங்காது முன்னவற்றை சேகரித்த முயற்சியிலிருப்பானாயின் குறைந்த வஸ்துக்கள் யாவும் நிறைந்து போமென்பது கருத்தாம்.

22. கைப்பொருடன்னின் மெய்ப்பொருட்கல்வி

கைப்பொருள் - ஒவ்வொருவர்க் கைகளால் ஆளும் தனப் பொருள், தானியப் பொருள், தன்னினும் - அதனினும், மெய்ப்பொருள் - அழியாப்பொருள் யாதென்பீரேல், கல்வி - அறிவை விருத்திபெறச் செய்யுங் கலைநூற்களே என்பதாம்.

அதாவது அவனவன் உள்ளத்திற் பதிந்துள்ள மண்பொருளினழகும், பொன்பொருளினழகும் பெண்பொருளினழகுங் தோன்றி தோன்றி கெடுவது சுவாபமாகும்.

கல்வியென்னும் மெய்ப்பொருளோ, கற்றவளவினின்று கலைநூல் உசாவுவனேல், அதன் பலனும், அதனழகும் அதனொளியும் இவனது உருவங் காணாது அழிந்த விடத்தும் பிரகாசிக்கு மென்பதாம்.

மூவர் தமிழ் - நாலடி நானூறு

குஞ்சியழகுங் கொடுத்தானைக் கோட்டழகும் / மஞ்சளழகும் அழகல்ல - நெஞ்சத்து நல்லம்யா மென்னு நடுவுநிலையாமெய் / கல்வி யழகே யழகு.

அறநெறிச்சாரம்

எப்பிறப்பாயினு மேமாப்பொருவற்கு / மக்கட் பிறப்பிற் பிறிதில - அப்பிறப்பில் கற்றலுங் கற்றவை கேட்டலும் கேட்டதன்கண் / நிற்றலுங் கூடப்பெரின்.

23. கொற்றவனறித லுற்றுடலுதவி

கொற்றவன் - வல்லவன், அறிதல் - தன்னையறிந்தடங்கற்கு, உதவி ஆதாரமானது, உடல் - தேகமேயாம்.

அதாவது வல்லமெயுற்றோனெனத் தோன்றியும், தன்னை ஆராய்ந் தடங்காது வல்லபத்தை விழலுக்கிரைத்த நீர்போல் விட்டுவிடுவானாயின் தேகம் தளர்ந்து பாலுண் கடைவாய் படிந்து நோக்குங் குறைந்துவருங்கால் பற்பல பிணிகளாலும், துன்புற்று துக்கத்தைப்பெருக்கிக்கொள்ளுவான். ஆதலின் தேகசக்தி மிக்கவன் ஒவ்வொருவனும் தன்னையறியுஞ் சாதனத்து உழைப்பனேல் தேகமெடுத்த பலனை அடைவானென்பது கருத்து.

அறநெறிச்சாரம்

நீக்கரு நோய்மூப்பு தலைப்பிறிவு நல்குரவு / சாக்காடென்றைந்து களிருமுக்கப் - போக்கரிய துன்பத்துட்டுன்ப முழப்பர் துறந்தெய்தும் / இன்பத் தியல்பறியா தார்.

மூவர்தமிழ் - நாலடி நானூறு

நிலையாமெய் நோய்மூப்புச் சாக்காடென் றெண்ணி
தலையாயார் தங்கருமஞ்செய்யார் - தொலைவில்லா
சித்துமுடலுஞ் செய்யநிலையென்னும்
பித்தரிற் பேதையாரில்.

இச்செய்யுளில் பாடபேதங்கள்:

1831 வருஷம் ம-அ-அ-ஸ்ரீ தாண்டவராய முதலியாரவர்களால் அச்சிட்டுள்ள நாலடி நானூறில், "சத்தமும் சோதிடமு மென்றாங்கிவை பிதற்றும்" என்றும் ம-அ-அ-ஸ்ரீ வேலூர்மார்க்கலிங்க பண்டாரமவர்கள் ஏட்டுப்பிரிதியிலும், ம-அ-அ-ஸ்ரீ மயிலை குப்புலிங்கனாயனாரவர்கள் ஏட்டுப்பிரிதியிலும்,

"சித்துமுடலுஞ் செய்யநிலையென்னும்"

என்னும் பாடபேதங்களைக் கண்ணுற்றபோது இருவரேட்டுப் பிரிதிகளிலுள்ளச் செய்யுள் சிதையினும் பொருள் பொருந்தியுள்ளது கண்டு உடற்கூற்றையே வெளியிட்டுள்ளோம்.

சத்தமுஞ் சோதிடமுமென்னு மொழி முற்சீருக்குப் பொருந்தாதாதலினும், சோதியின் இடங்கண்டு கூறுவோரை பித்தரென்று கூறியுள்ளதும் பிழையேயாம்.

எங்ஙனமென்பீரேல் தற்காலமுள்ள பிரிட்டிஷ் ஆட்சியில் (அஸ்ட்ர) என்னும் வானசாஸ்திரிகள் சோதிகளாகும் நட்சத்திரங்களுள்ள இடங்கண்டு இன்னசோதி, இனிய இடம் போமாயின் காற்றடிக்கும் மழைபெய்யுமென்று கூறுதலும், சாக்கையர்கள் குணிப்பில் இன்னசோதி இன்னின்னவிடங்களில் மாறுபடுமாயின் சூரிய கிருஹணம், சந்திரகிருஹணம் உண்டாமென்னுங் குறிப்பும், அநுபவத்திலும், காட்சியிலுமிருக்குங்கால் சோதியின் இடமறிந்து பலாபலன் கூறுவோரை பித்தரென்றும், பேதையரென்றுங் கூறியுள்ளது பிழையென்று துணிந்து கூறியுள்ளோம்.

24. கோட்செவிக் குறளை காற்றுட நெருப்பு

கோட்செவி - எக்காலுங் குற்றமாகிய சொற்களையே கேட்க விரும்பும் சுரோத்திரமுடையவன், குறளை - விருப்பமானது, காற்றுட நெருப்பு - மனைகள்

தீப்பட்டெறியுங்கால் காற்றுஞ் சேர்ந்துக்கொள்ளுமாயின் உள்ள மனைகளும் எரிந்து பாழாவதுபோல் தான் கெடுவதுடன் தன் சுற்றமுங் கெடுமென்பதாம்.

குடும்பத்தோர் குற்றங்களையாயினும், நேயர்கள் குற்றங்களையாயினும் தங்கள் செவியாரக் கேட்க விருப்பமுடையவன் மனமானது எப்போதும் கோபமென்னுந் தணலில் எரிந்திருக்குங்கால் மேலுமேலுங் கோட்சொல் நுழையில் காற்றுடன்சேர்ந்த நெருப்பைப்போல் உள்ள கோபாக்கினி மீறி தன்னையுந் தன் குடும்பத்தையுந், தன்நேயரையும் அழிக்குமென்று உணர்ந்த ஞானத்தாய் குற்றத்தைக் கேழ்க்கும் விருப்பமிகுத்தோன் காற்றுடன்சேர்ந்த நெருப்புக்கொப்பாய் தன்னைத்தானே தகித்துக்கொள்ளுவானென்பது கருத்து.

அறநெறிச்சாரம்

தன்னிற் பிறிதில்லை தெய்வநெறி நிற்பில் / ஒன்றானுந்தானெறி நில்லானேல் - தன்னை
இறைவனாய்ச் செய்வானுந் தானேதான்றன்னை / சிறைவனாய்ச் செய்வானுந்தான்.

25. கௌவைசொல்லி னெவ்வருக்கும் பகை

கௌவைசொல் - எதிரிக்கு மற்றொருவன்கூறிய வார்த்தையைச் சொல்லுதலும், மற்றவன் கூறிய வார்த்தையை எதிரிக்குச் சொல்லுதலும், எவருக்கும்பகை - ஒருவருக்கொருவரை விரோதிக்கச்செய்து பாழ்படுத்து வதுடன் அத்தகையக் குட்டுணிசெயலால் சகலருக்கும் விரோதியாவான் என்பதாம்.

உடும்புக்குள்ள இரட்டை நாவைப்போல் இருவருக்கும் நேயனைப் போலிருந்து கௌவைப்போல் அவர் சொல்லை இவருக்கும், இவர் சொல்லை அவருக்குஞ் சொல்லி கலகத்தை உண்டு செய்வோன் இருவருக்கும் விரோதியா வதுடன் இவன் இருநாக்கன், கௌவை சொல்லன் என்றுணர்ந்தோர் யாவரும் இவனைக் கண்டவுடன் பயந்து யாதொரு சொற்களையும் பேசாமல் துரத்தி விடுவார்கள். ஆதலின் ஒருவர் சொல்லை மற்றவனுக்குச் சொல்லுங் கௌவை சொல் எக்காலும் பேசலாகாதென்பது கருத்து.

26. சந்ததிக்கழகு வந்தி செய்யாமெய்

சந்ததி - புத்திர பாக்கிய விருத்திக்கு, அழகு - சிறப்பு யாதெனில், மெய் - தனது தேகத்தை, வந்திசெய்யா - அறுவகை கற்பதோஷத்திற் குள்ளாகாது கார்க்கவேண்டிய தென்பதாம்.

அதாவது இஸ்திரீகளை மலட ்க்கிப் புத்திர பாக்கியத்தைக் கெடுப்பது அறுவகைக் கருப்பை தோஷங்களேயாதலின் சந்ததியின் அழகைக்கோறும் பெண்கள் யாவரும் கருப்பை தோஷமுண்டாகாது காக்கவேண்டுமென்பது கருத்து.

27. சான்றோரென்கையீன்றோட்கழகு

சான்றோர் - நற்குணங்கள்யாவும் நிறைந்த ருபி, என்கை - என்று கூறப்படுவானாயின், ஈன்றாள் - பெற்றத்தாயார்க்கு, அழகு - சிறப்பாகும் என்பதாம்.

தானீன்ற புத்தி,ன் நல்வாய்மெய், நல்லூக்கம், நற்கடைபிடி என்னும் சாந்தரூபியாய் சகலராலுங் கொண்டாடப்படுகின்றா னென்று பல்லோரும் புகழக் கேழ்ப்பதே பெற்றவளுக்குப் பேரழகென்று கூறியுள்ளாள்.

திரிக்குறள்

ஈன்றப்பொழுதிற் பெரிதுவக்குந்தன்மகனை / சான்றோனெனக் கேட்டதாய்.

அறநெறிச்சாரம்

எள்ளிப்பிறருரைக்கு மின்னாச்சொல் தன்னெஞ்சில்
கொள்ளிவைத்தாற்போல் கொடிதெனினு மெள்ள
அறிவென்னு நீரா லவித்தொழுக லாற்றின்
பிறிதெனினும் வேண்டாந் தவம்.

28. சிவத்தைப்பேணிற் றவத்திற்கழகு

சிவத்தை - உனக்குள்ள அன்பை, பேணில் - பெருக்க முயலில், தவத்திற்கு - சுகசாதனத்திற்கு, அழகு - சிறப்பாகும் என்பதாம்.

திருமூலர் - திருமந்திரம்

அன்பும் சிவமும் இரண்டென்ப ரறிவிலார் / அன்பே சிவமாவதி யாருமறிகிலார்
அன்பே சிவமாவதி யாரு மறிந்தபின் / அன்பே சிவமா யமர்ந்திருப்பாரே.

கோபமென்னுங் குன்றின்மீதேறி யவித்து அன்பே ஒருருகொண்ட சாந்தரூபியாம் புத்தபிரானை குணகாரணத்தால் சிவனென்றும், சதா சிவனென்றுங் கொண்டாடிவந்தார்கள்.

அறநெறித்தீபம்

அவன்கொ லிவன்கொலென்றையப்படாதே
சிவன்கண்ணே செய்ம்மின்கண்சிந்தை - சிவன்றானும்
நின்றுக்கால்சீக்கு நிழறிகழும்பிண்டிக்கீழ்
வென்றிச்சீர் முக்குடையான் வேந்து.

சூளாமணி

மணிமலர்ந் துமிழொளி வனப்புஞ் சந்தனத் / துணிமலர்ந்துமிழ் தருந்தண்மெய்தோற்றமும்
நணிமலர் நாற்ற மென்னவன்ன தா / லணிவரு சிவகதி யாவதின்பமே.

மேருமந்திரபுராணம்

அவதியா னரகமா றாவதாய்ந்திடா / வுவதியால் வரும் பயன் ஒன்றுமின்றியே
சிவகதி யவர்க்குப் போலிவர்க்கு நல்வினை / யவதியி னுதையத்தா லாகு மின்பமே.

29. சீரைத்தேடி னேரைத் தேடு

சீரை - சுக வாழ்க்கையை, தேடில் - ஆராய்வதில், ஏரை - உழுதுண்ணுஞ் செயலை, தேடு - கண்டறிந்துக்கொள் என்பதாம்.

அதாவது உலகத்தில் சுகவாழ்க்கையைத் தேடுபவன் பூமியைத் திருத்தியுண்ணும் வேளாளத் தொழிலை நாடுவானாயின் சகலருக்கும் உபகாரியாக விளங்குவதுமன்றி தானும் சுகவாழ்க்கையைப் பெறுவான்.

திரிக்குறள்

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந் / தொழுதுண்டு பின்செல் பவர்.

30. சுற்றத்திற்கழகு சூழவிருத்தல்

சுற்றத்திற்கு - உறவின்முறையா ரென்போருக்கு அழகு - சிறப்பு யாதெனில், சூழவிருத்தல் - ஒருவருக்கொருவர் உதவிபுரிந்து சேர்ந்து வாழ்தலேயாம்.

என் சகோதிரன், என் மாமன், என் மைத்துனியென்று சொல்லுங் குடும்பிகளுக்கு சிறப்பும், வாழ்க்கையும் சுகமும் யாதெனில், ஒருவருக்கொருவர் நெருங்கி வாழ்வதுடன் ஒருவருக்கொருவர் உபகாரிகளாக விளங்குவதே. என் குடும்பத்தோர், என் சுற்றத்தோர் என்பதற்கு அழகாகும் சேர்ந்த வாழ்க்கைப்பெற்றும் உபகாரமற்றிருப்போருக்கு வாழ்க்கைக்கு அழகாகாவாம்.

திரிக்குறள்

சுற்றத்தாற் சுற்றப்படவொழுகல் செல்வந்தான் / பெற்றத்தார் பெற்ற பயன்.

31. சூதும்வாதும் வேதனைசெய்யும்

சூதும் - ஒருவரை வஞ்சினத்தாலும், வாதும் - ஒருவர் வாக்குக்கு யெதிர்வாக் குரைத்தலாலும், வேதனை - துன்பத்தை, செய்யும் - அநுபவிக்க நேரிடு மென்பதாம்.

சூதாகும் வஞ்சகக் கிரியைகளையும், வாதாகுங் குதர்க்க வாதங்களையுஞ் செய்துக்கொண்டே வருவதினால், விவேகமிகுத்தோர் இவனை புறம்பே அகற்றுவதுடன் அதிகாரிகளால் வேதனையும் அடைவானென்பதுங் கருத்து.

32. செய்தவ மறந்தாற் கைதவ மாளும்

செய் - தான் செய்துவரும், தவம் - நல்லொழுக்கத்தை, மறந்தால் - செய்யானாயின், கைதவம் - அநுபவத்திற்கைகண்ட சுகங்களானது, மாளும் - கெட்டுப்போமென்பதாம்.

தான் விடாமுயற்சியாய் சாதித்துவந்த நற்காட்சி, நல்வாய்மையாகுந் தபோபலங்குறையின் துற்காட்சி மிகுத்து முன்செய்த தவமும் மாய்ந்து போமென்பது கருத்து.

33. சேமம்புகினுஞ் சாமத்துறங்கு

சேமம் - சுகசீர், புகினும் - அடைந்திருப்பினும், சாமத்து - ஐந்து நாழிகைவரையினும், உறங்கு - நித்திரை செய் யென்பதாம்.

அதாவது யாதாமோர் தொழிலுமின்றி சுகசீரடைந்திருப்பினும், சோம்பலால் அதிக ஓறக்கத்திற்கு இடந்தரல் ஆகாதென்பது கருத்து.

34. சையொத்திருந்தா லையமிட்டுண்

சையத்தோர் - தன்னையறியும் சாதனைநிலையோர், இருந்தால் - தோற்றுவாராயின், ஐயம் - அவரொடுக்கத்தை யறிந்து, இட்டுண் - முன்பு அவருக் கன்ன மளித்து நீ யுண்பா யென்பதாம்.

பாலியில், சைவர், தன்னை ஆராய்வோர், சைனர், சினமற்றோர், தன்னை யறிந்தோரென்னப்படும்.

அகப்பேய்சித்தர்

சைவமாருக்கடி யகப்பே தன்னையறிந்தவர்க்கே .
சைவமானவிட மகப்பே தாணாக நின்றதடி .

35. சொக்கரென்பவ ரத்தம்பெறுவர்

சொக்கர் - சகல பாசபந்தங்களையுங் களைந்த சுயம்பு, என்பவர் - என்று சொல்லத் தகுந்தவர், அத்தம் - நிருவாணமென்னு முத்தி நிலையை, பெறுவர் - அடைவர் யென்பதாம்.

அதாவது சருவ குற்றங்களையும் அகற்றியவர், களங்கமற்ற நெஞ்சினர், மனமாசு ஒழிந்தவர், சுயம்பு, சொக்கர் என்று சொல்லும்படியான நிலையை வாய்த்தவர்கள் அத்தமாம் வீடுபெற்று பிறவி துக்கத்தை ஒழித்தவர்கள் என்பது கருத்து.

சுயம்புநிலையால் புத்தரை சொக்கநாத ரென்றும், பிறவியற்ற நிலையால் புத்தரை அத்தனென்றும் வழங்கிவருகின்றார்கள். அதுகொண்டே நமது ஞானத்தாய் அகக் களிம்பற்று சொக்கமானவர் அத்தம் பெறுவரென்று கூறியுள்ளாள். சொக்கமென்னு மொழி சுவர்க்க மென்னும் மொழியினின்றும், அத்தமென்னும் மொழி முடிவாம் வீடுபேற்றினின்றும் தோற்றியவைகளாம்.

36. சோம்பரென்பவர் தேம்பித்திரிவர்

சோம்பர் - யாதொரு தொழிலுமற்ற சோம்பேரி, என்பவர் - என்றழைக்கப்பெற்றவர்கள், தேம்பி - துக்க மதிகரித்து, திரிவர் - அலைந்து கெடுவாரென்பதாம்.

அதாவது மனித உருவெனத் தோன்றி ஓர் தொழிலின்றியும், யாதாமோர் முயற்சியின்றியும் தேகத்தை அசையாது சோம்பலில் இருத்தியுள்ளவன் உண்ண உணவிற்கும், உடுக்க உடைக்குமின்றி வீதிகடோருந் திரிந்து பசியின் கொடூரத்தாலும், துக்கவிருத்தியாலும் நலிந்து கெடுவான். ஆதலின் ஒவ்வோர் மனிதனும் சோம்பலின்றி தேகத்தை வருத்தி சம்பாதித்துண்பதே மனித தோற்றங்களுக்கு அழகாதலின் ஒவ்வோர் மனிதனும் தனக்குள்ள முயற்சியையும், உழைப்பையும் நோக்காது சோம்பித்திரியலாகாதென்பது கருத்து.

37. தந்தைசொன்மிக்கமந்திரமில்லை

தந்தை - தன்னையீன்ற தகப்பனும், தனக்கு நீதிவழிகாட்டியுள்ள சற்குருவாகிய தகப்பனும், சொன் - சொல்லிய மொழிகளுக்கும், சுருதி வாக்கியங்களுக்கும், மிக்க - மேலான, மந்திரம் - ஆலோசினை, இல்லை - வேறில்லை யென்பதாம்.

அதாவது சற்குருவின் திரிபேதவாக்கியங்களாம் நீதிநெறி ஒழுக்கங்களைத் தழுவிவந்த தனது தந்தையால் சொல்லக்கொடுத்துவரும் புத்திக்கும், ஆலோசினைக்கும் மேற்பட்ட மந்திரங்கள் யாது மில்லையெனபது கருத்து.

மற்றப்படி கள் குடியனாகுந் தந்தையும், களவாடுந் தந்தையும், அப்பா கொஞ்சங் கள்ளுக்குடி, அய்யா அவன் பொருளை அபகரித்துவாவென்று சொல்லுஞ் சொற்களை மந்திரங்களாகும் ஆலோசினைகளென்று ஏற்கப்

போமோ, ஒருக்காலும் ஏற்கலாகாவென்பதாம். ஆதலின் ஞானத்தாய் நீதிநெறி ஒழுக்கங்களை அநுசரித் தோது முதுமொழிகளையே மந்திரங்களென்று கூறியுள்ளாள்.

38. தாய்சொற்றுறந்தால் வாசகமில்லை

தாய் - தன்னையீன்ற தாயாரும், வாசகநெறியோதியுள்ள ஞானத்தாயாரும், சொல் - சொல்லியுள்ளவற்றை, துறந்தால் - அவற்றிற்கு மாறுகொள நடந்தால், வாசகமில்லை - ஞானத்தால் ஓதியுள்ள திரிவாசகமுமில்லை, அவற்றை அநுசரித்துவந்த ஈன்ற தாயாரின் ஒழுக்கமுமில்லை என்பது கருத்தாம்.

பெரும்பாலும் நமது ஞானத்தாய் ஓதியுள்ள திரிவாசகங்களை எளிதிலும், வாசகநடையிலு முணர்ந்து அம்மார்க்கத்தில் நடந்துவரும் தன்னை ஈன்றத் தயானவள் ஓதுஞ் சொற்களைக் கடந்து நடப்பதாயின் ஞானத்தாய் ஓதியுள்ள திரிவாசகத்தையே மீறிநடந்ததற்கொக்கும். ஆதலின் நீதிமார்க்கத்தில் நடக்கும் தன்னை ஈன்ற தாயின் சொற்களை மீறலாகாதென்று கூறியுள்ளாள். கொலையிலும், களவிலும், பொய்யிலும், விபச்சாரத்திலும், குடியிலு மிகுத்தவளைக் கூறாது திரிவாசகங்களை ஏற்று நடந்ததாயின் மொழிகளையே இவ்விடம் வற்புறுத்திக் கூறியுள்ளாள்.

39. திரைகடலோடியுந் திரவியந்தேடு

திரை - அலைபெருக்கில், கடலோடியுந் - கடன்மடை திரண்டோடும் வோடத்திற் சென்றும், திரவியஞ் - செல்வத்தை, தேடு - சம்பாதிக்க முயற்சிச்செய்யு மென்பதாம்.

யாதாமொரு களங்கமும் பயமுமின்றி கடல் மீது கப்பல் யாத்திரைச் செய்து புறதேசங்களுக்குச் சென்று தனது நீதிநெறியாம் ஒழுக்கங்களினால் அத்தேசத்தோருக்கு மேலானவனென விளக்கி தனது முயற்சியினாலும், தேககஷ்டத்தினாலும், வித்தியா விருத்திகளினாலும் திரவியத்தை சேகரித்து தான் சுகிப்பதுடன் தனது குடும்பத்தோரையும், தன்னையடுத்துள்ள ஏழைகளையும் ஆதரிக்கவேண்டுமென்னுங் கருத்தால் திரவியந்தேடும் உபாயத்தைக் கூறியுள்ளாள்,

40. தீராக்கோபம் போராய் முடியும்

தீராக்கோபம் - தன்னாலாற்றமுடியாக்கோபம், போராய் - பெருஞ்சண்டை கேதுவாய், முடியுந் - தீருமென்பதாம்.

தனக்குள் எழுங் கோபாக்கினியை சாந்தமென்னும் நீரினால் அவிக்காமற் போவானாயின் தனதுள்ளுருப்புக்கள் யாவுங் கொதிப் பேறி நடுக்குற்று நாசமடைவதுடன் எதிரிகளால் தனது தேகமும் நையப் புடைக்கப்பட்டு நசிந்துபோவானென்பதாம்.

திரிக்குறள்

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்காவாக்கால் / தன்னையே கொல்லுஞ் சினம்.

41. துடியாப்பெண்டீர்மடி நெருப்பு

துடியா - தனது கணவனுக்கு ஆபத்து நேரிட்டகாலத்து பதரா, பெண்டீர் - இஸ்திரீயானவளிருப்பளேல், நெருப்பு - அக்கினியைக் கட்டியுள்ளானென்பதற் கொக்கும் என்பதாம்.

புருடனுக் கோர் ஆபத்து நேரிட்டதென்று கேழ்விப்பட்ட மனைவியின் தேகந் துடியாமலும், மனம் பதராமலும் இருக்குமாயின் அவளது எண்ணம் பரபுருடனை நாடிநிற்பதுமன்றி தனது கணவன் சீக்கிரந் துலையவேண்டும் என்னும் நோக்கமுடையவளேயாவள். அத்தகையத் தீயகுணமுள்ளாளைச் சேர்ந்து வாழ்தல் தனது மடியில் நெருப்பைக் கட்டிவைத்திருப்பதற்கு ஒக்கும். தன்கணவன்மீது வெறுப்பும், அன்னியபுருடன்மீது விருப்புமுள்ள பெண்டீர் வாழ்க்கைக்குத் துணைநலமாகாதது கண்டுள்ள ஞானத்தாய் துடியா பெண்டீர் மடியில் நெருப்பென்று கூறியுள்ளாள்.

42. தூற்றும்பெண்டீர் கூற்றெனத் தகும்

தூற்றும் - மனை விவகாரங்களை வெளியில் தூற்றித்திரியும், பெண்டீர் - பெண்களை, கூற்றென - நசிக்குங்காலனெனத், தகும் - சொல்லுதற் கேதுவுண்டா மென்பதாம்.

அதாவது தனது மாமன் மாமியார் வார்த்தைகளையும், மாதுலன் மாதுலி வார்த்தைகளையும், கணவன் வார்த்தைகளையுந் தான் செல்லுமிடங்களுக் கெல்லாம் சொல்லித் திரிபவள் தனது குடும்பத்தை அழிக்குங் கூற்றனுக்கு ஒப்பாவாளென்பது கருத்து.

தன்வீட்டின் நெருப்பாங் கலக வார்த்தைகளை வெளியிற் கொண்டு போகாதவளும், வெளி நெருப்பாங் கலகவார்த்தைகளை உள்ளுக்குக் கொண்டு வராதவளுமே கற்புக் கினியவளென்பது கலை நூற்களின் துணிபாதலின் மனை வாழ்க்கை மொழிகளை பதரைப்போல் தூற்றித் திரிபவள் அக்குடிக்கே காலனாவாளென்று உணர்ந்த ஞானத்தாய் தூற்றும் பெண்டீர் கெடுதியை விளக்கியுள்ளாள்.

43. தெய்வஞ்சீறிற் கைதவமாளும்

தெய்வம் - தெய்வகமாம் உள்ளதை சீறில் - சீற்றமுறில், கைதவம் - உள்ளங்கை நெல்லிக்கனிபோல் கண்டுள்ள வொழுக்க சுகமானது, மாளும் - மாய்ந்துபோ மென்பதாம்.

அதாவது, ஒவ்வோர் மக்களுக்குமுள்ள காமாக்கினி, கோபாக்கினி, பசியாக்கினியாந் தேய்வினிலைமீறி சீறிநிற்குமாயின் செய்தவமும் அழிந்து தேகமாளும். அங்ஙனமின்றி திரிபுராந்த தணலாய்த் தேய்வென்னும் நிலையுள்ள காமாக்கினி, பசியாக்கினி, கோபாக்கினி என்னுங் குன்றின் மீதேறி சாந்தமென்னும் நீராலவித்து தண்மெயாம் குளிர்ந்த தேகியாய் விளங்கவேண்டுமென்பதே சற்குருவின் போதமாதலின் அவற்றைப் பின்பற்றியுள்ள ஞானத்தாய் அகத்துள்ளனவனலை அதிகரிக்கச் செய்யாதேயுங்களென்று கூறியுள்ளாள்.

தேய்வனலாகுந் திரிபுராந்தக ஸ்வயம்பிரகாச சாந்தரூபி யானோர் தேய்வன லகன்ற காரணங்கொண்டு தேவர் தேவர்களென்னும் பெயரைப்பெற்றார்கள்.

விவேகசிந்தாமணி – சாந்தபலன்

ஆசாரஞ் செய்வாராகி லறிவொடு புகழுமுண்டாம்
ஆசார னன்மெயானாலவனியிற் றேவராவர்.

44. தேடாதழிக்கிற் பாடாமுடியும்

தேடாது - ஓர் பொருளை தானே கஷ்டப்பட்டு சேகரிக்காது, அழிக்கில் - விரயஞ்செய்யில், பாடாய் - பாழாக, முடியும் - தீருமென்பதாம்.

ஒருவன் தேகத்தை வருத்தி ஓர் பொருளைச் சேகரிக்காது தனது முன்னோர் சேகரித்து வைத்திருந்த பொருளை கஷ்டமின்றி அழிப்பானாயின் மறுபடியும் அப்பொருளை சேகரிக்க வழிதெரியாமலும், சோம்பலினாலும், பாழடைந்து போவான். ஆதலின் கஷ்டப்பட்டு சம்பாதிக்கும்பொருளே விசேஷமென்று விளக்குவான் வேண்டி தனது முன்னோர்களால் தேடி உள்ள பொருள் தன்னாலுந் தேடி சேகரிக்கும் வழிதெரிந்தபின் அவற்றை சிலவழிக்க முயல்வானாயின் அஃது பாழகாது விருத்திபெற்றுவரும். அதனை சேகரிக்கும் வழி தெரியாது அழிப்பானாயின் பொருள் பாழாகி ஒழிவதுடன் உடையவனும் பாழாகி முடிவானென்பது கருத்து.

45. தைமாசியும் வைத்தியர்க்குழவு

தையும் - தைமாதமும், மாசியும் - மாசிமாதமும், வைத்தியர்களுக்கு - மாமாத்திரர்களுக்கு, உழவு - பூமியை யுழுது பூமியின் நீராகும் பூநீரெடுக்குங்கால மென்பதாம்.

அதாவது, மாமாத்திரர்கள் ஆடி - ஆவணி மாதங்களில் சமுத்திர உப்பென்னுங் கடலுப்பையும், தை - மாசி மாதங்களில் பூமி உப்பென்னும் நாதத்தையுந் தோண்டி எடுப்பதற்கு முன் பனிகாலமாகும் தையிலும், மாசியிலும்

உவர்மண் பூமியை உழுது வைத்து மீன-மேஷமென்னும் பங்குனி-சித்திரையில் பூர்த்திருக்கும் பூமியின் நீர் தோங்கி எழுமிடங் கண்டு அடிப்படை தோண்டி நாதமெடுத்து கடலுப்புடன் சேர்த்து வைத்திய உப்பை முடித்து வைத்துக் கொண்டு ஓடதிகளைச் செய்து பிணியாளருக்களித்து சுகமீவதியல்பாகும்.

உப்பினதுபோக்கும், அவற்றை எடுக்குங் காலமும், அதனால் முடியும் ஓடதிகளும், மாமாத்திரர் காலமறிந்து செய்யவேண்டிய விதியாதலின் வைத்தியர்கள் அக்காலத்தை மறவாதிருப்பான்வேண்டி தையும், மாசியும் வைத்தியர்க்குழவென்று கூறியுள்ளாள்.

பதஞ்சலியார் ஞானம்

காக்கையார்க்கெனுங் கம்பிதிறப்படும் / காக்கையாலுவர்ச் சாரமுங் கைக்குளாம்
காக்கையாற் சவுக்காரமங் கட்டலாம் / காக்கை காக்கை நடுக்கடற் காக்கையே
ஆடியாவணி யாழித்திரண்டதை / தேடினால் வருமே வந்துசிக்கினால்
பாடினார் பலநூற்களிற்பாஷையா / லோடியோடி யுழன்று தவிக்கவே.

தையு மாசியுங் கண்டு வுழுவதற் / கையனே பனிகால மதன் குறி
செய்யுங் கங்கையின் தீட்சை யறிந்தபேர் / கையுஞ் செய்யு மெய்யாகவே காண்பரே.

மீனமேட மிரண்டையு மேவுவார் / கானற்காலமென் றேசிலர் காட்டுவார்
போனகாலமும் புக்கின வேளையுஞ் / ஞானதேசிக னார்சொல நல்குமே.

மச்சமுநிவர் ஞானம்

யீசனென்று முடிவன்னியாதி சுழியேகமான பரிபூரணம்
இந்துகூடு மிருமீன மேஷ மதிவேயிருக்கு மிவை யெய்துமே
வாசமுண்டு புவியாளர் தாணுமறியாதிருந்தது சமாதியாய்
வாடிடாதுபின் மலர்ந்திடாது நிறமாவ தென் வைடூரியம்.

ஏட்டுப்பிரிதிகளின் பாடபேதத்தால் 'வையகத்துறங்கு' மென்னு மொழியை ஏற்று பனிகாலத்தில் வைக்கோல்வீட்டில் உறங்குகவென்று கூறுவதாயின் அம்மொழி நாட்டுவாசிகளுக் கேற்குமேயன்றி நகரவாசிகளுக்கு ஏற்காவாம்.

அத்தகைய நாட்டுவாசிகளுக்குள்ளும் பனை ஓலையாலும், தெங்கின் ஓலையாலும், விழல் கொத்துக்களினாலும் வீட்டின் மேடு மேய்ந்துள்ளாரன்றி வைக்கோலினால் இட்டுள்ள ஓர் குடிசையுங் கிடையாவாம். ஆதலின் அநுபவத்திற்கு வராததும், நூல்சார்பற்றதுமாகிய மொழியை ஏற்பது பொருந்தாவாம்.

46. தொழுதூண்சுவையினுழுதூ ணினிது

தொழுது - ஒருவரை வணங்கி, ஊண் - பெற்றவுணவை புசிப்பதினும், உழுது - பூமியைத் திருத்திப் பயிரிட்டு, ஊண் - புசிப்பது, இனிது - இன்ப மாகுமென்பதாம்.

தேகத்தை சோம்பலாலும், மந்தபுத்தியாலும், டம்பத்தாலும் வளர்ப்பதற்கு தன்மெய் ஒத்த தேகியை வணங்கி அவனிடந் தனக்கு வேண்டிய புசிப்பைப்பெற்று உண்பதினும் பூமியைத்திருத்திப் பயிரிட்டு உண்பதில் தேகத்தை வருத்திப் புசிப்பானாயின் அதுவே தேகசுக யினிய புசிப்பென்று கூறியுள்ளாள்.

அதாவது, நான் இன்னவகையாற் பெரியவன், இனியவகையிற் பெரியவன் எனப் பொய்யைச்சொல்லியும், வணங்கியும் உழைப்பாளராகும் பேதைமக்களை வஞ்சித்து பொருள்பறித்து உண்ணும் உணவு உணர்ச்சியற்ற உணவாதலின் உலகவாழ்க்கையுற்றோன் உழுதேனும் உடலை வருத்தியேனும் பொருளை சேகரித்து உண்ணும் உணவே உணவென்று வற்புறுத்திக் கூறியதாகும்.

திரிக்குறள்

உழுதுண்டுவாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந் / தொழுதுண்டு பின்செல்பவர்.

47. தோழனோடு மேழமெய்ப் பேசேல்

தோழனோடு - தன் புஜபலத்துக் குதவுவானோடு, ஏழைமெய் - தன் வல்லமெய்க் குறைவை பேசேல் - மறந்தும் பேசாதே என்பதாம்.

புருஷர்களில் தோழர்களென்பதும், இஸ்திரீகளில் தோழிகளென்பதும் தங்கள் எஜமானன் எஜமாட்டிகளுக்கு ஆபத்து பந்துபோலிருந்து

அஞ்சலியஸ்தராய் ஆதரிப்பவர்களாதலின் அவர்களிடத்துத் தங்கள் வல்லபக் குறைவை சொல்லுவதாயின் மதிப்பற்று ஆபத்துக்குதவாரென்பது கருத்து.

48. நல்லிணக்கமல்ல தல்லற்படுத்தும்

நல் - நல்ல, இணக்கம் - நேயர் சேர்க்கை, அல்லது - இல்லாமற் போமாயின், அல்லல் - துன்பத்திற்கு, படுத்தும் - ஆளாக்குமென்பதாம்.

நல்லவர்களை அடுத்திருத்தலும், நல்லவர்களின் வார்த்தையைக் கேட்குதலும் நன்றாகும். அத்தகைய நல்லோர்களை அடுக்காமலும், அவர்கள் வார்த்தையைக் கேளாமலும் இருப்பதாயின் எவ்விதத்துங் கேடுபெருகி மாளாதுக்கத்துக்கு ஆளாக்குமென்றுணர்ந்த ஞானத்தாய் நல்லோரிணக்கம் வேண்டுமென்றும் அஃதல்லாதார் அல்லற்படுவரென்றும் வற்புறுத்திக் கூறியுள்ளாள்.

49. நாடெங்கும்வாழ்க கேடொன்று மில்லை

நாடு - நஞ்சை புஞ்சை பூமிகளில், எங்கும் - எங்குமுள்ளவர்கள், வாழ்க - சுகவாழ்க்கையி லிருப்பார்களாயின், கேடு - சுகக்கேடுகள், ஒன்றும் - ஒன்றாயினும், இல்லை - இராது யென்பதாம்.

நஞ்சை புஞ்சை பூமிகளைத் திருத்தி பயிரிட்டு மக்கள் வாழ்க்கை புரியுமிடத்தை நாடென்றும், அரசனும் அரசவங்கத்தோரும் வாழுமிடத்தை நகரமென்றும் வழங்கிவருபவற்றுள் நஞ்சை புஞ்சை தானியங்கள் செழித்திருக்குமாயின் நாட்டார் யாவருஞ் செழித்திருப்பார்கள். நாட்டார்கள் செழிப்புற்றிருப்பார்களாயின் நகரவாசிகள் யாவரும் சுகமுற்றுவாழ்வது அநுபவமாதலின் பயிரிடுங் குடிகளின் சுகத்தைக் கண்டு எங்கும் சுகமுண்டென்பதை விளக்கியுள்ளாள்.

50. நிற்கக்கற்றல் சொற்றிரமாகும்

நிற்க - மனதில் நிலைக்க, கற்றல் - வாசித்த, சொல் - வார்த்தைகளாவது, திரம் - உறுதியாக, ஆகும் - முடையுமென்பதாம்.

கற்குங் கல்வியை நிலைபெறக் கற்று தான்கற்ற கல்வியினளவாய் ஒன்றைக் கூறுவானாயின் அஃது உறுதிபெற்றே நிற்கும். தான் கற்ற கல்வியை நிலைக்க வைக்காமலும், கற்றக் கல்வியினளவே நில்லாமலும் ஒன்றைக் கூறுவானாயின் சேற்றில்நாட்டியக் கம்பம்போல் தன்னிற்றானே திறம்பெறா தாதலின் கற்போர் யாவருந் தாங்கள் கற்றக் கல்வியை தங்களுள்ளத்தில் பதியக் கற்றல்வேண்டு மென்பது கருத்தாம்.

51. நீரகம்பொருந்திய வூரகத்திரு

நீர் - லோகசலதாரையூற்றுக்கு, அகம் - இடம், பொருந்திய - அமைந்துள்ள, ஊரகத்து - தேசத்தின்கண், இரு - வீற்றிரு மென்பதாம்.

நீர்வளமானது நிலவளத்தூறிய வகத்து வாழ்தலே பஞ்சமற்ற வாழ்க்கைக்கு இடமாதலின், நீர் வளம்பொருந்தியவிடத்து வாழ்கவேண்டுமென்பது கருத்து.

நீர்வளம் நிறைந்தவிடம் மக்கள் தேகசுத்தத்திற்கும், சுகத்திற்கும், தானியவிருத்திக்குமிடமாதலின், மனோசுத்தம், வாக்குசுத்தம், தேகசுத்தமாம் திரிகரணசுத்தத்தை நாடும் ஞானத்தாய் முதல்வாசகத்திற் கூறியுள்ள சனி நீராடென்னும் வாசகத்துக்கு இணங்க இரண்டாம்வாசகத்தில், சனிக்கும் நீரூற்றுள்ள வூரகத்து வாழென்று கூறியுள்ளாள்.

52. நுண்ணியகருமமு மெண்ணித் துணி

நுண்ணிய - சிறிய, கருமமும் - தொழிலேயாயினும், எண்ணி - தேற வாராய்ந்து, துணி - செய்வதற்கு முயலுமென்பதாம்.

ஓர் சிறியகாரியமேயாயினும் அக்காரியத்தை சரிவர ஆராய்ந்து செய்தலே நன்று. அங்ஙனமின்றி காரியம் சிறிதென்று கவனமற்று செய்வதாயின் சிறுகாரியமே பெருநஷ்டத்திற் குள்ளாக்குமென்று உணர்ந்த ஞானத்தாய் நுட்பச்செயலாயினும் முன்பின் ஆராய்ந்துச் செய்யுமென்று கூறியுள்ளாள்.

திரிக்குறள்

எண்ணித் துணிக கருமந் துணிந்தபி / னெண்ணுவ தென்ப திழுக்கு.

53. நூன்முறைதெரிந்து சீலத்தொழுகு

நூல் - கலைநூலில், முறையை - வழியை, தெரிந்து - அறிந்து, சீலத்தில் நன்மார்க்கத்தில், ஒழுகு - நடவா யென்பதாம்.

உலகத்திலுள்ள மக்களில் சிற்சிலர் தங்கடங்கள் சுயப்பிரயோசனங் கருதி எங்கள் தேவனே தேவன். எங்கள் தேவனை நம்பினவர்களே நேரில் மோட்சம்போவார்கள். மற்றவர்கள் நரகம் புகுவார்களென்று சிறுகுழந்தை களுக்கு ஐந்துக்கண்ணன் பயங்காட்டுவதுபோல் பேதைமக்களை வஞ்சித்து பொருள் பறிப்பான்வேண்டி வரைந்துள்ள பொய்நூற்களும் அனந்தமுண்டு. அத்தகைய நூற்களை நன்காராய்ந்து பொய்யகற்றலே நூன்முறை தெரிதலாகும்.

அங்ஙனமாய பொய்யகற்றி அநுபவத்திற்குங் காட்சிக்கும் பொருந்திய மெய் காணவேண்டியவர்கள் ஆதிதேவனாம் புத்தபிரானால் கண்டருளிய முதநூலும், அதையடுத்த சார்புநூற்களுமே சீலத்திற்கும், ஒழுக்கத்திற்கும் ஆதாரமாகும். ஆதலின் பேதைமக்கள் பலநூற்களையும் நம்பி பாழடையாது நூன்முறை தெரிந்தொழுகவேண்டுமென்பது அம்மன் கருத்தாம்,

அருங்கலைச்செப்பு

என்று முண்டாகி யிறையால் வெளிப்பட்டு / நின்றது நூலென்றுணர்.

நன்னூல்

வினையினீங்கி விளங்கிய வறிவின் / முனைவன் கண்டது முதநூலாகும்.

மனக்கோட்டம்தீக்கி துக்கநிவர்த்திசெய்வ / தெதுவோ அதுவே நூலென்னப்படும்.

உரத்தின் வளம்பெருக்கி யுள்ளியதீமெய்ப் / புரத்தின் வளமுருக்கிப்பொல்லா - மரத்தின் கனக்கோட்டந்தீர்க்கு நூலஃதேபோன்மாந்தர் / மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு.

சீவகசிந்தாமணி

காமனன்னதோர் கழிவனபறிவொடு பெறினு / நாமனாற்கதி நவைவரு நெறிபல வொருவி வாமனூனெறி வழுவறத் தழுவின ரொழுக / லேமவெண்குடை யிறைவமற்றியாவது மரிதே

திரிக்குறள்

நூலாருணூல்வல்ல னாகுதல் வேலாருள் / வென்றி வினையுரைப்பான் பண்பு.

54. நெஞ்சை யொளித்திரு வஞ்சகமில்லை.

நெஞ்சை - மனதை, ஒளித்து - அடக்கி, இரு - இருப்பாயாயின், வஞ்சகம் - உள்ள கடுஞ்சினம், இல்லை - அகன்றுபோமென்பதாம்.

தன்மனமாகிய நெஞ்சமே தனக்கு சான்றாதலின் அதிற்றோன்றும் வஞ்சினம், பொறாமெய், சூது, முதலியவற்றை அகற்றி நெஞ்சை நன்மார்க்கத்தி னூடே ஒளிப்பானாயின் அவனுக்கு துக்கமென்பது எக்காலு மில்லையாகும். அங்ஙனமின்றி நெஞ்சை ஒளித்தவர் போல் துறந்தோரென வேஷ மிட்டு பேதைகளை வஞ்சித்து பொருள் பறித்துண்பாருமுண்டு. அத்த கைய வஞ்சிக்கும் வாழ்க்கைபெறாது நெஞ்சை ஒளித்திருப்பதே நலமென்று கூறியுள்ளாள்.

திரிக்குறள்

நெஞ்சிற்றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து / வாழ்வாரின் வன்கணா ரில்.

55. நேரா நோன்பு சீராகாது

நேரா - தனக்குக் கூடிவரா, நோன்பு - கொல்லாமெய், சீராகாது - தனக்கு சுகங்கொடா தென்பதாம்.

அதாவது கொல்லா விரதமென்னும் நோன்பை நோற்பவன் மற்றொருவன் கொன்ற மாமிஷத்தைத் தின்பானாயின் தானோற்கும் நோன்பிற்கு நேராகா தென்பது கருத்து. மாமிஷம் தின்போன் இல்லாவிடின் கொல்வோன் அதிகரிக்கான்.

திரிக்குறள்

தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின்யாரும் / விலைப்பொருட்டா லூன்றரூவாரில்.

56. நைபவ ரெனினு நொய்ய வுரையேல்

நைபவர் - வருந்தும் ஏழைகளாக, எனினும் - இருப்பினும், நொய்ய - அவர்கள் மனம் வருந்த, உரையேல் - பேசாதே யென்பதாம்.

நமக்குள் அடங்கி வாழக்கூடிய ஏழைகளாயிருப்பினும் அவர்களது மனங்குன்ற பேசலாகாதென்பது கருத்து.

57. நொய்யவரென்பவர் வெய்யவ ராவர்

நொய்யவரென்பவர் - ஒருவரை மனனோகப் பேசுகிறவர்கள், வெய்யவர் - கொடுஞ்சினத்தோர், ஆவர் - எனப்படுவார்கள்.

ஒருவரை மனனோகப் பேசும்படியாய வார்த்தையை உடையோர் கோபத்திற் குடிகொண்டிருப்பவரென்பது கருத்து.

58. நோன்பென்பது கொன்று தின்னாமெய்

நோன்பென்பது - தம் மெய்யை காப்பதென்பது, கொன்று - சீவப்பிராணியை வதைத்து, தின்னாமெய் - மாமிஷத்தைப் புசியா தேகி யென்பதாம்.

தன் தேகத்தைக் காக்க வேண்டிய நோன்பினை உடையோன் சீவப்பிராணிகளுக்குத் துன்பத்தைச் செய்யாது காக்க வேண்டும் என்பது கருத்து. அங்ஙனமின்றி புறமெய்யை வதைத்து தன் மெய்யை வளர்க்க வேண்டியதாயின் புற உயிரை வதைத்துண்டு வளர்ந்த தேகம் அஃதுணர்ந்த உபாதையை உணர்ந்தேதீரல் வேண்டும்.

திரிக்குறள்

தன்னூன் பெருக்கற்குத்தான் பிறிதூனுண்பா / னெங்கன மாளுமருள்.

59. பண்ணியபயிரிற் புண்ணியந் தெரியும்

பண்ணிய - தான் உழுது விளைத்த, பயிரில் - தானிய வளர்ச்சியில், புண்ணியம் - தனது நற்கருமம், தெரியும் - விளங்கும் என்பதாம்.

"சூதன் கொல்லையில் மாடுமேயு" மென்னும் பழமொழிக்கிணங்க அவனவன் துற்கன்மத்தின் பாபபலனை அறியவேண்டின் அவன் விளைத்த பயிர் மழையின்றி மடிவதும் வெட்டுக்கிளிகளால் நாசமடைவதும், புழுக்களால் மாளுவதுமாகிய செயலால் விளங்கும். அவனவன் நற்கருமத்தின் புண்ணிய பலனை அறியவேண்டின் அவன் விளைத்த பயிர் காலமழையால் ஓங்கி வளரவும், வெட்டுக்கிளிகளும் புழுக்களும் அணுகாது தானியவிருத்தி கூடுவதுமாகிய செயலால் விளங்கும். புண்ணிய பலனை பண்ணியபயிரில் காணுகவென்று கூறியுள்ளாள்.

60. பாலோடாயினுங் காலமறிந்துண்

பால் - பசுவின்பாலுடன், ஆயினும் - அன்னத்தையாயினும், மற்றும் பலகாரத்தையாயினும் புசிப்பதாயின், காலமறிந்து - காலை, மாலை, மத்தியமென்னும் முக்காலமறிந்து, உண் - புசிக்கக்கடவா யென்பதாம்.

பாலுடன் கலந்த பழத்தையாயினும், பாலுடன் கலந்த சோற்றையாயினும் உண்ணவேண்டுமாயின் காலையில் உண்ணவேண்டுமென்று பாகசாஸ்திரங் கூறியுள்ளபடியால் காலமறிந் துண்ணென்று வற்புறுத்திக் கூறியுள்ளாள்.

கன்மச்சூத்திரம்

காலையி லமுதும் மத்தியந் தயிர் மோர் / மாலையில் வெந்நீர் வழங்குக நன்றே.
காலை யமுதங் கருத்தூர விதய / தூலபலத்தின் செய்கையதாமே.
மத்திய தயிர்மோர் பாக மருந்தல் / பித்தப் பிணியை போக்குவதாகும்

மாலை வெந்நீர் வாழ்க்கை யருந்தல் / கூல வாயாசக்குறைச் சோர்வகலும்.
காலையிற் பாக்கை கணமுறப் பெருக்கில் / சீலவலத்தை சேர்க்காதகற்கும்.
மத்தியச் சுன்னம் வாயிற் பெருக்கல் / சித்தியாம் பசியும் சீரண முண்டாம்.
மாலை வெற்றிலை வளரப் பெருக்கில் / வாலவாய் மணங் கொடுப்பதுதானே.

தாம்பூலம் இடுவதில் காலையில் பாக்கை அதிகரித்தல், மலத்தைக் கழிக்கவும், மத்தியானத்தில் சுண்ணாம்பை அதிகரித்தல் ஜீரணசக்தி கொடுக்கவும், மாலையில் வெற்றிலையை அதிகப்படுத்துவதால் வாய்மணம் வீசுவதாம். மூன்று

பலன்களுண்டாவதுபோல் காலையில் பாலை அருந்துவதும், பலகாரங்களுடன் சேர்ப்பதும், இதயகோசம் வலுபெரும். மத்தியானந் தயிர் மோர் சேர்த்தல் பித்தசாந்தி யுண்டாம். மாலையில் வெந்நீரருந்தல் ஆயாசமும் நரம்புகளின் சோர்வு நீங்கும்.

இத்தியாதி பதார்த்த குணா குணங்களையும் ஞானத்தாய் நன்குணர்ந்தவளாதலின் பசுவின் பால் மிக்கவிருக்கினுங் காலமறிந் துண்ணவேண்டுமென்று கூறியுள்ளாள்.

61. பிறன்மனை புகாமெ யறமெனத் தகும்

பிறன் - அன்னியனுடைய, மனை - மனைவியை யிச்சித்து, புகா - அவனில்லம் நுழையாத, மெய் - தேகமே, அறம் - சத்திய தருமத்தை பெற்றது, எனத்தகும் - என்று கூறத்தகும் யென்பதாம்.

அன்னியனுடைய மனைவியை இச்சித்து அவளில்லம் புகாத தேகமே அறச்சுக தேகமென்று கூறியுள்ளாள்.

மூவர்தமிழ் - நாலடி நானூறு

அறம்புகழ் கேண்மெய் பெருமெ யிந்நான்கும் / பிறன்றார நச்சுவார் சேரா - பிறன்றார நச்சுவார் சேரும் பகைபழிபாவ மென் / ரச்சத்தோடிந்நாற் பொருள்.

62. பீரம் பேணிற் பாரந் தாங்கும்

பீரம் - வீரம், பேணில் - கொள்ளில், பாரம் - பெருஞ்சுமையை, தாங்கும் - சுமக்கக்கூடும் என்பதாம்.

யாதொன்றுக்கும் அச்சமின்றி வீரமுற்றுள்ள புருஷன் தனக்கு அதிகபாரமுற்ற சுமையே ஆயினும் வீரத்தன்மெயால் அதனை எளிதிலேந்திச் செல்வானென்பது துணிபு. மனோதிடமும், தைரியமுமுள்ள புருஷன் எடுத்தகாரியத்தை எளிதில் முடிப்பானென்பது கருத்து.

63. புலையுங் கொலையுங் களவுந்தவிர்

புலையும் - மாமிஷ யிச்சையையும், கொலையும் - சீவ யிம்ஸையையும், களவும் - அன்னியர் பொருளை யபகரித்தலையும், தவிர் - அகற்றுமென்பதாம்.

நாவுக்குரிய உருசியின் அவா மிகுதியால் மாமிஷ இச்சை உண்டாயின் கொலையாம் சீவயிம்சைக்கு அஞ்சான். சீவர்கள் கிடையாவிடின் அவற்றை விலைக்குக் கொள்ளுதற்கு அன்னியர் பொருளை களவுசெய்ய அஞ்சான். அக்களவின் அவாவால் தன்மெயொத்த மக்களையும் வதைக்க அஞ்சான். ஆதலின் ஞானத்தாய் புலையின் இச்சை முதலாவது அகற்றவேண்டுமென்று கூறியுள்ளாள்.

அருங்கலைச்செப்பு

ஊனுண் டுடலை யுறக்க விருப்போன் / தானுண் டலைவான் தவிர்.
புலையுண்ணு மாசை பிறவு னருந்தல் / கொலையுண்ணற் கஞ்சாக் குறி.
புலைவெறுத்தோனென்னும் புன்மெயின்சான்று / கொலையகற்றாற் காட்டிவிடும்.
ஊன் தின்னேனென்னு முறுதி யுரைப்பார்க்கு / தான் கொலையுண் சீவன் கரி.
சீவனுயிரை சிதைக்கே னெனக் காணல் / ஆவல்புலா லிச்சை போம்.

பரப்பொருளை வவ்வி புலாலுண் டுகித்தோன் / நிரக்கொலைக்குத்தாரன் றெளி.
தேவர்கட் கென்பான் றீயிற்சுட்டுண்பான் / பாவிக்குமாமோ பரம்.
ஊனாசைக்கொண்டு வுயிர்சுட்டுத் தின்பான் / றானூனைத் தின்பான் றலை.
வேள்விதீ யென்பான் வேறுயிர் சுட்டுண்பான் / மாள்வான்கொல் மற்றுயிராலென்.
புலாலாசையற்று புண்ணியத்தி னின்றோன் / நிலாமதிய நீள்விசும்புவான்.

64. பூரியோர்க்கில்லை சீரியவொழுக்கம்

பூரியோர்க்கு - நீச்சமிகுத்த கீழ்மக்களுக்கு, சீரிய - சிர்பெறவேண்டிய, ஒழுக்கம் - நன்மார்க்கம், இல்லை கிடையாயென்பதாம்.

அதாவது, பொய், வஞ்சினம், சூது, பொறாமெய், குடிகெடுப்பு நிறைந்த கீழ்மக்களுக்கு மெய்ப்பேசுதல், சகலரிடத்தும் அன்புபாராட்டல், நெஞ்சங்களங்கமற்றிருத்தல், சகலர் சுகத்தையுங்கண்டு ஆனந்தித்தல், தங்களைப்போல்

சகலரும் சுகமடைய விரும்பல் ஆகிய சீர்பெறும் ஒழுக்கங்களை நோக்கார்களென்பது கருத்து.

'அப்பா திருடாதே, திருடனென்னும் பெயரை யெடுக்காதே, அது கீழ்மக்கட் செயலென்பாராயின்,' எங்கள் குலமே திருட்டு குலம், 'எங்கள் சீவனமே திருட்டுசீவனம்', எங்களைத் திருடனென்னாது வேறென்னப் பெயரால் அழைப்பதென்பான் சீரிய ஒழுக்கமற்றோன்.

'அப்பா குடியாதே, கட்குடியனென்னும் பெயரை எடுக்காதே, அது கீழ்மக்கட் செயலெ'ன்பார்களாயின் 'ஆ! ஆ! எங்கள் குலமே குடிப்பது வழக்கம், குடிக்காவிட்டால் குடியனென்னும் பெயர் மறைந்துபோமோ, கள் குடியனென்னும் பெயர்சொல்லிக்கொண்டே ஏன் முன்னுக்கு வரப்படாதென்று தாங்கள் பிறந்த குலத்தளவின் குணத்தையே காட்டுவார்கள். ஆதலின் செயலாலுங் குணத்தாலுந்தோன்றுங் கீழ் மக்கள் மேன்மக்கள் என்போர்களின் குணாகுணங்களை நன்குணர்ந்த ஞானத்தாய் சீரியவொழுக்கங்கள் பூரியோரிடத்துக் காண்பது அரிதென்று கூறியுள்ளாள்.

சீவகசிந்தாமணி

கற்பூரப் பாத்திகட்டி கஸ்தூரி யெறுபோட்டு கமழ்நீர்ப் பாய்ச்சி
பொற்பூரமுள்ளரியை விதைத்தாலுமதின்குணத்தைப் பொருந்தக்காட்டும்
சொற்பேதையர்க்கறிவு யினிதாக வருமெனவே சொல்லினாலும்
நற்போதம் வாராதங் கவர் குணமே மேலாக நடக்குந்தானே.

பழமொழிவிளக்கம்

சிறியவரா முழுமூடர் துரைத்தனமாயுலகாளத் திரம்பெற்றாலும்
அறிவுடையார் தங்களைப்போ லன்படையார் புகழுடையா ராகமாட்டார்
மறிதருமான் மழுவேந்துந் தண்டலைநீ நெறியாரே வாரி வாரி
குறுமணிதாளிட்டாலுங் குருடி கண்ணிற் கண்ணாகிக் குணங் கொடாதே.

65. பெற்றியார்க்கில்லை சுற்றமுஞ் சினமும்

பெற்றியார்க்கு - குணங்குடி கொண்டார்க்கு, சுற்றமும் உரவின் முறையாரும், சினமும் - கோபமும், இல்லை கிடையாதென்பதாம்.

பெற்றி என்னுங் குணத்தை குடிகொள்ள வைத்தவர்களுக்கு சுற்றத்தா ரென்னுங் குடும்பமென்பது இல்லை, சினமென்னுங் கோபமுமில்லையென்பது கருத்து.

பாம்பாட்டி சித்தர்

மனமென்னுங் குதிரையை வாகனமாக்கி / மதியென்னுங் கடிவாளம் வாயிற் பூட்டி
சினமென்னுஞ் சீனிமேற் சீராயேறி / தெளிவுடன் சாரிவிட் டாடாய் பாம்பே.

66. பேதமை யென்பது மாதர்க் கொருபெயர்

பேதை - அறிவற்ற, மெய் - தேகமென்பது, மாதர்க்கு - பெண்களுக்கு, ஒருபெயர் - குறித்துள்ளவோர் பெயராகும் யென்பதாம்.

பெண்களுக்குரிய வாலை, தருணி, பிரவிடை, விருத்தை என்னும் நான்கு பருவத்துள் எழு வகைவயதின் பெயர்களுண்டு. அதாவது ஐந்துவயதுமுதல் ஏழு வயதளவும் பேதைப்பெண்ணென்றும், எட்டுவயது முதல் பதினோரு வயதளவும் பெதுமெய்ப்பெண்ணென்றும், பன்னிரண்டுமுதல் பதின்மூன்று வயதளவும் மங்கைப்பெண்ணென்றும், பதினான்குவயதுமுதல் பத்தொன்பது வயதளவும் மட்நதைப்பெண்ணென்றும், இருவது வயது முதல் இருபத்தைந்து வயதளவும் அரிவைப் பெண்ணென்றும், இருபத்தாறு வயதுமுதல் முப்பத்தோரு, வயதளவும் தெரிவைப்பெண்ணென்றும், முப்பத்திரண்ட வயது முதல் நாற்பது வயதளவும் பேரிளம் பெண்ணென்றும் எழுவகைப் பெயர்களுண்டு.

இவ்வெழுவகைப்பெயருள் ஏழுவருஷத்துள் அறியா சிறியளாகும் பேதமெய்யென்பது பெண்களுக்குரிய ஓர் பெயராதலின் மாதருக்குரிய பெயர்களில் பேதமை யென்பதுமோர் பெயரென்று குறிப்பிட்டுள்ளாள்.

67. பையச் சென்றால் வையந் தாங்கும்

பைய - மெல்லெனச், சென்றால் - செல்லுவோமாயின், வையம் பூவுலகு, தாங்கும் - யேந்துமென்பதாம்.

உலகத்தின்கண் வார்த்தை மிருதுவாகவும் நடத்தை அமைதியாகவும், செயலை நிதானமாகவும் செய்துவருவோமாயின் வையத்துள்ள சகல மக்களாலும் ஏந்திப் புகழப்படுதல் அநுபவமாதலின் சகலகாரியங்களையும் நிதானித்துச் செய்வோர்களை வையந் தாங்குமென்று வற்புறுத்திக் கூறியுள்ளாள்.

நீதிவெண்பா

சீலமில்லா னேதேனு செப்பிடினுந்தானந்தக் / கால மிடமறிந்து கட்டுரைத்தே - யேலவே செப்பு மவனுந்தான் சிந்தை நோகாதகன்று / தப்புமவ னுத்தமனே தான்.

68. பொல்லாங்கென்பவை யெல்லாந் தவிர்

பொல்லா - கொடிய, ஆங்கு - அங்கம், யென்பவை - யென்று சொல்லும் படியான, எல்லா - சகல குற்றங்களையும், தவிர் - அகற்றிவிடு மென்பதாம்.

அதாவது தேக குற்றம், வாக்கு குற்றம், மனோகுற்றங்களாகும் முத்தோஷங்களமைந்த பொல்லா அங்கத்தோனென்னும் பெயரெடாது அக்குற்றங்களைத் தவிர்த்து வாழ்கவேண்டுமென்பது கருத்து.

69. போனக மென்பது வானவர் விருந்து

போனகம் - காமதேனு அல்லது கற்பக விருட்சம், என்பது - என்று கூறும்படியானது, வானவர் - மக்கள் நிலைகடந்து தெய்வநிலை யடைந்தவர்கள், விருந்து - தங்களை யண்டினோர்க் களிக்கும் அமுத மென்னப்படும் என்பதாம்.

தாயுமானவர் கூறியுள்ளபடி "போனகமமைந்ததென வக்காமதேனு னின் பொன்னடியினின்று தொழுமே" என்னுஞ் செய்யுளுக்குப் பகரமாய் காட்டிலும், குகைகளிலுந் தங்கி ஞான கருணாகர முகமமைந்த பெரியோர்களைக் காண வேண்டிவரும் அரசர்களுக்கும், குடிகளுக்கும் அக்காலுண்டாகும் பசிதாகத்தை நிவர்த்திக்கக் கூடிய ஓரமுதமென்னப்படும். காட்டில் தங்கியுள்ளவர்களுக்குக் கேட்டதை அளிக்கும் ஓர் சித்தின்நிலைக்குப் போனகமென்னும் பெயரை அளித்துள்ளார்கள்.

காக்கைபாடியம்

கேட்டவை யாவுங் கொடுக்கும் போனகம் / நாட்டுள் மாரியாய் நடக்கும் வானகம் வீட்டினி லடங்கி யுள்ளொளி கண்டோர் / வாட்டமொன்றில்லா வாழ்க்கையதாமே.

புத்தசங்கத்தோர் பிட்சா பாத்திரத்திற்கும் போனகமென்னும் ஓர் பெயருமுண்டு. அதுகொண்டே பட்டினத்தார் வற்றாத பாத்திரமென்றுங் கூறியுள்ளார். அதற்குப் பகரமாய் மணிமேகலையிலுள்ள ஆபுத்திரன் காதையைக் காணலாம்.

அருங்கலைச்செப்பு

வானகத்துட் சென்றார் மாபாத்திரமெடுத்தார் / போனகத்தா லுண்ட பொருள். சுரபாத்திரமெடுத்தார் காட்சி நிலைத்தார் / திரநேத்திர மமைந்த சீர்.

70. மருந்தும் விருந்தும் முக்குறை யகற்றும்

மருந்தும் - ஔடதியும், விருந்தும் - விரும்பியுண்போர் புசிப்பும், முக்குறை - மூன்று தோஷங்களை, யகற்றும் - நீக்குமென்தாம்.

அதாவது, மருந்துண்பதினால் வாததோஷம், பித்த தோஷம், சிலேத்தும தோஷம் ஆகிய முத்தோஷங்களையும், விருந்தளிப்பதினால் எதிரிக்குப் பொருளில்லா குறையும், பசியின் குறையும், பிராண துடிப்பின் குறையும் நீங்கி சுகமடைவதால் விருந்தினால் நீக்கும் முக்குற்றங்களையும் மருந்தினால் நீங்கும் மூக்குற்றங்களையும், ஏகபாவனையால் புசிப்பிற்சுட்டி பகர்ந்திருக்கின்றாள். விருந்துக்கு வருவோன் முக்குறையாவது இல்லாக்குறை, பசியின் குறை, காலக் குறையுமேயாம்.

71. மாரி யல்லது காரிய மில்லை

மாரி - மழை, அல்லது - இல்லாமற்போமாயின், காரியம் - எடுக்குந் தொழில் யாவும், இல்லை - நடப்ப தரிதாகு மென்பதாம்.

உலகத்தில் மழைப் பெய்யாமற் போமாயின் சகலகாரியங்களுக்கும் ஆனியுண்டாய் பஞ்சம் அதிகரித்துப் பாழாம் என்பது கருத்து.

72. மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை

மின்னுக்கெல்லாம் - வானில் மின்னல் தோன்றுவதின் சாட்சி, பின்னுக்கு மழை - பிற்காலத்துக்குத் தகுந்த மழைப்பெய்யுமென்பதாம்.

வானில் மின்னல் மீருங்கால் ஆழிநீரையுண்டு ஆகாய கருப்பங் கொள்ளுவது அனுபவமாதலின் மின்னல் சாட்சியைக்கொண்டு மழையுண்டென்பதை உணர்ந்து உழுதுண்போர் விளைக்க விளக்கியுள்ளாள்.

73. மீகாமனில்லா மரக்கல மோடாது

மீகாமன் - வோடசூஸ்திரன், இல்லாமல் - இல்லாமற்போவானாயின், மரக்கலம் - ஓடம், வோடாது - நீரிலோட்டுவது அரிதாகும் என்பதாம்.

ஓடத்தையோட்டும் சூஸ்திரனாகும் மீகாமனில்லாவிடில் மரக்கலத்தை நீரில் ஓடச்செய்வது கஷ்டமாகும். அதுகொண்டே "மாலுமியில்லா மரக்கலமேறலாகா" தென்பதும் முதுமொழி.

மீகாமன், மாலுமி, ஓடசூத்திரன், சுக்கானனென்னும் நான்கு தொழிற்பெயரும் நீரின்வேகமும் காற்றின்வேகமுமறிந்து ஓடத்தை ஓட்டுவோன் பெயராகும்.

74. முற்பகற் செய்யின் பிற்பகல் விளையும்

முற்பகல் - காலையில், செய்யின் - செய்யும் வினையின் பயனானது, பிற்பகல் - மாலைக்குள், விளையும் - வெளிவருமென்பதாம்.

யாவருக்குந் தெரியாதென்னும் ஓர் காரியத்தை மறைந்து செய்தபோதினும் அக்காரியம் தன்னிற்றானே வெளிவருமென்பது கருத்து.

75. மூர்த்தோர் சொல் வார்த்தை யமிர்தம்

மூர்த்தோர் - விவேகமுதிர்ந்தோர், சொல் - வாக்கியமானது, வார்த்தை - சொற் சுவையாம், அமிர்தம் - நீதிபோத மென்னப்படும்.

விவேகமிகுத்தோர் போதிக்கும் நீதிவாக்கியங்களை செவியிற் கேட்டு அதன்மேறை நடப்பவன் எவனோ அவன் சகல துக்கங்களையும் போக்கி சுகநிலை அடைபவனாதலின் மூர்த்தோர் வாக்கியமாம் அமுதுண்டோன் என்பது கருத்து.

ஓடதியென்னும் அவுடதம் உண்பதால் பிணி நீங்கி ஆரோக்கிய மடைவதுபோல் மூர்த்தோர் வாக்கியமென்னும் அமுதால் துக்கம் நீங்கி சுகமடைவதே காட்சியின் இனிதென்னப்படும்.

76. மெத்தெனப்படுத்தல் நித்திறைக்கழகு

மெத்தென - மெல்லிய பஞ்சணையில், படுத்தல் - சயனித்தல், நித்திறைக்கு - தூங்குகைக்கு, அழகு - சுக மென்னப்படும்.

மிருதுவாகியப் பஞ்சுமெத்தையின் மீது படுத்தல் சுகமான நித்திறைக்கேது உண்டாமென்று விளக்கியுள்ளாள்.

77. மேழிச்செல்வங் கோழைப்படாது

மேழி - ஏறு பிடித்து உழுதுண்பவனின், செல்வம் - திரவியமானது, கோழைப்படாது - குறைவுபடாது என்பதாம்.

அதாவது ஏறுபிடித்து உழுதுண்ணும் உழைப்பாளி யானவன் எத்தொழிலையும் அஞ்சாது செய்யும் தைரியமுடையவனாதலின் அவன் கஷ்டமாகியத் தொழில்களில் எவற்றையேனுஞ் செய்து சம்பாதித்து தனது திரவியங் குறையாது நிறப்புவான் என்பது கருத்து.

78. மைவிழியாடன் மனையகன் றொழுகு

மைவிழியாள - கண்களில் மைதீட்டும் விலைமகள், மனை - வீட்டிற்கு, அகன்று - விலகி, ஒழுகு - நன்மார்க்கத்தில் நடவென்பதாம்.

கண்ணால் விழித்து மயக்கி தனது வயப்படுத்தும் விலைமகளின் வீட்டினருகே வாழ்தல் எவ்விதத்துங் கேட்டைத்தரும் வாழ்க்கையாதலின் அவள்வீட்டின் அருகே வாழ்தல் ஒழுக்கத்திற்கு இழுக்கென்பது துணிபாம்.

79. மொழிவது மறக்கி னழிவது கருமம்

மொழிவது - தனது தாய் தந்தையாராலேனும், தன்னை ஆண்டு வருபவனாலேனுங் கூறிய வார்த்தையை, மறக்கின் - மறந்துவிடில், கருமம் - அத்தொழிலானது, அழியுங் - கெட்டுப்போமென்பதாம்.

தனது எஜமானனாகும் ஆண்டவன் ஏவிய மொழியை மறப்பானாயின் அக்கருமத்திற்கே கேடுண்டாயதென்பது கருத்து.

80. மோனமென்பது ஞானவரம்பு

மோனமென்பது - பற்றற்ற நிலையென்று கூறுவது, ஞானம் - அறிவினாற் கட்டப்பட்ட, வரம்பு - வரப்பு அல்லது எல்லையத்துவென்று கூறப்படும் யென்பதாம்.

விவேகவிருத்தியற்று வீணில் அலைந்து திரியும் மனதை அடக்கியாள்வ தென்னப்படும். அதாவது விவேகமென்னும் அறிவைக்கடந்து மனம் மலையாதுநிற்கும் சுகவாரிக்கு ஒப்பாய பற்றற்ற நிலையென்பது கருத்து.

81. வளவனாயினு மளவறிந்தெடுத் துண்

வளவன் - தானிய சம்பத்துள்ளவன், ஆயினும் - இருப்பினும், அளவறிந்து - தன்குடும்பத்துக்குப்போதுமான திட்டந்தெரிந்து, எடுத்து-பண்டியினின்று மொண்டு, உண்ணு - சமைத்துப் புசிக்கக் கடவா யென்பதாம்.

பூமிச் செல்வமாகும் தானிய சம்பத்து ஏராளமாக இருப்பினும் அவற்றை வீண்விரயஞ் செய்யாது தன்சிலவுக்குத் தக்கவாறு எடுத்து உபயோகித்துக் கொள்ளவேண்டும் என்னும் செட்டு நிலையை ஞானத்தாய் உழுதுண்ணும் வேளாளத் தொழிலாளருக்கு விளக்கியுள்ளாள்.

82. வானஞ்சுருங்கிற் றானஞ்சுருங்கும்

வானம் - காலமழை, சுருங்கிற் - குறைந்துபோமாயின், தானம் - பூமிவளம், சுருங்கும் - தானியவிளைவு குன்றுமென்பதாம்.

எத்தகைய பெருக்கதானியப் பண்டிகள் நிறைந்திருப்பினும் ஓராண்டு கால மழை தவறுமாயின் தானியவிருத்தி குன்றி குடிகள் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டி நேரிடுமாதலின் வளநாடனும் தானியசம்பத்து நிறைந்துள்ள வனாயினும் அளவறிந்து சிலவுசெய்யவேண்டுமென்று முன்வாசகத்திலும் மொழிந்துள்ளாள்.

83. விருந்திலோர்க்கில்லை பொருந்திய வொழுக்கம்

விருந்து - நிதம் ஒருவருடன் கலந்து புசிக்கும் புசிப்பு, இல்லார் அற்றிருப்போர்க்கு, பொருந்திய - சேர்ந்து வாழக்கூடிய, ஒழுக்கம் - நல்வாழ்க்கைத்துணை, இல்லை - அவர்களுக்குக் கிடையாதென்பதாம்.

அனவரதம் ஒருவருக்கு அன்னமிட்டு உண்ணும் அன்பில்லாமல் லோபம் நிறைந்திருக்குமாயின் அவனை நெருங்கி ஒருவனும் அணுகாது வாழ்க்கைத் துணை அற்றுபோமென்பது கருத்து.

84. வீரன்கேண்மெய் கூரம்பாகும்

வீரன் - யுத்தவல்லபனை, கேண்மெய் - நேசித்த தேகிக்கு, கூரம்பு - சாணைதீர்த்தவேலை, ஆகும் - கையிலேந்தியுள்ளதற் கொக்கும் யென்பதாம்.

யுத்தத்தில் வல்லமெய் யுடையோனை நேசித்துள்ளவன் கூரிய அம்பை எக்காலுங் கரத்திலேந்தி இருக்குங்கால் எவ்விதத்துந் தன்கரத்தைக் காயப் படுத்துவதுபோல் ஏதேனும் ஓர்நாளில் வீரனால் உபத்திரவமடைய நேரும் ஆதலின் வீரன் கேண்மெயை விரும்பாதே என்பது கருத்து.

85. உரவோனென்கை யிரவா திருத்தல்

உரவோன் - தேகவுரம் பெற்றவன், என்கை - யென்போன், இரவாது - மற்றொருவர்பா லிரந்துண்ணாது, இருத்தல் - இருக்கவேண்டு மென்பதாம்.

அதாவது தேகத்தில் யாதாமோர் பழுதின்றி உரமாகும் பிலமுற்றிருப் போன் ஒருவரையடுத்து இரந்துண்ணாது தேகத்தை வருத்தி உழைத்துண்ண வேண்டுமென்பது கருத்து.

86. ஊக்கமுடைமெய் யாக்கத் திற் கழகு

ஊக்கம் - இடைவிடா முயற்சி, உடைமெய் - உடையவனின், யாக்கத்திற்கு - உருவிற்கு, அழகு - சிறப்பென்னப்படும்.

எத்தொழிலை எடுப்பினும் அவற்றை இடைவிடா முயற்சியினின்று சாதித்து முடிக்குந் தேகியை சிறப்பித்துக் கொண்டாடுவது இயல்பாதலின் முயற்சியின் அழகை சிறப்பித்துக் கூறியுள்ளாள்.

87. வெள்ளைக்கில்லை கள்ளச்சிந்தை

வெள்ளைக்கு - சுத்தவிதயமுள்ளார்க்கு, கள்ளச்சிந்தை - வஞ்சினம், கபடு, சூதுமுதலிய துற்குணங்கள், இல்லை - இராவென்பதாம்.

குணமென்னுங் குன்றேறிய சுத்தகுணமுள்ளோரிடத்து வஞ்சினம், கபடு, சூது முதலிய துற்குணங்கள் யாவும் அணுகாதென்பது கருத்து.

88. வேந்தன்சீறி னாந்துணையில்லை

வேந்தன் - ஆளும் அரசனானவன், சீறின் - சினந்துநிற்கின், ஆந்துணை - அவனைத் தடுத்தாளும் உதவி, இல்லை - வேறில்லை யென்பதாம்.

தேசத்தை ஆளும் அரயனுக்கு ஒருவன்மீது மீறியக் கோபமுண்டாயின் அவனது கோபத்தை அடக்கிக் கார்ப்போர் அங்கு ஒருவருமில்லை என்பது கருத்து.

89. வையந் தொடருந் தெய்வந் தொழு

வையம் - புடவி பாசமானது, தொடரும் - உன்னை யெக்காலும் பின்பற்றுமாதலின், தெய்வம் - தேய்வகமாம் உண்மெய்யைத், தொழு - உள்ளொளிகண் டொடுங்கு மென்பதாம்.

பாச அடவியின் பந்தப்பற்றானது வண்டி எறுதின் காலை சக்கரந் தொடர்ந்து செல்லுவது போல் மாறா பிறவிக்கும், மீளா துக்கத்திற்கும் கொண்டு போய்விடும். ஆதலின் தேய்வகமாம் உள்ளொளியில் அன்பை வளர்த்தி ஒடுக்கவேண்டுமென்பது கருத்து.

ஔவைக்குறள்

அந்தத்தி லங்கி யழல்போலத் தானோக்கில் / பந்தப் பிறப்பறுக்கலாம்.

90. ஒத்தவிடத்து நித்திறைக்கொள்

ஒத்தவிடத்து - உன் சாதனத்திற்கு நேர்ந்தவிடத்து, நித்திறை - தூங்காமற்றூங்கும் நிலையில், கொள் - உழ்க்காருமென்பதாம்.

நேர்ந்தவிடத்து ஆனந்த நித்திறையாம் தூங்காமற்றூங்கும் நிலையை வற்புறுத்தியுள்ளாளன்றி தன்னை அறியாமற் தூங்கும் மரணதூக்கத்தைக் கூறினாளில்லை.

91. ஓதாதார்க்கில்லை வுண்மெயி லொடுக்கம்

ஓதாதார்க்கு - நற்கேள் வியில் முயலாதார்க்கு, உண்மெயிலொடுக்கம் - தன்னுட்டானே யொடுங்கி சுயம்பாம் நிலை, இல்லை - கிடையா தென்பதாம்.

ஆதலின் ஒவ்வோர் மக்களும் நீதிநூற்களை ஓதி உணர்ந்து உண்மெயில் அன்பை வளர்த்து புறமெய் வெறுத்து பிறவியறுத்து நிருவாணமடைய வேண்டுமென்பது கருத்து.

ஔவையார் அருளிச் செய்த இரண்டாம் வாசகம் முற்றிற்று

(இரண்டாம் வாசகம் முன்றாமாண்டு 12ஆம் இலக்கத்தில் தொடங்கி மூன்றாமாண்டு 24ம் இலக்கத்தில் முடிவுறுகின்றது)

ஔவையார் அருளிச் செய்த மூன்றாம் வாசகம்

காப்பு

வெற்றி ஞான வீரன் வாய்மெய் / முற்று மறிந்தோர் மூதறிவோரே.

ஞானவெற்றி - அறிவில் ஜெயமுற்றவனாகும் வாலறிஞனாம். வீரன் - அதிதீவிரனெனப்புகழ்ப்பெற்ற புத்தபிரானா லோதிய, வாய்மெய் - மெய்வாக்கியங்கள் நான்கையும், முற்றும் - முழுவதும், அறிந்தோர் - தெரிந்துக்கொண்டவர்கள், மூதறிவோரே முற்றுமுணர்ந்த பேரறிவாள ராகுமென்பதாம்.

அதாவது நூன்முகத்து சதுர்முகன் ஓதிய நான்கு வாய்மெயாம் துக்கம், துக்கோற்பவம், துக்கோற்பவக் காரணம், துக்க நிவாரணமென்னும் சதுர்வித சத்தியங்களையும் குறைவற உணர்ந்தவர்களெவரோ அவர்களே முற்றும் உணர்ந்தவர்களென்பது கருத்து.

நறுந்தொகைநான்கு

பற்றாமுலகப் பற்றினை யறுத்து / பொற்றாமரையிற் பரந்தவன் பகர்ந்த
நறுந்தொகை தன்னால் நற்றமிழ் தெரிந்து / குற்றங்களைவோர் குறைவிலாதவரே.

பற்றாமுலகம் - உலகபாசபந்தக்கட்டாகும், பற்றினை - பாசக்கயிற்றினை, அறுத்து - துண்டித்து, பொற்றாமரையில் - பதுமாசனத்தில், பரந்தவன் - வீற்றிருந்தவன், பகர்ந்த - ஓதிவைத்த, நற்றமிழ் - சிறந்த தமிழ்பாஷையை, தெரிந்து - கற்று, நறுந்தொகையாம் - வாய்மெய் நான்கினையும் உணர்ந்து, தன்னால் - அதனாதரவால், குற்றங்களைவோர் - இராகத் துவேஷமோக மென்னுங் குறுந்தொகையாம் முக்குற்றங்களை யகற்றினோர், குறைவிலாதவரே - சுகவாரிக்கொப்பாம் சகல சுகமும் பொருந்த வமைதியுற்று வாழ்வார் களென்றவாறு.

திரிக்குறள்

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார் / நிலமிசை நீடுவாழ்வார்.

சிலப்பதிகாரம்

அருக ரறிவனருகற்கல்லதென் / இருகையுங்கூடி யொருவழிக் குவியா
மலர்மிசைநடந்த மலரடிக்கல்லதென் / தலைமிசை யுச்சி தானணி பொறாது.

ஞானவாசிஷ்டம்

புண்டரீக வாதனத்தில் / புத்தன்போல் உத்தரமுகனாய்.

1. எழுத்தறிவித்தவன் இறைவனாகும்

எழுத்து - வரிவடிவாம் அட்சரங்களை, அறிவித்தவன் - ஓதிவைத்தவன், இறைவனாகும் - குடிகள்பால் வரியிறைக் கொள்ளும் ஓரரசனேயாகும்.

அவ்வரசன் யாரென்பீரேல் வீரவாகு, குலவாகு, இட்சுவாகென்னும் சக்கிரவர்த்திகள் மரபிற்றோன்றிய சித்தார்த்தி திருமகனேயாகும். இவ்விறைவன் காலத்தில் பாலிபாஷை வரிவடிவாம் எழுத்துக்களின்றி ஒலிவடிவாம் சப்த மொழியும், அம்மொழிகளோ ஒருவர் சொல்லவும் மற்றொருவர் கேட்கவுமான சுருதிகளாயிருந்தது.

இறைவன் உலகபாசத்தைத் துறந்து அவலோகிதரென்றும், ஐயிந்திரியங் களைவென்று இந்திரரென்றும், நிருவாணநிலை அடைந்தபோது சகலமுந் தன்னிற்றோன்றிய விளக்கத்தால் தான் சுருதியாக ஓதியுள்ள திரிபீடவாக்கியம், திரிபேத வாக்கியமென்னும் கன்மபாகை, அறுத்தபாகை, ஞானபாகையாகிய மூன்று அருமொழிகளும் மறைந்துபோமென்று உணர்ந்து மகடபாஷையாம் பாலியினின்று சகடபாஷையாம் சமஸ்கிருந்தாட்சரங் களையும், திராவிட பாஷையாம் தமிழட்சரங்களையும் இயற்றி வரிவடிவாய்க் கற்களில் வரைந்து கல்வியைக் கற்பித்ததுகொண்டு எழுத்தறிவித்தவன் இறைவனாகு மென்று வற்புறுத்திக் கூறியுள்ளாள்.

தொல்காப்பியம்

மங்காமரபி னெழுத்து முறைகாட்டி / மல்குநீர் வரைப்பினிந்திர னரைந்த

வீரசோழியம்

ஆலியனைத்துங் க,ச,த,ந,ப, மவ்வரியும் வவ்வி
லேவிய வெட்டும் யவ்வாறு ஞந்நான்கு மெல்லாவுலகு
மேவிய வெண்குடை செம்பியன் வீரரா ஜேந்திரன்றன்
நாவியல் செந்தமிழ் சொல்லின் மொழிமுத லண்ணுதலே.

மதத்திற் பொலியிம் வடசொற் கிடப்பும் தமிழ்மரபு
முதத்திற் பொலியேழை சொற்களின் குற்றமு மோங்குவினை
பதத்திற் சிதைவு மறிந்தே முடிக்க பன்னூறாயிரம்
விதத்திற் பொலியும் புக ழுவலோகிதன் மெய்த்தமிழே.

சிலப்பதிகாரம்

தண்டமிழாசான் சாத்தனிஃதுரைக்கு.

முன்கலை திவாகரம்

ஒருவர்க் கொருவனாகி யுதவியும் / பரிசின் மாக்கள் பற்பலராயினுந்
தானொருவன்னே தரணிமாதவன் / செந்தமிழ் சேந்தன் தெரிந்த திவாகரம்.

சிவஞான யோகீசுவரர்

இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவரியல் வாய்ப்ப
இருமொழியும் வழிபடுத்தார் முனிவேந்த ரிசைபரப்பும்
இருமொழியு மான்றவரே தழீ இயினா ரென்றாலில்
இருமொழியு நிகரென்னு மிதற்கைய முளதேயோ.

இத்தகைய இலக்கிய நூல் இலக்கண நூற்களின் ஆதாரங்களைக்கொண்டு தமிழட்சரங்களை இயற்றியளித்தவர் புத்தபிரானென்றே தெளிவாக விளங்குகிறபடியால் எழுத்தறிவித்தவன் சிறப்பைக்கூறி அன்னோர் தன்மத்தை விளக்கலுற்றாள்.

2. கல்விக்கழகு கசடறமொழிதல்

தான் கற்ற கல்விக்கு சிறப்பு யாதெனில், கூறும் வாக்கில் குற்றம் எழாமலும், மற்றவர்களிதயம் புண்படாமலும் முன்பின் யோசித்து பேசவேண்டுமென்பது கருத்து.

3. செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்

திரவிய சம்பத்தைப் பெற்றவர்களுக்கு சிறப்பு யாதெனில், தனது குடும்பம் ஓங்கி செழிக்கவும், தன்னை அடுத்தோர் குடும்பம் ஓங்கி செழிக்கவும் அன்புடன் உதவிபுரிந்துவருவானாயின் அதுவே தனவந்தன் அழகென்பது கருத்து.

4. வேதியர்க் கழகு வோதலு மொழுக்கமும்

சத்தியதன்மமாம் சதுர்பேத மொழிகளை ஓதுவோர்க்கு அழகு யாதெனில், எத்தேச எப்பாஷைக்காரனாயிருப்பினும் நீதியும், நெறியும், வாய்மெயும் நிறைந்து சகலருக்கும் நன்மெயை விளக்கவேண்டியவனாகவும் அன்றேல் ஓதியுணர்ந்த பயனால் சகலருக்கும் நல்லவனாகவும் விளங்குவோன் எவனோ அவனே வேதமோதும் சிறப்புடையானென்னுங் கருத்து.

நல்லாப்பிள்ளை பாரதம்

நீதியும் நெறியும் வாய்மெயு முலகில் நிறுத்தினோன் வேதியனன்றி
வேதியனெனு மிழிக்குறி லவனைவிளம்பும் சூத்திரனென வேத
மாதவர் புகன்றா ராதலாலுடல மாய்ந்தபின் பாவதோர் பொருளோ
கோதிலாவிந்தப் பிறவியில் வேதக் குரவனீ யல்லையோ குறியாய்.

5. மன்னவர்க்கழகு செங்கோ நடத்தல்

அரசர்களுக்கு அழகாவது யாதெனில், செவ்விய நீதியின் கோலேந்தி தன்னவரன்னிய ரென்னும் பட்சபாதமின்றி நீதியை செலுத்துவதுடன் குடிகள் யாவருந் தனது பாதுகாப்பிலிருக்கின்றபடியால் அவர்களுக்கு, யாதாமோர் தீங்குநேரிடாவண்ணம் ஆதரிப்பதே மன்னர்க்கு சிறப்பென்பது கருத்து.

குமரேச சதகம் - மன்னரியல்

குடிபடையி டபிமான மந்திராலோசனை குறிப்பரிதல் சத்யவசனம்
கொடைநித்தமவரவற்கேற்றமரியாதைபொறை கோடாத சதுருபாயம்
படிவிசாரிணை யொடுப் பிரதானிதளகர்த்தரை பண்பறிந்தே யமைத்தல்

பல்லுயிரெலாந் தன்னுயிர்க்கு நிகரென்றே பகுத்தல் குற்றங் களைத்தல்
துடிபெறு தனக்குறுதி யானநட்பகையின்றி சுகுணமொடு கல்வியறிவு
தோலாத காலமிட மறிதல்வினை வலிகண்டு துஷ்ட நிக்கிரக சௌரியம்
மடைவுபெறு செங்கோனடத்திவருமன்னர்க்கு வழுவாத முறைமை யிதுகாண்
மயிலேறிவிளையாடு குகனேபுல் வயநீடு மலைமேவு குமரேசனே.

6. வாணிபர்க்கழகு வளர்பொருளீட்டல்

வியாபாரிகளுக்கு அழகு யாதெனில், ஒன்றைக்கொடுத்து மற்றொன்றை மாறுவதில் மிக்கச் செட்டுடையவனாயிருந்து எக்காலத்தில் எச்சரக்கைப் பிடித்துக் கட்டவேண்டியதென்றும் எச்சரக்கை நில வரத்திலும் தராசுகோணா நிலையிலும் தன்செலவழிவுபோக சொற்ப லாபத்திலும் விற்று பொருளை வளர்த்து சருவசீவர்களுக்கும் உதவியுள்ளோராக விளங்குதல் ஒன்றைக்கொடுத்து மற்றொன்றைப்பெறும் வாணிபர்களுக்கு சிறப்பென்பது கருத்து.

குமரேச சதகம் - வணிகரியல்

கொண்டபடி போலும் விலைபேசிலாபஞ்சிறிது கூடிவர நயமுறைப்பார்
கொள்ளுமொரு முதலுக்கு மோசம்வராதபடி குறுகவே செலவுசெய்வார்
வண்டப்புரட்டர்தான் முரிவந்து பொன்னடகு வைக்கினுங் கடனீய்ந்திடார்
மருவுநாணயமுளோர் கேட்டனுப்புகினுமவவார்த்தையிலெலாங்கொடுப்பார்
கண்டெழுதுபற்றுவர வதனில்மயிர்பிளவுபோற்கணக்கி லணுவேனும்விடார்
காசுவீணிற் செலவிடா குசிதமானதற்கனதிரவியங்கள் விடுவார்
மண்டலத் தூடுகன வர்த்தகஞ்செய்கின்ற வணிகர்க்கு முறைமையிதுகாண்
மயிலேறி விளையாடு குகனேபுல் வயநீடுமலைமேவு குமரேசனே.

7. வேளாளர்க்கழகு வுழுதூண் விரும்பல்

பூமியை திருத்தி பயிர்செய்கிறவர்களுக்கு அழகு யாதெனில், நஞ்சை பூமியை உழுது பயிரிடுங்காலம் ஈதென்றும், புஞ்சை பூமியை உழுது பயிடுங்காலம் ஈதென்றும் நன்காராய்ந்து தான் மழையைவேண்டி ஆகாயத்தை நோக்குவதுபோல் சருவசீவர்களும் தானியத்தைவேண்டி வேளாளனை நோக்குகிறபடியால் பூமியின் பலனைக் கருதுங்கால் ஈகையைப்பெருக்கி சருவசீவர்கள் மீதும் இதக்கமுடையவனாய் ஆதரிக்குஞ்செயலிலிருப்பதே வேளாளர்சிறப்பென்பது கருத்து.

ஏரெழுபது

வெங்கோபக் கலிக்கடந்த வேளாளர்விளை வயலுட்
பைங்கோதி முடிதிருந்த பார்வேந்தர் முடி திருந்தும்
பொங்கோதக் கவியானைப் போர்வேந்தர் நடத்துகின்ற
செங்கோலைத் தாங்குங்கோ லேரடிக்குஞ் சிறுகோலே.

8. மந்திரிக்கழகு வரும்பொருளுரைத்தல்

ஆலோசனை கர்த்தனுக்கு அழகு யாதெனில் தனதரசனுக்கு அரிய வாக்கியங்களை விளக்கி தேசத்தை சீர்திருத்தலும் வருங்காலசெயல்களையும் போங்காலச் செயல்களையும் ஆராய்ந்து சேர்க்கவேண்டியவற்றை சேர்த்தும், அகற்றவேண்டியவற்றை அகற்றியும் ஆண்டுவருவதே சிறப்பென்பது கருத்து.

9. தந்திரிக்கழகு தன் சுற்றங் கார்த்தல்

தன்னில் திறமுள்ளவர்களுக்கு அழகு யாதெனில், அத்திறத்தால் தனது சுற்றத்தோரை கார்த்தலே சிறப்பென்பது கருத்து.

10. உண்டிக் கழகு விருந்தோடுண்டல்

உண்ணும்படியான புசிப்புக்கு அழகு யாதெனில், விருந்தினருடன் அன்புடன் புசித்து அன்னத்தாலவர்களைப் போஷிப்பதே சிறப்பென்பது கருத்து.

11. பெண்டீர்க் கழகெதிர் பேசாதிருந்தல்

பெண்களுக்கு முக்கிய அழகு யாதெனில், தனது கணவன் கூறும் வாய் மொழிகளுக்கு எதிர்மொழி கூறாமல் இட்ட ஏவலை இன்பொடு செய்தலே சிறப்பென்பது கருத்து.

12. குலமகட்கழகு கொழுனனைப் பேணுதல்

நற்குடும்பத்திற்பிறந்த பெண்களுக்கு அழகு யாதெனில், தன் கணவனையே கடவுளாகவும், காப்பவனாகவுங்கருதி அவனுக்கு நீராட்டலை அங்கசுத்த மாகவும், அன்னமூட்டுதலை அபிஷேகமாகவும், அவன் கால்கரங்களைப் பிடித்துப் பூசுதலே பூசையாகவும், அவன் உத்திரவளித்துள்ள வாக்கியங்களை மந்திரமென்றெண் எண்ணி நடத்தலே சிறப்பென்பது கருத்து.

13. விலைமகட் கழகு மேனிமினுக்குதல்

விலை கொடுத்து வாங்கும் அடிமைப் பெண்களுக்கு அழகு யாதெனில், எக்காலுந் தங்கள் தேகத்தை சுத்தத்தில் வைக்கவேண்டுமென்பது கருத்து.

14. அறிவோர்க் கழகு கற்றுணர்ந்தடங்கல்

அறிவுள்ளோரென்று கூறுதற்கு அழகு யாதெனில், தான் கற்ற கலை நூற்களுக்கு அளவாய் அடங்கி சகலருக்கும் உபகாரியாக விளங்குதல் அன்றேல் சகலராலும் நல்லவனென்று நன்கு மதிக்கப் பெறுதலே சிறப் பென்பது கருத்து.

15. வறியோர்க்கழகு வருமெயிற் செம்மெய்

ஏழைகளாகி மிக்க துக்கத்தை அநுபவிப்போர் நடந்துக்கொள்ள வேண்டிய அழகு யாதெனில், இந்த தேகம் மறைந்து மறுதேகம் எடுக்கினும் அதனிலேனும் சுகத்தை அநுபவிக்கும்படியாக எடுத்த தேகத்தின் துக்கத்தை மிக்கக் கருதாது நன்மார்க்கத்தில் நடத்தலே சிறப்பென்பது கருத்து. (அதனால்),

16. தேம்படு பனையின் நிரபழத்தொருவிதை

வானுறவோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க்கிருக்க நிழலாகாதே

ஆதலின் பனைவிதையானது மிக்கப் பருத்திருப்பினும் அதின் மரமான தது ஒருவர் தங்கிநிற்பதற்கு நிழலிராதென்பது கருத்து.

17. தெள்ளியவாலின் சிறுபழத் தொருவிதை

தெண்ணீர்க்கயத்துச் சிறுமீ ன்சினையினும் நுண்ணியதாயினு
மண்ணல் யானை அணிதேர்ப்புரவி யாட்பெரும்படையோடு
மன்னர்க்கிருக்க நிழலாகும்மே.

ஆலமரத்தின் விதையானது மீன்சினைக்கொப்பாய சிறியதாயிருப் பினும் அதன் மரத்தின் நிழலோ இரத கஜ துரக பதாதிகளுடன் அரசனும் வந்து தங்குவதற்கு நிழலைத் தருமென்பது கருத்து.
(அதுபோல்),

18. சிறியோரெல்லாம் சிறியோரு மல்லர்

சிறுவயதாயிருப்பினும் அவர்களை சிறியவர்களென்று அவமதிக் கலாகாது. காரணம், விவேகத்தில் பெரியோர்களாயிருப்பார்கள்.

19. பெரியோரெல்லாம் பெரியோரு மல்லர்

வயதில் முதிர்ந்தோர்களாயிருப்பினும் அவர்களைப் பெரியோர்களென் றெண்ணப்படாது. காரணம், விவேகமற்றிருப்பார்கள்.

20. பெற்றோரெல்லாம் பிள்ளைக ளல்லர்

பெற்றப் பிள்ளைகள் யாவரையும் தன்னுடையப் பிள்ளைகளேயென்று நம்பப்படாது காரணம், தாய் தந்தையரைக் கவனியாத களியாட்டத்திலிருக்கும் பிள்ளைகளுமுண்டு.

21. உற்றோரெல்லா முறவின ரல்லர்

மிக்க உரியவர்களென்று சொல்லும் படியான குடும்பத்தோர் யாவரும் உறவினராகமாட்டார்கள் காரணம், உறவினர் உரிமையாம் சுகதுக்கங்களைப் பொருந்தினிற்பர்.

22. கொண்டோரெல்லாம் பெண்டிரு மல்லர்

குடும்பத்திற்கு வேண்டுமென்று கொண்டப் பெண்கள் யாவரும் குடும்பிகளாகமாட்டார்கள். காரணம், சிலப்பெண்கள் குடும்பத்தைக் கலைக்கும் வேர்ப்புழுவாகத் தோன்றுவார்கள்.

23. அடினுமாவின்பால் சுவை குன்றாது

பசும்பாலினை சுண்டக்காச்சினும் அதனது சுவையானது குன்றாது என்பது கருத்து.

24. சுடினுஞ் செம்பொன் றன்னொளி கெடாது

சாம்புன தமாம்பொன்னை நெருப்பிலிட்டு மேலும் மேலும் உருக்கினும் அதன் பிரகாசங் குறையமாட்டாதென்பது கருத்து.

25. அரைக்கினுஞ் சந்தணந் தன்மண மாறாது

சந்தனக்கட்டையை நீர் வார்த்து உரைக்கினும் அதன் பரிமளம் மாறாது என்பது கருத்து.

26. புகைக்கினுந் தண்கடல் பொல்லாங்கு கமழாது

குளிர்ந்த சமுத்திர நீரை புகையெழக் கொளுத்தினும் கொடியநாற்ற மெழாது என்பது கருத்து.

27. கலைக்கினுந்தண்கடல் சேறாகாதே

குளிர்ந்த கடல்நீரை எவ்விதங் கலைக்கினும் சேறு காணமாட்டாது. காரணம், அதனதன் செயலும், குணமும் அதனதன் நிலையிற் காணும். அதனால்,

28. பெருமெயும் சிறுமெயுந் தன் செயலாமே

ஓர் மனிதனைப் பார்த்து இவன் பெரியோன் மேன்மகனென்று கூறுவதும், மற்றொருவனைப்பார்த்து இவன் சிறியன் கீழ்மகனென்று கூறுவதும் அவனவன் நற்கரும துற்கருமக் கூற்றாதலின் சகலமும் தன் செயலாலாவதென்பது கருத்து.

29. சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம்
பெரியோராயின் பொறுப்பதுகடனே

சிறியோராரும் அறியாப் பிள்ளைகள் செய்தக் குற்றங்களை பெரியோராகும் விவேகிகள் பொருப்பதே இயல்பாகும்.

30. சிறியோர் பெரும்பிழை செய்தனராயின்
பெரியோரப்பிழை பொறுத்தலு மரிதே

சிறியோரென்னும் அறியாப்பிள்ளைகள் ஆயினும் பெருங்குற்றங்களைச் செய்து விடுவார்களாயின் அப்பிழையை பெரியோர்கள் பொறுக்கமாட்டார்கள் என்பது கருத்து. அதனால்

31. வாழிய நலனே வாழிய நலனே

ஒவ்வோர் மக்களும் நல்வாழ்க்கையாம் நன்மார்க்கநடையில் ஒழுகவேண்டியதே நலனாதலின் வாழிநலனே என்று வற்புறுத்திக்கூறியுள்ளாள்.

32. நூறாண்டுபழகினு மூர்க்கர் கேண்மெய்
நீர்க்குட்பாசிபோல் வேர்க்கொள்ளாதே

மூர்க்கனெனக் கூறும் பெயர்பெற்ற தேகியுடன் நூறுவருடம் பழகியிருப்பினும் நீரின்மேற் படர்ந்துள்ள பாசைபோல் ஒட்டாநேயத்தில் இருப்பானன்றி நீரினுள் வேரூன்றும் விருட்சம் போல் நிலைக்காக் கேண்மெய் என்பது கருத்து.

33. ஒருநாட்பழகினும் பெரியோர்கேண்மெய்
இருநிலம்பிளக்க வேர்வீழ்கும்மே

பெரியோராகும் விவேகமிகுத்த மேன்மக்களிடம் ஒருநாட் பழகினும்

அப்பழக்கமானது மத்திய பாதாளமென்னும் இரண்டிலும் வீழ்ந்துருகியுள்ள வேர்போல் பதிந்துள்ள கேண்மையாம் என்பது கருத்து.

(அதனால்)

34. கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சைபுகினுங் கற்கை நன்றே

மேற்கூறியக் கீழ்மக்கள் மேன்மக்களென்னும் பெயர்வாய்த்த வகையறிந்தோர் கலைநூற்களைக் கற்றல் நன்று. அவற்றுள் பிச்சைபுகும் வறியகாலம்வரினும் கலைநூற்களைக் கற்றுத் தெளியவேண்டுமென்பது ஞானத்தாயின் கருத்து.

35. கல்லானொருவன் குலநலம் பேசுதல்
நெல்லி னுட்பிறந்த பதராகும்மே

கலைநூற்களைக் கற்றுணராதவன் தனது குடும்பத்தை உயர்த்தியும் விசேஷித்தும் பேசுதல் பயனற்ற சொற்களாகி நெல்லினுட் டோன்றும் பதர்போலொழியுமென்பது கருத்து. ஆதலின்,

36. நாற்பாற்குலத்தின் மேற்பாலொருவன்
கற்றிலனாயிற் கீழிருப்பவனே

அந்தணன், அரசன், வணிகன், வேளாளன் எனும் நான்குவகைத் தொழிலை நடாத்தும் நான்கு குடும்பத்தோருள் விவேகமிகுத்த மேற்குடும்பமாம் அந்தணர் குடும்பத்திற் பிறந்தும் கலை நூற்களை வாசித்துணராதவனா யிருப்பானாயின் அவனைக் கீழ்க்குடும்பமாம் கடைகுலத்தானென்றே அழைக்கப்படுவான்.

37. எக்குடிபிறப்பினும் யாவரேயாயினும்
அக்குடியிற்கற்றோ ரறவோராவர்

மேற்கூறியுள்ள நால்வகைத் தொழிலை நடாத்தும் நாற்குடும்பத்தோருள் எக்குடும்பத்திலாயினும் எவனொருவன் கலை நூற்களைக் கற்று பூரணமடைகின்றானோ அவனே அறவோனாம் அந்தணன் என்றழைக்கப் படுவான்.

38. அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்

கலைநூற் பயிற்சியால் நீதியும், நெறியும், வாய்மையும் நிறைந்த அறிவுடையோனை அரசனாம் தேசத்தையாளும் மன்னனும் விரும்பி கொண்டாடுவான்.

39. அச்சமுள்ளடக்கி அறிவகத்தில்லா
கொச்சைமக்களை பெறுதலினக்குடி
எச்சமற்றென்று மிருக்கை நன்றே.

கலைநூற் கற்ற விவேகவிருத்தியால் மநுகுலத்தோனென வெளி தோன்றாது கல்லாக்குறையால் மநுக்களாம் விவேகிகளைக் கண்டவுடன் மிருகங்களச்சமுற்று ஒடுங்குதல்போல் அடங்கும் பேதைமக்களைப் பெறுவதினும் எச்சமாம் புத்திரபாக்கியம் அற்றிருப்பதே நன்றென்பது கருத்து.

40. யானைக்கில்லை தானமுந் தருமமும்

யானைக்கு ஈயுங்குணமும், நன்மார்க்கமும் இல்லையென்பது கருத்து.

41. பூனைக் கில்லை தவமுந் தயையும்

பூனைக்கு ஒழுக்கமும், பரோபகாரமும் இல்லையென்பது கருத்து.

42. ஞானிக்கில்லை யின்பமுந் துன்பமும்

விவேகமிகுத்தப் பெரியோர்களுக்கு பேராசையாம் அதியிச்சையும், உபத்திரவமாந் துக்கமும் இல்லையென்பது கருத்து.

43. சிதலைக்கில்லை செல்வமுஞ்செருக்கும்

சிதலென்னுங் கறையானுக்கு திரவியசம்பத்தும், அகங்காரமும் இல்லை யென்பது கருத்து.

44. முதலைக்கில்லை நீச்சும் நிலையும்

முதலையாம் நீர் மிருகத்திற்கு நீரில் நீந்தும் செயலும், நிலைக்குஞ் செயலும் இல்லை என்பது கருத்து.

45. அச்சமும் நாணமும் அறிவிலார்க்கில்லை

விவேக விருத்தி இல்லாதவர்கள் பெரியோர்களிடத்தில் பயமும் கெட்ட செய்கைகளில் வெழ்க்கமுமடையார் என்பது கருத்து.

46. நாளுங் கிழமெயு நலிந்தோர்க்கில்லை

நல்லநாளைப் பார்ப்பதும், நற்பலன் வேண்டுமென வாரத்தைக் கருதிப்பார்ப்பதுமாகியச் செயல்களை வியாதியஸ்தருக்குப் பார்ப்பதில் பயனில்லை. நோய்க்கண்டவுடன் சிகிட்சை செய்வதைவிட்டு நாளையும், அதன் பலனையும் நோக்குவதானால் வியாதி அதிகரித்து நோயாளி துன்பமடைவானாதலின் அக்காலத்தில் யாதொரு நாளையுங் கருதாது நோயைக் கருதி உடனுக்குடன் பரிகாரஞ் செய்யவேண்டுமென்பது கருத்து.

47. கேளுங்கிளையுங் கெட்டோர்க்கில்லை

சுருதி விசாரிணையும், குடும்ப விசாரிணையும் சுகநிலை கெட்டு எழியநிலை அடைந்தோர்க்கு இல்லையென்பது கருத்து.

48. உடைமெயும்வருமெயு மொருவழிநில்லா

தற்காலந் தோன்றி உடைத்தாய தேகமும் மறு பிறவிக்கு ஆளாகுந் தேகமும் எண்ணிய மார்க்கத்திற் சென்று நிலைக்காது என்பது கருத்து.

49. குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர்
நடைமெலிந்தோரூர் நண்ணினுநண்ணுவர்

ஏகச்சக்கிராதிபதியாய் வெண்குடை நிழலில் யானையின்மீது சென்றவர்களும், ஒடுங்கிக் கால்நடையில் நடப்பினும் நடப்பர் என்பது கருத்து.

50. சிறப்புஞ் செல்வமும் பெருமெயு முடையோர்
அறக்கூழ்சாலை யடையினுமடைவர்

சிறந்த வாழ்க்கையும், திரவிய சம்பத்தும், பெரியோரென்னும் பெயரும் பெற்று வாழ்ந்தவர்கள் அன்னசத்திரத்திற் சேரினுஞ் சேருவர் என்பது கருத்து.

51. அறத்திடு பிச்சை கூறியிரப்போர்
அரசரோ டிருந்தரசாளினு மாளுவர்

தருமஞ் செய்வோரிடத்துக் கையேந்தி பிச்சை இரப்போர் ஓர் காலத்தில் அரசரோடு வீற்றிருந்து இராட்சியம் ஆளினும் ஆளுவர்.

52. குன்றத்தினைய நிதியைபடைத்தோர்
அன்றைப்பகலே யழியினுமழிவர்

மலைக்கொப்பாய திரவியக் குவியலை உடையவராயினும் அதே மத்தியானத்துள் இழந்தாலும் இழப்பர்.

53. எழுநிலைகூடங் கால்சாய்ந்துக்குக்
கழுதைமேய்ப்பா ளாகினுமாகும்

எழடுக்குகள் அமைந்த மாடமாளிகையும் கற்றூண்களமைந்த சபாமண்டபம் ஆயினும் ஓர் காலத்தில் கழுதைகள் வந்தடையும் குட்டிச்சுவராகத் தோன்றினுந் தோன்றும்.

54. நல்லஞானமும் - வானகநோக்கினும்
எல்லாமில்லை யில்லில்லோர்க்கே

விவேக விருத்தி பெற விரும்புவோருக்கும் வானமாகும் அகண்டத்துலாவ விரும்புவோருக்கும், நிலையாகத் தங்கியிருந்து ஆராய்ச்சிசெய்வதற்கு ஓரிருப்பிடம் இல்லாமற்போமாயின் விரும்பிய சுகம்யாதுங் கூடாவென்பது கருத்து.

55. தறுகண்யானைத் தான்பெரிதாயினுஞ்
சிறுகண் மூங்கிற் கோற்கஞ்சும்மே

கணுமூட்டுகளும் பெரியதுமான யானையாயினும் சிறு கணுக்களமைந்த மூங்கிற்றடிக்கு அஞ்சுமென்பது கருத்து.

56. குன்றுடைநெடுங்கா டூடேவாழினும்
புன்றலைபுல்வாய் புலிக்கஞ்சும்மே

மலைச்சார்பாகுங் காட்டில் வாசஞ்செய்யினும் ஊனைக்கௌவும் நாவினையுடைய புலிக்கு அஞ்சவேண்டுமென்பது கருத்து.

57. ஆரையாம்பள்ளத் தூடேவாழினும்
தேரைபாம்பிற்கு மிகவஞ்சும்மே

சற்பிளவுகளுக்குள்ளே தேரையானது பயமற்ற வாழ்க்கையுற்றிருப்பினும் பாம்பிற்கு அஞ்சுமென்பது கருத்து. (அதுபோல்),

58. கொடுங்கோன்மன்னன் வாழும்நாட்டிற்
கடும்புலிவாழுங் காடுநன்றே

நீதியும், நெறியும், வாய்மெயுமற்று கொடிய வன்னெஞ்சமே குடிகொண்ட அரசனது நாட்டில் வாழ்வதினும் உயிரை வதைத்து ஊனைத்தின்னும் புலிவாழுங் காட்டில் வசிப்பது நன்றென்பது கருத்து.

59. சான்றோரில்லா தொல்பதி யிருத்தலின்
தேன்றேர்க்குறவர் தேயனன்றே

பஞ்சபாதகமற்ற மேன்மக்களாம் சாந்தரூபிகள் வாசஞ்செய்யாவிடத்தில் வாழ்க்கை பெற்றிருப்பதினும் தேனையும், மயிர்ப்பீலியையும் விற்று சீவிக்குங் குறிஞ்சிநிலவாசிகளாம் குறவருடன் கூடிவாழ்வது மேலென்பது கருத்து.

60. இல்லோரிரப்பது மியல்பே யியல்பே
இரந்தோர்க்கீவது முடையோர்க்கடனே

இல்லாத ஏழைகளாயிருப்போர் எங்கேனுஞ்சென்று இரந்துண்ண வேண்டியது இயல்பாகும். (ஆதலின்) அவ்வகை இரப்போர்க்கு திரவிய சம்பத்துடையார் தங்களாலியன்ற உதவிபுரிவதே கடனென்பது கருத்து.

61. மணிவணியணிந்த மகளீராயினும்
பிணவணியணிந்துங்கொழுனரைத்தழுஇ

உடுத்தவாடை கோடியாக முடித்தகூந்தல் விரிப்பினும் விரிப்பர்.

நவரத்தின ஆபரணங்களை அணிந்து தங்கள் கணவர்பாற் கூடிக் குலாவி ஆனந்தத்திலிருக்கும் பெண்களும் சகல ஆபரணங்களையுங் கழற்றி எறிந்து வெள்ளையாடை, யுடுத்தி தலைவிரித்துநிற்குங்காலம் வரினும் வரும்.

62. பெற்றமுங்கழுதையும் மேய்ந்தவப்பாள்
பெற்றொடி மகளிரும் மைந்தருங்கூடி
நெற்பொலி நடுநக ராயினுமாகும்

பன்றியையுங் கழுதையையும் மேய்த்து சீவிப்பவள் ஓர்கால் இராணி யோடும், இராஜபுத்திரரோடுங் கூடிக் குலாவி நெல்வயற்சூழ்ந்த நாட்டினும், நகரினும் வசிப்பள்.

63. வித்துமேரு முளவாயிருப்ப
எய்த்தங்யிருக்கும் யேழையும்பதரே

விதைமுதலும், பூமியும், ஏருங் கையிருப்பிலிருக்க அவற்றை உழுது பயிர்செய்து சீவிக்காது தன்னை ஏழையாக்கி வெளிதோன்றிவருபவன் பதருக்கொப்பாவன். (யீதன்றி),

64. காலையும்மாலையும் நான்மறையோதா
அந்தணரென்போ ரனைவரும்பதரே

காலையிலும், மாலையிலும் நீதிநெறியமைந்த நல்வாய்மெய்களை ஓதியுணராது வேஷத்தினால் தங்களை அந்தணரென்று கூறித்திரியும் அனைவரும் பதருக்கொப்பாவர்.

65. தன்னையுந் தனது தேயமக்களையும்
முன்னின்றுகாரா மன்னனும்பதரே

தனது ராட்சியபார வாட்சியையும், தனக்குள் அடங்கிவாழுங் குடிகளையும் முன்பின் ஆராட்சியினின்று காப்பாற்றாத மன்னனும் பதருக்கொப்பாவான்.

66. முதலுளபண்டங்கொண்டு வாணிபஞ்செய்
ததன்பயனுண்ணா வணிகரும் பதரே

திரவியமுதலைக்கொடுத்து சரக்கை வாங்கிவந்து வியாபாரத்தைப் பெருக்கி அதன் பலனைப் பெறாது வியாபாரியெனத்தோன்றியும் வீணே யலைந்து திரிபவனும் பதருக்கொப்பாவான்.

67. ஆளாளடிமை யதிநிலமிருந்தும்
வேளாண்மெயில்லா வீணரும்பதரே

வேணபூமியும் ஆள் அடிமைகளுமிருந்து உழுது பயிர்செய்துண்ணும் புருஷவல்லபமற்றவனும் பதருக்கொப்பாவான். (அதுபோல்),

68. தன்மனையாளைத் தாய்மனைக்ககற்றி
பின்பவட்பாரா பேதையும் பதரே

தனது மனையாளை அவள் தாய்வீட்டிற்கு அநுப்பிவிட்டு மறுபடியும் அவளை அழைக்காமலும், அவளை கவனியாமலும் இருப்பவன் எவனோ அவனும் பதருக்கொப்பாவான்.

69. தன்மனையாளைத் தன்மனையிருத்தி
வுன்னியே யுணராவுலுத்தனும்பதரே

தனது மனையாளைத் தனதுவீட்டி லிருக்கச் செய்து அவளுக்கு அன்னமும் ஆடையுமளிக்காது வேறு சிந்தையால் உப்புத் தூண்போல் உளுத்துப்போவோனும் பதருக்கொப்பாவான்.

70. தன் ஆயுதத்தையும் தன்கைப்பொருளையும்
பிறர்கையிற்கொடுக்கும் பேதையும்பதரே

தனக்கென்றுள்ள ஆயுதத்தையும் தனது திரவியத்தையும் அன்னியன் கையிற்கொடுத்துவிட்டு விழிப்பவனும் பதருக்கொப்பாவான்.

71. வாய்பறையாகவும் நாக்கடிப்பாகவும்
சாற்றுவதொன்றை போற்றிக்கேண்மின்

நாவின் சொற்களையே மேளம்போற் பறைந்துக்கொண்டும் அச்சொற் களைக்கொண்டே சுட்டுத்திரியும் வகைகள் யாவற்றையும் எடுத்துரைக்கின்றேன் செவிசாயங்கோளென்று கூறலுற்றாள்.

72. பொய்யுடை யொருவன் சொல்வன்மெயினால்
மெய்போலும்மே மெய்போ லும்மே

பொய்யைச் சொல்லித்திரிவோன் அதைச் சொல்லும் வல்லபத்தினாலும், சாதுரியத்தினாலும் மெய்யைப்போற் கூறுகின்றான்.

73. மெய்யுடையொருவன் சொற்சோர்வதனால்
பொய்போலும்மே பொய்போலும்மே

மெய்யைச் சொல்லும் படியானவன் அவற்றை சொல்லும் வல்லபக்குறைவாலும் சொற்சோர்வினாலும் பொய்போல் திகைப்பன். (ஆதலினால்)

74. இருவர்சொல்லையு மெழுதரங்கேட்டு
இருவரும்பொருந்த வுரையாராயின்
மநுநெறிமுறையால் வழுத்துதநன்று

நியாயாதிபதியானவன் வாதிப்பரதிவாதி இவர்களின் வார்த்தைகளை எழுதரம் மடக்கிமடக்கி விசாரித்து யதார்த்தமொழிகண்டு நீதியளித்தல் வேண்டும்.

75. மநுநெறி முறையின் வழக்கிழந்தவர்தாம்
மனமறவுறுகி யழுதகண்ணீர்
முறையுறத்தேவர் முநிவர்க்காக்கினும்
வழிவழியூர்வதோர் வாளாகும்மே

அங்ஙனம் மநுநீதி தவறி, நியாயவழுவி கெடுநீதி உரைத்து விடுவானாயின் அந்நியாயமடைந்தோன் தான் அடைந்தக் கேட்டை முநிவரிடத்தேனுந் தேவரிடத்தேனும் அழுது முறையிடுவானாயின் அம்முறைப்பாடு பொய்ச்சான்று கூறியவன் சந்ததியையும், அந்நியாயம் அளித்தவன் சந்ததியையும் விடாமல் வாள்போன்றறுத்துவரும்.

ஆதலின்,

76. பழியாய்வருவதும்மொழியாதொழிவதும்
சுழியாய்வருபுன லிழியா தகல்வதும்
துணையோடல்லது நெடுவழி போகேல்
புணைமீதல்லது நெடும்புன லேகேல்
வழியே யேகுக வழியே மீளுக
இசைகாணுலகிற் கியலாமாறே.

ஒருவர் பழிச்சொல்லை நீதிமொழியால் அகற்றுவதும், சுழலிட்டுவரும் நீரோட்டத்தில் இறங்காது அகல்வதும் யாதொரு துணையுமின்றி நெடுவழிச் செல்லுதலும், யாதாமோர் ஓடத்தின் உதவியின்றி ஆறுகளைக் கடப்பதுங் கூடாது. (ஆதலின்)

சரியானப்பாதையிற் செல்லுவதும், சரியானப்பாதையில் மீளுவதுமே உலகில் வாழும் விவேகிகளுக்கு அழகாகுமென்பது கருத்து.

வெற்றிஞான மூலமுங் கருத்துரையும் முடிவுபெற்றது

இவ்வெற்றிஞான வாசகந் தோற்றிய காரணம் யாதென்பீரேல், பாண்டியன் வம்மிஷ வரிசையைச்சார்ந்த கிள்ளை வள்ளுவனென்னும் அரசனுடைய மூதாதை சயம்பென்பவன் தனது மாளிகையைவிட்டு வேணுவிஹார அறஹத்துவை தெரிசிக்கப்போகுங்கால் வழியே சென்று வழியே மீளாமல் குறுக்குவழியாக ஓர் நந்தவனத்தினடுவே போகுங்கால் ஓர் சிற்றரசன் புத்திரி சயம்பனென்னு அரசபுத்திரனைக் கண்டு விரகமீறியபோது அவனதற்கிணங்காது வியாரஞ்சென்று மறுபடியும் அவ்வழி வருங்கால் வேவுகர்களால்பிடித்து மந்திரிகளால் சரிவர விசாரியாது தெண்டித்து விட்டப்படியால் அவற்றை அம்பிகா தேவிக்குத்தெரிவிக்கவும் அம்மன் இவ் வெற்றிஞானத்தையெழுதி திவாகர சிற்றரசர்களுக்கனுப்ப அவன் மறுபடியும் சங்கதிகளைத் தேற விசாரிணைச்செய்து சயம்பனை விடுவித்து வெற்றி ஞானவாசத்தையும் வேண திரவியத்தையும் மகனுக்களித்து தனது மாளிகைக்கு அனுப்பிவிட்டான் அன்றுமுதல் புத்ததன்மத்தைச் சார்ந்த சமணமுநிவர்கள் யாவரும் முன் வாசகநூற்கள் இரண்டுடன் இவற்றையும் சேர்த்து திரிவாசக மென வழங்கிவந்தார்கள். சத்திய தன்மமாம் புத்ததன்மம் மாறுபட்டு அபுத்ததன்மம் மேற்கொண்டபோது திரிவாசகத்தில் இருவாசகம் ஒளவை வாக்கென்றும், ஒருவாசகம் பின்கலை நிகண்டிலில்லா ராமபாண்டியன் வாக்கென்றுங்கூறி வேறுபடுத்தி விட்டார்கள். இதன் சரித்திரத்தை கிறிஸ்து பிறந்த 95 வருஷம் அரசாண்ட கிள்ளை வள்ளுவன் மூதாதை வம்மிஷவாளியிற் காணலாம்.

(மூன்றாம் வாசகம் மூன்றாமாண்டு 25ஆம் இலக்கத்தில் தொடங்கி 29ஆம் இலக்கத்தில் முற்றுப் பெறுகின்றது)

4. குண்டலிகேசி

இக்குணடலிகேசியென்னும் பெயர் பூர்வம் மதுரையை அரசாண்டுவந்த ஓர்முக்கியபௌத்தவரசனின் புத்திரி குண்டலிகேசியென்னும் அம்மை பிக்குணிகள் மடமென்னும் இஸ்திரீகள் ஞானசங்கத்திற் சேர்ந்து அறஹத்து நிலை அடைந்தபின் "அறவாழியான் திரிபேதவாக்கியங்களாம் நீதி வாக்கியங் களைத் திரட்டி அந்நூலுக்கு குண்டலிகேசி என்னும் பெயரிட்டுள்ளதாகக் கூறுகின்றனர்.அதன்முகப்பிலுள்ளக்

கடவுள் வாழ்த்து

முன்றான் பெருமெய்க்கு ணின்றான் முடிவெய்துகாரும்
நன்றே நினைந்தான் குணமொழிந்தான்றனக்கென் றென்றே
யொன்றானுமில்லா னுள்ளான்பிறர்க்கேயுறுதிசூழ்ந்தான்
நன்றே யிறைவ னவன்றாள் சரணங்களன்றே.

அவையடக்கம்

நோய்க்குற்றமாந் தர்மருந்தின்சுவை நோக்கில்லார்
தீக்குற்ற காதலுடையார்புகைத் தீமையோரார்
போய்க்குற்ற மூன்று மறுத்தான் புகழ் கூறுவேற் கென்
வாய்க்குற்ற சொல்லின் வழுவும் வழுவல்லவென்றே.

நூல்

தீவினையச்சம்

வாயுவினை நோக்கியுள மாண்டவிய நாவா
யாயுவினை நோக்கியுள வாழ்க்கையது வேபோற்
றீயவினை நோக்குமியல் சிந்தனையு மில்லாத்
தூயவனை நோக்கியுள துப்புரவு மெல்லாம்.

எனும் இத்தகையச் செய்யுட்கள் அமைந்து குண்டலிகேசியென்னும் பெயர் பெற்றுள்ள தன்ம நூலானது தன்மப்பிரியர்கள் யாவரிடத்தேனும் இருக்குமாயினும் இருக்குமிடங் கண்டாயினும் பெற்று உதவி புரிவரேல் அவர்களே சத்திய தன்மத்தைப் பரவச்செய்தவர்களுமாவதுடன் அப்பலனையும் அடைபவர்களாவர். தற்காலம் நம்மிடங் கிடைத்துள்ளது ஒன்பது பாடல்களேயாம்.

3:14, செப்டம்பர் 15, 1909

5. தேன்பாவணி தேவபாணி

வினா: தென்னாடெங்கும் தேன்பரவணியென்னும் நூலை தேன்பாவணி என்று சகலர் நாவிலும் வழங்க தமிழன் பத்திராதிபர் மட்டிலும் தேவபாணி, தெய்வபாணி என்று கூறுவது இவரது தமிழோவென்றும் சங்கிக்கின்றார்கள்.

வே.ந. தாமோதரம்பிள்ளை. பெங்களூர்,

விடை: தமிழின் வாசகநடையிலும், செய்யுள்நடையிலும் வலித்தல் விகாரம், மெலித்தல்விகாரம், விரித்தல்விகாரம், தொகுத்தல் விகாரம், நீட்டல் விகாரம், குறுக்கல்விகாரம் என அறுவகையுண்டு. அத்தகைய இலக்கண நடைகளை தற்கால வித்துவான்கள் அறிந்திருப்போர் சிலரேயாகும். பலர் பூர்வத்தமிழ்ச்செய்யுட்களையும், இலக்கணங்களையுந் தங்கட் கண்களால் கண்டேயிருக்கமாட்டார்கள்.

அவ்வகைக் குறைகூறும் வித்துவான்களை அவர்களது பெயரைக்கண்டு நேரில் எமக்கெழுதும்படி கூறவும்.

தொல்காப்பியம்

அந்நாற் சொல்லுந் தொகுக்குங்காலை வலிக்கும் வழி வலித்தலும், மெலிக்கும் வழி மெலித்தலும், விரிக்கும் வழி விரித்தலும், தொகுக்கும் வழி தொகுத்தலும், நீட்டும் வழி நீட்டலும், குறுக்கும் வழி குறுக்கலும் நாட்டல் வலியமென்பனார் புலவர்.

தேன்பாவணி என்னும் மொழிதிரிந்து தேவபாணியாயிற்றா அன்றேல் தேவபாணி என்னும் மொழியை மாற்றி தேன்பாவனி என்று வரைந்திருக்கின்றனரா என்பதை அவர்கள் கண்டுமிரார்கள் கேட்டுமிரார்கள் என்பது திண்ணம்.

இத்தகைய அறியா குதர்க்கங்களைச் செய்து வீணே மனத்தாங்கலை உண்டுசெய்து வருவார்களாயின் தேவபாணியின் ஆக்கியோன் யாரென்றும், அஃது யாருடைய சரித்திரமென்றும் எக்காலத்தில் அச்சரித்திரத்தை மணிமேகலை மாதவிக்குப் போதித்தாளென்றும் அச்செய்யுளுள் எத்தனைச் செய்யுட்களைக் கூட்டியுங் குறைத்தும் பெயரை மாறுபடுத்தியும் இருக்கின்றார்கள் என்றும், அதன் பிரட்டை சரித்திர ஆதரவுடனும் செய்யுட்களின் ஆதரவுடனும், நமது பத்திரிகையில் வெளியிடக்கார்த்திருக்கின்றோம். இனியடங்காது மீருகிறவர்களை அடக்கும் ஆயுதம் அதுவேயாகும்.

யாப்பருங்கலக்காரிகை - செய்யுளியல்

கூறிய வுருப்பிற் குறைபாடின்றித் / தேறிய விரண்டுந் தேவபாணியுந்
தரவே யொழியினுந் தாழிசையொழியினு / மிருவகை முத்திறத் தெண்ணே நீங்கினு
மொருபோகென்ப வுணர்த்திசினாரே.

3:22, நவம்பர் 10, 1909

6. புத்தகம் என்னும் மொழி

வினா : புத்தகமென்னு மொழி பூர்வசாஸ்திரங்களில் ஏதேனும் வரைந்திருக்கின்றார்களா அவற்றை அன்னூற் பெயருடன் விளக்கித் தெளிவிக்கும்படி வேண்டும்,

வீ. பாலக்கிருஷ்ணன், வேலூர்.

விடை. : தாம் வினாவியுள்ளவற்றிற்கு சிறுவயதில் கற்றுத்தேர்ந்த கலைநூற்களே போதுஞ்சான்றாகும். அதாவது, பிடகத்தை விளக்கிய பிடஹறியை சிந்திக்குமிடத்து, புத்தகத்துள்ளுரை மாதே பூவிலமர்ந்தருள் வாழ்வே - என்றும்,

சீவகசிந்தாமணி

அணங்கெனவுரித்த தோலனைய மேனியன்
வணங்குநோன்சிலை யெனவளைந்த யாக்கையன்
பிணங்கு நூன்மார்பினன் பெரிதோர் புத்தக
முணர்ந்துமூப்பெழுதின தொப்பத்தோன்றினான்.

மூவர்தமிழ் - நாலடி நானூறு

புத்தகமே சாலத் தொகுத்தும் பொருடெரியா
ருய்த்தக மெல்லா நிறைப்பினு - மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே பொருடெரிந்து
தேற்றும் புலவரும் வேறு.

3:28, டிசம்பர் 22, 1909

7. முச்சங்கங்கள்

வினா : ஐயா நமது தென்னிந்தியாவிலுள்ள மதுரையில் முதற்சங்க மென்றும் நடுச்சங்கமென்றும், கடைச்சங்கமென்றும் மூன்று சங்கங்கள் இருந்தன வென்று கூறுகின்றார்களே அதன் காரணமென்னை. அவ்வகையாகவே தமிழ்ச் சங்கங்களிருந்திருக்குமாயின் பௌத்த சங்கத்தோர்களாகும் சமணமுநிவர்கள் இயற்றியுள்ள இலக்கிய நூற்களும், இலக்கண நூற்களும், கலைநூற்களும் கணிதநூற்களும் இருக்கின்றனவேயன்றி முதற்சங்கம், நடுச்சங்கம், கடைச்சங்கம் என்னும் சங்கத்தோர் இயற்றியுள்ள நூற்கள் யாதோ விளங்கவில்லை.

ப. கோபால், தஞ்சை.

விடை : அன்பரே, தாம் வினவியுள்ள சங்கங்களின் பெயர்களைக் கொண்டே அவைகளிருந்தன என்பதும், இல்லை என்பதும் தாமே உணர்ந்துக் கொள்ளலாம்.

ஈதன்றி மதுரையில் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட புத்தசங்கங்கள் இருந் தனவென்று சிலாசாசனங்களாலும், செப்பேடுகளாலும் கண்டறிந்த (ஆர்ச்சலாஜிக்கல் சர்வேயர்கள்) தெளிவாக வரைந்து வைத்திருக்கின்றார்கள்.

அவற்றினுள் முதற்சங்கம் இருந்ததென்றாயினும், நடுச்சங்கம் இருந்த தென்றாயினும், கடைச்சங்கம் இருந்ததென்றாயினும் ஓர் குறிப்புங்கிடையாது.

அச்சங்கங்கள் இன்ன மதத்தினரைச் சார்ந்ததென்று திடம்படக்கூற யாதோர் ஆதரவுங் கிடையாது. அவ்வகையாகவே சிலத் தமிழ்ச் சங்கங்கள் இருந்ததாக ஒப்புக்கொள்ளினும் அஃது முதற் சங்கம், இரண்டாஞ் சங்கம், மூன்றாஞ் சங்கமென்று வழங்குமேயன்றி முதற்சங்கம், நடுச்சங்கம், கடைச் சங்கமென வழங்குமோ.

அதை விளக்கச் சென்னையில் ஓர் கலாசாலையை எடுத்துக் கொள்ளுவோம். ஆதியிற் சிலர்கூடி வாசித்தக் கலாசாலை முதற் கலாசாலை என்றும், இரண்டாவது சிலர்க்கூடி வாசித்த கலாசாலைக்கு இரண்டாங் கலாசாலை என்றும், மூன்றாவது சிலர்க்கூடி வாசித்த கலாசாலைக்கு மூன்றாங் கலாசாலை என்றுங் கூறுவரேயன்றி முதற்கலாசாலை, நடுக்கலாசாலை, கடைக்கலாசாலை என்று கூறுவரோ.

அங்ஙனங் கூறுதற்கு மூன்று சங்கங்களும் அக்காலத்தில் இல்லாமல் ஒவ்வோர் சங்கங்கள் இருந்த காலங்களையும் வெவ்வேறென வரையறுத்துக் கூறியிருக்கின்றார்களே. அத்தகையாய் வரையறுத்தக் காலங்களிற் தோன்றிய சங்கங்களை முதற்சங்கம், நடுச்சங்கம், கடைச்சங்கமென முடிக்கவுந் தகுமோ. கடைச்சங்கமென்று முடிவு பெற்று பின்னும் நான்காஞ் சங்கமென்னும் நாமந் தோன்றுமோ ஒருக்காலுந் தோன்றா.

இவைகள் யாவும் பொய்க்குருக்கள் தோன்றி பொய்மதங்களையும், பொய்ச்சாதிகளையும், உண்டுசெய்து அவைகளை மெய்ப்படுத்துமாறு மூன்று சங்கங்கள் இருந்ததென்று வகுத்தும் அச்சங்கம் தற்காலம் உண்டாவென்று கேட்போருக்கு உத்தாரமளிக்க வழியின்றி முதல், நடு, கடை என செல்காலத்தில் நிறுத்திக்கொண்டார்கள் தமிழ் பாஷையினை ஈன்று வளர்த்தவர்களும், சத்திய தன்மத்தைப் பரவச்செய்தவர்களும், சமணமுனிவர்களாதலின் அவர்களால் கொண்டாடி வந்த புத்த, தன்ம, சங்கமென்னும் முத்திர மணிகளை முச்சங்கங் களென மாற்றிவிட்டார்கள். அதாவது, ஏக்காலத்தில் முதலாகத் தோன்றியவர் புத்தர், நடுவாகத்தோன்றியது தன்மம், கடையாகத் தோன்றியது சங்கம். இவற்றையே முத நடு கடைச்சங்கமென வழங்கிவந்தார்கள். மற்றும் முறையே என்றுமழியா பதுமநிதி என்றும், தன்மநிதி என்றும், சங்கநிதி என்றும் கொண்டாடி வந்தார்கள்.

இத்தகைய மெய்க்குருக்களின் போதனைகளையும், செயல்களையும், மாறுபடுத்தி மதக்கடை வைத்து சீவிக்க முயன்ற பொய்க்குருக்கள் தங்களது முதற்சங்கம் நாலாயிரத்தி ஐந்நூறு வருடம் இருந்ததென்றும், கடைச்சங்கம் இரண்டாயிர வருடம் இருந்ததென்றும், நடுச்சங்கம் மூவாயிரத்தைந்நூறு வருடம் இருந்ததென்றும் பத்தாயிர வருட கணக்கை பரக்க எழுதிவைத்திருக் கின்றார்கள்.

நூறுவருட கணக்கை நுட்பமாக எடுத்து வரையறுத்துக்கூற வகையற்ற வர்கள் பத்தாயிர வருட கணக்கை எந்த அரசாங்க பதிவில் பதிந்துவைத்திருந் தனரோ விளங்கவில்லை.

தங்கள் சங்கங்களின் கணக்கை பத்தாயிர வருடமெனப் பதிந்து வைத்துள்ளவர்கள் எந்த யுகமுதல் எதுவரையிருந்ததென்னுங் காலவரையை ஏட்டில் எழுதாதிருந்து விட்டார்கள் போலும்.

எவ்வகை கணக்குகளையும் யுகக்கணக்குகளாம் இருட்டரையில் விட்டு மயக்குகின்றவர்களாதலின் தங்கள் சங்கக் கணக்குகளை பத்தாயிர வருடமென வகுத்துள்ளவர்கள் தமிழ்பாஷையும், தமிழிலக்கங்களும் அசோகவரசன் காலத்தில் மதுரையிற் பிரபலப்பட்டதா அன்று அசோகவரசன் காலங்களுக்கு முன்பு பிரபலப்பட்டதா என்பதை சிலாசாசனங்களினாலும், செப்பேடுகளி

னாலும் ஆராய்ச்சி செய்வார்களாயின் பத்தாயிரவருட சங்கத்தின் கணக்குப் பரக்க விளங்கும்.

ஒரு சங்கம் 4,500-வருடம் இருந்ததென்றும் மறுசங்கம் 3,500-வருடம் இருந்ததென்றும், இன்னொரு சங்கம் 2,000 வருடம் இருந்ததென்றும், வரையறுத்து வெளியிட்டுள்ள கணிதத்தின்படி முதற்சங்கம், நடுச்சங்கம், கடைச்சங்கமென்னும் பெயர் தோன்றுமா, கடைச்சங்கமென்னும் பெயரைக் கொடுத்தோர்கள் சங்கத்தோரா, குடிகளா, மதுராபுரியில் இச்சங்கங்கள் எங்கு ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

இஸ்தாபனபீட சிலாசாசனங்கள் ஏதேனுமுண்டா, இல்லை. ஈதன்றி கடைச்சங்கம் ஒன்றிருந்து நசிந்ததென்பதை குடிகள் நன்கறிந்திருப்பார்களாயின், நான்காஞ் சங்கமென்றும் ஒன்று தோன்றுமோ. கடைச்சங்கமாக முடிவு பெற்றதை மூன்றாஞ் சங்கமாகத் தொடரப்போகுமோ. இத்தகையச் செயல் களைக்கொண்டே முச்சங்கங்கள் இருந்ததுண்டா இல்லையா என்பதை தாமே அறிந்துக்கொள்ள வேண்டியதுதான்.

ஞான நூற்களில் தோன்றிய முச்சங்கங்கள் யாதென்பீரேல், ஓர் குழந்தை பிறந்தபோது அமுதூட்டி அன்னமளிக்குங்கால் ஓர் கூட்டங்கூடுவது முதற்சங்கமென்னப்படும். இரண்டாவது விவாகத்திற்காகக் கூடுவது நடுச்சங்கம் என்னப்படும். மூன்றாவது இறந்தப்பின் கூடுவது கடைச்சங்கம் என்னப்படும்.

இத்தகையச் செயல்களுக்கும் முதற்சங்கம், நடுச்சங்கம், கடைச்சங்க மென்று கூறுவர்.

பட்டினத்தார்பாடல்

முதற்சங்கமுதூட்டு மொய்குழலார்தம்மெய் / நடுச்சங்க நல்விலங்கு பூட்டுங் - கடைச்சங்க மாம்போதனவுது மம்மட்டோ விம்மட்டே / நாம்பூமி வாழ்ந்த நலம்.

பத்தாயிர வருட பண்டைகாலச் செய்யுட்களையும், விண்டகாலச் செய்யுட்களையும் விரித்துணரில் வெள்ளென விளங்கும்.

3:32, சனவரி 18, 1910

8. நாயனார் செத்தமாடெடுத்தாரா

வினா : நமது திருவள்ளுவநாயனார் ஆற்றியுள்ள ஞானவெட்டியில் செத்ததோர் மாடெடுப்போமென்று எப்போது கூறியிருக்கின்றாரோ அப்போதே செத்தமாட்டைப் புசித்திருக்கவேண்டுமென்று சிலர் சங்கிக்கின்றார்கள்.

பா. வேணுகோபாலன்.

விடை : அந்நூலின் பெயர் ஞான வெற்றியா அல்லது ஞானவெட்டியா. அந்நூலின் ஆக்கியோன் திருவள்ளுவ சம்பவனாரா அல்லது திருவள்ளுவ நாயனாரா, அந்நூற்றொகை ஆயிரத்திஐநூறா, ஆயிரத்தி எண்ணூற்றித் தொண்ணிற்றொன்பதா வென்பதை தேற விசாரித்தவிடத்துத் தெள்ளென விளங்கும்.

இஞ்ஞானவெற்றியை அச்சிட்டு வெளிக்குக் கொண்டு வந்தவர்கள் பராயசாதியோரும், பராய மதஸ்தர்களுமாதலின் தங்கள் மனம்போனவாறு செத்ததோர் மாடெடுப்போமென்றும், கட்டையும் அடுக்கிக் கொள்ளுவோ மென்றும் குறள் செய்த காலத்தில் என்றும் பலமதங்களை கண்டித்தும் நூதனப் பாடல்களை அனந்தமாக அதில் நுழைத்தும் விட்டார்கள்.

சாம்பவனார் தான் பாடியுள்ள நொண்டி சிந்தினுள் தன்னுடைய பௌத்ததன்ம ஞானத்தின் சிறப்பையும், விருதிகளின் வல்லபத்தையும் விளக்கி வந்தவர் செத்ததோர் மாடெடுப்போமென்றும், கட்டையை அடுக்கிக் கொள்ளுவோமென்றுங் கூறுவரோ.

வள்ளுவர்களென்று கூறப்படுவோர் அரசர், வணிகர், வேளாளரென்ற முத்தொழிலாளருக்குங் கன்மகுருக்களென்று முன்கலை திவாகரத்திலும், பின்கலை நிகண்டிலும் தெளிவாகக் கூறியிருக்க வள்ளுவ வம்மிஷ வரிசையோர் செத்தமாடெடுப்போமென்று கூறியுள்ளது அபுத்தர்களின் புரட்டுச் செய்யுளேயாம்.

அவ்வகையாக செத்தமாடெடுப் போமென்னும் இழிந்த செயலைக் கூறியபின்னர் "சாதியில் உயர்ந்தவன்கா ணென்னும்" செய்யுள் தோன்றுமோ.

"செத்ததோர் மாடெடுப்போமென்னும் வாக்கியத்தை அவரே கூறியிருப்பாராயின்" சாதியை சொல்லுகிறேனெனும் பாட்டின் வரிசையில் சேர, சோழ நாட்டிலுள்ள பாவிகள் செத்தமாட்டை தின்னும்படி வதைத்தார் களென்று சத்துருக்களின் செயலைத் துக்கித்துக் கூறுவாரோ.

செத்தமாடெடுப்பது யாதார்த்தமாயின் உலகவுற்பத்தித் தருவில் சீவ செந்துக்களை வதைத்து அதன் மாமிஷங்களைப் புசிக்கலாகாதென்று கூறுவரோ, ஒருக்காலுங் கூறியிருக்கமாட்டார்.

"நான் அந்தஸ்துள்ள சீவனமுள்ளவன் என்றொருவன் கூறி மலமெடுப்பது எனது தொழில் என்பானாயின்" விவேகிகள் அம்மொழியை யாதென்றேற்பர். யாவும் பராயமதப் புறட்டேயாம். வள்ளுவர் வம்மிஷவரிசையில் பூர்வத்தில் நிறைவேறியும் தற்காலம் நிறைவேறிவந்தும், அச்செய்யுளிலும் இருக்குமாயின் விவேகிகள் யாவரும் ஒப்புக்கொள்ளுவர்.

முற்காலத்திலும் இராது தற்காலத்திலும் இராது, ஞானவெற்றி என்னும் 1500 செய்யுளிலுமிராது, நூதனமாகச் சேர்த்துள்ளதை விவேகிகள் ஏற்பரோ ஒருக்காலும் ஏற்கமாட்டார்கள்.

ஏற்பவர்கள் யாரெனில், சாராயத்தைப் பூராயமாகக் குடித்து ஆட்டு மாமிஷம், மாட்டு மாமிஷம், பன்றி மாமிஷம் முதலியதைத் தின்று மதோன்மத்தராகத் திரிபவர்களே ஏற்றுத் தூற்றித் திரிவர். அத்தகையோர் வார்த்தைகளை நீங்கள் ஏற்காது அசுத்த புசிப்பாம் மதுமாமிஷங்களை அகற்றி சீவிக்கக் கோறுகிறோம்.

ஞானவெற்றியிலுள்ளப் பொய்ப்பாடல் யாவுமிராது சுத்தப்பிரிதியைக் கூடியசீக்கிரம் அச்சிட்டு வெளியிடுவோம்.

3:40, மார்ச் 16, 1910

9. பஞ்ச காவியங்களில் ஒன்றாகிய குண்டலகேசி

இக்காவியத்துள் நமக்கு ஒன்பது பாடல் கிடைத்துள்ளது. இதனை நோக்கும் அன்பர்பால் மற்றும் இச்செய்யுட்கள் வேறு கிடைத்திருக்குமாயின் உதவிபுரிய வேண்டுகிறோம்.

கடவுள் வாழ்த்து

முன்றான் பெருமெக்குணின்றான் முடிவெய்துகாறும்
நன்றே வினைந்தான் குணமொழிந்தான் தனக்கென்
றொன்றானு மில்லான் பிறர்க்கே யுறுதி சூழ்ந்தா
நன்றே யிறைவ னவன்றாள் சரணங்கணன்றே.

அவையடக்கம்

நோய்க்குற்ற மாந்தர் மருந்தின் சுவை நோக்குகில்லார்
தீக்குற்ற காதலுடையார் புகைத் தீமெயோரார்
போய்குற்ற மூன்று மறுத்தான் புகழ் கூறுவேற் கென்
வாய்க்குற்ற சொல்லின் வழுவும் வழு வல்லவென்றே.

தீவினை யச்சம்

வாயுவினை நோக்கியுள மாண்டவய நாவா
யாயுவினை நோக்கியுள வாழ்க்கையதுவேபோற்
றீயவினை நோக்குமியல் சிந்தனையு மில்லாத்
தூயவனை நோக்கியுள துப்புரவு மெல்லாம்.

புணர்ச்சிவிழையாமெய்

அனலென நினைப்பிற் பொத்தி
யகந்தலைக் கொண்டகாமக் கனலினை யுவப்ப நீராற்
கடையற வலித்து மென்னார் நினைவிலாப் புணர்ச்சி தன்னால்
நீக்குது மென்று நிற்பார் புனலினைப் புனலினாலே
யாவர் போகாமெய் வைப்பார்.

யாக்கை நிலையாமெய்

கோள்வலைப் பட்டுஞ் சாவாங் கொலைக்களங் குறித்துச்சென்றே
மீளினு மீளக்கண்டு மீட்சியொன்றானு மில்லா
நாளடி யிடுத லொன்று நம்முயிர் பருகுங் கூற்றின்
வாளின்வாய் தலைவைப்பார்க்குச் செல்கின்றோம் வெல்கின்றோமே.

தூயதன்மெய்

எனதென சிந்தித்தற்றன்னுடலது பற்றுக்காமேற்
றினைப்பெய்து புனகம்போல சிறிதும் பற்றாதாகி
வினையொழியத் தினைமாசற்று மீண்டிடி லுலகவின்பப்
புனலினைக் கழுவியாற்றி புந்தியி லுரைது மென்பார்.

இறைமாட்சி

சீற்றம் செற்று பொய் நீக்கிச் செங்கோலினாற்
கூற்றங் களைந்து கொடுக்க வெனுந்துணை
மாற்றமேன வின்றான்றடு மாற்றத்துத்
தோற்றந் தன்மெயுங் காமுறத் தோன்றினான்.

குற்றங்கடிதல்

மண்ணுளார் தம்மெய்ப்போல்வார் மாற்றதேயன்று வாய்மெய்
நண்ணினாற் றிறத்துங் குற்றம் குற்றமே நல்லவாகா
விண்ணுளார் புகழ்தற்கொத்த விழுமியா நெற்றிபோழ்ந்த
கண்ணுளான் கண்டத்தன்மேற் கறையையார் கறையென்றென்பார்.

இடுக்கணிழீயாமெய்

வேரிக்கமழ் தாரரசன் விடு கென்ற போழ்துந்
தாரித்தலாகா வகையாற் கொலைச்சூழ்ந்த பின்னும்
பூரித்தல் வாடுதலென் றிவற்றால் பொலிவின்றி நின்றான்
பாரித்தலெல்லாம் வினையின் பயனென்ன வல்லான்.

அன்பர்களே! அழியா தன்மநூற்களை வெளியிட்டு ஆதரிப்பதே ஆனந்த தன்மமாதலின், அந்த தன்மத்திற்கு ஆதிமூலனாம் அறன்செயலை முற்றும் ஆய்ந்து அறஹத்துநிலை பெற விரும்புவோர் சத்தியதன்ம நூற்களை சகலருக்கும் பரவச்செய்ய வேண்டுகிறோம்.

3:47, மே 4, 1910

10. வள்ளுவர் காலம்

வினா : இம் மே மாதம் 2ல் வெளிவந்த சுதேசமித்திரன் பத்திரிகை ஐந்தாம் பாரம் இரண்டாவது கலத்தில் திருவள்ளுவரைப் பற்றிய சில குறிப்பு களென்னு முகப்பிட்டு "நல்கூர் வேள்வியார் பாட்டில் வடதிசையைநோக்கி நப்பின்னை பிராட்டியை மணந்த கண்ணபிரானை உத்தர மதுரைக்கு அச்சு (ஆதாரம்) என்றும், தெய்வப்புலவர் கடைச்சங்கத்தார் காலத்துக்கு இருநூறு முந்நூறாண்டுகட்கு முன்னவராக நிறுத்தலே பொருத்தமாகத் தோன்றுகிற தென்றும் நம்காலத்துள்ள பெரிய புலவரொருவர் வாக்கை இராமர் காலத்தில் இருந்த ஒருவர் கூற்றாக வைத்துப் பொய்யிற் புலவன் பொருளுரை தேறாய் எனின் அது சிறவாதென்பது பிரத்தியட்சமாமென்றும், திருவள்ளுவனார் தம் நூலை வியாழம் வெள்ளி இவர்களின் நூலாதாரங்கொண்டு செய்துள்ளது போற் போக்குக் காட்டி வரைந்துள்ளது கண்டு மிக்க வியப்புற்றேன். ஆதலின் பத்திராதிபர் கருணைபாவித்து அன்னோர் கருத்து யாதார்த்த சரித்திரத்தைப் பொருந்துமா பொருந்தாவா என்பதை அடியேனுக்குத் தெரிவிக்கும்படி வேண்டுகிறேன்.

வீ. தணிகாசலம், இரங்கூன்

விடை : இத்தேசத்துள் கண்ணபிரானென்று ஒருவர் பிறந்திருந்தார் என்னும் சரித்திராதாரங்களேனும், செப்பேடுகளேனும், சிலாசாசனங்களேனும் ஒன்றுங்கிடையாது. ஆதலின் திருவள்ளுவர் மாலையிலுள்ள நல்கூர் வேள்வியார் பாடலைக்கொண்டேனும் ஓர் நூலாதாரந் தேடிக் கொள்ளும் வழி திறந்திருக்கின்றார்கள். ஆயினும் அன்னோர் கூற்றே திருவள்ளுவர்

மயிலையிற் பிறந்தனரென்பதை மாற்றி மதுரையிற் பிறந்தார் என்பதும் ஓர் சார்பேயாம்.

இரண்டாவது முதற்சங்கம், நடுச்சங்கம், கடைச்சங்கமென்னும் மொழிகளே முற்றும் மாறாயிருப்பது கொண்டு பன்னீராயிர புத்தசங்கங்கள் இருந்த மதுரையில் இந்த மூன்று சங்கங்களிருந்த விவரத்தை கனந்தங்கிய ஆர்ச்சலாஜிக்கல் சர்வேயர் காணாத விவரந் தோன்றவில்லை. இம்மூன்று சங்கங்கள் இருந்ததாக ஏற்கினும் கடைச் சங்கத்திற்கு இருநூறு முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தவர் திருவள்ளுவர் என்று கூறியுள்ளக் கூற்றால் கடைச்சங்கத்திற்கு திருவள்ளுவர் சென்றதும் அவரது குறளை சங்கப்பலகையில் வைத்ததும் பொய்யென்றே திட்டமாக விளங்குகிறபடியால் சங்கசரித்திரங்களைக் கொண்டே சங்கைகளுள்ளது என்பதைத் திட்டமாகத் தெரிந்துக்கொள்ளலாம்.

மூன்றாவது புத்தபிரான் தோன்றிய நெடுங் காலங்களுக்குப்பின் இராமர் தோன்றியுள்ளாரென்று வஷிஷ்டர் கூறியுள்ள இஸ்மிருதிகளில் ஒன்றாம் வாஷிஷ்டங் கூறுவதுமின்றி அநுமார் இலங்காதீவஞ் சென்றிருந்தபோது அங்குள்ள ஓர் கோபுரத்தின் மீதுட்கார்ந்து ஈது புத்த மடமென்று கூறியதாக வடமொழியிலுள்ள வால்மீக ராமாயணங் கூறுகின்றது. இத்தகைய நூலாதாரங் களை அன்னோர் கண்டிருப்பாராயின் இராமர் திருவள்ளுவருக்கு முந்தியவரா பிந்தியவரா என்பதும் பொய்யிற் புலவன் பொருளுரை தேறாயென்னும் மொழி சிறப்புறுமா உறாவாவென்றும் உணர்ந்து கூறுவர். அந்நூற்களையும் புத்தரது காலவரைகளையும் அறியாதவராதலின் அம்மொழி சிறவாதென்று கூறிவிட்டார்.

நான்காவது வியாழம், வெள்ளி இவர்களின் நூலாதாரங்கொண்டு திருவள்ளுவர் தனது குறளை இயற்றியுள்ளாரென்பது திருவள்ளுவர் மாலையிற் கூறியுள்ள செய்யுட்களுக்கு முற்றும் மாறாகவே முடியும். இதுகாருந் தோன்றா வியாழம் வெள்ளி இவர்களின் நூற்கள் முற்கால சரித்திரங்களில் இல்லாது முரண்பட்டு தற்காலந்தோன்றியுள்ளபடியால் திருவள்ளுவர் குறள் ஆதாரங் கொண்டே வியாழம், வெள்ளி, பிரகஸ்பதி, சுக்கிரன், சாணாக்கியர் அர்த்த சாஸ்திரம் யாவுந்தோன்றியுள்ளதென்பது அதன் தோற்ற காலங்கொண்டே சொல்லாமலே விளங்கும்.

ஆதிபகவனாம் புத்தபிரான் ஓதியுள்ள திரிபீட வாக்கியங்களாம் திரிபேத வாக்கியங்களைத் தழுவி முதலாம் பிடகத்திற்கு வழி நூலாந் திரிக்குறளை திருவள்ளுவர் இயற்றியுள்ளார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகையில் அவற்றை மறைப்பது முழு பூசணைக்காயை பிடிசாதத்தால் மறைப்பதற்கொக்கும். ஆதலின் நமதன்பர் இனியாதாரமற்ற சரித்திரங்களையும் இயல்புக்கு விரோதச்செயல்களையும் உடனுக்குடன் நம்பாது தேறவிசாரித்துத் தெளியும்படி வேண்டுகிறோம்.

3:49, மே 18, 1910

11. திருவள்ளுவர் யார்?

வள்ளுவரென்பது செயல்பற்றியப் பெயர்.

முன்கலை திவாகரம்

வள்ளுவர், சாக்கையரெனும் பெயர்மன்னர்க் / குள்படு கருமத் தலைவர்க் கொக்கும்.

இத்தகையக் கருமச்செயல்களை பௌத்தமார்க்க அரசர்களுக்கும் குடிகளுக்குமே நடாத்திவந்தவர்களும் வள்ளுவர்களேயாம்.

சீவகசிந்தாமணி

பூத்த கொங்குபொற் பொன்சுமந்துளா / ராய்ச்சியர் நலக்காசெறாணனான்
கோத்த நித்திலக் கோதைமார்பினான் / வாய்த்த வன்னிரை வள்ளுவன்சொனான்.

மந்திரத்தரசன் வல்லே நிமித்தகன் வருக வென்ன
வந்தரத் தோடுகோளிற் சாதக மவனுஞ் செய்தான்
னிந்திர திருவிலேய்ப்பக் குலவிய புருவத்தாட்கு
வந்தடை பான்மை மண்மே லிராசமா புரத்ததென்றான்.

இதை அநுசரித்தே நாளது வரையில் சாதிபேதமற்ற திராவிடர்கள் தங்கள் அரசபீடங்களையும் பௌத்த மடங்களையும் இழந்துவிட்டபோதினும் அவர்களுக்குக் கருமத்தலைவர்களாயிருந்து சுபாசுப காரியங்களை நடத்தி வருகிறவர்களும் வள்ளுவர்களேயாகும்.

இத்தகைய வள்ளுவர், சாக்கையர், நிமித்தக ரென்னும் கருமத் தலைவர்களுக்குள் திருவள்ளுவ நாயனார் கருமத்தலைவர் வம்மிஷவரிசையிற் தோன்றிய கச்சனென்னும் அரசனுக்குப் பிறந்து புத்தசங்கஞ் சேர்ந்து முதநூலாம் திரிபிடகத்திற்கு வழிநூலாகும் திரிக்குறள் இயற்றியிருக்கின்றார். பாகுபலி நாயனார், மார்க்கலிங்க பண்டாரம் இவர்களின் கையேட்டுப் பிரதிகள்.

பின்கலை நிகண்டு

பூமலி யசோகி நீழற் / புனைந்தவெம் மடிகள்முன்னா
லேமமா முதனூற்சொல்ல / வள்ளுவ ரியன்றபாவால்

தாமொரு வழிநூற்சொல்ல / சார்புநூற் பிறருஞ்சொல்ல
தோமிலா மூன்றுநூலுந் / துவமென வுதித்தவன்றே.

சார்பு நூற்களோ வென்னில் ஔவையா ரியற்றியுள்ள திரிவாசகமும், திருமூலர் இயற்றியுள்ள திரிமந்திரமும், நீதிநூல் ஞான நூற்களென்பவை களுமேயாம்.

புத்தபிரானால் ஓதியுள்ள திரிபீட வாக்கியம், திரிபேதவாக்கியம், திரிமறைவாக்கியம், திரிசுருதி வாக்கியமென வழங்கும் முதநூலாதாரங் கொண்டே இந்திர தேசத்திலுள்ள சகல மதங்களுந் தோன்றியுள்ளபடியால் ஒவ்வொரு மதஸ்தரும் தமிழ் பாஷையில் வரைந்துள்ள வழிநூலாந் திரிக்குறளில் ஒவ்வோர் பாடல்களை எடுத்துக்கொண்டு திருவள்ளுவர் மதம் எங்கள் மதம் எங்கள் மதமெனத் தங்கள் மதங்களை சிறப்பித்துக்கொள்ளுவது இயல்பாம். திருவள்ளுவருக்கோ மதமென்பது கிடையாது. தங்கள் மதமே மதம், தங்கள் தேவனே தேவனென்று கூறி மதக்கடை பரப்பி சீவிப்பவர்கள் யாரோ அவர்களுக்கே மதம் என்பது சான்றாம். திரிபிடகத்தை புத்த தன்ம மென்றும், திரிக்குறளை திருவள்ளுவர்தன்மமென்றே கூறத்தகும்.

நமது பத்திரிகையில் வரைந்துவரும் பூர்வத்தமிழொளி முடிந்தவுடன் திருவள்ளுவ நாயனார் திரிக்குறளை வரையப்போகின்றோம். அக்கால் நூலாசிரியர் பிறப்பு வளர்ப்பும், நூலுக்கு முதலும், பத்துப் பாடலால் புத்தரை சிந்தித்திருக்கும் கடவுள் வாழ்த்தும், அவற்றிற் கூறியுள்ள இந்திரராம் புத்தரது மகத்துவமும், புத்தேளுலகின் சுகமும் தெள்ளறவிளங்கும்.

4:4, சூலை 6, 1910

12. தமிழினை இயற்றியவர்

வினா : நமது சுயபாஷையாகும் தமிழினை இயற்றினவர் சிவனெனக் கூறுகின்றார்களே அச்சிவன் எச்சரித்திர சார்பினர். இப்பாஷைக்குள் தமிழென்றும், திராவிடமென்றும் பெயருண்டாய காரணமென்னை.

வி. கோபாலன், சென்னை.

சிவனென்பதும், சிவகதி நாயகனென்பதும், சிவகதிக்கு இறைவ னென்பதும், சங்கறநிறையோன் என்பதும், காமதகனன் என்பதும், காலகாலன் என்பதும், புத்தபிரானுக்குரிய சகஸ்திர நாமங்களுள்ளடங்கியவைகளேயாகும். இவற்றுள் சித்தார்த்தித் திருமகன் நம்மெய்ப்போன்ற மநுட வடிவாகத் தோன்றி பெண்சாதி பிள்ளையுடன் சுகித்து தன் சாதன முயற்சியால் பொய்யை அகற்றி மெய்யை விளக்கி புத்தரென்றும் இராகத்துவேஷ மோகத்தை அகற்றி, பேரன்பின் சுகத்தைவிளக்கி சிவனென்றுங் காரணப் பெயர்களைப் பெற்றவர் புத்தபிரானேயாகும். சகடபாஷையாம் சமஸ்கிருதத்தையும், திராவிட பாஷையாம் தமிழினையும், ஆதியாக வரிவடிவில் போதித்தவரும் புத்த பிரானேயாகும்.

இவ்விருபாஷைகளை இயற்றியதுகொண்டே அருங்கலை நாயக னென்றும், அருங்கலைவினோதனென்றும், மற்றும் பெயர்களை அளித்துள் ளார்கள்.

வடமொழி, தென்மொழிகளின் ஆக்கியோன் யாவரென்பதை திவாகரம், நிகண்டு, தொல்காப்பியம், வீரசோழியம், சிலப்பதிகாரம் முதலிய நூற்களால் தெள்ளறத் தெளிந்துக் கொள்ளலாம்.

தென்மொழியில் நஞ்செழுத்தென்றும், அமுதெழுத்தென்றும் இருவகை அட்சரங்களுண்டு. அவற்றுள் நஞ்செழுத்துக்களின் ஆதாரங்கொண்டு தீராவிடமென்றும் , அமிர்தவெழுத்துக்களின் ஆதாரங்கொண்டு தமிழென்றும், இருபெயர்கள் உண்டாயிற்று. இவ்விரு பெயர்பெற்ற பாஷையை அகஸ்தியரால் தென்னாட்டிற் பரவச்செய்தபோதினும் மிகுப் பிரபலமாகப் பரவச்செய்தவள் புத்தசங்க பிக்குணியாகி அம்பிகையென்றும், அறச்செல்வியென்றும், பெயர் பெற்ற ஔவையேயாகும். அவ்வம்மன் தமிழ் நூற்களுக்கு ஆதரவாயிருந்து மேலும் மேலும் பரவச்செய்தவர்கள் சேர, சோழ, பாண்டியனென்னும் மூவரசர்களே ஆவர். இத்தமிழ்ச் செல்வியை கலைபரவும் அமுதூட்டி செய்யுள் சீராட்டி செந்தமிழ் தாராட்டி, அட்சரா லட்சணங்களாம் ஆபரணம் பூட்டி ஆனந்தமாக வளர்த்துவந்தவர்கள் சமண முநிவர்களாகும் புத்தசங்கத்தோர் களேயாவர். ஆதலின் சிவனென்னும் பெயர்பெற்று தமிழினை உண்டுசெய்த வரும் புத்தர், அவற்றை மேலும் மேலும் பலகலைகள் தோன்ற விருத்தி செய்தவர்களும் பௌத்தர்களேயாகும். இதற்குமாறுபட்ட சிவனது யதார்த்த சரித்திரம் அவரது பிறப்பு வளர்ப்புடன் வேறேதேனும் இருக்குமாயின் சரித்திர ஆதாரம், சிலாசாசன ஆதாரம், செப்பேட்டின் ஆதாரங்களுடன் வெளிவரலாம்.

4:14, செப்டம்பர் 14, 1910

13. திரிக்குறளில் உள்ள காமத்துப்பால்

மயிலை எப்.எம் என்னும் அன்பரே, தாம் வினவிய சங்கை விசேஷித்ததேயாம். ஆயினும் தாம் வினவியுள்ள நாயனார் திரிக்குறளிலுள்ளக் காமத்துப்பாற் செயல் மெய்யா பொய்யா என்பதை உணராது வினவியது வீணேயாம். அதாவது, சிற்றின்பமென்னும் காமிய நிலை சகல மக்களுக்கும் இயல்பில் தோன்றும் இன்பமென்னப்படும். அத்தகைய இன்ப நுகர்ச்சி சருவ மக்களுக்கிருந்தும் அதன் புலநிலையறியார்கள். புலன் தென்படலாம், பேரின்பம் பெற்ற தென்புலத்தோரே அவற்றை அறிவர்.

ஆதலின் தென்புலத்தோராம் நாயனார் காமத்துப்பாலாம் சிற்றின்ப நுகர்ச்சியைத் தெள்ளற விளக்கிப் பேரின்பத்தைத் துலக்குவதற்காய் கண்ணும், மூக்கும், செவியும், நாவும், உடலும், ஓர் பெண்ணுருவை நாடி வெளிதோன்றி நுகர்வது சிற்றின்ப நுகர்ச்சியாதலின்,

கண்டுகேட்டுண்பிர்த் துற்றறியுமைம்புலனு
மொண்டொடி கண்ணேயுள.

வென்றும் யேக சிற்றின்பத்தில் யேகபாவனையாய் வெளிதோன்றியது போல் ஐம்புலனும் யேக பேரின்பத்தில் யேகபாவனையாய் உள்ளடங்குமாயின் தாமரைக்கண்ணனுலகாகும் புத்தேளுலகில் சிற்றின்பத்திற்கு மேலாய பேரின்பத்திற் சதா சுகிப்பனென்று கூறுவதற்காய்

தாம் வீழ்வார்மென்றோட் டுயிலினினிதுகொ
றாமரைக்கண்ணா னுலகு.

காமமீறி ஐம்புலனால் ஒடிய கண் அவ்வைம்புலனும் ஒடுங்கிய பேரின்ப சுகத்தையும் ஆற்றலையும் விளக்கியிருக்கின்றார்.

பொறிவாயிலைந்தவித்தான் பொய் தீரொழுக்கம்,
நெறி நின்றார் நீடுவாழ்வார்.

காமத்தால் சிற்றின்பம் நுகர்ந்து சீர்கெடுவதினும் என்றுமழியா பேரின்பம் நுகர்ந்து நித்திய வாழ்வடைவதே அழகாதலின் சிற்றின்பத்தை செவ்விதில் விளக்கி பேரின்பம் அளாவும் போக்கில் விடுத்திருக்கின்றார். உள்ளதை உண்மெய்க்குத்தாரமாய் விளக்குவதே புத்ததன்மமாகும். உள்ளது ஒன்றிருக்க இல்லாததைக்கூட்டிப் பொய்யை மெய்போல் பேசுவது அபுத்ததன்மமாகும். கொக்கோகரும் மதனனூலாரும் உலகமக்கள் நோயின்றி வாழ்க நூலெழுதினார் கள். அவர்கள் கருத்தை உணராது காவிய விருப்பம் மிகுத்து கெட்டு

நூலாசிரியரை நிந்திப்பது அழகாமோ. உள்ளதை ஒளியாது விளக்கி மக்களைச் சீர்பெறச்செய்வது மதியூகிகளின் கடனாதலின், நாயனார் தான் இயற்றியுள்ள காமத்துப்பாலில் புருஷருக்குள்ள செயலையும், இஸ்திரீகளுக்குள்ள செயலையும் தெள்ளற விளக்கியிருக்கின்றார்.

அவர் விளக்கியச் செயலுக்கும், அநுபவத்திற்கும் ஏதேனும் மாறுதலுண்டோ, இல்லையே. இத்தகைய மாறுதலற்ற மதியூகிகட்போதத்தைக்கண்டு அகமகிழாது திகைப்பது வீணேயாகும். உலகத்தின் மனுகுலத்தோற்ற சருவ ஆடம்பரங்களும் காமியத்தையே பீடமாக வகுத்துள்ளதை அறியாது அதை சிறப்பித்தது தவரென்று கூறுதல் உள்ளுக்குக் காமியசிறப்பை ஒளித்து வெளிக்குத் தூற்றுவதொக்கும். நாயனார் அங்ஙனம் ஒளியாது மக்களின் சருவசெயல் களையும் அளந்து கூறியவிடத்து காமத்துப்பாலையும் தெள்ளற விளக்கி விட்டார் காரணம், இன்பத்தையும் துன்பத்தையும் விளக்கும் ஓர் போதனா நிலையாகும்.

அதற்குப் பகரமாய் கிறிஸ்துவானவர் தனது மாணாக்கரையும் மற்ற மக்களையும் நோக்கி மனிதன் ஓர் இஸ்திரீயை நோக்கிப்பார்த்தபோதே அவளையவன் சேர்ந்ததொக்குமென போதித்திருக்கின்றார். காமியநிலையைக் கருத்தறிந்து கூறியுள்ளபடியால் அவர் அங்ஙனம் கூறலாகாது என்னலாமோ. போதனைப் புதைப்பொருள் பலவாறு நிற்கும். அவைகளை உணர்ந்தே சங்கித்தல் வேண்டும். உணராச் சங்கிப்பு பலன்தராவாம்.

4:18, அக்டோபர் 12, 1910

14. கவிராயர் சிறப்பு

இந்திரதேசத்தில் தமிழ்பாஷையை வளர்த்த அரசர்கள் தமிழ் வித்துவான்களையும் மிக்க சிறப்புடன் வளர்த்துவந்தார்கள். அச்சிறப்பினால் ஒவ்வொரு வித்துவபுருஷர்களும் இலக்கிய இலக்கணங்களை நன்குணர்ந் திருந்ததுமின்றி எழுத்துக்களில் நஞ்செழுத்து அமுதெழுத் திவைகளையும் அறிந்து பாடும் வல்லவர்களாகவு மிருந்தார்கள். அத்தகைய வல்லபத்தால் ஆசுகவி, மதுரகவி, சித்திர கவி, விஸ்தார கவியெனும் நான்கு கவிகளையுங் குற்றமறப் பாடுவோரை கவிராயரென்றழைத்துவந்தார்கள். அதாவது, கவிக்கு அரசனென்பதேயாம். கவிக்கரசரானோரை தேசவரசர்கள் மதித்து சமாசன ஈய்ந்து வித்துவவிருதுகளும், வேண பரிசும், மானியங்களும் அளித்து பாதுகாத்து வந்தார்கள். அதனால் அனந்த வித்துவான்கள் பெருகியதுமன்றி வித்தியா விருத்தியால் விவேகவிருத்திப்பெற்று சாதுசங்கங்களைச் சேர்ந்து சமணநிலை யுற்று உலோகோபகாரமாய்க் கலைநூற்களை இயற்றி சகல மக்களுக்கும் போதித்து நீதிநெறி ஒழுக்கங்களை நிலைக்கச்செய்துவந்தார்கள்.

தமிழ் இலக்கிய இலக்கணங்களை வகுத்துரைத்தவர்களும் சமண முநிவர்களே. தமிழ்க் கவிகளாகும் கோவைபாடுங் குறிவைத்தவர்களும் சமண முநிவர்களே. அகவற்பாடும் அளவை வகுத்துவைத்தவர்களும் சமண முநிவர்களே, வெண்பா, விருத்தப்பா பாடும் விதிகூறிவைத்தவர்களும் சமண முநிவர்களேயாகும். தற்காலமோ அத்தகைய சமணமுநிவர்கள் வாழுஞ் சங்கங் களையே பாழ்படுத்திவிட்டார்கள். அவர்களுக்கு மெய்க்குருக்களாக விளங்கிவந்த யதார்த்தபிராமணர்களும் இல்லாமற் போய்விட்டார்கள். இவைகள் யாவற்றிற்கும் பீடாதாரமாகும் தமிழரசர்களும் இல்லாமல் ஒழிந்தார்கள்.

தற்காலமுள்ளத் தமிழ்மண மாறாதுத் தென்னிந்தியாவில் வீசச்செய்து வரும் மன்னர்கள் இருவர்களேயாவர். அவர்கள் யாரென்பீரேல், கனந்தங்கிய இராயபாதூர் பெமா. மதுரை பெருமானவர்களும், கனந்தங்கிய பாண்டித்துரை தேவரவர்களுமேயாம்.

அவர்கள் இருவருமோ வித்துவான்கள் வளரும் உயர்பிச்சை அளித்து வருகின்றார்களன்றி அவர்கள் கற்றதினளவே நற்றாடொழுதுக் கடைத்தேறும் சாதுசங்கங்களை நாட்டினார்களில்லை. இத்தமிழ் வளர்க்கும் தாதாக்கள்

இருவருங் கருணைகூர்ந்து தென்னிந்தியாவில் சாதுசங்கங்களை நாட்டி சமண முநிவர்களைக் கூட்டிப் பூர்வ பள்ளிகளைப் புதுப்பிப்பரேல் அருங்கலை நீதியும், பெருங்கலை ஞானமும் தமிழ் பாஷையிற் பரவி உலகெங்கும் அதின்மணம் வீசவும், அழிந்த சங்கங்களுக்கு உயிர்பிச்சை அளித்து ஆதரித்தவர்கள் இருமன்னர்களே எனப் பேசவும் ஏதுவுண்டாம். அத்தகைய ஏதுவைக்கொண்டே சாதுசங்க ஞானதந்தைகளும் இவ்விருவர்களேயாவர். இவ்விரு ஞானதந்தையர்களும் இத்தென்னிந்தியாவில் சாதுசங்கங்களை நாட்டி சமணமுநிவர்களைக் கூட்டிவிடுவரேல் மெய்யறம் ஓங்கி, கலைவல்ல கவிராயர்களுந் தோன்றுவார்கள்.

அத்தகையக் கவிவல்லோர் வெளிவருவரேல் மங்கலமொழி அறியாது மங்களம் பாடும் கவிராயர்களும் கருமாதிகளுக்குக் கவிபாடிக் கட்டியழுங் கவிராயர்களும் சற்று நிதானித்துப்பாடும் நிலைநிற்பார்கள். தாங்கள் கற்றதினளவேனின்று சங்கபோதனைகளில் அணுகுவரேல் தம்குல வித்துவர்களைத் தாங்களே தூஷித்து அன்னோர் சிறப்பைக் கெடுப்பதன்றி தங்கள் சிறப்பையுங் கெடுத்துக்கொள்ளமாட்டார்கள். ஒருவருக்கொருவர் தூஷித்தலால் உண்டாகும் விரோத பலன்களையும், பூஷித்தலா லுண்டாகும் அவிரோத பலன்களையும் அவரவர்களே ஆராய்ந்தறிந்து கொள்ளுவார்கள்.

சாது சங்கத்தோரை அணுகி சகல கலைகளும் கற்றடங்காது வித்துவகலை ஒன்றை மட்டும் கற்று வித்துவான்களுக்கு வித்துவான்கள் கல்லாதவர்களைப் போல் கலகத்தைப் பெருக்கிக் கொள்ளுகின்றார்கள்.

கற்றவர்களே கல்லாதவர்களைப்போல் கலகஞ்செய்துக்கொள்ளுவர்க ளாயின் இவர்களது கலகத்தை நீக்கி அன்பு பெருகச்செய்வோர்கள் யார்? பொற்பிளவோடு ஒப்பார் பெரியோரென்றும், கற்பிளவோடு ஒப்பார் கயவ ரென்றும் மேலோர்கள் வகுத்திருக்க வித்துவகலை கற்றும் கயவரென்னும் பேர் பெறலாமோ. புவிராயரென்பதிலும் கவிராயனெனும் பெயரழியாப் பெயராதலின் அவற்றை விரோதச்சிந்தையால் அழித்து வீணே கெடுக்கா திருத்தலே அழகாகும்.

பூர்வக் கவிராயர்களைக் கண்டவுடன் வணங்கி அவர்களுக்கு வேணப் பொருளளித்து வந்தது வழக்கமாகும். காரணமோவென்னில், நீதி கலையுணர்ந்து நான்கு கவிபாடுந் திறமும், மங்கலமொழி கண்டு நஞ்செழுத்தகற்றி அமுத வெழுத்தூன்றி பாடும் உரமும் உணர்ந்துவந்தவர்களாதலின் அமுதவெழுத்தின் ஆனந்தங் கண்டளித்து வந்தார்கள்.

நஞ்செழுத்துளதால் திராவிடமென்றும், அமுதெழுத்துளதால் தமிழென்றும் பெயர் பெற்ற பாஷையின் வித்துவான்களென வெளிவந்தும் அவ்வட்சர பலன்களை உணராது பாடி பாடற்குரியோனையுங் கெடுத்து பாடிய தானுங்கெட்டு பயனற்று திரிகின்றார்கள். அவ்வகைத் திரிந்துள்ள வித்துவான்களில் ஒருவர் பாடியுள்ளப் பாடலைப் பாருங்கள்.

கல்லைத்தான் மண்ணைத்தான் காச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானா
இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான் கொடுத்துத்தான் ரட்சித்தானா
அல்லத்தான் பின்னைத்தான் யாரைத்தான் னோவத்தான் ஐயோ விங்கு
பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான் புவியிற்றான் பண்ணினானே.

என்று பாடியிருக்குங் காரணம் தான் படித்துந் தன்னைப் போஷித் துக்கொள்ளப்படியாததாலும், தெய்வத்தாலாகாது முயற்சி மெய் வருந்த கூலிதருமென முயலாததாலும் இத்தகையப் பாட்டைப்பாட நேர்ந்தது.

மநுக்கள் எவ்வித்தையில் முயலினும் அவ்வித்தையைச் செவ்வைப்பெற கற்றலே பயன்தரும். அங்ஙனஞ் செவ்விதிற் கல்லாததால் சீரழிக்குமென்பதே திண்ணம். ஆதலின் தற்காலந் தமிழினை வளர்க்கும் தாதாக்கள் இருவருங் கருணைபாலித்து சாதுசங்கத்தை நாட்டிசமணமுநிவர்களைக்கூட்டிவிடுவரேல் கவிராயர்கட் சிறப்பு அவியாது பிரகாசிக்குமென்பதாம்.

4:21, நவம்பர் 2, 1910

15. தமிழ்பாஷையின் சிறப்பு குன்றிய காலமெவை.

பௌத்த அரசர்களும் பௌத்த சங்கங்களும் பௌத்த உபாசகர்களும் நிலைகுலைந்த காலமே தமிழ் பாஷையின் சிறப்புகுன்றிய காலமாகும். அதாவது, "பெற்றவட்கே தெரியுமந்த வருத்தம் பிள்ளைபெறா பேதையறிவாளோ பேரானந்தமென்னும்" பெரியோன் வாக்கியப்படி ஆதிபகவனாம் புத்தபிரானால் ஏற்படுத்திய வரிவடிவாம் அட்சரங்களில் அமுதவெழுத்துள்ளது கண்டு தமிழென்றும், விடவெழுத்துள்ளது கண்டு தீராவிடமென்றும் பெயர்பெற்ற பாஷையானது பௌத்தசங்க அறஹத்துக்களிலொருவராகும் அகத்திய முநிவரால் தென்தேசத்தில் இந்திரவியாரங்களாம் மடங்களைக் கட்டிவைத்து சமணமுநிவர்களைச் சேர்த்து விவேகவிருத்தி செய்யுங்கால் தமிழட்சர இலட்சணங்களை விளக்கும் இலக்கண நூற்களையும், பலபொருட்களின் பெயர்களை விளக்கும் இலக்கிய நூற்களையும், விவேகவிருத்திக்குரிய கலைநூற் களையும், கணிதவாராய்ச்சிக்குரிய சோதிடநூற்களையும், ஓடதிவிருத்திக்குரிய வைத்தியநூற்களையும் மேலும் மேலும் வகுத்து மநுமக்களை சீர்திருத்தி சீலத்திலும் ஒழுக்கத்திலும் நிலைபெறச்செய்து மக்கள் கதிசுடந்து தேவகதி பெறுவதற்காய வேணநூற்களை வகுத்து மக்களுக்கு மிக்க உபகாரிகளாக விளங்கிவந்தபடியால் தமிழ் பாஷை மேலும் மேலும் விருத்திபெற்று எங்கும் பரவிவந்தது. அதனுடன் பௌத்தசங்கமுள்ள ஒவ்வோர் அறப்பள்ளிகளிலும் சமணமுநிவர்களால் சிறுவர்களுக்குத் தமிழ்ப் பாஷையைக் கற்பித்து விவேக விருத்தியும், வித்துவ விருத்தியும் செய்துவந்தபடியால் வித்துவான்கள் பெருகி தமிழின் பரிமளத்தை எங்கும்வீசி மணக்கச் செய்துவந்தார்கள். அத்தகைய தமிழ் மணமானது மிலேச்சர்களாம் ஆரியர்கள் இத்தேசம்வந்து அறஹத்துக் களாம் பௌத்த பிராமணர்களைப்போல் பொய்வேஷமிட்டு பொய்ப் போதங் களைக் கூறி பொய்மதங்கள் இயற்றி கல்வியற்றப் பெருங்குடிகளையும் காமிய முற்ற சிற்றரசர்களையும் வசப்படுத்திக்கொண்டு வஞ்சினத்தாலும், சூதினாலும், மித்திர பேதங்களாலும் தன்மநெறியில் நின்ற பௌத்தவரசர்களை அழித்ததினால் வித்துவர் சிறப்பழிந்தும், பௌத்தசங்கங்கள் அழிந்ததினால் கலைநூற்களின் விருத்திகளும், சிறுவர்களின் கல்விவிருத்திகளும் மற்றும் தமிழின் விருத்தி நாசமடைந்ததுடன் சத்துருக்களால் தன்மநூற்களும், கலை நூற்களும் பாழடைந்து சத்தியதன்ம போதங்களற்று அசத்தியதன்மம் மேலிட்டு மிலேச்சர்களின் செல்வாக்கும் கூட்டமும் பெருகிவிட்டபடியால் இத்தேசத் தோர் தமிழ் பாஷையைக் கற்பதற்கே ஏதுவில்லாமல் பாழடைந்துவிட்டார்கள். மிலேச்சர்களின் செல்வாக்கிலும், அவர்களுக்குள் அடங்கியவர்களின் ஆளுகை யிலும் நாளது வரையிலிருக்குமாயின் தமிழென்னும் சப்தமும், தற்காலமுள்ள தன்ம நூற்களுமற்று தமிழ்மணமில்லா பொய்ப்புராணங்களே மலிந்து மெய்நூற்கள் முற்றுஞ் சீரழிந்திருக்கும்.

இதன்மத்தியில் உலகோபகாரிகளாகும் சமணமுனிவர்களின் புண்ணியவசத்தால் ஆங்கிலேயர் இவ்விடம்வந்து தோன்றி கனந்தங்கிய எலீ சென்னும் துரைமகனால் தமிழ்ச்சங்கமொன்று ஏற்படுத்தி சிதலுண்டு கெட சமீபித்திருந்த ஓலைச் சுவடிகள் யாவையுங் தங்களிடங் கிடைத்த வரையில் அச்சிட்டு வெளிக்குக்கொண்டுவந்து மற்றுமுள்ள நூற்களையும் வெளிக்குக் கொண்டுவருவதற்குள் சென்றுவிட்டபடியால் அச்சங்கத்துள் பௌத்த சத்துருக்கள் நுழைந்து சங்கமேநடவாத ஏதுக்களைச்செய்துவிட்டார்கள். அதன்பின் புரோடிஸ்ட்டன்ட் மிஷநெரிதுரைமக்கள் வந்துசேர்ந்து நாலாபக்கங்களிலும் கலாசாலைகளை அமைத்து கல்வி விருத்தி செய்யுங்கால் தமிழ் விருத்தி கிஞ்சித்துப் பரவி அதன் மணமின்றி தமிழென்னும் சப்த மட்டிலும் ஒலித்துவருகின்றது. பிரிட்டிஷ் துரைத்தனமட்டிலும் இவ்விட மாட்சிபெறாவிடில் தமிழென்னு ஒலியுங் காணாது புத்தரது பெயரும், அவரது சிறப்பும் மறைந்ததுபோல தமிழென்னும் பெயரும், அதன் சிறப்பும் மறைந்தேபோயிருக்குமென்பது திண்ணம்.

மற்றும் முன்போன்ற தமிழ்மணமும் அதன் சிறப்பும் பெருக வேண்டுமாயின் அதனை ஈன்றவர்களும் வளர்த்தவர்களுமாகிய பௌத்த சங்கசமணமுநிவர்களே பின்னும் தோற்றுவார்களாயின் அன்றே தமிழ்மணமும் வீசுவதுடன் அதன் சிறப்பும் பெருக்கமுறுமென்பதற்கு ஆட்சேபமில்லை.

4:24, நவம்பர் 23, 1910

16. திராவிடமும் தமிழும்

வினா : ஐயா தமது பத்திரிகையில் திராவிடம் என்பது தமிழுக்குரியப் பெயரென்று வரைந்து வருகின்றீர். மற்றும் சிலர் திராவிடம் என்பது திரமிடமென்றும் நான்கு பாஷைகளைச் சேர்ந்தப் பொதுப்பெயரென்றுங் கூறுகின்றார்கள்.

வீ. கோவிந்துசாமி, மயிலை

விடை : அதாவது, திராவிடமென்னும் மொழியின் பொருளென்ன. திராவிடமென்னும் மொழி திரமிடமென எவ்வாறு மறுவியது. அதற்கு விதியும் பூர்வ அநுபவச் செய்யுளும் உண்டாவென உசாவியிருப்பீரேல் அவர்கள் கூறும் மொழி தங்களுக்குத் தெள்ளறத் தெளிந்துவிடும். அங்ஙனம் அவர்களைத் தாம் வினவாது எம்மெய் வினவியுள்ளபடியால் அதனந்தரார்த்தத்தை உணர்ந்தவளவில் உணர்த்துகின்றேன்.

அதாவது, தென்மொழியிலுள்ள அமுதவெழுத்திற்கு தமிழென்றும், நஞ்செழுத்தாம் விடவெழுத்திற்குத் திராவிடமென்றும் வகுத்துள்ள அநுபவத்தைக்கொண்டும் சிங்கள நாட்டாரும், தெலுங்கு நாட்டாரும், தமிழர்களைத் திராவிடர்களென்று கூறும் வாய்மொழியாலும், அடியிற் குறித்துள்ள தாயுமானவர் பாடலின் உட்கருத்தாலும் தமிழ்பாஷைக்கே திராவிடமென்னும் மறுபெயர் உண்டென்பதை எளிதில் அறிந்துக்கொள்ளலாம்.

தாயுமானவர் பாடல்

கல்லாதபேர்களே நல்லவர்கள் நல்லவர்கள் கற்றுமறிவில்லாதவென்
கன்மத்தையென்சொல்வேன் மதியையென் சொல்லுவேன் கைவல்லிய

ஞானநீதி

நல்லோருரைக்கிலோகன்மமுக்கியமென்று நாட்டுவேன் கன்மமொருவா
நாட்டினாலோபழய ஞானமுக்கியமென்று நவிலுவேன் வடமொழியிலே
வல்லானொருத்தன் வரவுந்திராவிடத்திலே வந்ததா விவகரிப்பேன்
வல்லதமிழறிஞர்வரி னங்கனேவடமொழியின் வசனங்கள் சிறிதுகல்வேன்

எனும் பாடலால் திராவிடத்தையே தமிழென்றும், தமிழையே திராவிடமென்றும் மடக்கிக் கூறியுள்ளதைக் காண்க.

4:26, டிசம்பர் 7, 1910

17. மை எனும் மகர ஐகாரமும் மெய் எனும் மகர ஏகாரமும்

யகரவொற்றுங்கூடி வரக்கூடிய மொழிபேதங்களின் அந்தரார்த்தங்கள் யாவும் புத்தன்மத்தைத் தழுவிய சமணமுநிவர்களுக்கும், பௌத்த வித்வான் களுக்கும் விளங்குமேயன்றி ஏனைய மதசார்பினர்களுக்கு விளங்கமாட்டாது.

காரணமோவென்னில், ஏனைய மதத்தோர் யாவரும் தங்களுக்கு அப்புறப்பட்ட ஓர் பொருளுண்டென்றும், அதைக்கொண்டே தாங்கள் சுகம்பெறவேண்டுமென்றுங் கூறுவார்கள்.

பௌத்தர்களோ அங்ஙனமன்று. உடலுயிர் பெற்ற தங்களுக்குள்ளாகவே சகல துக்கமும் சகல சுகமும் உண்டென்றும் தங்களைக்கொண்டே தங்களை சீர்திருத்திக்கொள்ளல் வேண்டுமென்றும் சகல துக்கத்திற்கும் ஆதாரந் தாங்களே, சகல சுகத்திற்கும் ஆதாரந் தாங்களேயன்றி தங்களுக்கு அப்புறப்பட்டப் பொருள் வேறில்லையென்று உணர்ந்து பொய்யை அகற்றி மெய்யைக் கண்டடைய வேண்டிய செயலில் விளங்குவார்கள்.

ஆதிபகவனாகிய புத்தபிரான் அத்தகைய மெய்யைக்கண்டே நித்தியானந்த பரிநிருவாணம் பெற்றார். தன்னிற்றானே தெளிந்து பூரணதிசை

அடைந்தபின்னர் தன்மெய்ப்போல் ஏனைய மக்களும் அச்சுகத்தை அடைந்து நித்திய வாழ்க்கையைப் பெறுவான்வேண்டி சகட பாஷையாம் சமஸ்கிருதத் தையும், திராவிட பாஷையாம் தமிழினையும் ஏற்படுத்தியுள்ளார். அஃதெவ்வா றென்னில், உடலுயிரென்னும் உண்மெய், புறமெய் இவற்றினை கண்டடை வதற்கே வரிவடிவாம் அட்சரங்களை வகுத்து உயிரெழுத்தென்றும், மெய்யெழுத் தென்றும், ஆவியென்றும், உடலென்றும், நஞ்செழுத்தென்றும், அமுதெழுத் தென்றும், இவ்வெழுத்துக்களுக்கெல்லாம் ஆதி எழுத்தாயது அகார பேருயிரென்றும் வகுத்து அவ்வட்சரங்களை வாசித்துணர்ந்து கலைநூல் தெரிந்தபின்னர் தனதுடலுயிரினது பாகுபாடுகளைக் கண்டு தனக்குள்ள நஞ்சாகும் இராகத் துவேஷ மோகங்களை சேரவிடாதகற்றி தனக்குள்ள அமுதாகும் சாந்தத்தைப் பெருக்கி அகராட்சரமாகியப் பேருயிராம் அண்ணாவினால் உண்ணாவின் அமுதுண்டு அழியா பாக்கியத்தனாகி புறமெய் அகற்றி உண்மெய்யில் நிலைத்து நன்மெயாம் தன்மகாய ததாகதனாகின்றான்.

இராகத் துவேஷ மோகங்க ளுடைத்தாய தேகமே தின்மெ யுடைத்தாய தென்றும், சாந்தம், அன்பு, ஈகைக ளுடைத்தாய தேகமே நன்மெயுடைத் தாயதென்றுங் கூறப்படும். இத்தகைய செயல்கொண்டே தெய்வப்பெயர் வகுப்பில் "கடவு, டே, முநி, நன்மெய்ப்பே" ரென வகுத்துள்ளார்கள். உயிர்மெய் யெழுத்தினது ஆதாரங்களைக்கொண்டே உடலுயிரின் பாகுபாடுகளையும் அதனதன் குணாகுணச் செயல்களையும் ஆய்ந்து நன்மெய்க் கடைபிடிப்பதற்கே.

சீவப்பிராணிகளை துன்பஞ்செய்யாமெய், எக்காலும் பொய்சொல்லா மெய், அன்னியர்பொருளை அபகரிக்காமெய், அன்னியரது தாரத்தை இச்சிக்காமெய், மயக்கமுள்ள மதுபானங்களை யருந்தாமெய், ஆகிய சுத்த தேகிகளாக வாழும்படி வகுத்து வைத்திருக்கின்றார்கள். சுத்ததேகியாய வாழ்க்கைப்பெயரே நன்மெய்ப்பெய ரென்னப்படும்.

இவற்றுள் அட்சரமெய்யையும், உடலையும், அட்சர உயிரையும், உண்மெய்யையும், அட்சர எண்பகுப்பையும், எண்குணத்தையும், அட்சரவுடலுயிர் முப்பதினையும், உடலுயிரினது குணம் முப்பத்திரண்டையும், அட்சர புணர்ச்சி விகாரங்களையும், உடலுயிர் புணர்ச்சியின் கேடுபாடு களையும், அகரவட்சர பேருயிரின் குறிப்பையும், நாவினது நால்வாய்மெய் சிறப்பினையும் ஆய்ந்துணருவோருக்கே உண்மெய் புறமெய் என்பதின் விகற்பங்களும், நன்மெய் தீமெயென்னும் பேதாபேதங்களும் நன்குவிளங்கும்.

புத்த தன்ம இலக்கியங்களையும், புத்த தன்ம இலக்கணங்களையும் உணர்ந்தவர்களுக்கே இவ்வட்சரபேதங்கள் நன்குவிளங்குமேயன்றி ஏனை யோருக்கு விளங்காவாம்.

நல்-நோக்கம் - நன்னோக்கம் என்பது நற்காட்சியைப் பொருந்தியதாகும்.

நல்-முயற்சி - நன்முயற்சி என்பது நல்லூக்கத்தைப் பொருந்தியதாகும்.

நல்-நூல் - நன்னூலென்பது நல்லறிவை
விருத்திசெய்யுங் கலைநூலில் ஒன்றாகும்.

நல்-மெய் - நன்மெ யென்பது களங்கமற்ற உண்மெயாம் தன்மகாயங்களில் ஒன்றதாகும்.

இத்தகைய சிறந்த ஞானார்த்தத்தைக் கொடுக்கக்கூடிய பகுபத மொழியை நன்மையென வரைவதாயின், நல்லஞ்சனம், நல்கருப்பு, நல்லாடு எனும் பொருளைத்தருமெயன்றி "கடவுடே முநிநன்மெய் ப்பே" ரென்னும் ஞானார்த்தந் தருமோ ஒருக்காலுந் தாராவாம்.

இத்தியாதி மொழிபேதங்களுக்குள்ளும் "பொம்மை" யென வழங்கு மொழிக்கு இலக்கணந் தெரிந்துகொள்ளுவார்களாயின் நன்மெயென்னு மொழியினது இலக்கணம் நன்கு விளங்கிப் போம்.

அதாவது, "பொம்மெய்" என்பதற்கு இலக்கணம் பொய்மெயென்று கூறப்படும். அதாவது மண்ணினாற் செய்த பொய் தேகம், மரத்தினாற் செய்த பொய்தேக மென்பதாகும். இத்தனையே பொம்மை, பொம்மையென

மெய்கெட் எழுதி பொய்தேகமென்னும் பொருளை ஏற்றுவருகின்றார்கள். இதுபோலவே நன்மெயென்னும் தெய்வப்பெயரை மறந்து நன்மையென்னும் ஏவற்பொருளை ஏற்று ஏவல் மொழியை வழங்கி ஏவலட்சரத்தை வரைந்து வருகின்றார்கள் . இத்தகையாய் பொருள்கெட்டு வழங்குமொழிகளை பூர்வத்தினின்று புலவர்கள் யாவரும் வரைந்து வருகின்றார்கள். அவற்றை தற்காலம் மாற்றப் போமோவென்னில் புத்தன்மமாம் மெய்யறங்கெட வழங்கு மொழிகள் யாவையுந் திருத்தி நல்லறத்தில் ஒழுகவேண்டுமென்பதே நமது கருத்தாம்.

ஈதன்றி புறப்பொருட்காட்சி எம்மட்டுண்டோ அம்மட்டகற்றி அகப்பொருட் காட்சியாம் உண்மெயில் அன்பை வளர்த்தி நன்மெய்க் கடை பிடிப்பான் வேண்டி நாதன் வகுத்துள்ள தமிழினது மெய்ப்பாட்டியலே போதுஞ் சான்றாம்.

4:29, டிசம்பர் 28, 1910

18. அகஸ்தியர், நாயனார், ஔவையார்

வினா : அகஸ்தியர், நாயனார், ஔவையார் இவர்கள் மூவரும் எக்கூட்டத்தைச் சார்ந்தவர்கள் நூலாதாரத்துடன் விளக்கி அடியேனை ஆதரிக்க வேண்டுகிறேன்.

ஏ. நாராயணசாமி, ஓரத்தூர்

விடை : அகஸ்தியர், நாயனார், ஔவையார் இம்மூவரும் பௌத்த தன்மத்தைச்சார்ந்த திராவிட குலத்தவர்களும் சாக்கைய வம்மிஷ வரிசையோர்களுமேயாம்.

இதற்குப் பகரமாய் வானசோதிகளின் கணிதங்களைக்கொண்டே வருங்காலம், போங்காலங்களை அறிந்து சொல்லக்கூடிய சாக்கையர், வள்ளுவர், நிமித்தகரென்னும் வம்மிஷ வரிசையிற் தோன்றிய புத்தபிரானென்னும் அவலோகிதர் பால் திராவிடமென்னுந் தமிழ்பாஷையை அகஸ்தியர் கற்று தென்னாடெங்கும் பரவச்செய்திருக்கின்றார்.

வீரசோழியம்

ஆயுங்குணத்தவலோகிதன் பக்கலகத்தியன்கேட்
டேயும்புவனிக் கியம்பிய தண்டமிழ்ங்குரைக்க.

பதஞ்சலிமா முனிவர்

பாருங்கீர்திசையிலையர் சட்டமுநி பானுமாமலையிலாகினார்
பன்னதென்றிசையிலே யிருந்து தமிழ் பாஷையோதின னகத்தியன்.

அவலோகிதரென்னும் புத்தபிரானிடம் தமிழினைக் கற்று தென்னாடெங்கும் அத்தமிழினைப் பரவச்செய்த அகஸ்த்தியர் தான் இயற்றி யுள்ள தமிழ் நூற்கள் யாவற்றிற்கும் காப்பாக புத்தபிரானையே வினாய கரென்றும், கணநாயகரென்றும், திவாகரரென்றும் சிந்தித்திருக்கின்றார்.

அகஸ்தியர் பரிபாஷைத்திரட்டு

காப்பு

பரமஞானோதயத்துப் பரஞ்சுட குலகுக் கெல்லாந்
திரமதா யுதித்தஞான திவாகரன் திருநாள் போற்றி
வரமதாம் வகாரயோக மறைப்புநீற் பாடையெல்லாம்
முருகமழ் தமிழாற் செய்து முடிக்கும் மொழியான் காப்பே.

என ஞான்திவாகரராம் புத்தபிரானையே காப்புக்கு முன்னெடுக்குங் கடவுளாக சிந்தித்து தனது நூலை முடித்திருக்கின்றார்.

திருவள்ளுவநாயனார்

தானியற்றிய முப்பாலாகும் திரிக்குறளை வரையும் முகப்பில் கடவுள் வாழ்த்து காப்பாம் பத்துபாடலிலும் புத்தபிரானையே சிந்தித்திருக்கின்றார்.

பகவனென்னும் பெயரை சிலர் பொதுப்பெயரெனக் கூறுவாறும் உண்டு. உலகெங்குமுள்ள மக்களின் அஞ்ஞான இருளை அகற்றி மெஞ்ஞான முதயமுறச் செய்தவர் புத்தர் ஒருவரேயன்றி வேறொரு ருவரில்லாததாலும், அப்பகவனென்னும்

பெயரை புத்தசங்க சமணமுநிவர்களே அவருக்களித்துள்ளதினாலும், சமணமுநிவருள் சித்திபெற்ற சித்தர்களே அவரை பகவன் என்று சிந்தித்துள்ள படியாலும் நாயனார் திரிக்குறள் காப்பில் கூவுளாக சிந்தித்துள்ள பகவனென்னு மொழி புத்தபிரானைக்குறித்த மொழியேயாம்.

பின்கலை நிகண்டு

பகவனே யீசன் மாயோன் பங்கயன் சினனே புத்தன்
நீரினிற் பூவில் வானில் நினைந்துழி யொதுங்குகின்ற
சாரண ரெண்மராவர் சமணரிற் சித்திபெற்றோர்.

இத்தகைய சமணரிற் சித்திபெற்ற சித்தர்களும் தங்களது சற்குருவை எவ்வகையால் சிந்தித்துள்ளார்களென்னில்,

இடைகாட்டுசித்தர்

ஆதிபகவனையே பகவே அன்பி நினைப்பாயேல்
சோதிபரகதிதான் பகவே சொந்தமதாகாதோ.

இத்தகைய ஆதாரங்களே நாயனார்க் கூறியுள்ள "அகரமுதல வெழுத்தெல்லாமாதி, பகவன்முதற்றே யுல" கென சிந்தித்திருக்கின்றார்.

அதன் கருத்தோவெனில் அகரமாகிய எழுத்து சகல எழுத்துக்களுக்கும் ஆதியாயிருந்து மக்களின் அறிவை விளக்குவதுபோல் உலகத்தில் தோன்றிய மநுகுலத்தில் மூவாமுதல்வனெனத் தோன்றி உலகெங்குமுள்ள மக்கள் யாவருக்கும் ஞானச்சுடர் விளக்கேற்றி சீர்திருத்தம் பெறச் செய்ததுமன்றி முத்திபேற்றிற்கும் முதல் வழிகாட்டியாக விளங்கியதுகண்டு புத்தபிரானையே ஆதி பகவனென சிந்தித்திருக்கின்றார்.

ஔவை என்னும் அம்பிகாதேவியோ எனின் ஓரரசபுத்திரியாயிருந்தும் தாய்மாமன்கையால் கழுத்தில் பொட்டுக்கட்டிக்கொண்டு பிக்குணிகள் வாழும் இஸ்திரீகள் சங்கத்திற் சேர்ந்து புத்தபிரானாம் அருகனது ஞானசாதன உருவம்போல் ஓர் விக்கிரகஞ்செய்து தனது முடியில் தரித்துக்கொண்டு ஞானசாதனம் முதிர்ந்தபின்னர் வேம்புமரமென்னும் பூகமரத்தடியில் வீற்று உலகமக்களுக்கு அறநெறி விளக்கி அரசர்கள் முதல் குடிகள் வரை அறச்செல்வி என்றும், அம்மையென்றும் பௌத்தர்கள் கொண்டாடப்பெற்றவள் நமது ஞானத்தாய் என்னும் ஔவையேயாகும்.

பின்கலை நிகண்டு

மரகதவல்லிபூசு மரநிழ லுற்றவஞ்சி
பரமசுந்தரியியக்கி பகவதி யம்மையெங்க
ளருகனை முடிதரித்தா ளம்பிகை யறத்தின் செல்வி
தருமதேவதை பேரம்பா லிகையென்றுஞ் சாற்றலாமே.

சூளாமணி

கொவ்வையந் துவரிதழ்க் கோலவாயவட்
கிவ்வகை யணியென கூறியீண்டுநும்
அவ்வைதன் கோயில்புக் கடிசிலுண்கென
மவ்வலங் குழலியை மன்னனேவினான்.

இத்தகைய புத்தசங்கத்தைச்சார்ந்த சமணமுநிவர்களும், பௌத்த உபாசகர்களும் அரசமரத்தடியில் வீற்று ஞானோதயம்பெற்ற சித்தார்த்த சக்கிரவர்த்தியை உலகநாதனென்றும், அறவாழியானென்றும், புத்தரென்றும், அருகனென்றும், செல்வனென்றும், ஐயனாரென்றும், தருமதேவன் என்றும், பகவன் என்றும், வாலறிவனென்றுங் கொண்டாடியதுபோல்;

புத்தரது போதனையையும், அவருருவத்தையும் சிரசிற்றாங்கி வேப்பமரத்தடியில் வீற்று ஞானோதயம் பெற்ற அம்பிகாதேவியை உலகநாயகியென்றும், உலகமாதாவென்றும், அறச்செல்வி என்றும், ஔவை என்றும், அருகி என்றும், அம்மை என்றும், தருமதேவதை என்றும், வாலி என்றும், பகவதி என்றுங் கொண்டாடி வந்தார்கள்.

இத்தகைய சரித்திர ஆதாரங்களையும், பெயர்களின் ஆதாரங்களையும், அநுபவ ஆதாரங்களையும் கொண்டே அகஸ்தியர், நாயனார், அவ்வை

இம்மூவரும் திராவிட குலத்தைச்சார்ந்த பௌத்தர்கள் என்றே தெரிந்துக் கொள்ளுவீராக அவலோகீசனென்றும், அவலோகிதரென்றும் பெயர் பெற்ற புத்தபிரான்பால் அகஸ்தியர் தமிழ்கற்று தென்னாடெங்கும் சங்கங்களை ஸ்தாபித்து சத்தியதன்மத்தைப் பரவச்செய்தார் என்பதற்கு பூர்வ இலக்கண நூலாம் விரசோழியமும் ஞானநூலாம் பதஞ்சலி ஞானமுமே போதுஞ் சான்றாம்.

4:30, சனவரி 4, 1911

19. தேசபாஷையை சிறுவர்களுக்கு ஏன் கற்பிப்பதில்லை

தேசபாஷையாம் திராவிடம் ஒன்றை எடுத்துக்கொள்ளுவோம் இப் பாஷையானது இந்துதேசம் எங்ஙணும் பரவியிருந்தகாலத்தில் பூமியினது குணாகுணங்களை ஐந்துபாகமாகப் பிரித்து அவற்றின் விளைவுகளையும், அதனா லுண்டாம் பயன்களையும், அந்தந்த பூமிகளை ஆளும் அரசர்களையும், அவரவர்கள் பெயர்களையும், அந்தந்த பூமியில் வாழுங் குடிகளின் செயல்களையும், திராவிடபாஷையில் தெள்ளற விளக்கி அனந்த நூற்களை வரைந்து வைத்திருக்கின்றார்கள்.

அத்தகைய நூற்களை தற்கால சிறுவர்களுக்குத் கற்பித்துவருவதாயின் வித்தை புத்தி ஈகை சன்மார்க்கம் இவைகள் பெருகுவதுடன் குரு விசுவாசம், மாதுரு பிதுரு விசுவாசம், இராஜவிசுவாச முதலியவைகள் நிலைத்து தாங்கள் சுகச்சீர் பெருகுவதுடன் தங்களை அடுத்தோரையும் சுகச்சீர் பெறச் செய்விப்பார்கள். அத்தகைய நூற்களை சிறுவர்கள்கையில் எடுக்கவே கூடாமற் செய்துவிட்டபடியால் சிறுவர்கள் ஆங்கிலபாஷையை அனந்தமாக கற்றிருப் பினும் சுயபாஷையினதுச் செயலும் அதன் பயனுங் குறைந்துபோயிற்று. அத்தகைய நூற்களை ஆங்கில வித்வான்களுக்கு விளக்கி கலாசாலைகளில் கற்பிப்பதாயின் தற்காலம் நூதனமாக ஏற்படுத்திக் கொண்ட சாதி வித்தியாசங்களும், மதக்கடை வியாபாரங்களும் இராஜாங்கத்தோருக்கு விளங்குவதுடன் சிறுவர்களும் விவேகவிருத்திபெற்று சாதித்தலைவர்களையும் சமயதலைவர் களையும் மதியாமற் போய்விடுவார்கள். பூர்வ பௌத்ததன்மத்தின் சிறப்புகளும் விளங்கிப்போமென்னுங் கருத்தினால் நூதன சாதித்தலைவர்களும், நூதன சமயத்தலைவர்களும் பூர்வ திராவிட நூற்களை கலாசாலைகளிற் பரவ விடாமலே செய்துவிட்டார்கள்.

தற்காலம் அச்சிட்டு வெளிவந்திருக்கும் திராவிடநூற்களும் ஆங்கிலேய ஆராய்ச்சிப் புருஷரால் வெளிவந்துள்ளதேயன்றி வேறன்று. பூர்வநூற்களின் ஆக்கியோன்கள் பெயர்கள் யாவும் விகுதியாகவிருக்குமேயன்றி பகுதியாக இருக்கமாட்டாது.

நத்தத்தனார், சாத்தனார், கீரனார், சோழனாரென்னுந் தொடர்மொழிகள் அற்றிருக்குமேயன்றி நத்தவையங்கார், சாத்தநாயுடு, கீரமுதலியார், சோழ செட்டியார் என்னுந் தொடர்மொழிகள் யாதொன்றுங் கிடையாது. அத்தகைய நூற்களையும் ஆக்கியோன் பெயர்களையும் காணக்கூடிய சிறுவர்களும் இராஜாங்கத்தோரும் பூர்வத்திலில்லாத் தொடர்மொழிகள் இப்போது தோன்றியுள்ளதால் இஃது நூதனசாதித்தொடர் மொழிகளென்றே தெரிந்துக்கொள்ளுவார்களென்னும் பீதியால் பூர்வ திராவிட நூற்கள் யாவையும் கலாசாலைகளிற் கொண்டுவரக்கூடாதென்னும் முயற்சியில் இருக்கின்றார்கள். ஆதலின் தேசபாஷையை தேசசிறுவர்களுக்கு விளக்காமலும் அதன் பயனை உணராமலும் போய்விடுகின்றார்கள்.

திராவிடமென்றால் நான்குபாஷைக்குரியப் பொதுப்பெயரென அவற்றை மாறுபடுத்திவிட்டார்கள். காரணம்: அதனந்தரார்த்தம் அறியாமலேயாம். மகட பாஷையாம் பாலிபாஷையை மூலமாகக்கெண்டு புத்தபிரானால் சகடபாஷையாம் சமஸ்கிருதத்தையும், திராவிடபாஷையாம் தமிழையும் அக்கை தங்கையர்போலேற்படுத்தி இந்தியதேயமெங்கும் பரவச்செய்துவந்ததினால் வடதேசம் எங்கணுந் தமிழையே திராவிடமென்றும், இலங்காதீவம் எங்கணுந்

தமிழையே திராவிடமென்றும் வழங்கிவருவது அநுபவக் காட்சியாயிருக்க நாலு பாஷைக்குமே திரமிடம், திரமிடம் என்னும் பெயருண்டெனக் கூறுவாராயின் பூர்வ பதிநெட்டுபாஷைக்கு எப்பெயர் கூறுவரோ அறியேம். மகட பாஷையை ஆதாரமாகக்கொண்டு தோன்றியது ஒன்று சகடபாஷையும் ஒன்று திராவிடபாஷையுமேயாம். புத்தசங்கங்கள் தோரும் வட்டமிட்டிருந்த படியால் சகடபாஷையென்றும், நஞ்செழுத் தமைந்துள்ள படியால் தீராவிட பாஷை, திராவிடபாஷையென்றும் வழங்கிவந்தார்கள். இதன்றி செய்யுட்களில் அரம்வைத்துப் பாடிவிட்டான், நஞ்சுவைத்துப் பாடிவிட்டானென்னும் மொழிகளுக்கியல் அட்சரங்களிலும் நஞ்செழுத்துக்கள் சிலதும், அமுதெழுத்துக்கள் சிலதும் உண்டென்பதை நாளது வரையிற் காணலாம். நஞ் செழுத்தின் செயலைக்கொண்டு திராவிடமென்றும், அமுதெழுத்தின் செயலைக்கொண்டு தமிழென்றும் வழங்கிவந்தார்கள். இவ்விரு பெயருக்குங் காரணமுண்டு. இதனந்தரார்த்தம் அறியா பராயர்கள் அதனையும் வீணே மாறுபடுத்தி தமிழினது இனிதையும், திராவிடத்தினது வலிதையுங் கெடுத்தே வைத்திருக்கின்றார்கள். இவற்றை நாளுக்கு நாள் உணர்ந்துவரும் நமது கருணைதங்கிய ராஜாங்கத்தார் கலாசாலைகளில் வாசிக்கும் சிறுவர்களுக்கு மதப்படிப்பைக் கற்பிக்காமல் நீதியின்படிப்பைக் கற்பிப்பதாயின் பூர்வதமிழ் நூற்கள் யாவுந்தானே வெளிவரும். அவ்வகை வெளிவந்து சிறுவர்கள் வாசிப்பார்களாயின் வித்தை, புத்தி, ஈகை, சன்மார்க்கம் நிறைந்து தங்களே சுகச்சீர் பெறுவார்கள்.

5:39, மார்ச் 6, 1912

20. திராவிடமும் திராவிடரும்

வினா: ஐயா, எமதாபீசிலுள்ள ஒருவரிடம் பேசிக்கொண்டிருக்குங்கால் திராவிடர்களென்பது தமிழருக்குரியப் பெயரல்லவென்றும், அஃது கன்னடர், மராஷ்டகர், ஆந்திரர்க்குரியப் பொதுப்பெயரென்றும், திரமிடமென்பது திராவிடமென வழங்குகிறார்களென்றுங் கூறினார். அதற்கு ஏதேனும் விதியுண்டோவென வினாவினேன். அதற்கென்னவிதி யென்றார். திராவிடமென்னு மொழிக்கு மூலம் எவையென்றேன். அதற்கு மூலமென்ன வென்றார். அஃது காரியமொழியா, காரணமொழியா என்றேன். அதோர் காரணமொழியே யாகுமென்றார். யாது காரணமென்றேன், ஏதோர் உத்திரமுங் கூறாமல் மௌனத்திருந்துவிட்டார். எமக்குமது விளங்காமல் திகைத்திருக்கின்றேன்.

கோ. பார்த்தசாரதி. திரிசுரபுரம்,

விடை: வடமொழி தென்மொழியென்னும் இருவகுப்பில் தென்மொழி யாம் திராவிடம், தமிழ் என்னும் இருமொழிகளும் ஒருபாஷைக்குரிய பெயர்களேயாம். அம்மொழிகள் தோன்றியவற்றிற்கு மூலகாரணங்கள் யாதெனில், அவ்வட்சரங்களுள் நஞ்செழுத்தாம் விடவட்சரங்களும், அமுதெழுத்தாம் இனியவட்சரங்களுள்ளது கண்டு நஞ்செழுத்தால் தீராவிட மென்றும், அமுதெழுத்தால் தமிழென்றும் இருபெயர்களுண்டாயிற்று.

இஃது யாப்பிலக்கணங்கற்ற பெரியோர்களுக்கே நன்குவிளங்குமன்றி ஏனையோர் கெவணும் விளங்காவாம். திராவிட மென்னுந் தமிழை எடுத்தாளும்போதே வாசகநடை மிகவின்றி செய்யுள்நடையே பெருகியபடியால் எடுக்குஞ் செய்யுள் இனிதுமுடியுமாறு மொழி முதலாய் அந்தெழுத்துள் அமுது பொருந்தி மங்கலமிசையும் உளவறிந்து தாங்களும் பாடியுள்ளதன்றி ஏனையோரும் அப்பத்துப் பொருத்தங்களை இசைந்து பாடும் வழிகளையும் வரைந்துள்ளார்கள். அவைகளமைக்கவேண்டிய விதி: "மங்கலப் பொருத்தமே கங்கைமலரிலங், கார்புயல் பொன்மணி கடல்சொல் கரிபரி, சீர்புகழெழுத்தலர் திங்கடினகரன், றேர்வய லமுதந் திருவுலகாரண, நீர்பிறவருமுதனிலைச் சொல்லியல்பே" என்னும் மொழிமுதற்கொண்டு அவற்றுள் பத்து பொருத்தங்கள் அமையப் பாடவேண்டுமென்பது விதி.

"மங்கலஞ்சொல்லெழுத்தெண்ணியதானம் வருமிருபாற், பொங்கிய வுண்டிவருணம் பகுத்திடி நாட்பொருத்தந், தங்கியநாட்கதி யெண்கணமென்று தமிழ்தெரிந்தோ, ரிங்கிவை பத்து முதல் மொழியாமென் றியம்புவரே" இவ் வகைப் பாடுவதில் அமுதெழுத்து அமைத்துப் பாடவேண்டியதே சிறப்பென்பதுவிதி.

"மதித்த க ச த ந ப மவ்வொடுவவ்வு, முதித்தமைந்த நாற்குற்றியிருந் - துதித்தமுதென், றாதிமொழிக்குந்தசாங்கத் தயலுக்குந், தீதில வேயென்றார் தெரிந்து" என்னுந் தசாங்கத்துள் உண்டி பொருத்தமே அமுதெழுத்துக்களையும் நஞ்செழுத்துக்களையும் விளக்குகின்றபடியால் யாப்பிலக்கணங்கற்ற பெரியோருக்கே நஞ்செழுத்தென்னுந் தீராவிட அட்சரங்களும், அமுதெழுத் தென்னுந் தமிழட்சரங்களுங் கண்டு அப்பாஷைக்குத் திராவிடமென்றும் தமிழென்றும் வழங்கலாயினர்.

தீராவிடமென்னு மொழியே குறுக்கல் விகாரத்தால் திராவிடம் திராவிடமென வழங்கலாயிற்று.

திராவிடமென்பதே தமிழென்பதற்குச் சூத்திர ஆதாரங்கள் இருப்பதுடன் வடநாட்டோரும் சிங்களதேசத்தோருந் தமிழை திராவிடபாஷையென்றும், தமிழ் பாஷைக்குரியோரை திராவிடர்களென்றும் வழங்கி வருவதை நாளது வரையிற் காணலாம்.

இத்தேசப்பெயரையும் வேதாகம புராணங்களையும் கடவுளர்களையும் புறட்ட ஆரம்பித்துக் கொண்டவர்கள் திராவிடமென்னும் பாஷையையும் புறட்டப்பார்க்கின்றார்கள். அப்புறட்டு தமிழினுக்குரியோர்முன் பிறழாவாம்.

6:26, டிசம்பர் 4, 1912

21. தமிழ் கவிகள்

வினா: நமது தமிழ் நாட்டுள் வழங்கும் ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, விஸ்தாரகவி எனக் கூறுகின்றார்களே அவ்வகைக் கவிபாடுவோர் தற்காலம் இருக்கின்றார்களா, அவர்கள் யார், எவ்வகையாகப் பாடுவோருக்கு அப்பெயர்கள் பொருந்தும் என்பது அடியேனுக்கு விளங்காதிருத்தலால் அவற்றை நமதரிய தமிழனில் விளக்கி ஆட்கொள்ளும்படி வேண்டுகிறேன்.

தி.நா. பாலகிருஷ்ணன். மதுரை,

விடை: தற்காலமுள்ள விவேகிகள் யாவரும் தமிழையும் அதன் சுவையையும் ஓம்பாது விடுத்து ஆங்கில பாஷையையே பெரும்பாலும் அனுசரிக்க முயன்றுவிட்டதினால் தமிழ் பாஷையினது மணமும் செய்யுட்களின் சிறப்பும் மறைந்து இன்னார்தான் ஆசுகவி, இன்னார்தான் மதுரகவி, இன்னார் தான் சித்திரகவி, இன்னார்தான் வித்தாரக்கவியெனக் குறிப்பிட்டுக் கூறுவதற்கு ஆளில்லாமற் போய்விட்டது. இப்புலமெயோர் சிறப்புக்கள் யாவும் புத்ததன்மம் இத்தேசத்திற் பரவியிருந்தவரையில் சிறப்புற்றோங்கி, அஃது மறைந்தபின்னர் வித்வ அமிசையோர் சிறப்பும் மறைந்தே நிற்கின்றது.

இவற்றுள் கற்றுணர்ந்த பெரியோரை வடமொழியில் வித்வான்கள் என்றும், தென்மொழியில் புலமெயோர் என்றும் வழங்கிவந்தார்கள். அவர்களுள் ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவியென்னும் நான்கினையும் பாடவல்லவரை "கவி" என்றும், பொருள்விளங்காமொழிகளை பொருள் விளங்க செவ்வியநடையில் விவரித்துப்பாடுவோரை "கமகன்" என்றும், தொடுத்த காரிய காரணங்களை உபமான உபமேயங்களால் விளக்கி எதிரிகளது கொள்கைகளைத் தடுத்து தனது கொள்கையை மேற்கொள்ளபாடுவோரை "வாதி" என்றும், அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கின் விவரங்களையும் தெளிவுற போதித்து வாய்மெயையூட்டி சத்தியதன்மத்தில் நிலைக்கச் செய்வோரை "வாக்கி" என வகுத்திருக்கின்றார்கள்.

இவற்றுள் ஆசுகவிபாடும் விதிகள் யாதெனில்:-எதிரி யொருவன் ஒருபொருளைச் சுட்டிக்காட்டி அதன் செயல் விளங்கப் பாடவேண்டு மென்றவுடன் அதன் குணாகுணப் பொருளை விளக்கி, பாவணி பிறழாது

பாடுவதாகும். மதுரகவி என்பது அமுதெழுத்தூன்றி இன்னிசை மயங்கா சொல்லலங்காரம் பொருளலங்காரம் அமையப் பாடுவதாகும். சித்திரகவி என்பது எழுகூற்றிருக்கை, ஏகபாதம், காதை, கரப்பு, கரந்துறை, கூடசதுக்கம், கோமுத்திரி, சக்கரம், சித்திரப்பா, சுழிகுளம், சருப்பதோயத்திரம், தூகங்கொளல், பாவின் புணர்ச்சி, பாதமயக்கு, மாலைமாற்று, ஒற்றெழுத்தமைந்த ஒருபொருட்பாட்டு, ஓரெழுத்தின் சித்திரப்பா, பலவெழுத்தின் விசித்திரப்பா, விடுகவி விடை இவற்றுள் நன்கு பழகி நடுநிலைவழாது பாடுவதாகும். வித்தாரக்கவியென்பது இயல், இசை, கலிவெண்பா, சிலேடை, தசாங்கம், பன்மணிமாலை, பாசண்டத்துறை, மறம், மாலை, மும்மணிக்கோவை, இவற்றின் பாவணி கெடாது விவரித்துப் பாடுவதாகும்.

இதுவே தமிழினை வளர்த்த தாதாக்களாம் சமணமுநிவர்கள் வகுத்த விதிகளாகும். இவ்விதிகளையறிந்து பாடவல்ல பாணர்கள் இக்காலத்துளரோ இலரோ என் றெம்மை வினவுவதால், யாதுப்பயன். சமணமுநிவர்களது சங்கங்கள் மறைந்தபோதே கவியின் திறங்கண்டு பாடவல்ல பாணர்களும் மறைந்துள்ளார்கள். பௌத்தர்கள் தோன்றியுள்ளபடியால் இனி கவிகளின் விதியறிந்து பாடவல்ல பாணர்களுந் தோன்றுவார்களென்பது திண்ணம்.

இதனை அநுசரித்தே 1862 வருஷம் தோன்றியுள்ள சீட்டுக்கவியை இதனடியில்வரைகின்றேன். அதாவது:- எமது வித்தியாசிரியர் தொண்ட மண்டலம் வல்லகாளத்திநகர் வீ. அயோத்திதாசக் கவிராஜப்பண்டிதர் இயற்றியுள்ள இலக்கணவெண்பாவில் வழுவுளதென புரசைவாக்கத்திலுள்ள பராயசாதி அஷ்டாவதானி ஒருவர் கூற அவற்றை வித்துவான் முன்னிலையில் ஆராயவேண்டுமென்னும் அவாவினால் புரசை ஏகாம்பரபாவலரும், பெத்துநாய்க்கன் பேட்டை டிக்குரூஸ் அண்ணாவியாரும், வீரணன் தோட்டத்தில் ஓர்பந்தலமைத்து வழுகூறிய அஷ்டாவதானியாரையும் மற்றுமுள்ள வித்துவான்களையும் தருவித்தார்கள். அக்கால் வெண்பாவிற்கு வழுகூறிய அஷ்டாவதானியார் வெளிதோன்றாது பதுங்கிவிட்டார். குறித்த காலவரை எதிர்பார்த்தும் வாராது கண்ட வீ அயோத்திதாச கவிராஜப் பண்டிதர், டிக்குரூஸ் அண்ணாவியாரை ஓலையும் எழுத்தாணியும் எடுக்கச்சொல்லி அடியிற்குறிக்கும் கவியைப்பாடியிருக்கின்றார்.

சீட்டுக்கவி

அகரமுத லவ்வெழுத் தொற்றுபதி நெட்டுசுழியம்மூவிகற்சார்புறன்
அறிச்சூடி தன்னைப் படிக்க தெரியாதவர்களரசுகவி சொற்புலவராம்
அட்சரந் தனை யுச்சரிக்க தெரியாதவர்களணிமதுர கவிராயராம்
அபிநயந் திட்டோபி யட்சயம் பழகிலாசேதனர்கள் சித்திரகவியாம்
சுகனமணி மாலைநிலை பேதுளோர் வித்தாரகவிகாய தோழரென்பார்
காணி முந்திரிசெவு டுழக்கழாக்குக் குருணிகல்லநூற் றொருமாவிலே
கணக்கு தெரியாதவர்க ளஷ்டாவதானக்கவிப்புலவராந் திசையினில்
கைதனி லெழுத்தாணியைப் பிடித் தோலையிற்சுரகரென வெழுதவறியார்
துகிலிகையிற்றின்றுன்மை தொட்டெழுதவறிலார்சோடசுபதானிக்களாம்
சொன்னதைச்சொல்ல வகையில்லாத விழுதையர்கடுகளாக கற்றவர்களாம்
தொன்னுதன்னூல்பஞ்ச லட்சணத் திரைகடற்றுரையையறியாத மடையர்
தூயவீ ரருணிக ளோதிய பராயணஞ்செற்பனத்தீலுமறியார்.
புகழ்கீசகம்போ ளெரிப்போதரிக் கவிதை பொழிகின்ற மேகமென்பார்
புலவராம் பலவராம் மலவரா மிவரெலாம் புளுகராங் கனதுஷ்டராம்
புலையரா மிவர்கட்கு புத்திசொல்வோ மிந்த பூதலந் தனிலுயர்ந்தோன்
புகழ்பெறு மயோதியா தாசனன்கோடையிடி பூமியண்டங் கிழியுமே.

எனக் கூறியுள்ளக் கவியே நாற்கவிப்பாடும் வல்லவர் தற்காலம் இல்லை என்பதை விளக்கப்போதுஞ்சான்றாம்.

6:27, டிசம்பர் 11, 1912

22. மணிமேகலை

வினா: ஐயா யான் மணிமேகலையென்னும் புத்தகம் ஒன்று வாங்கி வாசித்து வருகிறேன். அச் செய்யுள் மிகவுங் கருதாலா யுள்ளபடியால் பொருள் சரியாகவும் கோர்வையாகவும் விளங்கவில்லை. அதற்கு எழுதியிருக்கும்

உரையோ இன்ன உரையென்று விளங்குவதற்கு ஆதாரமில்லாமலே விரிந்திருக்கின்றது. மணிமேகலை நூலுக்கு வேறு யாரேனும் உரையெழுதியிருக்கின்றார்களா

பு.க. முனிநாதன். வேலூர்,

விடை: மணிமேகலையென்னும் செய்யுளே சரிவர வெளிவராமல் வரிக்குவரி மாறுதலும் மொழிக்கு மொழி பேதமுற்றும் பூர்வ ஓலைப்பிரிதி களுக்குப் பிரிதி சிதலுண்டும் போய்விட்டபடியால் அவரவர்களுக்குக் கிடைத்த மேறை அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றார்கள். கூடியசீக்கிரம் சுத்தப்பிரிதி வெளியாகும். அப்போது சரித்திரக்கோர்வையைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். மணிமேகலை என்னும் மங்கை சிற்றின்பத்தை வெறுத்து பேரின்பத்தை விரும்பிபுத்த சங்கஞ் சேர்ந்து பிக்குணியாகி ஆதி அறச்செல்வி என்றும், சிந்தாதேவியென்றும், சிந்தாவிளக்கென்றும் வழங்கிய அம்பிகா தேவியாம் அவ்வையின் ஒழுக்கத்தைப் பின்பற்றி தெய்வநிலையடைந்து பரிநிருவாண முற்றப்பின்னர் அவ்வம்மனை இத்தேசத்தோர் தேவியாகக் கொண்டாடி வந்திருக்கின்றார்கள். அவ்வகைக்கொண்டாடிவந்தவற்றை அடியிற்குறித்துள்ளப் பாடலால் காணலாம்.

கம்பருடைய புத்திரர் அம்பிகாபதி என்பவர் பாடியுள்ள செய்யுள்.

காதன்மடந்தையர் கையறுங்காலையு மெய்யகலா
மேதகுநாணு மெலியவன்றோ விழிபோலு நெய்தற்
போதவழ் மென்மலர்ப் புன்னையங்கானல்பொருந்துமிந்த
மாதவிபெற்ற மணிமேகலை நம்மை வாழ்விப்பதே.

என சிந்தித்துள்ள செய்யுள் ஆதாரங்கொண்டு நமது தேசத்தோர் மணிமேகலா தேவியைக் கொண்டாடிவந்ததைக் காணலாம். அவ்வம்மனது கொண்டாட்டம் புத்ததன்மங்கள் மாறுபட்டு புதின மதங்கள் தோன்றிவிட்ட படியால் அம்மன் பெயர் சகலர் நாவிலும் வழங்காமலிருக்கின்றது. அதனால் தங்களுக்கு அப்பெயர் புதினமாகவும் விளங்குகின்றது. இத்தேசத்திற் பிறந்து வளர்ந்து ஜெகத்திற்கே குருவாக விளங்கிய கருணாகரக்கடவுளாம் புத்தருடைய பெயரும் அவருடைய சத்தியதன்மமும் மறைந்து அசத்திய தன்மங்கள் பரவிவிட்டபோது அவரது சங்கத்தினர் பெயர் மறைவதற்கு சான்றும் வேண்டுமோ, இல்லை. அம்மணிமேகலை என்னும் நூலுக்கு வேறொருவர் உரை எழுதியிருப்பார்களென்பதும் எமக்கு விளங்கவில்லை. ஏனென்பீரேல் தமிழ்பாஷையை மிக்கக் கற்றவரும் பௌத்த நூலாராய்ச்சியுள்ளவரும் மகா ஞானியுமாக விளங்கிய சிவப்பிரகாச சுவாமியவர்களே, மணிமேகலையென்னும் நூலிற்கு உரையெழுத எம்மால் இயலுமோவென பயந்துவிட்டிருக்க, தற்கால வித்துவான்கள் அவற்றிற்கு உரையெழுதியுள்ளாரென்பதை சங்கிக்கற்பாலதே. அவற்றுள் புத்ததன்மத்தைச்சார்ந்தக் குடும்பத்திற் பிறந்து வளர்ந்து அத்தன்ம ஒழுக்கத்தைச் சார்ந்துள்ளோர் எழுதினால் அவ்வுரையை சிலகால் ஏற்கப்பாலதன்றி ஏனைய மதத்தோர் எழுதியுள்ள உரையை சற்று சிந்தித்து ஆராயவேண்டியதேயாம். அதாவது தங்கள் புதினமதக்கூற்றை புத்ததன்மத்திற் கூட்டியுங் குறைத்து மிருப்பார்கள். அன்னோர் நூலைக் கண்ணுற்று எம்மை வினாவுவதில் யாதுபயன். சிலகால் அமைதியுறின் சுத்தப்பிரிதி காணலாம்.

சிவப்பிரகாச சுவாமிகள் செய்யுள்

மந்தாகினியணி வேணிப் பிரான் வெங்கை மன்னவநீ
கொந்தராகுழன் மணிமேகலை நூனுட்பங்கொள்வதெங்ஙன்
சிந்தாமணியுந் திருக்கோவையு மெழுதிக்கொளினும்
நந்தா வுரையை யெழுதலெவ்வாறு நவின்றருளே.

6:29, டிசம்பர் 25, 1912

23. பதினெண் சித்தர்கள்

வினா: பதினெண் சித்தர்கள் புத்தருடைய காலத்தில் இருந்தவர்களா அல்லது பௌத்தரைச் சேர்ந்தவர்களா அல்லது ஆரியரின் காலத்திலிருந்து வந்தவர்களா. இவருள் கருவூரார் என்பவர் மோகனம், வசியம், தம்பளம், உச்சாடனம்,

ஆக்றாணம், வித்துவேஷம், பேதனம், மாரணம் என்னும் சித்துக்களை (ந-ம-சி-வ-ய) (ச-ற-ஹ-ண-ப-வ) என்னு மட்சரத்தை மாறுதல் செய்து அனேக சித்துக்கள் செய்ததாகவும் அதையே தற்போது சிலர் கையாண்டு வருவதாகவும் காண்கிறோம். இதன் இரகசியம் எனக்கு விளங்கவில்லை.

வி. எல்லையா சுபேதார், பெங்களூர்

விடை : யாதார்த்த பிராமணர்களாம் தென்புலத்தோர்களும் சத்தியசங்கங்களும் இத்தேசத்தில் பரவியிருக்குமளவும் சித்தின் ரகசியங்களும் ஞானரகசியங்களும் சுயம்பாகவே விளங்கி வந்தன. சத்திய சங்கங்கள் மாறுதலுற்று அசத்திய சங்கங்கள் பெருகியும், யதார்த்த பிராமணர் மறைந்து வேஷபிராமணர்கள் பெருகியும் விட்டபடியால் அவர்களுக்கு வேதம் இன்னதென்றும், வேத அந்தம் இன்னதென்றும், சித்து இன்னதென்றும், சித்தின் அந்தம் இன்னதென்றும், பிராம்மணம் இன்னதென்றும், பிராமணாள் இன்னாரென்றும், புலன் தென்பட்டோர் இன்னாரென்றும், தென்புலத்தோர் இன்னாரென்றும், ஞானமின்னதென்றும், ஞானிகளின்னாரென்றும், இருடி நிலையின்னதென்றும், இருடிகளின்னாரென்றும், பார்ப்பது இன்னதென்றும், பார்ப்போரின்னார் என்றும், திரிகாயமந்திர மீதென்றும், காயத்திரிமந்திர மின்னதென்றும், நயன மீதென்றும், உபநயனமின்னதென்றும், கிரமம் சாலதின்னதென்றும், சாலக் கிரமமீதென்றும், மந்திரமீதென்றும் மந்திரவாதிகளிவரென்றும், மந்திரீகளின்னா ரென்றும், அதனதனந்தரார்த்த மறியாது பிராமணவேடமிட்டு பொய்யாலும் மித்திரபேதத்தாலும் வயிறு வளர்க்க ஆரம்பித்துக் கொண்டார்கள்.

அதன் பெயர்களைமட்டிலும் நாவில் வழங்கி அதனுட்பொருளறியாப் பெருங்கூட்டத்தோர் அவர்கட் பொய்ப்போதங்கள் யாவையும் மெய்ப் போதங்களென் றெண்ணிவந்தகாலத்தில் இருடிகளுக்கு மனைவிகள் அருகிலேயே யிருந்தார்களென்றும் அவர்களைப்போலவே பிராமணர்களாகிய யாங்களும் பெண்டுபிள்ளைகளுடன் இருக்கின்றோமென்றும் பகட்டிக்கொண்டு வேதமுநி சூதமுனி யுகமுநி என்னும் பொய்ப் பெயர்களைக் கொண்டு மனம்போனக் கட்டுக்கதைகளை எழுதியும் கூறியும் வந்ததன்றி பௌத்தன்மதத்தைச் சார்ந்த அகஸ்தியர் வஸிஷ்டர் முதலானவர்கள் வெவ்வேறு தங்களுக்கொத்த நூற்களைச் சொன்னதாகவும் வரைந்து பேதை மக்களை வஞ்சித்துவந்த பொய்நூற்கள் மிகப்படப் பெருகிவிட்டபடியால் கியானசித்துக்க ளீதீதென்றும் கருவிசித்துக்க ளீதீதென்றும் விளங்காது திகைத்திருக்கின்றார்கள்.

கியானசித்துக்களானது பௌத்த வியாரங்களில் தங்கியிருந்த சமணமுனிவர்களில் சித்திப் பெற்றோர் நீருள் நீராகவும், மன்னுள் மண்ணாகவும், நெருப்புள் நெருப்பாகவுங் கலக்கக்கூடிய கியான சித்துக்கள் எண்பத்தினாலும் செய்துவந்தார்கள். அவர்களை சாரணர்களென்றுங் கூறப்படும். அவர்களடைந்துள்ள நற்கதியைத் தாங்களும் அடையவேண்டியே சாரணர்கதியை விரும்பி இருகைகூப்பி சரணாகதி வேண்டுவதையே தற்காலம் அதன் அந்தரார்த்தம் அறியாது சரணம் சரணமெனக் கை கூப்புவதை தாசனமென்றும், நமஸ்காரமென்றும் பொருளற்ற மொழிகளை வழங்கி வருகின்றார்கள்.

பின்கலை நிகண்டு

நீரினிற் பூவில் வானில் நினைந்துழி யொதுங்குகின்ற
சாரண ரெண்மராவர் சமணரிற் சித்திபெற்றோர்.

மணிமேகலை

நிலத்திற் குழித்து நெடும்விசும்பேறி
சலத்திற்றிரியுமோர் சாரணன்றோன்ற.

புத்தபிரான் ஓதிய நுண்ணிய ஞானசாதனத்தின் உறுதியால் இயல்பாகவே சித்துக்கள்தோன்றிய விவரத்தை புத்தசங்க வடியார்கள் பாடிய பாடலாலுங் காணலாம்.

வீரசோழியம்

எண்பத்திநான்குசித்தும் இயல்பினாலுளவென்று
பண்பொத்த நுண்பொருளை பாரறிய பகர்ந்தனையே.

காலம்நேர்ந்தபோது உடனுக்குடன் அச்செயலையொட்டி இயற்கையில் நடவாததை இயல்பில் நடாத்துவதே கியானசித்துக்களென்னப்படும் இவைகள் பௌத்தர்கள் காலத்தில் நிறைவேறிவந்ததேயன்றி வேறில்லை. இத்தகைய கியானசித்திப்பெறாது வைத்திய சாதனமாம், ஓடதி விசாரணையிலிருந்தவர்கள். மூலிகைகளைக் கொண்டும், உபாசங்களைக்கொண்டும், இரச பாஷாணங்களை கொண்டும், கருவிசித்துக்களும் விளையாடிக்கொண்டுவந்தவர்களும், பௌத்த சங்கத்தோர்களேயாம். கருவிசித்துக்களாவது நரியை பரியாக்குவதும், பரியை நரியாக்குவதும், சிறுகல்லை மலையாக்குவதும்., மலையை சிறுகல்லாக்குவதும், ஆணை பெண்ணாக்குவதும், பெண்ணை ஆணாக்குவதும், இரும்பை பொன்னாக்குவதும் பொன்னை இரும்பாக்குவதும் கூடுவிட்டுக் கூடு பாய்வதும், மநுக்களுக்குத் தெரியாது மறைவதும் ,வீட்டிலிட்டு பூட்டினால் வெளிவந்துலாவுவதுமாகச் செய்துகாட்டுவதேயாம் இவைகள் யாவையும் சமணமுனிவர்காள் இயற்றியுள்ள அறுபத்துநாலு கலைக்கியானங்களால் தெரிந்துக்கொள்ளலாம்.

6:32, ஜனவரி 15, 1913

24. அறுபத்திநாலு கலைகள்

வினா: அண்ணலே, அறுபத்துநாலு கலைக்கியானங்கள் ஆரியரா லியற்றாததுமாய் சமணமுநிவர்களால் எழுதியதாயுமிருக்கும் புத்தக நாமதேயங்களைக் கேழ்க்க மிக்க பிரியரில் ஒருவன்.

முருகன், மழலை

விடை: அறுபத்தினாலு கலைக்கியானங்களாவது.

1. அட்சரலட்சணம், 2. இலிகிதம், 3. கணிதம், 4. பராணம், 5. வியாகரணம், 6. நீதிசாஸ்திரம், 7. சோதிடம், 8. தன்மசாஸ்திரம், 9. யோகசாஸ்திரம், 10. மந்திரசாஸ்திரம், 11. சகுனசாஸ்திரம், 12. சிற்ப சாஸ்திரம், 13. வைத்திய சாஸ்திரம், 14. சாமுத்திரிகா சாஸ்திரம், 15. ரூபசாஸ்திரம், 16. இதிகாசம், 17. காவியம், 18. அலங்காரம், 19. மதுப டணம், 20. நாடகம், 21. நிருத்தம், 22. சப்தப்பிரமம், 23. சிலம்ப சாஸ்திரம், 24. வேணுவாத்தியம், 25. மிருதங்க வாத்தியம், 26. தாளவாத்தியம், 27. தனுர் வித்தை, 28. சுவர்ணபரிட்சை, 29. ரதபரிட்சை, 30. கஜபரிட்சை, 31. அசுவ பரிட்சை, 32. இரத்தினபரிட்சை, 33. பூபரிட்சை, 34. யுத்தலட்சணம், 35. மல்லயுத்தம், 36. ஆக்ரூஷ்ணம், 37. உச்சாடனம், 38. வித்துவேஷணம், 39. மதனசாஸ்திரம், 40. மோகனம், 41. வசீகரணம், 42. ரசவாதம், 43. காந்தர்வவாதம், 44. பிபீலிவாதம், 45. கௌத்துவவாதம், 46. தாதுவாதம், 47. காரூடம், 48. நஷ்டப்பிரசனம், 49. முட்டிப்பிரசனம், 50. ஆகாசப் பிரவேசம், 51. ஆகாசகமனம், 52. பரகாயப்பிரவேசம், 53. அதுர்ஷியம், 54. இந்திரஜாலம், 55. மகேந்திரஜாலம், 56. அக்கினிஸ்தம்பம், 57. ஜலஸ்தம்பம், 58. வாயு ஸ்தம்பம், 59. திருஷ்டிஸ்தம்பம், 60. வாக்குஸ்தம்பம், 61. சுக்கிலஸ்தம்பம், 62. ஜனஸ்தம்பம், 63. கடகஸ்தம்பம், 64. அவஸ்தைப் பிரயோகம்.

என்னும் இன்னூற்கள் யாவும் மக்கள் அறிவு பிறைபோல் வளர்ந்து பூரணமடைவதற்கே வரைந்திருந்ததால் இவற்றிற்கு கலைநூற்கள் என்றும், கலைக்கியானங்கள் என்றும் பெயர்கள் அளித்திருந்தார்கள். கலையென்பது சந்திரனுக்கோர்பெயர், அச்சந்திரகலை நாளுக்குநாள் வளர்ந்து பௌர்ணமி யென்னும் பூரணப்பிரகாசமுற்று உலக ஒளியாவதுபோல மக்களும் இன்னூற் களில் கியானத்தை செலுத்தி தேக தத்துவங்களையும் மனோதத்துவங்களையும் உலகப் பொருட்களாம் ஓடதிகளின் தத்துவங்களையும் நன்காராய்ந்து சில சித்துக்களையாடி தாங்கள் கற்றவித்தைகளின் சிறப்பை உலகமக்களுக்கும் விளக்கி உள்ளக்களங்கமகற்றி உண்மெய்யுணர்ந்து நிருவாணமாம் பூரண சுகமடைவார்கள்.

இத்தகைய அரியநூற்களெல்லாம் சத்துருக்களால் அழிந்து சிதலுண்டும் புத்த வியாரங்களிற் புதைவுண்டுந் துஞ்சியதுபோக எஞ்சியுள்ள ஒவ்வோர் நூற்கள் சிலரிடங்கிடைத்து சொற்பசித்துக்களை விளையாடிவருகின்றார்கள். மற்றும் ஆரியரென்னும் மிலேச்சர்களுக்கும் இன்னூற்களுக்கும் யாதொரு சம்மந்தமுங்கிடையாது.

மந்திரசாஸ்திரமென்பது முன்பின் ஆலோசித்துச் செய்யும் விதிகளை விளக்கும் நூலினது பெயர். அம்மந்திரநூலைக் கற்று விதிவிலக்குகளை காலமறிந்து கூறும் சமணமுநிவர்கள் கூட்டத்திற்கு சமயகணக்கரென்றும் மந்திரவாதிகளென்றுங் கூறப்படும். மற்றும் அரசர்களினருகிலிருந்து அவ்வாலோசினையாம் மந்திரத்தைப் போதிப்போருக்கு மந்திரிகள் என்று பெயர்.

மற்றப்படியோர் வார்த்தையை மடக்கி மடக்கிக் கிளிப்பிள்ளையைப் போல் சொல்லித்திரிவதற்கு மந்திரமென்னுமொழி பொருந்தாவாம்.

நமசிவய வென்னு மொழி தோன்றியகாரணம் யாதென்பீரேல், ஓர் ஞானாசிரியரை அடுத்திருந்த ஓர் மாணாக்கன் குரு பரிநிருவாணம் அடையுங் கால் சென்று வணங்கி சுருக்கத்தில் ஞானநிலை அடையும் வழியை அருளவேண்டுமென்றடி பணிந்தான். குரு பெரு மௌனமுற்றிருந்தபடியால் ஓலை எழுத்தாணியெடுத்து "மனசிவய" வென்றெழுதிக்கொடுத்து அடங்கி விட்டார். அதன்கருத்தோ மனதைவயப்படுத்திக் கொள்ளென்பதேயாம். அதன் கருத்தறியாது அண்டைவீட்டுப் பெரியோனை அடுத்து என்குரு சமாதியடையுங்கால் இதை எழுதிக்கொடுத்தாரென்று கூறியபோது அவரும் அதனுட்கருத்தறியாது "மநசிவய" வென்பதை மாறிமாறி மநசிவய சிவயநம, யநமசிவ, மசிவயன, வயநமசி என நடுவெழுத்தை மாறி ஜெபிப்பதாயின் சகலசித்தியுமுண்டாமென்றுகூற அதற்கே மந்திரமென்னும் பெயரையளித்து அதனை மனவுறுதியுடன் உருப்போடுவதில் சிலது சித்தியாக அதையே பெருமந்திரமென்றெண்ணி ஜெபிக்க ஆரம்பித்துக்கொண்டதுமன்றி வைத்திய நூற்களிலும் நுழைத்துவிட்டு பஞ்சாட்சரமந்திரம், அகஸ்தியர் சொன்னார், போகர் சொன்னார், புலிபாணி சொன்னார், கருவூரார் சொன்னாரென சிறப்பித்துவிட்டார்கள். மநசிவயமென்னு மொழிக்கும் நமசிவயவென்னும் மொழிக்கும் பொருள் பொருந்தவே பொருந்தாவாம்.

சரவணபவ என்பது கூட்டுமொழியேயாம் அதாவது சரவணப்பள்ளி யென்பதும், சரவணப்பொய்கை யென்பதும் பௌத்தர்கள் வியாரத்தைச்சார்ந்த ஓர் பெயராம். அவ்வியாரத்திலேயே முருகனென்றும் கந்தனென்றும் பெயர்பெற்ற குறிஞ்சிநாட்டரசன் சமணநிலை சார்ந்தயிடம், இச்சரித்திரத்தை சிறு குறவஞ்சியிலும் சிலப்பதிகாரத்திலுங் காணலாம். அச்சரவணவென்னு மொழியுடன் "பவ" வென்னுந் தொடர் மொழியை சேர்த்துக்கொண்டு சரவணபவவென்னும் பொருளற்றதும் பயனற்றதுமாய மொழியை வழங்கி அதற்கும் சடாட்சரமந்திரமென்று வழங்கிவருகின்றார்கள். இம்மந்திரங்களால் மாங்காய் விழாது, தன்திறங்களால் மாங்காய் விழுமென்பது திண்ணமாதலின் சோம்பேறிச்சங்கதிகளை ஏற்றுக்கொண்டு தாமும் சோம்பேறியாகாது வித்தையில் முயலுவீரென்று நம்புகிறேன்.

6:33, ஜனவரி 22, 1913

25. நமது கருணைதங்கிய கவர்ன்மென்றார் தமிழ் பாஷையை விருத்தி செய்யவேண்டுமென்னும் நன்னோக்கத்தால் இலட்சரூபாய் செலவிட்டு பலப்பெயர் விளங்கத்தக்க ஓர் நிகண்டு வெளியிடுவதாகக் கேள்வியுற்று ஆனந்தமடைந்தோம்

அதாவது தமிழ்பாஷையில் வழங்கிவரும் பலப் பொருட்களின் பெயர்களையும் விளங்கவைக்கவேண்டுமென்பதே அவர்களது கருத்தாகும். அத்தகையக் கருத்தை இந்தியதேசத் தமிழ் வித்துவான்கள் ஒவ்வொருவரும் சிரமேற்றுக் கருதலானப் பெயர்களின் பொருட்களை விதிப்படி விளக்கி செவ்வனே உதவுதல் உசிதமாம்.

அத்தகைய வித்துவான்களையுங் கருணைதங்கிய கவர்ன்மென்றார் தெரிந்தெடுத்து பல்பெயர் பொருட்களின் உதவிகொண்டு அந்நிகண்டினை அச்சிடுவதும் அழகாம்.

ஏனென்பரேல் தற்காலந் தமிழில் வழங்கும் பல்பொருள் விளக்கும் நூலுக்கு 'அகராதி' எனும் பெயரையளித்துள்ளார்கள். அம்முகப்பெயர் பிழையேயாம். எங்ஙனமெனில், அகரவட்சரத்தை ஆதியாக்கொண்டுள்ள நூற்களுக்கே அகராதியென்னும் பெயர்பொருந்துமேயன்றி பல்பெயர் பொருளை விளைக்கும் நூலுக்கு அப்பெயர் பொருந்தாவாம். இந்நூல் அகரவட்சரத்தை ஆதியாகக்கொண்டுள்ள நூலாதலின் அகராதியென்றோம் என்பாராயின் அறிச்சுவடியும் அகரத்தை ஆதியாகக் கொண்டுளது. ஆத்திச்சுவடி என்னும் முதல்வாசகமும் அகரத்தை ஆதியாகக்கொண்டுளது. குன்றை வேந்தனென்னும் இரண்டாம் வாசகமும் அகரத்தை ஆதியாகக்கொண்டுளது. திருவள்ளுவநாயனார் இயற்றியுள்ளத் திரிக்குறளும் அகரத்தையாதியாக் கொண்டுள்ளது. தாயுமானவர் பாடலும் அகரத்தை ஆதியாகக்கொண்டுளது. ஆதலின் இவைகள் யாவையும் அகராதியென்னலாமோ ஆகாவாம். பாலி பாஷையில் பல்பெயர் பொருளை விளங்கக்கூறும் நூலுக்கு பாலி நிகண்டென்றும், வடமொழியில் பல்பெயர் பொருளை விளங்கக்கூறும் நூலுக்கு வடமொழி நிகண்டென்றும் தென்மொழியில் பல்பெயர் பொருளை விளங்கக் கூறும் நூலுக்கு தென்மொழி நிகண்டென்றே கூறல்வேண்டும். இதற்குப் பகரமாக ஆதியில் சமணமுநிவர்களில் ஒருவர் தமிழ்மொழியின் பல்பெயர் பொருளை விளங்கக்கூறி அந்நூலுக்கு சேந்தன் திவாகரமெனத் தன்பெயரையே கொடுத்துவிட்டார். அதன்பின் தோன்றிய சமணமுநி மண்டலபுருடன் என்பவர் திவாகரரால் வாசக சூத்திரமாக வரைந்திருந்த தெய்வப் பெயர் தொகுதி, மக்கட் பெயர் தொதி, விலங்கின்பெயர் தொகுதி, மரப்பெயர் தொகுதி, இடப் பெயர் தொகுதி, பல்பொருட்பெயர் தொகுதி, செயற்கை வடிவப்பெயர் தொகுதி, பண்புப்பெயர் தொகுதி, செயல்பற்றியபெயர் தொகுதி, ஒலிபற்றிய பெயர் தொகுதி, ஒருசொற்பலபெயர் தொகுதி, பல்பெயர் தொகுதிகள் யாவும் மக்கள்மனதில் சரிவரப் பதியாமல் மயங்கிநின்றதுகண்டு பன்னிரண்டையுந் தொகுப்புத்தொகுப்பாக செய்யுளால்பாடி அந்நூலுக்கு நிகண்டென்னும் பெயரையளித்துள்ளார். பாலி பாஷையில் 'நிகண்டு' எனு மொழிக்கு திராவிட பாஷையில் 'பன்மொழி பொருள்விளக்க' மென்னப்படும். இத்தகைய முகப்புப் பெயரைவிடுத்து யாதொரு பொருளும்விளங்கா அகராதியென்னும் பெயரை முகப்பில் அளிப்பது பிசகேயாம்.

மற்றும் இத்தேசமெங்கும் பௌத்ததன்மங்களே பரவி பௌத்தர்களே நிறைந்து பௌத்தநூற்களையே சகலருங்கையாடிவந்தகாலத்தில் தமிழ்பாஷை யானது சிறப்பும் அதன் தொகுப்புகளும் பிழையற வழங்கிவந்ததன்றி பின்னடி மக்கள் வழுவாவொழுக்கத்தினின்று சீர்பெற்று சுகிக்கவேண்டி இலக்கியநூற் களையும் இலக்கணநூற்களையும் நீதிநூற்களையும் ஞானநூற்களையும் வரைந்து தமிழ்பாஷையை மயக்குறாது சொற்சுவை பொருட்சுவை விளங்க போதித்துவந்தார்கள்.

வேஷப்பிராமணர்கள் தோன்றி சத்தியதன்ம நீதிநெறி ஒழுக்கங்களும் மாறுபட்டு பௌத்தர்களுங் கலைந்து பௌத்த நூற்களுஞ் சிதலுண்டு நிலைகுலைந்துவிட்டபடியால் தங்கள் தங்கள் சீவனத்திற்குத் தக்கவாறு பொய்வேதங்களையும், பொய்ப்புராணங்களையும், பொய்மதங்களையும், பொய்ச்சாதிகளையும் ஏற்படுத்தி பூர்வ தன்மமொழிகள் யாவற்றையும் தாங்களேற்படுத்திக்கொண்ட சாதிகளுக்குஞ் சமயங்களுக்குந் தக்கவாறு மாறுபடுத்தி பூர்வத்தமிழ்மொழிகளையுங் கெடுத்தும் அம்மொழிகளின் மூலப்பொருட்கள் தங்களுக்குத் தெரியாமலே விடுத்தும் வழங்கிவருகின்ற படியால் பூர்வத்தமிழ்மொழிகளுக்குத் தக்கப் பொருட்கள் தற்கால தமிழில் அனந்தபேதப்பட்டிருக்கின்றது. அவைகளின் சுருக்கங்கள் யாதெனில் பல் பொருள் விளக்க மக்களது கூட்டத்தொருபெயர் தொகுதியில் இல்லந் துறந்து சருவ உயிர்களையுந் தன்னுயிர் போல் காக்கும் சாந்தரூபிக்கு "அந்தணன்"

எனும் பெயரை அளித்து அவனது தொழிலாம் ஓதல், ஓ துவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றலெனக் குறிப்பிட்டு ள்ளார்கள். இவையே பௌத்தர் களது கூட்டத்துள் வழங்கிவந்த சமணநீத்தோர் பெயராகும். அப்பெயரே தற்காலத்திலுள்ள சாதித்தலைவர்கள் வைத்துக்கொண்டு அடுப்பூதுவோனும் அந்தணன், சாதமெடுத்து ஓடுவோனும் அந்தணன், மலமெடுக்கச்செய்யும் முதலாளியும் அந்தணன், மரித்தப்பிணங்களை அறுத்து சோதிப்போனும் அந்தணன், தோல்கடை சொந்தக்காரனும் அந்தணன், கள்ளுக்கடை கணக்காப்பிள்ளையும் அந்தணன், சாராயக்கடை சம்பிரதியும் அந்தணன், பெண்களைக் கூட்டிப்போவோனும் அந்தணன், பெண்சாதிப் பிள்ளைகளுடன் இல்லறசுகம் அநுபவிப்போனும் அந்தணனென வழங்கிவருவதாயின் அந்தணனென்னும் மொழியின் சிறப்பும் அதன் அந்தரார்த்தமும் மக்களுக்கு விளங்குமோ. இம்மேறையே அரசனது தொழிலையும், வணிகனது தொழிலையும், வேளாளனது தொழிலையும் உள்ளப்பெயர்களைக்கொண்டு அதன் பொருட்களையும் தற்கால இம் மொழிகள் மாறுபட்டு பிழை கொண்டுள்ளப் பொருட்களையும் விளக்குவதாயின் வீணே விரியுமென்றஞ்சி விடுத்துள்ளோம்.

பொய்யாய சாதிபேதச்செயலால் அனந்த மொழிகள் பொருள் பேதப்பட்டுள்ளதன்றி அவர்கள் மதக்கடை பரப்பி சீவிக்கும் சமயங்களினாலோ பூர்வத் தமிழ்மொழிகள் அனந்தமாகப் பொருள்கெட்டு வழங்கிவருகின்றது.

எவ்வகையா லென்னில் பௌத்தர்களதுகாலத்தில் அறிவின் பெருக்காம் ஞானவிருத்தி எவ்வகையால் உண்டாமென்னும் வினா எழுவில் சரியாக்கிரியை யோகத்தால் ஞானமுண்டாம் என்னும் விடைபகர்வதுண்டு. அதாவது சரியானவழியில் கிரியை ஓர்தொழிலை நடத்துவதாயின் யோகமென்னும் அதிர்ஷ்டபாக்கியமுண்டாம். அதனால் ஞானமென்னும் அறிவு விருத்தி பெறு மென்று தொழிலின் விருத்திக்காக பௌத்தர்கள் கூறிவந்த நீதிமொழி களாகும் மதக்கடை பரப்பி சீவிக்கும் அந்தண வேஷதாரிகளுக்கு அப்பொருள் விளங்காது. சரியையென்றால் கல்லுசாமி கட்டைசாமிகளுக்குப் புஷ்பமிட்டுக் கும்பிடுத லென்றும், கிரியையென்றால் கல்லுசாமி கட்டைசாமி முன்னின்று மந்திரஞ் ஜெபித்தலென்றும், யோகமென்றால் மூச்சையடக்குதலென்றும் மொழிக்கு உற்றபொருளைமாற்றி தங்கள் மனம் போனவாறு வழங்கி வருகின்றார்கள்.

நூதனமாய சாதிபேதத்தால் அனந்தமொழிகள் மாறுபட்டுள்ளதன்றி சமயபேதத்தால் தமிழ்மொழிகளின் பொருட்கள் அனந்தமாக மாறுபட்டிருக் கின்றது. ஈதன்றி சருவசாதியோரும் சருவசமயத்தோரும் வழங்கிவரும் மொழி களுள் ஓர் கூட்டத்தோர் ய, ர, ல, வ, ழ, ள என்னும் இடையெழுத்து அட்சரந்தழுவி சிலர் வாழைப்பழம், கோழிக்கரி என்றும், சிலர் வாளைப்பளம், கோளிக்கரி என்றும்; சிலர் வாயப்பயம், கோயிக்கரியென்றும் எழுத்திலட்சணம் ஓட்டிப் பேசுவதை இலக்கணலட்சணமறியாம் பேதைகளிற் சிலர் ஏளனஞ் செய்வார்கள். பெரியசாதி என வேஷமிட்டுள்ளோ னொருவன் "நேக்கு" இப்தாபஞ்சமே தெரியாதென்று கூறுவானாயின் "நேக்கு" என்னு மொழிக்குப் பொருள்தெரியாவிடினும் அவன் கூறும் மொழியை சிறப்பாக ஏற்றுக் கொள்ளுவார்கள். அவனைச்சார்ந்த மற்றொருத்தி என்னாம் படியானாளம் பவருவானென்று கூறுவாளாயின் 'ஆம்படியான்' என்னுமொழிக்கும், 'னாளம்ப' வென்னு மொழிக்கும் பொருள்தெரியாவிடினும் அவள் கூறும் மொழியை சிறப்பாக ஏற்றுக்கொள்ளுவார்கள். இவ்வகையாய வழக்கமான நூதன மொழிகளையுங் கலந்து தமிழ் மொழிகள் மாறுபட்டிருக்கின்றது. சாதிபேதச் செயலாலும் சமயபேதச் செயலாலும் தென்மொழிப் பொருட்கள் அனந்தமாக மாறுபட்டிருப்பதுடன் தங்கள் தங்கள் சாதிவேஷத்திற்குஞ் சமய வேஷத்திற்குந் தக்கவாறு வடமொழியினது சிறப்பையும் அதன் பொருட்களையும் மிகுபடக் கெடுத்தே வைத்திருக்கின்றார்கள். அவைகளின் சுருக்கமாவது 'பிராமணன்' என்பது பிரம்மணமாம் சிறந்தநிலைபெற்று 'யமகாதகா' மரணத்தை ஜெயித்துக் கொண்டவனுக்குரிய பெயராம். அத்தகையான சிறந்தபெயரை குட்டம்பிடித்துச்

சாவோனும் பிராமணன், கொறுக்கு வலியிழுத்துச் சாவோனும் பிராமணன், பிளேக்கண்டுசாவோனும் பிராமணன், பேதிகண்டு சாவோனும் பிராமண னென அம்மொழியின் பேரானந்த சிறப்பைக் கெடுத்துவிட்டார்கள்.

'உபநயனம்' என்பது உதவிவிழி என்னப்படும். அதாவது மாணாக்கனுக்கு ஞானாசிரியன் ஊனக்கண் அன்றென்று உள்விழியாம் ஞானக்கண் அளிப்பதற்குப் பெயராம். அத்தகைய சிறந்த பெயரின் பொருள்கெட என்பிள்ளைக்கு பூனூல் போடுவதென்று கெடுத்துவிட்டார்கள்.

பௌத்தமக்களுக்குள் சிறந்த ஆலோசனையாய மந்திரமாவது யாதெனில் திரிகாய மந்திரமென்னப்படும். அதாவது தேகசுத்தம், வாக்குசுத்தம். மனோசுத்த முடனிருக்கவேண்டு மென்பதேயாம். அத்திரிகாயமந்திர மொழியிலக்கணம் 'காயத்திரி' என்னப்படும் திரிகாய மென்பதே காயத்திரி யென மறுவியுள்ள சிறந்தமொழியை மந்திரஞ் ஜெபிப்பதெனக் கெடுத்துவிட்டார்கள்.

பௌத்தாசிரியர்கள் பௌத்தக் குடிகளை எக்காலும் அக்கிரமமின்றி கிரமமாக வாழ்கவேண்டுமென்னும் நீதிமொழியை சாலக்கிரமம் சாலக்கிரம மென மொழிந்து வந்தார்கள். அத்தகைய சிறந்த மொழியை சாலக் கிராமம் சாலக்கிராமமெனமாற்றி ஓர்சிறியகுழியான்கல்லைப் பூசிப்பதென்று கெடுத்து விட்டார்கள்.

இத்தகையாக வடமொழி பெயர்களின் பொருட்களும் தென்மொழி பெயர்களின் பொருட்களுங் கெட்டுள்ளதற்குக் காரணமியாதெனில் நூதனமாக இத்தேசத்திற் குடியேறியவர்கள் வடமொழி தென்மொழிகளைக்கொண்டே நூதன சாதிகளையும் நூதன வேதங்களையும் நூதன புராணங்களையும் நூதன மதங்களையும் உண்டுசெய்துக்கொண்டு கல்வியற்றக் குடிகள் பெருந்தொகை யோரை வஞ்சித்து சீவிக்க ஆரம்பித்துக் கொண்டவர்களானபடியால் அந்தந்த மொழிகளின் உட்பொருளாம் அந்தரார்த்தமறியாது தங்கள் தங்கள் மனம்போனவாறு கெடுத்துவைத்ததுமன்றி வழங்கியும் வருகின்றார்கள். இத்தகைய மொழிபேதங்கள் யாவையும் நமது கருணை தங்கிய கவர்ன்மென்றார் நியதிகளைந்து பதருகளை கழற்றி மணிகளைக்குவித்து இலட்சரூபாய் செலவிட்டு வெளியிட யோசித்திருக்கும் தமிழ்பாஷா பல்பொருள் விளக்கநூலை அச்சிடுவரேல் இராஜாங்கத்தின்பெயர் என்றென்றும் அழியாமல் நீடித்திருப்பதுடன் அவர்களது கருணைமிகுத்த சிறப்பும் மாறாதிருக்குமென்பது சத்தியம்.

அந்நூலுக்கு 'தென்மொழி நிகண்டு' என்னும் பெயரை அளிப்பரேல் இன்னுஞ் சிறப்பாம். தென்மொழி வடமொழிகள்யாவற்றினுங் கெட்டுள்ள பொருட்கள் யாவையும் வரைவதாயின் விரியுமென்றஞ்சிவிடுத்துள்ளோம். தமிழினை ஆய்ந்து பொருட்களை விளக்கவேண்டின் தமிழினுக்கு உரியோரைக் கண்டாய்வதே அழகாம்.

6:39, மார்ச் 5, 1913

26. தமிழ்பாஷையாகும் தென்மொழியுடன் கலப்பு

வடமொழியுந் தென்மொழியும் ஏககாலத்தில் புத்தரால் இயற்றியது கொண்டு பேசுமொழிகளிலும் வரையும் நூற்களிலுங் கலப்புற்றே வந்தவை யாதலின் வடமொழிகளைநீக்கித் தென்மொழிகளை மட்டிலுந் தெள்ளற விளக்கினும் விளக்கலாம். தென்மொழிக்குரிய சத்தபேதத்தால் அதாவது ஒலியினது மாறுபாட்டினால் வடவட்சரங்கலந்தே தென்மொழி வழங்குவ தாயினுங் குற்றமில்லை. அவற்றைக் குறிப்பிட்டுவரைவதாயின் வழங்கிவரும் மொழிகளின் பொருட்கள் இன்னுந் தெள்ளறவிளங்குமென்பதற்கு ஐயமில்லை. முன்கலைதிவாகரம், "வடநூற்கரசன் றென்றமிழ்க் கவிஞன், கவியறங்கேற்று முபயக்கவிப்புலவன்" வீரசோழியம், "இருமொழிக்குங்கண்ணுதலார் முதற்குரவரியல்வாய்ப்ப" வென்னும் ஆதாரங்கொண்டு ஆதிபகவனாம் புத்தபிரான் இருமொழிகளை இயற்றுங் காலத்திலேயே வடமொழியை மூத்தாள் போலும் தென்மொழியை இளையாள்போலுமியற்றி ஒன்றுக்கொன்று

சம்பந்தமுற்றிருப்பினும் வடமொழியைப் பாணினியார் ஜனகர்முதலானோரிடமும் தென்மொழியை அகஸ்தியர், திருமூலர் முதலானோரிடம் ஈய்ந்து பரவியதில் பாணினியாரும் ஜனகரும் வடதேசத்திருந்தே மகடபாஷையினின்றுதித்த சகடபாஷை மொழிகளைப் பிரபலமாகப் பரவச்செய்ததால் அவற்றிற்கு வடமொழியென்றும் அகஸ்தியருந் திருமூலரும் தென்தேசம் வந்து மகடபாஷையினின்றுதித்த திராவிடபாஷைமொழிகளைப் பிரபலமாகப் பரவச்செய்ததால் இவற்றிற்குத் தென்மொழியென்றும் பேதந் தோன்றியதேயன்றி மற்றும் அட்சரங்களிலும் மொழிகளிலும் ஒலிகளிலும் சரித்திரங்களிலும் ஒலிபற்றிய பெயர்களிலும் அதனதன் செயல்களிலும் பொருந்தியே நிற்கும். அதாவது வடமொழியில் மக்களுக்குரிய செயலைப்பற்றியுந் தொழிலைப்பற்றியும் பிராமணன் க்ஷத்திரியன், வைசியன், சூத்திரனென்றும்: தென்மொழியில் அந்தணன், அரசன், வணிகன், வேளாளனென்றும் வழங்கிவந்துள்ளார்கள்.

ஈதன்றி மக்களும் ஐந்து இந்திரியங்களை வென்ற திரமுடையோரை வடமொழியில் ஐந்திரர் என்றும், அம்மொழியை தென்மொழியில் இந்திரர் என்றும் வழங்கி திரிக்குறளில் "பொறிவாயிலைந்தவித்தான் பொய்தீரொழுக்கும், நெறிநின்றார் நீடுவாழ்வர்" என்னுமொழியை சிரமேற்கொண்டு ஆதியில் ஐந்து இந்திரியங்களைவென்ற இந்திரனென்னும் புத்தரையேபிரபலமாகத் தொழுதும், இந்திரவிழாக்களைக்கொண்டாடியும் வந்தபடியால், இத்தேசமக்கள் யாவரையும் இந்தியர்களென்றும், இத்தேசத்தை இந்தியதேசமென்றும் நாளதுவரையில் வழங்கியும் வருகின்றார்கள்.

வடமொழியுந் தென்மொழியும் இந்திரராம் புத்தபிரானால் ஏககாலத்தில் தோன்றியதாயினும் தென்மொழியைமட்டிலும் தனிமையாக உருப்பட எழுதினும் எழுதலாம்.

விதி

வீரசோழியம் "மதத்திற்பொலிவும் வட சொற்கிடப்புந் தமிழ்மரபு, முதத்திற்பொலியேழை சொற்களின்குற்றமு மோங்குவினைப், பதத்திர்சிதைவு மறிந்தேமுடிக்கப்பன் னூராயிரம் விதத்திற்பொலியும் புகழவலோகிதன் மெய்த்தமிழே"

மொழி என்னுந் தமிழ் சொற்களில் வேற்றுமெ எட்டும், திணை இரண்டும், பால் ஐந்தும், வழுக்கள் ஏழும், மாறுதல் எட்டும், காலம் மூன்றும், இடம் மூன்றும், அடி இரண்டுங் கண்டெழுதுவதே சொற்களின் சிறப்பாகுமெனத் தமிழினை ஈன்று வளர்த்த தாதாக்களாகும் சமணமுனிவர்களின் கருத்தாதலின் தற்காலம் இக்கருத்தை மேற்கொண்டு தமிழினைக் கேடறவளர்க்கவும் மேலும் மேலும் அதனை சிறப்புற விளங்கவைக்கவுந் தோன்றிய கருணைதங்கிய பிரிட்டிஷ் துரைத்தனத்தார் இலட்ச ரூபாய் செலவிட்டு வெளியிடுந் தென்மொழி நிகண்டினை மிக்க ஆராய்ந்து வெளியிடுவார்களென்று நம்புகிறோம்.

காரணமோவென்னில் தென்மொழியிலுள்ள வடமொழி கிடப்பை விளங்கக்கூறினும் மகமதியர்காலத்தில் கலந்துள்ள அதாலத்க்கோர்ட், அமீனா, சுபீனா, வக்காலத், கொத்தவால், ஜமீன்தார், தாசில்தார், மிட்டாதார், மிராசுதார் என்னுமொழிகளும், போர்ட்சுகீயர்காலத்தில் கலந்துள்ள, நாத்தா, விவீக்கா கலகலா என்னு மொழிகளும், ஐரோப்பியர் காலத்திற் கலந்துள்ள தீனபுட்டி, கோப்பை, புட்டி, இன்னும் பலவகைமொழிகளுங் கலந்தே வழங்கி வருகின்ற படியால் இவைகள் யாவற்றையும் அந்தந்தபாஷைகளின் மூலோற்பவங்கண்டு நீக்கவேண்டியவற்றை நீக்கியுஞ் சேர்க்கவேண்டியவற்றை சேர்த்தும் பல்பெயர்பொருளை விளக்கவேண்டிய கஷ்டங்கள் அதிகமிருக்கின்றபடியால் பெருநிகண்டினை வெளியிடுதற்கு இலக்கண இலக்கியங்கற்ற வித்வான்கள் உதவிமட்டிலும் போதியதன்று. ஓடதிகளின் உட் பொருளாய்ந்தவர்களும், சோதிடத்தின் உட் பொருளாய்ந்தவர்களும், ஞானவாக்கிய சாதனங்களின் உட்பொருளாய்ந்தவர்களுங் கலந்தே ஆராய்ந்து பதிப்பது மேலாம். ஆதனின்

இவைகள் யாவையும் உணர்ந்துள்ளவர்களே ஆராய்ந்து பதிப்பிக்கின் யாவிலு மேலாமென்றே கூறுவோம்.

6:40, மார்ச் 12, 1913

27. முதற்குறள்

வினா: நமது தெய்வப்புலமெய் திருவள்ளுவநாயனாரியற்றிய திரிக்குறள்-பரிமேலழக ருரைசெய்தது.

"அகரமுதலவெழுத்தெல்லா
ஆதிபகவன் முதற்றேயுலகு."

என்றும், கவிராஜ சக்ரவர்த்தியே நீவிருரைசெய்தது:

"அகரமுதல வெழுத்தெல்லாம்
ஆதிபகவன் முதற்றே யுலகு."

என்றும் இருக்கின்றமெயால் இவ்விரண்டிற்கும் பதம் சரியாயிருந்தாலும் உரை மாறுபட்டிருக்கின்றது.

3-வதாக-புதுப்பேட்டை ஸ்ரீமாந் ந. பாலகிருஷ்ணம் பிள்ளை, தாமியற்றிய "பிரிவாற்றாப் பரிவுறுநிலை" என்கின்ற சரமகவியின் முகப்பில்;

"அகரமுதலவெழுத்தெல்லாம்
ஆதி யுகர முதற்றே யுலகு."

என்று பதிப்பித்திருக்கின்றமெயால் இது புராதனகாலத்தில் உண்டான குறளோ அன்றேல் ஆரியர்களாகிய வன்நெஞ்ச அஞ்ஞானிகளால் ஏற்படுத்திய கட்டுக்கதைகளில் இதுவும் ஒன்றோ என்று விளங்காதிருக்கின்றமெயால் இம்மூன்றின் செய்யுட்களின் சங்கையை நிவர்த்திக்கக் கோறிநிற்கின்றனம்.

தா. ஷண்முகம், புதுப்பேட்டை

விடை: தற்காலந் தோன்றியுள்ள நூதன சாதியோரும், நூதன மதத்தர் களும் திரிக்குறளைத் தங்களுடைய மதத்திற்கு உரியனவென்றும், எங்கள் மரபின் சார்பினதென்றும் மாளா வழக்கிட்டுவருவது சாலநிலையாம். காரணமோவென்னில் புத்ததன்மத்தினின்றே சருவமதங்களுஞ் சகல வேதங்களும் தோன்றியுள்ளது கொண்டு வழிநூலாந் திரிக்குறளை எம்மதெம்ம தெனக் கூறத்துணிந்ததுமன்றி புத்ததன்ம சீலநிலை அறியாது செய்யுட்களையும் மாறுபடுத்திவருகின்றார்கள்.

நாயனார் திரிக்குறள் கடவுளென்னும் புத்தர் சிறப்பு முதற்செய்யுள் "அகரம் முதல் எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு" என வரவேண்டுமே யன்றி இவற்றிற்கு மாறாயுள்ளவை யாவும் பிழையேயாம். செய்யுள் தோன்றிய விதியும் அதன் கருத்து அறியாதார்க்கு முதநூற்றொடர்பும், வழிநூற் சுவையும், சார்புநூற் குணமும் விளங்கவே விளங்காவாம். முதல் வழி சார்பென்னு முத்திரிபில் "முதநூலுணர்ச்சி முற்றவறிந்தோ, ரிதவழிநூலி னின்பைமுகப்ப, ரதனது சார்பேயகலவிரிந்து, யிதயகளங்கை யறுப்பதுமாமே" என்னுங் காக்கை பாடிய விதியே போதுஞ்சான்றாம் ஆகலின் மேற்கூறிய செய்யுளுக்கு மாறு கொண்டன யாவுந் தப்பரை தப்பரையேயாம்.

7:3, ஜூன் 25, 1913

28. முத்தமிழ் திராவிடம்

வினா : முத்தமிழ், திராவிடம் என்னும் மொழிகள்யாவும் பௌத்தர்களால் தோன்றியதா, நூதனா மதஸ்த்தவர்களால் தோன்றியதா. பௌத்தர்களால் தோன்றியதென்னில் அதன் ஆதாரத்தையும் உதாரணத்தையும் விளக்கியருளல் வேண்டும். நூதன மதஸ்தர்களுடையதாயின் எம்மொழி ஆதாரங்கொண்டு அவ்வகை வழங்கி வருகின்றார்களென்பதையுந் தெள்ளற விளக்கி அடியேனைப் புனிதனாக்கவேண்டும்.

குருமணி, சேலம்

விடை : அம்மொழிகள் யாவும் பௌத்தர்கள் நாவில் வளர்ந்ததேயன்றி நூதன மதஸ்த்தர்பால் தோன்றியதன்றாம். அதனந்தரார்த்தமறிய நூதன

மதஸ்த்தர்கள் தங்கடங்கள் மனம் போனவாறு பொய்யைச்சொல்லி மதங்களைத் தோற்றுவித்துக்கொண்டது போல மொழிகளினது பொருளறியாது ஒன்றை கூறவும் அதுவும் அறியாதோரதை நம்பவும் வழங்கவுமாகி வருகின்றது. அம்மொழிகள் யாவும் தென்னாட்டை ஒட்டியதன்றி வடநாட்டைப்பற்றிய தன்றாம். வழங்குந் தமிழை முத்தமிழென்பது மூவகையாகப் பேசுந் தமிழென்று கூறப்படும். அவைகள் யாதென்னிலோ மலையாள வாசிகள் வழங்குந் தமிழை கொடுந்தமிழென்றும், திருநெல்வேலி புரவாசிகள் வழங்குந் தமிழை கருந்தமிழென்றும், சென்னை முதலிய புரவாசிகள் வழங்குந் தமிழை செந்தமிழ் என்றும் கூறப்படும். அவைகள் வழங்கும் வகைகளோ, நாயின்ட மகனே யென்பது கொடுந்தமிழ், நாய் ஈன்ற மகனே வென்பது கருந்தமிழ், நாய் பெற்ற பிள்ளையேயென்பது செந்தமிழ். கருந்தமிழில் வரைந்துள்ள புகார் காண்ட முதலிய நூற்களில் வரைந்துள்ளவற்றை செந்தமிழ் வாணர் வாசிப்பதற்கே இயலாது இன்னுந்திகைக்கின்றார்கள்.

இக்கொடுந்தமிழ், கருந்தமிழ், செந்தமிழினையே நமது முன்னோர்கள் நன்கு வரைந்திருக்கின்றார்கள். இப்பாஷையினது வரிவடிவாம் அட்சரங்களில் நஞ்செழுத்தென்றும் அமுத வெழுத்தென்றும் இருவகை உண்டு. அவற்றுள் அமுதெழுத்தைக்கொண்டு தமிழென்றும் நஞ்செழுத்தைக்கொண்டு தீராவிடம் என்றும் வழங்கி வந்தார்கள். தீராவிடமென்னு மொழியே குறுக்கல் விகாரப்பட்டு திராவிடமென வழங்கலாயிற்று. கொடுந்தமிழ் கருந்தமிழ் செந்தமிழ் இம்மூன்றினுள்ளும் நஞ்செழுத்துள்ளதால் முத்தமிழுக்குந் திராவிடமென்னும் பொதுப்பெயர் வழங்கலாயிற்றேயன்றி வேறன்றாம். இவற்றை நூதனமத வித்வான்களெவரேனும் மறுப்பரேல் பூர்வ நூலாதாரத் துடன் விளக்கக் கார்த்துள்ளோமாக.

7:39, மார்ச் 4, 1914

29. பௌத்தர்களது இலக்கணோற்பவம் போப்பையருக்கு தெரியாதென்பது பௌத்தர்களது இலட்சணோற்பவம் போப்பையருக்கு தெரியாதென்பதேயாம்

பௌத்தர்களது இலட்சணோற்பவம் யாதென்னிலோ பஞ்சசீல சாதனங்களேயாம். அச்சாதனத்தில் உற்பவிப்போரே பௌத்தர்களென் றழைக்கப்படுவார்கள். நமது போப்பையரோ வேறு மதசாதனராதலின் பௌத்தர்களது இலட்சணோற்பவந் தெரியாதென்று வரைந்துள்ளோம்.

மற்றும் பௌத்தர்களின் எழுத்திலட்சணம், சொல்லட்சணம், பொருள் லட்சணம், யாப்புலட்சணம், அணியிலட்சணமாய பஞ்ச லட்சணங்களில், உடல் ஒன்றை காணும் ஒற்றுமை தோற்றத்தாலும், செயலால் உடலும் உயிருமென்னும் வேற்றுமை தோற்றத்தாலும் புருடனென்றும் ஆன்மனென்றும், மனிதனென்றும் பெயர் பெற்றோன் தானே தன் செயலால் சீர்கெடுவதும் தானே தன் செயலால் சீர் பெறுவதும் தானே தன் செயலால் துக்கமடைவதும் தானே தன் செயலால் நிரயமென்னும் மீளாபிறவியில் அல்லல்பட்டு உழல்வதும், தானே தன் செயலால் மோட்ச மென்னும் பிறவியற்று நித்தியானந்தத் திலிருப்பதுமாதலின்,

திரிக்குறள்

பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங் / கருமமே கட்டளைக்கல்.

நாலடி நானூறு

நன்னிலைக் கட்டன்னை நிறுப்பானுந்தன்னை / நிலைகலக்கிக் கீழிடுவானும் நிலையினு மேன்மேலுயர்த்து நிறுப்பானுந்தன்னை / தலையாகச் செய்வானுந்தான்.

அறநெறிச்சாரம்

தானே தனக்குப் பகைவனு நட்டானும் / தானே தனக்கு மறுமையு மிம்மையும் தானே தான் செய்தவினைப்பயன் துய்த்தலால் / தானே தனக்குக்கரி.

மனிதன் தனக்கப்புறப்பட்ட வேறொரு பொருள் உண்டென்று மலைவுறாது தன்னிற்றானே அறிவுபெருகி வீடுபேற்றை அடைவான் வேண்டி உயிருமெய்யுமாய மனிதனுக்கு உயிருமெய்யுமாய அட்சரங்களை புத்தபிரான் வகுத்து வரிவடிவில் அமைத்து அகஸ்தியர் பால் ஈய்ந்து பரவச்செய்தவற்றுள்,

நன்னூல்

உயிரு முடம்பு முப்பது முதலே.

உயிராயது பனிரண்டெழுத்தும், உடலாயது பதினெட்டெழுத்துமாய வைகள் மனிதனது உந்தியில் தோன்றி உதான வாயுவால் நெஞ்சிற் பிறந்து கண்டத்துள் நுழைந்து நாசியையும் நாவையுந் தழுவி ஒலிப்பதை விளக்கி,

நேமிநாதம்

உந்தியிறோன்று முதானவளிப்பிறந்து / கந்தமலி நெஞ்சுதலை கண்டத்து வந்தபின் னாசினாவண்ண மிதழெயிறு மூக்கென் / பேசு மெழுத்தின் பிறப்பு.

மனிதன் தன்மெய்யைத் தானே உணரும் வழியில் விடுத்து உண்மெய்யாம் அந்தர் அங்கத்தையும் புறமெய்யாம் பகிர் அங்கத்தையும் அறிந்து தெளிதற்கு மெய்யறம், மெய்ப்பொருள், மெய்யின்பத்தை வகுத்து உபமான உபமேய உதாரணங்கள் யாவற்றிலும் புறமெய்யாய உடலையே சுட்டி வரைந்திருக்கின்றார்கள்.

அச்சுட்டுப்பொருட்களை உணர்த்துவதினும், அவன் இவன் உவனென்றும் அக்கொற்றன் இக்கொற்றன் உக்கொற்றனென்றும் மனிதனையே உதாரணமிட்டு வரைந்ததுகொண்டே ஒருமெய், பன்மெய் யென்னும் விளக்கங்களையும், தன்மெய், முன்னிலை, படற்கை என்னுஞ் சுட்டுக்களையும் மனிதனென்னுந் தேகத்தையே சுட்டி அவன் விளங்குமாறு உயிர் மெய்யமைந்த மனிதனுக்கு உயிர்மெய்யாம் எழுத்துலட்சணம், சொல்லட்சணம், பொருள் லட்சணம், யாப்புலட்சணம், அணியிலட்சணமென்னும் பஞ்சலட்சணங்களால் பஞ்சபுலனுணர்ந்து தென்புலத்தானாம் வரையில் வரைந்துள்ளார்கள்.

எழுத்துக்களே இரண்டாவது லட்சணசொற்களாய் திரண்டு இலக்கிய லட்சணம் அமைந்தபோது ஒருசொல் வாக்கியம் இருச்சொல் வாக்கியம் மூச்சொல் வாக்கியங்களாகி மூன்றாம் பொருள் லட்சணம் விளங்க விளக்கி பகுபதம் பகா பதங்களென வகுத்து குறித்த சொல்லுக்கு உரித்த பொருள் கூறுமிடத்து துலங்கவரைந்து விளங்கக்கூறும் விதிகண்டு இருச்சொல் வாக்கிய பகுபத ஒருமெய், பன்மெய், என வரையின் அதன் உரிய பொருளாய ஒருதேகம், பலதேகங்கள், என்றும், தன்மெய், முன்னிலை, படற்கையென வரைவதில் தன் தேகம் முன்னிலுள்ள தேகம், பக்கலுள்ள தேகமென உரிய பொருளை விளங்க விளக்குவதாகும்.

அங்ஙனமின்றி இருச்சொல் வாக்கியத்தை ஒரு சொல்லே என்றும், பகுபதத்தை பகாபதமேயென்றும் பண்பு பிரழ்ந்து ஒருமை, பன்மை, தன்மை, என்று வரைவதாயின் பஞ்சலட்சண வாக்கியோன் கருத்துங் கெட்டு அதனுரிய பொருளுங் கெட்டு மலைவுற்றுப்போம்.

ஆகலின் பஞ்ச லட்சணமாம் எழுத்துக்கு லட்சணங் கூறுவதினும், சொல்லுக்கு லட்சணங் கூறுவதினும், பொருளுக்கு லட்சணங் கூறுவதினும், யாப்புக்கு லட்சணங் கூறுவதினும், அணிக்கு லட்சணங் கூறுவதினும், வரைவதினும் ஆக்கியோன கருத்து கெடாதும் பொருள் கெடாதும் வரைவதுங் கூறுவது அழகாம். இத்தகைய வாக்கியோன் கருத்து கெடாதும் பொருள் கெடாதும் வரைந்துள்ளவற்றை பௌத்தர்களால் இருநூறு வருடங்களுக்குமுன் வரைந்து வைத்துள்ள வோலை புத்தகங்களிலும் சிலாசாசனங்களிலுங் காணில் பரக்க விளங்கும். பண்டை காலத்தார் கருத்தையும், பண்டை நூற்களையும், பண்டை சிலாசானங்களையும் ஆய்ந்துணராதோர்க்குப் பஞ்ச லட்சணம் விளங்காவாம்.

பஞ்சலட்சணமே விளங்காதோர்க்கு தருக்க லட்சண பாகுபாடுகளே விளங்காவாம் விளங்குவோர்பால் வாதிடுவதே விவேகவிருத்தி, விளங்கார்பால் வாதிடுவதால் விவேகங்குறைவாம்.

7:46, ஏப்ரல் 22, 1914

30. திருவள்ளுவ நாயனார் இயற்றிய திரிக்குறள்

சற்குருவே நம

சிறப்புப்பாயிரம்

உலகுபுகழ் அரிய திரிபேதவாக்கியங்களென்றும், திரிபீட வாக்கியங்களென்றும் வழங்கிய மூவருமொழியாம் முதனூலுக்கு வழிநூலாகத் தோன்றியவை திரிக்குறளும், சார்பு நூலாகத்தோன்றியவைகள் திரிமந்திரம், திரிவாசகம், திரிவெண்பா, திரிமாலை, திரிகடுகம், சித்தர்கள் நூல் முதலியவை களேயாம். இத்திரிக்குறளுக்கு திருவென்னும் அடைமொழி சேர்த்துத் திருக்குறளென சிறப்ப வழங்கினும் தன்மபிடக, சூத்ர பிடக, வினயபிடக மென்னும் மகடபாஷா முந்நூலுக்கு திராவிட பாஷா வழி நூலாம் அறத்துப்பால், பொருட்பால், காமப்பாலென்னுந் திரிக்குறளே உடன் பாடாதலின் திருவென்னும் அடைமொழி சிறப்பென்றெண்ணி திருக்குறளென ஏற்பது மும்மணிகளென்பதை அழகுமணிகள் என்பதற்கு ஒக்கும். ஆதலின் திரிபேதங் களாம், முதநூலுக்குத் திரிக்குறளே வழி நூலாதலின் திருவென்னும் அடை மொழி நீக்கி திரியென்னும் மூவருமொழிகளை விளக்கியுள்ளதே முதற் சிறப்பாகும்.

அங்ஙனம் விளக்குவதில் சுருங்கச்சொல்லி விளங்கவைத்தலே சுகமென்றெண்ணி குறள் வெண்பாவாற் குறுகக்கூறியவை இரண்டாம் சிறப்பாகும். திரிபீடவாக்கிய மறைபொருள் பாலிபாஷையினின்று சகல மக்களுக்கும் விளங்காததுகண்டு அவற்றை திராவிட பாஷையில் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தது மூன்றாம் சிறப்பாகும். புத்தபிரான் சக்கரவாளம் எங்கணுஞ் சுற்றி திரிபேதவாக்கியங்களாம் தன்மபாதத்தை விளக்கியிருக்க இத்திரிக்குறளாக்கியோன் இருந்தவிடத்திருந்து ஈரடிவெண்பாவால் திரிபாலாற்ற வும், சகலதேச பாஷையோரும் அவற்றை அவரவர்கள் பாஷையில் மொழி பெயர்த்து ஏற்கவுமாயது நான்காவது சிறப்பாகும். வட இந்தியாவில் சாக்கையர் வம்மிஷ வரிசையில் மண்முகவாகென்னும் சக்கிரவர்த்திக்கும், மாயாதேவி யென்னும் சக்கிரவர்த்தினியாருக்கும் மகவாகப்பிறந்து முதநூலியற்றியருளியது போல் தென்னிந்திய வள்ளுவ வம்மிஷவரிசையில் மாமதுரைக்கச்சனென்னும் அரயனுக்கும், உபகேசியென்னும் ராக்கினிக்கும் மகவாகத் தோன்றி நாயனாரென்னும் பெயர்பெற்று சங்கஞ்சார்ந்த தபோபலத்தாலும் தாய் தந்தையர் செய்த புண்ணியபலத்தாலும் சிறந்த நாவமைந்து செந்நாப்புலவரெனத் தோன்றியது ஐந்தாம் சிறப்பாகும். அரசருக்குப் பிறந்து அரசியல் இருபத் தைந்தினையும் அமைச்சியல் பத்தையும் அரணியல் இரண்டையும் கூழ்பகுதி ஒன்றையும், படைபகுதி இரண்டையும் நட்பாளர்பகுதி பதினேழையும் பதின் மூன்றுவகைக் குடிகளியல்பையும் நன்கு விளக்கியது மன்றி, தான் சார்ந்த சங்கத்தின் ஞானவியல்பையும் தென்புலத்தோராம் சமணமுநிவர்களாற்றலையும், சிற்றின்பம் அறுக்கு நிலையே பேரின்பமாதலையும் முதற்பா என்னுங் குறள் வெண்பாவால் எழுதி மதுரைக்கச்சனென்னுங் கூர்வேல்வழுதி மனமகிழச் செய்தது ஆறாஞ் சிறப்பாகும். திரிக்குறளில் கடவுள் வாழ்த்தென்னும் புத்தரது சிறப்பு முதல் ஆயிரத்தி முன்னூற்றி முப்ப தருங் குறட்பாக்களைத் திரிபற வாசித்துணர்ந்தோனுக்கு வேறென்னூற்களும் வேண்டாவாகலின் ஏழாம் சிறப்பாகும். இத்தகைய சப்த சிறப்பமைந்த திரிக்குறளாக்கியோன் திருவள்ளுவநாயனார் திருவடி வணங்கி அவ்ரது வழி நூலுக்கு பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விரித்துரை நான்கையு மெழுதத் துணிந்தது கருடன் பறக்குமிடத்து ஈயும் பறப்பது போலாயினும் ஆதிபகவனது சரித்திரத்தையும் திரிபிடகமாம் திரிபேத மொழிகளின் அந்தரார்த்தங்களையும் உணர்ந்தவுறமே உள்ளதைவிளக்குவான் வேண்டி வழி நூலுக்கு உரை ஆரம்பித்துள்ளோம். இவற்றுள் வரிவழுகுறிவழு ஏதொன்று வழுவினும் பௌத்ததன்ம ஆன்றோர்கள் பொறுத்து நீதிவழு நெறிவழுவுக்களை நியதிகளைந்து விளக்குக வேண்டுவாம். இவ்வேண்டுகோள் மகடபாஷையிலும், திராவிட பாஷையிலும் சத்தியதன்ம

ஆராய்ச்சியில் மிகுத்த புத்தன்மத்தைச் சார்ந்தோரையன்றி ஏனைய மதத்தோரைச் சாராவென்பதாம்.

1. கடவுள் வாழ்த்து என்னும் புத்தரது சிறப்புப்பாயிரம்

அஃதாவது காப்புக்கு முன்னெடுக்குங் கடவுளே மாலென்னும் புத்தராதலானும், மாதா, பிதா, குரு என்னும் மூவரையுமே தெய்வமாகக் கொண்டவிடத்து புத்தரே ஜகத்குருவும் ஆதியங் கடவுளாயதினாலும் நூலாசிரியரது மரபில் தொன்றுதொட்டு வணங்கிவரும் திரிரத்தின முதலாம் பதுமநிதியாகிய ஆதிபகவனாம் புத்தபிரானைத் தனது வழிநூலுக்குக் காப்பாகப் பத்து பாடலால் வாழ்த்தி சிறப்பித்திருக்கின்றார்.

1. அகரமுதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

(பதவுரை) அகரம் - அகரமென்னு மெழுத்து, எழுத்தெல்லாம் - மற்றுள்ள வெழுத்துகளுக்கெல்லாம், முதல் - ஆதியாயிருப்பதுபோல், பகவன் - புத்தபிரான், உலகு - உயர்வோருக்கு, முதற்று - முதலாயிருக்கின்றாரென்பது பதம்.

(பொழிப்புரை) சகல எழுத்துக்களுக்கும் அகரமாகிய எழுத்து முதலாயிருந்து அறிவை விளக்குவதுபோல் பகவனாகிய புத்தர் சருவ மக்களுக்கும் அறிவை விருத்திசெய்யும்முத நூலீயீந்த முதல்வனாக இருக்கின்றாரென்பது பொழிப்பு.

(கருத்துரை) அகரமாகிய எழுத்தாயது மற்றுமுள்ள எழுத்துக்கள் யாவற்றிற்கு மாதியாயிருந்து கற்போருக்குக் கசடற அறிவின் விருத்தி செய்வது போல் உலகசீர்திருத்தக்காரருள் ஆதியாகத் தோன்றி மக்களுக்கு மூவருமொழி களை ஊட்டி உயர்ந்தோர்மாட்டே உலகென விளக்கியவர் ஆதிபகவனாகிய புத்தரேயாதலின் அவரை முதற்பாடலில் சிறக்க வாழ்த்தியிருக்கின்றாரென்பது கருத்து.

(விரித்துரை) புத்தபிரான் ஜகத்திற்கே குருவாகத்தோன்றி அவன் தன்னவன் இவன் அன்னியனென்றும், இவன் தாழ்ந்தவன் இவன் உயர்ந்தவனென்றும், இவன் கற்றவன் அவன் கல்லாதவனென்றும், இவன் கனவான் அவன் ஏழையென்றும், இவன் சிறியவன் அவன் பெரியவனென்றும் பாரபட்சம் பாராதும், எறும்பு முதல் யானை வரையிலுள்ள சருவசீவர்களின் மீதும் அன்புபாராட்டியும், சக்கரவாளம் எங்ஙணுஞ் சுற்றி அங்கங்குள்ள சருவ மக்களுக்கும் சத்தியதன்மத்தை ஊட்டியும், மக்கள் கதியினின்று தேவகதி பெறும் நித்தியானந்தத்தில் விடுத்து பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடென்னும் துக்கங்களைப் போக்குதற்காய தன்மசங்கங்களை நாட்டியும், அஞ்ஞான இருளை அகற்றி மெஞ்ஞானோதயஞ் செய்தபடியால் பகவனென்னுங் காரணப் பெயரைப் பெற்றார்.

அதாவது இருளை விலக்கிய சூரியனுக்குப் பகலவனென்னுங் காரணப் பெயருண்டாயது போல் மக்களுக்குள்ள காம வெகுளி மயக்கமென்னும் அஞ்ஞான இருளை அகற்றி சாந்தம், ஈகை, அன்பென்னும் மெஞ்ஞானோதயஞ் செய்வித்தபடியால் புத்தருக்குள்ள சகஸ்திர நாமங்களில் பகவன் பகவனென்னும் ஓர் சிறப்புப்பெயரையும் மேலோர் வகுத்திருக்கின்றார்கள், மண்டல புருடன் "பகவனே ஈசன் மாயோன், பங்கயன் சினனே புத்தன்" என்று கூறியுள்ள வற்றிற்குச் சார்பாய் *திரிமத்திர* வாக்கியோன் திருமூலர் "ஆதிபகவனருமறை யோதுமின்" என்றும் அதனை அநுசரித்து சமணமுனிவரினின்று தேர்ந்த *இடைகாட்டு சித்தர்*, "ஆதிபகவனையே பசுவே அன்பாய் தொழுவாயேல், சோதிபரகதிதான் பசுவே சொந்தமதாகாதோ" வென்றற்குப் பகரமாய் *மணிமேகலை* ஆக்கியோன் சீத்தலை சாத்தனார் பிண்டியினது சிறப்பை ஓட்டி பகவனதாணையில் பன்மாம் பூர்க்குமென்றும் இதற்கு ஆதரவாக *சீவகசிந்தாமணி* ஆக்கியோன் திருத்தக்கதேவர் "பாடல் வண்டாற்றும்பிண்டி பகவனதாணை போல" வென்றும் வழிநூலுக்கு ஆதரவாக சார்பு நூலோர்களும் வரைந்திருக் கின்றார்கள். புத்தபிரானை மகடபாஷையில் பகவனெனக்

கூறியவற்றை அநுசரித்து திராவிட பாஷையில் திவாகரரென்றும் வழங்கி வந்தார்கள்.

உலகிற்கே ஆதி சீர்திருத்தக்காரரெனத் தோன்றியவரின் மலைவுபடா மொழிகளையும், அளவுபடா அன்பினையும், திகைவுபடா ஞானத்தின் சிறப்பினையும், மநுகுலத்தில் முக்காலங் கெடா புருஷோத்தமனாக விளங்கிய உருவினையும், மிருதுவாக்கினமுதினையும், களங்கமற்ற உள்ளக்காட்சியையும் ஒப்பிட்டுக்காட்டும் உபமான உபமேயம் உலகில் ஒன்றுமில்லாததால் அறிவை விளக்கி சீர்திருத்தும் அறிச்சுவடியின் முதலெழுத்தாம் அகரவெழுத்தைச் சுட்டி உவமான உபமேயங்களாக விளக்கியுள்ளார். அத்தகைய விளக்காம் அகரசிறப் போவென்னில் தமிழ் எழுத்துக்கள் யாவற்றிற்கும் முதவெழுத்தாகவும், எட்டென்னும் இலக்கண எழுத்தாகவும், குண்டலியரம் சுழிமுனை நாடியின் முன்சுழியாகவும், ஞானவேற்ற அடிபடையாகவும் "அ காரகாரணத்துளே யனேகனேகரூபமா" என்னும் ஞானோற்பவத்திற்கே ஆதாரமாகவும், "ஆதியாய் நின்ற அறிவு முதலெழுத்தோதிய நூலின் பயன்" என்னும் அறிவிருத்திக்கே பீடமாகவும், "கட்டுப்படாதந்த வச்சுமட்டம் அதன் காலேபன்னிரண்டா கையினால், எட்டுக் கயிற்றினால் கட்டிக்கொண்டாலது மட்டுப்படுமோடி ஞானப்பெண்ணே" என்னும் மனோலயத்திற்கே ஆதாரமாகவும் இருக்கின்ற படியால் அவ்வகரவட்சரத்தின் மகத்துவம் அறிந்த மேலோர்கள் மக்களது வாழ்க்கையின் இல்லங்களில் அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, அம்மான், அத்தை என வழங்கு மொழிகளால் எக்காலும் அகராட்சரத்தை உச்சரிக்கவுஞ் செய்துள்ளது சகல மகாஞானிகளின் சம்மதச்சிறப்பாகவும் விளங்குவது கொண்டு வழிநூலாசிரியர் அறவாழியானுக்கு அகரத்தை ஒப்பிட்டு கடவுள் வாழ்த்தாம் புத்தரது சிறப்பை விரித்திருக்கின்றார்.

இதற்கு ஆதரவு பாலி புத்தாகுணோ இதிபிஸோ பகவா அறஹங் ஸம்புத்தோ விஜ்ஜாசரண ஸம்ப்பன்னோ ஸுகதோ லோகாவிது அநுத்தரோ புரிஸதம் மகாரதி ஸட்த்தா தேவம் அனுஸ்ஸானங் புத்தோபகவாதி.

பாலி நிகண்டு. ஆதி பகவா பகவாமுனி, பகவாஸம்மா ஸம்புத்தா, பகவாஜீனா பகவா புத்தர், பகவா மஹாமுனி.

2. *கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ*
னற்றா டொழாஅ ரெனின்.

(ப.) கற்றதனால்-படித்ததினால், ஆய-உண்டாய, பயன்-பலன், என்கொல்-என்னென்று சொல்லுதும், வாலறிவன்-பாலதானத்தில் அறிவின் விருத்திப்பெற்று நின்றவன்,நற்றாள்-சீரடிகளை, டொழாஅ-வணங்கா, ரெனின்-பயனென்னை யென்பது பதம்.

(பொ.) பல நூற்களைக் கற்றும், நூலுக்கு முதல்வனும், நுண்ணணறிவின் ஆசிரியனுமாய வாலறிஞனின் செயலையும் அவரது தன்மபாத போதத்தையும் வணங்கி விசாரியார்க்கு நூலினைக் கற்றும் பயன் விளங்காதென்பது பொழிப்பு.

(க.) பாலவயதிலேயே அறிவின் விருத்திபெற்று ஜகத்குருவாகத் தோன்றிய ஒப்பிலா அப்பன் புத்தரது திருவடிகளை வணங்கி மக்களுள் அவர்பெற்ற பேரானந்தத்தை உணர்ந்து அவரது முதநூலையும் மற்றும் வழிநூல், சார்புநூல் யாவையுங் கற்பதாயின் கற்ற சுகத்தின் பயன் நித்திய காட்சியும் அநுபவமுமாக விளங்குமென்பது கருத்து.

(வி.) கண்டுபடிப்பதே படிப்பு, மற்றபடிப்பெல்லாம் தெண்டபடிப் பென்று வழங்குதற்குப் பகரமாகக் காட்சிக்கும் அநுபவத்திற்கும் பொருந்தாக் கலைகளைக் கற்பது கல்லானென்பதற்கு ஒக்கக் களங்கம் தோய்ந்திருப் பானாயின் கற்றுங் கசடன் என்றேற்கப்படுவான். ஆதலின் கற்குமுன்னும் கற்றப்பின்னும் நூல்தோன்றியகாரணம் யாதென்றும், நூலினது ஆக்கியோன் செயல் ஏதென்றும் அவரடைந்த பயனென்னையென்றும் உணர்ந்து கற்றும் கடைத்தோற்கே வாலறிவன் தாளினை வணங்கிக் கற்றலே பயனுடைத்தென்றும் வணங்காது கற்றல் பயனற்றதென்றும் விளக்குவான்வேண்டி களங்கமற்ற வாலறிஞன் தாளினை வணங்கி களங்கமறுக்கும் நூற்களைக் கற்பது

பயனுடைத்து என்பதாம். புத்தரையே வாலறிஞனென வழிநூலார் சிந்தித்தற்குச் சார்பாய் *யாப்பருங்கலை* ஆக்கியோன் அமுதசாகரர், "அறிவனைவணங்கி யரைகுவன்யாப்பே, என்றும் அதனுரையாசிரியர் குணசாகரனார், "ஆசனத்திருந்த திருந்தொளியறிவன், ஆசனத்திருந்த திருந்தொளியறிவனை" என்றும், *சிலப்பதிகார* ஆக்கியோன் இளங்கோவடிகள், "ஆதியிற்றோற்றவறிவனை வணங்கி," என்றும், *அறநெறிச்சார* ஆக்கியோன், முனைப்பாடியார், "அறிவனை வாழ்த்தி அடவித்துணையா" என்றும் தோன்றியுள்ள சார்பு நூற்களே போன்ற விரிவாம்.

3. மலர்மீசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமீசை நீடு வாழ்வார்.

(ப.) மலர்-தாமரைப் புட்பத்தின், மிசை-மீதே, யேகினான்- சென்றவனது, மாணடி-சிறந்த பாதத்தை, சேர்ந்தார்-சார்ந்தவர்கள், நிலமிசை-பூமியின்கண், நீடுவாழ்வார்-எக்காலும் சுகசீவிகளாக வாழ்வார்களென்பது பதம்.

(பொ.) பதுமாதனமென்னும் தாமரை புட்பத்தில் வீற்று பதுமநிதி என்னும் பெயர்பெற்று, ததாகதமுற்றுக் காமனையுங் காலனையும் வென்று நித்தியானந்தம் பெற்றோன் சீர்பாதங்களைச்சார்ந்தோர் நீடிய வாழ்க்கை சுகம் பெறுவார்களென்பது பொழிப்பு.

(க.) கல்லாலடிக்குள் செங்கமலப்பீடத்தின்மேல் வீற்று செவ்விய ஞானத்தை உணர்ந்து ஜகத்குருவாக விளங்கிய உலகநாதனின் மாணடியைச் சேர்ந்தோர் அவரது மாபோதத்தை உணர்ந்து தீவினையை வென்று என்றுமழியா நிப்பானமாம் நித்தியவாழ்க்கைப் பொறுவார்கள் என்பது கருத்து.

(வி.) கல்லால விருட்சத்தின் கீழ் கமலாசனத்தில் வீற்று கமலநாத னென்னும் பெயரும் பெற்ற "புத்தபிரானை" மலருற்று நடந்தவாமனென்றும், தாமரையாசனனென்றும், கமலபாதனென்றுங் கொண்டாடுமாதாரத்தைக் கொண்டே வழி நூலார் மலர்மிசை யேகினான் மாணடிசேர்ந்த போதே அவரது சீலத்தையும், ஒழுக்கத்தையும், மெஞ்ஞானத்தையும் பெற்று நிப்பானமென்னும் நித்தியசுகம் பெறுவார்களென்னுந் துணிபால் நிலமிசை நீடுவாழ்வாரென வைப்புறுத்திக் கூறியுள்ளார். மலர்மிசை யேகினா னென்பதற்குச் சார்பாய் *பின்கலைநிகண்டி* னாக்கியோன் மண்டல புருடன் "மூலருற்றுநடந்த வாமனென்றும், *திரிமத்திர* வாக்கியோன் திருமூலனார் "கடந்துநின்றான் கமலாமலர் மீதே" என்றும், *சீவகசிந்தாமணி* வாக்கியோன் திருத்தக்கதேவர் விண்டலர் பூந்தாமரையின் விரைததும்ப மேனடந்தா" னென்றும், *சூளாமணி* யாக்கியோன் தோலா மொழித்தேவர் விரைமணங்கு தாமரைமேல் விண்வணங்கச் சென்றாய்" என்றும், *அறநெறிச்சார* வாக்கியோன் முனைப்பாடியார் "தாமரைப்பூவின்மேற் சென்றான் புகழடியை" என்றும், *சிலப்பதிகார* வாக்கியோன் இளங்கோவடிகள் "மலர் மிசைச்சென்ற மலரடிக் கல்லதென், றலைமிசையுச்சி தானணிபொறஅ" என்றும் *வாசிட்ட* வாக்கியோன் "புண்டரீகவாதனத்தில் புத்தன்போலுத்தரமுகனா" என்றும், *வீரசோழிய* உதாரணச்செய்யுள் "உறுதாமரைமேலுரைவார்தன்" என்றுங் கூறியுள்ள சமணமுனிவர்களின் சார்பு நூற்களின் ஆதாரங்கொண்டே வழி நூலார் கூறியுள்ள மலர்மிசையேகினானென்னு மொழி புத்தபிரானை குறித்தவையெனத் துணிந்தோதிய விரிவு.

4. வேண்டுதல் வேண்டாமெயிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில்.

(ப.) வேண்டுதல்-விரும்புதல், வேண்டாதல்-விரும்பாதல், இலானடி அற்றவனது சீர்பாதத்தை, சேர்ந்தார்-அடைந்தவர்களுக்கு, கியாண்டு-எக்காலமும், யிடும்பை-பிறவியின் துன்பம், யில்-இல்லையென்பது பதம்.

(பொ.) விருப்பும் வெறுப்புமற்ற புத்தரது கமல பாதத்தைச் சார்ந்தவர்கள் எக்காலுந் துக்கமென்பதற்று சுகநிலை பெறுவார்களென்பது பொழிப்பு.

(க.)விவேகவிருத்தியால் வேண்டுமென்னும் விருப்பும், வேண்டா மென்னும் வெறுப்புமற்ற விண்ணவர்கோன் சீரடியாம் அறஹணடிகளைச் சார்ந்து அவர்கள் விசாரணையால் தங்களுக்குள்ள விருப்பு வெறுப்பற்ற துக்கநிவர்த்தியுண்டாகி எக்காலும் சுகநிலை அடைவார்களென்பது கருத்து.

(வி.) மக்களுள் வேண்டுமென்னும் அவாவே மிகுந்து வேண்டாமென்பது அற்று பாசபந்தமுற்று மாளாப்பிறவிபெற்று துக்கசாகரத்திற் சுழல்வது இயல்பாதலின் புத்தபிரான் அத்தகைய சுழலில் அகப்படாமலும், துக்கசாகரத்தில் அழுந்தாமலும், மாளாப்பிறவிக்கு ஏகாமலும்,பாசபந்தத்திற்சிக்காமலும் இஃது வேண்டும், அஃதை வேண்டாமென்று பற்றாமலும் என்றும் இடும்பை யற்று சதாசுகத்தில் நிலைத்ததன்றி தனது சங்கத்தோர்களாம் அடியார்களையும் தன்மயமென்னும் அறஹணவடிகளாக்கி என்றும் கெடா ஆனந்த சுகத்தில் விடுத்த அநுபவக்காட்சியால் விருப்பு, வெறுப்பற்ற சங்கமாம் அடிகளைச் சேர்ந்தவர்கள் இடும்பையென்னும் பலவகைத் துன்பங்களில் அழுந்தாது சுகநிலை பெறுவரென்னுந் துணிபுகொண்டு வழிநூலார் கூறியவற்றிற்குப் பகரமாக, *மணிமேகலை* ஆக்கியோன் வணிகசாத்தனார் சங்கத்திற் சேர்ந்த சமணமுநிவர்களில் சித்திபெற்ற சாரணர்களையே அடிகளென்பதற்கு, "நிலத்திற் குழித்து நெடுவிசும்பேறிச், சலத்திற்றிரியுமோர் சாரணன் தோன்ற, மன்னவ னவனை வணங்கிமுன்சென் றென்னு யிரனையாளிங் கொளித்தாளுள், என்னளொருத்தியைக் காணிரோவடிகேள்" என்றும், மற்றும் புத்தரை தியானிக்குமிடத்து "மாரனை வெல்லும் வீரனின்னடி, தீநெறிக்கடும்பகை கடப்போய் நின்னடி, பிறற்கறமுயலும்பெரியோர் நின்னடி, துறக்கம் வேண்டா தொல்லோய் நின்னடி, யென் பிறப்பொழிய விருந்தோய் நின்னடி, கண் பிறர்க்களிக்குங் கண்ணோய் நின்னடி, தீமொழிகடிந்த செவியோய் நின்னடி, வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி, நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி, யுரகர் துயர் மொழிப்போய் நின்னடி, வணங்குதலல்லது வாழ்த்துதலென்னா" என்னும் அவரது அடிகளை சிந்தித்து அறவணவடிகளைச்சார்வோரே ஆனந்தவாழ்க்கைப் பெறுவரென்பதை *வீரசோழிய* உதாரணச்செய்யுள், "இருட்பாரவினைநீக்கி யெவ்வுயிர்க்குங் காவலென, வருட்பராந்தனி சுமந்தவன்று முதலின்றளவு, மதுவொன்றி மலரடிக்கீழ் வந்தடைந்தோர் யாவர்க்கும் பொதுவன்றிநினக்குரித்தோ புண்ணியனின் றிருமேனி" என்றும் *அறநெறிச்சார* ஆக்கியோன் முனைப்பாடியார், "குற்றங் குறைத்து குறைவின்றி மூவுலகில் நற்றமரைத்தாங்கருள்பரப்பி - முற்ற உணர்ந்தானைபாடாத நாவல்லவல்ல, சிறந்தான்றாள் சேராத்தலை", என்றும் கூறியுள்ள சார்புலோர் ஆதாரங்கொண்டே வேண்டுதல் வேண்டாமெயென்னும் வினையினீங்கிய இறைவனின் அடியைச்சார்ந்தோர் தங்களது வினையாம் இடும்பை நீங்கி எக்காலும் சுகவாழ்க்கைப் பெறுவார்கள் என்பது விரிவு.

5. இருள் சேரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

(ப.) இறைவன்-வேந்தனாம்புத்தரோதிய, பெர்ருள் சேர்-மெய்ப் பொருளுணர்ந்து, புகழ்புரிந்தார்-சிறக்க பெற்றவர், மாட்டு இடத்து, இருள்சேர்-அஞ்ஞானத்தை விருத்திசெய்யும், இருவினையும்-இரண்டுவகை கன்மங்களும், சேரா-அணுகாவென்பது பதம்.

(பொ.) இறைவனாம் தருமராசனால் ஓதிவைத்த மெய்ப்பொருளை அடைந்து மேதினியிற் சிறந்தோரிடத்து வினைகளிரண்டும் அணுகாவென்பது பொழிப்பு.

(க.) இறைவரி கொள்ளும் அரசனாகத் தோன்றி துக்கநிவர்த்தி அறிவான் வேண்டி துறவு அடைந்து ஓதாமல் உணர்ந்து உண்மெயாம் மெய்ப் பொருளடைந்து இருவினையற்று சதாநிலையுற்று சகலமக்களுக்கும் ஓதிய பொருளையுணர்ந்து புகழ்பெற்றோரை இருவினைகளுஞ்சேராவென்பது கருத்து.

(வி.) வரியிறைக் கொள்ளும் அரசனாகத் தோன்றி பிறப்பினால் உண்டாந் துக்கங்களையும், மூப்பினாலுண்டாந் துக்கங்களையுங் மரணத்தா லுண்டாங் துக்கங்களையுங் கண்டு சகிக்காது இத்துக்கநிவர்த்திக்கானவழி ஒன்றிருக்க வேண்டுமென்று உணர்ந்து இறைவனது நிலையா சுகபோகங்கள் யாவையும் விடுத்து, விருப்பு, வெறுப்பென்பதற்று, நல்வினை தீவினையென்பதை மறந்து, நாமரூபமென்னுந் துவிதபாவனையழிந்து, மெய்ப்பொருளுணர்ந்து, பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடென்னும் நான்கு வகைத் துக்கங்களும் ஒழிந்து சாதுயர் நீக்குந் தலைவன் தவமுநியெனத் தோன்றி, தான் கண்ட காட்சியையும் அநுபவத்தையும் மக்களுக்கு உலகநீதியாயோதி, உண்மெய்பொருளை உணர்ந்து ஒடுங்கவைத்தவராதலின் அவ்விறைவனது பொருளைச் சார்ந்து புகழ் பெற்றோருக்கு இருவினையும் ஒழியுமென்னும் அநுபவக்காட்சியால் வழி நூலாசான் கூறியதன்றி, சார்புநூலோருள் *யாப்பருங்கலை* உரையாசிரியர் குணசாகரனார் "பூந்தண் சினைமலர் மல்கியப்பொழிப்பிண்டி வேந்தன் புகழ்பரவாதவர் வினைவெல்லார், அதனால் அறிவண்நடியிணைப் பரவிப் பெருகுவர் யாவரும் பிறவியிநெறியே". "முருகவிழ் தாமரைமலர் மேன் முடியிமையோர் புடைவரவே வருசினநாதருமறை நூல் வழி பிழையாமனமுடையார், (இருவினை) போய்விழமுனியா தெதிரிய காதியையறியா, நிருமலராயருவினராய் நிலவுவர் சோதியினிடையே" என்றும், *வீரசோழிய* உரையாசிரியர் பெருந்தேவனார், "அருள்வீற்றிருந்த திருநிழற்போதி முழுதுணர் முநிவநிற் பரவுதுந் தொழுதக, வொருமனமெய்தி (யிருவினைப்) பிணிவிட முப்பகை கடந்து நால்வகை பொருளுணர்ந், தோங்கு நீருலகிடையாவரு, நீங்காவின்பமொடு நீடுவாழ்கெனவே," எனுந் தாட்டாந்தத்துடன் அரசனையே இறைவனெனக் கூறியவற்றிற்குப் பகரமாக *ஞானக்கொம்மி*" அரசகுலத்திலுருவாகி அம்பரமான வெளிதனிலே புரச மரத்திலொடுங்கி நின்றான் அவன் பொருளைப் பாரடி ஞானப்பெண்ணே" என்றும் *நெஞ்சறி விளக்கம்*, "அரியதோர் அரசன் மைந்தன் அவனியிலுதித்து முன்னாள், பெரிய பேரின்பஞானம் பெருவதே பெரிதென் றெண்ணி, உரிய வேதாந்தவுண்மெயுரைக்கு மாசானுமாய, தெரியொணா நாகைநாதர் சீர்பதம் போற்று நெஞ்சே" என்றும், *பட்டினத்தார்*, "மானார் விழியைக்கடைத்தேரி வந்தனன் வாண் குருவுங், கோனாகி வந்தென்னைக் குடியேற்றுக்கொண்டனன் குற்றமில்லை, போனாலும் பேரிருந்தாலு நற்பேரிதுபொய்யன்று காணானாலுமிந்த உடலோடிருப்ப தருவெறுப்பே" என்றுங் கூறிய குரு அரசனேயாதலின் இறைவனென்னு மொழி புத்தரையே குறித்ததென்பதுபோன்ற விரிவு.

6. பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ்வார்.

(ப.) பொறிவாயில் - பஞ்சபொறிகளின் வழியே, ஐந்து - அவா ஐந் தினையும், அவித்தான் - அடக்கினவனது, பொய்தீர் - பொய்யை யொழிக்கும், ஒழுக்கம் - நற்றவமாம், நெறிநின்றார் - நிலையில் நின்றவர்கள், நீடு வாழ்வார் நித்தியசுகம் பெறுவார்களென்பது பதம்.

(பொ.) ஐம்புல நுகர்ச்சியால் ஆசை கொண்டு உழலும் பொய்யாகியத் தோற்றத்தை அவித்து மெய்யாய ஐம்பொறிவொடுக்கத்தின் நின்றவரது நெறியில் ஒழுகுவோர் நீடு வாழ்வார்களென்பது பொழிப்பு.

(க.) ஐம்பொறியின் வாயலிற்செல்லும் பொய்த்தோற்றங்களாகிய ஆசைகள் ஐந்தினையும் அவித்து ஆமைபோலுள்ளடங்கி மெய்கண்ட தேவனாம் புத்தரது நல்லொழுக்க நெறியில் நின்று அவரது சாதனத்தைப் பின்பற்றியவர்கள் என்றும் அழியா நீடிய வாழ்க்கைப் பெறுவார்களென்பது கருத்து.

(வி.) கண்ணினாற் பார்த்தப் பொருட்களின்மீதே ஆசைகொண்டலை தலும், மூக்கினால் முகர்ந்த வாசனைகளைநாடி ஆசைகொண்டலைதலும், செவியினாற் கேட்ட மொழிகளில் ஆசைகொண்டலைதலும், நாவினால் உரிசித்த பொருட்களின்மீது ஆசைகொண்டலைதலும், தேகம்சுகித்த போகத்தை

யாசித்தலைவதுமாகிய பொய்தோற்றங்களையும் அதனால் உண்டாந் துக்கங் களையும் ஒழித்து மகராஜனே துறவடைந்தாரென்னும் ஒழுக்கநெறிநின்று, பொறிவாயல் ஐந்தினையும் அவித்து புத்தராகிய மெய்கண்டதேவனை பின்பற்றி அவரது நல்லொழுக்க போதனாநெறியில் நிலைப்பவர்கள் பொய்ப்பொருட் தோற்ற அவாக்கள் ஐந்தினையும் அவித்து தன்னில் தானே தத்துவமாகும் மெய்ப்பொருள்கண்டு என்றும் அழியா நித்திய நிலையில் நீடுவாழ்வார் களென்று வழி நூலார் கூறியவற்றிற்குப் பகரமாய் *வீரசோழிய* உரையாசிரியர் பெருந்தேவனார் "வீடுகொண்டநல்லறம் பகர்ந்தமன்பதைக்கெலாம், விளங்குதிங்கள் நேர்மெயால் விரிந்திலங்கு வன்பினோன் மோடுகொண்ட வெண்ணுரைக் கருங்கடற் செழுஞ்சுடர், முளைத்தெழுந்த தென்னலாய் முகிழ்ந்திலங்கு போதியி, நாடுகின்ற மூவகைப் பவங்கடந்து குற்றமா, மைந்தவித்து மூன்றறுத்த நாதனாண்மலத்துணர்ப் பீடுகொண்ட வார்தளிர்ப் பிரங்குபோதி யானையெம், பிரானைநாளு மேத்துவார் பிறப்பிறப்பிலார்களே" என்றும் *அறநெறிச்சார* ஆக்கியோன் முனைப்பாடியார், "உள்ளப்பெருங்குதிரை, யூர்ந்து வயப்படுத்திக் கள்ளப் புலனைந்துங் காப்பமைத்து, வெள்ளப் பிறவிக் கணீத்தார் பெருங்குணத்தாரைத், துறவித் துணைப்பெற்றக்கால்" என்றும், *சீவகசிந்தாமணி* ஆக்கியோன் திருத்தக்கதேவர் "ஐவகைப் பொறியும்வாட்டி யாமையினடங்கி யைந்தின், மெய்வகை தெரியுஞ்சிந்தை விளக்குநின் றெரியவிட்டுப், பொய், கொலை, களவு, காம, மவாவிருள் புகாதுபோற்றிச், செய்தவனுனித்தசீலக் கனைகதிர்த் திங்களொப்பார்" என்றும் *மணிமேகலை* ஆக்கியோன் வணிகசாத்தனார் "பொருளினுண்மெய் புலங்கொளல்வேண்டும். மருளில்காட்சி யைவகையாகுங் கண்ணால் வண்ணமுஞ் செவியாலோசையு, மூக்கானாற்றமு நாக்காற் சுவையு, மெய்யாலூறு மென்றுஞ் சொன்ன இவ், ஐவகைகண்டு கேட்டுண்டுயிர்த்து" என்றும் *இடைக்காட்டுசித்தர்* "மெய்வாய்கண் மூக்குச் செவி எனுமைந்தாட்டை, வீறுஞ்சுவையொளி யூரோசையாங்காட்டை, யெய்யாம லோட்டினேன்வாட்டி னேனாட்டினேன் ஏகவெளிக்குள்ளே யோக வெளிக்குள்ளே" என்றும், பொறிவாயல் ஐந்தவித்த புத்தரின் பொய்தீர் ஒழுக்க நெறினின்று புலன்தென்பட்டோர் நீடிய சுகவாழ்க்கைப் பெறுவார்களென்பது விரிவு.

7. *தனக்குவமெயில்லா தான்றாள் சேர்ந்தார்க் கல்லான்*
மனக்கவலை மாற்ற லரிது.

(ப.) தனக்கு - தனக்கு, உவமெயில்லாதான் - நிகரற்றவராகுந் ததாகதரின், றாள் சேர்ந்தார்க்கு - சீர்பாதத்தை யடைந்தவர்க்கு, அல்லான் - அல்லது, மனக்கவலை - துக்கவிருத்தியை, மாற்றல் - அகற்றல், அரிது - கடினமென்பது பதம்.

(பொ.) தனக்கு நிகரில்லாதவன் தாளைச் சார்தலே துக்கநிவர்த்திக்கு வழியென்பது பொழிப்பு.

(க.) உலகத்தில் தோன்றிய மக்களுள் புத்தருக்கு நிகராய புருஷவுத்தமன் ஒருவரும் இல்லையாதலால் அவரது கமலபாதத்தைச் சார்தலே மனக் கவலையாம் துக்க நிவர்த்திக்கு வழியல்லது வேறுவழி இல்லையென்பது கருத்து.

(வி.) உலகத்தில் தோன்றியுள்ள மக்களுள் மனக்கவலையாம் பிறவியின் துக்கம், பிணியின் துக்கம், மூப்பின் துக்கம், மரணதுக்கம் ஆகிய நான்கையுங் கண்டுபிடித்து அந்த துக்கம், துக்கோற்பவம், துக்கோற்பவ காரணம், துக்க நிவாரணமாகிய நான்கையும் உணர்ந்து பிறப்பினால் உண்டாம் மனக்கவலை, மூப்பினாலுண்டாம் மனக்கவலை, மரணத்தினாலுண்டாம் மனக்கவலையாய நான்கினையும் மாற்றி துக்கநிவர்த்தியாம் என்றும் அழியா நித்தியநிலைப் பெற்று மக்களென்னும் ஆறாவது தோற்றத்தினின்று ஏழாவது தோற்றமாம் தேவகதியில் ஆதிதேவனென்றும், ஆதிமுநிவனென்றும் ஆதிபகவனென்றும், ஆதிநாதனென்றும், ஆதிகடவுளென்றும் விவேகமிகுத்த மேன்மக்களால்

கொண்டாடப்பெற்றவரும், சாந்தத்திலும், அன்பிலும், ஈகையிலும் அளவுபடா ஞானத்திலும், மலைவுபடா வாக்கிலும் அவருக்கு உவமையாக ரூபிக்க சரித்திரங்களில் வேறுதேவர்கள் ஒருவருமில்லாதலால் தனக்குவமையில்லாதான் தாளைச் சார்ந்தவர்க்கல்லது மனக்கவலையாம் துக்கநிவர்த்தி ஆகாதென வழி நூலார் துணிந்து கூறியவற்றிற்குச் சார்பாக *மணிமேகலை* ஆக்கியோன் வணிகச் சாத்தனார் "சாதுயர்நீக்கிய தலைவன் தவமுனி" யென்றும், "முற்றுமுணர்ந்த முனிவனையல்லது, மற்றைப்பீடிகை தன்மிசை பெறாஅ" என்றும், *வீரசோழிய* ஆக்கியோன் புத்தமித்திரனார் "மிக்கவன் போதியின் மேதக்கிருந்தவன் மெய்தவத்தாற், றோக்கவன் யார்க்குந்தொடரவொண்ணாவன் றூயனெனத், தக்கவன்பாதந் தலைமேற்புனைந்து தமிழுரைக்கப், புக்கவன்பைம்பொழிற் பொன்பற்றி மன்புத்திமித்தரனே" என்றும், *சூளாமணி* ஆக்கியோன் தோலாமொழித்தேவர் "திருமறு வுவலனணிந்து திகழ்கின்ற திருமூர்த்தியொரு மறுவுமிலையென்ப தொழியாமலுணர்த்து மேயொரு மறுவுமில்லையென்ப தொழியாமலுணர்த்துகினு மருமறையை விரித்தாயை யறிவரோ வரியரே" என்றும், "ஒருமெயாற்றுன்பமெய்து மொருவனாயும் மெயாலே, திருமெயான் முயங்குஞ் செல்வச் செருக்கொடு திளப்பநோக்கி, யிருமெயி மொருமெயாலே யியற்றலினிறைவன் போல, பெருமெயையுடைய தெய்வம் பிறிதினி யில்லையன்றே" என்றும், *சீவகசிந்தாமணி* ஆக்கியோன் திருத்தக்கதேவர் "வீங்கோதவண்ணன் விரைத்த தும்புபூம்பிண்டித், தேங்கோதமுக்குடைக் கீழ்த்தேவர்பெருமானைத், தேவர் பெருமானைத் தேனார்மலர் சிதரி, நாவினவிற்றாதார் வீட்டுலக நண்ணாரே" என்றும் தனக்கு என்னுந் தானே தானே தத்துவமானத் தவநிலை முதல்வனுக்கு நிகரில்லாதது விண்டும், ததாகதரையே தலைவனாகக் கொண்டும் மனக்கவலை மாற்றுதற்கு பீடகமாயது கண்டும் புத்தரது சீர்பாதத்தைச் சாராதார்க்குத் தீவினையொழிந்து மனக்கவலை மாறாதென்பது விரிவு.

8. அறவாழி யந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.

(ப.) அறவாழி - தருமச் சக்கரத்தோனாம், அந்தணன் - சாந்தரூபியின், தாளைச்சேர்ந்தார்க்கு - கமலபாதத்தை யண்டினவருக்கு, அல்லால் - அல்லது, பிறவாழி - ஜெனனக்கடலை, நீந்துதல் - கடத்தல், அரிது - கடினமென்பது பதம்.

(பொ.) தருமச்சக்கரத்தோனாம் சாந்தரூபியின் கமலபாதத்தைச் சார்ந்தோர்க்கல்லது ஜெனனக்கடலை கடத்தல் கடினம் என்பது பொழிப்பு.

(க.) எண்ணருஞ்சக்கிரவாளம் எங்கணும் அறக்கதிர் விரித்த அருகனாம் புத்தரது பாதபடியைச்சேர்ந்து அவரது தன்ம பாதத்தில் நடப்போரன்றி ஏனையோர் பிறவிக்கடலாம் துக்கநிவர்த்தியடைவது அரிதென்பது கருத்து.

(வி.) சருவ உயிர்களையுந் தன்னுயிர் போற் காக்குந் தண்மெய்தேகியாய மகாராஜனது திருவடியாம் அறஹணவடிகளைச்சார்ந்தவர்கள் அலைகடல் தோன்றி தோன்றி மறைவதுபோல் பல ஜெனன தோற்றங்களால் மாறிமாறி பிறப்பதற்கு ஏதுவாய் பற்றுக்களற்று துக்கநிவர்த்தியாம் நிருவாணசுக மடைவார்கள். அறவணவடிகளைச் சேராதும் சத்தியதன்மத்தில் நடவாதும் பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசையென்னும் பற்றுக்கள் அறாமலு முள்ளவர்கள் பிறவிக்கடலாந் துக்கநிவர்த்தி பெறுதல் அரிது, அரிதாதலின் அறவாழியானாம் புத்ததன்ம சங்கத்தைச் சார்தலே அழகென்று வழி நூலார் கூறியவற்றிற்குச் சார்பாக *மணிமேகலை* ஆக்கியோன் வணிகசாத்தனார் "அறவியங்கிழவோனடியிணையாகி பிறவியென்னும் பெருங்கடல்விடூஉ" என்றும், "ஆதி முதல்வன் அறவாழியாள்வோன் பாதபீடிகை பணிந்தனளேத்தி" என்றும் "அறக்கதிராழி திறப்பட வுருட்டிய, காமற்கடந்த வாமன்பாதம்" என்றும், *அறநெறிச்சாரம்* ஆக்கியோன் முனைப்பாடியார் "கொல்வதூஉங்

கள் வதூஉ மின்றிப் பிறர்மனையிற், செல்வதூஉஞ் செய்வனகாலல்ல - தொல்லைப், பிறவிதணிக்கும் பெருந்தவர்பாற் சென், றறவுரை கேட்பிப்பகால்" என்றும், *வீரசோழிய* உரையாசிரியர் பெருந்தேவனார் "புண்டரிகபாத நமசரணமாகுமென முநிவர் தீமெய் புணர்பிறவு காணார்" என்றும் *திரிமத்திரம்* ஆக்கியோன் திருமூலர் "அருமெவல்லான் கலைஞாலத்துட்டொன்றும், பெருமெவல்லான் பிறவிக்கடல் நீந்தும், உரிமெவல்லா னடியூடுரவாகி, திருமெவல்லாரொடுஞ் சேர்ந்தன்னியானே" என்றுங் கூறிய ஆதாரங்கொண்டு அறவாழி அந்தணன் புத்தரேயென வற்புறுத்திக் கூறிய விரிவாம்.

9. கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலை.

(ப.) பொறியிற் - பஞ்சபொறிகளினிடத்தே, கோள் - குற்றங்கள், இல் - இல்லாதவனாயினும், குணமிலவே - பயனில்லை, எண்குணத்தான் - எட்டுவகைகுணங்களை யமைந்தவனது; தாளை - சீர்பாதங்களை, வணங்கா - தொழுகா, தலை - சிரமென்பது பதம்.

(பொ.) குற்றமற்ற பஞ்சபொறிகளையுடையத் தலையைப்பெற்ற வனாயினும், எண்குணத்தான் தாளை வணங்காத்தலை பயனற்றதென்பது பொழிப்பு.

(க.) நாவால் வருங் குற்றம், மூக்கால் வருங்குற்றம், செவியால்வருங் குற்றம், கண்ணால்வருங் குற்றம், தேகத்தால் வருங் குற்றம், எண்ணத்தால் வருங் குற்றங்களாய வறுவகைக் கோளற்ற தலையை உடைத்தாவனாயினும் அதனுளவை போதித்தும் நடந்துங்காட்டிய ஜகத்குருவாம் எண்குணத்தானது அடிகளைச் சேராதார்க்கு யாதொரு குணமும் விளங்காதென்பது கருத்து.

(வி.) முன்பு குற்றமற்று குருவாகத் தோன்றிய எண்குணத்தான் யாவரென்னில் பொய்சொல்லாமெய், கொலைசெய்யாமெய், களவாடாமெய், கள்ளருந்தாமெய், பிறர்மனை நயவாமெய் ஆகிய சுத்ததேகியாம் தூயவுடம் பினனானவரும், தன்னைத்தானே அடக்கி ஆட்கொண்ட தன்வயத்தனானவரும், யாதொருவர் போதனையுமின்றி வாலவயதிலேயே அறிவின்விருத்திப்பெற்ற இயற்கை யுணர்வினனானவரும், சகலமும் அறிந்த முனிவனென முற்றும் உணர்ந்தவரானவரும், இராஜ போகத்தைத் துறத்தற்கு இயல்பாகவே பாசபந்தங்களினின்று நீங்கியவரும், அன்பே ஒருருவாகத் தோன்றிய பேரருளுடலையுடையவரும், கடைத்தேறிநிருவாணம் பெற்று முடிவிலா ஆற்றலடைந்தவரும், பேரின்பமாம் வரம்பில் இன்ப மமைந்தவரும் புத்தர் ஒருவரே ஆதலின் அறுவகைக்குற்றங்களை அறுத்தோனாயினும் எண் குணத்தானடிகளை வணங்கி எண்குணத்தோனாவதே குணமன்றி அறுவகை குற்றங்களற்ற சிரமாயினுங் குணமில்லையென்பது கண்டு வழி நூலார் குற்றமற்றுங் குணங்குடிக்கொள்ளும் ஏதுவை விளக்கியுள்ளார். இதனது சார்பாக *வீரசோழிய* உரையாசிரியர் பெருந்தேவனார் "எண்ணிறைந்த குணத்தோய்நீ, யாவர்க்கு மரியோய் நீ" என்றும், "அருள்வீற்றிருந்த திருநிழற்போதி, முழுதுணர் முநிவநிற் பரவுதுந் தொழுதக" வென்றும், "பொதுவன்றிநினக்குரித்தோ புண்ணியனின் றிருமேனி" என்றும், *மணிமேகலை* ஆக்கியோன் வணிகசாத்தனார் "முற்றுமுணர்ந்த முதல்வனையல்லது மற்றைப்பீடிகை தலைமிசைப்பெறாஅ" வென்றும், *சூளாமணி* ஆக்கியோன் தோலாமொழித்தேவர் "சோதியும்பே ரெண்குணனுந் துப்புரவுந்துன்னுவரே" என்றும், "கடையி லெண்குணத்தது காகராகர்க" வென்றும், *சீவகசிந்தாமணி* யாக்கியோன் திருத்தக்கதேவர் "பூத்தொழியாப் பிண்டிக்கீழ்ப்பொங்கோத வண்ணனை நாத்தழும்ப வே . . . யீட்டுலக நண்ணாரே, வீட்டுலக . . . னகள் வராதுதரி, வோட்டிடுபவென்னுக் குட்பட்டயர்வாமே" என்றும், *பின்கலை நிகண்டினாக்கி* யோன் மண்டல புருடன் "அநக னெண்குணன் நிச்சிந்தன் அறவாழிவேந்தன் வாமன்" என்றும், கூறியுள்ள நூற்களின் ஆதாரங்கொண்டு எண்குணத்தா னென்னும் பெயர் புத்தருக்குரிய சகஸ்திரநாமங்களில் ஒன்றென்றே துணிந்து கூறிய விரிவாம்.

10. பிறிவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
றிறைவனடி சேராதார்.

(ப.) இறைவன் - போதி வேந்தனது, அடி - தன்மபாதத்தை யடைந்தோர், பிறவிப்பெருங்கடல் - ஜெநநசாகரத்தை, நீந்துவர் - கடப்பார், சேராதார் - அடையாதார், நீந்தார் - கடக்கமாட்டார்க ளென்பது பதம்.

(பொ.) போதி வேந்தனாம் அறவணனடிகளைச் சேர்ந்தோர்க்குப் பிறவியினது துக்கம் ஒழியும் சேராதார்க்குத் துக்கம் ஒழியாதென்பது பொழிப்பு.

(க.) அலையுற்ற கடல்போல் அவாவின் பெருக்கப்பற்றினால் உண்டாம் பிறவியின் துக்கத்தைப் போக்கிக் கொள்ளவேண்டியவர்கள் புத்தரது அடிகளாய சாரணசங்கத்தைச் சேர்ந்து அவரது போதனா ஓடத்திலேறி வாணமென்னும் பாசபந்தக் கட்டுக்களைக் கடந்து நிருவாணமென்னும் பிறவியற்றக் கரைசேர்வார்களென்பது கருத்து.

(வி.) பிணியின் துக்கத்தையும், மூப்பின் துக்கத்தையும், மரண துக்கத்தையும் கண்ணினாற்கண்டு இத்தகைய துக்கங்களுக்கு ஏதுபிறப்பென்றும், பிறப்பிற்கு ஏது பாசபந்த பற்றுக்களென்றும், பற்றுக்களுக்கு ஏது அவாவென்றுங் கண்டுணர்ந்து தனது அரசபோக அவாவினை ஒழித்து பாசபந்தப் பற்றுக்களை அறுத்துப் பிறவியென்னுந் துன்பக்கடலை கடந்தபெரியோன் தான் கடந்த வழியை உலகமக்களுக்கூட்டி அவர்களுக்குள்ள பல இன்பதுன்பங்களையும் ஒழிக்கச்செய்விக்கவேண்டுமென்னுங் கருணையின் பற்றினால் சத்திய சங்கங்களைச்சேர்த்து சாரணர்களாம் அறவணவடிகளை நிலைக்கச்செய்து அவ்வடிகளைச் சேர்ந்தோர்களைப் பிறவியின் சமுத்திரத்தைக் கடந்து கடைத்தேறச் செய்துவருகின்றபடியால் அவரது அடிகளாம் சங்கத்தைச் சேர்ந்தவர்களே பிறவியின் துக்கத்தை ஒழித்து பிணியின் துக்கம், மூப்பின் துக்கம், மரண துக்கம் யாவையும் ஜெயிப்பரென்னும் அநுபவக்காட்சியால் அவரடிகளைச் சேர்ந்தோரேபிறவியின் கடலைக்கடப்பரென்றும் அடிகளைச்சேராதோர் பிறவியின் கடலைக் கடவாரென்றுந் துணிந்து கூறியவற்றிற்குச் சார்பாக *சீவகசிந்தாமணி* ஆக்கியோன் திருத்தக்கதேவர் "கருமக்கடல்கடந்த கைவலச் செல்வ, னெரிமல்ர்ச்சேவடியை யேத்துவார் யாரே, யெரிமலர்ச் சேவடியை யேத்துவார் வான்றோய், திருமுத்தவிராழிச்செல்வரேயன்றே" என்றும், *சித்தாந்தக்கொத்து* "அருநெறியார் பாரமிதையாறைந்து முடனடக்கிப், பொருள் முழுதும் போதிநிழனன்குணர்ந்தமுநிவரன்ற, னருள்மொழியா னல்வாய்மெ யறிந்தவரே பிறப்பறுப்பார், மருணெறியாற் பிறநூலு மயக்கறுக்குமா றுளதோ" வென்றும், *மணிமேகலை* ஆக்கியோன் வணிகச்சாத்தனார் "அறவியங் கிழவோ னடியிணையாகிய, பிறவியென்னும் பெருங்கடல் விடுஉ" என்றும், "என்பிறப்பொழிய நின்றோய் நின்னடி" என்றுங் கூறியுள்ள சார்பால் புத்தரது சங்கதன்மமென்னும் ஈரடிகளைச்சேர்ந்தோரே பிறவியின் கடலை நீந்துவர். ஏனையோர் நீந்தாரென்பது விரிவு.

இப்பாயிரம் பத்துப்பாடலினும் ஆதியங் கடவுளாம் புத்தரையே வாழ்த்தி அவரது அடிகளாம் சங்கத்தையும் தன்மத்தையும் சிறப்பித்துக் கூறியவற்றுள் மகடபாஷையாம் பாலியினின்று சகட பாஷையாம் வட மொழியையும், திராவிட பாஷையாம் தென் மொழியையும் அக்கைதங்கையர் போல் முதற்குரவராம் ஆதிபகவனால் ஈன்றும் அவரது முதநூலாம் திரிபேத வாக்கியங்களென்னும் திரிபீடகமாம் மும்மறை மொழிக்கும் வழி நூலாந் திரிக்குறளெனத் தோன்றியுள்ள இம்முப்பாலுக்கு அந்தரார்த்தங் கூறுமிடத்து வடமொழியும் தென்மொழியும் மருவி நிரவுவதால் மார்க்கம் விளங்குமன்றி மருவாவிடத்து மறைவதுகண்டு இருமொழியையும் நிரவி வரைந்துவருகின்றாம். இவற்றுள் எஞ்சிய பாலிநிகண்டினது மேற்கோள் மிஞ்சும் புத்தகத்தில் வெளியாம்.

புத்தரது சிறப்புப் பாயிரம் முற்றும்

2. மழையினது சிறப்பு

1. வானின் றுலகம் வழங்கி வருதலாற்
நானமிழ்த மென்றுணற் பாற்று

(ப.) வானின்று - ஆகாயத்தினின்று பெய்யு மழை, உலகம் - சருவ சீவதோற்றங்களுக்கும், வழங்கிவருதலால் ஊட்டி வளர்த்துவருகிறபடியால், தானமிழ்தம் - தாயின் பாலுக் கொப்பாயதென்று, உணரற்பாற்று - தெரிந்துகொள்ள வேண்டுமென்பது பதம்.

(பொ.) உலகத்தில் தோற்றும் சருவசீவர்களையும் தாய்பால் போலூட்டி கார்த்துவருவது மழையே என்பதுபொழிப்பு.

(க.) உலகத்தில் தோன்றும் எழுவகைத் தோற்றங்களை தோற்றவைப்பதுஉ மழை, அதனை வளர்ப்பதும் மழையேயாதலின் அதனைத் தாயின் அமுதுக்கு ஒப்பென உணர்தற் கருத்து.

(வி.) பூமியினின்று புற்பூண்டுகள்தோற்றுவதற்கும், புற்பூண்டுகளினின்று புழுக்கீடாதிகள் தோற்றுவதற்கும், புழுக்கீடாதிகளினின்று மட்சம் பட்சிகள் தோற்றுவதற்கும், மட்சம் பட்சிகளினின்று ஊர்வனங்கள் தோற்றுவதற்கும், ஊர்வனங்களினின்று மிருகாதிகள் தோற்றுவதற்கும், மிருகாதிகளினின்று மக்கள் தோற்றுவதற்கும் மக்களினின்று தேவர்கள் தோற்றுவதற்கும் வானின்று வழங்கும் மழையே ஆதாரமாக உள்ளதால் தாயானவள் அமுதூட்டி தன் மக்களை கார்ப்பதுபோல் உலக தோற்றத்திற்கும் போஷிப்புக்கும் மழையே ஆதார மென்பது விரிவு.

2. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்கு
துப்பாய தூஉ மழை.

(ப.) துப்பார்க்கு - குற்றமுள்ள பொல்லார்க்கும், துப்பாய - குற்றமற்ற நல்லோர்க்கும், துப்பாக்கி - உவரகற்றி, துப்பார்க்கு - பொல்லாருக்கும், துப்பாய - சுத்தமாகத், தூஉமழை - பெய்யுமழை யென்பது பதம்.

(பொ.) பொல்லார்க்கும், நல்லோர்க்கும், புல்லுக்கும், நெல்லுக்கும் பொதுவாகப் பெய்யுமழை என்பது பொழிப்பு.

(க.) மழையானது பொல்லாரென்றும் நல்லாரென்றும் பேதம்பாராது பெய்யக் கூடியதாயினும் தனக்குள்ள உவராகிய உப்பை நீக்கி சுத்தமாகப் பெய்வதே அதன் சிறந்தகுணமென்பது கருத்து.

(வி.) சமுத்திரத்திலுள்ள நீரை ஆகாயத்திற் கிரகித்து தனக்குள்ளத் துப்பாகிய உப்பை ஆகாய உப்புடன் கலந்துவிட்டு துப்புற்ற பொல்லாரென்றும், துப்பற்ற நல்லோரென்றும் பேதம்பாராது தனக்குள்ள உவரென்னுந் துப்பை அகற்றி சுத்தநீரைப் பெய்யுந் துப்பகன்ற மேலாயச் செயலை தனக்குள்ள குற்றத்தை நீக்கி எதிரிக்குள்ள குற்றம்பாராது சுகமளிக்கும் சிறந்த செயலை சிறப்பித்துக் கூறிய விரிவாம்.

அகஸ்தியர் முப்பு

ஆதியுப்புவிண்ணிலே அனாதியுப்பு வேலையில்
ஆழிநீரையுண்டுகர்ப்ப மாயிருந்து குண்டலும்
சோதியுற்றநாளில்மேனி சூலுடைந்தமாரியாய்
தூரும்வேளைதன்னில்மின்னல்மீருமம்பலத்திலே

மோதியக்கினிக்கடாவி வீழு மங்கிடிச்சுடர்
மூலவிந்து பூமியூடு தானிரங்கி மேலுவர்
சாதியுற்றளத்திலே சமாதிகொண்டதையனே
சத்தியுள்ளடக்கமாகத் தானிருந்த தீசனே.

3. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

(ப.) விண்ணின்று - ஆகாயத்தினின்று பெய்யவேண்டிய காலமழை பொய்ப்பின் - பெய்யாவிடின், வியனுலகத்து - மண்ணுலகத்து, விரிநீர் -

சமுத்திரநீர் சூழ்ந்திருப்பினும், பசி - பசியக்கினியானது, உண்ணின்று - தனக்குள் தானே தோன்றி, றுடற்றும் - வதைக்கும் என்பது பதம்.

(பொ.) சமுத்திர நீர் சூழ்ந்த மண்ணுலகமாயினும் மழைப்பெய்யாவிடின் மக்கள் வாதைக்கு உள்ளாவ ரென்பது பொழிப்பு.

(க.) உப்புநீர் உலகை சமுத்திரமாகச் சூழ்ந்திருப்பினும் மக்களுக்குப் பயனில்லை, அச்சமுத்திர நீர் ஆகாயத்திற்கு ஏகி அதிலுள்ள உவர்நீக்கி சுத்தநீராகப் பெய்வதே பயன். ஆதலின் அந்நீர் பெய்யாமல் பொய்க்குமிடத்துள்ள சீவர்கள் சருவமும் பசியால் வருந்துமென்பது கருத்து.

(வி.) பசிக்கு ஆதாரம் புசித்தலும் அருந்துதலுமாம். புசித்தலுக்கும் அருந்துதலுக்கும் ஆதாரம் மண்ணும் நீருமென்னப்படும். அந்நீருள் சமுத்திர நீரை விளைநிலத்திற்குப் பாய்ச்சில் பலன்தரா. அருந்தினுந் தாகந்தீரா. ஆதலின் விரிந்து பரவிய சமுத்திரநீர் எங்கும் எக்காலத்துங் கிடைக்கக்கூடியதாயினும் சீவராசிகளுக்குப் பயனில்லை. அதனிலுள்ள உப்பை ஆகாய உப்புடன் சேர்த்துவிட்டு, சுத்தநீராகப் பெய்யும் மழையால் விளைநிலங்களில் தானியங்கள் விளைந்து சீவராசிகளுக்குப் புசிப்பளிப்பதுமன்றி அருந்துதலுக்கும்ஆதாரமாகிப் பசியாற்றி போஷித்துவருகின்றது. அத்தகைய விண்ணீர் காலத்திற்பெய்யாது பொய்த்துப் போமாயின் சருவசீவர்களும் பசியால் வருந்தி மடியுமென்று கூறியுள்ளவற்றிற்குச் சார்பாய் *திரிவாசகம்* ஆக்கியாளாகும் அம்மனும் " "வானஞ்சுருங்கிற் றானஞ்சுருங்கும்" எனக் கூறிய விரிவாம்.

4. *ஏரினுழாஅ சூழவர் புயலென்னும்*
வாரிவளங் குன்றிக்கால்.

(ப.) உழவர் - வேளாளர், புயலென்னும் வாரி - ஏரிநீர், வளங்குன்றி - நீர்வளங்குன்றிய, கால் - காலத்தில், ஏரி னுழாஅ - யேருழாரென்பது பதம்.

(பொ.) மழைபெய்யாது புயலென்னும் பெரும் ஏரி குன்றுமாயின் வயலுக்குப்பாயும் நீரற்று வேளாளர் பூமியை ஏருவிழாரென்பது பொழிப்பு.

(க.) காலமழைப்பெய்து பெரும் ஏரிகளில் நீர் நிறைந்துள்ளகாலத்தில் உழவர் பூமியை உழுது நீர்பாய்த்து தானியங்களை விளைவிப்பார்கள். காலமழை பெய்யாது ஏரிநீர் வற்றிப்போமாயின் மேழியர்கள் மாடுபூட்டி வயல்களை ஏருவிழா அரென்பது கருத்து.

(வி.) வயல்கள் சூழ்ந்த கிராமவாசிகளாகிய வேளாளர்கள் தங்கள் பண்ணைத்தொழிலைச் சரிவரச்செய்து காலமறிந்து தானியங்களை விளை வித்துத் தாங்கள் சுகம் பெறுவதுடன் ஏனையமக்களும் சீவராசிகளும் புசித்து சுகவிருத்தி பெறுமாறு கிராமங்களுக்கருகே புயலேரிகளைக் கட்டி வயல்களுக்குக் காலத்திற்குத் தக்கவாறுநீரினைப் பாய்த்து நாத்துமுடி ஓங்கவும், நாத்துமுடி ஓங்க கதிருகள் பெருகவும், கதிருகள் பெருக, தானியவிருத்தி யடையவும், தானியவிருத்தி பெருக குடி, படை, சகலமும் ஓ ங்கவும் குடிகளும், படைகளுமோங்க அரசர் சிறக்கவுமாயுள்ளது மழையினால் நிறம்பியுள்ள புயலேரிகளின் ஆதாரமேயாதலின் அத்தகைய மழைபெய்யாமலும் பெரும் ஏரிகள் நிரம்பாமலும் போமாயின் வயல்களும் வறண்டு நாத்துமுடிகளுந் தீய்ந்து, பயிறுகளும் பாழடைந்து, சீவராசிகளும் பசியால் மடியவேண்டியது மெய்யாதலின் புயலேரிகளது நீர்வளங்குன்றில் வேளாளர்கள் ஏருவிழார் களென்பது விரிவு.

ஏரெழுபதின் ஆக்கியோன் கம்பர் கூறியவை:

வெங்கோபக் கலிக்கடந்த வேளாளர் விளைவயலுட்
பைங்கோல முடிதிருந்த பார்வேந்தர் முடிதிருந்தும்
பொங்கோதக் களியானைப் போர்வேந்தர் நடத்துகின்ற
செங்கோலைத் தாங்குங் கோல் ஏரடிக்குஞ் சிறுகோலே

பார்பூட்டுந் திசையனைத்தும் பகடுகளும் பரம்பூணா
போர்பூட்டுங் காமனுந்தன் பொருசிலைமேற் சரம்பூட்டான்
கார்பூட்டுங் கொடைதடக்கை காவேரி வளநாடர்
ஏர்பூட்டி லல்லதுமற்றிரவியுந்தேர் பூட்டானே.

காவேரி என்பது குடிகளைக் காக்கும் ஏரியென்றும், புயலேரியென்பது பெருநீர்வளம் ததும்பிய ஏரியென்றும் வழங்கப்படும்.

5. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற்றாங்கே
யெடுப்பதூஉ மெல்லா மழை.

(ப.) கெடுப்பதூஉங் - சீர்கெடுப்பதும், கெட்டார்க்கு - அவ்வகை சீர்கெட்டோர்க்கு, சார்வாய் - உதவியாய், மற்றாங்கே - மற்றும் அக்காலத்து, யெடுப்பதூஉம் - சீர் தூக்குவதற்கும், எல்லாமழை - காரணமாயுள்ளது மழையே என்பது பதம்.

(பொ.) சீவராசிகளது சீரைக்கெடுப்பதற்கும், மற்றுமவர்களுக்கு சீரளித்துக் கார்ப்பதற்கும் எல்லாமாயுள்ளது மழையே என்பது பொழிப்பு.

(க.) வேளாளர்கள் விளைவித்துள்ள தானியங்கள் மடியவும் அதனால் சீவராசிகள் கெடவும், மற்றும் அவ்வகை மடிந்த பயிர்கள் தலை நிமிரவும், பயிர்களோங்கவும் சீவராசிகள் சிறக்கவுமாயுள்ளது மழையே என்பது கருத்து.

(வி.) காலமழைப் பெய்யாவிடின் விளைவித்த விளைவும், நட்ட நடவும் மடிந்து சீவராசிகள் புசிப்பும் அருந்துதலுங்கெட்டு சீரழிவதற்குங் காரணம் மழையேயாம்.

நட்ட நடவும் விளைத்த விளைவும் முடிதிருந்தி ஓங்கவும், தானிய சம்பத்துப் பெருகவும், சீவராசிகள் யாவற்றும் சுகச்சீரடையவுமாயுள்ளதூஉம் மழையேயாம்.

ஆதலின் உலகத்தோற்றத்திற்குக் காரணம் மழையும், அதன்கேட்டிற்குங் காரணம் மழையுமே என்பது அநுபவக் காட்சியால் உணர்ந்தநாயன் கெடுப்பதுவுங் கெட்டவற்றை எடுப்பதுவும் மழையே என்று கூறிய விரிவாம்.

6. விசும்பிற்றுளிவீழி னல்லான்மற்றாங்கே
பசும்புற்ற லைக்காண் பரிது.

(ப.) விசும்பில் - ஆகாயத்தினின்று, துளி - மழைத் திவலையானது, வீழினல்லான் - பெய்யாமற்போமாயின், மற்றாங்கே - பூமியின்கண், பசும்புல் - பசியநிறமமைந்த முதற்றாபரந், தலைக்காண்பரிது - தோற்றுவதரிதென்பது பதம்.

(க.) மழையினது திவலையானது பூமியின்கண் விழாதுபோமாயின் உலகத்தில் ஓரறிவுயிராய் முதற்றோன்றும் பசும்புல்லுங் கண்களில் காண்பது அரிது என்பது கருத்து.

(வி.) ஓரறிவுயிரென்றும், ஈரறிவுயிரென்றும், மூவறி உயிரென்றும், நாலறி உயிரென்றும், ஐயறி உயிரென்றும் தோற்றும் எழுவகைத் தோற்றத்துள் முதல்தோற்றமாம் புல்முதற்றாபரமே ஓரறிவுடைய வாதியாதலின் அத்தகையப் பசும்புல் தோற்றத்திற்கே ஆதாரம் மழை என்னப்படும். அம்மழைத்துளி பூமியின்கண் வீழாமற்போமாயின் முதல் தோற்றமாம் பசும்புல்லுந் தோற்றாதென்பது விரிவு.

7. நெடுங்கடலுந்தன்னீர்மை குன்றுந்தடிந்தெழிலி
தானல்கா தாகிவிடின்.

(ப.) தடிந்தெழிலி - தடித்தெழும்புமேகமானது, தானல்காதாகிவிடின் - தன்காலத்திற்றான் பெய்யாவிடின், நெடுங்கடலும் - நெடிய கடலுக்கும், தன்னீர்மை குன்றும் - தனது செயலுங் குன்றுமென்பது பதம்.

(பொ.) இருண்டெழும்பும் மேகமானது தன்காலத்தில் பெய்யாவிடின் கடலினது நீர்மையாம் பலன்கெட்டு மணிகளுங் கொழிக்காதென்பது பொழிப்பு.

(க.) நெடுங்கடலில் தோன்றும் பாசிமணி, பவழமணி, சிப்பிமணி முதலிய தோற்றங்களுக்கு ஆதாரம் மழையேயாதலின் காலத்திற்குக்காலம் அம்மழை பெய்யாவிடின் கடலினது நீர்மையாம் பலனுங் குன்றுமென்பது கருத்து.

(வி.) கடல்நீரை மொண்டுசென்ற கருமுகிலானது தனக்குள்ள உப்பை ஆகாய உப்புடன் சேர்த்துவிட்டு சூடுண்டாகி மின்னல்மீறி மோதியக்கினிக் கடாவு மிடிச்சுடருடன் தூவும் சுத்தநீரினது செயலால் கடலினது நீர்மையி

சிறப்புறுவது இயல்பாம். அதாவது கடலினது உவர்நீரில் உப்பற்ற சுத்தநீரைத் துளிர்ப்பதாயின் பவழங்கொடி பரவுவதற்கும், சிப்பிமுத்து குழூஉவதற்கும், மட்சங்கள் ஆகாரம் பெறுவதற்கும் நீர்மெயாம் அத்தகைய சுத்தநீர் பெய்யாமல் போமாயின் நெடுங்கடலினது நீர்மெயாம் சீர்மெயுங் குன்றுமென்பது விரிவு.

நாயனாதிகாரர்காப்பியம்

வானமாலியுங் காய்வதேதெனப் புவிவதைப்ப
மானமாவுற வெஞ்சுடர் மாரியே படைகொண்
டூனமாக்கென வுச்சியி லம்பிடி பொழிந்து
தானமேகரை வாக்கினசரிவுநீர் தோற்றம்
பல்லுயிர்க் கொருதந்தையாம் பருதியவ்வுயிரைக்
கொல்லுகுத்தலைக் கூவெனந்தாயுளத் திரங்கிச்
செல்வியை திறைத்தெரிசன மறைக்கவும் காக்குக்
கல்வியின் முலைப்பால் சுரந்தளித்தெனக் காண்டும்

8. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

(ப.) வானம் - மழையானது, வறக்குமேல் - சுருங்குமாயின், வானோர்க்கு - மக்களுட் சிறந்த தேவர்களுக்கு, சிறப்போடு உற்சாகத்துடன், பூசனை - பூசித்த லாகியச் செயல்கள் யாவும், மீண்டும் - துணிந்தும், செல்லாது - நடவாது என்பது பதம்.

(பொ.) வானஞ் சுருங்குமாயின் தேவர்களைக் கொண்டாடும் பூசனையுஞ் சுருங்குமென்பது பொழிப்பு.

(க.) ஆறாவது தோற்றமாகிய மக்கள் ஏழாவது தோற்றமாகிய தேவர்களை உற்சாகஞ்செய்தலும் பூசித்தலுமாகிய சிறப்புகள்யாவும் மழைப்பெய்யாவிடின் நடவாவென்பது கருத்து.

(வி.) முட்டையில் பிறப்பும், வேர்வையில் பிறப்பும், விதையில் பிறப்பும், கருப்பையில் பிறப்புமாகிய நான்குவகை யோனியுள் எழுவகைத் தோற்றங்களை ஆராய்ந்தறிந்த சமணமுனிவர்கள், கருப்பைத் தோற்ற நரரிலிருந்து மக்களும், மக்களிலிருந்து நிருவாணம்பெற்ற தேவர்களுந் தோற்றுவதைத் தெள்ளற விளக்கியுள்ளார்கள். அவர்களது சிறப்பைக் கொண்டாடுவது இந்திரர்தேய மக்களின் இயல்பாம். அத்தகையோரைக் கொண்டாடும் இயல்பின் காரணமோ வென்னில் மக்களுக்குள்ள காமவெகுளி மயக்கங்களால் உண்டாம் பொன்னாசை, மண்ணாசை, பெண்ணாசையாகிய மூன்றினது ஆசாபாசப் பற்றுக்களில் ஆழ்ந்து மாளாப்பிறவியில் தோய்ந்து துக்கத்தைப்பெருக்கிக் கொண்டே துன்பம் அடைவார்கள். காம வெகுளி மயக்கங்களால் உண்டாம் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசையால் உண்டாம் ஆசாபாசப் பற்றுக்களை அறுத்து மாளாப்பிறவியில் உண்டாம் பிணியினது துக்கம், மூப்பினது துக்கம், மரணத்தினது துக்கங்கள் யாவையும் அகற்றி நித்தியானந்த முற்று இரவு பகலற்ற நிருவாணம் பெற்று தேவர்களென்னும் ஏழாவது தோற்றமடைந்த பேரானந்த சிறப்பைக் கண்ணாறக் காணும் ஆறாவது தோற்ற மக்கள் அவர்களை சிறப்பிப்பதும், ஆனந்தங் கொண்டாடி பூசிப்பதும் இயல்பாம். அத்தகைய பூசிப்பும் சிறப்பும் மழையினது பெருக்கத்தால் உண்டாமேயன்றி மழை சுருங்குமாயின் இராதென்பது விரிவு.

9. தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனில்.

(ப.) வானம் - மழையானது, வழங்காதெனின் - பெய்யாமற்போமாயின், தானமும் - முப்பத்திரண்டு தானங்களும், தவமிரண்டும் - ஞானசாதனமுடன் இரண்டும் நடவாமல் போவதுடன், வியனுலகம் - தேவலோகமும், தங்கா - நிலையா என்பது பதம்.

(பொ.) வானினது ஈகை ஒன்று குறையுமாயின் மற்ற எச்சுகமும் நிலையா என்பது பொழிப்பு.

(க.) காலமழைச் சரிவறப் பெய்யாது காய்ந்துபோமாயின் நரரது நற்செயலால் மக்களாவதும், மக்களது ஈகையின் பெருக்கத்தால் தவமிகுதியாவதும்,

தவமிகுதியால் தேவகதி பெறுவதும், தேவகதியால் தேவலோகம் அடைவதுமாகிய செயல்கள் யாவும் அற்று நிலைதவறிப் போமென்பது கருத்து.

(வி.) உலகத்தில் காலமழை பெய்யவும் பயிறுகள் ஓங்கவும் மக்கள் சிறப்புற்றோங்குவதுமாகிய காலத்தில் சாது சங்கங்கள் சேருவதும், தானங்கள் ஈவதும், இதயசுத்தமாம் மனமாசு கழுவுதலும் நிருவாணமாம் நித்தியசுகம் பெறுகுதலும், ஏழாவது தெய்வதோற்றமடைந்து பரிநிருவாணமுற்று தேவலோகமாம் அகண்டத் துலாவி ஆனந்த சுகவாரியில் லயிப்பதுவும் இயல்பாம். அத்தகையக் காலமழை பெய்யாது ஆற்று நீர்கள் தீய்ந்து தானியங்களுமற்றுப்போமாயின் மக்கள் யாவரும் பசிபட்டினியால் வருந்தி புசிப்பிற்கு ஆதாரந் தேடுதலும், அருந்துதலுக்கு நீர் தேடுவதுமே ஓர்பெரும் விசாரமாயிருக்கு மேயன்றி தானச்செயலும் தவவிசாரிணையுமற்று நிலைகுலைவதால் நிருவாணமென்னும் சுகநிலையும் பட்டு தேவலோகமென்னும் பெயருங்கெட்டுப் பாழடைவது நிட்சயமாதலின் வானஞ்சுருங்குமாயின் தானந் தவங்களுஞ் சுருங்கி தேவலோகமென்னும் பெயரும் நிலைகுலையும் என்பது விரிவு.

10. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

(ப.) உலகெனின் - உலகமென்னும் பெரும்பேரானது, நீரின்றமையாது - நீரில்லாமல் அமையாதது போல், யார்யார்க்கும் - உலகிலுள்ள மக்கள் யாவருக்கும் உள்ள, ஒழுக்கு - நல்லொழுக்கச் செயல்கள் யாவும், வானின்றமையா - மழையில்லாமல் போமாயின் நிலைபெறா என்பது பதம்.

(பொ.) சருவ தோற்றங்களுக்கும் நீரே ஆதாரமாய் இருப்பதுபோல் மக்களுக்குள்ள சருவ நல்லொழுக்கங்கள் யாவற்றிற்கும் மழையே ஆதாரம் என்பது பொழிப்பு.

(க.) உலகத்தில் தோற்றும் புற்பூண்டுகள் முதல் மற்றுந் தோற்றங்கள் யாவும் அமைதற்கு நீரே ஆதாரமன்றி வேறில்லாததுபோல் மக்களது ஒழுக்கங்களாம் சீலநிலைகள் யாவும் மழையின்றி நடவாதென்பது கருத்து.

(வி.) நீரின்றி புற்பூண்டுகள் முதல் ஈறாகவுள்ள தேவர்களென்னும் எழுவகைத் தோற்றங்களும் அமைதல் அரிதாவதுபோல் சருவ மக்களுக்கும் உள்ள நற்காட்சி, நற்கடைபிடி, நல்வாய்மெய், நல்லூக்கம், நல்லமைதி, நல்லுணர்ச்சியாய ஒழுக்கங்களும், கொலை செய்யாமெய், பொய்சொல்லாமெய், களவாடாமெய், கள்ளருந்தாமெய், பிறர்மனை நயவாமெய் ஆகிய சுத்த தேகிகளாக வாழும் சீலங்களும் மழையில்லாமல் அமையாதென்பது விரிவு.

3. நீத்தார் பெருமையென்னும் நிருவாணம் பெற்றோர் சிறப்பு

உலக பாசபந்த பற்றுக்களற்று உள் விழிபெற்று சருவமு முணர்ந்து சதாசுகத்தினிற்கு மகாஞானிகளது சிறப்பினை கூறுகின்ற படியால் இவ் வதிகாரத்தை நீத்தார் பெருமையென வரைந்துள்ளார்.

1. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.

(ப.) விழுப்பற்று - ஆசையற்று, ஒழுக்கத்து - ஒழுக்கத்து நின்று, நீத்தார் - பற்றை அகற்றினவர்களது, பெருமை - உண்மெய் சிறப்பு ஏதெனில், பனுவல் - புத்தாகமத்தை, வேண்டும் - உசாவிய, துணிவு - தீவிரமென்பது பதம்.

(பொ.) ஆசையை அகற்றி ஒழிக்கினின்று பற்றற்று உண்மெய் உணருஞ் சிறப்பு யாதெனில்: புத்தாகமத்தை ஆழ்ந்துவிசாரித்தத் துணிபென்பது பொழிப்பு.

(க.) பனுவலாம் புத்தாகமத்தை ஆழ்ந்து விசாரித்த அதிதீவிரத்தால் மூவாசைகளுமற்று ஒழுக்கத்தினின்று நீத்து பெருமையாம் உண்மெ யுணர்ந்தார்கள் என்பது கருத்து.

(வி.) மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்னும் மூவாசைகளுமற்று நல்லொழுக்கத்து நிலைத்து தீவினை ஒழித்து உண்மெய் உணர்ந்து முநிவுறும் பெருமெய் உண்டாதற்குக் காரணம் புத்தாகமம் என்னும் பனுவலாம் ஆதிவேதம் என்பது கண்டு நீத்தாரது சிறப்பைக் கூறுமிடத்து நீத்தற்குக் காரணமாயுள்ள முதநூல் விசாரிணைத் துணிபை விளக்கியவற்றிற்குப் பகரமாக சார்பு நூலார் *சூளாமணி* ஆக்கியோன் தோலாமொழி தேவர் "ஆதிநாளரசர் தங்கலருங்குல அமைந்துமாக்கி, யோதநீருலகின் மிக்க ஒழுக்கமுந் தொழிலுந்தோற்றித், தீது தீர்ந்திருந்தபெம்மான் திருவடி சாரச்சென்று, நீதிநூற்றுலங்கக்காத்து நிலந்திருமலரநின்றான்" என்பவற்றுள் (பனுவல்) என்பது நூலின் பெயரென்பதை *பின்கலைநிகண்டின்* ஆக்கியோன் மண்டலபுருடன் "தந்துரைபுனைந்துரைத்தல் சார்ந்த பாயிரத்தினோடு, முந்திய பதிகமேநூன் முகமுக உரையுமப்பே, ரந்தமா மாகமத்தோடாரிடம் பிடகமற்றுந், தந்திரம் பனுவலோடு சமயஞ்சூத்திரமு நூற்பேர்" என்பதின் ஆதாரமே வேண்டும் பனுவலின் விரிவாம்.

2. *துறந்தார்பெருமெ துணைக்கூறின் வையத்*
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.

(ப.) துறந்தார் - பற்றற்றவர்களின், பெருமெ - சிறப்பிற்கு, துணைக்கூறின் - உவமெய்க்கூறவேண்டின், வையத்து - பூமியின்கண், இறந்தாரை - மரணமடைந்தோரை, எண்ணிக்கொண்டற்று - இத்தனையோரெனக் கணக்கெடுப்பதற்கு ஒக்கும் என்பது பதம்.

(பொ.) பற்றற்ற மகாஞானிகளின் சிறப்பினைக் கூறப்புகுவது பற்றும் மிகுத்திறந்தவர்களை எண்ணிப்பார்ப்பதொக்கும் என்பது பொழிப்பு.

(கூ) பூமியின் கண் தோன்றி தோன்றி இறந்தவர்களின் கணக்கைக் கண்டறியக் கூடாததைப்போல் துறந்த மகாஞானிகளின் சிறப்பை எடுத்துக் கூறுதலும் அரிதென்பது கருத்து.

(வி.) உலகத்தில் தோன்றி மறையும் மநுமக்களில் ஓர் குடும்பத்தில் பிறந்தபோதே இறத்தலும், பாலதானத்தில் இறத்தலும், குமரதானத்தில் இறத்தலும், மூப்புதானத்தில் இறத்தலுமாகியக் கணக்கைக் கண்டறிதலே மிக்க அரிதாயிருக்க பூமி எங்கணுந் தோன்றி தோன்றி இறந்தவர்களின் கணக்கைக் கண்டெடுப்பது இயலாததுபோல் உலக பாசபந்த பற்றுக்களினின்று துறந்த மகாஞானிகளது சிறப்பையும் அவர்களது மகத்துவத்தையும், அவர்களது நித்தியானந்தத்தையும், அவர்களது என்றும் அழியா நிலையையும் எடுத்துக்கூற இயலாது என்பவற்றிற்குப் பகரமாக *சீவகசிந்தாமணி* ஆக்கியோன் திருத்தக்கதேவர் "பற்றார் வஞ்செற்ற முதலாகப் பாம்புரிபோன், முற்றத்துறந்து முனிகளாயெல்லாரு, முற்றுயிர்க்குத்தீம்பால் சுரந்தோம்பியுள்ளத்து, மற்றிருள் சேரா மணி விளக்குவைத்தாரே" என்றும், *வாசிஷ்டம்* "சரமழைகணெய்தன் மலர்மழையை ஒக்குந் தழற்பள்ளி பனிநீரில் சயனம் ஒக்குஞ், சிரமறிதல் சுகமுறு நித்திறையை ஒக்குந் தெகமறிவது கலவைச் செறிப்பூச்சொக்கும், நிரவதிகநாராச மருமம்பாய்ததெடுங்கோடைச்சிவிரியினன் னீரை ஒக்கும், விரகரியவிடயமெனும் விடவிடுசி விவேக மிகுத்தவர்க்கலால் விலக்கொணாதே" என்றுஞ் சார்பு நூலோர் கூறிய விவேகமிகுத்தத் துறவோர் சிறப்பைக் கூறுதற்கு இயலா என்பது விரிவு.

3. *இருமெ வகை தெரிந்தீண் டறம்பூண்டார்*
பெருமெ பிறங்கிற் றுலகு.

(ப.) இருமெய் - யாக்கை இரண்டினுடையவும், வகைதெரிந்து கூறுபாடுகளை அறிந்து, யீண்டறம் - மீண்டுந் தன்மத்தைச்செய்ய, பூண்டார் - உறுதிகொண்டோரே, உலகு - பூமியின்கண், பிறங்கில் - மேலாய, பெருமெய் - சிறப்பு மெய்பெற்றார்களென்பது பதம்.

(பொ.) அந்தரங்கம் பயிரங்கமென்னும் இருவகை யாக்கையை உணர்ந்து சத்திய தன்மத்தில் நடப்போரே உலகத்தில் சிறந்தோர்களென்பது பொழிப்பு.

(க.) உண்மெய் புறமெய்யென்றும், அந்தரங்கம் பயிரங்கமென்றும், பரிநிருவாண காலத்தில் விளங்குபவற்றின் வகைதெரிந்து நீதிநெறி ஒழுக்கத்தில் நிலைப்பவர்களே இவ்வுலகத்தை சிறப்படையச்செய்து தாங்களும் சிறப்புற்று உலாவுவார்கள் என்பது கருத்து.

(வி.) உலகத்தில் தோன்றியுள்ள மக்கள் பஞ்சஸ்கந்தத்தால் ஒருமெய் அமைந்திருப்பினும் ஆசாபாசப் பற்றறுத்து உள்ளமைந்த ஆற்றலால் புளியம்பழம்போலும் ஓடுபோலும் புழுப்போலும் விட்டில் போலுமுள்ள இருமெயின் பிரிவை உண்மெய், புறமெய் என்றும், அந்தரங்கம், பயிரங்கமென்றும், அழியாக்கை, அழியாயாக்கைகளை இருமெய் என வழங்கி வந்தவற்றை பரிநிருவாணமுற்ற இருபிறப்பாளர் வரைந்தவைகளாயினும் மற்றுமுள்ளோர் உலாவும் உடலென்றும் ஊழ்க்காக்கும் உடலென்றும் இருமெயாக வழங்கியவற்றை ஞானக்குறளாக்கியோளாகும் அவ்வை "உணர்வாவ தெல்லாம் உடம்பின்பயனே உணர்கவுணர் உடையா" என்றும், வெள்ளி பொன்மேனிய தொக்கும் வினையுடைய உள்ளுடம்பினாய ஒளி" என்று கூறியவற்றிற்குப் பகரமாக சூளாமணி ஆக்கியோன் தோலாமொழி தேவர் "ஒருவனதிரண்டு யாக்கை யூன்பயினரம் பின்யாத்த, உருவமும்புகழுமொன்றாங் கவற்றினூழ்காத்து வந்து, மருவிய உருவமிங்கே மறைந்துபோ மற்றயாக்கை, திருவமர்ந்துலகமேத்தச் சிறந்த பின்னிற்குமன்றே" என்றும் நன்னூலாக்கியோன் பவணந்திமுனிவர் "ஒற்றுமெ நயத்தினென்றெனத் தோன்றினும், வேற்றுமெ நயத்தின் வேறெயுடலுயிர்" என்றும், அறநெறிச்சார வாக்கியோன் முனைப்பாடியார் "தன்னொக்குந்தெய்வம் பிறிதில்லை தான்றன்னை, எழுத்தெண்ணே நோக்கி (இருமெயுங்) கண்டாங், கருட்கண்ணேநிற்பதறிவு" என்றும், சீவகசிந்தாமணி ஆக்கியோன் திருத்தக்கதேவர் "உள்பொருளிதுவென உணர்தன்ஞானமாந், தெள்ளிதிநப்பொருடெளிதல் காட்சியாம், விள்வர (விருமெயும்) விளங்கத் தன்னுளே, யொள்ளிதில் தரித்தலை ஒழுக்கமென்பவே" என்றுங் கூறியுள்ள சார்புநூற்களாலும் இருபிறப்பால் உண்டாம் இரு மெவகைதெரிந்து அறம்புரிதலே உலகிற்குந் தனக்கும் சிறப்பென்பது விரிவு.

4. உரனென்னுத் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்புக்கோர் வித்து.

(ப.) உரனென்னும் - அறிவென்னும், தோட்டியான் - கதவினைகொண்டு, ஓரைந்தும் - மெய். வாய், கண், மூக்கு, செவி யென்னும் ஐந்தினையும், காப்பான் - அடைப்போன், வரனென்னும் - தண்மெயாம், வைப்புக்கோர் - பெருமெ பெருதற்கோர், வித்து - ஞானவிதைக்கொப்பாவானென்பது பதம்.

(பொ.) தனது அறிவையே கதவாகக்கொண்டு ஐம்புலன்களை அடைப்போன் பற்றற்று சாந்தசொரூபியாதற்கு ஓர் வித்தென்னப்படுவான்.

(க.) இரசோகுணம் தமோகுணம் இரண்டும் அற்று சத்துவகுணமாம் பிரம்மநிலை விரிதற்கு விதையாவது யாதெனில் ஐம்புலனை அடக்கும் அறிவென்பதுவே கருத்து.

(வி.) மெய்யுணர்ச்சியின் அவாவினையும், கண்பார்வையின் அவா வினையும், மூக்கால் முகர்ந்த அவாவினையும், நாவினால் உருசித்த அவாவினையும், செவியினாற்கேட்ட அவாவினையும் பற்றிச்செல்லும் ஐந்துவாயல்களே கேட்டின்வழியென்று அறிந்து அவ்வாயல்களை அடக்கும் அறிவென்னுங் கதவினைகொண்டடைத்து வரனென்னும் பிரம்மமாம் சாந்தத்தை நிறப்பும் முத்திக்கு வித்தென்பது விரிவு.

5. ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்க்கோமா
னிந்திரனே சாலுங் கரி.

(ப.) ஐந்து - மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் வழிக ளைந்தினையும், அவித்தான் - அடக்கினவனது, ஆற்றல் - சுகநிலையை சொல்லவேண்டின், அகல் - அகண்ட, விசும்புளார்க்கு - வானுலகோர்க்கு கோமான் - அரசனாக விளங்கும், இந்திரனே - புத்தபிரானே, சாலும் - போதுமான, கரி - சாட்சியென்பது பதம்.

(பொ.) பொறிவாயல் ஐந்தினையும் அவித்தவனது சுகநிலையை அறியவேண்டின் புத்தேளுலகுக்கு அதிபதியாம் புத்தரே போதுஞ் சாட்சி யென்பது பொழிப்பு.

(க.) பொய்தீர்ஒழுக்கத்தினின்று பொறிவாயல் ஐந்தினையும் அவித்து ஆதிதேவனாக விளங்கி அவரால் தெய்வநிலை அடைந்த வானவர்கள் யாவருக்கும் அரசனாக விளங்குவதை ஆதிசாட்சியாகக்கொண்டு ஐந்தவித்தலின் ஆற்றலுக்கு இந்திரனேபோதுஞ் சாட்சி என்பது கருத்து.

(வி.) மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்தினையும் அவித்த வல்லபங்கொண்டு ஐந்திரர் என்னும் பெயர்பெற்று ஐ, அ. ஆகத்திரிந்த வடவட்சர பேதத்தால் இந்திரரென வழங்கியதும் அப்புத்தபிரானாகிய இந்திரரே வானவர்களாம் தேவர்களுக்கெல்லாம் அரசனுங் குருவாகவும் விளங்கியதுமன்றி இத்தேசமெங்கும் புத்தபிரானையே இந்திரரென பூசித்து அரசமரத்தடியிலும் அறப்பள்ளிகளிலும் இந்திரவிழாக்கள் கொண்டாடிவந்த ஓர் பேரானந்தத்தால் இந்திரரைக் கொண்டாடியக் குடிகளை இந்தியர்களென்றும், கொண்டாடுந் தேசத்தை இந்தியதேசமென்றும் சிறப்புப்பெற வழங்கியவற்றிற்குப் பகரமாக சார்புநூலார் *அருங்கலைச்செப்பு* "இந்தியத்தை வென்றான் றொடர்பாட் டோடாரம்ப, முந்திதுறந்தான் முநி" என்றும், *அறநெறிச்சார* ஆக்கியோன் முனைப்பாடியார் "இந்தியக் குஞ்சரத்தை ஞானப் பெருங்கயிற்றால், சிந்தினைத் தூண்பட்டிச் சேர்த்தியே - பந்திப்பர், இம்மெப்புகழும் இனிச்சொல் கதிப்பயனும், தம்மெத்தலைப்படுத்துவார்" என்றும், *மணிமேகலை* ஆக்கியோன் சாத்தனார் "இந்திர ரெனப்படு மிறைவநம்மிறைவன், தந்தநூற் பிடகமாத்தி காயமதன்" என்றும், ஐம்பொறிகளை அவித்துப் பெண்ணாசையை ஒழித்தவர்களுக்கே இந்திரரென்னும் பெயர்வாய்க்கும் என்பதை *சீவகசிந்தாமணி* ஆக்கியோன் திருத்தக்கத்தேவர் "ஆசையார்வமோடைய மின்றியே, யோசை போயுலகுண்ண நோற்றபி, னேசுபெண்ணொழித் திந்திரர்களாய்த், தூயஞான மாய்த் துறக்கமெய்தினார்" என்னும் ஆதாரங்கொண்டு ஐந்தவித்தவர்களின் சிறப்பை அறியவேண்டில் இந்தியத்தை வென்ற வானவர்க்கரசனாம் இந்திரரே போதுஞ்சாட்சியென்பது விரிவு.

6. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

(ப.) பெரியர் - விவேக மிகுத்தோர், செயற்கரிய - யாவரும் செய்யற்கியலா ஞானசாதனங்களை, செய்வார் - முகிப்பார்கள், சிறியர் - விவேக மில்லாதவர்களோ, செயற்கரிய - செய்தற்கரிய ஞானசாதனங்களை, செய்கலாதார் - செய்யார்களென்பது பதம்.

(பொ.) விவேகமிகுத்தோர் செய்தற்கரியக் காரியங்கள் யாவையுஞ் செய்வார்கள். விவேகமில்லாதவர்களோ எளிதிற்செய்யக்கூடிய காரியங்களையும் செய்யார்களென்பது பொழிப்பு.

(க.) அறிவின் விருத்திபெற்ற பெரியோர்கள் புலன் தென்பட உசாவி தென்புலத்தோராகி சகலராலுங் கொண்டாடப்படுவார்கள். அறிவின் விருத்தியற்ற சிறியோர்கள் எடுத்த காரியங்களையே முடிக்கவியலாது சகலராலும் இழுக்கடைவார்களென்பது கருத்து.

(வி.) ஞானமென்னும் அறிவின் மிகுத்தோர்களையே பெரியோர் களென்றும், அஞ்ஞானமென்னும் அறிவிலிகளையே சிறியோர்களென்றுங் கலைநூலோர் கூறியவற்றிற்கியைய வழிநூலாரும் ஞானமிகுத்தப் பெரியோர் செயற்கரியக் காரியங்கள் யாவையும் எளிதில் முடிப்பார்களென்றும் அஞ்ஞானிகளாகிய சிறியோர்கள் எளிதில் முடிக்குங் காரியங்களையு முடிக்கார்களென்பதற்குச் சார்பாக *முதுமொழி.*

ஞானமின்றிச் செய்தவந் தவமுமன்று / நயஞானமில்லாத தருமந் தருமமன்றே
ஆனதெருண ஞானமிலாத் தவமேசெய்தல் / அழுக்கறவிற் கழுவுதலு மாகுமின்னும்
மானமுறு ஞானமிலாத் தரும மிக்க / மறுவுள்ள மணியாக விருக்குமென்று
மோனமுறுந் தவமுனிவர் முன்னந்தானே / முயற்சியுடன் கண்டறிந்த முறைமையாமே

என்றும் விவேமிகுத்தப் பெரியோர் புகழ்ச்சியையும் அவிவேகிகளாம் சிறியோர்கள் இகழ்ச்சியையுங் கூறிய விரிவாம்.

7. சுவையொளி யுரோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

(ப.) சுவை - உருசித்தலுக்கும், ஒளி - பார்த்தலுக்கும், ஊரு - பரிசித்தலுக்கும், ஓசை - கேட்டலுக்கும், நாற்றம் - முகர்தலுமாம், என்றைந்தின் - ஐந்திற்கும் ஆதாரமாயுள்ளவை யெவையென, வகைதெரிவான் - அதனிலையைத் தெரிந்துகொண்டவன், கட்டே - இடத்தே, உலகு - உலகம் அடங்கியுள்ள தென்பது பதம்.

(பொ.) ஐம்புல நுகற்சிக்கும் ஆதாரம் ஈதீதென்று அறிந்துகொண்டவ னிடத்தே உலகம் அடங்கியுள்ளதென்பது பொழிப்பு.

(க.) நாவினாற் சுவைத்து அறியும் நிலையையும், கண்ணினாற் கண்டறியும் நிலையையும், ஊரினால் உணர்ந்தறியும் நிலையையும், செவியினாற் கேட்டறியும் நிலையையும், நாசியினால் முகர்ந்தறியும் நிலையையும் கண்டடைந்தவனிடத்தே உலகம் ஒடுக்கமென்பது கருத்து.

(வி.) கண்ணானது பார்க்கும் புலனையுடைத்தாயினும் மனமானது வேறுவிவகாரத்தில் நிலைக்கின் பார்வை அற்றுப்போம். நாவானது சுவைக்கும் புலனை யுடைத்தாயினும் மனமானது வேறு விவகாரத்தில் நிலைக்கின் சுவையற்றுப்போம். தேகமானது ஊரும் புலனை யுடைத்தாயினும் மனமானது வேறுவிவகாரத்தில் நிலைக்கின் உணர்ச்சி அற்றுப்போம். செவியானது கேட்கும்புலனை யுடைத்தாயினும் மனமானது வேறுவிகாரத்தில் நிலைக்கு மாயின் சப்தமற்றுப்போம். மூக்கானது முகரும் புலனையுடைத்தாயினும் மனமானது வேறு விவகாரத்தில் நிலைக்குமாயின் நாற்றமற்றுப்போம். இத்தகைய ஐம்புல நுகர்ச்சிக்கும் ஆதாரமாயுள்ள மனமே புருடனென்றுணர்ந்து அதனவாவாம் மாசினைக் கழுவி பற்றற்றவனது உள்ளங்கண்ணாடியின் கண் உலகமொடுங்கிசருவமுந் தனக்குள் தோன்றி செல்லல், நிகழல், வருங்கால மூன்றினையும் விளக்குகின்றபடியால் புலனைந்தின் வகை தெரிவானிடத்தே புழுப்பூச்சுக்கள் முதல் மக்கள் வரை ஒடுக்கமென்பதை விளக்குமாறு புலனைந்தின் வகைதெரிந்த தென்புலத்தானிடத்தே உலகம் அடங்கியுள்ளதற்குப் பகரமாக *தேவிகாலோத்திரம்* "யோகியாகி யொழுகுமியல்பினோன், போகமாற்றிப் பொருண்மேற் பொறிகளை, வேகமான பயமும் வியப்பும் போய், மாகர்காண சுகத்தை மருவுவான்" என்றும் *வாசிஷ்டம்* "பெருகத் திரண்ட முகில்களெல்லாம் பெருங்காற்றாலே யொதுங்குதல்போல், வருகற்பனை நாசத்தாலே மனம் போயிறக்கு மனமிறந்தால், பொருகற்பாந்த மாருதமும் பொங்கு கடலும் புவியனைத்து, முருகச்சுடு பன்னிரு கதிருமொருகால் வரினுமிடருண்டோ" என்றும் *நாலடி நாநூறு* "மெய்வாய் கண்மூக்கு செவியெனப் பெயர்பெற்ற, வைவாய வேட்கைக்-கைவாய, கலங்காமற் காத்துய்க்கு மாற்றலுடையான், விலங்காது வீடுபெறும்" என்றும் *அறநெறிச்சாரம்* " தன்னைத்தன்னெஞ் சங்கரியாகத் தானடங்கின், பின்னைத்தா னெய்தாநலனில்லை-தன்னைக், குடிகெடுக்குந் தீநெஞ்சிற் குற்றேவல் செய்தல், பிடிபடுக்கப்பட்ட களிறு" என்றும் ஐம்புல நிலையாங் குணவமைதிகொண்டோனிடத்தே உலகம் அடங்கிற்றென்பது விரிவு.

8. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

(ப.) நிறை மொழி - மலைவுபடா வார்த்தையினையுடைய, மாந்தர் - முனிந்தோரது, பெருமெய் - அந்தரங்கத்தை, நிலத்து - பூமியின்கண் கூறவேண்டின், மறைமொழி - புத்தாகம மொழிகளே, காட்டிவிடும் - நிரூபிக்குமென்பது பதம்.

(பொ.) மலைவுபடா வார்த்தையினை உடைய முனிவரது உண்மெய்யை விளக்கவேண்டின் அவரால் போதித்துள்ள முப்பேத மொழிகளாம் திரிபீட வாக்கியங்களே அவற்றைக் காட்டிவிடுமென்பது பொழிப்பு.

(க.) ஞானமணிகளாம் புதைப்பொருளமைந்த மொழியினையுடைய முனிவரது பெருமையை பூமியின் கண்கூறவேண்டின் அவர்களால் கூறியுள்ள மறைமொழிகளே விளக்கிவிடுமென்பது கருத்து.

(வி.) மறைமொழிகளாம் பாபஞ்செய்யாதிருங்கள், நன்மெய் கடைபிடியுங்கள், உங்களிதயத்தை சுத்திசெய்யுங்கோளென்னுந் திரிபேத வாக்கியங்களே உலக மக்கள் சீர்திருத்தங்களுக்கு திரிபீடங்களாகவும், விளங்கி மும்மொழிகளில் யாதொன்றைப்பற்றின் அஃது முற்றி முத்திப்பேறாம் நிருவாணத்திற்குக் கொண்டுவரு கிறபடியால் அவற்றை உணர்ந்த வழிநூலார் பூமியின்கண் நிறைமொழி மாந்தரின் பெருமையை அறியவேண்டின் மறைமொழியின் பயனே அவற்றிற்குச் சான்றெனக் கூறியுள்ளவற்றைக் கண்டு சூளாமணி என்னுஞ் சார்பு நூலார் தோலாமொழி தேவர் " ஆதியங் கடவுளை யருமறை பயந்தனை, போதியங்கிழவனை பூமிசை யொதுங்கினை, போதியங் கிழவனை பூமிசை யொதிங்கிய, சேதியென் செல்வனின்றிருவடிவணங்கின" என்னுந் தொழுகினைக்காதாரமாம் முனிவனும் அவரால் ஓதிய மறைமொழியுமே போன்ற ஆதாரமென்பது விரிவு.

9. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.

(ப.) குணமென்னும் - சாந்த குணமென்னும், குன்றேறி - மலைமீதேறி, நின்றார் - நிலைத்தவர்களது, வெகுளி - கோபமானது, கணமேனும் - கண்ணிமைப்பொழுதேனும், காத்தல் - நிலைத்தல், அரிது - அரிதென்பது பதம்.

(பொ.) சாந்த குணமே நிலையாகநின்ற தண்மெய் மிகுத்த அறவோர்களுக்குத் தோற்றும் கோபமானது கண்ணிமைப் பொழுதேனும் அவர்களிடம் நிலைக்காதென்பது பொழிப்பு.

(க.) இரசோகுணம், தமோகுணம் இரண்டும் நசிந்து சத்துவகுணம் நிலைத்த சாந்தரூபிகளாம் அந்தணர்களுக்கு பூர்வபழக்க வெகுளி தோன்றினும் அவ்வெகுளி சாந்தம் நிறைந்தவர்களிடம் கணமேனும் நிற்காதென்பது கருத்து.

(வி.) சாந்தகுணமாங் குன்றின்மீதேறி சகல பாசபந்த பற்றுக்களுமற்று நிருவாணநிலை நிலைத்தவர்களுக்கு ஏதோ முன்பழக்கவசத்தால் கோபங் கொள்ள நேரினும் சாந்தகுணமே உருவமைந்த நிலையில் நூதனமாக வந்து கலக்குங் கோபமானது ஒரு கணப்பொழுதேனுந் தரித்து நிலையாது என்பதற்குப் பகரமாக அறநெறிச்சார ஆக்கியோன் முனைப்பாடியார் "மெய்மெய் பொறையுடைமெய் மேன்மெ தவமடக்கம், செம்மெயொன்றின்மெ துறவு டமெ-நன்மெய், திறம்பாவிரதந் தரித்தலோடின்ன அறம்பத்து மான்ற குணம்" அமைந்த சிறப்பின் விரிவு.

10. அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குந்
செந்தண்மெய் பூண்டொழுக லால்.

(ப.) அந்தணரென்போர் - அந்தணரென் றழைக்கப்படுவோர், அறவோர் - சமணமுநிவரிற் சிறந்த தன்மசொரூபிகளே யாவர் (எவ்வகையிலென்னில்), எவ்வுயிர்க்கும் - சருவ வுயிர்களின்மீதும், செந்தண்மெய் - செவ்விய சாந்தநிலை யமைந்து, பூண்டொழுகலால் - கார்த்துவருதலா லென்பது பதம்.

(பொ.) சருவசீவர்களாம் புழுப்பூச்சுகள்முதல் மக்களீராகவுள்ள தோற்றங்களின்மீது அன்புபாராட்டி காக்கும் கருணை நிறைந்த சாந்தரூபிகள் யாரோ அவர்களையே அந்தணர்களென்று அழைக்கப்படுவதென்பது பொழிப்பு.

(க.) தண்மெயாம் சாந்தநிறைவால் சருவ உயிர்களையுந் தன்னுயிர்போல் கார்த்து தாங்களடைந்த சுகநிலையாம் நிருவாணத்தை மற்றய மக்களும் சுகிக்கவேண்டுமென்னும் அன்பின் பெருக்கத்தால் அந்தணர்களென்னும் பெயரைப் பெற்றார்களென்பது கருத்து.

(வி.) உலகத்தில் தோன்றியுள்ள மநுக்களில் எத்தேச எப்பாஷைக் காரனாயிருப்பினும் தன்மத்தைப் பூர்த்திசெய்து தண்மெமிகுத்த சாந்த நிறைவால் சருவ உயிர்களுக்கும் தண்மெயுண்டாம் அன்புகொண்டு சங்கங்களை நாட்டி சத்தியதன்மத்தை ஊட்டி சதா சுகத்தில் நிலைக்கச்செய்யும் சாந்தரூபிகளையே அறவோர்களென்றும், அந்தணர்களென்றும் அழைக்கப் பெற்றதற்குச் சார்பாய் *சீவகசிந்தாமணி* ஆக்கியோன் திருத்தக்கதேவர் "திருமறுமார்பனை திலகமுக்குடையனை, யருமறை தாங்கிய வந்தணர் தாதையை, யருமறை தாங்கிய வந்தணர்தாதைநின், னெரிபுரைமரைமல ரிணையடிதொழுதும்" என்றும் சங்கத்து சமணமுநிவருள் தோன்றியுள்ள அந்தணர்கள்யாவருக்கும் தாதையாக விளங்கும் புத்தபிரானே ஆதி அந்தணரென்பது போன்ற விரிவாம்.

4. அறத்தினது வலிதென்னும் தன்மத்தின் சிறப்பு

அதாவது சாக்கைய முநிவரால் போதித்துள்ள அறத்தால் மெய்ப் பொருளும், மெய்ப்பொருளால் பேரின்பமும், பேரின்பத்தால் வீடுபேறும் உண்டாமென்பதினால் விளங்கும்.

1. சிறப்பீனுஞ் செல்வமுமீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு.

(ப.) உயிர்க்கு - மக்களுக்கு, சிறப்பீனும் - அழியாப் புகழைத் தருதற்கும், செல்வமுமீனும் - அழியாப்பொருளை பெறுதற்கும், அறத்தினூஉங் - தன்மத்தைவிட, ஆக்க - ஆதரிக்கக்கூடியவன், எவனோ - வேறெவனாயினு முளனோ வென்பது பதம்.

(பொ.) மக்களுக்கு அழியா சிறப்பைத் தருதற்கும், மெய்ப்பொருளை விளக்குதற்கும் ஆதாரமாயுள்ளது தன்மமேயன்றி வேறொருவனாலும் ஆகாதென்பது பொழிப்பு.

(க.) தன்னைத் தலைமெயாக்கிக் கொள்ளுவதற்கும், தன்னை அடிமையாக்கிக் கொள்ளுவதற்குந் தனது ஈகையும் அன்புமே ஆதாரமாயுள்ளது போல தான்பெறும் அழியாப்புகழுக்கும், அழியாப்பொருளுக்கும் தனது தன்மமே துணையன்றி வேறொரு வரும் துணையாகாரென்பது கருத்து.

(வி.) ஆனந்த ஈகையும், அன்பின் பெருக்கமும், சாந்த உருவமுமே பரிநிருவாண சுயம்பிரகாச தோற்ற தேவர் தன்னுருவமாதலின் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என்னும் அவாவாம் பற்றினை அறுத்தற்கு மூலம் தன்மமென்றறிந்த மேலோர் தன்னைத்தானறிந்து அடங்கற்குத் தானே தானே தலைவனாதலின் தனதழியாமெய்ப் புகழுக்கும், தனதழியாமெய்ப் பொருளுக்கும் தனது தன்மமே ஆதாரமன்றி வேறொருவனும் ஆதாரமில்லை யென உணர்ந்து வரைந்துள்ள வற்றிற்குப் பகரமாக *அறநெறிச்சார* ஆக்கியோன் முனைப்பாடியார் "தனக்குத் துணையாகித் தன்னை விளக்கி, இனத்து ளிறைமெயுஞ் செய்து - மனக்கினிய, போகந்தருதலாற் பொன்னே அறத்துணையோ, டேகமானண்பொன்றுமில்" என்றும், *மகாபுராணம்* "இத் துணைத்தரும தானங்களிம்மெயின், மெத்திய செல்வமுஞ் சுதருமேவிநீண், முத்தியின் மான மேற்பொலிவர் மூதுரைப், பத்தியின்றானமே பலிக்க வேண்டுமால்"என்றும், *சிவதன்மோத்திரம்* "மகவினை யாலாகத்தின் வருத்தந்தன்னான் மாநிதியான் மற்றுமுள பொருள்களாலுந், தகைபெறு வானவராலுங் காதலின்றேற் சாதிக்கப்படுவதன்று தருமந்தானே, யுவகையுறவாதரவாற்சிறிதே தேனுமுதவியிடிலறமதனாற் பெரிதுண்டாகும், அகநெகலு மாதரவுமதியா தாரென்றறியா தாரென் பெறுவரன்னோவன்னோ" என்னும் தன்மமே சகலசீருக்கும் சுகத்திற்கும் ஆதாரமென்பது விரிவு.

2. அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலினூங் கில்லை கேடு.

(ப.) அறத்தினூஉங் - தன்மத்திற்கு மேற்பட்ட, ஆக்கமும் - சுகாதாரமும், இல்லை - வேறொன்றுங் கிடையாது, அதனை - அத்தன்மத்தை, மறத்தலினூங்

- தன்மத்தைச் செய்யாது மறந்துவிடுதலினும், கேடு - சீர்கேடு, இல்லை - வேறொரு கேடுமில்லை யென்பது பதம்.

(பொ.) தன்மத்தைவிட வேறொரு சுகாதாரமுங் கிடையாது. அதனை மறந்திருப்பதைவிட வேறொரு கேடுங் கிடையாதென்பது பொழிப்பு.

(க.) பொருளாசையற்று சருவ உயிர்களின் மீதும் அன்பு பாராட்டி தன்மம் புரிதலே தனது சுகச்சீருக்கு ஆதாரமென்றும் பொருளாசை யுற்று, சீவகாருண்ய மற்று, லோபியெனத் திரிவதே சகல சுகக்கேடுகளுக்கும் ஆதாரமென்பதூஉங் கருத்து.

(வி.) மக்கள் அவாவின் பெருக்கத்தால் ஈகையற்று பாசபந்தக் கட்டுக்களாம் வாணமுற்று மாறாப்பிறவியிற் சுழன்று தீரா துக்கத்தை அநபவித்துவருதலே பெருங்கேடாக முடிவதும், மக்கள் அவாவினையொழித்து ஈகைநிலைத்து பாசபந்தக்கட்டுக்களை அறுத்து நிருவாணம் பெற்று பிறவியென்னும் சமுத்திரத்தைக் கடந்து சதாசுகத்தில் நிலைக்கச்செய்வதுமாய அறத்தினது வலியையும் அதனது மெலிவையும் ஆராய்ந்தறிந்த மேலோர் தன்மத்தை விட வேறொரு சுகவழியும் இல்லையென்றும் அதனை மறத்திலினுங் கேடு மற்றொன்று மில்லையென்றுங் கூறியுள்ளவற்றிற்குப் பகரமாக *அறநெறிச்சார* ஆக்கியோன் முனைப்பாடியார் "குறைக்கருமம் விட்டுரைப்பிற்கொள்ளவுலவா, அறக்கரும மாராய்ந்து செய்க - பிறக்கடைக்கோ, நெஞ்சே மாப்பில்லாதான் வாழ்க்கை நிரயத்துத் துஞ்சாத்துயரந்தரும்." என்றும், "ஈட்டியவொண்பொருளு மில்லொழியும் சுற்றத்தார், காட்டுவாய் நேரே கலுழ்ந்தொழிவர் - மூட்டு, மெரியினுடம்பொழியும் ஈர்ங்குன்ற நாட, தெரியி னறமே துணை" எனக் கூறியுள்ள சார்பே போன்றவிரிவு.

3. ஒல்லும் வகையா லறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

(ப.) ஒல்லும் வகையால் - தன்ம நூலையுணர்ந்தவழியால், அறவினை - தன்மச்செயலை, யோவாதே - மறவாமல், செல்லும்வாய் - கூடியவரையில், யெல்லாம் - சோர்வுறாது. செயல் - செய்யவேண்டு மென்பது பதம்.

(பொ.) மக்கள் அறநூலை வாசித்தவழியால் தங்களாலியன்றவரையில் தன்மத்தை மறவாது செய்யவேண்டுமென்பது பொழிப்பு.

(க.) தங்களால் தன்மநூற்களை வாசித்தளவிலும், அறவுரைக் கேட்ட அளவிலும், தனக்குள்ளவரையிலும், தன்னாற்கூடியவரையிலும் அன்புகொண்டு அறவினைச் செய்யவேண்டுமென்பது கருத்து.

(வி.) முநிவரால் ஓதிவைத்துள்ள முதநூலை உணர்ந்தவகையால் அறச் செயல்களை என்றும் மறவாது நற்கடைபிடியிலும், நல்லூக்கத்திலும், நல்வாய்மெயிலும் நின்று சோர்வின்றி தன்மத்தைச் செய்யக் கூடியவரையில் செய்யவேண்டுமென்று வரைந்துள்ளவற்றிற்குப் பகரமாக *அறநெறிச்சார* ஆக்கியோன் முனைப்பாடியார் "இன்சொல்விளை நிலமா யீதலே வித்தாகி, வன்சொற் களைகட்டு வாய்மெ யெருவட்டி, அன்புநீர் பாய்ச்சி அறக்கதி ரீன்றதோர், பைங்கூழ் சிறுகாலைச்செய்" என்றும், *மகாபுராணம்* "கருமபூமியிற் புன்முதற் பிறப்பெலாங்கடந்து, பொருவின் மானிடத்தொழிலுடன் பிறந்தருள்பூத்து, மருவுகண்டுயிலிளமெ மூப்பொரி இத்தருமத்தி, னுரிமெயிற் செய்து மென்றிட லயம்புரிந்தோங்கும்" என்றும், "போதமேவியகாதை கேட்டிருந்தவம்புரியா, ரேதமேவிய நரகத்தினழுந்துவரியம, னாதி நாட்டொடர்ந்தற்றமே நோக்குவனதனாற், பேதையீரறம்புரிந்திடு மெனமறை பேசும்" என்று கூறியுள்ளவைகளே அறநூலை உணர்ந்துசெய்யும் அறச்செயல் களென்பது விரிவு.

4. மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுல நீர பிற.

(ப.) மனத்துக்கண் - உள்ளத்தினிடத்தே, மாசிலனாதல் - களங்க மற்றவனென்று, பிற - அன்னியரால் கண்டறிவதற்கு, ஆகுல - ஆனந்தத்துடனும்,

நீர - தண்மெயுடனுஞ்செய்யும், அனைத்தற - அவனது சகல தன்ம கன்மங்களாலும் விளங்குமென்பது பதம்.

(பொ.) தன்மத்தைச் செய்வோன் மனமாசில்லாதவனெனக் கண்டறிதற்கு அவனால் செய்யுஞ் சகல தன்மங்களை ஆனந்தமாகவும், பொருமெயுடனும் செய்வதே போதுஞ் சான்றென்பது பொழிப்பு.

(க.) ஆரவாரமாம் பேரானந்தத்துடனும் பெருகிய சாந்தத்துடனுமிருந்து ஒருவன் செய்துவரும் சகல தன்மகாரியங்களினாலும் உள்ளக்களங்க மற்றவனென்னுங் குறிப்பைக் காட்டுங் கருத்து.

(வி.) தன்மஞ்செய்வோன் தன்னைப் பணக்காரனென்று பல்லோறியக் கூச்சலிட்டு தன்மஞ்செய்யாமலும், தன்மஞ்செய்வோமென்னும் மமதைகொண்டு ஏழைகளை வையாமலும், கொடூரவார்த்தைகளைப் பேசாமலும், சாந்தத்துடனும் அமைதலுடனும் சருவசீவர்களின்மீதும் அன்பு பாராட்டிச் செய்யுந் தருமச்செயலால் அவனுக்குள்ள இர்ாகத் துவேஷ மோகங்களற்று சாந்தம், அன்பு, ஈகை, இவைகள் பெருகியுள்ள அநுபவக்காட்சியில் மனமாசுக் கழுவியுள்ளானென்பதைக்கண்டு தன்மத்தை ஆனந்தமாக ஏற்றலும், மனக்களங்கமுற்ற டம்பனெனக் கண்டு தன்மமேற்காது அகலுதலுமாகிய வற்றிற்குச் சார்பாய் *விவேகசிந்தாமணி* ஆக்கியோன், கணபதிதாஸர் "ஒப்புடன் முகமலர்ந்தெயுபசரித்துண்மெபேசி, உப்பிலாக்கூழிட்டாலு முண்பதேயமிர்த மாகும், முப்பழமொடுபாலன்னம் முகங்கடுத்திடுவாராயின் கப்பியிபசியும் போக்கிக் கடும்பசி நல்லதாமே" என்றும், *அறநெறிச்சார* ஆக்கியோன் முனைப்பாடியார் "மக்களுடம்பு பெறற்கரிது பெற்றபின், மக்களறிவுமறிவரிது - மக்கள், அறிவதறிந்தாரறத்தின் வழுவார், நெறித்தலை நின்றொழுகுவா" ரென்னும் ஆதாரங்கொண்டு மனமாசு கழுவியுள்ளாரென்பதை அறிதற்கு அன்பின்மிகுத்த ஆனந்தத்தால் அவர்கள் செய்யுங் காருண்ய தன்மமே காட்சி என்பது விரிவு.

5. அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொன் னான்கு
மிழுக்கா வியன்ற தறம்.

(ப.) அறம் - தருமத்திற்கு, மிழுக்கா - குற்றமாக, வியன்ற - தோன்றுதல் யாதெனில், அழுக்காறு - பொறாமெய், அவா - பேராசை, வெகுளி - கோபம், இன்னாச்சொல் - கடுஞ்சொல், நான்கும் - நாலுமென்பது பதம்.

(பொ.) பொறாமெய், பேராசை, கோபம், கடுஞ்சொல் இன்னான்கும் தன்மத்திற்கு எதிரடையாயதென்பது பொழிப்பு.

(க.) இவர்களுக்கும் தன்மஞ்செய்யலாமோ என்னும் பொறாமெயும், எவ்வகையாகப் பொருளை ஈவதென்னும் பேராசையும், தன்மங் கேட்போரை சினந்து பார்க்கும் பார்வையும், அவர்களைக் கடிந்து துரத்தும் வார்த்தையும் ஆகிய நான்குந் தன்மத்தைக் கெடுத்து தங்களை சீரழிக்கும் நான்கு ஆயுதமென்பது கருத்து.

(வி.) மக்களை மக்களாக பாவிக்காத மிருகத்திற்கு ஒப்பாயவர்கள் சீவகாருண்ய மற்றவர்களாதலின் தங்கள் பொறாமெ மிகுதியால் தன்மத்தை அலட்சியஞ் செய்வார்கள். எக்காலும் பொருளறியாது யாசகசீவனஞ் செய்பவர்களுக்கு ஏதோ சில பொருள் கிடைத்துவிடின் அவற்றை எவ்வகையால் தன்மஞ் செய்துவிடுவதென்னும் பேராசையும், களவினாலும் சூதினாலும் வட்டியினாலும் பொருள் சேகரித்துள்ளோரை ஆதுலர் அணுகில் சினந்து துரத்தும்செயலும், கருணையற்ற உலோபிகள்பால் ஆதுலர்ச் செல்லில் கடுங்சொற்கூறி துரத்துஞ் செயலுங் கண்டுரைத்துள்ளவற் றிற்குச் சார்பாய் *அறநெறித்தீபம்* "கோபங்கொண்டிழிகுவதுங் கடுமொழி கொண்டேசுவதும், பாபம் பேராசையொடு பற்றும் பொறாமெயதுந், தாபஞ்சேர்தன்மத்தின் தலைகேடென்றாரறவோ, ராபத்தை நீக்கும்வழி அறநெறியென் றறிவீரே" எனச் செல்லல், நிகழல், வருங்கால மூன்றினையுங் கண்டுணர்ந்தோர் ஓதுங் காட்சியின் அனுபவங்கொண்டு அறத்திற்கெதிரடையாயது பொறாமெய்,

பேரவா, கோபம், கடுஞ்சொல்லெனக் குறித்து அவற்றை அகற்றிச்செய்வதே தன்மமென விளித்த விரிவு.

6. *அன்னறிவா மென்னா தறஞ்செய்க மற்றது*
பொன்றுங்காற் பொன்றாத் துணை.

(ப.) அன்றறிவாம் - அப்போது பார்த்துக்கொள்ளலாம், மென்னா - என்று கூறாது, அறஞ்செய்ய - தன்மத்தைச் செய்வீர்களாக, மற்றது - அவ்வகைச் செய்வது, பொன்றுங்கால் - மரண காலத்தில், பொன்றாத்துணை - நிகரற்றவாதரவாகத் தொடருமென்பது பதம்.

(பொ.) தன்மத்தை இன்று செய்யலாம் நாளை செய்யலாமெனச் சிந்தியாது அப்போதைக்கப்போதே செய்தல்வேண்டும். அவ்வகைச்செய்யும் அறமே மரணவத்தையினின்று கார்ப்பதுடன் தொடர்ந்தும் சீரளிக்குமென்பது பொழிப்பு.

(க.) இன்று நாளை என்னாது இம்மெயிற் செய்யுந் தன்மமானது மறுமெயிலுந் துணையாய் நின்று காக்கு மென்பது கருத்து.

(வி.) தோன்றி தோன்றி க்ஷணத்திற்குக்ஷணம் அழியக்கூடியப் பொருளைச் சேகரிக்க முயல்பவன் என்றும் அழியாததும் தனக்குத் துணையாக நின்று காக்கக் கூடியதுமாய அறத்தை அன்றுசெய்யலாம் இன்றுசெய்யலாமென்னுந் தாமதித்து நில்லாமல் இம்மெய்யைப் போஷிப்பதற்காதாரமாகும் பொருட்களை சேகரிப்பதுடன் இம்மெக்கும் மறுமெக்கும் ஆதாரமாக விளங்கும் தன்மத்தை சேகரிப்பதே விசேஷமென்றறிந்த மேலோர் அறத்தை இன்றுசெய்யலாம் அன்று செய்யலாமென்றெண்ணாது மரணம் இப்போதோ எப்போதோ வென்று கார்த்துள்ளதென்றெண்ணி தன்மத்தை அப்போதைக்கப்போதே செய்யுங்கோ ளென்பதற்குச் சார்பாய் *அறநெறிச்சார* ஆக்கியோன் முனைப்பாடியார் "இன்றுளாரின்றேயு மாய்வர் அவருடைமெ, யன்றே பிறருடைமெயாயிருக்கும் - நின்ற, கருமத்தரல்லாத கூற்றின் கீழ் வாழ்வார், தருமந்தலை நிற்றல் நன்று" இன்னுமிளமெயுளதாமென மகிழ்ந்து, பின்னையறிவென்றல் பேதமெ - தன்னை, துணித்தானுந் தூங்கா தறஞ்செய்ககூற்றம், அணித்தாய் வருதலுமுண்டு" என்று இன்று நாளையென்றெண்ணாது அன்றே அறஞ்செய்ய வேண்டுமென்பது விரிவு.

7. *அறத்தா நிதுவென வேண்டா சிவிகை*
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.

அறத்தா - தருமத்தின், நிதுவென - ஆற்ற லிதுவென, வேண்டாம் நினைக்க வேண்டாம், சிவிகை-தண்டிகையை, பொறுத்தானோ - சுமந்தவன் கேட்டையும், டூர்ந்தா - ஏறியிருந்தோன் சுகத்தையும், னிடை - மத்தியிலிருந் தோன் கண்டறிந்ததற்கு கொக்குமென்பது பதம்.

(பொ.) தன்மத்தினாலுண்டாய சுகம் இதுவேயென்று குறிப்பிட வேண்டாம். பல்லக்கில் ஏறியுள்ளோன் சுகத்தையும், அதனை சுமப்போன் அசுகத்தையும் மத்தியினின்று கண்டறிந்தோன் நிலையே அதற்கு ஆதார மென்பது பொழிப்பு.

(க.) அறத்தினாற் றிதுவெனவேண்டாம் அதனை அநுபவக் காட்சியால் அறியவேண்டின் தண்டிகையேறி ஊர்வோன் சுகமே அதற்குப் போதுஞ் சான்றென்பது கருத்து.

(வி.) அறத்தினது ஆற்றலாம் சுகத்தைக் குறிப்பிடுதற்குப் பாங்கின்மெயான் ஈதெனவேண்டாம். அறமற்று அறிவற்று தண்டிகை சுமப்போன் கேட்டையும் அறமுற்றி அறிவுபெருகி தண்டிகை ஊர்வோன் சுகத்தையும் மத்தியிற்காண்பான் கண்டறிவதுபோல தன்மத்தையும், தன்மத்தின் பெருக்கத்தையும், தன்மத்தின் ஆற்றலாம் அதன் பயன்களையும் அவனவன் செய்தொழில் சித்தியாலும் சுகானுபவத்தினாலும் அறியலாமென்பதற்குச் சார்பாய் *நாலடி நானூறு* "உறக்குந் துணைய தோராலம்வித்தீண்டி, யிறப்பநிழற் பயந்தா அங் - கறப்பயனுந், தான்சிறிதாயினும் தக்கார்க்கை பட்டக்கால், வான்சிறிதாப் போக்கிவிடும்" என்னும், *சீவகசிந்தாமணி* ஆக்கியோன் திருத்தக்கத்தேவர் "அறவியமனத்தராகி

யாருயிர்க் கருளைச்செய்யிற், பறவையு நிழலும்போலப் பழவினையுயிரோ டோடி, மறவியொன்றானுமின்றி மனத்ததேசரக்குநல்லான், கறவையிற் கரக்குந் தன்னாற் காமுறப்பட்டவெல்லாம்" என்றும் அவனவன் செய்யும் அறத்தின் ஆற்றல் அவனவன் எண்ணிய வெண்ணம் முடிதலே காட்சி என்பது விரிவு.

8. வீழ்நாள் படா அமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

(ப.) வீழ்நாள் - கழிந்த நாளெல்லாம், நன்றாற்றி - நல்லறத்தை, படாஅமை- செய்யாதொழிந்த, னஃதொருவன் - ஒருவன், வாழ்நாள் - மற்றும் வாழ்நாள் முயற்சியாவிற்கும், வழியடைக்குங்கல் - தடைகளுண்டாகிக்கொண்டே வரு மென்பது பதம்.

(பொ.) தன்மத்தைச் செய்தவன் முயற்சி முட்டுபடாது முடிவதுபோல் தன்மத்தைச் செய்யாதோன் முயற்சி முடியா என்பது பொழிப்பு.

(க.) மலைமீதேற முயற்சிப்போனுக்கு அடுத்தடுத்து கற்குன்றுகள் தடையுண்டாகி இழிவதுபோல், ஈகையற்ற லோபிகளெடுக்கும் முயற்சிகள் யாவற்றிற்கும் லோபத்துவத் தடைகளே முன்னின்று கெடுக்குமென்பது கருத்து.

(வி.) ஈகையற்ற குணம் எவனிடம் நிறைந்துள்ளதோ அவனிடம் சீவகாருண்யங் கிடையாது. சீவகாருண்யம் எவனிடத்தில்லையோ அவனை சருவசீவர்களும் விரோதிப்பர். அத்தகைய சருவசீவர்கள் மத்தியில் ஈகையற்றோன் செய்யும் இச்சாசெயல்கள் யாவற்றிற்கும் இடுக்கமாகியத் தடைகளுண்டாவது இயல்பாம். கடந்தநாள் யாவற்றிலும் ஈகையற்ற லோப வாழ்க்கை அமைந்தோன் இனி கடக்கவேண்டிய நாளில் எடுக்கு முயற்சிகள் யாவுங் கெடுமென்பதாதலின் கடக்குநாளிலேயே தன்மத்தைச் செய்யின் தடை அகலுமென்பதற்குச் சார்பாய் *பாசமாட்சி* "இன்றியமையா விருமுதுமக்களைப், பொன்றின்மெகண்டும் பொருள்பொருளாய்க்-கொள்பவோ, வொன்றும் வகையா னறஞ்செய்கவூர்ந்துருளிற், குன்றும் வழி தடுப்பதில்" என்பதற் காதாரமாக வாழ்நாளை வீணாளாக்காது அறஞ்செய்ய வேண்டுமென்பதே விரிவு.

9. அறத்தான் வருவதே யின்ப மற்றெல்லாம்
புறத்த புகழு மில.

(ப.) அறத்தான் - தன்மச் செயலால், வருவதே - தோன்றுவதே, இன்பம் - அழியா சுகம், மற்றெல்லாம் - வேறு வகையால், புறத்த - அன்னியரிடத்தே, புகழுமில - கீர்த்தியும் சுகமும் இல்லை யென்பது பதம்.

(பொ.) தன்மத்தின் பெருக்கமாம் நல்லறத்தால் சுகமுங் கீர்த்தியும் உண்டாமன்றி ஏனையவற்றால் யாதும் உண்டாகாதென்பது பொழிப்பு.

(க.) அறமென்பது அன்பு, ஈகை, சாந்தமென்னும் மூன்றினையுமே பீடமாகக் கொண்டுள்ளதால் அறத்தின் மிகுதியே சுகத்திற்கும் சிறப்பிற்கும் ஆதாரமென்றும் மற்றவையால் அல்லவென்பதுங் கருத்து.

(வி.) அறமென்பது தன்மம் ஒன்றைமட்டிலுங் குறிக்காது மக்களுக்கு நீதிநெறிகளைப் புகட்டுதலுந் தன்மம், தன்னுயிர்போல் பிறருயிரை நேசிப்பதுந் தன்மம் தன்சுகம்போல் பிறர்சுகமுங் கருதுவது தன்மம், தன் துன்பம்போல் பிறர்துன்பத்தை ஆற்றுதலுந் தன்மம், தனக்குண்டாந் துக்கமே பிறருக்கும் உண்டாமெனக் கருதி அவற்றை நீக்குதலுந் தன்மம், தனக்குண்டாம் பெருந் திரவியத்தை தன்னையடுத்தோருக்கும் ஈய்ந்து தன்மயமாக்கிக்கொள்ளுவது தன்மம், தானடைந்த நிருவாண பேரானந்தத்தை ஏனையோருமடைய வேண்டுமெனப் போதிப்பதுந்தன்மமாதலின் அவற்றாலடையும் பேரின்ப சுகமே சுகம், அழியாப் புகழே புகழென்பது கண்டு அறத்தால் வருதலே இன்பமென்று கூறியவற்றிற்குச் சார்பாய் *அறநெறிச்சார* ஆக்கியோன் முனைப்பாடியார், "தனக்குத் துணையாகித் தன்னைவிளக்கி, இனத்துளிறைமையுஞ்செய்து - மனக்கினிய,

போகந்தருதலாற் பொன்னே அறத்துணையோ, டேகமாமற்றொன்றுமில்" என்பது கண்டு அறத்தின் பெருக்கமே அழியா பேரின்பதிற்கு ஆதாரமென்பது விரிவு.

10. செயற் பாலதோரு மறனே யொருவற்
குயற் பாலதோரும் பழி.

(ப.) செயற்பால தோரு - பலகாரியங்களை முடிக்குங்காலங்களிலும், யொருவற்கு - மற்றவோ ராதுலற்கு, அறனே - தன்மஞ்செய்தே யாரம்பித்தல் வேண்டும், தோரும் - பலகாரியங்களை செய்யுந்தோரும் உயற்பால - தன்னை உயர்ந்தோனென்றெண்ணி தன்மஞ்செய்யாமற்போவானாயின், பழி - நிந்தைக் குள்ளாவானென்பது பதம்.

(பொ.) ஈயாத லோபி எடுத்தகாரியம் இடிந்தென்ன முடிந்தென்னவென்பது பொழிப்பு.

(க.) ஒவ்வோர் காரியங்களை எடுத்து முடிக்குங்காலங்களிலெல்லாம் ஆதுலருக்கு அன்னமூட்டிச் செய்வது செய்தொழில் முட்டின்றி முடியு மென்பதாம். அங்ஙனம் ஆதுலரை நோக்காது அரியகாரியத்தைச்செய்தல் அவர்கள் நிந்தையாற்படுமென்பது கருத்து.

(வி.) செய்யுங்காரியங்கள் எவற்றிலும் தன்மத்தை முன்னிட்டுச் செய்வதே சித்தியும் அங்ஙனம் தன்மநிலை கொள்ளாது செய்யுங்காரியங்களிற் பழியுமுண்டாமென்பதற்குச் சார்பாய் *அறநெறிதீபம்* "செய்தொழிலே சித்திக்க செல்லுக நல்லறநெறியில், உய்த்தவமு முண்மை நிலையாவதுமதுவதுவாம், மெய்த்தவமே கோறியற நெறிதவரி வாழ்வதெனில், பொய்த்தவமேயென்றுபழி பலநாவுந் தூற்றுமதோ" என்று கூறியுள்ளவை ஆதாரங்கொண்டு தன்மத்தை முன்னிட்டே சகலகாரியங்களிலும் சித்திப்பெற வேண்டுமென்பது விரிவு.

5. இல்வாழ்க்கை

சாக்கைய முநிவரால் போதித்துள்ள இல்லற துறவற ஒழுக்கங்களில் இல்லறத்தையே முதலாகக்கெண்டு சீலமிகுத்துத் துறவறமாஞ் சங்கஞ்சேர்ந்து வீடுபெறும் சுகவழி வகுத்துள்ளதைக்கண்ட இன்னூலினாக்கியோன் தானும் இல்லறவாழ்க்கையில் நல்லொழுக்கத்தை இனிது வகுத்திருக்கின்றார்.

1. இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை.

(ப.) இல்வாழ்வா னென்பா - இல்லறத்தானென் றழைக்கப்படுவோன், னியல்புடைய - வழக்கமாக வுடைய, மூவர்க்கு - துறந்த சங்கத்தோர்களுக்கும், துறவா ஆதுலர்களுக்கும், மரித்தோர்களுக்கும் ஆகிய மூவர்களுக்கும், நல்லாற்றி - நல்லசுகவழியில், னின்ற - நிலைத்த, துணை - உதவியாவரென்பது பதம்.

(பொ.) துறந்துள்ள சமணமுநிவர்களுக்கும், துறவா கூன் குருடு சப்பாணி முதலியவர்களுக்கும், திக்கற்று மரணமடைந்தோர்களுக்கும் குடும்பத்துடன் வாழ்ந்துள்ளவனே நிலையான துணையென்பது பொழிப்பு.

(க.) இல்லறப் பற்றினை ஒழித்து ஞானசாதனத்தில் இருப்பவர்களுக்கும், யாதாமொரு தொழிற்செய்வதற்கும் இயலா அங்கவீனராம் பிணியாளர்களுக்கும் திக்கற்றப் பிணங்களுக்கும் நிலையாக நின்று உதவிபுரிவோர் இல்லறவாசிகளாம் நல்லறக் குடும்பிகளென்பது கருத்து.

(வி.) இல்லறவொழுக்கத்தைத் தனது இல்லாளுடன் நல்லறமாக நடாத்தும் இல்வாழ்வோன் இல்லந்துறந்த சங்கத்தோர்களாம் சமணமுநிவர்களுக்கும், அஞ்ஞானக் களங்கமமைந்த ஆதுலர்களாம் அங்கவீனர்களுக்கும், அநாதைப் பிணங்களுக்கும் ஆதரவாக நிலைத்துள்ளவனெனக்கூறியுள்ளவற்றிற்குச் சார்பாய் *அறநெறித்தீபம்* "இல்லறத்தி னிழுக்காற்றி யில்வாழ்வோன் பயனென்னில், வல்லறவோர் சாதனத்தை மாதவத்திலாழ்த்துவதும், புல்லுரவாமா துலர்க்குப் புசிப்பீய்ந்து காப்பதுவும், முல்லுரவற்றிறந்தோராம் மூவர்க்குந் துணையாமால்" என்னும் ஆதாரங்கொண்டு இயல்பாகவரும் சங்கத்துசமண முநிவர்களுக்குத், ஆதுலருக்கும், இறந்தோர்க்கும் இல்வாழ்வோனே துணையென்பது விரிவு.

2. துறந்தார்க்குந் துவ்வாதவர்க்கு மீறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை.

(ப.) துறந்தார்க்குந் - இல்லறத்தைவிட்டு நீங்கி துறவறமாஞ் சங்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும், துவ்வாதவர்க்கும் - அவ்வகைத் துறவடையா வாதுலர்க்கும், மிறந்தார்க்கும் - மரணமடைந்தோர்க்கும், மில்வாழ்வானென்பான் - இல்லாளுடன் குடும்பியென வாழ்பவனே, துணை - உதவி யாவனென்பது பதம்.

(பொ.) புத்தசங்கத்தைச்சார்ந்து துறந்தவர்களுக்கும், அங்ஙனந் துறவாத கூன் குருடு சப்பாணிகளாம் ஆதுலர்களுக்கும், மரணமடைந்தோர்களுக்கும் உதவியாயிருந்து சகல காரியங்களையுங் குறைவற நடாத்திவர வேண்டியவன் உபாசகனென்னும் இல்வாழ்வோனே என்பது பொழிப்பு.

(க.) சமணமுநிவர்களை தங்கள் தங்கள் சாதனங்களில் நிலைபெறச் செய்பவனும், ஆதுலர்களாம் ஏழைகளுக்கன்னம் ஈய்ந்து ஆதரிப்பவனும், மரணமடைந்தப்பிணங்களைக் கொண்டுபோய் சுடலை சேர்ப்பவனுமாகியக் குடும்பியே துணையாவனென்பது கருத்து.

(வி.) துறவறஞ் சிறந்து புலன் தென்பட்டவர்களாகும் தென்புலத் தோர்க்கும், அஞ்ஞானமிகுத்து துற்கன்மிகளாய வாதுலர்களுக்கும், பாபகன்மப் பெருக்கத்தால் தன்னை யாயாது மரணமடைந்தோர்களுக்கும் இல்வாழ்வோனே துணையென்பது கண்ட தெய்வப்புலவர் இல்லற வாழ்க்கை முதற்பாடலில் மூவர்க்கும் இல்வாழ்வான் துணையென்று பாடியுள்ளவை சகலருக்கும் விளங்காதென்ப துணர்ந்து இரண்டாவது பாடலில் துறந்தார், துவ்வாதவர், இறந்தோரென மேல் மூவரை விளக்கி இல்லற தன்மமும் இல்லறத்தோன் ஈகையையும் விளக்கி சுருக்கத்தில் துறவறசுகமடையும் படிவரைந்து நல்லறமே இல்லறமாக ஒழுகும்படி செய்தவற்றுள் இல்லறத்தையுந் துறவறத்தையுந் தெள்ளற விளக்கி தெய்வகதிபெறச் செய்துவைத்தவர் புத்தரேயென்பது அடியிற்குறித்த செய்யுளால் விளங்கும். *யாப்பருங்கலைக்காரிகை* "வாளார்ந்த மழைத்தடங்கண் வனமுலைமேல் வம்பனுங்கக், கோளார்ந்த பூணாகங் குழைபுரளக் கோட்டெருத்தின், மாலைதாழ் கூந்தலார் வரன்முறையான் வந்தேத்தச், சோலைதாழ் பிண்டிக்கீழ்ச் சூழ்ந்தார்தன் சொன்முறையான், மனையறமுந் துறவறமு மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும், வினையறுக்கும் வகைதெரிந்து ஈடொடுகட்டிவையுரைத்த, தொன்மைசால் கழிகுணத் தெந்துறவாசை தொழுதேத்த, நன்மைசால் வீடெய்துமாறு" என்று முதனூலுணர்ந்த ஆசான் தனது வழிநூலில் இல்லறவொழுக்கத்தைத் தெள்ளற விளக்கித் துறவற வழியைக் காட்டியுள்ளாரென்பது விரிவு.

3. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கு மென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை.

(ப.) தென்புலத்தார் - புலன்கள் தென்பட வுழைக்கும் சமண முநிவர்களுக்கும், தெய்வம் - ஆறாவது தோற்றமாம் மக்களிலிருந்து யேழாவது தோற்றமாம் தேவகதிபெற்றவர்களுக்கும், விருந்தொக்க - ஒத்த விருந்தின ரென்றளிக்கும், தமென்றாங் - யீகையையுடையோனை, கைம் புலத்தார் - ஐம்புல வவாவுள்ளோர் யாவரும், றலை - தங்கள் சிரங்களிலேந்தி, றோம்ப-கொண்டாடுவார்களென்பது பதம்.

(பொ.) புலன் தென்பட வுழைப்போர்களுக்கும், புலன் தென்பட்டு தேவகதியடைந்த யேழாவது தோற்றத்தோர்களுக்கும் நன்னோக்க விருந்தளித்துக் காக்கும் குடும்பியை தங்கட்சிரமீது ஏந்திக்கொண்டாடுவர், ஐம்புல அவாவில் உழலுங் குடிகளென்பது பொழிப்பு.

(க.) புத்தசங்கத்திற் சேர்ந்து தங்கட்புலன்கள் தென்பட சாதிக்கும் சமணமுநிவர்களுக்கும், சமணமுநிவர்களுள் சித்திபெற்ற அறஹத்துக்களுக்கும் அன்புடன் அன்னமூட்டிவரும் உபாசகக்குடும்பியை மற்றுங் குடும்பிகள் தங்கட் சிரமீதேற்றிக் கொண்டாடுவார்களென்பது கருத்து.

(வி.) மெய், வாய்க், கண், மூக்குச், செவி என்னும் ஐம்புலனுகர்ச்சியின் பீடம் ஈதீதென்றறிந்த தென்புலத்தோருக்கும், மக்களென்னும் ஆறாவது தோற்றங் கடந்து ஏழாவது தோற்றமாம் நிருவாணமுற்று தெய்வநிலையடைந்தவர் களுக்கும் ஒக்க விருந்தினர்களாயிருந்து அவர்களுக்குள்ளக் கருமக் கிரியைகள் யாவற்றிற்குந் துணையாகவுள்ள பௌத்த உபாசகர்களாம் நல்லறக் குடும்பிகளை செல்வமும் விவேகமுங் குறைவுற்ற மற்றும் இல்லறக்குடிகள் சிரமேந்தி ஓம்புவது இயல்பாதலின் உபாசகர்களாம் நல்லறக் குடும்பிகளின் சிறப்பை விளக்க ஐம்புல அவாவோர் ஓம்புந்தலையென்பதற்குச் சார்பாய் *அறநெறித்தீபம்* 'இல்லறமாநெறி நிற்போரியல்புடைய மூவர்க்கும், நல்லறமே துணைகொண்டு நற்றவத்தினுறுதி செயும், வல்லறத்தோர் வாழ்க்கைதனை மணணகத்தோர் கண்டோம்பி, சொல்லறத்தி நின்ற வரைசிரமேற்பர்சிரமேற்பர்" என்றும், *அறநெறிச்சார* ஆக்கியோன் முனைப்பாடியார் பிச்சையுமையமுமிட்டுப் பிறன்றார, நிச்சலு நோக்காதுபொய்யொரீ இ-நிச்சலுங், கொல்லாமெ காத்துக் கொடுத்துண்டு வாழ்வதே, இல்வாழ்க்கை யென்னுமியல்பு," "செல்வத்தைப் பெற்றார் சினங்கடிந்துசெவ்வியராய்ப், பல்கிளையும் வாடாமற் பார்த்துண்டு - நல்ல தானமறவாத தன்மெயரேலஃதென்பார், வானகத்து வைப்பதோர் வைப்பு" என்றும், பெருந்திரட்டு "சூழ்வானெறியினியன் மூவர்க்குந் துணிபின் றுறுதுணையாய்த், தாழ்வானதிலாதேநின்றும் பரத்தனி வாழ்வருளித்தானாழ் வாருதிசூழுலகின் பொடுமற்றதனின்பும் பெறலால், வாழ்வானென்போனில் வாழ்பவனே மற்றயரஃதுளரோ" என்று கூறியவற்றின் ஆதாரங்கொண்டு ஐம்புல னவா மிகுத்தக் குடும்பிகள் உபாசகர்களை சிறப்பிக்கும் நிலையினது விரிவு.

4. பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்.

(ப.) பழியஞ்சி - பிறர் நிந்தனைக்கஞ்சி, பாத்தூணுடைத்தாயின் நியாயவழியில் சம்பாதித்து உண்டுடுப்பானாயின், வாழ்க்கை - அவனது இல் வாழ்க்கையில், வழியெஞ்ச - எடுக்குந் தொழிலுக்குத் தடையுண்டாதல், லெஞ்ஞான்று - எக்காலத்தும், மில் - இல்லையென்பது பதம்.

(பொ.) இல்வாழ்வோன் நியாயவழியில் சம்பாதித்துக் கொடுத்து உண்பானாயின் அவனது வாழ்க்கைக்கு எடுக்கும் முயற்சிகள் யாவும் முட்டின்றி முடியுமென்பது பொழிப்பு.

(க.) இல்லாளுடன் குடும்பியென வாழ்பவன் தனது தேகத்தை வருத்தி சம்பாதித்துத் தன்னையடுத்தவர்களையும் போஷித்து ஆதுலருக்கும் ஈய்ந்து ஆனந்த வாழ்க்கையோடு எடுக்குந் தொழில்கள் யாவும் எக்காலத்துந் தடையின்றி முடியுமென்பது கருத்து.

(வி.) எண்வகை வதுவையில் ஒன்றேற்று இல்வாழ்க்கையில் ஒழுகுவோன் சூதினாலுங் களவினாலும் பொய்யாலும் பாவவழியில் பொருளை சம்பாதிக்காது உழைப்பினாலும் நீதியினாலும் நெறியினாலும் புண்ணிய வழியில் பொருளை சம்பாதித்து தானுந் தனது உரவின் முறையோரும் புசிப்பதுடன், துறந்தார்க்குந் துறவாதவர்க்கும், இறந்தோர்க்கும் ஈய்ந்து இனிது செய்வோர் காரியங்கள் யாவும் இன்புற்று முடியுமென்பதற்குப் பகரமாக *அறநெறித்தீபம்* "பழிபாவம் வழியஞ்சி பார்த்துண்ணு மில்லோன்றன், அழியாத வறநெறியி லென்றென்று நின்றுசுகங், கழியாதுயில் வாழ்க்கைக் காமுறுவோர் செய்கையது, இழியாது யெக்காலு மீடேற்ற முறுமாமால்" என்று இல்வாழ்வோன் நீதியின்வழியால் சம்பாதித்தப் பொருளை நீதியும் நெறியும் வாய்மெயும் அமைந்த பெரியோர்க்கு இட்டுண்டு வாழ்பவன் எடுக்குஞ் செயல்கள் யாவும் இடுக்கின்றி முடியுமென்பது விரிவு.

5. அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
பண்பும் பயனு மது.

(ப.) அன்பு - கருணையும், மறனு - யீகையுமாய விரண்டும், முடைத்தாயி - பெற்றிருப்பானாயின், னில்வாழ்க்கை - குடும்பவியல்பிலேயே, பண்பும் - குணவமைதியும், பயனும் - அதன் பலனும், மது-அதுவே யென்பது பதம்.

(பொ.) இல்வாழ்வோனுக்குக் கருணையும் ஈகையும் பொருந்தி இருக்குமாயின் அவன் நெடுங்குணங் குடிக்கொள்ளலே அதன் பயனென்பது பொழிப்பு.

(க.) மனவிரிவால் உலகமும், மனவொடுக்கத்தால் சிரேஷ்டமும் பெறுவதியல்பாதலின் இல்வாழ்வோன் தனது செயலைக் கருணையிலும் ஈகையிலும் பொருந்தச்செய்வானாயின் அதுவே குணங்குடிக்கொள்ளுதற்குப் பயனென்பது கருத்து.

(வி.) குணவிரிவிற்கு அவாவின் பெருக்கமும், குணவொடுக்கத்திற்கு அவாவின் சுருக்கமே காரணமாதலின் கருணையோடும் தன்மத்தைச் செய்ய முயலுவோனுக்கு உலகபற்றுக்கள் யாவுமற்று சீவகாருண்யப்பற்று மிகுத்திருப்பதுகண்டு இல்வாழ்க்கையில் இருப்போனுக்குக் கருணையோடமைந்த ஈகையிருக்குமாயின் அதற்குப் பயன் குணவமதியேயென்றறிந்து அதனது நித்திய சிறப்பை விளக்கியவற்றிற்குச் சார்பாக *அறநெறிச்சார* ஆக்கியோன் முனைப்பாடியார் "தண்டாமம் பொய்வெகுளி பொச்சாப் பழுக்காறென், றைந்தே கெடுவார்க் கியல்பென்ப - பண்பாளா, யீதலறித லியற்றுதலின் சொற்கற், றாய்தலறிவார் தொழில்" என்றது கண்டு அன்பும் அறனுமுள்ளானுக்குப் பண்பமைதியே பயனென உணர்த்திய விரிவு.

6. அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்.

(ப.) அறத்தாற்றி தன்மத்தினது வாற்றலை, னில்வாழ்க்கை - குடும்பச்செயலிலேயே, யாற்றிற் - சுகநிலைப்பெறுவதினும், புறத்தாற்றிற் - வேறிடமுண்டென்று, போஒய்ப் சென்று, பெறுவதெவன் - சுகமடைபவனெவனென்பது பதம்.

(பொ.) நல்லறத்தின் சுகமாகிய ஆற்றலை இல்லறத்தில் இனிதுநடாத்தி சுகம்பெறுதலே மேலாயபயனாதலின் அதற்கு மேலாய சுகம் அப்புறம் வேறுளதோ என்பது பொழிப்பு.

(க.) இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையில் நடத்துவோனது ஆற்றல் அவனது சுகவாழ்க்கையிலேயே விளங்குகின்றபடியால் இல்லறத்தில் நல்லறம் நடாத்தி ஆற்றலடைபவனுக்குமாறாக புறத்தாற்றிற் பெறும் சுகமுடையவன் ஒருவனுளனோ என்பது கருத்து.

(வி.) தலைவனும் தலைவியும் அன்புபொருந்தி நடாத்தும் இல் வாழ்க்கையில் நல்வாய்மெய், நல்லூக்கம். நற்கடைபிடி, நல்லமைதியில் வாழ்பவரின் ஆற்றலினும் வேறு சுகவழியில்லையென்று கண்ட ஆசான் தனது வழிநூலுள் அறத்தாற்றி சுகமடைதலே ஆற்றலென்றும், அதற்கு மாறாய சுகவழிகள் யாதொன்றும் இல்லையென்றும் விளக்குவான்வேண்டி அறத்தாற் சுகமடைபவனினும் வேறொருவன் உளனோ என்பதற்குச் சார்பாய் *அருங்கலைச்செப்பு* "நற்காட்சி நன்ஞான நல்லொழுக்க மிம்மூன்றுந் தொக்கவறச் சொற்பொருள்," *அறநெறிச்சாரம்* "காட்சியொழுக்கொடு ஞானந்தலைநின்று, மாட்சிமனைவாழ்தலன்றியு - மீட்சியில், வீட்டுல மெய்தல் என விரண்டே நல்லறங், கேட்டதனாலாயபயன்" என்பது விரிவு.

7. இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை.

(ப.) இயல்பினா - நீதினெறி யொழுக்கச் செயலினால், னில்வாழ்க்கை - இல்லறத்தன்மத்தில், வாழ்பவ னென்பான் - வாழ்பவனென்று சொல்லும் படியானவன், முயல்வாரு - மற்றும்வேறு முயற்சியுள்ள, ளெல்லாந் - யாவர்க்குந், தலை - முதலவனென்பது பதம்.

(பொ.) இல்லறதன்மத்தில் வழுவாது வாழ்பவன் மற்றுஞ் செயலிலுள்ள யாவர்க்கும் முதலவனென்பது பொழிப்பு.

(க.) இல்லற நல்வாழ்க்கையை இனிது நடாத்துங் குடும்பியானவன் மற்றுஞ் செயலை நடாத்துவோர் யாவருக்குந் தலைமையானவனென்பது கருத்து.

(வி.) சங்கஞ்சேர்ந்த சிரமணர்களாம் சமணமுநிவர்களுக்கும், வேதாந்தத்திற்கும், சித்தாந்தத்திற்கும், சமரசநிலைநிற்கும் சித்தர்களுக்கும், சமணநிலை கடந்த அறஹத்துக்களாம் தேவர்களுக்கும், ஆதுலர்களுக்கும், மரணமடைந்தோர்களுக்கும், மற்று முயற்சியுள்ளார்க்குந் தலைமெயானவன் உபாசகனென்னும் இல்லற நெறி வழுவாதவனே ஆதாரமென்பதற்குச் சார்பாய் அறநெறிச்சாரம் "ஒன்றாக நல்லதுயிரோம்ப லாங்கதன்பின், நன்றாய்த்துங்கினார்க் கீத்துண்டல் - என்றிரண்டுங், குன்றாப்புகழோன் வருகென்று மேலுலகம், நின்றதுவாயிற் றிந்து" என்பது கொண்டு சகல முயற்சியிலுள்ளவர்களுக்கும் இல்லறநெறி நிற்போனே தலைமெயானவனென்பது விரிவு.

8. ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மெ யுடைத்து.

(ப.) ஆற்றி - ஞானத்தி னிற்பினும், னொழுக்கி - சீலத்தினிற்பினும், யறனிழுக்கா - தன்மநெறி பிறழாது, வில்வாழ்க்கை - மனையறத்தினிற்பவன், நோற்பாரி - தவத்தைச் செய்பவனினும், னோன்மெயுடைத்து மேலாய தவத்தையுடையவனென்பது பதம்.

(பொ.) விவேக மிகுதியும சீலமுமிருப்பினும் அறநெறி வழுவா இல்வாழ்க்கை யையுடையவன் தவநெறியாம் நோன்பினை நோற்பவனினும் மேலாய நோன்மெயுடையவனென்பது பொழிப்பு.

(க.) கொன்றுத் தின்னாமெ யென்னும்நோன்பினையுடைய தவத் தோனாயினும் இல்லறநெறியை இழுக்கற நடாத்துவோனுக்கு நிகராகான் என்பது கருத்து.

(வி.) கொன்றுத் தின்னாமெயென்னும் நோன்பினைநோற்கினும் ஞானமுதிர்ந்தோனென்னும் விவேகம் விளங்கினும் சீலமிகுத்தோனென்னும் சுத்தமமையினும் இல்லாளுடன் நல்லறம் நாடாத்துவோன் அறநெறி பிறழாது இழுக்கற நடாத்துவானாயின் அவனது இல்லறவொழுக்கமே நல்லறநெறியும் தொல்லறம் நீக்கி பல்லறம் பயிற்றலும், புண்ணியவசத்தால் செல்வஞ் சேரலும், சேர்ந்த செல்வத்தால் துறந்தோரைக் காத்தலும், துறவாதோர்க்கு ஈய்தலும், இறந்தோரை எடுத்தலும், இழிந்தோரை உயர்த்தலுமாகிய ஈகையென்னும் பெருக்கே ஈசனென்னும் பெயருக்குப் பீடமாயதுகண்ட பெரியோன், எத்தகைய நோன்பினை யுடையவனாயினும் இழுக்கற்று ஈகைமிகுத்த இல்வாழ்வோனுக்கு நிகராகான் என்பவற்றிற்குச் சார்பாய் அருங்கலைச்செப்பு "பழிக்கஞ்சு மெஞ்ஞான்றும் பண்ணுந்தவத்தோன் இழுக்கற்ற வில்வாழ்வான்முன்" என்னும் ஆதாரங்கொண்டு இழுக்குற்ற தவத்தோனினும் இழுக்கற்ற இல்வாழ்வோன் சிறந்தோனென்பது விரிவு.

9. அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று.

(ப.) அற னெனப்பட்டதே - தன்மமென்று கூறப்பட்டதே, யில்வாழ்க்கை - மனையறமென்பதே முதலாம், யஃதும் - அத்தகைய தன்மமும், பிறன்பழிப்ப - அன்னியனால் நிந்திக்கப்படுகை, தில்லாயி - இல்லையாயின், னன்று - நல்ல தென்பது பதம்.

(பொ.) அறமென்னும் இல்லறந் துறவறம் இரண்டினும் இல்லறமே முதலாதலின் அவற்றை நடாத்துவோன் அன்னியனால் நிந்தனைக்குள்ளாகாது நடத்தலே இல்வாழ்வோன் சிறப்பென்பது பொழிப்பு.

(க.) இல்லறம் துறவறம் இரண்டினுள் துறவறத்திற்கு இல்லறமே வாழ்க்கை வழியாதலின் இல்வாழ்வோன் பழிபாவம் அகற்றி வாழ்கவேண்டு மென்பது கருத்து.

(வி.) அறமென்னும் மொழியே இல்வாழ்க்கையின் சீர்திருத்த அடிபடையாதலின் அவ்வறத்தை இல்லறத்தோனே இனிது நடாத்தி மூவரையுஞ் சீர்திருத்துவானாயின் இவனுக்குள்ள பற்றுகளாம் பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை மூன்றும் நாளுக்குநாளற்று சுருக்கத்தில் வீடுபேறு பெறும்

சுத்தசீலனாதற்கு இல்லறமே நல்லறமாகக் கண்ட ஆசான் கூறியவற்றிற்குச் சார்பாய் *அறநெறிச்சாரம்* "மருவி யகாதன் மனையாளுந்தானும், இருவரும் பூண்டுயப்பி நல்லால் - ஒருவரால், இல்வாழ்க்கையென்னுமியல்புடையவான் சகடம், செல்லாது தெற்றிற்று நின்று" என்றுங் கூறிய ஆதாரங்கொண்டு அறமே இல்வாழ்க்கை, இல்வாழ்க்கையே அறமாதலின் அவ்வறத்தைப் பிறர்பழிப்பின்றி நடாத்தவேண்டுமென்பது விரிவு.

10. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்.

(ப.) வையத்துள் - பூமியின்கண், வாழ்வாங்கு - இல்வாழ்க்கைநெறி பிறழாது, வாழ்பவன் - வாழும்படியானவன், வானுறையுந் - அகண்டத்துறையும், தெய்வத்துள் - புத்தேளுலகத்துள், வைக்கப்படும் - எவ்விதத்துஞ் சேர்க்கப்படுவா ரென்பது பதம்.

(பொ.) இல்லறநெறி பிறழாது வாழ்பவன் எவ்விதத்தும் புத்தேளுலகைச் சேருவானென்பது பொழிப்பு.

(க.) இல்லாளோடுங்கூடி நல்வாழ்க்கை நடத்துவோன் இல்லற நெறியினேதுவால் நல்லற நிகழ்ச்சியாம் வானுறை தேவர்கதியின் தானங்கிடைக்கும் என்பது கருத்து.

(வி.) துணைநலங்கொண்டு வாழும் இல் வாழ்வோன் இல்லறநெறி பிறழாது துறந்துள்ளவர்களுக்கு வேண்டிய துணைக் கருவிபோலிருந்தும், துறவாத ஆதுலர்க்கு ஆதரணைக்கர்த்தனாகவிருந்தும் இறந்தோர்களை இல்லம் நீக்கி இடுகாடு சேர்ப்பதுமாய தன்மவாழ்க்கையில் வாழ்வாங்கு வாழ்பவன் கூடிய சீக்கிரம் பாசபந்தக் கயிறுகளாம் வாணமற்று நிருவாணமுற்று வானவர்க்கரசனாம் புத்ததேவனது பதும பாதத்தைச் சேர்வானென்பதற்குச் சார்பாய் *இஸ்காத்தம்* "துறந்தவர்கள் வேண்டியதோர் துப்புறவுநல்கி, யிறந்தவர்கள் காமுறு மிருங்கடனியற்றி, யறம்பலவுமாற்றி விருந்தோம்பு முறையல்லாற், பிறந்த நெறியாலுளதோர் பேருதவியாதோ", *அறநெறிச்சாரம்* 'செல்வத்தைப் பெற்றார் சினங்கடிந்து செவ்வியராய்ப், பல்கிளையும் வாடாமற் பாத்துண்டு - நல்ல, தானமறவாத தன்மெயரே லஃதென்பார், வானகத்து வைப்பதோர்வைப்பு" என்னும் ஆதாரங்கொண்டு இல்லறநெறியில் வழுவாது வாழ்பவன் துறவறநெறியிற் சுருக்கத்திலயித்துப் பரிநிருவாணமுற்று சுயம்பிரகாசனாகி வானவர்க்கு அரசனாம் ஆதிதேவனடியை அடைவானென்பது விரிவு.

6. மனையறமாம் வாழ்க்கைத் துணை நலம்

தலைவனும் தலைவியும் மனையறம் வழுவாது வாழ்தலின் சுகாசுகங்களை விளக்குகின்றார்.

1. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

(ப.) மனைத்தக்க - தன தில்லத்திற்குத்தக்க, மாண்புடையளாகித் - கற்பிற்கினிய சிறந்தவளை, தற்கொண்டான் - தனக்கென்று சேர்த்துக் கொள்ளுவானாயின், வளத்தக்காள் - நீர்வளம் நிலவள முடையவளாகி, வாழ்க்கை-இல்லறச்சுகத்திற்கு துணை, வாழ்க்கைத் துணை - யாவா ளென்பது பதம்.

(பொ.) இல்லத்திற்குத் தக்க சிறந்தகுணத்தாளைத் தனக்குத் துணையாக சேர்த்துக்கொள்ளுபவன் நீர்வளம் நிலவளம் நிறைந்த சுகவாழ்க்கைப் பெறுவானென்பது பொழிப்பு.

(க.) கற்பிற்கினிய மாண்புடையாளைத் தனது இல்வாழ்க்கைக்குத் துணைவியாகச் சேர்த்துக்கொள்ளுவானாயின் அவளது கற்பின் வளமொல் நீர்வளம் நிலவளம் பெருகி சருவசீர்களுக்கும் உபகாரிகளாகி சுக வாழ்க்கை பெறுவான் என்பது கருத்து.

(வி.) இல்லறம் நடாத்துவதில் பிரமம், பிரசாபத்தியம், ஆரூடம், தெய்வம், கந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்னும் எட்டுவகை விவாகத்துள்

ஏதொன்றிலேனும் நிலைத்து வாழ்க்கைத் துணைநலம் பெறுவதே மனையற மென்னப்படும். *தொல்காப்பியப்* பொருளதிகாரம் "இன்பமும் பொருளுமறனு மொன்றாங், கன்பொடு புணர்ந்தவைந்திணை மருங்கிற், காமக்கூட்டங் காணுங்காலை, மறையோரதே ஏத்துமன்ற, லெட்டனுட்டுறையமை, நல்வாழ்துணைமெயோரியல்பே" என்னும் இல்வாழ்க்கைத் துணைநலங் கொண்டுவாழ்வோர்க்கு இனிது நலமுடியுமென்பதற்குச் சார்பாய் *அறநெறித்தீபம்* "மனைவாழ்வே யறநெறியில் வாழ்க்கை துணைநலங் கொண்டான், வனநெறிக்குமேலாய மாண்புடையா ளமைவாளேல், இனமரபு மெழிலுரவு மில்லறமே நல்லறமாய், மனவளமு நிலவளமும் வாழ்க்கைசுகந் தருமமால்" என்னும் ஆதாரங்கொண்டு கற்பிற்கினிய மாண்புடையாள் வாழ்க்கைத் துணைநலம் ஆவளேல் நீர்வளம் நிலவளம் பெருகி சுகவாழ்க்கைப் பெறுவானென்பது விரிவு.

2. *மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை*
யெனைமாட்சித் தாயினு மில்.

(ப.) மனை - இல்லத்தில், மாட்சி - கற்பினும் அறத்தினுஞ் சிறந்த, யில்லாள்க - மனையாட்சிகள், ணில்லாயின் - இல்லாமற் போவார்களாயின், வாழ்க்கை - இல்லறசுகம், யெனைமாட்சித் - மற்றுமேனையசம்பத்து, தாயினும் - பெருகி யிருப்பினும், மில் - சுகவாழ்க்கை யில்லை யென்பது பதம்.

(பொ.) வாழ்க்கைத்துணைவிக்குக் கற்புங் கருணையும் இல்லையின் மற்றும் ஏனைய சம்பத்திருந்தும் இல்வாழ்க்கை சிறப்பைத்தராவென்பது பொழிப்பு.

(க.) ஒருவனுக்கு தனசம்பத்து, தானியசம்பத்து, குடும்பசம்பத்து நிறைந்திருப்பினும் தனது மனையாளுக்கு வேண்டிய கற்பின் சம்பத்து கருணைசம்பத்து இரண்டுமில்லாமற் போமாயின் அவ்வில்வாழ்க்கைக்கு யாதொரு சுகமுமில்லை யென்பது கருத்து.

(வி.) இல்லத்தை சிறப்பிக்கச்செய்யும் நல்லறமாம் இல்லாளின் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னும் நான்கு தன்மபாத நடை ஒழுக்கங்களின்றி வாழ்க்கைத்துணைக்கு ஒருவள் தோன்றுவாளாயின் அவனது வாழ்க்கையில் தனசம்பத்து, தானிய சம்பத்து, குடும்ப சம்பத்து நிறைந்திருப்பினும் இல் வாழ்க்கையின் சுகசம்பத்தில்லையென்று கூறியுள்ளவற்றிற்குச் சார்பாய் *அருங்கலைச்செப்பு* "மனையறமே காட்சி மனையாளின் கற்பு. இனையாயி னில்லறமேயில்", *அறநெறிச்சாரம்* "விருந்துபுறந்தாரான் வேளாண்மைசெய்யான், பெருந்தக்கவரையும் பேணான் - பிரிந்துபோய்க், கல்லான் கடுவினை மேற்கொண்டொழுகுமேல், இல்வாழ்க்கை யென்பதிருள்" என்றுங் கூறியுள்ள ஆதாரங்கொண்டு ஏனைய சிறப்புப் பெறினும் வாழ்க்கையில் மனையாளினது கற்பின் சிறப்புங் கருணையினது சிறப்பும் இல்லையாயின் அவ்வாழ்க்கையில் யாது சிறப்புமில்லையென்பதே விரிவு.

3. *இல்லதெ னில்லவண் மாண்பானா லுள்ளதே*
னில்லவண் மாணாக் கடை.

(ப.) இல்லதே - வாழ்க்கைக்கேது மில்லாதிருப்பினும், னில்லவண் உள்ளமனையாள், மாண்பானா - கற்பின் சிறப்பமைந்திருப்பாளாயின், லுள்ளதே - சகலபாக்கியமு மிருக்குமென்பதேயாம் னில்லவண்-கற்பிநிலையில்லாத வளாயின், மாணாக்கடை - அவ்வில்வாழ்க்கை சகலராலும் இழிவடையு மென்பது பதம்.

(பொ.) இல்லத்தில் ஏதொரு பாக்கியமில்லாதிருப்பினும் இல்லாள் நல்லொழுக்க நல்லமதியாம் கற்பமைந்திருப்பாளாயின் சகல பாக்கியங்களும் இருக்குமென்பது பொருந்தும். அங்ஙனம் இல்லாளாயின் அவ்வில்லம் சகலராலும் இழிக்கு மென்பது பொழிப்பு.

(க.) நல்லொழுக்கம், நல்லமதி, நற்கடைபிடி அமர்ந்த கற்புடைய மனையாளிருப்பாளாயின் அவளுடன் சகலபாக்கியமும் பொருந்தவிருக்கும். நல்லொழுக்க நல்ல மதியற்று கற்புநிலை கடந்திருப்பாளாயின் அவ்வில்லத்தில் யாதுபாக்கிய மிருந்தும் இல்லையென்னும் இழிவையே தருமென்பது கருத்து.

(வி.) இல்லறத்தையே நல்லறமாகக்கொண்டு இறந்தோரை இடு காட்டிற்கும், துறந்தார்க்குத் துணையாகவிருந்து தூயநிலையடைதற்கும், துறவாது ஆதுலநிலையுற்றோர்க்கு உண்டிகொடுத்தும் உயிர்பிச்சை அளித்தாதரிக்குங் கருணையுடையோளாய் கணவனையே கடவுளாகக் கருதுங் கற்புடையவளாய இல்வாழ்க்கைத்துணைவி ஒருவளிருப்பாளாயின் அவளில்லத்தில் சகலபாக்கியங்களும் நிறைந்திருக்கும். இல்லாள்நீலியும், இடும்பியும், லோபியும், கற்பற்ற பாவியுமா யிருப்பாளாயின் அவளில்லத்தில் சகல பாக்கியங்களும் நிறைந்திருப்பினும் நிர்பாக்கியவதி யென்னும் நிட்டூரத்தாற் கழிந்த மாணாக்கடை யடைவனென்பதற்குச் சார்பாய் அறநெறிச்சாரம் "நெறுங்குபெய்தாக்கிய கூழாரவுண்டு, பிறங்கிருகேட்டொடுபன்றியுமவாழும், அறஞ்செய்து வாழ்வதே வாழ்க்கைமற்றெல்லாம் வெறும்பேழை தாழ்க்கொளீ இயற்று" என்னும் ஆதாரங்கொண்டு கற்புங் கருணையுமமைந்த வாழ்க்கைத்துணையே துணையென்றும் மற்றுமில்லாள் துணைவாழ்க்கைக்குக் கேடென்பது விரிவு.

4. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மெயுண் டாகப் பெறின்.

(ப.) பெண்ணிற் - பெண்களுள், கற்பென்னும் - பதுமினியென்னும், திண்மெயுண்டாகப் - திறமெயுடையாளை, பெறின் - வாழ்க்கைக்குத் துணையாகப் பெற்றவனுக்கு, பெருந்தக்க யாவுள - இவளினும் பெறவேண்டிய வேறு சம்பத் துளவோ வென்பது பதம்.

(பொ.) கற்பிற்கு இனியாளை தனது இல்வாழ்க்கைத் துணையாக சேர்த்துக்கொண்டவனுக்கு இவளினும் வேறொரு தக்கப் பொருளுளவோ என்பதுபொழிப்பு.

(க.) நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு, சீலம், கருணை இவைகள் நிறைந்த கற்புடையப் பெண்மணியை ஒருவன் தனது இல்வாழ்க்கைத் துணைவியாகத் தேடிக்கொள்ளுவானாயின் அவ்வில்லிற்கு அவளினும் பெருத்த சம்பத்து வேறுளவோ என்பது கருத்து.

(வி.) கணவனுக்கு இனியவளாயுள்ள சம்பத்து, கணவனுக்கு எதிர்மொழி கூறாசம்பத்து, மாமி ஆதுலர்பால் மிருதுமொழி பேசுஞ் சம்பத்து, தனது கணவன் உறவின் முறையோரையே தனது உறவின்முறையோராகக் கருதி அவர்களை ஆதரிக்குஞ் சம்பத்து, நாணத்தையே ஆபரணமாகக்கொள்ளுஞ் சம்பத்து, அச்சத்தையே ஆடையாக அணையுஞ் சம்பத்து, தன்வீட்டின் சங்கதிகளை அன்னியர் வீடுகளுக்குக் கொண்டுபோகா சம்பத்து, அன்புங் கருணையுமே ஆதாரமாகக் கொண்டுள்ள சம்பத்தாம் கற்பு நிறைந்த பெண்மணி வாழ்க்கைக்குத் துணையாவளேல் அவ்வில்லிற்கு அவளினும் வேறு சம்பத்துளவோ என்பதற்குச் சார்பாய் அறநெறித்தீபம் "அச்சமொடு நாணமட மரிய பயிர்ப்புடையாளாய், இச்சையறு ஞானநிதி யினியமொழி கற்புநிலை, அச்சுருவா மாணியதா அமைந்தவளே வாழ்க்கைபெறில், நிச்சயமா மில்லிற்கு நேருநித வேறாமோ" என்னும் ஆதாரங்கொண்டு கற்பிற்கினியவள் இல் வாழ்க்கைபெறில் கணவன் தேடவேண்டிய வேறு சம்பத்து இல்லையென்பது விரிவு.

5. தெய்வந் தொழஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

(ப.) தெய்வந் - தெய்வத்தை, தொழாஅள் - வணங்கமாடடாள், கொழுநற் - தனது கணவனையே தெய்வமென, றொழுதெழுவாள் - வணங்கித் துயிலெழுபவள், பெய்யெனப் - தூவவேண்டுமென, பெய்யு - தூஉம், மழை - துளிர் நீரென்பது பதம்.

(பொ.) தன்னைக் காக்கும் தெய்வம் வேறொன்று வணங்காது தனது கணவனையே காக்குந்தெய்வமென வணங்கி துயிலெழுந்து கற்பின் நிலை நிற்பவள் பெய்யென்றால் மழை பெய்யுமென்பது பொழிப்பு.

(க.) காலையில் துயில்விட்டெழும்போதே தன் கணவனையே தெய்வமெனத்தொழுது இல்லறநெறி வழாது நடாத்துபவள் வானத்தை நோக்கிப் பெய்யவேண்டுமென்றால் பெய்யுமென்பது கருத்து.

(வி.) நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னுங் கற்பிநிலை பிறழாது தன் கணவனையே கடவுளெனக் கருதி வாழ்க்கைத் துணையாக நின்று புலன் தென்பட்டோராம் தென்புலத்தோருக்கும், அநாதை ஆதுலர்கட்கும், இறந்து இழிவடைவோருக்கும் துணையாயிருந்து துயில்நீற்று எழும்போதே தனது கொழுனனைத் தொழுது மனமாசகற்றி வாழும் பெண்மணியானவள் பூமிவளம் பெருக வானம் பெய்யவேண்டுமென்று கோறும்போதே தனக்கு யாதொரு பிரிதிபலனுங் கருதாது தனது கணவன்சொல் தவிறாது மூவர்க்குந் துணையாயிருந்து ஈபவளாதலின் அவளின் கோரிக்கை கூடுமென்பதற்குச் சார்பாய் அருங்கலைச்செப்பு "இல்லறவாழ்க்கைக் கினியாளகுமுறில், சொல் லெல்லாஞ் செல்லுந் துணை", "வாழ்க்கைத் துணைநல முள்ளாள்தன் வாக்குப், பாழ்ப்போகாதென்றும்பகர்" "கற்புக்கினியாளாய் கணவனையே பேணும், பொற்புடையாள் வாக்கதனைக் காண்" என்னு மொழிகொண்டு வேறொரு தெய்வத்தையும் நம்பாது தனது கணவனையே தெய்வமென நம்பி அறநெறி வழுவாது நடாத்துபவளின் வாக்கு தவிறா தென்பது விரிவு.

6. *தற்காத்துத் தற்கொண்டாற் பேணித்தகை சான்ற*
சொற்காத்த சோர்விலாள் பெண்.

(ப.) தற்காத்து - தனது கற்புநிலையைக் காப்பதுடன், தற்கொண்டாற் - தன்னைக்கொண்டக் கணவனையும், பேணி - அன்புட னாதரித்து, தகைசான்ற - இருவருக்கு மோர் கவசத்திற் கொப்பாக, சொற்காத்து - தனது நாவைக்காத்து, சோர்விலாள் - கற்பின் நிலை பிறழாது வாழ்பவளே, பெண் - துணைவி யென்பது பதம்.

(பொ.) தனது கற்பின் நிலையைக் காத்துக்கொள்ளுவதுடன் தனது கணவனையுங் கவசம்போல் காத்து தனது நாவையுங்காத்து தானுங் கலங்காமல் நிற்பாளாயின் அவளையே கற்புநிறைப் பெண்ணென்பது பொழிப்பு.

(க.) பெண்ணென்னும் பெயர்பெற்றவள் தனது கற்பினைக் காப்பதிலும், தன் கணவனைக் காப்பதிலும், தன்னாவைக் காப்பதிலும் தளர்வுறாதிருப் பாளாயின் இல்வாழ்க்கைப் பெண்களில் அவளே சிறந்த கற்புடையா ளென்பது கருத்து.

(வி.) பெண்ணானவள் தனக்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னுங் கவசத்தால் காத்துக்கொள்பவளாகவும், தனது கணவனுக்கு யாதொரு குறைவுமின்றி புசிப்பூட்டிக் காத்துக்கொள்பவளாகவும், தனது வாக்கினால் ஒருவரையுஞ் சுடச்சொல்லாது காத்துக்கொள்பவ ளாகவும் உள்ள நீதிநெறிக் கவசம்பூண்டு சோர்வுரா கற்புநிலையில் நிற்பவளே பெண்களிற் சிறந்தவளென்பதற்கு சார்பாய் குறுந்திரட்டு "தலைவனைக் காப்பதல்லால் தன்னையுங் காத்துகற்பி, நிலைதனிற் பிறழாநோன்பு நோற்பவ ளாவளென்னில், பலகலை பயின்றவில்லோன் பாக்கியவாளனென்னும், சிலைநுதல் விழியாள் வாழ்க்கை செவ்வையிற்செவ்வையாமே" என்னும் ஆதாரங்கொண்டு தன்னையும், தன் கணவனையும், தன் வாக்கையும் சீலகவசத்தால் மூடிக் காப்பவளே வாழ்க்கைத் துணை நலமாயப் பெண்ணென்பது விரிவு.

7. *சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்*
நிறைகாக்குங் காப்பதே தலை.

(ப.) சிறைகாக்குங் - பெண்களின் கற்பைக் காக்குங், காப்பெவன் - காவலனெவன், செய்யு - மனைத்தொழிலை நடத்தும், மகளிர் - பெண்களின், நிறைகாக்குங் - கற்பிற்குக் குறைவராது, காப்பே - காத்துக்கொள்ளுபவளே, தலை - இல்லின் தலைவியாவாளென்பது பதம்.

(பொ.) பெண்களின் கற்பைக் காப்பவனும், வேறொருவனுளனோ, இல்லை, வாழ்க்கைத் துணையாம் இல்லாளே தனது கற்பைக் காத்துக் கொள்ளுவதே தலையென்பது பொழிப்பு.

(க.) பெண்கள் அவரவர்கள் கற்பை அவரவர்களே காத்துக்கொள்ள வேண்டுமேயன்றி தங்கள் காவலாளர்களேனும் ஏனையோர்களாலேனுங் காக்கலாகாதென்பது கருத்து.

(வி.) படைமருண்ட பாலரையுங்காக்கலாம், கடல் மடைதிரண்ட வெள்ளத்தையுங் காக்கலாம், கருமுகில் பொழியு மழையையுங் காக்கலாம், பெண்களின் கற்பை எவராலுங் காக்கலாகாது. ஆதலின் பெண்களின் கற்பின் நிலையை அவரவர்களே காத்து வாழ்க்கைக்குத் தலைமையாக விளங்கவேண்டு மென்பதற்குச் சார்பாய் குறுந்திரட்டு "மறைமொழி காக்குஞ் செங்கண் முநிவர்கள் அனந்தமுண்டு, நிறைமொழி காக்கு மன்னுதிடமுளோர் பலருமுண்டு, சிறையுளார் பெண்கள் காப்பைப் பெண்களே காப்பரன்றி, குறைவறக் கற்பையென்றுங் காப்பவரில்லை கண்டீர்" என்னுமுதுமொழிகொண்டு பெண்களினது கற்பைக் காக்கக்கூடியவனும் உலகத்திலுளனோ, இல்லை. அப்பெண்மணிகளே தங்கள் தங்கள் கற்பின் நிலையைக் காத்துக்கொள்ள வேண்டுமென்பது விரிவு.

8. பெற்றார் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு.

(ப.) பெண்டிர் - பெண்களுள், பெருஞ்சிறப்புப் - கற்பின் புகழை, பெற்றார் - அமைந்தவர்களை, பெறிற் - துணைவியாகப் பெற்றவர்கள், புத்தேளிர் - மெய்கண்டோர், வாழுமுலகு - வானராட் சியத்தை, பெறுவர் - எவ்விதத்துஞ் சேருவார்களென்பது பதம்.

(பொ.) வாழ்க்கைக்குத் துணைவியாக அமைந்த பெண்மணியானவள் கற்பினது புகழைப் பெற்றிருப்பாளாயின் அவளது கணவன் எவ்விதத்தும் புத்ததேவனுலகைச் சேருவானென்பது பொழிப்பு.

(க.) கணவனுக்கு இனியவளாக இருந்து அவனது சொற்றவறாது நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னும் நான்குவகை சிறப்பினின்று இல்லறத்தை நடத்துவாளாயின் கணவன் எடுக்குஞ் செயல்கள் யாவுஞ் சீர்பெற முடிவதுடன் மனமாசு கழுவுதற்கு நல்லேதுவாகநிற்றலால் புத்ததேவன் உலகைச்சேருதற்கும் வழியுண்டாமென்பது கருத்து.

(வி.) இல்லறத்தில் கலைநூல் கற்று கடைத்தேறமுயலுவோனுக்கு கற்புடைய மனையாளுந் துணைவியாகச் சேருவாளாயின் அவ்வில்லத்தில் ஆனந்த தன்மம் பரவுவதுடன் இல்லோன் முடிக்கும் முயற்சிகள் யாவும் முட்டின்றி முடிவது இயல்பாதலின் அவற்றை உணர்ந்த பெரியோன் குடும்பிக்குத்தக்க குணவதியுஞ்சேருவாளாயின் தேகம் இரண்டாயின் மனம் ஒன்றித்துவாழுஞ் செயலால் நீதியும், நெறியும், வாய்மையும் நிலைத்து நீடிய சுகவாழ்க்கைப்பெற்ற காட்சியே வானராட்சியத்திற்கு ஆதாரமெனக்கண்டு, கற்பிற்கு இனியாளைத் துணைவியாகக்கொண்டவன் தனது நற்சுகப்பேற்றால் எவ்விதத்தும் புத்ததேவனுலகைச் சேருவானென்பதற்குச் சார்பாய் அருங்கலைச்செப்பு "இல்வாழ்க்கைக்கேற்ற விளம்பெண்ணமைவளேல், நல்லாக்கும் வீட்டிநிலை", "கணவனுக்கேற்ற கற்புடையாள் கூடின் துணையவியாகந் தூநெறியின் தூள்", "மனமொத்துவாழு மனையாளுமுண்டேல், கனமுற்ற வீடுதரும்", "அறநெறி வாழ்க்கை யமர்ந்தோ ளகத்துரில், பிறப்பறும் பாதையதுவாம்" என்னும் ஆதாரங்கொண்டு கற்புடைய மாதர் காட்சியே கனந்தருமென்பது விரிவு.

9. புகழ்புரிந் தில்லோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை.

(ப.) புகழ்புரிந் - கற்பினது சிறப்பு, தில்லிலோர்க் - இல்லாதவளை யுடையவனுக்கு, கில்லை - யாதொரு சுகமுங்கிடையா, யிகழ்வார்முன் - தன்னைப் பழிப்போர்முன், னேறுபோற் - எறுமெபோல், பீடுநடை - வல்லநடை குன்றிபோ மென்பது பதம்.

(பொ.) கற்பினது புகழ்ச்சியில்லா மனையாளைச் சேர்ந்துள்ளவனுக்கு யாதொரு சுகமுமில்லாததுடன் தன்னை இகழ்வோர்முன் தனதுநடை வலுவுங்குன்றிப் போமென்பது பொழிப்பு.

(க.) இல்வாழ்க்கையில் புகழினைத்தரும் மனையாள் இல்லாதவனுக்கு சகல பாக்கியங்களுமிருந்தும் சுகமில்லாததுடன் தன்னை அவமதிப்போர் முன்பும் தனது வீரிய நடைக் குன்றிப்போமென்பது கருத்து.

(வி.) குணவதி, பதிவிரதி, கற்பிநிதி என்னும் புகழ்பெயரற்று நீலி யென்னும் பெயர்பெற்றவள் வாழ்க்கைக்குத் துணையாவளேல் பதிக்குப் பலபாக்கிய மிருந்தும் இல்லையென்பதுடன் தன்னை இகழ்வோரைக்கண்டு தலை குனிதற்கும் ஏதுவாகி தனது வீரிய நடையுங் குன்றி இழிவையும் பெறுவானென்பது விரிவு.

10. மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல னன்மக்கட் பேறு.

(ப.) மங்கல மென்ப - மங்கல மென்று கூறுமொழி, மனைமாட்சி - மனைவியினது கற்பின் சிறப்பு, னன்மக்கட்பேறு - இனியமக்களைப் பெறுதலுமேயாம், மற்றத வேறொன்றும், னன்கல - மங்கலமல்லவென்பது பதம்.

(பொ.) மங்கலமென்று கூறுமொழியானது வாழ்க்கைத்துணைவியாம் இல்லாளினது கற்பின் சிறப்பும், இனிய மக்களைப் பெறுதலுமென்பதே பொழிப்பு.

(க.) இல்லத்தில் சகலவாத்திய முழங்குதலும், வாழைக்கமுகை நாட்டுதலும், மஞ்சள் குங்குமந் தீட்டுதலும் மங்களமாகாவாம். மனையாள் கற்பினது சிறப்பும், நன்மக்கட் பேறும் மங்களமென்பது கருத்து.

(வி.) இல்லந் திருத்தி சாந்திடுதலே மங்களமென்றும், தீபாலங்கிரதஞ் செய்வதே மங்களமென்றும், பற்பல வாத்தியகோஷ முழங்குவதே மங்கள மென்றும், கோடியுடுத்திக் குங்குமமஞ்சள்பூசுவதே மங்களமென்றும், பல்லாண்டு கூறுவதே மங்களமென்றுங் கூறுவர். அவைகள் யாவும் மங்களமாகாவாம். மங்கலமென்பதியாதெனில்:- தலைவனும், தலைவியும் ஒருமனப்பட்டு அன்புபொருந்தி வாழ்தலும், பெறுமக்கள், இனியவர், கல்வியாளர் உபகாரிகள், ஒழுக்கமுள்ளாரென்னும் சிறப்புப்பெயர் பெறுதலுமே மங்கலமொழியின் விரிவு.

7. புதல்வரைப் பெறுதல்

மக்களின் சந்ததி மறையாமலும், குடும்ப விருத்திக்குறையாமலும், தங்கள்வரன்முறையோர் பெயர் அழியாமலும் நீடிய வாழ்க்கைப் பெறுதற்கு மக்கட்பேறே பெரிதாதலின் அதனது சிறப்பையும் அன்பையும் இவ்விடத்து விளக்குகின்றார்.

1. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற.

(ப.) பெறுமவற்றுள் - புத்திரரைப் பெறுவதுள், யறிவறிந்த - விவேகமுதிர்ந்த, மக்கட்பேறல்ல - புத்திரரையன்றி, பிற - வேறொன்றும், யாமறிவதில்லை - யாம் கண்டிலோமென்பது பதம்.

(பொ.) விவேக மிகுத்தப் புத்திரரைப் பெறுவதினும் வேறாரு சிறப்பும் இல்லை என்பது பொழிப்பு.

(க.) ஓர் குடும்பத்தில் அறிவு மிகுத்த புத்திரரைப் பெறுதல் மேலான பாக்கியமேயன்றி வேறுபாக்கியம் இல்லையென்பது கருத்து.

(வி.) இல்லத்தில் தனபாக்கியம், தானியபாக்கியம், நிறைந்திருப்பினும் விவேகமிகுத்தப்புத்திரபாக்கியம் ஒன்றில்லாமற் போமாயின் மற்ற பாக்கியங்கள் யாவும் அழிவதற்கு ஏதுவுண்டாமன்றி விருத்திப் பெறாதென்பது அநுபவ மாதலின் குடும்பத்தில் தோன்றும் புத்திரர்களில் அறிவு மிகுத்த ஒருவன் தோன்றுவானாயின் அவனினும் மேலாய பொரு ளில்லையென்பதற்குச் சார்பாய்

குறுந்திரட்டு "புத்திரப் பேற்றைப் பெறுமவனென்னிற் பேரறிவாளனேயாயின், முத்திரமூன்று மொழிமுதலாய்ந்து மோனமாமவ் வரம்பிருத்தி, சித்திரதீபம் போலசைவற்று தெய்வநற் கதிதனைப்பெற்று, உத்தமவுரவின் முறையதே யென்று முலகெலா மோங்கு மெய்ப்போதம்" என்னும் மக்கட்பேற்றைப் பெறுதலில் விவேகமிகுத்தப்புத்திரரைப் பெறுதலினும் மேலாயப் பொருளில்லை என்பது விரிவு.

2. எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

(ப.) எழுபிறப்புந் - எழுவகைத் தோற்றங்களும், தீயவை - தீவினைப் பயனேயாம், தீண்டா - அவற்றைச் சாராதும், பழி - நிந்தை, பிறங்கா - ஒலியாதும், பண்புடை - குணங்குடியாகு, மக்கள் - புத்திரரை, பெறின்- பெறுவதே சிறப்பென்பது பதம்.

(பொ.) எழுவகைப் பிறப்புந் தீவினை போகத்தையே ஓராதாரமாகக் கொண்டு தோற்றலால் அத்தீவினைக்கணுகாதும் நிந்தையொலியாதும், நற்குணமமைந்த மக்களைப்பெற்று பிறப்பின்தோற்றம் ஒழிவதே சிறப்பென்பது பொழிப்பு.

(க.) வினைபோகமே எழுவகைத்தோற்றங்களுக்கும் ஆதாரமாதலின் அத்தீவினையை அணுகாதும் நிந்தைக்கு ஆளாகாததுமாய நற்குண மக்கள் தோன்றி நிருவாணம் பெறுதலே மேலாம் என்பது கருத்து.

(வி.) தேவர், மக்கள், விலங்கு, பட்சி, தாபரம், ஊர்வனம், நீர் வாழ்வனம், ஆகிய எழுவகைத் தோற்றங்களுக்கும் தீவினையே பீடமாதலின் அத்தகைய தீவினைக் காளாகாதும், பழிபாவத்துக்கு ஆளாகாதும் விவேகமுற்று நற்குணம் அமையும் மக்களைப்பெற்று தாங்கள் சிறப்படைவதுடன் மக்கள் பெற்ற பெரும்பேற்றால் உலக மக்களும் அறிவுவிருத்திப்பெற்று கடைத்தேறுவார் களென்பது விரிவு.

3. தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு
டந்தம் வினையான் வரும்.

(ப.) தம்பொரு-தன்னுடையபொருள், ளென்பதம் - என்பதாஉம், மக்கள் - புத்திரர், அவர்பொரு - அவர்களுடையபொருளும், டந்தம்-தங்கடங்கள், வினையான் - கன்மத்திற்கீடாய், வரும் - சேருமென்பது பதம்.

(பொ.) தங்கள் பொருளென்பதும் தங்கள் புத்திரர்கள் பொருளென்பதும் அவரவர்கள் வினைக்கீடாகவந் தமையும் என்பது பொழிப்பு.

(க.) தாங்கள் பெற்ற பொருளும், தங்கள் புத்திரர் பெற்றபொருளும் அவரவர்கள் வினைக்கீடாக வந்தமையினும் தந்தை பொருள் மைந்தனுடையதும், மைந்தன் பொருள் தந்தையுடையது என்பது கருத்து.

(வி.) தந்தையது பொருள் மைந்தனுடையதும், மைந்தனது பொருள் தந்தையுடையதுமாக விளங்கலால், தந்தையது தீவினை மைந்தனைத் தழுவியும், மைந்தனது தீவினைத் தந்தையைத் தழுவியும்வருதலைக்கண்ட பெரியோன் பண்பமைந்தப் புத்திரனைப்பெறுதலே பெரும்பாக்கியமென்றுங் கூறுதற்கு இயைந்து தந்தை பொருளே மைந்தன்பொருளென்றும், மைந்தன் பொருளே தந்தைபொருளென்றும் பொய்ப்பொருள் விளக்கி நல்வினைபயனால் உண்டாம் மெய்ப்பொருளை உணறுதற்கு நற்குணமமைந்த மைந்தனைப் பெற விரும்பும் தந்தையும் நற்குணனாகவே விளங்கவேண்டுமென்பது விரிவு.

4. அமிழ்தினு மாற்ற லினதே தம்மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

(ப.) அமிழ்தினு - சுவைமிகுத்த பானத்தினும், மாற்றலினிதே - மிக்க மேலாயது, தம்மக்கள் - தனது புத்திரர்கள், சிறுகை - சிறுத்த கைகளால், யளாவிய - தொழாவிய, கூழ்-மாவின் கஞ்சு என்பது பதம்.

(பொ.) தான் ஏழைக் குடும்பியாகிக் கூழருந்தினும் தனது புத்திரர் சிறுவிரல் களிட்டு அக்கூழைத் தொழாவுவார்களாயின்புத்திரரின் இன்பப் பெருக்கே அக்கூழை அமுதினும் இனிதாகக் கொள்ளுவரென்பது பொழிப்பு.

(க.) புத்திரர்கள்மீதுள்ள இன்பப்பெருக்கத்தால் அவர்களது சிறிய விரல்களால் தொழாவியது கூழேயாயினும் அதனை தேவாமிர்தத்திற்கு ஒப்பாகப் புசிப்பாரென்பது கருத்து.

(வி.) அன்பும், இன்புந் திரண்ட உருவே புத்திரபாக்கியமாகத் தோன்றலால் அவர்கள் சிறுவிரலால் தொழாவியது கூழேயாயினும் அதனை இனிய அமுதினும் மேலாகக்கொண்டு புசிப்பதுடன் அச்சிறு விரல்களையும் ஆனந்தமாக சுவைப்பார்களென்பது விரிவு.

5. மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு.

(ப.) மக்கண் - குழந்தைகளினது, மெய்தீண்ட - தேகத்தைத் தொடுதல், லுடற்கின்ப - பிதாவினது உடலுக் கின்பந்தரும், மற்றவர்-மற்று மக்குழவியினது, சொற்கேட்ட - மதலைசொற் கேட்டல், செவிக்கு - காதிற்கு; லின்பஞ் - இன்பத்தை விளைவிக்குமென்பது பதம்.

(பொ.) குழவிகளை எடுத்துத் தீண்டல் உடலுக் கின்பத்தையும், அதனது மதலைச்சொற்களைக்கேட்டல் செவிக்கு இன்பத்தையுந் தருமென்பது பொழிப்பு.

(க.) அருங் குழவிகளது உடலேனும் பாதமணுந் தங்களுடலிற் படில் அரியவின்பத்தையும், அக்குழந்தைகளினது இனிய மதலைச்சொற்களை செவிகளிற் கேட்டல் அதனினும் இன்பத்தைத் தருமென்பது கருத்து.

(வி.) பஞ்சஸ்கந்தங்களுடன் அன்பும் இன்புஞ் சேர்ந்து அரியக்குழந் தையாகத் தோன்றுதல் இயல்பாதலின் அதன் தோற்றங்கண்ட பெரியோன் குழந்தைகளின் மதலைச்சொற்களைக் கேட்டலும், அதனுடலைத் தழுஉதலும் அதி இன்பந்தருமெனக் கூறியவற்றிற்குச் சார்பாய் *புறநானூறு* "படைப்புப் பலபடைத்துப் பலரோடுண்ணும், உடைப்பெருஞ் செல்வராயினு மிடைப்படக், குறுகுறு நடந்து சிறுகைநீட்டி, யீட்டுந் தொட்டுங் கௌவியுந்துழந்து நெய்யுடையடிசின் மெய்பட விதிர்த்து, மயக்குறு மக்களை இல்லோர் பயக்குறவிலர்தாம் வாழுநாளே" என்பதுகொண்டு மதலைசொற் கேட்டலும் அதனுடல் தழுவுதலுமே இன்பநிலையாம் இல்லறவியல் என்பது விரிவு.

6. குழலினி தியாழினி தென்பதம் மக்கண்
மழலைச்சொற் கேளா தவர்.

(ப.) மக்கண் - குழந்தைகளது, மழலைச்சொற்-குதலைமொழிகளை, கேளாதவர் - செவியிற் கேட்டறியாதவர்கள், குழலினி - புள்ளாங்குழலினோசை யினிது, தியாழினி - வீணையினோசை யினிது, தென்பதம் - என்று கூறுவரென்பது பதம்.

(பொ.) தாங்கள் ஈன்றக் குழந்தைகளினது மதலைமொழியின் இன்பத்தைக் கேட்டுணராதவர்கள் புள்ளாங்குழலோசையையும், வீணை யினோசையையுமே நன்கு மதிப்பரென்பது பொழிப்பு.

(க.) குழந்தைகளின் இனிய மொழிகளைக் கேட்டு இன்புறாதவர்கள் குழலினோசையையும், வீணையினோசையையுமே விசேஷம் மதிப்பார் களென்பது கருத்து.

(வி.) வீணையினோசையும், புள்ளாங்குழலினோசையும் பெரிதல்ல. மக்களினது மதலைமொழிகளினோசையே மிக்க இன்பத்தைத் தருமென்பதை விளக்குவான்வேண்டி மக்களைப் பெறாதோர் செவியின் இன்பத்தையும், பெற்றோர்கள் செவியினின்பத்தையும் இனிது விளக்கியுள்ளவற்றிற்குச் சார்பாய் *பாரதம்* "கல்லாமழலைக்கனியூற்ற கலந்துகொஞ்சுஞ், சொல்லாலுருக்கி யழுதோடித் துடர்ந்துபற்றி, மல்லார் புயத்தில் விளையாடு மகிழ்ச்சிமைந்தர், இல்லாதவர்க்கு மனைவாழ் வினினிமெயென்னாம்" மக்கள் பெருக்கே இனிது கண்டு அவர்களது இனிய ஓசையே மற்ற இசைகள் யாவிற்கும் மேலாயதென்பது விரிவு.

7. தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

(ப.) தந்தை - தகப்பனானவன், மகற்காற்று - தன்மைந்தனுக் கூட்டியுள்ள நல்லொழுக்கத்திற்கு, நன்றி - பிரிதியுபகாரமியாதெனில். வையத்து - உலகத்தில், செயல் - அந்நற்செயல், முந்தியிருப்ப - சகலருக்கும் நன்கு விளங்குக வென்பது பதம்.

(பொ.) தகப்பன் மகனுக்கு ஊட்டியுள்ள நல்லொழுக்கப்பயிற்சிக்கு மைந்தன்செய்யும் பிரிதியுபகாரம் யாதெனில் உலகத்தில் நல்லொழுக்க மைந்தனென முந்தவிளங்குவதே அதன் பொழிப்பு.

(க.) மைந்தனானவன் தனதுதந்தையால் கற்பித்துக்கொண்ட ஆற்றலாம் நல்லொழுக்க சுகத்திற்குப் பிரதி நன்றி யாதெனில் உலகமக்களுள் நல்லோனென முந்தயிருப்பதே அதன் கருத்து.

(வி.) பிதாவானவன் நல்லொழுக்க ஆற்றலுடையவனாயிருந்து தன் மைந்தனை நல்லொழுக்க ஆற்றலடையச்செய்த நன்றிக்கு மைந்தனது பிரதிநன்றியாதெனில் உலகமக்களில் நற்செயல் வாய்த்தோன், நற்கடை பிடித்தோன், நல்லவனெனத் தந்தையின் பெயரை முந்த விளக்குவதே அதன் விரிவு.

8. தம்மிற் றம்மக்க ளறிவுடைமை மானிலத்து
மன்னுயிர்க்கெல்லா மினிது.

(ப.) தம்மிற் - தன்னினும், றம்மக்க - தனது புத்திரர்கள், ளறிவுடைமை - மேலாய வறிவுடையவர்களாக விளங்குவார்களாயின், மானிலத்து - சிறந்த பூமியினிடத்துள்ள, மன்னுயிர்க் கெல்லா - சருவ சீவர்களுக்கெல்லாம், மினிது - சுகந்தருமென்பது பதம்.

(பொ.) தன்னைவிட தனதுபுத்திரர்கள் மேலாய விவேகமிகுத்திருப்பார் களாயின் சருவ சீவர்களுக்கும் இனியவர்களாக விளங்குவார்களென்பது பொழிப்பு.

(க.) தான் கல்வியைக்கற்று விவேகவிருத்திப் பெறாதவனாயினும் தனது மக்களுக்கு விவேகவிருத்தி செய்விப்பானாயின் அவர்கள் சகல வுயிர்களிடத்தும் இனியவர்களாக விளங்குவார்களென்பது கருத்து.

(வி.) உலகத்தில் மானிகளாகத் தோன்றியுள்ள மானிடர்கள் அறிவை விருத்திசெய்யுங் கலைநூற்களைக் கல்லாவிடினும் தங்கள் மக்களுக்குக் கற்பித்து அறிவின் விருத்தியை செய்விப்பார்களாயின் தங்கள் மக்களது விவேக விருத்தியால் கருணை மிகுத்து சருவவுயிர்களையுந் தன்னுயிர்போல் பாதுகாக்கும் இனியச் செயலால் மன்னுயிர்கள் யாவும் அவர்களை ஓம்பற்குத் தங்கள் மக்களைத் தங்களுக்குமேலாய விவேகவிருத்தி செய்விக்கவேண்டு மென்பதற்குச் சார்பாய் *பாசமாட்சி* "எந்நெறியானுமிறைவன்றன் மக்களைச், செந்நெறிமேனிற்பச்செயல்வேண்டு - மன்னெறி, மான்சேர்ந்த நோக்கினா யாங்கவணங்காகுந், தான்செய்த பாவை தனக்கு" என்பது பொருந்தத் தன்மக்களை தன்னினும் விவேகமிகுதிபெறக் கற்பிக்கவேண்டுமென்பது விரிவு.

9. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.

(ப.) ஈன்றபொழுதிற்-மைந்தனைப் பெற்றபொழு துண்டாகிய மகிழ்ச்சியினும், பெரிதுவக்கும் - பெருமகிழ்ச்சியாக விளங்கும், தன்மகனை - தனது புத்திரனை, சான்றோனென - மேன்மகனெனச் சொல்லக்கேட்ட, தாய் - யீன்றவளுக் கென்பது பதம்.

(பொ.) மைந்தனைப் பெற்றபொழு துண்டாகிய ஆனந்தத்தினும் மற்றவர்களால் அவனை விவேகமிகுத்த மேன்மகனென்று சொல்லக்கேட்ட தாயானவள் அதனினும் மேலாய ஆனந்தங்கொள்ளுவாள் என்பது பொழிப்பு.

(க.) புத்திரனைப்பெற்றபோ துண்டாய வானந்தத்தினும் அவனை விவேகமிகுத்த மேன்மகனென்று சொல்லக்கேட்ட தாயானவள் அதனினும் மேலாய வானந்தங்கொள்ளுவாள் என்பது கருத்து.

(வி.) இல்லறத்தை நல்லறமென நடாத்துந் தாயானவள் தனக்கோர் புத்திரபாக்கியங் கிடைத்தபோ துண்டாய ஆனந்தத்தினும் தந்தை தாயர் சொற்கடவாது அவர்களை தெய்வமாகக் கொண்டாடுவதுடன் ஏனையோர் களால் உனது மைந்தன் மிக்க விவேகமிகுத்தவனென்றும், சாந்தரூபியென்றும், அந்தணனென்றும் சொல்லக் கேள்விப்படுவாளாயின் அதனினு மேலாய ஆனந்தங்கொள்ளுவாளென்பதற்குச் சார்பாய் *காசிகாண்டம்* "தந்தைதாய் பணித்தல்செய்யுந் தவமலாற் றவம்வேறில்லை, மைந்தர்நற் கதியைவேண்டில் வணங்குவர் தாயைத்தந்தை, அந்தமைந்தனையேபோற்றல் வேண்டுமற்றவ ரன்னாற், சிந்தையுற்றுணரிற்றாயே தந்தையுட் சிறந்தாண் மன்னோ" என்னும் ஆதாரங்கொண்டு புத்திரபாக்கியம்பெற்ற ஆனந்தத்தினும் தனது மைந்தனின் ஞானபாக்கியத்தையுங் கேட்பாளாயின் அதனினு மிக்க ஆனந்தங் கொள்ளுவாளென்னுந் தாயினது சிறப்பைக் கூறும் விரிவு.

10. மகன்றந்தைக் காற்று முதவியிவன் றந்தை
யென்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்.

(ப.) மகன் - புத்திரனானவன், றந்தைக்காற்று - தனது தகப்பனுக் கன்புடன் செய்துவரும், முதவி - உபகாரத்தைக்காண்போர், யிவன்றந்தை - இவனுடைய தகப்பனானவன், யென்னோற்றான் - ஏது நற்றவத்தைச்செய்தானோவென, கொல்லென்னுஞ்சொல் - சகலருங் கேட்கப் பேசிக் கொள்ளுவார்களென்பது பதம்.

(பொ.) புத்திரன் தனது தகப்பனுக்குச் செய்துவரும் அன்பின்மிகுத்த வுபகாரத்தைக் காண்போர் இவனது தந்தையேது தவத்தைச்செய்து இப்புத்திரனைப் பெற்றானோவென ஒலிக்கப் பேசிக்கொள்ளுவார்களென்பது பொழிப்பு.

(க.) மைந்தன் தனது தகப்பனுக்குச் செய்துவரும் நன்றியறிதலாம் அன்பின் மிகுத்த அரிய வுபகாரச் செயல்களைக் காண்போர்கள் யாவருங் கொல்லென்று பேசிக்கொள்ளும் மொழிகள் யாதெனில் இவன்றந்தை எத்தகைய வரிய நோன்பினைனூற்று இப்புத்திரனைப் பெற்றானோ என்பார்களென்பது கருத்து.

(வி.) தகப்பன் செய்துவந்த அரிய தபோபலத்தால் சற்புத்திரன் தோன்றி அவனன்பு மிக்கச் செய்துவரும் உபகாரச் செயல்களைக் காண்போர் புத்திரபேற்றிற்காய் அவன்றந்தை நூற்ற நோன்பினையே ஆதாரமாகக்கொண்டு என்னூற்றான் இவன் றந்தையெனத் தகப்பனது நற்செயலை விளக்கிய விரிவு.

8. அன்புடைமெய்

அதாவது இல்லறம் இனிது நடாத்தலுக்கும், பிறவுயிரோம்பலுக்கும், வாழ்க்கைத்துணைநலமாதலுக்கும், அறவோர்க்களித்தலுக்கும், யதார்த்த அந்தணரை ஓம்பலுக்கும், இழிந்தோரை ஏற்றலுக்கும், மெலிந்தோரைக் காத்தலுக்கும், அன்பே ஆதாரமென்பதைக்கண்ட நமது நாயன் இவ்விடம் அன்பினது சிறப்பை விளக்குகின்றார். உடல்தோற்றாவிடத்து அன்புந் தோற்றாதாதலின் உடல்கொண்ட அன்பினை விளக்குமாறு அன்புடைமெ யென்னும் பெயர்பெற்றது.

1. அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்.

(ப.) அன்பிற்கு - உழுவலுக்கும், உண்டோ - உளவோ, வடைக்குந்தா - காப்புச் செயல், (இல்லை) ழார்வலர் - அன்பின்மிக்கோர், புன்கணீர் - துன்புருவோரைக் காணுங்கால் விடுங் கண்ணீரே, பூசறரும் - அடைபடா வன்பினை விளக்குமென்பது பதம்.

(பொ.) அன்பினை தாளிட்டடைக்குங் கதவில்லை. அதாவது துன்புருவோரைக் காணுங்கால் அன்புடையோர் விடுங்கண்ணீரே அடைபடாவன்பின்மிகுதியைக் காட்டுமென்பது பொழிப்பு.

(க.) எத்தகைய வன்னெஞ்சனாயினும் தன்னினத்துன்பத்தைக் காணுவானாயின் தனக்குள்ள அன்பின் அடைபடாவழியால் ஆற்றொணா

கண்ணீரைப் பெருக்குவான் ஆதலின் அன்பினை யடைக்குங் கதவுவொன்றில்லை யென்பது கருத்து.

(வி.) சருவசீவர்களையு மடித்துத் தின்னும் துஷ்டப்புலியேயாயினும் தனது குட்டிகளுடன் அன்புபொருந்தக் கூடிவிளையாடும். சகல மக்களுக்குந் துன்பத்தை விளைவிக்கும் விஷத்தேளேயாயினுந் தன்னினத்துடன் அன்பு பொருந்த வாழும். விஷம்பெற்றப் பாம்புகளேயாயினும் தன்னினத்துடன் அன்புபொருந்தி விளையாடும். ஆட்டுக்கொலை, மாட்டுக்கொலை, மனிதக்கொலைபுரியுங் கொலைஞர் கூட்டத்தோரேயாயினும் அவர்கள் உரவின்முறையோருடன் அன்புபொருந்தியே வாழ்வார்கள். அன்னியமக்கட் பொருளை அடித்துபரிக்குங் கள்ளர்கள் கூட்டத்தோர்களேயாயினும் தங்கடங்கள் கூட்டத்தோர்களுடன் அன்புபொருந்தியே வாழ்வார்கள். ஆதலின் சருவசீவர்களின் விருத்திக்குங் காரணம் அன்பென்றே கண்டுணர்ந்த நமதையன் அன்பினையடைக்கு மோர் தாளில்லையென்பதைத் துணிந்து கூறியுள்ளா ரென்பது விரிவு.

2. *அன்பிலா ரெல்லாந் தமக்குரியரன்புடையா*
ரென்பு முரியர் பிறர்க்கு.

(ப.) அன்பிலா - உழுவிலார், ரெல்லாந் - எல்லவரும், தமக்குரிய - தமக் குரியவர்களுக்கே வுபகாரிகளாவர், ரன்புடையா - அன்பின் மிக்கோர், பிறர்க்கு - அன்னியர்களுக்கு, ரென்பு முரியர் - தங்களன்பையும் உரியதென வருள்வாரென்பது பதம்.

(பொ.) அன்பின் மிகுத்த மேலோரது என்பும் பிறருக்கு வுபகாரிகளாக விளங்கும். அன்பிலாக் கீழோர் தங்களுக்குரியவர்களுக்குமட்டிலும் உபகாரி களாவரென்பது பொழிப்பு.

(க.) சருவசீவர்களையும் அன்புபொருந்தி காப்பவர்கள் எலும்புந்தோலு மாக மெலிவுறினும் பிறர்க்குபகாரஞ்செய்வதையே நோக்குவர். அன்பிலார் தன சம்பத்தைப்பெற்று தடிசோம்பலுற்றிருப்பினும் தனது சுற்றத்தோருக்கே வுபகாரிகளாக விளங்குவார்களென்பது கருத்து.

(வி.) சீவகாருண்யமற்ற அன்பிலார்கள் தங்களுக்குரிய சுற்றத்தோர் களுக்கே உபகாரிகளாக விளங்குவார்களன்றி ஏனைய மக்களையும் ஏனைய சீவப்பிராணிகளையும் நோக்கார்கள். சீவகாருண்யமும் அன்பும் நிறைந்தவர்கள் என்பேவோருருவென மெலிந்திருப்பினும் ஏனைய மக்களுடையவும் ஏனைய சீவப்பிராணிகளுடையவுந் துக்கங்களையே நீக்கி ரட்சிப்பார்கள். இதற்குச் சான்றாய் மூவாயிரவருடங்களுக்குமுன்பு அன்பே வோருருவெனத்தோன்றி சிவனென்னும் பெயரும்பெற்று அவலோகிதனென விளங்கிய சித்தார்த்தி சக்கிரவர்த்தியை தகனஞ்செய்த யென்பும் அன்புகொண்டுள்ளதென்பதை தற்கால பிரிட்டிஷ் ஆட்சியார் பிஷவாரென்னுந் தேசத்துப் புராதனக் கட்டிடத்தை தோண்டியகால் கண்டெடுத்த சித்தார்த்தரது என்பினை கண்டு அன்புருகி அகிலமெங்கும் அறிவித்ததினால் அவ்வென்பின்மீது அன்பார்ந்த வோர் பர்ம்மியவம்மை சிறந்த கட்டிடங்கட்டி அதனுள் வைக்கவேண்டுமென ஒருலட்ச ரூபாய் உடனுக்குடன் அநுப்பிய அன்பின் மிகுதி என்பினதுதோற்றமா அன்றேல் அன்பினது தோற்றமா என்றாராயுங்கால் அன்பின்மிகுத்த சிறந்த வுருவினது என்பின் தோற்றமேயாதலின் அன்பின் மிக்கோர் என்பும் பிறருக்குரிய தாகுமென்பது விரிவு.

3. *அன்போ டியைந்த வழக்கென் பவாருயிர்க்*
கென்போ டியைந்த தொடர்பு.

(ப.) வாருயிர்க் - தோற்று மக்களுக்கு, கென்போடியைந்த - எலும்பினோ டமைந்த, தொடர்பு - விட்டகுறை யாதெனில், அன்போடியைந்த - அன்பினோடு பொருந்திய, வழக்கென்ப - இயல் பென்பது பதம்.

(பொ.) சருவ வுயிர்களின் தோற்ற நல்லொழுக்கங்களுக்கும் ஆதாரமாக நின்று விளங்குவது பூர்வ என்பென்னும் உருவக அன்பின் வழக்கே விட்டகுறைவில் வந்து தோன்றுமென்பது பொழிப்பு.

(க.) அவனவன் அன்பின் விருத்திக்கும், அன்பின் குறைவிற்கும் ஆதாரபீடமாகத் தொடர்ந்து வருவது என்புடன்தொடர்ந்த அன்பின் உருவகமேயாதலின் சருவவுயிர்களுக்கும் உண்டாகும் அன்பின்தொடர்பு என்போடியைந்தவை யென்பது கருத்து.

(வி.) சருவ சீவர்களின் விருத்திக்கும் அதனானந்தத்திற்கும் ஆதாரமாகத் தொடர்ந்து நிற்பது என்பென்னும் உருவகத் தோடமைந்த அன்பின் தொடர்பேயாதலின் அன்போடியைந்துசெய்துவரும் வழக்கங்கள் யாவும் உடலோடியைந்துத் தொடர்ந்து வருவதியல்பென்றறிந்த நாயன் என்பே[illegible]யைந்த தொடர்பென்று கூறிய விரிவாம்.

4. அன்பீ னுமார்வமுடைமெ யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு.

(ப.) அன்பீனு - உழுவலாவதை பிறப்பிக்கும், மார்வமுடைமெ - அன்பின் மிகுத்த தேகியை, யதுவீனு - அது பிறப்பிக்கும், நண்பென்னு - இனிய நேயத்தால், நாடாச்சிறப்பு - அழியாப் புகழைத் தருமென்பது பதம்.

(பொ.) அன்பே அன்பின்மிகுதியைத் தோற்றுவிக்கும். அவ்வன்பின் மிகுத்ததேகி இனிய நட்பை தோற்றுவிப்பான். அவ்வினிய நட்பால் சகலமக்களாலும் அழியாப்புகழைப் பெறுவானென்பது பதம்.

(க.) அன்பு யாவரிடத்துண்டோ அவ்வன்பை யின்னும்பெருக்கல் வேண்டும். அதின் பெருக்கத்தால் அன்புடையோனெனத் தோற்றல்வேண்டும். அத்தோற்றத்தால் சகலருக்கும் இனிய நண்பனென விளங்கவேண்டும். அவ்விளக்கத்தால் அழியாப்புகழைப் பெறுவானென்பது கருத்து.

(வி.) அன்பின் பெருக்கமே அன்பனென்னும் ஒருருவத்தை விளக்கும். அவ்வுருவமே சகலருக்கும் இனியநேயனெனத் தோற்றும். அன்பின்மிகுத்தத் தோற்றமே சகலராலு மினியநேயனெனக் கொண்டாடுஞ் சிறப்பென்பதற்குச் சார்பாய் *அறநெறித்தீபம்* "பல்லோர்தற்பணிவனவும்பகை கெடதர்மம் பெருகுவதும், இல்லார்க்கொன்றீவது மினியவே புகலுவது, நல்லார் கண்டுவப்பதுநலிவா நோயின்மெயும், எல்லார்க்குமுயிர்நிலையா மன்புடைய பயனென்பார்" என்னும் ஆதாரங்கொண்டு அன்பின் பயனே அழியாப் புகழைத் தருமென்பது விரிவு.

5. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு.

(ப.) அன்புற்றமர்ந்த - அன்பு பொருந்த நிலைத்த, வழக்கென்ப - இயல்பானது, வையகத் - பூமியின்கண், தின்புற்றார் - பேரின்ப சுவையை, ரெய்துஞ் - அநுபவிக்கும், சிறப்பு - புகழைத்தரு மென்பது பதம்.

(பொ.) சருவ செயலிலும் அன்புபொருந்திவாழும் வழக்கமானது பூமியின்கண் ஞானசாதனத்தோர் சுகிக்கும் பேரின்பத் திற்கீடாய சிறப்பை யடையச்செய்யுமென்பது பொழிப்பு.

(க.) சருவசீவர்கண்மீதும், சருவச்செயல்களின்மீதும் அன்புபொருந்தச் செய்யுஞ் செயல்கள் இயல்பாகவே நிகழ்ந்துவரின் அதன் பயனை பேரின்பத்திற் கொப்பாக சிறப்பிப்பார்களென்பது கருத்து.

(வி.) மனைவிமக்களுடன் கூடி வாழும் இல்வாழ்வோன் தனது வாழ்க்கையை அன்பு பொருந்தி நடாத்தி வருவானாயின் இல்லந்துறந்த மகா ஞானிகளடையுஞ் சிறப்பை இவன் அடைவானென்பது விரிவு.

6. அறத்திற்கே யன்பு சார்பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை.

(ப.) அறத்திற்கே - தன்மத்திற்கே, அன்பு - உழுவல், சார்பென்ப - உடைந்தை யாமென்ப, வறியார் - ஏழைகளது, மறத்திற்கு - யீகையற்றச் செயலுக்கும், மஃதே - அவ்வன்பே, துணை உதவியாயிருந்து யீகையைத் தருமென்பது பதம்.

(பொ.) தன்மத்தைச் செய்தற்கு அன்பே ஆதாரமாயிருந்துச் செய்வதுபோல் ஏழைகளது தன்மமில்லாச் செயலுக்கும் அன்பே ஆதாரமாயிருந்து தன்மத்தை செய்விக்குமென்பது பொழிப்பு.

(க.) கனதனவான்கள் செய்துவருந் தன்மத்திற்கு அன்பே ஆதாரமாய் இருந்துவருவதுபோல் ஏதுமற்ற யேழைகளுக்கும் அவ்வன்பே ஆதாரமாயிருந்து மறக்கருணையைப்போக்கி அறக்கருணையை யுண்டுசெய்யுமென்பது கருத்து.

(வி.) கனதன மிக்கோன் ஒருவன் மறமாம் உலோபநிலையுற்று அன்பற்று தன்மத்தை மறக்கின்றான். தனமில்லா னொருவன் அறமாம் யீகைநிலையுற்று அன்புற்று தன்மத்தைச் செய்கின்றான். இவ்விருவருள் தனமில்லானுக் கன்பும், தனமுள்ளோனுக் கன்புமில்லாமலிருப்பது சகஜமேயாயினும் ஓர்கால் அவ்விலோபிக்கும் அன்பே ஆதாரமாகி தன்மத்தை செய்விப்பது சகஜமாதலின் அறத்திற்குஞ் சார்பு அன்பு, மறத்திற்குஞ் சார்பு அன்பு என்பதை விவரித்த விரிவாம்.

7. என்பி லதனை வெயிற்போலக் காயுமே
அன்பி லதனை யறம்.

(ப.) என்பிலதனை - என்பிலாப்புழுவை, வெயில்போலக் - சூரியனது வெப்பம்போலக், காயுமே - தீய்ப்பதுபோல், அன்பிலதனை யறம் - தன்மமே சுடுமென்பது பதம்.

(பொ.) எலும்பில்லாப் புழுவை சூரிய வெப்பமானது தகிப்பதுபோல் அன்பில் லாதவனை அறந் தகிக்குமென்பது பொழிப்பு.

(க.) அன்பில்லாதோன் தனம் எடுப்பதற்குஞ் சுடும், கொடுப்பதற்குஞ் சுடும். அவை யெவ்வகைத்தென்னில் என்பில்லாப் புழுவானது சூரியனின் வெப்பத்தினால் எழுகையிலுஞ் சுடும், தவழ்கையிலுஞ் சுடுமென்பது கருத்து.

(வி.) என்பில்லாப் புழுக்கள் சூரியனது வெப்பத்தால் சுடுகொண்டழிவது போல் அன்பில்லாதோன் செய்யுந் தன்மமானது அவனுக்குள்ள உலோப அக்கினியால் சுடுகொண்டு தன்னிற்றானே கெடுவானென்பது விரிவு.

8. அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மாந்தளிர்த் தற்று.

(ப.) அன்பகத்தில்லா - உள்ளத்தின்கண் அன்பில்லா, வுயிர்வாழ்க்கை - சீவியச் செயலானது, (எவ்வகைத்தென்னில்) வன்பாற்கண் - கொடிய பாலைநிலத்திடத்தே, வற்றன் - காய்ந்த, மரம் - விருட்சம், தளிர்த்தற்று - துளிர்த்ததற் கொக்குமென்பது பதம்.

(பொ.) அகத்தி னிடத்தே அன்பிலாதோன் வாழும் வாழ்க்கையானது பாலை நிலத்திற்பட்ட மரந் துளிர்ப்பதற்கொக்குமென்பது பொழிப்பு.

(க.) இல்லறவாழ்க்கையை இனிதுநடாத்துவோன் உள்ளத்தில் அன்பென்பது இல்லாமற்போமாயின் அவ்வாழ்க்கைக்கு சுகமில்லையாகும். எவ்வகையென்னில் பாலை நிலத்திற் பட்ட மரந் துளிர்க்காததுபோ லென்பது கருத்து.

(வி.) கொடிய பாலைநிலமானது நன்னிலமல்லாக் காந்தளாதலின் அதனிற்பட்ட மரந் துளிர்க்காதென்பது துணிபு. அதுபோல் அகத்துள் அன்பில்லா வன்னெஞ்சரது வாழ்க்கை எஞ்ஞான்றுஞ் சுகத்தைத் தாராவென்பது விரிவு.

9. புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பில வர்க்கு.

(ப.) யகத்துறுப் - உள்ளத்தின்கண், பன்பிலவர்க்கு - அன்பில்லாதவர் களுக்கு, புறத்துறுப்பெல்லா - மற்ற புறவுறுப்புகளெல்லாம், யாக்கை - உடலுக்கு, மெவன் செயும் - என்னபயனைத் தருமென்பது பதம்.

(பொ.) உள்ளன்பில்லா வுடலுக்குப் பலவுறுப்புகளிருந்தும் பயனில்லை யென்பது பொழிப்பு.

(க.) அன்பிலா யாக்கை யழிவதே மேலாயதன்றி அஃது வுலக வாழ்க்கையைப் பெறுதலில் பயனில்லையென்பது கருத்து.

(வி.) உடலுக்கொற்ற வுறுப்புகள் யாவுங் குறைவற நிறைந்திருப்பினும் அன்பொன்றில்லாமற்போமாயின் அவ்வுறுப்புகள் யாவும் பயனற்றவனவாதலின் அகத்துறுப்பில் அன்பில்லாமற்போமாயின் புறத்துறுப்புகள் யாவுஞ் குறைவறவிருந்தும் பயனில்லையென்பது விரிவு.

10. அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

(ப.) அன்பின்வழிய - அன்பிற்கு வழியாக நிற்பது, துயிர்நிலை - உயிரின் றன்னிலை யென்னப்படும், யஃதில்லார்க் - அவ்வகையில்லாதோர், (உயிரற்ற) கென்புதோல் - என்பினையுந் தோலையும், போர்த்த வுடம்பு - மூடிக்கொண்டுள்ள தேகமென்பது பதம்.

(பொ.) உயிரிற்கு ஆதாரமாகவும் பீடமுமாகவும் நிற்பது அன் பென்னப்படும், அவ்வன்பில்லாவிடத்து உயிருமில்லாமற்போம். அவ்வுயிரு மில்லாதவிடத்து எலும்புந் தோலும் போர்த்த வுடலே வுள்ள தென்பது பொழிப்பு.

(க.) உயிர்நிலைக்குறுதி யன்பும், அன்புக்குறுதி உயிர்நிலையுமா யுள்ளபடியால் அன்பில்லாவிடத்து உயிரில்லையென்றும், உயிரில்லாவிடத்து என்பு தோல்போர்த்த வுடலையொக்குமென்பது கருத்து.

(வி.) அன்புபெருகியவிடத்து உயிர்வாழ்க்கைப் பெருகுமென்றும் அன்பு பெருகாவிடத்து உயிர்வாழ்க்கையுங் சிறுகுமென்பது அநுபவக்காட்சியாதலின் அன்பிலார் உயிரற்ற வுடலுக் கொப்பவரென்பது கண்டு அன்புநிறைந்த வுயிர்நிலையில்லார் என்புதோல் போர்த்த வுடம்பென்று கூறிய விரிவு.

9. விருந்தோம்பல்

இல்லற வாழ்க்கையை இனிது நடாத்துவோர் அன்புபொருந்தி வாழ்கின்றாரென்பதற் கறிகுறியாவது யாதெனில்:- மனுக்களென்னும் பெயர் கடந்து தெய்வப்பெயர்பெற்றுலாவும் அறஹத்துக்களும், சங்கங்களிலுள்ள சமணமுநிவருள் புலன் தென்பட்ட தென்புலத்தோர்களும், தேடிவரும் உரவின்முறையோர்களும், நாடிவரும் உரவின்முறையோர்களும், அனாதை ஆதுலர்களும், எப்போது தனதில்லந் தேடிவருவார்க ளென்றெதிர்பார்த்திருந்து சோறிடுதலை விருந்தோம்பலென்று கூறப்படும்.

1. இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

(ப.) இருந்தோம்பி - தன்னைக் காத்து, யில்வாழ்வதெல்லாம் - இல்லற தன்மத்தை நடாத்துவதில், விருந்தோம்பி - வரும் விருந்தினரைக்காத்து, வேளாண்மை - ஈகையுடன் விவசாயத்தை, செய்தற்பொருட்டு - விருத்தி செய்வதற்கேயா மென்பது பதம்.

(பொ.) இல்லற தன்மத்தை சரிவர நடாத்துவோன் ஈகைக்கு ஆதாரமாம் விவசாயத்தை விருத்திசெய்து தன்னைநோக்கும் விருந்தினரைக் காக்கவேண்டும் மென்பது பொழிப்பு.

(க.) இல்லறத்திருந்து விவசாயத்தை விருத்திச்செய்ய விரும்புவோன் தன்னை நாடும் விருந்தினரைக் காத்தல்வேண்டுமென்பது கருத்து.

(வி.) அன்புபொருந்தி இல்லாளோடிருந்து சுகவாழ்க்கைப்பெற விரும்புவோன்மேழிச் செல்வமாம் விவசாயத்தை விருத்திச்செய்யல்வேண்டும். அவ்விவசாயவிருத்திக்கு வருவிருந்தைக்காத்தலே வித்தாதலின் விருந்தோம் பலுக்குக் காரணம் வேளாண்மை செய்தற்கென்று கூறியவற்றிற்குச் சார்பாய் *பாசமாட்சி* "வேளாண்மை செய்து விருந்தோம்பி வெங்களத்து, வாளாண் மையாலும் வலியராய்த்-தாளாண்மை, தாழ்க்குமடிகோளிலராய் வருந்தாத, வாழ்க்கைதிருந்துதநன்று" *இஸ்காத்தம்*, "துறந்தவர்கள் வேண்டியதோர் துப்புரவு நல்கி, யிறந்தவர்களாமுறுமிருங்கடனியற்றி, யறம் பலவுமாற்றி விருந்தோம்பு

முறையல்லாற், பிறந்த நெறியாலுளதோர் பேருதவியாதோ" வெனக் கூறியுள்ளச் சார்பே போன்ற விரிவாம்.

2. விருந்து புறத்தாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

(ப.)சாவாமருந்தெனினும்-அமுதத்திற்கொப்பாய புசிப்பேயாயினும், விருந்து - வந்த விருந்தினரை, புறத்தாத் - வெளியில்விட்டு, தானுண்டல் - தான்மட்டிலும் புசித்தல், வேண்டற்பாற்றன்று - விருந்திரைவோம்பற் கழகன்றாமென்பது பதம்.

(பொ.) தான்புசிக்கப்போவது அமுதத்திற் கொப்பாயாதாயினும் வந்தவிருந்தினரை வெளியில்விட்டுப் புசிப்பதழகன்றா மென்பது பொழிப்பு.

(க.) நல்லபுசிப்பாயிற்றே இவற்றையெவ்வகையால் விருந்தினருக் களிப்பதென்னும் பேரவாவால் விருந்தினரைப்புறத்தே நிறுத்திவிட்டு தான் மட்டிலு மவற்றைப் புசிப்பது விருந்தோம்பலென்னுமொழிக்கே குற்றமா மென்பது கருத்து.

(வி.) விருந்துடனுண்ணுஞ் சோறு அமுதத்திற் கொப்பாயதென்றும் விருந்திலாதுண்ணுஞ்சோறு நஞ்சிற் கொப்பாய தென்றும் உணர்ந்த நாயன் புசிக்கப்போவது அமுதமேயாயினும் வந்த விருந்தினருக்கவற்றை யூட்டித் தானும் புசிப்பது நலமென்பதை விவரித்தல்வேண்டி சாவாமருந்தாயினும் விருந்தினருக்களிக்காது தான்மட்டிலும் புசிப்பது வேண்டற்பாற்றன்றென்று கூறியுள்ளவற்றிற்குச் சார்பாய் *தண்டலையார் சதகம்* "திருவிருக்குந் தண்டலையார் வளநாட்டிலில் வாழ்க்கை செலுத்துநல்லோர், ஒருவிருந்தாகிலு மின்றியுண்டபசுற் பகலோமோ வுறவாய்வந்த, பெருவிருந்துக் குபகாரஞ் செய்தனுப்பியின்னு மெங்கேபெரியோரென்று, வருவிருந்தோடுண்பதல்லால் விருந்திலா துணுஞ்சோறு மருந்துதானே" எனக் கூறிய ஆதாரமே போன்றச் சார்பென்பது விரிவு.

3. வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவத்து பாழ்படுத்த லின்று.

(ப.) வைகலு - பொழுதுவிடிந்தவுடன், வருவிருந்து - விருந்தின ரெப்போது வருவார்களென்று, மோம்புவான் - எதிர்நோக்கி வுபசரிப்பவன், பருவத்து - எக்காலத்தும், பாழ்படுதலின்று - கேட்டிற்கு வாராதென்பது பதம்.

(பொ.) விடிந்தவுடன் விருந்தினரை எதிர்நோக்கி வாழ்பவன் வாழ்க்கைக்கு எக்காலுங் கேடுவாராதென்பது பொழிப்பு.

(க.) அன்பு பொருந்தி அறஹத்துக்களுக்கும், ஆதுலர்களுக்கும் அன்னமிடும் பயனே அவனது சீர்கேட்டையகற்றி சீரளிக்குமென்பது கருத்து.

(வி.) உதயத்தி லெழும்போதே உள்ளன்புகொண்டு விருந்தினரை நோக்கிநிற்றல் பற்றறுத்தலுக்கோர் படியாக விளங்குதலால் அவனது வாழ்க்கைச் சுகவாழ்க்கைக்கொண்டு எக்காலும் இனிதுபெருவானென்பதற்குச் சார்பாய் *அறநெறித்தீபம்* "வள்ளல்களாய்வழங்குதலும் வரையறையிற் பெருஞ்செல்வ, மெள்ளற்பாடின்மெயு மினியனவே நுகர்வதுவுந், தள்ளாத விழுநிதியத் தலைப்பட்டந் தீண்டுதலும், வள்ளாது விருந்திரை மிகவோம்பும் பயனன்றே" என விருந்தினது பயனை விளக்கிய விரிவாம்.

4. அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்.

(ப.) அகனமர்ந்து - உள்ளன்பு கொண்டு, செய்யாளுறையு விருந்தோம்புபவளில்லாவிடின், முகணமர்ந்து - முகமலர்ச்சியுடன், நல்விருந் - விவேகமிகத்தோர் விருந்தினை, தோம்புவானில் - செய்வதற் கில்லாமற் போவானென்பது பதம்.

(பொ.) முகமலர்ந்தன்னமிடும் இல்லோனிருப்பினும் அகமகிழ்ந் தன்னமிடும் இல்லாளில்லாமற் போவாளாயின் விருந்தோம்பற் பயனில்லை யென்பது பொழிப்பு.

(க.) தலைவனுந் தலைவியும் அன்புபொருந்தி செய்யுந் தானமே விசேடித்ததாகும். இவற்றுள் தலைவி முகமலர்ச்சியின்றி தலைவன் முகமலர்ச்சிக் கொண்டு செய்யுந் தானமானது பலன்தராவென்பது கருத்து.

(வி.) அகனமர்வில்லாதவளாம்உள்ளன்பு இலாதவளுடன் முகனமர்ந்த வனாம்முகமலர்ச்சியுள்ளோன் கலந்து விருந்தோம்புதல் வீணேயாதலின் தலைவனுந் தலைவியும் அகமுகமலர்ந்துசெய்யுந்தானமே விருந்தோம்பலிற் சிறந்ததென்பவற்றிற்குச்சார்பாய் பெருந்தேவனார் *பாரதம்* "மலர்ந்தமுகத்தானு மதுரவுரையாளு, நலந்தந்திடுவர்கணல்லோர் - புலந்திருந்த, இன்னாமுகத்தா னருளாதிடும்பொருள்கள், தன்னாற்ப யனுண்டோதான்" எனும் ஆதாரங் கொண்டு இல்லாள் அகமலராது தான் முகமலர்ந்து விருந்தோம்புதல் வீணேயென்பதுவிரிவு.

5. வித்துமீடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சின் மிசைவான் புலன்.

(ப.) வித்துமிடல் வேண்டும் - விதைவிதைத்தல்வேண்டும், கொல்லோ - ஆயினும், விருந்தோம்பி - வருவிருந்தினரைக் காப்பதாயின், புலன் - விளைநிலத்தில், மிச்சின் - மிகுதியாய, மிசைவான் - பலனை யடைவானென்பது பதம்.

(பொ.) விருந்தோம்பி விதை விதைப்போன் மிக்க மேலாய பயனை யடைவானென்பது பொழிப்பு.

(கு.) வரும்விருந்தினரைக் காக்கும் வேளாளனது விளைநிலம் வேணபலனை யளிக்குமென்பது கருத்து.

(வி.) பூமியைத் திருத்தி பயிறுசெய்யும் வேளாளனது யீகை இல்லாளுடன் விருந்தோம்பலில் லயிக்குமாயின் அவன் செய்யும் விவசாயம் மேலாயபலனைத் தருவதுடன் வருவிருந்தும் பெருகுமென்பதற்குச் சார்பாய் *அறநெறித்தீபம்* "உருளாதவிழுநிதியமொன்பதிற்குந் தலைவனா, யிருளாத பெருங்குலத்துக் கிறைவனாய்த் தோன்றுதலுந், தெருளாத களிரூர்ந்து தேசமீக்கூறுதலும், பொருளாக விருந்தினரைப் போற்றியவன் பயனாகும்" என்னும் ஆதாராங்கொண்டு அன்புபொருந்த விருந்தோம்புவோன் விளைநிலம் விசேடபலனைத் தருமென்பது விரிவு.

6. செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கு.

(ப.) செல்விருந்தோம்பி - வந்த விருந்தை யுபசரித்தனுப்பிவிட்டு, வருவிருந்து-இனிவரும்விருந் தெப்போது வருமென பார்த்திருப்பா - எதிர்பார்த்திருப்பவன், வானத்தவர்க்கு - புத்தேளுலகத்தவர்க்கு, நல்விருந்து சிறந்தக் கூட்டுரவினனாவனென்பது பதம்.

(பொ.) தன்னை நாடிவரும் விருந்தினரை யுபசரித்தனுப்பிவிட்டு இனி வரும் விருந்து எப்போதுவருமென யெதிர்பார்த்திருப்பவனை வானவர்களுந் தங்களுடன் எப்போது விருத்தமடைவானென் றெதிர் பார்ப்பார்களென்பது பொழிப்பு.

(கு.) வந்தவிருந்தினரை முகமலர்ச்சியுடன் உபசரித்தனுப்பிவிட்டு இனி வரும் விருந்து எப்போது வருமென் றெதிர்பார்த்து வுபசரிப்பவனை வானவர் உபசரித்தற்கு யெதிர்பார்த் திருப்பார்களென்பது கருத்து.

(வி.) அறஹத்துக்களாம் தேவர்களுக்கும், தென்புலத்தோராம், சமண முனிவர்களுக்கும், உரவின்முறையோர்களுக்கும் நேயர்களுக்கும், ஆதுலர்களுக்கும் உண்டிகொடுத்து வுயிரளிப்போர் அன்புமிகுத்துப் பற்றறுப்பவர்களாதலின் தலைமெய்ச் சேர்க்கையாம் தேவர்சபையைச் சேருவா ரென்பதற்குச் சார்பாய் *ஆசாரக்கோவை* "முறுவலினிதுரை கானீர்மனைபாய், கிடக்கையோ டிவ்வைந்து மென்பதலைச்சென்றார்க், கூணோடு செய்யுஞ் சிறப்பு" என்னும் ஆதாரங்கொண்டு அன்பு, யீகை, சாந்தம் மூன்றுந் திரண்டு விருந்தோம்பிய பலன் வானவர்களுடன் சடுதியில் சேர்க்குமென்னும் வித்தாகிய விரிவு.

7. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
றுணைத்துணை வேள்விப் பயன்.

(ப.) இனைத் துணைத் - உரவின் முறையோ ருதவி, தென்பதொன்றி ல்லை - என்று சொல்லும்படியான வொன்றில்லை, விருந்தின்-விருந்தோம்பப் பெற்றவர்களின், றுணைத் துணை - உடந்த வுதவியானது, வேள்விப்பயன் - தவப்பயனைத் தருமென்பது பதம்.

(பொ.) உரவின் முறையோர் உதவுவார் என்று நம்பப்படாது. உரவினர் அல்லாத விருந்தினர் உதவியே தவத்திற்கு ஒப்பாகும் என்பது பொழிப்பு.

(க.) தன் குடும்பத்தோருக்கு அளிக்கும் விருந்து பயன்றராது. அன்னியருக்கு அளிக்கும் விருந்தோ தான் செய்ய வேண்டிய தவற்றிற்கு ஒப்பப் பயனைத்தரும் என்பது கருத்து.

(வி.) தேகத்தில் ஓர்ப் பிணி கண்டு தேகத்தையே மடிப்பதோர் அனுபவக் காட்சியாதலின் தனதுரவின் முறையோர் உண்டு களித்தும் சத்துருக்களாவரன்றி ,மித்துரு ஆகாரென்றுணர்ந்த பெரியோன் அன்னியருக்களிக்குந் தானத்தின் பயனை வேள்வியாந் தவத்திற்கு ஒப்பாயதென்று கூறியவற்றிற்குச் சார்பாய் மூதுரை "உடன் பிறந்தார் சுற்றத்தா ரென்றிருக்க வேண்டாம், உடன்பிறந்தே கொல்லும் வியாதி - உடன்பிறவா, மாமலையிலுள்ள மருந்தே பிணிதீர்க்கு, மம்மருந்து போல்வாறுமுண்டு" என்பதுகொண்டு இனத்தின் துணை துணையாகா, ஏனையோர் துணையே துணையென்பது கண்டு அன்னியருக்கு அன்புடனளிக்கும் விருந்து ஐம்புலனடக்குந் தவமாம் வேள்விக்கு ஒப்பாய என்பது விரிவு.

பனைகாய் - பனங்காயென மறுவுவது போல் இனைத்துணையென்பது இனத்துணை யென மறுவியதாகும்.

8. பரிந்தோம்பிப் பற்றற்றோ மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

(ப.) விருந்தோம்பி - விருந்தினரை அன்புடனுபசரித்து, வேள்வி தலைப்படாதார் - தவத்தீயை வளர்க்காதவர்கள், பரிந்தோம்பி - வீண் வுபசரிப்புக் கூறி, பற்றற்றோமென்பர் - சகல பற்றுக்களையும் விட்டோமென் றபிநயிப்பரென்பது பதம்.

(பொ.) விருந்திடும்பயன் வேள்விக் கென்றுணராதோர் பற்றற்றவர்போல் நடித்து வீண்விருந்து உபசரிப்பார் என்பது பொழிப்பு.

(க.) விருந்தோம்புதலே பற்றறுத்து ஐம்புலன் அடைத்தலுக்கோர் வழியாதலின் அவ்வேள்விக்குத் தலைப்படாது விருந்தினரை வீணே பரிந்து உபசரிக்கின்றோம் என்பது விழலே என்பது கருத்து.

(வி.) அன்னியரையே தன்னவர் என்று ஆதரித்து விருந்தோம்புதல் நாளுக்குநாள் பற்றறுக்குமூடே வழியாதலின் அப்பற்றினை அறுக்கும் உள்ளந்துறவாது பற்றற்றோம் என்னும் வீண்டம்பங் கூறி விருந்தினரை வீணே உபசரிப்பது விழலென்பதற்குச் சார்பாய் குறுந்திரட்டு "ஆசையற்றோமெனக்கூறி யதிதிகட்தன் அரியபொருள் தனைபரிக்குமதிபரெல்லாம், ஓசையிட்டன்னமதை யளித்தாலென்னோ உத்தமர் போலுபசரிப்ப தென்னோவென்னோ, பூசையது செய்வமென மணிகுலிக்கிப் பொய்ப்பொருளைப்போற்றுவதால் பயன்றா னென்னோ, காசைக்கண்டால் கனவாசைக் கொள்ளுமாந்தர் கருத்திலொன்று புறத்திலொன்று காட்டுவாரே" என்பது கண்டு வேள்வி தலைப்படார் உபசரிப்பு வீணே என்பது விரிவு.

9. உடைமை யுளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்க ளுண்டு.

(ப.) உடைமையு - பொரு ளுள்ளவனாயினும், ளின்மை இல்லாதவன்போல், விருந்தோம்ப - விருந்தினரை யுபசரிக்கவேண்டியவன், லோம்ப - உபசரியாமற்போதற்கு, - மடமை - தடையாமுடல், மடவார்களுண்டு - பெண்ணுருக்க ளுண்டென்பதே பதம்.

(பொ.) பொருளிருந்தும் பொருளில்லாதவனைப்போல் விருந்தோம்பலை விரும்பாததற்குத் தடை இல்லாட்களே என்பது பொழிப்பு.

(க.) விருந்தோம்பற்கு வேண பொருளிருந்தும் ஓம்பாதிருத்தற்குத் தடை தங்கள் இல்லாள்களே என்பது கருத்து.

(வி.) இல்லாட்களது துற் குணத்தால் ஈகையை மறப்பது இல்லோன் இயல்பாதலின் பொருளிருந்தும் புண்ணியஞ்செயற்கு மனமில்லாப் பெண்களின் தடையால் புருஷர்கள் விருந்தோம்பலை மறந்து வீணே தடையுற்றிருக் கின்றார்கள் என்பது விரிவு.

10. மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

(ப.) மோப்பக் - நாசியால் முகர, குழையு - வாடிப்போம், மனிச்ச - அனிச்சப்பூ, முகந்திரிந்து - முகவாட்டமுற்றிருப்பதை, விருந்து - வந்த விருந்தினர், நோக்கக் - காண்பார்களாயின், குழையும் - அவர்கள் மனம் வாடிப்போமென்பது பதம்.

(பொ.) அனிச்சப்பூவை முகர்ந்தவுடன் வாடிப்போவதுபோல் விருந்து ஈவோர் திரிந்த முகத்தைக் கண்டவுடன் விருந்தினர் வாட்டமுறுவர் என்பது பொழிப்பு.

(க.) மக்கள் முகர்ந்தவுடன் அனிச்சப்பூ வாட்டமுற்றிடுவதுபோல் முகமலர்ச்சியில்லாது ஈவோரைக்கண்ட விருந்தினரும் வாட்டமுற்றுப் போவார் என்பது கருத்து.

(வி.) முகர்ந்தவுடன் வாடும் அனிச்சப்பூவுக்கொப்பாக விருந்தோம்பு வோன் முகத்திரிப்பைக் கண்ட விருந்தினர் மனம் வாடிப்போம் என்பவற்றிற்குச் சார்பாய் *விவேகசிந்தாமணி* "ஒப்புடன் முகமலர்ந்தே யுபசரித் துண்மெபேசி, உப்பிலாக் கூழிட்டாலு முண்பதே யமிர்தமாகும், முப்பழமொடுபாலன்னம் முகங்கடுத்திடுவாராயின், கைப்பிய பசியும் போக்கி கடும் பசி நல்லதாமே" என்னும் ஆதரவால் அகமலர்ச்சியு முகமலர்ச்சியுங் கொண்டு செய்தலே அன்னதானத்திற்கு அழகாதலின் முகந்திரிந்து விருந்து ஈயலாகாது என்பது விரிவு.

10. இனியவை கூறல்

இனிய சொற்களாம் அமுத வாக்கானது மனதின்கண் ணெழுஉம் ஆனந்தக் கிளர்ச்சியாதலின் அதையே சாந்தபீடமென்று அறிந்த பெரியோன் விருந்தோம்பலுக்குப்பின் அவற்றை விளக்கி இனிய மொழியுடன் ஈவதே சிறப்பென வகுத்துள்ளார்.

1. இன்சொலா லீர மளையிப் படிரிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

(ப.) செம்பொருள் - மெய்ப்பொருளை, கண்டார் - அறிந்தவர்களின், வாய்ச்சொல் - நாவிலெழு மொழியானது, படிரிலவாஞ் - கடுஞ்சொற்களற்று, லீரமளையிப் - தண்மெயுடையாரென்பதை, இன்சொலா - அமுதவாக்கா லறியலாமென்பது பதம்.

(பொ.) மெய்பொருளை அறிந்த மேன்மக்களை அறியவேண்டின் கடுஞ்சொற்களை அகற்றி இனிய மொழிகளாற் பேசும் வாய்மெயே சான்று என்பது பொழிப்பு.

(க.) அழியாச் செவ்வியபொருளை அறிந்த அறிவின் மிக்கோர் சாந்தரூபிகளாதலின் அவர்களது வாக்கில் எழுஉஞ் சொற்கள் யாவும் இனிய சொற்களால் அமுதென விளங்கும் என்பது கருத்து.

(வி.) இராகத், துவேஷ, மோகம் நிறைந்துள்ளாரை அவரவர்கள் கடுஞ்சொற்களாலும் கொடுஞ் செயற்களாலும் அறிந்து கொள்ளுதல்போல் காம, வெகுளி, மயக்கங்களற்று செம்பொருளுணர்ந்த மேன் மக்களை அறியவேண்டின் அவர்களது இனியசொற்களே சான்றென்றற்குச் சார்பாய் காக்கைபாடியம் "மனமாசகற்றி வானிலை யடைதலும், இனமாசகற்றி

யினியவை கூறலும், வனமதில் புக்கி மகத்துறவோங்கலும், கனமுறு மெய்ப்பொருள் காட்சியதாமே" என்னும் ஆதாரங்கொண்டு செம்பொருட் கண்டோர் என்பதை அவர்களது இனிய மொழிகளால் அறியலாம் என்பது விரிவு.

2. *அகனமர்ந் தீதலி நன்றே முகனமர்ந்*
தின்சொல னாகப் பெறின்.

(ப.) அகனமர்ந் - உள்ளன்புகொண்டு, தீதலி - கொடுத்தலில், நன்றே - மேலாயதியாதெனில், முகனமர்ந் - முகமலர்ச்சியுடன், தின் - இனிய, சொலனாகப் - சொற்களை யுடையவனென, பெறின் - கூறப்பெறுவதே மேலாமென்பது பதம்.

(பொ.) அகமகிழ்ந்து ஒருவருக்கு ஆனந்தமாக ஈவதினும் முகமலர்ந்து இனியமொழி கூறலே மேலாம் என்பது பொழிப்பு.

(க.) உள்ளன்புகொண்டு தானம் ஈவதில் முகமலர்ச்சியுடன் இன்சொற்கூறி ஈவதே மேலாமென்பது கருத்து.

(வி.) யதார்த்தத்தில் அகமகிழ்ந்து தானம் ஈபவனாயினும், முகங்கடுத்து ஈவானாயின் அதன் பயனற்று போவான் என்பதை கண்ட பெரியோன், ஈவதினும் முகமலர்ந்து இனியமொழி கூறலே மேலென்று கூறியுள்ளவற்றிற்குச் சார்பாய் *சிறுபஞ்சமூலம்* "இன்சொலானாகுங் ளெமெயியல்பில்லா, வன்சொலானாகும் பகைமெமன-மென்சொலின், ஆய்விலாமாரருள வருளினாமனத்தான், வீவில்லா வீடாய்விடும்" என்னும் ஆதாரங்கொண்டு சகலவற்றிலும் அகமலர்ந்து இனியமொழி கூறலே மேலாம் என்பது விரிவு.

3. *முகத்தா னமர்ந்தினிது நோக்கிய கத்தானா*
மின்சொ லினிதே யறம்

(ப.) முகத்தானமர்ந் - முக மலர்ச்சியுடனும், தினிது நோக்கி - இனிய பார்வையுடனும், யகத்தானா - உள்ளன்புடனும், மின்சொலினிதே - அமுதமொழிகூறலே, யறம் - தன்மத்தின் பீடமென்பது பதம்.

(பொ.) முகமலர்ந்தும், அகமலர்ந்தும், குளிர்ந்த பார்வை மிகுந்தும் இனியமொழி கூறலே தன்மத்தின் ஆதியென்பது பொழிப்பு.

(க.) தன்மஞ்செய்வோன் முக மகிழ்ச்சியுடனும், கருணா நோக்கத்துடனும், உள்ளன்புடனும் இனிய மொழியுடனுஞ் செய்தலே சிறப்பு என்பது கருத்து.

(வி.) தன்மஞ்செய்வோன் தற்புகழ்ச்சியைக் கருதியும், டம்பத்தைக் கருதியும், சுயப்பிரயோசனத்தைக் கருதியுஞ் செய்யாது அகமுக மலர்ந்தும் அன்புடன் நோக்கியும் இனியமொழி கூறியும் ஈவதே தன்மமெனக் கூறியுள்ளவற்றிற்குச் சார்பாய் *தண்டலையார் சதகம்* "பொற் குடையும் பொற்றுகிலும் பொற்பணியுஞ் கொடுப்பதென்ன பொருளோவென்றும், நற்கமல முகமலர்ந்தே உபசார மிக்கவின்சொ நடந்தாலன்றோ, கற்கரையு மொழிபாகா தண்டலையார் வளநாட்டிற் கரும்பின்வேய்ந்த, சற்கரையின் பந்தலிலே தேன்மாரிபெய்துவிடுந் தன்மெதானே" என்னும் ஆதாரங்கொண்டு இனிய முகமும், இனிய உள்ளமும், இனிய பார்வையும், இனிய மொழியுமாயிருந்து ஈதலே தன்மம் என்னும் விரிவு.

4. *துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு*
மின்புறூஉ மின்சொல வர்க்கு.

(ப.) துன்புறூஉந் - துன்பமடையக்கூடியதும், துவ்வாமெ - இரஞ்சுக் கேட்கக் கூடியதும், யில்லாகும் - இல்லையாகும், யார்மாட்டு - யாவர்க்கென்னில், மின்புறூஉ - செவிக் கின்பங்கொடுக்கக்கூடிய, மின்சொலவர்க்கு - இனிய மொழிகளை பேசுவோர்கென்பது பதம்.

(பொ.) எக்காலும் இனியமொழிகளைப் பேசுவோரிடம் துன்பம் அணுகாது இருப்பதுடன் மற்றோரை வணங்கிக் கேட்கவேண்டியச் செயலும் வாராது என்பது பொழிப்பு.

(க.) மற்றோரை இரஞ்சு கேட்கவேண்டியச் செயலும், தனக்குண்டாகுந் துன்பங்களும் அணுகாவாம். யாவர்க்கென்னில், எக்காலத்தும் இனிய மொழியைப் பேசுவோர்களுக்கு என்பது கருத்து.

(வி.) தன்னவர் அன்னியரென்னும் பேதம்பாராது யாவரிடத்தும் முகமலர்ந்து இனிய மொழியைப் பேசுவோர்களைத் துன்பங்கள் அணுகாமலிப்பதுடன் மற்றவர்களுக்கு பயந்தும் ஒடுங்கியுங் கேட்கவேண்டியக் குறைகள் யாதும் வாராது என்பதற்குச் சார்பாய் *நீதிநெறிவிளக்கம்* "கண்ணோக்கரும்பா நகைமுகமே நாண்மலரா, மின்மொழியின் வாய்மெயே தீங்கனியாம் - வண்மெ, பலமா நலங்கனிந்த பண்புடையாரன்றே, சலியாத கற்பதரு" என்னும் ஆதாரங்கொண்டு இன் சொல்லின் பயனை இனிது விளக்கிய விரிவாம்.

5. பணிவுடைய னின்சொ லதனா லொருவற்
கணியல்ல மற்றுப் பிற.

(ப.) னின்சொலதனா - இனியமொழிகளையுடையதினா, லொருவற் - ஒருவன், பிற - அன்னியரால், பணிவுடைய - வணங்கப்பெறுவான், மற்றுப் - வேறு, கணியல்ல - ஆபரண மணிந்தோனைப் பணியாரென்பது பதம்.

(பொ.) இனிய மொழிகளை உடையோனை சகல மக்களும் பணிவார்கள். அணிபூண்ட ஒருவனை சகல மக்களும் வணங்கார் என்பது பொழிப்பு.

(க.) சிறந்த அணிகலம்பூண்ட சீமானாயினும் அவன் சகலராலும் வணங்கப்பெறான். இனியவாக்குடைய பெரியோனை சகலரும் பணிவார்கள் என்பது கருத்து.

(வி.) பலரறிய பல அணிகளைப் பூண்பவன் டம்பச்செயலையும், டம்ப மொழியையும் உடையவனாதலின் சகலராலும் வணங்கப் பெறான் என்றும், சகலரிடத்தும் முகமலர்ந்து இனியமொழி கூறுவோன் சகலராலும் வணங்கப்பெறுவான் என்றுங் கூறியுள்ளவற்றிற்குச் சார்பாய் *பாசமாட்சி* "புன்சொல்லு நன்சொல்லும் பொய்யின்றுணர்கிற்பார், வன்சொல்வழியராய் வாழ்தலுமுண்டாமோ, புன்சொலிடர்படுப்பதல்லாலொருவனை, யின்சொ லிடர்படுப்பதில்" என்னும் புன்சொல்லாற் கேடும் இன்சொல்லால் சுகமும் உண்டென்பதைக் கண்ட பெரியோன் இன்சொலுடையோனை சகலரும் வணங்குவார் எனக் கூறிய விரிவு.

6. அல்லவை தேயவறம் பெருகு நல்லவை
நாடி யினிய சொலின்.

(ப.) அல்லவை - இல்லையென்னும் லோபமொழி, தேய - அகல, வறம்பெருகு - தன்மம் வளரும், நல்லவை - அந்நல்லறம், நாடியினியசொலின் - தேடி யினியமொழிகூறி கொடுப்பதாலென்பது பதம்.

(பொ.) உலோபகுணத்தை அகற்றி இனியமொழியுடன் தன்மஞ் செய்வானாயின் அத்தருமம் வளரும் என்பது பொழிப்பு.

(க.) ஈயாத உலோபகுணத்தைப் பெற்றவன் அக்குணத்தைத் தேய்த்து இ னியமொழியுடன் நல்லறத்தை நடாத்துவானாயின் அந்நல்லறம் மேலும் மேலும் வளரும் என்பது கருத்து.

(வி.) உடாதும் உண்ணாதும் அறஞ்செய்யாதும் உள்ளலோபிகள், தங்களது அலோபகுணத்தை அகற்றி தன்ம குணங் கொண்டு இனிய மொழியும் முகமலர்ச்சியும் உடையவனாய் நல்லறத்தை நடத்துவானாயின் செல்வம் பெருகி மேலும் மேலும் ஈவானென்பதற்குச் சார்பாய் *அருங்கலைச்செப்பு* "கொடாத வுலோபிக் கொடுத்துண்டு வாழின், விடாதுவறத்தின் செயல்" என்னும் ஆதாரங்கொண்டு அல்லவை தேய்ந்து இனியமொழியுண்டாயின் அறம்வளரும் என்பது விரிவு.

7. நயனீன்று நன்றிபயக்கும் பய னீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல்.

(ப.) நயனீன்று - சகல நலங்களையுங் கொடுத்து, நன்றிபயக்கும் - செய்நன்றிக்குத் தக்கவாறு, பயனீன்று - பிரிதிபலனளிக்கும், பண்பிற் - சிறந்த குணத்தின், தலைப்பிரியாச் - மாறுதலடையா, சொல் - இனியமொழியென்பது பதம்.

(பொ.) எக்காலும் இனிய மொழிகளைப் பேசுவதனால் சகல நயங்களுந் தோன்றி சுகிப்பதுடன் சத்துவகுணமும் பெருகி சகல சுகமுண்டாம் என்பது பொழிப்பு.

(க.) நன்னயம், பொருணயம், குணநயம் யாவையுஞ் சிறக்கச் செய்யும் சொன்னயம் என்பது கருத்து.

(வி.) ஒவ்வோர் மக்களும் இனிய மொழியாம் சொன்னயம் பேசலே சகல சுகத்திற்கும் ஆதாரமென்றறிந்த நமதையன் சகலசுகங்களையுங் கருதுவோர் தனது இனிய மொழியை என்றும் மாறாதிருக்கவேண்டுமென்பதற்குச் சார்பாய் *வள்ளலாரிரைஞ்சல்* "நலம்வேண்டில் நலம்வேண்டில் நற்றவமும் வேண்டில், பலகாலும் இனிய மொழி . . ." பேறும் பெறலாம் என்பது விரிவு.

8. சிறுமெயு ணீங்கிய வின்சொன் மறுமெயு
மிம்மெயு மின்பந் தரும்.

(ப.) சிறுமெயு - ஒடுங்கிய விடத்தும், ணீங்கிய - துன்மொழியகன்று, வின்சொன் - இனிய மொழிகளையே பேசுவானாயின், மறுமெயு - இனியெடுக்குந் தேகத்திற்கும், மிம்மெயு - இப்போதெடுத்துள்ள தேகத்திற்கும், மின்பந்தரும் - சுகத்தையளிக்குமென்பது பதம்.

(பொ.) பலவகை இடுக்கங்களால் ஒடுக்கமுற்றகாலத்துந் தனது கொடுமொழிகள் அகன்று இனிய மொழியையே பேசுவானாயின் இப் பிறவியிலும் மறு பிறவியிலும் இன்பத்தை அடைவான் என்பது பொழிப்பு.

(க.) மிக்க தாரித்திரியத்தால் ஒடுக்கமுறினும் தனது புன்மொழிகளற்று நன்மொழிகளாம் இனிய மொழிகளையே பேசுவானாயின் இம்மெய்யில் ஆனந்தசுகமடைவதுடன் மறுமெய்யிலுஞ் சுகமடைவார் என்பது கருத்து.

(வி.) பிறப்பிலேயே தாரித்திரத்தில் ஒடுங்கினவனாயினும், தாரித்திரத்தால் எழுஉங் கொடுமொழிகள் அற்று இனிய மொழிகளையே என்றும் பேசிவருவானாயின் எடுத்துள்ள தேகத்தில் இன்பம் அநுபவிப்பதுடன் இனி எடுக்குந் தேகத்திலும் இன்பசுகம் அநுபவிப்பான் என்பவற்றிற்குச் சார்பாய் *அறநெறிச்சாரம்* "கொடுப்பான் வினையல்லன் கொள்வானுமல்லன், கொடுக்கப்படும் பொருளுமன்றால் அடுத்தடுத்து, நல்லவையாதாங் கொல்நாடியுரையாய்நீ, நல்லவர்நாப்பண் நயந்து" என்னும் ஆதாரங்கொண்டு நாவிலெழுஉம் இனிய மொழியால் இம்மெயிலும், மறுமெயிலுஞ் சுகமடையலாம் என்பது விரிவு.

9. இன்சொ லினிதின்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

(ப.) இன்சொ - இனிய மொழிகளா, லினிதீன்றல் - இன்பந்தோன்றலை, காண்பா - கண்டவன், னெவன்கொலோ - எவனாயினும், வன்சொல் - கொடு மொழிகளை, வழங்குவது - பேசுவனோவென்பது பதம்.

(பொ.) இனியமொழியால் உண்டாம் இன்பசுகத்தைக் கண்டவன் மறந்தும் வன்மொழிப் பேசமாட்டான் என்பது பொழிப்பு.

(க.) கொடுமொழிகளைப் பேசுவதாலுண்டாங் கேடுகளையும், இனிய மொழிகளைப் பேசுவதாலுண்டாஞ் சுகங்களையும் ஆராய்ந்துணர்ந்தவன் எக்காலுங் கொடுமொழி கூறமாட்டான் என்பது கருத்து.

(வி.) ஒருவன் எக்காலும் இனியமொழிகளைப் பேசி அதன் நயத்தையும் சுகத்தையுங் கண்ட பின்பு மறந்துங் கொடுமொழி கூறமாட்டான் என்பதற்குச்

சார்பாய் அருங்கலைச்செப்பு "இறந்துமின்மொழி மாறாதிளவல், மறந்தும் வன்மொழியாளான்" என்பது கண்டு இன்மொழி சுகங்கண்டோன் மறந்தும் வன்மொழி கூறான் என்பது விரிவு.

10. இனிய வுளவாக லின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

(ப.) இனிய - இன்பமடையுமொழி, வுளவாக - உள்ளவனாயிருந்தும், லின்னாககூறல் - கொடு மொழியைக் கூறுவானாயின், கனியிருப்பக் - கனிந்த பழமிருக்க, காய்கவர்ந்தற்று - காயைப்புசிப்பதற்கொக்குமென்பது பதம்.

(பொ.) இனியமொழியையுள்ளவன் கடுமொழி கூறுதல் கனியிருக்கக் காயைப் புசித்தலுக்கு ஒக்கும் என்பது பொழிப்பு.

(க.) தனக்குள்ள இனிய மொழிகளால் அடைந்த பயனை உணர்ந்தும் வன்மொழிகளைப் பேசுவதாயின் தன்னிடமுள்ளக் கனியைத் தவிர்த்துக் காயைப் புசித்தலுக்கு ஒக்கும் என்பது கருத்து.

(வி.) உள்ளத்தில் இனியவை உள்ளதை உணர்ந்தும் இல்லா கொடுமொழி கூறுவதாயின் இனியக் கனியை உருசித்து உண்டும் இனிப்பில்லாக்காயைப் புசித்தலுக்கு ஒக்கும் என்பதற்குச் சார்பாய் *அறநெறிதீபம்* "இனிய வுளத்துள்ளிருந்து மின்னாசொற் கூறுதலும், பனியகற்றி சூடடையும் பாங்கெல்லைக் கேகுதலும், தனிமெயடைந் தூவோரை தானகற்றி உண்பனவும், கனியிருக்கக் காயுண்ணுங் காட்சியதன்பயனாகும்" என்னும் ஆதாரங்கொண்டு உள்ளத்திலினியவை இருந்து கொடுமொழி கூறல் கனியிருந்துங் காயைப் புசித்தலுக்கு ஒக்கும் என்பது விரிவு.

11. செய்நன்றி அறிதல்

ஒருவர் செய்த உபகாரத்தை எக்காலும் மறவாதிருத்தலே அதன் பிரிதிபலன் என்றறிந்த பெரியோன் இனிய மொழிக்குப் பின் செய்நன்றியை மறவாதிருத்தலை விவரிக்கின்றார்.

1. செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது.

(ப.) செய்யாமற் - தனக்கோருதவியுங் கோறாது, செய்த வுதவிக்கு - தான் செய்த வுபகாரத்திற்கு, வையகமும் - பூவுலகத்தையும் , வானகமும் - விண்ணுலகத்தையும், மாற்றலரிது - பிரிதிபலனாக ஈயினும் பொருந்தா என்பது பதம்.

(பொ.) பிரிதிபலனைக் கருதாது செய்யும் உதவிக்கு விண்ணுலகத்தையும், மண்ணுலகத்தையும் பிரிதிபலனாக வீயினும் பொருந்தா என்பது பொழிப்பு.

(க.) எதிரியின் பலனைக் கருதாது காருண்யத்தாற் செய்யும் உதவிக்கு நிகராக வானுலகத்தையும், பூவுலகத்தையும் தானமாகக் கொடுக்கினும் பொருந்தாவென்பது கருத்து.

(வி.) கருணையினது மிகுதியால் இனியமொழிகொண்டு ஈய்யும் உபகாரத்திற்கு மேலாய உதவி ஏதொன்றும் இல்லையாதலின் கெடுவார் செயலை அகற்றி இடுவார்ச் செயலை விளக்குவதற்குச் சார்பாய் *அறநெறிச்சாரம்.* "தண்டாமம் பொய்வெகுளி பொச்சாப்பழுக்காறென், றைந்தேகெடுவார்க் கியல்பென்ப பண்பாளா, யீதலறித லியற்றுதலின் சொற்கற், றாய்தலறிவார் தொழில்" என்னும் மேன்மக்கட் செயலை செய்யாமற் செய்யும் உதவியில் விளித்த விரிவு.

2. காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது.

(ப.) காலத்தினாற் செய்த - வேண்டுங்காலமறிந்து செய்த, நன்றி - உபகாரமானது, சிறிதெனினு - சொற்பமாயினும், ஞாலத்தின் - பூமியின்கண், மாணப்பெரிது - மிக்க மேலாயதென்பது பதம்.

(பொ.) எதிரிக்குச் செய்த உதவி சிறியதாயினும் அவனுக்கு வேண்டுங்

காலமறிந்து செய்த அவ்வுதவி பூமியின்கண் மிக்க மேலாயது என்றே ஏற்கவேண்டும் என்பது பொழிப்பு.

(கூ) ஒருவன் ஆபத்து காலமறிந்து செய்தவுதவியானது மிக்கச் சிறிதேயாயினும் அவனது கேட்டின் காலமறிந்து செய்தவுதவியால் உலகத்தில் அவ்வுதவி மிக்கமேலாயது என்பது கருத்து.

(வி.) உலகத்தாருக்குச் செய்யும் உதவிகளில் அவனவனுக்கு நேரிடுந் துன்பகாலங்களை அறிந்து செய்யும் உதவியே மிக்கமேலாய உதவியென்றுணர்ந்த மேலோன் காலத்தினாற் செய்தவுதவி சிறிதேயாயினும் ஞாலத்தில் அஃதே பெரிதென்பதற்குச்சார்பாய் *அறநெறிச்சாரம்* "இன்சொல்விளைநிலமா ஈதலேவித்தாகி, வன்சொற்களைகட்டு வாய்மை-யெருவட்டி, அன்புநீர்பாய்ச்சி அறக்கதிரீன்றதோர், பைங்கூழ் சிறுகாலைச்செய்" என்னும் இனிய மொழியையுங் காலமறிந்து செய்யும் பேரானந்தவுதவியையும் விளித்த விரிவு.

3. பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மெ கடலிற் பெரிது.

(ப.) பயன்றூக்கார் - எதிரியின் பயனைக் கருதாது, செய்தவுதவி - கொடுக்கும் உபகாரமானது, நயன்றூக்கி - குணவாராச்சியில், னன்மெ - சுகநிலையானது, கடலிற்பெரிது - கடன்மடை திரண்டோடும் எழுகடலினுஞ் சிறந்ததென்பது பதம்.

(பொ.) எதிரியின் பயனைக் கருதாது செய்யும் உதவியின் நயத்தை சீர்தூக்கி ஆராயுங்கால் அதனது சிறப்பு கடலினும் பெரிது என்பது பொழிப்பு.

(கூ) யாதொரு பயனையுங்கருதாது செய்யும் உதவியின் நயத்தை யாராயுங்கால் உலகத்தில் மடைதிரண்டோடும் எழுகடலினும் மேலாயது என்பது கருத்து.

(வி.) உலகத்திற் கடல் மடைத்திரண்டோடி யாதொரு பிரிதிபயன் ஏற்காது உபகாரமாக விளங்கும் பாற்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், தேன்கடல், கருப்பஞ்சாற்றுக்கடல், உவர்நீர்கடல், நன்னீர்க்கடல் ஆகிய எழுகடலினும் மேலாய உதவியாதெனில் எதிரியின் பயனை சீர்தூக்கி சிந்தியாது செய்யும் உதவியே பெரிது என்பது விரிவு.

4. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்.

(ப.) தினைத்துணை - தினையரிசியி னளவாக, நன்றி - உபகாரஞ், செயினும் - செய்வதாயினும், பனைத்துணையாக் - அவற்றை பனைமரத்திற் கொப்பாய பேருதவியாக, கொள்வார் - ஏற்பர், பயன்றெரிவார் - அதன் பயனையறிந்த மேலோர்கள் என்பது பதம்.

(பொ.) தினை அரிசியினளவாகப் பெற்ற உபகாரத்தைப் பனைமரத்துக்கு ஒப்பாக கொள்ளுவர் பெரியோர் என்பது பொழிப்பு.

(கூ.) விவேக மிகுந்த மேன்மக்கள் தினை அரிசிக்கு ஒப்பாய சிறிய உபகாரத்தைப் பெறினும் அவற்றைப் பனைமரத்திற்கு ஒப்பாய பேரூபகாரமாகக் கருதுவார்கள் என்பது கருத்து.

(வி.) கருணை மிகுந்த மேன்மக்கள் சிறிய உபகாரத்தைப் பெறினும் அந்நன்றி மறவாதச் செயலால் அதனைப் பேருபகாரமாகக் கருதி மேலும் மேலும் அதன் பயனை உள்ளத்துணர்வதுடன் ஏனையோருக்கும் அதன் பயனை உணர்த்தி இனிது விளக்குவான் வேண்டி உதவியின் பெரிது சிறிதைத் தினைக்கும் பனைக்கும் ஒப்பிட்டு உரைத்த விரிவு.

5. உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

(ப.) உதவி - செய்தவுதவியின், வரைத்தன் - நன்றியை மறவாதோர்க்கு, றுதவி யுதவி - மேலு மேலு முபகாரத்தை, செயப்பட்டார் - செய்துவருவோர், சால்பின்வரைத்து - என்றென்று மன்னன்றியைப் பெறுவாரென்பது பதம்.

(பொ.) செய்த உதவியின் நன்றியை மறவாதோர்க்கு மேலும் மேலும் உதவி புரிவோர் எக்காலும் அவர் நன்றியைப் பெறுவார் என்பது பொழிப்பு.

(க.) ஒருவருக்குச் செய்த உபகாரத்தை அன்னோர் மறவாதிருப்பாராயின் மேலும் மேலும் அவர்களுக்கு உதவி புரியலாம் என்பது கருத்து.

(வி.) கல்லின்மேல் வரைத்தவரைபோல் செய்நன்றியை மறவாதிருத்தலே நல்லோர் செயலாதலின் அன்னற்செயலை உள்ளார்க்கு மேலோர் எக்காலும் உதவி புரிவார்கள் என்பதற்குச் சார்பாய் *அறநெறித்தீபம்* "திடநிலையவுபகாரச் செய்நன்றி மறவார்க்கு, வுடநிலைமே லுபகார முள்ளளவுஞ் செய்திடுவார், அடவிநிலைசென் றாங்கு மாதாரங் கொண்டிடுவர், கடல் மடைபோற் பெறுபேற்றுக் காட்சியதன் பயனாகும்" என்னும் கல்லின்மேல் வரைத்தன் வரைபோல் நன்றிமறவாதார்க்கு என்றென்றுஞ் சுகமுண்டு என்பது விரிவு.

6. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு.

(ப.) மாசற்றார் - களங்கமற்ற நெஞ்சினர், கேண்மை - சிநேகத்தை, மறவற்க - மறவா திருத்தல்வேண்டும், துன்பத்துட் - துன்பமுண்டாயகாலத்தில், டுப்பாயார் - உதவிபுரிந்தவர்களின், நட்பு - நேயத்தை, துறவற்க - அகலாதிருக்க வேண்டுமென்பது பதம்.

(பொ.) மனமாசு கழுவியுள்ள மேன்மக்களின் கூட்டுறவை மறவாதிருத்தல் வேண்டும். தனக்குத் துன்பம் நேரிட்டகாலத்தில் உதவி செய்தவர்களின் சார்பை அகலாதிருக்க வேண்டும் என்பது பொழிப்பு.

(க.) களங்கமற்றோர் கேண்மையை எக்காலும் மறவாதிருத்தல் வேண்டும், அவைபோல் ஆபத்து காலத்தில் உதவி புரிந்தோர் நேயத்தை என்றும் அகலாதிருத்தல் வேண்டும் என்பது கருத்து.

(வி.) மனமாசுக் கழுவியுள்ள மகான்களின் பார்வையால் அனந்தசுக முண்டாயதைக் கண்ட நமதையன் ஆபத்துகாலமறிந்து உதவிசெய்த மேன்மக்களை அகலாதிருத்தல் வேண்டுமென்று கூறற்கு முன் களங்கமற்றோர்காட்சியை மறவற்கவென்று கூறியவற்றிற்குச் சார்பாய் *அறநெறிசீசாரம்* "கொடுத்துய்யப் போமாறு கொள்வான் குணத்தில், வடுத்தீர்ந்தாருண்ணிற் பெறலாம் - கொடுத்தாரைக், கொண்டுய்யப்போவார் குணமுடையா ரல்லாதார், உண்டீத்து வீழ்வார் கிழக்கு" என்னும் ஒருவன் ஆபத்துகாலத்து உண்டாய ஈகையே ஈசனென்னு மொழி ஏற்றலால் அதன் பீடமே களங்கமறற்கு காட்சி என்று விளித்த விரிவு.

7. எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைப்பவர் நட்பு

(ப.) எழுமை - எழுவகைத் தோற்றமாம், யெழுபிறப்பு - ஏழுவகைப்பிறப்பினும், தங்கள் - தங்களுடைய, விழுமந் - துன்பத்தை, துடைப்பவர் - அகற்றினவர்களின், நட்பு - அன்பின்மிகுதியை, முள்ளுவர் - தங்களுள்ளத் தகலாதிருத்துவரென்பது பதம்.

(பொ.) நல்லவர்கள் பெற்ற உதவியைத் தங்கள் எழுவகைத் தோற்றத்தினும் மறவார்கள் என்பது பொழிப்பு.

(க.) பெரியோர்களால் பெற்ற உபகாரத்தை நன்றியுள்ளோர் தங்கள் எழுபிறப்பினும் மறவார்கள் என்பது கருத்து.

(வி.) நல்லோர் தங்கள் துன்பத்தை அகற்றி ரட்சித்த மேன்மக்களின் செயலை தங்கள் எழுவகைத் தோற்றங்களாகிய தேவர், மக்கள், விலங்கு, பட்சி, ஊர்வன, நீர்வாழ்வன, தாபரமாயவற்றுள்ளும் மறவார்களென்னும் முதுமொழிக்குச் சார்பாய் *அறநெறித்தீபம்* "பாபத்தைத் தீர்க்கும் வாய்மையப் பெருமொழி நான்கினுக்குங், கோபத்தை யடக்கி யாண்டு குணக்குன்றி லேறினோர்க்கும், ஆபத்தை தீர்த்து காக்கும் அரியநல்லுபகாரிக்குந், தாபத்தினன்றிகற்குஞ் சோபமே பயனாமன்றோ" என்னும் நல்லோராயுள்ளோர் மற்றோரல் செய்நன்றியை எத்தோற்றத்தினும் மறவார்கள் என்பது விரிவு.

8. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

(ப.) நன்றி மறப்பது - ஒருவர் செய்த வுபகாரத்தை மறப்பது, நன்றன்று - நல்லதல்லவாகும், நன்றல்ல - ஒருவர் செய்த தீங்கினை, தன்றே மறப்பது - அப்பொழுதே மறந்துவிடுவது, நன்று - நல்லதாகும்.

(பொ.) ஒருவர் செய்த உபகாரத்தை என்றும் மறவாதிருத்தலே நல்லதாகும். ஒருவர் செய்த துன்பத்தை அன்றே மறந்துவிடவேண்டும் என்பது பொழிப்பு.

(க.) ஒருவர் செய்த தீங்கினை அப்போதே மறந்துவிடுவது நலமாகும். ஒருவர் செய்த உபகாரத்தை மட்டிலும் எக்காலும் மறக்கலாகாது என்பது கருத்து.

(வி.) ஒருவர் செய்த உதவியை எக்காலும் மறவாதவர்கள் அதன் புண்ணிய பலத்தால் பட்டாடை உடுத்தி சுகசீவ வாழ்க்கையிலிருப்பார்கள். அவ்வுதவியை மறப்போர் வாட்டமுற்று உணர்வற்றிருப்பாரென்னுங் கேட்டை நாலடியார் நானூறு "புணர்கடல்சூழ் வையத்துப் புண்ணிய மோவேறே, யுணர் வுடையாரிருப்ப வுணர்விலா, வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ்வரே, பட்டுந்துகிலுமுடுத்து" என்றும் *நாலடியார்* நல்லோர்க்குறி "செய்நன்றி மறவாதபேர்களும் ஒருவர்செய் தீமையை மறந்தபேரும்" என்னும் ஆதாரங்கொண்டு நன்றியை மறவாதிருத்தலே நற்பயனென்றறிந்தொழுகற்கு எதிரடையாக, ஒருவர் செய்த தீங்கினை மறவாதிருப்பதாயின் உள்ளங்கொதித்து மேலும் மேலும் தீங்கினை வளர்த்து அதிதுன்பம் உண்டாவதை உணர்ந்த பெரியோன் ஒருவர் செய்த தீங்கினை அன்றே மறந்துவிடவேண்டும் என்று கூறிய விரிவு.

9. கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும்.

(ப.) கொன்றன்ன - கொல்லத்தக்க, வின்னா - பலவகையாய துன்பங்களை, செயினும் - செய்தபோதினும், மவர்செய்த - அவரால் செய்யப்பட்ட, வொன்று - ஒரு, நன்றுள்ள - உபகாரத்தையுள்ளத் துணர்வதாயின், கெடும் - அத்துன்பங்கள் யாவும் விலகிப் போமென்பது பதம்.

(பொ.) ஒருவர் கொல்லத்தக்கப் பலவகைத் துன்பங்களைச் செய்யினும் அவரால் செய்துள்ள உபகாரத்தை உள்ளத்துணர்வதாயின் அத்துன்பங்கள் தானே அகலும் என்பது பொழிப்பு.

(க.) ஒருவர் செய்த உபகாரத்தை மறவாதிருப்போனை யாதொரு துன்பஞ்செய்யினும் அணுகாது என்பது கருத்து.

(வி.) செய்நன்றியை மறவாத நல்லோனை நன்றிசெய்தவனே ஓர்கால் துன்புறுத்தின் அத்துன்பம் அவனை அணுகாதென்னுஞ் காரணம் யாதெனில் அவனோர்கால் செய்த நன்றியை எக்காலும் மறவாது உள்ளத்து இறுத்தி யுள்ளவனாதலின் தீவினையாம் கள்ளம் அகன்று உள்ளபடி முடியுமென்னும் ஆதாரத்தால் நன்றிமறவாத நல்லோர்பால் தீவினை அணுகாது என்பது விரிவு.

10. எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு.

(ப.) எந்நன்றி - எத்தகைச் செயலையும், கொன்றார்க்கு - கெடுத்தோர்க்கு, முய்வுண்டா - சுகமுண்டாம், செய்நன்றி - உபகாரச்செயலை, கொன்ற - கெடுத்த, மகற்கு - மக்களுக்கு, முய்வில்லை - சுகமில்லையென்பது பதம்.

(பொ.) எத்தகையச் செயல்களைக் கெடுத்தோருக்கும் சுகமுண்டாம். ஒருவர் செய்த நன்றியைக் கெடுப்போருக்கு சுகமில்லை என்பது பொழிப்பு.

(க.) எவ்வகையாயச் செயல்களை மறக்கினும் சுகமுண்டாம். ஒருவர் செய்த வுபகாரத்தை மறக்கின் எக்காலும் சுகமில்லை என்பது கருத்து.

(வி.) ஒருவர் செய்துள்ள நன்றியை மறந்த மக்களுக்கு எக்காலும் சுகமில்லையென்னுங் காரணம் யாதெனில் நன்றியை உள்ளத்து உள்ளானுக்கு

சகல தீவினைகள் அறும் என்பதும், நன்றியை மறந்தோனுக்குத் தீவினை யறாது என்பது விரிவு.

12. நடுவு நிலைமெய்

அதாவது தன் சுகம் பிறர் சுகமென்னும் பேதமின்றியும், தன்னவ ரன்னியர் என்னும் பேதமின்றியும், தன்னலம் அன்னியர் நலமென்னும் பேதமின்றியும், சகல மக்களையும், சகலர் சுகத்தையும், சகலர் நலத்தையும், தன்னவர் சுகம்,தன்னவர் நலமென நிற்கும் நிலையையே நாடிநிற்றல் நடுவு நிலைமெயாதலின் செய்நன்றியை அறிதலுக்குப் பின் நடுவுநிலைமெயை விளக்குகின்றார்.

1. தகுதியென வொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின்.

(ப.) தகுதியென - தகுந்தகு மென்னும் நடுநிலைமொழி, வொன்று - ஒன்று, நன்றே - நல்லதாகும், பகுதியாற் - பிறிவினையால், பாற்பட்டொழுகப் - நெறியற்றிருக்கப், பெறின் - பெறுவோரென்னும் பதம் நன்றன் றென்பதைக் குறிக்குங் குறுக்காம்.

(பொ.) பலராலும் நடுவு நிலைமெயோன் என மதிக்கத்தக்க நிலையே நன்றாம். நடுவு நிலைமெயற்றோன் தீயன் எனப்படுவான் என்பது பொழிப்பு.

(க.) சகலராலும் இவன் நெறியை உடையவன், நடுவு நிலைமெயோன் என்னுந் தகுந்த பெயர் ஒன்றைப் பெறுதலே நன்றாம். அதற்கு மாறாக நெறிபிறழ்ந்து நடுவுநிலைமெயற்று நிற்றல் நன்றன்றென்பதை கூறாமற் குறித்த கருத்து.

(வி.) இவன் தன்னவன் அன்னியனென்னும் பேதம் பாராதவன் தன்னலத்தைப்போல் பிறர்நலங் கருதுகிறவன், தன்சுகம்போல் பிறர்சுகங் கோருகிறவன் நெறிபிறழா நடுநிலைமெயுடையவனென்னத்தகும் பெயரொன்றைப் பெறுதலே நன்றென்றும் அவற்றிற்கு மாறாய் நெறி பிறழ்தலை கேட்டின் ஒழுக்கமென்று குறிப்பிட்டுள்ளவற்றிற்குச் சார்பாய் *அறநெறிச்சாரம்* "விதிப்பட்ட நூலுணர்ந்து வேற்றுமெ நீக்கிக், கதிப்பட்ட நூலினைக் கையிகந்தாக்கி, பதிப்பட்டு வாழ்வார் பழியாயசெய்தல், மதிப்புறத்திற் பட்ட மறு." நடுவு நிலைமெயாம் ஒழுக்கநெறி நிற்றலே நன்றென்றும் அதற்கு மாறாம் பகுதியாய பாற்பட்டொழுகல் தீதென்றுங் கூறிய விரிவாம்.

2. செப்ப முடையவ னாக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து.

(ப.) செப்ப முடைய - சொல்லத்தக்க நடுவுநிலைமெயுடையவனது, னாக்கஞ் - தன சம்பத்தானது, சிதைவின்றி - யாதொரு சேதமுமின்றி, யெச்சத்திற் - புத்திரபௌத்திரர்களுக்கும், கேமாப்புடைத்து - இல்லையென்னா துதவுமென்பது பதம்.

(பொ.) சகலராலும் நடுவுநிலைமெயுடையவனெனப் போற்றப் பெற்றவனது தன்சம்பத்து யாதொரு சேதமுமின்றி தனது புத்திர பௌத்திரர் களுக்கும் உதவுமென்பது பொழிப்பு.

(க.) கஸ்தூரியுள்ள பாண்டம் கஸ்தூரியகலினும் அதன் மணம் நீங்காதது போல் நடுவுநிலைமெயுள்ளோன் மறையினும் அந்நற்செயல் நீங்காது அவனது தனசம்பத்து அவனுக்குதவியதுபோல் தனது புத்திர பௌத்திரர்களுக்குங் குறைவற உதவும் என்பது கருத்து.

(வி.) இவன் நீதிமான் நடுவுநிலைமெயுடையவனென சகலராலுங் கொண்டாடப் பெற்றவனது செல்வம் நாளுக்குநாள் பெருகுவதுடன் தனது புத்திர பௌத்திரர்களுக்கும் அச்செல்வம் பெருகி சுகச்சீர்பெறுவார்கள் என்பதற்குச் சார்பாய் *காக்கைபாடியம்* "நெறியிற் பிறழா நடுநிலையாளர், பொறியும் புலனும் போற்றுதற்கினிதாய், செறியுஞ் செல்வச் சேர்தனம் யாவுங், குறியா முரவோர்க் குதவுவ தாமே" என்னும் மொழிகொண்டு நடுவு

நிலைமெயுள்ள மக்களது செல்வம் நாளுக்குநாட் பெருகி சுகந்தருவதுடன் தனது உரவின் முறையோருக்கும் உதவும் என்பது விரிவு.

நற்றொழிலிலும், நல்லெண்ணத்திலும், நற்செயலிலும் நின்று சம்பாதிக்கும் பொருள் நடுவுநிலைமெயாள ருடையதும், துற்செயலிலும், வஞ்சகத்திலும், சூதிலும், வட்டியிலும், நின்று சம்பாதிக்கும் பொருள் நடுவுநிலைமெ யற்றவர்களுடையதும் ஆதலின் அத்தகையோர் செல்வம் தங்களுக்கும் உதவாது தங்கள் தங்கள் சந்ததியோர்களுக்கும் உதவாமற்போம் என்பதேயாம்.

3. நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே வொழிய விடல்.

(ப.) நன்றேதரினு - சுகத்தைக் கொடுக்கக்கூடியதாயினும், நடுவிகந்தா - நல்வழியிற் சம்பாதிக்காத, மாக்கத்தை - செல்வத்தை, யன்றே - அப்பொழுதே, யொழிய விடல் - அகற்றிவிட வேண்டு மென்பது பதம்.

(பொ.) கெட்டவழியால் சம்பாதித்தப் பொருள் தனது சுகத்தைக் கொடுக்கக் கூடியதாயினும் அதனை அன்றே ஒழித்து விடவேண்டும் என்பது பொழிப்பு.

(க.) சூதாலும், வஞ்சகத்தாலும், களவாலும், வட்டியாலும் சம்பாதிக்கும் பொருள் அக்கால் தனக்கு சுகத்தைக் கொடுத்திடினும் பிற்கால் பெருந்துக்கத்திற்குக் கொண்டுபோமாதலின் அத்தகையப் பொருளை அன்றே ஒழித்து விடவேண்டும் என்பது கருத்து.

(வி.) தீயச் செயலால் சம்பாதிக்கும் பொருள் தீயவழியிலேயே செல்வதுடன் தன்னையுந் தீவினைக்கு உள்ளாக்குமென்பதை உணர்ந்த பெரியோன் அத்தீவினைக்குள்ளாகி அல்லலடையாது நல்வினையில் ஈடுபட்டு நடுவுநிலைமெயோனாம் நல்லோனாகி சகல சுகமும்பெற்று சகலருக்கும் உபகாரியாக விளங்கவேண்டும் என்பது விரிவு.

4. தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப்படும்.

(ப.) தக்கார் - நடுவுநிலைமெ யுள்ளார், தகவில - நடுவுநிலைமெ யில்லாதார், ரென்ப - என்பதை, தவரவ - அவரவர்களின், ரெச்சத்தாற் - சற்புத்திர விருத்தியாற், காணப்படும் - தெரிந்துக்கொள்ளலாமென்பது பதம்.

(பொ.) இவர்கள் நடுவுநிலைமெயுள்ளோர் அவர்கள் நடுவுநிலைமெ யில்லார் என்பதை அவரவர்கள் நற்புத்திர விருத்தியாற் கண்டுக்கொள்ளலாம் என்பது பொழிப்பு.

(க.) தனபாக்கிய விருத்திக்கும், புத்திரபாக்கிய விருத்திக்கும் நடுவுநிலைமெயாம் நற்செயலே காரணம் என்பதை அவரது நடுவுநிலைமெய் செயலாற் காணலாமென்பது கருத்து.

(வி.) இவர்கள் துறந்தவர்கள் இவர்கள் துறவாதவர்களென்று அவரவர்கள் ஈகையினாலும் உள்ள வமைதியினாலும் அறிந்து கொள்ளுவதுபோல் இவர்கள் நடுநிலைமெயுள்ளார் அவர்கள் நடுவுநிலை மெயில்லாதார் என்பதை அவரவர்கள் ஈன்ற சற்புத்திரச்செயலால் அறியலாம் என்பது விரிவு. *அறநெறிச்சாரம்* "துறந்தார் துறந்திரலரென்றறியலாகும், துறந்தவர் கொண்டொழுகும் வேடங்-துறந்தவர், கொள்ப கொடுப்பவற்றாற் காணலாம் மற்றவர், உள்ளங்கிடந்தவகை".

5. கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமெ சான்றோர்க் கணி

(ப.) கேடும் - தனக்குறைவும், பெருக்கமு - தனநிறைவும், மில்லல்ல - பகுப்பின்றாம், நெஞ்சத்துக் - உள்ளத்து, கோடாமெ - நடுவுநிலைமெ பிறழா, சான்றோர்க் - மேன்மக்களுக்கு, கணி - அணிகலமென்பது பதம்.

(பொ.) நடுநிலைமெ பிறழா சாந்தரூபிகளுக்கு அணிகலமாயுள்ளது யாதெனில் இவன் ஏழை அவன் தனவான் என்னும் பாரபட்சமற்ற பேதம்பாரா நிலை என்பது பொழிப்பு.

(க.) இவன் தனமற்றவன், அவன் தனமுள்ளவன் என்னும் பேதமற்று இருவரையும் சமநிலையாம் நடுநிலைமெயி நோக்குவதே மேன்மக்களுக்கு அணிகலம் என்பது கருத்து.

(வி.) இவன் தனமில்லாது கேடுற்றவன் அவன் தனம்பெற்று சுகமுற்றவனென்னும் பேதாபேதம் பாரா நடுவுநிலைமெயுற்ற நிலையே சான்றோர்களாம் மேன்மக்களின் அணிகலமென்று கூறியவற்றிற்குச் சார்பாய் *அறநெறிச்சாரம்* "தூயவாய் சொல்லாடல் வண்மெயும் துன்பங்கள், ஆயபொழுதாற்று மாற்றலும்-காய்விடத்து, வேற்றுமெகொண்டாடா மெய்மெயும் இம்மூன்றும், சாற்றுங்கால் சாலத்தலை" என்னும் மிருதுவாய நல்வாக்கும் சுகத்தையுந் துக்கத்தையும் சமமாகக் கருதுதலும், தன்னவரன்னியர் என்னும் வேற்றுமெ பாராட்டாதலுமாகிய சான்றோர்களே உலகத்தில் எக்காலும் முதல்வர்களாவார்கள் என்பது கொண்டு நடுவுநிலைமெயுள்ளார்க்கு வேற்றுமெயற்றிருத்தலே அணிகலமென்பது விரிவு.

6. கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
நடுவொரீ யல்ல செயின்.

(ப.) தன்னெஞ்ச - தன துள்ளத்திற்கு மாறாய், நடுவொரீஇ - நடுவுநிலைமெ, யல்ல - அல்லாததை, செயின் - செய்வதாயின், கெடுவல்யானென்ப - யான் கெடுவேனென்பதை, தறிக - அறிந்துக்கொள்ள வேண்டுமென்பது பதம்.

(பொ.) தன துள்ளத்திற்கு மாறாய நடுவுநிலைமெயற்றச் செயலை செய்வதாயின் தான் கெடுவோமென்று அறியவேண்டும் என்பது பொழிப்பு.

(க.) தனது மனசான்றுக்கு விரோதமாக நடுவுநிலைமெயற்றச் செயலைச் செய்வதாயின் தனது கேட்டிற்கு வழியைத் திறந்துகொண்டோமென்று அறியவேண்டும் என்பது கருத்து.

(வி.) தன்னெஞ்சமே தனக்குக் கரியாய்நிற்க அதற்கு மாறாக நடுவுநிலைமெயற்றச் செயலைச் செய்வதாயின் தானே கெடுவான் என்பதும் கெடான் என்பதும் அவனவன் செயல் என்பதற்குச் சார்பாய் *நால்டி நானூறு* "நன்னிலைக்கட்டன்னை நிறுப்பானுந்தன்னை, நிலைகலைக்கிக்கீழிடுவானு நிலையினு, மேன்மேலுயர்த்து நிறுப்பானுந்தன்னைத், தலையாகச் செய்வானுந்தான்." *அறநெறிச்சாரம்* "தானேதனக்குப் பகைவனு நட்டானும், தானேதனக்கு மறுமெயு மிம்மெயும், தானேதான் செய்தவினைப்பயன் துய்த்தலால், தானே தனக்குக்கரி" என்பதுகொண்டு தான்செய்யும் நடுவுநிலைமெயற்றச் செயலால் தானே கெடவேண்டும் என்பது விரிவு.

7. கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக் கட்டங்கியான் றாழ்வு.

(ப.) நடுவாக - நடுவு நிலைமெயோனை, துலக - உலகத்தோர், கெடுவாக - குற்றமுடையவனாக, வையார் - நிந்தியார்கள், நன்றிக்கட்டங்கியான் - நன்றியை நினையா நடுவுநிலைமெ யற்றோனை, றாழ்வு - நிந்திப்பாரென்பது பதம்.

(பொ.) நடுவுநிலைமெயுள்ளானை உலகத்தார் நிந்திக்கமாட்டார்கள். நடுவுநிலைமெயில்லானை நிந்திப்பார்கள் என்பது பொழிப்பு.

(க.) சகலமக்களையும் சமமாக பாவிக்கும் மேன்மக்களை உலகத்தார் உயர்த்திப் பேசுவார்களன்றி தாழ்த்தி நிந்திக்கமாட்டார்கள். சகலரையும் சமமாகப் பாவிக்காத கீழ்மக்களைத் தாழ்த்தி நிந்திப்பார்கள் என்பது கருத்து.

(வி.) நடுவுநிலைமெயினின்று சகலமக்களையும் பேதம்பாராது ஆதரிப்போரை வையமாட்டார்கள், பேதமுறக் கெடுப்போரை வைவார்க ளென்பதற்குச் சார்பாய் *அறநெறித்தீபம்* "நல்லோரை யெல்லோரும் நாடிடுவர் நல்லறத்தி, லில்லாரை யெல்லோரு மிழுக்குறவே பேசிடுவர், சொல்லாலும் பொருளாலு மறியாத தொல்லுலகோ, ரெல்லவரும் நல்லவரை யேற்றுவதன் பயனாமே" யென்னும் ஆதாரங்கொண்டு நடுவுநிலைமெ யுற்றோரை வையாது போற்றுவதும் நடுவுநிலையற்று நன்றியில் நிலையாரை வைது தாழ்த்துவார் என்பது விரிவு.

8. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல மைந்தொருபாற்
கோடாமெ சான்றோர்க் கணி.

(ப.) சமன்செய்து - தராசு தட்டிற் சமநிறையேற்றி, சீர்தூக்குங் - நிறைபார்க்குங், கோல்போல் - துலாக்கோல்போல, லமைந்தொருபாற் - ஒருபக்கம், கோடாமெ போல சாயாதிருப்பதே, சான்றோர்க்கு - மேன்மக்களுக்கு, அணி - அழகாமென்பது பதம்.

(பொ.) தராசு தட்டிற் பொருளேற்றி கோல் எப்புறமுஞ் சாயாது நிலைக்கப்பார்ப்பதுபோல் மக்கள் நடுநிலைமெ சாயாது நிற்பதே அழகு என்பது பொழிப்பு.

(க.) பொன்னொருதட்டிலும் படிக்கல்லொருதட்டிலும் இட்டு கோல்தூக்கி சமநிறைபார்ப்பதுபோல் கனவானையும் ஆதுலனையும் நடுவுநிலை மெயிற் சீர்தூக்கி ஆள்வதே மேலோர்களது செயல் என்பது கருத்து.

(வி.) தராசு கோலைக் கையிலேந்தி பொற்கல்லுக்கும் எடைக்கல்லுக்குங் குறைவு நிறைவின்றி சமன்செய்து பார்ப்பது போல் மக்களாற் செய்யப்படும் இன்பதுன்பங்களை நடுவுநிலைமெயில் ஆராய்ந்து நீதியளிப்பதே சான்றோர் செயலாதலின் அந்நடுவுநிலைமெ யுற்றோர் தராசுகோல் சமநிலைபோல் நிற்பரென அவர்களது சிறப்பைக் கூறிய விரிவாம்.

9. சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மெ பெரின்.

(ப.) வுட்கோட்ட -உள்ளத்தின்கண், ஒருதலையா - நடுவுநிலைமெயற்ற வொருசார்பு, மின்மெபெறின் - இல்லாமெ யுற்றிருக்கின், செப்ப - கூறுவோரால், சொற்கோட்ட - சொற்குற்றம், மில்லது - நிகழாவென்பது பதம்.

(பொ.) உள்ளமானது நடுவு நிலைமெயுற்றிருக்கில் அவர்களது வாய்மொழியும் நடுவுநிலைமெ யுற்றிருக்கும் என்பது பொழிப்பு.

(க.) மனத்தின்கண் மாசகற்றியுள்ளவன் மொழியும் மாசற்ற நடுவுநிலைமெயுற்றிருக்கும் என்பது கருத்து.

(வி.) உட்குற்றமாம் மனமாசு கழுவியவன் செயலும் அவன் மொழியும் மாசகன்றிருக்கும் என்பது திண்ணமாதலின் உள்ளக் களங்கமற்றோன் ஒருதலையாய நியாயமற்று நடுவுநிலைமெயில் நிற்பான் என்பது விரிவு.

10. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தம்போற் செயின்.

(ப.) பிறவுந் - அன்னியரையும், தம்போற் - தங்களைப்போற், பேணிக் - கருதி, செயின் - செய்வதாயின், வாணிகஞ்செய்வார்க்கு - வியாபாரம் நடத்துவோருக்கு, வாணிகம் - செட்டுவிருத்தி பெறுமென்பது பதம்.

(பொ.) வணிகன் நடுவுநிலைமெயுள்ளவனாய் கொடுக்கவேண்டிய பொருளைச் சரிவரக் கொடுத்துவருவானாயின் வணிகமாம்செட்டு விருத்தி பெறும் என்பது பொழிப்பு.

(க.) வியாபாரியானவன் தான் வாங்கிய பணத்திற்குத் தக்கப் பொருளை குறைவுநிறைவின்றி சரியாக ஈய்ந்துவருவானாயின் அவனது வியாபாரம் நாளுக்குநாள் விருத்திபெறும் என்பது கருத்து.

(வி.) நாயன், தராசுகோலின் நடுவுநிலைமெயை விளக்கி அத்தராசுகோல் ஏந்தும் வணிகன், செட்டி, ரெட்டி என்னுந் தொழிற்பெயர்கொண்ட வியாபாரியும் விருத்திபெறல் வேண்டி ஒன்றைக்கொடுத்து மற்றொன்றை வாங்குவதில் குறைவுநிறைவாம் பேதமின்றி கொடுக்கல் வாங்கலை நடுவுநிலைமெயில் நடாத்துவானாயின் வாணிபமும் விருத்திபெற்று செட்டும் நிலைக்குமெனக் கூறிய விரிவு.

13. அடக்கமுடைமெய்

அதாவது திரிகரண சுத்தமாம் மனோவடக்கம், நாவடக்கம், தேகவடக்கமாம் மூன்றினையும் விளக்குமாறு நடுவுநிலைமெக்குப் பின் அடக்கமுடைமெயை விவரிக்கின்றார்.

1. அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமெ
யாரிரு ளுய்த்து விடும்.

(ப.) அடக்க - ஒடுக்கமானது, மமரரு - வானவர்களுடன், ளுய்க்கு - சேர்ப்பிக்கும், மடங்காமெ - ஒடுக்கமில்லாமெ, யாரிரு - பிறவிசாகரமாம் நிரையத்து, ளுய்த்துவிடும் - சேர்த்துவிடுமென்பது பதம்.

(பொ.) ஒடுக்க முடையவர்கள் உயர்ந்தோராம் வானவர்களைச் சேர்வார்கள். ஒடுக்கமில்லாதவர்கள் இருள் நிலையாம் பிறவிசாகரத்தில் உழன்று அவதி உறுவார்கள் என்பது பொழிப்பு.

(கூ.) மனவொடுக்கம், நாவொடுக்கம், தேகவொடுக்க முடையோர் உலகத்தில் சுகவாழ்க்கைப் பெறுவதுடன் முத்திநிலையாம் வானவரோடு அமைந்து நித்திய வாழ்க்கையைப் பெறுவார்கள். அத்தகைய ஒடுக்கமில்லாதோர் மாறாப்பிறவியிற் சுழன்று தீரா துக்கசாகரத்தில் ஆழ்வார்கள் என்பது கருத்து.

(வி.) அடக்கமென்பதில் நாவடக்கம், மனோவடக்கம், தேகவடக்கமாந் திரிகரணசுத்தத்தை வால வயதாம் பதினாறு வயதினின்று சாதிப்பானாயின் அதுவே மக்களின் மேலான சாதனமென்பதற்குச் சார்பாய் நாலடி நானூறு "இளையானடக்கங் கிளைபொரு, ளில்லான் கொடையே கொடைப்பய மடக்கனெல்லா, மொறுக்கு மதுகையுரனுடையாளன், பொறுக்கும் பொறையே பொறை" இவற்றிற்குப் பகரமாக அறநெறிச்சாரம் "தன்னைத்தன்னெஞ் சங்கரியாகத் தானடங்கின், பின்னைத்தா னெய்தானலனில்லை-தன்னைக் குடிகெடுக்குந் தீனெஞ்சிற் குற்றேவல் செய்தல், பிடிபடுக்கப்பட்டகளிறு" என்னும் ஆதாரங்கொண்டு அடக்கமே நித்திய சுகத்திற்குக் கொண்டுபோம் வழியென்றும் அடக்கமின்மெயே மாறா துக்கத்திற்குக் கொண்டுபோம் வழியுமாம் என்பது விரிவு.

2. காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினுவுங் கில்லை யுயிர்க்கு.

(ப.) வடக்கத்தை - அடக்கத்தையே மேலாயப் பொருளாகக்கருதி, காக்க - காத்தல்வேண்டும், மதனினூஉங் - அடக்கத்தினுமேலாய, யாக்க - செல்வம், யுயிர்க்கு - மக்களுக்கு, கில்லை - இல்லையென்பது பதம்.

(பொ.) மக்களுக்கு அடக்கத்தினும் மேலாய செல்வம் உலகத்தில் இல்லை என்பது பொழிப்பு.

(கூ.) தனச்செல்வம் தானியச் செல்வமாம் பொருளினும் அடக்கமுடைமெயாம் பொருளே மேலாம் என்பது கருத்து.

(வி.) ஒருவனுக்கு நாவொடுக்கம், மனோவொடுக்கம், தேகவொடுக்க மாகிய மூன்றும் இருக்குமாயின் சகல சுகமும் பொருந்திய வாழ்க்கை உடையவன் அவனேயாதலின் தனப்பொருள், தானியப்பொருள் யாவற்றிற்கும் அடக்கமுடைமெயாம் பொருளே மேலாயது என்பது விரிவு.

3. தெறிவறிந்து சீர்மெ பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்.

(ப.) மறிவறிந்தாற்றி - விவேகவிருத்தியாற்றணிந்து, னடக்கப் - ஒடுங்க, பெறின் - பெறுவானாயின், தெறிவறிந்து - நிலைபெற்ற, சீர்மெ - சுகத்தை, பயக்கு - அளிக்குமென்பது பதம்.

(பொ.) அறிவின் விருத்தியால் ஆற்றலுற்று அடங்கியவன் நிலையான சுகபயனை அடையலான் என்பது பொழிப்பு.

(கூ.) விவேக விருத்தியால் தணிந்தடங்கியவன் அழியா சுகப்பயனை அடைவானென்பது கருத்து.

(வி.) அறிவின் மிக்கோர் ஆற்றலடைந்து திரிகரண வொடுக்கம் பெறுவார்களாயின் வாக்காலும், மனதாலும், தேகத்தாலும் யாதொரு தீங்குகளும் எழாது என்றுமழியா சுகவாழ்க்கையைப் பெறுவார்கள் என்பது விரிவு.

4. நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற
மலையினு மாணப் பெரிது.

(ப.) நிலையிற்றிரியா - நடுவுநிலைபிறழாது, தடங்கியான் - ஒடுங்கியவன், றோற்ற - காட்சியானது, மலையினு - அசலத்தினும், மாண - மிக்க, பெரிது - மேலாக விளங்கும் என்பது பதம்.

(பொ.) நடுவுநிலைமெய்ப் பிறழாது ஒடிங்கினவன் மலையினும் பெரிதாக விளங்குவான் என்பது பொழிப்பு.

(க.) திரிகரண ஒடுக்கத்திலும் நடுவுநிலைமெ பிறழாது நிற்பவன் ஓர் மலைபோல் தோற்றுவான் என்பது கருத்து.

(வி.) அடக்க முடைய நடுவு நிலைமெயோன் தோற்றம் சகலருக்குங் குறிப்பிட வகல விளங்குகின்றபடியால் நடுவுநிலைமெயில் அடங்கிய பெருங்காட்சியை மலைக்கு ஒப்பிட்டுக் கூறிய மாணவிரிவாம்.

5. எல்லார்க்கு நன்றாம் பணிதல வருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந்த கைத்து.

(ப.) எல்லார்க்கு - சகலருக்கு மொடுங்கி, பணித - வணக்கமுறுதல், நன்றாம் நல்லதாம், லவருள்ளுஞ் - அத்தகையோருள், செல்வர்க்கே - செல்வமுள்ளார்க்கு, செல்வந் - செல்வமானது, தகைத்து - மேலுமேலுந் தழைக்குமென்பது பதம்.

(பொ.) எல்லோருக்கும் ஒடுங்கி வணக்கமுற வாழ்தலே நன்றாம். அவ்வகை அடக்கமுடையார்க்கு செல்வம் இருக்கின் அச்செல்வம் மென்மேலும் பெருகும் என்பது பொழிப்பு.

(க.) சகலரிடத்தும் அன்பு பொருந்த அடங்கி வாழ்தலே அழகாம். அவ்வகை வாழ்க்கைப் பெறுவோரது செல்வம் மேலும் மேலும் பெருகி சுகவாழ்க்கைப் பெறுவார்கள் என்பது கருத்து.

(வி.) எல்லோராலும் அடக்கமுடையான், வணக்கமுடையானென்னும் பெயரைப் பெருதலே அழகாம். அத்தகையோர்க்குக் கிஞ்சித்து செல்வமும் இருக்கின் அஃது மேலும் மேலும் பெருகுமென்பதற்குச்சார்பாய் அடக்கமுடையாரைத் துன்பமணுகா என்பதுடன் உயர்கதிக்கு மாளாக்குமென *நாலடியார்* "அறிவதறிந்தடங்கியஞ்சுவதஞ்சி, யுறுவதுலகுவப்பச் செய்து-பெறுவதனா, லின்புற்றுவாழு மியல்புடையா ரெஞ்ஞான்றுந், துன்புற்றுவாழ்தலரிது". *அறநெறிச்சாரம்* "இம்மெடக்கத்தைச்செய்து புகழாக்கி, உம்மெயுபரகதிக்குய்த்தலால்-மெய்ம்மெயே, பட்டாங் கறமுரைக்கும் பண்புடையாளரே, நட்டாரெனப்படுவார்" என்பதுகொண்டு அடக்கத்தை விளக்கிய விரிவு.

6. ஒருமெயு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமெயு மேமாப் புடைத்து.

(ப.) ஒருமெயு - வோர்தேகத்துள், ளாமைபோ - ஆமையைப்போல், லைந்தடக்கலாற்றி - ஐம்பொறியடக்கியமைந்தோன், னெழுமெயு - இனிதோற்று மெழுவகைப் பிறப்பினையும், மேமாப்புடைத்து - தோற்றாதகற்றிக் கொள்ளுவானென்பது பதம்.

(பொ.) ஆமையைப்போல் ஐம்பொறியையும் அடக்கி ஆற்றலுற்றவன் இனி தோற்றும் எழுவகைப்பிறப்பையும் வெல்லுவான் என்பது பொழிப்பு.

(க.) ஆமையானது ஓர் தலையையும் நான்கு கால்களையும் அடக்கி சுகம் பெறுவதுபோல் ஓர் புருடன் மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் வாய ஐந்தினையுங் கண்டடங்குவானாயின் எழுபிறப்பினுந் தோற்றுந் துன்பங்களற்று சுகநிலை பெறுவான் என்பது கருத்து.

(வி.) அன்னியரால் தனக்குத் தீங்கு நேரிடாவண்ணம் ஆமையானது ஐந்துறுப்பினையும் அடக்கிக்கொள்ளுவதுபோல் புருடன் எழுபிறவி களாலுண்டாந் துன்பங்களை அகற்றிக்கொள்ளற்கு ஐம்பொறி வாயல் கண்டடங்கலே யாதாரமென்பதற்குச் சார்பாய் *அறநெறிச்சாரம்*

"உணர்ச்சியச்சாக வுசாவண்டியாகப், புணர்ச்சிப் புலனைந்தும் பூட்டி-உணர்ந்ததனை, ஊர்கின்றபாக னுணர்வுடைய னாகுமேல், பேர்கின்றதாகும் பிறப்பு" என்பதுகொண்டு ஐம்புலன் அடக்கத்தால் எழுவகைப் பிறப்பின் துன்பங்களும் அகலும் என்பது விரிவு.

7. யாகாவா ராயினு நாகாக்க காவாக்கான்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

(ப.) யாகாவாராயினு - எவராயிருப்பினும், நாகாக்கக் - நாவை யடக்கிக் காக்கல் வேண்டும், காவாக்கால் - அடக்கிக் காக்காவிடின், சோகாப்பர் - மயக்கத் துன்புறுவதுடன், சொல்லிழுக்கப்பட்டு - பலராலு மிழிவடையப் படுவார்க ளென்பது பதம்.

(பொ.) யாவாராயினுந் தனது நாவைக்காக்கல்வேண்டும். காக்காது போவாராயின் பற்பல துன்பங்களை அடைவதுடன் பல்லோராலும் இகழப்படுவார்கள் என்பது பொழிப்பு.

(கூ) எத்தகைத்தோ ராயினுந் தனது நாவிலிருந்து கோட்சொல், கொடுஞ்சொல், புறச்சொல் முதலிய வழுச்சொல் எழாது காக்கல் வேண்டும். அவ்வகைக் காக்காவிடின் பலவகைத் துன்பங்களை அடைவதுடன் சகலராலும் இழிச்சொற் பெறுவார்கள் என்பது கருத்து.

(வி.) கனவானாயினும், ஏழையாயினும், சுற்றோனாயினும், கல்லானாயினும், அடங்கிப் பேசவேண்டியதே அழகாம். அங்ஙனமடங்காது வித்தியா கர்வத்தாலும், தனகர்வத்தாலும் தனது நாவைக் காவாது கொடுஞ்சொல்லாலும் கோட் சொல்லாலுங் குறளைச் சொல்லாலும் மற்றோரைப் புண்படக் கூறியும் இழிபடக்கூறியுங் குடிகெடக்கூறியுங் கலம்பெறக் கூறியும்வருவார்களாயின் துன்பத்திற்கு ஆளாவதுடன் எக்காலும் இழிவடைப்படுவார்கள் என்பதற்குச் சார்பாய் இளையோராயினும் தேகவடக்கம், மனோவடக்கம், நாவடக்கம், பெறவேண்டுமென்பதை *நாலடியார்* "ஆர்த்தவறிவின ராண்டிளையராயினுங், காத்தோம்பிதம்மெ யடக்குப-மூத்தொறுஉந், தீத்தொழிலே கன்றித் திரிதந்தெரிவைபோற், போத்தறார் புல்லறிவினார்" என்பது கொண்டு மூத்தோராகி நாவடக்கம் பெறாதுகெடினும், இளைஞராயினும் அடக்கமுற்று வாழ்தலே இனிது என்பது விரிவு.

8. ஒன்றானுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயி
னன்றாகா தாகி விடும்.

(ப.) பொருட்பய னுண்டாயி - பயனுண்டாம் பொருளைக் கருதி பேசுங்கால், ஒன்றானுந் - ஒருமொழியாயினும், தீச்சொற் - கொடுமொழியா யிருக்குமாயின், நன்றாகாதாகிவிடும் - பயனடைவதற் கேதுவில்லாமற் போமென்பது பதம்.

(பொ.) ஒரு பொருளின் பயனைக் கருதி பேசுவோன் கொடுமொழி ஒன்றைக் கலந்து பேசுவானாயின் அம்மொழியால் நாடிய பொருள் கிட்டாதென்பது பொழிப்பு.

(கூ.) பயனுண்டாம் எப்பொருளை நாடிப்பேசினும் இனியமொழியால் பேசுதலே பயன்தரும். அங்ஙனமிராது ஓர் பயனைக் கருதியுங் கொடுமொழி எழுமாயின் கூடிய பயன் கெடுமென்பது கருத்து.

(வி.) தனக்கு வேண்டும் ஓர் பொருட் பயனைக் கருதிப் பேசுகிறவன் அடக்கமுறப் பேசுதலே அழகாம். அங்ஙனம் பேசாது ஓர் கொடுமொழி கலந்துவிடுவானாயின் "துரும்புங் கலத்தண்ணீரைத் தேக்கு" மென்னும் பழமொழிக்கிணங்க பலநற்பயனுங் கெடுமென்பது விரிவு.

9. தீயினால் சுட்டப் புணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு.

(ப.) தீயினால் - நெருப்பினால், சுட்டப் - வெதுப்பிய, புணுள்ளாறு - புண்ணானது தானே யாறிப்போகும், நாவினாற் - தனது வாயினால், சுட்ட - புண்படக்கூறியக் கொடுமொழியின், வடு - வருத்தமானது, மாறாதே - என்றும் ஆறாவென்பது பதம்.

(பொ.) ஒருவனை நெருப்பினாற் சுட்டப் புண்ணானது ஆறிப்போம். நாவினாற் புண்படக்கூறிய கொடுமொழியானது என்றும் ஆறாதென்பது பொழிப்பு.

(க.) நெருப்பினாற் சுடப்பட்ட வருத்தமானது தன்னில் தானே அகன்றுபோம். நாவினாற் புண்படக்கூறிய கொடுமொழியின் வருத்தமானது என்றும் அகலாதென்பது கருத்து.

(வி.) மெல்லிய தேகத்தில் நெருப்பினாற் சுடப்பட்ட நோயானது கூடிய சீக்கிரந் தன்னில் தானே அடங்கிப்போம். ஒருவன் தன் நாவினால் எதிரியின் மனம் புண்படச் கூறுமொழியின் நோயானது குணக்குன்றில் ஏறாதோரை எக்காலும் வாதிக்கும். ஆதலின் குணக்குன்று ஏறிய விவேகிகளை மற்றோர் புண்படக் கூறினும் அவற்றை அப்போதே மறந்து புண்படக் கூறலாகாதென்பதற்குச் சார்பாய் *அறநெறிச்சாரம்* "தன்னையொருவ னிகழ்ந்துரைப்பிற் றானவனைப், பின்னையுரையாப் பெருமையான் - மூன்னை, வினைப்பயனுமாயிற்றா மென்றதன்கண் மெய்ம்மை, நினைத்தொழிய நெஞ்சினோயில்" என்னு மாதாரங்கொண்டு எவ்விதத்தேனும் ஒருவர் மனம் புண்படக் கொடுமொழிகளைக் கூறலாகாதென்பது விரிவு.

10. கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து.

(ப.) கதங்காத்துக் - தனது கோபாக்கினியை யடக்கி, கற்றடங்க - கற்றவழியில் நிற்போன், செவ்வி - செவ்விய, லாற்றுவான் - ஆறுதலடைவான், (அதுவே) யறம்பார்க்கு - தன்மநெறியின்கண்ணின்று, மாற்றி - ஆறுதலில், நுழைந்த - அமர்ந்தோனது நிலையை யொக்கு மென்பது பதம்.

(பொ.) கோபத்தை அடக்கிக் கற்றவழியில் நிற்போன் அறநெறியில் நின்றோன் ஆற்றலை அடைவானென்பது பொழிப்பு.

(க.) தனக்குள் எழுஉங் கோபாக்கினியை அவித்து கற்றநிலையில் அடங்குவோன் அறவாழியந்தணன் நுழைந்த ஆறுத நிலையில் அமர்வானென்பது கருத்து.

(வி.) அடக்கத்துள் தனக்குள் எழுங் கோபத்தை முதலாவது அடக்கி தான் கற்ற நீதிநெறி ஒழுக்கத்தில் நிலைப்பவன் அறக்கடவுளால் ஆதிபகவன் அமர்ந்த விடம் புக்குவானென்பது விரிவு.

14. ஒழுக்கமுடைமெய்

அதாவது ஒழுக்கமுடைமெய் என்பது மக்களது மனோ வாக்குக் காய மென்னும் முன்றினையும் அடக்கியாளுஞ் செயலுக்குரிய பொருளேயாம். அதுகொண்டே *காரிகையார்* "ஆர்கலியுலகத்து மக்கட்கெல்லாமோதலிநன்றே யொழுக்கமுடைமெ" என வற்புறுத்திக் கற்பதினும் திரிகரண ஒடுக்கமே மேலெனக் கூறியுள்ளார்.

1. ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்.

(ப.) ஒழுக்கம் - ஒடுக்கச்செயலானது, விழுப்பந் - மேலாய சிறப்பை, தரலா - கொடுத்தலால், னொழுக்க - அவ்வொழுக்கம், முயிரினு - உயிருக்கு மேலாக, மோம்பப்படும் -கருதப்படுமென்பது பதம்.

(பொ.) திரிகரண ஒடுக்கச் செயலானது மேலாய சிறப்பைத் தரலால் அவற்றை உயிரினு மேலாகக் கருதி காக்கவேண்டுமென்பது பொழிப்பு.

(க.) மனோ வாக்கு காய மூன்றும் ஒடுக்கச் செய்யும் செயலே சகலவற்றினுஞ் சிறந்ததாதலின் அவற்றைத் தங்கள் உயிரினும் மேலாக ஓம்பிக் காத்தல் வேண்டுமென்பது கருத்து.

(வி.) படைக்கஞ்சி தனது உயிர் போம் என்று ஒடுங்குதலினும் வியாதியினாற்றனதுயிர் போமென்று ஒடுங்குதலினும், அக்கினியினால் தனதுயிர் போமென்று ஒடுங்குதலினும், நீரினால் தனதுயிர் போமென்று ஒடுங்குதலினும், மனத்தினால் எழுஉங் கெட்ட எண்ணங்கள் எழாமல் ஒடுங்கியும், நாவினால்

எழுஉங் கொடிய வார்த்தைகள் எழாமல் ஒடுங்கியும், தேகத்தால் செய்யுங் கொடியச் செயல்களைச் செய்யாமல் ஒடுங்கியும் வாழ்தலே மக்களது சிறந்த வாழ்க்கையாதலின் ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக் காத்தல் வேண்டுமென்பதற்குச் சார்பாய் அறநெறிச்சாரம் "மக்களுடம்பு பெறற்கரிது பெற்றபின், மக்களறிவு மறிதரிது - மக்கள், அறிவதறிந்தாரறத்தின் வழுவார், நெறித்தலை நின்றொழுகுவார்" என்னும் ஆதாரங்கொண்டு உயிரினுந் திரிகரண ஒடுக்கநெறியே மேலாயதென்பது விரிவு.

2. *பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்*
தேரினு மஃதே துணை.

(ப.) பரிந்தோம்பிக் காக்க - ஒன்றைக் கருதிக்காக்கலினும், வொழுக்கந் - ஒடுங்க வேண்டியவை யிவையென, தெரிந்தோம்பித் - கண்டுகருதி, தேரினு - முன்னேறுவதாயின், அஃதே துணை - அதுவே இவனுக்குத் துணையாமென்பது பதம்.

(பொ.) ஒன்றைப் பரிந்துசெய்வதினும் இதுவே சரியாய நெறியென்று அறிந்து தேறுதலே அவனுக்குத் துணையாகும் என்பது பொழிப்பு.

(க.) ஒருவன் அவாக்கொண்டு செய்யும் செயலில் நீதிநெறியொழுக்கச் செயலைத் தெரிந்து செய்வானேயாயின் அச்செயலே அவனுக்குத் துணையாமென்பது கருத்து.

(வி.) நீதிநெறிவாய்மெயாம் ஒழுக்கமே சகலவற்றினுஞ் சிறந்ததென்று உணர்ந்து அவ்வழி ஒழுகுபவன் எவனோ அவனை அவ்வொழுக்கமே காக்குமென்பது அனுபவக் காட்சியாதலின் ஒருவனுக்குத் துணையாக நின்று காத்தலே இவனது ஒழுக்க மென்பதற்குச் சார்பாய் நாலடி நானூறு "வேற்றுமெயின்றி கலந்திருவர் நட்டக்காற், றேற்றா வொழுக்க மொருவன் கணுண்டாயி, னாற்றுந் துணையும் பொறுக்கப் பொறானாயிற், றூற்றாதே தூரவிடல்" என்பது கொண்டு மக்களுக்கு ஒடுக்கமே உற்ற துணையாம் என்பது விரிவு.

3. *ஒழுக்க முடைமெ குடிமெ யிழுக்க*
மிழிந்த பிறப்பாய் விடும்.

(ப.) ஒழுக்கமுடைமெ - நல்லொழுக்கத்தையுடையானென்பான், குடிமெ - குடும்பத்தோரால், யிழுக்க - இழிவடையப்படுவானாயின், மிழிந்த - தாழ்ந்த, பிறப்பாய் விடும் - பிறவியிற் றோன்றுவா னென்பது பதம்.

(பொ.) நல்லொழுக்கச் செயலை நாடுவோன் தனது குடும்பத்தில் ஒடுக்கமிராது இழுக்கடைவானாயின் தாழ்ந்தபிறப்பை அடைவானென்பது பொழிப்பு.

(க.) குடும்பத்தில் நல்லொழுக்கமில்லாதவன் பிறரிடத்தும் ஒழுக்கமற்று விலங்கும் பேயும் நரகருமாகத் தோற்றுவானென்பது கருத்து.

(வி.) தனது இல்லத்தில் தீயொழுக்கச் சாதனமுள்ளவன் பிறரிடத்தும் தீயொழுக்கமாங் கொலை, களவு, காமம், வெஃகல், வெகுளல், பொல்லாகாட்சி, பொய், குறளை, கடுஞ்சொல், பயினிற் சொல் ஆகியவற்றைப் பெருக்கி மிருக தோற்றங்களாம் பலவகைத் தாழ்ந்த பிறவிக்கேகுவானென்பது விரிவு.

4. *மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்*
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

(ப.) மறப்பினு - தன்னை மறந்திருப்பானாயினும், மோத்துக்கொளலாகும் - சம்மதித்துக்கொள்ளலாம், பார்ப்பான் - தன்னைத்தானாராயக் கூடிய, பிறப்பொழுக்கங் - மானிடனெனப் பிறந்துள்ளோனது வொழுக்கம், குன்றக்கெடும் - குறையக் கெடுவானென்பது பதம்.

(பொ.) தன்னை அறிந்து ஆராயாதவன் ஆயினுங் குற்றமில்லை, தன்னை அறிந்தாராய்வோன் எனத் தோன்றிய மானிடன் நல்லொழுக்க நெறியினில்லானேல் கெடுவானென்பது பதம்.

(க.) மக்கட் பிறப்பிற் தோன்றியும் தன்னைத்தான் அறியாதவனாயினுங் குற்றமில்லை. மக்கட்பிறப்பாம் மானிடனெனப் பிறந்து தன்னை ஆராய முயன்றும் நல்லொழுக்க நெறியில் தவறுவானாயின் கெடுவானென்பது கருத்து.

(வி.) ஒருவன் தனது நற்செயல்கள் ஈதீதென்றும் துற்செயல்களீதீதென்றுந் தன்னைமறந்திருப்பினுங் குற்றமில்லை. மானிடனென்னும் மேலாயப் பிறப்பில் தோன்றி அப்பிறப்பின் சிறப்பால் இஃது நல்வினை அஃது தீவினையென் உணர்ந்தும் நல்லொழுக்க நெறியில் குன்றுவானாயின் எண்ணறிய பிறவிதனில் மானிடப் பிறவியே மேலாயதென்னும் சிறப்புக்குன்றி விவேகமிகுத்தோரால் விலங்கோ, பேயோ, நரனோ என்று இகழப்படுவான் என்பதற்குச் சார்பாய் அறநெறிச்சாரம், "எப்பிறப்பாயினு மேமாப்பொருவற்கு, மக்கட் பிறப்பில் பிறிதில்லை - அப்பிறப்பில், கற்றலுங் கற்றவை கேட்டலுங் கேட்டதன்கண், நிற்றலுங்கூடப்பெறின்." தொல்காப்பியம், "உயர்திணை யென்மனார்மக்கட் சுட்டே யஃறிணை யென்மனா வரலபிறவேயாயிருதிணையி னிசைக்குமென சொல்லே" என்பது கொண்டு மானிடனெனப் பிறந்தும், தன்னைத்தான் அறிய முயன்றும், ஒழுக்கங்குன்றுமாயின் கெடுவானென்பது விரிவு.

5. அழுக்கா றுடையான்க ணாக்கம் போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு.

(ப.) அழுக்காறுடையான்க - அறுவகை மனமா சுள்ளவ னிடத்துள்ள, ணாக்கம் போன்றில்லை - செல்வமில்லாததுபோல், யொழுக்கமிலான்க - நல்லொழுக்கமில்லாதவனது, ணுயர்வு - சிறப்பெனப்படுவது பதம்.

(பொ.) மனமாசுள்ளவனிடத்து உள்ள செல்வம் பயன்படாததுபோல் உயர்ந்தோன் எனினும் ஒழுக்கமில்லாவிடின் சிறப்பில்லையென்பது பொழிப்பு.

(க.) களங்கமுள்ளோனிடம் செல்வமிகுந்தும் பயன் தராததுபோல் ஒழுக்கமில்லானிடத்து யாதொரு மேம்பாடிருப்பினும் சிறப்பைத் தாராவென்பது கருத்து.

(வி.) பேராசை, வஞ்சினங், குடிகெடுப்பு, சூது, உலோபம், பொறாமையாம் மனக்களிம்புகள் ஆறும் நிறைந்தோனிடம் தனமிருப்பினும் இல்லாததுபோல் எத்தகைவுயர்ந்த அந்தஸ்த்தைப் பெற்றவனாயினும் நல்லொழுக்கமில்லாவிடின் சிறப்படையானென்பது விரிவு. குறுத்திரட்டு "வஞ்சினை பொறாமெ லோபம் வழு குடி கெடுப்பு சூது, துஞ்சும் பேராசை யீதே துறவியர்க் கழுக்காறாகும், எஞ்சிய சாந்தம் யீகை யிதக்க விம் மமுதமூன்றுந், தஞ்சுக மடைவோர்க்கென்று சாற்றினர் மேலோரென்பான்."

6. ஒழுக்கத்தி னொல்கா ருரவோ ரிழுக்கத்தி
னேதம் படுப்பாக் கறிந்து

(ப.) ருரவோர் - உரவின் முறையார், ரிழுக்கத்தி - இடுக்கத்தின், னேதம் - வழுவால், படுபாக்கறிந்து - உறுந்துன்பங்களையுணர்ந்தோர், ஒழுக்கத்தி - நல்லொடுக்கத்தினின்று, னொல்கா - வழுவாரென்பது பதம்.

(பொ.) உறவின் முறையோரது வழுவால் இழுக்குறுவதை உணர்ந்தோர் தங்களது நல்லொழுக்கத்தினின்று பிறழார் என்பது பொழிப்பு.

(க.) தங்கள் தங்கள் வரன்முறையோர் துற்செயலால் படுந்துன்பங்களைக் கண்ணாறக் காணுவோர் தங்களுக்குள்ள நல்லொழுக்கமாம் நற்செயலினின்று என்றும் நீங்காரென்பது கருத்து.

(வி.) தங்கள் உறவினர்களும் அடுத்த நேயர்களும் தங்கள் தங்களிழுக்கால் படுந்துன்பங்களைக் கண்டுணர்வோர் அத்தகைய இழுக்காம் அழுக்காறுக்கு அஞ்சி சாந்தம் யீகை அன்பென்னு மூவொழுக்கத்தினின்றும் அகலாரென்பது விரிவு.

7. ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னெய்துவ ரெய்தாப் பழி.

(ப.) ஒழுக்கத்தி - நல்லொழுக்கத்தால், மேன்மை - சிறப்பை, னெய்துவர் - பெறுவார்கள், யிழுக்கத்தி - துற்செயலால், யெய்துவ - பெறுவது, ரெய்தாப் - செய்யொணா, பழி - நிந்தையென்பது பதம்.

(பொ.) நல்லொழுக்கச் செயலால் சிறப்பைப் பெறுவர், தீயொழுக்கச் செயலால் நிந்தையைப் பெறுவா ரென்பது பொழிப்பு.

(க.) ஒருவன் தான் செய்யும் நற்கருமங்களினால் எல்லோராலும் புகழப்படுவான். மற்றொருவன் தான் செய்யுந் துற்கருமங்களினால் எல்லோராலும் இகழப்படுவானென்பது கருத்து.

(வி.) உலகத்தில் தோன்றியுள்ள மக்கள் தாங்கள் தாங்கள் செய்துவரும் நல்லொழுக்கச் செயல்களினால் சருவசீவர்களாலும் மேன்மக்களெனக் கொண்டாடத்தக்கப் புகழைப் பெறுவர். மற்றுமுள்ளோர் மக்களென்னும் மனுகுலத்தில் தோன்றியும் கருணையற்ற தீயொழுக்கமாங் கொறூறச் செயல்களினால் சருவசீவர்களாலுங் கீழ்மக்களெனத் தூற்றுவதன்றி பழிப்புக்கு ஆளாகுவரென்பது விரிவு.

8. நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கத்தீ யொழுக்க
மென்று மிடும்பை தரும்.

(ப.) நன்றிக்கு - செய்நன்றிக்கு, வித்தாகு - விதையாவது, நல்லொழுக்கந் - நன்றியை மறவாதிருத்தலேயாம், தீயொழுக்க - அன்னன்றியை மறப்பது, மென்று - எக்காலத்தும், மிடும்பைதரும் - துன்பத்தைக் கொடுக்குமென்பது பதம்.

(பொ.) ஒருவர் செய்த நன்றியை மறவாதிருத்தலே நல்லொழுக்க வித்தென்னப்படும். அதனை மறத்தலே துன்பத்தை வளர்க்கும் வித்தென்பது பொழிப்பு.

(க.) ஒருவர் செய்த உபசாரத்தை என்றும் மறவாதிருத்தலே நல்லொழுக்க விதையென்னப்படும். அவ்உபகாரத்தை மறக்குஞ் செயலே சகல துன்பங்களையும் விளைவிக்கும் வித்தென்பது கருத்து.

(வி.) உலகத்தில் தோன்றியுள்ள மக்களுள் ஒருவர் செய்த வுபகாரத்தை என்றும் மறவாது அவர்களுக்குப் பிரதிவுபகாரஞ் செய்யாவிடினும் நல்லவனாக நடந்துக்கொள்ளலே மற்றவர்கள் உதவிக்கு முறித்தாய் நல்லொழுக்க விதையினது பலனைத்தரும். அங்ஙனஞ்செய்த உபகாரத்தை மறந்து அவர்களுக்கே தீங்கை விளைவிப்பதாயின் அத்தீங்கின் விதையே தீவினையாக வளர்ந்து மற்றோர் உபகாரத்தையுமிழந்து அல்லலுற்று அலைவிப்பதுடன் ஆற்றொணா துன்பத்திற்கு ஆளாக்கும் என்பது விரிவு.

9. ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயற் சொலல்.

(ப.) ஒழுக்கமுடையவர்க் - நல்லொழுக்க நெறியினிற்பவர்கள், வழுக்கியும் - தன்னைமறந்தும், தீய - கொடிய மொழிகளை, வாயாற்சொல்ல - நாவினால் மொழிதற்கு, கொல்லாவே - முடியாவா மென்பது பதம்.

(பொ.) நல்லொழுக்க நெறியில் நிற்போர் தங்களை மறந்தும் நாவினால் கொடுமொழிகளைக் கூறாரென்பது பொழிப்பு.

(க.) அப்பிரயோசன வார்த்தைகளைப் பேசாது அடங்கலே ஒழுக்கமுடையோர் உள்ளுணர்வாதலின் இழுக்குடைய வார்த்தைகளை என்றும் மொழியாரென்பது கருத்து.

(வி.) தேகவடக்கம், மனோவடக்கம், வாக்கடக்கமுள்ள நல்லொழுக்க நெறியில் நிற்போர் தங்களை மறந்தும் ஒருவரைக் கொடுமொழிக் கூறி புண்படச் செய்யார்களென்பது விரிவு.

10. உலகத்தோ டொப்ப வொழுகல் பலகற்றும்
கல்லா ரறிவிலா தார்.

(ப.) உலகத்தோடொப்ப - உலகமக்களுடன் கூடி, வொழுகல் - நல்லொழுக்கங்களை, பலகற்றும் - பலவகையாகக் கற்றும், கல்லார் - அவற்றை யுணராதவர்கள், ரறிவிலாதார் - விவேகமில்லார்களென்பது பதம்.

(பொ.) நல்லொழுக்க நெறியில் நின்றொழுகும் மக்களுடன் கூடியுலகத்தில் வாழினும் அவர்களது நன்னெறியைக் கல்லாத மக்கள் கற்றுங் கல்லாத அவிவேகிகளென்னப் படுவார்களென்பது பொழிப்பு.

(க.) உலகத்தில் நன்மார்க்க நெறியுள்ளோருடன் கூடி வாழ்ந்தும் தங்கள் தங்கள் துன்மார்க்கச் செயல்களை விடாது ஒழுகுவராயின் கற்றுங்கல்லாதவர் களும், தெரிந்தும் தெரியாதவர்களாகும் அறிவிலிகள் என்னப்படுவார்களென்பது கருத்து.

(வி.) உலகமென்பது உயர்ந்தோர்மாட்டேயென்பது விதியாதலின் அவ்வுயர்ந்தோராம் நல்லொழுக்க நெறியில் நிற்கும் விவேகிகளுடன்கூடியும் அவர்களது நன்னெறிகளைக்கற்றும் அவ்வழியில் நடவாது தங்கள் துற்செயலிலேயே நிற்பார்களாயின் பல நன்னெறிகளைக் கற்றும் உலகத்தோடு ஒக்க ஒழுகா அவிவேகிகளென்று எண்ணப்படுவார்களென்பது விரிவு.

15. பிறனில் விழையாமெய்

ஒழுக்கமென்பது ஈதீதென்று உணராதோர்க்கு அதன் அந்தரார்த்தத்தை விளக்குமாறு ஒழுக்கத்தின் பின்னர் அன்னியர் தாரத்தை இச்சிக்குங் கேடுகளையும் அதன் இழிவையும் விளக்குகின்றார்.

1. பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதமெ ஞாலத்
தறம்பொருள் கண்டார்க ளில்.

(ப.) பிறன் - அன்னியன், பொருளாட் - ஆளு மனையாளை, பெட்டொழுகும் - பெற்றணையும், பேதைமெ - அறிவிலிச்செயல், ஞாலத் - பூமியின்கண், தறம் - நல்லறச் செயலையும், பொருள் - மெய்ப்பொருளுணர்ச்சி யையும், கண்டார்க - அறிந்தவர்களிடத்து, ளில் - இல்லையென்பது பதம்.

(பொ.) அன்னியனுடைய மனையாளை இச்சித்து அணையுஞ் செயல் மெயயுணர்ச்சி மிகுந்த அறிவாளிகளிடத்து இராவென்பது பொழிப்பு.

(க.) தனது காமாக்கினியை தணித்தாள இயலாது அன்னியன் மனைவியை ஆளுஞ் செயல் விவேகமிகுத்த மெய்யுணர்வுள்ளோர்பால் இராவென்பது கருத்து.

(வி.) மனிதன் மிருகத்திற் கொப்பாயத் தனது அறிவிலிச் செயலால் தனது காமயிச்சை அடக்க இயலாது அன்னியனது தாரத்தை இச்சித்து அவனது குடியைப் பாழ்படுத்துஞ் செயல் விவேகமிகுதியால் தன்னையும் உணர்ந்து மெய்ப்பொரு ளுணர்வோரிடத்து இரா வென்பதற்குச் சார்பாய் *அறநெறிச்சாரம்* "அறனுமறனறிந்த செய்கையுஞ் சான்றோர், திறனுடைய னென்றுரைக்குந்தேசும்- பிறனில், பிழைத்தானெனப் பிறரால் பேசப்படுமேல், இழுக்கா மொருங் கேயிவை" தன்னைத்தானுணர்ந்து மெய்யுணர்வுகொண்டோர் தங்களை மறந்தும் அன்னியன் மனையாளை இச்சியார்கள். தன்னைத்தா னறிவோ னென்னும் ஞானியென வேஷமிட்டும் அன்னியர் மனையாளை இச்சிப்பனேல் சகலராலும் இகழப்படுவானென்பது விரிவு.

2. அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில்.

(ப.) அறன்கடை - தன்மத்தின் முடிவையறிந்தோமென்று, நின்றாரு ளெல்லாம் - நிலைத்தோரெல்லவரும், பிறன்கடை - அன்னியன் மனையாள் வாயலில், நின்றாரிற் - சென்று நிலைப்பாராயின், பேதை - அவரினுமறிவில்லார், யாரில் - யாவருள்ளாரென்பது பதம்.

(பொ.) தன்மத்தின் முடிவுநிலையை அறிந்தோமென்போர் யாவரும் பிறன் மனையாளின் கடைவாயலிற் சென்று நிலைப்பாராயின் அவரினும் அறிவிலிகள் வேறுளரோ என்பது பொழிப்பு.

(க.) அறநெறியின் முடிவை ஆழ்ந்தறிந்தோமென்போர் பிறர்மனையாள் கடைவாயற் கார்ப்பாராயின் அவரினும் அவிவேகிகள் உலகத்தில் வேறில்லை என்பது கருத்து.

(வி.) தன்மத்தின் கடைவாயலாம் நன்மெய்கடைபிடித்து ஒழுகுகின்றோ மென்போர் அன்னியன் மனையாள் கடைவாயலிற் சென்று பயந்து நிற்பாராயின்

அவரினும் இழிவுள்ளோர் வேறுளரோ என்பதற்குச் சார்பாய் நாலடிநானூறு "புக்கவிடத்தச்சம் போதரும் போதச்சந், துய்க்குமிடத்தச்சந் தோன்றாமற் காப்பச்ச, மெக்காலுமெச்சந் தருமா லெவன்கொலோ, வுட்கான் பிறனில் புகல்" நன்மெய்க் கடைபிடிப்போராம் அறன்கடையாளர் இவ்வச்சங்களுக்கு ஆளாகார் என்பது விரிவு.

3. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற்
றீமெபுரிந் தொழுகுவார்.

(ப.) விளிந்தாரின் - கண்டுதெளிந்தோரினும், வேறல்லர் - மற்றுஞ்சிறந்தோரில்லை, மன்ற - மற்றும், தெளிந்தாரிற் - கண்டுதெளியாதோர், றீமெ - கொடுங்காமச் செயலையே, புரிந்தொழுகுவார் - செய்துழலுவா ரென்பது பதம்.

(பொ.) நன்கு தீதெனக் கண்டு விளிந்தோரின் சிறந்தோர் வேறில்லை. அங்ஙனங் கண்டு தெளியாதவர்கள் அன்னியர் தாரத்தை இச்சிக்குங் கொடுமெயில் உழல்வார்களென்பது பொழிப்பு.

(க.) இஃது நற்செயல் அது தீச்செயலெனக் கண்டு அடங்கினோர்களினும் சிறந்தோர் வேறில்லையாக்கும். மற்றுமத்தீச் செயல் நற்செயலைக்கண்டு தெளியாதோர் காமவெறியால் அன்னியர் தாரத்தை இச்சிக்குந் தீமெயில் ஒழுகுவார் என்பது கருத்து.

(வி.) மக்களுக்குண்டாய நற்செயல் ஈதீது என்றும் துற்செயல்கள் ஈதீது என்றுங் கண்டு விளித்தோர் சகலருக்கும் நல்லவர்களாக விளங்குதலும் நன்மெய்க் கடைபிடித்தலுமாகியச் செயலால் அவரினுஞ் சிறந்தோர் வேறில்லையென்றும், இது தீயச்செயல் அது நற்செயலென்று கண்டுதெரியாதுங் கேட்டுணராதும் காமப்பெருக்கால் தங்கள் மனம்போனவாறு அன்னியர் தாரத்தை இச்சித்தும் அவரது குடியைக் கெடுப்பித்தும் கொடுமெயாம் தீமெபுரிந்து உழலுவார்களென்பது விரிவு.

4. எனைத்துணைய ராயினு மென்னாத் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல்.

(ப.) எனைத்துணையராயினு - எத்தகைத்தான உதவியிருப்பினும், மென்னாந் - என்னவாகும், தினைத்துணையுந் - ஓர் தினையரிசிக் கொப்பாய வுதவியுந், தேரான் - பெறான், பிறனில் புகல் - அன்னியன் மனையாளை நாடி அவளிட மணுகலென்பது பதம்.

(பொ.) ஒருவனுக்கு எவ்வகையான உதவிகளிருந்த போதினும் அவ்வுதவிகள் அன்னியன் மனையாளை நாடுவோனுக்கு அணுவளவும் உதவா என்பது பொழிப்பு.

(க.) அன்னியன் மனையாளை யிச்சித்து அவளிட ம் அணுகுவோனுக்கு எவ்வகையானப் பேருதவிகள் இருப்பினும் அவைகள் யாவும் இவனுக்கு உதவாமற்போமென்பது கருத்து.

(வி. அன்னியன் தாரத்தை இச்சித்து உழலுவோனுக்கு அறமும், புகழும், சினேகமும், கீர்த்தியும் அகன்று பகையும், பழியும், பாவமும், அச்சமும் வந்தடைகின்றபடியால் ஒருவனுக்கு மக்களுதவியும் தனவுதவியும் தானியவுதவியும் நிறம்ப இருக்கினும் அன்னியன் மனையாளை ஆளுவோனுக்கு அஃதில் ஓர் தினையரிசி அளவேனும் உதவா என்பதற்குச் சார்பாய் நாலடிநானூறு "அறம் புகழ் கேண்மெ பெருமெயின்னான்கும், பிறன்றார நச்சுவார் சேரா-பிறன்றார, நச்சுவார்ச் சேரும் பகைபழிபாவமென், றச்சத்தோ டின்னாற் பொருள்" என்னும் ஆதாரங்கொண்டு எத்தகையத் துணையிருப்பினும் அத்தகைய துணைகள் யாவும் அன்னியன் தாரத்தை இச்சிப்பவனுக்கு தினையளவும் உதவாவென்பது விரிவு.

5. எளிதென வில்லிறபபா னெய்து மெஞ்ஞான்றும்
விளியாது நிற்கும் பழி

(ப.) எளிதென - அற்பமாகக் கருதி, வில்லிறப்பா - அன்னியன் மனையாளை யாளுவோனுக்கு, னெய்துமெஞ்ஞான்றும் - எக்காலும்பெறக்கூடிய, பழி - நிந்தையானது, விளியாது - வெளியிற் செல்லாவிடினும், நிற்கும் - அவரவர்கள் மனதிற்றங்கியிருக்குமென்பது பதம்.

(பொ.) அன்னியன் மனையாளை சேருதல் அற்பமென்று எண்ணு வோனுக்கு உண்டாம் நிந்தையானது அவ்வவர் உள்ளத்தில் எஞ்ஞான்றுந் தங்கியிருக்கும் என்பது பொழிப்பு.

(க.) அன்னியன் தாரத்தை இச்சிப்பதையும் அவள்மனை சேறுவதையும் எளிதென்று எண்ணி சேருவோனுக்கு உலகமக்கள் பழியானது வெளிவிடாவிடினும் அவரவர் உள்ளத்தே ததும்பி நிற்கும் என்பது கருத்து.

(வி.) பல்லோரறிய பறையறைந்து வரவழைத்த சாட்டிகள் முன்னிலையில் சேர்ப்பித்த ஒருவன் மனையாளைக் கெடுப்பது அவன் குடும்பத்தையே கெடுத்ததற்கு ஒப்பாதலின் அக்கொடுஞ்செயலை நாவிட்டு விளியாவிடினும் சேர்ந்துள்ள மக்கள் உள்ளத்தில் எக்காலும் பழி ஊன்றி நிற்குமென்பதற்குச் சார்பாய் *நாலடிநானூறு* "பல்லாரறியப் பறையறைந்து நாட்கேட்டுக், கல்யாணஞ்செய்துக் கடிப்புக்க-மெல்லியற், காதன்மனையாளு மில்லாளா வின்னொருவ, னேதின் மனையாளைநோக்கு" என்பது கொண்டு உலகோருக் குள்ளப் பழியை யறிந்தேனும் அன்னியன் மனையாள் நோக்கை அகற்றவேண்டு மென்பது விரிவு.

6. பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்.

(ப.) பகை - விரோதம், பாவ - கொடுஞ்செயல், மச்சம் - பயம், பழி - நிந்தை, யெனநான்கு - என்று சொல்லப்பட்ட நான்கும், மிகவாவா - நாளுக்குநாள் அதிகரிக்குமாம், மில்லிறப்பான்கண் - அன்னியன் மனையாளை யிச்சித்துழலுவோனுக்கென்பது பதம்.

(பொ.) அன்னியன் மனைவியை இச்சித்து உழலுவோனுக்கு விரோதமும், கொடுஞ்செயலும், பயமும், நிந்தையும் நாளுக்குநாள் அதிகரிக்குமென்பது பொழிப்பு.

(க.) அன்னியனுடைய தாரத்தின் இச்சையைப் பெரிதென்று எண்ணித் திரிவோனுக்கு மாளா விரோதமும், தீராக் கொடுமையும், ஆறா பயமும், பேராப்பழியும் பெருகிக்கொண்டே வருமென்பது கருத்து.

(வி.) தனது தாரத்தை மற்றொருவன் இச்சிக்குங்கால் தனக்குள்ளெழும் விரோதத்தையும், தனக்குள்ளெழுங் கொடுஞ்செயலையும், தன்னால் அவனுக்குத் தோன்றும் பயத்தையும், தன்னாலும் தனது சுற்றத்தாராலும் அவனுக்குண்டாம் பழியையும் தன்னில் தானே ஆராய்ந்துணராது அன்னியன் தாரத்தை இச்சித்து பகையையும் பழியையும் பாவத்தையும் பயத்தையும் மாளாது சேர்த்துக் கொள்ளுவது யாதுசுகம் என்பதற்குச் சார்பாய் *அறநெறிச்சாரம்* "பழியொடு பாவத்தை பாராய்நீ நன்றுக், கழிபெருங் காமனோய் வாங்கி-வழிபடா, தோடுமனனே விடுத்தென்னை விரைந்துநீ, நாடிகொள் மற்றோரிடம்" என்பதுகொண்டு அன்னியன் மனையாளை நாடுவதிலும் தன்னை நாடுவது அழகென்பது விரிவு.

7. அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள
பெண்மை நயவா தவன்.

(ப.) னில்வாழ்வா னென்பான் - இல்லறவாழ்க்கையை யுடையோன், அறனியலா - யாதொரு தர்மத்தைச் செய்யாதிருப்பினும், பிறனியலாள் - அன்னியன் மனையாளாம், பெண்மை - இஸ்திரீயை, நயவாதவன் - இச்சியாதவனே இல்வாழ்க்கைக் குடையோனென்பது பதம்.

(பொ.) இல்லற வாழ்க்கையை உடையோன் நல்லறஞ் செய்யாதவனாயினும் அன்னியன் தாரத்தை இச்சியாது வாழ்பவனே அவ்வாழ்க்கைக்கு உரியோன் என்பது பொழிப்பு.

(க.) தனக்குரிய இல்லாளுடன் கூடி இல்வாழ்வோன் என்னப்படுவோன் யாதொரு தர்மஞ் செய்யாவிடினும் அன்னியன் மனையாளை இச்சியாது வாழ்வதே ஓர் தர்மமாம் என்பது கருத்து.

(வி.) இல்வாழ்வோன் என்போன் சகல நல்லறங்களை வழுவாது நடத்தியும் அன்னியன் இல்வாழ்க்கைக்கு உரியாளை இச்சித்து அவன் குடியை கெடுப்பானாயின் அவன் செய்துவந்து நல்லறங்கள் யாவும் கெட்டு பகையும், பழியும், பாவமும், அச்சமும் அடைகின்ற படியால் இல்வாழ்வோன் பல தர்மங்களைச் செய்யாவிடினும் அன்னியன் மனையாளை இச்சியாது வாழ்தலே பெருந்தர்மமாம் என்பது விரிவு.

8. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றே வான்ற வொழுக்கு.

(ப.) பிறன்மனை - அன்னியன் மனையாளை, நோக்காத கண்ணெடுத்துப்பாராத, பேராண்மை - புருஷச்செயல், வான்ற வொழுக்கு - நல்லொழுக்கமாயினும், சான்றோர்க் - மேலோர்க்குச் செய்யும், கறனொன்றோ - தன்மத்திலுமொன்றாகாவோவென்பது பதம்.

(பொ.) பிறன்மனையாளைக் கண்ணெடுத்துப்பாராத புருஷர்செயல் நல்லொழுக்கங்களில் ஒன்றாயினும் மேலோராம் அறஹத்துக்களுக்குச் செய்துவரும் தன்மங்களிலும் ஒன்றாகாவோவென்னும் உறுதிமொழி பொழிப்பு.

(க.) நல்லொழுக்கங்களில் பிறன் மனையாளை இச்சியாத புருஷதன்மம் ஒன்றிருக்கினும் அஃது அறஹத்துக்களுக்குச் செய்துவரும் தன்மங்களிலும் ஒன்றாகுமன்றோ என்பது கருத்து.

(வி.) சான்றோர்களாம் சமணமுநிவர்களால் ஓதிவரும் சீலங்களில் பிறன்மனையாளை இச்சியாதே என்பதும் ஓர் தன்மமாதலின் அவர்கள் அளிக்கும் சீலம்பிறழாது நடத்தலையும் ஓர் தன்மமாகக்கொண்டு அன்னியன் மனையாளைக் கண்ணெடுத்துப் பாராததே புண்ணியப் புருஷச்செயலாதலின் குருவினது போதனைக்கு உள்ளடங்கி நடக்குந் தன்மங்களில் ஒன்றாகப் பிரிதிநன்றி கருதி சான்றோர்க்கு அறனொன்றோ மற்றுஞ் சுகமுண்டென்பது விரிவு.

9. நலக்குரியார் யாரெனி னாமநீர் வைப்பிற்
பிறர்க்குரியா டோடோயா தார்.

(ப.) நலக்குரியார் - நன்மெய்க் கடைபிடித் தொழுகுவோர், யாரெனி - யாவரென் றறியவேண்டின், னாமநீர் - சமுத்திரநீர் சூழ்ந்துள்ள, வைப்பிற் - பூமியின்கண், பிறர்க் குரியாடோ - அன்னியன்மனையாளுடன், டோயாதார் - கலவாதவர்களே யென்பது பதம்.

(பொ.) நன்மெய் கடைப்பிடித் தொழுகுவோர் யாவர் என்றறிய வேண்டின் நீர் சூழ்ந்த பூமியின்கண் அன்னியன் மனையாளை சேராதவர்களே என்பது பொழிப்பு.

(க.) கடல்நீர் சூழ்ந்த பூமியின்கண் அன்னியன் மனையாளுடன் கலவாதவர்கள் யாரோ அவர்களே நன்மெய்க்கடைப்பிடித்தொழுகுவோராவர் என்பது கருத்து.

(வி.) சகல நன்மை சொரூபிகளாக விளங்கவேண்டுமென்பது புத்தரது இரண்டாம் பேதவாக்கியம் ஆதலின் அநநலத்துக்குரிய சொரூபிகள் யாவரென்று ஆராயுங்கால் அன்னியன் மனையாளை இச்சித்து அவளுடன் தோயாதவர்களே யாவர் என்பது இச்சையினால் உண்டாம் சகல கேட்டிற்குங் காம இச்சையே மூலமாதல் கொண்டு பூமியின்கண் அன்னியன் மனையாளுடன் சேராதவர்களே சகல நன்மைகளுக்கும் உரியோர்களாவர் என்பது விரிவு.

10. அறன்வரையா நல்ல செயினும் பிறன்வரையாள
பெண்மெ நயவாமெ நன்று.

(ப.) அறன்வரையா - அறநெறியாம் ஒழுக்கத்தினின்று, நல்லசெயினும் - நல்லற நடாத்துவோனாயினும், பிறன்வரையாள் -அன்னிய நெறிக்குள்ளடங்கி வாழும், பெண்மெ - இஸ்திரீயை, நயவாமெ - இச்சியாதவனே, நன்று - அறநெறியாளனென்பது பதம்.

(பொ.) அறநெறிவழுவாது நல்லவைகளைச் செய்வோன் ஆயினும் பிறனது கட்டுக்கு உள்ளடங்கி நிற்கும் பெண்ணை இச்சிப்போன் நல்லவனாகான் என்பது பொழிப்பு.

(க.) உலகமக்களுள் தன்ம வரம்பைக் கடவாது நல்லதைச் செய்வோன் அன்னியன் மனையாளை இச்சியாதிருப்பவதே அறநெறி வரம்பைக் கடவாதவன் என்பது கருத்து.

(வி.) அறமென்னும், நல்வாழ்க்கை, நன்முயற்சி, நல்வாய்மெய், நற்கடைபிடி முதலிய நல்லச் செயல்களில் முயல்வோன் அன்னியன் மனையாளை நயவுவானாயின் அவன் செய்யும் நன் முயற்சிகள் யாவும் தீயவையாக முடிவதன்றி பழிபாவத்திற்கு உள்ளாவதால் நன்மெயாம் அறநெறியோன் அன்னியன் மனையாளை நயவாதிருத்தலே நன்றென்பது விரிவு.

16. பொறையுடைமெய்

மக்களுள் இவன் பொறுமெ உடையவன், இவன் பொறாமெ உடையவனென்னுங் குறிப்பை தேகத்தைக்கொண்டே அறிதலால் பிறனில் விழையாமெ என்னும் நெறிக்குப்பின் பொறையுடைமெயாம் சாந்தருபியை விளக்குகின்றார்.

1. அகழ்வாரை தாங்கு நிலம்போலத் தம்மெ
யிகழ்வார்ப் பொறுத்த றலை.

(ப.) அகழ்வாரை - பூமியின் பலனைக்கருதா தகன்றோரை, தாங்குங் - காக்கும், நிலம்போலத் - பூமியைப்போல, தம்மெ - தன்னை, யிகழ்வார்ப் - தம்மெ நிந்திப்போர் செயலை, பொறுத்தறலை - மன்னித்துக் கொள்ளுதலே தலைமெயா மென்பது பதம்.

(பொ.) பூமியின் பலனைக் கருதாது அகன்றோரையும் பூமியே காப்பதுபோல் தம்மெ நிந்திப்போரை விரோதியாகக் கொள்ளாது பொறுத்துக்கொள்ளுதலே தலைமெயாம் என்பது பொழிப்பு.

(க.) பூமியை வெறுத்தும் அதன் பலன் கருதாது அகல்வோரை அப்பூமியே காத்து ரட்சிப்பதுபோல தம்மெ நிந்தித்து வைவோரது குற்றத்தைக் கருதாது காத்தலே பொறுமெயில் தலைமெயாம் என்பது கருத்து.

(வி.) பூமியை வெட்டிக் கொத்திப் புழுதியழுகக் கலக்கிய போதினும் அவ்வகை செய்வதை வெறுத்து அகழ்ந்தபோதினும் அஃது காப்பதுபோல், நிந்தித்து வைதோர் பெறாமெச்செயலை தங்கள் உள்ளத்தில் ஊன்றி அப்பொறாமெயைத் தங்களுக்குள் அணுகவிடாது அகற்றி அவர்களைக் காத்தலே பொறையுடையான் என்னுந் தோற்றத்திற்கு அழகாதலின் மற்றொருவர் குற்றத்தைப் பொறுத்துக் காத்தலை முதன்மெயாகக் குறிப்பிடப்பட்டது என்பது விரிவு.

2. பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று.

(ப.) விறப்ப - வொருவன் குற்றத்தை மடித்து, பொறுத்த - மன்னித்துக்கொள்ளினும், யென்றுமதனை - எக்காலுமவற்றை, மறத்தல் - அக்குற்றத்தை மறந்துவிடுதல், லதனினு - அவற்றினும், நன்று - நல்லதாகுமென்பது பதம்.

(பொ.) ஒருவன் குற்றத்தை மடித்து விடினும் அவற்றை எழவிடாது மறத்தலே அதனினும் நன்றாம் என்பது பொழிப்பு.

(க.) பொறையில் ஒருவன் செய்த குற்றத்தை மடித்துவிடினும் மறுபடியும் அக்குற்றத்தை என்றுங் கருதாதிருத்தலே நலமென்பது கருத்து.

(வி.) பொறுமையுடையோன் என்னுஞ் செயலைப்பெற்றவன் அன்னியனது குற்றத்தைக் கருதாது மடித்து விடினும் எதிரியினது குற்றம் மடிந்துவிட்டதென்றற்குச் சார்பாய் அதனை எக்காலுந் தோன்றவிடாமல் அகற்ற வேண்டியதே நலமென்பது விரிவு.

3. இன்மெயு ளின்மை வீருந்தொரால் வன்மெயுள்
வன்மை மடவார் பொறை.

(ப.) இன்மெயு - ஒருபுருடனுக்கு, ளின்மை - பொருளிலாது, விருந்தொரால் - வரும்விருந் தோம்பாவிடினும், வன்மெயுள் - திடதேகி, வன்மை - பொருளிருப்பின், மடவார் - தனது விரோதிகளுக்கு மிட்டுண்பதே, பொறை - மன்னித்தலென்பது பதம்.

(பொ.) ஆதுலன் தனக்குப் பொருளிலாது விருந்தோம்பாவிடினும் உள்ளவன் தனது விரோதிக்கும் இட்டுண்பதே பொறையினது அழகென்பது பொழிப்பு.

(க.) பொருளில்லாத ஏழையா யிருப்போன் வருவிருந்தினரைக் காக்காவிடினும் பொருளுள்ள வல்லதேகி தனக்கு விரோதியாயுள்ளவன் வரினும் அவனுக்கு அன்புடன் விருந்தளிப்பதே பொறையுடையானின் அழகென்பது கருத்து.

(வி.) தெரிந்த விருந்தினரும் தெரியா விருந்தினரும் விரோத விருந்தினரும் அவிரோத விருந்தினரும் வரில் ஏழையாயுள்ளோன் தனது பொருளில்லாக்குறையால் தவித்து நிற்பான். பொருளுள்ள வல்லவனோ அங்ஙனமிராது தனக்கு விரோதியாயினும் அவிரோதியாயினும் வரின் பேதம்பாராது விருந்தளித்து அனுப்புவதே பொறுமையின் குறியாதலின் மடவார் பொறை யென வற்புறுத்திக் கூறிய விரிவு.

4. நிறையுடைமெ நீங்காமை வேண்டிற் பொறையுடைமெ
போற்றி யொழுகப் படும்.

(ப.) நிறையுடைமெ - சாந்தரூபியென்றழைக்கப்பெற்றோன் பெயர், நீங்காமை வேண்டிற் - என்று மகலாதிருக்கவேண்டுமாயின், பொறையுடைமெ - பொறுமெயே உறுத்தி, போற்றி - அதனையே புகழ்ந்து, யொழுகப்படும் - நற்செயலில் நடக்கவேண்டுமென்பது பதம்.

(பொ.) சாந்தரூபி யென்னும் பெயரைப்பெற்றவன் அச்சாந்தத்தையே போற்றி ஒழுக வேண்டுமென்பது பொழிப்பு.

(க.) இவன் நல்லோன் சாந்தரூபி என்னும் பெயரைப் பெற்றவன். மேலும் மேலும் நல்லவனென்னுஞ் செயலைப்போற்றி ஒழுகவேண்டுமென்பது கருத்து.

(வி.) சகல நற்செயலும், நற்குணமும், நல்வாய்மெயும் நிறைந்த ஒருவன் அவைகள் நீங்காதிருக்க வேண்டுமாயின் தனக்குள் பொறுக்கும் செயலை பூரணப்படுத்தி அதனை கொண்டாடிவருவானாயின் அதுவே போற்றப்படு மென்பது விரிவு.

5. ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து

(ப.) ஒறுத்தாரை - யென்றுங் கோபக்குறி யுள்ளாரை, யொன்றாக - ஓர் மனிதனாக, வையாரே - மதிப்பில் வைக்கமாட்டார்கள், வைப்பர் - யாவரை மதிப்பில் வைப்பரென்னில், பொறுத்தாரைப் - முகமலர்ச்சியுள்ளாரை, பொன்போற் - சுவர்ணத்தைப்போல், பொதிந்து - பொருந்தவென்பது பதம்.

(பொ.) எக்காலுங் கோபக்குறி உள்ளாரை விவேகிகள் ஓர் மனிதனென மனதில் மதியார்கள்; பொறுமெ உள்ளாரைப் பொன்போல மதிப்பார்கள் என்பது பொழிப்பு.

(க.) எந்த காலத்திலுங் கோபக்குறியுள்ள முகத்தோனை விவேகிகள் மதிப்பில் வைக்க மாட்டார்கள். என்றென்றும் முகமலர்ச்சியுள்ள சாந்தரூபியை சுவர்ணம் போல் கருதி மதிப்பார்கள்.

(வி.) கடுஞ்சொல், பொறாமெய், காய்மகாரம் முதலியக் கோபக்குறிமிகுத்து மக்களை உறுப்பாரை சாந்தரூபிகளாம் விவேகிகள் என்றும் மதியார்கள். அன்புமிகுத்து என்றும் முகமலர்ச்சியுடன் தங்களை வைதோர் குற்றங்களையும், நிந்தித்தோர் குற்றங்களையும் பொறுத்துள்ளாரைப் பொன்போற் பொதிந்து சகலருங் கொண்டாடுவார்களென்பதற்குச் சார்பாய் *அறநெறிச்சாரம்* "தன்னையொருவ னிகழ்ந்துரைப்பிற்றானவனைப், பின்னையுரையாப் பெருமையான் - பின்னை, வினைப்பயனுமாயிற்றா மென்றதன்கண் மெய்ம்மை, நினைத்தொழிய நெஞ்சினோயில்" பொறையுடையாரை உலகத்தோர் பொன்போல் ஏந்துவரென்பது விரிவு.

6. ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்

(ப.) ஒறுத்தார்க் - உறுத்துநிற்போருக்கு, கொருநாளை - ஒருதினத்து, யின்பம் - சுகமுண்டாம், பொறுத்தார்க்குப் - பொறுமையுள்ளார்க்கு, பொன்றுந் - எக்காலமுள்ள, துணையும் கூட்டுரவும், புகழ் - கீர்த்தியு முண்டாமென்பது பதம்.

(பொ.) கோபக்குறியாம் உறுத்தார்க்கு ஒரு நாளைய சுகமுண்டாய போதினும் பொறுமையுள்ளார்க்குப் போதுமான துணையும் புகழுமுண்டா மென்பது பொழிப்பு.

(க.) ஒருவரை ஒறுத்துப் பேசி வாங்கிய பொருள் ஒரு நாளைய சுகத்தைத் தரினும் பொறுத்துப்பேசிய பயன் பலருடைய துணையைத் தருவதுடன் என்றும் அழியாக் கீர்த்தியையும் பெறுமென்பது கருத்து.

(வி.) உறுத்துநின்று ஒருவரை வைதும், கண்டித்தும், நிந்தித்தும் அடைந்த பயன் அன்றைய சுகத்தை மட்டிலுந் தருமேயன்றி வேறு இராவாம். எக்குற்றங்களையும் பொறுத்து முகமலர்ச்சியுடன் மிருதுவான வார்த்தைகளைப் பேசி எதிரிகளுக்கும் பொறுமையை உண்டுசெய்வோர்க்கு சகல மக்களும் எக்காலும் சுகத்துணையாக விருப்பதுடன் என்றும் அழியாக் கீர்த்தியையும் அடைவார்களென்பது விரிவு.

7. திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்
தறனல்ல செய்யாமெ நன்று.

(ப.) தற்பிறர் - பிறரால் தனக்கு, திறனல்ல- பயனற்றவைகளை, செய்யினு - செய்த போதினும், நேநொந் - தாங்களும், தறனல்ல - பயனில்லா தன்மங்களை, செய்யாமெ - செய்யாதோரென வாழ்தலே, நன்று - நல்லதாகுமென்பது பதம்.

(பொ.) அன்னியரால் தாங்கள் பயனற்றச் செயல்களைப் பெறினும் தாங்களும் அத்தகையப் பயனற்றச் செயல்களை செய்யலாகாதென்பது பொழிப்பு.

(க.) அன்னிய மக்கள் தங்களுக்கு யாதொரு பயனற்ற செய்கைகளை செய்தபோதினுந் தாங்களும் அத்தகையப் பிரயோசனமற்றச் செயல்களைச் செய்யலாகாதென்பது கருத்து.

(வி.) மற்றுமுள்ள மக்கள் தங்களுக்கு யாதொரு பயனுமற்ற செயல்களை செய்து வந்த போதினும் தாங்களும் அவற்றை ஒத்தப் பயனில்லாச் செயல்களைச் செய்யாது அக்காலும் அவர்களுக்கோர் பயனைத் தரக்கூடியச் செயல்களைச் செய்தும் பயனைத் தரக்கூடிய வார்த்தைகளைப் பேசியும் வரவேண்டுமென்பது விரிவு.

8. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தன்
தகுதியால் வென்று விடல்.

(ப.) மிகுதியான - கோப வதிகரிப்பால், மிக்கவை - மிகுத் தீங்கினை, செய்தாரை - செய்தோர்களை, தாந்தன் - தங்களுக்குள்ள, தகுதியால் - பொறுமையினால், வென்றுவிடல் - ஜெயிக்கவேண்டுமென்பது பதம்.

(பொ.) கோப அதிகரிப்பால் மிக்க தீங்குசெய்வோர்களை தங்களுக்குள்ளப் பொறுமையினால் வென்றுவிடவேண்டுமென்பது பொழிப்பு.

(க.) எதிரிக்குள்ளக் கோபத்தின் மிகுதியால் மிக்கத் துன்பத்தைக் கொடுப்பினும் அவற்றைப் பொறுத்துக்கொள்ளுவதே அவனை வென்றதற்கு அறிகுறியாமென்பது கருத்து.

(வி.) எக்காலுங் கோபத்தையே வளர்த்துக்கொண்டு மிக்கத் துன்பமாங் கொடுஞ்செயல் புரிவோருடன் தாங்களும் எதிர்த்துக் கொண்டு கொடுஞ்செயல் புரியாது அத்தீங்குகள் யாவையும் பொறுத்து அவர்கட்கு இதம்புரிவதாயின் அதுவே அவர்களை வென்ற அடையாளமாதலின் கோபத்தைக் கோபத்தால் வெல்லலாகாது சாந்தத்தால் வெல்லலாமென்பது விரிவு.

9. துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா
யின்னாச்சொ னோற்கிற் பவர்

(ப.) துறந்தாரிற் - இல்லந் துறந்தவருள், றூய்மையுடைய தூயதேகிகளைக் காண்பதினும், ரிறந்தார் - இல்லறத்தோர், வாயின்னாச்சொ - நாவி லுண்டாங் கொடுமொழிகளை, னோற்கிற்பவர் - நோக்கிக்காப்பாரென்பது பதம்.

(பொ.) துறந்தவர்களது தூயதேகத்தைக்கண்டு களிப்பதினும், இல்லற வாசிகளது கொடுமொழிகளைக் கண்டு பொறுப்பது மேலாம் என்பது பொழிப்பு.

(க.) இல்லந் துறந்து மரணத்தை ஜெயித்துக்கொண்ட தூயதேகிகளைக் கண்டு மகிழ்வதினும் மரணத்திற்குள்ளாம் இல்லறவாசிகளது கொடு மொழிகளைக்கேட்டும் பொறுப்போரே மேலோர்கள் என்பது கருத்து.

(வி.) பாசமந்தப் பற்றுக்களைவிட்டு சாது சங்கஞ்சார்ந்து பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காட்டை வென்ற சுத்ததேகிகளைக் காண்பதினும் இறப்புக்குரிய பாசபந்த இல்லறவாசிகளது மிருதுவாம் மொழிக்கு எதிரடையாய கொடியமொழிகளை உலகத்தோர் நாவினின்று எழாமற் காக்கவேண்டும் என்பதற்குச் சார்பாய் *அறநெறிச்சாரம்* "எள்ளிப் பிறருரைக்கு மின்னாச்சொல் தன்னெஞ்சில், கொள்ளிவைத்தாப்போல் கொடிதெனினு - மெள்ள, அறிவென்னு நீரா லவித்தொழுக லாற்றின், பிறிதெனினும் வேண்டாந் தவம்" என்பது விரிவு.

10. உண்ணாது நோற்பார் பெரியர்பிறர் சொல்லு
மின்னாச் சொன்னோற் பாரிற்பின்.

(ப.) உண்ணாது - அதியாகாரம்புசியாது, நோற்பர் - நோன்பி னிலைப்பர், பெரியர் - மேலோர்கள், பிறர்சொல்லு - அன்னியரால் மொழியப்படும், மின்னாச்சொ - கொடியமொழிகளை, னோற்பாரிற்பின் - காப்பவரினும் வேறுளரோ வென்பது பதம்.

(பொ.) மேலோர்கள் மிதாகாரம் புசித்துத் தங்கள் நோன்பினைக் காப்பர். மற்றோர் பிறர்களது கொடிய மொழிகளைக் காப்பார்கள் என்பது பொழிப்பு.

(க.) விவேகமிகுத்தப் பெரியோர் மிதபுசிப்பால் தங்கள் விரதத்தைக் காப்பார்கள், மற்றுமுள்ளோர் அன்னியரது கொடுமொழிகளைப் பொறுத்து காப்பதினும் வேறுளதோ என்பது கருத்து.

(வி.) பெரியோர்களாம் அறிவின் மிக்கோர் தங்கள் காம, வெகுளி, மயக்கங்களை அறுக்குமாறு சங்கஞ்சேர்ந்து மூவேளை உண்பினையை ஒடுக்கி ஒருபொழுதுண்டு தங்கள் விரதமாம் நோன்பினை நோற்பார்கள். மற்றும் உலக மக்களோ அன்னியர்களது கொடிய மொழிகளைப் பொறுத்து காப்பதினும் வேறுநோன்புளவோ என்பது விரிவு.

17. அழுக்காறாமெய்

இஃது பொறையுடையான் சுகத்தையும், பொறையிலான் கேட்டையும் விளக்கியதன்பின் வஞ்சினம், பொறாமை, குடிகெடுப்பு, லோபம், சூது, பேரவாவாம் மனக்களங்குகள் ஆறினையும் அகற்றுவோன் சுகத்தையும், அகற்றாதோன் கேட்டையும் விளக்குகின்றார்.

ஆறழுக்குடைமை யென்பது அழுக்காறாமெய் எனக் குறுக்கல் விகாரப்பட்டது.

1. ஒழுக்காறாக் கொள்க வொருவன்றன் னெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்

(ப.) ஒழுக் காறாக்கொள்க - நல்லொழுக்க மாறாதிருக்க வேண்டிய, வொருவன் - ஒரு மனிதன், தன் - தனது, நெஞ்சத் - மனதின்கண்ணுள்ள, தழுக்காறிலாத - அறுவகை களங்கங்களுமிறாது, வியல் - ஒழுகல் வேண்டுமென்பது பதம்.

(பொ.) நல்லொழுக்கம் வழாது வாழ வேண்டிய ஒருவன் தனது மனமாசுகள் ஆறினையும் அகற்றி ஒழுகவேண்டும் என்பது பொழிப்பு.

(க.) உலகத்தில் நல்லொழுக்கக் கொள்கையை மாறாது கடைபிடிக்க வேண்டிய ஒருவன் தனதுள்ளத்தின்கண் எழும் அறுவகைக் குற்றங்களையும் அகற்றிக்கொண்டே வரவேண்டும் என்பது கருத்து.

(வி.) ஒருமனிதன் தான் சுகச்சீரடைவதுடன் உலகமக்களாலும் நல்லொழுக்கமுள்ளான் என்று கூறவேண்டுமாயின் தன்மனதினின்று எழும் மாசுகளாகும் வஞ்சினம், பொறாமை, சூது, குடிகெடுப்பு, லோபம், பேராசையாம் ஆறினையும் அகற்றி வாழவேண்டுமென்பதற்குச் சார்பாய் அறநெறிச்சாரம் "புழுப்போ லுவர்ப்பூறிப் பொல்லாங்குநாறும், அழுக்குடம்பு தன்னுள் வளர்ந்தாய் விழுந்துமிழ்ந், தின்ன நடையா யிறக்கும் வகையினை, நன்னெஞ்சே நாடாய் காணற்கு" என்பது விரிவு.

2. விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டு
மழக்காற்றி னன்மெ பெறின்.

(ப.) மழுக்காற்றி - மனக்களங்க மாறினையு மகற்றி, னன்மெபெறின் - சுத்ததேகியாக விளங்கில், விழுப்பேற்றி - அவனை புகழ்ந்துகொண்டாடற்கு, னஃதொப்ப - அதனினு மேலாயது, தில்லையார்மாட்டு - யாவரிடத்து மிராவென்பது பதம்.

(பொ.) மனமாசு ஆறினையும் அவித்தவனைக் காண்பதினும் வேறாய சுத்தகாட்சி இல்லை என்பது பொழிப்பு.

(க.) உள்ளக் களங்கங்கள் ஆறினையும் அறுத்த மேலோனையே மற்றுள்ள மக்கள் புகழ்ந்து போற்றுவாரன்றி வேறு புகழில்லை என்பது கருத்து.

(வி.) உலகிலுள்ள மக்கள் காணும் பலவகைக் காட்சிகளினும் அறுவகை மனமாசுகளை அகற்றி சுத்ததேகியாக உலாவுவோனைக் காண்பதே மேலாய காட்சியாதலின் அதனை ஒப்பப்புகழ்ந்து போற்றற்கு வேறொரு காட்சியும் இல்லை என்பது விரிவு.

3. அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான்

(ப.)அறனாக்கம் - நல்வழியால் சம்பாதித்தப் பொருளையே, வேண்டாதானென்பான் - கருதாது வாழ்பவன், பிறனாக்கம் - அன்னியனது செல்வத்தை, பேணா - கருதாது, தழுக்கறுப்பான் - தனக்குள்ளக் களங்கங்களை நீக்கிக்கொள்ளுவானென்பது பதம்.

(பொ.) தான் நல்வழியால் சம்பாதித்தப் பொருளின் பேரில் அதிகப்பற்றில்லாது வாழ்பவன் அன்னியன் பொருளின்மீது அவாக்கொள்ளாது தனக்குள்ள மனமாசுகளைப் போக்கிக்கொள்ளுவான் என்பது பொழிப்பு.

(க.) தன் தேகத்தை வருத்திக் கஷ்டத்துடன் சேகரித்தப் பொருளின்மீது அவா இராதவன் அன்னியன் பொருளை ஆசிக்காது தனது மனமாசுகளை அறுப்பானென்பது கருத்து.

(வி.) பேராசையே சகல கேட்டிற்குங் கொண்டுபோகும் வழியாயுள்ளதால் வஞ்சகத்தாலும், குடிகெடுப்பாலும் பொருளை சம்பாதியாது அறநெறியாம் நல்வழியில் பொருளை சம்பாதித்தும், அதனிற் பற்றில்லாதவன் தனக்குள்

எழும் மனக்களங்கங்கள் ஆறினையும் அறுப்பான் என்று பேராசையின் களங்கை விளக்கிய விரிவாம்.

4. அழுக்காற்றி னல்லவை செய்யா கிழுக்காற்றி
னேதம் படுப்பாக் கறிந்து

(ப.) அழுக்காற்றி - அறுவகைக் களங்கங்களையு மகற்றி, னல்லவை - மக்களுக்குநல்லதை, செய்யா - செய்யாதவர்கள், கிழுக்காற்றி - சகலராலு மிழிவடைவதுடன், னேதம் - துன்பத்தையும், படுப்பாக்கறிந்து - அடைவதைக் காணலாமென்பது பதம்.

(பொ.) அறுவகைக் களங்கங்களையும் அகற்றி மக்களுக்கு நல்லதைச் செய்யாதவர்கள் சகலராலும் இழிவடைவதுடன் துன்பத்தையும் அடைவதைக் காணலாம் என்பது பொழிப்பு.

(க.) மனமாசுகள் ஆறினையும் அகற்றி மனுக்களுக்கு நல்லதைச் செய்யாதவர்கள் சகலராலும் இழிமொழிகளை அடைவதுடன் மீளா துன்பமடைவதால் படும் பாடுகளைக்கண்டே அறியலாம் என்பது கருத்து.

(வி.) உள்ளக் களங்கை அறுத்து உலகத்தோருக்கு நலஞ் செய்யாது வஞ்சினத்தாலும், பொறாமையாலும், குடிகெடுப்பாலும், லோபத்தாலும், சூதினாலும், பேராசையாலும், மக்களுக்குத் தீங்குசெய்வோரை பலரும் இழிப்பதுடன் துன்பத்திற்கும் ஆளாவதைக் காணலால் களங்கறுத்து நல்லவை செய்யவேண்டுமென்பதற்குச் சார்பாய் அறநெறிச்சாரம் "உயிருமுடம்பும் பிரிவுண்மெயுள்ளிச், செயிருஞ் சினமுங் கடிந்து - பயிரிடைப், புற்களைந்து நெற்பயன் கொள்ளு மொருவன் போல், நற்பயன் கொண்டிருக்கற் பாற்று" என்பது விரிவு.

5. அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது.

(ப.) மொன்னார் - அன்னியரால், வழுக்கியுங் - மறுத்துங், கேடீன்பது - கெடுதிசெய்யாவிடினும், அழுக்கா றுடையார்க் - அறுவகைக் களங்கமுள்ளோர்க்கு, கதுசாலு - கெடுப்பதற் கதுவே போதுமென்பது பதம்.

(பொ.) அன்னியர் கேடுசெய்யாது அகலினும் அறுவகை அழுக்கினை உடையார்க்கு கேட்டை உண்டுசெய்தற்கு அதுவே சாலும் என்பது பொழிப்பு.

(க.) அறுவகை மனக்களங்கம் உள்ளாரை அன்னியர் கெடுக்காது விடினும் தனக்குள்ளக் களங்கே தன்னைக் கெடுப்பதற்குப் போதுமானதாம் என்பது கருத்து.

(வி.) வஞ்சினம், பொறாமை முதலிய அறுவகைக் களங்கங்களால் அன்னிய மக்கள் துன்புற்று மறுத்துங் கேடுசெய்யாது விடினும் தனக்குள்ளக் களங்கே இரும்பைத் துரும்பு அரிப்பதுபோல் தன்னைத்தானே அக்களங்கு கெடுத்தற்குப் போதிய வழியாம் என்பது விரிவு.

6. கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றி கெடும்.

(ப.) கொடுப்ப - ஒருவர் செய்யுந் தன்மத்தைக் கெடுக்கும், தழுக்கறுப்பான் - பேரவா வழுக்குடையான் கெடுவதன்றி, சுற்ற - தனதுரவின்முறையோரும், முடுப்பதூஉ - உடுக்க ஆடையு, முண்பதூஉ - புசிக்க சோறும், மின்றி - கிடையாது, கெடும் கெடுவார்களென்பது பதம்.

(பொ.) ஒருவர் செய்யுந் தன்மத்தைக் கெடுக்கும் பேரவா அழுக்குடையான் தான்கெடுவதுடன் தனது சுற்றத்தாரும் உடுக்கத் துணியில்லாமலும், உண்ண சோறில்லாமலுங் கெடுவார்களென்பது பொழிப்பு.

(க.) அன்பின் மிகுதியால் ஒருவருக்குச் செய்யுந் தன்மத்தைக் கெடுக்கும் அழுக்காறுடையோன் தான் உண்ண சோற்றிற்கும், உடுக்க வஸ்திரத்திற்கும் அலைவதுடன் தனது சுற்றத்தோருங் கெடுவார்களென்பது கருத்து.

(வி.) இல்லார் குறைகளை அறிந்து ஈயுந் தன்மத்தைக் கெடுக்கும் உலோபியானவன் தனக்கு உண்பதற்கு சோறு கிடையாமலும், உடுப்பதற்கு வஸ்திரங் கிடையாமலும் அல்லலடைவதுடன் தனது உரவின்முறையோருங் குலபழக்கத்தால் கேடுற்று அவர்களும் துன்பத்தை அநுபவிப்பார்கள் என்பது விரிவு.

7. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும்.

(ப.) தழுக்காறுடையானைச் - ஆறழுக்கினையுடையவனின், அவ்வித் - அவன் சந்ததியினது, செய்யவ - செய்கைகளினால், இவ்வையைக் - முன்குல வழியை, காட்டிவிடும் - விளக்கிவிடுமென்பது பதம்.

(பொ.) ஆறழுக்கினை உடையவனது சந்ததியின் செய்கைகளினால் அவனது குலவழி விளங்கிப்போம் என்பது பொழிப்பு.

(க.) ஆறு அழுக்கினை உடையவனின் துற்செயல் அவனிடத்து விளங்குவதுமன்றி பின் தோன்றும் புத்திர பௌத்திரரிடத்தும் விளங்குமென்பது கருத்து.

(வி.) அவ்வித்தாம் புத்திரர் பௌத்திரர் தோன்றி பிரபல வாழ்க்கைப் பெற்றுரினும் தனது தாதையினது அழுக்காறாம் அவ் வளப்பத்தைக் காட்டி சகலருக்கும் விளங்கவைக்குமென்பதற்குச் சார்பாய் *காக்கைபாடியம்* "தந்தை குலத்தின் செயல்வழிதான்பெறு, மைந்தருஞ்சென்று மாள்வர் மதியதிலார், சிந்தைச்செயலை சீர்பெறநோக்கிடில், அந்தரசாரிக ளருநிழலுறுமே" என்பதற்குச் சார்பாய் முன்தோற்றத் தாதையின்செயலை பின்தோற்ற மைந்தர் விளக்குவார் என்பது விரிவு.

8. அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

(ப.) அழுக்காரென - ஆறழுக்குடையான் செயலை, வொருபாவி - மற்றவனும் பாவித்துநடப்பானாயின், திருச்செற்றுத - அவனுக்குள்ளச் செல்வமு மடிந்து, தீயுழி - கொடிய துன்பத்தில், உய்த்துவிடும் - சேர்த்துவிடுமென்பது பதம்.

(பொ.) ஆறழுக்கினை உடையோனை பாவித்து மற்றவனும் நடப்பானாயின் அவனுக்குள்ள செல்வமும் மடிவதுடன் கொடிய துன்பத்திற்குங் கொண்டு போய்விடும் என்பது பொழிப்பு.

(க.) நல்லொழுக்கத்தில் வாழ்ந்திருந்த ஒருவன் தீயொழுக்க முடையோனை பாவித்து விடுவானாயின் உள்ள செல்வம் நசிந்துபோவதுடன் மீளா துன்பத்திலும் அழுத்திவிடும் என்பது கருத்து.

(வி.) அறுவகை அழுக்கினை உடையோன் செயலாம் லோபத்தால் பொருள்சேர்ப்பதைக்கண்டு மற்றுமுள்ளோனும் அவனை பாவித்து பொருள் சேர்க்க முயலுவானாயின் தான் முன் சேகரித்தப் பொருளுமழிவதுடன் மீளா துன்பத்திற்குங் கொண்டுபோய்விடுமென்பது விரிவு.

9. அவ்விய நெஞ்சத்தானாக் கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும்.

(ப.) அவ்விய - மேற்களங்க நிறைந்த, நெஞ்சத்தா - மனதையுடையான், னாக்கமுஞ் - செல்வத்தைக்கண்டு, செவ்வியான் - நல்வழியோனதைக் கருதுவது, கேடுநினைக்கப்படும் - தனக்குள்ள சொத்துங் கெடுவதற்கெண்ணுகிறானென்பது பதம்.

(பொ.) மனமாசுள்ளோன் சொத்துக்களைக்கண்டு அவ்வழி பொருள்சேகரிக்க மனமாசு அகன்றுவருவோனும் சிந்திப்பது தனதுசொத்துங் கெடுவதற்கு எண்ணுகிறான் என்பது பொழிப்பு.

(க.) வஞ்சினத்தாலும் சூதினாலும் சம்பாதித்துள்ளப் பொருளைக் கண்டு வஞ்சினமும் சூதுமற்றவன் அவ்வழி கருதுவது தனது பொருளுங் கெடுவதற்கு எண்ணங் கொள்ளுகிறான் என்பது கருத்து.

(வி.) அறுவகை அழுக்கையுடையான் தனக்குள்ள லோபத்தாலும், வஞ்சினத்தாலும், சூதினாலும், பொருள் சேகரிப்பதைக் கண்ட ஓர் களங்கமில்லானும் அவன் பொருள் சம்பாதிக்கும் வழியைக் கருதுவது தனக்கு முன்புள்ளப் பொருளையுங் கெடுத்துக் கொள்ளுவதற்கு எண்ணுகிறான் என்பது விரிவு.

10. அழுக்கற் றகன்றாரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்

(ப.) அழுக்கற் - அறுவகை மனக் களங்கங்களை யறுத்து, றகன்றாரு - துறந்தவரும், மில்லை - இல்லை, யஃதிலார் - அத்தகைய களங்கில்லார், பெருக்கத்திற் - முத்திபேற்றை, றீர்ந்தாருமில் - அடைந்தாருமில்லையென்பது பதம்.

(பொ.) அறுவகை மனமாசுகளற்று துறவுபூண்டாரும் இல்லை. அவ்வகை அறுத்து முத்திபேறு பெற்றாரும் இல்லையென்பது பொழிப்பு.

(க.) மனமாசுக்களாம் ஆறழுக்குகளையும் அறுத்து இல்லம் துறந்தாரையுங் காண்பதற்கு இல்லை. அவ்வகைத் துறந்தும் வீடுபேற்றைப் பெறுவதையுங் காணுவதற்கில்லையே என்னும் இரங்கற் கருத்து.

(வி.) உலக மக்கள் செயல்களைக் கண்டுணர்ந்த தெய்வப்புலவர் தனது மனமிரஞ்சி அறுவகை மனக்களங்கங்களையும் அறுத்து இல்லந்துறப்பவர் களைக் காண்பதற்கில்லையே அவ்வகைத் துறந்தும் முத்திபேறு பெற்றாரென்றறிவதற்கும் இல்லையேயென்று இரங்கிக்கூறிய விரிவு.

18. வெஃகாமெய்

இவ்வெஃகல் எனும் மொழி, வேதல், வெதும்பலென்னு மொழியினின்று தோன்றியது. காம வெதும்பல், கோப வெதும்பல், பேரவா வெதும்பல், பசி வெதும்பல் என்னும் வெப்பத்தை உணர்ந்தவையன்றி காம வெஃகல், கோபவெஃகல், பசியின் வெஃகலால் உண்டாங்கேடுதளை விளக்குமாறு வெகுளிக்குப் பீடமாம் வெஃகலை விளக்குகின்றார்.

1. நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்.

(ப.) நடுவின்றி - சமநிலையின்றி, நன்பொருள் - இச்சிக்கும் பொருளைக்கண்டு, வெஃகில் - வெதும்பில், குடிபொன்றிக் - தன்குடி யொடுங்குவதன்றி, குற்றமு - பலகுறைகளும், மாங்கே தரும் - அதுவே கொடுக்குமென்பது பதம்.

(பொ.) தனது இச்சையை சம நிலையில் வையாது பேரவாவால் வெதும்பல் தன்னைக் கெடுப்பதுடன் அதுவே பலவகைக் குறைகளையும் உண்டாக்கும் என்பது பொழிப்பு.

(க.) பேரவாக்கொண்டு இச்சித்தப்பொருள் கிட்டாது வெதும்பல் தன் குடியிருப்பையே கெடுப்பதுடன் பலவகைக் குற்றங்களுக்கும் ஆளாக்கிவிடும் என்பது கருத்து.

(வி.) தனக்குக் கிடைத்த வரையிற் போதுமென்னும் நடுநிலைபெறாதும் இச்சித்த நன்பொருள்பெறாதும் வெதும்புவதினால் பேரவாக்கொண்ட உள்ளம் நிலையாது அலைந்து தன் குடி கெடுவதுடன் பலவகைத் துன்பத்தையுந் தருமென்பதற்குச் சார்பாய் குறுந்திரட்டு "கூறிடு காமவெஃகல் கேடுறுங்குற்றஞ்சாறும், சீறிடுங்கோபவெஃகல் சினையுறு துன்பங்காட்டும், ஆறிடா பசியின் வெஃக லகத்துயிர் போக்குங்கண்டீர், கோறிட கிடைத்தல் போற்றல் குற்றமென்றில்லையாமே" என்பது கொண்டு நடுநிலையற்று நன்பொருள் கிட்டாது வெதும்பலுங் குற்றம் என்பது விரிவு.

2. படுபயன் வெஃகிப் பழிபடுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

(ப.) நடுவன்மை - பொதுவாய நிலையில், நாணுபவர் - ஒடுங்கிநிற்பவர், படுபயன் - கேட்டைத்தரும் பொருளை யிச்சித்து, வெஃகி - அவைகிட்டாது

வெதும்பி, பழிபடுவ - நிந்தைக்குள்ளாக, செய்யார் - செய்துகொள்ளாரென்பது பதம்.

(பொ.) பொதுவாய நிலையில் ஒடுங்கி நிற்பவர் கேட்டைத்தரும் பொருளை இச்சித்து, வெதும்பி, நிந்தைக்குரிய செயலுக்குள்ளாகார் என்பது பொழிப்பு.

(க.) தனக்குக் கிடைத்தவரையில் போதுமென்னுந் திருப்தியை உடையவர் கெடுதியை உண்டு செய்யும் பயனை இச்சித்து, வெதும்பி, நிந்தையை உண்டு செய்துக்கொள்ளமாட்டார்கள் என்பது கருத்து.

(வி.) நடுநிலைமையிற் போதுமென்னுந் திருப்தியுற்று கிட்டியவரையில் ஒடுங்கிநிற்பவர் கிட்டாப்பயனைக் கருதி அதனால் வெதுப்புற்று தனக்கு இழிபழி நேரும்படிச் செய்துக்கொள்ள மாட்டார்கள் என்பது விரிவு.

3. சிற்றின்பம் வெ∴கி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்

(ப.) மற்றின்பம் - பேரின்பத்தை, வேண்டுபவர் - கோறி நிற்போர், சிற்றின்பம் - சொற்ப காம யின்பத்தில், வெஃகி - வெதும்பி, யறனல்ல - தன்மத்திற்கு மாறுபட, செய்யாரே - நடவார்களென்பது பதம்.

(பொ.) பேரின்பத்தைக் கோறிநிற்பவர்கள் சொற்பகால இன்பமாம் காமியத்தால் வெதும்பி தன்மத்திற்கு மாறுகொள நடவார்கள் என்பது பொழிப்பு.

(க.) சதா இன்பத்தைக் கருதி சுகசாதனஞ் செய்பவர்கள் சொற்பநேர இன்பமாங் காமியத்தால் வெதும்பி அறநெறியைக் கடக்க மாட்டார்கள் என்பது கருத்து.

(வி.) முத்தி பேறாம் பேரின்பத்தைக் கருதி உள்ளத்திலோர் களங்கமும் அணுகவிடாது அகற்றுஞ் சாதனமுடையவர்கள் சொற்பகால இன்பத்தைக் கொடுக்குங் காம இச்சையால் தன்மவழி தவறி தங்கள் உள்ளத்தை வெதும்பச் செய்து கொள்ளமாட்டார்கள் என்பது விரிவு.

4. இலமென்று வெ∴கல் செய்யார் புலம்வென்ற
புன்மெயில் காட்சி யவர்.

(ப.) புலம்வென்ற - ஐம்புல நுகர்ச்சியினை வென்ற, புன்மெயில் - சிறந்ததேக, காட்சியவர் - தோற்றமுடையவர்கள், இலமென்று - ஒருபொருளுங் கிட்டவில்லையே யென்று, வெஃகல் செய்யார் - வெதும்பலடையார்களென்பது பதம்.

(பொ.) ஐம்புல நுகர்ச்சிகளை வென்ற சிறந்த தேகத்தோற்றமுடையவர்கள் தங்களுக்கு ஒருபொருளுங் கிடைக்கவில்லையேயென உள்ளம் வெதும்பார்கள் என்பது பொழிப்பு.

(க.) மெய், வாய், கண், மூக்கு, செவியென்னும் ஐம்புலன் உளவுகளை அறிந்த சுகதேகிகள் தங்களுக்கு யாதொன்றும் இல்லையே என வெதும்பார்கள் என்பது கருத்து.

(வி.) மெய்யினது உணர்ச்சியின்நிலையையும், கண்ணினது பார்வையின் நிலையையும், மூக்கினது முகரல் நிலையையும், செவியினது கேட்டல் நிலையையுங் கண்டுணர்ந்த சிறந்த தேகிகள் தங்களுக்கு வேறுபொருள் ஒன்றும் இல்லையேயென உள்ளம் வெதும்பித் ததும்பச் செய்துக் கொள்ளார்கள் என்பது விரிவு.

5. அ∴கி யகன்ற வறிவென்னாம் யார்மாட்டும்
வெ∴கி வெறிய செயின்

(ப.) யார்மாட்டும் - யாவரையுங்கண்டு, வெஃகி - மனந்தாளாது வெதும்பி, வெறியசெயின் - பொல்லாங்கை செய்துவிட்டு, அஃகியகன்ற - பயந்தோடும், வறிவென்னாம் - விவேக மென்னவாமென்பது பதம்.

(பொ.) ஒவ்வொருவரையுங்கண்டு மனந்தாளாது வெதும்பி தீங்குசெய்துவிட்டு பயந்தோடுவது என்ன விவேகம் என்பது பொழிப்பு.

(க.) மற்றொருவர் சுகத்தைக்கண்டு மனஞ்சகியாது வெதும்பி பித்தேறி துன்பஞ் செய்துவிட்டு பயந்தோடுவோர் அறிவும் அறிவாமோ என்பது கருத்து.

(வி.) பலர் சுகங்களையுங் கருதி தனக்குக் கிட்டாது உள்ளம் வெதும்பி அதனால் அவா பித்தேறி அவர்களுக்குத் தீங்கிழைத்து பயந்தோடும் படியான மக்களுக்கு அறிவுமுண்டோ என்னும் இரங்கல் விரிவு.

6. அருள்வெஃகி யாற்றின்க ணின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்.

(ப.) அருள்வெஃகி - கிருபையில் வெதும்பி, யாற்றின்க ணின்றான் - ஆறுதல் பெற நோக்குவோன், பொருள் வெஃகி - அழியும்பொருளை நோக்கி வெதும்புவனாயின், பொல்லாத - கொடிய துன்பங்கள், சூழக்கெடும் - சுவிழ்ந் தழிக்கு மென்பது பதம்.

(பொ.) கிருபையைநாடி வெதும்பி ஆறுதல் பெறவேண்டியவன் அழியும் பொருளைநாடி வெதும்புவானாயின் கொடுந்துன்பங் சுவிழ்ந்து கெடுக்கும் என்பது பொழிப்பு.

(க.) அருளில் வெதும்பி ஆற்றலடைய வேண்டியவன் பொய்ப் பொருளையும் நாடி வெதும்புவானாயின் சகல துன்பத்திற்கும் ஆளாவான் என்பது கருத்து.

(வி.) புறப்பற்றுக்கள் யாவும் பொய்யெனக் கண்டு அகப்பற்றாம் உண்மையில் வெதும்புவோன் மறந்தும் புறப்பற்றாம் பொய்ப்பொருளை நாடி வெதும்புவானாயின் அதுவே சகலகேட்டையும் விளைவித்துத் துன்பத்தை உண்டு செய்துவிடும் என்பது விரிவு.

7. வேண்டற்க வெஃகியா மாக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்

(ப.) வேண்டற்க - வெறுப்புற்றவன் போற் காட்டி, வெஃகியா - உள்ளுக்கு வெதும்புவோன், மாக்கம் - செல்வம், விளைவயின் - விருத்தியானது, மாண்டற்கரிதாம் - மரித்தோனுக்கொப்பாய, பயன் - பலனாமென்பது பதம்.

(பொ.) வெறுப்புற்றவன்போற் காட்டி உள்ளுக்கு வெதும்புவோன் செல்வமானது மரித்தோனுக்கொப்பாய பலனுடைத்தாம் என்பது பொழிப்பு.

(க.) வெளிக்கு வெறுப்புற்றவன்போற்காட்டி உள்ளுக்குள் வெதும்பு வோனது பயன் மாண்டவனே சாட்சியாம் என்பது கருத்து.

(வி.) மாண்டான் என்றபோதே சகலமும் ஒழித்தானென்று கூறுவதுபோல் வெளிக்கு சகல பற்றுக்களையும் அறுப்பவன் போல் அபிநயித்து உள்ளுக்குள் பொருளாசையால் வெதும்புவோனது பயனும் விழலாகும் என்பது விரிவு.

8. அஃகாமை செல்வத்திற் கியாதெனில் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

(ப.) செல்வத்திற் - ஆக்க மழியுமென்று, அஃகாமை - பயங்கொள்ளா நிலை, கியாதெனில் - எதுவென்னில், பிறன்கைப்பொருள் - அன்னியன் பொருளின்மீது, வேண்டுமென் - விருப்புற்று, வெஃகாமை - வெதும்பாதிருத்தலேயாமென்பது பதம்.

(பொ.) ஆக்கம் அழியுமென்னும் பயம் கொள்ளா நிலை யாதெனில் அன்னியன் பொருள்மீது விருப்புற்று வெதும்பாதிருத்தல் என்பது பொழிப்பு.

(க.) தனது செல்வம் அழியாதென அஞ்சாதிருப்பதற்குத் திடநிலை யாதெனில்: அன்னியர் பொருள் மீது அவாக்கொண்டு வெதும்பாதிருத்தலே நிலையாம் என்பது கருத்து.

(வி.) தான் நல்வழியால் சேகரித்துள்ளப் பொருள் கள்ளர்கைப்படுமோ, சூதர்கைப்படுமோ, வஞ்சகர்கைப்படுமோவென்று அஞ்சாதிருப்பதற்கு ஆதாரம் யாதெனில்: அன்னியர் பொருளைத் தான்கண்டு ஆசையுற்று வெதும்பாதிருத்த லேயாமென்பது விரிவு.

9. அதனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேரும்
திறனறிந் தாங்கே திரு.

(ப.) அதனறிந்து - கேட்டி னிலைகளையுணர்ந்து, வெஃகாமெ - வெதும்பாத, வறிவுடையார்க் - விவேகமுடையாரின், திறனறிந் - நெறியினை யறிந்து, தாங்கே - அவர்களிடம், திரு - செல்வமானது, சேருந் - அடையுமென்பது பதம்.

(பொ.) கேட்டின் நிலைகளை உணர்ந்து வெதும்பாத விவேக முள்ளாரின் நெறியினை அறிந்து அவர்களிடம் செல்வஞ் சேரும் என்பது பொழிப்பு.

(க.) கேட்டின் வழிகளை உணர்ந்து வெதும்பலற்று நீதிநெறியில் நிற்கும் விவேகமிகுத்தோரது செல்வம் அழியாது சேரும் என்பது கருத்து.

(வி.) உள்ளவெதும்பலால் உண்டாகுங் கேடுகளை உணர்ந்த விவேகிகளின் நீதிநெறியை அறிந்து மென்மேலும் சுகச்செல்வஞ் சேருவதுடன் அஃது கள்ளர்களாலும், வஞ்சகர்களாலும், சூதர்களாலும் அழியாது தன் சந்ததியைக் காக்குந் திருவென விளங்கும் என்பதும் விரிவு.

10. இறலீனு மெண்ணாது வெஃகின் விறலீனும்
வேண்டாமெ யென்னுஞ் செருக்கு

(ப.) இறலீனு - கேட்டினை யுணர்ந்தும், மெண்ணாது - அதனைக் கருதாது, வெஃகின் - வெதும்புவதாயின், விறலீனும் - பேரமுதை யீயினும், வேண்டாமெ - அதனைக் கருதாத, யென்னுஞ் செருக்கு - அகங்கரிப்புக் கொப்பாமென்பது பதம்.

(பொ.) கேட்டினை உணர்ந்துங் கருதாது வெதும்புவதாயின் பேரமுதைக் கொடுக்கினும் வேண்டாமென்று அகங்கரிப்பதற்கு ஒக்கும் என்பது பொழிப்பு.

(க.) இதனால் இக்கேடுண்டாயதென்று உணர்ந்தும் அவற்றைக் கருதாது மற்றும் பேரவாவால் வெதும்புவதாயின் பேரமுதை ஒருவர் ஈயினும் அதனை வேண்டாமெனத் தடுக்குஞ் செருக்குடையோனுக்கொப்பாம் என்பது கருத்து.

(வி.) காமிய வெதுப்பல், கோப வெதுப்பல், பேரவா வெதுப்பல், பசியின் வெதுப்பல்களால் உண்டாங் கேடுகளை உணர்ந்த நிலையே அமுதத்திற் கொப்பாயதாதலின் அதனைக் கருதாது மறந்தும் வெதும்புறுவதாயின் பேரமுதை யொருவர் அளித்தும் அதனைத் தனது செருக்கால் வேண்டாமென்று அகற்றியதற் ஒக்கும் என்பது விரிவு.

19. கள்ளாமெய்

இவைகள் யாவும் இல்லறத்தோன் ஒழுக்கங்களாதலின் அவ்வாழ்க்கையில் அன்னியன் பொருளை யிச்சிப்பவனது கேட்டையும் இச்சியாதோன் சுகத்தையும் இவ்விடம் விளக்குகின்றார்.

1. எள்ளாமெ வேண்டுவா னென்பா னெனத்தோன்றுங்
களளாமெ காக்கத்தன் னெஞ்சு.

(ப.) எள்ளாமெ - மற்றவர் நிந்தைக்கூடாதென, வேண்டுவா - கோறுவோன், னென்பா - என்னப்படுவோன், னெனத்தோன்றுங் - தனக்குத் தோன்றும், கள்ளாமெ - அன்னியன்பொருளை யிச்சியாதவனென, தன்னெஞ்சு - தனதுள்ளத்தைக், காக்கத் - காக்கக் கடவ னென்பது பதம்.

(பொ.) மற்றவர் நிந்தைக் கூடாதெனக் கோறுவோன் காணும் அன்னியர்பொருளை இச்சியாதவ னெனத் தனதுள்ளத்தைக் காக்கக்கடவன் என்பது பொழிப்பு.

(க.) அன்னியரால் தன்னை நிந்திக்காமல் கார்த்துக்கொள்ள வேண்டியவன் அன்னியர் பொருளைக்கண்டு இச்சியாது தனதுள்ளத்தைக் கார்க்கக்கடவது என்பது கருத்து.

(வி.) இவன் திருடன், இவன் அயோக்கியன் எனப் பலராலும் நிந்திக்கப்படாமல் வாழ்கவேண்டு மென்னும் விருப்பமுடையோன் தனது உள்ளத்தின்கண் அன்னியன் பொருளை இச்சிக்குங் குணம் எழாமல் காத்துக்கொள்ள வேண்டுமென்பது விரிவு.

2. உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளை
கள்ளத்தாற் களவே மெனல்

(ப.) உள்ளத்தா - தன தெண்ணத்தால், லுள்ளலுந் - எண்ணுதலும், தீதே - கொடிதே, பிறன்பொருளை - அன்னியருடையபொருளை, கள்ளத்தாற் - களவினால், கள்வேமெனல் - அபகரிப்போ மென்பது பதம்.

(பொ.) தன்னெண்ணத்தால் எண்ணுதலுங் கொடிதே அன்னியர் பொருளை அபகரிப் போம் என்பது பொழிப்பு.

(க.) அன்னியர் பொருளை அபகரிப்போம் என்று தனதுள்ளத்தில் எண்ணுதலே கொடிது என்பது கருத்து.

(வி.) அன்னியனது பொருளின் மீது பேரவாக்கொண்டு அதனை அபகரிக்க வேண்டுமென்று தனதுள்ளத்தில் எண்ணுதலே மிக்கத் தீதுக்குக் கொண்டு போகும் உள்ளக் கிளர்ச்சியாம் என்பதற்குச் சார்பாய் நாலடி நாநூறு "உள்ளத்தானள்ளா துறுதித்தொழிலராய்க், கள்ளத்தா னட்டார்கழிகேண்மெ - தெள்ளிப், புனற்செதும்புநின்றழிக்கும் பூங்குன்றநாட, மனத்துக்கண் மாசாய்விடும்" என கள்வனுக்குள்ளக் களங்கு பகவனுக்கு விளங்கிப்போம் என்பது விரிவு.

3. களவினா லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும்.

(ப.) களவினா - அன்னியர்பொருளை அபகரித்தலால், லாகிய - சேர்ந்த, வாக்க - செல்வமானது, மளவிறந் - மென்மேலும், தாவதுபோலக் - பெருகுவதுபோல, கெடும் - அழியுமென்பது பதம்.

(பொ.) அன்னியர் பொருளை அபகரித்ததால் சேர்ந்த செல்வமானது வளர்வது போல அழியும் என்பது பொழிப்பு.

(க.) களவினால் சேகரித்தப் பொருள் காட்சியில் வளர்வது போலவே அழிந்துப் போம் என்பது கருத்து.

(வி.) அன்னியரை வஞ்சித்துக் களவாடும் பொருட்களானது தன் கண்ணிற்குப் பெருகுவதுபோலக் காணினும் அஃது போகும்வழி தோன்றாது அழிந்துபோம் என்பது விரிவு.

4. களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும்.

(ப.) களவின்கட் - அன்னியர் பொருளை யபகரிக்கவேண்டி, கன்றிய - ஊன்றிய, காதல் - ஆசையானது, விளைவி ன்கண் - தனது விருத்தியினிடத்து, வீயா - ஒழியா, விழுமந்தரும் - துன்பத்தைக்கொடுக்குமென்பது பதம்.

(பொ.) அன்னியர் பொருளை அபகரிக்கவேண்டி ஊன்றிய ஆசையானது தனது விருத்தியினிடத்து ஒழியாத் துன்பம் தரும் என்பது பொழிப்பு.

(க.) எப்போது அன்னியன் பொருளை அபகரிக்கும் இச்சையில் ஆழ்ந்து நிற்கின்றானோ அவன் விருத்தி பெறச்செய்யுந் தொழில்கள் யாவற்றினுந் துன்பத்தை அநுபவிப்பான் என்பது கருத்து.

(வி.) கஷ்டப்பட்டு சம்பாதிக்க வேண்டுமென்னும் நாணய முயற்சியை விடுத்து அன்னியன் பொருளை அபகரிக்க விரும்பும் பேரவாவுடையவன் செய்யுந் தொழில்கள் யாவற்றினுந் துன்புற்று அலைவான் என்பது விரிவு.

5. அருள்கருதி யன்புடை யராதற் பொருள்கருதிப்
பொச்சப்புப் பார்ப்பார் கணில்.

(ப.) அருள்கருதி - கிருபையை விரும்பி, யன்புடையராதல் - சிவனிலை யடைதல், பொருள் கருதி - அன்னியரதுபொருளை விரும்பி, பொச்சாப்புப் - அழியுநிலையை, பார்ப்பார்கணில் - நோக்குவோரிடத்திராவென்பது பதம்.

(பொ.) கிருபையை விரும்பி சிவநிலையடைதல் அன்னியர் பொருளை விரும்பி அழியுநிலையை நோக்குவோரிடத்து இரா என்பது பொழிப்பு.

(க.) அழியாக் கருணையைக் கருதி சிவநிலையமாதல், அழியும்பொருளை நோக்கி யிச்சிப்பவரிடத்து இரா என்பது கருத்து.

(வி.) அன்னியரது பொருளினை இச்சித்து அதையே நோக்குவோரிடத்து அருளைவிரும்பி அன்பில் நிலைக்கும் நோக்கமிராது என்பது விரிவு.

6. அளவின்க ணின்றொழுக லாற்றார் களவின்கட்
கன்றிய காத லவர்.

(ப.) அளவின்க - நீதிநெறியில், ணின்றொழுக - ஒழுக்கத்தில், லாற்றார் - ஆறுத லடையாதவர்கள், களவின்கட் - அன்னியர் பொருளை யபகரிக்கும் வழியில், கன்றிய - வெதும்பிய, காதலவர் - அவாமிகுத்தவர்க ளாவரென்பது பதம்.

(பொ.) நீதிநெறியின் ஒழுக்கத்தில் ஆறுதலடையாதவர்கள் அன்னியர் பொருளை அபகரிக்கும் வழியில் வெதும்பிய அவா மிகுத்தவர்களாவர் என்பது பொழிப்பு.

(க.) நீதிநெறி ஒழுக்கத்தின் சுகநிலை அறியாதவர்கள் அன்னியர் பொருளை அபகரிக்கும் வழியில் மனம் வெதும்பி அவாகொண்டு அலைவார்கள் என்பது கருத்து.

(வி.) அன்னியரது பொருளை அபகரிக்கும் எண்ணத்திலேயே மனங்கன்றி அவாமிகுத்தவர்களுக்கு நீதிநெறி ஒழுக்கத்தின் செயலால் உண்டாம் ஆறுதலும் அதன் பயனும் விளங்காது என்பது விரிவு.

7. களவென்னுங் காரறி வாண்மை யளவென்னு
மாற்றல் புரிந்தார்க ளில்

(ப.) களவென்னுங் - அன்னியர் பொருளை அபகரிப்பதென்னும், காரறி - அஞ்ஞான, வாண்மை - அகங்கரிப்பு, யளவென்னு - நீதிநெறி யொழுக்கத்தால், மாற்றல் - ஆறுதல், புரிந்தார்களில் - அடைந்தவர்களிடத் திராவென்பது பதம்.

(பொ.) அன்னியர் பொருளை அபகரிப்பதென்னும் அஞ்ஞான அகங்கரிப்பு நீதிநெறி ஒழுக்கத்தால் ஆறுதலடைந்தவர்களிடத்து இரா என்பது பொழிப்பு.

(க.) நீதிநெறி யொழுக்க அளவில் ஆறுதலடைந்தோருக்கு அன்னியர் பொருளை அபகரிப்போம் என்னும் அஞ்ஞானமாய அகங்கரிப்பு இரா என்பது கருத்து.

(வி.) நீதியில் நடக்க வேண்டிய அளவும் நெறியில் நிற்கவேண்டிய அளவுங் கடக்காது ஒழுகி ஆறுதலடைந்து உள்ளார்க்கு அன்னியர் பொருளை அபகரிக்க வேண்டும் என்னும் அஞ்ஞானமாகிய அகங்கரிப்பு உள்ளத்தில் மறந்தும் எழாது என்பது விரிவு.

8. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் காவு.

(ப.) அளவறிந்தார் - நீதிநெறி யளவுகடவாது நின்றோர், நெஞ்சத - உள்ளத்தின்கண், தறம்போல நிற்குங் - ஆனந்தம் நிலைத்திருப்பதுபோல, களவறிந்தார் - அன்னியர் பொருளை யபகரிப்போரது, நெஞ்சிற் - உள்ளத்தின் கண், காவு - துக்கம் நிலைத்திருக்குமென்பது பதம்.

(பொ.) நீதிநெறி அளவுகடவாது நின்றோர் உள்ளத்தின்கண் ஆனந்தம் நிலைத்திருப்பதுபோல அன்னியர் பொருளை அபகரிப்போரது உள்ளத்தின்கண் துக்கம் நிலைத்திருக்கும் என்பது பொழிப்பு.

(க.) நீதிநெறியின் அளவறிந் தொழுகுவோர் இதயத்தில் ஆனந்தம் நிலைத்திருப்பதுபோல கள்ளர்களிடத்து துக்கம் நிலைத்திருக்குமென்பது கருத்து.

(வி.) நீதிநெறியின் ஒழுக்க அளவுகடவாத தன்மப்பிரியர்களுக்கு ஆனந்தம் நிலைத்திருப்பதுபோல அன்னியர்பொருளை அபகரிக்கும் வஞ்ச நெஞ்சினர்களுக்கு மாறா துக்கமும் பயமும் நிலைத்திருக்கும் என்பது விரிவு.

9. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர்

(ப.) களவல்ல - அன்னியர் பொருளையபகரிக்கலாகாதென, தேற்றாதவர் - சொல்லியுங் கேளாதவர், மற்றைய - ஏதுக்குமஞ்சாது, அளவல்ல - நீதிநெறியற்ற, செய்தாங்கே - செயல்களைச்செய்து, வீவர் - கெடுவரென்பது பதம்.

(பொ.) அன்னியர் பொருளை அபகரிக்கலாகாதென சொல்லியுங் கேளாதவர் எதுக்குமஞ்சாது நெறியற்ற செயல்களைச் செய்து கெடுவார்கள் என்பது பொழிப்பு.

(க.) களவுசெய்வது கொடிது என்று கூறியும் அவற்றை உணர்ந்தறியாதோர் யாதொன்றுக்கும் அஞ்சாது கொடுஞ் செயல்களைச்செய்து கேடுண்டு அலைவார்கள் என்பது கருத்து.

(வி.) களவாகாது என்பதே களவல்ல என மறுவியுளதால் அன்னியர் பொருளை அபகரிப்பது தீங்கை விளைவிக்குமென தேற்றக்கூறியுந் தேறாத வன்னெஞ்சினர் ஏதுக்குமஞ்சாது மற்றுங் கொடுந் தீங்குகளைச்செய்து தீவினைக்குள்ளாகி மாளாதுன்புற்று கெடுவார்களென்பது விரிவு.

10. கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்கு
தள்ளாது புத்தே ளுலகு.

(ப.) கள்வார்க்குத் - களவாணிக்கபடரை, தள்ளு - அகற்றும், முயிர் நிலை -உண்மெய், கள்ளார்க்கு - களவாணிக ளல்லோரை, தள்ளாது - அகற்றாது, புத்தேளுலகு - புத்ததேவ னுலகமென்பது பதம்.

(பொ.) களவாணிக்கபடரை உண்மெ நிலை அகற்றும் களவாணிக ளல்லோரை புத்ததேவன் உலகம் அகற்றாது என்பது பொழிப்பு.

(க.) அன்னியர் பொருளை அபகரிக்குங் கள்ளரை அவர்களுள் உண்மெ நிலையாம் உயிர்நிலையே அகற்றும். அன்னியர் பொருளை அபகரிக்காதோரை அகற்றாது புத்ததேவன் உலகுய்க்கும் என்பது கருத்து.

(வி.) உயிர்நிலையே உண்மெய்யனாம் புத்ததேவன் உலகாதலின் அந்நிலை உணராது அன்னியர் பொருள்மீது அவாக்கொண்டு அலைவோரை சுகநிலை கெட அகற்றும். அவ்வவா அற்றோரை உயிர்நிலையாம் புத்ததேவன் உலகம் அகற்றாது சேர்த்து சுகம்பெறச்செய்யும் என்பது விரிவு.

20. கள்ளுண்ணா மெய்

இல்லறத்தோன் தனது வாழ்க்கை ஒழுக்கத்தில் எத்தகைய நிதானமுற்றிருப்பினும் வழுவுற்று அலைவது இயல்பாதலின் அத்தகையோன் தனது அறிவை மயக்கும் கள்ளினை அருந்துவானாயின் முற்றும் அறிவு மயங்கி பாழடைவானாகலின் அக்கள்ளினை அருந்துவோனது கேடுகளை விளக்குகின்றார்.

1. உட்கப் படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகு வார்.

(ப.) கட்காதல் - கள்ளின்மீதவா, கொண்டொழுகுவார் - கொண்டலைவோர், ரெஞ்ஞான்றும் - எக்காலத்தும், உட்கப்படாஅ - தங்கள் நாணமற்று, ரொளியிழப்ப - கீர்த்தியையு மழித்துக்கொள்ளுவார்களென்பது பதம்.

(பொ.) கள்ளின்மீது அவாக்கொண்டு அலைவோர் எக்காலத்தும் தங்கள் நாணமற்று கீர்த்தியையும் அழித்துக் கொள்ளுவார்கள் என்பது பொழிப்பு.

(க.) கள்ளை அருந்தும் ஆசைகொண்டு அலைவோர் எந்தகாலத்தும் வெட்கமென்பது அற்று தங்கள் புகழையுங் கெடுத்துக் கொள்ளுவார்கள் என்பது கருத்து.

(வி.) தனது அறிவை மயக்குங் கள்ளென்று அறிந்தும் அதன்மீது காதல்கொண்டு அலைவோர் தான்கற்றக் கல்வியிலுங் கைத்தொழிலிலும் உண்டாயக் கீர்த்தியும் அழிந்து எக்காலுங் கேடுற்று அலைவார்கள் என்பது விரிவு.

2. உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரா
லெண்ணப்பட வேண்டா தோர்.

(ப.) சான்றோரா - விவேகமிகுத்தவர்கள், லெண்ணப்பட - கருத்திலும், வேண்டாதார் - இச்சியாத, கள்ளை - மதுவினை, உண்ணற்க - பலரறியவு மருந்தலாகாது, யுணிலுண்க - ஒதிங்கியு மருந்தலாகாதென்பது பதம்.

(பொ.) விவேகமிகுத்தவர்களால் கருத்திலும் இச்சியாதக் கள்ளினை பலரறியவும் அருந்தலாகாது அடக்கத்திலும் அருந்தலாகாது என்பது பொழிப்பு.

(க.) விவேகிகளாம் சாதுக்களால் உள்ளத்திலும் இச்சியாத கள்ளினை பலர் காணவும் குடிக்கலாகாது காணாதுங் குடிக்கலாகாது என்பது கருத்து.

(வி.) சாதுக்களாகிய பெரியோர் தங்கள் இதயத்தின் கண்ணும் இச்சி யாது அகற்றி வைத்துள்ளக் கள்ளினை மக்கள் பலர் காணவும் அருந்தலாகாது பலர் காணாதும் அருந்தலாகாது என்பதற்குச் சார்பாக அறநெறிச்சாரம் "ஒளியுமொளிசான்ற செய்கையுஞ் சான்றோர், தெளிவுடையரென்றுரைக்குந் தேசும் - களியென்னும், கட்டுரையாற் கோதப்படுமேல் இவையெல்லாம், விட்டொழியும் வேறாய் விரைந்து" என்ற கள்ளினை இச்சித்தலே தகாது என்பது விரிவு.

3. ஈன்றாண் முகத்தேயு மின்னாதா லென்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி.

(ப.) ஈன்றாண் - பெற்றவளே, முகத்தேயு - பிள்ளையின்முகத்தை, மின்னாதா - பார்க்க அருவெறுக்குங்கால், லென்மற்று - மற்றவேறாம், சான்றோர் - பெரியோர்கள், களி - கள்ளினை, முகத்து - நோக்குவரோவென்பது பதம்.

(பொ.) பெற்றவளே கள் குடித்துள்ள தன் பிள்ளையின் முகத்தைப்பார்க்க அருவெறுக்குங்கால் மற்றும் வேறாம் பெரியோர்கள் கள்ளினைக் கண்ணிலும் நோக்குவரோ என்பது பொழிப்பு.

(க.) கள்ளினைக் குடித்து வெறித்துள்ளப் பிள்ளையின் முகத்தை ஈன்றெடுத்த தாயே பார்க்க இச்சியாதபோது மற்றும் வேறாம் பெரியோர்கள் அக்கள்ளினை கண்ணிலும் பார்ப்பரோ என்பது கருத்து.

(வி.) ஈன்று அமுதூட்டி எறும்பு அணுகாது காத்து இரட்சித்தத் தாயானவள் கள்ளினைக் குடித்து வெறித்துள்ளத் தன் பிள்ளையின் முகத்தைப்பார்க்க அருவெறுக்குங்கால் வேறாய சாதுக்கள் அக்கள்ளினை தங்கள் முகத்திலும் நோக்குவாரோ, நோக்கார்கள் என்பது விரிவு.

4. நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு

(ப.) கள்ளென்னும் - மதுவினை யருந்தும், பெருங்குற்றத்தார்க்கு - மிகுக் கொடியோர்களை, நாணென்னு - அச்சமிகுத்த, நல்லாள் - பதிவிரதையும், பேணா - இச்சியாது, புறங்கொடுக்குங் - முகத்திருப்புவாளென்பது பதம்.

(பொ.) மதுவினை அருந்தும் மிகுக்கொடியோர்களை அச்சமிகுத்தப் பதிவிரதையும் இச்சியாது முகந்திருப்புவாள் என்பது பொழிப்பு.

(க.) கள்ளினை அருந்துங் கணவர்கள் கொறூர முகத்தைக் காணற்கு அஞ்சி தனது இல்லாளும் முகத்திருப்பஞ் செய்துக்கொள்ளுவாள் என்பது கருத்து.

(வி.) பெரியோர் இச்சித்தற்குத் தகுதியற்றதாய கள்ளினை அருந்துங் கொடியோர்கள் முகத்தை தங்கள் இல்லாள்களாகும் நல்லாளும் பார்ப்பதற்கு அஞ்சி தங்கள் தங்கள் முகங்களைத் திருப்பிக்கொள்ளுவார்கள் என்றும் தன் மனைவியும் வெறுத்துப்புறம் போவாள் என்பது விரிவு.

5. கையறி யாமெ யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமெ கொளல்.

(ப.) கையறியாமெ - அநுபவத்திற் கண்டறியாதோன், யுடைத்தே - தன்னிடத்துள்ள, பொருள்கொடுத்து - பணங்கொடுத்து குடித்து, மெய்யறியாமெ

- உண்மெயறியாது, கொளல் - கெடுத்துக்கொள் ளுதற்கொக்குமென்பது பதம்.

(பொ.) அநுபவத்திற் கண்டறியாதோன் தன்னிடத்துள்ளப் பணங் கொடுத்துக் குடித்து உண்மெ அறியாது கெடுத்துக் கொள்ளுதற்கு ஒக்கும் என்பது பொழிப்பு.

(க.) கட்குடியினால் உண்டாங் கேடுகளைக் கண்டும் அநுபவ மறியாதவன் உடைய பணத்தைக்கொடுத்துக் குடித்து உண்மெயைக் கெடுத்துக் கொள்ளுவதற்கு ஒக்கும் என்பது கருத்து.

(வி.) உண்மெய்ப்பொருளை அறியவேண்டி மக்கள் படுவது உலகறிந்திருக்க அவ்வனுபவத்தைக் கைகண்டதென்று உணராது கேட்டினைத் தன் பொருள் கொடுத்துப் பெற்றுக்கொள்ளுதல்போல் தன்னிடத்துள்ளப் பணத்தைக் கொடுத்து அறிவை மயக்குங் கள்ளினை வாங்கி அருந்துவதாகும் என்பது விரிவு.

6. துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

(ப.) துஞ்சினார் - தன்னை மறந்து தூங்கினோர், செத்தாரில் - மரித்தோருக்கு, வேறல்ல - மாறுபடாததுபோல், ரெஞ்ஞான்று எக்காலத்தும், கள்ளுண்பவர் - மதுவினை யருந்துவோர், நஞ்சுண்பார் - விஷத்தினை யருந்துவோருக் கொப்பாவ ரென்பது பதம்.

(பொ.) தன்னை மறந்து தூங்கினோர் மரித்தோருக்கு மாறுபடாததுபோல எக்காலும் மதுவினை அருந்துவோர் விஷத்தைக்குடிப்போருக்கு ஒப்பாவர் என்பது பொழிப்பு.

(க.) சகலவற்றையு மறந்து நித்திரையால் மூடுபட்டவன் மரணமடைந்தோனுக்கு சமம் ஆவதுபோல் கள்ளினை என்நேரமுங் குடிப்பவன் தினேதினே விஷத்தினை அருந்துவோனுக்கு ஒக்குமென்பது கருத்து.

(வி.) நினைவற்று பெண்டுபிள்ளைகளையும் மறந்து சேகரித்துள்ளப் பொருள்களையும் மறந்து தூங்கினவன் மரணமுற்றோனுக்கு ஒப்பாவதுபோல் சகலவற்றையும் மறக்கச் செய்யுங் கள்ளினை அருந்தி திரிவோன் மதிமயங்கிக் கேடுண்டு மரிப்பானாதலின் அவன் எக்காலும் விஷத்தினை அருந்துவோனுக்கு ஒப்பாவன் என்பது விரிவு.

7. உள்ளொற்றி யுள்ளூர் நகப்படு ரெஞ்ஞான்றுங்
களவொற்றிக் கண்சாய் பவர்.

(ப.) யுள்ளூர் - தான் வசிக்கும் ஊரில், உள்ளொற்றி - ஒத்துவாழ்பவர், கள்ளொற்றி - கள்ளை யருந்தி, கண்சாய்பவர் - விழி மறைந்தோரை, ரெஞ்ஞான்றுங் - எக்காலத்தும், நகப்படுவ -அகன்றே - நிற்பார்களென்பது பதம்.

(பொ.) தான் வசிக்கும் ஊரில் ஒத்து வாழ்வோர் கள்ளைஅருந்தி விழி மறைந்தோரை எக்காலமும் அகன்றே நிற்பார்கள் என்பது பொழிப்பு.

(க.) ஊரில் தன்னுடன் ஒத்து நேசித்து வந்தவர்கள் யாவரும் கள்ளைஅருந்தி கண்மயங்கி நிற்போரைக் கண்டவுடன் நேசியாது தூரவே அகன்றுவிடுவார்கள் என்பது கருத்து.

(வி.) தனது ஊரில் தன்னுடன் நேசித்து அன்பு பொருந்தி ஒத்து வாழ்ந்துள்ளோர் யாவருங் கள்ளைக்குடித்து வெறியேறி கண்மயக்குற்றவர்களைக் கண்டவுடன் அவர்கள் அருகில் நெருங்காமலும் ஒருதவியும் புரியாமலுந் தூரவே விலகிப்போவார்கள் என்பது விரிவு.

8. களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததுஉ மாங்கே மீகும்.

(ப.) களித்தறியே - கள்குடியாதானந்தமறியேன், னென்பது - என்று கூறும்படியானதை, கைவிடுக - மறந்துவிடுவாயாக, நெஞ்சத் - உள்ளத்திலவ் வெண்ணமே, தொளித்ததுஉ - அடங்கி, மாங்கேமிகும் - அவ்வாசையையே அதிகரிக்கச்செய்யுமென்பது பதம்.

(பொ.) கள்குடியாத ஆனந்தம் அறியேன் என்று கூறும்படியானதை மறந்துவிடுவாயாக. உள்ளத்தில் அவ்வெண்ணமே அடங்கி அவ்வாசையையே அதிகரிக்கச்செய்யும் என்பது பொழிப்பு.

(க.) கள்ளைக் குடிப்பதால் சொற்ப ஆனந்தமுண்டு அதனைக் குடியாததால் ஏதொரு ஆனந்தமும் அறியேனே என்னும் எண்ணத்தைப் பதியாது அகற்றிவிடுவாயாக மனதின்கண் அவ்வெண்ணமே அடங்கி அவ்வாசையே அதிகரித்துப்போம் என்பது கருத்து.

(வி.) கள்ளினைக் குடித்து வெறிப்பதால் ஓர் ஆனந்தமுண்டு. அதனைக் குடியாது வேறானந்தமும் அறியேனே என்னும் எண்ணத்தைக் கைவிடுவாயாக. அவ்வகை எண்ணுவதாயின் அவ்வெண்ணமே அதிகரித்து அந்த சொற்ப ஆனந்தத்தில் விடுத்து மாறா துக்கத்திற்குக் கொண்டுபோய்விடுமாதலால் அவ்வானந்த எண்ணத்தையே நெஞ்சிற் பதியவைக்கலாகாது என்பது விரிவு.

9. களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீ யற்று.

(ப.) களித்தானை - கட்குடித் தானந்தித்தோனின், காரணம் - செயலை, காட்டுதல் - விளக்குதல், கீழ்நீர் - சேற்றுநீரில், குளித்தானைத் - மூழ்கினோனுக் கொப்பாக, தீத்துரீஇயற்று - சீலமற்றோன் நிலைபோ லாமென்பது பதம்.

(பொ.) கள்குடித்து ஆனந்தித்தோனின் செயலை விளக்குதல் சேற்றுநீரில் முழுகினோனுக்கு ஒப்பாக சீலமற்ற நிலை யாகும் என்பது பொழிப்பு.

(க.) கள்குடித்துள்ளவனின் ஆனந்தம் மற்றவர்களுக்கு எவ்வகையாகக் காட்டுமென்னில் சீலமற்று சேற்றுநீரில் குளித்து வந்தவனைப் பார்ப்பது ஒக்கும் என்பது கருத்து.

(வி.) கள்ளைக் குடித்து வெறித்து ஆனந்திப்பது அவனுக்கு சுகமாகத் தோற்றினும் மற்றும் பார்ப்பவர்களுக்கு குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்டு சீலமற்று உலாவுவோனைப்போற் காணப்படுவதுமன்றி அவனருகில் நெருங்கி தீண்டாமலும் பேசாமலுந் தீத்துரீ இயன் என்று அகலுவார்கள் என்பது விரிவு.

10. கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கா
லுள்ளான் கொலுண்டதன் சோர்வு.

(ப.) கள்ளுண்ணா - தான்கள் குடியாத, போழ்திற் - காலத்தில், களித்தானை - கட்குடித் தானந்திப்போனை, காணுங்கால் - பார்ப்பானாயின், லுண்டதன் - கள்ளினையருந்திய, சோர்வு - கெடுதியை, லுள்ளான்கொ - தனக்குள்ளறிவா னென்பது பதம்.

(பொ.) தான் கள்குடியா காலத்திற் கள்ளைக்குடித்து ஆனந்திப்போனைப் பார்ப்பானாயின் கள்ளினை அருந்தியக் கெடுதியை தனக்குள் அறிவான் என்பது பொழிப்பு.

(க.) கள்குடியன் தான் குடியாத காலத்தில் கள்குடித்துள்ளவனுடைய சோர்வைக் காணுவானாயின் அக்கேடு தன்னில் தானே விளங்கும் என்பது கருத்து.

(வி.) எக்காலுங் கள்ளைக்குடித்து ஆனந்திப்பேன் என்பவன் ஏதிரி ஒருவன் அக்கள்ளினைக் குடித்து வெறித்து மதிமயங்கிச் செய்யுங் கொடுஞ்செயல்கட்கு அஞ்சி பல்லோர் இகழவும் பாதுகாவலில் அடைக்கவுமுள்ளதைக் காணுவானாயின் அதனாலுண்டாம் சிறு வானந்தமும் பெருங்கேடுந் தன்னில் தானே விளங்கும் என்பது விரிவு.

21. கொல்லாமை

அதாவது இல்லறத்தில் இன்புற்று வாழ்க விருப்பமுடையோன் சருவ சீவராசிகளையுந் துன்புறச் செய்யாமல் சீவகாருண்யமுற்று வாழ்வானாயின் சகல சுகமும் பெற்று வாழ்க்கைநல மடைவதன்றி மனிதன் என்னும் பெயரற்று

தெய்வநிலை அடைவது திண்ண மாதலின் கொல்லாமையின் சிறப்பைக் கூறியுள்ளார்.

1. அறவினை யாதெனிற் கொல்லாமே கோறல்
பிறவினை யெல்லாந் தரும்.

(ப.) அறவினை - தன்மகன்மம், யாதெனில் - எதுவென்றால், கொல்லாமை - சீவப்பிராணிகளை வதையாதேயென, கோறல் - வேண்டுதலால், பிறவினை - மற்றும் நற்கன்மங்கள், யெல்லாந்தரும் - யாவுமுண்டாமென்பது பதம்.

(பொ.) தன்ம கன்மம் எது வென்னில் சீவப்பிராணிகளை வதையாதே என வேண்டுதலால் மற்றும் நற்கன்மங்கள் யாவும் உண்டாம் என்பது பொழிப்பு.

(க.) வேண்டும் நல்வினைகளில் சீவப்பிராணிகளைத் துன்பஞ் செய்யாதிருத்தலே சகல நற்கன்மங்களுக்கும் ஈடாம் என்பது கருத்து.

(வி.) தான் கோறிச்செய்யும் நல்வினைகள் யாவற்றிற்கும் சீவப்பிராணிகளை வதைத்துத் துன்பஞ்செய்யாதிருத்தலே தலையாய தன்மச் செயல் என்பதற்குச் சார்பாய் *அறநெறிச்சாரம்* "கொன்றூனு கருங் கொடுமையெ யுண்ணினைந், தன்றேவொழியவிடுவானேல் - என்றும், இடுக்கணெனவுண்டோ இல்வாழ்க்கைக்குள்ளே, படுத்தானாந் தன்னைத்தவம்" என்பது கொண்டு கொல்லாமை கோறலே தலையாய நல்லறமென்பது விரிவு.

2. பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை.

(ப.) பகுத்துண்டு - சரிபாகங் கொடுத்து புசித்து, பல்லுயிரோம்புத - சருவ வுயிர்களையுங் காத்தலையே, நூலோர் - அறநூலோர், தொகுத்தவற்று - கூறியுள்ளவைகளில், ளெல்லாந்தலை - முதலாக வகுத்துள்ளாரென்பது பதம்.

(பொ.) சரிபாகங் கொடுத்து புசித்து சருவவுயிர்களையுங் காத்தலையே அறநூலோர் கூறியவைகளில் ஆதியாக வகுத்துள்ளார்கள் என்பது பொழிப்பு.

(க.) தான் சேகரித்தப் பொருட்களை சருவசீவர்களுக்கு இட்டு உண்டு காத்தலையே தன்மநூலோர் தொகுத்துள்ளவற்றுள் தலையாக வகுத்துள்ளார் என்பது கருத்து.

(வி.) தனக்குக் கிடைத்தவற்றைத் தான்மட்டிலும் புசித்து மலமாக்கிப் போக்காது ஏனைய சீவராசிகளுக்கும் இட்டுண்டு உயிரளித்துக் காத்தலையே தன்மநூலோர் தலையாக வகுத்துக் கூறியுள்ளார்கள் என்பது விரிவு.

3. ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

(ப.) ஒன்றாக - முதலாக, நல்லது - நல்வினை யென்பது, கொல்லாமை - ஒருயிரையுந் துன்பஞ்செய்யாததேயாம், மற்றதன் - மற்று மதற்கு, பின்சார - அடுத்ததுபோல், பொய்யாமை - பொய்யனாகாமையே, நன்று - நல்லதாமென்பது பதம்.

(பொ.) முதலாய நல்வினை என்பது ஒருயிரையுந் துன்பஞ் செய்யாததேயாம். மற்றும் அதற்கடுத்ததுபோல் பொய்யன் ஆகாமையே நல்லதாம் என்பது பொழிப்பு.

(க.) ஒருவன் செய்வினைகளில் கொல்லாவிரதங்கொண்டு வாழ்தலே முதலாயதாயினும் அதன்பின் தான் கொல்லப்படும் இறந்தானென்னும் பொய் ஆகாதிருத்தலே நல்லதாம் என்பது கருத்து.

(வி.) மனிதன் எடுத்தாளும் நற்கன்மங்களில் ஒருயிரையுங் கொல்லாதிருத்தலே தலையாய கன்மமாயினும் அதனாற் சீவகாருண்ய சாந்தவருவேறி பொய்யனாம் இறந்தான் என்னும் பெயரெடாது மெய்யனாம் புத்தனாகவேண்டுமென்பதற்குச் சார்பாய் *அறநெறிச்சாரம்* "அறிவுமிகப் பெருக்கி ஆங்காரநீக்கி, பொறியைந்தும் வெல்லும் வாய்ப்போற்றிச் - செறிவினான், மன்னுயிரோம்புந் தகைத்தேகா ணன்ஞானம், தன்னையுயக்கொள்வது" சீவகாருண்ய மற்று பொய்யனாகாது சீவகாருண்யமுத்திமெய்யனாம் புத்தநிலை அடையவேண்டுமென்பது விரிவு.

4. நல்லா ரெனப்படுவதியா தெனின் யாதொன்றுங்
கொல்லா மெகூழும் நெறி.

(ப.) நல்லாரெனப்படுவ - நல்லவரென்று சொல்லும்படியானவை, யாதெனின் - எதுவென்றால், யாதொன்றுங் - ஏதொரு சீவப்பிராணிகளையும், கொல்லாமெ - துன்பஞ்செய்யாதிருத்தலே, சூழும் - அமைந்த, நெறி - கடைப்பிடியாம் என்பது பதம்.

(பொ.) நல்லவன் என்று சொல்லும்படியானவை எதுவென்றால், ஏதொரு சீவப்பிராணிகளையும் துன்பஞ் செய்யாதிருத்தலே அமைந்த கடைப்பிடியாம் என்பது பொழிப்பு.

(க.) எல்லோராலும் நல்லவன் என்று சொல்லும்படியான அறிகுறி யாதெனில் சருவசீவர்களுக்குந் துன்பஞ்செய்யாத நிறைந்த வொழுக்கத்தினால் என்பது கருத்து.

(வி.) உலகத்தில் சகலராலும் நல்லவன் என்று சொல்லுமொழி ஏதெனில் மனுக்களுக்கு மட்டிலுங் நல்லவனென்று தோற்றமுற்று எறும்பு கடை யானை முதலாயுள்ள சீவராசிகளைத் துன்பஞ்செய்வானாயின் அவன் நல்லவனென்று அழைக்கப்படமாட்டான். சருவவுயிர்களின்மீதும் அன்புபொருந்தி கருணாநாயகனென்னும் நல்லொழுக்கஞ் சூழ்ந்து நன்னெறியில் நிலைத்த வனையே நல்லவனென்று அழைக்கலாம் என்பதற்குச் சார்பாய் *அறநெறிச்சாரம்* "நல்வினைநாற்கால்விலங்கு நவைசெய்யுங் கொல்வினையஞ் சிக்குயக்கலம் - நல்வ, உறுதியுமல்லவும் நாட்பேர் மாப்பேர், இறுதியிலின்பந்தரும்" என்பதில் மிருகங்களும் நல்வினைச் செய்வதுண்டு, அதற்கொப்ப மனிதனும் ஏதோ வோர் நல்வினைச் செய்வதிற் பயனில்லை கொல்வினையற்றிருப்பதே பயன் என்பது விரிவு.

5. நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சி
கொல்லாமெ சூழ்வான் றலை.

(ப.) நிலையஞ்சி - துக்கம் நிலையா யுள்ளதென பயந்து, நீத்தாரு - துறந்தாரி, ளெல்லாங் - யாவரினும், கொல்லாமெ - சீவர்களைத் துன்பஞ் செய்யாது, சூழ்வான் - கருணை நிறைந்தோனே, தலை - முதலவரென்பது பதம்.

(பொ.) துக்கம் நிலையாய் உள்ளதென்று பயந்து துறந்தார் யாவரினும் சீவர்களைத் துன்பஞ்செய்யாது கருணை நிறைந்தோனே முதலவன் என்பது பொழிப்பு.

(க.) துக்கமே என்றும் நிலையாய் உள்ளது என்றஞ்சி துறவுபூண்டவருள் சீவராசிகளுக்கு துக்கத்தை உண்டுசெய்யாதவனே முதலவன் என்பது கருத்து.

(வி.) உலகத்தில் தோன்றியுள்ள மக்களுக்கு பிறவி துக்கம், பிணி துக்கம், மூப்பின் துக்கம், மரண துக்கமே நிலையாயுள்ளதுகண்டு பயந்து இல்லந் துறந்த வருள் சீவராசிகளுக்குத் துக்கத்தை விளைவிக்காத கருணை மிகுத்தோன் எவனோ அவனே துறந்தோருள் தலைவனாவன் என்பது விரிவு.

6. கொல்லாமெ மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று.

(ப.) கொல்லாமெ - ஒருயிரையும் வதையாச்செயலை, மேற்கொண்டொழுகுவான் - முக்கியமாகக் கருதிநடப்போன், வாழ்நாண்மேன் - சுகமாய வாழ்க்கை தினத்து, துயிருண்ணுங்கூற்று - மரணத்துக் கேதுவாய துன்பங்கள், செல்லா - நடவாது என்பது பதம்.

(பொ.) ஒருயிரையும் வதையாச் செயலை முக்கியமாகக் கருதிநடப்போன் சுகவாழ்க்கை தினத்து மரணத்துக் கேதுவாய துன்பங்கள் நடவாது என்பது பொழிப்பு.

(க.) சீவகாருண்ய முதிர்ந்து ஒருயிரினையுந் துன்பஞ் செய்யாதவனது வாழ்க்கையில் மரணத்துக்கேதுவாய யாதாமோர் துன்பமும் அணுகாது என்பது கருத்து.

(வி.) மனிதனது வாழ்நாளில் யாதாமோர் சீவப்பிராணிகளையுந் துன்பஞ்செய்யாது அவைகளின் மீது கருணைவைத்து காப்பானாயின் தனக்கு மரணத்துக்கு ஒப்பாய துன்பங்கள் யாதும் அணுகாது என்பதற்குச் சார்பாய் அறநெறிச்சாரம் "பிரப்பு நீர்வையகத்துப்பல்லுயிர்கட்கெல்லாம், இரப்பாரில் வள்ளல்களுமி ல்லை - இரப்பவர், இம்மெப்புகழு மினிச்செல் கதிப்பயனும், தம் மெத் தலைப்படுத்தலால்" என்னும் சருவ உயிர்களின்மீதும் இரக்கமுற்றோருக்கு இம்மெய்யிற் புகழும் இனிசெல்லும் நற்கதியின் பயனும் உண்டாம் என்பது கொண்டு ஒரு உயிரையும் வதையாதோன் தன்னுயிர்த் துன்பம் அடையான் என்பது விரிவு.

7. தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.

(ப.) தன்னுயிர் - தனதுயிர், நீப்பினும் - நீங்குங்காலமாயினும், பிறிதுயிர் - மற்றும் சீவப்பிராணிகளினுயிரை, நீக்கும்வினை - போக்குஞ்செயலை, தான் - தானே, செய்யற்க செய்யாதகலுகவென்பது பதம்.

(பொ.) தனதுயிர் நீங்குங்காலமாயினும் மற்றும் சீவப்பிராணிகளின் உயிரை போக்குஞ் செயலைத் தானே செய்யாது அகலுக என்பது பொழிப்பு.

(க.) தன்னுயிர் நீங்கும் ஒத்தக்காலம் நேரினும் அக்காலத்தும் பிறிதோருயிரைத் தானே கொலைசெய்யலாகாது என்பது கருத்து.

(வி.) சில கூட்டத்தோருள் பெரியோருக்கேனும் சிறியோருக்கேனு ஓர் பிணியுண்டாயின் உயிர்போ மென்று அஞ்சிப் பிறிதுயிரினைக் கொல்லும் பேதையர்களின் செயலை உணர்ந்த பெரியோன் தன்தீவினையால் தனதுயிர் நீங்கும்படியான பிணியின் உபவத்திரவந் தோன்றியுள்ளதைத் தானேயுணர்ந்து அதற்கேதுவாய சிகிட்சைபுரியாது தன்னுயிர்காக்கப் பிறிதுயிரை வதைப்பதாயின் அத்தீவினையின் பயனே மேலும் மேலுந் துன்பத்தை விளைவிக்குமாதலின் தன்னுயிர் நீங்குங்காலம் நேரினும் அன்னியப் பிராணிகளுக்குத் துன்பத்தை உண்டுசெய்யலாகாது என்பது விரிவு.

8. நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகு மாக்கங் கடை.

(ப.) நன்றாகு - சகல சுகத்தையுந்தரும், மாக்கம் - செல்வமே, பெரிதெனினும் - மேலாக விளங்கினும், சான்றோர்க்குக் - சாந்தரூபிகளுக்கு, கொன்றாகு - கொல்லாவிரதமாகும், மாக்கம் - செல்வமே, கடை - நிலையாமென்பது பதம்.

(பொ.) சகலசுகத்தையுந்தரும் செல்வமே, மேலாகவிளங்கினும் சாந்தரூபிகளுக்குக் கொல்லாவிரதமாகுஞ் செல்வமே நிலையாம் என்பது பொழிப்பு.

(க.) உலகமக்களுக்கு செல்வமே பெரிதாக விளங்கினும் மேன்மக்களாம் சாந்தரூபிகளுக்குக் கொல்லாவிரதச் செல்வமே பெரிது என்பது கருத்து.

(வி.) உலகத்தில் வாசஞ்செய்யும் மனுமக்கள் யாவருக்கும் செல்வமே ஆதாரமாயிருந்து விளங்குவதுபோல சான்றோர்களாம் மேன்மக்களுக்கு ஓருயிரையும் வதைச்செய்யா விரதச்செல்வமே பெரிதாகும் என்பது விரிவு.

9. கொலைவினய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து.

(ப.) புலைவினையர் - மாமிஷங் கொணர்ந்து விற்போராலும், புன்மை - இன்புறபுசித்து, தெரிவாரகத்து - உணர்ந்தோர் வீடுகளாலும், கொலைவினையராகிய - கொல்லுந் தொழிலினையுடைய, மாக்கள் - மனுக்கள் தோன்றுகிறார்களென்பது பதம்.

(பொ.) மாமிஷங் கொணர்ந்து விற்போராலும் மாமிஷம் புசித்துணர்ந்தோர் வீடுகளாலும் கொல்லுந் தொழிலினையுடைய மனுக்கள் தோன்றுகிறார்கள் என்பது பொழிப்பு.

(க.) மாமிஷத்தைக் கொண்டுவந்து விற்பவராலும் , உருசிகொண்டு அவற்றைப் புசிப்போர் வீடுகளாலும் உயிரினை வதைப்போர் உண்டாகின்றார்கள் என்பது கருத்து.

(வி.) வீடுகள் தோரும் மாமிஷம் புசித்து உருசிகண்ட மக்கள் தோன்றுவதினாலும் மாமிஷங் கொணர்ந்து விற்கும் மக்கள் பலர் ஏற்படுவதினாலும் கொலையையே தொழிலாகக் கொண் டொழுகு மக்கள் தோன்றுகின்றார்கள் என்பது விரிவு.

10. உயிருடம்பி நீக்கியா ரென்பர் செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.

(ப.) உயிருடம்பி - உயிருள்ள சீவப்பிராணிகளின், நீக்கியா - உயிரினை நீக்கினோர், ரென்பர் - என்னப்படுவோர், செயிருடம்பிற் - தோன்றியதேகத்துள், செல்லாத்தீ - மாறா துன்பத்தை, வாழ்க்கையவர் - வாழ்நாட்களென்று அடைவார்கள் என்பது பதம்.

(பொ.) உயிருள்ள சீவப்பிராணிகளின் உயிரினை நீக்குவோர் என்னப்படுவோர் தோன்றிய தேகத்துள் மாறா துன்பத்தை வாழ்க்கை நாளென்றும் அடைவார்களென்பது பொழிப்பு.

(க.) சீவப்பிராணிகளின் உயிரை நீக்குவோர் என்னப்படுவோர் எடுக்குந் தேகங்கள் தோறும் மாறா துன்புற்று வாழ்க்கைசுகங் கெட்டலைவார்கள் என்பது கருத்து.

(வி.) தன்னுடலில் ஊசிநுழைந்தால் உளையவும், அம்புபட்டால் அலறவும், உடையவன் அன்னிய சீவப்பிராணிகளின் உடல் நடுங்கவும், உள்ளம் பதரவும், நாக்கதரவும், அம்மாவென்று அலறவுந் துள்ளத்துடிக்கக் கொல்லுவானாயின் எடுக்குந் தேகத்தின் வாழ்நாட்கள் யாவிலும் தீரா துன்புற்றே துடிப்பான் என்பது விரிவு.

22. பொய் சொல்லாமெய்

இல்லறத்தில் வாழ்வோர் வாயினின்று எழும் வார்த்தை ஒலி மெய்யாயதும், தீங்குவிளையாததும், இன்பமாயதுமானது இம்மெய்யிற் சுகம்பெறுவதுடன் மறுமெய்யிலுஞ் சுகம்பெற்று அதிதீவரத்தில் நிருவாணமடைவது திண்ணமாதலின் இவ்விடம் வாய்மெயாம் மெய்யாய வாய்மொழியை விளக்குகின்றார்.

1. வாய்மை யெனப்படுவதியா தெனின்யா தொன்றுந்
தீமை யிலாச் சொலல்.

(ப.) வாய்மை - நாவினால் மெய் பேசுதல், யெனப்படுவ - என்று கூறுவது, யாதெனில் - எதுவென்றால், யாதொன்றுந் - ஏதோ ருயிருக்கும், தீமையிலாத - துன்பம் விளையாதாக, சொலல் - பேசவேண்டுமென்பது பதம்.

(பொ.) நாவினால் மெய்ப் பேசுதலென்று கூறுவது எதுவென்றால் ஏதோருயிருக்குந் துன்பம் விளையாதாகப் பேசவேண்டுமென்பது பொழிப்பு.

(க.) ஏதோயிருக்குந் தீங்கினை விளைவிக்காத மொழியே தூயமொழியாம் மெய்மொழியென்றும் வாய்மெயென்றுங் கூறுவது கருத்து.

(வி.) மனிதன் தனது நாவினின்று எழும் மொழியால் ஒருயிரினுக்கும் யாதொரு தீங்கும் விளையாமல் மொழியும் மொழியையே மெய்ம்மொழி யென்றும் வாய்மெயென்றுங் கூறுதற்குச் சார்பாய அறநெறிச்சாரம், "தூயவாய்ச்சொல்லாடல் வன்மெயுந்துன்பங்கள் ஆய்மொழுதாற்று மாற்றலும் - காய்விடத்து, வேற்றுமெ கொண்டாடா மெய்ம்மெயும் இம்மூன்றும், சாற்றுங்காற் சாலத்தலை" என்பது கண்டு வாய்மெயாந் தூயமொழியாடலே சிறப்பென்பது விரிவு.

2. பொய்மெயும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

(ப.) பொய்மெயும் - நிலையற்ற தேகியாயினும், வாய்மெயிடத்த - தூய மொழிகளால், புரைதீர்ந்த - களங்கமற்றது, மெனின் - என்பதாயின், நன்மெ - நித்திய சுப்ரதேகியாக, பயக்கு - செய்விக்குமென்பது பதம்.

(பொ.) நிலையற்ற தேகியாயினுந் தூய மொழிகளால் களங்கமற்ற தென்பதாயின் நித்திய சுப்ரதேகியாக செய்விக்கும் என்பது பொழிப்பு.

(க.) பொய்யாய நிலையற்ற தேகத்தை எடுத்திருந்த போதினும் தனது தூய வாய்மொழியால் களங்கமறுவானாயின் நன்மெய்யனாம் நித்தியப் பிரகாசனாக விளங்குவான் என்பது கருத்து.

(வி.) நின்றான், இருந்தான், கிடந்தான், தன்கேள் அலறச் சென்றான் என்னும் அநித்திய தேகத்தை உடையவனாயினும் தனது வாய்மெயாம் தூயமொழிகளால் மனமாசகலுவானாயின் என்றும் அழியா சுயம்பிரகாச தேகியாக உலாவுவான் என்பது விரிவு.

3. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

(ப.) தன்னெஞ்சறிவது - தன்னைத் தானே அறிவது, பொய்யற்க - மரணத்தை ஜெயித்து நித்தியசீவனாகுக, பொய்த்தபின் - மறந்தும் மரிப்பானாயின், தன்னெஞ்சே - மறுமெயிற் றனதுள்ளமே, தன்னைச்சுடும் - தன்னை மாறா துக்கத்திற்கு ஆளாக்கும் என்பது பதம்.

(பொ.) தன்னைத்தான் அறிவது மரணத்தை ஜெயித்து நித்தியசீவனாகுக, மறந்தும் மரிப்பானாயின் மறுமெயில் தன்னுள்ளமே மாறா துக்கத்திற்கு ஆளாக்கும் என்பது பொழிப்பு.

(க.) தனது மனக்களங்கங்களைத் தானே ஆராய்ந்து அகற்றுதல் மறு பிறவியை ஜெயித்தற்கேயாம். அங்ஙனம் ஆராயாது பொய்த்துப் போவானாயின் அவனது மனமாசுகளே பிறவிகள் தோரும் மாறா துன்பத்தால் தகிக்கும் என்பது கருத்து.

(வி.) பொய் மொழியால் இன்னின்ன தீங்குகள் விளையுமென்றும் மெய்ம்மொழியால் இன்னின்ன சுகங்கள் விளையுமென்றும் தன்னெஞ்சைத் தானே ஆராய்ந்தறிவதினால் மனமாசகன்று பொய்யற்ற நித்திய உண்மெய்யனாவான். அங்ஙனந் தன்னெஞ்சைத் தானே ஆராய்ந்துணராமல் பொய்யனாம் மரணத்திற்குள்ளாவனேல் தீராப்பிறவியிற் சுழன்று மாறா துக்கமாம் சூடுண்டு அலைவான் என்பது விரிவு.

4. உள்ளத்தாற் பொய்யா தொழுகினுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்.

(ப.) உள்ளத்தாற் - மனதிலும், பொய்யாதொழுகி - பொய் யென்ப தெழாது வாழ்வோன், னுலகத்தா - உலக மக்கள், ருள்ளத்துளெல்லா - எல்லோரிதயத்திலும், முளன் - எண்ணக்கூடியவ னாவனென்பது பதம்.

(பொ.) தன் மனதிலும் பொய் என்பது எழாது வாழ்வோன் உலகமக்கள் எல்லோரிதயத்திலும் எண்ணக்கூடியவ னாவன் என்பது பொழிப்பு.

(க.) தன் மனதிலும் பொய்யென்பது எழாது வாழ்பவன் உலகத்தோரால் மெய்யனென்று கொண்டாடப்படுவதுடன் அவரவர்கள் உள்ளத்திலும் நிலைத்திருப்பான் என்பது கருத்து.

(வி.) மனிதன் தனது உள்ளத்திலும் பொய்யென்பதை எழவிடாது காத்துக்கொள்ளுவானாயின் அவனை உலகத்தோர் பொய் சொல்லாப் பெரியோனென்று கொண்டாடுவதுடன் தங்களுக்குள் பொய்மொழி எழுங்காலெல்லாம் அம்மெய்யனைத் தங்கள் தங்கள் உள்ளங்களிற் சிந்தித்து மகிழ்வார்கள் என்பது விரிவு.

5. மனத்தொடு வாய்மெ மொழியிற் றவத்தொடு
தானஞ் செய்வாரிற் றலை.

(ப.) மனத்தோடு - தனதுள்ளமறிய, வாய்மெ மொழியிற் - நாவினால் மெய்ப்பேசுவோன், றவத்தோடு - நற்சாதனத்துடன், தானஞ்செய்வாரிற் - தருமஞ்செய்வோர்களிலும், தலை - முதல்வனாவனென்பது பதம்.

(பொ.) தன்னுள்ளம் அறிய நாவினால் மெய்பேசுவோன் நற்சாதனத்துடன் தன்மஞ்செய்வோர்களிலும் முதல்வனாவன் என்பது பொழிப்பு.

(க.) நற்சாதனம் புரிவோரிலும் தருமஞ் செய்வோரிலும் தன் மனதாற நாவினால் மெய்ப்பேசுவோனே பெரியோன் என்பது கருத்து.

(வி.) நற்சாதனமாம் தவத்தில் ஒழுகுவோரிலும், தானமாம் வரையறக் கொடுப்போரினும் தன் மனமாற நாவினால் மெய்யினையே பேசுவோன் எவனோ அவனே மேற்கூறிய இருவருக்கும் முதல்வனாவான் என்பது விரிவு.

6. பொய்யா மெயன்ன புகழில்லை யெய்யாமெ
யெல்லா வறமுந் தரும்

(ப.) பொய்யாமெ - பொய்ப் பேசாதவனென, யன்ன - விளங்கினும், புகழில்லை - கீர்த்தியில்லை, யெய்யாமெ - பொய்மொழிகூறி மற்றவனைக் கெடுக்காதிருப்பதே, யெல்லாவறமுந் - சகல தன்மங்களையும், தரும் - கொடுக்குமென்பது பதம்.

(பொ.) பொய்ப்பேசாதவனென விளங்கினும் கீர்த்தியில்லை பொய்ம்மொழி கூறிமற்றவனைக் கெடுக்காதிருப்பதே சகல தன்மங்களையுங் கொடுக்கும் என்பது பொழிப்பு.

(க.) நாவினாற் பொய்ப்பேசாதவனென விளங்கினுங் கீர்த்தியில்லை. மற்றவனைப் பொய்ச்சொல்லிக் கெடுக்காமலிப்பதே கீர்த்தியாதலின் அஃது சகலதன்மங்களையுந் தானே கொடுக்கும் என்பது கருத்து.

(வி.) உலகத்தில் இவன் பொய்ப்பேசாதவனென உலாவினுங் கீர்த்தியில்லை. பொய்ம்மொழிகூறி மற்றவனுக்குக் கேடுண்டாக்காமலிருத்தலே மற்றய தன்மங்களைப் பெறுதற்கு ஆதாரமாயிருத்தலால் மற்றோர்க்குத் தீங்கிழைக்கா வாய்மெயே மேலென்பதற்குச் சார்பாய் *அறநெறிச்சாரம்* "பொய்ம்மேற்கிடவாத நாவும் புறனுரையைத், தன்மேற்படாமெ தவிர்ப்பானு - மெய்ம்மேல், பிணிப்பண் பழியாமெ பெற்றபொழுதே, தணிக்குமருந்துதலை" என்பதுகொண்டு பொய்மேற்கிடவாத நாவே பெரிதென்பது விரிவு.

7. பொய்யா மெபொய்யா மெயாற்றி னறம்பிற
செய்யாமெ செய்யாமெ நன்று.

(ப.) பொய்யாமெ - மனதிலும் வாக்கிலும் பொய்யெழாமற் காத்து, பொய்யாமெ - மரித்தா னென்னும் பொய்த்துப் போகாது, யாற்றி - காம வெகுளி மயக்கங்களை தணித்துக்கொண்டோன், னறம்பிற - பிறருக்கு தன்மத்தை, செய்யாமெ - கொடாமலும், செய்யாமெ - போதியாதிருக்கினும், னன்று - நலமா மென்பது பதம்.

(பொ.) மனதிலும் வாக்கிலும் பொய்யெழாமற் காத்து மரித்தான் என்னும் பொய்த்துப்போகாது காமவெகுளி மயக்கங்களைத் தணித்துக் கொண்டோன் பிறருக்கு தன்மங்கொடாமலும் போதியாதிருக்கினும் நலமாம் என்பது பொழிப்பு.

(க.) அன்னியருக்கு தன்மத்தைப்போதியாமலுங் கொடாமலுமிருக்கினும் பெரிதல்ல, மனதிலும் நாவிலும் பொய் எழாமற் காத்து காம வெகுளி மயக்கங்களையாற்றித் தண்மெயுற்று உண்மெய்கண்டு மரணத்தை ஜெயிப்பதே நன்றென்பது கருத்து.

(வி.) அன்னிய மக்களுக்கு தன்மத்தைப் போதியாவிடினும், ஈயாவிடினும் பெரிதல்ல. ஒருவன் தன் மனதிலேனும் வாக்கிலேனும் பொய்யை எழவிடாமற் கார்ப்போன், உள்ளதை இல்லையென்னாதும், இல்லாததை இல்லையென்பதுந் துணிபாதலின் அவற்றை மறுத்து பொய்யை நாவிலும் மனதிலும் எழவிடாமற் காத்து கோபாக்கினி காமாக்கினி தணிந்து ஆற்றலுறுவோனே பொய்த்தானென்னும் மரணத்தை ஜெயித்து மெய்த்தோனென்னும் உண்மெயுணர்ந்து துக்கத்தைப் போக்கிக் கொள்ளுவான் என்பது விரிவு.

8. புறத்தூய்மெ நீரான மையு மகத்தூய்மெ
வாய்மெயாற் காணப் படும்.

(ப.) புறத்தூய்மெ - உடலினது சுத்தம், நீரானமையும் - அப்பினா லுண்டாம், மகத்தூய்மெ - உண்மெய்யின் சுத்தமானது, வாய்மெயாற் - நாவினாலெழூஉ மெய்ம்மொழிகளால், காணப்படும் - தோற்றப்படுமென்பது பதம்.

(பொ.) உடலினது சுத்தம் அப்பினாலுண்டாம், உண்மெய்யினது சுத்தமானது நாவினா லெழுஉ மெய்ம் மொழிகளால் தோற்றப்படும் என்பது பொழிப்பு.

(கு.) நீரினால் உடல் சுத்தமுண்டாவதைக் காணலாம். அதுபோல் அவரவர்கள் மெய்யாய வாய்மொழிகளால் உண்மெய்யினது சுத்தத்தைக் கண்டறியலாம் என்பது கருத்து.

(வி.) உடலுக்கு நீரினாற் சுத்தமுண்டாவதை அநுபவத்திற் கண்டுக் கொள்ளுவதுபோல உண்மெய்யாம் அந்தர அங்கத்தின் சுத்தத்தை பொய்சொல்லா நன்மெய்யாம் வாய்மொழிகளால் அறிந்துக்கொள்ளலாம் என்பது விரிவு.

9. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்கு
பொய்யா விளக்கே விளக்கு.

(ப.) எல்லாவிளக்கும் - சகல வகை ஒளியும், விளக்கல்ல - ஒளியாகா, சான்றோர்க்கு - சாந்தரூபிகளுக்கு, பொய்யாவிளக்கே - என்றென்றும் அவியா வொளியே, விளக்கு - ஒளியென்பது பதம்.

(பொ.) சகலவகை ஒளியும் ஒளியாகா. சாந்தரூபிகளுக்கு என்றென்றும் அவியா ஒளியே ஒளியென்பது பொழிப்பு.

(கு.) சகலவகை ஒளிகளுந் தோன்றி தோன்றி கெடுவதியல்பாதலின் பொய்யகற்றிய சாந்தரூபிகளுக்கு என்றென்றுங் கெடா மெய்யொளியே ஒளி என்பது கருத்து.

(வி.) உலகத்தோர் ஏற்றிவரும் விளக்காகிய ஒளிகள் யாவும் ஏற்றயேற்ற அவிந்துபோவதே சுவாபீகமாயினும் சாந்தரூபிகளாம் மேன்மக்களுக்கு பொய்யாது நின்ற, என்றுங்கெடா மெய்விளக்கே சகலருள்ளத்திலும் உள்ள அஞ்ஞான இருளை அகற்றும் விளக்காக ஒளிருகின்றபடியால் அதனை பொய்யாவிளக்கே விளக்கென்று கூறிய விரிவு.

10. யாமெய்யாக் கண்டவற்று ளில்லையெனைத் தோன்றும்
வாய்மெயி னல்ல பிற.

(ப.) யாமெய்யாக் - யாமநுபவத்தில், கண்ட வற்று - பார்த்தவைகளில், ளில்லை - யாதொன்றுமில்லை, யெனைத்தோன்றும் - எனக்குக் காணப்படுவதுயாதெனில், வாய்மெயி - மெய்யைக் கண்டடைவதைவிட, எல்லாபிற - வேறு நன்றென்பதில்லையென்பது பதம்.

(பொ.) யாம் அநுபவத்தில் பார்த்தவைகளில் யாதொன்றுமில்லை. எனக்குக் காணப்படுவது யாதெனில் மெய்யைக் கண்டடைவதைவிட வேறுநன்றென்பதில்லை என்பது பொழிப்பு.

(கு.) நாம் நமதனுபவத்திற் கண்டுவருபவற்றுள் யாதொன்றையுங் காணோம். எமதநுபவத்திற் கண்டும் அநுபவித்தும் வரும் நான்கு வாய்மெ கண்டு தெளிவதினும் வேறொன்றுமில்லை என்பது கருத்து.

(வி.) யாம் உலகத்திற் கண்டுவருந்தோற்றங்களில் யாதொன்றையும் காணோம். எனதநுபவத்திலும் பார்வையாலுங் கண்ட மெய்கள் யாதெனில் மாறிமாறி பிறப்பது மெய், பிணி தோன்றுவது மெய், மூப்படைவது மெய், மரணமுண்டாதல் மெய் எனக் கண்டுதெளிந்து கடிகைக்குக் கடிகை தோற்றி அழியும் பொய்யினை அகற்றி பிறப்பது துக்கம், பிணி துக்கம், மூப்பு துக்கம், மரணதுக்கம் உண்டாவது மெய்யேயென்றுணர்ந்து அத்துக்கத்தையும், அத்துக்க உற்பவத்தையும், அத்துக்க நிவாரணமார்க்கத்தையும், துக்கநிவாரணத்தையுங் கண்டுதெளிய வேண்டியதே அநுபவமும், நோக்கமுமே ஆதலின் நான்கு வாய்மெய்க்கு மேலாயது வேறில்லை என்பது விரிவு.

23. புறங்கூறாமெய்

இல்லறமக்கள் பஞ்சபாதகங்களை அகற்றி வாழ்க்கைப்பெறுவதில் தம்மெ ஒத்த மக்களைக் காணுமிடத்துப் புகழ்தலுங் காணாவிடத்து இகழ்தலுமாகியப் புறங்கூறுவோனது செயலை இவ்விடம் விளக்குகின்றார்.

1. அறங்கூறா னல்ல செயினு மொருவன்
புறங்கூறா னென்ற லினிது.

(ப.) அறங்கூறா - தன்மத்தைப் போதியாது, நல்லசெயினு - சுகக் கிருத்தியங்களைச் செய்யினும், மொருவன் - மற்றொருவனை, புறங்கூறா - காணாவிடத் திகழாதவன், னென்ற லினிது - என்று கூறத்தகுவது யினிதாமென்பது பதம்.

(பொ.) தன்மத்தைப் போதியாது சுகக்கிருத்தியங்களைச் செய்யினும் மற்றொருவனைக் காணாவிடத்து இகழாதவன் என்று கூறத்தகுவது இனிதாம் என்பது பொழிப்பு.

(க.) நற்செயலுடையோனாயினும் நல்லறங் கூறாதவனாயினும் குற்றமில்லை. உலகத்தோரால் இவன் மற்றவரைப் புறம்பில் இகழாதவனெனக் கூறு மொழிகேட்டலே இனியதாம் என்பது கருத்து.

(வி.) ஒருவன் செயல்கள் நல்லதாயிருப்பினும், மற்றவர்களுக்கு அறிநெறியைக் கூறாதவனாயினுங் குற்றமில்லை. உலகத்தோரால் இவன் மற்றவர்களைக் காணாவிடத்துப் புறங்கூறி தீங்கிழைப்பவன் என்று கூறாது வாழ்தலே இனியதென்பதற்குச் சார்பாய் *அறநெறிச்சாரம்* "முன்னின்றொருவன் முகத்தினும் வாயினும், கன்னின்றுருகக் கலந்துரைத்துப் - பின்னின், றிழித்துரைக்குஞ் சான்றோரை யஞ்சியே தேவர், விழித்திமையா நின்றநிலை" என்பதுகொண்டு கண்ணிற் கண்டவிடத்து களிப்புடன் பேசி காணாவிடத்து இழியது கூறலாகாது என்பது விரிவு.

2. அறனழி யல்லவை செய்தலிற் றீதே
புறனழிப் பொய்த்து நகை.

(ப.) அறனழீஇ - தன்மவழி கெட்டு, யல்லவை - மாறுபட, செய்தலிற் - செய்வதினும், றீதே - கொடிது யாதெனில், புறனழீஇ - காணா தகன்றோனை யிழிவு கூறி, பொய்த்து - கெட, நகை சிரிப்பதுவேயாம்.

(பொ.) தன்மவழிகெட்டு மாறுபடச் செய்வதினும் கொடிது யாதெனில் காணாது அகன்றோனை இழிவுகூறி கெடச் சிரிப்பதுவேயாம்.

(க.) தன்மஞ்செய்வோர் குணத்தைக் கெடுத்து மாறுபடுத்துவதினுங் கொடிது யாதெனில் கண்டவிடத்து ஒருவனிடம் இனியபேசி அவனைக் காணாவிடத்து இழிவுகூறி கெடுப்பதே கொடிது என்பது கருத்து.

(வி.) ஒருவன் தன்மச் சிந்தையினின்று ஆதுலர்களுக்கு அன்னமளிப் பதையும் ஆபத்துக்குதவுவதையுந் தடுத்துக் கெடுப்பதினுங் கொடிது யாதெனில் ஒருவனை எதிரிற் கண்டவிடத்து மனமகிழப்பேசி, அவன் புறம்பே சென்றபின் அவனைப் பழித்தும் இழிவுகூறியுங்கெடுத்தலே கொடிது என்பது விரிவு.

3. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத
லறங்கூறு மாக்கந் தரும்.

(ப.) புறங்கூறி - ஒருவனை காணாவிடத்திழிவுகூறி, பொய்த்துயிர் - கெட்டோனே வுயிர்பெற்று, வாழ்தலிற் - வாழ்தலினும், சாத - மரித்துவிடுவானாயின், லறங்கூறு - தன்மத்தைப் போதிக்கும், மாக்கந்தரும் - செல்வத்தைப் பெறுவானென்பது பதம்.

(பொ.) ஒருவனைக் காணாவிடத்து இழிவுகூறி கெட்டோன் என உயிர்பெற்று வாழ்தலினும் மரித்துவிடுவானாயின் தன்மத்தைப் போதிக்கும் செல்வத்தைப் பெறுவான் என்பது பொழிப்பு.

(க.) ஒருவரைப் பழித்தும் இழிவு கூறியும்வருஞ் செயலைக் காண்போர் இவனை கொடியோனென்றுகூற உடலெடுத்துவாழ்தலினும் அக்கொடு மொழிக்கு நாணுற்று மரித்து விடுவானாயின் தன்மத்தைப் போதிப்போனுக்கு ஒப்பாய பலனை அடைவான் என்பது கருத்து.

(வி.) ஒருவனைக் கண்டவிடத்து முகமலரப்பேசி அவனைக் காணாவிடத்து பழித்தும் இழித்தும் பேசிவருபவனை மற்றோர் உயிரற்றக் கொடியனென்று

கூறக்கேட்டு அதனால் உணர்வுதோன்றி புறங்கூறலற்று மரிப்பானாயின் நல்லறத்தினின்று நல்லறம் புரிந்தோன் அடையும் பயனை யடைவான் என்பது விரிவு.

4. கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

(ப.) கண்ணின்று - கண்டவிடத்தும், கண்ணறச் - காணாவிடத்தும், சொல்லினும் - சொல்லக்கூடா மொழியை, சொல்லற்க - சொல்லலாகாது, முன்னின்று - முகமுகமாக, சொல் - பகர்ந்தமொழியை, பின்னோக்கா - காணாவிடத்துப் பேசலாகாதென்பது பதம்.

(பொ.) கண்டவிடத்துங் காணாவிடத்தும் சொல்லக்கூடாமொழியைச் சொல்லலாகாது. முகமுகமாகப் பகர்ந்தமொழியைக் காணாவிடத்துப் பேசலாகாது என்பது பொழிப்பு.

(க.) ஒருவரைக் கண்ணினாற்கண்டு பேசுமிடத்து அவரைக் காணாதிருக்குங்காலத்தும் பேசக்கூடாத வார்த்தைகளைப் பேசலாகாது. அதனினும் முன்னில் வோர் வார்த்தையைப் பேசிவிட்டு அவர்சென்ற பின் கனக்குறைவாய வேறொரு வார்த்தையைப் பேசலாகாது என்பது கருத்து.

(வி.) ஒருவரைக்கண்டு பேசுமிடத்திலேனும் அவரைக் காணாவிடத் தேனுமோர் தீங்கின்னை விளைவிக்கும் வார்த்தைகளைப் பேசலாகாது. அதனினுங் கண்டவிடத்து இனியமொழிகளைக் கூறிவிட்டு காணாவிடத்துப் புறங்கூறி இழிவடையச்செய்யு மொழிகளைப் பேசலாகாது என்பது விரிவு.

5. அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மெ புறஞ்சொல்லும்
புன்மெயாற் காணப் படும்.

(ப.) அறஞ்சொல்லு - தன்மத்தைப் புகட்டும், நெஞ்சத்தா - உள்ளத்தை யுடையவனது, னன்மெய் - சுயவுருவம், புறஞ்சொல்லும் - அன்னியனைக் காணாவிடத்திழிவுகூறும், புன்மெயாற் - பொறாமெயால், காணப்படும் - விளங்கிப்போ மென்பது பதம்.

(பொ.) தன்மத்தைப் புகட்டும் உள்ளத்தை உடையவனது சுயவுருவம் அன்னியனைக் காணாவிடத்து இழிவு கூறும் பொறாமெய்யால் விளங்கிப்போம் என்பது பொழிப்பு.

(க.) ஒருவன் சத்திய தன்மத்தைப் போதித்தபோதினும் மற்றவர்களைப் புறம்பி இகழ்வானாயின் அவன் அசத்தியனே என்பது கருத்து.

(வி.) ஒருவன் நீதிநெறி வாய்மெகளைத் தெள்ளறப் போதிப்பவனாகக் காணப்படினும் அவன் மற்றவர்களைக் காணாவிடத்து அவர்கள்மீது இல்லாபழி மொழிந்தும், இழிவு கூறியுங், கேடுண்டாக்கத்தக்க ஏதுக்களைச் செய்துவிடுவானாயின் நீதிநெறி வாய்மெய்க் குரிய போதகனாகான் என்பது விரிவு.

6. பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
திறன்றெரிந்து கூறப் படும்.

(ப.) பிறன் - அன்னியனை, பழி கூறுவான் - குறைசொல்லுபவன், றன்பழி தனது குறைகளை, யுள்ளுந் - தன்னிற்றானே, திறன்றெரிந்து - தேற வுணர்ந்து, கூறப்படும் - சொல்லுகவேண்டுமென்பது பதம்.

(பொ.) அன்னியனைக் குறைச் சொல்லுபவன் தனது குறைகளை தன்னிற்றானே தேற உணர்ந்து சொல்லவேண்டும் என்பது பொழிப்பு.

(க.) அன்னியனது குற்றத்தைப் புறங்கூற ஆரம்பிப்பவன் தன்னுடையக் குற்றங்களை முற்றும் ஆய்ந்து கூறல் வேண்டும் என்பது கருத்து.

(வி.) தனக்குள்ள பொய், களவு, கள்ளருந்தல், விபசாரம், கொலை முதலிய பழிபாதகங்களைத் தன்னில் தானே உணர்ந்தவைகளை அகற்றாது பிறனது பொய்யையுங் களவையுங் கள்ளருந்தலையும் விபச்சாரத்தையுங் கொலையையும் புறங்கூறித் திரிதல் பயனில்லை என்பது விரிவு.

7. பகச்சொல்லிக் கேளிர் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடறேற்றா தவர்.

(ப.) பகச்சொல்லி - ஒருவருக்கொருவரை பிரிக்கத்தக்க பழிகூறி, கேளிர் - நேயத்தை, பிரிப்பர் - பிரித்துவிடுவார்கள், நகச்சொல்லி - எதிரிகளின் மனமகிழப்பேசி, நட்பாட - நேசிக்க, றேற்றாதவர் - தகுதியற்றவர்களென்பது பதம்.

(பொ.) ஒருவருக்கொருவரைப் பிரிக்கத்தக்கப் பழிகூறி நேயத்தைப் பிரித்துவிடுவார்கள், எதிரிகளின் மனமகிழப்பேசி நேசிக்கத்தகுதியற்றவர்கள் என்பது பொழிப்பு.

(க.) எதிரிகளின் மனதை மகிழச்செய்து, நேசிக்கத் தகுதியற்றவர்கள் ஒருவருக்கொருவரைக் காணாவிடத்துப் புறங்கூறி அவர்களது நேயத்தைப் பிரித்துவிடுவார்கள் என்பது கருத்து.

(வி.) எதிரியுடன் இனியமொழி கூறி இதமகிழச்செய்து நேசிக்கத் தகுதியும் விவேகமும் அற்றவன் அவனது அன்புக்குரிய நேயனைப் பிரிக்கத்தக்கப் புறங்கூறி அவனைப்போல் தன்னை நேசிக்கும் பழிவழி தேடுவார் என்பது விரிவு.

8. துன்னியார் குற்றமுந் தூற்று மரபினா
ரென்னைகோ லேதிலார் மாட்டு.

(ப.) துன்னியார் - தனதுரவின் முறையார்களது, குற்றமுந் - குறைகளையே, தூன்று - புறங்கூறும், மரபினா - உரவினன், லேதிலார்மாட்டு - அன்னியரது குற்றங்களை, ரென்னகோ எவ்வகை சொல்லுவானோவென்பது பதம்.

(பொ.) தனது உரவின் முறையோர்களது குற்றங்களையே புறங்கூறும் உரவினன் அன்னியர் குற்றங்களை எவ்வகை சொல்லுவானே என்பது பொழிப்பு.

(க.) தனது சுற்றத்தோரது குறைகளையே புறம்பிற் கூறித்திரிபவன் ஏனையோர்க்குள்ள குறைகளை இன்னுமின்னும் எடுத்துக்கூறுவான் என்பது கருத்து.

(வி.) தனது சுற்றத்தோரது குறைகள் யாவுந் தன்னைச்சார்ந்ததென்று உள்ளுணராது அவற்றைப் புறம்பே கூறித்திரிபவன் அயலாரது குற்றங்களை மேலுமேலுங் கூசாது கூறித்திரிவான் என்பது விரிவு.

9. அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறனோக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை.

(ப.) அறனோக்கி - தன்மநெறிகளையே ஆதாரமாக நோக்கி, யாற்றுங்கொல் - ஆறுதலடையும், வையம் - உலகமானது, புறனோக்கி - அன்னியர்மீது, புன்சொலுரைப்பான் - தீங்குரைப்போனை, பொறை - பொறுக்காதென்பது பதம்.

(பொ.) தன்மநெறிகளையே ஆதாரமாக நோக்கி ஆறுதலடையும் உலகமானது அன்னியர்மீது தீங்குரைப்போனை பொறுக்காது என்பது பதம்.

(க.) அறநெறியினின்று ஆறுதலுற்று வாழ்கவேண்டிய வையகத்தோர் புறங்கூறித்திரிவோன் செயலைப் பொறுக்கார் என்பது கருத்து.

(வி.) வாழ்க்கைத்துணைநலம்கோறி அறநெறிவழுவாது வாழ்கவேண்டிய விருப்பமுடைய வையகத்தோர் புறங்கூறித்திரியும் பேதையின் புன்செயலைப் பொறுக்கார் என்பது விரிவு.

10. ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பின்
றீதுண்டோ மன்னு முயிர்க்கு.

(ப.) ஏதிலார் - தனக்கு அன்னியமானவர்களது, குற்றம் போற் - குறைகளைக் காண்பதுபோல், றங்குற்றங் - தனது குறைகளை, காண்கிற் - கண்டுணர்ந்துக் கொள்ளுவானாயின், பின் - பிறகு றீதுண்டோ - வேறு தீங்குகளுண்டோ, மன்னுமுயிர்க்கு - அன்னிய சீவப்பிராணிகளுக்கு என்பது பதம்.

(பொ.) தனக்கு அன்னியமானவர்களது குறைகளைக் காண்பதுபோல் தனது குறைகளைக் கண்டுணர்ந்துக்கொள்ளுவானாயின் பிறகு வேறு தீங்குகளுண்டோ அன்னிய சீவப்பிராணிகளுக்கு என்பது பொழிப்பு.

(க.) அன்னியனிடம் உண்டாகுங் குற்றங்களைக் கண்டுகொள்வதுபோல தன்னுடைய குற்றங்களையும் உணர்ந்து அடங்குவானாயின் பிறவுயிர்களுக்கு யாதொரு தீங்கு உண்டாகாம் என்பது கருத்து.

(வி.) உலகத்துள் வாழும் மக்களுள் அவன் பொய்யன், இவன் கள்ளன் உவன் குடியனென அவர்களது செயல்களை உணர்ந்து அவற்றைத் தீயச்செயல்கள் என்றுணர்ந்து புறங்கூறுவோன் தனக்குள்ளத் தீயச்செயல்களைக் கொடிது என்றுணர்ந்து அடங்குவானாயின் அன்னியப் பிராணிகளுக்கு யாதொரு துக்கமும் அணுகாது என்பது விரிவு.

24. பயனில் சொல்லாமெய்

மக்களுள் புறங்கூறா வகையை விளக்கியும் நாவினின்று எழும் சொற்களில் மற்றோருக்குப் பயனைத் தரத்தக்க மொழிகளைப் பேசவேண்டுமே அன்றி பயனற்ற மொழிகளைப் பேசுவதால் பொய்மொழி, இழிமொழி, கடுமொழி முதலிய தோன்றி தன்னை துன்பத்திற்கு ஆளாக்குவதுடன் எதிரிக்கு ஓர் பயனின்றி துன்பத்தை விளைவிக்குமாதலின் எக்காலும் பயனற்ற மொழிகளைப்பேசி வீண்காலம் போக்காது எதிரிக்குந் தனக்கும் பயனைத் தரக்கூடிய அறநெறிகளைப் பேச வேண்டியதே இல்லறவாழ்க்கைக்கு இனிதென் றுணர்ந்த பெரியோன் பயனிலா மொழிகளைப் பேசலாகாதெனக் கூறியுள்ளார்.

1. பல்லார் முநியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மெள்ளப் படும்.

(ப.) பல்லார் - பலகலை யாய்ந்த பெரியோர், முநிய - அருவெறுக்க, பயனில - அப்பிரயோசன மொழிகளை, சொல்லுவா - பேசுவோனை, னெல்லாரு - சகலரும், மெள்ளப்படும் - வெறுப்பார்களென்பது பதம்.

(பொ.) பலகலை ஆய்ந்த பெரியோர் அருவெறுக்க அப்பிரயோசன மொழிகளைப் பேசுவோனை சகலரும் வெறுப்பார்கள் என்பது பொழிப்பு.

(க.) நீதிநெறி வாய்மைகளை உணர்ந்த விவேக மிகுத்தோர்முன் அருவெறுக்கு மொழிகளைப் பேசுவோனை சகலரும் இகழ்வார்கள் என்பது கருத்து.

(வி.) பலகலைகளை ஆய்ந்து விவேகமிகுத்துள்ள மேன்மக்கள்முன் சென்று அவர்கள் அருவெறுக்கத்தக்கப் பயனிலா மொழிகளைப் பேசுவோரை மற்றுமுள்ள சகலரும் வெறுப்பதுடன் தானுங்கெடுவான் என்பதற்குச் சார்பாய் அறநெறிச்சாரம் "தண்டாமம் பொய்வெகுளி பொய்ச்சாப் பழுக்காமை யைந்தே கெடுவார்க்கியல்பென்ப - பண்பாளா, யீதலறிதலியற்றுதலின் சொற்கற், றாய்தலறிவார்தொழில்" என்பதுகொண்டு முன்பின் ஆய்ந்து பயனுள மொழி கூறவேண்டும் என்பதே விரிவு.

2. பயனில பல்லோர்முற் சொல்ல நயனில
நட்டார்கட் செய்தலிற் றீது.

(ப.) பயனில - அப்பிரயோசன மொழிகளை, பல்லோர்முற் - பலகலை யாய்ந்த நல்லோர்முன், சொல்ல - மொழிதலானது, நட்டார்கட் - தன்னைக் காப்பாற்றியவர்களுக்கு, நயனில - கொடியச்செயலை, செய்தலிற் - செய்தலினும், றீது - கொடிது யென்பது பதம்.

(பொ.) அப்பிரயோசன மொழிகளை பலகலை ஆய்ந்த நல்லோர்முன் மொழிதலானது தன்னைக் காப்பாற்றியவர்களுக்குக் கொடியச்செயலை செய்வதினுங் கொடிது என்பது பொழிப்பு.

(க.) கலைநூற்கள் யாவையும் நன்குணர்ந்து அடங்கியுள்ள மேன் மக்களிடஞ் சென்று பயனிலா சொற்களைப் பேசுதல், தன்னைக் காப்பாற்றியவர்களுக்குக் கேடுவிளைவிப்பதினும் அஃது கொடிது என்பது கருத்து.

(வி.) இம்மொழி கூறலாங், கூறலாகாது என்று கலைநூற்களை ஆய்ந்து அடங்கிய அறிவு மிகுத்தோர் முன்னிலையிற் சென்று பேசக்கூடா மொழிகளைப்பேசி அவர்களது மனங்குன்றச்செய்தலானது தன்னைக் காப்பாற்றி நிலை நிறுத்தியவர்களுக்குக் கேட்டினை உண்டு செய்வதினுங் கொடிது என்பது விரிவு.

3. *நயனில னென்பது சொல்லும் பயனில*
பாரித்து ரைக்கு முரை.

(ப.) பயனில - பயனற்ற மொழிகளை, பாரித்துரைக்கு - பெரிதென் றெண்ணிப் பேசும், முரை - கருத்தானது, நயனில - நல்லவனன்று, னென்பது - என்று கூறும், சொல்லும் - மொழியெழுஉமென்பது பதம்.

(பொ.) பயனற்ற மொழிகளை பெரிதென்று எண்ணிப் பேசுங் கருத்தானது நல்லவனன்று என்று கூறும் மொழி யெழுஉம் என்பது பொழிப்பு.

(க.) ஒருவருக்கும் பயன்படா வார்த்தைகளை வீண்பேசித்திரிவோனை உலகமக்கள் நல்லவனென்று கூறார் என்பது கருத்து.

(வி.) தன்னை சிறப்பித்துக் கொள்ளும் மொழிகளையும், நிந்தை மொழிகளையும், பொய்மொழிகளையும் வீணே பிதற்றித்திரிவோனை உலகமாக்கள் நல்லவன் அன்றென்றே கூறுவார்களென்பது நிலையாதலின் மறந்தும் பயனற்றமொழிகளைப் பேசலாகாதென்பது விரிவு.

4. *நயன்சாரா நன்மெயி னீக்கும் பயன்சாராப்*
பண்பில்சொற் பல்லா ரகத்து.

(ப.) நயன்சாரா - நற்செய லில்லாதோரை, நன்மெயினீக்கும் - நற்செய லுள்ளோர் நீக்குவதைப்போல, பயன்சாரா - யாதொரு பயனையுந் தராமொழிகளை, பண்பிற்சொற் - இசைபெறக் கூறுவதாயினும், பல்லாரகத்து - பலகலை யாய்ந்தோரில்லத்தி லேற்கார்களென்பது பதம்.

(பொ.) நற்செயலில்லாதோரை நற்செயலுள்ளோர் நீக்குவதைப்போல யாதொரு பயனையுந் தராமொழிகளை இசைபெறக் கூறுவதாயினும் பலகலை ஆய்ந்தோர் இல்லத்தில் ஏற்கார்கள் என்பது பொழிப்பு.

(க.) கொடியச்செய லுள்ளோரை நல்லோர்கள் அகற்றிவிடுவதுபோல் பயனற்ற மொழிகளை பண்ணிசையுடன் கூறுவதாயினும் பலகலைகளை ஆய்ந்தோர் அகத்துள் அவற்றை ஏற்கார்கள் என்பது கருத்து.

(வி.) துற்கிருத்தியமுடையோரை துட்டர்கள் என்று நல்லோர் அகற்றி விடுவதுபோல யாதாமொரு பயனையுந்தரா வீண்மொழிகளைப் பாட்டுப்பாடிக் கூத்தாடிப் பகர்ந்தபோதினும் பலகலை ஆய்ந்தோர் அவர்களை அகற்றுவதுடன் அவர்கள் இல்லத்தோர்களும் அகற்றி இழிவார்கள் என்பது விரிவு.

5. *சீர்மெ சிறப்பொடு நீங்கும் பயனில*
தீர்மெ யுடையார் சொலின்.

(ப.) நீர்மெ - தூயதேகத்தை, யுடையார் - அடைந்தவர்கள், பயனில - யாது பயனுமற்ற மொழிகளை, சொலின் - சொல்லுவதாயின், சீர்மெ - உருவலட்சணம், சிறப்பொடு - கீர்த்தியுடன், நீங்கும் - அகன்றுப்போமென்பது பதம்.

(பொ.) தூயதேகத்தை அடைந்தவர்கள் யாது பயனுமற்ற மொழிகளைச் சொல்லுவதாயின் உருவலட்சணங் கீர்த்தியுடன் அகன்றுப்போம் என்பது பொழிப்பு.

(க.) சகல களங்கங்களுமற்ற சுத்ததேகிகள் என்போர் யாதொரு பயனையுந் தரா வீண்மொழிகளைப் பேசுவார்களாயின் அவர்களது தேககாந்தியுமற்று உள்ளக்கீர்த்தியும் போம் என்பது கருத்து.

(வி.) பொய்யாமெய், கொல்லாமெய், கள்ளாமெய், கள்ளருந்தாமெய், பிறன்தாரநயவாமெயாம் சீர்மெயுற்று சுகதேகியாக உலாவுவோனாயினும் ஏனையோரிடம் பயனற்ற மொழிகளைப் பேசித் திரிவானாயின் அவனது

சீர்மெயாந் தூயதேக ஒளிகுன்றி உள்ளக் கீர்த்தியும் அகன்றுப்போம் என்பது விரிவு.

6. பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்.

(ப.) பயனில் - ஏதொரு பயனுமற்ற, சொல் - மொழிகளை, பாராட்டுவானை - பேசித்திரிவோனை, மகனெனல் - புத்திரனெனக் கூறுதலிலும், மக்கட் - அவனை மனுக்களுள், பதடியெனல் - பதரெனக் கூறலாமென்பது பதம்.

(பொ.) ஏதொரு பயனுமற்ற மொழிகளைப் பேசித் திரிவோனை புத்திரனெனக் கூறுதலிலும் அவனை மனுக்களுள் பதரெனக் கூறலாம் என்பது பொழிப்பு.

(க.) தனக்கும் பிறருக்கும் ஏதொரு பயனையுந்தாரா வீண்மொழிகளைப் பேசித்திரிவோனை பதருக்கு ஒப்பானவனெனக் கூறலாம் என்பது கருத்து.

(வி.) உலகமக்களுக்குந் தனக்கும் பயனைத் தரக்கூடிய கல்வி விருத்தியைப் பற்றியும், வித்தியா விருத்தியைப்பற்றியும் ஞானவிருத்தியைப்பற்றியும், நீதியின் விருத்தியைப் பற்றியும் பேசிப் பயனை உண்டு செய்யாது தானுமறியா தன்தந்தையும் அறியாப் பொய் மொழிகளையும் வீண்மொழிகளையும் பிதற்றித்திரிவோனைப் பதரென்று கூறலாம் என்பது விரிவு.

7. நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமெ நன்று.

(ப.) நயனில - இனிதற்ற, சொல்லினும் - மொழிகளைப் பேசினும், சொல்லுக - பேசலாம், சான்றோர் - பெரியோர்முன், பயனில - யாதொரு பயனுமற்ற மொழிகளை, சொல்லாமெனன்று - பேசாதிருப்பதே நல்லதென்பது பதம்.

(பொ.) இனிதற்ற மொழிகளைப் பேசினும் பேசலாம் பெரியோர்முன் யாதொரு பயனுமற்ற மொழிகளைப் பேசாதிருப்பதே நல்லது என்பது பொழிப்பு.

(க.) பலர் செவிகளுக்கும் இனியதான மொழிகளைப் பேசித்திரியினுந் திரியலாம் கற்றுணர்ந்து அடங்கியுள்ள மேன்மக்களிடத்து யாதொரு பயனுமற்ற மொழிகளைப் பேசலாகாது என்பது கருத்து.

(வி.) உலகமக்கள் நன்கு வாசித்தவன், நன்றாய் பேசுகிறான் மிக்க மிருதுவாய மொழிகளை உடையவனெனக் கூறும்படியாகப் பேசித்திரியினுந் திரியலாம் கற்று ஆய்ந்தடங்கிய மேன்மக்களாம் சான்றோர்களிடத்து யாதொரு பயனையுந்தாரா வீண்மொழிகளைப் பேசலாகாது என்பது விரிவு.

8. அரும்பய னாயு மறிவினார் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல்.

(ப.) அரும் - அரியதாய, பயனாயு - பலனை யாராய்ந்துதிரியும், மறிவினார் - விவேகிகள், பெரும்பய - யாதொரு சிறந்த பலனும், னில்லாதசொல் - இல்லாதமொழிகளை, சொல்லார் - வீணிற்பேசார்களென்பது பதம்.

(பொ.) அரியதாய பலனை ஆராய்ந்து திரியும் விவேகிகள் யாதொரு சிறந்த பலனுமில்லாத மொழிகளை வீணிற்பேசார்கள் என்பது பொழிப்பு.

(க.) உலகத்திற் சிறந்தவை எவையென ஆராய்ந்துணரும் விவேகிகள் யாதொரு வீண்மொழிகளையும் பேசார்கள் என்பது கருத்து.

(வி.) தோற்றும் பொருட்கள் யாவும் கடிகைக்குள் கடிகை அழியும் என்றுணர்ந்து அழியாதவை எவையென ஆய்ந்து திரியும் அறிவுள்ளவர்கள் உலக மக்களுக்கு யாதொரு பயனையுந்தாரா வீண் மொழிகளைப் பேசமாட்டார்கள் என்பது விரிவு.

9. பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருடீர்ந்த
மாசறு காட்சி யவர்.

(ப.) மருடீர்ந்து - அஞ்ஞான விருளினின்றகன்று, மாசறு - களங்கமற, காட்சியவர் - தோன்றும்படியானவர்கள், பொருடீர்ந்த - அழியும் பொருட்க ளென்றுணர்ந்து, பொய்ச்சாந்தும் - மறந்து மதனுடன் கலந்தும், சொல்லார் - பேசார்களென்பது பதம்.

(பொ.) அஞ்ஞான இருளினின்று அகன்று களங்கமறத் தோன்றும் படியானவர் அழியும் பொருட்களென்று உணர்ந்து மறந்தும் அதனுடன் கலந்தும் பேசார்கள் என்பது பொழிப்பு.

(க.) மனமாசகன்று மருள் தீர்ந்த பெரியோர்கள் மறந்தும் பொருளற்ற மொழிகளைப் பேசார்கள் என்பது கருத்து.

(வி.) உலகத்தில் தோன்றும் பொருட்கள் யாவும் அழிந்தழிந்து தோன்றுகின்றவைகள் என்றுணர்ந்து அஞ்ஞான பாசபந்தங்களை அகற்றி மனமாசு கழுவினின்ற பெரியோர்கள் மறந்தும் அழியும் பொருட்களின் வார்த்தைகளை வீணிற் பேசித்திரியார்கள் என்பது விரிவு.

10. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

(ப.) சொல்லிற் - பேசும் வார்த்தைகளில், பயனுடைய - பலனை யடையக்கூடிய வார்த்தைகளை, சொல்லுக - பேசல்வேண்டும், சொல்லிற் - பேசுமொழிகளில், பயனிலா - யாதொரு பலனுமற்ற, சொல் - மொழிகளை, சொல்லற்க - பேசலாகாதென்பது பதம்.

(பொ.) பேசும் வார்த்தைகளில் பலனையடையக்கூடிய வார்த்தைகளைப் பேசல் வேண்டும். பேசுமொழிகளில் யாதொரு பலனுமற்ற மொழிகளைப் பேசலாகாது என்பது பொழிப்பு.

(க.) மக்களுடன் பேசுங்கால் அவர்களுக்கும் தங்களுக்கும் ஓர் பலனுண்டாகத்தக்க வார்த்தைகளைப் பேசல் வேண்டும் மற்றும் பயனிலா வீண்வார்த்தைகளைப் பேசலாகாது என்பது கருத்து.

(வி.) எப்போதும் மக்களுடன் கலந்து ஒருவருக்கொருவர் பேசுங்கால் அவர்களுக்கும் தனக்குமோர்பலனை உண்டாக்கத்தக்க விருத்தி மொழிகளைப் பேசவேண்டுமேயன்றி பயனற்ற வீண்மொழிகளைப் பேசி காலத்தை வீணே போக்கலாகாது என்பது விரிவு.

25. பெண்வழிச்சேரல்

இல்வாழ்க்கையை விரும்புவோர் ஓர் இல்லாளைத் தேடிக் கொள்ளுங்கால் அவள் ஒழுக்கமிகுத்த நற்குடியிற் பிறந்திருப்பாளாயின் கணவனது குடும்பத்தையே தன் குடும்பமெனக் கருதி கணவனது சொற்கடவாது நடந்து மந்திரிபோலிருந்து இல்லறதன்மத்தை சரிவர நடாத்தி தன் கணவனை ஈடேறச்செய்வாள். அற்ப குடும்பத்துள் பிறந்தவளாயின் விலைமகளுக்கு ஒப்பாய் தன்குடும்பத்தையே போஷிக்க ஆரம்பித்துக் கொள்ளுவதுடன் தன் கணவனையும் வேணவழியில் வயப்படுத்தி அதன்மவழியில் விடுத்து அவனது ஈடேற்றத்தையுங் கெடுத்துவிடுவது இயல்பாதலின் இல்வாழ்க்கை விரும்புவோன் இல்லாளின்வழி சேறாது நல்வாழ்க்கை அடையும் நடையை விளக்குகின்றார்.

1. மனைவிழைவார் மாண்பய னெய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளு மது.

(ப.) மனைவிழைவார் - மனைவியினின்பத்தையே கருதுவோர், மாண்பய - சிறந்தபலனை, னெய்தார் - அடையார்கள், வினைவிழைவார் - தொழிலினை விரும்புவோர், வேண்டா - இச்சியாத, பொருளுமது - செல்வத்திற் கொப்பாகவென்பது பதம்.

(பொ.) மனைவியின் இன்பத்தையே கருதுவோர் சிறந்த பலனை அடையார்கள். தொழிலினை விரும்புவோர் இச்சியாத செல்வத்திற்கு ஒப்பாகவென்பது பொழிப்பு.

(க.) ஓர் தொழிலைச் செய்யக்கருதியும் அதனால் அடையுஞ் செல்வத்தைக் கருதாதவனுக்கு ஒப்பாக இல்லறதன்மத்தை யாசித்து இல் வாழ்க்கையில் அமர்ந்தும் சிற்றின்பத்திலேயே கிடப்பானாயின் மேலாய பயன் யாதையுமடையான் என்பது கருத்து.

(வி.) யாதாமோர் தொழிலை விருத்தி செய்யவேண்டுமென்று உழைத்தும் அதனால் பெறும் செல்வத்தைக் கருதாதவனுக்கு ஒப்பாக இல்லறதன்மத்தை

விருத்தி செய்யவேண்டுமென்னும் அவா மிகுத்து இல்லாளை சேர்த்துக் கொண்டவன் அத்தன்மத்தை மறந்து இல்லாள் இன்பத்திலேயே ஆழ்ந்து விடுவானாயின் மேனோக்கும் தன்மபயன் யாதொன்றையும் அடையான் என்பது விரிவு.

2. பேணாது பெண்விழைவா னாக்கம் பெரியதோர்
நாணாக நாணத் தரும்.

(ப.) பேணாது - இல்லறத்தை யிச்சியாது, பெண்விழைவா பெண்ணினின்பத்தையே யிச்சிப்பவனது, னாக்கம் - செல்வமானது, பெரியதோர் - ஓர் பெரியதாயினும், நாணுக - ஒடுக்கத்திற்கொப்பாய, நாணு - அழிவை, தரும் - கொடுக்குமென்பது பதம்.

(பொ.) இல்லறத்தை இச்சியாது பெண்ணினின்பத்தை இச்சிப்பவனது செல்வமானது ஓர் பெரியதாயினும் ஒடுக்கத்திற்கு ஒப்பாய அழிவை கொடுக்கும் என்பது பொழிப்பு.

(க.) இல்லறத்திலிருந்து நல்லறத்தை நடாத்திக்கொள்ள விருப்புற்றவன் பெண்ணினின்ப விருப்பில் ஆழ்ந்துவிடுவானாயின் மிக்க செல்வமிருப்பினும் ஒடுங்கி ஒழிந்துபோமென்பது கருத்து.

(வி.) அதிக செல்வத்தைப்பெற்றும் இவ்வாழ்க்கைப் பெறவேண்டு மென்னும் விருப்புற்றும் அவற்றைப் பேணாது இல்லாள் இன்பத்தில் ஆழ்ந்து அவள் வாய்மொழி கோணாது சேருவோனுக்குள்ள ஓர் பெரிய செல்வமும் ஒடுங்கி தனக்கும் அழிவைத்தரும் என்பது விரிவு.

3. இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மெ யெஞ்ஞான்றும்
நல்லாரு ணாணுத் தரும்.

(ப.) இல்லாள்கட் - தனது மனைவி வாக்கிற்கு, டாழ்ந்த - அடங்கிநடக்கும், வியல்பின்மெ - செய்கையையுடையோனுக்கு, யெஞ்ஞான்றும் - எக்காலத்தும், நல்லாரு - பெரியோர்கள்முன், ணாணுத்தரும் - அச்சத்தைக்கொடுக்குமென்பது பதம்.

(பொ.) தனது மனைவி வாக்கிற்கு அடங்கி நடக்கும் செய்கையை உடையோனுக்கு எக்காலத்தும் பெரியோர்கள் முன் அச்சத்தைக் கொடுக்கும் என்பது பொழிப்பு.

(க.) துறந்த நல்லோர்வரினும் துறவா நல்லோர் வரினும் அவர்களுக்கு செய்ய வேண்டிய தன்மத்தை மனைவியை வேண்டி செய்வதானது எக்காலும் அவனை நாணும்படி செய்யும் என்பது கருத்து.

(வி.) இல்வாழ்க்கையே இல்லறத்தை நாடிநிற்றலால் இல்லோனை நாடிவரும் துறந்தார்க்குந் துறவாதவர்க்கும் இறந்தோர்க்குந் துணைமுதலவன் தன்மனைவியை முதலாகக்கொண்டு அவள் வாக்குக்கு எதிர்பார்ப்பது தனக்கு வெட்கத்தை உண்டு செய்தலால் நல்லோர்முன் நாணுத்தரும் என்பது விரிவு.

4. மனையாளை யஞ்சு மறுமெயிலாளன்
வினையாண்மெ விரெய்த லின்று.

(ப.) லாளன் - மனையறம் நடாத்தும் புருடன், மனையாளை - தன் மனைவிக்கு, யஞ்சு - பயந்து நடந்துவருவானாயின், மறுமெயி - மற்று மெடுக்குந் தேக, வினையாண்மெ - செய்தொழிலுட் புருடச் செயலை, வீரெய்த - துணிந்துசெய்த - லின்று - இல்லாமற்போமென்பது பதம்.

(பொ.) மனையறம் நடாத்தும் புருடன் தன் மனையாளுக்கு பயந்து நடந்து வருவானாயின் மற்றும் எடுக்குந் தேகச் செய்தொழிலுள் புருடச் செயலை துணிந்து செய்தல் இல்லாமற்போம் என்பது பொழிப்பு.

(க.) இல்லறத்தை இனிது நடாத்தவேண்டிய புருடன் தன் மனையாளுக்கு பயந்து பயந்து நடத்திவரும் இயல்பால் மரித்து மறுமெய்தோன்றினும் புருடச்செயலற்று யாதொரு பயனுக்கும் உதவாமற்போவான் என்பது கருத்து.

(வி.) புருடனே பெண்ணுக்கு ஒப்பாகவும் பெண்ணே புருடனுக்கு ஒப்பாயிருந்து இல்வாழ்க்கை நடைபெற்றுவருமாயின் இறந்தும் பிறந்த போதினும் வினைக்கீடாயப் புருடச்செயலற்று வீரமற்று வீணாவான் என்பதில் பிறவி உண்டென்பதற்குச்சார்பாய் *அறநெறிச்சாரம்* "இறந்த பிறப்பிற்றாஞ்செய்த வினையைப், பிறந்த பிறப்பாலறிக - பிறந்திருந்து, செய்யும் வினையாலறிக வினிப்பிறந், தெய்தும் வினையின்பயன்" எனக் கன்மத்திற்கு ஈடாய தோற்றம் உண்டென்றுணர்ந்த பெரியோன் மறுமெயில் வினையாண்மெ விரெய்தலின்று என்று கூறிய விரிவு.

5. இல்லாளை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று
நல்லார்க்கு நல்ல செயல்.

(ப.) இல்லாளை - தன் மனையாளுக்கு, யஞ்சுவா - பயந்து நடப்பவன், மற்றெஞ்ஞான்று - மற்று மெக்காலத்தும், நல்லார்க்கு - சான்றோர்க்கு, நல்லசெயல் - தன்மஞ்செய்தற்கும், னஞ்சு - அஞ்சு பயப்படுவானென்பது பதம்.

(பொ.) தன் மனையாளிக்கு பயந்து நடப்பவன் மற்றும் எக்காலத்தும் சான்றோர்க்கு தன்மஞ் செய்தற்கும் பயப்படுவான் என்பது பொழிப்பு.

(க.) எப்போதும் தன் மனைவிவாக்குக்கு அடங்கியும் அவளுக்கு பயந்தும் நடந்துவருகிறவன் அருந்தவ னல்லோருக்குந் தன்மஞ்செய்வதற்கு அஞ்சுவான் என்பது கருத்து.

(வி.) எப்போது ஒருபுருஷன் தன்மனைவியை அடக்கியாளாமல் பயந்தும் அவள் வாக்குக்கடங்கியும் நடக்க ஆரம்பிப்பானாயில் அருந்தவ நல்லோர்களுக்கு தன்மத்தைச்செய்து சுகம்பெறுதற்கும் பயப்படுவதுடன் தன் தந்தைதாயாருக்கும் பந்துமித்திரருக்கும் இட்டுண்பதற்கும் பயந்து ஏனையோருக்குமோர் உதவியற்றவனாய் ஆண்மெயும் வீரமும் அற்றுப்போவான் என்பது விரிவு.

6. இமையாரின் வாழினும் பாடிலரே யில்லா
ளமையார்தோ ளஞ்சு பவர்.

(ப.) இமையாரின் - கண்ணிமை யற்ற தேவர்போல், வாழினும் - இல்வாழ்க்கை பெறினும், யில்லா - மனையாளின், ளமையார்தோ - அடங்கா செயல்களுக்கு, ளஞ்சுபவர் - பயந்துநடப்போர், பாடிலரே - யாதொரு பயனுமற்றவர்களே யென்பது பதம்.

(பொ.) கண்ணிமையற்ற தேவர்போல் இல்வாழ்க்கை பெறினும் மனையாளின் அடங்காச்செயல்களுக்கு பயந்துநடப்போர் யாதோர் பயனுமற்றவர்களே என்பது பொழிப்பு.

(க.) இரவு பகலற்ற வானவருக்கு ஒப்பாக இல்லத்தின் கண் சுகவாழ்க்கைப்பெற்றிருப்பினும் தன்மனையாளின் இன்பத்தையே பெரிதென்று எண்ணி அவளுக்கு பயந்து நடப்போன் யாதொரு பயனையும் அடைய மாட்டான் என்பது கருத்து.

(வி.) இரவென்றும் பகலென்றும் கண்ணிமையில்லா தேவர்க்கு ஒப்பாக சுப்ரதீபங்களால் அமைத்த மாடமாளிகைகளில்வாழினும் அம்மனையோன் மனையாளின் சொற்கடவாது அவ்வில்லத்திலேயே அழுந்தி கிடப்பானாயின் அவனது ஈடேற்றத்திற்கேற்ற விசாரிணையும் அறநெறியுமற்ற புருடச்செயல் என்னும் பயனில்லாமற்போவான் என்பதற்குச் சார்பாய் *அறநெறிச்சாரம்* "பெண்விழைவார்க்கில்லை பெருந்தூய்மெ பேணாதூன், உண்விழைவார்க் கில்லை யுயிரோம்பல் - எப்பொழுதும், மண்விழைவார்க்கில்லை மறமின்மெ மாணாது, தண்விழைவார்க்கில்லை தவம்" என்பது கொண்டு பெண்ணினது வாய்சொற் கடவாதோருக்கு பெருஞ் சிறப்பில்லை என்பது விரிவு.

7. பெண்ணேவல் செய்தொழுகு மாண்மெயி னாணுடைப்
பெண்ணே பெருமெ யுடைத்து.

(ப.) பெண்ணேவல் - மனையாள் சொற்கடவாது, செய்தொழுகு - அவள்சொல்லுந் தொழிலைச் செய்துவருவோன், மாண்மெயி - புருட

தேகியாயினும், னாணுடை - அவனது வொடுக்கத்தால், பெண்ணே - பெண்தேகமே, பெருமெயுடைத்து - மிக்கச் சிறந்ததாமென்பது பதம்.

(பொ.) மனையாள்சொற் கடவாது அவள்சொல்லுந் தொழிலைச் செய்துவருவோன் புருட தேகியாயினும் அவனது ஒடுக்கத்தால் பெண்தேகமே மிக்கச் சிறந்ததாம் என்பது பொழிப்பு.

(க.) சிறந்ததோர் புருடதேகம் எடுத்தும் பெண்ணினது மாயபோதனைக்கு அடங்கி அவள்சொற் கடவாது நடப்பானாயின் புருடனென்னும் சிறப்புக் குன்றி பெண்ணே சிறப்படைவாள் என்பது கருத்து.

(வி.) சகலவற்றையும் அடக்கியாளுஞ் செயலால் ஆண்மெயாம் புருடனென்னும் பெயர் பெற்றோன் பேதைமெயாம் பெண் உருவினது ஏவலுக்குட்பட்டு அவள் ஏவுந் தொழிலைச்செய்து அடங்கிவாழ்வானாயின் புருடவுருவினும் பெண்ணுருவே சிறந்ததென்று கூறும் இழிவைத் தரும் என்பது விரிவு.

8. நட்டார்குறை முடியார் நன்னாற்றார் நன்னுதலாட்
பெட்டாங் கொழுகு பவர்.

(ப.) நன்னுதலாட் - தனக்கோர் சிறிய வின்பத்தைத்தரு மனைவியினது, பெட்டாங் - வாக்குக்கடங்கி, கொழுகுபவர் - வாழ்க்கைப் பெறுவோர், நட்டார் - தன்னைப் பெற்றுவளர்த்தோர், குறைமுடியார் - கோறிக்கையையும் முடிக்கமாட்டார், நன்னாற்றார் - தனக்காய நல்லாற்றலையு மடையார்களென்பது பதம்.

(பொ.) தனக்கோர் சிறியவின்பத்தைத்தரும் மனைவியினது வாக்குக்கடங்கி வாழ்க்கைப்பெறுவோர் தன்னைப்பெற்று வளர்த்தோர் கோறிக்கையையும் முடிக்கமாட்டார், தனக்காய நல்லாற்றலையும் அடையமாட்டார்கள் என்பது பொழிப்பு.

(க.) மனையாளினது சொற் கடவாது அவள் இன்பத்தில் ஆழ்ந்து நிற்போர் தன்னைப் பெற்று வளர்த்தோர் கோறிய விரதத்தையும் முடிக்கமாட்டார், தான் ஆற்றலடையுந் தவத்தையும் அடையமாட்டார்கள் என்பது கருத்து.

(வி.) தன்மனைவியினது சொற்கடவாமலும் அவளது வாக்குக்கு பயந்தும் அவளினது சிறியவின்பத்தில் ஆழ்ந்தும் வாழ்க்கை புரிவோர் தன்னைப்பெற்று வளர்த்தோர் குலம் விளங்கவேண்டிய புத்திரனைப் பெற்றெடுக்க விரதங்கார்த்து ஈன்ற அவர்களது கோறிக்கை நிறைவேறாமலும், தங்கள் துக்கமகன்று ஆற்றலடையும் நிலைபெறாமலும் போவார்கள் என்பது விரிவு.

9. அறவினையு மான்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வர்க ணில்.

(ப.) அறவினையு - தன்மச் செயலும், மான்ற - அதற்காய, பொருளும் - செல்வமும், பிறவினையும் - மற்றுந் தொழிற்களும், பெண்ணேவல் - பெண்களினது வாக்குக்கடங்குந் தொழில், செய்வர் - செய்வோரிடத்து, ணில் - நில்லாதென்பது பதம்.

(பொ.) தன்மச் செயலும் அதற்காய செல்வமும் மற்றுந் தொழில்களும் பெண்களினது வாக்குக்கு அடங்குந் தொழில் செய்வோரிடத்து நில்லாது என்பது பொழிப்பு.

(க.) பெண்களுடைய வாக்குக்கு அடங்கி அவர்களுக்கு ஏவல்புரிந்துவரும் புருடர்களிடத்து தன்மச்செயலும், செல்வமும், வேறு தொழிற்களும் நிலையாது என்பது கருத்து.

(வி.) புருடனானவன் தனது மனைவியுடைய வாக்குக்கடங்கியும் அவளுக்கு பயந்தும் தனது காரியங்களை நடத்திவருவானாயின் அவன் உதாரத்துவமாக நடத்தும் தன்மச்செயலற்று செல்வமும் ஒழிந்து தொழில்களும் ஒடுங்கி பெண்வழிசேர் பேதையாவான் என்பது விரிவு.

10. எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில்.

(ப.) எண்சேர்ந்த - எட்டுவகை யுறுப்பினமைந்த, நெஞ்சத்திட - மனவுறுதி, னுடையார்க் - உடையவர்களுக்கு, கெஞ்ஞான்றும் - எக்காலத்தும், பெண்சார்ந்தாம் - மனைவியினது வாக்குக்கடங்கி நடக்கும், பேதைமையில் - அறிவிலிச்செயல் தோற்றமாட்டாதென்பது பதம்.

(பொ.) எட்டுவகை உறுப்பினமைந்த மனவுறுதி உடையவர்களுக்கு எக்காலத்தும் மனைவியினது வாக்குக்கடங்கி நடக்கும் அறிவிலிச்செயல் தோற்றமாட்டாது என்பது பொழிப்பு.

(க.) எண்வகை உறுப்பில் நிலைத்து மனவுறுதிபெற்றவர்கள் தங்கள் மனையாளை அடக்கி ஆண்டு வருவார்களேயன்றி அவர்கள் வாக்குக்கு அடங்கி அவர்களால் ஆளும் அறிவிலிகளெனத் தோற்றமாட்டார்கள் என்பது கருத்து.

(வி.) எண்வகை உறுப்புகளாம் ஐயநீக்கல், அவாவறுத்தல், நிந்தையகற்றல், மயக்கொழித்தல். செய்பழி நீக்கல், அழிவோரைக் காத்தல், அன்பை வளர்த்தல், அறவுரை கூறலுடையச்செயலில் உறுதி பெற்ற மனோதிடமுள்ள புருடர்கள் தங்கள் மனையாளது மையல்வாக்குக்கு அடங்கியும் அவர்களுக்கு ஒடுங்கியுந் தங்களை அறிவிலிகளென்றுகூற வைத்துக்கொள்ள மாட்டார்களென்பதற்குச் சார்பாய் எண்சேர்ந்த காட்சி *அருங்கலைச்செப்பு* "எட்டுவகையுறுப் பிற்றாகியியன்றது, சுட்டிய நற்காட்சிதான்", *அறநெறிச்சாரம்* "ஐயமவாவே யுவர்ப்புமயக்கின்மெ, செய்பழிநீக்க நிறுத்துதல் - மெய்யாக, அன்புடைமெ யான்ற வறவிளக்கஞ்செய்தலோ, டென்றிவையெட்டாமுறுப்பு" என்பது கொண்டு எண்சேர்ந்தோர் பெண்சார்ந் தடங்கார்கள் என்பது விரிவு.

26. தீவினையச்சம்

இல்லறத்திருந்து நல்லறம் நடத்தவேண்டியவன் அஃதை மறந்து கொடுஞ்செயல்களாம் தீவினைகளைச் செய்வானாயின் வழிபடு நல்லறங்கெடுவதுடன் அவனும் அவனில்லாளும் புத்திரர்களுங் கெடுவார்க ளென்று உணர்ந்த நமது நாயன் பெண்வழி சேரலை விளக்கி அதன்பின் தீவினையின் கேடுகளை உணர்த்தலானார்.

1. தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு.

(ப.) தீவினையா - கொடுஞ்செயலினையுடையோர், ரஞ்சார் - ஏதுக்கும் பயப்படார்கள், தீவினையென்னுஞ் - கொடியச்செயல்களென்னும், செருக்கு - அகங்காரத்திற்கு, விழுமியா - ஒடுங்கிய நல்லோர், ரஞ்சுவர் - பயப்படுவார்களென்பது பதம்.

(பொ.) கொடுஞ்செயலினையுடையோர் ஏதுக்கும் பயப்படார்கள், கொடியச் செயலென்னும் அகங்காரத்திற்கு ஒடுங்கிய நல்லோர் பயப்படுவார்கள் என்பது பொழிப்பு.

(க.) எக்காலுங் கொடியச் செயல்களையே செய்துவருவோர் யாதுக்கும் அஞ்சார்கள். ஒடுக்கத்தை நாடியுள்ள நல்லோர்கள் கொடுஞ்செயல்கள் யாவற்றிற்கும் அஞ்சியே நிற்பார்கள் என்பது கருத்து.

(வி.) பொய், கொலை, களவு, விபச்சாரங், கள்ளருந்தல் முதலியத் தீயச்செயல்களையுடையோர் குருநிந்தையாகும் மற்றுங் கொடூரச் செயல்களுக்கு அஞ்சமாட்டார்கள். நீதிநெறியொழுக்கங்களைப் பின்பற்றிய பெரியோர் தீயவினைகளாகும் கொடுஞ்செயல்களுக்குப் பயந்து நிற்பார்கள் என்பது விரிவு.

2. தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயிலு மஞ்சப் படும்.

(ப.) தீயவை - கொடுஞ்செயற்களை, தீய - இன்னுங் கொடிதாக, பயத்தலாற் - செய்வதினால், றீயவை - அக் கொறூரச்செயலைக் காண்போர், தீயிலு - நெருப்பினும், மஞ்சப்படும் - அதிகம் பயப்படுவரென்பது பதம்.

(பொ.) கொடுஞ்செயல்களை இன்னுங் கொடிதாகச் செய்வதினால் அக்கொறூரச் செயலைக் காண்போர் நெருப்பினும் அதிகம் பயப்படுவார்கள் என்பது பொழிப்பு.

(கூ.) எக்காலுந் தீயச் செயல்களையே மேலுமேலுஞ் செய்து வருவோர்களைக் காண்போர் அவர்களை அக்கினிக்குங் கொடியோர் என அஞ்சி அகலுவார்கள் என்பது கருத்து.

(வி.) சீவகாருண்யம் என்னுஞ் செயலற்று மக்கள் ஈறாகவுள்ள சீவராசிகளுக்கு எக்காலுந் துன்பத்தையே செய்துவருவோர்களைக் காணும் சருவ சீவராசிகளும் தீயைக்கண்டு அஞ்சுவதினும் தீயச்செயலுள்ளோருக்கு அதிகம் அஞ்சுவார்கள் என்பது விரிவு.

3. அறிவினு ளெல்லாந் தலையென்பதிய
செறுவார்க்குஞ் செய்யா விடல்.

(ப.) அறிவினுளெல்லாந் - விவேகமிகுதியைநாடுபவற்றுள், தலையென்ப - விவேகமுதல் யாதெனில், தீய - கொடியத் தீங்குகளை, செறுவார்க்குஞ் - செய்யும்படியானவர்களுக்கு, செய்யாவிடல் - பிரதிதீங்கு செய்யாதிருப்பதா மென்பது பதம்.

(பொ.) விவேகமிகுதியை நாடுபவற்றுள் விவேகமிகுதி யாதெனில் கொடியத்தீங்குகளைச் செய்யும்படியானவர்களுக்குப் பிரதி தீங்கு செய்யாதிருப்ப தாம் என்பது பொழிப்பு.

(கூ.) அறிவினது விருத்திகள் யாவற்றினும் மேலாய அறிவு யாதெனில் அன்னியர் செய்யுந் தீங்குகளுக்கு பதிலாய தீங்கு செய்யாதிருப்பதேயாம் என்பது கருத்து.

(வி.) கலைநூற்களைவாசித்து அறிவினை விருத்திச்செய்ய முயல்வோர்க்கு முதலாய அறிவின் செயல் யாதெனில் தங்களுக்கோர் துன்பத்தை விளைவிப்போருக்குத் தாங்களும் முயன்று பிரதி துன்பஞ் செய்யாதிருப்பதே தலையாய அறிவு என்பது விரிவு.

4. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி
னறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

(ப.) மறந்தும் - தான் கற்றவைகளை மறந்தும், பிறன்கேடு - அன்னியனது தீங்குகளை, சூழற்க - உள்ளத்தி லூன்றாதகற்றல்வேண்டும், சூழில் -உள்ளத்தி லூன்றுவதாயின், னறஞ்சூழ் - சேர்ந்துள்ள தன்மங்கள் யாவும், சூழ்ந்தவன் - தீங்கினை யூன்றியவனுக்கு, கேடு - கெடுதியாக முடியுமென்பது பதம்.

(பொ.) தான் கற்றவைகளை மறந்தும் அன்னியனது தீங்குகளை உள்ளத்தில் ஊன்றாது அகற்றல் வேண்டும். உள்ளத்தில் ஊன்றுவதாயின் சேர்ந்துள்ள தன்மங்கள் யாவும் தீங்கினை ஊன்றியவனுக்குக் கெடுதியாக முடியும் என்பது பொழிப்பு.

(கூ.) கற்றக் கலைநூற்களை மறந்த போதினும் அன்னியர் செய்த தீங்குகளை மனதில் ஊன்றாது அகற்றல் வேண்டும். அகலாது நிலைக்கச் செய்வதாயின் சேர்ந்துள்ள தன்மங்கள் யாவற்றிற்குங் கேடுண்டாகிப்போம் என்பது கருத்து.

(வி.) நீதிநூற்களை மறந்த போதினும் அன்னியனது தீங்குகளை மறவாதிருத்தல் செய்துள்ள தன்மங்கள் யாவையும் அகற்றும் வழிக்கு பீடமிட்டிடலால் அன்னியனது தீங்கினை மறத்தல் வேண்டும். மறவாதிருப்பின் அதுவே அவனுக்கோர் கேடாக முடியும் என்பது விரிவு.

5. இலனென்று தீயவை செய்யற்க செய்யி
னிலனாகு மற்றும் பெயர்த்து.

(ப.) இலனென்று - யாதொருவுதவியுமற்றவனென்று, தீயவை - கொடியச் செயல்களை, செய்யற்க - அவனுக்குச் செய்யாதகலுக, செய்யி - கொடுஞ்செயற்புரிவதாயின், மற்றும் - தனக்குள்ள சுற்றத்தோர், பெயர்த்து - அகன்று, னிலனாகி - உதவியில்லாமற் போமென்பது பதம்.

(பொ.) யாதொரு உதவியுமற்றவனென்று கொடியச்செயல்களை அவனுக்குச் செய்யலாகாது. கொடுஞ்செயற் புரிவதாயின் தனக்குள்ள சுற்றத்தோர் அகன்று உதவியில்லாமற்போம் என்பது பொழிப்பு.

(க.) யாதாமோர் உதவியும் இல்லாதவனென்று அவனுக்குத் தீங்கிழைப்பதாயின் இவனுக்குள்ள உதவிகள் யாவும் இல்லாமல் தானே விலகிப்போம் என்பது கருத்து.

(வி.) ஒருவனுக்கு சுற்றத்தோர் உதவியும் இல்லை பொருளுதவியும் இல்லை என்றறிந்து அவனைக் கெடுக்குந் தீயச் செயல்களைச் செய்துக் கெடுப்பதாயின் இவனுக்குள்ள மக்களுதவியும் பொருளுதவியும் இவனை அறியாது ஒழிந்து பெருந் துக்கத்திற்கு ஆளாக்கிவிடும் என்பது விரிவு.

6. தீப்பாலதான் பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னையடல் வேண்டா தான்.

(ப.) நோய்ப்பால - பிணியினது தோற்றம், தன்னையடல் - தன்னைச்சேரல், வேண்டாதான் - வெறுப்புற்றவன், தான்பிறர்கட் - தான் மற்றவர்கட்கு, தீப்பால - கொடிய துன்பந் தோன்றாவண்ணம், செய்யற்க - ஒழுகல்வேண்டுமென்பது பதம்.

(பொ.) பிணியினது தோற்றம் தன்னைச்சேர வெறுப்புற்றவன் தான் மற்றவர்கட்குக் கொடிய துன்பந் தோற்றாவண்ணம் ஒழுகல்வேண்டும் என்பது பொழிப்பு.

(க.) தனக்கோர் துன்பமும் அணுகாதிருக்க வேண்டுகின்றவன் பிறருக்கோர் துன்பத்தையும் விளைவிக்காது தன்னைக் காத்துக்கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

(வி.) கொடிய துன்பங்களாஞ் செயல்களும் பிணிகளுந் தனக்கு அணுகலாகாதென விரும்புகிறவன் தன்னால் மற்றவர்களுக்குத் துன்பச் செயல்களும் பிணியின் உபத்திரவமும் அணுகாது செய்துக்கொள்ள வேண்டும் என்பது விரிவு.

7. எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.

(ப.) யுற்றாரு - தனதுரவின்முறையாரிடத்து, எனைப்பகை - எவ்வளவு விரோதந் தோன்றினும், முய்வர் - அங்கனே யடங்கிவிடுவார்கள், வினைப்பகை - தான் செய்யுங் கொடிய துன்பவிரோதமானது, வீயாது - அடங்காது, பின்சென்றடும் பிறவிகடோருந் தொடர்ந்தேவருமென்பது பதம்.

(பொ.) தனது உரவின் முறையோரிடத்து எவ்வளவு விரோதந் தோன்றினும் அங்கனே அடங்கிவிடுவார்கள். தான்செய்யுங் கொடிய விரோதத்துபமானது பிறவிகடோருந் தொடர்ந்தே வரும் என்பது பொழிப்பு.

(க.) தனது குடும்பத்துள் எத்தகைய விரோதமுண்டாயினுங் கூடியசீக்கிரம் அங்கனே அடங்கிப்போகும். தான்செய்தக் கொடிய துன்பத்துக்குள்ளாய விரோதவினையாயது மாறாப் பிறவிகடோருந் தொடர்ந்தே வரும் என்பது கருத்து.

(வி.) குடும்பத்தோருக்குள் தோன்றுங் கொடிய விரோதமாயினும் நாளுக்கு நாளகன்று அடங்கிப்போய்விடும். தான் அன்னியருக்குச்செய்யுங் கொடிய துன்பங்களும் பகைகளும் மாறாப்பிறவிகடோருந் தீராப்பகையையும் துன்பத்தையுங் கொடுத்துக்கொண்டேவரும் என்பவற்றிற்குச் சார்பாய் சீவகசிந்தாமணி "அல்லித்தாளற்றபோது மாறாத நூலதனைப்போலத், தொல்லைத் தன்னுடம்பு நீங்கத்தீவினை தொடர்ந்து நீங்கா, புல்லிக்கொண்டு இரைச்சூழ்ந்து புக்குழிபுக்குப்பின்னின், றெல்லையிறுன்பவெந்தீச் சுட்டெரித் திடுங்களன்றே" என்பது கொண்டே தீவினைக்கு அஞ்சி நடந்துக் கொள்ளுங்கோள் என்பது விரிவு.

8. தியவைச் செய்தார் கெடுத னிழறன்னை
வீயா தடியுரைந் தற்று.

(ப.) தீயவை - கொடிய துன்பங்களை, செய்தார் - செய்வோர்களுக்கு, கெடுத - கேடானது, னிழறன்னை - தன்னுடைய நிழல், வீயா - அகலாது,

தடியுரைத்தற்று - தனது பாதத்தைத் தொடர்ந்து நிற்பதுபோ லிருக்குமென்பது பதம்.

(பொ.) கொடிய துன்பங்களைச் செய்வோர்களுக்குக் கேடானது தன்னுடைய நிழலகலாது தனது பாதத்தைத் தொடர்ந்துநிற்பதுபோலிருக்கும் என்பது பொழிப்பு.

(க.) தன்னுடைய நிழலானது தனது பாதத்தைத் தொடர்ந்தே நிற்பதுபோல தான் செய்தத் தீவினையாங் கொடியச் செயல்களானது தன்னைக்கெடுத்தற்குத் தொடர்ந்தே நிற்கும் என்பது கருத்து.

(வி.) நடக்கினும் நிற்கினும் ஓடினுந் தன்னுடைய நிழலானது தன் பாதத்தைத் தொடர்ந்தே நிற்பதுபோல தான் அன்னியருக்குச் செய்தத் துன்பங்களானது ஓடினும் ஒளியினும் மறுபிறவி மாறினும் விடாது தொடர்ந்தே கேடினைத் தரும் என்பது விரிவு.

9. தன்னைத்தான் காதல னாயி னெனைத்தோன்றுந்
துன்னற்க தீவினைப் பால்.

(ப.) தன்னைத்தான் - தானே தன்னை, காதலனாயி - நேசிப்பவனாயின், தீவினைப்பால் - கொடியச்செயலென்னு மொன்றை மட்டிலும், னெனைத்தோன்றுந் - எள்ளளவேனுந் தோன்றவிடாது, துன்னற்க - நேசிக்கா தகற்றவேண்டுமென்பது பதம்.

(பொ.) தானே தன்னை நேசிப்பவனாயின் கொடியச் செயலென்னும் ஒன்றை மட்டிலும் எள்ளளவேனுந் தோன்றவிடாது, நேசிக்காது அகற்றவேண்டும் என்பது பொழிப்பு.

(க.) உண்மெய்யாந் தன்னில் அன்பை வளர்த்தவேண்டியவன் தன்னுள் எழுங் கொடியச்செயலை மட்டிலும் எழவிடாமல் அகற்றவேண்டும் என்பது கருத்து.

(வி.) தன்னைத்தானே நேசித்துத் தனக்கோர் துன்பமுமணுகாமல் காத்துக்கொள்ளவேண்டியவன் அன்னியனுக்கோர் துன்பத்தைத் தோன்ற வைக்காது காத்துக்கொள்ளவேண்டும் என்பது விரிவு.

10. அருங்கோட னென்ப தறிக மருங்கோடித்
தீவினைச் செய்யா னெனின்.

(ப.) மருங்கோடி - மக்கள்பக்கச்சென்று, தீவினை - கொடுஞ் செயல்களை, செய்யானெனின் - செய்யாதிருப்பானாயின், அரு - அருள்நிறைந்தோர், கோடனென்ப - மரபினையுடையோனென்று, தறிக - தெரிந்துக்கொள்ள வேண்டுமென்பது பதம்.

(பொ.) மக்கள் பக்கஞ் சென்று கொடுஞ்செயல்களைச் செய்யாதிருப் பானாயின் அருள் நிறைந்தோர் மரபினையுடையோனென்று தெரிந்துக் கொள்ளல் வேண்டும் என்பது பொழிப்பு.

(க.) அருளினைநிறைந்த கூட்டத்தைச் சேர்ந்தோன் மற்றுமுள்ள மக்களை நாடியவர் பக்கஞ்சேரினுந் தீவினையாங் கொடுஞ் செயல்களைச் செய்யான் என்பது கருத்து.

(வி.) அன்பின் பெருக்கத்தையே பீடமாக நின்றொழுகும் அருள்நிறைந்தோர் மரபில் நின்று ஒழுகினோன் மற்றுள்ள மக்கள் பக்கஞ் சேரினும் தீவினைச்செய லற்றுள்ள தோற்றத்தாலவனை அருங்கோடன் என்றறிதற்கு ஆதாரமானான். தீயவினைகள் யாதெனில்:- தேகத்தால் நிகழுங் கொலை, களவு, காமம் மூன்றும், வாக்கால் நிகழும் பொய், குறளை, கடுஞ்சொல், பயனிலாச்சொல் நான்கும், மனத்தால் நிகழும் வெஃகல், வெகுளல், பொல்லாக்காட்சி மூன்றும் ஆகிய பத்துமே என்பதற்குச் சார்பாய் *மணிமேகலை* "தீவினையென்பதியாதெனவினவி, னாய்தொடிநல்லாயாங்கது கேளாய், கொலையே களவே காமத்தீவினை, யலையாதுடம்பிற்றோன்றுவமூன்றும், பொய்யேகுறளை கடுஞ்சொல் பயனில், சொல்லே சொல்லிற் றோன்றுவ னான்கும், வெஃகல் வெகுளல் பொல்லாக்காட்சி, யென்றுளந்தனினுருப்ப மூன்றுமெனப், பத்து வகையாற்

பயன்றெரிபுலவ, ரித்திரம்படார்படர்குவராயின், விலங்கும் பேயும் நரகருமாகிக் கலங்கிய உள்ளக் கவலையிற்றோன்றுவர்" என்பது கொண்டு இல்லறத்தோன் தீவினைக்கு அஞ்சி ஒழுகல் வேண்டும் என்பதை விளங்கக்கூறிய விரிவு.

கனந்தங்கிய எலீஸ் துரையவர்கள் சங்கத்திலேயே முதலாவது அச்சிட்டக்குறளில் "அருங்கேடனென்ப தறிக" வென்பது பிழைபட்டுள்ளது கொண்டே உரையெழுதி யோர்காலத்தும் பிழைபட்டு பொருள்கெட்டும் வழங்கிவருகின்றது. அதன் திருத்தமொழியை அருங்கலைச் செப்பாலறிந்துக் கொள்ளலாம். வீடுபேறு "அருங்கோடர் சங்கமணுகி யறவுரைகேட் டிருமாந்திருப்பதேவீடு".

27. ஒப்புர ஒழுகல்

உலகத்தில் வாழும் மக்கள் தங்கள் யதார்த்த உரவினரோடு கூடிவாழ்தல் இயல்பாதலின் மற்றுந் தங்களையொத்த மக்களென ஒப்பி உரவாடும் பல்லோருக்கும் இட்டுண்டு வாழ்வதே இல்லறப்பேறாய ஒழுக்கமாதலின் பிரிதிபயனைக் கருதாது பெய்யும் வானின் உபகாரத்தை விளக்கி ஒப்புரவொழுகலின் சுகத்தையும் அதன்பயனையும் விளக்குகின்றார்.

1. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு.

(ப.) கைம்மாறு - ஏதொரு பிரிதி யுபகாரமும், வேண்டா - விரும்பாது, கடப்பாடு - முடிவின்றி பெய்யும், மாரிமாட் - மழைக்கு, வுலகு - உலகமானது, டென்னாற்றுங் - என்ன மறு உபகாரஞ் செய்கிறதென்று, கொல்லோ - சொல்லக்கூடு மென்பது பதம்.

(பொ.) ஏதொரு பிரிதி உபகாரமும் விரும்பாது முடிவின்றி பெய்யும் மழைக்கு உலகமானது என்ன மறு உபகாரஞ் செய்கிறதென்று சொல்லக்கூடும் என்பது பொழிப்பு.

(க.) உலகமும் உலக சீவராசிகளும் மழைக்கு யாதொரு பிரிதி உபகாரமுஞ் செய்யாதிருந்தபோதினும் அம்மழையும் பிரிதி உபகாரங் கருதாது இடைவிடா காலத்திற்கு காலம் பெய்து காப்பதுபோல் மக்களும் ஒப்புரவோராம் மற்ற மக்களது உபகாரங் கருதாது காக்கவேண்டும் என்பது கருத்து.

(வி.) சீவகாருண்யத்தையும் ஒழுக்கத்தையும் மேற்கொண்டு உலகமக்களது வாழ்க்கையில் இல்லறத்தோன் ஒப்புரவோரின் பயனைக் கருதாது அவர்களுக்கு உபகாரியாயிருந்து வாழ்கவேண்டும் என்பதற்கு மழையை உவமித்துக் கூறிய விரிவாம்.

2. தாளாற்றி தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

(ப.) தாளாற்றி - காலையுங்கையையு மியந்திரமாகக்கொண்டு, தந்த - சேகரித்த, பொருளெல்லாந் - திரவியங்க ளெல்லாம், தக்கார்க்கு - உழைப்பாளிகளுக்கு, வேளாண்மை - உழவின்சுக யீய்ந்து, செய்தற்பொருட்டு - உபகாரிகளாக விளங்கவைப்பதற்கேயா மென்பது பதம்.

(பொ.) காலையுங் கையையும் இயந்திரமாகக்கொண்டு சேகரித்த திரவியங்களெல்லாம் உழைப்பாளிகளுக்கு உழவின் சுகமீய்ந்து உபகாரிகளாக விளங்கவைப்பதற்கேயாம் என்பது பொழிப்பு.

க.) கையையுங் காலையும் ஓர் இயந்திரம்போற்கொண்டு சேகரித்தப் பொருளை பூமியில் உழைக்கத்தக்கப் புருடர்களுக்கு உதவி தானியவிருத்திச் செய்து சருவசீவர்களுக்கும் உதவும் பொருட்டேயாம் என்பது கருத்து.

(வி.) ஓடித் திரிந்து சேகரித்தப் பொருளைக்கொண்டு ஆற்றலுற்றுள்ளோர் பூமியில் உழைக்கத் தக்கோர்களைக் கொண்டு தனமுதலீய்ந்து உழுது பண்படுத்தி தானியவிருத்திச்செய்து சருவசீவர்களுக்கும் உபகாரியாக இருக்கும்படி செய்யவேண்டும் என்பது விரிவு.

3. புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
யொப்புரவி நல்ல பிற.

(ப.) யொப்புரவி - ஒப்பி உரவுகொண்டோர்களுக்கும், நல்ல - மற்றும் விவேகமிகுத்தப் பெரியோர்களுக்கும், பிற - அன்னியருக்கும் உபகாரஞ் செய்யாரேல், புத்தேளுலகத்து - புத்ததேவ னுலகத்தையும், மீண்டும் - வேறு சுகத்தையும், பெறலரிதே அடைத லரிதாமென்பது பதம்.

(பொ.) ஒப்பி உரவுகொண்டோர்களுக்கும், மற்றும் விவேகமிகுத்தப் பெரியோர்களுக்கும் அன்னியருக்கும் உபகாரஞ்செய்யாரேல் புத்ததேவன் உலகத்தையும் வேறு சுகத்தையும் அடைதலரிதாம் என்பது பொழிப்பு.

(க.) தன்னுரவினர் உபகாரிகளாவது போல் ஒப்புரவினருக்கும் நலமிகுத்தபெரியோருக்கும் மற்றும் அன்னியருக்கும் உபகாரிகளாக விளங்காவிடின் புத்ததேவனுலகமும் மற்றுஞ் சுகங்களும் பெறுதலரிதாம் என்பது கருத்து.

(வி.) உலக மாக்கள் தன்னுரவினருக்கே உபகாரம்புரிவது இயல்பாதலின் அவ்வகைத் தன்னவரைமட்டிலும் நாடிச்செய்தல் உபகாரமென்னு மொழிக்கு உறுதி பெறாதாதலின் தன்னவரென்றே அன்னியரையும் நேசிப்பதே உபகாரமென்பதுகொண்டு புத்ததேவ னுலகாம் வானராட்சியத்தையும் மற்றுஞ் சுகத்தையும் விரும்புவோர் ஒப்புரவினருக்கும், நல்லோருக்கும், பிறருக்கும் உபகாரிகளாக விளங்கவேண்டும் என்பது விரிவு.

4. ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

(ப.) ஒத்த - சகலமக்களிடத்தும் ஒத்துவாழும் வாழ்க்கையை, தறிவா - உணர்வோன், னுயிர்வாழ்வான் - சுகசீவியாக வாழ்வான், மற்றையான் - அவ்வகை வாழ்க்கையற்றவனோ, செத்தாருள் - மரித்தோருள், வைக்கப்படும் - ஒருவனாக சேர்க்கப்படுவானென்பது பதம்.

(பொ.) சகலமக்களிடத்தும் ஒத்துவாழும் வாழ்க்கையை உணர்வோன் சுகசீவியாக வாழ்வான். அவ்வாழ்க்கை அற்றவனோ மரித்தோருள் ஒருவனாக சேர்க்கப்படுவான் என்பது பொழிப்பு.

(க.) தன்னுரவினரைப்போல் ஏனையோருக்கும் உபகாரியாக வாழ்வோன் சுகசீவியாக வாழ்வான். அவ்வகை உபகாரமற்று வாழ்வோன் மரித்தோருள் ஒருவனாக எண்ணப்படுவான் என்பது கருத்து.

(வி.) எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம் என்னும் முதுமொழிக்கிணங்க சகலசீவர்களும் ஓங்கி தன்னிலையடைதற்கு உபகாரியாக விளங்குவோன் என்றென்றும் சுகசீவியாக வாழ்வான். அத்தகைய சீவகாருண்யமற்று வாழ்வோன் உலகத்தில் சீவித்திருப்பினும் மரித்தோருள் ஒருவனாகக் கருதப்படுவான். ஆதலின் ஒப்புரவொழுகலில் நல்லொழுக்கமே மேலென்பதற்குச் சார்பாய் *அறநெறிச்சாரம்* "தானத்தின்மிக்க தருமமும் தக்கார்க்கு, ஞானத்தின்மிக்கவு சாத்துணையும் - மானம், அழியா வொழுக்கத்தின் மிக்கதூஉமில்லை, பழியாமல் வாழுந்திறம்" என்பது கொண்டு ஒப்புர வொழுகல் வேண்டும் என்பது விரிவு.

5. ஊருணி நீர்நிறைத் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் றிரு.

(ப.) ஊருணி - தேசத்துள், நீர்நிறைந்தற்றே - நீர்வளம்பொருந்தியபோது, யுலகவாம் - உலகமென்னும் சிறப்பைப்பெறும் (அவைபோல்) பேரறிவாளன் - விவேக மிகுதியால் ஒப்புரவொழுகுவோன், றிரு - செல்வனென்னும் சிறப்பைப்பெறுவானென்பது பதம்.

(பொ.) தேசத்துள் நீர்வளம் பொருந்தியபோது உலகமென்னும் சிறப்பைப்பெறும் (அவைபோல்) விவேக மிகுதியால் ஒப்புரவொழுகுவோன் செல்வன் என்னும் சிறப்பைப்பெறுவான் என்பது பொழிப்பு.

(க.) நீர்வளம் பொருந்தி நிலவளமான போது உலகமக்கள் சிறப்படைவதுபோல விவேக மிகுத்தோன் உள்ளதைக்கொண்டு உபகாரியாக விளங்கின் செல்வன் என்று அழைக்கப்படுவான் என்பது கருத்து.

(வி.) நீர்வளம்பெருகி நிலவளம் ஓங்குமாயின் உலகமும் உலகமக்களும் சிறப்பைப் பெறுவதுபோல விவேக மிகுத்தோன் தனக்குள்ள செல்வத்தைக் கொண்டே உபகாரியாக விளங்குதலினால் செல்வன் என்று அழைக்கப்படு கின்றான். செல்வமிருந்தும் உபகாரமற்று வாழ்வானாயின் உலோபியென்று அழைக்கப்படுவான் என்பது விரிவு.

6. பயன்மர முள்ளூர்ப் பழத்தற்றாற் செல்வ
நயனுடை யான்கட் படின்.

(ப.) பயன்மர - பிரயோசனமானக் கனியைக்கொடுக்கும் விருட்சம், முள்ளூர் - ஊர்மத்தியில், பழுத்தற்றாற் - கனிந்துவிழுவதுபோல், செல்வ - திரவியமானது, நயனுடையான்கட் - கிருபை நிறைந்தவனிடத்து, படின் - அமையி லென்பது பதம்.

(பொ.) பிரயோசனமானக் கனியைக்கொடுக்கும் விருட்சம் ஊர்மத்தியில் கனிந்து விழுவதுபோல் திரவியமானது கிருபை நிறைந்தவனிடத்து அமையில் என்பது பொழிப்பு.

(க.) நல்ல கனியைக் கொடுக்கும் மரத்தின் பழம் உள்ளூர் மத்தியில் கனிந்துவிழுந்து சகலசீவர்களும் உண்பதற்கு உதவுதல்போல் கிருபை நிறைந்தவனிடத்து செல்வமும் நிறையுமாயின் சகலமக்களுக்கும் உபகாரியாக ஒழுகுவான் என்பது கருத்து.

(வி.) சகலசீவர்களும் உண்பதற்குரிய கனியைத்தரும் விருட்சமானது உள்ளூர் மத்தியில் கனியை உதிர்ப்பதுபோல சீவகாருண்யம் நிறைந்தவனிடத்து செல்வமும் வந்தமருமாயின் ஒப்புரவோருக்கும் ஏனைய சீவராசிகளுக்கும் உபகாரியாக விளங்குவான் என்பது விரிவு.

7. மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்.

(ப.) செல்வம் - திரவியமானது, பெருந்தகையான்கட் - பேராசை யுடையோனிடத்து, படின் - சேருவது, மருந்தாகி - எட்டிக்கனி, தப்பா - தவிராது, மரத்தற்றாற் - மரத்தடியில் கனிந்து வீழ்வதற்கொக்குமென்பது பதம்.

(பொ.) திரவியமானது பேராசை உடையோனிடத்து சேருவது எட்டிக்கனி தவிராது மரத்தடியில் கனிந்து வீழ்வதற்கு ஒக்கும் என்பது பொழிப்பு.

(க.) உலோபியி னிடத்துப் பொருள் சேருவது எவ்வகையாக விளங்குமென்னில் எட்டிமரத்தடியில் கனிகள் வீழ்ந்து குப்பல் சேர்வதுபோலாம் என்பது கருத்து.

(வி.) சருக்கரையைக் கையிலேந்தி மருந்தென்றுகூறி கொடுப்பதாயின் கசக்குமென்று பயந்து எட்டி அகல்வது இயல்பாதலின் எட்டி என்னும் மருந்தாய கனி ஏராளமாக மரத்தடியில் வீழ்ந்திருப்பினும் அக்கனி எச்சீவர்கள் உணவிற்கும் உதவாததுபோல பேராசையுடையோனிடம் படியுந் திரவியமானது பல்லோருக்கும் பயன்படாது என்பதற்கு ஒக்கப் பழமொழி "எட்டிப்பழுத்தாலென்ன ஈயாதவன் வாழ்ந்தாலென்ன" என்பது விரிவு.

ஓடதி நிகண்டில் எட்டி யென்பதற்குப் பொருள் கசப்பு, மருந்து, என்னும் பொருளைத்தரும்.

8. இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்.

(ப.) இடனில் - தனக்கு வாசஞ்செய்ய யிடமில்லாத, பருவத்து - காலத்தினும், மொப்புரவிற் - ஒப்பிய வுரவினர்க்குச் செய்யும் உபகாரத்தில், கொல்கார் - தளரமாட்டார்கள், கடனறி - தான் செய்ய வேண்டிய செயலினை யுணர்ந்த, காட்சியவர் - நற்காட்சி யுள்ளவர்களென்பது பதம்.

(பொ.) தனக்கு வாசஞ்செய்ய இடமில்லாதகாலத்தும் ஒப்பிய உரவினர்க்குச் செய்யும் உபகாரத்தில் தளரமாட்டர்கள், தான் செய்யவேண்டிய செயலினையுணர்ந்த நற்காட்சியுள்ளவர்கள் என்பது பொழிப்பு.

(க.) தான் வசிப்பதற்கு இல்லிடம் இல்லாவிடினுந் தனதீகையின் பயனை காட்சியால் அறிந்தவர்கள் ஒப்பிய உரவினர்க்கீயும் உபகாரங்களில் தளர்வடையார்கள் என்பது கருத்து.

(வி.) தாங்கள் தங்கியிருப்பதற்கு சுகமாய இல்லம் இல்லாதக் காலத்தினும் தன்மத்தின் பயனைக் காட்சியில் அறிந்தவர்கள் சருவசீவர்களுக்கும் உபகாரிகளாக விளங்குவார்கள் என்பது விரிவு.

9. நயனுடையா னல்கூர்ந்தா னாதல் செயுநீர்மை
செய்யா தமைகலா வாறு.

(ப.) நயனுடையா - கருணை நிறைந்தவன், னல்கூர்ந்தானாதல் சகலராலும் நல்லவனெனப் போற்றுதற்கு, செயுநீர்மெ - செய்யு முபகாரச்செயலில், செய்யா - தவிராது, தமைகலாவாறு - நிலைத்துநிற்றல் வேண்டுமென்பது பதம்.

(பொ.) கருணை நிறைந்தவன் சகலராலும் நல்லவனென்று போற்றுதற்கு செய்யும் உபகாரச்செயலில் தவிராது நிலைத்து நிற்றல் வேண்டும் என்பது பொழிப்பு.

(க.) கருணை நிறைந்த சகலராலும்போற்றத்தக்க உபகாரியானவன் அவ் வுபகாரச்செயலைத் தவிராதமைத்து நிற்றல் வேண்டும் என்பது கருத்து.

(வி.) சீவகாருண்யம் நிறைந்தவன் தனக்குள்ளக் காருண்யச்செயல் சீவர்களுக்கு வுபகாரியாக விளங்குதலால் அக்காருண்யன் என்னும் பெயரை சகலராலுங் கொண்டாடுவதற்காகும், அவ்வகையிற் கொண்டாடப்படுவோன் தனதுபகாரச் செயலை மாறாது நிலைக்கச்செய்ய வேண்டும் என்பது விரிவு.

10. ஒப்புரவி னால்வரும் கேடனி னஃதொருவன்
வித்துக் கோட்டக்க துடைத்து.

(ப.) ஒப்புரவினால் - ஒப்பிய வுரவினருக்குச் செய்யு முபகாரத்தால், வரும் - வருவது, கேடனி - தீங்கேயாயினும், னஃதொருவன் - அவ்வுபகாரஞ் செய்பவன், விற்றுக்கோட்டக்க - தன்னுடைய பொருளைக் கொடுத்துவிட்ட தென்றெண்ணி, துடைத்து - அகற்றவேண்டு மென்பது பதம்.

(பொ.) ஒப்பிய உரவினருக்குச் செய்யும் உபகாரத்தால் வருவது தீங்கேயாயினும் அவ்வுபகாரஞ் செய்பவன் தன்னுடையப் பொருளைக் கொடுத்துவிட்டதென்று எண்ணி அகற்றவேண்டும் என்பது பொழிப்பு.

(க.) உரவினருக்கும் அன்னியருக்குஞ் செய்யும் உபகாரத்தால் ஏதொரு தீங்கு விளையுமாயின் அவற்றை யங்ஙனே மறந்து தனது உபகாரச்செயலிலேயே நிற்றல்வேண்டும் என்பது கருத்து.

(வி.) தனது கருணைமிகுத்த உபகாரச்செயலால் தனதுரவினருக்கும் ஒப்பிய வுரவினருக்கும் ஏனைய சீவராசிகளுக்கும் செய்யும் உபகாரத்தால் பிரதியுபகாரந் தீங்காக நேரினும் அதனை மனதிற் பதியவிடாது துடைத்து தனதுபகாரச் சிந்தையிலேயே உறுதிபட நிற்றல்வேண்டும் என்பது விரிவு.

28. ஈகை

இல்லற ஒழுக்கமுள்ளோன் ஒப்புரவொழுகலில் ஆதுலருக்கும் பிணியாளருக்கும் திக்கற்றவர்களுக்கும் இல்லை என்னாது ஈய்ந்து உண்டிகொடுத்து உயிர்கொடுத்தலே மேலாய தன்மமாதலின் ஒப்புரவொழுகலின் பின்னர் அதற்கு உறுதியாம் ஈகையின் பயனை விளக்குகின்றார்.

1. வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

(ப.) வறியார்க் - ஏழைகளுக்கு, கொன்றீவதே - உதவிபுரிவதே, ஈகை - உதவியாகும், மற்றெல்லாங் - மற்ற வுதவிகளெல்லாம், குறியெதிர்ப்பை - ஓர்பயனைக் கருதி யுதவுதற்கு, நீர - நேரா, துடைத்து - உடையதாமென்பது பதம்.

(பொ.) ஏழைகளுக்கு உதவிபுரிவதே உதவியாகும் மற்ற உதவிகளெல்லாம் ஓர் பயனைக்கருதி உதவுதற்கு நேராய் உடையதாம் என்பது பொழிப்பு.

(க.) ஏதுமற்ற ஏழைகளுக்கு ஈவதே ஈகையாகும் மற்றுமுள்ள ஈகைகள் யாவும் தாம் கோறும் ஓர்பயனைக்கருதி ஈயும் ஈகைக்கு நேராயதாம் என்பது கருத்து.

(வி.) மநுமக்களுள் யாது தொழிலுஞ் செய்தற்கற்ற ஏழைகளுக்கும் பிணியடைந்து வருந்துவோருக்கும், திக்கற்ற வறியருக்கும் சீவகாருண்யங் கொண்டு உண்டிகொடுத் தாதரித்தலே உயிர் கொடுத்தற்கு ஒப்பாகும். மற்றும் கருணையும் அன்புமற்று ஈயும் ஈகையானது ஓர் பயனைக்கருதி ஈயும் ஈகைக்கு நேராதலின் அஃது பயன் தாராதென்று எண்ணிய பெரியோன் பிரிதி பலன் கருதாது காருண்யமிகுத் தீயுந் தானமே பயனுடைத்தாம் என்பதற்குச் சார்பாய் அறநெறிச்சாரம் "செல்வத்தைப் பெற்றோர் சினங்கடிந்து செவ்வியராய், பல்கிளையும் வாட்டாமற்பாத்துண்டு நல்ல, தானமறவாத தன்மெயரே லஃதென்பார், வானகத்து வைப்பதோர் வைப்பு" என்பதுகொண்டு பிரிதிபலன் கருதாது ஈயும் ஈகையே ஈகை என்பது விரிவு.

2. நல்லா ரெனினுங் கொளதீது மேலுல
கில்லெனினு மீதலே நன்று.

(ப.) நல்லாரெனினுங் - பிரிதிபலனை யளிக்கும் நல்லவர்களாயினும், கொளதீது - அவர்களிட மப்பலனைப் பெறுதல் கொடிய தாம், மேலுலகம் - வானராட்சியம், மில்லெனினும் - இல்லாவிடினும், மீதலே - தானஞ்செய்தலே, நன்று - நல்லதாமென்பது பதம்.

(பொ.) பிரிதிபலனை அளிக்கும் நல்லவர்களாயினும் அவர்களிடம் அப்பலனைப் பெறுதல் கொடியதாம். வானராட்சியம் இல்லாவிடினும் தானஞ்செய்தலே நல்லதாம் என்பது பொழிப்பு.

(க.) தானத்தைப் பெற்றவர்கள் நல்லவர்களாய் இருந்து பிரிதிபலனைச்செய்ய அதனைப் பெறுவதாயின் அஃது செய்த தன்மத்திற்கே கேடாக முடிதலான் கொடிதென்று கூறி வானராட்சியம் இல்லை என்பதாயினும் ஈகையின் செயலே இனிய பயனளிக்கும் என்பது கருத்து.

(வி.) ஒருவர்செய்த நன்றியாம் நல் உபகாரத்தை மறவாத நன்றியறிதலுள்ள நல்லோர்கள் அவ்வீகைக்குப் பிரிதியீகை செய்யவும் அதைப்பெறுவதுமாயின் தான் உள்ளன்புடனும் உதாரத்துவத்துடனும் ஈய்ந்த ஈகையின் பயன் கெட்டுப்போகின்றபடியால் அதனைக் கொடியதென்றும் வானராட்சியமென்னும் ஓர்பயனையுங் கருதாது ஈவதே ஈகை நலமாதலின் மேலுலகம் இல்லாவிடினும் வறியார்க்கு ஈவதே இனிதாம் என்பது விரிவு.

3. இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.

(ப.) இலனென்னு - வறியார்க் கில்லையென்று, மெவ்வ - எவ்வகையானு, முரையாமை - கூறாதவனாகி, யீதல் கொடுக்குஞ்செயலானது, குலனுடையான் - நல்ல குடும்பத்திற் பிறந்தவன், கண்ணே - இடத்தே, யுள - உள்ளதாமென்பது பதம்.

(பொ.) வறியார்க்கு இல்லை என்று எவ்வகையானுங் கூறாதவனாகி கொடுக்குஞ்செயலானது நல்ல குடும்பத்துள் பிறந்தவனிடத்தே உள்ளதாம் என்பது பொழிப்பு.

(க.) வறிஞராம் ஆதுலர்களுக்கு இல்லையென்னாமல் ஈயும் இனிய குணமானது நல்ல குடும்பத்திற் பிறந்த நல்லோனிடத்துள்ளதாம் என்பது கருத்து.

(வி.) ஏதோர் பொருளுமில்லா ஏழைகளுக்கும், பிணியாளருக்கும் இனிய உதவியாம் பொருளை இல்லையென்னாமல் ஈயுங் குணம் நல்லக் குடும்பத்துள் பிறந்து வளர்ந்த நல்லோரிடத்தே உண்டாம் என்பது விரிவு.

4. இன்னா திரக்கப் படுத லீரந்தவ
னின்முகங் காணு மளவு.

(ப.) இன்னா - யாதொரு பொருளுமிராது, திரக்கப்படுத - இரஞ்சி கேட்கப்படுதலை, விரந்தவ - இரக்கப்படுவோனது, நின்முகங் - நேராய முகத்தை,

காணும் - பார்க்குங்கால், மளவு - இல்லாநிலை விளங்கிப்போமென்பது பதம்.

(பொ.) யாதொரு பொருளும் இராது இரஞ்சி கேட்கப்படுதலை இரக்கப்படுவோனது நேராய முகத்தைப் பார்க்குங்கால் இல்லாநிலை விளங்கிப்போம் என்பது பொழிப்பு.

(கூ) ஒன்றுமில்லையென்று இரக்கவந்தவனது முகக்குறிப்பால் ஏதுமில்லாமலே இரக்கவந்தான் என்பதை எளிதிலறிந்துக் கொள்ளலாம் என்பது கருத்து.

(வி.) ஏதுமில்லாது இரக்கவந்தவனது குறிப்பை அவனுக்குள்ள ஆயாசத்தாலும் முகச்சோர்வினாலும் இல்லாமலே இரக்கவந்தான் என்பதை எளிதில் உணர்ந்து ஈவதே ஈகை என்பது விரிவு.

5. ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்

(ப.) ஆற்றுவா - ஆறுதலுள்ளோர், ராற்றல் - மற்றோரை யாறுதற்செய்தலி யாதெனில், பசியாற்ற - பசியாக்கினியை யாற்றலேயாம், லப்பசியை - அத்தகையப் பசியாக்கினியை, மாற்றுவா - அகற்ற வேண்டியவர்கள், ராற்றலிற்பின் - முன் ஆற்றிப் பின்பு தன் பசியை யாற்றிக்கொள்ள வேண்டுமென்பது பதம்.

(பொ.) ஆறதலுற்றுள்ளோர் மற்றோரை ஆறுதற்செய்தல் யாதெனில் பசியாக்கினியை ஆற்றலேயாம். அத்தகைப் பசியாக்கினியை அகற்ற வேண்டியவர்கள் முன்பு ஆற்றி பின்பு தன்பசியை ஆற்றிக்கொள்ள வேண்டும் என்பது பொழிப்பு.

(க.) காலப்புசிப்பைக் காலத்திலுண்டு ஆறுதலுற்றுள்ளவர்கள் மற்றோரை ஆறுதற்செய்வதியாதெனில் பசியுள்ளோரையறிந்து முன்பு அவர்கள் பசியை ஆற்றி பின்பு தங்கள் பசியைத் தணித்துக்கொள்ளவேண்டும் என்பது கருத்து.

(வி.) சகல சுகப்புசிப்புக்களையும் உண்டு ஆற்றலுற்றுள்ள கனவான்கள் மற்ற ஏனைய வரியர்களையும் ஆற்றலுறச் செய்வது யாதெனில் அவர்கள் முகங்கண்டு பசியை ஆற்றி பின்னர் தங்கள் பசியைத் தணித்துக்கொள்ளுவதே ஈகையின் ஏதுவாம் என்பது விரிவு.

6. அற்றா ரழிபசி தீர்த்த ல.ஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

(ப.) அற்றா - ஏது மில்லாதவருக்கு, ரழிபசி - மரணத்தைத் தரக்கூடிய பசியை, தீர்த்த - ஆற்றிய, லஃதொருவன் - அவ்வொருவன், பெற்றான் - அடைந்தான், பொருள் - மெய்ப்பொருள், வைப்புழி - நிலையை யென்பது பதம்.

(பொ.) ஏது மில்லாதவருக்கு மரணத்தைத் தரக்கூடிய பசியை ஆற்றிய அவ்வொருவன் அடைந்தான் மெய்ப்பொருள் நிலையை என்பது பொழிப்பு.

(க.) யாதுமற்ற ஏழைகளது மரணத்தைத் தரக்கூடிய பசியையாற்றிக் குளிரச்செய்த ஒருவன் தானடைய வேண்டிய மெய்ப்பொருள் நிலையைச் சார்ந்தான் என்பது கருத்து.

(வி.) உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோர் என்னும் முதுமொழிக் கிணங்க யாதுமற்ற ஏழைகளது பசியை மாற்றி உயிர் கொடுக்கக்கூடிய சீவகாருண்யமமைந்த ஒருவன் தோன்றுவானாயின் அவனது கருணைநிலையே மெய்பொருள் வைப்பாதலின் சீவர்களின் பசியை ஆற்றி ரட்சிப்போன் மெய்ப்பொருள் நிலையை அடைந்தானென்பதற்குச் சார்பாய் அறநெறிச்சாரம் " ஒன்றாகநல்ல துயிரோம்ப லாங்கதன்பின், நன்றாய்தடக்கினார்க்கித்துண்டல் - என்றிரண்டுங், குன்றாப் புகழோன் வருகென்று மேலுலகம், நின்றது வாயிற்றிறந்து" பொருளெனல் மெய்ப்பொருள் வைப்புழி விரிவு.

7. பாத்தூண் மரீ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது.

(ப.) பாத்தூண் - பசித்தோர் முகம்பார்த் துணவை, மரீஇ - அளிக்கும், யவனை - ஒருவனை, பசியென்னும் - பசியாக்கினியாம், தீப்பிணி - கொடுநோய், தீண்டலரிது - அணுகாதென்பது பதம்.

(பொ.) பசிப்போர் முகம்பார்த்து உணவை அளிக்கும் ஒருவனை பசியாக்கினியாம் கொடுநோய் அணுகாது என்பது பொழிப்பு.

(க.) கடும் பசியால் வருந்துவோனது முகம்பார்த்து உணவளிக்கும் ஒருவனுக்கு அத்தகையக் கடும்பசி அடையும் அரிய காலம் வாராது என்பது கருத்து.

(வி.) சீவகாருண்யமுள்ள ஒருவன் பசியுள்ளோன் முகங்கண்டு உணவளிக்குஞ் செயலால் அக்கருணைச் செல்வமே நிறைந்து சுகசீவியாக வாழ்தலால் பசியென்னுந் தீப்பிணி அவனை என்றும் அணுகாது என்பது விரிவு.

8. ஈத்துவக்கு மின்ப மறியார்கொறா முடைமை
வைத்திழக்கு வன்க ணவர்.

(ப.) ஈத்துவக்கு - ஈய்ந்து காக்கும், மின்ப - சுகத்தை, மறியார்கொ - தெரிந்துக்கொள்ளாதோர், றாமுடைமெ தங்கட்பொருட்களை, வைத்திழக்கு - சேர்த்திழந்துவிடுவார், வன்கணவர் - இதக்கமற்ற நெஞ்சினர்களென்பது பதம்.

(பொ.) ஈய்ந்து காக்குஞ் சுகத்தைத் தெரிந்து கொள்ளாதோர் தங்கள் பொருட்களை சேர்த்து இழந்துவிடுவார், இதக்கமற்ற நெஞ்சினர்கள் என்பது பொழிப்பு.

(க.) ஏழைகளுக்கு உண்டிகொடுத்து உண்ணும் சுகமறியாது இதக்கமற்ற நெஞ்சினார்கள் சேர்க்குஞ் செல்வத்தைத் தாங்கள் அறியாமலே இழந்து விடுவார்கள் என்பது கருத்து.

(வி.) வரியார்களுக்கு உண்டி கொடுத்து உயிரளிக்குஞ் சுகத்தையும் புண்ணிய பலத்தையும் அறியாது பொருளைச் சேர்த்துவைக்குங் கடின சித்தத்தையுடையவர் தாங்கள் தேடிய பொருளை தங்களை அறியாமலே இழந்துவிடுவார்கள் என்பது விரிவு.

9. இறத்தலி னின்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்.

(ப.) நிரப்பிய - செல்வம் நிறைந்து, தாமே - தான், தமிய - தனியே, ருணல் - புசித்தல், இறத்தலி - மரித்தோனென்று, னின்னாதுமன்ற - சொல்லுதற் கொப்பானவனே என்பது பதம்.

(பொ.) செல்வம் நிறைந்து தான் தனியே புசித்தல் மரித்தோனென்று சொல்லுதற் ஒப்பானவனே என்பது பொழிப்பு.

(க.) வேணசெல்வம் நிறைந்திருந்தும் தன்மட்டில் புசித்து சுகிப்பவன் இ றந்தவருள் ஒருவனாக எண்ணப்படுவான் என்பது கருத்து.

(வி.) உள்ளசெல்வத்தை இன்று நாளை என்னாது சகலருக்கும் இட்டுண்டு சுகிப்பதே ஈகையின் இயல்பாதலின் நிறைந்த செல்வமிருந்து சகலருக்கும் இட்டுண்ணாது தானே புசித்து சுகிப்பவனுக்கும் மரணமடைந்தோனுக்கும் பேதமில்லை என்பதே விரிவு.

10. சாதலி னின்னாத லில்லை யினிததூஉ
மீத லியையாக் கடை.

(ப.) சாதலி - மரணமடைதலினும், லின்னாத - கொடிய துன்பம், தில்லை - வேறொன்றுமில்லை, யினிததூஉ - மற்றுமினியதாகப் பொருள்சேர்த்தும், மீத - ஈயுங் குணம், லியையா - இசையாதாயின், கடை - அதனினுங் கொடிதாமென்பது பதம்.

(பொ.) மரணமடைதலினும் கொடிய துன்பம் வேறொன்றுமில்லை. மற்றும் இனிதாகப் பொருள்சேர்த்தும் ஈயுங்குணம் இசையாதாயின் அதனினுங் கொடிதாம் என்பது பொழிப்பு.

(க.) மக்களுக்கு மரணமுண்டாவதே கொடிய துன்பமென்னப்படும். அதனினுங் கடையாய கொடிய துன்பம் ஆசையுடன் பொருள் சேர்த்தும் ஈயுங்குணம் இசையாததே என்பது கருத்து.

(வி.) மரணமானது பிணியின் உபத்திரவத்தாலும் பஞ்சவவத்தையாலும் உண்டாய கொடிய துன்பமேயாயினும், செல்வத்தை இனிதாக சேர்த்தும்

ஈயுங்குணம் எழாது அதை காப்பதுந் துன்பம், செலவழிவதுந் துன்பம், இழப்பதுந் துன்பமாகக்கொண்டழிவதால் ஈகையின் குணம் எழாதோன் மரண துன்பத்தினும் அதிக துன்பத்தை அநுபவித்தே தீருவான் என்பது விரிவு.

29. புகழ்

இல்லறத்தோன் மிக்க ஈகையுடன் வாழினும் அவைப் புகழ்பெற வாழ்தலே மேலாதலின் புகழ்வோர் நிலையையும் புகழ்பெறுவோன் பயனையும் இவ்விடம் விளக்குகின்றார்.

1. ஈத லீசைபட வாழ்த லதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.

(ப.) ஈத - வறியோர்க்கீவதில், லிசைபட - புகழ்பெற, வாழ்த - வாழ்வதே, லதுவல்ல - வஃதின்றி, தூதியம் - பயன், மில்லை - வேறில்லை, யுயிர்க்கு - மனுடசீவர்களுக்கென்பது பதம்.

(பொ.) வறியோர்க்கு ஈவதில் புகழ்பெற வாழ்தலே நன்று. அஃதின்றி பயன்வேறில்லை மனுட சீவர்களுக்கு என்பது பொழிப்பு.

(க.) ஏழைகளுக்கு ஈயுந் தன்மமானது அவர்களால் கொண்டாடும்படி ஈவதே நன்று. அதுவன்றி ஈயும் மக்களுக்கு மற்றோர் பயனுமில்லை என்பது கருத்து.

(வி.) ஈவோர் ஈயுஞ் செயலில் மிக்கோர் என்றும் நல்லவர் என்றும் வறியோர்களால் புகழத்தக்கக் கருணையின் செயலே நன்றாதலின் அக்கருணையினிலையே காரணமாகக்கொண்டு ஈவோன் மிருதுவாக்கிற்குச் சார்பாய் அறநெறிச்சாரம் "கொடுப்பான்வினையல்லன் கொள்வானுமல்லன், கொடுக்கப்படும் பொருளுமன்றால் - அடுத்தடுத்து, நல்லவையாதாங்கொல் நாடியுரையாய் நாப்பண் நயந்து" என்பது விரிவு.

2. உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்
றீவார் மேனிற்கும் புகழ்.

(ப.) உரைப்பா - சொல்லும்படியானவர்கள், ருரைப்பவை - சொற்கள், யெல்லா - யாவும், மிரப்பார்க்கொன் - வறியார் கேட்கு மொன்றை, றீவார் - கொடுப்பவரை, மேனிற்கும் - சார்ந்தேநிற்கும், புகழ் - கீர்த்தி யென்பது பதம்.

(பொ.) சொல்லும்படியானவர்கள் சொற்கள் யாவும் வறியார் கேட்கும் ஒன்றை கொடுப்பவரை சார்ந்தே நிற்குங் கீர்த்தி என்பது பொழிப்பு.

(க.) புகழ்ச்சிபெற சொல்லும் சொற்கள் யாவும் ஏழைகள் கேட்குமொன்றை ஈவோனையே சார்ந்துநிற்கும் என்பது கருத்து.

(வி.) உலகமக்கள் புகழ்ந்துபேசும் வார்த்தைகளுள் ஏழைகள் கேட்கும் பொருளை இல்லையென்னாது ஈய்ந்து ரட்சிப்பவனது செயலையே பெரும்பாலுங் கொண்டுளதாம் என்பது விரிவு.

3. ஒன்றாவுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில்

(ப.) வுலகத் - உலகத்தினிடத்து, ஒன்றா - முதலாக, துயர்ந்த - சிறந்தது, புகழல்லாற் - கீர்த்தியே யன்றி, பொன்றாது - அதற்கொப்ப, நிற்ப - நிலையாகநிற்பது, தொன்றில் - வேறொன்றுமில்லையென்பது பதம்.

(பொ.) உலகத்தினிடத்து முதலாக சிறந்தது கீர்த்தியேயன்றி அதற்கொப்ப நிலையாக நிற்பது வேறொன்றும் இல்லை என்பது பொழிப்பு.

(க.) இல்லறத்தையே நல்லறமாகக்கொண்டொழுகும் மாக்கள் என்றும் அழியா புகழ்பெற வாழ்தலே வாழ்க்கை என்பது கருத்து.

(வி.) உலக வாழ்க்கையுள் முதலாக நிற்பது சிறந்த புகழ் ஒன்றேயாம் அப்புகழினும் வறியார்க்கு ஈய்ந்து ரட்சிக்கும் புகழே ஒப்பற்ற அழியாப் புகழ் என்பது விரிவு.

4. நிலைவரை நீள்புக ழாற்றிற் புலவரை
போற்றாது புத்தே ளுலகு.

(ப.) நிலவரை - பூமியினும், நீள் - பாதாளத்தினும், புகழாற்றிற் (கவியாற) புகழ்பெறினும், புலவரை - வித்வான்களை, போற்றாது - கொண்டாடாது, புத்தேளுலகு - புத்ததேவ னுலகென்பது பதம்.

(பொ.) பூமியினும் பாதாளத்தினும் கவியாற் புகழ்பெறினும் வித்வான்களை கொண்டாடாது புத்ததேவனுலகு என்பது பொழிப்பு.

(க.) மத்திய பாதாளம்வரைப் புகழத்தக்க நாற்கவிபாடினும் புலவரை சுவர்க்கமாம் வானராட்சியம் போற்றாது என்பது கருத்து.

(வி.) வறியார்க்கு ஈய்ந்து வருமை அகற்றிக்கொள்ளுவோரையே புத்ததேவ னுலகாம் வானராட்சியம் புகழுமேயன்றி நாற்கவிபாடி பூவிலுள்ளோராலும் பாதாளத்துள் உள்ளோராலும் புகழ்பெறினும் வானுலகம் போற்றிப் புகழாது என்பது விரிவு.

5. நத்தம்போற் கேடு முளதாகும் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.

(ப.) நத்தம்போற் - இருளைப்போல, சாக்காடும் - மரணத்தின், கேடு - துன்பமானது, முளதாகும் - தன்னை மறைத்தலாகும் (அத்தகைய துன்பமற்றபுகழ்) வித்தகர்க்கல்லா - மெய்ஞ்ஞானப் புலவர்க்கன்றி, லரிது - மற்றயருக் கரிதாமென்பது பதம்.

(பொ.) இருளைப்போல் மரணத்தின் துன்பமானது தன்னை மறைத்தலாகும். அத்தகைய துன்பமற்ற புகழ் மெய்ஞ்ஞானப் புலவருக்கன்றி மற்றயருக்கு அரிதாம் என்பது பொழிப்பு.

(க.) இருளானது சகலவற்றையும் மறைத்து மயக்கிவிடுவதுபோல மரணதுன்பம் தன்னை மயக்கும். அத்துன்பமயக்கத்தை ஜெயித்துப் புகழ்பெறுவோர் தெய்வப்புலவரன்றி ஏனையப்புலவர்களால் ஆகாது என்பது கருத்து.

(வி.) இருள்மூடி உலகத்தை மறைத்துவிடுவதுபோல மரண துன்பமானது தன்னை மறைத்துவிடுவது இயல்பாதலின் அத்தகைய மரண துன்பத்தை ஜெயித்துப் புகழ்பெறுவோர் தன்மபோதமும் மெய்ஞ்ஞானமும் நிறைந்த தெய்வப்புலவர்களேயன்றி சுவையற்றக் கவிபாடும் வித்தியாவிர்த்திகள் ஆகார் என்பது விரிவு.

6. தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

(ப.) தோன்றிற் - ஓர் காரியத்தைத் தொடுத்து வெளிதோன்றில், புகழொடு - அதனாலோர் கீர்த்தியுண்டாக, தோன்றுக - வெளிவரல்வேண்டும், அஃதிலார் - அவ்வகையில்லாதோர், தோன்றலிற் - அக்காரியத்தைக் தொடுத்து வெளிவருதலினும், றோன்றாமை - உருதோன்றாதிருத்தலே, நன்று - நல்லதாமென்பது பதம்.

(பொ.) ஓர் காரியத்தைத் தொடுத்து வெளிதோன்றில் அதனாலோர் கீர்த்தியுண்டாக வெளிவரல்வேண்டும் அவ்வகையில்லாதோர் அக்காரியத்தைத் தொடுத்து வெளிவருதலினும் உரு தோன்றாது இருத்தலே நல்லதாம் என்பது பதம்.

(க.) ஏதோர் காரியத்தைத் தொடுத்துச்செய்ய ஆரம்பித்தபோதினும் அதனால் ஓர் புகழுண்டாகச்செய்யல்வேண்டும். அத்தகை இல்லாவிடின் அக்காரியத்தைச் செய்யாமலிருப்பதே நன்று என்பது கருத்து.

(வி.) ஓர் காரியத்தைச் செய்யற்கு வெளிதோன்றியகால் அக்காரியமானது சகலமக்களுக்கும் உபகாரமாயிருக்குமாயின் புகழைத்தரும், உபகாரமற்றிருக்கு மாயின் பயனில்லையென்பதைக் கண்ட பெரியோன் உபகாரமுற்றச் செயலிலேயே தோன்றல் வேண்டுமென்றும் அத்தகைய உபகாரம் யாதொன்றும் இல்லாதாயின் அச்செயலில் தோன்றாமலிருப்பதே நன்றென்றுங்கூறிய விரிவு.

7. புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
யிகழ்வாரை நோவ தெவன்.

(ப.) புகழ்பட - உபகாரி யென்னுங் கீர்த்தியுண்டாக, வாழாதார் - வாழ்க்கைப் பெறாதவர்கள், தந்நோவார் - தாங்களே துன்புறுவதுடன், தம்மை - தங்களைக் கண்டு, யிகழ்வாரை - உலோபியென் றிகழ்வோரை, நோவதெவன் - பார்த்து வருந்துவோன் யாவனென்பது பதம்.

(பொ.) உபகாரி என்னுங் கீர்த்தி உண்டாக வாழ்க்கைப் பெறாதவர்கள் தாங்களே துன்புறுவதுடன் தங்களைக்கண்டு உலோபியென்று இகழ்வோரை பார்த்துவருந்துவோன் யாவன் என்பது பொழிப்பு.

(க.) தாங்களே மற்றோருக்கு உபகாரியாக வாழாமல் மற்றொரு உபகாரமற்று துக்கிப்பதுடன் தங்களை உலோபியென்று இகழ்வோரைக் கண்டு தான் துக்கிப்பதில் அவனுக்கு யாது பயன்கொல்லோ என்பது கருத்து.

(வி.) உலக மக்கள் தங்களுடைய சுக வாழ்க்கையில் ஏனைய மக்களையுஞ் சுகம் பெறச்செய்துப் புகழடையாது வாழ்வோர் தனக்கு ஏனையோர் உதவி உண்டாகாதிடத்து வருந்துவதுடன் தங்களையாதொரு உதவியுமற்றவன் என்று ஏனையோர் இகழக்கேட்டு அதனால் துக்கிப்பவனை எத்தகையோன் என்று கூறலாம் என்பது விரிவு.

8. வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு
மெச்சம் பெறாஅ விடின்.

(ப.) மிசையென்னும் - புகழ்பேறென்னும், மெச்சம் - எஞ்சிய பயனை, பெறாஅவிடின் - பெற்றுக்கொள்ளாவிடின், வையத்தோர்க்கெல்லா - சகலமக்களாலும், வசையென்ப - உலோபியென்னு மிழிச்சொல்லே யுண்டாமென்பது பதம்.

(பொ.) புகழ்பேறென்னும் எஞ்சிய பயனைப் பெற்றுக்கொள்ளாவிடின் சகலமக்களாலும் உலோபியென்னும் இழிச்சொல்லே உண்டாம் என்பது பொழிப்பு.

(க.) சகல மக்களுக்கும் உபகாரியாக விளங்கி மேலாயப் புகழை பெற்றுக்கொள்ளாவிடின் சகலராலும் உண்டாம் உலோபியென்னும் இழிச்சொல்லே துன்புறுத்தும் என்பது கருத்து.

(வி.) மநுமக்களென்னும் சிறந்த பிறப்பைப் பெற்றவர்கள் அச்சிறப்பைத் தங்கள் உபகாரத்தால் விளக்கிப் புகழ்பேறு பெறாவிடின் மநுக்களுள் மநுக்களாக பாவிக்காது போவதுடன் சகல மநுக்களாலும் உலோபியென்னும் வசைச்சொல்லாம் இழிவையும் அதனால் துக்கத்தையும் அநுபவிக்கவேண்டியது இயல்பாதலின் அவ்வசைச்சொல்லைக் கேட்டுத் துக்கிப்பதினும் அச்சொல்லெழாமலும் துக்கிக்காமலும் உபகாரியென்னும் புகழ்பெற்று வாழ்வதே பயன் என்பது விரிவு.

9. வசையலா வண்பயன் குன்று மிசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.

(ப.) வசையலா - இழிய கூறுவதுமட்டுமன்று, மிசையிலா - புகழற்ற, யாக்கை - உடலை, பொறுத்த - தாங்கிய, நிலம் - பூமியின், வண்பயன் - விளைவின் பலனும், குன்று - குறைந்துபோமென்பது பதம்.

(பொ.) இழிய கூறுவதுமட்டுமன்று புகழற்ற உடலைத் தாங்கிய பூமியின் விளைவின் பலனுங் குறைந்துபோம் என்பது பொழிப்பு.

(க.) ஈகையினது புகழற்றோனை உலோபி என்னும் வசைமொழி கூறுவதல்லாது அத்தகைய உலோபியின் உடலைத்தாங்கும் பூமியின்வளமுங் குன்றிப்போம் என்பது கருத்து.

(வி.) ஈதலென்னும் புகழற்றோனை உலகமக்கள் உலோபி என்னும் வசைமொழி கூறுவதல்லாது அவ்வுலோபி தங்கியிருக்கும் பூமியின் வளமுங் குன்றி தானியங்களும் விளைவில்லாமற் போம் என்பது விரிவு.

நாயன் கூறியுள்ள முதுமொழியினது அநுபவத்தை தற்காலமுள்ள உலோபிகளது செயல்களாலும் பூமிகளின்வளங் குன்றிவருங் காட்சியினாலுந் தெரிந்துக் கொள்ளலாம்.

10. வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழாதவர்.

(ப.) வசையொழிய - உலோபியென்னு மிழிமொழிபெறாது, வாழ்வாரே - வாழ்க்கைப்பெற்றோரே, வாழ்வா - சுகசீவிகளாக வாழ்வார்கள், ரிசையொழிய - ஈதலில்லாப் புகழகன்று, வாழ்வாரே - வாழ்பவர்களே, வாழாதவர் - சுகசீவவாழ்க்கையை யற்றவர்களென்பது பதம்.

(பொ.) உலோபியென்னு இழிமொழி பெறாது வாழ்க்கைப்பெற்றோரே சுகசீவிகளாக வாழ்வார்கள். ஈதலில்லாப் புகழகன்று வாழ்பவர்களோ சுகசீவவாழ்க்கையையற்றவர்கள் என்பது பொழிப்பு.

(க.) ஈதலென்னும் புகழ் பெற்று உலோபியென்னும் பெயரற்று வாழ்வோர்களே சுகசீவ வாழ்க்கையைப் பெறுவார்கள். உலோபியென்னும் பெயர்பெற்று ஈதலென்னும் புகழற்று வாழ்வோர்களோ சுகசீவ வாழ்க்கையைப் பெறார்கள் என்பது கருத்து.

(வி.) இறைக்குங்கிணறு சுரக்கும் என்னும் பழமொழிக்கிணங்க ஈவோனதுசெல்வம் என்றுங் குறையாது ஓங்குவதுடன் அவனது குணநலத்தால் வாழ்க்கையிலும் சுகசீவ வாழ்க்கையைப் பெறுவான், அங்ஙனமில்லா உலோபி தனது குணக்கேட்டினால் உள்ள செல்வமுமற்று சுகவாழ்க்கையுங் கெட்டு அல்லலடைவான் என்பது விரிவு.

30. துறவியல்

பௌத்த தன்மத்தைச் சார்ந்த குடும்பியானவன் இல்லாளுடனிருந்து அறச்செயலை வழுவற நடாத்துவதில் கொல்லாவிரதத்து ஒழுகலால் சீவகாருண்யமிகுத்தும், பொய்யை அகற்றி வாழ்தலால் மெய்யென்னும் உண்மை உணர்ச்சி தோன்றியும், களவு அகற்றி வாழ்தலால் பற்றுக்கள் சிலது அகன்றும், அன்னியர் தார இச்சையை அகற்றலால் காமாக்கினி குறைந்தும், மதியை கெடுக்கும் சுராபானங்களை அகற்றலால் நிதானமென்னும் விழிப்பிலிருந்து, இல்லறத்தோர் என்னும் பெயர் பெற்றவன் தனது விசாரிணை மிகுதியால் உலகத்தில் தோன்றும் பொருட்கள் யாவும் க்ஷணத்திற்கு க்ஷணம் அழிந்து மாறுதலுறும் நிலையாமெயாதலின் நிலையுற்ற மெய்ப்பொருளைத் தன்னில்தான் உணர்ந்து ததாகதமாம் நிருவாணம் பெறுதற்கு இல்லறத்தை ஒழித்து துறவறமுற்று பௌத்தசங்கஞ் சேர்ந்து சீரற உடையணிந்து பிச்சா பாத்திரங் கையிலேந்தி உண்மெய்யில் அன்பை வளர்த்திக் கடைத்தேறுமாறு நிலையாமெயை விளக்குகின்றார்.

1. நில்லாத வற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மெ கடை.

(ப.) நில்லாதவற்றை - என்றும் நிலையில்லாப் பொருட்களை, நிலையின - என்றும் உள்ளதென, வென்றுணரும் -எண்ணியிருக்கும், புல்லறி - அறிவற்றவன், வாண்மெ - மநுடரூபியாயினும், கடை - புற்பூண்டுக் கொப்பானவ னாவானென்பது பதம்.

(பொ.) என்றும் நிலையில்லாப் பொருட்களை என்றும் உள்ளதென எண்ணியிருக்கும் அறிவற்றவன் மநுடரூபியாயினும் புற்பூண்டுக்கு ஒப்பானவனாவான் என்பது பொழிப்பு.

(க.) தோன்றி தோன்றி அழியும் பொருட்களைக் கண்ணினாற் கண்டிருந்தும் அதனை அழியாதென்றுணரும் அறிவற்றவன் மநுட ரூபியாயினும் கடை பிறவியாம் புற்பூண்டுகளுக்கு ஒப்பானவனாவான் என்பது கருத்து.

(வி.) பூமியின்கண் தாபரவர்க்கம் முதல் தோற்றமாயினும் செயலின் சிறப்பில் தேவர், மக்கள், விலங்கு, பட்சி, ஊர்வனம், நீர்வாழ்வனம், தாபரமென்னும்

எழுவகைத் தோற்றங்களுள் தேவர்களை முதலாகவும் தாபரங் கடையாகவும் வகுத்துள்ளது கொண்டு இரண்டாவது சிறந்த மநுவுருவனாயினும் அழியும் பொருட்களை அழியாதென்று உணரும் அறிவிலியாயின் கடை தோற்றமாம் புற்பூண்டுகளுக்கு ஒப்பானவனாவான் என்பவற்றிற்குச் சார்பாய் நீதிநூல் *விவேகசிந்தாமணியார்* "ஈயாரை யீயவொட்டா னிவனுமீயா னெழு பிறப்பினுங் கடையா மிவன்பிறப்பே" என்பது விரிவு.

2. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று.

(ப.) கூத்தாட - கழைக்கூத்தாடியின், டவைக்குழாத் - சப்தங் கேட்டவுடன் கூட்டங்கூடி, தற்றே - நின்றவுடன் கலைந்து போவதுபோல, பெருஞ்செல்வம் - திரண்ட திரவியஞ் சேரினும், போக்கு - போகுங்கால், மதுவிளிந்தற்று - அங்கு பார்த்த கூட்டம்போல் நிலைக்காமற் போமென்பது பதம்.

(பொ.) கழைக் கூத்தாடியின் சப்தங்கேட்டவுடன் கூட்டங்கூடி நின்ற வுடன் கலைந்துபோவதுபோல திரண்ட திரவியஞ் சேரினும் போகுங்கால் அங்கு பார்த்தக்கூட்டம்போல் நிலைக்காமற்போம் என்பது பொழிப்பு.

(க.) ஏராளமாய செல்வஞ் சேர்ந்திருப்பினும் அஃது போகுங்கால் கழைக்கூத்தாடியின் சப்தங் கேட்டு பெருங்கூட்டங் கூடி ஆட்டம் நின்றவுடன் ஓராளும் இல்லாமற் போய்விடுவதுபோல் பெருஞ்செல்வமும் நிலைக்காமல் போய்விடும் என்பது கருத்து.

(வி.) கழைக்கூத்தாடியின் சப்தங் கேட்டவுடன் பெருங்கூட்டங்கள்வந்து சூழவிருந்தும் அக்கழைக்கூத்தன் ஆட்டம் நின்றவுடன் அங்கொருவரும் நிலைக்காமற் போய்விடுவதுபோல பெருஞ்செல்வம் சேர்ந்திருந்த போதினும் போகுங்கால் ஏதும் நிலைக்காமற் போய்விடும் என்பது விரிவு.

3. அற்கா வியல்புற்று செல்வமது பெற்றா
லற்குப வாங்கே செயல்.

(ப.) வியல்புற்று - தனது முயற்சியால், அற்கா - நிலையற்ற, செல்வமது - திரவியத்தை, பெற்றா - சேகரித்தபோதினும், லற்குப - அதற்குத்தக்க உபகாரத்தை, வாங்கே - அங்நனே, செயல் - செய்யவேண்டுமென்பது பதம்.

(பொ.) தனது முயற்சியால் நிலையற்ற திரவியத்தை சேகரித்தபோதினும் அதற்குத்தக்க உபகாரத்தை அங்நனே செய்யவேண்டும் என்பது பொழிப்பு.

(க.) செல்வமானது நிலையற்றதாயினும் நன்முயற்சியால் அஃதை சேகரித்தவன் நல் உபகாரத்தால் அவற்றை செலவுசெய்ய வேண்டும் என்பது கருத்து.

(வி.) அற்கா, காலற்றவென்னும், நிலையற்ற செல்வத்தைத் தனது நன்முயற்சியாம் இயல்பிலேயே சேகரித்த ஒருவன் அதனை வரியருக்கும் நல்விருத்திச் செயல்களுக்கும் உதவல் வேண்டு மென்பதற்குச் சார்பாய் *அறநெறிச்சாரம்* "ஈட்டியவொண்பொருளு மில்லொழியும் சுற்றத்தார், காட்டுவாய் நேரே கலுழ்ந்தொழிவர்-மூட்டு, மெரியினுடம்பொழியும் ஈரங்குன்றநாட, தெரியி னறமேதுணை" என்பதுகண்டு ஈதலும் ஏற்றலுமாய துறவறம் விளங்கவேண்டும் என்பது விரிவு.

4. நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்.

(ப.) நாளென - வாழ்நாட்களென்றும், வொன்றுபோற் - நிலையுள்ளதுபோல், காட்டி - நின்று, யுயிரீரும் - உயிர்போய்விடுமாதலின், பெறின் - உயிர் நிலைக்கவேண்டின், வாள - தனது வாழ்நாளை, துணர்வார் - உள்ளுணர்வில் நிலைத்தல்வேண்டுமென்பது பதம்.

(பொ.) வாழ்நாட்க ளென்றும் நிலையுள்ளதுபோல் நின்று உயிர் போய்விடுமாதலின் உயிர் நிலைக்கவேண்டின் தனது வாழ்நாளை உள்ளுணர்வில் நிலைத்தல் வேண்டும் என்பது பொழிப்பு.

(க.) தனது வாழ்நாளானது நிலையாயுள்ள வொன்றுபோல்காட்டி உயிர்போய்விடுமாதலின் அவ்வுயிரினைப் போகாது தன்னைக் காப்போர்

நிலையாய உணர்வால் உண்மெயில் அன்பை வளர்த்தல் வேண்டும் என்பது கருத்து.

(வி.) வாழ்நாளானது என்றும் நிலையாயுள்ள வொன்றுபோல்காட்டி உயிர் நீங்கி விடுவது இயல்பாதலின் அவ்வகை நீங்காது உயிர் நிலைப்பெற வேண்டுவோர் தங்களது வாழ்நாள் உணர்வையும் அன்பையும் உண்மெய்யில் வளர்த்தவேண்டு மென்பது விரிவு.

5. நாச்செற்று விக்குண்மேல் வாராமு னல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

(ப.) நாச்செற்று - வாயடங்கி, விக்குண் - பிராணயிடையூறு, மேல் - தன்னை நோக்கி, வாராமு - வருவதற்குமுன், நல்வினை - துறவறச்செயலை, மேற்சென்று - முநிந்துபோய், செய்ய - செய்வதாயின், படும் - பயமகன்று போமென்பது பதம்.

(பொ.) வாயடங்கிப் பிராண இடையூறு தன்னைநோக்கி வருவதற்குமுன் துறவறச்செயலை முநிந்துச் செய்வதாயின் பயமகன்றுப்போம் என்பது பொழிப்பு.

(க.) கண்பஞ்சடைந்து கடைவாய்வீழ்ந்து பிராணாவத்தை அடைவதற்குமுன் துறவற நெறியைக் கடைபிடித்து ஒழுகுவதாயின் அப்பிராணாவத்தையின் பயம் பட்டுப்போம் என்பது கருத்து.

(வி.) நல்வினையாம் துறவறச்செயலில் வழுவறநின்று புறப்பற்று அகப்பற்று ஒழிக்கும் நிட்டையிலிருப்போருக்கு மரணபயமில்லையாதலின் நாவிழுந்து பிராண இடையூறு வருவதற்குமுன்பு நல்லறமாந் துறவறத்தைக் கடைபிடித்து ஒழுகும் நன்வினைச்செயலில் சதா நிற்றல்வேண்டும் என்பது விரிவு.

6. நெருன லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமெ யுடைத் திவ்வுலகு.

(ப.) நெருன - தன்னையடுத்து, லுளனொருவ - உள்ள வொருவன், னின்றில்லை - இன்றே யில்லாமற்போனான், யென்னும் - என்று கூறும், பெருமெ - தடித்த யாக்கையை, யுடைத்திவ்வுலகு - உலகம் உடைத்தாயுள்ள தென்பது பதம்.

(பொ.) தன்னை அடுத்து உள்ளவொருவன் இன்றே இல்லாமற்போனான் என்று கூறும் தடித்த யாக்கையை உலகம் உடைத்தாயுள்ளது என்பது பொழிப்பு.

(க.) இன்று என்னுடனிருந்தான் இன்றே இறந்தானென்னும் பெருத்த உடலை தோற்றவைத்துள்ளது உலகமென்பது கருத்து.

(வி.) உலகத்தில் தோற்றியுள்ள பெருத்த உடலானது இன்று என்னுட னிருந்தான் கிடந்தான் தன்கேள் அலறச் சென்றான் என்னும் நிலையற்றுள்ளதை நிலையென்று எண்ணிக்காம வெகுளி மயக்கங்களை பெருக்கலாகாது என்பது விரிவு.

7. ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல.

(ப.) கோடியுமல்லபல - பலகோடி மக்களையும், கருதுப - உணருங்கால், ஒருபொழுதும் - முக்காலத் தொருகாலும், வாழ்வ - நிலையாக வாழ்ந்தவரை, தறியார் - கண்டிருக்கமாட்டார்க ளென்பது பதம்.

(பொ.) பலகோடி மக்களையும் உணருங்கால் முக்காலத்து ஒருகாலும் நிலையாக வாழ்ந்தவரைக் கண்டிருக்கமாட்டார்கள் என்பது பொழிப்பு.

(க.) பலகோடி மக்களது வாழ்க்கைகளையும் உய்த்துணர்ந்து நோக்குங்கால் நிலையாக வாழ்ந்திருப்பவர்கள் ஒருவரையுங் கண்டிருக்க மாட்டார்கள் என்பது கருத்து.

(வி.) செல்காலம், நிகழ்காலம், வருங்காலமென்னும் முக்காலங்களில் ஒருகாலத்தேனும் பலகோடி மக்களுள் ஒருவரேனும் நிலையாக வாழ்ந்தவரைக் கண்டிரார்களென்பதைக் கருதிப்பார்க்க விளங்கும் என்பது விரிவு.

8. குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்போ டுயிரிடை நட்பு

(ப.) குடம்பை - முட்டை வோடானது - தனித்தொழிய - தனியே யகல, புட்பறந் - பட்சி பறந்து, தற்றே - நீங்கிவிடுவதுபோல, யுடம்போ - உடலோடாடிய, டுயிரிடை - மனோ தத்துவத்தினது, நட்பு - நேயமென்பது பதம்.

(பொ.) முட்டை ஓடானது தனியே அகல பட்சி பறந்து நீங்கி விடுவதுபோல உடலோடு ஆடிய மனோரதத்தின் நேயம் என்பது பொழிப்பு.

(க.) முட்டையிலுள்ள பட்சியானது பறந்துபோய்விட முட்டையோடு தனியேயொழிவதுபோல் உடலோடாடு மனோதத்துவம் அகல உடலும் ஒழிந்து நிலையில்லாமற்போம் என்பது கருத்து.

(வி.) முட்டையை முட்டையென்று கூறுவாரேயன்றி முட்டையுள் பட்சியென்று கூறுவோரில்லை. அம்முட்டையிற் பட்சி பறந்து வெளிபோன்றபோது முட்டையென்னும் பெயரற்று ஒடென்னும் நிலையற்றழிவதுபோல உடம்பை உடம்பென்று கூறுவாரேயன்றி உடம்புள் உயிரென்று கூறுவாரில்லை. அவ்வுடம்போடாடிய உயிர்நிலையாம் மனோதத்துவம் அகன்றபோது உடம்பென்னும் பெயரற்று பிணமென்னும் நிலை இல்லாமற் போம் என்பது விரிவு.

9. உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

(ப.) உறங்குவது - தூங்குவது, போலும் - போல, சாக்கா - மரணமுண்டாதலும், டுறங்கி - தூங்கி, விழிப்பது - எழுந்திடுதல், போலும் - போலவும், பிறப்பு - தோற்றமுமென்பது பதம்.

(பொ.) தூங்குவதுபோல் மரணம் உண்டாதலும் தூங்கி எழுந்திடுதல்போல் தோற்றமும் என்பது பொழிப்பு.

(க.) உலகத்தில் தோற்றும் பொருட்கள் யாவும் தோன்றிதோன்றி நிலையற்று மறைவது இயல்பாதலின் தூங்குவதே மரணத்திற்கு ஒப்பாயதென்றும் தூங்கிவிழிப்பதே பிறப்பிற்கு ஒப்பாயதென்பதுங் கருத்து.

(வி.) தூங்கினேன் தூங்கினேனென்பது நித்திய நிறையாம் மரணத்திற்கு ஆளாக்கி நிலைகெடச் செய்கின்றபடியால் நிலையாமையாம் உடலம் தூங்கினானென்னும் மறைவையும் விழித்தானென்னும் பிறவியையும் விளக்கிய விரிவு.

10. புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்
டுச்சி லிருந்த வுயிர்க்கு

(ப.) வுடம்பினுட் - தேகத்தினது, டுச்சி - சிரசில், லிருந்த -தங்கி யொளிரும், வுயிர்க்கு - மனவொளிவுக்கு, புக்கி - நிலைபுகுந்து, லமைந்தின்று - அடங்குவதன்றோ நிலைமெய், கொல்லோ - சொல்லுவாயென்பது பதம்.

(பொ.) தேகத்தினது சிரசில் தங்கி ஒளிரும் மன ஒளிவுக்கு நிலைபுகுந்து அடங்குவதன்றோ நிலைமெய் சொல்லுவாய் என்பது பொழிப்பு.

(க.) உடலுக்கு சிரசே பிரதானமாகி அங்கு நின்று ஒளிரும் உயிர் நிலையை அங்ஙனே கண்டு அடங்குவதே நிலைமெய் என்றும் அவ்வகை அடங்காமெய் நிலையாமெய் என்பது கருத்து.

(வி.) ஆசையால் தோற்றுவதே பாசமென்னும் உடலாகவும் அதுவதுவாய் உலரீவதே பசுவென்னும் உயிராகவும், அது ஒளிரும் உச்சியினது நிலைகண்டு ஒடுங்கும் நிலைமெய்யே பதியாகவுங்கண்ட பெரியோன் பயிரங்க உடலாந் தோற்றத்தை நிலையாமையென்றும் அதன் உச்சியினுள் ஒடுங்கி பதிவதையே நிலைமெய்யாம் மெய்ப்பொருளென்றுங் கூறியுள்ளற்குச் சார்பாய் ஞானக்கும்மி "உச்சிக்குநேரே வுண்ணாவுக்குமேல்நிதம், வைச்ச விளக்கே யெறியுதடி, அச்சுவிளக்கதே வாலையடி அவியாமலெறியுதுஞானப்பெண்ணே" என்றும்,

கடவுளந்தாதி "மெய்ப்பொருளுச்சிக்கு ளுச்சிதாகவிருக்குமப்பா, வைப்பினின் மாணிக்கப் பொக்கிஷமே மணிமாமகுடச், செப்புக்குளேற்றுத் திருவிளக்குள்ளொளி தீபமது, கைப்பொருடன்னினு மெய்ப்பொருளாமது கண்டவர்க்கே" பட்டினத்தார் பூரணமாலை "பாசமுடலாய்ப் பசுவதுவுந்தானுயிராய், நேசமுடநிபொருளாய் நின்றனையே பூரணமே" என்பதுகொண்டு நிலையாயமெயாம் பொய்ப்பொருள் காட்சியையகற்றுங்கால் நிலையாய மெய்ப்பொருள் ஏதேனும் உண்டோவென்னும் வினாவெழுஉ மென்று எண்ணி நிலைமெய்யை விளக்கிய விரிவு.

31. ஊழ்

ஊழ் என்பது நல்வினை தீவினைகளது பயனிலை. தீச்செயலாம் தீவினைக்கு உட்பட்டவன் இல்லறவியல் மாளாதுன்புற்று, மாறிமாறி பிறக்கும் பிறப்பினால் முற்பிறப்பிற் செய்த தீவினையின் பயனை இப்பிறப்பில் அவனவன்செய்யும் முயற்சி கூடுவதிலுங் கெடுவதிலும் அறிந்துக்கொள்ளுவது போல், தோற்றும் பொருட்கள் யாவும் நிலையில்லாததென்று உணர்ந்து புத்தசங்கஞ் சேர்ந்த துறவி தான் முற்பிறப்பிற் செய்த நல்வினைப்பயனால் சத்தியசங்கஞ் சேர்ந்து சமண நிலையைப் பெற்று, அதனின்று நல்வினையை தினேதினே பெருக்கிப் பிறவித்துன்பத்தை நீக்கிக் கொள்ளவேண்டுமென்னும் உறுதிபெறுதற்காய் நல்வினை தீவினையாம் ஊழினை விளக்கலானார்.

1. ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி

(ப.) அசைவின்மை - நிலையாய மெய்ப்பொருள், ஆகூழாற் - ஆகக்கூடு முயற்சியால், றோன்று - காணப்படும், கைப்பொருள் - தான் முயன்று சேகரித்தப்பொருள் போகூழாற் - தன்னை யறியாமற்போகுஞ் செயல்போல், றோன்றும் - விளங்கும், மடி - நிலையமென்பது பதம்.

(பொ.) நிலையாய மெய்ப்பொருள் ஆகக்கூடும் முயற்சியால் காணப்படும். தான் முயன்று சேகரித்தப்பொருள் தன்னையறியாமற் போகுஞ் செயல்போல் விளங்கும் நிலையம் என்பது பொழிப்பு.

(க.) தானே முயன்று சேகரித்தக் கைப்பொருள் தன்னை அறியாது ஒழிந்து விடுவதுபோல தான் சேகரிக்க முயன்ற நல்வினையாம் அசைவிலா மெய்ப்பொருட் காட்சி தன்னை அறியாது தானேதானாக விளங்கும் என்பது கருத்து.

(வி.) தானேதானே இடைவிடாது பயின்றுவந்த நல்வினையின் பயனாய மெய்பொருட்காட்சித் தானே தானாகவிளங்கும். அஃதெவ்வகையால் என்னில் தானே தானே முயன்று சேகரித்தப் பொருள் தன்னையறியாது அகன்று விடுவதுபோல என்பது விரிவு.

2. பேதை படுக்கு மிழவூழறிவ கற்று
மாகலூ ழுற்றக் கடை.

(ப.) பேதை - அஞ்ஞானியானவன், படுக்கு - தோய்ந்துநிற்கும், மிழவூழ் - கெடுவினையானது, ழறிவகற்று - விவேகத்தைக் குறைப்பதன்றி, மாகலூ - இனியாகவேண்டிய நல்வினை யேதுக்கும், ழுற்றக்கடை - இல்லாது இழி பிறவியிற் சேர்ப்பிக்குமென்பது பதம்.

(பொ.) அஞ்ஞானியானவன் தோய்ந்து நிற்கும் கெடுவினையானது விவேகத்தைக் குறைப்பதன்றி இனியாகவேண்டிய நல்வினை ஏதுக்கும் இல்லாது இழிபிறவியிற் சேர்க்கும் என்பது பதம்.

(க.) அறிவற்றவன் செய்துவருங் கொடுவினைகளால் உள்ள அறிவுங் கெடுவதுடன் இனி மேற்பிறவிக்கு ஏகும் நல்வினைக்கு ஏதுவின்றியுந் தாழ்ந்த நிலையே அடைவான் என்பது கருத்து.

(வி.) அறிவற்று தனது மனம்போனவாறு செய்துவரும் கொடிய வினைகளால் உள்ள அறிவும் பாழாகிவிடுவதுடன் மாளாபிறவி துக்கத்திற்கு ஆளாகுந்

தாழ்ந்த கடைநிலையையும் அடைவானென வருந்திக் கூறவேண்டியதியாதெனில் பூமியினின்று நல்லேதுவால் புற்பூண்டுகள் தோன்றி, புற்பூண்டுகளினின்று புழுக்கீடாதிகள்தோன்றி, புழுக்கீடாதிகளினின்று ஊர்வனங்கள் தோன்றி, ஊர்வனங்களினின்று மட்சம் பட்சிகள் தோன்றி, மட்சம் பட்சிகளினின்று மிருகாதிகள் தோன்றி, மிருகாதிகளினின்று மக்கள் தோன்றி, மக்களினின்று தேவர்கள்தோன்றி, மேனோக்குதற்குக் காரணம் விவேகமிகுதியால் உண்டாம் நல்வினையே ஆதலின் அவற்றை மறந்து விவேகக்குறைவால் மாளாக் கொடுவினைகளையே செய்வோன் மேனோக்கும் சுகநிலையற்று கீழ்நோக்காம் தாழ்ந்தபிறவியிற் சுழன்று தீராதுக்கத்திற்கு ஆளாக்குங் கொடுவினைப்பயனை சங்கஞ்சேர்ந்து மேநோக்குவோனுக்கு விவரித்த விரிவு. *அறநெறிச்சாரம்* "இறந்தபிறப்பாற் றான்செய்தவினையைப், பிறந்த பிறப்பாலறிக - பிறந்திருந்து, செய்யும்வினையா வறிகவினிபிறந், தெய்தும்வினையின் பயன்."

3. நுண்ணிய நூற்பல கற்பினு மற்றுந்தன்
நுண்மெ யறிவே மிகும்.

(ப.) நுண்ணிய - அறிவை வளர்க்கும் நுட்பமாகிய, நூல்பல - பலநூற்களை, கற்பினு - வாசிக்கினும், மற்றுந்தன் - தான் கற்றுவிட்ட, நுண்மெயறிவே - விவேகநுட்பமே, மிகும் - மேலாக வளருமென்பது பதம்.

(பொ.) அறிவை வளர்க்கும் நுட்பமாகிய பல நூற்களைவாசிக்கினும் தான் கற்றுவிட்ட விவேக நுட்பமே மேலாக வளரும் என்பது பொழிப்பு.

(க.) அறிவை வளர்க்கும் பலவகையான நூற்களைப் படித்தபோதினும் தன் அறிவை வளர்த்துவிட்ட குறைவே மேனோக்கி வளரும் என்பது கருத்து.

(வி.) ஒருவன் தனது அவாவின் மிகுதியால் பலவகையான கலைநூற்களைக் கற்கினும் தான் முற்பிறவியில் கற்றுவிட்டக்குறைவே இப்பிறவியில் தொடர்ந்து மேலாக வளரும் என்பது விரிவு.

4. இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

(ப.) வேறுலகத்தியற்கை - நல்வினையினியல்பா லுலகத்தில் தோன்றுவது, இரு - இரண்டுவகைப்படும், திருவேறு - செல்வந்தனாக வாழ்தலொன்று, தெள்ளியராதலும் - விவேகமிகுத்த ஞானிகளாதலாகிய, வேறு - மற்றொன்றுமேயாமென்பது பதம்.

(பொ.) நல்வினையின் இயல்பால் உலகத்தில் தோன்றுவது இரண்டு வகைப்படும், செல்வந்தனாக வாழ்தல் ஒன்று விவேகமிகுத்த ஞானிகளாதலாகிய மற்றொன்றுமேயாம் என்பது பொழிப்பு.

(க.) உலகத்தில் நல்வினைப்பயனால் தோற்றுவோர் செல்வமுடையோ ரொருவரும் விவேகமிகுத்த ஞானிகளொருவருமாகிய இருவர்களுமேயாம் என்பது கருத்து.

(வி.) உலகத்தில் உடலெடுத்த மக்கள் தங்களது நல்வினைப்பயனால் இரு வகை சுகங்களை அநுபவிக்கின்றார்கள். அதாவது செல்வத்தைப்பெற்று அதனால் கிஞ்சித்து சுகமடைவோரும், விவேகமிகுத்த ஞானிகளாகி அனந்தானந்த சுகமடைவோரும் ஆகிய விரு வகுப்போருள் துறவு பூண்டோரே மேலோராதலின் தெள்ளியோரை வருவித்துக் கூறிய விரிவு.

5. நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு.

(ப.) செல்வஞ் - ஊழ்வலியால் சேர்ந்த திரவியத்தை, செயற்கு - செலவு செய்யுங்கால், நல்லவை - நற்கருமங்கள், யெல்லாம் - யாவும், அந்தீயவாந் - அங்கு தீதாக முடியும், தீயவு - துற்கருமங்களைச் செய்யின், நல்லவாஞ் - அஃது நல்லவையாக முடியுமென்பது பதம்.

(பொ.) ஊழ்வலியால் சேர்ந்த திரவியத்தை செலவுசெய்யுங்கால் நற்கருமங்கள் யாவும் அங்கு தீதாக முடியும், துற்கருமங்களைச்செய்யின் அஃது நல்லவையாக முடியும் என்பது பொழிப்பு.

(க.) புண்ணியவசத்தால் பொருள்சேரின் அஃது நற்செயல்களுக்கும், பாபவழியாற் பொருட்சேரில் அஃது துற்செயல்களுக்கும் செலவாகும் என்பது கருத்து.

(வி.) நான்காவது செய்யுளில் ஞானிகளையும் இருவகையாகப் பிரித்ததின் சிறப்பைக் கூறியவிடத்து செல்வமானது ஆரியராம் மிலேச்சரிடத்தும் சேரும். அரியராம் நீதிமான்களிடத்துஞ் சேரும். இவற்றுள் மிலேச்சரிடத்துள்ள செல்வத்தைக்கொண்டு நற்கருமங்களைச்செய்யின் அஃது துற்கருமங்களாகவே முடியும். நீதிமான்களிடத்துள்ள செல்வத்தைக்கொண்டு துற்கருமங்களைச் செய்யின் அஃது நற்கருமங்களாகவே முடியும். அதாவது புண்ணியவசத்தால் சேர்ந்த செல்வம் புண்ணியகருமங்களுக்கும், பாவவசத்தால் சேர்ந்த செல்வம் பாவகருமங்களுக்கும் உரித்தாயதால் ஒன்றை நினைத்துச்செய்ய மற்றொன்றாக முடிதல் ஊழின் பயன் என்பது விரிவு.

6. பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்து
சொரியினும் போகா தம.

(ப.) பரியினும் - அதி யவாவால் பொருளைச் சேர்க்கினும், மாகாவாம் - சேராவாம், பாலல்ல - பொருளைப் பொருளாக பாவியாது, வுய்த்து - நிதானித்து, சொரியினும் - வேண தானஞ் செய்யினும், போகா - குறையாது, தம - தங்கள் ஊழின் பயனென்பது பொழிப்பு.

(பொ.) அதி அவாவால் பொருளைச்சேர்க்கினும் சேராவாம். பொருளைப்பொருளாக பாவியாது நிதானித்து வேணதானஞ்செய்யினுங் குறையாது தங்கள் ஊழின்பயன் என்பது பதம்.

(க.) பேராசையாற் பொருளைச் சேர்க்க முயலினும் பூர்வ தீவினைவசத்தால் பொருள் சேராவாம். உள்ள பொருளை வேணதானஞ் செய்யினும் பூர்வ நல்வினைவசத்தால் அஃது குறையாவாம் என்பது கருத்து.

(வி.) ஒருவனுக்கு முற்பிறப்பிற் செய்த தீவினை தொடர்ந்து நிற்க வினைவழிமாறுற்று தனது பேராசையால் பொருளைச் சேர்க்க முயலின் அஃது சேராது மற்றொருவன் வினைவழியூடு சேர்ந்திருந்த பொருளைச் செலவு செய்யினுங் குறையாமல் வளரும் என்பது விரிவு.

7. வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குத் துய்த்த லரிது

(ப.) வகுத்தான் - நல்வழியால் சேர்த்த தொகையே, வகுத்த - தொகைநிலையில் நிற்கும், வகையல்லால் - நல்வழியி லல்லாது, கோடி - நூறாயிரமென்னும், தொகுத்தார்க்கு - கணக்கிட்டுவைப்பினும், துய்த்தலரிது - அத்தொகை நிலைத்தலில்லாமற்போமென்பது பதம்.

(பொ.) நல்வழியால் சேர்த்த தொகையே தொகையில் நிற்கும் நல்வழியிலல்லாது நூறாயிரங் கணக்கிட்டுவைப்பினும் அத்தொகை நிலைத்தல் இல்லாமற்போம் என்பது பொழிப்பு.

(க.) ஒருவன் தனது ஊழ்வழியின் துற்கன்மத்தால் சேர்க்குந் தொகையானது கணக்கில் நிலைக்காமலே கழியும். மற்றொருவன் தனது ஊழ்வழியின் நற்கருமத்தால் சேர்க்குந்தொகை அவனது கணக்கில் நிலைத்தோங்கும் என்பது கருத்து.

(வி.) ஈகையின்றி உலோபத்தாலுங் குடிகெடுப்பாலும் வஞ்சினத்தாலுஞ் சேருந்தொகை தனக்கும் உதவாது, சுற்றத்தோருக்கும் உதவாது, தொகை கணக்கிலும் நிலைக்காது போம். நல்முயற்சியாலும் கருணைநிலையாலும் சேரும்பொருள் தனக்கும், தன் சுற்றத்தோருக்கும், ஏனையோருக்கும் உதவுவதுடன் கணக்கிலும் நிலைக்கும் என்பது விரிவு.

8. துறப்பார்மற் றுப்புர லில்லா குறற்பால
வூட்ட கழியு மெனின்.

(ப.) துறப்பார் - இவைகளைக்கண்டு இல்லந் துறந்தோர், மற்றுப் புரலில்லா - வேறொரு பற்றுக்களுமின்றி, குறற்பா - திடநிலையினிற்பரேல், வூட்டா - உடுடே, கழியு - அகலும், மெனின் - என்னலாமென்பது பதம்.

(பொ.) இவைகளைக்கண்டு இல்லந்துறந்தோர் வேறு பற்றுக்களுமின்றி திடநிலையில் நிற்பரேல் உடனே அகலுமென்னலாம் என்பது பொழிப்பு.

(க.) ஆகையால் பொருள் சேருவதையும் அழிவதையுங்கண்டு துறவுபூண்டவர்கள் மற்றுமுள்ள பற்றுக்களை அகற்றுவரேல் நாளுக்குநாள் அவை கழிந்துபோம் என்பது கருத்து.

(வி.) பேராசையாற் பொருளைச்சேர்த்துப் பயன்படாதோரையும், அதியாசையின்றி சேர்த்த பொருள் பயனுறுவதையுங்கண்டு நிராசையுறில் நித்திய சுகம் உண்டென்று உணர்ந்த பெரியோர் துறவுபூண்டு சங்கஞ்சேர்ந்து சமணநிலை பெரினும் ஊழ்வலியிலுள்ளப் பற்றுக்களையும் நீக்குவதாயின் உடனே கழியுமென்று முன்னூழினது முநிவை முற்றுஞ் சாதிக்க விளித்த விரிவு.

9. நன்றாங்கா நல்லவாக் காண்பவ ரன்றாங்கே
லல்லற் படுவ தெவன்.

(ப.) நன்றாங்கா - எண்ணிய காரியம் சுகமாக முடியின், நல்லவா - அதனை யானந்தமாக, காண்பவ - பார்ப்போர், ரன்றாங்கே - உடனே அக்காரிய முடியாவிடில், லல்லற்படுவ - துக்கத்தை யனுபவிப்போன், தெவன் - யாவனென்பது பதம்.

(பொ.) எண்ணிய காரியம் சுகமாக முடியின் அதனை ஆனந்தமாகப் பார்ப்போர் உடனே அக்காரியம் முடியாவிடில் துக்கத்தை அநுபவிப்போன் யாவன் என்பது பொழிப்பு.

(க.) இஃது ஊழின் பயனைத் துறவோர்க்கு ஊட்டியக் கருத்தாதலின் எடுத்த முயற்சி உடனுக்குடன் முடியின் ஆனந்திப்பதும் அவ்வகை முடியாது நாள் பெருகின் அங்கு துக்கிப்பது துறவியின் செயலல்ல என்பது கருத்து.

(வி.) துறவுபூண்டோன் நான், நீ என்னும் பின்னபாவம் இரண்டும், நாமரூபம் என்னுந் துவிதமாய இரண்டும், சுகதுக்கம் என்னுங் காட்சிகளிரண்டும் அறவேண்டியவனாதலின் சமணநிலைக்கு முனிந்தோன் எடுத்த காரியம் இனிது முடியில் ஆனந்திப்பது, முடியாதுறில் துக்கிப்பதில் யாது பயன். விடாமுயற்சியால் சாதித்து சித்திப்பெறுவதே அழகு என்பது விரிவு.

10. ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தாமுந் துறும்.

(ப.) ஊழிற் - முற்பிறவியிற் செய்த தீவினை, பெருவலியாவுள - மிகு வலுபெற்றிருக்கின், மற்றொன்று - அதற் கெதிரிடையாய நல்வினை, சூழினும் - அதனைக் கடக்க முயலினும், தாமுந்துறும் - தீவினையே முன்வந்து நிற்குமென்பது பதம்.

(பொ.) முற்பிறப்பிற் செய்ததீவினை மிகு வலுபெற்றிருக்கின் அதற்கெதிரிடையாய நல்வினை அதனை கடக்க முயலினும் தீவினையே முன்வந்து நிற்கும் என்பது பொழிப்பு.

(க.) துறவுபூண்டோர் எவ்வகையாய நற்சாதனங்களைப் புரியினும் முற்பிறவியிற்செய்த துற்சாதன ஊழே முன்வந்து முயலுமாதலின் மேலும் மேலும் நற்சாதனத்தைப் பெருக்க முயலவேண்டும் என்பது கருத்து.

(வி.) இல்லறம் விடுத்துத் துறவறம் பூண்டோர் தங்கள் தங்கள் ஞானசாதனமாம் இதயசுத்தஞ் செய்யுங்கால் முற்பிறவியிற் சேர்ந்துள்ள இதய களங்குகள் மேலும் மேலும் வந்து மூடும் ஆதலால் சங்கஞ்சேர்ந்து சமணநிலை பெற்றவர்கள் மனத்தினது மாசுகளை அகற்றுஞ் சாதனத்திலேயே முனிந்து முன்மாசுகளை அறக்கழுவிவிடவேண்டும் என்பது விரிவு.

32. துறவு

ஊழ்வலியிற் துறந்த முனிவர் சங்கஞ்சேர்ந்து ஒருபொரு ளுண்டென்றும் இல்லையென்றும் ஓதுதலில் தானேதானாய் நிலைக்கவேண்டி பற்றறுக்கும் வகைவழிகளை விளக்கலானார்.

1. *யாதனின் யாதனி விங்கியா னோத*
லதனி னதனி நிலன்.

(ப.) யாதனின் - யாதாமொரு பொருளுண்டென்றும், யாதனி - யாதொரு தனிப்பொரு ளில்லையென்றும், னீங்கியா - துறந்தோன், னோத - விசாரிணையால், லதனி - தானே, னதனி - தானாய், நிலன் - நிலைபெற வேண்டுமென்பது பதம்.

(பொ.) யாதாமொரு பொருள் உண்டென்றும் யாதொரு தனிப்பொருள் இல்லை என்றும் துறந்தோன் விசாரிணையால் தானேதானாய் நிலைபெற வேண்டும் என்பது பொழிப்பு.

(க.) துறவுற்றோன் தனக்கப்புறப்பட்ட பொருளொன்று உண்டென்று ஏனும் இல்லை என்றேனுங் கருதாது தானேதானாய் நிலைக்கவேண்டும் என்பது கருத்து.

(வி.) இல்லறம் முடித்து துறவறம் ஆசித்து சங்கஞ் சேர்ந்தோன் தனக்கு அப்புறப்பட்டத் தனிப்பொருள் வேறொன்று உண்டு என்றேனும் இல்லை என்றேனுங் கருதாது ஐம்புலன் தென்பட சாதித்து தென்புலத்தானாகி தானேதான் என்னுந் ததாகதனாக வேண்டும் என்பது விரிவு.

2. *வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபி*
னீண்டியற் பால பல.

(ப.) வேண்டி - சுகத்தைக் கருதி, ளுண்டாக - பெருக்கவேண்டி, துறக்க - இல்லறம் விட்டவன், துறந்தபி - துறவறத்தை யாசித்தும், னீண்டியல் - மனதை நீட்டுவனாயின், பல - பலவகைத் துக்கங்களுஞ் சூழ்ந்து, பால - வெறுமனாவானென்பது பதம்.

(பொ.) சுகத்தைக் கருதி பெருக்கவேண்டி இல்லறம் விட்டவன் துறவறத்தை ஆசித்தும் மனதை நீட்டுவானாயின் பலவகைத் துக்கங்களுஞ் சூழ்ந்து வெறுமனாவன் என்பது பொழிப்பு.

(க.) துக்கத்தை அகற்றவேண்டுமென்று துறவறம் பூண்டவன் தனக்கப்புறப்பட்ட வேறுபொருள் உண்டென்று மனதை நீட்டுவானாயின் பலவகை துக்கங்களுஞ் சூழ்ந்து வெறுமனாகிப் பாலை நிலத்திற்கு ஒப்பாவான் என்பது கருத்து.

(வி.) பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடென்னும் நான்குவகை துக்கங்களை அகற்றவேண்டி துறவறத்தை யாசித்து சங்கஞ்சேர்ந்து தனக்கப்புறப்பட்ட வேறு பொருளுண்டென்று விரும்புவானாயின் இல்லறம் விடுத்தும் மனம் நிலையாது மாளா துக்கத்தில் ஆழ்ந்து தானெண்ணிய எண்ணமும் முடியாது ஏனையோர்க்கு ஓர்பலனும் இன்றி பாலைநிலத்திற்கு ஒப்பாவான் என்பது விரிவு.

3. *அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்*
வேண்டிய வெல்லா மொருங்கு.

(ப.) அடல் வேண்டும் - ஒடுங்கல்வேண்டும், மைந்தன் - அவ்வகை யொடுங்குவோன், புலத்தை - ஐம்புல நுகர்ச்சியை, விடல்வேண்டும் - அகற்றல் வேண்டும், வேண்டிய - கோறிய, வெல்லா - சகலசுகங்களும், மொருங்கு - ஒழுங்காமென்பது பதம்.

(பொ.) ஒடுங்கல் வேண்டும், அவ்வகை ஒடுங்குவோன் ஐம்புல நுகர்ச்சியை அகற்றல் வேண்டும், கோரிய சகல சுகங்களும் ஒழுங்காம் என்பது பொழிப்பு.

(க.) துறவுபூண்டோன் மனதையடக்கல் வேண்டும். அவ்வகை அடக்குவதில் பஞ்ச புலன்வழியாகச் செல்லும் நுகர்ச்சியை விட்டுவிடல் வேண்டும். அவ்வகை விடுவானாயின் அவன் கோரும் சுகங்கள் யாவும் ஒழுங்குற முடியும் என்பது கருத்து.

(வி.) இல்லறம் விடுத்துத் துறவறம் விரும்பி சங்கஞ்சேர்ந்து நித்திய சுகம் பெற வேண்டியவன் மனதை அடக்கும் வழியைத் தேடல் வேண்டும்.

அஃதமைதற்கு கண்ணினாற் பார்த்தப்பொருளை இச்சிப்பதும், மூக்கினால் முகர்ந்தப்பொருளை இச்சிப்பதும், செவியினாற் கேட்ட தொனியை இச்சிப்பதும், நாவினால் உருசித்தப் பொருளை இச்சிப்பதும், உடலால் சுகித்த சுகத்தை இச்சிப்பதுமாகியப் பஞ்சபுல நுகர்ச்சியை விடல் வேண்டும். அவ்வகை விடுவானாயின் அவன் கோரும் நித்தியசுகம் யாவும் பெருகி நான்குவகைத் துக்கங்களையும் போக்கிக் கொள்ளுவான் என்பது விரிவு.

4. இயல்பாகு நோன்பிற் கொன்றின் மெயுடைமெ
மயலாகு மற்றும் பெயர்த்து.

(ப.) இயல்பாகு - சாதாரணமாய, நோன்பிற் - விரதத்திற்கு, கொன்றின்மெ - முன்னிலைச்சுட்டாக வோருருவுங் கிடையா, யுடைமெ - அவ்வகை யுருவொன்றுண்டென வெண்ணுவதாயின், மற்றும்பெயர்த்து - சகல சுகங்களையும் போக்கிக் கொள்ளும், மயலாகு - அஞ்ஞானமா மென்பது பதம்.

(பொ.) சாதாரணமாய விரதத்திற்கு முன்னிலைச்சுட்டாய ஓர் உருவுங் கிடையா, அவ்வகை உருவொன் றுண்டென எண்ணுவதாயின் சகல சுகங்களையும் போக்கும் அஞ்ஞானமாம் என்பது பொழிப்பு.

(க.) இயல்பில் நிறைவேற வேண்டிய இதயசுத்த விரதத்தை விடுத்து முன்னிலைச்சுட்டாய ஓர் உருவுண்டென்று நோக்குவதாயின் அஃது பலவகைக் கேட்டிற்குங் கொண்டுபோகக்கூடிய மயக்கம் என்பது கருத்து.

(வி.) மனிதன் மேனோக்க வேண்டிய துறவுபூண்டும் மனமாசினை அகற்றும் இயல்பாய விரதத்தை விடுத்து தனக்கப்புறப்பட்ட ஓர் உரு உண்டென்று சிந்திப்பானாயின் மனமாசகலாது மேலும் மேலுந் துக்கமாயைக்கு உள்ளாவதுடன் சகலசுகங்களையும் இழந்துவிடுவான் என்பது விரிவு.

5. மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க
லுற்றார்க் குடம்பு மிகை.

(ப.) மற்றுங் - அதற்கு வேறாய, தொடர்ப்பாடெவன் - பற்றிவருங்கேடு யாதென, கொல் - சொல்லவேண்டுமாயின், பிறப்பறுக்க - மாளா பிறவி துன்பத்தைப் போக்கிக் கொள்ளுவதற்கின்றி, லுற்றார் - சுற்றத்தார், குடம்பு - உடல் துன்பத்தையும், மிகை - மிக்கப் பெருக்கிவிடுமென்பது பதம்.

(பொ.) அதற்கு வேறாய பற்றிவருங்கேடு யாதென சொல்லவேண்டுமாயின் மாளா பிறவிதுன்பத்திற்கு ஆளாவதின்றி சுற்றத்தார் உடல் துன்பத்தையும் மிக்கப் பெருக்கிவிடும் என்பது பொழிப்பு.

(க.) சகலசுகங்களையும் இழப்பதுடன் வேறாயக் கேடு யாதென்று சொல்லவேண்டுமாயின் மாளா பிறவி துன்பத்திற்கு ஆளாகி குடும்ப துக்கத்திலும் அவதி யுறுவான் என்பது கருத்து.

(வி.) இஃது நான்காவது செய்யுளைத் தொடர்ந்தே ஐந்தாவது செய்யுள் தோன்றியுளதால் மற்றும் அவற்றைத் தொடர்ந்து நிற்கும் பிறவியின் துன்பத்தையும் குடும்பத்தின் அல்லலையும் விளக்கித் துறவு பூண்டவன் தன்னைவிட்டு தனக்கப்புறமாய வேறொரு பொருளுண்டென்று நோக்காது தன் இதயக்களிம்பை அகற்றவேண்டும் என்பது விரிவு.

6. யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்.

(ப.) யானெனதென்னும் - நான் என்பதும் என்னுடையதென்பதுமாய, செருக்கறுப்பான் - அகங்கரிப்பாம் பற்றினையறுப்போன், வானோர்க்குயர்ந்த - மேலோர்க்குகந்த, வுலகம் - புத்தே ளுலகம், புகும் - சேருவானென்பது பதம்.

(பொ.) நான் என்பதும் என்னுடையது என்பதுமாய அகங்கரிப்பாம் பற்றினை அறுப்போன் மேலோர்க்கு உகந்த புத்தேள் உலகம் சேருவான் என்பது பொழிப்பு.

(க.) நான் நீயென்னும் புறப்பற்றையும் என்னது உன்னது என்னும் அகப்பற்றையும் அறுத்த துறவி மேலோர்க்கு உரியதாம் வானுலகஞ் சேருவான் என்பது கருத்து.

(வி.) இல்லறம்விடுத்து பற்றுக்கவேண்டி துறவறம் பூண்டவன் யான், எனதென்னுஞ் செருக்காம், நான் நீ என்னும் பற்றினையும், என்னுடையது உன்னுடையது என்னும் பற்றினையும் அறுக்காவிடிற் பயனில்லை. அதனை அறுப்பவனே துறவுபூண்ட பயனாம் மேலோர்க்குரிய வானராட்சியமாம் புத்ததேவன் உலகஞ் சேருவான் என்பது விரிவு.

7. பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

(ப.) பற்றி - துறவைப்பற்றினோர், விடாஅ - அதனை விடலாகாது. பற்றி - துறவைப்பற்றியும், பற்றினை - உலக பாசபற்றுடைய, தவர்க்கு - அவர்களுக்கு, விடும்பைகள் - நான்குவகை துக்கங்களும், விடாஅ - விடாது என்பது பதம்.

(பொ.) துறவைப் பற்றினோர் அதனை விடலாகாது. துறவைப்பற்றியும் உலக பாசபற்றுடைய அவர்களுக்கு நான்குவகைத் துக்கங்களும் விடாது என்பது பொழிப்பு.

(க.) இல்லறம் விடுத்து துறவறம் அடையவேண்டும் என்னும் ஓர் பற்றினையுடையோர் மற்றும் இல்லறப்பற்றை பற்றுவாராயின் நான்குவகைத் துக்கங்களும் அவர்களைவிட்டு அகலாது என்பது கருத்து.

(வி.) பிறப்பின் இடும்பை பிணியின் இடும்பை, மூப்பின் இடும்பை, மரண இடும்பை நான்கையுங் கண்டு பயந்து இல்லறப்பற்றை யொழித்து துறவறப்பற்றை பற்றினோன் மற்றும் இல்லறப்பற்றை நாடுவானாயின் துறந்து பற்றிய முயற்சிகள் யாவுங்கெட்டு நான்குவகை துக்கங்களில் அழுந்தியே உழல்வான் என்பது விரிவு.

8. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

(ப.) தலைப்பட்டார் - நன்முயற்சியில் முநிந்து. தீர - துக்கமகல, துறந்தார் - துறவு பூண்டோர், மயங்கி - மற்றும் உலகயின்பத்தை நாடி, வலைப்பட்டார் - பாசபந்தக் கயிற்றால் கட்டுப்படுவராயின், மற்றையவர் - இல்லறத்தோரே யாவரென்பது பதம்.

(பொ.) நன்முயற்சியில் முநிந்து துக்கமகல துறவுபூண்டோர் மற்றும் உலக இன்பத்தைநாடி பாசபந்தக் கயிற்றால் கட்டுபடுவராயின் இல்லறத்தோரே யாவர் என்பது பொழிப்பு.

(க.) துக்கந்தீர இல்லம் விடுத்து துறவு பூண்டோர் அந்நெறி தவறி மறுபடியுமிழிந்து மாயவலைக்கு உட்படுவராயின், அவர் இல்லந் துறந்தவராகார் என்பது கருத்து.

(வி.) தனது இடைவிடா முயற்சியால் இல்லந்துறக்கின் நான்குவகைத் துக்கங்களும் ஒழிந்து சுகம்பெறலாம் என்று எண்ணி துறவோர் சங்கஞ் சேர்ந்து, சமணநிலையுற்றோர் அந்நிலை பிறழ்ந்து பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை என்னும் பாசபந்தக் கயிற்றில் கட்டுப்படுவராயின் துறவறத்தான் என்னும் பெயரற்று இல்லறத்தோனே என்றழைக்கப்படுவான் என்பது விரிவு.

9. பற்றற்றக் கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்.

(ப.) பற்றற்றக்கண்ணே - தோற்றும் பொருட்களில் அவாவற்றலே, பிறப்பறுக்கு - பிறவியின் துன்பம் போக்கும், மற்று - அவ்வவா வறாவிடில், நிலையாமை - மாறிமாறி துன்புற்று தோற்றுமுடலை, காணப்படும் - எங்கும் பார்க்கலாமென்பது பதம்.

(பொ.) தோற்றும் பொருட்களில் அவா அற்றலே பிறவியின் துன்பம் போக்கும், அவ்வவா அறாவிடில் மாறிமாறி துன்புற்று தோற்றும் உடலை எங்கும் பார்க்கலாம் என்பது பொழிப்பு.

(க.) காணும் பொருட்களாம் மண், பெண், பொன் என்னும் மூவாசையற்றிருத்தலே பிறவியின் துன்பத்தைப் போக்கும் வழியாகும். அம் மூவாசை அறாவிடின் மாறிமாறி நிலையா துன்புற்று தோற்றும் உடலை எவ்விடத்துங் காணலாம் என்பது கருத்து.

(வி.) தோற்றும் பொருட்கள் யாவும் கூணத்திற்கு கூணம் அழிந்துகொண்டேபோவது இயல்பாதலின் அவைகளின் மீது ஆசைவையாது அகற்றலே பிறவியின் துன்பத்தைப் போக்கும், அங்ஙனமிராது காணும்பொருட்கண்மீது ஆசைகொண்டு அலைவதாயின் மாறாப்பிறவியின் துன்பத்தால் அல்லலடையவேண்டும் என்பது விரிவு.

10. பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

(ப.) பற்றுவிடற்கு - மூவாசையினது பற்றுக்கள் விடவேண்டுமாயின், பற்றுக - பற்றவேண்டியதாய, பற்றற்றான் - மூவாசையை யொழித்த புத்தர்தன், பற்றினை - உண்மெயில் அன்பை வளர்க்கும் பற்றாம், யப்பற்றை - அந்தப்பற்றினை, பற்றுக - உறுதிபெற பற்றல்வேண்டுமென்பது பதம்.

(பொ.) மூவாசையினது பற்றுக்களை விடவேண்டுமாயின் பற்ற வேண்டியதாய மூவாசையை ஒழித்த புத்தர் தன் உண்மெயில் அன்பை வளர்க்கும் பற்றாம் அந்தப்பற்றினை உறுதிபெறப் பற்றல் வேண்டும் என்பது பொழிப்பு.

(க.) பற்றறுக்கவேண்டியவன் புத்தபிரான் பற்றிய உண்மெயில் அன்பை வளர்க்கும் பற்றைப் பற்றுவானாயின் கூணத்திற்கு கூணம் தோற்றி அழியும் பொருட்கள் மீது அவாகொண்டழியும் பற்று தானே அகன்றுப்போம் என்பது கருத்து.

(வி.) புத்தபிரான் இராஜாங்கத்திலுள்ள சகல சுகபோகப் பற்றுக்களையும் அறுத்து உண்மெயில் அன்பை வளர்த்திய பற்றை ஒருவன் பின்பற்றுவானாயின் மற்றும் பிறவி துன்பத்திற்குக் கொண்டுபோகும் பெண்ணாசை பற்று, மண்ணாசை பற்று, பொன்னாசை பற்று மூன்றுந் தானே விட்டுப்போம் என்பது விரிவு.

33. புலால் மறுத்தல்

புத்தசங்கஞ்சேர்ந்து சமணநிலையுற்று சித்திப்பெற வேண்டியவர்கள் அதிகாலையில் எழுந்து உடலஞ் சுத்தி செய்து பச்சரிசியும் பாசிப்பயறும் இட்டுக் காய்த்துள்ளக் கஞ்சியைச் சாப்பிட்டு மனோ சுத்தஞ்செய்யவேண்டிய நீதி நூற்களையும், ஞான நூற்களையும் வாசிப்பதுடன் உலக மக்களுக்கு உதவுவதாய நூற்களையும் எழுதிவிட்டு உதையாதி பதினைந்து நாழிகைக்குள் காய், கீரை, கிழங்குகளைக் கொண்டு செய்தக் குழம்புடன் சோறுண்டு இரவு முழுவதும் யாதொரு பொருளையும் புசியாது சுத்த நீரருந்தி ஞான சாதனத்தினின்று விழித்து இரவு பகலற்ற இடஞ் சேரவேண்டியவர்களாதலின் துறவு பூண்டும் ஒடுக்கத்தைப் பெறாது தன்னூன் பெருக்கப்பிரிதூன் புசிப்பதாயின் காம வெகுளி மயக்கம் பெருகி துறவின் செயலைக் கெடுத்துவிடுமென்றறிந்த பெரியோன் இல்லறத் தோரையே புலால் அகற்றி வாழ்கவேண்டுமென்று கூறியுள்ள புத்ததன்மத்தை மற்றுந் துறவோர்க்குக் கருணைநிலை பூர்த்தி பெறுமாறு தெளிவுறக் கூறுகின்றார்.

1. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்கன மாளு மருள்.

(ப.) தன்னூன் - தன்னுடலது புலாலை, பெருக்கற்கு - பெருகுதற்கு, தான்பிறி - தான் மற்றோருடலது, தூனூண்பா - புலாலைப் புசிப்போனை, னெங்கன

- எவ்வகையால், மாளு - ஆண்டுக்கொள்ளும், மருள் - கருணை யென்பது பதம்.

(பொ.) தன்னுடலது புலாலைப் பெருக்குதற்கு தான் மற்றோர் உடலது புலாலைப் புசிப்போனை எவ்வகையால் ஆண்டுக்கொள்ளும் கருணை என்பது பொழிப்பு.

(க.) கருணைஎன்பதின்றி ஏனய உயிரை வதைத்துப் புலால் உண்போனைக் கருணையானது எவ்வகையால் ஆண்டுக் கொள்ளும் என்பது கருத்து.

(வி.) கருணை, ஈகை, சாந்தம், இம்மூன்றும் மெய்ப்பொருளின் சுயவடிவமாதலின் அம்மெய்யமைந்த பிற மெய்வளர்த்தற்கு சீவகாருண்யமின்றி சீவன்களைக் கொன்று அதனூன் புசிப்பதாயின் இவனுள் காருண்ய பெருக்கமாம் அருள்நிலை எவ்வகையால் வளரும். ஆகலின் துறவு பூண்டோன் அருளை வளர்த்து தெய்வகதி அடைய வேண்டின் புலால் உண்பதை அகற்றவேண்டும் என்பதற்குச் சார்பாய், *சீவகசிந்தாமணி* "ஊன்சுவைத் துடம்புவீக்கி நரகத்தி லுறைதனன்றோ வூன்றினாதுடம்பு வாட்டித் தேவராயுறை தனன்றோ, வூன்றியிவ்விரண்டி னுள்ளுமுறுதி நீயுரைத்திடென்ன, வூன்றினாதொழிந்து புத்தேளாவதே யுறுதியென்றான்" என்று கூறிய சார்புநூலாதார விரிவு.

2. பொருளாட்சி போற்றா தார்க்கில்லை யருளாட்சி
யாங்கில்லை யூன்றின் பவர்க்கு.

(ப.) பொருளாட்சி - பொருளி னிலையை, போற்றாதார்க்கில்லை - போற்றி வாழாதார்க்கு அஃது நிலையாததுபோல், யூன்றின்பவர்க்கு - புலாலை யுண்போர்க்கு, யருளாட்சி - கருணைநிலை, யாங்கில்லை - அவர்களிட மிறாதென்பது பதம்.

(பொ.) பொருளின் நிலையை, போற்றிவாழாதார்க்கு அஃதுநிலையாதது போல் புலாலை உண்போர்க்கு கருணைநிலை அவர்களிடமிராது என்பது பொழிப்பு.

(க.) பொருளினை உறுதிகொண்டு சேர்க்காதவர்களுக்கு அவை சேராதது போல் சீவகாருண்யமின்றி புலால் உண்போருக்கு அருள் நிலை ஒங்காது என்பது கருத்து.

(வி.) பொருளை நிலைபெற பெருக்கவேண்டியவன் அப்பெருக்க முயற்சியில் இருப்பானாயின் அஃது பெருகி ஆட்சிபெறும். அங்ஙனம் முயலாவிடில் பெருகாதது போல் அருளை வளர்க்கவேண்டியவன் சீவகாருண்யத்தால் புலாலை அகற்றல்வேண்டும். அகற்றாது புலால் உண்போனுக்கு சீவகாருண்யம் இராதாதலின் அருளும் ஆட்சியுமுறாது என்பது விரிவு.

3. படைகொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா தொன்ற
னுடல்சுவை யுண்டார் மனம்.

(ப.) படைகொண்டார் - யுதத களத்தில் நிற்போர், நெஞ்சம்போ - மனம்போல், னன்றூக்கா - நற்சுகமிறாததை, தொன்ற - ஒக்கும், னுடல்சுவை - புலாலை யின்பமாக, யுண்டார் - உண்போர், மனம் - மனமுமென்பது பதம்.

(பொ.) யுத்தகளத்தில் நிற்போர் மனம்போல நற்சுகமிறாததை ஒக்கும் புலாலை இன்பமாக உண்போர் மனமும் என்பது பொழிப்பு.

(க.) புலாலினை இன்பமாக உண்போர் மனமானது யுத்தகளத்திற் போர்புரிவோன் கலக்கமுற்ற நெஞ்சத்தை ஒக்கும் என்பது கருத்து.

(வி.) யுத்தகளத்தில் இவன் மற்றொருவனைக் கொல்லமுயன்று மற்றொருவன் இவனைக் கொல்ல முயலும் பயத்தால் நெஞ்சம் கலங்கி விழித்திருப்பது போல மற்றொரு உடலை வதைத்து அதன் புலாலைத் தின்போன் தன் புலாலைத் தின்ன மற்றொன்று காக்கும் என்னுங் கலக்கத்திலுள்ளக் கண்கலங்கி நிற்கும் என்பது விரிவு.

4. அருளல்லதியா தெனிற் கொல்லா மெகோறல்
பொருளல்ல தவ்வூன் ரினல்.

(ப.) கொல்லாமெகோறல் - ஓருடலையும் வதையாதேயென்று வேண்டுதல், பொருளல்ல - ஓர் கருணைமொழி யாகாவாம், அருளல்ல - கருணை யில்லாதவை, தியாதெனில் - எதுவென்றால், தவ்வூன்றினல் கொல்லதேயென்று கோறிய வுடலின் புலாலைப் புசித்தலென்பது பதம்.

(பொ.) எவ் வுடலையும் வதையாதேயென்று வேண்டுவது கருணைமொழி யாகாவாம் கருணை இல்லாதவை யேதென்றால் கொல்லாதே என்று கோறிய உடலின் புலாலைப் புசித்தல் என்பது பொழிப்பு.

(க.) சீவராசிகளைக் கொல்லுவோனைக் கண்டு கொல்லாதே என்று கோறுதல் கருணைமொழியாகாவாம். கருணையில்லையென்பதற்குக் காரணம் கொல்லாதேயென்று கூறிய வுடலின் புலாலைப்புசித்லே யென்பது கருத்து.

(வி.) அவ்வுடலை வதையாதே இவ்வுடலைக் கொல்லாதே என்று கோறி கருணையுள்ளவன் போல் பகட்டுவது பெரிதல்ல அவ்வகைக் கொன்ற புலாலைப் புசியாதிருப்பானாயின் கருணையுள்ளான் என்பது விளங்கும், அப்புலாலை புசிப்பானாயின் கருணை இல்லாதவன் என்பதே விரிவு.

5. உண்ணாமெ யுள்ள துயிர்நிலை யூனுண்ண
வண்ணாத்தல் செய்யா தளறு.

(ப.) உண்ணாமெயுள்ள - புலாலைப் புசியா தருவெறுக்கத்தக்க, துயிர்நிலை - சீவகதி, யூனுண்ண - புலாலைப் புசிக்க, வண்ணாத்தல் இதயசுத்தம், செய்யா - செய்வதற்கேதுவிடாது, தளறு - களங்கினைப் பெருக்குமென்பது பதம்.

(பொ.) புலாலைப்புசியாது அருவெறுக்கத்தக்க சீவகதி புலாலைப் புசிக்க இதயசுத்தம் செய்வதற்கு ஏதுவிடாது களங்கினைப் பெருக்கும் என்பது பொழிப்பு.

(க.) புலால் உடம்பை ஏற்றும், புலாலைப் புசிப்பதற்கு ஏற்கா உயிர்நிலை புலாலைப்புசிப்பதாயின் மனமாசு கழுவுவதற்று மேலும் மேலும் மனக்களங்கம் மூடும் என்பது கருத்து.

(வி.) ஊனுடலானது பிரிதோர் ஊனை சுவைத்து உண்பதாயின் உயிர்நிலையாம் சிவகதி நிலைபெறாதும், களங்கம் அறாதும், அஞ்ஞான பாசபந்தக் களிம்பால் மூடும் என்பதற்குக் காரணமோவென்னில் ஊனினைக் கண்டு அகற்றியும் முகர்ந்து வெறுத்துமுள்ள உயிர்நிலையை உடலின் சுவைமிகுதியாற் புசித்துக் களங்கமுறுதலே காட்சியாம் என்பது விரிவு.

6. தினற்பொருட்டார் கொள்ளா துலகெனின் யாரும்
விலைபொருட் டாலூன்ரு வாரில்.

(ப.) தினற்பொருட்டா-ஊனினைவுண்ணுவதற்காக, துலகெனின்-உலகமக்கள் கொள்ளா - வாங்கா திருப்பார்களாயின், யாரும் - மற்றும், விலைபொருட்டா - விற்பனைக்கு, லூன்றருவாரில் - புலாலினைக் கொடுப்போ ரிராரென்பது பதம்.

(பொ.) ஊனினை உண்ணுவதற்காக உலகமக்கள் வாங்காதிருப் பார்களாயின் மற்றும் விற்பனைக்குப் புலாலினைக் கொடுப்போர் இரார் என்பது பொழிப்பு.

(க.) புலாலினை வாங்கியுண்ணும் மக்கள் உலகத்திராவிடில் சீவர்களைக் கொன்று புலாலினை விற்போர் இரார் என்பது கருத்து.

(வி.) காருண்யமாம் அன்பினை வளர்க்கவேண்டியவர் புலாலை அகற்ற வேண்டும் என்பது துணிபு. அங்ஙனம் அகற்றாது உண்பதாயின் அச்சீவர்களைக் கொன்று விற்போனொருவன் தோன்றுகின்றான். அத்தோற்றத்திற்குத் தின்போனே காரணன் ஆதலின் புலாலினை உண்போன் இராவிடின் கொன்றுவிற்போன் இரான் என்பது விரிவு.

7. உண்ணாமை வேண்டும் புலா அல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின்.

(ப.) பிறிதொன்றன் - தனக்கன்னியமாகத் தோன்றும், புலாஅல் - மாமிஷ வுடலி லுண்டாய, புண்ண - இரணத்தினது கோரத்தை, துணர்வார்ப்பெறின் உற்று நோக்கப்பெற்றானாயின், உண்ணாமே வேண்டும் - அன்றே புலாலுண்பதை விடுவானென்பது பதம்.

(பொ.) தனக்கு அன்னியமாகத்தோன்றும் மாமிஷ உடலில் உண்டாய இர ணத்தினது கோரத்தை உற்றுநோக்கப்பெற்றானாயின் அன்றே புலால் உண்பதை விடுவான் என்பது பொழிப்பு.

(க.) அன்னிய சீவராசிகள் உடலிலுள்ளப்புண்ணினைக்கண்டு அருவெறுப்பவன் அன்றே புலால் உண்ணலைத் தவிர்ப்பான் என்பது கருத்து.

(வி.) புலாலினை அதி இன்பமோடு உண்டு வருவோன் மற்றுமோர் புலால் உடம்பிலுள்ளப் புண்ணினது கோரத்தை உற்று உணர்வானாயின் புண்ணினைக்கண்டு அருவெறுப்பதுப்போல் அப்புலாலினை உண்பதையும் அருவெறுப்பானென்பதற்கு சார்பாய் *அறநெறிச்சாரம்* "தம்புண்கழுவி மருந்திடுவர் தாம்பிரிதின், செம்புண்வறுத்து வறைதின்பர் - அந்தோ நடுநின்றுலக நயனிலாமாந்தர், வடுவன்றோ செய்யும் வழக்கு" என்று கூறியவற்றே சான்றாம் என்பது விரிவு.

8. செயிரிற் றலைபிரிந்த காட்சியா ருண்ணா
ருயிரிற் றலைபிரிந்த வூன்.

(ப.) செயிரிற் - அவாவினின்று, றலை பிரிந்த - விடுபட்ட, காட்சியா - உருவமுற்றோர், ருண்ணா - புசியார்கள், ருயிரிற் - சீவர்களின், றலைபிரிந்த - சிரசினைக்கொய்த, வூன் - புலாலை யென்பது பதம்.

(பொ.) அவாவினின்று விடுபட்ட உருவமுற்றோர் புசியார்கள் சீவர்களின் சிரசினைக் கொய்த புலாலினை என்பது பொழிப்பு.

(க.) இல்லறத்தை விடுத்து துறவறம் பூண்டவர்கள் சிரசினைக் கொய்து ஓருயிரினை வதைத்தப் புலாலைப் புசிக்கமாட்டார்கள் என்பது கருத்து.

(வி.) இல்லறத்திலிருந்து உண்பதினாலும் உடுப்பதினாலும் பலவகைச் செயல்களினாலும் காம வெகுளி மயக்கங்கள் அறாதென்று எண்ணித் தங்கள் அன்பினை வளர்க்கத் துறவறம் பூண்டவர்கள் சீவகாருண்ய மற்றச் செயலாம் கொல்லுதலும் கொல்லாததுமாயப் புலாலை மறந்தும் புசியார்கள் என்பது விரிவு.

9. அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகு த்துண்ணாமே நன்று.

(ப.) தாயிரம் வேட்டலி - ஆயிரங் கலியாணங்களைச் செய்து, அவிசொரிந் - அதிக நெய்பிசைந்த சோற்றை யளிப்பவனாயினும், னொன்ற - ஓர், னுயிர்செகுத்து - சீவனைக்கொன்று, துண்ணாமெ அதன் புலாலைப் புசியாதோனென்போனே, நன்று - நல்லவனென்பது பதம்.

(பொ.) ஆயிரங் கலியாணங்களைச் செய்து நெய்பிசைந்த சோற்றை அளிப்பவனாயினும் ஓர் சீவனைக் கொன்று அதன் புலாலைப் புசியாதோன் என்போனே நல்லவன் என்பது பொழிப்பு.

(க.) ஆயிரம் விவாகங்களைச் செய்து நெய்பிசைந்த அன்னதானஞ் செய்வோனாயினும் சிறப்படையமாட்டான். ஓர் உயிரினை வதையாமலும் அதன் புலாலை உண்ணாமலும் உள்ளவன் எவனோ அவனே சிறப்படைவான் என்பது கருத்து,

(வி.) கருணையே புகழிற்குங் கருணையற்ற நிலையே இகழிற்குங் காரணமாயுள்ளதால் ஆயிரம் வேட்டலைச் செய்து அன்னத்தில் நெய்சொரிந்து பிசைந்து ஊட்டுவதினும் ஓர் உயிரினைக் கொன்றும் அதன் புலாலைப் புசித்தும் சுகியாதிருப்பதே நல்லதென்று துறவோர்க்குக் கருணைநிலையை விவரித்த விரிவு.

10. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்.

(ப.) கொல்லான் - சீவப்பிராணிகளை வதையாதவனும், புலாலை - ஊனினை, மறுத்தானை - தின்னாதொழித்தவனு மானோனை, கைகூப்பி - சரணாகதியென, யெல்லாவுயிருந் - சருவவுயிர்களும், தொழும் - வணங்கு மென்பது பதம்.

(பொ.) சீவப்பிராணிகளை வதையாதவனும் ஊனினைத் தின்னாது ஒழித்த வனுமானோனை சரணாகதியென சருவசீவர்களும் வணங்கும் என்பது பொழிப்பு.

(க.) கருணை நிறைவால் சீவப்பிராணிகளைக் கொல்லாதவனும் அவா அறுத்தலால் புலாலினை உண்ணாதவனும் ஆகிய ஒருவனது கருணாகர முகங் கண்டபோதே சருவசீவன்களுங் கைகூப்பி வணங்கும் என்பது கருத்து.

(வி.) சருவசீவர்கள்மீது இதக்கமுற்று காக்குங் கருணையாளன் ஓர் உயிரினையும் துன்பஞ்செய்யமாட்டான். நாவில் உருசிக்கும் பொருட்களின் மீது அவா அற்றவன் புலாலை விரும்பமாட்டான். இவ்விரு வகைச் செயல் முதிர்ந்தவிடத்து உண்மெய் விளக்கத்தால் தண்மெய் உண்டாகி கருணாகரமுகங் காணலால் சருவசீவர்களும் அம்முகத்தைக் காணும்போதே அவைகளுக்கு அவ்வன்பு எழுவி வணங்குஞ் செயல் உண்டாதலால் ஒருயிரை வதையாதும் புலாலை உண்ணாதுமுள்ள பெரியோனை சருவ சீவர்களும் வணங்கும் என்பது விரிவு.

34. இன்னா செய்யாமெய்

இன்னாமெய் என்னும் மொழியினது பொருள் ஒருவனுள்ளத்தினின்று எழுஉங் கெட்ட எண்ணங்களேயாம். அதாவது ஓர் உயிரினை வதைப்பதினும் அதன் புலாலையுண்பதினும், அன்னியன் குடியை கெடுப்பதற்கும், அன்னியனை துன்பஞ் செய்வதற்கும், அன்னியனை சீர்பெறவிடாம லழிப்பதற்கும், பொறாமையை வளர்ப்பதற்கும், வஞ்சினத்தை நிறப்புதற்குமாய துற்கன்மங்களே பெரிதாதலின் அத்தகைய இன்னாவென்னும் கொடுஞ்சயல்களை துறவிகள் உள்ளத்தில் தோன்றவிடாமலும், தோன்றினும் அவற்றை நிலைக்கவிடாமலும் மனமாசு கழுவும் வழிவகைகளை விளக்குகின்றார்.

1. சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமெ மாசற்றார் கோள்.

(ப.) சிறப்பீனுஞ் - துறவி அட்டமாசித்தியால், செல்வம் - நிறைந்த பாக்கியத்தை, பெறினும் - அடைந்தபோதினும், பிறர்க்கின்னா - அன்னியருக்குத் துன்பமுண்டாகுஞ் - செயலை, செய்யாமெ - செய்யாதவனே, மாசற்றார் - மனக் களங்கமற்றோர், கோள் - கொள்கையுடையவனாவ னென்பது பதம்.

(பொ.) துறவி அட்டமாசித்தியால் நிறைந்த பாக்கியத்தை அடைந்தபோதினும் அன்னியருக்குத் துன்பமுண்டாகுஞ் செயலைச் செய்யாதவனே மனக்களங்கமற்றோர் கொள்கையை உடையவனாவன் என்பது பொழிப்பு.

(க.) துறவியானவன் தனது யாகமென்னு நற்காலபலனால் அட்டமாசித்துக்களை ஆடியபோதினும் அச்சித்தினால் ஒருவருக்கும் தீங்குநேராவண்ணம் ஆடுவதே களங்கமற்றோர் செயலை உரித்தாம் என்பது கருத்து.

(வி.) துறவுபூண்டோர் புத்த சங்கஞ்சேர்ந்து சமணநிலையுற்று சதா சாதன சுவாசசேர்க்கைப் பெற்று, மனேலயமுற்று, உலகத்தின் சகல சிறப்பினும் மேலாய அட்டமாசித்தி சிறப்பைப்பெறினும் அச்சித்தினால் ஏனையோர்க்கு இடுக்கண் உண்டு செய்வதாயின் மனமாசறுக்குஞ் செயலற்று களங்கமிகும், ஆதலின் கிஞ்சித்தடைந்த மனேசுத்தத்தால் சிறந்த, கீர்த்தியுறும் சித்தினைப்பெற்றும் அதனாற் பிறரைத் துன்புறச் செய்யின் மீண்டுங் களங்கமேறி துன்புறுவார் என்றறிந்த மேலோன் சிறப்பாய சித்தியினைப் பெற்ற துறவோர் ஓர் உயிரினுக்குந் தீங்கிழையாது மேலும் மேலும் இதயசுத்தம் உண்டாக்கிக்

கொள்ளவேண்டுமென்று கூறியுள்ளவற்றிற்குச் சார்பாய், *மச்சமுதியார்* "நித்திமுந் சுத்தமதாய் நின்றுபார்த்தால் நின்தேகம் பிரம்மடம் நீதான்காண்பாய், சுத்தமுடன் சோதிமனக் கண்ணாலந்த சுருதிமுடிவானசுட ரொளியைக் கண்டால், பத்தியுள்ள தேகமது சுத்தமாச்சு பாலகனே பலமிருத்துப்பரந்து போச்சு, வெத்தியுள்ள வட்டசித்துங்கைக்குள்ளாச்சு வேதாந்த புருவமய்ய மேவி நில்லே" என்னும் ஆதாரங்கொண்டு துறவு பூண்டுந் துன்பத்திற் காளாகலாகாது என்பது விரிவு.

2. *கறுத்தின்னா செய்தவக் கண்ணுமறுத்தின்னா*
செய்யாமை மாசற்றார் கோள்.

(ப.) கறுத்தின்னா - பிடிவாதத்தாற் கொடுஞ்செயலை, செய்தவக்கண்ணு - செய்ததினாலுண்டாந் துன்பத்தைக் கண்டவன், மறுத்தின்னா - மறுபடியு மத்துன்பத்தை, செய்யாமெ - செய்யாதவனே, மாசற்றார் - மனமாசினைக் சுழுவினோர், கோள் - கொள்கையோன் என்பது பதம்.

(பொ.) பிடிவாதத்தாற் கொடுஞ்செயலை செய்ததினால் உண்டாங் கொடுந்துன்பத்தைக் கண்டவன் மறுபடியும் (ஓர் வரி தெளிவில்லை) என்பது பொழிப்பு.

(க.) தனது மீளாகோபக்கிளர்ச்சியால் மற்றொருவனுக்குத் தீங்குசெய்து அவன் படுந் துன்பத்தைக் கண்ணாற் கண்டவன் மீண்டும் அத்தகையத் துன்பத்தை ஏனை யோருக்குச் செய்யாக் காருண்யமுடையவனே மனமாசினைக் கழுவினோருக்கு ஒப்பானவன் என்று எண்ணப்படுவான் என்பது கருத்து.

(வி.) துறவுபூண்டவன் சாந்தம், ஈகை, அன்பென்னு மூன்றையுமே உருவாக்க வேண்டியவனாதலின் அவற்றை மறந்து மற்றொருவனுக்குத் தீங்குபுரிந்து அதனாலவன்படுந் துன்பத்தை கண்ணாறகண்டு இதக்கமுற்று மற்றொருவனுக்குத் தீங்கு புரியாதவனே மனமாசினைக் கழுவினானுக்கு ஒப்பானவன் என்பது விரிவு.

3. *செய்யாமெ செற்றார்க்கு மின்னாத செய்தபி*
னுய்யா விழுமந் தரும்.

(ப.) செய்யாமெ - யாதொரு துன்பமும் பிறர்க்கு செய்யலாகாதென்றே துறந்தவன், செற்றார்க்கு - தனக்கோர் துன்பஞ்செய்தவர்களுக்கு, மின்னாத செய்தபி - கொடுந்துன்பத்தைக் செய்வதாயின், னுய்யா - மாறத, விழுமந் - துன்பத்தை, தரும் - கொடுக்கும் என்பது பதம்.

(பொ.) யாதெரு துன்பமும் பிறர்க்குச் செய்யலாகாது என்றே துறந்தவன் தனக்கோர் துன்பஞ்செய்தவர்களுக்கு கெடுந்துன்பத்தைச் செய்வதாயின் மாறாதுன்பத்தைக் கொடுக்கும் என்பது பொழிப்பு.

(க.) சருவசீவர்களையுந் தன்னுயிரால் காக்கத் துறந்தவன் ஒருயிரால் தனக்கோர் துன்பமுண்டாயபோது அதைமன்னியாமல் மீண்டும் அவற்றிற்குத் துன்பஞ்செய்வதாயின் மாளா துன்பம் அனுபவிக்க வேண்டிவரும் என்பது கருத்து.

(வி.) இல்லறத்திருப்பதால் பாசங்கொண்டு பலவகைத் துன்பத்தையுஞ் செய்ய ஆளாக்குமென பயந்து துறவறமாஞ் சங்கஞ்சேர்ந்து சமணநிலை பெற்றவன் தனக்கோர் துன்பஞ்செய்தவனை மன்னிக்காது மீண்டுந் துன்பஞ்செய்வானாயின் உணர்ந்துங் கேடுண்ட பயனாம் பிறவி துக்கத்தை அநுபவிப்பான் என்பது விரிவு.

4. *இன்னா செய்தாரை யொறுத்த லவர்நாண*
நன்னயஞ் செய்து விடல்.

(ப.) இன்னா - கொடுந்துன்பமுண்டாக, செய்தாரை - செய்தவர்களை, யொறுத்த - பொறுப்பவை யெவையெனில், லவர்நாண - அவர்களே யஞ்சி யொடுங்கற்கு. நன்னயம் - அவர்களுக்கு வேண்டிய சுபபலனை, செய்துவிடல் - அளித்துவிட வேண்டுவதென்பதே பதம்.

(பொ.) கொடுந்துன்பமுண்டாகச் செய்தவர்களை பொறுப்பவை யெவையெனில் அவர்களே யஞ்சி யொடுங்கற்கு அவர்களுக்கு வேண்டிய சுபபலனை யளித்துவிட வேண்டுவதென்பதே பொழிப்பு.

(க.) துறவியை ஒருவன் பலவகையாய துன்பஞ்செய்த போதிலும் அத்துன்பத்தை இன்பமாகக் கருதி அவனுக்கோர் பிறிதி துன்பத்தைச் செய்யாது இன்பம் பயக்கும் பலனை அருளுவதாயின் தன்னில் தானே நாணமுற்று பிறிதோர் துன்பமுஞ் செய்யாது அடங்குவான் என்பது கருத்து.

(வி.) சாந்தம், அன்பு, ஈகை இம்மூன்றையும் உருதிரட்ட சங்கஞ் சேர்ந்த சிரமணன், ஒருவன் செய்த கொடுந்துன்பத்தை இன்பமாகக் கருதி அவனுக்குப் பிறிதி துன்பஞ்செய்யாது இன்பம் பயக்கும் நற்பயனைத் தருவானாயின் துன்பஞ்செய்தோன் தன்னில் தானே நாணி மற்றொருவருக்குந் தீங்கு செய்யாது சுகநிலை பெறுவான் என்பது விரிவு.

5. அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.

(ப.) அறிவினா - துறந்தானென்னுமொழியால், னாகுவதுண்டோ ஆவதொன்றுண்டோவெனில், பிறிதினோய் - மற்றசீவர்களுக்குண்டாய துன்பத்தை, தந்நோய் போற் - தனக்குற்ற துன்பம்போற் கருதுவதேயாம். போற்றா - அங்ஙனம் கருதாதோன், கடை - புற்பூண்டுகளுக்கு ஒப்பாவான் என்பது பதம்.

(பொ.) துறந்தான் என்னும் மொழியால் ஆவதொன்றுண்டோவெனில் மற்ற சீவர்களுக்குண்டாய துன்பத்தை தனக்குற்ற துன்பம்போல் கருதுவதேயாம். அங்ஙனங் கருதாதோன் புற்பூண்டுகளுக்கு ஒப்பாவான் என்பது பொழிப்பு.

(க.) விவேக மிகுதியால் துறவுற்ற பயன் யாதெனின் மற்ற சீவர்களுக்கு உண்டாய துன்பத்தை தனக்குற்ற துன்பம்போல் கருதி காத்தலேயாம். அவ்வகைக் கருதாவிடில் புற்பூண்டுகளுக் கொப்பாவானென்பது கருத்து.

(வி.) துறவின் சிறப்பு அறிவின் பெருக்கத்தால் உண்டாதலின் அதன்பயன் ஏதேனும் உண்டோவெனில் அன்னிய சீவப்பிராணிகளுக்கு உண்டாம் துன்பத்தை தனக்குண்டாய துன்பம்போல் கருதி காப்பதேயாம். அவ்வகைக் கருதாது காக்காதுமுள்ளோனைத் துறவியெனக்கூறாது கடைப்பிறவியெனக் கூறத்தகும் என்பது விரிவு.

6. இன்னா வெனத்தானு ணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல்.

(ப.). இன்னா - பிறர்க்குத் துன்பத்தை யுண்டாக்குஞ் செயல், வெனத்தா - யீதீதென்று, ணுணர்ந்தவை - தெரிந்து கொண்டபோது, பிறன்கட் - அன்னியர் கட்கு, செயல் - செய்யுங் கிரித்தியங்களில், துன்னாமே - மறந்துங் கொடுஞ் செயல் புரியாதவனாக, வேண்டும் - இருத்தல் வேண்டுமென்பது பதம்.

(பொ.) பிறர்க்குத் துன்பத்தை உண்டாக்குஞ் செயல் ஈது, ஈது எனத் தெரிந்து கொண்டபோது அன்னியர்கட்கு செய்யுங் கிரித்தியங்களில் மறந்துங் கொடுஞ்செயல் புரியாதவனாக இருத்தல் வேண்டும் என்பது பொழிப்பு.

(க.) இன்னின்னச் செயல்களால் பிறருக்குத் துன்பமுண்டாம் என்றுணர்ந்த துறவி மறந்தும் அச்செயலை செய்யாதிருத்தல் வேண்டும் என்பது கருத்து.

(வி.) துறவியானவன் பிறரது செயலாலும், மொழியாலுந், தனது மொழியாலுஞ் செயலாலும் அன்னியருக்கு உண்டாந் தீங்கினை உணர்ந்த போது அத்தகைத் தீங்குண்டாக்குஞ் செயலையுந் துன்பத்தையுமுண்டு செய்யும் மொழியையும் மறந்தும் பேசாமலும் மறந்துஞ் செய்யாமலும் இருத்தல் வேண்டும் என்பது விரிவு.

7. எனைத்தானுமெஞ்ஞான்றுயார்க்கு மனத்தானா
மாணா செய்யாமை தலை.

(ப.) எனைத்தானு - எவ்விடத்திலேனும், மெஞ்ஞான்று - எக்காலத் திலேனும், யார்க்கு - யாதாமொருவருக்கு மனத்தானா - தன்மனமே கரியாக மாணா

செய்யாமை - மீளா துன்பத்தைச் செய்யாதவனே, தலை - முதலவனாவன் என்பது பதம்.

(பொ.) எவ்விடத்திலேனும் எக்காலத்திலேனும் யாதாமொருவருக்கு தன்மனமே கரியாக மீளா துன்பத்தைச் செய்யாதவனே முதலவனாவன் என்பது பொழிப்பு.

(க.) தன்னை ஒருவர் காணும் இடத்திலேனும், காணா காலத்திலேனும் தன் மனமே கரியாய் உள்ளதென்று உணர்ந்து யாதா மொருவருக்கு ஏதொரு துன்பமும் செய்யாதிருப்பவனே துறவிகளில் முதலவனாவன் என்பது கருத்து.

(வி.) அன்னியர் தங்களைக் காணுங்காலங்களில் ஏதொரு துன்பமும் செய்யாதவன் போல் நடித்து காணாவிடத்து துன்பஞ்செய்வோரும் உண்டாதலில், எவ்விடத்தும், எக்காலத்தும், தன்மனமே தனது தீச் செயலுக்குக் கரியாயுள்ளதென்று அறிந்து யாதொரு சீவப்பிராணிகளுக்குந் துன்பஞ் செய்யாதிருப்ப'வனே சகல துறவிகளினும் மேலானவன் எனக் கருதப்படுவான் என்பது விரிவு.

8. தன்னுயிர்க் கின்னாமெ தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்.

(ப.) தன்னுயிர் - தனக்கு, கின்னாமெ - துன்பம் உண்டாதலை, தானறிவா - தானேயறிந்தபின் மன்னுயிர் - அன்னிய சீவர்களுக்கு, கின்னா - துன்பத்தை, செயல் - செய்வது, னென்கொலோ - என்னென்று கூறுவாமென்பது பதம்.

(பொ.) தனக்குத் துன்பமுண்டாதலை தானே அறிந்தபின் அன்னிய சீவர்களுக்கு, துன்பத்தைச் செய்வதை என்னென்று கூறவாம் என்பது பொழிப்பு.

(க.) தனக்கோர் தீங்கு நேரிட்டு அதனால் உண்டாந் துன்பத்தைத் தானே அனுபவித்துணர்ந்தும் பிறருக்கு அத்தகைய துன்பத்தை உண்டு செய்வதாயின் அச்செயலை என்னென்று கூறலாம் என்பது கருத்து.

(வி.) தன்னாலேனும் பிறராலேனும் தனக்குண்டாகும் தேக துன்பத்தையும் மனக்கவலையையும் தானே நன்றாக உணர்ந்தும் அத்தகையத் துன்பத்தையும் மனக்கவலையையும் பிறருக்கு உண்டுசெய்வதாயின் அச்செயலுள்ளோனை எத்தகையத் துறவியென்று பரிந்து கூறிய விரிவாம்.

9. பிறர்க்கின்னாமுற்பகற் செய்யிற் நமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்.

(ப.) பிறர்க்கின்னா - அன்னியருக்கோர் துன்பத்தை, முற்பகற் செய்யிற் - முதற்பொழுதிற் செய்வதாயின், நமக்கின்னா - தமக்கே யத்தகையத் துன்பம், பிற்பகற் - மறு பொழுதில், றாமெவரும் - தானேவந்து சேருமென்பது பதம்.

(பொ.) அன்னியருக்கோர் துன்பத்தை முதற்பொழுதிற் செய்வதாயின் தமக்கே அத் துன்பம் மறுபொழுதிற் தானே வந்து சேரும் என்பது பொழிப்பு.

(க) முதனாளில் அன்னியனுக்கு ஓர் துன்பம் நேரிடச் செய்வதாயின் மறுனாளே யத்தகையத் துன்பம் அறியாமலே தன்னை வந்து சாரும் என்பது கருத்து.

(வி.) தானொருவனைப் புதைக்கத் தோண்டிய குழியில் தன்னையே புதைக்க நேரிடுவதுப் போல் தானொருவனுக்கு முதநாள் செய்த தீங்கு மறுநாள் தன்னையறியாமலே வந்து தீருமென்பது விரிவு.

10. நோயெல்லா நோய் செய்தார் மேலவா நோய் செய்யார்
நோயின்மெ வேண்டு பவர்.

(ப.) நோயெல்லா - அவரவருக்குத்தோற்றுந் துன்பங்கள் யாவும், நோய் செய்தார் - பிறருக்குச் செய்த துன்பப்பயனை, மேலவா - தோற்றுவித்தற்கே யாகலின், நோயின்மெ - தனக்குத் துன்ப மணுகாதிருக்க, வேண்டுபவர் - கோறுவோர், நோய்செய்யார் - பிறர்க்குத் துன்பஞ்செய்யார் களென்பது பதம்.

(பொ.) அவரவருக்குத் தோன்றுந் துன்பங்கள் யாவும் பிறருக்குச் செய்தத் துன்பப்பயனைத் தோற்றுவித்தற்கே யாதலின் தனக்குத் துன்பமணுகாதிருக்கக்

கோறுவோர் பிறருக்குத் துன்பஞ்செய்யார்கள் என்பது பொழிப்பு.

(க.) மக்களுக்குத் துன்பமுண்டாதல் யாவுந் தாங்கள் பிறருக்குச் செய்த துன்பத்தின் பிறிதிபயனே ஆதலின் தனக்கோர் துன்பம் அணுகாதிருக்க வேண்டும் என்று துறந்த துறவிகள் பிறருக்கோர் துன்பமுஞ் செய்யார்கள் என்பது கருத்து.

(வி.)உலக மக்கள் மற்ற சீவராசிகளுக்குச் செய்துவந்த துன்பங்களின் பிறிதி பலனே தங்களைத் துன்புறுத்த வந்து தோன்றுவது இயல்பாதலின் துக்கம் அகலவேண்டி துறவுற்ற முநிவர் பிறவுயிர்களுக்கோர் துன்பமுஞ் செய்யார்களென்பதாம். அங்ஙனஞ் செய்வார்களாயின் தாங்கள் கோறி துறந்த துக்கம் அகலாது என்பது விரிவு.

35. கூடாவொழுக்கம்

அதாவது இல்லறவொழுக்கம் துறவறவொழுக்கம் இவ்விரண்டினுள் இல்லறத்தினின்று இதயசுத்தமாகாதென்று எண்ணி சங்கமென்னுந் தெய்வசபை சேர்ந்து பொன்னாடைப்பூண்டு பாத்திரங் கையிலேந்தி இல்லறத்தாரோடு கூடாதுறவி அவர்கள் தீய ஒழுக்கத்திலுங்கூடாது ஒழுகல் வேண்டுமென்பதை விளக்குகின்றார்.

1. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும்.

(ப.) வஞ்சமனத்தான் - மனதிற் கொடுஞ்செயலையே குடியாகக் கொண்டவன், படிற்றொழுக்கம் - அடங்கி செய்யுங் கொடுஞ்செயல்களுக்கு, பூதங்களைந்து - ஐம்பூதங்களும், மகத்தே - தன்னிற்றானே, நகும் - இடம் விட்டகலுமென்பது பதம்.

(பொ.) மனதிற் கொடுஞ் செயலையே குடியாகக் கொண்டவன் அடங்கிசெய்யுங் கொடுஞ் செயல்களுக்கு ஐம்பூதங்களும் இடம் விட்டுவிலகும் என்பது பொழிப்பு.

(க.) துறந்தும் வன்னெஞ்சமுடையவனாயின் அதுவே அவனது ஐம்பூதச்சேர்க்கையைப் பிரித்து ரணதுக்கத்துக் ஆளாக்கும் என்பது கருத்து.

(வி.) இல்லறப் பற்றுக்களை ஒழித்து துறவு பூண்டவன் தனதுள்ளப் பற்றாகிய வஞ்சினத்தைத் துறக்காது தீங்குபுரிவானாயின் அவ்வுள்ளக் கொதிப்பால் பஞ்ச பூதங்களின் சேர்க்கைகள் பிரிவுற்று மீளா துக்கத்திற்கு ஏதுவாம் மரணத்திற்கு ஆளாவான் என்பது விரிவு.

2. வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின்.

(ப.) தன்னெஞ்சந் - தனதுள்ளக் கொடுஞ்செயலை, தானறி - தானேதெரிந்து, குற்றப்படின் - தப்பென் றுணர்ந்தவன், வானுயர் - வானராட்சியமாம் வீடுபேற்றின், தோற்ற - சுகப்பார்வையை, மெவன் செய்யு - எவ்வகையிலடையக் கூடுமென்பது பதம்.

(பொ.) தனதுள்ளக் கொடுஞ்செயலைத் தானே தெரிந்து தப்பென்றுணர்ந்தவன் வானராட்சியமாம் வீடுபேற்றின் அகப்பார்வையை எவ்வகையால் அடையக்கூடும் என்பது பொழிப்பு.

(க.) துறவி தனது உள்ளத்தில் நின்றெழுங் கொடுஞ்செயலைத் தப்பென்றுணர்ந்தபின் வீடுபேறாம் நிருவாண சுகநிலையை எங்ஙனம் அடைவான் என்பது கருத்து.

(வி.) இல்லந்துறந்து துறவேறி பற்றற்ற நிருவாண நிலையை அடைய வேண்டியவன் தனதுள்ளப்பற்றாம் வஞ்சினச் செயலைத் தானே அகற்றாது குற்றமென்றறிந்தபின் அவனுக்கு நிருவாணநிலை தோற்றுமோ என்பது விரிவு.

3. வலியி னிலைமெயான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று.

(ப.) வலயினிலைமெயான் - இயல்பிலேயே மனத்திடனில்லா னொருவன், வல்லுருவம்பெற்றம் - துறவியின துருவங்காட்ட லெவ்வாறெனில், புலியின்றோல், புலியினுடைய தோலால், போர்த்து - மறைந்து, மேய்ந்தற்று - புலிகளுடன் மேய்வதற் கொக்குமென்பது பதம்.

(பொ.) மனத்திட னில்லா ஒருவன் துறவியினது உருவங்காட்டல் எவ்வாறெனில் புலியினுடைய தோலால் மறைத்து புலிகளுடன் மேய்வதற்கு ஒக்குமென்பது பொழிப்பு.

(க.) மனமாசற்ற துறவிகளுடன் மனமாசறாதோன் சேர்க்கை எவ்வாறுள்ள தென்னில் எருதானது புலியின் தோலைப் போர்த்துக்கொண்டு புலியுடன் உலாவுவதற்கு ஒக்கும் என்பது கருத்து.

(வி.) மனக் களங்கங்களை அறுக்கவும், தேவர்கள் உலாவும் தெய்வசபையில் மீளா வன்னெஞ்சக் களங்கம் நிறைந்தோன் சேர்ந்து வாழ்தல் எவ்வாறுள்ளதென்னில் ஓர் எருதானது புலித்தோலைப் போர்த்துக்கொண்டு புலிகளது கூட்டத்து உலாவலை ஒக்கும் என்பது விரிவு.

4. தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமீழ்த் தற்று.

(ப.) தவமறைந் - துறவின துடைபூண்டும், தல்லவை - அதற்கடாதவைகளை, செய்தல் - செய்வதானது, வேட்டுவன் - வேடனானவன், புதன்மறைந்து - புதறுக்குள்ளொளிந்திருந்து, புட்சிமீழ்த்தற்று - பட்சிகளைப் பிடித்தலை யொக்குமென்பது பதம்.

(பொ.) துறவின் உடைபூண்டும் அதற்கடாதவைகளை செய்வதானது வேடனானவன் புதருக்குள் ஒளிந்திருந்து பட்சிகளைப் பிடித்தலை ஒக்கும் என்பது பொழிப்பு.

(க.) துறவுபூண்டு, சங்கஞ்சேர்ந்தும் இல்லறத்தோரை வஞ்சித்துப் பொருள்பரிப்பதாயின், அவர்களது செய்கை புதருக்குள் மறைந்து பட்சிகளைப் பிடிக்கும் வேடனுக்கொப்பாம் என்பது கருத்து.

(வி.) துறந்து சித்திப்பெற்றோரையே உலகத்தோர் தெய்வமென்று கொண்டாடுவது இயல்பாதலின் தானுமோர் துறந்தவனென்னுந் தவவேடம்பூண்டு இல்லத்தோரை வஞ்சித்து பொருள்பறித்தல் எவ்வாறுள்ள தென்னில் புதருக்குள் மறைந்து பட்சிகளைப் பிடித்து வதைக்கும் வேடனுக்கு ஒப்பாம் என்பது விரிவு.

5. பற்றற்றே மென்பார் படிற்றொழுக்க மெற்றெற்றென்
றேகம் பலவுந் தரும்.

(ப.) பற்றற்றே - சகல பாசபந்தங்களையும் விட்டோம், மென்பர் - என நடிப்போர்க்கு, படிற்றொழுக்க - தங்களுட்படிந்துள்ளத் தீச்செயல்களே, மெற்றெற்றென் - எப்போதெப்போதென, றேகம் - துன்பங்களை, பலவுந்தரும் - பலவாற்றானுங் கொடுக்குமென்பது பதம்.

(பொ.) சகல பாசபந்தங்களையும் விட்டோமென நடிப்போர்க்குத் தங்களுட் படிந்துள்ளத் தீச்செயல்களே எப்போதெப்போதெனத் துன்பங்களை பலவாற்றானுங் கொடுக்கும் என்பது பொழிப்பு.

(க.) துறவுபூண்டுந் தங்களுக்குள்ளத் தீச்செயல்களை உள்ளத்தினின்று அகற்றாது வெறுமனே பற்றற்றோமென நடிப்போரை துன்பம் எப்போதெப்போ தெனத் தொடர்ந்தே நிற்கும் என்பது கருத்து.

(வி.) பலவகைத் துக்கங்களையும் போக்குதற்குத் துறவுபூண்டு தனக்குள்ள தீயகுணங்களை அகற்றாது துறவியென நடிப்பினும் உள்ள வஞ்சினமே எப்போதெப்போதெனக் கார்த்து மீளாதுக்கத்திற்கு ஆளாக்கிவிடும் என்பது விரிவு.

6. நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணா ரில்.

(ப.) நெஞ்சிற்றுறவார் - மனக்களங்கங்களை யகற்றாதோர், துறந்தார்போல் - மனக்களங்கமற்ற துறவிகளாம் சமணமுநிவர்களைப்போல், வஞ்சித்து - கபடவேஷமிட்டு, வாழ்வாரின் - சங்கத்திற் சேர்ந்து வாழ்வோர்களினும், வன்கணாரில் - வேறு கொறுறப்பார்வையுடையோ ரிராரென்பது பதம்.

(பொ.) மனக்களங்கங்களை அகற்றாதோர் மனக்களங்கமற்ற துறவிகளாம் சமணமுநிவர்களைப்போல் கபடவேஷமிட்டு சங்கத்திற் சேர்ந்து வாழ்வோர்களினும் வேறு கொறூரப்பார்வை உடையோர் இரார் என்பது பொழிப்பு.

(க.) மனமாசினைக் கழுவாது மனமாசற்றத்துறவிகளாம் அறஹத்துக் களைப் போல் பொன்னாடை புனைந்தும் கரத்தில் ஓடு ஏந்தியும் இல்லறத்தோரை வஞ்சித்தும் பொருள் பறிப்போருமாய் இருப்பராயின் அவர்களைவிட வேறு கொடூரப்பார்வை உடையார் இராரென்பது கருத்து.

(வி.) மனத்தினின்றெழுஉங் குடிகெடுப்பு, வஞ்சினம், பொறாமெ, பொருளாசை முதலியக் களங்கங்களை அகற்றாது இவைகள் யாவையும் அகற்றியுள்ள முநிந்தோர்களாம் சமண முனிவர்களைப்போல் வேஷம்பூண்டு பேதைமக்களை வஞ்சித்துப் பொருள் பரிப்போரினுங் கொடுங்கண்ணுள்ளார் உலகத்தில் வேறும் உளரோ என்பது விரிவு.

7. புறங்குன்றி கண்டனையரேனு மகங்குன்றி
மூக்கிற் குரியா ரிடத்து.

(ப.) புறங்குன்றி - தேகந் தளர்வுறக், கண்டனையரேனு - காணக்கூடியவர்களாயினும், மகங்குன்றி - உள்ள பாவங்களற்றுள்ள, மூக்கிற் - முகத்தால், குரியாரிடத்து - ஞானக்கருணைநிலை விளங்குமென்பது பதம்.

(பொ.) தேகங் தளர்வுறக் காணக்கூடியவர்களாயினும் உள்ள பாவங்களற்றுள்ள முகத்தால் ஞானக்கருணைநிலை விளங்கும் என்பது பொழிப்பு.

(க.) துறவிக்கு மூப்பினால் தேகந் தளர்வுறினும் உள்ளக் களங்கமற்ற நிலை ஞான கருணாகரமுகத்தால் விளங்கும் என்பது கருத்து.

(வி.) துறவுபூண்டு சங்கஞ்சேர்ந்தும் தனக்குள்ள வஞ்சகச்செயலானது தனது கொடியப்பார்வையில் விளங்குவதுபோல துறந்தோன் மூப்புநிலை அடையினும் அவனது மனமாச கன்றச் செயலானது கருணை நிறைந்தமுகத்தால் விளங்கும் என்பது கூடாவொழுக்க விரிவு.

8. மனத்தது மாசாக மாண்டார் நீராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

(ப.) மாந்தர் பலர் - துறவடைந்த மக்களுட்பலர், நீராடி- தேகசுத்தஞ்செய்து, மறைந்தொழுகு - பொன்னாடையுள் மறைந்தும், மனத்தது - தன்மனத்துள்ள, மாசாக - களங்கமறாது, மாண்டார் - மரணமுற்றாரென்பது பதம்.

(பொ.) துறவடைந்த மக்களுட் பலர் தேகசுத்தஞ்செய்து பொன்னாடையுள் மறைந்தும் தன்மனத்துள்ளக் களங்கமறாது மரணமுற்றார் என்பது பொழிப்பு.

(க.) மரணதுக்கத்தைப் போக்கி பிறப்பறுக்கற்கு துறவுபூண்டு தேகசுத்தமட்டிலுஞ் செய்து மஞ்சளாடையுள் மறைந்தும் தன்மனோ சுத்தஞ்செய்யாது,மரணதுக்கத்திற்கு ஆளானார்கள் பலர்கள் என்பது கருத்து.

(வி.) பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடென்னும் நான்குவகைத் துக்கங்களுள் மரணத்தை ஜெயித்துக் கொண்டால் மற்றும் மூன்றுவகைத் துக்கங்களுந் தானே ஒழிந்து போமென்று எண்ணி துறவற முன்னி, சங்கஞ்சேர்ந்து சமணநிலை பெற்று சகலருங்காண முப்போதுங் குளித்து உடல்சுத்தஞ்செய்து மஞ்சளாடையுள் மறைந்தும் பொன் போன்ற தன்னுள்ளத்தை சுத்தஞ்செய்யாது மரணதுக்கத்திற்காளாவது என்னோவென்னும் இரஞ்சல் விரிவு.

9. கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்.

(ப.) கணைகொடிது - வில் வளையில் துன்பத்தைக்கொடுக்கும், யாழ்கோடு - வீணைவளையில், செவ்விதாங் - இன்பத்தைக்கொடுக்கும், கன்ன - அதுபோல், வினைபடு - துறவிகளது செயல்களா லுண்டாம் பயனை, பாலாற் - நல்வினை தீவினையென்னு மிருவகுப்பால், கொளல் - தெரிந்துக் கொள்ளவேண்டுமென்பது பதம்.

(பொ.) வில்வளையில் துன்பத்தைக் கொடுக்கும் வீணைவளையில் இன்பத்தைக் கொடுக்கும் அதுபோல் துறவிகளது செயல்களால் உண்டாம் பயனை நல்வினை தீவினையென்னும் இருபகுப்பால் தெரிந்து கொள்ளவேண்டு மென்பது பொழிப்பு.

(க.) வில்லால் துன்பம் உண்டாதலையும் வீணையால் இன்பமுண்டா தலையுங் கண்டறிந்துக் கொள்ளுவதுபோல் துறவிகள் தங்கள் தீவினையா லடையுந் துக்கவிருத்தியையும் நல்வினையாலடையுஞ் சுகவிருத்தியையும் இருபகுப்பினால் தெரிந்துக்கொள்ள வேண்டுமென்பது கருத்து.

(வி.) துறவியானவன் வில்லைப்போன்று வளைந்து ஒடுங்கினவனாகக் காட்டி துன்பத்தைச் செய்தலும், வீணையைப் போன்று வளைந்து ஒடுங்கினின்று யின்பத்தைத் தருதலுமாயதுகொண்டு துறந்துந் தீவினையை அகற்றாது துக்கவிருத்தி அடைதலையும், துறந்து நல்வினையைப் பெருக்கி சுவிருத்தியடைதலுமாய இருவகுப்பாலுங் கண்டுக் கொள்ளலாம் என்பது விரிவு.

10. மழித்தலும் நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த லொழித்து விடின்.

(ப.) உலகம் - துறவுபூண்டும் உலகமக்களால், பழித்த - மரணமடைந்தானென்றிழிவுகூறலை, லொழித்துவிடின் - நீக்கிக் கொள்ளுவானாயின், மழித்தலும் - சிரமயிர் கழித்தலும், நீட்டலும் - சிரமயிர் வளர்த்தலும், வேண்டா - கருதாமற்போமென்பது பதம்.

(பொ.) துறவுபூண்டும் உலகமக்களால் மரணமடைந்தானென இழிவு கூறலை நீக்கிக்கொள்ளுவானாயின் சிரமயிர் கழித்தலும் சிரமயிர் வளர்த்தலுங் கருதாமற்போம் என்பது பொழிப்பு.

(க.) இறந்தானென்னு இழிமொழியை உலகமக்களாற் கேளாது ஜெயம் பெற்றானாயின் சிரோமயிரைக் கழித்தல் வேண்டும் வளர்த்தல் வேண்டுமென்பது இல்லாமல் போம் என்பது கருத்து.

(வி.) சங்கஞ்சேர்ந்த சிரமணன் மரணஜெயம் அடையும்வரையில் சிரமயிர் கழித்தே வரவேண்டுமென்பது பூர்வவிதியாதலின் உலகோர் இறந்தானென்று இழிமொழி கூறாது சிறந்தானென்று மரணஜெய மடைவானாயின் மயிர் கழித்தலும் வளர்த்தலுமாய இருவகைச் செயல்களும் வேண்டாமற்போம், இறந்தானென்னும் பழித்தல் உண்டாயின் வேண்டுமென்பதற்குச் சார்பாய் *மச்சமுநியார் ஞானம்* "இறந்து போனவர்க்கென்ன மெஞ்ஞானங்காண் ஏச்சியேச்சி யிகத்துள்ளோர் தூஷிப்பார், மறந்து செத்து மறு ஜென்மம் புக்கினால் வருவதாகிய சஞ்சலமென்னவோ, பிறந்துநிற்கின்ற பெரியதிரோதகைப்பெண்ணைப்போல் வந்து பேயாக்கிப் போடுவாள், துறந்துவிட்டுக் கரையேறக் கற்பங்கேள் சொல்லுவேனிந்த சூட்சத்தைக் கேட்டிடே" என்னும் மரணத்தை ஜெயித்து பிறவி துக்கத்தைப் போக்குங் கியான போதத்தை அநுசரித்து துறந்தும் இ றந்தானென்னில் உலகோர் பழித்தல் எவ்வகையென்னில் துறந்து பிறந்தானேயென்னும் பரிதாபத்தால், ஐயோ பாபம் பாபமென்னும் இ ழிமொழியே பழித்தலாகும், துறந்தும் புண்ணியம்பெருகாது பாவம் பெருகியதுகொண்டு இறந்தானென்று கேழ்வியுற்றவுடன் பாவம், பாவமென்னு மொழி தோற்றுதல் இயல்பாம். இறப்பிற்கு எதிரடையாய சம ஆதியானான், இரு பிறப்படைந்தான் என்றவுடன் கேட்போர் ஆ!ஆ! வென்னும் ஆனந்தக்

கிளர்ச்சியுற்று ஆதிதேவனுக் கொப்பனையாகக் கொண்டாடுவார்கள். ஆகலின் துறவு பூண்டோன் இறந்தானென்னும் பழித்தலுக்குள்ளாகாது ஜெயம் பெருவனேல் அன்றுமுதல் சிரமயிர் கழிக்கவேண்டுமென்றும், சடைமுடி வளர்க்கவேண்டுமென்றுங் கூறும் விதிகளற்றுப்போவான் என்பது விரிவு.

36. வெகுளாமெய்

தன்னைத்தூற்று மொழிகளை செவியிற் கேட்டவுடன் கோபம் எழுதலும் தனது சத்துருவைக் கண்ணிற் கண்டவுடன் கோபம் எழுதலுமாய இருவகைச் செயலினுந் தனதுள்ளத் தடக்கிவைத்தெழுவும் வெகுளியே உடலையும் உள்ளத்தையுங் கெடுத்து தான் துறவுசென்றுசேர்ந்த சங்கத்தின் பயனுமில்லாமற் போமாதலின் வெகுளாமெயின் சுகத்தையும், வெகுளுமெய்யின் கேட்டையும் விளக்கலானார்.

1. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக்
காக்கிலென் காவாக்க லென்.

(ப.) னல்லிடத்து - இல்லத் திருந்து, சினங்காப்பா - கோபத்தை யடக்க முயலுவோன், காக்கிலென் - அடக்கிலென், காவாக்காலென்- அடக்காதுவிடிலென், செல்லிடத்து-துறவுபூண்டு சேர்ந்த சங்கத்திடத்து, காப்பான்-அடக்குவோனே மேலானவனென்பது பதம்.

(பொ.) இல்லத்திருந்து கோபத்தையடக்க முயலுவோன் அடக்கிலென் அடக்காதுவிடிலென், துறவுபூண்டு சேர்ந்த சங்கத்திடத்து அடக்குவோனே மேலோன் என்பது பொழிப்பு.

(க.) இல்லத்திலுள்ளோனுக்குக் கோபம் எழினும் எழாதுநிற்கினும் ஏனையோர் அவற்றைக் கருதமாட்டார்கள். சருவமுந்துறந்த சங்கத்தோனுக்குக் கோபம் எழுமாயின் கருதுவார்கள் ஆதலின் துறந்தோனே சினத்தைக் காக்கவேண்டும் என்பது கருத்து.

(வி.) இல்லந்துறந்து சங்கஞ் சேர்ந்த காரணம் இராகத்துவேஷ மோகம் என்னுங் காம, வெகுளி, மயக்கத்தை அகற்றற் கேயாதலின் தான் சென்ற சங்கத்திடத்து சினத்தைக் காத்தலே சிறப்பாம். இல்லத்தோன் தொல்லொத்தோனாதலின் அவன் சினத்தைக்காத்தான் காக்கவில்லையென நோக்குவதாற் பயனில்லை என்பது விரிவு.

2. செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்து
மில்லானிற் றீய பிற.

(ப.) செல்லாவிடத்து-இல்லந் துறவாதவனிடத்தும், சினந்தீது - கோபமடங்காவிடிற் கொடிதாம், செல்லிடத்து - சேர்ந்த சங்கத்திடத்து, மில்லதெனில் - அக்கோபமடங்காவிடின், றீயபிற - அதனினுங் கொடிய துன்பம் வேறில்லை என்பது பதம்.

(பொ.) இல்லந் துறவாதவனிடத்தும் கோபம் அடங்காவிடிற் கொடிதாம், சேர்ந்த சங்கத்திடத்து அக்கோபம் அடங்காவிடின் அதனினுங் கொடிய துன்பம் வேறில்லை என்பது பொழிப்பு.

(க.) இல்லத்தில் வாழ்வோனுக்கே கோபமெழுவில் அதனால் அவனடையுந் துக்கத்தைக் காண்கின்றோம். சாந்தத்தை நிறப்ப வேண்டுமென்று சங்கஞ் சேர்ந்துங்கோபத்தை அடக்கானாயின் அதனினுங் கொடியதுன்பம் வேறில்லை என்பது கருத்து.

(வி.) இல்லத்தில் வாழ்பவன் தொல்லத்தோனென்பது முதுமொழி ஆதலின் அவனுக்குக் கோபமெழுவி அடையுந்துக்கத்தைக்கண்டு பயந்து துறவுபூண்டு சங்கஞ்சேர்ந்தும் வெகுளியை அடக்காது மயக்கத்தில் அழுந்துவானாயின் இல்லத்தோனடையுந் துக்கத்தினுந் தீய துக்கத்தையடைவான் என்பது விரிவு.

3. மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனால் வரும்.

(ப.) யார்மாட்டும் - யாவர்மீதும், வெகுளியை - எழுங் கோபத்தை, மறத்தல் - துறவியானவ னகற்றல்வேண்டும், தீய - கொடிய கோபாக்கினியை யகற்றாவிடின், பிறத்தல் - மாறிமாறி பிறக்குந் துன்பம், லதனால் - அதுகொண்டே, வரும் வந்தேதீருமென்பது பதம்.

(பொ.) யாவர்மீதும் எழுங் கோபத்தை துறவியானவன் அகற்றல் வேண்டும். கொடிய கோபாக்கினியை யகற்றாவிடின் மாறிமாறி பிறக்குந்துன்பம் அதுகொண்டே வந்தேதீரும் என்பது பொழிப்பு.

(க.) சாந்தத்தை நிறப்பத் துறவுபூண்டவன் சகலர்மீதுந் தன் கோபத்தை விடுவானாயின் அதுவே தன்னை பிறவித் துன்பத்திற்கு ஆளாக்கிவிடும் என்பது கருத்து.

(வி.) முகமலர்ச்சியும் மிருதுவானமொழியுங் களங்கமற்ற குணமும் பெறவேண்டியவன் தன் கோபத்தை அடக்கியாளாது சகலர்மீதுஞ் சினந்து சீர்கெடுவானாயின் மீளா பிறவிதுன்பத்தில் உழல்வான் என்பது விரிவு.

4. நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற.

(ப.) நகையு - முகமலர்ச்சியையும், முவகையுங் - சாந்தம் யீகை அன்பு மூன்றினையும், கொல்லும் - அழிக்கும், சினத்திற் - கோபத்தினும், பிற - வேறு விரோதமும், முளவோ - உண்டோவென்பது பதம்.

(பொ.) முக மலர்ச்சியையும், சாந்தம் அன்பு ஈகை மூன்றினையுமழிக்கும் கோபத்தினும் வேறு விரோதம் உண்டோ என்பது பொழிப்பு.

(க.) நகைமுகத்தையும் சாந்தம் அன்பு ஈகையையுங் கெடுக்கத்தக்கக் கோபத்தைவிட வேறு விரோதிகள் உளரோ என்பது கருத்து.

(வி.) தனது முகமலர்ச்சியையும், தனது சாந்தத்தையும், தனது அன்பினையும், தனது ஈகையையுங் கெடுத்துப் பாழ்படச்செய்யுங் கோபத்திற்கும் மேலாய அன்னியமான வேறு விரோதிகள் இல்லையாதலின் வெகுளியை அகற்றவேண்டும் என்பது விரிவு.

5. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்கக் காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்.

(ப.) தன்னைத்தான் - தானேதானே தத்துவமாக, காக்கிற் - நிலைக்கவேண்டியவன், சினங்காக்க - தனக்குள்ளெழுங் கோபாக்கினியை அவித்தல்வேண்டும், காவாக்கால் அவ்வகையவிக்காவிடின், சினம் - கோபாக்கினியாயது, றன்னையே - தன்னைத்தானே, கொல்லும் - மரணதுக்கத்திற் ஆளாக்கிவிடும் என்பது பதம்.

(பொ.) தானேதானே தத்துவமாக நிலைக்கவேண்டியவன் தனக்குள் எழுங்கோபாக்கினியை அவித்தல்வேண்டும், அவ்வகை அவிக்காவிடின் கோபாக்கினியாயது தன்னைத்தானே மரணதுக்கத்திற்கு ஆளாக்கிவிடும் என்பது பொழிப்பு.

(க.) தன்னை ஆய்ந்து சாந்தம் அன்பு ஈகையைப்பெருக்கித் தன்னிலை அடைய வேண்டிய துறவி தனது கோபத்தை அடக்காமற்போவானாயின் அக்கோபமே அவனைக் கொன்றுவிடும் என்பது கருத்து.

(வி.) தனக்குள் எழுங் கோபாக்கினி, காமாக்கினி, பசியாக்கினியாகிய மூன்றையும் அவித்து தன்னைத்தான் காத்து ததாகதமடையவேண்டிய துறவி தனதுடற்சத்துருவாகிய கோபத்தைமட்டிலுங் காவாது விட்டுவிடுவானாயின் அக்போபாக்கினியே தகித்துத் தன்னைக் கொன்றுவிடும் என்பது விரிவு.

6. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி
யினமென்னு மேமப் புணையைச்சுடும்.

(ப.) சினமென்னுஞ் - கோபமானது, சேர்ந்தாரை - தன்னை யடுத் தோரை,

கொல்வி - கெடுப்பதுடன்,யினமென்னு - துறவினனுக்குரவி னராகும், மேமப்புணையை - சாதுசங்கத்தையும், சுடும் - தகிக்குமென்பதுபதம்.

(பொ.) கோபமானது தன்னை அடுத்தோரைக் கெடுப்பதுடன் துறவினனுக்கு உரவினராகும் சாதுசங்கத்தையும் தகிக்கும் என்பது பொழிப்பு.

(க.) துறவியானவன் தனதுள்ளத்தில் வெகுளியைப் பதித்திருப் பானாயின் தன்னைக் சேர்ந்தோர் கெடுவதுடன் தனக்குயினமாக விளங்கும் சங்கத்து சிரமணர்களையுஞ் சுடும் என்பது கருத்து.

(வி.) துறவியானவன் சாந்தத்தை நிறப்பற்குச் சங்களுஞ்சேர்ந்து தனது கோபத்தை யடைக்காமற் போவானாயின் அக்கோபத்தால் தன்னையடுத்தோர் கெடுவதுடன் சேர்ந்துள்ள சங்கத்தில் கூடிவாழ்கும் சமணமுநிவர் களையும் அஃதுசுடும் ஆதலின் வெகுளியை வுள்ளத்திலெழவிடாமல் அவிக்க வேண்டும் என்பது விரிவு.

7. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

(ப.) சினத்தை - கோபத்தை. பொருளென்று - ஒருபொருளென்று, கொண்டவன் - சேர்த்துள்ளவனுக்கு, கேடு - முடிவின் துக்கம் யாதெனில், நிலத்தறைந்தான்-மடிந்து மண்ணிற் புதைத்தலே, கைபிழையாதற்று - கைகண்ட தீவினையாக முடியு மேயன்றி வேறில்லை என்பது பதம்.

(பொ.)கோபத்தை ஒருபொருளென்று சேர்த்துள்ள துறவிக்கு முடிவின் துக்கம் யாதெனில் மடிந்து மண்ணிற்புதைப் படுதலே கைகண்ட தீவினையாக முடியுமே அன்றி வேறில்லை என்பது பொழிப்பு.

(க.) துறவியானவன் கோபத்தை ஓர் பொருளாகக் கொண்டு அதனை நிலைக்கச் செய்துக் கொள்ளுவானாயின் முடிவில் அவனடையும் துன்பம் யாதெனில் மடிந்து மண்ணில் மறைவதே யன்றி வேறு சுகம் என்றும் அடையமாட்டான் என்பது கருத்து.

(வி.) மெய்ப்பொருளை நாடிதுறவு பூண்டு சங்களுஞ் சேர்ந்தவன் அதற்கு எதிரடையாயக் கோபத்தை ஓர் பொருளாக எண்ணி சேர்த்துக் கொள்ளுவானாயின் அதுவே அவன் மெய்ப் பொருளை மறைத்து மரணாவத்தையைக் கொடுத்து மண்ணில் மறைக்கச் செய்யும் என்பது விரிவு.

8. இணரெரி தோய் வன்னவின்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.

(ப.) இணரெரி தோய் - நெருக்க முற்றோர் சகிக்க வொண்ணாத, வன்ன வின்னா - கொடியதுன்பத்தைச் செய்யினும், புணரின் - துறவிசார்ந்தவரிடம், வெகுளாமை - உள்ளத்தினும் உடலினுங் கோபக் கிளர்ச்சியை எழவிடாததே, நன்று - நல்லதாகும் என்பதுபதம்.

(பொ.) நெருக்க முற்றோர் சகிக்க வொண்ணாத கொடியதுன்பத்தைச் செய்யினும் துறவி சார்ந்தவரிடம் உள்ளத்தினும் உடலினுங் கோபக் கிளர்ச்சியை எழ விடாததே நல்லதாகும் என்பது பொழிப்பு.

(க.) துறவிக்கு அன்னியரால் சகிக்க முடியாத துன்பம் நேரினும் சங்கத்தோர் முன்னிலையில் தனது கோபக் கிளர்ச்சியை எழவிடாமல் தடுப்பதே சுகநிலை என்பது கருத்து.

(வி.) சங்களுஞ்சேர்ந்து சிரமணம் பெற்றோன் அன்னியரால் உண்டாந்துன் பத்தைச் சகித்து, சேர்ந்த சிரமணர் முன் தனது வெகுளியை அடக்கி காத்தலே நல்லதாகும். அவர்கள் முன்னிலையில் சினத்தைக் காக்கா விடின் போதனை சரிவாராது என்பதே விரிவு.

9. உள்ளிய வெல்லா முடநெய்து முள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின்.

(ப.) முள்ளத்தா - துறவிதன் னுள்ளத்தில், வெகுளி - கோபத்தை, லுள்ளான் அடக்கியுள்ளான், யெனின் - என்பதாயின், உள்ளிய - தானெண்ணிய,

வெல்லா - சுகங்கள்யாவும், முடனெய்தும் - உடனேகைக்கூடுமென்பது பதம்.

(பொ.) துறவி தன்னுள்ளத்தில் கோபத்தை அடக்கியுள்ளான் எனின் தான் எண்ணிய சுகங்கள் யாவும் உடனேகைக் கூடும் என்பது பொழிப்பு.

(க.) இல்லந்துறந்த துறவியானவன் தனது கோபத்தை அவித்தான் என்பதற்கு அடையாளம் யாதெனில் அவன் எண்ணிய எண்ணங்கள் யாவும் கைகூடுதலே காட்சியாம் என்பது கருத்து.

(வி.) துறவுற்றோன் தனக்குள் எழும் வெகுளியைத் துறந்துள்ளானாயின் தான் எண்ணிய சுகங்கள் யாவும் உடனுக்குடன் முடிவதுடன் சுகானந்த சுகவாரி நிலையை அடைவான் என்பது விரிவு.

10. இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

(ப.) இறந்தா - மரண பயமுற்றும் வெகுளி பயமில்லா துறவிகள், ரிறந்தாரனையர் - மரிப்போருக் கொப்பானவரே யாவர், சினத்தை - தங்கள் கோபத்தை, துறந்தார் - அகற்றியவர்களே, துறந்தார் - தங்களுள்ளந் துறந்து மரணபயமற்ற மேன்மக்களின், துணை - சார்பை யடைவார்களென்பதுபதம்.

(பொ.) மரண பயமுற்றும் வெகுளி பயமில்லா துறவிகள் மரிப்போருக்கு ஒப்பானவரேயோவர், தங்கள் கோபத்தை அகற்றியவர்களே தங்கள் உள்ளந் துறந்து மரணபயமற்ற மேன்மக்களின் சார்பையடைவார்கள் என்பது பொழிப்பு.

(க.) மரணதுக்கத்திற்குபயந்து துறவு பூண்டு சங்கஞ்சேர்ந்தவன் எழுங் கோபத்திற்கு பயந்து அடக்காவிடின் அவன் மரிப்போர்க்கு ஒப்பானவனேயாவன், கோபத்தை அவித்துவிட்டவனோ வென்னில் மரண ஜெயம்பெற்ற மேலோர்களாம் அந்தணர்களின் துணையை அடைவான் என்பது கருத்து.

(வி.) வெகுளி அகற்றி தண்மெயுற்று மரணஜெயம் பெற்றோரே அந்தணர்களாதலின் அவர்களைத் துணைக் கொள்ளுவோருந் தங்கள் வெகுளியை அகற்றி தண்மெய்பெற வேண்டியதேயாம். துறவு பூண்டு சங்கஞ் சேர்ந்தவன் தனது வெகுளியை அடக்காவிடின் இல்லத்திலிருந்து மரிப்போரில் இவனும் ஒருவனாவான் என்பது விரிவு.

37. அவா அறுத்தல்

இல்லறத்திலிருந்து உலகப்பற்றறுக்க இயலாதென்று துறவு பூண்டவன் தெய்வசபையாம் புத்த சங்கஞ் சேர்ந்து கண்ணினாற் பார்க்கும் பொருளின் மீது ஆசை வையாமலும், நாவினால் உருசிக்கும் பொருளின் மீது ஆசை வையாமலும், மூக்கினால் முகறும் பொருளின் மீது ஆசை வையாமலும், செவியினாற் கேட்கும் இசையின் மீது ஆசைவையாமலும் உடல் சுகித்த இச்சையின் மீது ஆசை வையாமலும் பற்றறுக்கும் ஆசையே பெரிதென்று எண்ணி சாதிப்பதே சிரமணர்க்குரிய விதியாதலின் துறவிகள் அவாவினை யகற்றும் வழி வகைகளை வகுக்கலானார்.

1. அவாவென்ப வெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனு வித்து.

(ப.) அவாவென்ப - ஆசையென்று சொல்லும்படியானது, வெல்லாவுயிர்க்கு - சருவசீவராசிகளுக்கும், எஞ்ஞான்றும் - எக்காலத்தும், தவா அப் - ஒன்றைவிட்டொன்றை தாவி, பிறப்பீனு - மறுபிறப்பினை தோற்றுவித்தற்கு, வித்து - ஓர் விதையாகுமென்பது பதம்.

(பொ.) ஆசையென்று சொல்லும்படியானது சருவ சீவராசிகளும் எக்காலத்தும் ஒன்றை விட்டு ஒன்றை தாவி மறுபிறப்பினைத் தோற்றுவித்தற்கு ஓர் விதையாகும் என்பது பதம்.

(க.) சருவ சீவராசிகளும் மாறி மாறி பிறத்தல் என்னுந் தோன்றி தோன்றி மறைதற்கு ஆசையே காரணம் என்பது கருத்து.

(வி.) மனதினின்று எழும் அவாவென்னும் பற்றுதலே பிறவிக்கு வித்தாகவும் அவ் அவாவினை அறுத்தலே பிறவியின் துக்கத்தைப் போக்குதற் கேதுவாகவு

முள்ளது கண்டு அவாவென்னும் வித்தாகியப் பற்றுதலே பிறப்பதற்கு மூலமென்று கூறியுள்ளவற்றிற்குச் சார்பாய், இடைகாடர்" பற்றே பிறப்புண்டாக்கும் தாண்டவக்கோனே அதை பற்றாதறுத்துவிடு தாண்டவக்கோனே, என்றும் "ஆசைக்கோரளவில்லை·லகிமெல்லாங் கட்டி யாளினுங் கடன் மீதிலே" என சதகத்தோர் கூறியுள்ளவற்றிற்கும் பகரமாய் ஆசையென்னும் விதையே சருவ சீவர்களின் தோற்றத்திற்கும் ஏதுவாய் உள்ளதென்பது விரிவு.

2. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமே வேண்ட வரும்.

(ப.) பிறவாமை - மறுபடியும் பிறவா சுகநிலையை, வேண்டுங்கால் - உறுதிபெறக்கருதுங்கால், வேண்டும் - அவை விரும்பி நிற்கும், மற்றது - பிறக்குந் துக்கநிலை யானது, வேண்டாமை - பிறவியினுருவை கருதாது, வேண்ட - அவாவைக்கருத, வரும் - வந்து தீருமென்பது பதம்.

(பொ.) மறுபடியும் பிறவா சுகநிலையை உறுதிபெறக்கருதுங்கால் அவை விரும்பி நிற்கும் பிறக்குந் துக்க நிலையானது பிறவியின் உருவை கருதாது அவாவைக் கருத வந்து தீரும் என்பது பொழிப்பு .

(க.) பிறவியின் துக்கத்தைப் போக்கிக் கொள்ளவேண்டுமென்னும் அவா மிகுத்தோனுக்கு சுகநிலை வந்தே கூடும் அவ்வகைய அவாவற்று உலக இன்பத்தை வேண்டுவோனுக்கு துக்கநிலை வந்தே தீரும் என்பது கருத்து.

(வி.) துறவு பூண்டவன் பிறப்பின் துக்கத்தைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்னும் அவாவில் நிலைத்து பஞ்சபுலன்களின் செயலை அறிந்துக்கொள்ளுவதினால் தென்புலத்தோனாகி சுகநிலை பெறுவான், அங்ஙனந் துறவு பூண்டும் பிறவியின் துக்கத்தை நோக்காது பஞ்சபுலனின் இன்ப நுகர்ச்சியை வேண்டுவானாயின் பிறவியின் துக்கம் வந்தே தீரும் என்பது விரிவு.

3. வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்.

(ப.) வேண்டாமை - புலன்வழியா யுண்டாமின்பத்தை நாடாதும், யன்ன - அதனை கருதாதுமாய, விழுச்செல்வ - அழியாச்செல்வம், மீண்டில்லை - வேறொன்றுங்கிடையா, யாண்டு - இப்போதுமெப்போதும், மஃதொப்பதில் - அதற்கு நிகராயதொன்றில்லை என்பது பதம்.

(பொ.) புலன் வழியால் உண்டாம் இன்பத்தை நாடாதும் அதனை கருதாதுமாய அழியாச்செல்வம் வேறொன்றுங் கிடையா இப்போதும் எப்போதும், அதற்கு நிகராயது ஒன்றில்லை என்பது பொழிப்பு.

(க.) துறவியானவன் அவாவற்ற வாழ்க்கையே அழியாச்செல்வமென்றும் அதற்கு நிகராய இன்பம் வேறொன்றுமில்லை என்பது கருத்து.

(வி.) துறவுபூண்டு சங்கஞ்சேர்ந்துள்ள சிரமணனுக்கு உலக இன்பத்தில் இச்சையும் அவிச்சையுமற்று ஆனந்தித்திருப்பதே அழியாச் செல்வத்திற்கு ஒப்பாவதுடன் அதற்கு ஒப்பிட்டுக் கூறுவதற்கும் வேறு பொருள் கிடையாது என்பது விரிவு.

4. தூஉய்மை யென்பத வாவின் மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

(ப.) தூஉய்மை - சுத்ததேகி, யென்ப - என்று சொல்லும்படியானது, தவாவின்மை - ஆசையற்றவனாதல், மற்றது - மற்றுமதற்கு உதவியோயென்னில், வாஅய்மை - நான்கு வகை சத்தியமொழிகளை, வேண்ட - கருத, வரும் - வந்து தீரும் என்பது பதம்.

(பொ.) சுத்த தேகியென்று சொல்லும் படியானது ஆசையற்றவனாதல், மற்றும் அதற்கு உதவியோ வென்னில் நான்கு வகைசத்தியமொழிகளைக் கருத வந்து தீரும் என்பது பொழிப்பு.

(க.) உலக இன்பத்தில் ஆசையற்றவனாயிருப்பானாயின் களங்கமற்றோன் என்பார்கள் அதனுடன் நான்கு வாய்மைகளையும் உணர்வானாயின் தூய உடம்பினனே யாவன் என்பது கருத்து.

(வி.) சகல களங்கங்களாம் மனமாசுகளற்று தூய உடம்பினனாக வேண்டிய துறவி ஆசையை அகற்றல் வேண்டும். அதற்கு உதவி வேண்டுமேல், நான்கு மெய்வாய் மொழிகளாம், பிறப்பின் துக்கம், பிணியின் துக்கம், மூப்பின் துக்கம், மரணதுக்கங்களைக் கண்டுணர்ந்த யிடத்தே வந்து தீருமென்பது விரிவு.

5. அற்றவ ரென்பா ரவாவற்றார் மற்றையா
ரற்றாக வற்ற திலர்.

(ப.) அற்றவரென்பா - சகலவாசைகளையு மொழித்தோமென்று கூறும் படியானவர்கள், ரவாவற்றார் - ஆசைகளைப் பற்றறவொழித்துள்ள, மற்றை - வேறொருவரைப்போல், ரற்றாக - பூர்த்தியாக, வற்றதிலர் - ஒழித்தவர்களாகா ரென்பது பதம்.

(பொ.) சகல ஆசைகளையும் ஒழித்தோமென்று கூறும்படியானவர்கள் ஆசைகளைப்பற்றற ஒழித்துள்ள வேறொருவரைப்போல் பூர்த்தியாக ஒழித்தவர்கள் ஆகார் என்பது பொழிப்பு.

(கூ) சகல ஆசைகளையும் ஒழித்துவிட்டேன் என்று எத்துறவி வெளியிற்கூறித் திரிகின்றானோ அவன் முற்றும் ஒழித்த முநிவர்கள் போலாகாது சிற்சில அவா உடையவனே என்பது கருத்து.

(வி.) உலகமக்களுள் யாவனொருவன் தன்னை முற்றுந் தெரிந்தவன், முற்றுந்தெரிந்தவன் எனச் சொல்லித் திரிகின்றானோ அவனை விவேகிகள் சற்றுந் தெரியாதவன் என்று எண்ணிக் கொள்வது போல ஓர் துறவி, நான் சகல ஆசைகளையும் ஒழித்தேன் என சொல்லித் திரிவானாயின், சகல ஆசைகளையும் ஒழித்து முநிந்துள்ள முனிவர்கள் அவனை சிற்சில ஆசை அறாதவன் என்றே மதிப்பார்கள் என்பது விரிவு.

6. அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா.

(ப.) யொருவனை - யாதா மொருவனை, வஞ்சிப்பதோரு - குடிகெடுக்க முயல்வதே, மவா - ஆசையின் மூலமென்னப்படும், அஞ்சுவதோரு - அவற்றிற்கு பயந்து நடத்தலே, மறனே - புத்தரது தன்மமா மென்பது பதம்.

(பொ.) யாதாமொருவனைக் கெடுக்க முயல்வதே ஆசையின் மூலமென்னப்படும் அவற்றிற்கு பயந்து நடத்தலே புத்தரது தன்மமாம் என்பது பொழிப்பு.

(க.) தீவினையாம் வஞ்சினைச்செயலுக்கு பயந்து அவாவை அறுத்தலே புத்த தன்மமென்றும் ஒருவனை வஞ்சித்துக் குடிகெடுத்தலே அவாவின் அதர்மமாம் என்பது கருத்து.

(வி.) ஒருவனை வஞ்சித்துக் கெடுப்பதாகியத் தொழில்கள் யாவும் ஆசையின் பெருக்கத்தால் உண்டாஞ் செயல்கள் என்னப்படும் வஞ்சினத்திற்கும் சூதிற்கும் பயந்து நடத்தலே தீவினைகளை அகற்றும் புத்தனன்மமே என்பதற்குச் சார்பாய் *சீவகசிந்தாமணி* "கொடுவெஞ் சிலைவாய்க் கணையிற் கொடிதாய், நடுநாளிரவின்னவை தான் மிகுமா, னெடுவெண்ணில வின்னிமிர் தேர்பரியா, தடுமால்வழி நின்றறனேயருளாய்" என்றும் *பாட்டியல்* "தீவினையை வெல்லும் அறவாழி தெய்வமஞ்சல்" என்பது கொண்டு வஞ்சினப்பெருக்கமே ஆசையின் பீடமென்றும் அவற்றிற்கு பயந்து அவாவை அறுத்தலே புத்த தன்மம் என்றும் கூறிய விரிவு.

7. அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும்.

(ப.) அவாவினை - ஆசையை யொழித்து, யாற்ற - ஆறுதலுற்றவனுக்கு, வறுப்பிற் - பிறவியின் பின்னலறுந்து போம், றவாவினை - ஆசையினை,

தான்வேண்டு - தானே கருதிநிற்பானாயின், மாற்றான்வரும் - மரண துன்பம் வந்தே தீருமென்பது பதம்.

(பொ.) ஆசையை ஒழித்து ஆறுதலுற்றவனுக்குப் பிறவியின் பின்னலறுந்துபோம், ஆசையினைத்தானே கருதி நிற்பானாயின் மரண துன்பம் வந்தே தீரும் என்பது பொழிப்பு.

(க.) உலக விபத்தில் ஆசையைப் பெருக்கி நிற்போனுக்கு மரண துன்பம் உண்டாவதுடன் மறுபிறவியில் மீளா துன்பத்தையும் அடைவான், ஆசைகளை அறுத்து ஆறுதலுற்றவன் மரணதுக்கத்தைப் போக்கிக் கொள்ளுவதுடன் மறுபிறவியுமற்ற சுகநிலை பெறுவான் என்பது கருத்து.

(வி.) ஆசையினால் ஒன்றை தாவிதாவி அலைவதின் செயலே மாறிமாறி பிறத்தற்கு ஏதுவாகி, பிறப்பின்துக்கம், பிணியின் துக்கம், மூப்பின்துக்கம், மரணதுக்கம், இன்னான்கையும் பெருக்கிக்கொண்டே வரும் உலக இன்பத்தின் ஆசைகளற்றபோது மாற்றான் வருவான் என்னும் பயமும் மரணத்தின் துன்பமும் பிறவியின் தோற்றமும் அற்று சுகவாரி என்னும் ஆனந்த நிலையில் இருப்பான் என்பது விரிவு.

8. அவாவில்லார்க் கில்லாகுந் துன்ப மஃதுண்டேற்
றவாஅது மேன்மேல் வரும்.

(ப.) அவாவில்லார்க் - ஆசையற்றவர்களுக்கு, துன்பம் - துக்கமானது, கில்லாகும் - இல்லையென்பதாகும், மஃதுண்டேல் அதுயிருக்குமாயின், றவா அது - ஆசையின் பெருக்கமே, மேன்மேல் - மேலு மேலும், வரும் - வந்தேதீருமென்பது பதம்.

(பொ.) ஆசையற்றவர்களுக்கு துக்கமானது இல்லை என்பதாகும், அது இருக்குமாயின் ஆசையின் பெருக்கமே மேலும் மேலும் வந்தே தீரும் என்பது பொழிப்பு.

(க.) நிராசையுற்றோர் நிமலநிலைப் பெற்றவர்களாதலின் அவர்களை யாதொரு துன்பமும் அணுகாவாம், ஆசையென்பதுள்ளோருக்கு மேலும் மேலும் ஆசை வளர்ந்தே தீரும் என்பது கருத்து.

(வி.) கண்ணினால் பார்க்கும் பொருளிலாசையும் நாவினால் உருசிக்கும் பொருளிலாசையும் மூக்கினால் முகறும் பொருளிலாசையும் செவியினால் கேட்கும் பொருளிலாசையும் உடலால் சுகிக்கும் பொருளிலாசையு மாயச்செயல்களில் இச்சையை விடாதோர்க்கு அஃது மேலும் மேலும் பெருகி மீளாதுக்கத்திற்கு ஆளக்கிவிடும். பஞ்ச புலநுகற்சியின் ஆசைகளற்று சுக நிலைபெற்றோருக்கு துக்கமென்பதே அணுகாது என்பது விரிவு.

9. இன்பமிடையறா தீண்டு மவாவென்னுந்
துன்பத் துட்டுன்பங் கெடும்

(ப.) துன்பத்துட்டுன்பங் - மேலு மேலுந்துக்கத்தையே கொடுத்துவரும், மவா வென்னுந் - ஆசையானது, கெடும் - அற்றொழியுங்கால், இன்பம் - பேரின்ப நிருவாணமானது, மிடையறா - மத்திய தடைகளின்றி, தீண்டு - வந்து கூடுமென்பது பதம்.

(பொ.)மேலும் மேலுந் துக்கத்தைக் கொடுத்துவரும் ஆசையானது அற்றொழியுங்கால் பேரின்ப நிருவாணமானது மத்திய தடைகளின்றி வந்து கூடும் என்பது பொழிப்பு.

(க.)உலக இன்பத்தை நாடி தினேதினே பெருகும் ஆசையினால் உண்டாந் துக்கமானது சகலமும் ஒழிந்து நிராசையுற்றபோது பேரின்பமாம் நித்திய சுகம் யாதாமொரு தடையுமின்றி வந்து கூடும் என்பது கருத்து.

(வி.) பாசபந்த இன்பத்தை நாடி ஆசையின் பெருக்கில் உலைந்த துறவி அவற்றை அகற்ற வேண்டியே சங்கஞ் சேர்ந்தவனாதலின் மற்றுமுண்டாம் ஆசையின் பெருக்கங்கள் யாவையும் பற்றற ஒழித்து விடுவானாயின் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பி பூரணமுற்று தானே தானே தத்துவனாவான் என்பது விரிவு.

10. ஆரா வியற்கை யவாநீப்பினந் நிலையே
பேரா வியற்கை தரும்.

(ப.) ஆரா - துறவி தன்னையாராயுங்கால், வியற்கை-தன்னிற்றானே, யவா-ஆசையென்பது தோன்றி கெடுத்தலால், நீப்பி-அவற்றை யொழித்து, னந்நிலையே-ஒழிந்த நிலையினிற்பானாயின், பேரா-என்று மழியா, இயற்கை-தண்மெயை, தரும்-கொடுக்கு மென்பது பதம்.

(பொ.) துறவி தன்னை ஆராயுங்கால் தன்னிற்றானே ஆசை என்பது தோன்றி கெடுத்தலால் அவற்றை ஒழித்து ஒழிந்த நிலையில் நிற்பானாயின் என்றும் அழியா தண்மெயைக் கொடுக்கும் என்பது பொழிப்பு.

(க.) இயல்பிலேயே தன்னிற்றானே உண்டாவது ஆசையின் குணமாதலின் அவற்றை பற்றற ஒழித்து, ஒழிந்த நிலையில் நிற்பானாயின் இயல்பிலேயேயுள்ள தண்மெயாம் சாந்தவுருவந்தானே தானாக விளங்கும் என்பது கருத்து.

(வி.)உலக ஆசையின் பெருக்கமானது இயற்கையிலேயே தன்னிற்றானே தோன்றி கெடுப்பதை ஆராய்ந்து உணர்ந்த துறவியானவன் அவ்வாசையைப் பற்றற நீக்கி நீங்கிய நிலையில் நிற்பானாயின் சாந்தமாம் என்றும் இயற்கையாயுள்ளப் பழம்பொருள் தானே தானேயாக விளங்கும் என்பது விரிவு.

38. தவம்

அதாவது தவமென்னும் நல் ஊக்கமாய சீவகாருண்யத்தை நிறப்பவேண்டிய துறவி தனக்கோர் துன்பமும் அணுகாதுத்தானே தன்னைக் காத்துக் கொள்ள வேண்டியவனாதலின் அதற்கு பலமாகசருவ சீவர்களுக்கும் ஏதோர் துன்பமும் அணுகாதுகாத்தலும், தவமாம் நல்லுர்க்கத்திற்கெதிறடையாய அவமாம் பொல்லுர்க்கத்தை அகற்றலு மாய வழி வகைகளை விளக்குகின்றார்.

1. உற்றநோய் தோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமெ
யற்ற தவத்திற் குரு.

(ப.) உற்றநோய் - தனக்குள்ளெழும் பிணிகளை, தோன்ற - எழவிடாமற்காத்தலும், லுயிர்க்குறுகண்- மற்றுஞ் சீவப்பிராணிகளுக்குத் துன்பத்தை, செய்யாமெ - செய்யாதொழிதலுமாய, யற்றே - அதுவே, தவத்திற் - நல்லுர்க்கத்திற்கு, குரு - அச்சாணியாகுமென்பது பதம்.

(பொ.) தனக்குள் எழும் பிணிகளை எழவிடாமற் காத்தலும் மற்றுஞ் சீவப்பிராணிகளுக்குத் துன்பத்தைச் செய்யா தொழிதலுமாயதுவே நல்லுர்க்கத்திற்கு அச்சாணியாகும் என்பது பொழிப்பு.

(க.) தனக்குள் நின்றெழுவி கெடுக்கும் பிணிகளாம் காமவெகுளி மயக்கங்களை எழவிடாமற் தடுத்தலுமு அன்னியப் பிராணிகளுக்கோர் துன்பம் அணுகாது காத்தலுமாயச்செயல்களெதுவோ அதுவே தவத்தின் சுகநிலை என்பது கருத்து.

(வி.) ஓர் மனிதன் தனக்குள்ளெழும் இராகத் துவேஷமோகங்கள் என்னுங்காமாக்கினி, கோபாக்கினி பசியாக்கினியாம் பிணியினுற்பவத்திற்கு இடங்கொடாமல் காத்தலும் அன்னிய சீவப்பிராணிகளுக்கோர் துன்பமும் அணுகாது பார்த்தலுமாயச் செயல்களெதுவோ அதுவே தவமென்னும் நல்லுர்க்கத்திற்கு பீடமாம் என்பது விரிவு.

2. தவமுந் தவமுடையார்க் காகும வமதனை
யஃதிலார் மேற்கொள் வது.

(ப.) தவமுந் - துறவியினது நல்லுர்க்கமானது, தவமுடையோர்க்காகு - முற்பிறவியில் விட்டதவத்தொடர் பால் யெளிதில் முடிவதாகும், யஃதிலார் - தவத்தினது விட்டகுறையில்லாதோர்க்கு, மவமதனை - பொல்லுர்க்கமாமவச் செயலே, மேற்கொள்வது - முந்தநிற்கு மென்பது பதம்.

(பொ.) துறவியினது நல்லுர்க்கமானது முற்பிறவியில்விட்ட தவத்தொடர்பால் எளிதில் முடிவதாகும், தவத்தினது விட்டகுறையில்லாதோர்க்கு பொல்லுர்க்கமாம் அவச் செயலே முந்த நிற்கும் என்பது பொழிப்பு.

(க.) தவமாம் நல்லூக்கத்தில் முயன்ற துறவிக்கு முற்பிறவியின் நல்லூக்கத்தொடர்புந் தொடர்ந்திருக்குமாயின் தவத்தின் பயன் எளிதில் கைகூடும் தவத்தொடர்பின்றி அவத்தொடர் இருக்குமாயின் துறவியினது தவச்செயல் குன்றும் என்பது கருத்து.

(வி.) தவத்திற்கு முயன்ற துறவியானவன் தனது நல்லூக்கச் செயலைத் தன்னிற்றானே ஆராய்ந்து இறந்த பிறப்பில் தான் செய்தவினையை, பிறந்த பிறப்பின் வினையால் அறிவது இயல்பாதலின் தனது தபோபலன் முந்துமாயின் முன்தொடர்பு என்றறிந்து முடிக்கவும் பிந்துமாயின் தவமே ஆரம்பம் என்றறிந்து விடாமுயற்சியால் தவனிலையாம் நல்லூக்கத்தில் நிலைக்க வேண்டும் என்பது விரிவு.

3. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொன்
மற்றை யவர்க டவம்.

(ப.) துறந்தார்க்கு-இல்லறந் துறந்த சிரமணர்களுக்கு, துப்புரவு வேண்டி - உண்டியும் உடையுமளிக்குஞ் செயல்கொண்டு, மற்றையவர்க - இல்லறத்தோர், டவம்-தங்கள் நல்லூக்கத்தை, மறந்தார்கொன் - விட்டு மிருக்கின்றார்களா மென்பது பதம்.

(பொ.) இல்லறந்துறந்த சிரமணர்களுக்கு உண்டியும் உடையுமளிக்குஞ் செயல்கொண்டு இல்லறத்தோர் தங்கள் நல்லூக்கத்தை விட்டும் இருக்கின்றார்களாம் என்பது பொழிப்பு.

(க.) இல்லறத்தோர் தாங்களே தவத்தில் முநிந்து சுகம் பெறுவதை விடுத்து துறந்தோர் ஈடேற்றத்தையே பெரிதென்று எண்ணி சகல சுகங்களையும் அளித்து வருகின்றபடியால் துறவோர் தங்கள் தவத்தை அதிதீவிரத்தில்முடிக்க வேண்டும் என்பது கருத்து.

(வி.) இல்லறத்தினின்று ஒழுகுவோர் தாங்களே தவத்தில் முநிந்து சுகப்பேற்றை பெறாது இல்லந்துறந்து சங்கஞ் சேர்ந்துள்ள சமண முநிவர்களுக்கே வேணஉதவி புரிந்து அவர்கள் முன்னேற்றத்தைக்கருதி நிற்றலால் துறந்தோர் மறந்தும் பொல்லூக்கமாம் அவநிலை சாராது நல்லூக்கமாம் தவநிலை சாரவேண்டும் என்பது விரிவு.

4. ஒன்னார் தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும்.

(ப.) ஒன்னார்- தானேதானே, தெறலு- உறுதிபெறலும், முவந்தாரை - தன்னையடுத்தோரை, யாக்கலு - சீர்பெறச் செய்தலு மாயது, மெண்ணிற் - கருதுதற்கரிதாய, றவத்தான் - நல்லூக்கத்தால், வரும்-வந்து நீருமென்பது பதம்.

(பொ.) தானே தானே உறுதிபெறலும் தன்னை அடுத்தோரை சீர்பெறச் செய்தலுமாயது கருதுதற்கரிதாய நல்லூக்கத்தால் வந்து நீரும் என்பது பொழிப்பு.

(க.) துறவியானவன் நல்லூக்கமாம் தபோ நிலையிற்றிறம்பெற நிற்பானாயின் தான் உறுதியாய் சுகநிலை பெறுகுவதுடன் தன்னை அடுத்தோரையும் அத்தவநிலை சுகச்சீர்பெற செய்விக்கும் என்பது கருத்து.

(வி.) தானே தானே தத்துவமாகநிலைபெறுதலுந் தன்னையடுத்தோரைக் கடைத்தேறவைத்தலு மாயச்செயல்கள் யாவும் தபோபலப் புண்ணியமே ஆதலின் துறவியானவன் அத்தவநிலை வழுவாது வாழ்கவேண்டுமென்பதற்குச் சார்பாய் அறநெறிச்சாரம், "உடம்புங்கிளையும் பொருளும் பிறவுந் தொடர்ந்து பின்செல்லாமெ கண்டு மடங்கித் தவத்தோடு தானம்புரியாது வாழ்வா, ரவத்தங்கழிகின்ற நாள்." என்பதுகொண்டு தபோபலத்தால் தான் சுகச்சீர் பெறுவதுடன் தன்னையடுத் தோரும் சுகச்சீர் பெறுவார்கள் என்பது விரிவு.

5. வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவ
மீண்டு முயலப் படும்.

(ப.) வேண்டிய - துறவிகோறிய தவத்தால், வேண்டியாங் - தாங்கோறியவைகள்,

கெய்தலால் - வந்து கூடுவதால், செய்தவ - நல்லூக்கத்தில், மீண்டு - இடைவிடாது முயலப்படும் - முநிந்து சாதித்தல் வேண்டுமென்பது பதம்.

(பொ.) துறவிகோறிய தவத்தால் தாங்கோறியவைகள் வந்து கூடுவதால் செய்யும் நல்லூக்கத்தை இடைவிடாது முநிந்து சாதித்தல்வேண்டும் என்பது பொழிப்பு.

(க.) துறவியானவன் நாடிநிற்குந் தபோபலத்தால் அவன் கோறியவைகள் முடிவது அநுபவமாதலின் மீண்டுந் தவச்செயலில் முநிந்தே நிற்கவேண்டும் என்பது கருத்து.

(வி.) இல்லந்துறந்து சங்கஞ்சேர்ந்த சிரமணன் தனது இடைவிடா தவச் செயலால் வேண்டியவைக் கைகூடுதல் அநுபவமுங் காட்சியுமாதலின் துறந்தோன் தவச் செயலில் மீண்டும் முயன்று சாதித்து சித்தி பெறவேண்டும் என்பது விரிவு.

6. தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லா
ரவஞ் செய்வாராசையுட் பட்டு.

(ப.) தவஞ்செய்வார் - நல்லூக்கத்தில் முநிந்து நிற்போர், தங்கருமஞ் செய்வார் - தாங்களடைய வேண்டிய வீடுபேறாம் சுகநிலையந்தேடிக் கொள்ளுவர், மற்றல்லா - அவ்வகை முனியாதோர், ராசையுட்பட்டு - பேராசையிற் சிக்குண்டு, ரவஞ்செய்வார் - தங்களுக்குத்தாங்களே கேட்டையுண்டு செய்துக் கொள்ளுவார் என்பது பதம்.

(பொ.) நல்லூக்கத்தில் முநிந்து நிற்போர் தாங்களடைய வேண்டிய வீடுபேறாம் சுகநிலையந் தேடிக்கொள்ளுவர், அவ்வகை முநியாதோர் பேராசையிற் சிக்குண்டு தங்களுக்குத் தாங்களே கேட்டை உண்டு செய்துக்கொள்ளுவார்கள் என்பது பொழிப்பு.

(க.) தன்னை அடைக்கியாளுந் தவநிலையில் ஊக்கம் பெற்றிருப்போர் தானே தானே சுயம்பாம் சுகநிலையைப் பெறுவார்கள் அவ்வகையில்லாதோர் துக்கநிலையடைவார்கள் என்பது கருத்து.

(வி.) இரசோகுணம், தமோகுணம் இரண்டு மற்று சத்துவ குணம் நிறம்பத் தவத்திற்கு முநிந்த துறவி இடைவிடாசத்துவ சாதனத்தில் முநிந்து நிற்பானாயின் சதா சுகநிலையைப் பெறுவான். அங்ஙனமில்லாது பேராசையுற்று உழல்வோன் மீளாதுக்க நிலையிற் சுழல்வான் என்பது விரிவு.

7. சுடச்சுடப் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோக்கிற் பவர்க்கு.

(ப.) துன்பஞ் - துக்கவிருத்தியின் காரணங்களை, சுடச்சுட - உடனுக்குடன், நோக்கிற் பவர்க்கு - உய்த்துணறுவோருக்கு, சுடச்சுட - புடமிடப்புடமிட, பொன் போலொளி - பொன்னானது பிரகாசிப்பது போல, விடுந் - சாந்தம் ஒளிவிடுமென்பது பதம்.

(பொ.) துக்கவிருத்தியின் காரணங்களை உடனுக்குடன் உய்த்து ணறுவோருக்கு புடமிடப்புடமிடப் பொன்னானது பிரகாசிப்பது போல சாந்தம் ஒளிவிடும் என்பது பொழிப்பு.

(க.) பொன்னைப் புடமிடப்புடமிட ஒளிவீசுவது போல் துக்கம் எதனால் உண்டாயின என்று உடனுக்குடன் உசாவி உணர்வானாயின் துக்கந்தோற்றும் நிலையகன்று சுகவொளிபெறுவான் என்பது கருத்து.

(வி.) பொன்னினை எடுத்துச் சுடசுடப் புடமிடுவதாயின் உள்ளக்களங்கமற்று மேலும் மேலும் பிரகாசிப்பதுபோல் துறவி தனது தவமுயற்சியால் துக்கம், துக்க உபத்திரவம் துக்கபோற்பவ காரணம், துக்க நிவாரணமாகும் வழிவகைகளை உடனுக்குடன் உய்த்துணர்ந்து துக்கோற்பவக் காரணத்தை அகற்றுவனாயின் சுகவொளியானது தன்னிற்றானே விளங்கும் என்பது விரிவு.

8. தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்.

(ப.) தன்னுயிர் - தனது யிரென்னும் பற்றினை, தானற - தானே தான றுத்து, பெற்றானை - நிருவாணம் பெற்றோனை, யேனைய - மற்றுமுள்ள, மன்னுயிரெல்லாம் - சீவராசிகள் யாவும், தொழும் - வணங்குமென்பது பதம்.

(பொ.) தனது உயிரென்னும் பற்றினை தானேதான் அறுத்து நிருவாணம் பெற்றோனை மற்றுமுள்ள சீவராசிகள் யாவும் வணங்கும் என்பது பொழிப்பு.

(க.) உயிரென்னும் நாமத்தையும் உடலென்னு முருவத்தையுந் தானாக அகற்றி வீடு பேறுபெற்றோனை சருவ சீவர்களும் வணங்கும் என்பது கருத்து.

(வி.) துறவுபூண்டு தவநிலை உறுதிபெற சாதிப்போன் நான் நீயென்னும் பின்ன பாவமும், உடலுயிரென்னும் இரண்டும் அற்றுஞானவரம்பு கடவாது என்றும் அழியா நிருவாண சுகமடைவோன், ஆதலின் அவ்வகையடைந் தோனை சருவசீவர்களுங் கைகூப்பித் தொழுஉம் என்பது விரிவு.

9. கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
னாற்ற லைப்பட் டவர்க்கு.

(ப.) நோற்றலி - தவவிரதத்தினால், னாற்ற - ஆறுதலுற, றலைப்பட்டவர்க்கு - முநிந்தவர்களுக்கு, கூற்றங் - மரணபயத்தை, குதித்தலுங் - கடக்கக்கூடிய, கை கூடு - வழியுண்டாம் என்பது பதம்.

(பொ.) தவ விரதத்தினால் ஆறுதலுற முநிந்தவர்கள் மரண பயத்தைக் கடக்கக் கூடிய வழியுண்டாம் என்பது பொழிப்பு.

(க.)துக்கத்தை போக்கி சுகநிலை பெறும் தபோ பலத்தால் ஆறுதலுற்றோருக்கு மரணபயம் அகன்றுப்போம் என்பது கருத்து.

(வி.) பிறப்பின் துக்கம், பிணியின் துக்கம், மூப்பின் துக்கம், மரண துக்கங்களாகிய நான்கையுங் கடக்கவேண்டி தவநிலை நாடிய துறவி, பாவஞ் செய்யாதிருத்தல் நன்மெய்க்கடைபிடித்தல், இதையத்தை சுத்தி செய்தலாகிய மூவகை சாதனத்தில் ஒன்றில் நிலைபெற முயன்று முந்துவானாயின் மரணநிலை கடந்து சுகநிலை பெறுவான் என்பதற்குச் சார்பாய், *ஔவையார் ஞானக்குறள்* "துரியங்கடந்த சுடரொளியைக் கண்டால், மரணம் பிறப்பில்லை வீடு" என்றும், *தாயுமானவர்* "சந்தமும் வேதமொழி யாதொன்றை பற்றினது தான்வந்து முற்றுமெனலால், சகமீதிருந்தாலுமரணமுண்டடென்பது சதா நிஷடர் நினைவதில்லை" என்னும் ஆதாரங்கொண்டு தவநிலையில் உறுதி பெற்றோருக்கு மரண நிலையை கடக்கும் வழியுண்டாம் என்பது விரிவு.

10. இலர் பலராகிய காரண நோற்பார்
சிலர்பல நோலா தவர்.

(ப.) இலர் பலர் - மரணசெயமில்லார், பலராகிய காரண - பலருண்டாகுங் காரணமியாதெனில், நோலாதவர் - தவநிலையில் நில்லாததினாலாம், நோற்பார் - தவநிலையுறுதிபெற்று மரணத்தை செயித்துக் கொள்ளுவோர், சிலர் - சொற்பமாகக் காணப்படுவார்களென்பது பதம்.

(பொ.) மரணசெயமில்லார் பலருண்டாங் காரணம் யாதெனில் தவநிலையில் நில்லாததினாலாம், மரணத்தை செயித்துக் கொள்வோர் சொற்பமாகக் காணப்படுவார்கள் என்பது பொழிப்பு.

(க.) மரணத்தை செயித்து பிறவியை அறுக்கவேண்டுமென்னும் ஊக்கமில்லா தோர் பலரும் மரணத்தை செயித்து பிறவியை அறுக்க வேண்டுமென்னும் ஊக்கமுடையோர் சிலருமாயிருக்கின்றார்கள் என்பது கருத்து.

(வி.) உலகமக்கள் பெரும்பாலும் பாசபந்தத்திற் சிக்குண்டு மூவாசையுள் பதிந்துள்ளோராதலின் துறவுபூண்டு சங்கங்சேர்ந்தும் பலர் மரணபயமின்றி பிறவியை அறுக்கும் வழியிற் பிந்துகின்றார்கள், சிலரோ தாங்கள் பூண்ட துறவில் நிலைத்துதவ உறுதிபெற்று சதா நல்லூக்கத்தில் நின்று எடுத்த நோன்பை தொடுத்து முடித்து மரணத்தை செயித்து பிறவியை அறுத்துக் கொள்கின்றார்கள் என்பது விரிவு.

39. அருளுடைமெய்.

அருளுடைமெய் என்பது கிருபை நிறைந்தோன் என்னும் பொருளைத்தரும். அதாவது அன்பின் நோக்கும், மிருதுவாயவாக்கும், கிருபையே ஆக்கலாய் சேர்க்குமுடலுக்கு அருளுடைமெயோர் என்றும், தனச்செல்வம், தானியச்செல்வம், மனைச்செல்வம், மக்கட் செல்வ முடையோரைப் பொருளுடைமெயோர் என்றுங் கூறப்படும். அத்தகைய பொருளோ மிலேச்சர்களாகிய ஆரியர்களிடத்திலுமுண்டு. அருளோ அவ்வகைத்தன்று சாந்தம் அன்பு யீகைஎவ்வுடலிற் சேருகின்றதோ அவனையே அருளுடைமெயோன் என்றுக் கூறப்படுதலால் துறவி அதனை நன்காராய்ந் தொழுகும் வகைகளை விளக்குகின்றார்.

1. அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வ
மாரியார் கண்ணு முள.

(ப.) அருட்செல்வஞ் - கிருபையை நிறப்புஞ்சீரே, செல்வத்துட் செல்வம் - சீரினுஞ் சீரென்னப்படும், பொருட்செல்வ - தனதானியச்சீரோ, மாரியார் கண்ணுமுள் - மிலேச்சரிடத்து முண்டுயென்பது பதம்.

(பொ.) கிருபையை நிறப்புஞ் சீரே சீரினுஞ் சீரென்னப்படும் - தனதானியச் சீரோ மிலேச்சரிடத்தும் உண்டு என்பது பொழிப்பு.

(க.) மேன்மக்கள் சேர்த்துள்ளக் கிருபை யென்னும் அழியாச் செல்வமே சிறந்த செல்வமென்னப்படும் மற்றும் அழியும் தனதானியச் செல்வமோ மிலேச்சராம் கீழ்மக்களிடத்தும் உண்டு என்பது கருத்து.

(வி.) முற்றுந் துறந்து சங்கஞ்சேர்ந்த துறவிகள் பொருட் செல்வத்தை சேர்க்காது அருட்செல்வமாம் கிருபையின் நிறைவே அடைய வேண்டியவர் களாதலின் பொருட்செல்வம் கீழ்மக்களாம் ஆரியரிடத்தும் உண்டு, அதனால் மேன்மகனாம் விவேகமிகுக்குந்துறவி அருள்செல்வத்தையே சேர்க்கும் வழிவகைகளை விளக்கலானார்.

இவற்றுள் இத்திரிக்குறள் மூலத்தையும், *நாலடி நானூறையும்* ஜர்ஜ் ஆரங்டியன் துரை பட்டர் கந்தப்பன் என்பவரால் கொண்டுபோய், தமிழ்ச்சங்கத்து அதிபதி மேம்பட்ட எலீஸ் துரையவர்களிடம் ஏட்டுப்பிரிதியாகக் கொடுத்து அச்சிட்டு வெளிவந்தபோது ஓலைப்பிரிதிக்கு மாறுதலாக சாற்றுக்கவிகளில் சிலது அதிகரித்தும் அறத்துப்பாலிலுள்ள சில செய்யுட்களைப் பொருட்பாலிற் சேர்த்தும், இச்செய்யுளில் ஆரியாரென்று வந்த மொழியைப் பூரியாரென்றும் மற்றும் செய்யுட்களை மாற்றியுள்ளதை கந்தப்பனவர்கள் சங்கத்திற்கு எழுதி கேட்டபோது மறுமொழி கிடைக்காமல் போய்விட்டது என்பது விவேகிகளறிந்த விடயங்களேயாம் அம்மொழி சங்கை யவ்வகையாயினும் *முன்கலை திவாகரத்தில்*, "மிலேச்சராரிய" ரென்றே குறிக்கப்பட்டிருக்கின்றன. அதற்குக் சார்பாய், *பாகுபலி நாயனார் பின்கலை நிகண்டு* ஏட்டுப்பிரிதியிலும், *மார்க்கலிங்க பண்டாரம் பின்கலை நிகண்டு* ஏட்டுப்பிரிதியிலும், "ஆரியர் மிலேச்சர்கிழோரென்றும்" "மன்னுமாரியருங் கீழோரென்றும்," வரைந்துள்ள மொழிகளைத் தற்காலம் அச்சிட்டுள்ளவர்கள் "ஆரியர் மிலேச்சர் நல்லோரென்றும்" "மன்னும் பூரியருங் கீழோரென்றும்" மாறுபடுத்தியுள்ளார்கள். இதுகொண்டே அம்மொழியும் மாறுபட்டுள்ளன என்பதற்கு ஐயமிறாவாம் ஆரியர் மிலேச்சரென்போரையே கீழ்மக்க ளென்பதற்குக் காரணம் யாதெனின்,

சூளாமணி

தேசமிலைச்சரிற் சேர்வுடையாரவர்
மாசின்மனிதர் வடிவினராயினுங்
சின்மனத்தர் கொடுந்தொழில் வாழ்க்கையர்
நீசரவரையு நீரினிழிப்பாம்.

வஞ்சினம், பொறாமெய், குடிகெடுப்பு, கரவடம் கொடுஞ்செயலுடையக் கீழ்மக்களை மிலேச்சரென்றும், ஆரியரென்றும், நீசரென்றும் பௌத்தர்களால் வழங்கிவந்த மொழிகளைக்கொண்டு தனச்செல்வம், தானியச்செல்வமென்னும்

பொருட்கள் ஆரியராம் மிலேச்சரிடங்களிலுமுண்டு, அதனால் அவை சிறப்பெய்தாது, அருட்செல்வமாம் பொருளே சிறப்பெய்தும் என்று கூறியவற்றுள், பூரியர் கண்ணும் பொருளுள்ளதென்பதாயின் கல்விப் பொருளுக்கு பொருந்தாவாம். அதாவது பூரியென்பது பதரென்னும் பொருளைத்தரும், பூரியரென்பது, பதருக்கொப்பானவர்கள் ஏழை, ஆதுலர்களென்னும் பொருளைத்தரும் இவற்றுள் தானிய மணியற்றபோது பதர், பூரியென்றும் வழங்குதல்போல் தனப்பொருள் தானியப் பொருளற்றவர் களை பூரியரென்றும் ஏழைகளென்றுங் கூறுமொழியை மாற்றி பௌத்தர்களால் வழங்கிவந்த ஆரியரென்னு மொழியை வரைந்துள்ளோமாக. ஆரியரென்னு மொழியே குணசந்தியால் ஆரியாரென மறுவிற்று என்பது விரிவு.

2. நல்லாற் றானாடி யருளாள்க பல்லாற்றாற்
றேரினு ம.ஃதே துணை.

(ப.) நல்லாற்றானாடி - சுகவாற்றலுற்று, யருளாள்க - கிருபையை நிறப்புவீராக, பல்லாற்றாற் - பலவகையாற்றலுற்று, றேரினு - முன்னேறினும், மஃதேதுணை - கிருபையாமருளே ஆதாரமாகுமென்பது பதம்.

(பொ.) சுகவாற்றலுற்று கிருபையை நிறப்புவீராக பலவகையாற் றலுற்று முன்னேறினும் கிருபையாம் அருளே ஆதாரமாகும் என்பது பொழிப்பு.

(க.) சுகமாய நல்வாழ்க்கைப் பெற்றிருப்பினும் கிருபையாம் அருளையே நிறப்பற்கு முயல்வீராக, அவ்வருளே பற்பல சுகங்களுக்குந் துணையாக நிற்கும் என்பது கருத்து.

(வி.) எத்தகையாய சுகவாழ்க்கைப் பெற்று வாழினும் தங்கடங்கள் உள்ளத்தின்கண் அருளென்னும் பொருளையே சேர்த்தற்கு முயலல் வேண்டும், அவ்வருளின் மிகுதியால் எடுக்கும் பல காரியங்களுங் கைகூடுமென்பதற்குச் சார்பாய், *தாயுமானவர்* "ஞான கருணாகரமுகங் கண்ட போதிலோ நவநாத சித்தர்களு முன்னட்பினை விரும்புவா"ரென்னு மாதாரங் கொண்டு பல்லாற்றாற்றேரினும் அருளே துணை நிற்கும் என்பது விரிவு.

3. அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள் சேர்ந்த
வின்னா வுலகம் புகல்.

(ப.) யிருள்சேர்ந்த - அஞ்ஞானத்தாற் பிறவியுற்று, வுலகம் புகல் மண்ணுலகத்தில் தோன்றி, வின்னா - துன்பத்தையநுபவிக்குஞ் செயல், அருள்சேர்ந்த - கிருபைநிறைந்த, நெஞ்சினார்க் - உள்ளத்தினர்க்கு, கில்லை - இராவென்பது பதம்.

(பொ.) அஞ்ஞானத்தால் பிறவியுற்று மண்ணுலகத்தில் தோன்றி துன்பத்தை அநுபவிக்குஞ் செயல் கிருபைநிறைந்த உள்ளத்தினார்க்கு இரா என்பது பொழிப்பு.

(க.) இருள்நிறைந்த பாசத்தால் மண்ணுலகத்திற் பிறந்து மீளா துன்பத்தை அநுபவிக்குஞ் செயல் அருள்நிறைந்த துறவிக்கு அணுகாது என்பது கருத்து.

(வி.) துறவியானவன் சங்கஞ்சேர்ந்து தனது இடைவிடா சாதனத்தின் கண் அருளாம் கிருபையினை தனதுள்ளத்தில் நிறப்பிக்கொள்ளுவானாயின் அருளொளியால் அஞ்ஞான இருளகன்று உலகின்கண் மாறாப்பிறவியினால் உண்டாந்துன்பங்கள் நீங்கி சுயம்பாவான் என்பது விரிவு.

4. மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை.

(ப.) மன்னுயிர் - அன்னிய சீவப்பிராணிகளை, ரோம்பி - காத்து, யருளாள்வாற் கிருபையுடன் ஆதரிப்போர், தன்னுயி தனதுயி ருக்கோர் துன்பம் வருமென்று, ரஞ்சும் - பயப்படும்படியான, வினை - செயல், கில்லென்ப - இல்லையாகு என்பது பதம்.

(பொ.) அன்னிய சீவப்பிராணிகளை காத்து கிருபையுடனாதரிப்போர் தனதுயிருக்கோர் துன்பம் வருமென்று பயப்படும்படியான செயல் இல்லை யாகும் என்பது பொழிப்பு.

(க.) மன்னுயிர்க்கோர் துன்பம் அணுகாமல் கிருபை வைத்து கார்ப்போர் தன்னுயிர்க்கோர் துன்பம் வருமென்று அஞ்ச வேண்டியது இல்லை யாகும் என்பது கருத்து.

(வி.) இல்லந்துறந்து சங்கஞ்சேர்ந்த துறவி சருவ சீவர்களையுந் தன்னுயிர் போல் பாதுகாத்து கிருபாநோக்கமுடையவனாய்த் தனதருளைப் பெருக்கிக் கொள்ளுவானாயின் தன்னுயிர்க்கோர்த் துன்பம் அணுகாதிருப்பதுடன் அருளமைந்து ஆற்றலுடையவனுமாவன் என்பது விரிவு.

5. *அல்ல வருள்வார்க் கில்லை வளிவழங்கு*
மல்லல்மா ஞாலங் கரி.

(ப.) அல்ல - பலவகையாய துன்பங்களும், லருள்வார்க்கில்லை - கிருபை நிறைந்த துறவிகளுக்கில்லை யென்பது, வளிவழங்கு - வீடுபேற்றை யளிக்கும், மல்லல் - வளந்தங்கி, மாஞாலங் - சிறப்புற்ற பூமியே, கரி - போதுஞ் சாட்சியென்பது பதம்.

(பொ.) பலவகையாய துன்பங்களும் கிருபை நிறைந்த துறவிகளுக்கில்லை யென்பது வீடுபேற்றையளிக்கும் வளந்தங்கி சிறப்புற்ற பூமியே போதுஞ் சாட்சி என்பது பொழிப்பு.

(க.) அருள்நிறைந்த துறவிக்கு ஓர் ஆபத்தும் வாராதென்பதற்கு என்றும் அழியா பூமியே சாட்சி என்பது கருத்து.

(வி.) என்றும் அழியாது நிலையாய் நின்று நிலமென்னும் பெயர்பெற்ற பூமியின்கண் சருவ உயிர்களுந் தோன்றி மாறிமாறிப் பிறழ்ந்துழல்வதில் பிறப்பை நீக்கி அருள்நிறைந்தோன் ஆனந்தத்திற்கு சிறந்தபூமியே சாட்சி என்பது விரிவு.

6. *பொருணீங்கிப் பொய்ச்சாந்தா ரென்பரருணீங்கி*
யல்லவை செய்தொழகு வார்.

(ப.) பொருணீங்கி - மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசைகளை விட்டோமென்று, பொய்ச்சார்ந்தாரென்ப - பொய்யைச் சொல்லி துறவு பூண்டவர்கள், ரருணீங்கி - கிருபையென்பதே அற்று, பல்லவை - அவற்றிற்கு நேர்விரோதமாயத் தீச்செயல்களையே , செய்தொழுகுவார் - செய்யத்தலைப் படுவார்களென்பது பதம்.

(பொ.) மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசைகளை விட்டோ மென்று பொய்யைச் சொல்லித் துறவுபூண்டவர்கள் கிருபை என்பதே அற்று அவற்றிற்கு நேர் விரோதமாயத் தீச்செயல்களையே செய்யத் தலைப்படுவார்கள் என்பது பொழிப்பு.

(க.) இல்லறத்திருந்து சகல ஆசைகளையும் விட்டேன் எனப் பொய்யைச் சொல்லி சங்கஞ்சேர்ந்து துறவறத்தை யாசிப்பினும் உள்ளப்பற்றுக்களினால் தீச்செயலில் முநிந்து நிற்பான் என்பது கருத்து.

(வி.) இல்லறத்திருந்தே பஞ்சசீலத்தொழுகி சகல பற்றுக்களையும் அறுக்காது, பற்றறுத்தவன் போல் பொய்யைச் சொல்லி சங்கஞ் சேர்ந்து துறவறத்தை யாசிப்பினும் உள்ளப் பற்றுக்களினால் தீச் செயலில் முநிந்து தீய கன்மங்களையே செய்வான் என்பது விரிவு.

7. *அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்கு*
கிவ்வுலக மில்லாது யாங்கு

(ப.) பொருளில்லார்க் - தனப்பொருள், தானியப் பொருளில்லாதவர் களுக்கு கிவ்வுலகமில்லாது - இல்லற சுகமில்லாது, யாங்கு - போல, அருளில்லார்க் - கிருபை நிறைவில்லா துறவிக்கு, கவ்வுலக - வான ராட்சியமாம் புத்தேளுலக சுகம், மில்லை - கிடையாவென்பது பதம்.

(பொ.) தனப்பொருள், தானியப் பொருளில்லாதவர்களுக்கு இல்லற சுகமில்லாது போல கிருபை நிறைவில்லாத துறவிக்கு வானராட்சியமாம் புத்தேளுலகசுகங் கிடையா என்பது பொழிப்பு.

(க.) இல்லறத்தோனாகிய உலகத்தோனுக்கு தனப்பொருள், தானி யப்பொருளற்றபோது உலக சுகம் யாதுமில்லாதது போல துறவு பூண்டோனுக்கு

அன்பு நிறைவில்லாதாயின் வான ராட்சியமாம் புத்தேளுலக சுகமில்லை என்பது கருத்து.

(வி.) உலகமக்களுக்கு தனச்செல்வம், தானியச்செல்வம், மனைச்செல்வம், மக்கட் செல்வமில்லாதபோது யாது சுகமில்லையோ அது போல் அன்பின் பெருக்கம் ஈகையின் பெருக்கம், சாந்தப் பெருக்கமாம் கிருபையின் நிறைவில்லாவிடின் பிறவி யற்றோர் வாழும் நித்திய சுகமாம் புத்தேளுலகம் இல்லை என்பது விரிவு.

8. பொருளற்றார் பூப்ப ரொருகால ருளற்றா
ரற்றார் மற்றாத லரிது.

(ப.) பொருளற்றார் - தனப்பொருள், தானியப்பொருளில்லாதோர், ரொருகா - மற்றொரு காலத்தில், பூப்ப - பொருள் சேர்ந்து முகமலர்வார்கள், லருளற்ற - கிருபையென்பதில்லா துறவிகள், ரற்றார் - உள்ள சுகமுமற்று, மற்றாதலரிது - மற்றுந்தாங் கோறிசென்ற முக்திசுகமுங்கிடையாமற் போவார் என்பது பதம்.

(பொ.) தனப்பொருள், தானியப் பொருள் இல்லாதோர் மற்றொரு காலத்தில் பொருள் சேர்ந்து முகமலர்வார், கிருபை என்பதில்லா துறவிகள் உள்ள சுகமுமற்று மற்றுந்தான் கோறிசென்ற முக்திசுகமுங்கிடையாமற் போவார் என்பது பொழிப்பு.

(க.) இல்லற மக்கள் தனப்பொருள், தானியப்பொருளற்று யாதொரு சுகமற்றிருப்பினும் மற்றொருகால் பொருள் சேர்ந்து முகமலர்ச்சியடைவார்கள், துறவியோதான் நிறப்பவேண்டியக்கிருபையை நிறப்பாமற் போவானாயின் உள்ள சுகமுங்கெட்டுத்தான் கோறிதுறந்த துறவின் சுகமுங் கிடையாமற் போவான் என்பது கருத்து.

(வி.) உலகமக்கள் தனச்செல்வம் தானியச்செல்வம் மனைச்செல்வம் மக்கட்செல்வமாகியப் பொருட்களற்று முகசோர்வுற்றிருப்பவர்கள் ஓர் கால்பொருட்கள் சேர்ந்து முகமலர்ச்சியுறினும் உறுவர், துறவிகளோ தாங்கள் கோறிச்சென்ற கிருபையை நிறப்பாது போவார்களாயின் உள்ள சுகமுங் கெட்டு கோறிய சுகமுமற்றே போவார்கள் என்பது விரிவு.

9. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றாற்றேரி
னருளாதான் செய்யு மறம்.

(ப.) தெருளாதான் - அறிவின் தெளிவில்லா துறவி, மெய்ப்பொருள் - உண்மெய்ப் பொருளை கண்டற்றாற் - கண்டு தெளிந்தவன் போல், றேரி - காட்டிக்கொள்ளுதல், னருளாதான் - கிருபையில்லான், செய்யுமறம் - தருமஞ் செய்கின்றானென்று சொல்லுவதற் கொக்குமென்பது பதம்.

(பொ.) அறிவின் தெளிவில்லா துறவி உண்மெய்ப் பொருளைக் கண்டு தெளிந்தவன் போல் காட்டிக்கொள்ளுதல் கிருபையில்லாதான் தருமஞ் செய்கின்றான் என்று சொல்லுவதற்கு ஒக்கும் என்பது பொழிப்பு.

(க.) விவேகம் முதிரா துறவி தன்னைத் தானறிந்து கொண்டேனென நடித்தல் அருளில்லா ஒருவன் தருமத்தைச் செய்கின்றான் என்பது போலாம் என்பது கருத்து.

(வி.) மெய், வாய், கண், மூக்கு, செவி, என்னும் ஐம்பொறியின் வழியாயுண்டாம் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், என்னும் ஐம்புல நுகர்ச்சியைக் கண்டடையாது தன்னை அறிந்தவன் போல் நடித்து தென்புலத்தோன் எனக் கூறித்திரியும் துறவி யாவருக்கு ஒப்பானவனென்னில் கிருபை என்பதே கனவிலும் இல்லாலோபி தருமஞ்செய்கின்றானென்று கூறுவதுபோலாம் என்பது விரிவு.

10. வலியார் முற்றன்னை நினைக்கத்தான் றன்னின்
மெலியார் மேற்சொல்லு மிடத்து

(ப.) வலியார்முற் - விவேகமிகுத்தத் துறவிகள் முன்னிலையில், றன்னை - விவேகமற்ற துறவி தன்னையும், நினைக்க - ஓர் விவேகியென்று நடித்தல்,

தான்றன்னின் - தன்னறிவுமற்ற, மெலியார் - அறிவிலிகள், மிடத்து - வசத்து, மேற்சொல்லு - மேலாக விளங்குமென்பது பதம்.

(பொ.) விவேகமிகுத்தத் துறவிகள் முன்னிலையில் விவேகமற்ற துறவி தன்னையும் ஓர் விவேகியென நடித்தல் தன்னறிவுமற்ற அறிவிலிகள் வசத்து மேலா விளங்கும் என்பது பொழிப்பு.

(க.) ஐம்புலன் தென்படா துறவி ஐம்புலன் தென்பட்டதென் புலத்தார்போல் நடிப்போனை அவனினும் அறிவிலிகளே கொண்டாடுவார்கள் என்பது கருத்து.

(வி.) கண்ணினாற் பார்க்குஞ் செயலுக்கும் மூக்கினால் முகருஞ் செயலுக்கும், நாவினால் உருசிக்குஞ் செயலுக்கும், செவியினாற் கேட்குஞ் செயலுக்கும், உடலால் ஊருஞ் செயலுக்கும் பீடமெஃதென்றாய்ந்து தன்னை உணர்ந்தடங்கி தன்னை போற்றினுந் தூற்றினும், ஒருவர் இகழினும் புகழினும், பூசிக்கினுந் தூஷிக்கினும் அவற்றை நோக்காது தாங்கள் நோக்குற்ற நிலையில்லயித்து ஆனந்தித்திருக்குந் துறவியைப்போல் இடம்பம், பொறாமெய், கோபம் நிறைந்த துறவி நடிப்பானாயின் அவனைப் போன்ற அவிவேகிகளே அத்துறவியைக் கொண்டாட இடம் உண்டாம் அன்றி வேறில்லையாதலின் விவேகமிகுத்த மேலோர் கொண்டாடும் துறவையடைந்து அருளை வளரச்செய்யவேண்டும் என்பது விரிவு.

40. மெய்யுணர்தல்

அதாவது, இவ்விடங்கூறியுள்ள மெய்யென்னும் பதம் இருவகைப்படும் அதாவது உண்மெயென்றும் புண்மெயென்றும் அந்தரங்கமென்றும், பகிரங்கமென்றுமாம். இஃது சகலருக்கும் விளங்குவதரிதாகும். இராகத் துவேஷ மோகங்களென்னும் காம வெகுளி மயக்க மூன்றும் அற்று சாந்தம் அன்பு ஈகை மூன்றுந் திரண்டு, பிறப்புப்பிணி மூப்புக்சாக்காடென்னும் நான்கு வகைத் துக்கங்களும் ஒழிந்து புளியம் பழம் வேறு ஓடுவேறாவது போல் உடல் வேறு உள்ளொளி வேறாகி, உயிரென்றும் உடலென்றும் வழங்கும் பெயரற்று அநித்திய அநாத்தும நிருவாணமாம் சத்து சித்து ஆனந்த நிலைபெறும். இதையே உண்மெயென்றும் இவற்றிற்கு ஆதாரமாம் உடலையே புலாலமைந்த புண்மெயென்றுங் கூறப்படும். இல்லறமக்கள் பாசபந்தப் பற்றுக்கள் நிறைந்துள்ளவரையில் புளியங்காயிற்கு சமமாகவும், துறவடைந்து சங்கஞ்சேர்ந்து உலக பற்றுக்களற்றபோது புளியம்பழத்திற்கு சமமாகவும் உடலினின்று உள்ளொளியை மாற்றிப் பிரிப்பதே பரிநிருவாணமென்றும், அத்துறவிகளையே தாயின் வயிற்றிருந்து பிறந்த பிறப்பொன்றும், உடலினின்று உள்ளொளியாய் மாற்றி பிறக்கும் பிறப்பொன்றுங் கண்டு இருபிறப்பாள ரென்றும் வழங்கப்படுவார்கள். இத்தகையப்பேரானந்தமெய்யுணர்வறிதற்கே துறவி சங்கஞ் சேர்ந்தும் பொருளல்லாதவற்றை உணராது மெய்ப்பொருளை உணரும் வழிவகைகளை விளக்கலாயினர்.

1. பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரு
மருளாணா மாணாப் பிறப்பு.

(ப.) பொருளல்லவற்றை - துறவி தனக்கப்புறப் பட்டப்பொருளை, பொருளென்றுணறு - மெய்ப்பொருளென்றுணரும், மருளாணா - அஞ்ஞானமருண்ட நிலையடைவானாயின், மாணாப்பிறப்பு - மீளாப்பிறப்பில் சுழலுவானென்பது பதம்.

(பொ.) துறவி தனக்கப்புறப்பட்டப் பொருளை மெய்ப்பொரு ளென்றுணரும் அஞ்ஞானமருண்ட நிலையடைவானாயின் மீளாப்பிறப்பிற் சுழல்வான் என்பது பொழிப்பு.

(க.) மெய்ப்பொருளுணரத் துறவுபூண்டவன் புலன் தென்பட தன்னை உணராது தனதஞ்ஞான மருளால் தனது முன்னிலை சுட்டாக ஓர் பொருள் உண்டென்று மலைவானாயின் மீளா பிறப்பு இறப்பிற் சுழன்று மாளாதுக்கத்தில் அழுந்துவானென்பது கருத்து.

(வி.) அகப்பொருள் ஆய்வதே ஆனந்தம் என்றும் புறப்பொருள் ஆய்வதே துக்கமென்றும் புத்த தன்மம் முறையிடுகின்றதாதலின் அகப்பொருளாம் உண்மெய்ப் பொருள் உணருமாறு துறவு பூண்டவன் தனதுள்ளச் செயலையாயுங் குறைவுற்று அஞ்ஞானமருட்சியால் புறப்பொருளொன்று உண்டென்று மலைந்து நிற்பானாயின் அம்மலைவே பிறப்புக்கும் இறப்புக்கும் ஏதுவாகி நான்குவகை துக்கத்திற்குங் கொண்டுபோம் என்பது விரிவு.

2. இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

(ப.) மருணீங்கி - துறவிகள் தங்களுக்கப்புறப்பட்ட ஒரு பொருள் உண்டென்னும் அஞ்ஞானமகன்று, மாசறு - களங்கமற்ற, காட்சியவர்க்கு - உட்பார்வையை அடைவார்களாயின், இருணீங்கி - மனமாசகன்று, இன்பம் பயக்கு - அழியாபேரின்பத்தைப் பெறுவார்கள் என்பது பதம்.

(பொ.) துறவிகள் தங்களுக்கப்புறப்பட்ட ஒரு பொருள் உண்டென்னும் அஞ்ஞானம் அகன்று களங்கமற்ற உட்பார்வையை அடைவார்களாயின் மனமாசகன்று அழியாப்பேரின்பத்தைப் பெறுவார்களென்பது பொழிப்பு.

(கூ) துறவுபூண்டு சங்கஞ் சேர்ந்த சமணர்கள் தங்களது முன்னிலைச் சுட்டாக ஒரு பொருள் உண்டென்று அலைவுறும் அஞ்ஞானம் அகன்று மனமாசுகழுவி உட்பார்வையிலிருப்பார்களாயின் அழியாப்பேரின்பத்தை அடைவார்கள் என்பது கருத்து.

(வி.) தங்களுக்குள்ள மனக்களங்கங்களினால் தங்களுக்கப்புறப்பட்ட ஒரு பொருளுண்டென்று மயங்கி மலைவுபடும் அஞ்ஞான இருளகன்று மெய்ப்பொருளுணர்ந்து உட்பார்வையில்லயித்து ஞானோதயம் பெறுவார் களாயின் என்றும் அழியா பேரின்ப சுகமாம் நிருவாணமடை வாரென்னும் மெய்யுணர்வுக்கு சார்பாய் *அறநெறிச்சாரம்* "உணர்ச்சியச்சாக உசாவண்டியாகப், புணர்ச்சிப்புலனைந்தும் பூட்டி உணர்ந்ததனை, ஊர்கின்ற பாகனுணர்வு டையனுகுமேல், பேர்கின்றதாகும் பிறப்பு" என்பதுகொண்டு அஞ்ஞானம் அற்றோரே மெஞ்ஞான இன்படைவார்கள் என்பது விரிவு.

3. ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து.

(ப.) ஐயத்தினீங்கி - உள்ளோ புறம்போவென்னு மச்சமற, தெளிந்தார்க்கு - உண்மெயுணர்ந்தோர், வையத்தின் - பூமியின் கண்ணிருப்பினும், வான - வானவர்களுடன், நணிய - பொருந்த, துடைத்து - உடையவர்களாவரென்பது பதம்.

(பொ.) உள்ளோ புறம்போ என்னும் அச்சமற உண்மெயுணர்ந்தோர் பூமியின் கண்ணிருப்பினும் வானவர்களுடன் பொருந்தவுடையவர்களாவர் என்பது பொழிப்பு.

(கூ.) மெய்ப்பொருள் தனக்கப்புறப்பட்டது அன்றென்று எண்ணும் ஐயம் நீங்கி மெய்ப்பொருளுணர்ந்த துறவி பூமியின் கண்ணிருப்பினும் வானராட்சியத்திற்குரிய தேவர்களுக்கொப்பாவான் என்பது கருத்து.

(வி.) மெய்பொருளுண்டோ இல்லையோ என்னும் மலைவும், அஃது அகத்திலுண்டோ புறத்திலுண்டோ என்னும் அச்சமும் நீங்கி தன்னிற்றானே உண்மெய்ப்பொருளை உணர்ந்தடங்கிய துறவி சகலருடன் பூமியில் வாழினும் வானராட்சியத்தின்கண் இரவு பகலற்று நித்தியவொளியாய் உலாவும் தேவர்களுக்கு ஒப்புடைத்தானவனேயாவன் என்பது விரிவு.

4. ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயனின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு

(ப.) ஐயுணர் - ஐம்புல நுகற்சியில், வெய்தியக் - சென்றுணர்ந்த, கண்ணும் - கியானபார்வையும், பயனின்றே - உதவியற்றுப்போம், மெய்யுணர் - உண்மெய்பொருளின்மீது, வில்லாதவர்க்கு - உள்விழி நோக்கில்லாதவர்க்கு என்பது பதம்.

(பொ.) ஐம்புல நுகர்ச்சியிற் சென்றுணர்ந்த கியானபார்வையும் உதவியற்றுப்போம், உண்மெய்ப் பொருளின் மீது உள்விழி நோக்கில்லாதவர்க்கு என்பது பொழிப்பு.

(க.) துறவியானவன் ஐம்புல நுகர்ச்சியுணர்ந்து தென்புலத்தானாயினும் மெய்ப்பொருளுணராமற்போவானாயின் யாதொரு பயனுமில்லை யென்பது கருத்து.

(வி.) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றமென்னும் ஐம்புல நிலைகள் ஈது என்றுணர்ந்த துறவியேயாயினும் புண்மெய் ஈதென்றும் உண்மெய் ஈதென்றும் பகிரங்கம் ஈதென்றும் அந்தரங்கம் ஈதென்றும் தன்னிற்றானே ஆய்ந்து மெய்ப்பொருளுணராமற் போவானாயின் யாதொரு பயனும் அடையான் என்பது விரிவு.

5. எப்பொரு ளெத்தன் மெத்தாயினு மப்பொருள்
மெய்ப்பொருட் காண்ப தறிவு.

(ப.) எப்பொரு - காணும்பொருட்களவற்றுள், ளெத்தன்மெத்தாயினு - எவ்வகையாய சிறந்த குணந்தோன்றினும், அப்பொருள் - அவற்றை விடுத்து, மெய்ப்பொருட் - உண்மெய்ப்பொருளை, காண்பதறிவு - கண்டுணர்வதே சிறந்த ஞானமாமென்பது பதம்.

(பொ.) காணும் பொருட்களவற்றுள் எவ்வகையாய சிறந்த குணந்தோன்றினும் அவற்றை விடுத்து உண்மெய்ப்பொருளைக் கண்டுணர்வதே சிறந்த ஞானமாம் என்பது பொழிப்பு.

(க.) துறவியினது முன்னிலைக்சுட்டில் எத்தகையாய சிறந்த உருவந்தோன்றினும் அவ்வுருவால் அனந்த அற்புதங்கள் நிகழினும் அதனையோர் பொருளென்று கருதாது தனதுண்மெய்ப் பொருளைக் கண்டறிவதே பேரறிவாம் என்பது கருத்து.

(வி.) நானே கடவுள் நானே சாமியென்று தோன்றி மரித்தோர்க்குயிரும் பிணியுற்றோர்க்கு சுகமுமாய அனந்த அற்புதங்களைச் செய்யினும் அவனவனாலாய நற்செயலின் காட்சியென்றுணர்ந்தகற்றி தன்னைத்தான் ஆய்ந்து மெய்பொருட் கண்டடைவதே சிறந்த ஞானமும் அதன் பயனும் என்பது விரிவு.

6. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

(ப.) கற்றீண்டு - எடுத்த விம்மெயிற் கற்றுணர்ந்து, மெய்ப்பொருள் - உண்மெய்ப்பொருளை, கண்டார் - கண்டவர்கள், தலைப்படுவர் - துறவிகளில் முதலவராவார், மற்றீண்டு - இதுவே யினி யெடுக்கு மறுமெய், வாராநெறி - தோன்றா நிலை யென்னப்படும்.

(பொ.) எடுத்த இம்மெய்யிற் கற்றுணர்ந்து உண்மெய்ப்பொருளைக் கண்டவர்கள் துறவிகளில் முதலவராவார் இதுவே இனி எடுக்கு மறுமெய் தோன்றா நிலையென்னப்படும்.

(க.) இப்போதெடுத்துள்ள தேகத்திலேயே கற்றுணர்ந்து உண்மெய்ப் பொருளைக் கண்டடைந்த துறவிகளே மேலோராவர் அதாவது மறுமெய் தோற்றாது காத்துக்கொண்டதினாலேயேயாம் என்பது கருத்து.

(வி.) இப்பிறவியில் எடுத்துள்ள மெய்யில் தெண்ட படிப்பைக் கல்லாது கண்டு படிக்குங் கலைநூற்களைக் கற்று உண்மெய்ப் பொருளைக் கண்டவர்களே மேலாய துறவிகள் எனப்படுவர்கள், எதனாலென்னில் மரணாவத்தைக்கு உள்ளாகி மறுமெய்யெடுத்து மாளாதுக்கத்திற்காளாகாது தன்னைத்தான் வெற்றிக்கொண்டதினாலேயாம் என்பது விரிவு.

7. ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாய்ப்
பேர்த்துள்ள வேண்டாபிறப்பு.

(ப.) ஓர்த்துள்ள - தன்னைத்தானாய்ந்துள்ள நெறியால், முள்ள துணரி- உள்ள மெய்ப்பொருளை உணர்ந்துக்கொள்ளுவானாயின், னொருதலையாய்ப்

- தனக்கப்புறப்பட்ட ஒரு பொருள் உண்டென்னும், பேர்த்துள்ள - உள்ளத்தினஞ்ஞானமகன்று, வேண்டாபிறப்பு - மறுபிறவி உண்டென்னும் அச்சமுமில்லாமற்போமென்பது பதம்.

(பொ.) தன்னைத்தான் ஆய்ந்துள்ள நெறியால் உள்ள மெய்ப்பொருளை உணர்ந்துக் கொள்ளுவானாயின் தனக்கப்புறப்பட்ட ஒரு பொருள் உண்டென்னும் அஞ்ஞானம் அகன்று மறுபிறவி உண்டென்னும் அச்சமும் இல்லாமற்போம் என்பது பொழிப்பு.

(க.) துறவி தன்னைத்தான் ஆய்ந்தறிந்த உணர்வால் உண்மெய்ப் பொருளை உணர்ந்துக் கொள்ளுவானாயின் தனக்கப்புறப்பட்ட ஒரு தலையாய மறு பொருளுண்டென்னும் மயக்கம் நீங்கி மறுமெய்யயுண்டென்னும் பயமுமில்லாமற் போம் என்பது கருத்து.

(வி.) உலகமக்கள் தங்கள் அஞ்ஞான மயக்கத்தால் தங்களுக்கு அப்புறப்பட்ட ஒரு பொருள் உண்டென்று மயங்கி மீளா பிறவியிற் சுழன்று மாளா துக்கத்திலாழ்ந்தி கிடப்பதை அறிந்து துறவுபூண்டு சங்கஞ்சேர்ந்து சமணனானவன் தன்னைத்தானாய்ந்து உண்மெய்ப்பொருளை உணர்ந்துக் கொள்ளுவானாயின் தனக்கப்புறப்பட்ட பொருளுண்டென்னும் மயக்கம் பேர்ந்தொழிவதுடன் பிறவி உண்டென்னும் பயமும் வேண்டாது ஒழிந்து போம் என்பது விரிவு.

8. பிறப்பென்னும் பேதெமெ நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு.

(ப.) பிறப்பென்னு - மாறிமாறி பிறந்துழலும், பேதைமெ - கருமறுவிய காயத்தை, நீங்க - நிருமலமாக்கி, சிறப்பென்னும் - அழியா - கீர்த்தியுடைத்தாய, செம்பொருள் - செவ்விய வுண் மெய்பொருளை, காண்பதறிவு - கண்டானந்திப்பதே அறிவின் பூரண நிலையாமென்பது பதம்.

(பொ.) மாறி மாறி பிறந்துழலுங் கரு மறுவிய காயத்தை நிருமலமாக்கி அழியாக் கீர்த்தியுடைத்தாய செவ்விய வுண்மெய்ப்பொருளை கண்டானந் திப்பதே அறிவின் பூரண நிலையாமென்பது பொழிப்பு.

(க.) அறிவினது பூரண நிலையாதெனில் நான் என்னும் அஞ்ஞான உடலை நிருமலமாக்கி தான் என்னும் அழியாப் பழம்பொருளாம் உண்மெய்யை அறிவதேயாம்.

(வி.) இறப்பிற் பிறப்பிற் கடிகைக்குக்கடிகை தோன்றி தோன்றி மறையும் பேதையுடலைப் பற்றிய பற்றுக்கள் யாவும் ஒழிய செம்மெயாய என்றும் அழியாவுண்மெய்ப் பொருளுதயமாம் என்பதற்குச் சார்பாய் *தாயுமானவர்* "தானான தன்மயமே யல்லா லொன்றைத் தலையெடுக்க வொட்டாது தலைப்பட்டாங்கே, கோனாலுங் கற்பூர தீபம்போல போயொளிப்பதல்லாது புலன்வேறின்றி ஞானாகாரத்தினொடு ஞேயமற்று ஞாதுருவமில்லாமல் நழுவி நிற்கும், ஆனாலுமதன் பெருமெ யெவர்க்கார் சொல்வாரதுவானால துவாரதுவே சொல்லும்" என்னுமஃதே அறிவறிவாய காட்சியுமாம் என்பது விரிவு.

9. சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.

(ப.) சார்புணர்ந்து - துறவி தனக்குள்ளப் பற்றுக்களேதேதென்றறிந்து, சார்புகெட - அப்பற்றுக்களற, வொழுகின் - சாதிப்பானாயின், மற்றழித்து - பற்றுக்களறுவதுடன், சார்தருநோய் - தன்னைச் சேர்ந்து கெடுக்கும் பிறப்புப்பிணி மூப்புச் சாக்காடென்னும் துக்கங்களுக்கும், சார்தாரா - இடங்கொடுக்காதென்பது பதம்.

(பொ.) துறவி தனக்குள்ள பற்றுக்கள் ஏதேதென்றறிந்து அப்பற்றுக்களற சாதிப்பானாயின், பற்றுக்களறுவதுடன் தன்னைச் சேர்ந்து கெடுக்கும் பிறப்புப்பிணி மூப்புச்சாக்காடென்னுந் துக்கங்களுக்கும் இடங்கொடுக்காது என்பது பொழிப்பு.

(க.) துறவியானவன் தன் மனதிலெழுஉம் அவாவின் பற்றுகள் எது யெதுவென்றாய்ந்து அவைகளை அகற்றுவானாயின் அவைகள் ஒழிவதுடன் அவைகளால் உண்டாம் நான்குவகைத் துக்கங்களுமிடம்பெறாமற் போம் என்பது கருத்து.

(வி.) கண்ணினால் பார்க்கும் பற்றும், மூக்கினால் முகரும் பற்றும், நாவினால் உருசிக்கும் பற்றும், செவியினால் கேட்கும் பற்றும், உடலால் ஊறும் பற்றுமாகிய ஐவகைப்பற்றுக்களில் எவை மிகுந்துள்ளன என்றுணர்ந்து அவைகளை அகற்றுவானாயின் அவைகள் தானே ஒழிவதுடன் மீளாதுக்கதிலாழ்ந்திவரும் பிறப்புப்பிணி மூப்புச் சாக்காடென்னும் நான்குவகை நோய்களும் இடம் பெறாமல் அகன்றுப்போம் என்பது விரிவு.

10. காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னாமங் கெடக்கெடு நோய்.

(ப.) காமம் - துறவி தன் அவாவாலெழுமின்பம், வெகுளி - கோபம், மயக்கம் - அஞ்ஞானவிருள், மிவை மூன்ற - இம்மூன்றினது, னாமங் கெட - பெயர்களுங்கெட்டொழிய சாதிப்பானயின், கெடுநோய் - நான்குவகைத் துக்கங்களு மொழிந்துபோமென்பது பதம்.

(பொ.) துறவி தன்னவாவால் எழும் இன்பம் கோபம் அஞ்ஞான இருள் இம்மூன்றினது பெயர்களுங் கெட்டொழிய சாதிப்பானாயின் நான்குவகைத் துக்கங்களு மொழிந்துபோம் என்பது பொழிப்பு.

(கூ) இன்பத்தால் எழுஉங் காமாக்கினியும் பற்றினால் எழுஉங் கோபாக்கினியும் உணவின் மயக்கத்தால் எழுஉம் பசியாக்கினியும் ஆகிய மூன்றும் அவிய சாதிப்பானாயின் அவை மூன்றும் அவிந்து ஒழிவதுடன் நான்குவகை துக்க நோய்களும் அகன்றுப்போம் என்பது கருத்து.

(வி.) துறவியானவன் பிறப்பின் துக்கம், பிணியின் துக்கம், மூப்பின் துக்கம் மரண துக்கம், நான்குவகைத் துக்கநோய்களைப் போக்கிக் கொள்ளுவதற்கே இல்லந் துறந்தவனாகலின் தனக்குள்ளெழுஉம் காமாக்கினி கோபாக்கினி பசியாக்கினியாகிய மூன்றும் அவியவும் சாந்தம் நிறம்பவும் சாதிப்பானாயின் உண்மெய்யில் நிலைத்து சதானந்த முற்று நிருவாண மடைவதுடன் என்றும் அழியா வீடு பேறாம் பரிநிருவாணமுற்று நட்சேத்திரம் பெற்று அகண்டத்து உலாவுவானென்பதற்குச் சார்பாய் *வடநூலார்*, இராகத்து வேஷ மோகங்களற்றபோது சதானந்தமும் அம்மூன்றும் அறாவிடத்து சதா துக்கமும் உண்டெனக் கூறியுள்ள மொழியே போதுஞ் சான்றாம் என்பது விரிவு.

இவ்வறத்துப்பாலுள் மெய்யறம், மெய்ப்பொருள், மெய்யின்பமாகிய மூன்றுப் புதைப்பொருளும் அடங்கியுள்ளதால் இல்லறத்தோர் முதல் துறவிகள் ஈராகவுள்ள சகல மக்களும் தங்கள் தங்களுக்கு உண்டாந் துக்கங்கள் அற்று சுகப்பேற்றையடைய இஃது போதிய போதமாக்கும். ஆதலின் ஒவ்வோர் விசாரணைப்புருஷரும் இதிலடங்கியுள்ள ஆதிபுத்தராங்கடவுள் வாழ்த்து முதல் மெய்யுணர்வுவரையில் தேறவாசித்து உணர்வரேல் பொய்யாய வேதாந்த மாய்கையை விட்டுத் தெளிந்து மெய்யாய வேத அந்தத்தில் நிலைத்து பிறப்புப்பிணி மூப்புச்சாக்காடென்னும் நான்கு வகை துக்கங்களையும் ஒழித்து உண்மெய்யில்லயித்து என்றும் அழியா நித்தியானந்த சுகத்தை அடைவார்கள் என்பது சத்தியம் சத்தியமேயாம்.

திருவள்ளுவ நாயன் – திருவடிகளே சரணம்

அறத்துப்பால் முற்றிற்று

பொருட்பால்

41. நாடு

இவ்விடங்கூறும் பொருட்பால் யாதெனில் முற்கூறியுள்ள உண்மெய்ப் பொருளல்லாது செல்வப்பொருள் கல்விப்பொருளையே குறிப்பதாகும் அதாவது ஓர் தேசமும் மக்களும் அரசனும் சுகம்பெற்று வாழ்கவேண்டுமாயின்

நாட்டின் வளமாம் தானியப் பொருளே முதற்பொருளென்னப்படும் அதுகொண்டே நீருயரவரப் புயரும் வரப்புயர பயிருயரும், பயிருயர குடியுயரும் குடியுயர கோனுயரும் என்பது முதுமொழியாதலின் நாட்டின் வளப்பத்தையுஞ் செயலையும் உலக மூலப்பொருளாக விளக்கலானார்.

1. தள்ளாவிளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு.

(ப.) தள்ளாவிளையுளுந் - சோர்வில்லா உழைப்பாளிகளும், தக்காரும் - விவேகமிகுத்தோரும், தாழ்விலா-குறைவில்லா, செல் வரும் - தனமுள்ளோரும், சேர்வது - சேர்ந்து வாழ்வது, நாடு -வளநாடென்பது பதம்.

(பொ.) சோர்வில்லா உழைப்பாளிகளும் விவேகமிகுத்தோரும் குறைவில்லா தனவந்தரும் சேர்ந்து வாழ்வது வளநாடென்பது பொழிப்பு.

(க.) உழைப்பிற்கஞ்சா உழவாளிகளாம் வேளாளரும் அறிவுள்ளோரும் தனவந்தருங் கூடி வாழ்குமிடத்திற்கே நாடு என்பது கருத்து.

(வி.) பூமியைத் திருத்தி காடுபோக்குவதற்கு அஞ்சாமலும், வரப்புயர்த்தி நீர்கட்டிபுழுதியடையக் கலைக்கி நஞ்சையாக்குவதற்கஞ்சாமலும் உழுது பயிரிடும் வேளாளர்களும் காலங்களை அறிந்து இன்னின்ன தானியங்களை இவ்விவ்வகையாக விளைக்க வேண்டுமென்னும் மதியூட்டும் விவேகிகளும் உழவாளருக்கு தனமுதலுந் தானிய முதலும் உதவிவரும் முதலீவோர்களுஞ் சேர்ந்து வாழ்வதே நாடென்பது விரிவு.

2. பெரும்பொருளாற் பெட்டக்க தாகிய குங்கேட்டா
லாற்ற விளைவது நாடு.

(ப.) பெரும்பொருளாற் - சிறந்த தனவுதவியால், பெட்டக்கதாகி - பூமியைப் பெட்டகம்போல் வரப்புயர்த்தி, யருங்கேட்டா - அதனை யழுகப் புழுக நஞ்சையாகக் கெடுத்து, லாற்றவிளைவது - தானியங்கள் சுகமாக வோங்கி வளர்வது, நாடு - வளநாடென்பது பதம்.

(பொ.) சிறந்த தனவுதவியால் பூமியைப் பெட்டகம்போல் வரப்புயர்த்தி அதனை அழுகப்புழுக நஞ்சையாகக் கெடுத்து தானியங்கள் சுகமாக ஓங்கி வளர்வது வளநாடென்பது பொழிப்பு.

(க.) தனவுதவியால் பூமியைப் பெட்டகம்போன்ற வரப்புயர்த்தி, நீர்கட்டி, எருவிட்டு அழுகப்புழுக்கக் கலக்கி நஞ்சையாக்கிப் பல தானியங்களும் ஓங்கி வளர்ந்திருப்பதே நாடு என்பது கருத்து.

(வி.) தனவுதவிகொண்டும், தானியவுதவிகொண்டும் பூமியைத் திருத்தி, சுற்றிலும் பெட்டகம் போன்ற வரப்புயர்த்தி பிள்ளைகளை தெண்டித்து மதியூட்டல் அறக்கருணையென்றும், தெண்டித்துக் கொல்லுதல் மறக்கருணை யென்றும் வழங்குதல்போல் பெருங்கேடென்றும் அருங்கேடென்றும் இரு வகையுண்டு அவற்றுள் பெருங்கேடாயது சகலவற்றையுந் துன்புறுத்தி அழித்து விடுதல், அருங்கேடு என்பது துன்புறுத்தி பலனடையச் செய்தல். அதாவது பூமியைப் பழுதுபட வழுகக் கலைக்கி நஞ்சையாம் அருங்கேடடையச் செய்து நற்பலனாம் தானியங்களை ஓங்கி வளர்த்து சுகம் பெறுமிடமே நாடென்பது விரிவு.

இதனந்தரார்த்தங்கொண்டே பூமியைப் பலவகைக் கொத்திப்புழுதி யாக்கிப் பழுக வழுகக்கலைக்கித் துன்புறச் செய்யினும் அஃது மேலாய நற்பலனைத் தருவதே சுவாபமாதலின் அம்மண்ணிற்கு மறுபெயர் பிரமமென்றும், மநுக்களுள் ஒருவனைப் பல்லோர் பல்வகையாயக் கொடூரத் துன்பஞ் செய்யினும் அத்துன்பங்களைப் பொறுத்து அவர்களுக்குப் பிரிதி தீங்கு செய்யாது நற்பயனை அருளி உபகாரியாக விளங்குவோனை பிரமமென்றும் பௌத்த சாஸ்திரிகள் வரைந்துள்ளார்கள்.

3. பொறையொருங்கு மேல்வருங்காற் றாங்கி யிறைவற்
கிறையொருங்கு நேர்வது நாடு.

(ப.) பொறை - பூமியில் விளைப்பொருட்கட் யாவும், யொருங்கு - ஒன்றுசேர்ந்து, மேல்வருங்காற் - ஓங்கி வளர்ந்த காலத்தில், றாங்கி -

அறுத்துசேர்த்துக்கொண்டு, யிறைவற் - அரசருக்கு சேர்க்கவேண்டிய வரியிறைக்கு, கிறையொருங்கு - மேலாக வொருபங்கு வரியிறை, நேர்வது - செலுத்திவருவது, நாடு-வளநாடென்னப்படும்.

(பொ.) பூமியில் விளைப்பொருட்கள்யாவும் ஒன்று சேர்ந்து ஓங்கிவளர்ந்த காலத்தில் அறுத்து சேர்த்துக்கொண்டு அரசருக்கு சேர்க்க வேண்டிய வரியிறைக்கு மேலாக ஒருபங்கு வரியிறை செலுத்திவருவது வளநாடென்பது பொழிப்பு.

(க.) பூமியின்கண் பலவகையான தானியங்களும் ஓங்கி வளர்ந்து பெரும்பயன்தருமாயின் அவற்றை ஆனந்தமாக பண்டியிற் சேர்த்து அரசனுக்குச் சேர்த்து வரும் வரி யிறையோடு ஒருபங்கு சேர்த்தளித்து வருவதே வள நாடென்பது கருத்து.

(வி.) நஞ்சைதானியம் புஞ்சைதானியமென்னும் பலவகைப் பொறை தானியங்களுங் குறைவற ஓங்கிவளருங் காலத்து அறுத்துத் தாங்கிக் கொண்டு அரசருக்குச் செலுத்திவரும் வரியிறைக்கு மேலாக ஒருபங்கு வரியிறை செலுத்திவருவதாயின் விளைவில்லாத காலத்து செலுத்தும் வரியிறையிற் குறைத்தே அளிப்பதற்காதாரமாய முன்னிறை வரிவிளக்கிய நாட்டின் சிறப்பாமென்பது விரிவு.

4. *உறுபசியு மோவாப்பிணியுஞ் செறுபகையுஞ்*
சேரா தியல்வது நாடு.

(ப.) உறுபசியு - பசியால் வருந்துவோரும், மோவாப்பிணியுஞ் - சகிக்க வொன்றாத நோயால் வாதைப்படுவோரும், செறுபகையுஞ் - ஏதொன்றுக்கும் பகை பாராட்டுவோரும், சேராதியல்வது - அணுகாது வாழ்க்கை சுகம்பெற்றிருப்பது, நாடு - வளநாடென்பது பதம்.

(பொ.) பசியால் வருந்துவோரும் சகிக்க வொன்றா நோயால் வாதைப்படுவோரும் ஏதொன்றுக்கும் பகை பாராட்டுவோரும் அணுகாது வாழ்க்கை சுகம் பெற்றிருப்பது வளநாடு என்பது பொழிப்பு.

(க.) பசியென்பதே தெரியாமலும் நோயென்பதே அணுகாமலும் பகைவரென்பதே இல்லாமலும் ஆனந்த சுகவாழ்க்கைப் பெற்றிருப்பதே வளநாடு என்பது கருத்து.

(வி.) பூமியின் உழவோராம் வேளாளருக்குள்ள அன்பின் பெருக்கினாலும் ஈகையின் செயலாலும் நீர்வளம் பெருகி நிலவள ஓங்குதலால் பசியற்ற சுகமும் நோயற்ற தேகமும் பகையற்ற வாழ்க்கையுங் கொண்டு வளநாடு பசியற்றும் பிணியற்றும் பகையற்றும் உள்ளதாம் என்பது விரிவு.

5. *பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங்*
கொல்குறும்பு மில்லது நாடு.

(ப.) பல்குழுவும் - பல்வகைக் கூட்டங்களையும், பாழ்செய்யு - கெடுத்தற் கேதுவாய, முட்பகையும் - வஞ்சினமும், வேந்தலைக்குங் - அரசரையசட்டைச் செய்தலும், கொல்குறும்பு - சீவர்களைக்கொன்று திரியுஞ் சேட்டைகளும், மில்லது - இல்லாதது, நாடு - வளநாடென்பது பதம்.

(பொ.) பலவகைக் கூட்டங்களையும் கெடுத்தற்கேதுவாய, வஞ்சினமும் அரசரை அசட்டைச்செய்தலும் சீவர்களைக் கொன்று திரியுஞ்சேட்டைகளும் இல்லாதது வளநாடு என்பது பொழிப்பு.

(க.) மக்கள் கூட்டங்களையும் ஆடுமாடுகளின் பட்டிகளையுந் தானியக்குவியல்களையுங் கெடுப்பதற் ஏதுவாய வஞ்சினமில்லாமலும் அரசரை அவமதிக்குங் கர்வமில்லாமலும் பட்சிகள் மட்சங்கள் முதலிய சீவராசிகளைக் கொன்று திரியும் சேட்டைகளில்லாமலும் ஆனந்த சுகவாழ்க்கைப் பெற்றிருப்பதே வளநாடு என்பது கருத்து.

(வி.) தங்களுக்குள்ள உட்பகையால் மக்களை வஞ்சிப்பதும், ஆடுமாடுகளைத் துன்புறுத்துவதும், தானியப்போர்களை அழிப்பதுமாய துற்செயல் களில்லாமலும் அரசருக்கு வரி இறை செலுத்தாதலக்கழிக்குங் கர்வமில்லாமலும்

விளையாட்டைப்போல் பட்சிகளையும் மச்சங்களையுங் கொன்றுத் திரியுங் குறும்பில்லாமலும் ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டி, சீவராசிகளைத் தன்னுயிர்போல் காத்து இராஜ விசுவாசத்தில் நிலைத்து நீர்வளம் நிலவளம் ஓங்க அன்பும் ஈகையும் பெருக நிற்பதே நாடு என்பது விரிவு.

6. கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டிற் றலை.

(ப.) கேடறியாக் - குறைவற்ற தானியம் விளைந்து, கெட்டவிடத்தும் - ஒருகால் விளைவுகுறையினும், வளங்குன்றா - நீர் வளம் நிலவளங் குன்றாதிருப்பதே, நாடென்ப - நாடென்று சொல்லப்படுவதினும், நாட்டிற்றலை - அதன் சகல நாடுகளுக்குந் தலையாய வளநாடென்னப்படும் என்பது பதம்.

(பொ.) குறைவற்ற தானியம் விளைந்து ஒருகால் விளைவு குறையினும் நீர்வளம் நிலவளங் குன்றாதிருப்பதே நாடென்று சொல்லப்படுவதினும் அதனை சகல நாடுகளுக்குந் தலையாய வளநாடென்னப்படும் என்பது பொழிப்பு.

(க.) நன்றாக விளைந்தும் பூமி ஒருகால் விளைவு குன்றினும் நீர்வளம் நிலவளம் பொருந்தியுள்ள நாடே சகல நாட்டிற்கு மேலாய வளநாடென்று கூறத்தகும் என்பது கருத்து.

(வி.) முதலீவோர் உதவியற்றும் உழைப்பாளிகள் சுகமற்றும் நன்றாக விளைந்திருந்த நாடு விளைவு குன்றுமாயினும் நீரின் வசதிகளும் நிலவசதிகளும் மட்டிலும் மாறாதிருக்குமாயின் அந்நாட்டையே சகலநாடுகளிலும் மேலாய வளநாடெனக் கூறத்தகும் என்பது விரிவு.

7. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லாணும் நாட்டிற் குறுப்பு.

(ப.) நாட்டிற் குறுப்பு - நாடுகளுக்கு முக்கிய வங்கங்கள் யாதெனில், இரு புனலும் - மழைநீர் ஆற்றுநீர் இரண்டுடன், வாய்ந்த - நெருங்கியமைந்த, மலையும் - மலையினின்று, வருபுனலும் - இறங்கும் நீருற்றும், வல்லாணும் - வல்லப மிகுத்த அரசன் வாழும் நகரமுமாமென்பது பதம்.

(பொ.) நாடுகளுக்கு முக்கிய அங்கங்கள் யாதெனில் மழைநீர், ஆற்றுநீர் இரண்டுடன் நெருங்கியமைந்த மலையினின்றிறங்கும் நீருற்றும் வல்லபமிகுத்த அரசன் வாழும் நகரமுமாம் என்பது பொழிப்பு.

(க.) காலமழையும் ஆற்றுநீர் பாய்ச்சலும் மலையருவி நீரும் வல்லப மிகுத்த அரசன் வாழும் அரண்மனையும் நாடுகளுக்கு முக்கிய அங்கங்களெனக் கூறுத்தகும் என்பது கருத்து.

(வி.) விசேடவளநாடு என்பதற்கு முக்கியமாய அங்கங்களென்னும் உறுப்புக்கள் ஏதென்னில் காலமழைத் தவராமல் பெய்துவருமிடமும் ஆற்றுநீர் பாய்ச்சலும் மலையருவி நீர்வடிதலும் இராட்சியபாரஞ் சகலவற்றையுந் தாங்கும் வல்லபமிகுத்த அரசன் வாழும் நகரமுமாம் என்பது விரிவு.

8. பிணியின்மை செல்வம் விளைவின்பமே
மணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

(ப.) பிணியின்மை - நோயற்றவுடலும், செல்வம் - குறைவற்ற தனமும், விளை - பயிறுகள் ஓங்கிவளர்தலும், வின்பம் - ஆனந்த நிலையும், மேம - தங்களை யடக்கியாண்டுக் கொள்ளும் விரதமுமாய, நாட்டிற் கிவ்வைந்து - இவ்வைந்தும் வளநாட்டில், மணியென்ப - தானியக் குவியல் நிறைவதற்கோராதாரமா மென்பது பதம்.

(பொ.) நோயற்றவுடலும் குறைவற்ற தனமும் பயிறுகள் ஓங்கிவளர்தலும் ஆனந்த நிலையும் தங்களை அடக்கி ஆண்டுக்கொள்ளும் விரதமுமாய இவ்வைந்தும் வளநாட்டில் தானியக் குவியல் நிறைவதற்கோர் ஆதாரம் என்பது பொழிப்பு.

(க.) நாடுகளில் தானியமணிகள் குவிதற்கு தங்களைக் காக்கும் விரதமும் சுகமும் பயிரோங்கும் ஆனந்த நிலையும் நோயற்ற வுடலும் குறைவற்ற செல்வமுமாய யிவ்வைந்துமே ஆதாரமாம் என்பது கருத்து.

(வி.) வளநாட்டில் தானிய மணிகள் நிறம்பப் போரிடுவதற்கு ஆதாரங்கள் யாதெனில் மனோவாக்குக் காயங்களை அடக்கியாளும் விரதமும் பயிறுகளை ஓங்கி வளரச்செய்யும் முயற்சியும் சுகமும் பிணியணுகாதிருக்கும் உடலுங் குறைவற்ற செல்வமுமாகிய ஐந்துமேயாம் என்பது விரிவு.

9. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.

(ப.) நாடென்ப - நாடென்று சொல்லும்படியானது, நாடா - வரியோர்களை நாடாது, வளத்தன - விளைவை மட்டிலும் நாடுதல், நாடல்ல - நாடென்று சொல்லுவதற்காதாரமில்லை, நாட - வரியோர்களைத் தேடியவர்களுக்கீவதாயின், வளந்தரு - தானியமணிகள் பெருகுவதுடன், நாடு - அதனை வளநாடென்றுங் கூறத்தகுமென்பது பதம்.

(பொ.) நாடு என்று சொல்லும்படியானது வரியோர்களை நாடாது விளைவை மட்டிலும் நாடுதல் நாடு என்று சொல்லுவதற்கு ஆதாரமில்லை, வரியோர்களைத் தேடி அவர்களுக்கு ஈவதாயின் தானியமணிகள் பெருகுவதுடன் அதனை வளநாடு என்றுங் கூறத்தகும் என்பது பொழிப்பு.

(க.) தங்கள் தங்கள் பயிறுகளை ஓங்க வளர்ப்பது போல் ஏழை வரியோர்களை ஓங்க வளர்க்காதது நாடாகாவாம், தங்கள் பயிற்றை சீர்தூக்கி வளர்ப்பதுபோல் ஏழைக்குடிகளையும் ஓங்க வளர்ப்பதாயின் தானியமணி வளம்பெருகுவதுடன் வளநாடென்று அவற்றைக் கூறத்தகும் என்பது கருத்து.

(வி.) தாபர வர்க்கங்களாகிய மணிகளை மட்டிலும் ஓங்கச் செய்வோர்கள் தங்களை ஒத்த மநுமக்களாகிய ஏழைகளை ஓங்கச் செய்யார்களாயின் அந்நாடு வளநாடாகாததுடன் அவர்களோங்க வளர்க்கும் தானிய மணிகளும் ஓங்காவாம். தானியங்கள் ஓங்கிப் பலன் பெறவேண்டியவர்கள் தங்களை ஒத்த மநுமக்களாம் ஏழைகள் ஓங்கிப்பலுகிப் பெருகக்கருதி ஈவார்களாயின் அவர்கள் விளைவிக்கும் தானியங்களும் ஓங்கிவளருவதுடன் அந்நாட்டையும் வளநாடென்று கூறத்தகும் என்பது விரிவு.

10. ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை இல்லாத நாடு

(ப.) வேந்தமை - அரசன் தங்கி, வில்லாத - இராத, நாடு - நாடேயாயினும், ஆங்கமை வெய்திய - ஏழைகளமர்ந்தோங்கி வளரப்பார்க்கும், கண்ணும் - பார்வைக்கு, பயமின்றே - யாதொரு பயமுமில்லையா மென்பது பதம்.

(பொ.) அரசன் தங்கியிராத நாடேயாயினும் ஏழைகள் அமர்ந்தோங்கி வளரப்பார்க்கும் பார்வைக்கு யாதொரு பயமுமில்லையாம் என்பது பொழிப்பு.

(க.) தங்களை பாதுகாக்கும் அரசனில்லாத நாடேயாயினும் ஏழைகளை யோங்கி வளரச்செய்யும் பார்வை நாட்டாருக்கிருக்குமாயின் யாதொரு பயமும் இராதென்பது கருத்து.

(வி.) முற்பாடலில் பயிறுகளை வோங்கும்படி கருதுவோர் தங்களை யொத்த மநுமக்களில் ஏழைகளாயுள்ளோரும் ஓங்கவேண்டுமெனக் கருதல் வேண்டுமென்று கூறியுள்ளவற்றை அநுசரித்தே ஆங்கமை வெய்தியக் கண்ணென்று ஏழைகளை ஓங்கிவளரச் செய்யும் யீகையாளரும் வேளாளருமாகிய உழவாளிகள் வாழும் நாட்டிற்கு அரசனில்லாத காலத்தும் பயமில்லையென்பது விரிவு.

42. அரண்

இதுவே நகரத்தின் சிறப்பையும் அவை அமையவேண்டிய நிலையையும் அவ்விடம் அமைவோர் செயலையும் விளக்கி நாட்டிற்குப் பேராதரவாகும் நகரமாம் அரணை விளக்குகின்றார்.

1. ஆற்று பவர்க்கு மரண்பொரு ளஞ்சித்தற்
போற்றுபவர்க்கும் பொருள்.

(ப.) மரண்பொரு - அரசன் வாழும் நகரப் பொருளாயது, ளஞ்சித்தற் - வீரம் அற்றவர்க்கல்லாது, ஆற்றுபவருக்கு - குடிகளைக் காத்து ரட்சிப் போருக்கும், போற்று பவருக்கும் - சுத்த வீரர் எனக் கொண்டாடத் தகுவோருக்கும், பொருள் - அது யிடமென்னப்படும்.

(பொ.) அரசன் வாழும் நகரப்பொருளாயது வீரம் அற்றவர்க்கு அல்லாது குடிகளைக் காத்து ரட்சிப் போருக்கும் சுத்த வீரர் எனக் கொண்டாடத் தகுவோருக்கும் அது பொருளென்னப்படும் என்பது பொழிப்பு.

(க.) அரண்மனை என்னும் பொருள் யாவருக்குரியது என்னில் வல்லபம் இல்லார்க்கு அல்லாது வல்லபமிகுத்த அரசருக்குங் குடிகளைப் பாதுகாத்து ரட்சிப் போருக்குமே அஃது பொருளென்னப்படும் என்பது கருத்து.

(வி.) அரணென்றும் நகரமென்றும் வழங்கும்படியானது அழகென்னும் பொருளையே குறித்து அரசன் வாழ்க்கைக்குரியப் பீடத்தைக் குறித்தலால் அதற்குரிய மன்னன் ஆற்றலுற்ற நிதானியாய் தன் குடிகளைக்காக்குஞ் செயலும் எதிரிகளுக்கு அஞ்சாது வல்லபமிகுத்தோனுமாகி அஞ்சாத் தலைமெயும் கருணையும் மிகுத்த வாழ்க்கைக்குரிய அரண் சிறப்பைக் குறிப்பித்துக் கூறிய விரிவாம்.

2. மணிநீரு மண்ணுமலையு மணிநிற்
காடு முடைய தரண்.

(ப.) மணி - தானியப்பண்டிகளும், நீரு - சுத்த நீரோடைகளும், மண்ணு - சுகந்த மணலும், மலையு - அருவி நீரோடுங் குன்றுகளும், மணிநிழற்காடு - அணியணியாக நிழலைத்தரும் நந்தவனங்களும், முடைய - அமைந்துள்ளதே, அரண் - அழகிய நகரமா மென்பது பதம்.

(பொ.) தானியப் பண்டிகளும் சுத்த நீரோடைகளும் சுகந்த மணலும் அருவி நீரோடுங் குன்றுகளும், அணியாக நிழலைத்தரும் நந்தவனங்களும் அமைந்துள்ளதே அழகிய நகரமாம் என்பது பொழிப்பு.

(க.) பல தானிய நிறைவின் பண்டிகளும், நீரோடைகளும் எக்காலும் புதுமணல் பரப்பும் வீதிகளும் அருவி நீர் பாயுங்குன்றுகளும் சுகந்தமலரும் இனியக் கனியும் அளிக்கக்கூடிய நந்தவனங்களுங் கூடியிருப்பதே அரண்மனை என்று கூறத்தகுமென்பது கருத்து.

(வி.) நகரமென்று கூறும் அரசனது அரண்மனைக்கு அழகாயது சுத்த நீரோடையே யாதலின் அவற்றிற்கு நீர் அரணென்றும் புதுமணல் பரப்பலே நில அரணென்றும், குன்றுகளருவியே மலை அரணென்றும், நந்தவனத்தையே காட்டரணென்றுங் கூறியுள்ளவற்றிற்குப் பொருள் கொண்டு மன்னனது வாழ்க்கை பீடமாம் அரணுக்கு இத்தியாதி சிறப்பு அமைந்திருத்தல் வேண்டும் என்பது விரிவு.

3. உயர்வ கலந் திண்மை யருமை யிந்நான்கி
னமைவர ணென்றுரைக்கு நூல்.

(ப.) உயர் - மதில்வுயரமும், வகல - விசாலமும், திண்மை - உறுதியும், யருமை - பார்வைக்கழகுமாய, யிந்நான்கி - இந்நான்கும், னமைவர ணென்றுரைக்கு - அரணுக்கமையவேண்டுமென்று கூறும், நூல் - சிற்ப நூலென்பது பதம்.

(பொ.) மதில் உயரமும் விசாலமும் உறுதியும் பார்வைக்கழகுமாய இந்நான்கும் அரணுக்கு அமையவேண்டுமென்று கூறும் சிற்பநூல் என்பது பொழிப்பு.

(க.) அரணுக்கு ஆதாரமாம் சுற்றுமதில் எழுப்புங்கால் மிக்க விசாலமாகவும் உயரமாகவும் நல்லுறுதிவும் பார்ப்போர்க்கு அரியதாகவும் கட்ட வேண்டும் என்பது சிற்பநூல் உறுதிமொழி என்பது கருத்து.

(வி.) இவற்றையே அரண்காப்பு என்றும் கோட்டை மதிலென்றுங் கூறப்படும். நாட்டுக்கு ஆதாரமாம் நகரத்திற்கு கோட்டையின் மதிலே காப்பு ஆதலின் அவை அகலமாகவும் உயரமாகவும் சாந்துமைகூட்டிய உறுதியாகவும் அழகிய வெண்தூளிதம் பூசியதாகவும் இருக்கவேண்டும் என்பது சிற்ப நூலின் குறிப்பு என்பது விரிவு.

4. சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை
யூக்க மழிப்ப தரண்.

(ப.) சிறுகாப்பிற் - சிறியக்காப்பாளராயினும், பேரிடத்ததாகி விசாலமுற்றயிடமுடையதாய், யுறுபகை - தங்களையெதிர்த்துவரும் பகைவரின், யூக்க மழிப்ப - மனோவுற்சாகத்தைக் கெடுக்கக்கூடியதே, தரண் - நகரமென்னப்படு மென்பது பதம்.

(பொ.) சிறிய காப்பாளராயினும் விசாலமுற்ற இடமுடையதாய் தங்களை எதிர்த்து வரும் பகைவரின் மனோ உற்சாகத்தைக் கெடுக்கக்கூடியதே நகரமென்னப் படும் என்பது பொழிப்பு.

(க.) சிறிய படையால் காக்கக்கூடியதாயினும் கோட்டையானது விசாலமும் உறுதியும் பெற்றிருப்பதே எதிரியின் மனோ உற்சாகத்தைக் கெடுப்பதற்கு ஆதாரமாயுள்ள அரணெனத் தகும் என்பது கருத்து.

(வி.) நகரக்கோட்டையானது விசாலமும் உறுதியும் பெற்றிருக்குமாயின் சிறு படையைக் கொண்டே எதிர்நோக்கி வரும் பெரும்படையின் உற்சாகத்தைக் கெடுத்துப் பின்போகச் செய்யும் என்பது விரிவு.

5. கொளற்கரிதாய்க் கொண்ட கூழ்த்தாகி யகத்தார்
நிலைக்கெளிதா நீர தரண்.

(ப.) கொளற்கரிதாய்க் - எதிரி யெளிதிற் கைப்பற்றக் கூடாததாகவும், கொண்ட கூழ்த்தாகி - வேணவுணவு பொருள் நிறப்புதற் கிடமாகவும், யகத்தார் - நகரவாசிகள், நிலைக்கெளிதா - பயமின்றி தங்கியிருப்பதற்காதாரமாகவும், நீரதரண் - நேர்ந்திருப்பதே கொத்தள மென்னப்படு மென்பது பதம்.

(பொ.) எதிரி எளிதிற் கைப்பற்றக் கூடாததாகவும் வேணவுணவு பொருள் நிறப்புதற்கு இடமாகவும் நகரவாசிகள் பயமின்றி தங்கியிருப்பதற்கு ஆதாரமாகவும் நேர்ந்திருப்பதே கொத்தளமென்னப்படும் என்பது பொழிப்பு.

(க.) எதிரி படையால் உடனுக்குடன் கைப்பற்றக்கூடாததும் பலவகைத் தானியங்களை ஏராளமாக நிறப்பி வைப்பதற்கு இடமாகவும், நகரவாசிகள் ஏதொரு பயமுமின்றி நிலைத்திருப்பதற்கு விடுதிகளாகவும் அமையப் பெற்றுள்ளதே அரயன் வாழ் நகரமெனத் தகும் என்பது கருத்து.

(வி.) நகரத்திற்கு ஆதாரமாயக் கோட்டையின் கட்டிடமானது எதிரி அரசர்களால் எளிதாகக் கைப்பற்றக்கூடாததாகவும் எத்தனை காலம் யுத்தம் நடப்பினும் உணவு பொருளில்லை என்னாது நிறப்பி வைத்தற்கு இடமாகவும் எவ்வகை யுத்த நடப்பினும் அவ்விடம் வசித்துள்ளக் குடிகளுக்கு பயமின்றி வாசஞ்செய்யும் இருக்கைகளாகவும் அரணமைந்திருத்தல் வேண்டும் என்பது விரிவு.

6. எல்லாப் பொருளு முடைத்தா யிடத்துதவு
நல்லா ளுடைய தரண்.

(ப.) எல்லாப்பொருளு - அரசனுக்கு வேண்டிய சகல பொருட்களும், முடைத்தா - உடையதாகி, அவ்விடத்தே நிறைந்திருப்பதுடன், நல்லா - ஒழுக்கமுற்ற வரணியும், ளுடைய - உடையதே, தரண் - அரண்மனையென்னும், யிடத்துதவு - இடத்திற்குப் பலமாமென்பது பதம்.

(பொ.) அரசனுக்கு வேண்டிய சகல பொருட்களும் உடையதாகி அவ்விடம் நிறைந்திருப்பதுடன் ஒழுக்கமுற்ற அரணியும் உடையதே அரண்மனை என்னும் இடத்திற்கு பலமாம் என்பது பொழிப்பு.

(க.) அரயனுக்கு வேண்டும் பலவகையாய பொருட்களும் ஒழுக்கமும் விவேகமு மிகுத்த நல்மனையாளும் இருப்பதே அரணுக்காதாரமாம் என்பது கருத்து.

(வி.) ஒரில்லத்தில் நல்லாளாம் ஒழுக்கமிகுத்த மனைவி இருப்பாளாயின் சகல பொருட்களும் உண்டென்பது போல் அரயனுக்கு சகலவகைப் பொருட்களிருப்பினும் நீதியும் ஒழுக்கமுமற்ற மனையாள் இருப்பாளாயின் சகல பொருட்களிருந்தும் இல்லையென்னப்படுதலால் அரண்மனைக்கு அதிபனாம் அரயனுக்கு சகலமாய பொருட்களோடு நல்லாளாம் உத்தம மனையாளும் இருப்பாளாயின் அரணுக்குப் பலமாம் என்பது விரிவு.

7. முற்றியு முற்றா தெறிந்து மறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண்.

(ப.) முற்றியு - கோட்டையை பகைவரால் முற்றிகை இடினும், முற்றாதெறிந்து - அவ்வகை முற்றிகை இடாது ஆயுதங்களை எறியினும், மறைப்படுத்தும் - காக்கக் கூடியதும், பற்றற்கரிய - பகைவரால் கைப்பற்றுதற் கரிதாயதுமே, தரண் - நகரமென்னப்படும் என்பது பதம்.

(பொ.) கோட்டையை பகைவரால் முற்றிகை இடினும் அவ்வகை முற்றிகை இடாது ஆயுதங்களை எறியினும் காக்கக் கூடியதும் பகைவரால் கைப்பற்றுதற்கு அரிதாயதுமே நகரமென்னப்படும் என்பது பொழிப்பு.

(க.) பகைவர் கோட்டைவாயலை நெருங்கி வந்து முற்றிகையிடினும் முற்றிகையிடாது வெளியிலிருந்தே ஆயுதங்களைப் பிரயோகிக்கினும் உள்ளிருப்போரை மறைத்துக்காக்கக்கூடியதும் பகைவரால் கைப்பற்றக் கூடாததுமாய் இருப்பதே அரணென்னப்படும் என்பது கருத்து.

(வி.) கோட்டையை நெருங்கி விட்டோமென்னும் பகைவரது அடையாளமாம் முற்றிகையிடினும் அவ்வகை முற்றிகையிடாது வெளியிலிருந்துக்கொண்டே ஆயுதங்களை யெறியினும் கோட்டைக் குள்ளிருப்போர் அவைகள் யாவற்றிற்கும் அஞ்சாதிருக்கவும் எதிரிகள் எளிதிற் கைப்பற்றக் கூடாததுமாயிருப்பதே மதிலரணென்றும் நகரமென்றுங் கூறத்தகும் என்பது விரிவு.

8. முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்
பற்றி யார்வெல்வ தரண்.

(ப.) முற்றாற்றி - பகைவராலிட்ட முற்றிகையை யகற்றியும், முற்றியவரையும் - முற்றிகையிட்டப் பகைவரையும், பற்றாற்றி - கைபற்றி, பற்றியார் - வீரமுறுவோர், வெல்வ - வெல்லுவதற்காதாரமாயிருக்க வேண்டியது, தரண் - நகரக்கோட்டை யென்பது பதம்.

(பொ.) பகைவராலிட்ட முற்றிகையை அகற்றியும் முற்றிகை இட்டப் பகைவரையுங் கைபற்றி வீரமுறுவோர் வெல்லுவதற்கு ஆதாரமாய் இருக்க வேண்டியது நகரக்கோட்டை என்பது பொழிப்பு.

(க.) பகைவர் முற்றிகையை உடைக்கக் கூடியதும் அவர்களைக் கைப்பற்றி அடக்கக் கூடியவர்களுமாய சுத்த வீரர்களுக்கு வசதியாகவும் அக்கோட்டையின் அரண் அமைந்திருக்க வேண்டும் என்பது கருத்து.

(வி.) அரயனுக்குக் காப்பாக விளங்கும் சுத்த வீரர்கள் எதிரிகளின் முற்றிகையை அடைக்கவும் அவ்வெதிரிகளைக் கைப்பற்றவுங் கூடிய உபாயத்தில் அமைந்திருக்க வேண்டியது அவ்வரண் என்பது விரிவு.

9. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீரெய்தி மாண்ட தரண்.

(ப.) முனைமுகத்து - முனிந்து செய்யும் யுத்தத்தில், மாற்றலர்சாய - பகைவர் மடிய, வினைமுகத்து - முந்திய செயலால், வீரெய்தி - மேலு மேலும் சுத்த வீரமுண்டாக, மாண்ட - முடிந்திருக்க வேண்டியது, தரண் - கொத்தளமென்பது பதம்.

(பொ.) முனிந்து செய்யும் யுத்தத்தில் பகைவர் மடிய முந்திய செயலால் மேலும் மேலும் சுத்த வீரமுண்டாக முடிந்திருக்க வேண்டியது கொத்தளம் என்பது பொழிப்பு.

(க.) அரணானது பகைவரை முனைந்துவென்றும் அவ்வீரங் குன்றாத செயலுடைத்தாகி சுத்த வீரமெழுவற்கு ஆதாரபீடமாக முகிந்திருத்தல்வேண்டும் என்பது கருத்து.

(வி.) அரண் காப்பாளராம் சுத்த வீரர் முனைமுகத்து நின்று வெல்லினும் அத்திடவீரங் குன்றாது மேலும் மேலும் வீரத்தை உண்டுசெய்வதற்கோர் சூத்திர பாகமாக முடிந்திருக்க வேண்டியதே அரண் என்னும் நகரமென்னப்படும் என்பது விரிவு.

10. எனைமாட்சித் தாகிய கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்ல தரண்.

(ப.) எனை மாட்சித் - எத்தகையவரணிலை யுற்றிருப்பினும், தாகியக் கண்ணும் - அதனை நோக்குற்றிராத பார்வையும், வினைமாட்சி - அதனை சீர்திருத்திவரும் முயற்சியினிலையும், யில்லார்க - இல்லாதவர்களிடத்து, தரண் - கொத்தளமானது, ணில்ல - நிலையாதென்பது பதம்.

(பொ.) எத்தகைய அரணிலை யுற்றிருப்பினும் அதனை நோக்குற்றிராத பார்வையும் அதனை சீர்திருத்திவரும் முயற்சியினிலையும் இல்லாதவர்களிடத்து கொத்தளமானது நிலையாது என்பது பொழிப்பு.

(க.) பலவகை யூகையாகக் கோட்டையை அமைத்திருப்பினும் அரசன் அதன் மீது கண்ணோக்கமும் எக்காலுமவற்றை சீர்திருத்திவரும் முயற்சியும் இல்லாமற் போவானாயின் அரண் அவனுக்கு நிலையாது என்பது கருத்து.

(வி.) மண்ணரண், மலையரண், காட்டரண் நாட்டரண்யாவுங் குறைவர அமைக்கப்பெற்றிருப்பினும் அரசனது பார்வையும் அதனை மேலு மேலும் சீர்திருத்து முயற்சியுமில்லாமற் போமாயின் அரண் சீரழிவதுடன் அரசனது வீரமுங் குன்றிப்போமென்பது விரிவு.

43. இறைமாட்சி

பொருளியலில் நாட்டியல் நகரவியலை விளக்கி அவைகட்காதாரபீடமாம் அரசியலின் விதிவழிகளை விளக்கலானார்.

1. படைகுடி கூழமைச்சு நட்பரணாறு
முடையா னரசரு ளேறு.

(ப.) படை - நால்வகை சேனையும், குடி - நல்வாழ்க்கையிற் கூடிவாழு மக்களும், கூழ் - தானிய நிறை பண்டிகளும், அமைச்சு - ஆலோசினை மிகுத்த மந்திரவாதிகளும், நட் - விளைநாடும், பரணாறு - நகரமோடாறும், முடையா - உடையவனே, னரசரு - அரசருக்குள், ளேறு - சிம்மத்திற்கு நிகராவானென்பது பதம்.

(பொ.) நால்வகை சேனைகளும், நல்வாழ்க்கையிற் கூடி வாழும் மக்களும் தானிய நிறை பண்டிகளும், ஆலோசினை மிகுத்த மந்திரவாதிகளும், விளை நாடும், நகர மோடாறும் உடையவனே அரசருள் சிம்மத்திற்கு நிகராவான் என்பது பொழிப்பு.

(க.) நாடும் நகரமும் நால்வகை சேனைகளும் சீரமைந்த குடிகளும் பண்டிகள் நிறம்பிய தானியங்களும் விவேகமிகுத்த அமைச்சர்களுமாய அறுவகைத்தானையுடைய அரசன் சிம்மத்திற்கு நிகராவன் என்பது கருத்து.

(வி.) வளந்தங்கிய நாடும், சிறப்புற்ற நகரமும், வீரமிகுந்த சேனைகளும், செல்காலம், நிகழ்காலம் வருங்காலம் மூன்றினையுமறிந்து சொல்லக்கூடிய மந்திரிகளும், இராஜ விசுவாசம் அமைந்த குடிகளும் குறைவற்ற தானியப் பண்டிகளுமாய அறுவகை நிறைவுகளும் அமையப்பெற்ற அரசன் சகல மிருகங்களையும் அடக்கி ஆளும் சிம்மத்திற்கு நிகராவான் என்பது விரிவு. இவற்றையே சேந்தனார் "கூட்டத்தொரு பெயருள் படையுங்குடியுங் கூழமைச்சு மரணு நட்பு மாசியலாறே" என்றுக்கூறியவற்றுள் உரைவாணர் நட்பை வளநாட்டமைதியென்றும், நட்டாற்றரமென்றும், நட்டுவிளை பொருளென்றும் பூமியின் நட்பே ஓங்குமாயின் உலக மக்கள் நட்பும் ஓங்குமென வரைந்துள்ளார்கள் என்பது விரிவு.

2. அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தர்க் கியல்பு.

(ப.) அஞ்சாமை - திடதேகமும், யீகை - தன்மசிந்தையும், யறிவு - விவேகமிகுதியும், வூக்க - விடாமுயற்சியும், மிந்நான்கு - ஆகிய வின்னான்கும், மெஞ்சாமை - குறைவற விருப்பவனே, வேந்தற்கியல்பு - அரசரது செயலுக்குரியவனாவனென்பது பதம்.

(பொ.) திடதேகமும் தன்ம சிந்தையும் விவேக மிகுதியும் விடாமுயற்சியும் ஆகிய இன்னான்குங் குறைவற இருப்பவனே அரசர்களது செயலுக்குரிய வனாவன் என்பது பொழிப்பு.

(க.) எதிரிகளுக்கு அஞ்சாதவனும் ஈகையை உடையவனும் அறிவுடையவனும், முயற்சியுள்ளவனுமாயிருப்பவனே அரசரது இயல்புடை யோன் என்னப்படுவான் என்பது கருத்து.

(வி.) அரசனானவன் தன்மசிந்தையை உடையவனும் எதிரி அரசர்களுக்கு அஞ்சாதவனும் விவேகத்தில் மிகுத்தவனும் எடுத்தச் செயலில் விடா முயற்சியுமாய நான்கும் இயல்பாகவே அமைந்துள்ளவனாயிருத்தல் வேண்டும் என்பது விரிவு.

3. தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்று
நீங்கா நிலனாள் பவர்க்கு.

(ப.) நிலனாள் பவர்க்கு - பூமியை யாளுமரசர்களுக்கு, தூங்காமை - மயக்கமின்மையும், கல்வி - கலைநூல் விருத்தியும், துணிவுடைமை - யுத்த முநிவும், யிம்மூன்று - ஆகிய விம்மூன்றும், நீங்கா - அகலாதிருத்தல் வேண்டும் என்பது பதம்.

(பொ.) பூமியை ஆளும் அரசர்களுக்கு மயக்கம் இன்மையும், கலைநூல் விருத்தியும் யுத்தமுநிவும் ஆகிய இம்மூன்றும் அகலாதிருத்தல் வேண்டும் என்பது பொழிப்பு.

(க.) எக்காலும் சதாவிழிப்பிலும் கல்வியின் பெருக்கிலும் யுத்தத் துணியிலுங் கலங்காதிருப்பவனே அரசன் என்னப்படுவான் என்பது கருத்து.

(வி.) அரசனுக்கு தனது ஆளுகையில் விழிப்பும் கல்வி கற்றலின் மிகுப்பும் யுத்தத்திற்பின் முதுகொடா எதிர்ப்பும் ஆகிய இம்மூன்றும் அகலாதிருத்தல் வேண்டும் என்பது விரிவு.

4. அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு.

(ப.) அறனிழுக்கா - தன்மநெறி பிறழாமல், தல்லவை - அதன்மவழிகள் யாவையும், நீக்கி - அகற்றி, மறனிழுக்கா - திடவீரங்குன்றாது, மானமுடைய - சகலருமதிக்கத்தக்க நிலைநிற்றலே, தரசு - மன்னு நிலை யென்னப்படு மென்பது பதம்.

(பொ.) தன்மநெறி பிறழாமல் அதன்மவழிகள் யாவையும் அகற்றி திடவீரங்குன்றாது சகலரும் மதிக்கத்தக்க நிலை நிற்றலே மன்னுநிலை என்பது பொழிப்பு.

(க.) அதன்மச் செயல்கள் யாவையும் நீக்கி அறநெறி மாறாமலும் வீரங்குன்றாமலும் சகலரும் மதிப்புற வாழ்தலே அரசர் நிலை என்பது கருத்து.

(வி.) அரசதன்மமாவது யாதெனில் தனக்குள் எழுங்காம, வெகுளி, மயக்கங்களை நீக்கி சத்திய சங்கங்களைப் போற்றலும், சமண முனிவர்களைக் காத்தலுங் குடிகளை நிலை நிறுத்தலும், சுத்த வீரங் குன்றாது சகலரும் போற்ற வீற்றிருத்தலுமேயாம் என்பது விரிவு.

5. இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

(ப.) இயற்றலு - தனதரசை செங்கோலாக்கலும், மீட்டலுங் - தனக்குப் புறப்பட்டுள்ள பூமிகளையும் மக்களையுஞ் சேர்த்தலும், காத்தலும் - அவைகள்

யாவையுஞ் சீர்பெற வாதரித்தலும், காத்த வகுத்தலும் - தனக்காதரவாய நால்வகை சேனைகளைப் பிறித்துவைத்தலுமாயதே, வல்ல-வல்லபமிகுத்த, தரசு - அரசென்னப்படு மென்பது பதம்.

(பொ.) தனதரசை செங்கோலாக்கலும் தனக்குப் புறப்பட்டுள்ள பூமிகளையும் மக்களையுஞ் சேர்த்தலும் அவைகள் யாவையுஞ் சீர்பெற ஆதரித்தலும் தனக்காதரவாய நால்வகை சேனைகளைப் பிறித்து வைத்தலுமாயதே வல்லபமிகுத்த அரசு என்னப்படுமென்பது பொழிப்பு.

(க.) அரசை செவ்விய வழியில் நடாத்தலும், சிதறியுள்ள பூமிகளையும் மக்களையுஞ் சேர்த்தலும் அவைகளைக் காத்தலும் நால்வகை சேனைகளை வகுத்தலும் ஆகிய நான்குவகை உறுதியே அரசனுக்கு வல்லபத்தை உண்டுசெய்யும் என்பது கருத்து.

(வி.) நீதிநெறி வழுவா செவ்வியக்கோலாம் செங்கோலைக் கையிலேந்தி இராட்சிய பாரந்தாங்கி இயற்றலும் தன்னை விட்டு சிதறியுள்ள பூமிகளையும் மக்களையும் கன்று காலிகளையும் மீட்டு தனதாளுகைக்குள் சேர்த்தலும், சேர்த்தவைகள் யாவற்றையும் சீர்திருத்திக் காத்தலும் தனக்குந் தனதரணுக்கும் ஆதரவாக நான்கு வகை சேனைகளை வகுத்தலுமே அரசனுக்கு வலதாம் என்பது விரிவு.

6. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல நல்லனேல்
மீக்கூறு மன்ன நிலம்.

(ப.) காட்சிக்கெளியன் - பார்வைக்கு எளியவன் போல்காட்டிக் கொள்ளுவதுடன், கடுஞ்சொல்ல - கொடுமொழியற்றவனாகவும், நல்லனேல் - சகலருக்கும் நல்லவனாகவுமிருக்கும், மன்னநிலம் - அரசனது தேசத்தை, மீக்கூறு - மேலாகக் கொண்டாடுவார்களென்பது பதம்.

(பொ.) பார்வைக்கு எளியவன்போல் காட்டிக்கொள்வதுடன், கொடுமொழியற்றவனாகவும், சகலருக்கும் நல்லவனாகவுமிருக்கும் அரசனது தேசத்தை மேலாகக் கொண்டாடுவார்கள் என்பது பொழிப்பு.

(க.) பார்வைக்கு டம்பமில்லாதவனும் மிருதுவாக்குடையவனும் சகலருக்கும் நல்லவனாகவும் விளங்கும் அரசனது தேசம் சகலராலும் புகழப்படும் என்பது கருத்து.

(வி.) சகலருடைய பார்வைக்கும் வீண்டம்பாகாரச் செயல்களைக் காட்டிக் கொள்ளாதவனும் எக்காலுங்கடுஞ்சொற்களற்று மிருதுவான வார்த்தைகளைப் பேசுபவனும், தன்னவரன்னிய ரென்னும் பட்ச பாத மற்ற நல்லவனுமாக விளங்கும் அரசனது தேசத்தை சகலரும் மேலாகக் கொண்டாடுவார்கள் என்பது விரிவு.

7. இன்சொலா லீத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலாற்
றான்கண்ட னைத்திவ் வுலகு.

(ப.) இன்சொலா - இனியமொழியால், லீத்தளிக்க - ஈய்ந்துகாக்கும், வல்லார்க்கு - வல்லபமிகுத்த வரசருக்கு, தன்சொலாற் - தனது வாக்கினால், றான்கண்டனைத்திவ்வுலகு - உலகத்திற் கண்டு கேட்டப்பொருளில்லை என்னாதமையுமென்பது பதம்.

(பொ.) இனிய மொழியால் ஈய்ந்து காக்கும் வல்லபமிகுந்த அரசருக்கு தனது வாக்கினால் உலகத்திற் கண்டு கேட்டப் பொருளில்லை என்னாதமையுமென்பது பொழிப்பு.

(க.) எக்காலும் இனிய மொழியுடன் குடிகளைக் காத்து ரட்சிக்கும் அரசனுக்கு உலகத்தில் கண்ட பொருள் எவை வேண்டினும் அவை கிடைக்கும் என்பது கருத்து.

(வி.) அரசனானவன் குடிகளிடத்து முகமலர்ந்து இனிய மொழிகளாற் பேசி சீர்திருத்துவதுடன் அவர்களுக்கு வேண்டிய பொருட்களை அளித்துப் பாதுகாத்து ரட்சித்து வருவனேல் அவனுக்கு உலகத்தில் வேண்டும் பொருட்கள்

எவையோ அவைகள் யாவும் அக்குடிகளால் கிடைத்து ஆனந்த சுகத்திலிருப்பான் என்பது விரிவு.

8. முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

(ப.) முறைசெய்து - தரும நெறியினின்று, காப்பாற்று - குடிகளை ரட்சிக்கு, மன்னவன் - அரசனை, மக்கள் - மனுக்கள், கிறையென்று - தருமராசனாம் புத்தரென்றே, வைக்கப்படும் - தங்களிதயத்திற் பதிய நினைப்பார்களென்பது பதம்.

(பொ.) தருமநெறியினின்று குடிகளை ரட்சிக்கும் அரசனை மனுக்கள் தருமராசனாம் புத்தரென்றே தங்கள் இதயத்திற் பதிய நினைப்பார்கள் என்பது பொழிப்பு.

(க.) எக்காலுந் தருமநெறி பிறழாது குடிகளைக் காப்பாற்றிவரும் அரசனை அக்குடிகள் யாவரும் இறைவறனாம் புத்தருக்கு ஒப்பாகவே இதயத்திற் கொள்ளுவார்கள் என்பது கருத்து.

(வி.) வரியிறைக்கொள்ளும் அரசனாகப் பிறந்து தருமநெறியினது சுகங்கண்டு உலகமக்களுக்கு அத்தன்ம நெறிகளைப் போதித்து நித்தியானந்த மடையச்செய்து இறைவனென்னுங் காரணப்பெயரை பெற்றவர் புத்தரே யாகலின் அத்தகைய தருமநெறி பிறழாது குடிகளைக் காப்பாற்றும் மன்னனை மனுமக்கள் யாவரும் இறைவனாம் புத்தருக்கு ஒப்பானவன் என்றே தங்கள் இதயத்தில் எண்ணுவார்கள் என்பது விரிவு. முறையெனல் தருமநெறி முறையேயாம்.

9. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ் தங்கு முலகு.

(ப.) செவிகைப்பச் - தன்காதில் கொடூரமாய, சொற் - சொல்லினைக் கேட்டும், பொறுக்கும் - மன்னித்துக்கொள்ளும், பண்புடைய - குணநலமுடைய, வேந்தன் - அரசனது, கவிகைக்கீழ் - குடையினுள்ளே, தங்குமுலகு - உலகம் நிலைக்குமென்பது பதம்.

(பொ.) தன்காதில் கொடூரமாய சொல்லினைக் கேட்டும் மன்னித்துக் கொள்ளும் குணநலமுடைய அரசனது குடையினுள்ளே உலகம் நிலைக்கும் என்பது பொழிப்பு.

(க.) உலகமக்கள் அரசனை செவியிலுறக் கொடுஞ் சொற்களால் வையினும் அவற்றைப் பொறுத்துக் காப்பதே தரும கவிகையாமென்பது கருத்து.

(வி.) நல்வழி தெரிந்து குடிகளை நடாத்தும் அரசனை நல்லோர் நலமாகக் கொண்டாடுவதும் தீயோர் கொடூரமாக வைவது இயல்பாதலின் அவ்விருமொழிகளையும் அரசன் செவியிற் கேளாது குண நலத்தால் குடிகளை ஆதரிக்குஞ் செயலையே மேற்கொண்டு நிற்பானாயின் உலகமக்கள் யாவரும் அவனது அரிய நீழலிலமர்ந்து வாழ்வார்கள் என்பது விரிவு.

10. கொடையளி செங்கோல் குடியோம்ப நான்கு
முடையானாம் வேந்தர்க் கொளி.

(ப.) கொடை - தருமசிந்தையும், யளி - ஈகை மிகுதியும், செங்கோல் - வழுவாநீதியும், குடியோம்ப - குடிகளைக்காக்கு மன்புமாய, னான்கு - இன்னான்கும், முடையானாம் - அமைந்துள்ளவன், வேந்தர்க்கொளி - அரசருக்குள் பிரகாசமுற்றவனாவானென்பது பதம்.

(பொ.) தருமசிந்தையும், ஈகை மிகுதியும் வழுவா நீதியும் குடிகளைக் காக்கும் அன்புமாய இன்னான்கும் அமைந்துள்ளவன் அரசருக்குள் பிரகாசமுற்றவனாவான் என்பது பொழிப்பு.

(க.) அறநெறி தவறாமலும் ஈகையின் குணமாறாமலும் தனதரசகோலை செவ்விய வழியில் நடாத்தி குடிகளைக் காப்பதே நோக்கமாயிருக்கும் மன்னன் சகல அரசர்களிலும் மேலாக விளங்குவான் என்பது கருத்து.

(வி.) இவ்விடங்கொடையும் ஈகையும் ஒரு பொருட் தரினும் கவிழ்ந்து காத்தலென்னும் சத்தியதன்மத்தை மேற்கொண்டு கொடையை நிலையாய தன்மமென்றும், அளித்தலை ஈகையென்றும், செங்கோலை நீதியினாளுகை என்றுங் குடியோம்பலை ஆளுகைக்குட்பட்டோரை ஆதரிக்குஞ் செயலென்று முன்னி இந்நான்கு வழியில் தனதரசை நடத்தும் அரசன் சகல அரசர்களினும் மேலாகப் பிரகாசிப்பான் என்பது விரிவு.

44. கல்வி

இஃது அரசயோகம் அமையினும், ஊன்றி நிலைக்கும் எண்ணமும் உறுதிபெறச்செயலுமாயக் கல்வியைக் கற்று தெளிவதில் வரிவடிவு அட்சரங்களாம் எழுத்துக்களை எண்ணத்தூன்றும் மொழி முதலாய்ந்துப் பொருளது தேர்ந்து அவற்றால் குவிந்துள்ள முதநூல், வழிநூல், சார்பு நூற்களை யுணர்ந்து நீதியிலும் நெறியிலும் ஒழுக்கத்திலும் அமைந்து தனது ராட்சிய பாரத்தைத் தாங்கி முத்திபேறாம் நித்தியானந்த நிருவாணமடைதற்கு கல்வியே ஊன்று கோலும் நிமையா விழியுமாதலின் அரசருக்கு வேண்டிய கல்வியை விளக்குகின்றார்.

1. கற்க கசடறக் கற்பவை கற்றபி
னிற்க வதற்குத் தக.

(ப.) கற்க - கல்வியைக் கற்குங்கால், கசடற - அதைக் களங்க மறக்கற்றல் வேண்டும், கற்பவை - கற்றுணர்ந்த யாவும், கற்றபி - தெரிந்தபின், வதற்குத்தக - கற்றுணர்ந்தவற்றிற்குத் தக்கவாறு, நிற்க - நிலைத்தொழுகல் வேண்டுமென்பது பதம்.

(பொ.) கல்வியைக் கற்குங்கால் அதைக் களங்கமறக் கற்றல்வேண்டும், கற்றுணர்ந்தயாவுந் தெரிந்தபின் கற்றுணர்ந்தவற்றிற்குத் தக்கவாறு நிலைத்தொழுகல் வேண்டும் என்பது பொழிப்பு.

(க.) கல்வியைக் கற்க முயலுங்கால் அவற்றைச் தெள்ளறக் கற்றல்வேண்டும் தெளிந்தபின் அவைகளுள் போதித்துள்ள நீதி நெறி வழுவா நிலையில் நின்றொழுகல் வேண்டும் என்பது கருத்து.

(வி.) அரசன் கல்வியென்னும் அட்சரவித்தை அப்பியாசிப்பதில் எழுத்து சொல், பொருள், யாப்பு, அணியென்னும் பஞ்ச லட்சணங்களில் தேர்ந்து அவைகளால் திரட்டியுள்ள நீதி நூல் ஞானநூற்களைக் கசடறக் கற்றுத் தெளிந்து அப்போதனைகளாம் உலக நீதியொழுக்கத்திற் கற்ற வழி நிற்றல் வேண்டும் என்பது விரிவு.

2. எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டு
கண்ணென்ப வாழு முயிர்க்கு.

(ப.) எண்ணென்ப - எண்ணென்னும் எட்டாம் அகரமாய முதலெழுத்தும், வேனை - அதன் சார்பாய, யெழுத்தென்ப - மற்ற யெழுத்துக்களின், விவ்விரண்டுங் - பிரிவுரண்டும், கண்ணென்ப - உள்விழியென்பதாம், வாழுமுயிர்க்கு - வாழ்க்கை நலம் வேண்டும் மக்களுக்கென்பது பதம்.

(பொ.) எண்ணென்னும் எட்டாம் அகரமாய முதவெழுத்தும் அதன் சார்பாய மற்ற எழுத்துக்களின் பிரிவுரண்டும் வாழ்க்கை நலம் வேண்டும் மக்களுக்கென்பது பொழிப்பு.

(க.) அகரமாய முதலெழுத்து ஞான சாதனத்திற்கு உறிதியாகவும் அதன் சார்பாய வேனைய எழுத்துக்கள் விவேக விருத்திக்குறிதியாகவும் உள்ளதுகொண்டு மக்களது ஈடேற்றத்திற்கு ஆதாரமாயக் காரணக்கண்ணா யுள்ளதாம் என்பது கருத்து.

(வி.) கல்வி கற்றலில் கண்டு படித்தலே கல்வி, காணாது படித்தல் தெண்டக்கல்வியென முதுமொழிக் கூறலால், அகர உயிர் ஆதியாகத் தோன்றி அனந்தமெய் அசைவுற்றதும், அதன் பயனுஞ் செயலும் ஞானசாதகர்க்கு விளங்குமேயன்றி ஏனையோருக்கு விளங்காவாம். எண்ணென்பதை

கணிதமாகவும் எழுத்தென்பதை இலக்கணமாகக் கொள்ளினும் கணிதமும் எழுத்தின்றியமையாவாம் இவ்விடம் ஏனை எழுத்தென்றமைந்துள்ளது கொண்டு மோனை எழுத்தாய முதலெழுத்தாம் அகரத்தையே ஓர் தனி முதற்பாகமாகவும் ஏனைய எழுத்துக்கள் யாவையும் ஓர் பாகமாகவும் வகுத்து, மக்களிவ்விரண்டையுங் கண்டு படிப்பரேல் உள்விழியாம் ஞானக்கண் உதயமாமென்று உயிர்நிலை வருக்க வீடேற்றத்தைக் கூறிய விரிவு. "ஊனக்கண்ணன்றென்றுளக் கண்ணளித்தபின், ஞானவநுபவ முரையென்று ரைத்தது". என்று ஞானிகள் வகுத்துள்ள ஆதாரங்கொண்டு ஆதியாய அகரவட்சரத்தின் சிறப்பையும் அஃது ஆதியாகத் தோன்றிய மதிப்பையும் அறத்துப்பால் சிறப்புப்பாயிரத்துட் கூறியுள்ளோம்.

3. கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத் திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

(ப.)கண்ணுடையரென்பவர் - ஞானக் கண்ணினையுடையோர் யாவரென்னில், கற்றோர் - கண்டு படித்தோரே யாவர், கல்லாதவர் - கண்டு கல்லாதவரோ, முகத்திரண்டு - முகத்தினிலிரண்டு, புண்ணுடையர் - புண்ணினை உடையேரென்பதற்கு ஒக்கும் என்பது பதம்.

(பொ.) ஞானக்கண்ணினை உடையோர் யாவரென்னில் கண்டு படித்தோரே யாவர், கண்டு கல்லாதவரோ முகத்தினில் இரண்டு புண்ணினை உடையோர் என்பதற்கு ஒக்கும் என்பது பொழிப்பு.

(க.) கற்றோரென்பது மேலோர், மேதாவியர், ஞானிகளென்னும் பொருளைத்தரும், ஆகலின் கற்ற வழியினின்று ஒழுகுவோரே கண்ணுடையாரும் கற்ற வழியினில்லாதோர் முகத்திலிரண்டு புண்ணுடையோரு மாவர் என்பது கருத்து.

(வி.) கல்லாதே கசடுற்றோரும் கற்றுங் கசடுற்றோரும் உள்ளாராதலின் அன்னோர் கற்றுங் கற்றவழியில் நில்லாதது கொண்டு முகத்தில் இரண்டு கண்ணற்றப் புண்ணுடையாரென்றும் தாம் கற்ற வழியில் நின்ற மேலோரைக் கண்ணுடையா ரென்றுங் கூறியவற்றிற்குச் சார்பாய் "முகத்திற் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள் அகத்திற் கண்கொண்டு பார்ப்பதே யானந்தம்" என்னும் உள்விழியினது சிறப்பையே ஊன்றி கற்றோரைக் கண்ணுடையாரென்று கூறிய விரிவாம்.

4. உவப்பத் தலைக் கூடியுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில்.

(ப.) உவப்பத் - சகல பற்றுக்களற்று, தலைக்கூடி - பழம்பொருட் சேர்ந்து, யுள்ளப் பிரித - உண்மெய்ப்புறமெய்ப் பிரிதலாய, லனைத்தே - அவ்வளவும் புலவர் - கற்றமைந்தோரின், தொழில் - செயலென்னப்படு மென்பது பதம்.

(பொ.) சகல பற்றுக்களற்று பழம் பொருட் சேர்ந்து உண்மெய்ப்புற மெய்ப்பிரிதலாய அவ்வளவும் கற்றமைந்தோரின் செயலென்னப்படும் என்பது பொழிப்பு.

(க.) புலவர் தொழில் யாதெனில் பற்றுக்களற்று புலன் ஐந்து ஒடிக்கிப் பழம் பொருள் தேர்ந்து இருபிறப்பாளராகப் பிரியும் அவ்வளவுமாம் என்பது கருத்து.

(வி.) காம வெகுளி மயக்கங்களால் உண்டாஞ் சகல பற்றுக்களுமற்று முதற் பொருளாம் மெய்ப்பொருட் கண்டு புளியம்பழம் போலும் ஓடுபோலும் உண்மெய்ப் புறமெய்ப்பிரிக்கும் ஐம்புலனடக்கி தென்புலத்தோராகும் அனைத்தும் புலவரது தொழில் என்பது விரிவு.

5. உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.

(ப.) உடையார்மு - செல்வமுடையோர் முன்னிலையில், னில்லார்போலே - செல்வமில்லாதார் நிலையாததுபோல, கற்றுங் - கல்வியைக் கசடறக் கற்று,

கற்றார் - தேர்ந்தோர் முன்பு, கல்லாதார் - கற்றுத் தேராதவர்கள், கடையரே - விலகி நிற்போரே யாவரென்பது பதம்.

(பொ.) செல்வமுடையோர் முன்னிலையில் செல்வமில்லாதார் நிலையாததுபோல கல்வியைக் கசடறக் கற்று தேர்ந்தோர் முன்பு கற்றுத் தேராதவர்கள் விலகி நிற்போரே யாவார் என்பது பொழிப்பு.

(க.) தனவந்தர்கள் முன்னிலையில் ஏழைகள் விலகி நிற்பதுபோல கற்றவர்கள் முன்னிலையில் கல்லார் விலகியே நிற்பார்கள் என்பது கருத்து.

(வி.) ஈட்டி எட்டியவரையிற் பாயும் பணம் பாதாளம் வரையிலும் பாயுமென்னும் பழமொழிக்கு ஒக்க தனமுடையோன் மனிதனேயாயினும் மனிதன் மனிதனுக்கு அஞ்சாது அவனிடமுள்ள பணத்திற்கு அஞ்சி விலகி நிற்பதுபோல, கற்றவன் மனிதனேயாயினும் அவனுக்குள்ளக் கல்வியின் சிறப்பையும் அதன் மகத்துவத்தையுங் கண்டு கல்லாதோர் விலகியே நிற்பார் என்பது விரிவு.

6. தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறு மறிவு.

(ப.) மணற்கேணி - மணற்பாங்குள்ள பூமியை, தொட்டனைத் - தூறு தோண்ட தோண்ட நீர்பெருகுவதுபோல், மாந்தர்க்கு - மக்களுக்கு, கற்றனைத்தூறு - கற்கக் கற்கப்பெருகும், மறிவு - ஞானமென்பது பதம்.

(பொ.) மணற்பாங்குள்ள பூமியை தோண்ட தோண்ட நீர்பெருகுவது போல மக்களுக்கு கற்கக் கற்கப் பெருகும் ஞானம் என்பது பொழிப்பு.

(க.) மணலுள்ள பூமியிற் பள்ளம்பரிக்கப் பரிக்க நீர் சுறப்பதுபோல் விசாரிணை மிகுத்த மக்களுக்கு கல்வியை கற்கக்கற்க விவேகம் விருத்திப்பெறும் என்பது கருத்து.

(வி.) மக்களுக்குள் கல்வி கற்றலில் ஊக்கமும் விசாரிணையும் மிகுத்திருப்பார்களாயின் பேரானந்த ஞானோதயமாம் என்பதற்கு உபமானமாக மணலுள்ள பூமியைத் தோண்டத் தோண்ட நீர் சுரக்குமெனக் கூறிய விரிவாம்.

7. யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

(ப.) லென்னொருவன் - எவனொருவன், கல்லாதவாறு - கல்வியைக் கற்காதிருக்கின்றானோ, சாந்துணையுங் - அவன் மரண பரியந்தம், யாதானு - ஏதொன்றை, நாடாமா - நாடினு மவைக் கிட்டாமலும், லூராமா - அதன் சுகத்தை யநுபவிக்காமலுமே போவன் என்பது பதம்.

(பொ.) எவனொருவன் கல்வியைக் கற்காதிருக்கின்றானோ அவன் மரண பரியந்தம் ஏதொன்றை நாடினும் அவைக் கிட்டாமலும் அதன் சுகத்தை அநுபவிக்காமலுமே போவன் என்பது பொழிப்பு.

(க.) கல்வியைக் கல்லாத ஒருவன் ஏதொன்றை நாடினும் அவன் மரிக்குமளவும் அதன் சுகத்தை அடையானென்பது கருத்து.

(வி.) கல்லாதவனது நிலை சொல்லாமலே அவன் செயலால் விளங்குதலால் ஏதொன்றை நாடினும் மரணபரியந்தம் அதன் சுகம் ஊராமலே போவன் என்பது விரிவு.

8. ஒருமெக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமெயு மேமாப் புடைத்து.

(ப.) ஒருமெக்கட் - எடுத்துள்ள வோர் தேகத்தில், டான்கற்ற - தான் கற்றுத் தேர்ந்த, கல்வி - கலை நூலின் பயனாயது, யொருவன் - அவனது, கெழுமெயு - எழுவகைப் பிறப்பையும், மேமாப் - களங்கமறத் தெரிந்துக் கொள்ளற்கு, புடைத்து - உடையதாகுமென்பது பதம்.

(பொ.) எடுத்துள்ள ஓர் தேகத்தில் தான் கற்றுத்தேர்ந்த கலைநூலின் பயனாயது அவனது எழுவகைப் பிறப்பையும் களங்கமறத் தெரிந்துக்கொள்ளற்கு உடையதாகும் என்பது பொழிப்பு.

(க.) மனிததேகம் எடுத்துள்ளோன் அத்தேகம் விழுமுன் கலைநூற்களைக் கற்றுத் தெளிவானாயின் அதன் பயனால் தான் தோற்றி தோற்றி மறைந்த யெழுவகைப் பிறவிகளையுங் கண்டடங்குவான் என்பது கருத்து.

(வி.) மனிதனென்னும் ஆறாவது தோற்றத்தில் தான் கற்றுத்தேர்ந்த கலைநூல் தெளிவால் தேவனென்னும் ஏழாவது தோற்றமுண்டாகி தான் தோன்றி தோன்றி மறைந்த எழுவகை பிறப்பையும் அறியத்தக்க ஏதுவினை உடையவனாவன் என்பது விரிவு.

9. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

(ப.) கற்றறிந்தார் - கல்வியைக் கற்றுத் தேர்ந்த மகா ஞானிகள், தாமின்புறுவ - தாங்களடைந்துள்ள பேரின்ப சுகத்தை, துலகின்புறக்கண்டு - மற்றும் உலக மக்களு மடையக் காணுவராயின், காமுறுவர் - அன்பு பாராட்டுவாரென்பது பதம்.

(பொ.) கல்வியைக் கற்றுத்தேர்ந்த மகா ஞானிகள் தாங்கள் அடைந்துள்ள பேரின்ப சுகத்தை மற்றும் உலக மக்களும் அடையக் காணுவார்களாயின் அன்பு பாராட்டுவாரென்பது பொழிப்பு.

(க.) கற்றுத்தேர்ந்த மேலோர்கள் தாங்களடைந்துள்ளப் பேரின்ப சுகத்தை ஏனைய உலகமக்களுங் கற்றுத்தேர்ந்தடைவார்களாயின் அவர்களது நட்பினை விரும்புவார்கள் என்பது கருத்து.

(வி.) கலைநூல் கற்று தேர்ந்த ஞியானிகளின் கருத்து யாதெனில் தாங்கள் கற்றடைந்த பேரின்ப சுகத்தை உலகமக்களுங் கற்று அவ்வின்பசுகத்தை அநுபவிப்பார்களாயின் அவர்கள் மீதன்பு பாராட்டுவதுடன் கூட்டுரவின் ஞான கருணாகர நட்பையும் பாராட்டுவார்கள் என்பது விரிவு.

10. கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்ற யவை.

(ப.) யொருவற்கு - ஒருவனுக்கு, கேடில் - என்று மழியாது, விழு - வேரூன்றி நிலைக்கும், செல்வம் - செல்வமாயது யாதெனில், கல்வி - கற்றுத்தேர்ந்த பொருளேயாம், மாடல்ல - பொன்னோடு, மற்ற - ஏனைய மண்பெண்யாவும், யவை - அழிந்து போமென்பது பதம்.

(பொ.) ஒருவனுக்கு என்று மழியாது வேரூன்றி நிலைக்கும் செல்வமாயது யாதெனில் கற்றுத் தேர்ந்த பொருளேயாம், பொன்னோடு ஏனைய மண்ணும் பெண்யாவும் அழிந்துபோம் என்பது பொழிப்பு.

(க.) மண்பெண் பொன்னென்னும் யாவும் அழிந்துபோம் கற்றுத் தேர்ந்த கல்வியொன்றே அழியாது என்பது கருத்து.

(வி.) கற்றுத்தேர்ந்த கல்வியின் நல்வினைத் தொடர்ந்தே நிற்றலால் அஃதையழியாச்செல்வமென்றும் மற்றய மண்பெண் பொன்னென்பவைகள் யாவும் மாறுதலுற்றே வருகின்றபடியால் அவற்றை அழியுஞ் செல்வமென்றுங் கூறிய விரிவாம்.

45. கல்லாமெய்

இவற்றுள் கல்லாதேகியின் செயலையும், அவன் தன்னை நிரம்ப நோக்காக் கேட்டையும் படவேண்டி நேரும் அல்லலையும், விளக்குகின்றார்.

1. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.

(க.) அரங்கின்றி - சதுரக்கோடுகளில்லாது, வட்டாடி - வட்டமாய பில்லையிட்டாடி, யற்றே - முடிவது போல, நிரம்பிய - தன்னைத்தானறியக்கூடிய நூலின்றிக் - கலை நூற்களைக் கல்லாது, கோட்டி- தன்னைப்போற்றி, கொளல் - கொள்ளுவதை யொக்குமென்பது பதம்.

(பொ.) சதுரக்கோடுகளில்லாது வட்டமாய பில்லையிட்டாடி முடிவது போல கலைநூற்களைக் கல்லாது தன்னைப் போற்றிக் கொள்ளுவதை யொக்கும் என்பது பொழிப்பு.

(க.) ஒருவன் கலை நூற்களைக் கற்றுணராது கற்றவனைப்போல் தன்னைக் காட்டிக் கொள்ளுவது எவ்வாறிருக்குமென்னில் கோடின்றி வட்டாடுங் கொள்கையை ஒக்கும் என்பது கருத்து.

(வி.) கல்வியைக் கற்காமலும் அதனது அறநெறி ஒழுக்கத்தில் நடவாமலும் கற்ற வழியில் நில்லாமலும் உள்ளவன் தன்னை மேலோன் என பாராட்டிக் கொள்ளுவது எவ்வாறிருக்கின்றன வென்னில் சதுராங்கமோ, கோபுராங்கமோ விளை யாடுவதாயின் அதற்குத்தக்கக் கோடுகள் கீரி, வட்டென்னும் பில்லைகள் கொண்டு விளையாடி கெலுப்புத் தோற்பைக் கூறுவதியல்பாம். அத்தகைய வங்கமுமின்றி கோடுமின்றி வட்டாடி கெலித்தேன் என்று கூறுவதை ஒக்கும் என்பது விரிவு.

2. கல்லாதான் சொற்காமுறுதன் முலையிரண்டு
மில்லாதாள் பெண்காமுற் றற்று.

(ப.) கல்லாதான் - கல்வியைக் கல்லாதவனுடைய, சொற்காமுறுதன் - மொழியை சபையோரேற்பதெவ்வாறிருக்கு மென்னின், முலையிரண்டு - இரண்டு ஸ்தன்னியங்களே காணப்படாத, பெண்காமுற்றற்று - பெண்ணினை இச்சியாதது போலாகுமென்பது பதம்.

(பொ.) கல்வியைக் கல்லாதவனுடைய மொழியை சபையோரேற்பது எவ்வாறிருக்குமென்னின் இரண்டு ஸ்தன்னியங்களே காணப்படாத பெண்ணினை இச்சியாதது போலாகும் என்பது பொழிப்பு.

(க.) இரண்டுஸ்தன்னியமும் இல்லாப் பெண்ணினைப் புருஷர்கள் இச்சியாதது போல கல்வியைக் கற்காதவனுடைய மொழிகளை சபையோர்கள் மதியார் என்பது கருத்து.

(வி.) பெண்களுக்கு ஸ்தன்னியங்களே முதற் குறிப்பாகும் அதன் பயனோ பாலமுதூட்டி பாலரைப் பெருக்குவிப்பதாகும் அதன் பார்வையே புருஷரைக் காமுறுத்துவதாகும். அது காணாவிடத்து பெண்ணென்னும் இச்சைப் புருஷர்களுக்குத் தோன்றாதது போல மனிதன் வாக்கினின்று எழுஉம் இன்சுவையற்றக் கல்லான் மொழியை சபையோர் நன்மொழியாக இச்சியார்கள் என்பது விரிவு.

3. கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முற்
சொல்லா திருக்கப் பெறின்.

(ப.) கல்லாதவரு - கல்வியைக் கற்காத வர்களாயினும், கற்றாமுற் - கல்வியைக் கற்றோர் முன்சென்று, சொல்லா - யாதொரு வார்த்தையையும், திருக்க - பேசாதிருக்கும், பெறின் - நிலையைப் பெற்றமைவாராயின், நனி நல்லர் - மிக்க நல்லவராவரென்பது பதம்.

(பொ.) கல்வியைக் கற்காதவர்களாயினும் கல்வியைக் கற்றோர் முன்சென்று யாதொரு வார்த்தையையும் பேசாதிருக்கும் நிலையைப் பெற்றமைவாராயின் மிக்க நல்லவராவர் என்பது பொழிப்பு.

(க.) கற்றுணர்ந்த பெரியோர்கள் முன்பு கல்லாத ஒருவன் சென்று கற்றவனைப்போல் பேசாதிருப்பதே மிக்க நல்லதாகும் என்பது கருத்து.

(வி.) கண்டு படித்துள்ள விவேகமிகுத் தோராங் கற்றோர் முன்சென்று கல்லாதார் பேசி இழுக்கடைவதியல்பாதலின் கல்லார் கற்றுணர்ந்தோர் முன்வாய் பேசாமலிருக்கப் பெருவதே மிக்க நல்லதாகுமென்பது விரிவு.

4. கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங்
கொள்ளா ரறிவுடை யார்.

(ப.) கல்லாதா - கல்விக்கல்லாத வொருவனை, னொட்பங்கழிய - தங்களேவல் முடிய, நன்றாயினுங் - நல்ல மனிதனாகக் கொள்ளினும், ரறிவுடையார் -

விவேக மிகுத்தோர், கொள்ளார் - அவனை யோர் மனிதனாக வேற்கார்களென்பது பதம்.

(பொ.) கல்விகல்லாத ஒருவனைத் தங்களேவல் முடிய நல்ல மனிதனாகக் கொள்ளினும் விவேகமிகுத்தோர் அவனையோர் மனிதனாக ஏற்கார்கள் என்பது பொழிப்பு.

(க.) கல்வியைக் கல்லாத ஓர் மனிதனை சில வேலையின் ஆளாக விரும்பி நல்லவனாகக் கொள்ளினும் கற்றுத் தெளிந்த விவேகிகள் கல்லாதவனை ஓர் மனிதனாக கொள்ளமாட்டார்கள் என்பது கருத்து.

(வி.) கற்றுணர்ந்த விவேகிகள் தங்கள் எவ்வாற்றானும் மானியென மேலாக்கிக் கொள்ளுவார்கள். கல்லாதவர்களோ தங்களை மிருகத்தினுங் கீழாக்கிக்கொள்ளுவது இயல்பாதலின் கல்லாதவனை மாடு, குதிரையைப் போன்று ஏவலுக்குரிய நல்ல மனிதனென பாவிக்கினும் கலை நூற் கற்றுணர்ந்தோர் அவனை மனிதனாக பாவிக்கமாட்டார்கள் என்பது விரிவு.

5. கல்லாவொருவன் றகை மெய் தலைப்பெய்து
சொல்லாட சோர்வு படும்.

(ப.) கல்லாவொருவன் - கல்வியைக் கல்லாதோன், றகைமெய் - சிறந்த தேகியாகி, தலைப்பெய்து - முதலவனாக விளங்கினும், சொல்லாட - கற்றோர் முன் பேசுவானாயின், சோர்வுபடும் - தாழ்த்தப்பட்டுப் போவானென்பது பதம்.

(பொ.) கல்வியைக் கல்லாதோன் சிறந்த தேகியாகி முதலவனாக விளங்கினும் கற்றோர் முன்பேசுவானாயின் தாழ்த்தப்பட்டுப் போவான் என்பது பொழிப்பு.

(க.) கல்வியைக் கல்லாதவன் வடிவுள்ள தேகமுடையவனாகியும், தன முதல், தானிய முதலுள்ளவனாக இருந்துங் கற்றோர் முன் பேசுவானாயின் தாழ்ச்சியடைந்து போவான் என்பது கருத்து.

(வி.) கல்லாதவன் எவர்களிடத்து எம்மொழி பேசவேண்டுமென்றும், எக்காலத்தில் எம்மொழி கூறவேண்டுமென்னும் பகுத்தறிவு அற்றவனாதலின் அவன் எத்தகைய வடிவுள்ளவனாயினும், தனமுதல், தானியமுதலுக்குத் தலைவனாக விளங்கினும் அவன் பேசும் வார்த்தையால் கற்றோர் முன் சோர்வடைந்தே போவான் என்பது விரிவு.

6. உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்.

(ப.) உளரென்னு - தனது தேசமென்னும், மாத்திரைய - பற்றினையுடையோரா, ரல்லாற் - இல்லாதோர், பயவா - யாதொரு பயனுமடையாததுபோல, கல்லாதவர் - கற்கும்பற்றில்லாதோர், களரனையர் - பாலை நிலத்திற் கொப்பாவரென்பது பதம்.

(பொ.) தனது தேசமென்னும் பற்றினை உடையோராய் இல்லாதோர் யாதொரு பயனுமடையாததுபோல, கற்கும் பற்றில்லாதோர் பாலை நிலத்திற்கு ஒப்பாவார் என்பது பொழிப்பு.

(க.) தனது தேசப்பற்றில்லாதோர் பயனடையாததுபோலும், களர்நிலம் யாதோர் விளைவிற்கும் உதவாததுபோலும், கற்கும் பற்றில்லாதோர் யாது விருத்திக்கும் பயனாகார்கள் என்பது கருத்து.

(வி.) தேசம் விருத்திபெறும் மார்க்கமாகும் விவசாயமும் வித்தையும் அற்றிருப்போன் யாதொரு பயனுக்கும் உதவாதது போலும் பாலை நிலமானது யாதொரு தானிய விருத்திக்கும் பயனற்றது போலும் கல்வியைக் கற்றுத்தேராதோர் யாதோர் உபகாரத்திற்கும் உதவார் என்பது விரிவு.

7. நுண்மா நுழை புலமில்லா னெழினல
மண்மாண் புனைபாவை யற்று.

(ப.) மண்மாண் - பூமியை பண்படுத்தாது, புனைபாவை - அதன்பலனை, யற்று - அடையாததுபோல, நுண்மா - நுண்ணிய கலைநூற்களைக்கற்று,

னுழை புல - ஐம்புலநுகர்ச்சி, மில்லா - அடையாதோர், னெழினல - சிறப்பாய பலனை யடையார்களென்பது பதம்.

(பொ.) பூமியைப் பண்படுத்தாது அதன் பலனை அடையாதது போல நுண்ணிய கலைநூற்களைக் கற்று ஐம்புலநுகர்ச்சி அடையாதோர் சிறப்பாய பலனை அடையார்கள் என்பது பொழிப்பு.

(க.) பூமிக்குடையோன் அதனை ஆழவுழுது பண்படுத்தியதன் பலனை அநுபவியாதது போல கலைநூற்களைக்கற்று ஐம்புலனாம் தென்புலன டையாதோர் மனிதன் என்னுஞ்சிறப்பை ஏது வகையாலுமடையார்கள் என்பது கருத்து.

(வி.) உலக சிறப்பிற்கு மிக்க பூமியை உடையோனென்னும் பெயரை வைத்துக் கொண்டு அதனை சீர்திருத்தி ஆழவுழுது பண்படுத்தி அதன் பலனை அநுபவியாதது போல மனிதனெனத் தோன்றியுங் கலை நூற்களைக் கற்று தனதைம்புலனிலையையும் அதன் செயலையும் அறிந்தடங்காதோன் யாது சிறப்பையும் சுகத்தையும் அடையமாட்டான் என்பது விரிவு.

8. நல்லார்கட் பட்ட வறுமெயி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு.

(ப.) நல்லார்கட் - நல்லவர்களென்னுங் கற்றோராயினும், மறுமெயி - அவர்கள் பின்னெடுக்குந்தேகத்தில், பட்ட - படும், னின்னாதே - துன்பத்தினும், கல்லார்கட் - கல்வியைக் கல்லாரெடுத்ததேகத்தின் கண், திரு - செல்வஞ்சேரினும், பட்ட - அதுகொண்டே துன்பப்பட்டுழல்வார்களென்பது பதம்.

(பொ.) நல்லவர்கள் என்னுங் கற்றோராயினும் அவர்கள் பின்னெடுக்குந் தேகத்தில் படும் துன்பத்தினும் கல்வியைக் கல்லாரெடுத்த தேகத்தின்கண் செல்வஞ்சேரினும் அதுகொண்டே துன்பப்பட்டு உழல்வார்கள் என்பது பொழிப்பு.

(க.) கற்றும் நல்லோராகி தன்னை மறந்து மறுபிறவியுற்று துன்பத்தை அடைவதினும் கல்லாதான் எடுத்துள்ள தேகத்தின் கண்ணே செல் வமும் அடைவானாயின் அதுகொண்டே மீளா துன்பப்பட்டு உழலுவான் என்பது கருத்து.

(வி.) கற்றுத்தேர்ந்து கல்விப்பொருள், செல்வப்பொருள் பெற்று சகலருக்கும் நல்லவர்களாக விளங்கி மறந்து, செத்து, மறுஜென்மம் புக்கித்துன்பத்தை அநுபவிப்பதினினும் கற்று கல்விப்பொருளை சேர்க்காது செல்வப்பொருளை சேர்ப்போர் அதுகொண்டே கெட்டவர்கள் என்றிழுக்குற்று எடுத்த தேகத்தின்கண்ணே பலவகைத் துன்பப்பட்டு உழல்வார்கள் என்பது விரிவு.

9. மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு.

(ப.) மேற்பிறந்தா - கல்வி, செல்வம் பெற்ற சிறந்த குடிப்பிறந்தோர், ராயினும் - ஆனபோதினும், கல்லாதார் - கல்வியைக் கற்காதோரிழுக்கடைந்தே போவார்கள், கீழ்பிறந்தும் - கல்வி செல்வமற்ற தாழ்ந்த குடியிற் பிறந்தும், கற்றா - கல்வியைக்கற்றுத் தெளிவாராயின், ரனைத்திலர் - சகல மக்களாலும், பாடு - சிறப்பாடுடையோராவ ரென்பது பதம்.

(பொ.) கல்வி செல்வம் பெற்ற சிறந்த குடிப்பிறந்தோரானபோதினும் கல்வியைக் கற்காதோர் இழுக்கடைந்தே போவார்கள், கல்வி செல்வமற்ற தாழ்ந்த குடியிற் பிறந்தும் கல்வியைக் கற்றுத் தெளிவாராயின் சகல மக்களாலும் சிறப்பாடுடையோராவர் என்பது பொழிப்பு.

(க.) கல்வியும் செல்வமும் அடைந்த மேலாய குடும்பத்திற் பிறந்தோராயிருப்பினும் கல்வியைக் கல்லாராயின் தாழ்த்தப்பட்டே போவார்கள், கல்வி செல்வமற்ற எழிய குடும்பத்திற் பிறந்துங் கல்வியைக் கற்று தெளிவாராயின் சகலராலும் மேலோரெனக் கொண்டாடப்படுவார்கள் என்பது கருத்து.

(வி.) சில வித்துவான்கள் மேற்பிறந்தார் என்பதை மேற்சாதியிற் பிறந்தோர் என்றும் கீழ்ப்பிறந்தார் என்பதைக் கீழ்ச்சாதியிற் பிறந்தோர் என்றும் உரை

கூறுவர். அஃது எத்துணையும் பொருந்தாவாம். கல்வியுமற்று செல்வமுமற்று யாசிப்போனை மேற்சாதியோனென்றும் கல்வியும் செல்வமுமுற்று சுகசீவியாக வாழ்வோனைக் கீழ்ச்சாதியோன் என்றும் வழங்கிவருவது இத்தேசத்தற்கால இயல்பாதலின் மேற்செய்யுளுக்கும் அன்னோர் உரைக்கும் நிறைபடாதது கண்டு திரண்ட செல்வமுமறிவு மிகுத்த மேலாய குடும்பத்திற் பிறந்தோராயினுங் கல்வியில்லாதோர் கனங் குலைவாரென்றும் செல்வமுமறிவுமற்றக் கீழாயக் குடும்பத்திற் பிறந்துங் கல்வியைக் கற்றுத்தெளிவாராயின் சகலராலுங் கனப்படுவார்கள் என்பது விரிவு.

பௌத்தர்களது நூலுக்கு பொய்யாய சாதி சம்மந்தவுரை கூறுவது இழுக்காம்.

10. விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

(ப.) விலங்கொடு - மிருகங்களுடன், மக்க - கல்லாமனுக்களும், ளனைய - பொருந்துவோராகலின், ரிலங்குநூல் - அறிவை வளர்க்குங் கலைநூற்களை, கற்றாரோ - கற்றவர்களோ, டேனையவர் - அவர்களுக்கு வேறாகவே விளங்குவார்களென்பது பதம்.

(பொ.) மிருகங்களுடன் கல்லாமனுக்களும் பொருந்துவோராதலின் அறிவை வளர்க்குங் கலைநூற்களை கற்றவர்களோ அவர்களுக்கு வேறாகவே விளங்குவார்களென்பது பொழிப்பு.

(க.) கல்வியைக் கண்டு கல்லாதார் மிருகத்திற்கு ஒப்பானவர்களாதலின் கண்டு கற்றோர் அவர்களை அணுகார் என்பது கருத்து.

(வி.) கல்வியைக் கற்று தெளிவுறா மக்களை மிருகத்திற்கு ஒப்புவமெயிட்டுக் கூறியவை யாதெனில் கல்லாதோர் மனுவுருவாகத் தோன்றியும் செயல்கள்யாவும் மிருகத்துக்கு ஒத்துளதைகண்ட நாயன் கற்றுணர்ந்த விவேகிகள் கல்லார்களது செயலுக்கு வேறாகவே விளங்குவார்கள் என்பது விரிவு.

இச்செய்யுளில் கல்லாரை மிருகத்திற்கு ஒப்பிட்டும் கற்றோரை மனுக்களுக்கு ஒப்பிட்டுங் கூறியுளதால் இவ்வழிநூல் பொய்யாய சாதிசம்பந்த உரைகளுக்குப் பொருந்தா என்பதே துணிவு.

46. கேள்வி

அதாவது கல்வியைக்கற்றலில் மாத்திரம் பயனில்லை, கற்ற மொழிமுதல் யதார்த்தங்களையும் செய்யுள் முதல் யதார்த்தங்களையும் ஞான முதல் அந்தரார்த்தங்களையுங் கேட்டுத்தெளியவேண்டியதே பயனாதலின் முதநூல் வழிநூல் சார்புநூற்களுக்குரியவர்களாம் சமணமுனிவர்களைக் கொண்டே கேட்டுத்தெளியுங் கேள்வியை விவரிக்கலானார்.

1. செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை.

(ப.) செல்வத்துட் - தனப்பொருள்யாவற்றிற்குமேலாய, செல்வஞ் - தனப்பொருள், செவிச்செல்வ - காதினாற் கேட்குங் கேள்விப்பொருளேயாம், மச்செல்வஞ் - அக்கேள்விப்பொருளாயது, செல்வத்து - சகலதனப்பொருட்கள், ளெல்லாந்தலை எல்லாவற்றிற்கும் முதலதாமென்பது பதம்.

(பொ.) தனப்பொருள் யாவற்றிற்கும் மேலாய தனப்பொருள், காதினாற் கேட்குங் கேள்விப்பொருளேயாம், அக்கேள்விப்பொருளாயது சகல தனப்பொருள் எல்லாவற்றிற்கும் முதலதாம் என்பது பொழிப்பு.

(க.) தனச்செல்வம் யாவற்றிற்கும் மேலாய செல்வம், காதினாற் கேட்டுத் தெளியும் செவிச்செல்வமேயாம் என்பது கருத்து.

(வி.) தனச்செல்வம், தானியச்செல்வம், மக்கட்செல்வம், மனைச்செல்வம் யாவுங் கள்ளர்களாலுங் காலயேதுக்களாலு மொழிந்துபோம். செவியினாற் கேட்கும்பொருளோ எவ்வாற்றானும் ஒழியாது நித்திய சுகமாம் நிருவாணம் வரை தொடர்ந்தே பயன் தருதலால் சகல செல்வங்களிலும் மேலாய செல்வம் செவிச்செல்வமே என்பது விரிவு.

2. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்.

(ப.) செவிக்குண - காதுகளுக்கு கேள்வி யுணவு, வில்லாத - கொடாத, போழ்து - காலத்தில், சிறிது - சொற்ப வுணவை, வயிற்றுக்கு - தன் வயிற்றிற்குமட்டும், மீயப்படும் - கொடுக்கப்படுவதால் யாது பயனென்பது பதம்.

(பொ.) காதுகளுக்கு கேள்வி உணவு கொடாத காலத்தில் சொற்ப உணவை தன் வயிற்றிற்குமட்டும் கொடுக்கப்படுவதால் யாது பயன் என்பது பொழிப்பு.

(க.) நேரம் தவராது வயிற்றிற்கு மட்டிலும் உணவை ஊட்டி வளர்ப்போன் தன் செவிக்காய கேள்வி உணவை ஊட்டாத போது யாது பயன் என்பது கருத்து.

(வி.) இச்செய்யுளுள் வயிற்றை சுட்டி உண்ணும் உணவையும் செவியைச் சுட்டிக் கேள்வி உணவையும் வகுத்துள்ளக் காரணம் யாதெனில் காலந்தவராது வயிற்றிற்கு உணவை ஊட்டி உடலை வளர்ப்பவன், செவிக்குணவாம் கேள்வியில் முயன்று அறிவை வளர்க்காதவன் யாது பயனையும் அடையான் என்பது விரிவு.

3. செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி
னான்றாரோ டொப்பர் நிலத்து.

(ப.) செவியுணவிற் - காதுக்குணவாம், கேள்வியுடையா - கேள்வியில் முயன்று நிற்போர், நிலத்து - பூமியின்கண், ரவியுணவி - உணவாக்கினியை யவித்துள்ள, னான்றாரோ - மகா ஞானிகளுக்கு, டொப்பர் - ஒப்பாவரென்பது பதம்.

(பொ.) காதுக்குணவாம் கேள்வியில் முயன்றுநிற்போர் பூமியின்கண் உணவாக்கினியை அவித்துள்ள மகா ஞானிகளுக்கு - ஒப்பாவார் என்பது பொழிப்பு.

(க.) இப்பூமியின்கண் பசியாக்கினியை அவித்துள்ள பக்குவர்களுக்கு ஒப்பாவர் கேள்வியில் முயன்று நிற்போர்கள் என்பது கருத்து.

(வி.) கேட்டல், சிந்தித்தல், தெளிதல் என்னும் கல்விப் பொருளியலில் தெளிந்தோராம் முற்றும் உணர்ந்தோரே காமாக்கினி கோபாக்கினி பசியாக்கினி மூன்றினையும் அவித்த முத்தராகுவர் இவர்களையே தேவர்கள் என்றும் கூறப்படும். இவற்றுள் கேள்வியில் முயன்று நிற்போர் பசியாக்கினியை அவித்தப் பெரியோர்களுக்கு ஒப்பாவர் என்பது விரிவு.

4. கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை.

(ப.) கற்றிலனாயினுங் - கலை நூற்களை கல்லாதவனாயினும், கேட்க - அறநெறியையேனுங் கேட்ட, வஃதொருவன் - ஒருவனுக்கு, கொற்கத்தி - கொடிய வாபத்து காலத்தில், னூற்றாந்துணை - லோக வூற்று நீர்போலுதவுமென்பது பதம்.

(பொ.) கலை நூற்களை கல்லாதவனாயினும் அறநெறியையேனுங் கேட்ட ஒருவனுக்கு கொடிய ஆபத்து காலத்தில் லோகவூற்று நீர்போலுதவும் என்பது பெ ாழிப்பு.

(க.) சனிநீராடு என்பதைக் கல்லாவிடினும் கேள்வியாலாடி சுகமடைவது இயல்பாதலின் கல்லாதவனுங் கேள்வியால் சுகமடைவான் என்பது கருத்து.

(வி.) உலோகத்தி நின்று ஊற்றுநீர் சனிக்கு மிடங்களில் குளிப்போர் சில கொடிய வியாதியினது துன்பம் நீங்கி சுகமடைதற்குத் துணையாயிருப்பது கற்றலின்றி சனிநீராடென்னுங் கேள்வியேயாதலின் கல்லாதவனாயினுங் கேள்வியில் முயலுவானாயின் கொடிய ஆபத்துக்களிலவை துணையாகும் என்பது விரிவு.

5. இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய் சொல்.

(ப.) இழுக்கலுடையுழி - நோயின் துன்பநிலை, யொழுக்கமுடையார் - சமணமுநிவர்களது, வாய்சொல் - நாவினின் றெழூஉம்வார்த்தையைக் கொண்டு, யூற்றுக்கோ - உலோக வூற்றினால், லற்றே - நீங்குவதே கேள்வியின் பயனென்பது பதம்.

(பொ. நோயின் துன்பநிலை சமணமுநிவர்களது நாவினின்று எழூஉம் வார்த்தையைக் கொண்டே உலோக ஊற்றினால் நீங்குவதே கேள்வியின் பயனென்பது பொழிப்பு.

(க.) ஒழுக்கமிகுத்த சமணமுநிவர்களின் வாய்மொழிக் கேட்டு அக்கேள்வியில் முயல்வோர் கல்வி கல்லாரேயாயினும் லோக ஊற்றின் பயனை ஒக்கப் பல துன்பங்களினின்றும் நீங்குவார்கள் என்பது கருத்து.

(வி.) "ஆர்கலி யுலகத்து மக்கட்கெல்லாம் ஓதலி நன்றே வொழுக்க முடைமெய்" என்னும் பௌத்தர்களது நீதி நூலின்படி கல்வியை ஓதாதார்களாயினும் சமண முநிவர்களது வாய்மொழி கேட்டு அவ்வொழுக்கத்தில் நடப்போர் சனிநீர் என்னும் சனிக்கும் உலோக ஊற்றில் குளிப்போர் சகலவியாதிகளும் நீங்கி சுகம் பெறுவார்கள் என்னும் வாய்மொழி கேட்டு அவ்வழி நடந்தோர் சுகமடைவதுபோல கல்லாரேயாயினும் ஒழுக்க மிகுத்துள்ளோர் கேள்வியில் முயன்று ஒழுகுவாராயின் செவியாற் கேட்டலின் பயன் செவ்வனே விளங்குவது கண்ட நாயன் கேட்டுத் தெளிதலின் செயலை விளங்கக் கூறிய விரிவு.

6. எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்.

(ப.) எனைத்தானு - எத்தகையோனாயினும், நல்லவை - நன்னீதிகளை, கேட்க - கேட்டுணர்வானாயின், வனைத்தானும் - கேட்ட அவ்வளவும், மான்ற - மேலாய, பெருமைதரும் - சிறப்பைக்கொடுக்கு மென்பது பதம்.

(பொ.) எத்தகையோனாயினும் நன்னீதிகளைக் கேட்டுத் தெளிவானாயின் கேட்ட அவ்வளவும் மேலாய சிறப்பைக் கொடுக்கும் என்பது பொழிப்பு.

(க.) கல்லாதவனாயினும் சமணமுநிவர்களையடுத்து அறவுரைக் கேட்டுணர்வானாயின் அக்கேள்வியின் பயனே அவனை மேலாய சிறப்படையச் செய்விக்கும் என்பது கருத்து.

(வி.) பொய்யுரைகூறி பொருள்பறித்து உண்ணுங் காரிய குருக்களை அணுகாது மெய்யுரை கூறி மக்கள் ஈடேற்றத்தை நோக்கிநிற்கும் சமணமுநிவர்களாம் காரண குருக்களை அணுகுங் கல்லாதவனாயினும் அவர்களது அறநெறிக்கேள்வியால் சுகமுற்று மேலாய சிறப்பைப் பெருவான் என்பது விரிவு.

7. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர்.

(ப.) ரிழைத்துணர்ந் - ஒத்துவுணர்வால், தீண்டிய - பெற்ற, கேள்வியவர் - அறவுரைக்கேள்வியால், பிழைத்துணர்ந்தும் - தாங்கள் சுகசீவியம் பெறுவதுடன், பேதெமை சொல்லா - அறிவிலி மொழிகளையும் பேசார்களென்பது பதம்.

(பொ.) ஒத்தவுணர்வால் பெற்ற அறவுரைக்கேள்வியால் தாங்கள் சுகசீவியம் பெறுவதுடன் அறிவிலி மொழிகளையும் பேசார்கள் என்பது பொழிப்பு.

(க.) சமணமுநிவர்களது அறநெறி போதத்தைக்கேட்டுத் தெளிந்து சுகமுற்றவர்கள் ஒருவரையும் மனங்குன்றப் பேசார்கள் என்பது கருத்து.

(வி.) கல்லாதவர்களேயாயினும் மேலோர்களது அறநெறிகளைக் கேட்டுத் தெளிந்து சுகவாழ்க்கையிலிருப்பவர்கள் தங்கள் நாவினால் எவரையும் மனநோகப் பேசமாட்டார்கள் என்பது விரிவு.

பேதைமெயால் அறிவிலிகள் கொடுஞ்சொற்களைக் கூறினும் அறவுரைக் கேள்வியில் முயன்றோர் மறந்துங் கொடுஞ்சொற் கூறார்கள் என்பதேயாம்.

8. கேட்பினுங் கேளா தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி.

(ப.) கேட்பினுங் - செவியாலறவுரைக் கேட்டும், கேளாதகையவே - கேட்காதவன் போலகலுவோன், கேள்வியாற் - அறவுரைகளால், றோட்கப்படாத - திறக்கப்படாத, செவி - புலனற்ற காதனென்னப்படு வானென்பது பதம்.

(பொ.) செவியாலறவுரைக் கேட்டும் கேட்காதவன் போல் அகலுவோன் அறவுரைகளால் திறக்கப்படாத புலனற்ற காத னென்னப்படுவான் என்பது பொழிப்பு.

(க.) சமணமுநிவர்களது சத்திய தன்மங்களைக் கேட்டுங் கேளாதவன் அறவுரையால் திறக்கப்படாத செவிப்புலன் அற்றவன் என்பது கருத்து.

(வி.) கேட்டல், சிந்தித்தல் தெளிதல் என்னும் மாற்றலுக்கு செவிபுலனே காரணமாகக் கொண்டு தென்புலத்தாராதல் இயல்பாதலின் அறவுரைக்கேட்டும் கேளாத செவிடு என்னப்படுதலால் அறவுரையால் திறக்கப்படாதகாதென்று கூறத்தகும் என்பது விரிவு.

9. நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது.

(ப.) நுணங்கிய - நுட்பமாய, கேள்விய - அறநெறிகளை, ரல்லார் - கேட்டுத் தெளியாதோர், வணங்கிய - நெறுக்கமாய, வாயின - முத்திவழி செல்லுவோர், ராதலரிது - ஆவது கடினமாமென்பது பதம்.

(பொ.) நுட்பமாய அறநெறிகளைக் கேட்டுத் தெளியாதோர் முத்திவழி செல்லுவோர் ஆவது கடினமாம் என்பது பொழிப்பு.

(க.) அறநெறிகளின் நுண்ணிய பொருட்களைக்கேட்டுத் தெளியாதோர் முத்தி வழியின் நெறுக்க பாதையிற் செல்லுவது அரிதாம் என்பது கருத்து.

(வி.) நிரயம் என்னுங் கேட்டிற்குப் போகும் வழி விசாலமாகவும், டம்பமாகவும், முத்தியென்னும் மோட்சத்திற்குப் போகும் வழி நெறுக்கமாகவும் ஒடுக்கமாகவுள்ளபடியால் அறநெறியாம் ஞானவிசாரிணைக் கேள்வியில் முயலாதோர் முத்திநெறியாம் ஒடுக்கமாய வாயல்வழி செல்லாதவர்களாவர் என்பது விரிவு.

10. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென்.

(ப.) செவியிற் - தங்கள் காதுகளால், சுவை யுணரா - அறநெறிகளைக் கேட்டு சுவைக்காது, வாயுணர்வின் - நாவினால் மட்டுஞ் சுவைத்துணரும், மாக்கள் - மனுக்கள், ளவியினும் - கெட்டாலும், வாழினு - வாழ்ந்தாலும், மென் - என்னாவாமென்பது பதம்.

(பொ.) தங்கள் காதுகளால் அறநெறிகளைக் கேட்டு சுவைக்காது நாவினால் மட்டுஞ் சுவைத்துணரும் மனுக்கள் கெட்டாலும் வாழ்ந்தாலும் என்னாவாம் என்பது பொழிப்பு.

(க.) அறுவகை யுணவை நாவினால் உண்டு சுவைத்து செவியினாற் கேட்டுத் தெளியும் ஞான அமுதினை சுவைக்காத மனுக்கள் வாழ்ந்தாலுமென்ன, கெட்டாலும் என்ன என்பது கருத்து.

(வி.) கேட்குஞ் செவியே கேட்டை விலக்குமென்னும் முதுமொழிக்கு ஒக்கும் விசாரிணையாம் அறநெறிக்கேள்வியால் ஞான அமுதினை சுவைத்து பிறவியின் துக்கங்களை ஒழித்து சதானந்தத்தில் நிலைப்பது அநுபவமுங் காட்சியுமேயாதலின் கேட்டலென்னும் செவியுணவை சுவைக்காது நாவினால் மட்டும் அறுவகை உணவின் சுவையை உண்டு களிக்கும் மக்கள் உலகத்தில் வாழ்ந்தாலும் என்ன, கெட்டாலும் என்ன என்பது விரிவு.

47. அறிவுடைமெய்

அரசர்கள் கல்விக்கேள்வியில் சிறந்த போதினும் அந்தரங்கம் பயிரங்கமென்னும் உண்மெய்ப்புறமெய்யினை அறியும் அறிவுடை மெய்யனாதலே சிறப்பென்றுணர்ந்த நாயன், சதுரங்க சேனையால் தன்னரசைக் காப்பதினுந் தானே தானுண்மெய் அறிந்து தன்னைக் காப்பதற்காதாரமாம் அறிவை வளர்க்கவேண்டிய வழிவகைகளை விளக்கலானார்.

1. அறிவற்றல் காக்குங் கருவி செறுவார்க்கு
முள்ளழிக்கலாகா வரண்.

(ப.) அறிவற்றல் - தனதறிவை மயங்கவிடாது, காக்கும் - விருத்திசெய்யுங், கருவி - கல்விக்கேள்வியாம் ஆயுதங்களை யுடையவரசனது, வரண் - அரண்மனையை, செறுவார்க்கு - சத்துருக்களாய வேற்றரசர், முள்ளழிக்க - உட்பிரவேசித்துக் கெடுத்தற்கு, லாகா - ஒருபோது மாகா வென்பது பதம்.

(பொ.) தன்னறிவை மயங்கவிடாது விருத்திசெய்யும் கல்விக் கேள்வியாம் ஆயுதங்களையுடைய அரசனது அரண்மனையை சத்துருக்களாய, வேற்றரசர் உட்பிரவேசித்துக் கெடுத்தற்கு ஒருபோதும் ஆகா என்பது பொழிப்பு.

(க.) கல்வி கேள்வி மிகுத்து அறிவை வளர்த்துள்ள அரசரது அரண்மனையை வேற்றரசர் எளிதிற் கைப்பற்றலாகாது என்பது கருத்து.

(வி.) அரசன் தன் கல்விக்கேள்விகளாம் ஆயுதங்களைக்கொண்டு அறிவை விருத்திசெய்துக் கொள்ளுவானாயின் அவனது அரண்மனையை வேற்றரசர் கைபற்றி ஆளுவதற்கிடங்கொட மாட்டான் என்னும் அரசர்காய அறிவின் பயனை விளக்கிய விரிவு.

2. சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீ
நன்றின் பாலுய்ப்ப தறிவு.

(ப.) சென்ற விடத்தாற் - தான் வேற்றரசரிடம் சென்றபோது, தீதொரீஇ - தனக்குள்ளெழுங்கொடுஞ் செயலை, செலவிடா - காட்டாதகல்வதே, நன்றின்பா - பிரிதியுபகாரங் கருதி, லுய்ப்ப - உணர்ந்த, தறிவு - அறிவினது பயனாமென்பது பதம்.

(பொ.) தான் வேற்றரசரிடஞ் சென்ற போது தனக்குள் எழுங்கொடுஞ் செயலைக் காட்டாது அகல்வதே பிரிதியுபகாரங் கருதியுணர்ந்த அறிவினது பயனாம் என்பது பொழிப்பு.

(க.) வேற்றரசரிடஞ் சென்றபோது அவர்கள் நன்றியை ஏற்று தனது தீய குணங்களை எழவிடாது பிரிதி நன்றியளிப்பதே அறிவின் விருத்தி என்பது கருத்து.

(வி.) ஓரரசன் வேற்றரசனிடஞ் சென்றபோது அவனால் அன்புடன் வரவேற்கப் பெற்று அவன் சுகவாழ்க்கையை தன் சுகம்போற் கருதாது பொறாமெக்கொள்ளுவது அறிவின் குறைவென்றும் சென்றவிடத்து அன்பு பாராட்டிப் பிரிதி நன்றியைக் கருதி நிற்பதே அறிவின் விருத்தி பேறாம் என்பது விரிவு.

3. எப்பொருள் யார்யார்வாய் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(ப.) எப்பொருள் - கண்டடைய வேண்டிய பொருளை, யார் யார் வாய் - எவரெவரிடஞ் சென்று, கேட்பினு - கேட்ட போதினும் விளங்காவாம், மப்பொருள் - அப்பொருளை, மெய்ப்பொருள் - தன்னிற்றானே, காண்பதறிவு - கண்டுக்கொள்வதே பேரறிவாமென்பது பதம்.

(பொ.) கண்டடைய வேண்டிய பொருளை எவரெவரிடஞ் சென்று கேட்ட போதினும் விளங்காவாம், அப்பொருளை தன்னிற்றானே கண்டுக்கொள்வதே பேரறிவாம் என்பது பொழிப்பு.

(க.) அறிவின் விருத்தியால் கண்டடைய வேண்டிய பொருளை தன்னிற்றானே கண்டடையவேண்டுமே அன்றி ஏனையோரால் கண்டடைய லாகாது என்பது கருத்து.

(வி.) பேரறிவினால் ஆய விருத்தியின் பயன் யாதெனில் மெய்ப் பொருளைத் தன்னிற்றானே கண்டடைவதாகும். அங்ஙனமின்றி யாவர்பாற் சென்றபோதினும், கேட்டபோதினும் விளங்கா நிற்பது அறிவின் குறைவும் மெய்யுள் மெய்ப்பொருளை கண்டடைவதே அறிவின் விருத்தியாம் என்பது விரிவு.

4. எண்பொருளவாகச் செலச்சொல்லி தான் பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

(ப.) எண்பொருள் - எண்ணும்பொருளெது, வாகச் - அதுவாக, செலச்சொல்லி - கண்டுரை யாடுவதுடன், தான் பிறர்வாய் - தானும் அந்நியர் நாவினின்று எழுஉம், நுண்பொருள் - அரிய பொருளை, காண்ப - கண்டுத் தெளிவதே, தறிவு - பேரறிவாம் என்பது பதம்.

(பொ.) எண்ணும் பொருளெது அதுவாகக்கண்டு உரையாடுவதுடன் தானும் அன்னியர் நாவினின்று எழுஉம் அரிய பொருளைக்கண்டுத் தெளிவதே பேரறிவாம் என்பது பொழிப்பு.

(க.) பொருளெதுவது என்று தன்னிற்றானே கண்டு உரையாடுவதோடு அன்னியர் ஓதும் அரிபொருளை ஆய்ந்தமைவதே அறிவாம் என்பது கருத்து.

(வி.) பொருளென்றாலெப் பொருளென்றும், அது என்றால் எதுவென்றும், அவர் என்றால் எவரென்றும் எதிர்மொழி எழுவதே இயல்பாதலின் மெய்ப்பொருளெது என்றாராயுமிட்டத்து எண்ணும் பொருளே அதுவாதலின் அவற்றை மறைக்கும் முக்குற்றங்களை அகற்றும் நுண்ணிய பொருளைக் கேட்டதுவாக நிற்றலே அறிவாம் என்பது விரிவு.

5. உலகந் தழீய தொட்ப மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு.

(ப.) உலகந் - உலகத்தில் தோன்றுவதற்கும், தழீஇய - கெடுவதற்கும், தொட்ப - ஒப்பாக, மலர்தலுங் - விரிதலும், கூம்பலு - குவிதலும், மில்ல - இல்லாததே, தறிவு - அறிவென்னப்படுமென்பது பதம்.

(பொ.) உலகத்தில் தோன்றுவதற்கும் கெடுவதற்கு ஒப்பாக விரிதலும் குவிதலும் இல்லாததே அறிவென்னப்படும் என்பது பொழிப்பு.

(க.) உலகத்தில் தோன்றும் பொருட்கள் யாவும் க்ஷணத்திற்குச்க்ஷணம் அழிந்துகொண்டே போவது இயல்பாதலின் கண்டறியும் அறிவோ அவ்வகை அழியாது என்பது கருத்து.

(வி.) நினைத்தலும் மறத்தலும் நிற்றலும் விரிதலும் நிதானித்தலும் கெடுதலும்ாய எண்ணங்கள் யாவும் அறிவென்னும் பொருளைப் பெறாவாம். அஃது உலகத்தில் தோன்றி தோன்றி க்ஷணத்திற்கு க்ஷணம் அழிந்து கொண்டேபோகும் பொருட்களுக்கு ஒப்பனையாகும் அத்தகையென்றுங் கெடாது எண்ணு மெய்ப்பொருள் விரித்தலும் குவிதலும் அற்று அதுவாய் நிற்பது அறிவென்னப்படும் என்பது விரிவு.

6. எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

(ப.) துலக - உலகமக்கள், துறைவ - அடையும் விருத்தி, எவ்வ - எவ்வெவ்வகையோ, டவ்வ - அவ்வவ்வகையே, முலகத்தோ - உலகத்தோடு, தறிவு - அறிவும், துறைவ - விருத்தியடையுமென்பது பதம்.

(பொ.) உலகமக்களடையும் விருத்தியெவ்வகையோ அவ்வகையே உலகத்தோடு அறிவும் விருத்தியுடையும் என்பது பொழிப்பு.

(க.) உலகமக்கள் எவ்வகையால் விருத்தி அடைகின்றனரோ அவ்வகையே உலகத்தில் அறிவும் விருத்தியடையும் என்பது கருத்து.

(வி.) கல்வி விருத்தியிலோ கைத்தொழில் விருத்தியிலோ சுயக்கியான விருத்தியிலோ உலகமக்கள் எவ்வகையாய விருத்தியடைகின்றனரோ அவ்வவ்வகையே உலகத்தில் அறிவும் விருத்தியடையும் என்பது விரிவு.

7. அறிவுடைய ராவ தறிவா தறிவிலா
ரஃ்தறி கல்லா தவர்.

(ப.) அறிவுடையவராவ - அறிவின் விருத்தியை யடையவேண்டுவோர், தறிவா - அவ்வறிவின் விருத்தியை யறிவர், ரஃ்தறி - அவ்வறிவின் விருத்தியையுங் குறைவையும், கல்லாதவர் - கலைநூற்களைக் கல்லாதவர், ரறிவிலா - அறியார்களென்பது பதம்.

(பொ.) அறிவின் விருத்தியை அடைய வேண்டுவோர் அறிவின் விருத்தியை அறிவர் அவ்வறிவின் விருத்தியையுங் குறைவையுங்கலை நூற் கல்லாதவரறியார் என்பது பொழிப்பு.

(க.) கலைநூற்களைக் கல்லாதோர் அறிவின் விருத்தி அறியார். கலைநூற் கற்று அறிவின் விருத்தியை அடைய வேண்டியவர்கள் அவ்வறிவின் விருத்தியை அறிவார்கள் என்பது கருத்து.

(வி.)கலைநூற்களை கற்றுணராதவர்கள் அறிவினது விருத்தியையும் அதன் குறைவையும் அறியார்கள். கலைநூற்களைக் கற்று அறிவின் விருத்தியடைய வேண்டுவோர் அவ்வறிவின் விருத்தியையும் அறிவின் குறைவையுந் தங்களுக்குத் தாங்களே அறிந்துக் கொள்ளுவதுடன் ஏனையோர் அறிவின் விருத்தியையும் குறைவையும் எளிதில் அறிந்துக் கொள்ளுவார்கள் என்பது விரிவு.

8. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்.

(ப.) அஞ்சுவ - அடங்கவேண்டிய காலமறிந்து, தஞ்சாமே - அடங்காதவன், பேதைமெ - அறிவற்றவனேயாகும், லறிவார் - அறிவின் விருத்தியுள்ளவர்களோ, தஞ்ச - அடங்கவேண்டிய காலமறிந்து, யஞ்சுவ - அடங்குவதே, தொழில் - அவர்களது செயலாகுமென்பது பதம்.

(பொ.) அடங்கவேண்டிய காலமறிந்து அடங்காதவன் அறிவற்ற வனேயாகும் அறிவின் விருத்தியுள்ளவர்களோ அடங்க வேண்டிய காலமறிந்து அடங்குவதே அவர்களது செயலாகும் என்பது பொழிப்பு.

(க.) அறிவினது விருத்தியே அற்றவர்கள் அடங்கவேண்டிய காலமறிந்து அடங்கமாட்டார்கள். அறிவின் விருத்தியை உடையவர்களோ அடங்க வேண்டிய காலமறிந்து அடங்கிக் கொள்ளுவார்கள் என்பது கருத்து.

(வி.) மனிதனுக்குள்ள அறிவென்னும் விசேஷித்தச் செயலை யறியாதவன் அடங்காச் செயலால் வருந் தீவினைகளை அநுபவித்தே தீருவன் அறிவென்னும் விசேஷித்தச் செயலை அறிந்தவனோ அடங்க வேண்டிய காலங்களிலடங்கி வருந் தீவினைகளை விலக்கிக்கொள்ளுவான் என்பது விரிவு.

9. எதிரநாக் காக்கு மறிவினார்க் கில்லை
யதிர வருவதோர் நோய்.

(ப.) எதிரநாக்காக்கு - வருங்காலச் செயல்களை யறிந்து காத்துக்கொள்ளும், மறிவினார்க் - அறிவின் விருத்தியுள்ளோர்க்கு, யதிரவருவ - நடுங்கத்தக்கதாகவரும், தோர் நோய் - ஓர் துக்கமானது, கில்லை - வராதென்பது பதம்.

(பொ.) வருங்காலச் செயல்களை அறிந்துக் காத்துக்கொள்ளும் அறிவின் விருத்தியுள்ளோர்க்கு நடுங்கத்தக்கதாகவரும் ஓர் துக்கமானது வராது என்பது பொழிப்பு.

(க.) அறிவின் விருத்தியால் எதிர்காலச் செயல்களைத் தெரிந்து நடப்போர்க்கு தேகம் அதிரத்தக்க யாதாமொரு துன்பமும் அணுகாது என்பது கருத்து.

(வி.) அறிவிலார் தனக்கு வரும் துன்பங்களைத் தெரிந்தும் அநுபவிப்பது போல அறிவின் விருத்தியுள்ளோர் செல்காலம் நிகழ்காலம் வருங்கால மூன்றினையும் உணர்ந்து தங்களுக்கினி எதிர்காலத்து வருந்துன்பங்களை அணுகாதுகாத்துக் கொள்ளுவார்கள் என்பது விரிவு.

10. அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்.

(ப.) அறிவுடையா - அறிவின் விருத்தியை யுடையவர்கள், ரெல்லாமுடையா - சகல பொருட்களு முடையவர்களாக விளங்குவார்கள், ரறிவிலா - அறிவின் விருத்தி இல்லாதவர்களோ, ரென்னுடையரேனு - எத்தகைத்தாய பொருளுடையவர்களே ஆயினும், மிலர் - இல்லாதவர்களாகவே விளங்குவார்கள் என்பது பதம்.

(பொ.) அறிவின் விருத்தியை உடையவர்கள் சகல பொருட்களும் உடையவர்களாக விளங்குவார்கள். அறிவின் விருத்தி இல்லாதவர்களோ எத்தகையத்தாயப் பொருளுடையவர்களே ஆயினும் இல்லாதவர்களாகவே விளங்குவார்கள் என்பது பொழிப்பு.

(க.) அறிவுள்ளவர் பால் யாது பொருளில்லாவிடினும் சகல பொருட்களும் உள்ளவர்களாகவே விளங்குவார்கள். அறிவில்லாதவர் பால் யாது பொருட்களிருப்பினும் இல்லாதவர்களாகவே விளங்குவார்கள் என்பது கருத்து.

(வி.) அறிவினது விருத்தியையுடையவரிடத்து சொற்பப் பொருட்களிருப்பினும் அவற்றை மேலும் மேலும் விருத்தி செய்து சகலருக்கும் உபகாரிகளாக விளங்குகிறபடியால் எல்லாப்பொருளும் உடையவர்கள் என்றும் அறிவினது விருத்தியில்லாரிடத்து சகல பொருட்களுமிருந்தும் அவைகளை விருத்திசெய்வதற்கு ஏதுவில்லாமலும் சகலருக்கும் உபகாரிகளாகாமலும் இருக்கின்றபடியால் யாதும் இல்லாதவர்கள் என்றுங் கூறப்படும் என்பது விரிவு.

48. குற்றங்கடிதல்

அரசனானவன் தன் தேசத்தையும் தேசமக்களையும் அடக்கி ஆண்டு ரட்சிப்பவனாகலின் முதலாவது தனது குற்றங்களையுஞ் செயலையும் ஆண்டு அடக்கி தேசத்தையும் தேச மக்களையும் சீர்திருத்தி ஆளவேண்டியவற்றில் அறிவின் பயனை விளக்குமாறு குற்றங் கடிதலை தொடர்ந்தே விவரிக்கலானார்.

1. செருக்குஞ் சினமுஞ் சிறுமெயு மில்லார்
பெருக்கம் பெருமித நீத்து.

(ப.) செருக்குஞ் - அகங்கரிப்பும், சினமுஞ் - கோபமும், சிறுமெயு - சோம்பநிலையு, மில்லார் - இல்லாததுடன், பெருமிக - சிற்றின்பப் பெருக்கையும், நீத்து - அகற்றி நிற்போருக்கு, பெருக்கம் - சுக பெருக்க முண்டாமென்பது பதம்.

(பொ.) அகங்கரிப்பும் கோபமும் சோம்ப நிலையும் அல்லாததுடன் சிற்றின்பப் பெருக்கையும் அகற்றி நிற்போருக்கு சுகபெருக்கம் உண்டாம் என்பது பொழிப்பு.

(க.) அகங்கரிப்பும், கோபம், சோம்பல் முதலியவைகளை அகற்றி நிற்பதுடன் காமிய பெருக்கத்தையும் ஒழித்துள்ள வரயன் சுகநிலை அடைவான் என்பது கருத்து.

(வி.) தனக்குள்ளெழும் அகங்காரக் குற்றத்தை அகற்றியும் கோபகுற்றத்தை அகற்றியும் சோம்பற்குற்றத்தை அகற்றியுமிருப்பதுடன் பெருமின்பமாகத் தோற்றிக்கெடுக்கும் காமத்தையும் ஒழித்து நிற்குமரசன் சகல சுகமும் பெருக வாழ்வான் என்பது விரிவு.

2. இவறலு மாண்பிறந்த மானமு மாணா
வுவகையு மேத மிறைக்கு.

(ப.) இவறலு - மறதியும், மாண்பிறந்த - ஆண்மெயற்ற, மானமு - வலிவும், மாணா - மீளாத, வுவகையு - களியாட்டும், மிறைக்கு - அரசனுக்கு, மேத - குற்றமாமென்பது பதம்.

(பொ.) மறதியும் ஆண்மெயற்ற வலிவும் மீளாத களியாட்டும் அரசனுக்குக் குற்றமாம் என்பது பொழிப்பு.

(க.) மறத்தலும் வீரங்குன்றுதலும் ஆனந்தவிளையாட்டிலேயே சுகத்தைவைத்தலுமாயச் செயல்களே அரசனுக்குக் குற்றமாம் என்பது கருத்து.

(வி.) ஒன்றை ஆலோசித்து அவற்றை அப்போதைகப்போதே மறத்தலும், போக இச்சையால் தேகத்தைக் குன்றச் செய்துக் கொள்ளலும், வீண் விளையாட்டுகளிலேயே காலத்தைக் கழித்தலும் அரசனுக்குக் குற்றம் என்பது விரிவு.

3. தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.

(ப.) தினைத்துணையாங் - தினையரிசிக்கொப்பாய சிறிய குற்றத்தைக் காணினும், பழிநாணுவார் - குற்றத்திற்கஞ்சி நடப்போரவற்றை, பனைத் துணையாக் - பனைமரத்தை யொப்பப்பெருங் குற்றமாக, கொள்வர் - ஏற்பரென்பது பதம்.

(பொ.) தினையரிசிக்கு ஒப்பாய சிறிய குற்றத்தைக் காணினும் குற்றத்திற்கஞ்சி நடப்போர் அவற்றை பனைமரத்தை ஒப்பப்பெருங் குற்றமாக ஏற்பர் என்பது பொழிப்பு.

(க.) குற்றங்கள் யாவற்றிற்கும் அஞ்சி நடக்கும் மேலோர் சிறிய குற்றத்தைக் காணினும் அவற்றை பெருங்குற்றமாகவே பாவிப்பார் என்பது கருத்து.

(வி.) தன்னாலுண்டாங் குற்றங்களையும் பிறராலுண்டாங் குற்றங்களையும் அறிந்தடங்கிய பெரியோர்கள் அரயன் பால் தினையளவாய சிறிய குற்றத்தைக் காணினும் பனையளவாய பெருங்குற்றமாகக் கருதுவார்கள் என்பது விரிவு.

4. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
யற்றத் தருஉம் பகை.

(ப.) குற்றமே - பலவகையாயக் குற்றங்களையே, பொருளாக - பெருந்தனமாக, காக்க - சேர்த்துள்ள வரசனுக்கு, குற்றமே - அக்குற்றங்களே, யற்றத் - வேற்றரசரது, பகை - விரோதத்தை, தருஉம் - உண்டுசெய்து விடுமென்பது பதம்.

(பொ.) பலவகையாயக் குற்றங்களையே பெருந்தனமாக சேர்த்துள்ள அரசனுக்கு அக்குற்றங்களே வேற்றரசரது விரோதத்தை உண்டு செய்துவிடும் என்பது பொழிப்பு.

(க.) செல்வத்தை சேர்ப்பதுபோல் அரசன் பலவகையாயக் குற்றங்களையே சேர்த்து வருவானாயின் அக்குற்றங்களால் வேற்றரசர் பகைவந்தே நேர்ந்து போம் என்பது கருத்து.

(வி.) அரசன் தனது வீணாய களிவிளையாட்டின் நோக்கத்தால் வேற்றரசர் ஓலைகளைக் கவனியாதும் தனது காமிய இச்சையின் பெருக்கத்தால் வேற்றரசர் தூதுவர்களுக்குத் தக்க உத்தரங் கூறாமலும் தனது கோபப் பெருக்கத்தால் தூதுவரைச் சீறிச் சினத்தலாலும் வேற்றரசர் பகைதானே விளைவதற்கு ஏதுண்டாதலால் குற்றங்களை பொருளாகக் கொண்ட அரசனுக்கு வேற்றரசர் பகைத்தானே தோன்றும் என்பது விரிவு.

5. வருமுன்னர் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

(ப.) வருமுன்னர் - தன் குற்றத்தால் கேடு வருதற்கு முன்னரே, காவாதான் - அவற்றைத் தடுத்துக் கொள்ளாத வரசன்து, வாழ்க்கை - குடி நலமானது, யெரிமுன்னர் - நெருப்பினது முன்னில், வைத்தூறு போல - இட்டக் கூளங்களைப் போல, கெடும் - அழிந்துபோமென்பது பதம்.

(பொ.) தன் குற்றத்தால் கேடு வருதற்கு முன்னரே அவற்றைத்தடுத்துக் கொள்ளாத அரசனது குடி நலமானது நெருப்பினது முன்னிலிட்டக் கூளங்களைப் போலழிந்து போம் என்பது பொழிப்பு.

(க.) கேடு வருமென்று அறிந்தும் அவற்றைத் தடுத்துக்கொள்ளாத வரசனது வாழ்க்கை சுகமானது தீயின் முன்னிட்டக் கூளங்களைப் போல் எரிந்து போம் என்பது கருத்து.

(வி.) நெருப்பினது முன்னிலிட்ட சிறுச்செடி கூளங்கள் எரிந்து பூண்டற்று போவதுபோல அரசன் தனது குற்றத்தால் தோன்றி எழுஉங் கேடுகள் தீதென்று அறிந்தும் அவற்றைத் தடுத்துக் கொள்ளாது போவானாயின் தனது வாழ்க்கை சுகமும் ஒழிந்து குடும்பமும் அழிந்து கேடடைவான் என்பது விரிவு.

6. தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னென்குற்ற மாகு மிறைக்கு.

(ப.) தன்குற்ற - தனது கொடுஞ் செயல்களை, நீக்கி - அகற்றி, பிறர்குற்றங் - அன்னியர்களது கொடுஞ்செயல்களை, காண்கிற்பி - பின்பு நோக்குவதாயின், மிறைக்கு - அரசனுக்கு, னென்குற்றமாகு - ஏது பழியுண்டாமென்பது பதம்.

(பொ.) தனது கொடுஞ்செயல்களை அகற்றி அன்னியர்களது கொடுஞ் செயல்களை பின்பு நோக்குவதாயின் அரசனுக்கு ஏது பழியுண்டாம் என்பது பொழிப்பு.

(க.) அரசன் தனது குற்றச்செயல்களை அகற்றிவிட்டு பின்பு பிறர் குற்றச்செயல்களை அகற்ற முயலுவானாயின் யாதொரு பழியும் வாரா என்பது கருத்து.

(வி.) அரசனானவன் தனது ஆளுகையில் தானோர் குற்றச்செயல்களுக்கு ஆளாகாது அகற்றி பிறரது குற்றங்களைக் கண்டு தெண்டித்தும் அகற்றுவானாயின் யாதொரு பழி பாவங்களும் நேராது என்பது விரிவு.

7. செயற்பால செய்யா திவறியான் செய்வ
முயற்பால தன்றி கெடும்.

(ப.) செயற்பால - குற்றமற செய்யவேண்டிய காரியங்களை, செயயா - செய்யாத, திவறியான் - முன்னாலோசனையற்றவன், செய்வ - செய்யும்படியானக் காரியங்கள் யாவும், முயற்பாலதன்றி - ஒருவர் கெடுப்பாரின்றி, கெடும் - தானே யழிந்து போமென்பது பதம்.

(பொ.) குற்றமறச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யாத முன்னாலோசனை அற்றவன் செய்யும்படியானக் காரியங்கள்யாவும் ஒருவர் கெடுப்பாரின்றி தானே அழிந்துபோம் என்பது பொழிப்பு.

(க.) அரசனானவன் ஏதொரு குற்றமும் அணுகாது முன்பு ஆலோசித்து ஓர் காரியத்தை நடத்தாவிடின் அஃது ஒருவரால் கெடுக்காமலே தானே கெட்டுப்போம் என்பது கருத்து.

(வி.) அரசனானவன் தான் செய்ய வேண்டிய காரியங்கள் யாவற்றினும் குற்றமாம் பழி பாவங்களணுகாது முன்பின்பு ஆலோசித்து செய்தலே அழகாம். அங்ஙனம் முன்பின்பு ஆலோசியாது குற்றங்கூறச் செய்துக் கொள்ளுவானாயின் அக்காரியங்கெடுதற்கு ஏதொருவருமின்றி தானே அழிந்து போம் என்பது விரிவு.

8. பற்றுள்ளமென்னு மிவரன்மெ யெற்றுள்ளு
மெண்ணப் படுவதொன் றன்று.

(ப.) பற்றுள்ளமென்னு - குற்றப்பற்றுள்ளோமென்னு, மிவரன்மெ - தங்களது செயல், யெற்றுள்ளு - ஏனையோருள்ளத்திலு முள்ளதென்று, எண்ணப்படுவ - நினைப்பது, தொன்றன்று - ஒரெண்ணமாகாதென்பது பதம்.

(பொ.) குற்றப்பற்றுள்ளோம் என்னுந் தங்களதுச் செயல் ஏனையோர் உள்ளத்திலும் உள்ளதென்று நினைப்பது ஓர் எண்ணமாகாது என்பது பொழிப்பு.

(க.) தங்களுக்குள்ளக் குற்றமாயப் பற்றுக்கள் யாவும் ஏனை யோரிடத்திலும் உண்டென்னுமோர் எண்ணம் சரியான எண்ணமாகாது என்பது கருத்து.

(வி.) தங்களுள்ளத்தின்கண் காமகுற்றம், கோபகுற்றம், லோபகுற்றமாய பற்றுக்களை நிறப்பிக்கொண்டு ஏனையோரிடத்தும் இக்குற்றப் பற்றுக்கள் உண்டென்னுமோர் எண்ணங் கொள்ளுதல் ஆகாதென்பது விரிவு.

9. வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

(ப.) வியவற்க - குற்றமற்றவனெனப் புகழ்ந்து கொள்ளலாகாது, வெஞ்ஞான்றும் - எக்காலத்தும், தன்னை நயவற்க - தன்னை நல்லவனென்று எண்ணிக் கொள்ளவுமாகாது, நன்றி - அஃது பிறருபகாரத்தை, பயவா - கருதா, வினை - செயலென்னப்படு மென்பது பதம்.

(பொ.) குற்றமற்றவனெனப் புகழ் கொள்ளலாகாது, எக்காலத்தும் தன்னை நல்லவனென்று எண்ணிக் கொள்ளவுமாகாது அஃது பிறருபகாரத்தை கருதா செயலென்னப்படும் என்பது பொழிப்பு.

(க.) தன்னை யாதொரு குற்றமற்றவனென்று புகழ்ந்துகொள்ளவு மாகாது, நல்லவனென்றெண்ணிக் கொள்ளவுமாகாது அதுவே பிறர் நன்றி மறந்த குற்றமாம் என்பது கருத்து.

(வி.) ஏனையோராலடைந்த விவேக விருத்தியின் நன்றியை மறந்தும் செயல்பற்றிய நன்றியை மறந்தும், தன்னைக் குற்றமற்றவனென்றும் நல்லவ னென்றும் எண்ணுதலே குற்றமாம் என்பது விரிவு.

10. காதல காதல ரியாமெ யுய்க்கிற்பி
னேதில வேதிலார் நூல்.

(ப.) காதல - அன்பற்று, காதலரியாமெ - அன்பரை யறியாதோனை, யுய்க்கிற்பி - உய்த்தாலோசிக்குங்கால், வேதிலார் நூல் - நீதிநூற்களை வாசியா, னேதில - நீதியற்றவனென்னுங் குற்றமுமுண்டா மென்பது பதம்.

(பொ.) அன்பற்று அன்பரை அறியாதோனை உய்த்து ஆலோசிக்குங்கால் நீதிநூற்களை வாசியர் நீதியற்றவன் என்னுங் குற்றமும் உண்டாம் என்பது பொழிப்பு.

(க.) தனக்குள் அன்பென்பதே அற்று அன்பரைக்கண்டறியாதவனை நோக்குங்கால் நீதியின் நூற்களைக் கல்லாதவனும் நீதி என்பதே அறியாதவன் என்னுங் குற்றமுண்டாம் என்பது கருத்து.

(வி.) அரசனானவன் நீதி நூற்களைக் கல்லாமலும் நீதியின் வழி நடவாமலுமிருப்பானாயின் அவனுக்கு அன்பென்பதே இராதாதலின் பேரானந்த அன்பு நிலையுற்றோரை அறியானென்னும் பெருங்குற்றம் உண்டாம் என்பது விரிவு.

49. பெரியாரைத் துணைக்கோடல்

அதாவது சுடர் விளக்காயினும் நன்றாய் விளங்கிடத்தூண்டுகோல் ஒன்று வேண்டும் என்னும் முதுகொழிக்கியைய அரசனானவன் கல்விக் கேள்விகளிற் சிறந்து குற்றமற்றவனாக விளங்கினும் பெரியோர்களென்னும் விவேகமிகுத்த மேலோர்களைத் துணையாகக் கொண்டு தனது ராட்சிய பாரந் தாங்கவேண்டும் என்பதேயாம் இவற்றுட் சில அறிவிலிகள் பெரியோர் என்பதையும் மேலோர் என்பதையும் வேஷசாதித்தலைவர்களையே கூறும் மொழியென்பாரும் உண்டு. அவை பௌத்த நீதி நூற்களுக்குப் பொருந்தாவாம். எத்தேச எப்பாஷைக்காரனாயினும் கோபங் குறைந்து, மோகங் குறைந்து, பேராசைக்குறைந்து, விவேகம் நிறைந்திருப்பவன் யாரோ அவனையே மேலோன் என்றும் பெரியோன் என்றுங் கூறத்தகும் இதனினும் வஞ்சகம், பொறமெ, பொருளாசை, குடிகொடுப்பு கட்கொலைகாமம் சோம்பல் மிகுத்த குடும்பத்தோரை கீழ்மக்களென்றும், சாந்தம் ஈகை அன்பு விடாமுயற்சி உழைப்பு மிகுத்தோரை மேன்மக்களென்றுங் கூறுவது நீதி நூற்றுணிபாம்.

1. அறனறிந்து மூத்தவறிவுடையார் கேண்மெ
திறனறிந்து தேர்ந்து கொளல்.

(ப.) அறனறிந்து - தன்மநெறியை யுணர்ந்து, மூத்த - தன்னிலும் விவேக முதிர்ந்த, வறிவுடையார் - விவேக மிகுத்தோராம், கேண்மெ -நேயரது, திறனறிந்து

- வல்லபமறிந்து, தேர்ந்து கொளல் - சேர்த்துக்கொள்ளல் வேண்டுமென்பது பதம்.

(பொ.) தன்மநெறியை உணர்ந்து தன்னிலும் விவேகமுதிர்ந்த விவேக மிகுத்தோராம் நேயரது வல்லபமறிந்து சேர்த்துக்கொள்ளல் வேண்டும் என்பது பொழிப்பு.

(க.) அரசன் தன்மநெறி ஒழுக்கந் தவிராது தன்னிலும் விவேகமிகுத்தப் பெரியோரை சேர்ந்து வாழ்கவேண்டும் என்பது கருத்து.

(வி.) அரசனானவன் அறிவுடையவனாகி தன்மநெறியிலும் ஒழுக்கத்திலும் சீர்பெற்றிருப்பினும் தன்னிலும் மேலாய விவேகமிகுத்தோரது கேண்மெய் இருந்தே தீரல்வேண்டும் என்பது விரிவு.

2. உற்றநோய் நீக்கி யுறா அமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

(ப.) உற்றநோய் - தோன்றியுள்ள துக்கங்களை, நீக்கி - அகலச்செய்து, யுறா அமை - இனியேது மவைபோன்ற துக்கங்களணுகாது, முற்காக்கும் - முன்னாலோசனை சொல்லக்கூடிய, பெற்றியார் - மேன் மக்களை, பேணிக்கொளல் - தெரிந்து சேர்த்துக் கொள்ளவேண்டுமென்பது பதம்.

(பொ.) தோன்றியுள்ள துக்கங்களை அகலச்செய்து இனியேதும் அவை போன்ற துக்கங்கள் அணுகாது முன் ஆலோசனை சொல்லக்கூடிய மேன்மக்களை தெரிந்து சேர்த்துக்கொள்ளல் வேண்டும் என்பது பொழிப்பு.

(க.) தனக்குத் தோன்றியுள்ள துக்கங்கள் அகலவும் இனி அத்தகைய துக்கங்கள் அணுகாமல் காக்கவும் முன் ஆலோசனைக் கூறும் விவேகிகளை சேர்த்துக்கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

(வி.) அரசனுக்குத் தோற்றியுள்ள துக்கங்கள் யாவும் அகலத்தக்க ஆலோசனைகளையும் அத்தகைய துக்கங்கள் இனி அணுகாதிருக்கும் ஆலோசனையும் ஆய்ந்து கூறக் தக்கப் பெரியோர்களாம் விவேக மிகுத்தோரை சேர்ந்து வாழ்கவேண்டும் என்பது விரிவு.

3. அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரை
பேணி தமராக் கொளல்.

(ப.) அரியவற்று - அரசன் தான் தேடியுள்ள சிறந்த பொருட்கள், ளெல்லா - யாவற்றினும், மரிதே - மேலாய சிறந்த பொருள் யாதென்னிலோ, பெரியாரை - விவேகமிகுத்தோரை, பேணி - தேடி, தமராக்கொளல் - அவர்களை தன்னவர்களாக சேர்த்துக்கொள்ளுவதேயாமென்பது பதம்.

(பொ.) அரசன் தான் தேடியுள்ள சிறந்த பொருட்கள் யாவற்றினும் மேலாய சிறந்தபொருள் யாதென்னிலோ விவேக மிகுத்தோரை தேடி அவர்களைத் தன்னவர்களாகச் சேர்த்துக் கொள்ளுவதேயாம் என்பது பொழிப்பு.

(க.) அரசன் தேடிவைத்துள்ள சிறந்த பொருட்கள் யாவற்றினும் விவேகமிகுத்த பெரியாரை சேர்த்து வாழ்தலே மேலாய சிறப்பாம் என்பது கருத்து.

(வி.) அரசனானவன் தனக்கென்று தேடி வைத்துக்கொள்ளும் தனச்செல்வம், தானியச்செல்வம், மக்கட்செல்வம், மனைச்செல்வம், சுற்றச் செல்வமாம் அரிய பொருட்கள் யாவற்றினும் விவேகமிகுத்தப் பெரியோரைத் தெரிந்து அவரைத்தன் சுற்றத்தாரில் ஒருவராக சேர்த்துக் கொள்ளுதலே மிக்க சிறப்பாம் என்பது விரிவு.

4. தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மெயு ளெல்லாந் தலை.

(ப.) தம்மிற் - தனதறிவிற்கு மேற்பட்ட, பெரியார் - விவேகமிகுத்தோரை, தமரா - தமது சுற்றத்தாரிலொருவராகக் கொண்டு, வொழுகுதல் - நல்வாழ்க்கைப்புரிதல், வன்மெயு - தனது திடச்செயல், ளெல்லாந் - யாவற்றிற்கும், தலை - முதலதாமென்பது பதம்.

(பொ.) தனதறிவிற்கு மேற்பட்ட விவேக மிகுத்தோரை தமது சுற்றத்தாரில் ஒருவராகக் கொண்டு நல்வாழ்க்கைப் புரிதல் தனது திடச்செயல் யாவற்றிற்கும் முதலதாம் என்பது பொழிப்பு.

(க.) அரசனானவன் எத்தகைய சுத்த வீர வல்லபமிகுத்திருப்பினும் தன்னறிவிற்கு மேற்பட்ட அறிவாளிகளை சேர்த்து வாழ்தலே மேலாய வல்லபமாம் என்பது கருத்து.

(வி.) அரசனுக்கு யானை யேற்ற வல்லபம் குதிரையேற்ற வல்லபம், வில்வித்தை வல்லபம், வாகுவித்தை வல்லபமாகிய சுத்த வீரம் இருப்பினும் வருங்காலப் போங்காலச் செயல்களை அறிந்து தனக்கு மேற்பட்ட மதியூட்டத்தக்க மந்திரவாதிகள் தன்னுடனிருப்பதே சகல வல்லபங்களினும் மேலாய வல்லபமாம் என்பது விரிவு.

5. *சூழ்வார் கண்ணாக வொழுகலான் மன்னவன்*
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.

(ப.) மன்னவன் - அரசனானவன், சூழ்வார் - தன்னைச்சேர்ந்து வாழ்வோர்மீது, கண்ணாக - நோக்கமுடையவனாக, வொழுகலான் - நல்வாழ்க்கைப் புரிதலால், சூழ்வோரை - மதியூகிகளை, சூழ்ந்துகொளல் - வாழ்வோரோடு சேர்த்து வாழ்கவேண்டுமென்பது பதம்.

(பொ.) அரசனானவன் தன்னைச்சேர்ந்து வாழ்வோர்மீது நோக்க முடையவனாக நல்வாழ்க்கைப் புரிதலால் மதியூகிகளை வாழ்வோரோடு சேர்த்து வாழ்கவேண்டும் என்பது பொழிப்பு.

(க.) அரசன் தன்னைச் சூழ்ந்து வாழும் சுற்றத்தோர் மீது கண்ணோக்கம் உற்றிருப்பதுபோல் அவர்களுடன் ஓர் மதியூகியாகும் மந்திரவாதியையுஞ் சேர்த்து வாழ்கவேண்டும் என்பது கருத்து.

(வி.) அரசனானவன் தன் மனைவி மக்கள் மீதும் தாய் தந்தையர்மீதும் உடன் பிறந்தார்மீதும் எத்தகையாயக் கண்ணோக்கமும் அன்பும் வைத்து வாழ்கின்றானோ அவைபோல் தனக்கு வருங்காலப் போங்காலச் செயல்களை யூகித்து சொல்லக்கூடிய மதியூகி ஒருவரைத் தன் சுற்றத்தார் போல் சேர்த்து வாழ்கவேண்டும் என்பது விரிவு.

6. *தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்*
செற்றார் செயக் கிடந்த தில்.

(ப.) தக்கா - விவேகமிகுத்த மேலோரோடு, ரினத்தனாய் - நற்குடும்பத்துடன், தானொழுக - நல்வாழ்க்கைப்புரியும், வல்லானைச் - வல்லபமிகுந்த வரசனை, செற்றார் - எதிரியரசர், செயற்கிடந்த - வெல்லுவதற்கு, தில் - இடமில்லாமற் போமென்பது பதம்.

(பொ.) விவேகமிகுத்த மேலோரோடு நற்குடும்பத்துடன் நல்வாழ்க்கை புரியும் வல்லப மிகுத்த அரசனை எதிரியரசர் வெல்லுவதற்கிடமில்லாமற் போம் என்பது பொழிப்பு.

(க.) நீதிநெறியமைந்த குடும்பத்துடன் விவேகமிகுத்தப் பெரியோரையுஞ் சேர்ந்து வாழும் வல்லபமிகுத்த வரசனை பகைவராம் அரசர்கள் வெல்லுவதற்கிடமில்லாமற் போம் என்பது கருத்து.

(வி.) நீதியும் நெறியும், ஒழுக்கமும் அமைந்த சுற்றத்தாருடன் வருங்காலச் செயல்களையும் போங்காலச் செயல்களையும் யூகித்து சொல்லக்கூடிய மதியூகியொருவரைச் சேர்த்து வாழுந்திடதேகியாம் அரசன் மீது வேற்றரசர் படையெடுப்பதற்கும் வெல்லுவதற்கும் ஏதுவில்லாமற் போமென்பது விரிவு.

7. *இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே*
கெடுக்குந் தகமை யவர்.

(ப.) இடிக்குந் - வற்புறுத்தி மதிகூறும், துணையாரை - கூட்டுரவோரை, யாள்வோரை - துணையாகக் கொண்டுவாழு மரசனை, யாரே - வேற்றரசர் யாவரேயாயினும், யவர் - அவர்களால், கெடுக்குந் - அழிக்க, தகமை - வல்லமையாகாதென்பது பதம்.

(பொ.) வற்புறுத்தி மதிகூறுங் கூட்டுரவோரை துணையாகக் கொண்டு வாழும் அரசனை வேற்றரசர் யாவரேயாயினும் அவர்களால் அழிக்க வல்லமையாகாது என்பது பொழிப்பு.

(க.) அரசனுக்கு வற்புறுத்திமதி கூறுங்கூட்டுரவோர் ஒருவரிருப்பாராயின் வேற்றரசர்களால் அவ்வரசனை மேற்கொள்ளும் வல்லபம் எழா என்பது கருத்து.

(வி.) அரசனது நட்பைக்கருதி சீவிப்போனாயிராது அவனது ராட்சிய சிறப்பையும் அரசன் சுகத்தையுங் கருதி கண்டித்து மதியூகங்களை ஊட்டி வரும் விவேகமிகுத்த பெரியார் ஒருவரை துணை கொண்டொழுகும் அரசனை வேற்றரசர் மேற் கொள்ளலாகாது என்பது விரிவு.

8. இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்.

(ப.) இடிப்பாரை - வற்புறுத்தி மதிகூறுவோரை, யில்லாத - சேர்ந்துவாழ்காத, வேமரா - ஆலோசனையற்ற, மன்னன் - அரசனது வாழ்க்கை, கெடுப்பா - தன்னை மேற்கொள்ளு மரசர், ரிலானுங் - இல்லாவிடினும், கெடும் - தானே யழிந்துபோமென்பது பதம்.

(பொ.) வற்புறுத்தி மதிகூறுவோரை சேர்ந்து வாழ்காத ஆலோசனை அற்ற அரசனது வாழ்க்கை தன்னை மேற்கொள்ளும் அரசனில்லாவிடினும் தானே அழிந்துபோம் என்பது பொழிப்பு.

(க.) அப்போதைக்கப்போது கண்டித்து மதியூட்டிவரும் பெரியோர் துணையற்று வாழும் ஆலோசனையற்ற அரசனது ராட்சியம் எதிரி அரசர்களால் அழிபடா விடினுந் தானே அழிந்து போம் என்பது கருத்து.

(வி.) அரசன் செய்துவரும் ஆலோசனையுள்ள நற்காரியங்களுக்கு இடங்கொடுத்தும் ஆலோசனையற்ற துற்காரியங்களுக்கு இடங்கொடாதுங் கண்டித்து மதியூட்டி வரும் பெரியோரது கேண்மையின்றி ஆலோசனையற்று வாழும் அரசனது ராட்சியத்தை வேற்றரசர் கைபற்றாவிடினும் அவ்வரசு தானே அழிவதற்கு ஏதுண்டாகிப் போம் என்பது விரிவு.

9. முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை.

(ப.) முதலிலார்க் - தனமுதல் தானிய முதலில்லார்க்கு, கூதியமில்லை - வியாபார விருத்தி விவசாய விருத்தி யில்லாதது போல, மதலையாஞ் - அறியார்க் கறிவூட்டும், சார்பிலார்க் - பெரியோரைச் சேர்ந்து வாழ்கா வரசனுக்கு, கில்லைநிலை - அரசுநிலை பெறாதென்பது பதம்.

(பொ.) தனமுதல் தானிய முதலில்லார்க்கு வியாபார விருத்தி விவசாய விருத்தியில்லாதுபோல் அறியார்க்கறிவூட்டும் பெரியோரைச் சேர்ந்து வாழ்கா அரசனுக்கு அரசு நிலை பெறாது என்பது பொழிப்பு.

(க.) கைம்முதலில்லார்க்கு சகல காரணவிருத்தியுமில்லாது போல விவேக மிகுத்தப் பெரியோரைச் சேர்ந்து வாழ்கா அரசனுக்கு இராட்சிய விருத்தியும் இல்லாமற் போம் என்பது கருத்து.

(வி.) மனுமக்களுக்கு தனமுதலில்லாது வியாபார விருத்தியில்லாதது போலும் தானிய முதலில்லாது விவசாய விருத்தியில்லாததுபோலும் அரசனுக்கு அறிவை ஊட்டி வரும்மந்திரவாதிகளாம் பெரியோர்கள் இல்லாவிடின் அவ்வரசும் விருத்தியற்றுப்போம் என்பது விரிவு.

10. பல்லார் பகை கொளலிற் பத்தடுத்த தீமெத்தே
நல்லார் தொடர்கை விடல்.

(ப.) நல்லார் - மேன்மக்களது, தொடர்கை - சேர்க்கையை, விடல் - நீங்கி வாழுமரசன், பல்லார் - பலபேருடனும், பகைகொளலிற் - விரோதத்தை யுண்டாக்கிக் கொள்ளுவதுடன், பத்தடுத்த - அதன் பற்றுதலால், தீமெத்தே - தீயதேகியென்று மெண்ணப்படுவானென்பது பதம்.

(பொ.) மேன் மக்களது சேர்க்கையை நீங்கி வாழும் அரசன் பலபேருடன் விரோதத்தை உண்டாக்கிக் கொள்ளுவதுடன் அதன் பற்றுதலால் தீயதேகி என்றும் எண்ணப்படுவான் என்பது பொழிப்பு.

(கு.) மதியூகிகளாம் நல்லோர்களைச் சேர்ந்து வாழ்காத அரசன் பலபேர்களின் விரோதத்தைச் சேர்த்துக்கொள்ளுவதுடன் பலபேருக்குத் தானும் தீயவனென்று எண்ணப்படுவான் என்பது கருத்து.

(வி.) செல்காலச் செயல்களையும் நிகழ்காலச் செயல்களையும் வருங்காலச் செயல்களையும் ஆய்ந்து மதியூட்டத்தக்கப் பெரியோர்களைச் சேர்ந்து வாழ்காத அரசன் தன் தேசக்குடிகளின் செயல்களை நன்காராயாது கண்டிப்பதினாலுந் தெண்டிப்பதினாலும் பலபெயர் பகையைத் தேடிக் கொள்ளுவதுடன் அப்பகையினது பற்றினால் பலருக்குந் தீயவனாகத் தோன்றி அரசும் நிலைகுலைந்து போம் என்பது விரிவு.

50. சிற்றினந் சேராமெய்

அதாவது பெரியோர்களாம் விவேக மிகுத்தோர்கள் பொருளாசை யற்றவர்களும் சீவகாருண்யமிகுத்தவர்களுமாகிய மேன்மக்களைத் துணைக் கோடலுமாகியக் கூட்டுறவை உறுதிபடுத்தி சிற்றினமாம் அறிவிலிகளையும் பேராசை மிகுத்தோர்களையும் சீவகாருண்யமற்றவர்களையும் கரவடர்களையும் பொறாமெ மிகுத்தோர்களையும் வஞ்சினமே உருவாகத் தோன்றியவர்களையும் பஞ்சபாதகர்களையும் அரசன் துணை கோடலாகாது என்னும் விதி விலக்குகளை இவ்விடம் விளக்கலானார்.

1. சிற்றின மஞ்சும் பெருமெ சிறுமெதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

(ப.) சிற்றின - அறிவிலிகளின் கூட்டுறவிற்கு, மஞ்சும் - பயப்படுவார்கள், பெருமெ - அறிவுள்ளோர்கள், சிறுமெதான் - அறிவிலிகளோ, சுற்றமா - அறிவிலிகளையே உறன்முறையோராகக்கொண்டு, சூழ்ந்துவிடும் - சேர்ந்தே வாழ்வார்களென்பது பதம்.

(பொ.) அறிவிலிகளின் கூட்டுறவிற்குப் பயப்படுவார்கள் அறிவுள்ளோர்கள், அறிவிலிகளோ அறிவிலிகளையே உறன்முறையோராகக் கொண்டு சேர்ந்தே வாழ்வார்கள் என்பது பொழிப்பு.

(க.) விவேகமிகுத்தப்பெரியோர் அவிவேகிகளைச் சேர்ந்து வாழார்கள், அவிவேகிகளோ அவிவேகிகளையே கூடி வாழ்வார்கள் என்பது கருத்து.

(வி.) நீதியின்பேரிலும் நெறியின்பேரிலும் விவேக விருத்தியின் பேரிலும் பசிதாகம் உள்ளவர்கள் அறிவிலிகளை யடுத்தே வாழ்கமாட்டார்கள் அறிவிலிகளோ துட்டர்களையும் பேராசையோரையும் வஞ்சினரையும் சூதரையுங் பொய்யரையுங் கள்ளரையுமே உறவினராகக் கொண்டொழுகு வார்கள் என்பது விரிவு.

2. நிலத்தியல்பா னீர்திரித் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு.

(ப.) நிலத்தியல்பா - பூமியினது குணத்திற்குத் தக்கவாறு, னீர்திரிந் - நீரும் மாறுபட்டு, தற்றாகு - அவை பேதமுண்டாதல்போல, மாந்தர்க் - மனுகுலத்தோரது, கினத்தியல்ப - குடும்பத்தின் செயலினளவே, தாகு - மாறுபட வளரும், அறிவு - விவேகமுமென்பது பதம்.

(பொ.) பூமியினது குணத்திற்குத் தக்கவாறு நீரும் மாறுபட்டு சுவைபேதம் உண்டாதல்போல மனுகுலத்தோரது குடும்பத்தின் செயலினளவே மாறுபட வளரும் விவேகமும் என்பது பொழிப்பு.

(க.) பூமியினது குணபேதத்தால் நீரும் சுவைபேதமடைதல்போல மனுக்களின் குடும்பபேதச் செயல்களைப்போல அறிவும் பேதப்பட்டே விளங்கும் என்பது கருத்து.

(வி.) ஆகாயமானது உப்பைக் கிரகித்துகொண்டு சுத்தநீரை மழையாகப் பெய்தபோதிலும் மருத நிலத்தில் தோய்ந்த நீர் இனியதாகவும், நெய்த நிலத்தில் தோய்ந்த நீர் துவர்ப்பாகவும், பாலை நிலத்தில் தோய்ந்த நீர் உவர்ப்பாகவும் குறிஞ்சி நிலத்தில் தோய்ந்த நீர் சிறு கசப்பாகவும், முல்லை நிலத்தில் தோய்ந்த நீர் கசப்பும் இனிப்புமாகவும் மாறுகொளற்போல மனுக்கூட்டமென்பது மேலாயப் பிறவியாகத் தோன்றியபோதினும் பேராசையுள்ளக் குடும்பத்திற் பிறந்தோர் பேராசையிலும், வஞ்சினமிகுத்தக் குடும்பத்திற் பிறந்தோர் வஞ்சினத்திலும், கள்ளர் கூட்டத்திற் பிறந்தோர்களவிலும், குடியர் கூட்டத்திற் பிறந்தோர் குடியிலும், தோய்ந்து நிற்பதற்களவே அறிவும் தியங்கி நிற்கும் என்பது விரிவு.

3. மனத்தானா மாந்தர்க் குணர்ச்சி யினத்தானா
மின்னா னெனப்படுங் சொல்.

(ப.) மாந்தர் - மனிதவகுப்போர், மனத்தானா - எண்ணிச் செய்யுஞ் செயல்களை, குணர்ச்சி - ஆய்ந்துணர்வோர், யினதானா - குடும்பங்களில், மின்னானெனப்படும் - இவன் நல்ல குடும்பத்தான் தீய குடும்பத்தானென்றறிந்து, சொல் - சொல்லி விடுவார்களென்பது பதம்.

(பொ.) மனித வகுப்போர் எண்ணிச் செய்யும் செயல்களை ஆய்ந்துணர்வோர், குடும்பங்களில் இவன் நல்ல குடும்பத்தான், தீயகுடும்பத்தான் என்று அறிந்து சொல்லி விடுவார்கள் என்பது பொழிப்பு.

(க.) அவனவன் எண்ணிச் செய்யும் நற்செயல்களைக் கண்டு நல்ல குடும்பத்தோனென்றும் துற்செயல்களைக்கண்டு தீய குடும்பத்தோனென்றும் பெரியோர் மதித்து விடுவார்கள் என்பது கருத்து.

(வி.) ஒவ்வோர் மனிதனுந் தன் மனதிற் கருதிச்செய்யுஞ் செயல்களில் பொய்யைச் சொல்லி பிச்சை இரந்துண்பானாயின் அவனை சோம்பேறித் தீயக்குடும்பத்தோனென்றும், மெய்யைச் சொல்லி மெய்வருந்த உழைத்துண்பானாயின் அவனை சுகசீவிய நற்குடும்பத்தோனென்றும் பெரியோர் பிரித்தறிந்து கூறுவார்கள் என்பது விரிவு.

4. மனத்து ளதுபோலக் காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு.

(ப.) மனத்து - ஒருவனது மனத்தின் செயல், ளதுபோல - செய்கையில், காட்டி - விளங்குதல்போல், அறிவு - விவேகமானது, யொருவற் - அவரவர், கினத்துளதாகு - குடும்பச்செயலினளவே விளங்குமென்பது பதம்.

(பொ.) ஒருவனது மனத்தின் செயல் செய்கையில் விளங்குதல்போல் விவேகமானது அவரவர் குடும்பச்செயலினளவே விளங்குமென்பது பொழிப்பு.

(க.) ஒருவன் எண்ணும் எண்ணம் கருமத்தால் விளங்குவதுபோல குடும்பத்தின் செயலால் அவனது அறிவும் விளங்கும் என்பது கருத்து.

(வி.) இதை அநுசரித்தே நமது மூதாட்டி "குலத்தளவேயாகுங் குண" மென்றும் கூறியுள்ளது ஓர் கூட்டுறவாயக் குடும்பத்தையே குலமென்னப்படும். அக்குலத்தோர் துற்செயலைக்கொண்டே தீய குலமென்றும் நற்செயலைக் கொண்டே நல்ல குலமென்றுங் கூறுவர் அவைபோல் எண்ணுங் கருத்து செய்கையில் விளங்குவதுபோல் அந்தந்தக் குடும்பத்தின் செயலால் அவரவர்கள் அறிவும் விளங்கிப் போம் என்பது விரிவு.

5. மனத்தூய்மெ செய்வினை தூய்மெ யிரண்டு
மினத்தூய்மெ தூவா வரும்.

(ப.) மனத்தூய்மெ - களங்கமற்ற மனமும், செய்வினை தூய்மெ - குற்றமற்றச் செயலுமாகிய, இரண்டும் - இவ்விரண்டுமுடையவனது, மினத்தூய்மெ - குடும்பத்தின் நல்லொழுக்கமானது. தூவா - சிதறாது, வரும் - வந்து கூடுமென்பது பதம்.

(பொ.) களங்கமற்ற மனமும் குற்றமற்றச் செயலுமாகிய இவ்விரண்டும் உடையவனது குடும்பத்தின் நல்லொழுக்கமானது சிதறாது வந்து கூடும் என்பது பொழிப்பு

(க.) மனமாசில்லாமலும் செய்தொழிலில் யாதொரு குற்றம் வாராமலுமிருப்போன் குடும்பத்தில் முடிக்குங் காரியங்கள் யாவும் முட்டின்றி முடியும் என்பது கருத்து.

(வி.) நல்லொழுக்கமுள்ள குடும்பத்தில் பிறந்தவன் நற்குணமுடைய வனாகவும் நற்செயல் புரிபவனாகவே விளங்குவான், அவன் தொடுத்து முடிக்கும் நற்காரியங்கள் யாவும் சுபமாகவே முடியும், அவனைச் சேர்ந்தோர்களும் சுகசீவியாவார்கள் என்பது விரிவு.

6. *மனத்தூயார்க் கெச்ச நன்றாகு மீனத்தூயார்க்*
கில்லை நன்றாகா வினை.

(ப.) மனத்தூயார் - இதய சுத்தமுள்ளோர், கெச்ச - எடுக்கு முயற்சிகள் யாவும், நன்றாகு - நல்லதாகவே முடியும், மினத்தூயார் - குடும்பத்தில் நல்லொழுக்கமுடையவர்களோ, வினை - தாங்கள் முடிக்குஞ் செயல்கள் யாவும், நன்றாகு - முடியா தென்று சொல்லுதற்கு, இல்லை - இல்லாமலே முடியுமென்பது பதம்.

(பொ.) இதய சுத்தமுள்ளோர் எடுக்கும் முயற்சிகள் யாவும் நல்லதாகவே முடியும், குடும்பத்தில் நல்லொழுக்கம் உடையவர்களோ தாங்கள் முடிக்குஞ் செயல்கள் யாவும் முடியாதென்று சொல்லுதற்கில்லாமலே முடியும் என்பது பொழிப்பு.

(க.) மனக்களங்கமற்றோர் எடுக்கும் முயற்சி முட்டின்றி முடிவதுபோல நல்லொழுக்கமுள்ள குடும்பத்தோரெடுக்கும் முயற்சி முடியாதென்று சொல்லுதற்கில்லாமலே முடியும் என்பது கருத்து,

(வி.) இராகத்துவேஷ மோகங்களென்னுங் காமவெகுளி மயக்கங்களாம் மனமாசகன்ற மேலோர் எடுக்குஞ் செயல்கள்யாவும் இடையூறின்றி முடிவனபோல் ஓர் குடும்பத்தோர் நல்லுரக்கம் நன்முயற்சி நற்கடைபிடியாய நல்லொழுக்கத்தில் வாழ்க்கை புரிவார்களாயின் அவர்கள் எடுத்துச் செய்யும் நன்முயற்சிகளும் முடியாதென்று கூறுவதற்கின்றி முடிவதோடு அவர்கள் சந்ததியோரும் நல்லொழுக்கச் செயலையே நாடி நிற்பர். தீயொழுக்கக் குடும்பத்தோராய சிற்றினத்தோரோ இவற்றிற்கு மாறுபட்டே நிற்பர் என்பது விரிவு.

7. *மனநல மன்னுயிர் காக்கு மீனநல*
மெல்லாப் புகழுந் தரும்.

(ப.) மனநல - மனத்தின் களங்கமற்ற நிலையானது, மன்னுயிர் - தன்னுயிரைப் போல் மன்னுயிரையும், காக்கும் - ஆதரிக்கும், மினநல - குடும்பத்தின் நல்லொழுக்கச் செயலானது, மெல்லாப்புகழு - இகபர சகல கீர்த்தியையும், தரும் - கொடுக்குமென்பது பதம்.

(பொ.) மனத்தின் களங்கமற்ற நிலையானது தன்னுயிரைப்போல் மன்னுயிரையும் ஆதரிக்கும். குடும்பத்தின் நல்லொழுக்கச் செயலானது இகபர சகல கீர்த்தியையுங் கொடுக்கும் என்பது பொழிப்பு.

(க.) மனமாசற்ற அறவோர் தன்னுயிரைப்போல் பிறவுயிரையும் காப்பர் நல்லொழுக்கக் குடும்பத்தோரோ இகபரத்தில் சகல புகழும் பெற்று வாழ்வார்கள் என்பது கருத்து.

(வி.) இதய சுத்தமுண்டாகித் தண்மெயுற்ற மேலோர் சருவ சீவர்களையும் தன்னுயிர்போல் காத்து புகழடைவார்கள். இனநலமாகும் நல்லொழுக்கக் குடும்பத்தோர்களோ இகத்தில் வாழும் மக்களாலும் பரத்தில் வாழுந் தேவர்களாலும் புகழப்படுவார்கள். மனமாசுற்ற சிற்றினத்தானோ தன்னைச் சார்ந்த சகலரையுங் கெடுப்பான். சகல கேடும் நிறைந்து தீயொழுக்கமுள்ள குடும்பமாம் சிற்றினத் தோரால் சருவ சீவர்களுங் கெட்டழிவதுடன் பல்லோரால் இகழவும் படுவார்கள் என்பது விரிவு.

8. மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநல மேமாப் புடைத்து.

(ப.) மனநல - மனமாசற்று, நன்குடைய - சுகச்சீரை, ராயினுஞ் - பெற்றுள்ள வனாயிருப்பினும், சான்றோர் - அறஹத்துக்களாகிய சாந்தரூபிகளுக்கு, கினநல - நல்லொழுக்கமுற்றக் குடும்பத்தின் மீதிலேயே, மேமாப் - மாறா, புடைத்து - நோக்கமுடைத்தாகுமென்பது பதம்.

(பொ.) மனமாசற்று சுகச்சீரைப்பெற்றுள்ளவனாயிருப்பினும் அறஹத்துக்களாகிய சாந்தரூபிகளுக்கு நல்லொழுக்கமுற்றக் குடும்பத்தின் மீதிலேயே மாறா நோக்கமுடைத் தாகும் என்பது பொழிப்பு.

(க.) சாந்தரூபிகளாகிய மேன்மக்கள் மனமாசற்ற ஒருவனைவிட நல்லொழுக்க மிகுத்த நற்குடும்பத்தையே மேலாகக் கருதுவார்கள் என்பது கருத்து.

(வி.) சற்சங்கமாம் புத்த சங்கஞ் சேர்ந்த ஒருவன் நன்மனசுடையோனாக விளங்கினபோதினும் மேலோர்களாகிய சான்றோராம் அறவணவடிகளவர்களை மிக்க கருத மாட்டார்கள். நற்செயல், நல்லூக்கம், நற்கடைபிடியில் ஒழுகும் நல்ல குடும்பத்தோரையே மிக்க கருதுவார்கள். அவைபோல் தீயவனொருவனை மேலோர் கண்டிடினும் ஒருகாற் காண்பர், தீய குடும்பமாம் சிற்றினத்தோரைக் கண்ணெடுத்தும் பாரார்கள் என்பது விரிவு.

9. மனநலத்தி னாகு மறுமை மற்றஃது
மினநலத்தி னேமாப் புடைத்து.

(ப.) மனநலத்தி - நன்மனச்செயலின் பயனாயது, னாகுமறுமை - பின்னரெடுக்குந் தேகத்தால் விளங்கிப்போம், மற்றஃது - அவையே தென்னிலோ, மினநலத்தி நல்லொழுக்கக் குடும்பத்தில், னேமாப் - மாறாது தோற்றலே, புடைத்து - உடையதாமென்பது பதம்.

(பொ.) நன்மனச் செயலின் பயனாயது பின்னரெடுக்குந் தேகத்தால் விளங்கிப்போம் அவையேதென்னிலோ நல்லொழுக்க குடும்பத்தில் மாறாதோற்றலே உடையதாம் என்பது பொழிப்பு.

(க.) நல்லொழுக்க மனமுடையவனாகிய பயன் நல்ல குடும்பத்தில் மறுமெய் எடுத்தலால் விளங்கும் என்பது கருத்து.

(வி.) சகலருக்கும் உபகாரியாக விளங்கும் ஒருவன் மரணமடையினும் பின்னரெடுக்கும் பிறவி நற்குடும்பத்திலேயே தோன்றி நற்பயனையே விளக்குவான். அவைபோல் தீயச் செயலிலொழுகுவோன் மரணமுறினும் தீயக்குடும்பமாம் சிற்றினத்திலேயே பிறந்து முன்விட்டு தோன்றிய தீவினைகளையே விளைவிப்பான் என்பது விரிவு.

10. நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுவதூஉ மில்.

(ப.) நல்லினத்தி - நல்லொழுக்கக் குடும்பத்தை, னூங்கு - சேர்ந்து வாழ்வதினும், துணையில்லை - வாழ்க்கையுதவி வேறில்லை, தீயினத்தி - தீயொழுக்கக் குடும்பத்தைச்சார்ந்து, படுவதூஉ - அனுபவிக்கும், னல்லற் - துன்பத்தினும், மில் - வேறு துன்பமில்லையென்பது பதம்.

(பொ.) நல்லொழுக்கக் குடும்பத்தைச் சேர்ந்து வாழ்வதினும் வாழ்க்கையுதவி வேறில்லை, தீயொழுக்கக் குடும்பத்தைச் சார்ந்து அநுபவிக்குந் துன்பத்தினும் வேறு துன்பமில்லை என்பது பொழிப்பு.

(க.) நல்லினத்தை சார்ந்து வாழ்வதினுஞ் சுகம் வேறில்லை. தீயவினத்தைச் சார்ந்து வாழ்வதிலுங் கேடு வேறில்லை என்பது கருத்து.

(வி.) நற்செயல்களையே நோக்கிச் செய்வோர்களும் நன்மார்க்கத்தையே கண்டு நடப்போர்களும், நல்வாய்மையே அறிந்து பேசுவோர்களும், நன்னோக்கமே கண்டு நிலைப்போர்களும், நல்லவர்களாகவே சகல சீவர்களுக்கும் விளங்குவோர்களும், நற்கடைபிடியே சாதனமாக ஒழுகு வோர்களுமாய நற்குடும்பத்தோரையே நல்லினத்தோரென்றும் மேன்மக்க ளென்றுங் கூறப்படும். இத்தகைய இனத்தைச் சேர்ந்து வாழ்வதே சிறப்பாம்.

தன் சுகத்தை நாடி பிறர் சுகத்தைக் கெடுக்கும் தீயோர்களும் தான் ஒரு குடி பிழைக்க நூறு குடிகளை கெடுக்குந் தீயோர்களும் வஞ்சினமே குடிகொண்டவர்களும் பொறாமையே உருவெடுத்தவர்களும், கருணை என்பதே கனவிலும் இல்லாதவர்களும் சீவகாருண்யமே சிந்தையிலற்றவர்களும், பஞ்சபாதகமே பரக்கச் செய்வோர்களுமாயத் தீயக்குடும்பத்தோரையே சிற்றினத்தோரென்றும் கீழ்மக்களென்றும் கூறப்படும்.

இத்தகைய சிற்றனத்தோரது குணாகுணச்செயல்களை நன்காராய்ந்து அரசன் சேர்க்காது அகற்ற வேண்டும் என்பது விரிவு.

51. தெரிந்து செயல் வகை

அதாவது அரசன் நல்லோராம் விவேகிகளைக் சேர்த்துக்கொண்டும் பொல்லோராம் அவிவேகிகளைச் சேர்க்காது அகற்றுவதுடன் தான் செய்யவேண்டிய காரியங்கள் யாவற்றையுங் தெரிந்து செய்யவேண்டியது மேலாயதாதலின் மேலாய ஆலோசனைக் கூறும் மந்திரவாதிகள் ஓதியபோதினும் அவற்றின் பாகுபாடுகளைத் தானுமாய்ந்து செய்ய வேண்டுமென்பதேயாம்.

1. அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு
மதியமுஞ் சூழ்ந்து செயல்.

(ப.) அழிவதூஉ - எடுக்கு முயற்சி கூடாவிடினும், மாவதூஉ - கூடிடினும், மாகி - சேர்ந்து, வழிபயக்கு - சுகபாதைக்குக் கொண்டுபோமாயின், மூதியமுஞ் - அச்சுகவழிபயனை, சூழ்ந்து - தன்னைச் சூழ்ந்துள்ளக் குடிகளும், செயல் - அநுபவிக்கச் செய்யவேண்டுமென்பது பதம்.

(பொ.) எடுக்கும் முயற்சிக் கூடாவிடினும், கூடிடினும் சேர்ந்து சுகபாதைக்குக் கொண்டுபோமாயின் அச்சுகவழி பயனை தன்னைச் சூழ்ந்துள்ளக் குடிகளும் அநுபவிக்கச் செய்யவேண்டும் என்பது பொழிப்பு.

(க.) தானெடுத்துச்செய்யும் நற்கருமமானது கூடினுங் கூடாவிடினும் விடா முயற்சியில் கூடும் பயனைத் தன்னோடு தன் தேசத்தோரும் அநுபவிக்கச் செய்ய வேண்டும் என்பது கருத்து.

(வி.) அரசன்தான் கோறிச் செய்யுஞ் செயல்களுக்கு அங்கத்தவருங் குடிகளுமே ஒன்று கூடி செய்யவேண்டுவது இயல்பாதலின் அக்கருமத்தா லடையும் பயனை அரசன் அநுபவிப்பதுடன் குடிகளும் பகிர்ந்து அநுபவிக்கவுதவுவானாயின் எடுக்குஞ் சகல காரியாதிகளுக்குக் குடிகளும் உபபலமாயிருந்து உற்சாகத்துடன் நடத்துவார்கள் என்பது விரிவு.

2. தெரிந்த வினத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில்.

(ப.) தெரிந்து - தான் நல்லவர்களென் றறிந்துகொண்ட, வினத்தோடு - நற்குடும்பத்தோடு சேர்ந்து, தேர்ந்தெண்ணி - எடுக்குங் காரியத்தை முன்பின்னாலோசித்து, செய்வார்க்கு - செய்யும்படியானவர்களுக்கு, கரும்பொருள் - கைக்கூடாவரிய பொருள், யாதொன்றுமில் - ஏதொன்று மில்லையென்பது பதம்.

(பொ.) தான் நல்லவர்கள் என்றறிந்து கொண்ட நற்குடும்பத்தோடு சேர்ந்து எடுக்குங் காரியத்தை முன்பின்னாலோசித்து செய்யும்படியான வர்களுக்கு கைக்கூடாவரிய பொருள் ஏதொன்றுமில்லை என்பது பொழிப்பு.

(க.) நல்லவர்களை சேர்த்துக்கொண்டு தேற ஆலோசித்து ஓர் காரியத்தை முடிப்போர்க்கு அக்காரியம் முடியாமற் போகா என்பது கருத்து.

(வி.) தீயோர்களாகிய நயவஞ்சகர்களை அகற்றி நல்லோர்களாம் மேன்மக்களைச் சேர்த்துக்கொண்டு எடுக்குங் காரியத்தை நன்காராய்ந்து முடிக்க முயலுவோருக்கு அக்காரிய சித்தியாகாமற் போகாது என்பது விரிவு.

3. ஆக்கங் கருதி முதலீழக்குஞ் செய்வினை
யூக்கா ரறிவுடை யார்.

(ப.) ஆக்கங்கருதி - பேராசையால் பெரும் லாபத்தை நோக்கி, முதலிழக்கும் - உள்ள பொருளையு மழிக்கும், செய்வினை - காரியத்தில், யூக்கா - முயற்சிக்கமாட்டார்கள், ரறிவுடையார் - விவேகமிகுத்தோர்களென்பது பதம்.

(பொ.) பேராசையால் பெரும் லாபத்தை நோக்கி உள்ள பொருளையும் அழிக்குங் காரியத்தில் முயற்சிக்கமாட்டார்கள் விவேக மிகுத்தோர்கள் என்பது பொழிப்பு.

(க.) அறிவின் மிகுத்தோர் அவாவின் மிகுதியால் பெரும் லாபத்தைக் கருதி தனக்குள்ள பொருளையும் போக்கடித்துக் கொள்ளமாட்டார்கள் என்பது கருத்து.

(வி.) அறிவின் மிகுத்தோரும் நல்லினத்தைச் சேர்ந்தவர்களும் பேராசை மிகுதியால் அதிலாபத்தைக் கருதி தனக்குள்ள பொருட்களை வீணே யழித்துவிடமாட்டார்கள் என்பது விரிவு.

4. தெளிவி லதனைத் தொடங்கா ரிளிவென்னு
மேதப்பா டஞ்சு பவர்.

(ப.) தெளிவி - நிதானியாது, லதனை - ஓர் காரியத்தை, தொடங்கா - ஆரம்பிக்க மாட்டார்கள், ரிளிவென்னு - அதனாற் குறை யுண்டாமென்று, மெதப்பா - முன்பரிந்து. டஞ்சுபவர் - அடங்கி நடப்போர்களென்பது பதம்.

(பொ.) நிதானியாது வோர் காரியத்தை ஆரம்பிக்கமாட்டார்கள் அதனாற் குறையுண்டாம் என்று முன்பறிந்து அடங்கி நடப்போர்கள் என்பது பொழிப்பு.

(க.) நிதானமும் அடக்கமும் முன்பே ஆலோசிப்போருமானவர்கள் முடியா காரியத்தை முடிக்க முயன்று இழிவடையார்கள் என்பது கருத்து.

(வி.) எக்காலும் நிதானமும் தன்னடக்கமும் முன்னாலோசினையும் உள்ளவர்கள் நிறைவேறாது என்றறிந்த காரியத்தை நிறை வேற்றவும் முடியாத காரியத்தை முடிக்கவும் முயன்று அதனால் தாழ்ச்சியடையார்கள் என்பது விரிவு.

5. வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு.

(ப.) வகையற - தான் நடத்தும் யுத்தத்தை முற்றும் ஆலோசியாமலும், சூழா - தன்னைச் சூழ காக்கும் படையுதவியில்லாமலும், பகைவரை - எதிரியரசர் மீது, தெழுதல் - படையெடுத்தலாயது, பாத்தி - தானே யோர் கால்வாய் வெட்டி, படுப்பதோராறு - ஆற்றுநீரை ஊருக்குள் திருப்பிக் கொண்டது போலாகுமென்பது பதம்.

(பொ.) தான் நடத்தும் யுத்தத்தை முற்றும் ஆலோசியாமலும் தன்னை சூழ காக்கும் படையுதவி இல்லாமலும் எதிரியரசர் மீது படையெடுத்தாலயது தானே ஓர் கால்வாய் வெட்டி ஆற்று நீரை ஊருக்குள் திருப்பிக்கொண்டது போலாகும் என்பது பொழிப்பு.

(க.) எதிரியரசன் வல்லபமறியாதும் தன்னைச் சூழ்ந்து காக்கும் படையுதவியில்லாதும் படையெடுத்தல் புறம் ஓடிக்கொண்டிருந்த ஆற்றைக் கால்வெட்டி ஊருக்குள் திருப்பி தேசத்தை நாசஞ்செய்துக்கொள்ளுவதற்கு ஒக்கும் என்பது கருத்து.

(வி.) அரசன் ஓர் யுத்தத்திற்கு முனியுங்கால் எதிரி அரசன் வல்லபத்தையுந் தன்னைச் சூழ்ந்து காக்கும் படைகளின் வல்லபத்தையும் ஆய்ந்து முனிதல் வேண்டும் அங்ஙனம் வகையறியாது யுத்தத்திற்கெழுவதாயின் ஆற்றுநீரை வெட்டி ஊருக்குள் திருப்பி தானே தன் தேசத்தையும் தேசமக்களையும் அழித்துக் கொள்ளுவதற்கு ஒக்கும் என்பது விரிவு.

6. செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்.

(ப.) செய்தக்க - தக்கவழியிலோர் காரியத்தை, வல்ல - செய்ய முடியாதென்றறிந்தும், செயக்கெடும் - செய்யில் முடியாமலே போகும், செய்தக்க - முடியக்கூடிய காரியத்தை, செய்யாமையானுங் - முடிக்காமல் விட்டுவிடலாலும், கெடும் - அதுவுமழிந்து போமென்பது பதம்.

(பொ.) தக்கவழியில் ஓர் காரியத்தை செய்ய முடியாதென்று அறிந்தும் செய்யில் முடியாமலே போகும், முடியக்கூடிய காரியத்தை முடிக்காமல் விட்டுவிடலாலும் அதுவும் அழிந்து போம் என்பது பொழிப்பு.

(க.) ஆரம்பிக்கும்போதே அக்காரியம் முடியாதென்று அறிந்தும் முடிக்க முயல்வதால் கெட்டுப்போம், முடியக்கூடியக் காரியத்தை முடிக்காமல் விட்டுவிடலால் அதுவுங் கெட்டுப்போம் என்பது கருத்து.

(வி.) சமுத்திர நீரை எடுத்துவிட்டு சமபூமியாக்க முடியாது என்பதை தெரிந்தும் அந்நீரை எடுக்க முயன்று பயனடையாது போவதுங் குற்றமாம். தேசத்துக் குட்டைநீரால் பற்பல புழுக்கள் தோன்றி அதனது துர்நாற்றத்தால் மக்களுக்குப் பிணியுண்டாவதென்று அறிந்தும் அந்நீரை எளிதில் எடுத்துவிட்டு சமபூமியாக்கிவிடலாம் என்று தெரிந்தும் அவ்வகை செய்யாமலிருப்பதுங் குற்றமாம். அதுபோல் செய்வனவற்றைச் செய்யலும் செய்யாதனவற்றைச் செய்யாமலும் தெரிந்துச் செய்வதே அழகாம் என்பது விரிவு.

7. எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு.

(ப.) கருமந் - ஓர் காரியத்தை யாரம்பிக்கும்போதே, எண்ணித் துணிக - முன் பின்னாலோசித்துவாரம்பிக்க வேண்டியது, துணிந்தபி - காரியத்தைச் செய்ய முயன்ற பின்னர், னெண்ணுவமென்ப அதையாலோசிப்பது, திழுக்கு - குற்றமாமென்பது பதம்.

(பொ.) ஓர் காரியத்தை ஆரம்பிக்கும் போதே முன்பின் ஆலோசித்து ஆரம்பிக்கவேண்டியது. காரியத்தைச் செய்ய முயன்றபின்னர் அதை ஆலோசிப்பது குற்றமாம் என்பது பொழிப்பு.

(க.) ஏதோர் காரியத்தை முடிக்க முயலும்போதே அதனை தேற ஆலோசித்தே முயலல்வேண்டும், அங்ஙனஞ் செய்யாது காரியத்தில் முயன்றபின் அவற்றை யோசிப்பது இழுக்காம்.

(வி.) அரசனானவன் எதிரி அரசன் மீது படையெடுப்பின் காரியத்தையேனும் குடிகளின் சீர்திருத்தக் காரியத்திலேனும் தேற ஆலோசித்து பின்னர் முனியல் வேண்டும் காரியத்தை ஆரம்பித்தபின்னர் துன்பம் நேருங்கால் ஆலோசிப்பது இழுக்காம் என்பது விரிவு.

8. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

(ப.) ஆற்றின் - தன் சுகத்தைநாடி செய்யுங் காரியத்தை, வருந்தா - அதிகஷ்டத்துடன் யூகித்துச் செய்யாது, வருத்தம் - பின்னர் துன்புறுங்கால், பலர் நின்று - பல்லோரொன்றுகூடி, போற்றினும் - உதவி புரியினும், பொத்துப்படும் - யாதொரு பயனுமில்லாமலே யழிந்து போமென்பது பதம்.

(பொ.) தன் சுகத்தை நாடி செய்யுங் காரியத்தை அதி கஷ்டத்துடன் யூகித்துச் செய்யாது பின்னர் துன்புறுங்கால் பல்லோரொன்றுகூடி உதவி புரியினும் யாதொருபயனுமில்லாமலே அழிந்துபோம் என்பது பொழிப்பு.

(க.) ஓர் காரியத்தை ஆரம்பிக்கும் போதே தெரிந்து செய்யாது அவை முடியாது தடையுறுங்கால் பலபேர் கூடியவற்றிற்கு உதவி புரியினும் முற்றுங் கூடாமலே பொய்யாய்ப் போம் என்பது கருத்து.

(வி.) ஒருவனோர் காரியத்தை முன்பின் ஆலோசித்துத் தேறத் தெரிந்து செய்யாது, அக்காரியம் முடியாது துன்புறுங்கால் பலபேரவற்றிற்கு

உதவியாயிருந்து முடிக்க முயலினும் அவை முடியாமலே பொய்த்துப்போம் என்பது விரிவு.

9. நன்றாற்ற லுள்ளுந் தவருண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

(ப.) நன்றாற்றலுள்ளுந் - உபகாரச் செயலையே செய்ய முயல்வதினும், தவருண் - குற்றமுண்டாம், டவரவர் - அதாவதவரவருடைய, பண்பறிந் - குணச்செயலறிந்து, தாற்றா - செய்விக்காத, கடை - முடிவாமென்பது பதம்.

(பொ.) உபகாரச்செயலையே செய்ய முயல்வதினும் குற்றமுண்டாம், அதாவதவரவருடைய குணச்செயலறிந்து செய்விக்காத முடிவாமென்பது பொழிப்பு.

(க.) அரசன் தன் குடிகளுக்குச் செய்யும் உபகாரங்களில் குலபண்பு அறியாது கீழ்மக்களுக்குச் செய்யும் உபகாரத்தால் தீதே வந்து முடியும் என்பது கருத்து.

(வி.) அரசனானவன் தனது குடிகளுக்குச் செய்யவேண்டிய உபகாரத்தை ஒழுக்கமும் சீலமும் காருண்யமும் நன்றியறிதலும் பரோபகாரமும் உழைப்பாளிகளுமாய பண்பமைந்த மேன்மக்களுக்குச் செய்வதாயின் அவர்கள் சீர்பெற்று நன்றி மறவாது இராஜவிசுவாசத்தில் லயித்து தங்கள் வாழ்க்கை இன்னும் சுகம்பெற அரசனது சுகவாழ்க்கையை மேலும் மேலுங் கருதி அரசனுக்கோர் துன்பம் அணுகாது உபபலமாக நிற்பார்கள், பஞ்சபாதகமும் பேராசையும் வஞ்சினமும் சோம்பலும், நிறைந்து சீவகாருண்யமும் பரோபகாரமுமற்றப் பண்பமைந்த கீழ்மக்களுக்குச் செய்வதாயின் தாங்கள் அரசனது உபகாரத்தால் சீர்பெற்றவுடன் நெருப்பில் விழுந்த தேளை எடுத்துவிட கொட்டுவதுபோலும் வலையிற் சிக்குண்ட பாம்பை எடுத்துவிட கடிப்பது போலும் அரசனுக்கே தீங்கிழைத்து அரசைக் கைப்பற்ற முயல்வார்களாதலின் குடிகளுக்கு உபகாரஞ் செய்வதிலுந் தெரிந்து செய்யல் வேண்டும் என்பது விரிவு.

10. எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு.

(ப.) எள்ளாத - அரசனானவன் செய்யும் சகல காரியங்களையும், வெண்ணி - தேறத் தெரிந்தே, செயல்வேண்டும் - செய்வித்தல் வேண்டும், தம்மொடு - தன்னோடுடன்படாச் செயலை, கொள்ளாத - தானே யேற்காத போது, கொள்ளா துலகு - உலகமு மேற்காதென்பது பதம்.

(பொ.) அரசனானவன் சகல காரியங்களைத் தேறத் தெரிந்தே செய்வித்தல் வேண்டும். தன்னோடுஉடன்படாச் செயலை தானே ஏற்காதபோது உலகமும் ஏற்காது என்பது பொழிப்பு.

(க.) சகல காரியாதிகளையும் அரசன் தெரிந்து செய்வதே சுகமாம் அக்காரியங்களிலொன்று தனக்கே ஒப்பாதிருக்குமாயின் உலக மக்களும் ஒப்பாரென்பது கருத்து.

(வி.) அரசனானவன் எக்காரியாதிகளையும் நன்காய்ந்து தேறத் தெரிந்து செய்யல் வேண்டும் அக்காரியங்களிலொன்று தனக்கே நற்பயன்றாராது போமாயின் உலகமக்களுக்கும் அதுவேயாதலின் தான் தெரியாது செய்து தானே கொள்ளாததை உலகமுங் கொள்ளாது என்பது விரிவு.

52. வலியறிதல்

அரசன் தான் தொடுக்குஞ் செயல்களில் கூடுங் கூடா என்னும் வினையின் வலியறிந்தும் தனது தேக திடனிலை அறிந்தும் எதிரிகளின் வலியறிந்தும் தனது துணைவரின் வலியறிந்தும் ஓர் காரியத்தில் முநியல் வேண்டும் என்பதாம்.

1. வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்.

(ப.) வினைவலியுந் - தான் தொடுக்குஞ் செயல் கூடுங் கூடா வல்லபத்தையும், தன் வலியு - தனது தேக வல்லபத்தையும், மாற்றான் வலியுந் - தனது சத்துருவாய

வரசன் வல்லபத்தையும், துணைவலியுந் - தனக்குப்பலமாயப் படைவீரர் வல்லபத்தையும், தூக்கி - சீர்தூக்கி, செயல் - ஆலோசித்துச் செய்ய வேண்டும் என்பது பதம்.

(பொ.) தான் தொடுக்குஞ் செயல் கூடுங் கூடாவல்லபத்தையும் தனது தேக வல்லபத்தையும் தனது சத்துருவாய அரசன் வல்லபத்தையும் தனக்குப்பலமாய படைவீரர் வல்லபத்தையும் சீர் தூக்கி ஆலோசித்து செய்ய வேண்டும் என்பது பொழிப்பு.

(க.) தனது முற்செயல் தொடர்வலியுந் தனது வலியுந் தன் சத்துருவின் வலியுந் தனது துணைவரின் வலியும் ஆய்ந்து ஓர் காரியத்தில் முநியல் வேண்டும் என்பது கருத்து.

(வி.) தனது ஊழ்வலியால் சில தொடுக்குஞ் செயல்கள் முட்டின்றி முடிந்தே வருவதும், சிலது முடியாது மயங்குமாதலின் வினையின் நுட்பமறிந்தும் தான்வாகு வல்லவனாயிருந்துங் கதைவல்லபனுடன் போர்புரிய லாகாது ஆதலின் தனது வித்தை பலமறிந்தும், தனது எதிரி சகல வல்லபங்களும் நிறைந்திருக்க தான் எவற்றிலேனுங் குறைந்துள்ளவனாவெனத் தெரிந்தும், தன்னோடு தன் துணைவரும் உபபலமாக நிற்பார்களா என்றறிந்தும் அக்காரியத்தில் முயலல் வேண்டும் என்பது விரிவு.

2. ஒல்வ தறிவ தறிந்ததன் கட்டங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில்.

(ப.) ஒல்வதறிவ - தனக்குள்ள வல்லபமறிந்து, தறிந்து - தேறத்தெரிந்த நிலையில், தன் கட்டங்கி - தானே நிலைத்து, செல்வார்க்கு - ஓர் காரியத்தில் முநிவோருக்கு, செல்லாததில் - முடியாத காரியமொன்று மிறாவென்பது பதம்.

(பொ.) தனக்குள்ள வல்லபமறிந்து தேறத்தெரிந்த நிலையில் தானே நிலைத்து ஓர் காரியத்தில் முனிவோருக்கு முடியாத காரியமொன்றும் இரா என்பது பொழிப்பு.

(க.) தனக்குள்ள நான்குவகை வல்லபமும் சரியாயிருக்கின்றதா என்றாய்ந்து நிலைபெற நின்று யுத்தத்தில் முநிவானாயில் வெற்றியடையாமற் பின்னிடையான் என்பது கருத்து.

(வி.) அரசனது வினைபலம் தன்பலம் எதிரிபலம் துணைவர்பலம் நான்கும் தனக்குள்ளதா என்று ஆய்ந்து தேறத் தெளிந்து எதிரியின் மீது முனைவானாயின் சகல வெற்றியுமடைவான் என்பது விரிவு.

3. உடைத்தம் வலியரியா ரூக்கத் தினூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்.

(ப.) உடைத்தம் - தனக்குள்ள நான்கு வகைத்தான, வலியறியா - வல்லபத்தையாய்ந்தறியாது, ரூக்கத்தி - வீண்முயற்சியால், னூக்கி - முயன்று, யிடைக்கண் - மத்தியில், முறிந்தார் - முரிந்தோடி மாய்ந்தோர், பலர் பலபேரென்பது பதம்.

(பொ.) தனக்குள்ள நான்கு வகைத்தான வல்லபத்தை ஆய்ந்து அறியாது வீண்முயற்சியால் முயன்று மத்தியில் முறிந்து ஓடிமாய்ந்தோர் பலபேர் என்பது பொழிப்பு.

(க.) தனக்குள்ள வல்லபங்களை நன்காராயாது எதிரி அரசின் மீது படையெடுத்துத் தங்களே முறியடிப்பட்டு மாண்ட அரசர்கள் பலருண்டு என்பது கருத்து.

(வி.) வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும் துணைவலியும் நன்காய்ந்தறியாது எதிரியின் மீது பெருமுயற்சியால் படையெடுத்து முறியடிப்பட்டு மாண்டார் பலவரசர்கள் என்பது விரிவு.

4. அமைந்தாங் கொழுகான ளவறியான் றன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

(ப.) அமைந்தாங் - தன் வல்லபங்களை யாய்ந்தொடுங்கி, கொழுகா - வாழ்க்கைப் புரியாதோன், னளவறியான் - தன் வல்லபத்தையும் எதிரியின்

வல்லபத்தையுமறியான், வியந்தான் - அறியாது தன்னை மேலாகப் புகழ்ந்துகொள்பவன், விரைந்து - கூடிய சீக்கிரம், கெடும் - அழிவானென்பது பதம்.

(பொ.) தன் வல்லபங்களை ஆய்ந்தொடிங்கி வாழ்க்கைப்புரியாதோன் தன் வல்லபத்தையும் எதிரியின் வல்லபத்தையும் அறியான், அறியாது தன்னை மேலாகப் புகழ்ந்துகொள்பவன் கூடிய சீக்கிரம் அழிவான் என்பது பொழிப்பு.

(க.) தனது வலியை ஆய்ந்தறிந்து அரசு செலுத்தாதவன் எதிரியின் வலியையும் அறியான், அறியாது தன்னை மதித்துச் செல்வோன் துரிதத்தில் தானே கெடுவான் என்பது கருத்து.

(வி.) அரச ஒழுக்கத்தைப்பற்றினோன் அரசவல்லப ஒழுக்கத்தை அறியானாயின் எதிரியரசன் வல்லபத்தையும் அறியான், தன் வல்லபத்தையும் எதிரியின் வல்லபத்தையும் அறியாது தன்னரசைத் தானே புகழ்ந்து இருமாப்புற்றிருப்பவன் விரைந்து கெடுவான் என்பது விரிவு.

5. பீலிபெய் சாகாடு மச்சிறுமப் பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.

(ப.) பீலிபெய் - மயிலின் இறகுகளையேற்றும், சாகாடு - சகடென்னும் பண்டியில், மப்பண்டம் - அதேயிறகுகளை, சால - மேலு மேலும், மிகுத்துப் - அதிகமாக, பெயின் - ஏற்றுவதாயின், மச்சிறு - இரும்பினிரிசியும் முரிந்து போமென்பது பதம்.

(பொ.) மயிலின் இறகுகளை ஏற்றும் சகடென்னும் பண்டியில் மேலும் மேலும், அதிகமாக ஏற்றுவதாயின் இரும்பின் இரிசியும் முறிந்துபோம் என்பது பொழிப்பு.

(க.) காற்றிலடித்துப் போகக்கூடிய மயிலிறகேயாயினும் அவற்றை அதிகமாக வண்டியிலேற்றுவதாயின் வண்டியினது அச்சாணி முரிந்துபோம் என்பது கருத்து.

(வி.) மிக்க மெல்லியதாய மயில் இறகினை அதிகமாகக்கொண்ட வண்டி அச்சாணி முறிவதுபோல எளிதாகத் தன்னை மேலாக மதித்துக்கொண்டவரசன் மேலும் மேலும் மதிப்பை அதிகரித்துக் கொள்ளுவானாயின் தாங்குவோரகன்று தானே கெடுவான் என்பது விரிவு.

6. நுனிகொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும்.

(ப.) நுனிகொம்ப - மரத்துக்கிளையின் உச்சியில், ரேறினா - ஏறினவன், ரஃதிறந் - அவ்விடம்விட்டு, தூக்கி - இன்னும் மேலேறுவானாயின், னுயிர் - தன்னுயிருக்கே, கிறுதியாகிவிடும் - கேடாக முடியுமென்பது பதம்.

(பொ.) மரத்துக்கிளையின் உச்சியிலேறியவன் அவ்விடம் விட்டு இன்னும் மேலேறுவானாயின் தன்னுயிருக்கே கேடாக முடியும் என்பது பொழிப்பு.

(க.) ஓர் மரத்துக் கிளையினது உச்சியிலேறியவன் இன்னும் மேலேறுவானாயின், கிளையும் ஒடிந்து தானும் மடிவான் என்பது கருத்து.

(வி.) மரக்கிளையின் உச்சியிலேறி அதன் வலியறியாது மேலும் ஏறி கிளையொடிந்து தானு மடிவதுபோல தன் வலியறியாது எதிரியரசர் மீது போருக்குச் செல்பவன் தானே முதல் மடிவான் என்பது விரிவு.

7. ஆற்றி னளவறிந் தீக வதுபொருள்
போற்றி வழங்கு நெறி.

(ப.) ஆற்றி - தனக்குள்ள பொருளின், னளவறிந் - அளவினையறிந்து, தீக - தருமஞ்செய்யல் வேண்டும், வதுபொருள் - அதுவே தனக்குள்ள பொருளை, போற்றி - விருத்திசெய்து, வழங்கு - பலர்க்குபகாரமாக விளங்கும், நெறி - ஒழுக்கமாமென்பது பதம்.

(பொ.) தனக்குள்ள பொருளின் அளவினை அறிந்து தருமஞ்செய்யல் வேண்டும், அதுவே தனக்குள்ள பொருளை விருத்தி செய்து பலர்க்கு உபகாரமாக விளங்கும் ஒழுக்கமாம் என்பது பொழிப்பு.

(க.) ஒருவன் தனக்குள்ள வரவை அறிந்து செலவுசெய்தல் வேண்டும், அதுவே பொருளினை போற்றி வளர்த்து பலருக்கும் உபகாரமாக விளங்கும் நெறியென்பது கருத்து.

(வி.) தனக்குள்ள ஆற்றலாகிய பொருளின் பெருக்கமறிந்து தருமஞ் செய்தல் வேண்டும், அதுவே பொருளினது பெருக்கமறிந்து செய்யும் உபகாரம் எனப்படும் அவைபோல் தனக்குள்ள வலியின் பெருக்கமறிந்து போருக்கு முனிவது அழகாம் என்பது விரிவு.

8. ஆகா ரளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா ரகலாக் கடை.

(ப.) ஆகா - பொருளில்லாது, ரளவிட்டி - அளவு கடந்த தானத்தை, தாயினுங் - செய்வதாயினுங், கேடில்லை - ஓர் கெடுதியும் வாராது, ரகலாக்கடை - செல்லலாகா வலியின் முடிவறிந்தோரோ, போகா - முனைமுகஞ் செல்லார்களென்பது பதம்.

(பொ.) பொருளில்லாது அளவு கடந்த தானத்தைச் செய்வதாயினும் ஓர் கெடுதியும் வாராது, செல்லலாகா வலியின் முடிவறிந்தோரோ முனைமுகஞ் செல்லார்கள் என்பது பொழிப்பு.

(க.) வரவுபொருளில்லாது தானத்தைச் செய்யினுங் கெடுதிவராது, தனக்குள்ள வல்லபமில்லாது யுத்தத்தில் முனிவதால் கெடுதியுண்டாம் என்பது கருத்து.

(வி.) தருமஞ் செய்யக்கூடாதவனாயிருந்துந் தருமத்தை அளவு கடந்து செய்வானாயின் ஒரு கேடும் அடையான், யுத்த வலிதில்லாதவன் என்றிந்தும் யுத்தத்திற்கு முனிவதால் கேடுண்டாம் ஆகலின் வல்லபமில்லா முடியறிந்தோர் யுத்தமுகஞ் செல்லார்கள் என்பது விரிவு.

9. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளிபோல
வில்லாகித் தோன்றாக் கெடும்.

(ப.) அளவறிந்து - தனக்குள்ள வலியின் நிலையறிந்து, வாழதான் - அரசு புரியாதவன், வாழ்க்கை - அரணிலையானது, யுளபோல - உள்ளதுபோல் காட்டி, வில்லாகி - மறைந்து, தோன்றாக்கெடும் - இல்லையென்றே யழிந்துபோமென்பது பதம்.

(பொ.) தனக்குள்ள வலியின் நிலையறிந்து அரசு புரியாதவன் அரணிலையானது உள்ளதுபோல் காட்டி மறைந்து இல்லையென்றே அழிந்துபோம் என்பது பொழிப்பு.

(க.) தனது வல்லபமறியாது வாழ்கும் அரசனது அரணிலையானது உள்ளது போல் தோன்றி இல்லையென்றே அழிந்துபோம் என்பது கருத்து.

(வி.) ஓர் தேசத்தை ஆளும் அரசனாகத் தோன்றியவன் தன் வலியும் உபபல வலியும் பெருக்கித் தனதரசவாழ்க்கையை நடாத்தல் வேண்டும், அவ்வல்லபத்தை நோக்காது அரசனென்று இருமாப்புற்று வாழ்வானாயின் அவனது அரணானது உள்ளதுபோல் தோன்றி சத்துருக்களலில்லாமலே அழிந்து போம் என்பது விரிவு.

10. உளவரை தூக்காது வொப்புர வாண்மெ
வனவரை வல்லக் கெடும்.

(ப.) உளவரை - தனக்குள்ள வல்லபத்தை, தூக்காது - சீர்தூக்கி யாராயாது, வொப்புர - சேர்ந்த வுறவின் முறையோரது, வாண்மெ - வல்லபத்தைக்கொண்டு, வளவரை - அரசவாழ்க்கையை நடத்துவதாயின், வல்லக்கெடும் - வலியின்றி அழிந்து போம் என்பது பதம்.

(பொ.) தனக்குள்ள வல்லபத்தை சீர் தூக்கி ஆராயாது சேர்ந்த உறவின் முறையோரது வல்லபத்தைக்கொண்டு அரச வாழ்க்கையை நடத்துவதாயின் வலியின்றி அழிந்து போம் என்பது பொழிப்பு.

(க.) அரசன் தனது குடிபடை வல்லபத்தை நிலைக்கச்செய்யாது ஒப்புரவினர் வல்லபத்தை நம்பி அரசுசெலுத்துவானாயின் வல்லபமில்லாது கொண்டே அரசழிந்து போம் என்பது கருத்து.

(வி.) அரசனானவன் நான்குவகை சேனைகளின் வல்லபமின்றி தனதுறவின் முறையோர் வல்லபத்தை நம்பி அரசு செலுத்துவானாயின் தேசக்காப்புக்குரிய வல்லபமின்றியே அரசநிலை அழிந்து போம் என்பது விரிவு.

53. காலமறிதல்

அரசனானவன் தனது பகைவர்மீது படையெடுப்பினும் தேச சீர்திருத்த காரியாதிகளை நடத்தினும் காலமறிந்து செய்யல் வேண்டுமென்பதாம். காலமாவது வெய்யற்காலம், பனிகாலம், மழை காலங்களையும் தனது அமைச்சர்களும் பிரதானிகளும் மித்துருவாகவேனும் சத்துருவாகவேனும் இருக்கின்றார்களா என்னுங் காலங்களையும், தனது படைவீரர்களுந் தலைவர்களும் சுகமுற்ற வாழ்க்கையிலிருக்கின்றார்களா பிணியுற்ற நிலையிலிருக்கின்றார்களா என்னுங் காலங்களையும், பண்டிகளில் தானியம் நிறைந்துள்ள காலங்களையும் ஆயுதாசாலைகள் குறைவற்றுள்ள காலங்களையும் தனது முயற்சிகூடுங் காலங்களையுங் கூடா காலங்களையும் ஆய்ந்து தனது காரியத்தில் முயலல் வேண்டும் என்பதாம்.

1. பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

(ப.) கூகையை - வலிது மிகுத்தக் கோட்டானை, காக்கை - காகமானது, பகல் - பகல்காலத்தில், வெல்லும் - வெற்றிக்கொள்ளும். (அவைபோல்) யிகல் - பகைவரை, வெல்லும் - வெற்றிபெறுதற்கு, வேந்தர்க்கு - அரசர்களுக்கு, வேண்டும் பொழுது - காலம் வேண்டுமென்பது பதம்.

(பொ.) வலிது மிகுத்தக் கோட்டானை காகமானது பகல்காலத்தில் வெற்றிகொள்ளும், அவைபோல் பகைவரை வெற்றி பெறுதற்கு அரசர்களுக்குக் காலம் வேண்டும் என்பது பொழிப்பு.

(க.) மிக்க வல்லபமிகுத்தக் கூகையை பகல்காலத்தில் காகமானது வெற்றிக் கொள்ளுவதுபோல அரசனானவன் காலமறிந்து பகைவர்மீது படையெடுப்பின் வெல்லுவான் என்பது கருத்து.

(வி.) இரவுகாலத்தில் ஒரு கோட்டானை நூறு காக்கைக்கூடினும் வெற்றி பெறலாம், பகல்காலத்திலோ ஒரு காக்கையுடன் ஒரு கோட்டான் வெற்றி பெறமாட்டாவாம், அவைபோல் சதுரங்க சேனைவல்லபமிருப்பினும் அதனதன் காலமறியாது பகைவர்மீது படையெடுக்கும் அரசன் வெற்றி பெறமாட்டான், காலமறிந்து படையெடுப்போனோ பகைவரை வெற்றி பெறுவான் என்பது விரிவு.

2. பருவத்தோ டொட்ட வொழுக நிருவினை
தீராமை யார்க்குங் கயிறு.

(ப.) பருவத்தோ - அரசன் விருத்தி காலத்தை, டொட்ட - அநுசரித்து, வொழுக - எக்காரியத்தையும், நடாத்தல் வேண்டும், நிருவினை - வளர்பிறைச்செயல் தேய்பிறைச்செயலிரண்டினையும், தீராமை - சரிவற வாராயாது செய்தல், யார்க்கும் - யாவருக்கும், கயிறு - தாங்களே சுறுக்கிட்டுக் கொள்ளுங் கயிற்றிற்கு ஒப்பாம் என்பது பதம்.

(பொ.) அரசன் விருத்திகாலத்தை அநுசரித்து எக்காரியத்தையும் நடாத்தல் வேண்டும், வளர்பிறைச்செயல்தேய்பிறை செயலிரண்டினையும் சரிவர ஆராயாது செய்தல் யாவருக்கும் தாங்களே சுறுக்கிட்டுக் கொள்ளுங் கயிற்றுக்கு ஒப்பாம் என்பது பொழிப்பு.

(க.) அரசன் தொடுக்குங் காரியாதிகள் யாவையும் விருத்திகாலங் குறைவு காலமறிந்து செய்யல்வேண்டும், அங்ஙனங் காலமறியாது செய்தல் தங்கள்

கழுத்தில் கயிறிட்டு தாங்களே சுறுக்கிட்டுக் கொள்ளுவது போலாம் என்பதுகருத்து.

(வி.) புருவமென்னும் பிறை வளர்வது போலும் பிறை தேய்வதுபோலும் தொடுக்கு முயற்சிகள் சகலமுங் கூடிவருவதும் சிலது மாறுபட்டு குறைந்து வருவதும் இயல்பாம். இவற்றுள் கூடிவருங் காரியத்தில் முயன்று செய்வதாயின் சித்தியுண்டாம். மாறுபட்டு குறைவுபடுங்காலத்தில் முயல்வதாயின் சித்தியில்லாமற்போம். ஆதலின் அரசன் பருவமாகிய விருத்தி காலத்தையும் அமரமாகிய குறைவு காலத்தையுங் கண்டுணராது ஓர் காரியத்தில் முயல்வானாயின் கயிற்றினால் தன் கழுத்தை தானே சுறுக்கிட்டுக் கொள்ளுவதற்கு ஒக்கும் என்பது விரிவு.

3. அருவினை யென்வுளவோ கருவியாற்
கால மறிந்து செயின்.

(ப.) கருவியாற் - தனது முயற்சியால், காலமறிந்து - அந்தந்த காலநிலையறிந்து, செயின் - அரசனோர் காரியத்தைத் தொடங்குவானாயின், அருவினை - முடியாத காரியம், யென்ப - என்று சொல்லும்படியானவை, வுளவோ - உளதோ வென்பது பதம்.

(பொ.) தனது முயற்சியால் அந்தந்த காலநிலையறிந்து அரசனோர் காரியத்தைத் தொடங்குவானாயின் முடியாத காரியமென்று சொல்லும் படியானவை உள்ளதோ என்பது பொழிப்பு.

(கூ) அரசன் அந்தந்த கால பருவம் அறிந்து காரியத்தைத் தொடங்குவானாயின் முடியாத காரியம் ஒன்றுண்டோ, இல்லை என்பது கருத்து.

(வி.) அரசனானவன் காலமறிந்து காரியத்தைத் தொடங்குவானாயின் முடியக் கூடாத அரிய காரியமாயினும் முடித்தே தீருவான் என்பது விரிவு.

4. ஞாலங் கருதினுங் கைகூடுங் காலங்
கருதி யிடத்தாற் செயின்.

(ப.) காலங்கருதி - அந்தந்த காலத்தை யநுசரித்து, யிடத்தாற் - தன்னிட வலி கொண்டு, செயின் - காரியத்தைத் தொடங்குவானாயின், ஞாலங்கருதினும் - பூமியை முழுவதுமாள வெண்ணினும், கைகூடும் - அஃதமையுமென்பது பதம்.

(பொ.) அந்தந்த காலத்தை அநுசரித்து தன்னிட வலிகொண்டு காரியத்தைத் தொடங்குவானாயின் பூமியை முழுதும் ஆள எண்ணினும் அஃதமையும் என்பது பொழிப்பு.

(கூ) அரசன் காலபலமறிந்தும் இடபலமறிந்தும் எடுத்த முயற்சியில் முயன்று தேசமுழுவதும் ஆள எண்ணினும் அவை கைக்கூடும் என்பது கருத்து.

(வி.) அரசனானவன் எடுக்குங் காரிய காலபலமறிந்தும் தனதிடபலமாம் தன்பலந் தனது சதுரங்கசேனைபலம், தானிய பண்டிபலம், ஆயுதசாலைபலம், அரசவங்கத்தோர்பலம் யாவையுஞ் சரிபடத்திறுத்தி பூமி முழுவதையும் ஆளுதற்கு எண்ணினும் அவ்வெண்ணம் முடியும் என்பது விரிவு.

5. காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்.

(ப.) ஞாலங் - பூமி முழுவதையும், கருதுபவர் - ஆளும்படியாக வெண்ணுவோர், கலங்காது - யாதொன்றுக்கு மஞ்சாது, காலங் - அதற்குரிய காலத்தின்பேறில், கருதி - எண்ணம் வைத்து, யிருப்பர் - கார்த்திருப்பார் களென்பது பதம்.

(பொ.) பூமிமுழுவதையும் ஆளும்படியாக எண்ணுவோர் யாதொன்றுக்கும் அஞ்சாது அதற்குரிய காலத்தின்பேரில் எண்ணம் வைத்துக் கார்த்திருப்பார்கள் என்பது பொழிப்பு.

(கூ) யாதொன்றுக்கும் அஞ்சா அரசன் பூமி முழுவதையும் ஆளும்படியான எண்ணத்தைக் கொள்ளினும் அதற்குரிய காலத்தையே கருதி இருப்பான் என்பது கருத்து.

(வி.) எத்தகைய அரசர் வல்லபங்களுக்கும் அஞ்சாத சுத்த வீரத்தால் சகல தேசங்களையுந் தன்னாளுகைக்குட்படுத்திக் கொள்ள எண்ணினும் அதற்கு சித்தாய காலத்திற்கே கார்த்திருப்பான் என்பது விரிவு.

6. ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கர் க்குப்பேருந் தகைத்து.

(ப.) ஊக்கமுடையா போருக்கு முயற்சியுடைய வரசன், னொடுக்கம் - காலம் நோக்கி நிற்கும் அடக்கமானது, தகா - ஆட்டுக்கிடா சண்டையில், பொரு - பின்னிக்குச் சென்று, தாக்கர்க்கு - பிலக்கவிடித்தற்காய, பேருந்தகைத்து - வல்லக் கிடாவின் வெற்றியை யொக்குமென்பது பதம்.

(பொ.) போருக்கு முயற்சியுடைய அரசன் காலம் நோக்கினிற்கும் அடக்கமானது ஆட்டுக்கிடா சண்டையில் பின்னுக்குச் சென்று பிலக்கவிடித்தற்காய வல்லக்கிடாவின் வெற்றியை ஒக்கும் என்பது பொழிப்பு.

(க.) போருக்கு முநிந்த வரசன் காலத்திற்கொடுங்கி நிற்றல் ஆட்டுக்கிடாவின் சண்டையில் பின்னுக்குச் சென்று முன்னோக்கி இடித்து வெற்றிபெறலை ஒக்கும் என்பது கருத்து.

(வி.) போருக்கு ஊக்கமிகுத்துள்ள அரசனுக்கு நால்வகை சேனை பலமும் தனக்குள்ள புருஷ பலமும் மிகுதியாயிருப்பினும் காலத்தை நோக்கி ஒடுங்கினிற்றல் எத்தகையதென்னில் ஆட்டுக்கிடாவானது சண்டையில் பின்னுக்குதைத்து முன்னேறி இடித்தலை ஒக்கும் என்பது விரிவு.

7. பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்ப ரொள்ளி யவர்.

(ப.) காலம்பார்த் - யுத்தமாரம்பிக்கும் நேரம்பார்த்து. துள்வேர்ப்ப - தனதுட்பகையை, ரொள்ளி யவர் - செலுத்தும் படியான வரசன், பொள்ளென - உடனுக்குடன், புறம்வேரார் - வேற்றரசர் மீது, வாங்கே - யுத்தகளம் போகானென்பது பதம்.

(பொ.) யுத்தம் ஆரம்பிக்கும் நேரம் பார்த்து தனதுட்பகையை செலுத்தும் படியான அரசன் உடனுக்குடன் வேற்றரசர்மீது யுத்தகளம் போகான் என்பது பொழிப்பு.

(க.) காலம்பார்த்து யுத்தத்திற்குச் செல்லவேண்டிய அரசன் தன்னுட் பகையிருப்பினும் உடனுக்குடன் அங்கு செல்லான் என்பது கருத்து.

(வி.) காலத்தை முன்னோக்கி சகல காரியாதிகளையும், நடாத்தும் படியான அரசனுக்கு வேற்றரசர்களால் உள்ளக்கொதிப்பெழலாய பெரும்பகை தோன்றினும் உடனுக்குடன் வேற்றரசர் மீது படையெடுத்துச் செல்லமாட்டான், காலம் நேர்ந்தபோது செல்லுவான் என்பது விரிவு.

8. செறு நரைக்காணிற் சுமக்க விறுவரை
காணிற் கிழக்காந் தலை.

(ப.) செறு நரைக்காணிற் - அரசன் பகைவரைக் கண்டபோது, சுமக்க - பாரமாகக்காணும், விறுவரை - அவர்கள் சிறையிற் கட்டுப்பட்டு, காணில் - அவர்களைக் காணு மிடத்து, கிழக்காந்தலை - தலைகுனிய நேர்ந்து போமென்பது பதம்.

(பொ.) அரசன் தன் பகைவரைக் கண்டபோது பாரமாகக்காணும். அவர்கள் சிறையிற் கட்டுப்பட்டு அவர்களைக் காணுமி!த்து தலை குனிய நேர்ந்து போம் என்பது பொழிப்பு.

(க.) பகைவராம் அரசரைக் கண்டவுடன் பாரமாகத் தோன்றும். சிறையிற் கட்டுப்பட்டு அவர்களைக் கண்டவுடன் தலையைக் கீழ்நோக்கும்படி யாகிவிடும் என்பது கருத்து.

(வி.) அரசன் தனது பகைவரைக் காணில் ராட்சியபாரந்தாங்குவதினும் அஃது பெருஞ்சுமையாகக் காணும் பகைவரது சிறையிற் கட்டுண்டாலோ அவர்களைக் கண்டவுடன் தலைக்கீழாகக் குனியும்படியாகும். ஆதலின்

அரசனானவன் சாம தான பேத தண்டமென்னும் சதுர்விதி உபாயங்களைக் காலமறிந்து செய்யவேண்டும் என்பது விரிவு.

9. எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயல்.

(ப.) எய்தற்கரிய - பகைவர் மீது தனதாயுதத்தைப் பிரயோகிக்கக்கூடிய, தியைந்தக்கா - காலம் நேர்ந்தபோது, லந்நிலையே - அக்காலத்திலேயே, செய்தற்கரிய - அரிய யுத்த முயற்சியை, செயல் - செய்ய வேண்டுமென்பது பதம்.

(பொ.) பகைவர்மீது தனது ஆயுதத்தைப் பிரயோகிக்கக்கூடிய காலம் நேர்ந்தபோது அக்காலத்திலேயே அரிய யுத்தமுயற்சியை செய்யவேண்டும் என்பது பொழிப்பு.

(க.) அரசன் பகைவர்மீது தனதாயுதத்தை யெய்யுங்காலம் நேர்ந்தபோது அக்காலத்திலேயே யுத்தத்தை நடாத்த வேண்டும் என்பது கருத்து.

(வி.) அரசனது யுத்தத்திற்கு வேண்டிய சகல காரியங்களுங் கைகூடுங் காலம் நேர்ந்தபோது அக்காலத்தையே முன்னிட்டு பகைவர்மீது படையெடுத்தலே வெற்றிக்கழகாகும் என்பது விரிவு.

10. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.

(ப.) கொக்கொக்க - கொக்கானது மீன் வருங் காலம்பார்த்து, கூம்பும் - பற்றிக்கொள்ளுமாபோல், பருவத்து - நேருங்காலமறிந்து, செய்வோன் - வெற்றிபெறுவான், மற்றதன் - காலமறியாது, சீர்த்தவிடத்து - கோபத்தால் யுத்தத்திற்கு முனிவதாயின், குத்தொக்க - தானே சோர்வடைவதற்கிடமுண்டாமென்பது பதம்.

(பொ.) கொக்கானது மீன் வருங் காலமறிந்து பற்றிக்கொள்ளுமாபோல் நேருங்காலமறிந்து செய்வோன் வெற்றிபெறுவான், காலமறியாது கோபத்தால் யுத்தத்திற்கு முனிவதாயின் தானே சோர்வடைவதற்கிடமுண்டாம் என்பது பொழிப்பு.

(க.) கொக்கானது ஒருமீன் வருமளவுங் கார்த்துப் பற்றிக்கொள்வதுபோல நேருங்காலம்பார்த்து படையெடுக்கும் அரசன் வெற்றியடைவான், அவ்வகையில்லாதவனோ தானே குத்துண்டு மடிவான் என்பது கருத்து.

(வி.) கொக்கின் உவமானமோ வருங்காலம் பார்த்தல். அதைபோலவே அரசனும் தனது பகைவரை வென்று அத்தேசத்தைக்கைப்பற்றுங்காலம் பார்த்து செய்வானாயின் வெற்றியடைவான். அவ்வகையக் காலம் பாராது தனது கோப வெறியால் படையெடுப்பவனோ தானே குத்துண்டு மடிவது ஒக்கும் என்பது விரிவு.

54. இடனறிதல்

அரசனானவன் தனது வலியையுங் காலத்தையுமட்டிலும் பார்த்துக் கொண்டு யுத்தத்திற்கு முனைவதிற் பயனில்லை, எதிரியரசனது காட்டரண்மதில் நாட்டரண்மதில் மலையரண்மதில்கள் சூழ்ந்த இடங்களின் போக்கு வருத்துக்களை நன்குகண்டு தெளிந்து எவ்விடம் நின்று யுத்தம் புரியில் தனக்கு வெற்றியுண்டாமென்னு இடந்திடமறிந்து படையை செலுத்த வேண்டியவற்றை விளக்கலானார்.

1. தொடங்கற்க வெவ்வினையு மெள்ளற்க முற்று
மிடங்கண்ட பின்னல் லது.

(ப.) முற்று - யுத்தாரம்ப சகல முடிவையும், மிடங்கண்ட - எதிரியரசனிட நிலைகளைக்கண்டு, பின்னல்லது - தெளிந்தபின்பே யன்றி, மெள்ளற்க - அவர்களை மதியாது முயன்று, வெவ்வினையு - கடுஞ்சினத்தாலாய யுத்தச்செயலை, தொடங்கற்க - ஆரம்பிக்கலாகாதென்பது பதம்.

(பொ.) யுத்தாரம்ப சகல முடிபையும் எதிரி அரசனிட நிலைக்கண்டு தெளிந்த பின்னரேயன்றி அவர்களை மதியாது முயன்று கடுஞ்சினத்தாலாய யுத்தச்செயலை ஆரம்பிக்கலாகாது என்பது பொழிப்பு.

(க.) அரசனானவன் யுத்தம் ஆரம்பிக்குங்கால் எதிரியரசன் இடங்கள் யாவையுங் கண்டு தெளிந்தபின்பே முநிதல் வேண்டுமென்பது கருத்து.

(வி.) எதிரியரசனது நாட்டரண், காட்டரண், மலையரண் முதலிய இடங்களின் போக்குவரத்து வழிகளையும் அங்கங்கு உண்டாம் இடுக்கண் களையும் தெரிந்து கொண்டபின்பே யுத்தத்தை ஆரம்பித்து செல்லவேண்டும் என்பது விரிவு.

2. முரண்சேர்ந்த மொய்ம்பினவர்க்கு மரண் சேர்ந்தா
மாக்கம் பலவுந் தரும்.

(ப.) முரண்சேர்ந்த - சகல விடுக்கமான வழிகளையு மறிந்து செல்லும், மொய்ம்பினவர்க்கு - திரண்ட சேனையையுடைய வரசனுக்கு, மரண்சேர்ந்தா - எதிரியரண்மனையைப் பற்றியபோது, மாக்கம் - பெருக்கமாய், பலவுந்ததரும் - சகல சம்பத்து மடையக்கூடுமென்பது பதம்.

(பொ.) சகல இடுக்கமான, வழிகளையும் அறிந்து செல்லும் திரண்ட சேனையையுடைய அரசனுக்கு எதிரியரண்மனையைப் பற்றியபோது பெருக்கமாய சகல சம்பத்தும் அடையக்கூடும் என்பது பொழிப்பு.

(க.) முரண்பட்டுள்ள சகல இடங்களையுங்கண்டு யுத்தத்திற்குச் செல்லும் அரசன் எதிரியினரண்மனையைக் கைப்பற்றி பல சுகமும் பெறக்கூடியவனாவான் என்பது கருத்து.

(வி.) படையெடுத்துச் செல்லும் அரசன் எதிரி தேசத்தின் முரண்பாடாய இடங்களின் வழிதெரிந்து செல்லுவோன் தன்சேனைகள் அதி சேதமுறாமலும் தனக்கோர் ஆபத்து வராமலும் அரண்மனையைக் கைப்பற்றியபோது இடங்கண்டறிந்து நடாத்தியசெயலால் பல சுகத்தையுந் தரும் என்பது விரிவு.

3. ஆற்றாரு மாற்றி யடுப விடனறிந்து
போற்றார்கட் போற்றிச் செயின்.

(ப.) போற்றார்கட் - கோபத்தால் தன்னை மதியாவரசனை, போற்றிச்செயின் - மதிக்கச்செய்ய வேண்டுமாயின், விடனறிந்து எதிரி யெல்லையினிடமறிந்து யுத்தத்தில் முநியில், ஆற்றாரு - அடங்காகோபியும், மாற்றி - தன் கோபமடங்கி, யடுப தனக்கடிமையாவானென்பது பதம்.

(பொ.) கோபத்தால் தன்னை மதியா அரசனை மதிக்கச் செய்ய வேண்டுமாயின் எதிரி எல்லையினிடமறிந்து யுத்தத்திற்கு முநியில் அடங்காக்கோபியுந் தன் கோபமடங்கி தனக்கடிமையாவான் என்பது பொழிப்பு.

(க.) தன்னை மதியா வரசனை மதிக்கச் செய்துக் கொள்ளவேண்டிய அரசன் அவர்கள் எல்லைக்கு இடுக்கமற்றதும் சுருக்க வழியும் எது என்னும் இடங்கண்டு யுத்தத்திற்குச் செல்லில் மதியா அரசனும் மதிப்புற்று ஒடுங்குவான் என்பது கருத்து.

(வி.) அவமதிப்பாக நடத்திவரும் அரசனை மதிக்கச் செய்துக்கொள்ள வேண்டிய அரசன் காலத்தையும் வலிமையுங் கண்டுக்கொள்ளுவதுடன் எதிரியின் இடங்களின் இடுக்கத்தையும், சுறுக்கத்தையும் நன்கறிந்து படையெடுத்து விடுவானாயின் அவனவன் அவமதிப்படங்கி மதிப்புற்று அடைக்கலம் புகுவான் என்பது விரிவு.

4. எண்ணியா ரெண்ண மிழப்ப ரிடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

(ப.) துன்னியார் - அடக்கமுடைய வரசர், துன்னி - இன்னு மடக்கமுற்று, ரிடனறிந்து - எதிரி யரசனின் சுறுக்க வழியினிடங்களைத் தெரிந்து, செயின் - யுத்தஞ்செய்ய முயலுவாராயின், எண்ணியார் - தன்னை யவமதிப்பாக

வெண்ணியிருந்த வரசர்களது, ரெண்ணமிழப்ப - எண்ணங்கள் யாவையு மிழந்து விடுவார்களென்பது பதம்.

(பொ.) அடக்கமுடைய அரசர் இன்னுமடக்க முற்று எதிரியரணின் சுறுக்கவழியினிடங்களைத் தெரிந்து யுத்தஞ் செய்ய முயலுவாராயின் தன்னை அவமதிப்பதாக எண்ணியிருந்த அரசர்களது எண்ணங்கள் யாவையும் இழந்து விடுவார்கள் என்பது பொழிப்பு.

(க.) அவமதிப்பின் எண்ணத்திற்குள்ளாய அரசன் தன்னரண்மனையை முத்திரிக்க வந்துவிடுவானாயின் அவ்வெண்ணத்தை இழந்தே விடுவார்கள் என்பது கருத்து.

(வி.) அரசருக்குள் மற்றோரரசரை மனப்பூர்வமாக அன்பு பாராட்டாது அவமதித்து நிற்பது இயல்பாம். அவற்றால் அவமதிப்புற்றுள்ள அரசன் எதிரியினிடமறிந்து படையெடுத்து அவனரண்மனையை முற்றிகையிட்டு விடுவானாயின் அவமதிப்பாய எண்ணங்கள் யாவும் ஒழிந்து மதிப்புற்று நாணுவான் என்பது விரிவு.

5. நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலி
னீங்கின தனை பிற.

(ப.) நெடும்புனலுள் - நிறைந்தவேரி நீரிலுள்ள, முதலை - நீர்ப்புலியானது, வெல்லு - சகல சீவர்களையும் வென்றுவிடும், யடும்புனலி - நிறைந்தநீர், னீங்கி - வற்றிய பூமியில், னதனை - அம்முதலையை, பிற - அன்னிய சீவன்கள் யாவும் வென்றுவிடுமென்பது பதம்.

(பொ.) நிறைந்த ஏரிநீரிலுள்ள நீர்ப் புலியானது சருவ சீவர்களையும் வென்று விடும், நிறைந்த நீர் வற்றிய பூமியில் அம்முதலையை அன்னிய சீவன்கள் யாவும் வென்றுவிடும் என்பது பொழிப்பு.

(க.) நீர் நிறைந்த இடத்தில் வாழும் முதலை சருவ சீவர்களையும் வென்றுவிடும், நீரில்லாவிடமாம் பூமியில் வந்துவிடுமாயின் சருவ சீவர்களிடத்துந் தோல்வியடைந்து போம் என்பது கருத்து.

(வி.) நிறைந்த நீரில் வாசஞ்செய்யும் முதலையானது நீரிலுள்ளவரையில் புலிக்கொப்பாய பலனுற்று சருவ சீவர்களையும் வென்றுவருவதால் ஓடதி சாஸ்திரிகளால் நீர்ப்புலியென்னும் மறுபெயரையும் பெற்றிருக்கின்றது. அத்தகைய முதலையானது நீருள்ள இடத்தைவிட்டு பூமியில் வந்து விடுமாயின் சருவ சீவர்களிடத்தும் தோல்வியடைவது அநுபவமுங் காட்சியுமாதலின் அரசன் தன்னிட வலியையும் எதிரியினிட வலியையுங் கண்டு யுத்தத்திற்கு முனியல் வேண்டும் என்பது விரிவு.

6. கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து.

(ப.) கால்வ - பூமியிற் கால்விட்டோடும், னெடுந்தேர் - உயர்ந்த ரதமானது, கடலோடா - திரண்ட நீரினிலோடாவாம், கடலோடு - திரண்ட நீரினிலோடும், நாவாயு - பாய்மரக்கப்பலானது, நிலத்து - பூமியின்கண், மோடா - ஓடாவாமென்பது பதம்.

(பொ.) பூமியிற் கால்விட்டோடும் உயர்ந்தரதமானது திரண்ட நீரினில் ஓடாவாம் திரண்ட நீரினில் ஓடும் பாய்மரக்கப்பல் பூமியின்கண் ஓடாவாம் என்பது பொழிப்பு.

(க.) பூமியில் ஓடும் பெருத்த ரதம் நீரினில் ஓடாது நீரினில் ஓடும் மரக்கலமானது பூமியில் ஓடாது அவைபோல் இடனறிந்து யுத்தத்திற்கு முநியல் வேண்டும் என்பது கருத்து.

(வி.) பூமியில் ஓடும் ரதம் நீரில் ஓடக் கூடாததும் நீரில் ஓடுங் கப்பல் பூமியிலோடக்கூடாத துமாபோல் அரசன் சுத்த வீரனாயினும் இடமறிந்து யுத்ததத்திற்கு முநிவனேல் வெற்றி பெறுவான், இடனறியாது யுத்தத்திற்கு முநிவனேல் தோல்வியடைவான் என்பது விரிவு.

7. அஞ்சாமெ யல்லாற்றுணை வேண்டா வெஞ்சாமெ
யெண்ணி யிடத்தாற் செயின்.

(ப.) அஞ்சாமெயல்லாற் - எதுக்கும் பயப்படாத வரசனுக்கு, றுணைவேண்டா - படைத்துணை வேண்டாதாயினும், யெண்ணி - நன்காலோசித்து, யிடத்தாற் செயின் - இடமறிந்து யுத்தாரம்பஞ் செய்யின், வெஞ்சாமெ - ஏதுக்கு மஞ்சா வீரங்குன்றாதென்பது பதம்.

(பொ.) ஏதுக்கும் பயப்படாத அரசனுக்கு படைத்துணை வேண்டாதாயினும் நன்காலோசித்து இடமறிந்து யுத்த ஆரம்பஞ் செய்வானாயின் எதுக்கும் அஞ்சா வீரங்குன்றாது என்பது பொழிப்பு.

(க.) சுத்தவீரமுடைய அரசனுக்குத் துணைவேண்டாதாயினும் பகைவரிடம் அறிந்து முநிவானாயின் வீரங் குறைவுபடாது என்பது கருத்து.

(வி.) அரசன் தனது அதிவீர பராக்கிரமத்தால் துணை வேண்டாது யுத்தத்திற்குச் செல்லுவதில் எதிரிகளின் இடதிடநுட்பங்களைக் கண்டுகொண்டு செல்வானாயின் தனது வீரங்குறையாமலே வெற்றி பெறுவான் என்பது விரிவு.

8. சிறுபடையான் செல்லிடஞ் சேரினு றுபடையா
னூக்க மழிந்து விடும்.

(ப.) சிறுபடையான் - சொற்ப சேனைகளைக் கொண்டும், செல்லுமிடஞ் - யுத்தத்திற்குச் செல்லுமிடனுட்பமறியாமலும், சேரி - சென்றுவிடுவானாயின், னுறுபடையா - அவ்விடமுள்ள சேனை பலத்தால், னூக்க - தனது வீரமுயற்சி, மழிந்து விடும் - குன்றிபோமென்பது பதம்.

(பொ.) சொற்ப சேனைகளைக் கொண்டும் யுத்தத்திற்குச் செல்லுமிட நுட்பம் அறியாமலும் சென்று விடுவானாயின் அவ்விடமுள்ள சேனை பலத்தால் தனது வீரமுயற்சி குன்றிப்போம் என்பது பொழிப்பு.

(க.) தனது வீரத்தால் சேனைபலம் இல்லாமலும் எதிரியினிட பலம் அறியாமலும் யுத்தத்திற்குச் செல்லுவதாயின் அவ்விடமுள்ள சேனைகளால் வீரங் குன்றிப் போம் என்பது கருத்து.

(வி.) அரசன் தனக்குள்ள சுத்த வீரத்தால் சிறுபடையை அழைத்துக்கொண்டு எதிரியரசன் இடதிட்டங்களைக் கண்டறியாமல் யுத்தத்திற்குச் சென்று விடுவானாயின் இடங்களின் இடுக்கண்களாலும் எதிரி சேனையாலும் முறியடிப்பட்டு தனது சுத்தவீரம் யாவும் அழிந்து போம் என்பது விரிவு.

9. சிறைநலனுஞ் சீரு மிலரெனினு மாந்த
ருரைநிலத்தோ டொட்ட லரிது.

(ப.) சிறைநலனுஞ் - அரசனது நற்காப்பும், சீரு - நற்சீரும், மிலரெனினு - இல்லாதவர்களென்றும் சொல்லப்படும், மாந்த - அரசர்கள், ருரைநிலத்தோ - தாங்கள் வாழும் பூமியில், டொட்டலரிது - நிலையாக வாழ்தலில்லாமற் போவார்கள் என்பது பதம்.

(பொ.) அரணது நற்காப்பும் நற்சீரும் இல்லாதவர்களென்று சொல்லப்படும் அரசர்கள் தாங்கள் வாழும் பூமியில் நிலையாக வாழ்தலில்லாமற் போவார்கள் என்பது பொழிப்பு.

(க.) அரண்மனையின் நற்காப்பும் நற்சீரும் இல்லாதவர்கள் என்று கருதப்படும் அரசர்கள் அவ்வரணில் பதியாக நிலைக்க மாட்டார்கள் என்பது கருத்து.

(வி.) அரணை சிறையாகக் காக்கும் மதில் காப்பு அகழி காப்பில்லாமலும் மதியூகச் சீரில்லாமலும் வாழும் அரசரென்றெண்ணப்படுவோர் தங்களரணுள்ள பூமியில் நிலையாக நிலைக்கமாட்டார்கள் என்பது விரிவு.

10. காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு.

(ப.) வேலாண் முகத்த - கூரியவேலேந்தியுடையவனுடைய முகத்தை, கண்ணஞ்சா - கண்டும் பயப்படாத, களிறு - யானையினது, காலாழ்களரி - கால்களாழ்ந்த சேற்றிலழுந்திவிடுமாயின், னரியடுங் - நரியினுக்கு பயந்து போமென்பது பதம்.

(பொ.) கூரியவேலேந்தி உடையவனுடைய முகத்தைக் கண்டும் பயப்படாத யானையினது கால்கள் ஆழ்ந்த சேற்றிலழுந்திவிடுமாயின் நரியினுக்கு பயந்துபோம் என்பது பொழிப்பு.

(க.) அதிகக்கூராய வேலேந்தியுடையவனைக் கண்டஞ்சாத யானை யானது ஆழ்ந்த சேற்றிலழுந்திவிடுமாயின் நரிக்கு பயந்து ஒடுங்கிப்போம் என்பது கருத்து.

(வி.) கூரிய வேலேந்தியுடையவனுக்கு அஞ்சாத யானை சேற்றிலழுந்தி விடுமாயின் சிறிய ஓர் நரிக்கஞ்சி ஒடுங்கி விடுவதுபோல் அதிவீரமிகுத்த அரசனாயினும் இடுக்கணாய இடத்திலகப்பட்டுக் கொள்ளுவானாயின் வீரங்குன்றி தோல்வியடைவானாகலின் எதிரியினிடமறிந்து யுத்தத்தில் முநியல் வேண்டும் என்பது விரிவு.

55. தெரிந்து தெளிதல்

அதாவது அரசனானவன் தனது மந்திரவாதிகளாயிருப்பவருள் வஞ்சினம் பொறாமை, பொருளாசை, குடிகெடுப்பு மிகுத்தவர்களே அதிகரித்திருக் கின்றார்களா அன்றேல் நீதியும் நெறியும் சீவகாருண்யமும் பகுத்தறிவும் கலைநுலாராய்ச்சியும் முன்பின் காலவகைகளை அறிந்து மதியூகங் கூறுவோரும் அரசனுக்கு நேரும் பழிபாவங்கள் தங்களையே சாருமென சத்தியதன்மத்தில் நிலைப்போருமாய பெரியோர்களாயுள்ளார்களா எனத் தெரிந்து தெளிந்தும், இரதகஜ துரகபதாதிகளாகிய நால்வகை சேனைகளும் அரசாங்கப்பற்றில் அமைந்துள்ளதா என்றும், ஆயுதசாலைகள் நிறைந்துள்ளதாவென்றும் தானிய பண்டிகள் நிறைந்திருக்கின்றதாவென்றும் தெரிந்து தெளிந்தும் தானும் தனது சேனைகளும் சுகமுற்றிருக்கின்றார்களாவென்றுந் தெரிந்து தெளிந்தும் தனதுயிருக்கு ஓராபத்தும் வாராத காப்புகளைத் தெரிந்து தெளிந்தும் ஓர் காரியத்தில் முநியல் வேண்டும் என்பதேயாம்.

1. அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
றிறந்தெரிந்து தேறப் படும்.

(ப.) அறம் - தேசத்தில் தன்மநெறி பிசகாசெயலும், பொரு - சகலபொருட்களினிறைவும், ளின்ப - சகல சுகமும், முயிரச்ச - உயிர்காப்பும், நான்கின் - ஆகிய நான்கின், றிறந்தெரிந்து - திடங்களை யறிந்து, தேறப்படும் - உறுதிப்படவேண்டுமென்பது பதம்.

(பொ.) தேசத்தில் தன்மநெறி பிசகா செயலும் சகல பொருட் களினிறைவும் சகல சுகமும் உயிர்காப்பும் ஆகிய நான்கின் திடங்களை அறிந்து உறுதிப்பட வேண்டும் என்பது பொழிப்பு.

(க.) அரசனானவன் தன்மநெறி, பொருள் நிறைவு, சுகாதாரம், உயிர்காப்பு இந்நான்கையும் உறுதிபடுத்திக்கொள்ளல் வேண்டும் என்பது கருத்து.

(வி.) அறநெறி வழுவா செங்கோலையும் சகல பொருட்களினிறைவையும் சகல சுக ஆதாரங்களையும் தனதுயிர் காப்புக் காயபடைத்துணையையும் உறுதிபெறச் செய்துக்கொண்டு சகல காரியங்களிலும் முநிதல் வேண்டும் என்பது விரிவு.

2. குடிபிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியு
நாணுடையான் கட்டே தெளிவு.

(ப.) குடிபிறந்து - நல்லக்குடும்பத்திற்பிறந்து, குற்றத்தினீங்கி - தீவினைகளுக்கஞ்சி யொதிங்கி, வடுப்பரியு - குற்றங்களை யறிந்து, நாணுடையான் - ஒடுங்கும் படியான தோழன், கட்டே - இடத்தே, தெளிவு - சகலவரிய பொருளும் விளங்குமென்பது பதம்.

(பொ.) நல்லக் குடும்பத்திற் பிறந்து தீவினைகளுக்கஞ்சி ஒதுங்கி குற்றங்களையறிந்து, ஒடுங்கும்படியான தோழனிடத்தே சகல அரிய பொருளும் விளங்கும் என்பது பொழிப்பு.

(க.) கருணையும் நீதியும் அமைந்த குடும்பத்திற்பிறந்து யாதொரு குற்றங்களுக்கும் ஆளாகாது அகன்று சகலவகைக் குற்றங்களுக்கும் ஒடிங்கி நடக்குந் தோழனால் சகல சுகத்தெளிவும் உண்டாம் என்பது கருத்து.

(வி.) நல்லொழுக்கக் குடும்பத்திற் பிறந்து நாணமுறுஞ் செயல்களுக்கு ஒதிங்கி சகல குற்றங்களையும் ஆய்ந்து அடங்கி நிற்போனை அரசன் தோழனாகக் கொள்ளுவானாயின் சகல தெளிவும் பெறுவான் என்பது விரிவு.

3. அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கா
லின்மை யரிதே வெளிறு.

(ப.) அரியகற் - அரியகலை நூற்களைக் கற்று, றாசற்றார் - சகல குற்றங்களு மற்றுள்ளோரை, கண்ணுந் - கண்டு தெளிந்து. தெரியுங்கா - தோழனாகத் தெரிந்து கொள்ளு மரசனுக்கு, லின்மையரிதே - ஒருபொருளு மில்லையென்று சொல்லுவோரிராரென்பதே, வெளிறு - வெளிப்படையா மென்பது பதம்.

(பொ.) அரிய கலைநூற்களைக் கற்று சகல குற்றங்களு மற்றுள்ளோரைக் கண்டுதெளிந்து, தோழனாகத் தெரிந்து கொள்ளும் அரசனுக்கு ஒருபொருளும் இல்லையென்று சொல்லுவோரிராரென்பதே வெளிப்படையாம் என்பது பொழிப்பு.

(க.) கலைநூற்களைக் கற்று சகல குற்றங்களு மற்றுள்ளப் பெரியோரைத் தோழராகக் கொண்ட அரசனுக்கு இல்லையென்னும் பொருளொன்று இராது என்பதே கருத்து.

(வி.) சகல கலைநூற்களையும் சரிவரக் கற்று மனமாசகன்ற பெரியோரை அரசன் தெரிந்தெடுத்துக் கொள்ளுவானாயின் அவனது தேசத்தில் ஒரு பொருளுண்டு ஒரு பொருளில்லையென்று கூறாது சகல வளமும் பொருந்தி நிற்கும் என்பதே விரிவு.

4. குணனாடிக் குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல்.

(ப.) குணனாடி - அரசன் நற்குண முள்ளோரை நேசிப்பதுபோல, குற்றமுநாடி - தீயகுணமுள்ளோரையும் நேசித்து, யவற்றுண் - அவர்களுக்குள், மிகைநாடி - நல்லோர்களையே தேடி, மிக்ககொளல் - அதிகமாக நேசிக்கவேண்டுமென்பது பதம்.

(பொ.) அரசன் நற்குணமுள்ளோனை நேசிப்பதுபோல தீய குணமுள்ளோரையும் நேசித்து அவர்களுக்குள் நல்லோர்களையே தேடி அதிகமாக நேசிக்க வேண்டும் என்பது பொழிப்பு.

(க.) நற்குணமுள்ளோரை நேசிப்பது போலவே துற்குண முள்ளோரையும் அரசன் நேசித்து அவர்களுக்குள் நற்குணமுள்ளோர் நேசிப்பையே மிக்க பாவிக்க வேண்டும் என்பது கருத்து.

(வி.) அரசனானவன் தேசக்குடிகள் யாவருக்கும் பொதுவாய தந்தையாதலின் சகலரையும் மைந்தர்போல் பாவித்து நல்லோரையும் பொல்லோரையும் நேசித்து அவர்களுள் நல்லோர் வாக்கியங்களையே மிகுதியாக்கொண்டு தனது ராட்சியபாரத்தைத் தாங்கவேண்டும் என்பது விரிவு.

5. பெருமெக்கு மேனைச் சிறுமெக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்.

(ப.) பெருமெக்கு - தம்மை மேலாக வுயர்த்திக்கொள்ளற்கும், மேனை - மற்றும், சிறுமெக்குந் - தம்மைக் கீழாகத் தாழ்த்திக் கொள்ளற்கும், தத்தங் - தாங்கள் தாங்கள் செய்யும், கருமமே - செயல்களே காரணமென்பது, கட்டளைக்கல் - கல்லின்மீதெழுத்து போலாமென்பது பதம்.

(பொ.) தம்மை மேலாக வுயர்த்திக் கொள்ளற்கும் தம்மைக் கீழாகத் தாழ்த்திக் கொள்ளற்கும் தாங்கள் தாங்கள் செய்யுஞ் செயல்களே காரணமென்பது கல்லின்மீதெழுத்து போலாம் என்பது பொழிப்பு.

(க.) தன்னை உயர்த்திக் கொள்ளற்குந் தாழ்த்திக்கொள்ளற்கும் தங்கடங்கள் செயல்களே என்பதை கல்லின்மீது எழுத்தைப்போல் எண்ணவேண்டும் என்பது கருத்து.

(வி.) அரசனானவன் தெரிந்து தெளிதற்குத் தானே காரணன் ஆதலின் தம்மெயுயர்த்திக் கொள்ளற்குந் தாமே காரணன் என்பது கல்லின் மீதெழுத்துப் போலுள்ளதால் சகலவற்றையுந் தெளிந்து செய்யல் வேண்டும் என்பது விரிவு.

6. அற்றாரைத் தேறுத லோம்புக மற்றவர்
பற்றிலர் தாணார் பழி.

(ப.) அற்றாரை - சகல பற்றுக்களு மற்று நீதிநெறியமைந்த மேலோரை நேசித்து, தேறுத - அவர்பால் தெரிந்து தெளிதலை, வோம்புக - விரும்பல் வேண்டும், மற்றவர் - வேறு சிலராய, பற்றிலர் - நீதிநெறியிற் பற்றில்லாதவர்களோ, பழி - நிந்தனைக்கு, நாணார் - வெட்கமடையாரென்பது பதம்.

(பொ.) சகல பற்றுக்களுமற்று நீதி நெறி அமைந்த மேலோரை நேசித்து அவர்பால் தெரிந்து தெளிதலை விரும்பல் வேண்டும், வேறு சிலராய நீதிநெறி பற்றில்லாதவர்களோ நிந்தனைக்கு வெட்கம் அடையார்கள் என்பது பொழிப்பு.

(க.) நீதிநெறியிற் பற்றுள்ள மேலோரை நேசிக்கில் தெளிவுண்டாம், நீதிநெறியற்றவர்களை நேசிக்கில் பழிபாவத்திற்கு அஞ்சாதும் நாணமற்றும் அடுத்தோரைக் கெடுப்பார்கள் என்பது கருத்து.

(வி.) நீதிநெறியிற் பற்றுண்டாய் ஏனைய பற்றுக்கள் யாவும் அற்றுள்ள மேலோரைநோக்கில் தெளிவுண்டாகும் மதியுகமளிப்பர். நீதிநெறியிற் பற்றில்லாது சகல பற்றும் அமைந்துள்ள கீழோரை நேசிக்கில் பழிக்கும் நாணத்திற்கும் அஞ்சாது தெளிவற்ற நிலையில் விடுத்து பாழ்படுத்தி விடுவார்கள் என்பது விரிவு.

7. காதன்மெ கந்தா வறிவரியார்த் தேறுதல்
பேதைமெ யெல்லாந் தரும்.

(ப.) காதன்மெ - காமியபற்றுற்றோர், கந்தா - அதையே முகந்து நிற்பராதலின், அறிவறியார் - அவர்கள் தெளிவினிலையறியார், தேறுதல் - அவர்களை யடுத்துத் தெளியவேண்டுமாயின், பேதைமெ - அறிவிலிச் செயலுக்குரிய, யெல்லாந்தரும் - சகல கேடுகளையுங் கொடுக்குமென்பது பதம்.

(பொ.) காமியபற்றுற்றோர் அதையே முகர்ந்து நிற்பராதலின் அவர்கள் தெளிவினிலை அறியார். அவர்களை அடுத்துத் தெளியவேண்டுமாயின் அறிவிலிச் செயலுக்குரிய சகல கேடுகளையுங் கொடுக்கும் என்பது பொழிப்பு.

(க.) காமியப்பற்று மிகுத்தோர் அதையே நுகர்ந்து நிற்போராகலின் அவர்களைத் தெளிவுற அடுத்தல் கேட்டிற்கே வழியாம் என்பது கருத்து.

(வி.) எவற்றானுந் தன்னை ஆய்ந்து தெளிதற்கு சற்று பேதமெயுற்றவன் காமியப்பற்று மிகுத்தோனை அடுத்துத் தெளிய முயல்வானாயின் மேலும் மேலும் பேதைமெயுற்று அல்லலடைவான் என்பது விரிவு.

8. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா விடும்பை தரும்.

(ப.) தேரான் - தன்னிற்றானே சற்றுந் தெளிவில்லாதவன், பிறனை - அன்னியனை யடுத்தே, தெளிந்தான் - தெளிவதாயின், வழிமுறை - தனது குலமரபிற்கு, தீராவிடும்பை - மீளா துக்கத்தை, தரும் - கொடுக்குமென்பது பதம்.

(பொ.) தன்னிற்றானே சற்றுந் தெளிவில்லாதவன் அன்னியனை அடுத்தே தெளிவதாயின் தனது குலமரபிற்கு மீளா துக்கத்தை கொடுக்கும் என்பது பொழிப்பு.

(க.) தான் தானே தெளிவுறாது ஏனையோரால் தெளிவுற முயல்வது மனுகுலவரம்பிற்கே வழுவாம் என்பது கருத்து.

(வி.) மனுகுலத்தானென்னும் சிறப்புப் பெயரைப்பெற்று தன்னிற்றானே தெளிவுறாது அன்னியனைக் கொண்டு தெளிவுற முயல்வது மனுகுல சிறப்புங் கெடுவதுடன் தானும் பலவகை இடும்பைக்குள்ளாவான் என்பது விரிவு.

9. தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபிற்
றேறுக தேறும் பொருள்.

(ப.) தேறற்க யாரையுந் - ஒருவரை யடுத்து தெளிய முயலாமலும், தேராது - அவ்வகைத் தெளியாமலும், தேர்ந்தபிற் - தன்னிற்றானே தெளிந்து, றேறுக - முன்னேறுவதால், தேறும் பொருள் - சகல பொருளும் உறுதி பெறுமென்பது பதம்.

(பொ.) ஒருவரை அடுத்து தெளிய முயலாமலும் அவ்வகைத் தெளியாமலும் தன்னிற்றானே தெளிந்து முன்தேறுவதால் சகல பொருளும் உறுதிபெறுமென்பது பொழிப்பு.

(க.) அன்னியரை அடுத்துத் தெளிவு பெறுவதினும் தன்னிற்றானே தெளிவுபெறுவானாயின் சகலபொருளும் நிலையாம் என்பது கருத்து.

(வி.) அன்னியனை யடுத்துத் தெளிவுறுவதில் ஐயமும் மறுப்பும் நிறைந்து தோற்றலால் தெரிந்து தெளிய வேண்டியவன் தன்னிற்றானே தெரிந்து தெளிந்த நிலையடைவானாயின் அவன் கோரிய சகல பொருளும் நிலைபெற்றுப்போம் என்பது விரிவு.

10. தேரான் தெளிவுந் தெளிந்தான்க ணையுறவுந்
தீரா விடும்பை தரும்.

(ப.) தேரான் - தன்னிற்றானே தெரியாது, தெளிவுந் - தெளிவடைந் தேனென்பதும், தெளிந்தான்க - தெளிந்தவனெனத்தோன்றி, ணையுறவுந் - அதிலச்சமுறுவதுமாயச் செயல், தீராவிடும்பை - மீளா துக்கத்தை, தரும் - கொடுக்குமென்பது பதம்.

(பொ.) தன்னிற்றானே தெரியாது தெளிவடைந்தேனென்பதும், தெளிந்தவனெனத் தோன்றி அச்சமுறுவதுமாயச் செயல் மீளா துக்கத்தைக் கொடுக்குமென்பது பொழிப்பு.

(க.) தன்னை ஆய்ந்தறியாதவன் தெளிந்தோனென்பதும், தெளிந்தோ னென்பவன் தன் செயலால் அஞ்சி நடப்பதுமாயச் செயலால் மீளா துக்கத்திற்குக் கொண்டு போம் என்பது கருத்து.

(வி.) தன்னையுந் தன் செயலையுந் தெரிந்து தெளியாதவன், தெளிந்தேனென்பதும் தெளிந்தோனென வெளிதோன்றிதன் செயல்களில் அச்சமுறுவதுமாயின் மீளா துக்கத்தையே அநுபவிக்கவேண்டி வரும் என்பது விரிவு.

(திரிக்குறள் உரை புத்தகம் 5, இலக்கம் 24இல் தொடங்கி அயோத்திதாசர் இறக்கும் வரை தொடர்ச்சியாக வெளியிடப்பட்டது. உரை முற்றுப் பெறவில்லை.)

ஆசாரிய துரை க. அயோத்தீதாஸ பண்டித தம்மதாயகா அவர்கள் பஞ்சஸ்கந்த பிரிவினை அடைந்த துக்க செய்தி

நாம் இங்கு விவரிக்க வேண்டியிருக்கிற துக்க செய்தியைக் குறித்து நினைக்கவும் மனம் தடுமாறுகிறது, சொல்லவும் வாய் குளறுகிறது. எழுதவும் கை கூசுகிறது. ஆயினும் மனதை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு நமது வாசகர்களுக்கு தமிழன் பத்திராதிபர் பண்டிதபெருமானவர்கள் பஞ்சஸ்கந்த பிரிவினை அடைந்த விசநகரமான சமாசாரத்தைத் தெரிவிக்கவேண்டிய கொடுங்கடமெய்க்கு உட்பட்டுள்ளோம். இந்தத் தமிழன் என்னும் வாராந்தரப் பத்திரிகையை எவ்வளவோ சிரமத்துடனும் சிரத்தையுடனும் துவக்கி, எத்தனையோ இடையூறுகள் நேர்ந்தும், அவை யொன்றுக்கும் பின் வாங்காமல், பூர்வமான மனோபலத்துடன் தம் அறநெறியிலேயே நம்பிக்கை வைத்துச் சென்ற ஏழாண்டுகளாக தாம் அந்திம தசையை அடையுமட்டும், தமிழ்நாடு முழுவதும் பெருந்தகை என்று கொண்டாடும்படி புகழுடன் பத்திரிகையை

நடாத்திவந்தார். நமது நாட்டு பூர்வக் குடிகளின் உத்தாரணத்தையும் தேசாசாரச்சீர்திருத்தத்தையும் முன்னிட்டே இவர் இப்பத்திரிகையை ஸ்தாபித்து அதின் ஆசிரியராயிருந்து வந்தாரென்பது நமது வாசகரனைவருக்கும் தெரிந்த விஷயம். தற்காலத்தில் இங்ஙனம் கைம்மாறு கருதாது தேசத்துக்காகவும் தாழ்ந்த வகுப்பாரென இழிவு படுத்திவரும் பிரஜைகளுக்காகவும் உழைப்பவர் இருப்பது வெகு அருமை. இவர் பிரிவு தமிழ் பாஷாபிவிருத்திக்கும், பௌத்ததன்மப் பரவுதலுக்கும், மநுகோடிகளின் சீர்திருத்தத்துக்கும் ஆற்றொணா துயரை விளைக்கும் பெரிய நஷ்டமே ஆகும். இம்மகானுடைய அன்பின் பெருக்கையும், அறநெறியைக் கைப்பிடித்தொழுகும் வல்லமையும், கருணை தங்கிய பிரிடிஷ் ராஜாங்கத்தின் பூர்ண பக்தி விசுவாசமும் எம்மால் எடுத்துரைக்க இயலாது.

இப்புண்ணிய புருஷர் இவ்வளவு சீக்கிரம் மறைவார் என்று எள்ளளவேனும் யாம் எண்ணவில்லை. கடைசிவரையிலும் தாம் தம் வேலைகளை செவ்வையாகவே செய்து கொண்டு வந்தார். பௌத்த தன்மத்தைச் சேர்ந்த எமக்குத் திடீரென்று நேரிட்ட இப்பிரிவு சொல்லமுடியாத வியாகூலத்தைத் தருகிறது. அவர் அந்திமகாலத்தைக் குறித்துசொல்லும்போது ரோமம் சிலிர்க்கின்றது, மெய்ந்நடுங்குகின்றது. அவர் ஒருவாரங்கூடச் சரியாய் வியாதியுடன் படுத்திருக்கவில்லை. அவருக்குத் தாம் இப்பொய்யுடலை நீத்துப்போக வேண்டிய தருணம் வந்துவிட்டது என்பது தெரிந்துவிட்டது போலும், பௌத்த ஸாஸனத்துக்குரிய மனவமைதியோடு அவர் இறுதி வரையிலும் எப்போதும் போலத் தமக்கு வாய்ந்த வாக்கு சாமார்த்தியத்துடன் தம் நண்பர்களுக்கும் சீடர்களுக்கும் அறநெறியைக் கைப்பிடித்து வாழ்ந்துவரும்படி இதோபதேசம் செய்துகொண்டிருந்தார். தம்காலம் நெருங்கிவிட்டதைக் குறித்து ஒரு சிறிதும் கலக்கமடையாமல், தாம் பௌத்ததன்மத்திற்காகவும், பூர்வக்குடிகளின் சீர்திருத்தத்திற்காகவும் பாடுபட்டுவந்த வேலை இடையுறாமல் மேன்மேலும் நடந்தேற வேண்டும் என்று புத்ததன்ம சங்கமென்னும் முத்திறமணியைத் தோத்திரித்துக் கொண்டிருந்தார். இம்மகானுடைய அருள்நிறைந்த மனமும், மரணத்துக்குப் பயப்படாத தூய்மையும் இருந்தவாறு எம்மனதை வசுகரிக்கின்றது. இனி எம்மெய்ப்பற்றியே சிறிது சொல்ல வேண்டியிருக்கிறது. எமது அருமை தந்தையராகிய தெய்வப்புலமெய் க. அயோத்திதாஸ பண்டிதர் அவர்கள் மறைந்தது எம்மை அடியற்ற மரமாகச் செய்துவிட்டது. பௌத்ததன்ம ஏற்பாடுகளைத் தலைமேற் கொண்டு அநாதாரவாய் நிற்கிற ஏழையேம் எமது தந்தையார் நடாத்திவந்த தன்ம கைங்கர்யமாகிய "தமிழன்" பத்திரிகையின் பத்திரிகாசிரியராயிருக்கும் கடினமான தொழிலை ஏற்றுக்கொண்டோம். இது கோணாமல் நடந்தேறுவதற்கு சத்தருமம் திருவருள்புரியுமாக. விசாகா தினத்திற்கு 4-நாளுக்குமுன் தினமாகிய 1914 , மே மாதம் 5 நாள் செவ்வாய்கிழமை காலை 5மணி சங்கை பண்டிதரவர்கள் பஞ்சஸ்கந்த பிரிவினையடைந்தனர். அவர் வியாதியின் கொடுமையைப்பற்றிக் கொஞ்சமேனும் அவஸ்தைப்பட வில்லை. தாமே கைதேர்ந்த வைத்திய பண்டித சிகாமணியாயிருந்ததினாலும் தமக்கே தம்மாயுளைக் குறித்து உணர்ச்சி இருந்ததினாலும் வைத்திய ரொருவருடைய உதவியையும் அவர் கோரவில்லை. மே மாதம் 3உ ஆதிவாரங் காலை 5-மணிக்கு பண்டிதரவர்கள் எல்லோரையும் பார்த்து இந்த தேகம் விழப்போகிறது என்றனர். அவருக்கு நெருங்கின பந்துக்களும் நண்பர்களும் அவர்களுடைய கதியைப்பற்றி பண்டித பெருமானை வினாவிய போது, அவர், உங்களுக்கு நான் சொல்லவேண்டியது ஒன்றே, அதாவது, உங்களுடைய தருமமும், கருமமுமே உங்களைக் காக்கும் என்று திருவாய்மலந்தருளினர். அடியேன் பத்திரிகையைக் குறித்து விண்ணப்பித்தபோது, அவர் திரிக்குறள் உரை இதுவரையிலும் நாம் எழுதியதோடு மாத்திரம் நிற்கவேண்டியிருக்கிறதே என்பதுதான் குறை, இந்தப்பொய்சடலம் கூடியிருந்தவரையில் அவ்வளவுதான் செய்யமுடிந்தது. "தமிழன்" ஆகிய குழந்தையை உன் கையில் ஒப்பித்து

விடுகிறேன், உன்னால் வளர்க்க முடியுமல்லவா? என்றனர். அவரோடேயே அடியேன் இதுகாறும் உழைத்துவந்த அனுபோக்கத்தைக் கொண்டு பத்திரிகையை நடத்தக்கூடும் என்று நம்பிக்கையாக விடையளித்ததும் பண்டிதர் திருப்தி அடைந்து களித்தனர். அவரைத் தாம் ஸ்தாபித்துப் பாதுகாத்து வந்த சத்திய சங்கங்களைக் குறித்துக் கேட்டபோது புத்தரது ஆதிவேதம் என்னும் நூல் பற்றுக்கோடாக இருக்கட்டும். அதனை ஆராய்வோருக்கு தர்மம் விளங்கும் சங்கமும் நிலைநிற்கும் என்றனர். சென்னையில் கட்டவேண்டிய அறப்பள்ளியைக் குறித்து வினாவியபோது அவர் ஒரு தீர்க்கதரிசிபோல பொன் சிகரங்களோடு கூடிய அறப்பள்ளி ஒன்று சீக்கிரம் ஸ்தாபிக்கப்படும் என்று பூர்ண நம்பிக்கையுடன் சொன்னார். அவரது வார்த்தை நிறைவேறும்படி புத்தபகவான் திருவருள் புரிவாராக! மே மாதம் 5-ம் நாள் காலை பஞ்சஸ்கந்த பிரிவை அடைவதற்கு சில நிமிஷங்களுக்கு முன் அவர் தம்மெய்ச்சுற்றியிருந்த உறவினரையும் சீடர்களையும் நோக்கி சந்தடி செய்யாதேயுங்கள், இந்த தேகத்தைக் கொஞ்சநேரம் ஒன்றும் தொந்தரவு பண்ணவேண்டாம் என்று ஆக்ஞாபித்தார். பிறகு நிர்மயமாய் மன ஆனந்தத்துடன் புராதன பௌத்த முனீந்திரர்களைப்போல் கைகளைக் கூப்பிக்கொண்டு சவுபாதிஸேஸ நிருவாண மார்க்கத்தில் நின்று சுற்றி நின்றவர்களெல்லாம் பிரமிக்கும்படி பஞ்சஸ்கந்த பிரிவினை அடைந்தார்! இவ்வதிசயத்தை கண்ணாரக்கண்டு அருகிலிருந்த அனைவரும் செயலற்று, அழவும் வாய்வராமல், எங்களையும் அறியாமல் கண்ணீர்ப் பெருக ஸ்தம்பித்து நின்றோம். அன்பே உருவாயமைந்த திருமேனியையும் ஏழைகளிடத்தில் இரக்கம் நிறைந்த கண்களையும் எல்லோர் மனத்தையும் ரஞ்சிக்கச் செய்யும் புன்முறுவல் பூத்த திருமுக மண்டலத்தையும் இனி எப்போது காணப்போகிறோம் என்று எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி ஏங்கி நின்றோம். அவருடைய கிருபை நிறைந்த உபந்நியாசங்களைக் கேட்பது இனி கிடைக்குமோ வென்று துக்கக்கடலில் ஆழ்ந்தோம். ஆனால் மானுடராய்ப் பிறந்தோரெல்லாம் பஞ்சஸ்கந்த பிரிவினை அடைய வேண்டியது தானே.

பஞ்சஸ்கந்த பிரிவினை அடைந்தபிறகு இருந்த அவரது திருமுக விலாசத்தை யாவரே வருணிக்கத்தக்கவர். அன்று பகலெல்லாம் அவரது உறவினரும், நண்பர்களும், சீடர்களும் நூற்றுக்கணக்காக வந்து பார்த்துவிட்டுப் போய்க்கொண்டிருந்தனர். பகல் 3 மணிக்கு அவருக்குப் பரிசளித்திருந்த மூன்று மெடல்களையும் அணிந்து அலங்கரித்து அவரைத் தரிசித்தோம். மாலை 5.30 மணிக்கு வானத்தில் மேகங்கள் அடர்ந்து புஷ்பமாரிப் பெய்தாப்போல் தூறி நிலத்தைக் குளிரச்செய்தது மனோகரமாயிருந்தது.

"நல்லாரொருவருளரேல் அவர் பொருட்
டெல்லார்க்கும் பெய்யுமழை"

மாலை 6 மணிக்கு சர்வாலங்கிருதங்களோடு அவரை வெள்ளைப் பெட்டியில் வைத்து புஷ்பங்களால் அலங்கரித்திருந்த விமானத்தில் இருக்கச் செய்து பௌத்தன்ம சின்னங்களுடன் முன்னால் புத்தரது ஆதிவேதத்திலிருந்து உருக்கமான பாடல்களைப் பாடிக்கொண்டுவர கோலம் புறப்பட்டது. அநேக பர்மிய பௌத்த பிக்ஷீக்களும், இந்தியபௌத்தர்களும், பர்மிய பௌத்தர்களும், ஆயிரங்கணக்கான ஜனங்களும் கோலத்துடன் வந்தனர். பண்டிதபெருமான் அவர்களே காருண்யம் பொருந்திய பிரிட்டிஷ் கவர்ன்மெண்டிலிருந்து பௌத்தர்களுக்காக வாங்கிய மயானத்திற்கு தேவ விமானம் கொண்டுபோகப் பட்டது. விமானத்தை இறக்கினதும் சென்ற 1500 வருடங்களாக நடந்திராத பௌத்த சடங்குகள் வெகுசிரத்தையுடன் நடத்தப்பட்டன.

பிறகு மிஸ்டர் ஏ.எஸ். முதலியாரவர்கள் பண்டிதபெருமானவர் களைப்பற்றி ஆங்கில பாஷையில் ஆரவாரத்துடன் உபந்நியாசித்தார். அதன்பின் கீழ்குறித்துள்ள பாடல்கள் முறையே பாடப்பட்டன.

இப்பாடல்கள் பாடி முடிந்ததும் அவருடைய விஷயங்களையெல்லாம் பார்த்துக் கொண்டுவந்த கோலார் தென்னிந்திய சாக்கைய பௌத்த சங்கத்தின்

அக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீமந் எம். வொய். முருகேஸம் ஸாஸனதாயக அவர்கள் முடிவுரை கூறி அமர்ந்தனர். பிறகு அடியேன் அவரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு புத்ததன்மக் கோட்பாட்டின்படி தகன கைங்கரியம் நிறைவேறியது. தொடர்ந்துவரும்.

சி.ஐ. பட்டாபிராமன்

7:48; ஜூன் 17, 1914 -

நவீன இந்தியாவின் மாபெரும் அறிஞர்களுள் ஒருவர் பண்டிதர் அயோத்திதாசர் (1845–1914). தமிழ்–பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவித்து தீவிரமாகச் செயல்பட்டவர். காலனியாதிக்கத்தின் இக்கட்டான காலகட்டத்தில் வாழ்ந்த இவர், சமத்துவம், பகுத்தறிவு, நவீனத்துவம் முதலான கொள்கைப் போக்குகளில் தமிழக அளவில் பெரியாருக்கும் இந்திய அளவில் அம்பேத்காருக்கும் முன்னோடியாக விளங்கினார்.

அயோத்திதாசரின் சிந்தனைகள் 1907 முதல் 1914 வரை ஏழாண்டுகள் அவரால் நடத்தப்பட்ட *தமிழன்* என்னும் வார இதழில் எழுத்து வடிவம் பெற்றன.

தொகுப்பாளர் அலாய்சியஸ் கடின முயற்சி மேற்கொண்டு *தமிழன்* இதழ்கள் அனைத்தையும் தேடிக் கண்டுபிடித்து, அயோத்திதாசர் எழுத்துகளைக் காலக்கிரமத்தின்படி, இதழாதாரத்துடன் அரசியல், சமூகம், சமயம், இலக்கியம் என்ற 4 பெரும் பிரிவுகளுக்குள் அடுக்கியிருக்கிறார்.

தொகுப்பாசிரியர் ஞான. அலாய்சியஸ், சமூகவியல் மற்றும் வரலாற்றுத் துறை ஆய்வாளர். புதுதில்லி, ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தனது ஆய்வுப் படிப்பை 1991 முதல் 1997 வரை மேற்கொண்டிருந்தார். இதுவரை இரண்டு நூல்கள் எழுதியுள்ளார். `Nationalism without a Nation in India' என்ற முதல் நூல் ஆக்ஸ்போர்ட் யுனிவர்சிட்டி பிரஸ் மூலமாக 1997இல் வெளியானது. அயோத்திதாசர் மற்றும் தமிழ் பௌத்தம் குறித்த இவரது ஆய்வு நூல் `Religion as Emancipatory Identity: A Buddhist Movement among the Tamils under Colonialism' என்ற தலைப்பில் `நியூ ஏஜ் இண்டர்நேஷனல்' வெளியீட்டாளர்களால் 1998ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. தற்போது சூரத்திலுள்ள `Centre for Social Studies' என்ற ஆய்வு மையத்தில் ஆய்வாளராகப் பணிபுரிகிறார்.